125=00

உ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீசீதாலக்ஷ்மண பரதசத்ருக்ன அநுமத்சமேத
ஸ்ரீராமச்சந்த்ர பரப்பிரம்மணேநம:.

இதிஹாச சிரேஷ்டமாகிய

ஸ்ரீமத் கம்பராமாயண

வசனம்.

யுத்தகாண்டம்
ஒட்டக்கூத்தர் செய்தருளிய உத்தரகாண்ட வசனம்.

இஃது

சென்னைப்புரம்
இந்துமத பாலிகா தர்மபாடசாலைத் தமிழ்ப்பண்டிதரும்,
அஷ்டாவதானம்
பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்
மாணாக்கருமாகிய,
பிரசங்காமிர்தம்
பாலூர் - வேலுதேசிகரவர்களால்
பார்வையிடப்பட்டு,
அவ்வவ்விடங்களுக்கேற்ற ஐதிகப்படி நூதன லெத்தகிராப் படங்களுடன்
ஷை பாடசாலையின் தருமபரிபாலனர்,
நே. முனிசாமிமுதலியாரவர்களால்
தமது
கணேச அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது.

MADRAS.

1903.

இரண்டாம் புஸ்தகம்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

இப்புத்தகத்து ளடங்கிய
படங்களின் அட்டவணை.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

இப்புத்தகத்துள்ளடங்கிய படலங்களோடு, விஷயங்களின் அட்டவணை.

௬-வது யுத்தகாண்டம்.

படலமும், விஷயமும்.	பக்கம்.

படலமும், விஷயமும்.	பக்கம்.

படலமும், விஷயமும். பக்கம்.

அச்சிரத்தைக்கொரு பொருளின்றாயினும்
பச்சிரத்தம்பொழி பருதிக்கண்ணினன்.

இவ்வண்ணம் மகோதரன் சொல்லித் தன்னாசனத்திலிருந்த சமயத்தில் வச்சிரம்போலும் வலிவுடைய தந்தங்களையுடையவனானதால் வச்சிரதந்தனென்னும் பெயரினையுடையவனெழுந்து மிகவும் உருக்கமுடையவனைப்போல் பசிய இரத்தம்பொழிகின்ற கண்களையுடையவனாகி, தான்சிரத்தையோடு சொல்லும் சொற்களில் சாதிக்கத்தக்க யாதொருபொருளின் றாயினும், பெரிய விஷயங்களை ஆராய்ந்து சொல்பவனைப்போலச் சொல்கின்றான்.

ஓ திரிலோகபயங்கரனே! நீபோய் மனிதரையுங் குரங்குகளையும் - தரையிலிட்டுக் கைகளால் தேய்த்துத் தின்றுவிட்டுவாவென்று என்னையேவி நீர் இவ்விடத்தில்தானே யிராமல், வெகுதூரம் ஆலோசித்து ஆராய்கின்றதென்ன? என்னிடத்தில் ஏதாவது உமக்குச் சந்தேகமுண்டா? முன்பு எந்த உலகத்திலும் உம்முடைய ஏவலைக்கேளாத சத்துருக்களைக்கருவறுத்து சகலரையும் உமக்கு அடிமையாகும்படிசெய்த நான், எவ்விடத்திலேயோ எதுவோ ஒருகாரியத்திலே தவறிப்போனதாக நினைத்தோ? இந்தக் காரியத்தை யென்னை முடிக்கச்சொல்லி எனக்கு உத்தரவுசெய்யாம லிருக்கிறீரென்றான்.

துன்முகன் சொல்லுதல்.

கவி.

நின்மினென்றவன்றனை விலக்கியிவை
என்முனுமெளியர்போ லிருத்தியோவென
மன்முகநோக்கினன் வணங்கிவன்மையால்
துன்முகனென்பவனினையசொல்லினன்.

இவ்வாறு சொன்ன வஜ்ரதந்தனைத் துன்முகனென்பவன் பார்த்து, நீயதற்குத் தக்கவனல்ல நில்லென்று விலக்கி, மகாதீரத்தோடுந் தானெழுந்து இராவணேஸ்வரனைப் பார்த்து, நீரிவைகளை என்முன்னும் பலஹீனரைப்போலச் சொல்லுகின்றீரோ? என்று கைகூப்பித்தொழுது தான்சொல்லத் தலைப்பட்டான்.

கேளும் பிரதாபலங்கேஸ்வரனே! அஷ்டகஜங்களும் உம்மை ஜெயிக்கத்தக்க பலமுடையவைகளல்ல. தேவர்களும் பலத்தில் எளியவர்கள். முக்கண்படைத்த சிவபெருமானுடைய கைலாசகிரியும் உமக்குப் பலமற்றதாயிருக்கின்றது. இவைகளெல்லாம் இப்படி யிருக்க - இனி மனிதர்களும் குரங்குமே பலத்தில் மிகுந்தவர்களானால், திரிலோக கண்டனாகிய ஓ ராவணேஸ்வரனே! உமக்குண்டாகிய பலமெல்லாம் எங்கேபோயிற்று? ஐயோ! நம்மிடத்தில் எப்போதும் சிறப்பான செய்கைகள் அநேகமாயிருக்கின்றன. அற்பச்செய்கையே சிறியவர்களுக்கு உரியதாயிருக்கின்றது. ஆகையால் நம்முடைய சத்துருக்கள் பலத்தையுடையவர்களென்றாலும், நாம் அவர்களுக்குப்பயந்து நம்முடைய உயிரினிடத்தி லிச்சைவைத்துக்கொண்டு பின்னிடுகிறதா? நீரிப்பொ

எ-வது உத்தரகாண்டம்.

No. 43. ஸ்ரீராமர் எழுபதுவெள்ளம் வானரசேனையோடு பவளமலையினின்றும் தென்றிசைக்கடலடைதல்.



இராவணன் மந்திராலோசனைசபைகூட்டி அமைச்சர்கும்பகர்ணாதியர் கருத்தறிதல்.



ஸ்ரீ



ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ சீதா லக்ஷ்மண பரத சத்துருக்ன அநுமத்சமேத

ஸ்ரீராமச்சந்திர பரப்பிரமணே நம:.

ஸ்ரீமத் கம்பராமாயணவசனம்.

ஆறவது,

உயுத்த காண்டம்.

தோத்திரக்கவி.

ஒன்றேயென்னி னொன்றேயாம் பலவென்றுரைக்கிற் பலவேயாம்
அன்றேயென்னி னன்றேயா மாமேயென்னி னாமேயாம்
இன்றேயென்னி னின்றேயா மிலதென்றுரைக்கி னிலதேயாம்
நன்றேநம்பி குடி வாழ்க்கை நமக்கிங்கென்னோ பிழைப்பம்மா.

முதலாவது,

கடல்காண் படலம்.

இப்படலத்தில்! ஸ்ரீராமச்சந்திரர் எழுபது வெள்ளம் வானரசேனைகளோடு தென்றிசைச் சமுத்திரத்தை யடுத்ததும், அச்சமுத்திரத்தினுடைய வர்ணனையுஞ் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமபத்திரர் தென்றிசைச் சமுத்திர மடைதல்.

கவி.

ஊழி திரியுங் காலத்து முலையா நிலைய வுயர்கிரியும்
வாழி வற்றா மறிகடலு மண்ணும் வடபால் வான்றோயும்
பாழித் தெற்குள் ளனகிரியு நிலனுந் தாழப் பரந்தெழுந்த
எழு பத்தின் பெருவெள்ள மகர வெள்ளத் திறுத்ததால்.

பொங்கிப் பரந்த பெருஞ்சேனை புறத்து மகத்தும் புடைசுற்றச்
சங்கிற் பொலிந்த தகையாளைப் பிரிந்த பின்பு தமக்கினமாம்

கொங்கிற் பொலிந்த தாமரையின் குழுவுந் துயில்வுற் றிதழ்குவிக்கும்
கங்குற் பொழுதுந் துயிலாத கண்ணன் கடலைக்கண் ணுற்றான்.

வெவ்வேறாகிய ஊழிக்காலத்திலும் சலனமில்லாமல் நிலைபெற்றிருக்கின்ற உன்னதமான மகமேரு முதலாகிய பர்வதங்களும் - எக்காலத்திலும் வற்றாதிருக்கின்ற சமுத்திரமும் - பூமியும் - வடபாரிசத்திலே வானமளவும் உயரவும், தென்பாரிசத்தி லிருக்கின்ற பொதிய முதலாகிய மலைகளும் - நிலமும் - பாதாளமளவுந் தாழவும், எங்கும் பரவியெழுந்த வானரசேனை எழுபது வெள்ளமும் தெற்கிலுள்ள மகரவெள்ளமாகிய கடலி னருகேவந்து தங்கியன. சமுத்திரமானது சமீபித்திருக்கிற படியினாலும் - சுவாமி வெகுநாளாகப் பிராட்டியாரைப்பிரிந்திருக்கிற படியினாலும் - இனி வழிமத்தியில் எங்கு நில்லாமல், பசி - தாகம் - களைப்பு - முதலானவைகளையும் பாராமல், எப்படியாவது பிரயாசத்துடனே பிரயாசமாய்ப்போய்ச் சீக்கிரத்திற் சேரவேணுமென்றும் - இராவணாதி ராக்ஷதருடனே எதிர்த்துச் சண்டைசெய்து ஜெயித்து சீதாபிராட்டியின் சிறையை மீட்கவேணு மென்றும் - எண்ணங்கொண்டவர்களாய் மனதுபொங்கி, நிலமுழுதும் பரந்து விரைந்து நடந்துவந்த அவ்வானரசேனா வீரர்களெல்லாம் மாயையுடைய ராக்ஷதர்களாலே சுவாமிக்கு என்ன அபாயம் வருகிறதோ வென்று சர்வஜாக்கிரதையுடனே அணியணியாய் அவருக்குப் புறத்திற் புடைசூழ்வ தானார்கள்.

இதுபோலவே அந்தவானரர்கள் தங்களைப்பெற்ற தாயர் — தந்தையர் — தமையன்மார் - தம்பிமார் - பெண்சாதி-பிள்ளைகள் - இவர்கள் முதலானவர்களையும் கைவிட்டு தமக்குத் துணையாகவந்ததனால் அவர்களில் ஒருவராவது தப்பாமல் வந்து சேர்ந்தார்களா வென்றும், அவர்களுக்குப் பொல்லாங்கு எங்கே சம்பவிக்கிறதோ வென்றும், ஒருவேளை கர்மவசத்தால் ஆருக்காவது பிராணநஷ்டம் வந்தால் அந்தச் செய்திகேட்டு அவர்களுடைய பந்துவர்க்கத்தார் இந்தராமன் தன்பெண்சாதியை ராவணனெடுத்துக்கொண்டு போனதைக்குறித்து அவனைஜெயிப்பதற்காக எங்கள் புத்திரர் புருஷர் அண்ணன்மார் தம்பிமார்களையெல்லாம் ஆட்டுமந்தைபோல மடக்கிக்கொண்டுபோய்ப் பதனமாய்க் காப்பாற்றி அழைத்துக்கொண்டு வராமல் அநியாயமாய் ராக்ஷதப் புலிகளின்வாய்க் கிரையாகக் கொடுத்துவிட்டானே: ஐயோ நாசகாலமே: என்று தம்மை நிந்திப்பார்களென் றெப்போதும் அவரவர்களை மறவாமல் மனதிற் சிந்தித்துக்கொண் டிருக்கின்றதனால் அந்தவானர வீரர்கள் அவருக்கு அகத்திலும் புடைசூழ்வதானார்கள். இப்படி வானரவீரர்கள் தமதகத்திலும் புறத்திலும் புடைசூழ ஜானகியாரைப் பிரிந்தபின்பு ஒருவிதத்தில் தம்முடைய கண்களையொத்திருக்கின்ற தாமரைப்புஷ்பங்களு மிதழ்குவிந் துறங்குகின்ற இராத்திரிகாலத்திலு நித்திரையில்லாத கண்களையுடையவராய் துக்கித்துக்கொண் டிருக்கின்ற ஸ்ரீராமபத்திரர் இலங்கைக்குச் சமீபமாயுள்ள தென் சமுத்திரத்தைக் கண்டார்.

சமுத்திர வர்ணனை.

கவி.

சேயகாலம் பிரிந்தகலத் திரிந்தான் மீண்டுஞ் சேக்கையின்பால்
மாயன்வந்தா னினிவளர்வா னென்றுகருதி வருந்தென்றல்
தூயமலர்போ னுரைத்தொகையு முத்துஞ்சிந்திப் புடைசுருட்டிப்
பாயலுதறிப் படுப்பதே யொத்ததிரையின் பரப்பம்மா.

மாயனென்னுந் திருநாமத்தையுடைய லோகாராட்டியன் அநேககாலமாய்த் திருக்கண் வளர்ந்தருளாமல் தன்சயனஸ்தானத்தை விட்டுப்போய் வெகுதூரந்திரிந்து இப்பொழுது மீண்டுவந்தானுகையால், இனிப்பழையபடியே பள்ளிகொள்வானென்று நினைத்து தென்றிசையிருந்துவரும் மந்தமாருதமானது வெண்மையாகிய புஷ்பத்தைச் சிந்துவதுபோல நுரையையு முத்துக்களையுஞ்சிந்தி, நெடிதாகிய பாயலைச் சுருட்டியுதறி மறுபடியும் விரிப்பதுபோல அந்தக்கடலலைகளின் பரப்புகள் சுருண்டு பரவிப்பாய்ந்தன. பெருகிவழிகின்ற கண்ணீராகிய கடலினடுவில்நின்று சீதாபிராட்டியார் விசனப்பட்டுக்கொண் டிருக்கின்றதனுல், தமக்குவந்த பழிக்கு மன்மதனுடைய பஞ்சபாணத் திற்கும் இலக்காயிருக்கின்ற ரகுநாயகருடைய அழகிய திருத்தோள்களை, சமுத்திரங்கொழிக்கின்ற அலைகளிலிருந்து தென்றற்காற்றானது கிரகித்துக்கொண்டுவந்து தூவுகின்ற சிறிய நீர்த்துளிகள் கருமானுடைய உலைக்களத்தில் துள்ளியெழுகின்ற நெருப்புப் பொறிகளைப்போல என்ன காரணத்தினுலோ சுறுக்கிடும்படிச்சுடத் தலைப்பட்டன.

ஜானகியாகிய பிராணநாயகியைப்பிரிந்த வியாகூலத்தால் நேற்றுகண்ட திருமேனி இன்றுகண்டவர்களுடைய கண்களுக்கு நிறம்வேறுபட்டு அடையாளந்தெரியக்கூடாமல் நாளுக்குநாள் இளைத்துக் காணத் தக்கதாக உயிர்நிலைதளர்கின்ற ஸ்ரீராமனுகிய மருமகனைக்கண்டும் என்றழையாமல், ஐயா! உன்னுடைய நாயகியைப் பறிகொடுத்தனையா? உனக்கும் ஆபத்துவந்ததா? என்று மேல்விழுந்துமழாமல், என்றும்வராத இந்தச் செல்வமருமகன் மாமியார்வீடுதேடி அபூர்வமாக வந்ததையு நினையாமல், தன்மகளாகிய சீதையை இராவணன் கொண்டுபோனதைக் குறித்துத் தனக்குச்சம்பவித்த சோகத்தினுல் மெய்மறந்து, தன்னுடனேகூடத் துணையாயிருக்கின்றவர்களுமில்லாமல், ஒற்றைக்குரலாய்த் தனியே கதறிக்கொண் டிருக்கின்ற அக்கடலினுடைய அலைகளின்மேல் தவழ்ந்து விளையாடுகின்ற இளந்தென்றலாகிய தன் பிள்ளை அந்தக்கடற்கரையிலுள்ள தேனொழுகுகின்ற புன்னைப்புஷ்பத்தின் மகரந்தப்பொடியைக் கந்தப்பொடியாக வாரிக்கொண்டுவந்து, அடிக்கடி ஸ்ரீராகவப்பிரான்மேற் பூசி, தனது தமக்கையின் மணுளனுகிய மைத்துனன் முறையைக்கொண்டாடும். அக்கடலினிடத்திற் பவளக்கொடிகள் படர்ந்திருப்பன எப்படியிருக்கின்ற தென்றால் - தம்முடைய திருத்தோள்களுக்கு முன்பு ஒப்பாகாத மேருமுதலாகிய பலமலைகளும் சிறிது ஒப்பாரும்படி மிகவுமெலிவுகூர்ந் திருக்கின்ற சக்கரவர்த்தித் திருமகனுக்கு எதிரே ஏழுலோகத்தாரும் கிட

சின்மேற் கொள்ளத்தக்க கற்புக்கிருப்பிடமாகிய சீதாதேவியின் திருவாயை ப்போல் ஒப்பற்றனவாய்த் தோன்றி அவருடைய பிராணனை வாட்டுகின்ற வைகளாகையால், இவைகள் ஜீவகோடிகளை இம்சிக்கின்ற எமன்தானோவெ ன்று அவர் பயப்படும்படி யிருக்கின்றன. அந்தக்கடலானது என்மகளாகிய சீதையானவள் ஒழியாததுன்பத்தை அநுபவித்துக்கொண்டு இலங்கையில் தனியே தவஞ்செய்கின்றது அவளது பர்த்தாவாகிய உம்முடைய கௌ ரவத்திற்குத் தகுதியா யிருக்கின்றதோ வென்று கண்ணீர்ததும்புவதுபோ ல் முத்துக்களைச்சிந்தி, கையைவிரித்து மார்பிலடித்துக்கொண்டு, சுவாமிதிரு வடியில் விழுந்து முறையிடுவதுபோல அலைகளெழுந்து மடங்கிவிழும்படி இரையத் தொடங்கியது.

மற்றும் ஆதிசேஷனுடைய முடியின்மேற் கிடக்கின்ற பூமியே அம்மிக் கல்லாக, மேலேயெழும்பிச் சிதறுகின்ற சிறுதுளிகளே தெளிநீராக, புனித மர்கிய நீர்க்குழவியைச் சுழற்றிச்சுழற்றி, வெளுத்தநுரையாகிய சந்தனத் தை ஸ்ரீராமச்சந்திரனுடைய விரகாக்கினியால் வெதும்புகின்ற திருமேனியில் அந்தவெப்பந் தணியத்தக்கதாக அள்ளிப்பூசும்படி அக்கடலானது அலையாகி ய தன் கையினால் அரைப்பதுபோலவு மிருந்தது. மேலுமக் கடல் குயிலை யொத்த பிராட்டியாருடைய துயரத்தைநீக்கித் தேவர்களுக்குச் சம்பவித்த குறையை முடிக்கும்படி கையிலே கோதண்டத்தையேந்தி முதுகின்புறத்தில் அம்புப்புட்டிலைத்தாங்கி அதிககோபத்துடனே சத்துருக்கள்மேல் யுத்தத்திற் காக வந்திருக்கின்ற கங்கை நாட்டையுடைய தசரதகுமாரனைப் பார்த்து மனங் குதுகளிக்கும்படி, அலைகளாகிய கைகளைத் தூக்கிநீட்டிக்கொண்டு எதிரே ஓடி வந்து ஆர்ப்பரிக்கிறதுபோலவு மிருந்தது. இவ்விதமாகிய சிறப்பினையுடைய தென்சமுத்திரத்தின் கரையில் இரகு குலோத்தமர் வந்துசேர்ந்து, அந்தக்க டலுக்கும் ஏழுபங்கு அதிகமாக அபிமானமும் - துக்கமும் — ஆசையும் - உ திக்கும்படி இனிமேல் என்னவிளையுமோவென்று எண்ணமிட்டுக்கொண் டிரு ந்தார். இவரிப்படியிருக்க - பின்பு லங்காபட்டணத்தில் நடந்த காரியங்களைக் குறித்தும் நிகழ்ந்தபொருள்களைக்குறித்தும் சாங்கோபாங்கமாகச் சொல்லு வோமாக.

கடல்காண் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

இரண்டாவது,

மந்திரப் படலம்.

இப்படலத்தில் இராவணன் பிரமதேவனேவலால் மயன்புதுக்கிய இலங்கையைக்கண்டு சந்தோஷித்து மந்திராலோசனைச்சபை கூட்டுவித்ததும், அச்சபைநடுவில் கொலுவீற்றிருந்த இராவணன் மந்திரத்தலைவர்களிடத்தில் தனக்குநேர்ந்த விபத்தைக்கூற வதற்கவர்கள் தனித்தனி தங்கள்கருத்தை யுணர்த்தியதும், பின்பு கும்பகர்ணனெனவன் அவன்செய்த தூர்க்கிர்த்தியங்களை யெடுத்துக்கூறி இனி நடத்தவேண்டுவ திது வென்று ஒருவாறுணர்த்தியதும், அப்போதவன் கருத்திற் கிணங்கிய இராவணனுக்கு இந்திரஜித்தானவன் தன்பராக்கிரமங்கூறித் தேற்றியதும், அவன்தேற்றியவாற்றலை விபீஷணரானவர் கடிந்து தமது தமயனுக்குத் தம்மாற்கூடியவரையில் தகவுரைத்ததும், அவ்வா றுரைத்தும் இராவணனவரைக்கடிந்து தன்பராக்கிரமங்கூறி ஆக்கிரமித்ததுஞ் சொல்லப்படுகின்றது.

ஆஞ்சனேயராற் கொளுத்திய விலங்கையை மயன்புதுக்க இராவணன் மந்திராலோசனைச்சபை கூட்டுவித்தல்.

கவி.

பூவருமயனொடும் புகுந்துபொன்னகர், மூவகையுலகினு மழகுமுற்றுற
வெனவியற்றினன் கணத்தினென்பரால், தேவருமருள்கொளத் தெய்வத்தச்சனே.

ஆஞ்சனேயரால் தகிக்கப்பட்டு எரிந்து நீறுய்ப்போகிய இலங்காபுரியைப் பிர்மதேவர்வந்திருந்து தெய்வத்தச்சனாகிய மயனென்பவனை அழைப்பித்து முன்னிலுமநேகமடங்கு அழகுமிக்கதாய்ச் செய்யக்கடவாயென்று ஆக்கியாபிக்க, அவன் அப்படியே சுவர்க்கமுதலாகிய மூன்று உலகத்திலும் விசேஷமாகிய அழகுண்டாகத் தக்கதாக, இந்திரன் - குபேரன் - இவர்கள் முதலாகிய தேவர்களெல்லாம் இது அமராபதியோ? அளகாபுரியோ? தேஜோபதியோ? என்று சந்தேகமுற்றுப் பிரமிக்கும்படி ஒருக்ஷணப்பொழுதிலே நிர்மிதம்பண்ணினான். சகலலோக சிருஷ்டிகர்த்தாவாகிய அந்தப் பிரமதேவரே இப்படிச் செய்யவேணுமென்று அதனதனங்கங்களை யெல்லாங் குறித்துக்காட்ட அவருடைய நோக்கத்தின்படியே அந்த மயனானவன் சிருஷ்டித்தானுகையால், பழிப்பில்லாத உலகங்களையெல்லாம் பலகால் அழித்தழித்துச்செய்கின்றவனுக்குச் செய்தற்கரிதாகியதும் ஒன்றுண்டோ?

இப்படி ஆயிரத்தெட்டு மாற்றையுடைய சாம்பூநதமென்னும் பொன்னினாலும், கோமேதகம் - பவளம் - புஷ்பராகம் - மரகதம் - மாணிக்கம் - முத்து - வச்சிரம் - வைடூரியம் - என்கின்ற நவரத்னங்களாலும், நூதனமாய் மகாவினோதவிசித்திரமாகச் செய்யப்பட்ட திவ்விய சுந்தரத்தையுடைய இலங்

காபட்டணத்தை ராவணேஸ்வரன்வந்து பார்த்து, உடனே தேவலோகத்தையும் இதனேடு ஒப்பிட்டுப்பார்த்து, இந்நகரம் முன்னிலும் அதிக அழகையும் - அற்புதத்தையும் - உடையதா யிருக்கின்றதென்று நினைத்து, அதற்குமுன் இலங்கை அழிந்துபோய்விட்டதென்று தான்கொண்ட கோபமாறி மிகவுஞ் சந்தோஷப்பட்டான். பட்டணமுழுதும் செவ்வையாகப் பார்த்துச் சந்தோஷித்த தசக்கிரீவன் பிதாமகனுகிய அந்தப்பிரமதேவருக்குக் கிரமமாகப் பூஜார்ச்சனைசெய்து, மயனுக்கு மகிழ்ச்சியுடனே அருமையாகிய நானுவிதவஸ்துக்களையும் அன்புடன் வெகுமானங் கொடுத்தனுப்பினுன்.

பின்பு செழுமையாய்ப் பிரகாசிக்கின்ற மாணிக்கத்தினுற்செய்த பத்துலக்ஷந்தூண்கள்நிறுத்தி அதிக சிங்காரமாகக் கட்டப்பட்ட மகாமண்டபத்தில் சிங்கங்கள்சுமக்கின்ற உன்னதமாகிய ஆசனத்தில் பிரதாப லங்கேஸ்வரனவன்போய், சிரேஷ்டர்களாகிய சுற்றத்தாரும் மனுநூலையறிந்த பூரணமாகிய மந்திரித்துவத்தையுடைய வயோதிகப் பிரதானிமார்களும் - சேனுபதிகளும் தன்னைப்புடைசூழ, தன்மார்பிலணிந்த மணிமாலை மலர்மாலை முதலானவை மகாகாந்தியையும் பரிமளத்தையும் வீசி அசைய, தேவஸ்திரீகள் சாமரம்வீசும்படி வீற்றிருந்தான். அப்போ தவ்விராவணன் மந்திராலோசனை செய்யவேணுமென்று கருதி, அங்குள்ள முனிவர்களையும் - தேவர்களையும் - மலர்களினுலலங்கரிக்கப்பட்ட கூந்தலையுடைய ஸ்திரீகளையும் - பால்யர்களையும் - மற்றுமுள்ள அந்நியர்களையும் அப்பாற்போகச்சொல்லி, சகலசாஸ்திர பண்டிதர்களையும் - நெடுங்காலமாகத் தன்னுடன் பழகியிருக்கின்ற பேர்களையும் விருத்தர்களையும் - குணசாலிகளையும் - மந்திரி சிரேஷ்டர்களையும் - வரவழைக்கச்சொல்லி ஆக்கியாபித்துத் தன்னருகில் வைத்துக்கொண்டான். தன்மலர்மாலையிலுள்ள தேனைவிரும்பிவருகின்ற வண்டுகளையும் தனக்குக் குளிர்ச்சியைத்தரும்படியாய் வருகின்ற மந்தமாருதமாகிய தென்றற்காற்றையும் உள்வராதபடி ஆக்கியாபித்தான்.

இன்னும் நிறைந்தமைந்த நல்லகேள்வியை உடையவர்களா யிருந்தாலும், ஆண்மைக்குணநிறைந்த சிநேகராயிருந்தாலும், பந்துக்களாயிருந்தாலும் புத்திரர்களுக்கும் தம்பிமார்களுக்கும் சமானமானவர்களா யிருந்தாலும், அவர்களையும் மற்றின்னுமுள்ளவர்களையும் வரவொட்டாமல் தடுத்து உள்ளே நுழையாமல் விலக்கிவிடும்படி உத்தரவுசெய்து; திக்குகள்தோறும் காவற்காரரை வைத்தான். அந்தக்காவல்காக்கும் வீரர்களின் பிரதாபத்தைக்குறித்து என்னவென்று சொல்லுகிறது? உலகமெல்லாம் ஒருமிக்கக்கூடிஎதிர்த்தாலும் உள்ளங்கைக்குளிட்டு மூட்டுப்பூச்சிகளைப் போல நசுக்கிப் பிசைந்தெறியத்தக்க பலசாலிகளா யிருக்கின்றவர்க ளாகையால், அவர்கள்காவலிற் பறக்கின்ற பக்ஷிகளும் - எங்கும்ஓடித் திரிகின்ற மிருகங்களும் - மற்றஜெந்துக்களும் - சப்திக்கிறதற்கும் பலதிசைகளிலும் சஞ்சரிக்கிறதற்கும் அஞ்சி வாயைத்திறவாமல், அவ்வவைகள் இருந்தவிடத்திலேதானே அசைவற்ற சித்திரம்போல் ஸ்தம்பித்திருந்து விட்டன.

இராவணன் மந்திரிமார்களைப் பார்த்துக்கூறல்.

கவி.

தாட்சியிங்கிதனின்மேற் றருவதென்னினி
மாட்சியோர்குரங்கினு லழிந்தமாநகர்
ஆட்சியுமமைவுமென் னரசுநன்றெனுச்
சூட்சியின்கிழவரை நோக்கிச்சொல்லினன்.

இப்பால் செவிகளிலணிந்த மாணிக்கக் குண்டலங்களும் - தோள்களிலணிந்த நவரத்தின வாகுவலயங்களும் - மார்பிற்பூண்ட முத்துமணித் தாழ்வடங்களும் - முன்கையில்தரித்த மரகதக்கடகங்களும்-ஜாஜ்வல்யமாய்ப் பிரகாசிக்கவும், சிரசிற்கவித்த வச்சிரகிரீடங்கள் இருளைக்கோபித்துத் துரத்தவும், சபாநாயகனுய் உன்னதமாகிய சிங்காசனத்தில் வீற்றிருந்த ராவணேஸ்வரன் தான்நினைத்த நினைவை வெளியிடும்பொருட்டுத் தனக்குச் சமீபத்திலிருந்த மந்திரத்தலைவர்கள் முகத்தைப்பார்த்துச் சொல்லுகிறுன். கேட்டீர்களோ சபையார்களே ! ஒருகுரங்கினுலே என்னுடைய அழியாத பெரியலங்காபட்டணம் அழிந்துபோயிற்று. இதைப்பார்க்கிலும் இனிமேலும் வரத்தக்க மானத்தாழ்வு என்ன இருக்கின்றது ? என்னுடையபராக்கிரமமும் - குறையாத சம்பத்தும் - இராஜரீகமும் - அழகாயிருக்கின்றன. என்றுசொல்லி, மற்றும் அந்தச் சிறுகுரங்கு சுட்டிச்சூறையாடும்படி நம்முடைய நகரமானது சமூலமும்வெந்து பொடியாய்விட்டது. பந்துஜெனங்களும் சிநேகிதர்களு மடிந்தார்கள். எங்கு மிகுதியாகிய உபத்திரவ முண்டாயிற்று, இப்படிப்பட்ட அனர்த்தம்விளைந்தும் இந்தச்சிங்காசனத்தில் என்சரீரம் சாவாமல் ஜீவித்திருக்கின்றது.

இலங்கையில் கிணறுகள் துரவுகளெல்லாம் இன்னமும் உதிரவூற்றுச் சுரந்தபடி யிருக்கின்றது. ஊருக்குள் ஓர்குரங்குவந்திட்டதீ ஆறவேயில்லை. ஸ்திரீகளின் தலைமயிரெல்லாம் அகிற்புகை மணப்பனமாறிச் சுடுநாற்ற நாறிக்கொண்டிருப்பன. நாமெல்லாம் அந்தச் சுடுநாற்றத்தைத்தானே அநுபவித்துக்கொண்டிருக்கிறேம். நல்லது: பின்னையொன்று மில்லாமற்போனுலும் இப்படிச் சண்டைசெய்து வீண்பிரமாதத்தை விளைத்துப்போன குரங்கு மாண்டுபோய்விட்டதென்கின்ற சொல்லாவது நமக்குக் கிடைக்கலாகாதா ? அதுவுமில்லை. ஆகையால் நாமெல்லாம்பிறந்தும் பிறவாதவர்களானே மென்பதைப்பெற்றேமேயல்லாமல், நம்தெண்ணத்தின்படி முடித்திலோம். இனிநமக்கென்ன பெருமையிருக்கிறது ? அபகீர்த்திக் காளாயினேம். என்று இவ்விதமாக ராவணன்சொல்லினுன்.

பிரகஸ்தனேன்னும்சேனுபதி இராவணனுக்குச் சொல்லல்.

கவி.

என்றவனியம்பலு மெழுந்திறைஞ்சினன்
கன்றியகருங்கழற் சேனைகாவலன்

ஒன்றுள துணர்த்துவ னொருங்குகேளென
நின்றனனிகழ்த்தினன் புணர்ப்பினெஞ்சினன்.

கடுரமாகிய கோபத்தையுடைய சேனாபதியான பிரகஸ்தனெழுந்து நமஸ்கரித்து, சுவாமி! அடியேனொரு விண்ணப்பஞ்செய்கிறேன். அதைத் தாங்கள் கேட்டருளவேண்டும். என்று நின்றபடியே சொல்லுகின்றான். இராமலட்சுமணர்களாகிய மனிதர்களை வஞ்சித்து அவர்களுடைய ஸ்திரீயை எடுத்துக்கொண்டு வருகிறது பயந்தவர்கள்செய்கிற காரியமென்று நான்முன்னமே தானே அறிவித்தேன். சகலத்தையும் அறியத்தக்க புத்திகோசரத்தையுடைய நீர், அது அற்பமாகிய செய்கையென்று எனக்குத்தோன்றிச் சொன்னதாக எண்ணி, அதினுட் பிரிவுகளாகிய விஷயங்களைக் கவனியாமற்போனீர். அவர்கள் கரதூஷணாதியரைக்கொன்ற கள்ளர்கள். மேலும் உம்முடைய தங்கையாருடைய மூக்கையறுத்த வீரர்கள். ஒருகுரங்கைத் தூதனுப்பி அக்ஷயன் முதலானவர்களையு மாயச்செய்து வெகுதுன்பத்தை விளைவித்தவர்கள். அப்படிப்பட்ட சத்துருக்களை அப்பொழுதேகொல்லாமல்விட்டுவிட்டு, இப்பொழுது அரசாட்சி யழிந்ததென்று விசனப்படுகிறீர். சாம பேத தான தண்டமென்கின்ற நால்வகை உபாயங்களுளொன்றாகிய தண்டமென்று சொல்லப்பட்ட போர்செய்து வெல்லுதற்கு உரியவர்களைக் கண்ணிலேகண்டும், அது சாத்தியமான காரியமாயிருந்தும், இராஜரீகம் செய்கிறவர்கள் அப்படிச்செய்யாமற் பொறுத்துக்கொண் டிருப்பார்களோ? பகைவர்களுடைய மதத்தையடக்கி அரசாளத்தக்க ஆண்மையையுடைய நாம் இனியவர்களை வணங்கிப் பிழைக்கப்போகின்றோம்?

ஐயா! நீர் இதுவரையிலும் உம்மோடெதிர்த்த தேவர்கள் - அசுரர்கள் என்றுசொல்லு மனைவரையும், விஜயம் - புஜபலம் - வீரம் - தீரம் - இவையாவுமற்று ஓடி யொளிக்கும்படி ஒடுக்கித் திரிலோகாதிபதியாய் ராஜ்யபாரம் பண்ணிக்கொண்டு வந்தது உம்முடைய வீரத்தினாலேயோ? அல்லது பொறுமையினாலேயோ சொல்லும். சத்துருக்கள் பிராணநாசமாம்படி அவர்களை அதம்பண்ணாமல் இந்த லங்கையிலே சௌக்கிய மநுபவித்துக்கொண்டிருப்போமானால், அந்தக்குரங் கின்மட்டிலேதானே போமா? இனியொரு கொசுகுவந்து உபத்திரவஞ்செய்தாலும் விலக்கக்கூடுமோ? இந்தவூரைச் சுட்டெரித்துப்போன குரங்கைப் பின்தொடர்ந்துபோய் அதையும், அக்குரங்கை இவ்விடத்திற்கு அனுப்பிய மனிதர்களையுங்கொன்று பழியைத் தீர்த்துக்கொள்ளாமலிருக்கிறோம். விருதாவாய் வாயினாலே பலகாலுஞ் சொல்லிக்கொண்டும், மனதினாலே நினைத்துக்கொண்டுமிருந்தோமேயாகில்; நம்முடைய ஆண்மைக்கு எந்தவிதத்திலும் குறைவுவரும். என்று பிரகஸ்தன் சொல்லினான்.

மகோதரன் சோல்லுதல்.

கவி.

மற்றவன்பின்னுற மகோதரப்பெயர்க்
கற்றடந்தோளின னெரியுங்கண்ணினன்

முற்றுறநோக்கினன் முடிவுமன்னதால்
கொற்றவகேளென விளையகூறினன்.

இப்படியாகப் பிரகஸ்தனென்பவன் சொல்லியபிறகு மலையைப்போலும் பருத்ததோள்களையுடைய மகோதரனெழுந்து அக்கினிஜொலிக்கின்ற கண்களையுடையவனாகி திசைகளனைத்தையும் திரும்பித்திரும்பிப் பார்த்து, ஐயா இராவணேஸ்வரனே! இப்போது பிரகஸ்தன் சொல்லிய வார்த்தையின்படி நடப்பதுதான் முடிவு. நானும் சில விஷயங்கூறுகிறேன் அதையும் சற்றுச் செவிசாய்த்துக் கேட்பீரென்று சொல்லுகிறான். தேவரீருடைய வீர சௌரியங்களுக்கும் ஆக்கினைக்கும் பயந்து ககனவாசிகளாகிய தேவர்களு மடங்கிப்போனார்கள். சித்தர்களும் திசைதிசையாய்ச் சிதறினார்கள், அசுரர்களும் செருக்கழிந்தார்கள், யாவருந் தங்களுக்கு இறைவர்களென்று வணங்குகின்ற பிரமருத்திராதியர்களாகிய திரிமூர்த்திகளும் ஒதுங்கிக்கிடக்கிறார்கள். இன்னம் வேறென்ன விசேஷித்துச் சொல்லத்தக்கது? சகலருடைய பிராணனையும் வாங்குகின்ற மகாபலத்தையுடைய யமனும் உம்மைத் தன்னுடைய பிராணனை வாங்குகின்ற யமனென்று நினைத்து, உம்முடைய ஆக்கினையைச் சிரசாகவகித்து, நீரிட்ட ஏவலைச் செய்துகொண் டிருக்கின்றான். இரிஷபவாகனாரூடனாகிய உருத்திரமூர்த்தியுடனேகூட அவருடைய வெள்ளியங்கிரியையும் அடியோடே பேர்த்து அண்டத்தைமுட்ட அங்கையாலெடுத்து அட்டகாசஞ்செய்த அதிபராக்கிரமத்தையுடைய நீர், சுள்ளியாகிய சிறுகொம்புகளில் தங்கித்திரிகின்ற ஒரு குரங்கினுடைய தோள்வலியை விசேஷித்துச்சொல்லி, அதற்கு உம்முடைய புஜபலத்தை இளைத்ததாக எங்களுடனே இகழ்ந்து பேசுகின்றீர்.

பூலோகத்திலும், சுவர்க்கலோகத்திலும், பாதாளலோகத்திலும், சகலமான இடங்களிலும், உம்முடைய திருஷ்டிக்குத்தட்டுப்படாதவர்கள் ஆரிருக்கின்றார்கள்? ஆயினும் — நீர் யுத்தஞ்செய்து உம்மாலே ஜெயிக்கப்படாத சூரர்கள் தாம் எவர்களுண்டு? ஒருவருமில்லையே: இப்படியிருக்க -அந்தச் சொற்பமானவர்களைக் குறித்து இவ்வளவாக ஆலோசிக்கவேண்டுமா? இனி நீர் இப்படிக்கெல்லாந் துக்காக்கிரந்தராய்ப் பேசவேண்டாம். நானும் தடை சொல்லுகிறதில்லை. இப்பொழுது எனக்குச் செலவுகொடுத்து என்னை அனுப்பினீரேயாகில், இந்தக்ஷணமே அந்தக்குரங்கின் குலத்தை நிர்மூலஞ்செய்து, ஒடுங்காத வலிமையையுடைய அம்மனிதர்களின் உயிரையுமுண்டு, உம்முடைய பகையை நானே முடித்துவிடுவேன் என்று சொல்லினான்.

வச்சிரதந்தன் சொல்லுதல்.

கவி.

இச்சிரத்தவனுரைத் திறக்குமெல்லையில்
வச்சிரத்தெயிற்றவன் வல்லைகூறினன்

அச்சிரத்தைக்கொரு பொருளின்றாயினும்
பச்சிரத்தம்பொழி பருதிக்கண்ணினன்.

இவ்வண்ணம் மகோதரன் சொல்லித் தன்னாசனத்திலிருந்த சமயத்தில் வச்சிரம்போலும் வலிவுடைய தந்தங்களையுடையவனானதால் வச்சிரதந்தனென்னும் பெயரினையுடையவனெழுந்து மிகவும் உருக்கமுடையவனைப்போல் பசிய இரத்தம்பொழிகின்ற கண்களையுடையவனாகி, தான்சிரத்தையோடு சொல்லும் சொற்களில் சாதிக்கத்தக்க யாதொருபொருளின்றாயினும், பெரிய விஷயங்களை ஆராய்ந்து சொல்பவனைப்போலச் சொல்கின்றான்.

ஓ திரிலோகபயங்கரனே! நீபோய் மனிதரையுங் குரங்குகளையும் - தரையிலிட்டுக் கைகளால் தேய்த்துத் தின்றுவிட்டுவாவென்று என்னையேவி நீர் இவ்விடத்தில்தானே யிராமல், வெகுதூரம் ஆலோசித்து ஆராய்கின்றதென்ன? என்னிடத்தில் ஏதாவது உமக்குச் சந்தேகமுண்டா? முன்பு எந்த உலகத்திலும் உம்முடைய ஏவலைக்கேளாத சத்துருக்களைக்கருவறுத்து சகலரையும் உமக்கு அடிமையாகும்படிசெய்த நான், எவ்விடத்திலேயோ எதுவோ ஒருகாரியத்திலே தவறிப்போனதாக நினைத்தோ? இந்தக் காரியத்தை யென்னை முடிக்கச்சொல்லி எனக்கு உத்தரவுசெய்யாம லிருக்கிறீரென்றான்.

துன்முகன் சொல்லுதல்.

கவி.

நின்மினென்றவன்றனை விலக்கிநீயிவை
என்முனுமெளியர்போ லிருத்தியோவெனா
மன்முகநோக்கினன் வணங்கிவன்மையால்
துன்முகனென்பவனினையசொல்லினான்.

இவ்வாறு சொன்ன வஜ்ரதந்தனைத் துன்முகனென்பவன் பார்த்து, நீயதற்குத் தக்கவனல்ல நில்லென்று விலக்கி, மகாதீரத்தோடுந் தானெழுந்து இராவணேஸ்வரனைப் பார்த்து, நீரிவைகளை என்முன்னும் பலஹீனரைப்போலச் சொல்லுகின்றீரோ? என்று கைகூப்பித்தொழுது தான்சொல்லத் தலைப்பட்டான்.

கேளும் பிரதாபலங்கேஸ்வரனே! அஷ்டகஜங்களும் உம்மை ஜெயிக்கத்தக்க பலமுடையவைகளல்ல. தேவர்களும் பலத்தில் எளியவர்கள். முக்கண்படைத்த சிவபெருமானுடைய கைலாசகிரியும் உமக்குப் பலமற்றதாயிருக்கின்றது. இவைகளெல்லாம் இப்படியிருக்க - இனி மனிதர்களும் குரங்குமே பலத்தில் மிகுந்தவர்களானால், திரிலோக கண்டனாகிய ஓ ராவணேஸ்வரனே! உமக்குண்டாகிய பலமெல்லாம் எங்கேபோயிற்று? ஐயோ! நம்மிடத்தில் எப்போதும் சிறப்பான செய்கைகள் அநேகமாயிருக்கின்றன. அற்பச்செய்கையே சிறியவர்களுக்கு உரியதாயிருக்கின்றது. ஆகையால் நம்முடைய சத்துருக்கள் பலத்தையுடையவர்களென்றாலும், நாம் அவர்களுக்குப்பயந்து நம்முடைய உயிரினிடத்தி லிச்சைவைத்துக்கொண்டு பின்னிடுகிறதா? நீரிப்போ

மூது ஆலோசித்த ஆலோசனை, பூமியிலே சஞ்சரிக்கின்ற மனிதர்களையும் குரங்குகளையும் நாம் உண்ணுகிறதற்கு ஏற்றதாகவே யிருக்கின்றது. அப்படியே உண்ணுகிறதற்காக நாமஞ்சுவோமானால், அப்பால் ராக்ஷதர்களைப் பார்க்கிலும் கீழ்ப்பட்டவர்கள் யாரிருக்கின்றார்கள்?

ஓ தசக்கிரீவனே! இப்படி நாமஞ்சுவதினால் நம்முடைய நகரத்தின் வாசலைக்கடந்து உள்ளேவருவதும், நாம் குடியிருக்கிற ஊரிலே நெருப்பை வைப்பதும், எதிர்த்தவர்கள் இறக்கும்படி சண்டைசெய்து போவதும், குரங்குக்கு எளிதாயிருக்கின்றது. இராக்ஷதர்களுக்குக் கடலைநீந்துகிறதே அரிதாயிருக்கிறது. இந்தமட்டும்வந்து உம்முடைய அரண்மனையையும், கோட்டையையும், சம்பத்தையும், மிதமில்லாத சேனைகளையும், உமது வீரத்தையும், அச்சமில்லாமற் கண்ணினாற்பார்த்து; மனதினால் மதித்துப்போய் ஆர்தான் உலகத்தில் உயிர்தப்பிப் பிழைத்திருக்கின்றார்கள்? பொருந்திய காரியத்தையே நினைத்தாலும், உறுதியையே ஆலோசித்தாலும், ஜெயிக்கத் தக்கதையே விரும்பினாலும், போர்த்தொழில்செய்யத் துணிந்தாலும், அவர்களிருக்குமிடத்திற்போயல்லவோ ஆகவேண்டியது? ஆகையால் அவ்விடத்திற்போய் அவர்கள் நிர்மூலமாகும்படி கொல்வதேகாரியம். என்று அவனுக்குத் தெரியச்சொன்னான்.

மகாபாரிசன் சொல்லுதல்.

கவி.

காவலன்கண்ணெதி ரவனைக்கைகவித்
தியாவதுண்டினிநமக் கென்னைச்சொல்லினான்
கோவமும்வன்மையுங் குரங்குக்கேயெனா
மாபெரும்பக்கனென் றொருவன்வன்மையான்.

இப்படி கூறிய அந்தத் துன்முகனை இலங்காதிபதியின் கண்ணுக்கெதிரே மகாபாரிசனென்னும் பராக்கிரமத்தையுடைய மந்திரியானவன் கையமர்த்திச் சொல்லுகின்றான். ஓ தேவகுலகாலனே! கோபமும் சாமர்த்தியமும் குரங்குக்கே யல்லாமல், இனிநமக்கென்ன விருக்கின்றது? முன்னம் அந்தக் குரங்குடனே பலமில்லாதவர்களிற் சிலபேர்தான் யுத்தஞ்செய்து மடிந்துபோனார்கள். அவர்களுடனே நம்முடைய புஜபலமெல்லாம் போய்விட்டதா? அல்லது குரங்குவந்து இட்ட நெருப்பினால்வெந்துபோன லங்கையுடனேகூட ராக்ஷதர்களுடைய ஆண்மையும் வெந்துதான்போயிற்று? அம்மனிதர்கள் சுயேச்சையாய் ஏவுவதும், குரங்குவந்து இந்தவூரைக் கொளுத்துவதும், இராக்ஷத சேனையை மடிப்பதும், அதினிமித்தம் மற்றவர்களெல்லாம் விசனப்பட்டுக் கூட்டங்கூடி ஆலோசிப்பதுமானால்; அப்பால் நடக்கவேண்டியதைக் குறித்துச் சொல்ல வேணுமா? இப்படிக்கெல்லாம் இருந்திருந்து, இவைகளை ஒருவரோடொருவர் ஆலோசனை பண்ணவும் வாயினாற் சொல்லவும் எனக்குச் சம்மதியா யிருக்கவில்லை. அந்த மனிதர்களையும் குரங்கையுங் கொன்றுதின்

றுலொழிய ஒரு எண்ணமுங் கைகூடிவரமாட்டாது. என்று சண்டைசெய்யவே எத்தினப்பட்டு அதிக கோபமாய்ச் சொன்னான்.

பற்பல மந்திரிகள் பற்பலவாறு கூறுதல்.

கவி.

மற்றவன் பின்னுற மற்றையோர்களும்
இற்றிதுவேநல மெண்ணமற்றிலென்
றுற்றனவுற்றன சொல்லியோங்கினர்
புற்றுறையரவெனப் புழுங்குநெஞ்சினர்.

அவனுக்குப்பின்பு பிசாசனென்று பெயர்பெற்றவனெழுந்து, மேற்கூறிய மகாபாரிசன் முதலாயினோரைப் பார்த்து, நம்முடையராஜா செய்கின்றதைப் பார்த்தால் வீணாயோசிக்கிறதும் சீரம் குன்றுகிறதுமாயிருக்கிற காரியமேயல்லாமல் ஒன்றும் சாரமில்லாதபடியினாலே, நாமெல்லாம் பட்டணத்தைவிட்டுப் பலதிசையிலும்போய் நம்முடைய வாழ்வை யொழித்துவிடவேண்டியதாய் நேர்ந்ததென்று நெருப்பைப்போலப் பொங்கிச்சொன்னான். அவன்சொன்னவுடனே சூரியசத்துருவென்பவன் அப்பிசாசனோடுங்கலந்து, நம்முடைய ராஜாவின்குணமோ இப்படியிருக்கின்றது. இவருடைய ஆலோசனையும் ஒருவிதமாயிருக்கின்றது. ஆகையால் காணுமிடத்தில் மனிதர்களே பெரியவர்களும் நாம்சிறியவர்களு மாய்விட்டோம். இனிவேறென்ன இருக்கின்றதென்று சொன்னான். அப்பால் யாகசத்துருவென்கிறவ னெழுந்து, ஓ நண்பர்களே! இராக்ஷதர்கள் யுத்தஞ்செய்வதிலும் பலத்திலுந் தாழ்ந்தவர்களா? இது ஒருவராலே சொல்லத்தக்கதா? மனிதர்களைக் குறித்துச் சகலருங் கூடியிருந்து மந்திராலோசனை செய்கிறமட்டும் வந்துவிட்டதே. ஆ! ஆ! நன்றாயிருக்கின்றதென்று சொன்னான். பின்பு தூமாக்ஷன் மகாவுக்கிரத்தோடு ராவணனைப்பார்த்து, குரங்கின் கூட்டத்தையுடைய மனிதர்களை நாங்களொருபொருளாகச் சொல்லமாட்டோம். மேலும் - சூலப்படையையுடைய ருத்திரனைக்குறித்துச் சொன்னாலும் லக்ஷியஞ் செய்யமாட்டோம். எப்படியாயினும் அவர்களைக் கொல்லுகிறதே யுக்தமென்று சொன்னான். அவனுக்குப்பின் மற்றமந்திரிமார்களும் இதுவேயுக்தமென்று புற்றிலிருக்கின்ற சர்ப்பங்களைப்போல் மனம்புழுங்கி, அவரவர்க ளிருந்தவிடத்திலிருந்து சொன்னார்கள்.

கும்பகருணன் அமைச்சராதியரைத் தடுத்துத் தனதுகருத்தை யுணர்த்தல்.

கவி.

வெம்பிகலரக்கரை விலக்கிவினைதேரா
நம்பியரிருக்கவென நாயகனைமுன்னா
எம்பியெனசிற்சிலுரை செய்வலிதமென்னாக்
கும்பகருணப்பெயரி னானிவைகுறித்தான்.

இந்தப்பிரகாரம் அதிககோபாவேச முடையவர்களாய்ச் சொன்ன மந்திரிமார்களையெல்லாம் கும்பகர்னனென்பவன் கையமர்த்தி, நீங்கள் காரியாகாரியந் தெரியாமற் பேசுகின்றீர்கள். சும்மா இருங்கள். என்று தடுத்துக்

தமையனாகிய தசக்கிரீவனைப்பார்த்து, வாரீர் அண்ணா! நான் இதமான சிலவார்த்தைகளைச் சொல்லுகிறேன் கேளுமென்று சொல்லத்தொடங்கினான். நீர் சிரேஷ்டமிக்க முதற்குலமாகிய பிரமகுலத்திலே உற்பவித்தீர், சகஸ்திரவேதங்களையும் ஓதி, அவைகளின் அர்த்தங்களையுந் தெளிந்து, ஞானோத்கிருஷ்டரா யிருக்கின்றீர். இப்படிப்பட்ட நீர்பாபகிர்த்தியத்தை விரும்பிச்செய்ய ஏற்பட்டீர். சித்திரவிசித்திரமா யிருக்கின்ற மகாபட்டணத்தை அக்கினிதத்தமாம்படிசெய்தீர். என்னுடைய ராஜரீகம் அழிந்துபோய்விட்டதென்று வருத்தப்படுகின்றீர். இராஜதர்மந்தப்பி அந்நியகுலத்தா னொருவனுடைய பெண்சாதியை இச்சித்து எடுத்துவந்து சிறைவைத்தீர். இதனால் நீர் இந்தப்பாபகர்மமொன்றுமாத்திரமா சூழப்பெற்றீர்? கொடியபாபாத்மாக்கள் அடையத்தக்க மகத்தாகிய பழியையும் அடையப்பெற்றீர். இதைப் பார்க்கிலும் அதிகமாகிய பழி வேறொன்றுண்டோ? இப்பொழுது நகரமானது அழிந்துபோய் விட்டதென்று வெட்கப்படுகிறீர்.

ஐயா! உம்முடைய பிராணனுக்குச் சமானமாகிய தேவிமார்களெல்லாம் உம்மைக் குறித்து அடிக்கடி சிரிக்கும்படி ஒருவன் பெண்சாதியாயிருக்கின்றவளுடைய காலிலே நீர் போய் விழுந்துவிழுந்து வணங்க, அவள் வைது மறுக்கும்படியா யிருக்கின்றதே: இதைப்பற்றி நாணமில்லையா? இது வென்ன கீர்த்தியா? என்றைக்கு ஒருவனுடைய மனையினிடத்திலிருந்த பதிவிரதையைக் கொண்டுவந்து இரங்காத கடினசித்தமும் அதற்குத்தக்க கடினச்செய்கையு முடையவனாய் முறையழிந்து சிறைவைத்தீரோ? அன்றைக்கே ராக்ஷதர்களுடைய பெருமை குலைந்து போயிற்று. அபகீர்த்தியை யுடையவர்களும் புகழைப் பெறுவதுண்டோ? குற்றமற்ற பரதாரத்தையெடுத்துவந்து சிறைவைத்த நீர் தோஷமில்லாத கீர்த்தியை இச்சிக்கின்றீர். வாய்மாத்திரம் படாடோபமாய் வீரம்பேசுகின்றது. மனிதரென்பதைக் குறித்து அபிமானமும் வாதிக்கின்றது. ஆகையால் நம்முடைய பிரதாபம் நன்றாயிருக்கின்றது. உயர்ந்தவர்கள் செய்வதற்குரிய நல்ல செய்கையைச் செய்யவில்லை. நம்முடைய ராக்ஷத குலத்துக்கேற்ற துஷ்கிர்த்தியமே செய்தீர். இனியந்தச் சீதாபிராட்டியை விட்டுவிட்டோமானாலும், நாம்பராக்கிரமத்தில் மிகவும் இளைத்தவர்களாகின்றோம். அதைவிட அவர்கள்கையினால் மாண்டுபோனாலும் நல்லதாகும். அது பழிப்பாக மாட்டாது.

மேலும் மரங்கள் அடர்ச்சியாயுள்ள இருண்டவனத்தில் தனக்கு உப பலமில்லாமல் ராமன் ஒருவனேயிருந்து வில்வளைத்துக் கரதூஷணதிரிசிரர்களுடைய சேனைகளை நாசமாக்கி, அவர்களையுங் கொன்று வென்று களைபறித்தான். அதுவும் அவனுடைய சாமார்த்தியத்திற்குப் போதுமானதல்ல. இனி நமக்கும் அந்தக்கதிதா னாகப்போகின்றது. அதற்குமேல் நமக்கென்ன வல்லமையுண்டு? அந்தமானிடர்கள் நம்மை ஜெயிக்கத்தக்கவர்களானாலும் சார

மில்லையென்பதாக நினைத்து நாம் விலகிநில்லாமல், அவர்கள்மேற் படையெடுத்துப்போய் நெருங்கி யுத்தஞ்செய்து அவர்களைக்கொல்லாமற் போவோமானால் தேவர்கள் முதலாகிய ஏழுலோகத்தாரும் ஒருமிக்க அந்தப்பகைவர்களுடனே கூடிக்கொள்வார்கள். இவ்விதமாக அவர்களுக்குப் படைத்துணை சேர்கிறதற்குமுன்னே ஒருநொடிப்பொழுதில் நாம் கடலைத்தாண்டிப்போய், அம்மனிதர்களும் குரங்குகளும் வேறோரிடத்திலோடிப் போகாதபடிவளைத்து, வேருடனே மடிந்துபோகப் பஸ்மபடலஞ்செய்வதே காரியமென்றுசொன்னான். அந்தவார்த்தையைக்கேட்ட ராவணேஸ்வரன் அவனைப்பார்த்துச் சொல்லுகிறான். அப்பா தம்பி கும்பகர்ணா! நீநல்ல தந்திரஞ்சொன்னாய். நானும் இப்படியே யோசித்தேன். இதைவிட்டு இனி வேறொருயோசனை செய்கிறது காரியப்பழுதாகும். இந்தநொடியிற்போய்ச் சத்துருக்களை யெல்லாங் கொன்று குவித்துவிட்டுவருவோம். ஆகையால் நமது சேனாசமுத்திரத்தை யெல்லாம் இப்பொழுதே பிரயாணப்படுத்தும்படிச் செய்யக் கடவாயென்று ஆக்கியாபித்தான்.

இந்திரஜித்து தன்பராக்கிரமங்கூறி இராவணனைத் தேற்றுதல்.

கவி.

என்றவனியம்பியுறு மெல்லையினில்வல்லே
சென்றபடையோடுசிறு மானுடர்சினப்போர்
வென்றுபெயர்வாயரச நீகொலெனவீரம்
நன்றுபெரிதென்றுமக னக்கிவை நவின்றான்.

இப்படியாகத் தசக்கிரீவனாகிய பிரதாப லங்கேஸ்வரன் சொன்னபொழுது, இவன் ஜேஷ்டபுத்திரனாகிய இந்திரஜித்தென்பவன் தனது தந்தையைப்பார்த்து, ஐயா! சேனைகளுடனே நீர்போயல்லவா மனிதர்களோடு எதிர்த்துச் சண்டையிட்டு அவர்களை ஜெபித்து வருகிறவர்? அப்படியானால் எங்களுடையவீரம் நல்லதாகும். என்று சிரித்து இவ்வாறு சொல்லுகிறான். உமாபதியாகிய சிவபெருமானவர் கொடுத்தவரங்களையும் ஆயுதங்களையும், பிரமதேவன் கொடுத்த வரங்களையும் ஆயுதங்களையும், மற்ற நாகபாச முதலானவைகளையும் வீணே சுமந்துகொண்டு; இங்கேயிருக்கின்ற பலபேர்களும் ஏசுகின்ற இழிசொல்லிற்கு இளையாமல் உழல்கின்றவனாய் நானுமொருவனிருக்கின்றேனல்லவா? ஆ! ஆ! வெகுநேர்த்தி: இந்தத் திரிலோகங்களையும் அவைகளிலுள்ள சராசரங்களாகிய சகலான்மகோடிகளையும் சிருஷ்டித்து ரக்ஷித்துச் சங்கரிக்கின்றவர்களாகிய திரிமூர்த்திகளும், ஒன்றாய்க்கூடிவந்து உம்மோடெதிர்த்துச் சண்டைசெய்தாலும் என்னையனுப்பும். உமக்கு நான் ஜெயத்தைச் சம்பாதித்துக் கொடாமற் போவேனேயாகில், நீரென்னைப் பெற்றதுமில்லை. நானுமக்குக் குமாரனாய்ப் பிறந்ததுமில்லை. குரங்குகளிறக்கவும், பூமிமுழுதும் என்னாலே குறைத்துத் தள்ளப்பட்டதலைகளால் மறைபடவும், போர்க்களமானது அதமாகவும், இராமலட்சுமணர்களாகிய மானிடர்கள் மிகவும் வருத்தப்பட அதைச்சீதையானவள் கண்டு மெய்பதைத்துத்

துக்கப்படவும், அவ்விருவருடைய சிரசுகளையுங் கொய்துகொண்டு வருகிறேனென்பாரும். இனிச் சொல்லினாலே காலத்தைக் கழிக்கவில்லை. மிகவும் சுருக்கத்திலேயே முடித்துவிடுகிறேன்.

ஐயா! குரங்குகளெல்லாம் யான் மலையைப்பிளக்கும்படி விசையாயிடித்து விழுகின்ற வல்லிடியைப்போலக் கடுமைதோன்றும்படி என்வில்லிலே பூட்டிப் பிரயோகிக்கப்படுகின்ற உக்கிராகாரமான பாணத்திற்குப்பயந்து, தங்கள்பல்லை இளித்துக்கொண்டு இந்த அண்டத்தைத்தாண்டி யோடுவதைக் கண்டு நீரேமெய்ச்சப்போகின்றீர். யானைப்படை-தேர்ப்படை-புரவிப்படை-ஆட்படையாகிய நால்வகைப் படையுமில்லாதவர்கள். நம்மைப்போல வரமும்பெறாதவர்கள். கையிலே ஒரு பொருளுமில்லாதவர்கள். கூனியமுதுகையுடைய அற்பமாகிய சிறு குரங்குகளைப் படைத்துணையாகக் கூட்டிக்கொண்டு நம்மைவெல்ல நினைக்கின்றவர்கள். இப்படி குறைந்தபலமும் குறைந்தநாளும் குறைந்தசெய்கையுமுடைய மானிடராகிய இவர்கள் நமது சத்துருக்களாயிருக்கின்றார்களாகையால்; நமதாண்மையானது அழகாகவேயிருக்கின்றது. பிருதிவு-அப்பு-தேயு-வாயு-ஆகாயம்-ஆகிய பஞ்சபூதங்களும், அப்பஞ்சபூதகாரியமாகிய உலகங்கள்யாவும் ஒரு நிமிஷத்தில் நிலைகுலையும்படி, மானிடர்களுக்குள்ளே ஒருவருந் தவறாமலிறக்கவும்;குரங்குகள் முதலற்றுப்போகவும், நான் நாசஞ்செய்யாமல் மீண்டுவருவதில்லை. என்றுசொல்லிப் பிதாவின் பாதத்தை வணங்கியெழுந்து, எனக்கு விடைகொடுக்க வேண்டுமென்று கேட்டான்.

விபீஷணர் இந்திரஜித்தைக்கடிந்து இராவணனுக்குத் தகவுரைத்தல்.

கவி.

என்றடியிறைஞ்சின னெழுந்துவிடையீமோ
வன்றொழிலினுயெனவும் வாளெயிறுவாயில்
தின்றனன்முனிந்துநனி தீவினையையெல்லாம்
வென்றவரினன்றுணரும் வீடணனுரைப்பான்.

அம்மாத்திரத்தி லவனருகிலிருந்த விபீஷணரானவர் அதிககோபங்கொண்டு, வாயிலுள்ள பற்களை நெறநெறவென்று கடித்து, உயிரை வருத்துகின்ற சகல தீவினைகளையும் வென்ற பெரியோர்களில் ஒருவராய் சற்காரியங்களை ஒழுங்குறக்கற்ற நீதிபரராகிய விபீஷணர் அந்த இந்திரஜித்தைப் பார்த்துச் சொல்லுகின்றார்.

அப்பா இந்திரஜித்தே! அறிவுமயங்கும்படியான ஆபாசமிக்க பொய்ப்பொருளை மெய்ப்பொருளென்றெண்ணுதற் குரித்தாகியவனும், அவ்வக்காலத்தில் நடக்கும் பிரமேயங்களையும், மேல் நடக்கும் விஷயங்களையும், ஆராய்ந்தறிவதற்கு அருகனல்லாதவனுமிருக்கின்ற பாலனாகிய நீ சகலசாஸ்திரங்களையுங் கற்றுணர்ந்த அதிநுட்பமாகிய அறிவினை யுடையவர்களைப்போல் இப்பெருங் காரியத்திற்கு இவ்வண்ணமாகிய வார்த்தையைப் பேசுவதற்கு

அருகனுவாயோ? நீ பேசுகின்றது எப்படி யிருக்கிறதென்றால், விவேகமில்லாதவனும் கண்ணில்லாதவனுமாகிய ஒருவன் தன் கையினுலெழுதப்பட்ட சித்திரம்போலிருக்கின்றது. முதிர்ந்த வயதினையும் பேரறிவையு முடையவர்கள் கூடி மந்திராலோசனைசெய்யும் இந்தக் கூட்டத்தின் முன்னே நீ சேர்ந்திருக்கலாமா? பால்யத்தினுலே அந்தக் கிரமத்தை யெண்ணுமலிருக்கின்றாய். நிர்மல சித்தத்தையுடைய பெரியோர்கள் எப்போதும் கிரமமாகவே நடந்துகொள்ளுகின்றார்கள். அவர்களிருக்கட்டும்: பாபாத்மாக்களாகிய அசுரர் முதலானவர்கள் புண்ணியாத்மாக்களாகிய தேவர்களாய்ச் சிரேஷ்டப்படுகின்றது, தர்மத்தினுலேயோ? மாயையினுலேயோ? வஞ்சனையினுலேயோ? அல்லது தங்களுடைய பராக்கிரமத்தினுலேயோ? தர்மத்தைக்கைவிட்டுத் தேவர்களை ஜெயித்த உன்னுடைய பராக்கிரமச் செய்கையை ஆலோசித்தறியுமிடத்தில், அதுவும் பூர்வநெறி தவறுமற்செய்த தவத்தினுலும் வைரத்தைவிட்டு அந்தப் பிரமாதி தேவர்கள் கொடுத்த வரத்தினுலுமே:

இன்னமும் பொல்லாதவர்களநேகர்கள் மும்மூர்த்திகளையும் வென்று மூன்று லோகங்களையும் பூரணமாக அரசாண்டுகொண்டிருந்தும், கெர்வமதிகரிக்கும்படி நடந்து மரணமே முடிவாக இறந்துபோனுர்களே யல்லாமல் நியாயமாய்த் தேவர்களை வென்றவர்கள் ஆரிருக்கின்றார்கள்? முனிவர்களுக்குள்ளும் தேவர்களுக்குள்ளும் முன்னும் பின்னும் இருவினைகளையுங் கடந்து மேலாகிய மோக்ஷசாம்பிராஜ்யத்தை அடைந்தவர்களெத்தனைபேர்களென்று அளவிட்டுச்சொல்லுவோம்? மற்றவர்களுக்குள்ளே ஆர்தான் அப்படிச் செய்தார்கள்? சிறுபிள்ளையானபடியினுலே இப்படிச்சொன்னுய். நீ புத்தியில்லாதவன். என்று மகனை அதட்டித் தமையனுகிய ராவணனைப்பார்த்து, சுவாமி! என்வார்த்தையை இகழ்ச்சிசெய்யாமற் கேட்பீரேயாகில், தெளிவான நல்ல சொற்களைச் சொல்லுகிறேனென்று சொல்லத்தலைப்பட்டார்.

கவி.

எந்தைநீயாயுநீ யெம்முனீதவம்
வந்தனைத்தெய்வநீ மற்றுமுற்றுநீ
இந்திரப்பெரும்பத மிழக்கின்றுயென
நொந்தனனுகலி னுவல்வதாயினன்.

எனக்குத் தந்தையும் நீரே: தாயும் நீரே: தமயனும் நீரே: நான்பூஜிக்கின்ற சாக்ஷாது தெய்வமும்நீரே: தவமும் நீரே: மற்றுஞ்சகலமும் நீரே: நீகையால் உம்முடைய இந்திரயோக போகபாக்கிய வைபவத்தை இழந்துவிடுகிறீரென்று மிகவும் மனமெலிந்தேன். அதனுல் உமக்கு நான்சொல்ல எற்பட்டேன்.

அன்றியும்-பல நூல்களையுங் கற்றமைந்த தன்மை யென்னிடத்திலில்லாமற்போனுலும், சாத்தியமாகத் தக்கவிஷயத்தை ஆலோசியாவிட்டாலும், உபாயதந்திரங்களை நிச்சயித்துச் சொல்லாதிருந்தாலும், நீரென்சொல்முழுவ

துங் கேட்டபிறகு வேண்டுமானால் என்மேற் கோபித்துக்கொள்ளும். சிலாக்கியமாகிய நம்முடையநகரமும், உம்முடைய பிரதாபமும், ஜானகியென்கிற ஸோகமாதாவினுடைய கற்பினால் வெந்ததல்லாமல்; ஒருகுரங்கு சுட்டதென்றுநினைக்கிறதென்ன பெருமையா? யோசிக்குமிடத்தில் எவர்களுக்கானாலும் ஆபத்தும்-சம்பத்தும்-பெண்ணினாலும்,பொன்னினாலும், மண்ணினாலு மல்லது; வேறொன்றினால் வரத்தக்கவைகளோ? கடல்சூழ்ந்த லங்கைக்குத் தலைவன் பூர்வம் அருமையாய்ச்செய்த தபோபலமெல்லாம் ஒரு மானிடஸ்திரீயினால் அழிந்துபோமென்று உலகத்தார்சொல்லும் அபக்கியாதியாகிய வார்த்தை இப்பொழுதென்ன முடியத்தக்கதா? நீர் பிரமாவைநோக்கி நெடுநாளாகத் தவஞ்செய்து அவரிடத்தில் தேவதானவர் முதலானவர்களை ஜெயிக்கும்படி வரம்பெற்றபோது, மனிதரை ஜெயிக்கும்படி வரம் பெறவில்லையே: ஆகையால் அவர்களை எந்தவிதத்தால் இனி ஜெயங்கொள்ளுவீர்?

ஐயா! தேவரீர் வேறொரு உபபலமும் வேண்டாமல் தனியேயெதிர்த்து ஏழுலகங்களையும் வெல்லத் தக்கவராயிருந்தும், மனிதர்களைமாத்திரம் வெல்ல மாட்டீரென்பதற்கு ஆயிரம் தோள்களையுடைய கார்த்தவீரியார்ச்சுனனாகிய மனுஷனுக்கு உம்முடையவலி தோற்றுப்போனதுவே திருஷ்டாந்தம். இதைவிட வேறுசாக்ஷியும் வேண்டுமோ? தேவரீர் முற்காலத்திலே வானத்தளவும் உயர்ந்த கைலாசகிரியை யெடுத்ததுகண்ட சதுர்ப்புஜங்களுடைய நந்திகேஸ்வரர் நீ குரங்குகளாலே உன்பலமழியப்படுவாயென்று சொன்னசாபத்தை, வாலியினிடத்திலே பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கின்றீர்.

கவி.

தீயிடைக்குளித்தவத் தெய்வக்கற்பினாள்
வாயிடைமொழிந்தசொன் மறுக்கவல்லமோ
நோயுனக்கியானென நுவன்றுளாளவள்
ஆயவள்சீதைபண் டமுதிற்றோன்றினாள்.

பூர்வம் தெய்வீகமாகிய கற்பினையுடைய வேதவல்லியென்கிற ரிஷிபுத்திரியானவள் ஸ்ரீமகாவிஷ்ணு தனக்குக் கணவனாகவேணுமென்று தபசு பண்ணிக்கொண்டிருக்கையில், அவளை நீர் கற்பழிக்க ஏற்பட்டபோது அவள் வாயினாற்கொடுத்த சாபத்தை நாம் தடுக்கத்தக்க வல்லமையுடையவர்களாவோமா? உனக்கு நானே மிர்த்தியுவாகிய நோய்ப்பிணியென்று சொல்லிவிட்டு அக்கினிப்பிரவேச மானாளே: அவள்தான் அமுர்தத்துடன் பிறந்த மகாலக்ஷுமி அவளே இந்தச் சீதையாய் வந்து அவதரித்திருக்கின்றாள்.

இந்திராதி தேவர்களுக்குச் சத்துருவாயிருந்த சம்பராசுரனை ஆகாசத்தினிடத்தில் ரதத்தை நடத்திக்கொண்டுபோய் வில்லின்வலிமையாற் பிரபலமாகிய யுத்தஞ்செய்து தலையறுத்து, அந்தத்தேவர்கள் பிழைக்கும்படி தேவராஜனுக்கு அரசுகொடுத்து உதவிசெய்து, தர்மசக்கரமானது தானேவியபடியே உலகத்தில் தனக்கு ஊழியஞ்செய்ய மகத்தாகிய கீர்த்தியை வகித்த

தசரதமகாராஜனென்பவ னொருவனிருந்தான். அந்தத்தசரதனோ? தேவேந்திரன் ரிஷபமாய்ச்சுமக்க முதுகின்மேலேறியிருந்து வாளையுருவி அசுரர்களையெல்லாஞ் சங்கரித்த ஒப்பற்ற ஆண்மையையுடைய காகுஸ்தமகாராஜனும், தன்னிடத்திலிட்ட வித்துக்களையெல்லா முளைக்கவொட்டாமல் தனக்குள்ளே யிழுத்துக்கொண்டு மதப்பட்டிருந்த பூமியின்மேற் பாணப்பிரயோகஞ் செய்து அதன்மதத்தை யடக்கி அது பசுவுருக்கொண்டுவந்து தானியமுதலாகிய சகலபதார்த்தங்களையும் கொடுக்க யாவருமுலையின் வழியே கறந்தெடுத்துக்கொள்ளச் செய்த பிருதுமகாராஜனும், சமுத்திரத்தைத் தோண்டிய சகரர்களும், தபசினால் ஆகாசகங்கையைப் பூமியிற் கொண்டுவந்த பகீரதமகாராஜனும் அவதரித்த மநுவம்சத்தில் உற்பவித்தவன்.

இன்னுமவ னெப்பேர்ப்பட்டவனென்றால், பொய்பேசி உலகத்தைப் பகைத்தவர்களுடைய குலத்தைக் கருவறுத்து தர்மத்தை விர்த்திசெய்து, அந்தத் தர்மநெறியில் நின்று, தன்மனைவிக்குக் கொடுத்த வார்த்தை மறுக்கமாட்டாமற் சத்தியத்தை நிலைநிறுத்துவதற்காகப் பிராணனைக்கொடுத்து, தேவர்களும் பெறுவதற்கு அருமையாகிய சாக்ஷாத் மோக்ஷத்தைப்பெற்றவன். அந்தத் தசரதச்சக்கரவர்த்தியின் புத்திரர்களே இப்போது உமக்குப்பகைவர்களாய் வந்திருக்கிறார்கள். அம்மம்மா!! அவர்கள் எப்படிப்பட்டவர்களென்று நீர் கேட்கிறீரேயாகில்; இராமனென்றும், இலக்ஷ்மணனென்றும், பெயர் பெற்ற அந்த இருவரும் தங்களுக்கு ஒருவரும் எதிரில்லாதவர்களா யிருக்கின்றவர்கள். முனீஸ்வரர்களும், தேவர்களும், எல்லாமறிந்த ஞானியர்களும், மற்றுமுள்ள சகல உத்தமர்களும் நினைப்பதற்கு அருமையாகிய தகைமையையுடைய மகாபுருஷர்கள். நாம்செய்த தீவினையால் மனிதர்களாக வடிவெடுத்து, யாவர்க்கும் எளிதாக வந்திருக்கின்றார்கள். தாமரையாசனத்தையுடைய பிரமதேவனுடனேசகல புவனங்களையுஞ் சிருஷ்டிசெய்கிறேனென்று பிரயத்தினப்பட்ட விஸ்வாமித்திர மகாரிஷி கொடுக்கப் பெற்றவைகளாய், இமைப்பொழுதிலே யாவருநாசமாம்படி எவ்வகைப்பட்ட உலகங்களிலும் விசையாய்ச் செல்லுவனவுமாய் அஸ்திரசஸ்திர முதலாகிய ஆயுதங்களைக் கையிற் பிடித்திருக்கின்றார்கள்.

பூர்வம் புஜபராக்கிரமத்தை யுடைய அசுரர்களுடனே பகைத்துத் தேவர்களிளைத்த சமயத்தில் அவர்களுக்காக எடுத்துவளைத்து யுத்தஞ்செய்து ஜெயத்தைச் சம்பாதித்துக்கொடுத்த கருடவாகனருடைய ஸ்ரீமகாவிஷ்ணுவினுடைய கைவில்லையும், முப்புரங்களெரிந்து நீறாகும்படி கைலாசநாதன் பிரயோகித்த திவ்வியாஸ்திரத்தையும், முனித்தலைவராகிய அகஸ்தியர் கொடுக்கப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களிடத்திலிருக்கின்ற நாகாஸ்திரங்கள் எப்படிப்பட்டவைகளென்றால்-நாவைநீட்டி உலகங்களையெல்லாம் ஒருமிக்கவளைத்து எடுத்து விழுங்குகின்றவைகளும், திக்குகளையெல்லாம் ஒருக்ஷணத்திலே போய் அளவிடுகின்றவைகளும், எப்போதும் விஷாக்கினியை கக்

கிக்கொண்டிருக்கின்றவைகளும், அதியுஷ்ணமாகப் பெருமூச் செறிகின்றவைகளும், பிரகாசத்தை வீசுகின்ற கூரிய பற்களையுடையவைகளும், அவ்வீராதிவீரர்களுடைய அம்புறைதூணியாகிய புற்றினிடத்திருந்து சீறுகின்றவைகளும், பூரணகியானத்தையுடைய பெரியோர்கள் விஷயத்தில் அபசாரப்படுகின்ற பாபாத்மாக்களுடைய உயிரையல்லது வேறொரு இரையை இச்சியாதவைகளுமா யிருக்கின்றவைகள்.

அவர்களுடைய விற்கள் அந்தப் பிரதாபசாலிகளால் மாத்திரம் எடுப்பதற்கும், வளைப்பதற்கும், பாணப்பிரயோகஞ் செய்வதற்கும் சுலபமாயிருக்கிறதேயல்லாமல்; மற்றொருவரால் அசைக்கப்படுமோ? அப்படி யவ்விற்கள் அபாரமானவைகளும் நெடியவைகளுமா யிருக்கின்றன. அவைகளிற் பூட்டியநாரியும் அறுபடாதவைகள். ஆதலால் நம்முடைய சொற்பமாகிய விற்களைப்போல் எளிதில் ஒடிக்கப்படுமோ? ஒருக்காலும்படாது. அன்றியும், அவைகள் மரமோ? மூங்கிலோ? அண்டத்தை ஊடுருவிநிற்கின்ற மகாமேருவோ? சப்தகுலாசலங்களிற் சம்பந்தப்பட்டனவோ? அல்லது இவைகளெல்லாமல்லவோ? என்னமோதெரியாது. அவர்களுடைய பாணங்களால் கடலைக்கடைந்த வாலியினுடைய மார்புருவி அவன் பராக்கிரமமடங்கியது, உலகத்தையெல்லாங் கவிந்துசூழ்ந்த மராமரங்களும் ஒடுங்கின. கரன் முதலானவர்களுடைய தலைகளும் விராதனுடைய தலையுங் கண்டிக்கப்பட்டன. இனியுத்தமுண்டாகுமானால் தேவர்களுடைய விபத்து நீங்குமல்லாமல், அவர்களுக்கு அடங்காத பகையென்பதுவேறொன்றுண்டோ? மகிமையையுடைய முனீஸ்வரர்கள் அவர்களுக்குவேண்டியவரங்களைக்கொடுத்து, இணையில்லாதவர்களாகிய இந்த இருவரும்தேவர்களுடனே புவனங்களையெல்லாம் வெல்லுவார்களென்றும்—இராக்ஷதர்களுடையகுலமானது வேரற்றுப்போம்படிக்குக் கொல்லுவார்களென்றும்-நினைத்தறிந்து, அவர்களைவந்து சிநேகித்திருக்கின்றார்கள்.

மேலும், உம்முடைய கிருபையேயல்லாமல் வேறுகதியில்லாதிருக்கின்ற தேவர்களுடையமனது முன்பு ராக்ஷதர்களுடைய பெயரைச்சொன்னாலுநடுங்கும். இரவும்பகலு நித்திரைசெய்யவு மாட்டார்கள். இப்போது ஜானகியாகிய விஷத்தை யுண்ண எத்தினப்பட்டவர்கள் மாண்டுபோய் நரகப்பிராப்தர்களாவார்களென்று எண்ணிக்கொண்டு நமக்குப் பயப்படாதிருக்கிறார்கள். அடைக்கல ஸ்தானத்தை யறியாதிருந்ததனால் நமக்குப்பயந்துகிடந்த ரிஷிகளுடைய முகங்கள் பகற்காலச் சந்திரனைப் போல ஒளிமழுங்கி யிருந்ததுபோய், இப்போது சரற்காலத்தின் இராத்திரியி லுதயமாகிய சந்திரனைப்போல அதிகபிரகாசத்தைக் கொண்டிருக்கின்றன. கடல்சூழ்ந்த உலகத்தைவிட்டு அப்பாற்போய்த் தங்களுருவத்தை மறைத்துக்கொண்டு எங்குஞ் சஞ்சரியாமல் ஒடுங்கிப்பதுங்கிய யமன்முதலான தேவர்களும் - முனிவர்களும் - மற்றவர்களும் — சீதையானவள் நம்முடைய நகரத்தில் வந்திருக்கிறாளென்று கேட்டபின்பு, சிறிதும் பயமில்லாமல் திரும்பிவந்து தங்களுலகமாகிய சுவர்க்கமு

தலானவைகளை அடிக்கடிப் பார்த்துச் சந்தோஷித்துப் போகின்றார்கள். சொல்லத்தகாத துர்ச்சகுனங்கள் எங்குங்காணத் தலைப்பட்டன.

அன்றியும் - நம்மை செயிக்கத்தக்க வல்லமையில்லாத நம்முடைய பகைவர்களாகிய தேவர்களும், அசுரர்களும், சண்டையிலே தோற்று விட்டுவிட்டுப்போன குதிரைகளும், யானைகளும், வலதுகாலை முன்னேயெடுத்து வைத்து நம்முடைய கிரகங்களுக்குள் வந்து நுழைகின்றன. இராக்ஷதர்கள் வாயிலும், பல்லிலும், நீரில்லாமல் வாடுகின்றார்கள். பேய்களும், பூதங்களும், நாய்களும், நரிகளும், நாடு நகர முழுமையுந் திரிகின்றன, ஸ்திரீகளுடைய கூந்தல்களும், நம்முடைய சிகைகளும், நெருப்பில்வெந்ததைப்போல் சுடுநாற்ற நாறுகின்றன. இனியிவைகளைப் பார்க்கிலும் வேறுதுர்நிமித்தங்களு முண்டோ? தேவலோகமானது அதமாகும்படி தேவர்களைப் போரிலே நிர்மூலஞ்செய்த கரன் - தூஷணன் - திரிசிரன் - மான்வடிவெடுத்த மாரீசன் - வாலி - இவர்கள் முதலானவர்களுமே இவர்களால் மாண்டமையால், மானை யிடதுகையிலேந்திய சிவபெருமானும் - சக்கரபாணியாகிய விஷ்ணுவும் - நான்முகக்கடவுளாகிய பிரமாவும் - மற்றத் தேவேந்திராதி தேவர்களுந்தாம் இந்த இரண்டு மனிதர்களுக்குச் சமானமாவார்களென்று ஆர்தான் எண்ணுவார்கள்?

ஐயா! இன்னமொன்று சொல்லுகிறேன் அதைச் சந்தோஷமாய்க்கேளும். அந்த இரண்டு மனிதர்களாயும் வானரக்கூட்டங்களாயும் வந்திருக்கிறவர்கள் நம்முடைய பகையாளிகளாகிய தேவர்களென்றும் அறிந்துகொள்ளும். ஆகையால் அவர்களுடனே பகைகொள்ளலாமென்பது செவிகொடுத்துக் கேட்கத் தக்கதல்ல. இது நமக்கு உறுதியென்று நினைப்பதுங் காரியமல்ல. கீர்த்தியும் - பாக்கியமும் - குலசிரேஷ்டமும் - குறைந்துபோகவும், அபகீர்த்தியும் - சிறுமையும் - அசிரேஷ்டமும் - பிரபலிக்கவும், நமது சுற்றத்துடனே நாம் வீணேமடிந்திடாமல்; சலியாத கற்பினையுடைய சீதாபிராட்டியை விட்டுவிடும். இதைப் பார்க்கிலும் வேறேஜெயமென்பது நமக்கில்லை. என்று பிரமயோனிகளுக்குள் சிறந்த விபீஷணரானவர் சொன்னார்.

இராவணன் விபீஷணரைக் கடிந்து தன்னாற்றல்கூறி யாக்கிரமித்தல்.

கவி.

கேட்டவாண்டகை கரத்தொடுகரதலங் கிடைப்பப்
பூட்டிவாய்தொறும் பிறைக்குலம்வெண்ணிலாப் பொழிய
வாட்டடக்ரவ ழாரமும் வயங்கொளி மார்பும்
தோட்டடங்களுங் குலுங்கநக் கிவையிவை சொன்னான்.

இந்த வசனத்தைக்கேட்ட இராவணேஸ்வரன் கையோடுகையறைந்து, வாய்கள்தோறுமுள்ள கோரதந்தங்கள் பிறைக்கூட்டம்போலப் பிரகாசிக்கவும் - கண்களில் நெருப்பெழவும் - இரத்தினாரங்களும் அவைகள் ஜொலிக்கின்ற மார்புந் தோளுங் குலுங்கவு நகைத்துச் சொல்லைத் தொடங்கினான். ஆ விபீஷணா! இவ்விடத்திற் பேசினவர்களெல்லாரைப் பார்க்கிலும் நல்ல உறுதிக

ளைச் சொல்லுகிறேனென்று சொல்லி, கேவலம் பித்தர்கள் பேசுகிற பேச்சுக்களையே நீபேசினாய். என்னுடைய மகாபலத்தைக் கொச்சையாகிய மானிடர்கள் ஜெயங்கொள்ளுவார்களென்று எனக்கு நேரிலே தானே சொன்னது, நீயவர்களுக்குப் பயப்பட்டுச் சொன்னதா? அல்லது அவர்களிடத்தில் அன்பினாலே சொன்னதா? என்ன கருத்துகொண்டு சொன்னாய்? மனுஷப் பசுக்களை வெல்லும்படிக்கு நான்வரம்பெற வில்லையென்று, இந்த அற்பவிஷயத்தை எனக்கொரு லக்ஷியமானதாகக் குறித்துக்கொண்டு என்மேற் குற்றஞ் சொல்லவந்தனையே: அஷ்டதிக்குகளையும் - திரிலோகங்களையும் - அஷ்டகஜங்களையும் ஜெயித்து, அந்தத் தழல்வண்ணனாகிய சிவனைக் கைலாசபர்வதத்துடனே எடுத்தேனே: அப்படியெல்லாம் செய்கிறதற்கு முன்பு நான் ஏதாவது வரம்பெற்றதுண்டா? கொஞ்சமாவது மனதிலெண்ணிப் பாராமல் பயனில்லாத சொற்களைச் சொன்னாய். இரணக்களத்திலே தேவர்கள் என்மேற்பிரயோகஞ்செய்த தெய்வீகமாகிய கொடியவாயுதங்களெல்லாம் என்னை என்னவுபத்திரவஞ்செய்தன? அவர்கள்தான் என்னசெய்தார்கள்? அந்தமனிதர்கள் என்னை வெல்லுகிறதென்பது அப்படியிருக்கட்டும்.

அப்பா விபீஷணா! குகேசியென்கிற ஒரு தாய் வயிற்றிலே என்னுடனே கூடப் பிறந்த உன்னைத்தான் அவர்கள் ஜெயிக்கமாட்டுவார்களென்று சொல்லுகிறதற்கு இடமுண்டா? நல்லது: ஒருவன் ஏதாவது சொல்லும்பொழுது, இதுசொல்லத் தக்கது இது சொல்லத்தகாதது: என்று ஆய்ந்தறிந்தல்லவோ சொல்லவேண்டும். நீயோ? அவ்வாறு சொல்லுஞ் சொல்லை அறிந்துசொல்லவேயில்லை. பலதரம் தோற்றும் ஒருதரம் வெற்றிகொள்ளத்தக்க பராக்கிரமமுமுண்டு. ஆனாலும் அண்டத்தைக் கல்லியெறிகின்ற மகாபலத்தையுடைய என்பந்துஜனத்தையும், என்னையும், போர்க்களத்தில் ஜெயிக்கின்ற சத்துருக்களுமுண்டென்று நினைவுகொண்டாய். தம்பீ! நான்தேவர்களிடத்திற்பெற்ற வரத்தினால் மிகவுஞ் செருக்குண்டாய்ப் பேசுகிறேன்; அந்தமனிதர்கள் திரிமூர்த்திகளுக்குள்ளே ரிஷபவாகனருடனாகியும் சம்மாரகிருத்தியனாயுமுள்ள சிவபிரானிடத்திலேயா? புவனங்களையெல்லாம் ரக்ஷிக்கின்ற மகாவிஷ்ணுவினிடத்திலேயா? சகலாண்டங்களையும் சிருஷ்டிக்கின்ற பிர்மாவினிடத்திலேயா? இவர்களல்லாமல் மற்றயாரிடத்திலே தான் வரம்பெற்றார்களென்று சொல்லுகின்றாய். நந்தி கொடுத்த சாபத்தினால் குரங்குகள் நம்மைக் கெலிக்குமென்று சொல்லுவாயானால், இந்திராதி தேவர்களாலும் - சித்தர்கள் யக்ஷர்கள் முதலானவர்களாலும் - நமக்குவந்திருக்கிறசாபங்கள் எண்ணத்தொலையுமா? அவைகளெல்லாஞ் செய்ததென்ன? சுரோத்திரம்-சக்ஷு-சிங்குவை-ஆக்ராணம்-துவக்கு என்னும் பஞ்சேந்திரியங்களையும், அவைகளின் விஷயங்களாகிய சப்தம்-ரூபம்-ரசம் - கந்தம் - ஸ்பரிச மென்னும் ஐம்புலன்களையும், மனம்-புத்தி-அகங்காரம்-சித்தம் என்னும் அந்தக்கரணங்களையும் அடக்கினவர்களாகிய எதீஸ்வரர்களிலும், இ

ரிஷீஸ்வரர்களிலும், நமக்கு மரணம்சித்திக்கும்படிப் பிரார்த்திக்காதவர்கள் யார்? அவர்களுடைய எண்ணங்களெல்லாம் நம்மை அழித்துவிடாதா? கனக சபையிலே பஞ்சகிர்த்திய நடனஞ் செய்கின்ற நடேசப்பெருமானாகிய சிவபிரானிடத்தில் அன்புசெய்து அந்தப்பூஜாபலத்தால் எதிரியின் பலத்திற் பாதி தனக்குவரும்படி வாலி வரம்பெற்றதை யறியாமல் நானிளைத்துநிற்க, என்பலம் அவனிடத்திற்போய்ச் சேர்ந்ததனாலல்லவோ அவனுக்குத்தோற்றேன்? அப்படியிருக்க மற்றக்குரங்குகளெல்லாம் என்னை ஜெயங்கொள்ளுமென்பது நீ யெப்படி குறித்துக்கொண்டாய்? நீலகண்டத்தையுடைய சங்கரனும் சக்கரதாரனாகிய மகாவிஷ்ணுவும் அந்தவாலிக்கு எதிரேநின்று போர்செய்தாலும் அவர்களுடைய மகாபலமும் அவனிடத்திற் சேர்கின்றவரத்தை அறிந்து, அவனுக்கு எதிரே போவதற்கஞ்சி இராமனாகிய அந்தமனிதன் மறைந்திருந்து அவனையெய்தான்.

அஃதப்படிக்கிருக்க-மிதிலையில் சொத்தையாகிய வில்லையொடித்து; கூனியினுடையஉபாயத்தினால் அயோத்தியாபுரியையாளும் அரசாட்சியையிழந்து, ஆரணியத்திற்குவந்து, கிட்கிந்தையில் ஓட்டையான மராமரங்களின்மேல் அம்பைச் செலுத்தி, நான்செய்த மாயையினால் தன் பெண்சாதியைப் பறிகொடுத்து மானமில்லாமல் இன்னமும் உயிரைச் சுமந்துகொண்டிருக்கின்ற அந்த மனிதனுடையபலத்தை; நீயல்லாமல் மதித்துச்சொல்லுகிறவர்க ளாரிருக்கின்றார்கள்? உனக்குப் புத்தியில்லை. நல்லது நீயெழுந்திரு. இனிநீயிங்கிராமல் அப்பாற்செல்லுகவென்று கடிந்துகூறினன். இப்படிகூறிய இராவணனை விபீஷணர் இவன் பாழ்த்தான்போவென்று ஒழியாமல், அவனுக்குச் சமீபத்திற் போய்ச் சகோதரவாஞ்சல்லியத்தினால் மறுபடியும் இன்னமொரு உறுதிவார்த்தை சொல்லுகிறேன் கேளுமென்று சொல்லுகின்றார்.

வாரீர் அண்ணா! தனக்குமேற்பட்டபொருள் வேறொன்றில்லாமல் ஒப்பற்றிருக்கின்ற பராபரவஸ்துவாகிய ஸ்ரீமந்நாராயணனே நம்முடையநிமித்தம் தேவர்கள்செய்த உபாயத்தினால் அந்தமானிடனாகவந்து அவதரித்திருக்கின்றான். நீரேதோ அறியாமல் இகழ்கின்றீர். அப்படிச்செய்யவேண்டாம். என்றத்தமையன் பாதத்தைத் தொழுது இரந்து சொல்லினர். அதுகேட்ட தசக்கிரீவனவரைநோக்கி, ஆ! ஆ! அம்மனிதனை விஷ்ணுவென்று சொல்வாயானால் உன்புத்தியை என்ன வென்கிறது? அற்ப புத்தியென்றல்லவோ சொல்லவேணும். ஆயினும் அந்த விஷ்ணு என்னுடையயுத்தத்திலே எத்தனையோதரந் தோற்றோடினன். மேலும் என்னிஷ்டப்படி இத்தனை காலமாய் நான் நடந்தபோதெல்லாம் முழுமுதலாகிய அவனென்ன செத்துக்கிடந்தானோ? பின்னும் இந்திரனைப் பிடித்துச் சிறைவைத்தகாலத்திலும், அஷ்டதிக்கஜங்களின் தந்தங்களை முறித்தகாலத்திலும், பூர்வம் தான்வந்து போர் செய்யுந்தோறும் தன்னை நான் துரத்தியடித்தகாலத்திலும், தேவர்களுடைய உலகத்தைப் பஞ்சாய்ப்பறக்க அடித்தகாலத்திலும், நீ சொன்ன அந்தத்தேவன் அறியாத சிறுபிள்ளையா யிருந்தானோ?

அன்றியும் - உருத்திரமூர்த்தியும், பிரமாவும், அந்தவிஷ்ணுவும், மற்றுமுள்ள இந்திரன் - அக்கினி - யமன் . வருணன் - வாயு - இவர்கள் முதலாகிய தேவர்களும் அடங்கியொடுங்கிக் கிடிகொள்ளும்படி திரிலோகங்களையு நான் ஏகாதிபத்தியமாக அரசாண்டு கொண்டிருப்பது அவனில்லாமையினாலேயோ ? அல்லது அவன் பலஹீனப்பட்டு ஒதுங்கிக்கிடந்ததினாலேயோ ?, ஆ! ஆ! நீ சொல்லுகின்ற ஆச்சரியமான சொல்லுக்கு என்னசொல்லுகிறது? ஏகமூர்த்தியாகிய விஷ்ணு தன்னுடைய ஆயிரந்தோள்களும் ஆயிரம்சிரசுகளும் பொருந்திப் பிரமாண்டத்தையெல்லாம் ஒருள்ளங்காலுக்குள் அடக்கிய ஸ்தூலவடிவத்தையே மிகவுஞ் சிறியவடிவென்று நாம் நினைக்கின்றவர்கள். நமக்கோர் சிறியவுணவாய்ச் சதாகாலமுந் தின்கின்ற சொற்பமாகிய மானிடவுருவ மெடுத்துக்கொண்டோ அவனம்மை ஜெயம்பண்ண வந்திருக்கிறான்? பித்தனாகிய உருத்திரமூர்த்தியும் - மாயனாகிய விஷ்ணுவும் - என் பெயரைக்கேட்டுப் பயந்து நடுங்கித் தளர்ந்து ஓடுகிறபோதெல்லாம், அவர்களேறிய ரிஷபத்தின்முதுகிலும் கருடன்முதுகிலும் என்னுடைய பாணங்கள் போய் மலைகளின்மேல் விழுகின்ற இடிகளைப்போல் விழுந்து தைத்துக்கொண்டு இன்னமுமிருக்கின்றன.

இப்படிக்கெல்லாமிருக்க நீயென்ன பொய்ப்பேச்சுப்பேசுகின்றாய்? அவனுக்கும் எனக்கும் உள்ளபடியே யுத்தநேரிட்டதானால் நீயுபபலமா யெங்களுடனேகூடப் புறப்பட்டுவந்து சண்டைசெய்ய வேண்டியதில்லை. உனதுயிருக்கு லயமில்லாதிருக்கிறதற்கு இந்த அழிவில்லாத லங்கைக்கோட்டையிருக்கிறது. இதற்குள்ளேதானே சுகமாயிரு. பயப்படாதே: என்று சொல்லிப் பக்கத்திலிருந்தவர்களுடைய முகத்தைப்பார்த்து, ஆலகாலமாகிய விஷத்தைப் பார்க்கிலும் அதிககடூரமான கோபத்தையுடையவனாய்க் கைகொட்டி, பிரளயகால இடியிடித்ததுபோல் ஆர்ப்பரித்துக் கலகலவென்று சிரித்தான். பின்னும் அந்த விபீஷணாழ்வானனவர் தசக்கிரீவனைநோக்கி, ஐயா! பூர்வகாலத்தில் உம்மைப்போலல்ல: உம்மிலும் அதிகபலமும் பிரதாபமும் படைத்தவர்கள் அநேகர் இந்தமகாபுருஷன் சங்கரிக்கும்படித் தங்கள் பந்துவர்க்கத்துடனே சமூலமாய் மாண்டுபோனார்கள். நானுமக்குச் சொல்லவேண்டுவது இன்னமொன்றுண்டு. அஃதென்னவென்றால் - இரணியனென்கின்ற அசுரராஜனுடைய சரித்திரமொன்றுளது அதையுள்ளபடி சொல்லுகிறேன் சற்றேதயைசெய்து கேளுமென்று சொல்லத்தலைப்பட்டார்.

மந்திரப் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

மூன்றாவது,

இரணியன் வதைப் படலம்.

இப்படலத்தில் விபீஷணரானவர் ஸ்ரீமந்நாராயணருடைய பிரபாவத்தை இராவணனுக் குணர்த்தவேண்டி இரணியகசிபுவினுடைய சரித்திரங் கூறப்புகுந்தவர் முதலி லவனுடைய தபோபலச்சிறப்பும் பராக்கிரமநிலைமையுமுணர்த்தி, பின்னரவ் விரணியாசுரனானவன் தனதுபிள்ளையாகிய பிரகலாதனைச் சுக்கிராசாரியின் குமாரனாகிய சண்டமார்க்கனிடத்தில் தன்னையே பரத்துவமாகக் கற்பித்திருக்கும் வேதசாஸ்திராப்பியாசம்பயிலவிடுக்க அவனதையோதாது ஸ்ரீமந்நாராயணனே பரத்துவமென்றோதியதும், அதைச் சண்டமார்க்கனாற் கேழ்வியுற்ற இரணியனுக்கும் பிரகலாதனுக்கு நடந்தவார்த்தைகளும், அதில்மாறுபட்ட இரணியன் பிரகலாதனைக் கொல்விக்கப் பலவாறுமுயல அம்முயற்சிகளினின்றும் பிரகலாதன் விடுபட்டுப் பகவானைத்துதிசெய்ததும், இதைக் கொலையாளர்களாலறிந்த இரணியன் பிரகலாதனைத் தானேகொல்ல முயலும்போது ஓர்ஸ்தம்பத்திருந்து ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் நரசிங்கவுருவமா யவதரித்து உலகமூன்றினுமுள்ள அவுணவெள்ளங்களை யெல்லாமழித்ததும், அதுகண்டு மடங்காது ஆக்கிரமித்துவந்த இரணியாசுரனை அந்தநரசிங்கமூர்த்தியானவர் சங்கரித்தபின் பிரமாதிதேவர்கள் தாம்கொண்ட பயநிவாரண மாகும்படி அவரைத்துதிசெய்து அவரது கோபமாறும்படி ஸ்ரீமகாலட்சுமியைப் பிரார்த்தித்து அவரருகில் வரச்செய்ததும், பின்னர் நரசிம்மமூர்த்தியானவர் கோபமாறிப் பிரகலாதனைக் கடாக்ஷித்துப் பிரமாதிதேவர்கள் முன்னிலையிற் பட்டாபிஷேகஞ்செய்து அளவற்றவரங்களைத்தந்து ஆட்கொண்டதுஞ் சொல்லியதைச் சொல்லப்படுகின்றது.

இரணியகசிபுவினுடைய தபோபலச்சிறப்பும் பராக்கிரமநிலைமையும்.

கவி.

வேதங்கண்ணிய பொருளெலாம் விரிஞ்சனேயீந்தான்
போதங்கண்ணிய வரமவன்றரக்கொண்டு போந்தான்
காதுங்கண்ணுத லோனயன் கடைமுறைகாணப்
பூதங்கண்ணிய வலியெலாமொருதனிபொறுத்தான்.

அண்ணா பிரதாபலங்கேஸ்வரா! பூருவத்தில் இரணியகசிபுவென்பவன் வேதத்திற் சொல்லியிருக்கின்ற தவங்களையெல்லாஞ்செய்து, தன்மனதில் நினைத்து வாயினாற்கேட்டவரங்கள் ஏதேதோ அவைகளையெல்லாம் பிரமதேவன் கொடுக்கும்படிப் பெற்றுக்கொண்டுவந்து, அப்பிரமன் - விஷ்ணு - உருத்திரன் - ஆகியவிம்மும்மூர்த்திகளு முடிவுகாணப்படாத சகலபூதங்களுக்குள்ள பலத்தையும் ஒருமிக்கப்பெற்று, எக்காலத்திலும் அழியாமல் நித்தியமா யிருக்கின்றவர்களென்று வேதவேதாந்தங்களாற் சொல்லப்பட்ட ஜெகதீஸ்வரா

No. 44. இராவணனுக்குவிபீஷணர் இரணியகசிபுவின்கதை கூறிஅறிவுறு
த்தியும்அவன்கேளாதுசினந்தல்.



ஸ்ரீராமர்தம்மைச்சரணடைந்தவிபீஷணர்க்குமகுடஞ்சூட்டி
இலங்காதிபதயமளித்தல்.



உ யுத்தகாண்டம். இரணியன்வதைப்படலம்.

கிய அம்மகாவிஷ்ணுவும் - பிரமாவும் - ஜடாமகுடத்தையுடைய சிவபிரானும்- படைத்துக் காத்தழிக்கின்ற இவ்வண்ட மொன்றின்மட்டுந்தானோ? இதற்கு அப்புறத்திலுள்ள அளவில்லாத பலவண்டங்களி லுள்ளவர்களும் தன்பெயரையே சொல்லும்படி வாழ்ந்திருந்தான்.

அண்ணா! அவனுடைய நிலைமைகளிற் சில்வற்றைச்சொல்லுகிறேன் கேட்பீராக. எட்டுத்திக்குகளையுந் தாங்குகின்ற ஐராவதமுதலாகிய அஷ்டகஜங்களில் வலதுகையில் ஒருயானையும் இடதுகையில் ஒருயானையுமாக, இரண்டு கையினாலும் இரண்டியானைகளைச் சுண்டைக்காய்போல அலக்ஷியமாகவெடுத்து ஒன்றோடொன்று முட்டவிடுவான். அளவுகாண்பதற்கரிதாகிய ஆழத்தையும் அகலத்தையுமுடைய ஏழுசமுத்திரங்களையும் தோணிமுதலானவைக ளில்லாமல், கணைக்காலளவு ஆழமாகவெண்ணித் தன்காலாலேயே நடந்து கரையேறுவான்.

கவி.

வண்டற்றெண்டிரை யாற்றுநீர்சிலவென்று பருவான்
கொண்டல்சொண்டநீர் குளிர்ப்பிலவென்றவை குடையான்
பண்டைத்தெண்டிரைப் பரவைநீருவரென்று படியான்
அண்டத்தைப்பொதுத் தப்புறத்தப்பினா லாடும்.

ஆகாசகங்கைமுதலான மகாநதிகளில் ஜலத்தைக் கொஞ்சமென்று நினைத்து, அவைகளின் கிட்டவும்போகான். ஸப்தமேகங்களின் ஜலத்தைக் குளிர்ச்சிபோதாதென்று எட்டியும்பாரான். சமுத்திரஜலத்தை உப்பென்றுகருதி அதில் மூழ்கவேமாட்டான். பின்னையெப்படி ஸ்நானஞ்செய்கிறதென்றால்— அண்டமுகட்டை உடைத்து அதற்கு அப்புறத்திலிருக்கின்ற பெரும்புறக்கடலின்ஜலத்தில் ஸ்நானஞ்செய்வான்.

இவ்விதமாகப் பெரும்புறக்கடலில் ஸ்நானஞ்செய்து, நாகலோகத்திற்குப்போய் நாககன்னிகைகள் உபசரிக்க ஷட்ரச பதார்த்தங்களுடனும் பால்பழம் பஞ்சகச்சாயங்களுடனும் இஷ்டான்னம்புசித்து, கர்ப்பூர தாம்பூலங்கொண்டு, கந்தபுஷ்பாதிகளைத் தரித்து இளைப்பாறி இந்திரலோகத்திற்குப்போய் அமிர்தபானம்பண்ணி, இந்திராணிமுதலாகிய தேவஸ்திரீகள் சத்திரம் பிடிக்கச் சாமரம்வீசக் காளாஞ்சியேந்த - அரம்பை மேனகை முதலாகிய தேவதாசிகள் பரதநாட்டியஞ்செய்ய - தேவேந்திரன் முதலான பலதேவர்களும் ஏவல்கேட்க - அந்த இந்திரனுடைய சுதர்மமென்னு மண்டபத்திற் சுதர்மணி சிங்காசனத்திலிருந்து வேடிக்கையாகப் பகற்பொழுதுபோக்கி, சத்தியலோகத்திற்குப்போய்ப் பிர்மாவுடனே சனக — சனந்தன — சனாத — சனற்குமாரர்களு மற்றுமுள்ள சகல ரிஷிகளும் புடைசூழ அந்தப் பிர்மாவின் திருவோலக்கத்தி லிருந்து சகல சம்பிரமத்தோடே இராப்பொழுது போக்குவான்.

ஒரு சமயத்தில் விமானத்தின்மே லேறிச் சந்திரமண்டலத்திற்குப்போய் அந்தச் சந்திரனைப்போலவே சஞ்சரிப்பான். ஒருவேளையில் தேரின்மேலேறி அதைச் சூரிய மண்டலத்திற்கு நடத்திக்கொண்டுபோய் அந்தச் சூரியனைப்போலவே உலாவுவான். எட்டுத் திசைகளிலும் போய்த் திக்குப்பாலர்கள்செய்யுங்காரியத்தையுந் தான்செய்வான். மகமேருவின் சிகரத்திற் பிரசண்ட மாருத மோதியடித்தாலும், யுகாந்தகால இடியிடித்து விழுந்தாலும், மகாப்பிரளயம்வந்தாலும் எவ்வளவாயினும் சலனமில்லாமல், சொர்னச்சாயையாயும் சித்திர விசித்திரமாயு மிருக்கின்ற பெரிய கோட்டைக்குள் நவரத்தின கசிதமாயும் திவ்விய தேஜோமயமாயும் பிரகாசிக்கின்ற அழகிய மண்டபத்தில் மாணிக்கசிங்காசனத்தில் சக்ரேஸ்வரனாய் வீற்றிருந்து, அகண்டாதி பத்தியமாக ராஜரீகஞ்செய்வான். பிருதிவு - அப்பு — தேயு — வாயு — ஆகாயம் — ஆகிய இவைகளுக்கு அதிதேவதையா யிருக்கின்றவர்களைத் தள்ளித் தான் அவர்களுக்குப் பிரதியாயிருந்து அவர்கள்செய்கிற கிர்த்தியங்களெல்லாஞ் செய்வான்.

கமலக்கண்ணனாகிய ஸ்ரீமகா விஷ்ணுவும் அக்கினிக்கண்ணனாகிய சிவபிரானுமென்கின்ற இவ்விரண்டு பெயருந்தவிரத் தன்பெயரையே சகல லோகத்தாரும் சொல்லி ஸ்தௌத்தியஞ் செய்யவும், பிராமணர் முதலானவர்கள் செய்யும் காருகபத்தியம்—யாகவனீயம் - தக்ஷணாக்னியம். என்னும் நித்தியாக்கினிகளிலும் வேதோக்தமாகச் செய்கின்ற யாகங்களிலும், தேவர்களைநோக்கி யவர்களுக்குக்கொடுக்கின்ற அவிர்ப்பாகங்களை யெல்லாம் தனக்குக்கொடுக்கும்படி செய்து,அந்தத்தேவர்களனைவருந் தானாயிருந்து வாங்கியுண்பான். ஆக்குதல்—காக்குதல்—அழிக்குதல்—என்கின்றஇந்தமுத்தொழில்களையும்மும்மூர்த்திகளுங் கைவிட்டொதுங்கி நிற்கும்படி, தானேயவைகளைச்செய்யத் தலைப்படுவான். யோகீஸ்வரர்களெல்லாம் அவனாலே தங்கள் தபங்களை இழந்தார்கள். தேவர்களும் தங்களுக்கு அவனேமுக்கியமானதெய்வமென் றெண்ணி அவன் பாதத்தைஅர்ச்சிக்கிறதேயல்லாமல்,மற்றைத்தெய்வங்களைப்பூஜிக்கிறதில்லை.

முற்காலத்திலே அமரர்கள் அசுரர்களெல்லாருங்கூடி வெகுபிரயாசமாகத் தூக்கி நட்டுத் திருப்பாற்கடலைக் கடைந்த மத்தாகிய நெடிய மந்தரகிரியை, அவன் தன் கையில் ஊன்று தடியாகச் சிலநாள் பிடித்துக்கொண்டிருந்து பின்பு அது தன்கைக்குப் பளுவுபோதாதென்று எறிந்துவிட்டான். சூரியன் உதித்து ஒடுங்குகின்ற ஸ்தானங்களாகிய உதயகிரி — அஸ்தமனகிரி— என்கின்ற இரண்டுமலைகளும் அந்த இரணியனுடைய இருகாதுகளுக்கும் குண்டலங்களா யிருக்கின்றவைகளென்றால், மற்றும் அவன் பராக்கிரமத்தைச் சொல்லவேண்டியதென்ன?

கவி.

மருக்கொடாமரை நான்முகன்மருத்துவன் முதலோர்
குருக்களோடெற் றேதுவதவன்பெருங் கொற்றம்

சுருக்கநான்மறை தொன்றுதொட்டுரைதொறுந் தோன்று
திருக்குந்தெய்வமு மிரணியனோநம வென்னும்.

வாசனைபொருந்திய தாமரை மலரினிடத்தில் வாசஞ்செய்கின்ற சதுர்முகங்களையுடைய பிரமனும், பஞ்சதாருக்களினது நிழலின்கீழ் சுதர்மணியென்னும் பெயருடைய இரத்தின சிங்காதனத்தில் அரசாக்ஷி புரிகின்ற தேவேந்திரன்முதலிய தேவகுருவாகிய பிரகஸ்பதியும், சதாகாலமுங் கற்பதுங் கேட்பதும் அவனுடைய கீர்த்திப்பிரதாபமே: நான்குவேதங்களும் தொன்றுதொட்டு ஓலமிட்டுங் காணக்கூடாத பரதேவதையும், இரணிய நமாவென்றே சொல்லுகின்றன. ஜெபம் – தபம்–இவை முதலானவைகளையும் சகலரு மவனைநோக்கியே செய்வார்கள்.

அவன் அடிவைத்தால் பூமிதாழ்ந்துபோம். சகஸ்திரபண மகுடங்களையுடைய அனந்தனு முடிசோர்ந்துபோவான். அவன் எழுந்துநின்றால் அண்டமுகடு சிரசிலேமுட்டி அப்பா லுயர்ந்துபோம். அவன் நடந்தால் பஞ்சமகா பூதங்களு நடுங்கிச் சலிக்கும். அவன்பெற்ற வரத்தினாலும் – அஷ்டசித்திகளாலும் – ஆணிலும், பெண்ணிலும், அலியிலும், உயிருள்ளவைகளாகிய சித்துப்பொருள்களிலும், உயிரில்லவைகளாகிய ஜடப்பொருள்களிலும், கண்ணினாற்காணப்படுகின்ற காட்சிப்பொருள்களிலும், மனதினால் நினைக்கப்படுகின்ற கருத்துப்பொருள்களிலும், சகல சராசரங்களிலும், சர்வாந்தரியாமிபோலப் புகுந்து சஞ்சரிப்பான். மண்ணிலும் மடியான். வானிலும் அழியான்.

இரணியாசுரன் தவஞ்செய்துபெற்ற அழியாவரத்தின் சிறப்பு.

கவி.

நீரிற்சாகில னெருப்பினுஞ்சாகில னிமிர்ந்த
மாருதத்தினு மண்ணின்மற்றெவற்றினு மாளான்
ஒருந்தேவரு முனிவரும்பிறர்களு முரைப்பச்
சாருஞ்சாபமு மன்னவன் றனைச்சென்று சாரா.

உள்ளிற்சாகிலன் புறத்தினுஞ்சாகில னுலவாக்
கொள்ளைத்தெய்வவான் படைக்கலம்யாவையுங் கொல்லா
நள்ளிற்சாகிலன் பகலிடைச்சாகில னமனார்
கொள்ளச்சாகில னினியவனுயிர் கொள்வார்.

நீரிலுஞ் சாவான். நெருப்பிலும் வேகான். காற்றிலும் இறவான். தேவர்களனைவரும், யக்ஷர்களெனைவர்களும், பிரமா விஷ்ணு ருத்திராதியர்களும், அவனைக்கொல்ல யத்தினப்பட்டாலும் உயிர்மாயான். மற்றமனிதர்கள் மிருகங்கள் பறவைகள் முதலான பலபலஜீவராசிகளாலும் அவனுக்கு மரணமேயில்லை. அண்டர்கள் முனிவர்கள் முதலிய மற்றயாவருமிடுகின்ற சாபங்களும் அவனைச் சேர்கிறதேயில்லை. அவனுக்கு அகத்திலுஞ் சாவில்லை. புறத்திலுஞ் சாவில்லை. இரவிலுஞ் சாவில்லை. பகலிலுஞ் சாவில்லை. தெய்வீகமாகிய சக்கராயுதம், சத்திவேல், யமதண்டம், யமபாசம், பிரமதண்டம், பிரமபாசம், பி

ரமாஸ்திரம், நாராயணாஸ்திரம், பாசுபதாஸ்திரம், இந்திராஸ்திரம், அக்கினியாஸ்திரம், வருணாஸ்திரம், நாகாஸ்திரம், மாயாஸ்திரம், இவை முதலாகிய அநேகவகை ஆயுதங்களும் அவனைக்கொல்லமாட்டா. யமன்வந்து பிடித்துக்கொண்டுபோனாலும் சாகமாட்டானென்றால், பின்னையார்தான் அவன் பிராணனை மாய்க்கின்றவர்கள்? பஞ்சமகா பூதங்களும் ஒன்றாகக்கூடி ஒருருக்கொண்டுவந்தாலும் மாளான். வேதத்திற்சொல்லப்பட்ட மந்திரங்களினாலும், ஔஷதங்களினாலும், இறக்கமாட்டான். பெற்றபிதாவே அவனைக்கொல்ல ஏற்பட்டாலும் பிராணலயப்படான். இவையாகும் அவனுடைய பராக்கிரம நிலைமை.

பிரகலாதன் சிறப்பு.

கவி.

ஆயவன்றனக் கருமகனறிஞரி னறிஞன்
தூயரென்பவர் யாரினுமறையினுந் தூயன்
நாயகன்றனி ஞானநல்லறத்துக்கு நாதன்
தாயின்மன்னுயிர்க் கன்பினனுளனொரு தக்கோன்.

இப்படி எல்லா உலகங்களுக்கும் தானொருவனே தலைவனாகி யாவரும் தனக்கெதிரில்லாமல் மகத்தாகிய தீரசூரபிரதாபத்துடனே வாழுங்காலத்தில், அவ்விரணியேஸ்வரனுக்கு அறிவுடையவர்களுக்கெல்லா மேலாகிய அறிவினையுடையவனாகியும், நல்லவர்களெல்லாரினு மிகவுநல்லவனாகியும், வேதத்தைக் காட்டினு மகாபரிசுத்த முள்ளவனாகியும், தாயைப்பார்க்கினும் அதிக தயையுள்ளவனாகியும், அளவிறந்த தவத்தினையுடையவனாகியுமுள்ள மகானுபாவனொருவன் அருமைத் திருமகனாக உற்பவித்து, பிரகலாதனென்கிற பெயரினையுடையவனாய்வளர்ந்து, ஐந்துவயதுள்ள சிறுபிள்ளையாயிருக்கிறான்.

இரணியாசுரன் தன்மகனாகிய பிரகலாதனுக்கு சண்டமார்க்கனால் வேதாத்தியயனஞ் செய்வித்தல்.

கவி.

என்றொரந்தண னெல்லையிலறிஞனை யேவி
நன்றுநீயிவற் குதவுதிமறையென நவின்றான்
சென்றுமற்றவன் றன்னொடுமொருசிறை சேர்ந்தான்
அன்றுநான்மறை முதலியவோதுவா னமைந்தான்.

ஓதப்புக்கவ னுந்தைபேருரையென லோடும்
போதத்தன்செவி தொளையிருகைகளாற் பொத்தி
ஏதச்சோயிது நற்றவமன்றென மொழியா
வேதத்துச்சியின் மெய்ப்பொருட்பெயரினை விரித்தான்.

ஓநமோநாரா யணயவென்றுரைத்துள முருகித்
தானையைந்திரு தடக்கையுந்தலையின்மேற் றாங்கிப்
பூநிறக்கண்கள் புனலுகமயிர்புறம் பொடிப்ப
ஞானநாயக னிருந்தனனந்தண னடுங்க.

அக்காலத்தில் அநேகயுகங்களைக்கடந்தும் அபிவிர்த்தித்துக்கொண்டிருக்கின்ற ஆயுஷியத்தையுடையவனாகியும், சதுர்த்தசபுவனத்தாரும் தன் பாதத்தை வணங்கும்படி ஏகசக்ரேஸ்வரனாயுமிருக்கின்ற இரணியாசுரன் மனமகி

ழ்ச்சிகொண்டுருகி மகனைப்பார்த்து, அப்பா என் புத்திரசிரோமணியாகிய பிரகலாதா! நீ சகலசாஸ்திரங்களுங் கற்றுக்கொள்ளுக வென்று அபரிமிதமாகிய கல்வியும் விவேகமுமுடைய அசுரகுருவான சுக்கிராசாரியார் புத்திரனான சண்டமார்க்கனென்பவனை அழைப்பித்து, நீர் என்கண்மணியாகிய பிரகலாதனுக்கு வேதசாஸ்திராப்பியாசம் பண்ணுவியுமென்று திட்டப்படுத்தி யனுப்பினான். அவ்வண்ணமே அந்தஉபாத்தியாயன் பிரகலாதனைக் கூட்டிக்கொண்டுபோய்க் கல்விக்கழகத்தினிடத்திற்சேர்ந்து, வேதத்தை யோதுவிக்கத்தொடங்கி, அசுரேந்திரனுடைய தவக்குமாரனைப்பார்த்து, பிள்ளாய்! (ஓம் இரணியநம:) என்று உன்பிதாவினுடைய நாமத்தை முன்னே ஸ்மரணைசெய்யென்று சொன்னான். அதுகேட்ட அந்தப்பாலன் தன்னிரண்டுசெவிகளையுங் கைகளால் மூடிக்கொண்டு, ஓ பேரறிவையுடைய உபாத்தியாயரே! நீர் இப்படிச் சொல்லுகிறது நன்மையல்ல. நான் சொல்வதைக்கேளும். என்று சொல்லி வேதத்தின்முடிவிலே சொல்லப்பட்டு தத்துவார்த்தமாய் விளங்கிநிற்கும் பிரமசாக்ஷாத்காரத்தின்திருநாமத்தைக்கருதி,(ஓம்நாராயணாயநம:) என்று நாவினாற்சொல்லி மனதுருகி ஸ்தம்பாகிர்தியா யமைவுற்றுநின்று, தன்னுடைய இரண்டுகைகளையும் தலையின்மேல் அஞ்சலிபண்ணிக்கொண்டு நமஸ்கரித்து, தாமரைமலருக்கிணையாகிய கண்கள் ஆனந்தபாஷ்பம்பொழிய, தேகம்புளகிக்க, மயிர்க்குச்செறிய, இந்தப்பிரகாரம் அந்தஞானசிரேஷ்டனாகிய பிரகலாதாழ்வான் பக்திபரவசனாய்ப் பகவத்தியானத்திலிருந்தான்.

அப்போது அந்தப்பிராமணனாகிய சண்டமார்க்கனுடைய சரீரம் நடுநடுங்கி, என்னடாத்துரோகி! என்னடாபாவி! என்னடா சண்டாளா! ஐயையோ!! என்னையுங்கெடுத்தாய். என்னைக்கெடுத்ததல்லாமல் உன்னையுங்கெடுத்துக்கொண்டாய். நீ கெட்டதுமல்லாமல் சகலத்தையுங் கெடுத்துவிட்டாயே: அடகெடுவாய்! அடகுலநாசகா! அந்தப்பிரமாதிதேவர்களுஞ் சொல்லுகிறதற்கு அடாததாய் அயோக்கியமானதா யிருக்கின்ற ஏதோ ஒன்றைச்சொல்லும்படி உனக்குப்புத்திபிறந்து நாவெழுந்ததே: இது என்னகாரணம்? ஆஆ!! என்ன அக்கிரமத்தைச்செய்ய நினைத்தாயென்றான்: இப்படி உபாத்தியாயன்சொன்னதற்குப் பிரகலாதன் சொல்லுகிறான். ஐயா வித்தியாகுருவே! நான்செய்ததென்னவென்றால் . முதல் என்னையுய்யும்படிச்செய்துகொண்டேன். பின்பு என்தந்தையை உய்யும்படிச்செய்தேன். அப்பால் உம்மையுய்யும்படிச்செய்து இந்த உலகத்தையும் உய்யும்படிச்செய்ய உத்தேசித்து,வேதாத்தியாயனம் செய்கின்றவர்கள் ஆதியிலும் அந்தத்திலும் அந்தவேதத்தின் முதற்பொருளாகிய ஸ்ரீ அரியையல்லவோ ஸ்துதிசெய்கிறது? அஃதல்லவோ சம்பிரதாயம்? நானும் அந்தப்படியே சொன்னேன். நான் சொன்னதில் என்னகுற்றம்? என்றுசொல்லவும் அதுகேட்ட உபாத்தியாயனாகிய சண்டமார்க்கன் சொல்லுகிறான்.

அடாகுழந்தாய்! தேவர்களுக்கெல்லாம் தலைவனாயிருக்கிறவன் இந்திரன். அந்த இந்திராதிதேவர்களுக்குந் தலைவர்களாயிருக்கின்றவர்கள். திரிமூர்த்

திகள். அந்தத்திரிமூர்த்திகளுக்குந் தலைவனாயிருக்கிறவன் உன்னைப்பெற்ற தந்தையாகிய இரணியேஸ்வரன். அப்படிப்பட்டவனுடைய பெயரைச் சொல்லுகிறதற்கு அருகனாயிருக்கிற பிராமணோத்தமனான என்னைப்பார்க்கிலும் நீ, யென்ன விசேஷமாகத்தெரிந்தவனோ? இந்தக்கர்னகடூரமாகிய பெயரைச்சொல்லி என்குடியைக்கெடுக்காதே: அப்பா! உனக்குப் புண்ணியமாய்ப்போகிறது. என்று சண்டமார்க்கன் சொன்னபோது நிர்மலசித்தத்தையுடைய பிரகலாத னவனைப்பார்த்து, ஐயா! நான் அந்த ஆதிநாயகனுடைய திருநாமத்தையல்லாமல் வேறொன்றையுமறியேன். என்னறிவுக்குச் சொல்லவேண்டியது பிறிதொன்றுமில்லை. அவனுடைய கடாக்ஷத்தினாலே எனக்குப் போதிக்கப்படாதபரமார்த்தமும் வேறில்லை. என்றுசொல்லி அச்சண்டமார்க்கனைப்பார்த்துப் பின்னுஞ்சொல்லுகிறான். ஐயா உபாத்தியாயரே! புராதனமாகிய வேதங்களால் கிரமமாக நிச்சயித்துச்சொல்லப்பட்ட பொருளுக்கெல்லா முடிவாகிய பரம்பொருளாயிருக்கின்ற ஸ்ரீமந்நாராயணன் எனக்குள்ளேவந்துபுகுந்து, என்னுடைய இதயகமலத்தைத் தனக்கு உறைவிடமாகக்கொண்டு எழுந்தருளியிருக்கின்றான். ஆகையால் அவனைவிடப் பெறுதற்குரிய பயன் எனக்கு வேறொன்றுமில்லை. ஆனாலு நானறியாதது ஏதாவதிருந்தால், அதை நீ தவறாமல் ஓதுவியும். ஐயா! பிர்மக்கியானசிரேஷ்டர்களெல்லாம் ஆரைச்சொல்லுகின்றார்கள்? வேதங்களும் விஞ்ஞானமும் எந்தவஸ்துவைச் சொல்லுகின்றன? உபநிடதங்கள் எதைச்சொல்லுகின்றன? அமரர்களுமுனிவர்களுஞ் சொல்லுகின்ற அந்தச்சர்வேஸ்வரனுடைய திருநாமத்தைச் சொல்லவேணுமேயல்லாமல் வேறேசொல்லைத் தக்கதும் ஒன்றுண்டோ?

மகானுக்களானவர்கள் இருக்காதி வேதங்களினாலும், அக்கினிஷ்டோமாதியாகங்களினாலும், தத்துவக்கியானத்தினாலும், மற்றுமுள்ள எவ்வகைப்பட்டசாதனப்பொருள்களாலும்சாதித்துப்பெறுவதற்குரிய பொருளையே நான்முக்கியமாய்ப்பெற்றிருக்கின்றேனாகையால்; இனியொருவர் ஓதுவிக்கும்படி ஓதி, கேட்பிக்கும்படி கேட்கத்தக்கபொருள் இன்னமு மொன்றுண்டாயிருக்கின்றதோ? அஃதில்லவே இல்லை: உன்னதமாய் ஆகாயபரியந்தம் வளர்ந்த ஆரணியவாசஞ்செய்தும், மரங்களடர்ந்த மலைக்குகைகளிற் சேர்ந்திருந்தும், கிருஷ்ணசனந் தரித்தும், சிரமுண்டிதஞ்செய்தும், ஜடைவளர்த்தும், அக்கினி மத்தியிலிருந்தும், தவம்பண்ணியும், சாந்திராயண விரதத்தை யனுஷ்டித்தும்,ஜலம்பருகியும்,சருகுகந்தமூல பலாதிகளைப் பக்ஷித்தும், காற்றைப்பிடித்தடக்கியும், அஷ்டாங்கயோகஞ் செய்தும், ஞானநிஷ்டை சாதித்தும், இந்தக்கிரமத்தினால் மோக்ஷத்தையடைந்த முக்தாத்மாக்கள்பெற்ற பாக்கியத்திலு மிகவும் உத்கிருஷ்டமாகச் சொல்லப்பட்ட பகவத்கடாக்ஷமாகிய பரமபாக்கியத்தை நான்பெற்றேன். இதைப்பார்க்கிலு மென்மேலும் வருத்தப்பட்டுச் சம்பாதிக்கவேண்டியது என்னவிருக்கின்றது?

ஸ்ரீதெய்வநாயகனுடைய அடியார்க்கடியாரா யிருக்கின்றவர்கள் செவிகளின்றப் பலகேள்விகளைக்கேளாதவர்களானாலும், வாயினாற்பல நூல்களைப் படி

யாதவர்களானாலும், தேவர்களுக்கு அவிகொடுக்கின்ற மந்திரங்களைச் சொல்லுகின்ற சதுர்வேதங்களின் பூர்வார்த்த உத்தரார்த்தங்களை அறிவார்கள். வித்துவஜனர்களாயினோர் உண்மைப்பொருளைக் காண்பார்கள். அவர்களுடைய பிரபாவத்தை யாரறிவார்கள்? எனக்கும், சதுர்முகப்பிரமாவுக்கும், சகல மானவர்களிலு முயர்ந்த தனக்கும், மற்றச் சராசரங்களுக்கும் தலைவனாயிருக்கின்றபெருமான் என்மனதிலெழுந்தருளி யிருக்கின்றமையால்; எனக்குச் சகலமும் எளிதிற்கிடைத்திருக்கின்றன. ஐயா உபாத்தியாயரே! உமக்கும் இதைவிட யுக்தமானது மற்றொன்றில்லை. இப்படியே நீருஞ்சொல்லி, இந்த அநுஷ்டானத்தையே கைக்கொண்டு, உம்முடைய ஆத்துமா உஜ்ஜீவிக்கின்றவிதத்தை நாடிக்கொள்ளுமென்று சொன்னான்.

அண்ணா தசக்கிரீவரே! இவ்வாறெல்லாம் பிரகலாதன் சொல்லக்கேட்ட அந்தச்சண்டமார்க்க னென்கிற உபாத்தியாயன் அவைகளுக்குப் பிரதியாக யாதொருசொல்லுஞ் சொல்லாமல் மனமறுகி, இனியெனக்கென்ன பெருமையிருக்கின்றது? என்பிராணனுக்கே முடிவுவந்தது. இரணியனிடத்திற் போய் அவனைக்கண்டு நல்லவிசேஷத்தைச்சொல்லித் தப்பிவருகிறதே மகா பிரயாசம், அப்படியிருக்க — இந்தக்கொள்ளையை எப்படி மனந்துணிந்து நாவானதுகூசாமற் சொல்லுகிறது? சொன்னால் அவனென்னசொல்லுவானோ? நான் வேதங்கற்பிக்கச்சொன்னால் ஏதேதோ துர்ப்போதனைகளைப்பண்ணி நீ யென்பிள்ளையின் புத்தியைக் கெடுத்துவிட்டாயென்பானோ? கோபத்தினால் கொலைசெய்வானோ? இதுவரையிலுஞ் சுகமாக ஜீவித்தேன். இப்பொழுதெனக்குக் கிரகசாரந்தான்போதாதோ? ஐயையோ!! இதேது தர்மசங்கடமாயிருக்கின்றது. என்று எண்ணாததுமெண்ணி முகம்வாடிக்கிலேசித்துப் பயந்து, நடுநடுங்கிக்கொண்டேபோய் இரணியனைக்கண்டு, அதிகபயபக்தி விசுவாசத்துடனே சாஷ்டாங்கமாகவிழுந்து வணங்கியெழுந்து, கைகட்டி வாய்புதைத்து, வஸ்திரத்தை யொதுக்கிக்கொண்டுநின்று இவ்வாறுசொல்லுகிறான்.

பிரகலாதன் கருத்தைச் சண்டமார்க்கன் இரணியனுக் குணர்த்தல்.

கவி.

மாற்றம்யாதொன்று முரைத்திலன்மறையவன் மறுகி
ஏற்றமென்னெனக் கிறுதிவந்தெய்திய தென்னா
ஊற்றமில்லவ னோடினன்கனகனை யுற்றான்
தோற்றவந்ததோர் கனவுகண்டானெனச் சொன்னான்.

எந்தைகேளெனக் கிம்மைக்குமறுமைக்கு மியம்பச்
சிந்தையாலிறை நினைத்தற்குமடாதன செப்பி
முந்தையேநினைந் தென்பொருள்முற்றுமென் றுரைத்தான்
மைந்தனோதிலன் வேதமென்றுரைத்தனன் வணங்கி.

சுவாமி! அடியேனொரு கனவுகண்டேன். அதைத் தேவரீரிடத்திற் சொல்லும்படி வந்தேனென்று சொன்னான். அதுகேட்ட இரணியன் அந்தச் சண்

டமார்க்கனைநோக்கி, ஐயா! நீர்கண்ட கனவின் விபரம் யாது கூறுமென்றுகேட்டனன். அதற்கு குருபுத்திரனாகிய உபாத்தியாயர் நடுங்கி, ஓ எங்களுக்கெல்லாந் தந்தையாயுங் குலதெய்வமாயு மிருக்கின்ற இரணியேஸ்வரனே! உம்முடைய வரகுமாரன் என்போலியர் இம்மையிலு மறுமையிலும் வாயினாற் சொல்லத்தக்கதாயு மனதினால் நினைக்கக்கூடாததாயு மிருக்கின்ற பலவிதச் சொற்களை, ஒருவர் சொல்லிக்கொடுக்காமல் தானே சொல்லிக்கொண்டிருக்கின்றான். வேதமோதென்று சொன்னால் ஓதாமல், நான் முன்னமேநானே சகலார்த்தங்களையும் அறிந்திருக்கிறே னென்று சொல்லுகிறான். ஐயா! இதற்கு யான் செய்யத்தக்கதியாது? என்றுகூறிய உபாத்தியாயன் சொல்லைக்கேட்ட இரணியன் அவனைத்தேற்றி, ஐயா சண்டமார்க்கரே! பிராமணர்களுக்கு யோக்கியமல்லாதவைகளாயும், முன்பு யாவருஞ்சொல்லிய கிரமத்திலேசம்பந்தப்படாதவைகளாயும், நீர் வெறுக்கும்படியாயும், அவன் தன்னறிவினாலே புதுமையாக வெடுத்துச் சொன்னவைகள்தாமென்ன சொல்லுமென்றான். அதற்குப் பிராமணன் பயந்து, சிரசின்மேற் கைகூப்பி நமஸ்கரித்துச் சொல்லுகின்றான்.

சுவாமி! காதுக்குள்ளே விஷசர்ப்பம் நுழைகிறதுபோல மகாகுரூரமாயிருக்கின்றசொல்லை அடியேன் தேவரீரிடத்திற் சொல்வேனேயாகில், இரௌரவ நரகத்திலேபோய் விழுவேன் என்னாவும் இப்பொழுதேவெந்து இற்று விழுந்துபோம். என்று சொல்லவும் அதுகேட்ட கொடியவனாகிய இரணியாசுரன் ஆச்சரியசித்தனாகி, சீக்கிரமாக என்குமாரனை அழைத்துவாருங்களென்று ஆக்கியாபித்தான். அந்த க்ஷணமே தூதர்களோடிப்போ யழைத்துவந்தார்கள். தனக்கு ஒருதுணையும் வேண்டாமலிருக்கின்ற ஏகமூர்த்தியைத் துணையாகவுடைய பிரகலாதன் வந்து தன்பிதாவைக்கண்டு சேவித்தான். அப்படிச்சேவித்த புத்திரனை மணியாரம் பிரகாசிக்கின்ற தன் மார்பினிடத்திலணிந்த பொற்சுண்ண முதலானவைகள் அவன்மார்பிற் படியும்படி அன்பினாலிறுகத்தழுவி, பக்கத்தில்வைத்துக்கொண்டு, அவனுடைய திருமேனி முழுமையும் பார்த்து, அப்பா பிரகலாதா! உங்களுபாத்தியாயர் கோபிக்கும்படி நீ பழுதாக என்னவார்த்தை சொன்னாய்? அதைச் சொல்லுகவென்று இரணியன் கேழ்க்கவும் அதற்குப் பிரகலாதன் சொல்லுகிறான்.

இரணியன் பிரகலாதனை யென்னசொன்னாயென்று கேட்க அவன் தான்சொன்னதைச் சொல்லுதல்.

கவி.

சுருதியாதியிற் றொடங்குறுமெல்லையிற் சொன்ன
ஒருவன்யாவர்க்கு நாயகன்திருப்பெய ருணரக்
கருதக்கேட்டிடக் கட்டுரைத்திடர்க்கடல் கடக்க
உரியமற்றிதி னல்லதொன்றில்லென வுரைத்தான்.

ஐயா! வேதமோதும்போது பிரதமத்திலே சொல்லப்பட்டதை நான் உச்சரித்தேன். அறிந்தாலும், நினைந்தாலும், கேட்டாலும், சொன்னாலும் நன்

பக்கடலைக் கடப்பதற்கு உரியது அதுவேயாம். அதைவிட நல்லது வேறொன்றில்லையென்று பிரகலாதன் சொன்னான். தேவர்களுக்குத்தக்க வொழுக்கத்தையுடைய அந்தப் பிரகலாதன் அப்படிச்சொல்லவே, பொல்லாதவனாகிய இரணியன் குற்றமில்லாத உபாத்தியாயன் சொல்லத் தக்கதையே சொல்லியிருப்பான். ஆனதாகட்டும்: இவனுடைய அபிப்பிராயத்தை யறிவோம். என்று நினைத்துக்கொண்டு நீ சொன்ன அந்தச்சொல் யாது? அதனைச் சீக்கிரமாகச் சொல்லென்று கேட்டான். அதற்குப் பிரகலாதன் சொல்லுகிறான்.

கவி.

காமம்யாவையுந் தருவதுமப்பதங் கடந்தால்
சேமவீடுறச் செய்வதுஞ்செந்தழன் முகந்த
ஓமவேள்வியி னுறுபதமுய்ப்பது மொருவன்
நாமமன்னது கேணமோநாராயணாய.

ஐயா பிதாவே! மனோபீஷ்டத்தை யெல்லாங் கொடுப்பதும், அவைகளை யனுபவித்துக்கடந்தால் மோக்ஷத்தை அடையும்படிச் செய்வதும், ஓமங்கள்-யாகங்கள் —செய்தவர்களை அவைகளுக்குரிய பதவிகளிற் செலுத்துவதும், ஆகிய ஏகவஸ்துவா யிருக்கின்றவனுடைய திருநாமமே: அது பிரணவத்துடனேகூடிய (ஓம் நாராயணாயநம:) என்னும் திருமந்திரமேயாம்.

பூமண்டலமுதற் பிரமலோக பரியந்தம் வாழ்கின்ற எண்ணிக்கையில்லாத பூதபௌதிக சராசரங்கள் யாவற்றினுள்ளும் கலந்து நிறைந்து, அந்தக் கரணங்களிலும் பொருந்தி, அங்கிருந்து உதிக்கின்ற உணர்வினால் உணரப்படுவது இந்தத் திருவஷ்டாக்ஷரமே யல்லது வேறில்லை. சதுர்முகப் பிரமாவாதியாக மனிதர்கள்வரையிலும் இந்தத் திருமந்திரத்தை மறந்தவர்கள் இறந்தவர்களே: இதை ஒருவர்காண்பிக்க ஒருவரறிகிறதோ? மகாபிரயாசம்: அப்படியானால் எப்படித்தான் அறிகிறதென்றால், சொல்லுதற்குரிய அதிகாரியாகிய சதாசாரியனும் கேட்பதற்குரிய பக்குவியாகிய சிஷனும்கூடி, ஒருமித்திருந்துகாட்டக் கண்டறிந்தாலறியலாம். மற்றப்படி அனதிகாரியாகிய ஆசாரியனும், அபக்குவியாகிய சிஷனும், அதனிலையைக் காட்டவும் அறியவுமாட்டார்கள். ஜனனமாகிய சமுத்திரத்தின் பழவினையாகிய சுழலில் நின்றும் கரையேற்றுகின்ற நல்லமரக்கலமா யிருப்பதும், யாவருக்குங் கிடைப்பதற்கு அருமையாகிய பூஷணமாயிருப்பதும், சொல்லுக்கு மங்களகரமாயிருப்பதும், இருஷிகள் வேதத்தின்முடிவில் சிலாக்கியமாகத் தெளிந்தெடுத்த மெய்ப்பொருளு மிதுவே: இதற்குச் சமானதிகமுமிதுவேயல்லாமல் மற்றொன்றுமில்லை. உம்முடைய ஆத்துமாவுக்கும், என்னுடைய ஆத்துமாவுக்கும், இவ்வுலகத்திலுள்ள சகல ஆத்துமாக்களுக்கும், இதுவே உறுதியென நான்மதித்துச் சொன்னது. என்று தத்துவக்கியானிகளிற் சிறந்தவனாகிய பிரகலாதாழ்வான் இவ்வண்ணம் உயர்மறையி னுச்சிப்பொருளாகிய அஷ்டாக்ஷரத்தை யோதியதாகச் சொல்லினான்.

இரணியன் கோபித்துப் பிரகலாதனுக்குப் பயமுறுத்தி அப்பெயரைச்சொன்ன துனக்காரென்றும் நீயெவ்விதஞ் சொன்னாயென்றுங்கேட்டு தனக்கும் அவ்வரிக்கும் இருக்கும் பகையைக் கூறல்.

கவி.

அற்றைநாண்முதல் யானுளநாள்வரை யப்பேர்
சொற்றவாயையுங் கருதியமனத்தையுஞ் சுடுமென்
ஒற்றையாணைமற் றியாருனக்கிப்பெய ருரைத்தார்
கற்றதாரொடு சொல்லுதிவிரைந்தெனக் கனன்றான்.

இரணியன் சோதிமின்னலைப்போலப்பிரகாசிக்கின்ற தன்கையிலேந்திய வீரவேலாயுதத்தைச் சுழற்றி, கண்களை நெருப்பு ஜொலிக்க விழித்து, அடா துஷ்டப்பயலே! நான் பிறந்தநாள்முதல் இந்நாள்வரைக்கும் இந்தப் பெயரைச்சொன்ன வாயையும், இதை நினைத்தமனதையும், என்னுடைய ஒப்பற்ற சக்கராக்கினையானது தகித்துவிடும். அப்படியிருக்கப் பின்னையாருனக்கிந்தப் பெயரைச்சொல்லிக் கொடுத்தவர்கள்? நீ எவரிடத்திற் கற்றுக்கொண்டாய்? சீக்கிரத்தில் உள்ளதைச் சொல்லுக. என்று காலாக்கினி சொரூபமாய்க் கோபித்து, இரிஷிகள் முதலாகத் திரிலோகங்களிலுமுள்ள மற்றச் சகலமானவர்களும் என்னுடைய உபயபாதத்தையே தியானஞ்செய்கிறது. என்பெயரையே ஸ்துதிசெய்கிறது. ஆகையால் - அவர்களெல்லாம் உனக்கு இதைச் சொல்லுகிறதற்குப் பயப்படுவார்களே. அப்படிக்கிருக்க நீ எப்படித்தான் அறிந்தாய்?

மேலும், அந்த விஷ்ணுவானவன் என்னிடத்தில் யுத்தஞ் செய்யும்படி அநேகாவர்த்திவந்து எதிர்ந்து, தானேறிய கருடவாகனத்தின் வேகத்தால் தப்பியோடிப்போய்க் கடலிலேவிழுந்து அமிழ்ந்து, இன்னமும் எழுந்திராமற் கிடந்து உறங்குகின்றான். அவ்வாறு உறங்குகின்றவனுடைய பெயரை உனக்கு உறுதியான பொருளென்று சொன்னவர்களைக் காட்டடா! சமுத்திரத்தின் சிறுமணலையெண்ணி அளவிட்டாலும், நம்முடைய குலத்திலே தோன்றிய பெரியோர்களை அளவிடக்கூடாது. அத்தனைபேர்களும் அவனொருவனே கொன்று தீர்க்கும்படி இறந்துபோனார்கள். எலியானது தனக்குக் கூற்றுவனாகிய கொடிய பாம்பின்பெயரைச் சொன்னதனால் அதற்கு என்ன நன்மையுண்டு? அப்படியாக விருக்கிறது நீ அந்தச் சத்துருவின்பெயரைச்சொல்லுகிறது. உனக்கிந்தத் துர்ப்புத்தி வந்ததற்குக் காரணம் என்னவென்று சொல்லலாம்! மேலேழு லோகங்களையும் கீழேழு லோகங்களையும் தன்வயிற்றுக்குள்ளே அடக்கி வைத்துக்கொள்ளத்தக்க ஐயப்பாடுநீங்கிய பலசாலியாகிய என் தமையன் இரணியாக்ஷனென்பவனை ஒரு பன்றியாக வடிவெடுத்துக் கொம்பினாற் குத்தியெறிந்து மடித்தவனுடைய பெயரைச் சொல்லுகிறதற்கோ உன்னை நான் பிள்ளையாகப் பெற்றது? ஐயோ! உலகத்திற் பிள்ளையைப் பெறுவது தந்தையின்பெயரைச் சொல்லுகிறதற்கல்லவா?

அடா பிரகலாதா! இவ்வுலகத்திற்கும், அதிலுள்ள உயிருக்கும், மற்றெல்லாவற்றிற்கும் நானொருவனே தலைவனாயிருக்கிறேன். சகல உயிர்களையும் உண்டாக்கல்—காத்தல்—அழித்தல்—என்கின்ற இம்மூன்று தொழில்களும் என்னாலே செய்யப்படுகின்றன. இந்தப் பிரத்தியக்ஷமாகிய காரியத்தைப் பாராமல் வேறே காரணமுண்டென்று நீ சொல்லுகின்றது எந்தவேதத்தின் சம்மதமென்று தேறினாய்? ஆதியந்தமில்லாத அளவிறந்த உலகங்களிலும் வேதம் எந்தமார்க்கமோ? அந்தமார்க்கத்தையே சார்ந்து அதுசொன்ன விதிப்படியே குற்றமற்ற நல்வினையைச் செய்தவர்கள் மேன்படுவார்கள். தீவினையைச்செய்தவர்கள் தாழ்வார்கள். யோசிக்குமிடத்தில் இது உண்மையாம். பூர்வத்தில் மகத்தாகிய தவத்தைச் செய்ததனால் அரியரப்பிரமாக்கள் திரிமூர்த்திகளென்று யாவருஞ் சொல்லத்தக்க பதத்தைப் பெற்றார்கள். பின்பு நான் அவர்களைப்பார்க்கிலும் விசேஷமாகிய தவத்தைச்செய்து, உண்மையாகிய நாயகத்துவத்தை வகித்ததனால் அந்தப்பதத்தை யவர்களிழந்து, இனியிச்சித்தாலும் அதுகிடைப்பது துர்லபமென்று நினைத்துப் பூரணமாகிய என்னதிகாரத்துக்குள்ளடங்கி நடக்கின்றார்கள். புத்தியில்லாத இளம்பிள்ளையாகிய நீ இப்பொழுது செய்தபிழையை நான் பொறுத்துக்கொண்டேன். இனிமே லிப்படிப்பட்ட விரோதமாகிய வார்த்தைகளைச் சொல்லாதே. உபாத்தியாயர் என்னசொன்னாலும் அதை இதமாகவே கொள்ளக்கடவாய். இனியோதுபோவென்று இரணியாசுரன் சொல்லவும் அதற்குப் பிரகலாதன் சொல்லுகிறான்.

தன்னையே தெய்வமென்று கொள்ளச்சொன்ன இரணியனுக்குப் பிரகலாதன் சிலவார்த்தை கூறல்.

கவி.

உரையுள துணர்த்துவ துணர்ந்துகோடியேல்
விரையுளவலங்கலாய் வேதவேள்வியின்
கரையுள தியாவருங் கற்குங்கல்வியின்
பிரையுளதென்பது மைந்தன்பேசினான்.

ஐயா திரிலோக பயங்கரனாகிய என் பிதாவே! உமக்கு நான் அறிவிக்கவேண்டிய வார்த்தைகள் சிலவுள. அவற்றை நீர் சற்று மசட்டைபண்ணாமற் கேட்டறியவேண்டும். அஃதென்னவென்றால்—வேதமாகிய கடலுக்குக் கரையாயும், வேள்விக்குப் பயனாயும், யாவருங் கற்கின்ற கல்வியாகிய பாலுக்குப் பிரையாயுமிருக்கின்றதென்று பிரகலாதன் சொல்லத் தலைப்பட்டான். வித்தில்லாத விளைவு ஒன்றுமில்லை. உம்முடைய பைத்தியத்தைவிட்டு அறிவீரேயாகில் உள்ளங்கை நெல்லிக்கனியைப்போலக் காண்பீர். தனக்குள்ளேயிருந்து உலகங்களையெல்லாம் உற்பவிக்கப்பண்ணியும், தானும் அவ்வுலகங்களுக்குள்ளே கலந்திருந்தும், தனக்குப் பின்னுமில்லாமல் முன்னுமில்லாமல் ஏகவஸ்துவா யழியாதிருக்கின்றவனுடைய மகிமைப் பிரபாவமானது ஒருவரால் நிச்சயித்துச் சொல்லத்தக்கதோ? விரிந்து ஸ்தூலித்திருக்கின்ற பிரு-

திவி முதலாகிய தத்துவங்களையெல்லாம் வெவ்வேறாகப் பகுத்துக்காண்கின்ற சாங்கியநெறியும் யோகநெறியுமென்று இரண்டுவழிகளுண்டு. அவ்வழிகளை யறிந்தவர்களுக்கல்லது மற்றவர்களுக்கு அவனுடைய மேலாகிய உயர்ந்தநிலை இன்னதென்று அறியக்கூடுமோ? வேதமுடிவில் சித்தென்று தெளிந்து சொல் லப்பட்ட மெய்ப்பொருளாகிய அவனுடைய தன்மையைத் தம்மைத் தாம றிந்த ஞானசீலர்களாகிய பெரியோர்க ளறிவார்கள். அப்படியல்லாமல் விஷ யங்களையே பொருளென்று மதித்துக்கொண் டிருக்கின்ற பித்தர்களுமுண்டு. அவர்கள் தம்மையறியாமையால் அவனுடைய தன்மையையும் அறியார்கள். அவர்கள் மோக்ஷமும் பெறமாட்டார்கள்.

மேலும் – பிரத்தியக்ஷமுதலாகிய அளவுகளால் அளவிடப்படாத தாகி யும், மனதுக்கு எட்டாததாகியும்; உபநிடதங்களிற் சொல்லப்பட்ட வாக்கி யங்களாலும், அந்தவாக்கியார்த்தங்களாலும், அறிவிப்பதற்கு எட்டாததாகியு மிருக்கின்ற அந்தப்பரமபுருஷனுடைய ரகசியத்தை மெய்மையைக்காணாத பாமரர்களி லாரறிவார்கள்? கீழ்மேல்நடுவாகிய மூன்றுலகங்களாகியும், முக் குணங்களாகியும், யாவரும் யாவையுமாகியும், இவைகளுக்கு வேறுபட்டும், நீக்கமில்லாமலிருக்கின்ற ஒப்பற்ற நிலைமையையுடைய பரம்பொருளாகிய அ வ்வொருவனுடைய கிர்த்தியங்கள்; பிரமாதிதேவர்களாலு முனீஸ்வரர்களா லுந்தாம் அறியப்போமோ? கர்மமும், அந்தக்கர்மத்தாலாகிய பயனும், அப்ப யனைத்தருகின்ற கர்த்தாவும் தானாயிருக்கின்றான். அவனுடைய அருமையை யும் - பெருமையையும் - யாரேனும் அறிவார்களாகில், அவர்கள் இகபரமெ ன்கின்ற கடலைக்கடந்து கரையேறுவார்கள். மந்திரமும், மாதவமும், அவை களால்வரும் பிரயோசனமும், அவைகளைக்குறித்துக் கிரமமாகச் சொல்லப்ப ட்டதெய்வமும், வேதமும், வேள்வியும், ஆகுதியும், அவனேயன்றி வேறி ல்லை. இவற்றை முறைதவறாமற் செய்தோர்க்கு முன்னேகொடுக்கவேண்டி யபலனை முன்னே கொடுக்கிறதும், பின்னேகொடுக்கவேண்டியபலனைப் பின் னேகொடுக்கிறதும், அந்தநாராயணன்செய்கையே: இதை அவனுடைய அற் புதமாகிய மாயையினாலே அநேகரறியாதிருக்கின்றார்கள்.

நல்வினையானது நன்மையும், தீவினையானது தீமையுமாகிய ஒவ்வொரு பலனைக் கொடுக்குமல்லாமல், விசேஷமாகக் கொடுக்கமாட்டா. அந்தப்பக வானுடைய கருணையின்பிரபாவம் அப்படியல்ல. பலகாலம் ஜனனமரணத்து க்கேதுவாகிய இருவினைகளும் பற்றற்றுப்போகும்படி ஆசிரயித்தவர்களால் நினைத்தவைகள் என்னென்னவுண்டோ? அவைகளையெல்லாம் அவர்களுக்கு க் கொடுக்கின்றது. இதையன்றி வேறுதிஷ்டாந்தமும் வேண்டுமோ? யாககிர் த்தியங்களைச்செய்கின்ற சோமயாஜிகள் யாகமுடிவிலே அந்தச்சேஷசாயிக் கு ஒரு ஆகுதிகொடுப்பார்களானால், அதுசராசரங்களுக்கெல்லாம் திருப்தி யாகும். வேதமும் இப்படியே சொல்லுகின்றது. மூலப்பிரகிருதியென்னும் மாயையினிடத்திலிருந்துதோன்றிய பஞ்சபூதபௌதிகங்களைக்கந்த முதற்

பொருளானது, அந்தப் பூதபௌதிகங்களாலாகிய நரககதி—மிருககதி — மானுடகதி—தேவகதி என்னும் நான்கு கதிகளிலும் போக்குவரவற்ற நிலைமையை அடையாத மேலானவர்களுடைய அறிவுக்கும் எட்டுமோ?

ஸ்ரீமந் நாராயணன் பெருமையைப் பிரகலாதன்கூறல்.

கவி.

எழுத்தியனுளத்தினெண்ணிலாவகை
முழுத்தனிநான்முகன் முதலமற்றுயிர்
வழித்தரும்பொகுட்டதோர் புரையின்வைகுமால்
விழுத்தனிப்பல்லிதழ் விரையிலாமுகிழ்.

கண்ணினுங்கரந்துளன் கண்டுகாட்டுவான்
உண்ணிறைந்திடுமுணர் வாகியுண்மையால்
மண்ணினும்வானினு மற்றைமூன்றினும்
எண்ணினுநெடியவ ஞெருவனெண்ணிலான்.

பிரமன்முதலான சராசரங்களெல்லாம் அந்தஜோதிசொரூபியின் இலக்கணமமைந்த திருநாபிக்கமலத்தின் பொகுட்டில் ஒருபுரைக்குள்ளே அடங்கியிருக்கின்றன. காண்கின்றவர்கள் காட்டுகின்றவர்களுடைய கண்ணுக்குள்ளும் அவனொளித்திருக்கின்றான். பஞ்சபூதங்களுக்குள்ளும் நிறைந்திருக்கின்றான். சகலருடைய நினைவிலுஞ் செய்கையிலுஞ் சொல்லிலும் வாழ்ந்திருக்கின்றான். இந்திரியங்கள்தோறும் சேர்ந்திருக்கின்றான். இப்படிக்கெல்லாமிருக்கின்றதை ஒருவன் தானெவ்வளவும் நினைக்கிறதில்லை. முன்பு ஏகாக்ஷரமாகிய பிரணவமும், பின்பு த்வயாக்ஷரமாகிய நமசப்தமும், அப்பால் பஞ்சாக்ஷரமாகிய நாராயணாயவென்பதோடுகூடி எட்டெழுத்தாகி; மூன்றுபதமும் இரண்டுசந்தியுமாய்த் தழைத்திருக்கின்றான். காமம் வெகுளி மயக்கம் இவைகளினாலுண்டாகிய தீமைகளையெல்லா நிவர்த்திசெய்கின்ற அந்தஷாட்குண்ய பரிபூரணனான எம்பெருமானுடைய திருநாமத்தையும் அதன்மகிமையையுங்குறித்துப்பேசாதவர்கள், அவனது இருப்பை எப்படியறிந்து பேசமாட்டுவார்கள்? காலமும் - கருவியும் - இடமும் - பயனும் - அந்தப்பயனை அனுபவிக்கின்றவனுமாகி, சீலமும் அச்சீலத்தாலாகுஞ் சம்பத்கரமுமா யிருக்கின்றான்.

பெரிதாகிய ஆலமரமும் சிறிதாகிய அதன்வித்தும்போலச் சங்கோசமாயும் விகாசமாயுமிருக்கின்றான். சங்கீதவித்துவான்கள் ஸப்தஸ்வரங்களையும் தங்களுக்குள்ளே உதிக்கின்ற உணர்வினால் முன்புசிந்தித்துக் கண்டறிந்து, பின்புவீணையினிடத்தில் வாசித்தலினால் செவிக்கு விஷயமாகும்படி அறிகிறதுபோல; பெரியோர்கள் யோகத்தில் தியானத்தின்வழியாகத் தமக்குள்ளே தரிசித்து, அந்தயோகதிடத்தினாலே புறத்திற்காண்கின்றார்கள். அதனால் அகத்திலுள்ளவனாகியும், புறத்திலுள்ளவனாகியும், ஆகாசமானது மற்றப்பூதங்களோடுசேர்ந்திருந்தும் அவைகளுடனே கலவாமலிருப்பதுபோல அவன் பி

ருதிவிமுதலான தத்துவங்களுடனே கூடியிருந்தும் அவைகளிலெல்லாம் தாக்கற்று நிற்பவனாகியும், வேதங்களும் பிரமிக்கின்ற தன்மையையுடையவனாகியு மிருக்கின்றான்.

ஐயா எனதுதந்தையே! ஓங்காரமாகிய ஓரெழுத்துக்குள் அதனுயிராயுமிருக்கின்றான். அறிவுக்கறிவாயுமிருக்கின்றான். மூன்றுலகங்களையும் தழுவியிருப்பதனால் புகையும் அக்கினியும்போலவு மிருக்கின்றான். பலபேதமாகிய சமயங்களைப்பற்றி வாதிக்கின்ற சமயவாதிகளுடைய மாறுபாடுகளையொழித்து ஏகபாவனையாய்ப் பேசுகின்றவர்களுக்கெல்லாம் பலமலர்களைக்கொண்டு தொடுக்கப்பட்ட மாலையினிடத்துள்ள மணம்போலவும், கடலும் அதனலையும் போலவும், வேறுபாடில்லாமலிருக்கின்றான். இப்படிப்பட்ட பரமாத்துமனை நீரிகழ்ந்துபேசி, உம்மைச்சார்ந்திருக்கின்ற செல்வமும் உம்முடைய தீர்க்காயுளும் பெயரற்றுப்போம்படி நீரும்பிராணனை இழந்துவிடுகிறீரேயென்று நினைத்து; நானந்த ஜெகதீஸ்வரனுக்குத் தண்டம்சமர்ப்பித்து மங்களாசனமாக அவனுடைய திருநாமத்தைச் சொன்னேனென்று பிதாவுக்குப் பிரகலாதாழ்வான் தெரியும்படிச் சொன்னான்.

இரணியாசுரன் மிகவும் கோபித்து பிரகலாதனைக் கொல்லும்படி கொலையாளர்வச மொப்புவித்தலும் அவர்கள் வதைசெய்தலும்.

கவி.

எதிரினின்றவ னிவையுரைத்திடுதலு மெவ்வுலகமுமஞ்ச
முதிரும்வெங்கத மொழிகொடுமூண்டது முதுகடற்கடுவேய்ப்பக்
கதிரும்வானமுஞ் சுழன்றனநெடுநிலங் கம்பித்தகனகன்கண்
உதிரங்கான்றன தோன்றினபுகைக்கொடி யுமிழ்ந்ததுகொடுந்தீயே.

வேறுமென்னொடு தரும்பகைபிறிதினி வேண்டலென்வினையத்தால்
ஊறியென்னுளே யுதித்ததுகுறிப்பினி யுணர்குவதுளதன்றால்
ஈறிலென்பெரும் பகைஞனுக்கன்புசா லடியன்யானென்கின்றான்
கோறிரென்றன னென்றலும்பற்றினர் கூற்றினுங்கொலைவல்லார்.

தாயின்மன்னுயிர்க் கன்பினன்றன்னையத் தவமெனுந்தகவில்லோர்
எயெனுந்துணை மாத்திரத்தெய்தன வெறிந்தனவெறிதோறும்
தூயவன்றனைத் துணையெனவுடையவவ் வொருவனைத்துன்னார்
வாயின்வைதன வொத்தனவத்துணை மழுவொடு கொலைவாளும்.

அண்ணா இராவணேஸ்வரா! இப்படிக்கெல்லாம் எதிரேநின்று பிரகலாதன் சொல்லவே அந்த இரணியனுக்கு எவ்வகையுலகங்களும் அஞ்சும்படிச் சமுத்திரத்தில் தோன்றிய ஆலகாலவிடம்போலப் பிரபலமாகிய கோபமுண்டாயது. சூரியனும், சந்திரனும், ஆகாசமும் சுழன்றன. பூமிகம்பிதமாயிற்று. அவனுடையகண்கள் உதிரத்தைக்கக்கின. கொடிபோலப் புகையெழுந்தது. யுகாந்த காலாக்கினியைப்போல உக்கிரமாகிய அக்கினிஜொலித்தது. இவ்விதமாகப் பொங்கிய அந்த இரணியேஸ்வரன் அடக்கற்கரிய கோபத்தினால் அந்

கையோடங்கை யறைந்து, ஆ! ஆ! ஆ! என்னுடனே பகைக்கின்றவர்களினி வேறில்லை. இவன் குடலுக்குள்ளே தினவுபோல என்னிடத்திலேதானே பிறந்து, என்சத்துருவுக்கே நானடிமையென்று சொல்லுகின்றான். ஆகையால் இவனைக் கொண்டுபோய்க் கொலைசெய்யுங்களென்று ஆக்கியாபித்தான். அந்த நொடியிலேதானே காலனைப்பார்க்கிலும் அதிகமான கொடுமையைச் செய்கின்றவர்களாகிய அசுரர்களனேகர்வந்து, ஒருயானைக்குட்டியைச் சிங்கக்கூட்டம் பிடித்து இழுத்துக்கொண்டு போவதுபோலப் பற்றியிழுத்துக்கொண்டு சென்று, மலைபோல் உயர்ந்த ரத்னகசிதமாகிய வாசலுக்கு வெளியிலேநிறுத்தி, மழு - வாள் - சூலம் - வேல் - குந்தம் - கெதை - இவைமுதலாகிய ஆயுதங்கள் ஒன்றுபோல அநேகமாயிரங்களைக் கொண்டு பிரகலாதன்மேற் பிரயோகஞ்செய்து, இவனை உயிருடனே தின்று தீர்ப்போமென்று இடியைப்போலக் கொக்கரித்துக் கண்களால் நெருப்பைச்சொரிந்தார்கள்.

இப்படி ஜீவகோடிகளினிடத்தில் பெற்றதாயைப் பார்க்கிலுமிகவும் அன்புசெலுத்துகின்ற அந்தப்பிரகலாதன்மேல் தவத்தைச்செய்யாத பாவிகளாகிய அசுரர்கள் பிரயோகித்த ஆயுதங்களெல்லாம், நல்லொழுக்கத்தையுடைய மெய்ஞ்ஞானியைப் பாமரர்கள் திட்டிய திட்டுப்போலாய்விட்டன. அவன் ஒருதன்மையாகிய வைராக்கியத்தில் நிலைபெற்ற சித்தத்தை யுடையவனாய்த் தானே அகக்கண்புறக்கண்களால் தரிசிக்கப்பட்ட தெய்வநாயகனாகிய ஸ்ரீமந் நாராயணனுடைய திருவடியைமறவாமலும் அவன்திருநாமத்தை விடாமலும் தியானம்பண்ணிக்கொண்டிருந்ததனால், அவன்மேலெறிந்தவைகளும் - எய்தவைகளும் - எற்றியவைகளும் - குத்தியவைகளும் - அரிந்தவைகளுமாகிய பலபடைகளும் முறிந்து ஒடிந்து உதிர்ந்து சிறுபொடிகளாய்ப் போனவைகளேயல்லாமல்; அவனுடைய திருமேனியிலுண்டாகிய தினவைக் குறித்துச் சொரிந்த அம்மாத்திர வுபத்திரவமுஞ் செய்யவேயில்லை. அதையந்த அசுரர்கள் பார்த்து ஆச்சரியங்கொண்டு, இரணியனிடத்தில்வந்து, சுவாமி! எங்களிடத்திலுள்ள ஆயுதங்களையெல்லாம் பிரயோகஞ்செய்தோம். அவைகளெல்லாந் தவிடுபொடியாய்விட்டன. உம்முடைய குமாரன் சரீரத்துக்கு யாதொருதுன்பமுமில்லை. இனிமேல்வேறேநாங்கள் செய்யவேண்டிய தென்னவென்றார்கள். அப்போது அசுரேந்திரன் மிகுந்த கோபமுண்டானவனாகி, பிரகலாதன் கபடமானநெஞ்சை யுடையவனாகையால் ஏதோ மந்திரக்கட்டினால் அந்த வாயுதங்களெல்லாம் தன்னுடலில்தாக்காமல் முறிந்துபோகும்படி செய்தான். நல்லது: இப்பொழுது நீங்கள் கோரமான அக்கினியை மூட்டி அதிலே அவனைக்கட்டித் தள்ளிவிடுங்களென்று சொன்னான்.

பிரகலாதனை அக்கினிக்குழியிற்றள்ளல்.

கவி.

குழியிலிந்தனமடுக்கினர் குன்றெனக்குடந்தொறுங் கொணர்ந்தெண்ணெய்
இழுதுநெய்சொரிந் திட்டனர்நெருப்பெழுந் திட்டதுவிசும்பெட்ட

அழுதுநின்றவரயர்வுற வையனைப்பெய்தன ரீஇயென்று
தொழுதுநின்றன னுயகன்றுளிணை குளிர்ந்ததுசுடுதீயே.

அப்படியே அந்தத் துஷ்டர்கள் அதிகவகலமு நீளமு மாழமு முள்ள தாக ஒருபெரிய குழிவெட்டி, அந்தக்குழியிலே பர்வதம்போலப் பருத்த புளியங்கட்டைகளை மேலுமேலு நிறையவடுக்கி, ஆயிரங்குடம் எண்ணெயுநெய்யுங் கொண்டுவந்து சொரிந்து தணல்மூட்டினார்கள். அந்தத்தணலினுடைய ஜுவாலையானதுதெய்வலோக மட்டும்போய்த் தவழும்படி பற்றிக்கொண்டு பிரளய காலாக்கினிபோ லெரிந்தது. அவ்வண்ணமா யெரியும்பொழுது அங்கிருந்தவர்களெல்லாம் உயிர்சோரும்படி என்னையனுகிய பிரகலாதாழ்வானைக் கையையுங்காலையுங்கட்டி, நிர்த்தாக்ஷிண்ணியமாய்த் தள்ளிவிட்டார்கள். அக்காலவன் லோகராட்டியனுடைய திருவடியை நமஸ்கரித்து, ஹரி ஹரி! ! என்று அதிலேவிழுந்தான். அவனுக்கு அதியுஷ்ணமாகிய அவ்வனலானது குளிர்ந்து, சீதளசந்தனக் குழம்புபோ லாய்விட்டது.

அண்ணு! கேட்டீரோ? அன்று அநுமானுடையவாலிலே வஸ்திரங்களைச்சுற்றி நெய்யிலேதோய்த்து விஷத்துக்குச்சமானமாகிய ராக்ஷதர்கள் கொளுத்திவிட நம்முடைய லங்கையாதியந்தமுஞ் சுட்டதீயானது. பதிவிரதா ரத்னமாகிய ஜானகியானவள் சொன்ன ஆசீர்வசனத்தினால் உஷ்ணமாறும்படி அந்த ஆஞ்சனேயனுடைய வால் எப்படிகுளிர்ந்ததோ? அப்படியே பிரகலாதனுடைய மாணிக்கத்தை யொத்த அருமைத் திருமேனியானது குளிர்ந்தது. அப்பொழுது இரணியனிடத்தில் அசுரர்கள் சென்று, ஐயா! தேவரீர் உத்தரவின்படி நெருப்புக்குழியில் தள்ளியும் உம்முடைய புத்திரனை ஜுவாலையிருந்த அந்தநெருப்பானது எவ்வளவும் தகிக்கவேயில்லை. இனியென்னசெய்கிறதென்று கேட்டார்கள். இரணியாசுரன் விழிகள்கொதிக்கும்படி மகத்தாகிய குரூரத்தைக்கொண்டு, அப்படியா? இனியந்த அக்கினியைக் கட்டிச் சிறையிடுங்கள். இந்தத் திருட்டுப்பயலை அஷ்டமாநாகங்களைவிட்டுக் கடிப்பித்து உயிரைக்குடிக்கும்படி செய்யுங்கள். அவனதிற்சாவாம லிருக்கிறதைப் பார்ப்போம். என்று ஆக்கியாபித்தான்.

பிரகலாதனை அஷ்டமாநாகங்களை விட்டுக் கடிக்கச்செய்தல்.

கவி.

அனந்தனேமுத லாகியநாகங்க ளருளென்கொலென வன்னான்
நினைந்தமாத்திரத் தெய்தினநொய்தினி னெருப்புகு பகுவாயால்
வனைந்ததாமன்ன மேனியினுன்றன்மேல் வாளெயிறுற வூன்றிச்
சினந்தமீக்கொளக் கடித்தன துடித்திலன் றிருப்பெயர்மறவாதான்.

இப்படி இரணியேஸ்வரன் சொன்னமாத்திரத்தில் ஒருவரும்போ யழைக்காமலே அனந்தன் - வாசுகி - சங்கன் - குளிகன் - பதுமன் - மகாபதுமன் - தக்ஷகன் - கார்க்கோடகன் - என்கின்ற தெய்வீகமாகிய சர்ப்பங்களெட்டும் அதிசீக்கிரமாக எங்களுக்கு என்னகட்டளையென்று வந்து, அவன்

சொற்படியே கொடிய விஷாக்கினியைச் சிந்துகின்ற வாயினால் இரைச்சலிட்டுச் சீறி, பிரகலாதனுடைய அழகிய திருமேனியில் வாளைப்போல் நீண்டு விளைந்து கூர்மையாயிருக்கின்ற பற்களானவும்படி மரணமடைவதற் கேதுவாகிய திதியும் நக்ஷத்திரமுங் கூடிய தினத்திற் கடித்தன. கடித்தவுடனே படம் விரித்துக்கொண்டாடித் தரையிற் புரண்டன. அப்போது பிரகலாதன்றன்சரீரந் துடிக்காமல், எம்பிரானுடைய திருநாமத்தையே தியானம் பண்ணிக்கொண் டிருந்தான். அக்கால் பக்கத்தில் நின்றவர்கள் பயத்தினால் வாயின்வழியாக இரத்தத்தைக் கக்கவும், பாம்புக்கு வைரியாகிய கருடனை நடுக்கத்தை யடையவும், சிவந்தமேகத்திற்குள்ளே பாலசந்திர னுழைகிறதுபோல் கடிமீளாத உறுப்புக்களில் காளி—காளாஸ்திரி - யமன் - யமதூதன் - என்கின்ற நான்கு பற்களுந் தைத்துருவ எழும்பி யெழும்பிக் கடித்ததனால், அந்தப் பாம்புகளின் பற்களெல்லாம் வலியற்றொடிந்து உதிர்ந்தன. பிரகலாதனுக்குக் கடித்தவிடங்களிலெல்லாம் விஷம் பாயாமல் அமிர்தம் ஊறியொழுகத் தலைப்பட்டது.

அதுகண்ட அரக்கர்கள் இரணியாசுரனிடத்திலோடி, அஷ்டநாகங்களும் சூழ்ந்து உம்முடைய மைந்தனைப்பற்றிக் கடித்தும் அவைகளின்பற்கள் சற்றுமழுந்தவில்லை, விஷமேறவுமில்லையென்று சொன்னார்கள். அவனதைக் கேட்டு, திக்கஜத்துக்கு முன்னே கொண்டுபோய்ப்போட்டு அதன்காலா லிடறச்செய்து விடுங்களென்றான்.

பிரகலாதனை யானையின் காலாலிடறச் செய்தல்.

கவி.

பசையிற்றங்கலில் சிந்தையர்பல்லோர், திசையிற் சென்றனர் செப்பின னென்னலும்
இசையிற்றந்தன னிந்திர னென்பான், விசையிற் றிண்பணை வெஞ்சின வேழம்.

அம்மாத்திரத்திற் பலபேர் தங்களுடைய பசையில்லாத மனதைப்போற் கிழக்குத்திசையில் விசையாயோடி, இந்திரனேறுகின்ற ஐராவதமென்கிறபெயரையும் - கொடிதாகிய கோபத்தையும் — பலம்பொருந்திய நான்கு கொம்புகளையுமுடைய வெள்ளையானையை அதிசீக்கிரமாகக் கொண்டுவந்து நிறுத்தி, அதன் முன்னே பிரகலாதனைக் கைகளிலும் - கால்களிலும் - மார்பிலும் - கழுத்திலும் — தெய்விகமாகிய பாசங்களை இறுக்கி யொடுக்கிக்கட்டி எடுத்துக்கொண்டுபோய்ப் போட்டார்கள். அத்தருணத்தில் மெய்ப்பொருளை யறிந்தவனாகிய பிரகலாதன் அந்த யானையைப்பார்த்து, ஓ ஐராவதமே! உன்தாயைப்பெற்ற பாட்டனாராகிய கஜேந்திரனைப் பூர்வகாலத்தில் ஒரு முதலையானது விழுங்கினபோது, ஆதிமூலமேயென்றழைத்த அதன் முன்னேவந்து ரக்ஷித்த கஜேந்திரவரதன் என் மனதினிடத்தில் வந்திருக்கிறானென்று சொன்னான்.

இப்படிச் சொல்லாததற்கு முன்னேதானே அந்தவெள்ளையானையானது இவன்சாக்ஷாத்து அரிபக்தன். இவன் விஷயத்தில் அபசாரப்படலாகாது. என்று பிரகலாதனைப் பிரதக்ஷிணமாகவந்து, தன்னுடைய நெற்றியிலணிந்த சொர்

னப்பட்டமானது நிலத்திற் பொருந்தும்படி அவனுக்குத் தெண்டம் சமர்ப்பித்துவிட்டுத் திரும்பியது. இந்தச்செய்தியை அரக்கர்கள் இரணியனுக்குப் போய்ச் சொன்னார்கள். அவனதுகேட்ட மாத்திரத்தி லாச்சரியசித்தனாகி, ஆ! ஒரு யானையானது உலகத்தில் எங்குந் தனக்கு இடங்கிடையாமல் எனக்குப் பயந்துபோய், சமுத்திரத்திலே தூங்குகின்ற விஷ்ணுவென்பவனையே பெரியபொருளாக மதித்துக்கொண்டு என்னுடைய அழியாத வீரத்தையும் ஆக்கினையையும் அழித்ததல்லவா ? ஆகையால் அவ்வைராவதத்தைக் கொல்லுங்களென்று நெஞ்சுகொதிக்கச் சொன்னான். உடனே அசுரர்கள் ஐராவதத்தைக் கொல்லும்படிப் பிரயத்தினப்பட்டார்கள். அப்படி யவர்கள் தன்னைக் கொல்லவந்தபோது அவ்வியானை பயந்து, இரணியனோ கொடியவனாயிருக்கின்றான். பிரகலாதனோ சுவாமிக்கு அடியவனாயிருக்கின்றான். இதென்ன பெரியசங்கடமாக நேர்ந்ததென்று நினைத்துத் துக்கித்து, பின்பு ஒருவிதத்தில் மனந்துணிந்து, பொன்னொளியையு மழுங்கச்செய்கின்ற தேஜஸையும் கீர்த்தியையுமுடைய சத்தியசந்தனாகிய பிரகலாதனைக் கொல்லும்படிவந்து, மின்னலை யழிக்கின்ற பிரகாசத்தையுடைய தன்கொம்புகளினால் அவனுடைய வலிபெற்ற மார்பிற் குத்தியழுத்தியது.

இவ்வண்ணமாக ஐராவதமானது தனது பூரணமான வலிவுடன் அழுத்தவே அந்தத் தந்தங்கள் நான்கும் இளவாழைத் தண்டுபோல் முறிந்துபோய்விட, அதுகண்ட உண்மையில்லாத அசுரர்கள் இரணியாசுரனிடத்திற் கண்ணிமைப்பதற்குள்ளாகச் சென்று, சுவாமி! ஐராவதம் உம்முடைய குமாரனைத் திரும்பிவந்து குத்திப்பாயவும் அதன் கொம்புகள் இற்றுவிழுந்ததென்று சொன்னார்கள். அதுகேட்ட அசுரேந்திரன் கோடைக்காலத்துச் சூரியனைப்போலச் சுடுகின்ற கண்ணை யுடையவனாய்க் கோபித்து, அவனை ஏழுநிலைகளையுடைய நமது பெரிய உப்பரிகையின்வாசற் கோபுர சிகரத்தின்மேலேற்றிப்பூமியிலே தள்ளிவிடுங்களென்று உத்தரவு செய்தான். பல்லாயிரங்கோடி அண்டங்களையும் உண்டருளிய பரமாத்துமனுடைய உபயதிருவடிகளைத் தியானிக்கின்ற புண்ணியாத்துமனாகிய பிரகலாதனைப் பிரசண்டவாயுவைப்பார்க்கிலும் அதிகபலத்தையுடைய கொலையாளர்கள் அப்படியேகட்டித் தூக்கிக்கொண்டுபோய், மகாமேருவைப்போல அண்டபரியந்த முயர்ந்த இரணியனுடைய வாசலிலிருக்கின்ற கோபுரசிகரத்தின்மேலேற்றி, அங்கிருந்து தலைகிழாகவுருட்டித்தள்ளிவிட்டார்கள். அந்தச்சமயத்தில் பூமாதேவியானவள் இரணியனுடைய தமயனாகிய இரணியாக்ஷன் தன்னைப்பாயாகச்சுருட்டிக்கொண்டுபோனபோது அவனை வராகமாயவதரித்துக்கொன்று தனதாபத்தை நீக்கிய பகவானுடையபக்தன் இவனாகையால், இவனுக்குவந்த ஆபத்தைத் தானே நீக்கவேண்டுமென்று எண்ணிப் பிரகலாதனிடத்தி லிரக்கத்தை யுடையவளாகி, அவனுக்கு யாதொரு உபத்திரவமுமில்லாமல் மாந்தளிருக் கொப்பாகிய தன்கைகளினால் அவனை எதிரே ஏந்திக்கொண்டாள்.

அதை இரணியனறிந்து உடல்வெதும்பி, புத்திராபேக்ஷையென்பது கடுகளவுமில்லாமல், அந்தக்கள்ளனை யாவராலும் அசைக்கப்படாத பெரிய மலையுடனே நெருக்கிக்கட்டிக் கரைகாணக்கூடாத சமுத்திர வெள்ளத்திலே விட்டுவிடுங்களென்று ஆக்கியாபித்தான்.

பிரகலாதனைப் பர்வதத்திற் கட்டிச் சமுத்திரத்திலிட்டழுத்தல்.

கவி.

ஒட்டிக்கொல்லவுணர்ந்து வெகுண்டான், விட்டிட்டானல னென்று விரைந்தார்
கட்டிக்கல்லொடு சால்விசையிற்போய், இட்டிட்டார்கட லின்னடுவெந்தாய்.

இவ்வண்ணமாக ஆக்கியாபித்தபோது அந்த அசுரர்க ளதற்கிசைந்து, பெற்ற தகப்பனே கொஞ்சமாவது பச்சாத்தாபமில்லாமலும்—இவன் பிள்ளையாகையால் இவனைக் கொல்லுகிறது நமக்குத் தர்மமல்லவென்று நினையாமலும் - இடைவிடாம லோட்டிக்கொல்ல ஏற்பட்டானேயென்று தாங்களும் தயையில்லாமல், ஓர்பர்வதத்துடனே சேர்த்துக்கட்டி வாயுவேகமாய்க் கொண்டுபோய்க் கடலினது நடுவிலே விட்டார்கள். அவ்வவ் வான்மாக்களிற்குள் அந்தரியாமியும், சகலகாரியங்கட்கு நடுவுநிலைமையுமாகிய ஏகநாயகன் திருநாமத்தை மனம் வாக்கு காயமென்னும் திரிகரணசுத்தியோடு இடைவிடாது உச்சரிக்கின்ற செய்கையையுடைய பிரகலாதனென்னும் புண்ணியனுக்குப் பாதாளபரியந்த மாழ்ந்த அந்தப் பெரியசமுத்திரமானது சிறிய மடுவைப்போலிருந்தது. அந்த நெடியமலையும் சுரைக்குடுக்கையைப்போல மிதந்தது. அலைமோதுகின்ற கடலிலே மூழ்காமல் தனக்குத் தெப்பமாய் மிதக்கின்ற பர்வதத்துடனே அந்தப் பாலன் மிதக்கின்றது எப்படிக் கிருந்ததெனில், மகா பிரளயத்தின்மத்தியிலே ஆலிலையின்மேற் குழந்தை வடிவுகொண்டு சயனித்திருந்த ஜெகத் ரக்ஷகனைப்போ லிருந்தது. அப்போது பிரகலாதனானவன் தலையின்மேற் கைகூப்பிக்கொண்டு, தீர்க்கவைராக்கியத்தை யுடையவனாகி, அந்த ஜெகத் ரக்ஷகனுடைய ஆயிரந் திருநாமங்களையுஞ் சொல்லி ஸ்துதி செய்யத் தலைப்பட்டான்.

பிரகலாதன் ஸ்ரீமந்நாராயண மூர்த்தியைத் துதித்தல்.

கவி.

அடியாரடியே னெனுமார்வமலால், ஒடியாவலியா னுடையேனுளனோ
கொடியாய்குறியாய் குணமேதுமிலாய், நெடியாயடியே னிலைநேருதியோ.

கள்ளந்திரிவா ரவர்கைதவநீ, உள்ளந்தெரியாத வுனக்குளவோ
துள்ளும்பொறியின் னிலைசோதனைதான், வெள்ளந்தருமின் னமுதேவிதியோ.

வருநான்முகனே முதல்வானவர்தாந், திருநான்மறையின் னெறியேதிரிவார்
பெருநாடெறிகின் றிலர்பேதமையேன், ஒருநாளுனையெங் ஙனமுள்ளுவனோ.

செய்யாதனவோ விலைதீவினைதான், பொய்யாதனவந்து புணர்ந்திடுமால்
மெய்யேயுயிர் தீர்வதொர்மேல்வினைநீ, ஐயாவொரு நாளுமயர்த்தனையோ.

ஆயப்பெறுகன் னெறிதம்மறிவென், றேயப்பெறுமீசர்க ளெண்ணிலரால்.
நீயப்புறநிற்க நினைக்கிலர்நின், மாயப்பொறி புக்குமயக்குவரால்.

தாமேதனிநா யகராயெவையும், போமேபொரு ளென்றபுராதனர்தாம்
யாமேபரமென் றனரென்றவர்க், காமேபிறர்நின் னலதாருளரோ.

ஆதிப்பரமா மெனிலன்றெனலாம், ஓதப்பெறுநூல்க ளுலப்பிலவால்
பேதிப்பனநீ யவைபேர்கிலையால், வேதப்பொருளே விளையாடுதியோ.

அம்போருகனு தியர்தாமறியார், எம்போலியரெண் ணிடிலெண்பலவாம்
கொம்போடடைபூங் கனிகாயெனினும், வம்போமரமொன் றெனும்வாசகமே.

நின்னிற்பிறிதாய் நிலையிற்றிரியா, தன்னிற்பிறிவா யினதாமெனினும்
உன்னிற்பிறிதா யினவோவுலகம், பொன்னிற்பிறிதா கியபொற்கலனே.

தாய்தந்தையெனுந் தகைவந்தனைதான், நீதந்தனைநீ யுறுநெஞ்சினின்யான்
நோய்தந்தவனோ நுவறீர்வுமெனு, வாய்தந்தனநின் செவிவாங்கிலையோ.

ஓ துஷ்டர்களை நிக்கிரகஞ்செய்கின்ற தூயனே! ஓ எவர்களாலும் குறித்தறியப்படாதவனே! ஓ தோஷகுணம் யாதொன்றுமில்லாதவனே! ஓ விராட்சொரூபனே! நானும்முடைய அடிமைக்கடிமையாயிருக்கவேண்டுமென்கின்ற விருப்பமுள்ளவனேயல்லாமல், மாயாமோகத்திலாழ்ந்து அழியாத அகங்காரத்தையுடையவனால் உமக்கு எதிர்க்கக்கூடியாவேனோ? ஆயினும் என்னுடைய பக்தியீனமாகியநிலைக்கு நீர் இணங்கி அருள்வீரோ! வஞ்சகத்தைக்கொண்டு நடிக்கின்றவர் நீராகையால், உள்ளத்திலுள்ள ரகசியங்களில் நீரறியாதனவுண்டோ? ஓ அமிர்தப்பிரவாகமாக விருக்கின்றவனே! இப்படிப்பட்ட துன்பங்களை நானடைவது ஊழின் சோதனைதானோ? பிரமேந்திராதியரான சகல தேவர்களும் வேதஞ்சொன்ன நெறிப்படி நடக்கின்றார்களே யல்லாமல், அநேககாலமா யுமது மகிமையை அறியவில்லை. அப்படியிருக்க நானுமது பிரபாவத்தை எப்படி யறிவேன்? அடியேன்செய்யாத பாபகர்மமோ இல்லை. அவைகளெல்லாம் தவறாமல்வந்து எனக்குப் பிராப்தமாகின்றன. இது எதார்த்தந்தான். ஒருகாலத்தில் அந்தக் கர்மம் என்னாத்துமாவைவிட்டு நீங்கும்படி எத்தனப்பட்டாலும், அதை யெக்காலமும் என்னாத்துமாவுடனே சம்பந்தப்படும்படிச் செய்கின்ற செய்கையை நீர் மறவாதிருக்கின்றீர். ஆகையாலது உமதருளில்லாமல் எப்படி நிவர்த்தியாகும்? ஆராய்ந்து அடையப்பெறுகின்ற நல்ல நெறியானது தம்மறிவேயென்று பொருந்தப்பெற்ற தேவர்கள் அநேகருண்டு. நீர் அவர்களுடைய அறிவுக்கும் அப்புறத்தில் நிற்க, உம்மை யெண்ணாதவர்களா யவர்களெல்லாம் உம்முடைய மகாமாயையாகிய வலைக்குள் அகப்பட்டே மயங்குகின்றார்கள்.

தாங்களே தனிநாயகமாய்த்தோன்றி எல்லாப்பொருள்களுந் தங்களுக்குத் தெரியுமென்று நிச்சயித்த முன்னோர்களெல்லாம், நாமே பரத்துவமென்று எண்ணி யிருந்தார்கள். அப்படி எண்ணத்தக்கதாக அவர்களுக்கு அந்தப் பரத்துவஞ்சித்திக்குமா? சாக்ஷாத்காரம் உம்மையல்லாமல் வேறே யா

ரிருக்கிறார்கள்? ஒரு சமயத்தார் காரணகாரியத்தைப்பற்றி ஜெகந்துக்கு நீரே ஆதியாகிய பரமென்றால்,மற்றொரு சமயத்தார் தமதுமாயாமயக்கத்தால் அல்லவென்றுஞ்சொல்லலாம். இந்தப்படி பலவிதத்திலுஞ் சொல்லுகிறதற்குச் சாஸ்திரங்களும் அநேகமாயிருக்கின்றன. அந்தச் சாஸ்திரங்களெல்லாம் பேதிக்கும். நீரப்படிப் பேதிக்கமாட்டீர்.

ஓ வேதார்த்தமா யிருக்கின்றவரே! இப்படிக்கெல்லாம் நீர் கபடநாடகம் நடிக்கிறீரன்றோ? எல்லாம் நீராயிருக்கின்ற உமது பிரபாவத்தை யறியாத என்னைப்போ லிருக்கின்றவர்கள் ஒருதன்மையாக உம்மையே குறியாமல், பிரமனென்றும் - உருத்திரனென்றும் - மற்றும் பலபலதேவர்களென்றும் வெவ்வேறாகக் குறிப்ப தென்னதன்மை? கொம்பு - இலை - மலர் - கனி காய் - என்று சொல்லும்படி வெவ்வேறாய் அநேகமாயிருந்தாலும், விருக்ஷமொன்றேயென்கின்றசொல் இப்பொழுதுதான் புதிதாய்த்தோன்றினதோ? உலகம் உம்மாலிருந்து வெளிப்பட்டு விகாரமாய்த் தனக்குள்ளே பலபேதப்பட்டதானாலும், உமக்கு அந்நியமா யிருக்கின்றதோ? பொன்னினாலாகிய ஆபரணங்கள் அந்தப் பொன்னுக்கு அந்நியமாகுமோ? தாயாகியும் தந்தையாகியும் வந்து நீரே யென்னைப் படைத்தருளினீர். நீரெழுந்தருளி யிருக்கின்ற நெஞ்சத்தை யுடையவன் யான். எனக்கு ஜனனமரணமாகிய நோய்களைத் தந்தவன் நீராதலால், அந்தநோய்களுக்கு நிவர்த்தியு நீரே சொல்லவேண்டுமென்று பிரலாபிக்கின்ற எனது வார்த்தைகளை நீர் உமதுசெவியில் வாங்கவில்லையோ? என்று பக்திபரவசனாய் இந்தப்படிக்குப்பலவிதத்திலும் தன்வாக்கில் வந்தவைகளைச் சொல்லிச்சொல்லி ஸ்தோத்திரஞ்செய்து வணங்கினான்.

அந்த அசுரர்களா லறிந்த மகாபராக்கிரமசாலியாகிய இரணியன் அவனைக்கொண்டுவந்து என்முன்னே விடுங்களென்றான். அவ்வாறே சமுத்திரத்தில் மிதந்துகொண் டிருக்கின்ற பர்வதத்துடனே கட்டிய கட்டவிழ்த்துவிட்டு, அவனையழைத்துக்கொண்டுவந்து அவ்விரணியனெதிரில் விட்டார்கள். அப்படி விட்டமாத்திரத்திற் சீரமெரிந்துபுழுங்கி, இவனுக்குவிஷங்கலந்த அன்னம்-பதார்த்தம்—பால் - பழம் - பஞ்சகச்சாயம் - இவைமுதலாகிய ஆகாரங்களை ஊட்டி, இவனைக் கொன்று விடுங்களென்றான். அவ்வாறே அநேகவகைப்பட்ட விஷான்னத்தையும் ஊட்டினார்கள். அவைகளையும் அவனுண்டு, பகவத் கடாக்ஷத்தினாலே ஜீரணம் செய்துகொண்டு சாவாமலிருந்தான். அதுகண்ட இரணியன் ஆச்சரியமாகி, இவனை இருப்புப் பணையின்மேல்வைத்துச் சம்மட்டிகளைக் கொண்டு கை - கால் - தலை - உடல் - இவை முதலானவைகளும் சிதைந்து பொடியாய்ப் போகும்படி அடியுங்களென்று ஆக்கியாபித்தான்.

அவ்வண்ணமே அந்தக் கொலையாளர்கள் பிரகலாதனைக் கட்டிக் கொண்டுபோய்ப் பணையின்மேல் வைத்து, எத்தனையோ பெரிய இருப்புச்சம்மட்டிகளைக் கொண்டு பலமாக ஓங்கியடித்தார்கள். கொடியபாதகர்களாகிய அசுரர்களிற் கணக்கில்லாதவர்கள் மூச்சுவிடாது ஓயாமல் அடிக்கவே, இனியேது

இவன் பிழைக்கிறது? கனவிலுமில்லை: என்று சகல மானவர்களு மெண்ணு ம்படியாயிருக்கிற சமயத்தில், அந்தப் பிரகலாதாழ்வான் தனக்குள்ளே பக வானைத் தியானித்து, அந்தரியாமியா யிருக்கின்ற எம்பெருமானுக்குக் கைக கனோ ஆயிரமல்ல: அநேகம். திருவடிகளோ அளவிறந்தன. திருக்கண்களோ எண்ணத்தொலையாதன. என்று இந்தப் பிரகாரம் பகவானுடைய அவயவ முதலாகிய ரூபநாமகுணங்களை ஒழியாது தியானித்து மனதுருகிக்கொண் டிருந்தானே யல்லாமல், தன்னை யடிக்கிறார்களென்கின்ற நினைவு சிறிதாவது கொள்ளவில்லை.

இரணியாசுரன் பிரகலாதனைத் தானே கொல்ல முயறல்.

கவி.

ஊனேயுயிர்வே றுபடாவுபயம், தானேயுடையன் றனிமாயையினால்
யானேயுயிருண்ப னெனக்கனலா, வானேழுநடுங்கிடவந்தனனால்.

கேட்டீரோ அண்ணா! இப்படி என்னசெய்தும் ஊறுபடாததுகண்ட இ ரணியன் ஏதோவொரு மாயையினால் இவன் உடலுஞ்சிதையாமல் உயிரும் பிரியாமலிருக்கத்தக்க உபாயத்தை யுடையவனா யிருக்கின்றானாகையால் இனி நானே கொல்லுகிறே னென்று கோபித்து, உலகங்களெல்லா நடுங்கும்படிப் பிரகலாதன்சமீபத்தில் வந்தான். அவ்வண்ணங்கொல்லவந்தபிதாவைப் பிரகலா தன் வணங்கி, ஐயா! என்னுயிரை வாங்கும்படி நீர் வருத்தப்படவேண்டாம். இது உம்மாலே சாத்தியமாகத்தக்கதல்ல. சகல புவனங்களையும் உண்டாக்கி ய ஸ்ரீமந்நாராயணனே கொள்ளும்படி யிருக்கின்றதென்று சொன்னான். அ தைக்கேட்ட இரணியாசுரன் - அடா பயலே! உலகங்களை யுண்டாக்கினவ னென்று சொன்னாயே: உலகங்களை யுண்டாக்கினவனார்? என்பெயரை ஸ்து திபண்ணிக்கொண்டிருக்கின்ற திரிமூர்த்திகளென்று சொல்லப்பட்டபிரமனா? விஷ்ணுவா ? உருத்திரனா? அல்லது முனிவர்களா? அல்லதுதங்களுக் குள்ள வைகளையெல்லாம் என்னிடத்தில் தோற்றுப்போ யிருக்கின்ற தேவர்களா? அல்லது மற்றவர்களிலாரோ அதனையெனக்குத்தெரியச்சொல்லடாவென்று சொல்லி, அப்படிப்பட்டவனொருவன் உண்டாயிருந்து அவனைக்காட்டுவாயா னாற் காணலாமென்று நினைத்தவனாய், தனக்குக்கோபமூண்டெழுந்தும் தன் பிள்ளையைக் கொல்லவில்லை. அப்பொழுது பிரகலாதன் அவனைப்பார்த்து, ஐ யா பிதாவே! நீர் அவனொன்று கேட்டீரல்லவோ? அவன் யான்குறித்தபடி யே இந்தச்சர்வாண்டங்களாகிய உலகங்களைப் படைத்தவனும், அவைகளுக் குள் நானாபேதமாகிய உயிர்களைப் படைத்தவனும், அந்த அழியாத உயிர்க ள்தோறும் அந்தரியாமியா யிருந்து அங்கங்கே வாசஞ்செய்கின்றவனும், பூவி னிடத்தில் மணமும் எள்ளினிடத்தி லெண்ணெயும்போல் அளவில்லாத பல பொருள்களினுங் கலந்து நிறைந்திருக்கின்றவனும், அளவில்லாத வேதங்க ளெல்லாம் பண்டைக்காலந்தொட்டுப் புகழ அப்புகழை மேற்கொண்டவனு மாகிய அரியென்பவன்தான். அவன் என்கண்ணினால் நோக்கிக் காண்பதற்கு

எவ்விடத்திலு மிருக்கின்றான். உம்மிடத்தில் நான் அவனைக்குறித்து அன்புடனே சொன்னால், நீர் ஒன்றாவது உறுதியாகக் கொள்ளவில்லை. ஆகையால், உம்முடைய கண்களால் நோக்கிப்பார்ப்பதற்கு உமக்கு மூத்தவனாகிய இரணியாக்ஷனுடைய உயிரைமாய்த்த அத்தாமரைக் கண்ணன் அத்தனை இலேசாய்க் கிடைக்கின்றவனோ?

பிரகலாதன் சுவாமியின் பெருமை கூறல்.

கவி.

மூன்றவன்குணங்கள்செய்கை மூன்றவனுருவமூன்று
மூன்றுகண்சுடர்கள்சோதி மூன்றுதன்னுலகமூன்று
தோன்றலுமிடையுமீறுந் தொடங்கியபொருள்களெல்லாம்
சான்றவனிதுவேவேத முடிவதுசரதமென்றான்.

படைத்தல், காத்தல், அழித்தலென்னும் மூன்றும் அவன் தொழில்கள். அருவம், உருவம், அருவுருவம் என்னு மூன்றும் அவனுருவங்கள். சூரியன், சந்திரன், அக்கினி என்னு முச்சுடர்களும் அவனுடைய நேத்திரங்கள். சுவர்க்கம், மத்தியம், பாதலமென்னு மூன்றுலகமும் அவனுடைய உலகங்கள். முதல், இடை, கடை, என்னு மூன்றிடமும் அவனிடங்கள். உலகங்களிலுள்ள சராசரப்பொருள்கட்கெல்லாம் அவனே சாக்ஷியாயிருக்கின்றான். இதுவே வேதத்தின் முடிவு. இதுவே சத்தியம். என்று சொன்னான் பிரகலாதன்.

இப்படிச் சொல்லவே இரணியாசுரன் தன்னுடைய தந்தங்கள் பிரகாசிக்கும்படி கலகலவென்று நகைத்து, அடாபயலே! உலகத்திலுள்ள பலபொருள்களி லெல்லாம் அந்த அரியென்கிற ஒருவன் புகுந்து நிறைந்திருக்கின்றானென்று சொன்னாயே: அப்படியானால் நான்கண்டு, பின்பு அதற்குத்தக்கபடி செய்கிறேன். அப்படியே அந்தத் திருடனிருப்பானாகில் அவனுடைய நிலைமையைத்திஷ்டாந்தப்படுத்துக பார்ப்போமென்று சொன்னான்.

அரியென்பவர் எங்குநிறைந்தவர் இத்தூணிலுமிருப்பார் சோதனைசெய்துகொள்ளென்று பிரகலாதன் இரணியனுக்குச்சொல்ல அவ்விரணியன் பதிலுரைத்தல்.

கவி.

சாணினுமுளனோர்தன்மை யணுவினைச்சதகூறிட்ட
கோணினுமுளன்மாமேருக் குன்றினுமுளனிந்நின்ற
தூணினுமுளன்முன்சொன்ன சொல்லினுமுளனித்தன்மை
காணுதிவிரைவினென்றா னன்றெனக்கனகன்சொன்னான்.

அதற்குப் பிரகலாதன் - ஐயா! அந்தப் புருஷோத்தமன் சாணிலுமிருக்கின்றான். அணுவிலு மிருக்கின்றான். அந்த அணுவை அநேகங்கூறாகச் செய்யப்பட்ட பரமாணுவிலு மிருக்கின்றான். மகமேருவிலு மிருக்கின்றான். இவ்விடத்தில் நிற்கின்ற தூணிலுமிருக்கின்றான். நீர் சொன்னசொல்லிலு மிருக்கின்றான். அவனில்லாதபொரு ளொன்றுமில்லை. அந்த அதிசயத்தைப்

பார்க்கவேணுமானால், சீக்கிரத்திற் சந்தேகமில்லாமற் பிரத்தியக்ஷமாகச் சோதித் தறிந்துகொள்ளுமென்றான்.

இவ்விதமாகச் சொல்லவே இரணியன் நல்லதென்று சம்மதித்துப் பின்னுஞ்சொல்லுகின்றான். தேவர்களுக்கும் உனக்கும் ஒத்தவனாகி இந்தவுலகமெங்கு நிறைந்திருக்கின்ற அந்தமகாவிஷ்ணுவை இங்கேநிற்கின்ற தூணினிடத்திலிருக்கக்காட்டுக. காட்டாமற் போவாயானால் மஸ்தகத்தையுடைய மதயானையைச் சிங்கமானது அறைந்துகொல்வதுபோல உன்னைநான் கொன்று, உன்னுதிரத்தைக் குடித்து, உடலையுந் தின்றுவிடுவேனென்று சொன்னான். அதுகேட்ட அறிவிலே சிரேஷ்டனாகிய பிரகலாதன் சொல்லுகின்றான்.

பிரகலாதன் உறுதிமொழி கூறல்.

கவி.

என்னுயிர்நின்னாற்கோறற் கெளியதொன் றன்றியான்முன்
சொன்னவன்றொட்டதொட்ட விடந்தொறுந்தோன்றானாயின்
என்னுயிர்யானேமாய்ப்பல் பின்னும்வாழ்வுகப்பலென்னின்
அன்னவற்கடியேனல்லே னென்றனனறிவின்மிக்கான்.

கேளுமையா பிதாவே! என்னைக் கொல்லுகிறேனென்று அடிக்கடிச்சொல்லுகின்றீரே: என்னுயிரானது உம்மாலே கொல்லப்படுகிறதற்கு அத்தனையெளிதாயிருக்கின்றதல்ல. நானுமக்கு முன்னேசொன்ன சர்வேஸ்வரன் நீர் குறித்த இடங்களிலெல்லாம் அவசியம் காணப்படுவார். அவ்வண்ணம் காணாமற்போவாரேயாகில் என்னுயிரை நானே மாய்த்துக்கொள்ளுகிறேன். அப்படிமாய்க்காமல் பின்னும் பிராணனுடனிருப்பேனானால், அவருக்கு நான் அடிமையல்ல. எனக்கவராண்டவனல்லவென்று பிரதிக்ஞை பண்ணினான்.

இரணியன் பராக்கிரமத்தோடு எதிர்நின்ற தூணைத் தனது கையாலறைய ஸ்ரீமந்நாராயணமூர்த்தி நரசிம்மாவதாரங்கொண்டு அத்தூணிற் றோன்றுதல்.

கவி.

நசைதிறந்திலங்கப்பொங்கி நன்றுநன்றென்னநக்கு
விசைபிறந்துருமுவீழ்ந்த தென்னவோர்தூணின்வென்றி
இசைதிறந்தமர்ந்தகையா லெற்றினனெற்றலோடும்
திசைதிறந்தண்டங்கீறிச் சிரித்ததுசெங்கட்சீயம்.

ஐயா இலங்கையையாளும் இராக்ஷசேந்திரனே! அப்பொழுது இரணியாசுரன் தன்னுடைய வக்கிரதந்தங்கள் பிரகாசிக்கும்படிச் சிரித்து,காலாக்கினிபோல மனம்பொங்கி. நல்லது: நல்லது: என்றுசொல்லி இடிவிழுந்தது போல அதிக ஆரவாரமாக எதிரேயிருந்த சொர்ணமயமாகிய நெடியதூணைத் தனது வயிரக்கடகங்களை யணிந்த ஜெயம்பெற்ற கையினால் ஓங்கி உக்கிரத்துடனே விசைகொண்டு அறைந்து, இதில் எங்கே காட்டடா வென்றான். அப்படி அறைந்தமாத்திரத்தில் அந்தத்தூணிலிருந்து ஒருபேரோசையானது எழுந்து, திசைகளைக்கிழித்து, அண்ட முகட்டையும் பீறிக்கொண்டு ஊடு

ருவும்படிச் சிவந்தகண்களையுடைய சிங்கமானது லோகாலோகங்க ளெல்லா ங் கிடுகிடாய்க்கும்படியாக மிகவும் உக்கிரமாய்ச் சிரித்தது.

சர்வகாலமும் சதுர்முகப் பிரமனாதி தேவர்களும் தேடியுங் காண ப்படாத அதிதூரத்தி லிருக்கின்ற சர்வக்கியனும், சர்வபரிபூரணனுமாகிய எம்பெருமான் அந்தஸ்தம்பத்திற் சிரித்தவுடனே, முன்புபரமாத்துமனை நான் எப்படியும் உமக்குத் தேடிக்காண்பிக்கிறேனென்று இரணியனுக்கு உறுதியாகச் சொல்லியிருந்த மகாக்கியானியாகிய பிரகலாதாழ்வான் எழுந்து கூத்தாடினன். ஆனந்தக் கண்ணீர்விட்டழுதான். அவன்விஷயமா யிருக்கின்ற திவ்வியகீர்த்திகளைப் பாடினன். சிரசின்மேற் கைகளை அஞ்சலிபண்ணிக் கொண்டான். சாஷ்டாங்கமாகச் சேவித்தான். மான்கன்றுபோலத் துள்ளித் துள்ளி உலகமெல்லாம் ஓடியோடித் துகைத்தான்.

அந்தச்சமயத்தில் இரணியன் கொக்கரித்து, அடடா! தூணிலிருந்து சிரித்தனையே: நீயாரடா ! இந்தப்பையல்சொன்ன விஷ்ணுதானோ? எனக்குப் பயந்து ஓடிப்போ யிதுவரையிலும் ஒளித்துக்கொண் டிருந்த சமுத்திரத்தினிடம் போதாதென்றோ இப்பொழுது இந்தத் தூணினிடத்தைத் தேடி இதிலே வந்து ஒளித்தாய். ஆகட்டும்: என்னுடனே யுத்தம்பண்ணத்தக்க வல்லமையை யுடையவனானல் தூணைவிட்டுச் சீக்கிரமாகப் புறப்படு: புறப்படு: ஏன் காலதாமசஞ் செய்கின்றாய்? என்றுசொல்லிப் பின்னும் அதட்டியார்ப்பரித்தான். அப்பொழுது அண்டம்வெடித்ததுபோலப் படீரென்று அந்தத் தூணும்பிளந்து, அதிலிருந்து உக்கிர நரசிங்கமானது பிறந்தது. பிறந்தவுடனே வளர்ந்து, அஷ்டதிக்குகளையும் பகிரண்ட முதலானவைகளையும் அளந்துகொண்டேபோய் எங்கும் நிறைந்தது.

ஆயினும் பகிரண்டத்திற்கு அப்பால் நடந்த செய்தி என்னமோ அதை யாரறிந்து சொல்லுகிறவர்கள்? ஆனாலாகாசம் கீழுமேலும் கிழிந்தது. பரிமளம்பொருந்திய துளபமாலையை யணிந்த நரசிங்கமூர்த்தியின் திருவுருவம் வானத்தை யூடுருவப்போனதை நாமறியமாட்டோம். திருவடித் தாமரைகள் பூமியிலே தோயும்படி நின்றபொழுது நெடிதாகிய அண்டமுகட்டில் சத்திய லோகத்தி லிருந்த பிரமதேவன் அன்றுதான் அந்த நரசிங்கப்பெருமானுடைய திருவுந்திக் கமலத்தில் உற்பத்தியானவன்போல விளங்கியிருந்தான். அப்படிப்பட்ட நரசிங்க சொரூபத்திற்கு எத்தனையோ கைகள், எத்தனையோ கால்கள், எத்தனையோமுகங்க ளுண்டாயிருந்தன. அவைகளைக்குறித்து இவ்வள வென்றெண்ணிக் கணக்கிட்டுச் சொல்லத்தக்க விவேகிகளு முண்டோ?

உலகமெல்லாம் பரவியிருந்த அசுரசேனைகள் ஆயிரங்கோடி வெள்ளமு மாண்டுபோய்ப்படித் தனித்தனியே நரசிங்கமூர்த்தியின் கைகள் அள்ளிக் கொண்டன. அந்தச்சகஸ்திரகோடி வெள்ளமாகிய அசுரர்களுக்குள்ளே ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு திருமுகமும் இரண்டிரண்டு கைகளுமுள்ளவ

ராயினர். அன்றியும்—ஒவ்வொரு சிரசுக்கு மும்மூன்றுகண்களுமா யங்கங்கே காணவும், திருமேனியில் முடங்கிய ரோமங்க ளசையும்பொழுது அவைகளி லிருந்து உண்டாகிய காற்றுனது பிரளயகாலாக்கினியை அவிக்கவும், சுவாசம் பிரசண்டமாருதத்தை அடக்கவும், கண்களில்நின்று ஜொலிக்கின்ற கோபாக்கினியானது சமுத்திரஜலத்தைச் சுவறச்செய்யவும், வாயிலுள்ள நீர் சகலமாகிய புவனங்களிலு நிரம்பவும், பல்லாயிரங்கோடி யண்டங்களும் நெருங்கிய ரோமங்கள்தோறு முட்டைகளைப்போ லொட்டிக்கொண் டிருக்கவும், இந்தப்படி கோரபீகரமாகிய சொரூபத்துடனே உலகமெங்கு மிடமில்லாமல் நிறைந்து தோன்றினர். இப்படித் தோன்றிய அந்த நரசிங்கமூர்த்தியானவர் ஊழிக்காலத்தில்சகலவுயிர்களையும் திருவுதரத்தில்வைத்து வாழ்விப்பதுபோல, பிரமன் முதலாகிய தர்மாத்மாக்களை யெல்லாம் அப்பொழுது தமதுகர்ப்பத்தினிடத்தில் வைத்துத் தாயைப்போ லிரக்ஷித்துக்கொண்டனர்.

நரசிங்கமூர்த்தி அசுரப்படைகளை வதைத்தல்.

கவி.

பேருடையவுணர்தம்மைப் பிறையெயிற்றடக்கும்பேராப்
பாரிடைத்தேய்க்குமீளப் பகிரண்டத்தடிக்கும்பற்றி
மேருவிற்புடைக்குமாள விரல்களிற்பிசையும்வேலை
நீரிடைக்குமிழியூட்டு நெருப்பிடைச்சுரிக்கநீட்டும்.

அங்குள்ள அசுரர்கள்மேல்தாவி, அநேகரையெடுத்து அர்த்தசந்திரனுக்கொப்பாகியதம்முடைய வக்கிரதந்தங்களுக்குள் அடக்குவார். அநேகரைவாரிப்பூமியிலிட்டுத்தேய்ப்பார். அநேகரைத்தூக்கிப் பகிரண்டத்தில் மோதுவார். அநேகரைப் பிடித்து மகமேருவிலடிப்பார். அநேகரை விரல்களினுற் பிசைவார். அநேகரைக் கடல்நீருக்குள் அமிழ்த்திக் குமிழியெழும்படிச் செய்வார். அநேகரை வடவாமுகாக்கினியிலிட்டு வாட்டுவார். அநேகரை யிருபாதியாகக்கிழிப்பார். அநேகரைக்குத்தி வாயைப்பிளப்பார். அநேகரை நகங்களாற்கிறித்தோலுரிப்பார். அநேகரைக்கண்களைத் தோண்டி யெறிவார். அநேகரை வயிற்றைப்பீறிக் குடலையறுப்பார். அநேகரைப் பசையற்றுப்போம்படி நசுக்குவார். நகச்சந்திற் பதுங்கியிருப்பவர்களை நகத்தினுலேயே அழுத்திக்கொல்லுவார்.

அவ்வசுரர்களுக்கு வாகனமாயிருக்கின்ற தேர்கள் யானைகள் குதிரைகள் முதலானவைகளை உடல்கள் பின்னப்படாமல் உயிரைமாய்த்து விழுங்குவார். ஸப்த சமுத்திர ஜலங்களையும் அவைகளிலுள்ள பெருமீன் சிறுமீன்களுடனே மொடமொடவென்றுகுடிப்பார். ஏழுமேகங்களையும்இடிகளுடனே உட்கொள்ளுவார். இந்தக்கோரத்தைக்கண்ட தர்மதேவதையும் இனியேது சுவாமிக்குக் கோபம் தணிகிறதென்று அஞ்சிச் சலிப்புற்றது. பின்னுஞ்சில அசுரர்களைச் சக்கரவாளகிரியோ டெற்றுவார். சில அசுரர்களைஸப்தகுல பர்வதங்களின்மே லடித்துக்கொல்லுவார்.

சில அசுரர்களை அஷ்டதிக்குகளிலும் அடங்கியிருக்கின்ற இருட்பிரதேசத்திற் கொண்டுபோய் தமது பெரியகையாலறைந்து தேய்ப்பார். சில அசுரர்களை மலையைப்போல உருண்டு விழும்படியாகத் தமது கையி னுனிநகத்தாற் றலைகளைக்கிள்ளி யெறிவார். சில அசுரர்களைவாரிச் சூடுபிறக்கும்படித்தேய்ப்பார். சில அசுரர்களைக் கொல்லுகின்றமுறைமைப்படி கொல்லுவார். சில அசுரர்களுடைய உயிரைப்பறித்துப் பானம்பண்ணுவார். சில அசுரர்களைப்பிடித்துக் கடல்நீர் ஆகாசத்திலெழுந்து தாவும்படி யெறிந்து அக்கடலை நிறையத்தூர்த்துவிடுவார். இந்த நரசிங்க மூர்த்தியினுடைய சில்கைகள், மூன்றுலோகங்களி லுள்ள அவுணகோடிகளில் ஒருவராவதுதவிராமற் பிடித்துக்கொன்று, அவ்வவுணஸ்திரீகளுடைய கருப்பமு மழிந்துபோகும்படியாகச் செய்து, இந்த அண்டத்திலு மவுணரில்லாமற்கொன்று அப்புறத் தண்டங்களிலுந் தேடித்தடவிக்கொண் டிருந்தன.

இந்தப்பிரகாரமாக நரசிங்கப்பெருமான் இரணியனையும் அவன்புதல்வனாகிய பிரகலாதாழ்வானையுந் தவிர மற்ற வசுரர்கூட்டங்களையெல்லாம் ஓரிமையளவுகாலத்தில் கொன்றதை அவ்விரணியன் பார்த்து, தனது வலதுகையில் வச்சிராயுதத்தை யுருவிக்கொண்டு, இடதுகையில் ஆகாசத்தையு மறைக்கும்படியான கேடகத்தைப்பிடித்து, தேவர்களுடைய மனது தீயும்படியாகவும்—சப்த சமுத்திரங்களும்வற்றி மணல்காணும்படியாகவும்-அஷ்டகுல பர்வதங்களு நடுங்கும்படியாகவும் கெர்ஜித்து, உயிருள்ள மகமேருவைப்போல உதட்டை மடித்துக் கடித்துக்கொண்டு நின்றான். அவ்வாறுநின்ற தன்பிதாவைப் பெரியோர்களெல்லாந் துதிக்கும்படியாக நிற்கின்ற பிரகலாதாழ்வான் பார்த்துச் சொல்லுகின்றான்.

ஐயா திரிபுவனங்களையும் அரசாக்ஷிசெய்யும் ஏகசக்கராதிபதியே! இப்போது இந்தநரசிம்மமூர்த்தியைப் பார்த்தும் நீர் உம்முடையமனதில் ஒன்றுமாலோசிக்கவில்லை யல்லவா? இந்தக்கருணைக்கடலாகிய நரசிம்மமூர்த்தியை வணங்கும். நீர் வணங்குவீராகில் அவரிடத்தி லிதுவரையில் நீர்செய்திருக்கிற அபராதமாகிய குற்றங்களையெல்லாம் அவர் பொறுத்துக்கொள்ளுவார். என்று சொல்லக்கேட்ட இரணியன் அதிகஉக்கிரமாகியகோபங்கொண்டு, அடாசிறு பயலேபிரகலாதனே! இதைக்கேள், உன் கண்முன்பாக வெளிப்பட்டிருக்கின்ற இந்த நரசிங்கத்தினுடைய தோள்களையும் - கால்களையும் - வெட்டித்தள்ளி, உன்னையும் இரண்டுதுண்டமாகத் துண்டிட்டு, என்னுடையவாளை வணங்குவேனே யல்லாமல்; இந்த நரஹரியை வணங்குவேனோ? எனது தேவிமார்களுடைய ஊடல்காலத்திலும் நான்வணங்கினதை நீகண்டதுண்டோ? என்று அண்டங்களெல்லா நடுங்கும்படியாகக் கடகடவென்று சிரித்தான்.

அப்படிச் சிரித்த வாயிலும், கையிலும், அக்கையிற்பற்றியிருக்கின்ற வாளிலும், நடக்குங்காலிலும், குபுகுபுவென்று தீப்பொறிபறக்கும்படியாக அதிககோபத்தோடு தேவர்களெல்லாரையும் ரக்ஷிக்கும்படியாக வந்த அந்த நரசிம்

மத்தை எதிர்க்கவந்தான். இப்படி வந்தமாத்திரத்தில் கொடுமைகளைச் செய்துகொண்டிருக்கின்றஅசுரர்களுடைய தந்திரங்களுக்கெல்லாமேலாகியஉபாயங்களைச்செய்யும் அனேகவித சாமர்த்தியமுள்ள அந்தநரசிம்மமூர்த்தியானவர் கணித சாஸ்திர பண்டிதர்களாலும் கணக்கிட்டு இவ்வளவென்று தொகை சொல்லுதற்கரிதான தம்முடைய எண்ணிறந்தகைகளினாலும் கால்களினாலும் அந்த இரணியாசுரனைச்சூழ்ந்து கட்டிப்பிடித்தார். இரணியாசுரனும் சுவாமியினுடைய உக்கிரத்தைக்கண்டு அஞ்சாமலும் தன்னைக்கொல்லுவாரென்ற எண்ணத்தைச் சற்றுமாலோசியாமலும் தனது பூரணமாகிய பலத்தோடுசேர்த்து இறுகக்கட்டிப்பிடித்தான். இந்தப்படிக்கொருவரையொருவர் கட்டிப்பிடித்து எல்லாவுலகங்களுக்குமேலாய் ஒருவருங்காணாதபடி உயர்ந்து நிற்கின்றதன்மையைக் காணும்போது, யாவருங்கண்டு பயப்படும்படியான தோற்றத்தையுடைய இரணியாசுரன் மேருமலைக்குச் சமானமாகவும், இந்த நரசிம்மமூர்த்தி மற்ற அஷ்டகுலாசலங்களுக்குச் சமானமாகவும்காணப்பட்டார்கள்.

மேலும் இந்தநரசிம்மமூர்த்தியானவர் தமது மிகுந்த கெர்ஜனையாலும், வேலாயுதம்போன்ற நகங்களையுடைய அநேகமாயிரங் கைகளாலும், சப்திக்கின்ற அலைகளையுடைய திருப்பாற்கடலானது பிர்மலோகத்தைத் தாவிக்கொண்டுபோகிறதுபோற் காணப்பட்டார். இரணியன் அச்சமுத்திரத்திற்கு நடுவிலகப்பட்ட மேருமலைக்குச்சமானமாக விருந்தான். இப்படி இருவரு மிகுந்த உக்கிரத்தோடு யுத்தஞ்செய்யும்போது, இந்தநரசிம்மமூர்த்தியானவர் தமதொருகையினாலே இரணியனுடைய இரண்டுகால்களையும் சேரப்பிடித்து வாரி, அவனுடையவாளும்—கைகளும்—தலையும்—பிர்மலோகத்தின்மேலாகிய அண்டச்சுவரில் உரைபடவும், சூரியனானவன் தன்னுடைய பரிவேடத்தோடு சுற்றிவருகிறதைப்போலத் தோன்றவும் கிறுகிறென்று சுழற்றினார். அக்காலத்தில் அந்த இரணியனுடைய இரண்டுகாதுகளில் தொங்கிக்கொண்டிருந்த குண்டலங்கள்சிதறி, கிழக்கிலொன்று மேற்கிலொன்றுமாக விழுந்தன. அதைப்பார்க்கும்போது சூரியனானவன் உதயகாலத்திலும் அஸ்தமனகாலத்திலும் பிரகாசிக்கின்ற காலைமாலைகளின் கிரணங்களைப்போன்றிருந்தன. இந்தப்பிரகார மிவர்களிரண்டுபேருஞ்செய்த யுத்தப்பெருமையில் சுவாமிக்கு வந்த கோபத்தையும் அவர்செய்யும் யுத்தத்தையும் இத்தன்மையதென்று யாவராற் சொல்லக்கூடும்?

நரசிம்மமூர்த்தி இரணியனுடைய மார்பைப்பிளந்து மாய்த்தல்.

கவி.

ஆயவன் றன்னைமாய னந்தியினவன்பொற் சோயில்
வாயிலின்மணிக்கவான்மேல் வயிரவாளுகிரின் வாயால்
மீயெழுகுருதிபொங்க வெயில்விரிவயிர மார்பு
தீயெழப்பிளந்துநீக்கித் தேவர்களிடுக்கண் டீர்த்தான்.

இப்படி யுத்தஞ்செய்கின்ற நரசிம்மமூர்த்தியானவர் அந்திநேரத்தில் அங்குள்ள கோபுரவாசற்படியில் தமது திருத்தொடைகளின்மேல் இரணியாசுரனை இறுக்கிப்பிடித்துக்கொண்டு, திக்குகள்தோறுந்தாவுகின்ற தமது கையிலுள்ள வச்சிரம்போலும் பலமும்கூர்மையும்பெற்ற நகங்களினால் அவன் மணிமார்பை இரண்டாகப்பிளந்து கண்களில் அக்கினிப்பொறி பறக்கும்படி அவனுடைய உதிரங்களையெல்லாம் பூமியின்பேரிற் சிந்தவொட்டாமல் வாயினாலுறிஞ்சிக் கொப்புளித்து, அவனைச் சம்மரித்து, அவனால்தேவர்களுக்கு உண்டாயிருந்த துன்பங்களைப் போக்கினார்.

பிரமனாதிதேவர்கள் ஸ்ரீநரசிம்மமூர்த்தியைத் துதித்தல்.

கவி.

முக்கணனெண்கணனு முளரியாயிரக்கணனும்
திக்கணந்தேவரோடு முனிவரும்பிறருந்தேடிப்
புக்கநாடறிகுறாமற் றிரிகின்றார்புகுந்துமொய்த்தார்
எக்கணாற்காண்டுமெந்தை யுருவமென்றிரங்கிநின்றார்.

கேட்டீரோ அண்ணா! அந்தச்சமயத்தில் இரணியாசுரனுக்குப் பயந்தோடிப்போய்த் தாங்களிருந்த விடந்தெரியாமல் மறைந்திருந்த மூன்று கண்களையுடைய உருத்திரனும்—எட்டுக்கண்களையுடைய பிரமதேவனும்—ஆயிரங்கண்களையுடைய இந்திரனும்—திக்குப்பாலர்களும்—மற்றெல்லாத் தேவர்களும்—சமஸ்தரிஷிக்கூட்டங்களும்—மற்றுமுண்டான சகலமானபேர்களும் ஒன்றுசேர்ந்து, எவ்விதத்திலுந் தேடித்தேடியலைந்தும் காணப்படாதவஸ்து கிடைத்தமையால், அவ்விடத்தில்வந்து சூழ்ந்துகொண்டு, நம்முடைய ரக்ஷகராகிய இந்தநரசிம்மமூர்த்தியின் பயங்கரமான ஸ்வரூபத்தைக்கண்டு கண்கூசி, எந்தக்கண்களாற் காண்போமென் றிரக்கமுற்றவர்களாய் நிற்கவும்; பார்த்தபேர்களுடைய கண்களுக்கு முன்பாகத் தமது திருமுகமும்—திருக்கைகளும்-திருமேனியும்—திருவடிகளுமாய்த்தோன்றி, எல்லாவிடங்களிலுந் தாமாய்நிறைந்து, வாக்கினாலு மனத்தினாலு மறிவினாலும் அளவிடக்கூடாதபடி திருவடிகள் பாதலத்திற்குக் கீழாகவும்—இடைப்பிரதேசம் இந்திரனாதியோருங் காணவரிதாம்படியாகவும்—திருமுடி சத்தியலோகவாசியான பிரமதேவனாலும் அளவிட்டுக்காண முடியாதாகவும், பெரிய உருவத்துடனே சேவைசாதிக்கின்றதைக்கண்டு சமஸ்தமான அத்தேவர்களும் ரிஷிகளும், பயந்துநிற்கவும்; இப்படி பல்லுக்குப்பல் இடைவெளி ஆயிரங்காதமாகவும், கோடானுகோடி திருமுடிகளை யுடையவராகவும், அளவிடுதற்கரிதான பெரிய திருமேனியையுடையவராகவும், பிரகாசித்துக்கொண் டிருக்கின்ற அந்த நரசிம்மமூர்த்திக்கெதிரே கமலோற்பவனான பிரமதேவன்வந்துநின்றுகொண்டு, அவருடைய புகழை யெடுத்துச் சொல்லத்தொடங்கினான்.

பிரமதேவன் தோத்திரம் செய்தல்.

கவி.

தன்னைப்படைத்ததுவுந் தானேயெனுந்தன்மை
பின்னைப்படைத்ததுவே காட்டும்பெரும்பெருமை

யுன்னைப்படைத்தாய்நீ யென்றாலுயிர்படைப்பான்
என்னைப்படைத்தா யெனுமிதுவுமேதாமோ.

பல்லாயிரங்கோடி யண்டம்பனிக்கடலுள்
நில்லாதமொக்குளெனத் தோன்றுமானின்னுழையே
எல்லாவுருவமுமாய் நின்றக்காலிவ்வுருவம்
வல்லேபடைத்தால் வரம்பின்மைவாராதோ.

பேரையொருபொருட்கே பல்வகையாற்பேர்த்தெண்ணுந்
தாரைநிலையை தனியையபிறரில்லை
யாரைப்படைக்கின்ற தியாரையளிக்கின்ற
தியாரைத்துடைக்கின்ற தையாவறியேமால்.

நின்னுளேயென்னை நிருமித்தாய்நீயல்லா
தென்னுளேயெப்பொருளு மியாவரையும்யானீன்றேன்
பின்னிலேன்முன்னிலே னெந்தைபெருமானே
பொன்னிலேதோன்றியதோர் பொற்கலனே போல்கின்றேன்.

ஓ சர்வஜீவதயாபரமூர்த்தியே! தேவரீருடைய கல்யாணகுணங்கள் ஒவ்வொன்றுந் தன்னைத்தானே சிருஷ்டித்துக் கொண்டதென்று நினைப்பதற்கு அக்குணங்கள் தேவரீருடைய திருவருளன்றியில் தன்னைத்தான் பிரத்தியேகமாகச் சிருஷ்டித்துக் காட்டுமேயானால் அந்தப் பெருமையை உடையதாகும். அப்படிக்கில்லாமல் தேவரீரே உம்முடைய திருவருளையும், அத்திருவருளுக்குப் பிரகாசமாகத் திவ்யகல்யாண குணங்களையுஞ் சிருஷ்டித்தீரானால்; உலகஜீவகோடிகளைச் சிருஷ்டிக்கும்படி என்னை நீர் சிருஷ்டித்தீரென்னுஞ் செய்கை யெத்தன்மைத்தாகும்? பல்லாயிரங்கோடி அண்டங்களும் குளிர்ந்த சமுத்திரத்தில் தோன்றி அழியுங் குமிழியைப்போல உம்மிடத்தி லுற்பவித்தழியும். எல்லா வுருவங்களும் நீரேயாயிருக்க, அவற்றை யெல்லாம் அழிக்கும்படியான இவ்வுருவத்தையும் வகித்துக்கொள்ளுவீரேயானால் அனவஸ்தா தோஷமென்கின்ற ஒரு குறைவு வரமாட்டாதோ?

நீராகிய ஏகவஸ்துவுக்கே பலபெயரிட்டுப் பேதித்து நினைக்கும்படியானகாட்சியை யுடையவர் நீரொருவரேயன்றி வேறொருவரில்லை யாதலால், நீராரைச் சிருஷ்டிக்கின்றீர்? யாரை இரக்ஷிக்கின்றீர்? யாரைச் சம்மரிக்கின்றீர்? அம்மாயாலீலையை நாங்களொன்று மறியமாட்டோம். உமது உந்திக்கமலத்திலடியேனையுண்டாக்க, உமதுகிருபையுடையமனத்தினு லென்னிடத்தினின்றும் எல்லாப்பொருள்களையும் எல்லாஜீவர்களையும் யான்சிருஷ்டித்தேன். உம்மையன்றி எனக்கொருகாரணமுமில்லை. காரியமுமில்லை. பிரமருத்திரேந்திராதியர்களான எங்கள் பிதாவாகிய ஓ பெருமானே! ஒரு பொன்னிலுண்டான பூஷணங்களைப் போல்வோமேயன்றி எமக்கு யாமே முதலல்ல. நீயே யெவருக்குமுதலாகும். என்றிப்படியாகப் பிரமதேவனும்—மற்றத்தேவர்கள்முதலியயாவர்களுஞ் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து இரண்டுபக்கங்களிலு நின்று கொண்டிருக்க, சக்கரதரராகிய சாக்ஷாது ஸ்ரீவைகுண்டபதியானவர் அடங்

காத தமதுகோபமாறி, இப்பொழுதே லோகமெல்லா மழிந்துபோகுமென்று மனநடுங்கிக்கொண்டிருக்கின்ற பிரமருத்திரேந்திராதி சமஸ்ததேவர்களையும் பார்த்து பயப்படாதேயுங்களென்று கிருபைசெய்து, தாமரைமலர்போன்ற தமதுதிருக்கரத்தால் அபயங்கொடுத்தார்.

சுவாமியின் கோபந்தணிய பிரமனாதிதேவர்கள் மகாலட்சுமியைப் பிரார்த்தித்து சுவாமியினிடம் சேர்த்தல்.

கவி.

பூவிற்றிருவை யழகின்புனைகலத்தை
யாவர்க்குஞ்செல்வத்தை வீடென்னுமின்பத்தை
ஆவித்துணையை யமுதிற்பிறந்தாளை
தேவர்க்குந்தம்மோயை யேவினார்பாற்செல்ல.

செந்தாமரைப்பொகுட்டிற் செம்மாந்துவீற்றிருக்கும்
நந்தாவிளக்கை நறுந்தா ழிளங்கொழுந்தை
முந்தாவுலகு முயிருமுறைமுறையே
தந்தாளைநோக்கினான் றன்னொப்பொன்றில்லாதான்.

தீதிலாவாக வுலகீன்றதெய்வத்தைக்
காதலாநோக்கினான் கண்டமுனிக்கணங்கள்
ஓதினார்சீர்த்தி யுயர்ந்தபரஞ்சுடரும்
நோதலாங்கில்லாத வன்பனையேநோக்கினான்.

இப்படிப்பட்ட சமயத்தில் தேவர்களெல்லாரும் தங்கள் பயநிவாரணத்தின்பொருட்டு ஒன்றாகச்சேர்ந்து,பூவில்வீற்றிருக்கின்ற ஸ்ரீமகாலக்ஷுமியும், அழகுக்கு அழகானவளும், சர்வத்திராளுக்கும் ஐஸ்வரியமானவளும், பரமபதவின்பத்தைக் கொடுப்பவளும், பிராணரக்ஷகியும், தேவாமிர்தத்தோடு பிறந்தவளும், தேவர்முதலிய யாவர்களையும்பெற்ற தாயானவளுமாகிய பெரியபிராட்டியாரை அந்த நரசிம்மமூர்த்தியினிடத்திற் கெழுந்தருளும்படியாகப் பிரார்த்தித்தார்கள். இப்படித் தேவர்கள் பிரார்த்தித்தபிரகாரம் தம்மெதிரிலெழுந்தருளிய செந்தாமரைப்புட்பத்தின்மீது வீற்றிருக்கும் தூண்டாவிளக்கானவளும், நல்லவாசனைபொருந்திய புஷ்பமாலையிற்கட்டியவிளங்கொழுந்தைப் போன்றவளும், எல்லாவுலகங்களையும் அவ்வுலகங்களிலுள்ள பிரமேந்திராதி ஜீவகோடிகளையும்பெற்ற தாயாகியவளுமான சாக்ஷாது ஸ்ரீமகாலட்சுமியைச் சமானரகித னான நரசிம்மமூர்த்தியானவர் கிருபையுடனே கடாக்ஷித்தார். அம்மாத்திரத்தில் ரிஷிக்கூட்டங்களெல்லாம் புருஷசூக்தத்தினால் ஸ்தோத்திரம் பண்ணினார்கள்.

ஓ இலங்கைக்கரசே! அப்போது பரஞ்சோதியாகிய ஸ்ரீநரசிம்மமூர்த்தியானவர் சந்தோஷத்துடன் தமக்கெதிரில்நிற்கின்ற பக்தசிரோமணியாகிய பிரகலாதாழ்வானைக் கடாக்ஷித்து; ஐயா பிரகலாதாழ்வானே! உன்னுடைய தகப்பனாகிய இரணியனை நான் உன்கண்ணெதிரேகொன்று அவனுடைய

உயிரைப் போக்கினகாலத்தினும், உன்மனது கிஞ்சித்தேனுஞ் சஞ்சலப்படாமல் தர்மமார்க்கமான செய்கையுடனே என்மீது அத்தியந்தபக்தி வைத்திருந்தாயன்றோ? அப்படிப்பட்ட பக்தியுள்ளவனுக்கு நானென்ன பிரதியுபகாரமாக யாதுசெய்வது? ஓரிமைப்பொழுதை ஆயிரம்பங்கிட்டு அதிலொருபங்கான சிறுகாலத்திற்குள் உன்தகப்பனதுயிரைமாத்திரம் நீக்குகிறவனைப்போன் றுவந்து, அளவற்ற அசுரர்களுடனோடு அவனுடைய தேகத்தையும்பிளந்து சின்னபின்னப் படுத்தக்கண்டும், பொறுமையமைந்த நல்லமனதுடனே நீ இருந்தனையே அஃதன்றோ ஆச்சரியம்; ஆகையால் இனிமேலுனது சந்ததியார் என்னிடத்தில் அளவில்லாத பலகுற்றங்களைச் செய்தபோதினும், அவர்களைக்கொல்லுகிறதேயில்லை. உனக்கு நல்லவனாக விருக்கிறேன். நீவிரும்பிய வரங்கள் எவ்வளவோ அவ்வளவும் நாணாமல் நீ கேட்பாயானால் யாம் தருவது உண்மையே ஆதலால் கேட்கக்கடவாயென்று ஆக்கியாபித் தருளினார்.

பிரகலாதன் வரங்கேட்டலும், சுவாமிவரமீதலும்.

கவி.

முன்புபெறப்பெற்றபே றன்றேமுடிவில்லை
பின்புபெறும்பேறு முண்டோபெறுகுவனேல்
என்புபெறாத விழிபிறவியெய்திடினும்
அன்புபெறுகை யரும்பேறெனக்கென்றான்.

அன்னானைநோக்கி யருள்சுரந்தமனத்தினனாய்
என்னானை வல்லே னெனமகிழ்ந்தபேரீசன்
முன்னானபூதங்கள் யாவையுமுற்றிடினும்
என்னாளுமுலவாய்நீ யென்போலுளையென்றான்.

அப்போது பிரகலாதாழ்வான், ஸ்வாமீ! உம்மால்முன்பு அடியேன்பெற்றபேறுகளுக்கு ஓரளவில்லை. ஆயினும் இன்னொருவரம் அடியேனுக்குக் கிருபைசெய்யவேண்டும். அஃதென்னவென்றால்—அடியேன் எலும்பில்லாத இழிபிறவியாகிய புழுவாகச்சென்மித்த போதினும், உம்மிடத்திலும் - உம்மடியாரிடத்திலும் - அத்தியந்த அன்புபெற்றிருக்கும்படியான இந்த அரியவரமொன்றுமாத்திரமே வேண்டுமென்றான்.

அப்படியாகக்கேட்ட பிரகலாதாழ்வானைக்கடாக்ஷித்து, கருணைபெருகிய திருவுள்ளத்தராகி, ஓ பிரகலாதாழ்வானே! பிரமன் இந்திரன் முதலிய சமஸ்ததேவர்களும் - பஞ்சபூதமாதிதத்துவங்களும் அழியத்தக்க எந்தவூழிகாலத்திலேயும் நீ அழியாமல், என்னைப்போல் நித்தியனாய்ச் ஜீவன்முக்தனாகக் கடவாய். ஓ பொன்னுலகருமதித்த புண்ணியரூபா! இனியிந்த மூன்றுலோகவாசிகளும் உனக்கடிமையல்லவோ? அவர்களென்னை வணங்கி யடையும் பிரயோசனங்களையெல்லாம், உன்னைவணங்கி உன்னாற்பெற்று உஜ்ஜீவிக்கக்கடவர்கள். எனக்கன்பானவர்களெல்லாம் உனக்கன்பராகக்கடவர்கள். நீ அசுரர்களுக்குமாத்திரமா அரசனாயிருப்பது, ககனவாசிகளாகிய தேவர்களுக்கும்

நீயேயரசன். நல்லதர்மமும்—சத்தியமும்—நான்கு வேதங்களும்—பெரியஞானமும்--பொறுமையும்-எண்குணங்களும்—உன்சொற்படிநின்று, உனக்குவேண்டியவைகளைச்செய் துய்யக்கடவன. இனி எனக்கு முனக்கு மொருபேதமுமில்லையென்றுகூறிக் கடாக்ஷித்தனர்.

பிரகலாதனுக்கு சுவாமி தமது திருக்கரத்தால் திருமுடிசூட்டேதல்.

கவி.

என்றுவரமருளி யெவ்வுலகுங்கைகூப்ப
முன்றின்முரச முழங்கமுடிசூட்டி
நின்றவமர ரனைவீருநேர்ந்திவனுக்
கொன்றுபெருமை யுரிமைபுரிகென்றான்,

தேமன்னுரிமை புரியத்திசைமுகத்தோன்
ஓமமியற்ற வுடையான்முடிசூட்டி
கோமன்னவனாகி மூவுலகுங்கைக்கொண்டான்
நாமமறையோதா தோதிநனியுயர்ந் தான்.

இந்தப்பிரகாரம் பிரகலாதாழ்வானுக்கு எப்பெருமான் வரங்கொடுத்து, பின்பு எல்லாலோகத் தவர்களும் கைகூப்பி வணங்கும்படியாகவும் - ஆசாரவாசலில் ஜெயபேரிகை முழங்கும்படியாகவும்-பிரகலாதாழ்வானுக்குத் திருமுடிசூட்டத் தேவர்களையெல்லா மழைத்து, நீங்கள் இந்தப்பிள்ளைக்குச்செய்யவேண்டிய உரிமை பெருமைகளை யெல்லாம் செய்யக்கடவீர்களென்று ஆக்கியாபித்தார். அப்படியே தேவர்களெல்லாரும் பிரகலாதாழ்வானுடைய பட்டாபிஷேகத்தில் தங்கள் தங்களுக்குரிய கடமைகளைச் செய்யவும், பிரமதேவன் ஓமம்வளர்க்கவும், சாக்ஷாத் நாராயணனால் முடிசூட்டப்பெற்று பிரகலாதாழ்வர்ன் மகாராஜனைய்த் திரிலோகத்தவர்கள் ஸ்தோத்திரம்பண்ணவும், மகாரிஷிகள் வேதபாராயணஞ் செய்யவும், தனது தந்தையிருந்த சிம்மாதனத்தின்மீது எழுந்தருளியிருந்தான். இஅபூர்வவிருத்தாந்தமாகும். ஓ அண்ணா இராவணேஸ்வரா! நீர் இதை நன்றாய்த் தீர்க்காலோசனைசெய்யவேண்டும். என்னமோ சாமானியமென்று அலக்ஷியம்பண்ணுவீரானால் நிமைவிளைகிறது சத்தியமாகுமென்று புத்திமான்களிற் சிரேஷ்டரான விபீஷணாழ்வான் தன் தமயனாகிய இராவணனுக்குச் சொன்னார்.

இரணியன் வதைப்பட்லம்—முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

நான்காவது,

விபீஷணனடைக்கலப் படலம்.

இப்படலத்தில் விபீஷணர் இரணியகசிபுவின் சரித்திரமுகாந்திரம் பலவாறு தெருட்டியும் இராவணன் சிறிதுமுட்கொள்ளாது சினந்து அப்பாற் செல்லுகவென்றுகூறவும் அவரவ்வாறே விண்ணிலெழும்பிப் பின்னுமவனவற்றையுங்கூறி இலங்கையைவிடுத்ததும், அக்கால்தன்னைத் தொடர்ந்த அனலன்முதலிய நான்கமைச்சர்களோடு விபீஷணர் மந்திராலோசனைசெய்துகொண்டு கடலைத்தாண்டி ஸ்ரீராமருடைய வானரசேனைகளைக்கண்டு வியந்து ஓரிரவு மறைந்திருந்ததும், அப்போதக்கடற்சார்பாகிய நெய்தனிலப்பொருள்களின்தன்மைகளை ஸ்ரீராமர்கண்டு உலாவிக்கொண்டிருக்க விபீஷணர்வானரசேனையில்வந்து கலந்ததும், கலந்தவரைவானரவீரர்கள்கொல்லயத்தனித்தபோது அவர் ஸ்ரீராமனைக் கூவிஓலமிடவும் அவராக்ஞையால்விபீஷணர் கருத்தறியவந்த மயிந்தனுக்கு அனலன்சொல்லுவதும், அதனாலவர்கருத்தறிந்த மயிந்தன் ஸ்ரீராமனுக் கதை யுணர்த்தலும், அப்படியுணர்ந்தபின் ஸ்ரீராமர் மற்றைத்துணைவர்களோடாலோசித்தபோது சுக்கிரீவன்-சாம்பவந்தன்-நீலன்-இவர்கள் தங்கள்கருத்தைத்தனித்தனியுரைத்ததும், பின்புஸ்ரீராமர் ஆஞ்சநேயரை வினவ அவர் சிலவனுபவங்கள்கூறி விபீஷணரைச்சன்மானித்ததும், உடனே ஸ்ரீராமர் சில உத்தமதருமங்களை யாவருக்குமுணர்த்தி சுக்கிரீவனைக்கொண்டு விபீஷணரை யழைப்பித்ததும், சுக்கிரீவனழைக்கவந்த விபீஷணர் ஸ்ரீராமனைச்சேர்ந்து, ஆனந்தபரவசராதலும், அப்பால் ஸ்ரீராமபிரான் அவ்விபீஷணருக்கு இலங்காதிபத்திய மளித்து அவர் வேண்டுகோளின்படி தமது திருவடிச்சுவடேறிய மகுடமுஞ்சூட்டித்தேவர்முதலிய சகலருங்கொண்டாடும்படி ஊர்க்கோலமுதலிய விபவங்களு நடப்பித்ததைச் சொல்லப்படுகின்றது.

விபீஷணர் சொல்லியவைகளைக்கேட்ட இராவணன் கோபித்தல்.

கவி.

கேட்டனனிருந்துமக் கேள்விதேர்கலாக்
கோட்டியசிந்தைய னுறுதிகொண்டிலன்
மூட்டியதீயென முடுகிப்பொங்கினன்
ஊட்டரக்கூட்டிய வனையவொண்கணன்.

விபீஷணரான புண்ணியசீலர் கடினசித்தத்தையுடைய தன்தமயனாகிய இராவணனுக்கு நல்ல ஞானமுண்டாகும்படி இரணியகசிபுவினுடைய சவிஸ்தாரங்களை எடுத்துச் சொல்லக்கேட்டு, சீதையின்மேல் வைத்திருக்கிற பேரவாவினால் தம்பிசொன்னவிஷயங்கள் ஒன்றும் மனதிற்ருக்காமலும் அதைஆராயாமலும் தனக்கபஜெயகாலம்நேர்ந்து,லோகரக்ஷகனாகிய ஸ்ரீராமன் கோதண்டத்திற் சந்தித்துவிடும் பாணத்திற்கு இரையாகவேண்டுமென்ற ஊழ்வினை

வசத்தால்செவ்வரக்கூட்டியதுபோல் இரண்டுகண்களுஞ்சிவந்து,ஏ விபீஷணா! இரணியாசுரன் மிகுந்தபலமுள்ளவனென்றும், அப்படிப்பட்டவனை அந்தவிஷ்ணுவானவன் கொன்றுபோட்டானென்றும்பயந்து, இந்தமனிதரிடத்தில்பக்ஷம் வைத்திருக்கின்றாய். மரணமென்கின்ற ஒருமுடிவுகாலத்தினால் அவ்வவனுக்கும் பலமொழியுமேயல்லாமல் வேறல்ல. அப்படிப்பட்ட இரணியனாற் பெற்றுவளர்க்கப்பட்ட பிரகலாதன் வளர்த்தகடா கையிற்பாய்ந்ததுபோலத் தன்தகப்பனை அந்தவிஷ்ணுவானவன்பிளந்து சம்ஹரித்தகாலத்தில் விசனமென்பது எள்ளளவேனுமில்லாமல், தான் மிகுந்த மகிழ்வடைந்திருந்தான். அந்தப்பிரகலாதனும்,என்பகையாளிகளான அந்தமானிடர்களுக்குச் சிநேகம் பூண்டிருக்கின்ற நீயும்,சமானமானவர்கள்.உங்களைப்போலொத்த துரோகசிந்தனையுடையோர்கள் வேறொருவருண்டோ? ஆ விபீஷணா! மிகுந்த பெருமையுடையவனாகிய இரணியனுடைய குமாரனான பிரகலாதனுடைய சுபாவத்தைப்போலச் செய்யவேண்டிய தந்திரங்களை நீ செய்துமுடித்து, நானிந்தமனிதனுக்குத்தோற்றபின்பு ஏழையான நீஎனதுஐஸ்வரியத்தை அடைந்து வாழாமென்றிருக்கிறாய். உன்னுடைய நினைவின்படி இது உனக்குக்கிடைக்குமோ? நீ அவர்களிடத்தில் வெகுநாளைய உறவாளிகளைப்போல மிகுந்த அன்பு வைத்திருக்கின்றாய். எனக்குப் பகையாளிகளாகிய அந்தமனிதரிடத்திற் சிநேகம் வைத்திருக்கின்றாய். அவர்கள் பக்ஷத்தில் மெத்த உருகிப்போகிறாய். அழுகிறாய். அவர்களை ஸ்தோத்திரம்பண்ணுகிறாய். ஆகையால்; நீயே உளவாயிருக்கின்றாய். இதற்கு வேறேசாக்ஷி வேண்டியதில்லை. அந்த மனிதர்களிடத்திற்குப்போய் அவர்களை சிநேகஞ் செய்துகொண்டு, செய்யவேண்டிய தந்திரங்களை யெல்லாம் நன்றாயாலோசனைபண்ணிக்கொண்டாய். என்னைச் செயிக்க வேண்டுமென்றும் நினைத்திருக்கின்றாய். இந்த ராஜரீகத்தின்பேரிலும்ஆசைவைத்திருக்கின்றாய். உன்னுடைய செய்கையானது வெகு கொடூரமானதாக விருக்கின்றது. உன்னைப்பார்க்கிலுமெனக்குப் பகையாளிகளாரிருக்கின்றார்கள்? ஆ! ஆ! நீ மகாகொடியவன்.

அன்றைக்கொரு குரங்கு வந்து நம்முடைய அசோகவனத்தை யழித்துவிட்டதைப்பற்றி அதைக்கொல்லும்படியாக நான்சொன்னதற்கு, தூதரைக் கொல்லுவது வெற்றியல்லவென்று விலக்கிவிட்டாய். இனி நடக்கவேண்டிய காரியத்தை நினைத்துக்கொண்டு வெற்றிமாலையை அணிந்துவந்திருக்கின்ற ஸ்ரீராமனை உனக்குத் துணைவனாக்கிக் கொள்ளுகிறதற்குத் தீர்மானித்திருக்கின்றாய். நீஉன் பிராணனுக்குப் பயந்திருக்கின்றாய்ஆனபடியால், எதிரிகளோடு யுத்தஞ்செய்கிறதற்கு நீ தக்கயோக்கியனுமல்ல. அந்த மனிதர்களிடத்தில் சிநேகம் வைத்திருக்கிறாய். உன்மனதிற் சூதிருக்கின்றது. நீ பிறந்த இராக்ஷச நிலைமையையு மாற்றிவிட்டாய். விஷத்தைச் சமீபத்தில் வைத்திருப்பது போல உன்னையு மென்னுடன் வைத்துக்கொண்டு வாழ்கிறதினால் நன்மையுண்டாகுமோ? ஆகையால் - சகோதரஹத்தி யென்கின்றதை நினைத்து உன்னைக்கொல்லாமல் விட்டுவிட்டேன். நீ ஒன்றும் பேசாதே. சீக்கிரமாய் வெ

ளியேபோய்விடு. என்கண்முன் நிற்பாயேயாகில் மரணமடைந்திடுவாயென்று, இனி யழிந்துபோகின்றவனும் தனக்குள்ள வறிவெல்லாங் கெட்டவனுமான இராவணன் சொன்னான்.

விபீஷணர் தன் கருத்திற்கிணங்காத இராவணனிடத்தினின்றும் பிரிந்து ஆகாசமார்க்கத்திற்சென்று சிலவார்த்தைகூறி ஸ்ரீராமபிரானை யடைவதே நலமெனப்புறப்படல்.

கவி.

என்றலுமிளவலு மெழுந்துவானிடைச், சென்றனன் றுணைவருந் தானுஞ்சிந்தியா
நின்றனன்பின்னரு நீதிசான்றன, ஒன்றலபலபல வுறுதியோதினான்.

இப்படி அவன் சொன்னமாத்திரத்தில் விபீஷணாழ்வான் அந்தச் சபையைவிட் டெழுந்திருந்து, ஆகாசமார்க்கத்திற்போய் அநேக நீதியான காரியங்களை ஆலோசித்து, அண்ணா பிரதாபலங்கேஸ்வரா! மிகுந்த வாழ்வுடனே ஊழிகாலபரியந்தம் உயிரோடுங்கூடி வாழ்ந்திருக்கிறதை எள்ளளவும் நீர் நினையாமல், அற்பமான பேர்கள் சொல்லுகிறதையேகேட்டுக் கெட்டுப்போகிறது நியாயமாகுமா? தருமந்தப்பினபேர்களுக்கு ஆண்மையுமுண்டா? உமது பிள்ளைகளென்ன? உமது குருக்கள்மாரென்ன? உமது மிகுந்தபந்துக்களென்ன? உமது சிநேகிதர்களென்ன? பலஹீனர்களும் பலமுள்ளவர்களுமாய் உம்மைச் சேர்ந்தபேர்களென்ன? இத்தனைபேர்களையும் ஸ்ரீராமருடைய அம்புக்கிரையாகக்கொடுத்து நீருமிறந்துபோவீர். நான் பலவகையாலும் உறுதியானவைகளையும், தகுதியானவைகளையும், உமது மனதுக்கிசையும்படியாகத் தெரிவித்தேன். அவ்வளவையும் நீர் ஆலோசிக்கவில்லை. அண்ணா! என்குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளவேண்டும். என்று உத்தமனான விபீஷணாழ்வார் சொல்லிவிட்டு, அவ்விலங்காநகரத்தைவிட்டுப் புறப்பட்டார்.

விபீஷணர் தன்னைத்தொடர்ந்த வமைச்சரோடு மந்திராலோசனைசெய்து விடியுமட்டு மறைந்திருத்தல்.

கவி.

அனலனுமனிலனு மரன்சம்பாதியும், வினையவர்நால்வரும் விரைவின்வந்தனர்
கனைகழற்காலினர் கருமச்சூட்சியர், இனைவரும்வீடண னேநேமெயினார்.

அப்போது அனலன் - அனிலன் - அரன் - சம்பாதி - என்கிற நான்கு மந்திரிகளும் வேகமாய்வந்து விபீஷணாழ்வாருடனே புறப்பட்டார்கள். அவ்வாறு புறப்பட்ட நான்குதோழர்களும் எப்பேர்ப்பட்டவரெனில், ஒலிக்கின்ற வீரகண்டாமணியணிந்த பாதத்தை யுடையவர்கள். மேல்வருங் காரியத்தை ஆராய்ந்து அதற்கு நடத்தவேண்டிய காரியம் இன்னதென்று ஆலோசித்து உணர்த்தும்படியாகிய விவேகசாமர்த்திய முடையவர்கள். அப்படிப்பட்ட குணவான்களாகிய மந்திரிகளுடன்; விபீஷணாழ்வாரும் குரங்குப்படைகள் சூழ இராமலட்சுமணர்களென்கின்ற இரண்டு மனிதர்கள் சமுத்திரக்கரையில்வந்து சேர்ந்திருக்கிறார்களென்ற சமாச்சாரங்கேட்டு, வேறோரிடத்துக்குப்போய்

இந்த நான்கு தோழர்களுடன் விபீஷணாழ்வா ராலோசிக்கத் தொடங்கினார். ஐயா தோழர்களே! தருமசிந்தை யுடையவர்களிடத்திலே எனக்குப் பக்ஷமுண்டாயிருக்கின்றது. நான் புகழையல்லாமல் வாழ்வை விரும்பவில்லை. அவ் வாழ் வென்பதை முற்று மறந்துவிட்டேன். இனிநான் செய்யவேண்டிய தென்னமோ? அதனை நீங்கள்சொல்லுவீர்களென்று கேட்டார். அதற்குத்தரும சாஸ்திர நிபுணர்களான அந்த நான்கு ஆலோசனை மந்திரிகளும் ஒருவருக் கொருவர் நன்றாயாலோசித்துச் சொல்லத்தொடங்கினார்கள்.

ஐயா விபீஷணமகாராஜனே! பெருமையிற் சிறந்தது இதினும் வேறொன்றில்லை குறைவில்லாத ஐஸ்வரியமானது தர்மசொரூபியாகிய அந்த இராமச்சந்திரனைத் தரிசித்துக்கொண் டிருக்கின்றதே: இனி உமக்குத் தர்மமு மிதுவேயாகுமென்று அவர்கள்சொல்ல அதை விபீஷ ணாழ்வார் கேட்டுச்சொல்லுகிறார்.

கவி.

நல்லதுசொல்லினீர் நாமும்வே றினி, அல்லதுசெய்துமே லரக்கராதுமால்
எல்லையில்பெருங்குணத் திராமன்றாளிணை, புல்லுதும்புல்லியிப்பிறவிபோக்குதும்.

ஐயா மந்திரிகளே! நல்லவார்த்தை சொன்னீர்கள். நாமிதைத் தவிர்ந்து வேறொருகாரியஞ் செய்வோமேயானால், இராக்ஷதர்களாகவே போய்விடுவோம். ஆகையாலினி நம்முடைய அற்பமான ஜென்மநீங்கிக் கடைத்தேறும்படி, அனந்தகல்யாணகுணகணனான ஸ்ரீராமமூர்த்தியினுடைய செந்தாமரை மலர்போன்ற இரண்டுதிருவடிகளையும் அடைக்கலமாய்ச்சேரக் கடவோம். என்று சொல்லிப் பின்னுஞ்சொல்லுகின்றார்.

அந்த ஸ்ரீராமமூர்த்தியை நான் முன்பொருக்காலும்பார்த்ததுமில்லை. அவரைப்பற்றிக் கேள்விப்பட்டதுமில்லை. அவரிடத்தில் எனக்கன்பு பிறந்ததற்குக் காரணமுந்தெரியவில்லை. என்தேகமெல்லாம் ஆனந்தமென்னுங்கடலிற் குளித்துக் குளிர்ந்துவிட்டது. என்னுடைய நெஞ்சு திடமாய் நிற்கவேயில்லை. அடிக்கடி உருகிப்போகிறது. அவர் என்னுடைய அற்பமான மாளாத ஜெனனமென்னும் வியாதிக்குப் பகையாளிபோலக் காணப்படுகின்றார். ஈஸ்வரபக்தியும், நல்லதர்மமும், பட்சபாதமின்மையும், பிறவுயிர்களிடத்தி லருளும், ஸ்ரீ வேதவித்துக்களுடைய ஆசீர்வாதங்களும், மூலதாமரசபுஷ்பத்தில் வசித்துக்கொண்டிருக்கின்ற சாட்சாத் பிரமதேவனை நோக்கித் தவஞ்செய்த காலத்தில் நான் விரும்பிப்பெற்றவரங்களாலு முண்டாகிய பிரயோசனங்களே என்னை யிப்படிப்பட்ட பரிசுத்தவானாகச் செய்தவைகளென்று நினைக்கின்றேன். ஆதலால் பிரமேந்திராதி தேவர்களுக்கெல்லாம் ஏகநாயகனாகிய அந்த ஸ்ரீராமமூர்த்தியினுடைய திருவடிகளைத் தியானித்து, நம்முடைய மனதில்நினைத்த எண்ணங்களையெல்லா முடித்துக்கொள்ளும்படியாயினோ மென்று கூறினர்.

கவி.

இருளுறவெய்துவ தினிதன்றுமெனப், பொருளுறவுணர்ந்தவப் புலன்கொள்புந்தியார்
மருளுறுசுழலின் மறைந்துவைகினர், உருளுறுதேரவ னுதயமெய்தினன்.

இப்படியாகக்கூறிய விபீஷணரானவர் மிகுந்தவாநந்தபூரணராய்த் தமது மந்திரிகளுடன் கடலைத்தாண்டிச்சென்று, அக்கரையில் எங்கும் விளக்குவெளிச்சம் பிரகாசிக்கின்றதனாற் பாற்கடலில் தாமரை புஷ்பித்திருக்கிறதுபோலக் காணப்படுகின்ற பெரியவானரசேனைகளைத் தனதுகண்ணினாலே பார்த்து, தேகத்தோடுகூடிய சகலஜீவகோடிகளையும் இந்தவானரங்களையும் ஓரிடத்தில் நிறுத்தி மதிப்பிடுவோமானால் இந்த வானரசேனைகளின் தொகையே பெரிதாயிருக்குமென்று தன்னுடையமந்திரிகளுக்குச்சொல்லி, நாமிப்போது இராத்திரிகாலமாயிருக்கிறபடியினாலே அவ்விடத்திற்குப்போகிறது நமக்குத் தகுதியல்லவென்று உயர்ந்த பொருள்பட ஆலோசனைசெய்து, அதிவிவேகியான அந்தவிபீஷணாழ்வார் ஓரிடத்தில்மறைந்து ஸ்ரீராமஸ்மரணை செய்து கொண்டிருந்தார். தமது தீவினைகளெல்லாம் தம்மைவிட் டொழிவதுபோல் உலகிலுள்ள இருட்கூட்டங்களெல்லாம் ஒழியும்படி ஒற்றைச்சக்கரத்தைப் பூண்ட தேரையுடைய சூரியனு முதயமாயினன்.

ஸ்ரீராமர் கடற்கரையடைந்து அங்கு நிகழுங் காட்சியைக் காணல்.

கவி.

அப்புறத்திராமனவ் வலங்குவேலையைக்
குப்புறக்கருதுவான் குவளைநோக்கிதன்
துப்புறச்சிவந்தவாய் நினைந்துசோர்குவான்
இப்புறத்திருங்கரை மருங்கினெய்தினன்.

அந்தச்சமயத்தில் லோகரக்ஷகனான ஸ்ரீராமமூர்த்தியானவர் சமுத்திரத்தைக் கடக்கும்படியாக நினைவுகொண்டவராகி, நீலோற்பல புஷ்பம்போன்ற கண்களையுடைய சீதாபிராட்டியின் பவளத்தைக்காட்டினும் சிறந்து பிரகாசிக்கின்ற சிவந்தவிதழை எண்ணி யெண்ணிச் சோர்வடைந்து, அந்தக்கடற்கரைக்குச் சமீபத்தில்வந்து, அங்குள்ள சோலைகளையும் - பலகழிகளையும் - மணல்வெளியையும் - தாழஞ்செடிகளையும் - நீலோற்பல புஷ்பங்களையும் - கருங்குவளைப் புஷ்பங்களையும் - புன்னைவிருக்ஷங்களையும்— அவற்றின் பக்கத்தில் மிகுந்தவெண்மைநிறமுள்ள அன்னங்கள் ஆணும் பெண்ணும் ஒன்றோடொன் றணையும்படியாகக் காமவேட்கையை வளர்க்கத்தக்க புஷ்பச்சோலைகளையும் - அவ்விடத்திற் கும்பற்கும்பலாக அலைகளினாற்சேர்ந்து கிடக்கின்ற முத்துக் குவியல்களையும்—பவளக்குவியல்களையும்—மற்ற மணிக்குவியல்களையும்—சொர்னமயமான கடற்கரையும்—யாவரும் பயப்படும்படியான அநேகமரங்களடர்ந்த தோப்புகளையும்—மணற்குன்றுகளையும்—அவற்றின்மேல் புரண்டுவருகின்ற கடலலைகளையும் தமது நேத்திரானந்தமாகப்பார்த்தார்.

இப்படிப்பார்த்த ஸ்ரீராமர் மின்னலைப்போலும் பிரகாசிக்கின்ற சில செம்படவ ஸ்திரீகள் தங்கள் நாயகன்மார்களெப்போது வருவார்களென்று அழகிய விரல்கள் தேயும்படியாகச் சுழிகள் சுழித்துச் சகுனம் பார்க்கும்போது தங்கள் கண்ணீரானது அந்தச் சுழிகளை அழித்துவிட அதனால் விசனமுடையவர்களாய் மறுபடியும் அச்சுழிகளைச் சுழிக்கின்ற சமுத்திரக்கரையிலுள்ள புன்னைமரச் சோலையைப் பார்த்துப் பிரமித்தவராகியும், குளிர்காலத்திலுண்டாகின்ற பனித்துளிகளைப்போல் அச்சமுத்திரத்தின் வெண்மையாகிய அலைகளினின்று மெழும்பிய நீர்த்திவலைகள் காற்றினால் சரஞ்சரமாக எழும்பி மேற்றெளிக்க அக்கரையின்கண் வளைந்த தாழஞ்செடிகளின்மேல் ஆணன்னங்கள் ஓர்புறத்திறகினால் தனதாசை மிகுந்த பெட்டையைப் பக்கத்திலணைத்துக்கொண்டு ஆனந்தமாக நித்திரை செய்கிறதைப் பார்த்துப் பெருமூச்சு விட்டவராகியும், உண்ணுதற்காக மீன்கொண்டு வரும்படி அந்த மரக்கிளையை விட்டுப் பிரிந்துபோன ஆண்கொக்கின்மேல் ஆருக்காதல்கொண்டு அஃதெப்போது திரும்பி வருமோவென்று அது சென்றதிசையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற வெண்மையும் இளமையுமுடைய பெட்டைக்கொக்கைப்பார்த்து மனமிரக்க முடையவராகியுமிருந்தார்.

மேலும் - ஒரு பெண்கொக்கின்மேல் மோகங்கொண்ட இரண்டு ஆண்கொக்குகள் மிகுந்த கோபமுடையவைகளாய்க் கண்களில் நெருப்புப் பொறிபறக்க ஒன்றோடொன்று பின்னிடையாமல் உயுத்தஞ்செய்வதைக்கண்டு தானுங் கோபங்கொண்டு வளைந்தபுருவத்தை யுடையவராகியும், நிறைந்த ஊடலினாலே ஆணன்னத்தை ஜெயித்த பெண்ணன்னமானது கலவியில் ஆணன்னத்திற்குத் தோல்வியுற்று நிற்கிறதைக் கண்டு தனது பவளம்போன்ற விதழை முத்தையொத்த பற்களினால் அதுக்கிக்கொண்டு துக்கமுடையவராகியுமிருந்தார். இப்படி அந்தச் சமுத்திரக்கரையிலுண்டான ஒவ்வொரு செயல்களினால் பிரமித்தும் - பெருமூச்சுவிட்டும் - மனமிரக்க முடையவராகியும் - புருவநெறிப்புடையவராகியும்—துக்கமுடையவராகியும்—உலாவிக் கொண்டிருந்த சக்கரவர்த்தித் திருமகனானவர், இளையபெருமாள்—சுக்கிரீவமகாராஜன்-சாம்பவர்—அநுமார்—இவர்கள் முதலியோர் தேறுதலைசொல்லித் திருவுளத்தைத்தேற்ற ஒருவாறு தேறி, சுபாவ வறிவோடுகூடிய பித்தரைப்போல அவ்விடத்தைவிட்டுத் தமது உறைவிடமே வந்து சேர்ந்தனர்.

விபீஷணர் வானரசேனையிற் கலத்தல்.

கவி.

உறைவிடமெய்தினு னெருங்குகேள்வியின்
துறையறிதுணைவரோ டிருந்தசூழலின்
முறைபடுதானையின் மருங்குமுற்றினன்
அறைகழல்வீடண னயிர்ப்பில்சிந்தையான்.

இவ்வண்ணம் ஸ்ரீராமச் சந்திரன் ஆராய்ச்சியின் வல்லமை மிகுந்த துணைவர்களோடு தமது உறைவிடமடைந்தபோது அங்கு முறைப்படி அணி

யணியாய் நிற்கின்ற வானரகூட்டத்தி னோர்புறம் வீரக்கழ லொலிக்கின்ற விபீஷணாழ்வார் மனதினிடத்தில் களங்க மில்லாமல் ஸ்ரீராமஸ்மரணைசெய்து கொண்டு வந்துசேர்ந்தனர்.

விபீஷணரைக் கண்ட வானரவீரர்கள் கோபிக்க அவ்விபீஷணர் ஸ்ரீராகவ சரணமென்று ஓலமிட்ட சத்தம் தன் காதிற்பட ஸ்ரீராமச்சந்திரன் அங்குள்ள வர்களை வந்தவர்களாரென்று பார்த்துவர ஏவுதல்.

கவி.

முற்றியகுரிசிலை முழங்குதானையின்
உற்றனர்நிருதர்வந் தென்னவொன்றினர்
எற்றுதிர்பற்றுதி ரெறிதிரென்றிடை
சுற்றினருருமெனத் தெழிக்குஞ்சொல்லினர்.

மற்றொருபொருளுள தென்னின்மாறிலாக்
கொற்றவசரணெனக் கூயதோருரை
உற்றதுசெவித்தலத் தையமெல்லென
நற்றுணைவனாமுக நயந்து நோக்குறா.

எந்தையேயிராகவ சரணமென்றசொல்
தந்தவரெவரோ சாற்றுமின்னென
மந்தணமுற்றுழிஇ வயவெஞ்சேனையின்
முந்தினர்க்குற்றதை மொழிகுவாமரோ.

இப்படி வானரசேனைகளில் வந்த விபீஷணாழ்வாரையும் — அவருடைய தோழர்களையும் — அவ்வானரசேனைகள் பார்த்து, நம்மிடத்திற்கேன் இவ்விரா க்ஷதர்கள் வந்தார்கள்? வந்தவர்கள் என்னசெய்யநினைக்கின்றார்களோ அதை அறிகிலோம். ஆதலால் இவர்களைத் தள்ளுங்கள், பிடியுங்கள், அடியுங்கள், என்று இடியிடித்தாற்போற் கர்ச்சித்துச் சொல்லிக்கொண்டு அவர்களைச் சுற் றிக்கொண்டார்கள். அப்போது விபீஷணாழ்வார்முதலிய ஐவரும் திகைத்து, ஓ ஸ்ரீராமா! கோதண்டராமா! சீதாராமா! அயோத்திராமா! தசரதராமா! இர குகுலோத்தமா! புருடோத்தமா! தேவரீருடைய திருவடித்தாமரைகளுக்கு அபயம்: அபயம்: இவ்விடத்திலெமக்கு வேறொரு துணையுமில்லை. என்று பே ரோசையிட்டுக் கூவினார்கள். இப்படியாகக்கூவிய சப்தமானது சக்கரவர்த்தித் திருமகனாருடைய திருச்செவியில் நுழைந்தமாத்திரத்தில் தமது துணைவராகி ய இளையபெருமாள் — சுக்கிரீவர் — அநுமார் — சாம்பவர் — முதலானவர்களைக் கிரு பையோடு முகமலர்ந்து பார்த்து, அபயமபயமென்று சொல்லுகிறார்களே: அவர்களியாரென்று பார்த்துவந்து சொல்லுங்களென்று ஆக்கியாபித்தார்.

அவ் வாக்கியாபனையைக்கேட்ட வானரவீரர்கள் சற்றுநிதானித்து, மு ன்னர் பிடிக்கவு மடிக்கவு மெண்ணியிருந்த தங்கள் கருத்தை யொழித்தார்க ள். அவ்வாக்கியாபனையைக் கேளாத வானரவீரர்களிற் சிலர் விபீஷணரை வி டாம்ற்பார்த்து, தர்மதேவதையே இலங்காதிபதியானவனை இங்கேகொண்டுவந்

துவிட்டதோ என்பார்கள். யதார்த்தமாய் என்னமோ வொருபொல்லாங்கு செய்கிறதற்கு இவ்விடத்திற்குவந்தான் என்பார்கள். சிலர் இவனே யிராவணனாதலால் நம்முடைய வெண்ணத்தை முடித்துக்கொள்ளலாம் என்பார்கள். சிலர் மகாபாவியாகிய ராவணனுக்கு இருபது கைகளும் பத்துத்தலைகளுமிருக்கின்றதாய்ச் சொல்லுவார்களே; அவைகளெல்லாம் அறுந்துபோய் விட்டனவோ என்பார்கள். சிலர் இவன் நம்மோடு சண்டைசெய்ய மாட்டுவானோ என்பார்கள். என்றிப்படி சிற்சிலர் சில வார்த்தையாகச் சொல்லினார்கள். சிலர் மிகுந்த கோபத்தோடு நெருங்குவார்கள். சிலர் இவனைப்பிடித்து சிறையில் வைத்துவிட்டு அதன்பிறகு நம்முடைய சுவாமிக்குச் சொல்லுவோ மென்பார்கள். சிலர் இவனைப்பார்த்தும் கொல்லாமல் க்ஷணப்பொழுதாவது நாம் சும்மாநிற்கவேண்டிய தென்னவென்றுசொல்லிப் பின்னும் சமீபமாக நெருங்கிப் போகின்றார்கள்.

சிலர் இவர்கள் கொடிய தீவினைகள் நிறைந்த இராக்ஷசசாதியிற் பிறந்தவர்களாதலால் க்ஷணப்போதுக்குள்ளாக ஆகாசமார்க்கமாய் மறைந்துபோய்விட்டால் அப்பால் நாம் செய்வதென்ன வென்பார்கள். சிலர் இவனைச் சும்மா கொல்லுவது தகுதிப்பாடன்று; குத்திநசுக்கிவிடுவதே நல்லதென்று வெகு கோபத்துடனே சொல்லுகிறார்கள் இப்படி அவரவர்களுக்குத் தோன்றியபடி சொல்லும்போது, முன்பு ஸ்ரீராமபத்திரருடைய ஆக்கியாபனையைக் கேட்டிருந்தவர்களில் நிபுணர்களான மயிந்தனென்பவனும்—துமிந்தனென்பவனும்-விரைவாயோடிவந்து, கொல்லும்படியாகப் போகின்ற வானரவீரர்களை விலக்கி, வேதசாஸ்திரங்களை யுணர்ந்தவர்களான அந்த இரண்டு வானரவீரரும் அந்த அரக்கரைப்பார்த்து, இவர்கள் கோபக்குறியுடையவர்க ளல்லவென்று தெரிந்து, சாமுத்திரிகா சாஸ்திரப்படி அவர்கள்விவேகாதிகளையெல்லாம் ஆராய்ந்து கேழ்க்கின்றார்கள்.

சுவாமியின் உத்தரவுபடிசென்ற மயிந்தனும் துமிந்தனும் விபீஷணரைக்கண்டு நீர்யாரென்று வினவ, அவ்விபீஷணரின் மந்திரிகளில் ஒருவன் அவர் இன்னாரென்றவரலாறும் வந்தகாரியமுங் கூறல்.

கவி.

யாரிவணெய்திய கருமம்யாவது, போரதுபுரிதிரோ புறத்தொரெண்ணமோ
சார்புறநின்றநீர் சமைந்தவாறெலாம், சோர்விலிர்மெய்ம்முறை சொல்லுவீரென்றான்.

நீங்கள்யார்? இவ்விடத்திற்கு வந்தகாரணமென்ன? சண்டைசெய்கிறதற்காகவோ? அல்லது வேறோரெண்ணமாகவோ வந்தீர்கள். மேலும்—நீங்கள் இவ்விடம் வந்து சேர்ந்ததற்குக் காரணமெதுவோ? அவைகளையெல்லாம் ஒளியாமல் உண்மையாகச் சொல்லவேண்டுமென்று கேட்டார்கள். அதற்குச் சத்தியவந்தரான விபீஷணாழ்வாருடைய தோழரில் ஒருவனாகிய அனலன் சொல்லுகிறான்.

கவி.

பகலவன்வழிமுதற் பாரினாயகன்
புகலவன்கழலடைந் துய்யப்போந்தனன்
தகவுறுசிந்தையன் றருமநீதியன்
மகன்மகன்மைந்தனான் முகற்குவாய்மையான்.

ஐயா புண்ணியவான்களே! இவர் பிர்மாவினுடைய குமாரரான தயாசீலரும் தருமவானுமாகிய புலஸ்தியப் பிர்மாவினுடையபுத்திரர். விபீஷணரென்னும் பெயரினையுடையவர். சூரியவமிச சிரேஷ்டரும் லோகநாயகருமான ஸ்ரீராகவபிரானுடைய திருவடிகளைச் சரணமடைந்து உஜ்ஜீவிக்கவந்தார். தருமநிலை தவறாமை, சாக்ஷாது நாராயணமூர்த்தியினிடத்தில் நிறைந்த அன்பு, சதாகாலமு நிலைத்த சத்தியம், பிராமணர்களிடத்தில் விசுவாசம், இவைமுதலாகிய நற்செய்கைகளையெல்லாம் பிரமதேவனை நோக்கித் தபசுசெய்து பெற்றுக்கொண்டார். இதன்றியும்—இவர் இராவணனைப்பார்த்து, ஐயா இராவணேஸ்வரா! நீர் அக்கினியை முன்தானையில் முடிபோட்டுக்கொண்டிருக்கின்றவர்களைப்போல அவிவேகமுள்ளவராய் லோகநாயகருடைய தேவியாகிய சீதாபிராட்டியாரைச் சிறையில் வைக்கலாமா? அந்தச் சீதாபிராட்டியை விட்டுவிட்டால் நீர்கடைத்தேறுவீர், விடாமற் போவீரானால் அழிந்துபோவது சித்தம். என்று பற்பலவிதமான நல்ல புத்திமதிகளைச் சொன்னார். இதைக்கேட்ட கொடுரமான துற்சிந்தையையுடையவனும், புத்தியீனனுமான இராவணன் இவரைப்பார்த்து, நீ எனக்குப்பின்பிறந்தவனென்கிற காரணத்தினாற் பிழைத்துக்கொண்டாய். வெளியேபோய்விடு. என்கண்முன்னாகநின்றால் இறந்துபோவாயென்று சொன்னான். இதைக்கேட்டமாத்திரத்தில் அந்த இராவணனினின்றும் நீங்கி வந்துவிட்டார். இதுசத்தியமான வார்த்தையென்று சொன்னான்.

இப்படி விபீஷணர்மந்திரியான அனலன் நடந்த சவிஸ்தாரங்களையெல்லாம் விவரித்துச்சொல்லியதை மயிந்தனென்பவன் கேட்டு ஆலோசித்து, இந்தவார்த்தையைச் சுவாமியினிடத்தில் அவசியம் சொல்லவேண்டுமென்று திரும்பி, துமிந்தனையும் இளையபெருமாளையும்—வானரசேனைகளையும் நோக்கி இவ்விபீஷணரைக்காத்துக்கொண் டிருங்களென்றுசொல்லி, ஞானம்—தருமம்—தவம் இவைகளை மதிலாகவும், பொருந்துதற்கரிய பெருமை-பொறுமை இவைகளைவாயிலாகவும்கொண்ட கிருபையாகிய கோயிலிற்குள் எழுந்தருளியிருக்கின்ற சக்கரவர்த்தித்திருமகனாருடைய அருள்பெற்று அவரது சன்னிதியில் மிகுந்த பயபக்தியுடனேபோய் அவர்திருவடிகளில் தெண்டனிட்டு, எழுந்து கைகுவித்துநின்று, சுவாமி! அடியேனுக்கொரு விண்ணப்ப மிருக்கின்றதென்றுசொல்ல, அதற்குத்தாமரைத்தடாகம்போன்ற திருமேனியையுடைய, ஸ்ரீராமமூர்த்தியானவர் மண்டலாகாரமாகிய சடாமகுடம்வாய்ந்த தமது சிரசையசைத்து ஓ உண்மையுள்ளநேசனே! நீ கண்டவதிசயத்தையுங் கேட்டவிஷயங்களையும்சொல்லுவாயென்று ஆக்ஞைசெய்ய, அதைக்கேட்ட மயிந்தன் பகவானைப்பணிந்து சொல்லத் தொடங்கினான்.

மயிந்தன் விபீஷணர் கருத்தை ஸ்ரீராமருக் குணர்த்தல்.

கவி.

விளைவினையறிந்திலம் வீடணப்பெயர், நளிர்மலர்க்கையினா னால்வரோடுடன்
களவியல்வஞ்சனை யிலங்கைக்காவலற், கிளவனஞ்சேனையி னடுவணெய்தினான்.

ஓ இராகவமூர்த்தியே! அடியேங்களுக்கு மேல்விளையுங்காரியம் இன்னதெனத் தெரியாது. குளிர்ந்த தாமரைமலர்போன்ற கரங்களையும் விபீஷணனென்கின்ற பெயரையுமுடைய ஒருவன். பிராட்டியாரை வஞ்சகத்தோடு களவுசெய்துகொண்டு போனவனாயும், தேவர்குலாந்தகனாயு மிருக்கின்ற இலங்காபுரியின் காவலனாகிய இராவணனுக்குத் தம்பியாம். அவன் தன்னுடைய மந்திரிகளான நான்குதோழர்களோடு நம்முடைய வானரசைனியங்களின்மத்தியில்வந்து சேர்ந்தான். அப்படிவந்து சேர்ந்தவனை அனேகவானரவீரர்கள் கொல்லுங்கள், பிடியுங்கள், தள்ளுங்களென்று சொல்லிக்கொண்டு நெருங்கிப்போனார்கள். அதையடியேன் பார்த்துப் பொறுங்களென்று அவர்களைத் தடுத்து, அவனை நீயார்? உன்னுடைய நிலைமையென்ன சொல்லென்றுகேட்டேன். அதற்கவனது துணைவர்களில் அனலனென்னுமொருவன் சொன்னதாவது இந்தவிபீஷணர் கொடுந்தீமையைச்செய்துமுடித்த தன்தமயனான இராவணன்போய்ச் சேருவது துன்பமிகுந்த நரகஸ்தானமே; தன்னைக்காப்பதற்கு வேறொரு இடமுமில்லையென்று கிருபாநிதியாகிய சக்கரவர்த்தித் திருமகனாரை இவர்சரணமடைந்தார். என்று சொன்னதுமன்றி, இந்த விபீஷணன் ஸ்ரீமந்நாராயணனிடத்திற் பற்றுள்ள சிந்தனையையும்—உண்மையையும்—பிரமதேவனிடத்தில் வெகுகாலந் தபசுசெய்து வரமாகப்பெற்ற பரிசுத்தவானென்றுஞ் சொன்னான்.

மேலுமிந்தவிபீஷணன் தன்தமயனைப்பார்த்து, பதிவிரதாசிரோமணியான சீதாபிராட்டியை நீவிட்டுவிடாமற் சிறைவைத்திருப்பையேயானால், சூரியன் நேராகவாராமற் பக்கத்திற் சுற்றிப்போகும்படியான பெருமையையுடைய இந்தலங்காநகரத்தில் கிரீடங்களணிந்த உனது தலைகள் புரளுமென்று ஒருநல்ல புத்தியுஞ் சொன்னானாம். அதற்கு இராவணன் அதிககோபமுள்ளவனாய்க்கண்களிற் றீப்பொறிபறக்கும்படியாகவெழுந்து, ஓ விபீஷணா! நீ ஒருக்ஷணப்பொழுதேனும் என்சமீபத்தில் நிற்பையேயாகில், உனக்கு மரணம்சம்பவிப்பது நிச்சயம். ஆகையால் என்கண்முன்பு நிற்காமல் அப்பாற்போய்விடென்று சொல்லவும் உடனே லங்கையைவிட்டுவந்து தேவரீரைச் சரணமடைந்தானாம். இஃதடியேன் கேள்விப்பட்ட விருத்தாந்தம். என்று மயிந்தனென்பவன் விண்ணப்பம் செய்தனன்.

ஸ்ரீராமர் விபீஷணரைக்குறித்துத் துணைவர்களோடாலோசிக்க அவருட்சுக்கிரீவன் தன்கருத்துரைத்தல்.

கவி.

அப்பொழுதிராமனு மருகினண்பரை, இப்பொருள்கேட்டநீ ரியம்புவீரிவன்
கைப்புகற்பாலனோ கழியற்பாலனோ, ஒப்புறநோக்கிநும் முணர்வினாலென்றான்

அவ்வார்த்தையைக்கேட்ட சக்கரவர்த்தித் திருமகனாகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் தமக்கருகில்நிற்கின்ற சுக்கிரீவமகாராஜன் முதலான துணைவர்களைப்பார்த்து, இப்போதிந்த மயிந்தன் சொன்னதைக்கேட்டீர்களே: இந்தவிபீஷணன் அடைக்கலம்புகத்தக்கவனா? நீக்கப்படத்தக்கவனா? உங்களுடைய புத்திநுட்பத்தால் சீர்தூக்கிப்பார்த்துச் சொல்லுங்களென்று நியமித்தார்.

இப்படிநியமித்த விசாலமான கமலலோசனருக்கு இராஜகாரிய விவகாரங்களை நடத்துகிறதில் காலதேசவர்த்தமானங்களைத் தகுந்தபடி ஆலோசித்தறியத்தக்க சமர்த்துள்ள இரத்தினகிரீடதரனாகிய சுக்கிரீவமகாராஜன் தெண்டன்சமர்ப்பித்து, ஆதியானவேதங்களையு மனுமுதலான சாஸ்திரங்களையும் கரைகண்ட தேவரீர் இப்படிப்பட்ட காரியங்களைக்குறித்து விசாரிக்கவோ எங்களை வினவினகாரியம்? ஓ பிரமனுக்கு மேலாயிருக்கின்றவரே! ஓ கிருபாசமுத்திரமானவரே! ஆகிலும் அடியேன் சொல்லுவது தகுந்ததல்லாததும் சாஸ்திரோக்தமல்லாததுமா யிருந்தபோதிலும், என்னறிவுக்குத் தகுந்தயானவைகளை விண்ணப்பம் பண்ணுகின்றேன். அதைத் தேவரீர்கிருபைசெய்து திருச்செவிசாத்தி யருளவேண்டும். இனிவிளைவது தேவரீருக்கேதெரியும். இப்போது சண்டைதொடங்குகிறதாயிருக்கின்றதே, அதற்காகவுமல்ல. எதிரிகள் கொல்லும்படியாக வந்திருக்க, அதை ஆலோசியாமையுமல்ல. இவன் தன்னுடைய தமயனை நீக்கிவிட்டுவந்தது தருமமாகுமா? அயோக்கியரான ராக்ஷதர்களுக்குள் யோக்கியர்களு முண்டாயிருப்பார்களா?

கவி.

தகையுறுசம்முனைத் தாயைத்தந்தையை, மிகையுறுகுரவரை யுல்கின்வேந்தனைப்
பகையுறவருதலுந் துறந்தபண்பிது, நகையுறலன்றியு நயக்கற்பாலதோ.

ஓ ஸ்வாமீ! பெற்றகாலமுதல் தயவுவைத்துப் போஷித்துக்கொண்டுவந்த தாய்தகப்பன்மார்களையும், தனக்குமுன்பிறந்த பிராதாவையும், தன்ஆசாரியர்களையும், அரசர்களையும் விரோதித்து; அவர்களைப் பகைக்கிறதும், அவர்களை விட்டுப்பிரிகிறதும், யோக்கியர்களுக் கிகழ்ச்சியாகுமேயல்லாமல் சந்தோஷிக்கும்படியானதோ? இப்படியிருக்க—இவன் தன்தமையனிருக்குமிடத்திலிருந்து அவன்பிரவேசித்த யுத்தத்திற்குத் தானும்பிரவேசித்து அவனுடன்மாண்டுபோக வேண்டியதாயிருக்க, அதற்குப்பயந்து நம்மிடத்தில் வந்து சேர்ந்தான். இது உலகத்தில் வீரலட்சணத்துக்குப் பழியையுண்டாக்குமல்லவோ? ஒருவன் தர்மத்தையே விரும்பினபோதிலும், தன்னுடைய பந்துக்களையெல்லாம்விட்டுப் பலர் நகைக்கும்படியாகத் தன்மானம் புறமானமென்பதில்லாமலிருந்து எதிர்த்தபகையாளிகளிடத்திற் சேர்ந்துகொள்ளுதல் எக்காலத்திற்கும் பழியாகாமற்போகுமா? இவன் தன்னுடைய தமையனான இராவணன் வாழ்ந்திருக்கிறகாலத்தில் அவனுடைய செல்வத்தைப் பங்கிட்டு அநுபவித்துக்கொண்டிருந்து, இப்போதவனை யெதிரிகள் பகைத்து வந்திருக்கும்போது அந்தயுத்தத்தில் அவனுக்குதவியாயிராமல் நம்மிடத்தில்வந்து சேர்ந்தானானால்; இவன் நமக்கு உறவாளியென்றெண்ணலாகுமா?

ஓ கிருபாநிதியாகிய ரகுராமா! பொன்மானுருவான மாரீசன் தன்மருமகனாகிய இராவணனுடைய துற்புத்திக்கிசைந்து அவனுடையசெஞ்சோற்றுக்கடனுக்காகத் தன்பிராணனைக் கொடுத்ததைப் பார்த்திருந்ததும், இந்தவிபீஷணன் தமையனென்னும் பக்ஷத்தை மறந்து விரோதங்கொண்டு வந்தவனாயிற்றே இவனை நீக்கிவிடாமல் நாம்சினேகங்கொள்ளலாகுமோ? மூன்றுலோகத்தவர்களும் எமனோடுகூடிக்கொண்டு உம்மோடெதிர்த்தகாலத்திலும் தேவரீர் அவர்களை யொருலக்ஷியம் பண்ணாதவராகவிருக்க நமக்குச் சத்துருவாகிய இராவணனுடைய தம்பியான இந்தவிபீஷணன் நம்மிடத்தில்வந்து சேர்ந்ததினால் நமக்கு இவன் சினேகனாவானா? இராக்ஷசர்களையெல்லாங் கொன்று கருவறுத்து தர்மத்தைப் பரிபாலிக்கும்படியாகி வந்தோமென்கின்ற பெருமையையுடைய நாம் இரக்கமென்பது சிறிதுமில்லாத அவ்விராட்சசர்களைச் சினேகமாக நாம் அங்கிகரிப்போமேயானால், நாம் பலவீனர்களென்று பிறர் நினைப்பார்களல்லவா?

பந்துக்களில் ஒருவர்க்கொருவர் பிரிந்தகாலத்திலும், ஒருவரையொருவர் நேர்கண்டகாலத்திலும், ஒருவர்பொருளை யொருவர் கைக்கொண்ட காலத்திலும், ஒருவர்க்கொருவர் அளவளாவி உண்ணுங்காலத்திலும், வித்தியாசப்படாமல் ஒரேநிலைமையா யிருப்பார்கள். நாமிந்த விபீஷணனைப் பக்ஷமாக அங்கிகரித்தபோதிலும் விஷத்தைப்போல் நமக்குத்தீமை செய்யவந்தவனேயல்லாமல், அடைக்கலமாக நம்மிடத்திற்கு வந்தவனல்லவென்று சுக்கிரீவமகாராஜன் தன்னபிப்பிராயத்தை விபரமாகச்சொன்னதைக்கேட்ட ஸ்ரீராமனவர்; அவன்பின்னுகிற்கின்ற அநேக சாஸ்திரக்கேள்விகளையுடையவனும், தனக்குச் சமானமில்லாத பலாஷ்டிகனுமான ஜாம்பவனைப்பார்த்து, உன்னுடைய அபிப்பிராய மென்னவென்று கேட்டனர். அதற்கு அனேககாலமாக வெகு காரியங்களை அநுபவமாயறிந்த ஜாம்பவன் சொல்லுவதாயினன்.

ஜாம்பவன் தன்கருத்துரைத்தல்.

கவி.

அறிஞரேயாயினு மரியதெவ்வரைச், செறிஞரேயாவரேற் கெடுதறிண்ணமாம்
நெறிதனைநோக்கினு நிருதர்நிற்பதோர், குறிநனியுளதென வுலகங்கொள்ளுமோ.

ஓ நீலமேகம் போலும் திவ்யதிருமேனியையுடைய ஸ்ரீராமச்சந்திர சுந்தரனே! விரோதிகள் நட்பமிருந்த அருமை பெற்ற அறிவில் சிரேஷ்டம் பெற்றவர்களாயிருக்கினும் அப்பகைவரை எவர்கள் சேர்ந்தபோதினும், அவர்கள் கெட்டுப்போவார்களென்பது நிச்சயமே: இராட்சசர்கள் நல்ல நெறியை யுடையவர்களாயினும் உலகத்தார் அவர்களை நற்குறியுடையவர்களென்று அங்கிகரிப்பார்களோ? பகைவரானவர்கள் நம்மைச்செயங்கொள்ளவெண்ணுவார்களாகில் ஒருசமயத்தில் தாங்கள் தோல்வியடைவதைப் போல் நடித்து, நம்மைச்செயம்பெறச் செய்வார்கள். அதிகவினைய விஸ்வாசமுள்ளவர்களாகவு மிருப்பார்கள். செய்யவேண்டிய காரியங்களை ஒழுங்காகவுமுடிப்

பார்கள். நீர்க்கபகையாளிகளாகவு மிருக்கமாட்டார்கள். ஆனபோதிலும் அவர்களைச் சிநேகர்களாகக் கொண்டாற்பெருமை யுண்டாகுமோ? மேலும் வேதவிதிகளையும்—யாகதருமங்களையும்—மாறுபாடாக்கிப் பிராமணர்களுக்குந் துக்கத்தையும்—தேவர்களுக்குத் துன்பத்தையும்—செய்துகொண்டுவருகின்ற மகாபாதகர்கள் நம்மிடத்தில் வந்ததினாலே, யோக்கியர்களாய் நமக்குநன்மை செய்வார்களோ?

அப்படிப்பட்டவர்கள் நம்மைச்சரணமடைய நாம் அவர்களைக்காப்போமானால், அவர்கள் பொய்யைக்கொண்டு வஞ்சனையான துரோகங்களைச்செய்தபோதிலும், அதை எதார்த்தமாகக்கொண்டு நாம் இறந்தபோதிலும், நம்முடைய ஐஸ்வரியங்களை இழந்த போதிலும், உலகத்தவர்க ளெல்லாருமிகழும்பழியாகும். தர்மதேவதையும்சகிக்கமாட்டாது. இன்னுமிதற்குமேல் விளைகிறதீங்கை நான்சொல்லவேண்டுமோ? தேவரீர் காட்டில் வாசம்பண்ணுகிற காலத்தில் மானுருவங்கொண்டு வந்தவனுடையவருகை யெப்படிப்பட்டதுன்பத்தைவிளைத்ததோ? அப்படிப்பட்டதாகவே இவனுடையவரவு முடிவுபெறுமென்று விண்ணப்பம்பண்ணிக்கொண்டான். அதன்பிறகு எல்லாச்சாஸ்திரங்களையும்படித்து அதனுடைய உண்மைப்பொருளைப் பலரிடத்திலும் கேட்டறிந்தவனான நீலனென்கிற வானரசேனாதிபனை ஸ்ரீராமபத்திரர்பார்த்து, உன்னுடைய அபிப்பிராய மென்னவென்றுகேட்க மிகுந்தபக்திவிசுவாசத்துடன் சொல்லலுற்றான்.

நீலன் தன் கருத்துரைத்தல்.

கவி.

பகைவரைத்துணையெனப் பற்றற்பாலவாம், வகையுளவன்னவை வரம்பில்கேள்வியாய்
தொகையுறக்கூறுவன் குரங்கின்சொல்லென, நகையுறத்தக்கன நயந்துகோடியால்.

அளவில்லாத சாஸ்திராராய்ச்சியில் வல்லமைபெற்ற சத்துவகுணத்தையுடைய ஸ்ரீரகு குலோத்தமா! சத்ராதிகளைத்துணையெனக் கொள்ளுவதில் அநேகவகைகளுண்டு அவ்வகைகளைச் சொல்லுகிறேன் இஃது; அற்பமாகிய குரங்கினது சொல்லென்று யாவரும் நகைக்கும்படியான சொல்லாயிருக்கினும் அதை ஒரு அலக்ஷியஞ் செய்யாது சற்றுச்செவிகொடுத்து விரும்பிக் கேட்டருள் செய்யவேண்டும். தங்களுடைய பந்துக்களா யிருக்கின்றபேர்கள் யுத்தஞ்செய்கிற காலத்தில் எதிர்த்துவந்த வீரர்களுக்குப் பயந்து அவர்களைப் பலஹீனர்களாகக் காட்டி வந்தவர்களும், குறைவுபடாத திரவியங்களையிழந்து கோபிக்கின்றபேர்களும், தேகாபிமானபேர்களும், யுத்தத்தில் புறங்கொடுத்தோடிவந்தபேர்களும், தாயாதிகளுக்குச் சேரவேண்டிய தாயபாகத்தைக் கொடாமல்அதைக்கொண்டு ஐஸ்வரியவான்களா யிருக்கிறவர்களும், அன்னியரால் பீடிக்கப்பட்ட பந்துக்களைக் கொன்றுவிட்டபேர்களும், அன்னியராஜதெண்டனைக் குட்பட்டவர்களை வருத்தப்படுத்தினவர்களும், பகையாளிகளிடத்தில் தம்மனையாளைவிட் டிழந்தவர்களும், ஆகிய இவர்கள் நம்முடைய

பகைவர்களாயினும்-பிள்ளைகளாயினும் - நம்மிடத்தில்வந்தால், தெண்டனையடைதற் குரியவர்களேயாவார்கள்.

மேலும் – இவர்கள் தங்களுக்குள்ளும் பொறுமையுடையவர்களல்ல. நாமுறவுசெய்யத் தக்கவர்களுமல்ல. அப்படிப்பட்ட இராக்ஷதர்களாகையால் நம்மைவந்து சேர்ந்தார்கள். தம்முடைய பந்துக்களுக்குக் கெடுதியுண்டாகும்படியாக அவர்களை விட்டு நீங்கி வந்தார்கள். ஆதலால் இவர்கள் மிகுந்த துணிவுடையவர்கள். இப்படிப்பட்டவர்கள்விஷயத்தில் நாமென்ன ஆலோசிக்கலாம்? இப்போது நாமிருக்கிறகாலத்தைப் பார்க்கும்போதும், நூல்களினுடைய கருத்தை ஆராயும்போதும் தமயன்மேற் கோபங்கொண்டுவந்த இவனுடைய நிலைமை இத்தன்மையதென்று நாமறியும்படியான தன்மையையுடையதா யிருக்கின்றதோ? என்று தனக்குத் தோன்றிய நியாயங்களை யெடுத்துக்காட்டினுன். பிறகு ஸ்ரீராமர் மற்றமந்திரிமார்களையும், அநேக வித்துவான்களையும், தனக்குச் சிநேகரா யிருக்கின்றவர்களையும் பார்த்து, இந்த விபீஷணன் விஷயத்தில் உங்களுக்கிருக்கும் அபிப்பிராய மென்னவென்று கேட்டனர். அதற்கவர்களெல்லாரும் வித்தியாசப்படாமல் ஒரேமொழியாய் இவனையங்கீகரிக்கிறது கிருபாநிதியாகிய தங்களுக்குத் தகாதென்று தீர்மானமாய்ச் சொன்னுர்கள்.

ஆஞ்சனேயர் தமதுகருத்தை அநுபவத்தோடுரைத்து விபீஷணரைச் சன்மாணிப்பித்தல்.

கவி.

உறுபொருள்யாவருமொன்றக்கூறினுர்,செறிபெருங்கேள்வியாய்கருத்தென்செப்பென
நெறிதருமாருதி யென்னுநேரிலா, அறிவனைநோக்கினு னறிவின்மேலுளான்.

இவ்வண்ணமாக யாவரும் தங்கள் தங்களுக்குத் தோன்றியவைகளையெல்லாம் எடுத்து விபீஷணரை இங்ஙனஞ் சேர்ப்பது தகாதென்று சொல்லினுர். அவையனைத்துங் கேட்ட ஸ்ரீராமமூர்த்தியானவர் எல்லாரிலு முதன்மைப்பட்டவரான அனுமாரைப்பார்த்து, ஓ சமானமில்லாத மிகுந்த நல்ல அறிவையுடைய மாருதியே! உன்னுடைய அபிப்பிராயத்தையுஞ் சொல்லுகவென்று கேட்டனர்.

கவி.

இணங்கியரறிவில ரெனினுமெண்ணுங்கால்
கணங்கொள்கைநும்மனோர் கடன்மைகாணென
வணங்கியசென்னியன் மறைத்தவாயினன்
நுணங்கியகேள்வியா னுவல்வதாயினுன்.

அதற்கந்த அதிநுட்பமான கேள்வியையுடைய ஆஞ்சநேயர் மிகுந்தபக்தியினைய விஸ்வாசத்துடனே தலைவணங்கி, கையினுல் வாயைப்பொத்திக்கொண்டு, சுவாமீ! அடியேங்கள் தேவரீருடைய திருவுளத்துக்கு இணங்கும்படியாகச்சொல்லத்தக்க விவேகத்தை யுடையவர்க ளல்லவென்றாலும், மந்திரா

லோசனைசெய்து காரியநடத்துகிறது தேவரீர் சந்நதியின் கடமையானதால் அதன்படி தேவருங் கேட்கத் திருவுளங்கொண்டீர். சுவாமீ! ஆலோசித்துச் சொல்லவேண்டியவைக ளெவ்வளவுண்டோ? அவ்வளவையும் தேவரீருடைய சந்நிதியில் உத்தமமானது இன்னதென்று இங்குள்ள பெரியோர்க ளெல்லாரும் விவரமாய் விண்ணப்பஞ் செய்திருக்க, அடியேனைப் போன்றவர்க ளென்ன விசேஷித்துச் சொல்லவிருக்கின்றது? இந்தப் பெரியோர்கள் சொன்னஆலோசனை மிகவுமுயர்ந்ததே: ஆயினும் - அடியேன் கண்ணாரக்கண்டறிந்த சிலகாரியங்களைச் சொல்லுகிறேன். தேவரீர் அவைகட்குத் திருச்செவி சாத்தியருளவேண்டும்.

ஓ தயாநிதியாகிய தயரதச் சக்கரவர்த்தியின் திருக்குமாரராகிய ஸ்ரீராமச்சந்திரரே! இந்த விபீஷணரைத் தீயவனென்று சந்தேகித்துச் சொல்லமாட்டேன். அடியேன் இலங்கைக்குப்போய் இராவணன் சமுகத்திற் சேர்ந்தபோது அவன் என்னைக் கொல்லும்படியாகத் தன்னுடைய கிங்கரரை யேவினான். அப்போது இந்த மகானுபாவராகிய விபீஷணர் அவனைத்தடுத்து, பகையாளிகளுடைய தூதுவரைக் கொல்லுவது தகாது. பொல்லாத பழியாகும். மேலும் வெற்றியுமல்ல. என்றுசொல்லி அவர்களைவிலக்கி, ஸ்திரீகளைக் கொல்லுகிறதும், கண்ணில்லாத குருடர்களைக் கொல்லுகிறதும், தூதர்கள் எவ்வளவு கெடுதியானவர்களாயினும் அவர்களைக்கொல்லுகிறதும், சற்றும் நல்லதல்லவென்று இப்படிப்பட்ட சிறந்தவேதுக்களை இராவணனுக்குத் தெரியச் சொல்லினார். இன்னும்பிராட்டியைத் தேடிக்கொண்டு இராத்திரிகாலத்தில் இவருடைய திருமாளிகைக்குள் நான்பிரவேசித்தபோதும், அவ்விடத்திலுலாவிக்கொண்டிருந்தபோதும், நல்லசகுனங்கள் அடியேனுக்குக்காணப்பட்டனவல்லாமலும்; ஓ ஸ்ரீராமமூர்த்தியே! இன்னும் அடியேன் கண்டவைகளைச்சொல்லுகின்றேன் கேட்டருள்வீர். இவர் திருமாளிகைக்குள் மதுமாமிசங்களிருக்க நான் கண்டதில்லை. அஃதெப்போதும் தருமம் — தானம் — வந்தனை — வழிபாடு— இவை முதலானவற்றால் பிராமணர்கள் வசிக்கும்வீடுபோற் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

மேலும் — இவருடைய குமாரத்தியான திரிசடையென்பவள் என் தாயாகிய சீதாபிராட்டிக் கருகிலிருந்துகொண்டு, அம்மா! இந்தத் துர்ப்புத்திமானான இராவணன் உன்னைக் கையால் தொடமாட்டான். ஒருவேளை தொடுவானானால் அவன்தலை சகஸ்திரபிளவாய் வெடித்து, அவனும் இயமலோகத்தை யடையும்படியாகப் பிரமதேவரிட்ட ஒரு சாபமுண்டாயிருக்கின்றது. என்று இவை முதலான இனியவார்த்தைகளைச் சொல்ல அடியேன் காதாரக் கேட்டிருக்கின்றேன். ஓ துளபமாலிகாதரராகிய சுவாமீ! அன்றியும் - நெஞ்சில் வஞ்சனையுள்ளவர்களுடைய முகத்தைப் பார்த்தமாத்திரத்திலே அவரவர்களுடைய குணம் வெளியாகாமல் மறைவாகமாட்டாது. உடைந்த கப்பலை விரும்பி சமுத்திரத்தில்முழுகிப் போகிறவர்களைப்போல் அடியேன்

இவர்விஷயத்தில் பொய்சொல்லுவேனோ? மனதிலுள்ளதை வாயாற்சொல்லுகிறதற்கு முன்னமே அவரவர்களுடைய முகங்களே வெளியாக்கிவிடும். வழிப்பறித்துண்போர்கள் தாங்கள்செய்யும் சோரவிளைவுகள் இராக்காலத்தில் பள்ளத்தாக்கான மார்க்கங்களிலன்றி மேடான வெளியிடங்களில் யாவருக்குந் தோன்றும்படியாகச் செய்வார்களோ?

சுவாமீ! இலங்காதிபதியாகிய இராவணனை அலக்ஷியமாகத் தன் வாலிற் கட்டி நான்கு கடற்கரையிலு மிழுத்துக்கொண்டுதிரிந்த வாலியானவன் சுவர்க்கத்தை யடையவும் அவனுடைய பட்டத்தைச் சுக்கிரீவமஹாராஜ னடையவும் வளைத்த உம்முடைய வில்வல்லமையையும், ஜயப்பிரதாபத்தையும், நல்ல குண சீலத்தையும் கேள்விப்பட்டு; உம்மையடைந்து ஞானப்பிரதேசமான பரமபதவாழ்வை யடையும்படி இந்த விபீஷணர் உம்முடைய திருவடியில் அடைக்கலம் புகுந்தார். மேலும்—மிகுந்த இராக்ஷசர்களுடைய இராஜரீகம் வேதமார்க்கத்துக்கு விரோதமான கொடுங்கோன்மையோடு கூடினதாகையால் இது நிலைத்திருக்க மாட்டாதென்று நம்பி, இந்தச் சமுத்திரஞ்சூழ்ந்த உலகமுழுவதையும் உம்முடைய தம்பியாகிய பரதாழ்வாருக்குக் கொடுத்துவிட்ட அபாரகருணையையும் சத்தியத்தையும் விரும்பிவந்தார். இவர் தகுதியல்லாதகாலத்தில் வந்தாலும் குறைவல்ல. வாலிக்குச் சமானமான பலமுள்ளவர்களாகி மூலபல சைனியங்களினுடைய வல்லமை தங்களுக்கு உதவியாக இருந்தபோதினும், அந்த ராக்ஷசர்களுக்கு முடிவுகாலம்வந்து விட்டதென்கின்ற நம்பிக்கையினால் தம்முடையசகோதரர்களை உண்மையாய்ப் பிரிந்துவிட்டார்.

அந்தக்கொடூரமிக்க இராட்சதர்களுடைய மாயதந்திரச்செய்கைகள் அநேகமுண்டு. அந்த வித்தையில் நன்றாய்த் தேர்ந்து பழகியிருக்கின்ற இந்த விபீஷணரொருவர் நமக் ககப்பட்டதனால்,இனிநாம் எளிதில் வெற்றிபெறலாம். அந்த ராக்ஷதர்களுடைய மனதின் தீமையை இனி ஆராய்ந்தறிகிறது இவரால் நமக்கு மிகவும் இலேசாய் முடியத்தக்கதே: மேலும்—இவர்க ளெளியவர்கள். இவர்களைப்பற்றி யாலோசிக்க வேண்டியதில்லை. இலங்கைக்கணுள்ள ராக்ஷசர்கள் பிரமனாதி தேவர்களிடத்திற் பெற்றிருக்கின்ற பெரியவரங்களையும், அவர்களுக்குத் தெரிந்த வஞ்சனை சூது முதலானவைகளையும் பார்க்கும்போது; அவர்களையல்லாமல் வேறொருவரும் அப்படிப்பட்ட தவங்களைச்செய்து வரம்பெற்றவர்களில்லை. அவர்களுடைய பெரியவரங்களும், அவர்களுடைய துர்க்குணமான வஞ்சனைசூது முதலானவைகளும், தேவரீர் திருக்கையிற் பிடித்திருக்கின்ற கோதண்டத்திலிருந்து புறப்படுகின்ற பாணத்தினால் வெந்து அழிந்துபோகுமென்று நினைத்து இந்த விபீஷணர் உம்முடைய திருவடிகளை யடைந்தார்.

ஜெயப்பிரதாப சீலரான தேவரீர் தேவர்களாலும்-அசுரர்களாலும்-தேவதேவர்களான பிரமேந்திராதியர்களாலும் செய்துமுடித்தற் கரிதான தர்

மஸ்நாபனத்தை முடிக்கும்படியாகக் கங்கணங்கட்டிக்கொண்டு எழுந்தருளி யிருக்கின்றீர். ஆபத்தையடைந்து அபயம் புகுந்தவர்களைச் சந்தேகித்து அகற்றிவிடுவீரேயானால், ஒரு சிறுகிணற்றின் சலத்தைப் பெரிய சமுத்திரமானது சந்தேகித்து நீக்கினாற்போலாய்விடும். இந்த விபீஷணர் பகையாளியைச் சேர்ந்தவரென்றும், நமக்குச் சிநேகரல்லவென்றும், இவரைத்தள்ளி விடுவோமேயானால்; அறிவாளிகள் பார்த்தால் நகைப்புக்கிடமா யிருக்குமல்லவா? தாயத்தில் ஒருவருக்குச் சேரவேண்டிய பாகப்பொருளையும் விளையுந் தானியங்களையும் அவர்களுக்குக்கொடாமல் தாங்களேயதையிச்சிப்பார்களேயானால், தந்தையர்களானாலும் - தம்பி தமையன்மார்க ளானாலும் - அவர்களல்லவோ பகையாளிகளாய்ப் போர்க்களத்தில் மரணமடையத்தக்கவர்கள்? ஆகையினாலே இந்த விபீஷணருடைய வரவு நல்ல வரவாகுமென்று அடியேனுடையமனதில் நினைத்திருக்கின்றேன். வேதத்திற்குச்சமானமான தேவரீருடைய திருவுள்ளக்குறிப்பு எப்படிப்பட்டதோ தெரியாது. என்று ஆஞ்சனேயர் சொல்லி முடித்தனர்.

இப்படி நான்கு முகங்களோடுங்கூடிய பிரமனாலும் கற்றறிதற்கருமையான சாஸ்திரங்களெல்லா வற்றையும் சூரியனுடைய கதிக்குமுன்னிட்டு அவனுடைய சன்னிதானத்திற் கற்றறிந்தவரும், மிகவுமகன்ற சமுத்திரத்தைத்தாண்டி இலங்கைக்குப்போய் ஜயம்பெற்று இந்தலோகங்களையெல்லாம் ரக்ஷிக்கும்படியாக அவதரித்தவருமான மாருதியானவர்சொன்ன அமிர்தவார்த்தையைச் சக்கரவர்த்தித் திருக்குமாரர் தமதுதிருச்செவியை சாய்த்து மிகுந்த சந்தோஷத்தோடு கேட்டருளி, அந்தச்சமூகத்திலிருக்கின்ற புத்திமான்களெல்லாரும் சபாஷென்று மெச்சிக்கொள்ள அவர்களைப்பார்த்து, இந்த ஆஞ்சனேயர்சொன்னது மகாசிரேஷ்டமான ஆலோசனையாகும். இதற்குமேல் நீங்களெல்லாரும் தெளியும்படியாகச் சொல்லுகின்றேன் கேளுங்கள். என்று அவர்கள்கேட்கும்படியாக ஸ்ரீராமமூர்த்தியானவர் அவர்களைப்பார்த்துத் திருவாய்மலர்ந்தருளிச் சொல்லுகின்றார்.

ஓ எனதன்பிற்சிறந்த அருந்துணைவர்களே! இந்தவிபீஷணன் என்னையடைக்கலம் புகவேண்டுமென்று நினைத்துவந்த இந்தக்காலமும், அவனுடைய மனதில்நம்மேலுண்டானவிருப்பமும், அவனுக்கு இராஜ ஐஸ்வரியத்தின்மேல் ஆசையும் எந்தவிதமாயிருந்தபோதிலும் நம்மிடத்தி லடைக்கலம்புகுந்த இந்தப்பெரிய தர்மமொன்றினால்மாத்திரமே தப்பானவனல்லவென்று திருப்திகரமாயிருக்கின்றது. இனிமேல் வேறேசொல்லவேண்டிய வார்த்தை யொன்றுமில்லை. இந்தஆஞ்சனேயர் தெளிந்துசொன்ன ஆலோசனையே தகுந்த ஆலோசனை. இப்படிக்கில்லாமல் வேறொன்றினால் வெற்றிவந்தாலுஞ்சரி; தாழ்வுவந்தாலுஞ்சரி; அவைகளெனக்கங்கீகாரமல்ல. இவன் நம்மையடுத்துஅடைக்கலமென்று சொன்னபோதே, இவனை அங்கீகரிக்கிறதினாலெனக்குத் தோல்விவந்தபோதிலும் - மரணம்வந்தபோதிலும் - அதுவேயென்பக்ஷம். என்னை

யடைக்கலம்புகுந்தவன் புண்ணியமொன்று மில்லாமல் மாத்திரமல்ல, தகப்பனையும் தாயையும் கொன்றுவிட்டு அந்தமகாபாதகத்துடனே வந்தபோதிலும் அவனேயெனக்கு இனிமையைச்செய்கிற சினேகனாகும். அந்தவடைக்கலத்தைத் தவறினவனுக்கல்லவோ இம்மையிற்பழியு மறுமையில் நரகமுமுண்டாகும்?

என் பிதாவர்க்கங்களில் சிபிச்சக்கரவர்த்தியானவர் புறவுக்காகத் துலையேறின தன்மையையெங்கள் வம்சத்தவர்களுக்குள்ளே தங்களாயுள்நாள்வரையில்மறந்துபோனவர்களில்லை. அப்படியிருக்க-என்னை அடைக்கலமென்று வந்து சேர்ந்தவனைத் துறந்துவிடுவேனேயானால், நானிருந்தாலுஞ்செத்தவனேயல்லதுவேறல்ல. எல்லாச்சீவகோடிகளையும் சிருஷ்டித் திரக்ஷித்துக்கொண்டுவருகிற சாக்ஷாத்நாராயணமூர்த்தியானவர் உலகத்துக்கெல்லாம் தாமே தர்மதேவதையும் அந்தந்தஜீவர்களுக்குள் அந்தரியாமியுமாயிருந்து தமது திருவடிகளை அடைக்கலமாகச் சேர்ந்தபேர்களுக்கு மாத்திரம் இகத்தில்ஐஸ்வரியத்தையும் மறுமையில் பரமபதத்தையும் கொடுத்தருள்வரென்றால், பின்னைவேறென்ன திஷ்டாந்தம் சொல்லவேண்டும்? ஐயோ! என்னை யாரிரக்ஷிப்பார்களென்று சீதையானவளழுது புலம்பும்போது, அம்மா! நீபயப்படாதே: உனக்குநான் துணையிருக்கின்றேனென்று கிருபையோடுவந்துஇரக்கவார்த்தைகூறியதிரிசடையும், இந்த இராவணனாகியபாதகனுடனே பெரியயுத்தத்தைச்செய்து ஜயம்பெற்றுத்தெய்வமரணத்தையடைந்த ஜடாயுவாகிய என்பிதா பெற்ற பெருமையும் எனக்குச்சாக்ஷியல்லவோ?

மேலும் - அபயமென்றடைந்தவர்களுடைய உயிரைத் தன்னுயிர்போலிரக்ஷியாத சண்டாளனும், ஒருவன்செய்த நன்றியை நினையாதவனும், களங்கமறப்பரிசோதியாமல் வேதநிச்சயமான மெய்ப்பொருளைப் பொய்யென்று சொன்னவனும், ஆகியவிவர்களெல்லா மீளாத நரகமடைவார்கள். தேவர்களுக்கிமிசைசெய்த அறிவீனனாகிய இராவணனை நான் கொல்லுவேனென்று சபதம்பண்ணிக்கொண்டது சீதைக்காகவா? என்னை அபயமடைந்த ரிஷிகளுக்கு வாக்குத்தத்தம் பண்ணினதற்காகவா? இந்தவாக்குத்தத்த நிறைவேற்றுவதற்கு அந்தச்சீதை காரணமாயினாளேயன்றி வேறல்ல. ஒருயானையானது முதலையினாலே இம்சிக்கப்பட்டபோது ஆதிமூலவஸ்துவான பரப்பிர்மமே உமக்கபயம். என்னைரக்ஷிக்கவேண்டும் என்று கூப்பிட்ட அந்தக்காலத்தில் வேதோபநிஷத்தினாலு மறியப்படாத மெய்ப்பொருளான சாக்ஷாத் நாராயணமூர்த்தி அந்தக்கெஜேந்திராழ்வானுக்குச் சேவைசாதித்து இரக்ஷித்தாரென்கிறவார்த்தையை ஞானவான்கள்மறந்துவிடுவார்களோ? நம்முடையகாரியமாகாவிட்டாலும் போகட்டும். அடைக்கலம் புகுந்தவர்களை இரட்சிக்கிறதைப்பார்க்கிலும் தயாசீலர்களுக்குப்பெருமை வேறுண்டோ? இவற்றையெல்லா நீங்கள் நன்றாயோசித்துப் பாருங்கள்.

ஸ்ரீராமர் விபீஷணரை யழைக்க சுக்கிரீவனுக்கருளல்.

கவி.

ஆதலானபயமென்ற பொழுதத்தேயபயதானம்
ஈதலேகடப்பாடென்ப தியம்பினீரென்பால்வைத்த
காதலானினிவேறெண்ணக் கடவதென்கதிரோன்மைந்த
கோதிலாதவனைநீயே யென்வயிற்கொணர்தியென்றான்.

ஓ சகாயர்களே! தன்னை அடைக்கலமாகவடைந்தபேர்கள் அற்பர்களாயிருந்தபோதிலும்தன்னுயிரைக்கொடுத்தாவது அவர்களை இரட்சிக்கவில்லையாமற் போவேனேயானால், அப்படிப்பட்டவன் சக்கரவர்த்தி யானபோதிலும் அவனுக்கென்ன மேன்மையுண்டாகும்? ஆனபடியினாலே அபயமென்று சொன்னமாத்திரத்தில் அவனுக்கபயதானங் கொடுக்கவேண்டியதே தகுதியாகும். நீங்கள்சொன்னதெல்லாம் என்னிடத்தி லுங்களுக்குண்டான பக்ஷத்தினாலேயன்றி வேறல்ல. இனியவ்விபீஷணனைப்பற்றி நாமொன்று மாலோசிக்கவேண்டியதில்லை. ஓ சூரியகுமாரனான சுக்கிரீவமகாராஜனே! இந்தக்ஷணம்போய் அந்தவிபீஷணனை என்னிடத்திற்கு அழைத்துக்கொண்டு வரக்கடவாயென்று நியமித்தருளினார்.

அம்மாத்திரத்தில் சுக்கிரீவமகாராஜன் தேவராஜனான சக்கரவர்த்தித் திருமகனார் திருவுள்ளத்தைப்போலத் தன்மனமுந்தெளிந்து, இதோ அடியேனழைத்துக்கொண்டு வருகிறேனென்று வேகமாய்ப் புறப்பட்டுச் சத்தியவந்தரான விபீஷணாழ்வாரிடத்திற்கு வருகின்றார். அப்போது சுக்கிரீவமகாராஜனை மயிந்தனென்கிற சேனைத்தலைவன்விபீஷணருக்குக்காட்டி, உம்மை யழைத்துக்கொண்டு வரும்படியாக ஸ்வாமிநியமித்தார். அதனாலும்மை எதிர்கொள்ளும்படியாக பெரியமலைக்குச் சமானமான தோள்களையுடைய சூரியகுமாரர் எழுந்தருளினார். என்று சொன்னமாத்திரத்திற் கலங்கிக்கொண் டிருந்த உள்ளத்தை யுடையவரான விபீஷணாழ்வார் மிகுந்தமனக்களிப்புடனே தாமுமவரெதிர் நடந்துபோனார்:அயோக்கியர்களாயிருக்கின்றபேர்கள் நல்லவர்களுடன் தங்களாயுளுள்ளவரையில் பழகினபோதிலும் நட்பாகமாட்டார்களென்றும், புத்திமான்கள் அந்நல்லவர்களைக்கண்டபோதே சிநேகமாவார்களென்றுங் கூறுகின்ற நீதியின்படியே;இருவருடையமனமு மேகமாகும்படி விபீஷணாழ்வானுஞ் சுக்கிரீவமகாராஜனும் இரவும்பகலு மொரேகாலத்திற் கலந்ததுபோல ஒருவரையொருவ ராலிங்கனம்பண்ணிநின்றார்கள்.

சுக்கிரீவன் ஸ்ரீராமபிரான் கட்டளைப்படி விபீஷணரையழைத்தல்.

கவி.

தழுவினர்நின்றகாலைத் தாமரைக்கண்ணன்றங்கள்
முழுமுதற்குலத்திற்கேற்ற முறைமையாலுவகைமூள
வழுவலிலபயமுன்பால் வழங்கினனவன்பொற்பாதம்
தொழுதியிவ்விரைவினென்னக் கதிரவன்சிறுவன்சொன்னான்.

இவ்வண்ணம் ஒருவருக்கொருவர் தழுவுகின்றபோது சுக்கிரீவமகாராஜன் விபீஷணரைப்பார்த்து, ஓ சற்புருஷசிரேஷ்டரே ! நீர் சரணமடைந்த சக்கரவர்த்தித்திருமகனுகிய ஸ்ரீராமர் தங்களுடைய வம்சத்துக்குத்தக்க முறைமைப்படி உம்மிடத்திற் கிருபைகூர்ந்து அபயதானம் பண்ணினர். இனிச்சீக்கிரமாய்வந்து, அவர் திருவடிகளுக்குத் தெண்டன்சமர்ப்பியும் என்று சொல்லினன்.

ஸ்ரீராமபிரான் உத்தரவுபடி சுக்கிரீவன் விபீஷணரையழைக்க அவ்விபீஷணர் ஆனந்தங்கொண்டாடல்.

கவி.

சிங்கவேறனையான்சொன்ன வாசகஞ்செவிபுகாமுன்
கங்குலினிறத்தினன்றன் கண்மழைத்தாரைகான்ற
அங்கமுமனமுமென்னக் குளிர்ந்ததவ்வகத்தைமிக்குப்
பொங்கியவுவகையென்னப் பொடித்தனவுரோமம்புள்ளி.

இப்படி ஆண்சிங்கம்போன்ற சுக்கிரீவமகாராஜன் சொன்னவார்த்தை செவியில் நுழைவதற்கு முன்னமே கறுத்த நிறத்தையுடைய விபீஷணுழ்வார் தமதிரண்டு கண்களிலுமிருந்து ஆனந்தபாஷ்பப் பிரவாகம் கரைபுரண்டோடவும், தேகங்குளிரவும், சந்தோஷமிகுதியினுலே உடல் மயிர்க்குச்செறியவுமாகி; சர்வசங்கபரித்தியாகம் பண்ணினவர்களான ஜீவன்முத்தர்களுக்கு நண்பரான ஸ்ரீராகவபிரான் என்னையும் உறவென்று திருவுளங்கொண்டு அபயதானம் பண்ணினரோ ? ஆ ! ஆ ! என்னபாக்கியம்? என்னபாக்கியம் ? இதுவன்ரே யான்செய்த தவத்திற்குரிய சிலாக்கியம்? இன்றன்ரே நான் என்னுடைய பாபவினைகளெல்லாம்போக்கி, அந்தப் பாபகாரியமான மாயவாழ்க்கைபோடுங்கூடிய என்னுடைய பிறவியையும் கடந்து, மறுமையிலடையவேண்டிய நரகத்தையு நீங்கிவிட்டேன்.

அந்தோ ! செம்பஞ்சைப்போலுஞ் சிவந்த மிருதுவான திருவடிகளையுடைய லோகமாதாவைப் பிரிவுசெய்த இராவணனுக்குத் தம்பியான என்னையும் வரும்படியாகத் திருவுள்ளங்கொண்டாரே: மயக்கநெஞ்சை யுடையவனை இராவணன் என் சொல்லைமறுத்தபோதே, சூரியனுடைய தேரும் இலங்கைமேலோடுமல்லவா ? எம்பெருமானுடைய கிருபை இவ்வளவு சௌலப்பியமாயிருக்குமேயானல், இராக்ஷசர்களுக்கினி பிழைப்புண்டாகுமோ ? துஷ்டர்களாயினேர் சகிக்கக்கூடாத இம்சைகளைச் செய்தபோதிலும், கிருபாநிதிகளான பெரியோர்கள் தங்களுக்குச் சுபாவமானநிலைமையில் நின்றுந் தப்பமாட்டார்களன்ரே ? முன்னந்தேவர்கள் மந்தரமென்னு மோர்பெரியமலையை மத்தியில்நிறுத்திச் சின்னபின்னமாகக் கடைந்தகாலத்திலும், சமுத்திரமானது அவர்கள் பிழைக்கும்படியாக அமிர்தத்தைக் கொடுத்ததன்ரே ? என்று சொன்னபோது மிகுந்த அன்புடையவரான சுக்கிரீவ மகாராஜன் விபீஷணரைப்பார்த்து; நம்முடைய சுவாமியானவர் நல்லவர் தீயவரென்

று கருதமாட்டார். தமது திருவடிகளிற் சரணமடைந்தவர்களைக் கடாக்ஷிக்க வேணுமென்கின்ற கருத்தினையுடைய பரமாத்துமா. ஆதலால் தாமதஞ்செய்யாமலெழுந்தருளுமென்றழைத்துக்கொண்டு, அநேகமலைகள்சூழ்ந்துகொண்டு வரும்படியாக இமயமலையும் மேருமலையும் வருகிறதுபோலத் தபோபலத்தையடைந்தவர்களான விபீஷணாழ்வாரும் சுக்கிரீவமகாராஜனும் வானரவீரர்சூழ்ந்துவர ஏழுமராமரங்களூ முருவும்படியாகப் பாணப்பிரயோகஞ்செய்த பிரதாபசீலரான சக்கரவர்த்தித் திருமகனாருடைய சன்னிதிக்குமுன் வந்தார்கள்.

விபீஷணர் ஸ்ரீராமரைக்கண்டுசேவித்து ஆனந்தபரவசராதல்.

கவி.

மார்க்கடஞ்சூழ்ந்தவைப்பி னங்கதன்மருங்குகாப்ப
நாற்கடலுடுத்தபாரி ஞயகன்புதல்வனுமப்
பாற்கடல்சுற்றவிற்கை வடவரைபாங்குநிற்பக்
கார்க்கடல்கமலம்பூத்த தெனப்பொலிவானைக்கண்டான்.

அளவற்ற வானரசைனியங்கள் சூழ்ந்த அக்கடற்கரையின்கண் அங்கதனாகிய வானரச்செல்வன் உடைவாளேந்தி அருகேநிற்க, தம்பியாகிய இலக்ஷுமணப்பெருமான் பரியவில்லைச்சுமந்து மகமேருகிரியைப்போல ஓர்புறமிருக்க, கருங்கடலில் தாமரைக்காடு பூத்ததைப்போலும் அழகிய திருமேனியை யுடையவராயும், தேவர்கள்வணங்கி வேண்டிக்கொள்ள களங்கமற்ற அலைகளோடு விளங்கிக்கொண்டிருக்கின்ற பாற்கடலினது நடுவில் யோகநித்திரையைவிட்டு எழுந்தருளியிருக்கின்ற நாதனைப்போற் பிரகாசிக்கின்றவராயும், அச்சமுத்திரத்தி னலைகளே புருவமாகவும், வெள்ளியமணல்வெளியே கண்ணினுட் பிரதேசவெண்மையாகவும், தாம் நீலநிறத்தோடு அங்கெழுந் தருளியிருத்தலே கண்ணின் கருவிழியாகவுமிருத்தலால் சீதாபிராட்டியாரின் கண்மணியை யொப்பானவராயும்; மேகத்தை வாகனமாக வுடைய தேவேந்திரன் தன்வில்லைவிட்டிருத்தற்போல இரத்தினாபரணங்களை நீக்கிப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற திருமார்பையுடையவராயும், கடலைக்கடையும்போது மந்தரகிரியிற்பூட்டிய வாசுகியைக்கழற்றி விட்டதுபோல இரத்தின கங்கணங்கள் நீங்கிய திருத்தோள்களையுடையவராயும், தனது பிரகாசத்தை நீக்கி கிருபையினாலே அமிர்தத்தைப் பொழிகின்ற சோடச கலைகளையுடைய சந்திரனுக்குச்சமானமான திருமுகத்தை யுடையவராயும், தமதுபிதாவாற் கொடுத்த ராஜமுடியைத்தமது திருத்தம்பியாருக்குக் கொடுத்தருளிச் சிறியதாயாராற் பெற்றஜடா மகுடத்தைத் தரித்துக்கொண்டிருக்கிற திருமுடியை யுடையவருமாயெழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீராமமூர்த்தியை விபீஷணாழ்வார் தமதுகண்ணாரக் கண்டு தரிசித்தனர்.

கவி.

வீரனைநோக்கியங்க மென்மயிர்சிலிர்ப்பக்கண்ணீர்
வாரநெஞ்சுருகிச்செங்க ணஞ்சனமலையன்றுகில்

கார்முகில்கமலம்பூத்த தன்றிவன்கண்ணன்கொல்லாம்
ஆரருள்சுரக்குநீதி யறநிறங்கரிதோவென்றான்.

இவ்வித தகைமையையுடையவராகி யிருக்கின்ற ஸ்ரீராமச்சந்திரப்பிரபுவைப்பார்த்து தன் தேகத்திலுள்ளமிருதுவாகிய உரோமங்கள்சிலிர்க்கக் கண்களினின்றும் ஆனந்தபாஷ்பமொழுக மனமானதுருகி, சிவந்தகண்களும் அஞ்சனமலையைப் போலும் திருமேனியு முடைய எங்கள் மகாவிஷ்ணுவா யிராவிடில் கறுத்தமேகத்தில் மலர்ந்த சிவந்த தாமரைமலரைப் போலும் பத்தவயவத் தாமரைகளுந்தோற்று. ஆகையால்சாக்ஷாத் வைகுந்தவாச நாதனேயன்றி மற்றொருவரல்ல. தன்னையடைந்தவர்கட்கு நிறைந்த கிருபையைப்பெருக்கும் நீதியாகிய தருமத்தின்மேனி கருநிறந்தானோ வென்றெண்ணி, மின்மினிப்பூச்சியின் ஒளிதோன்றி மறைவதுபோல அழிந்துபோகும் பிறவியையும் தமக்குரிமையான இராஜகிரீடத்தையும் நீக்கிவிட்டு, ஸ்வாமியினுடைய திருவடித்தாமரைகளை சிரசிற் சூடிக்கொள்ளவந்த விபீஷணர் இன்னும் யாதுநினைத்தனரெனில், எனக்குப் பிதாவாகிய புலஸ்தியருக்குப் பிரபிதாமகனையும், பாட்டனாகிய காசிபருக்குப் பிதாமகனையும், பிரபிதாமகனாகிய பிரமனுக்குப் பிதாவாயும், எனக்குநேர் முப்பாட்டனையும் இங்கெழுந்தருளிய ஸ்ரீராமமூர்த்தியை நான்வணங்கும்படியாக வெனக்கு உபகாரஞ்செய்த என் தமயனாகிய இராவணனுக்கு யாது உபகாரஞ்செய்யப் போகிறேமென்றெண்ணினார். அன்றியும் - மிகுந்ததபசு செய்தபேர்களுடைய பிறவிப்பிணியைப் போக்கு மருந்தாகவிருக்கின்ற சாக்ஷாத் நாராயணனே வில்விலம்பைப் பூட்டிக்கொண்டு இந்த அரக்கர்களைக் கொல்லும்படி நின்றானாயின், இவர்கள் பெருமையை என்னசொல்லப் போகிறேன்? ஆதலால் - இந்த அரக்கர்கள் அளவில்லாதஅருந்தவஞ்செய்தவர்களேயென்றுகூறி ஆச்சரியமானசராய்த் தமது இரண்டுகைகளையு மிரத்தினகிரீடந் தரிக்குஞ் சிரத்தின்மேற் கூப்பிக்கொண்டுவருகின்றனர்.

இப்படி ஆனந்தபரவசராய்வருகின்ற விபீஷணரானவர் கல்லுமரமு முருகும்படியான காட்சியையுடைய கிருபாமூர்த்தியாகிய ஸ்ரீராமச்சந்திரர் இரக்கத்துடன் கடாக்ஷித்தருளும்போதெல்லாம் தண்டஞ்சமர்ப்பித்துக் கொண்டேபோய் சர்வாபீஷ்டங்களையு நிறைவேற்றும்படியான இரண்டுதிருவடிகளும் தமது சிரசிற்பொருந்த நமஸ்காரம்பண்ணினார்.

ஸ்ரீராமர் விபீஷணருக்கு இலங்காதிபத்தியமளித்து மகுடஞ்சூட்டுதல்.

கவி.

அழிந்ததுபிறவியென்னு வகத்தியன்முகத்திற்காட்ட
வழிந்தகண்ணீரின்மண்ணின் மார்புறவணங்கினானைப்
பொழிந்ததோர்கருணைதன்னாற் புல்லினனென்றுதோன்ற
எழுந்தினிதிருத்தியென்னு மலர்க்கையினிருக்கையீந்தான்.

ஆழியானவனைநோக்கி யருள்சுரந்துவகைதுண்ட
எழினேடேழாய்நின்ற வுலகுமென்பெயருமென்நாள்

வாழுநாளன் றுகாறும் வாளெயிற்றரக்கர்வைகும்
தாழ்கடலிலங்கைச்செல்வ நின்னதேதக்கதென்றான்.

தம்முடைய பிறவியென்னுந்துன்பம் ஒழிந்துபோய் விட்டதென்னு நினைவு முகத்திலே பிரகாசிக்கவும் - ஆனந்தக்கண்ணீரோடு பூமியில் மார்புபடியும்படியாகவும் - அனந்தமுறை கீழேவிழுந்தும் புரளுவார். மீட்டுமெழுந்து நிர்த்தமாடுவார். யான் பெற்றபேறுக் கிணையுண்டோவென்று ஆனந்திப்பார். இப்படியாகச்சொல்லுதற்கரிய பிரமானந்தசாகரத்தில் மூழ்கியிருக்கின்றவிபீஷணாழ்வாரை ஸ்ரீராமபத்திரரானவர்கிருபையுடனே ஆலிங்கனம்பண்ணினது போலக் கடாக்ஷித்து, எழுந்திருக்கக்கடவாயென்று நியமித்து. தமது திருக்கையினால் இருக்கும்படி சைகை பண்ணி, மிகுந்த சந்தோஷம் பொங்கும்படியாக அவரைக்கிருபையோடும் பார்த்து, ஓ விபீஷண மகாராஜனே! இந்தப்பதினாலு லோகங்களும் - என்பெயரும் - எத்தனைகால மிருக்குமோ? அதுபரியந்தம் நீர் அழியாமல் சிரஞ்சீவியாகவும், இராக்ஷசர்களுக்கு வாசமாகவிருக்கின்ற இவ்விலங்கையினைஸ்வரியமெல்லாம் உமக்கேயாகும்படியாகவும் இப்பொழுதே கொடுத்தேனென்று வாக்குத்தத்தம் பண்ணியருளினார்.

இப்படி சுவாமி அருளிச்செய்த கிருபையைப்பார்த்தோ? அவரால் எல்லாப்பெருமையையும் பெற்ற விபீஷணாழ்வாருடைய தர்மசிந்தையையெண்ணியோ? வேறென்ன காரணத்தினாலேயோ? வாக்குத்தத்தம் பண்ணினமாத்திரத்தில் உலகத்திலுள்ள சராசரங்களெல்லாம் தனித்தனியே தமக்கேவாழ்வுண்டானது போலப் பெருங்கோஷ்டமாகச் சத்தமிட்டன. பிறகு கிருதார்த்தனானேனென்று அடிக்கடி வணங்கிக் கொண்டுநின்ற அஞ்சனம் போன்ற நிறத்தையுடைய விபீஷணாழ்வாரிடத்தில் ஸ்ரீராமர் கிருபைகூர்ந்து தமதருகில் நிற்கின்ற இலக்ஷுமணரைப்பார்த்து, ஓ நித்திரைசெய்யாத நேத்திரத்தையுடைய ஐயனே! அடைக்கலம்புகுந்து நமக்குத்துணைவராய் குற்றமற்ற கீர்த்தியோடுங்கூடிய விவருக்கு முடிசூட்டக் கடவாயென்று நியமித்தார். அதைக்கேட்ட மாத்திரத்தில் மேல்விளையுங் காரியங்களையெல்லா மறியும்படியான புத்தியையுடைய விபீஷணர் ஸ்ரீராமரை நமஸ்கரித்து, சுவாமி! எனக்கென்காளு மழியாத அளவிறந்த பெருமையைத் தரத்தக்க நல்லசெல்வத்தை யருளிச்செய்தீரேயாயினும்,பரதாழ்வாருக்குப்பாதுகை முடிசூட்டியது போல் திருட்டுச்சுபாவமுள்ள இராக்ஷசனான இராவணனுக்குத் தம்பியென்கின்ற சம்பந்தமொழிந்து அடியேன் கிருதார்த்தனாக என்சிரத்திலும் தேவரீர் தமது திருப்பாதுகையாகிய மௌலியை அடியேனுக்கும் சூட்டியருள வேண்டுமென்று விண்ணப்பம்பண்ணினார்.

அதுகேட்ட ஜகத்ரக்ஷகனாகிய சீதாபிராமன் சொல்லுகின்றார். ஓ விபீஷணமகாராஜனே! நாங்கள்முதலில் நான்குசகோதரர்களாகப் பிறந்தோம். அப்பால் குகனோடுசேர்ந்து ஐந்துபேராயினோம். மேருகிரியைச் சுற்றிவருகின்ற சூரியகுமாரனான சுக்கிரீவமகாராஜனைச் சேர்ந்து ஆறுபேராயினோம்.

இப்போது எங்களிடத்தில்வைத்த அன்பினாலே இங்கேவந்துசேர்ந்த மனப்பூரணமான காதலையுடைய உன்னோடு எழுபேராயினோம். இருள்சூழ்ந் தடர்ந்த நெடியகாட்டிற்கு என்னைப் போகும்படியாக நியமித்த உம்முடையபிதாவாகிய தசரதமகாராஜனும் இந்தப்புத்திரர்களால் மிகுந்த கீர்த்தியையடைந்தனரையா விபீஷணரே யென்றார். இப்படியென்று சொன்ன சுவாமியினுடைய வார்த்தையை விபீஷணர் கேட்டுச் சொல்லுகின்றார்.

கவி.

நடுவினிப்பகர்வதென்னே நாயகநாயினேனை
உடனுதித்தவர்களோடு மொருவனென்றுரையாநின்றாய்
அடிமையிற்சிறந்தேனென்னு வயிர்ப்பொடுமச்சநீங்கித்
தொடுகழற்செம்பொன்மௌலி சென்னியிற்சூட்டிக்கொண்டான்.

சுவாமி! சர்வலோகரட்சகநாயகனே தேவரீர் இனி வேறென்ன சொல்ல வேண்டியதிருக்கின்றது? நாய்க்குச்சமானமான அடியேனைத் தேவரீருடன் பிறந்தவர்களோ டொருவனென்று மருளிச்செய்தீர். ஆகையால் நான் அடியவர்களுக்குள் சிறப்புற்றேனென்று சொல்லி, சந்தேகபய நிவாரணராய் ஸ்ரீராகவபிரானுடைய திருவடிச்சுவடேறிய பாதுகையைத் தமது சொர்னகிரீடந் தரிக்கும்படியான சிரசிற்சூட்டிக்கொண்டு, சூரியனைத்தன துச்சியிற்கொண்ட ஓர் பெரியமலையைப்போல் விபீஷணர் நின்றனர்.

இப்படிநிற்கின்ற இலங்காதிபதியான விபீஷணாழ்வாரைப் பார்த்து, ஸ்ரீராமலட்சுமணர்களிருவரும் களித்தார்கள். அப்பால் சுக்கிரீவமகாராஜன் முதலான வானரர்களெல்லாம் சந்தோஷித்தார்கள். தேவர்கள் புஷ்பவருஷமும் சொர்னவருஷமும் வருஷித்து மங்களங் கூறினார்கள். சப்தசமுத்திரங்களும், சப்தமேகங்களும் சப்தித்தன. தேவதுந்துபியும் தேவசங்கமு முழங்கின. அமிர்தத்திற்குச் சமானமான சொல்லையுடைய சீதாபிராட்டியார் விஷயத்தில் முறைமைதப்பி அபசாரப்பட்ட என்னுடைய வம்சத்திலுண்டான ராக்ஷசகுலம் இப்போதுதான் சிரேஷ்டத்தை யடைந்ததென்று பிரமதேவர் துக்கநிவாரணமாயினர். பிறகு தர்மதேவதையும் இராவணனுடைய செல்வமழிந்துபோய்விட்டதென்று ஆர்த்துக்கூத்தாடி அபரிமிதமாகச்சந்தோஷித்தது. இப்படிப்பட்ட காலத்தில் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியானவர் இலங்காதிபத்திய ஐஸ்வரியமெல்லாம் விபீஷணாழ்வார் பெற்றதைப் பலரும் கேட்டறியும்படியாக எங்கும் கட்டியங்கூறும்படிச் செய்து, அங்கேதமது பக்கத்தில் அதிக விஸ்வாசத்துடன் வாய்பொத்திக்கொண்டுநிற்கின்ற சுக்கிரீவமகாராஜனையும், இளையபெருமாளாகிய லக்ஷுமணரையும் பார்த்து, நீங்களிருவரும் சகல வானரப்படைகளுடன் இவரை நம்முடைய பாடிவீட்டைச்சுற்றி ஊர்க்கோலம் செய்வியுங்களென்று நியமித்தார்.

அந்தப்படியே விபீஷணாழ்வாரை இரண்டு திருவடிச்சுவட்டைத் தரித்த முடியுடனே சந்தன விமானத்திலேற்றி அந்த விமானத்தை வானரவீரர்கள்

சுமந்துகொள்ளவும், பலவானரசைனியங்கள் பந்திபந்தியாகக்கூடி, ஓ இந்திர போக ஐஸ்வரியத்தையடைந்த இலங்காதிபதியே! எச்சரிக்கை பராக்: பராக்: என்று கட்டியம் கூறிக்கொண்டு ஸ்ரீராமருடைய பாடிக்கூடாரத்தை வெகுவிநோதமாகிய வேடிக்கையுடனே சுற்றி நகர்வலம் வருவதைப்போல் வந்தார்கள். மேலாகிய பரஞானத்தை அடைந்தவர்களால் தேடும்படியாக நின்ற பரமபதநாதனாகிய நமது க்ஷீராப்திவாசனது திருவடிகளைப் பிரமதேவன் அளவற்ற கற்பங்கள் தேடியுங்காணாது, தனது சந்ததியாரில் ஒருவராகிய விபீஷணருக்கு எளிதில் கிடைத்து அவர் சிரசிற் சூடிக்கொள்ளும்படியாக நேரிட்ட தவமகிமையால் தானும் அன்றுதான் கண்டவனாய் ஆனந்தித்து அப்பகவானுக்குக் கைங்கரியங்களைச் செய்து புனிதமாகும்படி ஸ்நானஞ்செய்த ஜலத்தில் யாராவது மூழ்குவார்களேயாகில் அவர்களது பஞ்சமகா பாதகங்களும் போய்த் தேவர்களாவாரெனில் அப்பகவானுடைய திருவடிகளைச் சிரசிற் சூடிக்கொள்பவர்களடையும் பதவி இன்னதென்று யாவராற் சொல்லக்கூடும். இரிஷிகளும், தேவர்களும், ஞானவான்களும், பக்திமான்களும், யாகாதிகளைச் செய்துமுடிக்கின்றவர்களும், மகத்தாகிய தபசிகளும், இந்தவிபீஷணாழ்வான் பெற்றபேறு இதுவரையிலும் யார்பெற்றாரென்று ஆச்சரியப்பட்டார்கள்.

விபீஷண னடைக்கலப் படலம்-முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்

ஐந்தாவது,

இலங்கை கேள்விப் படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமமூர்த்தியானவர் விபீஷணாழ்வாருக்கு வேண்டியசிறப்பை நடத்தியபின் இராஜசின்னங்களுண்டா யெங்கும்பாவின. சுவாமியானவர் பிராட்டியின் பிரிவைச் சகிக்கக்கூடாமையால் வருந்தக்கண்ட சுக்கிரீவ மகாராஜன்வந்து அவரைத்தேற்றினராக: உடனே யச்சுக்கிரீவ மகாராஜனால் விபீஷணரையழைப்பித்து இலங்கைமாநகரத்தின் சிறப்பும், அதிலுள்ள உதவிச்சைனியங்களின் திறமும், இராவணாதிகளின் பராக்கிரமமும், இலங்கையிலாஞ்சனேயராற் செய்த வீரப்பாடு மிவ்வகையினதென்றுகேட்ட இரகுநந்தனர் ஆஞ்சனேயருடைய வாற்றலுக் ககமகிழ்ந்துபசரித்தமை சொல்லப்படுகின்றது.

இரகுநந்தனர் பிராட்டியின் பிரிவுக்காற்றாராய்வருந்தச் சுக்கிரீவன்தேற்றுதல்.

கவி.

வந்தடிவணங்கிய நிருதர்மன்னவற்
கந்தமிலாததோ ருறையுளவ்வழித்
தந்தனன்விடுத்தபி னிரவிதன்கதிர்
சிந்தினவெய்யவென் றெண்ணித்தீர்ந்தனன்.

சந்திவந்தனைத் தொழின் முடித்துத்தன்னெடும்
புந்திநொந்திராமனு முயிர்ப்பப்பூங்கணை

No. 45. ஸ்ரீராமருக்குவிபீஷணர்இலங்கையின்அரணிப்பாதிகளை உரைத்தல்.



ஸ்ரீராமர்வருணனைச்சினந்துகடல்மேற்பிரமாஸ்திரம்விடஅவன் காணிக்கையோடுவந்துசரணடைதல்.



இலங்கைகேள்விப்படலம்.

சிந்திவந்திறுத்தனன் மதனன்றீநிறத்
தந்திவந்திறுத்தது கறுத்ததண்டமே.

இந்தப்பிரகாரமாக ஊர்க்கோலம்வந்து தமது திருவடியில் தெண்டம் சமர்ப்பித்த நிருதர்குலாதிபதியாகிய விபீஷணாழ்வாருக்கு ஸ்ரீராமச்சந்திரர் அருகே வசிக்கும்படியாக ஒருபெரிய விடுதிசெய்துகொடுத்து அதிலவரையிருக்கும்படிச் சொல்லியருளினர். பிறகு சூரியன் தன்கிரணங்கள் அதிக உஷ்ணமானவைகளென்று அவைகளைத் தன்னிடம் இழுத்துக்கொண்டு அஸ்தமனமானன், சுவாமியும் தமது க்ஷத்திரிய தர்மத்துக்கிசைந்த சந்தியாவந்தனாதி கருமங்களை முடித்துக்கொண் டெழுந்தருளி யிருக்கும்போது, மேற்குத்திசையில் அக்கினிநிறமான செவ்வானமுண்டாகிப் பின்பு ஆகாசமெல்லாம் கருகறுத்தது. அப்போது மன்மதன் புஷ்பபாணங்களை ஸ்ரீராமர்மேற் பிரயோகித்தான். சமுத்திரமானது எங்குங்கோர்த்து மூடிக்கொண்டதுபோல் அஷ்டதிக்குகளையும் இருள்மூடிக்கொள்ள, அந்தச் சமுத்திரத்தில் தாமரை அல்லி முதலானவைகள் புஷ்பித்ததற்கொப்பாக ஆகாசத்திற் கிரகங்களுடனே நக்ஷத்திரங்கள் பிரகாசித்தன. இன்னும் அவ்விருளில் நக்ஷத்திரங்களுடன் கூடிய ஆகாசம் எப்படியிருந்ததெனில், இராமமூர்த்தியைக் காமாதுரத்தினால் வருத்தப்படுத்த மல்லிகைக்காடுமலர்ந்ததைப் போலுமிருந்தது.

அவ்வாகாயத்தில் சந்திரோதயமானது எவ்வாறிருந்ததெனில் - என்னைப்போல் இருளினாலே மறைபடாமல் என்னைச் சமானப்படுத்திக்கொண் டிருந்து, ஒளியினாலே என்னைத் தோல்விபடுத்தி ஜெயப்பெற்ற திருமுகத்தையுடைய சீதாபிராட்டியாருக்குச் சிநேகராகிய இந்த ஸ்ரீராமமூர்த்தி இவ்விராத்திரிக்குச் சமானமான திருமேனியையுடையவரா யிருக்கிறபடியால், இவரை வெல்லலாமென்று எண்ணங்கொண்டதுபோலச் சந்திரனுதையமாயினன். இப்படி உதயமான சந்திரனானவன் இந்த ஸ்ரீராமரை வருத்தும்படியாக அந்தச் சீதாபிராட்டியாருடைய நிறத்தை நாமுடைத்தா யிருந்தோமானால், இவருடைய மனதைக் கவலைப்படுத்தி நமது வசப்படுத்திக் கொள்ளலாமென்று நினைத்து; தன்னுடைய சந்திரிகையாகிய வலையைக் கடல்சூழ்ந்த உலகமுழுவதிலும்வீசினன். அப்போது சமுத்திரமானது அப்பூரணசந்திரனைக்கண்டு பெருகினது எவ்வாறிருந்ததெனில், இந்த ஸ்ரீராமர் நம்மைப்போன்ற நிறத்தையுடையவராயிருந்தும் தம்முடையவானரசேனைகளால் நம்மேலணையிடும்படியாக என்முன்னே வந்தனரல்லவா? அப்படி வந்தவரை சும்மாவிடத்தகாது இவரோடு சண்டைசெய்து மோதுகிறதற்குச் சமயம்இதுதானென்று உடல்பூரித்தது போன்றிருந்தது.

மேலும் - சமுத்திரமாகிய பாம்பானது வளர்ந்ததோலையுரித்துத் தள்ளினதுபோல் விளங்குகின்ற மணற்குன்றுகளால் விசாலித் திருக்கின்ற சமுத்திரப் பிரதேசத்திலெல்லாம் பாலைக்கவிழ்த்துவிட்டதுபோற் சந்திரிகை

பிரகாசித்தது. அப்போது வாசனைபொருந்திய மல்லிகையரும்பென்கிற பல்லையும், தேனில் மொய்த்துக்கொண்டிருக்கின்ற வண்டுகளென்னும் கருவிழிகளையுடைய தேனுகிய கண்களையும், மலைக்குகையிலிருந்து பாய்கின்ற சக்தியையுமுடையதான தென்றலென்கின்ற ஒருபுலியானது ஸ்ரீராமர்மேற் சீறிக்கொண்டு புறப்பட்டது. கடலைக்கடைந்து அமிர்தங்கொடுத்தவனான வாலியினுடைய மார்பையும் - காட்டினிடத்தில் ஓங்கிவளர்ந்திருந்த மராமரங்களையும், தமது கையிற்கொண்ட பாணத்தினுலே துளைத்த ஸ்ரீராமருடைய திருமார்பிற் பாய்ந்திருக்கின்ற மன்மதபாணத்தோடு சந்திரிகையினுடைய கிரணங்களாகிய வாளாயுதமும் பாய்ந்தது.

அப்போது ஸ்ரீராமமூர்த்தியானவர் தம்முடைய இளைத்த திருமேனியைப்பார்ப்பார். இனிய உயிருக்கொப்பாகிய சீதாபிராட்டியாரைநினைப்பார். தமக்குச் சம்பவித்த துன்பத்தை ஆலோசிப்பார். வேறொன்றையும் பாராமல் தம்மெதிராகவிருக்கின்ற கடலைப்பார்ப்பார். இராவணனுகிய திருடன் வாசம் பண்ணுகின்ற இலங்காதீபமெங்கேயென்று சுற்றிப்பார்ப்பார் கோதண்டத்தைப் பார்ப்பார். இப்படி சீதாபிராட்டியாரிடத்திற்கொண்ட மோகப்பித்தேறிய மனத்தையுடையவரான ஸ்ரீராமபிரான் அச்சீதையினது மிகுந்த அழகுவாய்ந்த முத்தைப்போன்ற தந்தபந்தியுடன்கூடிய பவளத்துண்டத்தையொத்த திருவதரத்தை மனதில் நினைத்து மீட்டு மறவாமல் வருத்தமடைவார்.

கவி.

ஆயதோரளவையி னருக்கன்மைந்தனீ, தேய்வதென்காரிய நிரப்புஞ்சிந்தையை
மேயவன்றன்னெடு மெண்ணிமேலினித், தூயதுநினைக்கிலை யென்னச்சொல்லினுன்.

இவ்வண்ணம் லோகநாயகனுகிய எமது பகவான் சீதாபிராட்டியை நினைந்துநினைந்து மிகவும் மனம்நைந்துருகி வருத்தப்படுஞ்சமயத்தில் சூரியன் புத்திரனுகிய சுக்கிரீவமகாராஜனென்னும் வானராதிபதி அவரைச்சேவித்து, ஓ எல்லாக்காரியங்களையும் பூரணப்பண்ணத்தக்க திருவுளத்தையுடைய சுவாமி! தேவரீர் இனி விபீஷணரோடு ஆலோசித்து மேல்நடக்க வேண்டிய விஷயத்தை எண்ணுமல், இப்படிவருத்தப்படுவது கிருபாசமுத்திரம்போன்ற தமது பெருமைக்குத் தக்கதோவென்று சொல்லினுன்.

இப்படி சுக்கிரீவமகாராஜன் சொன்னமாத்திரத்தில் ஸ்ரீராமர் மூர்ச்சை தெளிந்து துக்கநீங்கினவராகி, சீக்கிரமாகப்போய் விபீஷணரை அழைத்துக்கொண்டுவாவென்று அச்சுக்கிரீவனையே நியமித்தனர். உடனே சுக்கிரீவமகாராஜன்விபீஷணரிடத்திற்குப்போய் உம்மை சுவாமி வரும்படி நியமித்தாரென்ன, அந்தக்ஷணம் அக்கிரமமல்லாதமார்க்கத்தையடைந்தவரானவிபீஷணுழ்வாரானவர் தாமரைகணெருங்கிப்புஷ்பித்த தடாகம்போல் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீராமருடைய சன்னிதியில்வந்து, அவருடைய திருவடித்தாமரைகளில் தெண்டம் சமர்ப்பித்தனர். அந்தவிபீஷணுழ்வானை ஸ்ரீராமபிரான் எழுந்திருந்து உட்காரும்படியாக நியமித்தார்.

ஸ்ரீராமர்கேட்க விபீஷணர் இராவணன் உதவிச்சைனியங்களின் றிறமுரைத்தல்.

கவி.

ஆர்கலியிலங்கையி னரணுமவ்வழி
வார்கெழுகனைகழ லரக்கன்வன்மையும்
தார்கெழுதன்மையி னளவுந்தன்மையும்
நீர்கெழுதன்மையாய் நிகழ்த்துவாயென்றான்.

அப்படியே உட்கார்ந்தபோது ஸ்வாமி விபீஷணரைப்பார்த்து, தம்பி விபீஷணா! சமுத்திரத்தினாற் சூழப்பட்ட இலங்காபட்டணத்தினுடைய அரணிப்பும், அதிலுள்ள ராக்ஷதர்க்கிராஜாவாகிய நீண்டவிரகண்டையையணிந்த பாதத்தையுடைய இராவணனது வல்லமையும், சைனியங்களினுடைய தொகையும் விவரமாய்ச்சொல்லவேண்டுமென்றார். அப்போது விபீஷணாழ்வார் எழுந்திருந்தார். அதுகண்டசுவாமி நீ இருந்தேசொல்லென, விபீஷணாழ்வார் இரண்டு கைகளையுங் கூப்பிக்கொண்டு சுவாமியைத்தொழுது, வினவின காரியங்களை விவரமாகச் சொல்லத்தொடங்கினார்.

ஓ என்னிருமையுங்கெடுத்தாண்ட எந்தையே! முன்னொருகாலத்தில் ஆதிசேஷனும் வாய்வுபகவானும் தங்கள்வலியைச் சோதிக்கும்படியாக ஆயிரஞ்சிகரங்களோடுகூடிய மேருமலையினிடமாக வந்து, ஆதிசேஷன் தன்னுடைய ஆயிரந்தலைகளாலும் ஆயிரஞ்சிகரங்களையு மறைத்துக்கொண்டார்: அப்போது வாய்வுபகவான் பூமிக்கஞ்சுருவாணியாக நிலைத்திருக்கிற அம்மேருமலையை அலையகுலையச்செய்து, தம்முடையபலத்தினாலே ஒருசிகரத்தைப் பறித்துக்கொண்டுவந்து சமுத்திரத்தின்மத்தியிலெறிந்துவிட்டார். அதுதா னவ்விலங்காதீபம். அந்தத் தீபம் எழுநூறுயோசனை விஸ்தீரணமாகும். அதைச்சூழ்ந்த கோட்டைமதில் இலக்ஷயோசனை ஆழ்ந்ததும், சூரியமண்டலத்துக்குமுயர்ந்ததுமாய், உலகத்தைச் சக்கரவாளகிரி வளைத்துக்கொண்டிருக்கிறதுபோல அவ்விலங்காபுரத்தைச் சூழ்ந்துகொண்டிருக்கின்றது. அதற்குச்சுற்றிலுமுள்ள தந்திரங்களையும், சித்திரவேலைப்பெருமைகளையும், காவலாக அமைத்திருக்கின்ற அரண்முதலானவைகளையும், விரித்துச்சொல்ல வேண்டுமானால் ஆயுள்போதாது. அடியேன் அதைப்பற்றி வேறென்ன சொல்லவேண்டியிருக்கின்றது? அதற்குச் சமுத்திரமே அகழாகவிருக்கின்றது.

அப்படிப்பட்ட கோட்டையின் வடக்கு வாசலுக்குக் காவலாயிருப்பவர்கள் பதினாறுகோடி அரக்கர்கள். அவர்களில் ஒவ்வொருவருக்கும் யுகாந்தகால இயமனுஞ்சமானமல்ல. சாக்ஷாத் ரிஷபவாகன ரூடரான உருத்திரனுஞ் சமானமல்ல வாசலில் உருத்துநிற்கின்ற காவலாளிகள் அவர்களைப்பார்க்கிலும் இரண்டுகோடிபேர் அதிகமானவர்கள். அவர்கள் கண்ணெதிரே இயமன்வரக்கண்டால் அவனுடைய இரத்தசகிதமாயுயிரையு முண்டுவிடுவார்கள். தெற்குக்கோட்டைவாசலைக் காக்கின்ற துஷ்டர்கள் மலைக்குச்சமானமான ஆகாரமுள்ள பதினாறுகோடிபேர்கள். அவ்வியமனுடைய அரசையும் பிடுங்கிக்

கொள்ளத்தக்க வல்லமையுடையவர்களாகும். கிழக்குக்கோட்டை வாசலிலிருக்கின்ற துஷ்டர்களும் பதினாறுகோடிபேர்கள்தா னென்றுசொல்வார்கள். அவர்களஷ்டதிக்கஜங்களையும் பின்னங்கால்களைத்தூக்கிப் பூமியி லறையத்தக்க வல்லபமுள்ளவர்கள். ஆகாசத்திற் காத்துநிற்கின்ற துஷ்டர்கள் முப்பத்திரண்டுகோடி பேர்களென்பார்கள் தேவர்கள் வருவார்களென்று பூமிக்குள் பதுங்கிக்கொண் டிருக்கின்ற இரக்கமற்ற ராக்ஷசர்களுக்கு அளவில்லை.

அந்தக் கோட்டையின் மதிலுக்குப் புறத்திலும் அகத்திலும் தூக்கமில்லாமற் காற்றை யாகாரம் செய்துகொண்டு காற்றாடியைப்போல இடைவிடாது சுற்றித்திரிந்து காத்துக்கொண்டிருக்கின்ற இராக்ஷசர்கள் ஆயிரங்கோடிபேர்கள். இந்தப் பிரகாரமாக அந்தலங்காபுரிக்கு மூன்று அரணங்களுண்டு. அவைகளைக் காக்கின்ற ராட்சசர்கள் மதிலொன்றுக்கு முப்பதுகோடியாக மதில்மூன்றுக்கும் தொண்ணூறுகோடிபேர்கள் காவலிருப்பார்களேயானால், அந்த லங்கைப்பட்டணத்தின் பெருமையைச் சிறப்பித்துச் சொல்லவேண்டுமோ? இராவணனால் சிறப்புஞ் செல்வமுமடைந்து தீர்க்கவைரமுள்ள அதிகபலவந்தர்களும், விரோதிகள் வந்தால் உண்மையாய்ப் பாடுபட்டு உதவிசெய்கிறவர்களுமாய் ஆயிரத்தறுநூறுகோடி ராட்சசர்க ளிருக்கின்றார்கள். அதுவுமல்லாமல் அவனுடைய அரண்மனை வாசலில் இந்தவுலகத்தை யொருகையில் தூக்கும்படியான தைரியசாலிகளும், மலைக்குச் சமானமான பலமுள்ளவர்களுமாய்க் கோடாகோடி ராக்ஷசர்கள் காவலிருக்கின்றார்கள்.

மேலுமந்த ராவணனுடைய மேருமலைக்குச் சமானமாகிய இராஜமாளிகைவாசலின் இடதுபக்கத்திலும் வலதுபக்கத்திலும், விஷக்கண்ணர்களும்-அக்கினிக்கண்ணர்களும்-கோபக்கண்ணர்களும்-கண்களை இமைத்தலில்லாமற் பார்க்கிறவர்களுமாய் அறுபத்துநாலுகோடி ராட்சசர்கள் காத்துக்கொண்டிருக்கின்றார்கள். அல்லாமலும்.-பேய்க்குச் சமானமாகப் பிதற்றிக்கொண்டு அவனுக்கு மூலபலமாயிருக்கின்ற ஆயிரவெள்ளம் சைனியங்களைக் கொல்வதற்குப் பிரமகற்ப பரியந்தம் செல்லவேண்டுமென்பது அடியேனுக்குத் தெரியும். சதுரங்க சைனியங்களாய்ப் பதினாயிரந்தேரும், செந்தாமரைப் புஷ்பம்போல் முகங்களையுடைய இருபதினாயிரம் யானைகளும், காற்றைப்போலப் பறக்கும்படியான நாற்பதினாயிரம் குதிரைகளும், எண்பதினாயிரம் ஒட்டகங்களுமிருக்கின்றன. இவ்விலங்கைப்பட்டணத்தினுடைய அரணிப்பு இப்படிப்பட்டது. அதன்சைனியங்களினுடைய தொகை இவ்வளவாகும்.

உலோககர்த்தாவாகிய சிவபிரானிடத்தில் வரமாகவாங்கின வாளாயுதத்தை வலதுகையிற் பிடித்திருக்கின்றவனான இராவணனுக்குத் துணையானவர்களனேகர். அவர்கள் தங்களுக்குவேண்டிய பலங்களையும் வரங்களையும் அனேகதபங்களைச் செய்து பெற்றுக்கொண் டிருக்கிறார்கள். அவர்களில் கும்பனென்று ஒருவனுண்டு. அவன் ஊழிக்காற்றைப்பார்க்கினு மகாகொடுமையானவன். சுவர்க்கலோகத்திலுள்ள சித்தகணங்களைச் சிறையிட்டவன். இரத்த

ஜதுரகபதாதிகளான பத்துக்கோடி சைனியங்களையுடையவன். வேறொருவன் அகம்பனென்கிற பேருடையவனுள்ளன். அவனனேகயுகம் தவஞ்செய்து வெகுவரங்களைப் பெற்றிருக்கின்றான். அவன் யுத்தங்களல்லாமல் தனக்குச் சுகந்தருவதாக வேறொன்றையும் இச்சிக்கிறவனல்லன். அவனுடைய சைனியங்கள் அளவில்லாதவைகள், அவனோ? நாசிம்மத்திற்குச் சமானமான வல்லமையுள்ளவன். நிகும்பனென்றொரு பெரியவாகாரமுடையவனுண்டு. அவன் மலையிலும் பெரிதான குதிரைகளும், யானைகளும், தேர்களும், வில்வீரர்களுமாகிய வொன்பதுகோடி சைனியங்களை யுடையவன். இவனோடு யுத்தஞ்செய்யவேண்டுமென்று தனதுவாகனமாகிய ஆட்டுக்கடாவை வேகமாய் நடத்திக்கொண்டுவந்து யுத்தத்தில் நின்ற அக்கினிதேவனைத் தோற்கடித்தான்.

மகோதரனென்கிற மற்றொரு வீரனுண்டு. அவன்பிசாசங்களும், யாளிகளும், யானைகளும், கழுதைகளும் கட்டப்பட்ட பத்துக்கோடி தேர்ப்படையையுடையவன். தாயாயிருந்தபோதிலும் வஞ்சனைசெய்கிறதில் பின்னிடமாட்டான். மகாதந்திரசாலி. யாககேது வென்றொரு வீரனுண்டு. அவன் மலையில் வாசஞ்செய்கின்றவர்களான இருபதுகோடி வீரர்களுக்குத் தலைவன். இன்றைக்குள்ளவர்கள் நாளைக்கில்லை யென்னும்படியாய் யாவர்களையும் தன் பற்களுக்கு இரையாக்கிவிடுவான். அனேகம் தடவைகளில் யுத்தத்துக்குவந்த தேவர்களை ஜெயித்திருக்கின்றான். சூரியகேதுவென்று ஒரு வீரனுண்டு. அவன் பூலோகத்திலுள்ளவர்களையும் தேவலோகத்திலுள்ளவர்களையும் ஒன்றாக ஒரே நாளில் தின்றுவிடத்தக்கவனென்று பிரசித்தப்பட்டவன். இவன் எட்டுக்கோடி சைனியங்களையுடையவனும், அக்கினியும் பயப்படும்படியான பார்வையுடையவனு மானவன். மகாபாரிசனென்கிற ஒருவீரன் மலையிலுமிகுந்தபலமுள்ளவன். தேவர்களும் - ரிஷிகளும் - பிரமேந்திராதியர்களும் - இவன் பெயரைச் சொல்லவேண்டுமானாலும், பக்கம்பார்த்துச் சொல்லவேண்டும்படியாகியமகத்தான கோபமுள்ளவன். இவன் பதினாறுகோடி சைனியங்களுக்குத்தலைவன்.

வச்சிரதந்தனென்றும் காலாந்தகனென்றும் பெயருள்ள எரிமுகத்தையுடையவனும், எட்டுக்கோடி சைனியங்களுக்கு அதிபதியும், சூலாயுதத்தையுடைய உமாநாயகனையும் வெல்லத்தக்க பலமுள்ளவனுமாகிய ஒரு வீரனுண்டு. எந்தக்காலத்திலும் சஞ்சலப் படாதவர்களான பத்துக்கோடி சைனியங்களை வசப்படுத்திக்கொண் டிருக்கிற வல்லமையில் தனக்குச் சமானமாக வேறொருவருமில்லாதவனும், யுத்தத்தில் யக்ஷர்களைக் கையினாலே பிசைந்து நசுக்கினவனுமான பிசாசன் என்கின்ற மற்றொருவீரனுண்டு. தேர்களும்-யானைகளும் - குதிரைகளும் - வில்வீரர்களுமாகிய பதினாறுகோடி சைனியங்களுக்குத் தலைவனும், பூமியைப் பேர்த்தெடுக்கத்தக்கவனும், சப்தசமுத்திரங்களும் - சப்தகுலாசலங்களும் - கலங்கச்செய்ய வல்லவனும், கோபித்துப் பேசுகின்ற சக்தியுடையவனுமான துன்முகனென்று ஒருபாபியுண்டு. இலங்

க்ராதீபத்தையொத்த மற்றத் தீபங்களிலே வாசம்பண்ணுகிறவர்களான பத்துக்கோடி இராக்ஷசவீரர்களுக்குத்தலைவனும், வாள்வித்தையில் வெற்றிபெற்றவர்களான வித்தியாதரர்களைத் தோற்கடித்து அவர்களுடைய கீர்த்தியைப்போக்கடித்தவனுமான விரூபாக்ஷனென்கிற அக்கினியைக்கக்கும் பார்வையையுடையவ னொருவனுண்டு.

உயுத்தத்தில் வல்லவனும், மகாஜெயசாலியும், தேவர்கள் மத்தாகக்கொண்ட மந்தரமென்னுங்கிரிக்குச் சமானமானவனும், எல்லாச் சேனாபதிகளிலும் அதிகபலமுள்ளவனும், பூலோகத்தாரும் - சுவர்க்கலோகத்தாரும் - கேட்டமாத்திரத்தில் முதுகுகாட்டி யோடும்படியான இரணமஸ்தனென்கிற பெயருள்ள வீரனொருவனுண்டு. தூவாட்சனென்பவன் பிணங்களை மசானத்தில் வைக்கவொட்டாமல் தன்பல்லுக்கே இரையாக்கிக்கொள்ளுகிறவனும், கோடாகோடி ராக்ஷசவீரர்களுக்குத் தலைவனும், தேவர்களையெல்லாம் யுத்தத்தில் முதுகிட்டோடும்படியாகச் செய்பவனுமானவன். இப்படிப்பட்டபேர்களை யெத்தனையாயிரம்பேர்களென்று சொல்லப்போகின்றேன். அவ்விராவணனுடைய உதவிச்சைனியங்களா யிப்போது சொன்னவர்களைப்பார்க்கிலும்; இரண்டுமடங்கு சைனியங்களுக்குத் தலைவனாயிருக்கின்ற பிரகஸ்தனென்று ஒரு வீரனுண்டு. அவனுடைய கொடுமைகள் சொல்லிமுடிவனவன்று.

மேலும் - இந்திரனுடைய ஐராவதமென்கின்ற யானை பின்னிட்டோடவும் - அந்த இந்திரனுடைய எழுசக்கரம்பூட்டிய தேர் சின்னபின்னப்பட்டழியவும் - முப்பத்துமூன்றுகோடி தேவகணங்களு முதுகிட்டலையவும் - தன்னுடைய அம்புகளைப் பிரயோகித்தவனும், அஷ்டதிக்கஜங்களினுடைய நான்கு சந்திரர்களைப்போலப் பிரகாசிக்கின்ற நான்கு கொம்புகளையும் பிடுங்கிக்கொண்டு மேருபர்வதமானது மதங்கொண்டு திரிந்தாற்போலத் திரிந்துகொண்டிருக்கின்றவனுமான கும்பகருணனென்று இராவணனுக்கு ஒருதம்பியுண்டு. அன்றியும்— சூரியசந்திரர்களையும் சிறையிட்ட மிகுந்த கோபமுடையவனான இந்திரசித்தென்று சொல்லப்பட்டபிள்ளை இவ்விராவணனுக்குண்டு; இவனிந்திரனைப் பிடித்துக் கட்டினதழும்பு அவ்விந்திரனுடைய கையிலுங் காலிலு மின்னுமாறவில்லை.

அந்த இந்திரசித்தையுஞ் செயிக்கவல்லவனும், கொஞ்சமாவது தருமத்துக்கு இரக்கப்படாதவனும், சாக்ஷாது கைலாசமூர்த்தியினிடத்திற் பெற்ற வில்லை யுடையவனும், இந்திரசித்துக் கிளையவனான பிள்ளையுமுண்டு. வேறொரு இந்திர னிவனுக்குச் செயிக்கிறதற்கில்லாமையா லிந்திரசித்தென்று பேரில்லாமல், அதிகாயனென்கிறபேருண்டாயிற்று, இவ்விருவரல்லாமலும் அவ்விராவணனுக்குத் தேவாந்தகன்—நராந்தகன்—திரிசிரா - என்கின்ற மூன்று பிள்ளைகளுண்டு. அந்த மூன்றுபேரும் திரிமூர்த்தியை யொத்தவர்கள். உயுத்தத்துக்குப் புறப்பட்டால் அவர்களெதிரில் நிற்கவல்லவர்கள் திரிபுவனங்களிலும் ஒருவருமில்லை. இவர்களுடையவல்லமை யிப்படியிருக்க, இராவணனுடையபலம் எனக்குத் தெரிந்தமட்டுஞ் சொல்லுகின்றேன்.

இராவணனுடைய வல்லபமுரைத்தல்.

கவி.

இனையதன்மையர்வலியிஃ திராவணனென்னும்
அனையவன்றிறம்யானறி யளவெலாமறைவென்
தனையனான்முகன்றகைமகன் சிறுவற்குத்தவத்தால்
முனைவர்கோன்வர முக்கணான்வரத்தொடுமுயர்ந்தான்.

இவ்விராவணன் பிரமதேவன்பௌத்திரரும்காசிபமகாரிஷியின்புத்திரருமான புலஸ்தியப் பிர்ம்மாவினுடையபுத்திரன். இவன்தபசில் முனிவர்களிலும் உயர்ந்தவனாகி, திரிநேத்திரராகிய உருத்திரமூர்த்தியை நோக்கித் தவஞ்செய்து எல்லாச்சிறப்பையும் பெற்றான். இவன் பூதகோடிகளெல்லாஞ் சூழ்ந்துகொண்டிருக்கும்படியான சாக்ஷாத் மான்தோலாடையையணிந்த அவ்வுருத்திரமூர்த்தியானவர் பார்வதிசமேதராய் எழுந்தருளியிருக்கின்ற கைலாச பர்வதத்தை, உள்ளங்கையில் வேரோடுபிடுங்கித் திரிலோகங்களு நடுநடுங்கும்படியாய்த் தூக்கினான். உலகங்களைத் தாங்குகின்ற அஷ்டதிக்கஜங்களையும் தந்தங்களை முறியும்படியாகத் தன்னுடைய மார்பினால் தாக்கினான். இனி நம்மீதும் வருவானென்று முப்பத்துமுக்கோடி தேவர்களு நடுக்கங்கொண்டு ஓட்டம்பிடித்தார்கள். இவன்காலகேயர்களை அவர்கள் பந்துசகிதமாக அணிந்த கிரீடங்களோடும் பிடித்த ஆயுதங்களோடும் கொன்றபிறகு, இவனுடைய பெயரைக்கேட்டாலும் இடிமுழக்கங்கேட்ட சர்ப்பம்போல் தானவஸ்திரீகளுடைய கர்ப்பத்திலிருக்கின்ற சிசுவும் இன்னும் பயப்படுகின்றது.

அநேக தடாகங்களாற் சூழப்பட்ட அளகாபுரிபட்டணத்தில் இப்போது பதுங்கிக்கொண்டிருக்கிற குபேரன் தன்னுடைய அநேகமான அயிஸ்வரியங்களெல்லாம் பட்டணவீதிகளிற் சிந்திச் சிதறுண்டுபோகும்படியாகப் புலியைக்கண்ட மானைப்போலப் பயந்து, தன்மானமும் புஷ்பகவிமானமுமிழந்து, இந்த லங்கைப்பட்டணத்தையும்விட்டோடிப்போய்விட்டான். இந்த ராவணனாகிய நமன் நம்மையடித்து உடம்பெல்லாங் காயப்படுத்தினதுமல்லாமல் நம்முடைய உயிரையும் வாங்கும்படியானசெய்கையிலிருக்கின்றானே யென்று யமனும் தன்பட்டணத்தைவிட் டோடித் தன்னுடைய ஆயுள்நாளைக் கணக்கெண்ணிக்கொண்டிருக்கின்றான். சூரியனை அவ்விலங்கா நகரத்துக்குள் பிரவேசிக்கவொட்டாமல் வெளியிலேயே நிற்கும்படியாகச்செய்தவன், அந்தச்சூரியனுடைய கண்களுக்கு லங்கையின் பெருமை யிவ்வளவெனத் தெரியாது. வருணனை ஜெயித்து அவனுடைய பாசத்தையும் பிடுங்கிக்கொண்டான். அந்தப் பயத்தினால் அவன் தப்பிப் பிழைத்துச் சமுத்திர ஜலத்திற்குள்ளே மறைந்துகொண்டிருக்கிறான். இப்படிப்பட்ட பலமுள்ள ராவணன் மலைகளெல்லாம் பொடிப்பொடியா யழிந்தாலும், இவனுடைய தோள்களுக்குக் கொஞ்சமேனும் லயமுண்டாகிறதில்லை. இவனுடைய பலம் இன்றைக்கானாலும், நாளைக்கானாலும், இன்னம் கொஞ்சகாலம்போய் அழியுமானாலும், தேவரீராலன்றி வேறொருவராலு மாளான்.

இலங்கையி லாஞ்சனேயர்செய்த வீரப்பாடுரைத்தல்.

கவி.

ஈடுபட்டவரெண்ணிலர் தோரணத்தெழுவால்
பாடுபட்டவர்படுகடன் மணலினும்பலரால்
சூடுபட்டதுகொடிநக ரடுபுலிதுரந்த
ஆடுபட்டதேபட்டன ரனுமனாலரக்கர்.

இப்படி யிவ்விலங்காதிபதியான விராவணனுக்குவேண்டிய கட்டுங்காவல்களும் கணக்கற்றனவாயிருந்தும், முன்னம் ஆஞ்சனேயராற் புலியினிடத்திலகப்பட்ட ஆடுகளைப்போலச் செத்தழிந்த ராக்ஷசர்களுக் களவில்லை. தோரணக்கம்பத்தினால் வதைபட்ட ராக்ஷசர்கள் கடல்மணலின் தொகையைப்பார்க்கிலும் அளவில்லாதபேர்கள். ஆஞ்சனேயராற் கோபித்தபோதே இராக்ஷசர்களுடைய உதிரமாகிய வெள்ளத்தில் தோலாதி மாமிசங்களெல்லாம் மேடுபோலக்குவிந்தன. வடவாக்கினிபோற் சிவந்த கண்களையுடைய அக்கனென்பவனைப் பிடித்துப் பூமியில் தேய்க்கும்போது, அவனது தேகத்திலிருந்து வழிந்த இரக்தநிணக்குழம்புகள் லங்காபட்டணத்துத் தெருவிலின்னமும் உலரவில்லை. இந்த ராவணனுடைய பஞ்சசேனாபதிகள் தேவர்களுக்குரிய சுவர்க்கத்திலுள்ள காவலையும், அரணங்களையும், அழித்தவீரர்களாகும். அப்படிப்பட்டவர்கள் தங்கள்சேனைகளும் பந்துக்களுமாய் யானையின்காலி லகப்பட்ட செல்லைப்போல் இவரால் நசுங்கிஇறந்தார்கள்.

இதுவுமல்லாமல் எண்பதினாயிரம்பேர் கிங்கரர்கள் மலைக்குச்சமானமான ஆகாரங்களையுடையவர்கள். இவர்கள் தங்கள் கொடியகையினாலும், மழுவாயுதத்தினாலும், இருப்புலக்கைகளினாலும், இவரையெதிர்த்துநின்று; உருத்திரமூர்த்தியினால் அழிந்துபோன திரிபுராசுரர்களைப்போலானார்கள். ஜம்புமாலியென்கிற மகாவீரனொருவன் சமுத்திரம்போன்ற சைனியங்களோடுகூட இந்த ஆஞ்சனேயரை எதிர்த்து, இவர்தோளொன்றுக்கு ஆயிரமாயிரமம்புகளைப் பிரயோகித்து, பிறகு அவன்கைவில்லினாலேயே அடியுண்டெமலோகம்போய்ச்சேர்ந்தான். இதுவுமல்லாமல் அந்தலங்காபட்டணத்தை இவரெரித்தகாலத்தில் அதிலழிந்துபோன ராக்ஷசர்களை யிவ்வளவென்று யார்கணக்கிட்டுச் சொல்லுவார்கள்? சுவாமி! இவரால் எரிக்கப்பட்ட அந்தலங்காபட்டண நெருப்பானது அவர்களுடைய ரக்தநிணங்களினாலேதான் அவிந்ததென்றால், அந்நெருப்பி லெரிந்துபோகாமல் தப்பி இன்னமும் வீரர்களிருக்கின்றார்களென்று சொல்லவும்போமா? ஆதலால் - இலங்கையி லிறந்தவர்களைப்பற்றி வேறேயென்னசொல்லவிருக்கிறது?

இராவணனே அணிந்தமாலையுடனும், பூசின சந்தனத்துடனும், அன்று பூண்ட ஆபரணங்களுடனும், கட்டியவஸ்திரங் களுடனுங்கூட; ஏழுநாள்வரைக்கும் அந்தலங்கையிலிருக்கச் சகிக்கமாட்டாமல் ஆகாயத்திலேயே நின்

றுவிட்டான். இப்படிப்பட்ட வல்லமைபொருந்திய ராவணனுடைய இலங்கைப்பட்டணத்தின்பெருமையையும், அதன்காவற் பெருமையையும், நானறிந்தவளவில்முன்னமே சொன்னேன். இவைகளிவராலெரிந்து போனபிறகு இராவணனுடைய ஏவலினால் சாட்சாதுபிர்ம்மதேவரே அந்த லங்காநகரத்தைப் பழையபடியே சிருஷ்டித்துவிட்டார். சுவாமி! மதத்தயானையையொத்த கரன்முதலாகிய வீரர்களும் — வாலியும் - தேவரால் இறந்ததைக்கேட்டதினாலும், கவிசிரேஷ்டராகிய இந்த ஆஞ்சனேயரால் இலங்காபட்டணமெரிந்ததனாலும் — இவர் ராட்சசர்களைக் கொன்றுவிட்டு வந்ததனாலும் — அடியேன் கண்ணினாற்கண்டதினாலும் தான்; இவ்விடம்வந்து தேவரீருடைய திருவடியையடைந்தேன். என்று தம்முடைய திருமேனியோடு உறவுகொண்ட கறுத்தமேனியை யுடையவரான விபீஷணாழ்வார் விண்ணப்பம் பண்ணிக்கொண்டு சேவித்திருந்தனர்.

ஸ்ரீராமர் ஆஞ்சனேயரை உபசரித்தல்.

கவி.

கேள்கொண்மேலையான் கிளத்தியபொருளெலாங்கேட்டான்
வாள்கொணோக்கியைப் பாக்கியம்பழுத்தனமயிலை
நாள்கள்சாலவுநீங்கலி னலங்கெடமெலிந்த
தோள்கள்வீங்கித்தன் றூதனைப்பார்த்திவைசொன்னான்.

இருமையிலும் அழியாத தனது சிநேகத்தைக்கொண்ட விபீஷணர் சொல்லிய வார்த்தைகளிலுள்ள சாரங்களையெல்லாம் ஸ்ரீராமச்சந்திரன் கேட்டு, வாளைப்போலுநீண்டு கூர்மைபெற்ற விழிகளையும், குறைவற்ற செல்வங்களையெல்லாம் தன்னைத்துதிக்கின்ற அன்பர்க்கு அருளுகின்ற மயில்போலுஞ்சாயலையுமுடைய தமதுதேவியாகிய சீதாபிராட்டியை வெகுகாலம் விட்டுப்பிரிந்திருந்ததினால் ஒளிமழுங்கி மெலிந்திருந்த திருத்தோள்கள்பூரித்து, தமதுதூதராகிய ஆஞ்சனேயரைப்பார்த்துச் சொல்லுகின்றார். ஓ வீரசிகாமணியாகிய ஆஞ்சனேயனே! அந்தராவணனுடைய சைனியங்களிற் பாதிசைனியங்களுக்கு மேற்படவே நீகொன்றுவிட்டாய். இலங்காபட்டண முழுவதையும் அக்கினிக்கிரையாக்கிவிட்டாய். இனியங்கே யென்னபலமிருக்கின்றது? சீதையை நீ காணப்பெற்றும் இங்கேகொண்டுவராதது என்னுடையவில்லின்வீரத்தைக் காட்டும்படியாகத்தானே? ஆ! ஆ! உன்னுடைய தோள்வல்லமையை நிறைத்துவைத்திருக்கின்ற அந்தலங்கைப்பட்டணத்தில் நாங்கள்போய் இனிச்செய்யப்போகின்ற காரியங்களினால் எங்களுக்கு என்னபெருமை யுண்டாகப்போகின்றது?

ஓ மேருமலைக்குச்சமானமான தோள்களையுடையவனே! நாங்கள் அதிகசேனைகளோடுவந்தும் இனி என்னகாரியத்தைச் செய்தோமென்று கீர்த்தியடையப்போகிறோம்? என்னுடைய சௌரியத்தையும் — இராவணனுடைய வல்லமையையும் — நீ ஜெயம்பெற்றதினாலும், அவனைத்தோற்பித்ததினாலும்

உன் வசப்படுத்திக்கொண்டாய். ஓ என்னயிஸ்வரியமெல்லாம் உருவம்பெற்று வந்ததுபோலு முற்பவித்த ஆஞ்சனேயனே! இந்த மூன்றுலோகங்களையுஞ் சிருஷ்டித்த பிர்ம்மதேவருடைய பதவியை மறுகற்பத்தில் நீயடையக்கடவாய். என்று அருளிச்செய்த மாத்திரத்தில் அனுமாரானவர் சுவாமியினுடைய திருவடிகளிற்சாஷ்டாங்கமாக தெண்டன்சமர்ப்பித்து,ஒன்றும்பேசாமல்வாய் பொத்திக்கொண்டு நின்றார். இவருடைய பிரதாபத்தைக் கேள்விப்பட்ட வானரவீரர்களும், அவர்களுக்குத் தலைவரான சுக்கிரீவமகாராஜனும், மோக்ஷத்தையடைந்தவர்களைப்போலப் பரமானந்தபரிதர்களாய் ஆச்சரியமடைந் திருந்தார்கள்.

இலங்கைகேள்விப் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

ஆறவது,

வருணனை வழிவேண்டு படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமர் விபீஷணரா லிலங்கையினரணிப்பு மிராவணனதிகள் பராக்கிரமமுங் கேட்டபின்னர் கடலைக்கடக்க வுத்தேசித்துத் தருப்பாசயனத்தில் வருணமந்திரம் செபித்துக்கொண்டு எழுநாள்வரையிற் சயனித்திருந்தும் வருணன்வராமையாற் சினந்து அவனுறையுளடங்கிய கடல்மேற் பாணப்பிரயோகஞ்செய்ததும், அப்பாணங்க ளக்கடல்மேற் பலபராக்கிரமங்களைக்காட்டியு மவன்வராமையாற் பிரமாஸ்திரம் பிரயோகிக்க முயன்ற சுவாமியின்கருத்தை யவனறிந்து உடனே காணிக்கையோடும்வந்து சரண்புகுந்து தான்வருவதற்குக் காலநீடித்த சற்குக்காரணங் கூறியதும், அஃதுணர்ந்த காகுத்தர் கோபமாறி அவ்வருணனற்பிரம்மாஸ்திரத்திற் கிலக்கறிந்து விடுத்துப் பின்பவனுத்தரவின்படிசேதுபந்தனஞ்செய்ய வானரப்படைகட் காஞ்ஞாபித்ததுஞ் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமர் கடல்கடக்க வழிவிடவராத வருணனைக்கோபித்து கடலின்மேற் பாணப்பிரயோகஞ்செய்தல்.

கவி.

தொடக்குமென்னினிவ் வுலகொருமூன்றையுந்தோளால்
அடக்கும்வண்ணமு மழித்தலுமொருபொருளன்றால்
கிடக்கும்வண்ணவெங் கடலினைக்கிளர்பெருஞ்சேனை
கடக்கும்வண்ணமுமெண்ணுதியெண்ணுநூல்கற்றாய்.

இவ்வாறு சுக்கிரீவமகாராஜன்முதலிய வானரவீரர்க ளானந்தமுறும்படியாக ஆஞ்சனேயரை ஸ்ரீராமபிரான் உபசரித்துக்கொண் டிருக்கும்போது விபீஷணாழ்வார் சுவாமியைநோக்கி, ஐயனே! இனிமேலிந்த ஆஞ்சனேயரு

க்கு இந்தமூன்றுலோகங்களைச் சிருஷ்டிக்கிறதும், இரக்ஷிக்கிறதும், சம்ஹரிக்கிறதும், ஒருகாரியமல்ல. இனி வருணனையழைக்கும் விதத்தையும், நம்முடையசேனைகளிந்தச்சமுத்திரத்தைத்தாண்டிப்போகும் வழியையும், ஆலோசிக்கவேண்டும். மறைந்துநின்ற உம்முடைய கல்யாணகுணங்களை யாசிரயிக்க இந்தச்சமுத்திரமானது இச்சிக்கின்றது. மேலும் — இஃதும்முடைய வமிசத்தாரா லுண்டானதாதலால், தேவர்விரும்பும் வரத்தைத் தீர்க்கமனதோடு கொடுத்தருளும், இனித்தேவரீர் இந்தச்சமுத்திராஜனைக்கேட்டுச் சைனியங்கள்போகும்வழியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றார். அதைக்கேட்ட ஸ்ரீராமமூர்த்தியானவர் விபீஷணாழ்வானுடைய வார்த்தை நன்றாயிருந்ததென்று சந்தோஷப்பட்டு, வானரசைனியங்களோடு சமுத்திரத்தின் சமீபமாகவந்தனர். அப்போது சூரியன் ஏழு குதிரைகள் பூட்டிய தேருடன் அஸ்தமனகிரி சென்று மறைந்தனன். உலகத்தில் இருளுஞ் சூழ்ந்தன. அந்தஇருள் நீங்கும்படி அமிர்தகலைகளோடுங்கூடிய சந்திரனுதித்தனன். அவ்வேளையிலிந்தச்சமுத்திரஞ்சூழ்ந்த பூமியான தெவ்வாறிருந்ததெனில், பொறிகளோடுங்கூடிய படத்தையுடைய கரும்பாம்பாகிய இராகுவினாலேவிழுங்கியுமிழப்பட்ட அந்தச் சந்திரனைப்போன்றிருந்தது.

தருணமங்கையைமீட்பதோர் நெறிதருகென்னும்
பொருணயந்துநன்னுனெறி யடுக்கியபுல்லில்
கருணையங்கடறுயின்றனன் கருங்கடனேக்கி
வருணமந்திரமெண்ணினன் விதிமுறைவணங்கி.

ஊழிசென்றதன்றிருவுருப் பொருந்தவும்பொறைதீர்
வாழிவெங்கதிர்மணிமுகம் வருடவும்வளர்ந்தான்
ஊழிசென்றனவொப்பன வொருபகலவைபோல்
ஏழுசென்றனவந்தில னெறிகடற்கிறைவன்.

அப்போது சுவாமியானவர் சீதாபிராட்டியாரை மீட்டுக்கொண்டு வரத்தக்க வழியைப் பெறும்படியான திருவுளங்கொண்டவராய், சாஸ்திரோக்தமாக இளையபெருமாளால் திருத்தப்பட்ட தருப்பைச்சயனத்தின்மீது வருணமந்திரத்தைச் செபித்துக்கொண்டு, கடலின்மேற் பார்வை செல்லும்படியாகச் சயனித்துக்கொண்டிருந்தார். இப்படி தமது திருமேனியிற் றுகள்படியவும் — சூரியன் திருமுகமண்டலத்தை ஸ்பரிசிக்கவும் — ஒருபகலை ஒரு ஊழிக்காலத்திற் கொப்பாகக்கழித்து ஏழுநாள்பரியந்தம் சயனித்திருந்தும் வருணதேவன் வாராமையைக்கண்ட சுவாமியானவர். இந்தப் பெரியசமுத்திராஜனானவன் நாம்கேட்டவரம் உண்டில்லையென்று சொல்லும்படியாக வரம் பெற்றோமில்லையே யென்கிற கோபத்தினால் சமுத்திரத்திலே அக்கினி புறப்பட்டதுபோலச் செந்தாமரைப்புஷ்பம் போன்ற இரண்டு திருக்கண்களும் சிவந்தனர். நாம் சிறந்த பெண்சாதியையிழந்து இந்தச்சமுத்திரத்தைத் தாண்டிப்போகிறதற்கு வழிவேண்டுமென்று வேண்டியும், இந்தவருணதேவன் இல்லையென்று சொல்லுவதற்கிடாக ஒளித்துக்கொண்டான்போலிருக்கிறதே

என்று மிகுந்தகோபத்துடனே பெருமூச்சுவிட்டுக்கொண்டு, நீண்ட வில்வளைந்ததுபோல் இரண்டு புருவங்களும் வளைந்தவாகி இதனைச்சொல்லுகின்றார்.

இவ்வுலகத்தில் உத்தமகுண மிகுந்தவர்கள் தாங்கள் பிறருக்குக் கொடுப்பதன்றி தாங்கள் பிறரிடத்தில் ஒருபொருளேனும் வேண்டாதவர்களாயினும், அவர்கட்கும் ஏதாவதொரு விஷயத்திற் சிறிது குறை நேரிடுவது சகஜமே: அக்குறையை நீக்குவதற்கு, ஒருவரிடத்தில் ஒருவர் ஏதாவதொன்றை விரும்பிக்கேட்க, அக்குறையை நிவர்த்திப்பதற்குரிய பொருள் தங்கள்பாலிருப்பினும் அதைக்கொடுத்து நிறைவேற்றுதார்கள் சிறுமையுடையவர்களே தவிர பெருமையுடையவர்களல்லர். இன்றைக்கு நாம் கடலைத் தாண்டவேண்டுமென்று வருணராஜனைப் பிரார்த்திக்கவும் அதை மறுத்துவிட்டான். இவனுடைய நீதி நன்றாயிருக்கின்றது. நம்மை அற்பவில்லை யுடையவனென்றும், இராவண னபகரித்துக்கொண்டுபோகத் தன்தாரமிழந்த தன்மையை யுடையவனுனபடியால் வீரமற்ற மனிதனென்றும் அலக்ஷியஞ்செய்து, இந்தவருணராஜன்வராமற்போனுன். ஒருதவிசெய்து ஒன்றைப்பெற்றுக் கொள்ளுதலும், சண்டைசெய்து துரத்திவிட்டு ஒன்றைப்பெற்றுக்கொள்ளுதலும், ஆகிய இவைகளெல்லாம் சாதாரணமான வீரர்கட்கு வழக்கமானவைகள். நாமப்படிச்செய்யாமற் கேட்டுவாங்கும்படி வந்தபோது, தன்னியல்பும் தருமமும் குறைவாகும்படி ஒளித்துக்கொண்டவிது மிக நன்றாயிருக்கின்றது. நம்மைக் காட்டிற்குவந்து காய்கனிகளைத் தின்று உடம்பு வளர்த்துக்கொண்டிருக்கிறவனென்று நினைத்திருந்த இந்தக் கடலுக்குத் தலைவனுன வருணராஜனுடைய பெருமையையும், வில்லுடனேநின்ற மனிதனுகிய என்னுடைய சிறுமையையும் தேவர்களே பார்க்கட்டும். இதுகாறும் பழிக்குப்பயந்து நாமிருந்த தன்மையை அற்பமென்று நினைத்து நம்மைநிந்தித்த இந்தச் சப்தசாகரங்களும் வெந்து ஒருபிடிசாம்ப லாகும் படியாகவும், பஞ்சபூதங்களும் அழுது கொண்டுவந்து பிராணபிக்ஷை கேட்கவும் செய்கிறேன். அப்போது என்னுடைய சேனைகள் கால்கூசாமல் தாராளமாக இந்தக் கடலின்வழியாக நடப்பார்கள்.

கவி.

மறுமைகண்டமெய்ஞ் ஞானியர்ஞாலத்துவரினும்
வெறுமைகண்டபின் யாவரும்யாரெனவிரும்பார்
குறுமைகண்டவர் கொழுங்கனலென்னினுங்கூசார்
சிறுமைகண்டவர் பெருமைகண்டல்லதுதேறுர்.

வருபிறப்பைக் கண்டமெஞ்ஞானியர்களானபோதிலும் இந்தப் பூமியில் வெறுமையோடுவருவார்களானுல்,ஒருவருமவர்களைலக்ஷியஞ்செய்யமாட்டார்கள். அக்கினியானபோதிலும் சிறிதாய்க் காணப்பட்டால் அதற்குப் பயப்படமாட்டார்கள். உருவச்சிறுமையைக் கண்டவர்கள் குணப்பெருமையைப் பார்த்தாலல்லாம லுணர்வடையமாட்டார்கள். என்று பலவாறுய் வருணனைக்

குறித்துக் கோபித்துக்கூறிய ஸ்ரீராமரானவர் ஊழிக்காலத்தில் அதிகவுக்கிரத்தோடு புறப்படுகின்ற சூரியனைப்போற் பிரகாசிக்கும் திருமுகமண்டலத்தையுடையவராகி, பலதரம் வில்லைக் கொடுகொடுவென்று தம்பியைநோக்கிக் கேட்டனர். உடனேயவர் உதிரம்போல் கண்கள்செவந்து நெருப்புப்பொறிபறக்கச் சினந்து அவ்வில்லைக் கொடுத்தனர். அதைத் திருக்கைநீட்டி வாங்கிய சுவாமியானவர் வளைத்து நாணேறிட்டு, விரலாற் குணத்தொனி பண்ணினார். அந்தக் குணத்தொனியானது கயிலாசபதியினுடைய தேவியாகிய பார்வதிதேவியார் கொண்டிருந்த ஊடலையு நீக்கிவிட்டது.

கவி.

பெரியமால்வரையேழினும் பெருவலிபெற்று
வரிகொள்வெஞ்சிலை வளர்பிறையாமெனவாங்கித்
திரிகைநிற்பனயாவையு முடிவினிற்றீய்க்கும்
எரியின்மும்மடிகொடியன சுடுசரமெய்தான்.

இவ்வண்ணம் எமது கர்த்தாவாகிய ஸ்ரீராமச்சந்திரனானவர் மிகவும் பெரிய சப்தகுல மலைகளைப் பார்க்கினு மிகுந்தவலிமை பெற்று வயிரப்பூண்களணிந்து பகைவரது உயிரைவாட்டுதலில் கொடுமைமிக்க தமது கோதண்டத்தை மூன்றும் பிறைச்சந்திரனைப் போல் வளைத்து சராசரப்பொருள்களை யெல்லாம் ஏககாலத்திற் றகிக்கும்படி யெழுகின்ற யுகாந்தவடவாக்கினியைக் காட்டிலும் மும்மடங்கு அக்கினி ஜுவாலையை வீசுகின்ற பாணங்களில் மிகவும் சிறப்புற்றவைகளில் அரிய சிறப்பு வாய்ந்தவைகளைத் தெரிந்தெடுத்து, மாரிக்காலத்திற் பொழியும் மழைத்துளிகளை எண்ணினும் எண்ணுக்கடங்காத அக்கினியாஸ்திரங்களை அக்கடலின்மீது பிரயோகித்தனர், அப்போது சமுத்திரத்திலுள்ளமீன்களும்-பாம்புகளும்-மலைகளும்-மற்றுள்ளவைகளும் சமிதைகளாகவும், நுரைகளோடுகூடிய அந்தச் சமுத்திரஜலமானது ஹோமநெய்யாகவும், பிரயோகிக்கப்பட்டபாணங்கள் அக்கினியாகவும், சமுத்திரக்குழியானது யாககுண்டமாகவும் இருந்தன. மேலும்-அந்தப் பெருமைபொருந்திய நெடிய வில்லி லிருந்து புறப்பட்ட ராமபாணங்கள் சப்தசாகரங்களையும் புகையும்படியாகச் சுட்டெரித்துக்கொண்டு ஊழித்தீயினது கொழுந்துகள் புறப்பட்டதுபோலப் போய்ச் சக்கரவாளகிரிக் கப்புறத்திலிருக்கின்ற இருளையு நாசப்படுத்திவிட்டன.

கவி.

மருமதாரையினெரியுண்ட மகரங்கண்மயங்கிச்
செருமவானிடைக் கற்பகமரங்களுந்தீய
நிருமியாவிட்ட நெடுங்கணைபாய்தலினெருப்போ
டுருமுவீழ்ந்தெனச் சென்றனகடற்றுளியும்பர்.

இவ்வண்ணம் சுவாமியால் விட்டபாணத்தினால் சமுத்திரத்திலுள்ள மகர மீன்கள் மார்புபிளந்து மயங்கி நெரிந்தன. ஆகாயத்திலுள்ள கற்பகமரங்களுந்திய அச்சமுத்திரத்தின்றுளிகள் இடிவிழுந்ததுபோல் தெய்வலோகத்தில் சென்றன. சமுத்திரத்திலுள்ள மலைகள் வெந்துபுகைந்துகொண்டு மேலெழும்பின. அக்கினிப்பொறிகள் ஆகாசத்தை யளாவினபடியால், அந்த ஆகாசத்திலோடுகின்ற மேகங்கள் வெந்து பூமியிலுதிர்ந்துவிட்டன. நிர்த்தனம் பண்ணிக்கொண்டிருந்த அரம்பாஸ்திரீகளினுடைய கறுத்த கூந்தலெல்லாம் விளர்த்துப்போய் விட்டன. இராமபாணங்கள் மார்பிற்பட்டுப் பாய்ந்ததினால் இரத்தங்கக்கிக்கொண்டு அனேக மகரமச்சங்கள் வற்றியுலர்ந்துபோய் விட்டன. திமிங்கிலங்களும் இன்னும் சில பெரியமச்சங்களும் அனேக கண்டதுண்டமாய் நறுக்குண்டு செத்தன. மலைகளெல்லா மெரிந்து சாம்பல்பறக்கவும், கிழாறுகொண்டு சமுத்திரஞ் சேறுகி அந்தச் சேறுந்தியவும், ஆதிசேஷனுடைய ஆயிரஞ் சிரசுகளுங் காய்ந்துபோகவும், இராமபாணங்க ளொவ்வொன்று நூறு - ஆயிரம் - கோடி - கோடானுகோடிகளாகப் புறப்பட்டன.

அச்சமுத்திரத்தின்கண் ணுள்ள வாளை-வரால்-கெண்டை-கெளிறு-குரவை-விலாங்கு-உளுவை-மலங்கு-பாறை-சூறை-தேடை-தேறி-சொள்ளை-திமிங்கிலம் — திமிங்கிலகிலம் இவையாதிய மீன்களெல்லாம் பொய்சொன்னவர்களுடைய குலம்போலக் கருவற்றுப்போய்விட்டன. பாய்மரங்களோடு கூடிய கப்பல்கள் சமுத்திரத்திலோடித் திரிவதுபோல, அனேக மீன்கள்பாய்ந்த அம்புகளோடு ஓடித் திரிந்தன. சமுத்திரமானது இரத்தங்கள்வழிந்து ஓடும்படியாக நெஞ்சுபிளப்புண்ட இரணியனைப்போலவும், சிவந்த அந்திவானத்தைப்போலவு மிருந்தது. பத்திபத்தியாக ராமபாணங்கள் பறந்துபோனதினாலே அந்தச் சமுத்திரத்திலிருந்த அனேக மீன்கள் வெந்து தீய்ந்துபோயின. அனேக மீன்கள் கரிந்துபோயின. அனேக மீன்கள் பொரிந்துபோயின. சுவாமியினுடைய பாணம் குடித்துவிட்டதினாலே வற்றி அங்கங்கே கொஞ்சங்கொஞ்சஞ் சலமுள்ளதாய்ப் பக்கத்தில் அனல்கள் சூழ்ந்திருந்து ஜுவாலையோடு வெந்துகொண்டிருக்கின்ற சமுத்திரம் கறுத்த சட்டிபோலவும், அதில்வேகின்ற சிலமீன்கள் நெய்யில்வேகின்ற மீன்கள் போலவு மிருந்தன.

ராமபாணங்களில்அனேகம்இரத்தத்தைக்குடிக்கிறதுபோற்சமுத்திரஜலத்தையெல்லாம் வற்றிப்போகும்படியாய்ப் பானம்பண்ணினதினாலே, அதிற்பிரகாசித்துக்கொண்டிருந்த இரத்தினக்கூட்டங்கள் எப்படியிருந்தனவெனில் கடல்வெந்து மவிக்கக்கூடாத மிருந்தநெருப்பைச்சொரிந்ததுபோன்றிருந்தன. சமுத்திரமுழுமையும் நீர்வற்றிவெளியாய்ப்போய்விட்டபடியினாலே சங்குகளெல்லாம் கொழுப்புடனேகரிந்துகிடக்கின்றமீனினங்களைச்சுடுதற்குவைத்திருக்கும் பாத்திரங்கள்போலிருந்த தல்லாமல், ஆற்றினிடத்திற்பிணங்களை

வரிசைவரிசையாய் வைத்துத் தகனஞ்செய்த அங்கங்கள் போலுமிருந்தன. சீறிக்கொண்டு வருகின்ற ராமபாணங்களொன்றோடொன்றுதாக்கி அக்கினியை உண்டாக்கினதால், மூங்கிற்காடுபற்றி யெரிகிறதுபோன்றிருந்தது. கடலிலுள்ள மீன்களும் — மற்றஜீவகோடிகளும் — இராமபாணத்தினால் துண்டிக்கப்பட்டு, அவற்றிலிருந்து மொழுகிவருகின்ற ரக்தவெள்ளங்கள் கடலினிடத்து சிலபக்கங்களில் அலைமோதிக்கொண்டிருந்தன.

ஸ்ரீராமபாண மறுத்துத்தள்ளத்தெறிபட்டு விழுந்த பெரியமரங்களும் அலைகளும் - ஆழ்ந்தசமுத்திரக்கொதிநீர் படும்போதெல்லாம் நெருப்புக்குபீர் குபீரென்றுபற்றி, உள்ளூன்றிய வேரோடுங்கூட எண்ணெயில்தோய்ந்து வேகின்றதுபோல வெந்தன. தேவதேவரான ஸ்ரீராமரால் விடப்பட்ட பாணமானது பிர்ம்மாவினுடைய சாபத்தைப்போலப் பிசகாமல், மனோவேகத்திலு மதிகமாகக்கடுகி, உக்கிரமான அக்கினியை அங்கங்கே கக்கிக்கொண்டு போகிறபடியினாலே சமுத்திரமானது தாமரைமலர்மலர்ந்திருந்த ஒரு தடாகம்போன்றிருந்தது. பெரியோர்கள் கோபித்தாலும் அதுசிறப்பைக் கொடுக்குமேயல்லாமல் கெடுதியைத் தரமாட்டாதென்பதைத் திருஷ்டாந்தமாய்க் கண்டோம். அஃதெப்படியென்றால் - உப்புச்சமுத்திரமென்று உலகத்தவர்கள் பழிக்கிறதுபோய் ஸ்ரீராமருடைய பாணப்பட்டு வற்றிப்போன அந்தத் தென்சமுத்திரம் சுத்தோதக சமுத்திரமாய்விட்டது. வரிசைவரிசையாக விருக்கிற பெரிய அண்டங்களையெல்லாம் வாரியுண்டருளின சாட்சாத் நாராயணனுக்கு இந்தச் சமுத்திரத்தை வற்றடிப்பதொருவல்லமையோ? பூமியை அமிழ்த்துவது சமுத்திரமென்றும், அந்தச்சமுத்திரங்களையும் ஊழிக்காலத்தில் வடவாமுகாக்கினியானது பக்ஷித்துப்போடுமென்றும் சொன்ன வேதவாக்கியத்தினர்த்தத்தை இவர் நிலைநிறுத்திக் காட்டினார்.

இராத்திரியும் பகலுமாக அந்தக் கடலுக்குள்ளாயிருந்து மங்களகரமான தவஞ்செய்துகொண்டிருந்த மகாரிஷிகள் அந்த ஸ்ரீயப்பதியினுடைய திருவடிகளைத் தியானித்துக்கொண் டிருந்தபடியால், இராமபாணத்தினால் வேகாதவர்களாகி அந்த அக்கினிமயமான ஜலத்துக்குள்ளேயே சஞ்சரித்தார்கள். தென்திசை வடதிசை முதலான எல்லாத் திக்குகளிலும் புகைப்படலங்கள் மூடிக்கொண்டதனால், சூரியனுடைய குதிரைகள் புகையாலுடல்கருகி நிறமாறி, நடக்கக்கூடாமல் வழிதப்பி நின்றுவிட்டன. தம்மைவிட்டு நீங்கினபேர்களனுபவிக்குந்தகைமை இன்னதென்றுதெரிந்துந் தெரியாதாரைப்போல், சக்கரவாளப்பக்ஷிகள் தம்மைவிட்டுப் பிரிந்திருக்கின்ற பேடுகளைத் தேடிக்கொண்டுபோய் அந்த அக்கினியிலகப்பட்டுத்தீய்ந் திறந்துபோய்விட்டன. பொறுமையற்ற கருங்கடல்முழுதும் அக்கினிவிசாலித்து வேகத்தொடங்கினபோது, அதன்கொடுமையை இன்னும் விவரித்துச் சொல்லவேண்டுமோ?

நெருங்கிய பெரும்புகைப்படலந் தங்களைச் சூழ்ந்துகொண்டபடியால் தேவர்களும் கண்ணிமைத்து வியர்வடைந்தார்கள். பூக்களைத் தேடிப்போகாமல், ஒளியைக்கண்டு அவ்விடத்தைச்சேர்ந்து பாவங்களெல்லாம் ஒன்றாய்க் கூடினதுபோன்றிருந்த வண்டுகளெல்லாம் அந்நெருப்பைக்கடந்துபோக வேறு வழியில்லாமையால் வருணராஜனுடைய விருத்தியடையாத புகழைப்போல் மடிந்துபோய்விட்டன. நெருங்கிக் கூடிக்கொண்டிருந்த கடற்பறவைகளெல்லாம் ஆகாசத்திற் பறக்கத்தொடங்கி, அவ்வாகாச வெளியிற்போவதற்குச் சக்தியில்லாமல் நெருப்புப்பற்றி யெரிகிற தேகத்தை யுடையவைகளாய்ப் பூமியிலுதிர்ந்துவிட்டன. இறந்துபோன பக்ஷிகளெல்லாம்போக சாகாதபக்ஷிகள் அக்கினிப்படலமானது சூழ்ந்துகொண்டபடியினாலே தாங்கள் முட்டையிட்டு வைத்தவிட மின்னதென்று தெரியாமல், வெந்தமுத்துக்களைத்தமது முட்டைகளென்று எடுத்துக்கொண்டு போயின. அக்கடற்கரையிலுள்ள குரங்குகள், ஓ பாவிகளே! சாட்சாத் எம்பெருமானை மனிதனென்றுநிந்தித்து, அவரிடத்திற்சேராமல் இங்கேயேயிருந்து விட்டோம். ஆனபடியினாலே அவர் நம்மைத் திருவுளத்தில் நினையாமற்போனார். என்று தங்களுடைய பற்களை இளித்துக்கொண்டு தாவிக்குதித்து ஓடிப்போய்விட்டன.

அதிக தீமையையுடையவர்களாய் கடலில் மறைந்துகொண்டிருந்த அசுரர்களெல்லாஞ் செத்து, பெரியமலைகளைப்போற் சமுத்திரத்தில் மிதந்தார்கள். பொற்குடமானது இடையில் விரிந்ததுபோலொத்த வரிகளையுடையபொன்னிறமான மான்களெல்லாம் வெந்து விழுந்துவிட்டன. ஆகாசகங்கையும் வற்றி வரண்டுவிட்டது. வானக்ஷத்திரங்களும் வெந்துபோய்விட்டன. சிவந்த நிறத்தையுடையவைகளாகவும், அக்கினியைவளர்க்கின்றவைகளாகவும், நீதியைப்போல நடக்கின்றவைகளாகவும், தபசைப்போல விர்த்தியானவைகளாகவும், கோபம் பலவுருவுகொண்டது போன்றவைகளாகவு மிருக்கின்ற ராமபாணங்கள்; அகஸ்தியமகா முனியைப்போலச் சமுத்திரத்தை வற்றக்குடித்து விட்டன. சமுத்திரத்தை மூடிக்கொண்ட தீயினாலே பூலோகமானது மரங்களோடு வெந்து இலங்காபட்டணத்தின் மதிலும் வேகத் தலைப்பட்டபோது, அதிலுள்ள ராட்சசர்களெல்லா முன்சுட்டுவிட்டுப்போன தூதன் மறுபடியும் வந்தானோவென்று பயமடைந்தார்கள். சூரியனைப்போலப் பிரகாசித்துக்கொண் டிருக்கின்ற மேருமலையானது பொற்காறுகளாக உருகியது. இரத்தந்தோய்ந்ததுபோன்ற முருக்கம்பூவுக்குச் சமானமாகக்காடுகள் நெருப்பாய் வெந்தன, பவழக்காடுகளெல்லாம் கரிக்குப்பலுக்குச் சமானமாய்விட்டன. பெரியமலைக்குச்சமானமாகப் பருத்திருக்கின்ற சிலமீன்கள் உயிர்தப்பிப் பிழைத்து, ஓரிடத்திலு மொதுங்குதற் கிடமில்லாதவைகளாய் இரத்தவெள்ளத்திற்குள் நுழைகின்றன. அவைகளிற் சிலமீன்கள் இந்த நீரைக்காட்டிலு நெருப்பே குளிர்ச்சியா யிருக்கின்றதென்று கரையிற்குதித்து உடல் துடிக்கின்றன.

இந்தப் பிரகாரமாக இராமபாணங்களானவை சுருண்டுவிழுகின்ற திரைகளையுடைய கடல்நீரையெல்லாம் பானம்பண்ணிப்போட்டு, இனிப் பானம்பண்ணுகிறதற்கு ஜலமில்லாமல் பூலோகத்திலுள்ள அந்தகாரத்தைக் கெடுத்து நரகலோகத்திலுள்ள இருளுமழியும்படியாகச் சூரியனைப்போலச் சென்றன. உலகத்தைச் சூழ்ந்திருக்கின்ற சப்தசாகரங்களையும் கொதிக்கச்செய்த இராமபாணங்கள் வேகமாய்ப்போய் மேலும் கீழுமாகப் பாய்ந்து பிரமாண்டத்தையும் உருவி, அப்புறத்திலுள்ள பெரும்புறக்கடலையும் தொடர்ந்துபோயின. ஆகாசங்கிழிந்து அவ்விடத்தில்நின்று முதிருகிற செவந்தமணிகள் சொர்க்கலோகம் உடல்கிழிந்து இரத்தவெள்ள மொழுகுகிறதுபோ லிருந்தன. கடலின் ஜலமெல்லாம்வற்றி அதன்குடல்கள் கிழிபட்டதுபோலப் பாம்புகள் நெளிந்தன. சமுத்திரம் ஜலம்வற்றி இரத்தினங்கள் வைத்திருக்கின்ற பெட்டியைப்போ லிருந்தது. இராமபாணங்கள் தைத்திருக்கின்ற சங்கங்கள் சட்டுவம்போலப் பிரகாசித்தன அநேகமாயிர பாணங்கள் தைத்ததினாலே மலைகளு மநேகமாயிரம் துண்டுகளாய்விட்டன. வித்வான்களாயினோர் கோபித்தால் வீரமனைத்தும் தேய்ந்து நசித்துப்போகிறவர்களைப்போல, அந்தச்சமுத்திரத்திலுள்ள முத்துக்கள் இராமபாணத்தால் வெந்து ஒன்று நூறாய்ச் சிதறிப்போயின.

இப்படி ஸ்ரீராமபாணத்தினாலே வெந்துமாண்ட ஜீவகோடிகளெல்லாம் நிரூபதமடைந்து விட்டன. அந்தச் சமுத்திரத்தில் நெருங்கிவளர்ந்த மூங்கிற்காடுகளிற்பற்றிய அக்கினி புறப்பட்டுச் சமுத்திரநீர் முழுதிலும் பரவியோடியது. அக்கொடியவக்கினியானது பூமியைச் சுற்றிலும் வளைத்துக்கொண்டதெப்படியிருந்ததென்றால், பூமிதேவி தரித்துக்கொண்டிருந்த நீலவஸ்திரத்தை நீக்கிவிட்டுச் செகப்புவஸ்திரத்தைத் தரித்துக்கொண்டது போன்றிருந்தது. படித்தவர்களும் படித்தவர்களு மெப்படி மனஞ்சகித்துக் கூடியிருக்க மாட்டார்களோ? அதுபோல ஸ்ரீராமபாணத்தினாலுண்டான அக்கினி இந்தச்சமுத்திரஜலத்தைப் பானம்பண்ணுவதைக்கண்டு சகிக்கமாட்டாத வடவாமுகாக்கினியானது உயிர்பதைத்து வேறொருகடலைநாடி ஓடத்தொடங்கியது. இந்தச் சமுத்திரத்திற்பற்றிய நெருப்பானது ஜீவகோடிகள் வாழும்படியான உலகத்தையெல்லா மூடிக்கொண்டு, ஆகாசபரியந்தம் பரவி, ஊழிக்காலத்தில் உலகங்களையெல்லாம் அழுத்தியழிக்கும்படியாகப் பொங்கிவருகிற பெரும்புறக்கடலை ஒத்திருந்தது. அக்கினியானது ஆகாசத்தை யளாவிச்சுட, அதைச் சகிக்கமாட்டாமல் தேவர்கள் சுவர்க்கலோகத்தைவிட்டுப் பிர்ம்மலோகத்திற்குப்போய் அவ்விடத்திலே தங்குவார்களேயானால், பூலோகத்திலிருக்கின்ற மற்றவர்களுடைய செய்கையை இன்னபடியென்று சொல்லவேண்டுமோ?

ஸ்ரீராமர் பிரமாஸ்திரந்தொடுக்க வருணன்வந்துதுதித்து தான்வருவதற்குக் காலநீடித்த காரணங்கூறுதல்.

கவி.

இடுக்கினியியம்புவ தென்னையிவ்வழி
முடுக்குவென்வருணனை யென்னமூண்டெழு
தடுக்கரும்வெகுளியான் சதுமுகன்படை
தொடுத்தனனமரருந் துணுக்கமெய்தினர்.

இப்பால் ஸ்ரீராமரானவர் இனிஅவன் வருத்தமுண்டாவதைஆலோசிப்பதென்ன? இப்போதே அவ்வருணனையோடி வரும்படிச் செய்கிறேனென்று அதிக உக்கிரமானகோபத்துடனே பிரமாஸ்திரத்தையெடுத்து வில்லிற்பூட்டினார். பூட்டினமாத்திரத்தில் தேவர்களெல்லா நடுங்கிவிட்டார்கள். இனியார் பிழைக்கப் போகிறார்களென்கிற பயத்தால் மேகங்களெல்லாம் கதறின. வருணனானவன் நாவிற்றண்ணீரில்லாமல் அபயக்கூக்குரலிட்டான். எல்லா லோகத்திலும் அடைபட்டிருந்த ஆறுகளெல்லாந் தத்தளித்துப்போய் விட்டன.

கவி.

அண்டமூலத்துக்கப்பா லாழியுங்கொதித்ததேழு
தெண்டிரைக்கடலின்செய்கை செப்பியென்றேவன்சென்னி
பண்டை நாளிருந்தகங்கை நங்கையும்பதைத்தாள்பார்ப்பான்
குண்டியிலிருந்தநீருஞ் சொளகொளக்கொதித்ததன்றே.

பிரமாண்டத்துக் கப்புறத்திலிருக்கின்ற பெரும்புறக்கடலுங் கொதிக்குமானால், ஏழுசமுத்திரங்களினுடைய செய்கையைச் சொல்லவேண்டுமோ? சாக்ஷாத் கயிலாசபதியினுடைய சடாபாரத்தில் ஆதிகாலந்தொட்டு வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஜலஸ்வரூபமாகிய கங்காதேவியும் பதைபதைத்துப்போயினாள். பிரமதேவனுடைய கமண்டலத்திலுள்ள தீர்த்தமும் சொளகொளவென்று கொதித்தது. தமக்குத் தயவுவந்தகாலத்தில் உலகங்களையெல்லாஞ் சிருஷ்டித்துக் கோபம்வந்தகாலத்தில் மறுபடியுஞ் சம்மரிக்கும்படியான சர்வேஸ்வரனை இந்தவருணன் அறியாமற்போனானே: அவருடைய கோபத்தைக் கண்டபின்பாவது வந்து அவரைக்காணப் புத்தியில்லாமல் தாமசப்பட்டானே: இவனைப்பார்க்கிலு மிராக்ஷசர்களா பகையாளிகளென்று தேவர்களெல்லா நடுங்கினார்கள். தானே தனியாயிருந்து தன்னிடத்திலேயே எல்லா வுலகங்களையும் பெற்றவனான சர்வேஸ்வரனால் கோபிக்கப்பெற்றால், இவனினிப் பிழைக்கிறதற்கிடமெங்கே? குற்றமில்லாதவர்கள் பேரிலும் இப்படிப்பட்ட தப்பிதம்வருகிறதற்குச் சம்பவித்ததேயென்று சமஸ்தாத்மாக்களும் வருணனைத் தூஷித்தன.

அப்போது வருணன் லோகமெல்லாம் அக்கினிச்சுவாலையோடு மிருந்த புகைகிளம்பினதினாலே வழிதெரிந்துபோகச் சக்தியில்லாதவனாகி, கண்களில்தாரைதாரையாய்ச்சலத்தைவிட்டுப் பக்தியுடனே உருகி, மனநடுங்கித்தொ

மூத கையனாகியும் ஏழையைப்போலக் கெஞ்சிப்புகழ்கின்ற சொல்லையுடையவனாகியு மெழுந்து, சுவாமி! தேவரீர் அடியேனை நினைத்ததன்மையைக் கடலுக் கக்கரையில்நின்ற நாய்போன்ற அடியேனறியவில்லையென்று சொல்லிக்கொண்டு சுவாமிக்குச் சந்தேக நீங்கும்படியாக அக்கினிபற்றியெரிக்கின்ற சமுத்திரத்தின்மத்தியிலே தட்டித்தடுமாறிக்கொண்டு நடந்து, குளறுகின்ற சொல்லையுடையவனாகியும் - வேகின்ற தலையையுடையவனாகியும் - பயந்தநெஞ்சையுடையவனாகியும் - கருகியிளைத்த தேகத்தையுடையவனாகியும் — கண்களிற் புகைமண்டிக்கொள்ளக் குருடனைப்போல வழிதடவிக்கொண்டு, மிகுந்தவருத்தத்துடனே துக்கப்பட்டுவந்து நின்று, குற்றமற்ற லோகத்திற்கெல்லாம் ரக்ஷகராகிய தேவரீரேகோபித்தால் உம்முடைய இரண்டுதிருவடிகளையல்லாமல் அடியேனுக்கு வேறுகதியொன்றுண்டோ? இந்தலோகமெல்லாமுமக்கு ஒருலட்சியமோ? உம்மையல்லாமல் எனக்குவேறு ரக்ஷகருண்டோ? உமக்கே அபயமபயமென்று அடிக்கடி சொல்லிக்கொண்டு இவ்வாறு துதிப்பதாயினான்.

வருணன் சுவாமியைத்துதித்தல்.

கவி.

ஆழிநீயனலுநீயே யல்லவையெல்லாநீயே
யூழிநீயுலகுநீயே வற்றுறையுயிருநீயே
வாழியாயடியேனின்னை மறப்பனோவயங்குசெந்தீச்
சூழுறவுலைந்துபோனேன் காத்தருள்சுருதிமூர்த்தி.

காட்டுவாயுலகங்காட்டிக் காத்தவைகடையிற்செந்தீ
யூட்டுவாயுண்பாய்நீயே யுனக்குமொண்ணாததுண்டோ
தீட்டுவான்பகழியொன்றா லுலகங்களெவையுந்தீய
வீட்டுவாய்நினையினாயேற் கித்தனைவேணுமோதான்.

சண்டவான்கிரணவாளாற் றயங்கிருட்காடுசாய்க்கு
மண்டலத்துறையுஞ்சோதி வள்ளலேமறையின்வாழ்வே
பண்டைநான்முகனையாகிச் சராசரமீன்றநாளிற்
புண்டரீகத்துவைகும் புராதனாபோற்றிபோற்றி.

கள்ளமாயுலகங்கொள்ளும் கருணையான்மறையிற்கூறும்
எள்ளலாகாதமூலத் தியாதுக்குமுதலாயுள்ள
வள்ளலேகாத்தியென்ற மாகரிவருத்தந்தீரப்
புள்ளின்மேல்வந்துதோன்றும் புராதனாபோற்றிபோற்றி.

அன்னைநீயத்தனீயே யல்லவையெல்லாநீயே
பின்னுநீமுன்னுநீயே பேறுநீயிகழ்வுநீயே
யென்னைநீயிகழ்ந்ததென்ற தெங்ஙனேயீசனாய
வுன்னைநீயுணராய்நாயே னெங்ஙனமுணர்வேனுன்னை.

ஓ ஸ்ரீராமமூர்த்தி! நீரே இந்தச்சமுத்திரங்கள். நீரே அக்கினி. மற்றப் பூதங்களும் நீரே. ஊழிக்காலமுநீரே. உலகங்களுநீரே. அந்த உலகங்களில் வசிக்கின்ற ஜீவகோடிகளுநீரே. இப்படிப்பட்ட உம்மையான்மறப்பேனோ?

அடியேன் மிகவுங்கொடிய அக்கினி சூழ்ந்தெரித்ததினால் வருத்தப்பட்டுப் போனேன். இரக்ஷித்தருளவேண்டும். சுவாமி! தேவரீர் இவ்வுலகங்களை யுண்டாக்குவீர். உண்டாக்கிரக்ஷித்தவைகளைக் கடையிசிற் சுட்டெரித்துவிடுவீர். ஓர் கவளமாகவும் உண்டருளுவீர். உம்மாலாகாத காரியமுண்டோ? மிகுந்தகூர்மையுள்ள ஒருபாணத்தினாலே இந்தமூன்று லோகங்களையுஞ்சுட்டு நாசமாக்கிப்போடுவீர். அடியேனுக்கு இவ்வளவுசெய்யவேண்டுமோ? ஓ மிகுந்த பிரசண்டகிரணங்களாகிய வாளாயுதத்தினால் எங்குமூடிய இருட்காட்டைவெட்டிச்சாய்க்கும்படியான சூரியமண்டலத்தில் வசிக்கின்ற ஜோதிஸ்வரூபரே? ஓ வேதங்களின் ஆதாரமே! ஓ நான்குமுகங்களையுடைய பிரமதேவனாகிச் சராசரங்களைச் சிருஷ்டித்தபோது தாமரசபுஷ்பத்தி லெழுந்தருளி யிருந்த அனாதிவஸ்துவே! ஓ ஒருவருக்கும் தெரியாம லுலகங்களையெல்லா மறைத்துவைத்திருக்கின்ற கிருபையோடுங் கூடின வேதப்பிரமாணமான வேதப்பிரதிபாதவஸ்துவான ஆதிகாரணவஸ்துவே! இரட்சித்தருள வேண்டுமென்றழைத்த கஜேந்திராழ்வானுடைய துக்கநீங்கும்படியாகக் கெருடபகவான்மீ தெழுந்தருளிவந்து சேவைசாதித்த ஓ புராதனரே! உமக்கு மங்களமுண்டாவதாக. எனக்குத்தாயு நீரே: தந்தையு நீரே: வேண்டியபொருளுநீரே: ஆதியு நீரே: அந்தமு நீரே: மோக்ஷமு நீரே: நரகமு நீரே. சர்வேஸ்வரரான நீரே உம்மை அறியாதிருந்தால் அடியேன் எப்படி யறியப்போகின்றேன்? அடியேனை இகழக்கூடுமோ? என்றிப்படி பலவாறாகக்கூறித் துதித்தனன்.

வருணதேவன் ஸ்ரீராமபிரானுக்குக் காணிக்கை செலுத்தல்.

கவி.

பாயிருள்சீக்குந்தெய்வப் பரிதியைப்பழிக்குமாலை
மாயிருங்கரத்தான்மண்மே லடியுறையாகவைத்துத்
தீயனசிறியோர்செய்தாற் பொறுப்பதுபெரியோர்மேற்றே
ஆயிரநாமத்தையா சரணமென்றடியில்வீழ்ந்தான்.

இவ்வாறு பத்திவினயத்துடன்துதித்த வருணனானவன் பூலோகத்திற் பரந்து தோன்றுகின்ற இருளைக்கெடுக்கும் பிரகாசமிக்க சகஸ்திரகிரணங்களையுடைய சூரியனைத் தோற்கடிக்கும்படியாக விளங்குகின்ற மாணிக்கமாலையைத்தனது மிகவும் பெரியகரத்தினால் சுவாமிக்குத் திருவடிகப்பணமாக எதிரிற் கீழ்வைத்து சிறியவர்கள் ஏதோகிஞ்சித்து தீமையான செய்கை செய்தார்களாயின் பெரியோர்கள் பொறுப்பதே கடமையல்லவா? ஆதலால் எனது சிறிய குற்றத்தைப் பொறுக்கவேண்டும் அநேகமாகிய திருப்பெயர்களையுடைய ரகுகுலோத்தமாவென்று திருவடியில் சாஷ்டாங்கமாகச் சேவித்தான். இப்படி ஒருமலையானது அக்கினி பற்றியெரிகிறதுபோன்றெரிகிற உருவத்துடனே சமுத்திரராஜன் அடியேனுமுமக் கபயமென்று சொன்னமாத்திரத்தில், மிகுந்த நெருப்பிலே காய்ந்து பொங்கிவழியும் பாலானது கொஞ்சந் தண்ணீரைத் தெளித்தமாத்திரத்தில் ஆறியடங்குவதுபோல் ஸ்ரீராமமூர்த்தி

கோபமாறி, அவ்வருணதேவனைக் கிருபையோடும்பார்த்து, ஓ புனல்வேந்தே! இயாம் உமதுமேல்வைத்த கோபமாறினேம்.பயப்படாதீர்.உமக்கபயந்தருகிறேனும். உம்மையாம்வேண்டிப் பிரபத்திபண்ணவும்வராமற் கோபித்தபிறகு வந்ததற்குக்காரணமென்ன? அதனை விவரமாகச்சொல்லுமென்று நியமித்தனர். அம்மாத்திரத்தில் வருணன் சுவாமியைத்தொழுது சொல்லத்தொடங்கினான். சுவாமி! பூமிதேவியைப்பார்க்கிலு மிகுந்த பொறுமையை யுடைய உமது பத்தினியாகிய சீதாபிராட்டியாருக்குச் சம்பவித்த துன்பத்தை இன்றைக்குத் தேவரீருடைய வார்த்தையினாற்று னறிந்தேன். ஏழுசமுத்திரங்களுக் கப்புறத்தில் மீன்கள் சண்டைசெய்துகொண் டிருந்ததை விலக்கப்போயிருந்தேன். ஆகையினாலே தேவரீருடைய நியமனத்தை அடியேனறியாம லிருந்துவிட்டேன். இதுதான் உள்ளசமாச்சாரமென்று வருணராஜன்கூறி வணங்கினான்.

இவ்வாறுகூறிய வருணனுடைய வார்த்தையைக்கேட்ட ஸ்ரீராமர் இரக்கமுற்று, இந்தக்காரிய நிற்கட்டும். இந்தப்பிரமாஸ்திரம் சும்மா வியர்த்தமாய்ப்போகாது.இதைப்பிரயோகிக்கும்படியான இலக்கு இன்னதென்று சொல்லக்கடவீர். என்று நியமிக்கவும் வருணன் மிகுந்தசந்தோஷத்துடன் ஸ்வாமியைத்தொழுது, ஓ மலையைக்காட்டிலும் உயர்ந்ததிருத்தோள்களையுடைய சக்கரவர்த்தித் திருக்குமாரரே! அடியேனும் இந்த லோகங்களும் பிழைத்தோம். பருகாந்தாரமென்கின்ற தீவிலே நூறுகோடி பேர்களுக்கு மதிகமாக அசுரர்களிருக்கின்றார்கள். அவர்கள் இந்தலோகத்து ஜீவகோடிகளில் அனேகர்களைத் தின்றுவிட்டார்கள். அவர்களெனக்கு மகாபகையாளிகள். இந்தப்பிரமாஸ்திரத்தை அவர்கள்மேற் பிரயோகித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான்.

வருணன்மேல் தொடுக்கவிருந்த பிரமாஸ்திரத்தை அவ்வருணன் வேண்டுகோளின்படி சுவாமி பிருகாந்தரதீவிலுள்ள அசுரர்கள் மேற்றொடுத்தல்.

கவி.

கோடிநூறெரிந்துளோர்க்கு முணர்விற்குநிமிரநின்றோன்
கோடிநூருயதீய வவுணரைக்குணங்களோடும்
ஓடிநூறென்றுவிட்டா னோரிமையொடுங்காமுன்னம்
பாடிநூருகநூறி மீண்டதப்பகழித்தெய்வம்.

கோடானுகோடியாகிய வேதாகமசாஸ்திரங்களைக் கரைதீரக் கற்றுணர்ந்த நிபுணர்களின் அறிவிற்கு மெட்டாது மேலாகநின்ற எமது கர்த்தாவாகிய ஸ்ரீராமபிரானனவர். நூறுகோடி பேர்களான அந்தத்துஷ்ட அசுரர்களை அவர்களுடைய வம்சசகிதமாகச் சீக்கிரமாய்ப்போய்ச் சம்மரித்துவிடும்படியாக ஆக்கியாபித்து அந்தப் பிரமாஸ்திரத்தைவிட்டார். அம்மாத்திரத்தி லப்பிரமாஸ்திரமானது ஒருக்ஷணநேரத்திற்குள்ளாக அவர்களைச் சுட்டெரித்துப்போட்டு, மறுபடியுஞ் சுவாமியின் அம்பறாத்தூணியில்வந்து நுழைந்துகொண்டன.

அப்போது ஸ்ரீராமர் வருணபகவானைநோக்கி, சற்கர்மங்களைச்செய்து தருமந்தப்பாதவர்களுக்கு எப்போதும் நன்மையேசேருமல்லது கெடுதியுண்டாகமாட்டாது. அழித்துவிடும்படியாக உம்மேற்பிறந்த கோபமானது துஷ்டசெய்கையையுடையவர்களான அசுரர்களுக்கே தீமையைச்செய்தது. பாபத்தைச் செய்துகொண் டிருந்தவர்களான அவ்வசுரர்களைத்தேடி அனேககாததூரமோடி, தீபத்தைதப்போன்ற ஞானமுடையவர்களான வேதமூர்த்திகளாலிடப்பட்ட சாபத்துக்குச்சமானமாக எம்முடைய வஸ்திரமானது சுட்டுவிட்டபடியினாலே, தர்மத்தைக்காட்டிலும் பலமுள்ளதொன்றுண்டோ. ஓ வருணதேவனே! நீ ரெம்மிடத்தில் அபயமென்று புகுந்தீர், அப்படிபுகுந்த உமக்கு அபயங்கொடாவிட்டாற் பழியுண்டாமென்று நாம் கோபமாறினோம். பாதகர்களாகிய ராவணாதி ராக்ஷசர்களுடைய தலைகளை அறுக்கும்படியாக இந்தச் சமுத்திரத்தைத் தாண்டிப்போகிறதற்கு எங்களுக்கு வழிகாட்டவேண்டும். என்று சுவாமிகேட்கவும் வருணனவரைத் தொழுது சொல்லுகிறான்.

வருணன் சோற்படி ஸ்ரீராமபிரான் சுக்கிரீவனாதியரோடு சேதுபந்தனஞ் செய்ய வாக்கியாபித்தல்.

கவி.

நன்றிதுபுரிதுமன்றே நளிகடற்பெருமைநம்மால்
இன்றிதுதீருமென்னி லெளிவரும்பூதமெல்லாம்
குன்றுகொண்டடுக்கிச்சேது குயிற்றுதிரென்றுகூறிச்
சென்றனனிருக்கைநோக்கி வருணனுமருளிற்சென்றான்.

ஓ தபஸ்ரேஷ்டரான சுவாமீ! இந்தச் சமுத்திரத்தினுடைய ஆழமும் அகலமும் அறிகிறதற்கு அடியேனாலுமுடியா. இதன் ஜலத்தை இறைத்துக் கட்டிவைக்கிறதற்கு அடுக்காகவிருக்கின்ற இந்த யேழுலோகங்களும்போதா. மேலும்—தேவரீருடைய சேனைகள் இதையிறைத்து வற்றடிக்கிறதற்கு அநேககாலஞ் செல்வதுமல்லாமல், மனத்தளர்வையு மடைந்து விடும். எல்லா ஜீவகோடிகளும் கல்லைப்போல வலியுடையவைகளாய் ஒன்றின்மேலொன்றுய் நின்றாலும், இதில்மூழ்கிமாய்ந்துபோய்விடும். ஆகையால்—என்மேல்வைத்த பொருளொன்று நழுகிவிழவொட்டாமல் எத்தனைகாலமானாலுஞ் சுமந்துகொண் டிருக்கின்றேன். தேவரீர் என்தலையின்மீது ஒரு சேதுவைக்கட்டிச் சந்தோஷமாக எழுந்தருளுமென்று விண்ணப்பம்பண்ணிக்கொண்டான். அதுகேட்டாலும் ஸ்ரீராமரானவர் அப்படியே செய்கிறோமென்று சொல்லி, தம்மைப் புடைசூழ்ந்த வானரவீரர்கட்குத் தலைவனான சுக்கிரீவமகாராஜனைப் பார்த்து, நம்மிடத்தில் வருணதேவன் கொண்டிருக்கின்ற நற்குணத்தினாலே அதிசீக்கிரத்தில் தீரும்படியாக யாவருமலைகளைக் கொண்டுவந்து அடுக்கிச்சேதுகட்டுங்களென் றுநியமித்துவிட்டு, சுவாமி தம்முடைய இருப்பிடம்போய்ச் சேர்ந்தார். வருணதேவனும் ஸ்வாமியினிடத்திற் சந்தோஷமாய் விடைபெற்றுக்கொண்டு போய்விட்டான்.

வருணனை வழிவேண்டபடலம் — முற்றிற்று.

№ 46. வானரத்தச்சனாகிய நளனாற்சுக்கிரீவனாதியர்கடலிற்சேதுபந்தனஞ் செய்து ஸ்ரீராமருக்கறிவித்தல்.



இராவணனாலேவந்தசுகசாரணர் இராமனாதியர்பலமறிந்துபோய் அறிவித்தல்.



சேதுபந்தனப்படலம்.

ஸ்ரீராமஜெயம்.

ஏழாவது,

சேதுபந்தனப் படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமபிரானுத்தரவின்படி சுக்கிரீவமகாராஜன் வானரத் தச்சனாகிய நளனையழைப்பித்துச் சமுத்திரத்தைப் பந்தனஞ்செய்வதற்கான ஆலோசனையை முடிவுபடுத்த, அஃதறிந்த ஜாம்புவந்தராக்ஞையால் வானரசைனியங்களும் வானரவீரர்களும் அளவற்ற மலைகளையு மரங்களையு மோயாமற் கொண்டுவந்து நிரப்ப நளனானவன் மூன்று தினத்தில் சேதுபந்தனஞ்செய்து முடித்து ஸ்ரீராமனுக் கறிவித்தமை சொல்லப்படுகின்றது.

சுக்கிரீவன் சேதுபந்தனஞ்செய்ய நளனுக் காக்கியாபித்ததுணர்ந்த சாம்புவர் கட்டளைப்படி வானரசைனியங்கள்செய்யும் விபரீதம்.

கவி.

அளவறுமறிஞரோ டரக்கர்கோமகற்
கிளவலுமினிதுட னிருக்கவெண்ணினன்
வினைவனசெய்வன முடிக்கவேண்டுவான்
நளன்வருகென்றனன் கவிக்குநாயகன்.

வானரகுலத்தரசனாகிய சுக்கிரீவமகாராஜன் மிகவும் அறிவிற் சிரேஷ்டராகிய ஆஞ்சநேயர் முதலிய அளவற்ற தனது மந்திரிமார்களுடன், இராக்ஷசகுலாதிபதியாகிய இராவணனுக் கிளைய விபீஷணர் தம்முடன் கூடியிருக்க ஆலோசித்து, இனிநடக்கவேண்டிய வேலையை முடிக்கும்படித் தீர்மானிக்கிறதற்கு வானரதச்சனாகிய நளனைவரவழைத்தான். அப்படியே நளன்வந்து சுக்கிரீவமகாராஜனுக்குத் தெண்டனிட்டு, ஓ மகாராஜனே! அடியேனை யழைப்பித்தகாரிய மென்னவென்று கேட்டனன். அதற்குச் சுக்கிரீவமஹாராஜனவனைநோக்கி, நாமெல்லாம் இலங்கைக்குச் செல்லும்படி இந்தச் சமுத்திரத்தில் அணை செய்யவேண்டு மாதலால், அதற்குத்தக்கபடி ஆலோசனைசெய்து விரைவில் முடிக்கவேண்டுமென்று சொல்லினன். அதுகேட்ட நளன் அவனை நமஸ்கரித்து, ஐயா சுக்கிரீவமகாராஜனே! கடலைவழியாகக்கொள்ள சேதுகட்ட வேண்டுமேயானால் நம்முடைய சைனியங்களுக்கு மலைகளைக் கொண்டுவரும்படி நியமியும். அடியேன் மேருவையும் அணுவையும் வித்தியாசந்தோற்ற வொட்டாமற் படியச்செய்து கட்டுகிறேனென்றான்.

கவி.

இளவலுமிறைவனு மிலங்கைவேந்தனும்
அளவறுநங்குலத் தரசுமல்லவர்
வளைதருங்கருங்கட லடைக்கவும்மெனத்
தளமலிசேனையைச்சாம்பன்சாற்றினன்.

கருவரைகாதங்கள் கணக்கிலாதன
இருகையிற்றோள்களிற் சென்னியேந்தின
ஒருகடலடைக்கமற் றெழிந்தவேலைகள்
வருவனவாமென வந்தவானரம்.

அப்போது சாம்புவர் வானரசேனையைப்பார்த்து, இளையபெருமாளும்—சுவாமியும்—விபீஷணாழ்வாரும்—சுக்கிரீவமகாராஜனுமல்லாத மற்றவர்களெல்லாம் இலங்கையைச் சூழ்ந்திருக்கின்ற சமுத்திரத்தைப் பந்தனஞ்செய்கிறதற்குப் புறப்படுங்களென்று சொன்னர். அந்தப்பிரகாரமே வானரசேனைகள் வெகுதூரம்போய் அனேக மலைகளைப் பெயர்த்துக்கொண்டு, இரண்டு கைகளிலும் — இரண்டு தோள்களிலும் — தலையின்மேலுஞ் சுமந்துகொண்டு, ஒரு சமுத்திரத்தை யடைக்கிறதற்கு மற்றச் சமுத்திரங்களெல்லாஞ் சேர்ந்துவந்ததுபோலப் புறப்பட்டுவந்தன. சிலவானரங்கள் மலைகளைப் பெயர்த்துக்கொண்டிருந்தன. அப்படிப் பெயர்க்கப்பெயர்க்க அவைகளைச் சிலவானரங்கள் தலைமேல் ஏந்திக்கொண்டு வந்தன. சிலவானரங்கள் தலைமேற் சுமந்துகொண்டு வந்தன. சிலவானரங்கள் அந்த மலைகளால் கடலைத்தூர்த்தன, சிலவானரங்கள் அப்படி கடலைத்தூர்த்த சந்தோஷத்தினுலே நின்று ஆர்ப்பரித்தன. சிலவானரங்கள் கூத்தாடின. சில வானரங்கள் பாட்டுப்பாடின. சிலவானரங்கள் ஒருமலையைக் காலாலுருட்டிக்கொண்டும், இரண்டுமலைகளை இரண்டுதோளின்பேரில் தூக்கிக்கொண்டும், ஆகாசத்தையளாவிச் சூல்கொண்ட மேகங்களாற் சூழப்பட்ட ஒரு பெரியமலையைத் தலையிற் சுமந்துகொண்டு, ஒருமலையை வாலிற்கட்டி யிழுத்துக்கொண்டும் வந்தன.

இந்தப் பிரகாரமாகக் கைக்குக்கை கொண்டுவந்து கொடுக்குந்தோறும் கொடுங்கள் கொடுங்களென்று நளனெனவன் வேகப்படுத்தினபோது, மூன்று கோடி வானரங்கள் ஒன்றாய்ச்சேர்ந்து தூக்கிக்கொண்டுவந்த பெரியமலையையும் அந்தநளனென்கிற வானரத்தச்சன் ஒரு கையைநீட்டி வாங்கிவைத் தடுக்கித் தன்சாமர்த்தியத்தைக்காட்டி, வருணதேவனை நடுங்கும்படியாகச் செய்தான்.

கவி.

மஞ்சினிற்றிகழ்தரு மலையைமாக்குரங்
கெஞ்சுறக்கடிதெடுத் தெறியவேநளன்
விஞ்சையிற்றங்கினன் சடையன்வெண்ணெயில்
தஞ்சமென்றோர்களைத் தாங்குந்தன்மைபோல்.

மேகமண்டலம் வரையில் அளாவி உயர்ந்து பிரகாசிக்கின்ற பெரியமலைகளை வானரக்கூட்டங்கள் அதிசீக்கிரமாக எடுத்தேந்திவந்துவீச, அப்போது நளனெனவன். திருவெண்ணெய் நல்லூரை வாசமாகக்கொண்ட சடையப்பமுதலியார் தம்மையாதாரமென் றடைந்தோர்களைத் தாங்குகின்ற தன்மைபோல், தான்கற்ற சிற்பசாஸ்திரத்தின் முறைப்படி தனது கரத்தால் தாங்குவான். வெற்றியையுடைய வானரசேனைத் தலைவர்கள் பெரியமலைகளைத்

தங்கள் கால்களால் உதைத்து அசைக்கும்போது, அந்த மலையின்பேரிலிருக்கின்ற மேகங்களெல்லாங் கூச்சலிட்டுக்கொண் டோடின. யட்சர்களும் யட்சஸ்திரீகளும் ஓட்டம்பிடித்தார்கள். வண்டுகள் சப்தித்துக்கொண் டிருக்கின்ற பெரியமலைகளை அலைகளையுடைய கருங்கடலின் கரையிற் கொண்டுவந்து அணைகட்டுவதற்குக் குவித்துவைத்திருக்க, அவைகளின்மேல் மோதுகின்ற அலைநீர்த்திவலைகள் சுவர்க்கலோகத்தைத் தாண்டிப்போய் மறுபடியுந்திரும்பிப் பூமியில் விழுகிறபடியால் தேவலோகத்திலு மழைபெய்ததாயிற்று.

இப்படி மலைகளை அடியோடேபிடுங்கி வானரத்தலைவர்கள் எறிகிறபோது அந்தமலைகள் ஒன்றின்பேரிலொன்றுபட்டுச் சமுத்திரஜலத்தில் நெருப்பு பறக்க, அந்தநெருப்பை வருணன்பார்த்து, இது ராமபாணநெருப்போ வென்று பயந்தான். பசுக்கண்ணனென்னும் பேருடைய ஒருவானரவீரன் ஓர்பெரியமலையைக் கையில் தூக்கிக்கொண்டுவந்து சமுத்திரத்தி லெறிந்தபோது, அந்தக்கடலிலுள்ள முத்துக்கள் நீர்த்துளிகளோடுங்கூடச் சிதறி ஆகாசத்திற்போய் வானநட்சத்திரங்களுக்குச் சமானமாகப் பிரகாசித்தன. செவந்த மலைகளைப்பிடுங்கி எறிந்தபோது நீர்த் துளிகளோடெழும்பிய முத்துக்கள் முன்பு தொத்தியிருந்தமுத்துக்களோடு பதிந்ததினால், ஆகாசத்திற் படர்ந்திருக்கின்ற மேகங்கள் மேற்கட்டும் வஸ்திரத்துக்கொப்பாகிச் சூரியனுக்காகப் போடப்பட்ட முத்துப்பந்தலைப் போலுமிருந்தன.

மேகங்களாற் சூழப்பட்ட மலைகளுடன் அலைசுருட்டுகின்ற கடலில்வந்துவிழுந்த யானைகள் பெரியவாயையுடைய சுறாமீன்கள்வந்து கௌவினமாத்திரத்திற் பயந்து, பூர்வத்திலே தடாகத்தினிடத்து முதலையினாற் கௌவப்பட்டுப்பயந்து ஆதியந்தமில்லாத பரம்பொருளேயென்று துதிக்கையைத் தூக்கிக்கொண்டு கூப்பிட்ட கஜேந்திரனுக்கொப்பா யிருந்தன. புலால் நாறிக்கொண்டிருந்த சமுத்திரசலமானது மிகவும் இனிமையுண்டாகும்படி ஒழுகுகின்றதேனும் புஷ்பங்களும், சந்தனக்கட்டைகளும், அகிற்கட்டைகளும், இன்னமநேகவாசனைத்திரவியங்களும், ஆகாசமுழுமையுங் கமழுகின்ற தேவகந்தம்போலநெருங்கிப் பரிமளிக்கின்றபடியினாலே வாசமூட்டிக் குடத்தில் நிறைத்துவைத்திருக்கின்ற திருமஞ்சனதீர்த்தம்போல வாசங்கமழ்ந்தது. மிகுந்த கொடையாளர்கள் தங்கள் குடும்பமெல்லாம் சிறுமைப்பட்டாலும் தாங்களக் கொடையினின்று மாறார்களன்றோ? அதுபோலமாமரங்கள்முதலியகனிவிருட்சங்களோடுங்கூடிய பெரியமலைகளெல்லாம் தங்களிடத்திலுள்ள கனியும் - காயும் — தேனும் - மாமிசமும் - திவ்விய பரிமளபுஷ்பங்கள் முதலான மற்றெல்லாவற்றையும் சமுத்திரத்திலுள்ள மீன்கள் பெற்றுக் கொள்ளும்படியாகக் கொடுத்துச் சிறப்பையடைந்தன.

மிகுந்தசேற்றுக்குள் அமிழ்ந்துபோகின்ற மலைகள் தமக்குள்ள செல்வங்களைக்கொடாமல் ஒளித்துக்கொள்ளுகின்ற லோபிகளைப் போலவும்; அவைகளிலுள்ள தேனிறைந்த புஷ்பங்களையும் - காய்களையும் — கனிகளையும்

இன்னுமுள்ள மற்றப்பொருள்களையும் உண்ணப்பொறாத வெண்மையான மீன்களெல்லாம் கொடைபெறாத யாசகரைப்போலவு மிருந்தன. மேலும் - காற்றாடியைப்போல் மிகுந்தவேகமாய்த் திரிந்துகொண் டிருக்கின்றவானரங்கள் பெருமலைகளைச் சடுதியிற் கடலிற்போடும்படியாகப் பெயர்த்தபோதும் அப்பெரிய மலையிலுள்ள பாம்புகள் யானையைவிழுங்கிப் போட்டு நகரமாட்டாமல், அறிவில்லாதவர்கள் துன்பம்வந்து சம்பவித்தபோதும் உணர்வடையாதிருப்பதுபோலச் சோர்ந்து உறங்கிக்கிடந்தன. ஆபரணத்துக்கொப்பாய் மின்னுகின்ற பற்களையுடையவைகளாய்ச் சமுத்திரத்தி லிருக்கின்ற முதலைகளும், துதிக்கையுடையவைகளாய் மலையிலிருக்கின்ற மதயானைகளும் கர்ச்சித்துக்கொண்டு, ஒன்றுடனொன்றெதிர்த்துச் சுற்றிப்பற்றி இடியுடன்கலந்த ஊழிக்காலத்தின் மேகத்திற்கொப்பாக மிகுந்தயுத்தஞ் செய்தன.

அன்றியும் – அற்பபுண்ணியஞ் செய்தவர்க ளிறந்து சுவர்க்கமடைந்து அப்புண்ணியத்திற்கிடாக அந்தச்சுவர்க்கத் தலத்தைக் கண்ணால்மாத்திரங்கண்டு மீள்வதுபோல, சில வானரவீரர்களெறிகின்ற மலைகள் ஒன்றின்மேலொன்றுபட்டு எழும்பித் தேவலோகத்திற்சென்று, அங்கேதங்காமற் கீழே வீழ்ந்தன. தங்கள் நிலைமைவிட்டால் பலவான்களும், அபலவான்களாவார்களென்று அறிவாளிகள் சொல்லுவார்களல்லவோ ? அதுபோல வானரவீரர்களால் எறியப்பட்ட மலைகளில் முன்னேவசித்திருந்த வல்லமையுள்ள சிங்கங்களும், புலிகளும், யானைகளும், கூர்மையான பற்களையுடைய சுறாமச்சியங்களாற் கொல்லப்பட்டு நீரினிடத்தில்மாண்டன. கொடையாளிகள் தங்கள்புத்தி பூர்வமாக உதவாவிட்டாலும் அவர்கள் அயிஸ்வரியங்கள் யாவர்களுக்கு முபகாரமாவதுபோல, பெரியமலைகளின் சிகரத்திலிருந்துபெருகியொழுகுகின்ற பூந்தேன்களை அம்மலைகளே கொடாவிட்டாலும் கடல்மீன்கள் நிறையக்குடித்து வானரங்களைப்போலச் சந்தோஷித்துத் துள்ளிக்குதித்தன.

மிகுந்த நெருப்புண்டாக ஒன்றோடொன்று தாக்கும்படி வானரங்கள் அதிகமாக மலைகளைக்கொண்டுவந்து இறக்கினவேகத்தினாலே, தேனைச்சொரிகிறதுபோலக் குளிர்ந்த நீரைச்சொரிகின்ற அம்மலைகளில் விளைந்த மூங்கிலிற்பிறந்த முத்துகளுக்கு வாய்விரிந்த இப்பியினிடத்திற்பிறந்த முத்துக்களும் - வலம்புரி முத்துக்களும் – விருந்துகொண்டாடின. வெண்ணெய் நல்லூரி லடைக்கலமென்று வந்தவர்களைச் சடையப்பமுதலியார் ஆதரித்துத் தாங்குவதுபோல, வானரசேனைவீரர்கள் பெரியமலைகளை வருத்தப்பட்டுப்பெயர்த்தெடுத்துக்கொண்டுவந் தெறிந்தபோதிலும் வானரதச்சனாகிய நளன் தன்வித்தியா சாமர்த்தியத்தால் அவைகளை ஒரு அநாயாசமாகவேந்தி வாங்கினான். ஆகாசத்தை யளாவிக்கொண் டிருக்கின்ற மலைகளை வானரவீரர்கள் வேரோடும்பெயர்த்தெடுத்துக்கொண்டுவந்து சமுத்திரத்திற் கும்பற்கும்பலாய்க்குவித்து விட்டபடியினாலே, கடல்நீரெல்லாம் பூமியில்தேங்கி பூமிகடலா

கவும் கடல்பூமியாகவு மாறிவிட்டன. சாக்ஷாது தாரகமந்திர வாச்சியனாகிய ஸ்ரீராமபிரான் விரும்பினால் எது எப்படியாகமாட்டாது?

கொடுமையான சிங்கங்கள் - வேங்கைப்புலிகள் - யாளிகள் - இவைமுதலியன சூழ்ந்துகொண்டிருக்கின்ற மலைகளும் விருக்ஷங்கள் முதலானவைகளு நெருங்கியிருக்கின்றபடியினாலே, நெய்தனிலம் குறிஞ்சிநிலமாய்விட்டது. மலையிலுள்ளமிருகங்கள் உண்ணக்கிடையாதவைக ளிவையென்றுசொல்லுகிறதற்கின்றி அவைகளுக்குவேண்டிய ஆகாரங்களில் எவையும்யம்மலையிலுண்டு; அப்படிக்கிருந்தும் அம்மிருகங்கள் சமுத்திரத்தில் வீழ்ந்தபோது தாம் உண்ணத்தகாத மீன்களாலே உண்ணப்படாமலிருந்த மிருகங்க ளொன்றுமில்லை. கொல்லாமல் வளர்க்கின்றவர்களிடத்தில் மிகுந்த தயவுண்டாயிருக்கிறபடியினாலே அப்படிப்பட்டவர்களைவிட்டு ஒருயிரும் விலகாதன்றோ? அதுபோல இம்மலை எங்களுக் காதாரமாயிருக்கின்றதாகையா லிதை விடோமென்று தொடர்ந்ததுபோல எல்லாமிருகங்களும் அம்மலையுடனே கடலில்வந்து சேர்ந்துவிட்டன. இதுபோலவே உலகப்பற்றில்லாத ரிஷிகளெல்லாரும் தினந்தோறும் வருத்தமில்லாம லுண்ணும்படியாக மிகுந்த கனிகளையும் காய்களையும் பெற்றுச் சந்தோஷமாகத் தவமுஞ்செய்கிறதற்கு நல்லவிடமாயிருந்தபடியால், அம்மலைகளைவிரும்பி அவைகளுடன் தாமுமுடிகிறதற் கிச்சித்தார்கள்.

இந்த மலைகளின்மேற் புலால்தின்று வாழ்ந்துகொண்டிருந்த இராக்ஷசர்கள் தலையின்மேற் கையைவைத்துக்கொண்டு, நமக்கினி இருக்கிறதற்கு மலையிலிடங்கிடையாது, அதைவிட்டாலும் வேறேவாழும்படியான இடமும் நமக்கில்லையென்று சொல்லிக்கொண்டு இலங்கையைப்போய்ச்சேர்ந்தார்கள். சமுத்திரநீரில் முழுகாமலும் - மேலேறிவராமலும் - சிறப்பாகக்கட்டப்பட்ட சேதுவணைக் கட்டினுடைய இரண்டு பக்கங்களிலும், தங்கள் கூட்டத்துடனே வரிசைவரிசையாய்ச்சேர்ந்த சிங்கங்களும்- யாளிகளும் - அந்தச் சேதுவுக்கு இரண்டுபக்கத்திலும் கட்டப்பட்ட ஒழுங்கான எழுதகம் போன்றிருந்தன. முந்திப்போட்ட பளிங்கு மலைகள் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றதைத் தெரியாமல் இடையில் வெளிவிழுந்திருக்கின்றதென்று கருதி, அவ்வெளியை மூட வேண்டுமென்று வானரவீரர்கள் சிலமலைகளைக் கொண்டுவந்து சேர்த்தார்கள்.

பூமியானது பள்ளமாய்ப் போகும்படியாக வானரங்கள் பிடுங்கியமலைகளின்வேரைப்போல, அந்தமலைகளினுடைய குகைகளில் நின்றும் பாம்புகள் நழுவிப் பூமியில் தொங்கின. அந்தச் சேதுவில் சூரியகாந்த மலையின்பக்கத்திற் சில இருண்டமலைகளையும் வரிசையாக அடுக்கிவைத்திருப்பவை எப்படியிருப்பனவென்றால், கிருபாமேகமாகிய ஸ்ரீரகுகுலோத்தமரானவர் வருணராஜன் வெறுங்கழுத்துடனிருக்கின்றானென்று அவனுக்குத் திருப்பிக்கொடுத்த வருணசரமாகியஇரத்திநமாலைபோன்றிருந்தது. யோகீஸ்வரர்கள் தங்

ளுக்குச் சொந்தமான தேகத்தைவிட்டு மறுகூடுபாய்ந்து சித்துவிளையாடுகிற துபோல, மலைப்பாம்புகள் தாமுன்பு வாழ்ந்துகொண்டிருந்த மலைகளைவிட்டு அம்மலைகளின் பக்கத்திற் சேதுவின் கட்டடத்துக்காகப் போடப்பட்ட வேறுபெரிய மலைகளின்குகையில் நுழைந்தன.

அனுமார் முதலான வானரவீரர்கள் செய்த சகாயத்தினால் நளன்சேதுபந்தனஞ் செய்துமுடித்தல்.

கவி.

சேதுவின்பெரு மைக்கிணைசெப்புவோர்
ஏதுவேண்டுமென் றெண்ணுவதென்கொலோ
தூதனிட்ட மலையின் றுவலையால்
மீதுவிட்டுல குற்றன மீன்களும்

அனுமாராற் கொண்டுவந்து போட்ட மலையினாற்சிதறுண்ட நீர்த்துளியோடு அந்தச் சமுத்திர ஜலத்திலுள்ள மீன்களெல்லாம் சகலாத்ம கோடிகளையும் சம்ரக்ஷணைசெய்யும் ஸ்ரீ உபேந்திரனுடைய லோகத்தைப்போய்ச்சேர்ந்ததினால், அந்தச் சேதுவினுடையசிறப்பைச் சொல்லுகிறதற்கு ஒருமுகாந்திரம் வேண்டுமென்று ஆலோசிக்கவும் வேண்டுமோ? அந்த வாயுபுத்திரனாகிய அனுமாருடைய நீண்ட தோள்களைப் போலப் பருத்திருக்கின்ற மலைகளைக் கரடிப்படைக்குத் தலைவராகிய ஜாம்புவர் பிடுங்கியெறிந்த வேகத்தினாலே சிதறிப்போன கடல்நீரானது தேவர்களுடைய சிரசின்மேற்போய்ப் பட்டது. இடியுடன்கலந்த மேகங்கள்சூழ்ந்த மலைகளைப் பனசனென்கிறவானரவீரன் கொண்டுவந்துபோட, அவைகள் பாதாளலோகபரியந்தம்பாய்ந்ததினாலே அவைகளை ஆயிரம்பணாமுடியையுடைய ஆதிசேஷமூர்த்தி தாங்கமாட்டாமல் அந்த லோகவாழ்வை வெறுத்துவிட்டுப் பூலோகத்திற்கு வந்துவிடப் புறப்பட்டார்.

நீலனென்பவன் ஒரு பெரியமலையைப் பிடுங்கியெறிய, அந்த மலையானது சமுத்திரத்தினுடைய அடித்தரைவரையிலும் தாக்கிச்சமுத்திரஜலமெல்லாம் பொங்கிக் கரைக்குமேற்பட்டு வழிந்து பூமிமுழுவதும் சலமூடிக்கொண்டதினாலே, உலகத்துள்ள ஜனங்களெல்லாம் அழுதுகொண்டோடத் தலைப்பட்டார்கள். இப்படிவானரவீரர்கள் ஒவ்வொருவரும் ஆயிரம்யோசனை யுயர்ந்த மலைகளை அக்கடலிற் போட்டமாத்திரத்தில் ராட்சசர்கள் வாழுமிலங்காபுரி வீதிகளெங்கும் உப்புநீர்ப்பிரவாகமாய் விட்டது.

கவி.

குமுதனிட்ட குலவரைகூத்தரின்
திமிதமிட்டுத் திரையுந்திரைக்கடல்
துமிதமூர்புக வானவர்துள்ளினார்
அமுதமின்னு மெழுமெனுமாசையால்.

குமுதனென்னும் வானரப்படைத்தலைவன் கொண்டுவந்திட்டகூட்டமாகிய மலைகளினால், நாடகரைப்போலசைந்தசைந் தெழும்பித் துள்ளிக்குதிக்கின்ற திரைந்த அலைகளையுடைய சமுத்திரத்தினது நீர்த்துளிகள் தேவலோகத்திற்றெறிக்க அங்குள்ள தேவர்கள் முன்னே பிறந்த அமுதம் இன்னும் பிறக்குமென்கின்ற ஆசையால் துள்ளித்துள்ளிக் குதித்துச் சந்தோஷித்தார்கள். அமிர்தமுண்டாகும்படியாகக் கடலைக் கடைந்தவாலியினுடைய புத்திரனாகிய அங்கதனென்பவன் இளையபெருமாளானவர் ஆயிரம் பாணங்களைக்கொண்டு விலக்கினாலும் விலக்கக்கூடாத பெரிய மலையொன்றைப் பிடுங்கியெறிந்து, அக்கடலைக் கலக்கினான். அளவில்லாத கரடிக்கூட்டங்கள் கொண்டுவந்து போடப்பட்ட மலைகள் ஒன்றினையொன்று விழுங்குவதுபோல் ஒன்றின்மேலொன்றுவிழுந்து, புண்ணியஞ் செய்யாதவர்களுடைய ஐஸ்வரியத்தைப்போலப் பொடிப்பொடியாய்ச் சிதறிப்போய்விட்டன. சமுத்திரத்தினுடைய ஆயிரம் யோசனைவரையிலும் நீண்டுயர்ந்து பருத்திருக்கின்ற திமிங்கிலமென்னு மச்சமானது தன்மேற் பெரியமலைகளின் பாரங்களேற, அதைச் சகிக்கமாட்டாமல் அஃதுடல் பதைத்துப் புரண்டபோது மலைகளெல்லாஞ் சரிந்து வீழ்ந்துவிட்டன.

இப்படி வானரவீரர்களாற் கொண்டுவந்த மலைகளைவாரிக் கரைகட்டுவதற்கு அடையாளம் பார்க்கின்ற வானரத்தச்சன் மலைகளை யொன்றுபோலுடைத்துச் சேர்த்து, சமானமான மலைகளை வரிசையாயடுக்கி, மேல்மட்டம் சரியாகும்படி மணலைவாரிப்போட்டுத் தனதுபெரியகையினாலே சமப்படுத்திப் பரப்புவான். கூட்டமாகிய ஆயிரங்கோடி வானரர்களாற் றூங்கிக்கொணர்ந்து கொடுத்த மலைக்கூட்டங்களை எழுக்கம்பம்போன்றதன்னுடையகையைநீட்டி எல்லாவற்றையு மொருமிக்கச்சேர்த்து வாங்கும்போது; இடையில் நழுவிவிழுகின்ற மலைகளைக் கால்களினாலே தாங்கிச் சேர்த்துக்கொள்ளுவான். மலைகளைச்சுமந்து வருகின்ற வானரக் கூட்டங்கள் ஒன்றின்பின்னொன்று நெருக்கமுறலால் செல்வதற்கு வழியில்லாமல் சிலதேங்கி நின்றுவிட்டன. அதைப் பார்க்கின் எத்தன்மையாயுளதெனில் கடலிற் கட்டும்படியாகிய சேது ஒன்று தவிர வானரக்கூட்டங்களின் தலையின்மீதும் ஓர் சேதுகட்டுந்தன்மையைப் போலிருந்தன.

வானரவீரர்களெல்லாம் பெரியமலையைக் கொண்டுவந்து வரிசைவரிசையாக வைத்திருக்கிற படியினாலே, சிலவானரர்கள் பூமியில் நடக்க வழியில்லாமற் கையில் தூக்கிக்கொண்டுவந்த மலையைத் தலையிலே தாங்கிக்கொண்டு சமுத்திரஜலத்திலிறங்கி நடந்துபோனார்கள். சிலவானரர்கள் வெகுதூரம் வருத்தப்பட்டுக் காலோய்ந்து பசியினால் சிரமமடைந்து, சுமந்துகொண்டுவந்த மலைகளைக் கீழேயிறக்கிவைத்து, அவைகளிற் கட்டியிருக்கின்ற தேன்களை அடிக்கடிக்குடித்து வெறியேறி மெய்ம்மறந்து நித்திரைபோயினர். மலைகளைக் கொண்டு வருகிறதற்காகப்போகிற வானரவீரர்களிற் சிலரை அஷ்டதிக்கினு

பிருந்து மலைகளைக் கொண்டுவருகிற வானரவீரர்களிற் சிலர் கண்டு, இப்போது சேது எவ்வளவு கட்டியாயிற்றென்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டார்கள்.

இப்படி திருவணை செய்வதற்கு உபயோகமாகத்தானே வானரக்கூட்டங்களால் கொண்டுவந்த மலைகளிலுள்ள குங்குமங்களும் - குகைகளிலுள்ள தேன்களும் - அநேகஜாதிபுஷ்பங்களும் - கலந்து துறைதோறும் படிந்திருப்பதினாலே, கருநிறமுள்ள உவர்க்கடல் நிறத்தினாலும் - சுவையினாலும் — சிவந்த மதுரமாகிய தேன்கடலுக்குச் சமானமாயிருந்தது. இந்தச் சமுத்திரமானது அநேகம் பெரியமலைகளைப்போட்டு தன்னை நெருக்கப்படுத்தியும், எவ்வளவு தரித்திரம்வந்த காலத்திலும் சிறிதுங்கலங்காமற் குடும்பசம்ரக்ஷணை செய்கின்ற உயர்ந்தகுடிப் பிறப்பாளரைப்போல் கொஞ்சமும் கலங்காமலிருந்தது. மலைகள் விழுந்தபடியினாலே சிதறின நீர்த்துளிகள் எங்குந்தெறித்தல் எப்படியுளதெனில், இந்தக்கடல் தூர்ந்துபோனபடியினாலே வேறொரு கடலிற் சேருகிறதற்குப் போவனபோன்றிருந்தன. கொழுந்துவிட்டுப்படர்ந்துவளருகின்ற பவளக்கொடிகள் அமிழ்ந்துபோகும்படியாக எறியப்பட்ட மலைகளாற் சிதறுண்ட நவரத்தினங்கள் எவ்விடத்திலும் இந்திரவில்லினது காந்தியைப்போல் ஒளிவீசின.

வானரவீரர்கள் ஆலமரங்களைப் பறித்தபோது அதில்வாழ்ந்துகொண்டிருந்த பக்ஷிக்கூட்டங்கள் குடும்பத்தைத் தாங்குகிறவன் இறந்தபோது அவனால் ரக்ஷிக்கப்பட்டவர்கள் வேறே தங்களுக்கு ரக்ஷகரில்லாமையால் அழுது துக்கிக்கிறதுபோலக் கூச்சலிட்டுக்கொண்டு பறந்தன. மாமரங்களெல்லாம் கடலில் விழுந்தபோது அந்தமாமரங்களில் வாழ்ந்துகொண்டிருந்த வண்டுகளெல்லாம், அரசனிறந்துபோக ஆதரணையில்லாத ஏவலாளர்களைப்போல பலபக்கங்களிலும் ஓடின. வானரவீரர்களால் வேரோடு பறியுண்ட புஷ்பங்களையுடைய விருக்ஷங்களைச் சூழ்ந்து படர்ந்திருந்த பூங்கொடிகள் அவைகளுடனே வெகுதுன்பமடைந்தவைகளே யாயினும், குலஸ்திரீகள் தங்கள் நாயகன்மார்களை விடாததுபோல் அந்தமரங்களைவிடாமற் பற்றியன.

சிலவானரசூரர்கள் மலைகளைப் பிடுங்கிக்கொண்டு வரும்போது அவற்றிலுள்ள யானைகளுடைய மதசலத்துக்கு ஆசைப்பட்டு அவைகளைப் பின்றொடர்ந்து மொய்த்துக்கொண்டுவந்த வண்டினங்கள் அந்தயானைகள் மலைகளுடனே சமுத்திரத்தில் விழுந்தபோது, நாயகன் சௌக்கியமாயுள்ளவரையிலும் அவன் கைப்பொருள்களைப்பறித் தனுபவித்துக் கொண்டிருந்து அவனுக்குச் சங்கடம் நேரிட்டமாத்திரத்தில் அவனைவிட்டு விலகிப்போகின்ற வேசியர்களைப்போல் திரும்பிப்போய்விட்டன. மலைகள் விழுவதனாற் சிதறுண்ட உப்புக்கடலினது நீர்த்துளிகள்பட்டுப் பெரும்புறக்கடலினது ருசியும் நீங்கிப்போயின. அன்றியும்— மேகத்தினிடத்து அக்கினிமயமாக விருக்கின்ற இடிகளும் குளிர்ந்துபோய்விட்டன. இவ்வளவுதானோ? மேகம்வருஷிக்கின்ற

மழைத்தண்ணீரும் உப்புகரித்தது. பெரியமலைகள் விழுந்தபோது எதிர்த்தெழுந்த நீர்த்துளிகள் படுகின்றதினால், சூரியனுடைய உஷ்ணகிரணங்களானவை சந்திரனுடைய கிரணங்கள்போலும் குளிர்ந்து விட்டன.

அன்றியும் – பேர்த்தெறிந்த மலைகளாற் சிதறுண்ட நீர்த்துளிகளோடு மேலெழுந்து பவளத்துண்டங்கள் பிரகாசிப்பதினாலே, ஆகாசமுழுமையு மின்னற்கொடிகள் சொலிக்கிறதுபோ லிருந்தன. முத்துக்களைப்பரப்பினாற்போ லிருக்கின்ற மணற்பிரதேசங்களின் பக்கங்களிலே அக்கினி நிறமாகப் பிரகாசிக்கின்ற அநேகவிதமான கனிவர்க்கங்களை உண்ணுதற்குப் பரப்பிவைத்திருக்கின்ற வானரங்களினுடைய கூட்டத்தின் விசாலம் அநேகபெருமணிகளையுடைய சமுத்திரப்பரப்பையொத்திருந்தது. இந்தப்பிரகாரமாக வானரகூட்டங்கள் லங்கைபரியந்த மூன்றுநாளைக்குள்ளாக சேதுவென்னுந்திருவணைகட்டி முடித்தன. கட்டிமுடித்த சந்தோஷத்தினாலே அவ்வானரகூட்டங்கள் மிகுந்தபோசையோடுகர்ஜிக்க அக்கர்ஜனையால் அண்டகோளம்படீரென்றுபிளந்துவிட, அப்போதிருந்த ஆகாசமற்றொருலோகத்தின் ஆகாசம்போலக்காணப்பட்டது. அக்கால் நளனாற்கட்டப்பட்ட அச்சேதுவானது எப்படிப்பிரகாசித்ததென்றால், பிலத்துவாரத்திற்குள்ளிருந்த ஆதிசேஷன்மேலெழுந்து, இச்சேதுவைக்கட்டுகிறதற்குவேறேயொருவரைத் தேடவேண்டிய காரணமென்ன? ஜெகன்மாதாவாகிய சீதாபிராட்டியாருடைய துன்பத்தை நீக்கும்படிக்கு நீங்களென்னுடையமுதுகின்வழியாய் லங்கைக்குப்போகலாமென்று தனதுமுதுகை யுயரத்தூக்கினதுபோற் பிரகாசித்தன.

இன்னும் அத்திருவணை யெத்தன்மைத்தெனில் மெய்யைவிரும்பிய லங்கையென்கிற ஸ்திரீயானவள் இராக்ஷசர்களாற் செய்யப்பட்ட தீமையைச் சகிக்கமாட்டாதவளாகி, ஸ்ரீ சர்வேஸ்வரனுடைய சேனையைக்கண்ட சந்தோஷத்தினால் தனது கையைநீட்டி உபசரிப்பதுபோலு மிருந்தது. அன்றியும்–ஆகாசகங்கையானதுகாட்டாறுகளாலே நிறைந்த சமுத்திரத்தைச் சர்வக்ஞரான ஸ்ரீராமச்சந்திரருடைய சேனைகள் தாண்டிப்போகிறதற்கு ஆறென்று பெயர்பெற்ற வழிநானல்லாமல் வேறெதுவென்று சமுத்திரத்தின் குறுக்காக வானாறாகிய ஆகாயகங்கை வந்ததுபோலு மிருந்தது. இப்படி வானரசைனியங்களாற் கட்டப்பட்ட சேதுவானது நவரத்தினக் கற்களினாலே பிரகாசிக்கின்றபடியினால், ஆகாசத்திலுள்ள இந்திரவில்லானது சமுத்திரத்தின் குறுக்கே கிடந்ததுபோலும் தோன்றின. இப்படிப்பட்ட சிறப்பையுடைய சேதுவை மிகுந்த சந்தோஷத்துடனே கட்டிமுடித்தபிறகு, வானரசேனாதிபதியான சுக்கிரீவமகாராஜனும் – இலங்காதிபதியான விபீஷணாழ்வாரும் - இன்னும் அங்குண்டான சகலமானவர்களும் ஸ்ரீகோதண்டதீக்ஷா குருவினிடத்திற்கு வந்து தெண்டஞ்சமர்ப்பித்து, நூற்றிரண்டுயோசனை நீளமும் பத்துயோசனை அகலமுமான சேதுவென்னுந் திருவணைகட்டி முடிந்ததென்பதாக விண்ணப்பம் பண்ணிக்கொண்டார்கள்.

சேதுபந்தனப் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

எட்டாவது,

ஒற்றுக் கேள்விப் படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமபிரான் வானரவீரர் சகாயத்தினால் வானரதச்சனாகிய நளனாற்செய்துமுடித்த சேதுபந்தனத்தைக்கண்டு, அவர்களைக்கொண்டாடி, பின்னர்யாவரும் புடைசூழ்ந் துபசரித்துவர வச்சேது மார்க்கமாய்க் கடலைத்தாண்டி இலங்கைக்குச் சமீபத்துள்ள ஓர்பர்வதத்தணுகி, யாவர்க்கும் பாடிவீடு சமைக்கும்படி நீலனுக்குத் திட்டஞ்செய்ய வவனுத்தரவால் நளனவ்வாறே முடிக்கச் சுக்கிரீவமகாராஜன் முதலிய சகலரும் ஸ்ரீராமனோடு சென்று அப்பாடி வீட்டிற் றங்கினராக; அங்கே இராவணனா லேவப்பட்டு குரங்குருவங் கொண்டுவந்திருந்த சுகசாரணரென்னு மொற்றர்களை விபீஷணராலறிந்த ஸ்ரீராம ரிராவணனுக்குணர்த்தும்படி சிலவற்றைச் சொல்லியனுப்பியதும், அக்காலவ்விலங்கையி லிராவணநியமித்த மந்திராலோசனைச்சபையில் மாலியவான் கூறிய சன்மார்க்க வார்த்தைகளை துன்மார்க்க வார்த்தைகளாகப் பிரகஸ்தன் தடுத்துரைக்கும்போது சுகசாரணர்கள்வந்து விபீஷணாதியரால் தங்கட்கு நேர்ந்த விபத்தையும் ஸ்ரீராமனால்நேர்ந்த சகாயத்தையுஞ் சொல்ல வக்கால் மகோதர னிராவணனைத்தேற்றி உச்சாகப்படுத்தக்கண்ட மாலியவான்மீட்டு மிராமனாதிய ருற்பவங்கூறியறிவுறுத்தவு மிராவணன் தன் பராக்கிரமங்கூறி யகங்கரித்ததுஞ் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமனாதியர் சேதுவாற் கடலைத்தாண்டி நளனாற் சமைத்த பாடிவீடேளிற் குடியேறியிருத்தல்.

கவி.

ஆண்டகையுமன்பினொடு காதலமிழ்தூற
நீண்டகையினானளனை நெஞ்சினொடுபுல்லி
ஈண்டவெழுகென் றன னிழைத்தபடியெல்லாம்
சாண்டலதன்மேனெடிய காதன்முதிர்கின்றான்.

இப்படி சுக்கிரீவமகாராஜனாதியோர் சேதுபந்தன நிறைவேறியதென்று தெரிவித்தபோது ஆண்மைக்குண நிறைந்த எமது ஐயனாகிய ஸ்ரீராமபிரானவர் ஆசையாகிய வமுதவெள்ளம் பெருக தமதுநீண்ட செந்தாமரை மலரைப்போன்றதிருக்கையினால் வானரத்தச்சனாகிய நளனைத்திருமார்போடு சேர்த்துத்தழுவி, எல்லா முடிந்ததாவென்றுவினவி அத்தியந்த சந்தோஷராய் இளையபெருமாளுடன் இச்சமுத்திரத்திற் கட்டப்பட்டழகுமிக்க சேதுவைப்பார்க்க அங்குள்ள சுக்ரீவன், அநுமான், அங்கதன், நளன், நீலன், மயிந்தன், துமிந்தன், ததிமுகன் முதலிய வானரசிரேஷ்டர்களைநோக்கி யாவரும் புறப்படுவீர்களென் றனுக்ஞைசெய்து தம்முடைய பழையவாசஸ்தலமாகிய பாலசமுத்திரத்திற்கு எதிராகச் சேனாசமுத்திரத்தின் மத்தியிலிருக்கின்றநில

மேகவண்ணனாகிய சாக்ஷாத்பரமபதநாதனேயிவனென்றியாவருமெண்ணித் துதிக்கும்படியாகப் படைவீரரோடு எழுந்தருளி திருவணையாகிய சேதுவினிடத்திற்சேர்ந்து தம்முடைய பிராணனையொத்த சீதாபிராட்டியாரைக் கண்டதுபோல மிகுந்த சந்தோஷ முடையவராகி, இந்தப்பெரியகடல்நிரம்ப மலைகளைக்கொண்டு தூர்த்து அணைகட்டினது மகா அருமையாகும்; உலகங்களைச்சிருஷ்டித்த பிரமதேவனேவந்து கட்டினபோதிலும் இதுமுடிகிறதற்குஎத்தனை காலஞ் செல்லுமென்று ஆச்சரியசித்தராய்ச் சந்தோஷித்தார்.

பின்னும் ஊழிநாதனாகிய ஸ்ரீதாசரதியானவர் வானரவீரர்களால்முடிந்த அந்தச் சேதுபந்தனத்தைக் காணுந்தோறு மிகவும் வியப்புற்றவராகி, இந்தக்கடலினழகும் ஒருவராற் சொல்லி முடிவதோ? இந்தச் சமுத்திரத்தைக் காட்டிலும் இலங்கை பெரிதாயிருக்கின்றது. ஆகையாலிந்தக் கடலேயொழிய இதற்கு மேலான சப்தசாகரங்களையும் ஒரு க்ஷணநேரத்திற்குள்ளாக இந்த வானரக் கூட்டங்கள் தூர்த்துவிடுவார்களென்பதற்குச் சந்தேகமுண்டோ?

கவி.

நெற்றியிலரக்கர்பதி செல்லநிறைநன்னூல்
கற்றுணருமாருதி கடைக்குழைவரத்தன்
வெற்றியுணர்தம்பியொரு பின்புசெலவீரப்
பொற்றிரள்புயக்கரு நிறக்களிறுபோனான்.

என்று சொல்லிச் சைனியங்களுக்கு முன்னாக விபீஷணாழ்வாரைப் போகும்படியாகவும், பின்பக்கத்தில் சாஸ்திரோக்தங்களையெல்லாம் விசிதமாக நன்றாய்க் கற்றுணர்ந்த சமர்த்தரான ஆஞ்சநேயரை வரும்படியாகவு நியமித்து, தமக்குப் பின்னாச இளையபெருமாள் எழுந்தருள வீரத்தோடுகூடிய மகா அழகிய திருத் தோள்களையும் கறுத்த திருமேனியையுமுடைய எமது இறையவனாகிய தாசரதியானவர் ஆண்யானைக் கொப்பாகத் தாமெழுந்தருளினார். பெரியவானர சேனைகள் இரத்தினங்களையு முத்துக்களையு மெறிந்துகொண்டு அருகிலேயோங்கி வளர்ந்திருக்கின்ற சோலையில் தாவி விழுகின்ற அலைகளுக்குச் சமானமாகவும், கருங்கடலிற்போய் விழுகின்ற காவிரியாற்றின் பெருக்கைப்போலவும், உயர்ந்த சேதுவின் வழியாகப் போயின.

அஃதெப்படியென்றால்? அந்தக் காவிரிநதி குறிஞ்சிநிலத்திலுள்ள ஆகாரங்களையும், முல்லைநிலத்திலுள்ள ஆகாரங்களையும், மருதநிலத்திலுள்ள சகல பொருள்களையும், மரங்களையும், தான்சுமந்துகொண்டு போய்ச் சமுத்திரத்தில் சேர்வதுபோல் இந்தவானரசேனைகள் குறிஞ்சிநில முதலானவற்றிலுள்ள உணவுப்பொருள்களி லொன்றும்விடாமற்கொள்ளைகொள்ளையாய் வாரிக்கொண்டு கடல்மார்க்கமாகப் போயின. அந்தச்சேதுவானது அழுந்தும்படியாக மிதித்துக்கொண்டு ஒருவர் போனவழியில் ஒருவர் போவதினாலே காலடிபட்டுத்தேயும்படியாகிய அந்த வழியில் சமுத்திரத்தினலைகள் பாய்கிற போதெல்லாம் குதிரைமேலேறிச் சவாரிசெய்துகொண்டு போகிறவர்களைப்

போல வானரவீரர்கள் குதித்துக் குதித்துத் தாவிக்கொண்டுபோனார்கள். அப்படி போகும்போது ஒருவர்தேகத்தோ டொருவர்தேகநெருங்கி உராய்கின்றபடியால் நடக்கவிசையற்றுங் கால்தவறிப் பக்கத்தில் விசாலமான இடமில்லாமற் கடலில்விழ, அப்படிவிழுகின்றவர்களை முழுகிப்போகாதபடி கைதூக்கி விடுகின்ற தயையுடையவர்கள் கைகொடுத்துத்தூக்கி வரிசைவரிசையாக அழைத்துக்கொண்டுபோக, இப்படி அநேகவானரவீரர்கள் ஒருவர்க்கொருவர் துணைபட்டுப்போனார்கள்.

மேலும் - அனேகவானரவீரர்கள் கருக்கொண்டமேகத்திற்குச் சமானமாகக் கறுத்த ஸ்ரீராமமூர்த்தியினது திருமேனியிற் சூரியனுடைய அதியுஷ்ணமாகிய கிரணங்கள் படவொட்டாமல், மிகவும் தழைத்து நிழல்தருகின்ற உயர்ந்த அதிக சீதளசந்தன விருக்ஷங்களையும் சுரபுன்னை விருக்ஷங்களையும் பிடுங்கிக் குடைபிடித்துக்கொண்டு ஸ்ரீராமமூர்த்திக்கு இரண்டுபக்கங்களிலும் போனார்கள். அனேகவானரவீரர்கள் தெய்வீகம்பொருந்திய பலவகைப்பட்டயாகாதிகளைச் செய்யும்படியாகிய வேதோத்தமர்களால் அத்தியயனம்பண்ணுகின்ற வேதார்த்தமே தாமாக வெழுந்தருளியிருக்கின்ற அந்தச்சக்கரவர்த்தித் திருமகனாருடைய திவ்யதிருமேனியானது இளைப்படையாமல், நானாவித பரிமளசுகந்தபுஷ்பக்கொத்துகளுள்ள மரக்கிளைகளையொடித்து அவைகளைத் திருத்தவேண்டிய பிரகாரமாகத் திருத்திச் சாமரைபோலவீசிக்கொண்டு சென்றார்கள்.

இப்படி வானரவீரர்கள் அனேகரனேகராய்ச்சூழ்ந்து உபசரித்துவரத் தேவர்கள் பெருந்தவஞ்செய்து பிரார்த்தித்ததின் பொருட்டு வந்தவதரித்தருளிய இரத்தின கடகங்களை யணிந்த கரதலத்தையுடைய ஸ்ரீராமமூர்த்தியானவர் சீதாபிராட்டியாருடைய திருமணத்தைத் திருவுளத்தில் நினைத்தவராய் யுத்தத்தின்பேரில் இச்சைகொண்டு போகின்றவர்களான வானரசேனைகளுடனே சமுத்திரத்தைத் தாண்டிக் கரையேறினார்.

கவி.

பெருந்தவமுயன் றமரர் பேணியதவத்தால்
மருந்தனையதம்பியொடும் வன்றுணைவரோடும்
அருந்ததியும்வந்தனைசெ யஞ்சொலிளவஞ்சி
இருந்தநகரின்புறனோர் குன்றிடையிறுத்தாள்.

தேவர்கள் செய்த பெரியதவத்தால் தேவாமிர்தத்திற்குச் சமானமாகிய தமது திருத்தம்பியாரோடும், சுக்கிரீவமகாராஜன்—விபீஷணாழ்வார்-அனுமார்-இவர்கள்முதலான துணைவர்களோடும், அருந்ததியுங்கண்ட நிசயித்துஸ்தோத்திரஞ் செய்யத்தக்க சீதாபிராட்டியா ரெழுந்தருளியிருக்கின்ற அந்தலங்காபட்டணத்தின் சமீபத்திலிருக்கின்ற சுவேலாபர்வதத்தின்மேல் எழுந்தருளி, நீலனென்கின்ற வானரசேனாவீரனைப்பார்த்து, அப்பா நீலா ! நம்மோடுகூட வந்த சைனியங்களுக்கெல்லாம் நீ பாடிகூடாரம் செய்விக்கவேண்டு மென்று

ஆக்ஞாபித்தார். அம்மாத்திரத்தில் அவன் சுவாமியினுடைய திருவடிகளில் நமஸ்கரித்துச்சென்று, சமுத்திரத்தில் அணைகட்டி வழிசெய்தவனான நளனுக்குச் சுவாமி நியமித்த கட்டளையை விவரமாகச் சொன்னான்.

அதைக்கேட்ட நளன் தன்பிதாவாகிய மயனுநாணமடையத்தக்கதாக அந்த இடத்தைச் சதுரப்படுத்தி, தலைவர்களானசுக்கிரீவமகாராஜன் விபீஷணாழ்வாரென்று சொல்லப்படுகின்ற இருவர்களுக்கும் மற்ற யாவர்களுக்கும் அவரவர்கள் நிலைமைகளுக்குத் தக்கபடியே பிரமதேவனால் சிருஷ்டிக்கப் பட்டதுபோலப் பொன்னினாலும் ரத்தினங்களாலும் பாடிக்கூடாரமமைத்து, இரகுகுலோற்பவரான ஸ்ரீகோதண்டபாணி யெழுந்தருளி யிருக்கத்தக்க இடத்தையும் விரைவிலுண்டாக்க வேண்டுமென்கின்ற விருப்பத்துடனே அம்மலைச்சிகரத்தை மட்டப்படுத்தி, மூங்கிற்கால்கள் நாட்டி, தருப்பைப் புற்களால் உறுதிபெறக்கட்டி, திவ்யசுகந்த பரிமளபுஷ்பங்களினால் மேற்கூரை மேய்ந்து பர்னசாலைகட்டி முடித்தான்.

கவி.

வாயினுமனத்தினாலும் வாழ்த்திமன்னுயிர்கட்கெல்லாம்
தாயினுமன்பினானைத் தாளுறவணங்கித்தத்தம்
எயினவிருக்கைநோக்கி யெண்டிசைமருங்கும்யாரும்
போயினர்பன்னசாலை யிராமனுநொய்திற்புக்கான்.

பின்பு சுக்கிரீவமகாராஜன் முதலான யாவர்களுந் தத்தமது வாசஸ்தானங்களை நோக்கி, எல்லாச் சீவகோடிக ளிடத்திலும் தாயைப்பார்க்கிலு மிகுந்த தயாசீலரும் சர்வரக்ஷகருமான ஸ்ரீராமமூர்த்தியை மனப்பூரணமாக வாழ்த்தி, சாஷ்டாங்கமாகத் தெண்டஞ் சமர்ப்பித்து, அந்தமலையின் அஷ்டதிக்குகளிலுமுள்ள அவரவர்க ளிருப்பிடத்தைச் சேர்ந்தார்கள். அப்பால் சர்வலோகசரணியராகிய ஸ்வாமியுந் தம்முடைய பர்னசாலையிற் சந்தோஷமாக எழுந்தருளினார்.

சூரியாஸ்தமனச் சிறப்பு.

கவி.

பப்புநீராயவீரர் பருவரைகடலிற்பாய்ச்சத்
துப்புநீராயதூய சுடர்களுங்கறுக்கவந்திட்
டுப்புநீரகத்துட்டோய்ந்த வொளிநிறம்விளங்கவப்பால்
அப்புநீராடுவான்போ லருக்கனுமத்தஞ்சேர்ந்தான்.

பரந்ததன்மையை யுடையவர்களாகிய வானரவீரர்கள் பருத்தமலைகளைச் சமுத்திரத்திலிட அதினின்றுமெழுந்த திவலையால், பவளம்போலுஞ் சிவந்த சூரியனானவன் கறுத்த உப்புநீர் பட்டதனது ஆயிரங் கிரணங்களுந் திருமேனியுஞ் சுத்தஞ்செய்வதற்கு அப்புறத்திலுள்ள சுத்தஜல சமுத்திரத்தில் ஸ்நானஞ் செய்வதற்குச் சென்றவனைப் போல் அஸ்தமன மாயினன். இப்படியவனஸ்தமித்த மாத்திரத்தில் ஸ்ரீராமர்மீது அஸ்திரப்பிரயோகம் பண்ணுகிற

சற்காக அதிககோபத்துடனே இரண்டு குதையும் ஒன்றுடனொன்று பொருந்தும்படியாக வளைக்கப்பட்ட மன்மதனுடைய வில்லைப்போல, மேற்றிசையில் மிகுந்த பிரகாசத்துடனே மூன்றும்பிறைத்திங்கள் உதயமாயிற்று. சகஸ்திர இதழ்களோடுங்கூடிய தாமரைப் புஷ்பத்திலுண்டானவாசனையையுடைய மகரந்தப்பொடிகளையளாவிக் குளிர்ந்த பனிநீர்த்துளிகளை வீசிக்கொண்டுவருகின்ற தென்றற் காற்றைப்பார்க்கிலும், அந்திவானமாகிய செவ்வானத்தைப்பார்க்கிலும், மன்மதபாணமாகிய கூற்றைப்பார்க்கிலும், அந்த மூன்றும்பிறைச் சந்திரன் அதிகமான குரூரத்தைக் காட்டிக்கொண்டு சுவாலையை வீசினன்.

கோபவேளையிலும் அழகு விளங்கிக்கொண்டிருக்கின்ற திருமுகமண்டலத்தையுடைய சீதாபிராட்டியாரைப்பிரிந்தகாலமுதல் நித்திரையையு நாவிற்குருசிதேடுதலையு மறந்திருப்பவராகிய ஸ்ரீராமருடையதிருத்தோள்களில்சந்திரகிரணங்கள் பிரகாசிப்பது எப்படி யிருந்ததென்றால், பெருமை பொருந்திய ஒரு மரகதமலைமேல் வாசமாயிருந்த ஓர்மயில் பிரிந்துவிட்ட சமயம்பார்த்து, அக்கினிமயமான சுவாசத்துடன் வெண்மையான ஒரு குட்டிப்பாம்பு தவழ்வதையொத்திருந்தது. சீதாபிராட்டியாரெழுந்தருளிய லங்காநகரத்தைக் கிட்டிவந்த வச்சிர கங்கணங்கள் தரித்து அழகுடனேதிரண்ட திருத்தோள்களையுடைய ஸ்ரீராமபத்திரர் தேகமெல்லாம் புழுங்கி வருத்தமடைந்தார். அநேக காததூரத்திலே இருந்து நினைக்கும்போதே சுட்டெரிக்கும்படியான செழுந்த இதழையும்கறுத்த கண்ணையுமுடைய அந்தச்சீதையாகிய அக்கினியானது, சமீபத்தில்வந்தாற் சுடாமலிருக்குமோ இந்தப்படியாகச்சீதாபிராட்டியாருடைய பிரிவென்னுமக்கினியாலே ஸ்ரீராமபிரானனவர் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தார்.

இராவணனேவலால் சுகசாரணரேன்னுமோற்றர்கள் வானரவுருவங் கோண்டு வானரசேனைகளில் வந்திருந்ததை விபீஷணர்கண்டு இராமமூர்த்திக்குக் காட்ட அவர் காணல்.

கவி.

இற்றதுகாலமாக விலங்கையர்வேந்தனேவ
ஒற்றர்வந்தளவுநோக்கிக் குரங்கெனவுழல்கின்றாரைப்
பற்றினனென்பமன்னே பண்டுதான்பலநாட்செய்த
நற்றவப்பயன்றந்துய்ப்ப மூந்துறப்போந்தநம்பி.

இராவணன் தன்னுடைய வாழ்நாளுக்கு முடிவுவந்ததினலே ஸ்ரீராமருடைய பலாபலங்களைத் தெரிந்து வரும்படியாக இரண்டு ஒற்றர்களை அனுப்ப அவர்கள் ராக்ஷசமாயையினால் குரங்குருவங்கொண்டு வானரசேனைகளைச்சுற்றி எவ்வளவு சேனைகளென்று மதிப்பிட்டுப் பார்த்துக்கொண்டிருக்கும்போது, பூர்வத்தில் தாம்செய்த நல்லதபோபலத்தினலே முந்திவந்து சாட்குண்ணிய பரப்பிரமமாகிய ஸ்ரீராமசுவாமியை அடைக்கலம்புகுந்த விபீஷண

ழ்வார் பெரிய சமுத்திரத்திற்குச் சமானமாகிய வானரசேனைகளை இவ்வள வென்றுதம்முடைய உள்ளத்தில் கணித்தறிந்திருக்கின்றவரானபடியால் பாற்கடலில் ஒரு சிறுதுளிநீர் தெளித்தபோதிலும் அந்தநீரை வேறுபிரித்தறியும்படியான அன்னத்தையொத்த விவேகசாமர்த்தியமுள்ளவராகி, மகத்துக்கு மகத்தாய் அணுவுக்கணுவாயிருந்து ஒரேதன்மையாய்க்காண்டற்கரியஅகண்டாகாரமாய்ப் பருத்துயர்ந்திருக்கின்ற தம்முடைய விராட்சொரூபத்தை யுள்ளடக்கிக்கொண்டு தம்முடைய ஸ்வரூப மிப்படிப்பட்டதென்று தெரியாதபடி மறைந்து அந்தரியாமியாய்ச் சகலாத்துமாக்களிடத்திலும் வசித்துக்கொண்டிருக்கின்ற மகாமாயாசக்தியையுடையவர்களான பெரிய பிராட்டியாரும் அவர் நாயகரான நாராயணமூர்த்தியுமாகிய இருவரையும் தங்களுடையஇருதயத்திலே தரிசனைசெய்கின்ற மகாயோகிகளுக்குச் சமானமானவராகி, இராவணனலனுப்பிய இரண்டொற்றர்களாகிய ராக்ஷசர்கள் சிறியவானரதேகத்தையுடையவர்களாய்ப் பார்க்கப்பயங்கரமாய்ப் பருத்துயர்ந்திருக்கும் தங்களாகாரத்தை உள்ளடக்கிக் கொண்டு தங்களுண்மையான உருவம் ஒருவருக்குந் தெரியாதபடி மறைத்துக்கொண்டு திரிகின்ற அந்தமாயரூபச்செயலைச் சூசனையாகக்கண்டு, அவர்களைத் தம்முடைய முஷ்டிபிடித்த பலம்பொருந்திய கைகளினாலே வானரக்கூட்டங்களுக்கு இரக்க முண்டாகும்படிக்குக் குமைத்து, வேறொன்றுஞ்செய்யாமல் மிகுந்தபலமுள்ள ஊனுங்கொடியாலிறுகக்கட்டி, இரத்தங் கக்கிக்கொண்டுவரும்படியாக அவ்விருவரையும் கட்டியகட்டுடனே சுவாமிக்கு முன்பாகக் கொண்டுவந்து, இராவணனுல் அனுப்பப்பட்ட திருடரிவர்களென்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டார்.

அதைக்கேட்ட சேஷசாயியாகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் அவர்களைப் பார்த்து, இராவணனலனுப்பிய ஒற்றர்களாதலாற் பகைவரென்று நினையாமல், இவர்கள் நமக்குச் சகிக்கக்கூடாத வருத்தத்தைச் செய்தபோதிலும் குரங்குகளாச்சுதேயென்று இரக்கங் கொண்டவராகி, ஐயா விபீஷணமகாராஜனே! நம்மைத் தஞ்சமென் றடைந்தவர்களை நாம்வருத்தப்படுத்தலாமோ? ஆதலால் இவர்களைத் துன்பப்படுத்தாமல் விட்டுவிடுங்களென்று திருவாய்மலர்ந்தருளினர். இப்படிச் சுவாமிசொல்லுவதைக்கேட்ட அந்தராக்ஷசத் திருடர்கள் சுவாமியைப்பார்த்து, ஓ வில்வீரசிகாமணியே! இந்தவிபீஷணன் உம்முடைய சேனசமுத்திரமாகிய வானரவீரர்களுடைய மிகுதியைப்பார்த்து, இவர்களைவெல்லுகிறது அரிதென்றெண்ணி, வஞ்சத்தால் எங்களையெல்லாங் கொல்லுகிறதற் கிங்குவந்தான். நாங்கள் யதார்த்தமான குரங்குகள். எங்களை அங்கிகரித்தருளவேண்டுமென்று சொன்னர்கள். அப்போது விபீஷணாழ்வார் சுவாமியினுடைய திருவுள்ளத்தின் தயையை அறிந்து, கண்ணுந் தண்ணீருமாய் நின்று, சுவாமி! இவர்கள் மலையிலுங்காட்டிலும் வாழ்கின்ற குரங்குகளல்லர். தயையும் தாக்ஷிண்ணியமும் சத்தியமு மில்லாத மனதையுடையவனான இராவணனு லேவப்பட்டதூதர்கள். இவர்களிரண்டுபேரில் ஒருவனுக்குச்

சுகனென்றுபேர். மற்றொருவனுக்குச்சாரணனென்றுபேர். இவர்கள் மாறுருவம் தரித்துக்கொண்டிருக்கின்ற திருடர்கள். அந்தமாறுபாட்டைத்தேவரீருக்குச் சந்தேகமறக் காட்டுகிறேன் பார்த்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்து ஒருமந்திரத்தைச் செபித்தார்.

விபீஷணர் மந்திரோச்சாடனஞ்செய்ய, சுகசாரணர்கள் வானரவுருவ நீங்கிப் பழைய இராக்ஷச வுருவங்கொண்டு பயந்து நிற்கிறபோது நீங்கள் வந்தகாரியம் யாதெனக் கேட்டல்.

கவி.

கள்ளரேகாண்டியென்னு மந்திரங்கருத்துட்கொண்டான்
தெள்ளியதெரிக்குந்தெவ்வர் தீர்வினைசேர்தலோடும்
துள்ளியினிரதந்தோய்ந்து தொன்னிறங்கரந்துவேறாய்
வெள்ளியோடிருந்தசெம்பு மாமெனவேறுபட்டார்.

இப்படி விபீஷணாழ்வார் செபித்தமாத்திரத்தில் பாதரசத்துளிபட்டவுடன், தன்னுடைய பழைய நிறமாறி வேறுபட்டு வெள்ளியநிறமாக விருந்த செம்பானது புடமிடுகிறவர்கள் அந்தரசம் போகத்தக்க தகுந்த செய்கைகளைச் செய்து புடமிடத் தன் பழையநிறத்தைப் பெறுமாறுபோல, வானரவடிவுகொண்டிருந்த அந்தத் திருடர்கள் தங்கள் யதார்த்தமான ராக்ஷசவடிவுடனே வக்கிரதந்தங்களை யுடையவர்களாய்ப் பயந்து நின்றார்கள். அப்போது ஸ்ரீராமச்சந்திரர் மலைபோல் நிற்கின்ற அந்தக் கொடியவர்களைப் பார்த்துச்சிரித்து, தம்மையடைந்தவர்களுடைய துக்கங்களை யெல்லா நிவர்த்திசெய்யும் பரமதயாளுவான அந்தராமமூர்த்தியானவர் பயப்படாதேயுங்களென்று கையமர்த்தி, நீங்களிவ்விடம் ஏதுகாரியத்திற்காகவந்தீர்கள்? அந்தவிவரங்களையெல்லாம் விசிதப்படச் சொல்லுங்களென்று நியமித்தார்.

வந்தகாரிய மின்னதென்று அச்சுகசாரணர்கள் சொல்லக்கேட்ட இராமசுவாமி இராவணனுக் குணர்த்தும்படி சிலவார்த்தை சொல்லி விட்டுவிடுதல்.

கவி.

தாய்தெரிந்துலகுகாத்த தவத்தியைத்தன்னைக்கொல்லும்
நோய்தெரிந்துணரான்றேடிக் கொண்டனனுவலவென்னே
வாய்தெரிந்துணரவண்ணங் கழறுவார்வணங்கிமாய
வேய்தெரிந்துரைக்கவந்தோம் வினையினால்வீரவென்றார்.

எல்லையினிலங்கைச்செல்வ மிளையவற்கீந்ததன்மை
சொல்லுதிர்மகரவேலை கவிக்குலவீரர்தூர்த்த
கல்லினிற்கடந்தவாறுங் கழறுதிர்காலந்தாழ்த்த
வில்லினர்வந்தாரென்று விளம்புதிர்விளம்பலாதீர்.

அப்படி நியமித்தமாத்திரத்திற் பெரியோர்களெல்லாம் தாயென்று தெரிந்துகொள்ளும்படியான சீதாபிராட்டியாரைத் தன்னைக் கொல்லும்படியான ஒருபெரியநோயென்றறியாமல் தனக்குத்தானே யந்நோயைச் சம்பாதித்துக்

கொண்ட இராவணனா லேவப்பட்டவர்கள். இன்னதுசொல்லவேண்டுமென்கிறதைத் தெரியாமல், மனதிலொன்றை நினைத்து வாயிலொன்றைக் குளறுகின்றவர்களாய் வணங்கி, சுவாமி! வஞ்சனையான தந்திரத்தினால் இவ்விடத்திலுள்ள உளவைத் தெரிந்துகொண்டுபோய்ச் சொல்லும்படியாக இராவணனாலனுப்ப வந்தோமென்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டார்கள். அதை ஸ்ரீராமர் கேட்டு, அப்படியா? நல்லது: ஓ சுகசாரணர்களே! உங்களை இங்கே விலங்கிட்டுச் சிறைபடுத்தாமல் விட்டுவிட்டேன். நீங்களிராவணனிடத்திற்போய் இந்த லங்காபட்டணத்தினுடைய அளவில்லாத ஐஸ்வரியத்தையெல்லாம் உன்னுடைய தம்பியாகிய விபீஷணனுக்குக் கொடுக்கப்பட்டதென்றும், வானரசேனா வீரர்கள் மலைகளைக்கொண்டு கடலையடைத்துச் சேதுவைக்கட்டி அந்தவாராவதியின் வழியாய்க் கடலைத்தாண்டி எல்லாரும் லங்கைக்குவந்தார்களென்றும், இத்தனைநாள் பொறுத்திருந்த இரண்டுவில்வீரர்களும் வந்திருக்கிறார்களென்றும், பனங்குலையைப்போன்ற பத்துத்தலைகளையுடையவனான இராவணன் வசித்துக்கொண்டிருக்கின்றதும், குறும்பர்களான இராக்ஷசர்கள் நிரம்பியதுமான இலங்கைக்குன்றமானது சமுத்திரத்தாற் சூழப்பட்டு இந்தமூலையிலிருக்கின்றதென்று தெரிந்துகொள்ளக் கூடாமையாயிருந்தபடியினாலே உயிருடனும் துஷ்டஹிருதயத்துடனுமாய் அவனித்தனைநாள் வாழ்ந்திருக்கும்படியாய் நேரிட்டதென்றும், என்பிதாவாகிய ஜடாயுபக்ஷவானைக்கொன்று அவருடைய பந்துக்களை வருத்தினபடியே அவனுடைய பந்துக்களையும் அவனுடைய பலத்தையும் அவனுக்குண்டான எல்லாவரங்களின் பெருமையையும் ரணக்களத்தில் நாசப்படுத்தி, என்னுடைய பிதாவுக்காகச் சொர்க்கலோகத்திலிருக்கிற தேவர்களுக்கு அவனுயிரைக்கொண்டுநான்பலியூட்டப் போகிறேனென்றும் நான் சொன்னதாகப் போய்ச் சொல்லுங்கள்.

மேலும் - மிகுந்த வேகத்தோடுஞ் செல்லுகின்ற ரிஷபவாகனத்தையும் கருடவாகனத்தையுமுடையவர்களான மூன்றாம்பிறைச் சந்திரனை யணிந்த உருத்திரமூர்த்தியும்-துளசிமாலிகாதரராகிய விஷ்ணுமூர்த்தியும் -மற்றைச் சமஸ்தலோகநாதர்களும் - அவனுக்குதவியாகவந்து காத்தபோதிலும் என்னுடைய பாணத்தினால் அவனுடைய தேகத்தைப் பலதுண்டங்களாகச் செய்யக்காத்திருக்கிறேனென்றும், பதிவிரதா தவசிரோமணியான சீதையைத் தனித்த ஒரு சிறையிலிருக்கும்படியாக வீரர்களுக்கடுக்காத வஞ்சனையைச்செய்த அந்த மாபாதகக் கொடியோனான இராவணனை அவனுடைய பந்துக்களோடு அக்கினிபற்றி யெரியும்படியான நரகமென்று சொல்லப்பட்ட மீளாச்சிறையிலேவைக்க எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேனென்றும் சொல்லுங்கள்.

கவி.

நோக்கினிர்தானையெங்கு நுழைந்தனிரினிவேறொன்றும்
ஆக்குவதில்லையாயி னஞ்சலென்றஃதுண்டன்றே

வாக்கினின்மனத்திற்கையின் மற்றினிவலியாவண்ணம்
போக்குமின்விரைவினென்று னுய்ந்தனமென்றுபோனர்.

நீங்க ளெங்களுடைய அளவற்ற சைனியங்களை எல்லா நன்றுய்ப் பார்த்தாயிற்றே: இனிநீங்கள் செய்யவேண்டியது ஒன்றுமில்லையே: ஆகையால் நீங்கள் போங்களென்று திருவாய்மலர்ந்தருளி, வானரசைனியங்களைப் பார்த்து, நாம் மனப்பூரணமாய் அஞ்சலென் றிவர்களுக்குச்சொன்ன நம்முண்டைய வாக்கை நினைத்துக்கொண்டு, இவர்களை உங்களுடைய வாக்கினுலும் - மனத்தினுலும் - கையினுலும் - மற்ற உறுப்புக்களினுலும் - ஒரு துன்பமுஞ்செய்யாமற் சிக்கிரமாய் வெளியேகொண்டுபோய் விடுங்களென்று நியமித்தார். அப்படியே கொண்டுபோய் விட்டுவிட்டார்கள். விடப்பட்ட சுகசாரணர்கள் நாங்கள் பிழைத்தோம்: பிழைத்தோம்: என்று சந்தோஷத்துடன் ஓட்டம் பிடித்தார்கள்.

இராவணனுடைய மந்திராலோசனையில் மாலியவான் சிலவார்த்தைகூற அதற்கிராவணன் கோபித்தல்.

கவி.

அரவமாக்கட லஞ்சியவச்சமும், உரவுநல்லணை யோட்டியவூற்றமும்
வரவுநோக்கி யிலங்கையர்மன்னவன், இரவினெண்ணிட வேறிருந்தானரோ.

அப்போ திராவணன் முன்னர் சமுத்திரராஜன் பயந்து அடைக்கலம்புகுந்ததையும் - வானரங்கள் சமுத்திரத்திற் சேதுகட்டின வல்லமையையும் - அந்தச்சேதுவின் வழியாக வானரசைனியங்களுடன் ஸ்ரீராமர் முதலானவர்கள் வந்திருப்பதையும் அறிந்துகொண்டு, இராத்திரியில் ஓரிடத்தில்தனித்திருந்து, தன்னுடைய பிள்ளைகள்மனைவிமார்க ளொருவரையும் வரவொட்டாமல் நியமித்து, தன்னுடைய உத்திரவில்லாமல் தென்றலும் நுழைவதற் கருமையான மந்திராலோசனைச்சாலை யென்கின்ற ஒரு ரஹஸ்யஸ்தானத்தில் தன்கருத்துக்கிசைந்த மந்திரிமார்களுடன் ஆலோசனை செய்யும்படியாகப் போயினன். அங்கே மிகுந்தபுத்தியும் - யதார்த்தமும்—சாஸ்திரக்கேள்வியும் - சிறிதேனுமில்லாதவர்களும், ஊமை-செவிடு-முதலான அங்கஹீனர்களும், கூன் - குறள் - சப்பாணி - முதலிய குருபிகளும், விளக்குகளைப் பிடித்துக்கொண்டு நின்றார்கள்.

கவி.

நணியர்வந்து மனிசர்நமக்கினிச், துணியுங்காரியம் யாதெனச்சொல்லினன்
பணியுந்தானவ ராதியர்பன்முடி, மணியினன்விளங் கும்மணித்தாளினன்,

அசுர யக்ஷ காந்தருவர் முதலானவர்கள் வணங்கும்படியான பாதங்களையுடைய பிரதாபலங்கேஸ்வரனுகிய அந்த இராவணன் மந்திரிகளைப்பார்த்து, மனிதர்கள் நம்முடைய பட்டணத்தைச் சமீபித்து வந்துவிட்டார்கள். ஆதலால் - இனிநாம் செய்யவேண்டியகாரிய மென்னவென்று கேட்டான். அப்

போது ராவணனுடைய தாயைப்பெற்ற பாட்டனாகிய மாலியவான் அந்த ராவணனைப்பார்த்துச் சொல்லுகின்றான்.

அப்பா ராவணா! ஊழிகாலத்தக்கினிபோன்ற அந்த ஸ்ரீராமனுடைய சரங்களினாற் சமுத்திரராஜன் உடல்வெந்து நடுநடுங்கிச் சூரியனுக்குச் சமானமான இரத்தினமாலைகளைக் கொண்டுவந்து ஸ்ரீராமனுடைய உபயதிருவடிகளில் வைத்துவணங்கி மன்னிப்புகேட்டுக்கொண்டசெய்தியானது, சூலத்தைப்போல என்னுடையநெஞ்சுக்குள்நின்று துளைக்கின்றது. அந்தச்சமுத்திரமானது ஸ்ரீராமபாணத்தாற் சின்னாபின்னப்பட்டழிந்ததும், அந்தப் பகவானுடைய உத்தரவின்படியே அணைகட்டிமுடிந்ததும், மிகுந்த பயத்தினாலே அந்தக்கடல் அவர்கள் இலங்கையிற் பிரவேசிக்கும்படியாக வழிகொடுத்ததுமாகிய இந்த அபூர்வமான செய்கைகளெல்லாம் என்னுடைய மனத்தைமெத்தவும் வருத்தப்படுத்துகின்றது. மேலும் - உலகத்திலிருக்கப்பட்ட மலைகளையெல்லாம் வேரோடு பிடுங்கிக்கொண்டுவந்த வானரவீரர்கள் தங்களுடைய தோள்களைக்கொட்டிக் கர்ச்சித்தசப்தமும், சமுத்திரத்தைக் கெட்டியாக அடைத்துக்கட்டின கோஷமும், என்னுடைய நினைவை ஸ்தம்பிக்கும்படிச் செய்துவிட்டது. அன்றியும் — மிகுந்த கோபாவேசத்தோடு அளவில்லாத வானரவீரர்கள் தங்களுடைய சக்திக்குத்தக்கபடி மலைகளைச் சுமந்துகொண்டுவந்து கொடுக்க, அவைகளையெல்லாம் அலக்ஷியமாக ஒரு நளனென்கிற வானரவீரன் தன்னுடைய கைந்நுனி விரல்களினால் வாங்கிச் சமுத்திரத்திலிட்டது. என்மனத்தினிடத்தி லிட்டதுபோ லிருக்கின்றது.

பின்னும்இந்த லங்காபட்டணத்தை முன்னொரு குரங்குவந்து சுட்டதையும், மஹா பலசாலிகளான நம்முடைய அநேக ராக்ஷசர்களை அந்தக்குரங்கு கொன்றுவிட்ட விதத்தையும், ஓர் நிமைப்போதிற் செண்டுபோலெழும்பிச்சமுத்திரத்தைத் தாண்டினதையும், நேரிற்கண்டிருக்கின்றோமல்லவா? அந்தக்குரங்கு இப்படிக்கிந்த கொடுமையான செய்கைகளெல்லாஞ் செய்துவிட்டு, நம்முடைய கண்ணுக்கெதிராகவே எவ்வளவுமச்சமில்லாமற் போய்விட்டதே: இவைகளையெல்லாம் நாம் அனுபவமாய்ப் பார்த்திருந்தும் அந்த மனிதர்களுடைய பலாபலத்தைப்பற்றி ஆலோசிக்கவேண்டுமோ?

கவி.

என்றுதாயைப் பயந்தோனியம்பலும், தின்றுவாயை விழிவழித்தீயுக
நன்றுநன்றுநம் மந்திரநன்றெனு, என்றும்வாழ்தி யிளவலோடேகென்றான்.

என்று பாட்டனாகிய மாலியவான் நல்லநீதிவார்த்தைகளைச் சொன்னமாத்திரத்தில் இராவணன் பற்களை நெறநெறென்று கடித்து, கண்களில் அக்கினிப்பொறி பறக்கும்படியாகக் கோபித்து நம்முடைய மந்திராலோசனை நன்றாயிருந்தது: நன்றாயிருந்தது: என்றுநகைத்து, ஓ மாலியவானே! நீ எப்போதும் உயிரோடுகூடி வாழ்ந்துகொண்டிருக்கும்படியாக விபீஷணனோடு கூடப் போய்விடுவாயென்றான்.

பிரகஸ்தன் இராவணன் புஜபலத்தைக்கூறி மாலியவான் வார்த்தையை மறுத்தல்.

கவி.

ஈனமேசொ லிதமெனவெண்ணாரு, மோனமாகி யிருந்தனன்முற்றினான்
ஆனகாலை யடியினிறைஞ்சிய, சேனைநாத னினையனசெப்பினான்.

இதைக்கேட்ட மாலியவான் எப்போதும் துஷ்டர்கள் நல்லவார்த்தையைக் கெட்டதென்று நினைப்பார்களென்று எண்ணிக்கொண்டு ஒன்றும் பேசாமல் மௌனமாக இருந்துவிட்டான். அப்போது அங்கிருந்த சேனாபதியான பிரகஸ்தனென்கிறவன் எழுந்திருந்து வணக்கஞ்செய்து கையைக்கூப்பிக்கொண்டு, ஐயா மாலியவானே! ஏழைகளானமனிதர்கள் இந்த அற்பமாகிய கடலைத்தாண்டி வந்த தொன்றுதானே அவர்களுக்குப்பலம்? அஷ்டதிக்குப்பாலர்களும் வணங்கும்படியாக ஜயம்பெற்று அவர்களிந்தப் பிரதாபலங்கேஸ்வரனாகிய ராவணனுக்கு ஊழியஞ்செய்துகொண் டிருக்கின்ற அந்தயதார்த்தமொன்றையு நினைக்காமற்போய்விட்டீரே: இந்தக்குரங்குகள் வருத்தப்பட்டுச் சிறுகுன்றுகளைத் தூக்கிக்கொண்டுவந்து கடலையடைத்தவைகளென்று பிரதாபித்துச்சொன்னீர். இந்தராவணேஸ்வரர் அந்தமகாகயிலாச பர்வதத்தைப் பிரமதகணங்களோடும் உமாநாயகனாகிய பரமசிவனோடும் உச்சாணிவேரும் பறிபடும்படிப் பேர்த்தெடுக்கவில்லையோ? அதை இப்போதேன்சொல்லவேண்டும்? இந்த இரண்டுமனிதர்களும், குரங்குகளும், புத்திகெட்டவர்களாய் நம்முடைய வாசஸ்தலமாகிய இந்தலங்கைக்குவந்து சேர்ந்தார்கள். தங்களை நாசப்படுத்துவதானகாலம் பிடரியைப்பிடித்துத் தள்ளிக்கொண்டு வந்தபடியால், இனிச்செத்தவர்களேயல்லாமல் பிழைக்கிறவர்கள் அல்லரென்று சொன்னான்.

இராவணன் சுகசாரணர்களாகிய ஒற்றர்கள்வந்தமையை வாயிற்காவலனாலறிந்து அவர்களை வரவழைத்து அவர்களால் ஸ்ரீராமபிரானிடத்து நிகழ்ந்த விஷயங்களையறிதல்.

கவி.

முற்றமூடிய சஞ்சுகன்மூட்டிய
வெற்றனற்பொறிக் கண்ணினன்வேத்திரம்
பற்றுமங்கை யினன்படிசாரநின்
றொற்றர்வந்தன ரென்னவுணர்த்தினான்.

மனைக்கண்வந்தவன் பாதம்வணங்கினார்
பனைக்கைவன்குரங் கின்படர்சேனையை
நினைக்குந்தோறு மலமருநெஞ்சினார்
கனைக்குந்தோறு முதிரங்கள்கக்குவார்.

வெள்ளவாரி விரிவொடவ்வீடணன்
தள்ளவாரி நிலைமையுந்தாபரன்

உள்ளவாறு முரைமினென்றனுயிர்
கொள்ளவாய்வெருவுங்கொடுங்கூற்றனன்.

அப்போது தேகமுழுது மூடிக்கொண்டிருக்கின்ற நிலையங்கிதரித்தவனும்-அக்கினிஜொலிக்கின்ற கண்களையுடையவனும்-கையிற் பிரம்பைப்பிடித்துக்கொண்டிருக்கின்றவனுமான வாயிற்காவலாளியாகிய ஒரு கட்டியக்காரன் இராவணனிடத்துக் கோடிவந்து, தண்டனிட்டெழுந்து நின்று, சுவாமி! எச்சரிக்கை பராக்: தாங்களனுப்புவித்த ஒற்றர்கள் வந்துவிட்டார்களென்றுசொன்னான். அம்மாத்திரத்தில் அக்கினிபொழிகின்ற கண்களுடையவர்களு மிகுந்த பலமுள்ளவர்களுமான ராக்ஷசர்களுக்குத் தலைவனாகிய ராவணன் அதுகேட்டு, நல்லது: அவர்களை இங்கே அனுப்புக. என்றுநியமிக்கவும் அவனப்படியே புத்தியென்றுபோய் அந்த ஒற்றர்களை உள்ளேபோவீர்களென்று அனுப்பினான். அவர்கள் ராவணனுடைய சமுகத்தில்வந்து அவனுக்கு வணக்கஞ்செய்து, வானரசேனைகளை நினைத்து நினைத்துத் திடுக்கிடும் நெஞ்சையுடையவர்களாகி, கனைக்கும்போதெல்லாம் இரத்தங் கக்கிக்கொண்டு நின்றார்கள். அப்படி நின்றவர்களை யாவரும் பயப்படத்தகுந்த யமனுக்குச் சமானமாகிய இராவணன்பார்த்து, வானரசேனைகளுடைய அளவையும் விபீஷணன்செய்கிற செய்கையையும், இராமலக்ஷ்மணர்களுடைய தன்மையையும், விவரமாகச்சொல்லுங்களென்று கேட்கச் சுகசாரணர் சொல்லுவதானார்கள்.

சுவாமீ! நாங்களிந்தச் சமுத்திரத்தை ஒருக்ஷணத்திற்குள்ளே தாண்டி, வானரசேனைவீரர்கள் வசிக்கின்ற பாடிக்கூடாரங்கள்தோறும் அவ்வானரவுருவந் தரித்துக்கொண்டுசென்று, நாங்களந்தச் சேனைசமுத்திரத்தினுடைய அளவைப் பார்க்கவேண்டுமென்கிற ஆசையுடனே உன்னிப்பாய்ப் பார்த்துக்கொண்டே கருடனிலும் அதிவேகமாகச்சென்றோம். அப்படிசென்றும் அதினுடைய முடிவைப்பார்க்க எங்களாற்கூடாமற் போய்விட்டது. அந்தவானரர்கள் இந்தக்கடலையடைத்தபோது சப்தித்துக்கொண் டெழும்பின அந்தநீர்த்துளிகளே உமக்கு முன்னேவந்து சொல்லியிருக்க, அவர்கள் விரிவை இவ்வளவென்றுபார்த்துச் சொல்லுகிறதற்கு நாங்களும்வேண்டுமோ? பிரமருத்திரேந்திராதிகளாலும் இத்தன்மையரென்று அளவிடக்கூடாத வேதசாஸ்திரங்களைக் கற்றறிந்த அந்தமனிதர் தம்முடையதோள்களாகிய மேருமலையைப் பார்த்துப் பாணங்களைப் பார்த்துத் தமதுவில்லையும் பார்த்தமாத்திரத்திலே, சமுத்திரமானது வெந்து நீறாய்விட்டது.

ஓ கற்பகப்பூமாலையசைகின்ற இரத்தினமயாலங் காரமுள்ள மார்பினனாகிய இராவணேஸ்வரா! உம்முடைய லங்காதிபத்திய ஐஸ்வரியமெல்லாவற்றையும் அந்த ஸ்ரீராமமூர்த்தி சூரியசந்திரர்களுள்ளவரையினும், தமதுநாமம் பிரகாசித்துக்கொண் டிருக்கிறவரையிலும், உம்முடைய தம்பியாகிய விபீஷணருக்கே சொந்தமாகக் கொடுத்துவிட்டார். முன்னாகத் தூதுவந்த ஒருகுரங்கு தன்னுடைய புஜபலபராக்கிரமந் தெரிவித்த பெருமையை இன்னு மொ

ருவரு மளவிடவில்லை. அப்படியிருக்க-அந்தக்குரங்கைப்போலொத்த அனேகங்குரங்குவீரர்கள் சேதுபந்தனஞ் செய்தார்களென்கிறதும் ஒருபுதுமையோ? முப்பத்துமூன்றுகோடி தேவர்களும் தேவாமிர்தபானம் பண்ணும்போது தங்களுடையபந்தியில் தானவர்கள் மறைந்திருக்கிறதை யறிந்து சர்வவல்லவரான ஸ்ரீமாதவப்பிரானுக்குத் தெரிவித்ததன்மைபோல, உம்முடையதம்பி வானரர்களைக்கொண்டு எங்களையடிப்பித்து, மடலோடு மடல்முறியச் சேர்த்துக்கட்டி, அப்படியே யிழுத்துக்கொண்டுபோய்ச் சகஸ்திரகோடி கிரணங்களோடுகூடிய இளங்கருஞ்சூரியனைப்போற் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற மகாவீரனான ஸ்ரீராமமூர்த்திக்குக் காட்டி, எங்களைராக்ஷசர்களென்றுசொல்லி, மந்திரத்தினால் நாங்கள் குரங்கல்லாமையையும் வெளிப்படுத்தினான். அப்போதெங்களை ராக்ஷசர்களென்று தெரிந்துகொண்ட அந்தவெற்றிவீரனான ஸ்ரீராமர் எங்கள்மீது பரிபூரண தயைவைத்ததினால், நாங்களும் பிராணன் தப்பிவந்து உம்முடைய பாதங்களை யடைந்தோம். மேலும்-அந்த ஸ்ரீராமர் சொன்னவார்த்தைகள் இவை: இவை: என்று அவர்சொன்னதில் ஒன்றும்விடாமல் விவரமாகச்சொல்லி, இதுதான் நாங்கள் போய்வந்த ஒற்றுத்தொழிலின் விதமென்றுகூறி, உமக்குண்டாகும் குறைவுகளும் பொல்லாங்குகளுநீங்கி இன்றுமுதல் தீர்க்காயுசுடையவராகக் கடவீரென்று வாழ்த்தினார்கள்.

மகோதரன் சிலவார்த்தைகூறி தன்னை யுத்தத்திற் கனுப்பவேண்டுதல்.

கவி.

வய்தெனக்கொல்லும்விற்கை மானுடர்மகரநீரை
நொய்தினினடைத்துமானத் தானையானுவன்றநம்மூர்
எய்தினரென்றபோதின் வேறினியெண்ணவேண்டும்
செய்திறனுண்டோவென்னச் சேனைகாவாளன்செப்பும்.

அப்போது மகோதரன் இராவணனைப்பார்த்து, ஐயா பிரதாபலங்கேஸ்வரா! பெரியோர்களுடைய சாபவார்த்தையைப்போல் தப்பாமற்கொல்லத்தக்க வில்லைப்பிடித்துக்கொண் டிருக்கின்ற அந்தமனிதர்கள் சமுத்திரசலத்தை லேசிலணைகட்டவல்லமையுள்ள சேனைகளுடனே யாவருந்துதிக்கின்ற நம்முடைய ஊரைவந்துசேர்ந்தார்களென்கிறபோதே இனி நாமாலோசித்துச் செய்யவேண்டிய செய்கையுமுண்டா யிருக்கிறதோ? நாம்சீதையை விட்டுவிட்ட போதிலும் தேவர்கள் ராவணன்பயந்தானென் றிகழ்வதுமல்லாமல், உம்மோடு ஸ்ரீராமலக்ஷ்மணர்களுக் குண்டான பகையை ஒழியவிடார்கள். ஸ்ரீராமன் சண்டையில் ஒருவேளை சிநேகமாயிருந்தாலும், உன்தம்பியாகிய விபீஷணன் அப்படி யாகும்படிவிடான். சத்துருக்கள் நம்முடைய ஊரைக்கிட்டினபிறகு, அவர்கள் செய்யப்போகிற அவமானத்தை இப்படியென்று சொல்லவேண்டுமோ?

நாம் படைகளுடனே போய்ச் சமுத்திரத்தின் அக்கரையி லவர்களிருக்கும்போதே வானரங்களுடனே அந்த மனிதர்களையுங்கொன்று திரும்பி நம்

யிடம்வந்து சேரவேண்டுமென்கிறதை ஆலோசியாமற்போய்விட்டோம். இப்போது அவர்களிங்கேயே வந்திருக்கிறார்கள். இனியவர்களைக் கொல்லுவதைவிட நமக்கு வேறே யுறுதிப்பாடு முண்டோ? இச்சித்தது சமீபத்திற் கிடைக்கப்பெற்றால் வெகுதூரம்போய் பிரயாசப்பட்டு வெற்றிகொள்ளுவதிலும் சிறப்பானதல்லவோ? ஓ திரிலோககண்டகனாகிய ராவணேஸ்வரா! ஆயிரவெள்ளமான நம்முடையராக்ஷசச்சேனைகள் அழியவேண்டுமானாலும் நூறுஊழிக்காலம் வேண்டியதாகும். நமக்குச்சேனையி லென்னகுறைவு? அந்தமனிதர்களோடு வந்திருக்கின்ற அற்பக்குரங்குக ளெல்லாம் இனிநீர் கோபித்துப் புறப்படும்போது சிங்கத்தைக்கண்ட நாய்க்கூட்டங்களைப்போ லோடிவிடுமேயல்லாமல், உமக்கெதிரே நிற்கமாட்டுமோ?

கவி.

வந்தவர்தானையோடு மறிந்துமாக்கடலில்வீழ்ந்து
சிந்தனரிரிந்துபோகச் சேனையும்யானுஞ்சென்று
வெந்தொழில்புரியுமாறு காணுதிவிடையீகென்று
இந்திரன்முதுகுகண்ட விராவணற்கேயச்சொன்னான்.

நம்மோடு பகைத்துவந்தவர்களைத் தங்கள் சேனையுடனே மடங்குண்டு பெரியசமுத்திரத்தில் வீழ்ந்து சிதறுண்டோடிப்போகச் செய்யத்தக்க சேனையு நானுமாய்ப்போய்க் கொடியயுத்தஞ் செய்கிறவிதத்தைக் கொஞ்சம் தயைசெய்துபாரும். எனக்கு உத்தரவுகொடுமென்று இந்திரனை முதுகுகாட்டியோடச்செய்த அந்தராவணனுடைய மனம் சம்மதிப்படும்படி, மகோதரனென்கிற ராக்ஷசவீரனானவன் சொன்னான்.

மாலியவான்மீட்டு மிராமனாதியருற்பவத்திற் கேதுவான தேவரகசியங்கூற, இராவணன் தன்பராக்கிரமங்கூறி மறுத்தல்.

கவி.

மதிநெறியறிவுசான்ற மாலியவானவ்வாய்மை
பொதுநெறிநிலையதாகப் புணர்த்துதல்புலமையென்று
விதிநெறிநிலையதாக விளம்புகின்றோருமீண்டுச்
செதுநெறிநிலையினாரே யென்பதுத்தெரியச்சொன்னான்.

அப்போது சகலதேவரகசியங்களையும் புத்திபூர்வமாக ஆராய்ந்தறிந்த மாலியவான் சத்தியமாக நாம் கேள்விப்பட்டதைப் பொதுநெறி நிலையாகச் சொல்லித் தெரிவிப்பது நல்லவறிவாகுமென்று நினைத்து, வேதசாஸ்திரவிதிகளினால் நிச்சயமாகச் சொல்லப்பட்ட வஸ்துவானவர்கள் இந்தராமலக்ஷ்மணர்களே யென்பதை இராவணனுக்கு விவரமாகச் சொல்லத்தொடங்கினான். அப்பா இராவணா! நம்மிடத்திற் சண்டைசெய்கிறதற் கேற்பட்டுவந்த ஓர் பெரியவீரன் சமுத்திரத்தாற் சூழப்பட்ட ஐம்பத்தாறு தேசத்திற்கும் ஏகசக்ராதிபதியான தசரதனுடைய குமாரனாகத் திருநாமஞ் சாற்றிக்கொண்டு வந்திருக்கிற பரஞ்சோதிஸ்வரூபனென்றும், வேதத்தினுச்சியி லெழுந்த

ருளியிருக்கும் தேவதேவனுன சர்வேஸ்வரனென்றுஞ் சொல்லுகின்றார்கள்: அவருக்கிளையவனுன இலக்ஷ்மணனை அப்பரம்பொருளுக்குச் சயனத்தலமாகிய ஆதிசேஷனென்கிறார்கள். இவருயர்ந்த நிலையினின்று முற்றத்துறந்து, அகங்கார மமகாரமாகிய குற்றமற்ற ஜீவர்களினிடத்தெல்லாம் சேஷத்துவ பாரதந்திரியமாகிற ஞானநிலையைக் காட்டுகின்றவர்களைப்போல, எல்லா ஸ்வரூபத்திலும் பரிசுத்தவானென்கிறதை லோகப்பிரசித்தமாகச் சொல்லிக்கொள்ளுகின்றார்கள்.

இந்த இரண்டுவீரர்களுடைய விற்களைப் பிரமதேவன் குலாசலங்களுடைய சத்தையெல்லாம் வேறாகவெடுத்து வில்லாகச்செய்த அந்தக்காலத்தில், அதற்கேற்றநாணிஅத்திருவனந்தாழ்வானையேஅமைத்திருக்கின்றதாம்,பாணமாகச்செய்த காலநேமியின் பராக்கிரமமோவென்றால், ஒருவராலுங் கணிக்க இசையாதென்கிறார்கள். வாலியையும், அவனுக்குப் பிள்ளையாகவந்தவனையும், தேவேந்திரனென்கிறார்கள். நீலனென்கிற வானரசேனாதிபனை லோகங்களையெல்லாம் சுட்டழிக்கத்தக்க அக்கினிதேவனென்கிறார்கள். யமனுக்குச் சமானமான ஸ்ரீராமதூதனை வாயுபகவானும் சாம்பசிவனுமென்கிறார்கள். மேலும் - இந்த ஸ்ரீராமதூதன் இனிமேல் பிர்ம்மாவாகப் போகிறானென்றுமொருவிசேஷஞ் சொல்லுகிறார்கள். அந்தப் பிர்ம்மபதவியைஅவருக்குக்கொடுத்தவர் இராக்ஷசர்களுடைய கருவை யறுத்துவிடுவதாக இந்த ஊருக்குவந்திருக்கிற ஸ்ரீராமபத்திரரென்று எல்லாருஞ் சொல்லுகின்றார்கள். இப்படியெல்லா மெனக்குச் சொன்னபேர்கள் இவர்களுடைய வல்லமையைப்பார்த்து ஒப்பிட்டுச் சொன்னார்களோ? யதார்த்தமே சொன்னார்களோ? தெரியாது.

மேலும் - குரங்காய்வந்தவர்களெவ்வொருவரும் பிர்ம்மாதிதேவர்களென்கிறார்கள். இந்தச் சமாசாரத்தையும் சொன்னவர்கள் பயத்தினால் சொன்னார்களோ? அல்லது அவர்களுடைய ஞானதிருஷ்டியினால் தெரிந்துசொன்னார்களோ? தெரியாது, சீதையைப் பிரம்மேந்திராதி தேவர்களுக்கு மெட்டப்படாத பரமபதநாட்டிலுள்ள சாக்ஷாது ஸ்ரீமகாலட்சுமியென்று சொல்லவேண்டுமே யல்லாது இந்த லோகத்துள்ள மற்றபெண்களைப்போலோர்பெண்ணென்று இகழ்வாய் நினைக்கப்படாதென்றும், மகாபரிசுத்தமானவளென்றும், அமிர்தத்துடன் அவதரித்தவளென்றும், சர்வலோகங்களுக்கு நிருபாதிகத் தாயானவளென்றும் சொல்லிக்கொள்ளுகின்றார்கள். இப்படி தர்மஸ்தாபனர்கள் மீன்களையுடைய சமுத்திரமாகிய அகழியாற் சூழப்பட்ட மேருசிகரமாகிய இலங்காபட்டணத்திற் கிராஜனான உன்னுடையவரத்தை நினைத்துத் தங்கள்சுயேச்சையாகவே மனிதவடிவுகொண்டு காட்டுக்கு வந்ததை, தேவர்களுடைய பிரார்த்தனையால்தான் வந்ததென்று சொல்லுகிறார்கள். அப்படியே அளவில்லாத உற்பாதங்களும் சம்பவித்தனவென்கிறார்கள்.

சர்வஜீவர்களுக்கும் தாயைக்காட்டிலும் அதிககிருபையையுடையவளான சீதாபிராட்டி யெழுந்தருளியிருக்கின்ற அதிரஹசியமான அசோகவனத்

தை யறியத்தக்கவனான ஸ்ரீராமதூதனால் இந்த லங்கையைக் காத்துக்கொண்டிருந்த தேவதையான துதையுண்டு அந்தக் காவலைவிட்டு ஓடிப்போய்விட்டதென்றும், அதனாலேயே இந்த யுத்தமுஞ் சம்பவித்ததென்றும் சொல்லுகிறார்கள். அந்த ஸ்ரீராமனுடைய அம்புக்கு லக்ஷியமானவர்கள் இப்போது ராஜரீகஞ் செய்துவருகிற ராக்ஷசர்களென்கிறார்கள். இப்படியென்று நம்முடைய வசத்திலிருந்த பொய்யாத நாவையுடையவனும், எல்லாக் கலைக்கியானங்களிலும் தேவமந்திரியான பிரகஸ்பதிக்கு ஒருமுழம் உயர்ந்தவனுமான உன்தம்பியாகிய விபீஷணன் சொல்லிவிட்டுப்போனானென்றும் வெளியரங்கமாகச் சொல்லுகின்றார்கள். இவைகளையெல்லாம் நான் கேள்விப்பட்டதுமல்லாமல், என்குலம் ஆதியில் நாசமானதும் பரம்பொருளாகிய அவனாலேதான். இதையெல்லாம் உன்னிடத்திலெனக்கிருந்த பக்ஷத்தினாலே, பின்விளையும் காரியங்களைக்குறித்து மனதில்வருத்தமுற்று உனக்குச் சொன்னேன். இனியாவது சீதையை விடுவாயானால் இந்தப்பொல்லாங்கு விலகிப்போய்விடும். என்று பாட்டனான மாலியவான்கூறி முடித்தனன்.

கவி.

மற்றெலாநிற்கவந்த மனிசர்வானரங்கள்வானின்
இற்றைநாளளவுநின்று ரிமையவரென்னுந்தன்மை
சொற்றவாறன்றியேயுந் தோற்றிநீயென்றுஞ்சொன்னாய்
கற்றவாநன்றுபோவென் றினையனகழறலுற்றான்.

இப்படிக்கெல்லாம் பன்னிப்பன்னி மாலியவான் சொன்னதைக்கேட்ட ராவணன் அவனைப்பார்த்து நீசொன்னவைகளெல்லா மிருக்கட்டும் அந்தமனிதர்களும் - வானரங்களும்—இன்றுவரையில் என்னிடத்தினின்றும் தப்பிநின்ற தேவர்களென்று சொன்னதுமல்லாமல், அவர்களுக்கு நான் தோற்றுப்போவேனென்றும் சொன்னாய். நீ இதுவரையில் பலசாஸ்திரங்களையும் படித்தறிந்தது இவ்வளவுதானா? என்றிகழ்ந்து பின்னும் சொல்லத்தொடங்கினான், ஐயா என்மூதாதையே! இந்தப் பேதைகளான மனிதர்களுடனே குரங்குகளல்ல, மற்ற ராக்ஷசர்கள்தானாகட்டும், பூலோகத்திலுள்ளவர்கள்—நாகலோகத்தவர்கள் - சுவர்க்கலோகவாசிகள் — முதலிய வெல்லாரும் பகைத்து என்மேற் சண்டைக்குவந்தபோதிலுஞ்; சீதையின்விஷயத்திலென்றைக்கானாலும் என்வல்லமையில் தப்பிப்போய்விடுவேனோ? இந்த லோகங்களையெல்லாஞ் செயித்தவைகளாய் என்கையில் ஒன்றல்லவே: அனேகபாணங்களிருக்கின்றனவே: அவைகளந்த அனுமானுடைய கொடுமையிலு மதிகமாய் முன்பு மிருந்த உக்கிரமான யுத்தஞ்செய்த தேவர்களுடைய முதுகையுமூடுருவிப்போனவைகளாச்சே: அப்படிப்பட்டவைகள் இன்றிந்தக் குரங்குகளின்மேற் செல்லச் சக்தியற்றவைகளோ?

சூலாயுதத்தைக் கையிற்பிடித்துக்கொண்டிருக்கின்ற பரமசிவனே யொருகுரங்காய்ப்பிறந்து வந்தாலென்ன? என்னைக்கண்டா விடைந்துபோகவேண்

டுமேயல்லாமல் என்னை யென்னசெய்ய மாட்டுவான்? என்கையிலிருக்கின்ற கூரியபாணங்கள் பாற்கடலைக் கடைந்தகாலத் திலுலகமெல்லாம் பயப்படும்படிப் புறப்பட்டுவந்த காலகோடிவிஷத்தையும் கவளீகரிக்க வல்லவைகளாக்கும். என்வல்லமை உனக்குத் தெரியாதுபோ லிருக்கிறது. யுத்தத்தி லெனக்குத் தோற்றுப்போன சக்கராயுதத்தனுன விஷ்ணுவே இந்த ஸ்ரீராமனுக வந்து எதிர்த்தாலுந்தா னென்ன? என்கையிலிருக்கின்ற பாணங்கள் சூரியசந்திரர்களும் தீய்ந்துபோம்படி அதிவேகமாகச் செல்கின்றவைகளல்லவோ? அவைகளையவன் அலக்ஷியஞ்செய்து தன்மார்பில் தரித்துக் கொள்ளுகிறதற்குச் சமுத்திரத்தைக் கடையும்போதுண்டான கௌஸ்துவமணியோ? வெற்றிபொருந்திய வாளாயுதத்தையுடையவர்களான தேவர்களுக்கிராஜனுகிய இந்திரன் குரங்குருவங்கொண்டானே யானல், அன்றைக்கவனுற் பிரயோகிக்கப்பட்ட வச்சிராயுதமறுக்கச் சிறகுவெட்டுண்டு நிற்கமாட்டாமல் விழுந்த அற்பமலைகளோ என்புஜமலைகள்.

என்றிப்படி ராவணன் சொல்லிக்கொண் டிருக்கும்போது குலஸ்திரீகளுடைய உள்ளமே தூதாகப்போகத் தங்களுயிர்க்குச் சமானமாகிய நாயகன்மார்கள் தங்கள் சொந்தவீட்டிற்குப்போகவும், அவர்களை விட்டுப் பரஸ்திரீகள் சோர்வடையவும், சக்கரவாகப் பக்ஷிகளுடைய வியசனங்கள் விலகவும், மேருமலையையு மூடிக்கொண்டிருந்த பிரளயவெள்ளம் வடிந்ததுபோல உலகத்தை மூடிக்கொண்டிருந்த இராத்திரி கழிந்துபொழுது விடிந்தது. இலங்கைப்பட்டணத்தின் தன்மை யிப்படிப்பட்டதென்று எட்டிப்பார்க்கவும் பறந்து அந்தமதிலுக்குப் பக்கமாய்த் தினந்தோறும் போய்க்கொண்டிருந்த சூரியன், இப்போது சக்கரவர்த்தித் திருக்குமாரர் யுத்தத்திற்கு வந்திருக்கிறாராதலால் நமக்கு நல்லவதிகாரம் கிடைத்ததென்று வெகுநாளாய்க் காணுமலிருந்த அவ்விலங்கையைப் பார்க்கிறதற்காகப் புறப்படுகிறதுபோல உதயமாயினன்.

ஒற்றுக்கேள்விப் படலம்-முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

ஒன்பதாவது,

இராம னிலங்கை காண் படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமபத்திரர் தமது துணைவர்களோடு சுவேலாபர்வதத்தின் சிகரத்திலேறி இலங்கைமாநகரத்தைக்கண்டு, இளையபெருமாளாகிய இலட்சுமணருக்கு அதிலுள்ள ஒவ்வொரு சிறப்புக்களையுந் தனித்தனி காட்டுதல் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமர் சுவேலாபர்வதத்தினுச்சியிலெழுந்தருளி யிருத்தற்சிறப்பு.

கவி.

அருந்ததியனையநங்கை யவ்வழியிருந்தாளென்று
பொருந்தியகாதறுண்டப் பொன்னகர்காண்பான்போல

No. 47. ஸ்ரீராமர்சுவேலாபர்வதத்தின்மேலேறி இலட்சுமணருக்கு இலங்கை விநோதங்களைக்காண்பித்தல்.



இராவணன் உத்தரவாயிற்கோபுரமேறி சுகசாரணரால் ஸ்ரீராமர் சேனையைக்காட்டுதல்.



இராமனிலங்கைகாண்படலம்.

பெருந்துணைவீரர்சுற்றத் தம்பியும்பின்புசெல்ல
இருந்தமான்மலையினுச்சி யேறினனிராமனிப்பால்.

அப்போது ஸ்ரீராமர் அருந்ததிக்குச் சமானமாகிய சீதாபிராட்டியாரைக் காணவேண்டுமென்று கருதி மிகுந்த ஆசையுடனே சுவர்க்கலோகத்தை காணப்போகிறவரைப்போல, துணைவர்களான சிறிய திருவடி சுக்கிரீவமஹாராஜன் – அங்கதன் - ஜாம்புவன் – இவர்கள் முதலானவர்கள் சுற்றிவரவும், இளையபெருமாள் பின்னே தொடரவும், சுவேலாபர்வதத்தின் சிகரத்தின்மேலேறியருளினர். அங்கே பலவந்தர்களான வீரர்களெல்லா நெருங்கிச்சூழ்ந்துவரவும், சுக்கிரீவமகாராஜனும் - அங்கதனும் – கைலாகு கொடுத்துக்கொண்டுவரவும், ஸ்ரீகாகுஸ்தவம்சோத்தாரகர் அதிகபலமுள்ள சிங்கமும் – யாளியும் – புலியும் – சூழ்ந்துகொண்டு வரும்படியாக உயர்ந்த பருவதத்தி லேறுகின்ற இராஜசிங்கத்துக்குச் சமானமாகவிருந்தார்.

அந்த ஸ்ரீராமர் அலைமோதிப் பொங்கிச் சப்திக்கின்ற சமுத்திரஞ்சூழ்ந்த இவ்வுலகமெல்லா மூடிக்கொள்ளுகின்ற இருளைப்போல மொய்த்துக்கொண்டிருக்கின்ற மிகுந்தராக்ஷசர்களுடைய நகரமும்–அதன் அயிஸ்வரியமும் – அழியச்செய்கின்ற உற்பாதத்தைக் காட்டும்படி, கிரமமாய் உதயகிரியினின்று முதித்துவராமல் இருந்தாற்போலிருந்து உக்கிரமமாக வடக்கேயொருமலையினுச்சியி லுதித்த கருஞ்சூரியனை யொத்திருந்தார். பெரியயுத்தத்தில் மிகுந்த அஸ்திரவருஷங்களைப் பொழிகின்ற வில்லுடனேகூட அந்தச் சுவேலாசனத்தின்மேல் ஒருபெரிய காளமேகம் தாமரைமலர்களைப் பூத்து வந்ததுபோல, ஸ்ரீகோதண்ட பாணியாகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் திருக்கைகளும் – திருவடிகளும்–திருக்கண்களும் – திருமுகமும் – திருவாயும் பிரகாசிக்க எழுந்தருளியிருந்தார்.

அன்றியும் – வலியமலையையொத்த திருத்தோள்களையுடைய சக்கரவர்த்தித் திருமகனானவர் பெருமை பொருந்திய தம்முடைய கோதண்ட வல்லமையினால் சமுத்திரநாயகனாகிய வருணனை வரவழைத்து, மலைகளாற் சேது கட்டிக் கடலைத்தாண்டி, சுவேலாசலத்தின்மீது வானரவீரர் கூட்டத்தினடுவே சுவர்ணகிரிகளுக்கு மத்தியிலிருக்கின்ற ஒருமரகதமலையையும் ஒத்திருந்தார். பெரிய சமுத்திரத்தின்மத்தியில் திருவணையைக்கண்டு வருணனிடத்திற் கொண்ட கோபமாறிய ஸ்ரீரகுநாதர் சீதாபிராட்டியென்னும் தமதினிய உயிர் பிரிந்தபிறகு துணைபிரிந்த அன்றிற்சேவலைப்போல வருத்தமுற்றிருந்தவர், தமதிரண்டு திருக்கண்களாலு மிலங்கைப்பட்டணத்தைப் பார்த்து இளைய பெருமாளுக்கு அதன்பெருமையைக் காட்டத் தொடங்கினர்.

ஸ்ரீராமரிலக்ஷ்மணருக்கு இலங்கையின் சிறப்புகளைக் காண்பித்தல்.

கவி.

நந்திருநகரேயாதி வேறுளநாகர்கட்கெல்லாம்
வந்தபேருவமைகூறி வழுத்துவான்மைந்தகாளை

இந்திரனிருக்கையென்ப ரிலங்கையையெடுத்துக்காட்டார்
அந்தரமுணர்தறேற்றா ரருங்கனிப்புலவரம்மா.

அப்பா இலக்ஷ்மணா! உலகத்தில் வித்துவான்கள் நம்முடைய அயோத்தியாநகர முதலாகிய எல்லாலோகத்தினுமுள்ள எல்லாநகரங்களுக்கும் உபமானஞ்சொல்லிப்புகழ ஏற்படுங்காலத்தில். இந்திரபதவியாகிய சுவர்க்கலோகத்தைத் திருஷ்டாந்தப் படுத்துகின்றார்கள். இந்த லங்காபட்டணத்தையெடுத் துவமிக்கின்றார்களில்லை. அதற்குமிதற்குமுள்ள தாரதம்மியந் தெரிவதரிதானதா லிதன்பிரபாவத்தை அவர்கள் அறியவில்லைபோ லிருக்கின்றது. அந்தவிலங்கையிற் குற்றமறப் பிரகாசிக்கின்ற செம்பொற்றகடுபடுத்த தலத்தில் சூரியனும் கண்கூசத்தக்க மிகுந்தவொளியுள்ள நவரத்தினங்களாற்செய்து முடிக்கப்பட்டவைகளும் தவஞ்செய்த சித்திரக்காரராலும் சித்திரிக்கக்கூடாதவைகளுமான மாளிகைகளினுடைய பொருத்தமான வேலைப்பாடுகள் அதிகபிரகாசமுள்ள கிரணங்கள் சூழ்ந்ததனால் கண்ணுக்குத் தெரியவில்லை.

ஓ பராக்கிரமத்திற்சிறந்த சுத்தவீரனே! விரிந்த கிரணங்களை யுடையவைகளாயும் பிரகாசிக்கின்ற இரத்தினங்களினுடைய கிரணக்கூட்டங்கள் ஆகாசவரையில் அளாவுகின்றதைப் பார்க்கும்போது, சிங்கத்துக்குச் சமானமாகிய வெற்றியோடுங்கூடிய வல்லமையுள்ள ஆஞ்சனேயன்வைத்த நெருப்பா லின்னமு மிந்தலங்காபட்டண மெரிகின்றதென்று நினைக்கும்படியா யிருக்கின்றதைப்பார். மேலும் — மேகங்கள் பரவிப்படர்ந்திருக்கின்ற பெரியமரகதத்தளத்தில் தங்கத்தாற்கட்டிய உப்பரிகைகளின் தழைந்த கிரணக்கூட்டங்கள் சூழும்படியாக மத்தியிற்களங்கமற்ற வயிரக்கற்கள் படுத்துக்கட்டிய வீடுகள், கொடிப்பாசி படர்ந்துள்ள ஒருதடாகத்தில் தாமரைப்புஷ்பத்தில் வசிக்கின்ற அன்னப்பக்ஷிகளைப்போ லிருக்கின்றதைப்பார்.

வளைந்த வில்லின்வடிவத்தைப்போலத் திரண்டதோளையுடைய ஓ இலக்ஷ்மணா! அக்கினிக்கொழுந்துபோன்ற ஜோதியையுடைய இரத்தினங்களையழுத்திக்கட்டிய மிகுந்தபிரகாசமுள்ள மேல்மாடங்கள் நெருங்கிச் சொலிக்கின்றபடியால், கருமைநிறத்துடன் ஆகாசமார்க்கமாய்ப்போகு மேகங்களெல்லாம் அந்தச்சுடர்கள்பட்டு உலைக்களத்தில் வேகும்படிக்காய்ச்சிய இரும்புக்கொப்பாகச் செவந்து ஒளிவீசுகின்றதைப்பார். அன்றியும் — கோபக்கண்ணோடுங்கூடிய யானையானது இருள்படிந்த நிறத்தையுடையதாக விருந்தபோதிலும் உரனுக்குச் சமானமான பலம்பெற்றிருக்கின்ற கால்நகங்களினாற் பொற்றரையைக் கல்லிப்பேர்த்து, தனது துதிக்கையினால் அந்தப் பொற்புழுதியைவாரித் தன்னுடம்பெல்லாம் பூசிக்கொண்டு பொன்மலையைப் போலப் போகின்றதைப்பார்.

உயுத்தஞ்செய்கின்ற வில்லையுடைய ஓ இளையவனே! மிகுந்த பிரகாசத்தோடுங்கூடிய சுவர்ணத்தேர்களிற் கட்டியிருக்கின்ற ஒளியையுடைய வாழைமரக் காடுகளும், அந்தத்தேரின்மீதுகட்டிப் பறந்துகொண் டிருக்கின்ற சுவர்

னக்கொடிக்காடுகளும், ஆகாசத்தினிடத்திற் பரவியிருக்கின்ற மேகமாகிய அழுக்கைத்துடைத்து; அந்த அகண்ட ஆகாசமாகிய கண்ணாடியைப் பிரகாசப்படுத்துகிறதுபோலு மிருக்கின்றதைப்பார். இதுவுமல்லாமல் - அவ்விலங்காபட்டணமானது நூல்போட்டதுபோல வரிசையாக ஒன்றின்பக்கத் தொன்றாகச்சேர்த்து சுவர்னத்தகடு பதித்துச் சித்திரங்க ளமைத்துப் பத்திபத்திகளாய்க் கட்டியிருக்கின்ற மாளிகைகளாகிய இரத்தினமணிகளுக்கு நடுவேயிருக்கின்ற இராவணனுடைய மாளிகையானது நாயகப்பதத்துக்குச் சமானமாகிய சமுத்திரராஜன் தரித்துக்கொண் டிருக்கின்ற இரத்தினமாலைபோலுமிருக்கின்றதைப்பார்.

இகலுடையோருக் கிடியேயொருத்துவிளங்கும் ஒ எனதிளவலே! இலங்கையினது நெடுந்தெருவில்வர்ணத்துக்கொருரத்தினங்களினாற்கட்டப்பட்டிருக்கின்ற உப்பரிகைகளின்வரிசையான நிழல்படுவதனால் தன்னுடைய சொந்தநிறமானது தெரியாமலும்,ஒருநிறத்தையாவது சேராமலும்,இன்னஜாதியானதென்று அறியப்படாமலும், குதிரைகள்போகின்றனபார். மேலும் - மன்மதனுங்கண்டு புத்திமருண்டு ஆச்சரியப்படும்படியாய் தெளிவான பளிங்குக்கல்லாற் பிரகாசிக்கத்தக்கதாகக் கட்டின உப்பரிகைகள் வேறே ஒருபொருளின் சாயைபடும்போதுமாத்திரங் காணப்படுகின்றனவேயன்றி, அப்படிக்கில்லாதபோது ஆகாயம்போல் யாதொரு நிறமுங்காணப்படவில்லை. அவைகாணப்படுகிறதோற்றம் ஜலத்தினாலே கட்டப்பட்டவைகள்போல நிழலிடுகிற தன்மை யுடையவைகளா யிருக்கின்றனபார்.

அரக்கர் செருக்கையடக்குமடல்விற் பிடித்திருக்கின்ற அழகியகையையுடைய ஒ இலட்சுமணா! வெண்மையானநிறம்வாய்ந்த சந்திரனுடையகிரணங்கள் பிரகாசிக்கிறதுபோலும் காணப்படுகின்ற ஆகாசத்தையளாவியமுத்துப்பந்தலுக்கு மத்தியில் அலங்கரித்துவைக்கப்பட்ட மரகதரத்தினமானது, பாற்கடலின் மத்தியிற் சயனித்துக்கொண் டிருக்கின்ற பரமவிராட்புருஷருக்கு நிகராகவிருக்கின்றதுபார். சூரியனைப்போலு மதிகபிரகாசத்தை வீசுகின்ற உப்பரிகையின்மீது ஒருதேவஸ்திரீயானவள் கறுத்தவுறையில் நின்றும் வெளியிலெடுக்கப்பட்ட கண்ணாடியானது, ஆகாசத்தினிடமாக இராகுவென்கின்றகரும்பாம்பு பற்றிவிழுங்கி மறுபடியுங்கக்குகிற சந்திரனுக்குச் சமானமாக இருக்கின்றதை உற்றுப்பார்.

வெற்றியைக்கொடுக்கின்ற வில்லைக் கையில்வைத்திருக்கிற ஒ வீரசிகாமணியே! அநேக கோடிகளாய் நெருங்கிய உப்பரிகைகளுள்ள லங்கையிலிருக்கின்ற நீண்டகழுத்தையுடைய, ஒட்டகங்கள், அந்த லங்கையி னுப்பரிகைகளிற் புஷ்பங்களைப்போலப் பிரகாசிக்கும்படியாகப் பதிக்கப்பட்ட ரத்தினங்களினின்று வீசுகின்ற கிரணங்களைத் தேமாவிருக்ஷங்களினுடைய கொத்துகளாகிய தளிர்களென்று பறித்துத் தின்னும்படியாகக் கழுத்தைநீட்டுகின்றதைப்பார். அன்றியும்—ஸ்திரீகள் பூமாலையை நீக்கிவிட்டுத் தங்கள் கூந்தல்

களுக் கூட்டுகின்ற அகிற்புகையினுல் முழுதுஞ் சூழப்பட்ட ஒரு பவளமாளிகையானது, யானையுரியைப் போர்த்துக்கொண் டிருக்கின்ற பார்வதி சமேதராகிய சாம்பசிவ மூர்த்தியைப்போலப் பிரகாசித்துக்கொண் டிருக்கின்றது பார்.

ஓ தசரதமஹாராஜருடைய அருந்தவப் புத்திரனே! விஸ்வகர்மாவானவன் நீல ரத்தினத்தினுல் அலங்கரித்துச் செய்யப்பட்ட செய்குன்றங்கள் ஒருவரும் தெரிந்துகொள்ளக்கூடாத வஞ்சகமனத்தையுடைய ராக்ஷசர்களாலே சம்பாதித்து வைக்கப்பட்ட பாபநிக்ஷேபங்களைப்போன் றிருக்கின்றவைகளைப்பார். மானைப்போல் மதர்த்த தங்களுடைய பார்வையானது வியர்த்தமாகும்படியாக மோகத்தினுற் பிணிப்புண்டு சொந்த நாயகர்களை விட்டுப் பிரிந்து வந்து தங்களிடையைப்போலத் தத்தளிக்கின்ற உள்ளத்தை யுடையவர்களும் சர்ப்பத்தின் படத்திற்குச் சமானமான அல்குலையுடையவர்களுமாகிய ராக்ஷசஸ்திரீகள், வருஷகாலத்தை எதிர்பார்த்துக்கொண் டிருக்கின்ற மயிற்கூட்டங்களைப்போல நம்மைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் பார்.

வெற்றிமாலையைத்தரித்த வில்லைக் கையிலேந்திக்கொண்டிருக்கின்ற அதிக பராக்கிரமமுடைய ஓ இலக்ஷுமணு! அகாலத்திற் பழுக்கும்படி மாதுளம்பழத்திற்குப் புகையூட்டுவதுபோல வண்ணப்பெண்ணொருத்தி ராக்ஷச ராஜஸ்திரீயினுடைய குஜங்களிற் சந்தனத்தாற் கோலமெழுதி, அஃதுலரும்படி பொன்தூபமுட்டியால் அகிற்புகை யூட்டுகின்றதைப்பார். புதுமலராற்றொடுத்த மாலையைத் தரித்திருக்கின்ற ஓ வீரசிகாமணியே! நம்முடைய சைனியங்களைப் பார்க்கும்படியாக வீணாநாதத்திற்குச் சமானமாகிய சொல்லையுடைய தேவஸ்திரீகளும் தேவபுருஷர்களும், நமக்கு இனி வாழ்வுண்டாயிற்றென்று லங்காப்பட்டணத்தையெல்லாம் பாழ்படச் செய்துவிட்டு ஓடிப்போகிறவர்களைப்போல ஆகாசமார்க்கமாக ஏறிப்போகிற விதத்தைப்பார்.

என்று இந்தப்பிரகாரமாக லங்காபட்டணத்தை இளையபெருமாளாகிய லட்சுமணருக்குத் தாரகமந்திரவாச்சியராகிய ஸ்ரீ ராமமூர்த்தியானவர் காட்டினபோது, அந்த லங்கையின் பெருமையைக்கண்டு அதிசயப் பட்டுக்கொண்டிருந்தனர்.

இராமனிலங்கைகாண் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பத்தாவது,

இராவணன் றுணைகாண் படலம்.

இப்படலத்தில் சகலபரிவாரங்களோடு மிராவணனுனவனிலங்கையினுத்தரவாயிற் கோபுரமேறி, சுவேலாபர்வதத்தின்கணுள்ள ஸ்ரீராமபிரானுடைய சேனையின் பெருக்கைக்கண்டு, முன்னமொற்றுபோய் வந்த

சாரனால் ஸ்ரீராமன்தவிர எனைய சேனைவீரர்களுடைய திறத்தையும்பெயரையு மின்னின்னபடியென்று தனித்தனி கூறக் கேட்டல் சொல்லப்படுகின்றது.

இராவணன் இலங்கையினுத்தரவாயிற் கோபுரமேறியிருத்தற் சிறப்பு.

கவி.

இன்னவாறிலங்கைதன்னை யிளையவற்கிராமன்காட்டிச்
சொன்னவாசொல்லாவண்ண மதிசயந்தோன்றுங்காலை
அன்னமாநகரின்வேந்த னரிக்குலப்பெருமைகாண்பான்
சென்னிவான்றடவுஞ்செம்பொற் கோபுரத்தும்பர்சேர்ந்தான்.

இவ்வண்ணம் இலங்கைமாநகரத்தின் காட்சிகளையெல்லாம் எமது பரந்தாமனாகிய ஸ்ரீராமப்பிரபுவானவர் தமது திருத்தம்பியராகிய இலக்ஷமணப்பெருமாளுக்குக் காட்டி ஒருவர்க்கொருவர் அதிசயப்பட்டுக்கொண் டிருக்குஞ் சமயத்தில் அவ்விலங்காபுரிக்கு நாயகனாகிய இராவணன் ஸ்ரீராமபிரானுடன் வந்திருக்கும் வானரசைனியங்களின் பெருமையைப் பார்க்கும்படி ஆகாயத்தையளாவிய செம்பொற்சிகரம்வாய்ந்த உத்தரகோபுரத்தின் மீதேறி உச்சியில் வந்துசேர்ந்து கட்டிய கயிறுகளெல்லாம் அறும்படியாகக் கோபிக்கின்ற மத்தகஜத்துக்குச் சமானமாகிய அந்தராவணன் சீதையினிடத்தில் வைத்த ஆசையாகிய மன்மதபாணமானது தைக்க வாட்டமுற்றும் மல்லயுத்தஞ்செய்து காய்ப்பேறியுமிருக்கின்ற தனதிருபது தோள்களும்பிரகாசிக்க, அநேககவடுகளை யுடைய ஒருபெரியமலைபோல் நின்றான். இப்படிநின்ற ராவணன் அப்போது எப்படிவிளங்கினனென்றால், சுகுமாரியாகிய சீதாபிராட்டியாருடைய அழகினாலே தளர்வடைந்து மெலிந்திருந்ததோள்கள் சண்டையென்று சொன்னமாத்திரத்தில் மேருமலையைக்காட்டிலும் பருத்துப் பலங்கொள்ளும்படியாகக் கர்வித்திருக்கின்ற மனதையுடையவனாகி, தனது பத்து சிரசிலும் பத்து சொர்னகிரீடங்கள் பிரகாசிக்கவும் அழகியபொன்மலைக்குச் சமானமாக உத்தரகோபுரம் பிரகாசிக்கவும் விளங்கினான்.

அன்றியும் — பிரளயகாலத்தில் உலகமூழ்கும்போது உலகத்தைவிட்டு மேலேறிப்போகின்ற அனேகசிரசுகளோடுங்கூடிய சர்ப்பராஜனாகிய வாசுகிக்குச் சமானமானவனாய், பஞ்சபூதங்களோடுங்கூடிய பத்துத் திசைகளிலும் மற்ற பக்கங்களையு மறைத்து நிழல்பரப்புகின்ற விசாலமாகியகுடை பிரகாசிக்கவும்; பக்கங்களில்நின்றுகொண்டுவீசுகின்ற வெண்சாமரைக்காற்றினால் நெய்த்திருண் டுயர்ந்திருக்கின்ற ஒருபெரியமலையின்மீது தத்திவிழுகின்ற அருவியாறுகளைப் போல நீண்ட பெரிய உத்தரீயங்கள் தன்னுடையவிஜயம் பொருந்தியமார்பில் அசைந்துகொண்டிருக்கவும் விளங்கினான்.

மேலும் - தேவலோகத்தி லிருக்கின்ற ஊர்வசியும் - வாசனையுள்ள தாமரைமலர்போலப் பரிமளிக்கின்ற தேகத்தையும், அம்மலரிலுள்ள தேனைப்போலும் இன்பத்தையுமுடைய திலோத்தமையும் - சிவந்த விதழையும் கு

யிலையொத்த சொல்லையுமுடைய மேனகையும் — ஆகியவிவ்வுயர்ந்த ஸ்திரீக ளெல்லாம் தாங்கள் தெய்வமாதர்களாயிருந்தாலும், சீதாபிராட்டியாருக்கு ஆயிரத்திலொருகூறும் ஒப்பாகாமற் சூரியனைக்கண்ட சந்திரனைப்போல விளங்குகின்றமையால் அவளுக் கழகை விளைவித்துக்கொண்டு பக்கத்தில்நின்று நிருத்தம் பண்ணவும், விழிப்பழுத்திற்கொப்பான இதழையும்மூங்கில்போன்ற மிருதுவான தோள்களையுமுடைய கந்தருவஸ்திரீகளில் நன்றாய்ப் பாடத்தக்கவர்கள் பக்கத்திற்குப்பதினாலாயிரம் பேர்களாக இரண்டுபக்கத்திலும் இரண்டுவரிசையாய்ச் சூழ்ந்து பாடிக்கொண்டு நிற்கவும் விளங்கினான்.

பின்னும் — வாயாகிய உறையினிடத்திற்பதிந்திருக்கின்ற வளைந்த கூர்மையான மிகுந்த பிரகாசமுள்ள வாளாயுதத்திற்கொப்பாகிய பற்கள் இளஞ்சந்திரிகையை வீசிக்கொண்டிருக்கவும், குண்டலங்கள்படிந்து தவழ்ந்துகொண் டிருக்கின்ற தோள்களாகிய ஒவ்வொரு மலையினிடத்திலும் சப்திக்கின்ற மேகங்கள் மழைத்தாரைகள் சொரிந்தாற்போல முத்துமாலைகள் பிரகாசிக்கவும், அருமையான உயிரானது தேயும்படி மனமானது சீதாசீதாவென்று கருதாநிற்கவும்,பலசாஸ்திரங்களைக் கேள்விப்பட்டிருக்கின்ற செவியாகியவாய்கள் தேவநாத சுரங்களையுடைய வீணையினிசையினோடு நாரதமகாமுனிவர் பாடுகின்ற சாமவேதகீதாமிர்தத்தை வாரிக் குடிக்கவும், கொடுமையான கையினிடத்தில் வேலாயுதத்தையுடையவர்களும் வாளாயுதத்தை யுடையவர்களும் வில்லையுடையவர்களுமாய்ச் சங்கரமூர்த்திக்கும் தோல்வியடையாத பலசாலிகளான நூறுகோடி ராக்ஷச மெய்காப்பாளர்கள் சூழ்ந்து காத்துக்கொண் டிருக்கவும் விளங்கினான்.

அன்றியும் - உலகங்களையெல்லாம் பெயர்த்து உள்ளங்கையில் தூக்கத்தக்க சக்தியை யுடையவர்களும் லங்காபட்டணம் தோன்றினகாலந்தொட்டிருக்கிறவர்களுமாகி யாதொருகுற்றமுமில்லாத கணிதநூலோர்களாலே கணக்கிட்டுச் சொல்லப்பட்ட நூறுகோடி யக்ஷர்கள் பக்கத்தில் வில்லைப்பிடித்துச் சூழ்ந்து ஆர்ப்பரித்துக்கொண் டிருக்கவும், பூமியிற் சஞ்சரிக்கின்றவர்களும் ஆகாசத்திற் பரவியிருக்கின்றவர்களுமாகிய வனேகர் ஜலபுஷ்களமான மேகத்தினுடைய சப்தத்தையொத்த பேரிகைகளையும் - முருடென்கிற வாத்தியங்களையும் - ஆகுளியென்கிற சிறுபறையையும் — சந்தோஷவாத்தியங்களையும் - சமுகத்துவாரத்தில் முழக்கிக்கொண் டிருக்கவும் - விஷத்தையு மேகத்தையுமொத்த விழிகளையுடைய நாகஸ்திரீகளும், பூங்கொடிக்குச் சமானமாகிய இடையையுடைய பூலோகஸ்திரீகளும், இனியமதுரம் பொருந்திய சுவையைத்தருகின்ற சொற்களையுடைய சுவர்க்கலோகத்து ரம்பாஸ்திரீகளுடன் சேர்ந்து மதுரமான கானங்களைப் பஞ்சமசுதியில் பாடிக்கொண் டிருக்கவும் விளங்கினான்.

மேலும் — மேகமு மஞ்சும்படியாகக் கர்ச்சிதச்சொல்லையுடைய கட்டியக்காரர்கள் விஷத்தைக் கக்கிக்கொண்டு அக்கினி ஜொலிக்கின்ற கண்களையு

ண்டையவர்களாயும் - பலநிறமுள்ள மெய்ச்சட்டையை யணிந்து கையிற் பிரம்பைப் பிடித்துக்கொண் டிருக்கின்றவர்களாயும் — கேகயப் பக்ஷியையொத்த வேகத்துடனே நடந்து நான்குதிக்குகளிலும் கட்டியங் கூறிக்கொண்டு திரியவும், அஷ்டகுலாசலங்களையும் சமானஞ்சொல்லுகிறதற்குக் கூடாத விசாலமான தோள்களினிடத்துப் பூசியிருக்கின்ற கலவைச் சாந்தினுடைய பரிமளமானது இராவணன் வருகிறானென்று ஒற்றர்கள் சொல்வதுபோல அஷ்டதிக்குகளிடத்தும்போய்க் கமழ்ந்துகொண்டிருக்கவும், கையிற்பிரம்பை யுடையவர்களும் - தீப்பறக்கும்படியாக விழிக்கின்ற கண்களை யுடையவர்களும் - க்ஷணத்துக்கு க்ஷணம் ஒவ்வொரு வகையான கோபத்தை யுடையவர்களும் - நகரக்காவலை விரும்புகிறவர்களுமாகிய பதினாயிரம் ராக்ஷசவீரர்கள் சூழ்ந்துகொண்டு நிற்கவும் விளங்கினான்.

இராவணன் ஸ்ரீராமபிரானைக் காணல்.

கவி.

தோரணத்தின்மிசை வாயின்மிசைச்சூல்
நீரணைத்தமுகி லாமெனநின்றான்
ஆரணத்தையரி யைம்மறைநெடுங்
காரணத்தைநிமிர் கண்கொடுகண்டான்.

இப்படியாக அழகிய தோரணவாசலின்மீது கருக்கொண்ட கறுத்தமேகம்போல நின்ற இராவணன் ஸ்வதப்பிரமாண வேதப்பிரதிபாத்திய வஸ்துவாயும், அபௌரஷேயமாகிய வேதபுருஷனாலுந்தேடிக் காணவரிதான முதற்காரணப்பொருளுமாகிய சாக்ஷாது ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியைத் தன்னுடைய இருபதுகண்களாலும் நன்று யுற்றுப்பார்த்த மாத்திரத்தில், பத்துவாய்களுமடிந்தன. இருபதுகண்களிலும் குபுகுபென்று நெருப்புப்பொறி பறந்தன. அப்படிப்பட்ட சமயத்தில் அஷ்டதிக்குகளிலு மிடியிடித்து, அவனுடைய நெஞ்சிற் கோபாக்கினியானது திருதிகென்று பற்றியெரிந்து, இடதுகண்களும் இடதுதோள்களும் துடித்தன. இப்படிப்பட்ட துர்ச்சகுனங்கள் காணும்படியாக இக்ஷ்வாகு வம்சப்பிரபுவான ஸ்ரீராமமூர்த்தியைக்கண்ட இராவணன் ஆகாசமார்க்கமாய்ச் செல்லுகின்ற செவந்த கிரணங்களையுடைய சூரியன் தனதுராசியில்வரக்கண் டெதிர்த்த கொடியராகுவைப்போல அதிகமாகக்கோபித்தான்.

இராவணன் சாரனேன்னு மொற்றனால் ஸ்ரீராமமூர்த்தியின் படைவீரரைக் காணல்.

கவி.

ஏனையோனிவ னிராமனெனத்தன்
மேனியேயுரைசெய் கின்றதுவன்றிச்
சேனைவீரர்படை யைத்தெரியென்று
தான்வினவவெதிர். சாரன்விளம்பும்.

இவ்வண்ணம்கோபித்து இராவணன் சாரனென்கிற ஒற்றனைப்பார்த்து, ஸ்ரீராமனுடைய வடிவழகே அவனை எனக்குத் தெரிவிக்கின்றது. மற்றச்சே

னுவீரர்களை இன்னு ரின்னுரெனத் தெரியக்காட்டென்று வினவ, சாரன் காட்டத்தொடங்கினான். ஐயா! இராவணேஸ்வரா! அதோ இளஞ்சூரியனைப்போல் பிரகாசித்துக்கொண்டு ஸ்ரீராமபிரானுக்குப் பக்கத்திலிருக்கின்றவன்தான் சூர்ப்பநகையைத் திரிலோக பயங்கரராகிய உம்முடைய தங்கையென்று கேட்ட மாத்திரத்திற் பெருங்கோபங்கொண்டு, தனது அழகிய கையினிடத்தில் வாளையுருவி, அம்மங்கையர்க்கரசியானவள் ஓவென்றழுது புலம்பும்படி ஸ்தனத்தையும், மூக்கையும், செவியையும் சேர்த்துப்பிடித்து அறுத்தவனுகிய இலட்சுமணன்.

இவன் தருமசிந்தை யுடையவனேயல்லது அதருமநோக்க முடையவனல்லாதவனுகி, கருங்கடலைச் சக்கரவாளகிரியானது சூழ்ந்துகாத்துக்கொண்டிருக்கிறதுபோல ஸ்ரீராமபிரானுக்கு யாதொருவருத்தமும் தோற்றுதபடிச் சகலபணிவிடைகளையுஞ்செய்து, சுவர்க்கத்தை யடைந்தபேர்களும் துறக்கக்கூடாத நித்திரைக்கு அதிதேவதையாகிய க்ஷாமதேவதையை ஓடும்படியாகக் கோபித்துத் துரத்திவிட்டவன். அந்த ஸ்ரீராமன் கைதொட்டுக்கொண்டிருக்கும்படியாகக் கைலாகுகொடுத்துக்கொண்டு நிற்கிறவன் தன் தமையனை வாலியோடு இவ்வண்டங்களெல்லா நடுங்கும்படியாகக் கொடிய யுத்தஞ்செய்து தன் கீர்த்தியாற் பிரகாசித்துக்கொண் டிருப்பவனும், சூரியகுமாரனுமான சுக்கிரீவனென்கிற நாமதேயமுடையவன். அவன்பக்கத்தில் நிற்கிறவன் அசுரர்களுக்குத் தோல்வியடைந்தவர்களான தேவர்களுடைய வாசஸ்தலமாகிய தேவலோகத்திற் கமிர்தமுண்டாகும்படியாக மந்தரகிரியிலே வாசுகியென்கிறசர்ப்பராஜனைக் கயிறுகப்பூட்டி, தனதுபெரிய தோள்களினாலே க்ஷீரசாகரத்தைமத்தித்த வாலியினுடைய குமாரனுகிய அங்கதனென்கிறபெயரினையுடையவன்.

அவனைச் சேரநிற்கின்றவன் சூரியனுடைய கதிக்கு முன்பாகப்போய் அவனிடத்தில நவவியாகரணங்களைக் கற்றுணர்ந்தவனும், இந்தப்பூலோகத்தைத் தனது தந்தத்தினுல் பெயர்த்தெடுத்த ஆதிபுருஷவராக மூர்த்திக்குச் சமானமாகிய பலத்தையுடையவனும், இந்தச்சமுத்திரத்தைத்தாண்டி முன்னம் இந்தலங்கைக்கு வந்தவனுமாகிய அனுமானென்கிற பெயரினையுடையவன். இவனுடைய காரியங்களையெல்லாம் முன்னாலே நீர்பார்த்திருக்கின்றீரல்லவா? இதோநிற்கின்றவன் அக்கினி குமாரனுகிய நீலனென்கிற பெயரினையுடையவன். இவனைத் தெரிந்தவர்கள் பலம்பொருந்திய சூலாயுதமும் பாசமுமில்லாமல் வந்திருக்கின்ற விஷத்திற்குச் சமானமாகக் கறுத்த எமனென்று சொல்லுவார்கள். அதோ மலைக்குச்சமானமாக பெரியவாகாரமுள்ளவன்தான் நளனென்னும் பெயரினையுடையவன். அவன் வருணன் வழிகொடுக்கவில்லையென்று ஸ்ரீராமமூர்த்தி அதிககோபங்கொண்டு அக்கினியாஸ்திரத்தினுற் கடலைச் சுட்டபோது, அச்சூடாறுதற்கு முன்னே விசாலமாகிய சமுத்திரத்திலே சேதுவைக்கட்டி வழியுண்டாக்கினவன்.

அவன்பக்கத்தே நிற்கின்றவன் மூன்றுகாலத்தையும் தன்னுடைய புத்தியினாலே முறைப்படி யறியத்தக்கவனும், தேவர்களெல்லாரும் சமுத்திரத்தில் விஷமுண்டாகும்படியாகக் கடைந்த காலத்திலு மிருந்த பெரியோனுமான கரடிப்படைக்குத்தலைவன். அவன்பெயர் ஜாம்புவனென்பார்கள். அவன் இவ்வளவு வயதாகியும் இன்றைக்குங்கூட இந்தச்சப்தலோகங்களையும் அம்மனைக்காய்போ லெடுத்தெறியத்தக்க அதிக பலாஷ்டிகனாகி விருக்கின்றான். அந்தச்சாம்புவனுக் கிருபாரிசத்திலும் ஒருகரியமலையி னிருபக்கத்தில் இரண்டு மேருமலை நிற்கின்றதுபோலு நிற்கிறவர்கள் இராமலட்சுமணர்களுக்குச் சமானமானவர்களும், தேவமருத்துவர்களுடைய புத்திரர்களுமாகிய மிகுந்த பலசாலிகளாகும். அதோநிற்கின்றானே அவன்தான் குமுதனென்று பெயருள்ளவன். அவனைச்சார்ந்து இருக்கின்றவனே குமுதாக்ஷனென்பவன். இந்தப்பக்கத்திலிருக்கின்றவன் பெயரென்னவெனில், கவையன். அவனுக்குச் சமீபத்திலிருக்கின்றானே அவன்தான் கவையாக்ஷன்.

அதோ இருக்கின்றானே அவன்தான் சிவனென்றும் - பிர்ம்மாவென்றும் — நாம்சந்தேகிக்கும்படி முன்னமிலங்கைக்குவந்த தூதனாகிய அனுமானுடைய பிதாவென்னும் வாயுதேவனுக்கொப்பாக நினைக்கத்தக்க கேசரியென்கிற நாமதேயத்தையுடைய அதிகபலசாலியானவன். இதோ மிகுந்தபலத்தோடுங்கூடிய தோள்களையுடைய நரசிங்கத்திற்குச் சமானமாக, விஷத்தையுடைய சர்ப்பராஜர்களும் சிவரத்தினங்களைக் கக்கும்படியாகக் கோபித்துக்கொண்டிருக்கின்றானே; அவன் அஷ்டகுலாசலங்களையும் வேரோடுபேர்க்கத்தக்க வல்லமையையுடைய சரபனென்கிற நாமதேயத்தையுடையவன். அவன்பக்கத்தில் இருக்கிறவன் சதவலியென்கிற பெயரையுடைய வானரவீரன். இதோமூன்று கண்ணில்லாதவனாயிருந்தபோதிலும் திரிபுரங்களைச் சுட்டெரித்த உருத்திரமூர்த்திக்குச் சமானமாக நிற்கின்றவன் பனசனென்கிற வானரவீரன். அதோநிற்கின்றானே யவன் இந்தச்சண்டைக்கெல்லாம் தானென்று ஏற்றுநிற்கின்றவனாகிய இடபனென்கிற நாமதேயமுள்ளவன். அவனுக்கெதிராகத் தோன்றுகின்றவன் மகாபுத்திமானாகிய சுசேஷணனென்கின்ற பெயரையுடையவன்.

மூங்கிற்புதருகளுள்ள மலைகளையெல்லாம் வேரோடுபிடுங்கிப் பூமியின்கடினத்தன்மையை நீக்கி மிருதுத்தன்மையை யுண்டாக்கினவனும், வடவாமுகாக்கினியையும் குளிரும்படிச்செய்த கோபத்தையுடையவனும், சூரியகுமாரனான சுக்கிரீவனுக்கு இடதுபக்கத்திலே நிற்கின்றவனுமான காளைதான் ததிமுகனென்கின்ற பெயரினையுடையவன். அவனுக்குப் பக்கத்தில் நிற்கின்றவன் தான் சிங்கமென்னும்படியான பலமுடைய சங்கனென்று சொல்லப்பட்டவன். கேளுமையா பிரதாபலங்கேஸ்வரா! இந்தவானரசைனியங்களுக்கு எண்ணுமில்லை: எல்லையுமில்லை: ஆகாயநக்ஷத்திரங்களை இத்தனையென்று கணக்கிட்டாலும், சமுத்திரத்திலுள்ள மீன்களை எண்ணிப்பார்க்கக் கூடுமானாலும்,

கடல்மணலையெல்லாம் கணித்துத் தொகைசெய்தபோதிலும், இந்தவானரர்களைக் கணக்கிடுவதரிது. ஆதலால் — பின்னுமுள்ளவர்களுடைய பெருக்கை நீரேபாருமையாவென்று காண்பித்தான்.

சாரனுற்காட்டிய வானரவீரர்களை இராவணன்
எனக்கோரு லக்ஷியமன்றேனல்.

கவி.

சினங்கொடிண்டிற லரக்கனுஞ் சிறுநகைசெய்தான்
புனங்கொள்புன்றலைக் குரங்கினைப் புகழுதிபோலாம்
வனங்களும்படர் வரைதொறுந் திரிதருமானின்
இனங்களும்பல வென்செயு மரியினையென்றான்.

இப்படிச் சாரன்சொன்னவற்றையெல்லா மிகுந்தபலவானாகிய இராவணன்கேட்டுக் கோபித்துப் புன்சிரிப்புச்சிரித்து, ஓ சாரா! காட்டிலேவசித்துக்கொண்டிருக்கின்ற அற்பமாகிய குரங்கைப் புகழுகிறாயென்ன? வனங்களிலும் பலமலைகளிலும் திரிந்துகொண்டிருக்கின்ற அனேக மான்குலங்கள் கூட்டங்கூடி, ஒருசிங்கத்தை என்னசெய்யமாட்டும்? அதுபோல இந்தவானரங்களெல்லாம் என்னை யென்னசெய்யக்கூடுமென்று சொன்னான்.

இராவணன் றானைகாண் படலம் - முற்றிற்று.

ஸ்ரீ ராமஜெயம்.

பதினோராவது,

மகுடபங்கப் படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமராக்ஞைப்படி இலங்கையி னுத்தரவாயிற் கோபுரத்தினின்ற இராவணனையு மவன்படைவீரர்களையுங் காட்டத்தொடங்கிய விபீஷணர் முன்னம் இராவண னின்னானென்று காட்டியமாத்திரத்தில் சுக்கிரீவமகாராஜன் சுவேலாபர்வதத்தினின்றுங் கிளம்பி இராவணனெதிரிற்போ யட்டகாசம் செய்து நின்றதும், உடனேயவ்விருவரும் ஒருவரையொருவர் திக்கரித்துச் சமர்விளைத்ததும், ஸ்ரீராமர் சுக்கிரீவமகாராஜன்செயலுக்காகுலித்ததும், அக்கால் சுக்கிரீவமகாராஜனிராவணனுடையபத்துமகுடங்களையும்பங்கப்படுத்தி அவற்றின் ஜீவரத்தினங்களைக்கொணர்ந்து ஸ்ரீராமருடைய திருவடியிற் காணிக்கைசமர்ப்பித்ததும், அக்காலவர் செயலுக்கிரங்கிய சுவாமியைச் சுக்கிரீவமகாராஜன் தன்குறைகூறிக் கிலேசிக்க விபீஷணாழ்வாரவரைவியந்து புகழ்ந்ததும் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமர் இலங்கைக் கோபுரத்தின்மீது நிற்கின்றவர்க ளின்னாரின்னாரேன்று காட்டும்படி விபீஷணரைக்கேட்டருள அவர் கூறுதல்.

கவி.

என்னும்வேலையி னிராவணற்களவலை யிராமன்
கன்னிமாமதி னகர்நின்று நம்வலிகாண்பான்

சுக்கிரீவன் உத்தரகோபுரத்தில்நின்று இராவணன்மேல்பாய்ந்து அவன்
4-8. மகுடத்துள்ள ஜீவரத்தினங்களைப்பறித்துவந்து ஸ்ரீராமரை சரணடைதல்.



இராவணன்மந்திராலோசனைக்கூட்டி அணிவகுக்கவும் இராமரு
மணிவகுத்து, இலங்கையைநாற்புறத்தும்வளைத்துக்கொள்ளுதல்.



மகுடபங்கப்படலம்.

முன்னிவானினு மூடிநின்றார்களை முறையால்
இன்னநாமத்த ரினையரென்றியம்பு தியென்றான்.

அந்தச்சமயத்தில் வீரியமிக்க வம்ஸோத்பவராகிய ஸ்ரீராம மூர்த்தியானவர் இராவணனுக்குத் தம்பியாகிய விபீஷணாழ்வானைப்பார்த்து, தம்பி விபீஷணா! அதோ லங்கைக்கோட்டைக் கோபுரத்தின்பேரில்நின்று, நம்முடைய சைனியங்களைக் காணும்படியாக நினைவுகொண்டு, ஆகாசமுமறையும்படியாகக் கூடியிருக்கின்றவர்களைக் கிரமமாய் இன்னபெயரினையுடையவரின்னாரென்று சொல்லக்கடவாயென்று நியமிக்க, விபீஷணாழ்வான் சொல்லுகின்றார். ஓ சக்கரவர்த்தித் திருக்குமாரராகிய சுவாமீ! அரம்பை - மேனகை - ஊர்வசி - திலோத்தமை முதலான ஸ்ரீகளுக்குநடுவே கோபுரச் சிகரத்தின் மீதேறி நிற்கின்றானே: அவன்தான் தன்பந்துக்களாகிய நாற்றுக்களையெல்லா நரகமாகிய கழனியில் நடும்படியாக அங்கிலத்தைச் சேறுசெய்து வைத்திருக்கின்ற அற்பகிருத்தியத்தை யுடையவனான இராவணனென்கிற பெயரினையுடையவனென்று சொல்லினான்.

சுக்கிரீவமகாராஜன் சுவேலாபர்வதத்தினின்றுங் கிளம்பி இலங்கையி னுத்தர கோபுரத்திற்பாய்ந்து இராவணன் முன் அட்டகாசஞ் செய்துநிற்றல்.

கவி.

கருதிமற்றென்றுங் கழறுதன்முனம்விழிக் கனல்கள்
பொருதுபுக்கனன் மூந்துறச்சூரியன் புதல்வன்
சுருதியன்னமுன் சிவந்தநற்கனியென்று சொல்லப்
பருதிமேற்பண்டு பாய்ந்தவனுமெனப் பாய்ந்தான்.

என்று சொல்லிய விபீஷணாழ்வான் மற்றொருவனை நினைத்துச் சொல்லுகிறதற்கு முன்பாக சூரியகுமாரராகிய சுக்கிரீவமகாராஜன் கண்களில் நெருப்புப்பொறி பறக்கும்படியானவராகி அவ்விராவணன்மேற் சண்டைக்குப்பாய்ந்தார். அச்சுக்கிரீவமகாராஜன் பாய்ந்தபாய்ச்சல் எத்தன்மைபோலுமெனில்? அஞ்சனாதேவியானவள் தன்குமாரனுக்குச் சூரியனைக் காட்டிச் சிவந்த கனியென்று சொன்னமாத்திரத்தில், அந்தச் சூரியன்மேற் பாய்ந்த ஆஞ்சனேயரைப்போலக் குபீரென்று பாய்ந்தார். அன்றியும் - தன்னுடைய பிதாவாகிய சூரியபகவான் ஆயிரங் கிரணங்களையும் பரப்பிக்கொண்டு உதயகிரியினிடத்திலிருந்து அந்தலங்கைக்கோபுரமாகிய மலையானது சிதறுண்டுபோகும்படியாகப் பாய்ந்ததுபோலுமென்று கண்டோர் சொல்லும்படியாக, தேவாமிர்தந் திரண்டிருந்ததுபோலுள்ள சுவேதகிரியி னுச்சியைவிட்டு இராவணனேறிநின்ற உத்தரகோபுரமானது சிதைந்து போகும்படியாகவும் பாய்ந்தார். இப்படி பள்ளத்தைத் தேடிப்போகின்ற ஜலத்தைப்போல அதிவேகமாகச்சென்று மேருமலையினது ஒரு சிகரமாகிய லங்கையானது முழுமையு நடுங்கி நொறுங்குமென்னும்படி அவ்வுத்தரகோபுரத்தின்மேற்பாய்ந்த சுக்கிரீவமகாராஜனானவர், சமுத்திரத்திற்குச் சமானமான விசாலாக்ஷத்தையு

டைய சீதாபிராட்டியார் தம்மை ராவணனுபகாரஞ்செய்ய தாம் துக்கித்தழுத காலத்தில் அந்த ராவணன்மீது தனது புத்திபூர்வமாகப் பாய்ந்து சென்ற ஜடாயுமகாராஜனுக்குச் சமானமானார்.

இப்படி சுக்கிரீவமகாராஜன் பாய்ந்தபோது ஜனனவிடாய்ப்பட் டோடிவந்தடைந்த மெய்ஞ்ஞானியர்கள் கண்டு விடாய்தணியும்படியான நீலமேக ஸ்யாமளரூபரும், கிருபாசமுத்திர மானவருமாகிய ஸ்ரீராமபிரானைப் பார்க்கும்படியாக இமையாக்கண்களைப் பெற்றுப் பேறடைந்தோமெனச் சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்த அரம்பைமுதலான ஸ்திரீகள், தாம்வசித்துக்கொண்டிருக்கிற மலையினிடத்தில் இடிவிழுந்த மாத்திரத்தில் நடுங்கிப் பறந்துபோகின்ற மயிற்கூட்டங்களுக் கொப்பாக வோடிப்போனார்கள். உதயகாலத்திருளை நாசம்பண்ணுகின்ற சூரியகுமாரனாகிய சுக்கிரீவமகாராஜன் மிகுந்த பலமுள்ளவனான இராவணனுக் கெதிராகப்போய், நீலமலைக்கு முன்னின்ற கயிலைமலைபோலவும், க்ஷீரசாகரத்தைக் கடைந்தபோது அதிற்பிறந்துவந்த ஆலகாலவிஷத்திற்கு முன்பாகநின்ற உருத்திரமூர்த்திக்குச் சமானமாகவும், நின்றார்.

இராவணனும் சுக்கிரீவமகாராஜனும் இகல் விளைத்தல்.

கவி.

இத்திசையின்வந்தபொரு ளென்னெனவியம்பத்
தத்தியெதிர்சென்றுதிசை வென்றுயர்தடந்தோள்
பத்திநெடுபத்துடைய வன்னுடல்பதைப்பக்
குத்தினனுரத்தினிமிர் கைத்துணைகுளிப்ப.

திருகியசினத்தொடு செறுத்தெதிர்விழித்தான்
ஒருபதுதிசைக்கணு மொலித்தவொலியொப்பத்
தருவனமெனப்புடை தழைத்துயர்தடக்கை
இருபதுமெடுத்துரு மிடித்தெனவடித்தான்.

அப்படி நின்ற சுக்கிரீவமகாராஜனை ராவணன்பார்த்து, இவ்விடத்திற்கு நீவந்தகாரிய மென்னவென்று கேட்டான். அதற்கு சுக்கிரீவமகாராஜன் பதிலுத்தரமொன்றுஞ் சொல்லாமல் எதிரேபோய், அஷ்டதிக்குகளையும் வென்றுயர்ந்த அவனது பெரிய தோள்களிருபதும் உடையவும்—தேக நடுக்கங்கொள்ளவும்—அவனுடைய மார்பிற் பதியும்படியாகத் தம்முடைய இரண்டு கைகளாலுமோங்கிக் குத்தினார். அந்தக் குத்தைப் பட்டுக்கொண்டராவணனானவன் மிகுந்த கோபத்தோடும் ஆக்கிரமித்து, நெருப்பு பறக்கும்படியாகப் பார்த்து, பத்துத்திசைகளினிடத்தும் பிரதித்தொனி யுண்டாகும்படியாக மகாவிருட்சக்கிளைகளைப்போற் பக்கத்தில் தழைத்துயர்ந்திருக்கின்ற இருபது பெரியகைகளாலு மோங்கி, இடிபிடித்தது போலச் சுக்கிரீவ மகாராஜனையடித்தான்.

அப்படியடித்த ராவணன் தன்னுடைய விரல்கள்பட்டவிடத்தில் அவருடைய தேகத்திற் காயம்பட்டு ரத்தஞ்சிதறி யொழுகாநிற்கக் கர்ஜ்ஜித்துக்கொண்டு, எதிரேபோய் ஒருவருடலோ டொருவருடல் தாக்கும்படியாக இடித்து, கண்களில் நின்றும் அக்கினிபறக்கும்படியாகக் காலினாலெற்றியுதைத்துத் தள்ளினான். அப்படி யவன் உதைத்துத் தள்ளின மாத்திரத்திற் சுக்கிரீவமகாராஜன் குபீரென்று பாய்ந்து, கிரீடங்கள் தரித்திருந்த பத்து தலைகளினிடத்தும் பத்து முகங்களினிடத்தும் எட்டியுதைத்தார். அப்படி யுதைத்த சுக்கிரீவமகாராஜருடைய இரண்டுகால்களையும் ராவணன்பிடித்து, ஒருக்ஷணநேரத்திற்குள்ளாகத் தேகமானது பதைபதைத் துலைவுறும்படியாகப் பலவித சேஷ்டைகளைச்செய்து, ஒரு மதத்தயானையைச்சிங்கமானது பிடித்து அலட்டினாற்போல அலட்டி, அந்தக் கோபுரதளத்தின்மீது போட்டுத் தன்காலைக்கொண்டு மிதித்துத் துகைத்தான்.

அப்படி மிதித்துத்துகைத்த இராவணனுடைய பெரிய தேகத்தைச் சுக்கிரீவமகாராஜன் வேகமாய்ப்பற்றி இழுத்து, தனது மிகுந்த பலத்தினாலே அந்தத் தளத்தின்மீது தள்ளியமுக்கி, இரண்டு கோரதந்தங்களையுடைய அவன் வாயிற்குத்தி, மலைக்குகையிலிருந்து சொரிகின்றதுபோன்றொழுகுகின்ற ரத்தத்தைக் கையினால்வாரிக் குடித்தார். அப்படிகுடித்த சுக்கிரீவமகாராஜனுடையதேகமாகிய மேருமலையை அநேகபடங்களோடுங்கூடிய தலையினையுடைய சர்ப்பராஜனைப்போல இருண்ட நிறத்தையுடைய இராவணன் பலகைகளினாலும் பிடித்து, மிகுந்த கோபத்துடனே திக்குகளினிடத்தும் - மலைகளினிடத்தும் - பூமியினிடத்துமாகக் கிறுகிறென்று சுழற்றினான். அப்படி சுழற்றின ராவணனுடைய மார்பில் ரத்தம் சிந்தும்படியாகச் சுக்கிரீவமகாராஜன் குத்தி, தனதுபருத்துயர்ந்த பெரியகைகளைக்கொண்டு அவனிடுப்பைப்பிடித்துத்தூக்கி, அவன் மனதுதிடுக்கிட்டுப் பலமுந் தைரியமுங் கெடும்படியாத் திரிபுரங்களை அன்று சுட்டெரித்த யுகாந்தகால ருத்திரனைப்போல அவனைக் கசக்கி இலங்கைக்கோட்டையைச் சூழ்ந்த அகழியில் விட்டெறிந்தார்.

அப்படியாகத்தன்னை அகழியில்விட்டெறிந்த சுக்கிரீவமகாராஜனை ராவணன்சீக்கிரமாகப்பாய்ந்து பிடித்து,தானுமவரை அந்த அகழியில் விட்டெறிந்தான். அவருமப்படியே மறுபடியும் குபீரென்றுபாய்ந்து இவனை யெதிர்த்து நிற்க, இருவரும் ஒருவரையொருவர் விடாமல் இறுகக்கட்டிப் பிடித்துக்கொண்டு, பாய்ந்து அவ்வகழியில் விழுந்தார்கள். அப்படி விழுந்தவர்களாகிய இராவணனும், சுக்கிரீவமகாராஜனும் கிறுகிறென்று சுழன்றார்கள். ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்து இடசாரி வலசாரி வலசாரி இடசாரியாகத் திரிந்தார்கள். ஒருவரையொருவர் காயப்படுத்தினார்கள். ஒருவருக்கொருவர் தோற்கவில்லை, ஒருவரையொருவர்விட்டு நீங்கவுமில்லை. ஒவ்வொருவரும் வீரபௌருஷவார்த்தைகளைப்பேசி, ஒருவர்மேலொருவர்பாய்ந்து, ஒருவருக்கொருவர் பின்னிடையாமல் எதிர்த்து நின்றார்கள். இப்படி யவ்விருவரும் மிகுந்த

கோபங்கொண்டு, தளர்ச்சியடையாமலும் வீரத்திற் சிறிது நஷ்டப்படாமலும், சமயுத்தஞ்செய்தார்கள்.

அப்போது சூரியகுமாரனாகிய சுக்கிரீவமகாராஜன் அந்த அகழியே சமுத்திரமாகவும், தமது அழகு பொருந்தியகைகளே வாசுகியாகவும், இராவணனைப்பற்றி வலிக்கும்போது அந்தச்சுழியி லகப்பட்டுக்கொண்டுமுழுகிப்போகின்ற ஜலயந்திரம்போலச் சுழலுகின்ற இரக்கமற்ற ராக்ஷசனாகிய அவ்விராவணன் மந்தரகிரியாகவும், தாம் அந்தக்கிரியைப்பற்றிக் கடைந்த வாலிக்குச் சமானமாகவும் தோன்றினார். இந்தப்பிரகாரமாக ஒருவரையொருவ ரடித்துக் காயப்படுத்தினபோது அந்தக்காயங்களில் நின்றும் ஒழுகுகின்ற ரத்தமானது ஆலையிலுடைந்த கரும்பில்நின்றும் புறப்பட்டசாறானது பெருக்கெடுத்தோடுகிறதுபோலப் பெருகியோட, அவ்விருவரும் கழுகும் — பருந்தும் - பறக்கிறதுபோல ஆகாசமார்க்கமாக வெழும்பினபோது அவர்கள்கண்களில் நின்றும் புறப்பட்ட கோபாக்கினியாலே லோகமெல்லாந்தீயத் தலைப்பட்டன. விசாலமான ஆகாசத்தில் யுத்தஞ்செய்கின்ற சுக்கிரீவமகாராஜனானவர் கருமேகம்போன்ற நிறத்தையுடைய மேருமலையை யொத்த கோபமுள்ளவனான இராவணனுடைய வெற்றிமாலையைத்தரித்த இருபதுதோள்களினாலும் கட்டிப்பிடிக்கப்பட்டபோது, இராகுவினாலே பிடிக்கப்பட்ட பரிவேடத்தோடு கூடிய தன்பிதாவாகிய சூரியனுக்கொப்பாக விருந்தார்.

இந்தப்பிரகாரம் ஆகாசத்தில் மிகுந்தயுத்தஞ் செய்துகொண் டிருக்கிறபோது சூரியகுமாரனாகிய சுக்கிரீவமகாராஜனுடைய மேனியைத் தனது திரண்ட தோள்களினாலே மறைத்த மிகுந்தபலமுள்ள இராவணனானவன், உஷ்ணமாகிய கிரணங்களையுடைய சூரியபகவானைமறைத்த மேகத்திற்குச்சமானமாக இருந்தான். அப்போதச் சூரியகுமாரனாகிய சுக்கிரீவமகாராஜன் பாதச்சிலம்புகள் சப்திக்கும்படி நடந்துவந்து வேடிக்கை பார்த்துக்கொண் டிருக்கின்ற ராக்ஷசஸ்திரீகளெல்லாரும் கீழேவிழுந்து கதறும்படியாகவும், பகைவர்களாகிய ராக்ஷசர் பெரியலங்காபட்டண முழுவதுமோடி இளைப்படையவும், உத்தரகோபுரமானது தலைகீழாய்விழுந்து பொடிப்பொடியா யிடியவும், ஸ்வர்க்கலோகத்திலிருந்து ஒரு சிங்கமானது தனித்துக் குதித்தாற்போல வந்துகுதித்தார். அப்படி குதித்தமாத்திரத்தில் மிகுந்தகோபத்தோடு அதிகபலாட்டியனான ராவணனானவன் பூலோகத்தைப் பொருந்தும்படியாகவந்து விழுந்த இடியுடனே சம்பந்தப்பட்ட மின்னலாகிய பற்களையுடைய ஒருபெரிய காளமேகமானது விழுந்தாற்போல, உன்னைக் கொன்றுதின்று விடுவேனென்று அவரைப் பின்றொடர்ந்துவந்து இரண்டுகைகளையுந் தாவிப்பிடித்தான்.

இப்படிபிடித்த ராவணனைச் சுக்கிரீவமகாராஜன் அதிக கோபாவேசத்தோடெதிர்த்து, அவனுடைய இருபதுகைகளையும் சேரப்பிடித்து, எமனும் பயப்படும்படியாகப் பூமியில்வாரியறைந்தார். அப்போது இராவணன் சுக்கிரீவமகாராஜனைஒருயந்திரப்பிரதிமையைத்தூக்கியெறிவதுபோல் ஆகாசத்தில்

விட்டெறிந்தான். அவர் அதைத் தப்பித்துக்கொண்டு ஒருபந்து தாக்குண்டு எழும்பினதுபோலச் சடுதியிற் பாய்ந்து ராவணனை எதிர்த்து நின்றார். இப்படியாக அவர்கள் லங்காபட்டணத்திலுள்ள விருக்ஷங்களெல்லாம் புற்பூடு நசுங்குவதுபோல நசுங்கவும் — விசாலமான அந்தப்பூமிமுழுமையும் பாளம் பாளமாகக் கிழிந்துபோகவும் - கொடியகோபமுதிர்ந்து ஒருவரையொருவர் ஓங்கிக்குத்தும்போது, பெரியசுவர்களெல்லாம் நெக்குவிடப் பிளந்துபோய் விட்டன. உயர்ந்தமலைகளெல்லாம் பொடிப்பொடியாய் நொறுங்கிவிட்டன. இலங்கைப்பட்டணத்தின்கோட்டை மதில்களெல்லாம் அஸ்திவாரத்தோடு இடிந்து விழுந்துவிட்டன.

இவ்விருவருநெருங்கி உயரப்பறக்கிற காற்றாடியைப்போற் கிறுகிறுவென்று சுழலும்போது அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்த ராக்ஷசர்கள் அந்த வேகத்தாலே அவர்களுடையதிருமேனியை வெண்மை கருமையென்று அறியமாட்டாமல், தங்கள்கைகளைப்பிணைத்துநின்று சுற்றியவிருவரும் ஒருவரைவிட்டொருவர் பிரிந்தார்களென்றும் ஒருவரோடொருவர் சேர்ந்தார்களென்றும் தெரிந்துகொள்ள மாட்டாதவர்களாகி, இராவணனைச் சுக்கிரீவமகாராஜன் வாரியெறியும்போது ராவணனெறிந்தான் சுக்கிரீவனெறியவில்லையென்றும், சுக்கிரீவனை ராவணன் வாரியெறியும்போது சுக்கிரீவனெறிந்தான் ராவணனெறியவில்லையென்றும், சுக்கிரீவன் ராவணனைத்தாக்கும்போது ராவணன் தாக்கினான் சுக்கிரீவன் தாக்கவில்லையென்றும், இராவணன் சுக்கிரீவனைத் தாக்கும்போது சுக்கிரீவன் தாக்கினான் ராவணன்தாக்கவில்லையென்றும், அவர்களுக் கெதிரேநின்றும் அவர்களின்னாரின்னாரென்று அறியாதவர்களாய்த் தாங்கள்கற்றறிந்த யுத்தவித்தைகளெல்லாவற்றையும்இந்தப்பிரமையினு லிராவணனுக் குதவிபுரியாது மறந்துவிட்டார்கள்.

ஸ்ரீராமர் சுக்கிரீவன்செயலுக்காற்றாராய் வருந்திக் கிலேசித்தல்.

கவி.

இன்னசோர்தன்மையெய்து மளவையினெழிலிவண்ணன்
மன்னுயிரனையகாதற் றுணைவனைவரவுகாணான்
உன்னியகருமமெல்லா முன்னொடுமுடிந்தவென்னாத்
தன்னுணர்வழிந்துசிந்தை யலம்வந்துதளர்ந்துசாய்ந்தான்.

இந்தப்பிரகாரமாகச் சுக்கிரீவமகாராஜனு மிராவணனும் யுத்தஞ்செய்துகொண்டிருந்தார்கள். அவ்விடத்தில் தம்மைச் சரணடைந்தவர்களுக்கு வேண்டியவைகளை வேண்டியபடி அருளுகின்ற கருணாசலதியும் அதிமானுஷசேஷ்டிதருமாகிய ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியானவர் தம்முடைய உயிருக்குச் சமானமான மிகுந்தபக்ஷமுள்ள துணைவரென்னும் சுக்கிரீவமகாராஜனைக் காணாததினால் வியசனமுற்று, அப்பா சுக்கிரீவா! நாணினைத்திருந்த காரியங்களெல்லாம் இன்றைக்குன்னோடு முடிந்துபோய்விட்டதேயென்று தமதுணர்வுமாறி, மனக்கலக்கமுற்றுச்சோர்ந்து சொல்லுகிறார். தம்பி சுக்கிரீவா! ஒருமைப்

பாடான என்னுணர்வே ! எனதுயிர்க்குச்சமானமாகிய துணையே ! உன்னையி ழந்து நான்மாத்திர மிருக்கின்றதினால் எனக்கு ஒரு காரியமுமாகமாட்டதே: அதுவுமல்லாமல் தேவர்களெல்லாரையும் துக்கசாகரத்தில் முழுகவைத்து இராக்ஷசர்களெல்லாரையும் இன்பசாகரத்தில் முழுகவைத்தாயே: உன்னுடைய கோபமானது என்னைக்கெடுத்து விட்டதே:

சீதையினுடைய ஆபரணங்களைக்காட்டி என்னுயிரைக்கொடுத்த ஓ் உபகாரகனே ! இந்தராக்ஷசர்கள் தெய்வத்தன்மையுள்ள அஸ்திரசஸ்திரங்களையுடைய மகாபலவந்தர்கள். மேலும் - மாயவஞ்சனையிலே மிகவும் கைதேர்ந்தபாவிகள். அப்படிப்பட்ட துஷ்டர்கள்கையில் நீ அகப்பட்டுக்கொண்டாயே ஆகையால் அவர்களுடைய காவலைக்கடந்து நீ எவ்விதமாய்வருவாய் ? நீவாராமற்போவாயேயானால் இந்தப்பதினாலுலோகங்களையும் நான்பெற்றபோதும், அந்தவாழ்வோடு வாழ்ந்திருப்பேனோ ? உன்னைவிட்டுத் தனியனாய் உயிர் வைத்துக்கொண் டிருப்பேனோ ? ஐயோ ! நானொருவிதமாக நினைக்க, என் கருமம் தானொன்றாய் முடிந்துவிட்டதே: ஆகையினாலே இனிநான் வாழமாட்டேன். நீ இல்லையென்கிறவார்த்தையைக் காதினாலேகேட்கவும் சகிக்கக்கூடவில்லை. உன்னை அந்தத் துர்க்குணனானராவணன் கொல்லுவானேயானால், எப்போதும் நிலைநிற்கும்படியான பழியுண்டாகத்தக்கதாய் பெரியயுத்தகளத்திலே என்னைக்கொன்றவன் நீயேயாகிறா யல்லவோ ?

அப்பா என்கண்மணியான சுக்கிரீவா ! நீ இறந்துவிட்டாயென்கிற சொல்லைக்கேட்டால் உடனே நானுமிறந்துபோகாமல் ராக்ஷசர்களுடைய பலமானசேஷ்டைகளை இந்த உலகத்திலில்லாமல் நீக்கிப் பிறகென்னுயிரை மாய்த்துவிடுவேனானபோதிலும், இந்த ஸ்ரீராமன் தனக்கு நன்மைசெய்தசிநேகர்களான அனுமான் - சாம்புவன் — நளன் இவாள்முதலாகிய பேர்களுடனே தன்னுயிருக்குச்சமானமாகவந்து சேர்ந்த சுக்கிரீவனை மறந்துவிட்டானே: இவனொரு சுத்தவீரனா ? என்று உலகத்தார் பழிப்பார்களே: ஆகையினால் அந்தக்காரியமும் செய்யமாட்டேன். நீ வெகுகுரூரமான்காரியம் செய்துவிட்டாய். பட்சமும் தயையுமில்லாதவெனக்கு எப்போதும்நிலைநிற்கும்படியான உபகாரஞ்செய்த உன்னை நான் ஒழித்துவிட்டு வாழலாமோ ? இந்த எழுபதுவெள்ள வானரசைனியங்களில் ஒருவராவது குறையாதபடி மிகுந்த வளப்பத்தையுடைய அயோத்தியாபுரியைப்போய்ச் சேர்ந்தாலல்லவோ துக்கமற்றுச் சந்தோஷமாயிருப்பேன் ? என்று ஸ்ரீராமர் துக்கப்பட்டுப் புலம்பிக்கொண்டிருந்தார்,

சுக்கிரீவமகாராஜ னிராவணனுடைய மகுடரத்தினங்களைக் கோணர்ந்து ஸ்ரீராமருக்குப் பாதகாணிக்கை வைத்தல்:

கவி.

என்றகனிரங்குங்காலத் திருவருமொருவர்தம்மில்
வென்றிலர்தோற்றிலாராய் வெஞ்சமர்விளக்கும்வேலை

வன்றிறலரக்கன்மௌலித் தனிமணிவலியால்வாங்கிப்
பொன்றினனாகினன்றென் றவன்வெட்கவிவனும்போந்தான்.

கொழுமணிமுடிகடோறுங் கொண்டனகுழுவின்கூட்டம்
அழுதயருறுகின்றான்ற னடித்தலமதனிற்சூட்டித்
தொழுதயனாணிநின்றான் றூயவரிருவரோடும்
எழுபதுவெள்ளயாக்கைக் கோருயிரெய்திற்றன்றே.

அப்படியிருக்கையில் சுக்கிரீவமகாராஜனும், இராவணனும் ஒருவரையொருவர் வெற்றிகொள்ளாமலும் – ஒருவருக்கொருவர் தோல்வியடையாமலும்–மகாவேகத்தோடுசெய்யும் கொடுமையான யுத்தத்தில் மகாபலவந்தனான ராவணனுடையபத்துகிரீடங்களிலுள்ள ஒப்பற்ற பத்துஜீவரத்தினங்களையும் சுக்கிரீவமகாராஜன் தன்னுடைய பலத்தினாலேபற்றிப் பறித்துக்கொண்டு, அவன்செத்தவனைப்போல வெட்கப்பட்டுக்கொண்டு நிற்கக் குபீரென்று பாய்ந்து, வானரசேனைக்கு மத்தியில்வந்து, கூட்டமாகிய ரத்தினங்களிழைத்த ஒவ்வொரு கிரீடங்களிலுமிருந்து பறித்த நாயக ஜீவரத்தினங்களைத் தன்னைக்காணாது சுக்கிரீவா சுக்கிரீவா என்று அழுது துக்கித்துக் கொண்டிருக்கின்ற ஸ்ரீரகுநந்தனருடைய திருவடித்தாமரைகளிற் பாதகாணிக்கையாகச் சமர்ப்பித்து நமஸ்காரஞ்செய்து, சகலருக்கும் ஜீவன்வந்ததுபோல எதிரேவந்து நின்றார்.

அப்படிநின்ற சுக்கிரீவனுடைய சரீரத்திற்பட்ட புண்களிலொழுகி வருகின்ற இரத்தமும் நீசச்சேரியில் வசிக்கும் ராக்ஷசனைத் தீண்டிவந்த ஆசூசமுந்திர ஸ்ரீராமர் அந்தச் சுக்கிரீவனாகிய தமதன்பனைத் தமது மார்பிலே தழுவிக்கொண்டு கருணைசுரந்து, மடைதிறந் தொழுகுவதுபோலத் தாரைதாரையா யொழுகாநின்ற தமது செந்தாமரைமலர்போன்ற கண்ணீராலே ஸ்நானம்பண்ணுவித்து, அப்பா சுக்கிரீவா! என்மனதைவியசனமானது பிளக்கவும், அங்குமிங்கு மாகிதடுமாறவும், சரீரம் ஸ்தம்பித்துத் தெளிவில்லாமற் றிகைத்துப்போகவும், எல்லாநூல்களையுங் கற்றுணர்ந்த உன்மனது திகைத்து என்னைப் பிரிந்துபோனாயே: பெருமை – வண்மை – ஆண்மை–இவைகள் பொறுமையினாலல்லவோ உண்டாகின்றன? செய்யத்தகாததையும் எனக்குச் சம்பவிக்கப்போகின்ற பழியையுமறந்து, இகபரமிரண்டையுங் கெடுக்கும்படியாய் நீ என்னநினைத்து என்னசெய்தாயப்பா!

ஆ! தம்பீ! நீ போனவிடத்தில் அந்தத் தயைகெட்டபாவியாகிய ராவணன் உன்னைக்கொன்றானேயானால், பிற்பாடு நான் பிராணனைவைத்துக்கொண்டிருந்து இந்த ராக்ஷசர்களை வேரோடேபறித்து வெற்றிகொண்டாலும் தோற்றவனேயல்லது ஜயித்தவனாவேனோ? இப்போது நீ விரைவாய்வராமற் சற்றுத் தாமசித்திருப்பாயேயானால், எனக்குச் சீதையினாலேயு மிந்தப் பூமியினாலேயும் காரியமென்ன இருக்கின்றது? நீ இறந்துபோனாயென்று உன்னைத்தொடர்ந்து நான்வருவேன். என்னை இந்த மூன்றுலோகங்களுந் தொடர்ந்துவரும், அப்படியாகும்படியாய் விளையாட்டிலேயே நான் உன்னைத்தவறும்

யாகச்செய்துவிட்டாய்? என்றிப்படியாக ஸ்ரீராமபிரான் சொல்லச் சுக்கிரீவமகாராஜன்சொல்லுகிறார். சுவாமீ! தேவரீருடைய காரியத்திற்காகக் காட்டிலே கழுகரசரான ஜடாயுசெய்ததுபோலவும், நாட்டில் ஸ்ரீகுகப்பெருமான்செய்த நன்மைபோலவும் செய்யாமற்போனேனே: அவைகளைக் காதினாற்கேட்டவனுமல்லாதவனாய்விட்டேன். நான் உண்மையாய்க் கேட்டவனேயானால் செகன்மாதாவை மீட்டுக்கொண்டு அந்நீசனுடைய பத்துத்தலைகளையுங் கொய்துகொண்டல்லவோவருவேன்.

ஐயோ! பெரியபகைமூண்டிருக்கவும் என்குரங்குப் புத்திக்குத் தக்கபடியோடித் தீராதிருக்கும்பகையைக் களையாமல்வந்தேன். என்பகையைத்தீர்த்து என்பிராணனையும் ரட்சித்துச் சகலசாம்பிராச்சியமுங் கொடுத்த உமக்கு, உம்முடையபகையை உமக்கேகொடுத்தேன். இன்னம் பிராணனையும் வைத்துக்கொண்டு திரிகிறேன். திக்கஜத்தினுடைய தந்தங்களைவிட என்தோள் பலங்குறைந்துபோச்சே: அப்படி குறையவில்லையென்பேனாகில் அந்தத் துராத்துமாவினுடைய மார்பில் என்கைகள் புதையும்படி குத்திவிட்டல்லவோவருவேன். உம்முடைய அம்புக்குமுன்னே நான்போயந்தப் பகையையறுக்கிறேனென்று கோபித்த எனதுமனமும நானும் யாதொரு தீங்குமில்லாமலே வந்துசேர்ந்தோம். எல்லாச்சாஸ்திரங்களையுங் கற்றறிந்த உம்முடைய தூதரானவர் முன்னம்போயிருந்தபோது, அவரைப்பலவான அஸ்திரங்களுடனே அநேககோடி ராட்சசர்கள்வந் தெதிர்த்தார்கள். அவர்களையெல்லாமவர் கொன்று தமதுவாலினுடைய பலத்தைக்காட்டி வந்திருக்க, நானந்தவூரிலே என்கால்பலத்தைக்காட்டி ஓடிப்போயோடிவந்துவிட்டேனே யல்லாமல் ஏதாகிலும் கைவலியினாலாகிய சாரசியமுண்டாயிற்றா? என்றுசொல்லித் தமது தலையை வளைத்துக்கொண்டு வானராதிபதியான சுக்கிரீவமகாராஜனின்றார்.

விபீஷணாழ்வார் சுக்கிரீவமகாராஜனாற்றலை வியந்து புகழ்தல்.

கவி.

இன்னனபலவும்பன்னி யிறைஞ்சியமுடியனாகி
மன்னவர்மன்னன்முன்பு வானரமன்னனிற்ப
அன்னவன்றன்னைநோக்கி யழகனைநோக்கியாழி
மின்னெனவிளங்கும்பைம்புண் வீடணன்விளம்பலுற்றான்.

இப்படி விசனமுற்று வணங்கிநின்ற சுக்கிரீவமகாராஜனை இலங்காதிபத்தியமோதிரமு மிருந்த ஆபரணமும் பூண்ட விபீஷணாழ்வானானவர்பார்த்து ஒருவார்த்தை சொல்லுகின்றார். ஐயா கபிச்சக்கரவர்த்தியே! அந்த ராவணேஸ்வரனுடைய கிரீடமென்றால், அவன் தலைமேலிருக்கிறதன்றோ? அந்தத்தலையிலும் அது அதிகமாச்சே: அதிலுமுயர்ந்த தென்னவிருக்கிறது? அந்தக்கிரீடம் அவன்தலையைப்பார்க்கிலும் உயிரைப்பார்க்கிலுஞ் சிறந்ததாயிற்றே: அவனுடைய பிரதாபகீர்த்தியை மேலோடே பிடுங்கிவந்துவிட்டீரே: ஆதிசேஷன் சிரோரத்தினத்தைப் பறிக்கவென்று [illegible] கருடனிலுமே [illegible]

யெறிந்துவிட வல்லவனான அந்தராவணனுடைய சிரசிலுள்ள ஜீவரத்தினங்களைப் பறித்துவந்தீரே: இதுமிருந்த சௌரியவந்த திரிபுராந்தகனாலேயும் ஆகுமா? இதற்குமேலானகாரியமும் வேறேயுண்டா? ஓ வாகுவலயங்கள் பூண்ட புஜபலமுள்ளவானராதிபதியே! ஸ்ரீ உபேந்திரனுடையமார்பிலே தரித்திருக்கிறகௌஸ்துவமணியையும், காளகண்டனான சிவபிரானுடையசடையிலே தரித்திருக்கிற பாலசந்திரனையும் பறித்தாலும்; அந்தராவணனுடைய சிரங்களிலே தரித்திருக்கிறகிரீடங்களைப் பறித்துவந்ததே வீரியாதிக்கமாச்சே:

ஐயா சுக்கிரீவமகாராஜனே! சிவபிரானது கையிலிருக்கிற வாளைவாங்கிக்கொண்ட அந்தராவணனுடைய கிரீடத்தைப் பறித்துவந்தபோதே, அவனை ஜயம்பண்ணுகிறதற்கு அஸ்திவாரம்போட்டு வந்ததுபோலாயிற்று. என்று விபீஷணர் சொல்லக்கேட்ட ஸ்ரீராமர் சந்தோஷித்து, ஐயா விபீஷணாழ்வானே! அதுமெய்தான். இப்போது தம்பிசெய்துவந்தகாரியங் கொஞ்சமா? இஃதந்த ஆதிபுருஷ தாரகஸ்வரூபரான பகவான்செய்தாலென்னமோ சொல்லமாட்டோமேயல்லாமல், பின்னை யொருத்தராலேசெய்து முடிக்கிறகாரியமா? தன்னுடையபலத்திற்கு இது ஜயமல்லவென்றும், சுத்தவீரர்கள் செய்யத்தக்க திதுவாவென்றும் தானெண்ணிச் சொல்லுகின்றதேயல்லாமல்; இது யாராலேசெய்யச் சக்கியம்? என்று ஸ்ரீராமர் அத்தியந்த இரக்கத்துடனே சொன்னார். அப்போது சூரியன் தன்னுடைய குமாரனானவன் இளங்கன்று பயமறியாதென்கிற சாமர்த்தியத்தினாலே ராவணனுடைய கிரீடங்களைப்பறித்துவந்தானே: ஒன்றுபோய் மற்றொன்றாய் முடிந்ததே: இனியிதனாலென்ன விளையுமோ? என்று அந்தராட்சசனுக்குப் பயந்து ஒளிந்துப்போகிறவனைப்போல அஸ்தமனகிரிக்கப்பால் மறைந்துபோயினன்.

ஸ்ரீராமர் சுக்கிரீவன்செய்துவந்த ஜயத்தை மனதில் நிறையவைத்து நினைந்து நினைத்துத் தோள்கள் பூரித்துக்கொண்டிருக்க, அப்போது வந்த இருளுக்கிராவணனுடைய கிரீடரத்னமானது கைவிளக்காய்ப் பிரகாசிக்கச் சுவேலாசலத்தைவிட் டிறங்கித் தமதிருப்பிடம்போய்ச் சேர்ந்தார். ஒருநாளுமிப்படிப்பட்ட அவமானமடைந்தவனல்லாத இலங்காதிபதியான இராவணேஸ்வரன் இதைத் தேவர்கள்வந்து நின்று கண்டார்களேயென்கிற நாணம் அதிகரிக்கவும், ஸ்ரீகள் பார்வை அப்போது பார்த்திருந்த புருஷர்கள் நோக்கம்போலக் கூசாமற் பார்த்திருக்கவும், சாகாது செத்தவனுடைய அபகீர்த்தியைப்போல அவ்வுத்தரகோபுரத்தை விட்டிறங்கிச் சென்றனன்.

மகுடபங்கப் படலம்—முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பன்னிரண்டாவது,

அணிவகுப்புப் படலம்.

இப்படலத்தில் சுக்கிரீவமகாராஜ னிராவணனுடைய மகுடபங்கஞ் செய்தபின் ஸ்ரீராமமூர்த்தியு மிராவணனும் சுவேலாசயிலத்தினின்றும் உத்தரகோபுரத்தினின்று மிறங்கித் தத்தமிருக்கை யடைந்திருந்தபோது முன்பிராவணனா லேவப்பட்டுள்ள சார்த்தூலமென்னுமோர் தூதன்வந்து ஸ்ரீராமச்சந்திரருடைய அணிவகுப்பின் றிறத்தைக்கூற, அதுகேட்ட ராவணன் அன்றிரவில் மந்திராலோசனைச் சபை கூட்டி ஆலோசிக்கையில் அம்மானாகிய நிகும்ப னவனுக்கறிவுறுத்த, அதற்கவனை இராவணன் சினந்து பிரகஸ்தனாதிய பரிசனங்களைக்கூவி அணிவகுத்துத் தானும் யுத்தசன்னத்தனாக, சூரியோதயமானவுடனே ஸ்ரீராமர் தமது சேனைகளோடு வெளிப்பட்டுச் சென்று இலங்கையை நாற்புறத்தும் வளைத்துக்கொண்டமை சொல்லப்படுகின்றது.

இராவணன் மகுடபங்கமான வருத்தத்தோடு தனதரண்மனையடைந்து வருத்தமுற்றிருக்க, சார்த்தூலனென்னுந் தூதுவனால் ஸ்ரீராமமூர்த்தியினுடைய படையணிவகுப்பின் றிறமுணர்தல்.

கவி.

மானத்தானல்லற்பட்ட மருமத்தான்வதனமெல்லாம்
கூனற்றாமரையிற்றோன்ற வான்றொடுங்கோயில்புக்கான்
பானத்தானல்லன்றெய்வப் பாடலானல்லனாடற்
றானத்தானல்லன்மெல்லென் சயனத்தானுரையுந்தாரான்.

இவ்வண்ணம் இராவணன் மானமென்னும் வேலினால் துளைக்கப்பட்ட மார்புடனே முகங்களையெல்லாம் தலைவளைந்த தாமரைமலர்கள்போல வளைத்துக்கொண்டு, தனது அரண்மனைக்குப்போய் மத்தியபானத்தையும் ஆடல்பாடல்களையும்விட்டு, ஒருவருடனேயும் பேசாமல் தன்படுக்கையிலேவீழ்ந்து சோர்ந்தான். அந்தப் படுக்கையானது திரைகளையுடைய பாற்சமுத்திரம் போலவும், அதின்பேரில் ஜீவரத்தினங்களையிழந்து படுத்திருக்கிறராவணன் பலதலைகளிலுமுள்ள ரத்தினங்களையிழந்து தன்மீது சயனித்திருக்கும் ஸ்ரீசாட்குண்ணிய பரப்பிரமத்தைப்பிரிந்திருக்கிற ஆதிசேஷனுக்கொப்பாகவுமிருந்தான்.

கவி.

தாயினும்பழகினாருந் தன்னிலைதெரிக்கலாகா
மாயைவல்லுருவத்தான்முன் வருதலும்வாயில்காப்பான்
சேயவர்சேனைநண்ணிச் செய்திறந்தெரித்திநீயென்
றேயவனெய்தினானென் றரசனையிறைஞ்சிச்சொன்னான்.

அழையெனவெய்திப்பாதம் வணங்கியவறிஞன்றன்னைப்
பிழையறவறிந்தவெல்லா முரைத்தியென்றரக்கன்பேச
முழையுறுசீயமன்னான் முகத்தினலகத்தைநோக்கிக்
குழையுறுமெய்யன்பைய வரன்முறைகூறலுற்றா

அப்படி யிருக்கின்ற சமயத்தில் தாயைப்போல் தன்னுடன் பழகினவர்களுக்கும் தன்னுடைய நிலைமை இப்படிப்பட்டதென்று காட்டாத மாய வித்தையில் தேறின சார்த்தூலன் பள்ளியறைவாசலில்வந்து நிற்க, வாசற் காவலாளிகளிலொருவன் இராவணனருகேவந்து, சுவாமீ! எதிராளிகளுடைய சேனையிற்போய் அவர்கள்காரிய மறிந்துவரச்சொல்லியனுப்பின தூதன் வந்திருக்கிறானென்று வணங்கிச்சொல்ல, உடனே யவனை யழையென் றுக்கியாபித்தான். அவன் வந்து வணங்கி நிற்கவு மவனை இராவணன்பார்த்து, அடா சார்த்தூலா ! நீ யறிந்துவந்த எல்லாக்காரியங்களையு மொளியாமற் சொல்லென்று கேட்டனன். அதற்கந்தச் சாதுரிய புத்திமானான தூதுவன் இராவணனுடைய முகக்குறிப்பினா லவனுடைய மனத்தை யறிந்துகொண்டவனாகி, தனது நீளமான சரீரத்தை ஒடுக்கிக்கொண்டு கையினால் வாயைப்பொத்தி குனிந்து மெல்லிய குரலுடன் தான்போய்வந்த வரலாற்றைச் சொல்லுகிறான்.

சுவாமீ! திரிலோகாதிபதியே! நமது எதிரிகளாகியமானிடரிருவரும் குரங்குக் கூட்டங்களும் செய்துகொண்டிருக்கிற யோசனையைச்சொல்லுகிறேன் சற்றுதயைசெய்து ஏழையேன் சொல்பவைகளைக் கேட்டருள்வீராகவென்று சொல்கிறான். பதினேழுவெள்ளஞ் சேனைகளுடனேயும், வீரலட்சணத்துடனேயும், அநுமானானவன் நம்முடைய மேற்கோட்டைவாச லரணைக் கைப்பற்றவருகிறதற்காக விருக்கிறான். அல்லாமலும் அங்கதன் பதினேழுவெள்ளஞ் சேனைகளுடனே தெற்குவாசலைச்சாதிக்க வந்திருக்கிறான். நீலன் பதினேழுவெள்ளஞ் சேனையுடனேயும், அநேகம் படைத்தலைவருடனேயும், கிழக்கோட்டை வாசலிற்சேர்ந்திருக்கிறான். வேறே பதினேழுவெள்ளஞ் சேனையும் - சுக்கிரீவனும் — தன்னைப் பிரியாமலிருக்கும்படியாய் வடக்குவாசலில் நிற்கும்படி அந்தத்தசரதபுத்திரன் தனதுதம்பியுடன் குதூகலமாகவந்திருக்கின்றான். இந்தச்சேனைகளுக்கெல்லாம் ஆங்காங்குள்ள காயுங்கனியும் சுற்றித்திரிந்து கொண்டுவரும்படியாக மற்ற இரண்டுவெள்ளஞ் சேனைகளை யனுப்பியிருக்கின்றான். இந்த வாசல்கள்தோறுந்திரிந்து நமது இரகசியங்கள் தெரிந்து சொல்லும்படியாய் உம்முடைய தம்பியைத் திட்டம்பண்ணியிருக்கின்றான். தானும் தன்தம்பியுமாய் உம்மோடு சண்டைக்கெதிர்த்து நிற்கிறதாயிருக்கின்றான். இதுதான் அவ்விடத்தில் நடந்த செய்தியென்று அந்தச் சார்த்தூலன் சொல்லி முடித்தனன்.

கவி.

சார்த்தூலனிதனைச்சொல்லத் தழறெறிதறுகணனும்
பார்த்துளிவாடைபொங்கப் படுவதுபடுமோபார்த்தி
போர்த்துளிதுடைப்பெனுளை யவருடற்பொறையினின்றும்
தேர்த்துறுகுருதிதன்னா லென்றனனெயிறுதின்னா.

இவை யனைத்துங்கேட்ட இராவணன் கண்களிலெல்லா நெருப்புப்பொறிபறக்கச் சினந்து, நாளையதினம் அவர்களுடைய சரீரங்கள் என்னுடைய தேர்க்காலிலே நசுங்கும்போது அவர்கள் ரத்தம் புழுதியுடனேகூடப் பறக்

கும்படியாய்ப் பண்ணிப்போடுகிறேன் பாரென்று பல்லை நெறநெறவென்று கடித்து, முன்னம் சுக்கிரீவன்குத்தின குத்துகளினாலே தன்னுடலெங்கு மிரத்தம்பீறிட்டு, சூரியோதயமான நீலமலை இளவெயிலோடு பிரகாசிக்கிறது போல அந்த ரத்தக்குருதியாற் சிவந்து பிரகாசிக்கின்ற தோள்களையுடையவனாகி, அந்தத் துக்கத்திலும் சிலநேர மன்மதபாணத்தால் எரிக்கப்பட்டு, பின்பு புஷ்பமெத்தையைவிட்டு வேறோ ரிரத்தின சிங்காதனத்திலே போயிருந்தான்.

இராவணனுடைய மந்திராலோசனையி லம்மானாகிய நிகும்பனறிவுறுத்த, அவனைக்கடிந்து தானுமணிவகுப்பித்தல்.

கவி.

செய்வனமுறையினெண்ணித் திறத்திறமுறையிற்றேரும்
மய்யறுமரபின்வந்த வமைச்சரைவருகவென்றான்
பொய்யெனப்பளிங்கினாய விருக்கையின்புறத்தைச்சுற்றி
அய்யிரண்டாயகோடி பேய்க்கணங்காப்பவாக்கி.

அந்நந்தகாலத்திற்குத் தக்கபடி யோசித்துப் பலாபலங்களை யறிந்து சொல்லுகின்ற தன்வமிச பரம்பரையாய் வந்த மந்திரிகளை அழைத்துவரச் சொல்லி ஆக்ஞாபித்தான். அப்படியே அவர்களுமந்த அரண்மனைவந்து சேர்ந்தார்கள். பாலைவனத்திற் கானலாகிய தங்களுடைய தேரைச் சுற்றிக்கொண்டிருப்பதுபோற் பளிங்குக்கல்லாற்கட்டிய ஒரு பெரியமண்டபத்தைச் சுற்றிக் காவல்செய்யும்படி பத்துகோடிப் பேய்க்கூட்டங்களை ஏவி, மிகுந்த அறிவுள்ளவர்களான மந்திரிகளோடு அந்த மந்திராலோசனை மண்டபத்தைச் சேர்ந்து அவர்களைப் பார்த்துச் சொல்லுகிறான்.

ஓ எனதன்பிற்சிறந்த அமைச்சர்களே! குரங்குச்சேனைகள் எங்கும்வந்து சுற்றிக்கொண்டன. வாசலுக்கு வாசல் வானரங்களாக நிறைந்து யுத்தத்திற்குத் தலைப்பட்டன. நம்மை யின்னமும் விடாது வருத்தப்படுத்துகின்றன. நாமிதற் கென்னகாரியம் செய்யத்தகும்? என்று அவர்களை வினவினான்.

கவி.

ஈதிவர்நிகழ்ச்சியென்னா வெரிவிழித்திடியினக்குப்
பூதலத்தடித்தகைய னிகும்பனென்றொருவன்பொங்கி
வேதனைக்காமமந்தோ வேரொடுங்கெடுத்ததென்ன
மாதுலத்தலைவன்பின்னு மன்பினோர்மாற்றஞ்சொன்னான்.

அதற்கு அவனுடைய அம்மானாகிய நிகும்பன் மிகுந்தகோபங்கொண்டு, கண்களில் நெருப்புப்பொறிபறக்க இடியிடித்தாற்போலச் சிரித்து, பூமியைக் கையாலறைந்து சொல்லுகின்றான். அப்பா இராவணா! எழுபதுவெள்ள வானரசைனியங்கள் நம்முடைய கோட்டைமதிலையெல்லாம் சூழ்ந்து முற்றுகை செய்துகொண்டன. இப்போது நீ வேறென்னமோசெய்ய வேற்பட்டாய்போலு மிருக்கின்றது. நமக்குப் பெரியசமுத்திரத்திற்கொப்பான ஆபி

ரம்வெள்ள மிராக்ஷசச் சேனைகளிருந்தும், சத்துருக்கள் கோட்டையி னரணிப்பைப் பற்றிக்கொள்ளும்படியாக நெருங்கி மேற்கொண்டுவந்து விட்டார்கள். முன்னம் தேவர்களுக்கு நமக்கும் நடந்த யுத்தத்தில் வளைதடி - மழுவாயுதம் - தண்டாயுதம் - வில் - வாள் - சூலாயுதம் - என்று சொல்லப்பட்ட பெரிய ஆயுதங்களைக் கையிற்பிடித்துக்கொண்டு நம்முடைய ராக்ஷசவீரர்கள் கோபித்தகாலத்தில், இவர்களுக்கத்தேவர்கள் கும்பிடுபோட்டுவிட்டுத் தங்களுடைய சைனியங்களுக்கு முன்னாக ஓட்டம்பிடித்தார்களன்றோ? அப்படிக்கிருக்க - கையிலொரு ஆயுதங்களுமில்லாமல் இந்தக் குரங்குப்படைகள் வெறுங்கையால் வெற்றிகொள்ளுவது ஆச்சரியமாக இருக்கிறது. ஐயோ! காமவிகாரமல்லவோ நம்மை இப்படி வேரோடுங் கெடுத்துவிட்டது? என்று பின்னும் அதிக பக்ஷத்தோடு அவ்விராவணனைப்பார்த்துச் சிலவார்த்தைகள் சொல்லத்தொடங்கினான்.

ஐயா இலங்கேஸ்வரா! இந்த ஊருக்குவந்து நெருப்புவைத்துச் சாம்பலாக்கிவிட்டுப்போன ஓர் குரங்கின்கையிலே சக்கரமுண்டா? மலைகளுக்குச் சமானமான பத்துத்தலைகளையுடைய பிரதாபலங்கேசுரனாகிய உன்னுடைய கிரீடத்திலுள்ள நாகரத்தினங்களைப் பறித்துக்கொண்டுபோன சுக்கிரீவனுக்குச் சூலாயுதமும், வாளாயுதமும், வேலாயுதமும், உண்டாயிருந்தனவோ? இவ்விரண்டு குரங்குகளின் கைகளில் ஓராயுதத்தையும் கண்டோமில்லை. ஆகையால் - இனிராமனுடைய பாணம் வரிசைவரிசையாகப் புறப்படுகிறதற்கு முன்னதாக ஸ்திரீகளுக்குள்ளே அதிக உத்தமியான அந்தச்சீதையைக் கொண்டுபோய்விட்டு, ஆயுதமில்லாத அந்தச் சேனைகளைச்சேர்ந்து பலவாயுதங்களையுமுடைய நாம் அடைக்கலம்புகவேண்டுமேயல்லாமல் அவரவர்கள்மட்டில் தப்பி யொளித்துக்கொள்ளுகிறதற்கும் வேறேவழியிருக்கின்றதாவென்று சொன்னான்.

கவி.

என்புழிமாலிதன்னை யெரியெழநோக்கியென்பால்
வன்பழிதருதிபோலாம் வரன்முறையறியாவார்த்தை
அன்பழிசிந்தைதன்னா லடாதனவறையலென்றான்
பின்பழியெய்தநின்றா னவன்பின்னைப்பேச்சுவிட்டான்.

அப்போது கண்களில் தீப்பொறிபறக்கும்படியாக இராவணன் மாதுலனைப்பார்த்து, ஓ அம்மானே! நீ யெம்மான்கூட்டத்திற் சேர்ந்த வேளையோ நானறியேன். எனக்கு அபகீர்த்தி சம்பாதிக்கிறாய்போ லிருக்கின்றது. நீ என்மீது பட்சமில்லாதவனாகி, நமது குலத்தின் பராக்கிரமமுதலியவற்றை அறியாதவர்கள் சொல்லுகிற தகாதவார்த்தைகளையா சொல்லுகிறாயென்று பின் பிறரால் நிந்திக்கப்படுகின்றவனான ராவணன் மிகுந்தகோபத்துடனே சொன்னான். அந்த நிகும்பன் பின்பொன்றும் பேசாமலிருந்தான்.

அப்போது திரிலோககண்டனாகிய ராவணன் பிரகஸ்தனைப்பார்த்து, ஓ காலகேயர் யாவரையும் சம்ஹாரம்பண்ணின ஆயுதங்களையெல்லாந் தரித்திருக்கின்ற சேனாபதியே! நீ இருநூறுவெள்ளம் ராக்ஷசசேனைகளோடும், உன் பந்துஜெனங்களோடும், கிழக்குவாசலைக் காத்துக்கொண்டு நில்லென்று ஆக்கியாபித்தான். அப்படி யவனுக் காக்கியாபித்துத் தென்றிசைக்கதிபனாகிய யமனுடையவகங்காரத்தை யடக்கின மகோதரனைப் பார்த்து, நீ அதிக சீக்கிரமாகச்சென்று மதத்தவீரனான மகாபாரிசனென்பவனைத் துணையாகக் கூட்டிக்கொண்டு இருநூறுவெள்ளஞ் சேனைகளுடனே தெற்குவாசலிலே நின்று அங்கே வருகின்ற வானரசேனைகளை யெல்லாஞ் சம்ஹரித்துப் போவென்று கட்டளையிட்டான். அப்பால் இந்திரசயித்தைப்பார்த்து, அப்பாகுழந்தாய்! அநுமானுடைய பலத்தை நீ அறிந்திருக்கின்றனை யாகையால், இருநூறுவெள்ளஞ் சேனையுடனே பொழுதுவிடிகிறதற்குள்ளாக மேற்கு வாசலிற்போய்க் காத்திருவென்று உத்தரவுசெய்தான். பின்பு விரூபாக்ஷனைப்பார்த்து, இதுவரைக்குந் தேவர்களை ஜயம்பண்ணிக்கொண்டிருந்த நீ குரங்குப்படைகளின்மேல் சண்டைசெய்யும்படிப் போகிறது அற்பமாகும். கீர்த்தியும் வரமாட்டாது. இருக்கிற மூலச்சேனைகளுடனும் - மந்திரிகளுடனும் - பட்டணத்தைக் காத்திருவென்று ஆக்கியாபித்தான்.

அப்பால் பிரமனுலகத்திற் கிப்புறத்திலுள்ளவர்களை யெல்லாம் ஜயித்துவிட்டு வெகுநாளாகச் சண்டைகிடைக்கவில்லையே யென்று கோபித்துக்கொண்டிருக்கின்ற யானைவீரர் - குதிரைவீரர் - தேர்வீரர் - காலாள்கள் - ஆகிய இருநூறுவெள்ளஞ் சேனையுடனே வடக்குவாசலை நான் காத்துக்கொள்ளுகிறேனென்று யுத்தசன்னாகமானான். அப்போது இருதிறத்தாருக்கும் யுத்தவபேக்ஷையுண்டாகி விரைவிற் பொழுதுவிடியவில்லையென்று உதயத்தை எதிர்நோக்கிக்கொண் டிருந்தமையால், அந்தராத்திரி ஒருகற்பகாலம்போல நீளுவதாகக் காணப்பட்டது. அல்லாமலும் - இனி ராட்சதர்களாலுண்டாகும் உபத்திரவங்கள் ஒழிந்து விடுமென்றெண்ணிக் குதூகலமாயிருக்கும் தேவர்கள் முனிவர்கள் முதலிய சாதுசனங்களுக்கும், உலகங்கள் சுகிப்பதுவே தாம்சுகிப்பதாகவும் துக்கிப்பதுவே தாம்துக்கிப்பதாகவும் கொள்பவராகையால் ஆதிசங்கற்பத்தின்படி நிறைவேற்றக் காலம் வாய்ந்ததென்றிருக்கிற ஸ்ரீராமபிரானுக்கும், இவருடைய சௌந்திரியத்தில்மூழ்கி இவருடைய திருமார்பைவிட்டுப் பிரியாத காலம்கிடைத்ததென்பதினால் ஜானகிப்பிராட்டியாருக்கும், தன்னுடைய பேதமைப் புத்தியால் மனுஷியரென்றெண்ணி நாளை கலபத்திலே வெற்றிகொள்ளலாமென்று அகங்கரிக்கும் இராவணனுக்கும் ஆநந்தத்தை விளைவிப்பதாகவு மிருந்தது. அப்போது பொறுமை - தயை - முதலிய சற்குணங்களில்லாத அதிக பலாஷ்டிகனாகிய ராவணனுடைய கொடுமைக்குப் பயந்து வெளிப்படாமல் வேதனைப் பட்டுக்கொண்டிருந்த ஒருவன், அக்காலத்தில் இறுமாப் படைவோருடைய கர்வத்தைப் போக்கிக்காக்கவல்ல ஓரிறைவனைக்கண்டு வெளிப்பட்டாற்போலச் சூரியன் உதயமானான்.

தூதனுப்புதல்.

№ 49. ஸ்ரீராமர்விபீஷணாதியரோடாலோசித்து இராவணன்அங்கதனைத்



அங்கதன்றன்னைக்கொல்லஇராவணனுலேவியநான்கரக்கரையுங்கொன்றுவந்து ஸ்ரீராமரைச்சரணமடைதல்.



உயுத்தகாண்டம். அங்கதன்தூதுபடலம்.

கவி.

உளைப்புறமோதவேலை யோங்கலையொடுங்கத்தூர்ப்ப
அளப்பருந்துளிச்சுண்ண மாசைகளலைப்பப்பூசல்
இளைப்பருந்தலைவர்முன்ன மேவவினையிலைமுற்றம்
வளைத்தனர்விடியத்தத்தம் வாயில்கடோறும்வந்து.

தந்திரமிலங்கைமூதூர் மதிலினைத்தழுவித்தாவி
அந்தரக்குலமின்சிந்த வண்டமுங்கிழியவார்ப்பச்
செந்தனிச்சுடரோன்சேயுந் தம்பியுமுன்புசெல்ல
இந்திரன்றொழுதுவாழ்த்த விராமனுமெழுந்துசென்றான்.

அப்போது ஸ்ரீராமபிரானுடைய சேனைகள் அதிக சௌரியத்துடனே கடல்களினலைக ளோய்ந்துபோகவும் – ஆகாசமெல்லா மறைபட்டுப்போகவும் - தூளிகளெழும்பும்படியாகப் புறப்பட்டு, தங்கள் ராஜனாகிய சுக்கிரீவமகாராஜாவி னுக்கினையின்படி அந்தந்த வாசல்களின் சமீபத்திலேபோய் லங்கையை வளைத்துக்கொண்டு, அதன் கோட்டை மதிலைத் தாவி, ஆகாசத்தை மூடிக்கொண்டிருந்த இருளெல்லாம் இச்சேனைகளினுடைய தேககாந்தியால் அழிந்துபோகவும் - அண்டமு நடுக்கங்கொள்ளவும் – ஆர்ப்பரித்தன.

அப்போது சுக்கிரீவமகாராஜனு மிளையபெருமாளும் பின்னேவர, தேவேந்திராதி தேவர்கள் தொழுதுவாழ்த்த, ஸ்ரீராமமூர்த்தியும் இலங்கையை நோக்கினடந்தார். சகல சாஸ்திரபண்டிதராலும் அளவிடக்கூடாத பலமுள்ள ராட்சசசேனைக்கடலை உள்ளேயுடையதாக விருந்தும், கருங்கடலாலே வெளியே சூழப்பட்டதால் விளங்கியும், பின் வானரசேனைகளால் வளைத்துக்கொள்ளப்பட்ட அந்தப் பாவியினுடைய லங்காபட்டணமானது பாற்கடல் மத்தியிலுள்ள ஒருநகரத்தைப்போலிருந்தது. இராக்ஷசசேனைகளைப் பிடிக்கவீசியவலையைப்போல் வானரசேனைக ளிலங்கைமா நகரத்தை வளைத்துக்கொண்டன. மேலும் – அந்தலங்கையானது பிரளயகாலத்திற் பிர்ம்மேந்திராதி ஆத்தும கோடிகள் தங்கியிருக்கத்தக்க மாயப்பெருமானுடைய திருவுதரம் போலவும் பிரகாசித்திருந்தது.

அணிவகுப்புப் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பதின்மூன்றாவது,

அங்கதன் தூதுப் படலம்.

இப்படலத்தில். எழுபதுவெள்ளம் வானரசேனைகளோடு இலங்கைமாநகரத்தைநோக்கிச் சென்ற ஸ்ரீராமர் வடக்குவாயிற் சமீபத் தெழுந்தருளி இராஜதருமமுறைமைப்படி முன்னம் தமது பகைவனாகிய இராவணனுக்கு ஓர் தூதனுப்பி போர்த்தொழிற்கண் முயல்வது புஜபலவீரர்கட்

குத் தகுதியென்று விபீஷணுழ்வாராதியரோ டாலோசிக்க, அவர்கள் அதற் குடம்பட்டதறிந்த இலட்சுமணர் துர்கிருத்தியனுக்குத் தூதனுப்புதல் முறையன்றென்று தடுக்க, ஸ்ரீராமரவரைத்தேற்றி அங்கதனை யாய்ந்துவிடுக்க, அவனவ்வாறேசென்று இராவணனெதிர்நிற்றலும், அவன்இவ்வங்கதனது வரலாற்றைக் கேட்டறிந்து வாலியின்மகனென்றுணர்ந்து சன்மானிக்க, அச்சன்மானத்தையு மவனையு மங்கதனிகழ்ந்து அவனுள்ளத்தையுலையும்படிச்செய்ய, அதனுலிராவணனுக்குக் கோபமீறி அங்கதனைக்கொல்லும்படி நான்கு இராட்சசரைவிடுக்க, அவர்களை யவ்வங்கதன் தூக்கியவாறே ஆகாயத்திலெழும்பிக் கொன்றெறிந்து ஸ்ரீராமரிடம்வந்து இராவணனுடைய மனோபாவத்தையறிவித்தமைசொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமரிராவணனுக்குத் தூதுவிடுக்க முயன்றதை இலட்சுமணர்தடுக்க, அவரிவரைத் தேற்றுதல்.

கவி.

வள்ளலும்விரைவினெய்தி வடதிசைவாயின்முற்றி
வெள்ளமோரேழுபத்துக் கணித்தவன்சேனையோடும்
கள்ளனைவரவுநோக்கி நின்றனன் கணக்கிலாதான்
ஒள்ளியதுணர்ந்தேனென்ன வீடணற்குரைப்பதானன்.

தமது செந்தாமரை மலரைப்போலும் திருவடியை ஸ்மரிக்கின்ற பகவத்ஜனங்களுக்கு விருப்பியவைகளையெல்லாம் ஓயாது தந்தருளும் பரமோதாரனுகிய ஸ்ரீராமபிரான் இந்தப்படி அதிசீக்கிரமாக வடக்குவாசலின் சமீபத்திற் கெழுந்தருளி, எழுபதுவெள்ளஞ் சேனைகளையுடையவராய் அந்தக்கள்ளனை வரவு பார்த்துக்கொண்டேயிருந்து, அவன் வரவுகாணுததினுலே விபீஷணுழ்வானைப்பார்த்துத் திருவாய்மலர்ந்தருளுகிருர். தம்பிவிபீஷணு! எனக்கொரு நல்லயோசனை தோன்றுகிறது. அதாவது - இப்போது ஒருதூதனை இராவணனிடத்திற் கனுப்பிச் சீதையை விடுகிறையாவென்று கேட்டனுப்பவேண்டும். அதற்கவன் மறுத்துச்சொல்லி அனுப்புவானுகில் அதன்மேல் யுத்தத்திற்கு ஆரம்பிக்கலாம். அதுவே என்யோசனையும்-இராஜதருமமும்-நீதியுமென்று கிருபாநிதியானவர் சொல்ல, அந்தவார்த்தையை இராக்ஷசாதிபதியான விபீஷணுழ்வான்கேட்டு, சுவாமி! தேவரீராலோசித்தது மிகவழகாயிருக்கின்றதென்ருர். வானராதிபதியான சுக்கிரீவமகாராஜனும் இஃதிராஜதருமமேயன்றி வேறல்ல. ஆதலால் இக்காரியம் செய்யத்தக்கதே யென்ருர். இவைகளையெல்லாம் இளையபெருமாள்கேட்டு, சுவாமி! அவனையிரந்து நாம்கேட்பது மிருந்த ஈனமாகும். ஆகையால் — இனிநாம் இராக்ஷதர்மேல் அஸ்திரப்பிரயோகஞ் செய்வதேயல்லது, அவனையொரு பொருட்டாக வெண்ணிச் சமர்தானவார்த்தைசொல்லி, யனுப்புவதுநகாதென்று பின்னையுஞ்சொல்லுகின்ருர்.

கவி.

தேசியைச்சிறையில்வைத்தான் தேவருக்கிடுக்கண்செய்தான்
பூசுரர்க்கலக்கணீந்தான் மன்னுயிர்புடைத்துத்தின்றான்
ஆசையினளவுமெல்லா வுலகமுந்தானேயாள்வான்
வாசவன்றிருவுங்கொண்டான் வழியலாவழிமேற்செல்வான்.

ஐயனே! மகாதேஜஸையுடைய லோகமாதாவைச் சிறையிலேவைத்தத ல்லாமல் தேவர்கள் ரிஷிகள் முதலானபேர்களையு மிகுந்த வருத்தப்படுத்தின ன். சகலஜீவகோடிகளையும் அடித்துக்கொன்று தின்றுவிட்டான். திசைகளி ன் முடிவுவரையில் சகலலோகங்களையும் தானே ஆளுகிறான். இந்திரனுடைய சகல சாம்பிராச்சியங்களும் தானே அபகரித்துக்கொண்டான். தருமந்தப்பி னவழியே நடக்கின்றான். அல்லாமலும் — தேவரீர் அளவில்லாத துக்கசாகர த்திலே முழுகியிருக்கும்படியாக வஞ்சனைசெய்து தேவியாரையும்பிரித்தான். திக்கில்லாதவரா யழுதுகொண்டுபோகின்ற சீதாபிராட்டியாரது துக்கத்தைச் சகிக்கமாட்டாமல்தனிமையாயுத்தத்திற்குவந்த உம்முடையபிதாவாகிய ஜடா யுவையும், அவனேகொன்றிருக்கின்றான். அப்படிப்பட்ட பாவிக்கு நாம் தூ தனுப்பினால் அவனதற்கிசைந்து பிராட்டியாரை விட்டுவிடுவானேயாகில், அ ப்போது அவனைக்கொல்லாமல் விடவேண்டியல்லோ வரும்? அந்தப்படி வி ட்டுவிட்டால் தேவரீருடைய பேருங்கீர்த்தியு மிருக்கிறவரைக்கும் இலங்கா திபத்தியம் உனக்கென்று இவருக்கு வாக்குக்கொடுத்திருக்கிறது வீணாகும ல்லவோ?

அன்றியும் — தேவரீர்பண்ணின சபதம் எப்படிமுடியும்? உம்முடைய அன்பினாலேஅவைகளையெல்லாம் விட்டுவிடுவீராகில்,இவ்விலங்கையினுடைய பலத்தைப்பார்த்து இதில் நாம்பிரவேசிப்பது மிகுந்த பொல்லாங்கைத் தரு மென்று அஞ்சி நின்றுவிட்டீரென்று உலகத்திற்குத்தோன்றுமே; ஆதலால் எவ்விதத்திலும் போர்செய்வதே அதிக சிறப்பாகுமென்றுஞ் சொன்னார். அ ந்தவார்த்தையைக்கேட்ட வீரசிகாமணியாகிய ஸ்ரீராமமூர்த்தி நகைத்து, ஒரு வார்த்தை அருளிச்செய்கிறார்.

கவி.

அயர்த்திலன்முடிவுமஃதே யாயினுமறிஞராய்ந்த
நயத்துறைநூலினீதி நாந்துறந்தமைதனன்றே
புயத்துறைவலியரேனும்பொறையொடும் பொருந்திவாழ்தல்
சயத்துறையறனுமஃதே யென்றிவைசமையச்சொன்னான்.

தம்பி இலக்ஷ்மணா! நானென்றையு மொருபோது மறந்தவனல்லே ன். எல்லாம் பிராரப்தப்படிக்குவந்து முடியப்போகிறது. ஆனாலும் — தெரிந் த பெரியோர்கள் சொல்லியிருக்கின்ற நீதிசாஸ்திரத்தை நீக்கிநடப்பது யுக்த மல்லவே: அதிகபலசாலிகளானாலும் பொறுமையினாலேயே எந்தக்காரியமு ம் செய்யவேண்டும். அப்படிச் செய்கிறதே ஜெயமானகாரியம். அதுதான் த ருமமுமாகுமென்று அவருக்குச் சம்மதியாகும்படிச் சொன்னார்.

ஸ்ரீராமர் அங்கதனையாய்ந்து இராவணனிடந் தூதாகவிடுக்க அவன்செல்லுதல்.

கவி.

மாருதியின்னுஞ்செல்லின் மற்றிவனன்றிவந்து
சாருதல்வலியாரில்லை யென்பதுசாலுமன்றே
யாரினியேகத்தக்கா ரங்கதனமையுமொன்னார்
வீரமேவிளைப்பரேனுந் தீதின்றிமீளவல்லான்.

இந்தப்படி லக்ஷ்மணரைத்தேற்றிய ஸ்ரீராமர் பின்பு யாவரையும்பார்த்து, இந்தக்காரியத்திற்கு ஆரையனுப்புவோம்? அனுமானை அனுப்பினால், இவனைத்தவிர இவ்விடத்திற்கு வரத்தக்கபேர் அவ்விடத்தில் வேறேயில்லையென்று அவர்களுக்குத்தோன்றும். ஆகையால் - அங்கேபோனவிடத்திலே அவர்கள் தங்கள் சௌரியத்தைக்காட்டினாலும், அவைகளையெல்லாம் ஜயித்துச் சுகமாய்ப்போய் வரத்தக்கவன் அங்கதனென்றெண்ணி அவனை அழைத்து, பிள்ளாய்! நீயிந்த அனுமானுக் கிரண்டாவதானவன். ஆகையால் - நீ அச்சத்துருவினிடத்திற்குப்போய் என்னபிப்பிராயத்தைச் சொல்லிவரவேண்டுமென்று ஸ்ரீராமபிரான் சொன்னார். அவரருளியதைப்பெற்ற அங்கதராஜனுக்குத் தோள்கள்பூரித்தன. அக்கால் அவனுடைய சந்தோஷநிலைமையை இவ்வள வ்வளவென்று கூறத்தரமாகுமோ? உடனேயவன் சந்தோஷத்துடனே எழுந்திருந்து சுவாமியைப்பார்த்து, ஐயனே! அடியேன் அந்தக்கொடியோனை ராவணனிடஞ்சென்று யான்சொல்லவேண்டுங்காரிய மென்னவென்று பரிந்து கேட்டனன்.

கவி.

என்னவற்குரைப்பதென்ன வேந்திழையாளைவிட்டுத்
தன்னுயிர்பெறுதனன்றே வன்றெனிற்றலைகள்பத்தும்
சின்னபின்னங்கள்செய்யச் செருக்களஞ்சேர்தனன்றே
சொன்னவையிரண்டிலொன்றே துணிகெனச்சொல்லிடென்றான்.

அதற்கு ஸ்ரீராமர் அவனைப்பார்த்துச் சொல்லுகின்றார். அப்பா அங்கதா! நீயந்தராவணனை நேரிற்கண்டு, எவர்களும் புகழ்ந்துசொல்லும் பெருங்கீர்த்தியைப் பெறவேண்டிச் சீதையைவிட்டுப் பிழைப்பதோ? அல்லது நரகத்திற் கேதுவாகப் பத்துத்தலைகளும் பனங்காய்கள்போலச் சின்னபின்னமாயறுபட்டு மாண்டுமாய்வதோ? உன்சம்மதியென்றுகேள். விரோதமாக அவன்கோபங்கொண்டு மறுத்தானேயாகில், நாங்கள் வந்திருக்கும்போது நீ கோட்டைக்குள்ளே மறைந்திருக்கிறது தருமமல்லவே: சௌரியவந்தனுக்கிது அழகாருமோ? அல்லது ஆண்மையாமோ? சாமார்த்தியமு மல்லவே: உனக்கெதிரில்வந்து யுத்தஞ்செய்யச் சக்தியுண்டானால் வந்தெதிர்க்கலாமெனச் சொன்னதாகச் சொல்லக்கடவாய். என்று ஸ்ரீராமபத்திரர்சொல்லினார்.

கவி.

பார்மிசைவணங்கிச்சியம் விண்மிசைப்படர்வதேபோல்
வீரன்வெஞ்சிலையிற்கோத்த வம்பெனவிசையிற்போனான்

மாருதியல்லனாகி னீயெனுமாற்றம்பெற்றேன்
ஆரினியென்னோடொப்பா ரென்பதோரின்பமுற்றான்.

அவரை அங்கதன்சேவித்து, ஒருசிங்கமானது ஆகாசத்தில் தாவிப்போகிறதுபோலவும் — ஸ்ரீராமபாணத்தின் விசையைப்போலவும் - அதிகவேகமாகி, அனுமாருக் கிரண்டாவது நீயென்றுசொல்லும்படி நல்லவார்த்தைபெற்றேனே; எனக்குச்சமான மாரிருக்கிறார்கள் ? என்கிற மகிழ்ச்சியுடனே கிளம்பினான். இப்படி கிளம்பியமாத்திரத்தில் வேலாயுதத்தையுந் தோற்கடித்து நெருப்புப்பொறி பறக்கும்படியாகப் பார்க்கிற ராட்சசரைச் செயங்கொள்ளும்படிக்குத் திருப்பாற்கடற் சயனத்தைவிட்டு அயோத்தியிலெழுந்தருளின ஸ்ரீராமருடைய நியமனத்தைச் சிரசாகவகித்த தூதனான அந்த அங்கதராஜன், சூரியனுந் தாண்டிப் போகக்கூடாத மகமேருவினுமுயர்ந்திருக்கின்ற மதில்களையெல்லாந்தாண்டி அந்தராவணனிருக்கிற இடம்போய்ச்சேர்ந்தான். அவ்விடத்திலநேகராட்சசர்கள் இவனைக்கண்டமாத்திரத்தில் அழுதுகொண்டு, அந்த அனுமானே வந்தானென்று பயந்து இராவணனிடம்போய்த் தொழுதுமுறையிட்டார்கள். இப்படி அழுதுகொண்டும் தொழுதுகொண்டும்வந்த பந்துக்களாகிய ஸ்திரீபுருஷர்களையும் தன்னிடத்திற்கு வந்து முறையிட்டுக் கொள்ளுகிற வீரர்களையும், தன்காலில்விழுந் தலறுகின்ற சேனைகளையும்பார்த்து ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கிற ராவணனை அங்கதகுமாரன்கண்டு; நாம் கல்லினாலும் - மரத்தினாலும் — இந்தச் சிறுகடலைக்கட்டினது பெருமையென்றல்லவோ எண்ணியிருந்தோம் ? இவன் பிரதாபத்தைப்பார்த்தால் இவனையும் வெல்லநினைத்துத் தைரியங்கொண்டுபுறப்படுவோர்களுமுண்டோ ? இவன்கையி லாயுதமெடுப்பானானால் ஸ்ரீராமர்கையில் வில்லொன்றிருப்பதல்லாமல், வேறேயெதிர்த்து நிற்பவர்கள் இவ்வுலகம் தேவருலகம் பாதாளவுலகம் ஆகிய இவ்விடங்களில் எங்குமில்லை. என்றுகருதி மிகுந்த ஆச்சரியத்துடன் பிரமித்துநின்று பின்னுமாலோசிக்கிறான்.

இந்தராவணனை வெல்லவேண்டுமென்று நினைக்கிறவர்கள் யுத்தத்திலே இவனைத்தோற்கடித்த என்தந்தையாகிய வாலியின்மார்பில் ஒரு அம்பெய்து கொன்றுவிட்ட அந்த ஸ்ரீராமரைக் குறிப்பதல்லாமல், பிழைத்திருக்கின்ற மற்றவராலே இவனையேதேனுஞ்செய்யலாமோ ? ஆபரணங்களில்லாமலே அழகை விளைவிக்கும்படியான என்னன்னையாகிய சீதாபிராட்டியார்பேரில் ஆசைவைத்திருக்கின்ற இவனைக்கொன்று, இவனுடைய துராசையை அறுத்தெறியவல்லமையுள்ளவர்கள் அந்த ஸ்ரீராமபிரானையல்லாமல் யாரிருக்கின்றார்கள் ? ஆதிசேஷன்மீதுபாய்ந்து அவனுடைய சிரோரத்தினங்களைப் பறித்துவந்த கருடாழ்வானைப்போல முன்னமிவன்மேற் பாய்ந்து, இவனோடு மல்லயுத்தமுஞ்செய்து, இவனுடைய கிரீடத்திலுள்ள ஜீவரத்தினங்களைப் பறித்துக்கொண்டுவந்த நம்முடைய சிறியதந்தையே வல்லவர். என்று கிருபாநிதியாகிய ஸ்ரீராமதூதனான அங்கதன் இப்படிப் பலவாறு நினைத்து, கொடிய அக்கினிமயமான இடியையும் யமனையுஞ்சேர்த்து அவைகளுடனே காலகோடி

விஷத்தையுங்கூட்டிச் செய்ததுபோலக் கிரீடங்கள் மின்ன ஒரு கருங்கடலிருக்கிறதுபோன் றிருக்கிற சிங்கத்தையொத்த இராவணனுக்கு முன்னே போய்நின்றான்.

இராவணன் தன்னெதிர்வந்த அங்கதனைப்பார்த்து நீயாரென யான் இராமதூதன் உனக்கு சேதிசொல்ல வந்தேனென அவ்வங்கதனை அவ்விராவணன் வாலிபுத்திரனென்றுணர்ந்து சன்மானித்தல்.

கவி.

நின்றவன்றன்னையன்னு னெருப்பெழநிமிரப்பார்த்திங்
கின்றிவண்வந்தநீயா ரெய்தியகருமமென்னை
கொன்றவர்தின்னுமுன்னங் கூறுதிதெரியவென்றான்
வன்றிறல்வாலிசேயும் வாளெயிறிலங்கநக்கான்.

பூதநாயகனீர்சூழ்ந்த புவிக்குநாயகனப்பூமேல்
சீதைநாயகன்வேறுள்ள தெய்வநாயகனீசெப்பும்
வேதநாயகன்மேனின்ற விதிக்குநாயகன்றான்விட்ட
தூதன்யான்பணித்தமாற்றஞ் சொல்லிடவந்தேனென்றான்.

இவ்வண்ணம் தன் சமுகத்தில் நின்ற அங்கதனாகிய விராமதூதனை இராவணன் தன்னிரு விழியினின்றும் அனற்பொறி பறந்தெழப்பார்த்து, ஏ குரங்குருவங்கொண்டு வந்தவனே! நீயார் இவ்விடம் வந்தது யாதுகாரணம் இதோ நமது சமுகத்திலிருக்கின்ற இராக்ஷசவீரர்கள் நீ சொல்வதற்குத் தாமதிக்கின் கொன்று தின்றுவிடுவார்கள். அப்படி அவர்கள் கோபங்கொள்ளுவதற்குமுன்னே நீ சொல்லிவிடின் நலமாகுமென்று சொல்ல, அதற்கு எங்நாளுங் கலங்காத சௌரிய பராக்கிரம நிறைந்த வாலிபுத்திரனாகிய அங்கதகுமாரன் பிரகாசிக்கின்ற தனது தந்தங்கள் வெளியிற்றெரியும்படியாகச் சிரித்து, ஏ ராவணா! நான் யாரென்றால் சொல்கிறேன். பிரிதிவுமுதலான பஞ்சபூதங்களுக்கும், சமுத்திரத்தாற் சூழப்பட்ட இந்தப் பூலோகத்திற்கும், நீபூமியோடு பேர்த்தெடுத்துக்கொண்டுவந்த லோகமாதாவான சீதாபிராட்டிக்கும், சமஸ்தலோக நாயகர்களாகிய பிர்ம்மேந்திராதி தேவர்களுக்கும், நீ நாள்தோறும் ஓதிவருகின்ற வேதத்திற்கும், சகலாத்துமாக்களையும் தன்னியமப்படி நடத்திவருகின்ற மேலாகிய விதிக்கும், நிருபாதிக நாயகனா யிருக்கின்ற ஸ்ரீராமநாமதாரகப் பிர்ம்மத்தினால் விடப்பட்ட தூதனாகக்கொள்ளும். அவருனக்கு ஆக்ஞாபித்த நியமனத்தைச் சொல்லும்படியாக நான் வந்தேன். இதுதான் யானுனதெதிரில்வந்து நின்றதற்குக் காரணம். என்று அங்கதன் சொல்லி நின்றனன்.

இவ்வாறு சொல்லிநின்ற அங்கதனை இராவணன் பார்த்து நகைத்து, ஓ தூதனே! அரனுமயனுமரியுமல்லாமற் குரங்குகளைக் கூட்டிக்கொண்டு வந்து, கடலாகிய குட்டைக்கு ஒரு சேதுகட்டி, இன்னம் பயந்துகொண்டு உன்னைத் தூதனுப்பின நரனோ லோகநாயகன்? நீ சொன்ன லோகநாயகனுடைய செ

ய்தி மிகநன்றாயிருக்கின்றது. கங்கையையு மூன்றாம்பிறையையுந் தரித்த திரி நேத்திரதாரிக்கும் — கையில் சங்கு சக்கரந் தரித்த விஷ்ணுவுக்கும் — முன்ன மென்னாற் சம்பவித்த சகல விபத்துக்களையு மவனறிந்திருக்கலாம். அப்படி யறிந்திருந்தும் இந்த ஊரைவந்தடைந்த அந்தராமன் யாராயிருந்தாலும், அவன் செய்தியிருக்கட்டும். அந்தமனுஷனுக்குத் தூதாக இங்கேவந்து பயப்படாம லிப்படிச்சொன்ன நீயார்? அதனை யெனக்கு முன்னே சொல்லுகவென்று கேட்டனன். அதற்கு அங்கதனவனைப்பார்த்து. ஓ தசக்கிரீவனே! தேவேந்திரனுடைய குமாரனும், பூர்வகாலத்தில் இராவணனென்கிற உன்னை அழகான தோள்களோடு சேர்த்துத் தன்வாலிலே கட்டிக்கொண்டு மலைகளைத்தாண்டித் திரிந்தவனும், தேவர்களுண்ணும்படிக்கு மந்தரகிரியினாலே கடலைக்கடைந்து அமிர்தங்கொடுத்தவனுமான வாலியினுடைய புத்திரன் நானென்று சொன்னான்.

அதைக்கேட்ட ராவணன் அவனை நயமுகத்தோடும் பார்த்து, அப்பா! உன்தகப்பன் எனக்குச்சிநேகிதனென்கிறதற்குப் பழையகதையைச் சொன்ன நீயே சாக்ஷியாக இருக்கின்றாய், அப்படிப்பட்டவன் மகனான நீ மனுஷனுக்குத் தூதனானதைப் பார்க்கினு நிந்தனை வேறே யுண்டோ? உனக்கு வானராதிபத்தியம் நானேகொடுத்தேன். நீ அவர்களிடத்தி லிழிவடையாமல் வந்து பெரிய உபகாரஞ்செய்தாய். வாலிக்குப் பிள்ளையாகையா லெனக்கும் நீ பிள்ளைமுறையே யல்லது வேறல்ல. தகப்பனைக் கொன்றவன் பிறகே கும்பிட்டுக்கொண்டு திரிந்து பேதையைப்போ லிருந்தா யென்கிற அபகீர்த்தியும் தீர்ந்துவிட்டாய். முன்னே சீதையைப்பெற்றேன். இப்போது உன்னை எனக்குமாரனாகவும் பெற்றேன். இனியென்னால் முடியாத காரியம் என்னவிருக்கின்றது? அந்தமனுஷர்கள் இன்றைக்கோ நாளைக்கோ மாண்டுபோகிறதற்குச் சந்தேகமில்லை. உன்ராஜரீகத்தை உனக்கே கொடுத்தேன். நீ ஊழிகாலபரியந்தம் அந்த ராச்சியத்தை யாண்டுகொண்டு சுகமாகவிரு. தேவர்களெல்லாம் கைதொழப் பொற்சிங்காதனத்திலே வைத்து மஹாராஜாவாக உனக்கு நானே முடிசூட்டுவேன். என்று ராவணன் சொல்லி அவனைச் சன்மானித்தான்.

அங்கத னிராவணனையு மவன் சன்மானத்தையு மிகழ்ந்து
தான் வந்தகாரியத்தைக் கூறுதல்.

கவி.

அங்கதனதனைக்கேளா வங்கையோடங்கைதாக்கித்
துங்கவன்றோளுமார்பு மிலங்கையுந்துளங்கநக்கான்
இங்குநின்றார்கட்கெல்லா மிறுதியேயென்பதன்னி
நுங்கள்பாலின்றமெம்பாற் போந்தனனுய்பியென்றான்.

இப்படி ராவணன் சன்மானித்துக்கூறிய வார்த்தைகளனைத்தையும் அங்கதன்கேட்டு, தனது இருகரங்களையும் ஒருங்குசேரத்தட்டி உயர்வும் பராக்கிரமமும் பொருந்தியபுயமும்மார்பும் அவ்விலங்காபுரியுங்குலுங்கும்படியாகச்

சிரித்து, ஓ இலங்கைவேந்தனே! இங்கேயிருக்கிறவர்களுக்கெல்லா முடிவுகாலம் வந்ததென்பதை அறிந்துதானே உன்னுடைய தம்பி உங்களையெல்லாம் விட்டு எங்களிடம் வந்து சேர்ந்தான். அதைநீ சுத்தமாகமறந்து உன் வாயிலே வந்ததைச் சொல்லி என்னை உன்வசஞ்செய்து, நானும் திரிலோகநாயகராகிய ஸ்ரீராமரால் விடப்பட்ட தூதனுகவந்து உன்னுல் அரசாளப்பெறுகிறது புத்திமான்களால் ஆலோசிக்கத் தகுந்ததே: மேலும் - சிங்கமானது நாயின் கையில் மகுடாபிஷேகம் பெற்றதுபோல உன்னுல்நான் அரசாட்சி பெறுவேனேயானுல், இதற்குச் சமானமாகிய இழிவு வேறென்னவிருக்கின்றதென்று சொல்ல அப்போது ராவணனுக்கு அங்கதனைக் கொல்லத்தக்க கோபம்பொங்கி, ஓ குரங்கே! தங்களாயுள் முடிந்தமனுஷரை நம்பிச் சாகத்துணிந்திருக்கிற நீ, இங்குவந்த காரியத்தைச் சொல்லென்று சொல்லினன். அதைக்கேட்ட அங்கதன் சொல்லுகிறுன்.

கவி.

கூவியின்றென்னைநீபோய்த் தன்குலமுழுதுங்கொல்லும்
பாவியையெய்தியஞ்சி யரண்புக்குப்பதுங்கினுனைத்
தேவியைவிடுகவன்றேற் செருக்களத்தெதிர்ந்துதன்கண்
ஆவியைவிடுகவென்று னருளினம்விடுகிலாதான்.

ஸ்ரீராமசுவாமி என்னை அழைத்து, நீபோய் தன்னுடைய குலத்தையெல்லாங் கொல்லுகிறதற்கேற்பட்ட பாவியாகியும் யுத்தத்திற்குப்பயந்து கோட்டைக்குள்ளே பதுங்கியிருக்கின்றவனுமான ராவணனைக்கண்டு, சீதாபிராட்டியை விடுகிறையா? இல்லாவிட்டாற் போர்செய்ய வருகிறையா? என்று கேட்டறிந்து வரும்படியாகக் கிருபைநிறைந்த மனமுடையவராய்ச் சொன்னுர். அதுவுமல்லாமல் — பருந்துக்கிரையாகும்படி உன்பாட்டியாரைக் கொன்றபோதும், அநேகசேனையுடனே உனது தேவாமிர்தத்தைக் காட்டிலும் சிறப்புற்ற அம்மானைக் கொன்றநாளிலும், ஆரணியத்திலேவந்து உன்தங்கை சூர்ப்பநகையினுடைய மூக்கையும் ஸ்தனத்தையும் எங்களிளையபெருமாள் அரிந்த நாளிலேயும் வாராத நீ; இனி ஆண்மையுங்காட்டப் போகின்றுயோ? பந்துக்களோடும் அநேக ராக்ஷசக்கூட்டத்தோடும் உலகத்திற்குக் களைபிடுங்கினதுபோலக் கரதூஷணர்களான உன் தம்பிமார்களைக் கொன்றதைப் பார்த்திருந்தும், உன்மனதிற் சற்றுமெண்ணிவந்தவனல்லை. மேலும் - இளையபெருமாளைப் பிரியும்படியாக வஞ்சகஞ்செய்து சீதையைக்கொண்டுபோன வக்கிரதந்தங்களையுடைய ராக்ஷசனுன நீ யுத்தத்திற்கு வருவாயா?

இவையல்லாமல் முன்னே இவ்விலங்கையில் அனுமார்வந்து சீதையைக் கண்டு எதிரேவந்தெதிர்த்த ராக்ஷசர்களையெல்லாம் காலால் எற்றிவிட்டு, உன்பிள்ளை அக்ஷனையும் தரையிற்போட்டுத் தேய்த்துவிட்டு, உன் ஊரிலேயும் நெருப்புவைத்துக்கொளுத்தி, நீயும் பார்த்திருக்கவே கடலைத்தாண்டிவந்திருக்கச்செயும்; உடனே கூடத்தொடர்ந்துவரமாட்டாத நீ செய்யுஞ்சண்டையு

மொன் றிருக்கின்றதோ? உன் இனத்தாராகிய சுகசாரணர்களுக்குப் பிராணபிரதிஷ்டை கொடுத்து அவர்களுடைய கள்ளத்தன்மையையும் அறிந்து அவர்களா னுனக்குப் புத்திசொல்லி அனுப்பினபோதும், வருணன்வந்து எங்களாண்டவராகிய ஸ்ரீராமரை வணங்கினபோதும், உன்தம்பிக் கிலங்காதிபத்தியங் கொடுத்தபோதும், சமுத்திரத்தை அடைத்து அணையிட்டபோதும் வராத உன்னுடைய ஆண்மைக்கும் ஒருசிறப்புண்டா? உன்மீது பகைகொண்டிருக்கிற தேவர்களும் - உன்மீது ஆசைகொண்டிருந்த ஸ்திரீகளும் - தங்கள் தங்கள் கண்களாரப் பார்த்துக்கொண்டிருக்க, என்சிறியதந்தையாகிய சுக்கிரீவ மகாராஜராலே கிரீடங்களைப் பறிகொடுத்தும் யுத்தத்திற்கு வராதவன். இனி நீ உன்வீரத்தைப்பற்றி யென்னசொல்லப்போகிறேன்?

ஐயோ! நெஞ்சிற் கொஞ்சமும் தயவில்லாத உன்னை உன்குலத்துடனே கொன்றபோதும், அதனுல் எனதாண்டவராகிய ஸ்ரீரகுநந்தனருக்கு ஒருகீர்த்தியுமில்லையாம். நீ அவ்வளவு இழிவானநிந்தைக் குட்பட்டாய். எல்லாரும் தூஷிக்கிற தூஷணையானது உன்னைச் சூழ்ந்துகொள்ளும்படி உனதுரைநாங்கள் விளைந்துகொண்டும், இன்னும் வெளியேவராமற் பதுங்கிக்கொண்டிருக்கின்றாய். நீ திக்குவிஜயம்பண்ணின கீர்த்தி வரவர நன்றாய் சிறந்துவருகின்றது. என்றிப்படிப் பலவாறுகச்சொல்லிப் பின்னும் அங்கதன் இராவணனைப்பார்த்து, ஓ இலங்கைவேந்தே! எங்களாண்டவர் ஆக்கியாபித்தருளினபடி உனக்கு நன்மைவேண்டுமானுல், எங்கள் சீதாபிராட்டியாரைக் கொண்டுவந்துவிட்டுச் சுவாமியை வணங்கிச் சுகமாய்வாழ்ந்திரு. அப்படிக்கில்லாமல் உன் பந்துக்களுடனே நீயும் போர்க்களத்தில் மடிந்துபோகவேண்டு மென்கிற எண்ண முனக்கிருக்குமானுல், ஸ்ரீராமர் உன்னுடைய கோட்டைவாசலிற் கையும்வில்லுமாக உன்வரவை எதிர்பார்த்திருக்கின்றார். ஆதலினுல் இப்போதே என் பின்னுலேவா.

மேலும் வருணமண்டலத்திலும் - அக்கினிமண்டலத்திலும் — பூமண்டலத்திலும் — சுவர்க்கலோகத்திலுமுண்டான வீரர்களையெல்லாம் போர்க்களத்திலே தோற்றுப்போகும்படி ஜெயம்பெற்ற நீ, இப்போது இலங்கையிலொளித்துக்கொண்டு அதை மங்கும்படிச் செய்வாயானுல் யாவருக்கும் பழியாய்விடும். என்று அவனுடையமனம் உளையும்படிச் சொல்லினுன்.

இராவணன் தன்னை அங்கதன் இகழ்ந்த இழிவைப் பொறுது கோபித்து நாலு வீரர்களை கோல்லுங்களென்றேவ அவ்வீரர்களை அங்கதன் ஆகாயத்திற் றூக்கிக்கோன்று சில வார்த்தை சோல்லி மீளல்.

கவி.

சொற்றவார்த்தையைக் கேட்டலுக்தொல்லுயிர்
முற்றுமுண்பது போலுமுனிவினுன்
பற்றுமின்கடி தின்னெனும்பார்மிசை
ஒற்றுமின்னென நால்வரையேவினுன்.

ஏவினன்பிடித் தாரையெடுத்தெழத்
தாவினனவர் தந்தலைபோயறக்
கூவினனவன் கோபுரவாயிலில்
தூவினன்றுகைத் தானிவைசொல்லினன்.

இதைக்கேட்ட மாத்திரத்தில் இராவணன் அங்கத னுயிர்முழுதையும் வாரி உண்டுவிடுகிறவனைப்போல மிகுந்த கோபமுள்ளவனாகி, நான்கு மகாவீரர்களான இராக்ஷசர்களைப் பார்த்து, இவனைப்பிடித்து மூளை சிதறிப்போகும்படிப் பூமியிலறையுங்களென்று ஏவினன். அந்தப்படியே அவர்கள்வந்து பிடித்தார்கள். அம்மாத்திரத்தில் அங்கதன் அவர்கள் நாலுபேர்களையுந்தூக்கிக்கொக்கரித்துக்கொண்டே ஆகாசமார்க்கத்திலெழும்பி, அவர்கள் தலைகளறுந்து அந்த ராவணனுடைய கோபுரவாசலில்வந்து விழும்படி அவர்களைக் காலினாலே துவைத்தெறிந்து, மற்றவர்களைப் பார்த்து ஒருவார்த்தை சொல்லுகின்றான்.

ஓ ராக்ஷசர்களே! ஏழைகளான நீங்கள்யாவரும் ஸ்ரீராமரால் விடப்பட்ட கொடியபாணம் தகத்தகாயமாய் மின்னலைப்போல வருவதற்கு முன்னமே, ஓடிப்பிழையுங்கள்: ஓடிப்பிழையுங்கள்: என்று ஆரவாரித்தான்.

அங்கதன் ஸ்ரீராமபிரானிடமடைந்து இராவணன் கருத்தைக்கூறல்.

கவி.

அந்தரத்திடை யார்த்தெழுந்தானவன்
சிந்துரத்தந் துறைந்தெழுசெச்சையான்
இந்துவிண்ணின் றிழிந்துளதாமென
வந்துவீர னடியின்வணங்கினன்.

இவ்வண்ணஞ் சொல்லிக்கொண்டு ஆகாசமார்க்கமா யெழும்பிச்சென்று, சந்திரன் பூமியிலிறங்குவதுபோ லிறங்கி, இராகவனுடைய பாதாரவிந்தத்தில் வணங்கித்தெண்டன்சமர்ப்பித்தனன். அக்கால் ஸ்ரீராமர் அங்கதனைப் பார்த்து, அப்பா அங்கதா! இராவணனென்னுங் கொடியோனுடைய அபிப்பிராயமியாதோ? அவையெல்லாம் தெரியச்சொல்லுகவென்று கேட்டனர். அதற்கவ்வங்கத னவரைப்பணிந்தெழுந்து, சுவாமி! அவைகளைச் சொல்லுவதா லுண்டாகிற சாரமென்ன? அந்தமூர்க்கனுடைய பத்துத்தலைகளையு மறுத்துத் தள்ளினாலல்லாமல், அவன்சீதாபிராட்டியார்மேல் வைத்த ஆசை அவனுக்கொருநாளுமாறாதென்றுசொல்லினன்.

அங்கதன்தூதுப் படலம் - முற்றிற்று.

№ 50. ஸ்ரீராமருக்கும் இராவணனுக்கும் நடந்தமுதல்நாள்போர்.



ஸ்ரீ ராமஜெயம்.

பதினான்காவது.

முதற்போர் படலம்.

இப்படலத்தில் இராவணனிடம் தூதுபோய்வந்த அங்கதனுடைய வாக்கினையால் வானரசேனாவீரர்கள் இலங்காபுரியி னகழியைதூர்த்துக் கோட்டையை வளைத்துக்கொள்ளவும், அதுகண் டாக்கிரமித் தெழும்பிய இராக்ஷச சேனையோடு வானரசேனைகள் வெகுவாய் உயுத்தஞ் செய்து குலைந்துபோகவும், அப்போது சுக்கிரீவனால் வச்சிரமுஷ்டியும் - இன்னும் சில வானரவீரரால் சில விராட்சசவீரர்க ளிறக்கவும், இவையனைத்தையுங் கேட்ட விராவணன் யுத்தகோலங்கொண்டு வெளிப்பட்டதையறிந்த ஸ்ரீராமரும் யுத்தசன்னகமாய் வந்துநிற்க, அக்கால் சுக்கிரீவ மகாராஜனும் - ஆஞ்சனேயரும் - இளையபெருமாளும் - இராவணனோடு போராடிமெலியவும், மீட்டுமனுமான் அவனோடு குத்துச்சண்டையாடிச் சலிக்கவும், அதுகண்ட இலக்ஷுமணர் அவனைவளைத்துப்பொருது மூர்ச்சையாகவும், அனுமானவரை யேந்திச்சென்று இராமமூர்த்திக்கு முன்விடவும், அப்பால் ஆஞ்சனேயர் வேண்டுகோளின்படி அவர்தோளி லாரோகணித்த ஸ்ரீராமர் இராவணனோடு அபரிமிதமாகக் கடும்போர்விளைத்து மெலியச்செய்து நிராயுதபாணியனாய்நிற்கு மவனுக்குச் சிலவறிவுறுத்தி நாளைவாவென் றனுப்பினமை சொல்லப்படுகின்றது.

அங்கதனுத்தரவால் வானரசேனாவீரர்கள் இலங்காபுரியி னகழியைத்தூர்த்துக் கோட்டையை முற்றுகை செய்துகொள்ளுதல்.

கவி.

பூசலேபிறி தில்லையெனப்புறத்
தாசைதோறு முரசமறைந்தெனப்
பாசறைப்பறை யின்னிடம்பற்றிய
வாசரேறு முறையின்வருத்திரால்.

இவ்வண்ணம் வானரகுலங்களுக் கிளவரசாகிய அங்கதகுமாரன் ஸ்ரீராமசுவாமியை யடிவணங்கி விண்ணப்பித்து இனியுத்தஞ் செய்வதற்குத் தாமதித்தல் கூடாது வேறொருயோசனை செய்யலாகாதென்று வானரப்படைவீரர்களை நோக்கி திசைகளெல்லாம் பேரிகை முழங்கியதுபோல நம்முடைய பாடிக்கூடார வாசல்கள்தோறும்போய் எல்லாருக்கும் யுத்தமென்று தெரியச் சொல்லுங்கள். மலைகளு மரங்களும் பிடுங்கிவந்து முன்சமுத்திரத்தைத் தூர்த்துப் பழகினகைகளினாலே இலங்கைக்கோட்டைக்கு அரணாயிருக்கின்ற அகழிகளைத் தூர்த்துப்போடுங்கள். இராக்ஷசர்களை யெங்குந்திரியவொட்டாமற் பலவிருக்ஷங்களால் அடித்து, அவர்களை யுத்தத்திற்கு வரச்சொல்லி அழையுங்கள். சூரியனுன்வன் மேற்றாண்டிவருதற் கரியதாகிய அவன் கோட்டை

மதில்களைப்போய் இந்தக்ஷணமே முற்றுகை போட்டுக்கொள்ளுங்கள். என்றிப்படி பலவாறு ஆக்யாபித்த மாத்திரத்தில் சிங்கங்களையொத்த வானரசேனைகள் பெரியமலைகளையு மரங்களையும் பிடுங்கிக்கொண்டு வந்து முதலைகளெல்லாம் ஓடிப்போகும்படியாகவும் - அதிலுள்ள ஜலமெல்லா மேலேறியோடிவிடவும் — அந்தலங்கையி னகழியைத் தூர்த்துவிட்டனர்கள்.

இப்படி எழுபதுவெள்ளம் வானரசேனைகளும் எட்டாங்கடலென்று சொல்லும்படியாக மிகவும் விஸ்தீரணமிக்க அவ்வகழியைத் தூர்த்தமாத்திரத்தில் அதிலேயிருந்த தண்ணீரெல்லாம் அந்தவானரங்களுக்கு உதவிசெய்வதுபோலப் பொங்கிவழிந்து, அந்தக்கோட்டைவாசல் வழியாகப்போய் லங்கைப்பட்டணத்தைமூடி வளைந்துகொண்டது. அநேகவானரங்கள் ஜெயப்பிரதாபசாலியான அந்தராவணனுடைய பெருங்கீர்த்தியை வேருடனே பிடுங்குகிறதுபோல விசாலித்துத் தழைத்துமலர்ந்த தாமரைக்கொடிகளை வளையங்களுடனே பிடுங்கிக்கொண்டன. அதிலே நீலோற்பல புஷ்பங்கள் குவிந்தது எப்படியிருந்ததென்றால் - நிந்தைக்குப் பாத்திரவானான ராவணனுடைய புகழானது அவனுடனேகூட அழிந்துபோய் விடுகின்றதேயென்று அந்த அகழ் கண்ணைமூடிக்கொண்டு அழுகிறதுபோன் றிருந்தது. தாமரைகளெல்லாம் பிடுங்குண்டுபோனபடியினாலே அதிலேயிருந்த வண்டுகளெல்லாம் பறந்துபோய்விட்டன. அன்னங்களெல்லா முட்டைகளைத் தங்கள்வாயிலே கவ்விக்கொண்டு பறந்து ஓடிவிட்டன.

தாரமென்னும் பண்ணைப்பாடுகிற வண்டுகள் மொய்த்திருக்கின்ற கமுகு-தெங்கு-இவைமுதலியவைகளின்பாளையிலுள்ள பூந்தாதுகளுதிர்ந்திருக்கின்ற நிறைந்த நீரிலுள்ள தண்டையுடைய தாமரைமலரினிடத் திருக்கின்ற அம்சக்கூட்டங்கள் ஓடிப்போக வாளைமீன்கள் தாவும்படியாக, வானரவீரர்கள் ஓரிடத்திலிருந்து வேறோரிடத்திற் குதித்துப் பார்த்தார்கள். கூட்டங்கூட்டமாக பெரிய விருக்ஷங்களும் - மலைகளும் - பூந்தாதுகளும் — மேன்மேலுமடர்ந்து அகழியில் விழுந்து நெருங்குகிறபடியால், அதிலுள்ள நீரெல்லா மேலேறிப் பல ஆறுகளாய்ச் சமுத்திரத்தின்மேற் பரவியோடியது. அந்த ஆறுகள் கடலில்விழு மிடங்கள்தோறும் அங்கங்கு தோன்றுகின்ற நீர்ச்சுழிகளில் சுரிந்துமுழுகி மேலெழுகின்ற தாமரைப்புஷ்பங்கள், சமுத்திரஜலத்தில் ஸ்நானம்பண்ணி மேலெழும்புகின்ற ஸ்திரீகளுடைய முகத்தை யொத்திருந்தன.

கவி.

தன்மைக்குந்தலை யாயதசமுகன்
தொன்மைப்பேரகழ் வானரந்தூர்த்தலால்
இன்மைக்குமொன் றுடைமைக்கும்யாவர்க்கும்
வன்மைக்குமொர் வரம்புமுண்டாகுமோ.

புராதனமாகவிருந்த அகழியே வானரக்கூட்டங்களால் தூர்ந்துபோகும்படியான காலம் வந்து நேரிட்டதனுல், இனி மற்றவர்களுக்குள்ள பலத்திற்கும்-பாக்கியத்திற்கும் - தரித்திரத்திற்கும் – ஒரு மிதமுண்டாகுமா?

இப்படி அகழியைத் தூர்த்த வானரசேனைகள் அந்த அகழின்கரையை இடித்துத் தகர்த்துவிட்டு, அந்தக் கோட்டைமதில் முழுதையும் தாங்களேறி நடக்கிறதற்குத் தக்க ஒருவரப்பாக்கிக்கொண்டு, அதின்பேரில் நின்று சப்த சாகரமும் சப்தமேகமும் கலங்கும்படி கர்ச்சித்தன. சகல மேன்மையான தன்மைகளுக்கு முதலானவனுகிய பத்துமுகங்களையுடைய இராவணனு லாளப்பட்ட இலங்காபுரியினது வட்டாகாரமாகிய ஓர் மகம்மேருகிரியைப்போல அண்டமுகட்டை அளாவியிருக்கின்ற அந்தமதிலின்மேலேறி ஆகாசத்தைத் தொட்டுக்கொண்டு நிற்கின்ற சிலவானரங்கள், அந்த மதிலுக்கு அலங்காரமாகக் கட்டியிருக்கிற அனேக வெள்ளைக்கொடிகளைப் போலக் காணப்பட்டன. அளவில்லாத ரத்தினங்களாலும் சுவர்னங்களாலும் இயற்றப்பட்ட மேருமலையைப்போ லிருக்கின்ற கோட்டைமதில், தன்னை ஒருவரு மிடிக்கவேண்டாமலே இந்தவானரவீரர்கள் ஏறிநிற்கிறதைச் சுமக்கச் சத்தியில்லாமல் தானே பூமியி லழுந்திப்போய்விட்டது.

இராட்சதசேனைகளோடு வானரசேனைகளெதிர்த்துப் போராடிக்குலைந்து சுக்கிரீவ ராஜனிடம்போயடைதல்.

கவி.

அறைந்தமாமுர சானைப்பதாதியால்
மறைந்தவானெடு வானகமாதிரம்
குறைந்ததூளி குழுமிவிண்ணூடுபுக்
குறைந்ததாங்கவர் போர்க்கெழுமோதையே.

அப்போது அவ்விலங்கைக் கோட்டைக்குள்ளும் வெளிப்புறத்துமுள்ள இராட்சசர்கள் யாவரும் புறப்படுங்களென்று முரசறைந்த பேரொலிகேட்டுப்புறப்பட்ட ராக்ஷசவீரர்கள் ஆனைமேலேறிப் பிடித்துவந்த கொடிகளால் ஆகாசமறைந்துவிட்டது. இராட்சசசேனைகள் மிகுந்த ஆர்ப்பாடத்தோடு புறப்பட்டதனுலெழும்பிய சேனுபராகம் அஷ்டதிக்குகளிலும் போய்ப் படிந்தன. அந்தச் சேனைகள் சண்டைக்கென்று புறப்பட்ட பேரோசையானது சுவர்க்கலோக பரியந்தம் போய் அளாவியது. எங்கும் சங்கங்கள் தொனித்தன. அவர்களணிந்துகொண்டிருந்த ஆரங்களொலித்தன. நிர்த்தம் பண்ணிக்கொண்டு வருகின்ற குதிரைகள் அனுமானித்தன. தேர்களில் கட்டியிருக்கின்ற மணிகள் கோஷித்தன. யானைகளெல்லாம் பெருங்கூட்டமாகவும் அதிக வேகமாகவு நடக்கின்றமையால், அதனிரண்டு பக்கங்களிலும் கட்டியிருக்கின்ற மணிகள் கணீர் கணீரென்று ஒலித்தன.

கவி.

அரக்கர்தொல்குலம் வேரறவல்லவர்
வருக்கம்யாவையும் வாழ்வுறவந்ததோர்
கருக்கொள்காலம் விதிகொடுகாட்டிடத்
தருக்கியுற்றெதிர் தாக்கினதானையே.

அந்தச்சமயத்தில் வெகுகாலமாக விருத்தியடைந்திருந்த இராட்சசகுல மாகிய அரிஷ்டங்களெல்லாம் அழிந்துபோகவும் — மற்றத்தேவர்கள் மனிதர்கள் வானரர்களெல்லாம் வாழ்வடையவும் தக்க க்ஷேமமானகாலத்தை விதி கொண்டுவந்து காண்பிக்க, வானரசேனுசமுத்திரம் அதிக மனவூக்கங்கொண்டு இராட்சசசேனுசமுத்திரத்தோடு கலந்து ஒன்றோடொன்று எதிர்த்தன.

வானரசேனைகள் தங்கள் வாயிலுள்ள பல்லுகளையும், உயர்ந்த குன்றுகளையும், பெரியமலைகளையும், தழைந்த விருக்ஷங்களையுமே தமக்கு ஆயுதங்களாகக்கொண்டுபோர்செய்யப்புறப்பட்டன. இராட்சசசேனைகள் வில்—வேல்—சூலம் — வாள் - முசலம் — சக்கரம் — இவைமுதல் அநேகமான ஆயுதங்களைக்கொண்டு சண்டைக்குப் புறப்பட்டு, ஒருவரோடொருவர் யுத்தஞ்செய்யத்தொடங்கி, வானரங்கள் விட்டமலைகளை ராட்சசர்கள் அம்புகளாற் பொடிசெய்தார்கள். அந்தராட்சசர்களுடைய அம்புகளை வானரர்கள் விருட்சங்களாற்சாடித் துண்டுதுண்டாக்கினுர்கள். அந்தவிருட்சங்களால் ராட்சசர்களால்விட்டு உதிரந்தோய்ந்து செக்கச்செவேலென்று பிரகாசிக்கின்ற வேலாயுதங்களும் நொறுங்கிவிட்டன. வானரவீரர்களெறிந்தமலைகளால் வஞ்சகர்களான ராட்சசர்களுடைய தலைகள்சிதறி, அவர்கள் நாக்கின்வழியாயும் —செவியின் வழியாயும் — மூக்கின்வழியாயும் — தலைமூளைகள்வழிந்து சரிந்தன. கன்னங்கரேலென விளங்குகின்ற ராட்சசவீரர்கள்விடுத்த அம்புகள்பட்ட புண்களில் ரத்தங்கள்வடியப் பற்களெல்லாந் தகர்ந்து, தங்கள்கையிற் பிடித்திருக்கிற மலைகளோடு அநேகவானரங்களுருண்டுபோயின.

இலங்கைக்கோட்டை மதிலின்மேலேறியிருந்த வானரவீரர்கள் வீசியெறிந்த மலைகள் ராக்ஷசர்களின் உடல்மீது மலைகளின்மே லிடிவிழுந்தது போலத் திடீரென்று விழுந்து, அவர்கள் பிராணனைப் பறக்கடித்துவிட்டன. நெருப்பைப்போ லெரிந்துகொண்டிருக்கின்ற குரூரப்பார்வைகளையுடைய அரக்கர்கள் கைகளையுதறி வீசியெறிந்த வேலாயுதத்தினுல், எதிர்த்துவந்த வானரங்களுடைய தேகங்கள் கோட்டைமதிலுக்குப் புறம்புள்ளமண்ணுக்குள் புதைந்துபோய்விட்டன. வானரவீரர்க ளதிககோபங்கொண்டு அநேகராக்ஷசர்களைக்கடித்தும், குத்தியும், கையாற் கழுத்தைப்பிடித்துத் தமது நீண்டநகங்களாலிருபிளவாகப்பிளந்தும், அக்கைகளாலறைந்தும், காலிஞலுதைத்தெதிறிந்தும் கொன்றுவிட்டார்கள். இராக்ஷசர்கள் சஸ்திரங்களைத்தொட்டும், அஸ்திரங்களைவிட்டும், இருப்புலக்கை — தண்டாயுதம்—இவைமுதலானவைகளால் மோதியும், வேலாயுதத்தைக்கொண்டு தேகத்திலழுந்தியும் சண்டைசெய்த

படியால், வானரங்கள் கூட்டங் கூட்டமாக மடிந்துபோயின. இரத்தத்தினலே தோயப்பட்டிருக்கிற அங்கப்பொன்மதிலானது பவளத்தினற் கட்டப்பட்ட மதிலைப்போன்றிருந்தது. இரத்தமானது பிணமலைகளை யிழுத்துக்கொண்டு உப்புநீர்ச்சமுத்திரத்திற்போய் விழும்படி பிரவகித்தது.

ஆகாசமுழுவதும் கழுகு பருந்து முதலான பக்ஷிகள் படர்ந்து வட்டமிட்டுப் பறந்துகொண்டிருந்த படியினலே, இலங்காபுரி மறையும்படி ஒருபந்தலிட்டதுபோல விருந்தது. அதனு லாயிரங்கண்களையுடைய இந்திரனுக்குமிலங்கைக்குள் நுழையக்கூடாமல் திரும்பிப்போகத்தக்கதா யிருந்தது. அவ்வுயுத்தகளம் இரத்தமயமாய் நிறைந்ததால் செவ்வானமாகவும், கருநிறம்வாய்ந்த பேய்க்கூட்டங்களோடு கவந்தங்களும் துள்ளி விளையாடுவதால் இருளாகவுமிருந்த தன்மையைப்போன்று மிருந்தது. இந்த ரத்தக்கடலில் பக்ஷிகள் முழுகி ஆகாசமார்க்கத்திற் பறக்கிறபடியினல், அவ்விரத்தத்துளிகள்பட்டு இலங்கைப்பட்டணத்திற் கட்டியிருந்த கொடிகளுடைய பலநிறங்களும் போய் செந்நிறக்கொடிகளாய்விட்டன. இரத்தவெள்ளமானது லங்கைக் கோட்டை மதிலுக்கு மேற்பட்டுப்பொங்கி வழிவதினலே, வானரங்கள் மேருமலையின்மேலேறி இறங்கிவருஞ் சமுத்திரத்தைப்போல கோட்டையினின்று மதிலின்மேலேறி யிறங்கி யோடிவிட்டன. நடுக்கங்கொண்ட ராக்ஷசசேனை வெள்ளம் வெள்ளமாக மதிலின் உள்மேடைகளிலும், மேல்மேடைகளிலும், மதிலுறுப்புக்களிலும், கோட்டைவாசல்களிலும், நிலாமுற்றமாகிய அட்டாலைகளிலும், இன்னு மிலங்கைப்பட்டண முழுவதிலுமுள்ள மேட்டுப்பாங்குகளிலும் போய் நிறைந்தன.

இவ்வண்ணம் இராட்சசச்சேனைகள் நெருங்கி நிறைந்திருப்பதைக்கண்ட வானரச்சேனைகள் ரத்தக்கடலிற் குதித்து நீந்தும்போது, அதிகநெருக்கத்தால் நீந்தமாட்டாமல் அதில் அமிழ்ந்தும்—நீந்திக்கையோய்ந்து விழுந்தும்-இவ்வாறோடத் தொடங்கின. வானரசமுத்திரம் ஓட்டம்பிடிக்கவே ராட்சசர்கள் கெக்கலிகொட்டிக்கொண்டு, மூன்றுலோகங்களையும் அழிக்கும்படியாகப் புறப்பட்ட மகாபிரளயகால சமுத்திரம்போலச் சப்தித்தார்கள். அந்தராக்ஷசர் முழக்கிக்கொண்டு வந்த பேரிகைமுழக்கமும், முருடுவாத்தியசப்தமும், சங்கவாத்திய நாதமும், தாளவாத்தியத் தொனியும், அவரவர்களுடைய விற்களின் டங்காரவோசையும் ஒன்றாகக்கூடி; சமுத்திரவோசையை மயங்கும்படிச் செய்துவிட்டன. அப்படிப்பட்ட சமயத்தில் பிரமதேவன் தனது நான்கு முகங்களாலும் தந்த எல்லாவுலகத்திலுமுள்ள பிரசைகளனைவரு நாலுவழியாக நடந்துவந்ததைப்போல் இராட்சசசேனசமுத்திரங்கள் ஆகாசத்தைத்தொட்டுக்கொண் டிருக்கின்ற இலங்கைக்கோட்டைக் கோபுரத்தின் நான்கு வாயில்களினது வழியாகப் புறப்பட்டன.

அதிக காததூரமளவும் விசாலித்த பூமித்துவாரத்தின் வழியாக பெரிய மலைகளெழும்பி வருவதுபோல அநேகயானைகள் துதிக்கைகளிற்தண்டங்களைப்பிடித்து எட்டுத்திக்குகளிலும்வீசிச் சுழற்றிக்கொண்டுவருவதால், கொடி

யோடுகொடி சிக்கிக்கொண்டன. பிடித்துக் கொண்டு வருகிற கொடித் தண்டுகள் முறிந்தன. முகபடாமணிந்த நெற்றியையுடைய அந்தயானை யின் மதங்களால் அவ்விடங்களெல்லாம் சேறாகி, அதிலூழிக்காற்றைப்போ லோடுகின்ற தேர்களால் அச்சேறுகாய்ந்து புழுதியாகிவிட்டது. வானர வீரர்களா லிடிக்கப்பட்ட மதில்களை ஆடையாகவுடைய இலங்கைப்பட் டணமாகிய பெண்ணானவள் கடலைவாரிக்குடித்து, அதைச் சகிக்கமாட்டாமல் மறுபடியும் கக்குகின்ற அப்பெரியகடலினுடைய அலைகளைப்போலக் குதிரை கள் கோட்டைவாசல் வழியாகப் புறப்பட்டன. "சுற்றத்திற்கழகு சூழவிருத் தல்" என்று பெரியோர்களாலுலகில் வழங்கிவரும் பழமொழிப்படி, இராவ ணன் இலங்காபுரியி லரசாக்ஷிக்கு வந்தநாள்முதல் அவ்விடத்தில் சூரியப்பிர காசமில்லாதபடியால் நாள்தோறுஞ் சென்றுகூடி தம்மினமென்று பிரியாத இருட்கூட்டங்கள் ஏககாலத்தில் அவ்விடத்தைவிட்டுப் பிரிந்துவருந்தன்மை யைப்போல் கறுத்த நிறத்தையுடைய இராட்சசக் காலாள்கள் புறப் பட்டார்கள்.

இப்படிப்புறப்பட்ட இரத கஜ துரக பதாதிகளான சேனைகளின் கா ற்றூளி பூமியைச் சுமந்துகொண்டிருக்கின்ற ஆதிசேஷனுடைய வரிசையான ஆயிரந்தலைகளினுடைய சுமைகுறையும்படியாகப் பறந்து, சுவர்க்கலோகத் தின் மேல்முகடுமுழுவதையும்-அண்டப்பித்திகையின் புறப்பக்கத்தையும்—அ ஷ்டதிக்குகளின் வெளிப்புறத்தையும்போய்த் தொத்திக்கொண்டு, மறுபடியுங் கீழே உதிராமலிருந்துவிட்டது.

கவி.

நெருக்கிவந்து நிருதர்நெருங்கலால்
குரக்கினப்பெருந் தானைகுலைந்துபோய்
அருக்கன்மாமக னூரமராசையால்
செருக்கிநின்றவ னின்றுழிச்சென்றவால்.

அந்தராக்ஷசர்கள் இப்படி மிகுதியாய் நெருங்கிவந்தபோது குரங்குச்சே னைகள்குலைந்து, யுத்தஞ்செய்கின்ற ஆசையினாலுண்டாகிய செருக்குடனே நி ற்கிற சூரியகுமாரனான சுக்கிரீவ மகாராஜனிடத்திற்குப்போய்ச் சேர்ந்தன.

சுக்கிரீவமகாராஜனுக்குக்கோபமுண்டு போருக்கெழுந்து வச்சிர முஷ்டியென்னும் இராக்ஷசச் சேனைவீரனைக் கொல்லுதலும் சிலவானர வீரர்களால் சில இராக்ஷசரிறத்தலும்.

கவி.

சாய்ந்ததானைத் தளர்வுஞ்சலித்தெதிர்
பாய்ந்ததானைப் பெருமையும்பார்த்தறக்
காய்ந்தநெஞ்சன் கனல்சொரிகண்ணினன்
ஏய்ந்ததங்கொர் மராமரமேந்தினான்.

அப்போதந்தச் சுக்கிரீவமகாராஜன் தன்சேனைகள் சாய்ந்து தளர்ந்ததையும் கர்ஜித்துக்கொண்டு வந்த ராட்சசசேனையினுடைய பெருமையையும் பார்த்து, கோபாக்கினியுடனே அங்கேயிருந்த ஒரு மராமரத்தைக் கையிலெடுத்துக்கொண்டு புகுந்து, யானை – குதிரை – தேர் – பதாதிகளான நால்வகையாகிய சேனைகளுக்கெதிரே ஒவ்வொருத்தருக் கொவ்வொருவராக நெருங்கி, முன்னாலே தோரணக்கம்பத்திருந்து அடித்தவனிவனென்று நினைக்கும்படியாக அந்தராட்சசர்களுக்குக் காணப்பட்டு, தேர்களும் - யானைகளும் – குதிரைகளும் - இராட்சசர்களும் – உருளும்படியாகவும், அவர்களுடைய ரத்தவெள்ளத்தில் தன்கையிலிருக்கிற மராமரமானது தனது வெள்ளைநிறந்தோற்றாமற் சிவந்தநிறமாம்படி குளிக்கவும், கிறுகிறென்றுவீசி அடித்தார். அப்போது வானரகுலவீரர்கள் தம்மரசனுக்கெதிரிற் சண்டைக்குவந்த ராட்சசர்களுடன் பெரும்போர் செய்யத்தொடங்கி மலைகளைப்பிடுங்கி அரக்கர்மேலெறிய, அதனால் அவர்களில் அநேகம்பேர் நசுங்கிமடிந்தார்கள். இராட்சசர்கள்விட்ட அம்புகள்பட்டு அநேக வானரர்களும் இறந்தார்கள்.

அப்போது ரணக்களத்திற் பேய்க்கூட்டங்கள் பாடத்தொடங்கின. கவந்தங்கள் கூத்தாடின. இரத்தவெள்ளங் கடலைக்கிழித்துக்கொண் டோடியது. பதிவிரதாசிரோன்மணிகளான ஸ்திரீகள் யுத்தகளத்திற்குவந்து, தங்கள் தங்கள் நாயகன்மார்களுடைய சரீரங்களைத் தேடத்தலைப்பட்டார்கள். அல்லாமலும் ; அதிக உக்கிரமானகோபத்தையுடைய வானரவீரர்களால் தங்களாயுள் முடிந்த ராக்ஷசர்களுடைய ரத்தவெள்ள மோடுகின்ற ரணக்களமானது வெறுங்களமாம்படி, தப்பி யுயிரோடிருந்த ராக்ஷசர்கள் சண்டைக்கு ஆற்றமாட்டாமல் ஓட்டம்பிடித்தார்கள். அப்போது வச்சிரமுஷ்டியென்கிற ராட்சசன் தங்கள்சேனை பின்னிடைய அதிக கோபத்துடனேகடலி லோடுகின்ற கப்பல்போலத் தேரைப் பருந்துக்கூட்டங்கள் பின்றொடரும்படி முடுக்கிக் கொண்டுவந்து எதிர்த்து, அந்த வானரங்கள்பேரிலே சரமாரிகளைப் பொழிந்து சின்னபின்னமாகும்படிச் செய்தான். அதுகண்ட இந்திராதிதேவர்கள் மனந்திகைத்தார்கள்.

கவி.

நோக்கிவஞ்ச னொழில்வயமாப்பரி
வீக்குதேரினின் மீதெழப்பாய்ந்துதோள்
தூக்குதூணியும் வில்லுந்தொலைத்தவன்
யாக்கையுஞ்சிதைத் திட்டெழுந்தேகினான்.

அப்போது சுக்கிரீவமகாராஜன் மனதுநொந்து, அவனுடையதேரும் – அதில் வெகுசித்திரமாகக் கட்டியிருக்கின்ற குதிரைகளும் - அவனும் - பொடிப்பொடியாய்ப் போகும்படியாகப் பாய்ந்துகுதித்து, அவன்கையிலிருந்த வில்லையும் அம்பறாத்தூணியையும் பிடுங்கியொடித்து, அவனுடைய சரீரத்தைச் சிதைத்துவிட்டுப் போய்விட்டார். ஒருபெரியமலையானது அழிந்ததுபோல வச்சிரமுஷ்டி யென்கின்றவன் மரணமடையவே, மற்றராக்ஷசர்களெல்லா நிற்

கமாட்டாமல் நிலைகுலைந்து ஊரைப்பார்த்தோடத் தலைப்பட்டார்கள். அப்படியோடுகிறதைக்கண்டு அங்கிருந்த வானரர்கள் சமுத்திரகோஷம்போலே ஆர்ப்பரித்துக் கொக்கரித்தார்கள். இவர்களிங்கே இப்படியிருக்க - கிழக்குவாசலிலே விழிப்பழம்போலச் செவந்த குரூரமான கண்களையுடைய ராக்ஷசர்கள் பிரளயகால சமுத்திரம்போற் புறப்படக்கண்ட வானரவீரர்கள், தங்களோடு மாறுகொண்டெதிர்த்த பகைவர்களான அவ்விராக்ஷசர்கள்மேற் பகைத்து யுத்தஞ்செய்யத் தலைப்பட்டார்கள்.

விஷத்தையொத்த அந்தராக்ஷசர்கள் சூலம் — வாள் - தோமரம் - வாளா — சக்கரம் - அம்பு - இவைமுதலான ஆயுதங்களைச் சோனை மழையைப்போல இடைவிடாமல் அவரவர்கள் கைகளாற் சோர்வடையாமற் பொழியவே, அதனாற் சிலவானரங்கள் வாலுங்காலும் அறுபட்டுத் தறிபட்டுக் குறைபட்டு முறையிட்டு மடிந்தன. வெற்றிபெற்ற சிலவானரங்கள் வீசியெறிந்த மலைகளும் — மரங்களும் — யுகாந்தகால நமனைப்போல் போய்விழுந்தமாத்திரத்தில், அநேகராட்சசர்களிறந்தார்கள். குதிரைகளும், யானைகளும், இரதங்களும் விழுந்துநாசமாயின. அப்போது மற்றராக்ஷசர்கள் மிகவும்கொதித்து ஆக்கிரமித்துப் பராக்கிரமத்தோடு தண்டு வாள்முதலான படைகளினாலே சிதைக்க, வானரசேனையின் சரீரங்கள் கிழிபட்டுச் சல்லடைக்கண்களாகக் குழிபட்டு ரத்தப்பிரவாகமாய் நிற்கமாட்டாமல் ஓட்டமெடுத்தார்கள்.

அந்தச் சமயத்தில் அக்கினிபுத்திரனாகிய நீலன் அங்கு அண்டமளாவும்படியாக நீண்டு பருத்து உயர்ந்திருந்த ஒரு பெரியமராமரத்தை அதிவேகமாய்த் தனது பலம்பொருந்திய கைகளினால் வேரோடே பிடுங்கிக்கொண்டு வந்து, இராக்ஷசப்பூண்டுகள் கூண்டோடழிந்து சின்னபின்னமாகும்படிப் பிரளயகாலாக்கினியைப்போல அடித்தான். அந்த மராமரத்தாலடியுண்டு அனேகந் தேர்கள் — தேர்த் தலைவர்கள், யானைகள் - யானைவீரர்கள், குதிரைகள் — குதிரைவீரர்களாகிய இவர்களோடு; அந்தராட்சசர்கள் தங்கள் தேர்களிற்கட்டிவந்த சிங்கங்கள் - யாளிகள் - ஆகியயாவும் பூமியிலே விழுந்து மடியவே இரத்தப்பிரவாகம் எங்கும் பிரவகித்தோடிச் சமுத்திரத்தில் விழுந்து நிறைந்தது. அவ்வாறுமடிந்த ராட்சசர்கள்போக மற்றவர்கள் ஓட்டமெடுத்தார்கள். அவ்விராக்ஷசச் சேனைத்தலைவனான கும்பானு வென்பவன் அதிக கோபத்துடனே தன்கைவில்லில் அஸ்திரங்களைப்பூட்டிப் பிரயோகித்தமாத்திரத்தில், அந்த அஸ்திரங்கள் எண்ணிறந்தனவாய்ப் பிரவேசித்துப்போய் அனேக வானரங்களைத் துண்டந் துண்டமாகத் துணித்துவிட்டன.

அப்போதங்கு பார்த்துக்கொண்டிருந்த கரடிக்குத் தலைவனான இடும்பனென்பவன் ஒருபெரியபர்வதத்தைத் தனது புஜபலத்தினால் உக்கிரமாய்ப் பேர்த்துக் கையிலெடுத்துக்கொண்டு கும்பானுவுக் கெதிராகவந்து குதித்து, அவன் பிரயோகஞ்செய்த அனேக அஸ்திரங்கள் நெருங்கிவருகிறதற்குமுன்னமே அவனுடைய கொடிகளும் - வில்லும் - அம்பும் - தேரும் - தேரிற்பூட்

டின குதிரைகளும் – நாசமடையவும், சிங்கங்கள் அழியவும், அந்தப் பர்வதத்தினால் எறிந்தான். உடனே கும்பானு மேகத்தில் நின்றும் இடியானது பாய்ந்ததுபோலப் பூமிகிழிந்து பிளக்கும்படியாகப் பாய்ந்து, வானரங்களெல்லாம் புறங்காட்டியோடும்படி யுத்தஞ்செய்து, இடும்பன் மார்பிலே ஓங்கி ஒருகுத்துகுத்திக் கொக்கரித்தான். அப்படிக்குக்குத்தி எதிரேநின்ற அந்தக்கும்பானுவை இடும்பன் கன்னத்திலறைந்து, தலைமயிரைப் பிடித்திழுத்து மடலோடுமடல்சேரக் குண்டுகட்டாகக்கட்டி அவனைக்குப்புறத்தள்ளி, அவனிடுப்பில் தன்னிரண்டு காலுமூன்றி எறிநின்றுகொண்டு, மலைச்சிகரம்போலிருக்கிற அவன்தலையைக் கையினாற்பற்றி மூளைசிதறும்படிச் சாடிப் பூமியிலறைந்துகொன்றான்.

அதைக்கண்ட சுமாலி புத்திரனான பிரகஸ்தன் அதிகமனவருத்தமுற்று, வில்லைவளைத்து வானரசேனைகள் பேரிலே ஒன்று - பத்து - நூறு – ஆயிரம்-பதினாயிரம் – நூறாயிரமாகச் சரமாரிபொழிந்து, க்ஷண நேரத்திற்குள்ளே வானரசேனைகள் சின்னபின்னப்பட்டுச் சிதறிப்போகும்படிச் செய்தான். அதை இடும்பன்பார்த்து, வெகுகோபத்துடனே பக்கத்திலிருந்த ஒருமலையைப் பிடுங்கியெறிந்து, எமனைப்போல அந்தப் பிரகஸ்தன் சேனையை நாசப்படுத்தினான். அப்போதப்பிரகஸ்தன் அஸ்திரவருஷத்தால் அந்தமலையை ஒன்று நூறாயுதிரும்படிச் செய்தான். இடும்பன் பின்னையுமொரு மராமரத்தை வேரோடே பிடுங்கிக்கொண்டு இடிபோல மோதியடிக்கவே. பிரகஸ்தன் கையிலிருந்த வில்லும் – தேரும் - குதிரைகளும் - தூள்தூளாகச் சிதறிப்போயின. இப்படித் தேரும் வில்லும் இழந்துபோகவே பிரகஸ்தன் இடியிடித்தாற்போலச் சத்தித்து, ஆகாயத்திலுள்ள சூரியன் பரிவேடத்தை நீக்கிக் கையிலொரு தண்டாயுதமெடுத்துக்கொண்டு பூமிபிலிழிந்து ஓடிவருவதுபோல வாயைமடித்துக்கொண்டு, இரண்டு கண்களினும் அக்கினிப்பொறிகள் பறக்கும்படியாக ஓடிவந்தான். வந்தமாத்திரத்தில் அக்கினிகுமாரனான நீலன் வெகுகோபத்துடனே அவனுக்கெதிரே பாய்ந்து, அவன் பிடித்துவந்த தண்டாயுதத்துடனே அவனைத்தூக்கி ஆகாசத்தில் விட்டெறிந்து கர்ஜித்தான்.

அப்போது சுமாலிபுத்திரன் ஆகாசத்திலே நின்றுங்குதித்து, தேவர்கள் நடுங்கும்படியாய் நீலன்பேரிலே தண்டாயுதத்தினால் மோதினான். அந்த அடிக்கு நீலன் இளையாமல், அடா இராவணப்பதிதனுக்கு இனியதுணைவனே! உனது தண்டாயுதத்தைப் பறித்தெறிந்துவிட்டு உன்பிராணனை இதோ முடிக்கிறேனென்று சொல்லிக்கொண்டு தன்கையினாலோங்கி, அநேகரை வதைத்து முன்குடித்திருந்த இரத்தத்தைப் பிரகஸ்தன் கக்கும்படி யறைந்தான். அதற்குப்பிரகஸ்தன் சலியாமலும், கொஞ்சமாகிலும் கூசாமலும், நீலனுடைய மார்பிலேயோங்கி ஒருகுத்து குத்தினான். இவ்விதமாக இருவருஞ் செய்தயுத்த மித்தன்மையதென்று எவராலேயுஞ் சொல்லிமுடியாது. இப்படி யுத்தஞ்செய்கிறபோது ராக்ஷசசேனாபதியான பிரகஸ்தனை நீலன் தனதுவாலி

ணுலேசுற்றிக் கட்டிவிட்டு, அவன் தோளிலேயும் - மார்பிலேயும் - தலையிலேயும் - கையிலேயும் - அடித்தான். இப்படி நீலனடிக்கவே இடிமுழக்கம்போன்ற அந்த அடியினுற் பர்வதமானது முறிந்துவிழுவதுபோலப் பிரகஸ்தன் துண்டு துண்டாகத் தறிபட்டுத்தெறிபட்டு விழுந்திறந்தான். இவ்வாறு பிரகஸ்தன் விழுந்திறந்ததைக்கண்ட தேவர்கள் சந்தோஷித்து ஆர்ப்பரித்தார்கள்.

அதைப்பார்த்து நெறித்த செம்பட்டமயிரையும் வெண்மையான கோரதந்தங்களையுமுடைய மற்ற ராக்ஷசர்கள் பயந்து முறிந்து, தங்கள் இருப்பிடமாகிய லங்கையைநோக்கி ஓட்டம்பிடித்தார்கள். இவர்களிப்படிக்கிருக்க-தெற்குவாசலின் வழியாகச் சுபாரிசனோடு புறப்பட்ட ராக்ஷசசேனைகளையெல்லாம் அங்கதன்கொன்று, அந்தச் சேனைக்குத் தலைவனுன சுபாரிசனையும் திடுக்கிடும்படி அடித்தான். அப்படி அடித்த அடியினுலே சுபாரிசனென்கிற அப்படைத்தலைவன் கதறிப் பதறி உதறிவிழுந்து செத்தான். அவன் இப்படி சாகவே மற்ற ராக்ஷசக் கூட்டங்களெல்லாம் நிற்கமாட்டாமல் ஓட்டம்பிடித்தார்கள். மேற்கு வாசலிலிருந்த இருநூறுவெள்ளம் ராட்சசசேனைகளும்-மகாபலசாலியான துன்முகனும் - ஒன்றுகப் புறப்பட்டுப்போய், அனுமான் கையென்கின்ற யமனுலே ஒருவருந் தவறுதபடி அத்தனைபேரு மடிந்துபோனுர்கள்.

வச்சிரமுஷ்டிமுதலிய இராட்சசவீரர்கள் மடிந்தமையை தூதுவராலறிந்த இராவணன் யுத்தசந்நாகனுய் வருதல்.

கவி.

அன்னகாலை யயிந்திரவாய்மூதல்
துன்னுபோர்கண்ட தூதுவர்தோன்றினுர்
மன்னகேளென வந்துவணங்கினுர்
சென்னிதாழ்க்கச் செவியிடைச்செப்பினுர்.

அந்தச் சமயத்தில் கோட்டையின் கிழக்கு வாயில் முதலிய நான்குவாயில்களிலும் செய்கின்ற யுத்தத்தின்பெருக்கைக்கண்ட தூதுவர்கள் அதிசீக்கிரமாக ஓடோடிவந்து இராவணனைச்சேவித்து, ஓ எங்கள்சக்கரவர்த்தியே! தேவரீர் இந்த அதிசயத்தைக் கேட்டருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொண்டார்கள். அதற்கவன் தலையைச் சாய்த்துக்கேட்க, அவர்களவன் காதிலே ரகசியமாக, ஐயா இராவணேஸ்வரா! கிழக்குவாசலிலே புறப்பட்டுப்போன நம்முடைய சேனைகளும், எக்காலத்திலும் ஜெயம்பெற்று வந்தவனும்-உம்முடைய ஆக்ஞாசக்கரத்தைச் செய்தவனுமான பிரகஸ்தனென்னுஞ் சேனுதிபதியி னுயிரும், வானரசேனுதிபதியான நீலனென்பவனுல் வீரசொர்க்கம்போய்ச் சேர்ந்தன. வடக்குவாசலில் வச்சிரமுஷ்டியும், மேற்குவாசலில் மலையையொத்த துன்முக னென்பவனும், ஒருவரும் ஜெயிக்கவரிதான ஐம்பது வெள்ளஞ் சேனைகளோ டிறந்துபோனுர்கள். தெற்குவாசலிற்போன நம்முடைய ராக்ஷசக்கூட்டத்தோடு சுபாரிசனு மிறந்துபோனுன். கும்பா

னும் அவனைப் பின்தொடர்ந்தான். மற்றவர்கள் போனவழியை நாங்கள் அறியோமென்று சொன்னார்கள்.

இந்தவார்த்தையைக்கேட்கவே இராவணன் நெருப்பிலே நெய்யைவிட்டதுபோலக் கோபாக்கினிமண்டி, கண்களிலே அக்கினிச்சுவாலைகள் எழும்பும்படியாக அடிக்கடிப் பெருமூச்சுவிட்டு, மறுபடியு மந்தத் தூதர்களைப்பார்த்து, பிரகஸ்தனை யார்கொன்றவன்? நிறுத்திப் பொறுமையோடு சொல்லுங்களென்று கேட்டான். அதற்கோர்தூத னவனைவணங்கி, சுவாமீ! நீலனென்பவன் ராக்ஷசசேனைகளையெல்லாம் எங்குந்தலைகாட்டவொட்டாமற் சிதையவடித்துவிட்டு, பிரகஸ்தனுடனெதிர்த்து இருவரும் பற்பலவிதங்களாக யுத்தஞ்செய்தார்கள். அந்தச்சமயத்தில் நீலன் தன்கையினாலோங்கித் தலையிலடித்தான். அந்தப்பலமான அடியினாலே அந்தப் பிரகஸ்தன் மாண்டுபோனான். அவனுடன்கூடத் துணையாகச் சென்றவர்களில் நாங்கள்மாத்திரந்தான் தப்பிப் பிழைத்துவந்தோம். மற்ற ராக்ஷசர்களனைவரும் சிதைந்து இறந்துபோய்விட்டார்கள். பிரகஸ்த னிறந்தவிதம் இதுதானென்று சொல்லி முடித்தனன்.

இந்த வார்த்தையைக்கேட்ட இராவணன் பல்லை நெறநெறவென்று கடித்து, திசாதிசைக ளெல்லாம் திக்கென்று ஒரேகாலத்திற் பற்றி யெரியத்தக்கதாகக் கண்களில் தீப்பொறிபறக்கப் பார்த்து, தனக்குச் சமீபத்திலிருக்கிற சில ராக்ஷசவீரர்களை நோக்கி, நம்முடைய சேனாதிபதி பிரகஸ்தன் ஒரு மரத்தையெடுத்துவந்து போர்செய்த அற்பக்குரங்கினால் இறந்து போனானென்று வெளியரங்கமாகத் தூதுவர்கள் சொன்னார்களே: இந்திராதி தேவர்களையெல்லாம் ஜெயித்து அதிக கீர்த்திபெற்றவன் ஒரு குரங்கினாலே செத்தானென்கிற வார்த்தையைக் கேட்க என்காதும் வெந்து மனதும்வேகிறதே: அற்பஜெந்துவான ஒரு சிறிய எலியைப்போன்ற குரங்கு அடிக்க, மகம்மேருவைப்போலப் பருத்துயர்ந்த உருவமுள்ளவன் இறந்துவிட்டபடியால் பகையையும் - அக்கினியையும் - கொஞ்சமென் றெண்ணலாகாதென்று சொல்லி இரண்டுகண்களிலுந் தாரைதாரையாகக் கண்ணீரொழுக அங்கலாய்த்து, நல்லது: அஃதிருக்கட்டும். நமக்குக் குறைவுவராமற் குதிரைப்படையுடனே நீங்கள்யாவரும் இங்கிடத்திற் புறப்பட்டுப் போவீர்களென்று ஆக்கியாபித்தான்.

இப்படி கைலாசமலையைவேருடன் பறித்த பராக்கிரம சாலியான இராவணன் வில்வீரர்களான ராக்ஷசர்களை அனுப்பி, இனியாகவேண்டும் யுத்த காரியங்களை யெல்லாம் தெரிந்துகொண்டு ஆயிரம் குதிரைகளைக் கட்டியிருக்கிறதும்—சமுத்திரம்போலச் சப்திக்கத்தக்க ஓசையையுடையதும் - தெய்வலோக முதலிய அனேக லோகங்களெல்லாம் சென்றதும் - முன்னாளில் தேவராஜனாகிய தேவேந்திரன் தோற்றுக்கொடுத்ததும் — அதிகபலமுள்ளதும் - உயர்ந்ததும் - விசாலமானதுமாகிய தேரிலே இரிஷபவாகனரூடரான உருத்திரமூர்த்தியை வணங்கி ஸ்தோத்திரஞ்செய்தேறி, மகம்மேருகிரிக்குச் சமா

னமாகிய வில்லைக் கையிலேந்திக்கொண்டு, மஹாஅட்டகாசத்தோடு குணத்தொனி செய்தான். அம்மாத்திரத்தில் அந்தச் சப்தத்தால் தென்றிசைக்கதிபனை கூற்றுவனுடைய உயிரும் அஞ்சித்திடுக்கிட்டுக் கலங்கி அறிவழிந்தது. பின்னும் தேவர்களுடைய மணிமார்பினிடத்திற்பட்டாலு முறியாதபலமுள்ளதும் ஒருவர்மீதும் இதுவரையிலும் பிரயோகஞ் செய்யாததுமான பற்பல ஆயுதவர்க்கங்களைக் கைகளிற்பிடித்துக்கொண்டு, வச்சிரகவசத்தை மார்பிலே தரித்துக்கொண்டு, தும்பைமாலையைச்சூடி, இருபக்கங்களிலும் வீசுகின்ற வெண்சாமரைகள் நுரைகள்போலவும் தனதுசரீரமே ஒரு கடல்போலவுமாகி; முத்துக்குடையென்கின்ற பூரணச்சந்திரனுக்குக்கீழே காணப்பட்ட கரியமேகம்போலப் பிரகாசித்தான்.

இப்படி பிரதாபலங்கேஸ்வரனாகிய இராவணன் யுத்தசந்நாகனாகவும் அளவற்ற சேனாசமுத்திரங்கள் அவனைப் பின்னுமுன்னுந் தொடர்ந்தன. முரசுகள் - இரணபேரிகைகள் - தவளச்சங்கங்கள் - காகளங்கள்-இவை முதலான வாத்தியங்கள் அண்டகடாகங்கள் முழுதும் படீரென்று வெடிக்கும்படியாய் முழங்கின.

கவி.

தேருமாவும் படைஞருந்தெற்றிட
மூரிவன்னெடுந் தானையின் மூற்றினன்
நீரொரேழு"முடிவினெருக்குநாள்
மேருமால்வரை யென்னவிளங்கினன்.

யானைகளும் - தேர்களும் - குதிரைகளும் - இராக்ஷசர்களும் - வந்து நெருங்கி, யுகாந்தகாலத்திற் சப்தசமுத்திரங்களு மொன்றாய்ப்பொங்கி வந்ததுபோல நிறைந்தன. அதினடுவே மகம்மேரு பர்வதம்போலத் தேரிலேறிவந்தவனான இராவணன் சுயஞ்சோதியாகப் பிரகாசித்தான். அந்தத் தேரிலே ச-ரி-க-ம-ப-த-நி என்கின்ற ஏழிசைகளையுங் காட்டுகின்ற வீணைக்கொடி ஆகாசமட்டு மளாவி, பிரளயகாலக்கூற்றுவன் நீட்டியசைக்கின்றநாவைப்போலத்தோன்றியது. இந்தயுத்தத்தில்வந்த ராக்ஷசசேனாசமுத்திரத்தைத் தாண்டுகிறதற்கு ஸ்ரீராமமூர்த்தியையே ஒரு தோணியாக நினைத்து யுத்தத்தைப்பார்க்கவந்ததேவர்கள், நெருப்புப்பற்றி எரிகின்ற மூங்கிற்காட்டை யுடைய மலைகளைப்போல்ச் செம்பட்டமயிரும் கறுத்ததேகமுமாய்க் காணப்படுகின்ற இந்தராக்ஷசர்களைப் பார்த்துப்பயந்து ஆகாசத்திற் சிதறிப்போனார்கள். தேரிற்கட்டியிருக்கின்ற கொடிகளும்-யானைமேற் பிடித்துவருகின்ற கொடிகளும் - ஒன்றோடொன்று கூடியளாவித் தோய்ந்தபடியினாலே, ஆகாசகங்கையுஞ் சுவறி வற்றிப்போகியது.

இப்படியாக ஆயிரங்கோடி பேய்கள் ஆயுதங்களைச் சுமந்துகொண்டு பக்கங்களில் வரவும், இரண்டாயிரங்கோடி சேமத்தேர்கள் பின்னேவரவும், அநேகராட்சசப் படைத்தலைவர்களுடைய சேனைகள் நெருங்கி ஆர்ப்பரித்துச் சூழ்ந்துவரவும், இந்தமூன்று லோகங்களிலும், வெற்றிகொண்ட இராவணன் புறப்பட்டு வந்தான்.

இராவணன் யுத்தசந்நாசனாகப் புறப்பட்டுவந்தானென வானரதூதர்கள்சொல்ல சுவாமியும் யுத்தகோலங் கொள்ளுதல்.

கவி.

ஓதுறுகருங்கடற் கொத்ததானையான்
தீதுறுசிறுதொழி லரக்கன்சீற்றத்தான்
போதுறுபெருங்களம் புகுந்துளானென
தூதுவர்நாயசற் கறியச்சொல்லினர்.

அந்தச்சமயத்தில் வானரதூதர்கள் ஓடிவந்து லோகநாயகரான ஸ்ரீராமமூர்த்தியைச் சேவித்து, சுவாமீ! அற்பத்தொழிலையுடைய இராவணன் சத்தசமுத்திரம்போல அநேகஞ் சேனைகள்சூழ அதிககோபத்துடனே யுத்தகளத்தில்வந்து சேர்ந்தானென்று சொன்னார்கள். இராவணன் யுத்தத்திற்கு வந்தானென்கிற வார்த்தையை ஸ்ரீராமபத்திரர் கேட்கவே, சீதையை மீட்டதற்கொப்பான தைரிய சந்தோஷத்தினாலே அவருக்கதுவரையிற் சீதையைப்பிரிந்திளைத்திருந்ததோள்கள் பூரித்தன. உடனே மருங்கில் மரவுரிதரித்துஅதன்மேல் இடதுபுறத்தில் உடைவாளை இறுக்கிக்கட்டினார். உற்பத்தி-திதி - லயமென்கின்ற மூன்றில் இடையிலுள்ள திதிகாலத்தில் இவ்வுலகவின்பத்தில் யாதொரு இன்பமுமில்லையென்று சாஸ்திரோக்தமாகச் செய்யுஞ் சற்கருமங்களாகிய சரியை-கிரியை-யோகமென்னு மூன்றையும் அநுஷ்டித்துமுத்தியடைதற்கு-மூயனுவதாகிய சாதனங்களைச்செய்யும் பெரியோர்கள் ஞானக்கண்ணினாற் காணப்பட்ட காட்சியனாகிய பராபரவஸ்துவான ஸ்ரீராமர் பூர்வத்திலே வாமனவதாரத்தில் தமதுதிருவடிகளால் உலகத்தையளந்தகாலத்து வேதங்களுக்கு மிந்தவுலகங்களுக்கு மெட்டப்படாமலிருந்த திருப்பாதவிரல்கள் பக்கங்களில் விரிந்திருந்த தன்மைபோல, அந்தத் திருவடிக்கு வீரகண்டாமணியைத்தரித்தார்.

மேலும் - ஆகாசத்தில் நட்சத்திரங்கள் பிரகாசிக்கிறதுபோலத் தமது திருமார்பில் பிராட்டியில்லாம லிருப்பதினால் அவளுக்கு வருத்தமுண்டாகாதென்பதுகருதினரோ? தெரியாது: அந்தமார்பில் வச்சிரகவசத்தை இறுகக்கட்டினார். கற்பகக்கிளையில் கரும்பாம்பு சுற்றிக்கொண் டிருக்கிறதுபோல் கையில் முன்கைத்தோலைக்கட்டி, இராத்திரிகாலங்களிலும் பகற்காலங்களிலும் வேற்றுமையின்றி ஒரேதன்மையாகத் தானேமலர்ந்து பிரகாசிக்கின்ற தாமரைமல ரிருந்ததேயானால் அதற்கொப்பாகப் பிரகாசிக்கின்ற கைவிரல்களுக்குப் புட்டில்பூட்டி, உலகத்திலுள்ள பலபாஷையையுங்கற்றுத் தேர்ந்து அளவிறந்த சாஸ்திரங்களையும் ஆராய்ந்து - பஞ்சவிலக்கணங்களையுங் கற்றறிந்த மகாகவிகளினது நாவிலிருந்து வருஞ்சொற்கள் தடைபடாமலும் ஒழுங்காயும் ஆழ்ந்தகருத்தை யுடையதாயும் சகலருமெச்சும்படியாயும் சன்மார்க்கர்களைப் பூஷிப்பதும், துன்மார்க்கர்களைத்தூஷிப்பதுமாக எத்தன்மையா யிருக்குமோ? அம்மாதிரி விளங்குகிற அக்ஷயத் தூணீரத்தையுந்தோளிற்

ருங்கி, மேகக்கூட்டங்களுக்கு மத்தியிற் பிரகாசிக்கின்ற மின்னலுக்கொப்பாக அளவில்லாத கிரணங்களுடன்கூடிய நெற்றிப் பட்டமுந் தரித்தனர்.

அன்றியும் - இளந்தளிரான இலைகளையுடைய ஆத்திமாலையுடனே அழகிய துளவமலர்மாலையும் தும்பைமலர்மாலையுந் தரித்து, இந்தப் பெரியஉலகமும் - இதிலுள்ள எல்லாச்சராசரங்களும் - தமது திருவயிற்றில் அடக்கிய சமஸ்த வஸ்துக்களும் - தாமேயென்று சொல்லும்படியாக விருந்தும் இப்போது தாம்வேருக விருக்கின்றுராதலால் இதுவும் வேறொரு பொருளென்று சொல்லும்படியானதான மகாகோதண்டமென்னும் வில்லை இடதுகையிற் பிடித்துக்கொண்டவராய், வானரசேனைகளி னடுவே திருப்பாற்கடலுடனே ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் புறப்பட்டுவருகிறதுபோல வந்து, உலகங்களையெல்லா மழிக்கவந்திருக்கிற பிரளயகால உருத்திர மூர்த்தியைப்போல வானர சேனைகளுக்கெல்லா முன்னணிப்படையில் வில்லுடன் நின்றுகொண்டிருக்கிற தம்பியுடனே இரகுகுலோத்தமராகிய ஸ்ரீராமபத்திரர் வந்து கூடினர்.

அப்போது சப்தசமுத்திரங்களு மேககாலத்தில் திரண்டுவந்ததுபோல வந்த இராக்ஷசசேனைகளோடு மின்னலைப்போலப் பிரகாசிக்கிற பற்களையுடைய வானரசேனைகள் உயிர்களைக் கொண்டுபோகிற எமனைத் தம்வேலையிற் பிரவேசிக்கும்படியாக எதிர்த்துப் போர்செய்யத்தொடங்கின. அச்சமயத்தில் ராட்சசர்களுடையதலைக ளறுந்தன. குடல்கள் சரிந்தன. தேர்கள் சிதைந்து நுண்டன. குதிரைகளிறந்தன. எங்கும் ராட்சசப்பிணங்கள் கும்பல்களாகக் குவிந்தன. அந்தப்பிணக்கும்பல்களை வாரிக்கொண்டு ரத்தவெள்ள மெங்குமோடிப்பெருகியது. தெற்குவடக்காகியதிசைகளில் பற்பலகூட்டமாக நிறைந்த குரங்குப்பிணங்கள்பொற்குவியலைப்போன்றன. இராட்சசருடையபிணங்கள் மலைக்கூட்டத்தை நிகர்த்தன. மேகக்கூட்டத்தையு மொத்தன. குரங்குகள் இரண்டுகைகளினலறைய இராட்சசர்களேறிவந்த குதிரைகளுடைய காற்குளம்புகள் சிதைந்துபோய்விட்டன. அவ்வானரவீரர்களுடைய குத்தினல் ராக்ஷசர்கள் மார்பு பிளந்தொடிவிட்டார்கள். அவர்களுடையரத்தம் அங்கங்கு ஆறுகளாயோடியது.

அப்போது இராவணன் கண்களில் நெருப்புப்பொறிபறக்கத் தன்வில்லை வளைத்துத் தேவர்கள் நடுங்கக் குணத்தொனி பண்ணினன். அந்தச்சப்தத்தினலே சிலவானரசேனைகள் இடிமுழக்கங்கேட்ட சர்ப்பக்கூட்டம்போல ஓடியொளித்தன. சிலவானரங்கள் போர்க்களத்தைவிட்டு ஓடிவிட்டன. சிலவானரங்கள் இனிப்பிழைக்கோமென்றஞ்சின. சிலவானரங்கள் பயந்துவோடயத்தனித்தன. சிலவானரங்கள் மூர்ச்சையாய் விழுந்துவிட்டன. நெஞ்சிற் சற்றுமிரக்கமற்ற இராவணன் ஆகாசமும் கிழிபடும்படியாகச்செய்த வில்லினது நாணெலிகேட்டு அவன்சாதியரான இராட்சசர்களேபயந்துநடுநடுங்கினல், குரங்குகள் பயந்ததை இன்னபடியென்று சொல்லவேண்டுமோ? ஆனல் விபீ

ஷணும்வாரும், இளையபெருமாளும், சுக்கிரீவமகாராஜனுமாத்திரம் பயமெ ண்பதில்லாமற் சுவாமியுடனேகூட நின்றார்கள். மற்றவர்களெல்லாம் நாலுதி க்கிலும் ஓட்டம் பிடித்தார்கள். ஆகாசமுந் தூளிப்படலத்தால் மூடிப்போயி ற்று. முல்லை - குறிஞ்சி - மருதம் – நெய்தல் - என்னு நால்விதநிலமாகிய இந்தப்பூமியை ஒருகையால்தூக்கி எடுக்கும்படியான பராக்கிரமசாலியாகிய ராவணனது விற்குணத்தொனியானது இந்தப்பூலோகத்தவர்களை நடுங்கச்செ ய்ததுமாத்திரமோ? சப்தலோகங்களை யழிக்கவரும் பிரளயகால மேககர்ச்ச னைபோலத் தேவர்கள்செவியினு நுழைந்தச்சமுறச்செய்தது.

சுக்கிரீவன் இராவணனோடு போராடி மெலிதல்.

கவி.

எந்தியசிகரமொன்றங் கிந்திரன்குலிசமென்னக்
காந்தியதுருமின்விட்டான் கவிக்குலத்தரசனக்கல்
நீந்தருநெருப்புச்சிந்தி நிமிர்தலுநிருதர்க்கெல்லாம்
வேந்தனும்பகழியொன்றால் வெண்டுகளாக்கிவீழ்த்தான்.

அப்போது வானராதிபதியான சுக்கிரீவமகாராஜன் இந்திரனது வச்சி ராயுதத்தையொத்த ஒருபெரியமலையைப் பிடுங்கி, அதிவேகத்துடனே அக்கி னி ஜொலிக்கும்படி ராவணன்பேரில் விட்டெறிந்தான். இராவணன் அதை யொருபாணத்தினாலே பொடிப்பொடியாய்ச் சிதறிப்போகும்படியாகக் கீழே தள்ளினான். அதுகண்ட சுக்கிரீவமகாராஜன் அதிககோபத்துடனே கண்களி ற் பொறிபறக்கவும், பூமியின் வயிறுகிழியும்படியாகவும், ஒருபெரியமராமரத் தை வேருடனேபெயர்த்துப் பிடுங்கிக்கொண்டான். அதைக்கண்ட ராவணன் அனேகமாயிரம் அம்புகளைப் பிரயோகம்பண்ணி, அந்தமரத்தை ஆயிரத்துக்கு மேலும் அதிகதொகையாகத் துண்டங்களாக்கிவிட்டான். பின்பு சுக்கிரீவம காராஜன் மேருமலையினும்பெரிய ஓர்பருவதத்தைப் பேர்த்தெடுத்துக் கண்க ளில் நெருப்புப்பொறிபறக்க இராவணன்பேரில்வீசியெறிந்தான். அந்தப்பரு வதத்தையு மிராவணன் ஓரப்பினு லுடைத்துத்தள்ளி, திக்குப்பாலகரை முது கிட்டோடும்படி தோற்கடித்தவில்லைக் கெட்டியாகப்பிடித்து, சுக்கிரீவமகாரா ஜனுடையமார்பில் ஒருவச்சிரபாண மழுந்தும்படியாக விடுத்தான். அப்படி விட்ட பாணமானது மார்பிற்போய் அழுந்தவே சுக்கிரீவ மகாராஜன் சரீரம் பதைத்தான்.

ஆஞ்சனேயர் இராவணனுடனே போராடி மெலிதல்.

கவி.

சுடுகணைபடுதலோடுந் துளங்கினன்றுளங்காமுன்னம்
குடதிசைவாயினின்ற மாருதிபுகுந்தகொள்கை
உடனுறைந்தறிந்தானென்ன வோரிமையொடுங்காமுன்னம்
வடதிசைவாயில்வந்து மன்னவன்முன்புநின்றான்.

அப்படிப் பதைக்கிறதற்கு முன்னமே மேற்குவாசலிலிருந்த சிறிய திருவடியாகிய அனுமான் கூடவேயிருந்தறிந்தவர்போல ஒருநிமிஷத்தில் வடக்குவாயிலிலோடிவந்து சுக்கிரீவமகாராஜனுக்கு முன்னாகநின்று, இராவணனைப் பார்த்து, ஓ இராவணனே! எங்களிராஜா ஆயாசந் தீர்ந்து வருகிறதற்கு முன்னே மிகுந்தபலசாலியான நீ என்னுடனே சற்று போர்செய்யவல்லையோவென்று சொன்னார். அப்படிச் சொல்லவே வருவதானால் வாவாவென்று அதிககோபத்துடன்சொன்னான். இப்படிச்சொன்னராவணன்பேரிலே வேதங்களையொத்ததோள்களையுடையஅனுமான் ஒரு பெரியமலையையெடுத்துவீசியெறிந்தார். அந்தப்பருவதமானது ஆகாசத்திற்படர்ந்துவருகின்ற மேகங்களையெல்லாம் எரித்துவிட்டு நெருப்பை வீசிக்கொண்டு அதிகவேகமாய் வருகிறதைக்கண்ட ராவணன் பத்துப்பாணந்தொடுத்து ஆயிரங் கூறுக்கிவிட்டான். அதைப்பார்த்த தேவர்கள் பயந்து நடுங்கினார்கள். அனுமான் பின்னையொரு பர்வதத்தைப்பறித்துத் தமதுதோள்பலங்கொண்டு வீசியெறிந்தார். அந்தமலையானது இடியைப்பார்க்கிலும் அதிகவேகமாய்ப்போய் அவனுடையதோளிலணிந்திருக்கின்ற வாகுவலயத்துடன்கூடத் தானும் புழுதியா யுதிர்ந்துவிட்டது.

அதுகண்ட அனுமான் அதிககோபாக்கினியுடனே வேறொருபர்வதத்தைப் பேர்த்தார். அப்படிப் பேர்க்கின்ற அனுமானுடைய கையிலேயும், தோளிலேயும், பத்துப்பாண மழுந்தும்படி இராவணனெய்தான். அவைவந்து தமதுசரீரத்திலே அழுந்தியும் அதற்கு ஆயாசப்படாமல் மிகுந்ததைரியத்துடனே நின்றார். அதைக்கண்ட தேவர்கள் இப்படியார்தா னிருப்பார்களென்று ஆச்சரியப்பட்டு ஆரவாரித்தார்கள். அனுமான் பின்னுமொரு மராமரத்தைக் கையினாற் பிடுங்கி வேரோடே சுழற்றிவிட்டார். அப்படிவிட்ட அந்த மராமரம் இராவணனுடைய தேர்ச்சாரதியின் தலையைத் துணித்தெறிந்துவிட்டு, பக்கத்திலுள்ள ராக்ஷசர்களையும்அடித்துக்கொன்றுவிட்டது. உடனே வேறொரு சாரதிவந்து ரதத்திலேறினான். அப்போது கடல்பொங்கினதுபோலக் கோபங்கொண்ட ராவணன் நூறுபாணம் பிரயோகம்பண்ணினான். அத்தனையும் வந்து சரீரத்திலழுந்தவே இரத்தவாறொழுகும்படியாய் மாருதிமெய்மறந்து மிகவுநொந்தார். அதுகண்டராவணன் அவரைப்பார்த்துச் சொல்லுகிறான்.

ஓ குரங்குகளே! கல்லுமரமுங்கொண்டு கைகளினாலேயும், வாய்ப்பேச்சுகளினாலேயும், மயிர்வளர்ந்திருக்கின்ற தோள்களினாலேயும், ஊசிப்பற்களினாலேயுமா என்னைஜெயிக்க வெண்ணியிருக்கிறீர்கள்? உங்களை ஒருபொருளாய் நான் வில்லெடுத்துநின்றால்வெகுபல வந்தர்களைப் போலச்சௌரியங்காட்டமாட்டீர்களா? என்றுசொல்லிப் பல்லைக்கடித்து, நெருப்புப்பொறிபறக்க நகைத்து, வில்லைவளைத்து, குரங்குச்சேனைகளின்மீது பிரளயகாலவிடிக்குச்சமானமானபாணங்கள் ஒன்றைப்பார்க்கிலு மொன்றதிகமாய் ஆயிரங்கோடி பாணம் பிரயோகித்தான். அந்தப்பாணவருஷத்தாற் சண்டமாருதத்தினாலே கடலலைந்து பொங்கியிரைவதைப்போல வானரங்கள் துன்பப்பட்டன.

இலக்ஷ்மணர் இராவணனோடுபோராட தனது அம்பறுத்தூணி யறுதல்.

கவி.

கலக்கியவரக்கன்வில்லின் கல்வியின்கவிகளுற்ற
அலக்கணுந்தலைவர்செய்த தன்மையுமமையக்கண்டான்
இலக்குவனென்கைவாளிக் கிலக்கிவனிவனையின்று
விலக்குவனென்னவந்தான் வில்லுடைமேருவென்ன.

இப்படித் தம்முடைய சேனைகளை வருத்தப்படுத்தின ராவணனுடைய வில்வல்லமையையும், வானரங்கள்பட்ட பாடுகளையும், படைத்தலைவர்கள் செய்த காரியங்களையும்: இளையபெருமாளாகிய இலக்ஷ்மணர் கண்டு, நம்முடைய பாணத்துக்கே இவன்லக்ஷியமானவன். இன்றைக்கிவனை அதஞ்செய்வோமென்றெண்ணி, தனுசோடுகூடின மேருமலையைப்போலவந்து எதிர்த்தார்.

அப்படி எதிர்த்த ராஜாதிராஜனாகிய தசரதமகாராஜ குமாரரான லக்ஷ்மணர் வில்லைக்குணத்தொனி பண்ணினார். அதைக்கேட்ட ராவணனுடைய நிலைமை யென்னவென்று சொல்லப்போகிறேன் ? அந்தக்குணத்தொனியைக்கேட்டுப் பிரளயகால மேகக்கூட்டங்களினிடியென்று மூன்றுலோகத்தவர்களு நிச்சயித்து நடுங்கினார்கள். சத்துருக்களெல்லாரும் சிங்கத்தின்தொனியைக்கேட்ட யானைகள்போலப் பயந்து திடுக்கிட்டார்கள். அக்கால் பிரமித்தபடி நின்ற ராவணன் தன் பக்கத்தில்நின்ற ராக்ஷசர்கள் மனது முறிந்து கலங்கின தன்மையைப்பார்த்து, இது மகா வீரரான ஸ்ரீராமபிரானுடைய திருத்தம்பியாகிய இளையபெருமாளுடைய வில்லினது நாணொசையென்றறிந்து, தன்பத்துத்தலைகளையும் அசைத்து, இவனும் ஒருமனிதனோவென்று ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தான் அப்படி யவனிருக்கும்போது இலக்ஷ்மணப்பெருமாளுடைய வில்லிலிருந்து புறப்படுகிற பாணமழைகள் இரதங்கள்பேரிலும், குதிரைகள்பேரிலும், யானைகள்பேரிலும் இராக்ஷசர்கள்பேரிலும், மென்மேலுமவந்துபாய்ந்து எங்கும் ரக்தப்பிரவாகமாக்கிவிட்டன.

சிலபாணங்கள் தேர்ப்பாகர்களுடையமுகங்களிற்பட்டுக்கீழ்நோக்கியுடலிலுருவிப் பிளந்து தேரினச்சினைமுறித்து, கீழ்லோகங்களையும் உருவிச்சென்றும் ஓய்வில்லாமலோடின. அப்போது பத்துக்கோடி ராக்ஷசர்கள் யானை-குதிரை-தேர்-இவைகளைப் படைமுன்னணியாக்கிப் பற்பல ஆயுதங்களைப்பிரயோகம்பண்ணிக்கொண்டு, ஒருமனுஷன் நம்முடைய அரசனுடனெதிர்த்தால் நமக்குள்ள சௌரியம் என்ன பயன்படப்போகிறதென்று சொல்லிக்கொண்டு, தரித்திரம் ஹதமாகும்படியாகக் கொடுக்கிற ஒருபிரபுவை அனேகதரித்திரர்கள் போய்ச் சுற்றிக்கொள்வதுபோல் இராமானுஜரைச் சுற்றி வளைந்துகொண்டார்கள். அப்படி சுற்றிக்கொண்டு அந்தராக்ஷசர்கள் எறிந்தவைகளும் எய்தவைகளுமாகிய எல்லா ஆயுதங்களையும் இலக்ஷ்மணர் சிலபாணசரங்களினாலே யழித்து, பின்னும் ஓயாமற் பாணங்களைப்பொழிந்து அந்த ராக்ஷசர்களைச் சம்ஹரித்தார். அப்போது ராக்ஷசர்களுடைய உயிர்களை

யுண்டு எமனும்திகட்டிப்போனான். பெருகியஉதிரவாறுகளைச் சமுத்திரத்திற் கோடவொட்டாமற் பிணங்கள் மலைபோலக்குறுக்கே மறித்துக்கொண்டன.

இப்படி இளையபெருமாளாகிய இலக்ஷுமணரெய்கிற பாணங்களினாலே ராக்ஷசர்களுடைய தலைகளெல்லாம் அற்றன. வயிரம்பற்றிய கால்களெல்லா மற்றன. மலைபோன்ற தோள்களெல்லா மற்றன. மார்புகளெல்லாம் அற்றன. அவர்களுடைய வீரநிலைமையெல்லாம் அற்றன. பலங்களெல்லாம் அற்றன. வளைந்தவில்லுகளெல்லா மற்றன. அவர்கள் கற்றிருந்த யுத்தவகைகளெல்லா மற்றன. தேர்களெல்லாம் துணிந்தன. குதிரைக்கூட்டங்களெல்லாம் துணிந்தன. செவந்தகண்களையுடைய மேகம்போன்ற யானைகளெல்லாம் துணிந்தன. வீரர்களுடைய பாதகண்டாமணிகளெல்லாம் துணிந்தன. கழுத்திலே தடிபோலக்கிடக்கிற மாலைகளெல்லாம் துணிந்தன. கர்வித்து நின்றிருந்த அவர்களுடைய நிலையெல்லாம் குலைந்துபோயின. அவர்கள்செய்கிற போர்களெல்லாம் சின்னபின்னப்பட்டுவிட்டன. பூர்வத்திலே ஜெயம்பண்ணின கீர்த்திகளு மழிந்துபோய்விட்டன. மலைப்பாம்புபோலஞ்சாமையும்,கடினமான கால்களையுமுடைய ராக்ஷசர்கள் விழுந்தார்கள். அவர்கள்பேரிற் புரவிகள் விழுந்தன. அவைகளின்பேரிலே யானைகள் விழுந்தன. அவைகளின்பேரிலே ரதங்கள் விழுந்தன. அவைகளின் பேரிலே ராக்ஷசர்தலைகள் விழுந்தன. பிணங்களு மிரத்தங்களுமா யந்தரணக்களத்திலே கொஞ்சமாகிலும் வெளியில்லாமல், இந்தப்படியே ஒன்றின்மேலொன்றாக விழுந்து மாண்டன.

அப்போதந்த ராமானுஜர் வில்லிலே அம்புதொடுக்கின்றதையும், பிரயோகிக்கின்றதையும், ஒருவரும் காணவில்லை. அந்த அம்புகள் வரிசை வரிசையாய்ப்போகின்ற அடுக்கையுங் கண்டவர்களில்லை. அவைகள் வேகமாய் வந்துபடுதலால் வீழ்கின்றபிணக்குப்பல்களின் பத்திகளைமாத்திரமே அங்கங்கே கண்டார்கள். அத்தனை கரவேகசரவேகமாய் இலக்ஷுமணர் சரங்களைப் பிரயோகம்பண்ணினார். பர்வதங்கள்போல யானைகளும் — குதிரைகளும்—இரதங்களும்—யாளிகளும் சிங்கங்களும் - மற்றவைகளு நிறைந்து வந்தவைகளுக்கோ ஒரு அளவுமில்லை. அவ்வளவும் வந்து திரிந்து சிறிதுநேரமாகிலு நிற்கவுமில்லை. எல்லாம் அந்தரணக்களத்திற் பிணமாய்க் கிடந்தன. அநேகராக்ஷசர்கள் சூலங்கள்—வேல்கள்-வில்லுகள்-முதலான ஆயுதங்களையெடுத்து இலக்ஷுமணர் பேரிற் பிரயோகம் பண்ணினார்கள். அதெல்லாம் அவருடைய பாணத்தினால் நூறுநூறு துண்டங்களாயற்றுப்போயின வல்லாமல் ஒன்றாகிலும் தப்பவில்லை. அப்போது ராக்ஷசசேனைகள் நிலைத்துநிற்கமாட்டாமற் பின்னிட்டு ஓட்டமெடுத்து, வழிகளிலே பந்துக்களுடைய தலைகள் தங்கள் காலிலே இடறுவதினால் ஓய்ந்துவிழுந்து மாய்ந்தன. இப்படியாகவே ராவணன் அவ்விலட்சுமணருடைய அம்புகளைப்பார்த்து, வடவாமுகாக்கினிபோல மனங்கொதித்து, காற்றுக்குச் சமானமான குதிரைகள் பூட்டியிருக்கின்ற தன்தேரை யதிவேகத்துடனே செலுத்திக்கொண்டுவந்து லட்சுமணருடன் எதிர்த்தான்.

அப்போது கூற்றுவனுக்குப் பித்தேறினதுபோலக் கொல்லுகின்ற லட்சுமணர் கோபமும் தாபமும் வேறென்று பேதந்தோன்றாதபடி ராவணனைக்கிட்டிவந்து, நான் காத்துக்கொண்டிருந்த பிராட்டியாரை என்காவலைத்தப்பும்படி மோசம்பண்ணி எடுத்துக்கொண்டுவந்ததிருடா! இன்றைக்குநீ தப்பிப்போகமாட்டாய். என்றுசொல்லி அக்கினிச்சுவாலையாகப் பெருமூச்சுவிட்டுத் தலையோட்டைப்பிளக்கின்ற கொடியவிஷத்திற்குச் சமானமான பாணங்களை ஒன்றின்பின்னொன்று அடிக்கடி அடுக்கடுக்காய்ப் பிரயோகித்துப்போர்செய்தார். இப்படியாகப் பொழிந்த பாணங்களெல்லாம் தன்பேரில் வராமல் நடுவே முறிந்துபோகும்படியாக இராவணன் அதிகூர்மையான பாணங்களினாலே தடுத்தான். அதுகண்ட லட்சுமணர் இப்போது நான்விட்டது லகுவான பாணங்களானபடியினாலே அறுத்தாய். இனியறுப்பாயென்று மேகம்பொழிகிறதுபோல முன்னிலு மேலான அனேக சரமாரிகளைப் பொழிந்தார். அச்சமயத்தில் ராவணன் சரற்கால மழையைப்போல அஸ்திரங்களைப் பொழிந்து இலட்சுமணர்விட்ட பாணங்களை விலக்கி, இலட்சுமணர் மறுபடியும் பாணப்பிரயோகஞ் செய்யவொட்டாமல் அவருடைய அக்ஷயமாகிய அம்பறாத்தூணியை அறுத்துத்தள்ளினான்.

ஆஞ்சனேயர் இராவணனோடு குத்துச்சண்டை செய்து மெலிதல்.

கவி.

அப்போதகனயர்வாறிய வனுமானழல்விழியாப்
பொய்ப்போர்சிலபுரியேலென வவன்றேரெதிர்புகுந்தான்
கைப்போதகமெனமுந்தவன் கடுந்தேரெதிர்நடந்தான்
இப்போரொழிபிற்போருள வவைகேளெனவிசைத்தான்.

அந்தத்தருணத்திலே முன்னம் இராவணனோடு போர்செய்துமெலிந்து இளைப்பாறியிருந்த அனுமான் கண்களில் அக்கினிப்பொறிபறக்கவந்து, பொய்ப்போர் செய்யாதே: பொய்ப்போர் செய்யாதே: என்று அந்த ராவணனுடைய தேருக்குமுன்னாக மறித்துநின்றுகொண்டு, இந்த யுத்தத்தைவிடு, வேறொரு நல்லயுத்த மிருக்கிறது. அதன் விபரத்தைக் கேளென்று சொல்லுகிறார். ஓ இராவணா! நீ சொர்க்கமத்திய பாதாளமென்னு மூன்றுலோகத்தையும் ஜெயித்து இளையாமல் மிகுந்த பலத்துடனே தேவேந்திரனுடைய கீர்த்தியையழித்துப்போட்டாய். திக்குவிஜயம்பண்ணினாய், ஆனாலும் இன்றைக்கு உனக்கு அபஜெயம் வரும் என்றுசொல்லி அந்தராவணனுக் கெதிரில் கையைத்தூக்கி, அந்தக்கை திரிவிக்கிரமருடைய திருவடியைப்போல எல்லாலோகங்களையு மூடிக்கொண்டு வளர்கின்றதை எங்கும் வெற்றிகொண்டு கொடிகட்டியிருக்கின்ற அந்த ராவணனுக்குக்காட்டி, நீ வில்முதலாகிய ஆயுதபரிக்ஷையெல்லாம் வெகுசமர்த்துடனே கற்றிருக்கிறாய். இருபதுகைகளுடனே யிருக்கிறாய். நீ மிகுந்தபலசாலி. யுத்தத்திற் கைதேர்ந்தவன். மேலு நல்ல வீரனாயுமிருக்கின்றாய், எனதிருகைக்குமுன் நீசற்றுநேரம்நில்லு பார்ப்போமென்று சொல்லிப் பின்னும் சொல்லுகிறார்.

ஓ தசக்கிரீவனே! நீ யிதுவரையில் அக்கினியைப்போலச் சுவாசமிட்டுக் கொண்டு உனக்குச் சமானமில்லையென்று பிருந்த ஆண்மையுடனே யிருந்தாய். ஆகிலும் - நீ சிவபிரானிடத்திற் பெற்ற வாள்வல்லமையும், உன்னுடைய சப்தலோகாதிபத்தியமும், சப்தபிராகாரங்களையுடைய இலங்காராஜ்ய சம்பத்தும்; உன்தைரியமும், ஒருவரு மொப்பில்லாம லாளுகைசெய்கிற தன்மையும், உன்தோள்வல்லமையும், உன்பிரதாபமும், ஆகிய விவையெல்லாம் என்னொருகுத்தினாலே நாசமாக்கிவிடுகிறேன். பலவார்த்தைகள் சொல்லியென்ன? கைலாசபர்வதத்திற்கும் செவ்வரக்கைப்போன்ற கண்களையுடைய அஷ்டதிக்கஜங்களுக்கும் அசையாத அதிகபலமுள்ள இருபதுதோள்களுள்ள மார்புடையவன் நீயாயின், இப்போது குரங்கினுடைய கையினாலே குத்துகிறதைப் பொறுத்துக்கொள் பார்ப்போம். இப்போது நான் குத்துகிற குத்துக்கு நீசாகாமலிருந்தாயே யானல், பிறகு உன்னுடைய இருபது கையினாலேயும் என்னைக்குத்து. அதற்குநான் இறந்துபோய்விடுவேனேயானால், அப்பால் உன்னுடனே எதிர்த்துப் போர்செய்யவருகிறதில்லை. என்று சிறியதிருவடியாகிய ஆஞ்சனேயர் சொன்னார்.

அதற்கு இராவணன் சந்தோஷப்பட்டு, ஓ அனுமானே! நீநல்லசௌரியவந்தனாற் சொல்லுகிறவார்த்தையே சொன்னாய். நீபலசாலியே: சந்தேகமில்லை. இல்லாவிட்டால் என்னெதிரே வேறொருவர் நிற்பார்களோ? இவ்வளவு தைரியமாய் நீ வந்துநின்றாயல்லவா? உனக்கு இந்தஉலகத்திலாவது மற்றெங்கேயாவது சமானமுண்டா? உன்கையிலொரு ஆயுதமுமில்லாமல் நீ யொருவனாய் முன்னே எங்கள் பந்துக்களையெல்லாம் கொன்று, தேரின்மேலேறி வில்லைவளைத்துக்கொண்டு மிகுந்த சேனைகளுடனேவந்த என்முன் இவ்வாறே தனியேவந்து நின்றாய். ஆதலால் - உனக்குச் சமானமானவர்க ளாரிருக்கிறார்கள்? இப்படி நீ நின்றபோதே உன்சாமர்த்தியத்தை நானறிந்துகொண்டேன். ஆயினும் - அந்த மும்மூர்த்திமுதல் மூன்று லோகங்களிலுமுள்ள தேவர்களும், தானவர்களும், மற்ற வீரர்களும், பித்துப்பிடித்தல்லாமல் என்னெதிரே நின்று மார்பிற் குத்தென்று நிற்கத்தக்கவர்க ளாரிருக்கிறார்கள்? இந்த ஆச்சரியம் வெளியிற் சொல்லத்தக்கதல்ல. எனக்கு இருபதுகைகளிருக்கின்றன. அஷ்டதிக்குயானைகளும் தோற்றதென்கிற புகழுமுண்டு. இரண்டுகைகளையுடைய நீ என்முன் இப்படிச்சொன்னால். இனிமேல் என்யுத்தமானது எனக்கு வெற்றியைத்தரத்தக்க தல்ல.

ஐயா ஆஞ்சனேயனே! எட்டுத்திக்குகளையுஞ் ஜெயித்த என்கீர்த்தி யழியும்படியான ஓரிகழ்ச்சிமுன்னேயே உண்டாயிருக்கின்றது. நீ என் உயிருக்குச் சமானமான அதிகாயனென்னும் புத்திரனைத் தரையில்தேய்த்து, இரத்த வெள்ள மிலங்கையெல்லாம் பரவச்செய்தாய். அந்தரத்தம் இன்னு முலரவில்லை. இப்படி யிருக்க - இப்போது நீ என்முன்னின்று இவ்விதமாய்ச் சொன்னாய். நீ சொன்னது இசைவானது தான். இது வீரர்களுக்குப் பொதுவானதுவே:

ீ இப்போது பாணித்ததே சரி. வேறேபேச்செதற்கு? உன்சொல்லுக்குப் பி ன்னிட்டுத் தலைகுனியமாட்டேன். ஆதலால் - இந்த உலகங்களெல்லாம் பார் க்க நீ என்மார்பிலே குத்தென்று சொன்னான். இந்த வார்த்தையைக்கேட்ட அனுமான் இவன்மகா சௌரியவந்தனென்று மெச்சி, வீரகர்ஜனையுடன் அவன் தேரின்மேற் பாய்ந்து, கண்களிலே அக்கினிப்பொறி சிதறப்பார்த்து, அவன் மார்பிலே தரித்திருக்கிற ஆபரணங்களுடன் கவசங்களெல்லாம் பொ டிப்பொடியாய்ச்சிதற வச்சிரம்போலிருக்கின்ற தம்முடைய கையாலோங்கி க்குத்தினார்.

அப்போது பர்வதங்களெல்லா மணலைப்போலுதிர்ந்தன. இராவணன் கண்களில் அக்கினி உதிர்ந்தது. அவன் தலைகளிலிருக்கின்ற மூளைகள் தயிர் போலத் ததும்பிக் குழம்பின. இராக்ஷசக்கூட்டங்களுக்கெல்லாம் பிராணன் கழன்றது. எல்லாவானரங்களுக்கும் மயிரும் பல்லுகளு முதிர்ந்துவிட்டன. மேகங்கள் மழையைக்கக்கின. அந்தராக்ஷச குலாதிபனுடைய கைகளிலும், மற்றராக்ஷசவீரர்களுடைய கைகளிலும், ஏந்தியிருந்த விற்களிற் பூட்டின நாணிகளெல்லாமறுந்தன. சமுத்திரம் நிலைகுலைந்தது. சப்தகுலபர்வதங்களும் அதிர்ந்து கல்லுகளைச் சிந்தின. சூரியகிரணங்களு முதிர்ந்தன, திக்கெஜங் களுடைய பல்லுகளு முதிர்ந்தன. சகலருடைய ஆயுதங்களும் தரையிலே விழுந்தன. இராவணனுடைய மார்பிலே நெருப்புப்பொறி பறந்தது. அ னுமானுடைய கைக்குத்துபடவே இராக்ஷசாதிபதியான ராவணனுடைய மார்பிலே பூர்வத்தில் அஷ்டகஜங்களுடைய தந்தங்கள் தைத்தழுந்தி யொடிந் திருந்தவைகளெல்லாம் கீழே பலபலவென்று உதிர்ந்துபோயின.

மேலும் அவனது அவ்வளவைத்திருந்த கவசத்திலழுத்திய இரத்தினங்க ளெல்லாம்பேர்ந்து திக்குத்திக்குகளிற் சிதறி, ஆகாசத்திலிருந்து நக்ஷத்திரங்க ளுதிர்ந்து விழுவதுபோல விழுந்தன. அக்கால் அவன்கண்களிற் பொறி யெழும்பியது. பிரளயகாலத்துச் சண்டமாருதக் காற்றடிக்க அலைந்து தள்ளாடிச் சாய்ந்த மகாமேரு பர்வதம்போல இராவணன்சாய்ந்தான். அதை க்கண்ட தேவர்கள் சந்தோஷித்து, ஆர்ப்பரித்து, சிறியதிருவடியாகிய ஆஞ்ச னேயர்பேரிலே புஷ்பமாரி பொழிந்து வாழ்த்தினார்கள். இராக்ஷசர்க ளெல்லாம் பயந்தார்கள். வானரர்களெல்லாம் ராவணன் தோற்றுப் போ னானென்று சரீரம் புளகாங்கிதமாய்க் கூத்தாடினார்கள். அப்போது ரா வணன் - மலைகளிலிருந்து யோகாப்பியாசம்பண்ணிச் சுவாசவாயுவி னிலையை யறிந்த தபோதனர்கள் தங்கட்குக் கைவந்தசித்தியால் தங்கள் தேகத்தைவி ட்டு மற்றொரு தேகத்திற் புகுந்து அந்தத்தேகத்துக்கும் மாறுபாடு வந்தகா லத்தில் தங்கள் பழையதேகத்தை யடைவதுபோலவும், அந்தத்தேகத்தி ல னுபவிக்கக்கூடாத இஷ்டவிஷயங்களை மற்றொரு தேகத்தையடைந்து அனு பவித்துவிட்டு மறுபடியும் பூருவதேகத்தை யடைவதுபோலவும் மூர்ச்சை

தெளிந்து எழுந்து பெருமூச்சுவிட்டு,கண்களில் அக்கினிப்பொறிகளைக் கக்கிக் கொண்டு வாயுபுத்திரனைப் பார்த்துச் சிலவசனம் சொல்லுகிறான்.

ஒருவருஞ் சமானமில்லாத ஓ வீரனே! நீ என்னைச் சின்னபின்னப் படுத்தினாய் இனியென்னுடனே யுத்தஞ்செய்ய மாட்டாயல்லவா? பலமென்பதும், அஃதுண்டென்பதும், உன்னிடத்திலேதா னிருக்கின்றது. மற்றவர்களெல்லாம் பேடிக்குச்சமானமானவர்கள். என்னை மூர்ச்சிக்கும்படியாகக் குத்தியபடியால் உன்பலத்தை இந்தச் சப்தலோகங்களிலும் நிறைத்துவைத்தாய். பிரமதேவன் வந்து சலிக்கக்கடவாயென்று சபித்தாலும் நான்சலியாதவன். வருத்தமென்கிறதை இதுபரியந்தம் அறிந்தவனல்லாத என்னை, அதையறியப்பண்ணினாய். ஓ ஜயசாலியே! இன்னம் ஒருவார்த்தையிருக்கிறது சொல்லுகிறேன் கேள்.உன்மார்பிலே பிரளயகாலத்திடிபோல என்கையால் ஒருகுத்து குத்துகிறேன், அதற்குத்தப்பிப் பிராணனுட னிருந்தாயேயானால், உனக்குச் சமானமானவர்கள் இந்த மூன்றுலோகங்களிலும் ஒருவருமில்லை. நீயே இன்றைக்கும் மற்றென்றைக்கும் உள்ளவன். உனக்கு வேறே பகையுமில்லையென்று சொன்னான்.

அதற்கு அனுமான் அவனைநெருங்கிப் பார்த்து, ஓ தசக்கிரீவனே! எப்போது என்கைக்குத்தினாற் சாகாமல் நின்றுபேசினாயோ? அப்போதே நீ என்னை ஜெயித்தவனல்லவா? நீ நல்லசமர்த்தன். மிகுந்தபலவானென்று எதிரே நடந்து, அவன்சமீபத்திலேபோய், உன்கடனை நீ வாங்கிக்கொள்ளென்று மார்பைக்காட்டி நின்றார். அப்படி மிகுந்த உற்சாகத்துடனின்ற ஆஞ்சநேயருடைய மார்பிலே இராவணன் தன்பல்லை இறுக்கிக்கடித்துக்கொண்டு, பிலத்துவாரம்போன்ற பத்துவாய்களையுமடித்து, இருபதுகண்களினு நெருப்புப் பொறிபறக்கக் கைகளைமுறுக்கி, பலவிரல்களுநெரியவீசி, அஷ்டதிக்குகளும் போதாதென்னும்படி நீட்டி ஓங்கி இருபதுகையினாலேயும் குத்தினான்.

கவி.

பள்ளக்கடல்கொள்ளப்படர் படிபேரினும்பதையா
வள்ளப்பெறுவெள்ளத்தெறுழ் வலியாரினும்வலியான்
கள்ளக்கறையுள்ளத்ததிர் கழல்வெய்யவன்கரத்தால்
தள்ளத்தளர்வெள்ளிப்பெருங் கிரியாமெனச்சலித்தான்.

அந்தகுத்துப்படவே மிகுந்த ஆழமுள்ள சப்தசாகரங்களும் பிரளயகாலத்திற்பொங்கியெழுந்து பதினான்கு லோகங்களை யழிக்கினும் சற்றேனும் சலியாத வல்லமையுடைய சிரஞ்சீவிகளிற் றீர்க்க சிரஞ்சீவியான ஆஞ்சனேயர் வஞ்சமாகிய கறையையுடைய நெஞ்சத்தையும், சப்திக்கின்ற வீரக்கழலையணிந்த கால்களையுமுடைய தீமையாளனாகிய இராவணன் தனது கரங்களினால் பேர்க்க மிகவும் சலித்த வெள்ளியநிறம் வாய்ந்த கைலாசபர்வதம் போல் தேகம் சலித்துத் துடித்தனர். அப்படி யனுமான் சலிக்கவே தேவலோக

மெல்லாஞ் சலித்தன. தர்மஞ்சலித்தது. சத்தியமொழி சலித்தது. இவையன்றித் தவமும், வேதமும், நீதியும், கருணையுமாகிய சகலமுஞ் சலித்தன.

அப்போது வானரவீரர்களனைவரும் ஏககாலத்திலே ஆளுக்கொரு பருவதமெடுத்துக்கொண்டு, ஆகாசத்தில் வெளியில்லையென்னும்படியாய் நிறைந்து, பிரளயகாலத்தில் உலகங்களையெல்லாமழிக்க மேகங்கள் சொரிகிறதுபோல ஆயிரங்கோடிக்கு மதிகமான அந்தப்பருவதங்களை இராவணன்மேலே யெறிந்தார்கள். அதுகண்டு தேவர்களும் பயந்து ஓடிவிட்டனர்கள். இப்படி வானரவீரர்கள் மிகுந்தகர்வத்துடன் மலைகளை யெறிந்து ஆகாசத்திலிடமில்லாமல் ஒருவர்க்கொருவர் நெருங்கி விலகாமல் நிறைந்து நின்றபடியால், சூரியனு மறைந்து உலகமெல்லாமிருண்டன. வானரர்களெறிகிற மலைகளினால் ராட்சசர்கள் நசுங்கிப் போய்விடுவார்களென்று நினைத்து, தேவர்களெல்லாம் இனிநமக்கென்ன பயமென்று ஆகாசத்தில்வந்து சூழ்ந்துகொண்டார்கள். வானரர்களெறிந்தமலைக ளொன்றுடனொன்று தாக்கியுடைபட்டு, இடிகள்போல நெருப்புப்பறக்கும்படி ஒன்றோடொன்று உராய்ந்துகொண்டு, கோதண்டத்தினின்றும் புறப்படுகின்ற அம்புகள்போலவும் — சிலாவருக்ஷம்போலவும் — பூமியில்விழவே; இராக்ஷசச்சேனைகள் பயந்தோடத் தலைப்பட்டன. அந்தப்பர்வத ராசிகள்போய் விழுவதினாற் சமுத்திரங்களும் தூர்ந்துவிட்டன. உலகமெல்லாம் இன்றையதினம் கற்களால் மூழ்கிப்போய்விடுமென்கிற பெருந்தொனி எங்குமுண்டாயிற்று.

இந்தப்பிரமாதத்தைக்கேட்ட ராவணன் மிகுந்தகோபங்கொண்டு, தேவர்களுடைய புகழை வேரோடு விழுங்கிய தன்வில்லைவளைத்து, ஆயிரமாயிரங்கோடி பாணங்களைப் பிரயோகஞ்செய்து, அத்தனைமலைகளையும் பற்பல தூகளாய்ப் போகும்படி யுடைத்துக் கீழேதள்ளினான். இப்படி அம்புகளினாலே துண்டுகளாய்க் கீழ்விழப்பட்ட பருவதங்கள்யாவும் இராவணனணிந்திருந்தமாலைகள் துண்டுதுண்டா யறுந்துவிழவும், யானைகளெல்லாம் துண்டங்கள் படவும், ஆளிகள் சிங்கங்கள் கட்டிப் பெரிய கொடிஞ்சிகளுடன்கூடிய தேர்களெல்லாம் சின்னாபின்னமாய் நசுங்கிப்போகவும், கீழ்விழுந்தன. தேவர்கள் ராவணனுடைய பாணம்பாயும் விதமும், மலைகளொன்று நூறாயிரமாகமுறிந்தவிதமும், மலைகளிடியுண்டு பொடிப்பொடியாய் நொறுங்கினவிதமும் கண்டு; இந்தக் கொடியவன் இவ்வண்ணம் செய்யவும் வில்வித்தைகற்றானேயென்று பயந்து கைகளைவிதிர்த்தார்கள். இராவணனுடைய பலத்தை நாசப்படுத்துகிறோமென்று வானரகூட்டங்களெடுத்தெறிந்த மலைகளையெல்லாம் அவனுடைய பாணங்கள் பொடியாக்கிவிடவே, அப்பொடிகளினால் உலகத்தைச்சுற்றியிருந்தகடல் தூர்ந்துவிட்டது. இரணக்களத்தில் நின்றவர்கள் தேகத்திற்

படிந்த புழுதிகளையெல்லாம் அவர்கள் தேகத்திலிருந்துவழிகிற ரத்தவெள்ளங்கழுவிவிட்டுப் பூமியையுந் துடைத்துக்கொண்டோடியது.

அப்போது ராவணன் இந்தக்குரங்குக் கூட்டங்களிப்படிச்செய்கிறபடியா லிவைகளையெல்லாங்கொன்று, இந்த இரண்டுமனிதரையு மிந்தக்ஷணமே வெல்லுகிறேனென்று அதிககோபத்துடனே பத்துக்கையிலேயும் பத்துவில்லை யெடுத்துக்கொண்டு, பத்துக்கையினாலும் பிரளயகாலத்து மேகம்போலச் சரமாரிகளைப் பொழிந்தான். அப்பத்துவில்லிலேயும் கையொன்றுக்கு ஆயிரமாயிரம் பாணங்களாகத்தொடுத்து எய்கிறபோது, ஆகாசம்—பூமி - சமுத்திரம் — திசைகள் — இவையாவும் அம்புகளாய் நிறைந்துவிட்டன. அந்தரணக்களமானது ரத்தத்தினாலே அந்திவானம்போல் சிவந்தது வானரங்கள் பந்திபந்திகளாக மடிந்து விழுந்தன. பிணங்கள் மலைமலையாகக் குவிந்திருந்தபடியால், அவற்றைமலைகளென் றெண்ணி மேகங்கள் வந்துகவிந்தன.

கவி.

நீலனம்பொடுசென்றில னின்றிலனனலன்
காலனூர்வயத் தடைந்தில னேவுண்டகவயன்
ஆலமன்னதோர்சரத்தொடு மங்கதனயிர்த்தான்
சூலமன்னதோர்வாளியாற் சோம்பினன்சாம்பன்.

நீலன் தன்னுடலிற்பட்ட அம்புடன் கீழேவிழுந்தான். அனலனு மரணமூர்ச்சையாய் விழுந்தான். கவையன் அம்புதைத்து மூர்ச்சையடைந்தான். காலகோடிவிஷத்துக்குச் சமானமான அம்புடனே அங்கதன் மூர்ச்சையாயினன். சூலாயுதம்போன்ற முச்சிரபாணத்தாற் சாம்பவன் சுருண்டுவிட்டான். மற்றவானரவீரர் மார்பில் அம்புகள் தைத்தபடியால், தங்கள் வெற்றிபெற்ற வீரங்களும் - ஆண்மையான செய்கைகளும் - குறைந்துபோனார்கள். சூழ்ந்திருந்த வானரப்பெருஞ் சேனைகளெல்லாம் சின்னாபின்னப்பட்டு மெலிந்து போய்விட்டன. மீதியான வானரவீரர்களோடிவந்து முறையிட்டார்கள். அப்போது இளையபெருமாள் கோபங்கொண்டு யாதுசெய்தன ரெனில்?

கவி.

நூறுகோடிய நூறுநூறாயிரகோடி
வேறுவேறெய்த சரமெலாஞ் சரங்களால்விலக்கி
ஏறுசேவகன் றம்பியவ் விராவணனெடுத்த
ஆறுநாலுவெஞ் சிலையையுங் கணைகளாலறுத்தான்.

இராவணன்விட்ட நூறுகோடி நூறுநூறாயிரங்கோடியான பாணங்களையெல்லாம் தமது அஸ்திரங்களால் அறுத்து, அவன்கையிலே வைத்திருந்த பத்துவில்லையும் இரண்டிரண்டாக முறித்துப்போட்டார். அதைக்கண்ட தேவர்கள்சந்தோஷித்து ஆரவாரித்தார்கள். இராட்சசர்கள் மெய்வியர்த்து மனம்வெதும்பினார்கள். முனிவர்களெல்லாம் புஷ்பமாரி பொழிந்தார்கள். இலட்சுமணருடைய திருத்தோள்களைப் பார்த்துப் புகழ்ந்துபாடிக்கொண்டு தரும

மீதவரைவந்து சேர்ந்தது. அக்கால் இராவணன் இளையபெருமாளைப் பார்த்து, உன்யுத்தவல்லமை மிகநன்றாயிருக்கின்றது. உன்யுத்திசாதுரியமு மிகநன்றாயிருக்கின்றது. உன்குறிப்பு மிகநன்றாயிருக்கின்றது. உன்கைவேகமு மிகநன்றாயிருக்கின்றது. உன்வித்தியா சாமர்த்தியமு மிகநன்றாயிருக்கின்றது. உன்றொண்பிள்ளைத்திறமும் அதுபோலவே, உன்மேனியழகு மிகநன்றாயிருக்கின்றது. உனக்கு நீயேசமானன். உனக்கு ஆரணியத்தில் அன்றைக்குக்கரனையும் அவன்சேனைகளையுங்கொன்ற உன்தமயனும், இந்திரனைத்தன்வல்லமையால் தேவலோகத்தில் ஜெயித்த என்மகனு நானுங்கூடச் சரியல்லோம். ஆகையாலிந்தலோகத்திலே உனக்கு எதிராரிருக்கின்றார்கள்? என்றுசொல்லிக் கரக்கம்பம் சிரக்கம்பம்செய்து. இவனை வில்லினாலேயும் பாணத்தினாலேயும் நாம் ஜெயிக்க முடியாது. இவனைத்தாமசியாம லின்றைக்கே கொல்லவேண்டுமென்று நினைத்து உதட்டைப்பல்லினாலே யழுத்தி, பிரமன் தனக்குக்கொடுத்த வேலாயுதத்தைத் தன்பலங்கொண்டெடுத்து இலக்ஷுமணர்பேரிலே எறிந்தான்.

இராவணன் விட்ட வேலினால் இலக்ஷுமணர் மூர்ச்சையாதல்.

கவி.

எறிந்தகாலவே லெய்தவம் பியாவையுமெரித்து
பொறிந்துபோயுகத் தீயுக விசையினிற்பொங்கிச்
செறிந்ததாரவன் மார்பிடைச் சென்றதுசிந்தை
அறிந்தமைந்தனு மமர்நெடுங் களத்திடையயர்ந்தான்.

அவ்வேல்வருகிறபோது லட்சுமணர் அநேகம் அம்புகளைக்கொண்டுதடுத்தார். அந்த அம்புகளையெல்லாம் அவ்வேலாயுதமெரித்துப்பொறியாயுதிர்த்துவிட்டு, அக்கினித்திரளைக் கக்கிக்கொண்டு அதிகவேகமாய்வந்து இலட்சுமணருடையமார்பிலேபாய்ந்தது.பாயவே மகாபுத்திமானாகிய இளையபெருமாளும் அந்தப்பெரிய ரணக்களத்திலே சோர்ந்துவிழுந்தார். அதுகண்டுபயந்து வானரங்களோட்டமெடுத்தன. தேவர்கள் நடுங்கி உணர்வழிந்துபோனார்கள். இரிஷீஸ்வரர்கள்மனம்பதைத்தார்கள். இராக்ஷசர்கள் சமுத்திரத்திற்கிரட்டிப்பாகக்கொக்கரித்துச் சந்தோஷித்தார்கள். பூமிசுழன்றது. சூரியனுடைய பிரகாசமு மந்தகாரப்பட்டது. அப்போதிராவணன் இளையபெருமாளைப்பார்த்து, இவன் நமதுவேலுக்குப் பயப்படவுமில்லை. சாகவுமில்லை. மூர்ச்சித்திருக்கிறான்.இவனையெடுத்துக்கொண்டுபோய்விடுவோமென்றெண்ணித் தான்தேரைவிட்டிழிந்து, கால்நடையாக ரத்தப்பிரவாகத்திலே ஓடிவந்து, முன்புஉருத்திரமூர்த்தியினுடைய வெள்ளியங்கிரியையெடுத்தபோதுநமதுபராக்கிரமத்துக்கு அவமான மாயிற்றேயென்று நாணப்பட்டவன் அந்த நாணந்தீரும்படி அஷ்டகுலாசலங்களுட் சிறந்த மகமேருவாகிய பொன்மலையை இப்போதெடுக்கிறவனைப்போல, விஷத்துக்குச் சமானமான மனதையுடைய அந்தராவணன் இருபதுகைகளாலு மழுத்தி இளையபெருமாளை யெடுத்தான்.

அப்போது அந்த இராமானுஜர் தமக்கியற்கையான சேஷத்துவக்கியானங் கெடாமல், சாக்ஷாத்து ஸ்ரீராமமூர்த்தியே அந்தப்பீதாம்பர தாரியாகிய ஸ்ரீயப் பதியென்று தம்முடைய திருவுள்ளத்தில் தியானித்துக்கொண்டு மூர்ச்சித்திருக்கின்றாரானதால்; திக்குப்பாலகரை நடுங்கச்செய்து கைலாசத்தையெடுத்த இராவணன்கைகளுக்குத் தாங்கமுடியவில்லை. அப்போது பத்துத்தலைகளையுடைய தசமுகனென்கின்ற ராவணன் ஒருகடலையொத்திருந்தான். அவன்கைகள் உதயபருவதங்களையொத் திருந்தன. துளபமாலிகாதரரான ஸ்ரீராமருடைய திருத்தம்பியாகிய இளையபெருமாள் அந்தப்பர்வதத்திலே உதிக்கின்ற பாலசூரியனை ஒத்திருந்தார். இப்படி இராமாநுஜருடைய திருமேனியைத் தூக்கி யெடுக்கப் பலமில்லாதவனான ராவணன் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்தான். அப்போது முன்னங்குத்துச் சண்டையிலடைந்த மூர்ச்சைதெளிந்த அனுமாரோடிவந்து, இராவணனை ஓரிடியிடித்துத் தள்ளிவிட்டு, இலட்சுமணரைக் கையினாலேதாங்கி யெடுத்துக்கொண்டு, அதிவேகமாய் அப்பாலே போயினார். தொகுதியாக நெருங்கிய ஞானியர் கூட்டங்களில் மிகச்சிரேஷ்டனான ஆஞ்சனேயப்பெருமான் அன்புடன் தன்னை யடைந்தவர்கட்கு அருள் செய்கின்ற ஸ்ரீராமபிரானுக்கு ஒப்பற்ற துணைவனன்றி ஆண்டன்மையை யுடையவனாயினும் மனதிற்றதும்பி யெழுந்தாடுகின்றஆசையினால் இலக்ஷுமணரைக் கைலாகு கொடுத்துத்தூக்கிப்போவது எப்படியிருந்ததெனில் குட்டியை யணைத்துக்கொண்டு மரத்திற் றாவப்போகும் ஓர் பெண்குரங்கையும் ஒப்பானார். அனுமார் இவ்விதமாய் இலட்சுமணர் சற்று நேரத்திற்குள்ளாக மூர்ச்சை தெளிந்து எழுந்திருக்கும்படி தூக்கிக்கொண்டு, கையும் – காலும் - திருக்கண்களும் – செந்தாமரைப் புஷ்பத்திற்குச் சமானமாகப் பிரகாசிக்கின்ற ஸ்ரீராமபிரானுடைய சந்நிதிக்குப்போயினார்.

இராவணனோடு யுத்தத்திற்கெழுந்த ஸ்ரீராமர் ஆஞ்சனேயர்வேண்டுகோளின்படி அவர்தோளிலாரோகணித்துத் தமது கோதண்டத்தை வளைத்துக் குணத்தொனி செய்தல்.

கவி.

போனகாலையிற்புக்கனன் புங்கவன்போர்வேட்
டியானைமேற்செலுங் கோளரியேறிவனென்ன
வானுளோர்கணமார்த்தனர் தூர்த்தனர்மலர்மேல்
தூநவின்றவேலரக்கனுந் தேரினைத்துரந்தான்.

இவ்வண்ணம் தம்மிடத்து வந்த இலக்ஷுமணரைக் கண்டு தனது மனம் பொறாது இராவணன்மேற் கொண்டகோபத்தினால் அவரை என்னவென்றும் விசாரியாது தேவதேவனாகிய ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியானவர் யானையின் பேரிலே போருக்குப்போகிற ஒரு சிங்கம்போல இராவணன்பேரில் எதிர்க்க நடந்தருளினார். தேவதைகள் புஷ்பமாரிபொழிந்தார்கள். இராவணனும் தன் தேரைவிட்டுக்கொண்டு வந்தான். இப்படி அவன்ரதத்திலேயும் ஸ்ரீகாகுஸ்த

குலதிலகர் கால்நடையாகவும் எதிர்க்கின்றதை அனுமானாகிய சிறியதிருவடியானவர்கண்டு, முன்னால் யாவரும் பரிசுத்தத்தை யடையும்படி கங்கையைத் தந்த திருவடி பாவிகளுடைய போர்க்களத்தில் நின்று சிரமப்படச் சகித்திருப்பரோ? அதற்குச்சிறிதும் மனம்பொறாமல் மிகுந்த பரிவுடனேவந்து, சுவாமீ! அவன் ஆயிரங்குதிரைகட்டிய தேரின்பேரிலேறிவந்து எதிர்க்க, தேவர் பாதசாரியாக எதிர்க்கிறது சுலபமாகக்காணும் அடியேன் சிறியேனானாலும் என்னுடைய தோளின்மேலேறியருளவேண்டுமென்று பற்பலவிதத்தில் பிரார்த்தித்தார்.

கவி.

நன்றுநன்றெனா நாயகனேறினனுமக்
குன்றின்மேலிவர் கோளரியேயெனக்கூறி
அன்றுவானவ ராசிகளியம்பினரீன்ற
கன்றுதாங்கிய தாயெனமாருதிகளித்தான்.

அப்படிப்பிரார்த்தித்தகாலையில் அனந்தகல்யாணகுணபிராமனும்நல்லது நல்லதென்று சம்மதித்து, பருவதத்தின்பேரிலே தாவியேறுகிற ஒருராஜசிங்கம்போல அனுமானுடைய தோளிலேறினர். அதுகண்ட தேவர்கள் பல்லாண்டு பாடினார்கள். ஈன்றகன்றைத் தாங்கியெடுத்த தாயைப்போல மாருதி சந்தோஷித்துக் களித்தார்.

திருக்குறளான ஸ்வரூபமாய் உலகத்தை யளந்தவருடைய திருவடியை அப்போது அனுமான் செவ்வையாகப் பார்த்தும், பரிசித்தும், சிந்தித்துமறிந்து; எனக்கிது சுகமாகக் கிடைத்ததேயென அதிசயமடைந்தார். எப்போதும் உரிமையாக அவரைத் திருத்தோளிலெடுக்கிற கருடபகவான், இப்போது ஸ்ரீராமபிரானைத் திருத்தோளிலெழுந்தருளச் செய்துகொண்டு ஆனந்தக்கூத் தாடுகின்ற ஆஞ்சனேயருடைய பாக்கியம் நமக்குக் கிடைக்கவில்லையே யென்று நாணினர். ஆதிசேஷனும் தலைநடுங்கினான். அப்போது அந்த அனுமான் திருப்பாற்கடல்போலப் பிரகாசித்தார். ஸ்ரீராமர் அந்தத் திருப்பாற்கடலிலே வாசமாயிருக்கிற ஸ்ரீமகாவிஷ்ணுவான புருஷோத்தமரைப்போல விளங்கினர். ஆனாலும் — அந்தப்பரம புருஷோத்தமரைப்போல் இவர் யோகநித்திரை செய்யாமல் வீற்றிருக்கிறபடியினாலே, அந்தமாருதி வேதமும், ஸ்ரீராமர் அந்த வேதத்தினுடைய முடிவிலே யிருக்கிற போதசொரூபமான ஸ்ரீஹரியும்போலப் பிரகாசித்தார்கள். மேலும்—அந்த அனுமான் ஞானம்போலவும், ஸ்ரீராமர் அந்த ஞானத்துக்கு மேலேயிருக்கிற பரமபதம்போலவும் காணப்பட்டார். அண்டங்களையெல்லாம் உண்டு வயிற்றிலடக்கின அந்தப் பகவானைத் தாங்கிக்கொண்டிருந்து பலவிதமாகச் சாரிகை திரிகிற அனுமானுடைய தோள் வெண்மையா யிருக்கிறபடியால், அந்த மகம்மேருபர்வதத்தையும் சமானமாகச் சொல்லக்கூடாது.

அப்படி தோன்றுகின்ற அனுமானையும் அவர் தோளிலே சேவைசாதிக்கிற சக்கரவர்த்தித் திருமகனான கோதண்ட ராமனையும் ரிஷீஸ்வரர்கள் கண்டு பல்லாண்டு சொன்னார்கள். தர்மதேவதையும் கையை யெடுத்துக்கொண்டு ஆனந்தநிர்த்த மாடியது. உருத்திரன் - பிர்ம்மா — விஷ்ணு — இவர்கள் முதலான சகலமான தேவர்களும் இந்த ராம ராவணர்களுடைய யுத்தம்பார்க்கும்படியாகக் ககனமார்க்கத்தில் வந்து சேர்ந்தார்கள்.

கவி.

அண்ணலஞ்சனவண்ணனு மமர்குறித்தமர்ந்தான்
எண்ணரும்பெருந்தனிவலிச் சிலையைநாணெறிந்தான்
மண்ணும்வானமு மற்றையபிறவுந்தன் வாய்ப்பெய்
துண்ணுங்காலத்தவ் வுருத்திரனார்ப்பொத்ததோதை.

நீலமேகம்போலு நிறம்வாய்ந்த நமது பகவானாகிய ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியானவர் நினைப்பதற்கரியதும் மிகவும் பெரியதும் ஒப்பற்றதும் வல்லமைபெற்றதுமாகிய தமது கோதண்டத்தையெடுத்து நாணொலிசெய்தார். அப்படிசெய்த குணத்தொனியானது பூவுலகத்தையும் வானுலகத்தையும் இன்னுமுள்ள சகல வுலகங்களையும் தன்வாயிலிட் டுண்ணுங்காலத்துப் பேரொலி யிடுகின்ற உருத்திரமூர்த்தியினது தொனிபோலிருந்தது. இராக்ஷசர்களும் இயக்கர் முதலாகிய அனைவரும் பிராணன் போகாமற்சோர்ந்து நாவுலர்ந்து கலங்கி, தங்கள் தங்களிடத்தினின்றும் நீங்கி நடுங்கினார்கள். பதினாலு லோகமும் குலைகுலைந்தன. தேவதேவனாகிய உருத்திரனும் — பிர்ம்மாவும், விஷ்ணுவும், இந்திரனும், தலைநடுங்கினார்கள்.

ஸ்ரீராமர் கடும்போர்விளைத்து இராவணனை மெலியச்செய்தல்.

கவி.

ஊழிவெங்கனலொப்பன துப்பனவுருவ
ஆழிநீரையுங்குடிப்பன திசைகளையளப்ப
வீழின்மீச்செலின்மண்ணையும் விண்ணையுந்தொளைப்ப
ஏழுவெஞ்சரமுடன்றொடுத் திராவணனெய்தான்.

அந்தச் சமயத்தில் இராவணன் தனது வில்லைவளைத்து குணத்தொனிசெய்து பிரளயகாலாக்கினிபோன்றதும்,பவளம்போலுநிறத்தையும்,சமுத்திரநீரையும் குடிக்கத் தக்கவைகளும், திக்குகளெல்லாம் அளக்கத் தக்கவைகளும்,பூமியையும் ஆகாசத்தையும்தொளைக்கத்தக்கவைகளுமாகியஏழுபாணங்களைச்சந்தித்துச்சுவாமியின்மேல்பிரயோகஞ்செய்து ஆர்ப்பரித்தான்.அந்தவேழுபாணத்தையும்ஸ்ரீராமர்பதினாலுதுண்டமாக அறுத்துத்தள்ளி,பின்னும்அஞ்சுபாணங்களைக்கோதண்டத்திற்பூட்டிக்காலாக்கினியும்தீயும்படியான அக்கினியைவீசிக்கொண்டுபோகப்பிரயோகம்பண்ணினார். அந்தஅஞ்சுபாணத்தையும் இராவணன்அஞ்சுபாணத்தினால் ஆகாசத்திலேயே விலக்குவித்து,பத்து அம்புகளைநாணிலேற்றி ஆகர்னமளவுமிழுத்துவிட்டான். வேதமுதல்வராகிய ஸ்ரீராமபிரான் பத்துஅம்புகளையெய்து அந்தப்பத்தம்பையும் அறுத்துத்தள்ளினார்.

அவன் சமீபத்திலே யிருக்கிற அநேகராட்சசர்கள் பிரயோகம்பண்ணின ஆயுதமழைகளையுஞ் சில அம்புகளினாலே அறுத்துத்தள்ளி, அவர்களுடையயானைகளையும் அக்கினிக்கணைகளாற் சுட்டெரித்து, அவர்களது தலைகளையும் அறுத்து மலைமலைகளாய்க் குவித்தார்.

கவி.

மீனுடைக்கருங் கடல்புடை யிராக்கதர்விட்ட
ஊனுடைப்படை யிராவண னம்பொடுமோடி
வானரக்கடல் படாவகை வாளியான்மாற்றித்
தானுடைச்சரத் தாலவர் தலைமலைதடிந்தான்.

மீன்கூட்டங்களையுடைய சமுத்திரம்போன்ற நிறமும் அளவற்றதன்மையுமுடைய அவ்விராட்சசர்கள் பிரயோகம்பண்ணின ஆயுதங்களையும்-இராவணனெய்கிற அம்புமழைகளையும்—வானரர்கள்பேரில் வந்துபடாமல் மறுத்து; அவ்விராட்சசர்களது மலைபோன்ற தலைகளையும் துண்டித்தார்.

அப்போது அனுமானனவர் பூமியிலே யிருந்தாரென்று பார்த்தால் ஆகாயத்தில் இருப்பார். மறுபடியும் ஒரு க்ஷணத்திலே அந்தராவணனுடைய எல்லா முகங்களுக்கு மெதிரே நேராகநிற்பார். அங்குவந்த வஞ்சகரான அத்தனை ராக்ஷசர்களுடைய முகத்துக்கெதிரேயும் பிரகாசிப்பார். ஆனால் ஸ்ரீராமனுடைய அம்புக்கு முன்னேயும் அவருடைய மனதுக்குமுன்னேயும் நிற்கவல்ல இவருக்கு; இஃதோரதிசயமோ ? இந்தப்பிரகாரம் அனுமானனவர் இடசாரி வலசாரியாகச் சுழன்று திரியும்போது, அந்தரணக்களத்திலே எங்கும் கவந்தங்களாடின. அவைகளுடனேகூடப் பேய்களுமாடிப் பாடத்தலைப்பட்டன. இரத்தவாறுகள் திக்கையறுபட்டுநின்ற தந்தங்களையுடைய யானைகளையுங் குதிரைகளையு மிழுத்துக்கொண்டு கடல்போலெங்குமோடின. அந்த ரணக்களத்தில் சிலராக்ஷசர்கள் தாங்களேறிவந்த தேரையுமிழந்தார்கள். சிலராட்சசர்கள் தாங்கள் பிடித்தவில்லிழந்தார்கள். சிலராட்சசர்கள் யானைகளிழந்தார்கள். சிலராட்சசர்கள் குதிரையின்காலிழந்தார்கள். சிலராட்சசர்கள் யுத்தவலிமை யிழந்தார்கள். சிலராட்சசர்கள் வலியகவச மிழந்தார்கள். சிலராட்சசர்கள் பலமிழந்தார்கள். சிலராட்சசர்கள் மாலையிழந்தார்கள். இப்படியிழந்தவர்கள் முடிவில் தமதுதலையுமிழந்தார்கள்.

அந்தச் சமயத்தில் அநேகராட்சசஸ்திரீகள் வந்து தங்கள் புருஷர்களுடைய தலைகளைத் தேடிப்பார்த்து, விகாரசொரூபமுள்ள அரக்கர்களுடைய தலைகளும் யானைகுதிரைகளுடைய தலைகளும் பேதந்தோன்றாமற் சிதைந்து குழம்பிக்கிடக்கிறபடியால் மயங்கி, யானைத்தலையை இதுதான் என்புருஷன் தலையென்றும், குதிரைத்தலையை இதுதான் என்கணவன் தலையென்றும், இவ்வாறாக வெடுத்து உடற்துறைகளோடு பொருத்திப் பார்த்துத் தழுவிக்கொண்டு அழுதுமாண்டார்கள். ஸ்ரீராமபாணமான காலன் ஒன்று - பத்து - நூறு – ஆயிரமாகத் தலைகளையறுத்துக்குவித்தும், அதன்விசை யோயாமல்

திரிந்துகொண்டு அநேககோடி சேனைகளையும் உருவிச் சென்றது. தன்தேருடனே ராவணனொருவனிற்க, மற்றங்குள்ள சேனைகளெல்லாம் கொலையுண்டு போகவும் இராட்சசர்களுடையவாய்வார்த்தைகள் ஆர்ப்படங்கின. கண்களிலக்கினிகளைக் கக்கிக்கொண்டு பார்க்கின்ற அவரவர்பார்வைகள் குலைந்திலைந்தடங்கின. இப்படி தன்னுடன்வந்த ரத கஜ துரக பதாதிகளெல்லாமாண்டு பிணங்கள் மலைமலைகளாய் மேகமண்டலமுதல் ஆகாசபரியந்த முயர்ந்து கிடக்கிறதைப் பலதிசைகளிலுங்கண்ட ராவணன் சர்ப்பம்போலச் சீறிக்கோபித்து,அதிசீக்கிரமாகவில்லிலே இரண்டுபாணங்களைத்தொடுத்துத் தோளளவும்வாங்கி, ஸ்ரீராமமூர்த்தியினுடைய மரகதமலையின் சிகரம்போன்ற இரண்டுதிருத்தோள்களிற்போயழுந்தும்படியாய்ப் பிரயோகம் பண்ணினான்.

அதுகண்ட ஸ்ரீராமர் புன்னகைசெய்து, ஒரு திவ்வியாஸ்திரம்வாங்கிப் பிரயோகித்து, ஊழிக்காலத்துச் சண்டமாருதக் காற்றானது மந்தரகிரியை முறித்துவிட்டதுபோல அந்த ராவணன் கையிற்பிடித்திருந்த வில்லைத்துண்டித்துவிட்டார். துண்டித்த மாத்திரத்தில் திடுக்கிட்டு ராவணன் மறுவில்லெடுத்து நாணேற்றி ஆக்கிரமித்து அம்பைத் தொடுக்குஞ் சமயத்தில், அதையும் எம்பிரானாகிய ஸ்ரீராமமூர்த்தி ஒரு தெய்வீகம்பொருந்திய அஸ்திரத்தைவிட்டு நாசப்படுத்திவிட்டார். அவ்வளவிலே நில்லாமல் அதிவேகமாக அந்த ராவணனுடைய ரதத்திலேகட்டியிருந்த அனேகம் குதிரைத்தலைகளையு மறுத்தெறிந்தார். அந்தக் காலத்தில் அதிகபலம்பொருந்திய ராவணன் பின்னொருவில்லில் அஸ்திரமெடுத்துப் பிரயோகஞ்செய்ய எத்தனித்தான். அதையவனெடுக்கவொட்டாமற்கணைகளாலே ஸ்ரீராமபிரான்தடுத்தனர், அன்றியுமவனுடைய குடையும் — கொடியும் — யானைகளும் — தமது கணைகளாலே துணிந்துவிழும்படியாக அறுத்துத்தள்ளி, அவனுடைய அதிகபிரகாசமான கவசத்தையு மறுந்துவிழத்தள்ளினார். இதுவுமன்றி - அந்த ராவணனுக்கு மேலுமேலும் யுத்தகளத்தில் வருகிறசேமத்தேர்களை வரவொட்டாமல், அதியுக்கிரமான பாணங்களால் விலக்கி நாசப்படச் செய்தார்.

அப்போது தென்றிசைக்கதிபனாகிய எமனும் கைகளை யெடுத்துக்கொண்டு ஆடும்படியாக அந்த ரத்தவெள்ளமோடுகிற இரணக்களத்தில், இராவணன் தானேறிய தேரைவிட்டுக் குதித்தான். குதித்தபோது பிரகாசித்துக்கொண்டிருக்கிற அவன் கிரீடங்களின்மேல் ஸ்ரீராமர் சிலபாணங்களை யெய்தார். அந்தப்பாணங்கள் முன்னாலே சூரியன்பேரிற் பாய்ந்த அனுமானைப்போல அதிக விசையாகச்சென்று, அவன்கிரீடங்களைப் பலமேருமலைகளைத் தள்ளிக்கொண்டு போவதுபோலத் தள்ளிக்கொண்டுபோய்ச் சமுத்திரத்திலே போட்டுவிட்டன. அந்த ராமபாணங்கள் இழைக்கப்பட்ட ரத்தினங்களையெல்லாம் திக்குதிக்குகளிற் சிதறும்படியாகப்பண்ணிக் கிரீடங்களைக் கடலிலே தள்ளினபடியால், வாயுபகவானால் முறியப்பட்ட மேருவின்கொடுமுடிகள் பறியுண்டுகடலில் விழுந்ததுபோல அந்த மகுடங்கள் பிரகாசித்தன. பின்னையும்

ஸ்ரீராமருடைய கோதண்டத்தில் நின்றுபுறப்பட்ட அம்புகளோடு பறியுண்டுபோய்க் கடலில் விழுந்த அந்த மகுடமானவைகள் - பரிவேடத்துடன்கூடிய சூரியர்கள் தங்களை வாயாற் கௌவிக்கொண்ட கிரஹண சர்ப்பங்களுடன் சமுத்திரத்தில் விழுந்ததுபோலவுமிருந்தன. ஓர் சொற்சொல்லுமளவைக்குள் தன்கிரீடங்களையிழந்த அந்தத் துராத்துமாவானவன் சூரியனை யிழந்த பகலைப்போலவும், சந்திரனையிழந்த இராத்திரியைப்போலவும் பொலிவிழந்து காணப்பட்டான்.

இதுவரையிலும் தன்னோடு சண்டைசெய்தவர்களிடத்திலெல்லாம் வெற்றிபெறுவதே யல்லாமல் இந்த ஸ்ரீராமரிடத்தில் தோற்றதுபோல ஒருவரிடத்திலும் தோற்றறியாத வல்லவனான இந்தராவணன் சகலபாக்கியமும்பெற்றுப் பராக்கிரம முள்ளவனானாலும், வித்துவான்களுக்கு ஒருவன் அபசாரஞ்செய்ய அவர்கள் மனதுநொந்து வசைபாடித் தூஷணித்தால், அவனெப்படித் தன் கீர்த்தியும் செல்வமு மிழந்து போவானோ அப்படி எல்லா மிழந்தவனானான்.

இராவணன் யுத்தவலியிழந்து நிராயுதனாய்நிற்க ஸ்ரீராமபிரானனவர் சிலவார்த்தைகூறுதல்.

கவி.

அறங்கடந்தவர்செயலிதென் றுலகெலாமார்ப்ப
நிறங்கரிந்திட நிலம்விரல் கிளைத்திட நின்றான்
இறங்குகண்ணினனெல்லழி முகத்தினன்றலையன்
வெறுங்கைநாற்றினன் விழுதுடை யாலன்னமெய்யான்.

நின்றவன்னிலைநோக்கிய நெடுந்தகையிவனைக்
கொன்றலுன்னிலன்வெறுங்கைநின் றனெனக்கொள்ளா
இன்றவிந்ததுபோலுமுன் றீமையென் றிசையோ
டொன்றவந்தனவாசக மினையனவுரைத்தான்.

தருமந்தப்பி நடக்கிறவர்கள்காரிய மிப்படிதான் முடியுமென்று உலகஞ்சொல்லும்படியாய் முகங்கருகிப்போய் கால்விரலாலே நிலத்தைக் கீறிக்கொண்டும், தலைகள் குனிந்து தரையைப் பார்த்துக்கொண்டும், முகத்திற்சிறிது பவிஷுமில்லாமல் வெறுங்கைகள்தொங்க விழுதுகள் தொங்குகின்ற ஒரு ஆலமரம்போல் நின்றான். இந்தப்பிரகாரநின்ற ராவணனைக் கிருபாநிதியான தாசரதிபார்த்து, வெறுங்கையுடனிருக்கின்றவனைக் கொல்லலாகாதென்று திருவுளத்திலெண்ணி, ஓ இராவணா! உன்னுடைய அக்கிரமம் இன்றைக்கு அழிந்துவிட்டதுபோலும். என்றுசொல்லிப் பின்னும் சிலவார்த்தைகள் சொல்லுகின்றார்.

ஓ இலங்கைவேந்தே! தருமசிந்தை யுள்ளவர்களெவர்களானாலும் அவர்களுக்குச் செயமாகுமே யல்லாமல் தேவர்களானாலும் அதர்மத்தினாலேஜெயமடைய மாட்டார்களென்கிற நீதிவாக்கியத்தை உன்மனதிலே வைத்துக்

கொண்டு, ஐயோபாவி! நீ இப்போதே ஓட்டமாயோடி உன்பதியை யடைந்துவிடு, இன்னம் க்ஷணநேரமாத்திரம் என்னுடன் மாறுகொண்டு எதிர்த்து இங்கிருப்பாயேயானால், உன்பிராணன்போய்விடும். அதுஉண்மையாகவிருந்தாலும் அப்படி நானினைத்தவனல்ல. நீ தனியனானபடியினாலே மனமிரங்கினேன். உன் குலத்தாருடனேயும், உன் உறவின்முறையாருடனேயும், உன்சேனைகளுடனேயும், அல்லாமலும் உன்னால் என்னென்ன ஆயுதங்கள் சம்பாதித்திருக்கின்றனவோ? அவைகளெல்லாவற்றுடனேயும் மீட்டும்யுத்தத்துக்கு வர இஷ்டமிருந்தால் வரக்கடவாய். அல்லது-உனக்கு அவ்வளவு பலாபலத்துடன் வருவதற்குச் சத்தியில்லையாகில், எங்கேயாவதுபோய்ப் பதுங்கிக் கொள்வாயாக.

ஓ அற்பகிருத்தியஞ்செய்கிற அவிவேககுணவானே! நீ சிறையில் வைத்திருக்கிற சீதையையென்னிடந்தந்துவிட்டு, உன்தம்பியாகிய விபீஷணனை இந்தலோகத்திற்குத் தெய்வமெனநினைத்து, இராட்சசர்களுக்கெல்லாம் இராஜாவாகப் பட்டங்கட்டிவைத்து, நீ அவனிட்ட ஏவலைச்செய்துகொண்டிருப்பாயானால் உன்தலையை என்பாணத்தினாலறுத்துப் பூமியிற்றள்ளமாட்டேன். அப்படிக்கல்லவென்று யுத்தஞ்செய்ய உனக்குத் தேகவலிவிருந்தால், உன் பலமெல்லாங்கொண்டு என்னெதிரேநின்று சண்டைசெய்து மரணமடைந்து, சுவர்க்கலோகத்திற்குப்போய் அங்குண்டான சகலருக்கும் நல்லவனாகப் பேரெடுத்திரு. இனி நீ பிழைத்திருப்பாயென்று மனதில்வையாதே. நீ பிடித்து வளைத்துநின்ற வில்லுமுறிந்தது. தேருமழிந்தது. நீ கொண்டுவந்த பெருங்கூட்டமான சதுரங்கசேனைகளெல்லாம் நாசமாய்விட்டனவென்று சொல்லிப் பின்னுஞ்சொல்லுகின்றார்.

ஸ்ரீராமர் இராவணனுடன் இன்றையதினம்போய் நாளையதினம் யுத்தத்திற்கு வாவெனல்.

கவி.

ஆளையாவுனக்கமைந்தன மாருதமறைந்த
பூளையாயினகண்டனை யின்றுபோய்ப்போர்க்கு
நாளைவாவெனநல்கினன்நாகிளங்கமுகின்
வாளைதாவுறுகோசல நாடுடைவள்ளல்.

அடா ராவணா உனக்குத் துணையாகவந்த பந்துக்களெல்லாம் நமதுபாணத்தினால் காற்றிலகப்பட்ட பூளைப்பூப்போலாய்விட்டன. அதை நீயேநேரில் பார்த்தனை நீயும்வெறுங்கையாய் நின்றுவிட்டாய், ஆகையால் இன்றொருதினமாவது நீ சென்று உனது இலங்கையை ஆள். இனி நீ எக்காலத்திலாளப்போகின்றாய் நம்மிடத்தில் போர்புரிய நாளைய தினம் வருவாயென்று, மிகவும் இளமையாகிய பாக்குமரங்களில் வாளைமீன்கள் தாவிப்பாய்கின்ற வயல்வளமிக்க கோசலநாட்டிற்கதிபனாகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் சொல்லினார்.

முதற்போர்ப் படலம் - முற்றிற்று.

No 51. ஸ்ரீராமர் நிராயுதபாணியாயிருக்கும் இராவணனுக்கு அறிவுறுத்தி இன்றுபோய் நாளைவாவென்றனுப்புதல்.



NO. 52. ஸ்ரீராமருத்திரவின்படி விபீஷணர் கும்பகர்னனிடம்போய் அவன் மனதை ஆராய்தல்.



ஸ்ரீராமர் கும்பகர்னனோடு கடும்போர் விளைத்து அவனைச் சங்கரித்தல்.



ஸ்ரீராமஜெயம்.

பதினைந்தாவது,

கும்பகருணன் வதைப்படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமபாணத்தால் மெலிந்த இராவணன் தனியனாய்த் தன்மாளிகைக்கேகி தன்தூதர்களில் நால்வரையேவி நாற்றிசையினுமுள்ள மற்றச் சேனைகளைக் கொண்டுவரும்படி ஆக்ஞாபித்து மாலியவானோடு தனக்கு நேர்ந்த குறைகூற அவனறிவுறுத்தியதும், அவ்வறிவைத் தடுத்துரைத்த மகோதரன் துற்போதனையால் இலக்ஷ மிராக்கத மல்லர்களைக் கொண்டு கும்பகர்ணனைத் துயிலினின் றெழுப்பித் தன் கருத்தை யறிவித்ததும், அவனு மளவற்றபுத்திகள் கூறியும் கேளாததால் இனியாவனவற்றைக்கூறித் தான்வெளிப்பட்டதும், ஸ்ரீராமர் விபீஷணரா லக்கும்பகருணனிலைமையை யறிந்தழைத்துவரும்படி விடுக்க அவன் தன்னிடம் வந்த தம்பியோடு தன்னுறுதிப்பாடுகூறி விடுத்ததும், பின்னரிருதிறத்தலருங் கைகலந்து நடத்தியயுத்தத்திற் கும்பகர்ணனால் நீலன்-அங்கதன்-அனுமான்-இம்மூவரு மெலிந்ததும், அப்போதிளையபெருமா ளவனை பாதசாரியாக்கி அவனோடுவந்த சேனைகளையும், பின்னிராவணனு லனுப்பிய பெருஞ்சேனைகளையு மாய்த்துநின்றதும், அக்கால் சுக்கிரீவமகாராஜ னவனை வளைத்துப் போரிடுகையி லவர்மேலவன்விடுத்த சூலத்தை அனுமார் முறித்தெறிந்ததும், மீட்டுஞ் சுக்கிரீவமகாராஜ னிராயுதனான வவனோடு மற்போர்விளைத்து மூர்ச்சிக்க அவனவரை இலங்கைக்குக் கொண்டு போக யத்தனித்ததும், அஃதறிந்த ஸ்ரீராமர் அவனெற்றியைப் பிளந்து மூர்ச்சிக்கச்செய்து சுக்கிரீவமகாராஜனை விடுவிக்க அவரவன் மூக்கையுங் காதையு மறுத்துக் கொண்டுபோய் வானரப்படையிற் கலந்ததும், பின்னவன் மூர்ச்சை தெளிந்து இராவணன் மீட்டுமனுப்பிய பதினான்குகோடி ராக்ஷசச்சேனைகளைத்துணையாகக்கொண்டு போர்விளைக்கஸ்ரீராமரதனைக்கணப்போதில் மாய்த்து அவன திரண்டுதோளையுந் தாளையுந் துணித்ததும், அப்பாலவன் சரீரமொன்றனுற் றனது வீரவல்லமையைக்காட்டிப்போர்செய்யவும் ஸ்ரீராம ரவனப்பிபிராயமறிந்து சங்கரித்து அவன் சிரசைக்கடலில் வீழ்த்தியதும் சொல்லப்படுகின்றது.

இராவணன் தன்மாளிகைக் கேகல்.

கவி.

வாரணம்பொருதமார்பும் வரையினையெடுத்ததோளும்
நாரதமுனிவற்கேற்ப நயம்படவுரைத்தநாவும்
தாரணிமவுலிபத்துஞ் சங்கரன்கொடுத்தவாளும்
வீரமுங்களத்தேபோட்டு வெறுங்கையோடிலங்கைபுக்கான்.

இவ்வண்ணம் எமது நாயகனாகிய ஸ்ரீராமபிரானானவர் இன்றுசென்று நாளைவந்தெம்மொடு போர்புரிய வருவாயென்று சொன்னவாக்கை இராவணன்கேட்டு அவமானத்தினால் வாய்திறந் தொன்றுஞ் சொல்லாது மிகவுமனம்வருந்தி,

அஷ்டதிக்கிலுள்ள யானைகளுடனே போர்புரிந்து ஜெயம்செய்த மார்பினது வல்லமையும், கைலாயபர்வதத்தை யெடுத்த புஜபலமும், இரிஷிகளிற் சிரேஷ்டராகிய நாரதமகாமுனிவருக் கொக்கும்படியாக வேதாத்தியயனம்பண்ணுகின்ற நாவினது சாதுரியமும், வெற்றிமாலையைத்தரித்துப் பிரகாசிக்கின்ற கிரீடங்கள்பத்தும், சங்கரனாகிய உமாபதியானவர் கொடுத்தவாளும், தன்னுடைய சௌரியங்களு மிரணக்களத்திலேயே இழந்துவிட்டு; வெறுங்கையுடனே திரும்பிப்போய் இலங்கையைச் சேர்ந்தான். தமது யுத்தவன்மையால் எப்படிப்பட்ட பலசாலிகளாலேயும் அழியத்தகாத தேவர்களையெல்லாம் ஜெயித்து மூவுலகத்தையும் தம்வயப்படுத்திய நாயகனாகிய ராவணன் இவ்விதமாக ஆயுதமில்லாமல் ஆலம்விழுதுபோற் றொங்கிய கைகளையுடையவனாய் அபகீர்த்தியானது தன்னோடு தொடர்ந்துவரக் கால்நடையாகச்சென்று நகரம்புகுந்தபோது, சூரியனும் அஸ்தமனமானான். இவ்விதமாகச் சென்றவனாகிய இலங்காதிபதி எத்திசையும் நோக்கான். வளப்பம்பெற்ற தனது நகரம் பொலிவிழந்திருப்பதையு நோக்கான்; சமீபத்திற் பொருந்திய புத்திரர்களையு நோக்கான்; சைனிய சமுத்திரத்தையு நோக்கான்; மகரந்தப்பொடிகளோடு மலர்ந்த மலர்களையணிந்த கூந்தலையுடைய மாதர்கள் தனித்தனி நின்று தனது சோகத்தையும் தளர்ச்சியையும் நோக்க, தான் பூமியைப் பார்த்துக்கொண்டே சென்றனன். அன்றலர்ந்த தாமரைமலரையொத்த முகங்களையுடைய வண்டோதரி முதலான ஸ்திரீகளின் கண்களெல்லாம் அவனுக்கு வாள்போலவும், தன்பிள்ளைகள் வார்த்தை அந்த ராமபாணம்போலவு மிருந்தன. நவக்கிரகங்களாகிய கோள்களையெல்லாம் ஒரேவிடத்திற் சிறைவைத்தாண்டுவந்த ராவணனுக்கு, அன்று ஸ்திரீகளுடைய ஸ்தனங்கள் தன்னுடைய வெறுந்தோள்கள்போற்பார்க்கவும் வெறுப்பாக விருந்தன.

மந்திரிகளும் - பந்துக்களும் - தன்பெண்சாதிமார்களும் — சேனைத்தலைவர்களும் - உறவின்முறையார்களும் — தங்கள் தங்கள் மனந்திகைத்து ஒன்றும்பேசாமற் சித்திரப் பிரதிமைபோல நிற்க, ஒருவருமில்லாமல் தான்மாத்திரம் ஒருமதயானை தன்கொட்டாரத்திற் போவதுபோலத் தன்மாளிகையிற் போய்ச் சேர்ந்தான். இவ்வாறு போய்ச்சேர்ந்த இராவணன் அவ்விடத்தொரு பொற்சிம்மாசனத்திற்போ யுட்கார்ந்து ஆயாசத்தைத் தீர்த்துக்கொண்டு, எதிரே நின்றிருந்த ஒருகாவற்காரனை யழைத்து, நம்முடைய தூதர்களை அழைத்துவாடா வென்று ஆக்ஞாபித்தான்,

இராவணன் சேனைகளைச் சேர்த்தழைத்து வரும்படித்தூதர்களுக்காக்ஞாபித்தல்.

கவி.

மனகதிவாயுவேகன் மருத்தன்மாமேகனென்றிவ்
வினையறிதொழிலர்முன்னூ வாயிலர்விரவினாரை
நினைவதன்முன்னநீர்போய் நெடுந்திசையெட்டுநீந்தி
கனைகழலரக்கர்தானை கொணருதிர்கடிதினென்றான்.

இதைக்கேட்ட தூதுவன் அந்தக்ஷணமே அவன்போய் மனகதியென்றும், வாயுவேகனென்றும், மருத்தனென்றும், மேகனென்றும் பேரினையுடைய நான்கு தூதர்களைக்கூப்பிட; அவர்களதிவேகமாய் வந்து நின்றார்கள்.

அப்படி வந்துநின்றவர்களை இராவணன் பார்த்து, இந்தட்சணமே நீங்களோடி நம்முடைய ராட்சசசேனைகள் எங்கெங்கே யிருக்கின்றனவோ? அங்கங்கே விரைந்துபோய் அவைகளையெல்லா மழைத்துக்கொண்டு ஓடிவாருங்கள். இன்னும் சப்தசமுத்திரங்கள் - சப்ததீபங்கள் - அளவற்ற பர்வதங்கள் - பாதாளலோகம்-சக்கரவாளகிரியாகிய விவ்விடங்களிலிருக்கிற ராட்சசர்களென்னும் பெயருள்ளவர்களையெல்லாம் ஒருவரையும் விடாமல், அதிசீக்கிரமாக அழைத்துக்கொண்டு வாருங்களென்று உத்தரவுசெய்தான். இப்படி உத்தரவு செய்தமாத்திரத்தில் அந்தத் தூதர்கள் அவ்வாக்கினையைச் சிரசாகவகித்து இராட்சசர்களைத் தேடிக்கொண்டு போனார்கள்.

இராவணன் தானடைந்த தோல்வியினால் அவமானத்தோடு புஷபசயனத்தில் சோகித்துக் கிடத்தல்.

கவி.

மூவகையுலகுளோரு முறையினின்றேவல்செய்வார்
பாவகமின்னதென்று தெரிகிலர்பதைத்துவிம்மித்
தூவகலாதவைவா யெஃகுறத்தொளைக்கையானை
சேவகமமைந்ததென்னச் செறிமலரமளிசேர்ந்தான்.

முறைப்படி தங்கள் தங்களுக்கிட்ட பணிவிடைகளைச் செய்பவர்களாகிய சுவர்க்க மத்திய பாதல மென்னு மூவகையுலகத்தி லுள்ளவர்களாகிய தேவர் மானிடர் நாகரென்பவர்கள் கருத்து இன்னதென்று தெரியாமல் மனம் வருந்தித் துடிக்க, கூர்மையாகிய நுனியையுடைய வேலினால் தைப்புண்ட யானையொன்று மகாபிரயாசத்தோடு தனது துயிலிடந்தை யடைந்த தன்மைபோல் அவமானமென்கின்ற வேலானது தைத்துவருத்த வருந்துகின்ற சிந்தையுடன் மலர்களாற்றொடுத்த சயனத்திற் சாய்ந்தான். வீணையினதுநரம்பின்கண்சப்த சுரத்தையும் ஏழிசையோடு கூட்டி இசைத்தலைப்போலும் இனியமழலைச்சொல்லையும், பவளம்போலும் சிவந்தவாயையும், பச்சென்ற வளையலையணிந்த கைகளையுமுடைய சீதாபிராட்டியாரிடத்தில் வைத்த நினைவு நிறைந்திருக்கிற தனது நெஞ்சில் தோல்வியினா லுண்டான வெட்கமு நிறைந்தபடியால், பிறகுகள்ளுண்டாவது அவ்வெட்கத்தை மறைத்துக்கொள்ளுகிறதற்குமிடமில்லாமல் வியசனமுடையவனானான். இப்படி வியசனமானது தன்மனதைச் சூழ்ந்துகொள்ளவே, இராவணன் தன்னுள்ளமானது மானத்தைவெளியிற்கக்குகிறதைப்போலப் பெருமூச்சுவிடத் தலைப்பட்டான். சுவர்க்கலோகமுதலாகிய பலலோகங்களையும் தன்புஜபலத்தால் தோல்வியடையப்பண்ணி நகைத்த இராவணன், தன்னை ஸ்ரீராமலக்ஷ்மணர் முதலான பகைஞர்கள் சிறியமனிதர்களென் றெண்ணினவனாயினும் அவர்கள் தன்னை நகைப்பார்க

ளே யென்று வெட்கப்படவில்லை. மிதிலையிற்பிறந்த ஜானகியானவள் சிரிப்பாளென்கிறதற்கு மாத்திர மிகுந்தவெட்கமுற்றுச் சோர்ந்துகிடந்தான்.

இராவணன் சோகித்துக்கிடப்பதைக் கேட்ட மாலியவான் தன்னிடம்வந்து யாதென்றுவினவ யுத்தக்களத்தில் ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் செய்த யுத்தத்தின் பிரபாவத்தையும் தானடைந்த விபத்தையுங்கூறி வருந்தல்.

கவி.

ஆங்கவன்றன்மூதாதை யாகியமூப்பின்யாக்கை
வாங்கியவரிவிலன்ன மாலியவானென்றேதும்
பூங்கழலரக்கன்வந்து பொலங்கழலிலங்கைவேந்தைத்
தாங்கியவமளிமாடோர் தவிசுடைப்பீடஞ்சார்ந்தான்.

இருந்தவனிலங்கைவேந்த னியற்கையையெய்தநோக்கிப்
பொருந்தவந்துற்றபோரிற் றோற்றனன்போலுமென்னா
வருந்தினைமனமுந்தோளும் வாடினைநாளும்வாடாப்
பெருந்தவமுடையவைய வென்னுற்றபெற்றியென்றான்.

இப்படி இராவணன் ஸ்ரீராமலக்ஷ்மணரால் யுத்தக்களத்தில் தோல்வியடைந்துவந்து புஷ்பசயனத்தில் தனியே சோர்ந்துகிடப்பதைக்கேட்டு வயதுசென்றதனால் வில்லைப்போல்வளைந்து கூனியதேகத்தையுடைய அவன்பாட்டனாகிய மாலியவானென்கின்ற ராட்சசன் அவன்படுத்திருந்த மெத்தையின் பக்கத்திலே ஒரு ஆசனத்தி லிருந்துகொண்டு, அவ்விலங்காதிபதியினுடைய இருப்பை நன்றாயுற்றுப்பார்த்து, அப்பா பேரப்பிள்ளாய்! "பட்டாற்றெரியும் பறையனுக்" கென்பதுபோலுமிருக்கிறதே நீயிருக்கின்ற இருப்பு ஐயோ! ஏனிப்படி உன்மனதும், தோளும், வாடியிருக்கின்றாய்? ஒருநாளும் வாடாததபோபலத்தையுடைய என்னையனே! என்ன நடந்தசெய்தி சற்றே யெனக்குத் தெரியும்படிச் சொல்லுக. என்று கேட்டனன்.

கவி.

கவையுறுநெஞ்சன்காந்திக் கனல்கின்றகண்ணன்பத்துச்
சிவையின்வாயென்னச்செந்தீ யுயிர்ப்புறச்சிவந்தமூக்கன்
நவையுறுபாகையன்றி யமுதினைநக்கினாலும்
சுவையறப்புலர்ந்தநாவா னினையனசொல்லலுற்றான்.

அதற்கிராவணன் அதிகமான மனக்கவலையுடனே காந்தியெரிகிற கண்களையுடையவனாய்ப் பதைபதைத்து, பருத்ததுருத்திகளிற் காற்றுமிகுத்து வருவதுபோலப் பத்துமூக்குகளினும் அதிகக்காற்றாகப் பெருமூச்சு விட்டுக்கொண்டு, அமிர்தம் – பாகு – இவைகளை நக்கினாலும் சுவைதெரியாதபடி வறண்ட நாவுடனே பாட்டனைப்பார்த்துச் சொல்லுகின்றான்.

ஐயா என்னுயிருக்குயிராகிய பாட்டனே! கூட்டங்கூட்டமாகஇரிஷிகளும், தேவர்களும், நாமும், இதுவரையில் ஒருதேகம்போலப் பேதமற்றிருந்தோம். அப்படிப்பட்ட நம்முடைய குலத்துக்குப் பங்கமும் பழியும்வந்து

நேரிட்டன. குழந்தைச் சந்திரனைத் தரித்த அந்தத் திரிபுராந்தகன் முதலாகத் திரிலோகத்தவர்களு நமக்கு உபபலமாகவந்து எதிர்த்தாலும், ஓபாட்டா! அப்பெருஞ்சேனையெல்லாம் அந்த இளையவனை லட்சுமணன் வில்லைவளைத்துப் பாணப்பிரயோகஞ்செய்தால் அவனுக்கேபோதாது, இப்படியிருக்க - அவனுக்கு மூத்தவனாகிய ஸ்ரீராமனோ? அதியுக்கிரமாகப் போர்செய்கின்ற அநேகவெள்ளமாகிய ராக்ஷசவீரர்களுடைய ஆவியைப் பயப்படும்படி கவர்ந்த காலத்திலும், அந்த அவமானத்தையெல்லாம் என்முதுகின்மேற் சுமத்தின காலத்திலும், அந்த மனுஷனுக்குக் கொஞ்சமாகிலும் கோபம்வரவேண்டாமா? அக்கோபக்குறியினுண்மை கொஞ்சமுந் தெரியவில்லை. முன்னாலே கூனிமுதுகிலே உண்டையில் தெறித்தபோது அஃதெப்படி விளையாட்டாக விருந்ததோ? அதேபிரகார மவனுக் கின்றைக்கு மிருந்தது.

ஐயா? அம்பானது அவன்கையைவிட்டுப் புறப்பட்டால் உலகங்களிலெல்லாந் திரிந்துகொண் டிருக்குமேயல்லாமல், ஊழிக்காலமானாலும் ஓயுமென்று சொல்லக்கூடுமோ? அது பிரளய காலாக்கினியைத் தீய்ப்பதல்லாமல் போகுந்திசைகளையும் தீய்க்கும். மகமேருவைப் பிளக்கவேணுமென்றாலும், ஆகாசத்தைக் கிழித்துக்கொண்டு அப்பாற் போகவேண்டு மென்றாலும், இந்தப்பூமியைக்கிழித்து ஊடுருவிப்போகவேண்டு மென்றாலும், இந்தச் சமுத்திரஜலத்தைக் குடிக்கப் புறப்பட்டாலும் அதற்கு கைஷியமாகுமா? அதனுடைய வல்லமைக்கு மகமேருவும், உலகங்களும், ஆகாசமும், சப்தசமுத்திரங்களும், அநேக கோடிகளாக விருந்தாலும்; அப்போதாவது போதுமா? அவன் வில்லில் நாணைப்பூட்டி வளைக்கிறதும், அம்பு தொடுக்கிறதும், தேவர்களுக்கும் பார்க்க முடியாதென்றால்; இன்னுமற்ற எவர்கள்தான் தெரிந்துசொல்லப் போகிறார்கள்.

இராட்சசரைச் சம்ஹரிக்கவேண்டுமென்று அவனினைத்தாலே போதும். உடனே யிவ்வுலகமெல்லாம் அம்புக்கூட்டங்களாக நிறைந்துபோகும். இந்த இருநாறுவெள்ளஞ் சேனைகளையும், யானைகுதிரைகளையும், இராட்சசர்களையும், தலைகளை யறுத்தறுத்துத்தள்ளினதே யல்லாமல்; ஓரம்பாகிலும் சரீரங்களிலே தடைபட்டதுண்டா? நல்லவித்துவான்கள் நாவில் பொருள்களைக்குறித் தமைக்கப்பட்டதும் ஞானத்தை மனத்தின்கண் விளைவிப்பதுமான சொற்களைப்போலவும், அச்சொல்லா லமைந்த செய்யுட்களினது மோனை - எதுகை — இயைபு — அளபெடை — முதலியவைகளா லமைந்த தொடைகளைப்போலவும், அத்தொடையினளவை நீக்கி அந்தந்த சுரத்துக்கமைந்த சுதிகூட்டி மந்தம் — மத்திமம் - தாரம் — இவைமுதலான இசைவழியாய் ஆரோகணம் அவரோகணத்தாற் பாடப்படும் அளவுக்கடங்காத பண்களைப் போலவும், குன்றக்கூறல்முதலிய குற்றங்களற்ற தன்மை-புனைமை முதலாகிய பற்பல அலங்காரங்களைப் போலவும், அளவிடக்கூடாத பெருமையையுடையதாக விருந்தன.

கவி.

இந்திரன்குலிசவேலு மீசன்கையிலைமுன்றென்னு
மந்திரவயிலுமாயோன் வளையெலின்வரவங்கண்டேன்
அந்தரநீளிதம்மா தாபதனம்புக்காற்று
நொந்தனர்யானலாதா ராரவைநோக்கசிற்பார்.

ஐயா பிதாமகனுகிய ஓமாலியவானென்னும்பேருடையவரே! அந்தக் காகுத்தனுடைய பாணங்கள் இந்திரனுடைய வச்சிராயுதமும், சிவபிரானுடைய மந்திர சக்தியுள்ள முத்தலைச் சூலாயுதமும், விஷ்ணுவினுடைய சக்கராயுதமும், ஆகிய இவைகளெல்லாம் வருகிறவேகத்தைப் பார்த்தேன். அதற்கு மிதற்கும் வெகுதாரதம்மிய மிருக்கிறது. இந்த மனுஷனுடைய அம்பைச் சகிக்கமாட்டாமல் நானதிகமாய் நொந்துபோனேன். என்னையல்லாமல் வேறே யாராவது அதைக்கண்ணுல் பார்க்கமாட்டுவார்களோ? சுடுகாட்டிற் பேய்க்கணங்களுடனே வாசம் பண்ணுகின்ற தன்மையைவகித்த சிவபெருமானுடைய எட்டுத் தோள்களும், இந்திரனுடைய இரண்டு தோள்களும், சர்வலோகங்களையும் தன்வயிற்றி லடக்கிவைத்துக்கொண் டிருக்கின்ற விஷ்ணுவினுடைய ஆயிரம் தோள்களும், இந்த மனுஷனுடைய ஒருவிரலின் வல்லமைக்கு ஈடுகொடுக்க மாட்டுவனவோ? கொடுக்கவே மாட்டா. திரிபுரங்களைச் சுட்டெரித்த பலம்பொருந்திய அந்த மேருவில்லும் இந்தவீரனுடைய வில்லுக்குமுன்னே அம்பென்று சொல்லவும் கூடுமோ? கூடாது. ஆகையால் - அதற்கிணையாகச் சொல்லுகிறதற்கு வேறேயொரு பொருளுங்கிடையாது.

வேதந்தப்பினுலும், அவனுடைய வில்லிலிருந்து வருகிற அம்புகள் தப்பமாட்டா. மகாவீரர்களுக்குள்ளே அந்த விஷ்ணுவானுலும் கார்த்தவீரியனுக்குச் சமானமாக மாட்டானென்று நான் எண்ணியிருந்தேன். அப்படிப்பட்ட கார்த்தவீரியனும் இந்த மனிதனுடைய தம்பியின் பாததூளிக்கும் சரியாகமாட்டானுனல், அவர்களெதிரே கலங்காத சித்தத்தையுடையவர்களாக நிற்கத்தக்க வல்லமைசாலிகள் யாரிருக்கிருர்கள்? மேலும்—அவனுடைய பாணங்கள் கோதண்டத்தினின்றும் புறப்படுகிறபோது பிரம தேவனுக் கொப்பாகவும், ஓடுகிற காலத்தில் காலாயிரம் - முடியாயிரம் - கையாயிரமுள்ள விஷ்ணுவுக்கு நிகராகவும், சத்துருக்களுடைய படையைச்சேர்ந்து அவர்களை நிராக்ஷேபமாகச்சம்ஹரிக்கும் காலத்திற் பிரளயகாலஉருத்திரமூர்த்திக் கொப்பாகவும் கண்டோர்சொல்லும்படியாக விருக்கும்.

ஐயா என் மூதாதையே! அதன் பெருமையைச் சொல்லுகிறதற்கு எத்தனைகாலம் செல்லும்? அற்பத்திலே நம்மாற் சொல்லிமுடியத்தக்கதோ? அந்தப்பாணங்கள் மேலேயிருக்கும் ஆகாசத்தையுந் தொளைத்துக்கொண்டு வருமானுல், அவைகளின் வல்லமைக்கு வேறேசாக்ஷியும் நான் சொல்லவேண்டுமோ? இன்னுநா னென்னென்று சொல்லமாட்டுவேன்? அந்த மனுஷனுடைய வில்லானது கிழக்கு—மேற்கு—வடக்கு—தெற்கு—பூமி—ஆகாசம் - மற்ற இடங்

கள்—இந்தத்திசைகளில் எந்தத்திக்கி லிருந்ததோ? இடதுகையிலிருந்ததோ? அல்லது வலதுகையிலிருந்ததோவென்று இன்னு நினைத்து நினைத்துப்பார்க் கின்றேன். அது என்மனதுக்குத் தோற்றப்படவில்லை.

கவி.

எற்றமொன்றில்லையென்ப தேழைமைப்பாலதன்றே
ஆற்றல்சால்கலுழனேதா னாற்றுமேயமரினாற்றல்
காற்றையேமேற்கொண்டானோ கனலையேகடாவினானோ
கூற்றையேயூர்கின்றானோ குரங்கின்மேற்கொண்டுநின்றான்.

அஃதிருக்கட்டும்: அவனுடைய வாகனத்தின் பெருமையை நான் என் னவென்று தெரிந்துசொல்லப் போகின்றேன்? அந்தக் கருடனும் யுத்தத்தில் இப்படி முனைந்து இடசாரி வலசாரி வலசாரி இடசாரியாகத் திரியமாட்டா ன். அந்த ஸ்ரீராமன் காற்றின்மேலேதா னேறியிருந்தானோ? அக்கினியை யேசெலுத்தினானோ? எமனையே வாகனமாகக் கொண்டானோ? என் றால், அப்படிக்கில்லை. ஒரு குரங்கின் பேரிலேதா னேறியிருந்தான். அது பெருமையுடைய தல்லவென்று சொன்னாற் புத்தியீன மல்லவோ? ஆகையா ல் அநேகமாய்ப் பேசித்திரிகிறதி லென்னவுண்டு? சாந்தத்திற் பூமியையொத்த இந்தச் சீதையானவள் அந்த ஸ்ரீராமருடைய மேனியையும் அவனுடைய செ ய்கைகளையுங்கண்ட கண்ணுக்கு, மன்மதனும் - நானும்—மற்றவர்களும் — நா யென்று மதிக்கும்படியாகவு மாவேமா? இந்திரன்-விஷ்ணு — சிவன்-பிர்ம்மா- ஆகியவிந்தப் பலவீனர்களாலல்லாமல் இந்த மனிதர்களால் நமக்கு நாசகாலம் வந்து முடிந்தாலும் நல்லதே: நாம் நல்ல பகையாளியைத்தான் பெற்றோம். இதுதான் இன்றைக்கு நடந்தசேதி அந்த மனிதனால் யுத்தக்களத்தில் நான் பட்டநிந்தையை என்னசொல்லப்போகிறேன். எனது வீரமும்புகழும்பெரு மையும் திரிலோகாதிபத்தியமும் பந்துவர்க்கத்தினரும் புத்திரர்களும் செல்வ மும் அவனது ஒருபாணத்தினது முன்பாவது நிற்காதையா என்பாட்டனே யென்று இராவணன்சொல்லி முடித்தான்.

மாலியவான் இராவணனுக்குச் சில அறிவுறுத்தல்.

கவி.

முன்னுரைத்தேனைவாளா முனிந்தனைமுனியாவும்பி
இன்னுரைப்பொருளுங்கேளா யேதுவுண்டெனினுமோராய்
நின்னுரைக்குரைவேறுண்டோ நெருப்புரைத்தாலுநீண்ட
மின்னுரைத்தாலுமொவ்வா விளங்கொளியலங்கல்வேலோய்.

இவையனைத்துங்கேட்ட பாட்டனாகிய மாலியவான் நெருப்பினுடைய ஒ ளிக்கும் மின்னலினது ஒளிக்கும் நிகராகாது பிரகாசிக்கின்ற வெற்றிமாலை யையுடைய வேற்படையையேந்திய வீரசிகாமணியாகிய இராவணா! இந்தச் சேதியெல்லாம் உனக்கு நான் முன்னமேதானே சொல்லியிருந்தேன், அதற் கு நீ என்பேரில் வீணாய்க் கோபம்பண்ணிக்கொண்டாய். இதுவுமல்லாமல்

உன் தம்பியாகிய விபீஷணனும் எத்தனையோ நல்லபுத்திகளை உனக்குச் சொன்னான். அதையும் கேளாமற் கோபித்துக்கொண்டு அவனையும் துரத்திவிட்டாய். எல்லாவிதத்திலும் உனக்கு நம்பும்படியான ஏதுக்களைப் படித்துப் படித்துக் காட்டியும், அவைகளை யெல்லாம் மெய்யென்று கேட்டாயில்லையே; அப்பா இராவணா! உன்பேச்சுக்குக் குறுக்கே பேசுகிறவர்களு முண்டோ? ஓ இராவணேஸ்வரா! மிகவும் சாஸ்திரவாராய்ச்சியிற்றேறி யெல்லாக் காரியங்களினுடைய உண்மையை யறிந்தவர்கள் ஒன்றைத் தீர்க்காலோசனைசெய்து சொன்னபோது, அது வருத்தப்படத் தக்கவைகளானாலும் பொறுத்துக்கேட்கவேண்டும். நீ சிறிதுங் கேட்காமற் போய்விட்டாய். இப்போது அந்த ஜகன் மாதாவாகிய சீதாபிராட்டியாரைக் கொண்டுபோய் விட்டுவிட்டால், நீ பிழைத்துப்போவாய். அப்படிச் செய்யாவிட்டால் உன்னுடைய கிளைகளும் - சுற்றமும் - வெற்றியும் - உரிமையும் - கல்வியும் - செல்வமும் - சேனையும் - இவை முதலானவைகளுடன்கூட நீயும் மாண்டுபோகிறது நிச்சயம்: நிச்சயம்: என்னுடைய வார்த்தையைப் பொய்யென்று யோசனைசெய்யவேண்டாம். நாளை நீயே காணப்போகின்றாய். என்று மாலியவான் சொன்னான்.

இராவணன் மகோதரன் துற்போதனையால் கும்பகருணனை நித்திரையினின்றெழுப்பி யழைத்துவரும்படி சிலஒற்றர்களையு மிருகங்களையு மல்லர்களையு மேவுதல்.

கவி.

ஆயவனுரைத்தலோடு மப்புறத்திருந்தானன்ற
மாயைகள்பலவும்வல்ல மகோதரன்கடிதின்வந்து
தீயெழநோக்கியெண்ணிச் சிறுமைநீசெப்பிற்றென்று
ஓயுறுசிந்தையானுக் குறுதபேருறுதிசொன்னான்.

இவ்வண்ணம் மாலியவானாகிய பாட்டன் சொல்ல இராவணன் கேட்டுக்கொண்டிருக்கும்போது கொஞ்சம் தொலைவில் இவைகளனைத்துங் கேட்டிருந்த மகோதரன் அதிசீக்கிரமாக ஓடிவந்து கண்களில் அக்கினிப்பொறி பறக்க விழித்து மாலியவானைப்பார்த்து ஐயா, உம்முடைய வயதையும் நடையையும் மேனியையும் பார்த்தால் மிகப்பெரியவராக விருக்கிறது. நீர்சொல்லும்வார்த்தைமாத்திரந்தான் சிறியதாயிருக்கிறது. இந்தச்சமயத்தில் இவ்வண்ணம் அற்பமான வார்த்தைகளைச் சொல்வது யாது? அது மிகநன்றாயிருக்கிறது: நன்றாயிருக்கிறதென்று சொல்லி, வீரத்தன்மை யிழந்து வெதும்பி வருந்துகின்ற மனத்தையுடைய இராவணனுக்குச் சில வுறுதிப்பாடாகிய வார்த்தைகளைத்தகாதனவாகச்சொல்லுகின்றான். ஓ இராவணேஸ்வரா! ஆராகினுமொருவர் ஒருகாரியத்தை இதுநன்மையென்று பிடித்தால், அதனாலே ஜெயம் வந்தாலும் - அல்லது அபஜெயமாகி மரணம்வந்தாலும் - அதைவிடாமல் முழுமையும் சாதிக்கிறதே உத்தமர்களுடைய செய்கையாகும். சொன்னசபதம்

தவறினவனுக்கல்லவோ இம்மையிற் பழியும், மறுமையில் நரகமு முண்டாவது. திரிபுரங்க ளெரிந்துபோம்படி ஒரு அம்பைப் பிரயோகம்பண்ணின சிவபெருமானும் - உலகங்களையெல்லா மோரடியாக அளந்தடக்கின அந்த மகாவிஷ்ணுவும் - உம்மோடு யுத்தஞ்செய்து தோற்றுப்போயிருக்க, இந்த மனுஷனுடைய போருக்கு நீர் பயந்திருக்கின்றது போலக் காணப்படுகிறதே: இதென்ன விந்தையாயிருக்கின்றது?

கைலாசகிரியை வேரோடு பேர்த்தெடுத்த ஓ மகானுபாவனே! ஒருவேளை வென்றவர் தோர்ப்பார். தோற்றவர் வெல்வார். எல்லாருக்கும் மேலாயிருந்தவர்கள் தாழ்வார்கள். தாழ்ந்திருப்பவர்கள் உயர்வார்கள். இது பிரபஞ்ச நீதியென்று உணர்ந்தவர்கள்தானே ஞானவான்களென்பவர்கள். சாமர்த்தியத்திற்குக் கரையுண்டா? அற்பமனுஷர்கள் செய்கின்ற யுத்தத்தைப் புகழுகிறீர்போலு மிருக்கின்றதே: நாமிப்போது சீதையை விட்டுவிடுவோமேயானால், நமக்கு வந்த இந்தப் பொல்லாங்குகளெல்லா நீங்கிவிடும். இல்லாவிட்டால் யுத்தஞ்செய்து பிராணனைவிடவேண்டும். இவ்விரண்டு மல்லாமல் வேறே ஒரு உபாயஞ் செய்கிறதிற் பிரயோசனமில்லை. நீர் இந்தப் பிரகாரமாக இவ்விடத்தில் தாமசமாக விருப்பதென்ன? உமதுமனதிற் கொண்டிருக்கின்ற கவலையை இப்போதே லக்ஷியஞ்செய்யாமல் விட்டுவிடும்.

அழியாத பெருமையையுடைய ஓ இராவணேஸ்வரா! இன்னம் சற்றுநேரம் தாமசஞ்செய்வீரானாற் பனிமூடியிருக்கின்ற சிறிய சமுத்திரஜலத்தைச் சூரியனானவன் கிரகித்துவிடுவதுபோல, இலங்கா பட்டணத்தையும் - நம்மையும் - கனிகளையுடைய விருக்ஷங்களுக்குச் சமானமாக்கி இந்த வானரசேனைகளெல்லாம் கூடிக்கொண்டு தும்சம் பண்ணிப்போடும். நீர் வருத்தப்பட்டுக்கொண்டு சோர்ந்திருப்பது தகுதியன்று. இந்தத் துன்பத்தை விட்டுவிடும். முன்னாலே சர்வலோக நாயகர்களான திரிமூர்த்திகளும் உமக்குத் தோற்றுப்போய்விட்டபிறகு, சமஸ்தமான தேவர்களும் உமக்கு ஏவல்செய்யும்படியாக இந்தத் திரிலோகங்களையும் ஏகச்சக்ராதிபதியாய் ஆண்டு வருகின்றீர். அப்படிப்பட்ட நீர் புல்லினுனியில் ஒட்டிக்கொண்டிருக்கின்ற பனிநீர்த்துளிக்குச் சமானமாகிய இந்த அற்பமனிதர்களை ஒரு லட்சியம்பண்ணி, உமக்கு இளையவனான கும்பகருணனை ஒரு திரணமாகநினைந்து இகழ்ந்துவிட்டீர். இஃதென்ன ஆச்சரியம்? நீர் அந்தக்கும்பகருணனை வரவழைத்து அந்த மனிதர்கள் பேரிற் சண்டைக்கனுப்பும். மிகுந்த பயங்கரமான மலையையொத்த அந்தக் கும்பகர்ணனுடைய சொரூபத்தை அவர்கள் பார்த்தமாத்திரத்தில், எங்கேயாவதோடி ஒளித்துக்கொள்ளுவார்கள்.

அப்படிக்கில்லாமல் எதிர்த்துச் சண்டைக்கு நிற்பார்களானால், ஒருவருடைய சகாயமுமில்லாமல் அந்தக்கும்பகர்ணன் மாத்திரமே சடைமுடியாளர்களான அந்தமனிதர்களுடைய உயிரைப் பரிகரித்துப் போடுவான். என்றிந்தப்பிரகாரமாக மகோதரனாற் சொல்லக்கேட்ட இராவணன் அதற்குட்பட்டு;

சமஸ்தமுந்தெரிந்த ஓ மகோதரனே! உன்னைப்போலச் சமயோசிதமாக எல்லாவற்றையும் சொல்லவல்லவர்களியாரிருக்கிறார்கள்? நீ சமஸ்தமானகாரியங்களையும் அறிந்திருக்கின்றாய். மேலும் - நீ என்னிடத்தில் வைத்திருக்கின்ற அன்போ இவ்வளவவ்வளவல்ல. ஆகையினாலே நல்ல உபாயம் சொன்னாய். என்று இராவணன் மனம்பேதித்து, நமக்கு ஈஸ்வரயத்தினத்தாற் கெடுதிகாலம் வந்து நேரிடுமேயானால் மத்தியில் வேறொன்றினாலே தடுக்கக்கூடுமோ?

கவி.

நன்றிதுகருமமென்னா நம்பியைநணுகவோடிச்
சென்றிவட்டருதிரென்றா னென்றலுநால்வர்சென்றார்
தென்றிசைக்கிழவன்றூதர் தேடினர்திரிவரென்னக்
குன்றினுமுயர்ந்ததோளான் கொற்றமாக்கோயில்புக்கார்.

ஐயா மகோதரனே! நீர் சொன்னது மிகவும் நன்மை நன்மையென்று தனது சமுகத்திலுள்ளவர்களாகிய தூதர்களை நோக்கி இக்ஷணமே அதிசீக்கிரத்திற் சென்று எனது பின்னவனாகிய தம்பியிருக்கின்றானே கும்பகருணன் அவனை அழைத்துக்கொண்டுவாருங்களென்றாக்கியாபிக்க, அவ்வார்த்தையைச் சிரந்தாங்கினவர்களாகிய நான்கு தூதர்கள் தக்ஷணதிசையில் யமனியென்னும் படைவீட்டிற் கதிபனாகிய இயமனது தூதர்கள் கும்பகருணனுடைய உயிரைக்கொண்டு போதற்குக் கும்பகருணனெங்கே யெங்கேயென்று தேடிவருவதுபோல் மலையினுமிக்க பலம்பொருந்திய உயர்ந்த தோள்களையுடையவனான கும்பகருணனுடையவெற்றிபொருந்திய அரண்மனையிற்சேர்ந்து, மகாமேருமலைக்குச்சமானமாகிய அந்தக் கும்பகர்ணன்சயனித்துக்கொண்டிருக்கின்ற பள்ளியறையினது மேகமண்டலத்தளாவிய வாயிலில்நுழைந்து, ஐயாகும்பகர்ணமகாராஜனே! நீர்விழித்துக்கொள்ளக் கடவீர்: நீர்விழித்துக்கொள்ளக்கடவீர், என்று தங்கள் கையிலேபிடித்துக்கொண் டிருக்கின்ற இருப்புலக்கையினாலே தலையிலடித்துச் செவியிற்குத்தினார்கள். பின்னுமந்தக் கொடுங்கண்ணனான கும்பகர்ணன் நித்திரை செய்கிறதைக்கண்டு கோபமுற்று, ஓ கும்பகர்ண மகாராஜனே! எந்தக்காலத்திலும் அழிவில்லாத ராட்சசர்களுடைய இன்பமான மாயவாழ்க்கையெல்லாம் அழிந்துபோகும்படி, உன்தமையனான ராவணன் புத்திபூர்வமாய்த் தெரிந்தே தீமையைச் சம்பாதித்துக் கொண்டார். நீர் இன்றைக்கு உயிர்நீங்கி மாண்டுபோவதே நிச்சயம். இன்னமுமக்கு உறக்கமேதுக்கு? எழுந்திருக்கக்கடவீர். என்று பற்பலவிதங்களைச் சொல்லிப் புரட்டிப் புரட்டி யெழுப்பிப் பின்னுஞ் சொல்லுகிறார்கள்.

கவி.

உறங்குகின்றகும்பகன்ன வுங்கண்மாயவாழ்வெலாம்
இறங்குகின்றதின்றுகா ணெழுந்திராயெழுந்திராய்
கறங்குபோலவிற்பிடித்த காலதூதர்கையிலே
உறங்குவாயுறங்குவா யினிக்கிடந்துறங்குவாய்.

ஐயா கும்பகர்ண மகாராஜனே! எவர்களாலேயும் துதிக்கின்ற தேவர்களையெல்லாம் இம்சித்தும், புவனநாயகியாகிய சீதாபிராட்டியாரைச் சிறையில் வைத்தும், எவர்களுக்கும் அருவருப்பான காரியங்களைச் செய்தும், இப்படி அனியாய வரசாக்ஷியைச்செய்கின்ற உங்களுடைய வஞ்சகம்பெற்றவாழ்வெல்லாம் அழிந்துபோகிறதை இன்றைக்குப்பார்க்க எழுந்திரும்: எழுந்திரும்: காற்றடியைப்போற் கிறுகிறுவென்று சுழன்றுகொண்டு வந்து எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற யமதூதர்கள் கையிலே நீர் நன்றாய்ச் சயனித்துக்கொண்டு உறங்கப்போகிறீரே இவ்விடத்திலுறங்கினல் யாது பயன் பெறுவீர்? என்றிப்படியாகப் பற்பலவிதமாகச்சொல்லி எழுப்பினர்கள்.

கவி.

என்றுசொல்லவன்னவன் னெழுந்திராமைகண்டுபோய்
மன்றறங்குமாலைமார்ப வன்றுயில்லெழுப்பலம்
அன்றுகொள்கைகேண்மினென்று மாவொடாளியேவினன்
ஓன்றின்மேலொராயிரம் முழக்கிவிட்டெழுப்புவீர்.

தங்களுடைய வல்லமையினலே எழுந்திராததைக்கண்ட அவ்வொற்றர்கள் திரும்பித் தசக்கிரீவனிடம் சென்று, ஐயா இராவணேஸ்வரா! வாசனையோடுங்கூடிய மாலையையணிந்த மார்பையுடையவரான உமதுதம்பியாகிய கும்பகர்ணன் எழுந்திருக்க வில்லையென்று சொன்னர்கள். இப்படி சொல்லக்கேட்ட ராவணன் அவர்களைப்பார்த்து, ஓ தூதர்களே! குதிரை - யானை - யாளி - இவை முதலானவைகளில் ஆயிரமாயிரமாகவேவி மிதிக்கவிட்டெழுப்புங்களென்று நியமித்தான். அந்தப்பிரகாரம் அவர்கள் அந்தச் சேனைகளைக்கொண்டு மிதிக்கச்செய்தும் அவன் எழுந்திராததினல் மறுபடியும்போய் இராவணனுக்குத் தெரியப்படுத்த, மிகுந்த சாமர்த்தியமுள்ளவர்களான நீங்கள் உங்கள் சைனியங்களாகிய இராக்ஷச மல்லர்களோடுகூடப் போவீர்களென்று ஏவினன்.

இராவணனுடைய ஒற்றர்கள் இலட்ச மல்லர்களோடு சென்று கும்பகருணனை நித்திரையினின் றெழுப்புதல்.

கவி.

சென்றனர்பத்துநூற்றுச் சிரியவீரரோடி
மன்றலங்தொங்கலான்றன் மனத்தனின்வருத்தமாற
இன்றிவன்முடிக்குமென்ற வெண்ணினரெண்ணியீண்டக்
குன்றெனவுயர்ந்ததோளான் கொற்றமாக்கோயில்புக்கார்.

அந்தப்பிரகார மகாபலமுள்ள வீரர்களான இலட்சம்பே ரிராட்சசமல்லர்கள் ஓடிப்போய் இராவணனுடையமனதிலுள்ள வருத்தநீங்க இன்றைக்கிவன் வானரர்களைச் செயித்துக் காரியத்தை நிறைவேற்றுவானென்று அவனையெழுப்ப நினைத்து, மலையைப்போலும் உயர்ந்தநீண்ட தோள்களையுடைய அந்தக் கும்பகர்ணன் சயனித்துக்கொண் டிருக்கின்ற வெற்றிப்பிரதாப மாளிகையில் நுழைந்தார்கள். இந்தப்படி நுழைந்த மிகுந்தபலமுள்ள வீரர்

கள் கும்பகர்ணனுடைய திறந்தவாயினிலிருந்து புறப்படுகின்ற சண்டமாருதத்தையொத்த சுவாசத்தி லகப்பட்டுக்கொண்டு, வருகிறதும் போகிறதுமாய் உழன்று திகைப்படைந்து தத்தளித்து, அந்தச்சுவாசத்தி லிருந்தும் தப்பித்துக்கொள்ளக் கூடாமல் ஒருவர்கையை யொருவர் பிடித்துக்கொண்டு, தங்களுக்குண்டாகிய அளவில்லாத பலத்தினாலே நெக்கிக்கொண்டு, அந்தப் பெரிய சுவாசம்வரும் வழியைக்கடந்து அப்பாற்சென்றார்கள்.

அப்படியாகப் போனவர்கள் எப்படியேனும் அவனுடைய பெரியநித்திரையை எழுப்பவேண்டுமென்ற எண்ணங்கொண்டவர்களாகி மறுபடியும் வேறொருவாயிலில் நுழைந்து, நாமெல்லாரும் இன்றைக்கிவனை எழுப்புகிறதற்கு என்ன உபாயம் செய்யலாமென்று யோசித்து, அவனுடைய பெரியவாயையுமூக்கையுங்கண்டு உடல்நடுங்கி, அவனைக்கிட்டித்தொடுகிறதற்கும் பயந்து, அவனுடைய பெரிய குகைக்குச் சமானமாகிய காதில் சங்கு-தாரை-பூரி-முதலாகிய நாதங்களால் உகாந்தகால பேரிடியைப்போல கோஷமுண்டாகச் செய்தும், அநேககோடி தண்டாயுதங்கள் - சம்மட்டிகள் - குந்தாயுதங்கள் இவைகளைப் பழகுவதிற் சாமர்த்தியமுள்ளவர்க ளெல்லாரும் கூட்டம் கூட்டமாகக்கூடி அவனுடைய தாடையிலும் - சந்துமுட்டுகளிலும் - மார்பிலும் - தலையிலும் - பலங்கொண்டமட்டும் ஓங்கியடித்தும், குத்தியும், மொத்தியும், எற்றியும், கையோய்ந்து மெய்களைத்து சக்தியற்றுநின்று; உடனேசிலர்போய் இராவணனுக்குத் தெரிவித்தார்கள். அதற்கவன்பெரிய குதிரைப்படைகளை யெல்லாம் அதிசீக்கிரத்திற் கூட்டங்களாகக்கொண்டுபோகும்படி நியமித்தான்.

அந்தப்படியே அவர்கள் சவாரி செய்யத்தக்க ஜோடிகளோடு ஆயிரங்குதிரைகளை ஆயிரம்வீரர்கள் வேகமாய்ச் செலுத்திக்கொண்டுவந்து, பெருந்தூக்கங்கொண்டு உறங்குகிற கும்பகர்ணனுடைய அகன்ற மார்பின்மீது வருத்தமுண்டாகும்படியாக வேற்றி, அந்தக்குதிரைகளை நடத்துவித்தும் - ஓடச்செய்தும் - மிகுந்தவேகத்துடனே வையாளி போகச்செய்தும் - ஆர்ப்பரித்தார்கள். இப்படியவர்கள் ஆர்ப்பரித்துச்செய்கிற செய்கையெல்லாம் தான் அயர்ந்து தூங்குவதற்கு உடம்பினைக் குத்துவதுபோல நினைத்துக்கொஞ்சமும் உணர்ச்சியடையாமல் அப்படியே தூங்கிக்கொண் டிருக்கக்கண்டு, விரைவா யோடிப்போய் நெருங்கிய புஷ்பங்கள் கட்டியிருக்கின்ற வெற்றிமாலையையணிந்த ராவணனுடைய வீரகண்டாமணிதரித்த பாதத்தில்விழுந்து, ஐயாராவணேஸ்வரா! கும்பகர்ணனை எழுப்பும்படியான உபாயங்களில் ஒன்றல்ல: அனேக கடினமானவிதங்களெல்லாம்செய்து எங்களுக்குக் கையும்-மெய்யும் - பலமும் - குதிரைகள் கால்களும் - ஓய்ந்துவிட்டனவேயொழிய, அவரை எழுப்பும்படியாக எங்களால் ஆகவில்லை அவரை எழுப்பத்தக்க உபாயங்கள் இன்னுமேதேனு முண்டாயிருந்தால் தேவரீர் எங்களுக்குச்சொல்ல வேண்டுமென்று விண்ணப்பம் செய்தார்கள்.

அப்போது ராவணன் அவர்களைப்பார்த்து, ஆ ஒற்றர்களே! ஓ மல்லர்களே! இவ்வளவுதானு உங்கள்சாமர்த்தியம்? சக்கரங்கள்பூட்டி மணிகளால் அலங்கரித்திருக்கின்ற பெரியதேர்ப்படைகள் தன்மீதுபெயர்ந்துவருகிற காலத்திலும் உடல் அசையாதவனும், அதிகபலம்பொருந்திக் கட்டழியாது, சூலத்திலும் -மழுவினுலும் - வாளினுலும் - சம்மட்டியாலும் - ஓங்கிக்குத்தி வெட்டியெறிந்து துடிக்கும்படி அடித்தபோதிலும் தன்னுடையதொடையாவது சற்றேனுமசையாதவனுமாகியவென்தம்பி கும்பகர்ணனைநீங்களெவ்விதத்திலாவதுநித்திரையைப்போக்கி அழைத்துவாருங்களென்று உத்தரவுசெய்தான்.

கவி.

என்றலுமேயடிவணங்கி யீரைஞ்ஞூறிராக்கதர்கள்
வன்றொழிலாற்றுயில்கின்ற மன்னவன்றன்மாடணுகி
நின்றிரண்டுகைதப்புமுற நெடுமுசலங்கொண்டடிப்பப்
பொன்றினவனெழுந்தாற்போற் புடைபெயர்ந்தங்கெழுந்திருந்தான்.

அந்தவார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் அந்த ஒற்றர்களும் ஆயிரம் ராட்சசமல்லர்களும் அவனுக்குத் தெண்டனிட்டுச்சென்று, அதிகபலத்திற்காக நித்திரைசெய்கின்ற கும்பகர்ணமகாராஜனைக் கிட்டிநின்று, இரண்டு கன்னத்திலு நீண்ட இருப்புலக்கைகளைக் கொண்டு கைகொண்ட மட்டுக்கும் ஓங்கியோங்கி யடித்தார்கள். அப்படியடித்தபோது மூன்றுலோகத்தவர்களு நடுங்கும்படியாகவும், அஷ்டதிக்குகளி லிருக்கின்ற பலம்பொருந்திய பருத்த துதிக்கைகளையுடைய எட்டுயானைகளும் நிலைபெயராத தத்தம் நிலையிலிருந்து பெயர்ந்துபோகவும், சந்திரசூரியர்கள் திகிலடையவும், தாமரைமலரை ஆசனமாகவுடைய பிரமதேவனும் - திருப்பாற்கடலைச் சயனமாகவுடைய விஷ்ணுவும் - கைலாசகிரியை வாசஸ்தலமாகவுடைய சாம்பசிவனும் - ஆகிய விவர்கள்முதலான சமஸ்ததேவர்களு நடுக்கமுற்று ஏக்கமடையவும், செத்தவனுயிர்பெற்றெழுந்ததுபோல அந்தக்கும்பகர்ணன் விழித்துக்கொண்டான்.

இப்படி மேகங்களைப்பற்றிப் பிழியும்படியான பெரியகைகளையும் - ஆகாசத்தை அளவிடும்படிப்பருத்த ஸ்தூல ஆகாரத்தையும் - கடலிலும் பெரிதாகிய இரண்டுகண்களையும் - அளவிடக்கூடாத பெருமையுமுடைய கும்பகர்ணனுகிய ராவணசகோதரன் விழித்துக்கொண்டு, பூலோகத்தையெல்லாம் தமது திருவடிகளாலளந்து விஸ்வஸ்வரூபம் கொண்டுநின்ற சாட்சாது திரிவிக்கிரம மூர்த்தியைப்போல ஓங்கியெழுந்து நின்றான்.

கும்பகருணன் நித்திரை தெளிந்தெழுந்து ஆகாரமுண்ணல்.

கவி.

உறக்கமவ்வழி நீங்கியுணத்தகும்
வறக்கமைந்தன வூனொடுவாக்கிய
நறைக்குடங்கள் பெருஞ்சகடைநக்குலான்
இறக்கநின்ற முகத்திணையெய்துவான்.

ஆறுநூறு சகடத்தடிசிலும்
நூறுநூறு குடங்களுநுங்கினன்
ஏறுகின்ற பசியையெழுப்பினன்
சீறுகின்ற முகத்திருசெங்கணன்.

அவனப்படிக்கு நித்திரையைவிட் டெழுந்தமாத்திரத்தில் உண்ணும்படியாக வறுத்துச்சுட்ட மாமிசங்களோடுகூடச் சிலகள்ளுக்குடங்களை வழக்கப்பிரகாரங்கொண்டுவந்து கொடுக்கப் பெற்றுக்கொண்டுண்டும் தன்னுடைய உலர்ந்த கடைவாயை நக்கிக்கொண்டு, களைமாறின சாமுகத்தை யுடையவனாகி, பிறகு அறுநூறுவண்டிகளிற் கொண்டுவந்த சோறும் — பதினாயிரங்குடக்கள்ளும் — தட்டாதபடி உண்டான். அப்படியுண்டும் தனது மிகுந்தபசியாறாதவனாகி, இரண்டு கண்களினு நெருப்புப்பொறிபறக்க அவ்வண்டிகளிற்கட்டிவந்த ஆயிரத்திருநூறு கறுத்த எருமைக் கடாக்களையும் ஒருலக்ஷியம் வையாமற் சிறுதிண்டியாகத் தின்றுவிட்டு, அதுவும்போதாமல் இன்னமும் அதிக ஆகாரங்களைக் கொண்டுவந்து கொடுங்களென்று கூறி, இடிகளைப்பிடித்துக்கையினாற்பிசைந்து நெருப்புப்பற்ற வைக்கும்படியான மகாகோபத்தை யுடையவனாய் அவர்களைப் பார்த்துக்கொண்டு படுக்கையிலுட்கார்ந்திருந்தான்.

தானுட்கார்ந்தகாலத்தில் இராவணனாகிய தனது தமயன் எழுந்து நிற்பதற்குச் சமானமான தூலதேகத்தையுடையவனாகிய கும்பகருணன் பெரிய கடலினலைகள் நெறித்ததுபோலப்புருவங்கள்நெறித்த நெற்றியையுடையவனாகி, குடித்தரத்தம் தன்கடைவாயில் வடியும்படியாக உட்கார்ந்தபடியே தூங்கினான். இப்படியாகக் கும்பகருணன் மீட்டும் கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்தபடியே தூங்கவாரம்பித்ததைக்கண்ட ஒற்றர்களும்-மல்லர்களும் - என்ன செய்வார்கள் பாவம்: சற்றுநேரம் ஒன்றும் தோன்றாதவர்களாகி, யாவரும் ஒருமிக்கச்சேர்ந்து, ஐயோ! கடல்போன்ற ரத்தங்களுடனேகலந்த மாமிசங்களை எலும்புந்தோலு நீக்கி வாரிவாரி யுண்ணுகின்ற ஆகாரம்வேண்டுகிறவனும், சூரியனைப்போலொத்த வஜ்ஜிரகங்கணங்களைத்தரித்த பருத்த கைகளை யுடையவனும், கருங்காலிக் கட்டைபோல் வைரம்பற்றிய கால்களில் வீரகண்டாமணியைத் தரித்தவனும், மிகுந்தபசி நோய்க்கு மருந்தாக வேலாயுதமும் - இருப்புக்கழுமுட்களும் - அரிவாளும் - தோல்வியடையும்படியானதன் பற்களைக்கொண்டு யானைகளுடைய கொழுத்த மாமிசங்களைத் தின்று வெறிநீங்காத மிகுந்த கள்ளைக்குடிக்க அதிக ஆசையுள்ளவனுமான் இவன்.

அன்றியும் - ஒருசூலாயுதத்தைப் பிடித்துக்கொண்டிருக்கின்ற உயர்ந்த தோள்களை யுடையவனும், சூல்கொண்ட மேகம்போன்ற காத்திரமுள்ள தோற்றத்தை யுடையவனும், இராத்திரிபோலு மேனியையுடையவனும், அந்தகாரம்பொருந்தியமனதையுடையவனும், சத்திக்கின்றபல்விதகழல்களைத் தரி

த்திருக்கின்ற பாதங்களையுடையவனும், தேகமெல்லா நெறிப்புற்றிருக்கின்ற செம்பட்டமயிரை யுடையவனும், தேவேந்திரனைப் பற்களுதிரும்படியாக வடித்த தனது கையினாலே சொர்க்கலோகத்துமதிலு மிடிபட்டுப் பூமியில் விழும்படியாகப் பெயர்த்துத் தள்ளினவனும், ஸ்திரீகளெல்லாரும் வயிற்றைப் பிசைந்துகொண்டு பயந்துபோய் ஒளித்துக்கொள்ளும்படியாக கழுமுனைகளை வரிசையாக வைத்ததுபோன்ற பற்கள்காணப்படுகின்ற வாயையுடையவனும், உடல்கிடந்து நித்திரை செய்யும்போது தேவர்களுக்கு முழுப்பிராண வாயுவும் குடலிற்கிடந்திருக்க வொட்டாமற் பயங்கொள்ளச் செய்யத்தக்க வலியையுடையவனு மானவன் இவன்.

மேலும் - பூமியிற்கிடந்த கடல் நின்றதுபோலவும் - அதன்மேலில் மிகுந்தவெப்பமான வடவாமுகாக்கினி எரிகிறதுபோலவும் - கறுத்தமேனியும் தலையிற் செம்பட்டமயிரு முடையவனும், அஷ்டதிக்குகளையும் ஜெயம்பெற்ற இராவணன் கோபிக்குங்கால் மிகுந்த கிரணங்களையுடைய சூரியனு மக்கினியுங்கண்டு மனங்கலங்கிப் பதுங்கியோடி யொளித்துக்கொள்ளும் பெரியமலையினது குகைத்துவாரம்போன்ற மிகுந்த நித்திரை மயக்கமுள்ள கண்களையுடையவனும், மூங்கில்கள்பொருந்திய பெரிய மலையில்வசிக்கத்தக்க யானைகள் தமதிடமென்று நினைத்து உறங்கும்படியான நீண்ட ரோமராசியுள்ள மார்பையுடையவனும், வந்துசேர்கின்ற பிராணிகளுக்கு ஆதாரமான மலைமுழைபோன்ற மூக்கையுடையவனும், பாம்புகள் தங்கும்படியான செவிகளையுடையவனுமாகிய கும்பகருணனைப் பார்த்துயோசிக்கின்றார்கள்.

கும்பகருணன் தூதுவர் வார்த்தையைக்கேட்டு இராவணன் சமுகம்வருதல்.

கவி.

கூயினனும்மு னென்றவர்கூறலும்
போயினனன்னகர் பொம்மென்றிரைத்தெழ
வாயில்வல்லை நுழைந்து திதொடும்
கோயிலெய்தினன் குன்றனகொள்கையான்.

நிலைகிடந்த நெடுமதிட்கோபுரத்
தலைகிடந்த விலங்கையரண்ணலைக்
கொலைகிடந்தவேற் கும்பகருணனேர்
மலைகிடந்தது போலவணங்கினன்.

இவனை நாமெல்லோரும் அளவற்ற பிரயாசத்தினால் இவ்வாறெழுப்பியும் மீட்டும் கண்களைமூடிக்கொண்டானே: இனியிதற் கென்செய்வோமென்று எல்லோரும் ஒரேகூச்சலாய் ஒருமித்துக்கூவி அவன்கண்களை விழிக்கச்செய்து, ஐயா கும்பகருண மகாராஜனே! உம்முடைய தமயனாகிய பிரதாபலங்கேஸ்வரன் உம்மை யழைத்துக்கொண்டு வரச்சொன்னாரென்று சொன்னார்கள். உடனே பெரியமலைக்குச் சரியொத்த கடினமான தேகத்தை

யுடைய கும்பகர்ணன் இலங்கையி லுள்ளவர்களெல்லாம் கோவென்றரசப் திக்க அதிவேகமாய்ப் புறப்பட்டுக் கோட்டைவாயிலில் நுழைந்து, சந்திரமண்டலபரியந்தம் அளாவிக்கொண்டிருக்கிற இராவணனுடைய அரண்மனையின் வாசலைச் சேர்ந்து, மதில்களாற் சூழப்பட்ட பலநிலைகளமைந்த கோபுரத்தை யுடைய மாளிகையின் மேல்நிலையிற் சயனித்துக்கொண்டிருக்கின்ற தனது தமயனைக் கண்டு அநேகம் பேர்களைக்கொலைசெய்து ஜெயம்பெற்ற வேலாயுதத்தையுடைய அக்கும்பகர்ணன் ஒருபெரிய மலைவிழுந்தது போலச் சாஷ்டாங்கமாக விழுந்து தெண்டனிட்டான். நின்றுகொண்டிருந்த ஒருமலையானது தன்னிடத்திற் பிரசண்ட வேகத்தோடும் வந்த மற்றொருமலையைத் தழுவினதுபோல, தசக்கிரீவனாகிய ராவணனெழுந்து தனது வல்லமைபெற்ற துணைவனான மூத்ததம்பியை இருபதுகைகளினாலும் வாரியெடுத்து மார்போடுதழுவி, தன்னுடன்கூட உட்காரவைத்துக் கொண்டான்.

உடனே யந்த ராவணன் நித்திரை சோகத்தோடிருக்கின்ற கும்பகருணனுக்குக் குடங்குடமாக நிரப்பிவைத் திருக்கின்ற கள்ளையும் இரத்தங்களையும் குடிப்பாட்டி, நான்குதிசைகளிலும் சூழ்ந்திருக்கின்ற கடல்களினுரைக்குச் சமானமாகிய வெள்ளைப்பட்டு வஸ்திரங்களையுடுத்தி, கிரணக்கூட்டங்களுடன் பலபக்கங்களிலும் ஒளிவீசிக்கொண் டிருக்கின்ற பற்பல ஆபரணங்களைத்தரித்து, முன்னம் அதிகபலமுள்ள இந்திரனானவன் தானேறி நடத்திக்கொண்டுவந்த ஐராவத மென்கிற யானையோடுகூட இராவணனுக்குத் தோற்றோடும்போது சோர்ந்து விழுந்துவிட்ட பிரகாசமுள்ள ரத்தினங்களிழைத்த நெற்றிப்பட்டத்தை வெற்றிப்பட்டமாக அவனுடைய நெற்றியிற்கட்டி தேகமுழுது மின்னலைப்போலப் பிரகாசிக்கும்படியாகக் குங்குமச்சேறு பூசப்பட்டிருக்கின்ற மத்தகஜம்போல நன்றாய் விளங்கும்படி தெய்வமணம் வீசுகின்ற செஞ்சந்தனக்குழம்பை அவனுடம்பெல்லாம் பூசினான். மேலும் - காலகோடிவிஷமானது மேலெழுந் துபரந்ததுபோல உயர்ந்து ஆகாசத்தை யளாவும்படியாக நீண்ட அவனுடைய மார்பினிடத்தில், அக்கினிக் கொப்பாகிய திருமேனியையும் அஷ்டபுஜங்களையு முடைய சாம்பசிவமூர்த்தி ரிஷபவாகனரூடராய் வந்து அருளிய கவசத்தை யணிந்தான்.

இப்படி யிராவணன் சிங்காரிக்கும்போது கும்பகர்ணனுடைய மின்னற்கொடிபோல நீண்டுசிவந்திருக்கின்ற புருவமும் - ஆகாசத்தைத் தொட்டுக்கொண் டிருக்கின்ற தோளும் இடந்துடிக்கக்கண்டு, அண்ணா இராவணேஸ்வரா! என்னகாரணத்திற்காக இப்படிப்பட்ட அலங்காரங்களை ஆரம்பித்துச் செய்கின்றீரென்று கேட்டான். அதற்கிராவணன், தம்பீ! மிகுந்த வானரசைனியங்களுடனே இரண்டுமனிதர்கள் கெர்வித்து நம்முடைய கோட்டையைச் சுற்றி முற்றுகைபோட்டுக்கொண் டிருக்கின்றார்கள். நீபோய் அவர்களுடைய உயிரையுண்டு முடித்துவிடென்றான். அப்போது கும்பகர்ணன் - தமயனாகிய இராவணனுக்குத் தெண்டனிட்டுச் சொல்லுகின்றான்.

கும்பகருணன் இராவணனுக்குச் சிலஅறிவுறுத்தல்.

கவி.

ஆனதோவெஞ்சம மலகில்கற்புடைச்
சானகித்துயரினந் தவிர்ந்ததில்லையோ
வானமும்வையமும் வளர்ந்தவான்புகழ்
போனதோபுகுந்ததோ பொன்றுங்காலமே.

அண்ணா பிரதாபலங்கேஸ்வரா! கொடியயுத்தம் வந்துவிட்டதோ எண்ணற்கரிய பதிவிரதாசிரோமணியாகிய சீதாபிராட்டியாருக்கு மிகுந்த கொடுமைவாய்ந்த சிறையினாலாகிய துக்கமானது இன்னும் நீங்கவில்லையோ? தேவலோகமும் பூலோகமும் பரந்துயர்ந்து வளர்ந்த கீர்த்தியானது நம்மைவிட்டொழிந்ததோ? நாமெல்லாம் நமது வமிசத்தோடு இறக்குங்காலம் வந்துவிட்டதோ? மலைகளின் வலியையும் - உலகங்களின் வலியையும் - இவ்வளவென்று வரம்பிட்டுச் சொல்லக்கூடுமானாலும் அளவு சொல்லக்கூடாத ஸ்ரீராமன் தோள்வலியை நீர் வெற்றிகொள்ளலா மென்பது மிகவும் அழகு பெற்ற சீதாபிராட்டியின் திருமேனியைத் தழுவலாமென்று வெறுவாய் மெல்லுவதுமாகிய இந்த இரண்டு முடியாதகாரியங்கள். புலஸ்தியப் பிர்ம்மாவின் வழியாக முதலிலே உற்பத்தியாகி யதார்த்த தர்மங்களைச் செய்துவந்த நம்முடைய குலத்தினியல்பை அழித்துவிட்டீரே: இப்படிப்பட்ட உமக்கு வெற்றியும் கைகூடுமோ? உம்முடைய பலமெல்லா மழிந்துபோகு மென்பதற்குச் சந்தேக மெள்ளளவுமில்லை.

ஓ அண்ணா! நிலத்தின்சுபாவ மெப்படியோ? அப்படியே அதைச்சார்ந்த நீரின்தன்மையு மிருக்குமென்பதுபோல, நம்முடைய ராக்ஷச தர்மமே மேலிட்டுவிட்ட தல்லவா? இனி இந்திரனுக்கு அரசும் வெற்றியும் கொடுத்துவிட்டீர். உம்மையும் உமது புத்திரமித்திர களத்திராதிகளாகிய அளவற்ற பந்துக்களையும் அழித்துப்போட்டீர். அநேகர்களாகிய ராக்ஷசர்களை யெல்லாம் கொன்று நீக்கிவிட்டீர். இனி உமக்கு நல்லகதியுண்டாகப் போகிறதில்லை. உமக்குத் தர்மமும் பயந்து ஒளித்துக்கொண்டது. இந்தத் தருமந்தான் உமக்கழியாத மிகுந்த வல்லமையையும், செல்வங்களையும், நல்ல யௌவனத்தையும் கொடுத்திருந்தது. அப்படிப்பட்ட தருமத்தைவிட்டு அழியப்போகின்ற உம்மை வேறே யாரெடுத்து நிலைநிறுத்தப் போகிறார்கள்? அடைக்கலமும், தருமமும், நல்ல நடக்கையும், சத்தியவாக்குமாகிய விவைகளை யுடையவர்களே குறைவில்லாமல் எப்போதும் நீடித்து வாழ்வார்கள். அப்படிக்கில்லாமல் வஞ்சனையும், பாவமும், பொய்யு நிறைந்திருக்கின்ற நாம் அழிந்துபோகிறதற்கு ஒருதாழ்ச்சியுமுண்டோ?

ஓ பிராதுவே! தம்முடைய காலினாலே இந்தக் கருங்கடலைத் தாண்டிக் காற்றைப்போல வரும்படியான குரங்குகளு மிருக்கின்றன. சீதையும் நம்முடைய லங்கையைவிட்டுப் போகவில்லை. வாலியினுடைய மார்பைப் பிளந்து

கொண்டுபோன அம்பைப்போலொத்த வல்லமையுடைய ஸ்ரீராமபாணங்களு மிருக்கின்றன. அதற்குலட்சியமாக நாமுமிருக்கின்றோம், இனி நடக்கப்போகின்ற காரியங்களுக்கு ஏதேனுமொரு குறையுமுண்டாகுமா? இப்படியாக கும்பகர்ணன் இவைபோலின்ன மநேககாரியங்களைப் படித்துச் சொல்லி, பின்னு மிராவணனைப்பார்த்து, நானுமக்கு ஒன்று தெரிவிக்கின்றேன். அதை அங்கீகரித்துக் கொள்ளுவீராயின் அதனால் மிகுந்த நன்மையுண்டாகும். அப்படி அங்கீகரித்துக்கொள்ளாவிட்டால் நீர் செத்ததாகவே தீர்மானம் செய்துகொள்ளும். ஐயா இராவணேஸ்வரா! சீதாபிராட்டியைக் கொண்டுபோய் விட்டு, ஸ்ரீராமருடைய பாதத்தில் விழுந்து, உம்முடைய உண்மையான தம்பியாகிய விபீஷணனோடு சிநேகங்கொள்வதுதான் நீர் தப்பிப் பிழைப்பதற்குத்தக்க நல்லவழியாகும். அப்படிக்கில்லாவிட்டால் செய்யவேண்டிய உபாயம் வேறொன்றிருக்கின்றது; அதையும் தெரிவிக்கிறேன் கேளும். ஓ என் முன்தோன்றலே! வரிசை வரிசையாக உம்முடைய சைனியங்களை அவர்கள்பேரில் யுத்தத்திற்கு அனுப்பும். அவைகளெல்லா மழிந்துபோன பிறகு நீர் மாத்திரமே துக்கப்பட்டுக்கொண் டிருப்பது நியாயமல்ல. உம்முடைய பலமெல்லாங்கொண் டெதிர்த்து அவர்களோடு யுத்தஞ்செய்வதுதான் காரியசித்தியென்று உபாயஞ்சொன்னான்.

கும்பகருணன் சொல்லிய நீதி வார்த்தையை இராவணன் மறுத்தல்.

கவி.

மானுடரிருவரை வணங்கிமற்றுமக்
கூனுடைக்குரங்கையுங் கும்பிட்டுய்தொழில்
ஊனுடையும்பிக்கு முனக்குமேகடன்
யானதுமுடிக்குவே னெழுதிபோதியால்.

அதைக்கேட்ட ராவணன் — ஆ கும்பகர்ணா! ஓ என் பின்தோன்றலே! இரண்டு மனிதர்களை வணங்கிக் கூனலான குரங்குகளையும் கும்பிட்டு வயிறு வளர்த்துப்பிழைக்கிறசெய்கை, உன் தம்பியாகிய விபீஷணனுக்கும் உனக்குமே தகுதியானதாகும். நானப்படிச் செய்யமாட்டேன். நீ யெழுந்துபோய்விடு. உன்னை நான் கூப்பிட்டது இனி நடக்கப்போகிற காரியத்தைத் தெரிந்துகொள்வதற்காகவல்ல. அற்பபலத்தை யுடையவர்களான அந்த மனிதர்களைப்போய்க் கொல்லுவதற்கே உன்னை நானழைப்பித்தது. என்புத்தியைப் பார்க்கிலும் அதிக அறிவுடையமந்திரி நீயல்ல. நீ இப்போதே அவர்களுக்குப்பயந்துவிட்டாய். உன்னுடைய வீரத்தன்மை பயனற்றதாகப் போய்விட்டது. மிகுந்த பலத்தோடு செய்யவேண்டிய யுத்தத்திற்குத் தகுதியான அதிகமாமிசமும் - கள்ளும் — சாப்பிட்டாய். அஃதிருக்கட்டும் - நீ இப்போதே கண்ணைமூடிக்கொண்டு இரவும் பகலுமாக நித்திரை செய்யும்படியாகப் போய்விடு. நீ சண்டைசெய்யத்தக்க யோக்கியனல்ல.

ஓ சாரணர்களே! என்னுடைய தேரையும் ஆயுதங்களையும் கொண்டுவாருங்கள். எல்லாரும் புகழ்ந்து சொல்லப்பட்ட எமனும் என்னோடு வந்து எதிர்க்கட்டும். தேவலோகத்தி லுள்ளவர்களும், பூலோகத்திலுள்ளவர்களும், இன்னுமற்ற யாவர்களும் அந்தக் கைவல்லமையுடைய இரண்டு சிறுமனிதர்களுடனே சேர்ந்துகொண்டு; எல்லாரும் என்னோடு சண்டைசெய்யட்டும். நானே யுத்தத்திற்குப் போகிறேனென்று புறப்பட்டான். அதைக்கண்ட தம்பியாகிய கும்பகர்ணன் அவனுடைய பாதத்தில் விழுந்து வணங்கி, நான் சொன்னதைப் பொறுத்துக் கொள்ளுமென்று பலம்பொருந்திய நீண்ட சூலாயுதத்தை வலது கையில் தாங்கி, அண்ணா! இன்னமொரு வார்த்தையிருக்கின்றது. அதனையும் சொல்லுகிறேன் கேட்டுக் கொள்ளுமென்று சொல்லுகின்றான்.

ஓ எனது ஜேஷ்டசிகாமணி! நானிப்பொழுதுபோய் ஜெயித்துவருவேனென்று எண்ணங்கொள்ளவில்லை. விதியானது என்பிறகே நின்றுகொண்டு பிடரியைப்பிடித்து நெட்டித்தள்ளுகின்றது: நான் யுத்தகளத்தி லிறந்துபோய் விடுவேன். நான் இறந்து போனதின் பிறகாவது நீர் நன்மையைப் பெறும்படி சந்தோஷத்துடனே சொர்னச்சாயையோடும் கூடியிருக்கின்ற தோள்களை யுடைய சீதாபிராட்டியைக் கொண்டுபோய் விட்டுவிடும். என்னையெப்போது ஜெயிக்கின்றார்களோ? பிறகு உம்மையும் ஜெயித்து வெற்றிபெறுவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. நீர் பின்னாலோசனைசெய்கிறது புத்தியீனமாகும். ஆகையால் - சீதாபிராட்டியை இன்றைக்கே கொண்டுபோய் விட்டுவிடுகிறது உமக்குத் தவத்தைப்பார்க்கிலு மிருந்த எஜஸைத் தருவதாகும். இந்திரனுக்குப் பகைவனாகிய இந்திரஜித்தென்னும் உன்னுடைய குமாரன், ஸ்ரீராமனுடைய தம்பியாகிய இலட்சுமணன் பிரயோகிக்கின்ற மந்திராஸ்திரத்தினாலே சாகப்போகிறது சத்தியமாகும். ஓ அண்ணா! இனி நடக்கப்போகின்ற யுத்தத்தில் உமக்கிப்போதிருக்கிற சேனைகளல்லாமற் பின்னு மெத்தனைசேனைகள்வந்து தெய்வானு கூலத்தாற் கூடினாலும், அத்தனையும் காற்றிற்பறக்கின்ற புழுதிபோலாகப் போகின்றன. ஆகையாலே நீர் தகுந்த ஆலோசனை செய்து, உமக்கு யுத்தமான மார்க்கத்தைச் செய்துகொள்ளும்.

கும்பகருணன் தமயன்மேல் மனஸ்தாபத்தோடு இராமபிரானிடம் சண்டை செய்ய வெளிப்படல்.

கவி.

இற்றைநாள்வரைமுதல் யான்முன்செய்தன
குற்றமுமுளவெனிற் பொறுத்திகொற்றவ
அற்றதான்முகத்தினில் விழித்தலாரிய
பெற்றனென்விடையெனப் பெயர்ந்துபோயினன்.

அவ்வழியிராவண னனைத்துநாட்டமும்
செவ்வழிநீரொடுங் குருதிதேக்கினன்
எவ்வழியோர்களு மிரங்கியேங்கினர்
இவ்வழியவனும்போய் வாயிலெய்தினன்.

இன்றைவரையிலு நானுமக்கு முன் செய்துவந்த குற்றங்கள் உண்டாயிருக்குமானல், அவைகளை யெல்லாம் பொறுத்துக்கொள்ளும், உம்முடைய முகத்தில் நான் விழிக்கிறது இன்றையோடு முடிந்துவிட்டது. அண்ணு! விடைகொடு மென்று அந்த ஸ்தானத்தைவிட்டுப் புறப்பட்டுத் திரும்பினன். அப்போ திராவணன், இருபதுகண்களினிடத்து மிரத்தக்கண்ணீர்விட்டழுதான். கும்பகர்ணனுடைய பெண்சாதி — பிள்ளைகள் — உற்றர் - உறவின்முறையார் - இவர்கள் முதலான யாவரும் துக்கப்பட்டழுதார்கள். இப்படியாக அழுகிறவர்க ளெல்லாரையும் பார்த்துக் கும்பகர்ணனும் அழுதுகொண்டு, உத்தர வாயிலில்வந்து சேர்ந்தான்.

கும்பகருணனுக்கு இராவணன் படைத்துணை கூட்டல்.

கவி.

இரும்படைகடிப்பெடுத் தெற்றியேகுக
பெரும்படையிளவலோ டென்றபேச்சினல்
வரும்படைவந்தது வானுளோர்கடம்
சுரும்படைமலர்முடி தூளிதூர்க்கவே.

இவ்வண்ணம் கும்பகருணன் சண்டைக்கு வெளிப்பட்டவுடனே, அதைக்கண்டராவணன் தனது மந்திரிகளைநோக்கி, என் தம்பி கும்பகர்ணனேடுகூட நம்முடைய சேனுவீரர்கள் தங்கள் தங்கள் ஆயுதங்களோடு இரணபேரிமுழக்கிக்கொண்டு போகவேண்டுமென்று ஆங்கியாபித்தான். அம்மாத்திரத்தில் தேவலோகத்தவர்களுடைய வண்டுகள்மொய்த்த கற்பகமாலைசூடிய தலைகளில் சேனுபராகங்கள் படியும்படியாய் இரதகஜதுரகபதாதிகளென்று சொல்லப்பட்ட நால்வகைச்சேனைகளும் புறப்பட்டன. தேரின்மீது கட்டியிருக்கின்ற பதாகைகளும் - யானைகளின் பேரிற் பிடித்துக்கொண்டு வருகின்ற துவஜங்களும் - முன்னணிப்படைக் கர்த்தர் பிடித்துக்கொண்டு வருகின்ற ஆகாசத்தைத்தாவும்படியான விருதுக்கொடிகளும்-ஒன்றுடனென்றுநெருங்கி, சேனுபராகங்கள்போய்ச் சுவர்க்கமண்டலத்திற் படிந்திருக்கின்றமையால் அந்தத்தூசியைத் துடைக்கிறதுபோல ஆகாச மார்க்கத்திலாடிக்கொண்டு வந்தன.

அந்த ராக்ஷசச் சேனைகளுடைய அனேக ஆயுதங்கள் ஒன்றுடனென்று தாக்குவதினல் அவைகளினிடத்துண்டாகிய அக்கினிப்பொறிகளும் - சேனைத்தலைவர்களுடைய கண்களில் நின்றும் புறப்பட்ட நெருப்புப்பொறிகளும் - விசாலமான ஆகாசத்திற்போய்ப்பட, அங்குள்ள மேகங்களெல்லாம் தீய்ந்து உதிர்ந்துவிட்டன. தேர்ப்படைகள் போகிறதினுலும், யானைப்படைகள் செல்

இகிறதினால் மிகவு நெருக்குண்டு, முன்னணியாய்ப் போகவேண்டிய சிந்துரமப்பிய முகத்தையுடைய மேகம்போன்ற யானைகளும் - தேர்களும் - செல்லமாட்டாமல் நிற்க, குதிரைகள் காற்றைப்போல ஓடுவதினாலும், கொடிப்படைகள் நடக்கிறதினாலும், பின்வரும்சேனைகளானவை முந்திப் பூமியிற் செல்லுகிறதற்குத் தம்மால் முடியாதென்று ஆகாசமார்க்கமாகப் பாய்ந்து போயின.

கும்பகருணன் இரதாரூடனாகல்.

ஆயிரங்கோளரி யாளியாயிரம்
ஆயிரமதகரி பூதமாயிரம்
மாயிருஞாலத்தைச் சுமப்பவாங்குவ
தேயிருஞ்சுடர்மணித் தேரொன்றேறினான்.

ஆயிரம் சிங்கங்கள் — ஆயிரம்யாளிகள் — ஆயிரம்யானைகள் ஆயிரம் பூதங்கள் - பூண்டதும், மிகவும்பெருமைபொருந்திய இவ்வுலகத்தைச்சுமப்பவனாகிய ஆதிசேஷனது சிரமாலையினிடத்தினின்று மெடுத்ததையொத்தமிகக் காந்தியுடைய மணிகளிழைத்ததுமாகிய இரதத்தின்மேல் ஆரோகணித்து இருபக்கத்திலும் தோமரம் - இருப்புலக்கை - தண்டாயுதம் — வேலாயுதம் சூலாயுதம்-வல்லயம்-வாளாயுதம்- மழுவாயுதம் - அலாயுதம் - வளைதடி - சக்கரம் - வில் - கேடகம் - இன்னும்க்ஷேமத்தில் வைத்திருந்த பற்பல கொடிய ஆயுதங்களை யெல்லாம் அநேகம் இராக்ஷசர்கள் தலையிற்றூக்கிக்கொண்டு, அமரர்களெல்லாம் திடுக்கிடும்படிவந்தார்கள். இதுவல்லாமலும் - சிலபேர்கள் கள்ளுச்சாடிகளைத் தூக்கிக்கொண்டும், சிலபேர்கள் பக்குவமாகவெந்தமாமிசத்துண்டங்களை குறையாமல் நிறைத்துவைத் திருக்கின்ற ஆயிரம் வண்டிகளை யோட்டிக்கொண்டும், சிலபேர்கள் வக்கிரதந்தங்களையுடையவனான கும்பகர்ணனுக்குப் பின்னால் அக்கள்ளு மாமிசமு மாறிமாறி அடிக்கடி முறைப்படி கைநீட்டிக் கொடுத்துக்கொண்டும் வந்தார்கள். இப்படி அநேகராட்சதர்கள் தருகின்ற மாமிசங்களும், கள்ளும் தனது இருகரங்களால் வாங்கி ஒருபிலத்துவாரத்திலிடும் தன்மைபோல் வாயிலிட்டுண்டு யாவருந்திடுக்குறும்படி கும்பகருணனானவன் சென்றனன். அப்போததைக்கண்ட தேவர்கள் இஃதிந்தப் பெரியகூட்டங்களாகிய குரங்குகளோடு மாத்திரம் ஒழிந்துபோக பாட்டாது. இவன் தின்னுகிற மிகுந்த கொழுத்த மாமிசத்திற்கு இந்த உலகமும் போதாது. எங்கும் பிணக்காடாகப்போகிறது. யமனுக்கும் ருசிதெரிந்துவிட்டது. இனியவன் சும்மாய்ப் போகமாட்டான். என்று தேவர்களெல்லாம் ஓட்டம் பிடித்தார்கள்.

கும்பகருணனை ஸ்ரீராமபிரான் கண்டு இவன்யாரென்று சந்தேகித்து விபீஷணரை வினாவவும் அவர் இன்னானென்று அவன்வரலாறு கூறலும்.

பாந்தளினெடுந்தலை வழுவிப்பாரொடும்
வேந்தனவிளங்கிய மேருமால்வரை

போந்ததுபோற்பொலந் தேரிற்பொங்கிய
ஏந்தலையேந்தெழி லிராமனேக்கினன்.

ஆதிசேஷனுடைய ஆயிரஞ்சிரசுகளையும் விட்டு நீங்கிப் பூமியுடனேகூட பர்வத ராஜனென்று சொல்லும்படிப் பெயர்பெற்றிருக்கின்ற பெரிய மேருகிரியானது வந்ததுபோல் சொர்ணமயமாகிய தேரின்பேரில் உக்கிரமாய் வந்திருக்கின்ற கும்பகர்ணனை உயர்ந்த தோள்களையுடைய சக்கரவர்த்தித் திருக்குமாரராகிய ஸ்ரீராமர்பார்த்து, அவனுடைய தேரிற் கட்டியிருக்கின்ற கொடியில் வீணையெழுதி யிருக்கின்றதோ வென்று நோக்கியபோது அஃதில்லாமல் வெற்றிபொருந்திய சிங்கமெழுதியிருக்கக்கண்டு, இவன் ராவணனல்லன். காற்றினு மதிகவேகமாக மனதைச்செலுத்திப் பார்த்தாலும் அளவறிவதற் கருமையான தோற்றமுடையவனாக விருக்கிறான். மேலும் - உயிருடைய பொருளல்லவென்று நினைக்கலாமென்றாலும், ஆபரணங்களையணிந்த மார்புடையவனாகவு மிருக்கின்றான். இவன்யாரோ ? இவனுடைய ஒரு தோளோடு மற்றொருதோளை ஒருசேரப் பார்க்கிறதற்கு அநேகநாள் செல்லும். மேருமலைக்குக் கால்கள் முளைத்தனவோ ? யுத்தஞ்செய்கிறதற் கிசைந்துவந்திருக்கின்ற இவனின்னானென்று தெரியவில்லை. இவன்பெயரென்னயோ ?

கவி.

அரக்கனவ்வுருவொழித் தரியின்சேனையை
வெருக்கொளத்தோன்றுவான் கொண்டவேடமோ
தெரிக்கிலேனிவ்வுருத் தெரியும்வண்ணநீ
பொருக்கெனவீடணா புகறியென்றனன்.

அல்லதிராவணன் தன்னுடைய நிஜரூபத்தைமறைத்துக்கொண்டு, நம்முடைய வானரசைனியங்களைப் பயப்படுத்தும்படியாகக் காட்டுகிறதற்குக் கொண்ட மாறுவேஷமோ ? இந்த உரு இன்னதென்று எனக்குத் தெரியவில்லை. ஆகையால் - ஓ விபீஷணா! இதுநன்றாய்த் தெரியத்தக்கதாக எனக்கு நீ விரைவிற் சொல்லவேண்டுமென்று ஸ்ரீராமமூர்த்தி கேட்டனர்.

கவி.

ஆரியனனையகூற வடியிணையிறைஞ்சியைய
பேரியவிலங்கைவேந்தன் பின்னவனெனக்குமுன்னோன்
காரியல்காலனன்ன கழற்கும்பகருணனென்னும்
கூரியசூலத்தானென் றவனிலைகூறலுற்றான்.

இவ்வண்ணம்எண்ணித் தம்மைக் கேட்டபோது விபீஷணாழ்வான் அவருடைய திருவடிகளிற் சாஷ்டாங்கமாகத்தெண்டஞ் சமர்ப்பித்து, ஸ்வாமீ! இவர் மகாபிரதாபசாலியான இலங்கேஸ்வரனுடைய தம்பியும், எனக்கு மூத்தவரும், மேகத்தையொத்த கறுத்தநிறத்தையுடைய யமனுக்குச் சமானமாய் வீரகண்டாமணியைத் தரித்தவரும், கூர்மைபொருந்திய சூலாயுதத்தை யுடையவருமாகிய கும்பகர்ணனென்கிற நாமத்தையுடையவர். இவருடைய தன்மை எப்படிப்பட்டதென்றால் - அருமையான தபசைச்செய்கிறவர்களாலும் - வே

தவேதியரானவர்களாலும் - தியானிக்கத்தக்கவரும், கைலாசபதியும் - மூலதாமரஸ்புஷ்பத்தில் வீற்றிருக்கின்ற சதுர்முகப் பிரம்மதேவனும் - தம்மிலொருவராய்ச் சிந்திக்கும்படியான சாக்ஷாது க்ஷீராப்திநாதனுமான சாட்குண்ய பரப்பிர்ம்மமானவர் யோகநித்திரையைவிட்டு எழுந்திருக்கிறகாலத்தில் அசுரர்கள் நாசமடைவார்கள். இவர் நித்திரைவிட்டு விழிக்கிறகாலத்தில் தேவர்க்ள் நாசமடைவார்கள்.

ஓ சக்கரதரராகிய ஸ்வாமீ! அன்றியுமிவர் அற்பவாழ்நாளையுடையவனும், என்தமயனுமான இராவணனுக்கு அடுத்தசகோதரர், ஊழிகாலபரியந்தம் நித்திரைசெய்யத்தக்கவர். யமனுடைய உயிருக்கு யமனாகவிருக்கிறவர். வாயுதேவனைப்பார்க்கிலு மிகுந்தவேகத்துடனே நடக்கின்ற கால்களையுடையவர். தேவேந்திரன்முதலானபேர்களும் தோல்வியடையும்படியாகவெற்றிமாலையைத்தரித்த ஒப்பற்ற சூலாயுதத்தைக்கொண்டு அவர்களைக் குத்தினவர். நான்குகொம்புகளையும் மலைக்குச்சமானமாகிய நான்குகால்களையுமுடைய ஐராவதமென்கிறயானையை, அதின்பேரிலிருக்கின்ற தேவேந்திரன் நழுவிவிழாமல் இருந்தபடியே இருக்கும்படியாக அந்தயானையைப் பின்னங்காலிரண்டையும் பிடித்துக் கிறுகிறுவென்று சுழற்றினவர். அல்லாமலும் - வடவாமுகாக்கினியையும் காற்றையும்பிடித்துப் பிழிந்து, அவற்றிற் சாறெடுக்கும்படியான சாமர்த்தியமுடையவர். மீன்களெல்லாம் அழிந்து நசுங்கிப்போகும்படியாகச் சமுத்திரஜலத்திலிழிந்து காலால்நடந்து கரையேறத்தக்கவர்.

ஓ பரமதயாளுவே! மாமிசபுஷ்டியின் உறுதியினால் மேருவு நிகரற்ற மிகுந்தபலமுள்ளவர். அதிகதபங்களைச் செய்ததினால் யாரொருவரும்பெறாத மிகுந்தவரங்களைப்பெற்றவர். பூர்வத்தில்இவர்மதோன்மத்தத்தினால்திரிலோகங்களிலும் சாரியுலாவிவந்தபோது, பேயையு மிவருக்குச்சமானமாகச் சொல்லவொட்டாமல் எல்லாரையும் பிடித்துக்கொண்டு வந்தார். தொங்குகின்றமாலையையணிந்த இவர் அன்றைக்குவந்து படுத்து இன்றையவரையிலும் நித்திரைசெய்துகொண்டிருந்தபடியினாலே, உலகமெல்லாம் இவ்வளவாவது பிழைத்திருந்தது. இவர்கையில் ஒருசூலமிருக்கின்றது. அதுதேவர்களுடைய வாழ்நாளையெல்லாம் உண்டுவிட்டது. அந்தச் சூலாயுதத்தை காலகோடிமகா விடத்தையுண்ட சாக்ஷாத் சிவபிரானால் க்ஷீராப்தி நாதனாகிய உலகங்களையெல்லாமுண்டவனாகியுமுள்ள ஸ்ரீமகாவிஷ்ணு தரப்பெற்றவன்.

ஓ கமலநேத்திரரே! மின்னலைப்போலும் பிரகாசிக்கின்ற திவ்வியதேகத்தையுடைய சுவர்க்கலோகவாசிகளாகிய தேவர்கள் அநேகம்பேர் இவருக்குமுன்னாக அமர்செய்ய நின்றார்களென்றபோதிலும், அவர்களெல்லாரு முதுகிட்டோட அவர்கள் முதுகைப் பார்ப்பாரேயல்லாமல் அவர்கள் முகத்தில் இவர்விழிக்கவே மாட்டார். இவர் இடியைக்காட்டிலும் கொடியவனான இராவணனைப் பார்த்து, அண்ணா! சீதாபிராட்டியைக் கொண்டுவந்தது தருமமல்லவே: அதனால் நமக்கு உயிர்ச்சேத முண்டாகுமே: என்று வெகுவாய்ப்புத்தி

சொல்லியிருக்கின்றார். பெரியோர்கள் இரண்டுதரம் புத்திசொல்லுவார்கள். அப்படியல்ல; இவரதற்குமேல் மூன்றுதரம் சொல்லியிருக்கின்றார். இவர் சொன்ன புத்தியைமறுத்த இராவணனைச் சத்தியமாகக் கோபித்து, இதனாலுனக்குப் பிராணநாசம் வருமென்பதையும் தெரிவித்தார். அதைக்கேளாததினால் அவனைவெறுத்து, தான்சாகப்போகிறது நிச்சயமென்றுணர்ந்து, அவனிடத்தில் தனக்குண்டாகிய பாத்தியதையு முறித்துக்கொண்டு, இதுநமக்கு நல்லதல்லவென்று தகுந்தநீதியை இராவணனுக்குச் சொல்லி, இன்றைக்குத்தேவரீருடைய சந்நிதிக்கு முன்பாகவந்தார். என்று விபீஷணாழ்வான் கூறிச் சுவாமியை வணங்கினர்.

ஸ்ரீராமர் சுக்கிரீவன் வேண்டுகோளால் கும்பகருணனைத் தம்மிலோருவனாக்கிக்கொள்ளச் சம்மதித்து விபீஷணரை யனுப்புதல்.

கவி.

என்றவனுரைத்தலோடு மிரவிசேயிவனையின்று
கொன்றொருபயனுமில்லை கூடுமேற்கூட்டிக்கொண்டு
நின்றதுபுரிதுமற்றிந் நிருதர்கோனிடருநீங்கும்
நன்றதுநினைத்தேனென்றா னுதனுநலனீதென்றான்.

எகுதற்குரியார்யாரே யென்னலுமிலங்கைவேந்தன்
ஆகின்மற்றடியனேசென் றறிவினாலவனையுள்ளம்
சேகறத்தெருட்டியீண்டுச் சேருமேற்சேர்ப்பலென்றான்
மேகமொப்பானுநன்று போகென்றுவிடையுமீந்தான்.

இவ்வண்ணம் விபீஷணாழ்வார் கூறியவிவையனைத்தையுங் கேட்டுக்கொண்டிருந்த சூரியகுமாரனான சுக்கிரீவமகாராஜனெழுந்து ஸ்ரீராம மூர்த்தியின் திருவடிகளில் தீர்க்கதெண்டன் சமர்ப்பித்து, சுவாமி இரகுகுலோத்தமா! இப்பொழுது விபீஷணமகாராஜர் சொல்லிய அவரது தமயனாகிய கும்பகருணனை நாம் கொன்று அதினாலடையும்படியாகிய பிரயோசனம் யாதொன்றுமில்லை. நம்முடன் சேர்ந்து எங்களைப்போல் தமது திருவடிக்குக் குற்றேவல் செய்வதற்குடன்பட்டால் நாம் சேர்த்துக்கொண்டு மேல்நடக்கவேண்டிய காரியங்களைச் செய்யலாம் இதனால் இவ்விபீஷணரது துக்கமு நிவர்த்தியாகுமென்று சொன்னார். அதற்குச் சக்கரவர்த்தித் திருமகனார் சம்மதித்து, ஆம்: ஆம்: இதுமகா உத்தமமான காரியந்தானென்றுசொல்லி, ஆனால் அவனிடத்திற்குப்போய் இந்தக்காரியத்தைச் சொல்லத்தக்கவர்கள் யாரிருக்கிறார்களென்று விசாரித்தார். அப்போது விபீஷணாழ்வார் தேவருக்குத் திருவுள்ளமானால் அடியேனேபோய்த் தகுந்த புத்திமதிகளைச் சொல்லி, குற்றமில்லாமல் அவருடைய மனத்திலிருக்கின்ற வன்மைத்தன்மையை இளகச்செய்து, நம்மோடுசேர விருப்பமுள்ளவராகவிருந்தால் அழைத்துக்கொண்டு வருகிறேனென்று சொன்னார்.

அதற்கு நீலமேகத்துக்கொப்பாகிய ஸ்யாமளரூபரான ஸ்ரீராகவபிரான் சம்மதித்து, நல்லது: அப்படியே அதிவேகமாய்ப்போய் வரக்கடவாயென்று அனுப்பினார். உடனே விபீஷணாழ்வார் அந்தராக்ஷசசேனா சமுத்திரங்களைத் தாண்டி, தமக்குச்சிறந்த துணைவனான கும்பகர்ணனுக்குச் சமீபமாகப்போனார். அம்மாத்திரத்தில் வேவுகாரர்க ளவனைக்கண்டு, ஐயா கும்பகர்ணமஹாராஜனே! உம்முடைய தம்பியாகிய விபீஷணர் என்னமோ வெகுவிரைவாக உம்மிடத்திற்கு வருகின்றாரென்று சொன்னார்கள். அதுகேட்ட கும்பகருணன் அளவில்லாத சந்தோஷத்தைக்கொண்டு எக்களிப்புற்றிருக்க, அந்தக்கும்பகர்ணனுடையபாதங்களில் விபீஷணாழ்வார் தம்முடைய சிரசைச்சேர்த்துத் தெண்டனிட்டார். எதிரேவந்து சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்ட விபீஷணாழ்வானைக் கும்பகருணன் கைகளால் வாரியெடுத்து, உச்சிமுகந்து உயிராரத்தழுவி மார்போடணைத்து, தன்னிரண்டுகண்களினு மழைத்தாரைகள்போல நீரொழுகும்படியாக விருந்து அவரோடு சிலபேசத்தொடங்கினான்.

கும்பகருணன் தன்னைவந்தடைந்த விபீஷணரை நீ யேன்மறுபடி மீண்டுவந்தாயென வினவல்.

கவி.

முந்திவந்திறைஞ்சினானை முகந்துயிர்மூழ்கப்புல்லி
உந்தனையொருவைபோனா யெனமனமுவக்கின்றேனென்
சிந்தனைமுழுதுஞ்சிந்தத் தெளிவிலார்போலமீள
வந்ததென் றனியேயென்றான் மழையினீர்வழங்குகண்ணான்.

அவையரீபெற்றவாறு மமரரும்பெறுதலாற்றா
உவையபலோகத்தினுள்ள சிறப்புங்கேட்டுவந்தேனுள்ளம்
கவிஞரினறிவுமிக்காய் காலன்வாய்க்களிக்கின்றேப்பால்
நவையிலைவந்ததென்னீ யமுதுண்டாய்நஞ்சுண்பாயோ.

அப்பாவிபீஷணா! எங்களில் நீ ஒருவன் பிழைத்துப்போய் புத்திமானாய் வாழ்ந்திருக்கிறாயென்று சந்தோஷப்பட்டிருக்கின்ற என்னுடைய சிந்தை முழுதும் திகைக்கும்படியாக தெளிந்த புத்தியில்லாதவர்களைப் போலேதனித்தவனாய் ஏன் திரும்பிவந்துவிட்டாய்? ஸ்ரீராமபிரான் திருவடியையடைந்து நீ அபயம்பெற்ற விதத்தையும், தேவர்களும் பெறுதற்கேலாத இகலோகபரலோகாதி ஐஸ்வரியத்தைப்பெற்ற சிறப்பையும், நான் கேள்விப்பட்டு மிகுதியு மனங்களித்திருந்தேன். சகலசாஸ்திரக்கியான சம்பன்னனான நீ, யமன் தன்வாய்க்கிரையாக எதிர்பார்த்திருக்கின்ற எங்களிடத்திற்குக் குற்றமுள்ளவனாக ஏன்வந்துவிட்டாய்? ஸ்ரீராமகைங்கரியமான அமிர்தபானம்பண்ணுகின்ற நீ ராக்ஷசகிர்த்தியமாகிய விஷமுண்ணவரலாமோ? அப்பா விபீஷணா! நமது இராக்ஷசமரபின் செய்கை உன்னிடத்தி லழிந்ததெனினும் புலத்தியப் பிரமவமிசமானது எந்நாளும் கெடாத புண்ணியத்தைப் பெற்றதென்று எனது வலதுதோளைப்பார்த்து மகிழ்ச்சியடைந்திருந்தேன். ஓ என் கண்மணியாகியதம்பி! அப்படியிருந்த என்னை இப்போது உன்வருகையாலே

துக்கப்படுத்தி, என்னுடைய நாவை வறளச்செய்துவிட்டாய். அதை நினைக்கும்போது என்மனது உலைகின்றது.

மகாதர்மிஷ்டிகளான அந்தராமலட்சுமணர்கள் தங்களுயிரை விட்டபோதிலும், அபயமென்றடைந்த உன்னைநீக்கி விடுகிறதற்குச் சம்மதிக்கமாட்டார்கள். அவர்களைவிட்டு விலகினதினாலே நீ மறுமையி லடையப்போகிற நல்லபதவியை இழந்துவிட்டாய். இராமநாமத்தைச் சொல்லிக்கொண் டிருக்கின்றபரியந்தம், இந்த அற்பப்பிறவி யுண்டாகப்போகிறதில்லை. இவைகளையெல்லாம் வேதவேதாந்தங்களாற் கற்றறிந்தும் என்னகாரணத்தினாலே அந்தராமனைப்பிரிந்து நீ இங்கேவந்துவிட்டாய்? தர்ம்மமே ஸ்வரூபமாகநின்ற சாக்ஷாது ஸ்ரீராமலட்சுமணருக்குத் தாசத்துவம் பூண்டு, பாவமலையாய் நிலைபெற்றுநின்ற அக்கியானம் - அன்னியதாக்கியானம்—விபரீதக்கியானம்—என்கிற மூன்றையும் இருந்தவிடந்தெரியாமல் அவர்களாலே மாய்த்துவிட்டு, இன்னும் பலங்கொண்டிருக்கின்ற மற்றப்பாவங்க ளெல்லாவற்றையும் இந்தப்பிறப்பிலேயே யொழித்துவிட்டு மெய்ஞ்ஞானச் செல்வமுள்ளவனாகிய நீ; பிறர் தாரத்தி லிச்சைவைத்திருக்கின்ற எங்களை உறவாகப்பெற நினைக்கின்றாயோ?

அப்பனே! நீநல்லநீதியையும், தர்ம்மநிலையான நல்லசெய்கையையும், யதார்த்தக்கியானத்தையும், நீசெய்த அளவில்லாத தவங்களினால் ஆதிவஸ்துவாகிய சாக்ஷாது ஸ்ரீயப்பதியாலே பெற்றுக்கொண்டாய். வேதமுதல்வனான ஸ்ரீராகவமூர்த்தியினுடைய இனிய அமிர்தவாக்கினாலே சிரஞ்சீவிப்பட்டமும்பெற்றாய். இவ்வளவு யோக்கியாதிகாரத்தைப்பெற்ற நீ, ஹேயமான ஜாதிதர்மத்தை இன்னமும் விடவில்லைபோலக் காண்கின்றதே: எல்லார்க்கும் தலைவரான ஸ்ரீ சக்கரவர்த்தித்திருமகனார் நாணேற்றிய வில்லையுடையவராய் நிற்கின்றார். அவர்பக்கத்தில் ஒருவராலும் தடுத்தற்கரிய வல்லமையுடைய இளையபெருமாளு நிற்கின்றார். மற்றவானர வீரர்களெல்லா நிறைந்திருக்கின்றார். எங்களைக் கொல்லும்படியாக யமனும் வந்திருக்கின்றான். அதற்கு இசைவாக விதியும் கூடிநிற்கின்றது. இனி எங்களிடத்தில் என்னவல்லமை இருக்கக்கூடும்? நீ ஏன் எங்களோடுகூட மாளவந்தாய்.

ஓ புலஸ்தியவமிஸகுலதிலகமான விபீஷணா! நீ அயோத்தியாபுரிக் கரசர்களாகிய ஸ்ரீராமலட்சுமணர்களுக்கு அடைக்கலமாகி அவர்களால் உஜ்ஜீவனமடையாமல் இவ்விடத்திற்கு வந்தாயானால், இராட்சசர்களாயுள்ள நாமெல்லாம் அந்த ராமலட்சுமணர்கள் பிரயோகிக்கின்ற அஸ்திர வருஷங்களாலே மாண்டு இலங்காபட்டண முழுவதும் பாழாய்விடப் போகின்றதே: பின்புகையினாலே எள்ளுந் தண்ணீரு மெடுத்திறைத்துப் பிதுர்யாகக் கடமையை நிறைவேற்றத் தக்கவர்க ளாரிருக்கின்றார்கள்? அப்படிப்பட்டவர்கள் ஒருவரையெனக்குக்காட்டு பார்ப்போம், ஒருவரு மில்லையே: இங்கே யிருக்கின்ற பாபிகளாகிய ராக்ஷசர்களெல்லா மாண்டுபோனபிறகு திருவுறைமார்பனான

ஸ்ரீராமபிரானுடனே உன்னுடைய லங்கைப்பட்டணத்துக்குவந்து எந்தக்காலத்திலேயும் அழியா திருக்கின்ற பெரியசெல்வத்தை அனுபவிக்கத்தக்கவனா நீ, இங்கே வீணாய்த் தாமசஞ்செய்யாமற் சீக்கிரமாய்த் திரும்பி அவர்களிடத்திற்குப் புறப்பட்டுப்போய்விடென்று சொன்ன கும்பகர்ணனைப்பார்த்து விபீஷணர் சொல்லுகின்றார்.

கும்பகருணனுக்கு விபீஷணர் தாம்வந்த காரியமின்னதென்றுரைத்தல்.

கவி.

இருளறுசிந்தையேற்கு மின்னருள்சுரந்தவீரன்
அருளுநீசேரினென்றே வையமுமளிக்குமன்றி
மருளுறபிறவிநோய்க்கு மருந்துமாமாறிச்செல்லும்
உருளுறுசகடவாழ்க்கை யொழித்துவீடளிக்குமன்றே.

அண்ணா! நான் நமதுதமயனாகிய இராவணனிடத்தில் மனஸ்தாபம் பெற்றுவரும்போது உம்முடன் வார்த்தை சொல்வதற்கிடமில்லாமல் வந்துவிட்டேனே அதைத் தம்சமுகம் விண்ணப்பம் செய்வதற்குத்தான் வந்தேன். மேலும் அதன்றி முக்கியமான பெரியவிஷயமுமொன்றுண்டு அஃதென்னவென்றுகேட்டால்,அக்கியான சிந்தையையுடைய எல்லாரிடத்திலும் இனிய அருள் சுரக்கின்ற மகா வீரசிகாமணியாகிய ஸ்ரீராமமூர்த்தியினுடைய கிருபைக்கு நீர் பாத்திரமானால், அவர் அபயம் கொடுப்பதொன்று மாத்திரமோ? இந்த மாயப்பிறவிப்பிணியை மாற்றுமருந்தாகவுமிருந்து,கீழ்மேலாக மாறிமாறி உருண்டோடுகின்றசகடத்தினுருளையைப்போல நின்றநிலையில்நில்லாத இந்தமாயவாழ்க்கையை நீக்கிவிட்டு மறுமையில் தன்னுடைய ஜோதியாகிய பரமபதத்தையும் கொடுப்பார். அந்த ஸ்ரீராகவப்பிரான் எனக்குக் கிருபைசெய்து கொடுத்த சகல ஐஸ்வரியத்தையும், குறைவின்றி நிறைந்த இவ்விலங்காதிபத்தியத்தையும், மற்றெல்லாச் சிறப்பையும், உமக்கு நான்கொடுத்துவிடுகிறேன். மேலும் உம்முடைய ஆக்ஞையின்படி எப்போதும் நடந்துகொண்டும் வருகின்றேன். இதைப்பார்க்கிலும் உமக்கு வேறே யுறுதிப்பாடு ஒன்றுமில்லை.

ஓ உத்தமரான அண்ணாவே! உமக்குப் பின்னாகப்பிறந்த என்னுடைய மனத்தினிடத்தி லுண்டாகிய துக்கத்தைநீக்கி, நம்முடைய யக்ஷவம்ஸ தர்மத்தையும் விர்த்திசெய்து வாழக்கடவீர். இனி இந்தரணக்களத்தை விட்டுத் தப்பிப்போகிறதோ அருமை. அப்படி தப்பிப்போனபோதிலும் பிராணனோடே தங்குதற்கான இடமுங்கிடையாது. இராவணாதி ராக்ஷசர்களெல்லாம் வெகுசீக்கிரத்திலேயே நிச்சயமாகச் சாகப்போகிறார்கள். நீரோ? நல்லநீதியையும், தர்மத்தையும், அபேக்ஷித்திருக்கின்றீர். ஆனபடியினாலே இன்னுஞ் சிலநாளைக் கிருக்கத்தக்க பிராணனை விருதாவில் மாய்த்துக்கொள்ள வேண்டிய காரணமென்ன? வேதமார்க்கத்திற்குத்தக்க ஒழுக்கங்களையே கைப்பிடித்து நடக்கவேண்டியது யாவர்களுக்கும் யுக்தமாகும். வேதவிரோதமாகிய பாபகிருத்தியங்களைச் செய்வார்களேயானால் அப்படிப்பட்டவர்கள் தங்களிலும்

துறந்தவர்களானாலும், உடன்பிறந்தவர்களானாலும், உறவின்முறையார்களானாலும், தாய்தந்தையர்களானாலும், அவர்களை வைதீகதர்மவொழுக்கத்தில் நிற்பவர்கள் மதிப்பார்களோ? அந்த நியாயங்களையெல்லாம் நீர் நன்றாயறிந்திருக்கின்றீரல்லவோ? அப்படிப்பட்ட உமக்கு நான் சொல்லவேண்டியதென்னவிருக்கின்றது?

ஓ வாசனைவீசுகின்ற பூவிதழ்களால் தொடுத்த மாலையையணிந்த மார்பினையுடைய அண்ணா! சத்தியத்தைப் பின்பற்றி நடக்கும் உத்தமர்களைப் பாபமானது பின்றொடர்ந்து வருத்துமா? பிள்ளைகளும், வித்தியாப்பியாசஞ் செய்துவைத்த உபாத்தியாயர்களும், கொண்டபெண்டிரும், இனிய உயிர்க்குச் சமானமாகிய சிநேகிதர்களும், இடுக்கண்வந்தபோதுதவிசெய்தவர்களும், தம்மைவந் தடுத்தவர்களும், ஆகிய இவர்களிடத்தில் வைக்கும் அன்பு துக்ககரமான சம்சார பந்தத்தை உண்டாக்குமென்று அத்தியவசாயம்பிறந்த முமுக்ஷுக்கள் துறந்துவிடுவார்கள். வைதீக தருமமொன்று மாத்திரமே இகத்துக்கு நன்மையைச்செய்வதும், பரத்திற்கு அனுகூலமாயிருப்பது மாகும். ஒருவன் அகிருத்தியத்தைச்செய்ய அவனுடன் யாதொரு தீங்குக்குமுடன்படாத மற்றொருவன் மரணமடைகிறது நியாயமோ? அல்லது அநியாயமோ? நீரே ஆலோசித்துப்பாரும். நீர் நன்மை தீமையை நன்றாய்ப்பகுத்தறியும் தன்மையையுடையவராச்சே; தபசிரேஷ்டராகிய ஸ்ரீபரசுராமரானவர் தம்மைப்பெற்ற தாயாகிய ரேணுகா தேவியானவள் பாபகிருத்தியத்தைச் செய்ததனாலல்லவோ தர்மத்தைநோக்கி அவளைக்கொன்றுவிட்டார். துஷ்கிருத்தியத்தைச் செய்த பிர்ம்மதேவனுடைய தலைகளிலொன்றை மூன்றுகண்களையுடைய உமாநாயகராகிய சிவபிரானானவர் கிள்ளினாரல்லவா?

ஓ பகைவருடலைப் புண்படுத்திப் புலால் நாற்றம் வீசுகின்ற சூலாயுதத்தைக் கையிற்றாங்கிய மகாவீரசிகாமணியே! இம்மையில் மகாபாபிஷ்டியாய்ப் பலருமிகழும்படி யிருந்து, மறுமையில் ரௌரவமென்னத்தக்க நரகத்தில் வீழ்வதற்கும் புத்திமான்கள் பிரயத்தனப்படுவார்களா? தேகத்திற்கட்டி புறப்பட்டால் அதைச் சத்திரமிட்டு, கெட்டரத்தத்தை நீக்கிவிட்டு, காரம் வைத்துச் சுட்டு, பூச்சுமருந்தினாலந்தப்புண்ணையாற்றித் துன்பத்தை நீக்கிக்கொள்வார்களல்லவா? மிகுந்த புத்திமான்கள் உரைத்து உடலிலேபூசிப் பரிமளிக்கச் செய்யவேண்டிய வாசனை திரவியத்தை, வீணாகக் கடலிற்கொண்டுபோய்க் கரைத்து அழித்துவிட மாட்டார்களே: ஆகையால் உம்முடைய தமயனான ராவணனைப் பிராணன்போகாமற் காப்பாற்றலா மென்றால், அதற்கேற்ற ஒரு நற்குணமாவது அவனிடத்திற் காணப்படவில்லையே: இனிவேறொருவழியாய்த் தர்மத்தை விருத்திபண்ணலா மென்றாலும், அதையு நிறைவேற்ற அவன் இடங்கொடுக்கமாட்டானே: அஷ்டதிக்குப்பாலர்களும் — பலவகிலங்களிலுள்ளவர்களும் - சிரிக்கும்படியாக, இரணக்களத்திலேயே ராக்ஷசர்களுடையபிராணன்களெல்லாம் போய்விடப்போகின்றனவே: அப்படி போனபிற்

பாடு அவர்கள் பிறவிதொட்டு இதுவரையிலுஞ் செய்த பாபகிர்த்தியத்தால் நரகமேயன்றி வேறெந்த வுலகமுஞ் சித்திக்கமாட்டாதே.

ஓ எனக்கருமருந் தன்ன அண்ணா! நீர் மிகுந்தபலத்தைக்கொண்டு மேலுலகங்களையெல்லாம் ஜெயித்தீரே: அங்கேயாவது வசித்துக்கொண்டிருந்தீரா? இல்லையே; இந்தப் பூமியில்வந்து நீர் இறங்கி இன்றையவரைக்கும் உம்முடைய யௌவனவயதெல்லாம் வீணாய்ப் போகும்படியாக நித்திரைசெய்தீரென்கிறதல்லாமல், அதனாலேனும் ஒரு லாபத்தை யடைந்திருக்கின்றீரா? ஒன்றுமில்லையே: நீர் என்னபிரயோசனத்திற்காகத் தர்மத்தைவிட்டு உயிரை மாய்த்துக்கொள்ளுகிறதற்கு ஏற்பட்டீர்? திருவையும் — மறுவையும் - மார்பிலுடையவரும், சாக்ஷாது ஜெகத்ரட்சகரும், தைத்தியாரியுமாகிய ஸ்ரீராமருடைய காருண்ணியத்தினால் உம்முடைய அக்கியானமாகிய நித்திரையுநீங்கி எல்லா ஐஸ்வரியச்சிறப்பையும் அடைந்துவாழ்வீர். மேலும் - சிரஞ்சீவிப்பட்டமும் பெறுவீர். ஏகசக்கராதிபதியாய் அரசுசெய்துகொண் டிருப்பீர். எல்லா உரிமையும் உம்மதேயாகும். உமக்கு ஒருகாரியமும் அருமையாக மாட்டாது. அவைகளுக்கெல்லா மிதுவே தருந்தகாலமாகவு மிருக்கின்றது.

ஓ எனது மனதுக்கொத்த அண்ணா! தேவதேவனான சக்கரவர்த்தித் திருமகனார் கொடுக்க இலங்கையின் ஐஸ்வரியங்களெல்லாம் பெற்றுக்கொள்வீர். எப்படிப்பட்டவர்களுக்கும நீர்கீழடங்கியிருக்கவுமாட்டீர். யாவரும் உம்மைவருத்தப்படுத்தவு மாட்டார்கள். திரிமூர்த்திகளி லொருவரான ஸ்ரீமந்நாராயணமூர்த்தியே காகுஸ்த வம்ஸோத்பவரா யவதரித்து, தர்மமுழுமையும் காக்கும்படியாக வந்திருக்கின்றார். உமக்குப் பிள்ளைகளாக விருக்கின்றபேர்களும், உம்மோடு கூடப்பிறந்த எனக்குப் பிள்ளைகளாக விருக்கின்றபேர்களும், நம்முடைய யட்சவம்சத்திற்கு முடிவுகாலத்தை ஆலோசித்தவனான இராவணனுடைய பிள்ளைகளுடனே சிரேஷ்டத்தைப் பெற்றுத் திரிந்துகொண் டிருப்பார்களல்லவோ? துஷ்கிருத்தியத்தைச்செய்து அதர்மவானென்று கண்டோர்பழித்துச் சொல்லாமல், நல்லபுத்தியினாலே தர்மவானென்று பேர்பெற்று வாழக்கடவீர்.

ஓ சன்மார்க்க சிரோமணியாகிய அண்ணா! இதுவரையிலும் ராட்சசர்களிடத்தில் வெறுப்புற்றிருந்த மகாரிஷிகளெல்லாரும் இனிமேற் கருணையுடையவர்களாக இருப்பார்கள். சுவர்க்க மத்திய பாதாளமென்று சொல்லப்பட்ட திரிலோகத்திலும், இனி யெந்தப்பகையு முண்டாகப்போகிறதில்லை. இனியுமக்கு மரணமுண்டாகுமென்று பயப்படவேண்டியதே இல்லை. இராக்ஷசர்களை வருத்தப்படுத்திக்கொண்டு பகைவர்களா யிருக்கின்ற தேவர்களெல்லாரும் நட்புடையவர்களாகப் போகிறார்கள். இப்படிப் பழம்பறித்துத் தின்னத்தக்க காலத்தில் மரத்தைவெட்டி, அது தளிர்த்துப் புஷ்பிக்க வேண்டுமென்று நினைத்திருக்கின்றவர்களைப் போலப் பிரயோசனத்தை இழந்துவிடலாமோ? மேலும் — உம்மிடத்திற்குநானே என்சொந்த அபிப்பிராயத்தின்படிக்கு வர

வில்லை. அந்த வேதமுதல்வனாகிய ஸ்ரீராகவபிரானே என்மீது தாம் வைத்திருக்கின்ற கிருபையினாலே உம்மிடத்திலும் தயை யுடையவராகி, உம்மை யழைத்துவரும்படியாக என்னை யனுப்பினார். நான்வந்தகாரிய மிதுவேயாகும். ஆனபடியினாலே அந்தச் சக்கரவர்த்தித் திருமகனாரைக் காணும்படியாகத் தர்மத்திற்குப் பிசகிகடவாமல் இப்போதே என்னுடன்கூடப் புறப்பட்டு வரக்கடவீரென்று சகோதரவாஞ்சையினால் விபீஷணாழ்வார் அக்கும்பகருணனாகிய தன்தமயனது அழகுபொருந்திய இரண்டு பாதங்களிலும் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார்.

கும்பகருணன் தன்னையழைக்கவந்த விபீஷணரைச் சன்மானித்துத் தனதுறுதிப்பா டின்னபடியென்று கூறியனுப்புதல்.

கவி.

தும்பியந்தொடையன்மாலைச் சுடர்முடியடியிற்றோயப்
பம்புபொற்கழல்கள்கையால் பற்றினன்புலம்புபொற்றோட்
டம்பியையெடுத்துமார்பிற் றழுவித்தன் றறுகணூடு
வெம்புணீர்சொரியநின்று னினையனவிளம்பலுற்றான்.

வண்டுகள் ரீங்காரஞ்செய்கின்ற அழகுபெற்ற மலர்களாற்றொடுத்த மாலையையணிந்து பிரகாசிக்கின்ற கிரீடமானது பூமியிற்பொருந்த நமஸ்கரித்துத் தமயனுடைய பொன்னினாற்செய்து ஆரவாரிக்கின்ற வீரக்கழல்களை யணிந்த திருவடிகளைத் தமது கரத்தினாற்பிடித்துப் புலம்பும்படியாகிய நம்பியென்னும் விபீஷணரைத் தனது கரங்களால் வாரியெடுத்து மார்பிற் சேர்த்தணைத்துத் தழுவி கோபாக்கினிப் பொறிகளைக் கக்குகின்ற இரண்டு கண்களிலும் தாரைதாரையாக உதிர நீரொழுகும்படியாக வருந்தி கும்பகருணன் சிலவார்த்தைகளைச் சொல்ல ஆரம்பித்தனன். அழகுபெற்ற மாலையையணிந்த மார்பையுடையவனாகிய அடா தம்பீ விபீஷணா! நீரினாலெழுதிய கோலத்தைப்போலச் சிறிதுபொழுதே தோன்றும் அற்பவாழ்க்கையைவிரும்பி என்னை இத்தனைகாலமளவாக வளர்த்ததுமன்றி, இப்போது போர்க்கோலமுஞ்செய்து யுத்தத்திற்கு அனுப்பின இராவணனிமித்தமாக நான் என்னுடைய உயிரைக்கொடுக்காமல் ஸ்ரீராமமூர்த்தியினிடத்தில் அடைக்கலமாகப் போய்ச் சேரமாட்டேன். நீ என்னுடைய வருத்தத்தை ஒழிக்கவேண்டுமென்று உனக்கு இஷ்டமிருந்தால், மேகத்தைப்போலச் சிறந்து அழகு பெற்றிருக்கின்ற திருமேனியையுடையவரான அந்த ஸ்ரீராமமூர்த்தியைச் சீக்கிரமாகப்போய்ச் சேர்ந்து வாழக்கடவாய்.

மூலதாமரைப் புஷ்பத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிருஷ்டிகர்த்தாவான பிரமதேவருடைய பொய்யாவரத்தினாலே, நீ எப்போதுங் கெடுதலில்லாது நிலைபெற்றிருக்கின்ற தர்ம மார்க்கத்தையடைந்தாய்! இந்த லோகமுள்ளவரைக்கும் அழியாமற் சிரஞ்சீவியாகவு மிருக்கப்போகிறாய். மேலுமிந்தலோகமுழுமைக்கு நீயேசர்வாதிபத்தியமு முடையவனாகி விருக்கிறாய். உனக்கே

அந்த அடைக்கலமென்பது தகுதியாகும். நீசத்தன்மையில் மிகுந்த நமது தமயனாகிய இராவணனநிமித்தமாக மரணமடைகிறது அதிகஇழிவைத்தரத்தக்கதேயாயினும், அதுவே எனக்கு மேலான கீர்த்தியாகும். புத்திஹீனனாகிய ஒரு எஜமானன் கெடுநினைவை நினைத்தால், அந்தக் கெடுநினைவைநீக்கி அவனைத் திருத்தக்கூடுமானாலல்லவோ அவனைச்சேர்ந்த மற்றவர்களுக்கு நல்ல சுபக்ஷேமமுண்டாகும்? அப்படி அவனைத் திருத்தக்கூடாவிட்டால் குடிகளும் க்ஷேமத்துடனே வாழும்படியாகவு நேரிடுமோ? போர்த்தொழிலைச் செய்கிறதற்கு உரியவர்களான விவேகமற்ற தலைவர்கள் மடிவதற்குமுன்னே மடிந்து விடுதலே அவர்களுடைய சேனைகளுக்கும் — பந்துவர்க்கத்தினருக்கும் - மற்றையர்க்கும் உரியதாகும்.

அருமருந்தன்ன எனது தம்பியாகிய விபீஷணா! வண்டுகளொலிக்கின்ற மாலையையணிந்த தாசரதியாகிய சுத்தவீரனானவன் தொடுக்கும்படியாகிய அக்கினிக்கணைகளாலே நமது தமயனாகிய இராவணன் கொடுமையாகிய ராக்ஷசச்சைனியங்களுடனு மற்றபந்துக்களுடனும் தேவர்கள் முதலிய மூவுலகத்தவரும்போற்றும்படியாண்டுதம்பிமார்களிலொருவனாவது தனக்குத்துணையின்றி மண்ணுலகத்தில் மாளுதல்நலமாமோ? யுத்தக்களத்தில் தோற்றுத்தங்களுக்கு ஆதாரமாகிய பற்றுக்கோடொருவருமின்றி வருந்துகின்ற பகைவர்களெல்லாம் நகைக்க நமது தமயனாகிய இராவணன் தன்னுடைய பலத்திற்குக்குறைந்தவர்களுடைய கையினால் மாண்டபோதும், பெண்மானுக்குச் சமானமாகிய விழிகளையுடைய பார்வதியை வாமபாகத்தில் வைத்திருக்கின்ற நங்குலதெய்வமாகிய சாம்பசிவமூர்த்தியானவர் எழுந்தருளியிருக்கின்ற பெரிய கைலாசமலையை நடுங்கும்படியாகப் பெயர்த்த அவ்விராவணனுடைய திரண்டதோள்களை யமன் தனது பாசத்தினாற் கட்டியிழுத்துக்கொண்டு போகும்போதும், முன்னாலே தனக்குத் தோல்வியடைந்து தலைமறைவாய்த் திரிந்துகொண்டிருக்கின்ற அந்த யமனுடைய பட்டணத்துக்கு ஒருவரும் துணையில்லாமல் தனித்துப் போகும்படியாக விட்டுவிடுகிறது நமக்கு நல்லதாகுமோ?

அப்பா என்கண்மணிபோற் சிறந்தவிபீஷணா! செம்பொன்னினாற் கட்டப்பட்டிருக்கின்ற மதில்களாற் சூழப்பட்ட சிரேஷ்டமாகிய இலங்காதிபத்திய ஐஸ்வரியங்கிடைக்குமென்ற ஆசையினால் அம்புதைத்த மார்பையுடைய கோலத்தோடு நான்கட்டவிழ்ந்து வாசனைவீசுகின்றமாலையையணிந்த எனது தமயனுயிரை எவ்வண்ணமாவது தனது கோதண்டத்திற் கிரையாக்கிக் கொள்ளப் போகின்றான். அப்பேர்ப்பட்ட பகைஞனுடன் சேர்ந்து அவனைத்துதிசெய்து வாழேன். யானோ இயமனையும் தோற்கடித்து வேடிக்கைசெய்தவன். அஃதிந்த வேளையிற் சத்தியநடையாகவு மெனக்குத் தோற்றவில்லை. ஆதலால் அனுமானையும் — வாலிபுத்திரனாகிய அங்கதனையும் — சூரியகுமாரனாகிய சுக்கிரீவனையும் - அழகிய பொன்போன்ற கோதண்டத்தையுடைய ஸ்ரீராமனையும் - அவர் தம்பியையும் - நீலனையும் - சாம்பவந்தனையும்—பழங்களைத்தின்னும் விருப்பத்

தினற் காட்டிற் றிரிந்துகொண்டு சீவிக்கின்ற குரங்குச்சேனைகளாகிய பிரளயகாலச் சமுத்திரத்தையும் ஒருமிக்கச்செயித்து, பனிக்கூட்டமெல்லாம் வற்றும்படிச்செய்து இந்த உலகத்தைச் சுற்றிவருகின்ற சூரியனுக் கொப்பாகயான்மகா வீரபராக்கிரம உற்சாகத்தோடு உலாவிவரப்போகிறதைச் சற்றே நீ பார்த்துக்கொண்டேயிரு.

அப்பா தம்பீ விபீஷணு! காலகோடிவிஷத்தைப் பார்த்தோடிய தேவர்களைப்போலக் குரங்குகளெல்லாம் பின்னுபின்னப்பட்டோடும்படியாக, மேருமலையானது தன்னுடையகையிலே ஒரு சூலாயுதத்தைப் பற்றிக்கொண்டு அவர்களைப் பின்றொடர்ந்தோடி வருகிறதைப் போலொத்த தோற்றத்தைக் காட்டிக்கொண்டு, கருங்கடலோடவும் - வடவாமுகாக்கினி யோடவும் - சண்டமாருதக்காற்றோடவும் - உலகமெல்லாம் காலமுடிந்தோடவும் - காற்றுடியைப்போலச் சாரிகை சுற்றித் திரியப்போகிறேன். அதை நீ பார்க்கப்போகிறாய். போர்க்களத்திற் சற்றும்பயப்படாமல் வந்து என்கண்ணெதிரே அகப்படுகின்றவர்களில், நீலமலையு மேருமலையுமென்று ஒப்பிட்டுச் சொல்லும்படியான சிறப்பையுடையவர்களாகிய இராமலட்சுமணர்களென்கின்ற இரண்டுபேர்களுந்தவிர, மற்றவர்களெவர்களா யிருந்தபோதினும் அவர்களிற் பயத்தாற் செத்தவர்கள்போக உயிரைச் சுமந்துகொண்டு திரிகின்ற எல்லாரையும் ஒருவராவது தப்பித்திரியும்படியாக விடாமற் கொன்றுவிடுவேன்.

கவி.

தாழ்க்கிற்பாயல்லையென்சொற் றலைக்கொளத்தக்கதென்று
கேட்கிற்பாயாயினெய்தி யவரொடுங்கெழீஇயநட்பை
வேட்கிற்பாயினியோர்மாற்றம் விளம்பிலுல்விளைவுண்டென்று
சூழ்க்கிற்பாயல்லையாருந் தொழுகிற்பாயென்னச்சொன்னான்.

இனித்தாமசஞ்செய்யாதே என்சொல்லைச் சிரசாகவகிக்கத் தக்கதென்று கேட்பாயானால், சீக்கிரமாகப்போய் அவர்களோடுகூடியிருக்கும்படியான நட்பைத் தேடிக்கொள்ளக் கடவாயாக. இனி யேதேனு மொருவார்த்தைசொல்லுவாயானாலும் யாதொருகாரியமுமுடியுமென்று யோசிக்கவேண்டாம். நீ சீக்கிரமாய்ப்போய்விடு. நிலைபெற்றிருக்கின்ற வேதவித்துக்களாகிய பிராம்மண்ணிய தேவனாயிருக்கின்ற ஸ்ரீராமபிரானிடத்தில் உனக்கு வேண்டியவைகளைப்பெற்று, அவர்களுக்கு உண்மை யுள்ளவனாகியிருந்து, இந்தப் போர்க்களத்தி லிறந்தபேர்களாகிய எங்களுக்குச் சாஸ்திரவிகிதமான உரிமைக்கடன்களைச்செய்து, நாங்களடையத்தக்க துக்கசாகரமாகிய நரகத்தை யடையாதவிதமாக எங்களைக் காத்துக்கொள்ளக்கடவாய். அழிந்து போகிறதாய்க் காணப்படுபவைகள் ஆகுங்காலத்தில் அழியாததாய்முடியும். அழிந்துபோகத்தக்ககாலத்திற் சூழ்ந்துநின்று பல உபாயங்களைச்செய்து காப்பாற்றினபோதிலும், அது நசிக்காமற்போகாது. இதுசத்தியமாகும்.

எக்காலத்திலு மழியாமற் சிரஞ்சீவியாக விருக்கப்பெற்ற ஓ பாக்கியவானே! மாச்சரியமற்ற ஆலோசனையுடையவர்களில் உன்னினு முயர்ந்தோர் யாரிருக்கிறார்கள்? இஃதுனக்குத் தெரியாததல்லவே: ஆதலால்-நீ என்மரணத்தைப்பற்றி வியசனப்படாமற் போய்விடு. எங்கள்நிமித்தம் நீ துன்பப்படவேண்டா மென்றுசொல்லி மறுபடியும் அவனைவாரியெடுத்து மார்புடனே இறுகத்தழுவிநின்று, இரக்கமுற்று அழுது, கண்ணீருங்கவலையுமாய் வெகுநேரம் செவ்வையாக உற்றுப்பார்த்து, எமது செல்வமே! என்னுயிர்த்துணையே! தம்பி விபீஷணு! உனக்கும் எனக்கும் இன்றையோடு உடன்பிறப்பென்கிற ஆசையானது நீங்கிவிட்டதல்லவா? என்று கும்பகர்ணன் மகாவியசனத்தோடுஞ்சொல்லினான். அப்போது வெற்றிபெற்ற மிகுந்த பலமுள்ளவரும் அதிக குணவிசேஷருமான விபீஷணாழ்வான் அவனுடைய பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தெழுந்து, தமது தமயனாகிய வக்கும்பகர்ணன் தம்முடையபோதனைக் கிசையாமையால் கண்ணும் — முகமும் - மனமும் — சொல்லும் - அதிக சோர்வடைந்து, வச்சிரதேகமும் வாட்டமுற்று, இன்னும் எதையாவது சொல்லுகிறதினாலே இவருக்குக் கோபமுண்டாகும். அதனால் மிகுந்தபொல்லாங்கு நமக்குவிளையும் இனிக்காரியமில்லை திரும்பிப்போய்விடவேண்டுமென்று அபிப்பிராயமுற்று, அந்தராக்ஷச சைனியங்களெல்லாம் கையெடுத்துக்கும்பிடும்படியாகத் திரும்பிநடந்து,ஸ்ரீராமர் சந்நிதானத்தைநோக்கிப் புறப்பட்டார்.

கும்பகருணன் விபீஷணர் சம்மதிக்குடன்படாது அவரை ஸ்ரீராமரிடம் அனுப்பிவிட்டுச் சோர்ந்துநிற்றல்.

கவி.

கள்ளநீர்வாழ்க்கையேமைக் கைவிட்டுக்காலும்விட்டான்
பிள்ளைமைதுறந்தானென்னைப் பேதுறுநிலையனாகி
வெள்ளநீர்வேலைதன்னில் வீழ்ந்தநீர்வீழவெங்கண்
உள்ளநீரெல்லாமாறி யுதிரநீரொழுகநின்றான்.

அப்படியாகப் புறப்பட்டுச் சென்ற விபீஷணாழ்வானைக் கும்பகர்ணன் பார்த்து, வஞ்சககுபாவமுள்ள குணம்வாய்ந்த வாழ்க்கையையுடைய நம்மை இவன்கைவிட்டு ராக்ஷசசுபாவத்தையும் விட்டுவிட்டான். முலைப்பால் மணமாறாத குழந்தைப்பருவமுள்ள விவன் இவ்வளவு பெருந்தன்மையான நல்ல குணமுடையவனானேயென்று தான்மிகுந்த ஆச்சரியப்பட்டு, பித்துகொண்டவனைப்போலச் சித்தப்பிரமையடைந்து, திகைத்து, பெரியவெள்ளநீரையுடைய சமுத்திரத்தில் விழுகின்ற ஆற்றுநீருக்குச் சமானமாகத் தன்னிரண்டு கண்களிலிருந்தும் தாரைதாரையாக இரத்தநீர்பெருகி யோடும்படியாக நின்றுகொண்டிருந்தான்.

விபீஷணர் ஸ்ரீராமரிடம்வந்து கும்பகருணன் உடன்படாமையைக் கூறலும் அப்பிரான் விபீஷணரைத் தேற்றலும்.

கவி.

எய்தியநிருதர்கோனு மிராமனையிறைஞ்சியெந்தாய்
உய்திறனுடையார்க்கன்றே வறநெறியொழுக்கமுண்மை

பெய்திறனெல்லாம்பெய்து பேசினேன்பெயருந்தன்மை
செய்திலன்குலத்துமானந் தீர்ந்திலன்சிறிதுமென்றான்.

கொய்திறச்சடையின்கற்றை கொந்தளக்கோலக்கொண்டல்
நொய்தினிற்றளக்கியைய நுன்னெதிர் நம்முன்னோனை
எய்துறத்துணித்துவீழ்த்த லினிதன்றென்றிணையசொன்னேன்
செய்திறனினிவேறுண்டோ விதியையார்தீர்க்ககிற்பார்.

இந்த நிலைமையிற் கும்பகர்ணனிருக்க, ஸ்ரீராமருடைய சந்நிதானத்திற் சேர்ந்த விபீஷணாழ்வான் சுவாமிக்குத் தெண்டன்சமர்ப்பித்து, ஓ சர்வலோககாரணபூதரான சுவாமீ! கடைத் தேறும்படியானவர்களுக் கல்லவோ வைதீகதர்மமார்க்கமும், நல்லொழுக்கமும், சத்தியமு முண்டாகப்போகின்றன. அடியேனாலானமட்டும் சொல்லவேண்டிய புத்திமதிகளையெல்லாம் திருஷ்டாந்தப்படுத்திச் சொன்னேன். அவருக்குக் கொஞ்சமாவது இராவணனை விட்டுவருகிறதற்கு மனதில்லை. இராக்ஷசகுலாபிமான மவரைவிட்டு நீங்கவில்லை. என்று சொல்லக்கேட்ட நீலமேகஸ்யாமளரூபரான ஸ்ரீராமமூர்த்தியானவர் நெரிந்தவண்ணஞ்சேர்த்துக்கட்டியழகு வாய்ந்ததமது சடைமுடியைச்சற்றே அசைத்து, தம்பிவிபீஷணா! உன்கண்முன்னாக உன்தமையனாகியகும்பகர்ணனை இறக்கும்படி அஸ்திரப்பிரயோகஞ்செய்து துண்டித்தறுத்துத் தள்ளுகிறது அழகல்லவேயென்று, அவனை யழைத்துக்கொண்டு வரும்படி நான் உனக்குச் சொல்லியனுப்பினேன். இதைவிட நான் உனக்குச்செய்யுமுபகாரம் இப்போது வேறென்னவிருக்கின்றது? பிராரத்வகர்மத்தை யாவர்விலக்குவார்களென்று விபீஷணாழ்வான் கருத்தை ஒருவாறு தேற்றிக்கொண்டிருந்தனர்.

இராட்சசவீரர்களும் வானரவீரர்களும் கடும்போர் விளைத்தல்.

கவி.

எனவினிதுரைக்கும்வேலை யிராக்கதர்சேனையென்னும்
கனைகடல்கவியின்றானைக் கழியினைவளைந்துகட்டி
முனைதொழின்முயன்றதாக மூவகையுலகுமுற்றத்
தனிநெடுந்தூளியார்த்த தார்த்திலபரவைதள்ளி.

இப்படி ஸ்ரீராமர் விபீஷணாழ்வானோடு இனியவார்த்தைகளைச் சொல்லிக்கொண் டிருக்கும்போதே இராக்ஷசச் சேனைகளென்கின்ற பெரியசமுத்திரமானது வானரசேனைகளாகிய கழியைச் சூழ்ந்து முற்றுகைபோட்டுக்கொண்டு யுத்தஞ்செய்யத் தொடங்கியது. அப்போது அந்தச்சேனைகளாலெழும்பிய தூளிப்படலம் சுவர்க்க மத்திய பாதல மென்கின்ற மூன்றுலோகங்களையு மூடிக்கொண்டு, சமுத்திரத்தையும் தூர்த்துவிடத் தொடங்கியது. நானுபக்கங்களிலும் குதிரைகளும், யானைகளும், ஓடித்திரிந்தன. சக்கரங்களைப் பூட்டிய பலம்பொருந்திய தேர்களோடின. மலைகளையெல்லாம் பெயர்த்துக்கொண்டு பலரத்தவாறுகளோடின. கவந்தங்களெழுந்து கூத்தாடின. ஒருவன் கொலையுண்ணும்போது அந்த வுடலினிரத்தமாமிசங்களை உனக்கெனக்கென்று

பேய்களொன்றோடொன்று கைகோத்துக்கொண்டாடின. விருதுக்கொடிகள் பறந்தன. ஆகாசமார்க்கத்தில் மாமிசபட்சணிகளாகிய பருந்து, கழுகு, முதலியவை பறந்தன.

வானரவீரர்கள் மேருமலைக்குச் சமானமாகிய தங்கள்தோள்களினலெறிந்த மரங்களினலேயும், மலைகளினலேயும்; இராக்ஷசர்களாலேவப்பட்ட சூலாயுதத்தினலேயும், வேலாயுதத்தினலேயும்; இருவகைச்சேனைகளு மொத்துண்டன. அப்போது மூளையும், மாமிசமும், இரத்தமும், எலும்பும், கொழுப்பும், சிதறுண்டு பலதிசைகளிலும் விழும்படியாகக் கோரதந்தங்களையுடைய இராக்ஷசர்களிற் சிலர் தங்கள் தங்கள் கையிற்பிடித்திருந்த வாளாயுதத்துடனே குழம்பிக்குழைந்து மாண்டுபோனார்கள். சிலவானரர்கள் ரத்தவெள்ளத்திலழுந்தி மாண்டுபோனார்கள். சிலராட்சசர்கள் அநேகஆயுதங்களைப் பிரளயகால மேகத்தைப்போல வானரர்கள்பேரில் ஏவினார்கள். சிலவானரர்கள் மலைகளைப்பெயர்த்து யுகாந்தகால இடியைப்போல ராட்சசர்கள்மீது மோதினார்கள். சிலராட்சசர்கள் வானரர்களை வாரியெறிந்தார்கள். சிலவானரர்கள் ராட்சசர்களைக் கையிற்பிடித்துப் பிசைந்து பிசைந்து கொன்றார்கள்.

சில அரக்கர்கள் வானரர்களை நிந்தித்துப்பேசினார்கள். சிலவானரகுலவீரர்கள் அரக்கர்களை அடித்துத் துன்பப்படுத்தினார்கள். இந்தப்பிரகாரமாக இருதிறத்தாரும் பற்பலவிதமான யுத்தங்களைச் செய்யும்போது, எதாய்முடியுமோவென்று தேவர்களெல்லாரும் பயந்து நடுக்கங்கொண்டார்கள்.

வானரவீரர்களும் இராட்சசவீரர்களும் கடும்போர் விளைக்கக்கண்டு கும்பகருணன் வானரவீரர்களைச் சின்னபின்னஞ்செய்ய அவர்கள் கும்பகருணனங்கத்தைப் பங்கஞ்செய்தோடுதல்.

கவி.

நீரினையோட்டுங்காற்றுங் காற்றெதிர்நிற்குநீரும்
போரினையாகவென்று பொருகின்றபூசனோக்கித்
தேரினையோட்டிவந்தான் றிருவினைத்தேவர்தங்கள்
ஊரினைநோக்காவண்ண முதிரவேனோக்கியுள்ளான்.

யுகாந்தகாலத்திற் காற்று முன்னும் — மழைத்தாரை அதன்பின்னும், மழைத்தாரைமுன்னும் - காற்று அதன்பின்னுமாக ஒன்றையொன்று மாறிமாறித் துரத்துவதுபோலக் காணப்படும் விதமாய் ராக்ஷசவீரர்களை வானரவீரர்களும், வானரவீரர்களை ராக்ஷசவீரர்களும், ஒருவரையொருவர் மாறிமாறித் துரத்திப் பின்னிடைந்துபோய்விடாமல் எதிர்த்து நின்று கடும்போர் செய்கிறதைத்தனக்குவேண்டிய சகலஐஸ்வரியங்களையும் தேவலோகத்திலிருக்கவிடாமற் பறித்துக்கொண்டு மறுபடியும் அவைகளில் தேவர்களுக்கு இச்சையுண்டாகாதபடிக்குத் தன்னுடைய உதிரந்தோய்ந்த சூலாயுதத்தைப்பார்த்துக்கொண்டேயிருக்கின்றவனை கும்பகர்ணன்கண்டு, வானரசேனைகளின் பேரில் தன்தேரைச்செலுத்திக்கொண்டு யுத்தத்திற்குவந்தான். அப்போது ஊ

ழிக்காலத்திற்புறப்படுகின்ற சண்டமாருதத்தில் உலகங்களகப்பட்டுத் துன்ப ப்படுவதுபோல, வானரங்களென்றுசொல்லப்பட்டவைகளிலநேகம்சேனைத்தூ ளியிலகப்பட்டும், இரத்தக்கடலில் மூழ்கியும், முகபடாத்தையணிந்த மஸ்தக த்தையுடைய யானைகள்காலிலிடறியும், அவற்றோடு தொடர்ந்துவந்த கும்பக ருணனுடைய தேர்க்காலிலகப்பட்டும், இப்படி பலவாறாய் மாண்டன.

இம்மட்டிலே போகாமற் கும்பகர்ணனனவன் தன்மீது மலைகளைக்கொண் டெறிகின்றவைகளும் தன்தேரின் முன்பாகவந்து குதிக்கின்றவைகளுமான வானரங்களிற் சிலவற்றை இரண்டுகைகளினாலும் பிடித்துஒன்றுடனே யொ ன்றைமோதியும், சிலவானரங்களைக் காலினாலே தேயும்படி உதைத்தும், சில வானரங்களைக் காலின்கீழ்ப்போட்டு நசுக்கியும், சிலவானரங்களை வாயிலிட்டு மென்றுமென்றுமிழ்ந்தும், சிலவானரங்களைக் கையினாற் கும்பற்கும்பலாய் வாரியெடுத்து முந்திரிகைப் பழத்தினின்றும் கொட்டையைத்திருகிப் பிட்ப துபோலத் தலைகளைத்திருகிப் பிட்டெறிந்தும், சிலவானரங்களைப் பல்லினாற் கடித்துகடித்துக் கொன்று போராடி; மிகுந்த பலாட்டியனான வசந்தனென் கிற வானரவீரப்படைத்தலைவனைப் பிடித்து நசுக்கி, அவனுடைய ரத்தத்தை வாரித் தேகத்திற் சந்தனம்போலப் பூசிக்கொண்டான்.

இப்படிச்செய்த தல்லாமலும் சிலவானரவீரர்களைக் கையிற்பிடித்துச் சமுத்திரத்தில் தோய்த்துத் தோய்த்து எடுத்தான். சிலவானரவீரர்களைப் பூமி யிற்போட்டுத் தேய்த்துவிட்டான். சிலவானரவீரர்களைச் சமுத்திர ஜலத்தி லே அமிழ்த்திவிட்டான். சிலவானரவீரர்களை நெருப்பில் இறக்கும்படி எறிந்துவிட்டான். சிலவானரவீரர்களைத் தன்னுடைய தேரிலறைந்தான். சில வானரவீரர்களை எட்டுத் திக்கிலும்போய் விழும்படி வாரித் தூவினான். சில வானரவீரர்களைப் பிடித்து மரத்தூறுகளில் வீசியடித்தான். சில வானரவீரர் களைக் கிறுகிறுவென்று சுழற்றி மலைகளில் மோதினான். இதைக்கண்டு தேவ ர்களெல்லாரும் பயந்து பறந்தோடிப் போனார்கள். எங்கே பார்த்தாலும் வா னரப்பிணக்குப்பல்கள் நிறைந்துவிட்டன. கழுகு பருந்து முதலான பறவை களெல்லாம் எட்டுத்திக்குகளும் தோன்றாதபடி நெருங்கிப்பறந்தன.

முன்பு வானரப்படைகள் மலைகளையெல்லாம் பிடுங்கி எறிந்து எறிந்து இராக்கதப்படைகளைக் குறைத்ததுபோலவே, அக்குரங்குச் சேனைகளையெல் லாம்யமனும் பயப்படும்படியாகக் கும்பகர்ணன் கொன்று குறைத்துப்போ ட்டான். அப்போது மிகுதியான வானரசேனைகள் இனிமேல் நாம் கும்பகர் ணன்மேலன்றி மற்றொருவர்மேற்பிடுங்கி யெறிவதற்கு இவ்வுலகத்தில் ஓர்ம ரத்தையாவது மலையையாவது வைப்பதில்லை-இன்றைக்கேநாம் ஜெயமடைய ப்போகிறோம்.சத்துருக்களெல்லாம் இப்போதே முடியப்போகிறார்களென்று தங்களால் ஊக்கங்கொண்டு அடித்தவைகளும் விட்டெறிந்தவைகளுமான, மர ங்கள்-மலைகள்-வேர்கள்-கட்டைகள்-காலிலகப்பட்ட புற்பூடுமுதலியமற்றெல்

னவற்றையும் கும்பகர்ணன் தனது பெரிய தோள்களினாலே தாங்கினான். அப்படித் தாங்கினபோது இவர்களால்வீசப்பட்டவைகளெல்லாம் பொடிப் பொடியாய் உதிர்ந்துபோய்விட்டன.

அதைக்கண்ட வானரவீரர்கள் இனி இவன்மீது எறியத் தக்கவைகளும் - வாரியெறையத்தக்கவைகளும் -- ஒன்றுமில்லையேயென்று சொல்லிப் பல்லோ பெல்லை நறநறவென்று கடித்துக்கொண்டு, இவனை நாமெல்லாரும் சுற்றிநின் று அடிக்கலாம் வாருங்களென்று சொல்லி ஒருமிக்கப் போய்ப்பாய்ந்தார்கள்.

கவி.

குன்றின்வீழ்குரீஇக்குழாத்திற் குழாங்கொளக்குதித்துக்கூடிச்
சென்றுமேலெழுந்துபற்றிக் கைத்தலந்தேயக்குத்தி
வன்றிறலெயிற்றாற்கவ்வி வள்ளுகிர்மடியக்கீளா
ஒன்றுமாகின்றதில்லை யென்றிழிந்தோடிப்போன.

குருவிக் கூட்டங்கள் மலையை மோதுவனபோற் கும்பலாய்த் தாவிக் கூடி, குதித்துக் குதித்துக்கொண்டு போய்க் கும்பகர்ணன்மேற்பாய்ந்து அவ னைப்பிடித்து, தங்கள்கைகள் தேய்ந்துபோகும்படியாகக் குத்தியும்-பலம்பொ ருந்திய பற்களினாற் கௌவிக் கடித்தும் - கூர்மைபொருந்திய நகங்களினாற் சதைசதையாய்க் கிள்ளிப் பங்கப்படுத்தியும் – அவனுக்குக் கொஞ்சமும் து ன்பநேரிடாததைக்கண்டு; இனி நம்மாலொன்றும் ஆகமாட்டாதென்று அவ னைவிட்டிழிந்து ஓட்டம் பிடித்தார்கள்.

கும்பகருணனோடு நீலன் போர்விளைத்து மெலிதல்.

கவி.

மூலமேமண்ணின்மூழ்கிக் கிடந்ததோர்பொருப்பைமுற்றும்
காலமேயெழுந்தகால்போற் கையினாற்கடிதின்வாங்கி
நீலன்மேனிமிர்ந்ததாங்கோர் நெருப்பெனத்திரித்துவிட்டான்
சூலமேகொண்டுநூறி முறுவலுந்தோன்றிநின்றான்.

அப்போது ஊழிக்காலத்தில் உலகத்தை யெல்லாம் சுட்டெரிக்கும்படி யாக வருகின்ற பிரளயகாலாக்கினியைப்போல நீலனானவன் பூமியில் வேரூ ன்றிப் பதிந்துநிற்கிற ஒரு பெரியமலையைக்கையினாற் பேர்த்தெடுத்து, அவ்வூ ழிக்காலத்தில் மோதும்காற்றைப்போல் கும்பகர்ணனுடைய தேகத்தின்மீதி லெறிந்தான். அதைக்கும்பகர்ணன் ஒருசூலாயுதத்தைக்கொண்டுபொடிப்பொ டியாய்நொறுக்கிவிட்டுச் சிரித்துக்கொண்டுநின்றான். அதைக்கண்டநீலன்இன் னுமொரு மலையைத்தேடிப்பிடுங்கியெறிந்தபோதிலும் அதுவு மிப்படியே துக ள்துகளாய்ப் போய்விடும், அதனால் நம்மோடொத்த வானரசைனியங்கட்கு மிகவும் பயமுண்டாகப்போகுதென்றெண்ணித் தன்னுடையபுஜங்களையே ஆ யுதமாகக்கொண்டு கும்பகர்ணனுடைய தேருக்கெதிரேயோடி அட்டகாசஞ் செய்து நின்றுகொண்டு, யுத்தவாத்தியங்களி னோசையும்-சத்தசமுத்திரகோ ஷங்களும்–இடியின் முழக்கமும் வங்கும்படியாகவும், பூலோகத்தவர்களெல்லா

நடுக்கங்கொள்ளும்படியாகவும், நெய்யைச் சொரிந்த அக்கினியைப் போலக் கோபத்தாற் சுவாலித்தெரிந்து பலதரம் கைகளால் ஓங்கித் திடீர் திடீரென்று குத்தி, கால்களினால் எட்டி யெட்டி உதைத்து, கையும் சலித்து, காலுமோய்ந்து, மனதிற்கொண்ட எண்ணம் ஒருவாறு நிறைவேறி நின்றனன். அப்படி நின்றவனாகிய நீலனைக் கும்பகருணன் பார்த்து, அடா குரங்கே! நான் முனைந்தேனெனில் நீ எவ்வளவு உனது உயிரை இப்போதே குடித்துவிடுகிறேனென்று சொல்லி, நிராயுதனாய் நிற்றலைப்பார்த்து நமது சூலாயுதத்தை இவன் மேலெறிவது தகுதியல்லவென்று நினைத்துத் தனது இடதுகையினாற் பிடித்துத்தள்ளி ஓர் குத்துகுத்தவே நீலன் சோர்ந்துவிழுந்தனன்.

அங்கதன் போராடி மெலிதல்.

கவி.

ஆண்டதுநோக்கிநின்ற வங்கதனுழிதன்னுள்
நீண்டதோர்நெடுந்திண்குன்ற நிலமுதுகாற்றநீக்கி
மாண்டனனரக்கன்றம்பி யென்றுலகேழும்வாழ்த்த
தூண்டினனதனையன்னானொருதனித்தோளினேற்றான்.

அப்போது நீலன் சோர்ந்துவிழுந்ததைப் பார்த்துக்கொண்டிருந்த அங்கதன் சக்கரவாளகிரியைப்பார்க்கிலு நீண்ட ஒரு பெரிய பாரமான மலையைப் பூமிதேவியானவள் முதுகை ஆற்றிக்கொள்ளும்படியாகப் பிடுங்கி, இன்றைக்குக் கும்பகர்ணன் மரணமடைந்தானென்று ஏழுலோகத்தவர்களு மகிழும்படியாக அவன்பேரில் விட்டெறிந்தான். அதைக் கும்பகர்ணன் தனதொரு தோளினாலே தாங்கினான். தாங்கினமாத்திரத்தில் அந்த மலையானது அநேகம் சுக்கற்சுக்கலாயும், துண்டுதுண்டாயும், பாளம்பாளமாயும், பிளவாகவிழுந்தது. அதைக்கண்ட வானரசேனைகளெல்லாம் இனியெங்களுக்கென்ன சத்தியிருக்கின்றது? இவனோடெதிர்த்துச் சண்டை செய்ய எங்களால் முடியாதென்றுபயந்து ஓட்டம்பிடித்தார்கள் அந்தச் சமயத்தில் அங்கதன் மிகுந்த கோபத்துடனே மிதித்தவடி மாறாமல் ஒன்றியாய் நின்றான்.

அப்போது கும்பகர்ணன் இந்திரனுடைய வச்சிராயுதத்தையும் — எமனுடைய தண்டாயுதத்தையும் — ஜெயிக்கத்தக்கதும், சமானமற்ற வலியையுடையதுமான ஓரிருப்புலக்கையை அதிகமான வேகங்கொண்டு இடதுகையினாலெடுத்து, அங்கதனுடைய உயிரைவாங்கக் கடவாயென்று உச்சரித்துவீசியெறிந்தான். அங்கதன் தேவர்களெல்லாரும் தன்னை ஸ்தோத்திரம்பண்ணும்படியாகத் தனதுபலம்பொருந்திய கையினாலே அந்தமுசலாயுதத்தைப் பிடித்துச் சுழற்றிக்கொண்டு, மேகத்தில் தோன்றுகின்ற இடியானது ஒருபர்வதத்தை அக்கினிமூட்டி யெரிக்கிறதுபோல மிகுந்தவல்லவனான கும்பகர்ணனை அடித்து, அவன் உடல்முழுமையும் உதிரமயமாகும்படிச்செய்து, உயிரைமடிப்பேனென்று கண்களில் அக்கினிபறக்கக் கர்ச்சித்துக்கொண்டே அக்கும்பகர்ணனுடைய விருதுக்கொடிகள் கட்டிய பெரிய தேருக்கு முன்பாகத்தாவி

குதித்துப்போய் அவனெதிரே நெருங்கிநின்றான். இப்படிநின்ற அங்கதனைக்
கும்பகர்ணன் நெருப்புப்பறக்கப் பார்த்து, என்னிடத்திற் சாரும்படியாகவந்
த நீ வானரசேனைகளுக்கெல்லாம் தலைவனான சுக்கிரீவனோ? அல்லது அவனு
டைய குமாரனோ? அல்லது என்னுடைய ஊரில் நெருப்பிட்டுக் கொளுத்திவி
ட்டு மிருந்த வெற்றிபெற்றுக்கொண்டு போனவனோ? நீ யார் உன்னுடையபெ
யரென்ன? சீக்கிரமாகச் சொல்லுகவென்று கேட்டான்.

இவ்வாறுகேட்ட கும்பகர்ணனை அங்கதன் பார்த்து, உன்னுடைய தமை
யனான இராவணனை வாலினாற் சுற்றிக்கட்டிக்கொண்டு நான்கு திக்குகளிலும்
தாவிச்சூலாயுதத்தைக் கையிற்கொண்டசாம்பசிவமூர்த்தியினுடைய திருவடி
த்தாமரைகளில் வணக்கஞ்செய்த மஹாவீரனான வாலிபுத்திரனும், உன்னையும்
அப்படியே வாலிற்கட்டிக்கொண்டு இராக்ஷசர்களாகிய சத்துருக்களை எதிர்த்
துநிற்கின்ற தசரதகுமாரருடைய திருவடிகளில் வணங்கும்படியான ஐஸ்வரி
யத்தைப்பெற்றவனுமாகிய அங்கதன் நானேயாகுமென்று சொல்லினான். அ
தைக்கேட்ட கும்பகருண னவனைப்பார்த்து, அப்பா அங்கதா! உன் தகப்பனை
மறைந்திருந்து ஓரம்பினாலே உயிர்போக்கின அபகாரிகளுக்கு வருத்தப்படுத்
துகின்ற பகையைச் செய்துகாட்டாமற் போவாயேயானால், உன்னையுலகத்த
வர்கள் நிந்தனை செய்யமாட்டார்களா? அப்படிச் செய்தாயேயானால் என்னை
ப்போல வசையற்ற வீரர்களும் உன்னை ஸ்தோத்திரஞ் செய்வார்களல்லவா?
நல்லது அஃதிருக்கட்டும்: நீ இங்கேவந்தது என்னையுன் வாலினாலேகட்டியிழு
த்து ஸ்ரீராமனிடத்திலே கொண்டுபோய் வைக்கிறதற்காகவல்ல. தேவேந்திர
னுடைய மார்பிலேகுத்திக் கூறிட்டிழுக்கின்ற எனதுமூவிலைச் சூலாயுதத்தி
னுச்சியானது உன்முதுகைத் தடாரித்துக்கொண்டு போகும்படியாகவும், எ
ன்னைக் கட்டுகிறதற்குரியதாகச் சொன்ன உன்னுடைய வாலைப்போற் கையு
ங்காலும் அச்சூலாயுதத்திற் றலைகீழாய்த் தொங்கும்படி நிற்கவும் வந்தா யெ
ன்றனன்.

அம்மாத்திரத்தில் அங்கதன்கண்களி லக்கினிப்பொறிபறக்கும்படியாகப்
பார்த்து, மலையின்மீது இடியிடித்து விழுந்ததுபோலப் பிரதித்வனியுண்டா
கத்தக்கதாகவும் — உலகத்தவர்களினுடைய நெஞ்சு நடுங்கும்படியாகவும் -
தனது அழகுபெற்றுவிளங்கும் பெரிய கையினாலே அந்தக்கும்பகர்ணனை இ
ருப்புலக்கையைக்கொண்டு ஓங்கியடித்தான். அப்படியடித்தவுடனே வச்சிரத
ண்டத்திற்குச் சமானமாகிய அந்தஇருப் புலக்கையானது அநேகந் துண்டுக
ளாய்முறிந்து விழுந்துவிட்டது. அந்த இருப்புத்தண்டத்தைத் தனதுகையை
உயர்த்தித்தாக்கிப் பொடியாகச்செய்த கொடியவனான கும்பகர்ணனைப்பார்த்
துக் கொன்றுவிடுகிறேனென்று பூமிகுழியும்படியாகக் குதிக்கின்ற அங்கத
னை அதிகபலமுள்ளவனான கும்பகர்ணன்கோபித்து, தேகத்திற் புண்வடுப்ப
டும்படியாக ஓங்கி யொருகுத்துக் குத்தினான். அந்தக்குத்து பட்டமாத்திரத்

தில் அங்கதன் மரணமூர்ச்சையடைந்து, பூமிபடீரென்று வெடிக்கும்படியாகக் கீழேவிழுந்தான். அதைக்கண்ட அனுமான் உடனேவந்து குதித்தார்.

அநுமார் போராடி மேலிதல்.

கவி.

மறித்தவனவனைத்தன்கை வயிரவாட்சூலமார்பில்
குறித்துறவெறியலுற்ற காலேயிற்குன்றமொன்று
பறித்தவனெற்றிமுற்றப் பார்ப்பிடைப்பாகமுன்னே
செறித்தெனச்சுரிக்கவீசித் திரத்தனைவாழ்த்தியார்த்தான்.

அப்படிகுதித்தவர் மூர்ச்சித்துவிழுந்த அங்கதன்மேரில் அந்தக்கும்பகர்ணன் மறுபடியும் தன்கையிலுள்ள அதிகபலமாகிய உயர்ந்த சூலாயுதத்தை மார்பிற்கு கெதியம்வைத்தெறிய எத்தனித்ததைக்கண்டு, விரைவிலொருமலையைப்பறித்துக்கொண்டுவந்து அந்தக் கும்பகர்ணனுடைய விசாலம்பொருந்திய முழுநெற்றியின் பாதிப்பங்கிற்பாய்ந்து பொத்துக்கொள்ளும்படியாக வீசி ஸ்ரீராமபிரானை வாழ்த்திக்கர்ச்சித்தார். அந்தப்பர்வதமானது கும்பகர்ணனுடைய நெற்றியிலேபோய்ப் பொத்துக்கொண்டு அவனுக்குமற்றொருதலையிருந்தாற்போல நிற்க, அதைத்தானே கும்பகர்ணன் கையினாற்பிடுங்கிக்கொண்டு, வாயுபுத்திரராகிய அனுமானுடைய வச்சிரமலைக்குச்சமானமாகிய மார்பிலே உலைக்களத்தில் வேக்காடுற்ற இரும்பின்மீது தீப்பொறிகள்சிதறத் தாக்குகின்ற சம்மட்டிக்குச் சமானமாக நெருப்புப்பொறிகள் சிதறத்தக்கதாக வெறிந்து, தானும் தன்னுடைய தோள்களைக் கொட்டிக் கர்ச்சித்தான்.

அந்தச் சமயத்தில் முன்னோடிப்போன வானரர்கள் மறுபடியும் பயப்படாமல் வந்து வாலிபுத்திரனாகிய அங்கதனை எடுத்துக்கொண்டு போனார்கள். அப்போது ஆஞ்சனேயர் தானெறிந்த மலையைத் தன்மீதிலேயே விட்டெறிந்த கும்பகர்ணனுடைய சாமர்த்தியத்திற்கு மெச்சி, ஆகாசமுழுதையும் விழுங்குகிறதுபோல மறைத்துக்கொண்டிருக்கின்ற மற்றொருபெரியமலையைப் பறித்துக் கையிலேந்திநின்று, ஒருவரும் சமானமில்லாத பலமுள்ளவனான அந்தக்கும்பகர்ணனைப் பார்த்து, இந்த மலையை உன்மேல் எறிகின்றேன். க்ஷணநேரத்திற்குள்ளாக நீ நசுங்கி மாண்டுபோகப்போகிறாய். அப்படியில்லாமல் நீ சீக்கிரத்திலிதைத் தடுத்துவிடுவாயேயானால், உன்னுடைய சக்தியின் வல்லமையை நான் அறிந்து மெச்சிக்கொள்ளுகின்றேன். அதன்பிறகு உன்னுடன் சண்டையும்செய்யாமல் திரும்பிப்போய் விடுகிறேன். உலகத்திலே மகாவீரனென்கிற ஒரு பெரும்புகழையும் நீ யடையக்கடவாயென்று கூறினார்.

இப்படி அஞ்சனை யிளஞ்சிங்கமாகிய ஆஞ்சனேயர் சொல்லியதைக் கும்பகர்ணன்கேட்டு, மலையின்குகையை திறந்தாற்போலப் பிளப்பாகியவாயைத்திறந்துநகைத்து.நீஎறிகிறமலையை அப்படியேஎறி, அது என்மேற்படுகிறகாலத்திற் கொஞ்சமாவது இளைப்படைவேனேயானால், உனக்குநான் தோற்றுப்போனவனேயாவேன். என்னுடைய பலமும் அற்பமானதாக நினைக்கத்தக்

கரு. என்றிப்படி இருவரும் சபதம்பண்ணிக்கொண்டார்கள். அப்போது ஆஞ்சநேயர் - அடா! கும்பகர்ண! நீ சமர்த்தனானால் என்னோடே எதிர்த்து நில்லு: சமர்த்தில்லாவிட்டால் உயிர்தப்பி யோடிப்போய்விடென்று சொல்லித் தமது பெருங்கையினாலே குறிப்பிட்டெறிந்த அந்த வச்சிரமலையை அதிக உக்கிரத்தோடு கும்பகர்ணன் தனது தோளில் தாங்கினான். அம்மலை யவன் தோளிற் பட்டமாத்திரத்திற் படீரென்று அநேகம் சுக்கல்களாகப் போய்விட்டது. அந்தச் சப்தத்தைக்கேட்ட உலகத்தவர்கள் மனம் திடுக்கிட்டார்கள்.

அக்கா லவனுடைய தேகம் கொஞ்சமும் கன்றி வருத்தமடையாம லிருக்கிறதை ஸ்ரீராமதூதர்கண்டு, இவனுடைய வல்லமை இவ்வளவென்று ஒருவராலும் அளவிட்டுச் சொல்லிமுடியாது. மேருமலையைச் சமானப்படுத்திச் சொன்னாலும், அதைக்காட்டிலுமிவன் அசையாத நிலைமையுள்ளவன். ஆனதால்-வல்லமையிலும் அழகிலும் அம்மேருவையு நிகர்சொல்லக்கூடாமல் வெற்றியும் சுந்தரமும்பெற்ற தோள்களையுடைய ஸ்ரீராமமூர்த்தியின்பாணங்களே இவனைப் பிளந்தாற் பிளக்குமென்று சொல்லிவிட்டுத் திரும்பிப்போய் விட்டார். இவையனைத்தும் தேவர்கள்கண்டு, இந்தச் சமயத்தில் இவ்வனுமான் வராவிட்டால், எழுபது வெள்ள வானரசேனைகளுள் இதுவரையிலும் இறந்தவர்கள்போக மற்றவர்களெல்லாம் இன்றைக்கே இவனுடைய வலதுபாரிசத்திலுள்ள முக்கழுச்சூலத்தாற் குத்துண்டு கருவற்றுப்போவார்கள். இறந்துபோனவர்களுடைய உதிரமாமிசங்களால் நிறையப்பட்டு ஒரேநாளையில் இந்த லோகமுழுவது நாசமடைந்து வேறுபட்டுப்போகும். ஐயோ? இந்தக்கும்பகர்ணனையெதிர்த்து வானரர்கள் குத்தினதில் என்னகுறை? அப்படியாகக்குத்தியும் தங்கள் கைசலித்துப் போய்விட்டார்களே யல்லாமல் அவனைத் தோற்கடித்தவர்க ளொருவருமில்லை. அவனை நோகச்செய்தவர்களும் ஒருவருமில்லையென்றுகலங்கி நெஞ்சுபொருமி நடுநடுங்கினார்கள்.

அப்போது கும்பகர்ணன் தானொருவனே போர்க்களத்தில் ஒருகுரங்கினது அடிச்சுவடும் காணவொட்டாதபடி அடித்துத்துரத்தி, தேவர்களைச்செயித்த தன்னுடைய வீரத்தையும் - கீர்த்தியையும் - மறுபடியும் புதுக்கினவனாகி, குரங்குகளெல்லாம் பெருங்கூட்டங்களாக ஓடிப்போய்விட்டனவே: அந்தரிஷிகளாயிருக்கின்ற இரண்டுமனிதர்களும் இங்கில்லையே:இன்னமும் ஒரிலங்கையிருக்கின்றதென்று நினைத்து ஒருவேளை அங்கே போரிடுவதற்குப் போனார்களோ? அவர்கள் எங்கேயிருக்கின்றார்க ளெங்கே யிருக்கின்றார்களென்று உரத்தசப்தத்தோடு கூப்பிட்டுக்கொண்டு, தேவர்களும் பயங்கொள்ள தன்னுடைய தோள்களைத் தட்டிக்கொண்டு, பேரிடிமுழக்கம்போல வீரகர்ச்சிதஞ் செய்தான். அதைக்கேட்டு யமனும்பயந்து நடுங்கிப் போனான்.

அதிவேகத்துடனே மோதிவருகின்ற அலையைப்போலுந் தாவிவந்த எழுபதுவெள்ள வானரசைனியக் கூட்டங்களுக்குள் கும்பகர்ணனால் இறந்து

போனவைபோக உயிருண்டாயிருந்தவைகளெல்லாம் ஓட்டம்பிடித்தபடியினாலே இரணக்களத்தி லொருவருமில்லாமல் வெறுவெளியாய்விட்டன. உதிரவெள்ளம் பாய்ந்ததினால் சமுத்திரம் பெருக்கெடுத்து பூரணச்சந்திரோதய காலத்தைக்காட்டிலும் அதிகமாய் அலைகள் மேலெழுந்து சப்தித்தன.

இலக்ஷுமணருக்கும் கும்பகருணனுக்கும் போர்மூளல்.

கவி.

குன்றுங்கற்களுமரங்களுங் குறைந்தனகுரங்கின்
வென்றியம்பெருஞ்சேனையோர் பாதியின்மேலும்
இன்றுதேய்ந்ததென் றுரைத்தலு மமரர்கண்டுவெப்பச்
சென்றுதாக்கினனொருதனிச் சுமித்திரைச்சிங்கம்.

அச்சமயத்தில் பயந்தோடிய சிலவானரக்கூட்டங்கள் இளையபெருமாளாகிய இலக்ஷுமணரிடத்திற்குவந்து எங்களையாளவந்த ஸ்ரீராமச்சந்திரப்பிரபுவின் சோதரரே! இன்று கும்பகருணனுயுத்தத்தில் இவ்வுலகிலுள்ள குன்றங்களென்ன மலைகளென்ன மரங்களென்ன அவைகளிற் பாதிக்குமேலும் குறையும் வண்ணம் போர்புரிந்த வானரகூட்டங்கள் முற்கூறிய பாதிக்குமேலென்னு மளவைப்படியே; அக்கும்பகர்ணப்பதிதனால் இறந்துவிட்டன. இனியாது செய்வதென்றுரைத்து ஏங்கிநின்ற காலையில், சுமித்திராதேவியின் திருக்குமாரனாகிய ஒப்பற்ற இளஞ்சிங்கவேற்றை யொத்த நமதிலக்ஷுமணப்பெருமான் தேவர்களெல்லாம் இன்றே ராக்ஷசப்பூண்டுகள் அற்றதென்று சந்தோஷிக்கும்படியாக மகாகோபங்கொண்டவராகி அந்தக்கும்பகருணனோடு தானொருவரே எதிர்த்து வில்லைக் குணத்தொனி பண்ணினார். அந்தத் தொனியால் திடுக்கிட்டுக் கைகால்கள் நடுங்கி அநேக ராக்ஷசர்க ளிறந்தபடியினாலே, இராக்ஷச ஸ்திரீகள் தங்கள்கழுத்திற் கட்டியிருந்த பொற்றாலிகளை யெல்லாம் அறுத்துத் தரையில் எறிந்துவிட்டார்கள். இடியிடித்ததென்று சுவர்க்கலோகமுழுது நடுங்கியது. அஷ்டதிக்குகளெல்லாம் செவிடுபட்டுப்போய்விட்டன. பேய்க்கூட்டங்களெல்லாம் கையிற்பிடித்துத் தின்றுகொண்டிருந்த மாமிசங்களை எறிந்துவிட்டு, இரண்டு கைகளையும் தட்டிக்கொண்டு கூத்தாடின. இலட்சுமணப்பெருமான் வேகத்தோடும் பிரயோகித்த பாணக்கூட்டங்கள் வெகுநாளாய் ஆகாரமில்லாதிருந்தபடியினாலே சீறிக்கொண்டு கட்டுப்பாடாக உலைக்களத்தில் வெந்த இரும்புபோல அக்கினியைக் கக்கிக்கொண்டு, யானைகளினது தேகத்தில் நுழைந்து அவைகளுடைய ரத்தத்தையெல்லாம் பானம்பண்ணிவிட்டன. சில அஸ்திரங்கள் சமுத்திரத்திற் சொப்பாகவந்த ராக்ஷசர்களுடைய தலைகளைக் கொய்துகொண்டுபோயின. சிலபாணங்கள் அவரவர்களுடைய அறுபட்ட சிரங்களில் தைத்து அவைகளை அஷ்டதிக்குகளிலும் கொண்டுபோய் எறிந்தன. சில அம்புகள் அறுந்ததலைகளை விழவொட்டாமல் வேகமாய்க்கொண்டுபோவதினால் இந்த அம்புகளுக்கும் தலைகளுண்டென்னும்படி

யாக இருந்தன. அக்கினிமயமாக இருக்கின்ற சிலகணைகள் மலைக்குச்சரியொத்த யானைகளுடைய முகபடாத்தோடு தலையைக்கத்தரித்துத் தேகத்திலூடுருவிப்போய், இரணக்களத்தில் யுத்தஞ்செய்கின்ற அநேக ராக்ஷசர்களுடைய தலைகளையும் சிந்திக்கொண்டு, குகையில் நுழைகின்ற பெரிய மலைப்பாம்பைப் போலப் பக்கங்களிலுள்ள மலைகளிற்போய் நுழைந்துகொண்டன.

சிலசரங்கள் அனேக கூட்டங்கூட்டங்களாக மின்னல்களோடுகிறதுபோல விரைந்துபோய் எதிர்முகமாக இருக்கின்ற கூனர்களாகிய ராக்ஷசர்களுடையமுகத்தில் நுழைந்து, அந்த முகத்தில் நுழைந்ததுபோலவே சேனையின் கோடியிலிருக்கின்ற ராட்சசக்கூட்டங்களினது முதுகின் பின்புறத்திலிருக்கின்ற பிடர்க்குள்ளும் சமவேகத்தோடுபோய் நுழைந்தன. சிலசாயகங்கள் தோல்போர்த் திருக்கின்ற பேரிகைகளில் தைத்தன. சில சிலீமுகங்கள் சங்கினையூதுகின்றவர்களுடைய குவிந்தவாயிலும், அச்சங்கைப்பிடித்திருக்கின்ற கைகளிலும், அபரிமிதமாகப் போய்ப் பாய்ந்தன. சில ஆசுகங்கள் யானைகளுடைய கழுத்திற்போய்த் தைத்தன. சில ஆவரிகள் தேர்களிற் கட்டியிழுக்கின்ற மிகுந்த வேகமுடைய குதிரைகளின் தலைகளிற்போய்ப் பதிந்தன. சிலவாளிகள் இவைகளைப் பார்த்துக்கொண்டிருந்த ராக்ஷசர்களில் ஒருவரையும்விடாமல், அவரவர்களுடைய கண்களிலெல்லா முருவின. இந்தப் பிரகாரமாக எல்லாவிடங்களிலும் இலட்சுமணரால் விடப்பட்ட பாணமயமாக நிறைந்தன.

இப்படியாகப் பாணங்கள்பட்டு யானைகளெல்லாம் தந்தங்கள் முறியுண்டவைகளும், வாலறுபட்டவைகளும், தீப்பறக்கின்ற கண்களிழந்தவைகளும், துதிக்கைதுணிந்தவைகளும், இரணக்களத்திற் பிரவேசித்தவேகத்தையுடைய முன்னங்கால்கள் தறிபட்டவைகளுமாய்க் கொடுமுடியோடு மலைகளுருள்வனபோற் பூமியில் முண்டங்களாய்ப் புரண்டன. ஆகாயம் பூமி இவ்விடங்களிற் குளம்புகளையுடையகால்களால் மிதிக்காதகுதிரைகள் வரிசை வரிசையாக ஓயாமற் பிரயோகிக்கப் பட்டுக்கொண்டே யிருக்கிறபடியால் அஷ்டதிக்குகளிலிருந்து சுறீல் சுறீலென்று வருகின்ற இலட்சுமணருடைய பாணங்க்ள் மார்பில்தைத்துப் பிளத்தலினாலே மருண் டுருண்டு புரண்டு மாண்டுபோனவைகளுமா யொழிந்தவைகளே யல்லாமல்; ஒருகுதிரையாவது தப்பிப்பிழைத்து நிற்கவில்லை.

அன்றியும் - பலபலவிதமாகப் பாணங்கள் தேரிற்பூட்டிய குதிரைகளைக் கொன்று தள்ளி, இரண்டுகுதையும் வளையும்படியாக வில்லைப்பிடித்துக்கொண்டிருக்கின்ற தலைமையான ரதிகர்களையும் பாகர்களையும் அறுத்து வீழ்த்திவிட்டபடியினாலே, கொடிகள் கட்டியுள்ள பெருந்தேர்களெல்லாம் அளவில்லாமற்பெருகுகிற இரத்தப் பெருவெள்ளத்தினால் இழுப்புண்டு போனவைகளே யல்லாமற் போகவேண்டிய கிரமப்பிரகாரம் போனவைகளல்ல. ஒரு தி

லையில் நின்றவைகளுமல்லவாயின. செங்கடலுக்கொப்பாகிய ரத்தவெள்ளத்தில் மிதக்கின்ற இராக்ஷசர்களின் தலைகள் அகன்றவாயை யுடையவைகளாய்த்தோணிகளையொத்திருந்தன. தோண்டப்பட்ட கண்ணின் குழிகளும், அறுபட்ட மூக்குகளும், அகப்பைகளுக்குச் சமமாக விருந்தன.

கழுத்தோடுகூட அறுபட்டிருந்த தலைகள் ஒரேபாணத்தினால் வரிசைவரிசையாய்க் கோப்புண்டு தெப்பங்களுக்கு நிகராகவிருந்தன. இராக்ஷசர்களடித்துக்கொண்டு வந்த வெள்ளி உடுக்கைகள் கிழிந்து பூமியிற் குத்திட்டாற்போலவிழ, அவைகளினுடைய வட்டமான வாயிற்படிந்து விழுந்திருக்கின்ற வெண்சாமரைகள் ஸ்ரீராமருக்குச் சீக்கிரத்தில் வெற்றியுண்டாகப் போகிறதென்று நல்ல முகூர்த்தநாளைக் குறித்து முளைகள்வார்த்திருக்கின்ற பாலிகைக்குச் சமானமாயிருந்தன.

வேனிற்காலத்திற்குரிய மன்மதனைப்போல வடிவழகுள்ள இளையபெருமாள்விட்ட கொடிய பாணங்களினாலே கீர்த்திபெற்ற வாளாயுதம்போன்ற வக்கிரதந்தங்களையுடைய இராக்ஷசர்க ளாயுதங்களெல்லாம் அள்ளுண்டு, போனதிசைமுழுதினு நெருப்புப்பற்றி யெரிந்து, வானமீன்களெல்லாம் ஒருமிக்க ஆகாசத்தில்நின்றும் பூமியில் விழுந்ததுபோலப் பலபலவென்று உதிர்ந்தன. அரத்தினால் ராவப்பட்டுக் கூர்மைபெற்ற நீண்டபாணங்களாற் சேனைத்துடனே ஓடுகிற குதிரைகளுடைய கால்கள் ஒடிப்புண்டன. அக்கினிமயமான விருதுக்கொடிகள் அறுப்புண்டன. அலங்காரமாகிய பெரிய தேர்களெல்லாம் அழிந்து போய்விட்டன.

நல்வினை தீவினைகளுக்குக் காரணமாகிய அகங்கார மமகாரங்கள் யதார்த்தக்கியானத்தை நீக்கிவிட்டாலும், அந்தப்பாபத்தை வீரத்தன்மையானது நீக்கிவிடுமென்பதைத் திருஷ்டாந்த பூர்வமாகப்பார்த்தோம். அஃதெப்படி யென்றால் - இளையபெருமாளோடு எதிர்த்து யுத்தஞ்செய்து மரணமடைந்த இராக்ஷசவீரர்கள் இரக்க மற்றவர்களாயும் தர்மத்திற்கு விரோதஞ்செய்தவர்களாயு மிருந்தபோதினும்; வீரவான்களாக இருந்தபடியினாலே அவர்கள் வீரஸ்வர்க்கலோகத்தை யடைந்தார்கள். அப்போது ரம்பாஸ்திரீகளெல்லாரும் அவர்களிடத்தி லதிக விருப்பமுடையவர்களாய் அவர்கள் தேகத்தைத் தழுவிக்கொண்டார்கள். மேகதாரைகள் போலப் புறப்பட்ட கொடுமையான சிலபாணங்கள் வடவாமுகாக்கினியைப்போலவும் — சண்டமாருதத்தைப் போலவும் — உலகங்களையெல்லா மூடிக்கொண்டு சுவாலையுடனே வேகமாய்வந்தபோது, கொடிய பாபகிருத்தியத்தையுடைய ராக்ஷசர்களெல்லாம் அந்தப் பாணங்களைத் தடுக்கமாட்டாமல் மரணமடைந்தார்கள்

இந்தப்பிரகார மரணமடைந்த எல்லாரும் ஒருமிக்கச் சுவர்க்கமடைந்தார்களேயானால், வீரர்களடையத்தக்க அந்தச்சுவர்க்கத்தைப் பார்க்கிலும்

பெரியதொன் றிருக்கிறதாகப் புத்திமான்கள் சொல்லமாட்டார்கள். இலட்சுமணராலே விடப்பட்ட பாணங்கள் இராக்ஷசர்களி லொருவரை இரண்டு முன்னங்கைகளை அறுத்தும், மற்றொருவரைச் சிரந்துணித்தும், வேறொருவரை வீரகண்டாமணிகட்டிய பாதங்களைவெட்டியும், சிலர்தோள்களைப் பிளந்தும், இந்தப்பிரகாரமாக ராக்ஷசர்களை யெல்லாம் அவயவக் கண்டனைகள் செய்தபடியினாலே; மறுபடியும் சம்ஹரிப்பதற்குச் சத்துருக்களில்லாமல் வெறுமையானவைகளாய்ச் சிலபாணங்கள் ரணக்களத்தைச் சுற்றிச்சுற்றித் திரிந்து, கொடுக்கத்தக்க வள்ளலைக் காணாமையாற் பிரயோசனம்பெறாத அநேகயாசகர்களையொத் திருந்தன.

சிலராக்ஷசர்களைச்சிரங்களையும், சிலராக்ஷசர்களைச்செவிகளையும், சிலராக்ஷசர்களைநாசிகளையும், சிலராக்ஷசர்களைக்கைகளையும், அநேகராக்ஷசர்களைக் கண்களையும் சேதித்தமையால்; பூமியினிடத்துத் தாதாக்கள்கொடுக்கின்ற பொருளளவுக்குத் தக்கபடி தண்டமிழ்ப்புலவர்களாற் செந்தமிழ்ச் செய்யுட்களியற்றி முடித்ததற்கொப்பாகவு மிருந்தன. தருமதேவதையி னுயிர்க்குச் சமானமாகிய இளையபெருமாள் பிரயோகித்த அஸ்திரங்கள் படுகிறதினாலே நாமிங்கிருப்போமானு லிறந்துபோவோம். நம்முடைய ராஜனாகிய கும்பகர்ணனும் இன்னும் சற்றுநேரந்தான் இந்தரணக்களத்தில் நிற்கப்போகிறான். என்றிராக்ஷதசேனைக ளனைத்தும் ஓடிப்போக யத்தனித்தன. போகிறதற்கு வழிதெரியாமல் கூட்டங்கூட்டமாய்ச்சிதறி நான்குதிசைகளிலு மிரத்தவெள்ளமோடுவதுபோலப் பயந்து ஓட்டம்பிடித்தார்கள்.

அப்போது புலஸ்திய பௌத்திரனான கும்பகர்ணன் யுத்தகளத்தில் மாண்டவர்களான ராக்ஷசர்களுடைய பரிதாபஸ்திதியையும் இலட்சுமணர்செய்த வில்வல்லமையையும் ஆலோசித்து, திரிபுரசம்ஹார கர்த்தாவாகிய சிவசங்கரமூர்த்தியும் இந்த இளையபெருமாளுமே வில்வீரர்கள். வேறொருவரு மிவர்களுக் கொப்பாகமாட்டார்கள். என்று ஒருகரத்திற் காயிரந்தரமு மெடுத்துச் சொல்லிப் புகழ்ந்துகொண்டு, விசாலமாகிய தேர்த்தட்டின் பலவிடங்களிலும் சாரதிகளிருந்து செலுத்துகின்றதும், வாயுவேகத்திற்கு மனோவேகத்திற்கு மிஞ்சினவேகமுள்ளதுமான ஆயிரம்சிம்ஹங்கள் பூண்ட ஸ்வர்னமயமாகிய மேருகிரியை யொத்த தேரை நடத்திக்கொண்டுவந்து இரணரங்கத்தில் நின்றான்.

அப்படிநின்ற வக்கிரதந்தங்களையுடைய கும்பகர்ணன் துளையிட்ட நுகங்களில் அநேகசிம்ஹங்கள் பூண்டிழுக்கின்ற தேரிலிருந்து வில்லைவளைத்து யுத்தஞ்செய்தபோது இளையபெருமாள் பாதசாரியாய் யுத்தஞ்செய்வது மேன்பாடா யிருக்கமாட்டாதென்று ஆஞ்சனேயர் ஆலோசித்து, சாமோபாயநிஷ்டராய் அவருக்கு முன்னேவந்து ஸ்வாமி! தேவரீர் அடியேன் தோள்களின்மீது ஆரோகணித்து யுத்தம் செய்தருளுமென்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டார்.

இலக்ஷுமணர் ஆஞ்சனேயர்மீ தாரோகணித்து யுத்தஞ்செய்தல்.

கவி.

எறினனிளங்கோளரி யிமையவராசி
கூறினரெடுத்தார்த்தது வானரக்குழுவும்
நூறுபத்துடைப்பத்தியி னெறிற்பரிபூண்ட
ஆறுதேரினுமகன்றதவ் வனுமன்றன்றடந்தோள்.

அதற்குச் சுமித்திரை இளஞ்சிங்கமாகிய இலட்சுமணரும் அப்படியே ஆகுகவென்று வாயுபுத்திரராகிய சிறியதிருவடியின்மீது ஏறியருளினர். தேவர்களாசீர்வதித்தார்கள். வானரவீரப்பெருங்கூட்டம் ஜயாவிஜயபவா என்றார்ப்பரித்தன. ஆஞ்சநேயருடைய திருத்தோள்கள் ஆயிரம்பரிகள்பூண்ட கும்பகர்ணனுடைய ரதத்தினும் விசாலமாகப் பரந்தன. தமக்குச்சமானம் தாமேயல்லாமல் வேறொருவரு மில்லாத ஆஞ்சனேயருடைய திருத்தோளின்மீது அதிதேஜோன்மயமான இளையபெருமாள் எழுந்தருளி விளங்குகின்ற காட்சி, மேருமலையானது கயிலாசமலையின்மீ திருந்து பிரகாசித்ததுபோன் றிருந்ததே யல்லாமல் அதற்குச்சமானமாகச் சொல்லுகிறதற்கு வேறொன்றும் உலகத்திற்கிடையாது.

இவ்விதமா யெழுந்தருளிய இலட்சுமணப்பெருமாளுக்குச் சமானமாக யுத்தஞ்செய்ய வேண்டுமென்று கும்பகர்ணன் அநேக அஸ்திரங்களை நிறைத்து வைத்திருக்கின்ற அம்பறாத்தூணியை முதுகிற்கட்டிக்கொண்டு, பருத்த தோள்வல்லமைக்குத் தக்கதும் இந்திரதனுவும் வெட்கப்படத் தக்கதுமான ஒருபெரியமலைக்குச்சமானமாகிய வில்லைக் கையிற்பிடித்துக்கொண்டு, இளையபெருமாளைப் பார்த்து, நீ ஸ்ரீராமன்தம்பி. நான் இராவணேஸ்வரன்தம்பி. நாமிருவரும் யுத்தஞ்செய்ய நிற்கிறோம். நம்முடைய யுத்தத்தைப் பார்க்கிறதற்குத் தேவர்களெல்லாம் ஆகாசத்தில்வந்து பரவியிருக்கின்றார்கள். சமஸ்தமானவீரர்களும் பாரம்பரியமா யனுசரித்து வந்த யுத்தமரியாதைக்குத் தக்கவைகளைச்சொல்லி யாவரு மொப்புக்கொள்ளத்தக்க யுத்தத்தைச் செய்யலாம். நானிப்போது கேட்கிற கேள்விக்குத் தகுந்த உத்தரம் சொல்லக்கடவாய். அநேக தவஞ்செய்து எங்களுடன்பிறந்த சூர்ப்பநகை யென்னும் பெண்ணானவள் யாதொரு குற்றமும் செய்யாதிருக்கவும், அவளுடையமூக்கை வெகு கோபங்கொண்டு அறுத்தது உனக்குத்தகுமா? அப்படியறுத்த உன்வெற்றிப் பிரதாபத்தையும், அவளுடைய அளகபாரத்தைப் பற்றியிழுத்த உன்கையையும், இதோ அறுத்துக் கீழேதள்ளப்போகிறேன் தப்பித்துக்கொள்ளென்று சொன்னான்.

இப்படி இருளைப்போலுங் கறுத்தமேனியையுடைய கும்பகர்ணன் சொன்னதை மல்லயுத்தத்திலுயர்ந்த தோள்களையுடைய இலட்சுமணப் பெருமாள்கேட்டு, அடா குப்பகர்ணா! உங்களுக்கு பாருத்தரம் எங்கள் வில்லினாற் சொல்லும்படி கற்றிருக்கிறோமேயல்லது, வீரலக்ஷணத்துக்கு நாணமுண்டா

கும்படிச் சொல்லினாற் சொல்லுகிறதற்கு நாங்கள் சாஸ்திரங்கள் படிக்கவில்லையென்று சொன்னார். அதைக்கேட்ட கும்பகர்ணன் ஆகாசமிரண்டாய்ப் பிளந்துவிழுமென்றும், மேருமலை பூமியுடனே இரண்டாய்க் கிழிந்துவிழுமென்றும்; தேவர்களெல்லா மனந்திகைப் படையும்படியாக; தனதிரண்டு கண்களிலும் அக்கினிப்பொறிகள் பறக்கப் பதினெட்டு அக்கினி முகாஸ்திரங்களையொன்றாகத்தொடுத்து இளையபெருமாள்மீது பிரயோகித்தான். அஷ்டதிக் கஜங்களுடைய தந்தங்கள் தன்மார்பிற்பாய்ந்து பதியும்படியெதிர்த்து அவைகளைத் தோற்கடித்தவனும், தேவர்களுடைய வல்லமையையொடுக்கினவனும், இடிக்குச்சமானமாகிய கொடுங்கோபமுள்ளவனுமான இராவணன்தம்பியாகிய கும்பகர்ணன்விட்ட பதினெட்டு பாணங்களையும்; இளையபெருமாள் வில்லை வளைத்து நாணேறிட்டு அதில் நாலுபாணங்களைப் பிரயோகித்து அறுத்தெறிந்தார்.

இவ்வண்ணமாக நமதிளையபெருமாள் கும்பகருணப்பதகனாற் பிரயோகித்த பாணங்களெல்லாவற்றையுஞ் சிதைத்தமாத்திரத்தில் கும்பகருணனானவன் மிகவும் கடூரமாகத்தானே கோபித்தவனாகித் தேவலோகத்துள்ள தேவர்களை யெல்லாந்தலையெடுக்க வொட்டாது அனேகநாள் கண்டித்துக்கொண்டு வந்ததும், ஆயிரஉருவமுள்ளதும், நான்குதிக்குமுகங்களையுடைய பிரமாவானவர் தன்னுடைய தவத்திற்கிரங்கியளிக்கப் பெற்றதும், புள்ளிபெற்ற முகத்தையுடையதும், தெய்வீகமும் பெற்றுவிளங்குகின்ற ஓர் அஸ்திரத்தை யெடுத்து அதற்குத் தூபதீப நைவேத்திய சத்திரசாமரமாதி பாத்தியாசமனார்க்கியங்களை மனதாற்செய்து பிரமாவைப்போற்றி தனது வில்லிற் சந்தித்து, அடாநரா! இதோவருகிறதுபார் எனது அஸ்திரம் உனது தலையைக் கண்டிக்க, நீ சாமர்த்தியவந்தனானால் இதினின்றும் தப்பித்துக்கொள்ளென்று சொல்லி; தேவர்கள் பார்த்துப் பிரமிக்கவும் வானரர்கள் பயந்தோடவும் இலக்ஷுமணர்மீது பிரயோகித்தான். அது பார்த்த பார்த்த திசைகளிலெல்லாம் பாணவருஷங்களைப் பெய்கிற மேகத்திற்கொப்பாக அக்கினியைப்பொழிந்துகொண்டு வருகிறதை இளையபெருமாள் பார்த்து, அதற்குத்தக்க தின்னதென்று தெரிந்து ஒருசைவாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகஞ்செய்து, அந்த சகஸ்திரமுகாஸ்திரத்தை அறுத்துக் கீழேவீழ்த்தினார். அப்போதஃதிரண்டாயிரம் துண்டுகளாக விழுந்துவிட்டது. கும்பகர்ணன் உடனே பன்னிரண்டு பாணங்களைத் திருமேனியிலழுந்தும்படி அநுமான்மீதும், வேறே இரண்டுபாணங்களை இளையபெருமாள்மீதும் பிரயோகித்து, பின்னு நூறும் ஐம்பதுமாகத் தொடுத்து ஒருக்ஷணநேரத்திற் குள்ளாக எட்டுத்திக்கையும் - ஆகாசத்தையும் - பூமியையும் — பாணமயமாய் மறைத்துவிட்டான்.

இலக்ஷுமணர் கும்பகருண னிரதத்தையழித்து அவனைப் பாதசாரியாக்கல்.

கவி.

மறைத்தவாளிகளெவற்றையு மவற்றினூன்மாற்றித்
துறைத்தலந்தொறுந்தலந்தொறு நின்றுதேர்சுமக்கும்

பொறைக்கமைந்தவெங் கரிபரியாளிமாப்பூதம்
திறத்திறம்படத் துணித்தவன் றேரையுஞ்சிதைத்தான்.

இவ்வண்ணம் பூமியாகாசங்க ளெல்லாவற்றையும்மறைத்த கும்பகருண னுடைய பாணங்களை இலக்ஷுமணப்பெருமான் தனதம்புகளா லழித்து, அவ்வத்துறைகடோறு நிலைபெற்றுநின்று இரதத்தையிழுக்கும்படிப் பூட்டியிருக்கின்ற கொடுமை மிகுந்த யானைகள் குதிரைகள் யானையாளிகள் சிங்கங்கள் பூதங்களாகிய இவைகளைக் கண்டங் கண்டமாகப் பாணங்களாற் றுணித்து, அவ்விரதத்தின் அச்சு - மச்சு - குத்துக்கால் – கொடுங்கை - விட்டம்-தூண் – நாகவட்டம் - இருசு - வட்டை – இலை – குடம் - குடை - கொடி-மணி – சிகரம்–இவ்விதமாகிய பலவகையுறுப்புக்களையும் சின்னபின்னஞ் செய்துவிட்டனர். அந்தத்தேரைச் செலுத்திக்கொண்டுவந்த சாரதிகளுமொழிந்தார்கள். நீர்கொண்ட மேகக்கூட்டத்தி னிடத்திலுள்ள பெரிய வானவில்லானது அழிவுற்றதுபோலக் கும்பகர்ணன்கையிற் பிடித்திருந்த நெடியவில்லும் இரண்டுதுண்டாய் முறிந்துவிழுந்தது. இப்படி ஏறியிருந்த தேரழிந்து, பிடித்த வில்லு முறிந்து, கருங்கடலானது பொங்கி வந்ததுபோலத் தோற்றுகின்ற கும்பகர்ணன் பூமியிற் பாதசாரியாய்நின்று, இந்தலட்சுமணனுடைய உயிரை இதோ பானம்பண்ணுகின்றே னென்று புறப்பட்டு, தானிந்த மூன்றுலோகத்தையும் ஜெயித்ததற்கு அடையாளமான விருதாக மூன்றலகுடனே தன் கையிற் பிடித்திருக்கின்றதும் யமனுக்குநிகரானதுமான சூலாயுதத்தை யெடுத்தான்.

அப்போது தேவர்களெல்லாம் இளையபெருமாள்செய்த யுத்தவேடிக்கையைப் பார்த்து, இவர் அஸ்திரங்களை யெடுத்துத் தொடுத்துப் பிரயோகிக்கின்ற கரவேகத்தை அறிந்துகொள்ளக்கூடாமையால் இந்தத்தேரிற் பூட்டியிருந்த பிடரிமயிரினையுடைய கொடிய சிம்ஹமுதலாகிய கூட்டங்களை அஸ்திரப்பிரயோகஞ்செய்து கொன்றாரோ? அல்லது உயர்ந்த மந்த்ரோச்சாடனஞ் செய்து சபித்துக்கொன்றாரோ? என்று மனக்களிப்போடு ஆச்சரியப்பட்டுக் கொண் டிருந்தார்கள். அந்தத் தருணத்திற் பூமிபிளக்கும்படியாகப் புறப்பட்டுப் பிரளயகாலவெள்ளம்போலத் தோன்றுகின்ற கும்பகர்ணன் தேரில்லாமற் கீழேபாதாரியாய்நிற்க, நாம் வாகனத்தின்மீதிருந்து சண்டைசெய்கிறது வீரலக்ஷணத்திற்குப் பகையாகுமென்று இளையபெருமாள் ஆஞ்சநேயருடைய விசாலமாகிய திருத்தோள்களைவிட்டுத் தாமும் கீழேகுதித்துப்போய் கும்பகர்ணனோடு எதிர்த்து நின்றார். இந்தவிரண்டுபேரு மிப்படி எதிர்த்துநிற்கிற தருணத்திற் கும்பகர்ணனுக் குதவியாக இராவணனா லனுப்பப்பட்ட சேனைகள் முன்னழிந்த சேனைகளினும் மிருமடங்கதிகமாய்ச் சமுத்திரத்தைப்போலக் கோஷித்துக்கொண்டுவந்து, சுமித்திராதேவியின் புத்திரனென்னும் இளஞ்சிங்கமாகிய இளையபெருமாளைச் சுற்றிக்கொண்டு கர்ச்சித்தன.

அதைக்கண்ட தேவர்களெல்லாம் திப்பிரமைகொண்டு ஓட்டம்பிடித்தார்கள். இளையபெருமாள் கும்பகர்ணனைவிட்டு அவர்கள் பக்கமாய்த் திரும்பி,

அந்த ராக்ஷசசேனைகளெல்லாம் ஏககாலத்தில் தம்மீது பிரயோகித்த ஆயுதங்களை அதிக சாதுரிய சக்தியினால் துண்டு துண்டாய் அறுத்தெறிந்து, மிகுந்த கோபத்துடன் அவர்களை யெல்லா மொருபக்கமாகச் செல்லவிட்டு, கருங்கடல்போன்ற அந்த ராக்ஷச சேனைகளுக்குள்ளே நுழைந்து, கொடிய கண்களைப்பெற்ற அவர்களுடைய அன்றலர்ந்த முருக்கம் பூவையொத்த செம்பட்டமயிர்த் தலைகளையறுத்து மலைமலையாகக் குவித்து, அணைகட்டிச் செம்மை யுருக்கினாற்போலொத்த ரத்தவெள்ளங்களோடவும் அந்தப் பிரவாகத்தினால் அத்தலைகள் கடலிற்போய் விழும்படியாகவும் செய்தார். யானைகளுடைய துதிக்கைகளும் — குதிரைகளின் கால்களும் — காற்றைப்போலோடுகின்ற தேர்களின் சக்கரங்களும்—இராக்ஷசர்களுடைய தலைகளும் அறுந்து, அவர்கள் தேகத்தி லொழுகுகின்ற ரத்தவெள்ளமானது ரணக்கள முழுதிலுஞ் சுழியிட்டுக்கொண்டோடி, அவ்விராக்ஷசர்களுடைய பிணக்குன்றுகள் நான்கு பக்கங்களிலும் தடுக்கின்றபடியால் அவைகளைத் தாண்டிப்போகிறதற்குக் கூடாமல் தேங்கி நின்றுவிட்டது.

இராக்ஷசர்களுக்கு வெற்றியை யுண்டாக்குகிற வாளாயுதம் — எழுவாயுதம் — தண்டாயுதம் - வேலாயுதம் - மழுவாயுதம் - வச்சிராயுதம் — இவை முதலிய இன்னம் அநேகவாயுதங்களை இலட்சுமணரெய்த பாணங்கள் ரணக்களமுழுவதும் சுற்றிச்சுற்றி யோடித் துண்டிக்கிறபடியினால், அவைகள் கூட்டங்கூட்டமாய் முறிந்து துண்டுதுண்டுகளாய்க் கீழே விழுந்துவிட்டன. இராக்ஷசர்கள் பூண்டிருந்த குண்டலங்களும் — கிரீடங்களும் - முத்தாரங்களும் - புஷ்பமாலைகளும் - வீரத்தண்டைகளும் - தோள்வளைகளும் - கைக்கடகங்களும் - ஆகிய விவைமுதலிய ஆபரணங்களை யெல்லாம் அவைகளை அணிந்திருந்த அவயவங்களுடனே கண்டதுண்டங்க ளாகும்படிப் பாணங்கள் சேதித்து விட்டபடியால், அவை பூமியில்விழுந்து சூரியமண்டலத்துக்கெதிர்த்தட்டாகப் பிரகாசித்துக்கொண் டிருந்தன. அவ்விராக்ஷசர்களுடைய விசாலமாகிய வீரதுவசங்களையும், சாமரைகளையும்; நீண்ட விருதுக்கொடிகளையும், அம்புபூட்டியெய்யும் விற்களையும், கேடகங்களையும், மயிற்பிச்சங்களையும், இலையபெருமாளுடைய பாணங்கள் வாரிக்கொண்டு போயின. இரத்தவெள்ளமாகிய ஆறுகளிற் பேய்க்கூட்டங்கள் வரிசைவரிசையாய் நீந்திக்கொண்டுவந்து, கரைகளிற் கும்பற்கும்பலாய் நின்றிருந்தன.

கும்பகருணனைச் சுக்கிரீவ னெதிர்த்துநிற்க, இவர்மே லவன்விட்ட சூலப்படையை அனுமார் முறித்தெறிதல்.

கவி.

ஈண்டுவெஞ்செரு விளையனநிகழ்வுழி யெவர்க்கும்
நீண்டவெள்ளயிற் றரக்கன்மற் றொருதிசைநின்றான்
பூண்டவெஞ்செரு விரவிகான்முளையொடும் பொருதான்
சாண்டகும்மென விமையவர்குழுக்கொண்டு கண்டார்.

இவ்வண்ணம் இராவணனாலனுப்பவந்த தறுகண்ணுள்ளாகிய இராக்ஷசர்களையும், அவர்களது ரதம் கஜம் துரகம் பதாதி என்கின்ற நால்வகைச் சைனியங்களையும் அப்படைத் துணையாகநின்ற அணித்தலைவர்கள் படைத்தலைவர்கள் யூகத்தலைவராதியவர்களையும் இலட்சுமணர் அறுத்துத்தள்ளி யாவரும்கண்டு நடுங்கும்படியாகக் கடும்போர் நடத்துஞ்சமயத்தில்,அங்குள்ள விராட்சசர்களுடைய கோரதந்தங்களுக் கெல்லாம் நீளமாகியும் வெண்மையாகியுமுள்ள வக்கிரதந்தங்களையுடைய கும்பகருணனனவன் ஓர் புறமிருந்து, சூரியபகவான் குமாரனாகிய சுக்கிரீவமகாராஜனோடும்கொடியவஞ்சக மிகுந்த யுத்தஞ்செய்தான். அவ்வுயுத்தத்தை இமையாநாட்டம்பெற்றவர்களாகிய தேவர்கள் ககனவழியில்நின்று, ஆ ஆ! இவ்வுயுத்தத்தின் பிரபாவத்தைப் போல் நாமெங்கும் பார்த்ததில்லையே யென்றும், அதுஎப்படி முடிகிறது பார்க்கவேண்டுமென்று கூட்டமாகநின்று பார்த்துக்கொண்டு நின்றார்கள். சஹஸ்திர கிரணங்களையுடைய சூரியபுத்திரனான சுக்கிரீவமகாராஜன் தீப்பொறி பறக்கின்ற கண்களையுடையவராகவும் - புகையெழும்புகின்றவாயையுடையவராகவும் — மிகுந்த கோபமுற்று, ஆகாசத்தையளாவிய ஒரு பெரியமலையைப்பார்த்து, இத்தோடே கும்பகர்ணனுடைய பலம்பொருந்திய தோள்கள் அற்றுப்போய் விட்டனவென்று யாவருநினைக்கும்படியாக வீசியெறிந்தார். அப்படி யெறிந்தபோது அந்தமலையிலிருந்து பூமியிலிறங்கிவந்த செம்பொன்மலைபோ லிருக்கின்ற மதத்யானைகளும், இராக்ஷசசேனையின்கண் யுத்தப்பழக்கமுள்ள யானைகளும், ஒன்றோடொன்று சண்டைசெய்தன. அந்தப்பெரியமலையிலிருந்து புறப்பட்ட மலைப்பாம்புகள் இராக்ஷசர்களுடைய கூட்டங்கள் சிதறுண்டு நடுங்கும்படி அவர்களைக் கவ்விப்பிடித்தன.

இப்படி சுக்கிரீவமகாராஜன் யானைகளும் பெரும்பாம்புகளும் வசித்திருந்த ஒரு பெரியமலையையே யெடுத் தெறிவாரானால், இவரால் பெயர்த்தெறியக்கூடாத ஒரு பெரியமலையும் உலகத்திலுண்டோ? இப்படிப்பட்ட பராக்கிரமமும் சௌரியமு முள்ளவராற் பறித்தெறிந்த மிகவும் பெரியதாயுயர்ந்த மலையைக் கும்பகர்ணன் தனதுள்ளங்கையினாற் பந்தைப்பிடிக்கிறதுபோலப் பிடித்தான். அப்போது ராக்ஷசவீரர்களெல்லாம் அந்தக் கும்பகர்ணனை வாழ்த்தினார்கள். அவனந்த மலையை ஒருகையினாற் பிடித்துத் தனது மிகுந்த பலத்தினால் நீறாய் நொறுங்கிப்போகும்படிப் பிசைந்து, ஓ குரங்கே! நீ மிகுந்த பலங்கொண்டு பேர்த்தெடுத்தெறிந்த மலையை நீயே யெடுத்துக்கொள்ளென்று சுக்கிரீவமகாராஜனுக் கெதிராகவே காற்றில் தூற்றினான். அவனுடைய பலத்தைக்கண்டு தேவர்கள் திடுக்கிட்டு நடுங்கினார்கள். சுக்கிரீவராஜன் இன்னுமொரு பெரியமலையைத் தேடிக்கொண்டு வருவோமென்று நினைத்துக்கொண் டிருக்கின்ற சமயத்திற் கும்பகர்ணன் அதிகசந்தோஷத்துடனே நிறைவான தவசிரேஷ்டர்களுடைய சத்தியவாக்கைப்போலத் தவறிப் போகாத வல்லமையுள்ளதாய்த் தன்கையிற் பிடித்திருந்த சூலாயுதத்தை யெ

டுத்து, அந்தக்குரங்கைக் கொல்லக்கடவாயென்று அபிமந்திரித்து அந்தச் சுக்கிரீவமகாராஜன்பேரில் எறிந்தான்.

கவி.

பட்டனன்பட்டன னென்றுபார்த்தவர்
விட்டுலம்பிடநெடு விசும்பிற்சேறலும்
எட்டினனதுபிடித் திறுத்துநீக்கினன்
ஒட்டுமோமாருதி யறத்தையோம்புவான்.

அந்தச் சூலாயுதமானது எட்டுத்திக்கிலும் புகைபரப்பிச் சீறிக்கொண்டு வருகிறதைக் கண்டவர்களெல்லாம், ஐயோ! இன்றைக்குச் சுக்கிரீவராஜன் இறந்து போனார்: இறந்துபோனார்: என்று பெருங்குரலிட்டழுது புலம்புகிறதைத் தருமபரிபாலகரான ஆஞ்சநேயர்கேட்டு அதைச் சும்மாப்போக விடுவரோ? குபீரென்றுபாய்ந்து ஆகாசமார்க்கமாய்ப் போகின்ற அந்தச்சூலாயுதத்தை யெட்டிப்பிடித்து இரண்டுதுண்டாக முறித்தெறிந்துவிட்டார். அப்படிமுறித்த சூலத்தின் ஓசையானது சீதாபிராட்டியாருடைய திருமணக்காலத்தில் தமது திருவடியைப்பற்றிச் சகலசேதனர்களையும் நித்திய விபூதியாகிய பரமபதத்தையடையும்படிச் செய்கிறவரான சாக்ஷாது ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியானவர் ஸ்ரீசாம்பசிவ மூர்த்தியினுடைய வில்லை யொடித்தபோதுண்டான பெரிய வோசையைப்போலச் சுவர்க்கமத்திய பாதலமெல்லாம் செவிடுபடும்படியாக ஒலித்தது.

கும்பகர்ணன் அந்த ஆஞ்சனேயருடைய வல்லமையைக் கண்முன்னகப் பார்த்து, ஆஹா! சபாஷ்! உன்னுடைய வல்லமை நினைக்கவும் சொல்லவும் அடங்கினதல்ல. ஒருவராலு முடியாத காரியத்தை முடிக்கவல்லவன். எல்லா லோகங்களிலும் பார்த்தால் நீ ஒருவன்தா னிருக்கின்றாய். இப்போது நீ செய்த இந்தச் செய்கையினாலே உனக்குச் சமானம் ஆரிருக்கின்றார்கள். என்னுடன் யுத்தஞ்செய்ய விருப்பமுண்டானால் நீ யெப்படிச் சொல்லுகிறாயோ அப்படிப்பட்ட யுத்தத்தைச் செய்கிறேன். சண்டைசெய்யவாவென்று கும்பகர்ணன் கூப்பிட்டபோது அவனைக்கண்டு நகைத்து, முன்னால் இனியுன்னோடு சண்டைசெய்கிறதில்லையென்று சபதஞ்செய்துவிட்டு இப்போது சண்டைக்கு வருகிறேனென்று சொல்லுவது அசத்தியமாகுமல்லவா? ஆகையால், அப்படிச் செய்யத்தகாதென்று சத்தியவந்தரான அனுமார் சொல்லிவிட்டுத் திரும்பிப்போய் விட்டார்.

சுக்கிரீவராஜன் கும்பகருணனோடு மற்போர்புரிந்து மூர்ச்சிக்கவும், இவனவரை இலங்கைக்குக்கொண்டுபோக யத்தனித்தல்.

கவி.

அற்றதுகாலையி னரக்கனாயுதம்
பெற்றிலன்பெயர்ந்தில னனையபெற்றியில்

பற்றினன்பாய்ந்தெதிர் பருதிகான்முளை
எற்றினன்குத்தின னெறியுங்கைகளால்.

இவ்வண்ணம் ஆஞ்சனேயருடைய பராக்கிரமத்தால் சூலாயுதமானது ஒடிந்து போனகாலையில் கும்பகருணனனவன் யாதோராயுதத்தையுந் தொடாதவனாகி, நமது சூலமேமுறிந்துபோக இனி எவ்வாயுதத்தா லிவர்களை வெல்லப்போகிறேமென்றேங்கி நிற்கையில் சூரியபகவான்புத்திரனாகிய சுக்கிரீவன் கும்பகருணன்மேல் ஒரேபாய்ச்சலாகப்பாய்ந்து அவன்தோளிலும் மார்பிலும் முதுகிலும், தனதுகைகளால் ஓங்கியோங்கி ஓர்பெரிய மலையினமேல் கோடைகாலத் திடிவிழுவதுபோற் குத்தினர். அக்குத்தை யேற்றுக்கொண்ட கும்பகர்ணன் நீ நல்ல வீரன்தான். ஆயினு மின்றையோடு உன்னுடைய கர்வமெல்லா மொடுங்கிப்போகப் போகிறது. என்று உலையிலுருக்கின செம்பைப்போலச் சேவந்த கண்களையுடையவனாய்க் கோபங்கொண்டு, சுக்கிரீவமகாராஜனை நெருக்கிப்பிடித்து, அவரைத் தப்பிப்போகாதபடி கட்டித் தன்மார்புடனே சேர்த்து நெருக்கினன். அக்காற் சுக்கிரீவமகாராஜன் அவன் கையை விடுவித்துக்கொள்ள, பின்பு ஒருவரையொருவர் பற்றுவதற்காக இடம்வலமாய்க் கிறுகிறுவென்று சாரிகைசுற்றினர்கள். இப்படி சுற்றுகிற வேகத்தினால் இவ்விருவரையு மின்னாரின்னாரென்று தேவர்களும் காணமாட்டாமற் போனர்கள்.

இந்தப் பிரகாரமாக வெகுநேரம் ஒருவர்கைக் கொருவ ரகப்படாமல் தப்பித்திரிந்து, பின்பு ஒருவரையொருவர் நெருக்கிப் புஜங்களால் தாக்கியும் கைகளாற் குத்தியும், கால்களா லுதைத்தும், தலைகளால் மோதியும், முஷ்டியா லிடித்தும், அனேக வகையான யுத்தங்களைச் செய்து, கண்களிற் புகையெழும்பித் திகுதிகென்று நெருப்புப்பற்றி யெரியும்போது அந்தத்தீயால் இடிகளுந்தீய்ந்து போய்விட்டன. இப்படிச் சற்றுநேரமாவது ஒருவரையொருவர் விட்டு நீங்கிச் சோர்ந்துநிற்காமற் கண்களில் ரத்தந்தெறிக்கும்படி ஒருவர்மீ தொருவர்சீறி, ஒருவரையொருவர்பற்றி முறைமுறையாய் மல்லயுத்தஞ்செய்தார்கள். அப்போது கும்பகர்ணன் சுக்கிரீவமகாராஜனைச் சகிக்கக்கூடாத விதமாய்த் தனதுநீண்டகைகளினால் கட்டியிறுக்கினன். அக்காற் சுக்கிரீவராஜன் மயங்கி மனஞ்சோர்ந்து மூர்ச்சையடைந்தார்.

கவி.

மண்டமரின்றொரு மடங்குமன்னிலாத்
தண்டலில்பெரும்படை சிந்துந்தக்கதோர்
எண்டருசருமமற் றிதனினில்லெனக்
கொண்டனன்போயின னிருதர்கோனகர்.

அத்தருணத்திற் கும்பகர்ணன் இன்றையோடு சண்டைமுடிந்துபோக வேண்டுமானல் இந்த மாளாத சேனையைச் சிதறடிக்கத்தக்க ஒருயர்ந்த வுபாயந்தேடவேண்டும். அதற்கிந்தக் குரங்கைக் கொண்டு போய்விடுவதிலும் வே

ரூருபாயமில்லையென்று சுக்கிரீவராஜனை மார்பிலணைத்துக்கொண்டு இலங்கையை நோக்கிப் போகத்தொடங்கினான். அப்போது வானரக்கூட்டங்களெல்லாம், வேடன் தாயை வருத்தப்படுத்திப் பிடித்துக்கொண்டு போகும்போது குஞ்சுகளலறிக் கூக்குரலிடுவதுபோலமனங்கலங்கி, கையோடுகையையறைந்துகொண்டும் - பெருமூச்சுவிட்டுக்கொண்டும் - ஓவென்றழுதார்கள். இராக்ஷசர்களெல்லாம் தங்களுக்குச் செயமுண்டாயிற்றென்று பெருங்கோஷமிட்டார்கள். தேவர்களெல்லாம் நாவறண்டு நெஞ்சம் திடுக்கிட்டார்கள். அக்கால் வானரவீரர்களெல்லாமனமுருகி, ஐயோ! நம்முடைய ராஜா மூர்ச்சித்துக் கண்களை மூடிக்கொண்டதோடு தோள்வலியிழந்து உயிருமடங்கி விட்டாரோ? என்கின்ற அங்கலாய்ப்புடையவர்களானார்கள்.

அப்போது கும்பகர்ணன் விசாலமாகிய ஆகாசத்தினிடமாய் வருகின்ற இராகுவென்னுங் கரும்பாம்பைப்போலவும், சூரியகுமாரரென்று சொல்லப்படுகின்ற சுக்கிரீவமகாராஜன் அந்தக் கரும்பாம்பினால் விழுங்கப்பட்டு ஒளிமழுங்கிய சந்திரனைப்போலவும் தோன்றினார்கள். மேலும் - அந்தச் சுக்கிரீவமகாராஜன் கும்பகர்ணனுடைய கருநிறவுடலுக்குள் மறைந்து கொஞ்சம் பிரகாசித்தும், மற்றப்பாகமறைந்தும், மேகத்துக்குள் மறைந்து காணப்படுகின்ற சந்திரனுக்கொப்பாகவேயிருந்தார். அவரைப்பின்தொடர்ந்து செல்கின்ற வானரவீரர்களிற் கருங்கடலைத்தாண்டிய நீண்ட திருவடிகளையுடைய ஆஞ்சநேயர் உன்னோடுநான் எதிர்த்துச் சண்டைசெய்வதில்லையென்று முன்னால் அந்தக்கும்பகர்ணனோடு தாம் சபதஞ்செய்ததை நினைத்து அவனை எதிர்க்கக்கூடாமல், ஐயோ! இனி என்னசெய்யப்போகிறோம்? என்று தமது கையைப் பிசைந்துகொண்டு கும்பகர்ணன் பிறகே போயினார்.

ஸ்ரீராமர் கும்பகருணனை இலங்கைக்குப்போகவிடாமற் சரக்கூடிட்டு அவனெற்றியைப்பிளக்க, அதனாலவன் மூர்ச்சிக்கச் சுக்கிரீவ னவன் மூக்கையுங் காதையு மறுத்துக்கோண்டு வானரசேனையிற் கலத்தல்.

கவி.

ஆயிரம்பெயரவ னடியில்வீழ்ந்தனர்
நாயகரெமக்கினி யாவர்நாட்டினில்
காய்கதிர்ச்சிறுவனைப் பிணித்தகையினன்
போயினனரக்கனென் றிசைத்தபூசலார்.

உடைப்பெருந்துணைவனை யுயிரிற்கொண்டுபோய்க்
கிடைப்பருங்கொடிநக ரடையிற்கேடெனத்
தொடைப்பரும்பகழியின் மாரிதூர்த்தற
அடைப்பனென்றடைத்தனன் விசும்பினூறெலாம்.

அச்சமயத்தில் அநேகவானரகூட்டங்கள் ஐயோ! ஐயோ! இனிநாம் யாது செய்யப்போகின்றோம் நாம் அரசனையிழந்தோமேயென்று கோவென க்கூச்சலிட்டு அநேகதிருநாமங்களையுடைய சக்கரவர்த்தித்திருமகனாரது சிலந்

த திருவடிகளில்வீழ்ந்து சுவாமி! எங்களுக்கரசனும் சூரியகுமாரனுமாகிய சுக்கிரீவமகாராஜனைப் படுபாவியாகிய கும்பகருணன் தனதுகையினாற் சேர்த்துக் கட்டிக் ககனவழியாய்த் தூக்கிக்கொண்டுபோகிறானே; நாங்களரசனையிழந்தோம். இழந்தோம். இனியோசிக்கில் எங்களைக்காப்பாற்று மரசராரென்று கூச்சலிட்டுச்சொன்னார்கள். இந்தவார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் ஸ்ரீராமர் வடவாமுகாக்கினியிலுமிகுந்த செவப்பான கண்களையுடையவராகி, உலகங்களையெல்லாம் சுட்டெரிக்கத்தக்க அஸ்திரங்களையும் வில்லையுங்கையிலெடுத்துக்கொண்டு, ஒருக்ஷணநேரத்திற்குள்ளாக இலங்கைக்கோட்டை வாயிலில்வந்துசேர்ந்து, ஒருவராலும் நீக்குதற்கரிய சிநேகனாகிய சுக்கிரீவமகாராஜனை எனதுயிரைக் கிரகித்துக்கொண்டு போகிறதுபோல கொடிகள்கட்டிய அலங்காரங்கள்மிகுந்த இந்தலங்கைக்குள் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டால், வெகு கெடுதி யுண்டாய்விடுமென்றெண்ணி அஸ்திரவருஷம்பொழிந்து சரக்கூடங்கட்டி, எல்லாவழிகளையும் அடைத்துவிட்டு ஆகாச மார்க்கத்தையும் பாணப் பந்தலிட்டு மூடிவிட்டார்.

அப்போது பாணங்களினால் அஷ்டதிக்குகளு மறைந்தன. பிரகாசிக்கின்ற சூரியகிரணசோதியும் பூமியிற்பிரகாசியாமற்போயது. ஆகாசமுழுவதையு மேகங்கள் மறைத்ததுபோலப் பாணப்பந்தல் மறைத்தகனால் கிரஹநக்ஷத்திரங்களு நடக்கமாட்டாமல்நின்றுவிட்டன. அக்கால் மனோவேகத்திலு மதிகவேகமாய் ஆகாசமார்க்கத்திற் போகின்ற கும்பகர்ணன் சுற்றிலும் பாணமதிலிட்டிருக்கின்றதனால் தன்னினைவை முடிக்கிறதற்கு முடியாமல் வழிதேடித் திரியும்போது, திருமுகமும் - திருவாயும் - திருக்கண்களும் - திருக்கைகளும் - திருவடிகளுமென்னு மவயவங்களாகிய தாமரைமலர்க்காடுபூத்து, ஸ்வர்னமயமான கோதண்ட மென்னும் இந்திரதனுசுடன் மண்டிலமாக மின்னலைவீசிக்கொண்டுவந்த மேகத்துக்குச் சமானமாய்ப் பிரகாசிக்கின்ற ஸ்ரீராமமூர்த்தியைக்கண்டு வாயைமடித்துக்கொண்டு, குபுகுபென்று புகையெழும்பவும் - இதழ்கள் துடிக்கவும் - புருவங்கள் நெறித்துநிற்கவும்—கண்களில் நெருப்புப்பொறி பறக்கவும் கர்ச்சித்தான். அந்தக் கர்ச்சனையைச் சகிக்கமாட்டாமல் மலைகளெல்லாம் நெக்குவிட்டுப் போயின.

இந்தப்பிரகாரமாகக் கும்பகர்ணன் ஸ்ரீராமரைப் பார்த்து, ஓ சக்கரவர்த்தித்திருமகனே! வனத்தின்கண்வந்து உன்னோடெதிர்த்த மிகவும் தூலகாத்திரத்தை யுடையவனாகிய கவந்தனைப் போலவும், சிறுசெடிகடோறும் பூவைப்பறித் துண்ணும்படியான வாலியென்னும் பலமில்லாத ஒரு குரங்கைப் போலவும் நான் வலியிழந்தவனென் றெண்ணி யென்னுடன் சண்டைசெய்ய வந்தாயோ? அல்லது - இந்தக் குரங்கினுடைய உயிரைக் காக்கவந்தாயோ? சொல்லென்றுகேட்டுப் பின்னுஞ்சொல்லுகின்றான். ஓ ஸ்ரீராமா! நான் உன்தம்பியாகிய இலட்சுமணனைக்கோபிக்கவில்லை. அவனுக்குவாகனமாயிருந்த தும்பிபோற் பறந்தவனான அந்தக் குரங்கையும் கோபிக்கவில்லை. அபஜயப்பட்

டிப்போன வாலியினுடைய பிள்ளையையும் கோபிக்கவில்லை. நான் யுத்தக்கள த்திலேவந்து உன்னுடனே சண்டைசெய்ய நினைத்து, அவர்களுடன் போர் செய்வது நமக்கழகல்லவென்று உன்னை அந்தரணக்கள முழுவதும் தேடி னேன். உன் சேனையெல்லாம் என்னைக்கண்டு பறந்து ஓடிவிட்டன. உன்த ம்பியும் என்னைப்பார்த்து ஒரு பக்கமா யொதுங்கிப்போனான். அனுமானு மென்னோடு யுத்தஞ்செய்ய மாட்டேனென்று போய்விட்டான். இவனொரு வன்மாத்திரம் அறிவில்லாமையால் கர்வித்துப் போர்செய்யவந்தான். ஆத லால் – இவனைமாத்திர மிலேசா யெடுத்துக்கொண்டு வந்துவிட்டேன்.

ஐயா இரகுநந்தனே! இவனைக் காக்கவேண்டுமென்று நீ வந்தது, உன்னைக் காணும்படியான என்னதிர்ஷ்டமே என்கண்முன்கொண்டுவந்துவிட்டது. ஆத லால் - உன்னுடனே நான் செய்யவேண்டிய யுத்தமாதிரிகளை யெல்லாம் செ ய்து, என்தமயனுக் குண்டாயிருக்கின்ற மோகவிச்சையின் தடையையு மின் றுநீக்கி விடுகிறேன். நீ நல்லவீரனானால் தேவர்கள் முன்னிலையில் இவ்வற்ப க்குரங்கை நான் கட்டியிருக்கிற என்கைப்பிணிப்பை உன் வில்வல்லமையினா ல் அவிழ்த்துவிடு. அப்படி இவனை விடுவிப்பையேயானால் சீதையும் சிறைவி ட்டு வந்தவளேயாகுமென்று சொன்னான். இப்படி சொன்ன கும்பகர்ணனை ஸ்ரீராமர்பார்த்து நகைத்து, ஓ இராக்கதவீரனே! என்னுடைய உயிர்போன்ற துணைவனான சுக்கிரீவனைப் பிணித்துக்கொண் டிருக்கின்ற உன்னுடைய ம லையினுமுயர்ந்த தோள்களை அறுத்துத் தள்ளாவிட்டால், உனக்குநான் தோ ற்றவனே: இனி வில்லும் பிடிக்கிறதில்லையென்று சொன்னார்.

கவி.

மீட்டவன்கரங்களால் விலங்கலானையே
மூட்டறநீக்குவான் முயலும்வேலையில்
வாட்டலைபிடர்த்தலை வயங்கவாளிகள்
சேட்டகனெற்றியி னிரண்டுசேர்த்தினான்.

பிறகு கும்பகர்ணன் அஸ்திரங்களினாலாகிய பலம்பொருந்திய மதிலைக் கடந்து போகும்படி யத்தனப்பட்டான். அப்படி யத்தனப்படவே ஸ்ரீராமர் மழுங்காது கூர்மையுள்ளவைகளான இரண்டு பாணங்களைத் தொடுத்துக் கு ம்பகர்ணனுடைய விசாலமான நெற்றியைப் பிளந்தார். அப்போது வழிந்த ரத்தவெள்ளமானது அவன்தேகமுழுமையும் பரவிச் செந்நிறமாய்க் காணப் பட்டது. நெற்றியிலிராமபாணமானது பிரகாசித்ததெத்தன்மைத்தெனில், கிர ணமாலியான சூரியனுதயமாவதற்கு முன்னதாயுதிக்கின்ற அருணோதயத்தி னைப்போலத் தோன்றிற்று. மலையி லருவியாறொழுகுவதுபோலக் கொப்பளி த்துக் குபுகுபுவென்றுவழிகின்ற இரத்தவெள்ளமானது சுக்கிரீவமகாராஜனு டைய முகத்தைமூடிக்கொண்ட மாத்திரத்தில் தமதுசோகநீங்கி, நித்திரை செய் தெழுந்தவரைப்போல உணர்வடைந்து, கும்பகர்ணனுடைய நெற்றி யில் அதிகப்பிரகாசத்துடன் ஜொலிக்கின்றபாணத்தைப்பார்த்து, இதுஸ்ரீராம

பாணமென்று யூகித்தறிந்து அஞ்சலித்த கையனாய்ச் சுற்றிப்பார்த்தான். அப்போது ஞானபூரணர்களான பிரம்மேந்திராதியர்களுக்கெல்லாம் காரணபூதராயிருக்கின்ற ஸ்ரீராமமூர்த்தி நிற்கிறதைக்கண்டு யாதுசெய்தனனெனில்:

கவி.

கண்டனனாயகன் றன்னைக்கண்ணுறாத்
தண்டலின்மானமு நாணுந்தாங்கினான்
விண்டவனாசியுஞ் செவியும்வேரோடு
கொண்டனனெழுந்துபோய்த் தமரைக்கூடினான்.

இவ்வண்ணம் எழுந்த சுக்கிரீவமகாராஜன் உலோகநாயகனாகிய ஸ்ரீராமனைக் கண்டவுடனே இவரிடத்து ராக்ஷசர்களை யெல்லாங் கொல்கிறேனென்றுறுதிவார்த்தை கூறியயான் அவரேபார்க்க ஒருராக்ஷசனிடத்தில் அகப்பட்டுக்கொண்டேனே என்னை இவர் எவ்வளவாகநினைப்பார் ஆ! ஆ! மிகவும்நன்றாயிருக்கிறது என்பல மென்று தன்னைத்தான் வெறுத்து. நீங்காதமானமும் வெட்கமு முடையவனாய் அக்கும்பகருணனினின்று நீங்கி அவனது மூக்கையுங்காதையும் அடியோடேபறித்துக்கொண்டு குபீரென்றுபாய்ந்து தமது வானரச்சேனையை வந்தடைந்தார். அப்போது வானரர்களெல்லா மங்களம்பாடினார்கள். சப்தமேகங்களும் கர்ச்சித்தன. அரம்பாஸ்திரிகளும் தேவர்களுடன் ஆரவாரித்தனர்கள். மீன்களால் நிறைந்த சமுத்திரமும், மற்றவஸ்துக்களும் பிரதித்தொனி யுண்டாகும்படி கோஷித்தன. தேவர்களும், தர்மதேவதையும், ஆசீர்வாதஞ் சொல்லிச்சப்தித்தார்கள். மகாகோபியான கும்பகர்ணனுடைய கையிலிருந்து வெளிப்பட்ட சுக்கிரீவராஜன் சந்தோஷத்துடன் வந்து சேரப்பார்த்த ஸ்ரீகோதண்டபாணியாகிய சக்கரவர்த்தித் திருக்குமாரரும், தம்முடைய தேவியாகிய ஜானகிப்பிராட்டியார் இலங்கையின் சிறையிலிருந்து வந்துவிட்டாற்போல ஆனந்தித்தார். ஸ்ரீராமபாணமானது கும்பகர்ணனுடைய நெற்றியைப்பிளந்து மார்பிலுருவிப் போனபடியால், கும்பகர்ணன் மூர்ச்சையடைந்து சித்திரப் பிரதிமைபோ லிருந்துவிட்டான். அப்போது அவனுடைய செவியையும், மூக்கையும், கைவிற்பறித்துக்கொண்டுபோன சுக்கிரீவமகாராஜன் வானரசேனைகளிற்போய்ச் சேர்ந்துகளித்தனர். ஸ்ரீராமபிரானுடைய பெருங்கருணைக் குரியவராயினோரும் ஒருவர்கட்டிய கட்டுக்குள்ளேதானே அடங்கியிருப்பரோ? ஒருக்காலுமிரார்.

கும்பகர்ணன் கேடயமும் வாளுங்கொண்டு போர்விளைக்க ஸ்ரீராமரவற்றைப் பொடிப்படுத்தல்.

கவி.

அக்கணத்தறிவுவந் தணுகவங்கைகின்
றுக்கனன்கவியரசென்னுமுண்மையும்
மிக்குயர்நாசியுஞ் செவியும்வேறிடம்
புக்கதுமுணர்ந்தன னுதிரப்போர்வையான்

இப்படி சுக்கிரீவமகாராஜன் தன்கைக்குள் தங்கியிராமற்போனவுடனே கும்பகர்ணன் மூர்ச்சைதெளிந்து, தன்கையிலிருந்த வானராதிபதி போய்விட்டானென்கிறதையும்-தன்னுடைய பெரியமலையையொத்த மூக்குஞ்செவியுமறுந்து வெட்டவெளியாய் வெளிச்சென்றிருக்கிறதையும், செவந்தபதுமராகமலையின்மேல் மழைபெய்யும்போது தாரைதாரையாக நான்குபக்கங்களிலும் சலங்கோத்துக்கொண் டருவியாறுகளிழிந்தாற்போலத் தேகமெல்லாமிரத்தமொழுகுவதையும்பார்த்து இவ்வளவென்று அளவுசெய்யப்படாத துக்காகிராந்தனுய்த் தான் சண்டைக்குவந்து எல்லாவிதத்தாலும் பேடித்தன்மையேயடைந்ததினல் மனதுமிகவு நொந்து, மூக்கும் காதும் புண்பட்டு எப்படி ரத்தநீர் சொரிகின்றனவோ? அப்படியே ரத்தநீரைச்சொரிகின்ற குழிந்தகண்களால் தன்னைப் பரிகாசஞ்செய்துபோகின்ற தேவர்கள்முகத்தைப் பார்ப்பான், அறுந்துபோன தன்னுடைய மூக்கையும் செவியையும் தடவிப்பார்ப்பான். தனக்கு முன்கழிந்துபோன நாள்களிலுண்டான ஜெயங்களையும் இந்நாளிலுண்டான அபஜெயத்தையும் நினைப்பான். பிறகு பூமியைப்பார்த்துச் சற்றுநேரம் ஆலோசித்து, சீ! சீ! நமக்கென்ன இப்படிப்பட்ட அவமானம்வந்ததென்று மனக்கொதிப்படைவான்.

இந்தப்பிரகாரமாகக் கும்பகர்ணன் பெருங்கோபங்கொண்டு, என்முகத்தை நான் கண்ணடியிற்பார்க்கிறதற்கு முன்னதாக இந்த ஸ்ரீராமனுடைய முகமும்-மூக்கும்—காதும்—இப்படியே அறுப்புண்டுகிடக்கப்பார்க்கிறேன். இதுசத்தியமென்று சபதஞ்செய்துகொண்டு பொன்கட்டிய கேடகத்தை இடதுகையிற்பிடித்து, யுத்தத்தில் வெற்றிப்பிரதாபத்தைப் பெறச்செய்வதாகிய வாளாயுதத்தை வலதுகையிலெடுத்தான். ஆயிரம்பேய்கள் சுமந்துகொண்டுவந்து கொடுத்த அந்தக் கேடகத்துடனும் — இரண்டாயிரம்பேய்கள் தூக்கிக்கொண்டுவந்து கொடுத்த சமானமில்லாத வச்சிரவாளாயுதத்துடனும் — புறப்பட்டு, இடதுகையிலுள்ள அந்தக் கேடகத்தை ஒருசுற்றுச் சுற்றினன். அப்போது அதனுடைய காந்தியினலும், வேகத்தினலும், ஆகாசத்திலுள்ள நக்ஷத்திரங்களெல்லாம் ஒளிமழுங்கி நிலைதளர்ந்து விட்டன. தேவர்களெல்லாரும் குடல்குழம்பிப் போனர்கள். அந்தக்கும்பகர்ணன் கோபித்தபோது அவனுடைய நாசியில்நின்றும் செவியிலிருந்தும் இரத்தங்கள் தாரைதாரையாய்க் குபுகுபுவென்று வடிந்தன.

பின்பு வாளாயுதத்தை ஒருகுலுக்குக் குலுக்கிக் கிறுகிறென்று ஒருசுழற்று சுழற்றினன். அதனல் நக்ஷத்திரங்களெல்லாம் பலபலவென்று பூமியிலுதிர்ந்து விழுவதுபோலக் காணப்பட்டன. இப்பால் ஆயிரங்கிரணங்களோடும் கூடிய சூரியன் சூழ்ந்து வருகின்ற மேருமலைக்குச்சமானமான அந்தக் கும்பகர்ணன் பூமியும் அதைச் சுமந்துகொண்டிருக்கின்ற ஆதிசேஷனுடைய உச்சியு நடுங்கும்படியாகப் பெருங்கர்ச்சனைசெய்து, தன்கேடகத்தை வீசியெறிந்தான். அப்படி யெறிந்தபோது அதிலிருந்து புறப்பட்ட காற்றனது

வானரர்களினுடைய பெருங்கூட்டங்களை யொருமிக்கவாரிக் கொண்டுபோய் அஷ்டதிக்குகளிலும் வீசியெறிந்தது. மேலும் — அங்கங்குள்ள பொருள்களெல்லாவற்றையும் வாரிக்கோண்டுபோய் எறிந்ததினால் கடல்களையு மேடு செய்து விட்டோடினது. அப்படி வீசியெறிந்த கேடகத்தை ஆயிரம் திருநாமங்களையுடைய ஸ்ரீராமர் பார்த்துக்கொண்டே யிருந்தார். அவர் பார்த்துக்கொண் டிருக்கும்போதே கும்பகருணன் அவருக்குந் தெரியாமற் கேடகமெங்கேயென்று கைநீட்டினான்.

இப்படியவன் கைநீட்டிக் கேட்கிறதற்குள் ஒருக்ஷணநேரத்தில் இரண்டாயிரம் பேய்களாற் சுமந்து கொண்டுவந்துகொடுத்தவேறொரு கேடகத்தை கையிற் பிடித்துக்கொண்டான். இந்தக்கேடகத்தின் காற்றினால் வானரப்படைகளையெல்லாம்வாரி யெறியப்பட்டும், காலினால்மிதித்துத்துவைக்கப்பட்டும்,பிரகாசம்பொருந்திய வாளாயுதமாகிய நமனால் துணிபட்டும்,இன்னும்பலவகையாலும் சின்னபின்னமாய்ச் சண்டமாருதக் காற்றினால் அலைக்கப்பட்ட கடலுக்கொப்பாகச் சிதறுண்டு மாய்ந்துபோய்விட்டன. இந்தப்படி கும்பகர்ணன் மேலிட்டுவந்ததும், அவனுக்கெதிர்ப்பட்ட வானரங்களெல்லா நசுங்கிச்சின்னபின்னப்பட்டதும், அந்த வானரங்களினுடைய தேகத்தினின்று மொழுகுகிற இரத்தவெள்ளங்கள் பூமியிலாறாகவடிந்து ஆதிசேஷனுச்சியிலும் சேறுபட்டதும், ஆகிய இந்தச்செய்கைகளெல்லாம் ஒருக்ஷணநேரத்திற்குள்ளே முடிந்துவிட்டன.

இதைக்கண்ட பிரம்மாவினுடைய அம்சபூதரான சாம்பவர் ஸ்வாமியைப்பார்த்து, ஓ பரமதயாளுவே! இதைக்காட்டிலும் வேறேயொரு இக்கட்டினிவரப்போகிறதில்லை. இப்போதிவனை நீர் தடுக்காதிருப்பீரானால் வானரசேனைகளை யெல்லாம் தேவரீரேயொடுக்கி இராட்சசர்களை யெல்லாம் பலங்கொள்ளும்படிச் செய்தீரென்று ஒருநிந்தனையானபெயர் சம்பவிக்கும். இப்படித் தேவரீர் வேடிக்கைபார்த்துக்கொண்டிருக்கலாகாதென்று முடுக்கினார். அப்போது ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி வானரசேனைக ளழிந்ததையும் — கும்பகர்ணனுடைய அதிவீரியப்பிரதாப வெற்றியையும்—அவன்சத்தியையு நினைத்து, இனிநாம் சும்மாவிருக்கிறது தகாதென்று திருவுளங்கொண்டு, இன்றைக்கு மறைந்துகொண்டிருந்த நமனை இவன் கண்முன்னாக நிறுத்தி இவனைக் கொல்லுகிறேனென்று சபதம்பண்ணிக்கொண்டு அந்தக்கும்பகர்ணனுக் கெதிராகவந்து என்னசெய்தனரெனில்.

கவி.

ஆறினோடேழுகோ லசனியேறென
ஈறிலாவிசையன விராமனெய்தனன்
பாறுகுசிறையென விசும்பிற்பாறிட
தூறினன்வாளினு னுணங்குகேள்வியான்.

தனது கோதண்டத்தை வளைத்து நாணேற்றி; இவ்வுலகங்களை யெல்லாம் நினைக்குமுன் தகிக்கின்ற பதின்மூன்று பாணங்களை இடியேற்றைப் போல் மகாவேகத்துடனே எமதுகர்த்தாவாகிய பரந்தாமனென்னும் ஸ்ரீராமபிரான் பிரயோகித்தனர். பிரயோகித்த பாணங்களை யுத்தசாஸ்திரத்தினுள்ள நுட்பமான விஷயங்களை யெல்லாங் கற்றுணர்ந்த நிபுணனாகிய கும்பகர்ணனவன் – பருந்தென்னும் பறவையினது உடலினின்றும் உதிர்கின்ற சிறகுகளைப்போல் தனது வாளயுதத்தினால் வெட்டித்தள்ளினான். புருஷோத்தமரான ஸ்ரீராமபத்திரர் பின்னும் கோடைகாலச் சூரியனைப்போல அதிகூர்மையான பாணங்களை அவன்மீது பிரயோகித்தார். அவைகளையும் தன் கைக்கேடகத்தினாலேயே சிந்திச்சிதறிப் போகும்படித் தட்டிவிட்டான். அப்போது தசரத குமாரனான ஸ்ரீரகுநந்தனர் புன்சிரிப்புகொண்டு வேறேயொரு அஸ்திரத்தைப் பிரயோகம் பண்ணினார். அதுகருடபகவானைப்போல வந்து, கும்பகர்ணன்கையில் வெகுகொடுமையுடன் பிரகாசித்துக்கொண் டிருக்கின்ற அதிபலமுள்ள வாளாயுதமாகிய சர்ப்பத்தைத் துண்டு துண்டாய்ப் பொடித்தெறிந்துவிட்டது. அதுகண்ட தேவர்களெல்லாம் சந்தோஷகோஷமிட்டார்கள்.

அந்தவாளாயுத முறிந்தும் உடனே முறியவில்லையென்று நினைக்கும்படி வேறோர் வாளாயுதத்தை அதிவேகமா யெடுத்துக்கொண்டு, எல்லாரையு முடித்துவிட்டேன்: முடித்துவிட்டேன்: என்று சொல்லிக்கொண்டும் – வடவாமுகாக்கினியும் அவியும்படியாகப் பெருமூச்சு விட்டுக்கொண்டும் - ஸ்ரீராமருக்கு முன்பாகவந்து நின்றான்.

கவி.

அந்நெடுவாளையுந் துணித்தவாண்டகை
பொன்னெடுங்கேடகம் புரட்டிப்போர்த்ததோர்
நன்னெடுங்கவசத்து நாமவெங்கணை
மின்னெடுங்கிர்ப்பன பலவும்வீசினான்.

புருஷசிம்ஹமாகிய ஸ்ரீராமபிரானானவர் அந்த வாளாயுதத்தையும் துணித்து, பொன்மயமான கேடகத்தையு மழித்து, அவன்மார்பி லணிந்திருக்கின்ற நல்லவலிவுள்ள கவசத்தையு மின்னலைப்போல ஒளியைவீசிச் சத்துருக்களாகிய சர்ப்பங்களுக்குப் பயங்கரத்தை யுண்டாக்கத்தக்க கொடியபாணங்களால் அறுத்து நீக்கினார்.

இராவணன் கும்பகர்ணனுக்குத் துணையாகப் பதினான்குகோடி சேனைகளையனுப்ப, ஸ்ரீராமரவற்றைக் கணப்போதில்மாத்ய்தல்.

கவி.

அந்தரமன்னது நிகழுமவ்வழி
இந்திரன்றமரொடு மிரியலெய்திடச்

சிந்தவுந்தன்னிலை குலையச்சேணுற
வந்ததுதசமுகன் விடுத்தமாப்படை.

இப்படி ஸ்ரீராமரும் கும்பகர்ணனும் போர்விளைக்கின்ற சமயத்தில் ஆகாசமார்க்கத்தில்நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த தேவேந்திரனுடனே தேவர்களெல்லா மோட்டமெடுக்கவும், சமுத்திரமுந் தத்தளித்துத் தன்னிலைகெடவும், இராவணனால் தன்தம்பிக்குதவியாக வனுப்பப்பட்ட ராக்ஷசப்பெருஞ்சேனைகள் வெகுகோடிவந்தன. அப்போது ஸ்ரீராமரும் இந்தக்கும்பகர்ணனைக் கொல்லுவதற்குத் தகுந்த செய்கை இதுவாமென்று ஆலோசித்துக்கொண்டு தமதுவில்லை ஊன்றினின்று, பலதீவினைகள் பரவினகாலத்தில் ஒருநல்வினையானது பெருகிவந்ததுபோல இராக்ஷசசேனைகளுக்கு முன்னே நடந்து இரணக்களத்தில் விளங்கினார். அக்கால் ஸ்ரீராமர் நான்குபக்கங்களிலும் குதிரைப்படைகளும் - தேர்ப்படைகளும் — பதாதிப்படைகளும் — யானைப்படைகளும் — துணையாகவந்து சூழ்ந்ததைக்கண்டு ஆச்சரிய மனத்தினராகி, அடா கும்பகர்ணா! நீங்கள்யாவரும் அழிந்துபோகும்படியாக சீக்கிரமாய் வரக்கடவீர்களென்று கூப்பிட்டார்.

அப்போது நெற்றிப்பட்டத்தையுடைய மதயானைகளும், குதிரைகளும், குதிரைகளாலும் - யானைகளாலும — இழுக்கப்படுகின்ற சக்கரங்கள் பூட்டிய தேர்களு நிறைந்திருக்கின்ற பதினான்குகோடி ராக்ஷசசேனைகளும் போர்செய்யத் தொடங்கின. மகாபிரளயகால சம்ஹாரமூர்த்திக் கொப்பான்வரான ஸ்ரீராமரும் அவர்களுக்கெதிராக விளங்கினார். அப்போது கும்பகர்ணன் எமனையும், அவனுக்குரிய காலத்தையும், அதற்குவேண்டிய பாபங்களையும், அவைகளுக்குப் பிறப்பிடமான இராக்ஷசப்படைகளையும் அணிவகுத்துநிறுத்தி; இந்தப் பூலோகத்தவர்களையும் — பாதாளலோகத்தவர்களையும் — சுவர்க்கலோகத் தவர்களையும் — தன்னுனியினாலே தொட்டு நசுக்கிவிடும்படியான மற்றோர்கொடிய சூலாயுதத்தைக் கையிலெடுத்துக்கொண்டு யுத்தகளத்திலெதிர்த்துநின்றான். இப்படி யிவர்கள் யாவரு முனைந்துநிற்கையில் ஸ்ரீராமமூர்த்தி வில்லைவளைத்து நாணேறிட்டு அஸ்திரப்பிரயோகம் பண்ணினாரென்பதையும், இல்லையென்பதையும், ஒருவரும்தெரிந்திலர். அந்தரணக்களத்திற் கவந்தங்கள் கூத்தாடின.

அல்லாமலும் — தேவர்கள் மரங்கள் கிடக்கின்றனவோ? மலைகள் கிடக்கின்றனவோ? என்றுபிரமிக்கும்படியாகக் கைகளற்றுக் கிடந்தன. மெய்களற்றுக்கிடந்தன. பாணங்கள் தைத்துக்கொண்டு சிரங்கள் கிடந்தன. இவற்றைமாத்திரம் யாவருங்கண்டார்களே யல்லாமல். அவர்களுயிர்கொண்டு திரிய ஒருவரும் பார்க்கவில்லை. இரணக்கள முழுவதுமேடிட்டுக் கிடக்க அவர்கள் கொண்டுவந்த ஆயுதங்களில் இற்றுப்போகா தவைகளையும், முறிந்துமீதியாய்க் கிடவா தவைகளையும், நடுவேமுறிந்து ரணக்கள முழுவதும் தூர்ந்துகிடவா தவைகளையும், துணிக்கப்படா தவைகளையும், நெருப்பையிறைத்

துக்கொண்டு வெறும் சாம்பலாகாதவைகளையும், ஒன்று நூறாய் அற்றுப் போகாதவைகளையும் ஒருவருங் காணவில்லை. யானைகளுடைய விசாலமான மத்தகத்திற்பாய்ந்த பாணங்கள் உருவிச்சென்று பாதிதேகத்தைப் பிளந்து கொண்டுபோக, அதனாற் பெருக்கெடுத்துப் பூமியில் வடிந்துதேங்கிய ரத்த வெள்ளத்திற் குடல்களெல்லாம் சரிந்துவிழும்படியாகத் துதிக்கைகளுடனே இரண்டு தந்தங்களும் துணிபட்டும் — முன்னங்கால்களறுபட்டும் - பூமியில் விழுந்து கிடந்தவைகளேயல்லாமல் நடந்து திரிந்த யானைகளை யொருவராவது பார்க்கவேயில்லை.

அன்றியும் — மணிகட்டி யொலிக்கின்ற தேர்களில் ஒளியிழந்தவைகளாயும், விருதுக்கொடி யற்றவைகளாயும், சூரியகிரணங்களைப்போலப் பிரகாசிக்கின்ற கூர்மையான அம்புகளால் உடல் பிளப்புண்ட அநேகம் குதிரைகள் கட்டினவைகளாயும், வரிசைவரிசையாய் அச்சுக்களுடன் அஞ்சுருவாணியற்றவைகளாயும், இரணக்களத்தில் சரிந்துகிடக்கிற வெண்மையான கொழுப்பில் வழுக்குண்டு தலைகீழாய் விழுந்து பூமியிலாழ்ந்தவைகளாயும் கிடக்கக்கண்டார்களல்லாமல்; அந்தத்தேர்கள் ஸ்ரீராமபாணங்களாற் பிளக்கப்படுகிறபோதொருவரும் காணவில்லை. வந்த குதிரைகளெல்லாம் ஆடலொழிந்தவைகளும், வளைந்த கழுத்தற்றவைகளும், அனுமானிக்கிற குரல்வளைகளற்றவைகளும், கால்களற்றவைகளுமாகக் கூட்டங் கூட்டமாய் மாண்டு பிணமலைகளாய்க் கிடக்கையால் அப்பிணங்களை அமிழ்த்தித்தேங்கிய ரத்தவெள்ளச் சுழிப்புகளில் அகப்பட் டடித்துக்கொண்டு போகின்றவைகளுமாகக் கண்டார்களேயல்லாமல்; இரணக்களத்திற் குதிரைகள் நின்றுதிரியக் கண்டவர்களொருவருமில்லை.

வேதமுதல்வராகிய ஸ்ரீராகவப்பிரானெய்கின்ற அஸ்திரப்பிரயோக வேகத்தின் விசேஷத்தைக் கணிதசாஸ்திரத்தால் திருஷ்டாந்தப்படுத்தி அளவிட்டுச் சொல்லவேண்டிய தென்னதற்கு? அந்த ரணக்களத்திறபட்ட ராக்ஷசர்களென்னப்பட்ட கொடியவர்களை வீரஸ்வர்க்கத்திலும் தேவர்கள் இவ்வளவினரென்று கண்டிலர். ஆயினும் - இந்த ரணக்களத்தில் அவரவர்கள் நாயகன்மார்களைத் தேடிக்கொண்டு வந்த பெண்சாதி மார்களைத்தான் ஒருவாறு கண்டார்கள். அந்தராக்ஷசர்களுடைய மலையிலும் பெரிய தேகக்குவியலைக் கூட ஒருவரும் காணவில்லை.

கவி.

பனிப்பட்டாலெனக் கதிர்வரப்படுவது பட்டதப்படைபற்றார்
துனிப்பட்டாரெனத் துலங்கினரிமையவர் யாவர்க்குந்தோலாதான்
இனிப்பட்டானெனை வீங்கினவரக்கரு மேங்கினரிவனந்தோ
தனிப்பட்டானென வவன்முகநோக்கியொன் றுரைத்தனன்றனிநாதன்.

பனிக்கூட்டமானது சூரியனுதயமான மாத்திரத்தில் எப்படி அழிந்துபோகுமோ? அதுபோல ராக்ஷசப்படையெல்லாம் ஸ்ரீராமமூர்த்தியால் மா

ண்டுபோயிற்று. இராக்ஷசர்கள் கோபங்கொண்டார்களென்று பயந்து நடுங்கின தேவர்களெல்லாம், யாவரையும் ஜெயம்பெற்றுக் கர்வித்திருந்த ராவணன் இனிநாசமடைந்து விட்டானென்று நெஞ்சம் பூரித்தார்கள். இராக்ஷசர்களெல்லா மிதைக்கண்டு துக்கமடைந்தார்கள்.

ஸ்ரீராமர் தனியேநின்ற கும்பகருணனுடைய கருத்தைக் கேட்டறிந்து போர்விளைத்து, அவனிரண்டுதோளையுந் தாளையுந் துணித்தேறிதல்.

கவி.

எதியோடெதிர் பெருந்துணையிழந்தனை யெதிரொருதனிநின்றாய்
நீதியோனுடன்பிறந்தனை யாகலினின்னுயிர் நினக்கீவேன்
போதியோபின்றை வருதியோவன்றெனிற் போர்புரிக்திப்போதே
சாதியோநினக் குறுவதுசொல்லுதி தெரிவுறச்சமைந்தம்மா.

அந்தச்சமயத்தில் இரகுகுலோத்தமனாகிய ஸ்ரீராமபிரானனவர் அந்தோ. கும்பகர்ணா! நீ உனது வாளாயுதத்தோடு துணையாகவந்த இரதகஜதுரகபதாதிகளாகிய சைனியங்களையும் இழந்து தனிமையாக நின்றுவிட்டபடியாலும், மகாநீதிமானாகிய விபீஷணனுடன் பிறந்தபடியாலும் உனக்குப் பிராணபிக்ஷை கொடுக்கிறேன். இன்றைக்குப்போய் நாளைவருகின்றாயோ ? அல்லாவிட்டா லிப்போதே சண்டைசெய்து உன்னுயிரைக் கொடுக்கின்றாயோ ? நீ எதை யாலோசித்து முடிவுசெய்திருக்கின்றாய் ? உன்னபிப்பிராயத்தைச் சொல்லக்கடவாய். நானுன் தம்பியாகிய விபீஷணாழ்வானைக்கொண்டு உன்னை யழைப்பித்தும் உன் தமையன்செய்த பாவவினை முடியாதபடியால் உனக்குணர்வுபிறந்து வரவில்லை.நீயமதர்மராஜனியமித்த ஆக்ஞையின்படி நிற்கின்றாய். உன்னுடைய ஆயுள் நாளெல்லாம் உனது நித்திரையிலேயே கழிந்துபோய்விட்டன.இப்போது வருத்தப்பட்டுச்சாகவேண்டியவனாக இருக்கின்றாய். உன்மனதில்தோற்றுவதைச் சொல்லென்று கேட்கக் கும்பகர்ணன் சொல்லுகின்றான்.

ஓ இரகுநந்தனா! நீ சொன்னவனைத்தும் உண்மையே: ஆயினு மற்றக் காரியங்களெல்லா நிற்கட்டும். பெருமையும் - மானமும் - வீரமும் — நீதியும் வழுவில்லாத வெற்றியும் - குலதர்மமுதலாகிய எல்லாக்கிரமங்களையுமுடைய உங்களால், எங்களைவிட்டுவந்து தன்பெரிய செவியு மூக்கு மறுப்புண்ட என் தங்கையாகிய சூர்ப்பநகையைப்போல என்முகத்தைநான்யாருக்குக்காட்டி உயிர்வாழ்ந்திருப்பேன்? எங்களால் தேவர்கள் தங்கள் ஒழுக்கங்கெட்டு ஒளிமழுங்கிப் போனார்கள். அதை நினைக்கும்போதே மனது வருத்தமாயிருக்கின்றது. அவ்வருத்தத்துடனே மகாலட்சுமிக்குச் சமானமுள்ள அழகும் கற்பும்வாய்ந்த பிறன்மனைவியாகியசீதையைச்சிறையிடுவது தகாதென்று தடுத்துச்சொல்லிய பெரியோர்வாக்கை இராவணன் கடந்தானேயென்கிற வியாகூலத்தை எப்போதும் அனுபவிக்கிறநான், என் செவியையு மூக்கையு மிழந்த பிறகும் இலங்கைக்குப்போவேனோ? ஒருக்காலு முடியாது. என் தமயனைக்களிப்பிக்கவும் — என் தங்கையினுடைய மானத்தைக் காப்பாற்றவும்—உங்கள்

கால்களையும் - தலையையும் - என்கை வாளாயுதத்தால் வெட்டி, உங்களுயிரையும் போக்குகிறேனென்று சபதஞ்செய்து வந்திருக்கின்றேன்.

அப்படி வந்தநான், தேவர்களெல்லாம் பரியாசஞ்செய்யும்படி இராவணன் முன்பாக என் தங்கையாகிய சூர்ப்பநகை அலறி மோதி விழுந்ததுபோலத் தலையிற் கையைத்தூக்கிவைத்துக்கொண்டு கண்ணீர் இரத்தநீராய் வடியும்படியாக அழுது கூவிக்கொண்டு விழுவேனோ? நீயே சுவர்க்க மத்திய பாதாளமென்கிற இந்த மூன்றுலோகங்களுக்கும் தனித்தலைவனென்று பிறராற் சொல்லப்பட்டிருந்தும்.திண்மையின்னதென்றுராயத்தக்ககருத்துடையசேவகனுய் வந்தவனல்லவோ சேவகனென்றும்-அதுவல்லவோ வீரர்களுடைய கடமையென்றும் - நீயேன் ஆலோசிக்கவில்லை? யுத்தகளத்திலே அதிவீரர்களான உங்கள் தலைகளை வாளினலறுத்து மீட்டும் ஒட்டவைத்தால் ஒட்டிக்கொள்ளுமோ? யுத்தத்துக்கென் றுத்தேசித்துப் புறப்பட்டுவந்த நான் அந்த உத்தேசியத்தை உன் சொல்லாற் கைசோரவிட்டுத் திரும்பிப்போய் விடுவனே? வீரர்களுக்குப் பொருத்தமானதைச் சொன்னுயில்லையென்று சொல்லித் தன்வலது கையிலிருந்த சூலத்தை இடதுகையில் மாற்றிக்கொண்டு, அவ்வலதுகையால் எதிரே நின்ற ஒரு மலையைப் பூமியின்குடலைப் பிடுங்குவதுபோலப் பேர்த்தெடுத்து ஆகாசமெல்லா நெருப்பாய்ச் சொரியும்படியாகப் பார்த்து யாவரும் ஸ்ரீராமர்மீது பட்டுவிட்டதென்றே சொல்லும்படியாய் வீசியெறிந்தான்.

கவி.

அலையகுன்றெனு மசனியையாவர்க்கு மறிவருந்தனிமேனி
புலையவங்கெழு துகளெனநூறிய புரவலன்பொரவென்று
நிலையுமாத்திரை யொருகைநின்றொருகையி னிமிர்கின்றநெடுவேலை
தினையின்மாத்திரை துணிபடவரன்முறை சிந்தினன்சரஞ்சிந்தி.

அவ்வண்ணம் கும்பகருணப்பதகனால்விடப்பட்ட இடியேற்றையொத்த பருவதத்தை முற்றத்துறந்த முத்யோர்களாலும் அறிதற்கரிய பகவானுகிய ஸ்ரீகைலாச சிகர வாசனுகிய பரமேஸ்வரமூர்த்தியினது திருமேனியிலணிந்த விபூதியாகிய பஸ்மத்திற்குச் சரியாகப் பொடிப்படுத்திய சக்கரவர்த்தித்திருமகன் மறுபடியும் அவன்மீது அஸ்திரப்பிரயோகஞ்செய்ப யத்தனித்தார். அதற்குள்ளாகக் கும்பகர்ணன் இடதுகையிலிருந்த சூலாயுதத்தை வலதுகையிற்பற்றினன். அப்படிப் பற்றுவதற்குள்ளாக சுவாமியானவர் பாணங்களை அடுத்தடுத்துப் பிரயோகித்து, திணைப்போதுக்குள்ளாக அந்தச்சூலாயுதத்தை அவன்கையிலிருந்தபடியே துண்டுதுண்டாய்விழச் சிதைத்துவிட்டுப் பின்னும் இடியையும் சுட்டெரிக்கத்தக்கவைகளும் - அலைகளையுடைய சமுத்திரநீரை வறள உண்டுவிடத் தக்கவைகளும் - மேருமலையையு மூடுருவிக்கொண்டு ஓயாமலாகாசமுழுமையும் கடக்கத்தக்கவைகளும் - தவறாத உண்மைக்கொப்பானவைகளுமான பாணங்களை இரண்டுதுதையும் ஒன்றோடொன்று சேரும்படியாக வில்லிலவளைத்துத் தொடுத்து விட்டார்.

அக்கணைகள்போய்ப் பாலநேத்திரனாகிய சம்புமூர்த்தியாற் கொடுக்கப்பட்ட அவன்கவசத்தைப் பேதித்துக்கொண்டு போகமாட்டாமல் அதன்மேல் மோதிநிற்கிறதைச் செந்தாமரை மலர்போன்ற திருக்கண்களையுடைய சக்கரவர்த்தித் திருக்குமாரர்கண்டு, ஓ! ஹோ! இது சங்கரனாற் கொடுக்கப்பட்ட கவசமென்று யூகித்துணர்ந்து சிவாஸ்திரத்தைத் தொடுத்தெய்தார். அது பட்டமாத்திரத்தில் அந்தக்கவசமானது அள்ளுகழன்று, மேருமலையைச் சூழ்ந்துவருகின்ற சூரியன் பூமியில் விழுந்து விட்டதுபோலத் துண்டு துண்டாய்க் கீழேவிழுந்து விட்டது. அப்படி மிகுந்த பிரகாசத்தையுடைய கவசமானது நொறுங்கி யுதிர்ந்தமாத்திரத்திற் கும்பகர்ணன் இரண்டு கண்களிலும் அக்கினியைச் சிந்தி, தனதுதோளைத் தட்டிக்கொண்டு கர்ச்சித்து, அனேகரை ஜெயம்பெற்ற ஒரு வச்சிரதண்டத்தைக் கையிலெடுத்து, இந்த வானரசேனையை யெல்லாம் குழம்பாக்கி விடுகிறேனென்று ஆக்கிரமித்து, பூமியை அம்மியாகவும் – அந்த நெடுந்தண்டத்தைக் குழவியாகவும் - வானரங்களைச் சுண்டாங்கிப் பொருளாகவுங்கொண்டு கிரமக்கிரமமாய் அரைக்கத் தொடங்கினான்.

அப்போது ஸ்ரீராமபாணங்களில் ஆயிரம் பாணங்கள் ஆகாசமெல்லாம் பறந்தோடின. ஆயிரம் பாணங்கள் கும்பகர்ணன்மீது பாய்ந்தன. ஆயிரம் பாணங்கள் அவனுடைய பெரியமலைபோன்ற மார்பைச் சல்லடைக் கண்களாகத் திறந்துவிட்டன. ஆயிரம் பாணங்கள் அவனுடலில்தைத்து உருவிப் போகாமல் உள்ளேயே மறைந்தன. ஆயிரம் பாணங்கள் அவனை எதிர்த்துக் கொண்டு நின்றன. இப்படியாக ராமபாணங்கள் அவனை வருத்தினபோதிலும் அவன் கர்ச்சனையிட்டுக்கொண்டு காற்றாடியைப்போலே கிறுகிறென்று சாரிசுற்றிவந்தான். அப்போது நீலமேகம்போன்ற ஸ்யாமளமேனியையுடைய ஸ்ரீராமர் அவனைப் பார்த்து, இவன் கையில் தண்டாயுத மிருக்குமேயானால் நம்முடைய வானரசைனியங்க ளிருக்கமாட்டாதென்று நினைத்து, பத்துக் கூரியபாணங்களை வரிசையாகத் தொடுத்து எய்தார். அம்மாத்திரத்தில் அந்த வச்சிரதண்டமானது துண்டு துண்டாய் வெட்டுண்டது.

அக்கால் பெரிய வீரகண்டாமணியைத்தரித்த கும்பகர்ணன் வடவாமுகாக்கினியைப்போலப் பொங்கி, வட்டாகாரமான ஸ்வர்ணகேடகமொன்றையும், ஒரு கூரிய வாளாயுதத்தையுங் கையிலெடுத்துக் கொண்டான். அப்படியவன் வாளைக் கையிலெடுத்த உடனே வானரவீரர்களெல்லாம் தைரியங்குறைந்து, நாலா பக்கங்களிலும் காலெடுத்தோடத் தலைப்பட்டார்கள். தேவர்களெல்லாம் வருத்தமுற்றுத் தலைகாட்டாமல் மறைந்துகொண் டோடினார்கள். அப்போது கும்பகர்ணன் என்சபதத்தை நிறைவேற்றிக்கொண்டு தான் திரும்புவேனென்று சொல்ல, அதைக்கேட்ட ஸ்ரீராமமூர்த்தியானவர் கும்பகர்ணனுடைய மலைபோன்ற தோளைப் பிடித்திருக்கின்ற வாளாயுதத்

தடமேள துணித்துவிடக் கடவாயென்று தேவர்களெல்லாம் வாழ்த்தும்படியாக ஒரு பாணத்தை எய்தார்.

கவி.

அலக்கணுற்றது தீவினைநல்வினை யார்த்தெழுந்ததுவேர்த்துக்
கலக்கமுற்றன ரிராக்கதர்காலவெங் கருங்கடற்றிரைபோலும்
வலக்கையற்றது வாளொடுங்கோளுடை வானமர்மதிபோலும்
இலக்கையற்றதவ் விலங்கைக்குமிராவணன் றனக்குமென்றெழுந்தோட.

அப்போ திலங்கைக்கும் இராவணனுடைய தலைக்கும் கணக்கு முடிந்துவிட்டதே இனிநாம் வசிப்பதற்கிடமில்லையே யென்னசெய்வதென்று தீவினையானது மனந்திடுக்கிட்டது. படுபாவியாகிய இலங்கேசனது உபத்திரவத்தால் மறைந்திருந்த நல்வினையானது ஆநந்தித்துக்கொண் டோங்கிவளர்ந்தது. இராக்ஷசர்களெல்லாம் தேகம் வெயர்த்து, மஹாகொடுமையான யுகாந்தகாலச் சமுத்திரத்தின் அலையைப்போல மனங்கலங்கினார்கள். இப்படியாகும் சமயத்திற் கும்பகர்ணனுடைய வலதுகையானது தேவேந்திரனுடைய மேனியிலுள்ள கண்களுக் கொப்பாக, ஸ்ரீராமபத்திரர்விட்ட பாணத்தினாற் கிழிபட்ட புண்களுடனே வாளாயுதத்தோ டற்றுவிழுந்தது.

அதிவீரனான அந்தக் கும்பகர்ணனிடத்தில் யாரேனும் பிச்சைகேட்டு வாங்கினாலல்லது வேறேயும் வீரர்களுண்டென்று சொல்லுவதற் கொருவராலு முடியுமோ? அப்படிப்பட்டவீரனான கும்பகர்ணன் தனதுதோளோ டற்றுவீழ்ந்த வலதுகையை இடதுகையி லெடுத்து. வீரகர்ச்சனை யிட்டுக்கொண்டு வானரப்படையிற் பிரவேசித்து அடித்தான். அப்போது வானரக்கூட்டமெல்லாம் பல்லையிளித்துக்கொண்டு ஓட்டம்பிடித்தன. மஹாதாதாவான ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி காத்துக்கொண்டு நிற்கும்போதே கும்பகர்ணன் வானரசேனையைக் கொள்ளை கொள்ளையாக யமலோகமடையும்படி முன்னினு மூன்றுமடங்காகச்சிதைக்கின்ற குறிப்பை மூவுலகத்தினரும்பார்த்து, இந்த வானரசமுத்திரம் இன்றோடு நாசமாய்விடுமென்கிற துக்கத்தினாலுயிர்வாடி, இருக்கும் கையைப் பார்க்கிலும் அறுந்தகைக்கே அந்த மூன்று லோகத்தாரும் பயந்தார்கள்.

அப்போது கும்பகர்ணன் தன்னைக்கண்டு வானரப் பெருங்கடலானது முதுகுகாட்டியோடவும், யானைப்பிணங்கள் மேலேமிதக்கும்படி இவன்தோளிலிருந்து வழிந்து இரத்தவாறுகளோடவும், ஆகாயமார்க்கத்தில் தேவர்களெல்லாம் பயந்தோடவும், இலங்கையிலுள்ள பொருள்களும் — மலைகளும் — கடலும் — நிலைகுலைந்து பின்றொடர்ந் தோடிவரவும், மேகங்களெல்லாம் சின்னபின்னப்பட்டுச் சிதறிப்போகவும், ஆண்சிம்ஹம்போன்ற மஹாவீரரான ஸ்ரீராமரைநோக்கி அவர்மீது அதிவேகமாக ஓடினான்.

கவி.

ஈற்றுக்கையையு மிக்கணத்தரிதியென் றிமையவர்தொழுதேத்தத்
தோற்றுக்கையகன் றெழிந்தவனுளவை தொலையவுந்தோன்றாத

கூற்றுக்கையமு மச்சமுங்கெடநெடுங் கொற்றவன்கொலையம்பால்
வேற்றுக்கையையும் வேலையிலிட்டனன் வேறுமோரணையாக.

அக்கால் சிதறுண்ட தேவர்களெல்லாம் ஸ்ரீராமரைநோக்கி, சுவாமீ! மற்றொருகையையுமிப்போதே அறுத்துவிட வேண்டுமென்று பிரார்த்தித்து வணங்கிநின்றார்கள். அதுகண்ட நித்தியஜெயப் பிரதாபரான ஜானகிநாயகர் மனதிரங்கி, இவனுக்குத் தோல்வியடைந்து கைக்ககப்படாம லொளிந்துநின்று இவன்வாழ்நாள் முடிவையும் பயத்தினால் மறந்துவிட்ட யமனுக்கு இப்போதேனும் கால முடிந்ததோ இல்லையோவென்கிற சந்தேகமும், ஒருவேளை எதிர்ப்பட்டா லென்னபொல்லாங்குவருமோ வென்றிருந்தபயமு நீங்கும்படி; ஒருதிவ்விய பாணத்தினாலே அவனிடதுகையையு மறுத்து வேறொரு சேதுகட்டினதுபோலச் சமுத்திரத்திலே விழச்செய்தார்.

அப்பதகனாகிய கும்பகர்ணனது அறுந்துவிழுந்த புயங்கள் பூர்வகாலத்திற் சுவர்க்கலோகவாசிகளாகிய தேவர்கள் அலைகளையுடைய பாலசமுத்திரத்தின்கண்தேவாமிர்தந் தோன்றும்படியாகச் சந்திரனாகிய தூணினிடத்தில் சேர்த்துப் பூட்டிக் கடைந்த மந்திரபருவதத்தை யொத்தது. அப்புயத்திலணிந்த மாணிக்கக்கங்கணங்கள் அம்மந்திர மலையைச்சுற்றிய வாசுகியென்னும் சர்ப்பராஜனை யொத்திருந்தது. மேலும்-தன்னிறத்துக்குத் தானேயொப்பான பெருங்கடலில் விழச்செய்தபடியினாலும், நெருங்கிய ரேகைகளையுடையதான சொர்னமய விறகுகளின் கடுவிசையால் முடுக்கப்பட்ட செய்கையாலும், நிர்விகாரியான ஸ்ரீயப்பதியி னவதாரமான ஸ்ரீராமமூர்த்தியி னியமனப்படி நடந்த தன்மையினாலும், கூர்மையான ஸ்ரீராமபாணமானது பெரியதிருவடிகளாகிய கருடபகவானைப் போலவும் - அந்த உயர்ந்ததோளானது அக்கருடபகவான் அநாயாசமாகவெடுத்துவந்து கடலிலிட்ட மந்தரகிரிக்குச் சமானமாகவும் – இருந்தன.

இவ்வாறு கும்பகர்ணன் இரண்டுதோளு மற்றபின்பு, தினந்தோறும் சூரியன் சுற்றிவருகின்ற மேருமலையை உள்ளேகுடைந்து ஒருபறையாக்கித் திருவிக்கிரமமூர்த்தியானவர் உலகத்தை யளவிடற்கமைத்த ஒருநீண்ட குறுந்தடியைக் கையிலேந்தி யடித்து முழக்கினாற்போலப் பெருங்கூச்சலிட்டுக்கொண்டு வானர சேனாசமுத்திரத்தைத் தலையும் – தோளும் – சதையும் – எலும்புமாகச் சின்னாபின்னமாய் இரத்தவாற்றினுடன் பெருக்கெடுத்தோடக் கலக்கிவிட்டான். நிலம் – நீர் – தீ - காற்று – என்னும்பூதங்கள் நான்கும் அரக்கனுருவாகி ஒருவராலும் சொல்லுதற்கிசையாத பெரியதோற்றத்தைப் படைத்து வந்ததைப்போலச்சீவகோடிகளையெல்லாம் சம்ஹரிக்கிறவனாய், பிரளயகாலத் தெமனுக் கொப்பாகக் கோபமுற்றுச் சங்கிராமவீரர்களுள் தலைமைபெற்று யாதொருவிஷயங்களிலும் தனக்குத்தானே சமானமானவனென்கிற பிரபலமுற்று வாழ்வுற்றிருந்த கும்பகர்ணனுடைய மலைபோன்ற கறுத்த வலதுகாலை, விஜயகோதண்டபாணியாகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் தம்

முடைய வடித்துக் கூரிட்டுப் பகைவர்களுதிரத்திற் காய்ச்சித் துவையலிட்டுப் பொற்கட்டு வச்சிரக்கட்டுகளிட்டுச் சிறப்புற்றோங்கிய மயிலிறகு கொக்கிறகைச் சொருகிட்டு விளங்கத்தக்க அதிதீக்ஷண்ணியமுள்ள ஒருகூர்மைபொருந்திய பாணத்தினாற் கதறிப்பதறிச் சிதறத்தக்கதாக அறுத்துப் பூமியில்விழும்படிச் செய்தார்.

அப்போது கும்பகர்ணன் அழகுபெறத்தக்கதா யொன்றுடனொன்று சேர்த்து வரிசைவரிசையாக அமைத்து வைத்ததுபோற் பிரகாசிக்கின்ற, தந்தபந்திகளென்கிற நக்ஷத்திரக் கூட்டங்களோடு சம்பந்தப்பட்டு முதன்மை பெற்றிருக்கின்ற, இளமைதங்கிய வெள்ளிய மூன்றாம்பிறைச் சந்திரனைத் துண்டிட்டு வைத்ததுபோலச் சொலிக்கத்தக்க கூனலாகிய இரண்டுவெக்கிர தந்தங்க ளிரண்டுகடைவாயிலும் தோன்றும்படியாக, மலையிலிருந்து தாரைதாரையாகப் பெருக்கெடுத்தோடி வருகின்ற அருவிநீரைப்போல இரத்தவெள்ளமான து குபீர்குபீரென்று பாய்ந்து வருவதினால் மாலைப்போதில் காணப்படுகின்ற செக்கர்வானம்போன்ற தன்னுடைய கடைவாயைத் திறந்துகொண்டு, தன்னொருகா லிழந்தமையால் மற்றொருகாலினால் நடக்கத்திறமில்லாமற் குந்திக்குந்தி, பூமிகுழிபடும்படியாகவும் - கடல்நீர் கொதித்துக் கொப்புளித்துத் தத்தளித்துக் கலங்கி வழியும்படியாகவும் - அதிகவேகமாயோடி, வானம்பாடிப் பறவையைப்போலவும் - பந்தைப்போலவும் - விசைகொண்டு, பூமியிலிருந்தெழும்பி ஆகாசமார்க்கமாகத் தாவிக்குதித்துநின்றான்.

கவி.

மாறுகாலின்றி வானுறநிமிர்ந்துமா ளெவெலாம்வளைத்தேந்திச்
சூறைமாருத மாமெனச்சுழித்துமேற் றொடர்கின்றதொழிலானை
ஏறுசேவக னெரிமுகப்பழியா விருநிலம்பொறைநீங்க
வேறுகாலையுந் துணித்தனனறத்தொடு வேதங்கள்கூத்தாட.

இவ்வண்ணம் கும்பகருணன் அடியெடுத்து வைப்பதற்குமாறுகாலின்றி ஒற்றைக்காலினால் ஆகாயபரியந்தம் தாவிக்குதித்துப் பக்கத்திலுள்ள மரங்கள் - மலைகள் - மண்டபங்கள் — மதில்கள் - மாடமாளிகைகள் — கூடகோபுரங்கள் - அட்டாலைமண்டபங்கள் ஆகிய இவைகளையெல்லாம் தனது ஒரு காலினாற் பேர்த்து வளைத்தெடுத்து இடசாரிவலசாரி வலசாரி இடசாரியாகச் சுற்றிக்கொண்டுசூறாவளியென்னும் காற்றைப்போலக்கறகறவென்று சுழற்றியெறிந்து கட்டுக்கடங்காத மதயானையைப்போலக்கண்களில் தீப்பறக்கத்தக்கதாக ஆக்கிரமித்துக்கொண்டு வானரப்படைகளின்மேல்தாவிவந்தான். அப்போததைக்கண்ட எம்பெருமானாகிய உத்தண்டசண்டப்பிரசண்டபிரபலகோதண்டதீக்ஷாகுருவான ரகுநந்தனர் தனக்கினியளாகிய பூமிப்பிராட்டியினது தலைச்சுமையாகியபெரியபாரமானது நீங்கிப்போகவும், வேதங்களளவில்லாத சந்தோஷத்தினா லானந்தக்கூத் தாடத்தக்கதாகவும், பொன்னுலகவாசிகளென்கின்ற தேவர்களுடைய மனத்துயரம் தொலைந்து போகும்படியாகவும்,

இராக்ஷசர்களென்கின்ற விஷப்பூண்டுகள் வேரற்றுச் சாகத்தக்கதாகவும், அக்கினிமுகாஸ்திரத்தை யெடுத்து அதற்குச் செய்யவேண்டிய மந்திராகுதிகள் யாவும் கிரமப்படி கொடுத்துத் தொடுத்துவிடுத்தார். அப்படிவிடுத்த அக்கினிமுகாஸ்திரமானது அதிவிரைவாகப்போய், அந்தக் கும்பகர்ணனுடைய இடதுகாலையு மறுத்துத்தள்ளியது. இப்படி கும்பகர்ணன் மிகவும் வலம்பெற்று விளங்கிய தனதிரண்டு கால்களுங்கைகளு மறுபட்டும், கறுத்த மேருகிரியையொத்த ஸ்தூலதேகம் இலக்ஷம்பாணங்களாற் சல்லடைக் கண்களாகச் சில்லிசில்லியாகவும் தொளைத்துப் பின்புறம் உருவவும் சற்றும் வியசனமில்லாமலும்-பயப்படாமலும்—திடச்சித்தத்தை யுடையவனாய் மிகுதியாகிய கோபங்கொண்டு சிவந்தகண்களினின்று மக்கினிப்பொறி முன்னிலு மிருமடங்குபெருகிற்று. பூமியேஆகாயமாகவும், இவன்தேகமே மேகமாகவும்,கோபக்கண்களே மின்னலாகவும், கர்ச்சனையேஇடியாகவு மிருந்தது. எழுந்தகோபமோ முன்னிலு மனேகமடங்கு மிகுந்தது.

கவி.

பாதங்கைகளோ டிழந்தனன்படியிடை யிருந்துவான்பகுவாயால்
காதநீளிய மலைகளைக்கடித்திறுத் தெடுத்துவெங்கனல்பொங்கி
மீதுமீதுதன் னகத்தெழுகாற்றினால் விசைகொடுதிசைசெல்ல
ஊதவூதப்பட் டலந்தனவானர முருமின்வீழுயிரென்ன.

இவ்வண்ணம் பதங்களும் கரங்களுமிழந்தவனாகிய கும்பகர்ணன் பூமியிலே உருண்டு தனதுபிளவாகிய வாயினால் சமீபத்தில் காததூரமளவு நீண்டு வளர்ந்த மலைகளைப் பேர்த்தெடுத்துப் பற்களினால் கறகறவெனக் கடித்து, பெருமூச்சாகிய காற்றோடு கண்களிலிருந்து சிதறும் அக்கினிப்பொறிகள் சேர்ந்து வானரக் கூட்டங்களின்மீது அக்கினிமயமாகிய கோடையிடிவிழுவதைப்போற் போய்விழுந்து அநேகரைக் கொன்றான்.

இதல்லாமலு மக்கும்பகர்ணனானவன் மேலுமேலு மதிகரிக்கின்ற பெருங்கோபத்தினால் கண்களென்கிற பொறிகளிலிருந்து அபரிமிதமாகப் பறக்கின்ற தீப்பொறிகளானவை எட்டுத்திக்குகளிலும்போய்ப் பாய்ந்து தீய்க்கும்படியாகப் பார்த்து, எட்டாப்பொருளைத் தூரட்டுக்கோல்கொண்டு எளிதிற் கிரகித்துக் கொள்ளுகிறதுபோல முத்துக்களைச் சொரிகின்ற மூங்கில்கள்வளர்ந் தடர்ந்திருக்கின்ற ஒருபெரியமலையை அதனுச்சியோடு தன்வாயுதட்டினாற்பற்றி வேரைக்களைந்து பறித்தெடுத்து, கழுகுகள், காக்கைகள், பருந்துகள், வட்டமிட்டுப் பறக்கவும், நாய்கள் நரிகள் ஊளையிடவும், பேய்க்கணங்கள் நடிக்கவும், உதிரந்தோய்ந்திருக்கின்ற ரணக்களமெல்லா நிலைகுலையும்படிப் பெரிய பிலத்துவாரம்போன்ற வாயில்வைத்தூதி ஆக்கிரமித் தட்டகாசஞ் செய்தான். அப்போது முன்னம் வேதங்களுக்கு மெட்டப்படாத பரப்பிர்ம ஸ்வரூபத்தை ஆதிமூலமேயென்று ஓதிவணங்கிய யானையினது வேதனையை நீக்கும்படியாகமுதலையைச் சம்ஹரித்த எம்பிரானாகிய ஸ்ரீராமமூர்த்தியானவர், மதுகரங்கள் தேனுண்டு கீதங்களைப்பாடி வாசஞ்செய்யும்படி

முகையவிழ்ந்து மகரந்தம்வீசுகின்ற செந்தாமரை மலர்போன்ற தமது திவ்விய திருக்கண்களால் அவன்செய்யு மட்டகாசங்களை யெல்லாம் பார்த்தார்.

இப்படிப்பார்த்த ஸ்ரீரகுநந்தனர் மிகுந்த ஆச்சரியமுற்று, இந்தக் கும்பகர்ணனானவன் கைகால்முதலானவை அறிபட்டுத் தரையில்வீழ்ந்தும் அதிக ஆங்காரத்தோடு பயமென்பதைக் கடக்கவோட்டி, வீரவைராக்கியத்தைப் பாராட்டி, வானரசைனியங்களைத் திக்குமுக்கிடும்படி வாட்டி, தனக்குண்டான வல்லமையைக்காட்டி நிற்கின்றானே: இவனன்றோ வல்லவன். என்று மூக்கின்மேல் விரலைவைத்துச் சபாசென்று மெச்சினார். அந்தச்சமயத்தில் உலகத்தைச் சூழ்ந்துகொண்டிருந்த விருளும் பெரும்பனிக் கூட்டமும் சூரியகிரணங்களைக்கண்டு நீங்குவதுபோலச் சக்கரவர்த்தித் திருமகனாருடைய கோடிசூரியப் பிரகாசம்பொருந்திய அழகுபெற்ற முகாரவிந்தத்தைக் கண்டகும்பகர்ணனுக்கு நல்லவிவேகம்பிறந்து, கொடியராக்ஷசகுல சம்ஹாரமூர்த்தியும்–கௌசலைகுமாரரும் - மலைகளஞ்சத்தக்கனவாய்ப் பருத்துயர்ந்த திருத்தோள்களை யுடையவருமாகிய புருஷோத்தமனான ஸ்ரீராகவபிரானை நெருங்கிப் பார்த்து, ஐயோ! இந்த உத்தமனுடைய கையிற்பற்றி யிருக்கின்ற வில்லின் வல்லமைக்கு என்னைப்போன்ற சுத்தவீரனே கைகாலறுந்து, சூழ்ந்துவந்த சேனைகளுமிழந்து, வேறொருகதியு மில்லாமற் காற்றிற் பஞ்சுபோலப் பறந்துபோவேனேயானால்; என்தமையனாகிய ராவணன் இந்தச் சுந்தரமூர்த்தியை வெல்லுவானென்று சொல்லவும் படுமோ?

அல்லவென் றொருவேளை அவனுக்குதவியாக ஆயிரமிராவணர்கள்வந்தெதிர்க்கக்கூடுமானா லத்தனை பேர்களுடைய பிராணனையும், அவர்களுக் குதவியாக ராக்ஷசச்சேனைகளெத்தனைவருமோ அத்தனைசேனைகளினுடைய உயிரையும், இவன்கைக்கோதண்டமானது கூற்றுவனுலகத்திற்குடியேற்றி விடாமற் சும்மா விட்டுவிடப் போகின்றதோ? நானதன் பெருமையை என்னென்று சொல்லப்போகின்றேன். அளவில்லாத அகண்ட ஐஸ்வரியத்தைப் பெற்று வாழ்வுற்றிருக்கின்ற இந்தராவணன் காமநோய் தலைக்கொண்டவனாகி, தூண்டாவிளக்கைத் திண்டும்படிவந்த விட்டிற்பூச்சியானது தன்னுடைய பலங்குறைந்து சாவதுபோலச் சீதையென்கிற நெருப்பைக்கொண்டு சிறையிட்டபோதே அவனுடைய வாழ்நாள் குறைபட்டதே: இனி ராமபாணத்திற்குத் தப்பி ஒருக்காலும் பிழைக்கப்போகிறவ னல்லனே: என்றுபற்பலவிதமாகக் கும்பகர்ணன் மனதில்நினைத்து, அதிகதுக்காக்கிரந்தனாய்ப் பரிதபித்தான்.

இப்படிப்பரிதபித்த கும்பகர்ணனானவன் சிந்தூரப்பொடியையும் செம்பஞ்சையும்போன்ற சிவந்த உதிரவாறானது பலதிசைகளிலும்போய் அங்கங்குள்ள மிக்கபலம்பொருந்திய பெரியதேர்களையும் – யானைகளையும் - குதிரைகளையும் - சிங்கங்களையும் - வாரிக்கொண் டோடுகிறதைப் பார்த்து, உடல்வேர்த்து, ஓவென்றார்த்துச் சிந்தங்கலங்கி, பின்னந்தக் கலக்கம் ஒருவிதமாகத் தெளிந்து, சுவாமியினுடைய வல்லமையைக் குறித்து அளவில்லாத சந்

தோஷசாகரத்தில் மூழ்கினவனாகி, தனக்கெதிரே சேவைசாதிக்கின்ற கருங்கடல்வண்ணனும் கிருபாநிதியுமான ஸ்ரீ ரகுநாயகருடைய திருமுகமண்டலத்தைப் பார்த்துச் சிலவார்த்தைகளை வணங்கிச்சொல்லுகின்றான்.

ஸ்ரீராமபிரானைக் கும்பகருணன் விபீஷணரைப் பாதுகாக்கவேண்டுமென்று வேண்டி, தன் சிரசைக் கண்டித்துச் சமுத்திரத்தில் விழும்படியிரத்தல்.

கவி.

புக்கடைந்தபுறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க
மைக்கடங்கார்மதயானை வாள்வேந்தன் வழிவந்தீர்
இக்கடன்களுடையீர்நீ ரெம்வினைதீர்த்தும்முடைய
கைக்கடன்தானுயிர்காக்கக் கடவீரென் கடைக்கூட்டால்.

நீதியால்வந்ததொரு நெடுந்தரும நெறியல்லால்
சாதியால்வந்தசிறு நெறியறியானென்தம்பி
ஆதியாயுனையடைந்தா னரசருருக் கொண்டமைந்த
வேதியாவின்னமுனக் கடைக்கலநான் வேண்டினேன்.

வெல்லுமாநினைக்கின்ற வேலரக்கன் வேரோடும்
கல்லுமாமுயல்கின்றா னிவனெனலுங் கறுவுடையான்
ஒல்லுமாறியலுமே லுடன்பிறப்பின் பயனோரான்
கொல்லுமா லவனிவனைக் குறிகோடி கோடாதாய்.

தம்பியென நினைந்திரங்கித் தவிரானத் தகவில்லான்
நம்பியிவன்றனைக்காணிற் கொல்லுமிறை நல்கானால்
உம்பியைத்தா னுன்னைத்தா னனுமனைத்தா னொருபொழுதும்
எம்பிபிரியலனாக வருளுதியால் வேண்டினேன்.

மூக்கிலாமுகம்வந்து முனிவர்களு மமரர்களும்
நோக்குவார் நோக்காமு னொருகணையா லென்கழுத்தை
நீக்குவாய் நீக்கியபி னெடுந்தலையைக் கருங்கடலில்
போக்குவா யிதுவெனக்கு வேண்டுகின்ற பொருளையா.

ஒருவேடுவனால் வருத்தப்பட்டுத் தன்னை அடைக்கலம்புகுந்த ஒருபுறாவி னிமித்தமாகத் துலையேறினவனும், மேகம்போலு மதநீரைப் பெய்கின்ற யானைச்சேனை யுடையவனுமாகிய வெற்றிபொருந்திய கூரிய வாளாயுதத்தைத் தாங்கிய சிபிச்சக்கரவர்த்தி வமிசத்தில்வந் தவதரித்த இராமலக்ஷ்மணர்களே! அந்தச் சிபிச்சக்கரவர்த்தி செய்ததுபோல நீங்களும் பல அன்பின் கடமைகளைச் செய்யவல்லீர்கள். இனியுங்களுடைய திருக்கைகளாற் செய்ய வேண்டிய கடமையாவது, எங்கள் குலமுழுமையும் உங்கள் பாணத்தால் தொலைத்துவிடுவதே: அப்படி தொலைத்து விடுவீர்களேயானால், எங்களுடைய இருவினைகளையு மொழிந்து நிரதிசயாநந்த பரந்தாமத்தை யடைவோம். நீங்களும் எங்களுயிரை ரட்சிக்குங்கடமை யுடையீராவீர்கள். ஓ வேதமுதல்வனாகவும், க்ஷத்திரியகுலத்தில் வந்தவதரித்த அந்த வேதப்பிரதிபாத்திய வஸ்துவுமாகிய எனதையனே! ஓ கோதண்டக் கையனே! எம்மை ஆண்

டருளுமெய்யனே! என்றம்பி விபீஷணன் சகலாத்மாக்களுக்கும் செய்யவேண்டிய நீதியாயமைந்த வேதமார்க்க தருமத்தை அநுசரித்தவனேயல்லாமல், எங்கள் சாதிநித்தியமாகிய அற்பமார்க்கத்தை அநுசரித்தறியான்.

அவன் வேதமார்க்காநுசாரியாதலால் உமதுபக்கலிலே அடைக்கலம் புகுந்தான். அவ்வடைக்கலமானது யாதொரு பின்னத்தையு மடையாமலிருக்கவேண்டுமென்பதையே இன்னமு நான் வேண்டுவது. மேலும் – எல்லாலோகங்களுக்கு மேலாகிய பரமபதநாட்டிலிருந்து அவ்வழியாத வீட்டைத்தருகின்ற ஓ வைகுந்தா! ஓ முகுந்தா! ஓ கோவிந்தா! தேவரீரை வெல்லவேண்டுமென்று நினைத்து வெறுவாயை மெல்லுகின்றவனும் வேலாயுதத்தைத் தாங்கினவனுமான என் தமயன், இந்தவிபீஷணன் உங்களுடன்சேர்ந்து தங்களை அடியோடு வேரற்றுப் போம்படிச் செய்யக் கருத்துற்றிருக்கின்றானென்கின்ற வெண்ணங்கொண்டு கறுவிக்கொண்டிருக்கின்றான். ஆதலால்- இந்தவுத்தமனான விபீஷணன் மாத்திரம் தனியாயவன்கண்ணிலகப்படுவானேயாகில், சகோதரவாஞ்சையென்பதெள்ளளவுமில்லாமற் கொன்றுவிடுவான். ஓ கிருபாமூர்த்தியாகிய எமதுபெருமானே! அந்தவிபீஷணனை எப்போது மறவாமல் திருவுள்ளத்தில் வைத்துக்காத்தருள வேண்டும்.

இதல்லாமலும் - இந்தராவணாதி ராக்ஷசர்கள் மாயாரூபிகளானதால் எவ்வகைப்பட்ட உருவமெடுத்தேனு மவனைக்கொல்லச் சித்தமாய்க் காத்துக்கொண் டிருப்பார்களென்பது யான்மாத்திரஞ்சொல்லப் பாத்திரனோ? அது தங்கள் திருவுள்ளத்திற்கே விகசிதப்படத் தெரியவரும். ஆகையால்-ஓ சுவாமீ! உம்முடைய திருவடியை நம்பியிருக்கும் தம்பியாகிய இளையபெருமாளையாவது, உம்மையாவது, அல்லது வாயுபுத்திரனாகிய ஆஞ்சநேயனையாவது, என்தம்பியாகிய விபீஷணன் பிரிந்திருக்கவொட்டாமற் பாதுகாக்கவேண்டிய வரமொன்றும்; மூக்கறுப்புண்ட முகமென்று என்னைத் தேவர்களும் ரிஷிகளும்பார்த்து நகைப்பார்களாதலால், அவர்கள்வந்து பாராமுன்னமிப்போதே காலதாமசஞ் செய்யாமல் உம்முடைய திவ்வியாஸ்திரத்தாலே என்கழுத்தைத்துணித்து, தலையைக் கடலிற்கொண்டுபோய் விழச்செய்யவேண்டுமென்கிற வரமொன்றும்; ஆகியவிந்த இரண்டுவரமாத்திரமே அடியேனுக்குக் கொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டான்.

ஸ்ரீராமர் கும்பகருணன் தலையைக்கண்டித்துச் சமுத்திரத்தில் விழச்செய்ய, தூதர்கள் இராவணனிடஞ் சொல்லச் செல்லுதல்.

கவி.

வரங்கொண்டானினிமறுத்தல் வழக்கன்றென்றொருவாளி
உரங்கொண்டதடஞ்சிலையி னுயர்நெடுநாணுட்கொளுவாச்
சிரங்கொண்டான்கொண்டதனைத் திண்காற்றின்கடும்படையால்
அரங்கொண்டகருங்கடலு ளழுவத்துளழுத்தினான்.

அப்போது ஜகத்ரக்ஷகராகிய எம்பெருமான் இவன் வேண்டுதலுக் கிசையவேண்டுமேயன்றி மறுத்தல் தகாதென்றெண்ணி அப்படியே யாம் செய்விப்போமென் றருளியாவரங்கொடுத்து, உடனே தமதுவச்சிரவாகுவலய கடகங்களைத் தரித்திருக்கின்ற அழகிய இரண்டுதோள்களும் பூரிக்கக் கோதண்டத்தைக் கையிலெடுத்து நாட்டி, நாணேறிட்டு, விஷத்தயிலத்திலூட்டிக் காய்ச்சித் துவையலிட்டுச் சாணையிலாட்டிக் கூரிட்டுத் தங்கக்கட்டுகளிட்டு அதிக கூர்மைபெற்றிருக்கின்ற ஒரு திவ்வியாஸ்திரத்தைச் சந்தித்து, சரியானகுறிபார்த்து விடுத்து கும்பகர்ணனுடைய சிரசைத் துணித்தருளி, பிறகு உடனே அதிவேகமுள்ள வாயுவாஸ்திர மொன்றைப்பிரயோகித்து, அத்தலையைக் கடலில்விழும்படிச் செய்தார்.

கவி.

ஆடினார்வானவர்க ளரமகளிரமுதவிசை
பாடினார்மாதவரும்வேதியரும்பயந்தீர்ந்தார்
கூடினார்படைத்தலைவர் கொற்றவனைக்குடர்கலங்கி
ஓடினாரடலரக்க ரிராவணனுக்குணர்த்துவார்.

அதைக்கண்ட தேவர்களும் - இரிஷிகளும் - வேதமார்க்க நிஷ்டாநுபவர்களும் - தேவஸ்திரீகளும் - தாங்கள்நெடுநாளாகக் கொண்டிருந்த துன்ப நீங்கி, அமிர்தத்திற் கொப்பான அளவில்லாத தேவகானங்களைப்பாடி ஆனந்தக் கூத்தாடினார்கள். அன்றியும் - முன்னம் கும்பகர்ணனுக்குப் பயந்து தோற்றோடிப்போன வானரவீரர்களெல்லா மறுபடியும் ஸ்ரீராமரிடத்தில்வந்து சேர்ந்தார்கள். இஃதிப்படியிருக்க - அந்தக்கும்பகர்ணன் மடிந்துவிழுந்ததைக் கண்ட ராட்சசவீரர்க ளெல்லாம் தங்கள் குடல்குழம்பி உம்முடைய தம்பியாகிய அதிகபராக்கிரமசாலியான கும்பகர்ணமஹாராஜன் ஸ்ரீராமபாணத்தால் மடிந்தானென்று இராவணனுக்குச் சொல்லப்போனார்கள்.

கும்பகருணன் வதைப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பதினாறவது,

மாயாஜனகப் படலம்.

இப்படலத்தில் கும்பகர்ணன் யுத்தகளத்தில் ஸ்ரீராமனுடனேபோர் விளைத்திருக்கையில் நகரத்திலிருந்த இராவணன் மருத்தனை மாயாஜனகனைப்போல் ரூபமாக்கிக்கொண்டுவர மகோதரனைவிடுத்துத்தான் சீதையிருக்குமிடஞ்சென்று தன்குறைகூறியிரக்க, அச்சீதை யவனைத் தன்னெதிரிலிருந்த ஓர் துரும்பாகமதித்திகழ, அதற்கவன் ஜனகனாகிய உன்தந்தை முதலிய பந்துக்களிதோ கணப்போதில்வந்து மடியப் போகின்றதைப் பாரென்று பயமுறுத்த, அக்கால் மகோதரன் பிடித்து

இராவணன்மாயாஜனகனையுண்டாக்கிக்கொண்டுவந்து சீதையை பயமுறுத்தல்.
No. 53.



இலட்சுமணர்அங்கதனையூர்ந்துபோய்வாயுதேவனுதவியால்அதிகாயனைவதைத்தல்.



வந்த மாயாஜனகனைக் கண்டு சீதை பிரலாபிக்க, அப்போதிராவண னினியேனு மென்கருத்துக் கிணங்குவையே லெனது சாம்பிராச்சிய மனைத்து மிச்சனகனுக் களிப்பேனென்று கூறிவேண்ட, அதற்குச் சீதை இனியாவனவற்றைக்கூறி அவனைக்கடிய, பின்னரவன் மாயாஜனகனைக்கொண்டு சீதைக்குச் சிலவார்த்தைகூறவு மவனச்சனகனைச் சந்தேகித்துச் சினக்க, அச்சமையத்தி லிராவணன் கும்பகருணனுடையமரணத்தைத் தூதுவராலறிந்து பிரலாபித்து அப்பாற்செல்ல, இப்பால் சீதைக்குத் திரிசடை மாயாஜனகன் வரலாறுரைக்க, அவள்மகிழ்ந்திருந்தமை சொல்லப்படுகின்றது.

இராவணன் மகோதரனோடு மந்திராலோசனை செய்து மருத்துவனை மாயா ஜனகனாக்கிக்கொண்டு வரும்படி செய்தல்.

கவி.

அவ்வழிக்கருணன்செய்த பேரொழிலாண்மையெல்லாம்
செவ்வழியுணர்வுதோன்றச் செப்பினஞ்சிறுமைதீரா
வெவ்வழிமாயையொன்று வேறிருந்தெண்ணிவேட்கை
இவ்வழியிலங்கைவேந்த னியற்றியதியம்பலுற்றாம்.

கும்பகருணனானவன் யுத்தகளத்தில் ஸ்ரீராமனுதியரோடு செய்த யுத்தத்தின் பெருக்கை யிதுவரையிற் கூறினோம். இனிக்கொடுமையினின்றும் சற்றேனு நீங்காத வஞ்சகநிறைந்த மாயையொன்றை இலங்காபுரி நாயகனாகிய இராவணன் மகோதரனோடு தனிமையாக யோசனைசெய்து செய்த காரியத்தைச் சொல்லுவோம்; இங்கே கும்பகர்ணனை ஸ்ரீராமனுதியரோடு போர்விளைக்கவிடுத்த இராவணனானவன்-அங்கே தனது மந்திரிகளில் தன்குடிக்கொரு கேடனாகவிருக்கின்ற மகோதர னென்பவனுடைய முகத்தைப்பார்த்து உடலம்வேர்த்து, ஐயா எனது மனதுக்கிசைந்த மந்திரியாகிய மகோதரா! நான் சீதையைக் கூடிக்குலாவி என்மனக்குறையைத் தீர்த்துக்கொள்ளத்தக்க நல்லவுபாயம் இன்னதென் றொன்றைநாடி அன்புநீடிப்பாடி, எனதுயிரை நிலைநிறுத்திக் காப்பாற்றக்கடவாய். என்று பரிதாபத்துடன் கேட்கவே அதற்கு மகோதரனிசைந்து, சுவாமீ ராவணேஸ்வரா!! உமது புஜங்களிருபதும் பூரித்துமருவும்படி பக்குவமானமாயமொன் றின்றைக்கே நானுண்டுபண்ணி, அந்தச்சீதையை உமது பட்சத்திலதானே யாகும்படிச் செய்விக்கின்றேன். அதெப்படி யென்றால், மருத்துவனென்பவனை உருத்தெரியாமல் அந்தச் சீதைக்குத் தகப்பனான ஜனகராஜனைப்போ லுருவைமாற்றிக் கட்டிப் பிடித்துக்கொண்டுவந்து அவள்முன்னே விடுவோமாகில், அப்போதே அவள்கண்டுபயந்து திடுக்கிட்டு, வலியத்தானே வந்து அணைவாள். ஆகையால் - அதுவே தகுந்த உபாயமாகும். இந்த உபாயத்தா லுமதுகோரிக்கையை நிறைவேற்றுகிறேனென்று சொல்லினன்.

இராவணன் சீதாபிராட்டியாரிடஞ் சென்று குறையிரத்தல்.

கவி.

எனவெறுரைத்தலோடு மெழுந்துமார்பிறுகப்புல்லி
அனையவன்றன்னைக்கொண்டாங் கறுகுதியன்பவென்றுப்

புன்னைமலர்ச்சரளச்சோலை நோக்கினனெழுந்துபோனான்
வினைகளைக்கர்பின்வென்ற விளக்கினைவெருவல்காண்பான்.

இப்படி மகோதரன் சொல்லியதைக் காமநோயால் மனவருத்தப் பட்டுக்கொண் டிருக்கின்ற இராவணன்கேட்டுத் திடீரென் றெழுந்திருந்து, அவன் மார்பிறுகத்தழுவி, என்னருமைத்தோழனே! உன்னுடையகருத்தின்படியாகவே அதிகதீவிரத்தில் நிறைவேற்றுக. என்றவனுக்குச் சொல்லி உத்தரவுகொடுத் தனுப்பிவிட்டு, பாபிஷ்டர்களான ராக்ஷசர்களென்கின்ற விருட்கூட்டத்தை நாசப்படுத்தும் தூண்டா விளக்கையொத்துப் பிரகாசிக்கின்ற சீதாபிராட்டி மகோதரனுடைய மாயவஞ்சனைகளுக்குப் பயப்படுகின்றாளோ? இல்லையோ? அதைக்காணுவோமென்று உத்தேசித்து, பலராகங்களைப் பாடத்தக்கவண்டினங்கள் மொய்த்து வாசனைவீசுகின்ற புஷ்பங்களால்நிறைந்த அசோகவனத்தை நோக்கிச் சென்று, நித்தியானந்தத்தைத் தருகின்ற ராகத்தையொத்த சொற்களையுடைய ஸ்ரீகளுக்குள்ள சுந்தரமான அவயவங்களையெல்லாம் ஒவ்வொன்றாகக் கூட்டியமைத்து அளவிடுதற் கருமையான நற்குணங்களையெல்லாம் ஒன்றுசேர்த்துச் செய்த சித்திரப்பிரதிமைபோ லெழுந்தருளி யிருக்கின்ற சீதாபிராட்டியைக் கண்ணாரக்கண்டான்.

மின்னலைப்போன்ற தனது பத்துக்கிரீடங்களும் தகதகாயமாய்ப் பிரகாசிக்கவும் இருள்போன்ற இருபதுதோள்களினு மணிந்திருக்கின்ற ஸ்வர்னமயமாகிய மாலைகளானவை நீலமலையிலிருந்து அருவியாறுகள் விழுகிறதுபோலத் தொங்கியசையவும், இளமை தங்கிய மூன்றாம்பிறைச் சந்திரனைப் பழிக்கத்தக்க நெற்றியோடு சேறகண்டையையும் - வாளையும் - வில்லையும் - வெற்றிகொண்ட கண்களையுமுடைய தேவமாதர்கள் கொங்கையாகிய மலையைச்சுமந்து இடையானது வருத்தமுற முன்னும்பின்னு மணியணியாகச் சூழ்ந்து ஒரு விளக்கானது மற்றொருவிளக்கைத் தாங்கிவருகிறதுபோலக் கைகளில் விளக்கைப் பிடித்துக்கொண்டு வரவும், கட்டியக்காரர்கள் இரண்டு பக்கங்களினும் எச்சரிக்கைப்பராக்கென்று இடிமுழக்கம் போலச் சொல்லிக்கொண்டு வரவும், மதத்துக்களித்த யானையும் வெட்கப்பட வெகு விநோதவாடம்பரத்துடனே நடந்து; அங்கே சீதாபிராட்டியாருக் கெதிரிற் போட்டிருந்த ஓர் பொற்சிம்மாசனத்தின்பேரிற் சந்திர வட்டக்குடை கவியவும் — தேவர்களைச் சிறையிலிட்ட வெற்றிபொருந்திய தோள்கள் பூரிக்கவும் - பாதங்களில் வீரகண்டாமணி யசையவும் - இருமருங்கினு மரம்பாஸ்திரீகள் சாமரைவீசவும் - உடைவாளைத் தாங்கிய ஒருராஜ சிம்ஹம்போல உட்கார்ந்தான்.

கவி.

என்றுதானடியனேனுக் கிரங்குவதிந்துவென்பான்
என்றுதானிரவியோடும் வேற்றுமைதெரிவதென்பால்
என்றுதானனங்கவாளிக் கிலக்கலாதிருக்கலாவ
தென்றுதானுற்றதெல்லா மியம்புவானமைத்துக்கொண்டான்.

இந்தப்படி வீற்றிருந்த ராவணன் சீதாபிராட்டியாரைப் பார்த்து, ஓ பெண்களுக்கெல்லாம் நாயகமே! உனக்கடிமையா யிருக்கின்ற வென்மீ தென்றைக்கு நீ இரக்கம்வைத்துக் காக்கப்போகின்றாய்? துன்பப் படுத்துகின்ற கொடியோனான சந்திரன் என்றைக்குச் சூரியனைப்போல வேறுபாடில்லாமற் காணப்படுவான்? நெஞ்சிற் சற்றுமிரக்கமற்ற பஞ்சபாணனாகிய மன்மதனென்னும் பாதகன் தன்னைக் கெஞ்சக்கெஞ்ச என்மீது வஞ்சனையால் விடுகின்ற பாணங்களுக்கு நான் என்றைக்கு லக்ஷியமில்லாமலிருக்கப் போகின்றேன்? அல்லாமலும் - வஞ்சனையுள்ளவனாகிய நான் ஓர்பெண் வடிவுற்றிருக்கின்ற நஞ்சாகிய உன்னை என்னுட்கொண்டிருப்பதால், அதை மாற்றிக்கொள்ளும்படியான உன்போகாமிர்தத்தை விரும்பி நாளுக்குநாள் மெலிந்து வாடுகின்றேன், இப்படிவாடுகின்ற என்னுடைய சிந்தையைவிட்டு நீங்காமல் எப்போதும் குடியாயிருக்கின்ற உன்னையான் நினையாமல், ஆவியைவிட்டு நீங்குவதற்கும் பயந்திருக்கின்றேன்.

ஓ தேவாமிர்தம்போன்ற சீதா! நானுனக் கடைக்கலமல்லவோ? என்னை மன்மதனுக்குத் தோற்கும்படிச் செய்து, சந்திரனைக்கொண்டு என் மனத்தைச்சுட்டு, புலிபோற் சீறிவருகின்ற தென்றற்காற்றினால் மோதும்படிச் செய்து, வச்சிரமலைக்குச் சமானமான இருபது தோள்களையு மெலியவிட்டாயே: அல்லாமலும் - தேவர்கள் என்னிடத்திற் கொண்டிருந்த பயங்கரத்தையும் கெடுத்தாயே: ஆகிலு மிந்தமட்டோ டென்னை விட்டுவிடுவையோ? அல்லது இன்னுமென்ன துன்பங்களை விளைத்துப் பின்பு உன்மனவயிரந்தீரப் போகின்றனையோ? அதை அறிகிலேன். ஓ என்னுடைய மனோரம்மியமான சீதா! உலகங்களிலிருக்கின்ற பெண்களெல்லா நீயேயாகவும், அவர்களுடைய எல்லாப்பெயர்களு முன்பெயராகவும், என்னுடைய பார்வையெல்லா நின்மேலாகவும், பார்த்தவிடங்களிலெல்லா மன்மதனாகவு மிருக்கச்செய்து; அவனுடைய பஞ்சபாணங்களால் என்மேனிமுழுவதுந்தொளைபடும்படிக்குப் பார்ப்பது உனக் கழகல்லவே: அப்படியானால் என்னாற் சகிக்கக்கூடுமோ?

கைலாசபதியாகிய உமாதேவி மணாளன் முதல்மனிதர்களிறுதியாகக் கண்டு அச்சங்கொள்ளும்படி சுவர்க்கமாதி மூன்றுலகங்களையு மிரக்ஷிக்கின்ற வெற்றி மிகுந்த எனது சௌரியப்பிரதாபத்தைத் தாழ்மையாக இதுவரையில் யாதாமொருவரும் பேசினரைக் காணோம். ஒருவற்காவது யான் தோற்றவனல்லேன். அப்படிப்பட்ட வீரப்பிரதாபசாலியாகிய யான் ஒருபெண்மேல் வைத்த ஆசை நோயானது என்னை வருத்திக்கொன்றதென்றால், எனது ஆண்டன்மைக்குக்குற்றம் வாராதோ? தருமவழியாகச்சம்பாதித்த அறிவுடையோர்களின் செல்வம் போன்ற மாதே! பாற்கடலில் பிறந்த தேவாமிர்தம்போலும் தீஞ்சுவை வாய்ந்த மழலை மொழியையுடைய சீதா! உம்மீது காமவெறிகொண்ட என்னை நான் உலகிற் பிறந்தும் பிறவாதவனைப் போலாக்க வந்திருக்கிறீர். நான் பிறந்தும் உம்மையணையாத ஜென்மம் ஒருஜென்ம

மாகுமோ? உன்னுடைய அழகுக் கிடுபடத்தக்க என்னுடைய மானமானது என்னைக்கொல்ல நானுன்னை மறந்ததுபோலப் போம், இறந்த உயிரானது பிழைக்கத்தக்க சஞ்சீவி மருந்தான உன்னால் எப்போது மிறந்தும் பிழைத்தும் வருகின்ற என்னுடைய அருமையை இங்கே அறியத்தக்கவர்களாரிருக்கின்றார்கள்?

முற்காலத்தில் தன்மீது மோகங்கொண்டுவந்த சுவர்க்கலோகத் தரசனாகிய இந்திரனைக்கூடிச் சுகித்திருந்த கௌதமரிஷியினுடைய பத்தினியான அகலிகை யென்பவளுக்கு,இந்த உலகத்திற்கீர்த்தியில்லாமற் போய்விட்டதா? இல்லையே: நான் உன்மேற் கொண்ட காமநோய்க்கு அழகிய குமுதமலரை யொத்த உனது செவந்த வாயமிர்தமே மருந்தல்லாமல்! அதை நீக்கிக்கொள்ளுவதற்கான வேறொருமந்திரமும் - மருந்தும் - இயாண்டுமில்லை. என்றவ்விராவணன் பற்பல விதமாக முறையமிட்டுக்கொண் டெழுந்துநின்று, நீலமலைகளுங்கண்டு நாணும்படியான தன்னுடைய இருபது கைகளையும் தலையின்பேரிற் கூப்பிக்கொண்டு, ஒரு சூரியனைப் பத்தாகப் பங்கிட்டது போலப் பிரகாசிக்கின்ற பத்துக்கிரீடங்களும் பூமியிற்படிய லோகமாதாவாகிய - சீதாபிராட்டியினுடைய தாமரை மலர்போன்ற இரண்டு பாதங்களிலும்போய் விழுந்தான்.

இராவணனைச் சீதாபிராட்டி ஓர் துரும்பாக மதித்துக்கூறல்.

கவி.

வல்லியமருங்குகண்ட மானெனமறுக்கமுற்று
மெல்லியலாக்கைமுற்று நடுங்கினள்விம்மினாள்
கொல்லியவரினுமுள்ள கூறுவன்றெரியவென்னாப்
புல்லியகிடந்ததொன்றை நோக்கினாள்புகல்வதானாள்.

இவ்வண்ணம் இராவணப்பதகன்சொல்லிய வார்த்தைகளைக் கேட்டும் திருவடியில் தீர்க்கதெண்டன் சமர்ப்பித்ததைக்கண்டும், சீதாபிராட்டியானவள் தனக்கு யாதொருதுணையும் இல்லாமையாலே புலியைப் பக்கத்திற்கண்டமானைப்போல அச்சமுற்றவளாய், மெல்லியகுணம்வாய்ந்த இளந்தளிர்போன்ற தனது திருமேனிமுழுதும் நடுங்கினவளாய் அழுது விம்மிவிம்மி இராவணனாகிய சண்டாளப் பாவியினது முகத்தைப் பார்த்தாலும் பாவமுண்டாகுமென்று அவன் முகத்தைப்பாராது தனதெதிரிற் கிடந்த ஓர் சிறுதுரும்பைப்பார்த்து, அடாபாதகா! நீஇப்பொழுது என்னைக் கொல்லும்படியாக வந்திருந்த போதிலும்உனக்கு அறிவுண்டாகும்படியாகச் சிலவார்த்தை கூறுவேன் கேளென்று சொல்லுகிறாள். ஓ இராவணத்துரும்பே! கற்பென்னும் பதிவிரதத்தன்மையைப் பூண்டிருக்கின்றவர்களை இகழ்ந்துபேசுகிறதினாற் பழிபாவமுண்டாகுமென்பதைச் சற்றும்யோசித்தாயில்லை. உன்னுடைய துண்டரீகமுள்ள நெஞ்சைப்பிளந்து வஞ்சகரான உன்பந்துக்களுடனே நாசமாய்ப்போகும்படிச் செய்யாவிட்டால், என்னுடைய கற்பினிலைமைக்கும் - தருமதேவதையின் வல்லமைக்கும் - என்னபெருமை யுண்டாகப்போகின்றது?

அடா நீசத்துரும்பே! தேவதா நிர்ணயப்படிக் கிவ்வுலகில் வாழ்வுற்றிருக்கின்ற மாமிச தேகங்கள்தோறும் உயிரும், அவ்வுயிருக்கேற்ற நல்லுணர்வுமுண்டா யிருக்கின்றனவன்றோ? அதை நீ எவ்வளவு மறியாய்போலும். குகைபோன்ற உன்னுடைய பிளந்தவாயினால் தகாதவார்த்தைகளைப் பேசக்கேட்டும் உன்னை நாசப்படுத்தாமற் சும்மா யிருப்பதானால், நீதா னென்ன சொல்லமாட்டாய்? என்னசெய்ய மாட்டாய்? மேலும் — சுவர்க்கலோகத்தரசனாகிய இந்திரனையும், சத்தியலோக வாசியாகிய பிர்மதேவனையும், திரிபுராந்தகனாகிய சாம்பசிவமூர்த்தியையும், ஸ்ரீவைகுண்டபதியாகிய விஷ்ணுமூர்த்தியையும், அவரவர்களுக்குள்ள வல்லபங்களோடு நீ பார்த்திருந்தும், நீ அவர்களோடு சண்டைசெய்தேன் செயம்பெற்றேனென்று மனப்பால் குடித்துச் சொல்லுகின்ற உன்னுடைய கட்டுக்கதைகளைச் சுட்டுவிடக்கடவாய்.

அடா அசேதனத்துரும்பே! இரணக்களத்திற்குப்போய் அங்குண்டான வீரர்களையெல்லாம் பார்த்து வந்தேனென்றும் சொல்லுகின்றாய்? அஃதுண்மையா யிருக்குமாகில் அவ்விடத்திருக்கின்ற என்னுயிர்போன்ற நாயகராகிய சக்கரவர்த்தித் திருக்குமாரர் தம்முடைய கோதண்டத்தை நாணேறிட்டு உன்தலையைத் துணித்துவிடாம லிருப்பரோ? ஆனால் - அவருக்கு நீ பயந்தோடி வந்துவிட்டாய் போலக் காணப்படுகின்றது. அன்றியும் இதுவரையில் யான் ஆகாரமென்பதில்லாமலும் — அபிமானத்தினால் உயிரைமாய்த்துக்கொள்ளாமலும் - நாணமுற்று, மிகுந்த வருத்தப்பட்டுக்கொண்டு உன் கண்ணெதிரே வாழ்வுற்றிருக்கிறேனென்று நீ நினைக்கப் போகின்றாய்? அப்படியல்ல. நல்லொழுக்கத்தையே ஆபரணமாகத் தரித்திருக்கின்ற நீலமலைபோன்ற அழகிய திருமேனியையுடைய புண்ணியவந்தரான எனது நாயகரைக் காண்பதற்கும், போர்க்களத்தில் என்னுடைய கொழுந்தரான இளைய பெருமாளானவர் பின்னே காவலாகநிற்கத் தம்மோ டெதிர்த்துவருகின்ற உன் பத்துத்தலைகளையும் பந்துக்களையும் சின்னபின்னப்படுத்திச் சிதறிப்போக வடித்து வெற்றிபெற்றபிறகு என்பர்த்தாவான அக்கர்த்தாவின் திருமுகதரிசனம் செய்வதற்குமென்றே நீ நிச்சயமாக நம்பக்கடவாய்.

ஐயோ இராவணத்துரும்பே! எனக்கும் என்னுடைய நாயகராகிய அந்த லோகாராட்டினுக்கும் உடலிரண்டேயல்லாமல், உயிரொன்றென்று கருதி நீயுன் மந்தபுத்தியை நீக்கி யுணர்ந்துகொள்ளுவாய். செந்தாமரைமலர்போன்ற கண்களையுடைய ஒரு நீலமலையானது வில்லைப் பிடித்துக்கொண்டு பார்த்தபேர்களுடைய மனத்தை வெட்கமடையும்படியாகச் செய்வதுபோல விளங்கும் பெருமைபெற்ற புருஷோத்தமர் என்னாயக ரல்லவோ? அதை நீ யோசித்துப்பார். நீயிங்கேவீணாய் உன்வாய்க்குவந்தபடி வதறிக்கொண்டிராமல் அப்பாற் போய்விடு. என்றுகூறித் தான் சற்றப்பாற்றிரும்பினள்.

இராவணன் சீதாபிராட்டிக்கு ஓர்கணப்போதில் நின்பந்துக்களிங்ஙனம்வந்து மாய்வதைப்பாரென்று பயமுறுத்தல்.

கவி.

என்றனளென்றலோடு மெரியுறுகண்ணன் றன்னைக்
கொன்றனமானந்தோன்றக் கூற்றனசீற்றங்கொண்டான்
வென்றெனையிராமனுன்னை மீட்டபினவனோடாவி
ஒன்றெனவாழ்திபோலென் றிடியுருமொக்கநக்கான்.

இவ்விதமாகச் சீதாபிராட்டியானவள் கடுமையான வார்த்தைகளால் இடித்திடித்துக்கூற அதைக்கேட்ட பாதகனாகிய இலங்கேசன் இருபதுகண்களிலும் அக்கினிப்பொறி பறக்கும்படியாகக் கோபித்தவனாகி தன்னைக்கொன்றதைப்போல் மானமிருந்து ஓ பெண்கள் நாயகமே! நீ புகழ்ந்துபேசுகின்ற அந்த ராமன் என்னைக்கொன்றுவிட்டு உன்னை மீட்டுக்கொண்டு போனபின்பு, அவனுடனுயிரொத்து வாழலாமென்று நினைத்திருக்கின்ற உன்னெண்ணத்தை நான் பார்க்கிறேன். இஃதிருக்கட்டும். ஓ மின்னற்கொடிபோன்ற இடையையுடையசீதா! இந்த உலகத்தில் உன்னினத்தார் முதல் மற்றெவர்களாகட்டும், தேவர்களாகட்டும், புனத்துழாய் மாலையைத்தரித்த அந்த விஷ்ணுவென்று நீ சொல்லுகின்ற இராமனாகட்டும் என்னோடெதிர்ப்பார்களேயானால்; அவர்களையெல்லாம் வேரோடு அதஞ்செய்து போடேனோ? நீ இதை நாளையே காணப்போகின்றாய்.

முன்னமொரு குரங்குவந்து ஏதோ புளுகிப்போன அந்தச்சொல்லைநம்பி அவர்களெல்லாரும் சமுத்திரத்தை யணையிட்டுக்கட்டி இலங்கையைக்கிட்டிவளைத்துக் கொண்டார்களென்று நீ மனமகிழ்ந்திருப்பாயே யானால், நானுமென்னைச் சேர்ந்தவர்களும் என்ன மூடர்களோ? அந்தநினைவைமறந்துவிடு. மேலும் - என்முன்னாகத் தோன்றுகின்ற எப்படிப்பட்ட வஸ்துக்களானாலும், அவைகளெல்லாம் விளக்கின்முன் விட்டிற்பூச்சிபோ லழிந்துபோய்விடுமல்லவா? அதிகபராக்கிரமசாலிகளான வெற்றிபெற்ற சிலராக்ஷசவீரர்களை அயோத்திக்கும் மிதிலாபுரிக்கும்போய் அங்குண்டான உன்பந்துக்களையும் - மாமிமார்களையும் - உன்னைப்பெற்ற அப்பன் ஜனகராஜனையும் - கைப்பிடியாகப்பிடித்துக்கொண்டு வரும்படியாகவும், ஒருவேளை அவர்க ளெதிர்ப்பார்களாகில் அப்படிப் பட்டவர்களுடைய தலைகளை யறுத்துப் பச்சையுதிர மொழுகும்படியாய் என்னுடைய கண்முன்பாகக் கொண்டுவரும்படியாகவும் ஆக்கியாபித் தனுப்பியிருக்கின்றேன். இதோ வெகுசீக்கிரமாக வரப்போகிறார்கள், அதற்காகவே நானிங்கு காத்திருக்கின்றேன். என்று சொல்லினான்.

இப்படிச்சொல்லி இராவணன்பயமுறுத்த சீதாபிராட்டியார் நடுங்கி, இஃதென்ன காலக்கேடா யிருக்கின்றதே: நெருப்புக்குச்சமமான வென்னை மாயவஞ்சனைசெய்து கொண்டுவந்து வைத்திருக்கின்ற சண்டாளர்களுக்கு எந்தக்காரியந்தா னருமையாகப்போகிறது? என்று பற்பல ஆலோசனைகளைச்

செய்து பெருமூச்சுவிட்டு, ஐயோ! இங்கே நானிப்படியாகவென்று என்தலையிலெழுதிய கபடனாகிய பிர்மதேவர், அங்கே என்மாமியார் முதலானவர்களுக்கு மிப்படியே யெழுதியிருக்கமாட்டாரோ? ஆகையால் அவரு நம்மிடத்தில் நல்லகிருபையுடையவராகத்தா னிருக்கின்றார். ஒருகாலத்திலும் தருமம் பொய்த்துப்போகாதென்று உலகத்தார் சொல்லுவார்களே: அந்தவார்த்தை பொய்த்துப்போகும்படிக்குத் தருமமும் பொய்த்துப்போயிற்றோ? என்று தனதிரண்டு கண்களிலும் நீர் தாரைதாரையாய்ப் பெருகும்படியாகப் புலம்பிக்கொண்டிருந்தாள்.

மகோதரன் பிடித்துவந்த மாயாஜனகனைச் சீதாபிராட்டியார் தன்தந்தையென வெண்ணிப் பிரலாபித்தல்.

கவி.

ஆயதுகாலத்தாங்கோ ரரக்கனைச்சனகனாக்கி
வாய்திறந்தரற்றப்பற்றி மகோதரன்கடிதின்வந்தான்
சாயெரியனையாமுன்னர்க் காட்டினன்வணங்கக்கண்டாள்
தாயெரிவீழக்கண்ட பார்ப்பெனத்தரிக்கிலாதாள்.

அப்போது மகோதரன் மருத்துவனென்னுமோர் இராட்சதனைஜனகராஜனைப்போல ரூபமெடுப்பித்துக் கையிற்கயிறிட்டுக்கட்டிக்கொண்டு பெருங்கூச்சலிட்டு அதிவேகமாயோடிவந்து, காலகோடி விஷத்திற் கொப்பானவனும் தீக்கண்ணனுமான இராவணனுக்குமுன்னேவிடுத்தான். அதைச்சீதாபிராட்டி பார்த்து, இதை மாய்கையென் றறியாதவளாய் நெருப்பில்விழுந்த தாய்ப்பறவையைக்கண்ட குஞ்சுபோலச் சகியாதவளாகி, உடல்பதைத்துக்கைகளைநெரித்துமுகத்திலிரண்டுகைகளாலு மோதியறைந்துகொண்டு, நெய்சொரிந்தநெருப்பை மிதிக்கக்கூடாமைபோலத் தனது தாமரைமலர்போன்ற பாதங்களைப் பூமியிற்படியவையாமற் பதைபதைத்து, உள்ளும்புறம்பும் கொதித்துக் கீழேவிழுந்து புலம்பத் தொடங்கினாள்.

ஓ தெய்வமே! தெய்வமே! சத்தியமென்பது மறைந்துவிட்டதோ? என்னுடைய பதிவிரதாதருமமானது இந்த உலகத்தைச் சுட்டுவிடுமே: இந்தவஞ்சகர்களாகிய ராக்ஷசர்களுக்குத்தானோ ஆண்மை யிருக்கத்தக்கது? மற்றவர்களுக்குக் கிடைக்கத்தக்கதல்லவோ? அஃதப்படியானால் நான் பிழைத்திருப்பேனென்று நம்பத்தக்கதோ? என்று புலம்பிய எம்மாதாவாகிய சீதாபிராட்டியார் அங்கே வந்திருக்கின்ற மாயாஜனகனைப் பார்த்து, ஐயா என்பிதாவே! பெரிய தவத்தைச்செய்து என்னைப்பெற்று அருமைபாராட்டிவளர்த்த உமக்கு இப்போதென்பொருட்டுவந்த பொல்லாங்கு மிதுவோ? ஓ தர்ம்மமே ஸ்வரூபமாகப்பெற்று எல்லா வுயிர்களுக்கும் தாயுந்தந்தையுமாகிவந்த மகாதவசிரேஷ்டரே! ஓ! வந்தவிருந்தினர்களுக்கு முன்னே யமுதளித்துப் பின்னே பெண்டு பிள்ளைகளோ டுண்டுகளிக்கும்பாக்கியவானே! ஓ அளவற்ற நல்ல தவங்களைச்செய்த என் அப்பனே! உமக்குச் சத்துருக்களாகவிருந்து

எல்லாரையும் வென்று வெற்றிபெற்றிருக்கின்ற நீர், இந்த அற்பர்களாகிய ராக்ஷசர்கள்கையி லகப்பட்டுக்கொண்டது பூர்வம்செய்த மாதவசேஷமோ?

ஓ மதுரமாகிய தேனொழுகுகின்ற வாடாத வெற்றிமாலையைத் தரித்த உத்தமனான என்னப்பனே! இவ்வுலகத்தில் உம்மைப்போல யாகஞ்செய்த பேர்களு மிருக்கின்றார்களோ? மகா பாபாத்துமாக்களாகிய இந்த ராக்ஷசர்களால் வச்சிராயுதத்திற் கொப்பாகிய உம்முடைய தோள்கள் கட்டப்பட்டதென்னவநியாயம்? இதை யிந்தப் பாபிஷ்டிக் கண்ணிற் பார்த்திருந்தும் ஆவியைப்போக்காம லிருப்ப தென்னஜென்னமாகும்? என்று பற்பலவாகச் சொல்லி, உயிரில்லாத சித்திரப்பிரதிமை போல மூர்ச்சையடைந்து, ஆகாசத்திற் றோன்றுகின்ற மின்னற்கொடியானது பூமியில்வந்து படிந்ததுபோலச் சொர்னமயமாகிய திருமேனியானது மண்படியும்படியாகப் புரண்டு, செவந்த அதரத்தையுடைய அச்சீதாபிராட்டியார் பின்னும்வாய்திறந்து பெண்ணன்றிற் பக்ஷியைப்போல் அழுதுபுலம்புவதாயினாள்.

கவி.

பிறையுடைநுதலார்க்கேற்ற பிறந்தவிக்கடன்கள்செய்ய
இறையுடையிருக்கைமூது றென்றும்வந்திறுத்தலாதீர்
சிறையிடைக்காணநீருஞ் சிறையொடுஞ்சேர்ந்தவாறே
மறையுடைவரம்புநீங்கா வழிவந்தமன்னர்நீரே.

வன்சிறைப்பறவையூரும் வானவன்வரம்பின்மாயப்
புன்சிறைப்பிறவிதீர்ப்பா னுளனெனப்புலவர்நின்றார்
என்சிறைதீர்க்குவாரைக் காண்கிலேனொன்னின்வந்த
உன்சிறைவிடுக்கவல்லா ரியாருளருலகத்துள்ளார்.

பண்பெற்றாரோடுகூடாப் பகைபெற்றாய்பழிபாய
விண்பெற்றாயெனினுநன்றால் வேந்தராயுயர்ந்த மேலோர்
எண்பெற்றாய்பழியும்பெற்றா யிதுநின்னாற்பெற்றதன்றால்
பெண்பெற்றாயதனாற்பெற்றா யாரின்னபேறுபெற்றார்.

சுற்றுண்டபாசநாஞ்சிற் சுமையொடுஞ்சூடுண்டாற்ற
வெற்றுண்டுமென்றுநீங்கா விழுசிறகுண்டையென்னப்
பற்றுண்டநாளேமாளாப் பாவியேனும்மையெல்லாம்
விற்றுண்டேனெனக்குமீளும் விதியுண்டேநரகில்வீழ்ந்தால்.

இருந்துதான்பகையையெல்லா மீறுகண்டளவிலின்பம்
பொருந்தினேனல்லேனெங்கோன் றிருவடிபுணர்ந்தேனல்லேன்
வருந்தினேனெநாளும்மை வழியொடுமுடித்தேன்வாயால்
அருந்தினேனயோத்திவந்த வரசர்தம்புகழையம்மா.

சொல்லெனக்கணவற்காங்கோர் நெடும்பகைகொடுத்தேனெந்தை
கல்லெனத்திரண்டதோளைப் பாசத்தாற்கட்டக்கண்டேன்
இல்லெனச்சிறந்துநின்ற விரண்டுக்குமின்னல்சூழ்ந்தேன்
அல்லெனேவெளியனோயா னரியற்றேனிறக்கலாதேன்.

இணையறுவேள்விமேனு ளியற்றியீன்றெடுத்தவெந்தை
புணையுறுதிரடோளார்த்துப் பூழியிற்புரளக்கண்டேன்
மணவினைமுடித்தென்கையை மந்திரமரபிற்றொட்ட
கணவனையிலையேன்காண்ட லின்றியேகழிகின்றேனே.

அன்னையீரையன்மீரே யாருயிர்த்தங்கைமீரே
யென்னையீன்றெடுத்தவெந்தைக் செய்தியதியாதுமொன்றும்
முன்னநீருணர்ந்திலீரோ வுமக்கும்வேறுற்றதுண்டோ
துன்னருநெறியின்வந்து தொடர்ந்திலீர்துஞ்சினீரோ.

மேருவிற்கும்பர்சேர்ந்து விண்ணினைமீக்கொண்டாலும்
நீருடைக்காவன்மூதூ ரெய்தலாநெறியிற்றன்றால்
போரிடைக்கண்டாரேனும் வஞ்சனைபுணர்த்தாரேனும்
ஆருமக்கறியற்பாலா ரனுமனுமுளனேநும்பால்.

சரதமற்றிவனைத்தந்தார் தவம்புரியாற்றல்சான்ற
பரதனைக் கொணர்தற்கேனு மையுறவில்லைபன்னாள்
வரதனும்வாழ்ந்தானல்லன் றம்பியுமனையன்வாழா
விரதமுற்றறத்தினின்றூற் கிவைகொலாம் விளைவமேன்மேல்.

அடைத்ததுகடலைமேல்வந் தடைந்ததுமதிலையாவி
துடைத்ததுபகையைச்சேனை யெனச்சிலர்சொல்லச்சொல்லப்
படைத்ததோருவகைதன்னை வேறொருவினையம்பண்ணி
உடைத்ததுவிதியேயாகில் தன்வலியுரைப்பார்யாரே.

ஓ வேதவரம்பைக் கடவாத வமிசத்தவர்களுடைய சந்ததியிற்பிறந்த ஐயா! என்னைப் பாணிக்கிரகணஞ்செய்த என் பிராணநாதராகிய ஸ்ரீராமமூர்த்தியினுடைய அயோத்தியாபுரிக்கு என்றும்வந்தவரல்லாத நீர், அடியேனைச் சிறையிருப்பிற் காணவேண்டுமென்று நீரும் சிறைபட்டுவந்தீரோ? ஓ மஹாராஜனே! மகாபலமுள்ள இறகையுடைய கருடபகவானையே வாஹனமாக ஆரோகணித்து வருகின்ற சாக்ஷாது ஸ்ரீயப்பதியானவர், தம்மை ஆசிரயித்தவர்களுக்குமாயக்கட்டாகிய இந்த அற்பப்பிறவியை நீக்குவாரென்று புத்திமான்களெல்லா நிச்சயித்திருக்கின்றார்கள். இப்படிக்கிருக்க-என்சிறையைநீக்கும்படியான ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரராகிய அவ்விஷ்ணுவை இன்னும்வரக் காணவில்லை. என்னிமித்தமாகக்கட்டுப்பட்ட உம்முடைய சிறையைநீக்கத்தக்கவர்கள் இந்த லோகத்தில் யாரிருக்கின்றார்கள்? இந்தக் குணஹீனர்களிடத்தில் அதர்மவழியான பகையைப் பெற்றீரே: ஐயா! எதிர்த்துநின்று அம்புகள்பட்டுமாண்டு வீரசுவர்க்கம் பெற்றீரேயானாலும் பெருமை உண்டே: உலகத்திலுள்ள வீரத்தாலுயர்ந்த க்ஷத்திரியர்களெல்லாம் பரிகாசிக்கும்படியானீரே: எந்நாளு நிலைநிற்கும்படியான பாவத்திற்கு முள்ளாய்விட்டீரே; இந்த நஷ்டம் உம்மாலுண்டாயிற்றென்று நினைக்கலாமென்றா லும்மாலல்ல. பாபியாகிய என்னைப் பெண்ணாய்ப்பெற்றீரே அதனாலுண்டாயிற்று.

ஓ என தருமைப்பிதாவே! இப்படிப்பட்ட பேறுபெற்றவர்கள் நம்மையல்லாமல் யாரிருக்கின்றார்கள்? நானிறந்துபோகாம லுயிருடனிருந்து சத்து

ருக்களையெல்லா நாசமடையக் கண்டபோதிலும், நானொருசுகமும் கண்டவ ளல்ல. உங்களெல்லாரையும் வருத்தப்படுத்தி நாசமாக்கிவிட்டு, அயோத்தி யினிராஜவமிசங்களுடைய கீர்த்தியையெல்லாம் பிடாரியைப் போல உண்டு விட்டு, என்னுயகரைக் கொல்லுங்களென்று இந்த லங்கையிலொரு கொடிய பகையைச் சம்பாதித்துவைத்து, என்பிதாவாகிய உம்முடைய மலைபோலத் திரண்ட தோள்களையும் பாசத்தாற் கட்டியிறுக்கவும் கண்டேன். இப்படி புகுந்த வீட்டிற்கும் - பிறந்தவீட்டிற்கும் - அழியாததுக்கத்தைக் கொண்டு வந்துவிட்டவள் நானல்லவோ? நானென்ன சாமானியமானவளோ? கொஞ் சமாவது என்னிடத்திற் கிருபையென்பதுண்டோ? இனிநா னுயிருடனிரு க்கலாமோ ? ஆனபடியால் நான் செத்தபோதிலு மென்னசுகம்? அஃதொ ன்றுமில்லை. அளவில்லாத உயர்ந்த யாகங்களை முன்செய்து என்னை வேண்டு மென்று பெற்றுக்காப்பாற்றிக் கரையேற்றின என்பிதாவாகிய உம்மை, கை விலங்கிட்டுப் பற்றியிழுத்து உம்முடைய மேனி புழுதியிற் புரளுகிறதைக் கண்டேன்.

அல்லாமலும் — என்னை மணம்புரிந்து, செய்யும் சடங்குகளைச் சிறப்ப றமுடித்து, மந்திரவிதிப்படி பாணிக்கிரஹணம்பண்ணின பிராணநாயகருக்கு மிந்தத்துன்பத்தைச் சொல்லாமலே முடிந்துபோகின்றேனே? அல்லதுசொல் லி இடிந்துபோகின்றேனே? ஒன்றுந்தெரியாது. ஐயோ என்தாயாரே! ஓ என க்குப் பெரியோர்களா யிருக்கின்ற தமக்கைமார்களே! ஓ என்னருமையான உயிர்போன்ற தங்கைமார்களே! என்னைப் பெற்றெடுத்துவளர்த்த இத்தகப் பனுருக்கு இந்தத் துன்பம்வந்ததை நீங்கள் கொஞ்சமாவது ஆலோசித்துண ர்ந்தீர்களில்லையே: அல்லது உங்களுக்கு மேதேனும் துன்பம்வந்து விட்ட தோ? அல்லது கூடவே நீங்களும்வந்து வழியி லிறந்துபோனீர்களோ? இந்த ச்சண்டாளர் மேருமலைக்கு முயர்வாகப்போய் ஆகாசமார்க்கமாய் வந்தபோ திலும், அகழாற்சூழப்பட்ட காவலையுடைய மிதிலாபுரியினுள்ளே நுழைகிற தற்கு முடியாதே: அப்படிக்கில்லாமல் ஒருவேளை போர்க்களத்திற் பிடித்து க்கொண்டு வந்துவிட்டாலும், வேறேயொரு மோசஞ்செய்து என்னைக் கொ ண்டுவந்தபடி கொண்டுவந்து விட்டாலும், நமது பிதாவாகிய ஜனகமகாராஜனை இராக்ஷசர்கள் பிடித்து இலங்கைக்குக் கொண்டுபோய் விட்டார்களென்று தெரிவிக்க அனுமானிருக்கின்றானோ? இல்லையே: உங்களுக்குயாரறிவிக்கப்போ கின்றார்கள்?

ஐயோ ! சத்தியசந்தரான இந்த ஜனகமகாராஜனைக்கொண்டுவந்த சண் டாளர்கள் தர்மத்தைச் செய்து வல்லமைபெற்றிருக்கின்ற என்மைத்துனரா கிய பரதமகாராஜனையும்,அவருக்கிளைய சத்ருக்ன மஹாராஜனையும் கொண் டுவருகிறதற்குச் சந்தேகமில்லை. அவர்கள்பிறந்து ஒருசுகமுங்காணாத குழந் தைகள். ஆ தெய்வமே ! விரதங்களை யனுஷ்டித்துத் தர்ம்மமார்க்கத்தில் நிலை நிற்கின்றபேர்களுக் குண்டாகிறநன்மை இதுதானோ? இதோ வானரசைனி

யங்கள் சமுத்திரத்தை அணையிட்டதென்றும், அச்சமுத்திரத்தைத்தாண்டிவந்து இலங்கைக்கோட்டையின் மதிலை முற்றுகைபோட்டுக் கொண்டதென்றும் சத்துருக்களைச் சம்ஹரித்ததென்றும் சிலர் வந்து சொன்னவார்த்தைகளைக் கேட்டுக்கேட்டு அடைந்திருந்த சந்தோஷத்தை; வேறொருமோசமான செய்கைவந்து சிதைத்துவிட்டதே: ஐயோ என் ஊழ்வினையே! என்று பெருமூச்சுவிட்டு மனந்திகைத்து மூர்ச்சையடைந்து, மறுபடியு மூர்ச்சைதெளிந்து சீதாபிராட்டியா ரழுதுகொண்டிருக்கின்றார்.

இராவணன் ஜனகனுக்கும் சீதைக்கும் சில ஆதரணைகூறிவேண்ட, அதற்கவ ளினியாவனகூறிக் கடிதல்.

கவி.

எங்குவாளினையபன்ன விமையவரேற்றமெல்லாம்
வாங்குவாளரக்கனுற்ற மனமகிழ்ந்தினிதினோக்கித்
தாங்குவாளல்லளென்ப மிவளையுந்தாங்கித்தானும்
ஓங்குவானென்னவுன்னி யினையனவுரைக்கலுற்றான்.

அப்போது தேவர்களுடைய வல்லமைகளை யெல்லாம் பயத்தா லொளிக்கச்செய்யத்தக்க வெற்றிவாளைக் கையிற்பிடித்துக்கொண் டிருக்கின்ற துராத்துமாவாகிய இராவணன் அதிக மனமகிழ்வுடனே சீதாபிராட்டியாரைக் குளிர்ந்தமுகமாய்ப் பார்த்து, இவளதிக துக்கத்தைச் சகிக்கும்படியான கடின இருதய முடையவளல்லள். இவளை யினிச் சமாதானப்படுத்தி நமதெண்ணப்படிச் சந்தோஷிக்கலாமென்று தன்துன்மதியா லெண்ணிச் சில வார்த்தைகள் சொல்லுகிறான். ஓ சீதா! உன்னைச் சேரவேண்டுமென்கின்ற ஆசையால் நினைக்கிறதற்கும் சகிக்கமுடியாத இந்தப் பெரிய துன்பத்தைச் செய்துவிட்டேன். இந்தத் தப்பிதத்தைப் பொறுத்துக்கொள். இனி மிதிலாபுரியிலுள்ளவர்களை வேரறக் கொல்லுகிறதில்லை. இவனிறந்தாலு மிவனுக்கு மறுபடியும் பிராணனுண்டாகச் செய்கிறேன். ஓ அம்ஸபட்சிக்குச் சமமாய் நடக்கின்ற சீதையே! தேவலோகமானாலும், இந்தப் பதினாலுலோகமானாலும், இந்தப் பெரிய லோகமூன்றிலுள்ள என்னரசாக்ஷியே யானாலும்; இந்த வெற்றிமாலையை யணிந்த உன்பிதாவாகிய ஜனகராஜனுக்கே சொந்தமாக்கி விடுகிறேன். இப்போதென்னாற் சகிக்கக்கூடாத காமநோயைமாத்திர நீக்கிவிடுவாயேயானால், உன்னையே தெய்வமாகவணங்கி உன்னுத்தரவின்படி நடக்கிறேன்.

அப்படியல்லாமல் இந்த லங்காபட்டணத்தை இவனுக்குக் கொடுத்துவிட்டு என்னை வேறேயோரிடத்தி லிருக்கும்படி நியமித்தாலும், அப்படியே இருக்கின்றேன். எல்லா ஐஸ்வரியங்களையும் கொடுக்கும்படியான சங்கநிதி முதலிய மூன்று நிதிகளையும் கொடுத்துவிடுகிறேன். குபேரனிடத்தில் நான்ஜெயித்துப் பறித்துக்கொண்ட புஷ்பகவிமானத்தையும் பொதுவாயேறும்படிக்குக்கொடுக்கிறேன். தேவர்களையெல்லாம் வெற்றிகொண்ட இந்தவாளாயுதத்தைவேண்டுமென்று கேட்டாலும் கொஞ்சமாவது தடையின்றிக் கொடுத்து

விடுகிறேன். இந்திரன் சூடிக்கொண்டிருக்கிற தேவசாம்பிராச்சிய கிரீடத்தை அந்தத்தேவர்களெல்லாம்இவனை வணங்கும்படியாக மந்திரவிதிப்படியே இவனுக்குச்சூட்டி, தேவஸ்திரீகளெல்லா மிவனுக்கு அடிமைவேலை செய்யும்படியாக நானும் இவனிட்ட ஊழியம்கேட்டு நிற்கின்றேன். உன்னுடைய அழகியபவளம்போன்ற திருவாயாற் கிருபையாக ஒருசிறுவார்த்தை சொன்னாலும் போதும்.

இவ்வுலகமெல்லாவற்றையு மீன்ற என்பாட்டனாகிய பிரம்மதேவன் எனக்குக் கொடுத்தவரங்களை யெல்லாம் உன்தந்தைக்குக் கொடுத்து, யானே அடிமையாளரைப்போல் குற்றேவல்செய்து நிற்பேன். தேவாமிர்தத்தோடு பிறந்த இலக்ஷுமியே நீயல்லாமல், அவள்வேறேயில்லை. அப்படிவேறாயிருந்தால் அவளும் உனக்கு அடிமைசெய்வாள், தேவர்களும் - முனிவர்களும் - மற்றபெரியோர்கள் யாவரும் தாமேயோடிவந்து, உன்னுடைய பிதாவாகிய இவனுடைய பாதத்தில்விழுந்து சொன்ன ஏவலைச் செய்வார்கள். சித்திரப்பாவையொத்த நீ இவனுக்குப் பெண்ணாய்ப் பிறந்ததினால், இத்தனைநாள் ஒரு பிரயோசனத்தையும் காணவில்லை. இன்னமும் அப்படியிராமல் இப்போதே எல்லா நன்மையும் இவனடையப் போகின்றான். நீயிந்த மூன்றுலோகச்செல்வத்தையும் உன்னியமனப்படி யாவருக்குவேண்டுமோ அவர்களுக்குக் கொடுப்பாய். எனதுநெஞ்சிலுள்ள இச்சையைமாத்திரம் நிறைவேற்றவேண்டும். என்றிராவணன் சொல்லக்கேட்ட சீதாபிராட்டி எதிரேகிடக்கிற அந்தத்துரும்பைப் பார்த்து மீட்டும் சொல்லுகிறாள்.

கவி.

இத்திருப்பெறுகிற்பானு மிந்திரனிலங்கைநுங்கள்
பொய்த்திருப்பெறுகிற்பானும் வீடணன்புலவர்கோமான்
கய்த்திருச்சரங்களுன்றன் மார்பிடைக்கலக்கற்பால
மைத்திருநிறத்தான்றுளென் றலைமிசைவைக்கற்பால.

அடாதுன்மார்க்கத் துரும்பே ! இவ்வைஸ் வரியங்களையெல்லாம் பெறப்போகிறவன் இந்திரனாகும். உங்கள் பொய்வாழ்வான இந்தலங்காராச்சிய முழுவதையும் விபீஷணாழ்வான் பெறப்போகிறான். தேவதேவராகிய ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரருடைய திருக்கரத்திலுள்ள திவ்வியாஸ்திரங்கள் உன்மார்பைச் சின்னாபின்னப்படப் பிளக்கப்போகின்றன. அந்தநீலமேகஸ்யாமளரூபரான ஸ்வாமியினுடைய திருவடிகளைத் தரிக்கிறதற்கு என்தலை உரிமையாயிருக்கின்றது. உன்னைப்பார்த்துச் சிரித்துக்கொண்டே சக்கரவர்த்தித்திருக்குமாரருடைய நாம முத்திரித்திருக்கின்ற பாணங்கள் உன்மார்பிற்புகுந்து, சல்லடைக் கண்களாய்த் தொளைக்கப்போகின்றன. உனக்குத் தகுந்த புத்திசொல்லப் போகின்றவைகள், ஸ்வாமியின் கோதண்டத்திற் பூட்டிய நாணிலிருந்து மலைகளெல்லா நடுங்கிப் பொடிப்பொடியா யுதிரும்படிப் புறப்படப்போகின்ற மகாதிவ்வியசரவருஷங்களே; இப்போதியாவருஞ்சொல்லிக் கொள்ளுகிற வார்த்தையு மொன்றிருக்கின்றதைச்சொல்லுகிறேன் கேள்.

அற்பத் துரும்பே! காக்கைகள் தங்கள் மூக்குகளால் உன் கண்ணைக்குத்திக்கிளறும்படியாக, செந்தாமரைமலர்போன்ற கண்களையுடைய சுவாமியின் கோதண்டத்திலிருந்து அளவற்ற பாணங்கள் புறப்பட்டு வரப்போகின்றன. பிறகு உனதழகுள்ள மாலைகளணிந்திருக்கின்ற மார்பை எக்களித்துக்கொண்டு புலால்நாறுகின்ற வாயையுடைய பிசாசங்களெல்லாம் தழுவப்போகின்றன. எங்கள் சுவாமியினுடைய நாமமுத்திரித்திருக்கிற பலம்பொருந்திய திவ்வியாஸ்திரங்களினாலே கோரதந்தங்களையுடைய பெரியவாய்களோடும் கூடிய உன்தலைகள் சின்னபின்னப்பட்டுச் சிதறி நீயுமாண்டுபோனாயென்கின்ற சமாச்சாரத்தைத் திவ்விய துளசிமணி மாலிகாதரனான எனதருமைப்புத்திரன் ஆஞ்சநேயன்வந்து சொல்லப்போகிறான். அதைத்தான் நான்விரும்பிக்கேட்கப்போகின்றேன் அக்காலதைக் கேள்விப்பட்ட பேர்களுக்கெல்லாம் சந்தோஷகரமாயிருக்கப்போகிறது. இரணக்களத்தில் உன்மகனான இந்திரஜித்துவினுயிரை எங்களிளைய பெருமாள் பிரயோகிக்கப்போகிற பாணங்கள் உண்டுவிட, அவனுடலை நாய்கள்தின்ன, ஐயோ! என் மகனிறந்தானே: என்மகனிறந்தானே: என்று நீபுலம்பிஓவென்றலறி யழப்போகிறாய். அப்படி நீயழுகிறதை எல்லாருங்கேட்டுச் சந்தோஷப்பட்டுச் சொல்லுகிற வார்த்தையையு நீ கேட்கப்போகிறாய். அடா ஈனஜன்மத்துரும்பே! இப்போது நான் சொன்ன வனைத்தும் தப்பாது முடியுமென நிதானி; என்றுசொல்லி முடித்தனள்.

இராவணன் மாயாஜனகனாற் சீதைக்கறிவுறுத்த, அவளவனைச் சந்தேகித்துச் சினத்தல்.

கவி.

வெய்யவனனையகேளா வெயிலுகவிழித்துவீரக்
கய்பலபிசைந்துபேழ்வா யெயிறுபுக்கழுந்தக்கவ்வித்
தய்யன்மேலோடலோடு மகோதரன்றடுத்தானீன்ற
மொய்கழற்றாதைவேண்ட விசையுநீமுனியலென்றான்.

அன்னவன்றகைப்பமீண்டா னாசனத்திருக்கவாவி
பொன்றினனாகுமின்னத் தரையிடைக்கிடந்தபொய்யோன்
இன்றிதுநேராயென்னி னென்னையென்குலத்தினோடும்
கொன்றனையாதியென்னா வினையனகூறலுற்றான்.

இவ்வண்ணம் சீதாபிராட்டியார் சொல்லக்கேட்ட மஹாதுஷ்டனான இராவணன் அக்கினிப்பொறிபறக்கக் கண்களைவிழித்து, பலம்பொருந்திய தன் கைகளைமுறுக்கி, இதழிற்பல்லழுந்தக்கடித்துச் சீதையின்மேற்பாயும்படியோடினான். அப்போது துஷ்டமந்திரியாகிய மகோதரன் இராவணனைத் தடுத்து, ஐயா பிரதாபலங்கேஸ்வரா! இம்மாதர்சிரோமணி தன்தகப்பன் வேண்டியபுத்திசொன்னா லிசைவாள். நீர்கோபிக்கவேண்டாம்: என்று சமாதானப்படுத்தவும், இராவணன் திரும்பிவந்து அங்கிருந்த ஆசனத்தின்மீது உட்கார்ந்தான். பின்பு உயிர்போனவனைப்போலத் தரையில்விழுந்துகிடந்த மாயாஜனகன்

சீதாபிராட்டியைப் பார்த்து, அம்மா சீதா! நீ இந்த ராவணனிஷ்டப்படி இசையாவிட்டால், என்னையும் - என்குலத்தையும்—நீயே கொன்றுவிட்டவளாகிறாய். வெண்டாமரை செந்தாமரை புஷ்பங்களின்மேலிருக்கின்ற சரஸ்வதியு மிலக்குமியும் தம்மையடையும்படி விரும்பிமுயல்கின்ற எல்லாருக்கு முரியவர்களாக விருக்கிற படியினாலே யல்லவா? அவர்களுக்குப் பொதுமகளிரென்று பெயருண்டா யிருக்கின்றது. இஃதுனக்குத் தெரியாதா?

ஓ பாவியேனுக் கென்றுதித்தபெண்ணே! உன்னிமித்தமாக என்னுயிர் போவது உனக்கு நல்லதோ? சிறையிலகப்பட்டு வருத்தப்படுகிற நீ, தேவர்களுக்கெல்லா மிராஜனான இந்தராவணனுக்குப் பட்டத்துத்தேவியாயிருப்பது உனக்குப்பொல்லாததோ? என்தாயே! என்னை யென்பந்துக்களுடனேயிருந்த ஐஸ்வரியத்தை அனுபவிக்கும்படி உயிர்வாழச்செய்து, உன்னையுமிந்தக் கொடியசிறையிலிருந்தும் விடுவித்து இன்பமடையச் செய்யக்கடவாயென்றுகூறி அச்சீதாபிராட்டியாருடைய திருவடிகளுக் கருகேவிழ்ந்து, இடியுமுதிரும்படி ஓவென்றலறினான்.

கவி.

அவ்வுரைகேட்டநங்கை செவிகளையமையப்பொத்தி
வெவ்வுயிர்த்தாவிதள்ளி வீங்கினள்வெகுளிபொங்கி
இவ்வுரையெந்தைகூறு னின்னுயிர்வாழ்க்கைபேணிச்
செவ்வுரையன்றிதென்னாச் சீறினின்றினையசொன்னாள்.

இவ்வண்ணம் மருத்துவனாகிய மாயாசனகன் சொல்லிய தீமைமொழிகளைக்கேட்ட சீதையானவள் அரிகரி ஸ்ரீராமராமவென்றெண்ணி நான்யாது செய்வேனென மனம்புழுங்கிப் பெருமூச்சுவிட்டு உயிர்சோர்ந்தழுது, மிகுந்தகோபத்துடனே அம்மாயாஜனகனைப் பார்த்து, தர்மநிஷ்டரான என்பிதா நீதியானவார்த்தை சொல்லுவாரேயல்லாமல் உயிரையிச்சித்து இப்படிப்பட்டவார்த்தைகளைச் சொல்லமாட்டாரே: இதுஎன்னவிபரீதம்? என்று பயந்து கிளியைப்போல வாய்குழறிச் சிலமொழிகள் சொல்லுகிறாள்.

ஐயா ஜனகராஜனே! தர்மமழியவும், க்ஷத்திரிய வம்சத்திற்கடுத்த வீரத்தன்மை நாசமாகவும், சத்தியம் சிதையவும், நிந்தையுண்டாகவும், வேதசாஸ்திரநியமம் க்ஷீணித்துப்போகவும், ஆசாரம்பிழைபடவும், தேவர்களாலும் முனிவர்களாலும் புகழும் படியான உனது புகழ்நீங்கவும், இப்படிப்பட்ட துர்வார்த்தைகளைச் சொன்னாய். ஆனதால் நீ என்பிதாவாகிய ஜனகராஜனாவாயோ? இராஜ முறைமைதெரிந்த க்ஷத்திரியர்களாயினோர் தங்கள் வமிசமெல்லாம் அழியநேரிட்டாலும். தங்களுரிமையானவாழ்க்கை க்ஷீணித்துப்போனாலும், நெஞ்சைப்பிளக்கும்படி அக்கினியைக் கக்கிக்கொண்டு வேலாயுதம்வந்து சின்னபின்னப் படுத்தினபோதிலும், பெரியோர்கள்சொன்ன ஆஞ்ஞையின்படி வாழ்வார்களேயல்லாமல் முறைமைகெட்டு அதர்மிகளாய்ப்பிழைக்கிறசண்டாளர்களுக்குட்பட்டு வாழ்வார்களோ? ஐயோ! பாவம்: நீயும்-உன்

பந்துக்களும் இந்தப் பூலோகமும் - அழிந்துபோனாலும், நான்முறைமை கெட்டு உயிர் வாழ்ந் திருப்பனோ?

மேலும் - வச்சிரமலைக்குச் சமமான பலமுள்ள திருத்தோளினிடத்திற் சுதரிசனாழ்வானைத் தாங்கிய ஆயிரந் திருநாமங்களையுடைய சாட்சாது ஸ்ரீயப்பதியாகிய ராகவபிரானுக்கு அநந்யசேஷமா யிருக்கிறநான், என்னுயிரைக்காக்கும்பொருட்டு இந்தநாயை மறந்தாவது கையாலேனுந் தொடுவேனோ? அந்த ஸ்ரீகோதண்டபாணி யல்லாமல் அன்னியபுருஷர்களென் னருகேவந்தால், விளக்கில்விழும் விட்டிற்பூச்சியைப்போல மாண்டுபோகமாட்டார்களோ? இராஜசிம்ஹத்துடன் வாழ்ந்திருக்கின்ற பெண்சிம்ஹம், சலதாரைச்சேற்றைத்தின்று ஜீவிக்கின்ற ஒருசிறுநரிக்குட்டி யோடும் வாழ்ந்துகொண்டிருக்குமோ? இவன் நாயினுங் கடைப்பட்டவனாச்சுதே: நல்லது: நீ எனக்குத்தகப்பனானாய். ஆனபோது வெற்றிமாலையையணிந்த வீரசிகாமணியாகிய எனது ஸ்வாமியினுடைய கோதண்டத்துக்குப் பல்லாண்டுகூறி, அந்தவில்லால் நாமிருவரு மீட்கப்படுவோமானால் மீளுவோம். மீட்கப்படாவிட்டால் பிராணனை விட்டுவிடுவோம். நமக்கென்னகுறை வந்துவிட்டது? அப்படிக்கில்லாமல் தகாதசொல்லைச் சொன்னவளென்று ஒரு நிந்தைவார்த்தையை யேன்தேடிக்கொள்ளவேணும்? என்றுசொல்லினாள்.

இப்படிச் சீதாபிராட்டியார் சொல்லக்கேட்ட ராவணன் - அப்படியா? ஆனதாகட்டும். இனிநடக்கிறபடி நடக்கட்டும். இதோ உன்கண்முன் நிற்கின்றானே, இவனல்லவோ உன்னைப்பெற்ற ஜனகராஜன்? இந்தக்ஷணத்தில் இவனைக்கொன்று உயிர்குடித்து விடுகிறேன்பாரென்று தன் உடைவாளையுருவிக்கொண்டான். அப்போது சீதாபிராட்டியானவள் அந்தத் துரும்பைப்பார்த்து, அடா துரும்பே! நீ என்னையுங் கொல்லப் போகிறதில்லை. அல்லாமலும் இவனையும் கொல்லப்போகிறதில்லை. இப்போது நீயும் சாகப்போகிறதில்லை. இந்த உலகையும் அழிக்கப்போகிறதில்லை. இதெல்லாம் அற்பஜெந்துக்களாகிய உங்களுக்குண்டாகுமா?

நானிந்தத் துன்பத்தைநீங்கி அழியாத கீர்த்தியை அடையப்போகிறேன். நீயோ? என்பிராணநாயகர்விடும் திவ்வியபாணங்களால் உன்பந்து சகிதமாய்க் கொல்லப்படப் போகிறாயென்று சொன்னாள். அப்போது மகோதரன்ராவணனைப் பார்த்து, ஓ தேவைஸ்வரியமுள்ள திரிலோகநாயகனான இராவணேஸ்வரா! இந்தஜனகன்மேலென்னதப்பிதம்? இவனாலானமட்டும் வேண்டினான். இவனைக்கொல்லுகிறது உமக்கொரு லட்சியமேயல்ல. நமக்குப்பகையாய்வந்திருக்கின்ற அந்த ராமலட்சுமணர்களை ஜெயித்துவிடுவோமானால், இந்தச்சீதைக் கப்பாற் போக்கடியெங்கே? இப்போது தகப்பனைக்கொன்றால் அதை நினைத்துக்கொண்டு இவள் எப்போதும் துன்பப்பட்டுக் கொண்டிருப்பா ளல்லவா? என்று தடுத்தான்.

இராவணன் கும்பகருணன் மடிந்ததாக வானரவீரர்முழக்கின பேரோசை கேட்டுச் சந்தேகித்திருக்கும்போது தூதுவர்களோடிவந்து கும்பகருணன் மரணத்தை அறிவிக்க வறிந்து பிரலாபித்தல்.

கவி.

என்றவன்விலக்கமீண்டாண் டிருந்ததோரிறைநியின்கண்
குன்றெனநீண்டகும்ப கருணனையிராமன்கொல்ல
வன்றிறற்குரங்கின்றானை வானுறவார்த்தவோதை
சென்றெனசெவியினூடு தேவர்களார்ப்புஞ்செல்ல.

இவ்விதமான வார்த்தையினால் மகோதரன் தடுக்க இராவணன் கோபந் தீர்ந்தவனாய் அங்கு ஓரிடத்திலிட்ட இரத்தினாசனத்தி லுட்கார்ந்தான். அச்சமயத்தில் மலைபோ லுயர்ந்து வளர்ந்த கும்பகர்ணன் ஸ்ரீராமபாணத்தால் இறந்தானென்று வானரவீரர்கள் கர்ச்சித்துச்சொன்ன சப்தமானது தேவர்களுடைய ஆனந்தகோஷத்துடனே வந்து இராவணன் செவியில் நுழைந்தது. அப்படிவந்து நுழையவே, இராவணன் நம்மோடு வேறுபட்டு தேவலோகத்தாருக்கும் – வானரசேனைகளுக்கும் - பலம் அதிகரிக்கிறதற்குக் காரணம் வேறொன்றுமில்லை. அந்த ரணக்களத்தில் நிற்கின்ற அவ்விரண்டுமனிதர்களுடைய வில்லிற் பிறந்த நாணோசையின் தகுந்த வல்லமையே யென்பது எனக்கு நன்றாய்த் தெரிந்திருக்கின்றது. என்தம்பியாகிய கும்பகர்ணனுக்கு இப்போது தவியில்லாமல் தனித்திருக்கும்படியான சமயநேரிட்டுவிட்டாற்போ லிருக்கின்றதென்று மனதில் துக்கமடைந்தான்.

கவி.

புறந்தருசேனைமுந்நீ ரிருஞ்சிறைபோக்கிப்போதப்
பறந்தனரனையதூதர் செவிமருங்கெய்திப்பையத்
திறந்திறமாகிநின் றகவிப்பெருங்கடலைச்சிந்தி
இறந்தனனும்பியம்பிற் கொன்றனனிராமனென்றார்.

அப்படி துக்கப்பட்டிருக்குஞ் சமயத்தில் யுத்தகளத்தில் இராமசுவாமியினது பாணங்களுக் காற்றாது சமுத்திரங் கரைபுரண்டு போகிறதைப்போல வேர்த்து ஓடுகின்ற சேனைகட்கு எப்படி நாவறண்டு கண்சொருகி மதிமயங்குமோ அதைப் போல சிலதூதர்கள் அதிவிசனமாகச் சோர்ந்து வந்தூ தத்தளித்த நடையை யுடையவர்களாகி இராவணனிருக்கு மசோகவனத்தை யடைந்து இராவணனைக்கண்டு கண்களில் தாரைதாரையாய் நீர்பெருகச் சமீபத்திற்சென்று மெள்ளக்குனிந்து வாயைக் கரங்களினால் மூடிக்கொண்டு அவன் காதினிடத்தில்மாத்திரம் படும்படியாக உம்முடையதம்பிகும்பகர்ணமகாராஜன் வரிசை வரிசையாக வானரசைனியக் கடலையெல்லாம் சிதறடித்துவிட்டபின்பு, அவரை இராமன் தன்னுடைய பாணத்தாற் கொன்றுவிட்டானென்று சொன்னான். அதைக்கேட்ட ராவணனானவன் பரிவேடத்துடனே கூடித் தோன்றுகின்ற சூரியனைப்போல் வெற்றிமாலையைத் தரித்திருக்கின்ற பத்துக் கிரீடங்களும் தரையில் விழுந்தாருளப் பூமியில் வேரூன்றிநின்ற மரா

மரமானது தன்பருத்த பல கிளைகளுடனே வேர்பறிந்து மண்மேல் விழுவது போலத் திடீரென்று வீழ்ந்து, ஒருவரையொருவர் பிரிகிறதென்கிற துன்பத்தைத் தாங்கள் பிறந்தநாள்முதல் இன்றுவரையிலும் ஒருநாளுமடையாமல் உயிரொன்றும் உடலிரண்டுமாய்ப் பிரியாதிருந்தவர்களாதலால் இன்றைக்குத் தன்னிமித்தமாகத் தம்பி இறந்துபோனானென்று அறிவுமயங்கிப் பரவசப்பட்டு, சமஸ்தலோகங்களும் செவிடுபடும்படிப் புலம்பத்தொடங்கினான்.

கவி.

தம்பியோவானவராந் தாமரையின்காடுழக்கும்
தும்பியோநான்முகத்தோன் சேய்மதலைத்தோன்றலோ
நம்பியோவிந்திரனை நாமப்பொறிதுடைத்த
எம்பியோயானுன்னை யிவ்வுரையுங்கேட்பேனோ.

மின்னிலையவேலோனே யானுன்விழிகாண
நின்னிலையூழென்றே னுயிர்பேணிநிற்கின்றேன்
உன்னிலைமையீதாயி னேடைக்களிறுந்திப்
பொன்னுலகமீளப் புகாரோபுரந்தரனார்.

வன்னெஞ்சானீயென்னை நீத்துப்போய்வானடைந்தால்
இன்னஞ்சிலரோ டொருவயிற்றின்யார்பிறப்பார்
மின்னஞ்சுவேலாய் விழியஞ்சிவாழ்கின்றார்
தன்னெஞ்சுதாமே தடவாரோதானவர்கள்.

கல்லன்றோநீராடுங்காலத்துக்காறேய்க்கு
மல்லொன்றுதோளாய் வடமேருமானுடவன்
வில்லொன்றுநின்னை விளிவித்துளதென்னும்
சொல்லன்றோவென்னைச் சுடுகின்றதுதோன்றால்.

மாண்டனவாஞ்சூலமுஞ் சக்கரமும்வச்சிரமும்
தீண்டினவோவொன்றுஞ் செயலாற்றாவாந்தெறித்து
மீண்டனவாமானுடவன் மெல்லம்புமெய்யுருவ
நீண்டனவாமின்னுமுய்ய நின்றாராந்தோணுக்கி.

நோக்கறவுமெம்பிமார் மாளவுநொய்திலங்கை
போக்கறவுமாதுலன்றன் பொன்றவுமென்பின்பிறந்தாள்
மூக்கறவும்வாழ்ந்தே னொருத்திமுலைக்கிடந்த
ஏக்கறவாலின்ன மிரேனேவுனையிழந்தும்.

தன்னைத்தானம்பியைத்தான் றனைத்தலைவனைத்தான்
மன்னைத்தான்மைந்தனைத்தான் மாருதத்தின்காதலைத்தான்
பின்னைக்கரடிக் கிறையைத்தான்பேர்முடித்தாய்
என்னத்தான்சேட்கிலே னென்னுனைவாறிதுதான்.

ஏழைமகளீரடிவருட வீர்ந்தென்றல்
வாழுமணியரங்கிற் பூம்பள்ளிவைகுவாய்
சூழுமலகைத் துணங்கைப்பறைதுவைப்பப்
பூழியணைமேற் றுயின்றனையோபோர்க்களத்தே.

செந்தேன்பருகித் திசைதிசையுநீவாழ
உய்ந்தேனினியின்று நானுமுனக்காவி
தந்தேன்பிழையேன் றனிப்போகத்தாழ்க்கிலேன்
வந்தேன்றொடர மதக்களிறேவந்தேனால்.

ஐயோ தம்பி கும்பகர்ணா! தேவர்களாகிய தாமரைக்காட்டை மிதித்து நசுக்கி அழித்துவிடும்படியான ஓ மதயானையே! ஓ பிரம்மபுதல்வருடைய குமாரனுக்குப் பிள்ளையாகப்பிறந்த புத்திரசிகாமணியே! ஓ அரக்கர்குல புருஷசிரேஷ்டனே! ஓ தேவேந்திரனுடைய பெயரைத்தெரியாமல் மறையவடித்த என் பின் பிறந்தவனே! நானுன் விஷயத்திலிந்தவார்த்தையும் கேட்டுச் சகிப்பேனோ? ஓ இலைவடிவாய் மின்னலைப்போற் பிரகாசிக்கின்ற வேலாயுதத்தை யுடையவனே! நீ இப்போதடைந்த நினது நிலையாகிய மரணத்தை உன் கண்முன்பாக நானடைதல் முறைமையென்றிருந்தேன். அப்படிப்பட்ட நான் இனி உயிர்வைத்துக்கொண் டிருக்கமாட்டேன். உன்னுயுள் நிலை இப்படியாய்விட்டால், தேவேந்திரன் ஐராவதயானையை நடாத்திக்கொண்டு இனித் தன்னுடைய சுவர்க்கலோகத்திற்கு மறுபடியும்போய்ச் சேரமாட்டானோ?

அப்பா தம்பிகும்பகர்ணா! கடின இருதயத்தை யுடையவனாகி என்னை விட்டுவிட்டு நீமாத்திரம்போய் வீரசுவர்க்க மடைந்தாய். இன்னொருதரம் நம்மில் ஒரு தாய்வயிற்றில் யார்பிறக்கப் போகிறார்கள்? ஓ மின்னலுமொளியில் தோற்றுவிடத்தக்க வேலாயுதத்தை யுடையவனே! உன்கண்முன்வரப் பயப்பட்டு உயிர்வாழ்ந்திருந்த தானவர்களெல்லாம் களித்துக்கொண்டு நமது பகைவன் அற்றுவிட்டானென்று மார்பைக்கரங்களினாற்றடவித்தங்களிஷ்டப்படி எல்லா விடங்களையும் கடிதிற்பிடித்துக் கொள்ளமாட்டார்களா? ஓ மல்லயுத்தத்தில் தேர்ந்த தோளையுடையானே! நீ ஸ்நானஞ்செய்யும் காலத்தில் உன் காலைத்தேய்க்குங்கல் மேருமலை யல்லவா? உன்னையொரு மனிதனுடைய வில்லானது கொன்று விட்டதென்னும் இந்த அற்பச்சொல்லல்லவா என்னைச்சுட்டெரிக்கின்றது?

அடாதம்பிகும்பகர்ணா! ஆயுதங்களிலெல்லாம் சிறந்திருக்கின்றவைகளான சிவபிரான்கைச்சூலமும், விஷ்ணுவின் சக்கரமும், இந்திரனுடைய வச்சிராயுதமும், உன்மேல் வந்தகாலத்தில் உன்னைத் தொட்டதுண்டா? ஒன்றும் செய்யமாட்டாமல் ஆகாசத்திலேயே தெறித்து மீண்டுபோய் விட்டனவே: அப்படிக்கிருக்க — ஒரு அற்பமனிதனுடைய மெல்லிய அம்பு உன்தேகத்திலுருவித் தடாரித்துவிட்டதா? தங்கள் தோள்வலியைப் பார்த்துக்கொண்டு அவர்கள் பிழைத்திருக்கிறார்களா? என்தம்பிமார் பார்க்கிறதற்கு மில்லாமல் மாண்டுவிடவும், சுலபத்தில் இந்தலங்கையை அவர்கள் கைப்பற்றிக் கொள்ளவும், என்மாமனாகிய மாரீச னிறந்துபோகவும், என்தங்கையாகிய சூர்ப்பநகை மூக்கிழந்துபோகவும், நான்மாத்திரம் ஒருபெண்ணினுடைய போகத்தை யிச்சித்து அவ்வாசையா லுன்னை யிழந்தும் இன்ன மிருக்கமாட்டுவேனோ?

ஆ ! ஆ ! தம்பிகும்பகர்ணு! அந்த ஸ்ரீராமனையும், அவன் தம்பியாகிய லக்ஷ்மணனையும், அந்தக் குரங்குப்படைக்குத் தலைவனுன நளனையும், அப்படைக்கு ராஜனுன சுக்கிரீவனையும், அவன்மகனையும், வாயுபுத்திரனுன அனுமானையும், இன்னம் கரடிக்கிறைவனுன சாம்புவனையும் கொன்று; அவர்களை வேரற மாய்த்துவிட்டாயென்று நான்கேட்காமல் இப்படியாகக் கேள்விப்பட்டேன். இஃதென்னகாரியமாய் முடிந்தது? அப்பா கும்பகர்ணு! இலங்கைப் பெண்கள் கால்பிடிக்கக் குளிர்ந்த தென்றல்வீசுகின்ற இரத்தினமயமான பள்ளியறையில் நித்திரைசெய்துகொண்டிருப்பாயே இப்போது பேய்களெல்லாம் சூழ்ந்துகொண்டு முழங்கைமடக்கி விலாவிற்புடைத்துக் கூத்தாடுகிற வோசையைக் கேட்டுக்கொண்டு, இரணக்களத்திற் புழுதிமெத்தையின்மீது தூங்குகின்றாயோ?

ஐயோ தம்பீ கும்பகர்ணு! நீ அஷ்டதிக்குகளையும் ஜெயித்துச் செவந்த தேனைக் குடங்குடமாகக் குடித்துக்களித்து வாழ்வுற்றிருக்கின்றதை நான் கேட்டு, இதுவரையிலும் பிழைத்திருந்தேன். இனியின்றைக்கே என்னுயிரை யுனக்குக் கொடுத்து விட்டேன். இனிப் பிழைக்க மாட்டேன். நீ மாத்திரம் தனியாய் மாண்டுபோக நானினி தாமசித்திருக்கமாட்டேன். ஓ ஒப்பற்ற யானைக்குச்சமானமானவனே! இதோ வந்துவிட்டேன்: இதோ வந்துவிட்டேனென் றழுவான். பிரதாபலங்கேஸ்வரனுகிய தசக்கிரீவன் தன்சத்தம் ஆகாசம்போய் முட்டும்படி இவ்விதமாகச்சொல்லிக்கூவி. ஜானகிப் பிராட்டியாரைக் கொண்டுவந்து சிறையிட்ட தனதுதீச்செய்கையினுலே நேரிட்டபோரிற் கும்பகர்ணன்மாள அதிஞற் றுனழப் பட்டவனென்னும் தன்வினைமுதலுடன் இயாவரையு மழுவிப்போனென்று பிறவினைப் பொருளும் பொருந்தத் தனக்கிட்ட இராவண னென்கிற பெயரின் பயனைத் தோற்றுவித்தான். இப்படியிவ னழுவதைக்கேட்ட மாறுபடாத கற்பினையுடைய சீதாபிராட்டி கோவைக் கனிபோன்ற இதழ் துடிக்கவும்-திருமேனியெல்லா மயிர்க்குச்செறியவும்-கயல்மீன்போன்ற திருக்கண்கள் குளிர்ப்படையவும்-தமக்குள்ளே நெஞ்சம்பூரித்து, திருமுலைக்குடம் விம்மி, வாடினதிருமேனி வாட்டநீங்கித் தழைத்து, மனமுவந்து, தன்னைவிட்டுப்போனஉயிர் திரும்பவு மடைந்ததுபோலாகி ஆனந்தித்தனள். அதுபார்த்து அவளுக்குத் தோழியாகப் பக்கத்தில்நிற்கின்ற திரிசடையடைந்த சந்தோஷம் யாவராற்சொல்லி முடியப்போகின்றது? கும்பகர்ணனுடைய மிகவும்பயங்கரமான தோள்களை முன்னொருகாலத்திற் கண்டு பயமடைந்திருந்த சீதாபிராட்டியார் அவனைத் தம்முடையஸ்வாமி ஒருவராலும் தடுக்கமுடியாத பாணத்தாற் கொன்றுவிட, அந்த வார்த்தையைக் காதாரக்கேட்டு அமுதபானம் பண்ணினதுபோல உடல்பூரித்தாள். அப்போது கண்டவர்கள் இவள் முன்னைய சீதாபிராட்டியாரல்ல. வேறொருவராக்கும். என்று நினைக்கும்படி யாயினுள்.

அக்காலிராவணன் அதியுக்கிர கோபங்கொண்டு, இந்த அழியாத உலகத்தில் என் தம்பியின் பிணத்துடனே அந்த இரண்டுமனிதர்களையு மற்ற வானரங்களையுங்கொன்று பிணக்காடாக அழித்துவிட்டு, என்றைக்குமிறவாத மும்மூர்த்திகளையும் அமிர்தபானம்பண்ணி அழியாதிருக்கின்ற தேவர்களையும்பிடித்துக்கொண்டு வந்து சிறையிற்போட்டு விடுகிறேனென்று புறப்பட்டான். இப்படிப்புறப்பட்ட அஷ்டதிக்குகளையும் ஜெயித்தவனுன இராவணன்மந்திரிகள் சமாதானஞ்செய்யக் கொஞ்சங்கோபமாறி, இதோ இந்தக்ஷணமேபோய் அந்த மனிதர்களைக்கொன்று அவர்கள் ரத்தத்தால் என்தம்பிக்குத் திலதர்ப்பணம் செய்கிறேனென்று கண்களில் அக்கினி சொரியும்படிச் சீறிக்கொண்டு சிங்கார வனத்தைவிட்டுப் புறப்பட்டுப் போயினுன்.

பின்பு மகோதரன் இந்தகதியே நமக்குமுண்டாகப்போகிறதற் கையமில்லை. அப்பேர்ப்பட்ட கும்பகர்ணனே பேய்களுழலுகின்ற ரணக்களத்திலே மாண்டுபோனுன். என்றுமெய்பதைத்தவனுய் அங்கிருக்கிற ராக்ஷசர்களுக்குக் கண்சாடைகாட்டி, மாயாசனகனை வேறொருபக்கத்திற் கொண்டுபோய் வையுங்களென்று போக்குக் காட்டிவிட்டுப் போய்விட்டான். அக்கால் கணவனைப்பிரிந்த கவலையால் வண்டுகள்மொய்த்த மலரையணியாத கூந்தலெல்லாம் ஒருசடைபட்டுச் சுமையாகச் சுற்றிவைத்திருக்கிற குழலையுடைய சீதாபிராட்டியா ரிடத்திலுள்ள அன்பினுலே, அவரைத்தேற்றும்பொருட்டு விபீஷணுழ்வான் புத்திரியாகிய திரிசடையென்னும்பாக்கியவதி தேவாமிர்தத்திற் கொப்பாகிய சிலவார்த்தை சொல்லுகின்றுள்.

திரிசடை சீதாபிராட்டியாருக்கு மாயாசனகன் வரலாறுரைத்து மகிழ்வித்தல்.

கவி.

உந்தையென் றுனக்கெதி ருருவமாற்றியே
வந்தவன் மருத்தனென் றுளனெுர்மாயையான்
அந்தமில்கொடுந்தொழி லரக்கனுமெனச்
சிந்தையினுணர்த்தின ளமுதின்செம்மையாள்.

அம்மா சீதாபிராட்டியாரே! உம்முடைய தந்தையென்றுசொல்லி உமக்குமுன்பாக உருவுமாறி வந்தவன் - அளவில்லாத மாயையாற் கொடுந்தொழில் செய்வதே சுபாவமாகவுடைய மருத்தனென்கிற பெயருள்ள ஒருராக்ஷசனுகும். இவனும்முடைய தகப்பனுராகிய ஜனகமஹாராஜ னல்லவென்று சொன்னுள். இந்தவார்த்தையைக்கேட்ட சீதாபிராட்டியானவள்இத்திரிசடையாகியபுண்ணியவதி இதற்குமுன்சொல்லிய வார்த்தைகளைக்கேட்டு அதுநிச்சயமாகி நாள்தோறும் நடந்து கைகண்ட அநுபவமாகிவருகின்றபடியால் இப்போதுசொல்லிய வார்த்தையையும்நம்பி, உண்மையாக இவன் என்தந்தையல்லவென்று சொல்லித் தன்தந்தையின் ஒழுக்கமும் ஞானமும் வீரமும் புகழும் அத்திரிசடைக்குச்சொல்லிக்கொண்டு தன்துயரமொருவாறு நீங்கியிருந்தாள். இவ்விதிப்படியிருக்க இவ்வசோகவனத்தினின்றும் சென்ற தீயவனுகியஇராவணன் இனிச் செய்யும்படியான காரியங்களைச் சொல்லுவோம்.

மாயாஜனகப் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பதினேழாவது,

அதிகாயன் வதைப் படலம்.

இப்படலத்தில் கும்பகர்ணன் மடிந்ததைக்கேட்டேங்கித் தன்படைவீரர்களைச் சினக்கக்கண்ட அதிகாயன தன்வல்லபங்கூறி விடைபெற்று, கும்பன் நிகும்பன் அகம்பன் ஆகிய விவர்களோடு படையெடுத்துச்சென்று போருக்குவரும்படி இலக்ஷுமணர்பால் மயிடனென்பவனைத் தூதுவிடுக்க, அத்தூதின் கருத்தறிந்த ஸ்ரீராமர் இலட்சுமணரைச்செல்ல விடைகொடுத்தபோது விபீஷணரவ்வதிகாயனுடைய வலியையும் வரலாற்றையுங்கூறி, அவராக்ஞைப்படி தான் அத்தம்பியாரோடு துணைபோக. உடனேவானரசேனைக ளிராக்ஷதச்சேனைகளோடு போராடி மெலிவதை இளையபெருமாள்கண்டு தாம்விடுத்தபாணங்கள் எங்கும் பராக்கிரமித்து நிற்க, அக்காலெதிர்த்துவந்த தாருகன்-காலன்-குலிசன்-காலசங்கன்-மாலன்-மருத்தன்-சணிச்சி-என்னு மிராக்கதவீரரெழுவரை இலட்சுமணர் மாய்த்ததுகண்ட அதிகாயனுடைய சேனுவீரர்கள் இரண்டுகோடி யானைப்படைகளோடு வந்தெதிர்க்கவும், அவற்றையெல்லா மிளையவரு மாஞ்சனேயரு மடித்து ஹதமாக்ச, அதுகண்டுவந்த தேவாந்தகனும் திரிசிரனும் அவ்வாஞ்சனேயரோ டெதிர்த்து மடிந்துபோச, அக்கால் மகா உக்கிரத்தோ டாக்கிரமித்துவந்து போர்விளைத்துச் சற்றுமிளையாது பராக்கிரமித்துநிற்கும் அதிகாயனை இலட்சுமணர் அங்கதன் முதுகி லாரோகணித்துப் போராடி வாயுதேவன்கூறிய சூழ்ச்சியால் மடிக்க, அப்போதுவந்த நராந்தகன் - உன்மஸ்தன் - வயமஸ்தன் - கும்பன் . நிகும்பன் - இவ்வைவரு முறையே அங்கதன் - நீலன் - விருஷபன் - சுக்கிரீவன் - அனுமான் - இவ்வைவரால் மடிந்துபோக, அக்காலங்கு மிகுதியா யூறுபட்டிருந்த இராக்கதர் யாவரு மிலங்கைக்கோடி அதிகாயனதியர் வதையை இராவணனுக் கறிவிக்கவு மவன் தன்மகனைப்பற்றி ஒன்றும் தோன்றுதவனாய்க் கிலேசித்ததும் அஃதறிந்த தாயாகிய தானியமாலை பிரலாபித்ததும் சொல்லப்படுகின்றது.

இராவணன் கும்பகர்ணன்மடிவைக்கேட் டேங்கக்கண்ட அதிகாயனனவன் கும்பன் நிகும்பன் அகம்பனாதியரோடுசேன்று இலட்சுமணர்பால் மயிடனைத் தூதுவிடல்.

கவி.

சொழுந்துவிட்டழன்றெரி மடங்கல்கூட்டற
எழுந்தெரிவெருளியா னிருமருங்கினும்
தொழுந்தகையமைச்சரைச் சுளித்துநோக்குறு
மொழிந்தனனிடியொடு முகிலுஞ்சிந்தவே.

இவ்வண்ணம் கும்பகருணனிறந்தானென்று சேதிகேட்ட இராவணன் மனதுகலங்கியழுது தனதிடஞ்சென்று கொழுந்தோங்கி யெரியும்படியாகிய

ஊழித்தீயு நிகரல்லவென்று சொல்லும்படியாகக் குபீர்குபீரென்று கோபாக்கினிப்பொறிகளைக் கண்கள் சிந்தும்படியானவனுய்த் தனதிருபுறத்தும் கைகுவித்து நிற்கின்ற மந்திரிகளாதி படைவீரர்களை முகத்தைச்சுளித்துநோக்கி இடியோடு மேகக்கூட்டங்களுஞ் சிதறிப்போகும்படியாகச் சிலகடுஞ்சொற்களைக்கூறுவதாயினன். ஓவீரர்களே ! நீங்கள் என்னுடைய சேனையையும் ஆயுதங்களையும் உதவியாகக்கொண்டு போகின்றீர்களேயல்லாமல், அந்தக்குரங்குவீரர்கள் சூழும்படியாகவந்த மனிதர்களுடைய வேகமுள்ள வில்வல்லமையை நீக்கிவந்தீர்களில்லை. நீங்களென் னெதிரேமாத்திர நாங்களவர்கள் படையெடுத்துவந்திருக்கின்ற விடத்திற்குப்போய் எல்லாரையும் கொன்றுவிட்டு வந்துவிடுகிறோம். என்று சொல்லுகிறீர்கள். இப்படிப்பட்ட நீங்கள் என்தம்பி கும்பகர்ணனைச் சாகாமல் தடுத்தீர்களா? அன்றி உங்களுயிரை அவனுடனே போக்கிவிட்டீர்களா ? நீங்கள் நல்ல வீரர்களென்று பெயரைமாத்திரம் வைத்திருக்கின்றீர்களேயன்றி, உங்களா லாகுங்காரியம் வேறொன்றுமில்லை.

அன்றியும் — நானிந்த மூன்றுலோகங்களையும் எனதிஷ்டப்படியாண்டுவருவதற்கு உங்களுதவி யொன்றுமில்லை. நீங்களிந்தப் பெரிய ஐஸ்வரியங்களையடைந்திருக்கிறது நானடைந்த வெற்றியினல்தா னல்லவா ? அந்தக் கடனுக்காவது உங்களுயிரை என்பொருட்டுக் கொடுத்துவிட்டீர்களா ? இதைவிட எங்களுக்கு வல்லமையில்லையென்று சொன்னாலும் சொல்லுங்கள். நானேதனித்து யுத்தத்திற்குப்போய் அவர்களைத்தோற்படைந்து போகும்படித்துரத்தி, வெகுகாலமாக யமனுடைய கலப்பையைப்போலச் சத்துருக்களுடைய உயிரைத் தாகசாந்தி பண்ணிக்கொண்டிருக்கின்ற என்னுடைய கூர்மையான வேலாயுதத்தின்முனை அந்த மனிதர்களுடைய முதுகிற்பொத்து உருவும்படிச்செய்து, அவர்களை என்கண்ணுற் பார்க்கிறேன்.

ஆகிலும் இனியுங்களை ஒன்றுகேட்கிறேன். நீங்கள் அந்த மனிதரோடு சண்டைசெய்து வெற்றிபெறுகிறோ மென்பீர்களே யானுற் சண்டைக்குச் செல்லுங்கள். அல்லதுஎங்களுயிரையெல்லாம் இங்கேயே உன்முன்னே கொடுத்து விடுகிறோ மென்பீர்களேயானுலும் அப்படிச் செய்துவிடுங்கள். இவ்விரண்டில் உங்கள் அபிப்பிராய மென்னவென்று வெகுகோபத்துடனே கேட்டான்.

கவி.

நதிகாய்நெடு மானமுநாணுமுரு
மதிகாய்குடை மன்னனைவை துரையா
விதிகாயினும் வீரம்வெலற்கரியான்
அதிகாயனெனும் பெயரானறைவான்.

அப்போது பிர்மதேவனே கோபித்தபோதிலும் தன்னை ஜெயிக்கமுடியாத வீரனான அதிகாயனென்னும் பெயருள்ளவனும், இராவணனுடைய இளையகுமாரனுமான ஒருவன் அதிகமானமும் வெட்கமுமுற்று, சந்திரனையும்

தோற்கடிக்கத்தக்க வெற்றிக்குடையையுடைய இராவணனை நிந்தித்து இதனைச்சொல்லுவதாயினன்.

ஓ மகாராஜாவே! சுவர்க்கலோகத்தாரும் பயப்படட்டும். பூலோகத்தாரும் பயப்படட்டும். அகடிதகடன சமர்த்தனான அந்த மஹாவிஷ்ணுவும் பயப்படட்டும். யுகாந்தகாலாந்தகனான அந்த உமாநாயகனும் பயப்படட்டும் அவர்களுடனே நீரும் பயந்தீரென்று சொல்லும். அப்படிக்கில்லாமல் என்னைப்பயந்ததாகப் பொதுவாகச்சொன்னீரே: அது உமக்குத்தகுமா? மிகுந்த கொடியயுத்தம் செய்தவர்களும் அதிகபலாஷ்டிகர்களுமான தானவர்களை முன்பு நான் கட்டிக்கொண்டுவந்து உமக்குக்கொடுக்கவில்லையா? உங்களை ஓடவடித்த தேவர்களையெல்லா நான்குலால சக்கரம்போலச்சுற்றி யடிக்கவில்லையா? உலையிற்காய்ச்சிச் செய்யப்பட்ட ஆயுதங்கள் கையிலிருந்தும் ஒருகுரங்கின்காலில் தேய்ப்புண்டுமாண்டுபோன அக்ஷயனைப்போலவும், சிலபாணங்களால் மாய்ந்துபோன உன்தம்பியாகிய கும்பகர்ணனைப்போலவும், அந்தச் சிறுமனிதர்கள் வாய்மொழியால் தங்களுக்குப் பலமிருக்கிறதாக ஏமாற்றினதற்கு உடன்பட்ட மற்றொருதம்பியாகிய விபீஷணனைப்போலவுமா என்னை நினைத்திருக்கிறீர்?

ஐயா! நான்போய் எதிரிகளைக்கிட்டிச் சண்டைசெய்து, அந்தக் கர்வங்கொண்ட வானரசேனைகளை யெல்லாம் சூழ்ந்துகொண்டு, அவர்களுடைய தலைகளைவெட்டிப் பூமியில்தள்ளி, அந்த இரண்டு வில்வீரர்களையும் பின்கட்டாய்க்கட்டிக்கொண்டு வருகிறேன். நீரிங்குதானேயிருந்து பாரும். உம்முடைய தம்பியாகிய கும்பகர்ணனுக்கு முடிவையுண்டாக்கின ஸ்ரீராமனுடைய தம்பியாகிய இலக்ஷ்மணனைக் கொன்று, அவனண்ணன் மெய்பதைக்கும்படியான துன்பத்தைச் செய்யாவிட்டால் உலகப்பிரசித்தரான உமக்குப்பிறந்தபிள்ளை நானாவேனோ? நீர் என்னைச் சேனாசமுத்திரத்துடனே சண்டைக்குப் போவென்று நியமித்தாலும், அல்லது நீமாத்திரம் தனியாய்ப்போவென்று உத்தரவுகொடுத்தாலும், இவ்விரண்டு மெனக்கு நல்லதுதான். உம்முடைய மனதிற்கிசைந்தபடியே விரைவில் விடைகொடும்: விடைகொடும்: என்று சொல்லவும் இராவணன் அந்தவார்த்தையைக்கேட்டு, அப்பா அதிகாயா! நீ நன்றாய் ஆலோசித்துச்சொன்னாய். நீ அந்தலக்ஷ்மணனுடைய உயிரை வாங்கிவிடுவாயே யானால், நான் அவனண்ணனாகிய இராமனென்கிற பெயரையுடையவனைச் சேதித்து முடிக்கிறேன்.

கவி.

போவாயிது போதுபொலங்கழலோய்
மூவாயிரகோடிய ரோடுமுரண்
காவார்கரிதேர் பரிகாவலினின்
றேவாதனயா வையுமேவினனால்.

அப்பா சொர்னமயமான வீரகண்டாமணியைத்தரித்த அதிகாயனே! நீ மூவாயிரங்கோடி பதாதிகள் — யானைகள் - தேர்கள் — குதிரைகள் — இ

வைகளின் காவலுக் குள்ளாகவிருந்து சண்டைசெய்யப் போவென்று அதிகாயனைச் சேனைகளுடனே யேவினான். அப்போது தேவர்களாலும் வெல்லுதற்கேலாத பலமுள்ளவர்களான அதிக துஷ்டர்களாகிய கும்பனென்பவனும் - நிகும்பனென்பவனும்—மற்றொரு சொர்னமய வீரகண்டாமணியையுடைய அதிவீரனாகிய அகம்பனும் – செம்பொன்மயமான தேரி லேறிக்கொண்டு, அவனுக்கு முன்பின் னிருபக்கங்களிலும் காவலாகநெருங்கினார்கள். சிவபெருமானேறி நடத்தும்படியான நந்திக் கொப்பானவைகளாய், சண்டையிருந்தால் தமக்கும் வீரமிகுவனவாய், வார்பூட்டப்பட்ட ஆயிரங்குதிரைகள் பூட்டின தேரில் மஹாகொடியவனான அதிகாய னேறினான் அவனுடன் இன்னும் ஆயிரங்குதிரைகள் பூட்டிய ஆயிரம் சேமத்தேர்கள் பின்னாலேவர, கொல்லும்பயத்தைக் காட்டுகின்ற ஒருகோடி பெரிய மதத்தயானைகளுடனே ஐம்பதுநூறாயிரம் குதிரைவெள்ளங்களும் உதவிச் சேனையாகப் போயின.

யானையைக்காட்டிலும் வேறுபட்டுக் கறுத்துப் பெருத்துக் காணப்படுகின்ற தேகத்தையுடைய அதிகாயன் அனேகவகையான ஆயுதங்கள் சூரியனைப்போல் ஒளிவீசித் தோன்றவும், பலபலபாஷைகளினாற் சௌரியவார்த்தைகளைப்பேசுகின்றவீரர்கள் சுற்றிக்கொண்டுவரவும்யுத்தத்தைமேற்கொண்டு போயினான். அஞ்சனத்தைக்குழைத்துப் பூசினதுபோலக்கறுத்த தேகத்தையுடைய யானைகளும், அளவில்லாத தேர்களும், மலைக்குகைகளிலிருந்து பிரதித்தொனி யுண்டாகும்படிச் சப்தித்தன. இராக்ஷச வீரர்களுடைய வில்லினாணோசையானது கடலும்பொங்கிக் கொதிகொள்ளும்படி யொலித்தது. இரணபேரிகைகள் மேகங்கள் பயந்தடங்கும்படி முழங்கின. இராக்ஷசசேனா வீரர்கள் சுவர்க்கலோகத்தாரெல்லா நடுங்கும்படிகர்ச்சித்துக்கொண்டுநடக்கும்போது, பூமியும் அடியோடே பெயருமென்னும்படிக் காலடியெடுத்துவைத்தார்கள். தங்கள் சேனாபராகத்தாற் கடலைபுமேடிடும்படித் தூர்த்துவிட்டார்கள். இவர்கள் வருகிறதைப் பார்த்துத் தேவர்கள் பயந்து வேர்த்துப் போனார்கள்.

மிகவும் வேகமாயோடுகின்ற மதத்த யானைகளின் பின்பு தொடர்ந்து போய்ப் படைமுன்னணியின் கொடியிற் படிந்துமின்னுகின்ற மேகங்களெல்லாம், முன்னேசெல்லுகின்ற அவ்வாண்யானைகளுக்குரிய பெண்யானைகளைப் போலிருந்தன. அங்குசங்களாற் குத்துண்டமதயானைகளின் கன்னகபோலங்களிலிருந்து பெருக்கெடுத்து ஒன்றுக்கொன்று மாறுமொழுகுகின்ற மதநீராற்றில், குதிரைகளும் அந்த யானைகளும்படிந்து சேறுடினதுமல்லாமல் வெகு விசாலமாகப் பரவிவருகின்ற சேனைகளும் அச்சேற்றிற் படிந்தன. சூரியனைச்சூழ்ந்து பரிவேடம் போவதுபோலத் தேர்கள்போயின. மின்னிக்கொண்டு மேகக்கூட்டங்கள் வரிசையாகப் போவதுபோல முகபடாமணிந்த யானைகள் சென்றன. சிலகுதிரைகள் பூமிமார்க்கமாக ஓடின. சிலகுதிரைகள் ஓடவிடப்பெறாமல் ஆகாசமார்க்கமாகப் பறந்தன.

இந்தப்பிரகாரமாக வந்த அதிகோபிஷ்டனான அதிகாயன் ஸ்ரீராமனென்கிற மதத்தயானையானது கவளீகரித்துத் தம்சப்படுத்தின இரணக்களமுழுவதையும் பார்த்து, தனது நெஞ்சம் புண்பட்டுப் புழுங்கிப் பரவசப்பட்டுக் குதித்து, மலைக்குச்சமமான வலது தோளோடிடதுதோளும் வெட்டுண்டு கருங்கடல் கிடப்பதுபோற் கிடக்கின்ற தன்சிறியதந்தையினிலையைக்கண்டு, அவனுடைய தலையைக்காணாமல் மனவெறுப்படைந்து, பலம்பொருந்திய பாணங்கள் பாய்ந்தபடியே கிடக்கின்றதையுநோக்கி, இது உயர்ந்த மலையுமல்ல. அஷ்டதிக்கஜங்களிலொன்றின் உடலுமல்ல. பெரிய சமுத்திரமுமல்ல. ஒருவரும் வெல்லுதற் கேலாதிருந்த என்தகப்பனாகிய கும்பகர்ணனுடைய தேகமேயென்று நிச்சயித்து, உயிர்சோர்ந்து பெருமூச்சுவிட்டு, சீ! சீ! இவைகளைப்பார்க்கவா நானிவ்விடம்வந்தேன்? என்று மிகுந்த கோபத்தை யுடையவனாய்ச் சொல்லிப் பின்னுஞ்சொல்லுகிறான். ஆ! ஆ! அதிபலாட்டியராக விருக்கின்ற அந்தமனிதர்களை நான் கொலைசெய்து என்னுயிரைக்காத்துக் கொண்டு போகா விட்டால், இந்தப்பழி எங்களைவிட்டெவ்வாறொழியும்?

கவி.

என்னாமுனியா விதிழைத்துளவன்
பின்னானையுமிப் படிசெய்துபெயர்த்
தன்னானிடர்கண் டிடாறுவனென்
றுன்னாவொருவற் கிதுணர்த்தினனால்.

இவ்விதமாகப் பலவற்றையு மெண்ணியெண்ணிச் சொல்லிச் சொல்லி மிகவும் தனக்குத் தானே கடுங்கோபங் கொண்டவனாய் என்சிறியதந்தையை இப்படிச்செய்த அந்த ஸ்ரீராமனுடைய தம்பியை இவ்விதமே கொன்று, பின்பு அந்த ஸ்ரீராமன்படும் துன்பத்தைக் கண்டு என்துக்கம் தணிகிறேன். என்று ஒருசபதவார்த்தையை யாவருக்கும் தெரியப்படுத்தினான். அன்றியுமுடனே மயிடனென்கிற ஒருதூதனை யழைத்து, நீ அதிவேகமாகப்போய் இலட்சுமணனைக் கண்டு, அதிகாயனென்கிற ஓர்மஹாவீரன். பிரதாபலங்கேஸ்வரனுடைய கனிஷ்ட புத்திரன். ஒருவருமெதிரில்லாத ஜெயசாலி. இப்படிப்பட்டவன் தன் தகப்பனான இராவணன் தம்பியாகிய கும்பகர்ணனிறந்தானென்றழுது வெகுவாய்த் துயர்படுகிறதை நீக்குகிறதாக, உன்னோடும் உன்னுடைய சைனியங்களோடும் சண்டைசெய்யும்படி நிச்சயம் பண்ணிக்கொண்டு இரணக்களத்தில் வந்து நிற்கின்றான்.

ஆதலால் — உன்னெண்ண மென்னவென்று கேட்டுவரும்படி என்னையனுப்பினான். மகா வீரனான அவனுடைய நெஞ்சம் கொதித்துக்கொண்டிருக்கின்றது. இனி நாளைக்காகட்டும், நாளைக் கப்பாலாகட்டுமென்று சொன்னாற் பொறுக்கமாட்டான். உன்னைத் தன்சிறியதகப்பனைப்போலக் கைகால்களற்றுக் களத்தி லுருளும்படி அஸ்திரப்பிரயோகம் பண்ணப்போகிறதாய்ச் சபதம் பண்ணிக்கொண் டிருக்கின்றான். மேலுமவன் கொன்றவனொருவனாக விருக்க, கொல்லாத மற்றொருவனைக் கொல்லவெண்ணங்கொள்வது பொல்

லாங்காயிற்றென்று நினைக்கின்றவனல்ல. கொஞ்சமாவது தருமமென்பதை நினைக்கமாட்டான். நீ என்னைத் தூதனென்று அலக்ஷியம் பண்ணுதே. நானும் அந்த யுத்தத்திற்சேர்ந்த வீரன்தான். உனக்கு வல்லமையிருந்தாலென்னோடு கூடவேவா. என்று சொல்லி அழைத்துக்கொண்டு வரக்கடவாய்.

அறிவிற் சிரேஷ்டனுகிய ஓ மயிடனே எனதருமைத் தகப்பனுகிய இவ்விலங்காபுரி நாயகனது சிந்தையில் உண்டான வருத்தங்களை யெல்லாம், நீக்கும்படியாக என்னெதிரில் அம்மானிடனுகிய இலக்ஷுமணன் வந்தானென்று கொண்டுவந்துவிடுவாயானுல் எவ்வுலகங்களிலும் கிடைப்பதற்கரிதாகிய உயர்ந்த பொருள்க ளெல்லாவற்றையுங் கொடுப்பவர்களியானன்றி யாருனக்குத்தருவார்கள். ஐயா புத்திமானுகிய மயிடனே! சண்டை செய்யவேண்டுமென்கிற ஆசையினுற் புகழ் சம்பாதிக்கிறவர்களான அவ்விரண்டு மனிதர்களையும், பின்னு மென்னேடெதிர்த்துச் சண்டைசெய்து நமனுடைய சிறைச்சாலையை யடைய விருப்பமுள்ளவர்கள் யாரிருந்தாலும், அவர்களெல்லாரையும் வாருங்களென்று கூப்பிடு. அப்படி நீ கூப்பிடுகிறதினுல் அந்த லட்சுமணனென்று சொல்லப்பட்ட சிம்ஹம் வருவானேயானுல், அவனைத் தேவர்களெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கும்படி நானே பலபலதுண்டுகளாய்வெட்டிவிட்டு, உன்னையுமவனுக்கிடாக இராஜபட்டங்கட்டி ஒரு இராஜாவாக்கி விடுகிறேன்.

அல்லாமலும் - தேவலோக வாசிகளும் வித்தியாதரர்களுமாகிய இவர்களுடைய நாயகிமார்களான தேவாமிர்தத்தையொத்த ஸ்திரீகளால் திவ்விய கானம் பாடவைப்பதல்லாமல், ஒருவரு மிதுவரையி லுண்ணுத மாமிசமும்- எண்ணுயிரஞ்சாடிக் கள்ளும்-உனக்குக் கொடுக்கும்படிப்பண்ணுகின்றேன். சூரியனுக்கொப்பாகப் பிரகாசிக்கின்றவைகளும் — நூற்றிலொன்ருகப் பொறுக்கியெடுத்தவைகளும் — அதிகதேஜஸை யுடையவைகளும் — தேவர்களாற் கப்பங்கட்டினவைகளுமான அனேக ஆபரணங்களோடு, அளகாபுரிக்குத் தலைவனுன குபேரனுல் வரிசையனுப்பப்பட்ட நவநிதிகளும் உனக்குப் பரிசாகக் கொடுக்கின்றேன். இன்னும்-எப்போது மேகதாரைபோல ஒழுகிக்கொண்டிருக்கின்ற மதஜலத்தில் மொய்த்த வண்டுகளும் - பருந்துகளும் — சுற்றிப் பறக்கும்படியான முகத்தையுடையவைகளாய், ஒருநாளும் கோபமாருத செவந்த கண்களை யுடையவைகளுமான யானைகளில் நூருயிர முனக்கு நான் கொடையாகக் கொடுக்கின்றேன்.

அநேகமாற்றுயர்ந்து திரிலோக ஜ்யோதியாய்ப் பிரகாசிக்கின்ற உயர்ந்த தங்கத்தினுற் செய்த இரதங்களும், மேலிடமாகிய தேவபோகத்திலுள்ள தேவேந்திரனது உச்சைச்சிரவமென்னும்பெயருடையகுதிரைக்கும்நிகரற்றனவாகி, நவமணிமாலையை யணிந்து பூமியிலடிவையாது ஆகாயமார்க்கத்திலேயே தாவிப்பறக்கும்படியாகிய குதிரைகளும் உனக்குத் தருகின்றேன். நவரத்தினங்களைக் கும்பற்கும்பலாகக் கோர்க்கப்பட்டிருக்கின்றவைகளும், மூட்டைமூட்டையாகிய தங்கக்காசால் விலைபெற்றவைகளும், சந்திரனுக்கொப்பான

வெண்பட்டுகளால் தைக்கப்பட்ட நிலையங்கிகள் இரண்டாயிரங் கொடுக்கின்றேன். ஐயா பொன்மயமாகிய வீரகண்டாமணியை யணிந்த மயிடவீரனே! இன்னுமுன் மனதி லிச்சிப்பதற்கருமையாய்த் தேவர்களுக்குங் காணக்கூடாதனவாகி யென்னிடமுள்ள எல்லாவுடைகளும் உனக்குப் பரிசாகக் கொடுக்கின்றேன். நீ சந்தோஷமாகப்போய்வா. என்றுசொன்னமாத்திரத்தில், மல்லயுத்தத்தால் மோதுண்டு காய்ப்பேறித்திரண்ட தோள்களையுடைய அம்மயிடனென்கிற ராக்ஷசவீரன்தூதுபோகச் சம்மதித்துப் புறப்பட்டு, காகுஸ்தவமிஸோத்பவராகிய ஸ்ரீராமபிரானுடைய சந்நிதியிற்போய்ச் சேர்ந்தான்.

இப்படிச் சேர்ந்தசமயத்தில் அதிவேகத்துடன் வானரவீரர்கள் எதிரோங்கி வருவதை இந்தமயிடன்கண்டு, பயந்து ஓ ஐயன்மீர்! ஒருசந்தோஷசமாச்சாரம் சொல்லவந்த தூதுவனுனென்றுன். அதைப் பரமகிருபனுயும்வேதமுதல்வனுயுமுள்ள ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரர் அவ்வானர வீரர்களாற் சொல்லக்கேட்டு, இவனினியழிந்துபோகின்ற தன்னுடைய எஜமானன்சொன்னவார்த்தையைச் சொல்லவந்தவன். இவன் மற்றொன்று நினைத்து வந்தவனல்ல. சும்மாவந்த தூதனுகையால் இவனைக் கோபியாதேயுங்கள். என்றவ்வானரவீரர்களை விலக்கி, நீவந்தகாரியமென்ன சொல்லென்று கேட்டருளினர். அப்போதந்த மயிடன் - ஐயா வில்வீரசிகாமணியே! அந்தக்காரியம் உமது தம்பியாருடன் சொல்லவேண்டியதென்று சொல்லினுன்.

தூதுவந்தமயிடன் இலக்ஷ்மணரோடு தான் வந்தகாரிய மின்னதென்றேனல்.

கவி.

சொல்லாயதுசொல் விடுசொல்லிடென்று
வில்லாளனிலங் கிளையோன்வினவப்
பல்லாயிரகோடி படைக்கடன்முன்
நில்லாயென நின்றுநிகழ்த்தினனுல்.

அப்படிப்பட்ட விஷயங்களை சொல் சொல் சீக்கிரம் சொல்லிடென்று வில்வல்லமையில் மிகவும் சிரேஷ்டத்தன்மையை யுடைய ஸ்ரீராமச்சந்திரனது திருத்தம்பியாகிய இளையபெருமாள் கேட்க மயிடனுனவன் நமஸ்கரித்தெழுந்து, ஐயா சொர்னவிக்கிரகம்போலத் தேககாந்தி யுடையவரே! இராவணனுடைய இளையகுமாரன் அதிகாயனென்பவன் அநேககோடி சைனியங்களுடனே. கூடத் தேவரீரைத் தாக்கும்படி வெகுகோபத்துடன் மேருமலைபோல் இரணக்களத்தில்வந்து அறைகூவி நிற்கின்றுன். அவன்மீது நீர் எதிர்க்கவலியுண்டானு லென்னேடுகூடவே புறப்படும். மையபருவதம்போன்ற உருவத்தையுடைய கும்பகர்ணனுகிய தன் சிறியதகப்பன்தேகத்தை உம்முடைய பிராதாவான ஸ்ரீராமன் எப்படிக் கால்வேறுகைவேறு தலைவேருக வெட்டியெறிந்தாரோ? அப்படியே உம்மையும்வேகமாய் இந்த ரணபூமியிற் செய்யப்போகிறதாய்ச் சொல்லச்சொன்னுன். ஏன் கொன்றவனை விட்டுக் கொலைசெய்யாத வென்னைத் தேடிக்கொண்டுவந்து நிற்கின்றுனென்று கேட்

பிரேயானுல், தன்பிதாவான ராவணன் படுந்துக்கத்தைத் தன்சிறியதகப்பனை க்கொன்ற அந்தஸ்ரீராமனும் படவேண்டுமென்கிற விருப்பத்தைக்கொண்டு முக்கியமாய் உன்னேடு போர்செய்ய வந்தானும்.

ஓ தேவலோகத்துள்ளவர்களே ! ஓ பூலோகத் துள்ளவர்களே ! இன்னு மற்றயாவர்களும் இந்தவார்த்தையைக் கேளுங்கள். அதிகாயனென்பவன் இந்த இளையவீரனுடன் சண்டைசெய்யப்போகிருனும். இவருக்கு உதவியாக யார்வந்தாலும் அவர்களுடனும் போர்செய்வானும். வருதற்கு விருப்பமுள்ளவர்களெல்லாம் வரலாமென்றும் சொல்லச்சொன்னுன். என்றுசொல்லி இளையபெருமாளைப்பார்த்து, நீர் புறப்படுகிறதாயிருந்தால் என்னேடு விரைவிற்புறப்படுமென்று சொல்லினுன். இப்படியந்தமயிடன் எரிகிற மழுமுனைபோலக் கர்னகடூரமாகச் சொல்லவும் பிரபத்திபண்ணும்பாக்கிய முடையவர்களெல்லாம்வணங்கி உச்சீவிக்கும்படியான திருவடித்தாமரைகளையுடைய சர்வலோக சரண்யரான ஸ்ரீரகுநந்தனர் கேட்டு, தம்பிலக்ஷ்மணு ! இவனேடுகூடவே புறப்பட்டுப்போய் அவனைஜெயங்கொண்டு வருக, தாமசிக்கவேண்டாம். என்று நியமித்தார்.

ஸ்ரீராமர் விபீஷணரால் அதிகாயன் வல்லமையும் வரலாறுமறிந்து தமது தம்பியோடவரைக் கூட்டியனுப்புதல்.

கவி.

எல்லாமுடனெய் தியபின்னிவனே
வில்லானெடுபோர் செயவேண்டுமெனு
நல்லாறுடைவீ டணனுரணன்முன்
சொல்லாடின னன்னவைசொல்லுதுமால்.

அப்படிப்பெரியபெருமாள் இளையபெருமாளுக்கு அநுக்ரகித்த மாத்திரத்தில் அதைக்கேட்டுக் கொண்டிருந்த நல்லஞான நடைவாய்ந்த விபீஷணுழ்வார் க்ஷீராப்தியினின்று மிராக்ஷசசங்கார நிமித்தியமாகத் துயிலுணர்ந்து உலகமெல்லாங் கடைத்தேறும்படிச் சக்கரவர்த்தித் திருமகனுராகத்திருவவதாரஞ்செய்த ஸ்ரீயப்பதியாகிய இரகுநந்தனர் சன்னிதியில் தாழ்ந்தெழுந்து, சுவாமி! பரமதயாளுவே! இப்போது வந்திருக்கின்ற கண்டகனை இலேசானவனென்று நினையாதேயும் அவனுட னுயுத்தம்செய்வதற்கும் அவன் செருக்கை அழிப்பதற்கும் என்னென்னவிஷயங்களையறியவேண்டுமோ அவ்விரகசிய விஷயங்களையெல்லாம் அறிந்தபிறகு தான் அவனுடன் சண்டைக்குத் தொடங்கவேண்டும். ஆதலால் அவைகளையெல்லாம் சொல்லுகின்றேன் கேளுமென்று விபீஷணர் சொல்லுகின்றுர்.

ஸ்வாமி ! நாமெல்லோரும் இளையபெருமாளுடன் போகவேண்டும். பிறகிவரே அவ்வதிகாய னென்கிற வில்வீரனுடன் யுத்தஞ்செய்யட்டும். ஏனென்றுல் — அவன் சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமதேவனை நோக்கி ஒருபெருந்தவஞ்செய்து பெற்றவரத்தினுல், தேவர்களும் அசுரர்களுமான பெரியவீரர்கள்

சேர்ந்துசெய்த சண்டையிலும் அவன்செத்தவனல்லன். கொஞ்சமாவது மஞ்சலித்தவனுமல்லன். அதிகபலமுள்ளவனாக விருந்தான். மேலும் - உமாநாயகராகிய திரிநேத்திரருடனே அந்தக்கயிலாசமலையை வேரோடுபறித்தெடுத்தவனான இராவணனே தன்னிலும் இவனை மகாவல்லவனென்றும், அரிபிரமருத்ரேந்திராதி சமஸ்ததேவதா சமூகங்களுடனே மேருபருவதத்தைப் பேர்த்தெடுக்க வல்லவனென்று நினைத்து, இவனுக்கேற்ற ஆஹாரங்களெல்லாம் கொடுத்துவளர்த்தான். இன்னுமிவன் க்ஷீரசாகரத்தைக்கடைவதற்கு மந்தரகிரியும், வாசுகியும், விஷ்ணுவும், மற்றத்தேவர்களும் வேண்டாமலேயே, தன்காலினாலே கலக்கிச் சற்றுநேரத்திற்குள்ளே ஆலாலவிஷத்தையும் அமிர்தத்தையு முண்டாக்கிவிட வல்லவனுக்கும்.

சகலலோகங்களு மழியும்படியாகிய மகாபிரளயகாலத்திலும் அழியாதவைகளென்னும்படியாய் அஷ்டதிக்குகளிலு நின்று லோகத்தைத்தாங்கிக்கொண்டிருக்கின்ற பருத்த மஸ்தகங்களையுடைய யானைகளை, இவன் தோள்வலியால் தள்ளுவானென்பது ஒரு பெருமையோ ? சக்கரவாளகிரியையும் தனதுள்ளங்கையால் தள்ளும் வல்லமையுடையவனுக்கும். வெகுகாலம் வரையிலும் கண்ணிமை கொட்டாத விஷகண்டரான சங்கரமூர்த்தியானவர் அக்கிணிக்குகின்ற சூலாயுதத்தை அவன்மேற் பிரயோகித்தபோது, அதையவன் கையிற் பிடித்துக்கொண்டு இந்தச்சூல முன்னுடைய சூலமல்லவாவென்று அலக்ஷியமாய்ப் பேசினவனுக்கும். இவன் தன்னோடுபகைத்த தேவர்களுடைய ஊரைப் புகையெழும்படிச் சுட்டெரிக்கப்போன காலத்தில், வெற்றிமாலையைத்தரித்த விஷ்ணுமூர்த்தியானவர் பகைவனாகிய இவன்சேனைகளுடைய உயிரை உண்ணும்படி விடப்பட்ட சக்கரத்தையும் தன்வில்வல்லமையினால் தடுத்துவிட்டவனுக்கும்.

உயிருள்ளவைகளைப்போலொத்த ஆயுதங்களாயுள்ளவைகளையெல்லாம் இப்பாவியின்மீது அதிககோபங்கொண்டு இந்திரன் பிரயோகித்தபோது, அவைகளை யெல்லாம் இவன் சிறுமணலைப்போலப் பொடிசெய்துவிட்டு, அவனுடைய வச்சிராயுதத்தையும் தன்பாணங்களினாற் கீழேதள்ளிவிட்டான். இவன் வேதசாஸ்திரங்களெல்லாம் கற்றிருக்கின்றான். தேவர்கள் தங்களுடைய ஆயுதங்களை அவர்கள் வல்லமைகொண்டு இவன்முன்னின்றுபிரயோகிக்கக் கூடாதபடியாக உருத்திரனிடத்தில் வரமும்பெற்றிருக்கின்றான். மேலும்—அதிகசக்தியைப் பெற்றிருப்பதனால் யுத்தத்தைவிட நல்லதென்று மற்றொன்றையறியமாட்டான். இயாவரினும் அதிசூரனாயிருக்கப்பட்டவன். அதர்மமல்லாமல் வேறேயொரு நன்மையென்பதை இவனறியவே மாட்டான். யுத்தமல்லாமல் வேறொரு ஆபரணமு மணியமாட்டான். யுத்தத்தில் வலியில்லாதவர்களைக்கண்டால், அவர்கள்மேல் ஆயுதத்தையெறிந்து அவர்களுடைய அரியவுயிரை வேறுபடுத்தமாட்டான். பலத்தைக்காட்டிலும் கீர்த்தியே உயர்ந்ததென்று விரும்புகின்றவனுக்கும்.

தேகத்தைவிட்டு உயிர்போகின்ற காலத்திலும், வஞ்சகர்களே தன்னே டெதிர்த்துவந்தாலும், தன்தேசத்தவர்கள்செய்யப்பட்ட மாயாதந்திரங்களை யெல்லாம் அவர்கள்செய்தபோதிலும்,தானந்த அற்பமான மாயைச்செய்கை களைச் செய்கிறதற்குக் கொஞ்சமாவது நினைக்கமாட்டான். மேலும்-இவன்பி றப்பின் வரலாற்றைக்கேளும் ஸ்வாமி! வானவர்களுடைய லோகத்தைத் த ங்கள் கைவசப்படுத்திக்கொண்டிருந்த மதுகைடவர்களென்கிற இரண்டு அசு ரர்கள் முன்னொருநாள் அதிகவஞ்சகத்தைவகித்து, சக்கராயுதத்தைத்தரி த்தவரான விஷ்ணுமூர்த்தியினிடத்திற் பகைகொண்டு திருப்பாற்கடலுக்குச் சென்று, ஓய்விஷ்ணுவே! எங்களோடு நீர் சண்டைசெய்யவாரு மென்றார்க ள். அவரப்படியே நல்லது வாருங்களென்று நியமித்தார். அவர்களும் சண் டைக்குப் புறப்பட்டார்கள். தங்களோடு போர்செய்யச் சூரியன் ஆயி ரங்கரங்களுடனே வந்தாலும் அக்கரங்களை முறைமுறையாகக் கழித்துவிட் டுப் பரிகாசம்பண்ணும்படியான அவ்வீரர்கள் அந்த விஷ்ணுவோடு அதிகப கைகொண்டு போர்செய்தார்கள். அந்தப்போரி லனேகநாள் கழிந்துபோய் விட்டன.

பின்பு தங்களுக்குத்தாங்களே சமானமாகிய அந்த மதுகைடவர்கள் த னித்தங்கத்தைப்போலப் பிரகாசிக்கின்ற திருமேனியையுடைய அந்தவிஷ்ணு வைப்பார்த்து, யாவர்களாலு மதிக்கத்தக்க ஓ மாதவனே! புகழுடைய வர்களென்று பலரையெடுத்துப் பேசுவதினாற் பயனென்ன? நாங்களோவ் வொருவரே இந்த ஏழுலோகங்களையுமுண்டு உமிழ்ந்துவிடுவோம். இப்படிப்ப ட்ட எங்களிரண்டுபேருடன் நீ இத்தனைநாள் சமயுத்தஞ்செய்தாய். ஆதலால் நீ நல்லகெட்டிக்காரன்தான். உன்னைப்போன்ற வீரர் இனி வேறொருவரும் உ ண்டோ! நாங்களுன்னைப்பற்றி மகாசந்தோஷமாயினோம். உனக்கென்னவர ம் வேண்டும்? உன்மனதின் படிகேள். அவற்றை நீ கேளாததற்குமுன்னமே கொடுத்துவிட்டோ மென்றார்கள். இப்படியவர்கள் உனக்குவேண்டியபடி நல்லதை நாங்கள் கொடுக்கிறதற்கு என்னவேண்டுமென்று கேட்டமாத்திரத் தில், சர்வலோகநாயகனாகிய அந்தப்பகவான் நான் ஜெயித்தேனென்கிறதற் கிடாக உங்களை ஒடுக்கும்படியான வரம் எனக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டருளினார்.

அதற் கொழுக்கப்படி நடக்கின்ற நீதிமான்களான அந்தமதுகைடவர் கள் நாங்கள் வேறோரிடத்திலும் சாகமாட்டோம். உன்னுடைய தொடையி லிறந்துபோவோம். நீ துணிவாக எங்கள்சமீபத்தில் வருவாயானால் எங்கள் சொற்படிநடத்திக்கொள்ளலாமென்று வரங்கொடுத்தார்கள். அந்தவரம்பெற் றவுடனே மேலுலகங்கள் கீழுலகங்களெல்லாம் கடந்து மெட்டாதவராகிய விஷ்ணுவானவர் தம்முடைய இடதுதொடையை நீட்டினார்.மதுகைடவர்கள் ஊழ்வினைப்படி அந்தத்தொடையிலேறி நின்றார்கள். அப்போது அந்தவிஷ் ணுமூர்த்தியானவர் தமதுகையால் வலியகதையை யெடுத்துச் சுழற்றியடித்

தார். அந்த அடிபட்டு இருவருமடிந்தார்கள். அவருள் தன் வாணுள்முடிந்த மதுவென்பவனுடைய மாமிசம்பட்டபடியால் இந்தப் பூவுலகமெல்லா மேதினியென்று பெயர்பெற்றது. அந்த மதுவென்பவன்தான் இப்போது தன் வாணுள்கழிந்து மாண்டுபோன தேகவல்லமையுள்ள கும்பகர்ணன். இருப்புச்சலாகையையொத்த கால்களையுடையவனுன கைடவனென்பவன்தான் இந்தக்கூரியவேலாயுதத்தைக் கையில்வைத்திருக்கிற அதிகாயனென்பவன். நானறிந்த பூர்வோத்திர மிதுதானென்றுசொல்லி முடித்தனர்.

இப்படி விபீஷணுழ்வான் சொன்னதையெல்லாம் ஸ்ரீராமர்கேட்டு, தம்பிவிபீஷணு! நல்லகாரியம் சொன்னுய்: நல்லகாரியம்சொன்னுய்: என்று மின்னல் நாணிப் பறக்கும்படியாக நகைத்துப் பின்னுஞ் சொல்லுகின்றூர். தம்பீ விபீஷணுழ்வானே ! எண்ணுயிரங்கோடி ராவணர்களும் - சுவர்க்கலோகத்தாரும் — மற்றலோகத்தாரும் - திரிமூர்த்திகளும், ஒன்றுசேர்ந்து வந்தெதிர்த்த போதிலும், இந்தலட்சுமணன் வில்வித்தையின் பெருமையை நீ உன்கண்ணுற்பார்க்கப்போகிறுய். சுவர்க்கலோகத்தார்தா னென்ன ? பூலோகத்தார்தானென்ன ? அந்தசாக்ஷாது விஷ்ணுவானுல்தானென்ன ? வில்வீரர்களுக்குள்ளே நானேதானுகட்டும். பிரமதகணத் தலைவராகிய உருத்திரமூர்த்தியும் பிரமனும் தேவர்பதியாகிய இந்திரனுமானுலுஞ் சரி. என்தம்பி எல்லாரையும் தோற்கடித்து விடுவான். இவன் தன்வில்லில் கையைவைத்தானே யானுல், தேவாஸ்திரங்களாகட்டும்: கோபமென்பதாகட்டும்: பலமென்பதாகட்டும்: குற்றமற்ற வீரமேயாகட்டும்: மற்றவைகளே யாகட்டும்: இவனுக்கெதிரேநிற்க வல்லமை யுள்ளவைகளுமுண்டோ ? இதைச்சற்று நீயேபார்க்கக்கடவாய்.

அப்பா விபீஷணு ! அந்தப் பெரியதேஹத்தையுடைய அதிகாயன் இவன்விடும் பாணத்தோடுகூடவே ஆகாயவரையிலும்போய் இப்பூமியில் விழுந்த போது, காக்கை - பருந்து — கழுகு - முதலானவைகள் அவனைப் பிடுங்கித் தின்பதை நீயும் இலட்சுமணனுடனே பார்ப்பாயாக. என்றைக்கு என் தேவியை வஞ்சனைசெய்து எடுத்துக்கொண்டுபோனுனே? அன்றைக்கே அந்த ராவணனும், அவனைச்சார்ந்த இவனும், மற்றெல்லாரு முடிந்துவிட்டார்கள். என்தம்பி தன்பாரதந்திரசொரூபம் குறையமாட்டேனென் றிருக்கிறபடியால், இதுவரையிலு மெல்லாரும் உயிரோடிருக்கின்றூர்கள். ஒரு நீருடன் மற்றொரு நீரெதிர்த்துக் கூடாமல் நிற்குமோ? அதுபோலத் தர்மத்துடன் தர்மஞ்சேரும். இந்த முழுதுஷ்டர்களுடனே தேவர்களுக்காக நாம் போர்புரியவந்தது அத்தருமத்தைத் துணைப்பற்றி ஜெயிக்கவந்தோமே யல்லாமல், வேறொருவருடைய உதவியினுலேயா ஜெயிக்கவந்தோம்?

தம்பீ! இவர்களோடு யுத்தஞ்செய்து ஜெயம்பெறத்தக்கவர் அந்த ஸ்ரீருத்திரமூர்த்தியொருவர். அவரல்லாவிட்டால் இலட்சுமிபதியாகிய அந்த ஸ்ரீமகாவிஷ்ணுவா லாகவேண்டும். அல்லது - இந்த லோகங்களைச் சிருஷ்டி

ந்த பிர்மதேவராலாகவேண்டும். இவர்களெல்லாராலுமுடியாவிட்டால், சமான மற்றவல்லமையுடைய தர்மசொரூபியாகிய இவ்விளையபெருமாளாலாகவேண்டும். இவனுமல்லாவிட்டால் நானாகட்டும், மற்றவர்கள் யாராகட்டும், இவர்களோடு சண்டைசெய்ய முடியுமா? கும்பகர்ணனோடு வந்தது ஓராயிரவெள்ளம் சேனையா? எவ்வளவோசேனைகள்வந்தன. அவ்வளவு சேனையையும் ஒரு க்ஷணத்திற்குள்ளாகக் கொன்றவன் இவனேயல்லாமல் வேறே யாரையாவது சொல்லக்கண்டாயா? நீயும் கூடவே யிருந்தாயே:

கவி.

கொல்வானுமிவன் கொடியோரையெலாம்
வெல்வானுமிவன் னடல்விண்டுவென
ஒல்வானுமிவன் னுடனேயொருநீ
செல்வாயெனவே வுதல்செய்தனனால்.

அந்த மகாதுஷ்டர்களையெல்லாம் கொல்லப்போகிறவனு மிவனே: அவர்களைக்கொன்று ஜெயமடையப் போகிறவனு மிவனே: அந்தவீரர்களுக்கு மேலிட்டு நிற்கப்போகிறவனு மிவனே: நான்வரவில்லை. இவனோடுகூட நீமாத்திரமே போவென்றவ் விபீஷணரை அனுப்பினார்.

இலக்ஷுமணர் ஸ்ரீராமரிடத்தில் விடைபெற்று விபீஷணருடன் யுத்தகளம்புகுதல்.

கவி.

அக்காலையி லக்குவனரியனை, முக்காலும்வலங் கொடுமுதுணர்வின்
மிக்கான்மதிவீ டணன்மெய்தொடரப், புக்கானவன்வந்து புகுந்தகளம்.

அச்சமயத்தில் இலக்ஷுமணப் பெருமான் ஸ்ரீராமப் பிரபுவை முக்கால் வலம்வந்து நமஸ்கரித்தெழுந்து அறிவிற் சிரேஷ்டராகிய விபீஷணாழ்வார் தனது மெய்காப்பாளனைப் போற்றொடர அதிகாயனென்னும் கொடிய விராட்சசன் வந்திருக்கின்ற யுத்தகளத்தை வந்து சேர்ந்தான்.

வானரப்படைகளும் இராக்கதப் படைகளும் கலந்து போர்புரிதல்.

கவி.

சேனைக்கடல் சென்றதுதென்கடன்மேல்
எனைக்கடல்வந்த தெழுந்தெதிரே
ஆனைக்கடறேர் பரியாண்மிடையும்
தானைக்கடலோ டுதலைப்படலும்.

அப்போது வானரசேனை சமுத்திரமானது தென்கடலின் மேலெதிர்க்க வடகடல் வந்ததுபோல இராக்ஷசச்சேனைக்கடலை எதிர்த்தது. அப்படியெதிர்த்த வானரசேனைகளின் பேரில் அதிகாயனுடைய யானைப்படை - தேர்ப்படை - குதிரைப்படை - காலாட்படை - ஆகியவிவையெல்லா மொருமிக்கச் சேர்ந்து போர்செய்ய யத்தனித்தன.

முன்பு பசியரத்தத்தாற் சேறுபட்டுச் சறுக்கலுண்டாயிருந்த அந்தரணக்களம் இப்போது இருதிறத்தாருடைய சேனைகளு மிதித்தலினாலே காய்ந்து, புஷ்பத்தின் செவந்த மகரந்தப்பொடியைப் போலச் செந்தூளியெழும்பி ஆகாசத்தையெல்லா மறைத்து விட்டது. இடிக்குச் சமமான பேரிகை முழக்கத்தாலும், சங்கத்தொனியினாலும், வீரகர்ச்சித ஓசையாலும், பயங்கரமாய் வளைந்த வில்லின் சப்தத்தாலும், சகலவுயிர்களு நடுக்கமுற்றுச் சமுத்திர கோஷமும் அடங்கிப் போய்விட்டது. பாவர்களாகிய ராக்ஷசர்கள் மரணமடையும்போ தெல்லாம் மலையினின்றும் பூமியில்விழுகின்ற அருவியாற்றைப் போல ரத்தத்தைக் கக்கிக்கொண்டு விழவும், மரங்களிலிருந்து முதிருகிற இலைகளைப்போல அவர்கள் விருதுக்கொடிக ளறுந்துவிழவும், மலைகள்மீது பாய்கிறதுபோலப் பெரிய யானைகளின் தலைகளின்மேற் பலவானரங்கள் குதித்துப் பாய்ந்தன.

பல மர்க்கடங்கள் கூட்டங்கூட்டமாக மலைகளைப்பிடுங்கி யெறிந்தபோது அவற்றிலிருந்து தேனருவிகள் கீழேயொழுகிவரும்படி மதஜலங்கள் ஒழுகுகிற யானைகளின்மீது அம்மலைகள்மோதி, ஒருயானை மற்றொருயானையுடன் தாக்கி விழுவதுபோல மலையும் யானையுமாக இரண்டுங்கீழேவிழுந்தன. பல குரங்குகள் அரக்கர்களுடைய சிலகுதிரைகளைக் கைகளாற் குத்தின. சில குதிரைகளை நசுக்கிவிட்டன. சிலகுதிரைகளைக் கைகளாலிருக்கிப் பிடித்துத் தூக்கின. சிலகுதிரைகளைத் துண்டுதுண்டாக்கி விட்டன. சிலகுதிரைகளை முன்னங்கால்வேறு பின்னங்கால்வேறு தலைவேறாகப் பல்லினாற்கடித்து எறிந்துவிட்டன. சிலகுதிரைகள் வானரங்களுதைத்த உதையால் ரத்தங்கக்கிக்கொண்டு துடிதுடித் திறந்தன. பலகுரங்குகள் மோதினபோது சண்டமாருதக் காற்றடிக்க, அதனால் மேகங்க ளொன்றோடொன்று மோதுண்டு ஒதுங்குவதுபோல ஓட்டமெடுத்தயானைகள் ஒன்றுடனொன்று தாக்கித் தந்தங்கள் முறிபட்டு, அவைகளிலுள்ள முத்துக்கள் பலபலவென் றுதிர்ந்தன.

இந்தப்பிரகாரமாக யானைகள், சத்துருக்களை மிதித்துத் துவைக்கின்ற வச்சிரத் தூணையொத்த கால்கள் முறிபட்டு, யமபாசம்போன்ற வால்கள் அறுபட்டு, அவற்றின்பேரிலிருந்த பாகர்களும் இறந்தார்கள். வானரவீரர்கள் மரங்களையும், கல்லுகளையும், மலைகளையும், வாள்போன்ற பற்களையுடைய மலைப்பாம்புகளையும், இராக்ஷசர்களேறிவந்த யானைகளையும், குதிரைகளையும், தேர்களையும், இடைவிடாமல் வாரிவாரி வீசினபடியால்; ஓங்கிவளர்ந்திருக்கின்ற பெருங்காட்டைப்போல ஆகாசமுழுவதும் காணப்பட்டன. வானரத்தலைவர்கள் மலைகளைப் பிடுங்கியெறிய, அவைகள் ஆகாசமெல்லாம் பரவிச்சென்று கடலில் மேகம்படிவதுபோல ராக்ஷசச்சேனைகளின்பேரில் விழுந்தன. இரணக்களத்தில் ஓடமாட்டாமற் கால்சறுக்குண்ட குரூரராட்சசவீரர்களை வானரவீரர்கள் பிடித்து, மழுவாயுதம் — வேலாயுதம் — வாளாயுதம் — இவைகளைத் தாங்கிக்கொண் டிருக்கின்ற தோள்களோடு மடக்கி,

அவர்கள் பெரியதேகத்தை ஒன்றுசேரப் பிடித்து, அவர்களுடைய ரத்தவெள்ளத்திலேயே அமிழ்த்திக்கொன்று, அப்பிணங்களை அவ்வெள்ளத்துடன் ஓடும்படிச் செய்தார்கள்.

அதிகபலமுள்ளவைகளான அளவில்லாத வானரங்கள் இரத்தப்பெருக்குகளில் நீந்திநீந்திக்கையிளைத்து யானைப்பிண மேட்டின்மீது ஏறிநிற்க, அவைகளந்த ஆற்றிலடித்துக்கொண்டு போனதினால் அவைகளுமுடனேபோய்க் கடலில்விழுந் திறந்தன. சேற்கெண்டைகளுடனெழும்புகிற அலைகளையுடையஆற்றில் ஒருவர் தடியைநீட்டப்பிடித்துப் போகின்றகுருடர்கூட்டம் போல, கால்கள்கால்களா யோடுகின்ற இரத்தப் பிரவாகத்தில் வானரவீரர்கள் ஒருவர்வாலை யொருவர் பிடித்துக்கொண்டு வரிசைவரிசையாக இறங்கி நடந்துபோனார்கள். இராக்ஷசசேனைகள் பலமுறை வானரசேனைகளின்மீது பாய்ந்து ஆயுதங்களாலடிக்க, அவ்வாயுதங்களை விலக்கி விலக்கி வானரங்களுடையகைகள் கொஞ்சங்கொஞ்சமாய்த் தேய்ந்து சிதைந்து சின்னபின்னமாகி, மாமிசங்க ளாகாசமுட்டச் சிதறுண்டு போய் அநேக வானரங்களிறந்தன.

இலட்சுமணர் தமது வானரப்படைகள் இராட்சசப்படைகளால் மெலியக் கண்டு விடுத்தபாணங்கள் அஷ்டதிக்கிலும் பராக்கிரமித்து நிற்றல்.

கவி.

அத்துணையிலக்குவ னஞ்சலஞ்சலென்
றெத்துணைமொழிகளு மியம்பியேற்றினன்
சத்துணைவில்லினைக் காலன்வாழ்வினை
மொய்த்துணைநாணினை முழங்கத்தாக்கினான்.

இப்படி வானரசேனைகள் வருத்தப்படுவதை இளையபெருமாள் பார்த்து, பயப்படாதீர்கள்: பயப்படாதீர்கள்: என்றவர்களுக்குத் தைரியம்பிறக்கும்படியான வார்த்தைகளையெல்லாம் சொல்லி அவர்களுக்கு ஊக்கமுண்டாக்கி, தம்முடைய கையிலிருக்கின்றதும் எமனுக் குயிர்ப்பிச்சைகொடுப்பதுமான வில்லில் நாணேற்றிக்குணத்தொனிசெய்தார். அந்தநாணோசையானது சாஸ்திரங்களெல்லா மூழ்கிவிட்டாலும் ஸ்தூலபூதங்கள் சூக்ஷ்மபூதத்திலும் — சூக்ஷ்மபூதங்கள் தன்மாத்திரையிலும் - அந்தத் தன்மாத்திரைகள் கிரமக்கிரமமாய்ப் பிரகிருதியிலுமொடுங்கிப் பிரம்ஹகல்பமு முடிந்து காரணமாத்திரமுடியாத அந்தக்கடைசி காலத்தில், ஸ்வதப்பிரமாணமான நான்கு வேதங்களும் ஸ்ரீயப்பதியினுடைய குணங்களைப் பல்லாண்டுபாடி எங்குமாகக் கோஷித்துக்கொண் டிருப்பதுபோல எங்கு நிறைந்தது.

உடனே அந்தவில்லிலிருந்து அநேகபாணங்கள் புறப்பட்டன. அவைகள் எண்ணிறந்த ராக்ஷசர்களுடைய தேகங்களை யெல்லாமூடிச் சல்லடைக்கண்களாகத் தொளைத்து, ஆகாசமுற்றும் பிணக்காடுகளாக நிறைந்துவிட்டன.

அவர்கள் மார்புபிளந்து புறப்பட்ட ரத்தவெள்ளங்கள் கடலை நிறைத்து விட்டன. பின்னுமந்த அம்புகள் யானையின் றுதிக்கைகளை யறுத்து, தேர்வீரர்களுடைய உயர்ந்த கிரீடங்கள் தரித்திருக்கின்ற தலைகளைத்துண்டித்து, குதிரைகளின் கால்களைத்துணித்து, அவைகளின்மீ தேறிவந்த ரத்தநிறக்கண்களையுடைய பாகர்களது தேகங்களைச் சின்னாபின்னங்களாய்ச் செய்து, வில்லுகளை இரண்டிரண்டாக முறித்து, வேலாயுதங்களை யொடித்து, வீரர்களணிந்திருந்த பிரகாசமுள்ள கவசங்களைப் பேதித்து, அவர்கள் மார்புகளைப்பிளந்து, தேகங்களை மலையைப்போல நொறுக்கி, குதிரைகளை யுருவிப்போய் அவைகள் பூட்டியிருந்த தேர்களையுடைத்து, யானைகளை யெல்லாம் எமனைப் போலக் கொன்றன.

ஸ்ரீ லட்சுமணர் பாணத்தால் துண்டிக்கப்பட்டு விசையுடனே ஆகாயத்திற்போய்த்தோன்றுகின்ற வெற்றியானைகளின் வளைந்த வெள்ளைத்தந்தங்கள், உலகசிருஷ்டிக்கு முந்தின காலத்தில் ஆகாசத்தினிடமாக இருந்த அனேக மூன்றாம்பிறைச் சந்திரனைப் போலப் பிரகாசித்துக்கொண் டிருந்தன. துஷ்டராக்ஷசர்களுடைய பெரியதலைகளானவை அக்கினி சொரிகின்ற இரண்டு கண்களையுடைய மூன்றாம்பிறைச் சந்திரர்களைக் கவ்விக்கொண்டனபோன்று தொங்குகின்ற குண்டலங்களாகிய மின்னல்களுடனே, சந்திரமண்டலம் ஆகாசத்திலிருந்து நழுவி மண்ணில்விழுந்து கிடக்கிறதுபோலக் கிடந்தன. கூர்மையான தந்தங்களை யுடையவைகளாயும் — துதிக்கை குறையுண்டவைகளாயும் - இரணக்கள ரத்தவெள்ளத்திற் குப்புற்று விழுந்துகிடக்கின்ற யானைகள் இந்தப் பூமியைப் பேர்த்தெடுத்த ஆதிவராக புருஷமூர்த்தியை யொத்திருந்தன. புண்பட் டுயிரிழந்த குதிரைகள் பூட்டிய பூட்டுகளவிழ்ந்து தலைகிழாய்விழுந்த பெரிய தேர்க்கூட்டங்கள், புண்ணியவசத்தாலே சுவர்க்கத்தை யடைந்திருந்து அப்புண்ணியங் குறைபட்டு அந்தச் சுவர்க்கத்திலிருந்து பூமியில்விழுந்த தெய்வவிமானம்போ லிருந்தன.

ஸ்ரீ ராமாநுஜருடைய பாணம் சம்ஹரித்தபடியால் தம்மிடத்திலிருந்த உயிரானது விட்டுநீங்காத பாபங்களை முற்றுநீக்கி அடைகிறதற்குத் துர்லபமான மோக்ஷத்தை யடைந்ததென்று சொல்லும்படி,தேகமாகிய சுமைகள் சந்தோஷத்தாற் கூத்தாடுகிறதைப்போல இராக்ஷசக் கவந்தங்கள்கூத்தாடின. நாற்பத்தெண்ணாயிரம் வீரர்களிறந்தால் ஒரு கவந்தம் கூத்தாடுமென்கிற பிரமாணம் யதார்த்தமே: அது யதார்த்தமாதலால் கோடிக்குமேலாகக் கவந்தங்கள் கூத்தாடினபோது இறந்தவீரர்களுடைய தொகை இவ்வளவென்று எவராலாயினும் சொல்லிமுடியுமோ? ஒருகாலத்து முடியாது. இயானையினிரத்தப் பிரவாகமும், இராக்ஷசர்களுடைய உதிரவெள்ளமும், மற்றக் குதிரைக்கூட்டத்தின் செந்நீராறும், காட்டிலு மலையிலும் பெய்த மேகவருஷங்களாலுண்டாகிய பெருவெள்ளத்தைப்போலப் பரந்தோடி; தெய்வீகமாகிய நதியைப்போலச் சமுத்திரத்தில் விழுந்தன.

இலட்சுமணருடைய பாணங்கள்பட்டுத் தலைகளறுந்த அனேக யானைவீரருடைய உடற்குறைகள், அந்த யானைக்கழுத்திலுள்ள கயிற்றிற் கால்கள் கோத்தபடியே அங்குசங்களைக் கையிற் பிடித்திருந்து அந்த யானைகளைக்கொத்தி யோட்டுகின்றன. பலமுள்ள பாணங்கள்பட்டுக் குதிரைவீரர்களுடைய தலைகள் அறுந்தும் கீழேவிழாமல், முண்டங்கள் கையில் வாளைப்பிடித்துக் குதிரைமே லிருந்தபடியே கூத்தாடின. ஸ்ரீமத் வேதமார்க்க மகாரிஷிகளுடைய சாப வார்த்தைகளைப் போன்ற பாணங்கள் தேர்வீரர்களுடைய தலைகளையறுத்து நீக்கிவிடவும், அம்முண்டங்கள் முன்பு தாம் பிடித்து வளைத்து அம்புதொடுத்துக் கொண்டிருந்த கையோயாமல் அதிவேகமாய்ப் பாணப்பிரயோகம் பண்ணிக்கொண்டே யிருந்தன. சீதாபிராட்டியாரென்கிற ஒருயமனை இராக்ஷசர்கள் தேடிக்கொண்டு, தங்களையும் - தங்கள் தந்தைகளையும் — தமையன்மாரையும் - தம்பிமாரையும் — குமாரர்களையும் — பேரர்களையும் - மருமகர்களையும் — சண்டமாருதக் காற்றைப்போல அதிவேகமாய்ச் செல்லும்படியான இளையபெருமாளுடைய ஒரேபாண முருவிக்கொண்டு போக, அதில் அவர்கள்யாவரு மாண்டுபோனார்கள்.

இலட்சுமணராற் பிரயோகிக்கப்பட்ட பாணங்கள் பாய்ந்து அறுந்து உருண்டுகிடக்கின்ற பெரியதலைகளைக் கழுகுகளிற் சில கவ்விக்கொள்ள, அவைகளில் வைத்திருக்கிற ஆசையால் வேறே சிலகழுகுகள் சகியாமல் கோழிகளைப்போல ஒன்றோடொன்று எதிர்த்துச் சண்டைசெய்தன. ஆயிரக்கணக்காகவும் ஆயிரகோடிக் கணக்காகவும் வருகின்ற அக்கினிமுகபாணங்கள் மனோவேகமாய்ப் போய்ப் பாய்கின்றபடியினாலே இராக்ஷசர்களுடைய உடல்கள் மாய்ந்து நசிக்க, அவ்வுடல்களிலுள்ள உயிர்களைப் பிடிக்கிறதற்கு யமதூதர்களும் ஓடியோடிக் கால்கள் ஓய்ந்துபோகின்றார்கள். இலட்சுமணருடைய பாணங்களால் மேருமலையையு மசைக்கும் வல்லமையுள்ளவர்களான ராக்ஷசர்கள் உடற்சுமை நீங்கி மாண்டு துடிக்கின்றதைத் தேவர்கள்கண்டு, இளையபெருமாளுடைய வல்லமைக்காகத் தங்கள் தலைகளைக் குலுக்கினார்கள். இராக்ஷசர்களுடைய பிணமலைகளின் பாரத்தாற் பூமிதேவியு முதுகுநெளிந்து வருந்துகின்றவளாயினாள்.

இலட்சுமணருடன் தாருகன் வந்தெதிர்த்து மடிதல்.

கவி.

தாருகனென்றுள னொருவன்றானெடு
மேருவின்பெருமையா னெரியின்வெம்மையான்
போருவந்துழக்குவான் புகுந்துதாங்கினான்
தேரினன்சிலையின னுமிழுந்தீயினன்.

இவ்வண்ணம் இலக்ஷுமணரால் அநேகராட்சசக் கூட்டங்கள் படிவதை, நீண்டுயர்ந்த மகமேருவைப் போலுங் தேகத்தையும் ஊழித்தீயைப்போலுங் கோபத்தையும் யுத்தஞ்செய்வதிலேயே சந்தோஷ மனத்தையும் நவரத்

னகசித்தமாகிய தேரையுடையவனும் பொற்கட்டுகளணிந்த பருத்தவில்லையுடையவனுமாகிய தாருகனென்று சொல்லப்பட்ட ஓரரக்கன்வந்து யுத்தகளத்தில் இலக்ஷுமணப் பெருமான் முன்பு இராக்ஷசச் சேனைகளே அஞ்சாதேயுங்களஞ்சாதேயுங்களென்று சொல்லி அவ்விளைய பெருமாளோடெதிர்த்து, அக்கினிமயமான அனேக அம்புகளைப் பிரயோகித்தான். அவைகளெல்லாம் அவன்முன்னாற் பெற்றிருந்த வரங்களைப்போல ஆகாசம்பூமி முழுவதும் எள்ளிடவும் இடமில்லாமல் மூடிக்கொண்டன. அவைகளை இளையபெருமாள் அதிதீக்ஷணமான சிலபாணங்களால் இருந்தவிடம் தெரியாமற் போகப்பண்ணினார். அந்தப் பாணங்களில் ஒன்று அவனுடைய தலையையு மறுத்துவிட்டது. அந்தப் பருத்த தலையானது வெகுவேகமாய் மலையிலிருந்து மேகமெழும்பினதுபோல ஆகாசமார்க்கத்திற்போயும் கர்ச்சித்தது. அந்தச் சப்தத்தைக் கேட்டு அவனுயிரைப் பிடிக்கும்படிவந்த தூதர்களேயல்லாமல் யமனும்பயந்தான்.

காலன் முதலியவர்கள் இலக்ஷுமணரோ டெதிர்த்து மடிதல்.

கவி.

காலனுங்குலிசனுங் காலசங்கனும்
மாலியுமருத்தனு மருவுமைவரும்
சூலமுங்கணிச்சியுங் கடிதுசுற்றினர்
பாலமும்பாசமு மயிலும்பற்றுவார்.

இப்படி யவனிறந்தபிறகு காலனென்பவனும் — குலிசனென்பவனும் - காலசங்கனென்பவனும் —மாலியென்பவனும் - மருத்தனென்பவனும் - கணிச்சியென்பவனும் - வெகுவேகமாய்வந்து, இலக்ஷுமணரை எதிர்த்துத் துர்ப்பாஷைகளைப்பேசி, சூலாயுதத்தையும் - வேலாயுதத்தையும் — பாசத்தையும் - அடுக்கடுக்காய்ப் பிரயோகித்தார்கள். அப்படி யவர்கள் எறிந்தவைகளும் வீசினவைகளுமான அனேக ஆயுதங்களை யெல்லாம் இலட்சுமணர் துண்டுதுண்டாக்கி, அந்தத் துஷ்டர்களுடைய பெரியதலைகளையு மறுத்து, அவர்களுக் குதவியாகவந்த ரதகஜதுரக பதாதிகளையும் சின்னபின்னமாய்ச் சிதறிப்போகும்படிச் செய்தார். அந்தச் சமயத்தில் அதிகாயனுடைய சேனைவீரர்கள் ஐம்பத்தாறுயிர மதயானைகளைச் செலுத்திக்கொண்டு இலட்சுமணரைச் சூழ்ந்து, அவரவர்கள் பலபல ஆயுதங்களை மேகவருஷம்போல வருஷித்தார்கள். அன்றியும் - வானரசேனைகளி லொருவராவது அப்பாலிப்பாற் போகவொட்டாமற் சூழ்ந்து, பெருங்கூட்டமான மலைகளைப் பெருங்கைகளிற்கொண்டு வீசியெறிந்தும் — ஆயுதங்களால் நொறுக்கியும்—கர்ச்சிப்பினாற் கலங்கிப்போகும்படிச் செய்தும் ஆர்ப்பரித்தார்கள்.

இவ்வாறந்த ராக்ஷசவீரர்களாலே எறியப்பட்டவைகளும் எய்யப்பட்டவைகளுமான மலைகளும் — ஆயுதங்களும் - இடியோசை யுண்டாகும்படி ஒன்றையொன்று கிட்டித்தாக்கி, அதிவேகமாய்ச் சமுத்திரம்பொங்கி வந்தது

போலவும், யுகாந்தகாலமேக மூடிக்கொண்டது போலவும், லோகமுழுது நெருங்கிய படியால்; பூமி ஆகாசம் திக்குகளெல்லா மறைந்துவிட்டன.

இலக்ஷுமணர் அதிகாயனுடன் வந்த அறுபதினாயிர மதயானைகளை அதமாக்கல்.

கவி.

அப்படையனைத்தையு மறுத்துவீழ்த்தவர்
துப்புடைத்தடக்கைக ணிைத்துச்சுற்றிய
முப்புடைமதமலைக் குலத்தைமுட்டினான்
எப்புடைமருங்கினு மெரியும்வாளியான்.

யுத்தகளத்தில் நின்ற இராட்சச வீரர்களின்மேல் இப்பக்கத்திலிருந்து தான் வருகின்ற தென்பதன்றி எப்பக்கத்திலு மிருந்து அக்கினிச் சுவாலையை வீசிக்கொண்டு வரும்படியாகிய பாணங்களைப் பிரயோகித்த் பிரசண்ட உத்தண்டவீரப் பிரதாபசாலியாகிய இலக்ஷுமணப் பெருமான் இராட்சசவீரர்களையெல்லாம் இயமபுரிக்குக் குடியேற்றி அவர்களுடன் வந்த யானைப் படைகளைச் சங்கரிக்கும்படி அவைகளின்மீது பாணப் பிரயோகஞ்செய்து ஆயுதங்களைப் பிடித்துக்கொண் டிருக்கின்ற கைகளைத் துண்டுதுண்டாக்கி, கன்னமதம் — கபோலமதம் — பீஜமதம் — என்கிற மும்மதங்களைப் பொழிகின்ற மலைபோலும் பருத்த யானைகளுடைய தந்தங்களும் துதிக்கைகளும் அற்று, வலியதலைகளும் அறுந்து மேகங்களைப்போலச்சுருண்டு வீழும்படிச் செய்தனர். இவ்வண்ணம் இலக்ஷுமணர் ஒவ்வொருயானைக்கு ஒவ்வொருபாணம் பிரயோகிக்கவே இடி விழுந்ததைப்போல் அந்தப் பாணங்கள்பட்டு யானைக்கழுத்தின்கயிற்றில் மாட்டியிருக்கின்ற பாகர்களுடைய இரண்டுகால்களுமற்று, மேலிருந்து ஆயுதப் பிரயோகஞ்செய்கின்ற ராக்ஷசர்களு மடிந்து கீழேவிழுந்தார்கள். அந்த யானைகளு மதங்களைப் பொழிந்துகொண்டு மலைகளைப்போல விழுந்தன.

இடிபோல் முழங்குகின்ற வல்லமையுள்ளவைகளாகிய கூரியபாணங்கள் நுழைந்து முதுகி லுருவினபடியினாலே, சிலயானைகள் மேற்றவிசும் அத்தவிசை யிறுக்கிய கச்சுவார்படிந்த மார்பும் பிளப்புண்டு மதங்களைப் பொழிந்துகொண்டு, திக்குத்திக்குகள்தோறுங் கருமலைகளைப்போல்விழுந்துகிடந்தன. கொடிகளை முறித்து அங்கங்கேபற்றி யெரியும்படிச் செய்கின்ற அக்கினியாஸ்திரங்கள் யானைகளெங்கேயென்று தேடிக்கொண்டுபோகின்றபடியால், அந்த யானைகளறுபட்டு அவைகளைச்செலுத்தினவர்களுடைய தலைகளு மறுபட்டன. அதனால் கண்குழிந்தபேய்கள் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டுமென்று" சும்மாயிராமல், தங்களுக்கு வேண்டியமட்டும் பிணங்களைக்கொள்ளைகொள்ளையாய் வாரிக்கொண்டன. இலக்ஷுமணர் பலங்கொண்டு விடுகின்ற பாணங்கள் மழையினு மிகுதியாகவந்து படுகின்றபடியால், இடிவிழுந்த மலைகளைப்போலக் கூட்டங்கூட்டமாக உருளுகின்ற யானைகளினுடைய ரத்த

வெள்ளமானது கறுத்த யானைக்கூட்டத்தோடு சிவந்தநிறமுள்ள யானைக்கூட்டம் போரிட்டது போலக் கடலிற்போய் விழுந்தன.

சிலயானைகள் தங்களைச் செலுத்தும் பாகர்கள் மாண்டபடியால் ஒழுங்காய்ச் செல்லாமல், ஆலகாலவிஷத்தையு மிடியையுமொத்த கோபத்தையும் ஓசையையு முடையவைகளாய் மதமேறி வெறிகொண்டு, மதஜல மழைபோலச்சொரிப ஒன்றோடொன்று எதிர்த்துச் சண்டை செய்தன. இவ்வாறு சுமுத்திரைபெற்ற இளஞ்சிங்கம் பாணங்களையெய்து தும்சப்படுத்துவதினால் சில யானைகள் கால்களற்றன. சிலகஜங்கள் துதிக்கையிற்றன. சிலதந்திகள் வால்களறுந்தன. சிலகரிகள் குடல்சரிந்தன. சிலகுஞ்சரங்கள் தோல்வழுக்குண்டு போயின. சிலவேழங்கள் மழையைப் போல வீறிட்டன. சில சிந்துரங்கள் வளைதடிகளைப் போன்ற தந்தங்களொடிந்தன. இராக்ஷசவீரர்கள் எட்டுத்திக்குகளிலு நிறைந்து பதினாறுவகையான ஆயுதங்களையும் அவரவர்கள் விட்டது விட்டபடியே இலட்சுமணர் பாணங்களால் அறுந்தார்கள். அவர்க ளாயுதங்களு முறிந்தன. இப்படி தீயைச்சொரிகின்ற கண்களையுடையவர்களாயும், பெரிய தேககாத்திர முள்ளவர்களாயும், கோபமுற்ற வீரவார்த்தைகளைப் பேசுகின்றவர்களாயும், இலட்சுமணர்மீது கடல்புரண்டு வருவதுபோலவந்த ஐம்பத்தாறாயிரம் வீரர்களும் அவரவர்களுடைய மதயானைகளோடு மாண்டார்கள்.

அதுகண்ட அனேக துஷ்டராக்ஷசர்கள் அறுபத்தாறாயிரம் யானைகளை அக்கினியைப்போலச் செலுத்தி, அனேக சித்திரவிசித்திரமாக அஸ்திரப்பிரயோகம் பண்ணி, கொல்லுகின்ற வீரத்தொழிலையுடைய லக்ஷ்மணரைப்பார்த்து, இனியிந்த யானைகளை உன்னுடைய அஸ்திரங்களாற் கொல்லுக பார்க்கலாமென்று சொன்னார்கள். மேகங்களினாலே மூடப்பட்ட செவந்தகிரணங்களையுடைய சூரியனைப்போல அந்த யானைக்கூட்டங்களுக்குள் மறைந்துவிளங்கிய வீரசிகாமணியாகிய இளையபெருமாள், இந்திரதனுசுக்குச் சமானமாகிய தமது வில்லைவளைத்தார். வளைத்தமாத்திரமே யானையாகிய மேகங்களெல்லாம் சிதறுண்டு, தலையுங்காலு நடுக்கங்கொண்டு பூமியில் விழுந்தன. யோக மிகுதியால் செவியடியில் மதமழையைப் பொழிகின்றவைகளும், மலையையும் கடலையுமொத்த தேகங்களையுடையவைகளும், கண்களில் திரள்திரளாக நெருப்பைச் சொரிகின்றவைகளுமாகிய சிலயானைகள் முதுகுபிளந்தன. சில மஸ்தகந்திறந்தன. சிலபலம்பொருந்திய துதிக்கையற்றன. இப்படிப் பலவாறாகச் சின்னாபின்னப்பட்டும் தமக்குண்டாகிய மதமொழியாது பொழிந்தன.

சிலயானைகள்- தன்னளவுக்குள்ளாகவே அலைகளை வீசிக்கொண்டிருக்கின்ற சமுத்திர நீர் ஊழிக்காலச் சண்டமாருத மோதுவதினால் கரைபுரண்டுவருவதுபோல எண்ணுக்கடங்காமல் பலங்கொண்டு விசையாகப் புறப்பட்ட பாணங்கள் முகபடாமணிந்த மஸ்தகத்திற்பட்டுருவ, பூமியிற்பெய்கின்ற மேகஜலத்தைப்போல மதஜலத்தைப் பொழிந்துகொண்டே மாண்டன. சிற

குகளுடனே மிகுந்தவேகமாய்ப் பறந்துகொண்டிருந்த பருத்தமலைகள் தேவேந்திரன் கூர்மழுங்காத வச்சிராயுதத்தினால் வீசப் பக்கங்களிற் பறந்து போவதற்கிசைந்த சிறகுகளற்று விழுந்தாற்போல, மூன்றாம்பிறைச் சந்திரனுக்கொப்பாக நெற்றியில் அர்த்தசந்திரபாணம்பட்டுச் சிலயானைகள் மடிந்தன. சூரியனுக்குச் சமமாகிய பாணங்கள்பட்டுங் கோபமாறாமல் வேகமாய்க் குமுறுகின்ற மேகத்திற்கொப்பாய் கர்ச்சிக்கின்ற அநேகயானைகள் ரணக்களத்திற் பின்வாங்காமல்நிற்கின்ற, அளவிறந்தயானைகள் தங்கள்வலிவு குன்றி மஸ்தகங்கள் பிளப்புண்டு அவற்றில்நின்று மொழுகி அலைமோதியோடுகின்ற சிவந்த ரத்தப்பிரவாகத்தில் மலைகளைப்போல முழுகிக் கடலிற்போய் விழுந்தன.

சிலயானைகள் தங்கள்கண்களிற் கூர்மையான பாணங்கள்வந்து தைக்கிறதைக்கண்டு இவ்வளவவ்வளவென்னாத கோபத்துடனே கும்பற்கும்பலாக பூமியும் பொடிப்பொடியாய் நெரிந்து போகும்படித்திக்குத்திசை தெரியாமலோடி, இராட்சசசேனா சமுத்திரத்தை மிதித்து உழக்கிவிட்டன. இளைய பெருமாள் ஒருபிரயோகத்தில் ஆயிரங்கூர்மையான பாணங்களைமேகம்பொழிகின்ற ஆயிரந்தாரைகள்போல எய்வதினால், அப்பாணங்கள் பாய்ந்து இரண்டாயிர மதயானைகளிறந்து விழுமேயானால் அவருடைய கரவேகசரவேக வில்வித்தையை ஆராய்ந்து நிச்சயிப்பதற்குத் தேவர்களாலு முடியுமோ? தேர்கள்முறிந்து, யானைகளறுந்து, சண்டைசெய்கின்ற கோபமுள்ள வீரர்களிறந்து, விசயலட்சுமி கீர்த்தனஞ்செய்கின்ற ரணக்களத்திற் குதிரைக்கூட்டங்கள் பொரிந்து, இவையெல்லா நான்குபக்கத்திலு மோதுகின்ற யானையினிரத்தப் பிரவாகத்தில் அகப்பட்டு, அப்புறமிப்புறம் போகாமல் போர்க்களத்திலே தேங்கி நின்றுவிட்டன.

இப்படி அறுபதாயிர மதயானைகளும் ஒருநாழிகை செல்வதற்குள்ளே துண்டுதுண்டாய்ச் சிதைந்து குவியல் குவியலாகக் கிடந்தபடியினாலே, உலகத்தாரா லிவைகளெல்லா மலைகளோ? யானைப்பிணக் கூட்டமோ? என்றறியக் கூடாதவைகளா யிருந்தன. இப்படி கோடிக்குமதிகமாகவந்த யானைகளெல்லாம் இளையபெருமாள்விட்ட பாணங்களால் ஒருமிக்க வழிந்துபோனதைக்கேட்ட இராவணன் பின்னும் பிரத்தியேகமாயிருந்த ஒருகோடியானைகளை அந்த அதிகாயனுக்குத் துணையாகவனுப்பினான். முன்னமொருகோடி யானைகள்பட்டு வருகின்றவழியெல்லா மதநீர் ஆறாய்ப் பெருக்கெடுத்தோட, இப்போதுவந்த யானைகளை இடியையொத்த அம்புகளைப் பொழிகின்ற இரண்டுகுதைையுடைய இந்திர தனுவுக்குச் சமானமானவில்லைக் கையிலேவைத்திருக்கின்ற வெற்றிபெற்ற சிம்ஹத்திற்கொப்பாகிய இளையபெருமாளுக்கு முன் இராக்ஷசவீரர்கள் செலுத்திக்கொண்டுவந்தார்கள். இந்தலோகத்திலெத்தனை மலைகளுண்டோ அத்தனையையும் உருவத்தால் தோற்கடிக்கின்றவைக

ளும் ஒன்றுக்கொன்று ஒப்பானவைகளுமான அந்தயானைகளெல்லாம், இலட்சுமணரைவந்து கும்பற்கும்பலாய் நாலுபக்கமும் சூழ்ந்துகொண்டன.

இவ்விதமாய்வந்து சூழ்ந்துகொண்ட அளவில்லாத வடவாமுகாக்கினியைப்போலக் கோபிக்கின்ற யானைகளெல்லாம் அவருடைய வில்லிலிருந்து புறப்பட்டபாணங்களாற் சில தலையற்றனவும், சில காலற்றனவும், சில உடல் பிளந்தவைகளுமாய் மாண்டன. முப்பத்தாறுயோசனை தூரமட்டு நான்கு திசைகளிலு மதயானைகளினுடைய சஞ்சாரமே யாகிவிட்டதென்று யாவரும் பயந்தார்கள். வானரக்கூட்டமெல்லா நசுங்கிக் குழம்பி அந்தப்பூமியே வேறுபட்டுப்போய் விட்டது. பேய்க்கூட்டங்கள் வால்பக்கமிது; தலைப்பக்கமிது: என்றுதெரியாமல் யானைப்பிணங்களை மலைகளைத் தூக்கிக்கொண்டு போகிறதுபோலத் தூக்கிக்கொண்டு போயின. பக்கங்களில் அலை வீசிக்கொண்டிருக்கின்ற ரத்தக்கடலுடனே சிதைந்துமாண்டுபோன சேனைகளை வாரிக்கொண்டு மதஜலவாறுகள் பலபலவாய்ப் பாய்ந்தன. இலட்சுமணர் ஒருபாணத்திற்கு ஒருயானை இறந்து விழும்படியாக, இடியைப்போன்று அக்கினியைக் கக்குகின்றவைகளும் - யமனைப்போன்றவைகளும் — முருகனது வேலுங் கண்டு நாணத்தக்கவைகளும் - கடலையும் வற்றடிப்பவைகளுமான பாணங்களால், மேகம்போல மதஜலத்தைப் பொழிகின்ற யானைகளைப் பதினாயிரம் பதினாயிரம் ஒவ்வொரு பத்தியாகக்கொன்றார்.

இந்தப்பிரகாரமாக இளையபெருமாளுடைய பாணங்கள் யானைகளைத்தேடித்தேடிக் கொல்லுகின்றதைக்கண்டு நாமுமவ்யானைபோற் காணப்படுகிறோமே ஆதலால் நம்மையும் அப்பாணங்கள் துளைக்குமோ என்கின்ற பயத்தினால்மலைகளும் ஏங்கின. யானைபோலக்கறுத்துக் காணப்படுகின்ற மேகங்களு நடுங்கின. சோலைகளும் அஞ்சின. மற்றப் பெரியபொருள்களும் தங்கள் நிலைமாறின. திக்கஜங்களும் தங்கள் ஸ்தானம்விட்டு நழுவின. கடலலைகளும் துடிதுடித்தன. சிவபுத்திரராகிய ஐந்துகையுள்ள விநாயகரும் தாம் யானையுருப்பெற் றிருக்கின்றமையால், இராமாநுஜருடையபாணம் தம்மையுங்கொல்லுமோவென்று திடுக்கிட்டாரென்றால், மற்றவைகளைப் பற்றிப் பலவாறு சொல்லவேண்டிய தென்ன ? விற்குதைகளிற் பூட்டியிருக்கின்ற நாணோசையானதுகடலைத்ததளிக்கும்படிச்செய்து,சுவர்க்கலோகமெல்லாம் நடுநடுங்கிக் கிடுகிடாய்த்துவிட்டது. அந்த வில்லிலிருந்து புறப்பட்டபாணங்கள் வேகமுள்ள ராட்சச வீரர்களுடைய தலைகளிலும் உடல்களிலும் உருவின. அந்தப்பாணங்கள்பட்டு மத்தகஜங்கள் இடிவிழுந்த மலைகளைப்போல் அடிசாய்ந்துவிழுந்தன.

இலட்சுமணருடைய பாணங்கட்குத் துணையாக ஆஞ்சநேயரும் யானைப்படைகளைக் கொல்லல்.

கவி.

இவ்வேலையிலனுமான்முத லெழுவேலையுமனையார்
வெவ்வேலவர்செலவேவிய கொலையானையின்மிகையைச்

செவ்வேயுறநினையாவொரு செயல்செய்குவனென்பான்
தவ்வேலெனவந்தானிவன் றனிவேலெனத்தகையான்.

இப்படிப்பட்ட சமயத்தில் ஆஞ்சநேயர் வந்து, ஏழுசமுத்திரம்போல் உங்களாலேவிய யானைகளில் எங்களிளையபெருமாள் கொன்றதுபோக மிகுந்துள்ளயானைகளெல்லா மடியத்தக்க ஒருசெய்கையை நானொருவனே செய்கிறேன். ஓ இராட்சசவீரர்களே! துள்ளிக்குதியாதேயுங்கள். என்று சொல்லி வேல்பாய்வதுபோலப் பாய்ந்து, வீரகர்ச்சனைசெய்து, கண்களில் தீப்பொறி பறக்க ஒரு பெரியமதயானையைப் போலக் காணப்பட்டு, பிரமேந்திராதி தேவர்முதலியோரை உபத்திரவம் செய்துகொண் டிருந்த இரணியன்முதலிய அசுரவர்க்கங்களை நாசமாக்கும்படி அவதரித்த ஆகிநரசிம்ஹம்போல அதிக உக்கிரங்கொண்டு, ஸ்ரீராமநாமஸ்மரணைபண்ணி, யமதண்டம்போன்று வளர்ந்திருந்த ஒருமராமரத்தைப்பிடுங்கி, இருப்புத்தடிபோலும் நீண்ட துதிக்கைகளையுடைய மதயானைகளெல்லாம் ஒருமிக்கமாளும்படியாக ஊழிக்காலத்திற் பெரும்பூதங்களும் உகாந்தகால மேகமும் கலந்தழிக்கும்போது மலைகளின்மீது பேரிடிவிழுவதுபோலச் சாடினார்.

அப்படிச் சாடுகிறகாலத்தில் தம்முடைய கால்மிதியிற் பலயானைகளும், நடக்கும்விசையிற் பலயானைகளும், வல்லமையிற் பலயானைகளும், உதையிற் பலயானைகளும், கால்தட்டுதலிற் பலயானைகளும், வாலாற் பலயானைகளும், வால்நுனியாற் பலயானைகளும், வாய்ச்சொல்லின் வேகத்தாற் பலயானைகளும், கைவீசுதலிற் பலயானைகளும், ஓரிடத்திலிருந் தோரிடத்திற் குதிக்கிறதினாற் பலயானைகளும், குத்துகிறதினாற் பலயானைகளு மாளும்படிக்கொன்றார். சிலயானைகளைப்பற்றி யிழுத்தும், சிலவற்றைப் பிளவுபிளவாகப்பிளந்தும், சிலவற்றை நகங்களாற்கீறியும், சிலவற்றைப் பனைமரத்தைப்பற்றி முறிக்கிறதுபோல் துதிக்கைகளைப்பற்றி முறித்தும், சிலவற்றைக் கையாற்குடைந்தும், சிலவற்றைக்கிழித்தும், சிலவற்றைத் துண்டித்தும், சிலவற்றைப் பல்லாற் கௌவியும், சிலவற்றை மத்திட்டுக்கடைவதுபோலக் காலாற்கடைந்தும், சிலவற்றைத் துண்டந்துண்டமாகக் கடித்தும், சிலவற்றைப்பற்றிக் குண்டுக்கட்டாகவளைத்தும், சிலவற்றை யொடித்தும், சிலவற்றினுடைய நீண்ட தந்தங்களைப் பிடுங்கியும் கொன்றார்.

சிலயானைகளைக் கைகளினால் வாரிவாரிச் சமுத்திரத்திலெறிந்தார். சிலயானைகளை இழுத்துச்சுற்றி யலையச்செய்து உருட்டினார். சிலயானைகளைப் பூமியிற்போட்டு அரைத்துவிட்டார். சிலயானைகளைப்பிடித்துப் பூமியிலறைந்தார். சிலயானைகளைக் குடலைப்பிடுங்கினார். சிலயானைகளைச் சுவர்க்கலோகத்தில் விழும்படி வீசினார். சிலயானைகளை மிதித்துத்துவைத்தார். சிலயானைகளை முகத்திலுதைத்தார். அநேகயானைகளை மலைப்பாம்பைப்போல் தம்முடைய வாலினாலே சுற்றிவளைத்துக்கட்டி, பாகர்களுடனே வேகமாய் மலைமேல்மோதியடித்துக்கொன்றார். முன்னே தம்மேல்வந்த யானையைத் தோலுரித்துக்கொன்ற

சாக்ஷாது சிவபிரானே தாம் என்பதற்குத் திருஷ்டாந்தமாக, தம்முடைய பெரியவாயில் அநேகம் யானைகளைப்போட்டு குதப்பினர். இவ்வாறு ஒருக்ஷணப்பொழுதுக்குள் ஆயிரம்யானைகளைச் சிம்ஹத்தைப்போலக் கொன்றார்.

இப்படிக் கொல்லும்போதே சையபருவதத்திலுமுயர்ந்த நூறாயிரமத யானைகள் அதிகவேகத்துடனே ஆஞ்சனேயருக் கெதிராகவந்தன. அவைகளையெல்லாம் ஒருகணப்பொழுதுக்குள் உருமாய்த்து இன்னபொருளென்று தெரியவொட்டாமல், உழவுநிலத்துச் சேற்றைப்போலாகும்படித் துகைத்தார். இப்படி ஆஞ்சநேயர் க்ஷணப்பொழுதுக்குள்ளாக முன்னும்பின்னுமாகவந்த யானைகளில் இலக்ஷம்யானைகளுக்கு மேலாகவேகொன்றார். மற்றவைகளையெல்லாம் இளையபெருமாள் அர்த்தசந்திர பாணத்தினாற் கொன்றுவிட்டார். இதைக்கண்ட ராக்ஷசர்களெல்லாம் அதிகபயங்கொண்டு திக்குகள்தோறும் ஓட்டம்பிடித்தார்கள்.

தேவாந்தகனும் திரிசிரனும் ஆஞ்சனேயரோடேதிர்த்து மடிதல்.

கவி.

இரிந்தார்திசை திசையெங்கணும் யானைப்பிணமெற்ற
நெரிந்தார்களுநெரியாதுயிர் நிலைத்தார்களுநெருக்கால்
எறிந்தார்நெடுந்தடந்தேரிழிந் தெல்லாருமுன்செல்லத்
திரிந்தானொருதனியேநெடுந் தேவாந்தகன்சினந்தான்.

இந்தப்பிரகாரமாக ஆஞ்சநேயர் அநேக யானைகளையும் அவ்வானைமீதாரோகணித்த வீரர்களையும் திசாதிசைகளிலெறிந்து கொல்லக்கண்ட அதிரதவீரர்கள் சமரதவீரர்கள் மகரதவீரர்களாகிய தேர்வீரர்கள் தங்கள் தங்கள் தேரினின்றுங் குதித்து மனமெரிந்தவர்களாய் யானைப்பிணங்களெல்லாம் காலிற்றடுக்கும்படியாக அவ்வானை வீரர்களில் சிலரிறக்கவும், சிலருயிர் துடிக்கவுமாகின்ற கூட்டங்களில் புகுந்து புகுந்துஓடினார்கள். அவ்வண்ணம் யானைகளும் யானைவீரர்களும் மாண்டதையும், ரதவீரர்களோடுவதையும் திரிலோகங்களிலும் தனக்கு நிகரற்ற ஜெயப்பிரதாபசாலியான தேவாந்தகன் கண்டு இவ்வனுமானாலேயல்லவோ இவ்வண்ணமாயிற்றென்று கோபித்து அவருடன் எதிர்த்தான். இரத்தவெள்ளத்திலங்கங்கே பிணங்கள் மலைமலையாகக் குவியப்பெற்று அதிபயங்கரமாய்த் தோற்றுகிற அந்தரணக்களத்திலே தனித்தேர்விட்டுக்கொண்டு வந்து, அக்கினிக்குச் சமானமாகிய சிலபாணங்களை அனுமான்மீது பிரயோகித்துத் தேகத்தைச் சல்லடைக்கண்களாய்த் தொளைத்து இடியைப்போலக் கர்ச்சித்தான். அப்போது அனுமானும் ஒருபெரியமரத்தைப் பிடுங்கி, அடா தேவாந்தகா ! இதோ உன்னுயிர்போய்விட்டது. என்று அவன்மேல் விட்டெறிந்து அட்டகாசஞ்செய்து நின்றார். அதைக்கண்ட தேவாந்தகன் அக்கினியைப்போலப் பிரகாசிக்கின்ற கூர்மையான பாணத்தை எடுத்து, அந்த மரத்தின் வேகத்தையடக்கக்கடவாயென்று பிரயோகித்து, அதனைத் துண்டாக்கிவிட்டான்.

அதைக்கண்ட வானரகுலத்திலொரு சிங்ஹம்போலிருக்கின்ற அனுமான் வேறொருமலையைப் பிடுங்கிஎறிய, அதுதன்மேற்பட வரும்போது தேவாந்தகன் அந்தமலையைப் பாணத்தாலுடைத்துவிட்டுச் சந்தோஷித்தான். அப்போது ஆஞ்சநேயர் அதிககோபங்கொண்டு, வில்லிலம்பைப் பூட்டிக்கொண்டிருக்கின்ற அந்தத் தேவாந்தகன்மீது புறாவின்மேல் இராஜாளிபாய்வதுபோற்பாய்ந்து, அவன்கையிற் பிடித்திருந்த பெரியவில்லைப்பறித்துத் தேவர்களெல்லாம் பல்லாண்டு கூறும்படி அநேகதுண்டுகளாக முறித்தார். அவருடைய வல்லமையைக்கண்டு வெகுகோபமாய்த்தேவாந்தகன் ஒரு தோமராயுதத்தையெடுத்து, தேவர்கள் பயப்படும்படி அவ்வனுமானுடைய இடதுதோளில் பிரயோகித்துக்கர்ச்சித்தான். ககனவாசிகளாகிய தேவர்களும்பார்த்து இவ்வாயுதத்தால் அனுமான் இறந்துவிடுவானென்றே பயந்து மெய்ம்மறந்தார்கள்.

இவ்வண்ணம் தேவாந்தகன் தனது தோமராயுதத்தைப் பிரயோகித்தமாத்திரத்தில் பூவணிந்த கூந்தலையும், மயிலைப்போலுஞ் சாயலையுமுடையமாதர்களினது மாயவலையிற் சிக்காத ஜிதேந்திரியரான நமது தெய்வமாகிய ஆஞ்சநேயர் - ஊழிகாலத்திலெழுங் காலாக்கினியைப்போற் கோபித்தெழுந்து தன்புயங்களின்மீது தாக்கிய அக்கைவேலைத் தமது கரத்தாற் பிடித்து அவ்வுயுத்தகளமானது கலங்கிப் போகும்படியாக இடசாரி வலசாரி வலசாரி இடசாரியாகச் சாரிகை சுழன்று அத்தோமரத்தைக் கறகறவென்று சுழற்றி அத்தேவாந்தகனது தேரையும் அத்தேரை நடாத்தும் சாரதியையும் இடியேறு விழுந்ததைப்போ லடித்தார். அவ்வடிபடவே அவனிரதம் பொடிப்பொடியா யுடைந்துதிர்ந்தன. சாரதியும் மண்டைதிறந்து கீழ்விழுந்திறந்தான். சிந்தைகலங்கித் தவித்து மூர்ச்சித்த தேவர்களுங் கவலைநீங்கி முகமலர்ந்தெழுந்து அனுமானுடைய வீரப்ரதாபத்தைப் புகழ்ந்து போற்றினார்கள்.

கவி.

சூலப்படைதொடுவான்றனை யிமையாதமுன்றொடர்ந்தான்
ஆலத்தினும்வலியானும்வந் தெதிரேபுகுந்தடர்த்தான்
காலற்கிருகண்ணான்றன கையாலவன்கதுப்பின்
மூலத்திடைபுடைத்தானுயிர் முடித்தான்சிரமடித்தான்.

அப்போது அந்தத் தேவாந்தகன் ஒரு சூலாயுதத்தை யெடுத்துப் பிரயோகிக்கும்படி தொடங்கினான். அவனை ஆஞ்சநேயர் ஓரிமை கொட்டுமுன்னமே அவன்மேலெதிர்த்துப் பாய்ந்தார். காலகோடி விஷத்தைப் பார்க்கிலும் கொடியவனான அந்தத் தேவாந்தகனு மவனை யெதிர்த்துப் பாய்ந்தான். அனுமான் யமனுடைய தண்டாயுதத்துக்கொப்பான தம்முடைய கையால் அவன் பிடர்மூலத்தில் ஒரு குத்துக்குத்தி, அவனுடைய தலையை மடக்கி உயிரை யொடுக்கினார்.

அதை அதிகாய னெதிரேநின்று பார்த்துக்கொண்டிருந்து வடவாமுகாக்கினியைப்போற் சீறி, புண்ணிலிருந்து வழிவதுபோ லிருகண்ணிலிருந்து

இரத்தவெள்ளம் பொழியும்படியாக இப்போதே உன்னுயிரை யுண்டுவிடுகிறேன். உன்னையினி விடமாட்டேனென்று சொல்லிக்கொண்டே தன் தேரை வேகமாய் நடத்திக்கொண்டு அம்புவருவதுபோல வந்தான். அனுமானும் அப்படியே சலியாமல் நின்றார். அந்த அதிகாயன் வரும்போது முன்னிட்டசேனை பின்னிடவும், பின்னிட்டசேனை முன்னிடவும், பிரிந்து நின்றவர்களெல்லாம் ஓடிவந்து ஒன்றாய்ச் சேர்ந்தார்கள். இப்படி அதிகாயன் மேருமலைபோலே யிருக்கின்ற அனுமானைவந் தெதிர்த்து, பொன்மலையையு முறிக்கும் வல்லமையோடு தோன்றி இதனைச்சொல்லுகின்றான்.

ஓ வாயுபுத்திரனென்னும்அனுமானே! நீ என்னுடைய தம்பியாகிய அக்ஷகுமாரன் தனித்துவர அவனை, வெட்டாந்தரையிற் போட்டுத்தேய்த்துநசுக்கிக்கொன்றுவிட்டு, கடலைத்தாண்டி யோடிப்போய்விட்டபடியினாலே தப்பிப்பிழைத்துப் போனாய். இப்போது வந்து நடுவேநுழைந்து தேவாந்தகனையும் கொன்றாய். அதைப்பார்த்து உன்னை யானெதிர்த்து வந்தேன். உனக்காயுள் நாள் முடிந்துவிட்டபடியால் இன்றைக்கு அகப்பட்டாய். இன்றையதினம் நீ தப்பினால் இனி என்றைக்கும் உன்னோடு நானெதிர்க்கிறதேயில்லை. நீ பெங்களை அனேகவிதமாய் வருத்தப்படுத்தி யிருக்கின்றாய். இந்த லக்ஷுமணனையும் உன்னையும் வியர்த்தமாய்ப்போகாத என்பாணவருஷத்தால் வெற்றிபெற்றுக் கொன்றாலல்லாமல் நான் திரும்பிப்போகின்றதில்லை. இதை நீ கெட்டியாய் நம்பு. இந்த வார்த்தை தப்பமாட்டாது: தப்பமாட்டாதென்று தன்னிரண்டு கையையும் பிசைந்து மேகம் கர்ச்சித்தது போலச் சப்தித்துச் சிரித்தான்.

அதற்கு ஆஞ்சனேயர்-ஓ குகையிலிருக்கின்ற சிம்ஹத்தையொத்துவலிகூறிவந்தஅதிகாயனே! என்னை அப்படியே நீகோபிக்கலாம். உன்பின்னேநிற்கின்றதிரிசிரனென்பவனையும் நான் உன்னோடுகூடவேபூமியிற்போட்டரைத்துவிடும்படியாகக் கூப்பிடலாமென்று சொன்னமாத்திரத்தில், அத்திரிசிரனென்பவ னதுகேட்டு, ஆம்: ஆம்: நீ சொன்னது மெய்தானென்று கோஷித்துக்கொண்டு அவரெதிரேவந்து சேர்ந்தான். சாம்பசிவமூர்த்தியையொத்த ஸ்ரீராமதூதராகிய ஆஞ்சனேயர் அவ்விருவர்களுடனே எதிர்த்து; உங்களிற் சாகாதவர்களெல்லாம் பலமுள்ளவர்கள்தானென்று சொல்லிக்கொண்டு வாய்மென்றபடி பக்கத்தி லிருக்கின்றவர்களுக்குள்ளே நுழைந்துபோனார்.

கவி.

தேர்மேற்செலக்குதித்தான்றிரி சிரத்தோனையோர்திறத்தால்
கார்மேற்றுயில்மலைபோலியைக் கரத்தாற்பிடித்தெடுத்தான்
பார்மேற்பதித்தரைத்தானவர் பழிமேற்படப்படுத்தான்
போர்மேற்றிசைநெடுவாயிலி னுளதாமெனப்போனான்.

அவ்வண்ணம் பக்கத்தில் எமனுடைய பாசத்திற் கெதிர்பார்த்திருக்கின்ற சேனைகளில் நுழைந்தவராகிய அநுமார் திரிசிரனுடைய தேர்மேற்பாய்ந்

து குதித்து, கறுத்தமேகங்கள் மூடிக்கொண்டிருக்கின்ற மலையையொத்த அந்தத் திரிசிரனைத் தம்முடையபலத்தாற் பிடித்துத்தூக்கிப் பூமியின்மேற் போட்டுக் காலால்மிதித்தரைத்து, அவ்விராக்ஷசர்களுடைய பழியை வாங்கும்படியாகக்கொன்று, மேற்குவாசலிலும் போர் நடக்கின்றதென்றுகேட்டு ஒரு இமைப்பொழுதுக்குள்ளாக அவ்விடம்போய்ச் சேர்ந்தார்.

அப்போது அதிகாயன் நின்றபடியேநின்று இன்னது செய்யவேண்டுமென்பதும் தெரியாமற் கண்களிற் செந்நீருந்தீயும் சொரியும்படியாகப் பரிதபித்துக் கோபித்து, இந்த அனுமான் எதிர்த்து நிற்பானேயானாற் பார்வதியை இடப்பாகத்திலுடைய ருத்திரமூர்த்தியு மெதிர்த்து நிற்கச் சக்தியுள்ளவனல்லனென்று சொல்லி அதிககோபத்துடனே கையை யசைத்து, நாமொரு காரியத்திற்குவந்து வேறொரு செய்கையில்நின்று முயல்கிறது வீரலக்ஷணமல்ல. மஹாவீரர்களுக்கெல்லாம் உயர்ந்தவீரனான இவனைப் பிறகுபார்த்துப் பேசலாமென்று தன்தேரை இளையபெருமாள்மீது செலுத்தும்படிச் சாரதிக்கு நியமித்தான்.

இலக்ஷ்மணர் தன்னுடன் வந்தெதிர்த்த அதிகாயனுடன் அங்கதன் முதுகி லாரோககணித்துப் போர்புரிதல்.

கவி.

தேரொலிகடலைச்சீறச் சிலையொலிமழையைச்சீறப்
போரொலிமுரசினோசை திசைகளிற்புறத்துப்பேரசத்
தாரொலிகழற்கான்மைந்தன் றானையுந்தானுஞ்சென்றான்
வீரனுமெதிரேநின்றான் விண்ணவர்விசயஞ்சொல்ல.

அந்தத் தேரோசை கடலொலியைக் கெடுக்கவும் - வில்லினோசை மேககர்ச்சிதத்தைக் கோபிக்கவும்—யுத்தசன்னாகத் தொனியும் பேரிகை முழக்கமும் அஷ்டதிக்குகளையுங் கடந்துபோகவும் – கிண்கிணிமாலை சப்திக்கும்படியாக வீரகண்டாமணியைத்தரித்த அவ்வதிகாயன் சேனைகளுந்தானுமாக வந்துநின்றான். தேவர்களெல்லாம் பல்லாண்டிசைக்கும்படியாக இளையபெருமாளும் அவனோடெதிர்த்து வந்து நின்றார்.

அதை வாலிபுத்திரனாகிய அங்கதன் கண்டு அதிவேகமாயோடிவந்து, ஓ வில்வீரர்களுக்குத் திலகம்போலிருக்கின்ற சுமித்திரை இளஞ்சிங்கமே! ஓ இராமானுஜரே! அதிகாயன் தேரின்மேலேறியிருக்கத் தேவர் பாதசாரியாய் அவனோடு நின்று யுத்தஞ்செய்வதழகல்ல. அடியேன் தேவரீருடைய திருமேனியைத்தாங்க வல்லமையற்ற அற்பனாயிருந்தபோதிலும், கிருபைசெய்து அடியேனுடைய தோளிலேறி யருளல்வேண்டுமென்று பிரார்த்தித்தான்.

கவி.

ஆமெனவமலன்றம்பி யங்கதனலங்கற்றோண்மேல்
தாமரைச்சரணம்வைத்தான் கலுழனிற்றாங்கிநின்ற

சோமகனுற்றனேக்கிக் குளிர்கின்றமனத்தராகிப்
பூமழைபொழிந்துவாழ்த்திப் புகழ்ந்தனர்புலவரெல்லாம்.

அதற்கு ஸ்ரீராமமூர்த்தியின் திருத்தம்பியாகிய இளையபெருமாள் நல்லதென்று, அவ்வங்கதனது வெற்றிமாலையை யணிந்த தோள்மீது தமது திருவடிக் கமலங்களைவைத் தேறியருளினர். பெரிய திருவடியாகிய கருடனைப்போல அங்கதன் இளையபெருமாளைத் தாங்கிநின்ற வல்லமையை நோக்கித் தேவர்களெல்லா மனங்குளிர்ந்து புஷ்பமாரி பொழிந்தார்கள். ஆயிரம் குதிரைகள்பூட்டி இடியைப்போலச் சப்திக்கின்ற அவ்வதிகாயனுடைய தேர்போன திசைகளெல்லாம் அங்கதனும் காற்றுஷியைப்போலச் சாரியோடுவான். அந்தத்தேர் மேலே எழும்பினல் தானு மேலே போவான். அதுகீழே இறங்கினுல் தானுங் கீழேவருவான். அஃதாகாசத்திற்போனுல் தானு மகாசத்திற் போவான்.

இந்தப் பிரகாரமாக அங்கதன் கடல்நீரெல்லாம் அக்கினிமயமாகக் கொதிப்பெழும்படிக் கலக்கினன். அந்தச் செய்கையைப் பார்த்த வானரவீரர்களெல்லாம் ஆனந்தமுற்று ஆர்ப்பரித்தார்கள். தேவர்களெல்லாம் இந்த அங்கதனுடைய செய்கை அந்தக் கருடபகவானுக்கு முண்டாயிருக்க மாட்டாதென்று தங்கள் கைகளைவிரித்தார்கள். பிறகு இளையபெருமாளுடைய சரமாரி அதிகாயனுடைய யானைகள்மீதும் குதிரைகள்மீதும் தைத்தன. இராக்ஷசர்கள் பக்ஷத்தில் மேககர்ச்சிதத்தினு மூன்று மடங்காகப் பேரிகை முழங்கின. வேணுநாதங்கள் கோஷித்தன. பெரிய தேர்களொலித்தன. குதிரைகள் அனுமானித்தன. தவளச்சங்கங்கள் தொனித்தன. வில்லின் குணத்தொனி அதிர்ந்தது. வீரகண்டாமணிகளும், இரத்னுபரணங்களும், கலகலவெனக் கலித்தன. வீரர்களுடைய அதட்டுதலும், அவர்களுடைய சிம்ஹநாதமுமிடியைப்போனு முழங்கின.

அப்போது அதிகாயனுடைய யானைகளிறக்கவும், பதாதிவெள்ளமாளவும், காற்றுக்கொப்பான குதிரைகள் மடியவும், இவைகளைப்பார்த்து யமன் பயப்படவும், தங்கமிழைத்ததேர்கள் எரிந்துபோகவும், இரணக்களமெல்லாம் வெளியிடமாகவும், அவ்விடத்தி லுள்ளவைகளெல்லாம் பொடிப்பொடியாய்விடவுமாக; இளையபெருமாள் பிரயோகித்த பாணம் பெருமாரியாய்ப் பாய்ந்தன. அப்போது திரிலோக நாயகராகிய ஸ்ரீரகுநந்தனருடைய திருத்தம்பியார் எதிரே நிற்கின்ற ராவணனுடைய மகனைநோக்கி, உன்னுடைய அபிப்பிராயமென்ன? உன்சேனையெல்லாம் சின்னபின்னப் பட்டுப்போனுற் போய்விடுகின்றயா? அப்படிக்கில்லாமற் சண்டைசெய்யத் தெரிந்து நீ மாத்திர நின்று என்னேடு போர்செய்கின்றையா? இவ்விரண்டில் உன்சம்மதமேது சொல்லென்று கேட்கவும், யமனைக்காட்டிலும் கொடியவனுன அதிகாயன் அவரைப்பார்த்துச் சொல்லுகின்றுன்.

ஓ இலட்சுமணா! என்னோடுகூட வந்தவர்கள் உன்னோடு சண்டைசெய்கிறவர்களல்ல. எதிர்த்திருக்கின்றவர்களைப் பார்க்கும்படியாக வந்தவர்களேயன்றி வேறல்ல. இப்போது போர்செய்வதெல்லாம் உன்பிணத்தைக் காக்கைகள்வந்து காக்கும்படிச் செய்யத்தான். நானுன்னைக் கூப்பிட்டதும் இதற்காகத்தான். ஆனதால் - உன்னை அந்தப் பார்வதியே காக்கட்டும், அல்லதந்தப் பார்வதியை இடதுபாகத்திலுடைய உருத்திரபகவானே காக்கட்டும். தேவர்களெல்லாம் காக்கட்டும். ஏழுலோகத்தவர்களும் காக்கட்டும். யாவர் காத்தபோதிலும் உன்னுடைய ஆயுசு இன்றோடு முடிந்துவிடுமென்று சொல்லித் தன் சங்கத்தைத் தொனித்து, மூங்கிலுருவங்கொண் டிருக்கின்ற யமனாகிய தன் வில்லினைவளைத்துக் குணடங்காரம் பண்ணி, இடியைப்போலச் சிம்ஹநாதமும் செய்தான்.

இப்படி அதிகாயன்சொல்லக்கேட்ட இளையபெருமாள் புன்சிரிப்புச்சிரித்து, நீ சொன்னபடியே எனக்கும் ஒருவர் துணைவரமாட்டார்கள். நானொருவனுமே உன்னோடு சண்டைசெய்து தோற்றாலும் தோற்கிறேன். என்னை நீ ஜெயித்துவிட்டாயேயானால், முன்பு நீ சொன்ன தேவர்களையெல்லாம் ஜெயித்தவனே யாவாயென்றுசொல்லி, மின்னலைப்போலப் பிரகாசிக்கின்ற ஒரு பாணத்தை வில்லில்தொடுத்துப் பிரயோகித்தார். அதை மலையையவமதிப்புச்செய்யும்படியான தோள்களையுடைய அதிகாயன் ஒரு அக்கினிபாணத்தைத் தொடுத்து ஆகாசத்திலேயே துண்டாக்கிவிட்டு, கண்ணில் விஷமுள்ளதான குக்குடசர்ப்பம் போன்ற பதினாறுபாணத்தைப் பிரயோகித்து, ஓ லட்சுமணா! இந்தப்பாணங்களை விலக்குக பார்ப்போமென்று கர்ச்சித்தான். இளையபெருமாளானவர் அவனெய்த பாணங்களையெல்லாம் தமது பாணத்தாலே முறித்துவிட்டு, மேருவையும்பிளக்கவல்ல பாணங்களை அநேகமாகப் பிரயோகித்தார்.

குபேரனை எதிர்த்து யுத்தஞ்செய்தவனான அதிகாயன் அவைகளையெல்லாம் துண்டுதுண்டாக்கிவிட்டு, கூர்மையான சிலபாணங்களை இளையபெருமாள்மீது பிரயோகித்தான். அவனெய்த பாணங்களையெல்லாம் இவர் அக்கினிமுகாஸ்திரங்களால் பொடிப்பொடியாக்கி, வீரகர்ச்சனைசெய்துகொண் டிருக்கின்ற அவ்வதிகாயனைப்பார்த்துக் கோபித்துத் தெய்வத்துக்கொப்பான சில பாணங்களைப் பிரயோகித்தார். அவைகள் தவறாமல் அவனணிந்திருந்த கவசத்தை இரண்டாய்ப் பிளந்துவிட்டன. அப்படியந்தப் பாணங்கள் அதிகாயனுடைய கவசத்தைப் பிளந்துகொண்டு அவன்மார்பில் நுழைந்தமாத்திரத்தில், அவன்மூர்ச்சையாய்த் தேரிற்சாய்ந்து சோகமாற்றிக்கொண் டிருந்தான். அவ்வளவு நேரத்திற்குள்ளே அவனுடைய சேனைகளையெல்லாம் இளையபெருமாள் கோடிகோடியாகப் பாணங்களைப் பிரயோகஞ்செய்து துண்டந்துண்டங் கண்டங்கண்டமாய்ச் சிதைத்துக்கொன்றார்.

இப்படிப் பக்கத்திலிருந்த சேனைகளெல்லா மாண்டவிதத்தையும், அவர்களை உருவிக்கொண்டு போகின்ற அம்புகளை இவ்வளவென்று தொகைசெய்யக்கூடாதவிதத்தையும் அதிகாயன் பார்த்து, சேனைக்கு நடுவேநின்று தானடைந்திருந்த சோகம் தீர்ந்துந் தீராமையுமா யிருக்கும்போதே வில்லைக்கையிலேபிடித்து, அதிககோபத்துடனே மேகவருஷத்திலு மூன்றுபங்கதிகமாகப்பாணவருஷங்களைச் சரசரவென்று பொழிந்து நிறைத்தான். அப்போது ஆகாசமெல்லாம் அம்புகள். ஆகாச எல்லையெல்லாம் அம்புகள். பூமியெல்லாம் அம்புகள். மலைகளெல்லாம் அம்புகள். போர்க்களத்தில் நின்றவர்கள் தேகமெல்லாம் அம்புகள். அவர்களுயிரெல்லாம் அம்புகள். சமுத்திர நீரெல்லாம் அம்புகளாக அதிகாயன் நிருமித்துவிட்டான். அதனால் அஷ்டதிக்குகளு மறைந்துவிட்டன. தேவர்கள்மனம் பயத்தாலிருண்டது. அதுபோலவே சூரியகிரணங்களு மழுங்கிவிட்டன. சூரியனுமறைந்து போனான். பூமியும் ஆகாசமும் பாணங்களால் நிறைந்துவிட்டன.

அந்தப் பாணங்கள் கக்கிக்கொண்டுவருகிற தீயும் - அவை யொன்றுடனேயொன்று தாக்குதலாலுண்டாகிற தீயும்-ஒருசேரப்பற்றி, உலகமெல்லாம் புகையாய் நிறைந்துவிட்டது. அக்கால் தேவர்கள் இன்றோடே வானரசேனையெல்லா முடிந்துபோய்விடுகின்ற தல்லவா ? இவ்வதிகாயனை ஸ்ரீராமருடைய திருத்தம்பியார் ஜெயிக்கமாட்டுவாரோ ? இவர்கற்றவித்தை யெல்லாம் யமனுக்கு ஆகாரமாய்விட்டதோ ? இவ்வதிகாயன் கொல்லுகிறதற்கென்று கற்றவித்தைதா னெப்படிப்பட்டதா யிருக்கின்றதென்று சொல்லிப்பயந்து தத்தளித்தார்கள். அப்போதவன் அங்கத குமாரனுடைய நெற்றிமீதும் - அவன் தோளின்மேலும்-அவன்மார்பிலும்-இரணமயமாம்படி பாணத்தைப் பிரயோகித்து, பின்னு மூன்றுபாணங்களை இளையபெருமாள்மீது மேவவிட்டு, தனது விரசங்கத்தையெடுத்துப் பூரித்து; தேவர்களுடைய தலைகள் நடுக்கங்கொள்ளும்படி அஷ்டகாசஞ்செய்தான்.

அப்போதவ் வங்கதனுடைய தேகத்தில் அம்புபட்டு மலையிலிருந்து அருவியாறு ஒழுகுவதுபோல ரத்தவெள்ள மொழுகுவதை இளையபெருமாள் பார்த்து, ஆயிரம்பாணங்களினாலே அதிகாயனுடைய குதிரைகளின் தலைகளை அறுத்து, அந்தக்குதிரைச் சாரதியையும் சிதைத்து, அவன் பிடித்திருந்த வில்லையுமுறித்தெறிந்தார். உடனே வேறொரு வில்லைவளைத்துக்கொண்டு அமர்க்களத்தி லெதிர்த்துநின்ற அதிகாயன்மீது இளையபெருமாள் அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகித்தார். அதைக்கண்ட அதிகாயனும் அக்கினியாஸ்திரத்தையே விட்டான். இரண்டஸ்திரங்களும் ஒன்றோடொன்று எதிர்த்துப் போர்செய்துகொண்டிருந்தன. இன்னும்—இளையபெருமாள் இடிக்குச்சமமான வேறே சில அக்கினிமுகப்பாணங்களைத் தொடுத்துவிட்டார். அவைகளவ்வதிகாயன் மார்பிற்பட்டுருவின.

அதற்கவன் கொஞ்சமாவதுமனஞ்சோராமல், மிகுந்தவல்லமையுடனே மழையைப்பார்க்கிலு மூன்றுமடங்கதிகமாகப் பலபாணங்களை விராஷ்டகாசஞ்செய்து பிரயோகஞ்செய்தான். அந்தப்பாணங்கள் பின்னே நின்றவர்கள் முன்னே நின்றவர்களைக் காணத்தக்கதாகத் துவாரங்களுண்டாகும்படி தேகமுழுவதும் சல்லடைக்கண்களாகத் திறந்துவிட்டன. இந்தப்பிரகாரமாக அதிகாயன் மூர்ச்சியாமலும் உயிர்மாளாமலும் வில்லைவளைத்து, பொன்கட்டின இறகுகளுள்ள அம்புகளை இடியைப்போலப் பிரயோகஞ்செய்தான்.

வாயுபகவான் இலக்ஷ்மணரிடத்தில்வந்து பிரமாஸ்திரம் பிரயோகித்தாலிறப்பானேன்று கூறிப்போக அவ்வாறேபிரமாஸ்திரம் பிரயோகித்து அதிகாயனை மடித்தல்.

கவி.

கோன்முகசந்தள்ளியள்ளிக் சொடுஞ்சிலைநாணிற்கோத்துக்
கான்முகங்குழையவாங்கிச் சொரிகின்றகாலைவீரன்
பான்முகந்தோன்றநின்று காற்றினுக்கரசன்பண்டை
நான்முகன்படையாலன்றிச் சாகிலனம்பவென்றான்.

இவ்வண்ணம் அதிகாயன் பாணப்பிரயோகஞ் செய்துகொண் டிருப்பதை இளையபெருமாள் கண்டு, பயங்கரமான பாணங்களைப் பிடிப்பிடியா யெடுத்தெடுத்துநாணிற்பூட்டி, இருகுதையும்பொருந்த வில்லைவளைத்துச் சரவருஷமாய்ப் பொழிந்துகொண்டு நின்றார். இப்படிநின்ற லட்சுமணப்பெருமாளருகில் வாயுதேவன் தரிசனையாகின்று, ஐயா இளையபெருமாளே ! இவன் பிரமாஸ்திரத்தா லல்லாமல் ஒருநாளும் சாகமாட்டானென்று சொல்லிவிட்டு மறைந்துபோனான்.

கவி.

நன்றெனவுவந்துவீர னான்முகன்படையைவாங்கி
மின்றனிதிரண்டதென்னச் சரத்தொடுங்கூட்டிவிட்டான்
குன்றினுமுயர்ந்ததீயோன் றலையினைக்கொண்டவாளி
சென்றனவிசும்பினூடு தேவருந்தெரியக்கண்டார்.

இலட்சுமண ரதைக்கேட்டு நல்லதென்றங்கீகரித்து, பயத்தைத் தருவதாய் மின்னல்களெல்லாம் ஒன்றாகத்திரண்டு வந்ததையொத்த ஒரு அக்கினிமுகப்பகழியோடு பிரம்மாஸ்திரத்தைச்சேர்த்துப்பிரயோகித்துவிட்டார். அவ்வஸ்திரமானது மலையினுமுயர்ந்த தோள்களையுடைய அதிகாயனது தலையை அறுத்துக்கொண்டு போகின்றதை ஆகாசத்தில் நின்று தேவர்களெல்லாம் பார்த்துப் புஷ்பவருஷங்களை வருஷித்து, எங்கள் துக்கமெல்லாம் இன்றோடே போய்விட்டதென்றார்கள். இராக்ஷசர்களெல்லாம் ஒருவரையொருவர்கூவி அலறிக்கொண்டு, நான்குபக்கங்களிலும் ஓட்டம்பிடித்தார்கள். வானரர்களோ ? அதிகாயனுடைய பாணவருஷத்தால் வருத்தப்பட்ட துக்கமும், நம்மால்தா னிவர்களுக்கு ஜெயமுண்டாகப்போகின்றதென்றிருந்த கருவமுநீங்கிப் பிரமித்தார்கள்.

இப்பால் வெற்றிபெற்ற வில்வீரரான இளையபெருமாள் அங்கதன்தோளைவிட்டுக் கீழேகுதித்தார். அவ்விளையபெருமாளுடைய அதிகவல்லமையுள்ள வெற்றியைக்கண்ட விபீஷணர் ஆச்சரியப்பட்டு, அந்தரமார்க்கத்தில்சித்தவித்தியாதரர் முதலான தேவசமூஹங்கள் கோஷிக்கின்ற ஆனந்தகோஷத்தைக் கேட்டு, மந்திரசித்தியைப்போல இவருடைய வில்வல்லமை இப்படிப்பட்டதானால் இந்திரசித்துக்கு முடிவுகால நெருங்கிவிட்டதென்பதற்குச் சந்தேகமில்லையென்று நிச்சயம்பண்ணினர். சாதுக்கள்யாவரும் சந்தோஷசித்தராயிருந்தார்கள்.

இப்படி யிருக்கும்போது நராந்தகனென்பவன் இளையபெருமாளைப்பார்த்து, மகாவீரனே! என் தமையனாகிய தேவாந்தகனோடு இவ்வதிகாயனும் இறந்துபோனான். இனிச் சண்டையு முடிந்துவிட்டதென்று பூசினசாந்தழியாமல் அநாயாசமா யுத்தஞ்செய்த உன் தோளைப்பார்த்தும், கட்டுத்தளராத உன் வில்லைப்பார்த்தும், நீ சந்தோஷமாய்ப் போய்விடுவது கூடாது. போகாதே: போகாதேயென்று கூவிக்கொண்டு தன்வாளாயுதம் பளபளவென்று மின்னும்படி வீசி, தேரிலிருந்து குதித்து, கண்களில் அக்கினிபறக்கவும் - கோபம் வரவர அதிகரிக்கவும் - பூமி கிழிந்துபோகவும் பாய்ந்து, பகற்காலத்திலே சூரியன் தன் பரிவேடத்தோடு பிரகாசிக்கிறதுபோல இடதுகையில் கேடயத்தைப் பற்றிக்கொண்டு, சூல்கொண்ட மேகத்தில் மின்னல் மின்னினதுபோல வாளானது பிரகாசிக்கும்படி வந்து நின்றான்.

அப்போது வானரவீரர்கள் அவன்மீது விருக்ஷங்களையும், கல்லுகளையும், மலைகளையும், வாரிவாரி வீசினார்கள். அப்படி வீசினவைகளெல்லாம்துண்டு துண்டாக எட்டுத்திக்குகளிலும் சிதறிப்போகும்படி நராந்தகன் தன்கையிலுள்ள வாளாயுதத்தினால் அறுத்துத்தள்ளி, வானரர்கள் தாங்கள்பிடித்திருந்த கொடியையும் — இரண்டுகைகளையும்-தலைகளையும்-உள்ளே சுருக்கிக்கொண்டு நீர்மேற் பாசியொதுங்குவதுபோலத் தன்னைக்கண்டு ஒதுங்கிப் பதுங்கும்படிப் பாய்ந்து அவ்வானரசேனைக்குள்ளேயு நுழைந்தான். அதை அங்கதன் பார்த்தனன்.

நராந்தகன் அங்கதனுடன் போராடிமடிதல்.

கவி.

மரமொன்றுவிரைவின்வாங்கி வாய்மடித்துருத்துவள்ளல்
சரமொன்றுகடிதிற்சென்று தாக்கினன்றூக்கினன்றன்
கரமொன்றிற்றிரிவதாருங் காண்கிலாதவனைத்தன்கை
அரமொன்றுவயிரவாளா லாயிரங்கண்டங்கண்டான்.

ஒருபெரிய விருக்ஷத்தை வேகமாய்ப் பறித்து, உதட்டை மடித்துச் சீறிக்கொண்டு இளையபெருமாளுடைய பாணவேகத்திலும் கடுவேகமாகப் போய் அந்த நராந்தகன்மீது மோதினன். அப்படிமோதிய அங்கதன் தன் கையிற்பிடித்த அந்தவிருக்ஷம் சுழலுவதைப் பார்த்தும்பாராததற்கு முன்

அதையவன் தன் கைவாளாயுதத்தால் ஆயிரம்துண்டுகளாகக் கண்டித்து விட்டான். அப்போது வெறுங்கையுடனின்ற அங்கதன் நாம்சும்மாயிருப்பது விரமல்லவென்று ஒருவிருஷபம் போவதுபோலப்போய் ஒரு க்ஷணத்துள் விஷம்பொங்கினதொப்பக் கோதித்து, அவன் வீசின வாள்வீச்சளவுக்குள் இடிபாய்ந்ததுபோலப் பாய்ந்து அவனை வாளாயுதத்துடன் சேர்த்துப் பிடித்துக் கொண்டான்.

கவி.

அத்தொழில்கண்டவானோ ராவலங்கொட்டியார்த்தார்
இத்தொழிலிவனுக்கல்லா லீசற்குமியலாதென்பார்
குத்தொழித்தவன்கைவாடன் கூருகிர்த்தடக்கைகொண்டான்
ஒத்திருகூறாய்வீழ வீசினனுலையவார்த்தான்.

அந்த வல்லமையைக்கண்ட தேவர்கள் ஓகோவென்று சப்தித்துக் கூத்தாடி, இப்படிப்பட்ட மல்வித்தை இவனுக்கே யல்லாமல் உருத்திரனுக்கும் வராதென்று ஆச்சரியப்பட்டார்கள். அப்படியவனைக் கட்டிச்சேர்த்துப் பிடித்து ஒருகுத்துக்குத்தி, அவன்பிடித்திருந்த வாளாயுதத்தைத் தன் கூருள்ள நகக்கையாற் பற்றிப் பிடுங்கிக்கொண்டு, அதனாலேயே அந்த நராந்தகனைச்சரியிரண்டு கூறாய்த் துண்டுபட்டு விழும்படி ஒருவீச்சுவீசித் தேவர்களும் ஆச்சரியப்படும்படி வீரகர்ச்சனை கர்ச்சித்தான்.

இப்படியே சிலவானரத்தலைவருடன் சிலஇராட்சசவீரர்கள் போராடிமேலிதல்.

தேவர்கள் அமிர்தங்கொள்ளும்படி ஆதிகூர்மத்தினுடைய முதுகின்மீது வைத்துக்கடைந்த மந்தரகிரியாகிய மத்தையொத்த தோள்களையுடையவனும், நிறைந்த மஸ்துள்ளகள்ளில் ஊமத்தையைக்கலந்து குடித்தவனைப்போல மிகுந்த மயக்கத்தை யுடையவனுமான உன்மத்தனென்கிற பெயருள்ளவன் ஒருபெரிய மதயானையின்மீது ஏறிக்கொண்டுவந்து அங்கதனோடெதிர்த்தான். அவனேறிவந்த யானையின் வேகத்துக்கு வாயுவேகத்தையு மொப்பிடலாகாது. அதன் முழக்கத்திற்குக் கடல் முழக்கமும் ஒப்பாக மாட்டாது. அது கொல்வதுபோல யமனுங்கொல்லத் தக்கவனல்லன். அதன் கொடுமைக்கு இடியும் சமமல்லாவிட்டாற் பின்பெதை யொப்பிட்டுச் சொல்லத்தகும்? அதன் கோபத்திற்குமுன்னே கோபமென்கிற ஒருகுணமும் வேறேயில்லை. இந்தக் காரியங்களிலெல்லாம் இதற்கிதுவே ஒப்பாகுமல்லது. வேறொன்றைச் சொல்வதிலென்ன பிரயோசனப்படும்? அதனுருவத்துச்குச் சரியாகச் சொல்லத்தக்கமலையும் வேறொன்றில்லை.

அன்றியும் வானரவீரர்கள் அதிவேகமாக வெறிய, மேலுமேலுமாக வந்து விழ்கின்ற கூட்டங்கூட்டமான மலைகளெல்லாம் அந்த யானைப்பாகர்கள் வில்லிற்பூட்டித் தெறிக்கின்ற வில்லுண்டைக்கும் சமமாகமாட்டா. அவர்கள்

வீசுகின்ற ஆகாசத்தையளாவிய விருக்ஷங்களெல்லாம் அந்தயானையின் மதஜலத்தில் மொய்த்துக்கொண் டிருக்கின்ற வண்டுகளைத் துரத்துங் குஞ்சம்போலிருந்தனவென்று சொல்லினும் ஒவ்வா. அந்தயானை முறித்துத்தின்னும் கரும்புக் கொப்பென்று சொன்னாற் சொல்லலாகும். முன்பிளையபெருமாள் வில்லிற்பூட்டியெய்த அம்புகளால் அந்த ராக்ஷசர்களுடைய ரதகஜதுரக பதாதிகளாகிய நால்வகைச் சேனைகளு மென்னபாடு பட்டதோ ? அந்தப்பிரகாரமே இந்த வானரசேனைகளிற் சிலவானரங்கள் அந்தயானைகளினுடைய காலிற்பட்டு மாண்டன. சிலவானரங்கள் பருத்த துதிக்கையிற் பட்டிறந்தன. சில குரங்குகள் யமபாசத்துக்கொப்பாகிய வாலிலடிபட்டழிந்தன. சிலமந்திகள் பார்க்கப்பயங்கரமான நீண்டதந்தங்களாற் குத்துண்டு செத்தன.

இப்படித் தன்சேனையெல்லாம் சின்னபின்னப்பட்டுப்போகிறதை அதிகதையுள்ள வள்ளற்றன்மையையுடைய அக்கினி புத்திரனாகிய நீலனென்னும் வானரவீரன் கண்டு, அங்கிருந்த ஒரு மராமரத்தைப் பிடுங்கிச் சக்கராயுதம்போலச் சுழற்றிக்கொண்டு வந்தான். அதைக்கண்டு அவ்வுன்மஸ்தனுக்குப் பின்துணையாகவந்த பெருஞ்சேனையெல்லாம் ஓட்டமெடுத்தன. அப்படித்தன்சேனைகள் பின்னிட்டோடுவதைக்கண்ட அவ்வுன்மஸ்தனென்பவன் நேராகப் பன்னிரண்டம்புகளையெய்து, அந்த மராமரத்தைத் துண்டாக்கிவீழ்த்தினான். மறுபடியு நீலன் வேறொரு மலையைப்பிடுங்கி மஸ்தன்மேல் விட்டெறிந்தான். அந்தமலையை மஸ்தன் தன் யானையின் மீதேறி, நூறுபாணத்தால் ஆகாசத்திலேயே பொடிப்பொடி யாக்கிவிட்டான். பிறகுவேறே மலையைத் தேடிக்கொண்டுபோக யத்தனித்த நீலனை அவன்யானையானது அப்படிப் போகவிடாமல், மேருமலையைச் சுற்றிவளைந்த வாசுகியென்னும் சர்ப்பத்தைப்போல் தனது துதிக்கையை நீட்டி மிகுந்தகோபத்தோடு தேவர்களும் பயந்து நடுங்கும்படிப் பிடித்தது.

இப்படிப் பிடித்தமாத்திரத்தில் அந்த நீலனென்பவன் தனது பராக்கிரமும்-சக்தியும்—உயிரும் - ஒடுங்கிப்போய் விட்டானென்று யாவருநினைத்து இரக்கப்பட மூர்ச்சித்திருக்கும்போது, வச்சிராயுதம்போலிருக்கின்ற வளைந்த தந்தங்களினாலே அவனைக் குத்தும்படி அந்தயானையானது யத்தனித்த சமயத்தில் மூர்ச்சித்திருந்த நீலனானவன் சிறிதுதெளிந்தெழுந்து, அதன் துதிக்கையும் - தலையும் — சிதறிப்போகத் தக்கதாகக் குபீரென் றெழும்பிப் பாய்ந்து போய்விட்டான். இராக்ஷசர்களெல்லாம் அதைக்கண்டு நடுங்கினார்கள். தேவர்கள் இவனுடைய வீரம்நன்றாயிருந்தது; நன்றாயிருந்ததென்று சொல்லிக்கலகலவென்று சிரித்தார்கள். அக்கால் நீலன் - வீழ்ந்தான்: வீழ்ந்தானென்று யாவரும் சொல்லுகிறதற் குள்ளேதானே அந்த யானையானது தலையறுந்து, அதிலிருந்து வடிகிற ரத்தவெள்ளத்திற் பெரியமலைபோல முண்டமாய் வீழ்ந்தது. அஃதிப்படி வீழ்ந்தவுடனே மஸ்தன் ஆகாசமார்க்கத்திற் பாய்ந்துநின்று, அர்த்தசந்திர பாணங்களை மழைபோலச் சொரிந்தான்,

இவ்வாறவன் சொரிவதைக்கண்ட நீலன் அந்த யானைமுகத்திலிருந்த தந்தங்களைப் பிடுங்கி, அதிவேகத்துடனே மஸ்தன்மீது வீசியெறிந்தான். அவைகளையவன் ஓரம்பினு லறுத்துத்தள்ளிவிட்டு, வேறோரம்பை மலையையொத்த புஜத்தையுடைய நீலன்மார்பிற்பதிய எவினுன். அந்தப்பாணமெய்த காலத்திற்குள்ளாக நீலனுல் யானைசாகவில்லையென்று சொல்லும்படியாக, மஸ்தன் வேறொரு மலைபோன்ற பெரியயானையின்மே லேறிக்கொண்டு வாயுவேகமாகச் செலுத்திவந்தான். நீலனதைக்கண்டு, குபீரென்று அந்தமஸ்தன்மீது, பாய்ந்து, அவனைக்கைவில்லுடனே மதங்கொண்ட யானைக்கெதிரே ரணக்களத்தில் விழும்படியாகத் தள்ளினுன். அப்படிவிழுந்தவன் கீழேயிருந்தெழுந்து நிற்கிறதற்கு முன்பாக அந்தயானையானது மஸ்தனைத் தன்னுடைய தலைவனென்று தெரியாமற் கீழேதள்ளிக் காலாலுதைத்து, துதிக்கையாற் சுற்றிப்பற்றித்தூக்கி, இந்தப்பக்கமும் அந்தப்பக்கமுமாக இழுத்திழுத் தலைக்கழித்தது. அதை யம்மஸ்தன் சகிக்கமாட்டாமல், தானே தன்யானையை அந்தரணக்களத்திற்கொன்று வீழ்த்தினுன்.

இப்படி யானையைக்கொன்று தன்பெரியகையாலே பூமியிற்றள்ளிய மின்னலைப்பார்க்கிலும்பிரகாசிக்கின்ற கோரதந்தங்களையுடைய மஸ்தனது கோபத்தை நீலன்பார்த்து, பொன்னும் கறுப்பாயிருக்கிறதென் றெண்ணத்தக்கதாகக் கண்களில் நெருப்புப்பொறி பறக்கப்பாய்ந்து அம்மஸ்தனுடைய கைகளைப்பற்றி முறுக்கி, அவனுடைய மார்பிலொரு குத்துக்குத்தினுன். அந்தக்குத்துபட்டவுடனே மஸ்தன்மாண்டுபோனுன். இப்படி உன்மஸ்தனுடைய வச்சிரமலைபோன்றமார்பில் நீலனது கையானதுஇடிபோற்றாக்கின வல்லமையாலுன்மஸ்தனிறந்ததையும், அவனேறிவந்த யானை மாண்டுபோனதையுங் கண்டு, தன்ஜன்மஸ்வபாவத்தாலும், தருமத்தைக் கடந்துநடந்த பாவத்தின் ஏற்பாட்டாலும், வயமஸ்தனென்கிற மற்றொரு ராக்ஷசவீரன் அதிக உக்கிரங்கொண்டு ஒருபெரிய தேரின்மேலேறிவந்தான்.

கொடிய பொய்யைக்காட்டிலும் பெரியதேகத்தை யுடையவனும், மலையைக்காட்டிலும் பருத்ததோள்களையுடையவனும், மகாகொடுமையில் வல்லவனும், வில்வீரனுமான அந்த வயமஸ்தன்வந்து, காலில் வீரகண்டாமணி கணீர் கணீரென்று சப்திக்கவும்-சேனைகள் சிங்கநாதஞ்செய்யவும்-ஆயிரம்பேய்களிழுக்கும்படியான பெரியதேரிலிருந்து மிகுந்த ஆர்ப்பாடஞ்செய்கிறவனும், உலகம் கிடுகிடாய்க்க வதிரப்பண்ணுபவனும், இடியைப்போலக் கர்ச்சித்துச் சுற்றுமுற்றும்பார்ப்பவனும், இறந்தராட்சசர்களைப் பார்த்து இவர்களென்ன அற்பபலவந்தர்களென்று நிந்திப்பவனும், அஸ்திரவருஷம்சொரிபவனும், வானரசேனைகளைப் பின்றொடர்ந் தோடுபவனுமிருந்தான். இவனுடைய தைரியத்தைப்பார்த்து இவனோடு ஒருவருமெதிர்க்கவில்லை. அதுகண்ட விருஷபனென்கிற வானரவீரன் நாம் எதிர்க்கலாமென்று கருதி அவனுக்குமுன்வந்து நின்றான்.

அவனை வயமஸ்தன் பார்த்துச்சிரித்து, நீ யென்கைக்கெவ்வளவு ? வெகு சிறியவன். உன்னைச்செயிக்கிறதினாலே எனக்குப் பிரயோசனமென்ன ? ஆனாலுங்களையெல்லா நான்தான்கொல்லப்போகிறேன். இப்போது பிரம்மாவே வந்து என்னுடனெதிர்த்தாலு நானெதிர்க்கமாட்டேன். எங்கள் சக்கரவர்த்தியாகிய பிரதாபலங்கேஸ்வரனுடைய குமாரனான அதிகாயனைக் கொன்றவனெவனோ ? அவனைக்கொன்றுவிட்டு, பின்பு குரங்குகளின்மீது கோபிப்பேனென்றான். அதைக்கேட்ட விருஷபன் கொஞ்சமுமஞ்சாமல், அடா பைத்தியக்காரா ! நீ உன்வாயாலெவ்வளவு உளறினாயோ ? அவ்வளவு வல்லமையும் உனக்கிருக்கவேண்டும். அப்படிக்கிருக்குமானாற் பலியுண்டு வாழும்படியான சொற்பபலமுள்ள பேய்களைத் துணைகூட்டிக்கொண்டு வரமாட்டாய். நீயவற்றைத்துணைகொண்டு வந்ததினாலேயே உன்பவுருஷ மெனக்கு நன்றாய்த்தெரியவருகிறது.

மேலும்—தகுந்த மருந்தைத்தேடிச் சாப்பிடாத நோயாளியைப்போல நீ உன்னுடையயெல்லாவல்லமையுடன் என்முன்பாக ஓய்ந்துபோய்விடப்போகின்றாய். ஓடிப்போகவேண்டுமானா லோடிப்போ. ஓடாமலென்னோடெதிர்த்தாயானால் உன்னோடுநான் அநாயாசமாக விளையாடிச் சண்டைசெய்கிறேன். என்று சொல்லியதைக்கேட்ட வயமஸ்தன் அதிககோபிஷ்டனாகி, தன்கையிற் பிடித்த பொன்னாற்செய்த குதையையுடைய வச்சிரவில்லைப்போலவே தன்புருவத்தையும்வளைத்து, விருஷபன்மார்பிற் பத்துப்பாணங்களைப் பிரயோகித்தான். அந்தப்பாணங்கள்பட்டு ஊற்றெடுத்து இரத்தவெள்ளம்பாயு மார்பையுடையவனான விருஷபனென்பவன்—அதிவேகத்துடனே பொற்கலசமமைத்து விருதுக்கொடிகட்டின வயமஸ்தனுடையதேரைத் தனது பெரியகையிற் பிடித்துத் தூக்கிவிட்டெறிந்தான். அப்போது பச்சைக்கழற்காய்போன்ற கண்களையுடைய பேய்களெல்லாம் பறந்துபோய் விட்டன.

அப்போது ஆகாசத்திலோடுகின்ற மேகமானது ஒரு மித்துப்பொழியு மழைநீரைப்போலுதிரம்பெருகியொழுகுகின்றதேகத்தையுடையவனாகியவயமஸ்தன் தானேறியதேருடனேகூடக்கடலில்விழுந்து, தன் சிலையும்-கலையும்-மற்ற வாயுதங்களும் - ஆபரணாதிகளும் — அக்கடல்நீரிலமிழ்ந்துவிடத் தான் மாத்திரம் கட்டையைப்போல அம்மணமாய் மேலெழும்பி, அதிககோபத்துடனே பூமியிற்குதிக்க மேலெழும்பி வந்தான் அவனப்படி குதிக்கிறதற்கு முன்பாகவே மலையினும் வலியதோள்களையுடைய விருஷப னவனைப்பார்த்து, அடாசண்டாளா! நீ அப்படியேபோய்ச் சொர்க்கத்தை அடைந்துவிடென்று தானு மாகாசத்திற் பாய்ந்து, இருளைக்கட்டிப் பிடிக்கின்ற சூரியனைப்போல அந்த ராக்ஷசனைத் தனது கையினால் மிகவுறுதியோடு கட்டிப்பிடித்திறுக்கினான். அப்போது இடைவெளிவிட்டுவளர்ந்த பற்களையுடையபிலம்போன்ற வாயின்வழியாக அவ்வயமஸ்தன் இரத்தத்தைக்குபுகுபென்றுகக்கிக்

கொண்டு உயிர் மேலேபறக்க, இந்திரதனுசோடுங் கூடிய கரியமேகத்தைப் போல அவன்தேகமாத்திரம் பிணமாய்க் கீழேவிழுந்துவிட்டது.

இந்தச்சண்டை யிப்படியிருக்க அவ்வானராதிபதியான சுக்கிரீவமகாராஜனும் - தேவர்களை வெற்றிபெற்றிருந்த கும்பனென்கிற ராக்ஷசவீரனுமெதிர்த்து, யுத்தகளத்துக்கு ஒரு அலங்காரமாக நல்லமல்லுயுத்தஞ்செய்து, இருவரும் ஆயிரந்தரம் இடசாரிவலசாரியாகச் சுற்றிச்சுற்றி, சுக்கிரீவமஹாராஜன் மராமரத்தையும், கும்பன் தண்டாயுதத்தையுங்கொண்டு இரண்டுமலைகள் போர்செய்வதுபோலச் சண்டைசெய்தார்கள். அதைத்தேவர்கள்கண்டு சிரமுங்கரமு நடுக்கமெடுத்தார்கள். இப்படியாக வானராதிபதியு மிராக்ஷசவீரனும் ஒருவரை யொருவர் எதிர்த்து, அவரவர் தன்தன்மேனியி லொழுகுகின்ற ரத்தங்களை வழித்தெறிந்து, கண்களின்வழியாக அக்கினிப்பொறிகளைக் குபுகுபென்று சொரிந்து, அணிந்திருக்கிற வெற்றிமாலையும் - வீரகண்டாமணியும்- சப்திக்க உலாவி, போர்செய்கின்ற இரண்டு சிம்ஹங்களைப்போல ஒருவரையொருவர் கைகளினாலே அறைந்தார்கள்.

இப்படி ஒருவரையொருவ ரறைந்து சண்டைசெய்கையில் கும்பனென்பவன் தண்டாயுதத்தைச் சுழற்றி, அண்டங்களெல்லாம் வெடித்ததுபோலச் சப்தமுண்டாகும்படிச் சுக்கிரீவமகாராஜனை யோங்கியடித்தான். அடிக்கவே அவ்வானராதிபதி தன் கையிலுள்ள மராமரத்தால் அந்தத் தண்டடியைத் தாங்கினார். அப்போதந்த மராமரமோ? சின்னபின்னமா யுதிர்ந்துபோய் விட்டது. பின்பு சுக்கிரீவமஹாராஜன் உன்னைக் கொன்று விடுவேனென்று சொல்லி அதிகஉக்கிரமாய்ப் புறப்படுகிறசமயத்தில், தண்டாயுதம்வேண்டுமென்றுநினைக்குமுன்னமே நீலனென்கிற வானரவீரன் மலைக்குச்சமமான ஒரு பெரிய தண்டாயுதத்தை யெடுத்துக்கொண்டுவந்து கொடுத்தான். அந்தத்தண்டைச் சூரியகுமாரன் கையிற்பற்றிக்கொண்டு, அண்டமும் பூமியும் கிடுகிடென்று நடுக்கும்படியாகக் கர்ச்சித்து, அந்தராக்ஷசவீரனான கும்பனுடைய தோளிலுமார்பிலும் அடித்துப்பிளந்தார். அதைக்கண்ட ராக்ஷசர்களெல்லா நடுங்கிப்பயந்தார்கள்.

இப்படிச் சுக்கிரீவமஹாராஜனா லடியுண்ட ராக்ஷசன் மிகுந்த அக்கினிமயமாய் மின்னுகின்ற இடிவிழப்பெற்ற பெரியமலையைப்போல அயர்ந்துநின்றதைக் கண்டவர்களெல்லாம் இவன் முடிந்துபோவானென்று நினைக்கும்போது சோர்வுநீங்கி, இதோ உன்தோள் முறிந்துவிட்டதென்று சொல்லி ஓங்கிச் சுக்கிரீவராஜன்தோளில் அடித்தான். அவனாற்றோளிலடியுண்ட சூரியபுத்திரனான சுக்கிரீவமஹாராஜன் சோகமானான். உடனேசோகநீங்கி, இளையபெருமாளுடைய பாணம்போல வேகமாய்ப்பாய்ந்து அக்கும்பனைக்கிட்டி, யாளிக்கொப்பானவனாகிய அவனதுமார்பிற் கதையினாலே மோதினார். இப்படிச்சுக்கிரீவமகாராஜனும் கும்பனும் ஒருவரையொருவர் கதையால் ஆயிரங்கோடி படிகளுக்குமேலு மடித்துப் போர்செய்கிறதைத் தேவர்கள் கண்டு, இவர்களில் யார்ஜெயம்பெறுவார்களென்று பார்க்கும்படி நெருங்கிவந்து நின்றார்கள்.

இப்படி இருவரும் கதைகளை இடியுடனே இடிதாக்கினதுபோல மோதவே, இரண்டுகதையும் பொடிப்பொடியா யுதிர்ந்துவிட்டன. பிறகவ்விருவரும் கைச்சண்டைசெய்யத் தொடங்கி, இரண்டு மதத்த பெரியயானைகளைப் போலப் போர்செய்து, பத்துத்திக்குகளும் செவிடுபடும்படி பலதரங்குதித்தொருவரையொருவர்கட்டிப்பிடித்தும், திரண்டதோள்களால் மோதித்தாக்கியும்,கைகளினுற் குத்தியும்,ஒருவர்மார்புடன் ஒருவர்மார்பை முட்டியும்,சண்டைசெய்கிறுர்கள்.அப்போதுசுக்கிரீவமகாராஜன் தன்னுடையபலமுள்ளகையை நெருக்கி முஷ்டிபிடித்துக் கொல்லும்படியாகக் கொல்லன் சம்மட்டியாற் புடைக்கிறதுபோலத்திடரென்று அவன்மார்பிற்குத்திஞர்.அப்படியாகக்குத்தவே உலையிலுருகிக்காய்ந்த இரும்பு நசுங்குவதுபோல உடல்நசுங்கியும்,மலைபிளவுபட்டதுபோல மார்புபிளந்து மஞ்சாது இன்னமுஞ்சண்டைசெய்யக்கிட்டிவாவென்றந்தக் கும்பன் நின்று சிரிக்கிறதைச் சுக்கிரீவன்கண்டு, ஐந்துதலை நாகம் வளையில் நுழைவதுபோலத் தமதுகையை அவன்வாயில் நுழைத்து, பையைப்போன்ற நீண்டநாவை அவனுயிருடனேகூடப் பறித்துவிட்டார்.

இப்படி கும்பனிறந்தவுடனே நிகும்பனென்கிற பெயருள்ள ராக்ஷசவீரன்கண்களில் தீப்பறக்கவந்து, இனிநீங்களெங்கேதப்பிப் போகப்போகிறீர்களென்று குதித்துக்கொண் டிருந்தான். அங்கதகுமாரன் அவனைவந்தெதிர்த்து, மிகுந்தகோபத்துடனே இதுவரையிலு மொருவருஞ் செய்யாத யுத்தங்களெல்லாஞ் செய்தான். அப்படிச்செய்கிறபோது விஷத்திலுங்கொடியவனை நிகும்பனென்பவன் கையிலொரு சூலாயுதத்தை யெடுத்துக்கொண்டு குத்தவந்தான். அதற்கவ்வங்கதன் ஓர்பனை விருக்ஷத்தைப் பறித்துக்கொண்டு, ஒருநீலமலையை மேருமலையானதெதிர்த்துவந்ததுபோல வந்து தடுத்தான். தடுக்கவே நிகும்பன் சூலாயுதத்தை யெடுத்தெறிய யத்தனிக்கையில், அதை இப்போதே முறித்துவிடுகிறேனென்று அங்கதன் பிரவேசிக்கிறதற்கு முன்னதாக அவ்விருவருடைய எண்ணங்களையுந்தெரிந்த மாருதியென்னும் வாயுபுத்திரர் ஆகாசத்திலிருந்து நெருப்புப்பொறி விழுந்ததுபோல வந்து குதித்து, ஒருவராலும் தடைபடாத சூலாயுதத்தை விருஷபத்துக்குச் சமமான அங்கதகுமாரன்மீது அதிககோபத்துடனேவிட யத்தனித்த அந்த நிகும்பனைத் தம்முடைய இதழ்விரிந்த தாமரைமலரையொத்த திருக்கையினறையினுலே கொன்றுவிட்டு, மறுபடியும் தமதிடத்திற்குப் போய்விட்டார்.

இப்படி நடந்த சண்டைகளில் இறந்தவர்கள்போக மிகுதியானராக்ஷசர்களில் இனிவானரர்களைத் தடுத்துப் போர்செய்கிறவர்க ளில்லாமையை நினைத்து, ஒருநாளும் பிராணத்துடனே முதுகுகாட்டி யோடாத பலராக்ஷசர்களும் ஓட்டப்பிடிக்க வழிதேடினர்கள். வானரர்களோ? பெரியவிருக்ஷங்களைப் பிடுங்கியடித்து, ஓடவழிதேடுகின்ற இராக்ஷசர்களைத் தப்பிப்போகாதபடி கொலைசெய்தார்கள். அதிலும் தப்பிச்சில ரோடுகிறசமயத்தில் ஒருவரோடொருவர்முட்டின நெருக்கத்தால் அநேகராக்ஷசர்கள் கீழேவிழுந்து, தங்கள்

பின்னே ஓடிவருகிறவர்களுடைய கால்களினால் மிதியுண்டிறந்தார்கள். கோடி பேர்களுக் கதிகமாகவே வானரவீரர்களுடைய கைக்குத்தினால்வருந்திப்புண் பட்ட தேகத்துட னோடினார்கள். சண்டைசெய்யும்படியாகிய ரணக்களத்தில் நின்றவர்களில் கணக்கில்லாத ராக்ஷசர்கள் மடிந்துபோனார்கள். சிலராட்சசர்கள் தண்ணீர் தண்ணீரென்று கேட்டுக்கொண்டே யோடினார்கள். சிலராட்சசர்கள் தங்களுக்குதவியாளரில்லாமற் பயந்தோடித் தடாகங்களிலுண்ணுதற்கும் நீரில்லாமல் தாகவெப்பத்தால் நாவுலர்ந்து உடல்சோர்ந்து விழுந்தார்கள். சிலராட்சசர்கள் கண்ணீர்சொரிந்து உயிர்கலங்கியழுது, தங்கள் கால்வழியே யோடுகிற அக்கண்ணீரால் பூமிநனையும்படி தங்களூரைப்போய்ச் சேர்ந்தார்கள்.

சிலராட்சசர்கள் ஆகாசத்தில் தாவிப்போகச் சிறிதும் சக்தியில்லாமற் பூமியில்விழுந்து மாய்ந்தார்கள். சிலராட்சசர்கள் பூமியிலேயே பெரியமலைகளைப் போலக் குற்றுயிராய் மாண்டுகிடந்தார்கள். சிலராட்சசர்கள் இருண்டமேனியி லதிகபுண்பட்டவர்களாய்த் திக்குவிதிக்குகளா யோட்டம்பிடித்தார்கள். சிலராட்சசர்கள் தங்களுக்கு அறிமுகமானவர்களைக்கண்டு இவ்வம்புகளைப் பிடுங்கிவிடுங்களென்று கிட்டிவர, பிடுங்கினமாத்திரத்தில் உயிர்நீங்கிக் கீழேவிழவும், உபகரிக்கவந்த ராட்சசர்கள் தேகமெல்லாம் புண்பட்டிருக்கிறபடியால் இப்போது விழுந்தவர்க ளிவர்களென்றும் முன்னேவிழுந்து கிடக்கிறவர்க ளிவர்களென்றும் அடையாளந் தெரியாமல் வியசனப்பட்டு, தாங்களுமனோதைரியம் குறைந்துபோனார்கள். சிலராட்சசர்கள் குதிரைகளின்காலாலுதைபட்டு விழுந்துடல்பதைத்தார்கள். சிலர் யானைகளின் காலிலகப்பட்டுருண்டுபோனார்கள். சிலர்தேர்களின்காலிலகப்பட்டு அப்படியே நசுக்குற்றார்கள். இப்படி நெருப்புப்பட்டுவேகும் வீட்டி லகப்பட்டவர்களைப்போல யுத்தகளத்தில்வந்த ராட்சசர்களெல்லா மாண்டுபோனார்கள்.

சிலராட்சசர் பயந்து வானரவேஷம்பூண்டு பூமியின்வழியாகவர, அப்படி வந்தவர்களைத் தேகத்திற் புண்பட்டுப்போகின்ற ராட்சசர் பலபேர்பார்த்து இங்கே குரங்குகள் வருவதென்னவென்று கோபத்தினாலே அவர்களோடு சண்டைசெய்ய, இப்படியும் சிலராட்சசர்க ளிறந்தார்கள். சிலராட்சசர் கீழேவிழுந்து பிராணன் போகும் சமயமாயிருக்கும்போது தங்களிரண்டு கண்களையுந்திறந்து பக்கத்தில் வியசனப்பட்டுக்கொண் டிருக்கின்ற தங்கள்சிநேகரைப்பார்த்துக் குடிக்கக்கொஞ்சம் தண்ணீர்கொடுங்களென்று கேட்கக்கொண்டுவந்து கொடுக்கிறதற்குள்ளாக வவர்கள் மாண்டுபோனார்கள். சிலர் கொண்டுவந்துகொடுத்த தண்ணீரைக்குடித்துக்கொண்டிருக்கும்போதே விக்கலெடுத்து பிராணனீங்கினார்கள். சிலர் குடித்தானவுடனே மாண்டுபோனார்கள். சிலராட்சசர்களை அவர்கள் தகப்பன்மார் தூக்கிக்கொண்டு வீட்டிற்குப்போகும்போதேநடுவழியில்பிராணனைவிட, அவர்களையவர்கள்விட்டெறிந்துபோட்டுத் தாங்கள்மாத்திரமே வீடுபோய்ச்சேர்ந்தார்கள். சிலராட்சசர்கள்ரந்

தங்களைக்கக்கிக்கொண்டு கண்கள் வெளியிற் பிதுங்கித் தங்கள் ஊர் இன்னதிசையிலிருக்கிறதென்று தெரியாமற் சுற்றிச்சுற்றித்திரிந்து, அவ்விடத்திலேயே உயிர் நீங்கி மாண்டார்கள்.

இந்தப் பிரகாரமான அவஸ்தையை யடைந்து மாண்டவர்கள்போக மிகுதியாயுள்ள சில ராட்சசர்கள் சிதறியோடி இலங்காபட்டணத்தைச் சேர்ந்தார்கள். இந்தச் சண்டையைப் பார்த்துக்கொண்டிருந்தோடிவந்த தூதுவர்கள் மழையைப்போலக் கண்ணீர்சொரிந்துகொண்டு வீரகண்டாமணியைத் தரித்த இராட்சசவீரர்களுக்கெல்லா மிராஜாவான இராவணேஸ்வரனுடைய பாதத்தில் வீழ்ந்தார்கள்.

இராவணன் அதிகாயன் முதலியவர்கள் மாண்டதைக்கேட்டு வருந்துதல்.

கவி.

நோக்கியவிலங்கைவேந்த னுற்றதூதுவன்மினென்றான்
போக்கியசேனைமிம்மிற் புகுந்துளவிறையும்போதா
ஆக்கியபோரினைய வதிகாயன்முதல்வராய
கோக்குலக்குமரரெல்லாங் கொடுத்தனராவியென்றார்.

ஏங்கியவிம்மன்மான மிரங்கியவிரக்கம்வீரம்
ஓங்கியவெகுளிதுன்ப மென்றிவையொன்றிற்கொன்று
தாங்கியதரங்கமாகக் கரையினைத்தள்ளித்தள்ளி
வாங்கியகடல்போனின்று னருவிநீர்வழங்குகண்ணன்.

அப்படி வீழ்ந்த தூதுவர்களை இராவணன்பார்த்து, ஓ ஒற்றர்களே! என்ன சமாச்சாரம்? நடந்தது சொல்லுங்களென்று கேட்டான். அதற்கவர்கள் - ஐயா இராவணேஸ்வரா! நீர் அனுப்பின சேனைகளில் திரும்பிவந்தது மேருவுக்கு அணுவளவும் போதாது. நடந்த யுத்தத்தில் அதிகாயன் முதலான ராஜகுமாரர்களெல்லாம் தங்களாவியை ஒப்பித்துவிட்டார்கள். இஃதித்தினம் யுத்தகளத்தில் நடந்தசெய்தியென்று சொன்னதைக்கேட்ட விராவணன் அதிக துக்கத்துடனே அழுது, சமுத்திரத்தில் ஒன்றின்பின் னொன்றாகவந்து கரையில் மோதும் அலைகளைப்போல் இரக்கம்-கோபம்-வீரமான விவைகள் மனதிற்றாக்கக் கண்களி லருவியாற்றைப்போல் நீர் சொரியும்படியாகத் திக்குகளைப் பார்ப்பான்.

அன்றியுமந்தத் திக்குகளைக் காத்துக்கொண்டிருக்கின்ற தேவர்களைப்பார்ப்பான். இராக்ஷசஸ்திரீகளும் புருஷர்களும் தங்கள் தங்கள் தந்தைமார்கள்-அண்ணன்மார்கள் — தம்பிமார்கள் — நாயகர்கள் — மைத்துனர்கள் — சினேகிதர்களாகிய பலபேர் இறந்தனர்களென்று அழுகிற கூக்குரல் இலங்காபட்டணமெங்கும் எழும்பியதைக்கேட்டு, தனக்குச் சம்பவித்த பழையநாமத்தை அடிக்கடி நினைப்பான். தன்கையி லிருக்கின்ற வெற்றிபெற்ற வாளாயுதத்தைப் பார்ப்பான். அவ்வாளாயுதத்தைப் பிடித்திருக்கும் கையைப் பார்ப்பான். அந்தக் கையோடு மற்றொரு கையைச்சேர்த்துப் பிசைவான்.

புகைந்து தீயும்படியான மீசைகளைக்கண்டு பெருமூச்செறிவான். மறுபடியும் ஆசையில் மூழ்கினவனைப்போலச் சிரிப்பான். மீட்டும் அழுவான். வெட்கமுற்றுத் தலைகளை இறக்கிக்கொள்ளுவான். பூமியைப் பேர்த்தெடுக்கலாமாவென்று நினைப்பான். ஆகாசத்தையெல்லாம் சுருட்டிவிடலாமாவென்று எண்ணுவான். கணிதசாஸ்திரத்தாற் கணிக்கப்படுதற்கரிய உலகத்திலுள்ள சகல ஜீவகோடிகளையும் இந்த க்ஷணத்திலேயே கொன்றுவிடலாமாவென்று கருதுவான். ஸ்திரீகளென்று சொல்லப்பட்டவர்களையெல்லாம் பிளந்துவிடலாமாவென்று ஆலோசிப்பான். ஆறாப்புண்ணிலே நெருப்புவைத்ததுபோல மானத்தினுல் மனம்புழுங்குவான். அப்போது அங்கிருந்தவர்களெல்லாம் ஒருவரும் வாய்பேசாமலும், மூச்சுவிடாமலும், மனஞ்சகியாமலும், நடுங்கின தேகத்தையுடையவர்களாகி அழுதுகொண் டிருந்தார்கள்.

இப்படி யிருக்கும்போது காடுபோலிருக்கின்ற தோள்களையுடைய ராவணனுக்கு முன்பாக அக்கொடியோனுடைய பெண்சாதியும் அதிகாயனுடைய தாயுமான தானியமாலையென்கின்ற பெயருடையவள் அழுதுகொண்டு வந்து, ஐயோ மகனே! ஐயோ மகனே! என்று ஓயாமற் கூவி, இறந்து வீழ்ந்து கிடக்கின்ற அதிகாயன்மீது முட்டிமோதி, மலைச்சிகரங்களின்மீது இடிவிழுந்ததுபோல வளையல்களு மிரத்தினுரங்களும் சப்திக்கும்படி ஸ்தனங்களின் மீதுகையாலோங்கியோங்கியறைந்துகொண்டு, மலைக்குகைதிறந்தாற்போல ஆவென்ற வாயைத்திறந்துகூவி, தலையென்கிற மலையின் சிகரம்போற் கட்டி முடித்திருந்த செம்பட்டைமயிராகிய கூந்தலவிழச் சோர்ந்து, உலையிலுருக்கின செம்பருவிக்கொப்பாய் நீரொழுகுகின்ற சிவந்த கண்களையுடையவளாய் இராவணன் கால்மேல் விழுந்து, மெருகிடப்பட் டங்குள்ள தளவரிசைக்கற்களெல்லாம் பொறுக்குப்பொறுக்கா யெழும்பும்படிப்பெரிய மலைப்பாம்பைப் போலப்புரண்டு புரண்டு, அடக்கக்கூடாத துக்கத்தையடைந்து, அழுதவர்களையுந் தானிதுவரையிற்கண்ணுற் பார்த்தறியாதவளாகையால் இவ்விதமாகச் சொல்லி யழவேண்டுமென்பதுந் தெரியாமல், அவ்விராவணனிடத்திற் சற்றுமரியாதையில்லாமல், ஐயோ துஷ்டாவென்றும் சொல்லத்துணிந்து, துக்கசாகரத்தின் கரையைக் காணுதவளாய்ப் புலம்பத் தொடங்கினுள்.

அதிகாயன் தாயாகிய தானியமாலை புலம்பல்.

கவி.

மாட்டாயோவிக்காலம் வல்லார்வலிதீர்க்க
மீட்டாயோவீர மெலிந்தாயோதோளாற்றல்
கேட்டாயுணர்ந்திலையோ வென்னுரையுங்கேளாயோ
காட்டாயோவென்னுயிரைக் கண்மணியைக்காட்டாயோ.

இந்திரற்குந்தோலாத நன்மகனைப்பெற்றயென்
றந்தரத்துவாழ்வாரு மேத்துமளியத்தேன்
மந்தரத்தோளென்மகனை மாட்டாமனிதன்றன்
உந்துசிலைப்பசழிக் குண்ணக்கொடுத்தேனே.

அக்கனுலந்தா னதிகாயன்றானுலந்தான்
மிக்கதிறத்துள்ளார்களெல்லாரும்வீடினார்
மக்களினின்றுள்ளான் மண்டோதரிமகனே
திக்குவிசய மினியொருகாற்செய்யாயோ

ஏதையாசிந்தித் திருக்கின்றாயெண்ணிறந்த
கோதையார்வேலரக்கர் பட்டாரைக்கூவாயோ
பேதையாய்க்காமம் பிடிப்பாய்பிழைப்பாயோ
சீதையாலின்னம் வருவசிலவேயோ.

உம்பியுணர்வுடையான் சொன்னவுரைகேளாய்
நம்பிகுலக்கிழவன் கூறநலமோராய்
கும்பகருணனையுங் கொல்வித்தென்கோமகனை
அம்புக்கிரையாக்கி யாண்டாயரசைய.

ஓ இலங்கேஸ்வரா! இப்போதே அவ்விராம லட்சுமணருடைய வல்லமையை நீக்குகிறதற்கு உன்னால்முடியாதோ? என்பிள்ளையை மீட்டுக்கொண்டு வரமாட்டாயோ? உனது புஜவல்லமை குறைந்துபோனதோ? அந்த மனிதர்களுடைய தோள் வல்லமையைக் கேட்டும் அறியாமற்போனாயோ? நான்புலம்பி அழுது சொல்லுகின்ற என்சொல்லையும் கேளாயோ? என்னுயிரெங்கேயிருக்கிறதென்று காட்டமாட்டாயோ? என்கண்மணி யெங்கேயென்றும் காட்டமாட்டாயோ? இந்திரனையும் ஜெயிக்கும்படியான நல்ல பலமுள்ள புத்திரனைத் தானியமாலை பெற்றிருக்கின்றாளென்று தேவர்களெல்லாம் புகழும்படியாயிருந்த என்களிப்பு இன்றைக்குப் போய்விட்டதே: மந்தரகிரி போன்ற தோள்களையுடைய என்மகனைச் சக்தியற்ற மனிதன் வில்லைவளைத் தேவின அம்புக்கு ஆகாரமாக்கி விட்டேனே:

ஐயையோ! அக்ஷகுமாரன் மாண்டான். அதிகாயனுமாண்டுபோனான். அதிகபலமுள்ள பிள்ளைகளெல்லா மாண்டுபோனார்கள், உன்பிள்ளைகளில் இப்போதிருக்கிறவன் மண்டோதரியின் பிள்ளையான இந்திரஜித்து மாத்திரந் தானே: இன்னொருதரமு முன்போலத் திக்குவிஜயம் செய்யமாட்டுவையோ? ஐயா! என்ன நினைத்துக்கொண் டிருக்கின்றாய்? வெற்றிமாலையைத்தரித்த வேலை யேந்திய ராக்ஷசப் பிள்ளைகளில் இறந்து போனவர்களைக் கூப்பிட மாட்டாயோ? ஒ புத்தியற்றவனாகி மோகத்தாற் பிடிக்கப்பட்டவனே: நீயும் பிழைக்கும்வழி யறியப்போகிறாயோ? சீதையாலே இன்னமுனக்கு நேரிடப்போகிற தீங்குகள் கொஞ்சமோ? உன்னிளைய தம்பி வெகுபுத்திமானாச்சே: அவன்சொன்னபுத்தியை அப்போதே நீ கேட்டாயா? எல்லாந்தெரிந்த குலவிருத்தரான உன்பாட்டனார் சொல்லியும் அதைவிரும்பி யாலோசித்தாயில்லையே? அதிக பலாட்டியனென்னும் உன்மூத்த தம்பியான கும்பகர்ணனையும் கொல்லுகிறதற்குக் காரணமாயிருந்தனையே: எனது தலைமை மைந்தனாகிய அதிகாயனையும் அம்புக்கு இரையாக்கி விட்டாயே? இனி நீயரசாட்சி

செய்வதும் அப்படியப்படி தான். என்றிப்படிப் பலபலவிதமாகச் சொல்லி, ஓ காயா ! ஓ அதிகாயா ! என்றுரத்துக்கூவி யழுகிறுள்.

இவ்வண்ணம் பலபலவார்த்தைகளைச் சொல்லி ஓ அதிகாயா அதிகாயா வென்றழைத்து, கன்றிறக்கக்கண்ட தாய்ப்பசுவைப்போல் கதறிகதறியழுது வருந்துபவளை ஊர்வசியும் மேனகையுங்கண்டு அகத்திற் சந்தோஷமும் புறத்திற்றுக்கமுங் கொண்டவர்களாகி கைகளாற்றாக்கி யெடுத்து உபசாரஞ் சொல்லி, மகமேருகிரியை யொத்துயர்ந்த அரண்மனையில் கொண்டுபோனுர்கள். அவ்விலங்காபுரத்திலிருக்கின்ற இராட்சசர்களும், இராட்சச ஸ்திரீகளு மொருவர்க்கொருவர் இழவுகொண்டாடவந்து, தங்கள் தங்கள் பிள்ளைகளே யிறந்ததுபோல அழுது புலம்பினுர்கள். மற்ற ஸ்திரீகளினுடைய நிலையைச் சொல்லவேண்டியதென்ன ? தேவஸ்திரீகளும் தங்கள் வாயைத்திறந்து ஓ வென்று அழுதார்கள். மாலையையணிந்த மார்பையுடைய தாசரதியாகிய ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியானவர் தனது அரண்மனையினின்றும் புறப்பட்டு வனத்திற் கெழுந்தருளுங் காலையில் எவ்வண்ணம் அயோத்தியாபுரி வருந்திற்றே அதைப்போல் இலங்கைநகரம் வருந்திற்று. அழுதகுரலோசை பூரணச்சந்திரோதய காலத்திற் சமுத்திர மிரைந்ததுபோல விருந்தது.

அதிகாயன்வதைப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பதினெட்டாவது,

நாகபாசப் படலம்.

இப்படலத்தில் அதிகாயனுதிய ரிறந்ததை இராவணனுல் இந்திரஜித்து கேட்டுச்சினந்து, நானே யப்பகைவரையெல்லாம் வேரறக்களைவேனென்றுபிரதிக்ஞைசெய்து; தூமாக்ஷனும், மகாபாரிசனும் சக்கரரக்ஷகராய் வரும்படிப்போர்க்கோலங்கொண்டு யுத்தகளத்திற்குவர, அதுகண்டு லட்சுமணர் விபீஷணரா லவனுற்றலையறிந்து அவர் வேண்டுகோளின்படி அனுமாராதிய படைவீரர்களோடு யுத்தசன்னத்தராய் நிற்கவும், இருதிறச் சேனைகட்கும் போர்மூண்டு வானரசேனைகள் வலிபெற்றுநிற்க; அப்போது இந்திரஜித்தானவன் தனியே பராக்கிரமித் திருக்கக்கண்ட சுக்கிரீவன் - அனுமான் - நீலன் - அங்கதனுகிய நால்வரு மவனேடுபோராடி மெலிய, அப்போ திளையபெருமாள் ஆஞ்சனேயர் தோளின்மே லாரோகணித்து இந்திரஜித்தையும் அவனுக்குச் சக்கர ரக்ஷகராய்வந்த அவ்விருவரையும் வெற்றிகொள்ள, தனியனுய்நின்ற இந்திரஜித்து ஆகாயத்தில் மறைந்து நாகாஸ்திரப் பிரயோகத்தால் இலட்சுமணர் முதலாயினேரை மூர்ச்சிக்கச்செய்து சூரியனஸ்தமித்ததால் மகாஜயப்பிரதாபத்தோடுபோய்த் தனது வெற்றியை இராவணனுக்க

No. 54. இந்திரசித்து நாகாஸ்திரப்பிரயோகஞ்செய்து இலட்சுமணாதியரைமூர்ச்சிக்கச்செய்தல்.



றிவித்துத் தன்மாளிகைசென்றடைய, அக்கால் விபீஷணாழ்வார் பலவாறுசொல்லித் துக்கித்திருப்பதை யறிந்த அனலனென்னு மவர் மந்திரியானவனவரைத்தேற்றி ஸ்ரீராமரிடம்போ யறிவிக்கவும் அவரவ்விரவில் அக்கினியாஸ்திரத்தினு லிருளைநீக்கிச் சென்று தமது தம்பியாதியரைக்கண்டு கிலேசித்து, விபீஷணாழ்வாரால் நாகபாசத்தின் வரலாறு கேட்டறிந்து பிரலாபிக்க, அதை யாகாயத்தினின்றுங்கண்ட கருடபகவானங்கிறங்கிநின்று ஸ்ரீராமபிரானை வெகுவாகத் துதிக்க, அக்கால் நாகபாசத்தாற் கட்டுண்ட இலட்சுமணாதியர் அக்கட்டினின்றும் விடுபட்டெழுந்துவந்து ஸ்வாமியைக்கண்டு சேவிக்கவும் அவரவர்களைக்கண்டு மனமகிழ்ந்து ஆதரிக்க, அதுகண்ட கருடபகவான் ஸ்ரீராமனைத்தோத்திரித்து விடை பெற்றுத் தமதிருக்கை நோக்கிச் செல்ல, அநுமாருடைய பிரேரேபணையால் பாசறைக்கண் சந்தோஷகர்ச்சனையுண்டாக,வதுகேட்ட விராவணன் இந்திரசித்துவின் மாளிகைக்குப்போக, இந்திரசித்து இராவணனோடு இலட்சுமணருடையபாணத்தால் நேர்ந்த தன்சரீரமெலிவைக்கூறிக்கொண்டிருக்கும்போது தூதர்கள்வந்து யுத்தகளத்தில் நேர்ந்த சங்கதியை விண்ணப்பஞ்செய்ததைக்கேட்ட விராவணன் தன்மகன் கருத்தையறிந்து தனதிருக்கைவந்து சேர்தல் கூறப்படுகின்றது.

இராவணனால் அதிகாயனிறந்ததைக் கூறக்கேட்ட இந்திரஜித்து பகைவரைப் பற்றறக்களைவேனென்று சபதஞ்செய்து வெளிப்படல்.

கவி.

குழுமிக்கொலைவாட்க ணரக்கியர்கூந்தருழத்
தழுவித்தலைப்பெய்துதங் கைகொடுமார்பினெற்றி
அழுமித்தொழிலியாதுகொ லென்றொரயிர்ப்புமுற்றான்
எழிலித்தனியேறென விந்திரசித்தெழுந்தான்.

இப்படி வாள்போன்ற கண்களையுடைய இராக்ஷசஸ்திரீகள் முதலாயினோர் பெருங்கூட்டமாய்க்கூடி, தலைமயிரவிழ்ந்து சோரவொருவரையொருவர் தழுவி மாரடித்துக்கொண்டழுவே இந்திரஜித்தானவன் கேட்டு, இவர்களிவ்வாறழவேண்டிய தென்னவென்று சந்தேகித்து, மேகத்தினிடிபோலக் கர்ஜித்தூடனே புறப்பட்டு, அஷ்டதிக்கினு முள்ளவர்களை வெற்றிபெற்ற நமது தந்தையானவர் மறுபடியும் அவர்களுடனே போர்செய்து அவர்களுக்குத் தோற்றுப்போனாரோ ? அல்லாவிட்டா லிறந்தேபோனாரோ ? முன்பிவ் விலங்கையைச் சுட்டுவிட்டுப்போன அனுமான் மறுபடியு மிவ்விலங்கையை ஆழ்ந்த சமுத்திரத்துடனே சேர்த்துவிட்டானோ ? இப்படி யழுகிறதற்குக் காரணமென்னவென்றுநினைத்து, தான் கண்டகண்ட ராக்ஷசர்களையெல்லா மிலங்கைக்கு வந்த வருத்தமென்னவென்று கேட்டான். அதற்கொருவரும் சொல்லுகிறதற்குக் கூடாமல் மெய்நடுங்கி வாய்குழறிப் பேசத்தெரியாமல் நின்றார்கள். அப்போதவ் விந்திரஜித்தானவன் தன்சாரதியைநோக்கித் தேரைச்சீக்கிரமாக இராவணனுடைய மாளிகைக்கு ஓட்டென்று சொல்லி, ஒரிமைப்பொழுதுக்குள்ளாகவந்து சேர்ந்து, இராவண னுயிருடனிருக்கக்கண்டான்.

கவி.

கண்டானிறையாறிய நெஞ்சினன்கைகள் கூப்பி
உண்டாயதெனிவ்வழி யென்றலுமும்பிமாரைக்
கொண்டானுயிர்காலனுங் கும்பனிகும்பரோடும்
விண்டானடைந்தா னதிகாயனும்வீரவென்றான்.

இவ்வண்ணம் பற்பலவாகிய சந்தேகத்தைக்கொண்டு வந்தவனாகிய இந்திரஜித்தானவன் தன்தந்தையின் திருமுகத்தைப்பார்த்து சந்தேகநீங்கிய மனத்தினனாகித்தனது இருகரங்களையுஞ் சிரசின்மேற்குவித்து ஐயா! என்தந்தையாகிய இலங்காபுரிநாயகா! இப்போது நமது நகரத்தில் இருக்கின்றவர்களெல்லாம் சித்தங்கலங்கிக் கோவென்று நாவிலக்ஷம் வீதிகளிலும் ஸ்ரீகளும் புருஷர்களும் அழுகின்றார்களே யாதுகாரணம்? உமக்குத்தெரியுமோவென்று கேட்டனன். இப்படியாகக் கேட்டகாலையில் இராவணன் இந்திரசித்தை மார்புடன் சேர்த்துக்கட்டி, அப்பாமகனே! இந்திரசித்தே! உனக்கு என்னசமாதானம் சொல்லப்போகிறேன். உன்னுடைய தம்பிமாரை யமனும் பயமில்லாமற் கொண்டுபோய்விட்டானே: கும்பன் – நிகும்பன் – அதிகாயன் – இந்தமூன்றுபேரும் சுவர்க்கலோக மடைந்தார்களே: என்று சொல்லிப் பலபலவென்று இருபது கண்களிலு மிரத்தநீரையுகுத்தான். இப்படி யவன் சொல்லியும் சொல்லாததற்கு முன்னே இந்திரஜித்தானவன் அக்கினியையு மெரிக்கும்படியான கோபக்கண்களை யுடையவனாகி, பல்லா லுதட்டைக்கடித்து ஆகாசத்தைப் பார்த்து, எல்லாரு மிறந்துபோனார்களாவென்று மிகுந்த ஏக்கம்பிடித்து நின்று, வில்லாளரை விரல்தொட்டு எண்ணுமிடத்து முதலிலெண்ணநிற்கும்படியான வீரவானான அவ்விந்திரஜித்து இராவணனைப்பார்த்து, ஐயனே! அவர்களைக்கொன்றவர்கள்யாரென்று கேட்டான். அதற்கிராவணன்-அப்பா மகனே! நமது அதிகாயனை இலட்சுமணன்கொன்றானாம். மற்றவர்களை நம்முடைய ஊரில்நெருப்புவைத்துக் கொளுத்திய ஆஞ்சனேயனாதி மற்ற வானரவீரர்களும் கொன்றார்களாம். என்று கொன்றைப் பூ மாலையைத்தரித்த உருத்திரமூர்த்தியினுடைய கைலாசகிரியை வேரோடு பேர்த்துச் சாய்த்த மகா பலவானான விராவணன் சொன்னான்.

அதைக்கேட்ட இந்திரஜித்தானவன் மனங்கொதித்து,ஐயா இலங்கைவேந்தே! மகாவலியுற்றவானரசேனையையுடைய அம்மனிதர்களுடைய வல்லமை உமக்குத்தெரிந்திருந்தும்அதிகாயன்முதலானோரை அவர்கள்மேற்போருக்கு நீர் அனுப்பினபடியால் நீரேஅவர்களைக்கொன்றீர். அவர்களல்ல கொன்றவர்கள். என்னையாவது போகச்சொல்ல உமக்கெண்ணம் வராமற்போச்சு. ஐயோ! இனி யிதற் கென்னசெய்யலாமென்று சொல்லி வெகுநேர மாலோசித்து, அதிக கோபத்துடன் பெருமூச்சுவிட்டு, ஐயா! இப்படிச் செய்விக்கிறதற்குத்தானே முன்னே நமது அக்ஷகுமாரனைப் பூமியிற் போட்டுத் தேய்த்துவிட்ட அனுமானை, சத்துருக்கள் சொன்னசொல்லைச் சொல்லவந்த தூதுவனென்று கொல்லாமல் விட்டுவிட்டீர். நம்முடைய ஊருளவு சத்துருக்

களிடத்திற்குப் போகுமேயென்னும் பின்னாலோசனை செய்யாமற் போனீரே: ஓ ஆலோசனையில்லாதவரே! இனி நீர் பிள்ளை யுதவியில்லாமற்போய் விட்டீர். உமது வாழ்க்கையும் அழிந்துபோய்விட்டது.

கவி.

என்னின் றுநினைத்து மியப்பியுமெண்ணியுந்தான்
கொன்னின் றபடைக்கலத் தெம்பியைக்கொன் றுளானை
அந்நின் றநிலத்தவ னாக்கையைநீக்கியல்லால்
மன்னின் றநகர்க்கினி வாரலென்வாழ்வும்வேண்டேன்.

நான் சும்மா நினைத்தும் பேசியும் ஆலோசித்துமென்ன? கொல்லுந்தொழிலையே மேற்கொண்டு கூர்மைபெற்றுநின்ற ஆயுதங்களால் என்தம்பியைக்கொன்றவனை அந்தரணக்களத்திலேயே அவனுயிர்வேறு உடல்வேறாக நீக்கினாலல்லாமல், வெகுகாலமாக நம்முடைய வசத்திலிருந்த இலங்காபட்டணத்திற்குத் திரும்பிவரமாட்டேன். இந்த வாழ்வுமெனக்கு வேண்டாம். அந்த வானரப் பெருஞ்சேனையைப் பிளவுபிளவாகப் பிளந்து நிணச்சேறுபட அரைத்துவிட்டு அந்த லட்சுமணனையும் கொல்லாமற் போவேனானால், என்னெதிரே வருகிறதற்கும் பயந்து என்னாஜ்ஞையுமீறாத செந்தாமரை மலர்போன்ற கண்களையுடையவனான விஷ்ணுமுதலான தேவர்களெல்லாரும் என்னைப்பார்த்துச் சிரிக்கக் கடவார்கள். ஒருவராலும் எக்காலத்திலும் ஜெயிக்கமுடியாத ஸ்திரமான உயிரையுடைய என் தம்பியாகிய அதிகாயனைக் கொன்ற அந்த மனிதனுடைய தேகத்தினின் றூற்றெடுக்கும்படியான ரத்தவெள்ளத்தைப் பூமிதேவி குடிக்கும்படிச் செய்யாமற் போனேனேயானால், என்னோடெதிர்த்த இந்திர னிரண்டுதரமல்லவோ எனக்குத் தோற்றுப் போனான்? அப்படியல்ல: அவனுக்கே தோற்றவனாகக்கடவேன்.

மேலும் - நாகபாசத்தையும் பாசுபதாஸ்திரத்தையுங்கொண்டு மூன்றாம் பிறைச் சந்திரனையணிந்த சடாமகுடத்தையுடைய நமது குலதெய்வமாகிய அந்தச் சங்கரதேவன் எனக்குக்கற்பித்த தேவயாகத்தைச் செய்து, அந்த முறையைப் பாதுகாத்துத் திரிலோக ஜெயப்ரதாபசாலியாகச் சஞ்சரிக்கின்ற நான் இப்போது அவர்களுயிரை உமக்குக் கொடாமற் போவேனேயானால், என்னுயிரை நானே விட்டுவிடுவேன். அதுவரையிலு நான் உணவுமுண்ணுகிறதில்லை. எனக்குத் தேவாமிர்தம்போலிருந்த என் தம்பியினுடைய அருமையான உயிரைப்பறித்த அந்தக் கொடியவனை இந்நிமிடப்போய் யமனுக்கு விருந்தாகக்கொடாமற் பிறகு கையில் வில்லைப்பிடித்துத் தேவகூட்டமெல்லாம் சிரிக்கத் திரும்பிவந்து இந்தப் பூமியிலிருந்தேனானால், நானிராவணனுக்குப் பிறந்தவனேயல்ல. அதனாலெனக்குண்டான இராவணியென்கிற பெயரும் இன்றோடில்லாமற்போகக்கடவதென்று இவ்வண்ணம்பலசபதங்கள் செய்துகொண்டான்.

இப்படி இந்திரஜித்துச் சொல்லக்கேட்ட இராவணன் சற்றே தயிரியங்கொண்டு அவனைப்பார்த்து, என்னப்பா இந்திரஜித்தே! நீ இந்த லேசானகாரியத்தைச் செய்து என் விசனத்தை நீக்குகிறதற்காகும். உனக்கு முடியாத காரியங்களுமுண்டோ? பெருங்குதையையுடைய ஓ வில்வீரனே! உன்னை இந்த அற்பர்கள் மீது எதிர்க்கும்படி அனுப்புவேனேயானால் எனக்கே என்மீது கோபமுண்டாகுமேயென்று கருதி, உன்னேடொன்றுமேயோசியாமல் நானிப்படிப்பட்ட துக்கத்துக் குட்பட்டேனென்று சொன்னான். தேவர்களையெல்லாம் ஜெயித்துச் சொர்க்கலோகத்தை வெற்றிபெற்றவனான இந்திரஜித்தென்பவன் அவ்வாறுசொன்ன ராவணனை வணங்கி மின்னலைப்போலப் பிரகாசிக்கின்ற கூர்மையுள்ள வாளாயுதத்தைக் கையிற்பிடித்துக் கொண்டும், ஒன்றினாலும் அறுபடாததும் ஊடுருவப்படாததுமான கவசத்தைத்தரித்தும், சத்துருக்களுடைய முதுகையுருவிப் போகும்படியான அம்பறுத்தூணியை முதுகில் வலித்துக் கட்டியும், வலியகுதைகளையுடைய வயிரமானவில்லை இடதுகையிற் பிடித்தும் ஆக்கிரமித்து நின்றான்.

அவன் பிடித்தவில் ஆதியிற் பிரமதேவன் வச்சிரமலையை யெடுத்துப் பகைவர்களால் ஒருகுறைவு நேரிடாதபடிக்கு இந்திரனுக்காகச் செய்து கொடுத்த வில்லாகும். அப்படிப்பட்ட வில்லை இவனந்த இந்திரனை அடித்துக்கட்டிச் சிறையில் வைத்தகாலையில் அவன் கையிலிருந்து பிடுங்கிக்கொண்டான். தோளிற் கட்டிய அம்பறுத்தூணியோ வென்றால்? அந்தக் காலத்தில் சிம்ஹம் போன்ற பலமுள்ளவனான இவன் அவ்விந்திரனிடத்தி லிருந்து பறித்துக்கொண்டதே: அது சப்தசாகர ஜலம்வற்றினாலும் அம்புகள் குறைவுபடாததும், கொடியகண்களையுடைய பேயும் யமனு முண்ணும்படியான ஆகாரமுள்ள தொம்பைக்கூடுபோன்றது மானது. அந்தத் தூணியிலுள்ள அஸ்திரங்களோ? அவன்முன்பு தேவர்களுடன் சண்டைசெய்தபோது மெய்ச்சி அவர்கள் கொடுத்தவைகளும், மேருவை வில்லாகவுடையவரான உருத்திரமூர்த்தி கொடுத்தவைகளும், பிரம்ஹதேவர் கொடுத்தவைகளும், இதுவரையில் வெற்றியல்லாமல் தோல்வியைக் கொடாதனவுமானவைகள்.

இவையல்லாமல் இன்னு மனேகமாயிரங்கோடி ஆயுதங்களை ஆராய்ந்து பார்த்தெடுத்துக் கொண்டு இரதாரூடனானான். அந்தரத மெப்படிப்பட்டதென்றால், அதிகபலமுள்ள இலக்ஷம் யாளிகளும் இலக்ஷமாண்சிங்கங்களும் பூட்டினதும் - இலங்கைக்குச் சமமாக அவ்வளவுவிசாலமான தாகச் செய்யப்பட்டதும்-தேவர்களுக்கு மதன்வல்லமை இவ்வளவென்று அறியக்கூடாததும், பொன்னையுஞ்சமானஞ்சொல்ல வரியதான நிறத்தையுடைய சிரேஷ்டமானகருடனையும-மின்னலைத் தோற்கடிக்கும்படியான பிரகாசமுள்ள மழுவாயுதத்தையுடைய சிவமூர்த்தியின் விருஷபத்தையும் - முன்பு யுத்தசமயத்திற் பின்றொடர்ந்துபோனதும், அந்தத் திரிமூர்த்திகள் முதலானவர்களை யெல்லாம் ஜெயித்து மேன்மையடைந்தபோது இந்த மூன்று லோகங்களிலும் அவர்

கள் வாகனங்களனைத்தும் தன்னைப் பின்றொடர்ந்து வரும்படியாகத் தான்தோல்வியடைந்து முன்செல்லாததும், வயிரம்பற்றிய கைகளைவகித்த தானவர்களுடைய தேஹமாமிசங்களை யெல்லாம் தேய்த்துவிட்ட சக்கரங்களையுடையது மானது.

அன்றியும் – அந்தத் தேரானது துதிக்கையையுடைய அஷ்டதிக் கஜங்களைத் துரத்தினதென்று சொல்வதோ பெருமை? அதிக வீரத்தன்மையைக் காட்டி எதிர்த்து நின்று இந்திரனைத் தூக்கிவிட்டெறிந்த காலத்தில் அவன் மல்லார்ந்து விழும்போது அவனுடைய முதுகைத்தேய்த்துத் தழும்புண்டாக்கின சிகரத்தையுடையதும் ஆடிக்கொண்டிருக்கின்ற நீண்ட விருதுக்கொடி கட்டியிருக்கின்றதுமான இப்படிப்பட்ட மகாகெம்பீரமுள்ள தேரில், சமானமற்ற வல்லமையைக் காட்டின தேவேந்திரனுடைய அழியாத பெரும்புகழானது நீங்கும்படி அவனுடைய பெரியதோள்களைப் பாசக்கயிற்றாற் கட்டிய ஜெயப்பிரதாபசாலியான இந்திரஜித்து வந்தான்: இந்திரஜித்து வந்தான்: என்று சொல்லிக்கொண்டு பேய்கள் சப்திக்கும்படியாகத் தானேறி, அந்தத் தேருக்கொப்பான ஆயிரம் சேமத்தேர் பின்னேவர மனதில் யுத்தப்பித்தேறினவனாகி, எந்நாளும் தேவர்களை முதுகிடச் செய்ததன்றி ஒருநாளுமவர்கள் முகத்தைப்பார்த்து யுத்தஞ் செய்தறியாத வீராதிவீரனான இந்திரஜித்து வந்தான்.

அவ்விந்திரஜித்துவிற்குத் துணையாக அவனது தேரைச்சூழ்ந்தெழுந்தசேனைகள் இவ்வளவினதென்றறிந்து கூறுவதற்கு என்னால் முடியாது. ஆயினும், நன்மைமிகுந்த நான்குவேதங்களிலும் பாண்டித்திய முடையவராகிய வான்மீகரென்று சொல்லப்பட்ட மகாரிஷியானவர் தமது ஞானதிருஷ்டியால் நாற்பது வெள்ளஞ்சேனைகளென்று கூறினார். அவர் மகாதவச்சிரேஷ்டரானதினால்தான் அச்சேனையைக் கணக்கிட்டுக் கூறினாரன்றி, மற்றவர்களியார்தாம் சொல்லவல்லவர்கள். வெகுகாலமாய்ச் செய்துவருகின்ற எந்த யுத்தத்திலும் தோற்காமல் வெற்றிபெற்றவர்களாகிய தூமாக்ஷனென்பவனும் – மகாபாரிசனென்பவனும் – சாக்கிரதையோடு தன்தேர்வண்டிலைத் தொடர்ந்து காவலாய்வர, சந்திரவட்டக்குடை மேலே நிழலிட்டுக்கொண்டுவர, பெரிய சங்கத்தொனிமுழங்க, கேட்கப் பயங்கரமான அஷ்டாதச வாத்தியங்கள் நாலுகட்லும் சேர்ந்து சப்திக்கிறதுபோலச் சப்தித்தன.

கவி.

தேராயிரமாயிர கோடிதன்மாடுசெல்லப்
போரானைபுறத்தி னவற்றினிரட்டிபோதத்
தாரார்புரவிக்கடல் பின்செலத்தானைவீரப்
பேராழிமுகஞ்செலச் சென்றனன்பேர்ச்சியில்லான்.

ஆயிர மாயிரகோடித் தேர்வீரர்கள் உள்ளணிசூழ்ந்துவர, இரண்டாயிர மாயிரகோடி யானைவீரர்கள் புறவணிசூழ்ந்துவர, இவைகட்குமுன் அநேக

மாயிரம் குதிரைவீரர்கள்கூட, நாற்புறத்தும் சேனுவீரர்கள் யுத்தக்கடலை ப்போலச்சேர, இந்தப் பிரகாரமாக இந்திரஜித்தானவன் யுத்தகளத்தை நோக்கி ஆக்கிரமித்துவந்தான். அப்போது இளையபெருமாள் இராவணன் புதல்வனுன அதிகாய னிறந்தபடியால் அவ்விராவணனுவது—அவன் வாராவிட்டால் தேவேந்திரனை வெற்றிகொண்ட இந்திரஜித்தாவது—இனி யுத்தத்திற்கு வருவார்களென்று கருதி, இரணக்களத்தைவிட்டு நீங்காமல் அங்கேயே நின்றிருந்தார்.

இலட்சுமணர் விபீஷணரால் இந்திரஜித்துவி னுற்ற லறிதல்.

கவி.

யாரிவன்வருபவ னியம்புவாயென
வீரவெஞ்சொழிலினுன் விளம்பவீடணன்
ஆரியவிவனிக லமரர்வேந்தனைப்
போர்கடந்தவனின்று வலிதுபோரென்ருன்.

அப்படி நின்றிருந்த இலட்சுமணர் இவன் வருவதைக்கண்டு, ஐயா இலங்கைக்கரசனுகிய ஓ விபீஷணமகாராஜனே! இவன்யார் சொல்லக்கடவீரென்றுகேட்டார். அதற்கவர்-ஸ்வாமி! இவன் மகாபலவந்தனும், தேவேந்திரனை யுத்தத்தில் ஜெயம்பெற்றவனுமான இந்திரஜித்தென்பவன். இன்றைக்குக் கடினமானசண்டை நடக்கும். ஓ எங்களாண்டவனே! அடியேன் ஒரு விண்ணப்பம் செய்துகொள்ளுகிறேன் அதனைக்கேட்டருளும். இவனேடுகூட மகாவீரவான்களெல்லாம் துணையாய்வருகின்ருர்கள். நம்மோடுகூடவும் தகுந்த துணைவர்களை வைத்துக்கொண்டு சண்டைசெய்வது நல்லது. தேவரீர் எல்லாந்தெரிந்த மகானுபாவர். தீர்க்காலோசனை செய்யவேண்டும். ஆஞ்சனேயர் — சாம்புவர் - சுக்கிரீவமகாராசர் - அங்கதர் - நீலர் - என்று சொல்லப்படுகின்ற இவ்வீரர்கள் நம்முடன் நிற்கும்படியாக, பாபரகிதரும் வீரப்பிரதாபமே திருவாபரணமாக வுடையவருமான தேவரீர் இவனேடு சண்டைசெய்வதே தகுதி.

அனேகமாயிரம் தேவர்களெல்லா முதவியாயிருக்க அளவில்லாத தேவசேனைகளுடன் கூடிக்கொண்டு தேவேந்திரன் இவனேடு யுத்தம்செய்தபோது, அவர்களையெல்லாம் இவன் நிமிஷநேரத்தில் தோற்கடித்துத் துரத்திவிட்டான். தேவேந்திரன் அமிர்தபானம் பண்ணினவ னுகையால் அந்தப் பலத்தைக்கொண்டு தனதுயிர்தப்பிப் பிழைத்தோடிப் போயினுன். அவ்விந்திரனுடைய மலைபோன்ற தோள்களை இவன் நாகபாசத்தால் கட்டினுன். ஆஞ்சநேயரையும் அந்தப் பாசத்தால்தான் கட்டினுன். இவ்விரண்டு காரியமும் லோகப்பிரசித்தமான காரியம். இதுவுமல்லாமல் — இவனுடைய தனுர்வித்தியா சாமர்த்தியத்தை எப்படிப்பட்டவர்களாலும் தடுக்கமுடியாதென்றனர்.

அங்கங்கிருந்த வானரசேனைத் தலைவர் இலக்ஷுமணரிடம் சேர்ந்து இராக்ஷசவீரர்களுடன் போர்புரிதல்.

கலி.

என்றவனிறைஞ்சலு மிளையவள்ளலும்
நன்றெனமொழிதலு நணுகினனரோ
வன்றிறல்மாருதி யிலங்கைக்கோமகன்
சென்றனனிளவன்மே லென்னுஞ்சிந்தையான்.

இப்படியென்று விபீஷணாழ்வான் வணங்கிச்சொல்லியதை இளையபெருமாள் கேட்டு, ஐயா விபீஷணரே! நல்லது: உம்முடைய மனம்போலச் செய்யக்கடவீரென்றமாத்திரத்தில் ஆஞ்சனேயர் இளையபெருமாள்மீது இந்திரசித்து எதிர்ந்துவந்தானென்றறிந்து, கூற்றுவனும் கண்புதைப்பக் காற்றினும் கடுகிவந்து சேர்ந்தான் அங்கதகுமாரன் முன்னமே இளையபெருமாளுடனே இருந்தானன்றோ? மற்ற வானரவீரர்களெல்லாரும் தாம் தாமாகவே வந்து சேர்ந்தார்கள்.

சங்குகள்முழங்குஞ் சமுத்திரத்துக்கொப்பான வானரசேனைகளுடன் சுக்கிரீவமஹாராஜன் முன்னதாக நடந்தார். வானரசேனையும் – இராட்சசசேனையும் - வடசமுத்திரம் தென்சமுத்திர மென்னு மிரண்டு பெரிய சமுத்திரங்களும் சண்டைசெய்ய விரும்பிப் பொங்கிச் சப்தித்துக்கொண்டு வருவதுபோல, மிகுந்த கோபத்துடன் ஒன்றை யொன்றெதிர்த்து நின்றது. தேவர்கள் தேவலோகத்தில் இல்லையென்று சொல்லும்படியாக தேவர்களெல்லாரும் தம்பதி சமேதர்களாய் இன்றைக்கு நம்முடைய கண்ணினாலும் - மனத்தினாலும் – ஆலோசனையினாலும்–நன்றாய்ப் பார்த்திருந்தோமானாற் சந்தோஷ மடையலாமென்று வந்து ஆகாசமார்க்கத்தில் நிறைந்தார்கள். அப்போது இரண்டுபட்சத்துச் சேனைகளும் போர்செய்யத்தொடங்கின. அக்காலந்த வீரர்கள் கர்ச்சித்த வீரகர்ச்சனையும், சமுத்திரம்போன்ற சங்கத்தொனியும், இரணபேரிகை முழக்கமும், ஒன்றுசேர்ந்து ஒலித்தபடியால்; தேவேந்திராதி தேவர்களெல்லாம் தங்கள் செவிகளைக் கைகளாற் பொத்திக்கொண்டார்கள். உயுத்தவீரர்கள் ஒருவரையொருவர் அடியுங்கள் – பிடியுங்கள் - எறியுங்கள் எய்யுங்களென்று சொல்லுகின்ற சப்தமும், வில்லிற் பூட்டிய குணடங்கார ஓசையும், பிரளயகால விடியைப்பார்க்கிலு மூன்றத்தனை கோஷமாகப் பிறந்தன.

அப்போது வானரவீரர்களெறிந்த மலைகள்பட்டும், மரங்கள்பட்டும்; இராக்ஷதவீரர்கள்விடுத்த யமனுக்கொப்பான வேலாயுதம் தைத்தும், வில்லிலிருந்து புறப்படுகிற அம்புகள்தைத்தும்; இவ்விராக்ஷசரும் வானரருமாகிய வீரவான்களுடைய இராத்திரியை யொத்தவையும் பகலை யொத்தவையுமான தேகங்களெல்லாம் அழிந்தன. இந்தப்பிரகாரமாக இரண்டு சேனையும் ஒன்

றையொன்று தோற்கடிப்பதினாலே பூமியும் இரண்டாய்ப்பிளக்க யத்தனித்தது. முசலாயுதங்களாலும், விருட்சங்களாலும், ஒருவரையொருவர் அடிக்கத் தலைகள் சிதறுண்டுபோன வானரங்கள் இளையபெருமாளுக்கு ஜெயமுண்டாகக் கடவதென்று வாழ்த்திக்கொண்டே விழுந்தன. இராக்ஷசர்களுடைய கொடிய தேகங்கள் கழுத்துடனே தலைகளில்லாமல் ரணக்களத்திற் கூத்தாடின. தலைவெட்டுண்டு நரம்புகள் வலிக்க ரத்தத்தைக் கொப்புளித்துக் கொண் டிருக்கின்ற வானரவீரர்களுடைய பலத்த தேகங்களெல்லாம், காடெல்லாம்வெந்து மடிந்தபிறகு நிற்கின்ற அடிக்கட்டைகள்மாத்திர மெரிகிறதுபோ லிருந்தன.

சிலவானரங்கள் ராக்ஷசர்களைப்பிடித்து அவர்களுடைய பெரியதோள்களை முறித்தன. சிலவானரங்கள் அரக்கர்களைக் காலாலெட்டி யுதைத்தன. சிலவானரங்கள் நிசாசரர்களை நெட்டித் தள்ளின. சிலவானரங்க ளந்தத் துஷ்டர்களைப்பிடித்துத் துண்டுதுண்டாய்க் கடித்துக் கொன்றுவிட்டன. சிலவானரங்கள் அந்தப் பாவிகளைக் கழுத்தறுந்து போகும்படி கைகளால்வாரி யடித்தன. சிலவானரங்கள் ராக்ஷசர்களைப் பூமியிற்போட்டுத் தேய்த்துவிட்டன. சில வானரங்கள் வீரசிம்ஹநாதம் செய்தன. இராக்ஷசர்களிற் சிலர் வாளாயுதங்களினால் வானரங்களினுடைய வீரகண்டாமணிதரித்த கால்களைத் துணித்துவிட்டார்கள். சிலர் தலைகளை வெட்டித்தள்ளினார்கள். சிலர் தோள்களைவெட்டி யெறிந்தார்கள். சிலர் உடலை இரண்டுதுண்டமாகத் தறித்துப்புழுதியிற் புரட்டினார்கள். இயமனைப்போலத் திரியும் வானரங்கள் விருட்சங்களினால் இராட்சசர்களுடைய மலைபோலுயர்ந்த தலைகளைச் சிதறடித்தார்கள். சிலருடையஉயிரைப் பருவதப்பிரயோகத்தாற் போக்கிவிட்டார்கள். சிலருடையகைகளும் கால்களும் அதனால் முறிந்துவிழுந்துமடிந்தார்கள்.

அக்கினிப்பொறிகளைக் கக்குகின்ற கண்களை யுடையனவாகிய சிலகரடிகள் பலம்பொருந்திய தலையும் கைகளும் அற்றவைகளாகித் தேகத்தில் வச்சிரவே லுருவும்படி விடுத்தெதிர்ந்த ராக்ஷசர்களுடைய கழுத்தைத் தாவிக்கடித்துக்கொண்டு அவர்களுடனேகூட மாண்டுபோயின. சிலகரடிகள் மலைகளைப் பேர்த்து இடியோடுகூடின மேகத்தையொத்த தந்தங்களையுடைய கரியயானைகளின் மஸ்தகங்களைப் பிளந்து, அவற்றிலுள்ள மூளைகளைத் தின்று தங்களுடைய பசியாறின. மலைகளிலும் பெரிய தேகங்களை யுடையவைகளான வானரங்களிற் சிலமதத்தயானைகளின் மீதும், சில குதிரைகளின்மீதும், சில மணிகள் கட்டியிருக்கிற தேர்களின் மீதும், சில எதிரிகள் கைகளிற் பிடித்திருக்கிற வாள்களின் மீதும், சில வில்லுகளின் மீதும், சில ராக்ஷசர்களுடைய செம்பட்டைமயிர்த் தலைகளின் மீதும் தாவிக் குதித்தன. இராக்ஷசர்கள் தண்டாயுதங்களைக்கொண் டடித்துக்கொல்ல வுடைந்த தலையை வீசியெறிந்தும், வாள்களினாலே துண்டு துண்டாய்ப்போன தேஹங்களை வாரிக்கொண்டும், அங்குள்ளமலைகளைப் புரட்டிக்கொண்டும் போகின்ற ரத்த

வெள்ளமானது குரங்குப் பிணங்களையெல்லாம் சமுத்திரத்திற் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டது.

கவி.

பனிவென்றபதாகையென்றும் பல்லுளைப்பரிமாவென்றும்
தனுவென்றும்வாளியென்றுந் தண்டென்றுந்தனிவேலென்றும்
சினவென்றிமதமாவென்றும் தேரென்றுந்தெரிந்ததில்லை
அனுமன்றன்வயிரக்குன்று லரைப்புணடவரக்கர்தானை.

சகல லோகங்கட்கும் இராட்சசர்களுடைய உபத்திரவத்தை யொழிக்கும்படியாகத் திருவவதாரஞ் செய்த ஸ்ரீயப்பதியாகிய இரகுநந்தனருடைய தூதுவராகிய ஆஞ்சனேயர் தமது கையிற்பிடித்த மலையையொத்த வச்சிரதண்டத்தால் மோதிமோதி யிராட்சசச்சேனைகளை அடித்த காலையில், யாவர்களுக்கும் குளிர்ச்சியைக் கொடுக்கின்றதில் மிகவும் வலம்பெற்ற கொடி யென்றும், இவை பிடரிமயிர்களையுடைய பலவகையான குதிரைகளென்றும், இவை வில்லுகளென்றும், இவை அம்புகளென்றும், இவை வாளென்றும், இவை தண்டாயுதமென்றும், இவை கோபத்தையுடைய மதயானையென்றும், இவை தேரென்றும் வேறுபிரித்தறியக் கூடாமற் போய்விட்டன. அங்கதன் ஒரு பெரிய விருட்சத்தைப் பிடுங்கிச் சாடினபோது, அநேகந்தேர்கள் – குதிரைகள் – யானைகள் - இராட்சசர்களென்று சொல்லப்பட்ட அளவிறந்தசேனைக ளியமனும் சுற்றித்திரிந்து உயிர்களெங்கேனும் தப்பி யிருக்கின்றவைகளோவென்று இரண்டுகைகளினாலும் பிரேதங்களைக் கிளறித்தேடிப் பார்க்கும்படியாக அழிந்துபோய் விட்டன. அக்கா லஷ்டதிக்கிலுள்ளவர்கள் அந்த நாற்றிசைகள்தோறு நின்று, யானைகள் – தேர்கள் – குதிரைகள் – முதலிய எல்லாவற்றையும் வானரவீரர்கள் சம்ஹரிக்கிற இரணக்களத்தைப் பார்த்துத் தேவர்கள் சொல்லிக்கொண்டதாவது: முன்னே அசுரர்கள் நம்முடன் சண்டைசெய்கிறதைப் பார்த்து இன்னார் ஜெயமடைவார்கள்: இன்னார் தோற்பார்களென்று மஹாரிஷிகள் நிச்சயித்துச் சொன்னதுபோல, வானரங்களுக்கு ராட்சசர்கள் தோல்வியடைவார்களென்று சொன்னார்கள்.

இப்படியவர்கள் சொல்லிக்கொண் டிருக்கும்போதே இராட்சசர்கள் படையெடுத்துவர, அதைக்கண்டு வானரர்களெல்லா மோட்டமெடுத்தார்கள். வானரவீரர்கள் அதைக்கண்டு அவர்களை யோடவொட்டாமல் தடுத்தார்கள். இராட்சசர்கள் வானரங்களைச் சமுத்திரம்போலச் சூழ்ந்து மடித்தார்கள். அதைப்பார்த்த வானரர்கள் மீட்டும் பயந்து ஓட்டம் பிடித்தார்கள். அப்போதும் வானரவீரர்கள் அவர்களை யோடவொட்டாமல் தடுத்து நிறுத்தினார்கள். பிறகுநீலனென்கிற வானரவீரன் சூலாயுதமும் – மழுவாயுதமும் – கையிலே தாங்கிக்கொண்டு, அஷ்டபுஜங்களுடனே பிரளயகாலத்தில் உலகங்களையெல்லாம் சம்மரிக்கும் உருத்திர மூர்த்தியைப்போல நின்றவிடத்திலேயே நின்று வந்தராட்சசர்களை யெல்லாங் கொன்றுகொண்டே

யிருந்தான். இப்படி யநேகர் உயிர்மாய்வதினால் யமன் தன்கிங்காரர்களுடனே பாசத்தைக் கையிற்பிடித்தபடியே அந்த விடத்தைவிட்டு அப்பாற் போகாமல் நின்று உயிர்களைப் பிடித்துக்கொண் டிருந்தான்.

வேறொருபக்கத்திற் குமுதனானவன் வாயுதேவனைப் பார்க்கிலும் – வருணதேவனைக் காட்டிலும் – அதிகமாகவும், அக்கினிதேவனும் சமானமாகானென்று சொல்லும்படியாகவும், ஆயுதமொன்று மில்லாமல், இரண்டு கைகளின் வல்லமையாலேயே செய்கிற யுத்தத்தின் பெருமையை விரித்துச்சொல்லவேண்டிய தென்ன? இயமனும் தன்பதவியை இவன் பிடுங்கிக்கொள்ளுவானென்று நடுங்கிப் பயப்படும்படி தன்கையிலகப்பட்ட ராட்சசர்களையெல்லாங் கொன்றான். மற்றொருபக்கத்தில் இடபனென்கிற வானரவீரனால் வீசியெறிந்த சமுத்திரஞ்சூழ்ந்த பூமியிலுள்ள மரங்களுக்குள்ளும், மலைகளுக்குள்ளும், ஸ்ரீசக்கரவர்த்தித் திருமகனெய்த பாண முருவிப்போன நெருங்கிய கிளைகளையுடைய ஏழுமராமரங்கள் மாத்திரம் யாவர்களுக்கும் அடையாளம் தோன்றுவதற்காக நின்றன. மலைகளில் மேருமலையும் அஷ்ட குலாசலங்களுமே சாஸ்திரநிச்சயத்திற்காக நின்றன. மற்றமரங்களிலு மலைகளிலும் ஒன்றாவது அவன்கைக்குத் தப்பினவைக ளில்லை.

இந்தப்பிரகாரம் எல்லாமரங்களாலும், எல்லாமலைகளாலும், அநேக ராட்சசர்க ளிறந்துபோனார்கள். மதகிலிருந் தோடுவதுபோல இரத்தம் குபுகுபென்றொழுகும்படிச் சாம்பவன்பெரிய விருட்சங்களைவீசிச் சுற்றிச்சுற்றிக் கொல்ல எல்லாராட்சசர்களு மாண்டுபோகின்றதைப்பார்த்த தேவர்களெல்லாம் குதிரைகளையும், மதயானைகளையும், தேர்களையு முடையவராய் வக்கிரதந்தம் வாய்ந்தவாயையுடைய பாம்பிலும் கொடியவர்களுமானராட்சசர்கள் ஓயாமற்பல்கிப்பெருகுவதனா லுண்டாகிய பயம் இன்றைவரையிலுந்தானென்று பேசிக் கொண்டார்கள். போர்செய்கின்ற குதிரைகளாகிய அலைகளும், தேர்களாகிய கப்பல்களும், மதங்கொண்ட யானைகளாகிய சுறா மீன்களு மோடிப்போகவும்; நெருங்கிய வாயுதங்களாகிய மீன்கூட்டங்களெல்லாம் சிந்திச் சிதறிப்போகவும்; கருங்கடலைக் கலக்குகின்ற மத்தைப்போல இராட்சச சேனாசமுத்திரத்தைப் பனசனென்கின்ற வானரவீரன் சின்னாபின்னப்படக் கலக்கிவிட்டான்.

மயிந்தனென்கிற வானரவீரனும், அவனுக்கிளையவனாகிய துமிந்தனென்கிற வானரவீரனும், முன்மேகங்களைக் கிழித்துச் சின்னாபின்னப் படுத்தி ஆகாசத்திற் பறந்துபோன ஜடாயுராஜனையு மவர்சகோதரரான சம்பாதிராஜனையும்போல விராட்சசர்களை யெல்லாம் சின்னாபின்னப்படுத்திவிட்டார்கள். கவயனென்னும் வானரவீரன் இராட்சசக்குட்டையைக் கலக்குகின்ற மதயானையைப்போலானான். கேசரியென்னும் வானரவீரன் நின்றபடியே நின்று, வரிசையாய் வந்த இராட்சசர்களையும் அவர்கள் சேனைகளையும் கொன்றுவிட்

டான். இந்தப் பிரகாரமாக வானரவீரர்கள் முன்வைத்தகாலைப் பின்வையாமல் இராட்சசப்பிணங்களை மலைமலையாகக்குவித்து அட்டகாசஞ்செய்து போர்நடத்துகிறபோது, ஓடிப்போன வானரக்கூட்டங்களெல்லாம்வந்து ஒன்றாய்க்கூடிப் போர்க்குப்புறப்பட்டன. அதைக்கண்டு இராட்சசச்சேனைமுழுமையும் தங்குதல் தரிக்குதலில்லாம லோட்டமெடுத்தன.

இராட்சசச்சேனைகள் மாளக்கண்ட இந்திரசித்து போருக்கெழுதல்.

கவி.

பூணெறிந்தருவடனையதோள்களிரு புடைபரந்துயரவடல்வலித்
தூணெறிந்தனையவிரல்கள்கோதையொடு சுவடெறிந்ததொருதொழில்படச்
சேணெறிந்துதிமிர்திசைகளோடுமெலை செவிடெறிந்துடையமிடல்வலோன்
நாணெறிந்துமுறைமுறைதொடர்ந்துகட லுலகம்யாவையுநடுக்கினன்.

இந்தப்பிரகாரமாக இராட்சசச்சேனைகள்யாவும் இறந்தவைகளாகவும், ஓட்டமெடுத்தவைகளாகவும், வானரசேனைகள் ஆக்கிரமித்திருந்தவைகளாகவுங்கண்ட இந்திரசித்தானவன் தானொருவனாய் நின்று போர்செய்ய யத்தனித்தான். ஆபரணங்களைத் தரித்த மலையைப்போலத் தோள்களிரண்டுபக்கத்திலும் பூரித்துயரவும்; மிகுந்தபலமுள்ள தூண்கள்போல நெரித்தவிரல்களிற்றோல்பூட்டி, அந்தவிரலால் ஆகாசமெல்லாம் வெடிபடவும், திக்குகளெல்லாம் செவிடுபடவும், அஷ்டகுலாசலங்களு நெக்குவிடவும், மகாவீரத்தோடு வரிசைவரிசையாக வில்லைக்குணத்தொனி பண்ணி; சமுத்திரஞ்சூழ்ந்த லோகங்களையெல்லா நடுங்கும்படிச் செய்தான். அன்றியும் — சத்தசாகரங்களைப்போல யாவருநடுங்கும்படி வீரகர்ச்சனைசெய்து, தனதுயர்ந்ததேரை வேகமாய்ச் செலுத்தும்படிச் சாரதிக்குத் திட்டஞ்செய்து, அங்கதன் முதலானவர்களெல்லாம் பயப்படவும் — தேவர்களெல்லா நடுக்கங்கொள்ளவும்—அதிககோபத்தையுடையவனாகி, சங்கபாலன்—குளிகன்—பதுமன்—மகாபதுமன் - வாசுகி—அனந்தன் — தட்சகன் — கார்க்கோடகன்—என்று சொல்லப்பட்ட அஷ்டமாநாகங்களும் தங்கள் பற்களிலிருந்து அக்கினிமயமான விஷங்களைக் கக்கினாற்போலதிகவேகமாய் இடியையுந் தோற்கடிக்கும்படியான கொடியபாணங்களை நான்குபக்கங்களிலுந் தூற்றினான். அதனால் வானரவீரர்கள் சுற்றிலுங் கவிந்துகொண்டு வீசின மலைகளு மரங்களும் அவ்விந்திரஜித்துவிடுகிற பாணங்கள்பட்டுப் பொடியாயுதிர்ந்தும் துண்டு துண்டாய் முறிந்தும்போயின.

அப்போது வானரர்களுடைய தலைகள் அநேகமா யறுபட்டு ஆகாசத்திற்போய் சின்னாபின்னமாய்ச் சிதறிப் பூமியில்வீழ்ந்து மண்ணிற் புதைந்துபோயின. சில வானரவீரர்கள் இந்திரசித்துவின் வில்லிலிருந்து புறப்படுகின்ற பாணங்கள் போவதைக் கண்டுநடுங்கி, தாங்கள் கோபத்தாற் பேர்த்தெறியும்படித் தூக்கினமலைகள் தங்களுக்கே பாரமாகும்படியொடுங்கிநின்றுவிட்டார்கள். சிலவானரவீரர்கள் முந்திப்போய் நெருங்கினபோது, அவர்கள் கொண்டுபோன மலைகளும் அவர்களுடையமார்பு மூடுருவும்படியாக இந்திர

சித்துவின் பாணங்கள் நுழைந்தன. ஒரு முகூர்த்தகாலத்துக்குள் ஒருவெள்ள வானரங்கள்மாண்டன. சிலவானரவீரர்கள்-வானரர்களின்கழுத்துகளும்,கைகளும், கால்களும், வால்களும், அநேகதுண்டங்களானதைக் கண்டு,உருக்குஸ்தம்பம்போன்ற தோள்களினாலே முட்டியும், கைகளாற் குத்தியும், உயர்ந்த மூங்கில்கள் வளர்ந்திருக்கின்ற பெரியமலைகளைப் பேர்த்தெறிந்தும், தாமுமந் தமலைகளுடனே பூமியில் விழுந்துபோய் விட்டார்கள். வானரர்களுடைய தலைகளை அரிந்துகொண்டுபோன இந்திரசித்துவினது உஷ்ணமிருத்த பாணங்கள் புற்றில் நுழைந்த நீண்டபாம்பைப்போல நாகலோக மடைந்துவிட்டன. இரணக்கள முழுவது மேடுபள்ளமில்லாமல் வெற்றுவெளியா யிருந்தபடியால், அதிற் பரவினரத்தங்கள் ஒரு சமுத்திரத்துக்கொப்பா யிருந்தது.

இந்திரசித்துவினு லெய்தபாணங்கள் வானரர்கள் விழித்துப்பார்த்தால் அந்தவிழியிற் பாய்கின்றன. நிற்பார்களானால் அவர்களுடையமார்பிற் பாய்கின்றன. திரும்பி யோடுவார்களேயானால் முதுகிற் பாய்கின்றன. ஆகாசத்திற் பாய்ந்தார்களானால் அவர்கள் மேனியைக்கிழிக்கின்றன. இப்படி யவர்கள் கைகால்களை அசைத்தாலும், வாயாற்பேசினாலும், மனதால் நினைத்தாலும், அந்தந்த அவயவங்களிற் பாய்கின்றன. இந்தப்பிரகாரமாக மலைகளையொத்த தேகங்களை யுடையவர்களான வானரர்களினுடல் முழுவதும் இந்திரஜித்துவின்பாணங்கள் நுழைந்தன. நெருங்கிவருகின்ற பாணவருஷத்தால் மூடப்பட்ட இடத்தைக் கண்டார்களேயல்லாமல், வெறுமையா யிருக்கிறவிடத்தை ஒருவரும் அறியார்கள். அஸ்திரப்பிரயோகம் செய்யும்போது நெறித்திருக்கிற வில்லினோசையே யல்லாமல், வேறோரோசையும் கேட்கவில்லை. வானரர்களென்று பேரெடுத்த சேனைகளெல்லா மாண்டுபோய் விடுகின்றனவென்று துக்கிக்கின்ற அவ்வானரசேனையின் வீரர்களைப் பார்க்கிலும், தேவர்களதிகமாய்க் கலக்கமடைந்தார்கள்.

இந்திரசித்துடன் சுக்கிரீவன் போர்புரிந்துமெலிதல்.

கவி.

கண்டவானர மனந்தகோடிமுறை சண்டமானபடி கண்டவக்
கண்டன்மாறொருவ ரின்மைகண்டுகணை மாறினான்விடுத வின்மையாக்
கண்டகாலையில் விலங்கினனிரவி காதல்காதுவதொர் காதலால்
கண்டகார்சிதைய மீதுயர்ந்தொளிர் மராமரஞ்சலவு கையினன்.

இந்தப்பிரகாரமாக வானரர்களெல்லாம் அநேக கண்டதுண்டங்களானமையைக்கண்ட அந்தத்துஷ்டனான இந்திரசித்தானவன்,தன்னோடெதிர்த்துவரத்தக்கவர்கள் வேறொருவரு மில்லாமையாற் பாணப்பிரயோகம் செய்யாமலிருந்தான். அப்போது சூரியகுமாரனான சுக்கிரீவமகாராஜன் இந்திரஜித்துவோடு சண்டைசெய்ய வேண்டுமென்கிற ஆசையால் ஆகாசத்திற் பரவியிருக்கின்ற மேகங்களெல்லாம் சின்னபின்னப் படும்படி உயர்ந்திருந்த ஒரு மரா

மரத்தைப்பிடுங்கி, அவன் தன் சேனைகளெல்லா மாண்டு உயிரழியும்படிப் போர்செய்ததனுல், திருப்பாற்கடலைக் கடைந்து தேவாமிர்தங்கொண்ட வாலியைப்போல் மிகவும் கோபித்தவனு யவ்விந்திரஜித்துவைக்கிட்டி, அவனுக்கு உபபலமாகவந்து சூழ்ந்துகொண் டிருக்கின்ற சேனுசமுத்திரமெல்லாம் கால்தளர்ந்து பின்னிட்டோடும்படி அம்மராமரத்தைக் கிறுகிறுவென்று சுற்றியடித்தார். அதைக்கண்ட இராக்ஷசவீரர்களெல்லாம் பயந்து நடுங்கினுர்கள். இப்படிச் சுக்கிரீவமகாராஜன் ஒரு மராமரத்தைக்கொண்டு தன்னைச் சூழ்ந்துநின்ற இராக்ஷசப்படைகள் சின்னுபின்னப்பட்டோடத் தும்சம்பண்ணுகின்ற வீரத்தை இந்திரஜித்தானவன் கண்டு, சபாஸ் ! நல்லவீரன்; நல்லவீரனென்று ஆச்சரியப்பட்டு, அதிவேகமாய்ச் சுக்கிரீவமகாராஜனுடைய நெற்றியிலிரண்டு பாணமும் — மார்பில் அஞ்சுபாணமும் — விஷத்தைப்போல வெய்து, அவர்கையிற் பிடித்திருந்த மராமரத்தையும் துண்டுதுண்டாய்நொறுக்கிப் பொடியாக்கிவிட்டான்.

இந்திரசித்துடன் ஆஞ்சநேயர் போராடி மெலிதல்.

கவி.

அக்கணத்தனும ஞலகாலமென லாயதோர்வெகுளி யாயினுன்
புக்கனைத்துலக முங்குலுங்கநிமர் தோள்புடைத்துருமு போலுரு
இக்கணத்தவ னிறக்குமென்பதொரு குன்றெடுத்துமிசை யேவினுன்
உக்கதக்கிரி சொரிந்தவாளிகளி னூழிலாதசிறு பூழியாய்.

இவ்வண்ணம் இந்திரசித்தென்னும் இராட்சசப்பதகனுகிய சண்டாளன் இராமசுவாமியின் துணைவனுகிய சுக்கிரீவமகாராஜனைத் தோற்கடித்ததைக்கண்ட ஆஞ்சனேயர் அதைச்சகியாது அந்தக்ஷணத்திலேயே ஆலகாலவிஷம்போலக் கோபங்கொண்டு புகுந்து, உலகங்களெல்லா நடுங்கும்படித் தமது தோளைத்தட்டி யிடிபோலக்கர்ச்சித்து, இந்தட்சணமே இந்திரஜித்து இறந்துபோவானென்று யாவரு நினைக்கும்படியாக ஒருபெரியமலையைப் பேர்த்து அவன்மீது எறிந்தார். அஃதவன் பிரயோகித்தபாணங்களினுல் தூள்தூளாய்ப் பறந்துபோய்விட்டது. அப்போது இந்திரசித்து ஆஞ்சநேயரைப் பார்த்து, அடா வானரமே! சற்றே நில்லு: சற்றே நில்லு: உன்னை நினைத்துக்கொண்டு தான் நான் சண்டைக்குவந்தேன். கையில் வில்லெடுக்காமல் உன்வீரத்தை வாயினுற்சொல்லி விளையாடிக்கொண் டிருக்கின்ருய். இந்த மலைகளைக்கொண்டு மரங்களைக்கொண்டுமோ என்னை ஜெயிக்கப்போகிருய். என்றுசொல்லி அட்டகாசஞ்செய்தான். அதைமேருமலையல்லாமல் வேருென்றுடனும் சமானப்படாத திருத்தோள்களையுடைய ஆஞ்சநேயர்கேட்டு, அடா அற்பனே! வில்லெடுத்துச் சண்டைசெய்ய உரியவர்கள் வேறே இரண்டு வீரசிகாமணிக ளிருக்கின்ருர்கள். அதை இன்றைக்கோ நாளைக்கோ பார்க்கப்போகிருய். நாங்கள் மலையு மரங்களுமெடுக்கத்தக்கவர்களா யிருக்கின்ருேம்.

அடா எனதெரியுண்டவானுக் கிடியுண்டுபோன ஈனனே! பிரகாசிக்கின்ற பலவாயுதங்களையெடுத்துக்கொண்டு வந்த இந்திரன் முதலானபேர்கள் தம்முயிரைப் பெரிதாகக்கொண்டு உனக்குத் தோற்றுப்போவார்கள். நாங்களவ்வுயிரை லக்ஷியஞ்செய்து கையிலே புல்லெடுத்துக்கொண்டு வந்தவர்களல்ல. நாங்களுமுன்னோடு சிலயுத்தம் செய்யத்தான் வந்திருக்கின்றோம். உனக்கு என்னோடுசண்டைசெய்ய விருப்பமா? அல்ல திலட்சுமணரென்கிற திருநாமமுள்ள எங்களாண்டவருடனே சண்டைசெய்ய விருப்பமா? இவ்விரண்டுமில்லாவிட்டால் உங்களப்பனான இராவணனுடைய தலைகளை வெட்டித்தள்ள வெழுந்தருளி யிருக்கின்ற மகாவீரராகிய சக்கரவர்த்திப் பிரானுடனே போர்செய்ய விருப்பமா? நீயெப்படிக் கேட்டாலு நாங்கள் தடைசொல்லமாட்டோம். அப்படியேசெய்வோம். என்று சொல்லவும் அதுகேட்ட இந்திரஜித்தானவன் குலுங்கநகைத்து, அப்படியானால் நீசொன்ன அந்தலட்சுமணனெங்கே யிருக்கின்றான்? அந்தவற்ப பலவான் என்தம்பியாகிய அதிகாயனென்கிற சிங்கக்குட்டி வந்தால் அவனைக்கொன்று, தன்னுயிரை என்வில்லிற் கிரையாகவைத்திருக்கின்ற கீர்த்திமானாகியவனோடு சண்டைசெய்து அவனைக் கொன்று என்கோபந்தணிய வந்தேன்.

அடாநரதூதனே! என்சேனைகளை யெல்லாம் அப்பாற்போகச் செய்துவிட்டு, இவ்வுலகங்களை யெல்லாம் ஒடுக்கிவிடும்படியானநான் என் வில்லைவளைத்து இவ்வாறே தேரிலிருந்து உங்களையெல்லாம் தலையறுத்துவிடப்போகிறேன். இதுசத்தியம். எல்லாரும் வாருங்கள். உங்களுடனே தேவர்களையும், இந்தப் பூலோகத்திலுள்ளவர்களையும், உங்களுக்கு உபபலமாய் அழைத்துக்கொண்டுவரலாம். இன்றைப்பகற்பொழுதுக்குள்ளே ஜெயம்பெற்றுவிடுகிறேனென்று சொல்லித் தொளாயிரம் பாணங்களை வில்லிற்பூட்டி அனுமான்மீது பிரயோகம் செய்தான். அவைகள் மேருபருவதம்போல நின்றிருக்கின்ற அவ்வாஞ்சநேயர் மேனிமுழுவதும் கும்பற் கும்பலாகப்போய்த் தைத்த மாத்திரத்திற் பல்லைநெறநெறவென்று கடித்து, அதிக கோபத்துடனே பக்கத்தில் நிற்கின்ற ஒரு பிர்ம்மாண்டமான மலையைத் தூக்கிக்கொண்டுபோய் இந்திரசித்துவுக்கு முன்பாக நின்று கொண்டு சொல்லுகின்றார்.

அடா துஷ்டராவணனுடையசிசுவே! உலகத்தில் யானைகளெவ்வளவுண்டோஅவ்வளவுமொன்றாய்க்கூடினாலும், துள்ளியோடுங்கால்களையுடையசிம்ஹமொன்றுக்கு முன்னின்று அதைவெல்லுமா? எங்களாண்டவராகியஸ்ரீராமச்சந்திரருடையதிருத்தம்பியார் வருமளவும் நீநிற்கமாட்டாய். நீஅஸ்திரப்பிரயோகம் செய்வதற்குள்ளாக முந்தி இஃதுன்னுடைய பிராணனை யுண்டுவிடும். நீயுன் வில்வல்லமையாற் காக்கக்கூடுமானாற் காத்துக்கொள்ளடா பார்க்கலாமென்றுசொல்லி ஆஞ்சநேயர்விட்ட மலையானது அஷ்டதிக் கஜங்களினுடைய தந்தங்கள்பதிந்த திரண்டதோள்களையுடைய இராவணன்மகனான இந்திரஜித்

னுவின் மார்பில் தரித்திருக்கின்ற வச்சிரகவசத்தில், ஒரு மலைமீதுமற்றொரு மலை தாக்குண்டதுபோலவும், நெருப்பில்வெந்த இரும்பு சம்மட்டியாலடித்தபோது பொறிப்பொறியாய்ச் சிதறிப்போவதுபோலவும், உடைந்து மடிந்து மாவாகி நான்குபக்கங்களிலும் சிதறிவிழுந்தன.

இப்படி அனுமாராலே எறிந்தமலை மேலேவிழுந்து சிதறிப்போனதைக் கண்டு கோபங்கொண்ட சிம்ஹத்தைப்போன்ற வஞ்சகனாகிய இந்திரசித்தானவன் அதி உக்கிரமான செருக்குடனே ஆக்கிரமித்து, உலகத்தை மேருமலையுடனே பேர்க்கத்தக்கவரான வாயுபுத்திரராகிய அவ்வனுமானுடைய வெற்றிமாலையைத் தரித்திருக்கின்ற மார்பிலும் தோளிலும் உருவத்தக்கதாக ஆயிரம்பாணங்களைக் கொண்டு அழுத்தினான்.

இந்திரசித்துடன் நீலன் போராடி மெலிதல்.

கவி.

ஒன்றுபோல்வனவோராயிரம்பகழி யூடுபோயுருவவாடகக்
குன்றுசால்குடையமேலுயர்ந்திடை குலுங்குகின்றனையகொள்கையான்
மன்றனாறுதடமேனிமேலுதிர வாரிசோரவருமாருதி
நின்றுதேறுமளவின்கண்வெங்கண்விழி நீலன்வந்திடைநெருக்கினான்.

இந்தப்பிரகாரமாக இந்திரசித்தென்னும்பதகன் பிரயோகித்த ஒவ்வொன்றும் ஒன்றைப்போற்கூர்மையும், வேகமும், வருத்தஞ்செய்பவையும், கொடுமையும்பெற்று விளங்குவனவாகிய ஆயிரம்பாணங்களும் சல்லடைக்கண்களாகத் துளைத்துருவ, பொன்னிறம்பெற்ற மகமேருகிரியானது சண்டமாருதமசைக்க அசைந்து குலுங்குவதைப்போலநடுங்கி, வாசனைவீசிப் பருத்ததேகத்தில் இரத்தப்பிரவாகம் பெருக ஆஞ்சனேயர் சற்றுத்தளர்ந்தனர். அப்படி தளர்ந்தவராகிய அநுமார் அச்சிரமபரிகாரம் பண்ணிக்கொள்வதற்குள்ளாக கோபக்கண்களையுடைய அதிபலாட்டியனான நீலனென்கிற வானரவீரன் வந்து இந்திரஜித்துவை நெருங்கி, ஒரு நீலமலையைத் தனது பெரியகையினாற் பேர்த்து அவ்விந்திரசித்துவின்மீது ஆகாசத்தில் அக்கினிசெல்வதுபோல அதிவேகமாய்ப்போய் விழும்படி எறிந்தான். உடனே யமனெறிந்த சூலத்துக்கொப்பான அந்தமலை க்ஷணகாலத்துக்குள் வந்து தெரியாமற் சிந்திச்சிதறிப்போகும்படி, வலியவில்லையுடைய அவ்விந்திரஜித்தானவ னனேகவம்புகளைக்கொண்டு உடைத்து, வானரங்களின்மீதும் சிலபாணங்களை விட்டான்.

இப்படி அக்கினியும்பயங்கொள்ளும்படியான வாயையுடைய சர்ப்பசாலங்களுக்கொப்பான இந்திரசித்துவினுடைய பாணம் பாயும்போதெல்லாம் உயிரோடுநின்ற வானரங்கள் திக்குத்திசைதெரியாமல் ஓட்டம்பிடிக்கவும், தேவர்களுடையமனமும் பிராந்தியடையவும், மேருமலையினுமூன்றுபங்குபலமுள்ள நீலனுடைய தேகமெல்லாம் சல்லடைக்கண்கள்போலத் திறந்துபோகவும், அவற்றிலிருந்து ரத்தப்பிரவாக மொழுகவு மானபோ தந்நீலன் இடுகிடென்று தேகநடுங்கினான்.

இந்திரசித்துடன் அங்கதன் போராடி மெலிதல்.

கவி.

மேருமேருவெனவல்லதல்லதென வேரினோடுநெடுவெற்பெலா
மாரின்மேலுமுயர்தோளின்மேலும்வர வாலிகாதலன்வழங்கினான்
சேருமேயவைதனுக்கைநிற்கவெதிர் செல்லுமோவிடிதுசெல்லினும்
பேருமேகொடியவாளியான்முறி பெறுக்கலாவவைநுறுக்கினான்.

அப்போது வாலி புத்திரனான அங்கதகுமாரன் தன்னைப்பார்த்த பேர்களிற் சிலர் மேருதான்; மேருதான்; என்று சொல்லவும், சிலர் யூகித்து அதுவல்ல: அதுவல்ல : என்று சொல்லவும், அங்கேயுள்ள மலைகளை யெல்லாம் வேரோடுபிடுங்கி இந்திரஜித்துவின் மார்பின்மேலும் தோளின்மேலுமாகக் குறிப்பிட்டு எறிந்தான். அவைகளெல்லாம் இந்திரசித்துவின்கையில் வில்லிருக்கிற பரியந்தம் கிட்டிச்சேருமோ? அல்லது நடுவேதான் வருமோ? அப்படிவந்தபோதிலும் தப்பிப்போய் விடுமல்லவா? உடனே யவ்விந்திரசித்தானவன் தனது கொடிய பாணங்களினால் அவ்வங்கதன்விட்ட மலைகளையெல்லாம் பொடிப்பொடியாய் நொறுக்கிவிட்டான்.

இப்படி யவ்வங்கதன்விட்ட மலைகளெல்லா நொறுங்கிவிட்டது மாத்திரமா? அவனுடைய நெற்றியின்மீதும், உயர்ந்த தோளின்மீதும், நீண்டமார்பின்மீதும், மற்றக்கால்கள் முதலிய உறுப்புகளின்மீதும், புற்றில் நுழைகின்ற சர்ப்பத்துக்கொப்பாக அவ்விந்திரசித்துவினது புகைகின்ற பாணங்கள் நுழைய நுழைய; அவ்வங்கதகுமாரனும் அலைகுலைந்து பல்லைக்கடித்துக் கைகளைப்பிசைந்து, கண்களில் நெருப்புப்பறக்க வாட்டமுற்று, இரத்தம் வடியமயங்கிப் பூமியிற் சோர்ந்துவிட்டான். அப்படியே மற்றவீரர்களுடையமார்பின்மேலும், தோள்களின்மேலும், மழைத்துளிகளைப் போலக் கொடிய பாணவருஷங்கள் தைத்தபடியால்; அவர்களெல்லாரும் உடல்நடுங்கி, வேர்த்து வாட்டமுற்றவரானார்கள். அப்போது வானரசேனைகளும் வெகுவாய் மாண்டன. மற்ற உயிருள்ளவைகளாயிருந்த வானரங்கள் நாலுதிக்குகளிலு மோடிவிட்டன.

அப்போது இளையபெருமாள் அவ்விந்திரசித்திவினுடைய வீரத்தன்மையைக்கண்டு மனங்கொதித்து, கண்களில் அக்கினி ஜொலிக்கும்படியாக விபீஷணாழ்வானைப்பார்த்து, ஓ விபீஷணரே! இந்தத் துஷ்டனை நான் மாத்திரமாய் நின்று கொல்லாமல் நம்முடைய வானரவீரர்களையெல்லா மழைத்து ஓடிப்போனவர்கள்போக நின்ற வானரவீரர்களெல்லா மிவ்வளவு பெருஞ்சேனைகளுடனே இரத்தவெள்ளத்திலுழைத்து மாண்டு போகும்படியாகச் செய்தது பெருந்தப்பிதமாய் முடிந்ததே : என்று சொல்லவும் அதுகேட்ட விபீஷணாழ்வார்-ஸ்வாமீ! அது மெய்தான் : இந்தச் சண்டாளனுக்கு முன்பாக ஆயிரகோடிதேவர்கள் யுத்தத்திற்குவந்து சேர்ந்து இவன்கையிலகப்பட்டுப் போனார்களே யல்லாமல், இவனை அவர்கள் ஒன்றும் செய்யவேயில்லை. தேவ

நீர் இவனைக் கொன்றாலல்லாமல், அடியேங்களும் இந்த உலகமும் பிழைக்க மாட்டோம். ஆதலாலடியேங்களுக்குத் தேவரீரே பிராணபிக்ஷை கொடுக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார்.

இலட்சுமணர் இந்திரஜித்துவின் முன்னணிப்படையிலிருந்த சேனைகளை மடித்தல்.

கவி.

என்பதுசொல்லக்கேட்ட விந்திரவில்லினோடும்
பொன்பொருமேகமொன்று வருவதுபோல்கின்றானை
முன்பனைமுன்புநோக்கி யிவன்கொலாம்பரதன்முன்னோன்
தன்பெருந்தம்பியென்றா னாமெனச்சாரன்சொன்னான்.

அதைக்கேட்ட இளையபெருமாள் இந்திர தனுசுடனே வருகிற ஸ்வர்ண்மய மேகத்தைப்போல இந்திரஜித்துவுக்கு முன்பாகவந்து நின்றார். அவரைப்பார்த்த ராவணகுமாரன் சாரனைநோக்கி, இவன்தானா பரதனுக்குத் தமயனான ஸ்ரீராமனுடைய தம்பியென்று கேட்க, அதற்கவன் இவன்தான் நீர் கேட்ட இலட்சுமணனென்றுசொல்ல, அதைக்கேட்ட அந்தத்துஷ்டன் இளையபெருமாள்மீது யுத்தத்திற் காரம்பிக்கு முன்னமே அவன் பின்வந்த சில ராக்ஷசவீரர்கள் இளையபெருமாளைப்பார்த்து, ஓ பிள்ளாய் ! நீ எங்கள் ராஜகுமாரனான அதிகாயன் ஒன்றியாய்வர அவனைக் கொன்றுபோட்டாயல்லவா? இப்போது எங்களிடத்தில் அகப்பட்டுக்கொண்டாய். எங்கள் கண்முன்னகப்பட்டு மினியெங்கே தப்பிப்பிழைக்கப்போகிறா யென்று சொல்லி, அந்தநூறுகோடி ராக்ஷசர்களும் கண்களில் அக்கினிசொரிய அடர்ந்து, தங்கள் ரதங்களையும் – நடனம்பண்ணுகின்ற குதிரைகளையும் – யானைகளையும் – அதிவேகமாகச் செலுத்திக்கொண்டுவந்து நெருங்கி, இலக்ஷ்மணரைச் சூழ்ந்து மூடிக்கொண்டார்கள்.

அப்படிச் சூழ்ந்துகொண்டவர்களை யெல்லாம் ஸ்ரீராமருடைய திருப்பாதுகைகளைத் தமது திருமுடியில் தரித்துக்கொண்டிருக்கின்ற பரதாழ்வாருடைய திருத்தம்பியான இளையபெருமாள் கிரமங்கிரமமாகத்தொடர்ந்து, அவர்கள் தேர்களையும் - குதிரைகளையும் - யானைகளையும் - பதாதிகளையும் - முடிவில் அவ்விராக்ஷசர்களையும் – துண்டுதுண்டாக்கி வெற்றிமாலையைத் தரித்தார். அப்போது சப்தலோகங்களும் கிடுகிடாய்த்து நடுங்கின. இளையபெருமாளுடைய அஸ்திர வதிர்ச்சியால் இடிவிழுந்து மணல்களா யுதிர்வதுபோல மலைகளுதிர்ந்தன. பூமியும் பாளம்பாளமாய் வெடித்தது. அறுப்புண்டு கிடக்கின்ற இராக்ஷசப் பிரேதங்களின்மீது ஆகாசத்திலெழும்பிப்போன தலைகள் பலபலவென்று சிந்தின. இரத்தப் பிரவாஹங்கள் நாலுபக்கங்களிலும் ஓடின. தேவர்கள் கைகளை விரித்தார்கள். இப்படியாகக் கொடிய சண்டையை விளைத்தும் அவ்விலட்சுமணர் பிரயோகித்த பாணங்கள் வேகமாறாமல், தூரத்

தில் யுத்தசன்னத்தர்களா யிருந்த இராக்ஷசவீரர்களுடைய மார்பிலும் பட்டுருவின.

சிலபாணங்கள் உலகமுழுமையும் பரவின. சிலபாணங்க ளிராக்ஷசர்களுடைய விருதுக்கொடிக் காடுகளைச் சுட்டெரித்தன. சிலபாணங்கள் குதிரைகளையெல்லாம் துணித்தன. சிலபாணங்கள் யானைகளையெல்லாம் கண்டம்கண்டமாயறுத் தெறிந்தன. சிலபாணங்கள் யமனைப்போலக் கண்டகண்ட ராக்ஷசர்களையெல்லாம் கொன்றன. இந்த யுத்தத்திற் சாகின்ற ராக்ஷசர்களையெல்லாம் கணக்கிடலாமென்றுவந்த தேவர்கள் பொறிகலங்கிமுடிவுகாணமாட்டாமல், ஒருவராலும் தடுக்கமுடியாத அஸ்திரவருஷங்கள் செய்கின்ற செய்கையை நினைத்து, இலட்சுமணருடைய வில்லினிடத்தில்தானோ சப்தமேகங்களு மழைவருஷிக்கக் கற்றுக்கொண்டனவென்று ஆச்சரியப்பட்டார்கள். இலட்சுமணர்விட்ட பாணங்களில் ஒவ்வொருபாணம் யானைக்கூட்டங்களின் பந்திகளில் நுழைந்து, அந்தந்தவரிசை யானையின் தலைகளையெல்லாம் அறுத்துக் குப்பற்குப்பலாய்க் குவித்து விட்டது.

மேலும் — மலைக்குச் சமமாகவந்து சுற்றிக்கொண்டிருக்கின்ற கர்ச்சனையையுடைய அந்தந்த யானைவீரர்களோடு சேர்ந்து வந்திருக்கின்ற சேனுபராக மெவ்வளவுண்டோ? அவ்வளவு இளையபெருமாளுடைய பாணத்தொகைகள். அப்பாணங்கள் கணக்காகத்தானே வில்லின்கண்ணிருந் தெழுந்த தோற்றத்திற் பருத்தஆகாரமுள்ளவைகளும், மாம்சங்களையேயுண்டு திரிகின்றவைகளும், பக்ஷிகளைப்போலச் சிறகுகளை விரித்துப் பறக்கின்றவைகளுமாயின. இப்படிப்பட்டபாணங்கள் தேவர்களும் திகைத்துப்போகும்படி காணப்பட்டு, ஆகாசமுழுவதும் வெளியில்லாமல் மறைத்து கழுகுப்பக்ஷியைப்போலச் செத்தராக்ஷசப் பிணத்தின்மீது பற்றிப் படிந்துகொண்டிருந்தன. இந்திரசித்துவினால் மாண்ட வானரசேனைகள் முப்பத்தைந்து வெள்ளத்திற்கு மேலாக இரணக்களத்தில் விழுந்துகிடக்க, அவைகளை மலைபோன்ற தலைகளெல்லாம் அறுந்துமாண்ட வஞ்சகர்களான இராக்ஷசர்களுடைய தேகங்கள்மூடி மறைத்துக்கொண்டன. இரத்தவெள்ளங்கள் அவைகளை அடித்துக்கொண்டோடிச் சமுத்திரத்திற்போய் விழுந்தன.

இராக்ஷசர்களில் அனேகர் கையற்றார்கள். அனேகர் காலற்றார்கள். அனேகர் கழுத்தற்றார்கள். அனேகர் கவசமற்றார்கள். அனேகர் கவசம்பூண்ட மார்புமற்றார்கள். அனேகர் வயிறுகிழிந்து குடல்களற்றார்கள். அனேகர் ஓடிவந்த வேகமற்றார்கள். அனேகர் ஒருவரையொருவர் கூப்பிடவும் சக்தியற்றார்கள். அனேகர் கொண்டுவந்த மதத்தயானைகளும் — தேர்களும் - குதிரைகளும் - மற்றவைகளுமிழந்து, தாங்கள் மாத்திரம் தப்பிப்பிழைத்துப் புகலிடந்தேடி யோடிப்போனார்கள்

இந்திரஜித்து ரதாரூடனாயும் இலக்ஷ்மணர் ஆஞ்சனேயரின் புஜாரூடராயும் யுத்தஞ்செய்தல்.

கவி.

வற்றியகடலுனின்ற மலையெனமருங்கின்யாரும்
சுற்றினரின்றித்தோன்றுந் தசமுகன்றோன்றலுள்ளித்
தெற்றினபுருவத்தோன்றன் மனமெனச்செல்லுந்தோரான்
உற்றனனிளையகோவை யனுமனுமுடன்வந்துற்றான்.

இப்படி வற்றினகடலிலிருந்த மலையைப்போலத் தன்னைச் சூழ்ந்திருந்த எல்லாருமாளத் தான்மாத்திரமாயிருந்த இராவணன் புத்திரனான இந்திரசித்து அதிகோபத்தால் துடிதுடித்துப் புருவத்தை நெரித்து, தன்மனம்போல அதிவேகமாயோடும்படியான தேருடனேவந்து இளையபெருமாளை எதிர்த்தான். இதற்குள் ஆஞ்சநேயரு மூர்ச்சைதெளிந்து இளையபெருமாளை வந்துசேர்ந்து, ஸ்வாமி! அடியேன் தோளின்மீது தேவரீர் எழுந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார். அம்மாத்திரத்திற் சிம்மம்போன்ற பலவந்தரான இளையபெருமாளும் அப்படியே யேறியருளினார். அதைக்கண்ட தேவர்களெல்லாம் பல்லாண்டுகூறினார்கள். உடனேயவ் விருவரும் காளியைப்போலொத்தவைகளும், யமனைப்போற் கொல்லுகின்றவைகளும், அக்கினிக்குச் சமானமாகிய அதியுஷ்ணமுள்ளவைகளுமான பாணங்களை ஒருவர்மேலொருவர் மேகத்தின்மீது வேறொருமேகமெதிர்த்து மழையை வருஷித்தாற்போலப் பொழிந்தார்கள்.

இருவரும் தங்களுடைய வில்லில் இடியிடித்தாற்போலக் குணத்தொனிபண்ணினார்கள். அவைகளஷ்டதிக்குகளையும் செவிடுபடுத்திவிட்டன. அஷ்டகுலாசலங்களும் பதபதவென்று வெடித்துப் பிளந்துவிடுவதுபோலாயின. ஆகாசமெலாம் பொறியெழும்பின. உலகமுழுவதும் அக்கினியைக் கக்கிக்கொண்டு ஒருவர்பாணங்களை ஒருவர்பாணங்கள்கூர்மையான வாயாற் கவ்விக்கடித்துக்கொண்டது. ஒருவர்விட்ட அம்பை ஒருவர்விட்டஅம்பு அறுக்கமாட்டாமல், அக்கினிப் பொறிகளைச்சிதறி ஆகாசமார்க்கத்தில் வெந்துகரிந்துவிழுந்தன அதைக்கண்ட தேவர்களுமனோதயிரியங்குறைந்து ஏங்கிப்போனார்கள். உலகமெல்லாம் அதிர்ச்சியுற்றன. கடல்பொங்கி மேலெழும்பியது. அண்டமெல்லாம் கடல்கலங்கினது போலக் கலங்கின.

அப்போது சிம்ஹங்கள் பூட்டின இந்திரஜித்துவின்தேரும், இளையபெருமாளைத் தாங்கும் வாயுபுத்திரனாகிய அனுமானும், அனேகவிதமாகச் சாரிசுற்றவே இலங்காபட்டண முழுவதும் கிறுகிறென்று சுழன்றது. அக்கினிமுகாஸ்திரங்களுலகங்களை யெல்லா மூடிக்கொண்டதினாலே, இளையபெருமாளும் - இந்திரஜித்துவும் - இருக்கின்றார்களோ? இல்லையோ? என்று தேவர்களு மறியமாட்டாமற்போய்விட்டார்கள். பாணப்பிரயோகலக்ஷணங்களைத் தனுர்வேதசாஸ்திரம் ஒரு முறைபடுத்தி அளவுகூறியிருக்கும். இவர்களாற்

றெடுக்கு மதிலக்ஷணங்கள் அச்சாஸ்திரத்தி லடங்கினதன்று. அவர்களின் கைவலிக் களவிலாமற்செய்த யுத்தசாமர்த்தியத்தை எவ்வண்ண மளவுகூறுவது. இவ்விரண்டுவீரர்களுடைய பலத்தைக்கண்ட தேவர்களாதியோர் முடிவில் ஆகாயத்திலும் பெரியதாகுமென்றுசொல்லி, இவர்கள் வல்லமையான செய்கையைப் பார்க்கமுடியாதென்று காட்சிப்பிரமாணத்திற்கும் சந்தேகம் புகட்டினார்கள்.

இவ்விரண்டு பேர்களுடைய செய்கைகளையும் பார்த்த கற்பகப்பூமாலையுள்ள கிரீடங்களைத் தரித்த இந்திராதிதேவர்களெல்லாம் ஒன்றாகக்கூடி, இவர்களிப்போது என்னசெய்தார்கள்? முன்னென்ன செய்தார்கள்? என்றொருவரையொருவர் வினவுவார்கள். அன்றியும் தங்களிலிப்படி முன்யுத்தஞ்செய்தவர்கள் யாரென்றுகேட்பார்கள். முன்னே இப்படி யுத்தஞ்செய்தவர்களுமுண்டோ? இனிமேலு மிப்படி யுத்தஞ்செய்யப்போகிறவர்களு மிருக்கின்றனரோ? இப்படி யுத்தத்திற் பயங்கரத்தை யுண்டாக்குகின்ற இன்னவீரர் இன்னதிசையி லிருக்கின்றார்க ளென்று தெரியவில்லையே: என்று மனம் திகைத்தார்கள். இப்படியவர்கள் செய்கிற ஒரு செய்கையையாவது எந்தத் தேவர்களும் உணர்ந்தவர்களல்லர்.

இப்பால்-வக்கிரதந்தங்களையுடைய இந்திரஜித்து ஆயிரகோடி பாணங்களைப் பிரயோகித்தான். இளையபெருமாளும் ஆயிரகோடி பாணங்களைத் தொடுத்து அவைகளை யறுத்துத் தள்ளினார். இந்திரசித்து ஆயிரகோடி நாகபாணத்தை யெய்தான். இலட்சுமணர் ஆயிரகோடி நாகபாணங்களால் அவைகளையும் அறுத்தெறிந்தார். இந்திரசித்து கூட்டங்கூட்டமாகக் கோடிகோடி அம்புகளைத் தொடுத்தான். ஸ்ரீராமசகோதரரும் கூட்டங்கூட்டமாகக் கோடிகோடி அம்புகளைவிட்டு அவைகளைக் கொய்துவிட்டார். இராவணபுத்திரன் மறுபடியும் ஒருகோடிகோடி வாளிகளை அதிககோபத்துடனே ஏவினான். வீரசிகாமணியாகிய இளையபெருமாளு மறுபடியும் ஒரு கோடிகோடி வாளிகளைக்கொண்டு அவைகளைத் தடுத்துவிட்டார். இந்திரஜித்து கோடி கங்கபத்திரக் கணைகளைப் பிரயோகித்து விட்டான். இளையபெருமாளும் கோடி கங்கபத்திரக் கணைகளைக்கொண்டு அவைகளைத் துண்டாக்கிவிட்டார்.

இலட்சுமணர் கோடி அர்த்தசந்திர பாணங்களைப் பொறுக்கிப் பிரயோகித்தார். இந்திரஜித்துவும் கோடி அர்த்தசந்திர பாணங்களினால் அவைகளை நீக்கிவிட்டு, மீட்டும் கோரைத்தலையம்புகளைக் கோடிகோடியாகத் தொடுத்தான். தசரத குமாரரும் அவ்வித கோரைத்தலை யம்புகள் கோடிகோடியெய்து அவைகளைத் துண்டாக்கி வெட்டிவிட்டு, மீட்டும் கோடி மொட்டம்புகளை அனேகம் தடவைகளாகப் பிரயோகித்து நிறைத்துவிட்டார். இந்திரசித்தும் கோடி மொட்டம்புகளை யாவருங்கண்டு பயப்படும்படி எய்து, கமலமுகப்பாணங்களை அக்ஷரக்ஷணத்துக்குள்ளாக அடுக்கடுக்காய்ப் பிரயோகித்துச் சிம்மநாதம் பண்ணினான். அரவிந்த லோசனராகிய ஸ்ரீராமமூர்த்தியின் திருத்தம்

பியாரும் கமலமுகப்பாணங்களை அரைக்ஷணத்திற்குள்ளாக அனேகமாகப் பிரயோகித்து, அவன்விட்டவைகளையெல்லாம் அடித்து நொறுக்கி உதிர்த்து விட்டார்.

இப்பால் வளைந்தபல்லுடையவனான இந்திரசித்து கோடி வச்சிரமுகாஸ்திரத்தை ஏவினான். பரிசுத்தராகிய இளையபெருமாளும் கோடிவச்சிரமுகாஸ்திரத்தை ஏவி அவைகளை யெல்லாநொறுக்கி விட்டு, கோடி திரிமுகாஸ்திரங்களை வேகமாய்ப் பிரயோகித்துவிட்டார். அதிக பலாட்டியனான இந்திரசித்தும் கோடி திரிமுகாஸ்திரத்தை விட்டு அவைகளை யெல்லாம் தடுத்துவிட்டு, ஐந்து கோடி அஞ்சலி யாஸ்திரங்களைப் பிரயோகித்து வீரகர்ச்சனை செய்தான். இளையபெருமாளும் ஐந்துகோடி அஞ்சலியாஸ்திரத்தைப் பிரயோகித்துவிட்டு, கோடிகஜகர்ணாஸ்திரத்தை வில்லிற்பூட்டிப் பிரயோகித்தார். இந்திரசித்துவும் கோடிகஜ கர்ணாஸ்திரத்தைத் தொடுத்து அவைகளை யெல்லாம் தூம்சஞ்செய்துவிட்டான்.

இந்தப் பிரகாரமாக இந்திரசித்துவும் இளையபெருமாளுமாக ஒருவரெய்யவும், அந்தப் பாணங்களை யொருவர்கொய்யவும், உலகமெல்லாம் அம்புக்காடுகளாய் விட்டன. சப்திக்கின்ற சமுத்திரமும் அவர்கள்விட்ட அம்புகள் சொரிகின்ற நெருப்புப் பொறிகளாலே நீர் வற்றிப் போய்விட்டது. இரண்டு வீரர்களுக்குமுண்ட கோபமானது தங்கள் தங்கள் கைத்தொழிலை ஒருவருக்கொருவர் காண்பிக்குந்தோறும் மேலு மேலும் அதிகரித்ததே யல்லாமல், கொஞ்சமாவது தணியவில்லை. இப்படிப் போர்செய்யும் போது இந்திரசித்தானவன் அனுமான் வீழிப்பழம்போலத் தேகங்கிழிந்து மூர்ச்சையடையும்படியாக அவருடைய உருண்ட உருக்குத்தடிபோன்ற தோளின்மீது ஆயிரம் பாணங்களைத்தூவி, உகாந்தகால மேகமானது இடிகளைக் கக்கினதுபோல ஆயிரத்துநானூறு பாணங்களாலே இலக்ஷுமணருடைய மார்பின்கவசத்தையும்பிளந்தான்.

அதைக்கண்ட தேவர்களெல்லாம் இந்திரசித்து கைமுந்தி விட்டானென்று தங்கள் முகம்வாடி, கல்மலையிலிருந்து அருவியா றோடுவதுபோல இளையபெருமாளுடைய அழகிய திருத்தோளில்நின்று மிரத்தவெள்ள மொழுகுவதைக் கண்டு துக்கித்தார்கள். வைதிகமார்க்கா நுசாரிகளாகிய முனிவர்களும், பெரியோர்களும், இந்தராட்சசனே வில்வீரர்களிற் சிரேஷ்டமானவனென்றுபயந்து நடுங்கினார்கள்.

இந்திரசித்துவின் வெற்றிக்கொடியையும் மெய்க்கவசத்தையும் இலட்சுமணர் துணித்தல்.

கவி.

சிறுநுநெறிந்தசிந்தை யிலக்குவன்சிலைக்கைவாளி
நூறுநூறேவிநொய்தி னுடங்குளைமடங்கன்மாவும்

வேறுகூறியற்றிவீரக் கொடியையுமறுத்துவீழ்த்தி
ஆறுநூறம்புசெம்பொற் கவசம்புக்கழுந்தவெய்தான்.

இந்தப்பிரகாரமாக இருவரும் போர்புரியுங்காலையில், யுத்தசாத்திரத்தின் நுட்பங்களையெல்லாம் கண்டறிந்து தெளிந்த சிந்தையையுடைய இலக்ஷ்மணப் பெருமானானவர் தமது கரத்திலுள்ள தனுசிலிருந்து பதினாயிரம்பாணங்களைப் பிரயோகித்து, க்ஷணப்பொழுதில் அவன்தேரிற் பூட்டியிருந்த பிடரிமயிரையுடைய சிம்ஹங்களை யெல்லாம் வேறுவேறாய்க் கூறிட்டு, அதில் நாட்டியிருந்த விருதுக்கொடியையும் சாரதியையும் அறுத்துத்தள்ளி, பின்னும் அதிககோரமான அறுநூறம்புகளையேவி அந்த இந்திரசித்து அணிந்திருந்த கவசத்தைச் சின்னாபின்னப் படுத்திவிட்டார்.

இவ்வாறிளையபெருமாளுடைய பாணங்கள் காளமேகத்திற் சூரியகிரணங்கள் பிரகாசிக்கிறதுபோல விளங்கும் கவசத்திற்பட்ட மாத்திரத்தில் அவ்விந்திரசித்துவின் தோளின்மீது மார்பின்மீதும் பொருந்தியிருக்கின்ற அந்தக் கவசத்தைச்சுற்றிலு நீளநீளமாகப் பவளக்கொடிகள் ஏறிப்படர்ந்ததுபோல, அம்புகள்தைத்த வாய்களிலெல்லாம் இரத்தம் தாரைதாரையாய் ஒழுகி வடிந்தது. அப்போதிந்திரசித்துவானவன் பொன்மயமான பெரியதேரிற் பூட்டிய சிம்ஹங்கள் மாண்டபோதும், பிரகாசிக்கின்ற வெற்றிக்கொடியுடனே சாரதியுமறுந்து வீழ்ந்தகாலத்திலும், தன்னுடையமார்பிற் பாணங்கள் தங்குதடையில்லாம லுருவினவேளையிலும், இன்னகாரிய நடந்ததென்று அறியாதவனாகி ஒரு வார்த்தை சொல்லுகிறான்.

இந்தலட்சுமணனே நரனாகவேண்டும். அந்தராமனே நாராயணனாகவேண்டும். இவன் நரனல்லாவிட்டால், அந்த ஸ்ரீராமன் நாராயணன் அல்லனென்று சொல்லலாம். இப்படி யிவர்களல்லா விட்டால் இவனைச் சிவனென்றும் அந்த ஸ்ரீராமனைப் பிர்ம்மாவென்றுமாவது சொல்லலாம். இவர்களு மல்லாவிட்டால் இவ்வுலகத்தில் இராஜவமிசத்திற் பிறந்து வாழ்கிறவர்களுக்குள், தனுர் வித்தியா சாமர்த்தியத்தில் இந்தமனிதர்களுக் கொப்பாக வேறே அரசர்களு மிருக்கின்றார்களா வென்று சொல்லுவான்.

இந்திரசித்து மாறிமாறியேறிய தேர்களை இலட்சுமணர் அழித்தல்.

கவி.

வாயிடைநெருப்புக்கால வுடனெடுங்குருதிவாரத்
தீயிடைநெய்வார்த்தன்ன வெகுளியானுயிர்தீர்ந்தாலும்
ஓய்விடமில்லான்வல்லை யோரிமையொடுங்காமுன்னம்
ஆயிரம்புரவிபூண்ட வாழியந்தேரினானன்.

இவ்வண்ணம் சொல்லிச்சொல்லி வாயில்நெருப்பைக் கக்கிக்கொண்டு, தேகமுழுவது மிரத்தம்வடிய எரிகிறநெருப்பில் நெய்வார்த்ததுபோலக்கோபமதிகரித்து உயிர்போனாலும் உடலோயாதவனாகி, அதிசீக்கிரமாய் ஓரிமைப்

பொழுதுக்குள்ளே ஆயிரம் குதிரைகள்கட்டிய வேறொருதேரிலேறி, திக்குகள்தோறும் பாணத்தொனிகள் நிறையவும், உருத்திரமூர்த்தியும் உடல் நடுங்கவும், ஆயிரகோடி திவ்விய பாணங்களைப்பிரயோகித்து ஆகாசமெல்லாம் வெளியில்லாமல் மறைத்துவிட்டான்.

உடனே இளையபெருமாளும் ஆயிரம்பாணங்களைப்பத்திபத்தியாய்ச் சித்திரவிசித்திரமாகப் பிரயோகித்து, அந்தப்பாணங்களைச் சின்னாபின்னஞ்செய்து, இராவணபுத்திரனாகிய இந்திரசித்துவின் மேலும் ஆயிரம்பாணங்களைப் பிரயோகித்தார். அவ்வாயிர பாணங்களும்வந்து தைத்தவுடனே அதிதுஷ்டனான இந்திரசித்துவுக்கு அக்கினியில் நெய்சொரிந்ததுக் கொப்பாகப் பொறுக்கமுடியாத கோபமூண்டு, அதிவீரசிரேஷ்டரான இளையபெருமாள் சென்னியின்மீது நூறுபாணங்களைப் பிரயோகித்தான். இளையபெருமாள் தமது நெற்றிமேல் அந்த நூறுபாணங்கள்வந்து தைத்தகாலத்தில் கொஞ்சமுமாயாசப்படாமல், அந்தத்துஷ்டன் மார்பினிடத்தில் அதிகுரூரமான நூறுபாணங்களைச்செலுத்தினார். அப்பாணங்கள்பட்டு உதிரமொழுகுவதற்குள்ளாக இரத்தினங்களிழைத்த பொற்சக்கரம் அச்சோடு முறிந்துபோகவும், ஆயிரம்குதிரைகளும் சின்னபின்னப்பட்டுப் போகவும், கொல்லுகின்ற வேறொருயமனைப்போல வாயுபுத்திரனான ஆஞ்சநேயர் ஒருதையுதைத்து அவன் தேரை நொறுக்கிவிட்டார்.

இந்திரசித்து மறுபடியும் ஆயிரம் பேய்களைப்பூட்டியது மிரத்தினங்களிழைத்ததுமான வேறொருதேரின்மேல் ஒரு க்ஷணப்பொழுதுக்குள்ளே ஏறினான். அதையும் இளையபெருமாள் தமதுகையிலுள்ள ஐம்பதுபாணங்களாற் சிதைத்துத்தள்ளினார். இப்படி இந்திரசித்துதேரேறுகிறதும், இளையபெருமாள் அதைச்சிதைக்கிறதுமே யல்லாமல், அவன் வேறேயுத்தம் செய்யவேயில்லை. இளையபெருமாள் இந்தப்பிரகாரமாக அறுநூறு பாணங்களால் அவனுடைய ஆயிரந்தேரையும் ஒரு நாழிகைக்குள் சின்னபின்னம் பண்ணித் தகர்த்துப்போட்டார். இதைக்கண்ட தேவர்களெல்லாம் பல்லாண்டுபாடி ஆனந்தகர்ச்சனைசெய்து, கற்பகப்புஷ்பங்களை வாரிவாரி யிறைத்து, சுமித்திரை இளஞ்சிங்கமாகிய ராமாநுஜரை வணங்கி; இதற்குமுன் ஊசலாடிக்கொண்டிருந்த மனமுங்களித்து, மேலுத்தரீயத்தையும் விசிறியெறிந்து ஆனந்தத்தாண்டவம் செய்தார்கள்.

இந்திரசித்துவுக்கு மறுபடியும் படைத்துணையாகவந்த சேனைகளை இலட்சுமணர் மடித்தல்.

கவி.

அக்கணத்தினொ ராயிரமாயிரம், மிக்கவெங்க ணரக்கரவ்வீரனோ
டொக்கவின்ப மொருவழியூனினர், புக்குமுந்தினர் போரிடைப்பொன்றவார்.

அந்தச்சமயத்தில் பத்துலக்ஷம் ராக்ஷசர்கள் இந்திரசித்துவுக்குத் துணையாகவந்து, இலட்சுமணருடனே போர்செய்யும்படியாக எக்களிப்புடனே

ருய்க்கூடி முந்தியெதிர்த்து, செவந்தமுகத்தையும் கறுத்தமேனியையு முடைய தேர்வீரரும், குதிரைவீரரும், யானைவீரருமாகிய விவர்களோடு மேகம் போலக் கர்ச்சிக்கின்ற வீரகண்டாமணியைத்தரித்த பதாதிவீரர்களும் பூமியாகாசமெல்லாம் அளாவும்படியாக ஒருவரை ஒருவர்பேரிட்டழைத்து, சாக்கிரதை சாக்கிரதையென்று எச்சரிக்கைபண்ணிப் பேரிகைமுழக்கத்துக்கொப்பாகப் பேசிக்கொண்டு வந்தார்கள். பார்த்தபார்த்த திக்குகளிலெல்லாம் சப்தமேகங்களுங்கவிந்த வாகாசமாய்த்தோன்றும்படி நிறைந்த அவர்கள் கூட்டத்தின் ஓசையும், அஸ்திரசஸ்திரங்கள் ஒன்றுடனொன்றுபட்டு சப்திக்கின்ற சப்தமும் ஒன்ருகக்கூடி; சுவர்க்கலோகத்தையும் செவிடுபடுத்தி விட்டன. அவர்களது சேனைகளில் யாளிகள் சப்தித்தன. சிம்ஹங்கள்கர்ச்சித்தன. பேய்கள் கூவின. யானைகள்வீறிட்டன.

அதிரதர் - மகரதர் - சமரதர் - அர்த்தரதர்-என்னு நால்வகைரதிகர்களும் தங்கள் தங்கள் சேனைகளோடு நெருங்கி எய்தபடியால், பாணங்கள் எங்கு நிறைந்தன. இவ்வளவுசேனைகள் வந்தும் ரணக்களமெல்லாம் பிணமயமாயிருப்பதினுல் சேனுபாக மெழும்பவேயில்லை. அவர்கள் கொண்டுவந்ததும், சிம்ஹங்கள்பூட்டித் தாவுகின்றதுமான தேரின்மீது இந்திரனைச் செயம்பெற்றவனை மேகநாதனேறிச் சரமாரி வருஷித்துத் திக்குகள்தோறும் நிறைத்து விட்டான். அந்திவானம்போலச் சிவந்த சொர்னமயமான திருமேனியையுடைய இளையபெருமாள் அவைகளையெல்லாம் தும்சமாக்கிப் போட்டார். பின்னுமவருடைய பாணங்கள்பட்டு, முன்னமவ் விந்திரசித்துவுக்குத் துணையாய்ச் சூழ்ந்துவந்த ராக்ஷசர்கள் வீசுகின்றவைகளும், எய்கின்றவைகளும், எறிகின்றவைகளும், உதிர்ந்து பொடிப்பொடியாய்ப் போய்விட்டன. ஆயிரந்தலைகள் ஒவ்வொரு பாணத்தினுலே உருண்டன, குடல்கள் பாம்பைப் போற் பிறுண்டன. பலம்பொருந்திய மதயானைகள் குன்றுகள்போற் குவிந்தன, தேர்களெல்லாம் சின்னபின்னப்பட்டுச் சிதறிப்போய் விட்டன. பலவகையான ஆயுதங்கள் மேடிட்டன.

அவ்வாயுதங்களையுடைய வீரர்கள் கருங்கடல்போல் ரணக்களத்திற் கிடந்தார்கள். குண்டலங்களும், முத்தாரங்களும், பூமாலைகளும், கண்டசரங்களும், வீரக்கழல்களும், மெய்க்கவசங்களும், சண்டமாருதக் காற்றடித்தபோது மேகங்களில்நின்று மின்னல்கள் வீழ்ந்ததுபோல விலட்சுமணருடைய பாணங்கள்பட்டு வீழ்ந்தன. இந்திரசித்தெய்த பாணங்களை இளையபெருமாள்தமது அம்புகளாலே நாசமாக்கிவிட்டு, தம்மோடெதிர்த்துப் போர்செய்கின்ற கண்டகர்களாகிய இராக்ஷசர்களுடைய தலைக்குப்பல்களென்னு மலைகளை யமனுக்கும் இரக்கம் தோன்றும்படியாகக் குவித்தார். அப்போதிந்த வில்வீராகிய இளையபெருமாள் ஆரோகணித்திருந்த ஆஞ்சநேயர் யமனுக்கொப்பாகிய தம்முடையவாலால் சிலராக்ஷதர்களைச் சுற்றிக்கட்டி வாரி வீசுவார். சிலரைக் கால்களால் மிதிப்பார். சிலரைநெட்டித் தள்ளுவார்.

சிலரை ஆகாசத்திலெடுத்து எறிவார். சிலரை எதிரேபோய் அறைவார். சில ரைக் காலாலெட்டியுதைப்பார்.

இப்படியெல்லாம் செய்து மிளையபெருமாளேறி யருளிய மத்தகஜம் போன்ற அவ்வனுமானனவர் கோபமடங்காமற் பின்னும் வீரகர்ஜனைசெய்து, சிலர் பிராணபீதியடையும்படி உறுமிப்பார்ப்பார். சிலர் கைகால் விதிர்த்துப் பிராணனீங்குப்படிக் கோபிப்பார். சமுத்திரத்தை யானைகளால் தூர்த்துவிடு வார். இரண்டுதோளையும் கொட்டிநின்று அட்டகாசஞ்செய்வார். ஆயிரந்தேர் களைத்தமது உள்ளங்கையாற் பற்றியிழுப்பார். பின்னும் வீரசிகாமணியாகிய இளையபெருமாள் விருப்பங்கொண்டேறின ஆண் சிம்ஹத்துக் கொப்பாகிய அந்த வாயுபுத்திரர் குதிரைகளையும், யானைகளையும், ஆயுதங்களைப் பிடித்தி ருக்கிற ராக்ஷசவீரர்களையும்; புஷ்பத்தைப் போலவும், ஜலத்தைப்போலவும்; அலங்காரமான தளிரைப்போலவும் வாரிவாரித்தூவுவார். சிலசேனைகளை அ ள்ளி உள்ளங்கையில்வைத்து நசுக்கி வருத்தப்படுத்துவார்.

இந்திரசித்துவினால் மூர்ச்சித்த வானரவீரர்கள்தெளிந்து யுத்தத்திற்குவருதல்.

கவி.

அவ்விடத்தினி லாய்மருந்தாலழல், வெவ்விடத்தினை யுண்டவர்மீண்டென
எவ்விடத்தினும் வீழ்ந்தவினத்தலைத், தெவ்வடக்கும் வலியவர்தேறினர்.

அந்தச்சமயத்தில் தேவாமிர்த முண்டாகும்படிப்பாற்சமுத்திரத்தைக்கடை ந்தகாலத்திற் பிறந்தவிஷத்தைப் பானம்பண்ணின கைலாசபதியானவர் திரு ம்பிவந்ததுபோல அந்தந்த இடங்களில் மூர்ச்சையாய் வீழ்ந்துகிடந்த சுக்கிரீ வமகாராஜன்-அங்கதன்-நீலன்-இவர்முதலிய சத்துருசம்ஹாரர்களான பலா ட்டியர்கள் மூர்ச்சை தெளிந்து சுற்றுமுற்றும்பார்த்து, இளையபெருமாள் யுத்த த்தில்நிற்கிறதைக்கண்டு, நாமிருந்து மிவரைச் சண்டைக்குவிடத்தகுமாவென் று நெருப்புப்பறக்கக்கோபித்து,அதிகஉக்கிரமாகப் புறப்பட்டுவந்து இலக்ஷு மணரைச் சேர்ந்துகொண்டு, மாறிமாறி மலைகளையும், மரங்களையும், நூறுமா யிரமுமாகப் பறித்தெறிந்துஇராக்ஷசச்சேனைகளை அரைத்துக்கொல்லத் தலை ப்பட்டார்கள். இப்படி யவர்கள் அநேகஜாதிகளான மரங்களையும், மலைகளை யும், பகைவர்மேற் செலுத்தும்படிப் பறித்துச் சுமந்துபோய் வீசியெறிந்த போது, அதுபட்ட ராக்ஷசர்களுடைய தேர்களெல்லாம் கடைச்சற்றொழிலை ச்செய்கின்ற கம்மாளர்களுடைய பட்டடைச்சக்கரம்போற் சுழன்றன.

அப்போது வாலிபுத்திரனாகிய அங்கதப்பெருமான் ஒருமலையைப் பிடுங் கித் தேர்மேல்வந்த இந்திரசித்துவைப்பார்த்து, அடாதுஷ்டா ! தப்பித்துக் கொள். இதுதான் உன்னுடைய உயிரைவந்து குடிக்கப்போகின்றதென்று சொல்லி ஆகாசபரியந்தம் அளாவும்படி நெருப்புப்பறக்க வீசியெறிந்தான். அப்படியெறிந்த அம்மலையானது அநியாயஞ்செய்த ராவணனுடைய சிரை ய ழித்துவிட்டதுபோல, தேவர்களுடைய சுவர்க்கலோகத்தை நாசப்படுத்திய வுயர்ந்த தோள்வல்லமையையுடைய இந்திரசித்துவின் தேரை ஒரிமைப்பொ

மூதுக்குள்ளாகச் சிதைத்தழித்துவிட்டுப் போயினது. அப்போது தேவர்களெல்லாம் அதைக்கண்டு பெருமையுடன் வந்து, எங்கள்கண்மணியாகிய அங்கதன் தன்பாட்டனாகியஇந்திரன் இந்த்துராத்துமாவினது கையிலுற்பட்டபழியைநீக்கிவிட்டானென்கிற சந்தோஷத்தால் ஆர்ப்பரித்துக்கூத்தாடினார்கள்.

அக்கால் இந்திரசித்து அழிந்ததேரைவிட்டு ஆகாசத்திலெழும்பி, க்ஷணநேரத்திற்குள் வேறொருரதமேறி, ஓ அங்கதா! போய்விடாதே. நில்லு: நில்லு: என்றுசொல்லிக் கையிலுள்ளபாணங்களை மழைபோல்வருஷித்து, அதிககோபத்துடனே எதிரேநின்று, உன்னுயிரை யென்பாணங்கட்கு ஆகாரமாகக் கொடுத்துவிட்டுப் போடாவென்று சொன்னான். அப்படிச்சொன்ன இந்திரசித்துவென்பவனை மற்ற வானரவீரர்களெல்லாம் வந்து சூழ்ந்து வரிசைவரிசையாகப் போர்செய்யத்தொடங்கி; விருக்ஷங்களையும், கற்களையும், இறந்த ராக்ஷசர்களுடைய தலைகளையும், தேர்களையும், குதிரைகளையும், பலம்பொருந்திய யானைத்துதிக்கைகளையும், அம்புகளையும்; வாரிவாரி அவ்விந்திரசித்துவின் பாணவேகமும் பின்னிடும்படி வீசியெதிர்த்தார்கள்.

அந்தச்சமயத்தில் ஸ்ரீசர்வேஸ்வரனாகிய ஸ்ரீராமபிரானுடைய கைங்கரியவிஷயத்திலீடுபட்டுத் தமது இராச்சியத்தையும், வாழ்வையும், நித்திரையையுநீக்கின மகானுபாவராகிய இலக்ஷ்மணப்பெருமாள், ஆயிரமாயிரங்கணக்காக வஞ்சனையுள்ள ராக்ஷசர்களுடைய உயிர்களைத்தேவர்கள் நினைவிற்கு மெட்டாததற்கு முன்னே போக்கிவிட்டார். இப்படித்தன்னோடுவந்ததும், பின்னர் தனக்குத் துணையாகவந்ததுமாகிய சேனைகளில்; அளவற்ற மதத்த யானைகளும், பெரியதேர்களும், தன்னுயிர்க்குச் சமானமாகிய இராக்ஷசக் காலாட்படைகளும், வாயுவேகத்திலு மிஞ்சிப்பாய்கின்ற பலசாதிக் குதிரைகளு மாண்டுபோனவிதத்தை இந்திரசித்து நினைத்து; வெற்றியிழந்து, அக்கினியைப்போலக் கொதித்து, தன்தேரினுடைய சக்கரத்தினதுபக்கத்தினின்ற அதத்தேரைக்காத்துக்கொண்டிருந்த மகாபாரிசன்-தூமாட்சன்-என்கிற இரண்டுபேரோடும் பெருஞ்சேனைசூழ விரணக்களத்துக்கு வந்து, அந்தரத்தவெள்ளத்தினின்றும் தன்தேரைச் செலுத்தமாட்டாதவனாகி, வாய்பேசாமல் மரம்போல் நின்றான்.

அக்கா லாகாசத்திற் பரவியிருக்கின்ற கருமேகங்களையொத்த இருளையோட்ட வல்லதும், அவ்வாகாசத்திற்றானே பறக்கவல்லதுமான; தனதுதேர் தனக்குத்தானே செல்லமாட்டாமலு மந்தப்பிணமலைகளைத் தாண்ட மாட்டாமலும் போய்விட்டது. அப்போது இந்திரசித்து தன்பக்கத்திலிருக்கின்ற அவ்விரண்டுபேர்களுடைய முகங்களை யுற்றுப்பார்த்து, ஓசக்கரராக்ஷசர்களே பார்த்தீர்களா? ஒரு வில்லையுடையவன் மகாவீரர்களான நம்முடைய நாற்பதுவெள்ளம் சைனியங்களையன்றி, பின்னர் துணையாகவந்தபத்துலக்ஷம் சேனைகளையும் கொன்றுவிட்டு, இன்னும்பூசின சாந்தழியாமல் நிற்கின்றவிதமென்னவென்றுகேட்டான். அதைக்கேட்ட அவ்விரண்டு வீரர்களவனைப்பார்த்து,

ஐயா இந்திரசித்துவே! அதைரியப்படாதேயும்; நீருமப்படியே வானரர்களி லுமத்தனைத்தொகைச் சேனைகளழியும்படியாகக் கொடிய பாணவருஷங்க ளைப் பிரயோகஞ்செய்துதானிருக்கிறீராதலால், உமது சண்டையும் அதற்கொப்பாகுமென்று தைரியம் சொன்னார்கள்.

அப்போது ஆஞ்சனேயர்மீது ஆரோகணித்தருளிய அந்திபோன்ற சுவர்ணச் சாயையையுடைய இளையபெருமாள், இந்திரசித்துவுக்கெதிரேவந்து பத்துலக்ஷபாணங்களைப் பிரயோகித்தார். அவைகளையெல்லாம் அவனவ்வளவு பாணங்களைப் பிரயோகித்து வரிசையாயெல்லாவற்றையும பங்கமடுத்தப்படுத்திப் பின்பு நூறும் ஆயிரமுமாகப் பாணங்களைச்செலுத்தி, எதிர்த்த வானர வீரர்களையெல்லா மூர்ச்சையாக்கிச் சிலரைப் பூமியில்விழச்செய்தான். அப்போது சூரியகுமாரன் முதலான வானரவீரர்களெல்லா மிரத்தப் பிரவாகத்தில் மூர்ச்சித்துவிழுந் தொதுங்கினதை ஸ்ரீகோதண்டதீக்ஷா குருவின் திருத்தம்பியாகிய இளையபெருமாள்கண்டு, எதிரிலிருந்த ராவணியென்கிற இந்திரஜித்துவை லக்ஷியப்படுத்தி, மூங்கிற் காடெரிகிறதுபோல அவன் மேனியெல்லா மிரத்தமயமாகும்படியாகக் கொடுமையான பாணங்களையேவினார். அந்தப்பாணங்கள் பட்டமாத்திரத்தில் இந்திரசித்து அதிக வருத்தமடைந்தான். அவனுடனிருந்த மகாபாரிசனும் தூமாக்ஷனு நடுக்கங்கொண்டார்கள். அளவில்லாத ராக்ஷசச்சேனைகளெல்லா மடிந்தன.

இந்தப் பிரகாரமாக இலக்ஷுமணருடைய சரவருஷங்களால் அளவற்றதேர்களும், யானைகளும், குதிரைகளும், பதாதிகளுமாண் டிரணக்களத்திற் கிடப்ப; அவைகளை அந்த மகாபாரிசனும், தூமாட்சனும், பார்த்துக் கொண்டிருந்தார்கள். மற்றுள்ள ராக்ஷசர்களில் ஒருவராவது அந்த ரணக்களத்தில் நில்லாம லுயிர்தப்பி ஓடிப்போய்விட்டார்கள். அப்படியோடிப்போன ராக்ஷசர்களிற் சிலர் நாவுலர்ந்து தண்ணீரையுண்ணுமாசையா லதைத் தேடினவர்களாய்த் தங்களுக்கெதிர்ப்பட்ட மேகங்களைப் பிழிந்து குடித்து, உடலிலுள்ளபுண்களில் இரத்தம்பெருவாரியாயொழுகி ரணவலிகொண்டுகீழே விழுந்து மாண்டார்கள். சிலர்மாத்திரம் தோற்றோடினார்கள். சிலர் தேகமெல்லாம் பாணங்களாற் சல்லடைக் கண்களாய்த் தொளைக்கப்பட்டு வழியிற் மல் பெண்சாதிமார்களைக் கூவிக்கொண்டுபோக, அவர்களு மிவர்களைக்கண்டு தங்கள் செப்பட்டைமயி ரவிழ்ந்துசோரக் கதறிக்கொண்டுவந்து, இருவரும் கற்பகப் புஷ்பங்கள் பரப்பிய படுக்கையைச் சேர்ந்து, ஒருவரை யொருவர் கட்டிக்கொண்டபடியே இருவரும் பிராணன் நீங்கினார்கள்.

சிலர் அம்புகள்தைத்த மார்புடனே தங்கள்சொந்தக் கிரஹங்களைச்சேர்ந்து, தங்களைவந்துகாலைக்கட்டியழுதுக்கொண்டுநின்ற பிள்ளைகளையெடுத்தணைத்து, இவர்களைநீங்கள் காப்பாற்றுங்களென்று அண்ணன்-தம்பி-மாமன்-மைத்துனன் முதலாகி சுற்றத்தாருக்குச்சொல்லி, அந்தப்பிள்ளைகளின்கனிவாயை

ப்பார்த்ததன்றிப் பக்கத்தில்நிற்கின்ற யமனையும்பார்த்துத் தங்களுயிரை நீக்கினார்கள். சிலர் பெண்சாதி-பிள்ளை-தாய்-தந்தை முதலிய தங்கள் பந்துக்களைப்பார்த்து, எங்கள் உடலின் புண்களைப் பார்த்தீர்களா ? செந்தாமரை மலர்போன்ற திருக்கண்களையுடைய ஸ்ரீதசரதநந்தனரது திருத்தம்பியாருடையசாமர்த்திய மிப்படிப்பட்டதா யிருக்கின்றபடியினாலே, இந்த லங்காபட்டணம் அரைக்ஷணத்துக்குள்ளாக வெந்துபோய்விடும். இந்திரசித்து மாணமடைகிறதற்குள்ளே நீங்களெல்லாரும் பிராணன்பிழைக்கும்படிச் சீக்கிரமாய்ப் பெருவிருட்சங்களுள்ள காடுகள், மலைகள்முதலான விடங்கட்குப் புறப்பட்டுப்போ யொளித்துக்கொள்ளுங்களென்று புத்திசொல்லிவிட்டுப் பிராணனைவிட்டார்கள்.

அன்றியும், மலையையொத்த கடினமானதேகத்தின் மருமஸ்தானத்தில் ஸ்வாமியின்பாண மிரத்தபானம் பண்ணிப் பொத்துக்கொண் டிருக்கும்படிப் போன சில ராக்ஷசர்கள் இந்தப் பாணத்தைப் பிடுங்கினால் பிராணன்போய் விடுமென்று புரைகலந்த பாலைப்போல மனம்பேதுற்று, மந்தாதிகாரிகளாகிய மற்றவர்களுக்குச் சொல்லத்தகாத திருமந்திரோபதேசத்தைப் பெற்ற பிரபன்னர்களைப்போலத் தங்களுக்குள்ளேயே பெருமூச்சுவிட்டு வருத்தப்பட்டுக் கொண்டு மெள்ளமா யிருந்துவிட்டார்கள். சிலசில ராக்ஷசர்கள் தேர் மீதும் போகார். குதிரைமீதும் போகார். செவந்த கண்ணையுடைய மேகம் போன்ற யானைமீதும் போகார். காற்றைப்போற் கடுவேகங்கொண்ட தங்கள்காலாலு மோடமாட்டார்கள். தங்களை ஊருக்குள் நுழையவொட்டாமற் காவலிட்டிருக்கிறபடியால் வெட்கமுற்று இலங்கைக்குள்ளும் போகார்கள். உயிரின்மேலிருக்கிற வாசையா லந்தரணக்களத்திலுந் திரியமாட்டார்கள். இப்படி நடுநடுங்கித் திக்குமயங்கி அவ்வவர்களுங் கண்டவிடங்களி லோடிப் போய்விட்டார்கள்.

அப்போது இந்திரசித்து தனக்குநேரிட்டவருத்தத்தை நினைத்து, இந்த லட்சுமணனை இப்போதே கொன்றுவிடுகிறேனென்று அதிககோபத்துடனே அநேக பாணங்களை வருஷித்தான். அதைக்கண்டு பாணவருஷங்களைப் பொழிகின்ற பொன்னிற மேகத்துக்கொப்பான இளையபெருமாள் யமனுக்குச் சமானமாகிய சில பாணங்களினாலே அவன் மார்பிலணிந்திருந்த மற்றொரு கவசத்தையும் சின்னபின்னப்படுத்திக் கிழித்துத்தள்ளிவிட்டார். அப்போது மஹாபாரிசனுந் தூமாட்சனுமாகிய இரண்டு தேர்வீரர்கள் அனுமான்மீதும், இளையபெருமாளுடைய மார்பின்மேலும், அவருடைய தோளின்மேலும், லக்ஷியம்வைத் தநேக பாணங்களைத் தூவினார்கள். அவர்க ளப்பாணங்களை யெய்தவுடனே இலட்சுமண ரந்தவிரண்டு பேர்களுடைய வாகைமாலை சூடினவில்லுகளையும், அச்சுப்பூட்டின தேர்களையும், அந்தத் தேரைச்செலுத்துகிற சாரதிகளுயிரையும், குதிரையின் பிராணனையும் தும்சப்படுத்திவிட்டார்.

ஆஞ்சனேயர் இந்திரசித்துவிற்குத் துணையாகவந்த சக்கரரக்ஷகரிருவரையும் தோற்கடித் தோட்டுதல்.

கவி.

இருவருமிழந்தவில்லா ரெழுமுனைவயிரத்தண்டர்
உருமெனக்கடிதிளேடி யநுமனையிமைப்பினுற்றார்
பொருகனற்பொறிகள்சிந்தப் புடைத்தனர்புடைத்தலோடும்
பெருவலிக்கரத்தினுற்றண் டிரண்டையும்பறித்துக்கொண்டான்.

அக்கால் வில்லிழந்த அவ்விரண்டுவீரர்களும் இரண்டு வச்சிரதண்டங்களைக் கையிற்பிடித்துக்கொண்டு, இடிகள் வருவதுபோல ஓடிவந்து, ஆஞ்சநேயரைக் கிட்டிக் கண்களில் அக்கினிப்பொறிபறக்க மோதி யடித்தார்கள். அப்படி யடித்தவுடனே ஆஞ்சனேயரானவர் தம்முடைய மிகுந்த பலம்பொருந்திய கைகளால் அவ்விரண்டு முசலங்களையும் பறித்துக்கொண்டார். அந்தத் தண்டங்கள் அவர்கையிற் சிக்கிக்கொண்டதை அந்தத்துஷ்டர்கள் பார்த்து, இனிநாம் செய்வதொன்று மில்லை. இனியவன் நம்மையடித்துக் கொன்றுவிடுவானென்று பயந்து தாங்களிதுவரையிலு மிராவணனிடத்திலுண்ட செஞ்சோற்றுக்கடனையும் பாராமல், தங்களுயிரையே பெரிதென்றுகருதி, அந்தக்ஷணமே யோடிப்போனார்கள்.

அந்தச்சமயத்தில் அங்கதகுமாரன் - குமுதன் - நீலன் - சாம்பவன் — சுக்கிரீவமகாராஜன் - மயிந்தன் - துமிந்தன் - சதவலி-பனசன் - இவாள்முதலான இராஜ சிம்ஹங்களுக்கொப்பான வீரர்களெல்லாங் குளிர்ந்த தென்றற்காற் றடிக்கிறதினாலும், ஆயுளுக்கு முடிவில்லாமையாலும், இயமன்வந்து அவர்களுயிரைக் கிரகிக்கத்தக்க குறிகளில்லாமையாலும், முன்னரடைந்த மூர்ச்சைதெளிந் தாயாசமும் வருத்தமுமாறி; அதிக ஊக்கமும் பலமும் பெற்றெழுந்துவந்து, மலைகளைப்பேர்த் தெடுத்து, தேவர்களெல்லாம் வாழ்த்திப் பல்லாண்டுசொல்ல வீரகர்ச்சனை செய்து, அத்தனைபேர்களும் ஏககாலத்தில் இடிகளைப்போலவு மின்னலைப்போலவு மலைகளை இந்திரசித்துவின்மேற் பிரயோகித்தார்கள். அப்போது சித்திரவில் வீரனாகிய இந்திரசித்தானவன்பார்த்து, இந்த மலைகளெல்லாமா நம்முடன் யுத்தம்செய்யத் தக்கவையென்று சிரித்து, அவைகளையெல்லாம் சின்னபின்னமாகத் தனது அம்புகளாற் சிதற வடித்தான்.

சூரியனஸ்தமித்தற் சிறப்பு.

கவி.

மரங்களுமலையுங்கல்லு மழையெனவழங்கிவந்து
நெருங்கினார்நெருங்கக்கண்டு மொருதனிநெஞ்சும்வில்லும்
சரங்களுந்துணையாய்நின்ற நிசாசரன்றனிமைநோக்கி
இரங்கினனென்னமேல்பாற் குன்றுபுக்கருக்கனின்றான்.

மறுபடியு மவ்வானராதிபதிகள் மரங்களையும், மலைகளையும், கல்லுகளையும், மழையைப்போல வருஷித்து; அவனை நாற்புறத்து நெருங்கினார்கள். அப்படி நெருங்கியதைப் பார்த்தும் தனதுதீரமானமனமும், கைவில்லும், அம்புகளுமே தனக்குத் துணையாகத் தானொருவனே அச்சமின்றி நிற்கின்ற நிசாசரனாகிய விந்திரசித்துவின்பேரி லிரக்கமுற்றவனைப் போற் சூரியன் அஸ்தகிரியின்மீதிறங்கினான். அப்போது இருக்கு—எஜுர் - சாமம் — அதர்வணம் என்கின்ற வேதங்களும், மநுமுதலான தருமசாஸ்திரங்களும், பஞ்சமகா யஜ்ஞங்களும், இயாகங்களும், அந்தச் சீதரனே என்றும்; தெய்வத் தன்மையுள்ள மஹாரிஷிகளுடையும் பிரயோசனமும் அந்நாரணனே என்றும்; நித்திய நிர்விகார அப்பிராகிருத திவ்யதேஜோமயமாயும், ஆயுதராஜமாயும், சாக்ஷாதுதம்முடைய திவ்யாஜ்ஞையின்படி சகலலோகங்களிலும் பிரவேசித்து அங்குள்ள துஷ்டர்களை யெல்லாம் சம்ஹரிக்கின்றவராயு மெழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீசுதரிசனாழ்வாரைத் திருக்கரத்தில் தரித்தருளிய ஸ்ரீயப்பதியே சகலலோககாரணமான வஸ்துவென்றும்: நினையாத அறிவீனர்களுடைய மனம்போ லஷ்டதிசையு மந்தகாரமாய் விட்டது.

அப்போது விபீஷணாழ்வான் இளையபெருமாளைப் பார்த்து, ஸ்வாமீ! இந்தச் சர்ப்பத்துக் கொப்பானவனை இன்னும் கால்நாழிகையிற் கொன்றால்தான் அவனிறப்பான். இல்லாவிட்டா லிராக்ஷசர்களுடைய மாயகாலம் வந்துவிடும். அப்பாலிவன் ஆகாசத்திற் பாய்ந்து நம்மை மோசம்பண்ணி வெல்லுவானென்று சொன்னார். அதுகேட்ட இலக்ஷுமணர் எல்லாவானர வீரர்மேலும் அனுமான்மீதும் அநேககோடி பாணங்களைப் பிரயோகித்துக் காலம் பார்த்துக்கொண் டிருக்கின்ற வில்வீரனான இந்திரசித்துவை இனிக்கொன்றுவிட வேண்டுமென்று கருதி, அவனுடைய சித்திரத்தேரைச் சில திவ்வியபாணங்களால் நொறுக்கிவிட்டார்.

இந்திரசித்து இலட்சுமணர்மீது நாகாஸ்திரம் பிரயோகித்தற்பொருட்டு ஆகாசத்தில் மாயமாயிருளில் மறைதல்.

கவி.

அழித்ததேரழுந்தா முன்ன மம்பொடுகிடந்துவெம்பி
உழைத்துயிர்விடுவதல்லா லுறுசெருவென்றேமென்று
பிழைத்திவர்போவரல்லர் பாசத்தாற்பிணிப்பினென்னா
விழித்திமையாதமுன்னம் வில்லொடும்விசும்பிற்சென்றான்.

இந்திரசித்தென்னும் கொடிய இராக்ஷசப் பாவியானவன் இலட்சுமணராற் பிரயோகித்த பாணவருஷங்களால் தானேறிய தேரழிந்து பூமியிற் சுக்கற்சுக்கலாய் முறிந்து விழாததற்கு முன்பாகத்தானே யாதுயோசனை செய்தானெனில்? நமக்கு வரப்பிரசாதமாகக் கிடைத்திருக்கும்படியான நாகபாசத்தை யெய்தோமாகில், இவர்கள் நாம் செயித்தோமென்று யுத்தகளத்தினின்று மீண்டுபோகாமல் வருத்தமடைந் துயிர்விடுவார்களென்று கண்ணிமை

கொட்டுவதற்கு முன்னம் யாருக்குந் தெரியாமல் தனது வில்லோடு மறைந்து ஆகாயத்திற் புகுந்தான்.

அதுகண்ட தேவர்கள் பொன்மயமாகிய திருமேனியையுடைய இளைய பெருமாள் இவனுடனே யாவரும் புகழும்படியான சாமர்த்தியவித்தையைச் செய்துகொண்டிருக்கவும்; இவன் வேறே யெந்த மோசக்கருத்தை நினைந்துக்கொண்டு ஆகாசத்தில் மறைந்தான்? இனியென்ன விளையப்போகிறதோவென்றுபயந்தோடிப்போனார்கள். அக்கால் கையில் வில்லைப்பிடித்தவனும், முதுகில் அம்பறுத்தூணியை இறுக்கிக் கட்டினவனும், தன்னுள்ளே பொங்கிக் கொதிக்கின்ற கோபத்தையுடையவனும், அக்கினிமயமாய்ச் சுவாசம் விடுகிறவனும், பொல்லாங்கைச் செய்பவர்களுக் கெல்லாம் குருபீடமானவனும், மாயங்களே தனக்கு ஐஸ்வரியமாகத் தேடிவைத்திருக்கின்றவனுமான இந்திரசித்தானவ னவ்விருட்டில் ஆகாசத்திலுள்ள மேகத்துக்கு மேலேபோய் மறைந்தனன். குறைவில்லாத தவங்களைச் செய்ததினாலும், அநேகதானங்களைச்செய்ததினாலும், அஞ்ஞானப் பிணிப்புகளை யறுப்பவர்களான பிரமருத்திரேந்திராதியர்க ளிடத்தில் தான் பெற்றவரத்தினாலும், தன்னுடைய ராட்சசப் பிறப்பினாலும், மந்திர உருவினாலும், அணுவைப்போலச் சிறியதான ஒரு சூக்ஷுமதேகத்தையுடையவனாகி; அந்தப் பிரமருத்திரேந்திராதியர்களெதிர்த்தாலுமவர்களுடைய உயர்ந்த தோள்களையு மிறுக்கிக்கட்டித் தள்ளினாலல்லாமல்மீளாத நாகபாசப் படையை அபிமந்திரித்தெடுத்தான். இங்கே இந்திரசித்து மறைந்துபோனதைக் கண்ட வானரவீரர்கள் இராவணன்புத்திரன் சண்டைக்குப்பயந்து ஓடிப்போய் விட்டானென்றுநினைக் தார்ப்பரித்தார்கள். இளையபெருமாளும் அப்படியே திருவுளங்கொண்டு சிரித்தார். இவர்களெல்லாம் இந்திரசித்து மாயையைச் செய்வானென்பதை அறியாதவர்களாய்ப்போர்த்தொழிலை நீங்கிநின்றார்கள்.

இலட்சுமணர் மேல்விளைவை யோசியாது ஆயாசந்தீர்ந் திருத்தல்.

கவி.

அதுகணத்தனுமன்றோணின் றையனுமிழிந்துவெய்ய
கதுவலிச்சிலையைவென்றி யங்கதன்கையதாக்கி
முதுகுறச்சென்றுநின்ற கணையெலாமுறையின்வாங்கி
விதுவிதுப்பாற்றலுற்றான் விளைகின்றதுணர்கிலாதான்.

இளையபெருமாளும் ஆஞ்சநேயருடைய திருத்தோளைவிட்டிறங்கி, தமது கையிலிருந்த பலம்பொருந்திய வில்லை அங்கதகுமாரனுடைய கையிற்கொடுத்து, முதுகிலிறுக்கி யிருந்த அம்பறுத்தூணியை இறக்கிவைத்து, தமது திருமேனியில் வரிசையாய்ப் பாய்ந்திருந்த அம்புகளை யெல்லாம் பிடுங்கிவிட்டு, கைத்தோற்கட்டுகளைவிழ்த்தி இளைப்பாறிக் கொண்டு, அதிமானுஷிய சேஷ்டிதராகியதாம் மேல்நடப்பதை சிறிதுமுணராதவரா யிருந்துவிட்டார்.

இந்திரசித்து இலட்சுமணர்மீதும் வானரப்படைகளின்மீதும் நாகாஸ்திரப் பிரயோகம் செய்ய அவர்கள் பிரமித்துத் திகைத்தல்.

கவி.

விட்டனனரக்கன்வெய்ய படையினை விடுத்தலோடும்
எட்டினோடிரண்டுதிக்கு மிருடியிந்திரியவோடிக்
கட்டினதென்பமன்னோ காகுத்தற்கிளையகாளை
வட்டவான்வயிரத்திண்டோண் மலைகளையுளையவாங்கி.

இம்மாதிரியாக இலக்ஷுமணப்பெருமாள் மேல்விளைவறியாது ஆயாசந் தீர்ந்து வானரசைனியங்களோடிருந்த காலையில், யாவருக்குந் தெரியாது அவ்விருளில் ஆகாயத்தில் மறைந்த மகாபாதகனாகிய இந்திரசித்தானவன் தான் அபிமந்திரித் தெடுத்த நாகாஸ்திரத்தைத் திடீரென்று பிரயோகித்து விட்டான். அப்படி அப்பாதகனால் விட்ட அஸ்திரமானது—இந்திரன் — அக்கினி இயமன்—நிருதி—வருணன்—வாயு—குபேரன்-ஈசானியன்-ஆகாசம்—பூமி என்று சொல்லப்பட்ட தசதிசைகளிலேயும்பரந்த இருளை யோட்டும்படி அக்கினிப் பொறிகளைக்கக்கி சுவாலைவீசிக்கொண்டு அதிவேகமாகவந்து, தன்னையடைந்த ஆன்மகோடிகளினது வினைக்கட்டுகளை யெல்லாம் அறுக்கவல்ல ஸ்ரீமந்நாராயண மூர்த்தியி னவதாரமாகிய காகுத்த குலோத்தமனது திருத்தம்பியாகிய இலக்ஷுமணருடைய வச்சிரமலைபோலும் திரண்டுயர்ந்து வலம்பெற்ற தோள்கள் வருந்தும்படியாகச்சுற்றிக்கட்டிற்று. இப்படி யப்பாசமிறுக்கிக் கட்டினபோதும்,அதிலுள்ள பாணங்கள்தைத்து பொல்லாங்குகள்விளைந்தபோதும், மனந்திகைத்து நின்றாரேயல்லாமல்; இஃதிந்திரசித்துவின்மாயமென்று உணராமலும், மனதிற்கொஞ்சமாவது வியசனப்பட்டு அதைரியமடையாமலும், அதற்கொடுங்கி யாதொன்றும் தோற்றாமற் சுற்றிச்சுற்றி ரணக்களத்தைப் பார்ப்பார். மறுபடியும் ஆகாசத்தைப் பார்ப்பார். பின்னுமந்தக் கோரதந்தங்களையுடைய நாகபாசம்வந்து, வச்சிர ஸ்தம்பம்போலவும் - மலைகளைப்போலவும்—பெரியனவாயிருக்கின்ற வானரவீரர்களுடைய தோள்கள் முறிந்துபோயின வென்று சொல்லும்படி இறுக்கிக் கட்டினமாத்திரத்தில்; அவ்வானர வீரர்களெல்லாம் தங்கள் தெளிவுள்ள தைரியமான மனமிளகிச் செய்வ தின்னதென்று தெரியாமல் உழைத்துக்கொண் டிருந்தார்கள்.

அப்போது வாயுபுத்திரராகிய ஆஞ்சனேயர் அதனைக்கண்டு, வஞ்சனையுள்ள அற்பப்பையனாகிய இவ்விந்திர சித்துவை ஒருட்சணநேரத்துக் குள்ளாக ஆகாசத்திற்பாய்ந்து தேடிப் பிடித்துக்கொண்டு வருகிறேனென்று உக்கிரங்கொண்டார். அக்கால் வாலியினுடைய வாலால் இராவணன் தோள்கள் கட்டப்பட்டதைப்போல நாகபாசமானது அனுமானுடைய வச்சிரபருவதம் போன்றதோள்களையும் இறுக்கிப்பிணித்தது. இந்தப் பிரகாரமாகக்கட்டுண்ட வானரவீரர்களெல்லாம் வருத்தம்பொறாமல் மலைகளைப்போலக் கீழேவிழுவார்கள். பூமியிற் புரளுவார்கள். தலைகளை மேலெடுத்துக் கண்களில் அக்கினிபறக்

கப்பார்ப்பார்கள். வால்களைச் சுழற்றிப் பூமியிலடிப்பார்கள். வாய்மடித்துப் பல்லைக்கடித்து, ஆண்சிம்ஹத்துக் கொப்பான கோதண்டபாணியின் திருத்தம்பியாரைப்பார்த்து உள்ளங் கொதிப்பார்கள். பக்கத்தில் நிற்கின்ற விபீஷணாழ்வாருடைய முகத்தைப்பார்த்து, ஐயா! இதை நீக்கிக்கொள்ளும் படியான உபாய மேதேனுமுண்டாவென்று கேட்பார்கள். உலோகமெல்லா மூடிக்கொண் டிருக்கின்ற இராத்திரி காலத்தைப் பார்த்துக் கோபிப்பார்கள்.

இளையபெருமாளுடைய மலைபோன்ற திருத்தோள்களைப் பார்த்து, ஐயோ! நம்முடைய கண்முன்பாக ஸ்வாமி இப்படி வருத்தப்படலாமோவென்று கோபச்சிரிப்புச் சிரித்து நிர்ப்பயர்களாய் அழுவார்கள். இதை யார்நீக்க வல்லவர்கள்? ஆஞ்சனேயராகிய உபகாரகர்தாம் நீக்கவல்லவர். அவராவது தப்பிப்பிழைத்தாரோ வென்று பார்ப்பார்கள். இளையபெருமாள் வருத்தப்படுகின்றதைப் பார்த்து, இதுதானா நமக்கு வந்த பிரயோசனமென்று துக்கித்து, ஸ்ரீராமபிரானுனவ ரிவருடைய இக்கட்டைப் பார்ப்பாரோவென்று துக்கித்தார்கள். இந்தச்சமயத்தில் நடந்த பொல்லாங்கை யென்னென்று சொல்லப்போகிறேன்? அந்த மகா துராத்மாவான இந்திரசித்து மின்னல்கள் ஓடிவருகிற துபோலவும், ஆகாசத்திலிருந்துஇடிகள் விழுகிறதுபோலவும், அனேகமான பொற்பூண்கட்டிய பாணங்களைப் பிரயோகித்தான். அவைகளெல்லாம் புகைபரப்பி அக்கினிகளைக் கக்கிக்கொண்டுவந்து, இயாவருங் குப்புற்றுக் கிடக்கிறபடியால் முதுகிற்பாய்ந்து மார்பினுருவிப் போய்விட்டன.

அப்போதுமலைகளின்மீதுபொழியவந்த வருஷகாலமேகத்தைத் தடுத்துப்பிரசண்டவாடைக்காற்று மோதினபோது அந்தமலைகள்பேர்ந்து அங்கங்கே தடுமாறிவிழ்ந்துவிடுவதுபோல, அம்புகள்பாய்ந்த மாத்திரத்தில் மலைபோன்ற தோள்களையுடைய வீரர்களெல்லாம் பூமியில் அலைகுலைந்து சாய்ந்துவிட்டார்கள். எங்கு மிரத்தவெள்ளமோடியது. ஆஞ்சனேயர் தமதுதேகத்தில் ஆயிரகோடிக்கும் அதிகமாக அம்புகள் பாய்ந்தும் கொஞ்சமும் லக்ஷியஞ்செய்யாமற் கண்களில் நெருப்புப்பொறிபறக்கப் பார்த்து, தமதாண்டவருடைய திருத்தம்பியாருக்குச் சம்பவித்த துக்கமானது தம்மைச்சுட அதைப்பொறுக்கமாட்டாமற் பயந்து நடுங்கினர். மற்றவீரர்களெல்லாம் இடிபோன்ற பாணங்கள் நூறுமாயிரமுமாகத் தங்கள் தேகத்தில் நுழைந்தவுடனே இரத்தம்பெருகி ஆறுபோலோட மூர்ச்சையாய் வீழ்ந்துபோனார்கள். அங்கதப்பெருமான் மாத்திரம் அநேகபாணங்கள் தேகமுழுவதுந் தைத்திருந்தபோதிலும் சோர்வடையாமற் சும்மாயிருந்தான். சூரியகுமாரராகிய சுக்கிரீவமகாராஜன் கழற்காய் மேலுள்ள முட்களைப்போல உடலெல்லாம் அம்புகள் தைப்புண்டு, கண்களில் நெருப்புப்பொறி பறக்கவும், மூங்கிற்காடு பற்றியெரிவதுபோலத் தேகத்தில்

மயிர்களெல்லா மெரியவும், இரத்தக்கடலுக்குள்ளே உதிக்கின்ற தன் பிதாவாகிய சூரியனைப்போலவுமிருந்தார்.

இலக்ஷுமணர் மூர்ச்சையாதல்.

கவி.

வெப்பாரும்பாசம்வீக்கி வெங்கணைவளைக்குமெய்யன்
ஒப்பாருமில்லான்றம்பி யுணர்ந்திருந்தின்னலுய்ப்பான்
இப்பாசமாய்க்குமாயம் யான்வல்லனென்பதோர்ந்தும்
அப்பாசம்வீசவாற்ற தழிந்தநல்லறிவுபோன்றான்.

அக்கால் ஒருவருக்கு நிகரற்ற ஸ்ரீராமருடைய திருத்தம்பியாகிய இளையபெருமாள் கொடிய நாகபாசத்தாற் கட்டுண்டு, வெப்பமான பாணங்கள் தொளைக்கின்ற திருமேனியை யுடையவராய் உணர்வுடனே யிருந்து வருத்தப்பட்டு, உலோகபாசமயக்க மூலப்பிரகிருதியைவென்று அதனைக்கடந்தவர் இந்த நாகபாசத்தைச் சகிக்கமாட்டாதவராய் அறிவுசோர்ந்து மூர்ச்சையானார். அப்போதவ்விளையபெருமாள் எப்படித் தோன்றினாரென்றால்? தமது திருமேனியில் தைத்திருக்கின்ற அக்கினிமுகப்பாணங்களெல்லாம் கிரணங்கள்போலவும், அத்திருமேனியி னின்றும் வடிகின்ற இரத்தம் வெயிலைப்போலவுமாக; இருட்டைத் தூரத்தும்படியான மிகுந்த பிரகாசத்தையுடைய சூரியனானவன் கேதுவென்கிற சர்ப்பத்தினாற் பற்றப்பட்டு ஆகாசத்திலிருந்து பூமியில் வீழ்ந்ததற் கொப்பாகத் தோன்றினார். இந்தப்பிரகாரமாக இளையபெருமாளே மூர்ச்சையடைந்தா ரென்றால், மற்றவர்களெல்லா மூர்ச்சையாய்ப் பூமியில்வீழ்ந்து கிடந்தார்களென்பது ஓரதிசயமோ? இப்படித் தன்னம்புகளால் அவர்கள் தேகத்தையெல்லா மூடிவிட்ட இந்திரசித்தானவன் முன்ன மிளையபெருமாள்விட்ட பாணங்களாற் சரீரமெல்லாம் சல்லடைக்கண்களாய்த் தொளைக்கப்பட்டு வருத்தமுற்று, வாயிலிரத்தங்களைக் கக்கிக்கொண்டு வருந்தினான்.

இந்திரசித்து மகாசந்தோஷத்துடன் இராவணனைக்கண்டுதனதரண்மனைசேர்தல்.

கவி.

சொற்றதுமுடித்தேனென்னை யென்னுடற்சோர்வைநீக்கி
மற்றதுமுடிப்பேனென்று வெண்ணினான்மனிசன்வாழ்க்கை
இற்றதுகுரங்கின்றானை யிறந்ததென்றிரண்டுபாலும்
கொற்றமங்கலங்களார்ப்ப விராவணன்கோயில்புக்கான்.

எல்லாரையுங் கொன்றுவிட்டு வருகிறேனென்று நாம் சொன்னசபதத்தை முடித்துவிட்டோம். நம்முடற் புண்ணையும் வருத்தத்தையும் நாளைக்கே யாற்றிக்கொண்டு வந்து மற்றக்காரியங்களையு முடித்துவிடுவோ மென்று நினைத்துஉடனே தன்னிரண்டுபக்கங்களிலும் இரண்டுபேர்கள்நின்று இன்றோடிம் மனிதனுடையஉயிர்வாழ்க்கைபோய்விட்டதென்றும்,குரங்குச்சேனையெல்லா மாண்டுவிட்டதென்றும், மங்கலவாத்தியமுழங்க ஜெயங்கூறிக்கொண்டுவரத்

தன்பிதாவான இராவணனுடையமாளிகையைப்போய்ச்சேரும்படிப்புறப்பட்டு; தன்மேலுகாந்தகால மேகத்தைப்போல அஸ்திரவருஷங்களைப்பொழிந்துகொண்டிருந்த இளையபெருமாளைவிட்டு நீங்கியும், கச்சிறுக்கிய பருத்த ஸ்தனங்களோடு முத்தையொத்த தந்த பந்திகளையுமுடைய இராக்ஷசஸ்திரீகளினது கருங்கண்களாகிய பாணங்கள் தனதுதோள்களில் தைத்துப் பாயும்படியான மன்மதயுத்த நீங்காதவனாகி, பத்துக்கோடி ரத்நதீபங்களை யேந்திக்கொண்டு குற்றமற்ற தேவலோக ஸ்திரீகளும், நாகலோக ஸ்திரீகளும், பூலோக ஸ்திரீகளும், பல்லாண்டு பாடிக்கொண்டுவரவும், இராக்ஷச ஸ்திரீகளெல்லாம் ஆலாத்தி சுற்றி வாழ்த்திக்கொண்டு புடைசூழவும் வந்தனன்.

கவி.

தந்தையையெய்தியன்றூங் குற்றுளதன்மையெல்லாம்
சிந்தையினுணரக்கூறித் தீருதியிடர்நீயெந்தாய்
நொந்தனன்யாக்கைநொய்தி னுற்றிமேனுவல்வனென்னுப்
புந்தியிலனுக்கந்தீர்ப்பான் றன்னுடைக்கோயில்புக்கான்

இவ்வண்ணம் சகலாடம்பரத்துடன் அனேகவைபவங்களோடு ஜெயபேரிகை முழக்கிக்கொண்டு வந்தவனாகிய இந்திரசித்தென்னும் படுபாவியானவன் இராவணனைக்கண்டு, இரணக்களத்தில் நடந்த காரியங்களையெல்லாம் அவனுக்குத் தெரியச்சொல்லி, ஐயா! வெற்றிபெற்றேன். நீர் இனிமேல் துக்கிக்கவேண்டாம். இன்றைக்கு நான் வெகுவருத்தப்பட்டேன். என் தேகப்புண்களையெல்லாம் சீக்கிரத்தில் ஆற்றிக்கொண்டு மற்றக்காரியமெல்லாம் பின்னுற் சொல்லுகிறேன். என்றவனைத் தேற்றிவிட்டு, தன்தேகத்தில் அறிவிலாது தேடிக்கொண்ட வருத்தத்தை நீக்கிக்கொள்ளும்படியாகத் தன்னுடைய மாளிகைக்குப்போய்ச் சேர்ந்தான்.

இலட்சுமணர் நாகாஸ்திரத்தாற் கட்டுப்பட்டு மூர்ச்சித்த காலையில் அண்டையிலிருந்த விபீஷணர் திகைத்து எண்ணுதனவெண்ணிவருந்திப் பிரலாபித்தல்.

கவி.

இத்தலையின்னலுற்ற வீடணனிழைப்பதோரான்
மத்துறுதயிரினுள்ள மறுகினன்மயங்குகின்றான்
அத்தலைக்கொடியனென்னை யட்டிலனளியத்தேனுன்
செத்திலன்வலியெனின்றே னென்றுபோய்வையஞ்சேர்ந்தான்.

இவ்விடத்தில் விபீஷணாழ்வான் அதிகதுக்கத்துடனே தாலின்னது செய்யவேண்டுமென்று அறியாதவராகி,மத்தினுற்கடைந்த தயிரைப்போலமனம் பேதித்து மயங்கி, ஐயோ! அவ்விடத்திலேயே துஷ்டனான இராவணனுடையமகன் என்னையுங் கொல்லாமற்போனானே: தயவில்லாத நானேயானுலு நான்று கொண்டிறவாமற் போனேனே: ஆகிலுநான் மகாதைரியவான். என்றுகிலேசித்துவந்து பூமியில்விழுந்து புரண்டு,நாகபாசத்தினாலே என்னாசாரியருடைய

திருத்தம்பியார் கட்டுண்டார். அதுபோலவே என்னட்பினர்களான வானரவீரர்களெல்லாரும் கட்டுண்டு போனார்கள். நானொருவன் மாத்திரம் இறவாமலிருக்கின்றேன். சக்கரவர்த்தித் திருக்குமாரர் என்னை யென்ன நினைப்பார்? என்று சிந்தித்து மனோஉஷ்ணத்தால்தீய்ந்த மலர்மாலையையுடையமார்பராய் வாயைத்திறந்து கதறி, என்னை ஸ்வாமியானவர் இவன்கூடவேயிருந்து மோசம்பண்ணிக் கொல்லச்செய்தானென்பாரோ? கூட வழைத்துக்கொண்டு போய்த் தன்மகனுக்கு வெற்றியுண்டாகும்படிச் செய்தானென்று சொல்வாரோ? இப்படிப்பட்ட பொல்லாங்குக்கெல்லாம் இவனே தகுந்தமூலமாய் நமக்குவிசுவாசம்வர நடந்து காட்டினானென்று நினைப்பாரோ வென்று தமது கண்ணீரைப்போல உயிரையுங் கரையச்செய்து பின்னுஞ் சொல்கின்றார்.

ஆதெய்வமே! அந்தச் சண்டாளனாகிய இந்திரசித்து போர்செய்த போது சமானமில்லாத இந்தத் தண்டாயுதத்தினாலே அவனைத் தேரோடு நசுங்கும்படி கொன்று, என்மனதின் சுத்தத்தை இவருக்காவது தெரிவிக்காமற் போனேனே: அல்லதவன்கையிற் சாகாமலும்போனேனே: ஒருவிதத்தாலு மெலிவடையாமற் போனேனே: இனியாருக்கு காணுறவானவனாவேன்? கொஞ்சமுந் தயையில்லாமற் சும்மா அழுதுகொண் டிருக்கின்றேனே: ஐயோ! நானிவர்களோடு சேர்ந்து அவர்களுடன் சண்டைசெய்து கூடவேமாண்டு போகவேண்டும். அல்லதுபிழைத்தாற் கூடப்பிழைத்து உள்ளங்கை நெல்லிக்கனிபோல என் விசுவாசத்தைக் காட்டவேண்டும். இவ்விரண்டிலொன்றேனுஞ் செய்யாமற்போனேன். அல்லதுபிறகாவது மாண்டுபோகவில்லை. நான் துஷ்டகாரியத்தைச் செய்யாததினாலே அவனுக்கும் நல்லவனாகாமற் போனேன். இப்போ தபயங்கொடுத்தாண்ட இவருக்கும் ஆகாமல், குத்தினவனையும் குத்துண்டவனையுங் கொன்ற இருமுனையிலுங் கூர்மையுள்ள சூலத்தைப்போல இருவரையுங் கெடுத்துவிட்டவனானேன். என்று பலவிதமாய்ப் புலம்பிக்கொண்டழுது துக்கித்தனர்.

அனலனென்னும் விபீஷணர்மந்திரி அவ்விபீஷணரைத்தேற்றி இராமமூர்த்திபால்வந்து இலட்சுமணருக்குநேர்ந்த இடுக்கணுரைத்தல்.

கவி.

அனையனபலவும்பன்னி யாகுலித்தரற்றுவானை
வினையுளபலவுஞ்செய்யத் தக்கனவீரநீயும்
நினைவிலார்போலநெஞ்ச நெகிழ்தியோநீத்தியென்று
இனையனசொல்லித்தேற்றி யனலன்மற்றிதுவுஞ்சொன்னான்.

நீயினிதிருத்தியான்போய் நெடியவற்குரைப்பனென்னாப்
போயினனனலன்போயப் புண்ணியன்பொலன்கொள்பாதம்
மேயினன்வணங்கியுற்ற வினையெலாமியம்பிநின்றான்
ஆயிரம்பெயரினானு மருந்துயர்க்கடலுளாழ்ந்தான்.

இவ்வண்ணம் பலவற்றையெண்ணி யெண்ணி வாய்விட்டரற்றித்துக்கிக்கின்ற விபீஷணாழ்வானை அனலனென்கிற ராக்ஷசமந்திரிபார்த்து, ஐயா! இனிநடக்கவேண்டிய காரியங்களையெல்லாஞ் செய்யவேண்டியவர் நீர். நினைவில்லாதவர்களைப்போல நீரும்புலம்பலாமோ ஐயா விபீஷணாழ்வானே! நீரிவ்விடத்திலிவர்களைக் காத்துக்கொண்டிரும். அடியேன்போய் பெரிய பெருமாளுக்குச் சொல்லுகிறேன். என்று புறப்பட்டுப்போய்த் தர்மமே ஸ்வரூபமாயுள்ள ஸ்ரீராமருடைய திருவடித்தாமரைகளில் விழ்ந்து, இரணக்களத்தில் நடந்த சமாசாரங்களை யெல்லாம் விவரமாக விண்ணப்பம்பண்ணினான். அதைக்கேட்ட சகஸ்திரநாமங்களையுடைய ஸ்ரீரகுநந்தனர் துக்கசாகரத்தில் மூழ்கி, ஒன்றும்பேசாமலும், தமது நிலைமையை யறியாமலும், உயிருஞ்சோராமலும், கண்ணீர் விடாமலும், உலோகத்திலுள்ள ஒன்றையும் பாராமலும், உலோகத்தைப் படுசூரணப்படுத்தி விடாமலும், கோபங்கொண்டு; தமதுதிருக்கையா லிவ்வுலகத்திலுள்ள எல்லாவற்றையும் வாரி இறைத்துவிடாமலுமழுதேங்கி, பிராணனுண்டோவில்லையோவென யாவருக்குங் காணப்பட்டு, மனம்புழுங்கிப் பெருமூச்சுவிட்டுத் துக்கித்து, இவ்விடத்திருந்து செய்யத்தக்க தொன்றுமில்லையென்று திடீரென்றெழுந்து, வேகமாய் மடமடவென்றோடி, தமதுதம்பியார் சத்துருக்களைத் துரத்தியடித்த ரணக்களத்தை நெருங்கினார். அப்போது விஷமும் — மேகமும் - கருங்கடலும் - ஆகிய விவைமுதலான மற்ற நீலநிறமுள்ளவைகளை யெல்லாம் ஒருமிக்கச்சேர்த்துப்பிழிந்ததைப் போலவும், கருநிறமேகமானது சூல்முதிர்ந்து உலகமெல்லா மைவருஷம் வருஷித்ததுபோலவும், எங்குமிருட்படலமூடிக்கொண்டு அர்த்தராத்திரிகாலமா யிருந்தது.

அக்கால் ஆயிரந் திருநாமங்களையுடைய ஸ்வாமியானவர் அதிக சிரேஷ்டமான அக்கினியாஸ்திரத்தைத் தம்முடைய கோதண்டத்திற் பூட்டிவிட்டார். அம்மாத்திரத்தி லப்பகையாகிய விருள்நீங்கி யோடும்படிச் சூரியனுச்சியிலுதித்தாற்போல உலோகமெல்லாம் வெளிச்சமாயிருந்தது. பிரம்மகபாலத்தைக் கையிலுடைய உருத்திர மூர்த்தியானவர் உலோகத்துள்ள உயிர்களையெல்லாமழித் துண்ணுகின்ற யுகாந்தகாலத்திற் பொங்கிய சமுத்திரம்போ லிரத்தம்பிரவகிக்க எங்கும் பிணமயமாயிருக்கின்ற அந்தரணக்களத்தை ஸ்ரீராமர்பார்த்தனர்.

ஸ்ரீராமர் யுத்தகளம்புகுந்து இலட்சுமணரைத் தேடிக்கண்டு மனந்தியங்கி வருந்தலும் விபீஷணர் தேற்றுதலும்.

கவி.

பிணப்பெருங்குன்றினூடுங் குருதிநீர்பெயலப்பேரும்
நிணப்பெருஞ்சேற்றினூடும் படைக்கலநெருக்கினூடும்
மணப்பெருங்களத்தின்மோடி மங்கலவாழ்க்கைவைப்பில்
கணத்தினும்பாதிப்போதிற் றம்பியைச்சென்றுகண்டான்.

அய்யவனுக்கைதன்மேல் விழுந்துமார்பழுந்தப்புல்லி
உய்யலனென்னவாவி யுயிர்த்துயிர்த்துருகுகின்றான்
பெய்யிருதாரைக்கண்ணன் பெருந்துளிபிறங்கவானின்
வெய்யவன்றன்னைச்சேர்ந்த நீனிறமேகமொத்தான்.

அந்தப் பிணமலைகளுக்கு மிரத்தப்பிரவாகத்திற்கு நடுவிலும்-நிணமுள்ள சேற்றிலும் — ஆயுதநெருக்கினுள்ளும் - அரைக்ஷணத்துக்குள்ளாக யாவரையுமாராய்ந்து, ஒரு மங்கலகரமான விடத்தில் இளையபெருமா ளிருக்கக்கண்டு, உடனே யவர்மீது விழுந்து தம்முடைய திருமார்பிறுகும்படித் தழுவி, அம்பாதம்பி ! இனிநா னுன்னைவிட்டுப் பிழைக்கமாட்டுவேனோ ? என்றுவிசோர்ந்துருகித் தாரைதாரையாகக் கண்ணீர்பெருக்கி, ஆகாசத்தில் மழையைப் பெய்துகொண்டு சூரியனைச்சூழ்ந்துநின்ற நீலநிறமான மேகத்துக்கொப்பாக விருந்தார்.

அந்தச்சமய மவர்பட்டபாட்டை என்னென்று சொல்லுவேன்? கையுங்காலுமுதைத்து உழைத்துக்கொள்ளுவார். பெருமூச்சுவிடுவார். உருகிப்போவார். புத்திமயங்கிப்போவார். செய்யவேண்டியகாரிய மின்னதென்றறியார். ஒ இலக்ஷ்மணா ! ஒ இலக்ஷ்மணா ! என்றழைப்பார். தமது திருக்கையால் வாயையு மூக்கையு மூடிக்கொண்டு சும்மாயிருப்பார். ஐயா இலக்ஷ்மணா ! நாமினி பிழைப்போமோவென்று சொல்லுவார். இயாவர்க்கும் பிறந்தவர்போற் காணப்பட்டும் பிறவாதவரான சர்வலோகசரணியர் தமது தாமரை மலர் போன்ற திருக்கைகளால் அவ்விலட்சுமணருடைய பாதங்களைத் தடவிப்பிடிப்பார். தொடையை மெல்லெனத்தட்டுவார். பரிசுத்தமான தாமரைமலர் போன்ற அவருடைய கண்கள் சிமிட்டுகிறதோ இல்லையோவென்று பார்ப்பார். மார்பைத் தொட்டுப்பார்த்து நெஞ்சந்துடிக்கிறதென்று சொல்லுவார். ஆகாசத்தைப் பார்ப்பார். இலக்ஷ்மணரைத் தூக்கித்தமது திருத்தொடைமேல்வளர்த்திக் கொள்ளுவார். மறுபடியும் பூமியில் வளர்த்துவார். அந்தத் திருடன் போய்விட்டானே வென்பார். வானரவீரர்களையெல்லாம் பார்ப்பார். ஆதிசங்கற்பத்தை நினைப்பார். தமது திருத்தோளிலுள்ள பெரியவில்லைப் பார்ப்பார். அம்புகளையெடுத்துப் பார்ப்பார். இந்தலோகத்தில் என்னைப்போல் இந்தத்துன்பத்தை யடைந்தவர்கள் வேறே யாராவதுண்டோவென்பார். எனக்குநேரிட்ட இந்தஎளிமைத்தனம் பெரியதென்பார்.

எல்லா வளவைப்பிரமாணங்களையுந் தாண்டிநின்றவர் மீட்டுமடிக்கடி தமதுவில்லை நோக்குவார். இந்திரசித்துவினுடைய நாகபாசக்கட்டைப் பார்ப்பார். விடியாத விரவைப்பார்ப்பார். ஆகாசத்திலுள்ள தேவர்களைப்பார்ப்பார். பூமியைவேருடனே பேர்த்துவிடுகிறேனென்பார். தமது திருப்பவளம் போன்ற இதழைக்கடிப்பார். பெரியோர்களுடைய சாஸ்திரசம்மதியைப்பார்ப்பார். இப்படிக்கெல்லாம் தம்மைப்போலத் தமதுபுகழை விரும்பும் திருந்தோளையுடைய ஸ்ரீராமமூர்த்தியானவர் படாதபாடுபட்டு, அப்பாதம்பி விபீ

ஷணு! இந்திரசித்துக்கு மிளையபெருமானுக்கு மிவ்விதசண்டை நேரிட்டதென்று என்னைச்சீக்கிரமாக அழையாமற்போனாயே. இந்தத் தேவாஸ்திரத்தைத்தொடுத்த அவ்விந்திரசித்துவின் தலையுடனிதையுந்துணித்து உயிரைவாங்கி விடுவேனே: என்னை யனியாயமாய்க் கெடுத்துவிட்டாயே என்று எக்காலத்துங்கெடாதவரான ஸ்ரீராமர் அருளிச்செய்தனர். அவ்வார்த்தையை ஆருதனுயரோடழுதுகொண்டிருந்த விபீஷணாழ்வான் கேட்டு, ஸ்வாமி! அந்தச் சண்டாளன் யுத்தத்திற்குவந்து சண்டைசெய்வானென்பதை அடியே னறியவேமாட்டேன். அவன்வந்து யுத்தத்தில் நின்ற காலத்திலும் அவனே தோற்றுப்போவானென்றே யுணர்ந்திருந்தேன். இந்தமாய மித்தெய்வத்தன்மையுள்ள அஸ்திரத்தால் வந்ததேயல்லாமல் வேறொன்றாலல்ல.

சுவாமி! அதிகாயனுடைய தேகத்தை முண்டமாக்கி வெற்றிபெற்ற நம்முடைய இளையபெருமாள் உடனேதிரும்பாமல், இலங்காதிபத்தியத்தைப்பெற்றவனான இராவணன் யுத்தத்திற்கு வருவானென்று எண்ணிக்கொண்டிருக்கும்போது அவனுடைய பிள்ளையாகிய இந்தப்பயல் நாற்பதுவெள்ளம் சேனையுடனேவந்து, நம்முடைய நாற்பதுவெள்ளம் வானரசேனைகளின்மீது பாணங்களைப்பிரயோகித்து அவைகளைக்கொன்று, மற்றவானரவீரர்களைத் துரத்திப் பெருஞ்சண்டைசெய்து, அவர்களைமூன்றுதரம் பூமியில் மூர்ச்சையாய்விழும்படிச்செய்தான். பிறகாயிரஞ் சிம்ஹங்கள்பூட்டிய தேரின்மேலேறி ஆண்சிம்ஹத்துக்கொப்பான இளையபெருமாளோ டெதிர்த்தான். இளையபெருமாள் அனுமான்மீது ஆரோகணித்தருளி, அவனுடைய ஆயிரந்தேரும் பொடிப்பொடியாகும்படித் தம்முடைய வில்வல்லமையைக்காட்டி; பிறகவனுடனே வந்த நாற்பதுவெள்ளஞ் சேனைகளையும், உதவியாய்வந்த பத்துலக்ஷஞ்சேனைகளையும், சூரியனைக்கண்ட பனிபோற்கொன்று; அவனுக்குச் சக்கரரக்ஷகராய் வந்த மஹாபாரிசனென்பவனையும், தூமாக்ஷனென்பவனையும், பராரியாய்த்துரத்திவிட்டு; இனியென்ன இருக்கிறது அவனு மிறந்தானென்பதாக அநேகதிவ்வியபாணங்களை அந்தச்சண்டாளனுடைய மார்பிலெய்தார்.

அப்படியெய்த பாணங்கள்பட்டுப் பிளந்தவிடமெல்லா மிரத்தமொழுகும்படிநின்றவனை நான்பார்த்து, இவன்சேனையெல்லா முடிந்து ஒருவனாய்ச் சோர்ந்துநிற்கின்றானே: தப்பிப்போவானேயானால்ஏதேனும்வஞ்சனைசெய்வானென்று லோகமெல்லாங்கீர்த்திபரவச் செய்திருக்கின்ற ஸ்வாமிக்குச் சொன்னேன். சூரியனும் அஸ்தமனமானான். உலகமெல்லா மாயமாயிருண்டுவிட்டது. பின்னர் வஞ்சகனான இந்திரசித்து தன்னுடைய மாயவரத்தினாலே ஆகாசத்திற்போ யொளித்துக்கொண்டு நாகபாசத்தைவீசி, நம்முடைய கூட்டத்தையெல்லாம் சோரும்படிப் பண்ணினானென்று, அம்பினால் தொளைபட்ட புண்ணுடையவரைப்போல அழுதகண்ணும் தொழுதகையுமாய் நின்று விண்ணப்பப்பண்ணிய விபீஷணாழ்வாரானவர் பின்னுஞ்சொல்லுகின்றார். ஒ எங்களாண்டவனே! இவர்களெல்லாரும்பிராணன்போனவர்களல்லர். கட்டின

பாசமாத்திரமறுந்தால் அவனெய்திருக்கின்ற புல்லினுனிபோன்ற பாணங்களுக்கு வருத்தப்படமாட்டார்கள். தேவரீர்புலம்பி மனஞ்சலித்துத் துக்கிக்கவேண்டாம். தருமத்தை யொருநாளும்பாவம் வெல்லமாட்டாதென்றார்.

ஸ்ரீராமபிரான் இந்நாகாஸ்திரத்தின் மகிமையென்னவென்றுகேட்க விபீஷணர் அவ்வஸ்திரத்தினது மகிமையைச்சொல்லுதலும் சுவாமிபலபலவெண்ணிச் சொல்லித் துக்கித்தலும்.

கவி.

யாரிதுகொடுத்ததேவ னென்னையீ திதனைத்தீரும்
காரணம்யாதுநின்னு லுணர்ந்ததுகழறிக்காணென்
றூரியன்வினவவண்ணல் வீடணனமலசாலச்
சீரிதென்றதனையுள்ள பரிசெலாந்தெரியச்சொன்னான்.

அதைக்கேட்ட ஸ்வாமி விபீஷணுழ்வாரைப்பார்த்து, இவ்வஸ்திரங்கொடுத்த தேவர்களார்? இதன்பெயரென்ன? இதுதீரும்படியான உபாயமெது? இதைப்பற்றி உனக்குத்தெரிந்ததை யெல்லாம் விவரமாய்ச்சொல்லென்றுகேட்க விபீஷணுழ்வார் சொல்லுகின்றார்.

ஸ்வாமி! இதுமுன்னே லோகத்தைச்சிருஷ்டித்த பிரமதேவர்செய்த யாகத்திலுண்டானது. இதைக் கயிலாசபதியாகிய காமதகனர் அவரிடத்தினின்றும்வாங்கினர். அவரைநோக்கி இந்தச்சண்டாளன் அதிககொடுமையான தவசைச்செய்து பெற்றுக்கொண்டான். இஃதூழிக்காலத் திடியைக்காட்டிலுமிகுந்த வல்லமையுடையது. இது நாகபாசமென்று பேருள்ளது. இதனுடைய வல்லமைதான் ஆயிரங்கண்களைப்பெற்ற தேவேந்திரனுடைய வச்சிரத்தோள்களை யிறுக்கிக்கட்டினது. வேறேயொன்றை யாலோசிப்பானேன்? முன்னு லனுமானுனவ ரிலங்கைக்கு வந்தபோதும் இதுதான் அவருடைய தோள்களையு மிறுக்கினது. மேலும்தேவர்கள் சொர்க்கலோக ஐஸ்வரியத்தை யிழந்ததுமிதனுல்தான். இந்தநாகபாசம் தானேவிட்டால்தான் விடும். அல்லாவிட்டாற் பிரமலோகமுதலான லோகங்களெல்லாம் அழிந்தாலும் இதுநீங்கமாட்டாது. அப்படியிருக்க இந்தப்பூலோகத்தைப்பற்றிப் பேசியென்ன? மாமிசங்களெல்லாங் கழன்று உயிர்நீங்கினுல் தானேவிட்டுவிடும். வேறேயிதற்குஉபாயமில்லை. ஓ தேனொழுகுகின்ற திருத்துழாய் மாலையைத்தரித்த ஸ்ரீரகுநந்தனு! இதன்வரலாறு இப்படிப்பட்டதாகு மென்றார்.

அப்போது தேவர்களுடைய துன்பங்களையெல்லாம் தீர்க்கும்படி அவதரித்தவரான பெரியபெருமாள் விபீஷணரைப்பார்த்து, தம்பி! அப்படியானுல் இந்தஅஸ்திரத்தை இப்படிப்பட்ட துஷ்டர்களுக்குக்கொடுத்த தேவர்கள் மேலெதிர்த்துப் போகட்டுமா? இந்தலோகத்தையெல்லாஞ் சாம்பலாகச்சுட்டுவிட்டு நானுமுடிந்துபோகட்டுமா? இலங்காபுரி சின்னபின்னப் படும்படியாகச் செய்து அந்தராக்ஷசர்களுடைய வமிசங்களைக் கருவறுத்துப் போடட்டுமா? நான் செய்யவேண்டியதைத் தகுந்த வாலோசனையுடனே சொல்லக்கடவாய்.

இந்த நாகபாசத்தைக் கொடுத்தவர்கள் தாமே யென்னெதிர்வந்து இரங்கி வேண்டிக் கொள்ளும்படியான மார்க்கமுண்டானாற் கோபம் தணிகின்றேன். இல்லாவிட்டால் முப்புரங்களையு மோரம்பினாற்சுட்ட உருத்திரமூர்த்தியைப்போல இந்த மூன்றுலோகங்களையும் சுட்டு, ஒருநொடியிற் சாம்பலாக்கி அழித்துவிடுகிறேன்.

அப்பா விபீஷணா ! என்னருமைத் தம்பியாகிய இலக்ஷுமண னிறப்பானானால், பின்புஒருவேளை ராவணனே என்னைப் புகழ்ந்தாலுமென்ன? பழித்தாலுந்தானென்ன ? அப்பால் தருமந்தானென்ன ? என்னை நம்பிவந்த என்சிநேகர்களைக்காட்டிலும் தேவர்களானாலும் இந்த லோகத்திலுள்ள ஜீவர்களானாலும் எனக்கு நல்லவர்க ளாவார்களோ ? ஐயோ ! ஒருதுஷ்டன் இப்படிப்பட்டதுன்பத்தைச் செய்ததற்கு நானுலகத்தையெல்லாம் ஜெயித்து நாசம்பண்ணுகிறது கிரமமல்லவே: என்றிவ்வாறுசொல்லித் தமக்குத்தாமே துக்கித்து, இருந்திருந்து ஆலோசித்துப் பெருமூச்சுவிட்டு, தமது திருத்தம்பியாரைப் பார்க்கினு மற்ற வானரவீரர்களிடத்தில் தமக்குண்டான அபாரதயவால் பெருஞ்சோகமுற்று, வேதமாகிய அங்குசத்தினிலையில் நிற்கின்ற பெரிய யானைபோன்ற இராமஸ்வாமியானவர் மறுபடியும் இளையபெருமாளுக்குச் சமீபமாய்வந்து, அவருடைய மலைபோன்றனவும் வெற்றிபெற்றனவுமான திருத்தோள்களைப் பிணித்திருக்கிற நாகபாசத்தைப் பலதரம் உற்றுப்பார்த்து, இஃது என்தம்பியைக்கொன்று விட்டதானால் நானுமுடனே மாய்ந்துவிடுவேனென்று நினைத்தார்.

இராமசுவாமியினிடத்தில் கருடபகவான் வருதல்.

கவி.

இத்தன்மையெய்து மளவின்கண்வந்த விமையோர்களஞ்சி யிதுபோய்
எத்தன்மையெய்தி முடியுங்கொலென்று குலைகின்றவெல்லை யிதன்வாய்
அத்தன்மைகண்டு புடைநின்றவண்ணல் சலுழன்றனன்பின் மிசையால்
சித்தந்நடுங்கி யிதுதீரமெள்ள விருளூடுவந்து தெரிவான்.

இந்தப்பிரகாரமாக ஸ்ரீராமமூர்த்தி துக்கிக்கிறதைக்கண்ட தேவர்களெல்லாம் ஸ்வாமியைவந்து பார்த்துப்பயந்து, இனியிதனாலென்னமாய் முடியப்போகிறதோவென்று பரிதபித்தார்கள். அச்சமையத்தில் ஸ்வாமி துக்கிக்கின்றதைப் பார்த்துக்கொண்டு தேவர்களுடனேநின்ற பெரிய திருவடியாகிய கருடாழ்வான் அதிவேகத்துடனே அன்பின் மிகுதியால் மனந்திடுக்கிட்டு, தமது பாரதந்திரிய ஜ்ஞானமும் தடுமாறி ஸ்வதந்திரம் பாவித்து, ஸ்வாமியினுடைய இத்துக்கத்தை நீக்கிவிடுகிறேனென்று அதியிருள்நிறைந்த மத்தியராத்திரியில் ஸ்வாமிக்கெதிரில் தோன்றும்படியாகவருகின்றார். அஃதெவ்வாறெனில், ஒருகாலத்தும் சலனப்படாத திருவுள்ளஞ்சோர்ந்து நடுங்குகின்றவரும்,தடுமாறுதைரிய மிழந்தவருமாகிய ஸ்வாமியானவர் சத்துவகுணத்தையுடையவரானபடியால்இதுவரையிலும்இலங்கையைராவணனுடனேஅழிக்

காமற் கிருபையுடனேயிருக்கின்ற தன்மையைக்கண்டு ஆச்சரியப்பட்டுத் தமதுவேகத்தால் மேருமலையும் பூமியும் கிடுகிடென்று நடுக்கங்கொள்ளவும், உலோகமெல்லாம்தேஜோமயமாய்ப்பிரகாசிக்கவும், கண்சிமிட்டாத திக்கஜங்களும் அதிகபிரகாசத்தைப் பார்க்கமாட்டாமற் கண்ணைமூடிக்கொண்டு பயந்துநடுங்கவுமாயின.

மேலும் — சண்டமாருதக்காற்றை வீசுகின்ற சிறகையுடையவரான அக்கருடபகவானானவர் அநேககோடிகாத தூரம் கடைநீண்டு தோற்றுகின்ற செந்தாமரை மலர்போன்ற திருக்கண்களிடத்தில் தாரைதாரையாகக் கண்ணீர்சொரிந்து அநேகவிதமாக துக்கப்படுகின்ற ஸ்வாமியினுடைய திருமேனியைக்கண்டு அதிக சந்தோஷசித்தராகி, குளிர்ந்த கடலானது தத்தளித்து அலைகளெறியவும், உலோகத்தை மூடிக்கொண்டிருக்கின்ற இருளானது இருந்தவிடந் தெரியாமலோடிவிடவும், வேதபுருஷன் பல்லாண்டுபாடவும், உலகத்தி லுள்ளவர்களெல்லாம் தம்மைச்சேவித்துப் பாபநிவாரணராகவும், பிணித்துக்கொண் டிருக்கின்ற நாகபாசமெல்லாம் சின்னபின்னமாய் பலஹீனப்படவு மிரணக்களத்தி லெழுந்தருளி; இருளையடக்கிப் பிரகாசத்தைவிடுத்துத் திக்குகளிலெல்லாங் கிரணங்களைச்செலுத்திச் சந்திரனுக்கு ஒளியைக் கொடுத்துச் சொலிக்கின்ற கண்டத்துடனே ஒளிவிடுகின்றகிரீடமானது பூமியின்மத்தியி லிருக்கின்ற மேருமலையின்மீது விளங்குகின்ற சூரியனைக்காட்டிலு மூன்றுமடங்கத்தனை பிரகாசித்தன.

அன்றியும் - பலநாகராஜாக்களுடைய சிரோரத்தினங்களைக் கோடானுகோடியாகக் கொண்டு செய்திருக்கும் வகையில் மின்னலைக் கொண்டு அமைத்ததைப்போலும் பிரகாசிக்கின்ற ஆபரணங்களும் சாம்பூநதப் பொன்னாற்செய்தநெற்றிப்பட்டமும் பிரகாசிக்க, துளசிமணிமாலை மார்பினிடத்துப்புரள, தாம் பெருமானை வெகுநாள் பிரிந்த துக்கநீங்கும்படியாக அப்பகவானுடைய திருமேனியைக்கண்டு சிரசின்மீது இரண்டு கையையுங்கூப்பித் தொழுதுகொண்டு, ஸ்வாமியானவர் யுத்தகளத்தில் யாவருடனுங்கலந்து நிற்கிறபடியால் அவர் திருவடிகளில்மாத்திரம் தனியாகச்சேவிக்கக் கிடையாமல், அவர் துக்கித்துக்கொண் டிருக்கிற நிலைமையை நினைத்து நினைத்து நெஞ்சழிந்து, இந்தப் பதினாலுலோகமுந்தொழும்படியான திருவடிகள் பூமியில்தோயாமல் இறங்கி வரும்போதே அடிக்கடி ஸ்வாமியை வணங்கிக்கொண்டு வருகிறார்.

இப்படி வருகின்ற கருடபகவான் ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரரைப் பார்த்து, ஸ்வாமி! தேவரீர் உமது யதார்த்த ஸ்வரூபத்தை மறைத்துக்கொண்டு அவதரித்தீர். இப்போது உமது திருத்தம்பியாரைப் பிரிந்ததாக வருந்

தப்படுகின்றதுபோல மாயைகாட்டுதலை நீக்கியருளல்வேண்டும். தேவப்பிறவி முதலானஎழுவகைப்பிறவியுயிர்கட்கும்பிதாவானபிரம்ஹாவைப்பெற்ற தேவரீர்உமது திருவுளப்படி பிறவாமற்பிறந்து விளையாடுகின்றீர். ஓ சமானரகிதரே! அடியேங்களுடைய துக்கங்களையெல்லா நீக்கியிரக்ஷிக்கின்ற தேவரீர்துக்கப்படுவதாய் நாடகநடிக்கிற விதமென்ன? ஓ எங்கள் காரணவஸ்துவே! வருந்தப்படாதேயும்: வருத்தப்படாதேயும். என்று அநேகவிதமாய் ஸ்தோத்திரம்பண்ணத் தொடங்கினர்.

கருடபகவான் தோத்திரம்.

கவி.

தேவாதிதேவர் பலராலுமுந்துன் றிருநாமமோது செயலாய்
மூவாதநாளு முலகேழொடேழு மரசாளுமேன்மை முதல்வா
மேவாதவின்ப மவைமேவிமேவ நெடுவீடுகண்டு முடியாய்
ஆவாய்வருந்தி யழுவாய்கொலாரிவ் வதிரேகமாயை யறிவார்.

எழுவாயெவர்க்கு முதலாகியீறே டிடையாதியெங்கு முளையாய்
வழுவாதெவர்க்கும் வரமீயவல்லை யவரால்வரங்கள் பெறுவாய்
தொழுவாய்தொடர்ச்சி தொடராததன்மை யுருவாய்மறைந்து துயரால்
அழுவாயொருத்த னுளைபோலுமாரிவ் வதிரேகமாயை யறிவார்.

உன்னுைக்கவைத்த விருவர்க்குமொத்தி யொருவற்குமுண்மை யுரையாய்
முன்னைக்கணிற்றி வுலகொக்கவொத்தி முடிவொக்கிலொன்று முடியாய்
என்னைக்குமின்ன செயநேறவெண்ணி னிருளொக்குமொன்று விடியா
தன்னைப்பதேகொல் பிறிதேகொலாரிவ் வதிரேகமாயை யறிவார்.

வாணாளளித்தி முடியாமணிற்றி வருநாளிறத்தி மறையாய்
பேணுயுனக்கொர் பொருள்வேண்டுமென்று பெறுவானருத்தி பிடியாய்
ஊணுயுயிர்க்கு முயிராகிநிற்கு முணர்வாயபெண்ணி னுருவாய்
ஆணுகிமற்றை யலியாகியாரிவ் வதிரேகமாயை யறிவார்.

தானந்தமில்லை பலவென்னுமொன்று தனியென்னுமொன்று தவிரா
ஞானந்தொடர்ந்த சுடரென்னுமொன்று நயனந்தொடர்ந்த வொளியால்
மானந்துறந்த பதமென்னுமுன்னை மறைநாலுமந்த மறியா
ஆனந்தமென்னு மயலென்னுமாரிவ் வதிரேகமாயை யறிவார்.

வினைவர்க்கமுற்று முடனேயடைத்தி யவைசெய்தியொன்று விழையா
நினைவர்க்குநெஞ்ச முறுகாமமுற்றி யறியாமணிற்றி நிமிர்வாய்
முனைவர்க்குமொத்தி யமரர்க்குமொத்தி முழுமூடரென்றிம் முதலோர்
அனைவர்க்குமொத்தி தெரியாமையாரிவ் வதிரேகமாயை யறிவார்.

மீளாதவேத முடிவின்கணுன்னை வினைமேயமெய்யின் விளையும்
கேளார்கணின்று பிறவேறுபேசி கெடுவார்கள்சொன்ன தொடர்பாய்
மாளாதநீதி திகழாமைநின்க ணபிமானமில்லை வறியோர்
ஆளாயும்வாழ்தி யரசாதியாரிவ் வதிரேகமாயை யறிவார்.

எறிந்தாருமேறு படுவாருமின்ன பொருள்கண்டிரங்கு பவரும்
செறிந்தாயநுண்மை யெனலாயதன்மை தெரிகின்றதுன்ற னிடையே
பிறிந்தார்பிறிந்த பொருளோடுபோதி பிறியாதுநிற்றி பிறியா
தறிந்தாரறிந்த நெறியாதியாரிவ் வதிரேகமாயை யறிவார்.

பேராயிரங்க ளுடையாய்தொடர்ந்த பொருடோறுநின்று பிரியாய்
நீராய்பிறந்து திரிவாய்திறந்தோ றவைதேயுமென்று சிதையால்
கூராழிசங்க முடையாய்திரண்டோ ருருவாயகோட லுரிபோல்
ஆராயினேது மிலையாதியாரிவ் வதிரேகமாயை யறிவார்.

மறந்தாயுமொத்தி மறவாயுமொத்தி யயராதிமற்றெவ் வினையும்
துறந்தாயுமொத்தி துறவாயுமொத்தி யொருதன்மைசொல்ல வுலவாய்
பிறந்தாயசிந்தை பிறழாதவன்பர் பிறவாமைநல்கு பெரியோய்
அறந்தானிறுத்த லரிதாகவாரிவ் வதிரேகமாயை யறிவார்.

சொல்லென்றுநிற்றி பொருளாதிதூய மறைதேடி யேதுமறியாய்
வில்லொன்றெடுத்து மிகையின்றிநிற்றி விளிசங்கமங்கை யுடையார்
கொல்லென்றுநிற்றி கொலையுண்டுநிற்றி கொடியாயுன்மாயை யறியேன்
அல்லென்றுநிற்றி பகலாதியாரிவ் வதிரேகமாயை யறிவார்.

ஓ ஸ்ரீராமமூர்த்தி! சேனையர்கோனைமுதலாகவுடைய நித்தியசூரிகள் அநேகராலும் ஆரம்பத்திலே ஹரி: என்கிற திருநாமத்தைக்கொண்டு துதிக்கத்தக்க செய்கையையுடையோரே! தேவர்மானிடர் திரியக்குத்தாவரமாம் யாவுங்கெடாமல் பதினாலுலகங்களையும் செங்கோல்நடாத்துகின்ற மேன்பாட்டையுடையகாரணபூதரே! மானிடராக வரலரிதாகிய ஆனந்தமடைந்து பின்படையத்தக்க பேரின்பமான சுகத்தைக்காட்டுதற்கிடமான பதினாலுலகுக்குந் தலைமையான பரமபதமென்னுந் திருநாட்டையுடையவரே! இப்படிப்பட்ட தன்மையையுடையவராகிய தேவரீர் அதிக துக்கமுற்றவரைப்போல அழக்கடவீரோ? உம்முடைய மகாமாயையை அறியவல்லவர்கள் யாவர்?

ஓ ரகுநந்தனா! பிரம்மேந்திராதியர்களுக்கும் சிருஷ்டிகர்த்தாவும், இரக்ஷகக்கர்த்தாவும், சம்மாரகர்த்தாவுமாகி,எங்கும் அகண்டமாய் நிறைந்திருக்கின்றீர். அந்தப் பிரம்மேந்திராதியர்களுக்கும் புத்திமுத்திகளைக்கொடுக்கவல்ல தேவரீர் இந்த அவதார விசேஷத்தால் அவர்களிடத்தில் வரமாகிய பிரயோசனங்களைப்பெறுகிறீர். அவர்களை வணங்குகிறீர். சர்வகாரணத்துவ சர்வரக்ஷகத்துவ சம்பந்தங்களால் அவர்களுக்கும் தேவரீருக்குமுள்ள உடைமை உடையவனென்கிற சம்பந்தங்களைத் தோற்றுவியாமல், சாமானியமனிஷ்யரூபத்தைக்கொண்டு மறைத்துத் துக்கமுற்றவரா யழுகின்றீர். இப்படியு மொருவனைப் போலேயிருக்கின்ற உம்முடைய மகாமாயையை அறியவல்லவர்கள் யாவர்?

ஓ தாசரதி! தேவரீருக்கொப்பாகச் சிருஷ்டித்தருளின பிரமேந்திரர்களுடனே தேவரும் உபேந்திரரென்னுந் திருநாமங்கொண்டு அவர்களோடு சமமுற்றிருக்கின்றீர். அவ்வாறிருந்தும் அந்தப் பிரம்மேந்திரர்களுக்குத் தேவ

ரீருடையநிலைமை இப்படிப்பட்டதென்று சொல்லுகிறீரில்லை. பிரஹ்மாமுதல் பிபிலிகைமுடிவாகிய சமஸ்தசேதனு சேதனங்களையுங் கிரமமாய்நிறுத்தி, எல்லாவற்றிற்கும் நீரே காரணபூதரென்கிறதற் கடையாளமாக முந்தி எழுந்தருளியிருக்கின்றீர். பின்னும் பஞ்சபூத மயமான லோகத்தோடு அந்தர்யாமித்துவமாய்க் கலந்து, அந்தந்தப் பூதஸ்வரூபத்தை யொத்திருக்கின்றீர். அந்தந்தப் பூதங்களின் யதார்த்ததன்மையை யூகித்துப்பார்க்கு மிடத்தில் ஒவ்வொரு பூதங்களுமாகாமற் பிரத்தியேகமா யெழுந்தருளுவீர். அடியேனைப் போன்றவர்கள் தேவரீருடைய இவ்விதமான செய்கையை அறியவேண்டுமென்று நினைப்பார்களேயானுல், தங்களறிவெல்லாம் அந்தகாரமூடி ஒருநாளும் விடிவடையமாட்டார்கள். இந்த மாயையானது உமக்குச் சமானமானதோ? அல்லது உமக்குவேறுனதோ? இவ்விதமான உம்முடையமகாமாயையை அறியவல்லவர்கள் யாவர்?

ஓ சக்கரவர்த்தித் திருக்குமாரரே! உலோகத்திலுள்ள யாவர்களுக்கும் அவரவர்களுக்குத் தக்கபடியே வாழ்நாளைக் கொடுக்கின்றீர். அவர்களுக்கு அந்தரியாமியாய் நின்றிருக்கின்றீர். எல்லாக்காலங்களையுங் கடந்து நிற்கின்றீர். உமக்கின்னபொருள் வேண்டுமென்று ஒரு பொருளையும் இச்சிக்கமாட்டீர். பஞ்சபூத பஞ்சிகரணமான தேகமெல்லாம் தேவரீரேபோய் அந்தத்தேகத்துக்குள் ளிருக்கின்ற உயிராகி! அவ்வுயிர்க்கு அந்தராத்துமாவாகி நிலைபெற்ற உணர்வுமாகின்றீர். பெண்ணுகின்றீர். ஆணுகின்றீர். இவ்விரண்டுமல்லாத அலியாகின்றீர். இவ்விதமாகிய உமதுமகாமாயையை அறியவல்லவர்கள் யாவர்?

ஓ கௌசலைதனயரே! நான்குவேதங்களும் தேவரீரை எண்ணிலடங்காத பலவாகிய ஸ்வரூபமென்று சொல்லுகின்றன. ஏகமாகிய ஸ்வரூப மென்று ஒரு நூல்சொல்லுகின்றது. நீங்காத ஜ்ஞானப்பேரொளியாகிய ஸ்வரூபமென்று ஒருநூல் சொல்லுகின்றது. கண்ணுக்குப் புலப்படுவதான வெளியினளவைக் கடந்த பரமபதஸ்வரூபரான தேவரீரை முடிவில்லாத ஆநந்தஸ்வரூபரென்றுஞ் சொல்லுகின்றது. அவ்வானந்தத்தை விளைப்பதான வஸ்துவென்றுஞ் சொல்லுகின்றது. இவ்விதமாகிய உம்முடைய மகாமாயையை அறியவல்லவர்கள் யாவர்?

ஓ சீதாபதி! செய்யத்தக்க தொழிலின் கூட்டங்களையெல்லாம்செய்ய சேதநர்களுக்குக் கரசரணுதி யவயவங்களைச் சிருஷ்டித்தபோதே அவற்றோடாதியிலேயேயுண்டாக்கினீர்:ஒன்றிலும் விருப்பமின்றி அத்தொழில்களையெல்லாம் அந்தராத்துமாவாயிருந்து செய்கின்றீர். நினைவால் பிராப்தியாகின்ற மனதிலுள்ள ஆசைகளையெல்லா முடிப்பித்து, அந்தமனதுக் ககோசரமாகியேயிருக்கின்றீர். நாரதாதிகளாகிய மகாரிஷிகளுடனிருந்தே அவர்களால் தியானித்தறியத்தக்கவராகின்றீர். அவ்வாறேஉபேந்திராதியராய்த் தேவர்களுடனிருந்தே அவர்களுடைய இடையூறுகளிற் புறம்பேயிருக்கிற வஸ்துவைப்போலத்

தியானித்தடையும்படி யெழுந்தருளி யிருக்கின்றீர். இந்த மகாரிஷிகளையும் தேவர்களையும் பெருமூடர்களாகச்செய்து அவர்களோடொருவராய்த் தேவரீருந் தெரியாதவரைப்போலவே யெழுந்தருளி யிருக்கின்றீர். உம்முடைய மகாமாயையை யாரறிவார்கள்?

ஓ கிருபாநிதி! மாறுபடாதவேதமான துதமதந்தத்திலேநாராயணனுகிய உம்மை ஞானனந்தமயஸ்வரூபமாக தமதறிவின்கண்ணே எண்ணும்.இவற்றைக் கேட்டறியாமலும், கண்டறியாமலும், அறிவுகெடுமேவர்கள் அவ்வழியாதவே தம் அவாங்மனுேகோசர மென்றவற்றைத் தானேசொல்லிய மறுமொழியினுலே அழியாதவேதங்களது சொல்லுகையைத்தப்பாமல் உன்னுடைய கடாக்ஷவீக்ஷணியமில்லாமல் சூனியவாதிகளானுர்கள். தேவர்களுக்கு நேர்ந்த பகைவர்களாகிய ராக்ஷசர்களைச் சம்ஹரிக்க புருஷாகாரியுமானுய். அரசனுகவும் வந்திருக்கின்றுய். ஞானசூரியர்களுக்குக் கையாளாயுமிருக்கின்றீர். உம்முடைய மகாமாயையை அறியவல்லவர் யாரிருக்கின்றுர்கள்.

ஓ குணநிதி! உயுத்தத்தில் ஆயுதங்களைப் பிரயோகிக்கின்றவர்களும், அந்த ஆயுதங்களாற் காயம்படுகின்றவர்களும், இவ்விரண்டுகாரியங்களையும் பார்த்து இரக்கப்படுகின்றவர்களும், தேவரீரேயா யிருக்கின்றீர். அஃதுண்மையானதென்கின்ற நிலைமை தேவரீருடைய சர்வகாரணத்துவ சர்வரக்ஷகத்துவங்களால் பரிஷ்காரமாய் வெளியாகிறது. உம்மைவிட்டு நீங்கினவர்களால் நீக்கப்பட்ட ஜ்ஞானப்பொருளுடனே தேவரீரும் அவர்களைவிட்டு நீங்கிநிற்கின்றீர். அப்படி நீங்கியிருந்தும் அவ்வஞ்ஞானிகளுடனே அவர்களைப் பிரியாமல் அவர்கள் கடைத்தேறும்வழியைப் பார்த்துக்கொண்டு அவர்களையறியாமல் அவர்களுடனே அந்தர்யாமித்துவத்தால்வசிக்கின்றீர். அந்நிய பிரயோஜனரும் சரமோபாய நிஷ்டரும், பிரபத்திமார்க்கரும் தேவரீராகவே நிற்கின்றீர். ஆதலால் தேவரீருடைய இவ்வித நிலைமையாகிய ஆச்சரிய மகாமாயையை யாவரறிவார்கள்?

ஓ தயாநிதி! ஆயிரந் திருநாமங்களை யுடைத்தாயிருக்கின்றீர். காரணகாரியமாய்ச் சம்பந்தித்திருக்கின்ற சராசரங்களிலெல்லா நிலைகொண்டு நித்தியமாயிருக்கின்றீர். இவற்றிற்குவேறுயும் அவதரித்திருக்கின்றீர். இந்தரஹஸ்யங்கள் ஒருவருக்குந் தோற்றுவிக்கின்றீரில்லை. பரமபாகவதர்களால் வெளியிட்ட உமது ரஹஸ்ய நிலைமைகளை அவர்கள் வாக்கியச்சிதைவு நேரிடவொட்டாமல் அவற்றிலடங்கி நிற்கின்றீர். உம்முடைய ஸ்வரூபத்தைத் தியானிப்பவர்களுக்குச் சங்குசக்கரதாரியாய்ச் சேவைசாதிக்கின்றீர். உலோகமே யுமக்குத் திருமேனியென்று உரிமைபாவிக்கும்படி விராட்டுரூபமா யெழுந்தருளி யிருக்கின்றீர். அத னுண்மையை ஆராய்ந்தால் அதற்கவயவமாகிய சராசரங்களெல்லாமும் அவயவியாகிய தேவரீர் அல்லவா? இவையன்றி அப்

பிரமேய பரவாசுதேவனாகவும் எழுந்தருளியிருக்கின்றீர். தேவரீருடைய மகா கபடநாடக மாயையை அறியவல்லவர் யாவர்?

ஓ ஸ்வாமி! தேவரீருடைய ஸ்வரூபநிலையையெல்லா மறந்தவரைப் போலவும் காணப்படுகின்றீர். தேவரீருடைய முயர்ச்சிகளிலெல்லாம் உம்முடைய ஸ்வரூபத்தை மறவாதவரைப்போலவே யெழுந்தருள்கின்றீர். அம்முயற்சியிலும் ஒவ்வொருகாலங்களில் கொஞ்ச மறந்தவரைப் போலவுங் காணப்படுகின்றீர். லோகவியாபாரங்களை மறந்து நாட்டைவிட்டுக் காட்டையடைந்து துறந்தவரைப்போலவுங் காணப்படுகின்றீர். பந்துசம்பந்த துக்கத்தைக் காட்டி அந்தவியாபாரத்தை நீங்காதவரைப்போலவும் காணப்படுகின்றீர். தேவரீர் இன்னநிலைமையில் நிற்கின்றவரென்று தீர்மானிப்பதற்கு அகப்படமாட்டீர். கரசரணாதி யவயவங்களைப் பெற்றுப்பிறந்து தேவர்திருவடிகளில் பற்றுடைய மனமானது தடுமாற்றமடையாத உமதடியார்களைக் கருமவுலகத்திற் பிறவாமலிருக்கக் கிருபைசெய்கின்ற ஓபரமாத்மரே! தேவரீருடைய அரியதர்ம்மங்களை நிலைபெறச் செய்வதாகிய உமது மகா மாயாலீலையை ஆரறியவல்லவர்கள்?

ஓ கிருபாநிதியே! சகல சப்தஸ்வரூபமாக எழுந்தருளி யிருக்கின்றீர். அந்தச் சப்தார்த்தமுந் தேவரீரேயா யிருக்கின்றீர். தேவரீருடைய குணப்பிரகாச ஸ்வதப்பிரமாணமான வேதபுருஷனால் ஒருகுணமுங் கடைகாண நிச்சயித் தறியப்படாமல் நிற்கின்றீர். அப்படிப்பட்ட தேவரீர் திருக்கரத்தில் ஒருவில்லைப் பிடித்துக்கொண்டு யாதொரு வருத்தமும் சத்துருக்களுக்குத் தோற்றவொட்டாமல் எழுந்தருளி யிருக்கின்றீர். பகைவர்களை யெல்லாம் யுத்தத்திற்கு அழைக்கின்ற பாஞ்சசன்னியாழ்வானைத் திருக்கரத்தி லுடைத்தா யிருக்கின்றீர். இராக்ஷசர்களையெல்லாம் கொல்லத் திருவுளங்கொண் டிருக்கின்றீர். அவர்களுக் கந்தரியாமியாய் அவர்களுடனேயு மிருக்கின்றீர். ஓ பாபப் பகைவரே! உமது மாயையை அடியேன் இவ்விதமென்று அறியமாட்டேன். தேவரீ ரிராத்திரியுமா யிருக்கின்றீர். பகலுமா யிருக்கின்றீர். இந்த அபாரமான அற்புதத்தை யறியத்தக்கவர்கள் யாவர்? என்று பலவாறாக ஸ்தோத்திரம்பண்ணி மனங்கரைந்து, அவ்விராத்திரி கெடும்படிப் பொன்மயமான மேருமலையைப்போல் ஒளிவீசிக்கொண்டு எதிரே நின்றார்.

இப்படிநிற்கின்ற பெரிய திருவடியாகிய கருடபகவானை நிலைபெற்ற புகழையுடையவராகிய சக்கரவர்த்தித் திருக்குமாரர் கடாக்ஷித்து, இவர்யார்? தேவபுருஷராயிருக்கின்றாரென்று நினைத்துக்கொண் டிருக்கும்போது, இந்தச்சப்தலோகங்களையு மூடிமறைக்கும்படியான சிறகையுடையவராகிய கருடபகவான் உயரப்பறந்து வட்டமிட்டு ஸ்வாமியை வலமாகச் சுற்றிவந்து நின்று, பலகோடியாயிர காதவரையிலும் தமது சிறகின்காற்றை வீசினார்.

இலக்ஷுமணராதியரைப் பிணிப்புண்டிருந்த நாகபாசம் கழலுதல்.

கவி.

வாசங்கலந்த மரைநாளநூலின் வகையென்பதென்னை மழையின்
ருசங்கைகொண்ட கொடைமீளியண்ணல் சரராமன்வெண்ணெ யனுகும்
தேசங்கலந்த மறைவாணர்செஞ்சொ லறிவாணரென்றிம் முதலோர்
பாசங்கலந்த பசிபோலகன்ற பதகன்றுரந்த வுரகம்.

அம்மாத்திரத்திலே அந்தச் சிறகிலிருந்து புறப்பட்ட காற்றானது தன்னைச் சகிக்கிறதற்குச் சக்தியில்லாத நிலத்தினிடத்தில் யாவர்க்கு முணர்வுண்டாகும்படி குளிர்ந்து வீசிக்கொண்டு கிருபையுடனே போக, எல்லாருடலையுங் கட்டியிறுக்கியிருந்த நாகபாசமானது சின்னபின்னப்பட்டுச் சிதறிப்போயது. ஓர் மதத்தயானையைக் கட்டிய பரிமளத்தோடு கூடிப்பிறந்த தாமரையினது தண்டிலுண்டாகிய மெல்லிய விழையைப் போல் அந்நாகபாச மறுந்ததென்று சொல்வதுதானு ஓரழகு; பிரதியுபகாரத்தை நினையாது மழையைப் பொழிகின்ற மேகமெனமயங்குதலைப் பார்க்கின்றவர்களுக்குச் செய்கின்ற கொடுத்தற் றொழிலிலே வலம்பெற்ற தலைவராகிய, சரராமமுதலியார் வாழும் திருவெண்ணெய் நல்லூரையடைந்த ஞானமாகியவழகையுடைய வடமொழிப்புலவரும்,தென்மொழிப்புலவருமாகிய இவர்கள் முதலாயினுரை வினைப்பந்தத்தால் தொடர்ந்தவறுமையில் மேலிட்டபசியானது எப்படி நீங்குமோ அதைப்போல் கருடபகவானது சிறகுகளினுனசைமிக்க காற்றானதுதாக்கினவுடன் பாதகனுகிய இந்திரசித்து பிரயோகித்துப் பிணித்த நாகபாசம் கட்டவிழ்ந்தது. அவ்வவர்கள் தேகத்திலுள்ள புண்களும், வடுக்களும், ஒருவன் பஞ்சேந்திரியங்களையும் அவித்து நல்ல ஸ்வரூப ஜ்ஞானத்துடனிருப்பதுமன்றிச் சாஸ்திர தர்மத்தின்படியே நடந்துவருகின்ற சிரேஷ்டனும் தளராமுயற்சியுள்ளவனுமான ஒருவனை, நடுவில் அபுத்திபூர்வமாயடைந்த குறைவானது எப்படியவனைப் பற்றுமல் நசித்துப்போய்விடுமோ? அதுபோலக் கண்ணுக்குத் தோற்றுமல் மறைந்துபோயின.

அக்கால் தருமமார்க்கத்தை ஒருவிதத்திலுந் தழுவாத தன்மையர்களாயிருக்கின்றபடியால் இடியையொத்த கொடுஞ்செய்கையுடைய துஷ்டர்களான இராக்ஷசர்கள் மாத்திரம் பிழைக்கவில்லை. ஸ்ரீராமலட்சுமணர்களாகிய பெரியோர்களுடைய கைங்கரியத்தில் நிலைபெற்றிருக்கின்ற வானரசேனு சமுத்திரமெல்லாம் கருடபகவானுடைய இறகுகளினின்றுமெழுந்தவாயு பரிசித்தபடியினுலே,மூலதாமரைபுஷ்பத்தி லெழுந்தருளியிருக்கின்ற பிரம்மதேவர் மறுபடி சிருஷ்டித்ததைப்போல ஸ்ரீயப்பதியின் கிருபையால் மரணமூர்ச்சைதெளிந்தும்,உயிர்பெற்றும், எழுந்திருந்துநிலைத்து நின்றுர்கள். அக்கால் இளையபெருமாள்எழுந்து, ஸ்ரீராமமூர்த்தியினுடைய திருவடிகளில்வந்து வணங்கி நின்றுர். அப்படி நின்ற லட்சுமணரை அதிககிருபையுடனே ஸ்வாமி தமது திருவாபரணங்களுடன்கூடிய திருமார்பி லிறுகத்தழுவி, நமக்கு அதிக வருத்தத்தை விளைவித்த விதியானது மறுபடியுங் கிருபைசெய்ததென்று சந்தோஷித்தார்.

பின்பு தமது பிராணபந்துக்களுக்குச் சமானமாகிய சுக்கிரீவமகாராஜர்— ஆஞ்சநேயர் — சாம்பவர் — இவாள்முதலான துணைவர்களு மூர்ச்சைதெளிந்து, ஸ்வாமி திருவடிகளில் தண்டன் சமர்ப்பித்தார்கள். அவர்களை ஸ்ரீ ராமர் பிராணபூர்வமாகக் கடாக்ஷித்துத் தமது திருக்கையால் அணைத்துக் கொண்டு, மூன்றும்பிறைச் சந்திரனைப்போன்ற நகங்களையுடையவரான கருடபகவானுக்கு முன்பாகவந்து, அவதாரவடிவத்திற் கேற்றபடி மரியாதையுடன் அவரைப்பார்த்து, பிரமேந்திராதி சமஸ்ததேவர்களுடைய அறிவுக்கு மெட்டாத அந்தஸ்வாமியானவர் சொல்லுகின்றார். ஐயா! நீர்யார்? நாங்கள் பூர்வத்திற்செய்த தவப்பயனால்வந்து எங்கள் பிராணனையும் வாழ்வையுங் கொடுத்தீர். எங்களால் நீரொருகைம்மாறும் பெற்றீரில்லை. இப்படிப்பட்ட உபகாரியாகிய உமக்கு நாங்களென்ன உபகாரஞ் செய்யப்போகின்றோம்? புத்திமான்களாலோசிக்குமிடத்தில் நீர்செய்த உபகாரத்திற் கீடான பொருள் வேறேயொன்றுண்டோ? நீர் இப்படிப்பட்ட இருட் காலத்தில் கிருபைகொண்டு வந்து தயவுசெய்யத்தக்க மஹாதைஸ்வரிய முள்ளவரானால், உமக்கில்லாத வஸ்துவு முண்டென்று மனத்தாலேனு நினைக்கலாகுமோ?

ஐயா! எங்களை நீரெப்போதும் பார்த்தவரும் அல்லர். இன்னாரென்று சொல்லவுங் கேட்டிருக்கவுமாட்டேர். நீர் எங்களால் ஒரு நன்மையும் பெற்றவருமல்லர். நீரெப்போதும் பிறர்க்கருளுந் தன்மையுள்ளவராக இருக்கின்றீரே யல்லாமல், ஒருவரிடத்திலொன்று பெறும்படியானகுறை யுமக்கில்லை. உண்டில்லை யென்னும்படியாயிருந்த எங்களுயிரைக்கொடுத்த ஓ மஹாநுபாவரே! எங்களுடனே உமக்கெப்போதும் ஒருசிநேகமுமில்லையே: அப்படிப்பட்ட உமக்கு நாங்கள் செய்யத்தகுந்த காரிய மென்ன இருக்கின்றது? அதனை நீரேயாலோசித்துச் சொல்லுமென்று கூறினார்.

கருடபகவான் மீண்டு வைகுந்த மடைதல்.

கவி.

பறவையின்குலங்கள்காக்கும் பாவகன்பழையநின்னோ
டுறவுளதன்மையெல்லா முணர்த்துவெனரக்கனோடம்
மறவினைமுடித்தபின்னர் வருவெனின்னுழையன்மாயப்
பிறவியின்பகைஞநல்கு விடையெனப்பெயர்ந்துபோனான்.

இப்படி ஸ்ரீராமபிரான் பிரார்த்தித்தவைகளைக்கேட்ட பக்ஷிராஜனாகிய ஸ்ரீகருடபகவான் ஸ்ரீராமரைப் பார்த்து, ஸ்வாமி! தேவரீருக்கும் அடியேனுக்கு நித்தியமான பழையவுற விருக்கின்றது. தேவரீரிந்த ராக்ஷசநிரசனஞ்செய்து முடித்தபிறகு அதையடியேன்வந்து விண்ணப்பம்பண்ணிக் கொள்ளுகின்றேன். ஓ வஞ்சமாயப்பிறவியை அறுக்கின்ற புருஷோத்தமரே! அடியேனுக்கு விடைகொடுத் தருளவேண்டு மென்று அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார்.

இப்படி கருடபகவான் போய்விட்டபிறகு கோதண்டதீக்ஷா குருவாகிய ஸ்ரீராமமூர்த்தியானவர், இவர் நம்முடைய பிராணனை யுபகரித்துத் தமக்கு ஒருபிரயோசனமும் விரும்பாமற் போய்விட்டாரே: கிருபாவான்களுடைய செய்கை இப்படித்தானிருக்கும். பெருந்தன்மையாளர்களுடைய உபகாரமெல்லாம் பிரதிபயனை விரும்பமாட்டாது. ஏனென்றால், மேகமானது மழைபெய்து உபகரிக்கிறதைப் பெற்றும், உலோகமானது அதற்குப் பிரதியுபகாரஞ்செய்கிற துண்டாயிருக்கின்றதோ? என்று உபகாரலக்ஷணத்தைப் பற்றி யாவர்க்கு முணர்த்தினர்.

ஆஞ்சனேயராதி வானரவீரர்கள் பாசறையில் சந்தோஷ கர்ச்சனை யிடுதல்.

கவி.

இறந்தனனிளவலென்னு விறைவியுமிடுக்கணெய்தும்
மறந்தனருறங்குகின்ற வஞ்சருமறுகிமீளப்
பிறந்தனரென்றுகொண்டோர் பெரும்பயம்பிடிப்பரன்றே
அறந்தருசிந்தையன்ப வார்த்துமென்றனுமன்சொன்னான்.

அழகிதென்றண்ணல்கூற வார்த்தனசடல்களஞ்சிக்
குழைவுறவனந்தனுச்சிக் குன்றநின்றண்டகோளம்
எழுமிசையுலகமென்மே லேங்கிடவிரிந்துசிந்தி
மழைவிழமலைகள்கீற மாதிரம்பிளக்கமாதோ.

அப்போதாஞ்சநேயர் ஸ்வாமி திருவடிகளில் தெண்டன் சமர்ப்பித்து, ஸ்வாமி! இந்தத் துஷ்டராக்ஷசர்கள் இலங்கையிற்போய் இளையபெருமாள் இறந்து போய்விட்டாரென்று சொல்வார்களேயானால், அந்த வார்த்தையைச் சர்வலோகமாதாவான சீதாபிராட்டியார்கேட்டுத் துக்கப்படுவார். ஆகையால் நாங்கள் யாதொருதுக்கமும் அடையவில்லையென்பதற் கடையாளமாக எல்லாருஞ்சேர்ந்து சந்தோஷகர்ச்சனை செய்கிறோம். இதைக்கேட்டால் சந்தோஷத்தினாலே மெய்மறந்து நித்திரைசெய்கின்ற இராக்ஷசவஞ்சகர்களும், இறந்தவானரர்களெல்லாம் பிழைத்துக்கொண்டார்களென்று திடுக்கிட்டுப் பெரும்பயம் அடைவார்களென்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டார். அதைக்கேட்ட சக்கரவர்த்தித் திருக்குமாரர் சந்தோஷித்து, அப்பா அனுமானே! நல்லது: அப்படியே செய்யுங்கள். என்று விடைகொடுத்தார். அப்போது சுக்கிரீவமகாராஜா - சாம்பவர் — ஆஞ்சனேயர் — அங்கதன் - இவர் முதலாகிய வானரவீரர்களெல்லாம் சமுத்திரமனைத்து நடுங்கித் தத்தளிக்கவும், ஆதிசேஷனுடைய முடியும் கூச்சமடையவும், அண்டகோளமானது வெடிபடவும், உலகத்தவர்களெல்லாம் அதிக ஏக்கமடையவும், மேகங்களெல்லாம் கருவழிந்து சிதறுண்டு பூமியில்விழவும், மலைகள் கிழியவும், அஷ்டதிக்குகளும் கிழிபடவும், பெருங்கோஷமாகச் சப்தித்தார்கள்.

அப்போது சாமுத்திரிகாசாஸ்திரத்திற் சொல்லப்பட்ட எல்லாலக்ஷணங்களிலுங் குறைவற்ற திருமேனியையுடைய சீதாபிராட்டியாரிடத்தில் தனது மனஞ்செல்லவும், கண்ணுறக்கமில்லாமல் மோகதாபத்தால் நெஞ்சுவேகவும், சிவனுடைய சூலாயுதமும் தைக்கமாட்டாத மார்பை மன்மதபாணங்கள் சின்னபின்னமாய்க் கிழிக்கவும் பெருமூச்சுவிட்டுக்கொண்டு படுக்கையிற் கிடந்த இராவணன் அந்தச்சப்தத்தைக் கேட்டான். அக்கால பிதாவின் வாக்கியத்தைச் சிரசாகவகித்துக்கொண்டு தவவுருவம்பூண்டவராயும், தர்ம்ம மூர்த்தியாயும், பாபங்களையெல்லாம் போக்கி ரக்ஷிக்கின்ற திருநாமமாகிய ஸ்ரீராமநாமாங்கிதராயு மிருக்கின்ற சக்கரவர்த்தித் திருக்குமாரரும், அவரைச் சதாதியானம் பண்ணிக்கொண் டிருக்கின்ற சீதாபிராட்டியாரும், அச்சீதாபிராட்டியாரை நினைத்து நினைத்துப் புத்திகெட்ட பேதையாயிருக்கின்ற இராவணனுமல்லாமல்; அந்தராத்திரியில் இலங்காபட்டணத்திலுள்ளவர்களில் நித்திரையில்லாதவர்க ளொருவருமில்லை.

இராவணன் வானரவீரர்களினது சந்தோஷகர்ஜ்ஜனையைக் கேட்டு ஆச்சரியப்பட்டு இந்திரசித்துவின் மாளிகையையடைதல்.

கவி.

சிங்கவேறசனியேறு கேட்டலுஞ்சீற்றச்சேனை
பொங்கியதென்னமன்னன் பொருக்கெனவெழுந்துபோரில்
மங்கினர்பகைஞரென்ற வார்த்தையேவலியதென்று
அங்கையோடங்கைகொட்டி யலங்கற்றோள்குலுங்கநக்கான்.

அந்தச்சமயத்தி லிந்தவோசையைக்கேட்ட ராவணன் ஆண்சிம்ஹமானது இடியோசையைக்கேட்ட காலையில் எவ்வண்ணம் தனக்குள் அபரிமிதமாகக் கோபங்கொள்ளுமோ அதைப்போல் யாவராலேயும் அளவிடுதற்கரிய கோபத்தைக்கொண்டவனாகிப் படுக்கையைவிட் டெழுந்திருந்து, உயுத்தகளத்தில் எல்லா மிறந்துபோனார்களென்று சொன்னவார்த்தை வெகு வுறுதியாயிருப்பது போலவே யிருக்கின்றதென்று கையோடு கையறைந்து, கற்பகப் பூமாலையணிந்த இருபது தோள்களும் குலுங்கும்படியாய்ச் சிரித்து, ஸ்ரீராமனுடைய வில்லினோசை யுகாந்தகால விடியைப்போல விடித்து இரைகின்றது. அண்டகோளம் வெடிபடும்படி இலக்ஷுமணனுடைய வில்லின் குணத்தொனி அதிர்கின்றது. அனுமானுடைய வீராஷ்டகாசமானது என்னிருபது செவியும்கிழிய அடிக்கின்றது. சுக்கிரீவனுடைய சிங்கநாதம் இந்த லோகங்களையெல்லா மூடிவிடுகின்றது.

இவ்வளவுதானோவென்றால்? அங்கதன் அதோசப்திக்கின்றான். ஆகாசத்திலுள்ள தேவர்களெல்லாம் ஆர்ப்பரிக்கின்றார்கள். அக்கினியாம்சனான நீலன் முதலான மற்ற வீரர்களெல்லாம் தனித்தனியே சீறிக்கொண்டு கர்ச்சிக்கின்ற ஓசையானது அண்டத்துக் கப்புறம்போய் முட்டுமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆகையால், எல்லாரும் தர்மதேவதையி னுதவியால் நாகபாசக் கட்டுகளினின்றும் விடுபட்டார்களென்று சொல்லி யெழுந்தனன்.

கவி.

என்பதுசொல்லிப்பன்னிச் சேக்கைநின்றிழிந்துவேந்தன்
ஒன்பதுகோடிவாட்கை யரக்கர்வந்துழையர்சுற்றப்
பொன்பொதிவிளக்கங்கோடி பூங்குழைமகளிரேந்தத்
தன்பெருங்கோயினின்று மகன்றனிக்கோயில்சார்ந்தான்.

இவ்வண்ணம் சொல்லிக்கொண்டு தான் சயனித்திருந்த அம்சதூளிகாமஞ்சத்தினின்று மெழுந்து கீழிறங்கி ஒன்பதுகோடி ராக்ஷசர்கள் தன்னைச் சூழ்ந்துவரும்படியாகவும், கோடி ஸ்திரீசனங்கள் சுவர்னவிளக்குகள் பிடித்துக்கொண்டு வரும்படியாகவும், இராவணன் தன் பெரிய அரண்மனையைவிட்டுப் புறப்பட்டு இந்திரஜித்துவின் அரண்மனையைச் சேர்ந்தான்.

அப்போது தங்கள் புடவைகளை வாரிச்சுருட்டிக் கொண்டவர்களும், அவிழ்ந்துவிழ்ந்த கூந்தலையுடையவர்களும், மேல்மூச்சுவாங்கி விடுகின்றவர்களும், ஆகாசத்தைமுட்டிய ஸ்தனங்களையுடையவர்களும், உறக்கம் நீங்காத கண்ணையுடையவர்களும், தள்ளாடின நடையை யுடையவர்களும், கொடிபோல வளைந்த இடையையுடையவர்களுமான ராக்ஷசஸ்திரீகள் தூக்கத்தாற் சோர்ந்து வீழ்ந்துகொண்டு; இராவணனுக்குத் துற்சகுனமாக எதிர்கொண்டு வந்தார்கள். குடித்தமதுபானமும், உறக்கமும், தங்கள் நாயகன்மார்வந்து புணர்வதாகக்கண்ட கனவும், பண்விளைந்த கானப்பாட்டுகளும், தம்மைத் தள்ளத் தடுமாறி; மதர்த்துக் கள்ளங்களைக்கற்று மீனைப்போலப் பிறழுகின்ற பெரியகண்களை மூடுவதும் திறப்பதுமாகத் தேவஸ்திரீகளெல்லாம் கால்களிற் சதங்கை சப்திக்கும்படியாக இராவணன் முகத்தில் விழிக்காமல் மறைந்துபோய்விட்டார்கள்.

மேகத்திற்கு நீலச்சாயங்கூட்டி நல்ல பரிமளப்புகையையூட்டி அங்கங்கே சுருட்டி மெல்லிய புஷ்பங்களை யணிந்து இடையினுக் கிடையூறுகப் பிர்ம்மதேவர்சிருஷ்டித்த பெருங்கூந்தலையும், பெருங்கண்களையும், செவந்தவாயையும், உடையவர்களான அநேகவாபரணங்களைத்தரித்த மானிட ஸ்திரீகளெல்லாம் நித்திரை மயக்கத்தால் அந்தந்தவிடங்களிற் பதுங்கிவிட்டார்கள். தேனையும், கரும்பையும், வெல்லப்பாகையும், அமுதையுமொத்த சொல்லைத்தேடி அமைத்து; மானையும், கயல்மச்சியங்களையும், வாளாயுதத்தையும், நீலோற்பலபுஷ்பங்களையு மொத்திருக்கின்ற கண்களைச் சம்பாதித்துவைத்து; உயர்ந்த நடக்கைகளையும் அதற்கொப்பான நல்லமார்க்கங்களையும் கொடுக்கத்தக்க சிறந்தநகரத்தை ஆராய்ந்து, அதிற் பிரமதேவராற் சிருஷ்டித்த ஸ்திரீகள் அநேகம்பேர்கள் இராவணனுடனே போனார்கள்.

அப்போது வானரவீரர்கள் சப்திக்கின்றஓசையானது செவிகளில் நுழைந்தமாத்திரத்தில் தன்னிடத்திலகப்பட்ட ஜீவன்களைத் தப்பவிடாத ஆன்

முதலைக்கொப்பான பலமுள்ள இராக்ஷசர்களெல்லாம், சிம்ஹகர்ச்சனையைக் கேட்ட யானைகளைப்போல இருந்தவிடத்திலேயே உழைத்துக் கொண்டார்கள். இராக்ஷச ஸ்திரீகளெல்லாரும் இடிமுழக்கங்கேட்ட புற்றிலுள்ள பாம்பைப்போலக் கர்ப்பங்கலங்கி நடுங்கிவிட்டார்கள். இப்பால் இந்திரஜித்துவின் மனைக்குப்போன இராவணனானவன் அவன் படுத்திருக்கின்ற ஸ்வர்ன உப்பரிகையிற் சரேலென்று சென்று, சிம்ஹத்தினால் சங்கடப்பட்டுச் சோர்ந்துவீழ்ந்துகிடக்கின்ற கருக்கொண்டமேகம்போன்ற யானைக்கொப்பாக இலக்ஷுமணருடைய பாணவருஷங்களால் தேகமெல்லாம் சல்லடைக்கண்களாய்த் தொளைக்கப்பட்டுள்ள புண்களி லிரத்தந் தாரைதாரையாக வழிந்துகொண்டு கிடக்கின்ற இந்திரஜித்துவைப் பார்த்தான்.

இராவணனைக்கண்ட இந்திரசித்து எழுந்திருக்க முடியாமல் இலக்ஷுமணனால் தனக்குநேர்ந்த மெலிவைக்கூறல்.

கவி.

எழுந்தடிவணங்கலாற்றா னிருகையுமரிதினேற்றித்
தொழுந்தொழிலானைநோக்கித் துணுக்குற்றமனத்தன்றேன்றல்
அழுங்கினைவந்ததென்னை யடுத்ததென்றடுத்துச்சொன்னான்
புழுங்கியபுண்ணினானு மினையனபுகறலுற்றான்.

இப்படி ராவணன்வந்து பார்த்தபோது இந்திரசித்து எழுந்திருந்து, தகப்பன்காலில்வீழ்ந்து கும்பிடமாட்டாமற் படுத்தபடுக்கையிலேயே இரண்டு கைகளையும் வருத்தப்பட்டுத்தூக்கிக் கும்பிட்டான். அதைக்கண்ட ராவணன் மனங்கலங்கி, அப்பாகுமாரனே! நீவெகு வருத்தப்பட்டுக்கொண் டிருக்கின்றாயே! உனக்குச்சம்பவித்த சங்கடமென்ன? உன்னையார் என்னசெய்தார்களென்று கேட்டான். அப்போது சீப்பற்றிக் குத்தலெடுத்துக்கொண்டிருந்த புண்களையுடைய இந்திரஜித்து இராவணனைப்பார்த்து, ஓ வெற்றிமாலையைத்தரித்த மார்பினையுடைய ஐயா! அந்தலக்ஷுமணனுடைய பாணங்களில் அநேகபாணங்கள் என்முதுகைத் தடாரித்துப்போயின. அநேகபாணங்கள் என் தேகத்திலுள்ள இரத்தத்தையெல்லாம் குடித்துவிட்டன. அனேகபாணங்கள் என்மார்பிலணிந்திருந்த கவசத்தையும் துண்டுதுண்டாய்ச் சிதறவடித்து விட்டன. அநேகபாணங்கள் என்தேகத்தைச் சக்கைச்சக்கையாய்ப் பேர்த்தெறிந்து விட்டன. சிலபாணங்கள் என்கண்களிலும் வந்து நுழைந்துவிட்டன. உடனே என்மாயையால் தப்பித்துக்கொண்டு ஓடிவந்துவிட்டேன்.

மேலும் – நான் சொர்க்கலோகாதிபதியான இந்திரன் - விருஷபவாகனரூடரான உருத்திரமூர்த்தி – கருடவாகனரூடரான ஸ்ரீமகாவிஷ்ணுவாகியவிவர்களோடு சூரியன் முதலான தேவர்களெல்லாம்கூடி என்னோடெதிர்த்து யுத்தஞ்செய்த போதும், இவ்வளவுதுன்பப்படவில்லை. இப்படியொருநாளும் இளைத்துவந்து உம்மோடு நான் குறைசொன்னதுமில்லை. ஓ மந்தரகிரிக்குச்சமமான தோள்களையுடைய ஐயா! அந்தமனிதனுடைய வல்லமைக்கு ஒருவரம்பு

சொல்ல என்னாலாகாது. நான்சொன்ன இவ்வளவுவல்லமையும் அந்த லக்ஷுமணனுடைய வல்லமையாக்கும். வெற்றிமாலையைத்தரித்த மார்பையுடைய ஐயா! இராமனுடைய பராக்கிரமத்தை நினைப்போமேயானால் நம்முடைய பிராணன்களோடு மாத்திர முடிந்துபோகாது. சம்பவித்த காரியங்களைப்பார்த் துணரவேண்டுமேயல்லாமல், நமக்குவெற்றியே உண்டாகுமென்று நினைப்பதுதகாது. என்றுசொல்லி இப்போது நிறைவேறியிருக்கிற தன்மையையுணராதவனான இந்திரஜித்துப் பின்னுஞ் சொல்லுகின்றான்.

ஐயா! இயானிப்போ தந்த வெற்றியாளனான இலக்ஷுமணனையும் குரங்குவீரர்களையுங்கொன்றது நாகபாசத்தினாலும், என்மாயா வல்லமையினாலுமேயன்றி, என்சொந்த பலத்தினாலே யல்லவென்று நினையும். இன்னும் ஸ்ரீராமன்மாத்திரம் தப்பிநிற்கின்றான். ஆதலால் மேல்நடக்கிறபடி நடக்கட்டும். என்று சொல்லக்கேட்ட இராவணன் இந்திரஜித்துவைப் பார்த்து, அப்பா வீரகண்டாமணியைத்தரித்த காலையுடைய குமாரனே! இப்போதவ்விலட்சுமணனுடைய வச்சிரவில்லின் குணத்தொனி ஆகாசத்தைப் பிளக்கின்றதே; சப்தமேகங்களின் கர்ச்சனையடங்கவும், சமுத்திரந் தத்தளிக்கவும், அனுமான் — சுக்கிரீவன் — அங்கதன் — சாம்பவன் — இவர் முதலான வானரவீரர்கள் போர்க்களத்திற் சப்திக்கின்றார்களே: அந்தச்சப்தத்தைக்கொஞ்சமும் நீ அறியவில்லைபோ லிருக்கின்றதே யென்றான். அதை இந்திரஜித்துகேட்டு, ஐயா! எனது நாகபாசத்தால் அந்த லக்ஷுமணன் முதலானவர்களெல்லாம் கட்டுண்டார்கள். பிறகு இடிக்குச்சமானமாகிய என்கைப்பாணங்களால் தேகமெல்லாம் சக்கைச்சக்கையாய்ப் பிளந்துபோனார்கள். என் கண்முன்னேயே அறிவுஞ் சோர்ந்துபோனார்கள். அப்படிப்பட்டவர்கள் பிழைத்தார்களென்று சொல்லுவது உண்மையோ? அல்லதுவேறோ: அப்படியுண்மையானால் அப்பாசத்தைக்கொடுத்த ஐம்முகக்கடவுள் அவ்வளவுசிறியரோ? என்றுசொல்லி ஆச்சரியமாயினான்.

இராவணனும் இந்திரஜித்தும் வார்த்தையாடும்சமயத்தில் தூதர்கள்வந்து யுத்தகளத்தின் தன்மைகூறல்.

கவி.

ஈதுரைநிகழும்வேலை யெய்துவதறியப்போய
தூதுவர்விரைவின்வந்தார் புகுந்தடிதொழுதலோடும்
யாதவணிகழ்ந்ததென்ன விராவணனியம்பவீறின்
றோதியகல்வியாளர் புகுந்துளதுரைக்கலுற்றார்.

இப்படி ராவணனு மிந்திரசித்துவும் பேசிக்கொண்டிருக்கும்போதே அங்கேநடந்த காரியத்தைத் தெரிந்துகொண்டு வரும்படியாய்ப்போன தூதர்கள்வேகமாய்த் திரும்பிவந்து இராவணனுடைய பாதங்களில் வீழ்ந்தார்கள். அவர்களைப்பார்த்த ராவணன்நடந்தகாரிய மென்னவென்று கேட்க, அந்தக்கல்விமான்களான தூதுவர்கள் சம்பவித்ததைத் தெரிவிக்கத்தொடங்கினார்கள்

ஐயா திரிலோகநாயகா! நாகபாசத்தாற் கட்டுப்பட்டுப் பாணங்களாற் பிளப்புண்டவர்களை அயோத்திநாட்டுக் கரசனான தசரதபுத்திரனாகிய ஸ்ரீராமன் அர்த்தராத்திரியில் வந்துபார்த்துச் சிறிதுகிலேசித்து, பிறகிவ்வுலகத்தை யெல்லா மெரித்துவிடுகிறேனென்று அட்டகாசஞ்செய்தான். அப்போது ஆகாசத்திலிருந்து கருடன் பறந்துவந்தான். அவன்வந்தவுடனே கூரியபற்களையுடைய சர்ப்பங்களெல்லாம் சின்னபின்னப்பட்டுப் போய்விட்டன. அவர்கள் தேகத்துப் புண்களும் ஆறிப்போயின. அவர்கள் மூர்ச்சையுநீங்கிவிட்டது. அவர்களெல்லாரு முன்னினுமதிகபலமுள்ளவர்களாகி இராணக்களத்திற்சூழ்ந்து மொய்த்துக்கொண்டார்கள். இது நடந்த சமாச்சாரமென்றார்கள்.

அப்போது ராவணன் அருகிலிருந்தவர்களைப்பார்த்து ஓ மித்திரர்களே! ஒருவராலும் புகழ்ந்து முடியாத தோள்வல்லமையை யுடைய என்குமாரனான இந்திரசித்து எய்த நாகபாசத்தைக் கருடன் தன்சிறகின்காற்றினாலே கழன்றுபோகும்படிச்செய்தானாம். கேட்டீர்களா? என்றான் இப்படிப்பட்டவார்த்தையுண்டாகுமானால் இராவணனிந்த மூன்றுலோகங்களையும் ஆளும்வல்லமையுடையவனா யிருக்கின்றானென்று யாவருஞ்சொல்லிக்கொண்டு வந்த என் வாழ்வு மிகநன்றாயிருக்கின்றது. ஆ! ஆ! என்வெற்றிப் பிரதாபமெல்லா முடிந்துபோய் விட்டதுபோ லிருக்கின்றதே: அப்படியா? இந்தப் பதினாலு லோகங்களையும் உண்டுமிழ்ந்தவனென்கிற கீர்த்திபெற்றவனான அந்த விஷ்ணுவானவன் என்னோடெதிர்த்து யுத்தஞ்செய்தபோது புத்திமயங்கித் திகைத்துப்போனான். அப்போதிவன் அவனுக்கு வாகனமாகத்தானே யிருந்தான். நானிந்தப் பூமண்டலமெல்லாம் ஜெயித்து வெற்றிபெற்று வந்தேன். இந்தச் சப்தசமுத்திரங்களும் என்வல்லமைக்குத் தத்தளித்துப் போய்விட்டன. அப்போதெல்லாம் இந்தக்கருடன் என்வல்லமையைத் தன்கண்ணாற் பார்க்கவில்லையோ விருக்கின்றது.

கைகளில் சக்கரமும் சங்கமும் ஏந்தியிருக்கின்ற விஷ்ணுவினாலே காக்கப்பட்டிருந்த அந்தவைகுந்த லோகத்தின்மீது நான் சண்டைக்குப்போய் என்வில்லில் அம்பைக்கோத்துப் பிரயோகித்தபோது, சூரியசாரதியாகிய அருணனுடைய தம்பியான இந்தக்கருடனுடைய மார்பிலும், முதுகிலும், தோள்களிலும், அந்தத் தோள்களிலுள்ள சிறகிலும், அவ்வம்புகள் தைத்து வருந்தினதை மறந்துபோய்விட்டோ இப்போதுவந்தான். இஃதிருக்கட்டும். இன்னுமெப்படி முடிந்தாலு முடியட்டும். இனிப்பயந்து மீதியாய் நிற்கின்றவர்களைக் கொல்லவேண்டிய விருப்பத்தை முடிக்கவேண்டு மல்லவா?

அப்பா ஆண்பிள்ளைச் சிங்கமே! நீயே அந்தச்சண்டையைச் செய்யவேண்டும். உன்னுடைய அருமையான சண்டைகளை அவர்கள் பார்த்தமாத்திரத்தில் வெட்கப்பட்டோடிவிடுவார்கள். என்று தனதுபராக்கிரமத்தினுஞ் சிறந்தபிள்ளையாகிய இந்திரசித்துவைப்பார்த்துச் சொல்லினான். அதைக்கேட்ட இந்திரசித்து அவ்விராவணனைப் பார்த்துத் தன்கருத்தைச் சொல்லத் தொடங்கினான்.

இராவணன் இந்திரசித்துவின் கருத்துணர்ந்து தனதரண்மனையடைதல்.

கவி.

இன்றொருபொழுதுதாழ்த்தென் னிகற்பெருஞ்சிரமநீங்கிச்
சென்றொருகணத்தினுளே நான்முகன்படைத்ததெய்வ
வென்றிவெம்படையினாலுன் மனத்துயர்மீட்பனென்றான்
நன்றெனவரக்கன்போய்த்த னவமணிக்கோயில்புக்கான்.

ஐயா எனதருமைப் பிதாவே! இன்றைக்கு ஒருநாள்தங்கியுத்தத்திற்பட்ட சிரமங்களெல்லாம் ஆற்றிக்கொண்டு நாளைக்கு யுத்தகளத்திற்குப்போய், ஒரு க்ஷணநேரத்திற் குள்ளே பிரம்ஹாஸ்திரத்தை விட்டு அவர்களையெல்லாங்கொன்று உமதுமனதிலுள்ள துக்கத்தை நீக்கிவிடுகிறேனென்றான். அதைக்கேட்ட ராவணன், அப்பா! நல்லது: அப்படியே செய்யக்கடவாய். என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுப்போய்த் தன்னுடைய நவரத்தினமாளிகையைச் சேர்ந்தான்.

நாகபாசப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பத்தோன்பதாவது,

படைத்தலைவர் வதைப் படலம்.

இப்படலத்தில் யுத்தத்திற்குச்செல்ல விடைகொண்டவர்களில் இந்திரசித்துவுக்குச் சக்கரரக்ஷகராய்ச்சென்ற தூமாக்ஷமகாபாரிசாள் ஆஞ்சனேயருக்குத் தோற்றோடிவந்ததைச் சிலராலறிந்த இராவணன் அவர்களுக்குக் கடுந்தண்டனை விதித்ததும், அத்தண்டனையை மாலியென்பவன் சில நியாயங்கூறி மன்னிப்பித்ததும், உடனே தூமாக்ஷனாதிய படைவீரர்கள் யுத்தசன்னாகங்கொண்டு வரக்கண்ட ஸ்ரீராமர் விபீஷணரா லவர்களை இன்னாரென்றறிந்ததும், அப்படைவீரரோடு வந்த இராக்கதச் சேனைகளை வானரச்சேனைகள் வளைத்துப் போர்விளைத்ததும், அக்கால் தூமாக்ஷனாதியரை ஆஞ்சனேயாதிய ரெதிர்த்துமாய்க்க அவர்களோடு வந்த பத்துவெள்ளஞ் சேனைகளையும் ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் சூரியோதயத்திற்குமுன் மடித்ததும் சொல்லப்படுகின்றது.

இந்திரசித்துவினோடுஞ்சென் றாஞ்சனேயருக்குத் தோற்றோடிய சக்கரரக்ஷகிருவரை இராவணன் தண்டிக்கச்சொல்லுதல்.

கவி.

ஆர்த்தெழுமோசைகேட்ட வரக்கருமுரசமார்ப்பப்
போர்த்தொழில்வேட்கைபூண்டு பொங்கினர்புகுந்துமொய்த்தார்
தார்த்தடமார்பன்றன்னைத் தாவிடையென்னச்சார்ந்தார்
பார்த்தனன்முனிந்துமன்ன னினையனபகர்வதானான்.

No. 55. இலட்சுமணனுதியர் கருடபகவானால் மூர்ச்சைதெளிந்தெழுந்து ஸ்ரீராமரைமகிழ்வித்தல்.



ஸ்ரீகெருடபகவானால் இந்திரஜித்துவின் நாகப்பிணிப்பினின்றுநீங்கிய, இராமலட்சுமணரும்வானரசேனைகளும்சந்தோஷகர்ஜனைமிடல்.



பின்பு வானரவீரர்களுடைய ஆரவாரத்தைக்கேட்ட இராக்ஷசர்களெல்லாம் யுத்தபேரிகையை முழக்கிச் சண்டைசெய்ய வேண்டுமென்று இச்சைகொண்டு, அதிக வாக்குரோஷத்துட னெல்லாரும் ஒருமிக்கக்கூடி, வெற்றிமாலையையணிந்த விசாலமான மார்பையுடையவனுன இராவணனைச்சேர்ந்து எங்களுக்கு யுத்தத்திற்குப்போகும்படி உத்தரவு கொடுமென்று கேட்டார்கள். அப்போது மகாபாரிசனும், தூமாக்ஷனும், எங்களுக்கும் உத்திரவுகொடுத்தால் நாங்களும் போகிறோமென்றார்கள். அவர்களைராவணன் சந்தோஷமாகப்பார்த்து, நல்ல துநீங்களும்போங்களென்று சொன்னான். அதைக்கேட்ட தூதர்கள் மனம்பொறுக்காதவர்களாகி, ஐயா இராவணேஸ்வரா! இவர்களுடைய நடக்கையைச் சொல்லுகின்றோம் கேளும். தேவரீருடைய குமாரராகிய இந்திரசித்துவானவர் யானைகளும், குதிரைகளும், தேர்களும், பதாதிகளுமாகிய சதுரங்கச்சேனைகளுமிழந்து தான்மாத்திரம் தனியாய்நின்றார். அப்போதிவர்க ளதைச்சற்றுநினையாமல், அவருக்குச் சக்கரரக்ஷகராய்வந்த தன்மையையும் யோசிக்காமல், மனிதனுடைய வாளிவாளியென்று வாய்குளறிக்கொண்டு யுத்தகளத்தில் நின்றும் ஓடிவந்துவிட்டார்கள். ஆதலால், இவர்களையுமொரு வீரரென்றெண்ணி யெங்களோடனுப்புதல் கூடாதென்று சொன்னார்கள்.

கவி.

அற்றவர்கூறலு மாரழலிற்றாய், முற்றியகோப முருங்கமுனிந்தான்
இற்றிதுவோவிவர் சேவகமென்னுப், பற்றுமினென்றனன் வெம்மைபயின்றான்.

அதைக்கேட்ட மாத்திரத்தில் இராவணனுக்கு அக்கினி பொங்கினது போலக்கோபமுதிர்ந்து, இவர்களுடைய வீரத்தன்மை இப்படிப்பட்டதா? நல்லது: இவர்களைப் பிடியுங்களென்று நியமித்தான். அப்படியே கிங்கரர்கள் போய் அவர்களைப் பின்கட்டாகக் கட்டிக்கொண்டுவந்து அவனுக்கு முன்பாக நிறுத்தினார்கள். அப்போது கருநிறத்தை யுடையவனுன ராவணன் இவர்களைக்கொல்லாமல் நன்றாய்ப் புடையுங்களென்று சொன்னான். அப்படியே யவர்கள் நன்றாய்க் குமுக்கினபிறகு மறுபடியு மிராவணன் அந்தத் தூதுவர்களைப்பார்த்து, இவர்களுக்கு வேறே தண்டனையில்லை. இவர்களுடைய மலைச்சிகரம்போலிருக்கின்றமூக்கையரிந்து, இவர்களை ஊரைச்சுற்றுவித்து யுத்தத்திற்பயந்தோடினவர்களென்று யாவருக்குந் தெரியப்படுத்துங்களென்பதாகக் கட்டளையிட்டான். அந்தக்ஷணமே அந்தத்தூதுவர்கள் நெய்பூசிய வாளாயுதத்தைக் கையிற்பிடித்து, அவர்களுடைய உயர்ந்த மலையைப்போன்ற நாசியை அறுக்கிறதற்காக ஓடினார்கள். அப்போது மாலியென்பவன் அவர்களைத் தடுத்துச்சென்று இராவணனைக்கண்டு சில சொல்லுவதாயினான்.

தூமாக்ஷமகாபாரிசானை தண்டிக்காவண்ணம் மாலியேன்பவன் மன்னிப்பித்தல்.

கவி.

அஞ்சமமஞ்சி யழிந்தனரானார், வெஞ்சமம்வேறலும் வென்றியதன்றாய்த்
துஞ்சலுமென்றிவை தொல்லையவன்றே, தஞ்செனவாருள ராண்மைதகைத்தார்.

ஐயா கீர்த்திமானாகிய இராவணேஸ்வரா! நீர் அவர்களை இப்படிச்செய்கிறது தகுதியல்ல. உயுத்தத்திற்குப் பயந்தவர்கள் ஜெயம்பெறுதலும், முன் ஜெயம்பெற்றவர்கள் மாண்டுவிழுதலும் வழக்கந்தான். ஆண்பிள்ளைத் தன்மையுடையவர்களுக்குள் உயர்வுபடாதவர்களும், தாழ்வுபடாதவர்களும், இயாரிருக்கின்றார்கள்? நீர் தாரதம்மியமொன்றுந் தெரிகின்றீரில்லை. இப்போது தங்களிச்சைப்படிச் சண்டைக்குப் போகிறோமென்று வந்தவர்களைக் கோபித்தாலெப்படி? தேவர்களும், தானவர்களும், சேனையாயிருந்தும்; இந்திரனானவன் உம்மைக்கண்டு நடுங்கினதை நீர் மறந்துபோய்விட்டீரா? அந்த ஸ்ரீராமனென்ன லகுவானவனோ? வருணதேவனே வந்து வணங்கி அவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்ளுகிற வரைக்கும் நடுங்கிநின்றானே: அப்படியிருக்க, இந்தக் கருநிறச்சூதர்கள் அவனெதிர் நிற்பார்களா? இதை யாலோசிக்கும்போது இவர்களென்ன சாஸ்திரங்க ளறிந்தவர்களா? இஃதுமக்குத் தெரியாதோ? இவர்கள் போகட்டும்.

இந்திரசித்துவினுடனேநாற்பதுவெள்ளஞ்சேனைகள்போயினவே: அவ்வளவுபேர்களு மாண்டு,இவர்களு மிந்திரஜித்துவுமாகிய இந்த மூன்றுபேர்கள்தானே தப்பிப் பிழைத்துவந்தார்கள். நீர் நல்ல புத்திமானாச்சே: இவர்களைப்பார்க்கிலும் வீரர்களாயிருந்தவர்கள் யார்? தான்விட்ட நாகபாசமும் சிந்திச்சிதறிப்போய்விட்டது. தன்னுடன்வந்த நாற்பதுவெள்ளஞ் சேனையும் படுசூரணப் பட்டுப் போய்விட்டது. தன்தம்பியாகிய அதிகாயனும் பட்டுப்போனான். இப்போது யுத்தமுகத்தில் உமதுகுமாரன் போகிறதற்குப் பயந்து சாக்குச் சொல்லுகின்றான். இப்படியிருக்க, அவனை யொன்றுஞ் சொல்லாமல் வயிற்றுச் சோற்றுக்கு உம்மிடத்தி லுழைக்கிற இந்த அற்பர்களையா நீர் மூக்கை யரியப் புறப்பட்டீர்? இலக்ஷ்மணனென்று சொன்னமாத்திரத்தில் இராக்ஷசரெல்லாரும் தங்கள் வீட்டுக்கதவுகளையெல்லா மூடிக்கொள்ளுவார்கள். இந்த எழுசமுத்திரமும் அவர்கள்போய் மறைந்துகொள்ளுகிறதற்குத் துணையாகுமோ?

ஐயா! இராவணேஸ்வரா! நாசியறுக்க வேண்டுமானால் உலகத்திலுள்ளவர்களை யெல்லாமே யறுக்கவேண்டும். அப்படிச் செய்வதற்கு ஊழிநாள் வரையிலும் செய்தாலு முடியாது. தூதாகவந்த அனுமானுக்குப் பயந்து அன்றைக்கவனோடு சண்டைசெய்யமாட்டாமல் ஓடிப்போனவர்கள், ஒரு தண்டனைக்கு முட்படாமல் உமதுசேனையிற் பாதிக்கதிகமாக நாசியுடனே யிருக்கின்றார்கள். நீர் சீதையை விட்டுவிடாதபடியினாலே அந்த ராமலக்ஷ்மணர்கள் நம்மீதுசண்டைக்கு வந்தார்கள். அப்போது எல்லாச்சேனைகளும் அவர்கள்மேற் சண்டைக்குப்போய் அந்த ராமலக்ஷ்மணர்களைக் கொல்லாமற் போனார்களேயென்று நீர் எல்லாருடைய மூக்கையும் ஒரேநாளில் அறுமென்று சொல்லாமற் போனீரே: அப்படியேன் சொல்லவில்லை. ஆகையால், இதெல்லாம் ஒரு குற்றமல்லவென்று சொன்னான்.

தூமாக்ஷனும் மகாபாரிசனும் தங்கள் வீரவல்லமையால் பகைவர்களை அதஞ்செய்வேனென இராவணனோடே சொல்லுதல்.

கவி.

ஆறினபின்ன ரழிந்தனரன்னுர், தேறினரன்னது சிந்தையுணர்ந்தார்
சீறியநெஞ்சினர் செங்கணரொன்றே: கூறினர்தந்நிலை செய்கைகுறித்தார்.

இவ்வண்ணம் மாலியென்பவன் சொல்லிய வார்த்தைகளால் இராவணன் கோபமாறினுன் அவ்வண்ணம் மாறினவுடனே நாம் இனிப்பிழையோமென் றெண்ணியிருந்த தூமாக்ஷனு மகாபாரிசனும் தங்கள்மீதுகொண்ட கோபமாறினு னிலங்கேசனென்று தெரிந்தவர்களாகிப் பயந்தீர்ந்து, மனம் தைரியப்பட்டு, அதிக கோபத்துடனே கண்கள் செவந்து நின்று தங்களுடைய செய்கையையும் நிலைமையையுஞ் சொல்லத் தொடங்கினுர்கள். ஐயா இராவணேஸ்வரா! உம்முடைய குமாரன் இந்திரஜித்து அந்த லக்ஷ்மணனுடைய யுத்தத்தில் வருத்தப்பட்டு ஒருபக்கத்தில் ஒதுங்கிவிட்டது மாத்திரமா? ஆகாசத்திற் போகத் துரிதப்பட்டு ஒருமாயையைச் செய்துவிட்டுப்போய்ப் பிழைத்து இலங்கைக்குள்வந்து நுழைந்துகொண்டார். நாங்களப்படி வந்துவிடமாட்டோம். இன்றைக்குள் அல்லது நாளைக்குள்ளாக அதிக உஷ்ணமான பெருநெருப்பில் வெந்த செப்புவட்டிலில்விட்ட எண்ணெயில்வீழ்ந்தவர்கள் துடிப்பதைப்போல் எல்லாருடைய பிராணன்களுந் துடிக்கும்படி முடித்துவிடுகிறோம். மூன்றுநாள்வரையிலும் வைக்கிறதில்லை.

வீரலக்ஷணமெல்லாம் நன்ருய்த்தெரிந்த ஓ இராவணேஸ்வரா! நீரேபாரும். நீர் எங்களை இப்போது போர்க்கு அனுப்பினீரேயானுல், தூமாக்ஷ மகாபாரிசாள் கொடிய யுத்தத்திலே பிரவேசித்து எல்லாரையுங் கொன்றுவிட்டார்களென்று கேள்விப்படுவீரே யல்லாமல், கெட்டுப்போய் விட்டார்களென்று கேள்விப்படமாட்டீர். என்று தங்களாவியை முடிக்க விருப்பங்கொண்டவர்களான அவ்விருவரும் சொன்னுர்கள்.

தூமாக்ஷன் மகாபாரிசனுகிய இவர்களுக்குத் துணையாக இராவணன் படைகளைக் கூட்டியனுப்புதல்.

கவி.

அன்னவர்தம்மொடு மையிருவெள்ளம், மின்னுபடைக்கை யரக்கரைவிட்டான்
சொன்னதொகைக்கமை யானைசுடர்த்தேர், துன்னுவயப்பரி யோடுதொகுத்தான்.

அந்தச் சொல்லைக்கேட்ட ராவணன் அவர்களுடனே பத்துவெள்ளம் ராக்ஷசக் காலாட்சேனைகளையும், அவர்களுக்குத்தக்க யானைகளையும், தேர்களையும், குதிரைகளையும், கூடச்சேர்த் தனுப்பினுன். இந்தச் சேனைகளுடனே நெய்சொரிந்து யாகஞ்செய்யக்கண்டால் அவ்வியாகங்களையெல்லாம் தும்சஞ்செய்கிறவனுன யாககேதுவென்றும், சூரியனுக்குப் பகைவனுன சூரியகேதுவென்றும்,மாலியென்றும், பிசாசனென்றும், வச்சிரதந்தனென்றும் சொல

ருகின்ற படைத்தலைவர்களெல்லாம்; இராவணனுடைய கட்டளையினால் யானைகளும், தேர்களும், குதிரைகளும், துணையாகவர மலைக்கூட்டங்களைப்போலக் கர்வித்துப் புறப்பட்டுப் போனார்கள்.

அப்போது ஆகாசத்தை மறைத்துக்கொண்ட தூளியினால் தேவர்களுடைய கண்களும் தெரியாமற்போய்விட்டபடியினால்,எண்ணுதலைக் கடந்து விளங்கும் அந்தச் சேனையின் தொகையை ஒருவரும் நிச்சயிக்கமாட்டாமற் போனார்கள். சக்கரங்கள்பூட்டிய தேர்களிற்கட்டிய கொடிகளும், கருமலை போன்ற யானைகளின்மீது பிடித்துக்கொண்டு வருகின்ற கொடிகளும்,வெள்ளையலைகளைப்போல வீசுகின்றபடியினாலும், மேகங்கள்பரவிய ஆகாச நக்ஷத்திரங்களாகிய மீனங்களில் அசைகின்றபடியாலும், அந்தச் சேனைகள் பெரிய கடல்போலிருந்தது. உலகத்தைச்சூழ்ந்த பெரிய சமுத்திரம்போல முரசங்கள் சப்தித்தன. யானைகள் மேககர்ச்சனையைத் தோற்கடித்துக் கடலுடன் பகைகொண்டு முழங்கின. குதிரைகள் மேகங்களைப்போலக் கனைத்தன. முகபடாமணிந்த குன்றுகள் நடந்தாற்போலப் பெண்யானையின் சுவட்டை மிதித்து ஆண்யானைகள் தொடர்ந்துபோக, கலவியினிமித்தமாகப் பெண்யானைகள் நின்றுபிணங்க, அவைகளைத் துதிக்கையாற் றழுவிக்கொண்டு ஆண் யானைகள் நில்லாமற் சென்றன.

சிலயானைகள் நீண்ட துதிக்கைகளை ஆகாசத்தில்நீட்டி மேகசலத்தைவாரி வீசிக்கொண்டு போகின்றபடியால்,அந்தமேகங்கள் விலகிப்போய்விட்டன. அவைஎப்படியிருந்தனவெனில்? அவ்வியானைகளால் உண்டுவிடப்பட்டனபோலிருந்தன. அக்கினிகளைக்கக்குகின்ற ஆயுதங்களின் பிரகாசமும், வீரர்கள் தரித்திருக்கின்ற ஆபரணங்களின் பிரகாசமும், தேர்களையும் குதிரைகளையும் யானைகளையும் சிங்காரித்த சிங்காரப்பொருள்களின் பிரகாசமும், கிண்கிணிமாலையின்பிரகாசமும், எங்கும் நிறைந்திருக்கின்றபடியினாலே, அவ்விராத்திரியினிருளெல்லாம் திக்குத்திக்குகளா யோடிவிடப் பகலைப்போலிருந்தது.

தூமாக்ஷன் மகாபாரிசன் இவர்களோடு வந்த படைத்தலைவர்களை ஸ்ரீராமர்யாரெனவினவ விபீஷணர் இன்னாரின்னாரெனச் சொல்லுதல்.

கவி.

எய்தியசேனையை யீசனெதிர்ந்தான், வெய்திவண்வந்தவன் மாயையின்வெற்றி
செய்தவனேகொ றெரித்தியிதென்றான், அய்யமில்வீடண னன்னதுரைத்தான்.

இப்படியாகவந்த படைகளையும் படைத்தலைவர்களையும் சர்வலோக சரண்யரான ஸ்ரீராமமூர்த்தி பார்த்து, விபீஷணரைநோக்கி, அப்பா சற்குணசிலனே! முன்பிங்கேவந்து மாயையால் வெற்றி பெற்றுக்கொண்டுபோன ஒருவனே மீட்டுமிந்தப் படைகளும் படைத்தலைவர்களும் சூழவருகின்றானோ? அல்லது வேறேயாரேனுமா சொல்லுகவென்று நியமித்தனர். உடனே யவர் ஸ்வாமிக்குத்தெண்டன் சமர்ப்பித்துச் சொல்லுகின்றார்.

ஐயா தசரதநந்தனு! இப்போது முன்பு மாயையால் மயக்கிவிட்டுப் போன இந்திரஜித்து வரவில்லை. மற்றியாரென்றால், மலைக்குகையிலிருந்த சிம்ஹமானது யுத்தத்தைவிரும்பி, அதிக கோபங்கொண்டது போலவும், சந்திரப்பிறையையொத்த தந்தங்களையும் பிளந்த வாயையுமுடைய யானையைப்போலவும் சப்தித்து, அக்கினிப்பொறிகளைச் சிந்துகின்ற அம்பறாத்தூணியை முதுகிற் கட்டி, வில்லைக்கையிற்பிடித்துத் தேரின்மீது வருகின்றவன் மகாபாரிசனென்னும் பெயரினையுடைய இராக்ஷசன். அக்கினிச்சுவாலை வீசுகின்ற கோபக்கண்களை யுடையவனுய்ச் சத்துருக்களுடைய ஆவியை யுண்கிற ஸ்வபாவமுள்ளவனும், பெரிய சமுத்திரத்தை வாயினுல்நக்கி யுண்டுவிடுகிறவனுமான மற்றொருவன், தூமாக்ஷனென்கிற பேருடையவன். பித்தர்களைப்போலத் தடுமாறிக்கொண்டு இப்போது சம்பவித்திருக்கின்ற யுத்தத்திற்காக-மூவிலைச் சூலாயுதத்தைப் பலம்பொருந்திய தோளிற்கொண்டு தன்பிரயாசமெல்லாம் யுத்தமேயென்று நினைத்து இதோவருகின்றனே, இவன் வச்சிரதந்தனென்கிற பெயருடைய ராக்ஷசன்.

இதோ வாயுவேகத்தையு மனோவேகத்தையும் பின்னிடச்செய்வதானகுதிரையின்மீது மடித்த வாயுடையவனும், சமுத்திரஞ் சப்திக்கிறதுபோலச் சப்திக்கிறவனும், ஆகாசபரியந்த மளாவிய ஒருசூலாயுதத்தை யுடையவனுமாக வருகின்றனே; இவன் பிசாசனென்கிற பெயருள்ள இராக்ஷசன். வெள்ளத்தைப்போல முழங்குகின்றவனும், நெருப்பைப்பார்க்கிலும் கொடியவனுமாய்த்தேரில்வருகின்ற இவன்; சூரியகேதுவென்கிற பெயருள்ளவன். இரத்தத்தையும் அக்கினியையும் சொரிந்துகொண்டு வருகின்றவன் யாககேதுவென்னும்பெயருடைய இராக்ஷசன். செந்நெற்கதிர் பழுத்து வளைந்ததுபோல உயர்ந்து வளைந்த கழுத்தையுடைய குதிரைப்படையுடனே வருகின்றவனும், மூலநோயைக்காட்டிலும் அதிக கொடுமையானவனும், அதிக தவத்தைச் செய்தவனும், சூலாயுதத்தையுடைய உருத்திரமூர்த்தியுங் கண்டு பயந்து போகும்படித்தேரிற் காணப்படுகின்றவனுமானவன் மாலியென்கிற பேருடையவனென்று சொன்னர்.

இராக்கதச்சேனைகளை வானரசேனைக ளெதிர்த்துப் போர்விளைத்தல்.

கவி.

ஆர்த்தெதிர்நடந்ததவ் வரியின்றானையும்
தீர்த்தனைவாழ்த்தியுற் றிரண்டுசேனையும்
போர்த்தொழில்புரிந்தனர் புலவர்போக்கிலார்
வேர்த்துயிர்பதைத்தனர் நடுங்கிவிம்மியே.

அதைக்கேட்ட வானரச்சேனைகள் ஸ்ரீராமமூர்த்தியை ஸ்தோத்திரம்பண்ணி ஆர்ப்பரித்துக் கொண்டுபோய் இராக்ஷச சேனையுடனே கலந்து போர்செய்தார்கள். தேவர்களெல்லா மிதைக்கண்டு எங்கும் போக்கிடந்தோன்றுமல் வெயர்த்து, உயிர்பதைத்து நடுநடுங்கி நின்றுவிட்டார்கள். வானரர்கள் யுகாந்தகால இடியோடுங்கூடிய சண்டமாருதக் காற்றைப்போல மலைகளைப் பி

டுங்கி யெறிந்தார்கள். ஸ்ரீராமருடைய கோதண்டத்தில் நின்றும் புறப்பட்ட பாணங்கள் மேகதாரைகளைப்போலச் சென்றன. மலையிலுள்ள மேகங்கள் சிதறினதுபோல இராக்ஷசர்களுடைய வாய்களிலிருந்து பற்களெல்லாம் பலபலவென்றுதிர்ந்தன. மதஜலங்களைப் பொழிகின்ற யானைகள் மாளும்படியாகவும், சேணங்களிட்ட குதிரைகளழியவும், பெரிய சக்கரங்கள் பூட்டிய தேர்கள் பொடிப்பொடியாய் முறியவும், போர்க்கு உடன்பட்டுவந்த இராக்ஷசர்களெல்லாம் ஆதிசேஷனுடைய உச்சிப்படம்பட்டு விழுவதுபோலச் சுருண்டு விழும்படியாகவும் வானரச்சேனைக ளெறிந்த மலைகள்போய்ப் பட்டன.

இராக்ஷசர்கள் வேகமாயெறிந்த சக்கராயுதங்கள் வானரங்களுடைய மலைக்குச்சமானமாகிய நீண்டதோள்களையும், நிற்கின்ற கால்களையும், உயர்ந்திருக்கின்ற வால்களையும், தங்களைக்கொல்லும்படிப் பேர்த்தெடுத்த மலைகளையும், மரங்களையும், அவர்களுடைய தலைகளையுமறுத்துக்கொண்டு போய்விட்டன. பூமியைத்தந்தங்களினாற் பிளந்துகொண்டு வருகின்ற யானைகளோடு மனோவேகத்துடன் தாண்டிப்போகத்தக்க குதிரைகளையும் செலுத்திக்கொண்டு வருகின்ற இராக்ஷசவீரர்க ளெறிந்த தோமராயுதங்கள், வானரவீரச் சிரேஷ்டர்களுடைய தேகங்களைப் பாளம்பாளமாய்ப் பிளந்துவிட்டன. வானரவீரர்கள் கலீரென்று ஆர்ப்பரித்துக்கொண்டெறிகின்ற கற்பாறைகள் சக்கரங்கள்பூட்டிய தேர்க்கொடிகளைச் சிதைத்தும், சாரதியினுடைய வக்கிரதந்தங்களோடு கூடிய பெரிய தலைகளை நொறுக்கியும், அந்தச்சண்டாளர்கள் பிடித்திருக்கின்ற விற்களுடனே அவர்களேறிவந்த யானைகளையுங் கொன்றன.

இராக்ஷசர்கள் வானரங்களினுடைய தேகத்திற் பாயும்படியாயெறிந்த சூலாயுதங்கள் உயர்ந்த மலைக்குகையிற் பெரும்பாம்புகள்போய்ச் சேர்ந்தாற்போல, அவ்வானரவீரர்களுடைய தேகங்களிற்போய் நுழைந்தன. யானைகள் வானரவீரர்களின் வாலைப்பிடித்துப் பூமியில்வாரி யறையவும், அதைத் தப்பித்துக்கொண்டு அந்த யானைகளினுடைய பின்னங்காலைப் பிடித்துத் தூக்கி அவ்வானரவீரர்கள் மோதுவார்கள். அன்றியும், வானரவீரர்கள் யானைகளைக்கொண்டு இராக்ஷசர்களைத் தாக்கவும், வெங்கண்ணராகிய இராக்ஷசர்கள் வேலாயுதத்தைக் கையிற்கொண்டு எறிவார்கள். வானரவீரர்கள் வேகங்கொண்டு வீசியெறிந்த மலைகள்பட்டு, இராக்ஷசச்சேனைகள் ரணக்களத்தில்மாண்டன.

மகா பாதகர்களாகிய ராக்ஷசர்களுடைய வில்லிலிருந்து பிரயோகிக்கப்பட்ட அம்புகளால்: வானரச்சேனை சமுத்திரங்கள் பற்களுடன்கூடத் தலைகள் நொறுங்கி மாண்டன. வானரவீரர்களெறிந்த மலையினா லறுப்புண்டு அந்த மலையுடனேகூடத் தங்கள்வீட்டில்வந்து வீழ்ந்த தங்கணவர்களாகிய இராக்ஷசர்களுடைய வக்கிரதந்தங்களையுடைய தலைகளை அவர்கள் பெண்சாதிமார்கள் அருகிற்போய்ப்பார்த்து, அவர்களோடு நெடுநாள் பழகியிருந்தும்

[illegible]

No. 56. இராவணன் இராமாதியர் சந்தோஷகர்ஜனையால் மயங்கி இந்திரஜித்துவினிடம்போய் பேசுகையில் தூதர்கள் பாசறைச்செய்தியறிவித்தல்.



தூமாட்சாதியபடைத்தலைவர்களை ஆஞ்சனேயராதியரெதிர்க்க, அவர்கள். பத்துவெள்ளஞ்சேனைகளை இராமலட்சுமணர்கள் மடித்தல்.



உயுத்தகாண்டம். [illegible]ாக்ஷாதியர்படையெடுத்துவந்தது.

தங்கணவர்தானென்று தெரிந்துகொள்ளமாட்டாமல் இது யாருடைய தலையோவென்று சந்தேகித்து நிற்பார்கள். தரித்திரத்தில் வருந்துகின்றபேர்களுக்குக் கொடுத்துண்ணாமலழிந்த செல்வத்தை யுடையவர்களைப்போல யானைகள் மாண்டுபோய்விட்டன.

பொன்மயமாய்ப் பிரகாசிக்கின்ற தேர்களினுடைய அச்சுகளெல்லா முறிந்தழிந்தன. குதிரைகளெல்லா நடக்கமாட்டாமற் கால்முறிந்து விழுந்தன. மீகாமனு மற்ற ஆள்களு மாண்டுவிடக் கப்பலானது தன்மீதுவிரித்தபாயோடு கடலில் நானாவிதமாக ஓடித்திரிவதுபோல, யானைகள் தங்கள் பாகர்கள் மாண்டு செலுத்துகிறவர்க ளில்லாமல் இரணக்கள முழுவதும் பரவியிருக்கின்ற ரத்தப்பிரவாகத்திற் கரைகாணமாட்டாமல் உழன்றுகொண் டிருந்தன. தங்களாயுதங்களுடனே மேலேறி நடத்திவந்த இராவுத்தர்கள் மடிந்துவிட வாயி லிரத்தங் கக்கிக்கொண்டு அங்கங்கே இரத்தப்பிரவாகத்தில் விழுகின்ற குதிரைகள் சமுத்திரத்தில் அக்கினியைக் கக்கிக்கொண்டு நிற்கின்ற வடவாமுகாக்கினியையொத் திருந்தன.

தூமாட்சனாதியர் பத்துவெள்ளஞ்சேனைகளோடும் ஆஞ்சனேயராதியரை எதிர்க்க, அப்பத்துவெள்ளஞ்சேனைகளும் இராமலட்சுமணர்களால் சூரியோதயத்திற்குமுன் மடிதல்.

கவி.

தூமக்கண்ணனு மநுமனுமெதிரெதிர் தொடர்ந்தார்
தாமத்தங்கதன் மாபெரும்பக்கனைத் தடுத்தான்
சேமத்திண்சிலை மாலியுநீலனுஞ் செறுத்தார்
வாமப்போர்வயப் பிசாசனும்பனசனு மலைந்தார்.

இப்படிப் போர்விளைகின்ற காலத்தில் தூமாட்சனும், ஆஞ்சனேயரும், ஒருவரையொருவ ரெதிர்த்து யுத்தஞ்செய்தார்கள். மஹாபாரிசனை வெற்றிமாலையைத்தரித்த அங்கதகுமாரன் தடுத்து யுத்தஞ்செய்தான். பலம்பொருந்திய வில்லையுடைய மாலியென்பவனும், நீலனென்கிற வானரவீரனும், சண்டைசெய்தார்கள். உயுத்தத்தில் ஜெயம்பெற்ற பிசாசனென்பவனும், பனசனென்பவனும், ஒன்றுகலந்து போர்செய்தார்கள். சூரியனுக்குப் பகைவனான சூரியகேது என்பவனும், சூரியபுத்திரராகிய சுக்கிரீவமகாராசரும், ஒருவரையொருவ ரெதிர்த்துச் சண்டைசெய்தார்கள். இயாககேதுவும், இளையபெருமாளும், யுத்தஞ்செய்தார்கள். வீரவானாகிய வச்சிரதந்தனென்பவனும், விருஷபனும், ஒருவரோ டொருவர் எதிர்த்தார்கள். கொடுங்கண்களையும் வெண்மையாகிய பற்களையு முடையவர்களான இராட்சசர்களுக்குள்ளும், வீரசிம்ஹத்துக்குச் சமானமாகிய வானரர்களுக்குள்ளும், போர்த்தலைவர்களின்னாரின்னாரென்றறிந்து ஒருவர்க்கொருவர் யுத்தஞ்செய்யப் புறப்பட்டு, தேவர்களுங்கண்டு நடுங்கும்படியாக யாவருஞ் சண்டைசெய்தார்கள்.

இப்படி இருவகைப்படையும் கலந்து போர்செய்கிறகாலத்திற் பிரகாசிக்கின்ற வக்கிரதந்தங்களை யுடையவர்களான இராட்சசர்களில்வந்த பத்து

வெள்ளஞ் சேனைக்குள், ஆறுவெள்ளஞ் சேனைகளை யுத்தகளத்தில் ஸ்ரீராமர் கொன்றுவிட்டார். மற்ற நாலுவெள்ளஞ் சேனைகளை இலட்சுமணர் தம்முடைய பாணங்களால் முடித்துவிட்டார். அவர்களுடைய ரத்தப் பிரவாகமானது உப்புக்கடலைச் சேர்ந்து அக்கடல்நீரின் நிறத்தை உருக்கிய செம்பைப்போல மாற்றிவிட்டது. அதிலுள்ள மீன்குலங்களெல்லா மதர்த்துப் பவளத்துண்டம்போ லாய்விட்டன. வெண்மையாகிய முத்துகளெல்லாம் குன்றிமணியைப்போலத் தோன்றின. அலையெறிகின்ற கடல்நீரெல்லா மிரத்தமயமாகி நானாவிதநிறமுள்ள இரத்தினங்களெல்லாம் செவந்துபோய்விட்டன. மதஜலம்பொழிந்து மலைபோ லுயர்ந்திருக்கின்ற யானைகளின் மஸ்தகத்திலிருந்து உதிர்கின்ற முத்துகளும், கடற்சங்கங்களிற் பிறந்த முத்துகளும், மற்ற ரத்தினங்களுடனே வேறுருவந் தெரியாமற் செவந்துபோய் விட்டன.

இப்படி வெகு ஆரவாரத்துடன் யுத்தநடக்கின்றசமயத்திற் பொழுதுவிடிந்து, சூரியனானவன் தன்னுடைய கிரணக்கற்றையாகியகைகளினாலேஎதிரிற்காணப்படுகின்ற இருளாகிய யானைகளையெல்லாங் கொன்று, உதிரக்கடலில் ஸ்நானஞ்செய்து புறப்படுகிறவனைப்போல உதயமானான். போர்க்களத்தி லிராக்ஷசர்களென்கிற காடாந்தகாரமானவிருட்டை ஸ்ரீராமர் துரத்திவிடவும், புறத்திலுள்ள விருட்டையெல்லாம் சூரியன் துரத்திவிடவும், உலகமானது இரண்டுசூரியர்களையுடையதா யிருந்தாற்போல எங்கும் பிரகாசமுண்டாயிற்று. இராத்திரிமுழுவது நிலைத்திருந்த பெரிய விருட்டானது நீங்கினபடியினாலே அலையெறிந்துகொண்டிருக்கின்ற இரத்தசமுத்திரமும் பிணமலைகளும் எங்கும்பரவி நிறைந்து, பூமியின்மீதும் பிரவகித்துக்கொண்டுவந்த சமுத்திரத்தையும் அதற்கிடையி லங்கங்கே கண்ணுக்கெட்டினவரைக்குந் தோன்றுகின்ற மலையையும்போ லிருந்தன. இரணக்களமுழுவது மூடியிருக்கின்ற இரத்தவெள்ளத்தி லிருக்கின்ற நிணச்சேற்றில் அம்புகள்தைத்து வீழ்ந்துகிடக்கின்ற இராக்ஷசர்களுடைய முகங்கள் சூரியோதயத்தில் தடாகங்களிலே மலர்ந்து வண்டுகள் மொய்த்துக்கொண் டிருக்கின்ற தாமரைப்புஷ்பத்தைப்போற் காணப்பட்டுக்கொண் டிருந்தன.

இரணக்களத்தில் தேர்களும், யானைகளும், குதிரைகளும், சின்னபின்னப்பட்டிருக்கின்ற தன்மை உலகமுமலைகளும் பெயர்ந்துபோகின்ற யுகாந்தகாலத்திற் சண்டமாருதக் காற்றடித்தபோது தேவர்களேறிக்கொண்டு திரிகின்ற விமானங்களும், சூரியசந்திராதி நக்ஷத்திரங்களும், தாறுமாறுபட்டுப்பூமியில்வந்து வீழ்ந்துகிடக்கிறதைப்போ லிருந்தன. இராத்திரியிற்றோன்றிய சந்திரனுக்குச் சமானமாகிய முகத்தையுடைய இராக்ஷசஸ்திரீகள் அக்கினியையொத்த அல்லிப்பூமாலையைச்சுற்றின கூந்தலுடனே வந்து இரணக்களத்தைச் சேர்ந்து மாண்டுபோன தங்கள் நாயகன்மார்களைக் கட்டித்தழுவிக்கொண்டு கிடக்கும்போது, அந்தராக்ஷசப் புருஷப்பிரேதங்கள் பூங்கொடிகள் சுற்றிக்கொண்டு கிடக்கின்ற மராமரத்தையொத் திருந்தன. அசைகின்ற

நுண்ணிய இடையையும், மலைபோன்ற ஸ்தனங்களையும், செவ்வானத்தை யொத்த கூந்தலையும், பயங்கரமான பற்களையுமுடைய இராக்ஷசஸ்திரீகள் இரணக்களத்துக்குவந்து; தங்களுக்குப்பிரியமான நாயகருடைய தலைகளைக் கொடுக்காமல் மல்லாடியோடுகின்ற பேய்களைத்தொடர்ந்து பிடித்து இரண்டு கால்களையும் பற்றிப்பிளந்தார்கள்.

பிரகாசிக்கின்ற சங்குவளைகளையணிந்த கைகளையுடைய ஒரு ராக்ஷசஸ்திரீயானவள் தன்னாயகனைத் தேடிக்கொண்டுவந்து, இரணக்களத்தில் உடலையும் அவயவங்களையும் பார்த்துச் சகிக்கமாட்டாதவளாகி, குடலையும், ஈரலையும், கண்ணையும், சிறுநரிபற்றிப் பிடுங்கப் பொறுக்கமாட்டாமற் பெருமூச்சுவிட்டுத் தன் கணவனுடனே தன்பிராணனையுந் துறந்துவிட்டாள். வாளைப்போன்ற கண்களையுடைய சில ராக்ஷசஸ்திரீகள் தங்கள் நாயகர்களுடைய பெரியதோள்களைப் பெண்ணரியும் கிழநரியும் அதட்டவுமஞ்சாமற் கொண்டுபோகிறதைக் கண்டு தொடர்ந்தோடும்போது, கீழேயிருக்கின்ற ஆயுதங்கள் செம்பஞ்சூட்டிய கால்களைப் பாளம்பாளமாய்ப் பிளந்தும் அவர்களுக்கு நோய் தெரியவேயில்லை. தங்கள் நாயகன்மார்களிடத்திற் சிநேகித்திருந்த மனதையுடைய சிலஸ்திரீகள் தங்கள் புருஷர்களை மலையைப்போ லிருக்கின்ற பிணங்களின்மே லேறித்தேடிக்கொண்டு, ஆண்மயிலைப்பிரிந்து மலையின்மேல் திரிந்துலாவுகின்ற பெண்மயிலையொத் திருந்தார்கள்.

சில ராக்ஷசஸ்திரீகள் தங்கள் நாயகன்மார்கள் போர்த்தொழிலிற் கொண்ட கோபத்தால் வாயை மடித்துக்கொண்டு உயிர்துறந்து விட்டதைப் பார்த்து, வெண்மையாகிய பற்களினாலே இதழைக்கடித்துத் தமது சக்களத்திக்குத் தங்கள் கணவன் கலவிக்குறிப்பைக் காட்டுகின்றானென்று பிணங்கினார்கள். சில ஸ்திரீகள் தலையிழந்து களத்திற்கிடக்கின்ற தங்கள் நாயகன்மார்களை நெருங்கிப்பார்த்து மூர்ச்சையடைந்து, அவர்களுடைய உருத்தெரியாமல் வெள்ளைத் துகிற்கொடியையொத்த தங்கள் பருத்த நகங்களினாலே முன்னம் தோளிற் கீறியிருந்த குறியை அவர்கள் மார்பிலணிந்திருந்த கவசத்தை நீக்கிவிட்டுப்பார்த்துத் தங்களுயிரை மாய்த்துக்கொண்டார்கள். சிலஸ்திரீகள் கண்களில் மழையைப்போலக் கண்ணீர்விட்டுக்கொண்டு தங்கள் கணவர்களுடைய வஜ்ஜிரத்துக்கொப்பாகிய தேகத்தைத் தேடிக்கொண்டு ரணக்களத்தில் வந்து, இராக்ஷசர்களுடைய பிணமலைகளிலிருந்தொழுகுகின்ற இரத்தப்பிரவாகத்திலமுழ்ந்தித் தங்கள் பிராணனையிழந்தார்கள்.

தூமாக்ஷன் ஆஞ்சனேயரோடு போராடிமாய்தல்.

கவி.

வகைநின்றுயர்தா ணெடுமொருதியும்
புகையின்பொருகண் ணவனும்பொருவார்
மிகைசென்றிலர்பின் றிலர்வென்றிலரால்
சிகைசென்றுநிரம் பியதீயுமிழ்வார்.

உருவத்திற்கேற்றபடி நீண்டுயர்ந்த பாதங்களையுடைய ஆஞ்சநேயரும், புகையெழும்புகின்ற கண்களையுடையவனானதால் தூமாக்ஷனென்னும் காரணப்பெயருடைய இராக்ஷசவீரனும், ஒருவர்க்கொருவர் போர்புரியுங்காலையில் இருவரிலொருவரேனும் வருத்தப்பட்டவர்களில்லை. தோற்றவர்களுமில்லை. செயித்தோர்களுமில்லை. சுவாலையிருந்து எங்கும் நிரம்பும்படியாகத் தமது கண்களினின்றும் அக்கினிப்பொறிகளைக் கக்குவார்கள். அப்போது மிகவுங்கறுத்த காளமேகமானது கோபித்தாற்போலச் சீறுகின்ற தூமாக்ஷன், அக்கினிக்கொடியையொத்த இருபத்தைந்து பாணங்களை அஞ்சனாதேவியின் புத்திரரான அனுமாருடைய தேகத்தின்மீது பிரயோகித்தான். அந்தப்பாணங்களவருடைய தோளிற்பட்டுருவினமாத்திரத்தி லிரத்தவெள்ளமானது குபுகுபுவென்று புறப்பட்டது உடனே யவ்வாஞ்சனேயர் ஊழிக்காலமேகம்போலக் கர்ச்சித்து அதிக கோபங்கொண்டு, தூமாக்ஷனுடையதேரை அழித்துவிட்டார். அப்படித் தேர்சிதைந்தமாத்திரத்தில் தூமாக்ஷன் கைவில்லுடனே சூரியன் பிரகாசிக்கின்ற ஆகாசத்தில் வேகங்கொண்டெழும்பினான். அப்போது லக்ஷ்மணர் தம்முடைய பாணங்களால் அவனுடையவில்லை முறித்தெறிந்தார். உடனே வாயுபுத்திரராகிய ஆஞ்சநேயர் அவனைப் பூமியில்தள்ளி, மலையிலும்பெரிய அவனுடைய உடலத்தை மண்ணில்விழத்தள்ளி, கடலைத்தாண்டிய பாதங்களைக்கொண்டு கதறும்படி உதைத்து, அவனதுபிளந்த வாயினையுடைய தலையைக் கையாற்பற்றித் திருகிக்கிள்ளிக் கடலிலெறிந்து தமது கோபமாறினார்.

மகாபாரிசன் அங்கதனோடு போராடி மாய்தல்

கவி.

மாபக்கனுமங் கதனும்மலைவார், தீபத்தினெரிந் தெழுசெங்கணினர்
கோபத்தினர் கொல்லநினைந்தடர்வார், தூபத்தினுயிர்ப்பர் தொடர்ந்தனரால்.

மகாபாரிசனும் அங்கதகுமாரனு மெதிர்த்துத் தீபத்தைப்போலக் கண்களெரியும்படியாகக் கோபங்கொண்டு, ஒருவரையொருவர் கொல்லநினைத்துப் புகையெழும்பும்படிச்சுவாசம் விட்டுக்கொண்டுநின்றார்கள். அந்தச்சமயத்தில் மகாபாரிசன் அதிககோபத்துடனே கர்ச்சித்துக்கொண்டு வருகின்ற பலத்தயானையானது உண்டையை விட்டெறிந்தாற்போல அங்கதகுமாரன்மீது ஐம்பத்தொரு பாணங்களைப்பிரயோகித்தான். அஃதெப்படியிருந்ததெனில் பரிவேடத்தோடு கூடிய சூரியனைக் கவ்வ வருகின்ற கேதுவென்னும் பாம்பையொத்திருந்தது. உடனே அவ்வங்கதகுமாரன் தனதுபலத்த கையினால் அவன்கைவில்லைமுறித்து, பூமியுடனேயெடுத்தெறிகிறதுபோல அவனையுந் தேரோடுதூக்கி ஆகாசத்தில்விட்டெறிந்தான்.

இப்படியெறிந்தவுடனே மகாபாரிசன் சூரியனைப்போலப் பிரகாசிக்கின்ற தனதூறுபட்டதேரை விட்டிழிந்து, தவறாத சாபவார்த்தையையொத்த ஒரு சூலாயுதத்தையெடுத்து அங்கதனுடைய மார்பிலெறிந்தான். அதைக்கண்ட சர்வலோகநாயகராகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் இதுசூலமல்லயுகாந்த

காலவிடிபோலிருக்கிறதென்று திருவுளங்கொண்டு, ஒருவரும் பயப்படாதபடி விஷம்பொழிகின்றதமது அம்பினாலே அறுத்துக் கீழேதள்ளினார். அப்போ தங்கதன் நினைவினளவுக்குள்ளாக அந்த மகாபாரிசனைக் கிட்டிப்பிடித்து, இந்தப் பதினாலுலோகத்தையும் இரண்டடியாலளந்த திரிவிக்கிரமரும் புகழத்தக்க வல்லமையுடனே அவனை இரண்டு சரிபிளவாய்ப்பிளந்து எறிந்துவிட்டான்.

மாலியென்பவன் நீலனோடு போராடி இலக்ஷ்மணரால் மாய்தல்.

கவி.

மாமாலியுநீ லனும்வானவர்தம், கோமானொடுசா னவர்கோனிகலே
ஆமாறுமலைந் தனரென்றிமையோர், பூமாரிபொழிந்து புகழ்ந்தனரால்.

மாலியென்கிற ராக்ஷசவீரனும், நீலனென்கிற வானரவீரனும், தானவராஜனான ஹிரண்யனும்,தேவதேவனான நரசிம்மமூர்த்தியும்போல யுத்தஞ் செய்கிறார்களென்று சொல்லி; தேவர்கள் புஷ்பமாரிபொழிந்தார்கள். அப்போதுநீலன் ஒருமலையையெறிந்து மாலியினுடையவில்லை இரண்டு துண்டாக்கிவிட்டான். அம்மாத்திரத்தில் அவன் பிரகாசமுள்ள வாளாயுதத்தைக்கையிற் பற்றிக்கொண்டுதேரேறி, நில்நில்லென்று கர்ச்சித்துக்கொண்டு நீலனை நெருங்கிவந்தான். இப்படியவன் வந்தமாத்திரத்தில் வேறொருபுறத்தில் நின்ற வெற்றியாளனான குமுதனென்கிற வானரவீரன் ஒருமலையை யெறிந்து அந்த மாலியினுடைய தேரைப் பொடிப்பொடியாகச் சிதைத்துவிட்டான். நீலனொரு மராமரத்தை வேரோடுபிடுங்கி மாலிமேல் விட்டெறிந்தான். அதையவன் தன்கையிலுள்ள வாளினாலே சிதைத்துவிட்டு நீலன்மீது பாய்ந்துவரும்போது, கெடாதபாவங்களை யெல்லா நாசம்பண்ணுகிறவரான ஸ்ரீராமமூர்த்திக்கிளையவராகிய இலக்ஷ்மணப் பெருமாள் அவனுடைய வாள்பிடித்த தோளறும்படி வாளியைப் பிரயோகித்தார். அப்படிப் பிரயோகித்த மாத்திரத்தில் மின்னலைப்போலப் பிரகாசிக்கின்ற வாளாயுதத்துடனே தோள்விழுந்தும் மாலியானவன் தான் போர்செய்வதில் நின்றும் விலகாமல்நிற்க, அதுகண்ட இளையபெருமாளானவர் இவன்முன்பு போர்செய்தல் என்னைப்போலொத்தவர்கட்கடாது.இது இலகுவானபோராய்விட்டது.என்று அப்பாற்போய்விட்டார்.

இதைக்கண்ட போர்வீரர்களெல்லாம் கடலைப்போலக் கறுத்ததிருமேனியையுடைய ஸ்ரீராமமூர்த்தியினிடத்திற்கு வந்து, மகாவீரரும் அம்புங்கையுமாயிருக்கின்ற வருமான இலக்ஷ்மணரைக்குறித்து வெகுவாய்க்கொண்டாடி, உலகத்தில் வீரத்தன்மையால் இந்தத் தர்மநடத்தையைச் செய்து யுத்தம் பண்ணினவர்கள் யாவரென்று புகழ்ந்தார்கள். அப்போது யாககேதுவுடன் அதிககோபங்கொண்டு யுத்தஞ்செய்கின்ற புஜபல பராக்கிரமசாலியான இலக்ஷ்மணர் அவனைநோக்கி, அடா யாககேதுவே ! உன்னுடைய ஆயுளிவ்வளவுதான். என்றுகூறி ஒரு பாணத்தைப்பிரயோகித்து அவனுடைய மார்பைப்பிளந்தார். உடனேயாககேது இலட்சுமணரால்விடுத்த ஒருபாணத்தினாலே


வில்முறிந்து, தோளறுந்து, உயர்ந்த மலைபோன்ற அவனுடைய மேனிபி
ளந்து; கழுத்தும், கால்களும், துண்டுபட்டு மாண்டுபோனான். வானராதி
பதியான சுக்கிரீவமகாராஜன் தனதுபிதாவாகிய சூரியனை முன்னமொருநா
ளெதிர்த்து ஜெயம்பெற்றவனும், மலையைப்போன்ற தேகத்தை யுடை
யவனும், பின்னிடாதஉயர்ந்த பலத்தையுடையவனுமான சூரியகேதுவைக்
கொன்றுவிட்டார்.

இடபனென்பவன் தன்னோடு கொடியசண்டை செய்கின்ற விஷம்போ
ன்ற கண்ணையுடையவனான வஜ்ஜிரதந்தனாற்சுவர்க்கமுமதிரும்படிச் செலுத்த
ப்பட்டதேரும், பிரகாசிக்கின்ற வாளாயுதமும் அழியும்படி ஒருமலையைப்பி
டுங்கி எறிந்தான். அப்படித் தேரழிந்தமாத்திரத்தில் அவ்வச்சிரதந்தன் வில்லை
வைத்துவிட்டு ஒருபெரிய தண்டாயுதத்துடனே பூமியிலிழிந்து, இடியும் எட்
டுத்தோள்களையுடைய உருத்திரமூர்த்தியுமஞ்சும்படி உன்னுயிரை யினிவைப்
பேனோவென்றுவந்து விருஷபனை அடித்தான். அப்படியடியுண்டவிருஷபன் உ
யிர்தடுமாறிச்சோர்ந்து இடியுண்ட மலையைப்போல முடிந்து போவானென்
று யாவருஞ் சந்தேகப்படுகிற தருணத்தில், விக்கிரமஸ்வரூபத்தையும் குறிய
ஸ்வரூபத்தையு முடையவரான ஆஞ்சநேயர்வந்து குதித்தார். அப்படிவந்தஆ
காசத்தையுமறைக்கும்படியாய் உயர்ந்த தேகத்தையுடையவரான அனுமானை
நீண்ட கண்டாமணியைத்தரித்தவனான வச்சிரதந்தன் ஓங்கி, மார்பிலக்கினிப
றக்கும்படியாகக் குத்திவிட்டுப்போயினான்.

அப்படி போகும்போது அவனை அனுமான் இடதுகையினாற் பிடித்து,
அவன்கையிலுள்ள தண்டாயுதத்தைப் பறித்து எறிந்துவிட்டு, தமதுவெற்றி
ப்பிரதாபமுள்ள கையைக்கொண்டு ஓங்கிக்குத்தினார். உடனே வஜ்ஜிரதந்தன்
தேகவல்லமையெல்லாமுடிந்து இறந்துபோனான். ஓர் பெரியவிருக்ஷத்தைக்
கையிற்பிடித்துச் சுழற்றிக்கொண் டிருக்கின்ற அதிவேகமுள்ள ஒரு ஆண்பு
லிபோன்ற பனசனுடையமார்பி லிரத்தம்புரண்டு வழிந்தோடும் படியாகப்
பசாசன் ஒரு தோமரத்தைவிட் டெறிந்துவிட்டு, அவன்மேகத்தின்மீ திருக்கி
ன்றானோ ? கடலின்மீ திருக்கின்றானோ ? பூமியில் நிற்கின்றானோ ? சூரி
யன்மீதுதா னிருக்கின்றானோ ? மற்றெதின்மே லிருக்கின்றானோ தெரி
யவில்லையென்று யாவரும் சந்தேகிக்கும்படியாக ஒரு குதிரைமீதேறிக்
கொண்டு யுத்தத்திற்கு வந்தான். அவ்வொருகுதிரையானது நூறுயிரகோடி
குதிரைகளோ? அல்லது ஒரு குதிரையோ? அதனைப் பல்லாயிரந் தேவர்களு
நின்று தங்களிமையாத கண்ணாலே நிச்சயித்தறியக்கூடாதபடி, அஃது பருந்
துகளுலாவுகின்ற இரணக்களத்தில் நின்று திரிந்தது.

பின்னுமந்தத் தேவர்கள் ஒன்றுகூடி, இந்தவெற்றிக்குதிரை கண்ணி
ற்குமெட்டாமலோடும். மனோவேகத்திலும் அதிவேகமாகப்போகும். ஆகாச
த்திற் செல்லுகின்ற காற்றைப்பார்க்கிலும் வேகமாகச்செல்லும். உயுத்த க
ளத்திற்குள்ளே நிற்கின்றதென்று நினைக்கும்போது புறத்தேபோய்நிற்கும்.

№ 57. மகரக்கண்ணனை ஸ்ரீராமரும், அவன்சக்கரரட்சகர்களாகிய குருதிக்கண்ணனையும் சங்கனையும் நளனும், பனசனுமாய்த்தல்.



பூமியிற் கால்தாவமாட்டாது. இப்படிப்பட்ட குதிரையின்வட்டாகாரச்சுற்றினுற் பெரும்புண்ணடைந்தும், இந்தக் குதிரையுடன் பந்திக்கப்பட்டவனய்க் காணப்படுகின்ற பசாசனுடைய கையாயுதத்தால் ஆயுதவடுக்கள் பட்டும், குரங்குப்படைகள் குதித்துக்குதித்துப் புறம்பிலோடிப் போய்விட்டன. மேலுமிக் குதிரையோ ஒரு நொடிக்குள்ளாக இருநூறு வானரங்கள் சிதையும்படிக்குப்பாயும். அந்தப்பசாசனுடைய கூர்மையான வேலோ? சற்றுநேரத்திற்குள்ளாகத் தனது நுனியினலே அநேககுரங்குகளை மாய்க்குமென்று மிகுந்தபலமுள்ள அந்தத்தேவர்களெல்லாம்பயந்து விட்டார்கள்.

இப்படி இடியைப்போலவும், அதிககோபமுள்ள யமனைப்போலவும், வானரர்களை வருத்தப்படுத்திக்கொண்டு உழலுகின்ற கொடுஞ்செய்கையையுடையவனுகிய அந்தப்பசாசனை, வில்வீரசிகாமணியாகிய இலக்ஷ்மணப் பெருமாள் வாயுவாஸ்திரத்தைப் பிரயோகித்து அவன்தலையை அறுத்துவிட்டார். அப்படி தலையறுந்தும் அந்தப்பசாசன் குதிரையின்மே லிருந்தபடியால் பூமியில்விழவில்லை. அவன்கைச் சூலத்தால் குத்துகிறதும் ஓயவில்லை, அந்தச்சூலமும் கொலைசெய்யாமல் நிற்கவில்லை. ஈக்களெல்லாம் நமக்கு இன்றைக்கு லாபமுண்டென்று ராக்ஷசர்களுடைய பற்களினிடத்திலுள்ள மாமிசங்களின்மீதுவந்து மொய்த்துக்கொண்டன. தென்றிசைக்கதிபனுன யமனுடைய தூதர்கள் இரணக்களத்திற்கு உயிர்களைப் பிடிக்கும்படி வந்தார்கள். இராவணனுடைய தூதுவர்கள் படைத்தலைவர்களெல்லா மாண்டார்களென்பதைச் சொல்லுகிறதற்கு இலங்கைக்கு ஓடினர்கள்.

படைத்தலைவர் வதைப் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

இருபதாவது,

மகரக்கண்ணன் வதைப் படலம்.

இப்படலத்தில் படைத்தலைவரனைவரும் தங்கள் படையோடு மாண்டதைத் தூதர்களாலறிந்து கிலேசிக்கும் இராவணனை வேண்டி மகரக்கண்ணனென்பவன் ஸ்ரீராமராற் றன் தந்தையாகிய கரன்மாய்ந்தானென்னும் வஞ்சினங்கொண்டு படையெடுத்துவர, ஸ்ரீராம ரவனுடைய வலியை விபீஷணரால‌றிந்து அவன்செய்த மாயைகளையும் அவனுயிரையும் ஒருமிக்கமாய்த்ததும், அதுகண்டுவந் தெதிர்த்த அம்மகரக்கண்ணனுக்குச் சக்கரரக்ஷகராயிருந்த குருதிக்கண்ணனையும் சங்கனையும் வானரத்தச்சனுகிய நளனும் பனசனு நாசமாக்கியதும் சொல்லப்படுகின்றது.

இராவண னேவலால் மகரக்கண்ணன் கரனென்னுந் தன்தந்தையை மாய்த்த ஸ்ரீராமர்மேல் வஞ்சினங்கொண்டு படையெடுத்துவரல்.

கவி.

சொன்னாரவர்சொற் செவிபாற்றொடர்வோன்
இன்னாதமனத்த னிலங்கையர்கோன்
வெந்நாகவுயிர்ப்பினன் விம்மினனால்
அன்னானிலைகண் டயனின்றறைவான்.

இப்படிப்போன தூதுவர் இராவணனை வணங்கி, நம்முடைய சேனையெல்லா முடிந்துபோய் விட்டதென்று சொன்னார்கள். அப்படிச்சொன்ன சொல்லானது செவியில் நுழையும்போதெல்லா மிலங்காதிபதியான ராவணன் மனவெறுப்புடன் கொடியநாகத்தைப்போலச் சீறிக்கொண்டு துக்கிக்கின்றான். அச்சமயத்தில் கரனுடைய புத்திரனான மகரக்கண்ணன் இராவணனுடைய நிலைமையைக்கண்டு, ஐயா இராவணேஸ்வரா! முன்னம் என்னுடைய தகப்பனான கரனை நெருங்கின யுத்தத்திற் கொன்றுவிட்ட அந்த ராமனைவெல்லும்படி யென்னை யனுப்பாமலும், வேறெது நினையாமலு நீரிப்படி வியசனப்படலாமா? நான்போவேனேயானால், அந்த ஸ்ரீராமனென்னெதிரேவந்தாற் கெடுதியுண்டாமென்று பயந்து ஓடிப்போய் விடுவான். ஐயா திரிபுவனேஸ்வரா! ஆகாசத்திலுள்ளவர்களாவது, பூமியிலுள்ளவர்களாவது, என்னை ஜெயிக்கும்படியான கொள்கையை யுடையவர்களோ? அஃதுமக்குத் தெரியாதோ? மேலும், என்தாயார் துக்கசாகரத்தில் மூழ்கினவளாகி எப்போதுங் கண்ணுங்கண்ணீருமாய் அழுதுகொண்டு, தன்மாங்கலியம்வாங்கச் சகிக்கமாட்டாமல் தன் கணவனைக்கொன்றவனுடைய தலைமண்டையில் தன்கடனைக் கழிக்கவேண்டுமென்கிறாள். ஆகையால் நீரெனக்குத் தயைசெய்து உத்தரவு கொடுக்க வேண்டுமென்று கேட்டான்.

கவி.

அவ்வுரைமகரக்கண்ண னறைதலுமரக்கனைய
செவ்விதுசேறிசென்றுன் பழம்பகைதீர்த்தியென்றான்
வெவ்வழியவனும்பெற்ற விடையினன்றேர்மேற்கொண்டான்
வவ்வியவில்லான்போனான் வரம்பெற்றுவளர்ந்ததோளான்.

அந்தவார்த்தையை இராவணன்கேட்டு, அப்பா மகரக்கண்ணா! நல்லகாரியஞ் சொன்னாய். அப்படியே போய் உன்பழைய பகையைத் தீர்த்துக் கொள்ளக்கடவாயென்று உத்தரவுகொடுத்தான். அந்தத் துராத்துமாவான மகரக்கண்ணனு மிராவணனிடத்தில் உத்தரவுபெற்றுக்கொண்டுதேரேறி, வரம்பெற்றுவளர்ந்த தோள்களில் வில்லைத் தாங்கினவனாகி, தன்சொந்தமான ஐந்துகோடி சைநியங்கள் தன்னைச்சூழ்ந்துவரவும், இராவணனாற் கொடுக்கப்பட்ட ஐந்துவெள்ளஞ் சேனைகளும் தனக்குப் பின்னாக மேகத்தைப்போல ஆர்ப்பரித்துவரவும், பேரிகையானது கடலைப்போலச் சப்திக்கவும், சேனா

தூளியால் மேருமலையினுடைய சிகரநுனியு மறைபடும்படிப் புறப்பட்டான். அவனோடுகூட இரத்தக்கண்ணனென்பவனையும் சிங்கனையும் இராவணன் பார்த்து,நீங்களிம் மகரக்கண்ணனுடைய குதிரைபூட்டிய தேர்ச்சக்கரத்தைக் காத்துக்கொண்டு போகக்கடவீர்களென்று நியமித்தனன். நல்லதப்படியே யாகட்டுமென்று இருவரும் ரதாரூடராகச்சென்று அவன்தேரைக்குறுகினார்கள். இப்பால் பதாதிமுதலிய சேனைகளுடனே அனைவருந் தொடர்ந்துவர, நக்ஷத்திரங்களை நட்புடன் தழுவின சந்திரனைப்போல் மகரக்கண்ணன் போயினான்.

அப்போது ஆகாசத்திலிட்ட பந்தலைப்போன்ற கொடிகள் சூரியகிரணக் கற்றைகள் முழுவதையு மறைத்து லோகத்துக்கு நிழலிடவும், கொல்லத்தக்க கோபத்தை யுடையவைகளாகிய யானைகள் தங்கள் துதிக்கையாற் சமுத்திர நீரையெல்லாம் வாரித்தூவவும், இதைப்பார்த்துச் செயசாலிகளான வானரவீரர்கள் தங்கள் யுத்தமுயற்சியைவிட்டுப் பிரமித்து நின்றார்கள். யானைகள் முழங்கின. குதிரைகள் கனைத்தன. பேரிகைக்கூட்டங்கள் சப்தித்தன. வீரர்கள் கர்ச்சித்தார்கள். இவைகளெல்லாம் அடங்கும் படியாகச்சிறுமொந்தை யோசையானது அண்டப்பித்திகை வரையிற்போய் முட்டியது. காற்றுநுழைகிறதற்குச் சந்தில்லாமையால் எல்லா ஜீவன்களும் வெந்து புழுங்கின. மகரக்கண்ணனோடு வேகமாய்வந்தசேனைகள்முந்தி போர் செய்தன. அக்கால் வானரத்தலைவர்களும், இராக்ஷசத்தலைவர்களும், அடுத்துக்கர்வித்து நெருங்கி, ஒருவரோடொருவர் கைகலந்து மலையும் வில்லும் கொண்டு யுத்தம்பண்ணினார்கள்.

இப்படியுத்த நடக்கிறபோது வண்டுகள் மொய்த்திருக்கின்ற மாலையை யணிந்த மார்பையுடையவனான மகரக்கண்ணனென்னும் பெயருடைய இடியைப்போன்றபலமுள்ள இராக்ஷசனானவன்; பெரியசக்கரங்கள் பூட்டியதன் தேரை சோலைகளும், கங்காஜலம் பெருக்கெடுக்கின்ற வயல்களும் சூழ்ந்த அயோத்தியா நாட்டை யாளும்படியான மேகம்போன்ற ஸ்ரீராமருக்கெதிராகக் குரங்குச்சேனைகளெல்லா மாளும்படி செலுத்திக்கொண்டு வந்தான். அதைக்கண்ட வானரப்படையெல்லாம் இவனிந்திரஜித்துதானோ வென்கின்ற சந்தேகமும் பயமுங்கொண்டு சிந்திச் சிதறிப்போக, வானரத் தலைவர்களெல்லா மயங்கிச் ருத்திரப்பிரதிமைபோல அம்புகள்பட்டு மூர்ச்சையடைவதானார்கள்.

மகரக்கண்ணன் தன்மனதிற்கொண்ட குரூரங்களைச் சொல்லி ஸ்ரீராமரோடு போர்புரிதல்.

கவி.

என்னுடைத்தாதைதன்னை யின்னுயிருண்டாயென்று
முன்னுடைத்தாயதீயை முழும்பகைமூவர்க்கின்றி
நின்னுடைத்தாயதன்றே யின்றதுதீர்வனென்றான்
பொன்னுடைத்தாதைவண்டு குடைந்துண்ணும்பொலம்பொற்றாரான்.

இப்படியாக வந்துநின்ற ஸ்வர்னமயமான மகரந்தங்களை வண்டுகள்குடைந் துண்ணுகின்ற பொன்னரிமாலையையணிந்த மகரக்கண்ணன் சுந்தர பாகுவையுடையவரான ஸ்ரீராமரைப்பார்த்து,நீ என்னுடைய தகப்பனுகிய கரனுடைய உயிரைப் போக்கினுயென்கின்றபழைய பெரும்பகையானது உன்தம்பிமார் மூன்றுபேரிடத்திலும் சேராமல், உன்னொருவனிடத்தில் மாத்திர மிருக்கின்றது. அதையின்றைக்குத் தீர்த்துவிடுகிறேனென்று சொன்னன்.

அப்படி மகரக்கண்ணனுகிய துஷ்டன் சொன்ன வார்த்தையை கீர்த்திக்கு வாசஸ்தானமான திருத்தோளையுடைய ஆண்பிள்ளைச் சிம்ஹமாகிய ஸ்ரீராமபிரான் நன்ருய் உற்றுக்கேட்டு, அப்பா நீதான கரனுடையபிள்ளை? உன் பிதாவைக்கொன்ற பழையபழியை நீக்குதற்காகவாவந்தாய்? ஆண்பிள்ளையாகப்பிறந்த உனக்கு அதுதகுந்தகடமைதான். இது வீரர்களுக்குத்தகுந்த வார்த்தையே என்றுசொன்னர். அப்படிச்சொல்லவே மகரக்கண்ணன் இடியிடித்ததுபோல வில்நாணைத்தெறித்துச் சப்தமுண்டாக்கி, உன்னேடு என்தந்தை செய்ய வேண்டிய சண்டையைச்செய்து முடித்து என்கோபத்தை ஆற்றிக்கொள்ளுகிறேனென்று சொல்லி, சூல்முதிர்ந்த மேகமானது சண்டமாருதத்தால் தூண்டப்பட்டு யுகாந்தகாலத்தில் மேருமலையின்மீது வருஷதாரைகளைப் பெய்ததுபோல் அஸ்திரவருஷங்களைப் பொழிந்தான். எப்படியெனில் தாமரைக்கண்ணனுகிய இரகுகுலோத்தமனது திருக்கழுத்திற்குச் சரியாய் ஆயிரம்பாணங்களைப் பிரயோகித்து, இளையபெருமாளினுடைய கவசத்தின் மீது இரண்டாயிரம் பாணங்களைத் தொடுத்து, கோபமும் பகைமையுங் கொண்டிருக்கின்ற ஆஞ்சனேயர்மீது கொடியபாணங்களை வருஷங்களைப்போல் பொழிந்து, இன்னவிடத்தி லிருக்கிறதென்று தெரியாமற்படிக்குத் தேவலோகத்தையும் பாணங்களைப் பிரயோகித்து மூடிவிட்டான். அவனெய்த பாணங்களையெல்லாம் ஸ்வாமியானவர் சில அக்கினிமுகாஸ்திரங்களை யேவித் துண்டு துண்டா யறுத்துத்தள்ளி, அந்த ஆண்மைக்குண வீரனுடைய மாலையணிந்தமார்பில் ஒரு அக்கினிபாணத்தைப் பிரயோகித்தார். அஃததிககோபத்துடனே புருவத்தை நெரித்துக்கொண்டுநிற்கின்ற அந்த ராக்ஷசவீரனுடைய மார்பிற்போய்ப் பாய்ந்து நின்றது.

அப்படி அக்கினிமயமான பாணம்பாய்ந்தும் நடுங்காமற் செவந்த சூரியகாந்திப் பூவைப்போன்ற கண்களையுடையவனுன மகரக்கண்ணன் வாயிற் புகையைக்கக்கிக்கொண்டு, தேவகீர்த்தியையுடைய ஸ்ரீராமரது கவசத்தில் ஆயிரம் வச்சிரபாணங்களைப்பிரயோகித்துக் கர்ச்சித்தான். அதைப்பார்த்துத் தேவர்களெல்லாம் ஆச்சரியப்பட்டார்கள். அப்போது சமுத்திரஞ்சூழ்ந்த பூமண்டலாதிபதியான ஸ்ரீராமமூர்த்தியானவர் நகைத்து கூர்மையான ஆறு பாணங்களைப் பிரயோகித்து, மகரக்கண்ணனுடைய பொன்மயமான பெரியதேரிற் கட்டியிருந்த குதிரையின் கால்களைத் தறித்து, அவன்கையிற்பற்றியிருந்த வில்லை இரண்டுதுண்டாக்கி,பாகன் தலையையு நிலத்தில்விழத்தள்ளினர். உடனே

மகரக்கண்ணன் தைத்தபாண மார்பில்நிற்கவும், வாயிலிரத்தம் வடியவும், தான்வரமாகப்பெற்ற மந்திரத்தினலே ஒருக்ஷணத்திற் குள்ளாக ஆகாசத்தில்மறைந்து; இடிகளையும், காற்றையும், அக்கினியையும், மேகமானது ஊழிக்காலத்தில் உலோகமெல்லா மழியும்போது சொரிகிறதுபோல வருஷித்தான். அப்போது அங்கிருந்து இடிகள் விழுந்தன. ஊழிக்காலத்தைக்காட்டிலு மிரண்டுபங்காய்ச் சண்டமாருதம் சீறிக்கொண்டு புறப்பட்டது. எங்கேபார்த்தாலும் உகாந்தமேகங்கள் அக்கினிமயமான கல்மழை பெய்தன. வானரங்களெல்லாம் அதைச் சகிக்கமாட்டாமல் தாம்செய்துநின்ற யுத்தத்தைவிட்டு நாலாபக்கங்களிலும் ஓட்டம்பிடித்தன.

இப்படி அஷ்டதிக்குகளிலும் புகைமண்டி நெருப்பைக் கக்கிக்கொண்டு சிலாவருஷம்பொழிவதினல் ஆயிரங்கோடி வானரங்கள் மாண்டுபோனர்கள். அதைக்கண்ட ஸ்ரீராமமூர்த்தியானவர் பிரமித்து, இதென்ன மாயமோ மகரக்கண்ணன்பெற்ற வரத்தின்பலமா ? என்று விபீஷணுழ்வானைக் கேட்டார். அதற்கவர், ஸ்வாமி ! இந்தமகரக்கண்ணன் செய்த தபோவல்லமைக்குமெய்ச்சி, வாயுதேவனும், வருணதேவனும், அவன்கேட்டதைத் தடுக்காமல் அவனிஷ்டப்படி கொடுத்த தெய்வாஸ்திரத்தின லிப்படி நேரிட்டதென்று சொன்னர். அதுகேட்ட ஸ்ரீராமர் அப்படியா ? இதோ ஒருநொடியில் இவைகளையெல்லா மாற்றிவிடுகிறேன். என்றுசொல்லி வாயுவாஸ்திரத்தையும், வருணுஸ்திரத்தையும், இயமஸ்வரூபமான கோதண்டத்திற் பூட்டி இராமபாணத்தோடு சேர்த்துப் பிரயோகித்தார். அம்மாத்திரத்தில் மகரக்கண்ணனலே யேவப்பட்ட சிலாவருஷமும், காற்றும், ஆகாசத்தில்நின்றும் வெந்து பெரியகடலில் வீழ்ந்து மாண்டுபோய்விட்டன. அத்தன்மையை அந்த மகரக்கண்ணன்பார்த்து, ஆகாசமுழுவதுந் தனதுருவம்போன்ற உருவத்தையுடையவனுகித் தான்மாத்திரமறைந்து, கோடிகோடியாகச் சூலங்களை வரிசை வரிசையாக எங்கும் பரப்பிவிட்டான்.

அதை ஸ்ரீராமர்பார்த்து, இஃதந்த மகரக்கண்ணனுடைய மாயமாக்குமென்று விபீஷணுழ்வானை நோக்கிக்கூறி, இப்படியாகத்தன்னுடைய மாயத்தாற்செய்தவவன் எங்கேபார்த்தாலும் அளவிட்டறியக்கூடாதஉருவத்தையுடையவனு யிருக்கின்றன். இதிலெந்ததேகம் அந்தமகரக்கண்ணனுடைய யதார்த்தமானதேகமோ தெரியவில்லை. இந்தத்துஷ்டன் விஷயத்தில் என்ன செய்யலாம் ? என்று தமக்குத்தாமே மனம்வருந்தினர்.

ஸ்ரீராமர் மகரக்கண்ணன்செய்த மாயைகளைத்தெரிந்து அவன்சிரத்தைத் தமதுபாணத்தால் அறுத்து வீழ்த்தல்.

கவி.

அம்பின்வாயாறுசோரு மரக்கன்றனருளில்யாக்கை
உம்பரிற்பரப்பித்தான்வே ரெளித்தனனென்னவோர்வான்

செம்புனற்சுவடுநோக்கி யிதுநெறியென்றுதேவர்
தம்பிரான்பகழிதூண்டத் தலையற்றுத்தலத்தனுனன்.

அம்புபட்டவழியே இரத்தவாறு ஒழுகும்படி நின்ற அந்த மகரக்கண்ணன் தன்னைப்போல அளவில்லாத உருவங்களை மாயையால், ஆகாசமெல்லா நிறைத்துவிட்டுத் தான்மாத்திரமெங்கேயோ ஒளித்துக்கொண் டிருக்கின்றானென் றுணர்ந்த தேவதேவராகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் அவ்விரத்த மொழுகிவருகின்ற அடையாளத்தைக் கண்டு, இதற்குநேராகத்தான் அந்த மகரக்கண்ணன் ஒளித்து நிற்கிறானென்று அந்தவழியாகவே இராமபாணத்தைப் பிரயோகித்தார். அப்போது அந்த மகரக்கண்ணன் தலையறுந்து பூமியில்வந்து வீழ்ந்தான். அப்படி இடியைப்போற்போன சூரிய பாணத்துடன் அந்தராக்ஷசனுடைய தேகமானது மேகத்தைப்போல இரத்தவெள்ளத்தைப் பொழிந்துகொண்டு பூமியில் வீழ்ந்தமாத்திரத்தில், அவனாற்செய்யப்பட்ட மாயையானது சூரியனுதயமா யிருளையெல்லா நீக்கின காலத்தில் நித்திரைகெட்டு அதனுடனே கனவுநீங்கினதுபோல மாய்ந்துவிட்டது.

மகரக்கண்ணனுக்குச் சக்கரரட்சகர்களாகிய குருதிக்கண்ணனையுஞ்
சிங்கனையு, நளனும் பனசனுமெதிர்த்து மாய்த்தல்.

கவி.

குருதியின்கண்ணன்வண்ணக் கொடிநெடுந்தேரன்கோடைப்
பரிதியினடுவெட்டோன்றும் பசுஞ்சுடர்மேகப்பண்பன்
எரிகணைசிந்திக்காலி னெய்தினன் றன்னேடேற்றான்
விரிகடற்றட்டான்கொல்லன் வெஞ்சினத்தச்சன்வெய்யோன்.

இப்படி மகரக்கண்ணன் மாண்டவுடனே குருதிக்கண்ண னென்பவன் அழகியகொடிகள்கட்டிய தேருடனே கோடைகாலத்துச் சூரியனுக்குநடுவே தோற்றுகின்ற மேகத்திற் கொப்பான தேககாந்தியை யுடையவனாகி, அக்கினிமுகாஸ்திரங்களைப் பொழிந்துகொண்டு சண்டமாருதக் காற்றைப்போல இரணக்களத்தில்வந் தெதிர்த்தான். அவனுடனே விரிந்த சமுத்திரத்தை மலையால் அணையிட்டுத் தடுத்தவனான நளனென்கிற வானரத்தச்சன்வந் தெதிர்த்தான். அப்படி யிருவருமெதிர்த்து நிற்கும்போது அந்தக்குருதிக் கண்ணன் வில்லைவளைத்துக் குணத்தொனிசெய்து அநேக பாணங்களை ஊழித்தீக் கொப்பாக நளன்மீது பிரயோகித்தான். அப்போது சிம்ஹத்துக் கொப்பாக இரணரங்கத்தில் நின்றிருந்த அந்தநளன் ஒருநீண்ட மராமரத்தைப் பிடுங்கி, அவன்விட்ட பாணங்களையெல்லாம் பொடிப்பொடி யாக்கினன்.

மறுபடியு மந்தக் குருதிக்கண்ணன் நளன்கையிலிருந்த மராமரத்தைத் துண்டுதுண்டாகப் பாணங்களினால் தறித்துவிட்டான். அப்படித் தறித்துவீழ்த்தின அந்தக் கொடியவனைப்பார்த்து நளனென்கிற வானரவீரன் தன் மார்பைவளைத்துக் குறுகினவனைப்போலக் காணப்பட்டு, அந்தக் குருதிக்கண்ணனுடைய சிரசின்மேற் பாய்ந்துகுதித்தான். அதைக்கண்டு தேவர்களெல்லாம்

திக்குகளுஞ் செவிடுபடும்படி யார்த்தார்கள். எரிகின்ற அக்கினிமலையின் மேல் இந்திரதனுசை நாட்டினாற்போல மிகவும் பெரிய தேகத்தையுடைய குருதிக்கண்ணன் சிரமீதுநின்ற அழகுள்ள நளனானவன் அவன்தேகமுழுவதும் இரத்தம்ஒழுகவும், அவன் வலியகண்ணிலும், மூக்கிலும், செவியிலும், மூளைவடியவும், அவன்தலை சுக்கலாய்நெரியவும், கால்களால் உதைத்துப் பூமியிலுருட்டிக் கொன்றான்.

கவி.

அங்கவனுலத்தலோடு மழற்கொழுந்தொழுகுகண்ணன்
சிங்கன்வெங்கணையன்வில்லன் றாரணிதேரின்மேலான்
எங்கடாபோதியென்று வெய்தினனெதிரிலாத
பங்கமின்மேருவாற்றற் பனசன்வந்திடையிற்பாய்ந்தான்.

அவனிறந்த மாத்திரமே அக்கினிக்கொழுந் தொழுகும்படியான கண்களையுடையவனான சிங்கனென்னும் ராக்ஷசவீரன் கையில் வில்லும் அம்பும் பிடித்துக்கொண்டு, வெற்றிமாலைபூண்ட தேருடனேவந்து, அடா வானரமே! எங்கே தப்பிப்போகின்றா யென்று கூறி எதிர்த்தான். அப்போது மேருபருவதத்துக்குச் சமமான வல்லமையுள்ள பனசனென்னும் வானரவீரன்அந்தச் சிங்கனுக்கெதிரிற் பாய்ந்தான். அப்படிப்பாய்ந்த மாத்திரத்தில் அந்தச் சிங்கனானவன் அதிதீக்ஷணமான பாணங்களைப்பொறுக்கி யெடுத்து, பனசனுடையதோளிலும், மார்பிலும், இடிக்கொப்பாகப் பத்தம்புகளைப் பதியும்படி அழுத்தினான். அப்படியழுத்தின மாத்திரத்திற் பனசனானவன் அக்கினியில் நெய்சொரிந்ததுபோலக் கோபங்கொண்டு, ஒருக்ஷணத்துக்குள்ளாக அந்தச்சிங்கனென்பவனைத் தேரோடு தூக்கினான்.

அப்படி தூக்கினவுடனே அந்தச்சிங்கன் தேரைவிட்டுக் கீழேகுதித்தான். அப்படிகுதித்த அவனுடைய மேருமலைக்கொப்பான தோற்றத்தையுடைய சிரசின்மீது பனசனானவன் அந்தத்தேரைக்கொண்டு மோதினான். அதுபட்டுக் கீழேவீழ்ந்த அந்தச்சிங்கன் ஆகாசத்திற்பாய யத்தனித்தான். அப்போது வயிரத்தோளையுடைய பனசன் அந்தச்சிங்கனுடைய ரத்தத்துடனே உயிருஞ் சோரும்படித் தள்ளிக் காலால் துவைத்துக்கொன்றான். இப்படி பூலோக சக்கரவர்த்தியாகிய தசரதமகாராஜன் புத்திரரான ஸ்ரீராமலக்ஷ்மணர்களுடைய பாணங்களினாலும், வானரச்சேனைகள் பிரயோகித்த மராமரம் - மலைகள் — இவைகளினாலும், இராவணனா லேவப்பட்ட பத்துவெள்ளஞ் சேனையு மாண்டுபோயின. அவர்களோடுகூட மாளாதவர்களான இராவணதூதர்கள் நிராயுதர்களாய் இந்தச் செய்தியைச்சொல்ல அவனிடத்திற்கு ஓடினார்கள்.

மகரக்கண்ணன் வதைப் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

இருபத்தோராவது,

பிரமாஸ்திரப் படலம்.

இப்படலத்தில் மகரக்கண்ணன் மாண்டதைச் சாரணரா லறிந்து இராவணனழைப்பிக்கவந்த இந்திரஜித்து மீட்டும்படையெடுத்துவரக்கண்ட வானரசேனைகளோட்டம்பிடிக்க, ஸ்ரீராமலக்ஷுமணர் இந்திரஜித்துவோடுவந்த அறுபதுவெள்ளஞ் சேனைகளையு மவன்கண்டு பிரமிக்கும்படி அதமாக்க, இலக்ஷுமணர் தனியே இந்திரஜித்துவைச் சூழ்ந்துநின்ற ஆயிரங்கோடி தேர்வீரர்களையு மதஞ்செய்து அவனைத்தனியனுக்க, உடனே இந்திரஜித்துவும் இலக்ஷுமணரும் ஒருவரோ டொருவர் சபதஞ்செய்துகொண்டு போர்விளைக்க, சூரிய னஸ்தமிக்கும்வேளையில் இந்திரஜித்து பிரமாஸ்திரம் பிரயோகஞ்செய்ய வெண்ணி மறைந்துபோய் இலங்கையி லிராவணனே டாலோசித்திருந்தனனுக: இப்பால் ஸ்ரீராமர் வானரசேனைகட்கு ஆகாரஞ்சேகரித்து வரும்படி விபீஷணரை ஏவ, அக்காலிராவணன் நூறுவெள்ளஞ்சேனைகளோடு மகோதரனை யனுப்ப, ஆஞ்சனேய ரச்சேனைகளையு மவற்றின்தலைவனுன அகம்பனையு நாசமாக்கி இலக்ஷுமணரைத் தேடிச்சென்று கண்டு இருட்டைநீக்கும்படிவேண்ட, அவர்பாசுபதாஸ்திரத்தாற் பலகோடி ராக்ஷசர்களையு மிருளையும் பாறச்செய்ய, அதுகண்டமகோதரன் மாயச்செய்கைவிட்டு ஆகாயத்தில் மறைய, அக்கால் முன்னமிலங்கைக்குச்சென்ற இந்திரஜித்து அத்திரயாகவிதிகளை முடித்து மேகஜாலத்தினுள் மறைந்துநிற்ப, அதுகண்ட மகோதரன் இந்திரனுருக்கொண்டு சிலராட்சசசேனைகளைத் தேவசேனைகளாக்கிக்கொண்டுபோய் இலக்ஷுமணரையெதிர்க்க, அச்சமயத்திலவன் பிரமாஸ்திரப் பிரயோகஞ்செய்ய, அதனல் இலக்ஷுமணர்-சுக்கிரீவமகாராஜன்-அங்கதன்-அனுமான்-இவர்கள்முதலாயினேர் தங்கள் சைனியங்களோடு மூர்ச்சித்துமடிய, அதைக்கண்ட இந்திரஜித்து மகோதரனேடு இலங்கைக்குப்போய் இராவணனுக் கறிவித்திருந்தனனுக: அப்பால் ஸ்ரீராமர் இந்திரஜித்துவின் பிரமாஸ்திரத்தால் மாண்டுகிடக்கிற சுக்கிரீவனுதியரையும் இளையபெருமாளையுங்கண்டு பிரலாபித்து மூர்ச்சையடைந்ததும், அதுகண்ட தேவர்களவரைத்துதிசெய்ததும், இதைச் சிலசாரணரோடி இராவணனுக்கறிவித்ததும் சொல்லப் படுகின்றது.

மகரக்கண்ணன் முதலியோர் இறந்தமையைச் சாரணர்களாலறிந்த இராவணன் இந்திரசித்தை வரவழைத்தல்.

கவி.

கரன்மகன்பட்டவாறுங் குருதியின்கண்ணன்காவற்
சிரனெரிந்துக்கவாறுஞ் சிங்கனிற்சீறுஞ்சேனைப்
பரமினியுலகுக்காகா தென்பதும்பகரக்கேட்டான்
வரன்முறைதவிர்ந்தான்வல்லைத் தருதிரென்மகனையென்றான்.

№ 5 ...ரஜித்து ... யாகமுடித்து ஆகாயத்தில் மறைந்துமேகநாதன் இந்திரன்போல இலக்குமண
ரோடுபோராடுகையில் பிரமாஸ்திரப்பிரயோகஞ்செய்தல்.



இலக்குமணாதியர் இந்திரஜித்துவின்பிரமாஸ்த்திரத்தால்மாண்டதைக்கண்ட ஸ்ரீராமர்மூர்ச்சிக்கவும்தேவர்களும் துக்கித்து,
(யுத்தகாண்டம்.) (பிரமாஸ்திரப்படலம்.) அவனைத்துதித்தல்.

இப்படியோடிய அந்தத்தூதுவர்களாற் கரன்மகனான மகரக்கண்ணன் இராமபத்திரரால் மடிந்ததையும். குருதிக்கண்ணன் நளனால் தலைநெரிந்திறந்ததையும், சிங்கனென்பவன் பனசனால் மாண்டதையும், மற்றப் பத்துவெள்ளச்சேனையும் பூமிக்குப்பாரமாக நில்லாமல் மாண்டுபோனதையும் சொல்லக்கேட்ட சாஸ்திரநெறி தவறினவனான இராவணன் சீக்கிரமாக எழுந்து, நீங்களென் குமாரனான இந்திரஜித்தனை விரைவிலழைத்துக்கொண்டு வாருங்களென்று அனுப்பினான். அவர்கள்போய் உம்முடைய தகப்பன் அழைக்கின்றானென்றதைக்கேட்ட இராவணகுமாரன் அவர்களைப் பார்த்து, ஒதுாதர்களே! திரண்ட தோள்களையுடைய ராக்ஷசவீரர்களிற் போனவர்களெல்லா மாண்டுபோனார்களோ வென்றான். அதற்கவர்களவனைப் பணிந்து, ஐயா! உம்மையல்லாமல் அனுப்பினபின் திரும்பிவரத்தக்கவர்கள் யாரிருக்கின்றார்கள்? ஐயோ! அவர்களெல்லா மாண்டுபோய் விட்டார்களென்றுசொன்னார்கள்?

இந்திரசித்து இராவணனிடத்தில்வந்து சிலவார்த்தைகூறி யுத்தகளத்திற்குச் செல்லல்.

கவி.

வணங்கிநீயைய நாய்தின் மாண்டனர்மக்களென்ன
உணங்கலையின்றுகாண்டி யுலப்பறுகுரங்கைநீக்கிப்
பிணங்களின்குப்பைமற்றை யாருயிர்பிரிந்தயாக்கை
கணங்குழைச்சீதைதானு மமரருங்காண்பரென்றான்.

அதைக் கேட்டமாத்திரத்தில் இந்திரஜித்தானவன் அதிவேகமாகத் தன் பிதாவினிடத்திற்கு வந்து வணங்கி, ஐயா! பிரதாபலங்கேஸ்வரா! உமது பிள்ளைக ளிவ்வளவு சிறுவயதில் மாண்டுபோனார்களே யென்று உமக்குக் கொஞ்சமாவது மனவருத்தமுண்டாக வில்லை. ஐயோ! குரங்குகள்தவிர இராக்ஷசர்கள் மாண்டுகிடக்கிறதை நீர்போய் இன்றாவது ரணக்களத்திற்பாரும். இனிக் கனத்தகுண்டலங்களையணிந்த சீதையும் தேவர்களும் காணப்போகின்றார்கள். என்றுசொல்லி வலஞ்சுற்றிவந்து வணங்கி, ஆயிரஞ்சிங்கங்கள் பூண்டு ஆகாசத்தையளாவிய பொன்மயமான கொடித்தேரிலேறி, போர்ப்பறைமுழங்க ரணக்களத்தை நோக்கிப் புறப்பட்டான். அவனுக்குதவியாக அறுபதுவெள்ள மிராக்ஷசப்படைகளும், யானைக்கூட்டங்களும், தேர்களும், குதிரைகளும், பெருங்கூட்டமாகக் கூடின.

அப்போது கும்பிகை - பம்பைமேளம் - மணி—பலகை - பம்பை - தாளம் - தாரை - டக்கை - உடுக்கை - புள்ளாங்குழல் - யானைமணி - ஊமைச்சகடை-இவைமுதலிய வாத்தியங்களோடு, பெரும்பேரிகை ஜெயபேரிகை முதலியவும் ஒலித்தன. யானைமேற்பறையும், பக்கமணிகளும், சமுத்திரம் போலக் கோஷித்தன. குதிரைக்கிண்கிணி மாலையும் - தேர் மணிகளும் - பிருதுக்கொடிக் கெச்சையும் - சேனைகளுடைய வீரகண்டைகளும்—வெற்றிமாலைகளும் - ஆகியவிவைகளின் முழக்கத்தோடு, கேடகங்கள் ஒன்றுடனொன்று

படு மோசையும் ஆகாசத்தை யெல்லாம் கடல்வளைந்து இரைந்தாற்போல மூடிக்கொண்டன. சங்கோசையும், குழலொலியும், எக்காளத்தொனியும், சிறுசின்னநாதமும், ஊதுகுழலின் ஆரவாரமும், சிம்ஹங்களின் கர்ச்சனையும், குதிரைகளின் அனுமானிப்பும், தேர்களின் அதிர்ச்சியும், யானைகளின் இரைச்சலும், மேகமுழக்கத்தோடு மாறுபட்டிருந்தன.

அல்லாமலும், இராக்ஷச வீரர்களுடைய வில்லிலுண்டாகும் குணடங்கார ஒலியும், அவர்கள் சப்தித்தழைக்கும் வீரவோசையும், அவர்களதட்டும் ஆரவாரிப்பும், அவர்கள்பேசும் வார்த்தையி னதிர்ச்சியும், அவர்கள் சுவாசம்விடும்போது பேசும் சத்தமும், அவர்கள் திரண்ட தோள்களைக் கொட்டுகின்ற பேரோசையும், அவர்கள் காலாற் பூமியைத்தட்டுகின்ற அரவமும், சமுத்திரவிரைச்சலையு மறைத்துவிட்டன. நான்குபக்கங்களினுமுள்ள பெரிய சமுத்திரத்துக்கொப்பான இராக்ஷசசேனைகள் நடப்பதினாற் பூமியிலிருந்து மேலெழுந்த தூளியானது ஆகாசத்தின்மேற் பறந்தபடியால், அதைப் பார்த்துப் போகானந்தக்கடலின் மூழ்கிக் களித்திருக்கின்ற தேவஸ்திரீகளுடைய பாற்கடலுக்கொப்பாகிய கண்களிற்பட அக்கண்களில்நீரானது பெருக்கெடுத்தது. ஆயிரங்கோடிவீரர்களது தேர்கள் கிரகமண்டலங்களுக் கொப்பாகச் சுற்றிவரத் தேவர்களை நடுங்கச்செய்த இந்திரசித்து ஒரு பொன்மயமாகிய தேரின்மே லேறிக்கொண்டு, எல்லாக்கிரஹங்களும் சுற்றிநிற்க நடுவே பிரகாசிக்கின்ற நாயகச்சூரியனைப் போலக் காணப்பட்டான்.

இப்படி காணப்பட்ட இந்திரஜித்தானவன் ரணக்களத்தில்வந்து சேர்ந்து, தன் சேனையை அன்றிற் பக்ஷியைப்போல் இரண்டிறகு ஸ்தானத்திலும், முகஸ்தானத்திலும், நேத்திரஸ்தானத்திலும், கண்டஸ்தானத்திலும், தேகஸ்தானத்திலும், பாதஸ்தானத்திலும், நகஸ்தானத்திலும், வால்ஸ்தானத்திலும், கிரமமாகநிறுத்தி யூகம்வகுத்து; தான்கருப்பஸ்தானத்தில் நின்று, முன்தேவேந்திரன் தோற்றுக் காணிக்கையாகக்கொடுத்து விட்டுப்போனதும், சப்த சமுத்திரங்களினுடைய பலத்தையொடுக்கி உகாந்தகாலத்திற் சப்திக்கின்ற பெருங்கோஷ்டத்தைத் தன்வயிற்றிலடக்கிக் கொண்டிருக்கின்றதுமான வலம்புரிச்சங்கைக் கையிலெடுத்து, தேவர்களெல்லாந் தலைவெடித்துப் பயங்கொள்ளும்படியாகவும், அஷ்டதிக்குஞ் செவிடுபடும்படியாகவுமூதினான். அந்தச்சங்கத்தொனியைக்கேட்டு வானரக் கூட்டமெல்லாம் பின்னிடைந்து, சிம்ஹநாதங்கேட்ட மிருகங்களெல்லாம் இருந்தவிடந்தெரியாம லோடிப்போய் விடுவதுபோல ஓடி விட்டன.

அத்தருணத்தில் இந்திரஜித்து பார்வதியை அர்த்தபாகத்தில் வைத்திருக்கின்ற உருத்திரமூர்த்தியினது மேருவில்லுக்குச் சமமான தன் வில்லைவளைத்துக் குணடங்காரம் பண்ணினான். அந்த முழக்கத்தைக்கேட்ட வானரங்களுடைய செவிகள் கிழிந்தன. நெஞ்சப்பிளந்தன. ஓடிவிடும்படியாகக் கால்கள் யத்தனித்தன. கையிற்பற்றியிருந்த மரங்களும், மலைகளும், நழுவிவிழுந்தன.

சரீரமெல்லாநடுக்கமடைந்தன. வாயெல்லா முலர்ந்துபோயின. தேகமெல்லாமயிர்க்குச் செறிந்தன. இவனாலேயல்லவோ நாமன் றிறந்து போனேமென்று சொல்லிவிட்டுச் சூரியபுத்திரனாகிய சுக்கிரீவமகாராஜனும், வாயுபுத்திரனாகிய ஆஞ்சநேயரும், அங்கதகுமாரனும், ஸ்ரீராமச்சந்திரரும், இளையபெருமாளும், சூரியசமானமாகிய திருவடிச்சுவடணிந்த கிரீடதாரியாகிய விபீஷணும்வானுமாகிய இவர்கள்முதலியவீரர்தவிர மற்றவானரங்களெல்லாம்ஓட்டம்பிடித்தார்கள். இப்படிவானரத்தலைவர் நீங்கலாகவானரசேனாசமுத்திரமானதுகரையுடைந்தோடும்வெள்ளம்போலோட்டமெடுக்க, ஊழிகாலசமுத்திர ஓசையைப்போல ராக்ஷச சேனாவீரர்கள் வீரகர்ச்சனைசெய்து நான்குதிசைகளையு மூடிக்கொண்டுஇரணக்களத்தில்நின்றார்கள். அப்போதுஸ்ரீராமமூர்த்தியும்,இலக்ஷ்மணப்பெருமாளும்,மேருபர்வதத்தைத்தோற்கடிக்கத்தக்கவரான வெற்றிமாலையைத்தரித்த ஆஞ்சநேயர் திருத்தோள்களின்மீதும், அங்கதகுமாரனுடைய புஜங்களின்மேலுமாக ஆரோஹணித்து, கருடவாஹனாரூடரான மஹாவிஷ்ணுவும், விருஷபவாகனாரூடரானஉருத்திரமூர்த்தியும், கையில்வில்லையுடையவர்களாய்ஊழிக்காலத்தில் நிற்கின்ற தோற்றத்தைப்போல அதிஉக்கிர கோபதீபிதர்களாய் நின்றார்கள். நீலன்முதலான வானரப் பெருவீரர்கள் ராக்ஷசர்களை எதிர்த்து, விருக்ஷங்களையு மலைகளையுங் கையிற்கொண்டு போர்செய்யயத்தனித்தார்கள்.

அப்போதிந்தப் பூலோகத்தையும் தேவலோகத்தையுங்காத்து ரக்ஷித்த தசரதமகாராஜ புத்திரரான ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியானவர் இனிமேல் நடக்கப்போகிற காரியங்களை யாலோசித்து அந்த வீரர்களைத் தடுத்து, உங்கள்மீது தேவதாஸ்திரங்களை அந்தத் துஷ்டன் பிரயோகிப்பானேயானால் நீங்கள் அவைகளைத்தடுக்க வல்லவர்களல்ல. அதைத்தடுக்கும் தொழிலை எங்களிடத்தில் விட்டுவிட்டு, நீங்கள் பின்னாற் சற்றேநின்று அந்தப்படைகளை நாங்கள் செய்கிற வில்வல்லமையைப் பார்த்துக்கொண்டிருங்களென்று நியமித்தார்.

ஸ்ரீராமலட்சுமணர்கள் இந்திரசித்துவினேடும் வந்த அறுபதுவெள்ளஞ் சேனைகளையுமதமாக்க, அதையவன்கண்டு பிரமித்தல்.

கவி.

அருண்முறையவருநின்று ராண்டகைவீரராழி
உருண்முறைத்தேரின்மாவி னேடைமால்வரையினூழி
இருண்முறைநிருதர்தம்மே லேவினரிமைப்பிலோரும்
மருண்முறையெய்திற்றென்பர் சிலைவழங்கசனிமாரி.

அவர்களும் அவரருளுப் பாட்டின்படி நின்றார்கள். பிறகு ஆண்தன்மையிற் சிறந்த ஸ்ரீராமலக்ஷ்மணர்களிருவரும் இராக்ஷசர்களுடைய தேரின்மீதும், பலகதியினவாகியகுதிரைகளின்மீதும், முகபடாமணிந்தயானைகளின்மீதும், ஊழிகாலத்திற்றோன்றுமிருளையொத்த பதாதிகளின்மீதும், அநேகபாணங்க

ளைப்பிரயோகித்தார்கள். இவர்கள் வில்லிலிருந்துபுறப்படுகின்ற இடிக்குச்சமமான பாணவருஷங்களைக் கண்டு தேவர்களும் திப்பிரமையடைந்துபோனார்கள். தமதுமுன்பாக வந்த இராட்சசவெள்ளங்களை இமைகொட்டுவதற்கு முன்னர் ஸ்ரீராமலட்சுமணராகிய சுத்தவீரர்கள் வில்லைவளைத்துயுத்தசாதுரியங்களைக்காட்டி இறக்கும்படியாகச்செய்தவைபவத்தைக்குறித்துஎம்மால்சொல்வதற்கு அரிதரிது மிகவுமரிது. ஆயினும் அவ்விராட்சசவெள்ளங்கள் மாண்டதுதானெப்படியிருந்ததெனில், உமாதேவியை யோர்பாகத்திருத்தியவராகிய மகா சங்காரக்கடவுளென்னும் பரசிவப்பிரபுவானவர் மகமேருகிரியை வில்லாகவளைத் தெய்தகாலத்து எவ்வண்ணம் திரிபுரமெரிந்ததோ அவ்வண்ணமாக வெரிந்துமாண்டன.

அப்போது வீரர்களுக்குள்சிறந்த வீரனான இந்திரஜித்து தேரின்மேல் வில்லைப்பிடித்தபடியே நின்று, சேனைகள் மடிந்துவிழுகிறதையும் அப்படி மடிந்துவிழுந்த பிணங்கள் மலைபோற்கிடக்கிற பூமியையும்பார்த்தான். மறுபடியும் அந்த ராமலட்சுமணர்களுடைய வில்வித்தையின் வல்லமையால் சேனைகள்மடிந்து மடிந்து விழுகின்றதென்னும் யுத்தலக்ஷணத்தையும் பார்த்தான். ஆ! ஆ! யானைகள் பட்டுப்போனவைகளோ வென்றான். இரதங்கள் முறிந்துபோனவைகளோ வென்றான். அணிவகுத்து அளவுசெய்து வந்த சேனைகளெல்லா மாண்டுபோனவைகளோ வென்றான். ஐயோ! இப்படி இறந்து போனவர்களைத் தூக்கிக்கொண்டு போகிறதற்கும் இராக்ஷசர்கள் வேறேயில்லையோ வென்றான். இப்படி ஆகாசபரியந்தம் பிணமலைகள் குவிந்துபோனதைக் கண்டு மதிமயங்கி, இங்கே சண்டைசெய்கிறபேர்க ளிருவர்தானே: ஆனாலிறந்துபோகின்ற சேனைகளைப் பார்க்கும்போது யதார்த்தமான நம்முடைய அறுபதுவெள்ளஞ் சேனையையும் சபித்துக் கொல்லுகின்றார்களோ? மற்றென்ன மோசமோ தெரியவில்லையே யென்றான்.

அல்லாவிட்டால் தங்கள் நீண்டவில்வல்லமையால் மாளும்படி யெய்து கொல்லுகின்றார்களோ? எந்த விந்திரஜாலஞ் செய்கின்றார்களோ? என்று வாய்பிதற்றிக்கொண்டு பாணவருஷங்களைப் பார்ப்பான். அதனாலொழுகுகின்ற இரத்தவாறுகளைப் பார்ப்பான். ஆகாசத்தை முட்டிக்கிடக்கிற பிணமலைகளின் உயர்வைப்பார்ப்பான். யானைத்தந்தங்க ளறுபட்டு அவைகளில்நின்று முதிர்ந்த முத்துக்குவியல்களைப் பார்ப்பான். மாண்டுகிடக்கின்ற யானைக்கூட்டங்களைப் பார்ப்பான். அந்த ஸ்ரீராம லக்ஷ்மணர்களுடைய அழகிய திருத்தோள்களைப் பார்ப்பான். பக்கங்களிலிருக்கின்ற மலைகளைப் பார்ப்பான். அவைகளைப்போல ஆகாசவரையிலுங் குவிந்துகிடக்கின்ற இராக்ஷசர்களுடைய தலைகளைப்பார்ப்பான் அந்த இரண்டு வீரசிம்ஹங்களுடைய பாணவேகங்களைப் பார்ப்பான். அந்தப் பாணங்கள்பட்டு அக்கினிப்பொறிகளைச் சிந்தி முறிந்துகிடக்கின்ற இராக்ஷசர்களுடையஆயுதப்பறிகளைப்பார்ப்பான். அவர்

கள் வில்லுகளைப்பார்ப்பான். அந்தவிற்களின் நாணிலிருந்து புறப்படுகின்ற இடியினோசையைச் செவியினாலே கேட்பான்.

ஆயிரந்தேர்களையும், போர்செய்கின்ற யானைக்கூட்டங்களையும், வெற்றி மாலையைத் தரித்திருக்கின்ற குதிரைத் தொகைகளையும், இராக்ஷசர்களுடைய பல்லாயிரந்தலைகளையும், சமுத்திரத்துக்கொப்பான ஆயுதக்கூட்டங்களையும்; துண்டுதுண்டாகத் துண்டிட்டும், தமதுவேகங் குறையாமல் அண்டத்திற் கப்பாலும்போகின்ற பாணங்களினுடைய சக்தியை ஆச்சரியப்பட்டுப் பார்ப்பான். அப்படிப்பட்ட பாணங்களுக்கு இவ்வளவென்னுங் கணக்கில்லாத விசாலத்தொகையைப்பார்ப்பான். அறுபதுவெள்ளமான ராக்ஷசவீரர்களுடைய வல்லமைக்கிசைந்தபடி எறிகின்றவைகளும், எய்கின்றவைகளும், சொரிகின்றவைகளும், ஏற்றுகின்றவைகளுமான ஆயுதங்களெல்லாம்பெருங்காடுவெந்ததுபோலச் சாம்பலாய்ப் போனவைகளே யல்லாமல், அந்த வீரர்களுக்குச் சமீபத்திலும்போகாத லக்ஷணத்தைத் தன் மனப்பூர்வமாய் ஆராய்ந்து பார்ப்பான். வயிற்றைப்பிசைந்துகொண்டோடிவந்து தங்கள் தங்கள் நாயகர்கள்மீது அவரவர்களுடைய மனையாட்டிகள் ஆகாசத்திற் செல்லுகின்ற மேகங்கள் பூமியில் வீழ்வதுபோல விழுந்து அழுதுகுழைகின்ற கூட்டங்களைப் பார்ப்பான்.

இவையல்லாமல் பற்களைக் கடித்து இடியைப்போலச் சப்தத்தை யுண்டாக்குகின்ற பிளந்தவாய்களோடுகூடிய தலைகளில்லாத முண்டங்கள் கூத்தாடுபவைகளையும், பருந்துமுதலிய பக்ஷிக்கூட்டங்கள் பூமியிலிறங்காமல் ஆகாசத்திற் பறந்துகொண்டிருக்கின்ற விதத்தையும் பார்ப்பான். அங்கத குமாரர்கள் அநேகம்பே ரிருக்கின்றார்களோ என்பான். ஆஞ்சநேயர்கள் இந்த லோகமெல்லா மிடமில்லாமல் நிறைந்திருக்கின்றார்களோ என்பான். இந்த மனிதர்க ளெங்கே பார்த்தாலும் அங்கங்கே யிருக்கின்றார்களே: இரண்டுபேர் தானோ? அல்ல தநேகம்பேர்களுண்டோ என்பான். ஆண்சிங்கங்களுக்குச் சமமான அந்த ராமலட்சுமணர்களுடைய போர்வேகத்தை இன்னபடியென்று தெரியாதவனாகி, ஆகாயத்தி லாரவாரிக்கின்ற தேவர்களைப் பார்ப்பான். அந்தத்தேவர்கள் வருஷிக்கின்ற புஷ்பவருஷங்களைப் பார்ப்பான். இடந்துடிக்கின்ற தனது தோளைப்பார்ப்பான், பார்த்த பார்த்த திக்கிலெல்லாம் பிணக்காடுகள் பரவிநிற்கின்றதைப் பார்ப்பான். இரத்தவாற்றில் யானைப்பிணங்கள் மிதந்துபோகின்றதைப் பார்ப்பான்.

இப்படி இந்திரஜித்து தனக்குத் துணையாகவந்த அறுபதுவெள்ளஞ்சேனையும் அழிந்துபோனதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு நிற்பதையும், ஆயிரங்கோடித் தேர்வீரர்கள்தவிர மற்றவர்களெல்லா மாண்டுபோனதையுங் கண்டு; முன்னமவ் விந்திரஜித்து நாகபாசத்தாற் கட்டின பயத்தினால் ஓடிப்போன வானரர்கள் மனங்கலங்கி மறுபடியும் வந்து ரணக்களத்தைச் சேராமல் அங்கங்கே சிதறுகின்றார்கள்.

ஆஞ்சநேயர் திருத்தோள்கொட்டி அட்டகாசஞ்செய் தாரவாரித்தல்.

கவி.

தளப்பருஞ்சேனைவெள்ளத் தறுபதுந்தலத்ததாக
வளப்பருந்தேரினுள்ள தாயிரகோடியாகத்
துளக்கமில்லாற்றல்வீரர் பொருதபோர்த்தொழிலைநோக்கி
யளப்பருந்தோளைக்கொட்டி யஞ்சனைச்சிங்கமார்த்தான்.

இராக்ஷசதளத்தின் அறுபதுவெள்ளஞ்சேனையுமடிந்து பூமியில்விழுந்துவிட ஆயிரங்கோடித் தேர்வீரர்கள் மாத்திர மிருந்தவல்லமையோடும் செய்த போர்க்கோலத்தை அநுமானனவர்கண்டு, அளவிடமுடியாமற் பூரித்த தமது திருத்தோளைத் தட்டிக்கொண்டு வீராஷ்டகாசஞ்செய்தார். இடிக்கொப்பாகிய அந்தச் சப்தத்தைக்கேட்டுச் சிலதேர்வீரர்கள் தேரில் நின்று மூர்ச்சையாய்ப் பூமியில்வீழ்ந்தார்கள். சில ராக்ஷசர்கள் கையிலுள்ள ஆயுதங்களைக் கீழே எறிந்துவிட்டுப் பாதசாரியாக ஓட்டம்பிடிக்க யத்தனித்தார்கள். மதில்களாற் சூழப்பட்ட லங்காபட்டணத்திலுள்ள ராக்ஷசர்களும் இந்தக் கர்ச்சனையைக்கேட்டு ரத்தங்கக்கிக்கொண்டு உயிர்சோர்ந்தார்கள்.

இதைக்கண்ட மேகத்திலும் கரியமேனியை யுடையவனான இந்திரசித்து அவர்களைப்பார்த்து, ஓ ஓ!! நீங்கள் பயந்துபோனீர்கள். இப்போதே போய்விடுங்கள். இந்த கர்ச்சனைக்குப் பலஹீனப்படத் தக்கவர்கள் இனியெப்படி கொடியயுத்தஞ் செய்யப்போகிறீர்கள்? நீங்களு முன்னிறந்துபோன அந்த வீரவான்களுடனே இப்போதே மாண்டுபோனீர்கள்போ லானீர்கள். என்று கோபித்துக்கொண்டு தனித்தேரை யுடையவனாக ஸ்ரீராமலக்ஷ்மணர்கள்மே லெதிர்த்து வந்தான். அதைக்கண்ட ஆயிரங்கோடித் தேர்வீரரும் கர்ச்சித்துக்கொண்டு நெருங்கி, பூமியுங் கிழிந்துபோய்விட்டதென்னும்படியாகவும், திக்கஜங்கள் தலைநடுங்கி மயங்கிப்போய்விடவும், ஆகாசநட்சத்திரங்கள் உதிர்ந்து விடவும், தேவர்கள் மனந்திகைக்கவும், இரணரங்கத்தில் வந்து நின்றார்கள். அப்போது மகாசாதுரிய வாசகரான இளையபெருமாள் மேகத்திற்குச் சமமான உதாரத்துவமுள்ள திருக்கைகளையுடைய வீரசிம்ஹமான ஸ்ரீராமச்சந்திரப் பிரபுவை நமஸ்கரித்து நின்றுகொண்டு விண்ணப்பம் பண்ணிக்கொள்ளுகின்றார்.

சுவாமி ! உலகத்தாரெல்லா மிவன் வெற்றிபெற்றதாகவும், இவனுடைய நாகபாசத்தாற் கட்டுண்டு அடியேன் தோற்றுப்போனதாகவுஞ் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இது யதார்த்தமே: அடியேனும் இஷ்டபந்துக்களான இவ்வானரவீரர்களைக் காக்கவில்லை. இந்தச் சண்டாளன்கட்டின பொய்க்கட்டை நீக்காமலும் போனேன். இவனைச்செயித்து வெற்றிகொள்ளாமலும் நின்றுவிட்டேன். இவனுயிரையும் போக்காமலிருந்தேன். இவ்விதைப்போதும் தீராத வசையா யிருக்கின்றது. ஆதலால், இந்திரனுக்குப் பகையாளியான இவனுடையதலையை எனது பாணத்தினால் அந்தரத்திலறுத்துத் தள்ளாமற்

போவேனேயாகுல், அடியேனே யெல்லாத் துஷ்டர்களுக்குள்ளு முதன்மைப்பட்டவனும், மனித ரெல்லாரினும் கடைப்பட்டவனுமாகக்கடவேன். சுவாமி!ஸ்வர்னவீர கண்டாமணியை யணிந்த திருவடிகளையும், அழகிய திருத்தோள்களையுமுடைய தேவரீர் சந்நிதிமுன்பாகவே இந்தத் துன்மார்க்கனுடைய தலையை அடியேனுடையபாணத்தா லறுப்பேனுனல்,நான்செய்த அடிமைத்தொழிலும் கீர்த்திபெற்ற தாகும்.

அப்படி யாகாவண்ணம் இந்தப் பெரியலோகத்தாரெல்லாம் பார்த்து நிற்கவும் அடியேனுடைய பாணமானது இவனுடைய தலையை அறுக்காமற் போகுமானுல், தேவரீருக்கு அடியேன் செய்கிற நிஷ்காமிய கைங்கரிய பிரயோசனமெல்லாம் லோகத்திற் குதவாமற்போகக்கடவது. என்று சபதஞ் செய்தார். அப்படி மஹாவீரரான இளையபெருமாள் சபதஞ்செய்யவே தேவர்களெல்லாம் எங்கள் மனவருத்த நீங்கினேமென்று ஆனந்தகோஷ மிட்டார்கள். சமஸ்தமான லோகங்களும் லோகத்துப் பதார்த்தங்களும் ஆரவாரித்தன. தருமதேவதையும் பல்லாண்டுகூறி யொலித்தது. இயமதருமராஜனும் கெக்கலிகொட்டிக் கர்ச்சித்தான். அப்போது செந்தாமரை மலர்போன்ற திருக்கண்களையுடைய ஸ்ரீராமபிரான் புன்சிரிப்புள்ள திருமுகத்துடன் அவரைப்பார்த்து, தம்பீ! நீ இவ்வளவு ஜ்ஞானத்துடனே இந்தச் செய்கையைச் செய்ய ஏற்றுக்கொள்வாயேயாகுல், நலமே: சம்ஹா ரகர்த்தாவாகிய உருத்திரமூர்த்தியும், இரக்ஷக கர்த்தாவாகிய உபேந்திர நாதரும், தங்கள் தொழிலில் வியர்த்தர்களாய்ப்போய்விட்டார்கள்.அவர்களால் இனியென்ன நடக்கப்போகின்றதென் ருசீர்வதித்தார்.

இலட்சுமணர் யுத்தகளம்புகுந்து இந்திரசித்துவைச் சூழ்ந்துநின்ற ஆயிரங்கோடி தேர்வீரர்களை அதமாக்கல்.

கவி.

சொல்லிதுகேட்டடி தொழுதுசுற்றிய
பல்பெருந்தேரொடு மரக்கர்பண்ணையைக்
கொல்வலிங்கன்னது காண்டிகொல்லெனு
ஒல்லையிலெழுந்தன னுவகையுள்ளத்தான்.

இப்படி யாசீர்வதித்த ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரரை இளையபெருமாள் சாஷ்டாங்கமாகத் தெண்டன் சமர்ப்பித்து, ஸ்வாமீ! அநேகங்கோடித் தேர்வீரர்களால் சூழப்பட்ட இந்த ராக்ஷசக்கூட்டத்தை இதோ கொன்றுவிடுகின்றேன். சற்றே தேவரீர் கடாக்ஷித்தருளுமென்று விண்ணப்பஞ்செய்துவிட்டு அதிக சந்தோஷத்துடனே புறப்பட்டார். அப்போது அங்கதகுமாரன் இடியைப்போலக் கர்ச்சித்தான். அதைக்கேட்டு மேகங்களெல்லாம் சிதறி உதிர்ந்துபோய்விட்டன. இந்திரஜித்துவின் தேரிற் பூட்டியிருந்த சிம்ஹங்களு நடுக்கமடைந்தன.ஸ்ரீயப்பதியினுடைய பாஞ்சசன்னியத் தொனியைப்போலச் சமுத்திரமும் ஆரவாரித்தது. இப்படி இளையபெருமாள்

யுத்தவரங்கத்தில் வந்து எதிர்த்துநின்ற மாத்திரத்தில் வளைதடி—மழு - சக்கரம் — ஈட்டி — தோமரம் — தண்டாயுதம் - வேலாயுதம் - முசுண்டி — சூலாயுதம் — கைவேல் — அம்புகள் — கன்னக்கோல் — இவைமுதலிய ஆயுதங்களையெல்லா மேகவருஷத்திலு மிருமடங்காக இராக்ஷசர்கள் வீசியெறிந்தார்கள்.

அப்போது வசந்தகாலத்துக்குரிய மன்மதனுக் கொப்பான சுந்தரமுள்ள ஸ்ரீராமாநுஜர் பிரயோகித்த பாணவேகத்தால் ஆகாசநட்சத்திரங்களெல்லாம் ஒருமிக்க உதிர்ந்தன. மேலுலகமுங் கீழுலகமு மறையும்படிப்பிரயோகித்த ஆயுதங்களெல்லாம் துண்டுதுண்டாய்முறிந்து வீழ்ந்தன. ஒரு பாணப்பிரயோகத்திற்கு ஆயிரந்தேர்கள் அச்சுமுறிந்து வீழ்ந்தன. அதிற்பூட்டிய குதிரைகளெல்லா மாண்டன. சாரதிகளுமிறந்தார்கள். இரதிகர்களும் தலையறுபட்டார்கள். உலோகமெல்லாந்தீயும்படி நெருப்பும், புகையும், மேன்மேலும் பொங்கின. தேர்த்தட்டுகளின் அடிமுறிந்து விழுந்தன. தேர் வண்டில்களெல்லாம் அச்சுமுறிந்து போயின. அம்புகள் பூட்டிய வில்லுகள் ஒடிந்தன. தேர்க்குத்துக்கால்களும், இரதிகர்களுடைய மார்புகளும், பிளப்புண்டன. விருதுக்கொடிகள் அற்றன. குடைகள் கிழிந்தன. வெற்றி வீரர்களுடைய முடிக ளுடைந்தன. பேரிகைகள் பீறுண்டன. மேகங்களெல்லாம் கரிந் துதிர்ந்தன.

இப்படி எவரும் - எவையும் - சின்னபின்னப்பட்டுத் தலைகால் தெரியாமற் போனபடியால், இவைகள் தேருறுப்புகள் - இவைகள் தேர்க்குதிரைகள் - இவர்கள் ரதிகர்கள் — இவர்கள்காலாள்கள் — இவர்கள் சாரதிகள் என்று வேறுபாடறிதற்கு ஏலாமற்போய்விட்டது. தகப்பன்மார் தேரிற் பிள்ளைகளுடைய தலைகள் கிடந்தன. பிள்ளைகள் தேரிற் பிதாக்களுடைய நரைத்த தலைகள் விழுந்தன. சிலதலைகள் குறியழிந்து அம்புடனே அந்தர மார்க்கத்திற் பறந்துபோயின. சில தலைகள் செவந்த ரத்தவாற்றில் அம்புபாய்ந்தபடியே சுறுமீன்கள் சமுத்திரத்தில் திரிவதுபோல ஓடின. தும்பைமாலையையணிந்த வலதுகைகள் அம்பறுத்தூணியில் நின்று மெடுக்கின்ற அம்புகளுடனே அறுந்தன. வில்லைப் பிடித்தபடியே இடதுகைகளும் ஒடிந்தன. கூர்மையானபாணங்களினால் அறுபட்டவைகளும் அடிபட்டவைகளுமான கொடிகளும், குடைகளும், மற்றவைகளும், விசாலமான கடலுக்கொப்பான இரத்தவெள்ளத்திற் பக்ஷிக்கூட்டங்கள் படிவதுபோலு மிருந்தன.

அன்றியும் யானைகளின் மேற்றவிசுகளும், அம்புகளும், தேர்களும், வளைகின்ற பெரியவில்லுகள் முதலான ஆயுதங்களும், கொடிகளும், விறகுகளாகி; இறந்தராக்ஷசர்களுடைய கண்களினின்றெழு மக்கினியிற்பாகமான பிணங்களைப்பேய்க்கூட்டங்கள்சந்தோஷத்துடன்எடுத்தெடுத்துவிழுங்கின. இலக்ஷ்மணருடைய பாணங்கள்பட்டுச் சிலதேர்களின் வண்டிகள் சில்லுசில்லாய்ப் பேர்ந்து சிதறிப்போயின. சிலதேர்கள் கயிற்றிற்கட்டிய குதிரைகள்மாண்டு

பூமியில் தலைகீழாய்ப்புரண்டு விழுந்தன. சிலதேர்கள் ரதிகனும் சாரதியுமடிய வெறுமையாய் இரணக்களத்தி லோடித்திரிந்தன. சில ரத்தினத்தேர்கள் பிரகாசிக்கின்ற ரத்தவெள்ளத்துடன்சேர்ந்து செவந்த கிரணங்களை வீசுகின்றதனால், அளவில்லாத பந்துக்களுடனே ராக்ஷச துஷ்டர்களெல்லாம் துக்கப்பட்டு மயங்கும்படி அக்கினியில் வெந்த லங்காபட்டணத்தின் மாளிகையைப்போலிருந்தன.

இப்படியிருக்கின்ற காலத்தில் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியும் ஆஞ்சநேயரைச் செலுத்திக்கொண்டு வந்து தம்முடைய கோதண்டத்தை வளைத்துச் சோனமாரியைப்போல அஸ்திரப்பிரயோகஞ்செய்தார். அப்போது தேவலோக விமானங்கள் பூமியில் விழுந்து முறிந்ததுபோல அங்கங்கே தப்பியிருந்த சிலதேர்களும் சின்னபின்னப்பட்டு அத்தேர்வீரர்களு மாண்டு போன பின்பு, இராவணகுமாரனான இந்திரசித்து மாத்திரம் ஒற்றை ரதத்துடனே நின்றான். இப்படி பலயானைகளோடு குதிரைகள்பூட்டிய தேர்களும், சிங்கங்கள்போன்ற ராக்ஷசவீரர்களும், கூட்டமாய்மடிந்து போனபிறகு, வில்லோடுங்கூடின ஸ்ரீராமலக்ஷ்மணர்களான இரண்டு வீரர்களையும் இந்திரசித்துவானவன்பார்த்து, வெகுகோபத்துடனே கொஞ்சமு மஞ்சாமல் சொல்லுகின்றான்.

ஸ்ரீராமலக்ஷ்மணர்களை இந்திரசித்து நோக்கிச் சிலவார்த்தைகூற அதற்குப் பிரதியுத்தரம் இலக்ஷ்மணரீதல்.

கவி.

இருவிரென்னொடுபொருதிரோ வன்றெனிலேற்ற
ஒருவிர்வந்துயிர்தருதிரோ வும்படையோடும்
பொருதுபொன்றுதல் புரிதிரோ வுறுவதுபுகலிர்
தருவலின்றுமக்கேற்றுள தொன்றெனச்சலித்தான்

ஒ வீரர்களே ! நீங்களிரண்டு பேர்களும் என்னோடு சண்டை செய்கின்றீர்களோ ? அல்லாவிட்டால் உங்களிருவரில் தகுதியான ஒருவர்வந்து உயிரைக்கொடுக்கின்றீர்களோ ? உங்கள் சேனைகளையெல்லாம் சேர்த்துக்கொண்டுபோர் செய்து மாண்டுபோகின்றீர்களோ ? உங்கள் மனதிலுள்ள அபிப்பிராயத்தைச் சொல்லுங்கள். அந்தப்படியே உங்களுக்கேற்ற ஒரு உத்தரவு கொடுக்கின்றே னென்றான். இப்படிச் சொன்னதைக்கேட்ட இளையபெருமாள் இந்திரசித்துவைப்பார்த்து, அடா இராவணகுமாரனே ! நீ வாளாயுதத்தாலாவது, பலம்பொருந்திய வில்வித்தையினாலாவது, மல்யுத்தத்தினாலாவது, இன்னும் உனக்குப் பழக்கமாயிருக்கின்ற எல்லாவித ஆயுதங்களினாலாவது பலங்கொண்டு நீ செய்கின்றபோரில் அபிப்பிராயப்படுகின்ற யுத்தம் ஒன்றல்ல பலவற்றையுஞ்செய்து உன்னுயிரை வாங்கும்படிச் சபதஞ்செய்திருக்கின்றேன். இது சத்தியமாகுமென்று சொன்னார். அதைக்கேட்ட இந்திரஜித்து, ஒ லட்சுமணா! உனக்கு முன் பிறந்தவனான அந்த ஸ்ரீராமனை முறை

மாற்றி உனக்குத்தம்பியாக்கி உனக்குப்பின்னாலே கொல்லுகின்றேன். அவனுக்குப் பின்பிறந்தவனான உன்னை முன்னேகொன்று அவனுக்குத் தமையனாகச் செய்து விடுகிறேன். இப்படிச் செய்யாவிட்டால் நான் ராவணனுக்குப் பிள்ளையாகப்பிறந்ததினாற் பயனென்ன விருக்கின்றது ? உனக்கிலக்குவனென்கிற பெயர் தகுதியான தென்னும்படிப் பிரகாசிக்கின்ற என்னுடைய பலமுள்ளபாணத்துக்கு உன்னை லக்ஷியமாக்கி விடுகிறேன்.

அன்றியும், என்பாணத்தை நடுவே நுழைந்து விலக்கிவிடுகிறேனென்று விருஷபவாகனரானவரான சாக்ஷாது உருத்திரமூர்த்தியே விலக்கினபோதிலும், அவரையுங்கூட என்வில்லினாற் சின்னபின்னப்படக் கலக்கிவிடுகிறேன். இவைகளையெல்லாம் உனதண்ணனாகிய அந்த ஸ்ரீராமனும் கண்ணாரப்பார்க்கப்போகிறான். என்னுடன் வந்த அறுபதுவெள்ள ராக்ஷச சேனைகளைக் கொன்றுபோக்கின நீங்களிரண்டு வீரர்களும் மனமிரங்கி வருந்தும்படி, தோஷிக்குரங்குகளாகி எழுபது வெள்ளஞ்சேனையு மாண்டு இரணக்களம் வெறுங்களமாகும்படி ஒரு க்ஷணத்துக்குள்ளாக என்னொருவில்லாலேயே முடித்துவிடுகிறேன். உன் தமையனுடைய பாணத்தாற் கொல்லப்பட்ட கும்பகருணனென்கிற பெயருடையவனான இராவணன் தம்பியல்ல நான். அந்தராவணனுடைய புத்திரனென்றுநினை. மேலும், நானொரேவீரனுக்கும், என்தம்பிமார்களுக்கும், என்சிறியதகப்பனான கும்பகர்ணனுக்கும், உன்னையும் உன்னண்ணனையுங்கொன்று உங்களிருவர்களுடைய ரத்தத்தினால் திலதர்ப்பணஞ் செய்வதாக நிச்சயித்து வந்திருக்கின்றேன். என்றுசொல்லக்கேட்ட இளைய பெருமாள் அவனைப்பார்த்துச் சொல்லுகின்றார்.

கவி.

அரக்கரென்பதோர்பெயர்படைத் தவர்க்கெலாமடுத்த
புரக்குநன்கடன்செயவுளன் வீடணன்போந்தான்
காக்குநுந்தைக்குநீசெயக் கடவனகடன்கள்
இரக்கமுற்றுனக்கவன்செயு மென்றனனிளையோன்.

அடா இந்திரஜித்துவே! இராக்ஷசரென்கிற பெயருடையவர்கள் யார் யாரோ? அவர்களுக் கெல்லாம் அபரகிர்த்தியங்களைச் செய்து ரக்ஷிக்கிறதற்குத் தகுந்த விபீஷணாழ்வான் எங்களிடத்தில் முன்னமே வந்துவிட்டான். ஒளித்துக்கொண் டிருக்கின்ற உன்தகப்பனாகிய ராவணனுக்கு நீசெய்யவேண்டிய உத்தரகிரியைகளையெல்லாம், அதிக துக்கத்துடனே அவனேவந்து நாளைசெய்யப்போகிறானென்றார்.

இந்திரசித்துவும் இலக்ஷ்மணரும் போர்செய்தல்.

கவி.

ஆனகாலையி னயிலெயிற்றரக்கனெஞ் சழன்றான்
வானம்வையமுந் திசைகளும்யாவையு மறையப்
பானல்வேலையைப் பருகுவசுடர்முகப் பகழி
சோனைமாரியி னிருமடிமும்மடி தூரந்தான்.

இவ்வண்ணம் இளையபெருமாள் சொல்லுங்காலத்து கூர்மைபெற்ற வக்கிரதந்தங்களையுடைய இராட்சச நீசனாகிய இந்திரசித்தானவன் மனங்கொதித்து, மிகவும் சுவைவாய்ந்த பாலசமுத்திரத்தையும் உண்ணும்படியாகிய அக்கினிமுகாஸ்திரங்களைத் தனது வில்லிற்பூட்டி, தேவலோகமும் பூலோகமும் மறையும்படியாக சோணமழையைக் காட்டிலும் இரண்டுபங்கு மூன்றுபங்கதிகமாகப் பிரயோகித்தான். அங்கத குமாரன்மேல் ஆயிரம்பாணமும், வாயுபுத்திரராகிய ஆஞ்சநேயர்மீது அதற்கிரட்டிப்பான பாணங்களும், மற்ற வீரசிம்ஹங்களுக்குச் சமமான வானரவீரர்கள் தேகத்தின்மேல் அநேக பாணங்களுமாகப் பிரயோகித்து, எல்லாவிடமும் பாணமயமாகும்படி நிறைத்துவிட்டான். இப்படி ராவணியான இந்திரஜித்து இராமாநுஜர்மீதும், ஸ்ரீராமபிரான் மேலும், மகா சமர்த்தர்களான வானரவீரர்கள் பேரிலும், தேகத்தை உளையச்செய்வதான கொடியபாணங்களைப் பிரயோகித்தான். அவனுடையவில் ஒருநாழிகைபரியந்த மண்டலாகாரமான பிறையைப்போல வளைந்து நின்றது. பின்புறத்திலும், முன்புறத்திலும், இரண்டு பாரிசத்திலுமாகிய நாற்புறத்தும்,அம்புகளை மத்தியானகாலத்திற்சூரியன் கிரணங்களைப் பொழிவதுபோற் பாணங்களைப் பொழியத்தீரங்கொண்ட அந்த இந்திரஜித்துவின் கைவல்லமையைக் கண்ட தேவர்களெல்லாம் பயந்து கண்களைமூடிக்கொண்டார்கள். இப்படி ராட்சசன்விட்ட பாணங்களில் தேகத்திற்பட்டவைகளையும் படாதவைகளையும் ஸ்ரீராமசகோதரராகிய இளஞ்சிம்ஹமானவர் விலக்கிவிட்டு, அவன்விடப்பட்ட தேவாஸ்திரத்திற்கு அந்தந்தத் தேவாஸ்திரங்களைப் பிரயோகித்து, அவைகளையெல்லாம் அந்த அறிவீனன்செய்த பொய்ச்சபத வார்த்தைகளைப்போல நாசமாகும்படிச்செய்து அதிவேகமாய் அவனையெதிர்த்துநின்றார்.

ஸ்ரீராமமூர்த்தியானவர் இந்திரஜித்துவின்மேற் பாணப்பிரயோகஞ்செய்கிறது தர்மமல்லவென்று வெறுமையாய் இளையபெருமாளைப் பிரியாமற் பின்னாகநின்றருளினார். இளையபெருமாளும் இந்திரசித்துவும் ஒருவரையொருவர் ஜெயிக்கநேரிடாமல், அவர்கள் பாணங்களெல்லாம் கொள்ளிக்கட்டைகளைப்போல வெந்து ஆகாசத்திற்போய்ச் சேர்ந்துவிட்டன. இருவரும் அதிக உக்கிரத்தோடு பாணப்பிரயோகஞ்செய்தலினாலே காடுகளெல்லாம் பற்றியெரிந்தன. பெரியமலைகளெல்லாம் சேர்ந்தெரிந்தன. பொன்னுலகமாகிய தேவலோகமும் எரிந்தது. சப்தசமுத்திரங்களுங் கொதித்தெரிந்தன. அவைகளிலுள்ள மலைகளும் திகுதிகென் றெரிந்தன. உலோகமெல்லாம் ஊழிகாலம்போலச் சாம்பராயெரிந்தன.

அப்போது ஆதிசேஷசயனத்தைத் துறந்து; அயோத்தியாபுரியிலவதரித்த ஸ்ரீரகுநந்தனருக்கிளையவராகிய இலக்ஷ்மணப்பெருமாள் தம்முடைய பாணங்களால் இந்திரசித்தேவிய பாணசமுத்திரங்களையெல்லாம் விலக்கிவிட்டு, ஆண்முதலைபோன்ற அந்த ராவணபுத்திரனுடைய தேரையிழுத்துக்

கொண்டு வருகின்ற ஆயிரஞ்சிம்ஹங்களையும் யமனுக்குத் தத்தஞ்செய்து விட்டார். அந்தேரழிந்த மாத்திரத்தில் சேமத்தேர் துணையில்லாமல் தேவர்களையெல்லா நாசப்படுத்தித் துரத்திவிட்டவனான இந்திரஜித்து பரிவேடமழிந்து போகத் தனித்துநின்ற சூரியனுக்கொப்பாகநின்று அவ்வழிந்த தேர்மீதிருந்தபடியே அங்கதகுமாரனுடைய வெற்றித்தோள்களின்மீதும்,இலக்ஷ்மணருடையதிருத்தோள்களின்பேரிலும், அழுந்தும்படியாக அளவில்லாதபாணங்களைக்கொட்டி, தனது பலம்பொருந்திய தனிச்சங்கத்தை யெடுத்துவாயில்வைத்து எல்லாலோகங்களு நிலைதளர்ந்து தத்தளிக்கும்படிப் பயம்மென்றூதினான்.

கவி.

சங்கமூதிய தசமுகன்றனிமகன் றரித்த
கங்கமார்பெருங் கவசமுமிற்றுடன் கழல
வெங்கொடுங்கணை யையிரண்டுருமென வீசிச்
சிங்கவேறன்ன விலக்குவன்சிலையைநா ணெறிந்தான்.

இப்படிச் சங்கநாதஞ்செய்த தசமுகனுடைய தனிக்குமாரனான இந்திரசித்து தரித்திருந்த வஜ்ஜிரகவசமானது பொடிப்பொடியாய் உதிர்ந்துபோகும்படி, ஆண்சிம்ஹம்போன்ற லட்சுமணப் பெருமாள் பத்துத்திவ்வியபாணங்களைப்பிரயோகித்து தமதுத் வில்லைக் குணத்தொனி செய்தார். இதைப்பார்த்த நீலமேக ஸ்யாமள மேணியரான ஸ்ரீராமர் செந்தாமரை மலர்போன்ற தமது திருக்கண்மலரில் ஆநந்தபாஷ்பமொழுக இளஞ்சந்திரிகையைப்போலப் புன்சிரிப்புச் சிரித்து, உலோகங்களையெல்லாம் விழுங்கிய தம்முடைய திருவாயைத்திறந்து ஓ வானரவீரர்களே! நீங்கள் யாவரும் அஷ்டகாசஞ் செய்யுங்களென்று நியமித்தார். உடனே யெல்லா வீரர்களும் லோகங்களெல்லாம் வெடித்துப்போய்விட்டனவென்னும்படி ஒருமிக்க வீரநாதஞ்செய்தார்கள். அப்போது சூரியனஸ்தமிக்கும்வேளை யாயிற்று.

அஸ்தமிக்கும் வேளையில் இந்திரசித்து ஆகாசத்தில் மறைய இலக்ஷ்மணர் இவன்மீது பிரம்மாஸ்திரம்பிரயோகிப்பனேன்று ஸ்ரீராமபிரானுடன் சொல்ல அவரதைத்தடுக்க இஃதறிந்த இந்திரசித்து தான் அப்பிரம்மாஸ்திரம் தொடுக்கும்படி இலங்கையிற் புகுந்து இராவணனிடம் யோசிக்கவருதல்.

கவி.

கண்ணிமைப்பதன்முன்புபோய் விசும்பிடைக்கரந்தான்.
அண்ணன்மற்றவனுக்கைகண் டறிகிலனாகிப்
பண்ணவற்கிவன்பிழைக்குமேற் படுக்குநம்படையை
யெண்ணமற்றிலையயன்படை தொடுப்பலென்றிசைத்தான்.

இப்படி யிருக்கிற தருணத்திற் கண்ணிமைத்துத் திறப்பதற்கு முன்பாக இந்திரசித்து ஆகாசத்திற்போய் மறைந்துவிட்டான். இளையபெருமாள் அவனுடைய உருவத்தைக் காணாதவராகி ஸ்ரீராமரைப்பார்த்து, சுவாமி! இ

வன் தேவர்களுக்குத் துன்பஞ்செய்கிறவனானபடியால் நம்முடைய சேனையையும் அழிப்பான். இப்போது ஆலோசிக்கவேண்டுவதில்லை. பிரம்ஹாஸ்திரப் பிரயோகம் செய்துவிடுகிறே னென்றார். இப்படி இளையபெருமாள் சொல்வதைக்கேட்ட ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரர் அவரைப்பார்த்து, ஆ! தம்பீ! உனக்குக்கோபம் பிறந்ததேனும் அவ்வஸ்திரத்தைத் தொடுத்துவிடாதே. அஃதிந்த மூன்றுலோகத்தையுஞ்சுட் டெரித்துவிடும். அதை யொருவருந் தடுக்க முடியாது. என்றருளிச்செய்யக் கேட்ட மகாபுத்திமானான இளைய பெருமாள் அதைப் பிரயோகிக்காமல் நிறுத்திவிட்டார்.

அப்போது மறைந்துபோய்நின்ற வஞ்சகனான இந்திரசித்து இவர்களுடைய மனோபாவத்தைத் தெரிந்துகொண்டு, தானந்தப் பிரம்ஹாஸ்திரப பிரயோகஞ்செய்ய எண்ணங்கொண்டவனாகி, இப்போது நாமிவர்களைவிட்டுப் பிரிந்துபோவது நல்லதாகுமென்று தீர்மானித்துக்கொண்டு போய்விட்டான். இவன்போகிறதைப் பார்த்துக்கொண் டிருந்தவர்களான தேவர்களெல்லாம் கெக்கலிகொட்டிச் சிரித்தார்கள். வானரர்களெல்லாம் இவ்விந்திரசித்துவினுடைய தேகத்தில் இளையபெருமாளுடைய தீட்சணியமான பாணங்கள்பட்டு ஒழுகிவருகின்ற இரத்த வெள்ளமானது மேகவருஷங்களைத் தோற்கச் செய்தனவென்றும், அவனு மெதிர்த்துநிற்கப் பயந்து ஆகாசத்தில் ஓடிப் போய்விட்டானென்றும் நினைத்தவர்களாய்; அதியுக்கிரத்தாற் பிறந்த சந்தோஷத்துடனே ஆர்ப்பரித்தார்கள்.

கவி.

உடைந்தவானரச் சேனையுமோதநீருவரி
அடைந்ததாமெனவந்திரைத் தார்த்தெழுந்தாடித்
தொடர்ந்துசென்றது தோற்றவன்யாவர்க்குந்தோன்றாக்
கடைந்தவேலைபோற் கலங்குறுமிலங்கையைக்கலந்தான்.

அன்றியும், ஓடிப்போன வானரசேனையெல்லாம் சமுத்திரமானது இரணக்களத்தில்வந்து சேர்ந்ததென்று சொல்லும்படி வந்துசேர்ந்து கர்ச்சித்துக்கொண்டு, இந்திரசித்துவைப் பின்றொடர்ந்து துரத்தின. தோல்வியடைந்துபோன இந்திரசித்து ஒருவருக்குந் தெரியாமல் மந்தரகிரியால் மத்திக்கப்பட்ட சமுத்திரம்போலக் கலக்கமடைந்திருக்கின்ற இலங்காபட்டணம் வந்து அடைந்தான். இப்பாலவ்விந்திரசித்து பிரகாசகரமான பிரம்ஹாஸ்திரத்தை இந்த வீரர்கள் நம்மேல் விடுவதற்குமுன்பாக நாமே முந்திக்கொள்ளுவோ மென்று உத்தேசித்து, அதர்வணவேத மந்திரங்களால் அஸ்திரயாகஞ்செய்யும்படி நிர்மாணித்தான். அந்தத் நிர்மானத்தை யுத்தஞ்செய்யத்தக்க தோள்களை யுடையவர்களான ஸ்ரீராமலட்சுமணர்களறியாமல், அவன்வஞ்சனைத்தொழிலையு மறந்து விட்டார்கள். சப்தித்த சேனைவீரர்களுடைய ஆர்ப்பரிப்பானது தேவலோகத்தைப்போய் அலைக்கவும், அதைக்கண்ட சூரிய பகவான் இளையபெருமாள்மீது இந்திரசித்து பிரம்ஹாஸ்திரப் பிரயோகம்

செய்வதைப்பார்க்கமாட்டேன். முன்னாக நானேமாண்டுபோகின்றேன். என்று போவது போலச் சப்தமாவென்னுங் குதிரையா லிழுக்கப்படுகின்ற தனது திரதத்துடனே மேலைக்கடலைப்போய்ச் சேர்ந்து விட்டான்.

சூரியனஸ்தமித்தபிறகு வானரசைநியங்கட்கு ஆகாரங்கொண்டுவரும்படி விபீஷணரை ஸ்ரீராமபிரா னனுப்புதல்.

கவி.

இரவுநன் பகலும்பெரு நெடுஞ்செருவியற்றி
உரவுநம்படைமெலிந்துள தருந்துதற்குணவு
வரவுதாழ்த்தது வீடணவல்லையினேகித்
தரவுவேண்டினெனென்றனன் றாமரைக்கண்ணன்.

அப்போது புண்டரீகாக்ஷராகிய ஸ்ரீராமர் விபீஷணாழ்வானைப்பார்த்து, அப்பா தம்பீ! வல்லமைபெற்ற நம்முடையசேனைகள் இராத்திரியும் பகலுமாகப் பெரும்போர்செய்து இளைப்படைந்து போய்விட்டார்கள். இவைகளுக்கு ஆகாரம் வருகிறதற்குத் தாமஸமாய்விட்டபடியால், நீயே இவர்களுக்குவேண்டிய உணவுப்பொருள்களைச் சேகரித்துக்கொண்டு வரவேண்டுமென்று நியமித்தார். அதற்கு விபீஷணாழ்வான் - ஸ்வாமீ! அப்படியே இதோ அதிசீக்கிரத்திற் கொண்டு வருகின்றேனென்று நமஸ்கரித்துப்புறப்பட்டு, தம்முடைய மந்திரிமார்களோடுங் கூடப்போய் ஒரு நாழிகைக்குள்ளாகச் சமுத்திரத்தைத் தாண்டினார்.

ஸ்ரீராமபிரான் இளையபெருமாளுடன் சிலவார்த்தைகூறி பாடி கூடாரமடைதல்.

கவி.

தெய்வவான்பெரும்படைகட்கு வரன்முறைதிருந்து
மெய்கொள்பூசனையியற்றினம் விதிமுறைவிதியால்
அய்யநானிவையாற்றினன் வருவதோராளவும்
கய்கொள்சேனையைக் காவெனப்போர்க்களங்கடந்தான்.

அத்தருணத்தில் இளையபெருமாளை ஸ்வாமிபார்த்து, தம்பிலட்சுமணா! தெய்வீகமாகிய அஸ்திரங்களுக்குக் கிரமமாக யதார்த்த பூஜைகளைச்செய்துவிட்டுப் பிறகுதான் வந்து பிரயோகிக்கவேண்டும். ஆகையால், நான்போய் அஸ்திரபூஜைகளைச் செய்துவிட்டு வருகின்றேன். நான்வருகிறவரையிலும் நம்முடைய சேனைகளையெல்லாம் பத்திரமாகக் காத்துக்கொண்டிரு. என்றுகூறி ரணக்களத்தைவிட்டுப் பாடிக்கூடாரத்தைப்போய்ச் சேர்ந்தார்.

இலங்கையில் இராவணனும் இந்திரசித்துவும் வஞ்சகமான செயல்களை யோசித்தல்.

கவி.

தந்தையைக்கண்டுபுகுந்துள தன்மையுரைத்தன்மேல்
முந்தைநான்மகன்படைக்கலந் தொரிக்குற்றமுறையும்

சிந்தையுட்புகச்செப்பின னனையவன்றிகைத்தான்
எந்தையென்னினிச் செயத்தக்க திசையெனவிசைத்தான்.

இலங்கைக்குப்போன இந்திரஜித்து இராவணனைக்கண்டு, அவ்விடத்தில் நடந்தகாரியங்களையும், தன்மேலவர்கள் முந்திப் பிரம்ஹாஸ்திரப் பிரயோகம்பண்ண யத்தனித்திருக்கிற விதத்தையும், அவனெஞ்சினுறுத்தும்படியாகச் சொல்லினான். அதைக்கேட்ட இராவணன் மனந்திகைத்து, என்னப்பனே! அப்படியா? ஆனால் நாமென்னசெய்யலாமென்று கேட்டான். அதற்கவ்விந்திரசித்து இராவணனைப்பார்த்து, ஐயா! தன்னைக் கொல்லுதற்கு ஒருவர் துணிந்தார்களேயானால் தானுமப்படியே அவர்களை முந்திக் கொல்லும்படி யத்தனிக்கலாமென்று சாஸ்திரஜ்ஞர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட யுத்தத்தை நான் செய்யப்போகிறேனென்பதை அவர்க ளறியாதபடி மறைவாயிருந்து அந்தப் பிரம்மாஸ்திரத்தை விடுகிறதே நன்மை. இது சாஸ்திரவிகிதமாகும்.

அன்றியும், நான் பிரம்மாஸ்திரம் பிரயோகிக்கப் போகின்றே னென்பதை அவர்களறிவார்களே யானால், அந்தப் பிரம்மாஸ்திரத்தைக்கொண்டே தடுத்துவிடுவார்கள். என்னை யெதிரேவரப் பார்ப்பார்களேயானால் கொன்றுபோடவும் வல்லவர்களாவர். அந்தத் தபோவான்களான அவர்களுக்கு வருத்தமென்பது கொஞ்சமாவ துண்டாகவில்லை. ஆகையால், அஸ்திரயாகஞ் செய்து அவர்கள் வாணாளை ஒரு க்ஷணநேரத்திற்குள்ளே முடித்துவிடுகிறேன். ஐயா இராவணேஸ்வரா! என்னையவர்கள் மறந்துபோய்விட்டார்க ளானதால் அவர்களோடெதிர்த்து யுத்தஞ்செய்ய அவர்கள்மீது அளவில்லாத சைநியங்களை ஏறவிட்டு, அந்தச் சேனைகளுக்குப் பின்னாக நானின்றுகொண்டுதான் இந்த அஸ்திரம் பிரயோகிக்கப்போகிறேனென்றான்.

இராவணன் ஸ்ரீராமலக்ஷ்மணரோடு போர்புரிய நூறுவெள்ளஞ் சேனைகளோடு மகோதரனை யனுப்புதல்.

கவி.

வெள்ளநூறுடை வெஞ்சினச்சேனையைவீர
அள்ளிலைப்படை யகம்பனைமுதலியவரக்கர்
எள்ளிலெண்ணிலர் தம்மொடுவிரைந்தனையேகிக்
கொள்ளைவெஞ்செரு வியற்றுதிமனிசரைக்குறுகி.

இப்படி யவ்விந்திரஜித்து சொல்லியதைக்கேட்ட இராவணன் தனக்கெதிரில் நிற்கின்ற மகோதரனைப்பார்த்து ஓமகாவீரவானே! நீ யென்மீது தயைவைத்து அதிககோபங்கொண்டனவாகிய நூறுவெள்ளஞ் சேனையையும், அதற்குத் தலைவனான பூர்வமையும் இலையைப்போலும் அச்சவடிவும்பெற்ற ஆயுதங்களையுடைய அகம்பன்முதலாக அளவில்லாத ராக்ஷசர்களையுங்கூட்டிக்கொண்டு, சீக்கிரமாகப்போய் அந்தமனிதர்களை நெருங்கிப்பெருஞ்சண்டையைச்செய்து,உன்மாயைகளெவ்வளவுண்டோ அவ்வளவுமாயைகளையும் ஏவி,மகாகொ

டுமையாகியஅந்தகாரவிருளெங்கேபார்த்தாலுநிரப்புக. நீயொருத்தன்மாத்திரமே இந்தமூன்றுலோகங்களையும்ஜெயம்பெறத்தக்கவன். ஆதலால், நீயேபோய் அவர்களைக்கோபித்துஅவர்களுயிரைவாங்கி எனக்குபகாரம்பண்ணவேண்டுமென்று சொன்னான். இப்படிராவணன்சொல்லக்கேட்ட வாள்போன்றகோரதந்தங்களையுடையவனான மகோதரன் அதிக சந்தோஷசித்தனாகி, ஐயா பிரதாபலங்கேஸ்வரா! எப்போது நீர் உத்தரவுகொடுப்பீரோ வென்று எதிர்பார்த்திருந்தேன். உத்தரவுகிடைத்தும் இனித்தாமசஞ்செய்யத் தக்கவனோ? இதோபுறப்பட்டேன். என்று அதிக உச்சாகத்துடன் அவனுடைய மலைபோன்ற தோள்களைத்தட்டி ஆக்ரமித்துத் தேர்மேல்வந்தேறினான். மலையைச்சூழ்ந்த மதத்தயானைகளைப்போல ராக்ஷசவீரர்கள் மகோதரனுக்கு உபபலமாக வந்து அவனது தேரைச் சூழ்ந்துகொண்டார்கள்.

அல்லாமலும், கோடிகோடி நூறுநூறாயிரம் என்னுங் கணக்குகளையுடையனவாகிய வெற்றிமிகுந்தயானைகள் அணியணியாகவந்துநின்றன. அந்தந்த அணிகள்தோறும் வாயுவேகத்திலு மதிவேகமாயோடுகின்ற தேர்க்கூட்டங்கள் அளவில்லாதவைகள் வந்து சேர்ந்தன, மகாபலமுள்ளவைகளான அஸ்வப்படைகளும் கணக்கற்றவைகளாய் வந்து சேர்ந்தன. ஆயுதவரிசைகளும், உயர்ந்துபருத்த இரத்நங்கள்வைத்திழைத்த ஆபரணங்களும், பிளந்த வாயிலுள்ள வக்கிரதந்தங்களும், ஆகிய இவைகளெல்லாம் அதிகப்பிரகாசமுள்ள சூரியர்களையும் சந்திரர்களையும் போலச் சொலிக்க, இவைகளுக்கு மத்தியிலுள்ள இருளைப்போல இராக்ஷசச்சேனைகளு நெருங்கிவந்தன. இராட்சசர்கள் பிடித்துக்கொண்டு வந்த விருதுக்கொடிகள் கூட்டமிட்டுக் கொழுந்துவிட்டு வளர்ந்ததுபோல ஆகாசத்தைப்போய் முட்டி, இடிகளின் சமுகங்களோடுகூடின மேகஜாலங்களையெல்லாம் துரத்திவிட்டன. அந்த ராக்ஷசர்கள் பூமி குழியும்படி காலடிகள்வைக்கு மிடங்களிலெல்லா முன்னேயூறிய ரத்தம் கொப்பளித்துப் புறப்பட்டு நிறைந்தது, உலோகங்களை மூடிக்கொண்டு பிரம்ஹாண்ட வரையிலும் தூளிசென்று அண்டங்களைச் சிருஷ்டித்தவனான பிரம்மதேவனுடைய கண்களையு மறைத்துவிட்டது.

ஆனைகளாகிய பெரியமலைகளில் நின்று மொழுகிவருகின்ற மதஜல மென்னும் பெரியநதிகள் குதிரைகளின் வாய்நுரைநீரோடு கலந்து மரங்களையும், மலைகளையு மடித்துக்கொண்டு வேகமாய்ப்போய் பெருஞ்சமுத்திரத்திற் சங்கமமாயின. மிகுந்த கோபத்தால் மடித்தவாயையும், ஒளிபொருந்திய கோரதந்தங்களையுமுடைய விராட்சசவீரர்கள் தமது வலக்கரத்திற் பிடித்த ஆயுதங்களை இடசாரி வலசாரியாகச் சுழற்றிக் கொக்கரிக்கும்போது அவ்வாயுதங்களினின்றும் எழுகின்ற அக்கினிப்பொறிகளும் ஓசையும் ஆகாயத்திற்சென்று பிரகாசித்தொலிப்ப தெத்தன்மைத்தெனில், மின்னி இடியிடித்தலையொத்திருந்தன. இராவணனால் யுத்தத்திற்கு அனுப்புவிக்கப்பட்ட நூறு வெள்ளஞ்சேனைகளும் இலங்கைக்கோட்டை வாசலிலிருந்துபுறப்படுகிறதைப்

பார்க்கும்போது, அகஸ்தியமகாமுனிவர் ஆதியிற் சமுத்திர முழுவதையும் பானம்பண்ணியிருந்ததைப் பானம்பண்ணின கிரமப்படியே மறுபடியும் உமிழ்வதைப்போ லிருந்தது. சங்கு - பேரிகை — எக்காளம் - தாளம் — ஆகியவிவைகளின் தொனியும்,வீரர்களுடைய சிங்கநாதமும், குணடங்கார ஓசையும், யானைகளுடைய முழக்கமும், குதிரைகளின்கனைப்பும், பொன்மயமாகிய தேர்களினுடைய அதிர்ச்சியும், உலோகங்களை யெல்லாம் விஷ்ணுவைப்போல விழுங்கிவிட்டன.

இந்தப்பிரகாரமாக ராட்சசப் பெருஞ்சேனைகள் ரணக்களத்திற் சேர்ந்தன. அவர்களை வானரவீரர்களெதிர்த்து, அவர்களா லேவப்பட்ட இடிக்குச்சமமான ஆயுதங்களையும் பாணவருஷங்களையும் தடுத்து, அவர்களோடு ஒருமிக்க ஆர்ப்பரித்தார்கள். கோபித்தார்கள். அதட்டினார்கள். அலக்கழித்தார்கள். மலைகளைக் கோடானுகோடிக்குமேற் கோடியுமாக வெறிய, மலையொன்றுக்கு நால்வருமைவருமாக இராக்ஷசர்கள் மாண்டார்கள். போர்செய்துகொண்டிருந்த யானைகளும், பாய்கின்ற குதிரைகளும், பொன்மயமாகிய தேர்களும், அழிந்துவீழ்ந்தன. இராட்சசர்கள் பிரயோகித்த மழு - சூலம் - சக்கரம் — கலப்பை — வாள் - வளைதடி - ஈட்டி - அங்குசம் - கோடரி — தண்டாயுதம் — நாராசம் - வேல் — எறிதடி - அம்பு — இவைமுதலிய ஆயுதங்கள்பட்டு வானரக்கூட்டங்கள் மடிந்துபோயின. முற்கரம் — இருப்புலக்கை — முசுண்டி - ஆப்புகள் — பிண்டிபாலம் — தடி — இருப்புமுள் — குறுந்தடி — கவண்கல் - இவைகளெல்லாம் வானரங்களேவின மலைகளைநொறுக்கி, அவர்களையுங்கொன்று ரணக்களத்தில் வீழ்த்தின. பிரகாசிக்கின்ற கூர்மையான ஆயுதங்களை இராட்சசர்கள் முறைமுறையாகவெய்வதாலும், பிணப்பெருமலைகள் அங்கங்கே தடைபட்டுக் கிடக்கிறபடியாலும், அழிந்த ரத்தவெள்ளங்கள்நான்கு பக்கங்களிலு மோடுகிறபடியாலும், இராட்சசர்கள் மீது வானரங்கள் எதிர்த்துப்போகமாட்டவில்லை. இராட்சசர்களும் வானரங்களின்பேரில் எதிர்கொண்டுவரக்கூடவில்லை.

அங்கு யுத்தஞ்செய்துகொண்டிருந்த வானரர்களெல்லாம் பூர்வஜென்மம் தேவர்களானபடியால், தேவலோகமடைந்தபிறகு தேவர்களுடனே சேர்ந்து திரிந்தார்கள். அவர்களை ஆலிங்கனம் செய்யவேண்டுமென்றுமோகங்கொண்டு வருத்தமுற்றிருந்த அரம்பாஸ்திரீகளெல்லாம் அவர்களைக்கண்டு ஆசைகொண்டு, தங்களாவியொன்றும்படித்தழுவி சிலநாள் பிரிந்திருந்ததுக்கந் தீர்ந்து இன்பமடைந்தார்கள். ஒளிப்பானமாயமும், வஞ்சனையும், களவும், தங்களுக்கெப்போதுங் கடமையுள்ளவைகளாகக் கொண்டு; அன்புமுதலான தருமமார்க்கத்தை மேற்கொள்ளாமலிருந்த இராட்சசர்களை ஜ்ஞானஸ்வரூபராகிய இலட்சுமணப் பெருமாளுடைய பாணங்கள் தேவர்களாகச்செய்ததனில், அப்பாணங்களைக்காட்டிலும் பவித்திரமானவைகள் வேறுஞ்சில வுண்டென்றுசொல்வது தகுதியாமோ? இயமன் தன்தூதுவர்களுடனே

அந்தரமார்க்கத்தில்வந்து நின்றான். மூன்றாம்பிறைபோன்றவளைந்தபற்களையுடைய இராட்சசர்களும், யானைகளும், தேர்களும், ஆகிய இவற்றின்மீது ஆகாசமுமிடமில்லை யென்றுசொல்லும்படி இலட்சுமணர் தம்முடைய பாணங்களைப் பிரயோகித்து, நான்குதிசைகளிலும் அந்தந்தத்திசைகளி லிருக்கிறதுபோலவே திரிந்துகொண்டிருந்தார்.

ஆஞ்சனேயர் தண்டாயுதத்தால் அகம்பனையும் அவன் சேனைகளையு நாசமாக்குதல்.

கவி.

கும்பகன்னனுண்டிட்டது வயிரவான்குன்றின்
வெம்புவெஞ்சுடர்விரிப்பது தேவரைமேனாள்
தும்பையின்றலைதுரந்தது சுடர்மணித்தண்டொன்
றிம்பர்ஞாலத்தைநெளிப்பது மாருதியெடுத்தான்

இப்படிப்பட்ட சமயத்தில் வாயுபுத்திரராகிய ஆஞ்சநேயர் கும்பகர்ணனாலே அவ்விடத்திற் போட்டு விடப்பட்டதும், ஆகாசத்தை அளாவிய வச்சிரமலையைப்போலப் பிரகாசிக்கின்றதும், தேவர்கள் தலையிலணிந்திருந்த தும்பைமாலையையறுத்து அவர்களைத் தோற்கடித்துத் துரத்தினதும், பூமியைப் பாரத்தால்நெளியச்செய்வதும்,இரத்தினமயமாய் பிரகாசிக்கின்றதுமான ஒரு தண்டாயுதத்தைக் கையிலெடுத்து;தேவர்களெல்லாரும்காற்றோ? அதுவல்ல: நெருப்போ? அதுவுமல்ல: என்று நினைக்கும்படி அதிவேகமாய் மிகுந்த கொலைத்தொழிலைச் செய்யும்படியான ஸ்வபாவத்துடனே,கோபமே ஒருருவு கொண்டதுபோல ஒருவருமளவிட்டறியக்கூடாத பெரிய ஆகாரத்துடன் இயமனே இந்தரணக்களத்திற் போர்செய்யவந்தா னென்னும்படி இராட்சசர்களைக்கொன்றார். சகலசாஸ்திரங்களுங்கற்றவரான அவ்வாஞ்சநேயர் கொடுங்கண்ணையுடையவைகளான மதயானைகளின்மேலும், வேகமாயோடுகின்ற குதிரைகளின்மேலும், வீரர்கள் செலுத்தும் தேர்களின்மேலும், கூட்டமாகிய ராட்சசர்களுடைய தேகங்களின்மேலும், அவர்களுடைய தலைகளின் மேலும் நான்குவேதங்களாலும் பிரதிபாதிக்கப்படுகின்ற செந்தாமரைக்கண்ணையுடையசர்வாந்தரியாமியாகிய திரிவிக்கிரமனிவனேயென்று சொல்லும்படியாகஇரணக்களமெல்லாஞ் சுற்றித்திரிந்தார்.

தம்மேலெதிர்த்துவந்தவர்களையும், தமதுகையிற் கிடைத்தவர்களையும், கண்களில் அக்கினிப்பொறி பறக்கும்படி கிழித்தெறிந்து; அந்தப்போர்க்களமெல்லாஞ் சேறாகும்படி நசுக்கி அவர்களுருவங்களையும் அழித்துவிட்டார். இவருடைய விக்கிரமவடிவத்தைக்கண்ட தேவர்களெல்லாம் திரிலோகங்களையுமுன்மூன்றடியாலளந்த அந்த சாக்ஷாத்காரஸ்வரூபம் இவர்தானோவென்றுசந்தேகித்தார்கள்.மதத்தயானைகளினுடைய மஸ்தகங்களைப்பிளந்து அவைகளி லுண்டாகிய முத்துக்கள் தமது திருமேனியிற்படியவும், மேகங்கள் சஞ்சரிக்கின்ற ஆகாசத்தைப்போய்த்திருமேனிமுட்டவும் விளங்கியஆஞ்சனேயர்

யுகாந்தகாலஞ் சம்பவித்தபோது சண்டமாருத மடிக்க அதனால் நக்ஷத்திரங்களெல்லாம் உதிர்ந்து தொத்திக்கொண்டு பிரகாசிக்கின்ற மேருமலையானது சூரியர்களால் சூழப்பட்டிருக்கின்றதை யொத்திருந்தார். பூமியையும் ஆகாசத்தையும் இடித்துவிட்டாரென்று யாவரு நினைக்கும்படியாகத் தமது பாதங்களாற் பூமியை ஒருதரம் யுதைத்துக்கிளம்பி, கடல்போன்றிருக்கின்றராக்ஷசப்பெருஞ்சேனையைத் துகளாய்ப்போகும்படிச்செய்து,முன்பெடுத்த கும்பகர்ணனுடைய பெருந்தண்டாயுதத்தைத் தமது வல்லமையுடன் கையிற்பிடித்து, யானைகள் – தேர்கள் – குதிரைகள் - முதலாகிய யாவையும் குழம்பிப்போகும்படி யடித்து, அவற்றின்மேலேறிவந்தவர்களுயிரைப்போக்கி வீரகர்ச்சனைசெய்து தமது மனக்கோபத்தை மாற்றிக்கொண்டார்.

நூறாயிரம் யானைகளை ஒருநாழிகைப்பொழுதுக்குள்ளாக இரத்தவெள்ளமா யோடும்படி அரைத்து, அநேகமாயிரஞ்சிங்கங்களைப்போ லெதிர்த்துவந்த வெற்றிபெற்ற ராக்ஷசவீரர்களையெல்லாம் காலினுலெற்றி, ஒருவருமிவ்வளவுபலமுள்ளவரிவரென்று தம்மையறியவொட்டாமல் கொல்லுகிறதற்குப் புறப்பட்ட திக்கெஜம்போல அந்தரணக்களமெங்குந் திரிந்துகொண்டிருந்தார், விருஷபத்தைப்போல வருகின்ற தேர்வீரர்களையும்,சிம்ஹத்தைப்போலவருகின்ற குதிரை வீரர்களையும், மேகம்போலக் கரியநிறத்தை யுடையவர்களையும், மழையைப்போலக் குமுறுகின்ற கர்ஜிதத்தையுடையவர்களையும், அநேகவிதமான யுத்தசாஸ்திரசமர்த்தர்களையும்,எங்குஞ்செயம்பெற்றுக்கீர்த்தியுடையவர்களா யுத்தஞ்செய்யவந்து தம்மைச்சூழவளைந்தவர்களையும், தம்மோடெதிர்த்துவந்த ராட்சசவீரர்களையும், வீரசுவர்க்கம் அடையும்படியாகக் கதையைச் சுழற்றி அடித்து நசுக்கிவிட்டார். சுக்கிரீவமகாராஜன்–நீலன் – அங்கதப்பெருமான் – சாம்பவன் – பனசன் – இவர்முதலாகச் சொல்லப்பட்ட வானரவீரர்களெல்லா மிகுந்த கோபவெறிகொண்டவர்களாகிப் போர்க்களத்திற் புகுந்து, ஒருவரையொருவர் காணுதவர்களாகி இராட்சசப்பெருங்கடலில் மறைந்துநின்றார்கள்.

இப்படி பெருந்தொகுப்பாகக்கூடியிருக்கின்ற இராக்ஷசப்பெருவெள்ளத்தை அப்படியப்படியே வாரிவாரி யெறிந்து நகாயுதத்தினலே இரணியாசுரனுடைய மார்பைப் பிளந்துகொல்ல நரசிம்ஹ மூர்த்தியானவர் நடந்ததுபோல மிகுந்த ராக்ஷசசேனைக்கடலில் நுழைந்து தமது தண்டாயுதத்தினலே அவர்களையெல்லாம் கொன்று திரிகின்ற வாயுபுத்திரனுனவர், வீரசம்பத்தை யுடையவனுன அகம்பனென்னுமிராக்ஷசவீரனை யெதிர்கொண்டார். முன்னுல் தாருகாசுரனென்னும் பெயரையுடையவனுகி, வில்வீரரான சுப்பிரமணியரோடெதிர்த்து அவருடையவெற்றிவேலால் மாண்டுபோய் இப்போது அகம்பனென்னும் பெயரையுடையவனுகப் பிறந்த அந்தராக்ஷசன் இவரைப்பார்த்து, மலையையொத்த ஆயிரங்கழுதைகள்பூண்டு மனோவேகத்திலுமதிவேகமாய்ப் போகத்தக்க பெரியதேரையும் வில்லையு முடையவனுய்வந்து,

முப்பத்துமுக்கோடிதேவர்களுக்கும் தலைவனாகிய தேவேந்திரனும், சத்துருக்களைச் சம்ஹரிக்கின்ற சக்கராயுத தாரியாகிய ஸ்ரீவிஷ்ணுமூர்த்தியும், முப்புரங்களை எரித்தருளிய உருத்திரமூர்த்தியும்தவிர மற்றவர்களிந்தக் குரங்குடனே யுத்தஞ்செய்யக் கற்றூர்களேயானால் யமனுக்கிரையாவார்கள். ஆகையால் இந்தக்குரங்கை நான் தடுக்காமற்போவேனேயானால் இந்தச் சப்தசமுத்திரங்கள்சூழ்ந்த பூலோகத்திலுள்ளஇராக்ஷசர்களென்னும் பெயரையுடையவர்களையெல்லாம் இக்குரங்கே மாய்த்துவிடும். என்று மாமிசமுள்ளதேகங்களில் தடையிலாது ஊடுருவிச்செல்லும்படியாகிய அஸ்திரவருஷங்களைப் பொழிந்துகொண்டு அதிககோபத்துடனேயெதிர்த்தான்.

அப்போது நட்சத்திர மண்டலமளவும்உயர்ந்திருக்கின்ற பலம்பொருந்தியதோள்களையுடைய ஆஞ்சநேயரும் வேகமாகஎதிர்த்துவந்தனர். இரதகஜதுரகபதாதிகளு நெருங்கிப் பகைத்துநிற்க யுகாந்தகாலமேகமும், ஊழித்தீயும், சண்டமாருதமும்பொங்கிவந்த பிரளயகாலம்போல வாரிட்டிறுக்கிய வீரக்கழலையுடையஅகம்பனுநெருங்கிவந்தனன். உடனேவச்சிரமலையைப்போன்ற திருத்தோள்களையுடைய தாம் அத்தண்டாயுதத்தைக் கிறுகிறென்று சுழற்றி; அவனுலெறியப்பட்டவைகளும், வீசப்பட்டவைகளும், பிரயோகிக்கப்பட்டவைகளும், எய்யப்பட்டவைகளும், சொரியப்பட்டவைகளு மாகிய வெல்லாவாயுதங்களும் கிரமக்கிரமமாக முறிபட்டுச் சிதறிப்போகும்படித்தூள் தூளாக்கி; தேவர்கள் சந்தோஷிக்கவும்,இராட்சசர்கள் வதையுண்ணவும், கற்றிருக்கிற தண்டாயுத வித்தையைக்காட்டினூர். உகாந்தகாலச் சண்டமாருதத்தினுலும் அசையமாட்டாத மேருவையொத்த ஆஞ்சநேயர் அகம்பன் பார்த்துக்கொண்டிருக்கும்போதே பத்துக்கோடி யானைகளையும், பத்துக்கோடி குதிரைகளையும், எண்ணற்றதேர்களையும், மூன்றும்பிறையையொத்த வக்கிரதந்தங்களையுடைய அளவற்ற ராட்சசக்கூட்டங்களையும்,பொடிப்பொடியாய்நொறுக்கிக் கொன்றுவிட்டார். அப்போது அகம்பன் இராட்சசர்கள் மாண்டுகிடக்கின்ற படுகளத்தைப்பார்த்து, வாயிலுங் கண்ணிலும் அக்கினியுடன் புகையைக்கக்கிக்கொண்டும், விருதுக்கொடி கட்டியிருக்கின்ற தேரைச் செலுத்திக்கொண்டும், பாணவருஷங்களை மழையிலுமூன்றுபங்கதிகமாய்ப் பிரயோகித்துக்கொண்டும், அதிவேகமாய்வந்து மலையைப்போலமோதி மேகத்தைப் போலக் கர்ச்சித்தான்.

இப்படி வந்த அகம்பனனவன் இடியைப்போன்றவைகளும், நெருப்புப் பொறிகளைக்கக்குகின்றவைகளும், இரண்டுபக்கத்திலும்கழுகைப்போலச்சிறகுகளையுடையவைகளும், தேவர்களுடையமார்பைப் பிளந்தவைகளும், பொன்வடிம்பு கட்டினவைகளும், நீண்டகணுக்களை யுடையவைகளுமான பாணங்களை அனுமானுடைய தோளின்மேலும், மார்பின்மேலும், அபரிமிதமாகச் சொரிந்தனன். அம்மார்பிலும், தோளிலுந் தைத்த பாணவாய்களின்வழியாக இரத்ததாரைகள் வடியத் தேகமெல்லா நடுக்கங்கொண்டு

நிற்கின்ற வாயுபுத்திரரானவர் – அந்தவருத்தம் நீங்குவதற்கு முன்பாக அகம்பனுடைய தேரிற்பூட்டி யிழுக்கப்பட்ட கழுதைகளையும், அத்தேர்த்தட்டையும், சின்னபின்னப்படுத்தி; சாரதியையு மாண்டுவிழும்படித்தமது கைத்தண்டத்தினால் மோதியறைந்தார். அதனைமலையினாலே செய்துவைத்தது போலுந் தேகத்தை யுடையவனான அந்த அகம்பன்பார்த்து, வில்லினாலிவனை ஜெயிக்கிறது அருமையென்று தனது மல்லுயுத்தப் பழக்கங்கொண்ட தோள்வல்லமையினாலே தெய்வத்தச்சனுடைய சிற்பவேலையால் செய்ததான ஒரு பெருந் தண்டத்தைக் கையிலெடுத்துக்கொண்டு கடலைப்போலக் கர்ச்சித்து, இன்றைக்கிவனை விண்ணாட்டிலேற்றி இலங்காதிபதியான ராவணேஸ்வரனை வெற்றியாளனாக்கி அந்த இரண்டுமனிதர்களையும் வெறியவர்களாக்கித் தேவர்களுக்குப் பெருந்துக்கத்தை யுண்டாக்கிவிடுகிறேனென்று மாருதியைக்கிட்டிநெருங்கினான்.

அவரு நல்லது வாவென்று சமீபித்துவர ஒருவரையொருவர் முட்டித் தாக்கினார்கள். இடசாரி வலசாரியாகத் திரிந்தார்கள். ஒவ்வொருவரும் வீரகர்ச்சனைசெய்தார்கள். அவரவர் தங்கள்தங்கள் புஜங்களைத்தட்டினார்கள். ஒருவரையொருவர் கிட்டினார்கள். ஒருவரையொருவர் முட்டினார்கள். ஒருவரையொருவர் கீழேதள்ளினார்கள். ஒருவரையொருவர் மேலேதூக்கிக் கிறுகிறென்றுசுற்றினார்கள். மறுபடியுங்கிட்டி நெருங்கினார்கள். பின்னுநீங்கிச் சற்றே ஆயாசமுற்றார்கள். ஒருவரையொருவர்முட்டி விலக்கினார்கள். ஒருவரையொருவர்கட்டித் தழுவினார்கள். ஒருவர்மேல் ஒருவர்பாய்ந்தார்கள். மீட்டுந் தரையிற்குதித்து ஒருவரையொருவர் கிட்டிப்பற்றினார்கள். மறுபடியும் ஒருவரையொருவரோங்கி அறைந்தார்கள். அந்தவறையை ஒருவருக்கொருவர் தங்கள்மேல்படாதபடி காத்துக்கொண்டார்கள். ஒருவரையொருவர் கொல்லமுடியாமல் ஒட்டிநின்றார்கள். ஒருவரை யொருவர்தாக்கி வட்டமாகச்சுற்றி முட்டினார்கள். இப்படியிருவரு மல்லயுத்தஞ்செய்யும்போது கருநிறத்துடனேபகைகொண்ட நிறத்தையுடையவனான அகம்பனுடைய வச்சிரத்தையொத்த மார்பில் பொய்யுடன் பகைகொண்டுநின்ற தர்ம்மகுணவானான ஆஞ்சனேயர் பாய்ந்து, தண்டத்தினால் மோதியடித்தார். அப்போது துஷ்டனான அகம்பன் அவ்வடியைத்தன் தண்டத்தினால் தட்டிவிலக்கினான். அப்படி விலக்கினமாத்திரத்தில் அவனுடைய கையுமுறிந்து தண்டாயுதமும் பொடிப்பொடியாய்ப் போர்க்களத்தில் விழுந்துவிட்டது.

இப்படி வலதுகையோடு தண்டாயுதமுமிற்று வீழ்ந்தவுடனே கடலைப்போலக் கலங்கிநடுங்கின தேகத்துடனே நின்ற அந்த அகம்பன் பலம்பொருந்திய தன் இடதுகையாலோங்கி அநுமானுடைய வெற்றிமாலையணிந்த திருமார்பில் அடித்தான். அந்த அடியானது வச்சிரமலைமேல் விழுந்த இடியைப்போ லிருந்தது. அப்போது ஆஞ்சநேயர் தமதுகையில் இடிக்குச்சமமான தண்டத்தைப் பிடித்திருந்தும், அதனாலே யவனையடித்தால் அதர்ம்மமாகுமே:

வெறுங்கையாய் நிற்கின்றானே: என்று உதட்டைமடித்துத் தாமும் அவனைப் போலவே இடதுகையால் அகம்பனுடையமார்பிலே குத்தினர். குத்தினமாத்திரமே முன்குடித்திருந்துகக்குகிறதுபோல இரத்தத்தைக் குபுகுபென்று பெருவெள்ளமாய்க்கக்கினான்.

கவி.

மீட்டுமெக்கையால்வீசிச் செவித்தலத்தெற்றிவீழ்த்தான்
கூட்டினனுயிரைவிண்ணோர் குழாத்திடையரக்கர்கூட்டம்
காட்டில்வாழ்விலங்குமாக்கள் கோளரிகண்டவென்ன
ஈட்டமுற்றெதிர்ந்தவெல்லா மிரிந்தனதிசைகளெங்கும்.

அம்மாத்திரத்தில் நமதாஞ்சனேயர் அவ்விடதுகையாலேயேஓங்கிக்கன்னத்திலோரறையறைந்துகிழேதள்ளி,அவனுயிரை வீரசுவர்க்கத்தில்வசிக்கும் தேவர்களுடனே சேர்த்துவிட்டார். மற்றக்கூட்டமாய்வந்த ராக்ஷசர்கள் காட்டில்வாழ்கின்ற மிருகங்களும், யானைகளும், சிம்ஹத்தைக் கண்ட தன்மையைப்போலச் சின்னபின்னப்பட்டு, திக்குத்திக்குகளாக ஓட்டம் பிடித்தார்கள். இப்படி யொருபக்கத்தில் அநுமான்கையால் அகம்பனுமடிந்து மண்மேல் விழுந்து விட்டான். அவனுடன் வந்த ராக்ஷச சேனைகளு மாண்டுபோனார்கள். வானரவீரர்களெல்லாம் திரும்பிவிட்டார்கள். மற்றொரு பக்கத்தில் இளையபெருமாள் வருஷிக்கின்ற அம்புகளால் சிங்கமுதலியவைகள் கட்டியிழுக்கின்ற கொடிகள்கட்டின தேர்களும், துதிக்கைகளை யுடையயானைகளும், குதிரைகளு மாண்டுபோயின.

ஆஞ்சனேயர் அவ்வர்த்தராத்திரியில் ஒருவரையுங்காணாது வருந்தி இலக்ஷ்மணரைத் தேடிக்கொண்டு வழியிலுள்ள காட்சிகளைக்கண் டவரிடஞ் செல்லுதல்.

கவி.

ஆர்க்கின்றகுரலுங்கேளா னிலக்குவனசனியேற்றைப்
பேர்க்கின்றசிலையிநாணின் பேரொலிகேளான்வீரர்
யார்க்கின்னலுற்றதென்ற துணர்ந்திலனிசைப்போரில்லைப்
போர்க்குன்றமனையதோளா னிளையதோர்பொருமலுற்றான்.

மகமேருகிரிமலைக்குச் சமானமாகி யுத்தத்தில் வல்லமைபெற்ற திருத்தோள்களையுடைய ஆஞ்சனேயர் - யுத்தகளத்தில்வானரவீரர்கள் அங்கங்கு ஆரவாரிக்கின்ற சப்தத்தையுங் கேட்டாரில்லை. இடியேற்றையும் பழிக்கும்படிப் பேரொலியைப்போலு முழக்குகின்ற இலக்ஷ்மணரது வில்லினொலியையுங்கேட்டாரில்லை. எந்தவெந்த வீரர்கட்கு என்னவென்ன துன்பம்வந்ததோ அதையுமறிந்தாரில்லை. இவ்வண்ணம் நடந்ததென்று தமக்கு யாதொருவரும்வந்து சொல்வாருமில்லை. ஆனபடியால், யாதுசெய்வார் தனக்குள்ளடங்காத பெருங்கவலைகொண்டு துக்கமுற்றனர். விசாலித்திருக்கின்ற ராக்ஷசசேனைகள் தெற்குமேற்காகக் கடலைப்போலிருக்க, எழுயோசனைக்கப்பால் அங்கதகுமாரன் போனான். அவனுக்கப்பாற் பதினான்குயோசனையில்

சுக்கிரீவமகாராஜன் போயிருந்தார். அதற்கப்பால் இருபத்தெட்டுயோசனை தூரத்தில் ஸ்ரீராமாநுஜர் எழுந்தருளியிருந்தார். வானரவீரர்க ளெல்லா நான்குயோசனை தூரமும் ஐந்துயோசனை தூரமுமாக யுத்தஞ்செய்துகொண்டு போயிருந்தார்கள். மற்றவானரசேனைகள் இரண்டுமூன்று காதத்திற்கப்பால் நீர்மேற்பாசிபோல இராட்சசசேனைகளுக் கிடையிடையே கூடிநின்றார்கள்.

இப்படியிருக்க வாயுபுத்திரர் இளையபெருமாள் எங்கேயெழுந்தருளி யிருக்கின்றாரோ அவ்விடத்திற்கு வேகமாய்ப் போகவேண்டுமென்னும் ஒருவருத்தமானது மனதையெழுப்ப, அதனாலவர் ஊழிக்காற்றைப்போற் போகும்போது தேகங் களைத்துவிடவும் அந்தக்களையை யாற்றிக்கொண்டுபோகின்றவர் தமது கண்ணில் அநேகவிதமான குறிகள்படக்கண்டார். அவை யாவையெனில்—ஆனைத்தந்தங்களையும், மயிற்பிச்சங்களையும், பூமாலைகளையும், இரத்நங்களையும், முத்துமாலைகளையும், வாரிவீசிக்கொண்டு, மீன்களைப்போல அங்குமிங்கும் ஆயுதங்கள் பிரகாசிக்க வெளுத்தகுடைகளாகிய நுரைகளையுடைய இரத்தவாறுகளைக் கண்டார். திக்குத்திக்குகளாகப் போய்ப் போரிடுகின்ற இராக்ஷசர்கள்மீது பிரயோகித்த அம்புகள் அவர்கள் தலைகளையறுத்து ஆகாசத்தில்வீச, அவைகள் அண்டப்பித்திகையில்முட்டிப் பெருங்கோஷமிட்டுக்கொண்டு லோகமெல்லா மதிரும்படியாக ஊழிக்காலத்திற் பொழிகின்ற சிலாவருஷம்போல விழுகின்றவைகளைக் கண்டார்.

இன்னும்பெரிய வேலாயுதத்தைக் கையிற் பிடித்திருக்கின்ற இராக்ஷசர்களேவின ஆயுதங்கள் இலக்ஷுமணர்விட்ட அம்புகளால் துண்டுதுண்டாகி அக்கினிப்பொறியுடன் நக்ஷத்திரங்கள் ஆகாசத்திலிருந்து இருள்கெடும்படி விழுவதுபோலவும், கானகத்திற்பற்றின நெருப்பைப்போலவும், நாலாபக்கங்களிலும் சுடுகின்றதைக்கண்டார். தயாளுவான இலக்ஷுமணப் பெருமாளுடைய பாணங்கள் ஆகாசமுழுவதும் ஜொலித்துக்கொண்டு, அக்கினிகளைக் கக்கித் தேவர்களெல்லாம் பார்க்கும்படியாக இருளைத்துரத்தி மயானத்தில் நிர்த்தம் பண்ணுகின்ற எட்டுத்தோள்களையுடைய சாம்பசிவமூர்த்தியினது சுருண்ட சடைக்கற்றையைப்போலப் பிரகாசிக்கின்றதைக் கண்டார். நெய்விட்டுக்கொளுத்தப்பட்ட நெருப்பைப்போல இராக்ஷசர்களுடைய மலையையொத்த தேஹத்திலிருந்தும் இரத்தம்வடிய, கவந்தங்கள் கூட்டங்கூட்டமாக இராத்திரிகாலத்திற்குக் கைவிளக்கேற்றினாற்போற் கூத்தாடுகின்றதைக் கண்டார்.

இதன்றி பிரம்ஹகல்ப பரியந்த மெண்ணித்தொகை செய்தாலு முடியமாட்டாத வெண்ணிக்கையுள்ள வீரர்களில்லாமல் திரிகின்ற யானைகளும், குதிரைகளும், தலைவர்கள்மாண்ட தேர்களும், இரக்ஷிக்கின்ற ராஜனில்லாத நாட்டிலுள்ள குடிகளைப்போலத் திரிகின்றசெயலைக் கண்டார். இதழ்விரிந்த பூமாலையைத்தரித்த திருமார்பையுடைய இளையபெருமாள் பலம்பொருந்திய அஸ்திரவருஷங்களை மேகத்தைக் காட்டிலு மூன்றுபங்கு அதிகமாகப்

பிரயோகித்து யுத்தஞ்செய்ய, அழிந்துமாண்ட ராக்ஷசர்களுடைய தேகமலைகளையும், இரத்தக்கடல்களையும், முறிந்துகிடக்கின்ற ஆயுதக்காட்டையும் கண்டார். ஊழிகாலச் சண்டமாருதம்போல அதிவேகமாய் இலக்ஷுமணரைத் தேடிக்கொண்டு போகின்ற ஆஞ்சநேயர் அவ்விரத்தக் கடலையெல்லாந் தாண்டினபோது, பிரம்ஹாண்டத்தையும் கிழித்துவிட்ட தென்னத்தக்க ஓர் வில்லினோசையைக்கேட்டு இலக்ஷுமண ரிருக்கின்ற இடத்தைக்கண்டுபிடித்தோமென்னுஞ் சந்தோஷத்தினாலே யுகாந்தகாலத்துப் பெரும்புறக்கடலின் கோஷத்திலுமிரண்டுபங் கதிகமாகக் கர்ச்சித்தார்.

இளையபெருமாள் தம்மைக்கண்டாரவாரித்த ஆஞ்சனேயரைக் கட்டித்தழுவி வானரவீரர்களெங்கேயென வினவல்.

கவி.

ஆர்த்தபேரமலைகேளா வனுகினனனுமனெல்லார்
வார்த்தையுங்கேட்கலாகு மென்றகமகிழ்ந்துவள்ளல்
பார்ப்பதன்முன்னம்வந்து வணங்கினன்விசயப்பாவை
தூர்த்தனையிளையவீரன் றழுவினனினையசொன்னான்.

இவ்வண்ணம் ஆர்ப்பரித்துக்கொண்டு அநுமானனவர் சமீபத்தில் வந்தமாத்திரத்தில் இலக்ஷுமணரானவர் சரிசரி அனுமார்வந்து விட்டார். இனி வானரவீரர்களினது க்ஷேமசமாச்சாரங்களை யெல்லாங்கேட்டுத் தெரிந்துகொள்ளலாமென்று சந்தோஷித்து அவர் வருந்திசையைத் திரும்பிப்பார்ப்பதற்குமுன்னமே அதிசீக்கிரமாகவந்து தமது திருவடிக்குத்தீர்க்க தெண்டன்சமர்ப்பித்தார். அப்படிதெண்டன் சமர்ப்பித்த விசயலக்ஷுமியின் காமுகராகிய அநுமாரை இளையபெருமாள் கட்டித்தழுவி, ஐயா அநுமானே! நம்முடைய வானரசேனையெல்லாமெங்கே? சூரியகுமாரனான சுக்கிரீவமகாராஜன்நம்மைப்பிரிந்த விதமென்ன? அங்கதகுமார னெங்கேயிருக்கிறான்? மிகுந்த விருளாயிருக்கிறபடியால் இந்த ராக்ஷசச்சேனைக்கடலில் நடந்ததொன்றும் எனக்குத்தெரியவில்லை. அதனைச் சொல்லக்கடவீரென்றுவினவ அஞ்சனைகுமாரர்தமது சிரசிற் கையைக்கூப்பிக்கொண்டு நின்று, ஸ்வாமி இராமாநுஜரே! அங்கங்கேபோன வீரர்கள்போய்ச்செய்த விதமும், அவர்கள் யுத்தஞ்செய்து பெற்றஜெயாபஜெயமும் அடியேனுக்குந் தெரியாது. நடந்தகாரியங்கள் போனவீரர்கள் வந்தால்தான்தெரியும். என்று சலசமுத்திரத்தையும் ஐந்திர வியாகரணக்கடலையுந் தாண்டின ஆஞ்சநேயர் விண்ணப்பம்பண்ணிப் பின்னுமிலட்சுமணரைப்பார்த்துச் சொல்லுகின்றார்.

இலட்சுமணரை ஆஞ்சனேயர் பாசுபதாஸ்திரம் பிரயோகித்து இருளைத் துரத்தும்படிவேண்ட அப்படியே பாசுபதாஸ்திரம் பிரயோகித் திருளைவிலக்கினகாலையில் சிதறிய வானரவீரர்களெல்லாம் இலக்ஷுமணரை யடைதல்.

கவி.

மந்திரமுளதாலைய வுணர்வுறுமாலைத்தலைதுன்
சிந்தையினுணர்ந்துசெய்யற் பாற்றெனிற்செய்திதெவ்வர்

தந்திரமிதனைத்தெய்வப் படையினற்சமைப்பினல்லால்
எந்தைநின்னடியர்யாரு மெய்தலர்நின்னையென்றான்.

முக்கணான்படையைமூட்டி விடுதலுமூங்கிற்காட்டில்
புக்கதோரூழித்தீயிற் புறத்திறேரருருவும்போகா
தக்கணத்தெரிந்துவீழ்ந்த தரக்கர்தஞ்சேனையாழித்
திக்கெலாமிருளுந்தீர்ந்த தேவருமயக்கந்தீர்ந்தார்.

ஸ்வாமி! ஒரு உபாயமிருக்கின்றது. இது மனமயக்கத்தைத் தரத்தக்க இராத்திரிகாலமானதால் நம்முடைய சேனைகளைப் பலவாறாகப் பிரிந்துபோகச்செய்தது. இது சத்துருக்களான இராக்ஷசர்களுடைய தந்திரமாக்கும். இதைத்தேவரீர் திருவுளங்கொண்டு தேவதாஸ்திரங்களா லிந்தவிருட்டைப்போக்கினாலல்லாமல், தேவரீருடைய அடியார்களான வானரர்கள் தேவர்திருவடியை அடையமாட்டார்க ளென்று வினயமாகச்சொன்னார். அதைக்கேட்ட இளையபெருமாள் சற்றுயோசித்து, அப்படியா? நல்லது: இதோ நீர்சொன்ன பிரகாரஞ் செய்கின்றேனென்றுஆயிரம்பேருடையவரான ஸ்ரீராமமூர்த்தியை நமஸ்கரித்து ஸ்தோத்திரஞ்செய்து, தகுந்தபாணங்களைப் பொறுக்கியெடுத்து அவைகளையும், மேருவில்லியான சாம்பவ மூர்த்தியினுடைய பாசுபதாஸ்திரத்தையும், அபிமந்திரித்து மின்னல்போலப் பிரகாசிக்கின்ற கோரதந்தங்களையுடைய இராக்ஷசர்கள்மீது பிரயோகித்தார்.

இப்படி மூன்றுகண்களையுடைய சங்கரன் ஆயுதத்தைப் பிரயோகித்துவிட்டமாத்திரத்தில் அது மூங்கிற்காட்டிற் பற்றிய வடவாமுகாக்கினியைப்போல இராட்சசர்களி லொருவராவது தவறிப்போகாதபடி ஒருக்ஷணத்துக்குள்ளாக அவர்களைத்தேடித்தேடிக்கொன்றுவிட்டது.சமுத்திரஞ்சூழ்ந்தஅஷ்டதிக்கிலுள்ள இருளையெல்லா நாசமாக்கிவிட்டது. தேவர்களும்பிரமைநீங்கினார்கள். அப்போது மகோதரனானவன் இந்தலட்சுமணன் தேவாஸ்திரம்பிரயோகஞ் செய்தபடியினாலே நம்மாற்செய்யப்பட்ட பெருமாயைத்தொழிலெல்லா நீங்கிவிட்டதென்று மறைந்துபோய்விட்டான். வானரவீரர்களெல்லாம் வீர அஷ்டகாசஞ் செய்துகொண்டுவந்து இளையபெருமாளுடைய திருவடியைச்சேர்ந்து நிர்த்தம்பண்ணினார்கள். அப்போது தேவதேவரான ஸ்ரீராமபிரானுடைய திருத்தம்பியார் வானரவீரர்களில் ஒருவருக்கும்ஒருதுன்பமில்லாமல்வந்து சேர்ந்ததைக்கண்டு சந்தோஷங்கொண்டு, தமது திருவுளத்திலிருந்த சந்தேகநீங்கினார். காவலாகவந்த வானரசேனைகளெல்லாம் கலீர்கலீரென்று ஆரவாரித்துக்கொண்டுவந்து இளையபெருமாளைச் சேர்ந்ததைக்கண்ட தேவர்கள் புஷ்பமாரியைப் பெய்தார்கள்.

இப்படி ராட்சசசேனைகள் நூறுவெள்ளமு மாண்டு,அகம்பனுமடிந்து, மகோதரனும் ஓடி மறைந்துபோனபடியால்; சிலதூதர்களோடி இலங்காதிபதியான ராவணனையடைந்து நடந்தகாரியங்களைச் சொன்னார்கள். அதைக்கேட்டதசக்கிரீவன் ஒன்றுந்தோன்றாதவனாகி, அப்படியா? நீங்கள்மாத்திரந்தப்பி

வந்தீர்களாக்கும். ஆ! ஆ! நூறுவெள்ளஞ்சேனையையும், அதைச்சேர்ந்த ரத கஜதுரகபதாதிகளையும், ஒருவில்லையுடையவ னிவ்வளவுசீக்கிரத்தி லெப்படி கொன்றுவிடுவான்? முடியமாட்டாதே: என்றுராவணன் கேட்க, அவர்கள் கொன்றைப்பூ மாலையையணிந்த உருத்திரமூர்த்தியினுடைய அஸ்திரத்தினு ல் முடிந்ததென்றூர்கள். அதைக்கேட்டராவணன் ஆச்சரியப்பட்டு, அப்படி யா? ஆனல் முடியத்தகும். என்றுசொல்லி மனமெலிந்திருக்கும்போது ம றுபடியுமத்தூதர்க ளவனைநோக்கி, ஓ எங்களாண்டவனே! ஸ்ரீராமன் யுத்தத் திற்குவரவில்லை. ஒருமலைமேற்போ யிருக்கின்றான். தேவரீர்தம்பியாகிய விபீ ஷணன் அவ்விராமனுமவன்சேனைகளும்சாப்பிட கந்தமூலபலாதிகள்கொண்டு வரப்போனன். நடந்தகாரியமிதுவாக்குமென்றூர்கள். அப்போ திராவணன் மகோதரன் எவ்விடத்திலிருக்கின்றா னென்றான். அவன் ஆகாசத்தில் மறை ந்துநிற்கின்றானென்றூர்கள்' அதுகேட்ட தசக்கிரீவன் சற்றுலோசித்து, அ டடா! அப்படியாமுடிந்தது? இதுமிகவழகாயிருக்கின்றதென்று சொல் லிச் சிரித்தான்.

இந்திரசித்து மூலயாகஞ்செய்து பிரம்மாஸ்திரந்தொடுக்க வேண்ணி ஆகாயத்தில் மறைதல்.

கவி.

காலமீதெனக் கருதியவிராவணன் காதல்
ஆலமாமர னென்றினைவிரைவினி னடைந்தான்
மூலவேள்விக்கு வேண்டுவகலப்பைகள் முறையால்
கூலநீங்கிய விராக்கதப்பூசுரர் கொணர்ந்தார்.

அப்போ திராவணபுத்திரனுன இந்திரஜித்து இதுதான் தகுந்தகாலமெ ன்று ஒரு ஆலமரத்தினிடத்திற்குப்போனன். மூலயாகத்திற்கு வேண்டிய க லப்பைகளைக்கொண்டு அக்கிரமிகளான இராக்ஷசமறையவர்கள் வந்தார்கள். பிறகு யாகஞ்செய்ய யத்தனித்து, அம்பினுல் சமிதைகள் சேர்த்து, அக்கினி யில் தும்பைப்பூவும் காரெள்ளுஞ்சொரிந்தார்கள். கறுத்தவெள்ளாட்டின் கொம்பும், பல்லும், இரத்தமும், மாமிசமும். வரிசையாகப்பெய்து, எண் ணெயால் ஓமம்வளர்த்தார்கள். அப்போது ஓமாக்கினியானது வலஞ்சுழித் துக்கொண்டு மேலெழும்பி நல்ல வாசனையைவீசியது. அநேக நல்லகுறிகளை ஒழுங்கா யுண்டாக்கியது.

கவி.

விசும்புபோயினன் மாயையின்பெருமையான் மேலைப்
பசும்பொனுட்டவர் நாட்டமுமுள்ளமும் படரா
அசும்புவிண்ணிடை யடங்கினன்முனிவரு மறியார்
தசும்புநுண்ணெடுங் கோளொடுகாலமுஞ் சார.

அதுகண்ட இந்திரஜித்தானவன் தங்கள் ஜாதிஸ்வபாவமாய்த் தோன் றுகின்ற கொடுமையையுடையவனுய் நமக்கு நன்மைவிளையப்போகிறதென்று

மேலெழும்பி, வானரர்களின் கிரகசாரமும் முடிவுகாலமும் ஒருங்குசேர மாயையின் வல்லமையால் ஆகாசத்திற்போய் சுவர்க்கத்திலுள்ள தேவர்களுடைய பார்வையும் அவர்களுடையமனதும் அறியாதபடி மேகஜாலத்துக்குள் மறைந்தான். இவன்வந்தது முனீஸ்வரர்களும் அறியார்கள். பொன்மயமான கிரகங்களும் நட்சத்திரங்களும் அறியா.

மகோதரனிந்திரனுருக்கொண்டு இலக்ஷுமணராதியரை யெதிர்க்க அவர்கள் இஃதென்னவென ஆலோசித்தல்.

கவி.

அனையளின்றன னவ்வழிமகோதர னறிந்தோர்
வினையமெண்ணின னிந்திரவேடத்தை மேவித்
துனைவலத்தவை ராவதத்தெருத்தின்மேற் றோன்றி
முனைவர்வானவ ரவரொடும்போர்செய மூண்டான்.

இந்தப்பிரகாரம் இந்திரஜித்து வந்ததை மகோதரன் தெரிந்துகொண்டு ஒரு சூதுசெய்ய நினைத்து, இந்திரனைப்போல வேஷங்கொண்டு போய் மிகுந்தபலமுள்ள ஐராவதத்தின்மேலேறிக்கொண்டு, முனிவர்களையும் தேவர்களையும் சேர்த்துக்கொண்டு இலக்ஷுமணருடன் சண்டைக்குவந்தான். இவர்களைப் பார்த்தவுடனே வானரர்களிற் சிலர் இவர்களிராக்ஷசர்களுமல்லர். மனிதருமல்லர். குரங்கினத்தருமல்லர். இந்தலோகத்தில் வாழ்கின்ற உயிர்கள் என்னென்னவுருவுகள்கொண்டிருக்கின்றனவோ அவைகளெல்லாம் யுத்தத்திற்குவந்ததோவென்றெண்ணும்படி மாயைகளைச்செய்தான். அக்குரங்கினத்தவர் பயந்து யுத்தகளத்தினின்றும் சிதறியோடினார்கள். சிலர் நான்கு தந்தங்களையும் பால்போலவெள்ளியநிறமுள்ளதான ஐராவதமென்னும்யானையின்மேலேறி வந்தபடியால் அவனிந்திரனாகவேண்டும். மற்றவர்களெல்லாம் தேவர்களும் ரிஷிகளுமாகவேண்டும். இவர்களெல்லாம் சண்டைசெய்யவேண்டுமென்று கோபித்து வருவதற்கு நாமென்ன பொல்லாங்குசெய்தோமென்று பயந்தார்கள்.

அப்போது சக்கரத்தையுஞ் சங்கையுநீக்கிக் கைகளில் வில்லையும் அம்பையுங்கொண்ட செந்தாமரைமலர்போன்ற திருக்கண்களுள்ளவரான ஸ்ரீராமமூர்த்திக்குத் திருத்தம்பியாராகிய இளையபெருமாள் அநுமானுடைய முகத்தைப்பார்த்து, ஓ ஆஞ்சநேயனே! இரிஷீஸ்வரர்களும், தேவர்களும், நம்மீது எதிர்த்துவரும்படி நாமென்ன பொல்லாங்கு செய்தோம்? அதைச் சீக்கிரமாகயோசித்துச் சொல்லக்கடவீரென்று சொல்லினர்.

ஆகாயத்தில் மறைந்துநின்ற இந்திரசித்து இலக்ஷுமணராதியர்மீது பிரம்மாஸ்திரப் பிரயோகஞ்செய்து யாவரையும் மூர்ச்சிப்பித்தல்.

கவி.

இன்னகாலையினிலச்சுவன் மேனிமேலெய்தான்
முன்னைநான்முகன்படைக்கல மிமைப்பதன்முன்னம்

பொன்னின்மால்வரைக் குரீஇயினமொய்த்ததுபோலப்
பன்னலாந்தரமல்லன சுடர்க்கணைபாய்ந்த,

இப்படி கோடிகோடி நூறுயிர பாணக்கூட்டங்கள் இலக்ஷுமணர் மேனியையெல்லாமூடிச் சுற்றிக்கொள்ளவே வேறொருசெய்கையுஞ்செய்யத் தோற்றாமல் பொறிகலங்கி அறிவடங்க, அவ்வண்ணம் ஆஞ்சநேயருடன் யோசனைசெய்துகொண்டிருக்குஞ்சமயத்தில், ஆகாசத்தில் மேகத்துடன் மறைந்து சமயம் பார்த்துக்கொண்டிருக்கின்ற மகாபாதகனாகிய இந்திரஜித்து வானவன் இதுதான்சமயமென்று, தனதுவில்லை வளைத்துப்பிரமதேவனைச்சிந்தித்துப் பிரமாஸ்திரத்தை யெடுத்துப் பாத்தியாசமனாற்கியம் நைவேத்திய முதலியவற்றை மனசாபத்தியினாற் செய்து இமைகொட்டுவதற்குமுன் சந்தித்து விட்டுவிட்டனன். அவ்வஸ்திரமானது மகம்மேருகிரியின்மேல் குருவிக்கூட்டங்கள் மொய்த்ததைப்போல் அநேக அஸ்திரங்களோடு புறப்பட்டுச் சொல்லலாந்தரத்ததல்ல வென்னும்படி இலக்ஷுமணப் பெருமானுடைய திருமேனியின் மீது அழுந்தின. வெற்றிபெற்ற பெரியயானையானது துயிலிடத்தில் வந்து அடங்கினதைப்போல் மூர்ச்சித்துவிட்டார்.

அத்தருணத்தில் ஆஞ்சநேயர் பார்த்துப் பிரமித்து, ஈதென்ன இந்திரன் வந்து இப்படிப்பட்ட செய்கையைச் செய்தான் ? இனித்தாமசமென்ன ? இவனேறிவந்த யானையுடன் இவனையும்வாரிப் பூமியிலறைகின்றேன். என்று எழுந்தமாத்திரமே அநுமானுடைய தேகத்திலும் அநேககோடிபாணங்கள் பாய்ந்தமாத்திரத்தில் நினைவுஞ் செய்கையுமறந்து பூமியில்விழுந்தார். மகமேருகிரியின்மேல் முருக்கங்காடானது மலர்ந்ததுபோல இரத்தவெள்ளம்வடிய அநேகாநேகமாய்க் கொடிய பாணங்கள்தைக்க உருக்கின செம்பைப்போலச் சிவந்த கண்ணையுடையவராகிய சுக்கிரீவமகாராஜன் பூமியில் வீழ்ந்தார். அங்கதகுமாரனும் பதினாயிரம் பாணங்கள் தைக்க இடியுண்ட ஆண்சிங்கத்தைப்போலப் பூமியில் வீழ்ந்தான், அதிகபுகழ்பெற்ற சாம்பவரும் அநேக பாணங்கள் வந்து மார்பையுந்தோளையுஞ் சல்லடைக்கண்களாய்த்தொளைக்கப் பூமியிற் சாய்ந்தார். நீலனும் ஆயிரங்கூரிய பாணங்கள் தேகத்திற்பாய்ந்து வருத்தப்படுத்தக் காலனார் தரிசனஞ்செய்பவனாய்ப்போய்விட்டான்

இவர்களைப்போலவே விஷம்போன்ற சிலபாணங்களால் விருஷபனும் பனசனும் சுவர்க்கமடைந்தார்கள். அம்புவடிவாய் வந்த யமனால் குமுதனுமாண்டு போனான். சமுத்திரத்தை அணையிட்ட நளனும் ஆயிரம்பாணத்தினாற் சோர்ந்து வீழ்ந்தான். வாலிக்குச்சமமான பலவந்தர்களான மயிந்தனும், அவன் தம்பியு மிறந்துபோனார்கள். இயமனுக்குச் சமமான கவயனும் ஆகாசம்போய்ச் சேர்ந்து விட்டான். கேசரியென்பவனும் வரிசைவரிசையாய்த் தைத்த பாணங்களினாற் பூமியிற்சாய்ந்தான். மற்றவானரவீரர்களெல்லாரும் வடித்தகூரியபாணவருஷங்களால்முழுதுந்தீர்ந்தார்கள். குபுகுபென்றிரைச்சு

விட்டுக்கொண்டு புறப்பட்ட இரத்தப்பிரவாகம் சமுத்திரத்துடனே பகைத்துக்கொண்டு எதிரேற, ஒருபாணத்துக்கு ஆயிரங்குரங்காகப் பிரம்ஹாஸ்திரம் அவரவர்களுடைய தேகத்திற் கொட்டிமறைக்கவும்; அவைகளை நீக்குவதற்கு ஓரடைக்கலமும் கிடையாமல் மாண்டன. இடியையொத்த அந்தப் பாணங்கள் பூமியில் வலியமுளைகளையடித்ததுபோற்றைக்க அனேகவானரங்கள் மடிந்துபோயின. தேவஸ்திரீகளெல்லா மிதைக்கண்டு தங்கள் நீலோற்பலம் போன்ற கண்களை மூடிக்கொண்டு தலையைவளைத்து வியசனப்பட, பூமியிற்கிடக்கின்றலக்ஷுமணர் முதலானவர்களை இரத்தவெள்ளங்கள் நான்குபக்கத்திலுஞ் சூழ்ந்ததெத்தன்மைத்தெனில் பவளக்காடுபடர்ந்த பாற்கடலைப்போலிருந்தது.

அந்தச் சேனைக்கடலிருந்த விருப்பு இப்படியிருக்க, இறந்தவானரங்களுடைய உயிர்களெல்லாம் ஆகாசத்திற்போய்ச் சேர்ந்தன. தேவர்கள் புதுவிருந்தினரைக் காண்பதுபோலக்கண்டு மிகுந்த களிப்புடனே அவர்களையுபசரித்து, நீங்களிக்கண மறுபடியும் பூலோகத்திற்குப் போங்களென்று உத்தரவுகொடுத்து, உங்களை லோகசிருஷ்டி கர்த்தாவினுடைய அஸ்திரம் உபசாரஞ்செய்ததே யல்லது அது உங்களைக் கொல்லவந்ததல்ல. கோதண்டபாணியாகிய ஸ்ரீராமமூர்த்தியினுடைய அடியவர்களுக் கடியவர்கள் பிறவிக்கடலிற் சம்பந்தப்படுத்தாத பரமபதப்பிராப்தியை அடைவார்கள். நீங்கள் நம்முடைய காரியத்தைச் செய்கிறதற்காகப் பூலோகத்திற்குப் போனீர்கள். உங்கள் பிராணன்களெல்லாம் எங்களுடைய அமிசந்தான். தேகமாத்திரம் அவதாரானுகுணமாக வானரரானீர்கள். செந்தாமரைக் கண்ணரான எம்பெருமானுக்காக ரணக்களத்தில் மாண்டீர்கள். நீங்கள் எங்கள் நாயகர்களாக்கு மென்றுசொல்லி அனேகவிதமாய்க் கொண்டாடினார்கள்.

இப்படியிருக்க இந்திரஜித்துவானவ னிவையனைத்தையு மிருந்தபடியிருந்ததுகண்டு, வானரர்களுடனே இலக்ஷுமணன் மாண்டுபோனான். இராமனிப்பொழுது வாராமற்போனா னென்றுசொல்லித் தன்னுடைய வெற்றிச்சங்கத்தை வாயில்வைத் தூதிவிட்டு, சீக்கிரமாகவோடிப்போ யிராவணனைச்சேர்ந்து யுத்தகளத்தில்நடந்த சமாச்சாரத்தையெல்லாம் விபரமாகச் சொன்னான். அவைகளையெல்லாங் கேட்ட ராவணன் - அப்படியா? இராமன் இறக்கவில்லையாவென்றான். அதைக்கேட்ட இந்திரஜித்து ஐயா இராவணேஸ்வரா! அவனெங்கேயோ போயிருக்கின்றான். இல்லாவிட்டால் தம்பியாகியலட்சுமணனை நான்கொல்லவும், அவனுடைய சிறந்த நண்பர்களை வதைக்கவும், சேனைகளையெல்லாம் அழிக்கவு மறைந்துவிடுவானோ? அவன் மகாவீரனாச்சே யென்றான். அதைக்கேட்ட விராவணன், அப்பா எனதருமைப் புத்திரனே! நீ சொன்னது யதார்த்தமே: அதற்குச் சந்தேகமேயில்லை யென்று சம்மதித்தான். பிறகு இந்திரஜித்து தனதரண்மனைக்குப்போய்ச் சேர்ந்தான். இராவணனுத்தரவினால் மகோதரனும் தனதிருப்பிடம் போய்விட்டான்.

ஸ்ரீராமர் இந்திரசித்துவின் பிரம்மாஸ்திரத்தால் மூர்ச்சித்து மாண்டு கிடக்கின்ற சுக்கிரீவனுதியரைக்கண்டு வருந்தல்.

கவி.

கொள்ளியிற்சுட ரனலிதன்பகழிகைக் கொண்டான்
அள்ளிநுங்கலா வாரிருட் பிழம்பினை யழித்தான்
வெள்ளிவெங்களப் பரப்பினிற்பொருக்கென விழித்தான்
தள்ளிருமரைச் சேவடிநுடங்குறச் சார்ந்தான்.

இப்படியிருக்க சர்வலோகேஸ்வரனுன ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியு மிரணக்களத்திற்கு வந்து ஓரிடத்தில்நின்று, இருளாயிருந்தபடியினுலே விண்வீழ்கொள்ளிபோலப் பிரகாசிக்கின்ற அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகித்து இருட்பிழம்பை யெல்லாம் கவளீகரிக்கும்படி நாசப்படுத்தி, வெறுவெளியாயிருக்கின்ற ரணக்களவிசாலத்தைத் திடுக்கென்று பார்த்து, தமது திருவடித்தாமரைகள் வருத்தமுறும்படி வேகமாயோடி நான்குதிக்கிலு முறைமுறையாகச்சென்று, தமதிரண்டு திருக்கரத்தாலும் திருமுகத்திலறைந்து இரத்தக்கண்ணீர் பொழிந்து களத்தில் நுழைந்து வானரவீரர்கள் தனித்தனிகிடக்கிறதைக் கண்டார்.

அப்போது முதலிற்சுக்கிரீவ மகாராஜரைக்கண்டு செந்தாமரை மலர் போன்ற கண்களில் தாரைதாரையாகக் கண்ணீரொழுகும்படியாக வெகுநேரநின்று பெருமூச்சுவிட்டு, அப்பா சுக்கிரீவா ! நீயுமிப்படி ரணக்களத்தில் மாண்டுகிடக்கத்தகுமோ வென்று மனந்தளர்ந்து பக்கத்திலிருந்த அநுமானைப்பார்த்துவிட்டார். என்னசெய்வார் ? தன்னைத்தானறியாதவராய்ப் பெருமூச்சுவிட்டு, அப்பா என்னுயிரையளித்த அஞ்சனைச்செல்வனே ! கடலைத்தாண்டிப்போய் அரக்கரையும், அசோகவனத்தையும், கலங்கச்செய்து என் துக்கத்தைமாற்றி, நானிருக்கும்படி நீ எனக்குபகாரஞ் செய்தது இதற்குத்தானே ? இராக்ஷசனுடைய அற்பமான வில்லிலிருந்து புறப்பட்டபாணங்கள் உன்னுடைய தேகத்தின்பலத்தைக் கடந்து விட்டதா ? அப்பா வாயுகுமாரா ! உன்விஷயமாகத் தேவர்கள்கொடுத்த வரங்களும், இரிஷிகள்கொடுத்த ஆசீர்வாதங்களும், பிறகு ஜானகிகொடுத்த சிரஞ்சீவிப்பட்டமும் பொய்த்துப்போய்விட்டனவோ?

ஓ மகாவீரப்பிரதாபசாலியே ! உனக்கிந்த அற்பச்செய்கை வந்தது என்னுடையபாவவினையா ? ஐயோ ! இப்படிப்பட்ட கொடும்பாவியான என்னைப்போல யாரிருக்கின்றூர்கள் ? அற்பகிருத்தியத்தையுடைய ஈனராச்சியத்தை யபேக்ஷித்து என்னபிரயோசனத்தை யடைந்தேன் ? முதலில் பெற்றதகப்பனைக்கொன்று அழித்தேன். பிறகு ஜடாயுவையுங் கொன்றுவிட்டேன். அம்மட்டிலும்விடாமல் இன்றைக்கு இத்தனை போர்வீரர்களையுங் கொன்றுவிட்டேன். நான்செய்யுங் கொடுந்தொழிலுக்கு இவ்வளவுதானென்று சொல்லத்தக்க ஒருவரம்பும் உண்டாகுமோ ? ஆ ! ஆ ! வீறுய்த்தமையனைக் கொன்று,

தம்பியாகிய சுக்கிரீவனுக்குவானராதி பத்தியத்தைக் கொடுத்தது, எல்லாரையும் ஒருமிக்கச்சேர்த்துக் கொல்லுவதற்குத்தானே? நான் பொறுமையுடையவனுகி உங்களையிப்படிப்பட்ட துன்பத்துக் குள்ளாக்கினேன். உடற்சுமையைச் சுமக்கத்தானே பிறந்தே னென்று துயரப்பட்டழுதார்.

பின்பு விருஷபக்கூட்டங்களுக்கு நடுவாக மற்றொரு விருஷபத்தைப்போலக் கடைக்கண்ணில் நெருப்பைக் கக்கிக்கொண்டு கிடக்கின்ற அங்கதனென்கிற யானையைக்கண்டு, ஐயோ! ஆயுதங்களை வீணுய்ச்சுமக்கின்ற பாவியான நான் அடைக்கலம் புகுந்தவர்களை இரக்ஷிக்கின்றவழகு நன்றுயிருக்கின்றது: நன்றுயிருக்கின்றது: என்று கண்ணீர்விட்டார்.

பிரம்மாஸ்திரத்தாற்கட்டுண்டு மூர்ச்சித்துக்கிடக்கின்ற இலக்ஷ்மணரை ஸ்ரீராமர் காணல்.

கவி.

உடரிடைத்தொடர் பகழியினெளிர்கதிர்க் கற்றைச்
சுடருடைப்பெருங் குருதியிற்பாம்பெனச் சுமந்த
மிடருடைப்பண மீமிசைத்தான்பண்டை வெள்ளக்
கடரிடைத்துயில் வானன்னதம்பியைக் கண்டான்.

அப்பாற் சற்றுதூரஞ்சென்ற தருமசொரூபியான ஸ்ரீராமர், தேகத்திற் பதிந்துகிடக்கின்ற அம்புகளாகிய கிரணக்கற்றைகளைப் பரப்பிப்பிரகாசிக்கின்ற இரத்தவெள்ளத்திற் பூமியைப் பாம்பாகச்சுமக்கின்ற பலம்பொருந்திய ஆதிசேஷன்மீது பழமையாகிய பாலசமுத்திரத்தின்கண் தான்சயனிக்குந்தன்மையைப்போல் வானரக்கடலின்மத்தியில் மூர்ச்சித்திருக்குந் தம்பியாகிய இலக்ஷ்மணப் பெருமாளைக்கண்டார். கண்டவரென்செய்வார். மனங்கொதித்து உயிர்சோர்ந்து முழுதும் புகைந்தார். நீலரத்தினம்போன்ற திருமேனியுமனதைப்போல வுருகி, தமது திருக்கண்களைக்கையால் மூடிக்கொண்டு மயங்கிப் பூமியில்விழ்ந்து, இடியுண்டுசாய்ந்த மராமரத்திற்குச் சமானமானுர்.

ஒருநாழிகைவரையிலு மூச்சுவிடாமலும், உணர்வடையாமலும், தேகத்தில் வியர்வுகாணுமலும், கண்டுவிழியாமலும், தேவர்களுங்கண்டு தெளிவடைந்தாரோ இல்லையோவென் றஞ்சும்படி திருக்கைகளும், திருவடிகளுமசையாமல், கருணையாற் பிறந்தவராகையால் உயிர்மாத்திரம் பிரியாமலிருந்தார். இப்படி வியசனப்படுகின்ற ஸ்ரீராமமூர்த்தியைத் தாங்குவா ரொருவருமில்லை. இளையபெருமாளைத் தழுவியணைத்துக் கொண்டிருக்கின்ற கைகளைப்பிணிப்பவிழ்த்து வாங்குவாரொருவருமில்லை. சொல்லால்தேறுதலை சொல்லுவாரு மில்லை. சிநேகர்களாயுள்ளவர்களெல்லா மாண்டுபோய் விட்டார்கள். ஆகையால் தனியான ஸ்ரீராமரை யார் துயரந்தீர்க்கவல்லவர்கள்? கவந்தங்களிற் கழுத்தில்லாமையால் தங்கள்நாயகரைக் காணுமல் தேடித்தேடித்திரிகின்ற செவந்தகண்களையுடைய இராக்ஷசிகளும், பிணங்களைக்கண்டு சந்தோ

ஷங்கொண்டு திரிகின்ற பேய்க்கூட்டங்களும், நரிகளுடைய பந்திகளுமல்லாமல்; வேறொருவரும் யுத்தகளத்திலே யில்லாமல் தாமாத்திரமே தனியாய்நின்றார்.

தேவலோக ஸ்திரீகளெல்லாம் தங்கள்வயிற்றைப் பிசைந்துகொண்டழுது, கண்ணீரைச் சோனமாரியைப்போலச் சொரிந்தார்கள். தேவர்களெல்லாஞ் சோர்ந்தார்கள். மற்ற அசரசரங்களும் இரக்கமுற்றன. இவைகளெல்லாம் ஞானநாயகரான ஸ்ரீராமருடைய திருமேனியேயாதலா லிப்படித் துக்கப்பட்டன. மூலதாமரைப் புஷ்பத்தி லெழுந்தருளியிருக்கின்ற சிருஷ்டிகர்த்தாவாகிய பிரம்ஹதேவருக்கும், மூன்றுகண்களையுடைய சங்கரமூர்த்திக்கும், ஸ்ரீராமரிடத்துள்ள அன்பால்தமது மகிழ்ச்சிகுன்றி, திருமுகக்கருணையுமாறிப் போகுமேயானால்; மற்றத்தேவர்களுக்குச் சம்பவித்த துக்கத்தைச் சொல்லவேண்டிய தென்ன? ஸ்வாமிக்குப் பகையானவர்களும் அழுதார்கள். பாவங்களும் அவரிடத்திலுள்ளபரிவால் அழுதன. அப்போது ஸ்ரீராமமூர்த்தி சற்றுணர்வடைந்து சுவாசம்விட்டு, திருக்கண்களை விழித்துத்தமது திருத்தம்பியாரை யுற்றுப்பார்த்து, நம்முடையதம்பி பரமபதம் அடைந்தான், இனித் திரும்பமாட்டானென்று மனம்புழுங்கிப் புண்ணிலேநெருப்பைக் கொளுத்தினாற்போலத் துன்பமுற்றுப் புலம்பத்தொடங்கினார்.

ஸ்ரீராமர் இலக்ஷுமணரை யிறந்ததாகவெண்ணிப் புலம்பி மூர்ச்சையாதல்.

கவி.

எந்தையிறந்தான் யானுமிறந்தே னுலகெல்லாம்
தந்தெனனென்றுங் கொள்கைதவிர்ந்தேன் றமியல்லேன்
உய்ந்துமிருந்தாய் நீயெனநின்றே னுரைகாணேன்
வந்தனெனையா வந்தனெனையா வுயிர்வாழேன்.

தாயோநீயே தந்தையுநீயே தவநீயே
சேயோநீயே தம்பியுநீயே திருநீயே
போயோநின்றா யென்னையிகந்தாய் புகழ்பாராய்
நீயோயானு நின்னினுநெஞ்சம் வலியேனே.

ஊறுநின்ற புண்ணுடையாய்பா லுயிர்காணேன்
ஆறுநின்றே னாவிசுமந்தே னழிகின்றேன்
எறேயின்னு முய்யினுமுய்வே னிருகூறாய்க்
கீறுநெஞ்சம் பெற்றனெனன்றே கெடுவேனே.

பயிலுங்காலம் பத்தொடுநாலும் படர்கானத்
தயில்கின்றேனுக் காவனல்கி யயிலாதாய்
வெயிலென்றுன்னாய் நின்றுதளர்ந்தே மெலிவெய்தித்
துயில்கின்றாயோ வின்றிவ்வுறக்கந் துறவாயோ.

அயிராநெஞ்சு மாவியுமொன்றே யெனுமச்சொல்
பயிராவேலைப் பாதகனேற்கும் பரிவுண்டோ
செயிரோவில்லா வுன்னையிழந்துந் திரிகின்றேன்
உயிரோநானோ வாரினியுன்னோ டுறவையா.

வேழ்விக்கேகி வில்லுமிறுத்தோர் விடமம்மா
வாழ்விக்கும்மென் றெண்ணியெனென்முன்னே வருவித்தேன்
சூழ்வித்தென்னைச் சுற்றினரோடுஞ் சுடுவித்தேன்
தாழ்வித்தேனோ வித்தனைகேடுந் தருவித்தேன்.

மண்மேல்வைத்த காதலின்மாதா முதலோர்க்குப்
புண்மேல்வைத்த தீநிகர்துன்பம் புகுவித்தேன்
பெண்மேல்வைத்த காதலினிப்பே றுகள்பெற்றேன்
எண்மேல்வைத்தே னெம்புகழ்யான்றா னெளியேனோ.

மாண்டாய்நீயோ யானொருபோது முயிர்வாழேன்
ஆண்டானல்ல னாநிலமந்தோ பரதன்றான்
பூண்டாரெல்லாம் பொன்றுவர்துன்பம் பொறையாற்றார்
வேண்டாவோநா னல்லறமஞ்சி மெலிவுற்றால்.

அறந்தாய்தந்தை சுற்றமுமற்றும் மெனையல்லால்
மறந்தாயென்று மெய்மறவாதா யுடன்வந்து
பிறந்தாயென்னைப் பின்புதொடர்ந்தாய் பிரிவாற்றாய்
இறந்தாயுன்னைக் கண்டுமிருந்தே னெளியேனே.

சான்றோர்மாதைத் தக்கவரக்கன் சிறைதட்ட
ஆன்றோர்சொல்லு நல்லறமன்னான் வசமானால்
மூன்றாய்நின்ற பேருலகொன்றாய் முடியாவேல்
தோன்றாயோவென் வில்வலிவீரத் தொழிலம்மா.

வேலைப்பள்ளக் குண்டகழிக்கும் விராதற்கும்
காலிற்செல்லுங் காகமணிக்குங் கரனுக்கும்
மூலப்பொத்தற் செற்றமரத்தேழ் முதலுக்கும்
வாலிக்கும்மே யாயினவோவென் வலியம்மா.

இருந்தேனானா விந்திரசித்தே முதலாய
பெருந்தேராரைக் கொன்றுபிழைக்கப் பெறுவேனோ
மருந்தேநீயே கொல்லுதியென்னும் வலிகொண்டேன்
பொருந்தேனானிப் பொய்ப்பிறவிக்கும் பொறையல்லேன்.

மாதாவுந்நஞ் சுற்றமுநாடு மறையோரும்
எதானாரோ வென்றுதளர்ந்தே யிறுவாரைத்
தாதாய்காணச் சாலநினைந்தேன் றரையாள்வேம்
போதாயையா பொன்முடியென்னைப் புனைவிக்க.

பாசமுமுற்றச் சுற்றியபோதும் பகையாலே
நாசமுமுற்ற போதுநடந்தே னுடனல்லேன்
நேசமுமற்றார் செய்வனசெய்தே நிலைநின்றேன்
தேசமுமற்றென் கொற்றநலத்தைத் தெரியாதோ.

கொடுத்தேனன்றே வீடணனுக்குங் குலமாளும்
முடித்தேர்செல்வம் யான்முடியாதே முடிகின்றேன்
படித்தோனன்றே பொய்ம்மைகுடிக்குப் பழிபெற்றே
ஒடித்தேனன்றே யென்புகழ்நானே யுணர்வற்றேன்.

அப்பா இலக்ஷ்மணா! என்பொருட்டு என்பிதாவாகிய தசரதமஹாராஜரிறந்தார். அப்போதேநானு மிறவாமலிருந்தேன். உலகமெல்லா வற்றையும் பரதனுக்குக் கொடுத்துவிட்டேன். இனிக்கொள்ளவேண்டியதையுந் தவிர்ந்துபோனேன். யான் தனிமையாயிருக்க மாட்டேன். நீ பிழைத்திருக்கின்றாயேயென்றிருந்தேன். இப்போதெனக்குத்துணையாக வார்த்தைசொல்லுவாரொருவருமில்லை. தம்பி இலட்சுமணா! இதோநானுமுன்னோடு வந்துவிட்டேன்; வந்துவிட்டேன்: இனிநா னுயிருடன்வாழமாட்டேன். எனக்குத்தாயு நீயே: தகப்பனுநீயே: நான்செய்யும் தவமுநீயே; என்பிள்ளையுநீயே: எனக்குத் தம்பியுநீயே: என் ஐஸ்வரியமுநீயே: அப்படியாயிருந்த நீ என்னை நீக்கிவிட்டுப்போய்விட்டாயே: புகழையும் நினைத்தாயில்லையே: நீமாத்திரம் என்னைவிட்டு நீங்குகின்றவனானாய். உன்னைவிட்டுநீங்கிநிற்க உன்னைக்காட்டிலும் என்னெஞ்சு வலிமையுள்ளதோ? அப்பாதம்பி! இரத்தமூறுகின்ற புண்ணுடைய உன் தேகத்தினிடத்தில் உயிரைக்காணேன். இவ்வளவு சகிப்புடனேஉயிரைப்பொறுத்துக்கொண்டு அழுகின்றேனாதலால், நானின்னும் பிழைத்தாலும் பிழைத்திருப்பேன். ஆ! ஆ! இந்தத்தீயேன் இருபாதியாய்ப் பிளப்புறுதநெஞ்சையுடையவனாக இருக்கின்றேனல்லவா?

அப்பா புருஷசிம்ஹமே! இந்தப்பதினாலுவருஷமாக விசாலித்திருக்கின்றகாட்டில் எனக்குண்ணத்தக்க கந்தமூல பலாதிகளைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, ஒன்றுமுண்ணாமல் என்காரியாநுகூல விரதநிஷ்டாபரனாயிருப்பவனே! எப்படிப்பட்ட காலத்திலும் வெயிலென்று லக்ஷியம்வையாமலிருந்த நீ இப்போது மனந்தளர்ந்து தேகங்களைத்து நித்திரைசெய்கின்றாயே: இன்றைக்கிந்த நித்திரையைவிட் டெழுந்திருக்கமாட்டாயோ? நிர்ச்சந்தேகமான மனதும், உயிரும், ஒன்றுமென்கிற சாஸ்திரங்கள் என்னிடத்தில் விருத்தியாகாதகாலத்தில், பாதகனாகிய வென்னிடத்திலும் அன்புண்டாகுமோ? வழுவிலாவடிமை செய்வேனென்ற பாரதந்திரஜ்ஞானத்திற் கொஞ்சமும்பிசகாத உன்னையிழந்தும் உயிருடனேதிரிகின்றேனே; இப்போது சாஸ்திரநிச்சயமான உயிரோ உனக்குறவாயிருக்கின்றது? அல்லது நானோ உனக்கு உறவாயிருக்கின்றேன்? தம்பி இலட்சுமணா! ஜனகமகாராஜாவின் யாகத்திற்குப் போய், உருத்திரனுடைய வில்லையுமொடித்து அங்குகிடைத்த சீதையென்கிற விஷமானது நமக்கு நல்வாழ்வையுண்டாக்குமென்று முன்னேநினைத்தேன். பிறகுகாட்டிற்கு என்பின்னால்வரச்செய்தேன். இப்போதந்த விஷத்தால் என்பந்துவர்க்கங்களையும் சுடப்பண்ணினேன். அது என்னைவிட்டு நீங்கினபிறகாவது போய்விடட்டுமென்று சும்மாவிருந்தேனோ? இவ்வளவு பொல்லாங்கையுஞ் சம்பாதித்துக்கொண்டேன்.

அப்பா என்னருமைத்துணைவனே! பூமியின்மேல்வைத்த ஆசையினாலே என்மாதாமுதலானவர்களுக்கும் புண்மேல்தீயை வைத்ததுபோன்ற துன்பத்தையுண்டாக்கினேன். பெண்மேல்வைத்த ஆசையினாலே இந்தப் பெரியவ

பங்களையும் பெற்றுக்கொண்டேன். என்புகழை யாவரு மதிக்கும்படியாய்ச்
செய்துவிட்டேனல்லவா? நானென்ன சாமானியனோ ? நீயோமாண்டுபோனா
ய். இனியானோ ஒருபோதும் உயிருடனேவாழமாட்டேன். ஐயா ! பரதனும்
இந்தப்பூமியை ஆளாமற்போனானே: அவனை யாசிரயித்திருக்கின்றபேர்களெ
ல்லாம் இந்தத் துன்பத்தைக்கேட்டு மாண்டுபோவார்கள். நான் தர்மத்துக்கு
ப்பயந்து தாழ்ந்திருந்ததற்கு இவ்வளவு உண்டாகவேண்டாமா ? தர்ம்மமு
ம், தாயும், தந்தையும், பந்துக்களும், மற்ற ஐஸ்வரிய சுகசந்தோஷாதிக
ளும், உனக்கு நானேயென்று கருதிக்கொண்டு; அவைகளை வேரோடு
மறந்துவிட்டவனே ! சத்தியத்திற் கொஞ்சமேனும் பிறழாதவனே ! எ
னக்குத்தம்பியாகப்பிறந்து என்னையே பின்தொடர்ந்து ஒருநிமிடமும் என்
னைப்பிரியச் சஹியாதவனே ! இப்படிப்பட்ட நீ இறந்துபோகப்பார்
த்து மென்பிராணனோடின்னுமிருக்கின்றேனே: ஆ! ஆ! நானென்ன இலேசா
னவனோ ?

அப்பா இலக்ஷுமணா! நடுநிலைமையுள்ள ஒப்பற்றஸ்திரீயை இந்தரா
க்ஷசன் சிறையிட்டுத்தடுக்கவும் பெரியோர்களுடைய நீதிவாக்கியங்களும்,
தர்ம்மதேவதையும், அவனுக்கு வசப்பட்டுப் போகுமானால் இந்த மூன்று
லோகங்களும் ஒருமிக்க அழியவேண்டும். அப்படியழியாவிட்டால் என்கோ
தண்டத்தின் வீரப்பிரதாபம் வெளிப்படாமற் போய் விடுமோ ? இந்தச்சமு
த்திரமாகிய பள்ளத்திற்கும்,விராதனுக்கும், காற்றைப்போலோடின காகாசுர
னுடைய கண்மணிக்கும், கரனுக்கும், பாதாளதுவாரத்தை வேராலடர்த்திய
ஏழுமராமரத்திற்கும், வாலிக்கு மாத்திரமா என்வில்வல்லமை சென்றது ? ஐ
யோ! இங்குநானப்போதே யிருந்தேனானால் இந்திரஜித்துமுதலான பெருந்
தேர்வீரர்களை யெல்லாம் பிழைக்கவிடுவேனோ ? கொல்லுகிறேனென்று
நீசொல்லக் கேட்டபடியினாலே, நீயே கொல்லக்கடவாயென்று மனத்திடங்
கொண்டேன். அப்பா என்பிராணாதாரமருந்தே! நானுன்னோடு பொய்யாகப்பி
றந்தேனேயன்றி, மெய்யாகப் பிறந்ததா யுடன்படவு மாட்டேன். நான் உடற்
பாரத்துக்கும் தகுந்தவனல்ல. என்னப்பனேஇலக்ஷுமணா! நம்முடையதாய்
மார்களும்,பந்துக்களும்,அயோத்தியா நகரமும், நம்மைஆஸ்ரயித்திருந்த பிரா
மணர்களும், நம்மை யென்னவானார்களோ வென்றுதுக்கமுற்று அழிந்து
போவார்கள். அப்படிப்போக வொட்டாமல் அவர்களைப்போய்க்காணவேண்
டுமென்று நினைத்துக்கொண் டிருக்கிறேன். நாம்போய் அவ்வயோத்தியா நா
ட்டை ஆளலாம். என்னைப் பொன்முடிசூட்டப் புறப்பட்டு வரக்கடவாய்.

அப்பா என்கண்மணியே! உன்னைநாகபாசஞ் சூழ்ந்துகட்டினபோதும்,
சத்துருக்களாலே நாசமுற்றபோதும், நானுன்னுடனேகூட நில்லாமல் அப்
புறம்போய்விட்டேனே. அந்தப் பகையாளிகள்செய்தது போலவே நா
னுஞ் செய்து நிலைத்து நிற்கின்றேனே: இந்தத் தேசத்திலுள்ளவர்க
ளெல்லாம் என்வெற்றிப்பிரதாபத்தை ஆலோசிக்கமாட்டார்களா ? விபீஷ

ஷுழ்வானுக்கு லங்காபட்டணத்தையாளும்படியாக முடிசூட்டி அங்குள்ள வாழ்வெல்லாம் அவனடையும்படியாக அன்று வரங்கொடுத்தேனே: அந்தவரத்தின்படி முடியாமல் இதோ நானே முடிந்து போகப்போகிறேன். நான் பொய்யையல்லவோ சொன்னேன் ? ஆ! ஆ! வாக்குப்பொய்யாத சூரியமரபிற்கும் ஒருபழியைச் சம்பாதித்துக்கொண்டேனல்லவா ? உணர்வில்லாத நான் என்புகழை நானேகெடுத்துக்கொண்டேன். என்றிவ்விதமாகச் சொல்லிக்கொண்டு ஏக்கமுற்றழுது பெருமூச்சுவிட்டு, நடுவிற்போய் அறிவுடனே இந்திரியங்களெல்லாஞ் சிறைபடும்படி இறந்து விடுவேனென்று சொல்லித் தம்பியை ஆசையுடனே கட்டித் தழுவிக்கொண்டு, ஒன்று மாலோசியாமல் தன்னைமறந்து மூர்ச்சையாய் விட்டார்.

இப்படி மானுஷிய சேஷ்டிதராகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் மூர்ச்சையடைந்ததைத் தேவர்கள் பார்த்து, தங்கள் கண்களில் அறைந்துகொண்டழுது அதிகதுன்பமுற்று, இனியெவ்வாறு முடியப்போகிறதோ வென்று குலைகுலைந்து, ஓ ஒருவராலு நிச்சயித்தறிகிறதற் கெட்டாத பெரியோனே! எங்கள் பொருட்டல்லவோ இப்படி வருத்தப்படுகிறீர். உமக்குந்துன்பமுண்டோ ? என்று அதிகபரிவுடனே சொல்லிப் போற்றத் தொடங்கினார்கள்.

ஸ்ரீராமர் மூர்ச்சையாயினமைகண்ட தேவர்கள் அவரைத்துதிசெய்தல்.

கவி.

உன்னையுள்ள படியறியே முலகையுள்ள திறனறியேம்
பின்னையறியே முன்னறியே மிடையுமறியேம் பிறவாமல்
நின்னைவணங்கி நீவகுத்த நெறியினிற்கு மதுவல்லால்
என்னையடியேஞ் செயற்பால தின்பதுன்ப மில்லோனே.

அரக்கர்குலத்தை யொறுத்தெம்மை யடிமையாக்கி யருளாயென்
றிரக்கவெம்மேற் கருணையினு லிசையாவுருவ மிவையெய்திப்
புரக்குமன்னர் குடிப்பிறந்து போந்தாயறத்தைப் புரைதீர்ப்பான்
கரக்கநின்றே நெடுமோய மெமக்குங்காட்டக் கடவாயோ.

ஈன்றெம்மிடுக்கண் டுடைத்தளிப்பா னிரங்கியரச ரிற்பிறந்தாய்
மூன்றுமுலகந் துயர்தீர்த்தி யென்னுமாசை முயல்கின்றேம்
என்றுமறந்தே மவனல்லன் மனிசனென்றே யிதுமாயம்
போன்றதில்லை யாளுடையாய் பொய்யும்புகலப் புக்காயோ.

அண்டம்பலவு மனைத்துயிரு மகத்தும்புறத்து முளவாக்கி
உண்டுமுமிழ்ந்து மளந்திடந்து முள்ளும்புறத்து முளையாகிக்
கொண்டுசிலம்பி தன்வாயி னூலாலமையக் கூடியற்றிப்
பண்டுமின்று மமைக்கின்ற படியையொருவாப் பரமேட்டி.

துன்பவிளையாட் டிதுவேயு முன்னைத்துன்பந் தொடர்வின்மை
இன்பவிளையாட் டாமெனினு மறியாதோருக் கிடருற்றால்
அன்புவிளையு மருள்விளையு மறிவுவிளையு மவையெல்லாம்
முன்புபின்பு நடுவில்லாய் முடித்தாலன்றி முடியாவால்.

வருவாய்போல வாராதாய் வந்தாயென்று மனங்களிப்ப
வெருவாதிருந்தே நீயிடையே துன்பம்விளைக்க மெலிகின்றேம்
கருவாயளிக்குங் களைகண்ணே நீயேயிதனைக் களையாயேல்
திருவாழ்மார்ப நின்மாயை யெம்மாற்றீர்க்கத் தீருமோ.

அம்பரீடற் கருளியது மயனார்மகனார்க் களித்ததுவும்
எம்பிரானே யெமக்கின்று பயந்தாயென்றே யேமுறுவேம்
வெம்புதுயர நீயுழக்க வெளிகாணாது மெலிகின்றேம்
தம்பிதுணைவ நீயிதனைத் தவிர்த்தெம் முணர்வைத் தாராயோ.

இன்பமும் துன்பமுமில்லாத ஸ்வாமி ! ஸ்ரீராமபிரானே ! உம்முடைய யதார்த்த ஸ்வரூபலக்ஷணங்களை நாங்களின்னபடியென் றறியமாட்டோம். இந்தலோக ஸ்வபாவத்தையும் இன்னவாறுயிருக்கிறதென்றுஅறியமாட்டோம். உமக்கந்தம் இதுவென்று மறியோம். உமக்குமுதல் இதுவென்றுமறியோம். உமக்கு நடுவு மின்னநிலைமையென்றறியோம். இவையாதும் தோன்றாமல் உம்மைவணங்கி நீர் நியமித்தவழியில் நிற்பதேயல்லாமல், அடியேங்கள் தேவர்விஷயத்திற் செய்யத்தக்கவைகளும் உண்டோ ? இராக்ஷசவம்சத்தை வேரறுத்து தேவரீர்திருவடிகளுக்கு எங்களை அடிமையாக்கிக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் யாசிக்க, எங்கள்மீது கருணைகொண்டு தேவர்பெருமைக்குப்போதாத இந்தமனிதத்திருமேனியைத் திருவுளங்கொண்டு உலோகரக்ஷணார்த்தஞ்செய்கின்ற ராஜவமிசத்தில் திருவவதரித்து வந்தது தர்மத்தைக்குற்றமற நிலைநிறுத்தவல்லவோ ? அதையொளித்துவிட்டு உம்முடைய நெடுமாயத்தை அடியேங்களுக்குக் காட்டலாகுமோ ?

ஓ தயாளுவே ! எங்களையெல்லாஞ் சிருஷ்டித்து எங்கள் துன்பங்களையெல்லா நீக்கி ரக்ஷிக்கும்படி இரக்கமுற்று இராஜக்கிருஹத்தி லவதரித்தபடியால், சுவர்க்கமத்திய பாதாளமென்கிறமூன்று லோகத்தார்களுடைய துன்பங்களையு நீக்குவீரென்னும்ஆசையுற்றிருக்கின்றோம். உம்மைநாங்கள்தெரிந்தும் பூர்வத்தில் மகமேரு சிகரத்தில்வரத்தைத்தயைசெய்த அந்தச்சாட்குணியபரப்பிரம்ம மிவ்ரல்ல. இவன்மனிதன். என்றுமறந்து நினைக்கும்படி செய்கின்ற இந்தமாயத்தைப் போன்றது ஒன்றுமில்லை. இப்படிப்பட்ட பொய்சொல்லவும் எழுந்தருளினீரோ ? ஓ பரமேட்டீ ! நீர் பல்லாயிரங்கோடி அண்டங்களையும், அவைகளுக்குள் வசிக்கின்ற எல்லா ஜீவகோடிகளையும், உள்ளும்புறத்தும் உண்டாக்கி; அவைகளையெல்லா முண்டும், உமிழ்ந்தும், அளந்தும், பிளந்து மவைகளுக்குள்ளும்புறத்திலு நிறைந்தவரா யிருந்துகொண்டு; சிலம்பியானது தன் வாயிலுண்டாகு நூலினாற் கூடுகட்டினாற்போல முன்னும், பின்னும், சிருஷ்டிக்கின்ற தொழிலை நீங்காதவரா யிருக்கின்றீரன்றோ ?

ஓ ஆதிமத்தியாந்தரகிதரே ! தேவரீர் விளையாட்டாகத் துன்பத்தை அங்கீகரித்தபோதிலும், தேவரீரை அந்தத்துன்பந் தொடருமோ ? தேவரீர்

சந்தோஷவிளையாட்டாக அங்கிகரித்தீரேயாயினும், எங்களுக்கு அந்தத் துன்பம்வரும். அப்போ தெங்கள் கர்வமடங்கிப் பக்தியுண்டாகும். அன்னியர்களிடத்தில் தயவுண்டாகும். ஜ்ஞானம்வளரும். அவையெல்லாம் தேவரீரால் நீங்கினுலல்லாமல் தாமேமுடிவடைய மாட்டா. இந்தலோகத்தில் வந்துவிட்டீரென்று எங்களை நினைக்கும்படிச்செய்து பரமபதத்தி லெழுந்தருளி யிருக்கின்றவரே! தேவரீர் எங்களுக்கு ரக்ஷகராகவந்தீரென்று மனது சந்தோஷிக்கும்படி நிர்ப்பயர்களா யிருந்தோம். அப்படியிருக்க நீர் மத்தியில்துன்பத்தைக் காட்ட எங்கள்மனது நிலையாமல் வருத்தப்படுகின்றோம். எங்கள்காரணமாயிரக்ஷிக்கவந்த ஓ ஆதாரமே! தேவரீரே இப்படிப்பட்ட துக்கத்தை நீக்காவிட்டால், பெரியபிராட்டியா ரெழுந்தருளியிருக்கின்ற மார்பையுடைய சர்வகாரண ஸ்ரீயப்பதியே! தேவரீரால் பூட்டப்பட்ட மாயையானது அடியேங்களால் நீக்க நீங்கக்கூடியதாகுமோ?

ஓ சக்கரவர்த்தித் திருக்குமாரரே! தூருவாசமுனிவரால் அம்பரீஷ ராஜரிஷிக்கு நேரிட்டதுன்பத்தை நீக்கிரக்ஷித்ததும், பிரமதேவ புத்திரராகிய பிரஜாபதிகளுக்கு நேர்ந்த துன்பத்தை நீக்கிரக்ஷித்தது மாகியவிப்படிப்பட்ட ரக்ஷகத்தைப்போல எங்களுக்கின்று அருளிச்செய்தீரென்று சந்தோஷித்திருந்தோம். ஓ எங்கள்பெருமானே! தேவரீரிவ்வளவு கொடுந்துயரத்தில் வருந்துகிறபடியால் எங்களுக்குண்டாகிய துன்பம் ஒழியாமல் வருத்தப்படுகின்றோம். ஓ ராமாநுஜருக்குத் துணையா யெழுந்தருளின ஸ்வாமி! தேவரீர் இந்தமாயத்தை நீக்கி எங்களுக்கு அறிவைக்கிருபைசெய்ய மாட்டீரோ! என்றிப்படிப் பலவாறுகச்சொல்லிப் பிரஹ்மேந்திராதி இமையா நாட்டமுடைய தேவர்களெல்லாம் துக்கப்பட்டார்கள்.

அப்போது பூர்வதீர்மானத் திருவுள்ளத்தின்படி துன்பத்தை யடையத்தக்க மனுஷாவதாரத்திற் கிசைவாக அன்பின்பெருக்கத்தின் பொருட்டு ஸ்வாமியு மரணமூர்ச்சையாய் விட்டார். அற்பர்களான ராக்ஷசத்தூதர்கள் இராவணனிடத்திற்கு ஓட்டமாயோடி நின்றார்கள்.

யுத்தகளத்தில் நடந்தவிஷயங்களைத் தூதுவர்கள் ராவணனிடஞ் சொல்லுதல்.

கவி.

என்வந்ததுநீரென் றரக்கர்க் கிறைவனியம்பவெறிசெருவில்
நின்மைந்தனதுநெடுஞ்சரத்தாற் றுணைவரெல்லாநிலஞ்சேரப்
பின்வந்தவனுமுயிரிழந்த பிழையைநோக்கிப்பெருந்துயரால்
முன்வந்தவனுமுடிந்தானுன் பகைபோய்முடிந்ததெனமொழிந்தார்.

இராவண னவர்களைப்பார்த்து, ஓ தூதர்களே! நீங்களெங்கேவந்தீர்கள்? ஏதேனும் சமாசாரமுண்டானுற் சொல்லுங்களென்று கேட்டான். அப்போது ராக்ஷசதூதர்கள் ஐயா பிரதாபலங்கேஸ்வரா! பகைத்துச்செய்கின்ற போர்க்களத்தில் உம்முடையகுமாரனுகிய இந்திரஜித்துவினுடையபெரும்பாணங்

NO. 59. இராவணனேவலால் இராக்கதிகள் சீதையைவிமானத்திலேற்றி வந்து ஸ்ரீராமனாதியர்க்குநேர்ந்த விபத்தைக்காட்டுதல்.



சாம்புவந்தரும்விபிஷணரும் ஸ்ரீராமரைத்தேற்றுகையில் ஆஞ்சனேயர் சஞ்சீவிமலையைக்கொணர்ந்து இலட்சுமணாதியரைஎழுப்புதல்.



கலால் வானரர்களும் வானரவீரர்களும் பூமியில்விழுந்து மடிய, ஸ்ரீராமனு க்குத்தம்பியாக வந்தவனுமிறக்க, அந்தத் துக்கத்தைக்கண்டு அதிகவியசனம டைந்து அந்த ஸ்ரீராமனு மடிந்துபோய்விட்டான். உமதுபகை இன்றோடு மு டிந்துவிட்டதென்று சொன்னார்கள்.

பிரமாஸ்திரப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

இருபத்திரண்டாவது,

பிராட்டிகளங்காண் படலம்.

இப்படலத்தில் இந்திரஜித்துவினுடைய பிரமாஸ்திரத்தினல் ஸ்ரீராமனு தியர் முடிந்தாரென்று சாரணர் சொல்லக்கேட்ட இராவணன் சீதை யைப் புஷ்பக விமானத்தி லேற்றிக்கொண்டுபோய் இராமனுதியர்க்கு நேர்ந்த விபத்தைக் காட்டுங்களென்று சிலராக்ஷசஸ்திரீகளுக் காக்கி யாபிக்க, அவர்களவ்வாறே கொண்டுபோய்க் காட்டவும் சீதாதேவியா ர் மடிந்து மண்மேல்வீழ்ந்துகிடக்கின்ற ஸ்ரீராமனுதியரைக்கண்டு பிர லாபித்து நானுமென்னுயிரை மாய்த்துக்கொள்ளுகிறேனென் றெழுந் து சுவாமியின் திருமேனிமேல்விழ வெத்தனிக்க, அக்கால் திரிச டையானவள் சேர்த்துப்பிடித்து இஃதரக்கர்களுடைய மாயை யேயன்றி வேறல்லவென்று சொல்லித்தேற்ற, அதுகேட்டுத்தேறி ய சானகியாரை மற்றராக்ஷச ஸ்திரீகள் புஷ்பகவிமானத்தோடுங் கொ ண்டுபோய் அசோகவனத்திற் சேர்த்தல் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமலக்ஷ்மணர்களினது நிலையித்தன்மையதாயிற்றென்று தூதுவர்களாற் கேட்ட இராவணன் சந்தோஷித்துச் சீதாபிராட்டியைப் புஷ்பகவிமானத்தின்மீ தேற்றிச்சேன்று யுத்தகளத்தைக் காட்டுவீர்களேன்று இராக்ஷசஸ்திரீகளுக் குத்தரவுசெய்தபடி பிராட்டியாரை யுத்தகளத்திற் கழைத்தேகல்.

கவி.

பொய்யார்தூதரென்பதனுற் பொங்கியெழுந்தவுவகையனுய்
மெய்யார்நிதியின்பெருவெறுக்கை வெறுக்கவீசிவிளைந்தபடி
கய்யார்வரைமேன்முரசேற்றிச் சாற்றிநகரங்களிசிறப்ப
நெய்யாராடலாகென்று நிகழ்த்துகென்றுனெறியில்லான்.

இவ்வண்ணம் ஸ்ரீராமலக்ஷ்மணராதியர்கள் உமது புத்திரனுகிய இந்தி ரசித்துவால் மாண்டார்களென்கின்ற வார்த்தையைக்கேட்ட தருமமார்க்கத் தில் நடவாத விராவணப்பதகனுனவன் தூதர்கள் பொய்சொல்லமாட்டார்க ளென்கிற நம்பிக்கையால் பொங்கமாய் விளைந்த சந்தோஷித்தனுகி, அவர் களுக்கு அநேகநிதிகள் ஆசைநீங்கும்படியாகக்கொடுத்து, நமக்கு ஜெயமுண்

டாயிற்றென்று நகரமுழுதுக்குந் தெரியும்படியாகவும், இயாவருமேண்ணெயிட்டு மூழ்கும்படியாகவும், யானைமேல் முரசறையச் செய்யுங்களென்று நியமித்தான். அந்தப் பிரகாரமாகவே அவர்கள் நடப்பிக்க, மறுபடியு மிராவணன் மருத்தனென்கின்ற ராக்ஷசனையழைத்து, அடா மருத்தனே! நீ சீக்கிரமாயோடி ரணக்களத்தில் மடிந்துகிடக்கின்ற ராக்ஷசப்பிரேதங்களெல்லாவற்றையும் பொறுக்கி யெடுத்துக் கடலிலெறிந்துவிடு. இந்தக்காரியம் உன் மனதறிந்ததேயல்லாமல் வேறொருவரறிந்தால் உன்தலையை வெட்டிவிடுவேன். முதலிலென் காரியத்தைச் செய்யக்கடவாய். என்றாக்கியாபிக்கவும் உடனே யவன்போய் இராக்ஷசர்களுடைய உடல்களையெல்லாமெடுத்துக் கடலிலெறிந்துவிட்டான்.

கவி.

தெய்வமானத்திடையேற்றி மனிசர்க்குற்றசெயலெல்லாம்
தையல்காணக்காட்டுமின்கள் கண்டாலன்றித்தனதுள்ளத்
தய்யநீங்காளென்றுரைப்ப வரக்கர்மகளிரிரைத்தார்ப்ப
உய்யுமுணர்வுநீத்தாளை நெடும்போர்க்களத்தினிடையுய்த்தார்.

பிறகவ் விராவணனனவன் சிலராக்ஷசஸ்திரீகளை நோக்கி, நீங்கள் சீதையைப் புஷ்பகவிமானத்தின்மேலேற்றிக்கொண்டுபோய் மனிதருக்கும் வானரர்களுக்கும் சம்பவித்த செய்கைகளெல்லாம் காட்டுங்கள். தான் நேரே பார்த்தாலல்லாமல் தன்மனதிற் சந்தேகநீங்கமாட்டாள். விரைவிற் கொண்டுபோங்கள். என்று நியமிக்கவும் இராக்ஷசஸ்திரீகளெல்லாம் ஆரவாரித்துக்கொண்டு சீதாபிராட்டியாரைப் பெரும்போர்க்களத்திற் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். அப்போது ஸ்ரீராமமூர்த்தியின் திருமேனியையே யல்லாமல் வேறொருவரையும் பாராத சீதாபிராட்டியார் இரணக்களத்தைத் தமது திருக்கண்களாற் கண்டார். உடனே விஷபானம் பண்ணினவர்களைப்போலத் தேகமும், அறிவும், சுவாசமும்சோர்ந்து ; தாமரைப் புஷ்பமானது அக்கினியில் வீழ்ந்தபோது எப்படிப்போய்விடுமோ? அப்படியே துன்பமடைந்து சகிக்கமாட்டாதவளாயழுதுமூர்ச்சித்தாள். ஐயோ! ஸ்ரீகளடைந்தபெருந்துக்கமானது லோகத்திலெல்லாவருத்தங்களைக் காட்டிலும்அதிகமாகுமல்லவோ?

சீதாபிராட்டியார் யுத்தகளத்தைக்கண்டு விசனித்தல்.

கவி.

மங்கையழலும்வானாட்டு மயில்களழுதார்மழவிடையோன்
பங்கினுறையுங்குயிலழுதாள் பதுமமலர்மேன்மாதழுதாள்
கங்கையழுதாணமடந்தை யழுதாள்கமலத்தடங்கண்ணன்
தங்கையழுதாளிரங்காத வரக்கிமாருந்தானழுதார்.

இப்படி சீதாபிராட்டியாரழுதபோது தேவலோகத்திலுள்ள மயில்கள் போன்ற ஸ்திரீகளெல்லாம் அழுதார்கள். விருஷபவாஹனரூடரான சாம்பசிவமூர்த்தியின் இடதுபாகத்திலிருக்கின்ற குயில்போலு மொழியையுடைய

பார்வதிதேவியும்அழுதாள். தாமரஸபுஷ்பத்தின்மீது வசிப்பவளாகிய லக்ஷ்மிதேவியும் அழுதாள். கங்காதேவியும் அழுதாள். சரஸ்வதிதேவியும் அழுதாள் செந்தாமரை மலர்போன்ற திருக்கண்களையுடைய விஷ்ணுவின் தங்கையென்னும் துர்க்காதேவியும் அழுதாள். கொஞ்சமு மிரக்கமடையாத இராக்ஷசஸ்திரீகளும் அழுதார்கள். அறிவுமுயிருநீங்கி மூர்ச்சையான சீதாபிராட்டியைக் கூட்டமாய்க் காவலாகவந்த இராக்ஷசஸ்திரீகளெல்லாம் தண்ணீர்தெளித்து, வெகுநேரம்வரையிலும் சைத்தியோபசாரஞ்செய்து களையாற்றி மூர்ச்சைதெளிவித்து வாரியெடுத்தார்கள். அப்போது சீதாபிராட்டி மூர்ச்சைநீங்கி, மேகம்போன்ற திருமேனியையுடைய ஸ்ரீராமபிரானை மறுபடியும் பார்த்து, சேற்கண்டையைக் கோபங்கொண்டு தாமரையால் மோதியறைகிறதுபோலத் தனதுதிருக்கண்களைத் திருக்கரங்களால் அறைந்துகொண்டும், ஸ்தனங்களின்மீது அடித்துக்கொண்டும், வயிற்றைப்பிசைந்துகொண்டும் கிலேசித்தாள்.

மேலும், அக்கினியில் வீழ்ந்த பூங்கொடியைப்போல உடல்குழைந்து, மனம்புழுங்கிப் பதைத்து, குலைவுற்றுநடுங்கி, மீனைப்போல மயங்கிச்சோர்ந்து சுழன்றுதுள்ளி, அதிக வருத்தமுற்றுயிர்வாடிக் கைகால்களை உதைத்துதறினாள். அந்தப் புஷ்பகவிமானத்தின்மீது திடீரென்று விழுந்தாள். கடகடவென்று புரண்டாள். தேஹமெல்லாம் வெயர்த்தாள். மெய்மறந்தாள். வெதும்பினாள். மறுபடியுமெழுந்தாள். உட்கார்ந்தாள். தாமரைமலர்போன்ற கைகளைநெரித்துக்கொண்டாள். சிரித்தாள். அழுதாள். ஒகொழுநரே! என்றாள். ஓ அயோத்திநகரத் துள்ளவர்களுடைய கோமானே! என்றாள். ஓ சுவர்க்கமத்திய பாதாளவாசிகளெல்லாம் வணங்குந் திருவடித்தாமரைகளையுடைய ஆண்டவனே! என்றாள். மூர்ச்சையானாள். மீட்டுந்தெளிந்து பிரலாபிக்கத்தொடங்கினாள்.

சீதாதேவிபிரலாபித்தல்.

கவி.

உறமேவுறுகாத லுனக்குடையார், புறமேதுயிலா ரொடுபூண்முலையார்
மறமேபுரிவார் வசமாயினையோ, அறமேகொடியா யிதுவோவருடான்.

மதியாருணர்வேத மொழிந்தவலால், கதியேதுமிலார் துயர்காணுதியோ
மதியேன்மதியே னினைவாய்மையிலாய், விதியேகொடியாய் விளையாடுதியோ.

கொடியேனிவைகாண் கிலெனென்னுயிர்கொள், முடியாநமனே முறையோமுறையோ
விடியாவிருள்வா யெனைவீசினையோ, அடியேனுயிரே யருளுயகனே.

எண்ணுமயலோடு பிருந்ததுநின், புண்ணுகியமேனி பொருந்திடவோ
மண்ணேருயிரே யிமையோர்வலியே, கண்ணேயமுதே கருணாகரனே.

மேவிக்கனன்முன் மிதிலைத்தலையென், பாவிக்கைபிடித் ததுபண்ணவநின்
ஆவிக்கொருகோள் வரவோவலர்வாழ், தேவிக்கமுதே மறையின்றெளிவே.

உய்யாளுயர்கோ சலைதன்னுயிரோ, ஐயாவிளையோ ருயிர்வாழலரால்
மெய்யேவினையெண்ணி விடுத்தகொடும், கைகேசிகருத் திறுவோகளிறே.

தகைவாணகர்நீ தவிர்வாயெனவும், வகையாதுதொடர்ந் தொருமான்முதலாப்
புகையாடியகாடு புகுந்துடனே, பகையாடியவா பரிவேதுமிலேன்.

இன்றீகலையே பிறரில்லிடைமான், அன்றீயெனவும் பரிவோடடியேன்
நின்றீவது நின்னைநெடுஞ்செருவில், கொன்றீவதொர் தீமைகுறித்தலினோ.

மேதாவிளையோய் விதியார்வினைவால், போதாநெறியெம் மொடுபோதுறுநாள்
மூதானவன் முன்னர்முடிந்திடெனும், மாதாவுரையின் வழிநின்றனையோ.

பூவுந்தளிருந் தகைபொங்கணைமேல், கோவுந்துயிலத் தருவாய்கொடியார்
ஏவின்றலைவந்த விருங்கணையின், மேவுங்குளிர்மெல் லணைமேவினையோ.

நெய்யார்பெருவேள்வி நிரப்பநெடுஞ், செய்யார்புன லூடுதிருத்துதியால்
மெய்யாகியவா சகமும்விதியும், பொய்யானவென்மேனி பொருந்துதலால்.

ஐயோ! தருமதேவதையே! என் காதலராகிய ஸ்ரீராமச்சந்திரப்பிரபு உன்னிடத்திலே உறுதியானகாதல்கொண் டிருந்தாரே. உன்னைவிட்டு வேறோரிடத்தில் சயனிக்கவு மாட்டாரே: இப்படியவரோடு அநந்யமாயிருந்த நீ இப்போது பாபகிருத்தியங்களை இயல்பாய் நடத்திக்கொண் டிருக்கின்றவர்களாகிய இராக்ஷசர்கள் வசத்திலோ சேர்ந்துவிட்டாய்? ஆ! ஆ! நீயுங் கொடுமைசெய்ய ஏற்பட்டையே: இதுதானோ உன்னை நான் நம்பியிருந்ததற்கு நீ எனக்குச்செய்தகிருபை? ஐயோ! விதியே! பெரியோர்களுடைய வாக்கியத்தையும் வேதநியமத்தையுமே யல்லாமல் வேறுகதியையுடையவர்களல்லாத எங்களையோ துன்பப்படுத்தவந்தாய்? சத்தியமாய் இனியுன்னை நான் நம்பமாட்டேன்: நம்பமாட்டேன்: நீ கொடுமையைக்கொண்டிருக்கின்றாய். அப்படிக்கில்லாமல் எங்கள் மனதைச்சோதிக்க விளையாடுகின்றாயோ?

ஐயோ! இயமதர்ம்மராஜனே! அதிகபாபிஷ்டியானநான் இந்தப்பதங்குறையைப்பார்த்துச் சகிக்கமாட்டேன். என்னுயிரைக் கொண்டுபோ. உனக்கு இதுமுறையாகுமோ? முறையாகுமோ? ஓ அடியேனுடைய பிராணாதாரமே! ஓ கிருபாமூர்த்தியே! விடியாதவிருளில் என்னையுட்படுத்திவிட்டீரோ? அடியேன் மிகுந்த ஆசையுடனே இதுவரையினு மென்பிராணனைவிடாமல் காத்திருந்தது, இப்போது தேவரீருடைத்தா யிருக்கின்ற புண்ணானதிருமேனியை இரணக்களத்தில் வந்து சேவிக்கும்படியாகத்தானோ? ஓ பூலோகத்தவர்களுடைய பிராணஸ்தானமா யிருக்கின்றவரே! ஓ சுவர்க்கலோக வாசிகளுக்குச் சக்தியாயிருக்கின்றவரே! ஓ அடியேனுடைய நேத்திரஸ்தானமானவரே! ஓ தேவாமுர்தத்துக்கொப்பானவரே! ஓ கருணாகரமூர்த்தியே! மிதிலாபுரியை யடைந்து அக்கினிசாக்ஷியாகப் பாவியாகிய அடியேனுடையகையைத்தேவரீர் பற்றினது தம்முடைய பிராணனுக் கிப்படிப்பட்ட பொல்லாங்கு வரத்தானோ? ஓ தாமரசபுஷ்பத்தில் வசிக்கின்ற ஜெயலக்ஷ்மிநாயகரே! ஓ வேதப்பிரதிபாத்திய வஸ்துவே! தேவரீருடைய மாதாவாகிய கௌசல்யாதேவி

யானவர் இனி பிழைக்கப்போகிறதில்லை அதுபோலவே இளையவர்களு முயிர்வாழமாட்டார்கள். உள்ளபடி இப்படிப்பட்டசெய்கைகளை யனுபவிக்கவேண்டுமென்று கொடுமையை யுடையவளாகிய கைகேசியினுடைய எண்ணமிருந்ததோ?

ஓ மதத்தயானைக் கொப்பாகிய ஸ்வாமி! அந்தக்கைகேசி உம்மை நகராளுகையைவிட்டுவிடென்ற மாத்திரமே பிரதி உத்தரஞ்சொல்லாமல் மான்கள் முதலான மிருகங்களெல்லாம் பற்றியெரியும்படியான காட்டிலேவந்து, உம்மோடு எதிர்த்துவந்த கவந்தனுதியர்களைக்கொன்று ஜெயம் பெற்றீரே: இப்படிப்பட்ட உம்மிடத்தில் அடியேனுக்கு எள்ளளவும் அன்பில்லாமல் போய்விட்டதே: ஓ என்பிராணபதமான நாயகரே! காட்டினிடத்தில் வந்த வஞ்சமுள்ள மானைப்பார்த்து, இன்றையதினம் இந்தமானைப்பிடித்து எனக்குத்தாரும். இது மற்றவர்கள் வளர்க்கிறமானை ஒத்ததன்று. ஆதலால் அபூர்வமாகிய இந்தமானை எனக்குத் தாருமென்று வருத்தத்தோடு தேவருடைய அடியாளாகிய நான் பிடிவாதஞ்செய்து நின்றது, இந்த உயுத்தக்களத்திலே உம்மைக் கொலையுண்ணச் செய்வதாகிய தீமையைக்குறித்துத்தானோ?

ஐயா அதிகபுத்திமானுன இளையபெருமாளே! நடக்கிறதற்குக் கஷ்டமாகிய காட்டுவழியில் ஊழ்வினையாலே நீர் எங்களுடனேவந்த நாளையில் உமது தாயார் சுமித்திராதேவியார் உம்மைப்பார்த்து, அப்பா குமாரனே! உன் தமயனுக்கு ஏதேனுமிக்கட்டு நேரிடுமேயானால் அவனுக்குமுன்னுக உன்பிராணனை விட்டுவிடென்று ஆஜ்ஞாபித்தாளே! மாதுருவாக்கியப்படி அந்தக்கிரமத்தில்நின்று முன்னே மாண்டுபோனீரோ? உம்முடைய பிராதாவாகிய பெருமாள் நித்திரைசெய்வதின் பொருட்டுப் புஷ்பங்களும், தளிர்களுங்கொண்டுவந்து கொடுப்பீரே: அப்படிப்பட்ட நீர் சத்துருக்களுடைய கூர்மையான பாணங்களினுலேயுண்டாகிய படுக்கையின்மீது சயனித்துக்கொண்டீரோ? ஓ சக்கரவர்த்தித் திருக்குமாரரே! நெய்சொரிந்து வளர்க்கத்தக்க யாகங்களை அனேகமாகச் செய்து நீண்டவயல்கள்சூழ்ந்து நிறைந்திருக்கின்ற அயோத்தியாநாட்டை ரக்ஷிக்கும்படியான நீர், அடியேனுடைய மேனியைத் தொட்டபடியினுலே வேதமார்க்கமும் ஊழினிலைமையும் பொய்யாய் விட்டன. ஆ! ஆ! என்கற்புடைமைவெகுநேர்த்தி; வெகுநேர்த்தி: உமது மரணவத்தையைக் கண்டபோதே நானுமிறக்கவேண்டும். எனதுமனமோ? மழு—வாள் என்னுமிரண்டும் ஒருங்குசேர்ந்து பிளக்கினும் பிளவாத கல்மனதையுடையவளாயிருக்கின்றேன். இனி உமது திருமேனியின்மீது விழுந்தாவது இறப்பேனென்றெழுந்தாள். இவ்வண்ணம் சொல்லியெழுந்த சானகியைத் திரிசடை தடுத்து சிலசமாதானமான வார்த்தைகளைச் சொல்லலுற்றுள்.

சீதாபிராட்டியாரின் துயரத்தைத் திரிசடையாற்றுதல்.

கவி.

மாடுறவளைந்துநின்ற வளையெயிற்றரக்கிமாரைப்
பாடுறவற்றநோக்கிப் பாவையைத்தழுவிப்பற்றித்

கூடினனென்னநின்று செவியிடைக்குறுகிச்சொன்னாள்
தேடியதவமேயென்னத் திரிசடைமறுக்கந்தீர்ப்பாள்.

இப்படிநானுவிதமாகவருந்தி எழுந்த சீதாபிராட்டியாரைத் திரிசடையானவள் தடுத்து, பக்கத்திற்சூழ்ந்துநிற்கின்ற வக்கிரதந்தங்களையுடையவர்களான இராக்ஷசஸ்திரீகள் அயர்ந்திருக்கின்ற சமயம்பார்த்து, சித்திரப் பிரதிமைபோன்ற சீதாபிராட்டியாரை வாரியெடுத்துக் கட்டிச்சேர்த்துப் பிடித்துத் திருச்செவியைக் கிட்டி, அம்மாஜானகி உலகம்செய்த தவவுருவே! இராவணன் முன்புமோசமாக மாயமானையனுப்பின விதத்தையும், மாயாஜனகனை யுண்டாக்கினதையும், இந்திரஜித்து மறைந்துபோய் நாகபாசத்தைவிட்டுக் கட்டினதையும், பின்பு கட்டவிழ்ந்துபோன தன்மையையு நீராலோசனைசெய்து நினையாமலும், துன்மார்க்கர்களான இந்த ராக்ஷசர்கள் செய்துவருகின்ற பெருமாயங்களை யெல்லாம் தெரியாமலும், வீணிலே பிராணத்தியாகம் பண்ணிக்கொள்ளும்படி நினைக்கலாகுமா?

அம்மா! அடியேன் தேவரீரிடத்தில் விண்ணப்பம் பண்ணிக்கொண்ட கனவுகளையும், தேவரீர்கண்ட சகுனங்களையும், உம்முடைய கற்பையும், தண்டமுடன் வாளுமுடையவர்களா யிருக்கின்ற இராக்ஷசர்களுடைய பாப கிருத்தியங்களையும், தர்ம்மஸ்தாபன தேவதேவோத்தமரான ஸ்ரீரகுநந்தனருடைய சௌரியப் பிரதாபத்தையும், நீர்மறந்துவிடலாமோ? நம்முடைய ஸ்வாமிக்கு இந்தச் சண்டாளர்கள் கையாலே மரணமும் உண்டோ? சக்கரதரரான இந்தஸ்வாமியினுடைய திருமேனியில் ஒரு பாணமாவதுபட்டுப் புண்ணுண்டாகா திருப்பதைத் தேவரீர் காணவில்லையோ? இளையபெருமாளுடைய திருமுகமண்டலமானது இன்னமும் பிரளய காலச்சூரிய பிம்பத்தைப்போலப் பிரகாசிக்கின்றபடியால், அவருடைய பிராணனுக் கீனம்வந்ததென்று திருவுள்ளமயங்கவேண்டாம்.

ஓ யாகஜனிதையான சீதா பிராட்டியாரே! ஸ்ரீராமமூர்த்தியானவர் மரணமாயிருப்பாரேயானால், இந்தப் பதினாலுலோகமுந்தீய்ந்துபோயிருக்கும். அதுவுமல்லாமல் சூரியனுந்திசைமாறித் தெற்குவடக்காய் நடப்பான். தெய்வம் பொய்த்துவிடும். பிரம்மாவோடு அவன் சிருஷ்டித்த உயிர்களெல்லா மாண்டுபோய் விடும். இப்போ துரைத்தவைகளெல்லாம் இன்னுநிலைதப்பாதிருக்கின்றபடியால் ஸ்ரீராம லட்சுமணர்களும் ஜீவவந்தர்களாகவே யிருக்கின்றார்கள். தர்ம்மதேவதையும் இருக்கின்றதம்மா! தேவரீர் வரமாகவருளிய சிரஞ்சீவிப்பட்டத்தைக்கொண்டவாயுபுத்திரராகிய ஆஞ்சநேயருக்கு மரணமில்லையல்லவா? அவருடைய பிராணனுக்கேதேனும் சலனமுண்டானால்தேவரீருடையகற்பு நிலைக்கு மாறுபாடுண்டாகு மல்லவா? எஃதெவ்வாறாயினு நன்மையென்பது சிறப்புறாதிருக்குமோ? இப்போதிவர்கள் மூர்ச்சையாகி யிருக்கின்றார்கள். அது பிர்ம்மாஸ்திரத்தின் செய்கையாகும். அதுவுமிதோ நீங்கிவிடப்போகின்றது. தேவர்களுடைய எண்ணமும் தவறிப்போகுமா?

ஓ சீதாதேவியாரே! தேவர்களெல்லாம் தங்கள் சொர்னமய கரகமலங் களைச் சிரசின்மேற் கூப்பிக்கொண்டு திரிமூர்த்திகளைக்கண்டா லெப்படிப் ப யபக்திசிரத்தையுடனே நிற்பார்களோ? அப்படியே இளையபெருமாளையும் ஸ்வாமியையுங்கண்டு தோத்திரஞ் செய்தார்கள். சுவாமியிறந்ததாக தாங்கள் துன்பப்படவில்லை. அதையடியேன்கண்ணாரக்கண்டேன். நீர் பயப்படவேண் டாம். ஒருசிறுகிணற்றில்கடல்நீரெல்லாம் அடங்கிவிடுமோ? அதுபோலிந்த அற்பர்களிடத்தில் இந்தத்திவ்யபுருஷர்கள் அடங்கிவிடுவார்களோ? அம்மா! இன்னுமொருதிருஷ்டாந்தஞ்சொல்லுகின்றேன் கேளும். மங்கலியமில்லாத வர்களையும், உயிரில்லாதவர்களையும், இந்தத்தேவவிமானம் பொறுக்கமாட் டாது. இந்தத் திருஷ்டாந்தத்தினாலே தேவரீர்துக்கப்படாம லிருக்கவேண்டு மென்றுதிரிசடைசொன்னவார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் முன் சந்தே ஹித்தவரைப்போல அவதாரவியல்பாயிருந்த சீதாபிராட்டியார் கொஞ்சஞ் சோகநீங்கி உயிர்கொண்டு திரிசடையைப்பார்த்து, அம்மா விபீஷணாழ்வானு டைய புத்திரியே! நீ இதுவரையிலுஞ் சொன்னவைக ளெல்லாம் ஒன்றுந்த வறுமற் சித்தித்ததை அனுபவமா யறிந்தபடியினாலே, உன்னையே யெனக்கு ஆதாரதெய்வமாகக்கொண்டு இத்தனைகாலம் பிழைத்திருந்தேன். அப்படியே இன்னும் இன்றைய ராத்திரிவரையிலு மிருக்கின்றேன்.

அம்மா திரிசடையே! நானெப்போது பெருமாளைப் பிரிந்தேனோ? அன்றைக்கே மரணமுண்டாய்விட்டது. என்னுடைய வெட்கமெல்லா நீங்கிவிட்டது. ஸ்திரீகளணிந்திருக்கத்தக்க ஆபரணங்களையும், அன்றை க்கே நீக்கிவிட்டேன். ஸ்ரீகோதண்டபாணியு நீலமேகவண்ணருமான என் னுடைய பிராணநாயகரை மறுபடியும் பார்க்கலாமென்கிற ஆசையானது தடுத்தபடியினாலே, என்னுயிரை இத்தனைநாள் வைத்திருந்தேன். துர்ப்பல மான இந்தத்தேஹத்தை நீக்கிவிடுகிறது எனக்கொரு லக்ஷியமா? என்று தாமரசபுஷ்பத்தைநீங்கி மிதிலையில்வந் தவதரித்த மகாலக்ஷ்மியாகிய சீ தாபிராட்டியார் சொன்னாள்.

இராக்ஷசஸ்திரீகள் பிராட்டியைப் புஷ்பகவிமானத்தின்மீது முன்பிருந்த அசோகவனத்திற் கழைத்தேகல்.

கவி.

தையலையிராமன்மேனி தைத்தவேற்றடங்கணளைக்
கைகளிற்பற்றிக்கொண்டார் விமானத்தைக்கடாவுகின்றார்
மெய்யுயிருலகத்தாக விதியையும்வலித்துவிண்மேல்
பொய்யுடல்கொண்டுசெல்லு நமனுடைத்தூதர்போன்றார்.

இப்பால் ஸ்ரீராமருடைய திருமேனியை நோக்கிக்கொண் டிருக்கின்ற திருக்கண்களை யுடைய ஜானகிப்பிராட்டியை இராக்ஷசஸ்திரீகளெல்லா மிரண் டுபக்கத்திலு நின்று இரண்டுகைகளையும் பிடித்துக்கொண்டு புஷ்பகவிமானத்

தைச்செலுத்தி, எதார்த்தமான பிராணனை இந்தலோகத்தில்விட்டுவிட்டுப் பலாத்காரமாய் விதியைக்கடந்து பொய்யான உடலை ஆகாசமார்க்கமாகக்கொண்டுபோகின்ற யமதூதர்களைப் போல அசோகவனத்திற்கழைத்துப் போனார்கள்.

பிராட்டிகளங்காண் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

இருபத்துமூன்றாவது,

மருத்துமலைப் படலம்.

இப்படலத்தில் முன்னம் ஸ்ரீராம ருத்தரவின்படி யாவர்க்கும்ஆகாரம்கொண்டுவரப்போன விபீஷணர் மீண்டு யுத்தகளத்தில் இந்திரஜித்துவினுடையபிரம்மாஸ்திரத்தால்இலக்ஷுமணராதியர்க்குநேர்ந்தவிபத்தையும் அங்ஙன் ஸ்ரீராமரடைந்திருக்குஞ் சோபத்தையுங்கண்டு ஆஞ்சனேயர்பாற்சென்று அவரைக் களைநீக்கி யெழுப்பவும் அவரவரை யழைத்துக்கொண்டு சாம்பவந்தரிடஞ்செல்ல, அவர்விரைவிற் சஞ்சீவிமருந்தைக் கொண்டுவரும்படி ஆஞ்சனேயருக்குணர்த்தி அஃதிருக்குமிடத்தையுங் குணத்தையுமறிவிக்க, உடனேயவர் விஸ்வரூபங்கொண்டு சாம்பவந்தர்கூறிய மார்க்கமே சென்று சஞ்சீவிமருந்துள்ள மலையைக்கண்டுபாய்ந்து அதனைச் செண்டுபோலத் தூக்க, சாம்பவந்தரும் விபீஷணரும் ஸ்ரீராமரிடஞ் சென்று திருவடியை வருடவும்; அவர் திருக்கண்விழித்தருளி நோக்கித் தமது குறை கூறிக் கிலேசித்தபோது சாம்பவந்தர் அனுமான் சென்றிருக்குங்காரியத்தைக் கூறி அவரைத்தேற்ற,வேருடன் சஞ்சீவிமலையைத்தூக்கிக்கொண்ட ஆஞ்சனேயர் யுத்தகளத்துக்கு நேரே ஆகாயமார்க்கமாய் வந்தமாத்திரத்தில் பிரமாஸ்திரத்தினால்மாய்ந்த இலக்ஷுமணராதிய ருயிர்பெற்றெழுந்ததுகண்ட ஸ்ரீராமர் அவரையாசீர்வதிக்க, அக்கால் சாம்பவந்தர் வேண்டுகோளின்படி ஆஞ்சனேயர் அம்மலையைமீட்டும் இருந்தவிடத்திற் சேர்க்கும்படிதூக்கிச்செல்லுதல் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமலக்ஷுமணாதியர்க்கு நேர்ந்த விபத்தை ஆகாரங்கொண்டு மீண்ட விபீஷணர் காணல்.

1 கவி.

போயினனடையலிப்பாற் புரிகெனப்புலவர்கோமான்
ஏயினகருமநோக்கி யெய்தியவிலங்கைவேந்தன்
மேயினவுணவுகொண்டு மீண்டவையுறையுள்விட்ட
ஆயினவாகத்தான்வந் தமர்ப்பெருங்களத்தணுனன்.

இப்படி சீதாபிராட்டியார் போய்விட்டபிறகு முன்னம் ஸ்ரீராமமூர்த்தி நியமித்தபடி கந்தமூலபலாதிகளைக் கொண்டுவந்த இலங்காதிபதியான விபீ

ஷணாழ்வார் [அந்த] ஆகாரங்களைப் பர்ன்னசாலையில் வைத்துப்போட்டுத் தான் ரணக்களத்தில்வந்துசேர்ந்து, யுத்தஞ்செய்துகொண்டிருந்த வானரவீரரெல்லாம் இந்தலோகங்களைச் சிருஷ்டிக்கும்படியாய் நோற்ற பிரம்மாவினுடைய வாக்கினால் மாய்ந்தவர்களைப்போல மாண்டுகிடக்கிறதைக் கண்டு, விஷத்தைப் பானம்பண்ணினவரைப் போலப் பித்துக்கொண்டு மயங்கி, நடந்தவிதமொன்றும் அறியாமல், கண்சுழன்று மனங்கொதித்து, மெய்யுலைந்துலைந்து பெருமூச்சுவிட்டு, ஆவியுண்டோ இல்லையோ என்னும்படியாக மூர்ச்சையாகி, சூழ்ந்திருக்கின்ற பேய்க்கூட்டங்களும் – நாய்களும் – நரிகளும் – தூரமாயோடிவிடும்படியாகச் சமீபித்துவந்து, இளையபெருமாளைக் கட்டித்தழுவின படியே விழுந்துகிடக்கின்ற ஸ்ரீராமமூர்த்தியை மத்தியிற் கண்டு திடுக்கிட்டார்.

எலும்பென்பதும் - உடலென்பதும் – உயிரென்பதும் – ஆகியவிவைகளைச் சினேகத்திற் கிசைந்ததாகச் சொல்வதெல்லாம் பின்னிட்டதேயாகும். அப்படிக்கல்லவென்று அதனிலையைமாற்றி முன்னாக இருந்தவைகளென்று சொன்னாலும், முழுதுமாராய்ந்து பார்த்தபோது அந்த நட்புக்குக்காரணமான அன்பென்று சொல்லப்பட்ட தத்துவத்தி னியற்கையைத் தேவர்களுமறிந்தவர்க ளெல்லாதவர்களானார்கள். ஏனென்றால், விபீஷணாழ்வானைப்போல அந்தத்தேவர்கள்துன்பமடையவில்லை. இவர் அவ்வளவுதுக்கமடைந்தவராயிருந்தாலும், இந்த ஸ்ரீராமலக்ஷ்மணர்களுக்கு அழிவு உண்டாகாதென்றுதெரிந்த கியானவானா யிருக்கின்றபடியினாலே தனது பிராணனை விடவுமில்லை. புலம்பவுமில்லை. ஆனால் பெருமாளுக்கு இவ்வளவுவருத்தம் வந்ததேயென்று அழுது மிகவுமனங்கொதித்து, ஸ்வாமியினுடைய தேஹத்தில் காயமொன்றுமில்லாமையால் மனம் நடுங்காமலும் பயப்படாமலு மிருந்தார்.

அன்றியும், மிகுந்த பலாஷ்டிகனான இந்திரஜித்து பிரஹ்மாஸ்திரப்பிரயோகஞ் செய்தான். அதனால் இளையபெருமாளுக்குத் துன்பமுண்டாயது. அந்தத் துன்பத்தைச் சகிக்கமாட்டாமல் பெருமாள் மூர்ச்சையானா ரென்கிற நுட்பக்கருத்தைத்தெரிந்துகொண்டு, இதற்கென்ன உபாயஞ்செய்து இதை நீக்கலாமென்று ஆலோசித்து, ஸ்வாமியினுடைய திருவுளத்தில் பெருந்துன்பமுண்டா யிருக்கின்ற ததனால் மூர்ச்சையாயினார். இந்த மூர்ச்சை தெளிந்தபிறகு ஸ்வாமியின் திருவுள்ளத்தை யறிகிறது நம்மால்முடியுமோ? இளையபெருமாளுக்குப் பொல்லாங்குண்டானால் ஸ்வாமி, தம்முடையபிராணனை வைத்திருக்கமாட்டாரே: அந்த மாயவாழ்வையுடைய திருட்டுப்பயலோ ஜெயம் பெற்றுப்போ யிருக்கின்றானே: என்று கண்களில்நின்றும் தாரைதாரையாகக் கண்ணீர்பெருகவிட்டுக்கொண்டு, அந்த நாகபாசம் போனதுபோலவே பிரம்மாஸ்திரமும் இன்றைக்கே நாசமாகப்போகிறது. இளையபெருமாளுக்கும் ஒருதுன்பமில்லை. இந்த விசாலமான ரணக்களத்தில் மாண்ட வானரசேனைக ளெல்லாம் பிழைத்துக்கொள்ளுவார்கள். அந்தமஹா துஷ்ட நீச

ராக்ஷசனும் ஜெயம்பெறுவானோ? என்று மனோதிடங்கொண்டு, ஸ்வாமி மூர்ச்சைதெளிவதற்கு முன்பாக இப்போதே உதவிசெய்யத்தக்க துணையாளர்கள் மரணமடையாம லிருப்பார்களேயானால் தேடிக் கண்டுபிடித்துக்கொண்டு வருகின்றேனென்று ஒருகொள்ளிக் கட்டையைக் கையிலெடுத்துக்கொண்டு, இரத்தவெள்ளமாகிய சேற்றில் நடந்து சுற்றிப்போனார்.

வானரவீரர்களைத் தேடிச்சென்ற விபீஷணாழ்வார் ஆஞ்சனேயரைக் கண்டு களையாற்றல்.

கவி.

வாய்மடித்திரண்டுகையு முறுக்கித்தன்வயிரச்செங்கண்
தீயுகக்கனகக்குன்றிற் றிரண்டதோண்மழையைத்தீண்ட
ஆயிரகோடியானைப் பெருப்பிணத்தமளிமேலான்
காய்சினத்தனுமனென்னுங் கடல்கடந்தானைக்கண்டான்.

இப்படிப்போன விபீஷணாழ்வாரானவர் ஓர்பால் வாயைமடித்து இரண்டுகையையும் பிசைந்துகொண்டும் — தமது செவந்ததிருக்கண்களில் அக்கினிப்பொறிகளைச் சிதறிக்கொண்டும் - மேருமலையைப்போலத் தோள்கள் மேகமண்டலத்தை யளாவும்படியாக ஆயிரகோடி யானைப் பெரும்பிண மெத்தையின்மீது ஆஞ்சனேயரென்கிற வீரசிம்ஹமானது மிகுந்தகோபத்தோடும் படுத்துக்கிடக்கிறதைக்கண்டு, தமது கண்களில் நீர்சொரியும்படிப் பார்த்து, உயிரிருக்கின்ற தென்பதை ஊகித்தறிந்து, தேகத்திற் பதிந்திருக்கின்ற அம்புகளை ஒவ்வொன்றாக மெல்லமெல்ல உபாயமாய்வாங்கி, மேகஜலங்கொண்டு வந்து அவருடைய முகத்தைக்கழுவிக் குளிரச்செய்தார்.

அப்போது முன்பு சுவாசம்பிறந்தது. பிறகு ரோமராசிகள் சிலிர்த்து வெயர்த்தன. கண்களைவிழித்தார். தேகத்தைமெல்ல அசைத்தார். வாயில் நீரூறினது. உடனே தூங்கிவிழித்தாற்போலக் கொட்டாவியுமுண்டானபோது ஸ்ரீராமநாமத்தை மறவாமல் துதித்தார். அதைக்கண்டு தேவர்களெல்லாம் ஆரவாரித்தார்கள். அப்போது விபீஷணாழ்வான் ஆநந்தபாஷ்பம் பொழிந்து மிகுந்த அன்புடனே ஆஞ்சநேயரைக் கட்டித்தழுவினார். அந்த விபீஷணரை வாயுபுத்திரரும் அன்புடனே சேர்த்துத்தழுவி, ஐயா சிரேஷ்டவானே: ஸ்வாமி பாங்கா யெழுந்தருளி யிருக்கின்றாரோவென்று வினவினார்: அதற்கவர்-ஆம்; அப்படியே திடகாத்திரரா யிருக்கின்றாரென்று விண்ணப்பஞ்செய்தார். அதைக்கேட்ட மாத்திரமே இந்தமூன்று லோகங்களையும் தாங்கும்படியான தமதுதிருக்கைகளைக்கூப்பித் தெண்டனிட்டு நிற்கின்ற ஆஞ்சநேயரை விபீஷணாழ்வார்பார்த்துச் சொல்லுகிறார்.

ஐயா அஞ்சனைச்செல்வரே! ஸ்வாமியானவர் தமது திருத்தம்பியார்மீது வைத்த அன்பினாலே மூர்ச்சையாய்க்கிடக்கின்றார். இனித்தெளிந் தெழுந்

இருந்தால் ஸ்வாமிதிருவுள்ள மெப்படி முடியுமோ? தெரியாதென்றார். அக்காலாஞ்சநேயர் ஒன்றுந் தோன்றாதவராய்ச் சற்றுநிதானித்து, நல்லது: சாம்பவ ரெவ்விடத்திருக்கின்றார் கண்டீரோவென்று வினவினர். அதற்கவர் அடியேனுக்கு அவரெங்கேயிருக்கிறாரென்றுந் தெரியாது. அவரிறந்துபோனாரோ உயிரோ டிருக்கின்றாரோ தெரியாது. நானிப்போதுதான் வருகிறேனென்றார். அதைக்கேட்ட வாயுபுத்திரர் அவரைப்பார்த்து, ஓ வெற்றிபெறத்தக்க ராக்ஷசர்களுக்கெல்லா மிராஜசிரேஷ்டரா யிருக்கின்ற விபீஷணாழ்வானே! அந்தச் சாம்பவந்தருக்கு மரணமில்லை. அவரெங்கே யிருக்கின்றாரென்று பார்க்கலாம்வாரும் என்றனர்.

ஆஞ்சனேயரும் விபீஷணரும் சாம்பவந்தரைத்தேடி யவரிடமடைய அவர் ஸ்வாமியின்க்ஷேமசங்கதிகளை வினவ இவர்கள் சொல்லுதல்.

கவி.

அன்னவன்றன்னைக்கண்டா லாணையேயரக்கர்க்கெல்லாம்
மன்னவவெம்மைவிட்டு வாழ்விக்குமுறுதிவல்லான்
என்னலுமுய்ந்தேமைய வேகுதும்விரைவினென்னாச்
சின்னெறியருளிற்சென்றார் சாம்பனைவிதியிற்சேர்ந்தார்.

அந்தச்சாம்பவந்தரைக்காண்போமானால் நம்மைமறுபடியும்வாழச்செய்யத்தக்க யத்தனங்களை நிறைவேற்றுவதில் வல்லவராக்கும். என்று சொன்னமாத்திரத்தில் விபீஷணாழ்வான், ஐயா அநுமானே! அப்படியானால் நாம் சீக்கிரமாகப் போகலாம் வாருமென்று கொஞ்சதூரம் அந்த விருளிற்போனார்கள். சாம்பவரைத் தங்கள் நல்லவிதிவசத்தால் அவ்விடத்திற் கண்டார்கள்.

அதிக வார்த்திகத்தினாலும், பிரம்மாஸ்திரம் அழுந்தத்தைதத்தினாலும், தேகத்திலுண்டான காயவருத்தத்தினாலும், மூச்சொடுங்கி ஒன்றுந்தெரியாமல் மயங்கினமனதை யுடையவராயிருந்தும்; இந்த ஆஞ்சநேயரும் விபீஷணாழ்வானும் வருகின்றசந்தடியை வச்சிரமுஷ்டியை யுடையவரான அச்சாம்பவர் தம்முடைய செவிகளாற் கேள்விப்பட்டு, இங்குவரப்பட்டபேர் விபீஷணாழ்வானோ? என்னை அடிமைகொண்ட ஸ்ரீராமமூர்த்தியோ? அநுமானோ? அல்லது எளியேன்பொருட் டையோவென்று இரக்கமுற்றுக் கிருபைசெய்யும்படியாகவருகின்ற தேவர்களோ? மகாரிஷிகளோ? மற்றியாவரோ அறியேன். பகைவர்கள் நம்மைக் கொன்றுவிட்டுப் போனபடியால் அவர்கள் வரமாட்டார்கள். நம்மை ரக்ஷிக்கத்தக்கவர்களே வருவார்கள். என்று நினைத்துத் தம்முடைய ஆயாசந்தீர்ந்து, தமதருகில் வந்துநின்று மலையில்வீழுமருவிபோலக் கண்ணீர்சோரும்படி அழுதுகொண்டிருக்கின்றவர்களை உணர்ந்து, கண்ணைமூடினபடியே, ஐயா குணபூஷணர்களாய் வந்து என்னருகில் நின்றவர்களே! நீங்கள் யாரென்று கேட்டனர்.

இப்படிகேட்ட சாம்பவருடைய வாக்கியத்தை வினவிய விபீஷணாழ்வாரானவர் பிழைத்தோம் பிழைத்தோமென்று சந்தோஷிக்கவும் சாம்பவந்தர்

அவரை யின்னாரென் றறிந்து, ஐயா விபீஷணாழ்வானே! உம்மோடுகூட நிற்கின்றவர் யாரென்றுகேட்டனர். அப்போது ஆஞ்சநேயர், ஐயா வெற்றியாளரே! உமக்கு மங்கலமுண்டாகக்கடவது. அடியேன் அனுமான். இதோ தண்டனிட்டேன்: என்றுசொல்லக்கேட்ட சாம்பவந்தர் மனமகிழ்ந்து, ஐயா மகானுபாவனான மாருதியே! இனியெல்லாரும் பிழைத்தோம். இனி யாதொருகுறையுமில்லை. என்று மிகுந்தகளிப்புடனே ஓங்கி உச்சாகங்கொண்டு நின்று, ஐயா! இந்திரஜித்து எவினது பிரம்மாஸ்திரமே யானபோதிலும், வேதத்திற்கும் வேதம்போ லெழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீராமமூர்த்தியை ஒன்றுஞ்செய்ய மாட்டா தென்னும்படியான அவருடைய வல்லமையை ஆதியிலேயே தெரிந்திருக்கின்றேன். இப்போது அந்தச் சர்வலோகநாயகரான ஸ்ரீராமமூர்த்தி என்னசெய்கின்றார்? அதைத்தெரிவியு மென்றுசொன்னதைக்கேட்ட அஞ்சனாதேவி புத்திரர் கைகூப்பி, ஓ எம்பெருமானாகிய சாம்பவரே! ஸ்வாமியானவர் இளையபெருமாளுக்குத் துன்பமுண்டான தென்று மிகுந்த துக்கத்துடன் மூர்ச்சையா யிருக்கின்றாரென்றார்.

சாம்பவந்தர் சஞ்சீவிமருந்துள்ள மலையைக்கோண்டுவர அஃதிருக்குமிடத்தையுங் குணத்தைம் ஆஞ்சனேயர்க்கு அறிவித்தல்.

கவி.

அன்னவன்றன்மைகண்டா லாற்றுமேயாக்கைவேறே
இன்னுயிரொன்றேமூலத் திருவருமொருவரேயால்
இன்னதுகிடப்பத்தாழா விங்கினியிமைப்பின்முன்னர்க்
கொன்னியல்வயிரத்தோளாய் மருந்துபோய்க்கொணர்தியென்றான்.

அதைக்கேட்ட சாம்பவர் – ஐயா! உள்ளதுதான். இளையபெருமாளுக்கு ஏதேனும் வருத்தமுண்டாகக் கண்டாரானால் தாம் சஹிப்பரோ? அவர்களிருவருக்கும்உடலிரண்டு. உயிர்ஒன்று. மூலவஸ்துக்களானநரநாராயணர்களே இப்போது ராமலக்ஷ்மணர்களாக வந்திருக்கின்றவர்களேதவிரவேறல்ல அதங் நிலைமையிருக்கட்டும். ஓமேருமலையை யொத்த தோள்களையுடைய வாயுபுத்திரரே! நீர் க்ஷணப்பொழுதுக்குள்ளாகப் போய்ச் சஞ்சீவியைக் கொண்டுவர வேண்டும். நம்முடைய வெழுபதுவெள்ள வானர சேனையும், ஸ்ரீராமமூர்த்தியும், இளையபெருமாளும், இந்த மூன்று லோகத்தவர்களும், தர்ம்ம தேவதையும், ஸ்வதப்பிரமாணமான வேதமும், உம்மால் வாழ்வடைந்தன. ஐயா அதிபலாஷ்டியரான ஆஞ்சநேயரே! தாமசியாமல் நான் சொன்னபடியே சஞ்சீவியைக் கொண்டுவரப் போகக்கடவீர். அந்தச் சஞ்சீவியானது எங்கேயிருக்கின்றதென்றால்? இந்தச் சமுத்திரத்தைத் தாண்டிவடக்குமுகமாய் ஒன்பதினாயிரம் யோசனைதூரம் போனீரேயானால், இமவத்பருவதத்தைச் சேர்வீர். அந்த மலையினுடைய விஸ்தாரம் இரண்டாயிரம் யோசனையுள்ளது. அதைக்கடந்து ஒன்பதினாயிரம் யோசனைதூரம் போவீரேயானால் ஏமகூடபருவதத்தையடைவீர்.

ஓ சிரேஷ்டரே! அந்தப் பருவதத்திற்கப்பால் வடக்கே ஒன்பதினாயிரம் யோசனை தூரம்போனால் நிஷதகிரி யிருக்கின்றது. அதைத்தாண்டி ஒன்பதினாயிரம் யோசனைதூரம்போனால் சகலபர்வதங்களுக்கும்பெரியதான மகமேருவென்னும் வடகிரியிருக்கின்றது. பகைவர்களுடைய பலங்களையெல்லாம் யுத்தத்தாற் றேற்கச் செய்வதாகிய திருத்தோள்களையுடைய ஆஞ்சநேயரே! அந்தமலையின் விசாலத்தைக்கணக்கிடின், முப்பத்திரண்டாயிரம் யோசனைதூரமாகும். அம்மேருவைத் தாண்டி ஒன்பதினாயிரம் யோசனை தூரஞ்சென்றால் நீலகிரியைக்காண்பீர். அந்த நீலகிரிபருவதம் இரண்டாயிரம் யோசனை உயரமுள்ளதாக இருக்கின்றது. அதற்கு நாலாயிரயோசனை தூரத்தில் மேகமண்டல வரையிலுயர்ந்த சஞ்சீவி மலையைக் காண்பீர். அதைக்கண்ட மாத்திரமே எங்களுடைய துன்பத்தை முடித்துவிடுவீர். அஃதெப்படியென்றால் - அந்தமலையின்மீது இறந்தவர்களைப் பிழைப்பிக்கின்ற அமிர்த சஞ்சீவியென்கிற ஒருமருந்திருக்கின்றது. தேகம் துண்டு துண்டாய்ப் பிளந்தாலும் பொருந்தச்செய்யும்படியான மருந்தொன்றிருக்கின்றது. ஆயுதங்கள் தைப்பதினாலுண்டாகிய இரணத்தைப்போக்கு மருந்தொன்றிருக்கின்றது. உருவமழிந்துபோனால் அந்த உருவத்தையேமீட்டுங் கொடுப்பதான ஒருநல்லமருந்திருக்கின்றது. இப்படிப்பட்ட மருந்துகள் நான்கும் தேவர்கள் பாலசமுத்திரத்தைக் கடைந்தகாலத்திலெழுந்தன. அவற்றை அத்தேவர்கள் அவ்விடத்து வைத்திருக்கின்றார்கள். நான்குவேதங்கட்கு மெட்டாத பரஞ்சுடராகிய நாராயணமூர்த்தி வாமனவதாரத்திலுலகங்களை யளந்தகாலத்தில் யான் முரசஞ்சாற்றிச் சுற்றிக்கொண்டு வந்தேன். அக்கால் அம்மலையைக்கண்டு அங்குள்ளமுனிவர்களை இஃதியாதென்று வினவினேன் அவர் அச்சஞ்சீவிமலையின் பெருமையை எனக்குச் சொல்லினார்கள்.

ஓ பொய்க்குச் சமீபத்துஞ்செல்லாத அனுமானே! இந்தச் சஞ்சீவிமருந்தை அநேக தேவர்கள் காத்துக்கொண் டிருக்கின்றார்கள். நீரவர்களைக்கண்டு பின்னிடையாதேயும். அதுவுமல்லாமல் ஒருவர்க்கு மடங்காததாய் நெய்பூசிய வசிகளையுடையதான ஒருசக்கரஞ் சுழன்றுகொண் டிருக்கின்றது. நீர் செய்யவேண்டிய அநுஷ்டானங்களின் பொருத்தன்மையை முடித்து உம்மைச் சூட்சுமசரீரியாகச் செய்துபோகாவிட்டால், அந்தமருந்துகள் உமது கண்ணுக்கு அகப்படாமல் மறைந்துவிடும். ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். என்று அறிவிலதிகசிரேஷ்டரான சாம்பவானவர் வேண்டிய அடையாளங்களையும் அனுபோகங்களையுஞ்சொல்லி, மருந்தை யெளிதிற்கொண்டுவரத்தக்க தந்திரமுஞ் சொன்னார்.

ஆஞ்சநேயர் விஸ்வரூபங்கொண்டு சஞ்சீவி மருந்துள்ள மலையைக்கொண்டுவர ஆகாயம் பாய்தற் சிறப்பு.

கவி.

ஈங்கிதுவேபணியாகி னிறந்தோரும்பிறந்தோரோ யெங்கோற்றியாதும்
தீங்கிடையூறெய்தாமற் றெருட்டுதிர்போயெனச்சொல்லி யவரைத்தீர்ந்தான்
ஓங்கினன்வானெடுமுகட்டை யுற்றனன்பொற்றோளிரண்டுந் திசையோடொக்க
வீங்கினவாகாயத்தை விழுங்கினனேயெனவளர்ந்தான் வேதம்போல்வான்.

அதைக்கேட்ட ஆஞ்சநேயர் – ஐயா புண்ணியசீலரே! அடியேனுக்கு இப்போதே விடைகொடுத்தருளுவீரானால் இதுவரையிலிறந்தவர்களும்பிறந்தவர்களானார்கள். எம்முடைய ஸ்வாமிக்கு யாதொருபொல்லாங்கும் இடையூறும் வராதபடி நீங்கள்போய்ச் சமீபமாயிருந்து, உபசாரஞ்செய்து ஆறுதல் சொல்லிக்கொண்டிருங்கள். இதோபோய்வருகிறேனென்றவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அதிகவிசையாய்ப்புறப்பட்டு அண்டமுகடுவரையும் ஓங்கி, இரண்டுதோள்களும் இரண்டுதிக்கையளாவ விஸ்வரூபங்கொண்டு, ஆகாசமுழுதும் வளர்ந்து, வேதம்போல நிறைந்து, கிரஹங்களும்–நட்சத்திரங்களும்-கோத்த மணிமாலைபோல வரிசையாய் மார்பில் தோன்றவும், ஒருதோளுக்கு மற்றொருதோள் ஆயிரயோசனை விஸ்தாரமென்று யாவருஞ் சொல்லிக்கொள்ளவும், ஒருபாதத்துடன் மற்றொருபாதத்தைப் பெயர்த்து வைக்கிறதற்கு இலங்காபட்டணமும் போதாமற்போய்விடவும், பெரியகைகளைவிசுகிறதற்கு நீண்டதிக்குகளும் பற்றாமற்போகவும் வளர்ந்தார். அதிகவிசைகொண்டு புறப்பட்ட அனுமானுடைய விஸ்வரூபத்தின் பெருமையை யாரளவிட்டுச் சொல்லவல்லவர்கள்.

இப்படி வாலைவிசிக் கையைஓங்கி வாயையுஞ்சிறிது அகலத்திறந்துகொண்டு, பெரியகாலை நிலத்திற்பதியும்படி மிதித்து, மார்பைவிசாலித்து விரித்துக்கொண்டு, திருக்கழுத்தைக் கொஞ்சமுள்சுருக்கி, திருமேனியிலுள்ள ரோமங்கள் நெறித்துநிற்க விசைகொண்டு எழும்பினபோது அந்த லங்காபட்டணமானது சமுத்திரத்தில் முழுகிப்போகின்ற கப்பலைப்போலக்கிறுகிறென்று சுழன்றது. இவருடைய வேகத்தால் குலாசலங்களெல்லாம் பாளம்பாளமாய்ப் பிளந்துவிடும்போலிருந்தன. சமுத்திரமானது நாலுபக்கங்களிலும் கால்கிழிந்து பாய்ந்தது. கிழக்கிலுமேற்கிலு மின்னல் மின்னியது. மலைகளுமரங்களு மேலெழும்பி வீழ்ந்தன. தேவவிமானங்கள் ஆகாசத்தில் ஒன்றோடொன்று மோதுண்டு இடியைப்போலவிழுந்தன. சமுத்திரங்குழிந்து மேலேறித்திக்குகளிற் சிதறின. இந்தப்பிரகாரமாக அனுமான் பாய்ந்தபொழுது பெரியமலைகளெல்லாம் அவருடைய வேகத்தாற்பெயர்ந்து பின்றொடர்ந்து வடமுகமாய்ச் சாய்ந்துவீழ்ந்தன. அவர்தேகத்திற்பிறந்த சண்டமாருதக்காற்றினால் பிதாவாகிய வாயுதேவரு மனந்தளர்ந்து ஓய்ந்துபோவாரென்று தேவர்களெல்லாம் பேசிக்கொண்டார்கள்.

இப்படி மாருதியானவர் ஆகாசமார்க்கமாய்ப் போகின்ற வேகத்தினால் கடல்நீர் வற்றிப்போயிற்று மேகங்கள் தீய்ந்துபோயின. பெருங்காடுகளெல்லாம் வெந்து கரியாய்ப்போய்விட்டன. முன்னே காற்றோடவும், அதன்பின்னே கடலோடவும், மகாவிசையுடன் செல்கின்ற ஆஞ்சநேயருடைய திருமேனியானது பின்னேபோகவும், இவ்வாறு சகலவுயிர்களும் உள்ளங்குழைந்து போகும்படிப்போகின்ற அவருடைய உருவத்தைப்பார்த்து; எல்லாத்தேவர்களும் இவர் தம்முடையபலத்தை முன்பொருநாள்காட்டினபோது கடல் சூழப்பட்ட லங்காபட்டணமென்னு மிராக்ஷசர்கள் வசிக்கின்ற மேட்டைச் சமுத்திரத்திற் சேர்த்துவிட்டார். இந்நாளில் நம்முடையதுக்கமே பறி

யுண்டு போய்விட்டதென்று பேசிக்கொண்டார்கள். இந்தப்பிரகாரமாக ஆஞ்சநேயர் மேகமண்டலத்தைத் தாண்டிச் சூரியர்களுஞ் சந்திரர்களுநின்ற மண்டலங்களைக்கடந்து, நக்ஷத்திரங்கள் வாழுகின்ற எல்லையையுந் தாண்டிப் போய், எல்லாச் சாம்பிராச்சியங்களையுமுடைய தேவர்களுக்குப்புகலிடமான சுவர்க்கலோகத்தைத்தாண்டி, மூலதாமரைப் புஷ்பத்திற் பிறந்த பிரம்மலோக மின்னங்கொஞ்சந்தூரந்தா னிருக்கின்ற தென்னும்படியாக உயர்ந்த விஸ்வரூபத்துடனே புறப்பட்டுப்போயினார்.

இவரைப்பார்த்த சுவர்க்கலோகவாசிகளான தேவர்களிற் சிலர் வெற்றி பெற்ற கருடபகவானுக்கும், அதனால் ஸ்ரீயப்பதிவசிக்கின்ற பரமபதத்திற்குப்போகின்றாரென்றார்கள். சிலர் பிரம்மதேவர் தம்முடைய லோகத்திற்குப்போகின்றாரென்றார்கள். சிலர் இவர் மூன்றுகண்களையுடைய உருத்திரமூர்த்தி யென்றார்கள். சிலர் தமக்குத் திருவுள்ளமான நான்குவேதங்களு மெட்டுதற்கருமையாய் திருஉருவத்தைக்கொண்டு இந்தப்பிராகிருத பூமியில் விளையாடுகின்ற ஸ்ரீயப்பதியே என்றார்கள். இவருடைய திருமேனியினளவைத் தெரியக்காணலாமென்று இமைகொட்டு முன்பாக நமது கண்ணறிவைச் செலுத்தினாலும் இன்னுங் காண்கிறதற்கு அளவுடையவராகக் காணப்படவில்லை. இவர் பரமபதத்திற்குப்போகிறவராய்க்காணப்படுகிறா ரென்று அநேகதேவகணங்கள் சொல்லிக்கொண்டார்கள். சிலதேவர்கள் இது உருவமென்றார்கள். சில தேவர்கள் இது உருவல்ல ஒளியென்றார்கள். சில தேவர்கள் இந்தப்பிரகாசமுள்ளமேனி அருவென்றார்கள். சில தேவர்கள் இவ்வெல்லாவண்டங்களுக்கு மேலாகவிருந்து இந்தவண்டங்களெல்லா முண்டாகிறதற்குக் காரணமாயிருக்கின்ற வஸ்துவென்றார்கள்; சில தேவர்கள் இதுகாற்றுக் கதிதேவதை யென்றார்கள்.

இந்தப்பிரகாரமாக எல்லாக்காரியங்களையு நிச்சயித்தறியவல்ல புத்திமான்கள் இந்த ஆஞ்சநேயருடைய விஸ்வரூபப்பிரகாசத்தை இன்னபடியென்று தெரிந்துகொள்ளச் சக்தியற்றவர்களாய் விட்டார்கள். தாமரைமலர்மேல் வாசமாயிருக்கின்ற பிரம்மாவினுடைய அண்டம்வரையிலுயர்ந்து மத்தியவாகாசமெல்லாம் தம்முடைய உருவத்துக்குள்ளடங்கி மறைந்துபோகும்படியாகவும்- மேருமலைபோன்ற தோள்களின் வீச்சினால் அண்டப்பித்திகை தேயும்படியாகவும் — விசைகொண்டெழும்பின அந்த வாயுகுமாரருடைய திருமேனியிற் பிறந்த கோஷத்தைக்கேட்டு, திக்குப்பாலகர்களுடைய தலைகளெல்லாம் நடுநடுங்கின. அண்டகோளமெல்லாங் கிழிந்துபோம்போலிருந்தது. மஹாபலிச் சக்கரவர்த்தியானவர் வாமனமூர்த்திக்கு மூன்றடிமண்கொடுத்தபோது அவர் தமது சிறியபாதத்தால் உலோகங்களை யளக்கும்படி நீட்டினநாளில் கற்பகப் பூமாலையையணிந்த தேவர்களோடு மஹாரிஷிகள் முதலான பெரியோர்கள் யாவரும் தங்களுக்குரிய வேதங்களைப் பாராயணம்பண்

ணிக்கோஷித்ததுபோல, இவ்வாஞ்சனேயர் விஸ்வரூபங்கொண்டு சஞ்சீவிமலையையெடுக்கப் போம்போதும் லோகமெல்லாம் வேதகோஷமாக இருந்தது.

ஆஞ்சனேயர் சாம்பவந்தர்கூறிய மார்க்கமாகச் சஞ்சீவி பருவதத்திற்குச் செல்லுதல்.

கவி.

தேவருமுனிவர்தாமுஞ் சித்தருந்தெரிவைமாரும்
மூவுலகிடையுளோரு முவகையாற்றொடர்ந்துமொய்த்தார்
தூவினமணியுஞ்சாந்துஞ் சுண்ணமுமலருந்தொக்குப்
பூவுடையமரர்தெய்வத் தருவெனவிசும்பிற்போனான்.

தேவர்களும் - முனிவர்களும் — சித்தர்களும் - அவரவர்களுடைய தேவிமார்களும் - சுவர்க்கமத்திய பாதாளத்திலுள்ளவர்களான மற்றவர்களும் — ஆநந்தத்துடனே ஒருமிக்கச்சேர்ந்து மொய்த்துக்கொண்டு, ஆஞ்சநேயர்மீது தூவின ரத்தினங்களும் — சந்தனங்களும் சுகந்தப்பொடிகளும் — பலவித புஷ்பங்களு மேலேபடிந்திருக்க, புஷ்பங்களால் நிறைந்த தேவகற்பக விருக்ஷத்தைப்போல அஞ்சனாதேவி திருக்குமாரர் ஆகாசமார்க்கமாய்த் தாவிப்போயினார்.

இந்தப் பிரகாரமாகச்சென்ற வாயுகுமாரர் இமவத்பருவதத்தைச் சேர்ந்தார். அங்கிருக்கின்ற இமையாநாட்ட முடையவர்களான தேவர்களும், யாகாதிகளையுடைய முனிவர்களும், இன்னுந் தர்ம்மமார்க்கத்தைச் சேர்ந்தவர்களெல்லாம், ஐயா ஸ்ரீராமதூதரே! உம்முடையகாரியம் அனுகூலமாகக் கடவதென்று வாழ்த்தினார்கள். அதைத்தாண்டி அப்பால் ஈசானதிக்கில் தோன்றும் கயிலாசகிரியைக்கண்டு சந்தோஷமுற்று, அம்மலையி லெழுந்தருளியிருக்கின்ற உமாமகேஸ்வராகிய சிவபெருமானை தாமரைமலர்போன்ற தமது திருக்கரங்களைக்கூப்பித் தரிசனஞ்செய்துபோகின்றார். அப்படிப்போகின்ற ராமதூதனைக் கயிலாசபதியான பரமசிவனானவர் மிகுந்த அன்புடனே கடாக்ஷித்துப் பார்வதிதேவிக்குக் காட்டி, இவர்தான் வாயுபுத்திரராகிய ஆஞ்சனேயரென்றார் அதைக்கேட்ட பார்வதி அப்படியா? இவரென்ன காரணமாயிவ்வுத்தரதிசை வந்தாரென்றுகேட்க, மஹாதேவர் ஓ பெண்ணே! ஸ்ரீராமமூர்த்தியின் தூதரிவர். இப்போது சஞ்சீவிமருந்தின் பொருட்டுவந்தார். வஞ்சகர்களான லங்காவாசிகள் செய்யும் பொல்லாங்கை நீக்கப்போகிறது சத்தியம். நாளைக்குமகாயுத்தம் நடக்கப்போகிறது. ஆகையால் அதை நாமும்போய்ப் பார்க்கலாமென்றார்.

பின்பவ்வாஞ்சனேயர் ஆயிரயோசனை தூரம் கடந்துபோய் ஹேமகூடத்தைச் சேர்ந்து, அவ்விடத்தில் முடிவில்லாத சந்தோஷங்களை அநுபவித்துக்கொண்டிருக்கின்ற தேவசமூஹங்களைக் கண்டு, அப்பாலங்கிருந்து சமுத்திரத்தைப்போலப் பார்த்து, நிஷதபருவதத்தி னுச்சியிற் குதித்தார்.

அளவில்லாத சாஸ்திரங்களைப் பயின்ற அறிவாளர்களுடைய பார்வைக்கும், கிருபாவான்களான தேவர்களுடைய மனதிற்கு மெட்டப்படாத வேகமுடையவரான ஆஞ்ஜநேயர் அந்த நிஷதபர்வதத்தைக் கடந்து, இந்தப் பூலோகத்திற்கும் அஷ்டதிக்குகளி னிலைமைக்கும் - பிர்மலோகத்திற்கும் அளவைக்கருவியாக விருக்கின்ற மேருகிரியின்மீது பாய்ந்தார். இமைகொட்டாத கண்களையுடையவர்களான தேவர்களாலும் இதனிலைமை இப்படிப்பட்டதென்றறியக்கூடாத அந்த வடமலைக்குமேலே போன வாயுகுமாரர், நாவலந் தீவென்று சமுத்திரத்தாற் சூழ்ந்த பூவளாகத்தில் மூன்று லோகத்தவர்களும் கொண்டாடுகிறதற்குக் காரணமான தெய்வத்தன்மையுள்ள சம்புநாவல் விருக்ஷத்தையுந் தமது திருக்கண்களாற் கண்டார்.

அந்த மலையினுச்சியி லிவ்வுலகங்களை யெல்லாம்படைத்த சிருஷ்டி கர்த்தாவினுடைய திவ்வியநகரத்தையும், அந்த நகரத்தின்மத்தியில் சஹஸ்திரவிதழ்களோடுகூடிய மூலசொர்னதாமரைப் புஷ்பத்தின்மீது நான்குதிருமுகங்களுடனேகூடிய வப்பிர்ம்மதேவர் எழுந்தருளி யிருப்பதையுங்கண்டு இரண்டுகையுங்கூப்பித் தெண்டனிட்டு, அந்தத் தாமரைப் புஷ்பத்திற்கு ஈசான்யதிசையில் ஆயிரஞ்சூரியர்கள் கிரணங்களைவீசிப் பரப்பினதுபோலச் சடைகளைப் பரப்பி தாமரைமலர்போன்ற ஐந்து திருமுகங்களைக்காட்டி மூன்றுலோகத்தவர்களு மர்ச்சித்த புஷ்பங்களுடனே அர்த்தநாரிபாகனாய் எட்டுத் திருத்தோள்களோ டெழுந்தருளி யிருக்கின்ற உருத்திரமூர்த்தியைக்கண்டு வணங்கி, பிறகு தில்லைக்காந்தார விருக்ஷத்தினடியில் தேவர்களெல்லாம் வணங்கும்படியாகவும் - மஹாரிஷிகளெல்லாம் பெருங்கோஷமுண்டாகப் பிரம்ம சூத்திரங்களாற் பல்லாண்டுகூறவும் - பூமிப்பிராட்டியாரோடும் பெரியபிராட்டியாரோடும் திருத்துழாய் மலர்ந்த கிரீடதாரியா யெழுந்தருளியிருக்கின்ற சகலகாரண மூலவஸ்துவாய்ச் சர்வலோகபாலராய் விற்றிருக்கின்ற ஸ்ரீயப்பதியைக்கண்டு சேவித்தார்.

அப்பால் சந்திரனுக்கொப்பாகிய வெற்றிக்குடையானது நிழலிடும்படியாகவும் - அரம்பைமுதலிய சுந்தரவதிகள் அழகியகையிற் கொண்ட சாமரைகளால் தென்றற் காற்றை வீசிக்கொண்டிருக்கவும் - சுவர்க்கலோகவாசிகளான தேவர்களெல்லாம்வந் தடிவணங்கி நிற்கவும் - தேவதுந்துமிமுழங்கவும் - இவ்வளவு வைபவத்துடனே தேவேந்திர னெழுந்தருளி யிருக்கிற நிலைமையைக்கண்டு அவனையுங் கைகூப்பிக்கும்பிட்டுவிட்டு, பின்னர் மலர்களையுடைய கற்பகவிருக்ஷத்தையெட்டி அம்மரங்கள்முழுமையும் தனதழகைக்காட்டுகின்ற சொர்னபீடங்கள் பிரகாசிக்கும்படியாகத் தேவர்களுக் கிருப்பிடமானமேருவின்சிகரப்பிரதேசத்தில், மூன்றுலோகத்தாருஞ்சூழும்படியாகிய அஷ்டதிக்குகளையு மிரக்ஷித்துக்கொண்டிருக்கின்ற திக்குப்பாலகர் அந்தந்தத் திசையில் நிற்கின்ற நிலைமையையுங்கண்டு வணங்கி அந்தமலையைவிட்டப்பாற்போயினர். இப்பாலவ்வனுமான் உத்தரகுருக்ஷேத்திரத்தை யடைந்து,

அவ்விடத்திற் சூரியன் தன் கிரணங்களைப் பரப்பிக்கொண்டு இருளைத்துரத்தி உதயமான செய்கையைப்பார்த்துவருந்தித் தமக்குத்தாமே நினைக்கின்றார்.

ஆ! ஆ! இப்பொழுது விடிந்துவிட்டது. இவ்வளவுதானோ என்வேகம்? பெருமாள் மூர்ச்சைதெளிவதற்கு முன்பாகவும் அர்த்தராத்திரியாகிறதற் குள்ளாகவும் சஞ்சீவிமருந்தைக் கொண்டுவந்து மாணமடைந்தவர்கள் துன்பத்தையெல்லா நீக்குகிறேனென்று சபதம்பண்ணி வந்தேனே: இப்போது சூரியோதய மாய்விட்டதே: நான் நிச்சயித்தபடி செய்யமாட்டாமற் போனேனே: இனிநான் செய்யப்போகிற தென்னவிருக்கின்றது? என்று சமானரஹிதரான ஸ்ரீராமதூதர் அதிகதுக்கமுற்று, பின்னராலோசித்துப் பார்க்கும் போது சூரியன்தமது இடப்பாகத்தில் உதயமானதைக்கண்டு சூரியோதய மேற்குத்திக்கி லுண்டாவது சம்பவிக்கமாட்டாதேயென்று நிதானித்து, இப்போது விடியவில்லை. மேருபர்வதத்திற்கு வடபால் சூரியன் பிரவேசித்ததால் மேற்பாரிசத்தில் உதயமாகுமென்று சாஸ்திரஜ்ஞர்கள் சொல்லுவார்க ளல்லவோ? அப்படியே இந்தவடபாரிசத்திற் சூரியனுதயமானான். தென்பாரிசத்தில் இப்போது அர்த்தஜாமராத்திரி. என்று தமதுதுக்கம் ஆறினார்.

பிறகு-இவ்வுலகத்திற் புண்ணியஞ்செய்த சிலர்கள் ஆண்பெண் ணிருவராய்த்தோன்றிஅழியாத ஆயுளைப்பெற்று ஒருவருக்கொருவர்உள்ளமும் உயிரும்போலஒன்றாகி, அளவில்லாத இன்பங்களை அநுபவித்துக்கொண்டு தம்பதிகளாய்வாழ்ந்திருப்பவர்களுடைய சஹஸ்திரபத்திர நாட்டையுங் கண்ணிற்கண்டார். இப்படி அக்கினிச்சுவாலைபோற் பிரகாசிக்கின்றசடாபாரத்தையுடைய உருத்திரமூர்த்தியும் – இலக்ஷ்மிதேவியைத் திருமார்பில் தரித்திருக்கின்றவரான விஷ்ணுமூர்த்தியும் – தம்மைவழிபடு மன்பினரைக் கழிபடாவண்ணங் காத்திரக்ஷிக்கும்படிக் கெழுந்தருளி வாழ்கின்ற காணியென்றும், வெற்றிமாலையைத்தரித்த கிரீடதாரியும் தியாகியுமாகியசோழமகாராஜன் வசிக்கின்ற காவிரிநதிசூழ்ந்த நாடென்றும் யாவராலுஞ்சொல்லுகிறதற்கொப்பான வளப்பமுள்ள அவ்வுத்தரகுரு நிலத்தைக் கண்ணுக்கழகாகப்பார்த்து அப்பாற்போயினார்.

இப்பால் விசாலமான மேருபாரிசத்தின்மேலேறி நடக்கும்படியான யோக்கியரும் இப்பிறப்பிலேயே பிரஹ்மபட்டம் பெற்றவருமாகிய ஆஞ்சநேயர், எல்லாலோகங்களையும் திரிவிக்கிரமாவதாரத்தால் அளவிட்ட பெரிய பெருமாளுடைய திருமேனியைப்போலக் கறுத்துத் தோன்றுகின்ற நீலகிரியைக் கண்ணுற்பார்த்தார். இவ்வா றிராத்திரியுங் குறைந்துபோகும்படிக் கறுத்துவிளங்குகின்ற அந்த நீலமலையைத்தாண்டிப் போனபிறகு மேருமலைக் குச்சமமான திருத்தோள்களையுடைய அவ்வாஞ்சநேயர் மஹாவிவேகஜ்ஞானமுள்ளவரான சாம்பவர் தமக்குபதேசித்த சஞ்சிவிபர்வதத்தைக்கண்டு தூரமாகநின்று, அம்மலைமுழுவதும் சூரியனும் பிரகாசத்திற் குறைவடையத்

திக்க பிரகாசம் வாய்ந்த அந்தச்சஞ்சீவிமருந்துகளிருப்பவற்றைக் கண்டு இது தான்சாம்பவர்சொன்ன அடையாளமென்று குபீரென்று அந்தமலையின்மீது பாய்ந்தார். அப்படி பாய்ந்தமாத்திரத்தில் அந்தமலையானது பாதாளத்தில் மறைந்துவிட்டது. அந்தமலையைக் காத்திருக்கின்ற தெய்வங்கள் நடுங்கி அதிககோபத்துடனே வந்து அனுமானைப்பார்த்து, ஓ பலவானே! நீயாவன்? இவ்விடத்திற்குவந்த காரணமென்ன? என்றுகேட்க அந்தத் தேவதைகளுக்குத்தாம் வந்தகாரியத்லதைத் தெரியச் சொன்னார்.

ஆஞ்சநேயர் சஞ்சீவிபர்வதத்தை வேரோடு பேர்த்தெடுத்தல்.

கவி.

கேட்டனவுய்யவேண்டிற் றியற்றிப்பின்கெடாமலெம்பால்
காட்டெனவுணர்த்திவாழ்த்திக் கரந்தனகமலக்கண்ணன்
வாட்டலைநேமிதோன்றி மறைந்ததுமண்ணினின்றும்
தோட்டனனனுமன்மற்றைக் குன்றினைவயிரத்தோளான்.

இவ்வண்ணம் வந்த காரியத்தைக்கேட்ட தேவதைகள் ஐயா! அநுமாரே இலக்ஷுமணராதி வானரவீரர்களெல்லாம் பிழைப்பதற்குவேண்டிய மருந்துகளைக்கொண்டுபோய் இயாவரையும் பிழைப்பித்து மறுபடி எம்மிடத்தில் கொண்டுவந்து காட்டுவீரென்று அநேகமாய்வாழ்த்தி அத்தேவதைகள் மறைந்தன. பிறகு செந்தாமரைக் கண்ணரான சாட்குண்ணிய மூர்த்தியினுடைய கூரிய சக்கராயுதமானது தரிசனையாகி, அதுவுமறைந்துவிட்டது. இனிக்காலதாமதமாகிறதென்று ஆஞ்சநேயர் நினைத்து அந்தச்சஞ்சீவி மலையைத் தம்முடைய வஜ்ஜிரமலைக்குச்சமானமாகிய திருத்தோள்களாற் பூமியில்நின்றும் பேர்த்துக் கையிலேந்தி ஆகாசமார்க்கமாகப் போகவேண்டுமென்று கருதி, உலகத்துக்கெல்லாந் தாயைப்பார்க்கிலுமிகுந்த தயையுள்ளவரான அவ்வனுமான் ஆயிரம்யோசனை விசாலமாகப்பருத்து, மேலே ஆயிரம்யோசனைதூரம் உயர்ந்து, பூமியில் ஆயிரம்யோசனை ஆழ்ந்துநிற்கின்ற அந்தச் சஞ்சீவிபர்வதத்தை ஒருக்ஷணப் பொழுதுக்குள்ளாக ஒருபந்தைத் தூக்குவதுபோல அலக்ஷியமாகத்தூக்கினார்.

சாம்பவந்தரும் விபீஷணரும் ஸ்ரீராமரிடஞ்சென்று திருவடிவருட சுவாமி மூர்ச்சைதெளிந்து தன்மனதிலுள்ள குறைகளைச் சொல்லி வருந்தல்.

கவி.

அத்தலையன்னவ னணையவாந்துணை
இத்தலையிருவரும் விரைவினெய்தினார்
கைத்தலத்தாலடி வருடுங்காலையின்
உத்தமற்குற்றதை யுணர்த்துவாமரோ.

இவ்விடத்தில் ஆஞ்சநேய ரிவ்விதமாயிருக்க, அவ்விடத்தில் விபீஷணரும் சாம்பவரும் அதிவேகமாய் இரணக்களத்தில் மூர்ச்சித்துக் கிடக்

கின்ற ஸ்வாமியினிடத்திற்குச் சென்று, தங்கள் கைத்தலங்களால் அவருடைய திருவடித்தாமரைகளைப் பிடித்துக்கொண்டிருக்கின்றார்கள். அப்போது ஸ்ரீராமபிரானானவர், வண்டைப்போலுந்தொடரும் ஸ்திரீகளுடையமனதைத் தம்மிடஞ்சாராமல்வேருடனேநீக்கப்பட்டவைகளும்-எல்லாஜீவகோடிகளும் பெறுவதற்கருமையாகிய கருணையெல்லாந்தாமேகொண்டவைகளும், சமஸ்த வரங்களையுங் கொடுக்கின்றவைகளும்-கொடுமையென்பது கிஞ்சிற்றேனுமில்லாதவைகளும்-இரண்டு தாமரைப் புஷ்பங்களையொத்த தர்ம்மமயமாகிய தமது திருக்கண்களைத்திறந்து, கரடிக்குத்தலைவரான சாம்பவாநும்-மிகுந்த புகழையுடையவரான விபீஷணாழ்வானும்-அழுதகண்ணர்களாய் தங்களுடைய திருமுடியில் கூப்பினகைகளோடும் ஏக்கமுற்றுத் தமக்குப் பக்கத்திலிருக்கின்றதைக்கண்டு கடாக்ஷித்து, அப்பா விபீஷணா! உன்னையனுப்பின காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு வருத்தமில்லாமல் வந்தாயோ? என்றுவினவிப் பின்பு அதிக கீர்த்திமானான சாம்பவரைப் பார்த்து, ஐயா சாம்பவந்தரே! பிழைத்துவந்தீரோ? என்று கேட்டருளிப் பின்னுஞ் சொல்லுகின்றார்.

பொய்யில்லாதவர்களும் அதிக புத்திமான்களுமான ஓ விபீஷண சாம்பவர்களே! நமக்கு மிப்படிப்பட்ட அழிவு நேரிட்டதே: செய்கையற்று உயிரிழந்த நம்முடைய இளையவன்முதலான யாவர்களும் பிழைக்கவில்லையே: இவர்கள் பிழைக்கும்படியாகச் செய்யும் உபாயமுண்டாயிருந்தாற் சொன்மின்கள். சீதையென்கின்ற ஒருபெண்ணால் மனமறுக்கமடைந்து அறிவையுங்கூட விழந்த என்னுடைய தப்பிதத்தால் நேரிட்ட ஈனத்துவத்தை நானென்னென்று சொல்லப்போகின்றேன்? இந்த லோகமுள்ளபரியந்தம் பெரும்பழியான ஒரு கதையை நிலைநிறுத்திவைத்துவிட்டேன். ஐயோ! முன்னமென் தம்பி - அண்ணா! இதுமாயமான், உண்மையான மானென்று நம்பாதீர். இது நம்மையேபகட்டுமாயின் பேதையரைப் பகட்டுதல் இதற்கருமையோ? என்று சத்தியமாக நல்ல உறுதிகளான வார்த்தைகளைச் சொல்லியுங் கேளாமல், ஒரு பெண்வார்த்தையைத் தடுக்கமாட்டாமற் போனபடியாலிந்தப்பழி ஆணியாக நின்றுவிட்டது.

ஐயா அன்பர்களே! அஃதிருக்கட்டும்; இராவணனைக் கண்களாற்கண்டு அவனோடு யுத்தஞ்செய்து என்வல்லமையைக்காட்டி அவனுயிரைவாங்காமல் விட்டுவிட்டு, நான் பூர்வத்திற்செய்த பாவவினையால் எல்லாருடைய பிராணன்களையு மிழக்கும்படிப் பண்ணினேன். பிறகவன் குமாரனான இந்திரஜித்து வந்துயுத்தஞ் செய்தபோது, இலக்ஷ்மணன் தேவதாஸ்திரப் பிரயோகம் பண்ணி அவனைக் கொன்றுவிடுகிறேனென்று சொன்ன நல்லகாரியத்திற்கும் இசையாமல், எனக்கிவ்வளவு அழிவுநேரிடுவதற் கிருக்கிற ஊழினால் தடுத்துவிட்டேன். மேலும் என்னுடையபாவம் என்னைச்செயங்கொண்டபடியால் நானிந்தரணக்களத்தி லிலட்சுமணனோடு நிற்காமல், ஆயுதங்களுக்குப் பூஜை

செய்ய வேண்டுமென்று நினைத்துப்போய்விட்டேன். அதனால் நம்முடைய சேனைகளெல்லாம் அழிந்துபோய்விட்டன. இலட்சுமணனு மிறந்துபோனான். நானுமிராக்ஷசர்களைச் செயிக்காமற் போய்விட்டேன்.

ஆதலால், இனியிவ்விடத்திலிருந்து இப்படி பலஹீனத்தன்மையைச் சொல்லிக்கொள்ள வேண்டியதில்லை. இந்தரணக்களத்தி லிறந்துபோன அதிசூரவான்களான எனது நேயர்களை யெல்லாம் காணும்படி நான் தேவலோகத்திற்குப்போய்ப் பிறக்கிறதே நல்லது. இல்லாவிட்டாற் காணமாட்டேன். என்தம்பியையும் என் இஷ்டபந்துக்களையு மிழந்தபிறகு துஷ்டர்களான ராக்ஷசர்களையெல்லாங் கொல்ல அஸ்திரப் பிரயோகஞ்செய்து, இராவணனுடைய உயிரைவாங்கித் தேவர்களுக்குதவிசெய்தும் நானதனாலடையப் போகின்ற லாபமென்ன? என்தம்பி இறந்தபிறகு மற்றவர்களா லெனக்காக வேண்டியதென்னவிருக்கின்றது? எனக்குப்பெருங்கீர்த்தி யெதற்கு? இராஜீகமெதற்கு? வீரமெதற்கு? இனியவர்களான பந்துக்களெதற்கு? தர்மமெதற்கு? சாஸ்திரக்கேள்வி யெதற்கு? உண்டாகிறலாபமெதற்கு? வேதவிதிப்படி நடக்கிறதெதற்கு? பிரபுத்துவமெதற்கு? ஆ! ஆ! என்னுடைய இரக்கத்தையும் பாழாக்கி, இலட்சுமணனையும் இழந்து, இப்போதிராக்ஷசர்களையெல்லாங் கொன்று வீரதத்துவத்தைக் காட்டுவனேயானால், பெருந்திருடனும் வஞ்சகனுமாகி விடுவேன். இனி மாண்டுபோவதே யல்லாமல் வேறே செய்யத்தக்ககாரிய மேதேனுமிருக்கின்றதோ?

மேலும்—இவ்வுலகத்தில் வல்லமையுள்ளோரெல்லாம் இதைக்கேட்டால், முன்னே தகப்பனையிழந்தான். பிறகு ஜடாயுவென்பவரு மாண்டார். தனக்குமிகுந்த அன்புள்ள இஷ்டர்களு மடிந்தார்கள். தன்னையெல்லாவிதத்திலுங் காத்துக்கொண்டிருந்த தம்பியும் இறந்தான். சீதையையிழந்துபோனான். இப்படியிருந்தும் சந்தோஷத்துடன் இருக்கின்றான். என்றுபலவாய்ச் சொல்லிக்கொள்ளுவார்களே: நானிராக்ஷசர்களை யெல்லாம் வென்று மூலவேரறக் கொன்று அயோத்தியைச்சேர்ந்து, சற்குணவானுந் துணைவனுமானதம்பியை யிழந்து நான்மாத்திரம் உயிருடனே வந்துவிட்டேனென்று மகிழ்ந்து இராஜ்யபாரஞ் செய்கிறது மிகவுநன்றாயிருக்குமல்லவா? இவ்வளவு ஐஸ்வரியமும் இந்த லோகத்தினளவாகவே நின்றுவிடும். ஆனபடியால் இவைகளெனக் கொன்றும் வேண்டாம். இப்போதே யென்பிராணனை என்தம்பியுடனே முடித்துவிடுகிறேனென் றுறுதியாய் ஸ்வாமிசொன்னதைக்கேட்ட ஜாம்பவர் ஸ்ரீராமருடைய திருவடிகளில் வீழ்ந்து தண்டனிட்டுச் சொல்லுகின்றார்.

சுவாமி! அடியேனுக்கொரு விண்ணப்பமிருக்கின்றது. தேவரீர் உமது பிரபாவத்தை யாதுகாரணத்தாலோ மறந்து அறியாமலிருக்கின்றீர்? அடியேன் முன்னமே தேவரீருடைய வல்லமையைச் சிறிது அறிந்திருக்கின்றேன். அதையிப்போது அடியேன் சொல்வதுபுத்தியீனமாகும். ஏனெனில், தேவர் பெருமையைப் பிரம்மேந்திராதி தேவர்களும் சொல்லத் தவறிவி

டுவார்கள். தேவரீரே பிறகு உம்முடைய அநந்தகல்யாண குணங்களையெல்லாந் தெரிந்தருளப் போகின்றீர். இப்போது இந்திரஜித்துவிட்ட ஆயுதம் பிரம்மாஸ்திரமென்று தெரிந்துகொண்டோம். அஃதெப்படி யென்றால் — இளையபெருமாள்மீதும் அளவில்லாத வானரவீரர்கள் மீதும் பாய்ந்து, யாவரையும் ஏககாலத்திலே ரணக்களத்தில் வீழச்செய்தவெற்றியினாலே தெரிகின்றது. ஓ மன்மதாகாரரான ஸ்வாமி! இது சத்தியமான வாக்காகும். அந்தப் பிரம்மாஸ்திரம் இந்திராதி தேவர்கள்மீதும் தானவர்கள்பேரிலும் விட்டபோதிலும், அவர்கள் பிராணன்களையெல்லாம் உண்டுவிடும். தேவரொருவரைமாத்திரம் ஒன்றுஞ்செய்யமாட்டாது. ஆதலால் தேவரிடத்திற்குவாராமல் மறைந்துவிட்டது. இது பிரம்மாஸ்திர மென்பதற்கு வேறு சாக்ஷியும் வேண்டுமோ?

மூர்ச்சித்திருக்கும் இளையபெருமாளாதி வானரவீரர்களை யெழுப்பும்படி ஆஞ்சநேயர் சஞ்சீவிபர்வதங்கொண்டு வரச்சென்றன ரவர்வந்தவுடனே யாவருமெழுவரென்று சாம்பவந்தர் சுவாமியின் மனதைத்தேற்றிச் சந்தோஷிப்பித்தல்.

கவி.

பெருந்திறலனுமனீண் டுணர்வுபெற்றுளான்
அருந்துயர்முடிக்குறு மளவிலாற்றலான்
மருந்திறைப்பொழுதினிற் கொணரும்வாய்மொழி
பொருந்தினன்வடதிசைக் கடிதுபோயினான்.

பனிவரைகடந்தனன் பருப்பதங்களின்
தனியரசதன்புறந் தவிர்ந்துசார்ந்துளான்
இனியொருகணத்தின்வந் தெய்துமீண்டிறு
துணிவருதுன்பநீ துடைத்திதொல்லையோய்.

ஓ எங்களாண்டவரே! தாம்வருத்தப்படாதேயும்அதிக பலவந்தரான அஞ்சனைகுமாரர் மூர்ச்சைதெளிந்தார். அவரெல்லாருடைய துன்பங்களையு நீக்கும்படியான வல்லமையுள்ளவர். எல்லாரையும் பிழைப்பிக்கும்படியான சஞ்சீவிமருந்தைக்கொண்டு ஒரு க்ஷணப்பொழுதுக்குள்ளாக வருகிறேனென்று வாக்குத்தத்தம் பண்ணிவிட்டு வடக்கே போயிருக்கின்றார். அவரிப்போது இமவத்பர்வதத்தைக்கடந்து மேருமலையைத்தாண்டிச் சஞ்சீவிமலையைக்கண்டார். இனியொரு க்ஷணப்பொழுதுக்குள்ளாக வந்து சேருவர். ஓ ஆதிமூலவஸ்துவே! தேவர்கொண்ட துன்பத்தை நீங்கியருளவேண்டும். அந்தமருந்தை அடியேனும், அடியேன் பிதாவாய் லோகசிருஷ்டி நாதரான பிரஹ்மாவும், திரிநேத்திரதாரியாகியசிவபிரானும்,சக்கராயுதபாணியாகிய உபேந்திரனுமல்லாமல், மற்றத்தேவதானவ மனிதர்களில் ஒருவரும் அறியும் வல்லமையுடையவர்களில்லை. அந்தச் சஞ்சீவிமருந்துகள் க்ஷீரசாகரங்கடைந்து அமிர்தமுண்டாக்கினகாலத்தில் அதனுடன்கூட உற்பத்தியானவைகள். நீலமேகஸ்

யாமளரூபரான ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியினுடைய சக்கராயுதமானது அவற்றையொருவரு மபகரித்துக்கொள்ளவொட்டாமற் காத்துக்கொண்டிருக்கின்றது. அம்மருந்துகள் உத்தர குருக்ஷேத்திரத்திற்கப்பா லிருக்கின்றன. சுவர்க்கலோகத்தி லிருப்பவர்களும் அதைப்போய்ப்பார்த்து வந்தவர்கள் அல்லர்.

ஓ சர்வலோக சரண்யரான எங்களாண்டவரே! அந்தச்சஞ்சீவிமருந்து உண்டானகாலமுதல் அவற்றை யாரும் கையால் தொடவில்லை. அமிர்தத்துடன் உண்டான வல்லமையால் சுவர்க்க மத்திய பாதாளமென்று சொல்லப்பட்ட லோகங்களை ஆதியிற் சிருஷ்டித்த பிரஹ்மதேவ ரிறந்தபோதிலும், அவருடைய பிராணனையு மறுபடியு முண்டாக்கிவிடும். அவற்றில் தேகத்திற் பதிந்த ஆயுதமுனையா லுண்டாகியபுண்ணை நீக்கிவிடுவதான சல்லியகரணியென்பதொன்று. முறிந்த அவயவங்களைச் சேரும்படிச் செய்யும் சந்தானகரணியென்பதொன்று. போனவுயிரை மறுபடியும் திருப்பும் மிருதசஞ்சீவினியென்பதொன்று. மேனி யழிந்தவர்களுக்கு மறுபடியும் அந்தமேனியை உண்டாக்கும் சமனியகரணியென்பதொன்று. இப்படி நான்குவித மருந்துகளிருக்கின்றன. ஓ மூலகாரணவஸ்துவானவரே! அந்தமருந்துகள் நிச்சயமாகவரப்போகின்றன. வாயுகுமாரரானவர் தர்ம்மமே தமக்குக்காட்ட அவற்றைக் கொண்டுவரப்போகின்றார். தவிரமாட்டார். தேவரீர்வருத்தப்படவேண்டாம் அவருக்கது அருமையல்ல. என்று வணங்கிச் சாம்பவர்சொல்லவே, அகங்கார மமகாரங்களை யாவருக்குநீக்கி ரக்ஷிக்கின்றவரான ஸ்ரீராமமூர்த்தி மிகுதியும் சந்தோஷித்தவரைப்போலத் தோன்றினார்.

ஆஞ்சனேயர் சஞ்சீவிபர்வதத்தைக் கொணர்தல்.

கவி.

பொன்மலைமீதுபோய்ப் போகபூமியின்
நன்மருந்துதவுமென் றுரைத்தநல்லுரைக்
கன்மயமில்லையென் றயிர்ப்புநீங்கினேன்
என்னலும்வடதிசை யெழுந்ததங்கொலி.

அப்போது ஸ்ரீராமபத்திரர் அச்சாம்பவரைப்பார்த்து, ஓ சர்வோத்தமரே! நீர் கூறியவனைத்துஞ்சரியே: அனுமான் மேருமலையி னப்புறமாகப் போகபூமியிலுள்ள நல்ல சஞ்சீவிமருந்தைக் கொண்டு வருவானென்று சொன்ன இந்த நல்லவார்த்தைக்குச்சந்தேகமுண்டாகமாட்டாதென்று நினைக்கின்றேனென்றருளிச் செய்துகொண்டிருக்கையில், வடதிக்கில் ஒருபெருங் கோஷம் உண்டாயிற்று. அதையாவரும் கேட்டார்கள். சமுத்திரமெல்லாமேலெழுந்து அலைவீசவும், மலைகளெல்லாம் அங்கங்கே பறியுண்ணவும், மகாவிரைச்சலோடு ஆகாசத்திலெழும்பிவருகிற சண்டமாருதம் வடதிசையிலிருந்து புறப்பட்டதாக ஒரு பெருமயக்கந் தோன்றினது. நக்ஷத்திரக் கூட்டங்களெல்லா நிலைமாறி உதிர்ந்து விழ்ந்தன. சூரியமண்டிலமானது சந்திரமண்டிலத்தைப்போலக் குளிர்ந்து மேகங்களுடன் கூடிக்கொண்டது. மலைகளு மரங்க

ளும் வேரோடுபெறியுண்டு ஆகாசமட்டுமெழும்பி மறைந்து மூடிக்கொண்டு சமுத்திரத்தையெல்லாம் தூர்த்துவிட்டன. ஸ்ரீராமவிபீஷண சாம்பவர்களுடைய துக்கநீங்கத்தக்கதாக அனுமான் அஷ்டஹாசஞ்செய்து சப்தித்தார். ஆண்சிம்ஹத்துக்குச் சமமான வாயுபுத்திரர்கர்ஜ்ஜித்த பெருங்கோஷமானது ஆகாசத்திலுள்ள மேகங்கள் நக்ஷத்திரங்கள் முதலானவைகளும் - பூமியிலுள்ள கடல்மலைமரமுதலானவைகளும் - பிரதித்தொனி கொள்ளும்படியாகச் செய்துவிட்டது.

அப்போதவ் வாஞ்சனேயரானவர் எப்படி காணப்பட்டாரென்றால் திருப்பாற்கடலைக் கடையும்படி யத்தனித்தபோது அதிகபிரகாசம்பொருந்தியமந்தரகிரியைக் கொண்டுவர வேண்டுமென்று ஸ்வாமிநியமித்தமாத்திரமே, அதை எடுத்துவருவது தம்வலிக்கு அற்பமென்பதுபோல ஏந்திக்கொண்டு ஆகாசமார்க்கமாய் வந்த சமானமில்லாத வல்லமை யுடையவராகிய கருடபகவானைப்போலக் காணப்பட்டார். அன்றியும் உலோகத்தைத் தாங்கிக்கொண்டிருக்கின்ற ஆதிசேஷனுடன் சபதமிட்டுக்கொண்டு போராடி மேருவின் சிகரத்தைத் தன் வல்லமையாற் பேர்த்துக்கொண்டுவந்த தம்முடைய பிதாவாகிய வாயுதேவனுக்குச் சமமாகவுந் தோன்றினர். இதைக்கேட்ட சாம்பவர் — சுவாமி? இதோ அனுமான் வந்துவிட்டார். என்றுசொல்லி முடிகிறதற்குள்ளாக அவரும் பாய்ந்துவந்து, தம்முடைய பாதத்தைப் பூமியில் வைத்தூன்றினர். அந்தத் தெய்வத்தன்மையுள்ள சஞ்சீவிபர்வத மாத்திரம் இந்தச்சண்டாள ராக்ஷசருரில் வருவதற்குக் கூடாமல், ஆகாசத்திலேயே அந்தரமாக நின்றுவிட்டது. ஆஞ்சநேயர்மாத்திரமே ரணக்களத்திற்குவந்து சேர்ந்தார்.

ஆஞ்சனேயர்கொண்டுவந்த சஞ்சீவிபர்வதத்தின் வாடைபட்டவுடன் வானரவீரர்க ளுயிர்த்தெழுதல்.

கவி.

காற்றுவந்தசைத்தலுங் கடவுணுட்டவர்
போற்றினர்விருந்துவந் துவந்தபுண்ணியர்
எற்றமும்பெருவலி யழகொடெய்தினர்
கூற்றினைவென்றுதம் முருவுங்கூடினர்.

அந்தச் சஞ்சீவிமருந்தினுடையகாற்றுவந்து வீசினவுடனேதெய்வலோகத்திலுள்ள தேவர்களெல்லாம், தங்களிடம் வந்திருந்த வானரவீரர்களை யெல்லாம் வாழ்த்திப்போற்றி யாசிர்வதித்தார்கள். அவ்வானர வீரர்களெல்லாம் அதிகதேஜசும்,மிகுந்தவல்லமையும் பேரழகுமடைந்தவர்களாகி, யமனைச்செயித்து,இரணக்களத்திற் கிடக்கிற தங்கள்தங்கள் பூர்வதேகத்தைவந்துசேர்ந்துகொண்டார்கள். இராக்ஷசர்களுடைய தேகமெல்லாவற்றையுமருத்தன் முதலானராட்சசர்களே கொண்டுபோய்க் கடலிற்போட்டுவிட்ட படியினலே, அவைகளெல்லாம் கடலில்மறைந்து ஒழிந்துபோய்விட்டன. மற்றவைகளில் யுத்தத்தால் மாண்டு பட்டுப்போன மரங்களெல்லாமும் உயிர்பெற்று வாழ்வ

டையுமேயானல், குரங்குக்கூட்டங்கள் ஜீவன்பெற்றதைப்பற்றிச் சொல்ல வேண்டுமோ? இளையபெருமாளுடைய திருமேனியிற் பதிந்திருந்த பிரம்ஹாஸ்திரத்தோடு மற்ற அம்புகளெல்லாம் கழன்று விழுந்துவிட்டன. கடுத்துக்கொதித்துக்கொண்டிருந்த அங்கமெல்லாம் குளிர்ப்படைந்தது. மூடியிருந்தகண்கள் சுழன்றன. மூர்ச்சைதெளிந்து அறிவுவந்தது.

இலக்ஷ்மணரெழுந்ததைக்கண்ட ஸ்ரீராமபிரான் சந்தோஷித்துத் தழுவிக்கோள்ளல்.

கவி.

யாவருமெழுந்தன ரார்த்தவேழ்கடற், றுவரும்பேரொலி செவியிற்சார்தலும்
தேவர்கள்வாழ்த்தொலி கேட்டசெங்கணன், எவரீங்கினனென விளவலோங்கினன்.

ஓங்கியதம்பியை யுயிர்வந்துள்ளுற, வீங்கியதோள்களாற் றழுவிவெந்துயர்
நீங்கினனிராமனு முலகினின்றிவ, ணீங்குளதேவரு மறுக்கஞ்சிந்தினர்.

இப்படி யாவரும் எழுந்தமாத்திரமே சப்தசமுத்திரங்களும் கோஷித்தன. இந்தப்பேரோசை இலக்ஷ்மணப் பெருமாளுடைய திருச்செவியில் வந்து நுழையவும். தேவர்கள் பல்லாண்டுகூறிய ஆரவாரத்தைக்கேட்டு வருத்தநீங்கி எழுந்திருந்தார். அப்படி யுயிர்பெற்றெழுந்த திருத்தம்பியாரைக் கண்டமாத்திரத்தில் ஸ்ரீராமமூர்த்தியானவர் திருத்தோள்கள் பூரித்துத் தழுவிக்கொண்டு துக்கநீங்கினர். உலகத்தில் யாவருக்கு முண்டாயிருந்த வருத்தமெல்லாம்போய் மயக்கமுமொழிந்தார்கள். அரம்பை ஊர்வசி திலோத்தமை முதலானபேர்கள் நிர்த்தம்பண்ணினர்கள். கின்னரர்கள் சப்தசுர நரம்புகளுள்ள கின்னரங்களைமீட்டித் தேவாமிர்தமுந் தோற்றுப்போகும்படிப் பாடினர்கள். உலகத்தவர்களெல்லாம் சந்தோஷ ஸ்நானம் பண்ணினர்கள். மஹாிஷிகளெல்லாம் வேதபாராயணம் பண்ணினர்கள். வேதபுருஷர்கோஷித்தார். வேதியர்களுடைய ஞானம் விருத்தியாயின. தர்பங்களனைத்தும் ஓங்கிவளர்ந்தன. தேவர்களுடைய மனதுகுளிர்ந்தது. பிரம்ஹாஸ்திரமானது ஸ்வாமியைச் சூழ்ந்துவந்து வணங்கி, ஸ்வாமி! தேவரீருடைய திருத்தம்பியார் பிழைத்துவிட்டார். இனியென்னல் அவருக்கொரு இக்கட்டும் உண்டாகப்போகிறதில்லை. அதற்குத் தேவரீரிடத்தில் அடியேன் வராமையே சாக்ஷியாகும். என்று சொல்லிவிட்டுப் போய்விட்டது.

அப்போது தேவர்கள் ஆனந்தகோஷ மிடும்படியாகத் தாயினுமிகுந்த அன்பையுடையவராகிய ஆஞ்சநேயரைச் சகலலோக நாயகராகிய ஸ்ரீராமபிரானவர்கண்டு, அதிகசந்தோஷத்துடனே திருக்கண்களில் ஆநந்தபாஷ்பம் பொழியத்தக்கதாக மனமுருகித் தமது திருமார்பிறுகத் தழுவினர். அக்காலவ்வாஞ்சநேயர் ஸ்வாமியினுடைய திருவடிகளில் வணங்கினர். அப்படி வணங்கின வாயுகுமாரரை சுவாமி பார்த்து, அப்பா அஞ்சனைச்செல்வனே! நாங்களெல்லா முன்னலே தசரதமகாராஜருக்குப் பிறந்து அதிக துக்கத்தால் இந்தரணக்களத்தில் மாண்டுபோய் விட்டோம். இப்போது மறுபடியு முன்

னுடைய வயிற்றில் நானும், இளையபெருமாளும், சுக்கிரீவன் முதலான யாவரும் பிறந்தோம். ஐயா வேதங்களை நிலைநிறுத்தின பிரதாபசாலியாகிய ஆஞ்சனேயனே! நாங்களெல்லாம் அழிந்துபோக எங்கள் பிராணன்களையெல்லாம் உபகரித்த உன்னுடைய உபகாரத்துக்கு எங்களுயிரைத்தான் உனக்குப் பிரதிபலனாகக் கொடுத்தபோதினும், அந்த உபகாரத்துக்கீடாகுமா? எங்களைப் பழிக்குள்ளாகாமற் காப்பாற்றி, எங்கள் பகையெல்லாநீக்கி, எங்கள் வமிசங்களையெல்லா நீயேரக்ஷித்தாய். என் தம்பிமேற்பட்ட அம்புகளாலே அவன் மாண்டதால், இந்த எழுலோகங்களு மாண்டவைபோலக் காணப்பட்டன. நான்உனது உபகாரத்துக்குப் பிரதியென்ன சொய்யப்போகிறேன்.

ஸ்ரீராமபிரான் ஆஞ்சனேயரை வாழ்த்திச் சிரஞ்சீவிப்பட்டமளித்தல்.

கவி.

இன்றுவீகலா தெவருமெம்மொடு, நின்றுவாழுநா ணெடிதுநல்கினாய்
ஒன்றுமின்னனோ யுறுகிலாதுநீ, என்றும்வாழ்தியா லினிதெனேவலால்.

அப்பா அனுமானே! ஒருக்ஷணப் பொழுதுக்குள்ளாகச் சஞ்சீவிகளைக் கொண்டுவந்து எங்களெல்லாரையும் இன்றைக்கு மாண்டுபோகவொட்டாமல் எங்கள் வாழ்நாளை எங்களுக் குதவிசெய்தாயானதால், நீ யொருக்காலும் வருத்தமு நோயுமில்லாமற் சிரஞ்சீவியாகி, சதாகாலமும் சந்தோஷமாக வாழ்ந்திருக்கக்கடவாயென்று ஆசீர்வதித்தார். மற்றப்பேர்களும் அனுமானுடைய உதவியால் தங்கள் தங்கள் உயிர்களைப்பெற்று மிகுந்தஅன்புடையவர்களாய் அவரைச்சூழநின்று வணங்கி வாழ்த்தினார்கள். அப்போது ஆஞ்சனேயர் சுக்கிரீவமகாராஜனையும் அங்கதன் முதலானவர்களையும் பார்த்து, தாமந்தச் சஞ்சீவியை மலையுடனே கொண்டுவரவேண்டியதற்கு நேரிட்ட முகாந்திரங்களையெல்லாஞ்சொன்னார். அதைக்கேட்ட சாம்பவர் வாயுகுமாரரைப் பார்த்து; ஐயா அதிகபலவந்தரான ஆஞ்சநேயரே! நீர் கொண்டுவந்துதவிய சஞ்சீவி பருவதம் இங்கேயேயிருக்குமானால், பொய்யாளர்களான ராட்சசர்களில் மாண்டவர்கள் பிழைத்துக்கொண்டே யிருப்பார்கள். ஆகையாலிந்த மலையைக்கொண்டுபோய் மறுபடியுமவ்விடத்தில் வைத்துவிட்டு வரவேண்டும், என்று நியமித்தார்.

சாம்பவந்தர் சோற்படி ஆஞ்சனேயர் சஞ்சீவிமலையை மீட்டும் உத்தரதிசையிற் கொண்டேகல்.

கவி.

என்றுசாம்பவ னியம்பவீதரோ
நன்றுசாலவென் றென்றுநாழிகைச்
சென்றுமீள்வனென் றுணர்ந்துதெய்வமாக்
குன்றுதாங்கியக் குரிசில்போயினான்.

இப்படிசொல்லிய சாம்பவந்தர் வார்த்தையை அனுமான்கேட்டு, ஆம்:இது மிகவுநல்லபுத்திதான். என்றங்கீகரித்துக்கொண்டு, இதோ ஒருநாழிகைக்குள்

NO. 60. இராவணன்பிரமாஸ்திரத்தால்பகைவர்மாண்டாரென்று களியாடல் செய்திருக்கையில் தூதர்கள்பாசறைச்சேதியறிவித்தல்.



ஸ்ரீராமனாதியரிலங்கையைக்கொளுத்தக்கண்ட இந்திரஜித்து சஞ்சீவிமலையைவைத்துவரும் ஆஞ்சநேயரெதிரில்மாயாசீதையைவதைத்தல்.



உ யுத்தகாண்டம். களியாட்டுப்படலம்.

ளாகக் கொண்டுபோய் வைத்துவிட்டு வருகிறேனென்று அந்தத் தெய்வீக மலையை மறுபடியுந் தூக்கிக்கொண்டு ஆஞ்சநேயர் வடதிசையை நோக்கிச் சென்றார்.

மருத்துமலைப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

இருபத்துநான்காவது,

களியாட்டுப் படலம்.

இப்படலத்தில் தசக்கிரீவன் இந்திரஜித்துவினுடையபிரமாஸ்திரத்தினாற் பகைவர்கள் தங்கள் சேனைகளோடு மாண்டார்களென்னுஞ் சந்தோஷத்தை வகித்துக் கள்ளுண்டு காமவெறியாய் ஆடல் பாடலாதிகளைச் செய்யும் ஆயிழையாரது அலங்கோலத்தைப் பார்த்துத் தானுங் களித்தவனாய்க் கொலுமுகத்திலிருப்ப, அக்கால் ஸ்ரீராமலட்சுமணருடைய விற்குணத்தொனியோடு வானரசேனைகளினுடைய ஆரவாரிப்பு முண்டாகக்கேட்டுத் திடுக்குற்ற அவ்விராவணனுக்குத் தூதுவர் உயுத்தகளத்திறந்தோரெல்லாம் உயிர்த்தெழுந்தனரென்றறிவித்தமை சொல்லப்படுகின்றது.

இராவண னிந்திரஜித்துவினுடைய வெற்றியைக்கேட்டு மகிழ்ந்து ஆடல் பாடல் களைச்செய்யு மாயிழையாரோடு களியாடல் செய்திருத்தல்.

கவி.

இன்னதித்தலையதாக விராவணனெழுந்துபொங்கித்
தன்னையுங்கடந்துநீண்ட வுவகையன்சமைந்தகீதம்
கின்னரமுதல்வர்பாட முகத்திடைக்கிடந்தகெண்டைக்
கன்னிநன்மயிலனாரை நெடுங்களியாட்டக்கண்டான்.

ஸ்ரீராமர் சன்னிதியிலிப்படி நடக்க — இலங்கையிலிராவணன் பிரம்மாஸ்திரத்தால் எல்லாரு மிறந்துபோனார்களென்று தன்னையறியாத சந்தோஷங் கொண்டு, கின்னர கந்தருவர்கள் தேவகானங்களைப்பாட — கண்களென்கின்ற கெண்டைமச்சியங்களை முகத்திலுடையவர்களான ஸ்திரீகள் கள்ளுண்டுமயங்கியாட — அதைப்பார்த்துக்கொண் டிருந்தான். வித்தியாதர ஸ்திரீகள் — இராட்சசஸ்திரீகள் — தானவஸ்திரீகள் — நாகலோக ஸ்திரீகள் - யக்ஷஸ்திரீகள் — சித்தஸ்திரீகள் — இவர்களெல்லாங் கூட்டங்கூட்டமாக வந்தார்கள். மேனகை — திலோத்தமை — அரம்பை - ஊர்வசி — இவாள்முதலாகிய தேவஸ்திரீகள் தங்களுடைய பாதச்சிலம்புகள் கலீர்கலீரென்று சப்திக்குக்கும்படியாகவும், தேவதுந்துமியும் — சங்கங்களும் — முருடுவாத்தியங்களும் - வானமதிர முழங்கும்படியாகவு நிர்த்தம் பண்ணினார்கள். அவர்கட்குப் புஷ்பமாலைகளைத் தரித்திருக்கின்ற சுருண்ட குழல்களும், தொங்கித்

கொண்டிருக்கின்ற குண்டலங்களும், சுருண்டவிதழ்களோடுகூடிய சொர்ண புஷ்பங்களும், நெற்றித்திலகமும், இலவமலர்போலுஞ்சிவந்தவாய்களினால் மறைந்திருக்கின்ற முத்தையொத்த தந்தபந்திகளும், தாமரை மலர்போன்ற சிவந்தகண்களும், அளகபாரங்களாகிய காடுகளினாலேமூடப்பட்ட சந்திரனைப் போலமுகமும் விளங்கிக்கொண் டிருந்தது.

இளங்கிரணங்களை வீசுகின்ற தந்தபந்திகளினுடையவெள்ளியசந்திரிகைகளும், மிகுந்த வொளியைவீசுகின்ற இரத்னுபரணங்களுடைய இளவெயில்களும், சொர்னம்போலப் பிரகாசிக்கின்ற தீபங்களைத் தோற்கடிக்கும்படியான தேககாந்திகளும் பிரகாசிக்கின்றபடியினாலே; அந்தப் பிரகாசங்கண்டு அவர்களிடத்தில் மோகங்கொண்டு மயங்கித்திரிகின்றவர்களைப் போலவே இராத்திரிகாலமு மயக்கங்கொண்டு அங்கங்கே தத்தளித்து மறையும்படியாய் விட்டது. அக்கால் பெருங்கல்விச் செல்வநிறைந்த குற்றமற்றவழியிலே நடந்து பூர்வவினைப் பிரயோஜனத்தை அறிந்த பெரியோர்களுடைய வாக்கியங்களில் பழகித்தேர்ந்தும்—இவற்றுற்பின்படையும் பிரயோசனமாகிய மோக்ஷநெறியிற்றெளியாத அறிவீனனைப்போலவும், வஞ்சகனுயிருக்குமொருவன் கற்பனைசெய்த மாறுபாட்டைப்போலவும், குடித்தகள்ளினுடைய வேகமானது அவர்களுடைய தேஹமுழுவது நிறைந்துவிட்டது. அதனுல் ஒவ்வொருவரும் அடிக்கடி சிரித்தார்கள். தேகத்தில் வெயர்வையுண்டாயிற்று. இதழ் துடித்தது. முல்லையரும்பையொத்த பற்கள் வெளியே தோன்றின. வேல்போன்ற கண்களின்கடை சிவந்தன. புருவங்கள் வளைந்தன. வாய்வெளுத்தன.

மேலும் – அளகபார மவிழ்ந்து அவர்களுடைய அவயவங்களை மறைத்துக்கொள்ளவும், தரித்துக்கொண்டிருந்த சேலையும் – மேகலாபரணமும் – சிலம்புகள் அணிந்திருக்கின்ற மாந்தளிர்போன்ற பாதங்களின்மேல் நழுவிவீழ்ந்து விடவும், ஸ்திரீகளெல்லா மயங்கிச் சோர்ந்து விட்டார்கள். கோத்தமணிகளாகிய மேகலாபரணங்களும் - வஸ்திரங்களும் - அவிழ்ந்து, கீழ்மக்களைப்போல அவர்களை அவமானப்படுத்த யத்தனித்தன.அவர்களுடையஅளகபாரமானது தம்மைச்சேர்ந்தவர்களுக்கு எவ்வித இக்கட்டுவந்தபோதிலுந்தாங்கள் செய்யத்தக்க பெரிய உபகாரமேசெய்வதுபோல, அவர்களுடைய மானத்திற்குப் பங்கம்வரவொட்டாமற் காப்பாற்றினது. மன்மதன் மாந்தர்களை மயங்கச்செய்து வாட்டுந்தொழிலை விட்டுத் தூணியிற்போட்டுவிட்ட அம்பைப்போலத் தங்கள் காமசேஷ்டையினுல் மாந்தர்களை மயங்கச்செய்து கொல்லுந் தொழிலைவிட்டுச் சொருகினகண்களையுடைய ஸ்திரீகள், பாடும்பாணி தப்பித் தாளமாத்திரையுங்கடந்து தந்திரிவழியே குரலைச்சேர்க்காமற் சுதியழிந்த மார்க்கமாய்ச் சுரமழிந்தபாடலைப் பாடினுர்கள்.

அன்றியும்-புள்ளாங்குழலினுற்பாடும்பாட்டிற்கிசைய நயமாயப்பாடாமல் அதன்சுதியை விரோதமானகனசுரத்தைக்கொண்டுமாற்றி,குறைவில்லா த

உருசியையுடைய பாலிலே புளித்ததேனைக் கலந்தாற்போலக் கள்ளுண்ட மயக்கத்தால் வெடித்தகுரலைக்கொண்டு உரத்தசுதியிற்பாடினார்கள். ஆரியக்கூத்தில் எல்லாவேடிக்கைகளையுங் கண்டபேர்களுக்கு இந்திரசாலவித்தையைக் காட்டுவதுபோலப் பாடும்பாட்டின் பாவனைகளைத் தங்கள் அவயவங்களாற் காட்டுஞ் சமர்த்தர்களான ஸ்திரீகள் தங்கள் கண்களாற் பதாதிவீரர்களைக் காட்டி, வாயால் யானையைவெளியிட்டு, கைகளின் அபிநயத்தால் தேரின்வடிவத்தைக்காட்டி, பின்னடக்கப்போகிற கெடுதிக்கு உற்பாதமாக விருந்தார்கள். முன் அழுவதைப்போலக்காட்டிப் பின்சிரிப்பார்கள். பாடியாடுகின்றவர்களை வணங்குவார்கள். தாம் பாடுவதையும் ஆடுவதையும் விட்டுத் தூங்குவார்கள். பவளம்போன்ற வாயிற் சொல்ளுவழியவிடுவார்கள். மயக்கத்தாற் சோர்ந்து ஒருவர்மேலொருவர் விழுவார்கள். கண்களுறங்கத் திமிர்விட்டுக்கொண்டுபோய்ச் செத்த உருவத்தின் மாதிரியாய்க் கள்ளுண்டமயக்கத்தால் விழுந்தும், தங்களுள்ளத்திலுள்ள நினைப்பைத் தங்கள் செய்கையால் உணர்த்தினார்கள்.

எல்லா ஆசைகளையு நீக்கி அகங்கார மமகாரங்களைக்கெடுத்த சுத்தமான மனதையுடையவர்களான ரிஷிகளுக்கெல்லா மயிர்க்கால்கள் தோறும் காமநீர்சுரக்க வண்டுகளைப்போலப்பிறழுகின்ற நோக்கத்தையுடைய ஸ்திரீகளின் கறுத்த நீலோற்பலத்தையொத்த கண்கள் செந்நிறமாய்மாறவும், செவந்த இதழ்கள் வெண்மையாய்விடவும், கங்கணங்கள் பூண்ட கைகள் திருட்டுராக்ஷசர்களுக்கு முடிவுண்டாகிறதென்று தெரிவிக்கவும், செண்பகமலர்போன்ற மேனியெல்லாம் ஒளிமாண்டுசெத்ததேகத்தைப்போலப் போய்விட்டது. சேற்கெண்டை — இயமன் - வேல் - மன்மதபாணம் - என்றிவைகளையொத்ததாயிருந்தபோதிலும் அவைகளுடைய லக்ஷணங்களையெல்லா மிழந்துவிட்டபெரிய கண்களையுடையவர்களான ஸ்திரீகள்தங்கள் ஸ்தனங்களின்மீது அசைந்து கொண்டிருக்கின்ற சொர்ணமங்கிலியம்பூட்டிய கயிற்றையும், காஞ்சியென்னு மேகலா பரணத்தையும், வஸ்திரத்தையுங்களைந்து - மேகத்திற்குச் சமமாகிய அளகபாரத்தையுஞ் சேர்த்துக்கட்டினார்கள்.

களியாட்டினாற் சந்தோஷித்திருந்த இராவணன்வானரவீரர்களின் ஆரவாரங்களைக்கேட்டல்.

கவி.

முத்தன்மைமொழியலாகா முகிழிளமுறுவனல்லார்
இத்தன்மையெய்தனேக்கி யரசுவீற்றிருந்தவெல்லை
அத்தன்மெய்யரியின்சேனை யார்கலியார்த்தவோதை
மத்தன்மெய்மயங்கவந்து செவிதொறுமடித்தமாதோ

இந்தப்பிரகார முத்தொன்றைத்தவிர வேறொன்றையுஞ் சமானஞ் சொல்லப்போகாத தந்தபந்திகளையுடைய ஸ்திரீகள் அலங்கோலப்பட்டிருக்

ன்றதை இராவணன் கண்குளிரப் பார்த்துக்கொண்டு அரசிருந்தபோது, வானரவீரர்கள் ஆரவாரித்த பேரோசையானது மதோன்மத்தனான அவனுடைய இருபது செவிகளிலும்வந்து நுழைந்தது. அப்படியந்த வானரவீரர்கள் ஆர்ப்பரித்த ஓசையானதுவந்து நுழைந்தவுடனே நாட்டியங்களும், கள்ளுண்டமயக்கமும், தாறுமாறாகப் பாடுகின்றபாட்டுகளும், மத்தளத்தின்சுதியும், பவளம்போன்ற வாயையுடையவர்கள் பிணங்கும் பிணக்கும், அவர்களின் கடைக்கண்பார்வையும், அவர்களுடையகொஞ்சுமொழியும், ஆகியவெல்லாம்இராவணனுக்கு வாடினபுஷ்பத்தைப்போல வெறுப்பாய்விட்டன. யானைகளுடைய மதமொடுங்கவும், குதிரைகள் உறங்கிவிடவும், இராக்ஷசர்கள் பயங்கொள்ளவும், வீரகண்டாமணியைத்தரித்த ஸ்ரீராமலட்சுமணர்களுடைய தெய்வத்தன்மை பொருந்திய வில்லின் குணத்தொனியானது பாற்கடல் கடைந்தபோது பிறந்த பேரோசையைப்போலத் திடுதிடென்று ஒலித்தது.

அப்போது முத்துகளைத் தோற்கடிக்கும்படியான தந்தபந்திகளமைந்த வாயோடுகூடிய முகங்களுள்ளவர்களும் தங்கள் கண்களென்கிற வேலாயுதத்தால் துக்கிக்கின்றவர்களுமான ஸ்திரீகளின் கூட்டங்கள், இராவணனுடைய கண்களுக்கு வானரவீரர்களுடைய கூட்டங்களைப்போலத் தோற்றின. மந்தரகிரியால் மறுக்கமடைந்த கடலைப்போலத் தன்மனதுகலங்கி, தன்முகங்களாகிய பத்துச்சந்திரர்களுக்கும் அன்றையராத்திரியானது பகலைப்போலிருந்தது.

தூதுசென்றசாரணர் யுத்தகளத்தில்நடந்த சவிஸ்தாரங்களை வண்டினுருவமாய்வந்து இராவணனுக்குச்சொல்ல அவன் மந்திராலோசனைச் சபைக்குவருதல்.

கவி.

ஈதிடையாகவந்தா ரலங்கன்மீதேறினார்போய்
ஊதினார்வேய்கள் வண்டி னுருவினாருற்றவெல்லாம்
தீதிலார்பகைஞரென்னத் திக்கென்றமனத்தன்றெய்வப்
போதுகுபந்தர்நின்று மந்திரத்திருக்கைபுக்கான்.

இவ்வண்ணமிருக்கிற சமயத்தில் தூதுபோய் வண்டின்ரூபமாய்வந்த இராட்சசர்களிராவணனுடைய மாலையின்மீதுபோயேறி, புள்ளாங்குழலோசையைப்போல விசைத்துப்பகையாளிகள் ஒருதுன்பமில்லாமற் பிழைத்தார்களென்றும் - இன்னும் அங்கேநடந்த வேவுகாரியங்களையெல்லாமும் - விவரமாகச்சொன்னார்கள். இதையுங்கேட்டமாத்திரத்தில்இராவணனானவன் கொதிகொதிக்கின்ற மனதுடனே கற்பகப்பூப்பந்தலைவிட்டு மந்திராலோசனை மண்டபத்திற்கு வந்துசேர்ந்தான்.

களியாட்டுப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

இருபத்தைந்தாவது,

மாயாசீதைப் படலம்.

இப்படலத்தில் மந்திராலோசனைச்சபைக்குவந்த இராவணன் அங்குவந்தபிரமுகர்களோ டாலோசிக்கும்போது மாலியவா னிவனுக் கினியாவனவற்றிற் றிவுறுத்தச் சிறிதுங்கேளாது இந்திரஜித்துவின் கருத்துக் கிசைந்திருக்கையில் சுக்கிரீவன் வேண்டுகோளால், ஸ்ரீராமலக்ஷ்மணர்களும் வானரவீரர்களும் பாணங்களாலும் கொள்ளிக்கட்டைகளாலு மிலங்கையைக்கொளுத்த, அக்கால் சஞ்சீவிமலையைக் கொண்டுபோய் முன்னிருந்தவிடத்தில் வைத்துத்திரும்பிய ஆஞ்சனேய ரிலங்கையின் மேலைவாயிலால் வந்து வீரகர்ஜனை செய்வதறிந்த இந்திரஜித்து மாயாசீதையையுண்டாக்கிக் கொண்டுவந்து அவரெதிரில்வெட்ட, அதுகண்ட ஆஞ்சனேயர் பிரலாபித்து ஸ்ரீராமர்பால்வந்து கூறவும் அவர்சோபித்து விபீஷணர்செய்த சைத்யோபசாரத்தினாற்றெளிந்தபின் இளையபெருமாளும் சுக்கிரீவமகாராஜன் முதலாயினோரு மின்றைக்கே இலங்கையையு மிராவணனதியரையு மழித்துவிடுகிறோமென்று புறப்பட, அப்போது ஆஞ்சனேயர் ஸ்ரீராமரை நோக்கி இந்திரஜித்து சீதாதேவியை வெட்டியெறிந்தபின் அயோத்தியைநோக்கிச் சென்றானென்றுகூறவும் அதனாலவருக்குண்டான கிலேசத்தை இளையவர் தேற்றிக்கொண் டிருக்கும்போது ஆஞ்சனேய ரவ்விருவரையு மயோத்திக் கெழுந்தருளும்படி வேண்டிப் பிரயாணமாகுங்கால் விபீஷண ரிவையனைத்து மிந்திரஜித்துவின் மாயையென்றுணர்ந்து ஸ்ரீராமராக்ஞையால் வண்டுருக்கொண்டு சென்று அசோகவனத்திற் சீதையினிருப்பையும் நிகும்பலையில் இந்திரஜித்துவின் யாகப்பிரயத்தனத்தையுங் கண்டு வந்து சுவாமிக்குத்தெரிவித்து அந்தயாகத்தையு மவனையு மழிக்குமாறு தம்மோடிளையபெருமாளை யனுப்பும்படி விண்ணப்பஞ் செய்துகொண்டமை சொல்லப் படுகின்றது.

இராவணன் மந்திராலோசனைக்குவந்தகாலையில் மாலியவான்சிலவறிவுறுத்தல்.

கவி.

மைந்தனுமற்றுளோரு மகோதரன்முதலோராய
சந்திரத்தலைமையோரு முதியருந்தழுவத்தக்க
பந்தியரெவரும்வந்து மருங்குறப்படர்ந்தார்பட்ட
அந்தரமுழுதுந்தானே யனையவர்க்கறியச்சொன்னான்.

இவ்வாறிராவணன் ஆலோசனைச்சபைக்கு வந்தவுடனே, இந்திரஜித்து-மகோதரன்முதலான மந்திரிகள் — விருத்தர்கள் - இன்னுமந்திராலோசனைக்கு வரத்தக்கவர்கள் - ஆகிய இவர்களெல்லாம்வந்து இராவணனைச் சூழவிருந்தார்கள். நடந்தகாரியங்களையெல்லாம் இராவணனே யவர்களுக்கு விவரமாகத்தெரிவித்தான். அப்போது மாலியவானெழுந்து சொல்லுகிறான்.

ஐயா இராவணேஸ்வரா! இந்தலங்கையிலிருந்து ஒருக்ஷணநேரத்திற்குள்ளாக மேருபர்வதமும் பின்னிடும்படிப்பாய்ந்து வல்லமையுள்ள சஞ்சீவிமருந்துள்ள பர்வதத்தைக் கொண்டுவருகிறதற்குவல்லவன் வெற்றிமாலையைத்தரித்த தோள்களையுடைய அனுமானேயாகவேண்டும். ஏனென்றால்—சமஸ்தமான லோகங்களுக்குங் காரணவஸ்துவான ஸ்ரீராமமூர்த்தியையும், புருஷகாரபூதையான பிராட்டியையும், உள்ளபடிகண்டிருக்கிற மகானுபாவனுகையினாலேதான். ஆ! ஆ! நம்முடையசேனைகளில் மாண்டுபோனவர்களையெல்லாம் கடலிற்கொண்டுபோய்ப் போடாமல் இரணக்களத்திலேயே யிருக்கச்செய்திருப்போமேயானால், அவர்களெல்லா மிந்தச் சஞ்சீவிக்காற்றுப்பட்டுப் பிழைத்து விடுவார்களல்லவா? எப்போது பிரஹ்மாஸ்திரம் பழுதுபட்டுப் போய் விட்டதோ? இனி அவர்களுக்கு ஓரிடையூறு முண்டாகமாட்டாது.

மேலும் - இந்தலங்கையென்கிற மலையை இந்தச் சமுத்திரமத்தியிலிருந்து பெயர்த்துப் பூமிகிழியும்படியெறிந்தால், அதைத்தடுக்கிறதற்கு நம்மிலாரிருக்கின்றார்கள்? நாமவர்களுடனே சண்டைசெய்ய முடியுமோ? அந்தவனுமான் மேருமலையைப்பிடுங்கிக்கொண்டு இந்த ஊர்மேலேயெறிவானானால், அதைவிலக்குகிறதற்கு ஒருவராலாகுமோ? அந்த அனுமான் லோகசிருஷ்டியின் முறையைக்கெடுத்து மாற்றவேண்டுமானாலு மாற்றிவிடுவான். ஆதியுமந்தமுமில்லாத பரமேஸ்வரனுடைய கலியாணகுணங்களைச் சொல்வதில் குற்றமற்ற வேதங்களாற்கூறுகின்ற மூர்த்திகள் மூன்றுபேர்களென்பது, ஆலோசியாமல்தான் சொல்லிவைத்ததோ? அனுமானோடுசேர்த்து நான்குமூர்த்திகளென்றே நாமெல்லாம் அங்கிகரிக்கவேண்டும். இறந்துபோனவர்களெல்லாம் இறந்துபோனவர்களாகவேபோக, வேறேபிறவி பிறந்தவர்களைப் போலிருக்கிற நாம் பிழைக்கவேண்டிய மார்க்கத்தைமறந்துபோனோமே: ஆனபோதிலும் - இனியாவது ஜானகியை மரியாதையுடனே கொண்டுபோய் விட்டுத் தர்மசீலர்களான ஸ்ரீராமலட்சுமணர்களை அடைக்கலமடையலாம். என்று சொல்லிப் பின்னு மேல்விளையுங் காரியங்களையெல்லா நன்றாயறிந்தவனான மாலியவா னிராவணனைப்பார்த்துச் சொல்லுகிறான்.

ஓ இலங்கேசா! இந்தச் சமுத்திரத்தைப் பானம்பண்ணவல்லவர்களாய், ஆகாசத்தையும் பூமியையும் ஒன்றாய் மறைக்கும்படியான ஆயுதவல்லமையுள்ள பெரிய ராக்ஷசவீரர்களெல்லாம் இறந்துபோனார்கள். இன்னுமிந்தலங்கையு நீயும், உன்பிள்ளை இந்திரஜித்து ஒருவனுமேதான் இருக்கின்றீர்கள். வேறேவீரர்களென்று சொல்லும்படியானவர்கள் யாரிருக்கின்றார்கள்? ஒருவரைக்காட்டு பார்ப்போம். இனிநாம் வெற்றியடைவோமென்பது கனவிலு நினைக்கப்போகாது. ஓ சூலாயுதத்தைக் கையிலுடைய உமாபதியாகிய உருத்திரமூர்த்தியைக்கயிலாசபரவதத்துடனே பேர்த்தெடுத்த வெற்றித்தோள்களையுடைய இராவணேஸ்வரா! ஒருபாணத்தால் வாலியைச் சுவர்க்கத்திலேற்றிச் சமுத்திரராஜனை ஜெயித்துக் கும்பகர்ணனை மாளும்படிச்செய்த அந்த ஸ்ரீரா

மணி, மழையிலுண்டாகும் குமிழிக்குச் சமமான இந்தராக்ஷசர்களோ போர்க்களத்தில் வெல்லச் சமர்த்தர்களென்றான்.

மாலியவான் கூறியபுத்திமதிகளை இராவணன் நிக்கிரகித்தபோது இந்திரசித்து சிலவார்த்தைகூறல்.

கவி.

என்றுமாலியவான்கூறப் பிறையெயிற்றெழிலிநாப்பண்
மின்றெரிந்தென்னநக்கு வெருவரவுரப்பிப்பேழ்வாய்
ஒன்றினென் றசனியென்ன வுருத்துநீயுரைத்தமாற்றம்
நன்றுநன்றென்றுசீறி யுரைத்தனனலத்தையோரான்.

இப்படியாகக்கூறிய மாலியவானது வார்த்தையைக்கேட்ட இராவணன், மேகத்தினது மத்தியில் மின்னற்கூட்டங்கள் பிரகாசித்ததுபோல, பிறைபோலும்வளைந்த கோரதந்தங்கள் வெளியிற்றெரியச் சிரித்து யாவருமஞ்சும்படியாகப்பேரொலியோடு அதட்டி பிளந்தவாய்களிலுள்ள உதடுகளை மடித்து இடியேறுபோலுங்கர்ச்சித்துமிகவுங்கோபித்து அடாபாட்டா!மாலியவானே! நீ சொல்லிய வார்த்தையானது மிகவுநேர்த்தி! மிகவுநேர்த்தி! உனக்குதான் இதுதகுமென்று, நன்மையிதுவென் றுணுவத்தாலறியாத இராவணன்- இராக்ஷசர்களெல்லா மாண்டாலுஞ்சரி, நம்மிடத்திலுள்ள அளவில்லாத ஆயுதங்களெல்லாம் அழிந்தாலுஞ்சரி, மிகுந்த அழகுடையவளான அந்தச்சீதையை என்னுசையைக்கெடுத்து மறுபடியும் விட்டுவிடுகிறதற்காகவா நான்சிறைபிடித்துக்கொண்டுவந்தேன்? என் பிள்ளைதானெதற்கு? மற்றபந்துக்கள்தானெதற்கு? பயந்து உயிர்வாழவேண்டுமென்று எண்ணியிருக்கின்ற நீங்களெல்லாரும் பிழைத்துப்போய்விடுங்கள். நாளைக்கு நான் ஊழித்தீயைப்போலப் புறப்பட்டு மனிதர்களையும் குரங்குகளையும் சிந்தச்சிதற வடித்துப்போடுகிறேன் என்றான்.

அப்போது இந்திரஜித்து-தகப்பனைப் பார்த்து, ஐயா! உமக்கு அங்கீகரிக்கக்கூடுமானல் எனக்குத் தெரிந்தகாரியமொன்றிருக்கின்றது. நான் பிரஹ்மாஸ்திரத்தை அக்கினிமுன்னிலையிற் பூசைசெய்து அந்த ஸ்ரீராமன்மீதுப்பிரயோகித்தேன். அஃதவனுடைய மேனியைத் தொடாமலே வந்துவிட்டது. ஆகையால் அவன்மனிதனல்லன். தேவனுமல்லன். இரிஷியுமல்லன். விபீஷணன் சத்தியமாகச்சொன்ன யானெனதென்னும் செருக்கற்றவர்களால் தியானிக்கப்படுகின்ற ஸ்ரீயப்பதியே இப்படி யவதரித்தாரென்று சந்தேகமில்லாமல் தெரிந்துகொண்டேன். அது நிற்கட்டும்: அதைச்சொல்லுகின்றது வீரலக்ஷணத்துக்குப் பொருந்தாது வருகிறது வரட்டும், ஐயா வீரவானே! இன்னொரு தந்திரமிருக்கின்றது. நான் நிகும்பலைக்குப்போய் அந்தயாகத்தைச் சீக்கிரத்திற் செய்துமுடித்தால் நம்முடைய சேனைகளெல்லாம் பிழைத்து, நமக்குண்டாயிருக்கின்ற துன்பமெல்லாம் நீங்கிவிடுமென்றான்.

இதைக்கேட்ட ராவணன், ஆம்: அதுநல்லகாரியந்தான். அப்பா ! அப்படியே பரிவாய் நிகும்பலையாகஞ் செய்யக்கடவாய் என்றான். அதைக்கேட்ட இந்திரஜித்து, ஐயா! அந்தயாகம் நான்செய்கிறதை உன்தம்பிவிபீஷணன் அவர்களுக்குச் சொன்னால், அந்தப் பகையாளிகள்வந்து நான்செய்கிற யாகத்தை முடியாதபடி அழித்துவிடுவார்களே யென்றான். அதற்கிராவணன் அவர்கள்வராதபடி செய்கிறதற்கு என்ன உபாயம் பண்ணலாமென்றான். அதற்கிந்திரஜித்து சொல்லுகிறான்.

இந்திரசித்து நிகும்பலையாகம் இடையூறின்றி முடியவெண்ணி மாயாசீதையையுண்டாக்கி அநுமான்முன்பு மாய்ப்பேனெனச் செல்லுதல்.

கவி.

சானகியுருவமாகச் சமைத்தவடன்மைகண்ட
வானுயரனுமன்முன்னே வாளியிற்கொன்றுமாற்றி
யானெடுஞ்சேனையோடு மயோத்திமேலெழுந்தேனென்னப்
போனபின்புரிவதொன்று மிலாதவர்துயரம்பூண்பர்.

ஐயா இராவணேஸ்வரா ! ஜானகியைப்போல ஒருராக்ஷசனை ஏற்படுத்திக்கொண்டுபோய் அனுமான் கண்முன்னிறுத்தி என்கைவாளால் அந்த மாயாசீதையைக் கொன்றுவிட்டு என்சேனையோடுங்கூட அயோத்திக்குப்போகிறேனென்று வழிகாட்டிவிட்டுப் போய்விட்டால், அவர்களெல்லாம் அந்தத்துக்கத்திலேமுழுகி, இங்கே சீதை இறந்துபோய்விட்டாள். இனி இவ்விடத்திலிருப்பதினுற் பிரயோசனமில்லை. அவ்விடத்தில் நம்முடைய தம்பிமாரும்- தாய்மார்களும் - மற்ற பந்துக்களும் - நம்முடைய பட்டணமும் - அழிந்துபோய்விடுமே: என்கிற வருத்தத்தினால் நொறுங்குண்டு சேனையும் தாங்களுமாய்ப் போய்விடுவார்கள். அப்படியவர்கள் போகாவிட்டாலும் அனுமானையாவது அவ்விடத்திற்கனுப்பி நடந்தகாரியத்தைத் தெரிந்துகொண்டாலேயல்லாமல், தங்கள் விசனத்தைப் பொறுத்துக்கொண் டிருக்கமாட்டார்கள். அதற்குள்ளாக நான் நிகும்பலைக்குப்போய் யாகத்தை முடித்துக்கொண்டு, அதிலுண்டாகிற ஆயுதங்களினால் அவர்களையெல்லாங்கொன்று உமக்கு வெற்றியை உண்டாக்குகின்றேனென்றான். அதுகேட்டவிராவணன்அப்படிச்செய்கிறது நல்லதென்றுசமாதானப்பட்டான். வேறொருராட்சசனைச்சீதாபிராட்டியைப்போல மாயஞ்செய்துகொண்டுவருகிறதற்கு இந்திரஜித்துப்போயினான்.

வானரவீரர்கள் இலங்காபுரியைக் கோளுத்தல்.

கவி.

அத்தொழில்புரிதனன்றென் றண்ணலுமமையவெண்ணித்
தத்தினனிலங்கைமூதூர்க் கோபுரத்தும்பர்சார்ந்தான்
பத்துடையெழுசான்ற வானரப்பரவைபற்றிக்
கைத்தலத்தோரோர்கொள்ளி யெடுத்ததெவ்வுலகுங்காண.

இவ்விடத்தில் இப்படியிருக்க - அவ்விடத்தில் சுக்கிரீவமகாராஜர் மற்ற வானரவீரர்களோடும் ஸ்ரீராமமூர்த்தியைத் தண்டஞ்சமர்ப்பித்து, ஸ்வாமீ! இந்த லங்கைக்கோட்டையைச் சீக்கிரமாகச் சுட்டுவிடுகிறோமென்றார்கள். ஸ்ரீராமரும் அதற்கிசைந்து அப்படியே செய்யுங்களென்றார். உடனே பதினேழுவெள்ள வானரசேனைகளும் ஆளுக்கொரு கொள்ளிக்கட்டையைக் கையிலெடுத்துக்கொண்டு சுக்கிரீவமகாராஜருடனே புறப்பட்டுப்பாய்ந்து இலங்காபட்டணக் கோட்டையைப்போய்ச் சேர்ந்து, கோட்டைவாயிலில் வெள்ளைநிறத்து மேகங்கள் மின்னல்களை வரிசைவரிசையாக மின்னிக்கொண்டு நுழைகிறதுபோல அங்குள்ளவர்களெல்லாம் பீதியடையும்படியாகவும் - நாலுபக்கங்களிலும் இந்தலங்கைக்கு நாசகாலம் வந்துவிட்டதென்று சொல்லத்தக்கதாகவும் - இராத்திரியில் நக்ஷத்திரங்கள் பூமியில் விழுகிறதுபோல அளவில்லாத கொள்ளிக்கட்டைகளை வீசியெறிந்தார்கள். யானைகளையொத்த வானரங்கள் வீசியெறிந்த அந்தக்கொள்ளிக்கட்டைகள், ஸ்ரீராமமூர்த்தி சமுத்திரத்தின்மீது ஏவின அக்கினியாஸ்திரங்களைப் போல, வஞ்சகனான ராவணனுடைய லங்கையின்மீது மேலுமேலும்போய்விழுந்தன. இப்படிநெருப்பெரியுங்கொள்ளிகளிலங்கைக்கோட்டையின்மீது நெருங்கினவுடனே இலங்காபட்டணமானது ஸ்வாமிபிரயோகித்த அம்புகள்பட்டுச் சமுத்திரம்வேகிறதுபோல வெந்தது. அக்கால்பெருங்காட்டில் நெருப்புப்பற்றியெரியும்போது அதில் வாசஞ்செய்திருந்த பக்ஷிசாதிகள் சப்தித்துக்கொண்டு ஆகாசத்திலெழும்பினதுபோல, இலங்கையிலுள்ளவர்களெல்லாம் பெருங்கூச்சலிட்டுக்கொண்டு அந்தரத்திலெழும்பிப் போனார்கள், மூன்றுலோகத்தவர்களாலு நித்தியசூரிகளாலும் வணங்கும்படியான வில்வீரசிகாமணியாகிய இளையபெருமாளும் ஸ்ரீராமமூர்த்தியும், தீபத்துக்குச்சமானமான சிலபாணங்களைப் பிரயோகிக்க, இலங்கையிலுள்ள மாடகூடகோபுரங்களெல்லா மலைகளைப்போல இடிந்து விழுந்தன.

அநுமார் சஞ்சீவிபர்வதத்தை இருப்பிடத்திற்சேர்த்து மீண்டு இலங்கையின் மேலைக்கோட்டைவாசலில் வந்துகர்ச்சித்தல்.

கலி.

இத்தலையின்ன நிகழ்ந்திடுமெல்லைக்
கைத்தலையிற்கொடு காவினெழுந்தான்
உய்த்தபெருங்கிரி மேருவினப்பால்
வைத்தநெடுந்தகை மாருதிவந்தான்.

இங்கே யிப்படி நடந்துகொண்டிருக்கும்போது முன்னே தம்முடைய திருக்கைகளைச் சிரசின்மேல் வைத்துக்கொண்டுபோய் மருத்து மலையைப் பேர்த்தெடுத்துக்கொண்டு வந்து மறுபடியும் அதை மேருமலைக்கப்புறத்தில் வைத்துவிட்டுவரப்போன ஆஞ்சநேயர் அவ்விலங்கையின் மேற்குவாசலில் வந்துசேர்ந்து வீரகர்ச்சனைசெய்தார். அக்காலந்த ஓசையைக்கேட்ட அந்த

விலங்கைப்பட்டணத்தி னுள்ளவர்கள். சிறகுகளையுடைய கருடபகவான் சீறு வதைக்கேட்ட பாம்புக்குலங்களை யொத்துப் பயந்தார்கள்.

இந்திரசித்து மாயாசீதையைக் கொண்டுவந்து ஆஞ்சநேயர்முன்பு நிறுத்திச் சிலவார்த்தைகூறல்.

கவி.

சானகியாம்வகை கொண்டுசமைத்தோர்
மானனையாளை வடிக்குழல்பற்று
ஊனகுவாளொரு கைக்கொடுருத்தான்
ஆனவனன்னிலை யின்னவறைந்தான்.

இப்படி மேற்குவாசலில் வந்துசேர்ந்த வாயுபுத்திரருக்கு முன்பாக எல்லாத்தந்திரங்களிலுஞ் சமர்த்தனும் இயமனையுஞ்செயம்பெற்றுச் சொட்டுப் போட்டவனுமானஇந்திரஜித்துவந்துசானகியைப்போலஒருமாயப்பெண்ணை யுண்டாக்கி, அவளுடைய தலைமயிரை இடதுகையிற்பற்றி, வலதுகையி லொருவாளையுருவிக்கொண்டு அதிககோபத்துடனே அனுமானைப்பார்த்துச் சில சொற்களைச் சொல்லத்தொடங்கினான்.

ஓ நரதூதனே! நீங்கள் இவள்நிமித்தமாகவந்து இவ்வளவு சண்டைசெய்தீர்கள் அல்லவா? இப்போது என்பிதாவாகிய ராவணேஸ்வரன் இவளைவெறுத்துத் தள்ளிவிட்டான். நானிவளுடைய ஆவியை இதோ உண்டுவிடப்போகிறேன். அப்பாலுங்களாலானதைப் பாருங்களென்றான். அதுகேட்ட ஆஞ்சனேயர் புத்திமயங்கிப் பரவசப்பட்டு அந்தமாயாசீதையைப் பார்த்து, இவர்தானே நாம்கண்ட சீதாபிராட்டியார்? ஐயோ! நம்முடையவாழ்வு போய்விட்டதே, இதைத்தடுக்கிறதற்கு வேறொருபாயமுந் தோற்றவில்லையே: என்று கலங்கி உயிருண்டோ இல்லையோவென்னும்படி வாயுலர்ந்து மூர்ச்சையடைந்து மீட்டுந்தெளிந்து யோசித்தனர்.

அநுமார் இந்திரசித்துவுக்குச் சிலநீதிவார்த்தைகூற அதனைக்கேட்ட இந்திரசித்து சிலபொய்வசனம்புகன்று மாயாசீதையைவெட்டி நிகும்பலையாகஞ் செய்யச்செல்லுதல்.

கவி.

யாதுமினிச்செய வில்லெனவென்னால்
நீதியுரைப்பது நீரெனவோராக்
கோதில்குலத்தொரு நீகுணமிக்காய்
மாதையொறுத்தல் வசைத்திறமன்றே.

இனிச்செய்கிறதற்கு வேறேசெயலில்லை. ஆகிலு நம்மாற் கூடியவரையி லிவனுக்கு நீதிவார்த்தையைச் சொல்லலாம். என்றுநினைத்துச் சொல்லுகின்றார். அப்பா! நீஉயர்ந்த யக்ஷகுலத்திற்பிறந்து நல்லகுணமுடையவனா யிருக்கின்றாயே: ஒரு பெண்பிள்ளையைக்கொல்லுகிறது நீங்காத பழியானதல்லவா

பிரஹம்மவமிசத்திலு நாலாந்தலைமுறையா யிருக்கின்றாய். மேலும் சாஸ்திரங்களையெல்லாந் தீரக்கற்று மிருக்கின்றாய். ஒரு பெண்பிள்ளையை வதை செய்கிறது பெண்பழியென்று நீ யறியவில்லையா? பூலோகத்தாரெல்லாம் வருத்தப்படுகின்றார்கள். தேவர்களெல்லா நடுங்கிக்கண்கூச்சம் அடைகின்றார்கள். அவைகளை நீ கண்ணாலேயாவது பார். ஐயோ! உனக்குக் கொஞ்சமாவது இரக்கமென்பதில்லையே: பெண்கொலைசெய்கிறது பெரும்பழியல்லவா? உன்பிதா வெறுத்துவிட்டபடியினாலே என்னிடத்திற் கொடுத்துவிட்டுப்போய்விடு. அப்படிச்செய்வாயேயானால் இந்தமூன்றுலோகமும் உனக்குவசமாய்விடும். நல்லவெற்றியென்பது உனக்கிதுவல்ல. அதை நீ யறிந்திலைபோலும். அற்பகாரியத்தைச் செய்கிறதினால் இதுவரையி லுனக்குண்டாயிருக்கும் புகழுக்கு அழிவுண்டாகுமே: என்று பலநீதிவார்த்தைகளைப் பரிவோடுங் கூறினார்.

இவ்வண்ணங்கூறிய ஆஞ்சனேயரை அவ்விந்திரஜித்துப்பார்த்துச் சினந்து, அடாகுரங்கே! என்தகப்பனுக்குவேண்டாத இவளை உன்கையிற்கொடுப்பேனேயானால் எனக்குப்புகழுண்டாகுமா? இவளை யென்வாளால்வெட்டியெறிந்துவிடுகிறேன். இவள்போய்விட்டாள். உங்களுக் கிவளிடத்தி லாசைவேண்டாம். அயோத்தி வேண்டுமானா லதைக் காத்துக்கொள்ளப் போங்கள். அதையு மிதோ கரியாகச்சுட்டுவிட்டு வரப்போகிறேன். அங்கேயிருக்கின்ற தம்பிமார்களும், தாய்மார்களும், தேவர்கள் விலக்கினபோதும் பிழைக்கவிடமாட்டேன். அக்கினியைப் பொழிகின்ற என்னுடைய பாணங்களினால் அவர்களெல்லா மாண்டுபோய் விட்டார்களென்று நம்புங்கள். இப்போதே போகின்றேன். வேகமாய்ப் போகவேண்டியதாதலால் புஷ்பக விமானத்திற் போகப்போகிறேன். அவர்கள் தப்பிவிடுவார்களென்று நினைக்கவேண்டாம். என்னுடையபாணங்கள் லகுவானவைக ளல்லவாக்கு மென்றுகூறி துரிதப்பட்டான்.

கவி.

ஆளுடையாயரு ளாயருளாயென், றேழைவழங்குறு சொல்லினிரங்கான்
வாளினெறிந்தனன் மாகடல்போலும், நீளுறுசேனையி னூடெதிர்ந்தான்.

அப்போது அந்த மாயாசீதையானவள் பயந்தவளைப்போல அவனைப்பார்த்து நடுங்கி, ஐயா எங்களாண்டவரே! என்னைக்கொல்லாமல் கிருபைசெய்துவிட்டுவிடும்: விட்டுவிடும்: என்றநேகவிதமாகக் கெஞ்சிக்கேட்கவும் கொஞ்சமும் இரங்காமல் தன்கைவாளினால் அவளை ஒரேவீச்சாக வீசிவிட்டு, கடலைப்போற் சூழ்ந்துவருகின்ற சேனையுடனே புறப்பட்டுத்தெற்கிலிருந்து வடக்குமுகமாகப் பொன்மயமான புஷ்பகவிமானத்தி லேறிக்கொண்டு இந்திரஜித்துப் போய்விட்டான்.

கவி.

போனவன்மாறி நிகும்பலைபுக்கான்
றூயவனெஞ்சு துயர்ந்துசுருண்டான்

ஓய்வொடுநெஞ்ச மொடுங்கவுலர்ந்தான்
எயனபன்னின னின்னனசொன்னான்.

இதைக்கண்ட வாயுகுமாரர் ஒன்றுந்தோற்றாமல் பிரமித்து மனஞ்சோர்ந்து, மேருமலை சாய்வதுபோல மூர்ச்சித்துக் கீழேவிழுந்துவிட்டார். அதுகண்ட இந்திரஜித்து அப்புஷ்பகவிமானத்தோடுந்திரும்பி நிகும்பலைச் சாலைக்குப்போய் நுழைந்து விட்டான். அப்பா லாஞ்சனேயர் சிறிது மூர்ச்சைதெளிந் துயிர்வாடி உடல்சோர்ந்து மனங்கலங்கித் தளர்ந்து, ஓ அன்னத்துக்குச்சமமான சீதாபிராட்டியாரே! என்பார். ஓ பெண்களுக்கு அருங்கலநாயகமே! என்பார். ஓ என்தாயே! என்பார். கொஞ்சமாவது தெய்வவருளில்லையே என்பார். ஐயோ! இந்த அற்பகாரியத்தைச் செய்யக்கண்டும் பாவியாகிய என்னுடையமனது பின்னப்பட்டுப் போகவில்லையே என்பார். இப்படியாக ஆஞ்சநேயர் தன்பலமெல்லாம் ஒடுங்கி எழுந்திருந்து இந்திரஜித்துவின்மேற்பாய நினைப்பார். மிகுந்த துக்கத்தினால் தள்ளாடிக் கீழேவிழுந்து பெருமூச்சுவிட்டு அழுதுபுலம்புவார். ஒருபக்கமாய்ப்போய் வருத்தப்படுவார். நெருப்புப் பறக்கும்படி மூச்சுவிடுவார். உடல்நடுங்குவார். தலைமேற் கையைவைத்துக்கொண்டு பூமியில்மோதி விழுவார். இப்படியெல்லாம் துன்பப்பட்டுப் பின்னும் பலவாறாகப் புலம்பத்தொடங்கினார்.

இந்திரசித்து மாயாசீதையை வெட்ட அநுமார் புலம்பல்.

கவி.

முடிந்தது நந்தமெண்ண மூவுலகிற்குங் கங்குல்
விடிந்ததென் றிருந்தேன்மீள வெந்துய ரிருளின் வெள்ளம்
படிந்தது வினையின்செய்கை பரந்தது பாவிவாளால்
தடிந்தனன் றிருவையன்றே தவிர்ந்தது தருமமம்மா.

பெருஞ்சிறைக் கற்பினாளைப் பெண்ணினைக்கண்ணிற்கொல்ல
அருஞ்சிற கற்றபுட்போல் யாதுமொன் றியற்றலாற்றேன்
இருஞ்சிறை யழுந்துகின்றே னெம்பிரான்றேவிபட்ட
அருஞ்சிறை மீட்டவண்ண மழகிது பெரிதுமம்மா.

பாதகவரக்கன்றெய்வப் பத்தினி தவத்துளாளைப்
பேதையைக் குலத்தின்வந்த பிழைப்பிலா தாளைப்பெண்ணைச்
சீதையைத் திருவைத்தீண்டிச் சிறைவைத்த வரக்கன்றானே
காதவுங் கண்டுநின்ற கருமமே கருணைத்தம்மா.

கல்விக்கு நிமிர்ந்தகீர்த்திக் காகுத்தன் றூதனாகிச்
சொல்விக்க வந்துபோனே னேவிலித் துயர்செய்தாரை
வெல்விக்க வந்தேனுன்னை மீட்பிக்கவன்று வெய்தில்
கொல்விக்க வந்தேனென்றே கொடும்பழி கட்டிக்கொண்டேன்.

வஞ்சியை யெங்குங்காணத் துயரிடைமறந்தானென்னச்
செஞ்சிலை யுரவோன்றேடித் திரிகின்றானுள்ளந்தேற
அஞ்சொலா ளிருந்தாள்கண்டே னென்றயா னரக்கன்கொல்லத்
துஞ்சினாளென்றுசொல்லத் தோன்றினேன் றோற்றமீதால்.

அருங்கடல் கடந்திவ்வூரை யள்ளெரி மடுத்துவெள்ளக்
கருங்கடல் கட்டிமேருக் கடந்தொருமருந்துகாட்டிக்
குரங்கினியுன்னொடொப்ப வில்லெனக் களிப்புக்கொண்டேன்
பெருங்கடற் கோட்டந்தெய்வை யாயதென் னடிமைப்பெற்றி.

விண்டுநின் ருக்கைசிந்திப் புல்லுயிர்விட்டிலாதேன்
சொண்டுநின் ருனைக்கொல்லக் கூசினேனெதிரேகொல்லக்
கண்டுநின்றேனே யென்றன் கைகளாற் கலத்தின்வெண்சோ
றுண்டுநின் றுய்யவல்லே னெளியனே வொருவனுள்ளேன்.

ஐயோ தெய்வமே! நம்முடைய எண்ணமானது இனி முடிந்துவிட்ட தென்றும், திரிலோகத்தையு மூடிக்கொண்டிருந்த பாவவிருளும் விழுந்துவிட்டதென்று நினைத்திருந்தேனே: மறுபடியும் துக்கவிருள் நம்மைமூடிக் கொண்டதே: பாவவினையே மேலிட்டுப் பரவிவிட்டதே: பாவியாகிய இந்திரஜித்து சீதாபிராட்டியாகிய இலக்ஷுமியை வாளால்வெட்டிவிட்டானே: தர்ம்மம் உலகத்தைவிட்டுக் குடிபோய்விட்டதுபோ லிருக்கின்றதே: இத்தனை நாளாகப் பெருஞ்சிறையாகவிருந்த மஹாபதிவிரதையான ஒருபெண்ணைக் கண்ணுக்கெதிரே கொல்லுகிறதைப் பார்த்தும், அந்தச் சடாயுபகவான் சிறகறுந்துபட்டதுபோல நான் ஒருகாரியமுஞ் செய்யாமலிருந்து இப்போது வருத்தப்படுகின்றேனே; என் ஆண்டவராகிய ஸ்ரீராமபிரானுடைய தேவியை நான் சிறைமீட்கும்படியாகச் செய்தகாரியம் வெகு அழகாயிருக்கின்றது. இந்தமஹா பாதகனாகிய ராக்ஷசனால் தெய்வீகமாகிய பத்தினித்தகைமைவாய்ந்தவளும், தவத்திலிருந்தவளும், உயர்ந்தகுலத்திற்பிறந்து யாதொருகுற்றமுஞ்செய்யாத மஹா உத்தமியும், பெண்ணென்பவளும், சீதையும், இலட்சுமியுமாகிய தேவியாரைத்தொட்டுச் சிறையில்வைத்த இராக்ஷசன் ஒருதப்பிதமுமில்லாமலே கொல்லுவித்ததைப் பார்த்திருந்த தர்மத்தின் ஸ்வபாவம் வெகு கருணையுடையதா யிருக்கின்றது.

என்தாயே! எல்லாச் சாஸ்திரங்களுக்கும் எட்டப்படா திருக்கின்ற கீர்த்திமானான ஸ்ரீராமமூர்த்தியினுடைய தூதுவனாகி, நான் அவர்சொன்ன சொல்லைத் தெரிவிக்கவந்து, மறுபடியும்போய் அளவில்லாத இந்தத் துன்பத்தைச்செய்த சண்டாளராக்ஷசர்களை இடங்காட்டி வெல்லும்படிச் செய்ய வந்தேன். தேவரீரை மீட்பிக்கவரவில்லை. இப்போது கொடுமையாய் உம்மைக்கொல்லச் செய்யவந்தேனென்று ஒருகொடும்பழியைக் கட்டிக்கொண்டேன். என்னுண்டவரும் வில்வீரருமான ஸ்வாமியானவர் தேவரீரை எங்குங்காணமல் துயரால் ஒருமரம்போலச் சோர்ந்து தேடிக்கொண்டு வந்தபோது, அவர்திருவுள்ளம் தேறும்படி அடியேன் சீதாபிராட்டியாரைக் கண்டேனென்று சொன்னேன். அப்படிச்சொன்ன நான் இப்போது ராக்ஷசன்கொல்லப்பார்த்தேன். ஐயோ! இனியந்த ஸ்வாமியை யான் கண்டு தேவரீர் பத்தினியானவர் மரணமாய் றுட்டாரென்று சொல்லும்படி நேரிட்டேனே இது

தானோ நான்பிறந்ததின் பலன்? அம்மா! யான் பெரிய சமுத்திரத்தைத்தாண்டி இந்தலங்கைநிரம்ப நெருப்பிட்டுக் கொளுத்தி; பிறகுகடலை அணைகட்டியாவரையு மிதிற்கொண்டுவந்து சேர்த்துப் போராடவிடுத்து, அப்பால் மேருவைத்தாண்டி ஒருவருக்குங் கிடைக்க அருமையான சஞ்சீவிமருந்தைக் கொண்டுவந்து, குரங்குகளுக்குள்ளே உனக்குச்சமமான கைங்கரியசாலிக ளில்லையென்று பேர்வாங்கிச் சந்தோஷித்தேன். என்னுடைய கைங்கரியநிலைமை, இப்போது பெருங்கடலில் கோஷ்டம் உரைத்ததுபோல ஆய்விட்டது. என் அம்மணி! உம்மைவிட்டு நீங்கி அடியேனுடைய உடல்சிதைந்து அற்பவுயிர் கழியாமற்போனேன். உம்மைப்பிடித்துக்கொண்டு வந்துநின்ற அந்தத் திருட்டுப்பயலைக் கொல்லுகிறதற்குப் பின்னிட்டுப்போனேன். உம்மையென்னெதிரே கொல்லும்படிப் பார்த்துக்கொண்டிருந்தேன். இப்படிப்பட்ட நான் கலத்திற்போட்ட ஷட்ரசான்ன பதார்த்தங்களாகிய நல்லுணவையுண்டு கொண்டிருந்து பிழைக்கும்படியாக இருக்கின்றேன். நான்சாமானிய ஞனவனோ? நானுமொருவனு யிருக்கின்றேனே: என்றுநின்றழுதார்.

அநுமார் தெளிந்தெழுந்து நடந்த சங்கதியை ஸ்ரீராமரிடஞ்சென்று சொல்லி மூர்ச்சித்தல்.

கவி.

என்னநின்றிரங்கிக்கள்வ னயோத்திமேலெழுவனென்று
சொன்னதுமுண்டுபோன சுவடுண்டுதொடர்ந்துசெல்லின்
மன்னனிங்குற்றதன்மை யுணர்கிலன்வருவதோரேன்
பின்னினிமுடிப்பதியாதென் றிரங்கினனுணர்வுபெற்றான்.

இவ்வண்ணமாகப் பலவற்றையு மெண்ணியெண்ணி யழுதவராகிய ஆஞ்சநேயர், இராக்ஷசப்பாதகனாகிய இந்திரசித்துவானவன் அயோத்திக்குப் போகிறேனென்று சொன்னான். அப்படியே போயுமிருக்கிறான். நாமவனைத் தொடர்ந்துபோனால் நம்முடைய ஆண்டவனுக் கிங்கேநடந்தகாரியந் தெரியாது. இனிச்செய்யவேண்டுவதிதுவென்று மெனக்குத்தோற்றவில்லை. இனி நாமென்னசெய்யலாம், என்று இரக்கமுற்றுத்தெளிந்து, நல்லது: நடந்தகாரியங்களைலோகநாயகரான சக்கரவர்த்தித் திருமகனுரிடத்தில் விண்ணப்பம்பண்ணிவிட்டு மாண்டுபோகின்றேன். இல்லாவிட்டால் அவராலோசனைபண்ணினியமித்தபடிச் செய்கின்றேன். வேறேதீர்மானம் ஒன்றுமில்லை. என்று துணிந்து பருத்தழகிய திருத்தோள்களையுடைய வீரசிகாமணியாகிய தசரதகுமாருடைய திருவடிப்பக்கல் சேர்ந்து, ஆண்சிம்ஹத்துக் கொப்பான ஸ்ரீராமபிரானுடைய வீரகண்டாமணியை யணிந்த திருவடிகளிலே தேஹமும்—மனதும்—கண்களும் — உயிரும் வாடிப் பெருங்குரல்கொண்டழுது பெருமூச்சுவிட்டுக் கொண்டு, தேஹமெல்லாங் கண்ணீரருவியாறாக ஓடும்படிப் பெரியமலைபோல வீழ்ந்தார்.

கவி.

வீழ்ந்தவன்றன்னைவீரன் விளைந்ததுவிளம்புகென்னத்
தாழ்ந்திருதடக்கைபற்றி யெடுக்கவுந்தரிக்கிலாதான்

ஆழ்ந்தெழு துன்பத்தாளை யரக்கனின் றயில்கொள் வாளால்
போழ்ந்தன னென்னக்கூறிப் புரண்டனன் பொருமுகின்றன்.

அப்படி விழ்ந்த ஆஞ்சநேயரைப் பெரியபெருமாள் கடாக்ஷித்து, அப்பனே ஆஞ்சனேயா! நடந்ததென்ன சொல்லுகவென்று கையைப்பற்றித் தூக்கினர். அப்போதுஞ் சகிக்கமாட்டாமல் ஆஞ்சனேயர் மிகுந்ததுன்பங்கொண்டு, ஸ்வாமீ! வருத்தப்பட்டுக்கொண்டிருந்த சீதாபிராட்டியாரை அவ்விந்திரசித்தென்னும்ராக்ஷசன் கூரியவாளாயுதத்தால்வெட்டி யெறிந்துவிட்டானென்று பூமியில்வீழ்ந்து புரண்டுபுரண்டு அழுது மூர்ச்சித்தார். தேஹம் அசையவில்லை. மூச்சுவிடவுமில்லை. கண்ணுஞ் சிமிட்டவில்லை. கண்களில் நீரும்சொரியவில்லை. ஒன்றும்பேசவுமில்லை. அழுதுமேதம்பவுமில்லை. பூமியில் விழவுமில்லை. சாகவுமில்லை. இப்படி ஆஞ்சநேயருக்குண்டான துன்பமென்னத்திறுலென்று தேவர்களுக்குந்தோற்றவில்லை. ஆஞ்சநேயர் சொன்னவார்த்தையைக்கேட்டமாத்திரத்தில் வானரசேனைகளெல்லாம் துடித்து அறிவுசோர்ந்து, பெரியவாடைக்காற்றில் அகப்பட்ட விருக்ஷங்களைப்போல நடுங்கிக் கற்பக விருக்ஷம் போலெழுந்தருளி யிருக்கின்ற ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் திருவடித் தாமரைகளின்மீது மலைகள் விழுந்ததுபோல வீழ்ந்தழுதார்கள்.

சீதையிறந்தாளென்ற வார்த்தையைக்கேட்ட ஸ்ரீராமரும் இலக்ஷ்மணரும் திகைத்துப் பூமியிற்சாய்ந்துவிட விபீஷணர் ஆயாசந்தீர்த்தல்.

கவி.

சித்திரத்தன்மையுற்ற சேவகனுணர்வுதீர்ந்தான்
மித்திரர்வதனநோக்கா னிளையவன்வினவப்பேசான்
பித்தருமிவற்பொறுத பேரபிமானமென்னும்
சத்திரமார்பிற்றைக்க வுயிரிலனென்னச்சாய்ந்தான்.

அப்போது மஹாவீரரான ஸ்ரீராமர் சித்திரப் பிரதிமைபோல் அறிவு சோர்ந்து, தமது நண்பர்கள் முகத்தையும் பாராமல் இளையபெருமாள் கேள்விக்கும் பிரதியுத்தரங் கூறமல், பித்தர்களுஞ் சகிக்கமுடியாத அபிமானமென்கிறவேலாயுதம் மார்பில் தைக்க உயிரிழந்தவனைப்போலப் பூமியிற்சாய்ந்து விழ்ந்தார். அக்கால் இளையபெருமாள் இப்படி வீழ்ந்த ஸ்ரீரகுநந்தனருடைய தன்மையைப் பார்த்தும், தங்களுக்குநேரிட்ட வெட்கத்தை நினைத்தும், தலையெடுத்தோங்கினதரும மறுபடியு மழிந்துவிட்டதேயென்று ஆலோசித்தும், வாய்ச்சொல்லும், மனமும், கண்களும், திருமேனியும், சோர்ந்துவாடி; தாயையிழந்த கன்றுக்குட்டியைப்போற் பூமியில் வீழ்ந்துவிட்டார்.

பிறகு எல்லாம் அறியத்தக்க ஜ்ஞானமுள்ளவரான விபீஷணுழ்வானு நடுங்கி, சம்பவித்தவருத்தத்தி னுண்மையைத் தெரிந்துகொள்ளாமல், அந்தச்சிறுபயல் இவர்களை நம்மால்ஜெயிக்கமுடியாது, நமக்கு இவ்வளவு நாசமும் இவளால்தான் சம்பவித்தது, என்று நினைத்துக் கொன்றுலுங்கொல்லுவான்; என்பதாக மனதிற் சந்தேகத்தினுல், குளிர்ந்தநீரைக்கொண்டு ஸ்வா

யின் திருமுகத்தில் தெளித்து, திருமேனியைத்தொட்டு உணர்வுண்டாகும் படியான எல்லாவுபாயங்களையுஞ்செய்து, திருவடித்தாமரைகளையும், திருக்கரங்களையும், திருமேனியையும்பற்றி வருடினார். அம்மாத்திரத்தில் வேதங்களுங்கண்டுணரவரியவரான பரவஸ்துவானவர் திருக்கண்களைவிழித்து சுவாசம் விட்டார். அப்போது இளையபெருமாள் ஊற்றெடுத்துக்கண்ணீரொழுக மனமழிந்து உற்றதைநினைத்து ஆற்றமாட்டாமல் வருத்தப்பட்டுக்கொண் டிருந்தாரேயன்றி, அந்தப்பிரமையை மாற்றவேயில்லை. தம்முடைய மானத்துக்கு உயிரேமுடிவாக ஹீனம்வந்திருந்தும், தமையனைத் தேற்றும்படி நினைத்துத் தமது சில அபிப்பிராயங்களைச் சொல்லத்தொடங்கினார்.

சீதையிறந்ததாகக்கேட்டு வருந்தும் ஸ்ரீராமரை இலட்சுமணர் தேற்றுதல்.

கவி.

முடியுநாட்டானேவந்து முற்றினுற்றுன்பமூழ்நீர்ப்
படியுமாஞ்சிறியோர்தன்மை நினக்கிதுபழியிற்றாமால்
குடியுமாசுண்டதென்னி னறத்தொடுமூலகைக்கொன்று
கடியுமாறன்றிச்சோர்ந்து கழிதியோகருத்திலார்போல்.

தையலைத்துணையிலாளைத் தவத்தியைத்தருமக்கற்பிற்
றெய்வதந்தன்னைமற்றுன் றேவியைத்திருவைத்தீண்டி
வெய்யவன்கொன்றானென்றால் வேதனையுழப்பதின்ன
மெய்யவோகருணையாலோ தருமத்தோடுறவுமுண்டோ.

அரக்கரென்னமரர்தாமென் னந்தணர்தாமென்னந்தக்
குருக்களென்முனிவர்தானென் வேதத்தின்கொள்கைதானென்
செருக்கிளர்வலியராகி நெறிநின்றார்சிதைவரென்னின்
இருக்குமிதென்னுமிம்மூன் றுலகையுமெரிமடாதே.

முழுவதேழுலகமின்ன முறைமுறைசெய்கைமேன்மூண்
டெழுவதேயமரரின்ன மிருப்பதேயறமுண்டென்று
தொழுவதேமேகமாரி சொரிவதேசோர்ந்துநாம்வீழ்ந்
தழுவதேநன்றுநந்தம் விற்றொழிலாற்றலம்மா.

புக்கிவ்வூரிமைப்பின்முன்னம் பொடிபடுத்தரக்கன்போன
திக்கெலாஞ்சுட்டுவானோ ருலகெலாந்தீய்த்துத்தீர்க்கத்
தக்கநாங்கண்ணீராற்றித் தலைசுமந்திருகைநாற்றித்
துக்கமேயுழப்பமென்றாற் சிறுமையாய்த்தோன்றுமன்றே.

அங்குமிவ்வறமேநோக்கி யரசிழந்தடவியெய்தி
மங்கையைவஞ்சன்பற்ற வரம்பழியாதுவாழ்ந்தே
மிங்குமித்துன்பமெய்தி யிருத்துமேலெளிமைநோக்கிப்
பொங்குவான்றளையிற்பூட்டி யாட்செயப்புகல்வரன்றே.

யன்றலங்கோதையாளைத் தம்மெதிர்கொணர்ந்துவாளிற்
கொன்றவர்தம்மைக்கொல்லுங் கோளிலாநாணங்கூரப்
பொன்றினரென்பராவி போக்கினுற்பொறுமைபார்க்கி
னன்றிதுசருமமென்னீ யயர்கின்றதறிவிலார்போல்.

சுவாமீ! தனக்கழிவுகாலம் ஊழ்விதிப்படி வந்து சம்பவித்தால் அல்பனுயிருக்கின்றவன் துக்கசாகரத்தில் மூழ்குவது சுபாவம். தேவரீருக்கு இது பழிப்பாகுமல்லவா? மிகப்பெருமைபெற்ற நம்முடையகுடிக்கே ஒருகுறைவுவந்தால் தர்மத்துடனே இந்த மூன்றுலோகங்களையு நாசப்படுத்திப்போடாமல் அறிவில்லாதவர்களைப்போல நாமாண்டுபோய் விடலாமோ? ஐயனே! பிராட்டியாரோ பெண்பிள்ளை. மேலும்ஒருதவியும் இல்லாதவள். தவப்பெண். தர்மபதிவிரதாதெய்வம். அல்லாமலுந் தேவரீருடையதேவி. சாக்ஷாதுமகாலக்ஷுமி. இப்படிப்பட்ட சீதாதேவியாரை மகாசண்டாளனுன ராக்ஷசப்பயல் கையால்தொட்டுக்கொன்றுனேயானுல், இதைக்கேட்டும் வருத்தப்படவேண்டியதெதற்கு? இப்படி வருத்தப்படுவது இன்னமும் உயிர்வைத்துக்கொண்டிருக்கவா? அல்லது தேவரீருடைய கிருபையினுலோ? இனி நமக்குத் தர்மத்துடனே சிநேகமும் உண்டாகுமோ?

சுவாமி! இனி நமக்கு ராக்ஷசர்களென்ன? தேவர்களென்ன? பிராமணர்களென்ன? குருக்கள்மாரென்ன? மகாரிஷிகள்தாமென்ன? இனி வேதத்தின் முறையான ஆசாரமென்ன? துஷ்டர்கள் வல்லமையுடையவர்களாகி யோக்கியர்கள் அழிந்துபோவார்களேயானுல், இந்த மூன்றுலோகத்தையும் அக்கினியாற் சுட்டெரிக்காமற் சும்மாயிருப்பதென்னகாரணம்? இனியிந்த ஈரேழுலோகங்களும்ஒழுங்காகத்தர்மங்களைச்செய்துகொண்டுவிர்த்தியாக்கும்படி இருக்கின்றனவோ? தேவர்களின்னமும் பிராணனுடனே இருக்கவோ? தர்ம்மமு மிருக்கின்றதாக நாம் வணங்கிக்கொண்டிருக்கவோ? இன்னமு மழையும்பெய்யவேண்டுமோ? நாமின்னும் சோர்ந்து வீழ்ந்து அழுதுகொண்டிருக்கின்றதோ? ஆ! ஆ! நம்முடைய வில்வல்லமை வெகு அழகாயிருக்கின்றது. ஓ தயாநிதி! இவ்விலங்கையில் நுழைந்து ஒருக்ஷணத்துக்குள்ளாக அதைச் சாம்பலாக்கிவிட்டு, அந்தராக்ஷசப்பயல் போன திசைகளையெல்லாம் சுட்டெரித்து, தேவலோகங்களை யெல்லாங் கொளுத்தி முடித்துவிடக்கூடிய நாம் கண்ணீரைத்துடைத்துக்கொண்டு வெறுங்கையைத்தலையின்மேல் வைத்து எளியவர்கள் போலத்துக்கமுற்று வாடினுேமானுல்; உலகத்திற்குச் சிறுமையாய் முடிந்துபோகாதோ?

சுவாமி! அயோத்தியிலு மிப்படியே தர்ம்மத்தைப்பார்த்து இராஜமுடியைத் துறந்துவிட்டுக்காட்டிற்குவந்து, சீதாபிராட்டியாரை அந்தவஞ்சகன் பிடித்துக்கொண்டுபோக அத்தருமத்தின்வரம்பைக்கெடுக்காமலிருந்துஉயிர்வைத்துக் கொண்டிருந்தோம். இப்போது இவ்விடத்திலுமிப்படிப்பட்ட துன்பத்தையடைந்து சும்மாஇருப்போமானுல். இராக்ஷசர்கள் நம்முடையஎளியதன்மையைப் பார்த்து நம்மைச் சிறையில் விலங்கிட்டுவைத்து அடிமைசெய்யும்படியாகவுஞ் சொல்லமாட்டார்களா? நாமிப்போது நம்முடைய ஆவியைப் போக்குவோமேயானுல், சீதையை வாளினுலே கொன்றவர்களைக் கொல்லும்படியானவல்லமைஇல்லாதவர்களாய் வெட்கப்பட்டிறந்துபோனுர்களென்று

சொல்லுவார்கள். ஆகையால் தர்மத்தைப் பார்க்கிறதற்கு இதுகாலமல்ல. தேவரீர் அறிவில்லாதவர்களைப்போலத்தாமசித்திருக்கின்றது தக்ககாரியமன்றென்று சொன்னார்

இப்படி இளையபெருமாள் சொல்லவே சூரியகுமாரரான சுக்கிரீவமகாராஜன் கனவுகண்டவரைப்போலத் திடீரென்றெழுந்திருந்து, ஓ கருணாநிதி! இனி யாலோசித்துக்கொண் டிருக்கலாமோ? விளக்கில் வீழ்கின்ற விட்டிலைப்போல இராவணனுடைய அரண்மனையிற்போய் அவனுடைய அகன்றமார்பிற் குதிக்கலாம் வாருங்கள். இலங்கையைப்பேர்த்துப் பாவிகளாகிய ராட்சசர்களென்று பெயருள்ளவர்களையும், அவர்கள் பெண்டுகளையும், பாலுண்கின்ற குழந்தைகளையும், அவர்களுக்குப்பந்துக்களாயிருக்கின்ற யாவரையும்ஒருமிக்கக் கொன்றுவிடுவோம். அதற்காகத் தேவர்கள் நம்மேல் யுத்தத்திற்கு வந்துவிலக்குவார்களேயானால், அவர்களுடைய சொர்க்கலோகத்தையும் பேர்த்துப் பூமியிற்போட்டு விடுகிறோம். தர்ம்மத்தையினிக் கெடுத்துவிடுகிறோமென்று புறப்படுவேதானால் நாமிங்கேயிருந்து வருத்தப்பட்டுக்கொண்டிருப்பதெதற்கு? இந்த லோகமூன்றையும் அழித்துக் காற்றாடியைப்போலச் சுற்றித்திரிந்து நமக்குதவி செய்யாமலிருந்த தேவர்களுடைய வமிசங்களையுங் களையறுத்துவிடுகிறோம். என்று லங்கையின்மேற் பாய்கிறதற்கெத்தனித்தார். மற்ற வானரவீரர்களு நம்முடைய ராஜனுக்கு முன்னதாகப் பாய்ந்துபோய் இராட்சசர்களையெல்லாம் அவர்கள் வசிக்கின்ற வீட்டுடனேபெயர்த்து இன்றைக்கே பூமியிலறைந்து கொன்றுவிடுகிறோமென்று புறப்பட்டார்கள்.

அப்போது ஆஞ்சனேயர் இன்னொருகாரிய மிருக்கின்றதென் றெழுந்து, அதிவஞ்சகனான இந்திரஜித்து அயோத்தியின்மீது புறப்பட்டுப்போனானென்றுஞ் சொன்னார். தாய்மார்களுந் தம்பிமார்களுந் தவஞ்செய்கின்ற அயோத்தியாநகரத்துக் கிந்திரஜித்துப் போயினானென்று சொன்னவார்த்தை ஸ்ரீராமருடைய திருச்செவியில் நுழைந்தவுடனே, முன்னிருந்த வேதனைக் காடானது பின்வந்ததுன்பமாகிய நெருப்பினால் வெந்து சீதையினிடத்திலுண்டான துக்கநீங்கினார். ஆழ்ந்த திருப்பாற்கடலில் நித்திரைநீங்கி வந்ததுபோல முன்னைய துன்பக்கடலிலிருந்து கரையேறி, கொழுந்துவிட்டெரிந்துகொண்டு புறப்பட்ட கோபாக்கினியும் பயமு மனதிலழுந்த உளம்வாடி, உழுந்துருளு மவ்வளவுபொழுதும் தாமசிக்காத முயற்சியை யுடையவராயிருந்தும் அக்கா லொன்றுந்தோற்றாமல் மயங்கி இவ்வாறு பிரலாபிப்பதாயினார்.

இந்திரசித்து அயோத்தியில் யாவரையுங் கோல்லப்போனானென்று
ஆஞ்சனேயர் சோல்லக்கேட்ட ஸ்ரீராமர் வருந்தல்.

கவி.

தீருமிச்சீதையோடு மென்கிலதன்றென்றீமை
வேரொடுமுடிப்பதாக விளைந்ததுவேறுமின்னும்

யாரொடுந்தொடருமென்ப தறிகிலேனிதனையைய
பேரிடவதியுண்டோ வெம்பியர் பிழைக்கின்றாரோ.

நினைவதன்முன்புசெல்லு மானத்தினெடுநின்றான்
வினையொருகணத்தின்முற்றி மீள்கின்றா[illegible]வந்த
யனைபொடிபட்டதங்கு மாண்டதுதாரமீண்டும்
எனையன தொடருகின்ற துணர்கிலே னிறப்புங்காணேன்.

தாதைக்குஞ்சடாயுவான தந்தைக்குந்தமியளாய
சீதைக்குங் கூற்றங்காட்டித் தவிர்ந்திலதொருவென்றீமை
பேதைப்பெண் பிறந்துபெற்ற தாயர்க்கும்பிழைப்பிலாத
காதற்றம்பியர்க்குமூர்க்கு நாட்டிற்குங்காட்டிற்றன்றே

உற்றதொன்றுணரகில்லா ருணர்ந்துவந்துறுத்தாரேனும்
வெற்றிவெம்பாசம்வீசி விசித்தவன் கொன்றுவீழ்த்தால்
மற்றையபுள்ளின்வேந்தன் வருகிலன்மருந்துநல்கக்
கொற்றமாருதியாங்கில்லை யாருயிர்கொடுக்கற்பாலார்.

மாகவாகாயஞ்செல்ல வல்லையின்வயிரத்தோளா
யேகுவானுபாயமுண்டே யியம்புதியென்றவெல்லாஞ்
சாகமற்றிலங்கைப்போருந் தவிர்கவைச் சழக்கன்கண்கள்
காகமுண்டதற்பின்மீண்டு முடிப்பனென்கருத்தையென்றான்.

ஐயோ! என்தீமையானது இந்தச்சீதையோடு தீர்ந்துவிட்டதென்று நினைப்பதற்கில்லையே: சூரியவமிசத்தை வேரோடு முடிப்பதாக மூண்டுகொண்டதே: இன்னம் இது யாராரைப் பற்றப்போகிறதோ தெரியவில்லையே: ஆ! ஆ! இதை மாற்றிவிடும்படியான முயற்சியும் உண்டாகுமோ? என்தம்பிமார்களும் பிழைப்பார்களோ! நினைக்கிறதற்கு முன்னாகப் போகும்படியான புஷ்பகவிமானத்திலேறிப் போனானே: தன்னுடைய கொடுஞ்செய்கையை ஒரு க்ஷணத்துக்குள்ளாக முடித்துங்கொண்டு வந்துவிடுவானே: ஐயோ! நான்பிறந்தஸ்தானமும் சாம்பலாய்ப் போய்விட்டது. இங்கே பெண்சாதியு மாண்டு போனாள். இன்னம் எனக்கு என்னசம்பவிக்கப் போகிறதோ தெரியவில்லை. நான்மாண்டுபோகாம லிருக்கின்றேன். என் தீமையானது என்னையீன்ற தகப்பனாருக்கும் - சடாயுவென்கிற பிதாவுக்கும் - தனிமையாயிருந்த சீதைக்கும் - இயமனைக்காட்டிவிட்டும் அவ்வளவோடு முடியவில்லை. எனதுதீமையே ஒருபெண்ணாய்ப்பிறந்து எங்களைப்பெற்ற தாய்மார்களையும் - இயாதொரு குற்றமுஞ் செய்யாத அருமைத்தம்பிமார்களையும் - ஊராரையும் - நாட்டாரையும் - அவ்வியமனுக்குக் காட்டிவிட்டதே:

ஐயோ! அந்தப் பரதசத்துருக்கர்கள் தங்களுக்கு இப்படிவருமென்று முன்னறிந்தவர்களல்லவே: ஒருவேளை இந்தச்சண்டாளனோடு எதிர்ப்பார்களேயானால், இவன் நாகபாசத்தாலே கட்டியும் பிரஹ்மாஸ்திரத்தினால் எவியும் கொன்றுவிடுவானே: அக்காலந்தப் பக்ஷிராஜனான கருடன் வரமாட்டானே: சஞ்சீவிமருந்தைக் கொண்டுவருகிறதற்கு இந்தவாய்வுகுமார

னும் அங்கில்லையே: வேறேயார் அவர்களுக்குச் சஞ்சீவியைக் கொடுக்கப் போகின்றார்கள்? அப்பா ஆஞ்சநேயா ! ஆகாசமார்க்கமாக அயோத்திக்குச் சீக்கிரம்போய்ச் சேரும்படியான உபாயமுண்டானாற் சொல்லுக. இங்கிருக்கிறதெல்லாஞ் செத்தாலுஞ் சாகட்டும். இலங்கையில் சண்டையுநிற்கட்டும். அவ்விந்திரஜித்தென்கிற துஷ்டனுடையகண்களைக் காகங்கள் தின்னும்படியாகச் செய்தபின்பு மறுபடியும்வந்து எனதெண்ணத்தை நன்றாய் முடித்துக்கொள்ளுகிறேனென்று சொல்லினர்.

இப்படி ஸ்ரீரகுநந்தனர் சொல்லக்கேட்ட இளையபெருமாள்சுவாமியை நமஸ்கரித்து, அடியேன் விண்ணப்பத்தைக் கேட்டருளும். ஐயனே! பரதாழ்வானை யுத்தத்திற் கட்டும்படியாக நாகபாசத்தைவிடுகிறதற்குத்தக்கவன் இவ்விந்திரஜித்துவோ ? அந்தப்பரதாழ்வான் இந்தச்சத்துருக்களுக்கு முன்பாக வருவாரானால் இந்த மூன்றுலோகமுந் தீய்ந்துபோக மாட்டாதோ ? தேவரீர் துக்கசாகரத்தில் மூழ்காதேயும். ஆகிலுமிந்தத் துஷ்டவஞ்சகன் பிரஹம்மாஸ்திரத்தைக்கொண்டு கட்டித்தள்ளுகிறதற்கு அடியேனென்று பரதாழ்வானை நினைத்தருளினீரோ ? அப்படி எண்ணவேண்டாம். அவ்விந்திரஜித்து அவர் கைப்பாணத்தால் அவனுடைய சேனைகளுடன் மடிந்து பூமியில் தலைகீழாய்க் குத்துண்டு விழப்போகிறதைத்தேவரீரே கடாக்ஷித்தருளப்போகிறீர். என்று வெகுகோபத்துடன் சொன்னார். அப்போது அநுமான்கைகளைக்கூப்பிக்கொண்டு, ஸ்வாமி ! அடியேன் சிறுதோளின்மீது தேவரீருடைய திருக்கைக்குத் துணையாகவிருக்கின்ற கோதண்டத்துடனே ஏறியருளும். வாயுதேவனும் பின்னிடும்படி இந்தக்ஷணத்திலே தானே அயோத்தியாபுரியைச்சேருகிறேன். இன்னுமிடமுண்டாயிருக்குமானால் அந்தட்சணத்திலேயே எல்லாத்திக்குகளையுஞ் சுற்றிவருகிறேன், அதுவுமல்லாமல் அடியேன் மாத்திரமேபோய் அந்தப் பகையாளியைக் கொன்று என்பகையுந் தீர்த்துக்கொள்ளுகிறேன்.

ஓ என் னாண்டவனே! அடியேன் அப்போதே அவனையேன்கொல்லமாட்டாமற் போனேனென்றால், சீதாபிராட்டியாரைக் கொல்லுகிறேனென்று பிடித்துக்கொண்டு வந்தான். அவனுக்கு நீதிவார்த்தையைச் சொல்லி விலக்கிக்கொள்ளலாமென்று நினைத்தேன். அவன் அக்கிரமமாய்ப் பேசிக்கொண்டிருந்து உடனே வாளால் வீசிவிட்டான். அதைப்பார்த்துச் சகிக்காமல் மூர்ச்சையாய்ப் பூமியில்விழுந்து உணர்வற்றுப்போனேன். அப்படிக்கில்லாமற் சற்றேநிற்பானானால் அந்தத்துஷ்டனாகிய ஈனன் உயிர்தப்பிப்போவானோ? ஸ்வாமி! தாமசிக்கவேண்டியதென்ன? துழாய்மாலையைத்தரித்ததிருத்தோளை யுடையவர்களான நீங்க ளிரண்டுபேரும் அடியேன்மீது ஏறியருளுங்கள். அவனுடைய புஷ்பகவிமானம் அயோத்திக்குப்போய்ச் சேருவதற்கு முன்பாக அடியேன்போய்ச் சேர்ந்து அவன்வரவுக் கெதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றேனென்றார். இவையனைத்துங்கேட்ட ஸ்ரீராமலக்ஷ்மணர்கள்

நல்லதப்படியே ஏறுகிறோமென்று புறப்பட்டார்கள். உடனே விபீஷணாழ்வான் தண்டன்சமர்ப்பித்துச் சொல்லுகிறார்.

சுவாமி! அடியேனுக்கொரு விண்ணப்ப மிருக்கின்றது. அதாவது, அதிகதுக்கத்தால் நடுங்கி மனந்தேறமாட்டாத செய்கையால் அடியேன் மயங்கித் திகைத்துப் போய்விட்டேன். இப்போது அடியேனுக்குக் கொஞ்சநினைவுதோன்றினது. அவன்செய்தது மாயமென்று சந்தேகிக்கின்றேன். மகாபத்தினியாகிய லோகமாதாவை அந்தப்பாவி கையால்தொட்டுக் கொல்லுவானானால், இந்த மூன்றுலோகமும் வெந்து சாம்பலாய்ப் போகமாட்டாதா? அஃதப்படியிருக்க - அவன் அயோத்தியை நோக்கிப்போனது தந்திரமாயிருக்கின்றது. அதைச் சற்றுநேரத்துக்குள்ளே தெரிந்துகொள்ளலாம். அடியேன் இமைப்பொழுதுக்குள்ளாகச்சென்று பிராட்டியா ரிருக்குமிடம் போய் ஆராய்ந்து தேடிப்பார்த்து, உள்ளதை அறிந்துவந்து சொன்னபிறகு ஆகவேண்டியதைச் செய்யலாமென்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டார். அதற்குப் பெரியபெருமாளும், ஆம்: இது தகுதியானதுதான் என்று சொன்னார்.

விபீஷணர் ஸ்ரீராமனுக்குச் சில தேறுதலைச்சொல்லி வண்டுருவங்கொண்டு சென்று சீதையினிருப்பும் இந்திரசித்து நிகும்பலையாகத்திற்குச் சென்றதுமறிந்து ஸ்ரீராமரிடம்வந் துரைத்தல்.

கவி.

வண்டினதுருவங்கொண்டான் மானவன்மனத்திற்போனான்
தண்டலையிருக்கை தன்னைப் பொருக்கெனச்சார்ந்துதானே
கண்டனனென்பமன்னோ கண்களார்கருத்தாலாவி
உண்டிலையென்னச்செய்த வோவியமொக்கின்றாளை.

பின்பு விபீஷணாழ்வான் வண்டினுருவத்தைக்கொண்டு ஸ்ரீராமபிரானுடைய திருவுளவேகத்தைப் போல அந்தரமார்க்கமாகப் போய் அசோகவனத்தைச் சேர்ந்தார். ஆவியுண்டோ இல்லையோ என்னும்படியான துயரத்துடனெழுந்தருளி யிருக்கின்ற சித்திரப் பிரதிமையை யொத்தவளும், என்னுடையதுக்கத்தை என்னுயிருடனே தீர்த்து விடுகின்றேனென்று சிந்தைகொண்டிருந்ததைச் திரிசடை சமாதானஞ்சொல்ல மறுபடியும் தேறிவந்தபோது சப்தமேகங்களும் உகாந்தகாலத்திற் குமுறுவதுபோல வானரவீரர்கள் சப்தித்த ஓசையைத் தேவாமிர்தம்போலக்கேட்டு உயிர் தரித்திருந்தவளுமாகிய சீதாபிராட்டியாரைக் கண்களாரக் கண்டனர்.

கவி.

வஞ்சனையென்பதுன்னி வானுயருவகைவைகும்
நெஞ்சினனாகியுள்ளந் தள்ளுறலொழிந்துநின்றான்
வெஞ்சிலைமைந்தன்போனா னிகும்பலைவேள்வியானென்
றெஞ்சலிலரக்கன்சேனை யெழுந்தெழுந்தேகக்கண்டான்.

இந்திரஜித்து வஞ்சனைசெய்துவிட்டுப் போனானென்று நினைத்து அளவில்லாத சந்தோஷத்தையுடைய மனத்தராகித் துக்கமற்றுநின்று, இந்திரசித்து நிகும்பலைக்குப்போய் வேள்வி செய்ய யத்தனித்தானென்பதை இராவணனுடைய சேனைகள் கூட்டங்கூட்டமாகப் புறப்பட்டுப்போவதைக் கண்டார். அவ்வியாகத்திற்கு வேண்டியகலப்பைகளும், விறகும், நெய்யும், தேவர்களெல்லாம் பார்த்து ஐயோ இவ்வஸ்துக்கள் அபிசார ஓமத்திற்கு வேண்டியவைகளாயுள்ளனவே ஆகையால் நம்மையெல்லாம் வாழ்வினின்றும் நீக்கி மீளாத தாழ்வி லழுத்துமேயென்று மனவருத்தப்படுதலைக் கண்டு, ஆ! ஆ! இப்பாதகன் என்னமாயஞ் செய்கிறானென்று வருந்தி ஐயோ இறந்த ராட்சசவீரர்களெல்லா மெழுந்துவிடுவார்களே அவ்வண்ண மெழுந்துவிட்டால் மீண்டுஞ் சாகார்களே சுவாமிகாரியம் பின்னமாய்விடுமே யாதுசெய்வதென்று எண்ணி ஆகிலும் நல்லதுபார்ப்போமென்று நிச்சயித்துத்திரும்பி மகாவரப்பிரதாபசாலியாகிய ஸ்ரீராமபிரான் றிருவடியில் தமது திருமுடிசாய்த்து வணங்கித் தான்போய்வந்த காரியத்தைச் சொல்லுகின்றார்.

வீபீஷணர் தாம்போய்க்கண்டுவந்தவைகளைச் சுவாமிக்குச் சொல்லுதல்.

கவி.

இருந்தனடேவியானே யெதிர்ந்தனெனென்கணா
அருந்ததிகற்பினாளுக் கழிவுண்டோவரக்கனம்மை
வருந்திடமாயஞ்செய்து நிகும்பலைமருங்குபுக்கான்
முருங்கழல்வேள்விமுற்றி முதலறமுடிக்கமூண்டான்.

ஸ்வாமி சக்கரவர்த்தித்திருக்குமாரரே! உலோகமாதாவாகியசீதாபிராட்டியார் க்ஷேமமாக எழுந்தருளி யிருக்கின்றாள். அடியேன் கண்ணாரக்கண்டேன். அருந்ததிக்குச் சமமான மஹாபதிவிரதையாகிய அந்த மாதேவிக்கும் அழிவுண்டாகுமோ? அந்தராக்ஷசன் நம்மைவருத்தப்படும்படியாக மாயஞ்செய்துவிட்டு நிகும்பலைக்குச் சென்று யாகத்தை முடித்துக்கொண்டு நம்மைக்கருவறுக்க யத்தனப்பட் டிருக்கின்றான். இதுதான் நடந்தசேதியென்று விண்ணப்பஞ் செய்தார்.

இப்படி விபீஷணாழ்வான் சொன்னவுடனே எழுலோகங்களும் சேர்ந்து வாழ்த்தினாற்போலச் சப்தசமுத்திரங்களும் ஒருமிக்கப் புறப்பட்டுச் சப்திக்கின்ற சப்தமோ அல்லவோ வென்று தேவர்களுஞ் சந்தேகிக்கத் தக்கதாக வானரக்கூட்டங்களெல்லாம் கர்ச்சித்து, மலைகளெல்லாம் பொடிப்பொடியாகும்படி எழுந்து கூத்தாடின. வீரசிகாமணியாகிய ஸ்ரீராமபிரானும் சீதாபிராட்டியாரைப்பற்றி யுண்டான சந்தேக நீங்கி, விபீஷணாழ்வானைத் தமது தேகமும் — ஆசையும் — உயிரும் - ஒன்றுசேரத் தழுவி, ஐயா விபீஷணா! இந்தத்துன்பம்போகிறது ஒரு அருமையோ? என்பங்கில் நீ யிருக்கிறாய். தெய்வமிருக்கின்றது. வாயுபுத்திர னிருக்கிறான். நாம்செய்த தவமுமிருக்கின்றது. வேதமும் பொய்த்துப்போகவில்லை. என்றுசொல்லியருளினார்.

No. 61.

நிகும்பலையில்யாகஞ்செய்திருந்த இந்திரஜித்துவை, இலக்குமணரெதிர்க்கையில்விபீஷணருக்குமவனுக்கும்போர்விளைத



உ யுத்தகாண்டம். நிகும்பலைப்படலம்.

சீதையிருக்கின்றாளென்ற சுபவார்த்தையைக்கேட்ட ஸ்ரீராமர் சந்தோஷித்த காலையில் நிகும்பலையையழிக்க இலக்ஷுமணரைத் தன்னுடன்கூட்டி யனுப்பும்படி விபீஷணர் வேண்டல்.

கவி.

என்றலுமிறைஞ்சியாக முற்றுமேல்யாரும்வெல்லார்
வென்றியுமரக்கர்மாடே விடையருளிளவலோடும்
சென்றவனுவியுண்டு வேள்வியுஞ்சிதைப்பனென்றான்
நன்றதுபுரிதிரென்னு நாயகனவில்வதானான்.

அதுகேட்ட விபீஷணாழ்வான் ஸ்வாமியை வணங்கி, ஓ கருணாநிதி! இந்திரசித்து அந்த நிகும்பலையாகத்தை முடிப்பானேயானால் அவனை யாரும் வெல்லமாட்டார்கள், இராட்சசர்களுக்கே ஜெயமுண்டாய்விடும். ஆகையால் தேவரீர் நியமனஞ்சாதித்தால் இளையபெருமாளுடனேபோய் அவனுயிரைவாங்கி, அவன்செய்துகொண் டிருக்கும் யாகத்தையும் சிதைத்துவிடுகிறேனென்றார். அதைத் திருச்செவிசார்த்தின சக்கரவர்த்தித் திருக்குமாரர், நல்லது; அப்படியே செய்யுங்க ளென்றுசொல்லிப் பின்னுஞ் சொல்லுகின்றார்.

மாயாசீதைப் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

இருபத்தாறாவது,

நிகும்பலைப்படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமர்விபீஷணர்வேண்டுகோளின்படி இலக்ஷுமணருக்குத் தாம் அகஸ்தியராற்பெற்றிருந்த அஸ்திராதிகளையளித்துச் சுக்கிரீவனாதியரைத் துணைகூட்டியனுப்ப, உடனே இலக்ஷுமணாதியர் நிகும்பலைக்குப்போய் இந்திரஜித்துவினால் காவல்செய்துள்ள பலசேனாசங்களையும் யாககுண்டத்தையு மழித்துப் பராக்கிரமித்துநிற்க, அக்கால் இந்திரஜித்து தன்சேனையனைத்துஞ் சின்னாபின்னமானதைக் கண்டு தனக்குத்தானே பலயோசித்திருக்க, அப்போ தாஞ்சனேயர் அவன் செயலனைத்தையுந் தூஷித் தெதிர்த்து நிற்கையில் அவனுஞ் சிலபேசிப் பலபாணங்களால் அவரைச் சோகமுறச்செய்ய, அதுகண்டு விபீஷணர் சூழ்ச்சியால் யுத்தசன்னகராய் அனுமானை யூர்ந்துவந்த இளையபெருமாளோடு இந்திரஜித்து கடும்போர்விளைத்து மெலிந்துபோய் மீட்டும் வந்து தேவாஸ்திரங்களைப் பிரயோகிக்கவும் அவற்றையுமவர் வெற்றிகொள்ள, அப்பால் இந்திரஜித்து விபீஷணரைத்தூஷித்து பலபாணங்களால் பிரயோகிக்குந்தோறும் இலக்ஷுமண ரவைகளைத் துண்டித்தநும், உடனே விபீஷணரும் அடக்காத கோபத்தினராய்த் தமது தண்டாயுதத்தினாலே அவனுடையசாரதியையும் குதிரைகளையும்வதைத்

ததும், அப்பாலவ் விந்திரஜித்து மறைந்து இராவணனிடம் போய்ச் சேர்ந்ததும் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமபிரான் இலக்ஷுமணருக்கு அஸ்திராதிகள்கொடுத்து சுக்கிரீவன் முதலியோர்ரைத் துணைகூட்டி யனுப்புதல்.

கவி.

தம்பியைத்தழுவியையன் றாமரைத்தவிசின்மேலான்
வெம்படைதொடுக்குமாயின் விலக்குவான்பொருட்டாலந்த
அம்புநீதுரப்பாயல்லை யனையது துரந்தகாலை
உம்பருமுலகுமெல்லாம் விளியுமஃதொழிதியென்றான்.

சாக்ஷாது ஸ்ரீராமமூர்த்தியானவர் தனது தம்பியாகிய இலக்ஷுமணப்பெருமானைத்தழுவி, அப்பா! நமது பெரும்பகைவனாகிய இந்திரசித்துவானவன் தாமரைமலரி லுறையும் பிரமதேவனது அஸ்திரத்தைப் பிரயோகிப்பானேயானால், அதை விலக்கும்பொருட்டு அப்பிரமாஸ்திரத்தையே நீயும் தொடுத்துவிடாதே அப்படித்தொடுத்து விட்டாயேயானால், தேவலோகம்-பிரஹ்மலோகம்-பூலோகமெல்லா நாசமாய்விடும். மேலும் பாசுபதாஸ்திரம்-நாராயணாஸ்திரம்-இவைகளை அவன் உன்மேற் பிரயோகிப்பானேயானால், அவைகளையும் அந்தந்த அஸ்திரங்களாலே நீங்கும்படியானவிதத்தைச் செய்துநீக்கி, பிறகுன் வில்வித்தையின் வல்லமையினாலே அந்த இந்திரசித்துவின் ஆவியை உண்டுவிட்டுவரக் கடவாய். அப்பா பிரதாபசாலியே! அவனென்னென்ன மாயங்களைச் செய்கிறானோ அவைகளைக் குறிப்பாய்ப் பார்த்துக்கொண்டிருந்து, அவைகளையெல்லாம் வேரறக்களைந்துவிடு. விசாலமான தர்ம்மசிந்தையைக்கொண்டு பலவகையான பெரும்போர்களையுஞ் செய்து, வருத்தப்படாமல் சமயம்பார்த்துத் தேவர்களுக்குக் கூற்றுவனாய்ப் பிறந்திருக்கின்ற அந்த இராவணியைக் கொன்றுவிடு.

ஐயா யமனுக்கொப்பாயிருக்கின்ற இலட்சுமணா! அவன் பதறிக்கோபங்கொண்டு அநேககோடி பாணவருஷங்களைப்பெய்து வேகத்துடனே உன் பாணங்களை விலக்கினபோதும், அல்லது மெலிவித்தபோதும், அவன் அம்பைப்பூட்டியெய்கின்ற வில்லைவெட்டி யெறிந்துவிட்டுப் பிறகு அவனைக் கொன்றுவிடு. அவன் அம்புதொடுக்கிறதற்கு முன்பாக உன்வில்லில் அம்பைப்பூட்டிக்கொண்டு, அவனெந்தத் துறைகளில் பாணங்களைப் பிரயோகிக்கிறானோ அந்தந்தத் துறையிலேயே அவைகளை நீக்கிவிடு. அவன் வேகமாய்ப் பிரயோகித்தாலும்—தாமசமாய்ப் பிரயோகித்தாலும்—நீ பராமுகமாயிராமல் அவைகளைக் குறிப்பாகப்பார்த்து, அந்தந்த வேகத்துக்குத்தக்கபடி நீயும் அஸ்திரப்பிரயோகம் பண்ணுக. என்றிந்தச் சமஸ்தவண்டங்களும் தாமாயிருந்தும் தம்முடைய அளவில்லாத குணப்பிரபாவங்களைத் தாமே அறியமாட்டாத சகல காரண பூதரான ஸ்ரீயப்பதியானவர் அவருக்குவேண்டிய எல்லா

உபாயங்களும் அந்த உபாயங்களுக்கு வேண்டிய மந்திரங்களும் உபதேசித்து அவைகளை வினயத்துட னேற்றுக்கொண்ட சிரேஷ்டராகிய அவ்விளைய பெருமாளைக்கடாக்ஷித்துப் பின்னும் சொல்லுகின்றார்.

ஓ தனுர்வேதத் தேர்ச்சியையுடைய இலக்ஷ்மண! இதோநான் பிடித்துக்கொண் டிருக்கின்ற வில்லைப்பார். இதுமிகுந்த பலமுள்ள வில்லாக்கும். இதை நீ மிகுந்த தைரியத்துடனே பிடித்துக்கொள். இந்த வில்லினுடைய வரலாற்றைச் சொல்லுகின்றேன்கேள். ஓ வில்வீரனே! தமிழ்ப் பாஷையை வெளியிட்டதனால் தமிழ்முனியென்று பெயர்பெற்ற அகஸ்திய மகாமுனிவர் முன்னமிதைப்பற்றிச் சொன்னவைகளையெல்லா நீ சித்திரப்பாவைபோலசையாமலிருந்து விவரமாய்க்கேட்டிருக்கின்றாயல்லவா? ஆயிரந்திருத்தோள்ஆயிரந்திருமுடியையுடைய விராட்டாகியமஹாவிஷ்ணுவினது திருமேனியிற் பிறந்த பிரஹ்மாவானவர்வளர்த்த யாகத்தினாலேவரப்பெற்ற வில்லாக்கும். இதுவென்றுசொல்லித்தம்முடைய கவசத்துடனேகூடஅவ்வில்லையும் தம்முடைய அம்பறாத்தூணியுங் கொடுத்து, இன்னும்வேண்டிய பலஉறுதிகளையுமுபதேசித்து, மேருமலையைப்போலப் பிரகாசிக்கின்ற இளையபெருமாளைக்கட்டித் தழுவினார். அப்படித் தழுவினவுடனே சுவர்க்கலோகத்தில் வசிக்கின்றவர்களான தேவர்களெல்லாம் இனியெங்களுடைய துக்கமெல்லா நீங்கிப்போய்விட்டதென் றானந்தித்தார்கள். அக்கால் இலக்ஷ்மணர் தேவர்கள் பல்லாண்டுகூறவும், தேவஸ்திரீகள் வாழ்த்தி ஆசீர்வதிக்கவும், பார்வதியை இடதுபாகத்திலுடைய சந்திர சடாமகுடதாரியாகிய சங்கரமூர்த்தி திரிபுரமெரிக்கக் கோபித்துப் புறப்பட்டதுபோல இந்திரசித்தாகிய பகைவன்மேல் யுத்தத்திற்குப் போகிறதற்காகச் சித்தமானார்.

அப்போது ஸ்ரீராமர் - அப்பா வில்வீரசிகாமணியாகிய தம்பீ! மாருதி முதலான வானரவீரர்களை உனக்குத் துணைவர்களாக அழைத்துக்கொண்டு போய் வருவாயாகவென்று விடைகொடுத் தருளினார். அக்கால் தர்ம்மசீலராகிய இளையபெருமாள் தமது ஆசாரியராகிய பெரியபெருமாளுடைய திருவடித்தாமரைகளைத் தமக்குள்ளும் புறத்துமாகத் திருமுடியிற் சூடிக்கொண்டு, அழகியமேகம்போலத் திருமேனியை யுடையவராய்ப் பிரிவையெண்ணியழுது கண்ணீர் பூமியிற் புரண்டோடும்படி நெஞ்சழிந்து நிற்கின்ற அப்பெரியபெருமாளை மும்முறைசுற்றிவந்துதெண்டனிட்டு, வச்சிரமலைபோலிருக்கின்ற வில்லைஇடதுகையிற் பற்றிக்கொண்டு, இந்திரசித்துவின்மேல் அதிக கோபங்கொண்டவராய் அவனுடைய தலையைக்கொண்டு வருகிறேனென்று ஸ்வாமியினிடத்தில் விண்ணப்பம்பண்ணிப் புறப்பட்டுப்போயினார். இவ்வண்ணம் காட்டிலும்தம்மைப்பிரியாமல் எல்லாக்காரியங்களையுஞ்செய்ததிருத்தம்பியார் மிகுந்தவேகத்துடன் சென்றபோது, தேகத்தைவிட்டுப்பிரியாத உயிரைப்போன்ற அவர் தமதுதிருக்கண்களுக்கு மறைவானவுடனே தாமிளமைப்பருவமாயிருந்தபோது விஸ்வாமித்திரருடைய யாகத்தைக் காக்கிறதற்காகப்போன அன்

றையதினம் தமது பிதாவாகிய தசரதமகாராஜா எந்தநிலையி லிருந்தாரோ அந்தநிலையைத் தாமு மடைந்திருந்தார். உடனே வானரசேனைக் கதிபதியான சுக்கிரீவமகாராஜாமுதலான வானரவீரர்கள் எரிகின்ற கொள்ளிக்கட்டையைக்கையிலுடையவர்களாகி, காட்டுவழிகளு மலைகளுங்கிழிபடும்படியாக அதிக வேகத்துடனேபோய் நிகும்பலையைச் சேர்ந்தார்கள்.

இலக்ஷுமணரும் வானரவீரர்களும் இந்திரஜித்துவினுடைய சேனைகளையும் யாககுண்டத்தையு மழித்தல்.

கவி.

உண்டாயதொரா லுலகுள்ளொருவன்
கொண்டானுறைகின் றதுபோற்குலவி
விண்டானும்விழுங்க விரிந்ததனைக்
கண்டாரவரக்கர் கருங்கடலே.

இவ்வாறுசென்று சேர்ந்த வானரவீரர் முதலாயினோர் அங்கே ஓராலிலையின்மீது லோகங்களை யெல்லாந் தமக்குள்ளேயொடுக்கின ஒருகாரணவஸ்துவானவர் சயனித்துக்கொண் டிருக்கிறதுபோல இந்திரசித் திருக்கின்றதையும், சுற்றிலும் இராக்ஷசக்கருங்கடல் சூழ்ந்திருக்கின்றதையும் பின்னுஞ் சில ராக்ஷசச் சேனைகள் சக்கர யூபஸ்தம்பம் நாட்டிக்கொண்டு காவலாயிருக்கின்றதையும், அந்தத்துஷ்டன் மத்தியில் ஓமாக்கினியுடனே கூடியிருந்து வடவாமுகாக்கினியுடனே கருங்கடலானது நின்றதுபோ லிருக்கின்றதையும், நீர்க்கடலுடனே மற்றக்கடல்களெல்லாஞ் சூழ்ந்துகொண் டிருக்கின்றதுபோல அணியணியாக மேகம்போலுநிறமும் பருத்ததேகமுமுடையயானைகளும்-தேர்களும்—குதிரைகளும்—கொடிப்படைகளுமாகி ஆயிரகோடி சேனைகள் ஆயிரயோசனை விஸ்தாரமாக விரிந்திருக்கின்றதையும், இன்னும் பொற்றேர்களும்—குதிரைகளும்—யானைகளும்—காலாள்களுட் — அளவில்லாமல் இந்திரசித்துவின் ஆஞ்ஞையின்படி பற்பலயூகமாய் லோகத்தைவளைந்து ஆயிரங்கடல்சூழ்ந் திருக்கின்றதுபோ லிருக்கின்றதையும் கண்டார்கள். இப்படிச் சூழ்ந்திருக்கின்ற ராக்ஷசர்களுடைய மேனியின்மீது ஆகாசத்தையெட்டிக் குத்தும்படியாக நெறித்துக்கொண்டிருக்கின்ற செம்மயிர்க் காடானது, நீலமேகத்துக் கொப்பாகிய திருமேனியையுடைய ஸ்ரீராமமூர்த்தியானவர் சமுத்திரத்தின்மீது அக்கினியாஸ்திரங்களைப் பிரயோகித்ததுபோலக் காணப்பட்டது. அந்த ராக்ஷசர்கள் இளையபெருமாளையும் வானரவீரர்களையும் பார்த்தும் தங்களெசமானனுடைய வுத்தரவின்றி முந்தலாகாதென்றிருந்த அவர்கள் விற்களெல்லாம் குணத்தொனி யில்லாமல், மேகத்தில்தோன்றிய இந்திர தனுசைப்போ லிருந்தன. அவர்கள் சங்கங்கள் சமுத்திரத்தில்வாழு முயிர்களைப்போல நிர்ச்சப்தமா யிருந்தன. பேரிகைகள் கர்ச்சிக்காத மேகங்களைப்போலே ஒலியாம லிருந்தன.

அப்படி ஒலியடங்கிப்போன பெருங்கடல்போலிருந்த இராக்ஷசசேனையை மெலிவடையாதவானரவீரர்கள் நெருங்கி, மிகுந்தபலம்பொருந்திய ஸ்ரீ ராமருடைய நியமனத்தால் ஆகாசமுங் கிழிபட்டுப்போகும்படி ஆரவாரித்தார்கள். இப்படிச்சப்தித்த வானரசேனைகளுக் கெதிராக இராட்சசர்களும் சப்தித்து வானரவீரர்களைவந்து சூழ்ந்துகொண்டார்கள். பேரிகைகள் முழங்கின. வானரவீரர்கள் மரங்களையு மலைகளையுங்கொண்டு இராட்சசக்கடலைத் தூர்த்துவிட்டார்கள். இராக்ஷசர்கள் சூல்கொண்ட மேகம்வருஷிக்கின்ற நீர்த்தாரைகளைப்போல அம்புகளைப் பிரயோகித்தார்கள். இப்படி ராக்ஷசர்கள் ஆயுதங்களைப் பிரயோகித்தபடியால் அவைகள் வானரசேனைகளின்மீது தடாகத்தில் அன்னங்கள் படிந்ததுபோல வந்து படிந்தன. மேலுமிராக்ஷசர்கள்விட்ட அம்புகளும் — மழுக்களும் — வளைதடி முதலானவைகளும் — வானரர்களுடைய பற்களும், தலைகளும், உடல்களும், பூமியில்விழும்படியாகச்சென்று, அவர்கள்விட்ட மலைகளையு மரங்களையும் சின்னபின்னங்களாய்ச் செய்தன. மேலுமேலு மிராக்ஷசர்கள் அம்புகளையும் - மழுக்களையும் - இருப்புலக்கைகளையும் - கொழுக்களையும், வேல்களையும், வளைதடிகளையும் வீசினதினால், வானரங்களுடைய வால்களும் — தலைகளும் - உடல்களும் — வயிறுகளும் கால்களும் - கைகளும் - சின்னபின்னப்பட்டுத் தரையில்வீழ்ந்தன.

இப்படி ராக்ஷசர்களுக்கும் வானரர்களுக்கும் கைகலந்து யுத்தநடக்கும்போது விபீஷணாழ்வான் வெற்றிவீரராகிய இளையபெருமாளைப் பார்த்து, ஸ்வாமி! தேவரீரிப்படி தாமசித்துக்கொண்டிருப்பது நீதியோ? சீக்கிரமாயெழுந்தருளி இந்தயாகத்தைச் சிதையாமற் போவீரானால் இந்தராக்ஷசக்கடலை நாம்ஜெயிக்கமாட்டோமென்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டார். அப்போது அந்தமார்க்கத்தில்வந்துநின்ற தேவர்களும்—அசுரர்களும்-பிர்ம்மாவும்-அச்சுதனும்—உருத்திரனும் — மூன்றுலோகத்துக்கு நாயகனாகிய தேவேந்திரனும் மற்றுமுள்ள யக்ஷ கின்னர கந்தருவராதியர்களுமாகிய இவர்களில், இந்தயுத்த வேடிக்கையைச்செவ்வையாகப் பார்த்தவர்கள் ஒருவருமில்லை. இப்படியிருவகையாருடைய சேனைகளும் எதிர்த்து நின்றன. அணியணியாக எதிர்த்துநின்ற வானரப்படைகளின்மீது மூன்றாம்பிறைச் சந்திரனையொத்த வக்கிரதந்தங்களையுடைய இராக்ஷசர்களும் எதிர்த்துநிற்க, பலவிடங்களிலும் அவரவர்களுக்கு ஆயுதங்களா யுள்ளவைக ளெல்லாம் இருபடைகளிலும் பிரவேசித்தன.

அப்போது இளையபெருமாள் அந்தச்சேனைக்குள் நுழைந்து கூர்மையான பாணங்களை வருஷித்தார். அதனாலிராக்ஷசர்களிந்தலோகத்தைவிட்டு யமனுடைய பட்டணமாகிய வைவச்சுதபுரியைப்போய் அடைந்தார்கள். மதங்கொண்ட யானைகளும், குதிரைகளும், நூறாயிரகோடியாக இரணக்களத்தில் மடிந்ததினால், பெருக்கெடுத்தோடின ரத்தக்கடலில் மேடுண்டாகும்படியாக இராக்ஷசர்கள்விட்ட அம்புகளைத் துண்டுதுண்டாக்கிக் குவிந்துவிட்டார். மத

யானைகள் விழுந்திறந்த குழிகளில் அக்கினி பற்றியெரிவதுபோன்ற செம்பட்ட மயிர்களையுடைய இராக்ஷசரின் தலைகள் விழுந்து, அநேக யாககுண்டத்துக் கொப்பாக இருந்தன. இலட்சுமணப் பெருமாளுடைய வில்லிலிருந்து புறப்பட்ட பாணங்களாற் பிளக்கப்பட்டவைகளான யானைக ளிரத்தங்களைக் கக்கிக்கொண்டு, உடலும், வயிறும், மலைகளையுஞ் சுனைகளையுமொத் திருந்தன. சில பாணங்கள்பட்டு உதிர்ந்தபற்கள் மின்மினிப் பூச்சிகளுக்கொப்பா யிருந்தன. அறுந்துவிழுந்த தலைகள் அம்புதைத்திருப்பதினாற் பாம்புள்ள புற்றுக்களையொத்துப் பூமியிற் கிடந்தன. மேகவருஷம்போன்ற பாணங்கள் பாய்ந்ததினாலறுந்து இரத்தக்கடலில் வீழ்கின்ற கொடிகள், சமுத்திரத்தில் மேகங்கள்படிவதைப்போ விருந்தன.

சில பாணங்கள்பட்டுக் காம்பற்று உதிரக்கடலில் விழுந்து மூழ்குகின்ற சத்துருக்களுடைய குடைகள், கேதுவாகிய செம்பாம்பினால் விழுங்கிய சந்திரனுக்கொப்பாக இருந்தன. சிலபாணங்கள்பட்டுப் பெரியயானைகள் துதிக்கையுங் கால்களுமறுந்து இரத்தக்கடலி லடித்துக்கொண்டு போகின்றன. அவைகளுக் குயிரில்லாதபடியால் அந்தரத்தத்தில் மிதந்து சமுத்திரத்திலுள்ள முதலைகளுக்கொப்பாக இருந்தன. அக்கினிமுகாஸ்திரம்பட்டு யானைமேற் போர்வைகளெரிவதினால் மூங்கிற்காடுகள் நெருப்புப்பற்றி வேகின்ற மலைக்குச்சமமா யிருந்தன. சமுத்திரத்துக்கொப்பான இராட்சசர்களைக் கரடிகள்சேர்ந்து அவர்களுடைய தலையின்மீதுள்ள மண்டையோட்டைப் பேர்த்துத் தரையில்தள்ளுவதைப் பார்க்கும்போது, மலையின்மேலுள்ள புற்றை நகங்களினாற் பேர்த்தெறிகிறதைப்போ விருந்தன. இலட்சுமணருடைய பாணங்கள் மழையைப்போல வருகிறபடியினாலே இரதத்திற் கட்டிய குதிரைகளும் யாளிகளுந்தடுமாறுந்தோறும், இராட்சசவீரர்களாகிய சாரதிகள் தங்கள் தலையிற்சூடிய பூமாலையில்மொய்த்த வண்டுகளோடு கீழே விழுந்து இறந்தார்கள். இராட்சசர்களுடைய தேகங்கள் துண்டுதுண்டாயறுபட்டபடியினாலே இரதகஜதுரக பதாதியாகிய அங்கங்கள் நிறைந்திருக்கின்ற யுத்தகளத்தில் அந்தந்தவிடங்களிலே யோடுகின்ற ரத்தவெள்ளங்கள் யாவரும் பழிக்கும்படியாக எலும்புக ளெங்குங்காண அலசின.

இளையபெருமாளானவர் தம்முடைய பிதாவான தசரதச்சக்கரவர்த்தி ஒரேதேரைச் செலுத்திக்கொண்டு அநேகந்தேரை நடத்திக்கொண்டு எதிர்த்துவந்த அசுரர்களுடைய பேரணியைக் கொன்றுவிட்டதுபோல அஸ்திரப்பிரயோகஞ்செய்து கொன்றுவிட்டார். அப்போது சண்டமாருத மடித்ததினால் மலைகளும், மேகங்களும், வானநக்ஷத்திரங்களும், அழிந்துபோனதுபோல, இராக்ஷசர்களுடைய தலைகளும், தேகங்களும், அஸ்திரங்களும், ஓமகுண்ட அக்கினியிற் பலபலவென் றுதிர்ந்தன. அன்றியும், மதயானைக்குச் சமமாகிய இளையபெருமாள் சம்ஹரிக்கிறபடியினாலே ஆகாசத்தைமுட்டி

யுயர்ந்திருக்கின்ற இராக்ஷசர்களுடைய பெருந்தலைகள் ஒன்றோடொன்று தாக்குண்டு, வேதமந்திரங்களை நிறைய உருச்செபித்து ஸ்தாபனம்பண்ணின பூரணகும்பத்தை உடைத்துப் போட்டன. மதயானைகளைவாரியும் இராக்ஷசர்களுடைய தலையையு நட்டிக்கொண்டுமோடுகின்ற இரத்தப் பெருவெள்ளமானது, இந்திரஜித்து வளர்த்துக்கொண் டிருக்கின்ற ஓமாக்கினியை அவித்துவிட்டுப் போயின.

இலட்சுமணர் பிரயோகித்த பாணங்கள் செம்பட்டமயிரையும் விரக்கழலையுமுடைய இராட்சசர்களுடைய வாள்பிடித்தகைகளை ஆகாசத்தில் நின்று துணித்து இடியைப்போல வீழ்த்தினபோது, அவைகள்பட்டு யாகத்துக்காக நின்றிருந்த எருமைக்கடாக்கள் மாண்டு துர்ச்சகுனத்தைக் காட்டின. மதஜலமொழுகுகின்ற பெரியமலைபோன்ற யானைகளின்மீதிருந்து பலக்குறைந்து வாளிழந்த ராட்சசர்கள் இலட்சுமணருடைய பாணங்களுக்குப் பயந்து, அந்த யாகசாலைமுழுவது மூடியிருக்கின்ற இரத்தவெள்ளத்தில் மூழ்கிப் பதுங்கிக்கொண்டார்கள். அதியுஷ்ணமாய்ச் சொலிக்கின்ற அக்கினிமுகாஸ்திரங்கள் கால்களையறுத்துத் தலைகளிற்பாய்ந்து செல்லுவதினால், எல்லா ராட்சசர்களும் புத்திமயங்கிக் கையிற்பிடித்திருக்கின்ற வேலைப் பூமியிலூன்றிக்கொண்டு மெய்நடுங்கிக் குடல்சரிந்துதொங்கி யசையும்படியாகச் சின்னபின்னப்பட்டார்கள். சிலராட்சசர்கள் பாணங்களால் உடல்பிளந்த தங்கள் பிள்ளைகளைக் கைசோரவிடாமல் தோள்களின்மேற் சுமந்து அவர்கள் தொங்கிக்கொண்டுவரவும், தங்களுடைய குடல்கள் முதுகுபக்கமாய்ச் சரிந்துவிழவும், திக்குமுக்காடி, அஸ்திரப்பிரயோகம் பண்ணுகின்ற இலட்சுமணரை நெருங்கி எதிர்த்துவந்தார்கள். நெய்யுங்கள்ளு நிறைந்திருக்கின்ற சாடிகள் பொரிக்குடங்களுடனே யுடைந்துபோகும்படியாகக் கோடாநுகோடியான கூட்டமாய் இராட்சசக்கவந்தங்கள் கூத்தாடின. சில உடல்கள் மயங்கி வீழ்ந்தன.

இந்தப்பிரகாரமாக இளையபெருமாள் காற்றைப்போலவும், விஷத்தைப்போலவும், நெய்வோர்களுடைய நூலைப்போலவும், தேகத்தைத்தொடர்ந்த நோயைப்போலவும், பாவிலூற்ற பிரரையைப்போலவும், இராக்ஷசசேனைகளிருக்கு மிடங்கள்தோறும் பிரவேசித்து எல்லாரையுங்கொன்று நாசமாக்கினார். இப்படிவிசாலமாகிய பெருங்கடலையொத்திருந்த இராட்சசப் பெருஞ்சேனைகள் சண்டமாருதக் காற்றடிக்க வேர்பறிந்து சாய்ந்துவிழ்ந்த தோப்பைப்போல நான்குபக்கத்திலும் வீழ்ந்துகிடக்கின்றதை இந்திரஜித்துப் பார்த்தான். அவன் பலம்பொருந்திய யானைப்பிணங்களின் மலைகளையும், குதிரைகளுந் தேர்களுஞ் சின்னபின்னப்பட்டு உடலும் தலைகளுமாகிய பர்வதங்களையும், இரத்தக்கடலையு மல்லாமல்; அவ்விடத்தில் வேறொன்று மிருக்கப் பார்க்கவில்லை. தன்னோடுகூடவந்த நூறுநூறாயிரகோடி ராட்சசமகாவீரர்களை இளையபெருமா ளொருவருடைய பாணங்கள் கூறுகூறாக்கிக்குவித்த குப்

பல்களையும் இரத்தவாறுகளையுமே யல்லாமல், இராவணகுமாரன் வேறொன்றுங் காணவில்லை. அக்கால் விஷத்தைக்காட்டிலும் அதிக கொடியவர்களான சிலராக்ஷசர்கள் நடுங்கி நாவறண்டு பயந்து தன்னண்டை யோடிவருகிறார்கள். மிகுந்தகோபத்தையுடைய சில ராக்ஷசவீரர்கள் திரும்பிவரமாட்டாமல், ஐயோ! நமக்கு உதவியாக ஒருவருமில்லையே: என்றுவீழ்ந்து மாண்டார்கள்.

இந்தப்படி ஓமாக்கினி அவிந்து அவ்விடத்திலிருந்த கலப்பைகளும் கட்டினகட்டறுந்த தர்ப்பைப் புல்லும் சின்னபின்னப்பட்டுப் போகவும், தான் உருப்போட்டுச் செபித்துக்கொண் டிருந்த மந்திரவேதமும் விட்டவிடந் தொட்டவிடந் தெரியாமல் மறந்துவிட்டு அந்த ஓமாக்கினிபொங்கினதுபோல அதிக கோபங்கொண் டிருந்தான். அப்போதந்தப் போர்க்களத்திலே பாணவருஷத்தால் மாண்டுபோனவர்கள் தவிர உயிருள்ளவர்களாயிருந்த இராக்ஷசர்களெல்லாம் ஒருமிக்கச் சேர்ந்தார்கள். வானரசேனா சமுத்திரமானது இந்திரஜித்துவைச் சூழ்ந்து வளைத்துக்கொண்டது. ஆயிரகோடியாகிய ராட்சசசேனை ஏயென்ற மாத்திரத்திற்குள்ளாக அழிந்துபோனதையும் சத்தியசந்தரான இலட்சுமணப் பெருமாளுடைய வில்வல்லமையையும் பார்த்த இந்திரஜித்துவுக்கு அதிக துக்கமு மிகுந்தகோபமும் வளர்ந்தன. பூமிதேவியானவள் திருமேனி நடுங்கித் துக்கிக்கத்தக்கதாகக் கொலைசெய்து திரிந்துகொண்டிருந்த இராட்சசர்கள் வமிசத்துடன் கருவறுந்துபோவதையும், அதைக்கண்டு மகாரிஷிகள் கையமைக்கின்றதையும், இந்திரஜித்து கண்ணினாலே பார்த்தான். இப்படி மானங்கெட்டுப் போகவும், ஒருவருடனும் பேசாமலிருந்தமோனம் விக்கினப்பட்டுப்போகவும், அளவில்லாத மிகுந்தபல முள்ளவர்களான இராட்சசசேனைகளு நாசமாகிப்போகவும், தன்மனதில் நினைத்திருந்த எல்லாவெண்ணங்களு மழிந்து சில சொல்லத் தொடங்கினான்.

இருபத்தைந்துவெள்ளஞ் சேனையில் இப்போதிருக்கின்றது பத்தக்குரோணி சேனையாகும். இனிநா மிங்கிருந்து யாகஞ்செய்யலாமென்பது சிறுபிள்ளைத் தன்மையாகும். இந்தயாகமுஞ் சிதைந்துபோய்விட்டது. நாம்யத்தனித்த யாகாக்கினி அடங்கியவிந்தது. இதுவரையிலும் யுத்தகளத்தில் நமக்குண்டாகிய வெற்றி யடங்கிவிட்டதென்பதற்கு இதெல்லாமோ ரேதுவாகும். அஃதிருக்கட்டும். இந்திரசித்துமனிதருக்குத்தோற்றுப்போனானென்று இழிவான வார்த்தையை என்னைதிரேநின்று யாவருஞ் சொல்லுவதினாலே, நம்முடைய குலத்தினுடைய பெருவல்லமையும் ஒழிந்து அழிந்துபோய்விடுமல்லவா? மேலும் - மந்திரவிதிப்படியான இந்தயாக மழிந்துபோய்விட்டதேயென்று இப்போது நாம் சிந்தைநொந்து வருத்தப்படுவது, தேவலோகத்திலேயிருக்கின்ற தேவர்கள் இந்திரசித்துவுக்கு மனிதர்களிடத்திற் சண்டைசெய்யமுடியாது. இவன்வல்லமை தேவேந்திரனிடத்தில் மாத்திரந்தான்

செல்லுமென்று பரிகாசம் பண்ணும்படிக்காகவோ? ஆ! ஆ! நாம் யாகஞ் செய்ய முயன்றது வெகுநேர்த்தி: வெகுநேர்த்தி: என்று தனக்குத்தானே ஆலோசித்தான்.

இந்தப்பிரகாரமாக இந்திரஜித்து சொல்லிக்கொண்டிருக்கும்போது வானரவீரர்கள் பெரியமலைகளையும், மரங்களையும், இராட்சசப்பிணங்களையும், இறந்தயானைகளையும் வீசியெறிந்து, அவனைச்சூழ்ந்திருந்த சேனைகளைச் சின்னபின்னப்படச் சிதறவடித்தார்கள். இராட்சசர்கள் அந்தவடியைச் சகிக்கமாட்டாமல் ஒருவர்கீழ ஒருவர் நுழைந்து பதுங்கினார்கள். இலட்சுமணருடைய பாணங்கள்வந்து பாய்கிறபடியினாலே அவரவர்கள் அங்கங்கேபதுங்கிக் குடலழிந்து, உடல்பிளந்து, மதமொடுங்கின யானைபோலக் கோபமாறினார்கள். இலட்சுமணருடைய பாணங்களும், வானரவீரர்கள்வீசிய மலைகளு மரங்களும், உகாந்தகால சண்டமாருதம் அடித்தபோது மழைத்தாரைகளுடனே மேகங்கள் விழுவதுபோல இராக்ஷசசேனைகளின்மீதுஃபடிந்தன. அப்போது ஆஞ்சனேயர் ஒருமராமரத்தைப் பிடுங்கிக் கடலுக்குச்சமமான இராட்சசப்பெருஞ்சேனைகள் சின்னபின்னப்பட்டுச் சிதறிப்போகும்படி மோதியடித்துத் துரத்திவிட்டு, இந்திரஜித்துவுக்குச் சமீபமாகப்போய் அவனுக்கு மிகுந்தகோபமுண்டாகத்தக்க சிலவார்த்தைகளைச் சொல்லுகின்றார்.

ஆஞ்சனேயர் இந்திரஜித்துவைத் தூஷித்தெதிர்த்தல்.

கவி.

நானுனையிரந்துகூறு நயமொழியொன்றுங்கேளாய்
சானகிதன்னைவாளாற் றடிந்ததோதனதன்றந்த
மானமேற்சேனையோடும் வடதிசைநோக்கிமீது
போனதோகோடிகோடி வஞ்சமும்பொய்யும்வல்லாய்.

தடந்திரைப்பரவையென்ன சக்கரயூகம்புக்குக்
கிடந்ததுகண்டதுண்டோ நாளெலிகேட்டிலாயோ
தொடர்ந்துபேரயயோத்திதன்னைக் கிளையொடுந்துணியநூறி
நடந்ததெப்பொழுதுவேள்வி முடிந்ததேகருமமன்றே.

எந்தகன்ஞாலமெல்லா மினிதுறைந்தியற்கைதாங்கும்
பாந்தளிற்பெரியதிண்டோட் பரதனைப்பழியிற்றீர்ந்த
வேந்தனைக்கண்டுநீநின் வில்வலங்காட்டிமீண்டு
போந்ததோவுயிருங்கொண்டேயாயினும்புதுமையன்றே.

அம்பரத்தமைந்தவல்விற் சம்பரனுவிவாங்கி
யும்பருக்குதவிசெய்த வொருவனுக்குநயஞ்செய்த
நம்பியைமுதல்வரான மூவர்க்குநால்வரான
தம்பியைக்கண்டுநின்றன் றனுவலங்காட்டிற்றுண்டோ.

தீயொத்தவயிரவாளி யுடலுறச்சிவந்தசோரி
காயத்தின்செவியினூடும் வாயினுங்கண்களூடும்
பாயப்போயிலங்கைபுக்கு வஞ்சனைபரப்பச்செய்யு
மாயப்போராற்றலெல்லா மின்றெடுயொளுமன்றே.

பாசமோ மலரின்மேலான் பெரும்படைக் கலமோபண்டை
யீசனார்படையோமாயோ னேமியோ யாதோவின்னும்
வீசநீர்விரும்புகின்றீ ரதற்குநாம் வெருவிச்சாலக்
கூசினேம் போதுநும்மைக் கூற்றினார்குறுகவந்தார்.

வரங்கணீருடையவாறு மாயங்கள் வல்லவாறும்
பரங்கொள்வான் வரிவிற்றெய்வப் படைக்கலம் படைத்தவாறு
முரங்களுநின்றதன்றே யும்மைநாமுயிரினோடுஞ்
சிரங்களைத் துணித்துமென்னக் கண்டதுதிறம்பினோமோ.

விடந்துடிக்கின்றகண்டத் தண்ணலும் விரிஞ்சன்றானும்
படந்துடிக்கின்றநாகப் பாற்கடற்பள்ளியானுஞ்
சடந்துடிக்கிலராய்வந்து தாங்கினுஞ் சாதறிண்ண
மிடந்துடிக்கின்றதுண்டே யிருத்திரோவியம்புவீரே.

கொல்வனென் றன்னைத்தானே யென்றொரு சபதங்கொண்ட
வில்லிவந் தருகுசார்ந்துன் சேனையைமுழுதும் வீட்டி
வல்லைநீபொருவாயென்று விளிக்கின்றான் வரிவினாணின்
ஒல்லொலியையசெய்யு மோமத்துக் குறுப்பொன்றாமோ.

மூவகையுலகுங்காக்கு முதலவன்றம்பிபூச
றேவர்கண் முனிவர்மற்றுந் திறத்திறத் துலகஞ்சேர்ந்தார்
யாவருங்காணநின்று ரினியிறை தாழ்ப்பதென்னோ
சாவதுசரதமன்றோ வென்றனன் றருமங்காப்பான்.

அடா இந்திரசித்துவே! நானுன்னைக் கெஞ்சிச்சொன்ன வார்த்தையொன்றையுங் கேட்டாயில்லை. அப்படியே ஜானகியைவாளினாலே வெட்டிவிட்டாயோ? குபேரனிடத்திற் பறித்துக்கொண்ட புஷ்பகவிமானத்தின் மேலேறிக்கொண்டுஇராட்சசசேனைகள் சூழும்படியாக வடக்குத்திக்கிலுள்ளஅயோத்தியாபுரிக்குப் போனாயோ ஒன்றிரண்டல்லவே: கோடிகோடியான வஞ்சனைத்தன்மையும் பொய்யுங் கற்றிருக்கின்றாயே: அடா இராவணக்குட்டியே! கடலைப்போல ராட்சசசேனைகளைச் சக்கரயூகங்கட்டி நீ நடுவே எங்களுக்குத் தெரியாம லிருந்துவிட்டாயல்லவா? எங்க ளிளையபெருமானுடைய வில்லினாணோசையை நீ கேட்கவில்லையோ? நீ அயோத்திக்குப்போய் அங்கிருக்கின்றவர்களைப் பந்துக்களுடனே கொன்றுவிட்டு எப்போது இவ்விடம்வந்தாய்? உன்னுடைய யாகமுடிந்து விடிந்ததல்லவோ? உன்காரியமெல்லாம் அநுகூலப்பட்டுப் போனதல்லவோ? விசாலமாகிய விந்தப்பூலோகமெல்லாம் பாதுகாப்பதல்லாது அதனைத் தாங்கிக்கொண் டிருக்கின்ற ஆதிசேஷனைக்காட்டிலும் நீண்டதிருத்தோள்களை யுடையவரும்யாதொருகுற்றமுமில்லாத மகாசத்தியசந்தருமான எங்கள் பரதமகாராஜரை நீ பார்த்து, உன்வில்வல்லமையை அவரிடத்திற்காட்டி மறுபடியும் உன்னுயிர்தப்பிப் பிழைத்துவந்தாயோ? ஆ! ஆ! ஈதெல்லாநினைக்க ஆச்சரியமா யிருக்கின்றது.

அடா இராவணீ! சுவர்க்கலோகத்திலிருந்த சம்பராசுரனைச் சம்ஹரித்துத் தேவர்களுக்கு உபகாரஞ் செய்தவரான தசரதமஹாராசாவுக்குத் திருக்குமாரராய் அவதரித்தகுணபூஷணரும், தமக்கு முன்பவதரித்த மூன்று திருத்தமையன்மார்களுக்கு நான்காமவரென்னுந் திருத்தம்பியுமாய்ச் சத்துருக்களை அழிக்கின்றகாரணத்தால் ஸ்ரீசத்துருக்க மஹாராஜரென்று திருநாமம் பெற்றவரை நீபார்த்து உன் வீரத்தைக் காட்டினுயோ? எங்களிளையபெருமாள் பிரயோகித்த அக்கினிமயமான பாணங்கள் உன்னுடலி லிரத்தம் வடியச்செய்த காயத்திலும்— செவியிலும் - வாயிலும் - கண்களினிடத்திலும் பாய்ந்து சல்லடைக்கண்களாய்த் தொளைத்தபோதெல்லாம், அந்தவடிபட்டு ஒடிப்போய் இலங்கையில் நுழைந்தும் அடிக்கடி இப்படிப்பட்ட வஞ்சனைகளை அபரிமிதமாய்ச் செய்துகொண்டுவருகின்ற உன்வல்லமையெல்லாம் இன்றேடே நாசமாய்விடப்போகின்றது. உன்னுடைய நாகபாசமும்— பிரஹம்மாஸ்திரமும், பாசுபதாஸ்திரமும், நாராயணாஸ்திரமும், இன்னுமற்றுமுள்ள தேவாஸ்திரங்களும், பின்னுமெதையெதை நீயும் உன்னப்பனும் உன்னைச் சேர்ந்தவர்களும் எங்கள் மேற்பிரயோகிக்க இச்சிக்கின்றீர்களோ அவைகளுக்கு நாங்கள் பயந்துபோய்க் கூசிக்கிடக்கின்றேமல்லோம். உங்களைக் கருவறுக்கிறதற்கு இளையபெருமாளாகிய யமன் இதோவந்திருக்கின்றார்.

அடா இந்திரசித்தே! நீங்கள் தேவர்களிடத்திற் பெற்றிருக்கின்ற வரங்களும், நீங்கள் கற்றிருக்கின்ற மாயவஞ்சனைகளும், நீங்களத்தேவர்களிடத்தில் வாங்கியிருக்கின்ற தேவாஸ்திரங்களும், உங்கள் தேஹவல்லமையும், இதுவரையிலுங்கட்கு நிலைத்திருக்கின்ற விதத்தை நீங்களே பார்த்திருக்கின்றீர்களல்லவா? உங்களைநாங்கள் உயிருடனேதலைகளையும் துண்டிட்டுவிடுகிறேமென்று சொன்னதில் நாங்களேதாவது மாறுபட்டுப்போனேமா? கண்டத்தில் விஷமுள்ளவரான உருத்திரமூர்த்தியும், கையிற்கதையேந்தினவரான பிரஹம்மாவும், பாற்கடலிலே ஆதிசேஷசயன முள்ளவரான விஷ்ணுமூர்த்தியும், தங்களுடல் நடுங்காமல்வந்து உங்களுக்கு உதவிசெய்தபோதிலும், நீங்கள் மரணமடையப் போகின்றது சத்தியமாகும். உங்களுக்கிடந்துடிக்கின்றதல்லவா? நீங்களினி உயிர்பிழைத்திருப்பீர்களோ? அடாபாவி! இதை நீயே சொல்லக்கடவாய். உன்னை யின்றைக்குக் கொல்லுவேனென்று சபதம்பண்ணிக்கொண்ட வில்வீரசிகாமணியாகிய இளையபெருமாள் இதோ சமீபமாக வந்து, உன்சேனையை முழுவதுங்கொன்று, உன்னையுஞ் சீக்கிரமாய்ச் சண்டைக்குவாவென்று அழைக்கின்றார். அவர் வில்லினோசையானது நீ செய்கின்ற ஓமத்துக்கு மந்திரமாகிய கிரியையென்று நினைத்திருக்கின்றாயோ?

அடா வஞ்சகா! இந்த மூன்றுலோகங்களையு மிரக்ஷிக்கின்ற ஸ்ரீராமபிரானுக்குத் திருத்தம்பியாகிய இலட்சும்ணருடைய சண்டையின்பெருமையைப்பார்க்கிறதற்கு, தேவர்களு முனிவர்களு மற்றெல்லா லோகவாசிகளுமான சகலர்களும்வந்து நிற்கின்றார்கள். இனிக்ஷணப்பொழுதுந்தாமசிக்கப்படாது.

நீங்களிந்தச் சமர்க்களம் வியக்க மாண்டுபோவது சத்தியந்தான். என்று ஆஞ்சநேயர் கூறியவனைத்தையும் இந்திரசித்துக்கேட்டு அக்கினிமயமாகச் சுவாசித்து, வெற்றிமாலையையணிந்த தோள்களில் மின்னற்பறக்கவும் பிளவாகியவாயில் நெருப்புப்பறக்கவுஞ் சிரித்து இவ்வாறுசொல்லுகிறான்.

இந்திரசித்து அனுமாரைத் தூஷித்தெதிர்த்தல்.

கவி.

மூண்டபோர்தோறும்பட்டு முடிந்தநீர்முறையிற்றீர்ந்து
மீண்டபோததனையெல்லா மறத்திரோவிளிதல்வேண்டி
யீண்டவாவென்னுநின்றீ ரித்தனைபேரும்பட்டு
மாண்டபோதுயிர்தந்தீயு மருந்துவைத்தனிரோமான.

அடா அனுமக்குரங்கே! நீ சிறிதும் பயமில்லாதவனாய் என்னெதிரே வந்து இவ்விதவார்த்தைகளைக் கர்வித்துச் சொன்னாயல்லவா ? என்னோடு செய்த எல்லாச்சண்டையிலும் பட்டு மாண்டுபோன நீங்கள் அவ்வொழுங்கையிழந்து நடந்த சண்டையையெல்லா மறந்துபோனீர்களோ ? நீங்கள் சாகிறதற்கிப்படி ஆசைப்பட் டிருக்கின்றீர்கள் போலும், நீங்களெல்லோரு மாண்டால் உயிர்பெற்றுக் கொள்ளும்படியான சஞ்சீவிமருந்து வைத்திருக்கின்றீர்களோ ? இந்தலட்சுமண னாகட்டும், இவனண்ண னிராமனாகட்டும, இன்னுந்தடுக்கிறவர்க ளெல்லாரும் வந்து விலக்கினாலும், குரங்குகள் கூட்டங்கூட்டமாக மாளப்போகின்ற என்னுடைய வெற்றியையும், அதைக்கண்டு இந்த மனிதர்கள் அடையப்போகின்ற வருத்தத்தையும், தேவர்களும் ரிஷிகளுமே பார்க்கப்போகின்றார்கள்.

அடா வானரமே ! என்கையிலிருந்த வெற்றிவில்லும் என்னுடைய விஜயத்தோள்களு மிருக்க, மாமிச தேஹிகளானசீவன்களும் பிழைக்கப் போகின்றனவோ? எங்கேபோ யொளித்துக்கொண்டாலும் விடாமற் கூனலாகிய குரங்குகளுடனே இந்த ராமலட்சுமணர்களாகிய மனிதர்களையுங் கொன்று, தப்பியிருக்கின்ற தேவலோகத்துக்கும்போய் அங்கே தேவவுருவம்பெற்றிருக்கின்ற யாவரையு நாசமாக்கிவிடுவேன்: சஞ்சீவிமருந்தாலும் பிழைக்கமாட்டீர்கள். நான்செய்தயாகம் இப்படி அழிந்துபோய்விட்ட படியினாலே ஜெயம்பெற்றதாக வாய்வீரம் பேசிக்கொள்ளுகின்றீர்கள், அப்படியொன்றும் பேசவேண்டியதில்லை. நான் சண்டைக்குவருகிறதற்குத் தாமசப்படவுமில்லை. உங்களை யொவ்வொருவராகத் தலைகளையறுத் தெறிகிறதற்குத்தக்க வீரர்கள் என்கையிலிருக்கின்ற பாணங்களா யிருக்கின்றன. இஃதுண்மையா அல்லவா யோசித்துப்பார். உங்களைப்போல நான் வாயினால் வீரம்பேசமாட்டேன். நீங்களெனக்கு முன்னும் வெற்றியைக் கொடுத்துவிட்டுப் போயிருக்கின்றீர்கள். ஆத்திரப்பட்டால் வெற்றியுண்டாகமாட்டாது. நான் கோபித்துப் புறப்படுவேனேயானால் ஒருதரமாவது என்னோடெதிர்த்து நிற்கமாட்டீர்கள். இன்னமு நீங்கள்மாண்டுபோகப்போகின்றீர்களோ?

வெற்றிகொள்ளப் பார்க்கின்றீர்களோ? அதை யறிந்துகொள்ள வேண்டில் நில்லுங்கள்: நில்லுங்கள்:

என்று சொல்லிக்கண்களில் நெருப்புப் பொறிபறக்கப்பார்த்து, மின்னலைப்போலமின்னுகின்றகவசமணிந்து, அம்பறாத்தூணிகட்டி, விரல்களிற் பொன்மயமானபுட்டில்களணிந்து, வில்லைக்கையில்தாங்கி, வஜ்ஜிரபருவதத்துக்குச் சமானமாகிய தேரின்மேலேறி வில்லைக் குணத்தொனிசெய்து சங்கநாதம் பண்ணினான். இந்த ஆடம்பரங்களைக் கேட்டுத் தேவஸ்திரீகளெல்லாம் கண்களில் அறைந்துகொண்டார்கள். ஒருக்ஷணத்துக்குள்ளே எல்லாரையுங் கொன்றுவிட்டவனல்லவோவென்று தேவர்களெல்லா மனங்கலங்கினார்கள். கயிலாசபதியும், பிர்ம்மதேவனும், மறுபடியு மின்றைக்குச் சண்டைநேரிட்டதென்றார்கள். முப்பத்துமுக்கோடி தேவர்களும், சமஸ்தமானரிஷிகளும், நம்முடைய தபோபலத்தினால் இந்திரசித்துச்செய்த நிகும்பலையாகம் தவறிப் போய்விட்டது. அப்படி தவறிப்போனபடியினாலே இந்தச் சண்டாளப்பயல் இனிப்பிழைக்கமாட்டான். இப்போதிவனை அழைத்துவந்தது விதியேயல்லாமல் வேறல்ல. இலட்சுமணப் பெருமாளுடைய அம்பினாலே இவன்மாண்டு இரணக்களத்தி லுழைத்துக்கொள்ளப்போகிறதை நாம் காணப்போகிறோம். என்றுஎக்களித்தார்கள். இந்திரசித்துவினுடைய வில்லின் குணத்தொனி செவிகளில்வந்து நுழைந்தவுடனே வானரர்கள் தங்களாண்மைகுன்றி, கையிலெடுத்துநின்ற மரங்களையு மலைகளையு மறுபடியும் பூமியிற் சோர்ந்துவிழ விட்டு, நாமினி யிறந்துபோவோமென்று பயந்து ஓட்டம் பிடித்தார்கள். வானரசேனாதிபதிகள்மாத்திரந் தாங்கள் கையிற்கொண்ட மரங்களையு மலைகளையும் போடாமலெதிர்த்து நின்றார்கள்.

இப்படி வானரர்களெல்லாம் உகாந்தகால சண்டமாருதத்தால் நாலுபக்கங்களிலும் பொங்கிவழிந்தோடுகின்ற சமுத்திரஜலத்தைப்போல ஓட்டம்பிடித்ததைக்கண்ட ஆஞ்சனேயர், அவ்விடத்திலிருந்த ஒருபெரியமலையைப் பேர்த்தெடுத்தார். அப்போது யமனுக்கும் யமனான இந்திரசித்து, அடா குரங்கே! நில்லு: நில்லு: நீவாய்வாதம்பேசி மலையைப்பேர்த்தெடுத்தது தேவர்கள்பார்க்கும்படி என்னையிந்த ரணக்களத்திற் கொன்றுவிடலாமென்றா? நல்லகாரியஞ் செய்தாய். உன்னைக்குரங்கென்று சொல்லுகிறது தகும். நல்லவன்தான் வா: வா: என்றுகூறிக்கூப்பிட்டான். இப்படி வில்வீரர்களுக்குள்ளே அதிவீரனான இந்திரசித்துவுக்கு முன்பாக மலையைப்பேர்த்தெறிய எதிர்த்துநிற்கின்ற அனுமானைத் தேவர்கள்பார்த்து, இந்த மல்லயுத்தவீரருக்கு என்னதைரியமப்பா வென்று ஆச்சரியப்பட்டார்கள். வாயுதேவன்பார்த்துத் தன்பிள்ளையின் பலத்தைக் குறித்துநடுங்கினான். ஆஞ்சனேயர் அந்தமலையைஆகாசத்திலும் அஷ்டதிக்குகளிலும் நெருப்புப்பொறிகள் சிதறும்படியாகச்சுழற்றி இந்திரசித்துவின்மீதுவீசியெறிந்தார். அநேகவிடிகள் ஒன்றாய்ச்சேர்ந்துகொண்டு வருகின்ற ஒருபெரிய இடிமலையைப்போல் வருகிற அதன்வேடிக்கைகளை

லோகத்தவர்களெல்லாம் கண்டு மனநடுங்கினார்கள். இராக்ஷசகூட்டங்கள் அதைப்பார்த்துச் சின்னபின்னப்பட்டுப் போனார்கள்.

அப்போது மேருவைப்போல்பருத்த தோள்களையுடைய இந்திரசித்துத் தன்குண்டலங்கள் மிகுந்த பிரகாசமாய்ப் பிரகாசிக்கும்படியாக வீராஷ்டகாசஞ்செய்து அஸ்திரப்பிரயோகம் பண்ணி, வாயுபுத்திரர் ஆகாசமார்க்கமாக வெறிந்த அந்தமலையைத் தூளாயுதிரும்படிப் பண்ணிவிட்டான். தேவர்கள் அதைக் கண்டார்களேயல்லாமல் அவன் அஸ்திரப் பிரயோகம் பண்ணினதை ஒருவரும் பார்க்கவில்லை. மறுபடியும் வேறேயொரு மலையைப்பேர்த்து வீசும்படி யத்தனித்த ஆஞ்சநேயருடைய வச்சிரமலைக்குச்சமமானமார்பிலும், அதிகவேகமாய்த்தாவுகின்ற கால்களிலும்,கைகளிலும்,இந்திரசித்துப்பிரயோகிக்கப்பட்ட விஷத்தில் தோய்ச்சலூட்டிய அக்கினிமுக பாணவருஷங்கள் வந்து பாய்ந்தன. அப்போதவ்வனுமான் மலையில்வளர்ந்த மூங்கிற்காடுகள் எரிவதுபோலத்தோற்றுகின்ற படியினாலும்,தமதெதிரிலுள்ள விருட்கூட்டங்களோடுந்தன்மையினாலும், இந்திரசித்துவிட்ட பாணங்கள் கிரணங்களைப்போலப் பிரகாசிக்கின்ற படியினாலும்,உதிரவெள்ளம் பெருகியோடுந்தன்மையினாலும், உதயகிரியில் தோன்றுகிற சூரியனுக்குச்சமானமாக விருந்தார்.

இந்தப்பிரகாரம் வாயுபுத்திரர் சோகமானவுடனே அங்கதகுமாரர் முதலான வானரவீரர்கள் அதிககோபத்துடனெழும்பி இந்திரசித்துமுன் வந்து சேர்ந்தார்கள். சுக்கிரீவமகாராஜரும் வந்து எதிர்த்தார். இந்திரசித்து அவரைப்பார்த்து மிகுந்த கோபத்துடனே சொல்லுகின்றான். அடா குரங்கரசனே ! ஓர் சிம்ஹமானது போருக்குமுன்பாக வந்தபோது யானையை எதிர்க்குமேயல்லாமல் ஒரு அல்பக்குரங்கைத் தொடர்ந்துவருகிறதுமுண்டோ? இலேசான உங்களைக்கொன்றதனாலெனக்கென்னலாபம்? சற்றுநேரமாவதெதிர்த்து என்னோடு சண்டைசெய்ய வல்லவனான அந்தராமனுடைய தம்பியைக் காட்டிக்கொடுத்து நீங்கள் பின்னிட்டுப்போகாமல், என்கோபத்துக்கு ஈடுபட்டு வீணாயேன் செத்துப்போகிறீர்கள். சோர்ந்துவிழுந்து போன அனுமானை நீங்கள் பார்க்கவில்லையோ ? அவனைப்பார்க்கிலும் நீங்கள் பலமுள்ளவர்களோ ? என்கையில் வில்லிருக்க அந்த வில்லுக்கிப்போது பலங்குறைந்துபோய்விட்டதா ? இந்தவில்லால் நீங்கள் முன்னடிபட்டவர்களல்லவோ ? நீங்கள் எப்போதில்லாமல் இப்போதென்ன பலத்தைப்பெற்று வந்தீர்கள் ? அந்தமனிதரை யெனக்குக் காட்டிக்கொடுத்துவிட்டு நீங்கள் வாசம்பண்ணுகின்ற மலைகளைத் தேடிப் பிழைத்தோடிப்போங்கள். என்றுசொல்லி இளையபெருமாளை நோக்கி வருவதானான்.

இப்படியவன் வருகின்றதைப்பார்த்த வானர வீரர்கள் அவன்மீது மலைகளையுமரங்களையும்எறிந்துகொண்டுவந்தார்கள். அப்படிவந்த அந்தவானரவீரர்களுடையகூட்டங்களின்மீது இந்திரசித்துவினுடையவில்லிலிருந்துபுறப்பட்டு மேருமலையையும் உருவிப்போகத்தக்க பாணங்கள் கோடிகோடியாகப்

பாய்ந்தன. அதனால் எல்லாரும்வருத்தமுற்றுச்சக்தியோய்ந்துபோய்விட்டார்கள். அப்போது விபீஷணாழ்வான் இளையபெருமாளைப் பார்த்து, சுவாமி! தேவரீருடைய சைநியமெல்லா மாண்டுபோகின்றதே: இப்போது பாணவருஷங்களைப் பிரயோகிக்கின்றதல்லவா வெற்றி? அந்த இந்திரசித்தென்னுங் காளமேகம்செய்த யாகம் அழிந்துபோய் விட்டது. இனியவனைப் பிழைக்கவொட்டாதபடி ஹதஞ்செய்ய வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டார். இளையபெருமாளும் போர்க்களத்துக்கு வந்து இந்திரசித்துவைச் சந்தித்தார்.

இலக்ஷ்மணர் அனுமானையூர்ந்துவந் தெதிர்க்கவும் இந்திரசித்து அவரோடு கடும்போர்விளைத்து மெலிந்துபோதல்.

கவி.

வந்தானெடுந்தகைமாருதி மயங்காமுகமலர்ந்தான்
எந்தாய்கடிதேறாயென திருதோண்மிசையென்றான்
அந்தாகவென் றுவந்தையனு மமைவாயினனிமையோர்
சிந்தாகுலங்களைந்தானென நெடுஞ்சாரிகை திரிந்தான்.

அப்போது சாக்ஷாது உருத்திரமூர்த்திபோலும் உக்கிரத்தை யுடைய அனுமான் சோர்வுநீங்கி முகமலர்ச்சியுடனே ஓடிவந்து இலக்ஷ்மணர் சந்நிதியில்நின்று, என் ஆண்டவரே! அடியேனுடைய இரண்டுதோள்களின்மீதும் ஏறியருளக் கடவீரென்று விண்ணப்பஞ்செய்தார். இளையபெருமாள் நல்லதென்று திருவுளம் உவந்து ஆஞ்சநேயர் திருத்தோளின்மீதுஏறியருளினார். உடனே வாயுகுமாரரும் தேவர்களுடைய துக்கங்களை நீக்கினதுபோலச் சந்தோஷமுற்றுச் சாரிகைதிரிந்தார்.

அப்போது ஆயிரமேகங்க ளொன்றாகக்கூடினதுபோலக் கருநிறமுள்ளவனாகிய இந்திரசித்து ஆயிரங்குதிரைகள் பூட்டிய உயர்ந்ததேரின்மீது ஏறினான். இருவரும் ஒருவரோடொருவர் எதிர்த்தார்கள். ஆஞ்சநேயரும் சஹஸ்திர நாமாங்கிதரான திரிவிக்கிரமரைப்போல அஷ்டதிக்குகளிலும் சுற்றித்திரிந்தார். அக்கால் பதினான்குவருஷமாக நித்திரைநீங்கிப் பெருமாள் கைங்கரியமே தமக்குத்தாரகமாக எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீராமாநுஜர் அக்கினிக் கொப்பானவைகளும், சத்துருக்களுடைய பிராணனே தமக்கு ஆகாரமாயிருக்கின்றவைகளும், எங்கும் பேயைப்போலத் திரிகின்றவைகளும், பசியைப்போல் வருத்தப்படுத்துகின்றவைகளும், நோயைப்போலத் துன்பப்படுத்துகின்றவைகளும், தவறாதபிரகிருதிமயமான ஊழ்வினைக்கொப்பானவைகளும், மழுவையொத்தவைகளும், கழுகுக்குத் தாய்போலிருக்கின்றவைகளுமாகியசிலபாணங்களைப் பிரயோகம்பண்ணினார். இந்திரஜித்துவும் அந்த அம்புகளை அந்தந்த அம்புகளாலேயே துண்டாக்கிவிட்டு, ஆகாசமுழுவதையும் – அஷ்டதிக்குகளையும் – சப்தசமுத்திரங்களையு மூடிக்கொள்ளும்படி உகாந்தகாலத்திற் பெய்கின்ற மேகவருஷம்போல உலோகத்தில் இவைகளல்

லாத வேறென்னபாணங்க ளிருக்கின்றவைக ளென்னும்படியாக எல்லாவித அம்புகளையும் புங்கானுபுங்கமாகப் பிரயோகித்தான். அவைகளையெல்லா மிளையபெருமாள் பொறிகளைப்போலப் பறந்தோட அந்தந்தப் பாணங்க ளாலேயே தடுத்துவிட்டார்.

அப்போது இந்திரஜித்துத் தனதுதேரை ஆயிரவிதசாரிகளோடும்படிச் செய்தான். அக்கால் அனுமானும் பலசாரிகைதிரிந்தார். இப்படி இந்திரசித்துவின் சக்கரம்பூண்ட தேரினாலும், வெற்றிபெற்ற ஆஞ்சநேயருடைய திருவடிகளினாலும் சிறுகுன்றுகளும் - பெருமலைகளும் - மரங்களும் - மற்றப்புற்களுமாகிய வெல்லாம் சாம்பலாகி, அந்தச்சாம்பலும் தோற்றாத விதமாகத் தேர்போனவழி வாயுபுத்திரர்செல்லவும், வாயுபுத்திரர் போனவழி இந்திரசித்துவின் தேர்செல்லவுமாயிற்று இவ்விதமாய் இரண்டுவீரர்களும் இன்னார் இன்னாரென்று அவ்விடத்திலுள்ள யுத்தவீரர்களுந் தெரிந்துகொள்ளாதபடி சாரிகைசுழன்று பாணங்களைப்பொழிந்தார்கள். இவர்களைப்பார்த்ததேவர்கள் திரிலோகத்திலும் ஒரு வீரரும் இவர்களுக்குச் சமமாகமாட்டார்களென்று சந்தோஷித்தார்கள். இலட்சுமணப்பெருமாளும் இந்திரசித்துவும் ஒருகடலுடனே மற்றொருகடல் வந்து எதிர்த்தாற்போலச் சண்டைசெய்தார்கள் ஆகாசமுமிடம்போதாமல் பாணங்கள் வருகின்றனவென்று தேவர்களெல்லாம்பயந்து, தங்கள் கண்களாலு மனத்தாலும் அவைகளை வேறு பிரித்தறியக் கூடவில்லை. அவைகளுக்கு ஒரு கணக்கிடலாமென்று நினைத்தும் இவ்வளவென்று தொகையுஞ்செய்ய முடியவில்லை. அவைகளுக்குநடுவே காற்றுநுழையக் கூடவில்லை.

இந்தப்பாணங்கள் அவரவர்களுடைய தேகங்களிற்புண்செய்கின்றவைகளேயல்லாமல் வேறொன்றுஞ் செய்யவில்லை. அஷ்டதிக்குகளும் அக்கினிமயமா யெரிந்தன. அவரவர்களுடைய விற்குணத்தொனியானது இடியைப்போல எங்கு நடுங்கச்செய்து விட்டது. மேகங்களில் நிறைந்திருக்கின்ற இடியையும் இவ்விருவருடைய பாணங்கள் உருவிப்போய் விட்டன. நட்சத்திரங்களெல்லாம் கரிந்துபோயின. உலோகமெல்லாம் புகைமண்டிப்போனது. திக்குகளெல்லாம் வெடித்துப்போயின. எங்கேபார்த்தாலும் இடிகள் வீழ்கின்றதுபோல வில்லின்குணத்தொனி பெருங்கோஷமாக ஒலித்தன. இரண்டு வீரர்களும் பல்லை நறநறவென்று கடித்தார்கள். அவர்களுடைய பாணங்கள் ஆகாசத்தை ஊடுருவிக்கொண்டுபோய் அக்கினிப்பொறிகளைக் கக்கின. தேவர்களெல்லாரும் இவைகளைப்பார்த்தார்கள். கடல்களெல்லாம் வற்றிப்போய் விட்டன. மலைகளெல்லாம் பிளந்துபோய்விட்டன. சூரியனுடலிலும் நெருப்புப்பற்றினது. மரங்களெல்லாம் வெந்தன. இரத்தக்கட லெல்லாம் வற்றின. எங்கும் எரிபற்றின. பாணங்கள் துணிபட்டுக் கடலைத் திடர்ப்படுத்திவிட்டன. உலோகமுழுவதும் கிறுகிறுவென்று சுழன்றன.

அக்கினிச்சுவாலையை வீசுகின்ற கூர்மையாகிய பாணங்கள் இருவகைச் சேனைகளும் ஓட்டமெடுக்கும்படியாக எங்குஞ்சுற்றின. உலோகத்திலுள்ள ஜீவகோடிகளெல்லாம் தத்தமிடங்களைவிட்டுச் சிதறித் திக்குத்திக்குகளாகப்போயின. யானைகளும் - குதிரைகளும் - குரங்குகளும் - அழிந்து, கடலைப்போல ரத்தவெள்ளமோடத் தலைப்பட்டது. அநேகர் கொலையுண்டு மரணமடைந்தார்கள். சக்கரவர்த்தித் திருத்தம்பியாகிய இளையபெருமாள் பிரயோகிக்கின்ற பாணங்களில் சில புகையைப் பரப்பிக்கொண்டு பறந்தன. சில நெருப்பைச் சொரிந்துகொண்டு போயின. சில லோகமெல்லாம் புகையாய் எரிந்தோடின. சில ஒன்று நூறாய் விரிந்தோடின. சில இடசாரியா யோடின. சில வலசாரியா யோடின. சில நெருங்கி யோடின. சில விரிந்தோடின. சில அஷ்டதிக்குகளிலும் பாய்ந்தோடின. அப்போது ஜலமுகாஸ்திரங்களையும், அக்கினிமுகாஸ்திரங்களையும், பர்வதாஸ்திரங்களையும், மேகாஸ்திரங்களையும், இடியாஸ்திரங்களையும், சமுத்திராஸ் திரங்களையும், சூரியாஸ்திரங்களையும், கைலாசபதியாகிய உருத்திரமூர்த்தியினுடைய சிரங்களையொத்த பஞ்சமுகாஸ்திரங்களையும், மேருமுகாஸ்திரங்களையும், இந்திரசித்துப் பிரயோகித்தான்.

இப்படிச் சுமித்திரைதனயரும் இந்திரசித்துவும் விட்ட கூர்மையான பாணங்கள் இவர்களுடைய தேககாவலான கவசங்களிலும், பலம்பொருந்திய தோள்களிலும், முகங்களிலும், வஜ்ரத்திற்குச்சமானமாகிய மார்புகளிலும், கால்களிலும், காமினிகளாகிய ஸ்திரீகளின் கடைக்கண்களைப்போலப்பதிந்து பாய்ந்தன. எந்தநாளையிலாவது இவர்களைப்போல யுத்தஞ்செய்தவீரர்கள் யாராவ திருந்தார்களாவென்று தேவர்களெல்லாம் இவ்விரண்டு வீரர்களையும்புகழ்ந்து ஸ்தோத்திரம்பண்ணி ஆரவாரித்தார்கள். இப்படியிவ் விந்திரசித்தும் இளையபெருமாளும் ஒருவருக்கொருவர் எதிராகி, கிருஷ்ணபட்சத்திரிதியையிலும், பூர்வபட்சத் திரிதியையிலும் தோன்றின மூன்றாம்பிறைச் சந்திரர்களைப்போல் வளைந்த பொன்மயமானதங்கள் வில்லுகளை வளைத்தார்கள். இவ்விரண்டு வீரர்களுடைய பாணங்களும் பாய்ந்து லோகமெல்லாம் வெந்தன. கடல்களெல்லாம் வெந்தன. தேவர்களெல்லாம் நாவுலர்ந்து யுகாந்தகாலமின்று வந்துவிட்டதோ வென்று சந்தேகித்து மனநொந்து போனார்கள். ஆகாசமெல்லா நட்சத்திரங்களை யுதிர்த்துவிட்டது. சூரியன் கிரணங்களை யுதிர்த்தான். பூரணச்சந்திரன் தன்னிடத்திலுள்ள மானை இழந்துபோனான். மேகங்களெல்லா மழையைச்சொரிந்தன. அஷ்டகுலாசலங்களு முடிகுலைந்துபோயின. உலோகத்திலுள்ள ஜீவகோடிகளுக்கெல்லாம் தேகத்தைவிட்டு உயிர்கழிந்துபோகும்போலாய் விட்டது.

அப்போது அஷ்டதிக்குகளைச் செயம்பெற்ற இராவணனுடைய குமாரனை இந்திரசித்து கூர்மையான பத்துப்பாணங்களை இளையபெருமாளுடைய திருமேனியில் எய்தான். இளையபெருமாள் தம்முடைய வில்லைவளைத்து,

இந்திரசித்துவின் கவசமுந்தேகமும் ஊடுருவிப்போகும்படி சிலஅக்கினிமுகாஸ்திரத்தைப் பொழிந்தார். இந்திரசித்து தேவர்களை முன்னந்தொடர்ந்து துரத்திக்கொண் டறுத்தவைகளான சில சாச்ஜொலியமாப் பிரகாசிக்கின்ற பாணங்களைப் பொறுக்கியெடுத்து வேகமாய்ச்செலுத்தி, ஆஞ்சநேயருடைய திருத்தோள்களின்மீது பிரயோகித்தான். அவைகள்பட்டு ரத்தவெள்ளஞ்சொரிகின்ற மலையையொத்த அநுமானுடைய திருமேனி சூரியனைப்போலச் செவந்திருக்கின்றதை இளையபெருமாள்பார்த்து, மிகுந்தகோபத்துடனே இந்திரசித்தேறியிருந்த தேரை வேறொரு பக்கத்திற்கும் போகவொட்டாதபடி குதிரைகளையும் வண்டில்களையும் சிதைத்துவிட்டு, இருளைக்கெடுக்கின்ற சூரியகிரணங்களைப்போலச் சரவருஷங்களைப் பொழிந்தார். இந்திரசித்துவின் தேர் அழிந்தமாத்திரத்தில் அதைக்கண்ட தேவர்கள்மிகுந்த சந்தோஷங்கொண்டு கோவென்று ஆரவாரித்தார்கள். பிரஹம்மேந்திராதி பிரதம தேவர்களும் சந்தோஷித்தார்கள்.

அதைக்கண்ட இந்திரசித்து மிகுந்த கோபமுற்றுக் குபீரென்று பாய்ந்துவேறொரு தேரின்மேலேறி, பத்துப்பாணங்களை இளையபெருமாள் திருத்தலையிற் பிரயோகித்தான். அவைகள் பட்டவுடனே இலட்சுமணர் துடித்துச் சோர்ந்து, உடனேசோகமாறிப் பிறைமுகாஸ்திரங்களையெடுத்துப் பிரயோகித்தார். அவைகளையவன் விலக்குகிறதற்கு முன்பாகப்பூர்வம்விருஷபவாகனாரூடரான உருத்திரமூர்த்தியானவர் கர்வங்கொண் டெதிர்த்துவந்த யமனை ஏகபாதத்தினாலே மார்பிலெட்டியுதைத்தது போல இளையபெருமாள்அவன்மார்பில் ஒருபாணத்தை ஏவினார். அந்தப்பாண மவ்விராக்ஷசனுடைய கவசத்தையும் அவன்மார்பையும் தடாரித்துக்கொண்டு போனவுடன் அவன் பரவசப்பட்டுச் சோகமடைந்தான். அதைக்கண்டதேவர்கள் ஆரவாரித்தார்கள். மறுபடியும் இளையபெருமாள் மத்தியானகாலத்துச் சூரியனுக்கொப்பான ஒரு பாணத்தைப் பிரயோகஞ்செய்து அவனுடைய விருதுக்கொடியை யறுத்துத்தள்ளி, இன்னுஞ்சிலபாணங்களைக்கொண்டு அவனுடைய வச்சிரமயமானதோள்களையுஞ் சின்னபின்னப்படத் தொளைத்துவிட்டார்.

அவைபட்டமாத்திரத்தில் இந்திரசித்துவின் தேகத்திலிருந்து இரத்தவெள்ளமானது அக்கினிமயமாய்ச் சூடுகொண்டு ஒழுகிவரச்சலனமுற்ற வடமேருபர்வதம்போலக் களைத்துச்சாய்ந்து, மறுபடியுஞ் சோகந்தெளிந்து பக்ஷிகள்மாமிசத்துக்காகச் சுழலிட்டுக் கொண்டிருக்கின்ற சிலபாணங்களைப் பிரயோகித்தான். அவைகள்போய் இளையபெருமாளுடைய கவசத்தில் நுழையாமல் கீழே பலபலவென்று உதிர்ந்துபோக, அதைக்கண்டு ஆயிரங்குதிரைகள்பூட்டிய தேரையுடைய இந்திரசித்து அதிககோபங்கொண்டு மறுபடியும் ஆயிரம்பாணங்களை இளையபெருமாளுடைய திருமார்புக்குக் குறிவைத்தேவினான். அவைகளை இராமாநுஜர் குறிபார்த்துச் சிலதிவ்யபாணங்களால் முறித்தெறிந்து, சிலபாணங்களை அவனுடைய தேகத்தில் ஊன்றச்செய்து, சில

பாணங்களை அவன் வில்லினது நாணறும்படிப் பிரயோகித்தார். அப்போது இந்திரசித்துத் திகைத்து இளையபெருமாளுடைய வில்லைப்பார்த்து, இந்தவில்லென்ன விஷ்ணுவினுடையதோ? சிவனுடையதோ? அல்லது பிரஹ்மாவினுடையதோ? என்றுசந்தேகித்து, அவருடைய கவசத்தையும் பேதிக்கமாட்டாமல் தன்னிடத்திலிருக்கின்ற பாணங்களெல்லாம் அவரை ஜெயிக்கமாட்டாமையைக் கண்டு மனமயங்கிப்போனான்.

அந்தத்தன்மையை அவன் சிறியபிதாவான விபீஷணர்கண்டு, இளையபெருமாளைக்கிட்டிவந்து அவர் திருமுகத்தை உற்றுப்பார்த்து, ஸ்வாமி! அடியேனுடைய ஒரு சிறுவிண்ணப்பத்தைக் கேட்டருள வேண்டும். இவன் எப்படிப்பட்ட தேவர்களையும் போரில் வெற்றிபெற்றவனுக்கும். இப்படிப்பட்டவனிப்போதுமனந்தளர்ந்து பித்துக்கொண்டுபோனான். இனியிவன் பிழைக்கப்போகின்றதில்லை என்றார். அப்போது இந்திரசித்து யமனைப்போலக் கோபித்து, வில்வில் வேறு நாணேறிட்டுக் குணத்தொனி செய்து, இதைத்தடுத்துவிடு பார்ப்போமென்று ஏழுலோகத்தையும் போய் முட்ட அதிகவேகங்கொண்டு வாயுவாஸ்திரத்தைப் பிரயோகித்தான். இளையபெருமாளும் அதனை வாயுவாஸ்திரத்தைக் கொண்டே தடுத்துவிட்டார். அவன் மறுபடியும் அக்கினியாஸ்திரத்தைத் தொடுத்தான். இவரந்த அக்கினியாஸ்திரத்தைக் கொண்டே தடுத்துவிட்டார். இராக்ஷசன் வருணாஸ்திரத்தைத்தொடுத்தான். இளையபெருமாளும் அந்த அஸ்திரத்தைக்கொண்டே தடுத்துவிட்டார். அந்தத்துஷ்டன் சூரியாஸ்திரத்தைப் பிரயோகித்தான். தர்ம்மிஷ்டரான இராமானுஜரும் சூரியாஸ்திரத்தைக் கொண்டே தடுத்துவிட்டார். அக்கால் இந்திரசித்து இராமானுஜரைப்பார்த்து, நல்லது இலக்ஷ்மணா! இத்தனை அஸ்திரங்களையுந் தடுத்தாயல்லவா? இந்த அஸ்திரத்தைத் தடுத்துவிடு பார்ப்போமென்றுகூறி சமுத்திராஸ்திரத்தைச் செலுத்தினான். அதற்கிலக்ஷ்மணர் — அடா இந்திரசித்தே! நான்வேறொன்றும் ஏவவில்லை. அந்த அஸ்திரத்தைக்கொண்டே தடுக்கின்றேன் பாரென்று தொடுத்துநீக்கினார்.

அப்போதிந்திரஜித்து இனிக்கொல்லத்தக்க அஸ்திரத்தைத் தொடுக்க வேண்டுமென்று நினைத்து, ஓ இலக்ஷ்மணா! இனிநீமாண்டுபோனாய். என்றுகூறி பிரஹ்மாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகித்தான். அக்காலந்தரமார்க்கத்தில் வேடிக்கைபார்த்துக்கொண்டு நின்றவர்களான பிரஹ்மாவும், தேவரிஷிகளும் — பிரஹ்மரிஷிகளும் — தேவேந்திரனும் — மற்றமற்ற தேவகணங்களு மனநடுங்கி, இனிமேல் இளையபெருமாளுக்கு இந்த அஸ்திரத்தினால் மரணமுண்டாகாமற் போகக்கடவதென்று ஆசீர்வதித்தார்கள். அப்போதப் பிரஹ்மாஸ்திரமானது உகாந்தகாலத்தில் உலோகங்களையெல்லா மழிக்கும்படியான வடவாமுகாக்கினியோடு துவாதசா தித்தர்களுடைய பிரகாசத்தைக்காட்டிலு மிகுந்த கிரணங்களை வீசிக்கொண்டு சமானமில்லாமல் வருகின்றதை இளையபெருமாள்பார்த்து, இவனிந்தப் பிரஹ்மாஸ்திரத்தைத் தன்

வல்லமையால் மீட்டுக்கொள்ளவுமாட்டான். தடுக்கவுமாட்டான். நாமாண்டு போவோமென்று விட்டான். இனி நாம் நம்முடைய நிலைமையைக்காட்டாமற் போனோமானால் தகுதியல்லவென்று தம்மிடத்திருந்த சகஸ்திர கமலவாசனாகிய பிரஹம்மாவினுடையஅஸ்திரத்தைத்தொடுப்பதாகத்திருவுள்ளங்கொண்டு அதனைப்பார்த்து, ஓ சதுர்முகாஸ்திரமே!தேவலோகத்தை மன்னித்துப் பூலோகத்தை மன்னித்து, இந்தச் சத்துருவினுடன் மாத்திர நீபோராடி அவன்விட்ட உன்பெயர்வாய்ந்த அஸ்திரத்தைமாத்திர மாற்றிவிடக்கடவாயென்று ஆக்கியாபித்து விட்டார். அதைக்கண்ட தேவர்கள்ஆச்சரியப்பட்டு,ஆ!ஆ! இவருடைய கிருபையே கிருபை, அதுதம்முடையதேஹத்தை அழிக்கவந்தபோதும் தாம் தர்ம்மத்தையழிக்காதபடி யிருக்கின்றாரே: என்றுஒருவரோடொருவர் கூறி ஆனந்தித்தார்கள்.

இந்திரசித்து தேவாஸ்திரங்களை விடுத்துப் போர்விளைக்கையில் இலட்சுமணரவற்றையும் வெற்றிகொள்ளுதல்.

கவி.

உருமேறுவந்தெதிர்த்தாலத னெதிரேநெருப்புய்த்தால்
வருமாங்கதுதவிர்ந்தாலென மலரோன்படைமாயத்
திருமாறனக்கிளையான்படை யுலகேழையுந்தீய்க்கும்
அருமாகனலெனநின்றது விசும்பெங்கணுமணுகி.

இப்பால் ஸ்ரீராமபிரானுருடைய திருத்தம்பியார்விட்ட அஸ்திரமானது இடியேறுவந்து எதிர்த்தகாலத்தில் அதற்கு எதிராக வேறுநெருப்பைப் பிரயோகித்தால் முன்வந்த இடி மாய்ந்துவிட்டதுபோல இராக்ஷசன்விட்ட அஸ்திரத்தை மாய்த்துவிட்டு, சப்தலோகங்களையுஞ் சுட்டெரிக்கும் படியான பெருந்தீயைப்போல ஆகாசத்தையெல்லா மூடிக்கொண்டு நிறைந்துநின்றது. இப்படியவ் வஸ்திரமானது எங்கும்படராதபடி சூரியகுல திலகராகிய இளையபெருமாள் வேறொரு அஸ்திரத்தைத் தொடுத்து அதன்மீது விட்டார். அது ஒருவிஷ மற்றொருவிஷத்தை மாய்த்துவிடுவதுபோல அந்த அஸ்திரவேகத்தை மாய்த்துவிட்டது. தேவர்களதைக்கண்டு, வெற்றிபெற்ற இந்த இளையபெருமாளுக்கு இனிமேலுங் கைகூடாத நன்மைகளும் இருக்கின்றவைகளோ வென்று மனத்தைரியங்கொண்டு சந்தோஷப் பட்டார்கள். அப்போது ஆயிரங்கண்களையுடைய தேவேந்திரன் அத்தேவர்களைப் பார்த்து,ஓதேவசமூகங்களே! இராமலக்ஷ்மணர்களாகிய இருவருக்கு மிதுமுடியாதகாரியமல்லவென்று நீங்கள் நிச்சயந்தெரியாமற் சொன்னீர்கள். எதார்த்த பொருளைச் சொல்லுகிறேன் கேளுங்கள். நாராயணநரரென்கிற திருநாமங்களை யுடையவர்களாய், நமக்கெல்லா மூலமு முதற்காரண வஸ்துவுமாய், பாவவினைகளையெல்லாம் கழித்த ஜ்ஞானிகளும் தம்மை ஆராய்ந் தறியவிடாத ஒரு மஹாமாயையினாலே தம்மை மறைத்துக்கொண்டு, நாம் பாராயணம் பண்ணுகின்ற நான்கு வேதங்களையுங்கடந்த புராணபுருஷர்க ளாக்கும் இவர்கள்.

அறிவுக்கு மெட்டப்படாமல் அப்பிரமேயர்களா யிருந்தவர்கள். தர்ம்மமார்க்கம் கெட்டுப்போகப் போகிற தென்று இந்தலோகத்து மனுஷியர்களைப் போலவந்து அவதரித்து அந்தத்தர்மத்தை நிலைநிறுத்துவார்கள்.

ஆகையால் அதர்ம்மிகளான இந்த ராக்ஷசர்களை வேரறக்களையும்படித் திருவயோத்தியில் தசரதமகாராஜாவின் தபோமகிமையால் அவருக்குப் புத்திரர்களாக அவதரித்து, அந்த அவதார ரஹஸ்யங்களை ஒருவருந் தெரிந்துகொள்ளக்கூடாத விதமாய் நடித்துக்கொண் டிருக்கின்றார்கள். சீவகோடிகளிலெல்லா நிறைந்து யாவரும் ஸ்தோத்திரிக்கத்தக்க ஒருவனென்கிற ஈஸ்வரனை யாவரும் சந்தேகிக்காதபடி வெளியிடுகின்ற நிச்சயத்தையுடையவர் இவர். அந்த ஸ்ரீராமனேவென்றால்? இந்த லோகமெல்லாவற்றிலும் பாலில்தோய்ந்த பிரைபோலக் கலந்து அவைகளுக்கு உத்கிருஷ்ட ஆதாரஸ்தானமா யிருக்கின்ற நாராயணனும், வேதபுருஷனாலும் புகழ்ந்து சொல்லுகிறதற்கு முடியாத சகலகாரண பூதனுமாகும். இது மூலரஹஸ்யமென்று அறியுங்கள். பெரியபாற்கடலிலே சயனித்துக்கொண் டிருந்தவரும், முன்னால் நாம் நம்முடைய முறைகளைச் சொல்லிக்கொண்டபோது துர்ப்பாக்கியர்களான இராக்ஷசர்களைக் குலத்துடனே களைந்தெடுத்துக் கொன்று சுபாக்கிய தர்ம்மத்தை ஸ்தாபனம் பண்ணுகிறதற்குத் திருவுளங் கொண்டவரும் இவர்தான் என்று சொல்லினன்.

அப்போது தேவர்கள் நாங்களிந்த ரஹஸ்யங்களெல்லாவற்றையும் அநுபவசித்தாய் அறிந்திருந்தும், அவருடைய மஹாமாயப் பிரயோகத்தாலே எங்களுக்கு அவையெல்லாம் தெரியாமல் மறந்துபோனோம். இப்போது உம்முடைய அநுக்கிரகத்தா லுபதேசித்த வாக்கியத்தைப் பற்றினதினாலே எங்களுக்குள்ள சந்தேகமுழுவது நீங்கினோம். இனி எங்களுடைய சத்துருக்களை யெல்லாம் செயித்துவிட்டுச் சந்தோஷமாய் வாழ்ந்தோம். எங்கள் வருத்தங்களைக் கடந்தோம். என்றுகூறி வணங்கித் தெண்டனிட்டார்கள். இப்படியிருக்க வக்கிரதந்தங்களையுடைய இந்திரசித்து நாராயணாஸ்திரத்தையெடுத்து இளையபெருமாளைப் பார்த்து, நீ இந்த அஸ்திரத்தைத் தடுத்துவிடுவாயேயானால் உன்னை யெதிர்த்து யார்நிற்கவல்லவர்கள்? உனக்கிணை யாரிருக்கின்றார்கள்? நீ இதைத் தப்பித்துக் கொள்ளமாட்டாய். உடனே மாண்டு சுவர்க்கம் அடைந்துபோவாய். இது தப்பாமற்கொல்லும், என்று சொல்லி லோகங்களெல்லா நிலைகலங்கித் தடுமாறும்படியாகப் பிரயோகித்து விட்டான். அதைக்கண்டு தேவர்களெல்லாம் தங்களிரண்டு கைகளையும் சிரசின்மேற் கூப்பிக்கொண்டு தங்களைக் காத்துக்கொண்டார்கள். அப்படியே வானரர்கள் முதலாகிய மற்றவர்களும் சிரத்திற் கரத்தைக்குவித்து வாய்திறவாமல் நடுங்கினின்றார்கள்.

அப்போது பழுதுறுமற் சத்துருக்கள் யாவர்களையும் சம்ஹரிப்பதான அந்த நாராயணாஸ்திரம் வருகின்றதை இளையபெருமாள் பார்த்து, சாக்ஷாது

சக்கரதரனுன ஸ்ரீயப்பதியேயென்று தியானித்து எதிரே நடந்து போனார். அக்காலந்த நாராயணாஸ்திரமானது எந்தலோகங்களையுஞ்சுட்டெரிக்கும்படிச் செல்லுகின்ற தென்பதைத்தெரிந்தவரும், ஒருவராலும் விலக்கற்கரிதாகிய முழுமுதற் காரணவஸ்துவின் அஸ்திரமென்று தியானிக்கின்றவருமான ஸ்ரீராமாநுஜர்மீது போகாமல் விலகி வலங்கொண்டுசுற்றி அந்தர மார்க்கமாகப் போய்விட்டது. உலோகமெல்லா நிறைந்துவந்த நெருப்பும் அவிந்துபோனது. புகையு நீங்கிப்போய்விட்டது. அப்படிப் பொதுவாய் நாராயணாஸ்திரம் போய்விட்டதைக்கண்ட தேவர்களெல்லாம் இளையபெருமாளை ஸ்தோத்திரம் பண்ணினார்கள். வானரவீரர்களெல்லாம் ஆநந்தக்கூத் தாடினார்கள். தேவஸ்திரீகளெல்லாம் நாட்டியமாடினார்கள். மஹாரிஷிகளெல்லாம் ஐயா இளையபெருமாளே! உலோகங்களை யெல்லா மிரக்ஷித்தீரே: இதற்கெம்மாற் செய்யுங் கைம்மாறு யாதுண்டென்று கொண்டாடினார்கள். தாமரஸபுஷ்போற்பவனான பிரம்மதேவனும் தேவேந்திரனும் வாய்நிறையப் புகழ்ந்தார்கள்.

இதை இந்திரசித்துப் பார்த்து இவனாரோ வென்று சந்தேஹித்து, இவனந்த அஸ்திரத்திற்கு முதல்வனும் உடையவனுமென்று நினைத்து, ஆராயிருந்தபோதிலும் இருக்கட்டும். இனிநான் ஆலோசிக்கமாட்டேன். என்று நினைத்துச் சிவாஸ்திரத்தைப் பிரயோகம்பண்ணி இவனைக் கொன்றுவிடுகிறேனென்று சபதம்பண்ணினான். பார்ப்பானாகிய பிரமதேவன் சிருஷ்டித்த லோகங்களையெல்லாம் ஒரேநாளில் ஒருமத்தியானத்திலே சம்மரிக்கின்ற உருத்திர மூர்த்தியினுடைய பாசுபதாஸ்திரத்தைத் தொடுக்கிறதற்காக இந்திரஜித்து எண்ணியிருப்பதை யறிந்து மேனுலகத்தில் வாசமாயிருந்த தேவகணங்களெல்லாம்பயந்துவிட்டன. உலோகமெல்லாம் இனி நம்மை க்ஷணநேரத்துக்குள்ளாக அழித்துவிடுவானே இந்தச் சண்டாளனென்று பயங்கிவிட்டன. அப்போது இந்திரசித்து அந்த அஸ்திரத்தைக் கையிலேந்தி, இதுசிவபிரானுடையதாயிற்றே: அவர்நம்மீது கருணைகொண்டு கொடுத்ததல்லவா? இதற்காக அநேகம்பேர்கள் பலகால் தவஞ்செய்தும் அவர்களுக்குக் கொடாமல் உனக்குக்கொடுத்தேனென்று அந்த ருத்திரமூர்த்தியே சொல்லி யிருக்கின்றாரே: ஆகையாலிது இந்த லட்சுமணனுடைய உயிரைவாங்குமோவென்று சந்தேகிக்கவேண்டியதில்லை. அல்லாமலு நாமேயிதை முன்னால் சத்துருக்களின் மீது விட்டபோதும் இதற்கெதிராக நின்றவர்கள் ஒருவருமில்லை யல்லவா? என்று தைரியங்கொண்டு இராவணி யானவன் அந்த அஸ்திரத்துக்கு மானஸிகமாகப் புஷ்பம் — தீர்த்தம் — சந்தனம் — நைவேத்தியம் — தூபம் — தீபம் — இவைகளைக் கொடுத்து, இந்தலக்ஷ்மணனுடைய உயிரைக் கொண்டு வரக்கடவாயென்று அநுசந்தித்து, அதிககோபத்துடனே பெரியவில்லிற் பூட்டிய நாணியைத் தோள்புரளவாங்கி, ஒருவிதத்தாலும் தடைபடாத வல்லமையிற் சிறந்த பாசுபதாஸ்திரத்தைப் பிரயோகித்து விட்டுவிட்டான்.

அப்போது அந்தப் பாசுபதாஸ்திரமானது ஒருபக்கத்திலே சூலாயுதங்களையும், மழுவாயுதங்களையும், பலவித பாணங்களையும், அக்கினியையும், விஷத்தையும், சர்ப்பங்களையும், நீரிடி நெருப்பிடிகளையும், அநேகமாய ஸ்வரூபங்களையும், கரும்பூதங்களையும், பெரும்பேய்களையும், உலோகமெல்லாம் நிரப்பிக் கொண்டு வருவதல்லாமல்; ஒருபக்கத்திலே வடவாமுகாக்கினியாயு மற்றொருபக்கத்திலே லோகங்களையெல்லாம் பின்தொடர்ந் தழிக்கும்படியான சூறைப்பெருங்காற்றையு முடையதாய்ச் சப்தசமுத்திரங்களுக்கும் அப்புறமாயிருக்கின்ற பெரும்புறக்கடல் வந்ததுபோலவும், அந்தச் சமுத்திரத்தில் வாசமாயிருந்த பேரிருள் மூடிவந்ததுபோலவும் வந்தது. அதைக்கண்டமாத்திரத்தில் இந்த அஸ்திரம் பழுதாகமாட்டாது. இலட்சுமண ரிறந்துபோனார். என்றுபயந்து தேவர்களெல்லாம் ஓட்டம்பிடித்தார்கள். இரிஷிகளெல்லாம் பறந்தார்கள். வானரங்கள்பட்ட பாட்டைக்குறித்துச் சொல்லுகிறதநிசயமோ? சூரியசந்திரர்கள் கதிமாறினார்கள். இந்தத் திரிலோகமுழுவதும் சுழன்றன.

அதைப்பார்த்த விபீஷணாழ்வான் உயிர்நீங்கும்படியான பயத்துடனே மனந்திடுக்கிட்டு, இந்த அஸ்திரத்தை நீக்கும்படியான உபாயங்களும் உண்டாகுமோ? ஓ ஸ்வாமி! ஓ வீரர்களுக்குள்ளே முதன்மையான இளையபெருமாளே! ஓ சக்கரவர்த்தித் திருக்குமாரரே! என்று கூப்பிட்டார். அதற்கு இளையபெருமாள் சிரித்தார். அக்கால் வெற்றிமாலையைத் தரித்த பலவான்களான வானரவீரர்களெல்லாம் இளையபெருமாளுடைய திருவடி நீழலிலொதுங்கி, ஸ்வாமீ! தேவரீருக்கு அபயம்: அபயம்: என்று கூவினார்கள். இப்படிகூவின எல்லாரையும் இராமானுஜர் பயப்படாதேயுங்களென்று திடங்கூறி, உங்களெல்லாருக்கும் அபயங் கொடுத்தோமென்று தமதுதிருக்கரத்தால் அவர்களை யாதரித்து, இந்தப்பூலோக சுவர்க்கலோகத்தார் படுகின்ற பயங்களை நாமறிந்தோம். இனிநாமிதைச் சும்மா விடப்போகிறதில்லை. பஞ்சமுகமுடைய சிவபிரானது அஸ்திரத்தையே தொடுக்கின்றேன். என்று நிச்சயித்து அந்தப் பாசுபதாஸ்திரத்தை யெடுத்து, இந்திரசித்துவிட்ட அஸ்திரத்தைமாத்திரம் அழித்துவிடக்கடவாய். உலோகத்துக்கு ஒருபத்திரவமும் செய்யவேண்டாம். என்று அபிமந்திரித்து அதனுள் வேறொரு அக்கினியாஸ்திரத்தைச் சேர்த்துச் செலுத்தினார். அதுபோய் அந்த அஸ்திரத்தினாலுண்டாகிய எல்லா விபரீதங்களையும் ஒரு க்ஷணப்பொழுதுக்குள்ளாக விழுங்கிவிட்டது.

அப்போது தேவலோகவாசிகளெல்லாம் ஆரவாரித்தார்கள். பூலோகவாசிகளும் ஆர்ப்பரித்தார்கள். தேவதுந்துமிகள் முழங்கின. சப்த சமுத்திரங்களும் கோஷித்தன. சப்தமேகங்களு முழங்கின. சாஸ்திரங்களுடனே கணிதாதிதேவதைகளும் சப்தமிட்டன. வானார்களெல்லாம் கர்ச்சித்தார்கள். ஜெயவிஜயீபவ: என்று சதா பல்லாண்டு கூறிக்கொண்டிருக்கின்ற

ஆகாசவாணியும், தர்ம்மதேவதையும், ஒலித்தன. மற்றவர்களெல்லாரும் அதிகோஷ்டமாகச் சப்தித்தார்கள். இந்தலக்ஷுமணன் உகாந்தகாலத்தில் உலோகங்களையெல்லாம் சம்ஹரிக்கின்றவனுடைய பாசுபதாஸ்திரத்தை மயங்காதபடி தெரிந்து அதைமாய்த்துவிடவும் வல்லவனானேயென் றெண்ணிக் கொல்லும் யமனிலுங் கொடியவனான இந்திரசித்து மனந்திகைத்துப்போனான். குறையாத வெற்றியாளர்களான வானரவீரர்களெல்லாம் இவர் சாக்ஷாத்து விஷ்ணுவாமிச மென்பதைத் தெரிந்துகொண்டார்கள். அக்கால் இந்திரஜித்து தேவாஸ்திரங்கள் வியர்த்தமாய்ப் போய்விட்டவைகளென்று வெட்கப்படாமல், நமக்குப் பாணப்பிரயோகம் பண்ணுகிற சாமர்த்தியம் இருக்கின்றதல்லவா வென்று விசைகொண்டு, தன் கைச்சமர்த்தால் சில பாணங்களைவாரி விதைத்துவிட்டான். அவைகளெல்லா மிகுந்த ஜ்ஞானஸ்வரூபரான இளையபெருமாளுடைய பருத்த தோள்களின்மீதும், நுதற்சுட்டியின்மீதும் பாய்ந்தன. அதுகண்ட சுக்கிரீவமகாராஜனாதிய மகாபலாட்டியரான வெற்றிவீரர்கள் கையோயாமல் அனேகமலைகளைவாரி வருஷமாகப் பெய்து, இராக்ஷச சேனைகளைத் தும்சம்பண்ணிக்கொண் டிருந்தார்கள், இளையபெருமாள் சதகோடி பாணவருஷங்களை இராட்சசர்க ளினிப்பிழைக்க மாட்டார்களென்று சொல்லும்படிப் பிரயோகித்தார். அப்போது இந்திரசித்துத்தன்சிறிய பிதாவாகிய விபீஷணாழ்வானைப் பார்த்து வெகுவாய் நிந்திக்கத் தலைப்பட்டான்.

இந்திரசித்து விபீஷணரைத் தூஷித்தெதிர்த்தல்.

கவி.

முரட்டடந்தண்டுமேந்தி மனிதரைமுறையைக்குன்றிப்
பிரட்டரிற்புகழ்ந்துபேதை யடியரிற் றொழுதுபின்சென்
றிரட்டுறுமுரசமென்ன விசைத்ததேயிசைக்கின்றாயைப்
புரட்டுவன்றலையையின்று பழியெனவொழிவென்போலாம்.

விழிபடமுதல்வரெல்லாம் வெதும்பினரொதுங்கவீழ்ந்து
வழிபடவுலகமூன்று மடிபடவந்ததேனு
மழிபடைதாங்கலாற்று மாடவர்யாண்டும்வெஃகாப்
பழிபடவந்தவாழ்வை யாவரேபகரற்பாலார்.

நீருளதனையுமுள்ள மீனெனநிருதரெல்லாம்
வேருளதனையும்வீவா ரிராவணனோடுமீளா
ரூருளதொருவனின்றாய் நீயுளையுறையநின்னோ
டாருளரரக்கர்நிற்பா ரரசுவீற்றிருக்கவையா.

முந்தைநாளுலகந்தந்த மூத்தவானோர்கட்கெல்லாந்
தந்தையார்தந்தையாரைச் செருவிடைச் சாயத்தள்ளிக்
கந்தனார்தந்தையாரைக் கயிலையோடொருகைக்கொண்ட
வெந்தையாரரசுசெய்வ திப்பெரும் பலங்கொண்டேயோ.

பனிமலர்த்தவிசின்மேலோன் பார்ப்பனகுலத்துக்கெல்லாந்
தனிமுதற்றலைவனுன வுன்னைவந்தமரர்தாழ்வார்
மனிதருக்கடிமையாய்நீ யிராவணன்செல்வமாள்வாய்
இனியுனக்கென்னுேமான மெங்களோடடங்கிற்றன்றே.

சொல்வித்தும்பழித்துநங்கை மூக்கினைத்துணிவித்தோரா
ரெல்வித்தும் படைக்கையுங்க டமையனை யெங்களோடுங்
கொல்வித்துந்தோற்றுநின்ற கூற்றினுர்குலத்தையெல்லாம்
வெல்வித்தும்வாழும் வாழ்வின் பெருமையே விழுமிதன்றே.

ழுதியேரணிந்ததிண்டோ ளிராவண னிராமனம்பாற்
புழுதியேபாயலாகப் புரண்டநாள்புரண்டுமேல்வீழ்ந்
தழுதியோநீயுங்கூட வார்த்தியோவிவனைவாழ்த்தித்
தொழுதியோயாதோசெய்யத் துணிந்தனைவிசயத்தோளாய்.

ஊனுடையுடம்பினீங்கி மருந்தினுலுயிர்வந்தெய்து
மானிடரிலங்கைவேந்தைக் கொல்வரேநீயுமன்னுன்
ருனுடைச் செல்வந்துய்க்கத் தகுதியேசரத்தினுேடும்
வானிடைப்புகுதியன்றே யான்பழி மறுக்கினென்ருன்.

ஓ சிற்றப்பா! உன்கையிலேபலம்பொருந்திய ஒருதண்டத்தை வைத்துக்கொண்டிருந்தும் மனிதர்களுக்குத் தாழ்ந்து, இராட்சசமுறைமைமாறி, புரட்டுக்காரரைப்போலப் புகழ்ந்து, புத்தியில்லாத அடிமைகளைப்போலத் தொழுது, அவர்களுக்குப்பிறகே நின்றுகொண்டு தப்பட்டையைப்போல் வீணுச்சொன்னதையே சொல்லிக்கொண் டிருக்கின்ருய். உன்தலையை அறுத்தெறிந்துபோடுவேன். பழியாகுமேயென்று விட்டுவிட்டேன். எல்லார்கண்ணுக்கும் தோற்றும்படியான உயர்ந்த ஆசனத்தின்மீது வீற்றிருந்து மும்மூர்த்திகளும் பயந்தொதுங்கித் தெண்டனிட்டுச் சொன்னபடி கேட்கவும் திரிலோகத்தாரும்வந்து காலில்வணங்கவு மகதைஸ்வரியம் சம்பவித்தாலும், எல்லாரையு மழிக்கும்படியான ஆயுதத்தைக் கையில்வைத்திருக்கின்ற புருஷர்களெல்லாம் வெட்கிப் பழிக்கத்தக்கவனுக விருக்கிற உன்வாழ் வென்னத்திற்காம்? ஐயோ! இந்தவாழ்வை யாராவது நயந்தவர்களாக நீகண்டாவது கதையிற்கேட்டாவ திருந்ததுண்டா? நீரிருக்குமட்டுமீன்களிருக்கும். நீர்போனல் மீன்களெல்லாம் ஒருமிக்கமாண்டுபோகும். அதுபோல ராவணனுடனே ராக்ஷசர்களெல்லா மாண்டுபோகப் போகின்ருர்கள். தவறமாட்டார்கள். இலங்காபட்டண மிருக்கின்றது. நீயொருவன்தானிருக்கின்ருய். நீ ராஜரீகஞ் செய்கிறதற்கு உன்னுேடுகூட யாரிருக்கின்ருர்கள்?

ஓ சிற்றப்பா! முன்னுல் உலகத்தையெல்லாம் பெற்ற தேவபிதாவாகிய பிரஹ்ம்மாவின் தகப்பனுன விஷ்ணுவை யுத்தத்தில் தோற்கடித்து, சுப்பிரமணியருடைய பிதாவாகிய சங்கரமூர்த்தியைக் கயிலாச மலையுடன் பேர்த்து ஒருகையில் தூக்கின என்பிதா இராஜரீகஞ்செய்தது உன்னைப்போல மனுஷியசஹாயத்தைக் கொண்டுதானு? அந்தப்பிரஹ்ம்மவமிசமான பிராஹ்ம்மண

குலத்துக்கெல்லாம் தனித்தலைவனுயிருக்கின்ற உன்னைத்தேவர்களெல்லாம் இனியென்னமாய் வணங்குவார்கள் ? நீ மனிதர்களுக்கு அடிமையாகி இராவணனுடைய செல்வமெல்லாம் எப்படியாளப்போகிறுய் ? உனக்கென்ன மானமிருக்கின்றது ? எங்களுடனேகூட பெருமையெல்லாம் அடங்கிவிடப்போகின்றது. உங்கள் தங்கையை மூக்கறுத்தவர்களுக்கு நீ வேண்டிய உளவுகளையெல்லாஞ் சொல்லிக்கொடுத்தும், அதனுற்பலவிகழ்ச்சிகளை யுண்டுபண்ணியும், பிரகாசத்தைவீசுகின்ற ஆயுதங்களைக் கையிலுடைய உங்கள் தமயனை எங்களோடுகூட இறக்கும்படிப் பண்ணியும், எங்களுக்கு இதுவரையிலுந் தோற்றுக்கிடந்த யமனுலே எங்கள் குலத்தையெல்லாம் ஜெயிக்கச்செய்தும் வருகிறுய். இதனுல் நீ யடையப்போகிற வாழ்வைக்காட்டிலும் தரித்திரமுற்றிருப்பதேமேலாகுமல்லவா ?

ஓ வெற்றிபெற்ற தோள்களையுடைய சிற்றப்பா ! சித்திரமெழுதி அழகுபெற்றிருக்கின்ற பலமுள்ளதோள்களையுடைய இராவணன் ஸ்ரீராமனுடைய பாணத்தினுலே நிலப்புழுதியே தனக்குப் பாயாகப்புரண்ட காலத்தில், நீயும்புரண்டு அவன்மேல்விழுந்து அழப்போகின்றுயோ ? அல்லது அவனைவாழ்த்தித் தொழப்போகின்றுயோ ?என்னசெய்ய நிச்சயித்திருக்கின்றுய் ? மாமிசத்துடனேகூடின தேகத்திலிருந்து நீங்கிப்போன உயிரை மறுபடியும் சஞ்சீவியாற்பெற்ற மனிதர்களுக்குள் இலங்காதிபதியான இராவணேஸ்வரனைச் செயிப்பவர்களுமுண்டா ? நீயும் அவனுடைய செல்வத்தையெல்லாம் ஆளும்படியாகத் தகுந்தவனுவாயோ ? அந்தராவணன்விடுகின்ற பாணத்தினுலே அவர்களுடனே நீயும் சுவர்க்கமடையப்போகின்று யல்லவா? ஐயோ! இப்போது நான் உன்னைக்கொன்றுல் பழிவருமென்றல்லவா முன்பின் பார்க்கிறே னென்றுன்.

இப்படி மேகநாதனென்னும் இந்திரஜித்துக்கூறிய வார்த்தைகளையெல்லாஞ் செவிகொடுத்துக்கேட்ட விபீஷணுழ்வான் மாலையணிந்த முடியை அசைத்துச்சிரித்து இவ்வாறு சொல்லுகிறுர்.

விபீஷணர் இந்திரசித்துவுக்குச் சிலவற்றைக்கூறல்.

கவி.

அறந்துணையாவதல்லா லருநகரமையநல்க
மறந்துணையாகமாயாப் பழியொடும்வாழமாட்டேன்
துறந்திலேன்மெய்ம்மையெய்தும் பொய்ம்மையேதுறப்பதல்லாற்
பிறந்திலேனிலங்கைவேந்தன் பின்னவன்பிழைத்தபோதே.

உண்டிலெனறவம்பொய்ம்மை யுரைத்திலென்வலியாலொன்றுங்
கொண்டிலென்மாயவஞ்சங் குறித்திலனியாருக்குற்றங்
கண்டிலனொன்பாலுண்டே நீயிருங்காண்டிரன்றே
பெண்டிரிற்றிறம்பினுரைத்துறந்ததுபிழையிற்றுமோ.

மூவகையுலகமேத்து முதலவனெவர்க்குமூத்த
தேவர்தந்தேவன்றேவி கற்பினிற்சிறந்துளாளை
நோவனசெய்தறீதென் றுரைப்பநுந்தாதைசீறிப்
போவெனப்போந்தேனின்று நகரத்திற்பொருந்துவேனே.

வெம்மையிற்றருமநோக்கா வேட்டதேவேட்டுவீயு
மும்மையேபுகழும்பூண்க துறக்கமுமுமக்கேயாக
செம்மையிற்பொருந்திமேலோ ரொழுக்கினோடறத்தைத்தேறு
மெம்மையேபழியும்பூண்க நரகமுமெமக்கேயாக.

அறத்தினைப்பாவம்வெல்லா தென்னுமதறிந்துஞானத்
திறத்தினதுறுமென்றெண்ணித் தேவர்க்குந்தேவைச்சேர்ந்தேன்
புறத்தினிற்புகழேயாக பழியொடும்புணர்கபோதச்
சிறப்பினிப்பெறுகதீர்க வென்றனன்சீற்றந்தீர்ந்தான்.

அப்பா இந்திரஜித்தே! பாவமெப்போதுங் கெட்டது. தர்ம்மமே உயர்ந்ததாகும். நான் தர்ம்மத்தைத் துணையாகப் பற்றுவேனே யல்லாமல் பாவத்தைத் துணையாகக்கொண்டு மாயாப்பழியுடனே உயிர்வைத்திருக்கமாட்டேன், பொய்யைப்பகைத்து விட்டுவிடுவேனேயல்லாமல் மெய்யில் கொஞ்சமேனும் தவறமாட்டேன். இலங்காதிபதியாகிய இராவணனெப்போது தவறிநடந்தானோ ? அப்போதே யவனுக்குத்தம்பியாகநான் பிறக்கவேயில்லை. நானிதுவரையிலும் கள்குடித்தவனல்ல, பொய்சொன்னவனும் அல்ல. மேலும் பலவிதமாக ஒருவரிடத்திலும் ஒன்றும் அபகரித்துக் கொள்ளவில்லை மாயமானவஞ்சனையை நான் நினைத்ததேயில்லை. இதுவரையிலும் என்மேற் குற்றஞ்சொன்னவர்க ளொருவருமில்லை. இவையனைத்தையு நீயுநின்றந்தை முதலானபேர்களும் பார்த்திருக்கின்றீர்க ளல்லவா? பெண்பிள்ளையின்பொருட்டுத் தவறிநடந்தவர்களைத் துறந்துவிட்டதினாலே என்மீது பிழையென்று சொல்லத்தகுமா?

அப்பா இந்திரசித்தே! திரிலோகத்தாரும் ஸ்தோத்திரஞ் செய்யத்தக்க முதற்காரணவஸ்துவும், எல்லார்க்குமூத்த தேவதேவனான ஸ்ரீராமமூர்த்தியினுடைய தேவியும்,கற்பிற்சிறந்தவளுமான சீதாபிராட்டியாரை மனவருத்தப்படுத்துவது தகாதென்று மாத்திரந்தான் சொன்னேன். அதற்குன்தகப்பன் என்னைக்கோபித்து அப்புறம் போய்விடென்று கட்டளையிட்டான். அதன் பிறகுதான் வந்தேன். அப்படியிருக்க நான் நகரத்திற்பொருந்தி வாழ்வதெப்படி? நல்லது: அதிக குரூரர்களாய்த்தர்மத்தைப்பாராமற் கெட்டவிருப்பத்தையே நல்விருப்பமாக விரும்பி மாளுகின்ற உங்களுக்கே கீர்த்தியுண்டாகட்டும். மோக்ஷமும் உங்களுக்கே கிடைக்கட்டும். ஒழுக்கமாய்நடந்து பெரியோர்கள் நியமித்த அனுஷ்டானப்படித் தர்ம்மத்தைப் பின்பற்றுகின்ற என்போன்றவர்களுக்கே நிந்தையுண்டாகட்டும். நரகமும் எங்களுக்கே கிடைக்கட்டும்.

அப்பா இந்திரசித்தே! தர்மத்தைப் பாவம் வெல்லமாட்டா தென்கிற தை அறிந்திருந்தபடியினாலே ஞானமார்க்கத்திற்கும் இதுவே தகுதியென்று நினைத்துத் தேவதேவரான ஸ்ரீராமமூர்த்தியை அடைக்கலம்புகுந்தேன். இதைக்கண்டு என்னை யெல்லாரும் புகழ்ந்தாலும் சரி: இகழ்ந்தாலுஞ்சரி: நான் அஷ்டஅயிஸ்வரியபோகங்களை யனுபவித்தாலும் சரி: அவைகளை யிழந்தாலுஞ்சரி: எனக்கு அவைகளிலே எண்ணமில்லை. என்று சாந்தசீலரான விபீஷணாழ்வான் சொன்னார்.

இந்திரசித்து விபீஷணர்மீது பாணப்பிரயோகஞ்செய்ய
அதைவிபீஷணர்கண்டித்தல்.

கவி.

பெருஞ்சிறப்பெல்லாமென்கைப் பிறைமுகப்பகழிபெற்றால்
இறுஞ்சிறப்பில்லையைய வெங்கினிப்போவையென்னாத்
தெறுஞ்சிறைக்கலுழனன்ன வொருகணைதொடுத்துச்செம்பொன்
உறுஞ்சுடர்க்கழுத்தைநோக்கி தூக்கினனுருமின்வெய்யோன்.

இவையனைத்தையும் இந்திரஜித்துக்கேட்டு, ஓ சிற்றப்பா! நீஅடையப்போகிற சிறப்புகளெல்லாம் என்கையிலிருக்கிற அர்த்தசந்திரபாணத்தா லழிந்துபோகின்ற சிறப்பேயல்லாமல் வேறல்ல. நீ என்னைவிட்டு எங்கேதப்பிப்போகப்போகிறாய்? என்றுகூறி இடியினும் கொடியனான அவ்விந்திரசித்து எல்லாவற்றையு முறித்தெறியத்தக்க வேகமுள்ள சிறகுகளோடு கூடிய ஸ்ரீகருடாழ்வாருக்கொப்பான ஒரு அர்த்தசந்திரபாணத்தை வில்லிலேதொடுத்து, விபீஷணாழ்வானுடைய இரத்தினாபரணங்களணிந்த கழுத்துக்குக் குறிவைத்து எய்துவிட்டான்.

அந்தப்பாணமானது இடியைப்போலவும் விஷபானம்பண்ணவரான திரிநேத்திர சங்கரமூர்த்தியினுடைய சூலாயுதம்போலவும் வேகங்கொண்டு வருகின்றதன்மையை இளையபெருமாள் பார்த்து, விபீஷணாழ்வா னிதோமுடிந்துபோனார் முடிந்துபோனாரென்று சொல்லிக்கொண் டிருக்கின்ற தேவர்கள்பார்க்கும்படியாகத் தம்முடைய திருக்கையிலுள்ள ஒருபாணத்தால் அந்தப்பாணத்தைத் துண்டாக்கிக் கீழேதள்ளினார். அந்தப்பாணம் துண்டுபட்டுப்போனமாத்திரத்தில், யமனுக்கும்யமனான இந்திரசித்து ஒருவேலாயுதத்தை யெடுத்துப் பிரயோகித்துவிட்டான். அஃதொரு சூரியன் வருகிறதுபோல வருகின்றதைக்கண்டு சகலலோகத்தாரு நடுக்கமுற்றனர். உடனே தனுர்வித்தியாசாமர்த்தியரான இலட்சுமணப்பெருமாள் அதையுந்துண்டாய்விழும்படி வெட்டித்தள்ளினார்.

அப்போது விபீஷணாழ்வான் தம்மீது இந்திரசித்து வேலாயுதத்தைப் பிரயோகித்தானே யென்று அதிககோபங்கொண்டு, பாதசாரியாகத்தானே வாயுவேகமாய்ப்போய்த் தம்முடைய தண்டாயுதத்தினாலே இந்திரசித்துவின்

No. 62.
இலக்குமணர் இந்திரஜித்துவைசங்கரித்து, அவன் சிரசை அங்கதனுற் கொண்டுபோய் ஸ்ரீராமருக்குபாதகாணிக்கையாக வைத்தல்.



தேரைச் செலுத்திக்கொண்டிருந்த சாரதியையும், தேரிற்பூட்டிய குதிரைகளையும் கொன்று, அவனுடையகுடிப்பையு மாற்றிவிட்டார். இப்படியழிந்த அத்தேரின்மே லிருந்துகொண்டே இந்திரசித்து கோடி அம்புகளைப்பிரயோகித்து விபீஷணாழ்வான் தோள்களின்மேலும், இலட்சுமணப்பெருமாள் தோள்களின்மேலும், மற்றவானரவீரர்களுடைய மார்பின்மேலும், இரத்தவெள்ளம் பெருக்கெடுக்கத் தக்கதாகச்செய்து அண்டங்களெல்லாம் கிடுகிடென்று நடுங்கும்படி வீராஷ்டகாசம்பண்ணினான்.

இந்திரசித்து ஆகாசத்தில் மறைந்து இராவணனிடம் செல்லுதல்.

கவி.

ஆர்த்தவனனையபோழ்தி னழிவிலாத்தேர்கொண்டன்றிப்
போர்த்தொழில்புரியலாகா தென்பதோர்பொருளையுன்னிக்
காத்தவரிமையாமுன்னம் விசும்பிடைக்கரந்தானென்னும்
வார்த்தையைநிறுத்திப்போனா னிராவணன்மருங்குசென்றான்.

இவ்வண்ணம் அஷ்டகுலாசலங்களும், அஷ்டதிசையும், சப்த சமுத்திரங்களுங் கலங்கும்படியாகச் சப்தித்தவனாகிய இந்திரசித்தானவன் இனிவேறோர் தேரின்மீ தேறியல்லாமல் யுத்தஞ்செய்வது தகாதென்று நிச்சயித்துக்கொண்டு, பார்த்தகண் ணிமைப்பதற்கு முன்னம் ஆகாசத்தில் மறைந்துவிட்டானென்னும் ஒரு சாமார்த்திய வார்த்தையை யாவரும் சொல்லத்தக்கதாக மேகத்தில் மறைந்துபோய் இராவணனிடம் போய்ச்சேர்ந்தான்.

நிகும்பலைப் படலம் முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

இருபத்தேழாவது,

இந்திரஜித்துவதைப்படலம்.

இப்படலத்தில் இந்திரஜித்துஇராவணனைக்கண்டுவிபீஷணருடையகலகத்தையும் இலக்ஷுமணருடைய பராக்கிரமத்தையுங் கூறி இனிச்சீதையை விடுப்பதே நமக்குச்சிறப்பென் றறிவிக்கவும் அவனதுகேட்டுச்சினந்து தானே போருக்கெழமுயல, அக்கால் இந்திரஜித்து தடுத்து மீட்டுந் தானே போருக் கெழுந்து சென்று அன்றிரா முழுதும் இலக்ஷுமணரோடு கடும்போர் விளைக்க, சூரியோதயமானவுடனே இலட்சுமணர் இந்திரஜித்துச்செய்தமாயப்போரனைத்தையும் வென்று அவனைச் சங்கரிக்க, அதுகண்ட ஸ்ரீராமர் இலக்குமணருடைய வெற்றியை வியந்து விபீஷணரைச் சன்மானித்தல் சொல்லப்படுகின்றது.

இராவணன் தன்பால்வந்த இந்திரசித்துவைநோக்கி நடந்த வரலாறனைத்தையுங் கேட்க இந்திரசித்துச் சொல்லுதல்.

கவி.

விண்ணிடைக்கரந்தானென்பார் வஞ்சனைவிளைக்குமென்பார்
கண்ணிடைக்கலக்கநோக்கி யையுறவுழக்குங்காலை
புண்ணிடையாக்கைச்செந்நீ ரிழிதரப்புக்குநின்ற
எண்ணுடைமகனைநோக்கி யிராவணனினையசொன்னான்.

இங்கே வானரவீரர்கள் இந்திரசித்து ஆகாசத்தில் மறைந்துவிட்டானே; முன்போல ஏதேனு மோசஞ்செய்வானோவென்று கண்கலங்கிச் சந்தேகித்துக் கொண்டிருந்தார்கள். அத்தருணத்தில் தேஹமெல்லாம் சல்லடைக்கண்களைப் போலத் தொளைக்கப்பட்ட புண்களிலே இரத்தமொழுகத் தக்கதாகப்போய் எதிரேநின்ற மகாசூரனென்று யாவருங் கொண்டாடும்படியிருந்த இந்திரசித்துவை இராவணன்பார்த்து, அப்பா மேகநாதா! உன்னுடைய நிகும்பலையாக முடிவுபெறாமல் அழிந்துபோனதென்பதை உன்தோள்களிலே அபரிமிதமாய்ப் பதிந்திருக்கின்ற அம்புகளே யெனக்குத்தெரிவித்தன. கருடனைக்கண்டு படத்தையொடுக்கின பாம்பைப்போல ஒருநாளும் பின்னிடையாதவல்லமையுள்ள தேகநடுங்கி அதிகவருத்த முற்றிருக்கின்றாய். மகனே! நீ நடந்தகாரியத்தைச்சொல்லுக. என்றுகேட்ட தகப்பனாகிய ராவணனை இந்திரசித்துப்பார்த்து, ஐயா பிரதாபலங்கேஸ்வரா! நான்செய்த மாயவஞ்சனைகளையெல்லாம் உமதுதம்பியாகிய விபீஷணன் சூரியனைக்கண்ட இருளைப்போல ஓடச்செய்தான். அந்த உதவியினாலே இலட்சுமணன் தன்னுடைய சேனைகளுடனேகூடவந்து சூழ்ந்துகொண்டு, நான்செய்த யாகத்தைச் சிதைத்துவிட்டு, மிகுந்த கோபத்துடனே வெகுசமர்த்தாய் உயுத்தத்துக்கு எதிர்த்து நின்றான்.

அப்போது நான் பிரஹ்மா, விஷ்ணு, ருத்திரனென்று சொல்லுகின்ற மூன்று தேவர்களுடைய அஸ்திரங்களையும் பிரயோகித்தேன். அவைகளையெல்லாம் அந்த ஸ்ரீராமன்தம்பி தடுத்துவிட்டான். சமஸ்தலோகங்களையும் சகலதேவர்களையும் சிருஷ்டித்த தேவதேவோத்தமரான சாக்ஷாது நாராயணமூர்த்தியினுடைய அஸ்திரமானது நிராயுதனாய் அஞ்சலித்துக்கொண்டு நின்ற அந்தலட்சுமணனை வலஞ்சுற்றிவந்து போய்விட்டதேயானால், அதைக்காட்டிலும் வல்லமைபெற்றது லோகத்திலே வேறோரஸ்திரமும் இருக்கின்றதோ? ஐயா! நம்முடைய குலத்திற் பூர்வந்தொட்டுச் செய்துவந்த பாவத்தினாலேயே இந்த மாளாதபெரும்பழியைச் சம்பாதித்துக்கொள்ளலாயிற்று. அவ்விலக்ஷுமணன் கோபிப்பானேயானால் இந்த மூன்றுலோகங்களையும் ஒருவனே முடித்துப்போடுவான். நெருங்கின யுத்தநடக்கும்போது லோகமெல்லா மழிந்துபோகுமென்னும் அநுதாபத்தினாலே அவனென்மேற் பிரஹ்மாஸ்திரத்தை விடவில்லை. ஆகையால் நான் இதுவரையிலும் ஜெயம்

பெற்றுவந்தேன். மற்றிரண்டு அஸ்திரங்களையு நானேமறுபடியும் பிரயோகித்தேன். அப்போதும் அந்த அஸ்திரங்களை மாத்திரம் தடுத்துவிட்டான். இன்னமும் பகைவர்களுக்குப் பலம் விர்த்தியாகின்றது. அவர்கள் தங்கள் சொந்தபலத்தாலே நம்மைக் கொல்லுகிறதற்கு நிச்சயித் திருக்கின்றார்க ளென்று சொல்லிப் பின்னுஞ் சொல்லுகின்றான்.

இந்திரசித்து தன்கருத்தை இராவணனிடம் வெளிப்படுத்த வதைக்கேட்ட விராவணன் சிலவற்றைக்கூறல்.

கவி.

ஆதலாலஞ்சினேனென் றருளலையாசைதானச்
சீதைபால்விடுதியாயி னனையவர்சீற்றந்தீர்வர்
போதலும்புரிவர்செய்த தீமையும்பொறுப்பருன்மேல்
காதலாலுரைத்தேனென்று னுலகெலாங்கலக்கிவென்றான்.

ஐயா எனதருமைப் பிதாவே! அதற்காக நான் பயந்துவந்தேனென்று திருவுளப்படாதேயும். நீர்மாத்திரம் அந்தச் சீதையினிடத்தில்வைத்த ஆசையைவிட்டுவிடுவீரேயானால் அந்தராமலட்சுமணர்கள் கோபமாறிப் போய்விடுவார்கள். நீர் அவர்கள் விஷயத்திற் செய்த அபசாரத்தையும் பொறுத்துக் கொள்ளுவார்கள். நான் உம்மிடத்திலுள்ள பக்ஷத்தினாலே சொல்லுகின்றேனே யல்லாமல் வேறொரு காரணத்தினாலும் அல்லவென்று லோகங்களையெல்லாம் கலங்கச்செய்த மகாவீரனான இந்திரசித்துச் சொன்னான். இப்படியவன் சொன்னவுடனே இலங்காதிபதியாகிய ராவணன் தன்பத்துமுகங்களிலும் வக்கிரதந்தங்கள் பிரகாசிக்க இருபதுதோள்களுங் குலுங்கச் சிரித்து, அப்பா இந்திரசித்தே! நீ இனிமேல் இந்தச்சண்டைக்குப் போகமாட்டாய் போலே யிருக்கின்றது. மயங்காதே. நீ மனிதர்களுக்காகப் பயப்படவேண்டாம். வருத்தப்படவும் வேண்டாம். நானேபோய் என்னொருவில்லாலே அந்தமனிதர்களைச் செயித்து எனக்கு வெற்றியுண்டாக்கிக் கொள்கின்றேன் பார். என்றுகூறிப் பின்னுஞ் சொல்லுகிறான்.

கவி.

முன்னையோரிறந்தாரெல்லா மிப்பகைமுடிப்பரென்றும்
பின்னையோர்நின்றாரெல்லாம் வென்றவர்பெயர்வரென்றும்
உன்னைநீயவரைவென்று தருதியென்றுணர்ந்துமன்றா
லென்னையே நோக்கியானிந் நெடும்பகை தேடிக்கொண்டேன்.

பேதைமையுரைத்தாய்மைந்த வுலகெலாம்பெயரப்போரக்
காதையென்புகழினோடு நிலைபெறவமரர்காண
மீதெழுமொக்குளன்ன யாக்கையைவிடுவதல்லாற்
சீதையை விடுவதுண்டோ விருபதுதிண்டோளுண்டாய்.

வென்றிலெனென்றபோதும் வேதமுள் ளளவுமியானும்
நின்றுளெ னன்றோமற்றவ் விராமன்பேர் நிற்குமாயின்

பொன்றுதலொருகாலத்துந் தவிருமோபொதுமைத்தன்றே
வின்றுளார்நாளைமாள்வார் புகழுக்குமிறுதியுண்டோ.

விட்டனன்சீதைதன்னை யென்றனம்விண்ணோர்நண்ணிக்
கட்டுமதல்லாற்பின்னை யாதெனக்கருதுவாரோ
பட்டனனென்றபோது மெளிமையிற்படுகிலேனோ
னெட்டிரண்டுமான திசைகளையெறிந்துவென்றேன்.

அடா இந்திரசித்தே! முன்னே இறந்தவர்களெல்லாம் பின்னுலிருக்கின்றவர்கள் இந்தப்பகையை முடித்துவிடுவார்களென்று நினைத்தார்கள். பின்புள்ளாரெல்லாரும் எதிரிற்போனவர்கள் ஜெயத்தினைப் பெற்றுக்கொண்டுவருவார்களென்று நினைத்திருக்கின்றார்கள். இப்போதுநீபோய் அந்தமனிதர்களை ஜெயம்பெற்றுக் கொடுப்பா யென்று நானினைக்கவில்லை. நானே யிந்தப்பகையைத் தேடிக்கொண்டது. நானேயிவர்களை ஜெயம்பெறுவேன். இனி வேறொருவரையும் அனுப்ப நானினைக்கவே யில்லை. நீபுத்தியில்லாத வார்த்தையைச்சொன்னாய். இந்த லோகங்களெல்லாம் அழிந்தாலும் அழியாத பெருஞ்சரித்திரமானது என்புகழுடனே நிலைநிற்கும்படியாகத்தேவர்கள் கண்முன்னே ஜலபுற்புதம்போன்ற இந்தத்தேகத்தைவிட்டாலும் விடுவேனேயல்லாமல், எனக்கிருபதுதோள்களிருக்கவும் என்பிராணனோடே சீதையை விட்டுவிடுவேனோ? நாமொருவேளை தோல்வி யடைந்தபோதிலும் வேதமுள்ளபரியந்தமும் அந்தராமன்பேர் நிற்பதுபோல என்பேரும் நிலைநிற்குமல்லவா? வீரமெப்போதாவது தவிர்ந்துபோகப்போகிறதா? இன்றுள்ளவர்கள் நாளைக்கிறப்பாரென்பது யாவர்க்கும் பொதுவல்லவா? புகழொன்றுமாத்திரந்தான் நிலையாய்நிற்கும். நான்சீதையை விட்டுவிட்டபோதிலும் தேவர்களெல்லாம் இலேசாய்நினைத்துவந்து என்னைக்கட்டுவார்களே யல்லாமல், திரிலோகபயங்கரனான இராவணனென்று எள்ளளவாவது உள்ளநடுங்கிப் பயப்படப்போகின்றார்களா? அல்லவென்று நானிறந்தாலும் அற்பத்திலிறந்து போகமாட்டேன். நானிந்தத் தசதிசைகளையும் வெற்றிபெற்றவீரனென்று நீ அறியமாட்டாயா? வீண்வார்த்தைகளைப் பலவாய்ச்சொல்லிப் பிரயோசனமென்ன? நீயுன் அரண்மனையைப்போய்ச் சேர்ந்து உன்தோளிற்பதிந்திருக்கின்ற அம்புகளையெல்லாம்வாங்கி, பெரியயுத்தத்திலேபட்ட வருத்தத்தைத் தீர்த்துக்கொண்டு, இந்தராத்திரியைச் சுகமாய்க் கழிக்கப்போய்விடுக. என்று சொல்லி நீண்டபற்களையுடைய புலியானது மிகவுஞ்சீறிக்கோபித் தெழுந்தாற்போல இராவணன் சிம்மாசனத்தைவிட் டெழுந்திருந்து, என்னுடையதேரை விரைவிற்கொண்டுவாருங்கள் கொண்டுவாருங்களென்று ஆர்ப்பரித்தான்.

இந்திரசித்து இராவணனைத்தேற்றிச்சென்று இலட்சுமணனோடு கடும்போர் விளைத்தல்.

கவி.

எழுந்தனன் றன்னைநோக்கி யிணையடியிறைஞ்சியெந்தாய்
ஒழிந்தருள்சிற்றஞ்சொன்ன வுறுதியைப்பொறுத்தியென்று

கழிந்தனெனென்றபின்னர் நல்லவாக்காண்டியென்று
மொழிந்தனன்றெய்வத்தேர்மே லேறினன்முடியலுற்றான்.

அப்படிப்புறப்பட்ட ராவணனை மாண்டுபோகிறதற்குச் சமீபித்தவனை இந்திரசித்துத் தடுத்து அவனுடைய காலில்விழுந்து, ஓ என்பிதாவே! என்மீது உமக்குண்டானகோபத்தை நீக்கியருளவேண்டும். நீர்கொண்ட உறுதியை நிலைநிறுத்தி யிருக்கின்றீர். நானேவப்படி நிலைநிறுத்தாமற்போனேன். இனியுமக் குண்டாகப்போகின்ற நன்மையை நீரேபார்க்கப்போகின்றீர். என்று சொல்லிவிட்டுத் தேவர்களிடத்திற் பறித்துக்கொண்ட ஒருதிவ்யரதத்தின்மேலேறி, தானதுவரையிலும் வெளியிடாமல் மறைத்துவைத்திருந்தமந்திரவலியுள்ள ஆயுதங்களையும், இன்னுந்தன்னிடத்திலுள்ள ஆடையாபரணங்களையும், தேவர்கள்தனக்கு அடைக்கலப்பொருளாகக் கொடுத்திருந்தவைகளையெல்லாம் விரும்பினபேர்களுக் கெல்லாந் தானஞ்செய்துவிட்டு, துஷ்டனான ராவணனைக்கடைக்கண்ணாற் பார்த்துப்பார்த்து இரண்டுகண்களிலுந்தாரைதாரையாய் நீர்பெருகும்படியாக யுத்தகளத்தைநோக்கிப் போயினான். அப்போதிலங்கையிலுள்ள இராட்சசசிரேஷ்டர்களெல்லா மெழுந்து அதிவேகமாயோடிவந்து, ஐயா வெற்றிமாலையைத்தரித்த தோள்களையுடைய இந்திரசித்தே! உம்மைவிட்டுப் பிரியமாட்டோம். உம்மோடுகூடவே நாங்களும் இறந்துபோகிறோமென்றார்கள்.

அதைக்கேட்ட இந்திரசித்து அவர்களைப் பார்த்து, ஓ நண்பர்களே! அப்படியல்ல; நீங்களெல்லா நம்முடைய எஜமானனான இராவணனைக் காத்துக்கொண்டிருங்கள். நீங்கள் மனங்கலங்கவேண்டாம். இன்றைக்கே அந்த மனிதர்களை ஜெயித்துவிடுகிறேன். என்றுசொல்லி அவர்களைச்சமாதானஞ்செய்தபோது அவர்களிற் சிலர் வணங்கினார்கள். சிலர் வாழ்த்தினார்கள். சில ரவன்வடிவத்தைப்பார்த்துத் தம்வாயுலர்ந்து நின்றார்கள். சிலர் பெருமூச்சுவிட்டார்கள். சிலர்மனமுருகினார்கள். அப்போது பயந்து இரைந்துகொண்டு வந்து பார்க்கின்ற இராக்ஷசஸ்திரீகளுடைய கடைக்கண்களென்கிற வேலாயுதங்கள் இந்திரஜித்துவின்மேற்பாய, அந்தயுத்தத்தை ஜெயித்து வெகுவியசனத்துடனே புறப்பட்டுப்போனான். முன்னமிவன் மேகத்தில் மறைந்தபோது அவ்விடத்தில் இளையபெருமாள்பிடித்தவில்லுடனே ஆகாசத்தைப்பார்த்து, ஓ விபீஷணரே! அந்தத்துஷ்டன் ஓடிப்போனான்போலே யிருக்கின்றது. இருந்தானேயானால் ஏதாவது செய்வானல்லவா? ஒன்றையுங்காணோமேயென்றார். இப்படிச்சொல்லிக் கொண்டிருந்த சற்றுநேரத்திற்குள்ளே ஆயிரங்குதிரைகள் பூட்டிய தேரினுடைய விரைச்சலைக் கேள்விப்பட்டார்.

அந்தத்தேரானது மகமேருவினதுசிகரமும் உருளும்படியாகவும் மற்ற பர்வதங்களெல்லாம் நெக்குவிடும்படியாகவும் வேகத்தையுடையது. சுவர்ன மயமாகிய கொடிகள்கட்டினது. இடியைப்போலு மதிர்ச்சியையுடையது. மின்னற்கூட்டம் திரண்டு விளங்குவதைப்போல் இரத்தினவிளக்கமுடையது. கட

லைப்பானம்பண்ணுகின்ற வடவாமுகாக்கினியானது வெளிப்பட்டு வருகிறதுபோல உலோகங்களெல்லாம் திக்குத்திக்குகளாகப் பறந்தோடும்படியாகவும், சமுத்திரமெல்லாஞ் சுழன்றிடத்தக்கதாகவும், உலோகங்கள் அடுக்கழியவும், சூரியசந்திரர்கள் கதிமாறவும், வானரசேனைகள் குடல்சரியவும், அஷ்டகுலாசலங்கள் நிலைதடுமாறிப் போகவும், பூமிவெடித்துப் பாளம்பாளமாய்க் கிழிபட்டுப்போகவும், அந்தவெடிப்பின் வழியாகச் சர்ப்பராஜனிடத்திலிருந்து புறப்பட்டவிஷத்தைப்போல இருள்பரவிநிற்கவும், ஆதிசேஷனுடைய படங்கள் நசுங்குண்ணவும், எதிருள்ள விருளானது பட்டப்பகலைப்போல வெளிச்சமாகவும்வந்து சேர்ந்தது.

கவி.

ஆர்த்ததுநிருதர்தமனிகமுட னமரும்வெருவினர்கவிகுலமும்
வேர்த்ததுவெருவலொடலம்வரலால் விடுகணைசிதறினனடுதொழிலோன்
தீர்த்தனுமவனெதிர்முடுகிநெடுந்திசை செவிடெறிதரவிசைகெழுதிண்
போர்த்தொழில்புரிதலுமுலகுகடும் புகையொடுசிகையனல்பொதுளியதால்.

இச்சமயத்தில் இராட்சசக்கூட்டங்கள் யுகாந்தகாலசமுத்திரம்போலப் பெருங்கோஷ்டமிட்டார்கள். ககனவாசிகளாகிய தேவர்களெல்லாம் பயப்பிராந்திகொண்டார்கள். குரங்குக்கூட்டங்களெல்லாம் வேர்த்துப்பயந்து ஐயோ இனியாதுசெய்வது நாசகாலன்வந்துவிட்டானேயென்று மனச்சுழற்சிகொண்டன. அதைப்பார்த்தவனாகிய பாதகன் தனதுவில்லைவளைத்து நாண்பூட்டி கோடாநுகோடியாகப் பாணங்களைப் பிரயோகித்தனன். இதைப்பார்த்தவராகியஇளையபெருமாளும் அவ்விந்திரசித்துவின் முன்னமணுகி அஷ்டதிக்குஞ் செவிடாகும்படி மகாவிசையோடு நாணேறிட்டுடங்காரஒசையையெழுப்பி அநேகபாணங்களைப் பிரயோகிக்க லோகமெல்லாம் புகைமண்டி அக்கினிபற்றியெரிந்தது. விபீஷணாழ்வான் இளையபெருமாளைப்பார்த்து, ஸ்வாமீ ! இனித்தேவரீர் இவனைவிட்டுவிட்டால் வெற்றிமாலையை அணியமாட்டீரென்று வணங்கிச்சொன்னார். அதைக்கேட்ட சுந்தரபுருஷராகிய ஸ்ரீராமாநுஜர் மீட்டும்வில்லைக் குணடங்காரம்பண்ணி, உலோகமெல்லாம் தத்தளிக்கவும் – அஷ்டகுலா சலங்களினு மணனுதிரவும் – பூமியைத் தாங்கிக்கொண்டிருக்கின்ற ஆதிசேஷனும் திடுக்கிடவும்–இடிக்குச்சமமானபாணங்களை அடுக்கடுக்காகப் பிரயோகித்தார். இப்படியிருக்கும்போது இந்திரஜித்துவிட்ட அக்கினிமுகாஸ்திரங்களாலே வானரர்கள் கண்டகண்ட விடங்களிற் சிதறியோட்டம்பிடித்தார்கள். இளையபெருமாள் பிரயோகித்த அனல்முகப்பாணங்கள் வடவாக்கினியைப்பார்க்கிலும் எரிந்துகொண்டு சம்மரிக்கத் தலைப்பட்டபடியினாலே இராக்ஷசர்களெல்லாம் திக்குத்திக்குகளாகச் சின்னபின்னப்பட்டு ஓட்டம்பிடித்தார்கள்.

அப்போதுலோகமுழுவதும்அக்கினிமயமாய்நிறைந்தபடியினாலேஇருதிறத்தாருடைய சேனைகளும் எண்ணத்தொலையாதபடிமாண்டார்கள். இளைய

பெருமாளும்இந்திரஜித்தும் ஒருவரையொருவர் குறிப்பிட்டுப்பிரயோகிக்கின்ற அஸ்திரவருஷங்கள் அக்கினிமழைபோலவும்இடிமழைபோலவும்பாய்ந்தன. இந்திரஜித்துவிடப்பட்ட பாணங்களை இளையபெருமாள் விடுகிறபாணங்கள் அங்கங்கே துண்டுதுண்டாக்கிக் கொண்டுபோய் அவனுடைய உடலிலுள்ள இரத்தங்களைப் பானம்பண்ணின. இந்திரஜித்துவின் பாணங்கள் இளையபெருமாளுடைய கவசத்தைப் பேதிக்கமாட்டவுமில்லை. அதைக்கிழிக்கவுங்கூடாமற் போயின. ஆஞ்சநேயருடைய திருமேனியில் மாத்திரம் புற்றில்நுழைகின்ற பாம்பைப்போல நுழைந்தன. அப்போது இளையபெருமாள் விஷத்துக்கொப்பான இந்திரசித் தணிந்துகொண் டிருக்கின்ற கவசமானது சின்னபின்னப்பட்டுப் போகும்படி அநேககூர்மையான பாணங்களைப்பிரயோகித்தார். அதைக்கண்ட இந்திரசித்து தன்தேகமெல்லாம் சல்லடைக் கண்கள்போலத்தொளைக்கப்பட்டதனுற் கண்களில் அக்கினிப்பொறிபறக்கத் தக்கதாகக் கோபித்தேவின பாணங்கள் இளையபெருமாள்மேற் படாமல் ஆகாச மார்க்கத்திலேயே ஒய்ந்துபோகிறதைக்கண்டு தேவர்கள் சந்தோஷத்தினலே ஒருதோள் ஆயிரந்தோள்களாகப்பூரித்தார்கள்.

அதைப்பார்த்த இந்திரசித்து இனிநாமிவனை வில்லால் ஜெயிக்கிறதற்கு முடியாதென்பதை யறிந்து, பிர்ம்மாவின் புத்திரரும் தனது பாட்டனுமாகிய புலஸ்தியப் பிரம்மாவினிடத்தில் வாங்கினதும் சூரியனுக்கீடான பிரகாசமுள்ளதுமாயிருக்கின்ற ஒரு வேலாயுதத்தை யெடுத்து, அதிவேகத்துடனே வல்லமைகொண்டு மேகத்துக்கொப்பாக வீசியெறிந்தான். அந்தவேலாயுதமானது அதிகசாஜ்ஜொல்வியமாய் வெளிப்பட்டது. அதை இளையபெருமாள் கடாக்ஷித்து, சப்தரிஷிகளுடைய சொல்லைப்பார்க்கிலும் வல்லமையுள்ளதான ஒரு அக்கினிமுகபாணத்தினலே இரண்டுதுண்டாக முறிபட்டுவிழும்படிச் செய்து பின்னு மனேகபாணங்களைப் பிரயோகித்தார். அவைகள் ஆணியறைந்ததுபோல இந்திரசித்துவின் தேஹமெல்லாம் ஆயிரமாயிரமாய் நுழைந்து புண்படுத்தி, இரத்தவெள்ளம் பூமியில் வழிந்தோடச் செய்தன. இந்திரசித்துவின் கைகள் பாணங்களை யெடுக்கிறதற்குப் போகிறதைக்கண்ட சூரியவமிசோத்பவரான இளையபெருமாள் சிலபாணங்களைப் பிரயோகித்து, அவன் முதுகிற்கட்டியிருந்த அம்பறுத்தூணியையும், அதிலுள்ள அம்புகளையும், துண்டுதுண்டாகும்படி அறுத்தெறிந்து, இவனுக்குத் தேரிருக்குமானல் இவன்பலங்குறையாது. பாணங்களால் குதிரைகளும் இறக்கமாட்டா. அலங்கரித்திருக்கின்ற மணிவடங்கள் துணிபடமாட்டா. இந்தத்தேர் மிகவுஞ்சிறப்பான நிலைமையுடைய தென்று தெரிந்து ஒருபாணத்தைப் பிரயோகஞ்செய்து, சாரதியினுடைய மலைபோன்ற தலையை யறுத்துப் பூமியிலுருட்டிவிட்டார்.

அப்போது இந்திரசித்துவினுடைய தேரானது ஒருவருஞ் செலுத்துதற்கில்லாமல், தவஞ்செய்து பஞ்சேந்திரிய விஷயங்களி லிழுப்புண்டு வருத்

தப்படுகிறவனுடைய மனதைப்போலவும், மேனியை மினுக்கிக் காமத்தை விலைப்படுத்தித்தந்திரத்தாற் பொய்யைமெய்போற் காட்டுகின்றவேசைகளினுடையகற்பைப்போலவும், பலவழிப்பட்டு ஓடத்தொடங்கியது. அதைக்கண்ட இந்திரசித்து அந்தக்குதிரைகளின் இசைவின்படித் தானேசெலுத்திக்கொண்டு, தன்தேகத்தையே அம்பறாத்தூணியாக வைத்து, அதிற்பதிந்திருக்கின்ற அம்புகளைப் பறித்தே இளையபெருமாள்மீதும்— அனுமான்மீதும் — மற்ற வானரங்கள் மீதும் — அநேகமாகப் பிரயோகஞ்செய்து, தேவர்களெல்லா நடுங்கத்தக்கதாக அட்டகாசஞ்செய்தான். அப்போது தேவர்கள் வீரரென்று சொல்லப்பட்டவர்களுக் கெல்லா முதன்மையாகநிற்கிற வீரனுக்கு மிவன். வீரர்களுடைய தன்மை இவனொருவனிடத்திலேதா னிருக்கின்றது. சூரரென்று சொல்லப்பட்டவர்கள் மரணமாகிற காலத்திலும் தங்களறிவு மாறமாட்டார்கள். இவ்விரண்டுபேர்தான் வில்வீரரென்னத்தக்கவர்கள். என்று தெய்வீகமாகியகற்பகப் புஷ்பங்களை வருஷித்தார்கள். அப்போது இளையபெருமாள் அவன் செய்கையைப் பார்த்து, இவனே தன்மீதுபாய்ந்திருக்கின்ற அம்புகளையே பறித்து நம்மீது எய்கின்றான். அப்படியெய்வதிற் கையுந்தடுமாறவில்லை. மனமும் உயிரைப்போலக் கலங்கவில்லை. தேகத்திற் கோடிகோடியாக அம்புகளைப் பிரயோகிக்கவும் கொஞ்சமேனுங் கண்சிமிட்டவுமில்லை. இவன்மாண்டுபோனு லிவனோடே ஆண்பிள்ளைத்தனமும் போய்விடுமென்று அவன் சாமர்த்தியத்திற்கு மெய்ச்சினார்கள்.

இலட்சுமணரும் விபீஷணரும் இந்திரசித்து இறக்கவேண்டியதைப்பற்றிச் சில வாலோசித்தல்.

கவி.

தேரினைக்கடாவிவானிற் செல்லினுஞ்செல்லுஞ் செய்யும்
போரினைக்கடந்துமாயம் புணர்க்கினும்புணர்க்கும்போயக்
காரினைக்கடந்தும்வஞ்சங் கருதினுங்கருதுங்காண்டி
வீரமெய்ப்பகலினல்லால் விளிகிலனருளில்வெய்யோன்.

அப்போது விபீஷணாழ்வான் இளையபெருமாளை வணங்கி, ஸ்வாமி! இவன் தேரைச் செலுத்திக்கொண்டு ஆகாசத்தில் மறைந்துபோனாலும் போவான். செய்துகொண்டிருக்கின்ற யுத்தத்தைவிட்டு ஏதாவது மாயஞ் செய்தாலும் செய்வான். மேகத்தில் மறைந்து வஞ்சனைசெய்தாலுஞ் செய்வான். இவன் பகற்காலத்திலல்லாமல் இராத்திரியிலிவன் மாளமாட்டான் என்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டார். இலங்காதிபதியான இராவணசகோதர ரிப்படிச்சொல்லக்கேட்ட இராமாநுஜர், அவனிதோ சாகப்போகிறானே யல்லாமல் இனியெங்கே தப்பிப்போவான். அவனெங்கேபோனாலும் என்பாணமும் அங்கே போகுமல்லவா? இவன் பலமெல்லா மொடுங்கிப்போனான். இனித்தாமசமில்லை. இப்போதே நாமிவனை வெற்றிகொள்ளலாம். என்று சொல்லிக்கொண் டிருக்கும்போது இந்திரஜித்துவி னிரதத்தைப்போலச்

செக்கர்நிறமானது திசையெல்லாம் படரும்படியாய், அவன் தேகத்திற் பதிந்திருக்கின்ற அம்பைப்போல நெருங்கிய ஆயிரங்கிரணங்களை வீசிப் பிரகாசிக்கின்ற தேரில்தோன்றுகின்ற சிறப்புடனே, அவ்விந்திரஜித்து ஆகாசத்தில் மறைந்து தூரநின்றாற்போலச் சூரியன் உதயமானான். அக்கால் உலகத்தில் யாவரும் சந்தோஷித்தார்கள் பொழுதும் விடிந்தது. சூரியனும் விளக்கைப் போலேமேலே பிரகாசித்தான். இனிராக்ஷசர்களாகிய இருள் மாண்டுபோய் விடும். மாயமெல்லாங் குறைந்து வலியுங்கெட்டு இந்திரஜித்தும் இனி மரணமடைந்துவிடுவான். என்று தேவர்கள் சுவர்க்கமெல்லா நிறையும்படி கல்லென்று ஆரவாரித்தார்கள்.

அப்போ தினிவிளையும் விளைவையறிந்த விபீஷணாழ்வான் இலட்சுமணரைப்பார்த்து, ஸ்வாமீ! கூர்மைமழுங்காத சூலாயுதத்தையுடைய சங்கரமூர்த்தியானவர் கிருபைசெய்து கொடுத்த இந்தத்தேரழியாதவரையிலும், இவன்பிடித்திருக்கின்ற வில் முறியாதவரையிலும், இவன் மரணமாகமாட்டான். இது சத்தியமாகுமென்று சொன்னார். அதைக்கேட்ட இளையபெருமாள் நீர் சொல்வதெல்லா நிச்சயந்தானென்றுகூறி, இந்தப் பச்சைக் குதிரைகளும் — கொடி-குடை-மொட்டு-கொடுங்கை-தட்டு - சக்கரத்தோடு அச்சுமுதலாகிய பலவுறுப்புகளுடன்கூடிய தேரும் — இலேசிலொழிய மாட்டாதென்பதைத் திருவுளத்தில் நினைத்து, வில்வித்தைக் காசாரியரான அந்த ஸ்ரீராமாநுஜர் தமதுவல்லமையினால் அந்தத்தேரின் ஆணிகளை வேறுபடுத்தி, அச்சுவேறு சக்கரம்வேறாகக் கழலும்படிச் செய்துவிட்டார். அப்படித் தேர்த்தட்டுவிலகிக் கீழேவிழுந்தவுடனே அதிற்கட்டியிருந்த குதிரைகளெல்லாம் எவ்வாறாயினவென்றால், ஒருமரமானது கோடரியால் வெட்டுண்டு கிளைவேறு முதல்வேறாகி வீழ்ந்தபோது அதில் வாழ்ந்திருந்த பக்ஷிகளெல்லாம் பலவீனப்பட்டுப் பறந்துபோவது போலப் பலவாறாக ஓட்டம்பிடித்தன. அப்படியழிந்த தேர்த்தட்டிலிருந்த இந்திரசித்து அங்கிருந்த ஆயுதங்களையெல்லாம் வாரிவாரி இளையபெருமாள்மீது வீசியெறிந்தான். அவைகளை யெல்லாம் ஸ்ரீராமாநுஜர் தம்முடைய திவ்வியபாணங்களால் துண்டு துண்டாக்கிவிட்டார்.

உடனேயவன் ஆகாசத்திற்பாய்ந்து மூன்றுலோகங்களும் கிழிபட்டுப் போகும்படியாகக் கர்ச்சித்தான். அப்போது அவனையொருவரும் பார்க்கவில்லை. அவன் கர்ச்சனையைமாத்திரம் கேட்டார்கள். அப்படிக்கர்ச்சித்த மல்லயுத்தத்தில் தேர்ந்த தோள்களையுடைய இந்திரசித்து தான்பெற்ற வரத்தின் வல்லமையினாலே ஆகாசத்திலிருந்து மலைகளை வருஷித்தான். அப்போது வானரவீரர்கள் ஓடிப்போவதற்குத் திக்குத்திசை தெரியாதபடியினால் தலைகளும் உடல்களும் நசுங்கிப் பூமியில் விழுந்தார்கள். அக்காலெங்கேபார்த்தாலும் சிலாவருஷமே யல்லாமல் வேறொன்றுங் காணப்படவில்லை. இந்திரசித்துவோ ஆகாசத்தில் மறைந்து காணப்படாதிருந்தபடியினாலே, இளையபெருமாள் சமஸ்ததிக்குகளிலும் நிறைந்துநின்ற ஆச்சரியசேஷ்டிதரான

ஸ்ரீமகாவிஷ்ணுவின்வடிவத்துக்கொப்பாகத்திவ்வியபாணங்களை யோயாமற் பிரயோகித்துக்கொண்டிருந்தார். அந்தப்பாணங்கள்எல்லாத்திக்குகளிலுநிறையவே யுத்தஞ்செய்யும் வல்லமையிழந்து கறுத்த மேகங்களின் கூட்டத்துக்கு மத்தியில் இரத்தமேகமான திருப்பதுபோல் நின்ற இந்திரசித்துவினுருவத்தை உலோகமெல்லாநிறைந்திருக்கின்ற சர்வவியாபகமூர்த்தியான இளைய பெருமாள் பார்த்து இது செய்வதானார்.

இந்திரசித்துவின் விற்பிடித்த கையை இலட்சுமணர் தறித்துத் தள்ளுதல்.

கவி.

சிலையறுதெனினுமற்றத் திண்ணியோன்றிரண்டதோளாம்
மலையறுதொழியாதென்னா வரிசிலையொன்றுவாங்கிக்
கலையறுத்திங்களன்ன வாளியான்கையைக்கொய்தான்
விலையறுமணிப்பூணோடும் வில்லொடுநிலத்துவீழ.

இவன்கையிற்பிடித்திருக்கின்றவில்முறியமாட்டாதேபோனாலும் போகுக. இவனுடையகையை யறுத்துத் தள்ளாவிட்டால் இந்தச்சண்டை முடியாது. என்று திருவுளங்கொண்டு தம்முடைய வில்லைவளைத்து அதிற் சோடசகலைகளோடுங்கூடிய சந்திரனுக்கொப்பாகிய ஒளியுள்ள அர்த்தசந்திரபாணத்தைப் பூட்டி, விலையுயர்ந்த ரத்னாபரணங்களைத் தரித்த அவனுடைய கையானது பூமியில் விழும்படிப் பிரயோகித்தார்.

அம்மாத்திரத்தில் அவன் விற்பிடித்திருந்தகையானது அமோகமான பெருங்காற்றடித்தபோது பிரளயகாலமேகமானது ஆகாசத்திற்போட்ட பச்சைவில்லுடனே கீழேவிழுந்ததுபோல விழுந்தது. பூமியைச் சுமந்துகொண்டிருக்கின்ற கார்க்கோடக சர்ப்பமானது தன்வாயினாற் சந்திரனைக் கடித்துக் கொண்டிருக்கின்றது போல விரல்களழுந்தப் பிடித்திருக்கின்ற வில்லுடனேகூட வீரபுருஷனாகிய இந்திரசித்துவின் இடதுகையானது கீழேவிழுந்து, மரங்களுமலைகளும் பொடியாகவும் குரங்குகள் நசுங்கிப்போகவும் அடித்தது. அப்போது அந்தர மார்க்கத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்த தேவர்களெல்லாம் திப்பிரமைகொண்டு, இந்திரசித்துவின்கையானது சூரியன் நடுங்கும்படியாகவும், சந்திரன் பயப்படும்படியாகவும், மேருமலை சிதறிவிழும்படியாகவும், ஒருநொடிப்போதில் அறுந்துவிழுந்துவிட்டதே: வாழ்நாளிப்படியிருக்க இந்தச் சூத்திரத்துக்கொப்பான ஜீவவாழ்க்கையைச் சிலபேர் இச்சிக்கின்றதென்னகாரணமென்று ஆச்சரியப்பட்டார்கள். தர்மதேவதைக்கொப்பானபுண்ணியபலத்தையுடைய இலட்சுமணப்பெருமாள்விடுத்த அம்பினாலே இராவணகுமாரனுடைய வச்சிரத்தையொத்தகையானது அறுந்ததைப் பார்த்தஇராக்ஷசர்களெல்லாம் தங்கள்தலைகள்அறுந்தாற்போலப்பயந்தார்கள்.

இப்படி இந்திரசித்துவின் கையற்றவுடனே வானரக்கூட்டங்கள் ஆரவாரித்து, மின்னலைப்போன்ற வக்கிரதந்தங்களையுடைய ராக்ஷசசேனைகளை யெல்லாம் திரும்பிவராதபடி கைகளினாலும், பற்களினாலும், விருக்ஷங்களி

னாலும், பெரியமலைகளினாலும், வீரசுவர்க்கலோகத்திற்குப் புதுக்குடியேற்றி விட்டார்கள். இவர்கள்செய்தி யிப்படியிருக்க - கார்கால மேகத்தைப் போலக் கறுத்தநிறத்தையுடையவனான இந்திரசித்து செவந்ததிருமேனியும் காளகண்டமுமுடைய உருத்திரமூர்த்தி மிகுந்தகிருபையுடனே கொடுக்கப் பெற்றுக்கொண்ட சூலாயுதத்தை யெடுத்தெறியும்படியாக எண்ணங்கொண்டு, இளையபெருமாளுக்கு முன்னே வந்து நின்று, இந்தச்சூலாயுதத்தினாலே உன்னைக்கொன்றுவிட்டல்லாமல் நானிறக்கப்போகிற தில்லையென்று சொன்னான்.

இலட்சுமணர் இந்திரசித்துவின் தலையைக்கண்டித்துப் பூமியில்விழச் செய்தல்.

கவி.

மறைகளேதேறத்தக்க வேதியர்வணங்கற்பால
இறையவனிராமனென்னு நல்லறமூர்த்தியென்னின்
பிறையெயிற்றிவனைக்கோறி பென்றொருபிறைவாய்வாளி
நிறையுறவாங்கிவிட்டா னுலகெலாநிறுத்திநின்றான்.

நேமியுங்குலிசவேலு நெற்றியினெருப்புக்கண்ணான்
நாமவேறனுமற்றை நான்முகன்படையுநாணத்
தீமுகங்கதுவவோடிச் சென்றவன்சிரத்தைத்தள்ளிப்
பூமழைமாரிசிந்தப் பொலிந்ததப்பகழிப்புத்தேள்.

இப்படிச் சண்டமாருதக் காற்றைப்போலவும், இடியைப் போலவும், வடவாமுகாக்கினியைப்போலவும், ஊழிக்காலத்தில்வந்த யமனுடைய உருவத்தைப்போலவும் — கொல்லுகிறேனென்று வாயாற்சொல்லிக்கொண்டு எதிரேநின்ற இந்திரசித்துவை அயோத்தியாபுரியின் மகாராஜாவான ஸ்ரீராமச்சந்திரருக்குத் திருத்தம்பியாராகிய தர்மஸ்தாபனரென்னும் இளையபெருமாள் பார்த்து, இனியிவனைத் தலையறுக்கவேண்டியகாலஞ் சமீபித்து விட்டதென்று நினைத்து, வேதங்களை யெல்லாங் கரைகண்ட மகாரிஷிகளாலே வணங்கும்படியானஸ்ரீயப்பதியே இந்தஸ்ரீராமரென்று சொல்லத்தக்க தர்ம்மஸ்வரூபியாயிருப்பாரானால்; இது வக்கிரதந்தங்களையுடைய இந்தராக்ஷசனைக் கொல்லக்கடவதென்று ஒருஅர்த்தசந்திர பாணத்தை வில்லிற்பூட்டி ஆகர்னபரியந்தமாக இழுத்து விட்டுவிட்டார்.

அம்மாத்திரத்திலந்த அர்த்தசந்திர பாணமானது விஷ்ணுவின்சக்கராயுதமும், இந்திரனுடைய வச்சிராயுதமும், நெற்றியில் நெருப்புக்கண்ணையுடையவருடைய பாசுபதாஸ்திரமும், பிரம்மாஸ்திரமுந்தோற்றுப்போகத்தக்கதாக அக்கினியைக் கக்கிக்கொண்டு போய், இந்திரசித்துவினுடைய தலையை அறுத்தெறிந்து பூமியில்தள்ளித் தேவர்கள் கற்பகப்பூமாரி பெய்யத்தக்கதாகப் பிரகாசித்தது. அந்தத்தலையானது உயரவெழும்பி ஆகாசத்தைப்போய் முட்டுகிறதற்கு முன்பாக இந்திரசித்துவினுடைய முண்டமா

னது பிடித்த சூலத்துடனும், உடலில்தைத்திருக்கின்ற பாணங்களுடனும், சண்டமாருதத்தா லடியுண்ட மேகமானது மின்னலுடனும், இடியுடனும், நிலத்தில் விழுந்ததுபோல வீழ்ந்தது. ஆகாசத்திற் பிரகாசிக்கின்ற இரண்டு சந்திரர்களைப்போல மின்னுகின்ற இரண்டு குண்டலங்களுடனேயும், சுருண்ட தலைமயிருடனேயும், செவந்த கண்களுடனேயும், சூரியன்தன்மண்டலத்தோடுவழுவி பூமியில் விழுந்ததுபோல இந்திரசித்துவினுடைய தலையானது நிலத்தில்வந்து விழுந்தது. அவனுக்குயிர்போனகாலத்தில் உள்ளேயிருந்த உணர்வும், இந்திரியங்களும், அந்தக்கரணங்களும், சிதறுண்டு போனதுபோல, கூர்மையானபற்களையுடைய இராக்ஷசர்கள் தங்கள் தலைவனிறந்தவுடனே போர்க்களத்தி லிருக்கச் சக்தியற்றவர்களாய்த் தங்களாயுதங்களை விட்டெறிந்து மிகுந்த பிரகாசத்தை யுடைய இலங்காபட்டணத்தை நோக்கி ஓட்டம்பிடித்தார்கள்.

இப்படிவில்வீரர்களுக்குள்ளே அதிகசிரேஷ்டனான இந்திரசித்துஇறந்தமாத்திரத்தில், இனி ராவணனுக்கு இலங்காதிபத்தியஞ் செல்லமாட்டாதென்கிற சந்தோஷத்தினாலே தேவர்களெல்லாம் உடுத்திருந்த வஸ்திரத்தைக்களைந்து மேலேயெறிந்து ஆரவாரித்தார்கள். அப்போதந்தத் தேவர்களெல்லாம் கொல்லா விரதிகளான சமணர்களுடைய நிருவாண தேவகூட்டங்களையொத்திருந்தார்கள். அக்கால்தேவேந்திரன் முதலான எல்லாத்தேவர்களும் தாங்கள் மறையாமல் மிகுந்த கிருபையுடையவர்களாய்ப் பூலோகத்தாருக்கெல்லாந் தெரியும்படியாகத் தரிசனையானார்கள். அவர்களுடைய திவ்வியதேகங்களை வானரர்களெல்லாம் தங்கள் கண்களாரக் கண்டார்கள். தர்மத்தில் நிலைத்து நிற்கின்றவர்களுக்கு அழிவென்பதொருநாளு மில்லையென்கிற பெரியோர் வார்த்தை சிறப்படைந்தது. இராக்ஷசர்களுடைய பாணங்கள் பாய்ந்ததினாலே மாண்டு கடலைப்போற் கிடந்த வானரப்பிரேதங்களெல்லாம் தேவர்களுடைய ஆசீர்வாதத்தால் உயிர்பெற்றெழுந்தன.

அங்கதகுமாரன் இந்திரசித்துவின் றலையைத்தூக்கிக்கொண்டுவர இலட்சுமணர் ஆஞ்சநேயர்மீ தாரோகணித்து ஸ்ரீராமபிரான்சந்நிதியிலெழுந்தருள அவர் சந்தோஷித்தல்.

கவி.

ஆக்கையினின் றுவீழ்ந்த வரக்கன்றன் றலையையங்கை
தூக்கினனுள்ளங்கூர்ந்த வாலிசேய்தூது செல்ல
மேக்குயர்ந்தமரர்வெள்ள மள்ளினர்தொடர்ந்துவீசும்
பூக்கிளர்பந்தர்நீழ லனுமன்மேலிளவல்போனான்.

அப்போது தேகத்தைவிட்டு மாண்ட இந்திரஜித்துவின் தலையை மிகுந்த சந்தோஷத்துடனே வாலிகுமாரனான அங்கதகுமாரன் கையில்தூக்கிக்கொண்டு முன்னேபோனான். தேவர்கள் வாரிவாரி இன்றக்கின்ற புஷ்பப்பந்தலுக்குள்ளாக ஆஞ்சநேயர்மீது இளையபெருமாளெழுந்தருளினார். அக்கால்

ஸ்ரீராமமூர்த்தியானவர் பூரித்ததோள்களை யுடையவரும், எங்குநிறைந்த புகழையுடையவரும், அதிக சந்தோஷமுட்கொண்ட திருவுள்ளத்தை யுடையவருமாகி, தேவர்கள் நிமித்தமாகப் பாற்கடலைக்கடைந்தவாலியின் புத்திரனாகிய அங்கதன் தூக்கிக்கொண்டு வருகின்ற இந்திரஜித்துவின் தலையைக் கண்டு, இராத்திரிகால சந்திரனிடத்திலுண்டான களங்கத்தைப்போல எனக்குண்டான பழியானது போகமாட்டாதென்றுபுலம்பிக்கொண்டிருந்தேன். இப்படிப்பட்ட வெனக்குத் தர்மதேவதை கிருபைசெய்த படியினாலே இப்போது அந்தத்துன்பம் நீங்கிவிட்டேன். இதைக்காட்டிலும் செல்வம் வேறே பெறப் போகின்றேனோ? இனி எனக்கென்னகுறை? என்று தமக்குள்தாமே சந்தோஷித்து அவ்வங்கதகுமாரனைப் பார்த்துச்சொல்லுகின்றார்.

ஓ வானராதிபதியே! தென்றிசையிற் கடல்சூழ்ந்த இவ்விலங்கையைக் காத்துக்கொண்டிருக்கின்ற அற்பத்திருட்டுப்பயலான இராவணன்பெற்ற பிள்ளையென்னும் இந்திரசித்துவை இலட்சுமணன் கொல்ல, அவனுடைய தலையை யெடுத்துக்கொண்டு நீ முன்னே வந்தபடியினாலே இனிநான் தலையெடுத்துப்போனேன். சத்திரபதியு மாய்விட்டேன். தேவர்களெல்லாம் தலையெடுக்கும்படியாகவும், சமுத்திரஞ்சூழ்ந்த பூலோகத்தாரெல்லாம் பிழைக்கும்படி யாகவும், தேவேந்திரன் பெருமையடையும்படி யாகவும், வேதபுருஷன் விருத்தியடையும்படியாகவும் ஆச்சுது. எப்போதுந் தேன் துளித்துக்கொண்டு வாடாமலிருக்கின்ற வெற்றிமாலையை யணிந்த அங்கதகுமாரா! தேவர்களையெல்லாஞ் ஜெயித்த இவ்விந்திரஜித்துவின் மாமிசமுள்ள தலையை நீ கையினாலே தூக்கினாய்: ஆ! ஆ! மகா அற்புதம்: என்று சந்தோஷங்கொண்டாடினார்.

அன்றியும் முன்னே இளையபெருமாள் போனது முதற்கொண்டு புத்திமயங்கி எழுந்தருளி யிருக்கின்றவரும், அதிகமாயமே தன் ஸ்வரூபமாகக் கொண்டிருக்கின்ற இந்த ராக்ஷசனைச் சத்தியமே ஜெயஞ்செய்து தர்மமே ரக்ஷிக்கவேண்டு மென்று விரதங்கொண்டிருக்கின்றவருமாகிய ஸ்ரீரகுநந்தனர்; தம்முடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற பரதாழ்வானைப்போலப் பக்தியையுடையவரான இளையபெருமாள் வருகின்ற விதத்தைக் கடாக்ஷித்தார். அக்கால் துஷ்டேந்திரியங்களை நசித்தவராய்த் திரும்பிவருகின்ற தமது திருத்தம்பியார்மேல் வைத்த திருக்கண்களாகிய தாமரையினிடத்திற் கண்ணீரானது தாரைதாரையாக வடிந்தது. அந்தக்கண்ணீர் அன்பின் கண்ணீரோ? அழுதகண்ணீரோ? ஆநந்தசமுத்திரமோ? எலும்புகளெல்லாம் உருகி வெளிப்பட்டுவருகிறகிருபாவாரியோ? அதை இன்னதென்று நிச்சயித்துச் சொல்லுகிறதற்கு யார்தரமாகும்?

இந்திரசித்துவின் தலையை ஸ்ரீராமர் பாதத்தில் காணிக்கையாகவைத்து இலட்சுமணர் வணங்க சுவாமி சந்தோஷித்தல்.

கவி.

விழுந்திழிகண்ணினீரு முவகையுங்களிப்பும்வீங்க
எழுந்தெதிர்வந்தவீர னிணையடிமுன்னரிட்டான்

சொழுந்தெழுஞ்செக்கர்ச்சுற்றைக் குழாங்கொளவெயிற்றினீட்டம்
அழுந்துறமடித்தபேழ்வாய்த் தலையடியிறையொன்றாக.

அப்படி யெழுந்தருளி வருகின்ற இளையபெருமாளானவர் ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரர் திருவடித் தாமரைகளில் தம்முடைய திருக்கண்களில்வடிகிற நீரும், சந்தோஷமும், எக்களிப்பும், அதிகரிக்கும்படியாகத் தெண்டனிட்டு; செம்பட்டை மயிர்க்கற்றைகளையுடையதும், பிரகாசிக்கின்ற வக்கிர தந்தங்களழுந்தும்படியாக உதட்டை மடித்ததும், பிளந்தவாயை யுடையதுமான இந்திரசித்துவினுடைய தலையை ஸ்ரீ பாதகாணிக்கையாகச் சமர்ப்பித்தார். அப்போது ஸ்வாமியானவர் தமது திருவடியில் இளையபெருமாள் வைத்த அந்தத் தலையைப் பார்ப்பார். தமது திருத்தம்பியாருடைய வீரலட்சுமி எழுந்தருளியிருக்கின்ற திருத்தோள்களைக் கடாக்ஷிப்பார். எதிரேசேவித்துக்கொண் டிருக்கின்ற வாயுபுத்திரரைக் கடாக்ஷிப்பார். இளையபெருமாளுடைய திருக்கரத்தி லிருக்கின்ற வில்லைக் கடாக்ஷிப்பார். தேவர்க ளானந்திக்கின்றதைக் கடாக்ஷிப்பார். இளையபெருமாள் இந்திரசித்துவைச் சம்ஹரித்த கொலையைத் திருவுள்ளத்தில் நினைப்பார். பிறகு மிகுந்த ஆநந்தத்தால் ஒன்றும் பேசாமலெழுந்தருளித் தமது திருவடித்தாமரைகளில் தெண்டன் சமர்ப்பித்துக்கொண் டிருக்கின்ற இளைய பெருமாளுடைய திருமேனியை, அதில் தைத்த அம்புகளின்வழியா யொழுகுகின்ற இரத்தங்கள் காளமேகத்திற் செவ்வான நிறங் கலந்ததுபோலவும், கருமாணிக்க மலையின்மீது சூரியோதய மானது போலவும், தமது திருமேனியில் தோயும்படியாக வாரித்தழுவி, அத்திருத்தம்பியாரைக் கடாக்ஷித்து இதனைச் சொல்லுகின்றார்.

கவி.

சம்பமதத்துக் களியானைக் காவற்சனகன் பெற்றெடுத்த
கொம்புமென்பாலினிவந்து குறுகினளென் றெனக்குளிர்ந்தேன்
வம்புசெறிந்தமலர்க்கோயின் மறையோன்படைத்த மாநிலத்தி்ற
றம்பி யுடையான் பகையஞ்சா னென்னுமாற்றந் தந்தனையால்.

அப்பா தம்பி! கொட்டாரத்திற் கட்டியிருக்கின்ற மத்தகஜங்களே திக்குகள்தோறும் காவல்காக்கத் தக்கதாக இராஜ்ஜியாதிகாரஞ் செலுத்தும்ஜனகமஹாராஜன்தனது தபோபலத்தாற் பெற்றெடுத்த சீதையும், இனியென்னிடம் வந்து சேர்ந்ததுபோலச் சந்தோஷமடைந்தேன். வாசனையோடுங்கூடிய மூலதாமரைப் புஷ்பத்தி லெழுந்தருளி யிருக்கின்ற பிரஹ்மாவினாலே சிருஷ்டிக்கப்பட்ட இந்தப் பூலோகத்திலே தம்பியையுடையவர்கள் பகைக்கஞ்சமாட்டார்க ளென்கிற ஆப்தவாக்கியத்தை நீயேதிருஷ்டாந்தப்படுத்தினாய். என்று திருவாய்மலர்ந்தருளி, இளையபெருமாள் திருத்தோளிற்கட்டித் தூக்கியிருந்த அம்பறாத் தூணியை அவிழ்த்திறக்கி, திருத்தோளும் திருமார்பு மறையவணிந்திருந்த கவசத்தின் தாட்பிணிப்பை விடுவித்துக் கழற்றி, உ-யுத்தத்தில் அம்புகள் தைத்ததனா லுண்டாயிருந்த புண்களைத் தமதுதிருத்

NO. 63. இந்திரஜித்தின சரீரத்தின்மேல்மண்டோதரிவிழுந்தழுகையில் இராவணன் சீதையைவெட்டுவேனென்றெழ, மகோதரன் தடுத்தல்.



இராவணன்மூலபலச்சேனையைவரவழைத்துக்காணுகையில்மாலியவானால் அச்சேனைவீரர்கள் இராமலட்சுமணர்கள்திறிமறிதல்.



தோள்களாற் பலதரம் ஒற்றி ஆறும்படிச்செய்து, திருத்தம்பியாருடைய திருமுகத்தைக் கடாக்ஷித்து, அப்பா புருஷதிலகமே இப்போது நீயடைந்த இந்தவெற்றி உன்னாலுமல்ல. மிகுந்த பலமுள்ள அனுமானென்னு நாமதேயமுள்ள நம்முடைய சிநேகனாலுமல்ல. வேறே யெந்தத் தேவ வரப்பிரசாதத்தினாலுமல்ல. இந்த விபீஷணாழ்வான் சம்பாதித்த தாக்கும். என்று புகழ்ந்து சொல்லிவிட்டுச் சந்தோஷமாக ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரரெழுந்தருளி யிருந்தார்.

இந்திரஜித்து வதைப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

இருபத்தெட்டாவது,

இராவணன்சோகப்படலம்.

இப்படலத்தில் சிலதூதரிலங்கையி லோடி இந்திரஜித்துவின் மரணத்தை இராவணனுக் கறிவித்தமாத்திரத்தில் அவன் வெகுவாய்த் துக்கித்தெழுந்து இரணக்களம்வந்து ஒருகை யறுபட்டுத் தலையிழந்துகிடக்கும் அவன்தேகத்தை யெடுத்து நகரத்துட்கொண்டுவர, அதுகண்ட மண்டோதரியானவள் சகிக்கமாட்டாத வியசனத்தோடு தன்பிள்ளைமேல் விழுந்தழ, இத்தனைக்கும் காரணமாகிய சீதையை இனி வெட்டியெறிவதே சரியென்று கையில் வாளேந்தி யெழக்கண்ட இராவணனை மகோதரன் அவனைத்தடுத்து நிறுத்துதல் சொல்லப்படுகின்றது.

இந்திரசித்துவின் மரணத்தைத் தூதுவர்கள் இராவணனுக் கறிவித்தல்.

கவி.

ஓதரோதன வேலைகடந்துராய்ப்
பூதரோதரம் புக்கெனப்போர்த்திழி
சீதரோதக் குருதித்திரையொரீஇத்
தூதரோதவெங் காலிற்றுளைந்துளார்.

இவ்வண்ணம் நடந்தவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த தூதுவர்கள், இந்திரசித்துவானவ னிளையபெருமாளால் கொலையுண்ட சங்கதியைச் சொல்லும்படி யுத்தகளத்தில் இறந்தவர்களைப்பற்றி அழுகின்ற வெகுராட்சசப்பிரஜைகளாகிய சமுத்திரத்தைக் கடந்து, ஒருவரை யொருவர் உராய்ந்துசென்று அப்போர்க்கள மெங்கும் வழிகிடையாது சுற்றிச்சுற்றி, ரோதனையால் தேகத்திலிருந்து வெளிப்பட்டு காற்றினால் வெம்மை நீங்கித் தண்மையைவாய்ந்த இரத்தக்கடலையுங் கடந்து பொன்மலையினது வயிற்றினுட்புகுந்தாற்போல இலங்கையின் கோபுரவாயிலுள் கடுங்காற்றைப்போல விரைந்

தோடினார்கள், கறுத்த அன்றிற் பெட்டைகளைப்போல இராக்ஷசஸ்திரீகள் அவரவர்கள் வீட்டுத்தெருமுற்றங்களிற் கூட்டங்கூட்டங்களாய் நின்று இன்றையோடு இலங்கை அழிந்துபோய் விட்டதென்று அழுதுகொண்டிருக்க இராவணனுடைய கொலுமண்டபத்திற்குச் சென்றனர்கள்.

கவி.

பல்லும்வாயு மனமுந்தம்பாதமும்
நல்லுயிர்ப்பொறை யோடுநடுங்குவார்
இல்லையாயின னுன்மகனின்றெனச்
சொல்லினார்பயஞ் சுற்றத்துளங்குவார்.

அவ்வண்ணம் சென்றதூதுவர்கள் தங்கள் வாய்களோடு பற்களும், நடந்துவந்தபாதங்களும், உயிருமனமுநடுங்கும்படி நின்றுசொல்லுகின்றார். ஐயா இராவணேஸ்வரா ! உம்முடைய ஜேஷ்டகுமாரனாகிய இந்திரஜித்து இன்றையதினமுதல் இப்பூமியிலில்லாமற் போய்விட்டார். என்று மிகுந்தபயத்துடனே சொன்னார்கள். அதைக் கேட்டமாத்திரத்தில் பக்கத்தில் நின்றிருந்த தேவர்களும், மஹாரிஷிகளும், நிர்த்தம் பண்ணிக்கொண்டிருந்த அரம்பை ஊர்வசி முதலானபேர்களும், இன்றைக்கு லோகம் அழிந்துவிடுமென்று துக்கத்துடனே நாலாபக்கங்களிலு மோடி யொளித்துக் கொண்டார்கள். இராவணன் கண்களில் நின்றும் அக்கினிபற்றி யெரியும்படிக் கோபங்கொண்டு, தன்கையில் வாளையுருவிக் கேதஞ்சொன்ன தூதுவர்களை ஓரேவீச்சாகவீசி யெறிந்துவிட்டு, இருபது கைகளும் அலைகளைப்போலச் சோர்ந்து விழும்படியாக ஒருபெருஞ் சமுத்திரம்போற் கிழேவிழுந்தான். அவன் வாயினிடத்திலிருந்து பெருமூச்சுப் புறப்பட்டது. கண்களில் அக்கினிப்பொறிகள் இவ்வுலகத்தைச் சுட்டெரிக்கத்தக்க ஊழித்தீயானது லோகமெல்லாம் பரவும்படிப் புறப்பட்டதுபோலப் புறப்பட்டன. படங்களையுடைய ஆதிசேஷனும், அந்த ஆதிசேஷனாற் சுமக்கப்பட்ட பூமியும், நிலைபெயர்ந்து கிறுகிறுவென்று சுழலும்படியாகத் தேஹத்தைப் புரட்டிப்புரட்டி விஷக்கடலைப்போலக் கோஷித்து, இந்திரசித்துவைக் கொன்றுவிட்டார்களேயென்று அக்கினிக்கொப்பாக அதிகதீக்ஷணமான கோபமும், பிள்ளையினிடத்தில் வைத்திருந்த அன்பும், தோன்றும்படியாக இருபது கண்களிலும் உருக்கின செம்பைப்போல இரத்தக்கண்ணீரூற்றெடுத்தோடப் பற்களை மலைகளும் பொடிப்பொடியாகும்படி நெறநெறவென்று கடித்து, இடியிடித்தது போலக்கைகளை மோதிப் பெரியமலையிலிருந்து கடல்நீர் புறப்பட்டதுபோலப் பத்துவாயிலுமிருந்து சொள்ளுநீர் வடியத்தக்கதாகப் புலம்பத் தொடங்கினான்.

இராவணன் இந்திரசித்திறந்தமைக்குப் புலம்பல்.

கவி.

மைந்தவோவெனு மாமகனேயெனும், எந்தையோவெனு மென்னுயிரேயெனும்
முந்தினேனுனை நானுளனேயெனும், வெந்தபுண்ணிடை வேல்பட்டவெம்மையான்.

புரந்தரன்பகை போயிற்றன்றேயெனும், அரந்தைதானை யார்த்தனரோவெனும்
கரந்தைசூடியும் பாற்கடற்கண்வளும், நிரந்தரம்பகை நீங்கினரோவெனும்.

நீறுபூசியு நேமியு நீங்கினேர், மாறுகொண்டொரு வேலை மறைந்துளார்
ஊறுநீங்கின ராயுவணத்திறே, யேறுமேறியு லாவுவரென்றுமால்.

வானமானமும் வானவரீட்டமும், போனபோன திசையிடம் புக்கனர்
தானமானவை சார்கிலர்சார்குவ, ரானமானுடர் வென்றிகொண்டேவெனும்.

கெட்டதாதர் கிளைத்தினையாவொரு, கட்டமானுடன் கொல்லவென்காதலன்
பட்டொழிந்தனனேயெனும்பன்முறை, விட்டழைக்கு முழைக்கும் வெதும்புமால்.

எழுமிருக்கு மிரைக்குமிரக்குமுற், றழுமாற்று மயர்க்கும்வியர்க்கும்போய்
விழும்விழிக்கும் கிடக்குந்தன்மேனியால், உழுநிலத்தை யுருளும் புரளுமால்.

ஐயனேயெனு மோர்தலையாளினம், செய்வனேயா வெசன்னுமங்கோர்சிரம்
கையனேனுனைக் காட்டிக்கொடுத்தனான், உய்வனேயென் றுரைக்குமங்கோர்சிரம்.

எழுவிற்கோல மெழுதியகைகளால், தழுவிக்கொள்கில னென்னுமங்கோர்தலை
உழுவைப்போத்தை யுழையுயிருண்பதே, செழுவிற்சேவக னேயெனு மோர்சிரம்

நீலங்காட்டிய கண்டனுமேமியு, மேலுங்காட்டி னெறிந்தபடையெலாம்
தோலுங்காட்டத் துரந்தனை மீண்டனின், ஓலங்காட்டிலை யோவெனுமோர்சிரம்.

நாகமாடு களத்திடைக்காண்பெனே, பாகசாதனன் மௌலியொடும்பறித்
தோகைமாதவ ருச்சியில்வைத்தநின், வாகைகாண்மல ரென்னுமற்றோர்தலை.

சேலியற்க ணியக்கர்தந்தேவிமார், மேவினித்தவிர் கிற்பர்கொல்வீரநின்
கோலவிற்குரல் கேட்டுக்குலுங்கித்தம், தாலியைத்தொட லென்னுமற்றோர்தலை.

கூற்றமுன்னெதிர் வந்துயிர்கொள்வதோர், ஊற்றந்தானுடைத் தன்றெனையும்மொளித்
தேற்றவெவ்வலி குற்றனையெல்லையில், ஆற்றலாயென் றழைக்குமங்கோர்தலை.

இப்படியாக ராவணன் வெந்தபுண்ணில் வேல்நுழைந்ததுபோன்ற தன்மையையுடையவனாய், அப்பா பிள்ளையே! என்பான். என்னருங்குமாரனே! என்பான். என்னப்பனே! என்பான். என்னுயிரே! என்பான். உனக்கு முன்னே இதோவந்தேன் என்பான். நான் பிந்தியிருப்பனோ என்பான். தேவேந்திரனுக்குப் பகையாயிருந்தாயே: அந்தப்பகை நீங்கிவிட்டதா என்பான். துன்பப்பட்டுக்கொண் டிருந்த தேவர்கள் இப்போது ஆர்ப்பரித்தார்களோ? என்பான். கரந்தம்பூவைத் தரித்த சிவமூர்த்தியும், பாற்கடலிற் பள்ளிகொண்டு ஒருவருக்கும் அகப்படாமலொளித்துக் கொண்டிருக்கின்ற அந்தவிஷ்ணுமூர்த்தியும், எப்போதுந் தங்களுக்குப் பகையாளிகளில்லாமல் இனிச்சுகப்பட்டார்களோ என்பான். விபூதியைப் பூசிக்கொண்டிருக்கின்றவனான சங்கரனும் - கையிற் சக்கராயுதத்தை வைத்துக்கொண்டிருக்கின்றவனான விஷ்ணுவும் - உனக்குப்பயந்தோடிப்போய் மலையிலும் கடலிலும் ஒளித்துக்கொண்டிருந்தவர்கள், தங்களுக் குன்னாலுண்டாயிருந்த இக்கட்டு நீங்கினவர்களாய் இனிவிருஷபத்தின் மேலும் கருடன்மீது மேறிக்கொண்டு உல்லாசமாக உலாவுவார்களல்லவா என்பான். தே

வவிமானமேறித் தேவகணங்களெல்லாம் உனக்குப்பயந்து நாலுதிக்கிலோடியொளித்துத்தங்களிருப்பிடத்தில் வந்துசேராமலிருந்தார்களே. அப்படிப்பட்டவர்கள் இந்த அல்பமான மனிதர்களுடைய வெற்றியினாலேயா மறுபடியும் தங்கள் யதாஸ்தானம்வந்து சேரும்படியாகநேரிட்டது என்பான். இந்தப் புத்தியில்லாத அற்பத்தூதர்கள் சொன்னபடியே பெண்டிழந்து பெருந்துக்கப் பட்டுக்கொண்டிருந்த ஒருமனிதன் கொன்றதினால், எனது ஆசைக்குமாரன் மாண்டழிந்தானே என்பான்.

ஓ இந்திரசித்தே! என்று கூப்பிட்டுக் கையுங்காலு முதறிக்கொண்டு சோர்ந்துகிடப்பான். உட்காருவான். ஓவென்றிரைவான். இரக்கங்கொண்டழுது புலம்புவான். மூர்ச்சைபோவான். உடம்பெல்லாம் வெயர்வையடைவான். ஓடிப்போய்ப்பூமியில்விழுவான். கண்ணைவிழிப்பான். அசையாமற்கிடப்பான். தன்தேகத்தாலே பூமியைக்கிளறுவான். கடகடவென்று உருளுவான். மல்லார்ந்து குப்புறுவான். ஒருவாயால்என்னையனேஎன்பான். வேறொருவாயாலினிநான் இராஜாங்கமுஞ் செய்வேனோ என்பான். இன்னொருவாயால் அப்பா! வஞ்சகனாகிய நான் உன்னைப் பகையாளிக்குக் காட்டிக்கொடுத்துவிட்டு நான்மாத்திரம் பிழைத்திருப்பேனோ என்பான். ஒருவாயால் சந்தனகஸ்தூரிகளாற் சித்திரமெழுதி உருக்குஸ்தம்பத்தைப்போலிருந்த உன்கைகளினாலே என்னைக்கட்டித் தழுவாமற் போய்விட்டாயே என்பான். மற்றொருவாயால் ஆண்புலிபோன்ற உன்னுயிரை மான்குட்டிக்கொப்பான அந்த மனிதனும் வாங்குகிறதா? அப்பா தேர்ந்தவில்வீரனே! என்பான். ஒருவாயால் நீலநிறத்தைக் காட்டிக்கொண் டிருக்கின்ற கண்டத்தை யுடையவனான கயிலாசபதியும், சக்கரதரனான விஷ்ணுவும், முன்னம் அபரிமிதமாகவெறிந்த ஆயுதங்களை யெல்லாம் தோற்கடித்துத் துரத்திவிட்டாயே: அப்படி துரத்தித்திரும்பிய நீ அவர்களுக்கு உன்னுடைய வீரகர்ச்சனையை இனிக்காட்டமாட்டாயோ என்பான்.

ஒருவாயால் இந்திரனுடைய கிரீடத்தைப்பறித்த உன்விஜயத்தைக்கண்டு சந்தோஷங்கொண்ட தபசிரேஷ்டர்கள் உன்தலையின்மேல் வைத்த வெற்றிமாலையை, இப்போதுகாகங்கள் ஆடுகின்றயுத்தக்களத்திற் காண்பேனோ என்பான். ஒருவாயால் — அப்பா வீரசிகாமணியே! உன்னுடைய வில்லின் குணத்தொனியைக் கேட்டுநடுங்கிய யக்ஷர்களுடைய பெண்சாதிமார்கள், தங்கள் தாலியைக் கையிற்பிடித்துக்கொள்வதை இனிநீங்கிவிடுவார்களோ என்பான். ஒருவாயால் — அப்பா இந்திரசித்தே! இயமனும் உன்னெதிரேவந்து உன்னுயிரைக் கைப்பற்றும்படியான வல்லமையுடையவனல்லவே: ஆனதால், நீயெனக்கு ஒளிப்புக்காட்டிக்கொண்டு உனக்குவிருப்பமான எந்தலோகத்திற்போய் மறைந்திருக்கின்றாய்? அளவில்லாத பலமுடையவனான இந்திரசித்தே! வா: வா: என்றழைப்பான்.

இராவணன் இந்திரசித்துவைக் கூவிக்கொண்டழுது யுத்தகளம் புகுதல்.

கவி.

இன்னவாறழைத் தேங்குகின்றானெழுந்
துன்னுமாத்திரத் தோடினனூழிநாள்
பொன்னின்வானன்ன போர்க்களம்புக்கனன்
நன்மகன்றன தாக்கையைநாடுவான்.

இந்தப்பிரகாரமாக இராவணன் புத்திரனைக் கூவிக்கொண்டழுது எழுந்திருந்து நினைக்கிறதற்குள்ளாக ஓடி, தன்னரும் புத்திரனாகிய இந்திரசித்துவின் தேகத்தைத் தேடும்படியாக ஊழிக்காலத்திற் பொன்னிறமாயிருக்கின்ற ஆகாசத்துக்கொப்பான இரணக்களத்தைவந்து சேர்ந்தான். அப்போது தேவர்கள்முதலாகிய தன்னுடைய கிங்கரர்களு மற்றெல்லோரும் அதைப் பார்த்து- ஐயோ! இந்த மூன்றுலோகங்களும், அவைகளின் முறைமைகளும், இனியெவ்விதமாய்ப் போகுமோவென்று நினைத்துப் பரிதபித்தவர்களாய்க் கூடத்தொடர்ந்து வந்தார்கள்.

இப்படி ராவணன் ரணக்களத்திற்கு வந்ததைக் கண்டமாத்திரத்தில் அங்குப் பிணங்களைத் தின்கிறதற்குவந்திருந்த பேய்களும், பக்ஷிகளும், அன்புடைய சினேகர்களைப்போலச் சில அழுதன. சில ராவணன்பாதத்தில் வீழ்ந்து வெகுபரிதாபங் கொண்டவைகளைப்போலத் தொழுதன. சிலபேய்கள் பயத்தால் யானைப்பிணங்களுக் குள்ளே புகுந்து ஒளித்துக்கொண்டன. வந்தராவணன் கோடிகோடி குதிரைப்பிணக் கூட்டங்களையும், உயுத்த வெற்றியாளர்களாகிய இராக்ஷசர்களுடைய பிணங்களையும், முகபடாமணிந்த யானைகளையும், முறிந்துவிழுந்திருக்கின்ற தேர்களையும் புரட்டிப்புரட்டி, நாள்முழுவதுந் தன்குமாரனுடைய தேகத்தைத் தேடிப்பார்த்து, அசத்திய நோக்கமுள்ள கண்களிற் கண்ணீர் பெருக்கெடுத்தோட நெய்விட்டெரிகின்ற அக்கினியைப்போலக் கொதிக்கின்ற மனதுடனே அதிகபலமுள்ள வெற்றிவில்லைப் பிடித்தபடியே இந்திரசித்துவின் வல்லமையுள்ள கையறுந்து கிடக்கின்றதைத் தன்கண்ணாரக்கண்டு, பெரியபாகுவலயமும், அம்புகளைப்பொழிகின்ற விற்புட்டிலும், தோளலங்காரமும், தைத்தபகழிகளும் பிரகாசிக்க அக்கினிமயமான கண்களையுடைய கார்க்கோடக சர்ப்பம்போலக் கிடக்கின்ற அந்தக்கையைத் தன் செவந்த கையால் தூக்கித் தன்தலையின்மேல் வைத்துக்கொண்டு, ஊழிகாலச் சண்டமாருதத்தைப் போலப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு அந்தக்கையை மலையையொத்த தன்மார்பிற் சேர்த்து அணைப்பான். கழுத்தில் வைத்துச் சுற்றிக் கொள்வான். மறுபடியுந் தன்தலையில் அணிந்துகொள்ளுவான். சுழலுகின்றகண்ணி லொற்றிக்கொள்ளுவான். முகர்ந்து மனமுருகுவான். பிறகுதுக்கிப்பான்.

இராவணன் இந்திரசித்துவின் தலையிழந்த தேகத்தைக்கண்டு வருந்துதல்.

கவி.

கய்கண்டான்பின் கருங்கடல்கண்டன
மெய்கண்டானதன் மேல்விழுந்தானரோ
பெய்கண்டாரை யருவிப்பெருந்திசை
மொய்கண்டார்திரை வேலையைமூடவே.

இப்படி கையைப்பார்த்தபிறகு கறுத்தகடலைப் பார்த்ததுபோல அவ்விராவணன் இந்திரசித்துவின் தலையில்லாததேகத்தைக்கண்டு, கண்ணீரருவித்திரைகள் சமுத்திரத்தைக் கவிந்து மூடும்படியாக அந்தப்பிணத்தின்மேல் விழுந்து, இலட்சுமணருடைய பாணவருஷங்களால் மூடப்பட்டிருக்கின்ற இந்திரசித்துவின் மார்பைக் கண்ணீரால் நிறைந்திருக்கின்ற தன்னுடைய உடலில் ஒற்றிக்கொள்ளுவான். வாரியணைத்துக்கொள்வான். ஓவென்று அலறுவான். வீரசிரேஷ்டனாகிய அந்த லங்காபதியுற்ற புத்திரசோகத்தை இந்த லோகத்தில் வேறொருவரும் அடையவில்லை. இந்திரசித்துவின் மார்பில் தைத்திருக்கின்ற பாணங்களைப் பலதரமாகப் பறித்து அவைகளைத் துண்டுதுண்டாக முறித்தெறிவான். மூர்ச்சையாய்ப் போவான். மோந்துபார்ப்பான். தேகத்தோடு சேர்த்து அணைப்பான். ஜ்வாலிக்கின்ற சூரியனுடனே சப்த லோகங்களையும் வாயிற்போட்டு மென்றுவிடுகிறேனென்று சொல்லிச்சொல்லிக் கோபிப்பான். இடமில்லாமல் ஆகாசமெல்லா நிறைந்துநிற்கின்ற தேவர்களுடனேயும், இரிஷிகளுடனேயும், உயர்ந்தவர்களான மற்றயாவர்களுடனேயும், மும்மூர்த்திகளுடனேயும், இந்த மூன்றுலோகங்களுடனேயும், போரிட்டு ஆறுவானோவென்று யாவருஞ் சொல்லுந் தன்மையுடையவனாகி இந்திரசித்துவின் தலையைக்காணமல் மிகுந்தகோபங்கொண்டு, அம்மனிதர்கள் தலையைக் கொண்டுபோய்விட்டார்களென்று தீர்மானித்தவனாய் மனதிற்புண்பட்ட வியசனமுடையவனாகி, ஆகாசமும் வெடிபடும்படியாக ஓவென்று அலறியழத் தொடங்கினான்.

இராவணன் உயுத்தகளத்திற் பிரலாபித்தல்.

கவி.

நிலையுமாதிரத்துநின்ற யானையுநெற்றிக்கண்ணன்
மலையுமேயெளியவேநான் மறிதற்குமறிந்தமைந்தன்
தலையுமாருயிருங்கொண்டா ரவருடலோடுந்தங்கப்
புலையனே னின்னுமாவி சுமக்கிறேன் போலும்போலும்.

எரியுணவளைகைமூது ரிந்திரனிருக்கையெல்லாம்
பொரியுணவுலகமூன்றும் பொதுவறப் புரந்தேன்போலாம்
அரியுனுமலங்கன்மௌலி யிழந்தவென்மதலையாக்கை
நரியுணக்கண்டேனானி னுயுனுமுணவுநன்றால்.

பூண்டொருபகைமேற்புக்கென் புத்திரனேனும்போனார்
மீண்டிலர்விளிந்துவீழ்ந்தார் விரதியசிருவரோடும்

ஆண்டுளகுரங்குமொன்று மமர்க்களத்தாருமின்னம்
மாண்டிலரினிமற்றுண்டோ விராவணன்வீரவாழ்க்கை.

கந்தர்ப்ப ரியக்கர்சித்த ரரக்கர்தங் கன்னிமார்கள்
சிந்தொக்குஞ்சொல்லினருன் றேவியர்திருவினல்லார்
வந்துற்றெங்கணவன்றன்னைக் காட்டென்றுமருங்குவீழ்ந்தால்
அந்தொக்கவரற்றவோநான் கூற்றையுமாடல்கொண்டேன்.

சினத்தொடுங்கொற்றமுற்ற விந்திரன்செல்வமேவ
நினைத்ததுமுடித்துநின்றே னேரிழையொருத்திநீரால்
எனக்குநீசெய்யத்தக்க கடனெலாமேங்கியேங்கி
உனக்குநான் செய்வதானே னென்னின்யாருலகத்துள்ளார்.

ஐயையோ! அஷ்டதிக்குகளிலு நிலைத்துநின்ற திக்கெஜங்களும், நெற்றிக்கண்ணனுடைய கயிலாசமலையும், என்னால் தோற்றுப்போவதற்கு அலக்ஷியமாயிருந்தனவே: அப்படிப்பட்ட நானிறப்பதற்கு முன்னே என்பிள்ளையினுடைய தலையையும் அவனதருமையான உயிரையுங்கொண்டுபோன அந்தமனிதர்கள் தேகத்துடனே தலையுமுயிரு முடையவர்களாயிருக்கவும், புலையனுகிய நான் இன்றையவரையிலும் ஆவியைப் பொய்யாய்ச் சுமந்துகொண்டிருக்கின்றேன்போ லிருக்கின்றது. இது வெகுநேர்த்தி: வெகுநேர்த்தி: அளகாபுரியை நெருப்புவைத்தெரித்து இந்திரபட்டணத்தைப் பொரியுண்டு போகும்படித் துரத்தியடித்து மூன்றுலோகங்களையும் என் ஒருகுடையின்கிழ் ஆண்டுகொண்டுவந்த நான், வண்டுகள் தேனுண்ணும்படியான வெற்றிமாலையையணிந்த முடியிணையுடைய தலையையிழந்த என்பிள்ளையினது தேகத்தை நரிகள்தின்னும்படிக் கண்டேன். நானுண்ணு முணவைக்காட்டிலும் பிறரெச்சிற்கலையைத் தேடிக்கொண்டுபோய்த் தின்னுகின்ற நாயினுணவு நல்லதாயிருக்குமல்லவா? ஒருபகையாளியின்மேற் பெருங்கூட்டங் கூடிக்கொண்டு என்பிள்ளையுடனே கூடப்போன வீரர்களில் ஒருவராவது மீளாமல் எல்லாருமாண்டு போனர்கள். பகைவர்கள் பக்ஷத்தில் இராமலட்சுமணர்களென்கிற இரண்டுதவசிகளோடு அவர்களுக்குப்படையாகவந்த குரங்குகளில் ஒன்றுவது ரணக்களத்தில் மரணமாகவில்லையே: இனி ராவணனுடைய வெற்றிப் பிரதாபவாழ்வு முண்டாயிருக்கின்றதாய் நினைக்கலாகுமா?

அப்பா இந்திரசித்தே! கந்தர்ப்பஸ்திரீகளென்ன? யக்ஷஸ்திரீகளென்ன? சித்தஸ்திரீகளென்ன? இராக்ஷசஸ்திரீகளென்ன? கிளிகளுநாகணவாய்ப் புட்களுநாணும்படியான தொனியும், சிந்தைப்போ லினிமையும் வாய்ந்தசொற்களையும் மிகுந்த அழகையுமுடையவர்களான உன்சொந்ததேவிமார்களென்ன? இவர்களெல்லாம் எங்கள் பிராணநாயகனைக் காண்பிக்கவேண்டு மென்று என்னண்டைவந்து வீழ்ந்தபோது,இயமனையும் வெற்றிகொண்டிருக்கிற நான் உங்கள்புருஷனையமன்கொண்டுபோய்விட்டானென்று அவர்களோடுகூட அலறியழுவேனோ? மஹாவெற்றிப்பிரதாபசாலியான இந்திரனுடையசெல்வத்தை

நானடையவேண்டுமென்றுகோபங்கொண்டபடியே என்னினைவை நிறைவேற்றிக்கொண்டிருந்த நான், சீதையென்கின்ற வொருபெண்ணின் ஆசையால் எனக்கு நீ செய்யவேண்டியதாயிருந்தகடமைகளை நீஎன்முன்னிறந்தபடியால் உனக்கு நானேயழுது செய்யும்படியானேனே: என்னைப்பார்க்கிலும் ஹீனர்களாக இந்தலோகத்தில் வேறேயாவரு மிருக்கின்றார்களா? என்றிவைமுதலாகிய பல துக்கவார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு அழுதனன்.

இராவணன் இந்திரசித்துவின் உடலை யெடுத்துக்கொண்டு இலங்கையிற் புகுதல்.

கவி.

என்பனபலவும்பன்னி யெடுத்தழைத்திரங்கியேங்கி
யன்பினன்மகனைத்தாங்கி யரக்கியராற்றிவீழப்
பொன்புனைநகரம்புக்கான் கண்டவர்புலம்புப்பூசல்
ஒன்பதுதிக்குமற்றை யொருதிக்குமுற்றதன்றே.

இவ்வண்ணம் பலமுறை சொல்லிச் சொல்லி எண்ணுதன வெல்லாமெண்ணியழுது, அப்பா இந்திரசித்தேயென்று கூவி இரைந்து அழுது, மிகுந்த ஆசையுடனே இந்திரசித்துவின் தேஹத்தைத் தூக்கிக்கொண்டு இராக்ஷசஸ்திரீகளெல்லாரும் புலம்பிப் புரண்டழுதுகொண்டுவரத் தன்னுடைய சொர்ணலங்கார நகரத்தைச் சேர்ந்தான்.

இப்படி ராவணன்போனதைக் கண்டவர்கள் புலம்பி யலறுகிற ஓசையானது தசதிசைகளிலும்போய் முட்டினது. இந்திரசித்துவின் தேஹத்தைக்கண்ட இராக்ஷசஸ்திரீகளிற் சிலர் துக்கத்தைச் சஹிக்கமாட்டாமல், குரூரகிருத்தியத்தையுடைய இராக்ஷசகுலத்தி னியற்கையின்படியே தங்கண்களைப்பிடுங்கிக் கொண்டார்கள். சிலர் தங்கள் கழுத்தினை அறுத்துக்கொண்டார்கள். சிலர் தங்கள் மார்பைப்பிளந்து ஈரலைப் பிடுங்கி யெறிந்தார்கள். சிலர் தங்கள் நாவை உயிருடனே பிடுங்கிக் கொண்டார்கள். அன்றியும் — அஷ்டதிக்குகளையும் வெற்றிகொண்ட புத்திரனாகிய இந்திரசித்துவின் கிரீடத்துடனே தலைநீங்கின முண்டத்தை இராவணனெடுத்துக்கொண்டுபோகக் கண்ட இராக்ஷசர்களெல்லாம் சமுத்திரத்துக் கொப்பாகத் தங்கள் கண்களிலிருந்தொழுகவிடுகின்ற அன்பின்கண்ணீர் வெள்ளமானது பலவழியிலுமோடிக் கடலிற்போய் விழுந்தது. அப்போது இந்திரசித்துக்குப் பிராணபதமாயிருந்த இராக்ஷசஸ்திரீகள் முதலான பெண்சாதிமார்கள் கூட்டமாகக்கூடித் தலையின்மேற் கைகளைவைத்துக்கொண்டு சித்திரங்களைப்போல வீழ்ந்து புரண்டழுகின்ற இராஜமாளிகையில், இரத்தநீர் சொரிகின்ற கண்களையுடையவனாய் இராவணன்போய்ச் சேர்ந்தான்.

அப்போது மயன்குமாரத்தியும் இந்திரசித்துவின் தாயுமான மண்டோதரியானவள் கறுத்த அளகபாரமானது அவிழ்ந்து குதிக்காலில்விழுந்து புரளத் தாமரைப்பூவால் தேன்னங்குரும்பையை யுடைப்பதுபோலத் தன்கைக

ளால் மூலேகளின்மீது அறைந்துகொண்டு, ஆபரணங்களேயெல்லாம் சுமக்கின் றபடியினலே அகன்ற அல்குலேயல்லாமல் இடையும்கொஞ்சம்உண்டுஉண்டு என்று நினேக்கும்படியாகத்தலேமேலே கையைவைத்துக்கொண்டு, நெருப்பை மிதிப்பதுபோல் அடிபெயர்த்துவைத்து, பிள்ளேமேலுண்டாகிய ஆசையினு லே ஓர்மயிலானது வேடன் அம்புபட்டு உயிர்சோர்ந்து மலேயின்மீது வீழ்ந் தது போல இந்திரசித்துவின்மேற் சோர்ந்து வீழ்ந்து, சுவாசம் விடாமல் அ றிவுங்குலேந்து உயிரிழந்துபோனளோவென்று சொல்லும்படியாகத் தேஹ மசையாமலும் — ஒன்றும் பேசாமலும் — துக்கியாமலும் — வெகுநேரபரியந் தம் அழாமலு மிருந்து, பிறகு மெல்லமெல்லச் சோர்வுநீங்கி அறிவடைந்து வாயைத்திறந்து அலறிப் புலம்பத் தொடங்கினுள்.

இந்திரஜித்துவிறந்ததற்கு மண்டோதரி புலம்பல்.

கவி.

கலேயினூற்றிங்கள்போல வளர்கின்ற காலத்தேயுன்
சிலேயினலரியைவெல்லக்காண்பதோர் தவமுஞ்செய்தேன்
தலேயிலாவாக்கைகாண வெத்தவஞ்செய்தேனந்தோ
நிலேயிலா வாழ்வையின்ன நினேவெனே நினேவிலாதேன்.

ஐயனேயழகனேயென் னரும்பெற லமுதேயாழிக்
கையனேமழுவனேயென் றவர்வலிகடந்தகால
மொய்யனே முளரியன்ன நின்முகங்கண்டிலாதேன்
உய்வெனேவுலகமூன்றுக் கொருவனேசெருவலோனே.

தாளரிச் சதங்கையார்ப்பத் தவழ்கின்ற பருவத்தேயும்
நாளணியணிந்துமேநீ நடக்கின்றபருவத்தேயும்
வாளரிக்கண்ணினர்கள் வாழ்த்திடமறுகினேகி
மீளரும்விளேயாட்டின்னங் காண்பெனேவிதியிலாதேன்.

அம்புலியம்மவாவென் றழைத்தலுமவிர்வெண்டிங்கள்
இம்பர்வந்தானேயஞ்ச லெனவிருகரத்திலேந்தி
வம்புறுமறுவைப்பற்றி முயலெனவாங்கும்வண்ணம்
எம்பெருங்களிறேகாண வேசற்றேனெழுந்திராயே.

இயக்கியரரக்கிமார்கள் விஞ்சையரேழைமாதர்
முயற்கறைபயிலாத்திங்கண் முகத்தியர்முருகநின்னே
மயக்கியமுயக்கந்தன்னுன் மலரணேயமளிமீதே
அயர்த்தனேயுறங்குவாயே யமர்பொரு தலசினேயோ.

மூக்கணுன்முதலினேரை யுலகொரு மூன்றினேடும்
புக்கபோரெல்லாம்வென்று நின்றவென்புதல்வன்போலாம்
மக்களினெருவன்கொல்ல மாள்பவன்வானமேரு
உக்கிடவணுவொன்ருேடி யுதைத்ததுபோலுமம்மா.

பஞ்செரியுற்றதென்ன வரக்கர்தம்பரவையெல்லாம்
வெஞ்சினமனிதன்கொல்ல விளிந்ததேமீண்டதில்லே

அஞ்சினேனஞ்சினேனச் சீதையென்றமுதாற்செய்த
நஞ்சினுலிங்கைவேந்த ஞளையித்தகையனன்றே.

அப்பாமகனே! கலையினுலோங்கிய சந்திரனுக்கொப்பாக நீவளர்கின்ற காலத்திலே உன்வில்லினுலே இந்திரனை ஜெயிக்கப் பார்க்கும்படித் தவஞ்செய்திருந்த நான், உன்னைத் தலையில்லாத முண்டமாகப் பார்க்கும்படி என்ன கெட்டதவஞ் செய்தேனே? ஐயோ! நினைவுகெட்டநான் நிலையில்லாத இந்த உயிர்வாழ்க்கையை இன்னமும் ஆசைப்படுவேனே? ஓ அப்பா! ஓ என்னையா! அடா என் அதிகசுந்தரவானே! நான் பெறுதற்கரிய தேவாமிர்தம் போன்றவனே! கையில் சக்கரத்தைத்தரித்த விஷ்ணுவையு மழுவாயுதத்தையுடைய சிவனையும் தோற்கடித்தயமனுக்குச்சமமான வல்லவனே! இந்த மூன்றுலோகத்திற்கும் ஒரு வீரசிகாமணியே! ஓ மஹாவீரனே! உன்னுடைய தாமரைமலர்போன்ற திருமுகத்தைக் காணுத நானும்பிழைப்பேனு? காலில் தண்டை சப்திக்கும்படியாக நீ தவழ்ந்து விளையாடின குழந்தைப் பருவத்திலும், நாளுக்கொருமேனியாய் அலங்கரித்துக்கொண்டு நடந்து விளையாடின பருவத்திலும், வாளைப்போ லரிபடர்ந்த கண்களையுடைய தாதிமார்கள் வாழ்த்தும்படியாகத் தெருவேபோய் ஒருவரும் விளையாடாத விளையாட்டாடின உன்விளையாட்டை விதிகெட்டபாவியான நான் மறுபடியும் பார்க்கப் போகிறேனே?

அடா எனதருமைச் செல்வனே! நீ குழந்தையில் அம்புலியே இங்கே வாவென்று அழைத்த மாத்திரத்தில் உன்னிடத்திற்குப் பயந்துகொண்டுவந்த சந்திரனைப் பயப்படாதே பயப்படாதே யென்று இரண்டுகையினுலும் அவனைப்பற்றிப் பிடித்து, அவனுக்குத் தோஷமாயிருந்த மறுவை முயலென்றுபற்றிப்பிடுங்கின அந்தவல்லமையையுடைய என்பெரியயாளையே! நான் வருந்துகிற துக்கம் தெரியவில்லையா? எழுந்திருந்துவரக்கடவாய். இராக்ஷசஸ்திரீகள்யக்ஷஸ்திரீகள் வித்தியாதரஸ்திரீகளாகிய முயற்கறையில்லாத சந்திரனுக்கொப்பான முகத்தையுடையவர்கள் உன்னைமோகப்படுத்திச் சையோகஞ்செய்ததனுலே புஷ்பசயனத்தின்மீதுஅயர்ந்து நித்திரைசெய்கிற நீ, உயுத்தஞ்செய்து அலுத்துப்போனுயே? ஆ!தெய்வமே!மூன்றுகண்களையுடையசிவபெருமான்முதலானபேர்களையும், மூன்றுலோகத்தாரையும்,எந்தயுத்தத்திலுஞ் செயித்துவெற்றிபெற்றிருந்த என்புதல்வனு ஒருசிறுமனிதனுலே கொல்லப்பட்டுப்போனுன்? இது ஆகாசத்தையளாவிய மேருமலையை நொறுக்கிப் போடும்படி ஒரு அணுவானது எழுந்து மோதினதுபோ லிருக்கின்றதே: அடாமகனே! பஞ்சுக்கூட்டத்தில் அனற்பொறி விழுந்ததுபோல இராக்ஷசக் கடலையெல்லாம் ஒருமனிதன் கோபித்துக்கொல்ல ஒருவராவது தப்பாமல் மாண்டுபோனுர்களே: எனக்குப் பயமாயிருக்கின்றதே: எனக்குப்பயமாயிருக்கின்றதே: அப்பா இந்திரஜித்தே! சீதையென்கிற பேரைவைத்து அமுதினுல் சிருஷ்டித்திருக்கின்ற விஷத்தினுலே இலங்கேஸ்வரனுன உன்தந்தை

யானவன் நாளைக்கு உன்னைப்போலவே மாளப்போகின்றானல்லவா? என்று கூவி அழுதுகொண்டிருந்தாள். அப்போ திராவணன் வெகுகோபங்கொண்டு, என்பந்துக்களுக்கு மரணத்தைத்தேடி வரவழைத்தவள் அந்தச்சீதை அல்லவா? அந்தப் பெரும்பாறையையொத்த மனதையுடைய வஞ்சகியை என் கையிலுள்ள வாளாயுதத்தினாலே கொன்று நாசமாக்கிவிடுகிறேனென்று ஓடினான். அப்படியோடுகின்ற இராவணனை மகோதரன்பார்த்து, ஓஓ!! இவனிப்போது பெரியபழியைத் தலைமேற்சுமந்து கொள்ளுகின்றானே: ஈதென்ன பாவம்? என்றெண்ணித்தன்மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு,அவன் சமீபத்திற்போய் அவன் காலில் வீழ்ந்துவணங்கி, ஐயா பிரதாபலங்கேஸ்வரா! வெகு காலமாய்ச் சம்பாதித்த உம்முடைய பெருமைக்கு இப்போது கெடுதி நேரும்படிச்செய்ய யத்தனித்தீர். இதென்னகாரியம்? என்று சிலபுத்திகளைச் சொல்லத்தொடங்கினான்.

இராவணன் சீதாபிராட்டியாரைச் சினந்து வெட்டப்போயினதை மகோதரன் தடைப்படுத்தி நிறுத்தல்.

கவி.

நீருளதனையுஞ்சூழ்ந்த நெருப்புளதனையுநீண்ட
பாருளதனையும்வானப் பரப்புளதனையுங்காலின்
பேருளதனையுமாயாப் பெரும்பழிபிடித்திபோலாம்
போருளதனையும்வென்று புகழுளதனையுமுள்ளாய்.

தெள்ளருங் காலகேயர் சிரத்தொடுந் திசைக்கண்யானை
வெள்ளியமருப்புச்சிந்த வீசியவிசயத்தொள்வாள்
வள்ளியமருங்குற்செவ்வாய் மாதர்மேல்வைத்தபோது
கொள்ளுமேயாவிதானே நாணத்தாற் குறைவதல்லால்.

பங்கையர்குலத்துளாளைத் தவத்தியைமுனிந்துவாளால்
சங்கையொன்றின்றிக்கொன்றான் குலத்துக்கே தக்கானென்று
கங்கையஞ்சென்னியானுங் கண்ணனுங் சமலத்தோனுஞ்
செங்கையுங்கொட்டியுன்னைச் சிரிப்பராற்சிறியனென்னா.

நிலத்தியல்பன்றுவானி னெறியன்றுநீதியன்று
தலத்தியல்பன்றுமேலோர் தருமமே லதுவுமன்று
புலத்தியன் மரபின்வந்து புண்ணிய மரபுபூண்டாய்
பலத்தியல் பன்றுமாயாப் பழிகொளமறுகுவாயோ.

இன்றுநீயிவளைவாளா லெறிந்துபோயிராமன்றன்னை
வென்றுமீண்டிலங்கைமூதூ ரெய்திநீ வெதும்புவாயோ
பொன்றினள்சீதையென்றே போவர்களவர்தாமல்லால்
வென்றிடமுடியாதென்னும் வீரமோவிளம்பவென்றான்.

ஐயா! எல்லாயுத்தத்திலும் ஜெயம்பெற்றுக் கீர்த்தியை அடைந்த நீர், பிருதிவு -- அப்பு - தேயு - வாயு - ஆகாசம் - என்கின்ற பஞ்சபூதங்களுள்ள வரையிலும் ஒழியாத பெரியபழியைக் கைக்கொள்ளவா புறப்பட்டீர்? கால

கேயர்களுடைய தலைகளையும் - திக்கெஜங்களையும் - கயிலாசமலையையும் — சின்னபின்னப்பட வீசின வெற்றிவாளாயுதத்தை, கொடியையொத்த இடையையும் செவந்தவாயையு முடைய சீதையின்மேற் பிரயோகித்தால்; அந்தத் தெய்வத் தன்மையுள்ள வாளாயுதமானது வெட்கத்தால் முனைமடிந்து போகுமே யல்லாமல் அச்சீதையினுடைய ஆவியைவாங்குமா? இந்தத் தசக்கிரீவனென்னும் இராவணன் ஸ்திரீஜாதியாகியும் தவப்பெண்ணாகியு மிருக்கின்றவளைக் கோபித்துக் கொஞ்சமுங் கூச்சமில்லாமல் வாளாயுதத்தாற் கொன்றான். இப்போது பலவீனனானான். மேலுமவன் ராக்ஷசகுலத்திற் பிறந்தவ னானபடியினாலே அதற்குத்தகுந்தபடி புத்தியில்லாமற் செய்தான். என்று கங்கையென்கிற பெண்ணைத்தலையில் வைத்திருக்கின்ற சிவபிரானும், விஷ்ணுவும், தாமரைப்புஷ்பத்தை ஆசனமாகவுடைய பிரம்மதேவனும், கைகொட்டிக்கொண்டு சிரிப்பார்களே:

ஓ புலஸ்தியப் பிரம்மவமிசத்திற் பிறந்த புண்ணியசீலனான இலங்கேஸ்வரா! ஸ்திரீகளைக்கொல்வது பூலோகத்தி லுள்ளவர்களுடைய இயற்கையு மல்ல. தேவலோகத்தி லுள்ளவர்களுடைய ஸ்வபாவமுமல்ல. மற்ற எந்தலோகத்தாருக்கும் ஒத்தகாரியமல்ல. பெரியோர்களுடைய தருமமென்னலாமோவென்றால் அப்படிக்குமல்ல: வீரவான்களுக்கும் இது தகுதியல்லாத காரியமாச்சே: இப்படிக்கிருக்க எந்நாளு நீங்காதிருக்கின்ற பழியைத் தேடிக்கொள்ள உமதுபுத்தி மயங்கிப்போனீரே: இன்றைக்கு நீர் இந்தச் சீதையை வாளினாலே வெட்டிப்போட்டு இராமனைச் செயித்துவிட்டு மறுபடியு மிலங்கைக்குவந்து துக்கப்பட்டுக்கொண் டிருப்பீரோ? அதுவுமல்லாமல் அந்த ராமலட்சுமணர்கள் சீதை மாண்டுபோனாள். இனி நாம் சண்டை செய்வதினாற் காரிய மென்னவென்று போய்விடுவார்கள். அப்போது உம்மால் அவர்களை ஜெயிக்க முடியவில்லையென்று சொல்லுவார்களே: அது வீரவாக்கியமாகுமோவென்று சொல்லினன்.

இராவணன் கோபந்தணிந்து இந்திரசித்துவின் உடலைத் தயிலதோணியில் விட்டுவைப்பித்தல்.

கவி.

என்னலுமெடுத்தகூர்வா ளிருநிலத்திட்டுமீண்டு
மன்னவன்மைந்தன்றன்னை மாற்றலார்வலியாற்கொண்ட
சின்னமுமவர்கடங்கள் சிரமுங்கொண்டன்றிச்சேர்கேன்
துன்னருந்தயிலத்தோணி வளர்த்துமினென்னச்சொன்னான்.

இப்படி மகோதரன் சொன்னதைக்கேட்ட இராவணன் ஓங்கினவாளைப் பூமியி லெறிந்துவிட்டுத் திரும்பி, தன் பிள்ளையைப் பகைவர்கள்கொன்ற பழிக்காக அந்தப் பகைவர்களுடைய தலைகளைக்கொண்டல்லாமல் திரும்பி வரமாட்டேன். இந்த முண்டமான தேஹத்தைத் தைலதோணியிற் போட்டு வையுங்க ளென்று நியமித்தான். அந்தப்பிரகாரமாகவே அவர்கள் இந்திரசித்துவின் தேஹத்தை வாசனைத் தயிலதோணியில் வளர்த்தி வைத்தார்கள்.

இராவணன்சோகப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.
இருபத்தொன்பதாவது,

படைக்காட்சிப் படலம்.

இப்படலத்தில் இராவண னுத்தரவின்படி சில தூதர்களோடி ஆங்காங்கு மூலபலமாயுள்ள சேனைகளையெல்லா மழைத்துவந்து அவனுக்குக்காட்டி அவ்வச்சேனைகளி நந்தவிடமுதலியவைகளையுந்தெரிவிக்க, அக்காலவ் விராவணன் அச்சேனாவீரர்களை வரவழைத்து முன்னர் நடந்தனவும் பின்னர் நடக்கவேண்டுவனவுங் கூறியிருக்குங்கால் மாலியவானால் அச்சேனாபதிகள் இராமலக்ஷ்மணனுதியருடைய பராக்கிரமத்தையறிந்து இராவணனைத்தேற்றினமை சொல்லப் படுகின்றது.

இராவண னுத்தரவின்படி சிலதூதரோடி மூலபலச்சேனையைக் கோணர்ந்து அவனுக்குக் காட்டுதல்.

கவி.

அத்தொழிலவருஞ்செய்தா ராயிடையனைத்துத்திக்கும்
பொத்தியநிருதர்தானை கொணரியபோயதூதர்
ஒத்தனரணுகிவந்து வணங்கின ரிலங்கையுன்னூர்
பத்தியினமைந்ததானைக் கிடமிலையணியிதென்றார்.

அப்போ திராவணன் தனது மூலபலசேனைகளையெல்லா மழைத்துக்கொண்டு வரும்படி சிலதூதர்களுக்கு நியமிக்க, அந்த நியமனப்பிரகாரம் போனதூதர்கள் நாலுதிக்கிலும்போய் அங்கங்குள்ள ராக்ஷசர்களையெல்லாம் அழைத்துக்கொண்டு வந்து இராவணன் பாதத்தில் வீழ்ந்து, ஸ்வாமி! நாங்களழைத்துக்கொண்டு வந்த சேனைகளுக்கு இந்தலங்காபட்டணத்தி லிடமில்லை. இனியுத்தரவுபடி நடந்துகொள்ளுகிறோ மென்றார்கள். அப்படித் தூதர் சொன்னதைக்கேட்ட ராவணன் மிகுந்த சந்தோஷங்கொண் டெழுந்திருந்துவந்து அச்சேனைகள் எங்கேயிருக்கின்றனவென்று கேட்டான். அப்போ தந்தத்தூதர்கள் இரண்டுகைகளையுங் கூப்பிக்கொண்டு, ஐயா இலங்கேஸ்வரா! அந்தச்சேனைகளெல்லாம் இன்னவிடத்தி லிருக்கின்றனவென்று ஓரிடத்தைக் குறிப்பிட்டுச்சொல்லக் கூடுமோ? சப்தசாகரங்களும் ஊழிகாலத்தில் உலோகங்களை யெல்லாம் வந்து வளைந்துகொண்டதுபோல வந்திருக்கின்ற சேனைக்கு இந்தலோகமே போதாதென்று சொல்லி நின்றார்கள்.

அப்போது பூமியில் மிதித்து நடக்கின்ற சேனைகளினு லெழுப்பிய பெருந்தூளி எங்கு நெருங்கினபடியினுலே ஆகாசமார்க்கமாயேறி, மேலுமேலுமாகக் கற்பமுடிவின் காளமேகத்தைப்போலக் கண்ணுற்பார்க்கவு முடியாமல் இலங்காபட்டணத்தை நோக்கி வந்தன. அப்படி வருகின்றசேனைகள் வாள்களை விதிர்க்கின்றதினுலே மேகத்திரளெல்லாம் ஓடிவிட்டன. அவர்களுடைய பேரிகை முழக்கத்தைக்கேட்ட இடியும் அதனேடு நேரொத்துச் சப்

திக்கமாட்டாது. தீட்டின ஆயுதங்களும் - குதிரைகளும் – இயானைகளும் – தேர்களும் – அங்கங்கு போகும்போது கடல்களெல்லாங் கொதித்து மேலெழும்பி விடுமேயானால், அதற்குச் சமானம் வேறெதைச் சொல்லலாம்? இந்த மூலபலசேனைகள் நடந்துபோகின்ற பாரத்தைப் பொறுக்கமாட்டாமல் உலோகங்களெல்லாம் ஒன்றுடனொன்று முட்டி ஒதுங்கிவிட்டன. மேலுலகத்தில் சந்திரனுக்கும் நக்ஷத்திரங்களுக்குந் தத்தநிலைமை நீங்கிவிட்டது. சூரியனுந் தான்முன்னம்போகின்ற பழையவழியை விட்டுப் பயந்து விலகிப்போய்விட்டான்.

ஆகாசத்தை யளாவின மேருமலையைப் போலப் பிரகாசிக்கின்ற கோபுரங்களையுடைய இலங்கா புரியினது நான்கு வாசலாலும்போய் நுழைந்து இந்தப் பூலோகமும் பொறுக்க மாட்டாதென்று சொல்லும்படி நடக்கின்ற சேனையானது, இயமனுனவன் கருங்கடலை வேறோரிடத்திற் சேர்த்துவைப்பதற்குச் சமானமாக இருந்தது. இந்தச் சேனையெல்லா நெருக்கமா யிருக்கின்ற இலங்கைக்கோட்டை வாசலின்வழியாக நுழையவேண்டுமானால் அநேகநாள் செல்லவேண்டி வருமென்று அந்தலங்கையின் மதிலின்மீதேறி, எல்லாவண்டங்களிலு மிருக்கின்ற மேகங்களெல்லாம் ஒருமிக்கக் கலந்தது போல இலங்கா பட்டணத்துக்குள்ளே பிரவேசிக்க யத்தனித்தன. அப்படி சேனைக ளிலங்கையை நோக்கி வரும்போது இராவணேஸ்வரன் சப்தசாகரங்களையும் ஒரேகாலத்திற் பார்க்கவேண்டுமென் றாசையுற்ற அறிவீனனைப் போலச் சேனையை ஒரேதடவையில் இவ்வளவென்று பார்க்கவேண்டு மென்கிற ஆசைகொண்டான்.

கவி.

மாதிரமொன் றினின்று மாறொருதிசைமேன்மண்டி
ஓதநீர்செல்வதென்ன தானையையுணர்வுகூட்டி
வேதவேதாந்தங்கூறும் பொருளினைவிரிக்கின்றார்போல்
தூதுவரணிகடோறும் வரன்முறைகாட்டிச்சொன்னார்.

அலங்காரமான ஒரு பெரிய கோபுரத்தின்மேலேறி நின்று ஒருதிக்கிலிருந்து மற்றொருதிசையை நோக்கிச் சமுத்திரஜலம் போவதையொத்த சேனையை வேத வேதாந்தார்த்தத்தை ஒருமிக்க விரித்துப் போகின்றவர்களைப் போலத் தூதுவர்கள் இராவணனுக்கு அணிபணியாகப் பலதரமாய்க்காட்டி இன்னதின்ன தென்று சொல்லத்தொடங்கினார்கள்.

ஐயா இராவணேஸ்வரா! இதோ வருகின்றார்களே இவர்கள் சாகத்வீபத்தில் வாழ்கின்றவர்கள். தானவர்கள்செய்த யாகத்திற் பிறந்தவர்கள். தேவர்களை யெல்லாம் ஒருமிக்கத் தோற்றோடும்படி அடித்தவர்கள். மாயைக்கு முதன்மையானவர்கள். மேகமண்டலத்தை யளாவிய தேகத்தையுடையவர்கள். ஐயா அதிவீரவானே! இவர்கள் குசத்வீபத்தில் வசிக்கின்றவர்கள். கொலைச்செய்கையினாலும் சிருஷ்டி விருத்தியினாலும் யமனுக்குப் பழிப்பையும்

பிரம்மாவுக்குப் பலத்தையும் உண்டாக்கினவர்கள். எப்போதும் தேவலோக வாசிகளான அமரர்கள் தங்கள் கீர்த்தியையும், ஐஸ்வரியத்தையும், இருப்பிடத்தையும், இழந்துபோனது இவர்களாலே தான். வெற்றியேயிவர்களுக் கியற்கையான தொழிலா யிருக்கின்றது. ஓ இராவணேஸ்வரா! இவர்கள் சான்மலித்வீபத்தில் வசிக்கின்றவர்கள். இமையா நேத்திரத்தையுடைய தேவர்களுக்குத் தலைவனான இந்திரனுடைய பொன்னுலகத்தை அழியும்படி யடித்தவர்கள். சந்திரனை ஜடாமகுடத்தில் தரித்த கயிலாசபதியாகிய உருத்திர மூர்த்தி யருளிச்செய்த வரத்தினாலே சிரேஷ்டப் பட்டவர்கள். காட்டுத்தீப் போன்ற கோபத்தையுடையவர்கள். ஐயா திக்விஜயப்பிரதாபசீலனே! இவர்கள் கிரௌஞ்சத்வீபத்தில் வாசம் பண்ணுகின்றவர்கள். பழையகாலத்தில் மேருமலையை இது தேவர்களுக் கிருப்பிடமா யிருக்கின்றதென்று பேர்த்துக் கொண்டுபோய்ச் சமுத்திரத்திற் போட்டுவிடுகிறதற்கு இவர்கள் யத்தனித்த போது, தேவர்களெல்லாம் அலைகுலையத் தலைகுலைய ஓடிவந்து அப்படிச் செய்யவேண்டாமென்று வேண்டிக்கொண்டதினாலே சும்மா விட்டுவிட்டார்கள்.

ஓ கயிலாசகிரியைப்பேர்த்த புஜபலவீரனே! இவர்கள் பிரவாளத்வீபத்தில் வாழ்கின்றவர்கள். சுக்கிரன் தன்னியல்பழிந்து ஒருராக்ஷசக் கன்னிகையைச் சேர்ந்து அவள் வயிற்றிற்பிறந்த பத்துக்கோடிபேர்கள். விளையாட்டைப்போலப் பாற்கடலை வற்றும்படி கொஞ்சநாளுக்குள் குடித்துவிட்ட பலவந்தர்கள். ஓ எங்களாண்டவனே! இந்த வக்கிரதந்தங்களையுடைய அளவில்லாதவர்கள் கருங்கடலுக்கப்பால் மந்தமாருதக்காற் றுலாவும்படியான கந்தமாதனமென்கிற பருவதத்தில் வாழ்ந்துகொண் டிருக்கின்றவர்கள். முன்னால் ஆலகாலவிஷம் பிறக்கும்போது அதனுடன்கூடப் பிறந்தவர்கள். ஐயா தசகண்டேஸ்வரனே? இவர்கள் சாகரத்வீபத்தில் மலையமென்னப்பட்ட பொதியமலையொன்று நிலையமாயிருக்கின்றதே, அங்கே வசிக்கின்றவர்கள். பிரஹம்மாவானவர் இவர்களாலே லோகத்துக்கு இக்கட்டுண்டாகுமென் றெண்ணி, ஓ ஐயன்மீர்! நீங்கள் தயைசெய்து இந்தமலையி லிருங்களென்று யாசித்தபடியினாலே அதிலே இருக்கின்றார்கள். ஐயா பெருங்கீர்த்திமானே! இந்த முஷ்கராயுதத்தையும் — சூலாயுதத்தையும் — முசுண்டியாயுதத்தையும் — சக்கராயுதத்தையும் - வில்லையும் உடையவர்களாய் நிற்கின்ற வீரர்கள், புஷ்கரத்வீபத்தில் வசிக்கின்றவர்கள். விஷத்துக் கொப்பானவர்கள். சப்தசாகரத்திற்கும் தலைவர்கள்.

ஓ எங்கள் தலைவனே! பிரகாசம்போன்ற கைகளையுடைய இவர்களை முன்னாலே பிரஹம்மதேவர் பார்த்து, இவர்களுக் கிந்தலோகம் போதாதென்று நினைத்து, நீங்கள் சப்தலோகங்களிலும் பாதாளலோகத்திலும் போயிருங்களென்று சொல்ல அங்கே போயிருந்தார்கள். இப்போ தும்மிடத்தில் அன்புடையவர்களாய் அந்தப் பிரஹம்மாவின் ஆக்கினையையுங்கடந்து வருகின்றார்கள். ஐயா இராவணேஸ்வரா! இவர் இறலித்தீவில் விருத்தியடைந் திருந்த

வர்கள். இயமனை முன்னாலே தங்கள் தாயார்சொல்லைக் கேட்டுத் தங்கள் வல்லமையாற் சக்கரவாள கிரியின்மீது விலங்கிட்டுப் பலமொடுங்கும்படி வைத்திருந்தார்கள். பிறகு பிர்ம்மதேவன் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதினா ல் விட்டார்கள். ஐயா ஜயப்பிரதாபனே! இவர்கள் நிருதியின் வமிசப்பிள்ளை கள். சூரியனுக்கும் தேவர்களுக்கும் எவ்விதபந்துத்துவம் உண்டாயிருக்கின் றதோ? அவ்வளவு உமது வமிசத்தார்களுடனே பாந்தவ்விய முடையவர் கள். இரத்தபானங் கிடையாவிட்டால் இந்தச்சப்த சாகரங்களையும் தாகத் துக்குச் சாப்பிடத்தக்கவர்கள். கறுத்தமேனியர்கள். ஒவ்வொருத்தர் சப்த குலபர்வதங்களையும் பேர்த்தெடுக்கும் வல்லமையுடையவர்கள்.

ஐயா இலங்காதிபதியே! இவர்கள் பூலோகத்தை நிலைநிறுத்திய ஆதிபுரு ஷவராகமூர்த்தியை மோகங்கொண்டுபார்த்த ஸ்திரீகள்வயிற்றிற் பிறந்தவர்க ள். இந்திரனைஐராவதமென்கிற யானையின்மேலேறவொட்டாமலடித்துஅவனை ஜெயித்து வெற்றிமாலை தரித்தவர்கள். இதோ பெரியமலைகளைப்போல நிற்கி ன்ற கொடுங்கண்களை யுடையவர்களான வெற்றியாளர்கள் ஒருவருக்கும் பின்னிடைய மாட்டார்கள். தராதலத்திலேயே வாசம்பண்ணுகின்றவர்கள். அவ்விடத்தி லிருந்தபடியே எந்நேரமும் துஷ்கிருத்தியங்களைச் செய்துகொண் டிருக்கின்றபடியினாலே ஆயிரந்தலைகளையுடைய ஆதிசேஷனுநித்திரையில்லா மல், விழித்தகண் விழித்தபடியே எங்கேயிவர்கள் நம்மை இம்சிக்கவருவார் களோவென்று பார்த்துக்கொண்டே யிருப்பான். இதோ கைகளிலிருக்கி ன்ற வாள்கள் பிரகாசிக்கவும் வக்கிரதந்தங்கள் ஒளிவீசவும் வருகின்றவர்கள், நெற்றிக்கண்ணராகிய சிவபெருமான்பூர்வத்தில் நடனஞ்செய்தபோதுதோற் றுப்போன காளிதேவியின் கோபாக்கினியிற் பிறந்த பேய்க்கூட்டங்களுடன் பிறந்தவர்கள். இதோவில்லைக்கையிற் பிடித்துக்கொண்டு வடதிசையிலிருந்து வருகின்றவர்கள், பாபம்பிறந்தபோது அதனுடன்கூடப்பிறந்த பழையவர் கள். விளக்கைப்போன்ற கண்களையுடையவர்கள். கோபம்பிறந்தால் தாயை யுங்கொன்று உயிரைவாங்கும்படியான சண்டாளர்கள்.

ஐயா பிரதாப லங்கேஸ்வரா! இவர்கள் பஞ்சமுகராகிய உருத்திரமூர் த்தி கோபங்கொண்டு, உலோகத்தையெல்லாம் சுட்டெரிக்கும்படியாக விழி க்கின்ற நெற்றிக்கண்ணிற் பிறந்தவர்கள். சூலமேந்திக்கொண்டு நிற்கின்ற இவர்கள் உருத்திரமூர்த்தி யமனுடையமார்பி லுதைத்தபோது, அவன்கக்கி ன ஏழுசமுத்திரத்தையொத்த இரத்தத்தில்நின்றும் பிறந்த வீரவான்கள். இதோ பெருங்கூட்டமா யிருக்கின்றவர்கள் ஆலகாலவிஷத்திலும் அமுதத்தி லும் பிறந்த இராக்ஷச யுத்தவீரர்கள், இவர்கள் வடவாமுகாக்கினியில் வா சுகி விஷத்தைக் கக்கினபோது அவ்விஷாக்கினியிலிருந்து பிறந்தவர்கள். மே கத்திற் பற்றியெரிகின்ற அக்கினியைப்போன் றிருக்கின்ற செம்பட்டமயிரி னையுடைய இவர்கள் உருத்திரன் இரதாரூடராகப் போய்த் திரிபுர ங்களை யெரித்தபோது அந்தத்தீயிற் பிறந்தவர்கள். ஐயா தசக்கிரீவமகாரா

ஜனே! இவர்களையெல்லாம் தனித்தனியே சொல்லப் புகுந்தால் கூடியமாத்திரத்தில் நினைக்கவும் குறிப்பிட்டு அறியவும் அளவுபடமாட்டார்கள். இவர்கள் செய்யும்படியான மாயைகளையும், இவர்கள் செய்திருக்கின்ற தவங்களையும், இவர்கள் பெற்றிருக்கின்ற வரங்களையும், ஒவ்வொன்றாய்ப் பேரிட்டுச் சொல்லவேண்டுமானால், ஆயிரம் யுகமானாலு முடியாது. ஐயா மகதைஸ்வரியனான இலங்கா நாயகனே! இவர்களி லொருவனேபோய் அங்கிருக்கின்ற பலவந்தர்களான குரங்குகளையெல்லாம் கெட்டிக்காரர்களான அவ்விரண்டு மனிதர்களோடும் ஒருகையினாலே வாரியடித்துவிட்டு வருவானானால், மற்றெல்லாரைப்பற்றியும் வேறென்ன சொல்லவேண்டுமென்று தூதுவர் சொன்னார்கள்.

இவையனைத்துங்கேட்ட ராவணன் அந்தத்தூதுவர்களைப் பார்த்து, இந்தச்சேனைகளுக்குத் தொகை எந்தக்கணக்காக வகுத்திருக்கின்றதோ அதைச்சொல்லுங்களென்று கேட்டான். அதற்கவர்கள் – ஐயா இலங்காதிபதியே! இவர்களுடையதொகையை ஆயிரம்வெள்ளமென்றுபைத்தியம்பிடித்தோர்கள் சொல்லுவார்கள். இவர்களுடைய தொகையைச்சொல்லுகிறதற்குக் கணக்கில்லை என்றார்கள், அதைக்கேட்டமாத்திரத்தில், நல்லது நீங்கள்போய் இந்தச்சேனைகளுக்கு நாயகர்களை என்னிடத்திற்கு அழைத்துக்கொண்டு வாருங்கள். அவர்கள் வந்தபிறகு நான் அவர்களுக்குச் சொல்லவேண்டிய காரியங்களையெல்லாஞ் சொல்லி, மரியாதை வார்த்தைகளையும் பேசி, உபசாரத்துடனே தகுந்த வெகுமானங்களையுஞ் செய்யவேண்டுமென்றான். அப்படியே தூதுவர்கள் அந்தந்தத் திக்குகளுக்குப்போய்ச் சமுத்திரத்தையொத்த அந்தச் சேனை நாயகர்களைக் கண்டு இராவணேஸ்வரன் உங்களை யழைத்துக்கொண்டுவரச் சொன்னானென்று சொல்ல, அந்தச் சேனாதிபதிகளெல்லாரும் வந்து இராவணன் பாதங்களிற் புஷ்பங்களைத்தூவி ஒருவருடைய கிரீடம் ஒருவர்கிரீடத்தில் மோதுண்டவோசை ஆகாசத்தை முட்டும்படியாக வணங்கினார்கள்.

அப்படி யவர்களெல்லாரும் வரிசை வரிசையாக வந்தனை வழிபாடுகள் செய்து சந்தோஷத்துடன் ஒருபக்கமா யிருந்தபோது அதிவீரனானராவணன் அவர்களைப்பார்த்து, உங்கள்வரவு நல்லவரவாய் முடியக்கடவதென்று அவர்கள்மனதைத் திருப்திகரம்பண்ணி, உங்கள் பெண்டுபிள்ளைகளெல்லாம் க்ஷேமமா யிருக்கின்றார்களோவென் றுபசாரவார்த்தைகளைச் சொன்னான். அதைக்கேட்ட அந்தச் சேனாவீரர்க ளிராவணனை வணங்கி, ஐயா திரிலோகாதிபத்தியமுள்ள பிரதாபலங்கேஸ்வரா! பருத்ததோள்களையுடையநீர் மிகுந்ததபோவல்லமைகளை யுடைத்தாயிருக்கின்றீர். உரியதா யுமக்குவேண்டியவைகளெல்லாவற்றையு முடித்துக்கொள்ளுகிறதற்குக் குறையென்ன? நீர்தேவர்களையெல்லாம் ஓடவிட் டடித்ததைப் பார்த்திருக்கின்றோம். இனியெங்களுக்கென்னகுறை? இஃதிருக்கட்டும். உம்மிடத்திலிருக்கின்ற ஸ்திரீகள்பிள்ளைகளெல்லாரினும் துக்கப்படாதவ ரொருவருமில்லை. நீருமப்படியே அதிகதுக்க

முற் றிருக்கின்றீர். இப்படி நேரிடுகிறதற்குக் காரணமென்னவென்று கேட்டார்கள். அதற்கிராவணன் அவர்களைப்பார்த்து, தனக்குச் சீதையின்மேலிருந்த மோஹத்தினாலே சம்பவித்த காரியங்களை யெல்லாம் விவரித்துச் சொன்னான்.

அதைக்கேட்ட மூலபலசேனாபதிகள் அவனைப் பார்த்து, ஐயா இராவணேஸ்வரா! கும்பகர்னனையும், இந்திரசித்தையும், நம்முடைய குலத்தவரான மஹாவீரர்களையும், இராக்ஷசர்களுடைய பெருங்கூட்டங்களை யெல்லாமும் வென்றவர்கள்; இரண்டு மனிதர்களும் அவர்களுக்குச் சேனையாகிய வானரங்களுமா? இதென்ன ஆச்சரியம்: நீ ரெங்களை வரவழைத்தது இந்தலோகத்தைச் சேஷனுடைய உச்சியிலிருந்து எடுக்கிறதற் கில்லாமலும், சப்தகுலாசலங்களையும் வேரோடு பறிப்பதற் கில்லாமலும், சமுத்திரத்தைக் கையாலள்ளிக் குடிப்பதற்கில்லாமலும்,பூவையு மிலைகளையுந்தின்றுகாட்டிற் பிழைத்துக் கொண்டிருக்கின்ற குரங்குகளின்மேலேவுகிறதற்காகவா? என்று கூறிக் கையுடனே கையையறைந்து இடியிடித்தாற்போலச் சிரித்து நின்றார்கள். அந்தக் கோரதந்தங்களையுடைய இராக்ஷசர்களைப் புஷ்கரத்விபத்துக்குத் தலைவனான வன்னியென்பவன் சமாதானப்படுத்தி இராவணனை நோக்கி, அந்தமனிதர்களுடைய வல்லமை யெவ்வளவென்று கேட்டான்.

மூலபலச்சேனைகட்கு இராமலட்சுமணர்களாதி வானரவீரர்களின் திறத்தை மாலியவான் அறிவித்தல்.

கவி.

மற்றவாசகங்கேட்டலு மாலியவான்வந்
துற்றதன்மையு மனிதராதூற்றமுமுடனும்
கொற்றவானரத்தலைவர்தந் தகைமையுங்கூறிக்
கிற்றுங்கேட்டிராலென்றவன் கிளத்துவான்கிளர்ந்தான்.

அவனப்படிக்கேட்டவுடனே மாலியவானென்கிறபேருள்ளவன் வந்து, இந்தப்பகை நேரிட்ட காரணமும் – இராமலட்சுமணர்களுடைய சௌரியமும் – அவர்களுக்குத் துணையாகவந் திருக்கின்ற வானரவீரர்களுடையசக்தியும் சொல்லுகிறேன் கேளுங்களென்று சொல்லத்தொடங்கினான். ஓ வன்னி முதலிய சேனாபதிகளே! சப்தசாகரங்களையும் சண்டமாருதம்போலத் தாண்டிப் போகின்றவனும் சப்தகுலாசலங்களைப் பேர்க்கும்படியான வல்லமையுள்ளவனுமானவாலியினுடையமார்பை,ஸ்ரீராமனென்பவனுடையஒரம்புபோய் பிளந்தெறிந்துவிட்டது. மேலுமந்த ஸ்ரீராமனானவன் கறுத்தபெருமலையைப் போன்ற கரன் – தூஷணன் - திரிசிர னென்பவர்களையும், அவர்களுடைய கடலையொத்த சேனையையும், ஒருவில்லால் ஒருநாழிகைக்குள்ளாகக் கொன்றுவிட்டான். பருத்த தோள்களையுடைய விராதனும், மாரீசனும், அவனால்தான் மாண்டுபோனார்கள். அந்தமனிதர்களுடைய வல்லமையை நீங்கள் வந்து கேட்கிறதென்ன? இந்தப்பெருங்கடல் வெந்தபோதுநீங்களங்கே கொஞ்

சமாவது பார்க்கவில்லையோ? அதுவல்லாமலும் கங்காபவானியைச் சடாபார த்திலேவைத்த உருத்திர மூர்த்தியினுடைய பெரியவில்லை அவன் முறித்தெறி ந்தபோது அந்தஓசை உங்கள்செவியில்வந்து கேட்கவில்லையோ? இதுவுமல் லாமல் இந்தலங்கையில் தீயினுங்கொடியவர்களான இராக்ஷசசேனைகள் ஆயி ரம்வெள்ளமுண்டு. அந்தச்சேனைகளெல்லாம் இந்த ராமலட்சுமணர்களுடைய இரண்டுவில்லாலே யமபுரம்போய்அங்குமிடமில்லாமல் நிறைந்திருப்பதுபோ லிருக்கின்றது.

அல்லாமலு மஹா வெற்றிவில்லை யுடையவனுன கும்பகர்ணனென்கிற உங்கள் எசமானனும், அவன் பெற்ற பிள்ளைகளும், பிரகஸ்தன் முதலான மற்றவீரர்களும்,இந்திரசித்துமடியுமுன்னமே மடிந்துபோனுர்கள்.இன்றைய வரையில் நானும் இதோவிருக்கின்ற சிலபேர்களு மாத்திரந்தான் பிழைத்திரு க்கின்றோம். எங்களுக்கு மூலச்சேனையாக முந்நூறுவெள்ளஞ் சேனையிருக் கின்றது. நீங்கள் வராவிட்டால் அதை இன்றைக்கு யுத்தத்திற் கனுப்பும்படி நிச்சயித்திருந்தோம். வீரகண்டாமணியைத் தரித்த அந்த ராமலட்சுமணர்க ளுடைய வல்லமையையும் வானரப் பெருஞ்சேனைகளுடைய வல்லமையையும் தெரிவிக்கவேண்டுமானுல், ஒரேயொரு குரங்குவந்து இந்த லங்காபட்டணத் தை நெருப்பூட்டி மிகுந்த கோபிஷ்டனுன அட்சயகுமாரனையும் பூமியிற் போட்டுத் தேய்த்துப் பெருஞ்சண்டைசெய்து தூதுபேசிவிட்டு, இராக்ஷச ஸ்திரீகளெல்லாம் அலறும்படி இராக்ஷசசேனு சமுத்திரத்தையும் இந்த ஜல சமுத்திரத்தையும் தாண்டிக்கொண்டு போய்விட்டது. இலங்கைக்குவந்து சண்டைசெய்கிறதற்காக வானரர்கள் சமுத்திரத்தை மலைகளைக்கொண்டு அ ணைகட்டி ஓர்மார்க்க மேற்படுத்தியதை நீங்கள் பார்க்கவில்லையா?

மேலும் சஞ்சீவிமருந்தை ஒரு நொடிக்குள்ளாக மேருவுக் கப்பால் தா ண்டிப்போய்க்கொண்டுவரும்படியான அநுமன்போல் எழுபதுவெள்ளம்வா னரங்க ளிருக்கின்றன. இஃதிவ்விடத்தில் முக்கியமான காரியமாயிருக்கின்ற து.சாமானியஸ்திரீகளைப்போலல்லாமற்பதியேதெய்வமென்றுவிரதம்பூண்டிரு க்கின்ற சீதையென்னுங் கற்புடையபத்தினியின்சிறை நிமித்தத்தாலேவேண் டியமுயற்சிகளைச்செய்துகொண்டு வந்திருக்கின்ற அந்தவில்வீரர்களேசெயம் பெறட்டும். அல்லது நீங்களே வெற்றிபெற்றாலும் பெறுங்கள். இதுநிச்சயமா னகாரியமென்பதை உங்களுக்குத் தெரிவித்தேன். என்று தான் சொல்லி இன்னும் வேண்டிய வார்த்தைகளை யெல்லாஞ் சொல்லிமுடித்தான்.

மூலபலச் சேனுபதிகள் இராவணனுடன் சிலபேசி யவனைத் தேற்றுதல்.

கவி.

வன்னிமன்னனைநோக்கிகீ யிவரெலாமடிய
என்னகாரணமிகல்செயா திருந்ததென்றிசைத்தான்
புன்மைநோக்கினனுணிஞற் பொருந்திலேனென்றுன்
அன்னதேவினியமையுமெங் கடனஃதென்றுன்.

அப்போது வன்னியென்னும் சேனாதிபன் இராவணனைப்பார்த்து, ஐயா நீர் இத்தனை ராக்ஷசவீரர்களெல்லா மடிந்துபோனதைக் கண்டும் என்னகாரணத்தினால் அந்தமனிதர்கள்மேல் யுத்தத்திற்குப்போகாமலிருந்தீரென்றுகேட்டான். அதற்கிராவணன் அவ்வன்னிமுதலியவர்களைப்பார்த்து, ஓ சேனாபதிகளே! மனிதர்களும் குரங்குகளுமென்கிற அற்பத்தை நினைத்து அவர்கள்மீது யுத்தத்திற்குப் போவதற்கு வெட்கப்பட்டுக்கொண்டு நின்றுவிட்டேனென்றான். அதற்கவர்கள் ஆம்: அதுமெய்தான். நீர் அவர்கள்மேற் சண்டைக்குப்போகிறது தகுதியல்ல. அந்தக்காரியம் எங்கள்கடமை என்று சொல்லினார்கள். பின்னும் வன்னியென்பவன் தனியேசொல்லுகின்றான்.

ஐயா! இராவணேஸ்வரா! எல்லாந்தெரிந்த வும்முடையபாட்டனான மாலியவானுடைய அபிப்பிராயம், சீதையைக்கொண்டுபோய் விட்டுவிட்டு அந்த மனிதர்களைச் சமாதானம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்பது. அது ஆதியிலேயே செய்யவேண்டும். இனிச்செய்கிறது கெடுதி. இப்போதிறந்துபோன இந்திரசித்துவை நாமினி யெங்கே காணப்போகிறோம்? இனியந்தச் சீதையைக்கொண்டுபோய் விட்டுவிட்டாலும் யுத்தத்தில் மடிந்துபோன வீரர்களை நாமறுபடியும் பெறப்போகிறதில்லை. அதனால் நம்மை எல்லோரும் ஏளனம்பண்ணுவார்கள். ஆகையால் — நாமவர்களுடன் யுத்தஞ்செய்து அவர்களை வமிசத்துடன் கருவறுப்பதே தகுந்தகாரியம். என்றெழுந்தார்கள்.

மூலபல சேனைகள் யாங்களேசென்று மனிதர்களையும் வானரர்களையும் செயிப்போ மேன்று போதல்.

கவி.

என்றெழுந்தனரிராக்கத ரிருத்திநீயாமே
சென்றுமற்றவர் சில்லுடற்குருதிநீர்தேக்கி
வென்றுமீளுதும் வெள்குதுமேன்மிடலில்லாப்
புன்றொழிற்குல மாதுமென்றுரைத்தனர்போனார்.

இவ்வண்ணம் சொல்லி யெழுந்தவர்களாகிய அவ்வன்னி முதலிய மூலபல சேனாதிபதிகளெல்லாம் இராவணனைப் பார்த்து, ஐயா பிரதாபலங்கேஸ்வரா! நீரிங்கேயே இரும். நாங்கள்போய் அந்தமனிதர் குரங்குகளினுடைய சிறுவுடலி னிரத்தங்களைக் குடித்துவிட்டு வருகிறோம். அவர்கள் பலமில்லாத அற்பசாதிக ளானவர்கள்தானே யென்று சொல்லிப்போனார்கள்.

படைக்காட்சிப்படலம் - முற்றிற்று.

No. 64.

மூலபலசேனையைவதைத்தல்.

ஸ்ரீராமர் இலக்குமணரை இராவணனோடுபோர்செய்யவும் அங்கதனைவானரச்சேனைகட்குதிடங்கூறவுஞ்செய்துதாம்,



ஸ்ரீராமஜெயம்.

முப்பதாவது,

மூலபலவதைப்படலம்.

இப்படலத்தில் இராவணன் மூலபல சேனையைப் போர்க்களஞ் செல்லும்படி விடுத்துத் தான் தனது மூலச்சேனையோடு போர்க்கோலங் கொண்டுடன்சென்று நிற்கவும் அச்சேனைகள் யாவரும் ஸ்ரீராமருடைய படைக்குட்புகுந்து பராக்கிரமித்திருக்க, அக்கால் வானரசேனைகளும் சாம்புவந்தர் முதலிய சேனாவீரர்களும் பயந்தோடினதை ஸ்ரீராமமூர்த்தி கண்டு விபீஷணரால் அம்மூலபல சேனையின் திறலையறிந்து அலக்ஷியஞ்செய்யவும் அதனை,அங்கதனறிந்தோடி அச்சாம்புவந்தர் முதலிய வானர சேனைகளைப் பயந்தீர்த் தழைத்துவர, அக்கால் ஸ்ரீராமர் இளையபெருமா ளாதியரை வானரசேனையைக் காத்திருக்கும்படித் திட்டஞ் செய்து தாம்தனியே மூலபலசேனைக்குட் புகுந்து யாவரையுஞ் சங்கரித்துவிட, அதுகண்ட அம்மூலபலச்சேனாபதிகள் யாவரும் ஒன்றுகூடி ஸ்ரீராமரைவளைத் தெதிர்க்கவும் தாமவர்களை அப்பாலிப்பாலகன்றோடாதபடி சரக்கூடிட்டு நிறுத்தி அச்சேனாபதிகளையும் இராவணனுக்கு மூலசேனையாயிருந்த இராக்கதர்களையுஞ் சங்கரித்து இளையபெருமாள் அவ்விராவணனோடு செய்யும் இரணரங்கத்தை நோக்கிச் செல்லுதல் சொல்லப்படுகின்றது.

இராவணன் மூலபலசேனையோடு உயுத்தகளம்புகுந்து பராக்கிரமித்தல்.

கவி.

வானரப்பெருஞ் சேனையை யானொருவழிசென்
றூனறக்குறைத் துயிருண்ப னீயிர்போயொருங்கே
ஆனமற்றவ ரிருவரைக்கோறிரென் றமைந்தான்
தானவப்பெருங் கிரிகளை வாள்கொடுதடிந்தான்.

அதைக்கேட்டுத் தானவர்களென்கிற மலைகளையெல்லாம் தன்கைவாளாயுதத்தினாலேவெட்டி ஜெயம்பெற்ற வீரனான இராவணன் மிகுந்த சந்தோஷசித்தனாகி, ஓ மூலபலச்சேனாபதிகளே! நானொருபக்கத்திற்போய் வானரசேனைகளையெல்லா மாமிசங்களைச் சிதைத்து அவர்களுயிர்களைப் பக்ஷித்துவிடுகிறேன். நீங்கள்போய் ஒருமிக்க அவ்விரண்டு மனிதர்களை மாத்திரங் கொன்றுவிடுங்களென்று ஆஞ்ஞாபித்தான். இப்படித் திட்டப்பண்ணினவுடனே அந்தச்சேனாதிபதிகள் தங்கள் தங்கள் வாஹனங்களின்மேலேறிக்கொண்டு, பெருங்கடலைப்போ லிருக்கின்ற தங்கள்சேனையிற் போய்ச்சேர்ந்தார்கள். அதை இராவணன்பார்த்து, இந்தச் சேனைகளுக்கு முன்னதாக நம்முடைய மூலச்சேனையை அவர்கள்மீதுயுத்தத்திற்கு அனுப்புங்களென்று கட்டளையிட்டான்.

கவி.

ஏவியப்பெருந் தானையைத் தானும்விட்டெழுந்தான்
தேவர்மெய்ப்புகழ் தேய்த்தவன் சில்லியந் தேர்மேல்

காவன்மூவகை யுலகமுமுனிவருங் கலங்கப்
பூவைவண்ணத்தன்சேனைமே லொருபுறம் போனான்.

அவ்வாறேயந்தச் சேனைகள் சென்றபின்பு தேவர்களுடைய புகழையெல்லா நாசப்படுத்தினவனான இராவணனும் தேர்மேலேறிக்கொண்டு, திரிலோகத்தவர்களு மகாரிஷிகளு நடுங்கிப் பீதியடையும்படியாகப் புறப்பட்டு, காயாம்பூவைப்போல் திருமேனியையுடையவரான ஸ்ரீராமமூர்த்தியினுடைய சேனைகளின்மீது ஒருபக்கத்திற் பிரவேசித்தான். அப்போது வள்ளுவர்கள் யானைமீதுபேரிகையைக்கொட்டிசேனைகளெல்லாஞ் சண்டைக்குப்புறப்படுங்களென்று பலபலதிசைகளிலும் அறைந்தபோது, மூலபலசேனைகள் பூமியையும் - ஆகாசத்தையும் - அஷ்டதிக்குகளையு மொய்த்து நிறைந்து கூட்டங்கூடின. அந்தமூலபலப் பெருஞ்சேனையெல்லாம் ஆயுதந்தரித்த தேகத்தைநெருக்கிச்சுருக்கிக்கொண்டு வாமனவுருவங்கொண்ட விஷ்ணுவானவர் விஸ்வரூபங்கொண்டுவருகிறதைப்போல வருகிறபடியினாலே, சமுத்திரமெல்லாமறைந்தது. ஆகாசமெல்லா மறைந்தது. உலோகத்திலுள்ள ஜீவகோடிகளெல்லா மறைந்தன.

அந்த மூலபலராக்ஷசர்கள் தருமத்தை வேரோடுவிழுங்கிக் கிருபையைப்பானம்பண்ணி வெற்றிபெற்ற வீரத்தையே ஆபரணமாகப்பூண்டு பாபத்தையே தங்களுக்கு மனைவியாகக் கலியாணஞ் செய்திருக்கின்றவர்களும், மேகத்தைப்போலக் கறுத்தவர்களும், ஆலகால விஷத்தைப்போன்ற மனதையுடையவர்களும் நெருப்புப்பற்றி யெரிகிறது போலத் தலைமயிரையுடையவர்களும், இயமனும் புகழும்படியானவர்களும், நீளமான கைகளினாலே சமுத்திரஜலத்தைவாரி யிறைத்துவிட்டு அதிலிருக்கின்ற மீன்களுடனே மகரமச்சியங்களையும் வாயிற்போட்டு மென்று விழுங்கிவிட்டு இடிகளைப் பிடித்துக் காதுகளுக்குக் குண்டலம்போலத் தொங்கவிட்டுக்கொண்டு மேகங்களையுரித்து வஸ்திரமாகப்போர்த்துக்கொண்டுலாவிக்கர்ஜ்ஜிக்கின்றவர்களும், மேகக்கூட்டங்கள் சத்திக்கும்படிகுலாசலங்களைப் பேர்த்துப் பரலாகவும்மலைப்பாம்புகளைக்கட்டிப்பிணித்திருக்கின்ற வீரகண்டாமணியாகவுந்தரித்தவர்களும், ஆகாசத்திற்பறந்துபோகின்ற கருடன்காற்று இவைகளைப்பார்க்கினு நாலத்தனை வேகமுள்ள நடையையுடையவர்களும், பசிக்குண்ணும்படியாக மாமிசங்கிடையாமற் போகுமானால் திக்கஜங்களையும்பிடித்து வாயிற்போட்டுக் கொள்ளுகின்றவர்களும், குடிப்பதற்குத் தாகங்கிடையாவிட்டால் ஆகாசத்திற் படர்ந்திருக்கின்ற மேகங்களையெல்லாம் பிடித்து வாயிற் பிழிந்துகொள்ளத்தக்க விடாயையுடையவர்களும், பனிகளுறைந்த மந்தரகிரி முதலானவைகளைக் கைகளினாலே யோங்கியறைந்து குளிரைநீக்கி உஷ்ணத்தையுண்டாக்கும்படியானவர்களும், சந்திரனைப்பிடித்து உடம்பைச்சொரிந்து தினவைநீக்கிக் கொள்ளுகிறவர்களும், மலைகளைக் கடைந்துபிடித்திருக்கின்ற தண்டாயுதத்தை யுடையவர்களும், இடியைப்போலக் கர்ஜ்ஜிக்கின்றவர்களும், சூலத்தையாவது - மழுவாயுதத்தையாவது—வாளாயுதத்தையாவது - வேலாயுதத்

தையாவது — தண்டாயுதத்தையாவது - சக்கராயுதத்தையாவது — அம்புவில்லையுமாவது கையிற்கொள்ளுவார்களேயானால், இயமனையும் — விஷ்ணுவையும் — சிவபிரானையும், சுப்பிரமணியனையும் ஜெயிக்கும்படியானவர்களுமாயிருந்தார்கள்.

அவர்களில் ஒருவரே இந்தலோக முழுவதையும் வெற்றி கொள்ளுவார்கள். இரண்டுபேர் சேர்ந்தார்களேயானால் இந்தப்பதினாலு லோகங்களையுமடித்துவிடுவார்கள். சுற்றித் திரிவார்களேயானால் பூமியும் அவர்களுடனே சுழலும். வருவார்களேயானால் சப்தசமுத்திரங்களும் பின்தொடர்ந்துவரும். மேகங்களெத்தனையோ? அத்தனையத்தனை பதாதிகளா யிருந்தார்கள். பிர்ம்மாண்டத்துக்குள் விசாலித்திருக்கின்ற மலைகளெத்தனையோ? அத்தனை தேர்களுண்டாயிருந்தன. அளவில்லாத குதிரைகளிருந்தன. குதிரைகளெத்தனையோ அத்தனையானைக ளிருந்தன. இப்படிப்பட்ட யானை — தேர் — குதிரை — ஆகியவிவைகளைப் பார்க்கும்போது அவைகளுடைய சேணங்களும், மேற்றவிசுகளும், கொடி - குடை - சிகரம் - ஆகிய உறுப்புகளும், பொன்னு மிரத்தினங்களு மல்லாமல் வேறொன்றினால் அலங்கரிக்கப்பட்டவைகள் ஒன்றாவதுகிடையாது, இந்தப்பிரகாரமாக இந்த மூலபலமானது ஆரவாரித்துக்கொண்டு போகும்போது மேலெழும்பின பவளப்பொடி போன்ற தூளிகள் நிறைந்து தூர்த்துவிட்ட படியினாலே சமுத்திரமானது நீலநிறமாறிச் செந்நிறமடைந்தது. அதோடு யானைகளினுடைய மதநீர்வெள்ளமுங் கலந்தபடியினாலே தனக்குச்சுபாவமாயிருந்த உப்பு நீங்கிப்போய்விட்டது. அந்தச் சேனைபுறப்பட்ட இலங்காபட்டணத்தின் கோட்டை வாசலின்வழி எப்படி யிருந்ததென்றால்? மலைகளையும் - சமுத்திரங்களையும் - மற்றப்பொருள்களையும் — பிரஹம்மேந்திராதி தேவநிலயங்களையும், மற்றலோகங்களெல்லாவற்றையு மழிந்து போகாதபடி உட்கொண்டு, மறுபடியு முமிழ்ந்த தனிப்பொருளாகிய ஸ்ரீயப்பதியினுடைய திருவாய்மலருக் கொப்பாயிருந்தது.

அன்றியும் - பொறுக்கக்கூடாத நாற்றத்தையுடைய மதநீர்மிகுந்த யானைகளுந் தேர்களுங் குதிரைகளு நிறைந்திருக்கின்ற அந்தச் சேனாசமுத்திரத்தைச் சுமக்கக்கூடாமையால்: ஆயிரம் சிரங்களையுடைய ஆதிசேஷனும் துடித்துப்போனான். திருப்பாற்கடலிற் பிறந்த ஆலகாலவிஷத்தைக் கண்டு சகிக்கமாட்டாமல் ஓட்டம்பிடித்த தேவர்களைப்போல, வானரக்கூட்டம் நிற்கிறதற்கு மிடங்கிடைக்க மாட்டாதபடியினாலே ஓடிப்போய் வடதிசையைச் சேர்ந்து நின்றுவிட்டன. சக்கரவாளகிரியினாற் சூழப்பட்டிருக்கின்ற சப்தசமுத்திரங்களும் வலைகளுக்கொப்பாகவும், மூலபல ராக்ஷசர்களெல்லா மான்கூட்டங்களாகவும், இயமனும் - விதியும் - அவர்களுடைய பாபங்களும் - அவர்களைப்பிடிக்கும் வேடர்களாய் இலங்காபட்டணத்தி லிருந்து தொடர்ந்துவர இரணக்களம் வந்து சேர்ந்தார்கள். வீரர்கள் கர்ச்சித்த ஓசையும், தேர்வண்

டில்களினுடைய அதிர்ச்சியும், மேகத்தையொத்த யானைகளின் முழக்கமும், குதிரைகளினுடையகனைப்பும், அஷ்டாதச வாத்தியங்களினுடைய சப்தமும், ஒன்றுகச்சேர்ந்து அண்டமுங் கிழிபட ஒலித்தன. அந்தமூலபல சேனுசமுத்திரத்துக்கு ஆயுதங்களெல்லா மீன்களாகவும், இயானைகள்முதலைகளாகவும், குதிரைகள் அலைகளாகவும், பேரிகையோசை முழக்கமாகவும், கோபக்கண்களை யுடைய ராக்ஷசசேனைகள் அதிகொடூரமான சுருமச்சியமாகவும், இருந்தன. கறுத்தகுடங்களைப்போல உருண்டுதிரண்ட தோள்களையுடைய இராக்ஷசசேனைகள் பொற்றலமாகிய சுவர்க்கலோகத்தில் மிதித்துநடக்கின்ற படியினுலேயும், அந்தத் தரையானது யானைமதம்பாய்ந்து ஓடுகிறபடியினுலேயும் சேறுகியும் குழைசேறுகியும் கெட்டுப்போய்விட்டது. இப்படி ராக்ஷசசேனைகளெல்லாம் ஆகாசத்திற் சென்றபடியினுலே சிகரத்தின்மேற் கட்டியிருக்கின்ற அந்த லங்காபட்டணமானது அழிந்துபோகாம லிருந்தது.

அப்போது தேவர்கள் பூமியைப்பார்த்தார்கள். சமுத்திரத்தைப் பார்த்தார்கள். விசாலமாயிருக்கின்ற ஆகாசமுகட்டைப் பார்த்தார்கள். எட்டுத் திக்குகளையும் பார்த்தார்கள். எங்கும் வெளியென்பது கொஞ்சமாவதில்லாதிருக்கக் கண்டார்கள். எங்குநிறைந்திருக்கின்ற வெற்றிக்கொடிகளையும் பார்த்தார்கள். அதனுலெல்லாரு நடுங்கிப்பயந்து, நாம் நீங்கலாக இந்தலோகத்திலிருக்கின்ற சராசரப் பொருள்களெல்லா மிராக்ஷச ரூபத்தைப்பெற்று அளவில்லாத ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு வந்தனவோ? அப்படிக் கில்லாவிட்டால் அலைகளோடுங்கூடிய சப்த சமுத்திரங்களும் பாபத்தினுலே இந்தத் துஷ்டராக்ஷசரூபங் கொண்டனவோ? என்றுசொல்லிப் பயந்தார்கள்.

மூலபல சேனைகளைக்கண்டதேவர்கள் பயந்து உருத்திரமூர்த்தியிடத்தில் அடைக்கலம் புகுதல்.

கவி.

நடுங்கிநஞ்சடை கண்டனைவானவர்நம்ப
ஒடுங்கியாங்கரந் துறைவிடமறிகிலமுயிரைப்
பிடுங்கியுண்குவர் யாரிவர்பெருமைகண்டறிவார்
முடிந்ததெம்வலி யென்றவரோவொன்முயன்றூர்.

என்றிறைஞ்சலு மிருண்மிடற்றிறைவனுமினிநீர்
ஒன்றுமஞ்சலீர் வஞ்சனையரக்கரையொருங்கே
கொன்றுநீக்குமக் கொற்றவனிக்குலமெல்லாம்
பொன்றுவிப்பதோர் விதிதந்ததாமெனப்புகன்றுன்.

அப்படிப் பயந்தவர்களாகிய தேவர்கள்—காளகண்டனுகிய சங்கரமூர்த்தியைப்போய்ச் சேர்ந்து, ஸ்வாமீ சம்ஹாரகர்த்தாவே! நாங்களொளித்துப் பிழைக்கும்படியான இடம் அகப்படவில்லையே: எங்களையெல்லா மிந்தராக்ஷசர்கள்கொன்று தின்றுவிடுவார்களே: இவர்களுடையபெருமையை யாரளவிட்டுச்சொல்லப்போகிறுர்கள்? எங்கள் பலமெல்லாம் இன்றையதினத்துடனே

முடிந்துபோய் விட்டது: இவர்க ளெவ்வொருவரைக் கொல்லுகிறதற்கு ஆயிரம் ஸ்ரீராமர்கள் வந்து நாற்பதுவருஷம் யுத்தஞ்செய்தாலு முடியாதே: நாமுங்கூடவிருந்தாவது கொல்லலாமென்றால், நின்றுயுத்தஞ் செய்கிறதற்காகிலும் ஒருவெளியிடம் வேண்டாமா? அதுவுமல்லாமல் முதலாவது நம்முடைய உயிரிருந்தாலல்லவா சண்டைசெய்யலாம்? அவர்கள் எல்லாரையுங்கொன்றுவிடுவார்களே: அப்பால்யார் இவர்களோடு எதிர்த்து யுத்தஞ்செய்யப்போகிறார்களென்று வணங்கினார்கள். அப்போது விஷகண்டராகிய உருத்திரமூர்த்தியானவர் அவர்களைப் பார்த்து, நீங்களொன்றுக்கும் பயப்பட வேண்டாம். இந்தவஞ்சகர்களான ராக்ஷசர்களை யெல்லாம் ஒருமிக்க அந்த ஸ்ரீராமனொருவனே சம்ஹரித்து விடுவான். இவர்களையெல்லா நாசம்பண்ணுகிறதற்கு அவர்கள் விதியே கொண்டுவந்துவிட்டதென் றருளிச்செய்தார்.

வானரசேனைகள் மூலபலசேனைகட் கஞ்சியோடல்.

கவி.

புற்றினின்றுவல்லரவினம் புறப்படப்பொருமி
இற்றதெம்வலியெனவிரைந் திரிதருமெலிபோல்
மற்றவானரப்பெருங்கடல் பயங்கொண்டுமறுகிக்
கொற்றவீரரைப்பார்த்தில திரிந்ததுகுலைவால்.

இப்படி யிருக்கும்போது புற்றிலிருந்து பெரும்பாம்புகள் புறப்பட்டபோது எங்கள் வலியழிந்தோமென்று வேகங்கொண்டு ஓட்டம்பிடிக்கின்ற எலிகளைப்போல, வானரசேனை சமுத்திரமானது ஸ்ரீராமலட்சுமணர்களுடைய வீரப்பிரதாபத்தையும் ஆலோசித்துப்பாராமல் நடுநடுங்கிப் பயந்து ஓட்டம்பிடித்தன. அப்படி யோடும்போது சிலவானரங்கள் சேதுவழியாக ஓட்டம்பிடித்தன. சில வானரங்கள் சமுத்திரத்தைத் தாண்டிப்போகிறதற்குப் புணைகளைத்தேடித் திரிந்தன. சிலவானரங்கள் சமுத்திரத்தில் நீந்திப்போயின. சிலவானரங்கள் இரண்டிரண்டாக நீந்திக்கொண்டுபோய் நடுச்சமுத்திரத்தில் முழுகிப்போய் விட்டன. சிலவானரங்கள் எட்டாமரக் கிளைகளிற்போ யேறிக்கொண்டன. சிலவானரங்கள் மலைக்குகைகளிற் புகுந்துகொண்டன. சில வானரங்கள் இந்தச்சேதுக்கட்டடந்தான் நமக்கு உயிரைக்கொடுத்ததென்றன. சிலவானரங்க ளதுகேட்டு, ஆயினுமந்த ராக்ஷசர்கள் இந்த அணையின்வழியாக நம்மைத் தொடர்ந்துவராமல் இதை உடைத்துவிட்டுப் போய்விடலாமென்றன. சிலவானரங்க ளப்போது நாமெங்கேபோனாலும் அங்கே ஆகாசத்தின்மார்க்கமாய் வந்துவிடுவார்களே யென்கிற பயத்தினாலே, பிரஹ்மா சிருஷ்டித்த அஷ்டதிக்குகளிலுஞ்சிதறி யோட்டம்பிடித்தன. சுக்கிரீவமகாராஜரும், ஆஞ்சனேயரும், அங்கதகுமாரனும், ஸ்ரீராமலட்சுமணர்களைவிட்டுப் பிரியமாட்டாதவர்களாகி நின்றார்கள். மற்ற வானரவீரர்களெல்லாரு மோடிக் கடலைக்கடந்து வடகரைக்குப் போய்விட்டார்கள்.

ஸ்ரீராமர் விபீஷணரைநோக்கி இச்சேனைகளின்வரலாற்றைச்
சொல்லென்ன வவர்சொல்லுதல்.

கவி.

இக்கொடும்படை யெங்குளதியம்புதியென்றான்
மெய்க்கருந்திறல் வீடணன்விளம்புவான் வீர
திக்கனைத்தினு மேழுமாத்தீவினுந் தீயோர்
புக்கடைத்திடப் புகுந்துளதிராக்கதப் புணரி.

இப்படி வானரங்களும் வானரவீரர்களுந் தட்டுக்கெட்டுத்தடுமாறி யலைவதையும் - மூலபலசேனைகள் மூர்த்தண்ணியங்கொண்டு பராக்கிரமித்து நிற்பதையும் - ஸ்ரீராமபிரான் கடாக்ஷித்து, ஓ விபீஷணு! இந்தப்படை இத்தனைநாள் எங்கேயிருந்ததென்று கேட்டார். விபீஷணுழ்வான் ஸ்ரீராமபிரானுடைய திருவடித்தாமரைகளில் வணங்கி, ஸ்வாமி! எல்லாத்திக்குகளிலு மற்றச் சப்தத்தீவுகளிலு மிருந்தவர்களைத் துஷ்டராவணனுடையதூதுவர்கள்போயழைத்தபடியினாலே, இந்தச்சேனைக்கடல்வந்து சேர்ந்தது. கீழேழுலகத்திலிருந்துமேலேறி ஊழிகாலத்துச்சமுத்திரம்போல முன்னாலேவருகின்றசேனை இராவணனுக்குமூலமாகவிருந்த சேனைகளாகும். இதுதவிரஇனிராக்ஷசர்களென்கிற பெயருள்ள ஒருபூண்டுங்கிடையாது. இப்போதிந்த அண்டத்திலுள்ள ராக்ஷசர்களெல்லாம் ஒருவரொழியாமல் தங்கள் பாவங்கள் பிடரியைப் பிடித்துத்தள்ள, மாண்டுபோகும்படியான விதியைப் பின்பற்றின புத்தியினாலே தூண்டப்பட்டு வருகின்றார்களன்றி வேறல்லவென்று விண்ணப்பம் பண்ணினர்.

மூலபலசேனைகட்குப் பயந்தோடின வானரசேனைகளை யழையென்று
சுவாமி சொல்ல அங்கத னழைக்கச் செல்லுதல்.

கவி.

கேட்டவண்ணலு முறுவலுஞ்சீற்றமுங் கிளரக்
காட்டுகின்றனென் காணுதியொருகணத் தென்னு
ஓட்டின்மேற்கொண்ட தானையைப்பயந்துடைத் தூவோய்
மீட்டிகொல்லென வங்கதனேடினன் விரைந்து.

அதைக்கேட்ட பெரியபெருமாள் சிரித்துக்கோபங்கொண்டு, இவர்கள் படும்பாட்டை நான் காட்டுகின்றேன். சற்றேபார். ஓடிப்போன நம்முடைய வானரசேனைகளைப் பயந்தீர்த்துவிட்டு அடைத்துக்கொண்டுவரக் கடவாய். என்று நியமிக்கவும் அங்கதகுமாரன் வானரங்களை அழைத்துக்கொண்டு வருகிறதற்கு வேகமாயோடி வானரசேனையைக் கிட்டி, ஓ வானரங்களே! நான் சொல்லுகின்ற வார்த்தையைச் சற்றேநின்று கேட்டுவிட்டுப் போங்களென்று நல்லவார்த்தையாகச்சொல்லினன். அப்படிச்சொல்லியும் அவ்வானரங்க ளதற்குச் செவிகொடாமல், நாங்களொன்றுங் கேட்கமாட்டோமென்றுசொல்லிக்கொண்டேஓடினார்கள். அவ்வானரப் படைத்தலைவர்கள்மாத்திரந் திரும்பிச்

சமுத்திரத்தின் வடகரையிலுள்ள ஒருமலையின்மீது நின்றார்கள். அவ்வாறுநின்றவர்களை அங்கதகுமாரன் பார்த்து நீங்களெதற்கு ஓடிவந்துவிட்டீர்களென்று கேட்க அவ்வானரவீரர்கள் சொல்லுகிறார்கள்.

அங்கதகுமாரனை லழைத்தசேனைகள் பதின்மொழிகூறல்.

கவி.

ஒருவனிந்திர சித்தெனவுள்ளவ னுளநாள்
செருவினுற்றவை கொற்றவமறத்தியோ தெரியிற்
பொருவின்மற்றவ ரிற்றிலரியாரோடும் பொருவா
ரிருவர்விற்பிடித் தியாவரைத்தடுத்துநின் றெய்வார்.

ஐயா மிகவும் வெற்றியாளராகிய உவராஜ்யாதிபதியே! நீரந்த ராக்ஷசப்பெருஞ்சேனைகள் கூட்டங்கூடிக்கொண்டு வருகிறதைக் காணவில்லையா? நாமெல்லோரும் இறந்துபோனபிறகு என்னகாரியஞ்செய்யப்போகிறோம்? உயிரிருந்தாலும் உப்புமாறிப்பிழைக்கலாம். இந்திரஜித்தென்னும் ஒருவன்செய்த யுத்தத்தில் நாம்பட்டபாட்டை நீர்மறந்துபோய் விட்டீரோ? இவர்களுக்குச் சமானமானவர்க ளியாராவ திருப்பார்களோ இவர்களித்தனைபேர்களை இரண்டுபேர்வில்லைப்பிடித்துக்கொண்டு எப்படித்தடுத்து யுத்தஞ்செய்வார்கள்? திரிபுர சம்ஹாரகர்த்தாவான உருத்திரமூர்த்தி முதலானதேவர்கள் தம்மையடுத்தவர்களுக்கு எல்லாவரங்களையுங்கொடுத்து இரக்ஷிக்கிறவர்களா யிருந்தாலும்,இவர்களோடெதிர்த்து நிற்கமாட்டாதவர்களாய் ஒளித்துக்கொண் டிருக்கின்றார்கள்.இப்படியிருக்க இந்தராமலட்சுமணர்களாகிய மனிதர்களா குரங்குகளைக்கொண்டு இந்தராக்ஷசர்களை ஜெயிக்கப்போகிறார்கள்? ஸ்ரீகைலாசபதியாகிய உருத்திரமூர்த்தியும் – சக்கரதரனாகிய விஷ்ணுவும் – கமலவாசனாகிய பிரஹம்மாவும் - தேவர்கோனாகிய இந்திரனும் - ஒன்று சேர்ந்துகொண்டு ஆயிரகோடி ஊழிபரியந்தம் இவர்களுடன் சண்டைசெய்து இவர்களி லொருவரையாவது கொல்வார்களேயானாலும் வெற்றியாகும். அப்பப்பா!! இந்த எழுபதுவெள்ள வானரசேனைகளும் ஒருராக்ஷசன் தின்று உமிழ்வதற்குத்தான் போதுமோ? நாங்களென்ன தேவர்களைக்காட்டிலும் வல்லவர்களோ? அல்லவே: ஆலோசிக்குமிடத்தில் அற்பஜெந்துக்கள்தானே: இதனை நீர் நன்றாயாலோசித்துப்பாரும்.

அன்றியும்-இந்த லோகங்களையெல்லாஞ் சிருஷ்டித்த பிர்ம்மா தன் ஆயுசுபரியந்தம் கிரமமாகநின்று இவர்களுக்குத் தொகைசெய்யவேண்டி ஆயிரத்துக்கொன்றாக எங்களை அவர்களுக்கு உறையிட்டாலும், அதற்குத்தான் நாங்களும் இந்தவானரங்களும் போதுமா?இவ்விராட்சசர்களுக்குத்தலைவனாக இருக்கின்றராவணனுக்குப் பத்துத்தலையும் இருபதுகைகளுமுண்டு.அவனொருவனை ஜெயிக்காமலிருக்கின்றோம். அப்படிக்கிருக்க–இப்போதுவந்தவர்களுக்கு ஆயிரந்தலைகளும், இரண்டாயிரங்கைகளு மிருக்கின்றன. ஐயா! சமுத்திரமணலை எண்ணினாலு மெண்ணலாம். இவர்களை எண்ணத் தொலையாதே:

கும்பகர்ணனென்கின்ற ஒருவனுடைய அம்பைச் சஹிக்கவும் சக்தியில்லாமற்போயிற்று அவன்செய்தகொடுமையைத்தான் நாங்கள்பார்த்திருக்கின்றோமே: தேவர்களையல்லாமல் அறிவுடையவர்களும் உண்டோ? அவர்களே பயப்படுகிறார்களே: ஆ! தம்பி! நீர் சிறுபிள்ளையாகையால் இளங்கன்று பயமறியாதென்பதுபோல ஒன்றியாய் எங்களைத் தேடிக்கொண்டு வந்தீர். ஆஞ்சநேயருடைய வல்லமையும், சுக்கிரீவருடைய பலமும், இராமலக்ஷ்மணர்களுடைய வில்வீரத்தன்மையும், தங்களுயிரைத் தாங்கிக்கொள்ளவு முடியமாட்டாது. ஆதலாலிவர்களால் எங்களுக்காக வேண்டியதென்ன? ஓ எங்களாண்டவனே! நாங்களுண்கிறதற்குக் காட்டிற் கனிகளுங்காய்களுமிருக்கின்றன வசிக்கின்றதற்கு மலைக்குகைக ளிருக்கின்றன. இந்தலோகத்தை மனிதர்களாண்டாலென்ன? இராக்ஷசர்க ளாண்டாலென்ன? யாரும் உயிருடனே யிருந்தால்தானே புகழையும் ஐஸ்வரியத்தையும் அடையப்போகிறார்கள்? அதுபோல நாங்களிருந்தாலல்லவா எங்கள் பிள்ளைகளும், பெண்டுகளும், பிழைப்பார்கள்? எங்களை எங்கேயாவதுபோய்ப் பிழைத்துவிடுங்களென்று சொல்லவேண்டிய நீர், எங்களைச் சாகும்படியாக அழைக்கின்றீரே: இஃதுமக்குத் தர்மமாவென்று கெஞ்சினார்கள்.

அங்கதகுமாரன் சாம்புவந்தரைப்பார்த்து சிலவசனங்கூறல்.

கவி.

சாம்பனை வதனநோக்கி வாலிசே யறிவுசான்றோய்
பாம்பணையமலன்மற்றிவ் விராமனென்றெமக்குப்பண்டே
யேம்பல்வந் தெய்தச்சொல்லித் தேற்றினையல்லையோநீ
யாம்பலம்பகைஞன்றன்னோ டயிந்திரமமைந்தோனன்னாய்.

இவையனைத்துங்கேட்ட அங்கதன் தனியே சாம்புவந்தரைப் பார்த்து, ஐயா பெரியோனே! சேஷசாயியான ஸ்ரீயப்பதியே இந்த ஸ்ரீராமபிரானென்று முன்னாலெங்களுக்கு நீர் சந்தோஷமுண்டாகச் சொல்லவில்லையா? ஆம்பற்புஷ்பத்துக்குப் பகைவனான சூரியனிடத்தில் ஐந்திர வியாகரணங்கற்ற ஆஞ்சநேயருக்கொப்பான புத்திமானாகிய நீர், என்னைப்போ லொத்தவர்கள் தப்பிதஞ்செய்தால் அவர்களுக்குத் தகுந்த புத்திசொல்லித் தேற்றுவிக்கின்றவ ரல்லவா? அப்படிப்பட்ட நீரே பயந்தவர்களைப்போல உயிரைக் காப்பாற்றிக்கொண்டீரே: இனிஎன்னகீர்த்தி: உம்முடைய விவேகத்தினாலே பிரயோசனமென்ன? வீரவான்களாயிருக்கின்ற பேர்கள் மரணமடைந்தாலும் தங்கள் வீரங்குறைவார்களோ? நாம் பயந்தபோதே பழியையும் பாவத்தையும் பூண்டுகொண்டோம். இனி அம்பினாலே ரணக்களத்தில் பிராணனைவிடுகிறதே யல்லாமற் பிராணனுடனேயும் இருக்கலாமா? மிகுந்த பயமடைந்து விஷத்துக்குச்சமமான நம்மை அமுதத்திற் கொப்பானவர்களென்று திருவுளங்கொண்ட ஸ்ரீராமலட்சுமணர்களைத் தனிமையாக விடுகிறதைவிடச் சாகிறதே நல்லதல்லவா? ஐயா சாம்பவரே! தானவர்கள் வானவர்கள் முத

லானவர்களாலே கடையமாட்டாத பாற்கடலைக்கடைந்து அமுதங்கொடுத்த என்றந்தை வாலியானவன் ஸ்ரீராமபாணமொன்றாலே மாண்டுபோனதை மறந்துபோன காரணமென்ன? அவருடைய பாணத்தினாலே சமுத்திரராஜன் பட்டபாட்டை நீர் பார்க்கவில்லையா? இவர்களெத்தனை ராக்ஷசர்களாயிருந்தபோதிலும் அவர்களிடத்தில் தர்மமில்லையல்லவா? ஆகையால் தர்மத்தை பாலரும் ஜெயம்பெறுமென்று நீர் நிச்சயித்திருக்கின்றீரோ? நீரும் பயித்தியக்காரரைப்போல் இந்த அவிவேகிகளான வானரங்களுடனே ஓடிவந்துவிட்டது உம்முடையவிவேகத்துக்குத் தகுதியல்லவே என்று சொன்னான்.

சாம்புவந்தர் தன்னைத்தேற்றவந்த அங்கதகுமாரனுக்குப் பதின்மொழி விடுத்தல்.

கவி.

நாணத்தாற் சிறிதுபோது நல்கினனிருந்துபின்னும்
தூணைத்ததிரடோள்வீர தோன்றியவரக்கர்வீரங்
காணத்தானிற்கத்தானக் கறைமிடற்றவர்க்குமாமோ
கோணற்பூவுண்ணும்வாழ்க்கைக் குரங்கின்மேற்குற்றமுண்டோ.

இப்படியங்கதன்சொல்லக்கேட்டசாம்பவர்சற்றுநேரம்வெட்கப்பட்டு வருத்தமுற்றாலோசித்து, அங்கதகுமாரனைப்பார்த்து இதனைச்சொல்லுகிறார். ஐயா எருஸ்தம்பம்போற்றிரண்ட புயங்களையுடைய அங்கதகுமாரரே இதுகாறு நீர் சொன்னவனைத்துங்கேட்டுநாணத்திற்கிலக்கானேனாயினும், இந்தராக்ஷசர்கள் வரும்போது இவர்களைப்பார்க்கவாவது- இவர்களுக்கெதிரே நிற்கவாவது அந்த விஷகண்டனாகிய உருத்திரமூர்த்தியினால்தானாகுமா? புஷ்பங்களையுண்டு வாழ்ந்துகொண்டிருக்கின்ற கூன்குரங்குகளிவர்களைக்கண்டும் இவர்களுக்குமுன்னிற்குமோ? இவர்கள்மேற்குற்றஞ்சொல்லலாகுமோ? தேவர்களும் அசுரர்களும் ஒருவரோடொருவரெதிர்த்து முன்னாளையிற் சண்டைசெய்தபோது, அவர்களில் யார் என்கண்ணுக் ககப்படாமலிருந்தார்கள்? விசாலமான இந்த மூன்றுலோகத்திலுள்ள மஹா வல்லவர்களுக்குள்ளும், இவர்களுக்குச் சமமான கொலைபாதகர்கள் யாரிருக்கின்றார்கள்? முன்னிருந்த மாலியென்பவனையும், மாலியவானென்பவனையும் பார்த்திருக்கின்றேன். காலநேமியென்பவனைப் பார்த்தேன். இரணியனைப் பார்த்தேன். ஆலகால விடத்தையும் பார்த்திருக்கின்றேன். மதுவென்பவனும், அவன்தம்பி கைடவனென்பவனும், சமுத்திரத்தைச் சின்னபின்னப்படக் கலக்கினதையும் பார்த்தேன். அவர்களுக்கெல்லாம் இவர்களுக்கிருக்கின்ற வல்லமையில்லை. இவர்கள் மிகுந்தபலவந்தர்கள். அதிக வரம்பெற்றவர்கள். மாயத்தில் வல்லமை யுள்ளவர்கள். சமுத்திரமணலினு மதிகப் பெருந்தொகை யானவர்கள். இவர்களுடையமனமோ பாவத்தினு மிகுந்தகொடியது. ஆயுதப்பயிற்சியிற் கைதேர்ந்தவர்கள்.

இப்படியிருந்தால் இவர்களைக்கண்டவர்கள் யார்தான் தோல்வியடையாதவர்கள்? தேவர்களே இவர்களைக்கண்டு ஓட்டம்பிடித்தார்கள்: எப்படியிருந்த

போதிலும்—ஐயா! சண்டையிற்பயந்து முதுகுகாட்டி யோடினால் மறுமையில் அவசியமாய் நரகமடைவார்கள். நாங்கள் திரும்பிவருகின்றோம். ஆனால் மேகம்போலும் திருமேனியையுடைய ஸ்ரீராமபிரான் சந்நிதியில் எப்படி வெட்கமில்லாமல் முகங்காட்டி நிற்போம்? என்று சாம்பவர்சொல்லக்கேட்ட அங்கதகுமாரன் — ஐயா பெரியோனே! பகைவர் மேலேறிப்போகிறதும், அவர்களைக்கண்டு சமயம்வந்தால் ஓடிப்போகிறதும், மறுபடியும் எதிர்த்து வந்தவர்களை யடித்துக்கொல்லுகிறதும், வீரவான்களுக்கெல்லாம் ஏற்றகாரியமே: அதுநிற்கட்டும். நீர் மிகுந்தபுத்திமானாகையால் அடியேன் சொல்லுகிறதை ஆலோசித்துக் கேட்கவேண்டும். நீரொன்றுக்கும் பயப்படவேண்டாம். நாமெல்லாம் ஒருமிக்கக் கூட்டமாகப்போய் நின்றாலு நம்மாலொன்றுஞ் செய்யமுடியாது. சக்கரவர்த்தித் திருக்குமாரரே அவர்களோடெதிர்த்துச் செயம்பெறுவாரேயானால் நாம்பிழைக்கின்றோம். இல்லாவிட்டால் அவருடனே நாமுமிறந்துபோகிறதே நமக்குக்கீர்த்தியென்று அங்கதகுமாரன் சொல்லினான்.

அங்கதகுமாரனுடைய சொற்களினால் திரும்பிவரக்கண்டவானரச் சேனைகளை ஸ்ரீராமபிரான் ஆதரித்திருவென இளையபெருமாளுக் காக்கியாபித்தல்.

கவி.

ஈண்டியதானைநீங்க நிற்பதென்யாமேசென்று
பூண்டவெம்பழியினோடும் போந்தாம்போவதென்னு
மீண்டனர்தலைவரெல்லா மங்கதனோடும்வீரன்
மூண்டவெம்படையைநோக்கித் தம்பிக்குமொழிவதானான்.

அத்தநீயுணர்தியன்றே யரக்கர்தானவுணரேதான்
எத்தனையுளரென்றாலும் யான்சிலையெடுத்தபோது
தொத்துறுகனலின்வீழ்ந்த பஞ்செனத்தொலையுந்தன்மை
ஒத்ததோரிடையூறுண்டென் றுணர்விடையுதிப்பதன்றால்.

ஓவானரவீரர்களே நம்முடைய கூட்டமான சேனையெல்லாம் போர்க்களத்தைவிட்டு நீங்கியிருப்பானேன்? நம்மாலேநாமே ஏன்பழியைச்சம்பாதித்துக் கொள்ளவேண்டும்? நாம்போகலாம்வாருங்க ளென்றுகூறி அங்கதகுமாரனழைக்கவும்சாம்பவந்தர்முதலாகியவானரவீரர்களும், மற்றவானரசேனைகளும், திரும்பிவந்துசேர்ந்தார்கள். அப்போது பெரியபெருமாள் மூலபலம் வருகின்றதைப் பார்த்து இளையபெருமாளுக்கு நியமிக்கின்றார். தம்பீ இலக்ஷ்மணா! இராக்ஷசர்கள்தானாகட்டும். அசுரர்கள்தானாகட்டும். எத்தனைபேர் வந்தபோதிலும் நான் வில்லெடுத்தபோது எரிகிற அக்கினியில் வீழ்ந்த பஞ்சைப்போல் நாசமாவார்களே யல்லாமல், நமக்கொக்கானு மிக்கட்டுவரமாட்டாதென்பதை நீ அறிந்திருக்கின்றாய் அல்லவா. நம்முடைய வானரசேனைகள் நங்களை ரக்ஷிப்பவர்க ளொருவரு மில்லாமையாற் பயந்து ஓடிப்போய்த் தங்கள்

உறைவிடந்தேடிப்போயின. ஆனதால் நான் இந்தராக்ஷசச் சேனைகளை யெல்லாங்கொன்று நீக்குகிற பரியந்தம் இராக்ஷசர்கள் யாராவது வந்து வானரங்களை வருத்தப்படுத்த வொட்டாமல் நீ அவர்களைப் பாதுகாத்துக்கொண்டிரு. இந்தப்பக்கத்தி லிந்தச்சேனைகளை ஏவிவிட்டு அங்கேயிருக்கின்ற துஷ்டராவணன் வேறே தந்திரம் பண்ணிக்கொண்டு அந்தப்பக்கமாய் வருவானுனல், வானரங்களையெல்லாம் கொன்றுவிடுவான். அவனை மிகுந்தகோபமுள்ள வில்வீரனுகிய உன்னையல்லாமல் யார் தடுப்பார்கள்? ஆனதால் ஆஞ்சநேயனு நீயும், சுக்கிரீவராஜனும், சீக்கிரமாக வானரசேனையைக் காத்துக் கொண்டிருக்கும்படியாகப் போய்விடுங்கள். நீங்கள் என்னைத் தனியேவிட்டுப் போகக்கூடாதென்று நினைப்பீர்களேயானுல் நாம் தோற்றுப்போய் விடுவோம். என்று சொல்லக்கேட்ட இளையபெருமாள் ஸ்வாமிக்குத் தண்டன் சமர்ப்பித்துச் சொல்லுகின்றுர்.

கவி.

அன்னதே கருமமைய வன்றியுமடியே னின்று
லென்னுனக் குதவிசெய்து மிதுபடையென்றபோது
சென்னியிற் சுமந்தகையர் தேவரே போலயாமும்
பொன்னுடை வரிவிலாற்றல் புறனின்றுகாண்டு நன்றே.

ஆண்டவனே! தேவரீர் திருவுள்ளப்படியே நடக்கின்றேம். அப்படிக் கில்லாவிட்டால் இந்தச் சேனைகளுக்குமுன்பாக அடியேங்களாலே தேவரீருக்கு என்ன ஒத்தாசை யுண்டாகப்போகின்றது? தேவர்களைப்போல அடியேங்களுஞ் சிரசிற் கைகூப்பிக்கொண்டு தேவரீருடைய வில்வீரத்தைப் பக்கத்தில்நின்று நன்முய் சேவித்துக்கொண் டிருக்கின்றேம். என்று சொல்லிவிட்டு இளையபெருமாள் புறப்பட்டபோது ஆஞ்சநேயர் ஸ்வாமியைநோக்கி, ஓ எங்களாண்டவரே! அடியேனை அற்பக்குரங்கென்று விட்டுவிடாமல் அடியேன் தோளின்மீதேறி யுத்தத்திற் கெழுந்தருளுவீரானுல், நல்லதென்று அடியேன் நினைக்கின்றேன். அப்படிக் கில்லாவிட்டால் நாய்போன்ற அடியேன் தேவரீர் பின்னின்று தேவரீருக்கு வேண்டிய அடிமைத் தொழிலிற் பிழையில்லாமல் நடத்துகின்றே னென்றுர். அப்போது சக்கரவர்த்தித் திருக்குமாரர் ஆஞ்சநேயரைக் கடாட்சித்துச் சொல்லுகின்றுர்.

தன்தோளிலாரோகணித்து யுத்தத்திற் கெழுந்தருளவேண்டு மென்றுவேண்டிய அநுமானை இலட்சுமணருடன்கூட்டியனுப்புதல்.

கவி.

ஐயநிற் கியலாதுண்டோ விராவணனயலேவந்துற்
றெய்யும்விற்கரத்துவீர னிலக்குவன் றன்னேடேற்றல்
மொய்யமர்க்களத்தினுன்னைத் துணைபெறு தொழியின்முன்பு
செய்யுமாவெற்றியுண்டோ சேனையுஞ்சிதையுமன்றே.

ஐயா அனுமானே! உனக்குமுடியாத காரியமும் இருக்கின்றதோ? அதற்காகவல்ல நான் சொன்னது, இராவணன் அந்தப் பக்கத்தில்வந்து இளையவ

ளோடு எதிர்ப்பானேயானால் உன்னுதவியில்லாவிட்டால் அவன்செய்கிற யுத்தத்தில் வெற்றியுண்டாகுமா? அதுவுமல்லாமல் சேனையும் அழிந்துபோய்விடுமல்லவா? மிகுந்த அழகுள்ள தலைமயிரையுடைய இந்திரசித் தென்பவனுடைய யுத்தத்தில் இலட்சுமணன் எதிர்த்துநின்றபோது, வேறேயாரைக்கொண்டு அவனை வெற்றிபெற்றான்? உன்னாலே அல்லவா? ஓ வீரர்களுக்குள்ளே மஹாவீரனே! எல்லா ஞானமும் வல்லோர்களுக்கு நாயகமாகிநிற்போனே! உன்னை ஒருக்காலும் நான் பிரியமாட்டேன். நீயேயிவர்களோடு ஜெயம்பெறக்கடவாயென்று நியமிப்பேன். ஆதலால் நீ இந்தவானரசேனையைக் காத்து, என்னுடனே அயோத்தியின் சுகத்தையெல்லாம் விட்டுவந்த சிம்ஹத்தையொத்த இளையவனைக்காத்து, வானராதிபதியாகிய சுக்கிரீவனைக் காத்து, தேவலோகத்தாரையும்-பூலோகத்தாரையும்- வேதமார்க்கத்தையும் -விருத்திசெய்யக்கடவா யென்றார். பிறகு வாயுபுத்திரர் மற்றொன்றுஞ் சொல்லாமல் இளையபெருமாளோடு கூடப்போனார். அப்பால் பெருமான் விபீஷணாழ்வானைப் பார்த்து, அப்பா! நீயும் என்தம்பிக்குப் பின்போய் துஷ்டர்களாகிய ராக்ஷசர்கள்செய்யு மாயத்தைத் தெரிந்து அவைகளைக்கெடுத்து நம்முடைய வானரசேனைகளைக் காக்காமற் போனாயேயானால், நமக்குவெகு கெடுதியுண்டாகுமென்றார். அவரும் அப்படியே நல்லதென்று புறப்பட்டார். சுக்கிரீவமகாராஜரும் தேவரீருடைய ஆஜ்ஞையின்படியே ஆகட்டும் பாக்கியமென்று இளையபெருமாள் பின்னேபோனார். மற்ற வானரவீரர்களெல்லாரும் இதுவே நல்லகாரியமென்று வானரசேனையைக் காத்துக்கொண்டு நின்றார்கள்.

ஆயிரவெள்ள மென்னும்படி வந்த மூலபலசேனைகளாகிய இராட்சசர்கள் யாவரையும் ஸ்ரீராமர் தனியே புகுந்து சங்கரித்தல்.

கவி.

வில்லினைத்தொழுதுவாங்கி யேற்றினான்மெய்ந்நாண்மேருக்
கல்லெனச்சிறந்ததேனுங் கருணையங்கடலேயன்ன
எல்லொளிமார்பிற்றீராக் கவசமிட்டிழையாவேதச்
சொல்லெனத்துளையவாளித் தூணியும்புறத்துத்தூக்கி.

இப்படி எல்லாரும் எம்பெருமான் திருவுள்ளப்படி போனபின்பு ஸ்ரீராமமூர்த்தியானவர் தெய்வத்தன்மை பொருந்திய கோதண்டத்தை வளைத்துக் கையிற்பிடித்து நாணேறிட்டு, மேருமலைக்கொப்பான திருமார்பில் கவசஞ் சார்த்தி, வேதவாக்கியம்போலக் குறைவில்லாத அக்ஷயத்தூணியையுந் தோளில்வரிந்து கட்டினார். அப்போது நூறுயோசனை வட்டமாக எள்ளிட இடமில்லாமல் நிறைந்திருக்கின்ற மூலபலசேனையின் முன்னணிவந்து ஸ்வாமியைச் சுற்றிக்கொண்டு, அவர்மேற் பிரயோகித்த ஆயுதங்களொன்றோடொன்று தாக்குண்டு நெருங்குவதைத் தேவர்கள் கண்டார்கள். உடனேயத்தேவர்களுடைய தேஹமெல்லாம் நடுங்கிப்போய்விட்டது. சேனாபராகம் ஆகாசமுழுதும் மூடிவிட்டது. அப்போது தேவர்கள் ஸ்ரீராமரைநோக்கி,

ஓ ஸ்ரீயப்பதியே! அடியேங்களுக்கு ரக்ஷகமாக எழுந்தருளியிருக்கின்றக வசமே! ஒருவராலும் அளவிடவொண்ணாத சமுத்திரத்துக்கொப்பான ஸ்வரூபனே! தர்மத்தின்பெருக்கே! வேதபாராயணர்களுடைய வல்லமையே! இந்தச்சேனைகளின்மேலெதிர்த்துப் போகிறதற்குத் தேவரீரல்லாமல் வேறொருவரால் முடியுமோ? தேவரீருடைய திருவுளப்படியேசெய்து முடித்தருளக்கடவீரென்று ஸ்தோத்திரம் பண்ணினார்கள். மகாரிஷிகள்முதலான பரமவைதீக தர்மமார்க்கத்தை நிறைவேற்றுகின்றவர்கள் பெருமாளுடைய தனிமையையும் இராக்ஷசச்சேனையின் பெருமையையும் பார்த்துச் சஹியாதவர்களாகி, கண்களில் கண்ணீர் பெருக்கெடுக்கத்தக்கதாக அழுது மனம்பதைத்து, பாவிகளாகியவெல்லாரும் தோற்றுப்போகக்கடவர்கள். ஸ்ரீராமபிரான் ஜெயம்பெறக் கடவர். என்றாசீர்வாதம் பண்ணினார்கள்.

அப்போது மூலபலசேனையானது ஸ்ரீராமமூர்த்தியைப்பார்த்து, சபாஸ், தனக்குதவியாயிருந்த சேனைகளெல்லாம் ஓடிப்போய் ஒருவருந் துணையில்லாமல் தனியாய்நின்றும், நம்முடைய பெருஞ்சேனையைக் கண்டு கொஞ்சமும் பயப்படாமல் பாணங்களைப் பொறுக்கிக்கொண்டு வீரத்தன்மைகுறையாமற் பிரயோகித்துக்கொண் டிருக்கின்றானே: இதுவே வெற்றிகொள்வதிலும் சிரேஷ்டமல்லவா? மாலியவான் எல்லாமறிந்தவனானபடியினாலே பொய்சொல்லமாட்டான். அவன் மெய்யேசொன்னான். திரிபுரசம்மாரியான சிவபிரானுக்குமொருதேரிருந்தது. தேவர்களெல்லாஞ்சேனையாக வந்தார்கள். ஆச்சரியபூதரான விஷ்ணுமூர்த்தியானவர் நங்குலத்தைக்கருவறுத்தநாளையில்கருடவாகனத்தின்மீதுஅநேகதேவகணங்களுடனேவந்தெதிர்த்தார். இவன்தனித்துக் கால்நடையாய் வந்து பயப்பட்டொளியாமல் நிற்கின்றானே: நாம் ரதகஜதுரகங்களோடுசிம்ஹம்யாளிமுதலானவைகளுடனேமேருமலைக்குச்சமமான தேகத்தை யுடையவர்களாய்ச் சப்தசமுத்திரம்போல வரவும், நம்மைக்கண்டு சிறிது மஞ்சாமல் - வாருங்கள்: வாருங்கள்: என்றழைக்கின்ற இந்தமனிதனுக்கு இந்தலோகத்தில் ஓடிப்போகப் போக்கிடமெங்கே? நம்மிடத்தில் நின்றும் எப்படி உயிர்தப்பிப் போகப்போகிறான்? என்று நெருங்கி ஆர்ப்பரித்து ஒருசிம்மத்தை அநேக யானைகள்போய் வளைந்ததுபோலச் சூழ்ந்துகொண்டார்கள்.

அம்மாத்திரத்தில் நல்ல தாகட்டுமென்று கீழேழுலோகத்தையு மேலேழுலோகத்தையும் ஒன்றாகத் திரட்டிச்செய்ததையொத்த தமது வெற்றிபொருந்தியவில்லை வேதநாயகராகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் குணத்தொனி பண்ணினார். அப்போது ராக்ஷசர்களுடைய மனதிலுள்ள கோபமெல்லாம் அடங்கிப்போய்விட்டது. காவலாகவந்த யானைகளுக்கு மதமுலர்ந்து போய்விட்டது. நின்றவீரர்கள் வாயுலர்ந்து போனார்கள். குதிரைகளெல்லாம் காலோய்ந்துவிட்டன. இராக்ஷசர்களுடைய வல்லமைகளெல்லாம் தளர்ந்துவிட்டன. மூலபலசேனைகளே இப்படி யாகுமானால் ஸ்வாமியின் வெற்றியைப்பற்றிச்

சொல்லவும்வேண்டுமோ? குதிரைகளும் சிம்மங்களும் தம்மைப்பூட்டியிருக்கின்ற சக்கரங்களுடன்கூடிய தேர்களை முறித்துவிட்டு ஓட்டம்பிடித்தன. எங்கு மிந்தப்பிரகாரமாக ஓரார்ப்பாடம் பிறந்தது. இப்படி நடந்தகாலத்தில் அந்தச்சேனைகளுக்கு இடந்துடித்த துர்நிமித்தத்தைக் கண்டு தேவர்களெல்லாம் குதித்துக் கூத்தாடினார்கள். அப்போது வேதப்பிரதிபாத்திய வஸ்துவான இராமமூர்த்தியானவர் இராக்ஷசர்கள்மீது மின்னல்களைப் போலொத்த பாணங்களைத்தொடுத்தார். பின்னும் யாளிகளின்மீதும், அவைகளைச் செலுத்துகிறவர்களின்மீதும், யானைகளின்மீதும், யானைப்பாகர்களின் மீதும், குதிரைகளின்மீதும், குதிரைப் பாகர்களின்மீதும், வீரவான்களுடைய தேர்களின்மீதும், வாளின்மீதும், வில்லின்மீதும், பூமியிலிருந்தெழும்பின தூளியின்மீதும், ஸ்ரீராமர் அம்புகளை அபரிமிதமாகப் பிரயோகித்தார். மலைகள் விழுந்தனபோல யானைகள் விழுந்தன. அந்தயானைகள் விழுந்தனபோல வீரர்களுடைய தலைகள் விழுந்தன. அந்தத்தலைகளைப்போற் குதிரைகள் கால்முறிந்து விழுந்தன. குதிரைக்கால்கள் அறுந்து விழுந்தனபோல வில்முறிந்துவிழுந்தன. அந்த வில்லுகளைப்போல வெற்றிக்கொடிகள் முறிந்து விழுந்தன. சந்திரர்களிற்று விழுந்ததுபோல இராக்ஷசர்களுடைய வக்கிரதந்தங்கள் அறுந்துவிழுந்தன.

அக்கால் கோடைகாலத்திலே நாலுபக்கங்களிலும் காற்றுவீசும்போது ஆகாசத்திலுள்ள மேகக்கூட்டங்கள் அபரிமிதமாய் வருஷிக்கிறதுபோல ஸ்ரீராமபாணங்கள் பாய்கிறபடியினாலே, யானைவீரர்களும் - குதிரை வீரர்களும் - தேர் வீரர்களும் — தங்களூர்திகளோடு மாண்டுபோனார்கள். அதனால் நாலுபக்கங்களிலு மிரத்தவெள்ளங்கள் ஓடுகிறதைப் பார்த்து அவரவர்கள் தைரியமற்றுப்போனார்கள். மேகங்களுந் தோற்றுப் போகும்படியாக ஸ்ரீராமபிரான் சொரிகிற பாணவருஷங்கள் பாய்வதினால் இராக்ஷசர்களுடைய விழித்தகண்களும், எடுத்தகைகளும், வளைத்தவில்லுகளும், எறிந்தவேல்களும், வீசியவாள்களும், சப்திக்கின்ற வாய்களும், நடக்கின்றகால்களும், பூரித்த தோள்களும், சின்னபின்னப்பட்டுப் போய்விட்டவைகளே யல்லாமல்; அவர்கள் பிடித்திருந்த உறைகழற்றிய ஆயுதங்கள்செய்த தொன்றையும் ஒருவரும் பார்க்கவில்லை. இராட்சசர்கள் தொடுத்துக்கொண் டிருந்த அம்புடனே வில்கள் துணிந்து விழுகிறதற்கு முன்பாகத் தைரியங்கொண்டெடுத்த வாள்களுடனே தோள்களு மற்றுவிழுந்தன. உடனே வேகமாய் நடந்துகொண்டிருந்த கால்களுங் கண்டங்கண்டங்களாய் அறுந்தன. இப்படியாகும் போது மிகுந்த கோபங்கொண்டு அந்தவீரர்கள் என்னசெய்யமாட்டுவார்கள்? தாங்கள் வரம்பெற்றதனால் துணிவுகொண்டு யுத்தத்திற்செலுத்தின குதிரைகளில் ஒவ்வொன்றையும் ஸ்ரீராமபாணங்கள் நூறுநூறாய்ப் பாய்ந்து கொல்லுவதினாலே, குளம்புகள் துணிபட்டு — கண்கள் சிதறுண்டு —, சேணங்கள் அறுந்து-மார்பும்பிளந்து விழுந்தவைகளே யல்லாமல் தாவியோடச் சக்தியுள்ளவைகளோ? தேர்வீரர்களென்று பேர்வைத்துக்கொண்டு வந்த பாவிகள்

அதைச் செலுத்தலாமென்று நினைத்தால், முன்புமாண்டு குப்பற்குப்பலா யுயர்ந்துகிடக்கின்ற பிணங்களினாலே அங்கேயிங்கும் நகர்கிறதற்கு முடியாமற் போயிற்று. அப்படியொருவேளை பேர்ந்ததேயானால் அபரிமிதமான பாணங்கள் பாய்கிறபடியினாலே ஒன்றுநூறாய் உடைந்துதிர்ந்து போனதேயல்லாமல், வேறொன்றுஞ் செய்யமாட்டாமற் போய்விட்டன.

எட்டுத்திக்கிலுமிருந்த சமர்த்தர்களான இராட்சசர்களெல்லாம் ஸ்வாமியைக்கிட்டி ஒருவரும் பிழைத்துப்போனவர்களில்லை. வரிசைவரிசையாக எதிர்த்துவந்த யானைகள் ஸ்ரீராமபிரானுடைய அம்புகள் பாய்வதினாலே வெகுநேரத்திற்கு முன்பாக அம்புபட்டு ஓடிவந்து விழுவதுபோலச் சுருண்டுவிழுந்தனவைகளே யல்லாமல், வேறென்ன காரியஞ்செய்ய வல்லவைகளாகும்? தடாகத்தில் மலர்ந்திருக்கின்ற தாமரைப் புஷ்பத்துக்கொப்பான திருக்கண்களையுடைய சக்கரவர்த்தித் திருக்குமாரர் ஒருபாணத்தைப் பிரயோகிப்பாரேயானால் அது நூறுகோடிப்படைகளைச் சம்ஹரிக்குமாகையால், இறந்த சேனைகளைக் கணக்கிட முடியாமற் பிரஹ்மதேவனும் பிரமித்துப்போய்விட்டான். அந்த யுத்தகளத்தில் மாண்ட சீவர்களைப் பிடிக்கவந்த யமனுக்கும், அந்தப்பாணத்தின் வேக முண்டாகமாட்டவில்லை. ஸ்ரீரகுகுல வம்சோத்பவராகிய ஸ்ரீராமமூர்த்தி யெய்தபாணங்கள் இராக்ஷசர்களுடைய கிரீடங்கள் தரித்த தலைகளைக் கோடிகோடியாக அறுத்துச் சிதறிவிட்டுப் பின்னுமிருந்த வேகங்கொண்டு ஓடுவதினாலே, அவைகளின் வாயிலுண்டாகிற அக்கினியானது கொடிகள்கட்டியிருக்கிற தேரின்பேரிலும் யானைகளின்பேரிலும்பட்டுக் கோடைகாலத்திடிவிழ்ந்து பற்றியெரிகிற நாடுபோல எரிந்தன. பாணங்கள் பட்டுமுறிந்த வேலாயுதங்கள் வாளாயுதங்கள் முதலான ஆயுதங்கள் மேலெழும்பி மிகுந்த வேகங்கொண்டுபோய்ச் சமுத்திரத்தில் விழ்ந்து உஷ்ணங்கொண்டு பற்றியெரிவதினால், சமுத்திரநீர்வற்றி அதிலுள்ள மீன்களெல்லாமாண்டு மணலில் அழுந்திப்போய் விட்டன.

உயுத்தத்தில் அரிந்தமனென்னும் திருநாமமுள்ள ஸ்ரீராமமூர்த்தியானவரேவின திவ்வியபாணங்கள் சத்துருக்களுடைய ஊரெரிந்ததுபோலவும் பட்டணமெரிந்ததுபோலவும் பிரகாசித்துக்கொண்டு ஓடுகிறபடியினாலே, சமுத்திரஜலம் வற்றினதுபோலவே இரணக்கள முழுவது நெருப்பாய்ப் பற்றிக்கொண்டு சத்துருக்களுடைய தேர்களெல்லாம் எரிந்தன. அச்சத்துருக்களுடைய தலைகளுமெரிந்து சிதறிப்போய் விட்டன. ஸ்ரீராமபாணங்கள் பட்டு இராக்ஷசர்கள் பிடித்திருக்கின்ற வாள்களும், வேல்களும், அவர்களுடைய தோள்களும் அறுந்து ; மலைப்பாம்புகளைப்போலத் துடித்தன. யானைகளின்மீதிருந்து யுத்தஞ்செய்ய யத்தனித்த வீரவான்களுடைய மடித்த வாய்களுடனே அவர்களுடைய தலைகள், இடிவிழுந்த மலைக்குலங்கள்போலப் பூமியில் விழுந்துவிட்டன. ஸ்ரீராமபாணம் ஒன்றுபாய்ந்தவுடனே இராக்ஷசர்களேறிவந்த கோரமானயாளிகள் சிம்ஹங்கள் ஓட்டம்பிடித்தன.

பிணங்களைத் தின்னுகிறதற்குப் பிசாசங்களு நாய்களும்வந்து சேர்ந்தன. கையிற்பிடித்த வாளுடனே இராக்ஷசர்களுடைய நூறுகோடி தோள்கள் அறுந்துபோயின. இராக்ஷசர்கள் வைத்துக்கொண்டிருந்த வருணாஸ்திரம், பிரிதிவியாஸ்திரம், நாகாஸ்திரம், கட்காஸ்திர முதலானவைகளெல்லாம் சின்னபின்னப்பட்டுப் போய்விட்டன.

ஊழிகாலச் சமுத்திரம்போலப் பெருக்கெடுத்து வருகின்ற இராட்சசரத்தவெள்ளத்தினுள்ளே சக்கரம் பூட்டிய தேர்களழுந்திப்போய், தேர்வீரர்களு முழுகிப்போய்விட்டார்கள். பாகர்களுடனே யானைகளழுந்திவிட்டன. குதிரைகளவ்விரத்தநீர்ச் சுழியிலகப்பட்டு மாண்டுபோயின. புழுதிபட்டுக்கிடந்த ரணக்களமுழுவதுஞ் சேறுபட்டுப்போயின. இராமபாணத்தாலெறியுண்ட இராட்சசர்களுடைய தலைகள் மேலே யெழும்பினதினாலே தங்களைக் காயப்படுத்துமென்று தேவர்கள் அங்குமிங்குமாக ஓடி யொதுங்கிப்போனார்கள். இப்படி மேலேயெழும்பிய தலைகள் திரும்பிப் பூமியில் வீழ்கின்ற போது அங்கு சஞ்சரிக்கின்றவர்களெல்லாம் இராட்சசத்தலைகள் சிலாவருஷம்போல மேலேபடுமென்று வருத்தப்பட்டார்கள். உலோகங்களையெல்லாம் அழித்துவிடுவதான யுகாந்தகாலவருஷத்துக் கொப்பானதும் சிம்ஹத்துக்குச் சமமானதுமான இராமபாணங்களால், கண்களை விழித்துக்கொண்டு ஆகாசத்தில் மொய்த்துக்கொண்டிருந்த பாவிகளாகிய இராட்சசர்களுடைய தேகமெல்லாம் கருக்கொண்டமேகங்கள் வீழ்கிறதுபோலவும், ஆகாசத்திற் போகின்ற விமானங்கள் வீழ்கிறதுபோலவும், பூமியின்மீது விழுந்தன.

கவி.

தெய்வநெடும்படைக்கலங்கள்விடுவேர்சிலர்சுடுகணைகள்சிலையிற்கோலி
எய்வர்சிலரெறிவர்சிலரெற்றுவர்சுற்றுவர்மலைகள்பலவுமேந்திப்
பெய்வர்சிலர்பிடித்துமெனக்கடுத்துறுவர் படைக்கலங்கள்பெறுதுவாயால்
வய்வர்சிலர்தெழிப்பர்சிலர்வருவர்சிலர் திரிவர்சிலர்வயவர்மன்றே.

இப்படியானபோது மூலபல ராட்சசர்களிற் சிலர் தெய்வத்தன்மை பொருந்திய ஆயுதங்களை விடுவார்கள். சிலர் எரிக்கும்படியான பாணங்களை வில்லிற்பூட்டி எய்வார்கள். சிலர் ஆயுதங்களைச்சுழற்றி எறிவார்கள். சிலர் ஆயுதங்களாலோங்கிக் குத்துவார்கள். சிலர் மலைகளைக் கைகளிற்பேர்த்தெடுத்துக்கொண்டு சூழ்ந்துநின்று வீசியெறிவார்கள். சிலர் கைப்பிடியாய்ப்பிடித்துக்கொள்ளுகிறோமென்று கோபித்துக்கொண்டு நெருங்கிவருவார்கள். சிலர் ஆயுதங்களொன்றுமில்லாமற் சும்மா வாயினால் மாத்திரம் வைவார்கள். சிலர் அதட்டுவார்கள். சிலர் நெருங்கிவருவார்கள். சிலர் அங்குமிங்குமாகத் திரிவார்கள். அநேகம்பேர் ஆர்ப்பரிப்பார்கள். அநேகம்பேர் யுத்தஞ்செய்வார்கள். அநேகம்பேர் பிடிப்பிடியாய் பாணங்களை வாரிவாரி எறிவார்கள். அநேகம்பேர் சூலாயுதங்களை யெறிவார்கள். அநேகம்பேர் ராமபாணங்களுக்குப் பயந்து ஒளித்துக்கொள்ளுவார்கள். அநேகம்பேர் கண்களில் நெருப்புப்

பொறிப்பறக்கப் பார்ப்பார்கள். அநேகம்பேர் ஸ்ரீராமர்மே லெறிகிறதற்கு மலைகளைப் பேர்ப்பர்கள்.

இப்படியாகச் சூரியனை மேகங்கள்சூழ்ந்து மறைந்துகொண்டதுபோல ஸ்ரீராமரை அநேகராட்சசர்கள் சூழ்ந்துகொண்டு தங்கள்தங்கள் ஆயுதங்களைப் பிரயோகம்பண்ணினார்கள். அப்படியவர்க ளெறிந்த ஆயுதங்களும், எய்த ஆயுதங்களும், எறிகிறதற்கு மெய்கிறதற்கும் கையிலெடுத்த ஆயுதங்களும், பிடித்த ஆயுதங்களுமெல்லாம் ஸ்ரீராமபாணம் பட்டு முறிந்து துண்டு துண்டாய் விழுந்தன. ஸ்ரீராமரைவந்து சூழ்ந்துவளைந்த தேருங் குதிரையும் சில்லுச் சில்லாகவும் துண்டந்துண்டமாகவு நெரிந்துபோயின. வளர்ந்த மயிர்களுடனேகூடின இராட்சசர்களுடைய தலைகள் பலபலவென்று உருண்டன. இராத்திரி விடிந்து சூரியனுதயமானதுபோலச் சூழ்ந்திருந்த இராட்சசர்கள் மடியவே பருத்த திருத்தோள்களையுடைய ஸ்ரீராமபிரானும் வேறு பக்கத்தில் திரும்பினார். இப்படி கழனித்தொழிலாளர்கள் தாமரைப்புஷ்பங்களுடனே நெல்லைச்சேர்த் தறுக்கும்படியான செழிப்பையுடைய திருவயோத்திக்குத் தலைவரான ஸ்ரீராமருடைய பாணங்கள் பெரியோர்களுடைய சொல்லுக்கடங்காத துஷ்டர்களான வலியராட்சசர்கள் தரித்திருக்கின்ற கவசங்களைத் தூளாக்கி, அவர்களுடைய தேஹங்களைத் துண்டுதுண்டாகச்செய்து, பிடித்திருந்த வில்லைமுறித்து, தலைகளை அறுத்து, வல்லமையை ஒடுக்கி, வெற்றியைக்கெடுத்து, அவர்கள் மேலுமேலுமாக எறிகின்ற மலைகளையு நொறுக்கிவிட்டன. இம்மட்டிலேபோகாமல் மரங்களைப் பிடித்துவந்த கைகளையுந் துண்டிட்டுவிட்டன.

தேவர்களெல்லாம் - யானைகள் காலிழந்துபோயின, உருவிச்சென்ற அம்பால் வாலறுந்துபோயின, துதிக்கையற்றுப் போயின, கழுத்தற்றுந்து போயின, இளம்பருவமழிந்துபோயின, தந்தங்களற்றுப் போயின. என்று பேசுகிறார்களேயல்லாமல்; சமுத்திரத்துக் கொப்பானகஜங்கள்ஆசையற்றன. மேகம்போலச்சொரிகின்ற மதமழிந்துபோயின, வலியற்றுப்போயினவாகிய இந்தத் தொழில்களை ஒருவருங்கண்டு சொல்லவில்லை. இராட்சசர்கள் ஆகாசமார்க்கத்திற் பறக்கும்படியாக நூறுகோடி வேலாயுதங்களையும், நூறுகோடி அம்புகளையும் பிரயோகித்தார்கள். கொல்லுதலே தமக்குத் தொழிலாயுள்ள மலைகளுக்கொப்பான நூறுகோடி யானைகள் நடக்கின்றன. குதிரைகள் பூட்டின தேர்கள் நூறுகோடி ஓடுகின்றன. இவைகளையெல்லாம் தனி வீரராக எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீராமபிரான் சின்னபின்னப்படுத்தினார். ஒரு வில்லாளியான ராட்சசன் ஒரேகாலத்தில் சப்தலோகங்களையு நாசமாக்கிவிடுவானுக்கும். அப்படிப்பட்டவீரர்கள் அளவில்லாதவர்கள் நெருங்கிவந்து பாணவருஷங்களை ஸ்ரீராமச்சந்திரர்மீது சொரிந்தார்கள். அவர்கள் பிரயோகம் பண்ணின அஸ்திரங்களெல்லாம் ஸ்ரீராமபாணத்தாற் பொடிப்பொடியாவதுமன்றி, ஞானசம்பத் தில்லாதவர்களுடைய தலைகள் பெருமலையைப்

போல உருள அவர்கள் பெரியதேஹங்களெல்லாம் சின்னபின்னப்பட்டுச் சிதைந்துபோயின.

நூறுயிரம் யானைகளின் பலமுள்ளவர்களான ஒவ்வொரு ராட்சசர்கள் இராமபாணமொன்று உருவிச்சென்றபோது தங்கள்பேர்மாறிமலைகளென்று சொல்லுகின்ற உடலழிந்துபோனர்கள். ஆறுயிரவீரர்களின் தோள்களறுந்து அவைகளிலிருந்துபொழிகின்ற இரத்தவெள்ளத்திலமிழ்ந்தி நீந்திக்கரையேற மாட்டாமல்யானைகள் கூட்டங்கூட்டமாக இரத்தவாறுகளோடு கடலிற்போய் விழுந்துவிட்டன. ஏககாலத்திலே லோகத்திலுள்ள ஜீவகோடிகளையெல்லாம் பலகாரம்பண்ணும்படியான வல்லமையையுடைய யமனும்—அவனுடைய தூதர்களும்-காலனும்—இரண்டுகாலுடையவர்களாக இருந்தபடியினலே, அந்தச் சமர்க்களத்தில் நடந்தோடித்திரியமாட்டாமலிளைத்தும் அந்தஉயிர்களையெல்லாம் பிடித்துக்கொண்டு தங்கள் வைவஸ்வத பட்டணத்திற்குப்போக வழி தெரியாமலு மயங்கிப்போய்விட்டார்கள். அழிந்ததேர்களும்-மாண்டயானைகளும் - சிதைந்த குதிரைகளும் — ஒன்றின்மேலொன்று அடுக்கடுக்காய்விழுந்து ஆகாசத்தைமுட்ட ஓங்கிக் குவிந்தவைகளேயானலும், அதிகபலமுள்ள கவந்தங்கள் கூட்டங்கூட்டமாக வெழுந்து கூத்தாடுகின்றபடியால் அந்தப் பிணக்குப்பல்களெல்லாம் உயிர்பெற்றதுபோலவே விளங்கின. மாண்டராட்சசர்களுடைய ரத்தமானது கருஞ்சூரியனைப்போ லெழுந்தருளிய தமது திருமேனியில் தெறித்து ஊழிக்காலத்தில் உலோகங்களையெல்லாம் சுட்டெரித் துண்ணும்படியான பிரளயகால சூரியனைப்போலப் பெருமாள் பிரகாசித்தார். பின்னும் சத்துருக்களுடைய தேஹத்திலிருந் தொழுகின இரத்தத்திற் குளித்தெழுந்தவரைப்போலவு மிருந்தார்.

இந்தப்பிரகார நெருப்புக்குச் சமானமாகவும் இடிக்குச்சமானமாகவு மிருந்த ராமபாணங்கள் ஓயாமலறுக்கிறபடியினலே வெகு மாயமுள்ளவர்களான ராட்சசர்கள் தலைகளிழந்து மாள்கின்றதைப் பார்த்திருந்தும், பின்னேயிருக்கின்ற மற்றராட்சசர்கள் தங்கள் வல்லமை குறையாதவர்களாய்த் தங்கள் தேகத்தினுள்ளே யிருக்கின்ற பிராணனைக் கொடுத்துவிட எத்தனித்து ஸ்ரீராமமூர்த்தியை ஈக்கள் மொய்த்துக்கொண்டதுபோல மொய்த்தார்கள். ஸ்ரீராமபிரானும் அந்த ஈக்களைக்கொல்லுகின்ற தேனையொத் திருந்தார். இப்படித் தம்மை மொய்த்துக்கொண்ட பின்னணியான மூலபல சேனைகளின்மேல் ஒரு இமைப்பொழுதுக்குள்ளாகத் தம்முடைய வில்லிற் பாணங்களைப்பிரயோகித்தெய்து அந்த ராட்சசர்களுடலமெல்லாம் கழற்காயைப்போலச் செய்துவிட்டு, அவர்கள் தேர்களும் யானைகளும் குழம்பாகும்படி தம்முடைய திவ்ய பாணங்களினலே குழப்பிவிட்டார். அப்போதுவந்த ராட்சசர்களில் அநேகர் பிராணனை யிழந்தார்கள். அநேகர் ஓட்டம்பிடித்தார்கள். அநேக ருயிர்தப்பிப் பிழைத்தார்கள். அநேகர் வருத்தப்பட்டுப் போனர்கள். அநேகர் யுத்தத்தைக்கண்டு சந்தோஷப்பட்டார்கள். அநேகர் மாண்டுபோ

னூர்கள். அநேகர் உருண்டுபோனூர்கள். அநேகர் புரண்டு போனூர்கள். அநேகர் பாணங்களாற் சாம்பலாய் வெந்துபோனூர்கள். அநேகர் கரிந்துபோனூர்கள். அநேக ரெழுந்து நின்றூர்கள். அநேகர் கீழேவிழுந்தார்கள். அநேகர் குடல்சரிந்து போனூர்கள். அநேகர் தலையறுந்துபோனூர்கள். அநேகர் திசைதெரியாமல் மாண்டவர்களுக்கு முன்னே எதிர்ந்து நடந்துபோனூர்கள். அப்போது மாண்ட ராக்ஷசர்களுடைய தேகத்தின்மீது இரத்தினகுண்டலங்கள், பாகு வலையங்கள், மகரக்குழைகள், இரத்தினகிரீடங்கள், மணிக்கண்டிகைகள், கவசங்கள், வீரகண்டாமணிகள், ஆயுதங்களாகிய விவைகள் மேகத்தில்நின்று வருகின்ற மின்னல்களைப்போலச் சிந்திச்சிதறிப் பிரகாசித்தன.

ஸ்ரீராமபிரான் இராக்ஷசர்களின் கண்ணுக்கு எங்குந்தானு யிருப்பதாகச் சாரிகை வந்து கொல்லுதல்.

கவி.

முன்னேயுளன்பின்னேயுளன் முகத்தேயுளனகத்தின்
றன்னேயுளன்மருங்கேயுளன் றலைமேலுளன்மலைமேல்
கொன்னேயுளனிலத்தேயுளன் விசும்பேயுளன்கொடியோர்
என்னேயொருகடுப்பென்றிட விருஞ்சாரிகை திரிந்தான்.

அக்கால் மூலபலராட்சசர்கள் இராமனென்பவன் எங்களெதிரு மிருக்கின்றூன். எங்கள் பின்னுமிருக்கின்றூன். எங்கள் முகத்திலுமிருக்கின்றூன். எங்கள் உள்ளத்திலு மிருக்கின்றூன். எங்கள் பக்கத்திலு மிருக்கின்றூன். எங்கள் தலைமேலுமிருக்கின்றூன். தலையின் உச்சியிலு மிருக்கின்றூன். பூமியிலுமிருக்கின்றூன். ஆகாசத்திலு மிருக்கின்றூன். இதென்ன ஆச்சரியம்? இப்படியும்ஒருமனிதனுக்குவேகமுண்டாயிருக்குமோ? என்றுசொல்லும்படியாய் சாரியுலாவிவந்தார், இதோ எனக்கெதிரே யிருக்கின்றூன் எனக்கெதிரே யிருக்கின்றூனென்று சொல்லும்படிச் சுவர்னமயமானகோதண்டத்தைக் கையிற்பிடித்தபடியே அவர்களுடனே யுத்தஞ்செய்தும் அந்தமூலபலப் பெருஞ் சேனைக்கடல் நிலைத்திருப்பதால், ஒவ்வொருவருக்கு மவரவர்களுடைய நிழலைப்போல ஸ்ரீராமமூர்த்தியானவர் திரிந்தார். ஆழ்ந்த சப்தசமுத்திரத்திலும் ஏழுலோகங்களிலும் அந்த மூலபலச்சேனைக்கடல் நிறைந்திருந்தமையால், அநேகதந்திரங்களை யறிந்து அதிகமாயைகளை யுடையவர்களாய்ப் பிறந்த அவர்களுடைய உள்ளத்தின்க ணிருப்பதன்றியும் அவர்களுக்குப்புறத்திலும் வியாபித்திருக்கின்ற தம்முடைய ஸ்வபாவத்தின்படியே எங்கு மிராமனு யிருந்தார்.

இப்படி ஸ்ரீராமர் பலவிதமான சாரிசுற்றி வருகிறதைத் தேவர்கள்பார்த்துச் சுவாமிசாரிவருகிருரென்று சொல்லாமல், இன்னவிடத்திற்குப் போனூர் இன்னவிடத்தில் நுழைந்தாரென்றுமறியாமல், ஓ! ஓ! ஸ்வாமியானவர் தம்முடையநர்த்த நிலைமையையெடுத்துக்கொண்டு உலோகமெல்லாந் தானேயாய் நிறைந்து விட்டார். இனி நம்மை ரக்ஷிப்பதற்கு அவதரித்த

வர் இராக்ஷசசம்ஹாரஞ் செய்கிற செய்கையை விட்டுவிட்டார்போலே யிருக்கிறதென்று சந்தேகித்தார்கள். அப்போது ஸ்ரீராமமூர்த்தியானவர் சண்டமாருதக்காற்றினுல் முறிந்து அடிபட்டுப் பூமியில்விழுந்த மலையைப்போலவு மரங்களைப்போலவும் துஷ்டச்செய்கையையுடைய இராக்ஷசர்கள் துண்டுதுண்டா யறுந்துவிழும்படி அதிவேகமாய்ச் சாரிசுற்றிவந்து பாணங்களைப் பிரயோகித்து, ஆகாசத்தையளந்த திரிவிக்கிரமமூர்த்தியைப்போல விளங்கினுர். மதத்தயானைகளும் - பெரியதேர்களும் - வேகமுள்ள குதிரைகளும் - வலியுள்ள யாளிகளும் - வல்லமைபொருந்திய சிம்ஹங்களும் — அதிக கோபிஷ்டர்களான ராக்ஷசவீரர்களுமாய் ஆகாசமு மறைந்துபோகும்படி மடிந்து மலைமலையாகக் கிடக்கிற பிணக்கும்பலின் மீது, ஸ்ரீராமமூர்த்தியானவர் க்ஷீரசாகரசயனியாகிய ஸ்ரீமகாவிஷ்ணுவைப்போலத் தாவி நடந்தருளினுர்.

ஸ்ரீராமபிரானுடைய பாணங்கள் அழுந்தலால் ஆகாயத்தைத் தொடுகின்ற கொடிச்சீலையும், அழகிய மேற்றவிசின் பாரத்தோடு மதத்தயானைகளும், ஜலத்தில் பிரசண்டமாருத மோதுதலால் சரக்கேற்றிய கப்பல்கள் மூழ்கினதுபோல இராட்சசர்களி னிரத்தவெள்ளத்தி லழுந்தின. ஸ்ரீராமச்சந்திரருடைய அம்புகளா லறுபட்டு மேலெழும்பிவிழுகின்ற இராக்ஷசர்களுடைய மலைபோன்ற தலைகள், உயுத்தப்பெண்ணுன விசயலட்சுமி தன்னுடைய செங்கையால் அம்மானைக் காயாடுகிறதுபோலிருந்தன. வாரிட்டிறுக்கிய வீரகண்டாமணிதரித்த இராக்ஷசர்களுடையவக்கிரதந்தங்கள் ஸ்ரீராமபாணங்களால் துணிபட்டு யானைகளின்வயிறுகள் தோறும் விழுவது, ஆகாசத்தினுள்ள மேகங்களுக்குள் மூன்றும்பிறைச் சந்திரர்கள் மறைவதுபோ லிருந்தன. இராக்ஷசர்களுடைய வக்கிரதந்தங்களும் - மதயானைகளுடைய வெண்மையாகிய தந்தங்களும் — இரணக்களத்திற் குப்பல்கும்பலாகக் குவிந்துகிடந்து, வெகுகாலமாக உதித்துவந்த மூன்றும்பிறைச் சந்திரர்கள் பூமியிலுதிர்ந்து கிடத்தல்போலத் தோன்றின. அளவில்லாத ராக்ஷசர்களிறந்து அவர்களுடைய ரத்தவெள்ளச் சமுத்திரம் பூமியெல்லாநிறைந்து பரவினபடியினுலே, சப்ததீவுகளிலிருந்து வந்த ராட்சசர்களெல்லாம் பூமியில் நிற்கமாட்டாமல் உயர்ந்தமலைகளின்மே லேறிக்கொண்டார்கள். இராக்ஷசர்களுடைய தேகத்திலுள்ள பிராணன்களெல்லாம் வீரசுவர்க்கத்தில் நிறைந்துவிட்டன.

அப்போது ராவணனுக்கு உதவிசெய்பவனுகிய வன்னியென்கிற மூலபல ராக்ஷசசேனுதிபதி தனது மூலபல சேனையைப்பார்த்து, ஒருமனிதன் நம்முடைய சேனைகளைக் கொன்றுகொண் டிருக்க மலைபோல ஆகாரமுள்ள நாமெல்லாம் அவனை வெற்றிகொள்ளமாட்டாமற் பல்லைக்கடித்துக்கொண்டு சும்மாயிருக்கலாமா? அந்த மனிதனுடைய அம்புகள் நம்மீதுபடுகிறதற்கு, முன்பாக நாமெல்லாம் கூட்டமாகக்கூடி அவன்மேல் விழுந்தாலும், அவன் மாண்டுபோவா னல்லவா? காலிறங்கிப்பெய்கின்ற மேகத்துக்குச் சமானமாகிய ஓஇராக்ஷசர்களே! நீங்களெல்லாம் பிரமைகொண்டு மயங்கிப்போனீர்

களா? நம்முடைய ஆயிரவெள்ளஞ் சேனையும் அடிபட்டு மாண்டுபோனபிறகு இலங்காபட்டணம் ஆராளவிருக்கின்றது? ஆகையால் இப்போதிருக்கிற நீங்களெல்லாமாவது ஒருமிக்க அந்தமனிதன்மீது பாயுங்களென்று சொன்னான்.

அதைக்கேட்ட மாத்திரத்தில் அப்போ தங்கிருந்த ஏழுவெள்ள மிராட்சசசேனைகளும் அதிககோபங்கொண்டு வந்து ஸ்ரீராமரைச் சுற்றிவளைந்து, ஒருமலையின்மீது சப்தமேகங்களும் பெருவருஷம் வருஷித்ததுபோல ஆயுதப்பிரயோகம் பண்ணினார்கள். அப்படியவர்கள் தம்மீது பிரயோகித்த ஆயுதங்களை யெல்லாம் ஸ்ரீராமபிரான் துண்டு துண்டாய்த் தறித்துவிட்டு, தேரும் யானையும் - குதிரையுமாண்டு பூமியில் விழும்படிக்கொன்று, அந்தச் சேனைகளெல்லாம் சின்னபின்னப்பட்டுச் சிதறிப்போகும்படி சகஸ்திர முகாஸ்திரங்களை அபரிமிதமாகப் பிரயோகித்தார். அப்படி ஸ்ரீராமமூர்த்தி பிரயோகித்த சகஸ்திர முகாஸ்திரங்களினால் எங்கு மிரத்தப்பிரவாக நிறைந்துவிட்டபடியினாலே, கொள்ளிவாய்ப் பிசாசங்கள் தீபத்தைப்போல அக்கினியைக் கக்கிக்கொண்டு கூத்தாடின. கொழுப்போடுங்கூடின இரத்தப் பிரவாகத்தினால் நிறைந்த பெருங்கடலாகிய செவந்தவஸ்திரத்தை யுடையவளும், இரத்தமயமாகிய சந்தனத்தைப் பூசிக்கொண்டவளுமாகிய பூமிதேவி பிரகாசித்தாள். ஸ்ரீராமமூர்த்தியும் செவந்தநிறமாக அலங்கரித்தவரைப்போலத் தோன்றினார். இலவணசமுத்திரம் — நெய்சமுத்திரம் — மதுசமுத்திரம் — தயிர்சமுத்திரம் — பாற்சமுத்திரம் - கருப்பஞ்சாற்றுச் சமுத்திரம் - சுத்தோதகச் சமுத்திரம் - என்று சொல்லப்பட்ட சப்தசமுத்திரங்களும் பவளக்கடல்போல இரத்தத்தினால் நிறைந்து, ஸ்ரீராமர் திருக்கரத்திலுள்ள ஒருவில்லினாலே சற்றுநேரத்திற் குள்ளாக முன்கொண்ட பழையபேர் மாறிவிட்டன. ஸ்ரீராமருடைய கோதண்டமானது ஒரு தொடைக்குக் கோடி அம்புகள் பிரயோகித்துக்கொண்டு மூன்றாம்பிறைச் சந்திரனைப்போல வளைந்தபடியே இருந்தது. இராட்சசர்கள் என்றைக்கு முடிந்து விடுவார்களோ என்னும்படியாக அளவற்றவர்களா யிருந்தார்கள்.

இராட்சசர்களிற் சிலர் ஸ்ரீராமர்பேரில் அஸ்திர சஸ்திரங்களைப் பிரயோகிக்கத் தொடுத்தார்கள். சிலர் ஆரவாரித்தார்கள். சிலர் ஆயுதங்களை எறிந்தார்கள். சிலர் ஸ்ரீராமர் பிரயோகிக்கிற பாணங்களைக்கண்டு தங்கள் வல்லமையுடனே எதிரேவந்து தடுத்தார்கள். சிலர் தடுக்கமாட்டாமல் கையசந்துபோனார்கள். சிலர் ஓட்டம்பிடித்தார்கள். சிலர் சாய்ந்துவிழுந்தார்கள். சிலர் மதத்தயானையைப்போலக் கோபங்கொண்டு வந்தார்கள். சிலர் அண்டம் வெடிக்கும்படி கூவினார்கள். சிலர் அதிகமாய்ச் சீறிவந்தார்கள். சிலர் அஸ்திரப்பிரயோகம் பண்ணினார்கள். இப்படிப் பலபல செய்கைகளைச் செய்துகொண் டிருந்தவர்களெல்லாம் ஸ்ரீராமர் பிரயோகித்த பாணங்களினாலே துண்டுதுண்டாக்கி இரணக்களத்தில் வீழ்ந்தார்கள். ஸ்ரீராமர் தமது கோத

ண்டத்தில் ஆயிரம் பாணங்களைத் தொடுத்துப் பிரயோகிப்பாரேயானால், அந்தப்பாணங்கள் பாய்ந்து மாளுகின்ற இராட்சசர்கள் ஆயிரம்பேர்களேயல்ல: பதினாயிரம் பேர்களா யிருந்தார்கள். அந்தப்பாணவேகத்தைக் கண்ணினாலு மனத்தினாலு நிச்சயிக்க முடியாது. இராட்சசர்கள் பிரயோகிக்கும்படி எடுக்கின்ற கூர்மையான வேலாயுத சூலாயுத முதலியவெல்லாம் துண்டுதுண்டாய் முறிந்ததே அல்லாமல், அவர்களுக்கொரு நன்மையுண்டாக வில்லை.

அக்கால் ஸ்ரீராமமூர்த்தியானவர் பாணங்களினாலே முன்னணியும் - அதற்குத்தலையும் – இருகைப் பிரதேசங்களு மமைந்த மகாபேரணிவகுத்து ஊசியு நுழையாதபடி செய்தார். அவ்வணியை இராட்சசர்கள் பேதித்துக் கொண்டுவர யத்தனித்தபோது, அவர்களுயிரை அந்தப்பாணவணிகளே உண்டுவிட்டன. மேலும் – அந்தப்பாணங்கள் அப்படியே அந்தந்தத்திசையை ஊடுருவி, அப்புறமும் இராக்கதர்கள் இருப்பார்களானால் அவர்களையும் உருவிப்போகும். ஸ்வாமியை எதிர்த்துவருகின்ற இராட்சசர்களெல்லாமடிந்து போகிறார்களே யல்லாமல், அவர்களுக்கு வெற்றியென்பது எவ்விதத்தா லுண்டாகுமோ தெரியாது. ஸ்ரீராமமூர்த்தியினுடைய பாணங்கள் ஊழித்தீய்க்குச் சமமாக இருந்தன. மூலபல ராட்சசசேனைகளோ வற்றியுலர்ந்த பெருங்காட்டுக்குச் சமமாகவும், யானைகளெல்லா நெருப்புப்பட்டு வேகின்ற மலைக்குச் சமமாகவுமிருந்தன. ஸ்ரீராமருடைய பாணங்கள் வீசியெறிந்த வலைக்குச்சமமாயிருந்தன. இராக்ஷசசேனைகள் சமுத்திரத்தில் வாழ்கின்ற செத்தமீன்களுக்குச் சமமாக இருந்தன. சக்கரவர்த்தித் திருக்குமாரர் யுகாந்தகால சண்டமாருதத்துக் கொப்பாயிருந்தார். மூலபல ராட்சசசேனைகள் அந்தச் சண்டமாருதத்தாற் புழுதியாயுதிர்ந்து போகின்ற மலைகளுக்கொப்பாயின.

ஸ்ரீரகுநந்தனர் சப்த லோகங்களையும், அந்த லோகங்களிலிருக்கின்ற ஜீவகோடிகளையு மழிக்கின்ற பிரளயகால சமுத்திரத்துக்கொப்பா யிருந்தார். மூலபல ராட்சசர்கள் அந்தக்கடலில் மூழ்கிப்போகின்ற ஜீவபிராணிகளைப்போ லானார்கள். மூலகாரணமாய் நடுவாய் அந்தியமாயிருக்கின்ற ஸ்ரீராமச்சந்திரர், எல்லாப் பொருள்களும் சமூலமாயடங்கிப்போகின்ற யுகாந்தகாலத்திற்கொப்பா யிருந்தார்கள். இராட்சசர்கள் அந்தயுகாந்தத்தில் ஆதாரமில்லாமல் மாண்டுபோகின்ற சராசரங்களுக்கொப்பா யிருந்தார்கள். ஸ்ரீராமர் ஆலகால விஷமயமான சப்தசமுத்திரங்களைப்போ லிருந்தார். இராக்ஷசர்களெல்லாம் அந்த விஷக்கடலில் அகப்பட்டு மாண்டுபோன மீன்களுக்குச்சமமாக விருந்தார்கள். இராட்சசர்கள் வஞ்சனையைச் செய்து, விசாலமான பூலோகத்திலுள்ள நன்மைகளையெல்லாம் பறித்துண்டு, சத்தியங்கெட்டு பாவ சிந்தனையையுடைய துஷ்டசாதியர்களா யிருந்தபடியால்; அவர்களை யழிக்கின்ற ஸ்ரீராமபத்திரர் தர்மத்துக்கொப்பா யிருந்தார். ஸ்ரீரகுவமிசோத்பவரான ஸ்ரீராமர் நச்சுப்பொய்கைக்குச் சமானமாயிருந்தார். இராக்ஷசர்கள் தண்ணீரில்லாத பஞ்சகாலத்தில் அந்த நஞ்சுநீரையுண்டு மாண்டுபோன தரித்திரர்களைப் போலானார்கள்.

இந்தப்பிரகாரமாக ஆயிரவெள்ள மூலபலராட்சச சேனையுமாண்டு அவர்களுடைய ரத்தப்பிரவாகமானது சமுத்திரத்தையும் இலங்காத்வீபத்தையும் பள்ளமேடு தெரியாதபடி மூடிக்கொண்ட மாத்திரத்தில், அவ்விலங்கைக்குள்ளிருந்த இராக்ஷசஸ்திரீகளெல்லாம் இலங்கை மதிலுக்குள்ளும் புறம்பும் தெரியாதவர்களாகிக் கலக்கமுற்று, தங்கள் கால் தளர்ந்தலறிக்கொண்டு ஓட்டம்பிடித்தார்கள். இப்படி மூலபலசேனை முழுவது மாண்டுபோனவுடனே நூறுயிரகோடி இராக்ஷசப் படைத்தலைவர்களாய், நாலாபக்கங்களிலும் பரவியிருந்தவர்களெல்லாம் ஒன்றாக நெருங்கி, இராக்ஷசப் பிணங்கள் பெரிய மலைகளைப்போலுயர்ந்து ஆகாசத்தை முட்டியிருக்கவும் இரத்தப் பிரவாகமானது பிரளயகாலக் கடலைப்போல எட்டுத்திக்கிலு நிறைந்து நிற்கவுங்கண்டு ஒருவராலும் தடுக்கமுடியாத கோபங்கொண்டு, தங்கள் தங்கள் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, பெரிய தேர்களையும் - மதத்தயானைகளையும்-மற்ற யாளி சிம்ஹம் - குதிரை - இவைமுதலியவைகளையு நடத்திக்கொண்டு அதிவேகமாய்ப் புறப்பட்டு, மேகத்தையும் இடியையுமொத்த ஆயுதங்களையும் அம்புகளையும் எங்குநிறையும்படி ஸ்ரீராமர்மீது பிரயோகித்துக் கொண்டே வந்தார்கள். அப்போது பெரியபெருமாள் வருகின்ற இராக்ஷசர்களை நோக்கி, ஓ மூலபல சேனாபதிகளே! வாருங்கோள்: வாருங்கோள்: வந்து உங்களுடைய பிராணன்களையெல்லாமும், நீங்கள் பெற்றிருக்கின்ற வரங்களெல்லாவற்றையும், என்னம்புக் கிரையாகக் கொடுத்துவிடுங்கோள். என்று திருவாய்மலர்ந்து கொண்டே அந்தராட்சச சேனாபதிகளெல்லாரும்விட்ட ஆயுதக்கடலையெல்லாந் தடுத்து அவர்களையுந் தனித்தனியே தடுத்தார். அப்போது ராக்ஷசசேனாதிபதிகள் ஸ்ரீராமர்பிரயோகித்த பாணங்களையெல்லாம்விலக்கி நெருங்கிஅவரைப்பலவாயுதங்களால் மறைத்து, மேகத்திலும் அதிகமாக அம்புகளைப்பொழிந்து திக்குகளையெல்லாமூடி மிகுந்தகருவத்துடனே பின்னு நெருங்கி வந்தார்கள்.

அந்தச் சமயத்தில் சக்கரவர்த்தித் திருக்குமாரர் பெருமைபொருந்திய சக்கராயுதத்திற்குச் சமானமாகிய வெற்றிபெற்ற திவ்யாஸ்திர வருஷங்களை அதிவேகமாகப்பொழிந்து, மலைகளுக்குநிகரான அந்த ராட்சசர்களுடைய தலைகளையறுத்துக் குப்பற்குப்பலாகக் குவித்துவிட்டார். மகரமச்சியங்கள் பொருந்திய சமுத்திரத்தைப்போல ஸ்ரீராமமூர்த்தியை வளைந்துகொண்ட இராட்சசர்களுடைய மலைகளுக்கொப்பான தேகமானது சிதறிப் பூமியிலுருள, அவர்களுயிர்கள் வீரசுவர்க்கத்தையடைய, அதனாலே தேவர்களுடைய புராதன நகரமானது இடம்போதாமற்போய்விட்டது. மற்றராக்ஷசர்களெல்லாம் வருத்தப்பட்டார்கள். குதிரைகளெல்லாம் தலையறுந்து விழுந்தன. குதிரைப்பாகர்களுடைய தலைகள் அறுபட்டு இரணக்களப் புழுதியில் உருண்டுநடந்தன. அவர்களுயிர்கள் வீரசுவர்க்கத்திலுள்ள அப்சரசுக்களை ஆலிங்கனம் பண்ணிச் சந்தோஷித்தன. சமுத்திரங்களும் — மலைகளும் — காடுகளும் —

கீழேழு லோகங்களும் — மேலேழு லோகங்களும் — ஆகிய விவைகளிலெல்லாம் இராட்சசர்களுடைய உயிர்களும், அவர்களுடைய தலைகளும், அவர்கள் தேகங்களும், அந்தத் தேகத்திலிருந்து ஒழுகிவருகின்ற இரத்தப்பிரவாகமுமாய் நிறைந்துவிட்ட படியினாலே; ஒருதிக்காவது வெறுமையா யிருக்கவில்லை.

இப்படியுத்த நடக்கும்போது ஸ்ரீராமரை எதிர்த்துவந்த இராட்சச வீரர்களெல்லா மாண்டுபோனவுடனே அவர்களைச் சூழ்ந்துவந்த சேனைகளெல்லாம் ஓட்டம் பிடித்தன. அப்போது தேவர்கள் ஸ்ரீராமபிரான்மீது புஷ்ப மாரியைப் பெய்தார்கள். அதனாலே மேகவருஷமானது பெய்வதற் கிடமில்லாமல் அந்தரத்திலேயே நின்றுவிட்டது. இப்படியோடிப்போகின்ற சேனைகளை அறிவில்லாத சிலராட்சசர்க ளிடையிலே ஓடவொட்டாமல் தடுத்துக் கண்களில் அக்கினிப்பொறிபொழியும்படியாகப்பார்த்துத்திரும்புங்கள்திரும்புங்களென்று சொல்லி அதட்டிக்கொண்டு, யானைகளையும் - சிம்ஹங்களையும் - குதிரைகளையும் - ஸ்ரீராகவபிரான் மீது செலுத்திக்கொண்டு, உலோகங்களெல்லாஞ் செவிடுபடும்படி யாகவும், மேகங்களெல்லாம் கரிந்துதீர்ந்து போகவும், அஷ்டகுலாசலங்கள் அடுக்கழிந்து சிதையவும், தேவர்களுடைய தலைகள் நடுக்கங்கொள்ளவும், ஆயுதவர்க்கங்க ளெல்லாவற்றையும் அடுக்கடுக்காய்ப் பிரயோகித்தார்கள். அவர்கள் பிரயோகிக்கின்ற ஆயுதங்கள் இடிகளையு மின்னல்களையு நிகர்த்துப் பிரகாசித்து மிகுந்த ஒலியைவிளைத்தன. அதைக்கண்ட சுந்தரபாகுவையுடையவரான ஸ்ரீராமர் சந்தோஷம் சந்தோஷமென்று வெகுகாலமாகப்பழகின அதிதிகளை எதிர்கொள்ளுகிறதைப்போல அவர்களை எதிர்த்துப்போய், அக்கினிமுகாஸ்திரங்களைத் தேவர்கள் புஷ்பமாரிபொழியும்படிமேகம்பொழிவதுபோலப் பொழிந்தார்.

ஸ்ரீராமர் சரக்கூடிட்டு இராட்சசர்களைச் சம்மரித்தல்.

கவி.

சுருக்கமுற்றதுபடை சுருக்கத்தாலினிக்
கரக்கமுற்றொருபுறத் தென்னுங்கண்ணினன்
அரக்கருக்கன்றுசெல் வரியதாம்வகை
சரக்கொடுமதில்நெடு சமைத்திட்டானரோ.

இவ்வண்ணம் சுவாமியானவர் பாணப்பிரயோகஞ் செய்தகாலத்தில் இராட்சசப்படைகள் யாவுமிறந்தன. இன்னுமிதியாயிருக்கும் படைகளோடிவிடுமென்று யோசித்து அப்படைகள் போகாவண்ணம் பாணத்தினாலேயே நீண்டமதிலுண்டாக்கி வழியை மூடிவிட்டார். அக்கால் மாலியென்பவனையும், மாலியவானையும், மலைபோலுயர்ந்த கைடனையும், மதுவையு மொத்தவர்களான கவசங்களையணிந்த தேகத்தையுடைய இராக்ஷசர்கள், அப்பாணமதிலைக் கடக்கமாட்டாமல் நின்று திகைத்தார்கள். மற்ற ராக்ஷசர்களெல்லாம் சப்தசாகரங்களும் பொங்கிவருகின்ற ஊழிக்காலத்திலே வடவாமுகாக்கினி, சுட்டுக்

கொண்டேவர, எல்லாம்வெந்து மீந்துநிற்கின்ற சில ஜீவன்களைப்போல ஒரு மூலையிலொதுங்கினுர்கள். இப்படி திகைத்தவர்களும் ஒதுங்கினவர்களுமாகிய இராக்ஷசர்களிற் சிலர் திரிபுரசம்ஹாரியும், புள்ளூர்திகளாகிய விஷ்ணுவும் பிரஹம்மாவும், வச்சிராயுத தரனும், நம்முடைய பலத்தை அடக்கமாட்டார்கள். இந்த ஒருமனிதனே தனியாகநின்று நம்முடைய பலங்களையும் வரங்களையும் அழித்துவிடுவான்? நம்முடைய வல்லமையையும் அழித்துவிடுவான் ? நம்முடைய ஆயுளையு நாசமாக்கிவிடுவான்? என்று நிச்சயித்தார்கள்.

வன்னியென்னு மிராட்சசப் படைவீரன் மற்றவிராட்சசர்களைப் பார்த்துச் சிலசொல்ல வவர்களுடன்பட்டு யாவரும் ஒருங்குசேர்ந்து சுவாமியுடன் சண்டைக்குவந்து மாளல்.

கவி.

எல்லோமெல்லோ மொன்றிவனைத்திந் நெடியோனை
வல்லோம்வல்ல போர்வளமுற்றி மலேயோமேல்
வெல்லோம்வெல்லோ மென்றனன்வன்னி மிடலோரும்
தொல்லோர்சொல்லே நன்றெனவஃதே துணிவுற்றூர்.

ஓ நண்பர்களே! இனிநாம் தப்பியோடி இராவணன் முகத்திலே விழிப்போமோ? இந்தராமன் நம்மிலொருவனைக் கொல்லுவானேயாகுல் தப்பாமல் இராவணனைக் கொன்றுவிடுவான். நாமெல்லோரும் ஒருமிக்க இவன்மீது எதிர்த்துப்போகலாமோ? அல்லது தனித்தனியேபோய்ச் சண்டை செய்யலாமோ? நாம் தனித்தனியே போவோமாகுல் இவனுக்குமுன்னே ஒருவேளை நிற்கமாட்டோம். நாமெல்லாரும் ஒன்ருய்க் கூடிக்கொண்டு நம்முடைய வல்லமைக்குக் கூடிய யுத்தங்களை யெல்லாஞ் செய்யலாம். அப்படிக்கில்லாவிட்டால் இவனை நாம் செயிக்கமாட்டோம். என்று சொல்லவு மற்றவீரர்களெல்லாம் அதைக்கேட்டு, பெரியோர்சொல்லே நல்லது: அப்படியே செய்யலாம். என்று நிச்சயம் பண்ணிக்கொண்டு எல்லாரும் ஒருமிக்கச் சப்தசமுத்திரங்களைப்போல ஆர்ப்பரித்துச் சங்கத்தொனி செய்து தோள்களைத் தட்டினுர்கள். இப்படிச் செய்ததினுலே மேகங்களெல்லாம் கரிந்து மின்னிக்கொண்டு பூமியில் விழுந்தன. இப்படி மேகங்களே விழுமாகுல் சுவர்க்கமத்திய பாதாளமென்று சொல்லப்பட்ட திரிலோகங்களும் பட்டபாட்டை இப்படியென்று சொல்லவேண்டுமோ? அவ்வாறவர்கள் சப்தித்தமாத்திரத்திலே அவர்கள் வல்லமைகளை யெல்லாம் ஒடுக்கும்படியான ஸ்ரீராமபத்திரர் தம்முடைய கோதண்டத்தைக் குணத்தொனிபண்ணினுர். அது தம்முடைய திருத்தோள் வல்லமையாலே திக்குகளையெல்லாம் அளவிட்டு ஸ்ரீமஹாவிஷ்ணுவினுடைய பாஞ்சசன்னியத் தொனியைப்போல லோகமுழுதும் கேட்டது.

அப்போது எல்லாலோகங்களிலும் பெருமைபெற் றிருக்கின்றவர்களும், திரிலோகங்களையும் ஜெயித்தவர்களும், தேவர்களையெல்லாம் புறங்காட்டியோடச் செய்தவர்களும், இயமனைப்போலத் தானவசேனைகளைச் சின்ன

பின்னப்படக் கொன்றவர்களும், உலோகத்திலுள்ள ஜீவகோடிகளையெல்லாங் கொன்றுதின்றவர்களும், மகா வில்வீரர்களுமான இராட்சசசேனாதிபதிகளெல்லாரு மொருமிக்கச் சேர்ந்துகொண்டு வந்து ஸ்ரீராமபத்திரரைத் தெர்ழுவத்திற்சேர்த்துக் கட்டிவிட்டவர்களைப்போல வளைத்துக்கொண்டு: ஒவ்வொருவரும் இடிகளைப்போலக் கர்ச்சித்து யுத்தஞ்செய்ய யத்தனித்தார்கள். அதைக்கண்டு தேவர்கள் மனம்வாடிப் போனார்கள். ஆகாசமும் தீய்ந்துபோகும்படியாக அந்தராக்ஷசர்கள் பிரயோகித்த ஆயுதங்களிலே யிருந்து புறப்பட்ட அக்கினியும் – அவர்கள் கண்களிலிருந் துண்டான நெருப்பும் – ஒன்றுகச் சேர்ந்ததினாலே, ஏழுலோகங்களும் வெந்து குழுங்கிப்போய் விட்டன. தேர்களினுடைய அதிர்ச்சியும், வீரர்களுடைய அதட்டுதலின் சப்தமும், இரத்நமாலைகளினுடைய ஆரவாரமும், வீரகண்டாமணி ஒன்றோடொன்று தாக்குகின்ற ஓசையும், வில்லினாேசையும், மேககர்ச்சனையையுங் கடலினாரவார ஓசையையும் ஒத்திருந்தன.

இவர்களுள் ஒவ்வொருவீரரு மிராவணனுக்குச் சமானமான பலமுடையவர்கள். அவர்களாலே செயிக்கப்படா லோகங்களில்லை. மிகுந்த தேஹவல்லமையு முள்ளவர்கள். இவர்களெல்லாம் வந்து சூழ்ந்தமாத்திரத்தில் தர்மசொரூபியான சக்கரவர்த்தித் திருக்குமாரர் சத்துருக்கள்வந்து சேர்ந்தார்களென்று திருவுளத்திலெண்ணி அவர்களுக்குமுன் எதிர்த்துவந்து நின்று, அந்த ராக்ஷசவீரர்கள் பிரயோகித்த ஆயுதங்களெல்லாம் தம்முடைய அம்பினாலே அறுந்துபோகும்படிச் செய்து, உகாந்தகால மேகவருஷத்தைப்போல அநேகதிவ்வியாஸ்திரங்களைப் பிரயோகித்தார். அதிகதேஜோமயமாகப் புறப்பட்ட ஸ்ரீராமபாணங்கள் அவர்கள் தரித்திருந்த தும்பைமாலையுடனே அவர்கள்மார்பைப் பிளந்ததினாலே சூரியன் தன்பரிவேடத்துடனே அழிந்து பூமியில் விழுந்ததுபோல அவர்கள் தாங்களேறிவந்த தேர்களுடனேகூட மடிந்துவிழுந்தார்கள்.

பூமியைச் சூழ்ந்துநிற்கின்ற கடலில் முகபடாத்தை அணிந்திருக்கின்ற யானைகள் இரத்தவெள்ளத்தின விழுப்புண்டுபோய் மின்னலுடனேகூட மேகமானது விழுவதுபோல விழுந்தன. வீரவான்களான ராக்ஷசர்களுடைய வலதுகரங்கள் பிடித்த வாளாயுதத்துடனே இரத்தக்கடலில் கொம்பன்சுறாமச்சியத்தைப்போல வீழ்ந்தன. அந்த ரத்தப்பிரவாகத்திலே குதித்துவீழ்ந்த குதிரைகள் இருளுக்கொப்பாக இருந்தன. ஸ்ரீராமபாணம்பட்டு இராக்ஷசர்களுடைய கேடகங்கள் பறிபட்டு இரத்தக்கடலில் வீழ்ந்தன. அவைகள் கடலாமைக்கொப்பாக இருந்தன. காம்புகளுடன் கொடிகள் அந்தரத்தக்கடலில் வீழ்ந்தன. அவை பெருங்காற்றடித்துக் கப்பற் கூம்புகள் கட்டினபாய்களுடனே கடலில் மூழ்கினதுபோ லிருந்தன.

இப்படி ஸ்ரீராமபிரானனவர் பருந்துகள்பறக்கின்ற ரணக்களத்தில் தாமொருவராகவேயிருந்து, ஒரு ஜாமபரியந்த நாராயிரயோசனை விஸ்தாரமாம்

சாரிகைசுற்றிச் சம்மாரம்பண்ணிக்கொண்டு வந்தார். ஸ்ரீராமர் நிற்கின்றவர்களுக்கு முன்பு நின்றும் - போகின்றவர்களுக்குமுன்பு போயும் - திரிகின்றபடியினாலே அவர்களிவரைப்பார்த்து, இவனிராவண குமாரனாகிய இந்திரசித்துவைப்போல சேனைகளை யெல்லாங் கொன்றுவிட்டான். இந்தராமன் கொன்றானென்று சொல்லுகிறது தகாதென்றார்கள். ஸ்ரீராமன் வில்லுங்கையுமாக வந்து இதோ என்னெதிரே நிற்கின்றான்: இதோ என்னெதிரே நிற்கின்றான். என் றிராட்சசர்கள் கலங்கிநிற்கின்ற காலத்தில் அவர்களில் ஒவ்வொரு அரக்கனும் கொடுங்கோபத்தோடு குரூரமாகிய பாணங்களைக் கண்ட கண்ட இடங்களில் எய்வார்கள். ஸ்ரீ கோதண்ட தீட்சாகுரு ஒருவன்தானின்றுபோர் செய்கிறானென்று உணரத்தகக உணர்ச்சியில்லாதவர்களாய் ஸ்ரீராமபாணப் பிரகாசத்தால் எங்கும் பிரகாசமா யிருப்பதால், இஃதிராத்திரியல்ல பகலென்று சொல்லுவார்கள். சில ராட்சசர்கள் தம்மவரைப்பார்த்து, கேட்டீர்களா? இராமன் ஒருவனுண்டென்பது அபத்தம். இராமர்கள் பலபேருண்டென்பதே யதார்த்த மென்பார்கள். மூலபல சேனையாக வந்த ஆயிர வெள்ள மிராட்சசர்களில் மலைகளைப்போல நீண்டுயர்ந்த ஒவ்வொருவரும் ஸ்ரீராமபிரான்போலத் தங்கள் கண்களுக்குத் தோற்றுகிறபடியால், ஒருவரையொருவர் தம்தம் ஆயுதத்தாற் கொலைசெய்து உயிரைப் போக்கிக்கொண்டார்களே யல்லாமல் ஏகநாயகனாகிய ஸ்ரீரகுகுலோத்தமர் அந்தப் பாபிஷ்டிகளுயிரை வாங்கினதுமுண்டோ? இல்லை:

இரதத்தின்மேலும் - குதிரையின்மேலும் - செவந்த கொடுங்கண்ணையுடைய மேகம்போன்ற யானையின்மேலும் - பூமியிலுநிற்க இடம்பெறாமற் சமுத்திரத்திலு மாகாயத்திலு மிருந்து போர்செய்கின்ற அரக்கர்களை அங்கங்கு இராமர்கள் புகுந்து சூழ்ந்து போர்செய்கிறார்களென்று சொல்லும்படியாக, சமஸ்தவண்டங்களிலும் - அவ்வண்டங்களுக்குள் சிறந்த பதவிகளிலும் - அப்பதவிகளில் உலாவுகின்ற சோதிமூர்த்திகளிலும் - அவர்களுடைய பக்கல்களிலும் - உடல்களிலும் பிரியாமல் அந்தரியாமியாக நின்ற தசரதநந்தனர் போர்புரிகின்றமையால் இராட்சசவீரர்கள் திப்பிரமை கொள்ளுவார்கள். எம்மையனுடைய இடதுகையில் தாங்கிய பெரியகோதண்டத்தின் தலையிற்கட்டிய மணிகள் கணகணகணவென்று ஒலிக்குந்தோறும், அங்குநின்ற மத்தகஜங்களும், அசுவங்களும் - நின்றநிலையிலேயே நடுங்கின. இமயகிரிபோல உயர்ந்து காணுகின்ற இரத சமுகங்கள் பூட்டுக்குலைந்து உதிர்ந்தன. அவற்றிலுள்ள இராட்சசவீரர்களு நடுங்கி மாண்டார்கள். எட்டுத்திக்குகளில் உள்ளவர்களும் செவிடுபட்டார்கள். சமுத்திரங்களும் அதிர்ச்சியாற் கலங்கிச் சேறுபட்டன. கொல்லுந்தொழிலையுடைய வியாக்கிரத்துக்குச் சமானமாகிய இராட்சசர்களது மனைவிமார்களுடைய கண்களில் நின்றும் களகளவென்று நீர்சிந்திப் பிரவகித்தது.

இன்னும் திரிநேத்திரங்களை யுடைய உருத்திரமூர்த்தியு நான்முகக்கடவுளும் சேர்ந்து, எம்பெருமான் கோதண்டத்தை வளைத்தெய்கின்ற அம்புகளை

இவ்வளவென் றெண்ணும்படியாகத் தொடங்கி, அந்த அம்புகள் கூட்டங் கூட்டமாகப் புறப்படுகின்றமையால் கணக்கிட முடியாமல், அவ்விருவரும் தனித்தனியாய் நின்று பார்ப்போமென்று பார்த்துக் கணக்கிடவு முடியாமல், இராமபாணத்தைக் கணிக்க நம்மாலாகுமோ? ஆகாது: என்றுசொல்லி ஆச்சரியமடைந்து ஸ்ரீராமபிரானுடைய புஜபலத்தை நினைத்துநினைத்துத் தோள்கள் பூரிப்பார்கள். இந்திராதிதேவர்களும் அப்பிரஹம்ம ருத்திரர்களைப்பார்த்து, ஓ தேவசிரேஷ்டர்களே! இராக்ஷசசேனுவெள்ளம் ஆயிரமே: கௌசலை புத்திரராகிய எம்பெருமான் விடுகின்ற அம்புகளும் அவ்வளவே: என்று வாய்க்கணக்கிட்டு உண்மையை யறிவோமானாலும், ஒவ்வோர் அரக்கனுடைய உருவையு நூறு அம்புகள்போய்த் தைக்கின்றனவே: ஆகையால் - அம்புகளுக்கோ கணக்கில்லை. அநேக ஆயிரமாமென்னலாம்படி யிருக்கின்றன. இவ்வளவு அம்புகளையும் ஸ்ரீராமபிரானொருவருமே எய்தாரேயென்று சொல்லி மகதாச்சரியப்பட்டார்கள்.

அதிசௌரியமாக யுத்தஞ்செய்கின்ற அரக்கர்களுடைய கண்டத்திலும் கண்டத்திற்குமேற் கபாலத்திலுமாக அவர்களைத் தம்முடைய பாணங்கள் தொடர்ந்து பற்றியுருவுகின்ற தன்மையால், ஸ்ரீராமபிரானனவர் சமஸ்தசேதனு சேதனங்களுக்கு மூலகாரணமாய் நின்று தோற்றுவித்துத் தமக்குத் திருமேனியாய் நின்ற அவ்வுருவங்களை அவற்றிற்கு ஸ்தானமாகிய பிர்மாண்டத்தை நிரம்ப அம்புகளையெய்து கலக்குகின்றாரென்னும்படியானார். ஸ்ரீ தாசரதிக்குமுன்பாக ஓர்பக்கத்திலிருந்த இரண்டுகோடி ராக்ஷசவீரர்கள் அவருடைய பாணங்களால் உயிரிழந்து அழிந்தமாத்திரத்தில் மற்றப்பக்கங்களிற் பிழைத்திருந்த நிசாசரர்களெல்லாருங்கூடி, இப்படி ராமபாணத்தால் நாம் விருதாவாக அழிந்துபோவது என்னகாரணம்? முன்னே தவங்களைச் செய்து பெற்ற தேவதாஸ்திரங்களை இம்மனிதன்மே லெறிந்து அந்த ஆயுதங்களால் அவனுடைய உடல்முழுமையு மூடிவிடுவோம் வாருங்கள். என்று கோபமூண்டு மொய்த்துக்கொண்டு நாராயணாஸ்திரமுதல் பிரம்மாஸ்திரங் கடைசியாகிய தேவதாஸ்திரங்களை ஒருமிக்க எய்தார்கள். எய்தமாத்திரத்திற் பிரஹம்மாண்டமே கீழ்மே லாகும்போலக் காணப்பட்டது. அங்குகூடியிருந்த சமஸ்ததேவதா சமூஹங்களு நடுக்கங்கொண்டன.

அப்படிப்பட்ட தேவதாஸ்திரங்களைக்கிருபாசமுத்திரமாகிய ஸ்ரீராமபிரான்கண்டு புன்சிரிப்புச்சிரித்து, அவ்வஸ்திரங்களை யெல்லாம் அவ்வஸ்திரங்களாலேயே துண்டித்துத்தள்ளி, மேலுந்தாம் அவ்வஸ்திரங்களை இராக்ஷசர்கள்மேல் எய்தால் அவர்களால் தடுப்பது அருமையாகும். தடுப்பதருமையான போது அந்தப்பாணங்களினது சுவாலையாலே உலகமானது வடவாமுகாக்கினியில் மூழ்கினதுபோலப் பொரிந்து சாம்பலாய்விடும். என்று திருவுளமிரங்கித் தேவதாஸ்திரங்களைத் தொடாமற் குரூரமாகிய் அநேக அம்புகளையெய்து, உயிர்பிழைத்திருந்த இராக்கதர்களுடைய தலைகளையெல்லாம் இடி-

விழுந்தொடிந்த மலைச்சிகரங்களைப்போலக் கீழே தள்ளினர். இவ்வாறு ஸ்ரீ ராமர் பாணவருஷத்தால் மூலபலசேனைகளாகிய ஆயிரவெள்ள மிராக்ஷசர்களும், அவர்களுக்குப் படைத்தலைவராயிருந்த நூறாயிரகோடி இராக்ஷச வீரர்களும், இராவணனுக்குத் துணையாகவந்த அவன்சொந்த மூலபலச்சேனைகளும் யுத்தகளத்தில் உயிர்மாய்ந்து விழுந்தார்கள். அப்படி வீழ்ந்தவுடனே பூமிதேவியானவள் பாரநீங்கிக்குதூகலித்தாள். சமஸ்ததேவர்களு நம்முடைய சர்வாபீஷ்டத்தையு முடித்தோமென்று துன்பநீங்கினர்கள். அவர்களுக்குள் இந்திரனனவன் தான்வெற்றிமாலையைத் தரித்ததைப்போலச் சந்தோஷித்தான். அபௌருஷேயமாயு நித்தியமாயுமுள்ள வேதங்கள் இராட்சதர்களால் இதுவரையுமழிந்திருந்தவரம்புகளைப் பெற்றுயர்ந்தன. இராக்ஷசர்களுடைய தேர்ப்பாரத்தால் மடங்கியிருந்த ஆதிசேஷனும் அப்போது தன் தலைகளையுயர்த்தி இளைப்பாறிச் சிரமம்நீங்கினன்.

கவி.

ஆனையாயிரந்தேர்பதினுயிர மடர்பரியொருகோடி
சேனைகாவலராயிரம்பேர்படிற் செழுமணிக்கவந்தமொன்ருடும்
கானமாயிரமாயிரகோடிக்குக் கவின்மணிகணிலென்னும்
எனவம்மணியேழரைநாழிகை யாடியதினிதன்றே.

ஸ்ரீராமபிரானுடைய வில்லிற்கட்டிய மணியானது ஆயிரம்யானை பதினுயிரந்தேர் ஒருகோடிகுதிரை ஆயிரம்சேனுபதிகள் இறந்தால் ஒருதரம்கணிலென்று சப்திக்கும். இம்மூலபலசேனையின்வதையில் அம்மணியானது ஏழரைநாழிகைபரியந்தம் இடைவிடாது கணீர்கணீரென்று சப்தித்தது. அந்நேரம் சப்தித்ததென்ருல் இறந்தபடைகளின் தொகையை யெவ்வண்ணமாகக்கணித்துச்சொல்வது. யாவருக்கு மரியவிஷயமே:

மூலபலசேனைகள் யாவையு மதமாக்கினதைக்கண்டு தேவர்கள் புஷ்பவருஷம் வருஷிக்க ஸ்ரீராமர் தனியேநின்ற சிறப்பு.

கவி.

தீமொய்த்தவனையசெங்க ணரக்கரைமுழுதுஞ்சிந்தி
பூமொய்த்தவரக்கராகி விண்ணவர்போற்றநின்ருன்
பேய்மொய்த்தநரிகளீண்டிப் பெரும்பிணம்பிறங்கித்தோன்றும்
ஈமத்துட்டமியனின்ற கறைமிடற்றிறைவனெத்தான்.

இப்படி சமஸ்தமான பேரும் வாழ்த்தி வணங்கும்படியாகவும் - சமஸ்ததேவர்களும் கற்பகமலர்களைக் கைகளால் வாரித்தூவிச் சந்தோஷிக்கும்படியாகவும் - ஸ்ரீராமமூர்த்தியானவர் தீப்பொறிகள் நெருங்கிப்பறக்கின்ற செவந்தகண்களையுடைய மூலபலராக்ஷசர்களியாவரையுங் கொலைசெய்து, அந்த ரணரங்கத்தில் பேய்க்கூட்டங்கள் நெருங்கவும்—நரிகள் மொய்த்துக்கொள்ள

வும் -எப்படிநிற்கின்ருரென்ருல்? அண்டபுவனசாராசரங்களையு மழித்து அப் பிணக்குவையல் நிறைந்த மசானத்தில் தாமொன்றியாய் நிற்கின்ற கறுத்த கண்டத்தயுடையஉருத்திரமூர்த்தியைப்போல நின்ருர். மேலும்சுவர்க்கலோக பரியந்தம் அடர்ந்து வந்த இராக்கதர்கள்யாவரையும் கொன்றுசமைந்த திருக்கோலத்தால்.மறுபடியும் சிருட்டி திதி சம்ஹாரத்தொழில் செய்யும்படி சர்வ சம்ஹாரகாலத்தில் எல்லாஉயிர்களையும் வாரியுண்டருளும் ஊழிமுதல்வனுகிய மாயப்பிரா னென்னுந் தாமாகிய மூர்த்தியையு மொத்திருந்தார்.

ஸ்ரீராமர் மூலபலப்படைகளைநீங்கி இலட்சுமணர் இராவணனேடு போர்புரியு மிடத்திற்குப் போதல்.

கவி.

ஆகுலந்துறந்ததேவ ரள்ளினர்சொரிந்தவெள்ளச்
சேகறுமலருஞ்சாந்துஞ் செருத்தொழில்வருத்தந்தீர்க்க
மாகொலைசெய்தவள்ளல் வாளமர்க்களத்தைக்கைவிட்
டேகினனிளவலோடு மிராவணனேற்றகைம்மேல்.

இப்பால் மகாகாருண்யராகிய ஸ்ரீராமபிரான் துராத்துமாக்களாகிய அரக்கர்கள் நாசமடைந்தபடியால் தங்கள் மனோவியாகூலந்தீர்ந்த தேவர்கள் அள்ளி அள்ளிச் சொரிந்த குற்றமில்லாத மலர்களாலும் - சந்தனத்தாலும் உயுத்த ஆயாசந்தீர்ந்து, அவ்வுயுத்தகளத்தை விட்டு இளையபெருமாளோடு இராவணன் செய்கின்ற ரணரங்கத்தை நோக்கிச் சென்ருர்,

மூலபலவதைப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

முப்பத்தோன்றவது,

வேலேற்றுப்படலம்.

இப்படலத்தில்முன்னமூலபலச் சேனையைக் கண்டோடின வானரசேனைகள் அங்கதனுற்றேறி மீண்டதுகண்ட இராவணன் வேறே பலகோடி இராக்ஷசச்சேனைகளோடும் பராக்கிரமித்து மோகனுஸ்திரத்தை விடுக்கவும் இளையபெருமாள் விபீஷணர் கூறிய சூழ்ச்சியால் அதனை நாராயணுஸ்திரத்தால் மாய்க்க, அதுகண்ட இராவணன் விபீஷணர் மார்புக் கிலக்குவைத்து வேலாயுதத்தை யெறியவும் அதனைச் சுமித்திரைகுமாரர் தமதுமார்பிலேற்று மூர்ச்சிக்க, அக்காலிராவணன் வெற்றியோ டிலங்கைபுகுந்தபின் சாம்புவந்தர் வேண்டுகோளால் ஆஞ்சனேயர் சஞ்சீவிமலையைக் கொண்டுவரவும் இலட்சுமணர் சோகந்தீர்ந்தெழுந்து யாவரோடும் ரணக்களத்தைவிட்டுநீங்கித் தம்மை நோக்கிவரும் இராமபிரானை எதிர்கொண்டுகாண, உடனே ஸ்வாமி நடந்தகாரியங்க

இராவணன்விபீஷணர்மேல்விட்ட வேலை இலக்குமணரேற்று மூர்ச்சித்து,
№ 65. ஆஞ்சநேயர்கொணர்ந்த, சஞ்சீவியாற்றேறி ஸ்ரீராமரைமகிழ்வித்தல்.



சுக்கிரீவனுதியர்மூலபலச்சேனையின்மடிவை, விபீஷணர்க்காட்டக்கானு
கையில் இராவணனும் இலங்கைகோபுரமேறிக்காணுதல்.



ளனைத்தையுங்கேட்டு ஆஞ்சனேயரைப் பலமுறைகொண்டாடி இளையபெருமானையுந்தழுவி ஆயாசந்தீர்ந்திருத்தல் சொல்லப்படுகின்றது.

இலக்ஷ்மணரை எதிர்த்துநின்ற இராவணன் மோகனாஸ்திரம் விடுக்க, அதையவர் விபீஷணர் சூழ்ச்சியால் நாராயணாஸ்திரம்விடுத் ததமாக்குதல்.

கவி.

இவ்வழியியன்றவெல்லா மியம்பினுமிரிந்துபோன
தெவ்வழியாற்றல்வெற்றிச் சேனையின்செலவுஞ்சென்ற
வெவ்வழியரக்கர்கோமான் செய்கையுமிளையவீரன்
எவ்வமிலாற்றற்போரு முற்றுநாமியம்பலுற்றும்.

இம்மூலபலத்தில் சுவாமிக்கு நேர்ந்த ஜயப்பிரதாபங்களை முற்றும்சொல்லினோம். இனி முன்புபயந்து ஓடிய வானரச்சேனைகள்மீண்டு செய்தசெயலையும், இராவணனது யுத்தகாரியத்தையும், இலக்ஷ்மணப்பிரான் அவ்விராவணனோடு செய்த யுத்தப்பிரபாவத்தையும் சொல்லுவோம். முன்னே மூலபல சேனையைக்கண்டோடிப்போன வானரத் தலைவர்களெல்லாம் அங்கதகுமாரனால் போனதைரியம் வந்தவர்களாகி, நாம் உடலோடுகூடி வாழ்தலையே விரும்பினோம். அதனால் வந்தபழியை நாமேயல்லாமல் வேறேயார் விலக்க வல்லவர்கள்? ஆகையால் நமக்குவந்தபழியை நாமே துடைக்கும்படி பாபிஷ்டர்களாகிய இராக்கதர்களோடு எதிர்த்திறந்து வீரசுவர்க்கத்தை அடைவோம், என்று தங்களுக்குள்ளே தீர்மானஞ் செய்துகொண்டு பாற்கடல்பெருகி வந்ததுபோல யாவரும் ஒன்றாகத் திரண்டவர்களாய்த் தங்கள் தங்கள் சேனைகளோடுகூடவந்து சேர்ந்தார்களன்றோ? அப்படியவர்கள்வந்து சேர்ந்தமாத்திரத்தில் இராவணனானவன் ஆயிரஞ்சக்கரங்களையுடையதாய் ஆயிரங் குதிரைகள் பூட்டிச் சூரியமண்டலத்தைத் தனதொளியாற்பகைத்து விளங்குகின்ற இரதத்தின்மேலே தேவர்களைச்செயித்த வில்லு முதுகில் அம்பறாத்தூணியு முடையவனாய்த் தனது வீரப்பிரதாப நான்குபக்கங்களிலும் பிரகாசிக்கும்படி ஏறி, வேறே நூறுகோடி தேர்வீரர்களும் - இருநூறுகோடி குதிரைவீரர்களும் - பத்துக்கோடி யானைவீரர்களும் - ஆயிரத்து முந்நூற்றுக்கோடி பதாதிவீரர்களும் - ஆண்சிம்ஹத்துக்குச் சமானமாகிய தன்னைச்சூழ்ந்துவரவும், திரிலோகத்திலும் அப்புறத்துள்ள உலகத்திலும் எதிர்க்கத்தக்க வீரர்களுண்டாயிருந்தால் வரலாம்வரலாமென்று அழைப்பதுபோலத் தொனிக்கின்ற பெரியரணபேரிகையும்-ஜெயசங்கங்களும் - இடிபோற் குமுறுகின்ற எக்காளமும் - பதினாலுலோகமும் கேட்கும்படி ஒலிக்கவும், உயுத்தகளத்தே வந்து சேர்ந்தான்.

அப்போது வானரவீரர்கள் அந்தக்கொடிய ராவணனையும், உயர்ந்து விசாலமாகிய ஆகாயத்தையு மறைக்கத்தக்க இராக்ஷசசேனா சமுத்திரத்தையுங் கண்டார்கள். கண்டமாத்திரத்தில் இந்தப் பெரியயுத்தத்தில் ஸ்ரீராமகாரிய

மாக நாமெல்லோரும் பிராணனை விடுவதே நமக்குச் சுகிர்தமென்று திடங்கொண்டு தமக்குள்ளே அணிவகுத்துநின்று, இடிகளுக்குச் சமானமாகிய மலைகளைக் கையிற்பேர்த்தெடுத்து! எமனு நடுக்கங்கொள்ளும்படி தோள்களைக்கொட்டி, அஷ்டகாசஞ்செய்து ஆரவாரித்தார்கள். இதுகண்ட கொடிய ராவணனுடைய சேனைகளும் தம்முயிரை உயுத்தத்தில்விடும்படி நிச்சயங்கொண்டு நின்றன. உடனே வானரசமுத்திரம் அவ்வரக்கர்களோடு எதிர்த்துநின்றது.

அங்கங்கே தலைகளும் - உடல்களும் - உதிரமும் - ஆயுதங்களும்—மற்றவைகளும் சிதறிக்கிடப்பதினால், பூமிமுழுமையும் உயுத்தகளம்போலவே காணப்பட்டது. அப்போது பதினாலுலோகமும் ஊழிகாலத்தில் நிலைகுலைவதுபோல நடுக்கங்கொள்ளும்படி சம்ஹரிக்கின்ற குரூரமாகிய உயுத்தத்தைப்பார்த்த இராவணன், இன்னம் சிறிதுநேர நாம் தாமசிப்போமேயானால் நம்முடையசேனைமுழுமையு நாசமாய் விடுமென்பதை நினைத்துக்கொண்டு சுற்றிலும் பார்த்தான்.

அப்படிப்பார்த்தபோது ஒருபக்கத்தில் வானரவீரர்களெறிகின்ற மரங்களும் கல்லுகளும் இராக்ஷசர்களுடைய வில்-வாள்-எழுத்தடி-சூலம்- ஆகியவிவற்றோடு அரத்தையும் வாய்மடியச்செய்யும் வேல்முதலிய கூர்மையாகியஆயுதங்களையு நொறுங்கும்படி செய்யவும், ஒருபக்கத்தில் தேகவலியும் தனுர்வேதவித்தையுமுள்ள இளையபெருமாள் போர் புரிவதாகவுமிருந்தது. பலபக்கத்தில் யானைக்கூட்டங்கள் துண்டுபட்டு விழுந்தும்-பலகுதிரைக்கூட்டங்கள் உயிர்துறந்து விழுந்தும் — தேர்க்கூட்டங்கள் சிதைந்து விழுந்தும் கிடக்கும்படியாக அனுமானும் அவர்பின்னே மற்றவானரவீரர்களு நெய்கின்ற குழலும் அதனைத்தொடர்ந்து செல்கின்ற நூலும்போல அரக்கர்சேனையுட்புகுந்து போர்செய்தலையும், ஒருபக்கத்தில் இவ்வளவென்று அளவுசெய்து சொல்லக்கூடாத விஸ்தாரமாகி நிறைந்த பெரியராட்சச சமூஹத்தை எமனுக்கு வில்லுமுண்டென்று சொல்லும்படி கையில் விற்பிடித்துச் சாரிகைதிரிகின்ற வீரராகிய இராமாநுசர் தமது அம்புகளாற் கொல்வதையும் கண்டான்.

உடனே கொடியோனாகிய அந்தத்தசமுகன் ஆ! ஆ! நாம் இனிச் சிறிதுபொழுது சும்மாயிருக்கப்போகாதென்று அதிகோபிஷ்டனாகி வேகத்தால் வாடைக்காற்றை யொத்தவைகளும், தடையில்லாமலுருவிப்பாய்வதால் இடியையொத்தவைகளும், மலைகளைப்பிளப்பவைகளும், அண்டத்தைச்சிறுதுண்டுகளாகச் செய்பவைகளும், திக்குகளைஇவ்வளவுதூரமுள்ளவையென்று அவற்றிற்பாய்ந்து அளப்பவைகளும்! எதிர்ப்பவருடைய உயிரை அபகரிப்பதினால் யாவராலும் தடுக்கக்கூடாத யமதூதர்களை யொத்தவைகளுமாகிய கொடிய அம்புகளை அணியணியாக வானரவீரர்கள்மேலே பிரயோகித்து அவர்களை வதம்பண்ணினான். இவ்வாறு குரூரபாணங்களைப் பிரதாபலங்கேஸ்வரன் இடைவிடாமலெய்தபோது குரங்குகளெதிர்க்கமாட்டாமல் திக்குத்திக்குகளாகச்சிதறி ஓட்டமெடுப்பதைக்கண்ட ஸ்ரீரகுநந்தனருடைய திருத்தம்பியார்

அவ்வானரங்களோடுவதை மரித்து நீங்கள் அஞ்சவேண்டாம் அஞ்சவேண்டாமென்று கருணைசுரந்து திருவாக்களித்து, அஞ்சனாதேவி புத்திருடைய திருத்தோளாகிய தேரின்மேல் ஆரோகணித்தருளி, எரிந்துகொண்டிருக்குங் கோபாக்கினியையுடைய இராவணனுக்கெதிரேசென் றெதிர்த்தார்.

அம்மாத்திரத்தில் இராவணனனவன் முகத்தில் தீயைக்கக்குகின்ற அம்புகளை நூறுகோடிக்கு அதிகமாகப் பிரயோகிக்க, அதுகண்ட இளையபெருமாள்சீக்கிரமாகவில்லைவளைத்து அவன்தொடுத்த வவ்வளவான அஸ்திரங்களையெய்து, காற்றுமுகத்திலகப்பட்ட பஞ்சுபோலத் திக்குகளிற்போய்த் துண்டுகளாகச்சிந்தும்படி அவன்விடுத்த அம்புகளையெல்லாம் அறுத்துத் தள்ளினார். அப்போது இவ்வாறு யோசிப்பதாயினன்.

ஓ ஓ!! ஏது மதிகெட்டுவந்து இந்தச் சிறுவன்கையி லகப்பட்டுக்கொண்டோம். இவன் நம்மைச் சும்மாவிடுகிறவனாகக் காணவில்லையே: அம்புகளாலிவனை வெல்லலாமென்றால் நம்மால் முடியாதுபோலத் தோன்றுகிறதே: திரிலோகங்களையும் வெற்றிபெற்ற நாம் திரும்பிவிடுவோமானால் அதிக பழிப்பாய் முடியுமே: இனி என்னசெய்யலாம்? நாம் தேவதாஸ்திரங்களைப் பிரயோகித்தால் அந்த தேவதாஸ்திரங்களையே தொடுத்துத் தடுத்துவிட்டு, மேனுமேலும் அஸ்திரங்களை நம்மேலெறிகின்ற சமர்த்தனா யிருக்கின்றான். இவன் நம்மைமாத்திரமோ? எல்லாவீரர்களையும் அநாயாசமாக வெல்லுவான். சமஸ்தபிராணிகளுடைய உயிரையும் வாங்கவல்ல யமனும் தனக்கெதிர்ப்பட்டால், உனக்கெவ்வளவு வல்லமையுண்டென்று அவனுடைய உடலைப் பிடித்துப் பார்க்கவும் வல்லவன். தன்னுடைய தமயனைப்போல எந்தவுலகங்களையும் சுட்டெரிக்குஞ் சாமர்த்தியவான். இவன் யாருக்குந் தோற்கான். நாம் முன்னே சிவபிரானிடத்தில் தவஞ்செய்துபெற்ற மோகனாஸ்திரந்தான் இவனை வெற்றியழியச் செய்யும். ஆதலால் அவ்வஸ்திரத்தை யேவிக் காகங்கள் மொய்த்துக்கொண் டிருக்கின்ற இரணக்களத்திற் சீக்கிரத்திலேவிழத் தள்ளுவோம் என்றெண்ணினன்.

கவி.

என்பதுன்னியவ் விஞ்சையைமனத்திடை யெண்ணி
முன்பன்மேல்வரத் துரந்தனனது கண்டு முடுகி
அன்பின்வீடண னுழியான்படையினி னறுத்தி
என்பதோதின னிலக்குவனதுதொடுத் தெய்தான்.

இவ்வாறுலோசித்துத் தீர்மானஞ் செய்துகொண்டு, அந்த அஸ்திரத்துக்குவேண்டிய மந்திரத்தைத் தியானித்தெடுத்து வில்லில்தொடுத்து, எதிரே நிற்கின்ற இராமாநுசர்மேல் பிரயோகித்தான். இப்படி ராவணனனவன் அபிமந்திரித்துப் பிரயோகித்த மோகனாஸ்திரத்தைக்கண்டு சமீபத்தில் நின்றுகொண்டிருந்த விபீஷணாழ்வான் இலட்சுமணப்பெருமாளை நோக்கி, சுவாமீ! தேவரீர் ஸ்ரீமகாவிஷ்ணு அஸ்திரத்தையெய்து அந்த அஸ்திரத்தை அறுத்

றுத்தள்ளுமென்று சொல்லினர். உடனே இலக்ஷுமணர் ஸ்ரீமகாவிஷ்ணு அஸ்திரத்தால் மோகனாஸ்திரத்தை அறுத்துத் தள்ளினர்.

அதைக்கண்ட இராவணனானவன் கோபங்கொண்டு, (குலத்துக்கூனம் கோடாரிக்காம்பு)என்பதுபோலும், இந்தவிபீஷணன் நம்முடைய சத்துருக்களுக்குச் சமீபத்திலிருந்து சமயோசிதமாக உபாயங்களைச் சொல்லிக்கொண்டு வருவதினாலே யல்லவோ நமக்கு இவ்வளவுகேடும் சம்பவித்ததென்று தனக்குள்ளே நினைத்து, தெய்வதச்சனாகிய மயனென்னு மாயன்தன் மகளாகிய மண்டோதரியைப்பாணிக்கிரகணஞ் செய்துகொடுத்த காலத்திற்றனக்குக் கொடுத்ததும்- சக்கராயுதத்தையும் வச்சிராயுதத்தையும் ஒத்ததும், பாய்ந்துருவத் தலைப்பட்டால் சுத்தவீரர்களுடைய வீரப்பிரதாபத்தையும் ஊழியையுங் கடந்து உருவத்தக்கது மாகிய வேலாயுதத்தையெடுத்து, தன்வெற்றியை யழித்த தம்பிமேற் பிராணனை வாங்கும்படி அதிகவிசைகொண்டு எறிந்தான். இப்படி யெறிந்தபோது, விபீஷணாழ்வான் அந்த வேலினுடைய நிலைமையையெல்லாம் அறிந்தவராகையால்; ஓ இராமாநுஜரே! இந்த வேல் என்னுயிரை நாசப்படுத்தாமற் போகாது. அதைத் தடுக்கும்படியான உபாயமோ ஒன்றுமில்லையென்று விண்ணப்பஞ் செய்துகொண்டார். அது கேட்ட மகாநுபாவராகிய இலட்சுமணப்பெருமாள் அதையிதோ தடுத்துவிடுகிறேனென்று சொல்லி அதினெதிரே நின்று, அவரெய்த அம்புகளும் எறிந்த எல்லாவாயுதங்களும் எப்படியாய் விட்டனவென்றால்? பரம வைதிகமார்க்கானுசாரியாய்ப் பரமோகாந்த நிஷ்டராயுள்ள பாகவத சிரோமணியாகிய ஒருமகாபுருஷனை அவைதிகமார்க்கானு சாரிகளாகிய துஷ்டர்கள் அசூயையால் தூஷிக்கும் தூஷணங்கள் எப்படியடையாவோ? அப்படி யவ்விராவணனெறிந்த வேலை ஒன்றுஞ்செய்யாமற் போய்விட்டன.

அங்கே ஆகாசமார்க்கத்திற் பார்த்துக்கொண் டிருந்த தேவர்களெல்லாம் விபீஷணாழ்வான் இந்தவேலுக்குத் தப்பிப் பிழையாரென்று பரிசுத்தமாகிய மனம்வாடினார்கள். அதுசமயத்தில் இளையபெருமாளானவர் நாமெய்தவைகளும் எறிந்தவைகளுமாகிய ஆயுதங்களை யெல்லாம் இலக்ஷியம்பண்ணாமல் வருகின்ற வேலானது நம்முடைய திருத்தமையனாரை அடைக்கலமடைந்த விபீஷணாழ்வானுடைய உயிரைவாங்கும். அப்படி உயிரைவாங்க விபீஷணாழ்வான் அழிவாரேயானால் சாதுக்களாகிய தேவர்களும் கைகொட்டி நம்மை நகைப்பார்கள். தம்மை அடைக்கலமடைந்தவனுடைய உயிரைத் தங்கள் நிமித்தம் சத்துருவானவன் கொல்லப் பார்த்துக்கொண் டிருந்தார்களென்கிற பழிவந்து நம்மையடைவதற்கு முன்பாக இந்தவேலை நாமே ஏற்றுக்கொள்ளுவோம். அப்படி யேற்றுக்கொள்ளுவதினால் நமக்குத் தோற்புவந்தபோதிலு மகாகீர்த்தி நிலைநிற்கும். இந்தத்தருமமு நம்மைச்சேரும். ஆதலால்- இனி ஆலோசிப்ப தென்னவிருக்கின்றது? என்றெண்ணி யவ்வேலெதிரே [illegible]- விபீஷணனுக்கு முன்னேசென்று தமது திருமார்பைக் காட்டிக்கொண்டு நின்

ருர். அப்படி நின்ற ராமாநுஜருக்கு முன்னே ஓடி விபீஷணாழ்வான் நின்ருர். அவ்விருவரையும் விலக்கி நானே இந்தவேலை ஏற்றுக்கொள்ளுகிறேனென்று அங்கதப்பெருமான் போய் நின்ருன். அம்மூவரையும் சுக்கிரீவமஹாராஜா தடுத்துத் தாமேபோய் நின்ருர். இவை யனைத்தையுங்கண்ட ஆஞ்சனேயர்- ஆ! ஆ! நன்ருயிருந்தது: ஸ்ரீராமபிரானுக்கு அடிமை நானென்பது பொய் யோ? இந்தவேலை நானே ஏற்றுக்கொள்ளுகிறேன். நீங்களெல்லோரும் அப் புறத்தேபோங்கள். என்றுசொல்லி எல்லாருக்கு முன்னேபோய் நின்ருர்.

விபீஷணர் மார்புக்குநேராக இலகுவைத்து இராவணனேவிய வேலை இளையபெருமா ளேற்று மூர்ச்சித்தல்.

கவி.

முன்னின்ருரெலாம் பின்னுறக்காலினின்முடுகி
நின்மின்யானிது விலக்குவனென்றுரைநேரா
மின்னும்வேலினை விண்ணவர்கண்புடைத்திரங்கப்
பொன்னின்மார்பிடை யேற்றனன்முதுகிடைப்போன.

இந்தப் பிரகாரமாக ஒருவரையொருவர் தடுத்து முன்னேபோய் நிற்கி றதும், நிற்கிறவரைத்தடுத்து மற்றொருவர்போய் முன்னே நிற்கிறதுமாகி யவிந்தத் துக்ககரமானசமாசாரத்தை இப்படிப்பட்டதென்று சொல்லி முடி யுமோ? முடியாது: ஒருவர்முன் ஒருவராக நின்றவர்களை யெல்லாம் — நீங்கில்: நீங்கில்: என்று விலக்கிவிட்டு ஸ்ரீராமாநுஜரானவர் நானே ஏற்றுக்கொள்ளுகி றேனென்று சென்று, தேவர்கள் தங்கள் கண்களிற் கைகளால்மோதி அறை ந்துகொண்டழவும், அந்தவேல் தமது முதுகை உருவிச்செல்லவும், தமது திருமார்பி லேற்றுக்கொண்டார். இப்படி வேலையேற்று இளையபெரு மாள் சாய்ந்தமாத்திரத்தில் இதுவேநமக்குப் போதுமென்று சீக்கிரமாகத் தேரைச் செலுத்திக்கொண்டு போகின்ற பாபிஷ்டியான இராவணனை விபீஷ ணாழ்வான் கண்டு, அடா துராசாரமுள்ள கள்ளா! நீயெங்கே தப்பித்துக் கொண்டு ஓடுகிருய்? நில்லடா நில்லு: என்றுசொல்லிக்கொண்டேபோய் எதி ரே மறித்துநின்று புருஷசிம்ஹத்தைப்போலச்சீறி, தம்முடைய கையிலுள்ள தண்டாயுதத்தால் தேவர்களுந் தலைநடுக்கங்கொள்ளத் தேரிற்கட்டிய குதிரை களையும் சாரதியையும் விழும்படிமோதி யடித்தார்.

உடனே ராட்சசகுலாதிபன் தேரில்நின்றெழும்பி ஆகாயமார்க்கத்தில் நின்று, அதிககோபத்தோடு கொடிய பத்தம்புகளை விபீஷணாழ்வானுடைய திருமேனியிற் பதியும்படிப் பாய்ச்சி, சமீபத்தில்நின்ற வாயுபுத்திரர் மேலும் ஆயிரமம்புகளை எய்து உயுத்தமுடிந்த தென்னுங் குதூகலத்தோடு இலங்கா பட்டண நோக்கிச் செல்லுகிருன். அப்போது சிரஞ்சீவியாகிய விபீஷணாழ் வானனவர் பலவகையாலும் என்னை ஆராய்ந்து, தமது சரணத்தையு மென க்குக் கதியாகத்தந்த பெரியபெருமாளின் திருத்தம்பியார் என்பொருட்டாக இரணக்களத்திற் சோர்ந்து வீழ்ந்தனர். அடா இராவணு! அடா துன்மதீ!

இந்தவஞ்சனைப் புத்தியால்நீ எங்கே ஓடிப்போவது? உன்னைக் கொலைசெய்து உன்னோடு நானுஞ்சாகிறேனென்று சொல்லிக்கோபித்துப்பின்தொடர்ந்தார். அதுகண்ட ராவணன் ஜெயமோ என்பக்ஷத்திலாய்விட்டது. விபீஷணனென்னும் இந்தச் சாதுப்பிராணியைக் கொல்லுவதினால் இனிப் பிரயோசன மொன்றுமில்லையென்று தனக்குள்ளே ஆலோசித்துக்கொண்டு சற்றேனு நில்லாமலும், விபீஷணுழ்வா னுடனே ஒன்றும்பிரதியுத்தரம் பேசாமலும், பொன்மதில்சூழ்ந்த தன்னகரமேபோய்ச் சேர்ந்தான்.

இவ்வண்ணம் யுத்தகளத்தில் இலட்சுமணப் பெருமாளைத் தனது வேலினுற் கிடத்திவிட்டு இராவணன் போனபிறகு விபீஷணரும் மற்றவானரவீரரும் ஓவென்று கதறி ஐயோ ஐயோ இனியாது செய்வது என்று வருந்திப் பிரலாபித்துக்கொண் டிருக்குந்தறுவாயில் சாம்பவந்தர் விபீஷணுதி வானரர்களைக் கையமர்த்தி சற்றேபொறுங்கள் முன்னம் நம்மையெல்லாம் பிழைப்பித்த ஆஞ்சனேயர் நமக்குத் துணையாயிருக்கும்போது இலட்சுமணப்பெருமாளிறந்தவ ரல்லவென்று சொல்லி ஆஞ்சனேயருடைய திருமேனியில் தைத்திருந்த அம்புகளைப் பிடுங்கிக் களைதெளிவித்து இதனைச் சொல்லுகின்றார்.

ஓ மகானுபாவரே! நம்முடைய ஸ்வாமியாகிய ஸ்ரீராமபிரானுனவர் இளையபெருமாளடைந்த இந்த வருத்தத்தையுங் கண்டு சகிப்பாரோ! சகிக்கமாட்டாரே: நீரும் சீக்கிரத்திற்போய்ச் சஞ்சீவியைக் கொண்டுவராமல் இருப்பீரோ? இருக்கமாட்டீரல்லவா? என்று சொல்லினர்: இதைக்கேட்ட ஆஞ்சநேயர் அதிசீக்கிரமாக வெழுந்து தான் முன்பு கைகண்ட மருந்தைக் கொண்டுவர முன்பு தாவிப்போன வழியே சென்றுசஞ்சீவிபர்வதத்திலுள்ளஉயிர்தரு மருந்தாகிய அமிர்தசஞ்சீவியை யெடுத்துவந்தனர்.

ஆஞ்சனேயர் சஞ்சீவிமருந்தைக் கொணர இலட்சுமணர் மூர்ச்சை தெளிந் தெழுதல்.

கவி.

தந்தனன்மருந்துதன்னைத் தாக்குதன்முன்னேயோசம்
வந்ததுமாண்டார்க்கெல்லா முயிர்தரும்வலத்ததென்றால்
நொந்தவர்நோய்வுதீர்க்கச் சிறிதன்றேநொடிதன்முன்னே
இந்திரனுலகமார்க்க வெழுந்தனனிளையவீரன்.

இப்படி ஆஞ்சனேயர் கொண்டுவந்த சஞ்சீவி மருந்தின்வாடைதாக்குதன்முன்னே யுத்தகளத்தில் இலட்சுமணப் பெருமாள் வானரவீரர்களெல்லாமார்ப்பரிக்க எழுந்தனர். முன்புபிரமாத்திரத்தால் இறந்துபோனவர்களுக்கெல்லாம் உயிரைத்தந்து உற்சாகத்தைஉண்டாக்கிய சஞ்சீவிமருந்திற்கும், இணைசொல்லவும் உண்டோ? நொந்தவர்களுடைய நோவைத்தீர்ப்பது அந்த மருந்துக்கு அற்பமாகுமல்லவா? ஒருநொடிப் பொழுதுக்குள்ளாக இந்திரலோகவாசிக ளெல்லாரும் சந்தோஷங் கொண்டாடும்படி உயிர்த்தெழுந்தவராகிய இராமாநுஜர் ஸ்ரீராமகைங்கரிய துரந்தர சீலராகிய

அநுமானைத் தமதிரண்டு திருக்கரங்களாலும் சேர்த்தணைத்து, என்னப்பனே ஆஞ்சநேயா! தாரகமந்திர வாச்சியராகிய ஸ்ரீரகுகுலோத்தமரை அடைக்கலமடைந்த விபீஷணாழ்வானையும் பட்டுருவிச்சென்று அவரும் விழுந்தனரோ? விழுந்தாரில்லையல்லவா? என்று வினவி, அவர் தமக்கு ஓரபாயமுமில்லாமல் தம்மைத் தொழுதுகொண் டிருப்பதையும் பார்த்து, அப்படிப்பார்ப்பதற்கு முன் னுண்டாயிருந்த அச்சமும் - துன்பமும் — சிறிதும் இல்லாதவராகி, சீதாபிராட்டியார் சிறையினின்று நீங்கின தன்மைபோல் குதூஹலமடைந்தார்.

இளையபெருமாளாதி யாவரும் தன்பால்வந்து வணங்கக்கண்ட ஸ்ரீராமபிரான் நடந்த யுத்தவரலாறுகளைக் கேட்க சாம்பவர்கூறுதலும் இளையபெருமாள் ஆயாசந்தீர்ந்திருத்தலும்.

கவி.

ஒன்றலபலவென்றோங்கு முயர்பிணத்தும்பரோடும்
குன்றுகள்பலவுஞ்சோரிக் குரைகடலனைத்துந்தாவிச்
சென்றடைந்திராமன்றன்னைத் திருவடிவணக்கஞ்செய்தார்
வென்றியின்றலைவர்கண்ட விராமனென்விளைந்ததென்றான்.

பிறகு அவ்விளையபெருமாளும் - சுக்கிரீவமகாராஜரும் — விபீஷணாழ்வானும் — ஆஞ்சநேயரும் — மற்ற வானரப்படைத் தலைவர்களும் எழுந்து, ஆகாயத்தையளாவிய அநேக பிரேதபர்வதங்களைக் கடந்து இரத்த ஆறுகளைத் தாண்டிச்சென்று தங்களைக் காணவேண்டிவரும் ஸ்ரீராமபிரானைத் தெண்டனிட்டு நின்றார்கள். அவரவர்களை நோக்கி உயுத்தம் என்னமாய் முடிந்ததென்று வினவினர். அதுகேட்ட அதிமேதாவியாகிய சாம்பவர் சுவாமியினுடைய திருவுளத்துக்கு ஏற்கும்படி இளையபெருமாள், யுத்தத்தில் இரதகெஜதுரக பதாதிகளைத் தும்சப்படுத்தி இராவணனெய்த மோகனாஸ்திரத்தை விபீஷணாழ்வானுடைய சொல்லினால் ஸ்ரீமகாவிஷ்ணுவினஸ்திரத்தைப் பிரயோகித்து, அழித்ததையும், அதுநோக்கி அந்தத் தசமுகன் விபீஷணாழ்வான்மேல் வேலெறிய அதையானேற்றுக் கொள்ளுகிறேன் யானேற்றுக் கொள்ளுகிறேனென்று சுக்கிரீவமகாராஜா முதலானோர் சென்றதையும், அவர்களை விலக்கிவிட்டு இளையபெருமாள் ஏற்றுக்கொண்டு உயிர்சோர்ந்ததையும், உடனே அநுமானானவர் தாவிச்சென்று சஞ்சீவிகொண்டுவந்ததையும், இலட்சுமணர் உயிர்த்தெழுந்ததையும், மற்றுமுள்ள செய்திகளையும் சாங்கோபாங்கமாகச் சொன்னார். இப்படிச்சொன்னவைகளெல்லாவற்றையும் கேட்டருளிய ஸ்ரீராமச்சந்திரரானவர் வாயுபுத்திரரைத் திருமார்போடிறுகத்தழுவி, உன்னை யான் பெற்றிருக்கின்றேனாதலால்இனிப்பெறவேண்டியதுவேறுண்டோ?ஓ நவவியாகரண பண்டிதனே! இயாதொரு துன்பமும் அடையாத ஆயுளையடையக்கடவாயென்று திருவாய்மலர்ந் தருளினார்.

அப்போது மிகுதியும் அன்புள்ள இராமாநுஜர் மேகம் வருஷிப்பது போல இரண்டு தாமரசமலர்போன்ற நேத்திரங்களிலிருந்தும் தாரைதாரையாய் நீரொழுக விம்மிவிம்மியழுது, உயிர் புறத்திலேசெல்லத் தனித்துநின்ற உடலை ஒத்தவராகி, முன்னே பிரிவென்கிற துன்பத்தைத் தமக்குக் கொடுத்துவிட்டு நிரதிசயானந்த பரமபதத்தை யடைந்த பிதாவாகிய தசரதசக்கரவர்த்தியைக் கண்டாற்போலத் தமது அண்ணனாகிய ஸ்ரீராமபிரானைமறுபடியு நமஸ்காரஞ்செய்து சமீபத்திலேபோய் நின்றார். அவ்வாறுநின்ற இளையபெருமானைப் பெரியபெருமாளானவர் செவ்வையாக உற்றுப்பார்த்து, என்னப்பனே! இலட்சுமணா! நம்மைச் சரணமடைந்த விபீஷணாழ்வானுக்காகஉன்னுயிரைக்கொடுத்த தாதுர்த்துவமானது நம்முடைய மரபுக்குத் தகுதியானதே: என்றுசொல்லி நீலநிறச் சூரியனையொத்த தேககாந்தியையுடைய ஸ்ரீராமமூர்த்தி யானவர் தமது திருத்தம்பியார் பூண்டிருந்த கவசமுதலிய யுத்தபூஷணங்களையெல்லாம் ஒவ்வொன்றாகக் கிரமமாய்க்களைந்து, வில்லை ஆஞ்சநேயர்கையிற் கொடுத்துவிட்டு, தமது தலையிற் சுருண்டு நீண்டு தொங்குகின்ற கேசத்தால் மேகந்தவழ்கின்ற மேருமலையைப்போல விளங்குகின்ற இலட்சுமணருடைய ஆயாசத்தை ஆற்றிக்கொண் டிருந்தார்.

வேலேற்றுப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

முப்பத்திரண்டாவது,

வானரர் களங்காண்படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமபிரான் ஆக்ஞைப்படி சுக்கிரீவமகாராஜனாதியர் போர்க்களஞ்சென்று மூலபலசேனை மடிந்திருக்கும் விதத்தை விபீஷணர் காட்டக்கண்டு ஆச்சரியங்கொண்டு மீண்டு சுவாமியினிடம் வந்தமை சொல்லப்படுகின்றது.

மூலபலசேனையின் மடிவை ஸ்ரீராமராக்ஞைப்படி விபீஷணர் காட்ட சுக்கிரீவனாதியர் காணுதல்.

கவி.

ஆயபின்கவிதன்வேந்து மளப்பருந்தானையோடும்
மேயினனிராமன்பாதம் விதிமுறைவணங்கிவீந்த
தீயவர்பெருமைநோக்கி நடுக்கமுந்திகைப்புமுற்றார்
ஒய்வுறுமனத்தாரென்று முணர்ந்திலர்நாணமுற்றார்.

இவ்வண்ணமானபின்பு,வானரங்கட்கரசனாகிய சுக்கிரீவமகாராஜர் யாவராலும் கணக்கிடுதற்கரியவானரச்சேனையோடுகூட்டிக்கொண்டுவந்து இராமமூர்த்தியின்திருவடித்தாமரைகளில்சாஷ்டாங்கமாகத்தெண்டன்சமர்ப்பித்துநின்று

சொல்லுகிறார் எப்படியெனில்சுவாமி இரகுகுலோத்தமரே! இன்றுயுத்தகளத்தில் தாமெய்த அஸ்திரவருஷத்தால் மாண்ட கொடியவர்களாகிய இராட்சசச் சேனைகளின் பெருமையைப் பார்த்து நடுக்கமும் மதிமயக்கமு மடைந்தவர்களாய் தைரியமிழந்து யாதொரு விஷயமு மறியமாட்டாதவர்களாய் தாங்கள் பயந்தோடினதை நினைத்து வெட்கமுற் றிருக்கின்றார்கள். திரிலோகங்களுக்குள் வசிக்கின்றவர்களிலும் அதிக கூட்டமாயும், வடவாமுகாக்கினி பரந்து உயர்ந்தெரிந்து வருவதுபோன்று மூலபலம்வந்ததே: அஃதென்னமாய் முடிந்ததென்று விண்ணப்பம் செய்துகொண்டனர். அதுகேட்டருளி ஸ்ரீரகுநாயகர் - ஓ மகாராஜாவே! அம்முடிவைப் பார்க்கவேண்டுமானால் படைத்தலைவர்களு நீயுமாக விபீஷணாழ்வாரோடு யுத்தகளம்போய்ப் பாருங்களென் றருளிச்செய்தனர். உடனேவானர வீரர்களெல்லா மூலபல மடிந்ததைக் காணவேண்டுமென்கிற ஆசையானது தங்களைத் தூண்டிவதினாலே உடனே எழுந்திருந்து விபீஷணாழ்வாரை நோக்கி, ஐயா! நமதையன் மூலபலசேனையிற் செய்த பராக்கிரமத்தைப்போய்ப் பார்ப்போம் விரைவிலெழுந்திருந்து வாருமென்று அழைத்துக்கொண்டு அதிவேகமாய்ச் சென்று, கழுகுகளும் - பருந்துகளும் — பேய்களும் — பூதங்களும் - மற்ற மாமிசபட்சணிகளும் - கூட்டங்கொண்டிருக்கின்ற போர்க்களத்தைத் தங்கள் கண்களாற் பார்த்தார்கள்.

அப்படிப்பார்த்தமாத்திரத்தில் யாவரும் திப்பிரமையாய் நின்று, ஆ! ஆ! இவ்வளவுபேரையும் ஒருவில்லுடனே ஸ்ரீராமபிரான் ஒருவர் சகாயமும் வேண்டாமற் கொன்றாரல்லவா? அதனால் அவர்திருமேனிக்கு என்ன ஆயாசந் தோன்றிற்றோ? என்று கண்ணீர் விட்டு அழுதார்கள். இத்தனை ராக்ஷசர்களையும் ஸ்ரீரகுநாயகர் எப்படி கொலைசெய்தாரோ வென்று உடலுமுள்ளமு நடுக்கினார்கள். ஸ்ரீராமச்சந்திரருடைய கீர்த்தியை வாயாரப்பாடி ஆரவாரித்து உற்சாகத்தோடு தேகம்பூரித்தார்கள். அவ்விடத்தே இராக்ஷசர்க ளடைந்திருக்கின்ற கோரத்தைக்கண்டு பயந்தார்கள். இந்தத்துராத்துமாக்கள் நம்முடைய சுவாமியை வந்து எதிர்த்தார்க ளல்லவா வென்று உள்ளத்தில் மிகுந்த கோபங்கொண்டார்கள். நமதாண்டவருக்கு இப்பேர்ப்பட்ட சிரமமும் நேரிட்டதாவென்று துக்கத்தால் உயிர்தடுமாறி, எப்படிக் கிருந்தபோதிலும் இவர்கள் யாவரையும் கொன்று முடித்தாரல்லவா வென்னும் சந்தோஷத்தினால் உயிர்நிலைத்துநின்றார்கள். இந்தப்படிஅந்தவானரவீரர்கள் அடைந்தவிதங்களை இன்னதின்ன தென்று அறிந்துசொல்லவல்லவர்கள் யாருண்டு? ஆயிரவருஷமாகப் பார்த்தாலு நம்மாற்பார்க்க முடியாதென்று சொல்லிக்கொண்டு அந்தந்த விடங்களிற்போய்ப் பார்க்குந்தோறும் அதிசயித்து நின்றார்களே யல்லாமல் முடியக்காணாதவர்களாகி, ஓ விபீஷணாழ்வானே! ஏழுசமுத்திரங்களும் இராட்சத வுருவங்கொண்டு வந்ததுபோல இந்தப்பாதகர்கள் தோன்றுகின்றார்களே; எங்களாற் கண்டுணரக் கூடவில்லையே: இதனை நீர்தெரிந்து சொல்லவேண்டு மென்று வானரப்படைத்தலைவர்களும் சுக்கிரீவமகாராஜரும் கேட்டுக்கொள்ள விபீஷணாழ்வான் சொல்லத்தொடங்கினார்

கவி.

காகப்பந்தற் செங்களமெங்குஞ் செறிகாலம்
மோகத்தம்பிற் பொன்றினவேனு முடலொன்றி
மேகச்சங்கந் தொக்கனவேழம் வெளியின்மை
நாகக்குன்றம் நின்றனகாண்மி னமரங்காள்.

ஓ நண்பர்களே! இயமனானவன் பிரியாமல் வசிக்கின்ற கூர்மையுடைய ஸ்ரீராமபாணத்தால் இறந்தவைகளாய்க்கீழேவிழுந்து படிந்திருந்தபோதிலும், பந்தலைப்போல மேலே காகக்கூட்டங்கள் மொய்த்துக் கொத்திக்கொண்டிருக்கின்ற யானைப்பிரேதங்கள் யுத்தகளத்தில் வெளியில்லாதபடி ஒன்றின்மேலொன்று விழுந்து மேகராசிகள் நிறைந்து தவழ்கின்ற உயர்ந்தபர்வதம்போலத் தோன்றுகின்றதையும் தங்களுடைய செவந்த கண்களாலுருட்டிப் பார்த்தே வெற்றிபெறத்தக்க குரூரராக்ஷசர்களுடைய உடல்களில் ஸ்ரீராமபாணங்கள் எனக்குனக்கென்று ஒன்றின்முன் ஒன்றுசென்று தைத்து உயிரையுண்டதினாற் கிடக்கின்ற அவ்வுடல்களிலே பொத்திய அந்தப்பாணங்கள், சிங்கங்கள் வசிக்க யோக்கியமான பெரியமலைகளில் நுழைந்து உறங்குகின்ற சர்ப்பங்களைப்போலத் தோற்றுவதையும் உதிர்ந்துகிடக்கின்ற கோரதந்தங்களினிராசிகள் மணற்குன்றுகளைப் போலவும், பரந்துவிழுந்திருக்கின்ற கறுத்த உடல்களின் பரப்பு கருங்கடலைப்போலவும், தங்கள்தங்கள் நாயகன்மார்களைத் தழுவிக் களிப்போடு பிராணனைவிட்ட கற்புள்ள இராக்ஷசஸ்திரீகளுடைய ஒளியுள்ள முகங்கள் அக்கடலிற்பூத்த தாமரைமலர்க்காட்டைப் போலவும், அம்முகங்களில் தாவிதாவி ஆரவாரித்துக்கொத்துகின்ற கழுகுகள் கீதங்களைப் பாடிக்கொண்டு மொய்க்கின்ற வண்டுகளைப்போலவும் விளங்குவதையும் பாருங்கள்.

ஓ வானரவீரர்களே! கூரிய பாணங்களென்னும் இடிவிழுந்தபோது கட்டியகுதிரைகளிறந்ததினால் வெள்ளைக்கொடிகள் பாய்களாகவும், அக்கொடிக்காம்புகள் பாய்மரங்களாகவும், பெரியதேர்கள் அடர்ந்தோடுகின்ற உதிரமாகிய கடலில் மரக்கலங்களைப்போல மிதந்துசெல்வதையும், மும்மதங்களும் பெருகிவழிகின்ற யானைகள் தமதுடலில் அம்புகள்பாய்ந்து உருவிச்சென்ற காரணத்தால் எழுந்துசெல்லமாட்டாமல், தேர்களாகிய மரக்கலங்களோடுகின்ற இரத்தசமுத்திரத்தில் திமிங்கிலமென்னும் மீனரசானது கடலின்மேல் தலையைத் தூக்கித்தூக்கிப் பார்ப்பதுபோலத் தமது தலைமேலே தோன்றுகிறது மூழ்கிறதுமாக இருப்பதையும், யானைகளைப்போலக் குதிக்கின்ற கவந்தங்களோடு கைகளைக் கோர்த்துக்கொண்டு தாளப்பரிமாணப்படி நடிக்கின்ற பேய்கள், அபிநயம்பிடித்தாடுகின்ற நடனத்தைத் தம்முடைய மாணாக்கர்களுக்குக் கற்பிக்கும்படி தாமும் அவர்களோடுகூடிக் காலடைவுபோட்டு அபிநயிக்கின்ற பரதசாஸ்திரிகளைப்போலத் தோன்றுகின்றதையும், வெற்றிவீரர்களுடைய கவந்தங்களோடு பொறிகளுடன் பொறிகள் பொருந்தக்கூடிக் கைகளைப் பிணைத்துத் தழுவிக்கொண்டு நர்த்தனம் பண்ணுகின்ற பேய்கள்

கோடரிபோலக் கூர்மைவாய்ந்து கீழேகிடக்கின்ற பல்லிடுக்குகளிலே தங்கள் கால்கள் சிக்கிக்கொண்டு நரம்புகளால் தளைக்கப்படுதலால், அப்பேய்கள் இக்கவந்தங்களோடு நடனஞ்செய்ய நம்மாலாகாதென்று கைசோரவிட்டு மெள்ள நழுவிச் செல்கின்றதன்மையையும் பாருங்கள்.

ஓ ஸ்ரீராமநேயர்களே! தங்களுடைய கூட்டங்களோடு சேர்ந்து நின்று யுத்தம்பண்ண விரும்பாமல் தனித்தனியாக முன்னேசென்று அதிக கோபங்கொண்டு வந்த யானைகளினது வெள்ளியதந்தங்கள், இராக்ஷசவீரர்களுடையஉடலில் வடிகின்ற இரத்தப்பிரவாகத்தில் அங்கங்கு தோன்றுகின்றவை இளஞ்செவ்வானத்தில் மேகராசியின் மத்தியில் விளங்குகின்ற மூன்றாம்பிறைச்சந்திரனைப்போலத் தோன்றுகின்றதையும், பூதங்கள் அதோகிடக்கின்ற கொடிக்கூட்டங்களின் மேலும், விற்குப்பைகளின்மேலும், அம்புக்குவியல்களின்மேலும், வேல்ராசிகளின்மேலும், குவிந்த தேர்களின்மேலும், யானைகளின்மேலலங்கரித்த அம்பாரிகளின்மேலும் உட்கார்ந்துகொண்டு, இராக்ஷசர்களுடைய கண்களிற்பிறந்த தீப்பொறிகளால் வெந்து பக்குவப்பட் டிருக்கின்ற மாமிசங்களை எடுத்தெடுத்துத் தின்று தேகம்பூரிக்கின்றதையும், சமுத்திரமுமிரத்தக்கடலும் ஒன்றுடனே யொன்று கலந்து பெருகுவதினால், உதிரவெள்ளத்தோடுவந்த யானைப்பிரேதங்களைத் தமதினமென்று நினைத்து சுறாமீன்கள் சமீபத்திலேவந்து தமது இனமல்லாமையைக் கண்டு பயந்து இவைமலைகளோவென்று சந்தேகித்து, இனமென்று முன்னே தாம் நினைத்ததற்காக நாணித் தமதிருப்பிடத்துக்குப் போகின்றதையும் பாருங்கள்.

ஓ நண்பர்களே! ககனமார்க்கத்தினின்று யுத்தஞ்செய்தவர்களை ஸ்ரீராமபாணமானது சென்று துண்டித்ததனால் அவர்களுடைய பர்வதாகாரமாகிய தேகங்களானவை சர்வலோக சரணியர்மீது போர்செய்ய வீராவேசத்தோடு வருபவர்கள்மேல் விழுந்ததினால், அந்தப் பிரேதங்களுக்குள்ளே அகப்பட்டுக்கொண்டு அவற்றினின்று நீங்கச்சக்தியற்றவர்களாய் அவர்கள் கைகால்களை யுதறிக்கொண்டு உபத்திரவப்படுவதையும், மிகுதியும் அடர்ந்து மொய்த்துவந்த இரத-கஜ-துரக பதாதியென்னு நால்வகைப்படைவீரர்களது உடலினின்றுந் தெறித்த இரத்ததாரைகள் தனதுமேனியிற் பட்டதினால் சூரியன் ஆகாசமத்தியில் வந்தவனாயிருந்தும், உதயகிரியின் சிகரத்தில் உதித்தவனைப்போலக் காணப்படுகிறதையும், தங்களுடைய பராக்கிரமமுற்றும் ஓய்ந்த குரூரராக்ஷசர்கள் துண்டிக்கப்பட்ட காலத்தில் அவர்களுடைய தேகத்திலிருந்து இது ஆறுதானோ வென்னும்படி மேலேசென்ற உதிரத்தில் மூழ்கிச் செவந்தநிறமடைந்து வேற்றுருவமாய் நின்ற சந்திரன், வேறேயொரு சூரியபிம்பத்தைப் போலத் தோன்றுகிறதையும் பாருங்கள்.

ஓ நண்பர்களே! இந்த மூலபலத்தில்வந்த குதிரைகளும் யானைகளும் அநேகமாயிரகோடி யாயினும், அவற்றுள் விசேஷமானவைகளைச் சொல்லுகிறேன் கேளுங்கள். இதோ பாகர்களோடு இறந்துகிடக்கின்ற பத்து

கோடிக்குதிரைகளும் குமுதமலர்போல மணம்வீசும் வாயையுடையவைகளாயும், நர்த்தனத்தில் தேர்ந்தவைகளாயும், யானையைப்போலக் காணப்படும் பாரியதேகமுடையவைகளாயும், அமுதத்தோடு கூடப்பிறந்தவைகளாயுமாகும். இங்கே செத்துக்கிடக்கின்ற பன்னிரண்டுகோடி யானைகளும் தேவசிரேஷ்டனாகிய பிரஹ்மதேவன் முன்னாள் செய்தயாகத்திலே பிறந்தவைகள். மேலு மழையும் — மேகமும் — சமுத்திரமும் - கங்காநதியும் - ஒருகாலத்தில் வறண்டுபோம். அப்படி வறண்டகாலத்திலும் இவைகளோ மதமொழியாது பெய்கின்றவைகளாகும். ஓ நண்பர்களே! இவ்விடத்திலே கோபவெறியாறியும், உயிரொழிந்தும் உதிரமெல்லாம் வடிந்துபோயும், ஓயாமல் மதத்தைப் பொழிந்துகொண் டிருக்கின்ற பதினான்கு கோடியானைகளும், மேகவாகனனாகிய இந்திரனுடைய திசையிலுள்ள ஐராவதத்தின் பரம்பரையைச் சார்ந்தவைகளாகும்.

ஓ கிஷ்கிந்தாநகரவாசிகளே! இந்தவிடத்தே பிராணனீங்கிக்கிடக்கின்ற பத்மமென்னும்கணக்குள்ள யானைகள் தம்முடையதேகபாரத்தைச் சுமக்கமாட்டாமல் பூமிசாய்ந்துபோவதாயிருந்தால் அந்தப்பூமியை அநாயாசமாகத் தனித்தனிச்சுமக்கவல்லவைகள். மற்றயானைகளைப்போல இமைகொட்ட மாட்டாது. சார்வபௌமமென்னும் யானையின்வமிசத்திற் பிறந்தவைகளாகும். பிரேதமாய்க்கிடக்கின்ற இந்தஆயிரகோடியானைகளும் முன்னாலே இந்திரன் இராவணனுக்குக்கப்பங்கட்டினவைகள். கணக்கில்லாமல் இறந்துகிடக்கின்ற இவ்வானைகளெல்லா நிருதியென்பவ னிலங்காதிபதிக்குத் திறைகொடுத்தவைகளாகும். கொலையுண்டுகிடக்கின்ற இந்தப் பத்துலக்ஷம் குதிரைகளும் க்ஷீரசாகரத்திலே அமிர்தோதயகாலத்தில் அதனோடு சனித்தவைகள். தசக்கிரீவன் தன்னோடு பகைகொண்ட வருணராஜனைச் செயம்பெற்று அபகரித்தவைகளாகும். சின்னபின்னப்பட்டுக் கிடக்கின்ற இந்தப் பத்துலட்சங் குதிரைகள் பிரதாபலங்கேஸ்வரனுக்குத் தோற்றுக் குபேரனோடிப்போனபோது விட்டுவிட்டவைகளாகும். பத்மமென்னும் கணக்குள்ளனவாய் மடிந்துகிடக்கின்ற இந்தக் குதிரைகளோ? வித்தியாதரராஜனை இராவணன் ஜெயங்கொண்டு பிடித்து வந்தவைகளாகும். என்று சொல்லிக்கொண்டு வந்தார்.

வானரசைநியங்கள் மீண்டு இராமபிரானிடம் வந்திருத்தல்.

கவி.

என்றுகாணினுங் காட்டினுமீதிறைக், குன்றுகாணினுங் கோளிலதாதலான்
நின்றுகாணுது நேமியினானுழைச், சென்றுகாண்டுமென் றேகினர்செம்மையோர்.

ஆரியற்றொழு தாங்கவன்பாங்கரும், போரியற்கை நினைந்தெழும்பொம்மலார்
பேருயிர்ப்பொ டிருந்தனர்பின்புறம், காரியத்தினிலைமை கழறுவாம்.

இப்படிச் சொல்லிக்கொண்டுவந்த இராவண சகோதரரை வானரோர்கள் பார்த்து, ஐயா விபீஷணாழ்வானே! நீர்காட்டிக்கொண்டே வரவும், நாங்கள் பார்த்துக்கொண்டே வரவும், இன்னும் ஆயிரத்திலொருகூறு முடியாவில்

லையே: ஆகையால் இன்னொருசமயம் நீர்காட்ட நாங்கள்பார்க்கிறோம். நம்முடைய சுவாமியினிடமே போய்ச்சேருவோம். என்று தங்களுக்குள் பேசிக்கொண்டு சமஸ்த அண்டங்களுக்கும் அவற்றுள் வசிக்கின்ற பிரமேந்திராதி சகலசேதனர்களுக்கும் தானே நியமனகர்த்தா வென்பதற்குக் குறியாகத் திருக்கரத்தில் சுதரிசனாழ்வானைத் தாங்கியருளிய ஸ்ரீராமபிரானிடமே போய்ச் சேர்ந்து, அவருடைய சரணாரவிந்தங்களில் தெண்டன் சமர்ப்பித்தெழுந்து பக்கங்களிலே உட்கார்ந்துகொண்டு, தாம்பார்த்துவந்த எண்ணத்தொலையாமல் மடிந்துகிடக்கிற இரதகஜதுரகங்களையும் இராக்ஷசர்களையு நினைப்பார்கள். அவ்வளவு சேனைகளையும் இரண்டுமூன்று நாழிகைக்குள்ளாகக் கொலை செய்த அதிபராக்கிரம முடையனவாய் நீண்டுபருத்துயர்ந்த தோள்களை உற்றுப்பார்ப்பார்கள். அப்படிப்பார்த்து மிகுந்த ஆச்சரியமடைந்து பெருமூச்செறிந்து ஆநந்த சமுத்திரத்தில் மூழ்குவார்கள். இஃதிப்படியிருக்க இனிநடந்த காரியங்களை மேற்சொல்லுவோம்.

வானரர் களங்காண்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

முப்பத்து மூன்றவது,

இராவணன் களங்காண்படலம்.

இப்படலத்தில் இலட்சுமணரை வெற்றிகொண்டு இலங்கையிற் சென்று யாவரோடும் சந்தோஷமாயிருக்கு மிராவணன் தானனுப்பிய மூலபல சேனையின் மடிவையும் சஞ்சீவியாற் சோகந்தீர்ந்தெழுந்த இலட்சுமணராதியர் சந்தோஷத்தையுந் தூதர்களாலறிந்தயர்ந்து உடனே கோபுரத்தின் மேலேறிக்கண்டு மகாகோபத்தோடு மீளுதலும் சொல்லப்படுகின்றது.

இலட்சுமணரை வெற்றிகொண்டு இலங்கையிற் சென்ற இராவணன் யாவரோடும் சந்தோஷங் கொண்டாடல்.

கவி.

அலக்கணெய்தி யமரரழிந்திட, உலக்கவானர வீரரையோட்டியவ்
விலக்குவன்றனை வீட்டியிராவணன், துலக்கமெய்தினன் றேமில்களிப்பினே.

இவ்வண்ணம் வானரவர்க்கங்களெல்லாம் ஸ்ரீராமரைச்சேவித்து சந்தோஷமாயிருந்தார்கள். இஃதிப்படியிருக்க தேவர்களெல்லாந் துக்கசமுத்திரத்தில்மூழ்கிவருந்தும்படியாக வானரர்களையெல்லாந் துரத்தி, இலட்சுமணப்பெருமானைத்தனதுவேலினால் ஜெயஞ்செய்து தனதுஇலங்காபுரியை யடைந்து சிம்மாதனருடனாகிச்சந்தோஷத்தோடுவிளங்கியஇராவணன்யாதுசெய்தனனெனில், யுத்தத்தில் அயர்ந்துவந்தவர்களுக்கும்—உள்ளன்போடு தன்னை உசாவவந்தவர்

களுக்கும் - தன்மாளிகையில் உண்ணத்தகுந்த போசனபதார்த்தங்களை இட்டு விருந்துசெய்ய வேண்டுமென்று விரும்பி, சுவர்க்கலோகவாசிகள் வரக்கடவர்களென்று ஆக்கியாபித்தான். உடனே தூதுவர்களோடிப்போய்ச் சொல்லக்கேட்ட தேவர்களும் தானவர்களும் ஓடிவந்து தன் சமுகத்தில் நிற்க அவர்களை இராவணன்பார்த்து, ஓதேவதானவர்களே! இந்திரசித்து உங்களரசனை வெற்றிகொண்ட அந்தநாளில் எப்படி பயத்தோடும் பக்தியோடும் போகங்களை எங்களுக்கு அமைத்துவைத்தீர்களோ? அப்படியே இன்றுமிங்கே அமைக்கவேண்டும். ஏதேனும் குற்றப்பட்டால் உங்கள்தேகத்தில் உயிர்நிலையாதென்பதை அறிவீர்களல்லவா. என்று வெகு உறுதியாகக் கட்டளையிட்டான். உடனே யாதொரு குற்றமுமில்லாத நல்ல மதுவகைகளும், மாமிசவகைகளும், மற்ற அன்னபானாதிகளும், நல்ல ஆடைகளும், சந்தனங்களும், தரிப்பதற்கு யோக்கியமான மலர்வகைகளும், வாசனையூட்டிய ஜலவர்க்கங்களும், மிருதுவாகிய சயனசாமக்கிரியைகளும், மாளிகைக்கு உள்ளும் புறத்தும் வந்து நிறைந்தன.

அக்கால் தேவலோகஸ்திரீகளாகிய அரம்பை மேநகை முதலானவர்கள் வந்து இராக்ஷசராஜர்கள் முதல் அடிமைத் தொழிலாளிகள் வரையும் வந்துள்ள யாவர்க்கும் வாசனைத்தைலமிட்டு மணமுள்ள கலவைச்சந்தன அரைப்புகளால் மெல்லெனத்தேய்த்து, வாசனையூட்டிய நீரால் ஸ்நானஞ்செய்வித்து, நல்ல போசனபதார்த்தங்களை யூட்டுவார்கள். மற்ற தேவதாஸ்திரீகளிற் சிலர் இசைப்பாட்டுகளைப் பாடுவார்கள். சிலர் அப்பாட்டின் பொருளுக்கிசைய அபிநயங்காட்டி நடனஞ்செய்வார்கள். வேண்டுமென்று விரும்பின அரக்கர்களைச் சிலர் அன்புபெருகச் சயனஸ்தலங்களில் ஆலிங்கனஞ் செய்வார்கள். இப்படி முன்செய்த நல்வினைப்பயனால் சத்கிருத்தியவணிகனுக்கு முதற்பணங்குறையாமல் அதிகலாபம் வந்தடைவதுபோலத் தான் முன்னேசெய்த தபோபலத்திலுண்டாகிய எல்லாச் சுகங்களையும் எல்லாரும் போதுமென்றமட்டி லனுபவித்துக்கொண் டிருப்பதை இராவணன் கண்டு குதூகலமாயிருந்தனன்.

மூலபலசேனையின் மடிவையும் இலட்சுமணரதியர் சந்தோஷத்தையும் தூதர்களோடிவந்து இராவணனுக் கறிவித்தல்.

கவி.

இன்னதன்மை யமைந்தவிராக்கதர், மன்னன்மாடுவந் தெய்திவணங்கினர்
அன்னசேனை களப்பட்டவாறெலாம், துன்னுதூதர் செவியிடைச்சொல்லுவார்.

இவ்வண்ணஞ் சகல சம்பிரமத்துடன் சந்தோஷமா யிருக்கின்ற இராட்சசகுல நாயகனாகிய இராவணனுக்குச் சிலதூதர்க ளோடிவந்து நமஸ்காரம் பண்ணி அவன்காதோடு வாய்வைத்து, மூலபலசைநிய மடிந்த வரலாற்றை யெல்லாம் தங்கள் உடல்நடுங்கி நாவுலர்ந்து சுவாசமொடுங்கி, இருதயநிலை

குலைந்து கண்களருகியழுது, உள்ளே ஓடுகின்ற சொற்களைப் பலாத்காரமாக வெளிப்படுத்திச் சொல்லுவார்கள்.

ஐயா பிரதாபலங்கேஸ்வரா! ஓ தேவகுலத்தை நாசஞ்செய்த சௌரியவானே! தற்காலத்திலே விருந்துண்ணுகிற இராக்ஷசவீரர்கள்தான் உயிர்பிழைத்திருக்கிறவர்கள். நீர் ஆக்கியாபித்தபடியே போன ஆயிரவெள்ள மிராக்ஷசசேனைகள் உயுத்தகளத்துக்குப் புறத்திலேபோய் நின்ற இரண்டுமூன்று நாழிகைக்குள்ளாக இராமனென்பவன் தன் ஒருவில்லாலேயே அவ்வளவு சேனைகளையும் சின்னபின்னப்படுத்திக் கொன்றான். இப்போ தும்முடைய பராக்கிரமத்தாலே தேவர்களைக்கொண்டு இராக்ஷசர்களுக்குப் பிரபலகீர்த்தியைத் தரத்தக்க விருந்தினை நான்செய்வேனென்று நினைத்துச் செய்கிறீர். இது சந்தோஷங்கொண்டாடத் தக்கதன்று. உமது குலத்தார்க்கெல்லாம் இந்தவிருந்தையே உத்தரகிரியையிற் செய்யும் அன்னபலியாகப் பாவித்துச் செய்யக் கடவீர். சப்ததீவுகளிலும் - நானுவிதபர்வதங்களிலும் - வனங்களிலும் பாதாளமுதலிய இடங்களிலும் வசித்துவந்த இராக்ஷசர்களெல்லாம், ஸ்ரீராமனுடைய அம்புக்கு இரையாய்மடிந்து போய்விட்டபடியாலே இந்தலங்கையில் வசிக்கின்ற சிலராக்ஷசர்கள் தாம் உயிரோடிருக்கின்றவர்கள். உலகத்தில் வேறே இராட்சசப் பூண்டென்பதே கிடையாதென்றார்கள்.

அப்போது மற்றவர்கள்செய்து பெறக்கூடாத விருந்துசெய்து அந்தச் சந்தோஷத்தில் மூழ்கியிருந்த இராவணன் தூதுவர்கள் சொல்லிக்கொண்டு வந்த செய்திகளையெல்லாம் கேட்டமாத்திரத்தில், அவனுக்குண்டாகிய துடிப்பும் - கோபமும் - அவமானமும் - தன்னெஞ்சைப் பிளந்தன. வேண்டுமென்று செவந்த சாயத்தை யூட்டினாற்போல விளங்குகின்ற செவந்தகண்களில் தீப்பொறி பறந்தது. பெருமூச்சு அதிகரித்தது. அக்காலவன் சித்தப்பிரமையடைந்து எழுதிவைத்த சித்திரத்தைப்போல ஒடுங்கி அசைவற்றிருந்துவிட்டான். அப்படி சற்றேயிருந்தபின் அந்தராவணன் தன்னைத்தானே திடம்பண்ணிக்கொண்டு, அடா தூதர்களே! படையெடுத்துப்போன ராக்ஷசவீரர்கள் திரிலோகபயங்கரனான என்னைப்பார்க்கிலும் பலவந்தர்கள். எப்படிப்பட்ட யுத்தத்திலும் தோற்றுச் சாகமாட்டாதவர்கள். அவர்களை இத்தனைபேரென்று புத்தியால் அனுமானித்துக் கணக்கிடவு முடியாது. சமுத்திரமணல் போன்ற பெருந்தொகையுள்ளவர்கள். இத்தன்மையான ராக்ஷசர்கள் செயம்பெற்றார்களென்று சொன்னீர்களில்லை. செயம்பெற்றார்களென்னுமற் போனாலும் அபசயப்பட்டு ஓடிப்போனார்களென்றாவது, உயுத்தத்துக்குப் போகப் பயந்து தங்கள்தங்க ளிருப்பிடமேபோய்ச் சேர்ந்தார்களென்றாவது சொல்லாமல்; இராமனென்னும் ஏகமனுஷியனால் இறந்தார்களென்று சொன்ன இந்தச்செய்தி உண்மைதானோ? பொய்சொன்னீர்கள்போலத் தோன்றுகிறதென்றான்.

இவ்வாறு பாபிஷ்டனாகிய இராவணன் சொன்னதைச் சமீபத்திலிருந்து கேட்டுக்கொண்டிருந்த மாலியவான் அவனைப்பார்த்து, என்னப்பனே! இந்த மூலபலத்தை அழித்ததென்பது ஸ்ரீராமனுக்குரிய செய்கையாகுமோ? நாம் அனுப்பிய தூதர்கள் நம்மிடத்திலே பொய்யையும் சொல்லுவார்களோ? அந்த ஸ்ரீராமன் சமஸ்தலோகங்களையும் அழிக்கவேண்டினால் எவ்வளவோ காலம் வேண்டுமோ? ஓரிமைப்பொழுதுக்குள்ளே அழித்துவிடுவா னல்லவா? அவனொருவனாயிருந்து இவ்வளவு இராட்சசப் பெருங்கூட்டத்தை எப்படி யழிக்கக்கூடுமென்பாயானால், விரிந்துகிடக்கிற சராசரங்களையெல்லாம் உகாந்தகாலத்தில் பார்வதியை இடப்பாகத்தில் வகித்த உருத்திரமூர்த்தி ஒருவரே யல்லவா தமது சங்கல்பத்தால் படுசூரணப்படுத்துகிறார். அவரமிசங்கொண்டு உயுத்தகளத்திற் புகுந்த இராமனுக்கு ஈதொருபெரிதோ? இஃதிருக்கட்டும்: என்றுகூறிப் பின்னுஞ் சொல்லுகிறான்.

அப்பா இராவணா! முன்னே நீ தேவர்களோடும் அசுரர்களோடும் அநேக யுத்தங்கள் செய்திருக்கிறாயல்லவா? அந்த யுத்தங்களுக்குள் எந்த யுத்தத்திலாவது உன்மேல் ஓரம்பும்தைத்ததுண்டா? இல்லையே: அப்படி நீசெய்த யுத்தத்தில் இந்திரனானவன் தன்னுடைய செல்வங்கள் யாவற்றையும் பற்றற உனக்கே ஒப்புவித்து விட்டதும் யதார்த்தந்தானே. இந்தப்பிரகார நீ செய்த யுத்தப்பிரதாபம் லோகங்களெல்லாம் வியாபித்தபின்பு எங்கேயாவது ஒரு யுத்தமுநேரிட்டதுண்டா? அதுவுமில்லையல்லவா? இப்போது நீ ஸ்ரீராமன் பக்கலிற்செய்த அபசாரத்தாலே உன்னுடைய பிரதாபமும், சகோதரர் புத்திரர் முதலிய பந்துஜனங்களும், சாதியர்களும், அழிந்துபோனார்கள். இதென்ன உனக்குத் தெரியாததோ? ஆகையால் இனியாகிலும் தீர்க்காலோசனை செய்து, ஜெகன்மாதாவாகிய சீதாபிராட்டியைக் கொண்டுபோய் விட்டுவிடும்படியான அறிவுக்கிசைந்த காரியத்தை நடத்தி, பிழைக்கும் வழியைப் பாரென்று சொன்னான். இப்படி சொன்னமாலியவானை இராவணன் அதிக கோபத்தோடு பார்த்து, நான் இலட்சுமணன்மேல் வேலைப்பிரயோகித்து அவனுடைய உயிரை யமனுக்கொப்புவித்தேன். அவனிறந்துபோன துன்பத்தால் அங்கிருந்த வானரப் படைத்தலைவர்களெல்லாம் அழுதுகொண் டிருக்கின்றார்கள். இது சங்கதியை எப்படியும் அந்தராமன் கேள்விப்படப்போகிறான். கேள்விப்பட்டபின்பு தேகவாழ்க்கையை வேண்டாமற் பிராணத்தியாகஞ் செய்துகொள்ளுவான். இதுபரியந்தம் அவர்களாலெனக்கு அநேகதுன்பங்கள் நேரிட்டபோதிலும், இப்போ தென்பக்ஷத்திலே யல்லவா செயமென்றுசொன்னான்.

இவ்வாறு மாலியவானைநோக்கி அதிபௌருஷத்தோடு இராவணன் சொல்லிக்கொண்டுவந்ததைக் கேட்டுக்கொண்டிருந்த தூதர்கள் மீட்டுமவனைவணங்கி, ஓ எங்களாண்டவனே! அதுசங்கதி உமக்குத்தெரியாதோ? இப்போது நீர் சொல்லியதெல்லாம் யதார்த்தமே: அநுமானென்பவன் கொண்டுவந்த

மருந்தால் உம்முடைய வேல்பட்டிறந்த இலட்சுமண னுயிர்பெற்றெழுந்தான். உடனே யங்கிருந்தயாவரும் ஓர் சிறுபொழுதும் தாமசஞ்செய்யாமற் சடுதியிலெழுந்து இலட்சுமணனோடு சென்று, செவந்த தாமரசமலர்போலுங் கண்களையுடைய தசரதராமனைச் சேர்ந்து ஒருவரையொருவர் ஆலிங்கனஞ் செய்துகொண்டு குதூஹலமாகவே யிருக்கின்றார்கள். எங்களுடைய சொல்லில் தேவரீருக்குச் சமுசயமிருந்தால் தம்முடைய நேத்திரங்களாலேயே பார்த்தறியலாம் என்று சொன்னார்கள்.

தூதுவர்களுடைய சொல்லால் இராவணன் கோபுரத்தின்மீதேறி மூலபலப் படுகளத்தைப் பார்த்தல்.

கவி.

தேறிலனுதலானே மறுகுறுசிந்தைதேற
ஏறினன்கனகத்தாரைக் கோபுரத்தும்பரெய்தி
ஊறினசேனைவெள்ள மூலந்தபேருண்மையெல்லாம்
காறினவுள்ளநோவக் கண்களாற்றெரியக்கண்டான்.

அவர்கள் சொன்ன சொல்லாலே இலட்சுமணரைச் செயம்பெற்றோமென்று ஆநந்தித்துக்கொண் டிருந்தமனம் அதிகதுக்கத்தோடு திடுக்கிட்டு, அந்தத் தூதர்களுடைய சொல்லினிடத்தில் நம்பிக்கை வையாமல் அதைக் கண்டறியும்படி சுவர்னமயமான கோபுரத்தின்மேலேறி, இலங்கையிலிருந்து சுரப்பெடுத்துப் பெருகிச் சென்றதுபோல அபரிமிதமாகச்சென்ற தனது சேனைவெள்ளம் அழிந்துகிடக்கின்ற யதார்த்தத்தை உள்ளநோகும்படி தனதிருபது கண்களாலும் பிரத்தியக்ஷமாகக் கண்டான்.

ஸ்ரீராமபாணத்தால் தலையறுப்புண்டு கிடக்கிற இராக்ஷசவீரர்களுடைய மனைவிமார்கள் கருங்குவளை மலரையும் - கருநெய்தற் பூவையும் - கருமையால்வென்ற தங்களுடைய கண்கள் தாரைதாரையாக நீர்சொரியும்படி அழுவதினால் செங்குமுத மலரைப் போலச் செக்கர்ச்செவேலெனத் தோன்ற, இனி நமக்கார் ஆதரவென்று கைகளைத் தலையின்மேல் வைத்துக்கொண்டு தங்கள் தங்கள் புருஷப்பிரேதங்க ளண்டையிருந்து கடலோசையு மடங்கும்படியாகக் கோவென்றலறி யழுகின்ற ஓசையைத் தனதிருபது செவியாலும் கேட்டான். அன்றியும் - அதிக துக்காக்கிரந்தனாய் அந்த யுத்தகளத்துக்கு மற்றொருபக்கத்தே திரும்பியபோது, அளவைக்கடந்த யானைப்பெரும் பிணங்களை ஏந்திக்கொண்டும் - நீராழமட்டும் பூமியை ஊடறுத்து மலைகளைப்புரட்டி அடித்துக்கொண்டும் - விரைந்தோடுகின்ற ரத்தநதிகளில், பேய்கள் புதுவெள்ளநீரில் ஸ்நானஞ்செய்வதுபோலக் குதித்துக்குதித்து மூழ்குகின்றமிகுதியைத் துக்கத்தால் தனதுகண்களிற் சுரக்கின்ற கண்ணீரைத் துடைத்துக்கொண்டு பார்த்தான். மேலும் — வேறொருபக்கத்தில் ஆகாயத்தை முட்டவுயர்ந்த வலியதோள்களையுடைய தங்கள் புருஷன் மார்பின்மேல் ஸ்ரீராமபாணம் பட்டுத் தொளைத்துச்சென்ற புண்களின்வழியாகப் பேய்கள்; கைகளை

நுழைத்துக் கொழுப்புள்ள புதுபிணங்களைத் தோண்டித்தோண்டி எடுத்துத் தின்பதைப் பார்த்த இராக்ஷசகுல ஸ்திரீகள், ஐயோ! நம்முடைய நாயகன் இறந்துகிடக்கப் பேய்கள் தாறுமாறாகப் பிளந்து மாமிசங்களைப் புசிக்கின்ற கோரத்தை இந்தக் கண்களிருந்தபடியா லல்லவோ பார்க்கிறோம்? இவை நமக்குவேண்டாம். என்று துணிவுகொண்டு அவர்களிற்சில அரக்கியர் அங்கே கிடக்கிற வாள்களாலும், சில அரக்கியர்கள் வாளெடுக்குநேரமும் சகியாமல் கூரியநகமுள்ள விரல்களினாலும், தங்கள் தங்கள் கண்களைப் பேர்த்தெடுக்கிறதைப் பார்த்தான்.

அன்றியும் - நம்முடைய நிமித்தம் இத்தனை ராக்ஷசர்கள் மடிந்தார்களே யென்கிற துக்கத்தாற் பெருகுகின்ற உதிரநீரோடு இவர்களையெல்லாம் ஒருமனுஷியன் கொன்றானல்லவா வென்கிற கோபத்தாற் பிறக்கும் தீப்பொறிகளைக் கொட்டுகின்ற கண்களையுடைய இராவணன், தமிழ்ப்பாஷை யாலாகிய பாசுரங்கள் எப்படிப்பலபலபொருள் கொடுக்குமோ அதைப்போல் ஸ்ரீகோதண்டத்தில் நின்றும் ஸ்ரீராமபாணங்கள் புறப்பட்டு நேராகச் சென்று அபாரமாகிய ராட்சசர்களை உருவிக்கொண்டு போனபடியால், அணியணியாக விழுந்துகிடக்கிறஅவ்விராட்சச வீரர்களுடைய உடலினின்றும் பெருகியோடுகின்ற இரத்தவெள்ளம் பாயவே முகத்துவாரத்தின் வழியே கடலானது உதிரநீரைக் கக்குவதுபோல இரத்த அலைகளை அதிவேகமாய் வீசிமோதுவதைக் கண்டான். பின்னும்-விண்ணுலகமும்பிளந்து நிலைமாறும்படி ஆரவாரிக்கின்ற வானரசமூஹத்தையும், அந்தப் போர்க்களமெங்கும் பிளந்து குழியும்படித் துள்ளித்துள்ளிக் குதித்தாடுகிற கவந்தக் கூட்டங்களையும், கண்களு நீலம்பூத்துப்போகும்படி இமையாமற்பார்க்கின்ற தேவர்களுடைய கொண்டாட்டத்தையும், வானரவீரர்களினதுஎக்களிப்பையும், இராட்சச கவந்தங்கள் துள்ளித்துள்ளிக்குதித்தாடுபவைகளையும் கண்டு; கோபுரத்தினின்றும் இறங்கி ஸ்ரீராமபிரானுடைய கோதண்டபராக்கிரமத்தையும், அவரை எதிர்த்து மூலபலசேனை நிர்மூலமானதையு மெண்ணினான்.

மூலபலப் படுகளத்தைப் பார்த்த இராவணன் மகாகோபத்தோடு கோபுரத்தினின்று மிறங்கி தனதரசாட்சி மண்டபம் சேர்தல்.

கவி.

நகைபிறக்கின்றவாய னாக்கொடுகடைவாய்நக்கிப்
புகைபிறக்கின்றமூக்கன் பொறிபிறக்கின்றகண்ணன்
மிகைபிறக்கின்றநெஞ்சன் வெஞ்சினத்தீமேல்வீங்கிச்
சிகைபிறக்கின்றசொல்ல னரசியலிருக்கைசேர்ந்தான்.

இவ்வணணம் தனது மூலபலசேனைகள் மாண்டதை நினைக்குந்தோறும் களகளவென்று சிரித்து, கடைவாய்களை நாவுகளால் நக்கிக்கொண்டும்—புகையெழும்படி பெருமூச்சு விட்டுக்கொண்டும், தீப்பொறிகள் பறக்கும்படி கண்

No. 66. இராவணனும் ஸ்ரீராமபிரானும் போர்க்கோலங்கொண்டு தெய்வீகத் தேரோர்தல்.



களைவிழித்துப் பார்த்துக்கொண்டும், பலபல விதமான நினைப்புடையவனாகி கோபாக்கினியானது மேன்மேலும் வளர்வதினால்குரூரமாகிய வார்த்தைகளைப் பேசிக்கொண்டு வந்து சிம்ஹாசனத்தின்மேல் உட்கார்ந்தான்.

களங்காண்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

முப்பத்துநான்காவது,

தேரேறு படலம்.

இப்படலத்தில் இராவணன் மாண்டவர்கள்போக மீதியாயுள்ள இராக்ஷசசேனைகளைப் போர்க்கோலங்கொண்டு வரும்படி திட்டஞ்செய்து தானும் போர்க்கோலங்கொண்டு தனது தெய்வீகத்தேரேறி விற்குணத்தொனிகாட்டிச் சமர்க்களத்துற்றதும், அதனையறிந்த விபீஷணாழ்வாரது வேண்டுகோளால் ஸ்ரீராமபிரான் உயுத்தகோலங்கொள்ள உடனே உருத்திரமூர்த்தியினாக்ஞையால் இந்திரன் தெய்வீகத்தேரனுப்ப அதிலவாரோகணித்ததும் சொல்லப்படுகின்றது.

இராவணன் போர்க்கோலங் கொள்ளுதற் சிறப்பு.

கவி.

பூதரமனையமேனிப் புகைநிறப்புருவச்செந்தீ
மோதரனென்னுநாமத் தொருவனைமுகத்துநோக்கி
எதுளதிறந்திலாத திலங்கையுளிருந்தசேனை
யாதையுமெழுகென்றானை மணிமுரசெற்றுகின்றான்.

இந்தப்பிரகாரமாகவந்து உட்கார்ந்த மகாதுன்மார்க்கனாகிய இராவணேஸ்வரனானவன். பர்வதாகாரமாகிய தேஹத்தையும் - மேலெழுகின்ற கரும்புகையையொத்த புருவங்களையும்-நெருப்புத்திரட்சிபோன்ற செவந்த கண்களையும்— மகோதர னென்னும் பெயரையுமுடையவனைப் பாபகருமங்களைச் செய்வதில் தனக்குச் சமானமில்லாதவனாகிய அவன் முகத்தைப்பார்த்து, உயுத்தத்துக்குப்போய் மாண்டவர்கள்போக மீதியாய் இந்தலங்கா நகரத்துக்குள்ளிருக்கு மிராக்ஷசசேனா வீரர்கள் யாவரையும் போர்க்கோலம்பூண்டு வரும்படி யானையின்மேல் பறைசாற்றுவிக்கக் கடவாயென்று சொன்னான். அவ்வாறே செய்விக்கிறேனென்று சொல்லிவந்த மகோதரனது கட்டளையாற் கொட்டிய போர்ப்பறை யோசையைக் கேட்டமாத்திரத்தில், ஆயிரத்து நானூறுகோடி இராக்ஷசவீரர்கள் இரதகஜதுரகங்களோடு சமுத்திரம் வற்றியதுபோல தன்னிடத்தில் இனி ஒருவீரனும் உண்டென்று சொல்லாதவண்ணம் இலங்காநகரம் பாழாய்ப்போகும்படிக் கூடினர்.

கவி.

ஈசனையிமையாமுக்க ணிறைதனையிருமைக்கேற்ற
பூசனைமுறையிற்செய்து திருமறைபுகன்றதானம்
வீசினனியற்றிமற்றும் வேட்டனவேட்டோர்க்கெல்லாம்
ஆசறநல்கியொல்காப் போர்த்தொழிற்கமைவதானான்.

உடனே பிரதாபலங்கேஸ்வரனானவன் தனதரண்மனையிற்போய் தன்குலதெய்வமாயும் உலோகேஸ்வரராயுமுள்ள பரமசிவனைச் சிவாகமத்திற்கூறிய முறைமைப்படி பஞ்சாக்ஷரத்தைச் செபித்து ஆத்மார்த்தமாகப் பூசித்தும், தன்னகரத்துள்ள சிவாலயங்களிற் பரார்த்தமாக அர்ச்சனை தீபதூபாதிகளெடுத்து ஆராதித்தும், நானாவித தானங்களைச்செய்தும், யார்யார் எதையெதை விரும்பினார்களோ அவரவர்களுக்கு அதையதை வெகுமதியாகக் கொடுத்தும், பின்வாங்காமற் செய்கின்ற யுத்தத்துக்கு வேண்டிய அலங்காரங்களைச்செய்து கொள்ளுவதானான்.

ஸ்ரீசர்வேசுரனாகிய நாராயணன் அண்டங்களைச் சிருட்டிப்பதற்குத்துணைக்காரணமாகிய பிரமதேவன் யாகத்திலே படைத்த கவசத்தை ஒருகாலத்தில் இந்திரனானவன் பூண்டுவந்து யுத்தஞ்செய்து தோற்றோடிப்போகவே அவனிடத்திலிருந்து அபகரித்த கவசத்தை இரண்டு பக்கங்களிலும் அருவிநீரொழுகுகின்ற நீலமலையினிடத்தில் அநேகசூரியர்கள் உதயஞ்செய்தாற்போலத் தோன்றும்படி தனதுமார்பிற் பூட்டியும், மந்தரகிரியைச் சூழக்கட்டிய வாசுகியென்னும் சர்ப்பத்தைப்போல விளங்கும்படி உடைவாளை வலது பக்கத்தில் தொங்கப் பொற்கச்சினால் அரையிலிறுகக்கட்டியும், கிரகங்கள் மகமேருவைச்சுற்றி அயர்ந்துபோய் அங்கங்கே கூட்டங்கூட்டமாக நின்றுவிட்டாற்போலப் பிரகாசிக்கின்ற கிம்புரிப்பூணமைந்த கடிசூத்திரத்தை அரைப்பட்டிகையின்மேல் இறுகப்பந்தித்தும், கருடபகவான் வேதங்களையே பக்கத்தில் விரித்துவைத்தாற்போற் பிரகாசிக்கிற தமது சிறைகளை விரித்ததையொத்த வெள்ளைப்பட்டாடை உடுத்தும், அதன்மேல் இருபக்கத்திலு நிலாவானது வழிந்து ஒழுகுவதுபோல முறுக்கிய கொய்சகத்தைத் தொங்கச்சாத்தியும், அது அசையாமலிருக்கும்படி பொன்னாற்செய்த சர்ப்பாபரணத்தாற்சூழ இறுக்கியும், கருமேகக்கூட்டத்தோடு அதனுள்ளிருக்கும் இடிகளைப் புறப்படுத்தி எடுத்து ஆபரணமாகச் செய்ததையொத்த உடைமணியென்னு மணிவடமணிந்தும், பொற்றாமரை மலர்போன்ற வடிவமும் குகைக்குளிருந்து சிம்ஹராஜன் கர்ச்சிப்பதுபோன்ற முழக்கமுமுள்ள சதங்கைமாலையைச் சாத்தியும், இடியோசையைக்கேட்ட பாம்புகளைப்போலத் திரிலோகவாசிகளும் பயந்தொளிக்கும்படி யொலிக்கின்ற பொன்னாற்செய்த வீரகண்டாமணியைத் தரித்தும், சரிந்து தொங்குவதுபோல ஒளியுள்ள செஞ்சாயந்தோய்த்த சீலையை அந்த வீரகண்டைக்கு வலப்பக்கத்தில் அணிந்தும், இருபதுகைகளுக்கு நடுவே பலதலைகளையுடைய ஆதிசேஷனது மிடறுகளில் விஷக்கறை தோன்றுவதுபோலத்தோன்றும்படி முன்கைத்தோற்கட்டு விரற்புட்டில்களுள் இவை

களைத்தரித்தும், பனைமரங்களைப்பொன்னிறமுள்ளநாகங்கள்தனித்தனியே சூழ்ந்து வளைந்தாற்போலக்கைகளில் இரத்தகங்கணங்களைப் பூண்டும், திருப்பாற்கடலைக்கடைந்த மந்தரகிரியைச்சூழக் கட்டிய சர்ப்பராஜனைப்போல விளங்கும்படி தோள்களிற் பாகுவலயங்களை அணிந்தும், சூரியன் தன்னோடு போர்செய்து இரத்தமயமாக உடல்குழம்பியோடச் செய்தாற்போலச் சிவந்த கிரணக்கூட்டங்களை வீசுகின்ற இரத்னகுண்டலங்களைக்காதுகளில் தொங்கவிட்டும், உதயகிரியிலுதித்த சூரியனுடைய கிரணசாலங்கள் கருங்கடலில் தவழ்வதுபோல் குங்குமமும்சந்தனமுமப்பிய எல்லாத்தோள்களிலும் குண்டலங்களினொளிவீசிக்கொண்டிருக்க அவற்றின் பக்கத்தே சந்திரர்களு நக்ஷத்திரங்களும் வரிசைவரிசையாக நின்று பிரகாசிப்பதுபோல முகங்களினிரண்டு பாரிசங்களிலும் பெருமுத்து மாலைகளைத் தொங்கவிடுத்தும் அலங்கரித்துக் கொண்டான்.

இலங்காதிபதியாகிய இராவணேஸ்வரனானவன் இவ்வாறு சர்வாபரணங்களையும் பூண்டவனாய் உதயகாலத்திற் பன்னிரண்டு சூரியர்களும் கிரணராசிகளை வீசுவதுபோல சாஜ்ஜொல்யமாய்ப் பிரகாசிக்கின்ற பத்துமுடிகளின் மேலும் தங்களுக்குநடுவே அநேகவிண்மீன்கள் விளங்கும்படி பலசந்திரர்கள் பிரகாசிப்பதுபோல முத்துக்குடைகள் மேலேகவிந்துநிற்கவும், கருக்கொண்ட நீலமேகங்கள் தவழ்கின்ற ஆகாயத்திற் பத்துப்பெருங் குடங்களிலிருந்து அவற்றின்மேற் செவ்வானத்தினொளிபடர அந்தக்குடங்களுக்கு இருபுறத்திலும் பிறைச்சந்திரர்கள் முளைத்தாற்போலப் பத்துமலைக்குகைகளுக்குச்சமானமாகிய பெரியகடைவாய்கள்தோறும் வளைந்த கோரதந்தங்கள் நிலாவீசவும், பத்துத்திசைகளிலும்பத்துயானைகளிருந்தால் அதன்முகங்களிலே கட்டிய பட்டங்களைப்போல ஒருராசியாயுள்ள பெருமுத்துகளினொளிநிரம்பிய வீரபட்டங்கள் நெற்றிகளின்மேல் விளங்கவும், ஊடலிலே இஷ்டநாயகிமார்களுடைய அழகிய சிலம்புசப்திக்கின்ற பாதங்களையல்லாமல் உலோகேஸ்வரர்களே யானபோதிலும் அவர்களுடைய பாதங்களை எக்காலத்திலும் வணங்கியறியாத தலைகளிலணிந்த பத்துக்கிரீடங்களும் தங்களொளியால் இந்தப்பூவுலகத்திலுள்ள சூரியனை ஒளிமழுங்கச்செய்து மற்றலோகங்களிலுள்ள அளவிடப்படாத இருளையெல்லாம் ஓட்டவும் மகாவிபவத்தோடு விளங்கினான். அன்றியும்சொர்க்கமத்திய பாதாளங்களிலுள்ள வீரர்கள்யாவரையும் வெற்றிகொண் டணிந்த வாகைமாலையையணிந்து, அதன்பக்கத்தில் மயில்போலுஞ்சாயலுள்ள யௌவனஸ்திரீகளுடைய கண்களும் வண்டுகளும் கலந்துமொய்த்துக்கொள்ளும்படி தும்பைமாலையைத்தரித்து, சகரர்களாலே தோண்டப்பட்ட சமுத்திரத்தையும் - தினங்களையும் - கடல்மணலையும் — இவைபோன்ற மற்றவற்றையும்— வேண்டியவைகளையெல்லாம் குறைவின்றித் தருகின்ற மந்திரங்களையும்—உவமைசொல்லக் கூடாதனவாகிய, ஐம்பெரும் பூதங்களும் அழியுங்காலத்திலுமழியாத தனது புகழைப்போல அளவுசெய்யமுடியாத அஸ்திரங்களால் நிறைத்த அம்பறாத்தூணியை முதுகிலிறுக்கிக் கட்டினான்.

இராவணனுடைய தெய்வீக விரதத்தின்சிறப்பு.

கவி.

வருகதேரெனவந்தது வையமும்வானு
முரகதேயமு மொருங்குடனேறினுமுச்சிச்
சொருகுபூவன்ன சுமையதுதுரகமில்றெனினு
நிருதர்கோமக னினைந்துழிச்செல்வதோர்நிணைப்பில்.

இப்படிப் போர்க்கோலங்கொண்ட இராவணனனவன் கட்டியக்காரனைப் பார்த்துத் தேர்வரக்கடவதென்று உத்தரவு செய்தான். அப்படி உத்தரவு செய்தமாத்திரத்தில் தனது தெய்வீகரதம்வந்து சேர்ந்தது. அந்தத் தெய்வீகரதத்தின் மகிமை யெப்படிப்பட்டதென்றால்:—

சுவர்க்கமத்திய பாதாளங்கள் ஒருமிக்கத் தன்மேல் ஏறினாலும் தலையில்முடித்துக்கொள்ளும் பூமாலையைப்போல அந்தத் திரிலோகங்களையும் சுமந்து செல்வதும், இராவணன் நினைத்தவிடங்களுக்குக் குதிரைகளைப் பூட்டாமற்படிக்கே ஓ ரிமைப்பொழுதுக்குள்ளே போகத்தக்க யந்திரங்களமைத்ததும், அமுதத்தோடு திருப்பாற்கடலிற் பிறந்த ஆயிரங்குதிரைகளையும் - சூரியபகவானுடைய தேரிற்கட்டிய பச்சைக்குதிரையின் வமிசத்திற் பிறந்த குதிரைகளையும் - அதிதேவதைகளாகிய அக்கினிபகவானுக்காகவும் வாயுபகவானுக்காகவும் கடல்நீரையும் வற்றச்செய்யத்தக்க வடவாமுகாக்கினியினும் பிரசண்டமாருதத்தினும் ஜனித்தகுதிரைகளையும் கட்டிய சிறப்புடையதும், பூமிமேல் ஓடுவதுபோலவே ஆகாயத்தின்மேலும் – சமுத்திரத்தின்மேலும் – நெருப்பின்மேலும் – மகோன்னதமான மேருமலையின்மேலும்- ஓடத்தக்கதும், அண்டமுகட்டின்கணுள்ள பிரமனுடைய உலகத்துக்கும் – மற்ற எந்தத்தேவர்களுடைய உலகங்களுக்கும் – ஓரிமைகொட்டுங் காலத்துக்குள்ளேபோய்த் திரும்பத்தக்கதும், எட்டுத்திக்குக் கஜங்களினுடைய மணிகளைப்போலக் கோஷிக்கும் ஆயிரகோடி மணிகளையுடையதும், அநேக சூரியமண்டலங்களை மேருமலையின்மேல் குவித்துவைத்தாற்போற் பிரகாசத்தையும், அண்டங்களையே விலைபெறத்தக்க மதிப்பையுமுடைய இரத்நங்களை முழுமையும்பதித்ததும், மகாரிஷிகள் தேவர்கள் முதலானவரும் அஷ்டாதிபதிகள் யாவரும் கொடுத்தவைகளும் – ஒருகாலத்தில் மேலேசொல்லியவர்களை யுத்தத்தில் தோற்று கைநழுவவிட்டவைகளும் - உயுத்தத்தில் அதிகுரூரமானவைகளும் - கடலின் மணலினுமிகுந்த தொகையுள்ளவைகளுமாகிய ஆயுதச்சுமைகளை யுடையதும், ஜெயத்துக்கு வாசஸ்தானமானதும், உபேந்திரராகிய பாலன கர்த்தாவினுடைய சக்கரமும் – நெற்றிக்கண்ணராகிய பரிபாக கர்த்தாவினுடைய மழுவாயுதமும் - சதுமுகனாகிய சிருஷ்டிகர்த்தாவினுடைய கமண்டலமும் - ஓர்கா லழிந்தாலும் தானழியாத வலிமையுடையதும், தேவர்களும் - முனிவர்களும் – சூட்சுமமாகப் பார்த்தும் அறியக்கூ

டாத நானாவித சித்திரத்தொழில் சத்தியத்தைப் போல என்றுமழியாமற் பலசெய்யப்பெற்றதும், ஆகிய மகாரதம்வந்து சேர்ந்தது.

இராவணன் இரதாரூடனாகி யுத்தகளஞ்சேல்லல்

கவி.

அனையதேரினை யருச்சனைவரன்முறை யாற்றி
எனையரென்பதோர் கணக்கிலாமறையவ ரெவர்க்கும்
வினையினன்னிதி முதலியவளப்பரும் வெறுக்கை
நினையினீண்டதோர் பெருங்கொடையருங் கடனேர்ந்தான்.

தனது எதிரில்வந்து நின்ற இரதத்தை பிரதாபலங்கேஸ்வரனாகிய இராவணன் அருச்சனை முதலானவைகளைக் கிரமப்படிசெய்து, இத்தனைபேரென்று அளவுசொல்லக்கூடாத பிராமணஜெனங்கள் யாவர்க்குந் தானமாகச் சொர்னங்களையும் ஆடையணி முதலியவைகளையும் கொடுத்து, இரதத்துக்கு நமஸ்காரஞ்செய்து அதன்மேல் ஏறினான். இப்படி ராவணன் தேரேறியதைக்கண்ட இந்திரன்முதலாகிய சமஸ்ததேவர்களும் இவன் ஸ்ரீராமபாணத்தால் நாசத்தை யடையப்போகிறானென்பதை முன்னே யறிந்தவர்களா யிருந்தாலும், இவனாற் பலமுறை தாங்கள் பட்டிருக்கிற யுத்தசிரமபீதியால் இனி எதாய்முடியுமோவென்று பயந்து சிதறியோடி புத்தியுங்கண்களு மழுங்கிப்போய் மனந்திகைத்து நின்று, ஒருவரையொருவர் பார்த்து நாம் செய்யவேண்டியது என்னவிருக்கிறதென்று பேசிக்கொண்டார்கள். ஐம்புலவாசைகளையு நிரசித்த மகாயோகிகளும் பயந்தார்கள். இம்மட்டுத்தானோ? சர்வலோகங்களும் அச்சத்தால் தங்கள்தங்கள் நிலைகலங்கியன. இப்படி சமஸ்தலோகவாசிகளும் பிராணபீதியடையும்படி இரதத்தின் மேலேறியபிரதாபலங்கேஸ்வரன் தன்னருகேநின்ற இராட்சசவீரர்களைநோக்கி ஓ என்னை இருமையிலும்பிரியாத நண்பர்களே! இன்று நான் யுத்தத்திற்பிரவேசிப்பதினால் ஸ்ரீராமன் எனக்குத்தோற்று தேகவியோக மடைந்தானேயானால், அதைக் கேள்விப்பட்டு இயற்கைமணம் அமைந்த அளகபாரத்தையுடைய சானகியானவள் தன்னுடைய தாமரசமலர்போன்ற கைகளால் வயிற்றைப்பிசைந்தும் - மோதியும் - சகிக்கமுடியாத கொடிய துக்கசாகரத்தில் மூழ்குவாள். அல்லது நான் தோற்று அந்தத் தசரதபுத்திரனால் மாள்வேனேயானால், அது சமாசாரத்தைக் கேள்விப்பட்டு மயனுடைய புத்திரியாகிய மண்டோதரியென்பவள் இரண்டுகைகளையுங் கொண்டு வயிற்றைப்பிசைந்து மோதிமோதி யறைந்து தீராத்துயரக்கடலிலே மூழ்குவாள். இந்த இரண்டு காரியங்களில் ஒன்றுமுடியாமல் வீணே நான் திரும்புவதில்லை. என்றுசொல்லி பலமுடிகளும் பலதலைகளும் பிரகாசிக்கின்ற காரணத்தாலும் - அளவுசெய்ய முடியாத பல ஆயுதங்கள் பலகைகளிலும் விளங்குகின்ற எதுவாலும் - சமுத்திரங்கள் பொறுக்கமாட்டாமற் பொங்கி ஆகாயத்தைமுட்ட அலைகளை வீசும்படி தம்முடைய திருவடியைப் பூமியில்வைத்து அளந்த திரிவிக்கிரம

மூர்த்தியைப்போலத் தோன்ற உயர்ந்து நிமிர்ந்து நின்று, ஆகாயமானது படீரென்று பிளந்து இருபிளவாகவும் — குலாசலங்கள் வெடிக்கவும் - புதுப் புண் வெடித்தாற்போலப் பூமிபாளமாகவும் — பசும்பொற்குடமானது ஆகாயத்திலிருந்து சுழலுவதுபோலச் சூரியன் தன்கதிமாறிச் சுழலவும் - சந்திரன் தன்னிலைகலங்கி அமுதத்துளிகள் சிந்தி வருத்தமுறவும் — தன்னுடைய தோள்களைக்கொட்டி ஆரவாரித்து, குரூரமாகிய யுத்த நமக்குச் சமீபித்ததென்னும் ஒப்பில்லாத பெருங்களிப்பால் மேருமலையும் வெடித்துச் சிந்தும்படி தன்வில்லைக் குணத்தொனி செய்தான்.

அந்தக் குணத்தொனியைக்கேட்ட தேவதாஸ்திரீகளும் — தானவஸ்திரீகளும் — தங்கள் நாயகன்மார்களுக்கு இன்றையதினம் சுராசுரகண்டனாகிய பாபிஷ்டனால் பிராணநாசம் உண்டாமோ என்னமோ வென்று திடுக்கிட்டு, ஸ்ரீமகாலட்சுமியைத் தியானித்து, அந்தச் சர்வலோகநாயகியினது சின்னமாகிய தங்கள்மாங்கலியத்தைத் தொட்டுப் பயந்தார்கள். இவ்வாறு குணத்தொனிபண்ணித் தேரோடுகிற அதிர்ச்சியால் சமுத்திரமானது பலசுழிகள் சுழித்துப்பொங்கவும், பலஉயிர்வர்க்கங்களு நடுக்கமடைந்து சிதறியோடவும், ஆதிசேடனானவன் பூமியைச்சுமப்பதை விட்டு தனதுகாந்திபொருந்திய ஆயிரமணித்தலைகளையும் பரப்பிமேலெழுந்து வந்ததைப்போன்றதேகத்தையுடையவனாகித் தேரைச் செலுத்திக்கொண்டுவந்த இராவணனானவன் தேவர்களும் - மூவர்களும் - அசுரர்களும் - மற்றத் திரிலோகத்திலுள்ள வீரர்கள் யாவரும் - இன்றைக்கு இந்தப்பாபிஷ்டன் யுத்தத்தை உத்தேசித்தபடியால் உலோகமெல்லா நாசமாய் விடுமேயென்று தங்கள்தங்கள் பிராணன்மேல் ஆசையுடையவர்களாய்ப் பீதியடையும்படி, வடவாமுகாக்கினிக்கு இரண்டுபங்கதிகமாகத் தீப்பொறிகளும் உதிரத்துளிகளும் சிந்தும்படி யுத்தகளஞ் சேர்ந்தான்.

இவ்வண்ணமாக யுத்தகளத்தில்வந்த இராவணனையும் அவன்சேனைகளையும் பார்த்து விபீஷணர் ஸ்ரீராமபிரான் சந்நிதியிற் சென்று சுவாமி! தேவகண்டனாகிய இராவணன் தனது சைநியங்களோடு இரதாரூடனாய் யுத்தகளம் புகுந்தனன். அதுகண்டு பயந்து வானரசைநியங்களெல்லாம் ஓடவாரம்பிக்கிறது. என்று விண்ணப்பஞ் செய்து நின்றனர். அப்போது வானரர்களெல்லாம் கைகளைச் சிரசின்மேல்தூக்கிக் குவித்து, ஓ சர்வதேவ தேவோத்தமா? ஓ ராட்சசகுலகாலா! ஓ சாதுசஜ்ஜனோத்தாரா! எங்களைக்காத்தருளாய். என்று சொல்லவந்தவர்கள் பயத்தால் நாவெழாமல் குழறிக்குழறிச் சொல்லிக்கொண்டு, நடக்கக் காலெழாமல் அங்கங்கே சுருண்டுவிழுந்து உளைத்துக்கூவுங் கூச்சல் அதிகரித்தது.

ஸ்ரீராமர் போர்க்கோலங் கொள்ளுதல்.

கவி.

தொழுங்கையொடுவாய்குழறி மெய்ம்முறைதுளங்க
விழுந்துகவிசேனையிடு பூசன்மிகவிண்ணோர்

அழுந்துபடபோலமளி துஞ்சியெழுமந்நாள்
எழுந்தபடியேகடி தெழுந்தனனிராமன்.

அம்மாத்திரத்தில் ஆதியிலே பிரமேந்திராதிசமஸ்த தேவர்களும் - முனிவர்களும் - இராட்சசர்களால் துன்பப்பட்டுக் கலங்கி முறையிட்டகாலத்தில் க்ஷீரசாகரத்தில் திருவனந்தாழ்வான்மேலிருந்து யோகநித்திரைநீங்கி எழுந்தாற்போலச் சடுதியிலெழுந்து, மத்தகஜம்போலக் காணப்படுகிற தாம் ஒப்பற்ற யமனுடைய விஷபாசக் கயிற்றையே கட்டினாற்போலப் பளபளவென்று மின்னுகின்ற வாளாயுதத்தைத் திருவிடையின் வலப்பாரிசத்திற் கட்டி, விபீஷணாழ்வானையும் வானரவீரர்களையும் பார்த்து, ஓ எனது மெய்ப்பத்தர்களே! கற்பின் பூங்கொடியாகிய சானகியினது துன்பத்துக்கும் - சுவர்க்கலோகவாசிகள் முதலிய சாதுஜனர்களுடைய துன்பக்கடலுக்கும் - இன்று முடிவு உண்டாகுமென்று திருவாய்மலர்ந்தருளித் தமது திருமேனியிற் கவசத்தினைத் தரித்தார்.

கவசத்தைப் பூட்டியபின் அதிகோபிஷ்டனாகிய நமனுடைய மடைப்பள்ளியைப்போல விளங்குகின்ற அழகியகைகளுக்கு விரற்புட்டில்களு முன்னங்கைத்தோல்களும் கட்டி, சமஸ்தபொருள்களையும் தன்னிடத் தடக்கிவைத்துக்கொண் டிருக்கும் பூமிபோல விளங்கி அளவுசெய்யமுடியாத நானாவித அஸ்திரங்களை வகித்த அம்பறாத்தூணியை முதுகில் இறுகக்கட்டி யுத்தசன்னத்தராயினர்.

அப்போது சுவாமியினுடைய யுத்தத்திறத்தைக் கண்டு சேவிக்கும்படி வந்திருந்த தேவர்களை உருத்திரமூர்த்திபார்த்து, ஓ அண்டர்களே! இராட்சசர்களுடைய சண்டை இன்றோடே முடிவாகின்றது. ஸ்ரீராமனே வெற்றியடையப்போகிறார். இதற்குச் சந்தேகமில்லை. இனிராக்ஷசவுபத்திரவ பயமென்பது யாருக்குங்கிடையாது. நீங்கள் நிர்ப்பயர்களாய் மணிகள்கட்டி வெற்றிச்சக்கரங்கள் பூட்டிப்பொன்னாலமைத்த இரதத்தை அந்த ஸ்ரீராமனுக்கு அனுப்புவீர்களென்று சொல்லி யருளினர். ஸ்ரீ உமாநாயகராகிய உருத்திரபகவான் சொல்லியதைக்கேட்ட தேவர்கள் இது செய்யத்தக்கதேயென்று சொல்லித்தங்கள் அரசனாகிய இந்திரனுக்குத் தெரிவித்தார்கள். அதுகேட்ட இந்திரன் ஒருக்ஷண காலத்துக்குள்ளே திரிலோகத்தையும் கிரமமாகச்சுற்றிக்கொண்டு வரத்தக்க ஒப்பில்லாத தேரைக்கொண்டு வாருங்களென்று உத்திரவுசெய்தான். உடனேதேவர்கள் குதூகலமாகச்சென்று இரதசாரதியாகிய மாதலியைப்பார்த்து, நமதிராஜனானவர் தேரையோட்டி வரச்சொன்னாரென்று சொல்லினார்கள்.

ஸ்ரீராமபிரானுக்குத் தேவேந்திரனு லனுப்பிய இரதத்தின்சிறப்பு.

கவி.

மாதலிகொணர்ந்தனன் மகோததிவளாவும்
பூதலமெழுந்துபடர் தன்மையபொலன்றேர்

சீதமதிமண்டிலமு மேலையளவுந்திண்
பாதமெனநின்றது படர்ந்ததுவிசும்பின்.

இவ்வண்ணந் தேவர்கள் கூறியவார்த்தையைக் கேட்ட மாதலியென்பவன் சமுத்திரஞ்சூழ்ந்த பூலோக மெழுந்துவருந் தன்மையையொத்த அழகு பெற்றதாய் சகலவலங்காரங்களு நிறைந்த இரதமான து குளிர்ந்த சந்திரமண்டிலமும் மற்ற மண்டிலங்களுந் தனக்குப் பாதமாக ககனமார்க்கத்தில் வந்தது. அந்தத் தேரின்மகிமை யெப்படிப்பட்டதெனில் ஏழு குலாசலங்களிலுமுள்ள பலத்தை யெடுத்துச்செய்த கொடிஞ்சும், பிரிதிவியின் முழுப்பலமுள்ள சக்கரத்திற்சேர்த்த இருசும், அஷ்டநாகங்களினாற் செய்த வடக்கயிறும், வருஷம் - அயனம் - இருது — மாதம் —பக்ஷம் - வாரம் — நாள் - என்று இதுவரையிலு நடந்த காலங்களிலும் இனிவருங் காலங்களினும் விசாலித்திருக்கின்ற தட்டும், நக்ஷத்திரங்களினாற்செய்த மணிமாலைகளும், திக்குகளினாலே யமைத்த பக்கச்சுவர்களும், மேகராசிகளால் இயற்றிய துவஜமும், அஞ்சுபூதங்களினுடைய சக்திகளெல்லாம் ஒன்றாய்த்திரண்டமைந்த பலமும், புற்பூண்டு முதல் விருக்ஷங்கள்வரையுமுள்ள தாபரங்களினாலமைத்த கொடிகளும், ஸ்ரீசர்வேசுரனானவர் சங்கந்தாங்கிய தமது திருக்கரத்தால் பாற்கடலைக்கடைந்த காலத்திலுண்டாகிய ஆரவாரமே தனதிடத் துண்டாகும் ஆரவாரமும், அவருடைய திருவுந்தியில்முளைத்த மூலதாமரை மலரின் மொட்டே தனக்குமொட்டும், ஐம்பெரும் பூதங்களையும் திருவுதரத்தில் வைத்து மறுபடியும் உமிழ்கின்ற அஷ்டகுண சம்பன்னனாகிய ஸ்ரீஹரி சயனிக்கின்ற சயனமாகிய ஆதிசேஷனையொத்த விசாலமுமுள்ளதா யந்தத்தெய்வீகத் திருத்தேரமைந்துள்ளது.

அப்படிப்பட்ட திருத்தேருக்குச் சதுர் வேதங்களாற் சொல்லப்பட்ட யாகங்களினாலும், ஏழுசமுத்திரங்களினாலும், ஏழுமலைகளினாலும், ஏழுலகங்களினாலும், ஐம்பூதங்களினாலும், மூன்றுதீயினாலும், பெருந்தவங்களினாலும், யாகத்திற் சொரிகின்ற அவிர்ப்பாகத்தினாலும், ஐந்து ஞானேந்திரியங்களினாலும், ஐந்துகருமேந்திரியங்களினாலும், ஐந்து சுடர்களினாலும், நாலுவேதங்களினாலும், மூன்று கரணங்களினாலும், பத்து வாயுக்களினாலும், இராப்பகலென்கின்ற இரண்டுபெரும் பொழுதினாலும், அஸ்வங்களி னுருவமாகச்செய்யப்பட்ட குதிரைகளைப்பூட்டி, சந்திரசூரியர் மண்டிலங்கள் அடித்தட்டில் நிற்கும்படி உயர்ந்த அந்தத் திருத்தேரை அம்மாதலியென்பவன் சமுத்திரஞ்சூழ்ந்த பூலோகத்தை நோக்கி ஆகாயமார்க்கமாக ஓட்டிவந்து தேவேந்திரனுக்கு முன்பாக அந்தரத்திலேயே நிறுத்தினான். அதைக்கண்ட தேவேந்திரன் இந்தத்தேரை இதோபூமியின்கண் யுத்தகளத்திலெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ புருஷோத்தமராகிய ஸ்ரீராமபிரானார்க்குச் செலுத்தக்கடவாயென்று மாதலிக்குக்கட்டளை யிட்டவுடனே அங்கிருந்த தேவர்களெல்லாம் அந்தத்தேருக்கு நமஸ்காரஞ்செய்து, ஓரதசிரேஷ்டமே! எங்கள் அரசனாகிய இந்திரனது கட்டளையால் ஸ்ரீராமச்சந்திரரிடத்திற் செல்லுகின்றாயன்றோ? நீ எங்களுக்கு

உபகாரார்த்தமாக ஜெயத்தையேதரக் கடவாயென்று கற்பகமலர்களை வாரிவாரி இறைத்தார்கள்.

அப்படி தேவர்கள்யாவரும்மலர்களை இறைக்காநிற்கையில் மாதலியானவன் இடதுகையிற் கடிவாளவடத்தைப்பிடித்து வலதுகையில்முட்கோல்கொண்டுநடத்த, அந்தரதமானது மனோவேகத்தினும் அதிவேகமாய் இருவினைகளுக்கும்விரோதியாய் நின்றமெய்ஞ்ஞானகோசரத்தின் விசையையடைந்துஆகாயத்தைஉருவி, தான்வருவதைக்கண்டு திரிலோகத்தார்களும் கைகளைக்கூப்பித் தண்டன் சமர்ப்பிக்கும் படியாக வந்து, அப்பிராகிருதனாகிய ஸ்ரீராமமூர்த்தியின்பக்கலிற் சேர்ந்தது. சத்துச்சித் தானந்தத்திருமேனியை மறைத்து லீலாமானுஷிய விக்கிரக ஸ்வரூபராய் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீரகுநந்தனர் அந்தத்தேரைக் கடாக்ஷித்து, அதிக சோதிர்மயமா யிருப்பதினால் இது சூரியனுடைய ரதமென்போமேயானால் ஒற்றைவண்டியில்லை. அல்லது யுகமுடிவில் தோன்றுகின்ற வடவாமுகாக்கினிச் சுடரென்போமேயானால் வெப்பத்தைக்காணோம். மேருமலை யென்போமேயானால் இவ்வளவு பெரிய உருவமுடையதல்ல. ஆகையாலிது திரிமூர்த்திகளும் ஏறியுலாவுகின்ற தெய்வவிமானந்தானோ? உயுத்தத்துக்கு ஆயத்தமாயிருக்கிற நம்மிடத்திலே இப்போதிதுவருவதற்கு என்னகாரணமென்று நமக்குள்ளே எண்ணி மாதலியைப்பார்த்து, யாருடைய கட்டளையால் இதைச்செலுத்திக்கொண்டு நீ என்பக்கலில் வந்தாயென்று திருவாய் மலர்ந்தருளினார். அப்படி அரசர்களுக் கரசனாகிய தசரதபுத்திரர் கேட்டதற்கு அஸ்வங்களி னுள்ளத்தை அறியவல்ல மாதலியானவன் சுவாமியைப்பார்த்துச் சொல்லுகிறான்.

ஸ்ரீகாகுஸ்தகுல நாயகரே! இந்தரதம் திரிபுரசம்ஹார கர்த்தாவாகிய சிவமூர்த்தியும் சதுர்முகப்பிரஹம்மாவும் பூர்வகாலத்தில் ஆயிரஞ் சூரியர்களுக்கு உவமையான ஒளியுள்ளதாகச் சிருட்டிக்கப்பட்டது. ஊழிகாலத்தில் சமஸ்தவஸ்துக்களும் அழிந்தாலும் இஃதழியாம லிருப்பது. ஓ எங்கள்நாயகனே! இந்திரனுடைய ஏவுதலாலே தேவரீர் ஆரோகணித்தருளுவீரென்று ஓட்டிக்கொண்டு வந்தேன். இந்தப் பிரம்மாண்டம்போன்ற அநேகவண்டங்களை இதன்மேலேற்றி அடுக்கிவைத்து நடத்தினாலும் சிறிதும் சலனமில்லாமற் சுமந்துகொண்டு வேண்டிய விடத்துக்குச் செல்லும். குறுகவேண்டிய விடத்திற் குறுகிநிற்கும். உயரவேண்டியபோது அதியுன்னதமாக உயரும். இக்காரியங்களால் சமஸ்த அண்டங்களையும் தனக்குள்ளே பொருந்த வைத்துக்கொள்ளுகின்ற ஸ்ரீ சர்வேசுரனுடைய திருவயிற்றை ஒப்பாகின்றது. தேவரீர் ஸ்ரீஹஸ்தத்தாற் பிரயோகிக்கப்பட்ட பாணத்தைப் போல அதிகவேகமாய்ப் போகத்தக்கது. பார்வையின் வேகத்தையும், மனோவேகத்தையும், சண்டமாருதத்தின் வேகத்தையும் கண்டால்; அம்மூன்றையும் தன்னுடைய வேகத்துக்குள்ளே அடக்கிக் கொள்ளும். வேகத்திலே ஞானமும் பின்னிடும்படி அதற்குமுன்னே செல்லுமானால், பூமியிலும் ஆகாயத்திலும் செல்லுமென்

பது இதற்கொரு விசேடமல்ல. நீரின்மேலும் தீயின்மேலும் பூமியாகாசங்களிற் செல்வதுபோலச்செல்லும். சப்தசமுத்திரங்களையும், பதினாலுலோகங்களையும், ஒருகணப்பொழுதுக்குள்ளாக இரண்டுமுறை சுற்றிவரும். இடையே எங்கேனுநிற்குமென்றாலோ நிற்பதல்ல.

ஸ்ரீகோதண்டத்தைக் கையிலேந்தி உலகங்களைக் காக்கவந்த எம்பெருமானே! இப்படிப்பட்ட திறமுள்ளதேர் இதுவல்லாமல் வேறுமுண்டோ? ஸ்ரீ உருத்திரமூர்த்தியினுக்ஞையால் பிரமனேமுதலிய தேவர்களு முனிவர்களு நம்முடைய சுவாமிக்குத் தேரைவிரைவாக அனுப்பென்று இந்திரனுக்குச் சொல்ல, அவ்விந்திரனக்கட்டளையைச் சிரமேலேற்றுத் தேவரீர் ஆரோகணித்தருளும்படி அனுப்பினானென்று சொன்னான். அதுகேட்ட நம்முடைய ஐயனாகிய ஸ்ரீராமபிரானானவர் இராக்ஷசர்கள் ஏதாவதுமாயையாற் கற்பித்து அனுப்பியதோவென்று யதார்த்தமாய்ச் சந்தேகித்தவரைப்போலக் காணப்பட்டார். அப்படியவர் காணப்பட்ட மாத்திரத்தில் அந்தரத்திற் பூண்டுள்ள குதிரைகள் ஸ்ரீராமபிரானை நோக்கி, ஓ வேதங்களிற் பிரதிபாத்திய மூலகாரணவஸ்துவே! இந்தமாதலி இப்போது சொல்லியவையெல்லாம் சத்தியமே: ஒன்றுப்பொய்யல்ல வென்று வேதமொழிகளைக் கொண்டு சொல்லியன. அப்போது தசரதநந்தனர் குதிரைகளினுடைய வேதமொழியால் இனிச் சந்தேகமில்லையெனத் தேறினவரைப்போலத் தோன்றி மாதலியைப்பார்த்து நீயாரென்று வினவ, அவன்கைகளைக் குவித்து நின்று, ஸ்ரீரவிகுலநாயகரே! நானே இந்த மகத்தாகிய ரதத்தைச் செலுத்துகின்ற சாரதி. என்பேர் மாதலியென் றழைப்பார்களென்று உண்மை கூறினான்.

அப்படி யவன்சொல்லியதன்மேல் எம்பெருமானானவர் சமீபத்திலிருந்த சுமித்திராதேவி இளஞ்சிங்கமாகிய இலட்சுமணரையும் சிறியதிருவடிகளாகிய அனுமானையும் கடாக்ஷித்து, நீங்கள் இதைப்பற்றி ஆலோசிப்ப தென்னவென்று கேட்டருளினார். அவர்களிருவரும் தண்டன்சமர்ப்பித்து வாயைப் பொத்திக்கொண்டு வணங்கி நின்று, ஓ எங்களாண்டவனே! நிச்சயமாக இந்திரனுடைய ரதமென்றே தோன்றுகிறதென்று சொன்னார்கள். அதுகேட்ட ஸ்ரீராமபத்திரர் இஃதுள்ள தேயென்று தெளிந்தனர்.

ஸ்ரீராமபிரான் இரதாரூடராகல்.

கவி.

விழுந்துபுரடவினை நிலத்தொடுவெதும்பத்
தொழுந்தகையநல்வினை களிப்பினொடுதுள்ள
வழுந்துயரத்தமர ரந்தணர்சைமுந்துற்
றெழுந்துதலையேறவினி தேறினனிராமன்.

தாம் ஸ்ரீகோதண்டத்தைத் திருக்கரத்தில் தாங்கியது முதல் தனதுவிர்த்தி நாசமாய்க் கீழ்விழுந்து புரண்டு துக்கித்துக் கொண் டிருக்கின்ற பாபவர்க்கங்களெல்லா நமக்கு மாதுருஸ்தானமாகிய இராவணனும் — செவிலி

№ 67. ஸ்ரீராமர் இராவணனைச்சங்கரித்து அவன், சிலவடுவைக் கண்டுதமது ஜெயத்தை விபீஷணர்சமாதானங் கூறல்.



(உயுத்தகாண்டம்.)

இராவணன்வதைப்படலம்.

த்தாயர்கள்போல நம்மை வளர்த்துவந்த இராக்ஷசப் பெருங்கூட்டத்தாரும்-இன்றேடே பற்றற அழிகின்றார்களல்லவா வென்று உள்ள நடுங்கிவாடவும், பரம வைதீகமார்க்கத்தார்யாவரும் சிறப்பாகக்கொள்ளப்பட்ட தருமவர்க்கங்க ளெல்லாம் களிப்போடெழுந்து துள்ளவும், அரக்கர்செய்யும் உபத்திரவத்தால் துக்கித்துக்கொண்டிருந்த தேவர்களும் - முனிவர்களும் — தங்கள் கைகளைச் சிரசின்மேற்கூப்பி நமஸ்கரிக்கவும், அந்த ஸ்ரீகோதண்ட தீக்ஷா குருவானவர் அந்த ரதத்தின்மேல் ஆரோகணித் தருளினர்.

தேரேறுபடலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

முப்பத்தைந்தாவது,

இராவணன் வதைப்படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமரும் இராவணனும் இரதாரூடர்களாய் ஒருவரையொருவர் நெருங்கினபோது இலக்குமணரை நோக்கிச் சென்ற மகோதரனை இராமச்சந்திரர் மடிக்க, அக்கால் பலதுற்சகுனக் காட்சியனாய் இராவணனெதிர்க்கண்ட ஸ்ரீராமருமவனும் உயுத்தப் பிரயத்தினர்களாய்ப் பராக்கிரமித்து நிற்க, அப்போ திருதிறவருக்கும் சமஸ்தலோகங்களுந் தத்தளிக்கும்படி கடுஞ்சமர்மூள, உடனேஇராவணன் தனது தேரோடு அந்தரத்திற் சென்று போரிட, அக்காலிருவரும் சிவாஸ்திர முதலிய பல அஸ்திரங்களை மாறிமாறிப் பிரயோகிக்க, அதிலிளைத்த இராவணன் பின்மாயாஸ்திரத்தை விடுக்கவும் ஸ்ரீராமர் அதைஞானாஸ்திரத்தால் அதமாக்க, அதுகண்ட இராவணன் சூலத்தைவிடுத் திளைத்து நாகாஸ்திரத்தைப் பிரயோகிக்க அதையும் ஸ்ரீராமர் கருடாஸ்திரத்தாற் கண்டிக்க, அப்பால் ஸ்ரீராமர் இராவணனுடைய தலைகளையறுத்தெறியுந்தோறு மவைகள் முன்போலவே முளைப்பதுகண்டு தமது பாணங்களால் அவன் சரீரத்தைத் துளைத்து மூர்ச்சிக்கச்செய்ய, அதுகண் டிரதத்தைத்திருப்பிய அவன்சாரதியின் சருத்தறிந்து விரைந்த மாதலியின் வேண்டுகோளை ஸ்ரீராமர்மறுத் தறிவுறுத்தும்போது இராவணனெழுந்து தன்சாரதியைச் சினந்து தணிந்து மீட்டுந்தேர்விடச்செய்ய, அதுகண்ட ஸ்ரீராமர் அவன்பிடிக்கும் விற்களையும் தொடுக்குமாயுதங்களையுஞ் சிதைத்து முடிவில் பிரமாஸ்திரப் பிரயோகஞ்செய்து அவனைமாய்த்ததும், அப்படி மாய்க்க அவன்மாய்ந்தும் அவனது சௌரியவீரிய பராக்கிரமமாத்திரம் அவன்சரீரவுறுப்புக்களில் மாயாது பிரகாசித்துக்கிடத்தலை ஸ்ரீராமர் தமது தெய்வீகத்தேர்க்கு விடைகொடுத்துவந்து கண்டு மிகவும் ஆச்சரியசித்தராகித் தாமடைந்த வெற்றியைவெறுத்து நின்றபோது அவனப்பராக்கிரமம்பெற்ற வகைகூறித் தம்மைத்தேற்றிய விபீஷணரை அவனுக்குச் சரமக்கிரியை நடத்தும்படி கட்டளையிட்டதும், அக்கட்டளையைச் சிரமேற்ற அவ்விபீஷணர்

இறந்துகிடக்குந் தன்தமயன்மேல் விழுந்து பிரலாபித்தழுதலைச் சாம்ப வந்தர் தேற்றியதும், அதனற்றேறிய விபீஷணர்போய் பலஸ்திரீச மூகத்தோடும் சமர்க்களம்வந்து இராவணன்மேல்விழுந்து பிரலாபித்த ழுத மண்டோதரி அவனோடனுமரண மாதலைக்கண்டு அவ்விருவர்க்கும் கும்பகர்ணனுதிய மற்றப் பந்துவர்க்கத்தினர்க்கும் சரமக்கிரியை நடா த்திமுடித்து ஸ்ரீராமரைச் சரணடைந்ததும் சொல்லப்படுகின் றது.

ஸ்ரீராமர் இரதமேறியபோது சகல தேவர்களும் ஆகாயத்தில்நின் றுசீர்வதித்தல்.

கவி.

ஆழியந்தடந்தேர்வீர னேறலுமாசிகூறிப்
பூழியிற்சுரித்ததன்மை நோக்கியபுலவர்போத
ஊழிவெங்காற்றின்வெய்ய கலுழனையொன்றுஞ்சொல்லார்
வாழியவநுமன்றோளே யேத்தினர்மலர்கவேி.

இப்படித் திருத்தேரின்மேல் எம்பிரானனவர் ஏறியருளின மாத்திரத்தில் அந்தத் திருத்தேரினது பரிசுத்தமாகிய சக்கரங்கள் பூமியிலுருண்ட தன்மை யைநோக்கிய பிரம்மேந்திராதி சமஸ்த தேவசமூஹங்களு முனிவர் கூட்டங்க ளும் ஒன்றுகூடி, இதற்கு முன்னே தேவகண்டகர்களோடு யுத்தஞ்செய்ய வெழுந்தருளும் போதெல்லாம் தாமேறியருளுகின்ற பெரியதிருவடிகளு டைய திருத்தோள்களைச் சிறிதுநினைத்துத் துதியாதவர்களாய்ச் சிறியதிருவடி களாகிய அனுமானுடைய திருத்தோள்களையே இந்தத் திருத்தேருக்குச் சமா னமாகச் சொல்லலாமென்று பலவாறுதுதித்துக் கற்பகமலர்களைத் தூவி, சுவாமியினிடத்துண்டாகிய அதிசயத்தால் வாழ்த்துகூறத் தலைப்ப ட்டு, இந்தத்திருத்தேர் யாதோரிடையூறு மில்லாமல் செல்லக்கடவதென் றும் - எல்லாப் பலங்களையும் வகிக்கக்கடவதென்றும் — சுவாமியை எதிர்த் துநின்ற இராக்ஷசர்களெல்லா நாசமாகக் கடவர்களென்றும் - உலோகேஸ் வரர்களுக்கும் ஈஸ்வரனுகிய ஸ்ரீராமபத்திரனனவர் ஜெயம்பெறக் கடவரெ ன்றும் - இராக்ஷசஸ்திரீகளெல்லாரும் ஸ்ரீராமபாணத்தால் பிராணனீங்கிய தங்கள் தங்கள் நாயகன்மார்மேலும் பந்துஜனங்கள்மேலும் விழுந்துகதறி அழக்கடவர்களென்றும் வாழ்த்தி ஆர்ப்பரித்தார்கள்.

இப்படி சமஸ்ததேவர்களும் ஆர்ப்பரிக்கா நிற்கையில் அந்தத் திருத்தே ரானது யுத்தகளத்தை நோக்கி வந்ததை இராவணன்தனது இருபது கண்க ளாலும் பார்த்து, இதுவரையிலு நமக்கு நடுங்கி ஒடுங்கிக்கிடந்த துர்ப்பலர்க ளாகிய தேவர்கள் இன்றைய யுத்தத்தில் நாமிந்த அற்பமனுஷியனுகிய இரா மன்கையம்பால் மாண்டுவிடுவோமென்று நினைத்துக்கொண்டு தேர் அனுப்பி னர்கள். இனி எங்கே அவர்கள் தப்பிப்போனர்கள்? இப்போதிந்தராமனைச் செயம்பெற்று அவர்களைத் தண்டித்து ஹிம்சிப்பேன். அது பின்னேயாகட் டும். என்றுகூறிப் பற்களை நறநறவென்று கடித்து பத்துவாய்களையு மடித் துக் கறுவிக்கொண்டு, அடாசாரதி! அதோ கோதண்டத்தைச்சிவந்தகையிற்

பிடித்து இரதாரூடனாய் வருகின்ற இராமன்மேல் இரதத்தைச் செலுத்தக்கட வாயென்று கட்டளை யிட்டான். முன்னேயிவ் விராவணன் தேர்வருவதைக் கண்டு பயந் தோட்டம்பிடித்த வானரங்களெல்லாம் ஒன்றுகூடி, ஸ்ரீராமபிரா னே செயமடைவாரென்று தீர்மானித்துத் தேவர்கள் இரதத்தை அனுப்பி னார்கள். ஸ்ரீராமச்சந்திரர் வெற்றிகொள்வா ரென்பதற்கு இனிச் சந்தேகமே இல்லையென்றுபயப்படாமல் அதிதைரியமடைந்து போர்க்களத்தே வந்து மொய்த்துநின்று, அங்குமிங்குமாகத் திரிந்து மரங்களையு மலைப்பாறைகளை யும் கொண்டு இராக்ஷசர்கள்மேலெறிந்து, திக்குப்பாலகர்களும் - ஆகாசமா ர்க்கத்தில் ஸ்ரீராமருடைய யுத்தசாதுரியத்தைக் கண்டு சேவிக்கும்படி வந்தி ருந்த தேவர்கூட்டங்களும் - திடுக்கிட்டுச் சிதறும்படியாகக் கல்லென்று பே ரிரைச்சலிட்டன.

அக்கால் வாரிறுக்கிக்கட்டிய முரசவாத்தியத்தின் ஓசையும், வீரர்கள் கர்ஜ்ஜிக்கும் ஓசையும், போர்க்களத்தில் இரதகஜதுரகபதாதிகள் வரிசைவரி சையாகவந்து நிறையும் ஓசையும் அடைந்து ஒருமித்துக்கோஷிப்பதினால்; உலகிலுள்ள வெல்லாரும் சகிக்கமாட்டாமல் பூமியில்வீழ்ந்து பேச்சடங்கி னார்கள். இவ்வளவிலே நில்லாமல் ஸ்ரீராமருடைய திருத்தேரின் ஆரவாரமும், பிரதாபலங்கேஸ்வரனுடைய இரதத்தின் ஆரவாரமும், எல்லாருடைய செவி களும் செவிடாகும்படி அதிகரித்தன. அப்போது ஸ்ரீரகுநாயகர் மாதலியி னுடைய முகத்தைநோக்கி, ஓ என்பால் அன்பின்மிகுந்த சாரதிசிரேஷ்டனே! நான் சொல்லுங்காரிய மொன்றுண்டு கேட்கக்கடவாய், அதாவது - இந்தப்ப த்துத் தலையுள்ள சத்துருவானவன் எது எது செய்ய நினைக்கின்றானோ அவ ற்றையெல்லா மவன்செய்த பின்பு யான் செய்யும் எத்தனத்தைநோக்கி, அத ற்குத்தக்கபடி நீ சாரதித்துவ வியாபாரஞ் செய்யக்கடவாய். முன்னதாக அவசரப்பட்டு நீ ஒன்றுஞ் செய்யவேண்டியதில்லை யென்பதை உன்மனதிற் பதியவைப்பாயாக என்று சொன்னார். அதுகேட்ட மாதலியானவன் ஸ்ரீரா மச்சந்திர சுவாமியினுடைய முகாரவிந்தத்தைப் பார்த்து, சுவாமி! தேவரீரு டைய திருவுளக்கருத்தையும், குதிரையினுடைய உள்ளத்தையும், சத்துருக்க ளுடைய எண்ணத்தையும், இருதிறத்தாருடைய சேனையின்மிகுதியையும், சே னைகளடைந்த குறைவுபாட்டையும், சுவாமியடையும் வெற்றியையும், சந் தேகமற்ற காலத்தையும், தகுதியான இடத்தையும்; செய்யப்புகுந்த யுத் தத்தின் திறத்தையும் ஆலோசிக்காதவனாகப்போவேனேயானால்; அஸ்வலக்ஷ ணசாஸ்திரமுதலிய நூல்களை ஐயமறத்தேர்ந்த என்னுடைய ஞானத்தால் என்னபிரயோசன மென்றான்.

அதுகேட்டருளிய ஸ்ரீராமபிரான் நல்லது அப்படியே செய்யென்றார். இப்படிப் பேசிக்கொண் டிருக்கையில் தசமுகனானவன் சுவாமிக்கு எதிரேவ ரவு மாதலியும் தேரைச்செலுத்த, ஸ்ரீராமமூர்த்தியும் இராவணனும்யுத்தத்து க்கு யத்தனிக்கும்போது மகோதரனானவன் இராவணனைப்பார்த்து, ஓ பிரதா

பலங்கேஸ்வரா ! நீங்களிருவரும் போர்செய்ய நானென்றும் செய்யாமல் சாக்ஷிபூதனைப்போல நின்றுகொண்டிருப்பது குற்றமாய் முடியுமல்லவோ ? ஓ என்னைப் போஷித்துவந்த மஹானுபாவா ! எனக்குச்செலவு கொடுத்தால் இந்த ராமனையும் வானரசேனைகளையும் அதம்பண்ணி விடுகிறே னென்றான்.

இலக்குமணரைநோக்கி யெதிர்க்கச்சென்ற மகோதரனை ஸ்ரீராமர்மாய்த்தல்.

கவி.

அம்புயமனையகண்ணன் றன்னையாளரியினேறு
தும்பியைத்தொலைத்ததென்னத் தொலைக்குவென்தொடர்ந்துநின்ற
தம்பியைத்தடுத்தியாயிற் றந்தனைகொற்றமென்றான்
வெம்பிகலரக்கனஃதே செய்வெனென்றவனின்மீண்டான்.

அதுகேட்ட இராவணனவன்—ஓ ஜெயவீர பிரதாபசாலியே! இதோநிற்கின்ற தாமரச மலர்போன்று விசாலித்துக்குளிர்ந்த சிவந்த கண்களையுடைய இராமனை நானேயுத்தத்தில் மடிக்கிறேன். அவ்விளங்காளையாகிய இலட்சுமணனை என்பக்கநோக்கவொட்டாமல் நீபோய்ப் போர்செய்து தடுத்துவைத்திருப்பாயானால், அதுதான் நீ யெனக்குத் தேடிக்கொடுக்கும் வெற்றியென்றான். அதற்கு மகோதரன் - ஐயா பிரதாபலங்கேஸ்வரா! இது எனக்கொரு பெரிதான காரியமோ? இதோபோய் நீர் சொன்னபடி அதையே செய்து முடிக்கிறேன். என்று சொல்லிவிட்டுத் திரும்பி ஸ்ரீராமாநுஜர் எழுந்தருளியிருக்கின்ற இடத்துக்குப் போகையில், ஸ்ரீ புருஷோத்தமனுடைய தெய்வீக ரதமானது நெருங்கி எதிரேவந்தது. அந்த இந்திர ரதமானது நெருங்கிவருவதை மகோதரன்கண்டு அதிககோபிஷ்டனாய்த் தனது வலவனைப்பார்த்து அடாசாரதி! நம்முடைய ரதத்தை இராமன்தேரை முட்டும்படி ஓட்டென்று உத்திரவுசெய்தான். இப்படிச்சொன்ன மகோதரனை அச்சாரதியானவன் வணங்கி, ஐயா வீரவானே! ஸ்ரீராமனுடைய வீராவேசத்தைப் பார்த்தால் எனக்கொன்றுந்தோன்றவில்லை. அளவிடற்கு முடியாத பராக்கிரமமுள்ள கோடி இராவணர்க ளானபோதிலும் இன்றையதினம் வந்து ஸ்ரீராமனோடு எதிர்ப்பார்களேயானால் சாகாமல் பிராணனோடு திரும்பியும் போவார்களோ? கமலாக்ஷனாகிய ஸ்ரீராமன்முன்னே செல்லாமல் நீர் அப்புறம் நழுவிவிடுவதே நல்ல காரியமென்றான்.

இவ்வாறு சாரதி சொல்வதைக்கேட்ட மகோதான் கோரதந்தங்களையுடைய ஆழமாகிய தனது வாயைமடித்து, அடாசாரதி! என்னுடைய சௌரியத்தைச் சிறிதும் கவனிக்காமல் அவமரியாதையான வார்த்தைகளைச்சொன்ன உன்னை இப்போதே மென்று தின்று விடுவேன். சந்தேகமில்லை. சுத்த வீரனாகிய மகோதரன் தன்சாரதியையே தின்றானென்கிறபழிக்கு அஞ்சிச்சும்மாவிட்டேன். என்றுகூறிக் கோபமாறியபின் அச்சாரதியானவன் அவனுடைய கோபத்துக்குப்பயந்து ஸ்ரீராமபிரானுடைய தேருக்கெதிரே தேரைச்செலுத்தினான். அப்படிச் செலுத்தியபோது மகாயுத்த நடந்தது. அந்தயுத்தத்

தில் பொன்மயமாகிய இரதகஜ துரகபதாதியென்கிற பெருங்கடலானது ஸ்ரீரகுநந்தனருடைய பாணங்களாகிய வடவாக்கினியால் வற்றிப்போய் மகோதரனென்னு மகாபாதகனொருவனுமே நின்று, சுவாமி யெழுந்தருளிய ரதத்திற்கட்டிய இடிக்கொடியின்மேலும் - தேரின்மேலும் - குதிரையின் கடிவாளவடத்தைக் கையிற் பற்றியிருக்கின்ற மாதலியின்மேலும் — ஸ்ரீராமமூர்த்தியினுடைய குவிந்ததோள்களின்மேலும் — அதிக விசையாகப் பாணவருஷங்களைப்பெய்து, ஆகாயமும் பூமியும் கிழிபடும்படி ஆரவாரித்தான். அதைக்கடாக்ஷித்த தேவதேவோத்தமனாகிய ஸ்ரீராமமூர்த்தி புன்னகைசெய்து, அந்தத் தீயவனுடைய வில்லையும் - கவசத்தையும் - கையையும் - தோள்களையும் - கழுத்தையும் - ஒவ்வொருபாணத்தா லறுத்துத்தள்ளினார். அறுத்துத்தள்ளின மாத்திரத்தில் தான் சொல்லிவந்தசொல் ஒன்றாயும் தன்செய்கை வேறொன்றாயு மாறிப்போய் மகோதரன் முடிந்தான்.

அக்கால் திரிலோகத்தையும் எட்டுத்திக்கையும் வெற்றிபெற்ற இராவணன் ஸ்ரீராமர் மகோதரன் முடியும்படி பாணப்பிரயோகம் பண்ணி உயிரையபகரித்ததைப் பார்த்து மனம்பொறாமல், அடா தேர்ப்பாகனே! இராமன் மேல் தேரைச் செலுத்துசெலுத்தென்று சொல்லினான். அப்படியவன் சொல்லுதலும் அந்தப்பாகனும் அவன் சொன்னபடி இரதத்தைச் செலுத்தினான். அதுகண்ட தயாசிந்துவாகிய ஸ்ரீராமபத்திரனானவர் மூடுபனிபோலக் கவிந்துகொண்ட இந்தச்சேனைகள் யாவற்றையும் படுசூரணப்படுத்தி இவனைத் தனியனாகச் செய்துவிட்டால் பின்பு மனநெகிழ்ந்து நம்மைச் சரணமடைந்து உஜ்ஜீவித்துப்போய்த் தான் பெற்றிருக்கிற வரங்களையும், ஆயுளையும், பூரணமாக அனுபவிப்பான். அப்படியன்றி முன்னே தானே இவனோடு போர்செய்வோமானால், ஐயோ! இவனிறந்துபோவானே: என்று திருவுளமிரங்கினவரானார். இப்படித் திருவுளமிரங்கிய ஸ்ரீராமபத்திரர் தாம் செய்துகொண்ட சங்கற்பம் அவனுக்குத் தோன்றாதபடியாகத் தமது கோதண்டத்தை நாணேற்றி, தேர் யானை குதிரை காலாள் இவைகளின்மேல் அஸ்திரங்களை எய்தனர்.

இராவணன் ஸ்ரீராமருடன் எதிர்த்தகாலையில் அவனுக்குண்டான துற்சகுனக்காட்சி.

கவி.

அடல்வரியரக்கர்க்கப்போழ் தண்டங்களெழுந்துமண்டும்
கடல்களும்வற்றவெற்றிக் கால்கிளர்ந்துடற்றுங்காலை
வடவரைமுதலவான மலைக்குலஞ்சலிப்பபோன்று
சுடர்மணிவலயஞ்சிந்தத் துடித்தனவிடத்தபெற்றோள்.

அந்தக்காலத்தில் மகாபராக்கிரம சாலியாகிய இராவணனுக்கு சமஸ்த அண்டங்களையு முழுகடிக்கத்தக்க சமுத்திரங்களும்வற்றிப்போகும்படி வெற்றியுள்ள பிரசண்டவாயுவான தெழுந்து மோதுகின்றகாலத்தில் மேருமுதலா

கிய பர்வதங்கள் தள்ளாடி அசைவதுபோல் பாகுவலயங்களெல்லா நெக்குவிட்டுச் சிந்தும்படி இடதுதோள்கள் பத்தும் துடித்தன. ஆகாயத்தில்நின்றும் இரத்தமழை இடைவிடாது பெய்தன. உலகங்களெல்லா நடுங்க பெருமலைகளெல்லாம் பொடிப்பொடியா யுதிர மின்னுமல் இடிகள் விழுந்தன. சூரியனை ஒளிமழுங்கும்படி பரிவேடம் கவிந்துகொண்டது. தேரிற்பூட்டிய குதிரைகள் நடுங்கின. கைகளிற்பிடித்திருந்த பத்துவில்லுகளும் தாமே நாரிகளற்றன. பத்துவாய்களும் நாவுகளும் ஈரமில்லாமல் உலர்ந்தன. மார்பிலணிந்த நல்லமணமுள்ள மலர்மாலைகள் புலால்நாற்றம் வீசின. தனது தேரிற்கட்டிய வீணைக்கொடிமேல் கழுகுகளும் காகங்களும் வந்து மொய்த்துக்கொண்டன. தன்னைச் சூழ்ந்துவந்த குதிரைகள் கண்களில் நீரைத் தாரைதாரையாகச் சொரிந்து அழுதன. பட்டமணிந்து அலங்கரித்து வந்த போர்க்குரியயானைகள் தறிகளில் கட்டிவைத்தாற்போலச் சோம்பிநின்றன.

இப்படி தனக்குத்துன்மைகளும் தேவர்களுக்கு நன்மைகளுந் தரத்தக்க துர்ச்சகுனங்கள் உண்டாயினவற்றைப் பார்த்தும் இராவணன்மனம் சிறிதும் தளராமல், ஏகமனுஷியனுக்கு என்னைவெல்லவும் முடியுமோவென்று நினைத்து, தேரை வேகமாய் நடத்திக்கொண்டு வருகிறான்.

ஸ்ரீராமமூர்த்தியும் இராவணனும் பராக்கிரமித்து நிற்றல்.

கவி.

கண்டசங்கர நான்முகர்கைத்தலம், விண்டசங்கத்தொல் லண்டம்வெடிபட
அண்டசங்கத் தமரர்தமார்ப்பெலாம், உண்டசங்க மிராவணனூதினன்.

சொன்னசங்கின தோசைதுளங்குற, என்னசங்கென் றிமையவரேங்குற
அன்னசங்கைப் பொருமையினரியன், றன்னவெண்சங்குந் தானுமுழங்கிற்றால்.

இவ்வண்ணம் இரதத்தைச் செலுத்திக்கொண்டு வருகிற இராவணன் உருத்திரமூர்த்தியும் பிரமதேவனும் தங்கள்தங்களது கரங்களை விதிர்த்தும் திருமேனி நடுங்கவும், பண்டைக்காலந்தொட்டுள்ள சகலாண்டங்களும் வெடிக்கவும், தேவலோகத்துள்ள தேவர்கூட்டங்களின் செருக்கையெல்லா மடக்கிய வெற்றிச்சங்கை இராவணன் வாயில்வைத் தூதினன். அவனூதிய சங்கத்தொனியைக்கேட்டுத் திருவுளங்கலங்கிய ஸ்ரீபாஞ்சசன்ய ஆழ்வான் விரைந்தெழுந்தருளி, இராவண சங்கத்தொனியு நடுக்கமுறவும் — இந்திராதிதேவர்களெல்லாம் இஃதெந்தச் சங்கத்தினது தொனியென்று ஏக்கங்கொள்ளவும்— தாமேநின்று தொனித்தருளினர். உடனே சுதரிசனமூர்த்தியும், கட்கமூர்த்தியும், சார்ங்கமூர்த்தியும், கதாமூர்த்தியும், சுவாமிக்குப் பரமகைங்கரியத்தைச் செய்யும்படி எழுந்தருளி சமீபத்தில் நின்றார்கள். தேவதேவோத்தமனாகிய ஸ்ரீராமபிரானனவர் தம்முடைய அநந்தகலியாண திவ்வியகுணங்களைச் சதுர்வேதங்களும் அறியாத தன்மையைப்போல அம்மூர்த்தியர்களைவரையும் காணாதவராயினர். அநந்தரம் திக்குகளும் — திரிலோகங்களும் — சமுத்

திரங்களும் — பர்வதங்களும் - பெருந்தேவர்களும் - நடுங்கவும், இவைகளெல்லாம் அடங்கிய பிரஹ்மாண்டமும் குலுங்கவும், இந்திரனுடைய சங்கையெடுத்து மாதலியானவன் தன்வாயில்வைத்து ஊதினன். இராவணேஸ்வரனுடைய அம்புகள் ஜகந்மோகனகாரலீலாமானுஷிய திவ்யமங்கள விக்ரகஸ்வரூபராயெழுந்தருளிய அப்பிராகிருதனாகிய ஸ்ரீராமச்சந்திரருடைய அழகிய திருமேனியின்மேல்வந்து படுவதற்கு முன்பாக, தேவதாஸ்திரீகளுடைய தாமரைமலர்போன்ற கண்களாகிய அம்புகள் அனந்தம்வந்து தைத்தன. இருவருடைய தேர்களிலுங்கட்டிய குன்றிமணிபோற்சிவந்தகண்களையுடைய குதிரைகள் ஒன்றின்மேலொன்று துள்ளிப்பாயும் கருத்துடையனவாய் கண்களில் தீப்பொறிபறக்கப் பார்த்து, ஒன்றையொன்று மென்றுதின்று பின்பு தணியுமென்னலாம்படியான கடுங்கோபத்தைக் காட்டி நின்றன. பூமியும் - சுவர்க்கமும் - கடல்களும் - இன்றே முடிந்துவிடுமென்று சொல்லும்படியான பேரொலி உண்டாகும்படி இராவணனுடைய தேரிலுள்ள வீணைக்கொடியும்; ஸ்ரீராமச்சந்திர ரெழுந்தருளிய இரதத்திற்கட்டிய இடிக்கொடியும், முறைமுறையாக ஒன்றையொன்று மோதின. இராவணேஸ்வரன் விற்களைவளைத்துப்பண்ணின குணத்தொனிகள் ஏழுசமுத்திரங்களும் ஒன்றாகச்சேர்ந்து கோஷித்தாற்போல ஒலித்தன. ஸ்ரீசக்கரதரனாகிய எம்பெருமான் ஸ்ரீகோதண்டத்தை வளைத்துச்செய்த குணத்தொனியானது, பிரமாண்டமே நிலைகுலைந்து தட்டுமாறும்படி ஊழிகாலத்தி லெழுந்த மேகமுழக்கம்போலத் தொனித்தது.

ஸ்ரீராமமூர்த்திக்கும் இராவணனுக்கும் சமர்மூளுதல்.

கவி.

பதைக்கின்றதொர்மனமும்மிடை படர்கின்றதொர்சினமும்
விதைக்கின்றதொர்பொறிபொங்கின விழியும்முடைவெய்யோன்
குதைக்கின்றனநிமிர்வெஞ்சிலை குழையக்கொடுங்கடுங்கால்
உதைக்கின்றனசுடர்வெங்கணை யுருமேறெனவெய்தான்.

ஸ்ரீராமனைப் பார்த்துப் பார்த்துப் பலபலவிதமாக வெண்ணி யெண்ணிப் பதறுகின்ற மனத்தையும், இடையிடையே தோன்றுகின்ற கோபத்தையும், அள்ளிவிரைப்பதுபோலத் தீப்பொறிகள்பறக்கின்ற கண்களையுமுடைய கொடியோனாகிய இராவணப்பதகன், தனதுயர்ந்தவில்லை இருகுதைகளும் பொருந்தும்படிவளைத்து, இடிகளையும் அக்கினியையும் ஒத்தவைகளும், எமனுடையமார்பினு நுழையத்தக்கவைகளும், மழையை யொத்தவைகளும், முன்னொருகாலத்தில் தேவர்கள் பிரயோகித்த அஸ்திரங்களையெல்லாம் பற்றறும்படிச்செய்த வலியுடையவைகளும், பாற்கடல்கடைந்த மத்தாகிய மந்தரகிரியைச்சுற்றிய வாசுகியென்னும் பாம்பினும் பெரியவைகளுமாகிய கொடிய தீட்சணியமான அம்புகளை இடியோசைபிறக்கும்படி எய்தான்.

கவி.

துண்டப்படுநெடுமேருவைத் தொளைத்துள்ளுறைதங்கா
தண்டத்தையும்பொதுத்தேகுமென் றிமையோர்களுமயிர்த்தார்
கண்டத்தெறுகணைக்காற்றினைக் கருணைக்கடல்கனகச்
சண்டச்சரமழைகொண்டவை யிடையேயறுத்தடுத்தான்.

அப்போது மேருமலையையும் துண்டப்படுத்தி அம்மட்டிலே தங்காமல் பிரம்மாண்டத்தையும் தொளைத்துக்கொண்டு அப்புறத்தும் போகுமென்று தேவர்களும் சந்தேகங்கொள்ளும்படி கிருபாசமுத்திரமூர்த்தியாகிய ஸ்ரீ ராமபிரானனவர் ஸ்ரீகோதண்டத்தில் அம்புகளைத்தொடுத்து, வாயுவேகமாக வருகின்ற இராவணபாணங்களை அந்தரத்திலேயே துண்டந்துண்டங்களாய் விழும்படித் துண்டித்துவிட்டார்.

அக்கால்செய்து நிறைவேற்றும் வல்லமையுடையவொருவன் முயன்ற காரியமானது அவன்முன்செய்த தீவினை நடுவேவந்து இடையூறுபடுத்தஅழிந்தாற்போல், ஸ்ரீராமபாணத்தால் தன்னுடையபாணங்கள்வலியிழந்தழிந்ததைக்கண்ட இராவணன் அளவில்லாதஅஸ்திரங்களையுகமுடிவில் மேகங்கள்மழைக்காலிறங்கிப் பெய்தாற்போலப் பிரயோகித்தான். அந்தஅஸ்திரங்கள் ஆகாயம் - திக்கு - மலைகள், சமுத்திரங்கள் - பூமி — இவ்விடங்களிலெல்லா நிறைந்து, ஒருபொருளையும் பார்க்கவொட்டாமல் எல்லாத்தேவர்களுடைய கண்களுக்குந் தடையாய்நின்று, கணித சாஸ்திரிகளால் ஏற்படுத்தப்பட்ட கணிதங்களையும் கடந்து, வெயில்பூமியில் காயவொட்டாமற்பரவி இருளையுண்டாக்கித் தீயைக்கக்கின. யானைத்தோலைப்போர்த்தமஹாயுத்தத்தொழில்வல்ல உருத்திரபகவானும் இப்படிப்புறப்பட்ட அம்புகளின் பெருமையை நாமென்னசொல்வதென்றுமனந்திகைத்தனர் மற்றப்பிரமன்முதலானபெருந்தேவர்களுமுனிவர்களும்பயங்கொண்டுநாங்களிந்தக்குரூரத்தைக் கண்களாற்காணமாட்டோமென மூடிக்கொண்டுசும்மா இருந்துவிட்டனர்கள். அநேகஇடிகள்விழும்போது மலைகள் பொடிப்பொடியாய்ச் சிந்துவதுபோல வானரசேனைகளெல்லாம் சிதறிப்போயின.

அக்கால் எல்லாவற்றிற்கு முதல்வராகியஸ்ரீகோதண்ட தீக்ஷாகுருவானவர் அச்செய்கையைக்கண்டு. அவற்றை விலக்கவேண்டுமெனத் திருவுளங்கொண்டுவில்லில் ஒரு அஸ்திரத்தைத் தொடுத்துப் பிரயோகித்தனர். அப்படி பிரயோகித்தஅஸ்திரம்பானதுஎன்னசெய்ததென்றால்:—

கவி

செந்தீவினை மறைவாணனுக் கொருவன்சிறவிலநாண்
முந்தீந்ததொ ருணவின்பய னெனலாயின முதல்வன்
வெந்தீந்தன வடிவெங்கணை யனையான்வருத் தமைந்த
வெந்தீவினைப் பயனொத்தன வரக்கன்சொரி விசிகம்.

மூன்றுவகையாகிய வேள்விசெய்யும் வேதப்பிராமண னொருவனுக்கு தானியங் குறைந்திருங்காலமாகிய க்ஷாமகாலத்திற்கொடுத்த ஒருவேளை

யுணவினாலாகியபலன் அன்னங்கொடுத்த தாதாவுக்கு எவ்வண்ணம்பெருகிப் பயன்படுமோ அதைப்போல், ஸ்ரீராமபாணம் இராக்ஷசகுலநாயகன்பிரயோகித்த அம்புகளையெல்லாம் நாசமாக்கின. அவைகள் நாசமாயினதெத்தன்மைத்தெனில் அநேகபாவங்கள் ஒருசிறுபுண்ணியத்தின் முன்னிலாதோடுவதுபோலாயின. ஒருக்ஷணப்பொழுதுக்குள்ளாக இலட்சம் பாணங்களைத் தேவகுலகாலனானவன் எய்வான். அந்தட்சணத்துக்குள்ளேதானே இராக்ஷசகுலகாலவைரியானவர் அவ்வளவு அம்புகளையும் பிரதி அம்புகள்தொடுத்து அறுத்துத்தள்ளுவார். இப்படி அவன்எய்கின்ற அம்புகள்யாவும் ஸ்ரீராமபாணத்தால் துண்டு துண்டுகளாய்க் கடலிற்போய்விழுந்து நீரைக்குடிப்பதினால் அக்கடலும்சேறாகி, சற்றுநேரத்துக் குள்ளே நீர்ப்பசையற்று அங்குள்ள பொருள்களெல்லாம் சாம்பலாகி அச்சாம்பல்கள் மேடுமேடாய் விளங்கும்.

அப்போது யுத்தத்தில் வல்லவனாகிய இராவணேஸ்வரன் தானெய்கின்ற அம்புகளையெல்லாம் காகுஸ்தகுலதிலகர் வில்லில் பிரதியம்பு தொடுத்தெய்து துண்டிக்கின்றமையால் மிகுதியும் கோபங்கொண்டு, எழுத்தடிகளையும் - கோடாரிகளையும் - தோமரங்களையும் - தண்டாயுதங்களையும் - இருப்புலக்கைகளையும் - சக்கராயுதங்களையும் - சூலாயுதங்களையும் - இவைபோன்ற மற்ற ஆயுதங்களையும் — தனது இருபதுகைகளாலும் எடுத்தெறிந்தான். உடனே சூல்கொண்ட காளமேகம்போன்ற திருமேனியையுடைய ஸ்ரீகோதண்ட ராமரானவர் வேகத்தால் காற்றையும் — தீப்பொறிகளைச் சிந்துவதினால் அக்கினியையும் - ஓசையால் இடியையுமொத்த அம்புராசிகளைத் தொடுத்தெய்ய, அந்த அம்புகளுள் ஓரம்பானது இராவணன் அபரிமிதமாக எய்த ஆயுதங்களுள் ஆயிரம்வேல்களைத் துண்டித்தன. ஓரம்பானது ஆயிரமெழுத்தடிகளைக்கண்டித்தன. ஓரம்பானது ஆயிரங்கோடரிகளை முறித்தன. ஓரம்பானது ஆயிரமம்புகளைப் பொடிப்பொடிசெய்தன. ஒவ்வோரம்பானது ஆயிரஞ்சக்கரசூலாயுதங்களைச் சின்னபின்னப்படுத்தின.

இந்தப்பிரகாரம் சமயுத்த நடக்கிறசமயத்தில் ஸ்ரீராமபாணங்கள் தன்னுடலில் வந்து தைப்பதினால் இராவணனானவன் அம்புகள்பட்ட மதயானையைப்போல உள்ளங்கொதித்து, ஏழுமேகங்களும் ஒன்றாய்க்கூடிப் பெருந்துளிமழையைப் பெய்வதுபோலப் பத்துவில்லையும் வளைத்து அநேக அம்புகளைத்தொடுத்துப் பிரயோகித்தான். இந்த யுத்தத்தைக்கண்ட பிரிதீவுமுதலிய பஞ்சபூதங்களும் பாபிஷ்டனாகிய இராவணன் இன்று முடிவானென்று சந்தோஷித்தன. ஸ்ரீசர்வேசுரனாகிய ஸ்ரீராமபிரானெய்கிற அம்புமழைகள் வீக்ஷணியமாய் எங்கும் வியாபித்தபோதிலும், கருணையால் தங்களுக்குக் குளிர்ந்திருப்பதினால் தேவர்கள்தங்களுடைய உருவங்கள் குளிர்ச்சிஅடைவார்கள். அதிநீசனாகிய இராவணனெய்கிற அம்புமழைகள் எவ்விடங்களிலும் சென்று உஷ்ணமாயிருப்பதினால், அப்பூதங்களைந்தும் தமது உருவம் வெப்பங்கொண்டுபோய் அக்கினிமய மாயின.

இராவணன் தனதிரதத்தோடு ஆகாயமார்க்கஞ்சென்று அங்கிருந்து பாணப்பிரயோகஞ் செய்தல்.

கவி.

மந்தரக்கிரியென மருந்துமாருதி
தந்தவப்பொருப்பெனப் புரங்கடாமெனக்
கந்தருப்பந்நகர் விசும்பிற்கண்டென
அந்தரத்தெழுந்ததவ் வரக்கன்றேரரோ.

இவ்வாறிங்கே யுத்தகளத்தே நின்றுற்போலிருந்து, ஸ்ரீகருடபகவான் ஆகாயமார்க்கமாகக் கொண்டுவந்த மந்தரமலை- ஸ்ரீ ஆஞ்சநேயர்கொண்டுவந்த சஞ்சீவிபர்வதம் - நினைத்தவிடங்களுக்குச் செல்லுகின்ற திரிபுரம் - கந்தர்ப்ப லோகம் - இவற்றுளொன்றை ஆகாயத்திற் கண்டாற்போலத் தோன்றும்படி இராவணனுடைய தேரானது அந்தரத்திலெழுந்து சென்றது. அங்கு நின்ற படி இராவணனுனவனெய்த பாணவருஷங்கள் ஸ்ரீராமசுவாமியினுடைய திருக்கண்களுக்கு முன்பாகவே வானரர்களுடைய உடல்களில் தைத்து உருவிப் போவதினால், இன்றோடுவானரர்கள் ஒழிந்தார்கள் - முழுமையும் ஒழிந்தாரல்லர் - என்றுசொல்லும்படி அநேக வானரவீரர்கள் பிராணனீங்கினார்கள். அதைக்கடாட்சித்த ஸ்ரீராமச்சந்திரர் தமதுசாரதியைப்பார்த்து, ஓ இளமையாகிய ரிஷபத்தையொத்தமாதலீ! நம்முடைய வானரசேனைவீரர்களிலநேகரிறந்தனர்கள். இவர்களிறக்கும்படி அம்புகளைப் பிரயோகித்த இராவணனுடைய இருபதுதோள்களோடு பத்துத்தலைகளையும் இதோ அறுத்துத் தள்ளுகிறேன். நீயுமிரதத்தை ஆகாயமார்க்கத்திற் செலுத்தக்கடவா யென்று கட்டளையிட்டனர்.

ஸ்ரீராமபிரான் தனது தேரையும் ஆகாயத்தில் நடத்திய இராவணன்தேரின் முன்னஞ் செலுத்தி யுத்தஞ்செய்தல்.

கவி.

அந்துசெய்குவனென வறிந்தமாதலி
உந்தினன்றேரெனு மூழிக்காற்றினை
இந்துமண்டலத்தின்மே லிரவிமண்டிலம்
வந்தெனவந்ததம் மானத்தேரரோ.

அதுகேட்ட புத்திமானாகிய மாதலியென்பவன் அப்படியே செய்கிறேனென்று கூறி, தேரென்று பெயர்வைத்துக்கொண் டிருக்கும் ஊழிக்காற்றைச் செலுத்தவும் அது சந்திரமண்டலத்தின்மேற் சூரியமண்டலம் போர்க்குப் போனதுபோல இராவணனுடைய தேருக்குமுன்னே வந்து சேர்ந்தது.

அப்படிச் சேர்ந்தமாத்திரத்தில் மேகக்கூட்டங்கள் சிதறவும் - திக்குகளெல்லாம் தளர்ந்து நிலைகெடவும் - விண்மீன்திரள்கள் உதிரவும் - பெரியமலைச்சிகரங்கள் நெரிந்து பொடியாகிச் சிந்தவும் - செல்லுகிறவேகத்தாலுண்டாகிறகாற்றால் சமுத்திர நீர் சுழலவும், குலாசலங்கள்யாவும் குலுங்கவும்-

அண்டமு நடுங்கவும் - குயவனுடைய சக்கரம் சுழலுவதுபோல இரண்டுதேர்களும் ஆகாயத்தில் வலமிடமாகவும் - பூமியில் இடம் வலமாகவும் சாரிகைதிரிந்தின. இப்படி உழுந்துருளுகிற காலத்துக்குள்ளே எவ்வுலகங்களிலும் சென்று ஒன்றாகநெருங்கியும் உடனே பிரிந்தும் செல்லுவதினால், இதுவளர்கின்ற கீர்த்தியையுடைய இறைவனாகிய ஸ்ரீதசரதராமன் தேரென்றும் இஃதிராவணன் தேரென்றும் தேவர்களாலும் அறியக்கூடாமற் போயது. இத்தேர்களின் சிகரங்கள் படுவதினால் உதிராதவிண்மீன்களும், சக்கரங்கள் தாக்குவதினால் நெக்குவிடாத மலைகளும், அதிலுண்டாகும் தீப்பொறிகள் சிதறுவதினால் வலிகுலையாததிக்குகளும், அதிர்ச்சியினால் வாயாலிரத்தங்கக்காத உயிர்களும் காணப்படவில்லை.

அக்காலங்கு கூடியிருந்த தேவர்களிற்சிலர் தேர்களிரண்டும் இப்போது இந்திரலோகத்திற் சென்றன வென்பார்கள். அப்படிச் சொன்னவர்களே இல்லை இல்லை சந்திரலோகத்திற் சென்றன வென்பார்கள். சிலர் பிரமலோகத்தை யடைந்தன வென்பார்கள். சிலர் இதோமந்தரமலையின்மேல் இறங்கின வென்பார்கள். சிலர் இத்தினம் உலகங்க ளழிந்துவிடுமென்றேங்கி நாவுலர்ந்து போனவர்களாய்ப் போனதேர்கள் திரும்பினவோ வென்பார்கள். சிலர் மேகங்கள் தவழ்கின்ற ஆகாயத்திலுள்ள சுவர்க்கலோகம் பிளந்துபோச்சோ வென்பார்கள். சிலர் பூமியில் இறங்கினவோ என்பார்கள். சிலர் இத்தேர்களிற் பூட்டியவை குதிரைகளோ? அல்ல: குதிரைகளானால் இவ்வளவுவேகம் ஏது? ஆதலால் ஆச்சரியகரமான காற்றுகளே என்பார்கள். சிலர் தேர்வீரர்கள் பாற்கடல்மத்தியில் நின்று யுத்தஞ்செய்கிறார்க ளென்பார்கள். சிலர் ஏழுசமுத்திரத்துக்கும் அப்புறத்துச் சென்றார்க ளென்பார்கள். சிலர் மேற்குக்கடலின்க ணிருக்கிறார்க ளென்பார்கள். சிலர் கிழக்குக்கடலின்க ணிருக்கிறார்க ளென்பார்கள். சிலர் இங்கேவந்தன ரென்பார்கள்.

இப்படி தேவர்கள் தங்களுக்குள் பேசிக்கொண் டிருக்கையில் ஸ்ரீராமரெழுந்தருளியரதமும் - இராவணனேறிய தேரும் - சப்தசமுத்திரங்களிலும், சப்த தீவுகளிலும், சப்த குலாசலங்களிலும், சப்தலோகங்களிலும், அண்டப் பித்திகையிலும், ஊழிக்காற்றைப்போல ஓயாமல் திரிந்தன. அப்படித் திரிந்த கடல்களிலும் - உலகங்களிலும் - தீவுகளிலும் - குலாசலங்களிலும் - தனக்கிரக்ஷகமா யிருந்த பொருள்களை யெடுத்தெறிந்தாற்போல, இராவணனெறிந்தனவெல்லாம் ஸ்ரீராமசுவாமியின்மேலெறிந்த பாணவருஷங்களாகவே யிருந்தன. பிரதாபலங்கேஸ்வர னெறிகின்ற ஆயுதங்களையும், அவனெய்கின்ற அம்புகளையும், ஸ்ரீராமபாணங்களிற்சில அறுத்துத்தள்ளின. சில தடுத்துவிட்டன. இம்மட்டிலே தம்முடையவேகம் அடங்காமல் உலகமுழுமையும் சென்று பாய்வன. ஸ்ரீராமச்சந்திரர் இராவணன் அபாரமாக விடுகின்ற அஸ்திரசஸ்திரங்களை அறுப்பதும் தடுப்பதுமேயல்லாமல் வேறொன்றுஞ்

செய்திலர். அவ்விருவர்களுடைய தேர்களும் யுத்தந்தொடங்கிய ஏழாநாள் மலைகளும், சமுத்திரங்களும், சந்திராதித்தர்கள் திரிகின்ற மேலுலகங்களும், கீழுலகங்களும், நிலைகுலையும்படி மோதிமோதித் திரிகின்ற சண்டமாருதம் போலப் பேரிரைச்சலோடு இலங்காநகரமே வந்து சேர்ந்தன.

அக்கால் இரண்டு சாரதிகளுநடத்திய வெற்றியுள்ள தேர்க்குதிரைகள் கடலிலுள்ள மணலினது தொகைக்கு மூன்றுபங் கதிகமாக எல்லாவிடங்களிலும் சாரிகைதிரிந்தவைகளாயினும், சற்றேனும் இளைக்கவும் இல்லை. இளைப்படைந்து பெருமூச்சுவிடவும் இல்லை. ஸ்ரீராமபத்திர ரெழுந்தருளிய இந்திரனுடைய தேரிற்கட்டிய மகாவலிவுள்ள இடிக்கொடியின் பேரில், அதிபிரதாப சாலியாகிய இராவணன் ஒரு அர்த்தசந்திர பாணத்தைப் பிரயோகித்து அதையறுத்துத் தள்ளினான். உலைக்களத்திற் காய்ச்சின பெரிய இருப்புலக்கையின் முனையைக் குடத்தினீரில் தோய்த்தமாத்திரத்தில் அந்நீர் சுவறிப்போவதுபோல,'இராவணனால் அறுபட்ட இடிக்கொடியானது சமுத்திரத்தில் வீழ்ந்தமாத்திரத்தில் அக்கடல்நீர் குறைந்துபோனது. அப்போதிராவணனனவன் ஸ்ரீதசரதபுத்திரர்ஆரோகணித்தருளியதேரிற்கட்டிய சப்தப்பிரமத்தைப்போல வழியாத குதிரைகளின்மேல் இராசிராசியாகச் சரங்களைப்பிரயோகித்து, சாரதித்தொழிலிற் கீர்த்திபெற்ற மாதலியினுடைய வயிரமார்பில் பன்னிரண்டு அம்புகளை எய்தான். இன்னுமவன் கட்டுகளமைந்த பத்து வில்லுகளையும் விர்த்தாகாரமான வானவில்லைப்போலவும் பிறைச்சந்திரனைப் போலவும் தோன்றும்படி வளைத்துத்தூவிய அம்புகள், ஸ்ரீசானகிப்பிராட்டியின்மணவாளருடையதிருமேனியைக் கவிந்துகொண்டமையால் தேவர்களும் சுவாமியினுடைய திருவுருவத்தைக்கண்டு சேவிக்கக் கூடாமற் போனார்கள்.

இப்படி சேவிக்கக்கூடாமற் போகவே அதிபராக்கிரம சாலியாகிய அந்தத்தேவர்கள் தெய்வசகாயராகிய ஸ்ரீராமசுவாமி இனித் தோற்றுவிடுவாரென்று தங்களுக்குள் ஒருகருத்துத் தோன்றிப் பயந்துவிட்டார்கள். இராக்ஷசர்க ளெல்லாரும் கோவென்று ஆர்ப்பரித்தார்கள். உலகமே திருவுருவமாகக் கொண்ட ஸ்ரீசர்வேசுரனிடத்துத் தனக்குண்டாகிற அன்பினால் பயம்ஜனித்து மேலேயுங் கீழேயும் காற்றுந்திரிந்ததில்லை. அண்டமுங்கலங்கியது. அக்கினியும் தனதுவெப்பமும் ஒளியுங்காட்டாதடங்கியது. ஏழுகடலும் ஆகாயத்தை அளாவும்படி பொங்காமல்தமக்குள்ளேஅசைவற்று அடங்கின. சந்திரசூரியர்கள் ஆகாயமார்க்கத்திற் போகாமல் திரும்பினார்கள். மேகங்களும் தங்களிடத்துள்ள நீர் வற்றிப்போயின. திக்குயானைகள் களிப்பு நீங்கின. கடலலைகள் ஒலிக்கஅஞ்சின. அங்காரகன்விசாகநக்ஷத்திரத்தை யேறினகாலத்திலுண்டாகு நடுக்கத்தைக் கொண்டு மேருவும் குலுங்கியது. வானரங்களும் — வானரப் படைத்தலைவர்களும் — சுக்கிரீவமகாராஜரும் - ஸ்ரீராமாநுஜரும்—தங்களுக்குப் பிராணபதமாகிய ஸ்ரீரகுநந்தனரைக் காணாதவர்களாய்

கஜசிரேஷ்டத்தைக் காணுமற் காட்டுயானைக் கூட்டங்கள் கலங்குவதுபோலவும் - திருவணை செய்தகாலத்தில் கடல்மீன்கள் கலங்கியனபோலவும் - கலங்கினார்கள்.

ஸ்ரீராமபத்திரரானவர் தருமநீதியின்படி இரதத்தைச் செலுத்திக்கொண்டிருந்த மாதலியினுடைய மார்பில் தைக்கும்படி இராவணனெய்த அம்புகளைக்கண்டு, முன்னே இளையபெருமாளுடைய திருமார்பில் வேல்தைத்ததென்று கேள்விப்பட்ட காலத்திற் கலங்கியதைப் பார்க்கிலும் அதிகமாகத் திருவுளம்கலங்கி, நீலநிறமுள்ள இராக்ஷசகுலேந்திரனெய்த சரங்களையெல்லாம் இமைகொட்டுதற்கு முன்பாகத் துண்டுதுண்டுகளாக அறுத்துத்தள்ளி, வேறே தமது கோதண்டத்தில் அணியணியாக அம்புகளைத் தொடுத்தெய்து ஆகாயமெல்லாம் பாணவருஷமாக்கிவிட்டார். அதுகண்ட தேவர்கள் முதலாகிய யாவரு மனந்தேறினார்கள். மேலும் - எல்லாவுயிர்களிலும் பிரியாமல் வசிக்கின்ற ஸ்ரீராமபிரானனவர் தூண்களை வரிசையாக வைத்தாற்போல விளங்குகின்ற இராவணனுடைய தோள்கள்தோறும், வளைந்த பர்வதாகாரமாகிய வில்லுகளின் வலிகுறையும்படி பாணங்களையெய்தனர். அவ்வளவிலே நில்லாமல் திருப்பாற்கடலில் யோகநித்திரையி லிருந்துகொண்டே எல்லாம் அறியவல்ல பரஞ்சோதியாகிய ஸ்ரீதசரதாத்மஜர் இராவணனுடைய மார்பிற் பூட்டிய கவசத்தை உருவிக்கொண்டு இரத்தபானம் பண்ணும்படி கிரணங்களை வீசுகின்ற கூரிய அம்புகளைப்பிரயோகித்து, உடனே திக்கின்முடிவுவரையுஞ் சென்றடர்ந்த மேகராசிகள் தனதுமுனைபட்டுச் சிதைந்தோடும்படி மோதுகின்ற பரந்த வடிவினதாகிய மொட்டுள்ள வீணையெழுதிய கொடியையும் ஒருபாணத்தால் அறுத்துத்தள்ளினார். ஸ்ரீராமபிரானுடைய ரதத்திற் கொடியில்லாமையைக்கண்டு சதுர்வேத ஸ்வரூபியாகிய ஸ்ரீகருடபகவான் அத்தேரின் சிகரத்திலெழுந்தருளினார். அதுகண்ட தேவர்கள் ஸ்ரீவேதபுருஷனாகிய வைனதேயன் அதிகோபிஷ்டராய் எழுந்தருளினா ராகையால், நாமினி இந்தயுத்தத்தைப்பற்றி ஒன்றும்யோசிக்கவேண்டியதில்லையென்று ஸ்ரீபக்ஷிராஜனை நானாவிதமாகத் துதித்தனர்.

ஸ்ரீ இராகவனும் இராவணனும் சிவாஸ்திரமுதலிய அஸ்திரங்களை மாறிமாறிவிடுத்துப் போர்விளைத்தல்.

கவி.

ஆயதொரமைதியி னறிவினினறிவான், நாயகனொருவனை நலிகிலதுணர்வான்
எயினனிருளுறு தாமசமெனுமத், தீய்வினைசருபடை தெறுதொழின்மறவோன்.

அந்தச்சமயத்தில் தேவகண்டகனாகிய இராவணன்போரில் ஒப்பில்லாதவராய்விளங்குகின்ற ஸ்ரீரவிகுலநாயகரை இனித் தான்விடப்போகிற பாணமானது ஒன்றும் செய்யமாட்டா தென்பதை அறிந்தவனாக இருந்தும் அஞ்ஞானவைபவமாகிய தாமதக்குணத்தினுற்றன்னிடத்துப் பெருகுகின்றவினைபோல் அநேகாநேகஅஸ்திரங்களையுடைய இராவணன் எவற்றிலும் சிரேஷ்டபாணமா

கிய சிவாஸ்திரத்தையெடுத்துப் பிரயோகித்தான். அக்கினிமயமாகிய முகத்தையும் - இரத்தமயமாகிய முகத்தையும் - தேவமுகத்தையும் - பேய்முகத்தையும் – சர்ப்பமுகத்தையுமுடைய அந்தப் பஞ்சமுகாஸ்திரமானது ஒருதிசையிலிருந்து ஒருதிசைவரையும் வளைந்து காணப்படுகின்ற வக்கிரதந்தங்களையுடையதாயும், தன்னைப்பிரயோகித்த எசமானன் எதையெதைச் செய்யவேண்டுமென்று நினைக்கிறானோ அவற்றையெல்லாம் செய்வதாயும், சூரியசந்திரர்களை விழுங்கத்தக்கதாயும், ஒருதிக்கில் அக்கினிச்சுவாலையையும் - ஒருதிக்கில் மழையையும் - ஒருதிக்கில் மின்னலையும் - ஒருதிக்கில் இடியையும் - ஒருதிக்கில் இரவென்றும் பகலென்றும் சொல்லப்படாத மயக்கத்தையும் – ஒருதிக்கில் கல்மழையையும் உண்டாக்கிக்கொண்டு, ஏழுலோகங்களிலு மிகுதியும் அந்தகாரமே கவிந்துகொள்ளவும் அங்குள்ள சீவராசிகளெல்லாம் கதறவும் வருவதாயது.

கவி.

கண்ணுதலொருவன தடுபடைகருதிப்
பண்ணவன்விடுதலு மதுநனிபருக
எண்ணுறுகனவினெ டுணர்வெனவிமையில்
துண்ணெனுநிலையினி னெறிபடைதொலைய.

அதை ஸ்ரீராமநாதனானவர் கடாக்ஷித்தருளி அதற்குத்தக்கபடி ஆலோசித்து, அந்தச் சிவமூர்த்தியினுடைய பாசுபதாஸ்திரத்தை யெடுத்து எய்தனர். அந்தச் சிவாஸ்திரமானது ஒருவன் கனவினுற்கண்டபொருள் விழித்தமாத்திரத்தில் மறைந்தாற்போல அந்த மாயைகளெல்லாம் போய்விடும்படி இராவணன்விட்ட பாணத்தை விழுங்கிவிட்டது.

ஒருவனுக்கு ஸ்ரீமத் பரமவேதமார்க்கக்கியானம் ஜனித்த மாத்திரத்தில் அசுரமோஹனார்த்தமாக உண்டான அவைதிகமார்க்கத்திற் பற்றுவிட்டாற்போலத் தன்பாண மழிந்துபோனதைக்கண்ட இராவணனானவன் இருபதுகண்களிலும் தீப்பொறிகள்பறக்கப் பற்களால் வாயைமடித்துக் கடித்து, கழுகினிறகுகளை யமைத்த குரூரபாணங்களை யெடுத்து ஸ்ரீரகுநந்தனருடைய திருமேனியிலழுந்தும்படி எய்தான். தேவர்களுடைய படைகளையும் கீர்த்தியையு நாசப்படுத்தியதும், இராவணனோடெதிர்த்த வீரர்களுடைய உயிர்களைக் கொண்டுபோய் நமனுடைய வயிற்றிலிட்டு நிரப்பியதும், இந்திரனுடைய செயத்தை முழுமையுந்தொலைத்ததும், ஒருகாலத்தில் எதிர்த்தபோது தேவர்கள் தங்கள் கையிற்பற்றியிருந்த ஆயுதங்களைப் பார்த்து அவமதித்துச் சிரித்ததும், எந்தலோகங்களிலுள்ளவர்களையும் வெற்றிகொண்டு பர்வதங்களைப் பேதித்துச் சென்றதுமாகிய வந்தப்பாணமானது; பிரமனுக்கும் தெய்வமாகிய ஸ்ரீராமபிரானை நோக்கி வருவதாயது. அதை யங்கங்கேநின்று தேவர்கள் யாவரும்பார்த்து இதுலோகங்களையெல்லாம் கவளீகரிக்கும்போ லிருக்கிறதென்று நடுங்கவும், அந்நடுக்கமொழிந்து யாவரும்கல்லென்று ஆரவாரிக்கும்படி

ஸ்ரீராமச்சந்திரர் இடியின்மேல் வடவாமுகாக்கினியைப் பிரயோகித்தாற் போல அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகித்து அறுத்துத்தள்ளினார்.

இப்படி யறுத்துத்தள்ளின நொடிப்பொழுதுக்குள்ளே இராவணனானவன் உயிர்களை அபகரிக்கிற விஷயத்தில் யமன் பின்வாங்கினபோதிலும் தாம் பின்வாங்காதவைகளும், கடலினீரையெல்லாம் வற்றச் செய்பவைகளும், மேருமலையையும் தூள்தூளாக்கத் தக்கவைகளும், காற்றும் பின்செல்லும்படி முன்னே செல்லத்தக்கவைகளும், உலகங்களையெல்லாம் உருவிப்போகத் தக்கவைகளுமாகிய நூறுகோடி அம்புகளைத்தொடுத்துச் செலுத்தினான். இவ்வாறவன் செலுத்தினதைக்கண்ட முனிவர்களிற் சிலர் இந்தராவணனுக்கு என்ன கைவேகமென்பார்கள். சிலர் இவைபாணங்களல்ல மாயமாயமென்பார்கள். சிலர் இந்த அம்புகள் பாய்வதற்கு ஆகாயத்தில் இன்னமும் இடமுண்டோவென்பார்கள். சிலர் முன்னே யெல்லாம் இவ்வளவு பொல்லாதனவாகிய யுத்தத்தை இராவணன் செய்ததில்லை யென்பார்கள். இப்படிச் சொல்லிக்கொண் டிருக்கையில் சதுர்வேதங்களு மூலகாரண பரவஸ்துவென்றெடுத்துச் சொல்லப்பட்ட ஸ்ரீராமநாதனானவர் இலங்காநாயகனால் லேவப்பட்ட பாணங்கள்யாவும் கூரிலிருந்து அடிகுதைவரையு மிருபிளவாகும்படி அர்த்தசந்திர பாணங்களைச் செலுத்திப் பிளந்து தள்ளினார். அக்கால் பிரஹ்மாண்டத்துக்குள்ளே மகாதபங்களைச் செய்து வரங்களைப் பெற்றவர்களுக்குள்ளெல்லாம் சிறந்தவனாகிய தசக்கிரீவன் பலபோர்களிலும் வெற்றியொன்றுமேபெற்ற மயனால் தரப்பட்ட பாணத்தையெடுத்து, ஸ்ரீதசரத திருக்குமாரர்மேல் வில்லில் தொடுத்து விடுத்தான். அதைப் பார்த்திருந்த தேவர்களெல்லாரும் இவ்வரக்கர்குலேந்திரன் மாயாஸ்திரத்தைப் பிரயோகித்துப் பூமியைச்சுட்டு நிர்மூலப்படுத்துகின்றானே யென்று நடுக்கங்கொண்டு சுருண்டுசுருண்டு விழுந்தார்கள். வானரங்களும் வானரப்படைத் தலைவர்களும் திக்குத்திக்குகளாக ஓட்டம்பிடித்தார்கள்.

அப்போது வேதவேதியர்கள் வணங்குதற்குரிய தெய்வமாகிய ஸ்ரீரகுநந்தனர் இனிப் பூலோகத்தில் மனுஷப்பூண் டில்லாமற் செய்துவிடுகிறேனென்று வருகின்ற அந்தப் பாணத்தினுடைய சௌரியத்தை அறிந்து, காந்தர்வாஸ்திரத்தைக்கொண்டு அதனைத் துண்டங்கள் செய்துவிட்டார். அக்காலிராவணனானவன் பூர்வத்திற் பிரமனாற் படைக்கப்பட்டதும், இரணியகசிபானவன் தன்னைக்கொண்டு இந்தப் பிர்மாண்டத்தைத் தன்வசப்படுத்தினதும், மதுவென்னும் அசுரன் தன்கையிற்கொண்டு யுத்தஞ்செய்ததும், சூரபத்மனென்னும் அசுரன் முற்காலத்தில் தேவர்களை ஹதஞ்செய்ததும், மேருமலைக்குச் சமானமானதும், சூரியனைப்போன்ற ஒளிவீசுவதும், உலகத்திலுள்ள தேவமனுஷியாதிய சமஸ்தபிராணிகளும் ஒருயுககாலவரையு நின்று உருட்டினும் ஒருசுற்று முருளாத கனமுள்ளதும், அநேக தேவர்களுடைய சிரங்களை உருட்டியதும், சமுத்திரஜலத்தைப் பானம்பண்ணின அகஸ்திய

ராற் கொடுக்கப்பட்டதுமாகிய கதாயுதமானது நம்மிடத்து உண்டல்லவா? அதையெறிந்து இந்தராமனுடைய உயிரைவாங்குவோமென் றுத்தேசித்தெடுத்துச்சுற்றி எறிந்தான். அந்தத் தண்டானது ஆகாயத்தில் ஆதித்தனைப்போல ஒளிவீசிக்கொண்டு வருவதால் இதுபட்டுக் குடம்போன்ற அண்டமானது உடைந்துவிடுமோவென்று சுவர்க்கவாசிகள் யாவரும் திடுக்கிடவும்-ஸ்ரீராமநாதனுடைய யுத்தத்தைக்கண்டு சேவிக்கும்படி வந்திருந்த சகலதேவர்களும் இருந்தவிடம் தெரியாம லோடிப்போகவும் — மந்தரமலையானது அதனுடைய வேகத்தையுணர்ந்து தன்னையெடுத்துப்போகக் கருடபகவான் மறுபடியும் வருகிறுரோவென்று பயப்படவும் வருவதாயது. அப்படி வருகின்றதை ஸ்ரீராமச்சந்திரசுவாமியானவர் கடாக்ஷித்து, தேவர்களுக்கரசன் தன்னுயிரங் கண்களாலும் பார்த்து அளவுசெய்யப்படாத தாமரைமொட்டம்பைச் செலுத்தி நூறுதுண்டுகளாகத் துண்டித்து உதிர்த்துவிட்டார்.

அதுபார்த்த இராவணன் நம்முடைய தனுர்வேத வித்தியாசாதுரியத்துக்கு முன்னே இந்தராமனுடைய வித்தியாகியானத்தைப் பார்த்தால், இவனையொரு சிறுகுழந்தையென்றே எண்ணவேண்டும். பேயைப்போல யாதொரு பயனும்படாத அற்பஆயுதங்களை நாம் எய்வதினுல் இந்தராமனும் அவைகளைத் துண்டித்து, தான் தெரிந்துகொண்ட வில்யுத்தத் திறமையைக் காட்டுகின்றுன். ஆதலால் அப்படிப்பட்ட ஆயுதங்களை எய்வதினுற் பயனென்றுமில்லையென்று தனக்குள்ளே யோசித்துக்கொண்டு, இந்தமனுஷியனும் - இவனுக்குத் துணையாகிய பெருஞ்சேனைகளும் — இதனுல்தான் மடிவார்களென்று மாயாஸ்திரத்தை எடுத்துப் பிரயோகிப்பே னென்று யோசித்தான்.

இராவணன் இராமசுவாமியின்மேல் மாயாஸ்திரத்தை விடுத்தல்.

கவி.

பூசனைத்தொழில்புரிந்துதான் முறைமையிற்போற்றும்
ஈசனைத்தொழு திருடியுஞ்சந்தமுமெண்ணி
ஆசைபத்தினு மந்தரப்பரப்பினுமடங்கா
வீசினன்செல வில்லிடைத்தொடைகொடுவிட்டான்.

இந்தப்பிரகாரமாக யோசனைசெய்து அம்மாயாஸ்திரத்தைக் கையிலெடுத்து அதற்குப் பத்திரபுஷ்ப தூபதீப நைவேத்ய சத்ரசாமர பாத்தியாசமனுதிய முதலானவற்றையும் மனசாபத்தியாற் கொடுத்து, தன் உபாசனுமூர்த்தியாகிய சாக்ஷாது பரமசிவனை அதிவிநய பயபக்தியோடு சிவாகமத்திற்கூறும் விதிப்படி தியானித்துத் தொழுது, அம்மாயாஸ்திரத்திற் கதிதேவதையாகிய இரிஷியையும் - மந்திரத்தையும் — மனதிலெண்ணி, அதனைப் பத்துத்திக்கிலும் ஆகாயப்பரப்பிலும் அடங்காதவண்ணமாக வில்லில்தொடுத்து, அப்பிராகிருதராகிய ஸ்ரீராமன்மேற் பிரயோகித்தான். இப்படியிராவணன் மாயாஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்த மாத்திரத்தில் அந்த அஸ்திரத்தினது மாயாசத்தி

யால் முன்னேமடிந்துபோன இராக்ஷச வீரர்களெல்லாம் ஆகாயத்தை யளாவும்படியான உடலோடு ஆயுளைப்பெற்று உயிர்த்தெழுந்தார்களென்னும்படி எங்கும் அரக்கர்களாய்நின்று ஆரவாரித்தார்கள்.

அஃதெப்படியென்றால் - இந்திரசித்துவும், அவனுக்கிளையோர்களாகிய அதிகாயனும், கும்பனும், நிகும்பனும், படைத்தலைவனாகிய மகாராக்ஷசனும், பிரகஸ்தனும், குருதிக்கண்ணனும், புகைக்கண்ணனும், வன்னியும், மற்றவர்களும், மகோதரனாதி மற்றமந்திரிகளும், மூலபல ராட்சசர்களும், இரதகஜதுரகபதாதிகளு மவ்விடத்தில் வந்துநின்று, மேகங்கள் சிந்தும்படி கோவென்று பேரிரைச்சலிட்டார்கள். ஸ்ரீராமபாணத்தால் உயிர்மாய்ந்துபோனவை ஆயிரவெள்ளமென்றுஅறிவுடையோராலே சொல்லப்பட்டஅவ்வளவுசேனைகளும் இராவணன் சாக்ஷாது ஸ்ரீஉருத்திரபகவா னிடத்திற்பெற்ற வரத்தால் உயிர்பிழைத் தெழுந்தனவோவென்று கண்டோர் சொல்லும்படி உயுத்தகளமுழுமையு நிறைந்துவந்து நின்று, தேவர்களுமுனிவர்களும் பயந்தோடும்படியாக முன்னே ஜெயித்தது எங்களைத்தானே? நாங்களிறந்துபோவதுமுண்டோ? அப்படி யிறந்துபோனதை இன்றைக்குக் காட்டுகிறோம். ஓ இராமா! ஓ இலட்சுமணா! ஓ சுக்கிரீவா! ஓ சாம்பவா! ஓ அனுமானே! உயுத்தத்துக்கு வாருங்கோள்: விரைவில் வாருங்கோள்: என்று தங்களைக் கொலைசெய்த வீரர்களுடைய பெயர்களையிட்டு அழைத்தன. பூமியை வேரோடு பேர்த்தெடுத்துக்கொண் டெழுந்தன வென்னும்படியான தோற்றத்தையுடைய பூதகணங்கள் பர்வதராசிகளைப்போல் ஒருபக்கத்திற் காணப்பட்டன. முதலையின் உருவம்போல விளங்குகின்ற வளைந்தகுண்டலங்கள் காதுகளிலே பிரகாசிக்கும்படிப் பேய்க்கூட்டங்கள் ஆகாயத்தினில் சிறிதிடமு மில்லையென்று சொல்லும்படியாகக் காணப்பட்டன.

இந்தச்சமூகங்களையும் அவைகள்செய்யும் பயங்கர கிருத்தியங்களையும் கண்ட ஸ்ரீமகாலட்சுமிநாயகராகிய ஸ்ரீராமபிரானானவர் மாதலியைப்பார்த்து; ஓ தேவசாரதி! இங்கே தோன்றுகின்ற இவைகளெல்லா மாயத்தினாலுண்டாயினவோ? இறந்தராக்ஷசர்களும், அவர்கள்சேனைகளும், விதியினுடைய பலத்தால் உயிர்பிழைத் தெழுந்தார்களோ? பிரஹம்மேந்திராதிகளிடத்தில் தாங்கள் பெற்றிருந்த வரங்களினால் உயிர்பெற்றார்களோ? அல்லது பிழைத்தெழுந்ததற்கு வேறே ஏதுவுமுண்டோ? எனக்கு ஒன்றுந்தோன்றவில்லை. உனக்குள் ஆலோசித்துச் சொல்லக் கூடுமானால் சொல்லக் கடவாயென்று சொல்லினர்.

அதுகேட்ட மாதலியானவ னவரைப்பார்த்து, ஓ சூல்கொண்ட காளமேகம்போலத் திருமேனியையுடைய மாயப்பிரானே! இரும்புத்தொழில் செய்வதில் தேர்ச்சியுள்ள கருமானிடத்தில் ஒருவன் நூல்கோத்துத்தைக்கும் சிறூசி ஒருபொன்னுக்குக்கொள்கவென்று விலைகூறிவிற்பதுபோல, இராவணனவன் மற்றெவராலு நீக்குதல்கூடாத மாயாஸ்திரத்தைப்பிரயோகித்தான்.

அஃதுகூர்மையுள்ள வெண்பற்களையுடைய அரவின்விஷத்தை உமதுநாமத்தி னாயமாகிய அச்சுத — அநந்த — கோவிந்த — என்னும் திருமந்திரங்களைப் பிரணவசகிதமாக உச்சரித்து அடக்கியதுபோலவும், துஷ்கர்மவியாதிகளையும் அந்தநோய்க்குக் காரணமாகிய வினையையும் உமது திருநாமத்தையோதி ஒழிப்பதுபோலவும், தேவதாந்தரங்களையறிந்து மூவகைப்பற்றுவிட்டு நின்னையே பரவஸ்துவென உண்மைஞானம்பிறந்து நினைக்கும் பரமவைதீகிகளுடைய பிறப்பு ஒழிவதுபோலவும், இதோ உம்முடைய பாணப்பிரயோகத்தால் ஒழிந்துவிடப்போகிறது. இங்கே தோன்றுகின்ற எல்லாமும் தசக்கிரீவன் பிரமேந்திராதிகளிடத்திற் பெற்ற வரத்தினாலேயாவது, மாயையினாலேயாவது, தனது தவபலத்தினாலேயாவது, அல்லது யதார்த்தத்தினாலேயாவது உண்டானவைகளா யிருந்தபோதிலும் இருக்கட்டும்: நீர் ஞானாஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்வீரென்று சொன்னான்.

ஸ்ரீராமர் ஞானாஸ்திரத்தைப்பிரயோகித்து இராவணன்விட்ட மாயாஸ்திரத்தை அதஞ்செய்தல்.

கவி.

துறத்தலாற்றறு ஞானமாங்கடுங்கணை தொடர
அறத்தலாதுசெல் லாதுநல்லறிவுவந் தணுகப்
பிறத்தலாற்றறு பேதைமைபிணிப்புறத் தம்மை
மறத்தலாற்றந்த மாயையின்மாய்ந்ததம் மாயம்.

இப்படி மாதலிசொன்னமாத்திரத்தில் சகலவேதங்களும் சிரசினால் வணங்கவும் தேடவும் எட்டப்படாத பரம்பொருளாகிய தாசரதியானவர் யானெனதென்னும் அகப்பற்றையும் புறப்பற்றையும் ஒழிப்பதற்கேதுவாகிய ஞானமய அஸ்திரத்தை விட்டனர். அந்தஞானாஸ்திரமானது புறப்படவும் இராவணனால்விடப்பட்ட மாயாஸ்திரமானது ஜனனத்துக்கேதுவாகிய அஞ்ஞானத்தாற் கவியப்பட்டு ஸ்வரூபஞ்ஞானமில்லாமற் செய்துகொண் டிருக்கும் வியாபாரங்களெல்லாம் ஸ்வரூபஞ்ஞானம் பிறந்தமாத்திரத்தில் ஒழிந்துவிடுவதுபோல ஒழிந்துபோய்விட்டது. அந்தரமார்க்கத்தில் காளகண்டராகிய சங்கரமூர்த்தியும் — சக்கரதரராகிய உபேந்திர விஷ்ணுமூர்த்தியும் — சதுர்முகப்பிரஹம்ம மூர்த்தியும் — இராவணன் முதலிற்பெற்ற வரமுதலானவைகளையெல்லாம் ஆலோசித்து, இன்றோடே தேவகண்டகர்களாகிய இராக்ஷசர்களை உயிரோடு முடிக்கின்றகால மிதுதானென்று எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

அந்தத் திரிமூர்த்திகளுடைய கண்களுக்கு முன்னேதானே சமஸ்ததேவர்களையும் வலியடங்கச்செய்யும் பிரதாபலங்கேசுரனானவன் தானெய்த மாயாஸ்திரமானது ஹதமாய்ப்போனதைக் கண்டு, ஆயிரமுனிகள் கட்டிக்கோஷிப்பதும் — தேவர்கள் கண்டால் வியாகுலமடைந்து நடுங்குவதுமாகிய சூலத்தை எடுத்து, சிருட்டிக்கப்பட்ட எல்லாவுயிர்களையும் சுட்டெரிக்கும்

வலியுடையதென்று எண்ணி இமைகொட்டுமுன்னேஎய்தான். அந்தச் சூலா யுதமானது வடவாமுகாக்கினியும் வெப்பங்குறையவும் — தேவர்களும் வா னரங்களும் பயந்தோடவும் உலகமெங்கும் தனதொளியேவிரியும்படி மூன்று தலைகளிலும் சுவாலைகளை வீசிக்கொண்டு தடைபட்டு நில்லாமல், நயனகோச ரத்துக்கும் எட்டப்படாத வேகமுடையதாய் வருவதாயது. அதைப்பிரஹம் மேந்திராதிகள் கண்டு, ஓ தீனர்களுக்கு அபயப்பிரதானங்கொடுக்கின்ற சா னகிரமணா! இராவணனிந்தச் சூலத்தைச்செல்லக்கடவாயென்று அபிமந்திரித் துவிட்டான். இந்த ஆயுதத்தை நாசப்படுத்த உமக்கே சக்தியுண்டு. எங்களி லொருவருக்கும் அடங்கமாட்டாது. மிகவுங்கூர்மையாகிய குரூரசூலமென் னுங் கூற்றுவனைச் சீக்கிரத்தில் துண்டித்துவிடும்: துண்டித்துவிடும்: என்று வெகுதுக்கத்தோடு பிரார்த்தித்தார்கள்.

இப்படி தேவர்கள்செய்த பிரார்த்தனையைக் கேட்டருளிய ஸ்ரீராமசுவா மியானவர் சிறந்த இடியும் திடுக்கிடும் படியாயும், பிரசண்டமாருதம்போல அ திவேகமாய்ச் செல்லும்படியாயும், சௌரியமான சில அம்புகளைப் பிரயோகி த்தனர். அந்த அம்புகளெல்லாம் இராவணனுடைய சூலத்தை ஒன்றுஞ்செய் யமாட்டாமல் பரமபாகவதர்களைக்குறித்து ஆலோசியாமல் சிலர்செய்யுந்தீய கிருத்தியங்கள்பயன்படாமற் போவதுபோல நிஷ்பிரயோசனப்பட்டன. அது கண்ட சுவாமியானவர் தேவதாஸ்திரங்களை ஓயாமல் எய்தும் அவற்றையெல் லா மிலக்ஷியம் பண்ணாமல் பிரஹம்ம சாபத்தைப்போல வருகின்ற சூலத்தின து வலியைக்கண்டு, அதைத் தடுக்கவேண்டிய செய்கை இன்னதென்று அறி யாதவர்கள் போலத்தோன்றிச் சும்மாநின்றார். சமஸ்ததேவஜனங்களும் ஸ்ரீ ராமச்சந்திரரானவர் சூலத்தைத் தடுக்கவேண்டியதைப்பற்றி நினையாத வராய் ஒன்றுஞ் செய்யாமல் இருக்கின்றாரே யென்று பயந்தனர்கள். தரும தேவதையுமஞ்சித் தலைகுலைந்தது. மற்ற எல்லோரும் அச்சமுற்றார்கள். இப் படியாவரும் தம்முடைய யதார்த்த நிலையை அறியாதபடி மனுஷியனாகப் பி றந்த ஸ்ரீராமபிரானானவர் பார்த்துக்கொண் டிருக்கையில் சுவாமி யெதிரில் வந்தது.

இராவணன்விட்ட சூலாயுதம் ஸ்ரீராமர்செய்த ஊங்காரத்தால் பொடியாதல்.

கவி.

சங்காரத்தாற் கண்டையொலிப்பத் தழல்சிந்தப்
பொங்காரத்தான் மார்பெதிரோடிப் புகலோடும்
வெங்காரத்தான் முற்றுமுனிந்தான் வெகுளிப்பே
ருங்காரத்தா னுக்கதுபன்னூ றுதிராகி.

அந்தச் சூலமானது கூட்டமாகிய மணியாரத்தால் ஒலியதிகரித்துக்கொ ண்டு அக்கினிப்பொறிபறக்கச் சுவாமியினுடைய சந்தனமணிந்த திருமார்புக் கெதிரோடி உருவிச்செல்வதாய் வந்தபோது அதிகோபங்கொண்டுஉங்காரஞ் செய்தனர். அந்த உங்காரத் தொனியால் அச்சூலமானது பற்பலபொடிகளா க நொறுங்கிவிட்டது.

இப்படி சூலமானது பொடிப்பொடியாக நொறுங்கிவிட்டதைக் கண்ட தேவர்களெல்லாம் போனவுயிர் வந்தவர்களாகி, சிறிதும் அச்சமில்லாமல் ஆநந்தபரவசங்கொண்டு ஆரவாரித்தார்கள். ஆரவாரித்துக்கொண்டே கற்பகமலர்களை வாரிவாரிச்சுவாமியின்மேலே இறைத்தார்கள். சிலர் பூமாரிபொழிதலை மறந்து துள்ளித்துள்ளிக்குதித்தார்கள். பின்னங்கிருந்தபடியே தெண்டன்சமர்ப்பித்து, இந்தமஹாசூலத்தினது பலத்தைக்குன்றச்செய்ய வல்லவர்நீரேயல்லாமல் வேறொருவருமுண்டோ? சாதுசனங்களாகிய எங்களுக்குத்துஷ்டர்களால்நேரிடுகிற துக்கங்களையெல்லாம் தடுக்க பகைவர்கட்குத் தீயைப்போல நின்று ஒழிப்பவரு நீரேயென்று துதித்துக்கொண் டிருந்தார்கள். இப்படியிருக்க—இனிச் செயமென்பது நம்முடைய பட்சத்திலென்று உச்சாகத்தோடு இராவணன்விட்ட சூலமானது அழிந்தாலல்லாமல் நம்மைவிட்டுப் பேரமாட்டாதென்று உணர்ந்து ஸ்ரீ ராமநாதரானவர் உங்காரஞ்செய்துபொடிப்பொடியாய்ச் செய்துவிட்டதை அவன்கண்டு திப்பிரமையாய் அசைவற்றுநின்று, அந்நாளிலே விபீஷணாழ்வானவன் சொன்னது தனக்குஞாபகத்துக்கு வந்தது.

இராவணன் விபீஷணர் கூறிய இராமமூர்த்தியினது மகத்துவத்தை யெண்ணல்.

கவி.

சிவனோவல்ல னான்முகனல்லன் றிருமாலாம்
அவனோவல்லன் மெய்வரமெல்லா மடுகின்றான்
தவனோவென்னிற் செய்துமுடிக்குந் தரமல்லன்
இவனோதானவ் வேதமுதற்கா ரணனென்றான்.

நாம் மஹாதபங்களைச்செய்து பெற்ற ஒருகாலத்திலு மழியாத வரங்களையெல்லாம் இந்த ஸ்ரீராமன் பாணப்பிரயோகம்பண்ணிஅநாயாசமாகவே அழிக்கின்றான். ஆதலால் இவன் நம்முடைய குலதெய்வமாகிய சாட்சாது உருத்திரனும், பிரமனும், விஷ்ணுவும் அல்லன். ஆனால் நாம்பெற்றுள்ள வரங்களையெல்லாம் அழிக்கும் வல்லமையுடையவனா யிருக்கின்றான். ஒருவேளை மகாதபசிகளில் சிரேஷ்டனா யிருப்பானோ? அப்படி தவமுடையோனென்றால், நம்மைக்கொன்று முடிப்பதற்கு இவனருகனாகான், பிறகு இவன் யாராயிருப்பானெனில், சகலவேதவேதங்களாலும் சொல்லப்பட்ட முதற்காரண வஸ்துவென்று தீர்மானஞ் செய்துகொண்டான்.

அந்தத் தீர்மானத்தை உடனேவிட்டுத் தன்னுடைய உன்மத்த சுபாவத்தால் யாரேயானபோதிலும் ஆகட்டும். என்னுடைய ஒப்பற்றபெயரொன்று நின்றுஎந்தப்புவனங்களிலுமுள்ள சுத்தவீரர்களையெல்லாம்அழும்படிச்செய்து எனக்குமகாஜெயத்தைத்தருகின்றது. இப்படிப்பட்டகீர்த்தியைப்பெற்றிருக்கின்றேன்.இப்பொழுதுஎனக்குநேரேவந்தமூலகாரணப்பொருளினவதார

மாகிய ஸ்ரீராமபிரான் என்னைக் கொன்றபோதிலும், எல்லாருடைய உயர்ந்த கீர்த்திகளுக்குள்ளும் தலைமைபெற்ற கீர்த்தி எனக்குச்சாஸ்வதமாக இருக்குமென்று திடங்கொண்டவனாய் தென்மேற்குத் திசைப்பாலகனாகிய நிருதியினுடைய வெற்றியுள்ள நாகக்கணையை நினைத்தமாத்திரத்தில் அது வந்து சேர்ந்தது. அதையிராவணன் கையிற்கொண்டு, எமனுடையவிருதையும் அழிக்கவல்ல வில்லிலே தொடுத்து, உலகமுழுமையு நடுங்கும் படியாயும் — இருபதுகண்களினும் தீச்சொரியும்படியாயுமெய்தான். இப்படி யிராவணனெய்த நாகாஸ்திரமானது பூமியைச் சுமக்கின்ற பிடரையுடைய ஆதிசேஷனு மனமஞ்சும்படியாய் கோடிபடங்களைவிரித்து, அவ்வளவுதலைகளை உயரத்தூக்கி, ஆழ்ந்து விசாலமாகிய வாய்களைத் திறந்துகொண்டு, மேருமலையும் சிறியதென்று சொல்லும்படி ஆகாயமுழுமையும் வியாபித்த தேகத்தை யுடையதாகி, தன்னுடைய எல்லாவாய்களிலும் சமுத்திரசலம்போல விஷங்கள் ஒழுகவும்—கண்களில் தீப்பொறிகள் சிந்தவும்—பேய்களின் வாய்களைப்போன்ற வாய்களிலுள்ள வெள்ளைப்பற்கள் எங்கும் பிரகாசிக்கவும் வருவதாயது.

இப்படி நாகாஸ்திரம் வருவதைக்கண்ட லோகத்தார் யாவரும் இந்தக் கொடிய சர்ப்பபாணமானது நம்முடைய ஐயனாகிய ஸ்ரீராமபிரானைத் தீண்டாமல் திரும்பமாட்டாதென்றும், இவ்வளவிலே நில்லாமல் பூமியையும் கடலையும் விழுங்கிக் குடியாமற்போகாதென்றும், தயை தாக்ஷணியம் சிறிதுமில்லாத குரூரனாகிய தசமுகன் இந்தச் சர்ப்பக்கணையை விட்டுச் சராசரப்பொருள்களை யெல்லாம் இப்பொழுதே நாசமாக்கிச் சாம்பலாகச் செய்யும்படி உத்தேசித்தானென்றும் சொல்லிக்கொண்டு தடுமாறிக் கலங்கிக்கொண்டிருக்கையில்; அந்தச் சர்ப்பாஸ்திரமானது எங்கும்பாம்புகளாய் உயர்ந்த மலைகளைக் கவ்விக்கொண்டு வருவதாயது. அதை ஸ்ரீரகுநந்தனர் கண்டு, இது எந்தப்பக்கங்களிலும் பரவிவருகின்றபடியால் யாவருக்கும் பயத்தைத்தருவதா யிருக்கின்றதென்று திருவுளத்தில் நினைத்து, தப்பாமல் ஜெயத்தைத் தருவதாகிய கருடாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகித்தார். இராவணனெய்த நாகாஸ்திரமானது எப்படிப் பலபலவுருவங்கொண்டு வேகமாய் வந்ததோ? அப்படியே இந்தக் கருடாஸ்திரமானது பொன்மயமாகிய மூக்கும் - நகங்களும்- சிறைகளுமுடைய அனந்த கருடப்பறவைகளாகி, காற்றைப்போலச் சிறைகளைவிசிறி அதிகவேகமாக ஆகாயமுழுமையும் வியாபித்தது.

இப்படி எங்கும் வியாபித்துப் பறக்கின்ற கருடப்பறவைகள் வாய்கள்தோறும் கோபத்தினால் அக்கினிகளைக் கக்கிக்கொண்டு விளங்குவதினால், இலங்காநகரம் சாம்பராய்ப் போகும்படி தீயையிடுகிறோமென்று தனித்தனி ஆகாயத்தில் விளக்குகளை யெடுத்துச் செல்வதுபோ லிருந்தன. கிரணங்களை விரிக்கின்ற இரத்தின ராசியாற் செய்தாற்போன்ற உருவத்தையுடைய அந்தக் கருடப்பட்சிகள், தாமரைத்தண்டுகளை அங்கங்கு கவர்ந்துகொண்டு எழுந்தாற்போலச் சர்ப்பங்களைக் கால்நகங்களால் இடுக்கிக்கொண்டு வாய்களால்

விழுங்கிவிட்டன. அப்போ திராட்சசகுல நாயகனுனவன் அக்கினிச் சுவாலையைப்போல் வீசுகின்ற சுவாசம் விட்டுக்கொண்டு கோபமுடையவனுய்க் கொதிகொதித்து, சுவர்க்கமும் பூமியு நிலைபேரும்படி இடிகளையொத்த பாணங்களை அநேகமாகத் தூவினுன். அதன்மேல் ஸ்ரீரகுகுல நாயகரானவரெய்த அம்புகள் இராவண பாணங்களைப் பொடிப்பொடியாய்விழத் துண்டித்துத் தள்ளியும் வேகமடங்காமல், தசக்கிரீவனுடைய மார்பில் அடிக்குதையும் தோன்ருதபடி தைத்துநின்றன.

இப்படிச் சமயுத்த நடக்குங்காலத்தில் திரிநேத்திர காளகண்டருடைய வெள்ளிமலையைப் பேர்த்தெடுத்த பராக்கிரம சாலியாகிய இராவணனுக்கு ஸ்ரீராமபாணப் பிரயோகத்தால்புத்திமயங்கி,தான்கற்றிருந்த தனுர்வேத வித்தையும் — மந்திரவித்தையுமறந்துபோகத் தலைப்பட்டன. தருமதேவதைக்குச் சம்ரக்ஷணகர்த்தாவாகிய ஸ்ரீராமபிரானுக்குப் பராக்கிரமும் வீரமும் அதிகரித்தன.

ஸ்ரீராமர் இராவணனுடைய பத்துத்தலைகளில் தமதுபாணத்தால் ஒருதலையும் ஒருகையும் கண்டித்தலும் மறுபடி முளைத்தலும்.

கவி.

வேதியர்வேதத்து மெய்யன்வெய்யவர்க்
காதியனனுகிய வற்றநோக்கினுன்
சாதியினிமிர்ந்ததோர் தலையைத்தள்ளினுன்
பாதியின்மதிமுகப் பகழியொன்றினுல்.

பிராமணுேத்தமர்களா லத்தியயனஞ் செய்யப்பட்ட நான்குவேதத்திலு மெய்ப்பொருளாய் விளங்கும் ஸ்ரீயப்பதியவதாரமாகிய இரகுபுங்கவ மூர்த்தியானவர்கொடிய இராக்கதர் கூட்டங்களுக்குத்தலைவனுகிய இராவணனுடைய நிலைமையையறிந்து அவனதுகூட்டமாகிய தலைகளில்உயர்ந்த ஒருதலையை அர்த்தசந்திர பாணமொன்றினுல் கண்டித்துக் கீழேவீழ்த்தினுர். பூர்வத்திலே மேருமலையின் சிகரங்களிலொன்றை வாயுபகவானுனவர் மோதியறைந்தபோது அந்தச்சிகரமானது சென்றுகடலில் விழுந்ததுபோல, ஸ்ரீராமபாணத்தால் அறுபட்ட தலையானது நெருப்பைக் கக்கிக்கொண்டுபோய்ச் சமுத்திரத்தில் விழுந்து அமிழ்ந்தது. பார்த்திருந்த தேவர்களெல்லாம் பூமியில் இறங்கிவந்து, இலங்கைமலையானது நெக்குவிடும்படி மிதித்துக் குதித்து ஸ்ரீராமபிரானைத் துதித்துப்பாடி, உடுத்தியிருந்த வஸ்திரங்களை ஆகாயத்தில் விசிறியெறிந்து துள்ளித்துள்ளி யாடினுர்கள்.

கவி.

இறந்ததோருயிருடன் றருமத்தீட்டினுல்
பிறந்துளதாமெனப் பெயர்த்துமோர்தலை
மறந்திலதெழுந்தது மடித்தவாயது
சிறந்ததுதவமலாற் செயலுண்டாகுமோ.

தேகத்தைவிட்டுக்கழிந்த உயிரானது முன்செய்ததருமப்பயனால் அத்தேகத்தையே அடைந்தாற்போல,மறுபடியும் அறுந்ததலைக்குப்பதிலாகமகாகோபத்தோடு வாயைமடித்துக்கொண்டு அவ்விடத்திலேயே ஒருதலைமுளைத்தது. ஆகையால் எவற்றினும்சிறந்தது தவமேயல்லாமல் வேறுசெய்கையு முண்டோ?

இப்படி யறுபட்ட தலையானது அறுபடவில்லையென்னும்படி முளைத்து அழிவில்லாத பேரின்பச்செல்வனாகிய ஸ்ரீகோதண்ட தீக்ஷாகுருவை இடிபோலமுழங்கித் துர்ப்பாஷணங்களால் தூஷணித்து அதட்டினது. மேருமலைச்சிகரம் துண்டிக்கப்பட்டு விழுந்தாற்போல, அதிவேகமாய்ச்சென்று விழுந்து தன்னுடைய வாயிலும் — செவித்தொளையிலும் - மூக்குத் துவாரத்திலும் - கடலினது நீரையெல்லாம் அடக்கிக்கொண்டு ஆலகாலவிஷம்போலச் சுவாலையைவீசுகின்ற விழிகள் பிதுங்கித் தோன்றும்படிகிடந்த தலையும், வீராவேசத்தாலே மேகங் குமுறுவதுபோலக் கர்ச்சித்தது. அப்போதிராவணன் எப்படிப்பட்ட தேவர்களோடும் இதுவரையும் ஜெயமே பெற்றுவந்த நம்முடைய தலைகளிலொன்றை இந்த ஸ்ரீராமன் அறுத்துத் தள்ளினனல்லவாவென்று கோபவெறிகொண்டு, நெடுங்கணக்கினுள் சிறப்பாகச் சொல்லப்பட்ட உயிரெழுத்துகளில் செயற்கையா லல்லாமல் இயற்கையாகவே நாதமாத்திரையாய்நின்ற அகாரத்துக்குப் பொருளாயுள்ள ஸ்ரீராகவபிரானுடைய திருத்தோள்களில் பதினன்கு அம்புகளை இடியானது நம்மைப்போல வேறோரிடியு முண்டோவென்று சந்தேகிக்கும்படியாக ஆரவாரித்து எய்தான். நீசனாகிய ராவணனுக்குத் தலையறுந்தால் மறுபடியு மத்தலையை முளைப்பிக்கும் தவமும் உண்டாயிருப்பதைச் சக்கரதரனாகிய ஸ்ரீராமபிரானானவர் அறிந்து, வில்லைத்தாங்கியிருந்த அவனுடைய கைகளிலொன்றைப் பிறைமுக அம்பினால் அறுத்துத் தரையில்விழச்செய்தார்.

சுவாமியினுடைய அர்த்தசந்திர பாணம்பட்டு அறுந்துவிழுந்த கை வில்லைப்பற்றியபடியே கிடந்தது. அக்கையான தறுந்தவிடத்தில் மற்றொருகை முன்னேதானே யிருந்ததுபோல ஒருகை உடனே முளைத்தெழுந்ததை அறிந்தவர்களுமுண்டோ? ஒருவருமில்லை. அவ்வளவு விரைவிலேபிறந்தது. முன்பாரிசத்தில் முள்ளுகளைப்போல மயிர்கள் அடர்ந்து முளைத்திருப்பதும் — மின்னற்கொடியைப் பிடித்திருப்பதுபோல வில்லைப்பிடித்திருப்பதுமாகிய அவ்வறுந்தகையை மகாபாபிஷ்டனாகிய இராவணனெடுத்து, பொன்னாற்செய்த கடிவாளத்தைப்பிடித்துத் தேரைச்செலுத்திக்கொண் டிருக்கு மாதலியினுடைய உயிரைமாய்க்கவேண்டுமென் றெண்ணங்கொண் டெறிந்தான். எறிந்த அந்தக்கையானது வேகமாய்வந்து மார்பிற்பட்டமாத்திரத்தில் ஒருகாலத்திலும் சலியாத மாதலியானவன் மனதிடங்குலைகுலைந்து, வாயாற்குபுகுபென்று உதிரத்தைக் கக்கினன். தன்னுடைய பந்துக்களாகிய அரக்கர்களைப்போலவே பெற்றுக்கொண்ட தவத்தையுடையவனா யிருந்தபோதிலும் அவ்வரக்கர்களிலும் விசேஷிக்கியனென்று சொல்லும்படி காமரமென்னு

மிசையைப்பாடி ஸ்ரீகயிலாசபதியாகிய உருத்திரபகவானிடத்தில் அவர் கையிற்பிடித்திருந்த வாளைப் பெற்றுக்கொண்ட இராவணனானவன் தானெறிந்த கையானது மார்பிற்பட்டு உதிரத்தைக் கக்கிக்கொண்டுவருந்துகின்ற மாதலியினுடைய நிலைமையைக்கண்டு, இவன் பிராணனைவாங்க இதுவே நல்ல சமயமென்றறிந்து தோமரமென்னும் ஆயுதத்தைச்சுழற்றி எறிந்தான்.

இப்படி மாதலியினுடைய உயிர்வாழ்க்கையானது இன்றோடுமுடிந்ததென்று தேவசமூஹங்கள் சிதறியோடும்படி இராவணனெறிந்த தோமராயுதத்தின்மேல் தீனரக்ஷகனாகிய ஸ்ரீகாகுஸ்தகுலநாயகர் பஞ்சமுகாஸ்திரத்தைப் பிரயோகித்தனர். அந்த அஸ்திரத்தால் தோமரமானது பொடிப்பொடியா யுதிர்ந்துபோயினது. அப்பால் சர்வஜ்ஞமூர்த்தியும் சர்வலோக நாயகனுமாகிய ஸ்ரீராமபிரானானவர் தனுர்வேதத்திற்சொல்லிய விதிப்பிரகாரம்சென்று, நிச்சயமாகச் சிறிதும் ஓய்வடையாமல் வியாபிக்கும்படி அபரிமிதமாக அம்புகளை எய்து தமதுதிருக்கரத்தின் சாதுரியத்தைக் காட்டத்தலைப்பட்டார்.

ஸ்ரீராமபிரான் இராவணனுடைய தலைகளைக்கண்டிக்க அவை மீண்டு மீண்டுமுளைத்தல்.

கவி.

நீர்த்தரங்கங்க டோறுநிலந்தொறும்
சீர்த்தமால்வரை தோறுந்திசைதொறும்
பார்த்தபார்த்த விடந்தொறும்பற்றலை
ஆர்த்துவீழ்ந்த தசனிகார்வீழ்ந்தென.

இந்தப்பிரகாரம் ஸ்ரீராமபாணங்கள் பாய்வதினால் சமுத்திரத்திலும், சமுத்திர அலைகளிலும், பூமியிலும், மலைகளிலும், நாலுதிக்குகளிலும், மற்றும் கண்டகண்ட இடங்களிலும், இராவணனுடைய பலபலதலைகள் இடிகள்விழுவதுபோல விழத்தலைப்பட்டன. பர்வதங்களின்மேற்போய் விழுகின்ற தலைகள் அந்தப்பர்வதங்கள் பிளவுபட்டு சாயும்படிவிழும். அறுபட்டு ஆகாயத்தின்மேற் பாய்கின்றதலைகள் அங்குநின்ற தேவர்களைக்கலைந்தோடும்படிப் பாயும். கடலிற்போய்ச் சிதறுகின்ற தலைகள் அந்நீரில் சுறாமுதலிய மச்சங்கள் உலாவுவதற்கு நீரில்லாதபடி ஜலமெல்லாம் செவித்தொளையிலும், மூக்குத்தொளையிலும், வாயிலுமடங்கிப்போம்படிச் சிதறும்.

ஒருவன் நெடுநாளாகத்தேடிய புண்ணியங்களெல்லாம் பரமவைதீக சுத்த சாத்விகர்க ளிடத்தில் அபசாரப்பட்ட காரணத்தாற் கட்டறஒழிந்துபோனபின், ஜெயவீரபிரதாபங்களெல்லா நீங்கிப்போய் அபகீர்த்தி முதலியவைகள் அவனைச் சூழ்ந்துகொள்ளுமல்லவா? அதுபோலவே இந்த ராவணன் ஸ்ரீசர்வேசுரனுடைய தாசபூதர்களாகிய தேவர்கள் பக்கலிலும், பரமமுனிவர்கள் பக்கலிலும், சர்வலோக சரணியாகிய பிராட்டியார் பக்கலிலும் அபசாரப்பட்ட காரணத்தால் ஸ்ரீராமபாணமானது தனது தலைகளைத் துண்டித்துத்தள்ளவே முன்பு இந்தப் பாபிஷ்டனுக்குப் பயந்து ஒடுங்கி வணங்கிக்

கொண்டிருந்த பிசாசங்களெல்லாம் உதிர்ந்து கிடக்கின்ற தலைகளைப்பொறுக்கி எடுத்துக்கொண்டு அந்தத்தலைகளிலுள்ள கண்களைத் தோண்டித்தோண்டித்தின்னத் தலைப்பட்டன. இப்படிச் சகலசேதனுசேதன ஸ்வரூபராகிய சுவாமியானவர் தலைகளை யறுத்தறுத்துத் தள்ளிக்கொண் டிருக்கையிலேயே தானே முளைத்துக்கொண்டே யிருக்கின்ற தலைகளையுடைய இராவணன் தனது இருபது தோள்களாலும் வாள் - வேல் — உலக்கை - வச்சிரம் - தண்டம் - கோடரிமுதலிய ஆயுதங்களை வாரி வாரி, ஸ்ரீராகவபிரானுடைய மார்பின்மேல் விட்டெறிந்தான்.

இப்படிப் பலவாயுதங்களை இராவணன்விட் டெறியும்போது சர்வயாமகனுகிய எங்கள் ஐயனுனவர், இந்தக்கொடியோனை எப்படி வெல்லலாம்? அதற்கு நாம் செய்யவேண்டியது என்னவென் றுலோசித்து அந்த ராக்ஷசனுடைய உடலைப் பாணங்களால் சல்லடைக்கண்களாகத் தொளைத்து விடுவோமென்று மிகுந்த கோபங்கொண்டு, மேகத்தைப்பார்க்கிலும் அதிககருமைவாய்ந்த இராவணனுடைய மார்பிலும் — தோள்களிலும் — விஷத்தைக்காட்டிலும் கொடியகண்களிலும் — நாவுகளிலும் — மற்ற அவயவங்களினும் பல பாணங்கள்தைக்கும்படி எய்து, தம்முடைய பாணங்களாகிய பறவைகள் வசிப்பதற்கு இராவணனுடைய தேகமே பஞ்சரமென்று சொல்லும்படி பொத்திவிட்டார். ஸ்ரீபரந்தாமராகிய காகுஸ்தர் எய்த அம்புகள் பத்துவாய்கள்சிரம்பவுந் தைத்து, இருபதுகண்களு மறையும்படிஉருவி, மற்ற அவயவங்களிலெல்லாம் பொத்தி, உதிரம் தம்மிற்படாதபடி விரைவாக அப்புறங்கழன்று அண்டத்துக் கப்பாலுஞ்சென்று நிறைந்தது.

ஸ்ரீராமபாணங்கள் தைத்தமையால் இராவணன் மூர்ச்சையாதல்.

கவி.

மயிரின்காறெறும் வார்கணைமாரிபுக், குயிருந்தீர வுருவினவோடலும்
செயிருஞ்சீற்றமு நிற்கத்திறறிரிந், தயர்வுதோன்றத் துணங்கியழுங்கினுன்.

இவ்வண்ணம் இராமசுவாமியானவர் பிரயோகித்த அஸ்திரவருஷங்கள் மயிர்க்கால்கடோறும் நுழைந்து உயிரும் ஓயும்படி உருவிப்போனகாலத்தில் கோபமொன்று நிற்க மற்ற வீரப்பிரதாபங்களெல்லாம் வேறுபட்டு ஆயாசப்பெருக்கமுண்டாகி மிகவும் தேகநடுங்கி, தேவருலகத்தில் பவனிவரும்படியாகிய இராவணன் உதிரப்பிரவாகமொழுகும்படியாகத் தேரிலேதானே முடிசாய்ந்து கிடந்தான். அதைப்பார்த்த பிரமேந்திராதி தேவர்கள் யாவரும், தருமதேவதையும். சந்தோஷ ஆரவாரஞ்செய்துகொண்டு நடனஞ்செய்தார்கள். பாபகிர்த்தியங்களெல்லாம் இனிநம்மை ஆதரிப்பாரில்லையே யென்று அதிதுக்கமடைந்து சோர்ந்து விழுந்தன.

இராவணன் இரதத்தில் மூர்ச்சித்து விழுந்ததைக்கண்ட சாரதி இலங்கைக்கேக இரதத்தைத்திருப்பிச் செல்லுதல்.

கவி.

ஆர்த்துக்கொண்டெழுந் தும்பர்களாடினூர்
வேர்த்துத்தீவினை வெம்பிவிழுந்தது
போர்த்துப்பொய்த்தன னென்றுபொலங்கொடேர்
பேர்த்துச்சாரதி போயினன்பின்றுவான்.

அப்போதிராவண சாரதியானவன் நம்முடைய தலைவன் மூர்ச்சித்துக் கிடக்கிறு ஞதலால் இனிரதத்தை யிங்கிருத்துவது தகுதியல்லவென்று நினைத்து, அதைமெல்லெனத் திருப்பி நடத்திச்சென்றான். தேவர்கள்முதலிய சாதுக்களுடைய உஜ்ஜீவனுர்த்தமாகத்திருவவதரித்த ஸ்ரீராமசுவாமியானவர் நம்முடைய சத்துருவாகிய இந்தப்பாபிஷ்டன் கைகளில் ஆயுதங்களொன்று மில்லாம லிருப்பதுமன்றி மெய்ம்மறந்து சோர்ந்து கிடக்கிறான். ஆதலால் இவன்மேல் ஒருபாணத்தையும் எய்யலாகாதென்று தருமத்தைச்சிந்தித்துச் சும்மாவிருக்கவும் இந்திரசாரதியாகிய மாதலியானவன் சுவாமியைநோக்கி, ஓ எங்கள் ஆண்டவனே! இந்தத்துஷ்டன் மூர்ச்சை தெளிவானேயானல் பின்னே ஒன்றுஞ்செய்யமுடியாது. ஆதலால் மூர்ச்சையாய்க்கிடக்கிற இந்தச் சமயத்திலேயே இவனுடைய பிராணனை வாங்கவேண்டுமென்று ஸ்ரீராமபிரானை உச்சாகமாகத் தூண்டினுன். அதுகேட்டருளிய தருமஸ்வரூபியாகிய ஸ்ரீராமநாதரானவர் அவனைக் கையமர்த்தி, ஓமாதலி! இவன் எல்லா ஆயுதங்களையும் கைசோரவிட்டு அறிவுமயங்கிக் கிடக்கின்றான். இப்போதுநாம் ஆயுதங்களை எறிந்தாலும் அறிந்துகொள்ளமாட்டான், அப்படிநாம் பாணப்பிரயோகம்பண்ணி தநுர்வேத நீதி பிசகும்படி பிராணனை வாங்குவது நன்மைபோ ? இவனுடைய யுத்தமோ முடிவாகப்போகிறது, நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். அவன் மூர்ச்சைதெளிந்து எழுந்தபின்பு தான் எதிர்ப்பேன். இதுவே என்னுடைய கருத்தென்று அருளிச்செய்தார்.

இப்படி சுவாமியு மாதலியும் வார்த்தையாடிக்கொண் டிருக்கையில் மற்றராட்சசர்கள் அஞ்சினவர்களாகி இராவணனுடைய தேரைத் தொடர்ந்து சென்றனர்கள். அக்காலத்தில் ஸ்ரீரகுநந்தனர்க்குக்கைகளைக்கூப்பித்தண்டன்சமர்ப்பிக்காத தேவர்களுமுண்டோ? இயாவரும் தண்டன் சமர்ப்பித்தார்கள்.

இராவணன் மூர்ச்சைதெளிந்து இரதத்தையேன் திருப்பினுயென்று சாரதியைக் கோபித்தல்.

கவி.

உறக்கநீங்கி யுணர்ச்சியுற்றுனென
மறக்கண்வஞ்ச னிராமனைவன்றிறைச்
சிறக்குந்தேரொடுங் கண்டிலன்சீற்றத்திப்
பிறக்கநோக்கினன் பின்னுறநோக்கினுன்.

இச்சமயத்தில் நிர்த்தாக்ஷணியமும் வஞ்சகமுமுள்ள இராவணனனவன் நித்திரைதெளிந் துணர்வுவந்தவனைப்போல வெழுந்தபோது தனக்கெதிர் முகத்திலே இரதாரூடராய் ஸ்ரீராமபிரானைக் காணமல், அதிக கோபத்தோடு மற்றமூன்று பக்கமும் திரும்பிப்பார்த்தான். அப்படிப்பார்க்கையில் பின்பக்கத்திலேஸ்ரீரகுநந்தனரைக்கண்டு, உடனே தனதுவலவனைப்பார்த்து,அடாசாரதி! சொல்பபலவந்தர்களாகிய தேவர்கள்காணவும், கோதண்டத்தைக் கையில்தாங்கியபடியே யிருக்கின்ற இராமனுக்குச் சிரிப்புண்டாகவும், நீ தேரைத்திருப்பி ஓட்டிவந்து தப்புசெய்தாயே: என்ன நினைத்துக்கொண்டு இப்படிச் செய்துவிட்டாய்? அடா வஞ்சகா! நானுனக் கிரட்சகமாய்நின்று சாரதித்தொழில் முதலியவற்றைக் கற்பித்து, இயாவரும் பெறக்கூடாத அகண்டஐஸ்வரியத்தில் நிலைநிறுத்தினேன். அதற்குப் பிரதியுபகாரமாக இப்போ திராவணன் ஸ்ரீராமனேடு போர்செய்ய அஞ்சினனென்று சொல்லும்படி பழிச்சொல்லை எனக்குத் தேடிவைத்தாயல்லவா? நீயும் உயிரோடு பிழைத்துப் போக இருக்கின்றயோ? என்று சலித்துக்கோபித்துத் தன்கையில் ஒருவாளைப்பற்றிக் கடைக்கண்ணுற் பார்த்துச் சாரதிமேல் வீச உயர்த்தினன்.

இப்படி யவ்விராவணன் வாளேந்தியகையை உயர்த்தலும் சாரதியானவன் பொருக்கென எழுந்து அவனுடைய பாதங்களை முடிமேல்தரித்துக்கொண்டு, ஓ தேவகுலகண்டகா! வடவாமுகாக்கினியைப் போன்ற உமது கோபத்தை ஆற்றக்கடவீர். அடியேன் சொல்லிக்கொள்ளும் விண்ணப்பம் ஒன்றுண்டு. அதனை நீர் தணிவாய்க் கேட்டருள வேண்டும். என்று கெஞ்சிக்கெஞ்சி, ஓ இராக்ஷசகுலமித்திரா! நீர் யுத்தத்தொழில் மறந்து சோர்ந்துபோய் விட்டீர். இன்னும் சிறிதுநேரமாத்திரம் அங்கேயே யிருந்துவிடுவீரேயானல் உம்முடைய உயிர் இந்தக்ஷணமே நீங்கிவிடுமென்று ஒருதுன்பம் என்னுடைய இதயத்தில் ஜனித்து, அந்தத் துன்பத்தைப் போக்கிக் கொள்ளும்படி இரதத்தைத்திருப்பி நடத்திவந்தேனே யல்லாமல் வேறல்ல. இதுசத்தியமாகும். இதுநிற்க. பொதுவாகப் பார்க்குமிடத்தில் தன்னுடைய தலைவனுக்குச் சோர்வும் அல்லது பிராணபாயமும் சத்துருவுக்குத்திடவிர்த்தியுங் கண்டால் உடனே சாரதியானவன் தனது தலைவனுடைய உடலின்சோர்வை நீக்குமுபாயத்தை ஆலோசித்துச் செய்யக் கடவனன்றே? ஆகையால் இப்படிச்செய்தேன். நீரே தீர்க்காலோசனை செய்யக்கடவீர். நிரபராதியாகிய என்னை வாளாற்கொல்லுதல் தகுதியல்லவென்று வேண்டிக்கொள்ளுதலும் இராவணனனவன் சரிதானென்று தானும் ஆலோசித்துச் சாரதிமேல் இரங்கி, அடா சாரதி! இஃதிருக்கட்டும்: தேரை இராமன்மேல் தூண்டி நடத்தென்று உத்திரவு செய்தான். அப்படியே சாரதியும் இரதத்தைத்திருப்பிக்கொண்டுவந்து தாரகமந்திர வாச்சியனகிய ஸ்ரீராமச்சந்திர சுவாமிக்கெதிரே நிறுத்தினன்.

இராவணன் தனதிரதத்தைத் திருப்புவித்து ஸ்ரீராமபிரான்மேலத்திர சத்திரங்களைப் பிரயோகஞ்செய்ய அவைகளைச் சுவாமிகண்டித்தல்.

கவி.

கூற்றின்வெங்கணை கோடியின்கோடிகள்
தூற்றினன்வலி மும்முறைதோற்றினன்
வெற்றொர்வாளரக் கன்னெனவெம்மையால்
ஆற்றினன்செருக் கண்டவரஞ்சினர்.

இப்படி அதிவீரபிரதாப இலங்கேசுரனனவன் அகில கல்மஷாந்தகார பாஸ்கரரா யெழுந்தருளியிராநின்ற ஸ்ரீராகவபிரானை எதிர்த்து நின்று யமனுக்குச் சமானமாகிய கோடாநுகோடி அம்புகளையெய்து, இவன்பழையராவணனல்லன்: புதுராவணன்; என்று கண்டவர்களெல்லாம் சொல்லி அஞ்சும்படி முன்செய்த உயுத்தத்தைப் பார்க்கிலு மூன்றுபங்கதிகமான உயுத்தத்தைச் செய்தான். அதுபார்த்தருளிய ஸ்ரீகோதண்டதீக்ஷாகுருவானவர் ஒளியுண்டாயிருந்தால் நெருப்புண்டென்பதுபோல இந்தக் கொடியோன்கையில் வில்லுண்டா யிருக்கிறவரையும் இவன் உயுத்த்தை ஒழியான். இவனொழியாமற் போர்செய்துகொண் டிருப்பானேயாகில் வெல்லுதலும் அரிதாகுமென்று திருவுளத்திற் கருதி ஸ்ரீமந் நாராயணாஸ்திரத்தை விரும்பி எடுத்துத் தொடுத்துப் பிரயோகித்து, பூமியைச் சுமக்கின்ற எட்டு யானைகளையும் ஜெயித்த இராவணன்பிடித்திருந்த யாவருக்குந் துன்பத்தைத் தருவதாகிய வில்லை இரண்டு துண்டுகளாகச் செய்துவிட்டார். முன்னே பிர்ம்மதேவரானவர் ஆண்டுகொண்டிருந்த அந்த வில்லானது சகஸ்திர திருநாமங்களைவகித்த ஸ்ரீமந்நாராயணனுடைய அஸ்திரத்தால் துண்டுபட்டு வீழ்தலும் தேவர்கள்யாவரு நாம்செய்த பலவாகிய தவத்தாற் பயனைப்பெற்றோ மென்று சொல்லிக்கொண்டு உயர்ந்து உயர்ந்து குதித்தாடினார்கள். உடனே வேறொருவில்லை இராவணன் பிடித்தான். அதையுமெம்மையனானவர் துண்டித்து விட்டார்.

கவி.

மாறிமாறிவரிசிலை வாங்கினன், நூறினூறினொ டையிருநூறவை
வேறுவேறு திசையுறவெங்கணை, நூறிநூறியிராம னறுக்கினன்.

இந்தப்பிரகாரம் அந்தக் கொடியோன் எடுத்தெடுத்துப்பிடித்த பதினொராயிரம் வில்லுகளையும் ஸ்ரீ ராமமூர்த்தியானவர் இடைவிடாமல் துண்டித்துத் தசதிசையிலும் போகும்படிச் செய்தனர். இனி வில்லெடுப்பதிற் பயனில்லையென்று இராவணனானவன் ஸ்ரீரகுநாதருடைய திருமார்பில் வாசஞ்செய்கின்ற ஸ்ரீமஹாலட்சுமியும் இடம்விட்டுப்பெயரும்படி இருப்புலக்கைகளையும், தண்டாயுதங்களையும், வேல்களையும், ஈட்டிகளையும், வாள்களையும், நெருப்பிலும் அதிதீக்ஷணியமாகிய தோமரங்களையுமெடுத்தெடுத்து, அவருடைய மார்பில் தாக்கும்படி விட்டெறிந்தான். அந்த ஆயுதங்களையெல்லாம் ஸ்ரீராமசுவாமியானவர் தமதம்புகளை எய்து அறுத்தறுத்துக்

கடலிலே அங்கங்கே தோன்றுகின்ற திடர்களைப்போல ஓடுகின்ற இரத்தப்பிரவாகத்திலே துண்டுபட்ட ஆயுதக்குவியல்கள் தோன்றும்படி குவித்தார். தமது திருவடிகளைச் சரணடைந்தவர்களுடைய பாபங்களை யெல்லாம் போக்குகின்ற நிர்த்தோஷராகிய ஸ்ரீகாகுஸ்தகுல திலகரானவர் நாமிப்போதெய்கின்ற பாணங்களைப்போன்ற பாணங்கள் இவன் பிராணனை வாங்கமாட்டா. கடல் மணலினும் அபரிமிதமாகிய குரூரபாணங்கள் இந்தக் கொடியோனுடைய கண்மணிகளிலு நுழைந்து ஓடியன. முன்பட்டகாயப் புண்ணின்வழியே தத்துவதரிசிகளுடைய கியானத்தைப் பார்க்கிலும் அதிக கூர்மையுள்ள பல அம்புகள் உருவிச்சென்றன. இப்படிப் பாணங்கள் பாய்ந்துதொளைத்தும் இவனுடைய தைரியபல வீரியங்களில் ஏதேனுமொன்று கழிந்ததுண்டோ? இந்த மஹாபாபிஷ்டனை உயிரோடு வைத்துக்கொண்டு போர் செய்வதினால் என்னபயன்? நாம் இனித்தாமசஞ் செய்யாமல் பிரம்மாவினுடைய அஸ்திரத்தைப் பிரயோகித்துப் பிராணனை வாங்குவோமென்று தமக்குள்ளே தீர்மானித்து ஆதியிலே மூலதாமரையில் ஜனித்துச் சகல அண்டங்களையும் சிருஷ்டித்த தேவசிரேஷ்டராகிய பிரஹ்மாவினது அஸ்திரத்தை எடுத்தார்.

இந்திராதி சமஸ்த தேவர்களுக்குந் தாம்தயைசெய்த வரத்தைப் பாலனஞ்செய்யும்படி அவதரித்த ஸ்ரீராமச்சந்திரசுவாமியானவர் தாமெடுத்த அந்தப்பிரஹம்மாஸ்திரத்துக்கு அர்ச்சனைமுதலிய பூசைகளைச்செய்து, ஸ்ரீகோதண்டத்தின் நாணில்தொடுத்து, மந்தரமலைக்குச் சமானமாகிய வலதுதோளால் வாங்கி அப்பிரமாஸ்திரத்தைச் சந்தித்தனர்.

ஸ்ரீராமபிரான் பிரமாஸ்திரத்தைப் பிரயோகித்து இராவணனை வதஞ்செய்தல்.

கவி.

புரஞ்சுடப்பண் டமைந்ததுபொற்பணை, மரந்தொளைத்தது வாலியைமாய்த்துள
தரஞ்சுடச்சுடர் நெஞ்சினரக்கர்கோன், உரஞ்சுடச்சுட ரோன்மகனுந்தினான்.

அவ்வஸ்திரம் எப்பேர்ப்பட்டதெனில் பூர்வகாலத்தில் சிவபெருமான் திரிபுரத்தைச் சுடவமைந்தது. அழகுபெற்று பருத்துவளர்ந்த ஏழுமராமரங்களைத் தன்னாற் றுளைக்கப்பட்டது. வாலியென்னும் வானராதிபதியைக் கொன்றது. இவ்விதமாகிய வலிவையுடைய பிரமாஸ்திரத்தை மகாகொடிய மனதையுடைய இராவணனது மார்பிற் சுட்டுக்கொண் டழுந்தும்படியாகச் சூரிய குலத்தினனாகிய இராமச்சந்திரமூர்த்தியானவர் பிரயோகித்தார்.

கவி.

முக்கோடிவாணாளு முயன்றுடையபெருந்தவமு முதல்வன்முன்னா
ளெக்கோடியாராலும் வெலப்படா யெனக்கொடுத்த வரமுமேனைத்
திக்கோடுமுலகனைத்துஞ் செருக்கடந்த புயவலியுந்தின்றுமார்பிற்
புக்கோடியுயிர்பருகிப் புறம்போயிற் றிராகவன்றன் புனிதவாளி.

இப்படி பிரமதேவருடைய மந்திரத்தை செபித்துப் பிரயோகித்த அஸ்திரமானது வாயுவால் அறியப்படாதவேகத்தையும் அக்கினியால் அறியப்படாத தீக்ஷணியத்தையுங் கொண்டு நான்குமுகங்களை யுடையதாகி, தன்னிடத்துண்டாகின்றசுவாலையால்சக்கரவாளகிரிக்கு அப்புறத்திலுள்ளபெரும்புறக்கடலிலுள்ள நீர்முற்றுஞ்சுவறிப்போய்வெற்றவெளியாகவும்-உகாந்தகாலத்துச்சூரியனு மின்மினியென்று சொல்லும்படியாகத் தன்னிடத்தெழுகின்ற சுடர்களால் உலகத்திலுள்ள அந்தகாரமுழுமையு நிலைபெயர்ந்தோடவும் - அதிவேகமாய்ச்சென்று, சுதரிசனாழ்வானுடைய பூர்ணமிசத்தையும் பெற்று, சுவர்க்கமத்திய பாதாளங்களும் அஷ்டதிக்குகளும் தடுமாற மஹாவீரப்பிரதாப இலங்கேஸ்வரனாகிய துஷ்டாத்துமாவினுடையமார்பில்தைத்து,தான் இந்திரிய ஆசைகளையொழித்து மனத்தை ஒருவழிப்படுத்திப் பெரும்பிரயாசப்பட்டுச்செய்த அரியதவத்தையும் — சாக்ஷாது சாம்பசிவமூர்த்தியும் பிரமதேவனு மனப்பூர்வமாய்க் கருணைசுரந்து ஆதிநாளில் அருளிச்செய்த மூன்றுகோடி ஆயுள்நாளோடு தேவதானவ மனுஷர் முதலியோரால் ஜெயிக்கப்படமாட்டாயென்றுகொடுத்த வரத்தையும் — அஷ்டதிக்குப் பாலகர்களையும் உலோகேஸ்வரர்களையும் யுத்தத்தில் ஜெயம்பெற்றுவந்த பராக்கிரமத்தையும் கவளீகரித்துண்டுவிட்டு, மார்பை உருவி உயிரையு முண்டு புறத்தே போய்விட்டது.

இராவணனிறக்கக்கண்ட தேவர்களுமுனிவர்களு ஸ்ரீராமபிரானைப் புஷ்பமாரிபொழிந்து ஆசீர்வதித்தல்.

கவி.

ஆர்க்கின்றவானவரு மந்தணருமுனிவர்களு மாசிகூறித்
தூர்க்கின்றவலர்மாரி தொடரப்போய்ப்பாற்கடலிற் றாய்நீராடித்
தேர்க்குன்றவிராவணன்றன் செழுங்குருதிப்பெரும்பரவைத் திரைமேற்சென்று
கார்க்குன்றமனையான்றன் கடுங்கணைப்புட்டிலினடைவே கரந்ததம்மா.

அப்போது சமஸ்ததேவர்களும் — வேதியர்களும் - முனிவர்களும் - குதூகலத்தோடு ஆசிர்வாதஞ்சொல்லி வாரிவாரி இறைக்கின்ற புஷ்பவருஷம் தன்மேற்படும்படியாக அந்தப் பிரஹம்மாஸ்திரமானது திருப்பாற்கடலிற்சென்று பரிசுத்த நீராட்டஞ்செய்து திரும்பி, இராவணனுடைய மார்பில்நின்று மொழுகாநின்ற உதிரக்கடலி னலைகளின்மேற்சென்று நீலரத்தின பர்வதம்போல விளங்குகின்ற தசரதாத்மஜருடைய அம்பறாத்தூணியில்வந்து சேர்ந்தது. கறுத்தபெருமலைபோன்ற தோற்றமுள்ள இராவணேஸ்வரன்பிராணனீங்கும் சமயத்தில் மாரிகாலத்துச் சூல்கொண்ட மேகம் குமுறுவதுபோல இருபதுதோள்களையும் கொட்டிப் பத்துவாய்களாலும் வீரகர்ச்சனைசெய்து, தும்பைமாலைதரித்த பருவதாகாரமாகிய மார்பில்நின்றும் ஆபரணக்கூட்டங்களும் அவற்றிலழுத்திய இரத்தினராசிகளும் சிதைந்து சிந்தவும் - இருபது நேத்திரங்களிலிருந்து புகையுமிரத்தமும் பெருகவும் - மகோன்னதமான இரதத்திலிருந்து பத்துத்தலைகளும் கீழாகக்குப்புற்று வீழ்ந்தான்.

அசுரமோகனார்த்தமாகக்கற்பித்த அசாஸ்திரத்தின்வழியே சென்று பரமவைதிக நெறியைத் தவறிநடந்த இராவணாசுரனானவன் ஸ்ரீராமபாணத்தாற் குரூரசுபாவமுள்ள சிங்கத்தினது கோபம்போன்ற கோபம் அடங்கவும் - மனோதைரியம் ஒடுங்கவும் - மாயாதந்திரங்கள் அழியவும் — தேவாசுரர்களாகிய சத்துருக்களது வலிகெடும்படிப் போர்செய்த இருபது தோள்களினுடைய தொழில்கள் நீங்கவும் - பரதாரங்களிடத்து வைத்த மோகம்கெடவும் — பராக்கிரமம் தேய்ந்துபோகவும் - உயிர் நீங்கினனாயினும், அந்தச் சுத்தவீரனுடைய பத்துமுகங்களும் மௌனசீலர்களாகிய ரிஷிக்கூட்டங்களையும் - தேவர்களையும் - மற்றவர்களையும் - தங்கள் நிலைகெட்டுத் தலைகுனிந்தோட முறியடித்த காலங்களில் விளங்கியதைப் பார்க்கினு மூன்றுபங்கதிகமாகக் களிப்பும் வீரமுநிரம்பி விளங்கிக்கொண்டிருந்தன. பின்பு சுவாமியானவர் - அப்பா மாதலீ! ஆகாயமார்க்கத்திற் செலுத்துகின்ற இரதத்தைப்பூமியில் இறக்குவாயாகவென்று கட்டளையிட்டார். அம்மாத்திரத்தில் மாதலியும் ஸ்ரீராமசுவாமியினுடைய உத்தரவின்படி பூமிமேல் நடத்திவந்தான்.

ஸ்ரீராமர் தெய்வீகத்தேரை இந்திரபுரத்திற்கனுப்பி இராவணனது உயிர்நீங்கிய உடலிலுள்ளதழும்புகளைநோக்கிச் சிலவார்த்தைகூற அதற்குவிபீஷணர் பதில்கூறல்.

கவி.

தேரினைநீகொடுவிசும்பிற் செல்கென்னமாதலியைச் செலுத்திப்பின்னர்ப்
பாரிடைமீதினினணுகித் தம்பியொடும்படைத்தலைவர் பலருஞ்சுற்றப்
போரிடைமீண்டொருவருக்கும் புறங்கொடாப்போர்வீரன் பொருதுவீழ்ந்த
சீரினையேமனமுவப்ப வுருமுற்றுந்திருவாளன் றெரியக்கண்டான்.

உடனே எவர்களாவது கண்டால் விரும்பத்தக்க சர்வ லட்சணங்களும் அமைந்து அறங்களை வளர்க்கின்ற தாமரைமலர்போன்ற விசால நேத்திரங்களையுடைய ஸ்ரீரகுகுல வீரரானவர் திருத்தேரைவிட்டு இறங்கியருளி மாதலியைக்கடாக்ஷித்து, நீ ரதத்தைச்சுவர்க்கலோகத்துக்கு இனியோட்டிக்கொண்டு போகக்கடவாயென்று உத்தரவுசெய்துவிட்டு ஸ்ரீலக்ஷ்மணப்பெருமாளும் — சுக்கிரீவமகாராஜரும் - மற்றவானர சிரேஷ்டர்களும் - விபீஷணாழ்வானும் தம்மைச் சூழ்ந்துவரச்சென்று, ஆகாயத்தைமுட்ட வீழ்ந்து கிடக்கின்ற தசமுகனுடைய உருவத்தை உற்றுப் பார்த்தருளினார். மகாதபங்களைச்செய்து ஒருவன்பெற்ற செல்வமானது தன்னைப் பெற்றுக்கொண்டவன் செய்யும் சத்கருமங்களுக்குத் துணையா யிருப்பதுமன்றி அவன்செய்யும் துஷ்கருமங்களுக்கும் துணையாயிருந்து, அவனுடைய பூர்வசத்கருமம் அற்றமாத்திரத்தில் உடனே அவனைவிட்டு நீங்கிவிடுகின்ற நிலையில்லாமையைப் பார்க்கினும் வேறொரு நிலையில்லாமையும் உண்டோ? மேலும் — அந்தச்செல்வமானது நீர்மேற்கிழித்த சித்திரத்தைப்போனு நிலைமையுடைய தல்லவா?

பெருந்தவங்களைச் செய்து அகண்டைஸ்வரியத்தை அடைந்து ஒருவரையும் வணங்கறியாதஇராவணனுடைய பத்துத்தலைகளின்மேலும், சாக்ஷாது

பரமசிவனானவர் பிரமதகணங்களோ டெழுந்தருளிய கயிலாசத்தை ஒரு பந்துபோலப் பேர்த்தெடுத்த இருபது தோள்களின்மேலும், தோள்களின் மேற்புறத்திலும், சாகாமிருகங்களாகிய அனேகவானரங்கள் தாவித்தாவி யேறி மலைகளின்மேலேறி நின்றாடுவதுபோலக் குதித்துக்குதித்து ஆடின. அப்போது புற்றுக்களிற் பலசர்ப்பங்கள் நுழைந்துசென்றன போலவும் — மேகராசியிற் பிறைச் சந்திரிகைகள் நுழைந்துசென்றனபோலவும் — இராவணனுடைய முதுகில் திக்குயானைகளினுடைய தந்தங்கள் மார்பில்தைத்தூருவிய தழும்புகளைத் தாமரைக்கண்ணனாகிய ஸ்ரீரகுநந்தனர் கண்டு, அந்தக்கொடியவன் பிராட்டியார் பக்கலில் அபசாரப்பட்டதனால் தமக்குண்டாகிய கோபமாறிப்போய் புன்னகைகொண்டு விபீஷணாழ்வான் முதலானவர்களைப் பார்த்து ஆ! ஆ! பார்த்தீர்களா? தன்னுடையபராக்கிரமத்தால் திரிலோகங்களையும் யதார்த்தமாகவே இந்தத் தசக்கிரீவன் அடைந்தவனானாலும் இன்று என்னுடைய பாணத்தால் இறந்தானென்று நான் என்தோள்களை நோக்கிக் களிக்கின்ற களிப்பானது. இவன்முன்னே எந்த யுத்தத்திலேயோ எதிர்த்துப் பின்வாங்கி முதுகில்தைத்த சில அம்புகளின் வடுக்கள் காணப்படுதலால் அழிந்துபோனது மல்லாமல்;முன்னொரு சுத்தவீரனுக்குத்தோற்றுப்போனஒருவனை இந்த ஸ்ரீராமன் கொலைசெய்தானென் றுலகத்தார் நிந்திக்கும்படியான அபக்கியாதியையும் தேடிக்கொண்டேன்.

இந்தராவணன் கார்த்தவீரியார்ச்சுனனால் முன்னொருகாலத்திற் கட்டுப்பட்டானென்று உலகத்தார் சொல்லிக்கொள்ளும் பிரபலமான ஒருவார்த்தையும் உண்டு. அந்த வார்த்தையை நினைத்துநினைத்து என்மனமோ மிகவும் நாணுகின்றது. இஃதிருக்கட்டும்: உயுத்தத்தில் இவன் முதுகுகாட்டி ஓடும்படிசெய்த சுத்தவீரனுடைய இரண்டுகைகளும் இருக்கையிலேயே நான் வில்லைப்பிடித்து அம்பையெய்து இவனைக் கொன்றே னென்பதும் ஒருவீரமோ? முன்சொன்னபடி நாணுகின்ற எனக்கு இது முதுகிற்பட்ட புண்ணல்லவோ? இறந்து போனாலும் உலகத்தில் நிலைத்திருக்கும்படியான பெருங்கீர்த்தியோ இனி என்னைச் சேரமாட்டாது. போரி லெதிர்த்துநின்று புண்படச் சண்டைசெய்யத்தக்க சுத்தவீரனானவன் சத்துருக்களெல்லாம் கைகொட்டிநகைசெய்யும் படியாகப் பிராணன்மேல் அன்பைவைத்துப் பிறகிட்டோடினானென்பது போன்ற அபகீர்த்தியைத் தேடிக்கொண்டேன். முன்னே சிலவீரர்களிடத்தில் நான்பெற்ற ஜெயமும் வியர்த்தமாய்ப் போயிற்றே: என்று வீரசந்தோன்றும்படி சொல்லினர்.

இப்படி எல்லாம்வல்லோராகிய ஸ்ரீகாகுஸ்தர் வீரர்களுக்கடுத்த வீரச வார்த்தைகளை அருளிச் செய்தமாத்திரத்தில் ஸ்ரீவிபீஷணாழ்வானானவர் மனம்பொறாமல் சுவாமிக்குத் தண்டன்சமர்ப்பித் தெழுந்துநின்று, இரண்டுகண்களிலும் நீர்பெருகும்படி பெருமூச்சு விட்டுக்கொண்டு, ஓ சுத்தவீரர்களுக்குள் சுத்தவீர சிகாமணியே! தேவரீர் நீதியாகப்போகவில்லையே: ஓ தைத்திய

ராக்ஷசகுல வைரியே! பூர்வத்திலே ஆயிரந்தோள்களையுடைய கார்த்த வீரிய னும் - வாலியும் — இந்தத் தசமுகனை வெகு அருமையாகவென்றார்களென் பது தேவர்களுடைய சாபத்தினாலல்லாமல் வேறல்ல. இந்தத் துராத்துமா வானவன் பிரமேந்திராதி சமஸ்த சீவர்களும் தாயைவணங்குவதிலும் அதிக மாக வணங்கத்தக்க சர்வலோகநாயகியாகிய பிராட்டியாற்பக்கலிற்பட்ட அப சாரமும், உம்முடைய தாசபூதர்கள் பக்கலிற்செய்த அபசாரம் காரணமாகத் தேவரீருக்குண்டாகிய சீற்றமும், இவனை வென்றவைகளல்லாமல் மற்ற எத் தேவர்களாலும் வெல்லவு முடியுமோ? இவன் முன்னே அவைதிகமார்க்கா நுசாரியாகி பூமிவிஸ்தீரணம் எந்தமட்டும் உண்டோ அந்தமட்டும் தனதுதே ரைச்செலுத்திச் சென்று, தன்னை எதிர்க்கத்தக்க சத்துருக்களொருவரையுங் காணாதவனாய் திக்கின்முடிவில்மகம்மேருவைப்போல்நின்றயானைகளோடு மு ட்டினான். அப்போதந்தத் திக்கஜங்களினுடைய தந்தங்கள் இவனுடைய வச் சிரமலைபோன்ற மார்பில்தைத்து நிற்கும்படி திமிறி முறித்துக்கொண்டு வந் துவிட்டான். அந்தத் தந்தங்கள் தன்மார்புக்கு அலங்காரமாகவும், தனது வீரப்பிரதாபத்துக்குக் குறியாகவும், நெடுநாள் அப்படியே வைத்துக்கொண் டிருந்தான்.

ஒருகாலத்தில் யமதர்மராஜனோடெதிர்த்தபோது அவனெய்த வச்சிர பாணங்கள் இந்தத் தந்தங்களின்மேற் பட்டதினாலும், இதோ நிற்கின்ற தேவரீருடைய தாசராகிய ஆஞ்சநேயர் உயுத்தகளத்திற் குத்தியகுத்தினா லும், அவைகள் முதுகுபரியந்தம் பாய்ந்தன. உடனே பாய்ந்ததந்தங்கள் இ வருடைய குத்தின் அதிர்ச்சியினாற் பலபலவென்று உதிர்ந்துவிட்டன. முது கிலே தோன்றுகின்ற வடுக்கள் அவையே யன்றி வேறே ஒருபாணம்பட்ட வடுக்களல்ல. திருப்பாற்கடலிற் பிறந்த ஆலகாலவிஷமானது ஸ்ரீருத்திரபக வானை நாசப்படுத்தினபோதிலும், வாசுகிமுதலிய குரூரசர்ப்பங்கள் ஸ்ரீகரு டபகவானை நெருங்கினபோதிலும், இந்தப் பிரமாண்டத்திலேயே அல்ல; மற்ற எந்த அண்டங்களிலாவது இவனுக்குச் சத்துருக்களுண்டாயிருந்து அவ ர்களுடைய பாணங்கள் அஞ்சாமல்வந்து இவனை என்னசெய்யமாட்டும். ஓ ஜீவகாருண்யமூர்த்தியே! இந்த முதுகுக்காயங்களுக்கு வேறுகாரணமும் உ ண்டோ? இல்லை: இஃதிருக்கட்டும். சமுத்திரத்தாற் சூழப்பட்ட பூகோள முழுமையும் தன்னுடைய கோரப்பல்லில் அடங்கும்படிகொண்டஆதிபுருஷ வராகமாகிய பராபரவஸ்து முதலிட்ட தேவதேவர்கள்யாவரும், இந்தராவண னா லுண்டாகும் இடுக்கண்களை என்றைக்கு நாம் நீங்கிப்போகிறோமென்று து ன்பப்பட்டுக்கொண் டிருந்தார்கள். இப்போதுதேவரீருடையபாணப்பிரயோ கத்தால் இந்தச் சாதுசஜ்ஜன கண்டகன் இறந்தானென்பதைத் தங்கள் கண்க ளாரக்காணும்படி, இதோ ஆகாயமார்க்கத்தில்வந்து மொய்த்து நின்றார்க ளென்று கூறி முடித்தனர்.

ஸ்ரீராமபிரான் விபீஷணரை நோக்கி இராவணனுதியர்க்கு சரமக்கிரியை நடத்துவாயென வாக்கியாபித்தல்.

கவி.

அன்னதோவென்னுவீச னையமுநாணுநீங்கித்
தன்னதோளிணையைநோக்கி வீடணுதக்கதன்றால்
என்னதோவிறந்துளார்மேல் வயிர்த்தனீயிவனுக்கீண்டு
சொன்னதோர்விதியினாலே கடன்செயத்துணிதியென்றான்.

இப்படி விபீஷணுழ்வான் சொல்லியதையெல்லாம் திருச்செவிசார்த்திக் கேட்டருளிய ஸ்ரீராகவபிரான் இந்தவடுக்கள் யானைத்தந்தங்களின் வடுக்களா வென்று தாம்கொண்ட அவதாரத்துக்கேற்க முன் அடைந்திருந்த சந்தேகமு நாணமு நீங்கினவராய்த் தம்முடைய திருத்தோளைநோக்கிக் களித்து, ஒ விபீஷணனே! உயிர்மாய்ந்தவர்கள்மேல் அவர்கள் முன்செய்த குற்றத்தைப் பாராட்டிச் சலஞ்சாதிக்கிறது தருமமல்ல. அது புத்திமான்களுடைய செய்கையுமல்ல. கொன்றாற்போன்ற குற்றஞ்செய்தவனு யிருப்பினும் உயிர்மாண்டவனுதலால் இவன்செய்த தீமைகளை நீமன்னித்தவனுகி, உங்களுடைய குலாசாரத்துக்குத்தக்கபடி கருமகாண்டத்திற்சொல்லிய விதிகளை அநுசரித்துப் பிரேதபூசைஉத்தரகிரியைமுதலியவைகளைச் செய்யக்கடவாயென்று திருவுளமிரங்கித் தமது கருணையால் சொல்லிக்கொண் டிருந்தனர். அதுசமயத்தில் தம்மைத்தரிசித்து வணங்கும்படியாக எந்த வுலகங்களிலுமுள்ள சமஸ்த சாதுசஜ்ஜனங்களும் — பிரமனும் - இந்திரனும் - மற்றதேவர்களும் - வேதங்களால் தோத்திரஞ்செய்துகொண்டு வந்து நிறைந்து, முறைமுறையாக வீழ்ந்து சேவித்துக்கொண் டிருந்தனர்கள். அவர்களோடு வார்த்தையாடும்படியாகச் சுவாமியானவர் தாம் அப்புறத்தே எழுந்தருளினர்.

இறந்துகிடக்கு மிராவணன்மேல் விபீஷணர்வீழ்ந்து பிரலாபித்தல்.

கவி.

ஓவருமுலகத்தெல்லா வுயிர்களுமெரியினெஞ்சின்
வேதமுமுனிவர்தாமுஞ் சிந்தையினிரக்கஞ்சேரத்
தாவரும்பொறையினன்ற னறிவினுற்றகைக்கநின்ற
யாவருந்துயரந்தீர வரற்றினன்பகுவாயார.

அப்பால் ஸ்ரீசர்வலோக சரணியராகிய ஸ்ரீராமநாதர் அருளிச்செய்த அருளுப்பாட்டின்படி ஸ்ரீ விபீஷணுழ்வானனவர் தம்முடைய கியானவயிராக்கியத்தால் தடுத்து வைத்திருந்த அன்பும் துன்பமு நீங்கும்படியாகவும், வானர சைநிய முழுமையும் - உலகத்திலுள்ள மனுஷ பசுபக்ஷிமுதலிய எல்லாவுயிர் வர்க்கங்களும் - அங்குவந்திருந்த எல்லாத்தேவர்களும் — எல்லாமுனிவர்களும் - தங்கள் தங்களுக்கு நேரிட்டதுன்பம்போலத் தம்மைக்கண்டு மனமிரங்கும்படி யாகவும் தம்முடைய பெருவாயைத்திறந்து கதறி அழுது, வீழ்ந்து கிடக்கிற ஒருமகா பர்வதத்தின்மேல் ஒருமலைசாய்ந்து விழுந்தாற்போலப் பிரதாப லங்கேசுரன்மேல் வீழ்ந்துபுலம்பத் தொடங்கினர்.

கவி.

உண்ணாதேயுயிருண்ணாதொருநஞ்சு சனகியெனும்பெருநஞ்சுன்னைக்
கண்ணாலேநோக்கவேபோக்கியதே யுயிர்நீயுங்களப்பட்டாயே
எண்ணாதேயெண்ணியசொ லின்றினித்தா னெண்ணுதியோ வெண்ணலாற்றல்
அண்ணாவோவண்ணாவோ வசுரர்கடம்பிரளயமேயமரர்கூற்றே.

ஓராசையொருவன்மே லுயிராசைக்குலமகண்மே லுடையகாதல்
தீராசைபழியென்றே யெனைமுனிந்தமுனிவாறித் தேறினாயோ
போராசைப்பட்டெழுந்த குலமுற்றும்பொன்றவுந்தான் பொங்கிநின்ற
பேராசைபேர்ந்ததோ பேர்ந்தாசைக்கரியிரியப் புருவம்பேர்ந்தோய்.

அன்றெரியின்விழிவேத வதியிவள்காணுலகுக்கோ ரன்னையென்று
குன்றனையநெடுந்தோளாய் கூறினேனதுமனத்துட் கொள்ளாதேயே
உன்றனதுகுலமடங்க வுருத்தமரிற்படக்கண்டு முறவாகாதே
பொன்றினையோவிராகவன்றன் புயவலியின்றறிந்துதான் போகின்றாயோ.

மன்றன்மாமலரானும் வடிமழுவாட்படையானும் வரங்களீந்த
ஒன்றலாதனவுடைய முடியோடும்பொடியாகி யுதிர்ந்துபோன
அன்றுதானுணர்ந்திலையே யானாலுமவனாட்டை யணுகிநின்ற
இன்றுதா னுணர்ந்தனையோ விராமனார்யாவர்க்கு மிறைவராதல்.

வீரநாடுற்றாயோ விரிஞ்சனார்யாவர்க்கு மேலாமுன்றன்
பேரநாடுற்றாயோ பிறைசூடிபிஞ்ஞகன்றன் புரம்பெற்றாயோ
ஆரணவுன்னுயிரை யஞ்சாதேகொண்டகன்றா ரதெலாநிற்க
மாரனார்வலியாட்டந் தவிர்ந்தாரோ குளிர்ந்தானோ மதியமென்பான்.

கொல்லாத மைத்துனனைக் கொன்றாயென் றதுகுறித்துக் கொடுமைசூழ்ந்து
பல்லாலேயிதழ்மறைக்குங் கொடும்பாவி நெடும்பாரப் பழிதீர்ந்தாளே
நல்லாருந்தீயாரு நரகத்தார் துறக்கத்தார் நம்பிநம்மோ
டெல்லாரும் பகைஞரே யார்முகத்தேவிழிக்கின்றா யெளியையானாய்.

போர்மகளைக்கலைமகளைப் புகழ்மகளைத் தழுவியவர் பொறாமைகூரச்
சீர்மகளைத் திருமகளைத் தேவர்க்குந் தம்மோயைத் தெய்வக்கற்பின்
பேர்மகளைத்தழுவுவா னுயிர்கொடுத்தும் பழிகொண்ட பித்தாபின்னைப்
பார்மகளைத் தழுவினையோ திசையோனைப் பணையிறுத்த பரிதிமார்பால்.

ஓ ஆலோசனையில் மிகுந்த என் அண்ணாவே! ஓ அசுரர்கள் குலத்துக்குப் பிரளயமே! ஓ தேவர்கள் குலத்துக்கு யமனையொத்தவனே! விஷமென்பது தன்னை யுண்ணாமற்போனால் உயிரையுண்ண மாட்டாதன்றோ? சானகிப் பிராட்டி யென்னும் பெரியவிஷமானது தன்னைக் கண்ணாலே பார்ப்பதினாலேயே உன்னுடைய உயிரைப் போக்கிவிட்டதே: மஹாபராக்கிரம சாலியாகிய நீயும் உயுத்தகளத்தில் வீழ்ந்தாயே: எல்லாயோசனையிலுஞ் சிறந்தவனென்று என்னை நான்சொல்லிக் கொள்ளவில்லை. முன்னே யான் யோசித்துச் சொன்ன சில புத்திகளை இன்றையதினமாவது யதார்த்தமென்று எண்ணுகின்றாயோ? ஸ்ரீபரமபதநாதனாகிய ஸ்ரீராகவபிரான்மேல்பிராணனே அவனென்று

ஆசைவைத்துள்ள கற்புடைய மங்கையர்க் கரசியாகிய மைதிலியின்மேல் நீ துராகிருதமாகவைத்த ஆசையை நீக்கிவிடென்றும், இல்லாவிட்டால் நமக்குப் பழிவந்துநேரிடுமென்றும் சொன்ன என்னைக் கோபித்துக்கொண்டாயே: அந்தக்கோபம் இப்போது ஆறி நான் சொன்னதெல்லாம் உண்மைதானென்று தேறினாயோ?

ஓ புருவங்களை நெறித்துப் பார்த்துத்திக்கஜங்கள் நிலைபெயர்ந்தோடச் செய்த சர்வலோக பயங்கரசீலனே: உயுத்தத்தில் அபேட்சைகொண்டெழுந்த நம்முடைய குலமுழுமையு நாசமாகிய பின்னேதானோ உன்னுடைய பேராசைநீங்கியது? அக்காலத்தில் அக்கினியில்வீழ்ந்து தேகவியோகமடைந்த வேதவதியென்னும் பதிவிரதாரத்தினமானவள் இப்போதிந்தச்சானகிப்பிராட்டியி னுருவமாக அவதரித்திருக்கின்றாரென்றும், இவரே சமஸ்தசராசரங்களையும் பெற்றெடுத்த சர்வ ஜகன்மாதாவென்றும் உனக்குச்சொன்னேன். அதை உன்மனதிற் கொள்ளாமற்போனாயே: அதுகாரணத்தால் உன்குலமுழுமையும் ஸ்ரீராமலட்சுமணர்களை எதிர்த்துநின்று நாசமடைந்ததே: பின்னேயாவது என்சொல்லை நிசமென்றுநம்பிச் சரணாகதி செய்யாமலே வியர்த்தத்திற் பிராணனைவிட்டாயே: இன்றையத்தினமாவது ஸ்ரீராமநாதனுடைய புஜபலபராக்கிரமத்தை அறிந்து செல்கின்றாயோ?

ஓ இருபது குலாசலங்களையொத்த தோள்களையுடையானே! மூலதாமரைமலரில்வந்த சதுர்முகனோடு கூரிய மழுவாயுதத்தைக் கையில்தாங்கிய பஞ்சமுகனும் கொடுத்தருளிய வரங்களில் ஒன்றுந்தவிராமல், எல்லாமும் ஸ்ரீராமபாணத்துக்கு முன்னே உன்பத்து முடிகளோடும் பொடியாய்ப் பயன்படாமற் போனவைகளல்லவா? அக்காலத்திலே உன்னிடத்தில் யான்வைத்த அன்பின்மிகுதியால் ஸ்ரீராமபிரானைப்பற்றிச் சொன்னவற்றில் ஒன்றும் உண்மையென்று அறிந்துகொள்ளாமற்போனாயே: ஸ்ரீராமபத்திரரானவர் உலோகேஸ்வரர்களுக்கெல்லாம் ஈஸ்வரனென்பதை, அந்த அவாப்த சமஸ்தகாமனாய்ச் சகலசகத்காரணபூதனா யெழுந்தருளிய ஸ்ரீசர்வேசுரனுடைய பரந்தாமத்தை யடைந்து நின்ற இன்றைக்குத்தான் தெளிந்தாயோ? நீ முன்பிருந்து வந்ததும், சகல பிரமாதிதேவர்களுடைய பதவிகளுக்கு மேலாகியதும், இந்த அண்டங்கள் யாவற்றினு மூன்றுபங்கதிகப் பெரிதுமாகிய வைகுண்டத்தை யடைந்தாயோ? அல்லது நீ உன்குலதெய்வமாக ஆகமவிதிப்படி ஆராதித்துவந்த ஸ்ரீசந்திரசேகரராகிய பரமசிவனுடைய அழியாப்பதவியென்னும் கயிலாசபதவியை யடைந்தாயோ?

ஓ என் அண்ணாவே! சிறிதும் பயப்படாமல் உனக்குச் சமீபத்தில் வந்து உன்னுயிரைக் கொண்டுபோனவர் யாரோ? இதெல்லா நிற்கட்டும்: சர்வலோகேஸ்வரியாகிய சீதாபிராட்டியார் பக்கலில் துன்மதியால் நீ விரகங்கொண்டதையறிந்து உன்னோடு போராடிக்கொண்டிருந்த மன்மதனானவன் தான் செய்துகொண்டிருந்த போராட்டத்தை இனியாவது விட்டானோ?

அக்கினிச்சுவாலையைப்போலக்கிரணங்களை வீசிக்கொண்டிருந்த பூரணச்சந்திரனானவன் இப்போது குளிர நிலாவெறிக்கின்றானோ? உதட்டை மறைக்கும்படியாக முன்னே நீண்டு தோன்றுகின்ற பற்களையுடைய சூர்ப்பநகையானவள் யாவராலும் கொல்லப்படாத பராக்கிரமசாலியாகிய மைத்துனனை இந்த ராவணனானவன் கொலைசெய்தா னல்லவாவென்று உள்ளத்தில் வைரங்கொண்டு அநேகமாயவஞ்சனைகளை ஆலோசித்திருந்தவள், இப்போதாவது தான் கொண்ட வயிரத்தை நீங்கினாளோ? நீ ஜாநகிப்பிராட்டியார்பக்கலில் அபசாரப்பட்ட காரணத்தால் சுவர்க்கவாசிகளாகிய நல்லவர்களும், நகரவாசிகளாகியயாவர்களும், நம்மோடு பகைகொண் டிருக்கின்றார்களே:

ஓ புருஷ சிரேஷ்டனே! நீ சுவர்க்கத்தையாவது நரகத்தையாவது அடைந்தாயானால் அங்கேயாரோடு உறவாயிருந்து யார்முகத்தே விழிக்கப்போகிறாய்? ஐயோ! தனித்தவனாகிவிட்டாயே: விசயலட்சுமியையும், சாஸ்திரங்களுக் கதிதேவதையாய்நின்ற சரஸ்வதியையும், கீர்த்தியென்கிற பெண்ணையும் தழுவிநின்று; அந்த மூன்றுஸ்திரீகளும் உன்னைவிட்டு நீங்கும்படியாகப் பொறுமையால் ஊடிக்கொள்ளவும் எல்லாவைபவங்களுக்கும் இறைவியும், சகல சம்பத்துகளுக்குந் தலைவியும், பிரமேந்திராதி சமஸ்ததேவர்களுக்குந் தாயும், தெய்வத்தன்மை பொருந்திய கற்புள்ள பெரியபிராட்டியாருமாகிய ஸ்ரீ சீதாபிராட்டியை உன்னுடைய துர்ப்புத்தியால் தழுவுதற்காகப் பிராணனையே கொடுத்துப் பழியைப் பெற்றுக்கொண்டனையே: ஓ முழுப்பித்தனே! உன்னெண்ண மெல்லாம் பழுதாகி இப்போது திக்குயானைகளுடைய தந்தங்களை முறித்தவுனது பிரகாசமாகிய மார்பினாலே பூமிதேவியைத் தழுவினாயோ என்று சொல்லிச்சொல்லி அழுதார்.

இராவணன்மேல் விழுந்தழுகின்ற விபீஷணரை சாம்புவந்தர் தேற்றுதலும் மண்டோதரி தன்னாயகன் மரணத்தைக்கேட்டு வருந்தி யுத்தகளம் வருதல்.

கவி.

என்றேங்கியரற்றுவான் றனையெடுத்துச்சாம்பவனா மெண்கின்வேந்தன்
குன்றோங்குநெடுந்தோளாய் விதிநிலையைமதியாத கொள்கைத்தாகிச்
சென்றோங்குமுணர்வினையோ தேறாதேயழுந்துதியோ வென்னத்தேறி
நின்றானப்புரத்தரக்க னிலைகேட்டாண் மயன்பயந்த நெடுங்கட்பாவை.

இப்படியழுகின்ற விபீஷணாழ்வானைக் கரடிப்படைகளுக்கு அரசனாகிய சாம்பவரானவர் இரண்டுகைகளாலும் எடுத்து, ஓ மலைபோலுயர்ந்த பெருந்தோள்களை யுடையானே! விதியினது நிலைமையைச் சிறிதுமறியாமல் ஓய்ந்து துக்கிக்கின்ற புத்தியும் உனக்குண்டோ? சுகமும் துக்கமுமாறாமல் வந்துகொண்டிருப்பது நல்வினை தீவினைகளினது பயனென்று தெளியாமல் வீணே வருத்தப்படுகிறது நல்லறிவோ? என்று இன்னும் பலபலவிதமாகத் தேற்றிக்கொண்டிருந்தார். இங்கே இப்படியிருக்க — மயனுடைய குமாரத்தி

யாகிய மண்டோதரியானவள் தன்பர்த்தாவினுடைய மரணச்செய்தியைக்கேள்விப்பட்டு, அனந்தலக்ஷமிராக்ஷசஸ்திரீகள் தங்கள் தங்கள் கூந்தல்களை விரித்துக் கோவென்று கதறிக்கொண்டு தன்பின்னேவர நினைப்பென்பது மறப்பென்பது மில்லாதவளாய் இறந்து கிடக்கின்ற இராவணனுக்குச் சமீபத்தில் வந்து அவன்மேல் வீழ்ந்தாள்.

மண்டோதரி இராவணன் மேல்விழுந்து புலம்பித் தானுமுயிர்விடல்.

கவி.

அன்னேயோ வன்னேயோ வாகொடியேற்கடுத்ததுவு மரக்கர்வேந்தன்
பின்னேயோ விறப்பதுமுன் பிடித்திருந்த கருத்திதுவும் பெற்றிலேனே
முன்னேயோ விழுந்தவுடன் முடித்தலையோ படித்தலைய முகங்காட்டாயோ
என்னேயோ வென்னேயோ விராவணனார்முடிந்தபரி சிதுவோபாவம்.

தெள்ளெருக்கு மலர்முடியான் வெற்பெடுத்த திரடோளின் மேலுங்கீழும்
எள்ளிருக்கு மிடமின்றி யுயிரிருக்கு மிடனாடி யிழைத்தவாறே
கள்ளிருக்கு மலர்க்கூந்தற் சானகியைக் கடுஞ்சிறையில் வைத்தகாதல்
உள்ளிருக்கு மெனக்கருதி யுடல்பிளந்து தடவியதோ வொருவன்வாளி.

ஆரம்போர் பொருமார்பை யகன்முழைகளெனத்திறந்திவ் வுலகிற்கப்பால்
தூரம்போ யினவொருவன் சிலைதுறந்த சரங்களே போரிற்றோற்றும்
வீரம்போ யுரங்குறைந்து வரங்குறைந்து வீழ்ந்தானே வேறேகெட்டேன்
ஓரம்போ வுயிர்பருகிற் றிராவணனை மானுடனா ரூற்றமீதோ.

காந்தையருக் கணியான சானகியார் பேரழகு மவர்தங்கற்பும்
ஏந்துபுயத் திராவணனார் காதலுநஞ் சூர்ப்பநகை யிழந்தமூக்கும்
வேந்தர்பிரான் றயரதனார் பணியாலே வெங்கானம் விரதம்பூண்டு
போந்ததுவுங் கடைமுறையே புரந்தரனார் பெருந்தவமாய்ப் போயிற்றம்மா.

தேவர்க்குந் திசைக்கரிக்குஞ் சிவனார்க்கு மயனார்க்குஞ் செங்கண்மாற்கும்
ஏவர்க்கும் வலியானுக் கென்றுண்டா மிறுதியென வேமாப்புற்றேன்
யாவர்க்கு நீயிழந்த வருந்தவத்தின் பெருங்கடற்கும் வரமென்றோதும்
காவற்கும் வலியாரோர் மானுடனா ருளரென்னக் கருதினேனே.

அரைகடையிட் டமைவுற்ற கோடிமூன்றுயுவும்பே ரறிஞரேனும்
உரைகடையிட் டளப்பரிய போராற்றறோளாற்றற் குலப்போவில்லைத்
திரிகடையிட் டளப்பரிய வரமென்னும் பாற்கடலைச் சீதையென்னும்
பிரைகடையிட் டழிப்பதனை யறிந்தேனோ தவப்பயனின் பெருமைபார்ப்பேன்.

ஆரனாருலகியற்கை யறிதற்கா ருலகேழு மேழுமஞ்சும்
வீரனாருடலுறந்து விண்புக்கார் கண்புக்க வேழவில்லான்
நாரநாண் மலர்க்கணையா னாளெலாந் தோளெலா நையவெய்யும்
மாரனார் தனியிலக்கை மனிசனா ரழித்தாரோ வலத்தினாலே.

ஆராவமுதா யலைகடலிற் கண்வளரும்
நாராயணனென் றிருப்பே னிராமனைநீ
ஓராதே கொண்டகன்று யுத்தமனார் தேவிதனைப்
பாராய்நீ நின்னுடைய மார்பகலம் பட்டவெல்லாம்.

ஓ என்தாயே! ஓ என்தாயே! மகாபாதகியாகிய எனக்கு இராக்ஷசகுல நாயகனுர்க்குப் பின்னே இறக்கும்படி நேரிட்டதே: இதென்ன ஆச்சரியம்? நான்வேறொன்றை யடையாமற்போனாலும் என்குலநாயகருக்கு முன்னே இறக்கவேண்டுமென் றெண்ணியிருந்த எண்ணத்தையாவது பெறுகின்ற பாக்கியம் எனக்கில்லாமற் போய்விட்டதே; இந்த வீரசிரேஷ்டருடைய உடல்முன்னே விழுந்திருக்கிறதே: சொர்ணமயமான முடிகளணிந்த தலைகளோ புழுதியி லுருண்டுகிடக்கின்றனவே: ஓ என்பிராணநாதா! சற்றேயுமது திருமுகங்களைக் காட்டீரோ? தம்முடையபேரைக் கேட்டமாத்திரத்தில் சகலவீரஜனங்களையும் அழச்செய்பவரென்னு மேதுவால் இராவணனென்னும் பெரும்பெயரைப்பெற்ற பராக்கிரமசாலியானவர் இறந்துபோனாரென்பது என்ன ஆச்சரியம்? ஆ! ஆ! என்ன ஆச்சரியம்? இஃதெவ்வளவு பரிதாபமானகாரியமா யிருக்கிறது?

அன்றியும் - தனக்குச் சமானமில்லாத ஸ்ரீராமனுடைய பாணமானது மார்பொன்றையே பிளந்துசெல்லாமல், வெள்ளெருக்க மலர்மாலையைத்தரித்த சாக்ஷாது உருத்திரபகவானுடைய கயிலையை அநாயாசமாகப் பேர்த்த தோள்களுக்கு மேலுங்கீழுமாக எள் தங்குதற்கு மிடமில்லாமற் சின்னபின்னமாகத் தொளைத்திருப்பதை யோசித்துப் பார்த்தால்; பிராணதாரத்தைத் தேடித்தேடித்தான் இப்படிச்செய்த விதமோ? அல்லது தேவியாகிய சானகிப்பிராட்டியை அசோகவனத்திற் சிறைவைத்த ஓராசை தங்கியிருக்கு மிடத்தைத் தடவிப்பார்த்த விதமோ? எனக்குயாதொன்றுந் தோன்றவில்லை. இதென்னமோ விபத்தமாய்க் காயம்பட்டிருக்கின்றது. ஒப்பற்ற ஸ்ரீராமனுடைய பாணங்கள் மலையிற் குகைகள்காணப் படுவதுபோல மார்பைப் பல தொளைகள்செய்து இவ்வுலகையுங்கடந்து அப்புறத்திலும் சென்றன. சகல வீரஜனங்களையும் செயம்பெற்ற பிரதாபலங்கேசுரர் போரிலே தோல்வியடைந்து, தம்முடைய வீரத்தையிழந்து, வலியுங்கெட்டு, பெற்றவரங்களெல்லாம் தொலைந்து இழந்தாரல்லவா? இதென்ன ஆச்சரியத்திலே ஆச்சரியமா யிருக்கிறது?

ஐயோ! ஒரு பாணந்தானோ என்புருஷனுடைய உயிரைவாங்கியது? ஏகமனுஷியனுக்கு இப்படிப்பட்டபலமும் உண்டோ? இதென்ன அற்புதம்? தேவஸ்திரீஜனங்களுக்கெல்லாம் சிரசிலே யணிந்துகொள்ளத்தக்க ஆபரணம்போல விளங்குகின்ற சானகிபிராட்டியாருடைய கட்டழகும், அவருடையகற்பும். உயர்ந்த தோள்களையுடைய இராவணனுர் அந்தப்பிராட்டியார் பக்கலில்வைத்த ஆசையும், இத்துன்பங்களுக்கெல்லாம் காரணமாகிய சூர்ப்பநகையானவள் மூக்கையிழந்ததுவும், ஸ்ரீராமபிரான் தசரதசக்கரவர்த்தியினுடைய ஆக்கினையால் தவவேஷம்பூண்டு காட்டிற் பிரவேசித்ததும், இவையெல்லாவற்றையும் கடைசியாக ஆலோசித்துப் பார்த்தால் இந்திரன்செய்த மகாபாக்கியமாய் முடிந்திருக்கின்றன. எல்லாத் தேவர்களுக்கும், திக்குயானைகளுக்கும்,

உருத்திரனுக்கும், பிரமனுக்கும், விஷ்ணுவுக்கும், மற்றெவர்களுக்குமே லான பராக்கிரமசாலியாகிய இராவணனுர்க்கு மரணமுமுண்டாகுமோ? ஒருகாலத்து முண்டாகாதென்றே கர்வங்கொண் டிருந்தேன். அந்தக்கர்வ மிப்போது பங்கமாய்விட்டதே:

ஓ என்பிராணேசா! நீர் எல்லாரைப் பார்க்கிலும் அதிக பிரயாசைப் பட்டுச்செய்த அரியதபமாகிய சமுத்திரத்தைக் காட்டிலும், அந்தத்தவங்களாற் பெற்றவரமென்னும் அரணைக்காட்டிலும், மிக்கவலிமையுடைய மனுஷியனொருவன் உண்டென்று நான் நினைத்ததுமுண்டோ? இல்லையே: ஓ இராக்ஷசகுல விராஜசிங்கமே! உம்முடைய ஆயுள்நாளோ மூன்றரைகோடியாகும். புத்திமான்களாலும் அளவிடுதற்கொண்ணுத உமது பராக்கிரமத்துக்கும் போர்ச் சாதுரியத்துக்கும் இவ்வளவென்று முடிவில்லை. எல்லையில்லாமல் நீர் பெற்றிருந்த வரங்களென்னும் பாற்சமுத்திரத்தை நம்முடையவிதியானது சீதாபிராட்டியாகிய பிரையைக்குத்தி அழிப்பதனை நான் இதற்குமுன்னே அறிந்திருப்பேனேயானல் எவ்விதத்திலும் அச்சீதையை நீர் விட்டுவிடும்படி செய்யாமற்போவேனே? செய்தேயிருப்பேன். நீர்பெற்றிருந்த வரங்களின்பெருமையையே கண்டு எக்களிப்புக்கொண் டிருந்தேன். ஐயோ! உலோக சுபாவத்தையார் அறியவல்லவர்கள்?

ஓ சங்கரா! கணுக்களடர்ந்த கருப்புவில்லை யேந்திமலர்க்கணைகளால் எந்நேரமும் இருபதுதோள்களின் மேலும் எய்துகொண்டுவந்த மன்மதராஜனுடைய லக்ஷியமென்னு மிராவணரை ஸ்ரீராமரென்னு மனுஷரானவர் தம்முடைய பராக்கிரமத்தால் அழித்துவிட்டார். சதுர்த்தசபுவனங்களும், அஞ்சத்தக்க மகாசுத்தவீரராகிய அவ்விராவணனுர் தேகத்தைத்துறந்து வீரசுவர்க்கமடைந்தார். ஐயோ! நான் தனியளானேனே: இனியென்னசெய்வேன்? ஓ என்பிராணபதமான நாயகமே! ஸ்ரீராமபிரானை யெல்லாவிறைவர்களுக்கும் திருப்தியுண்டாக்கிய அமுதஞ்சனித்ததிருப்பாற்கடலில் திருக்கண்வளர்கின்ற ஸ்ரீசர்வேசுரனென்றே நினைத்திருப்பேன். நீரதை எவ்வளவும் ஆலோசியாமல் அந்த அப்பிராகிருதராகிய ஸ்ரீராகவபிரானுடைய தேவியாரை வஞ்சமாய் எடுத்துக்கொண்டுவந்து சிறைவைத்துவிட்டீர். இப்போது உம்முடைய விசாலமாகிய மார்புமுழுவதும் பட்டிருக்கிற புண்களின்துவாரங்களைப் பாரும் என்று கூக்குரலிட்டு அழுதனள். இப்படிப் புலம்பியழுத பதிவிரதா சிரோமணியாகிய மண்டோதரியானவள் எழுந்து, அந்தராவணனுடைய மார்பைத்தழுவிப் பெருமூச்செறிந்து, பிரியாமை யென்னுந் துக்கத்தாலே உயிரைவிட்டனள்.

இராவணனோடு மரணஞ்செய்த மண்டோதரிக்கும் பந்துவர்க்கத்தினர்க்கும் விபீஷணர் சரமக்கிரியை நடத்தி மீண்டு ஸ்ரீராமரைச் சரணடைதல்.

கவி.

பின்னைவீடணன் பேரெழிற்றம்முனை, வன்னிகூவி வரன்முறையான்மறை
சொன்னவீம விதிமுறையிற்றெருகுத், தின்னனெஞ்சினெ டஞ்சலித்தேற்றினன்.

№ 68. ஸ்ரீராமராக்ஞையால் விபீஷணர் இராவணாதியர்க்குச், கரமக்கிரியை நடத்தி அவரைச் சரணடைதல்.



உயுத்தகாண்டம். இராவணன்வதைப்படலம். [illegible]

№59. இலட்சுமணர்விபீஷணர்க்குபட்டாபிஷேகஞ்செய்தல். ஆஞ்சனேயர்இராவணனிறந்ததை சீதைக்குணர்த்தல்.



(ஸ்ரீராமர்விபீஷணரால்சீதையையழைப்பிக்க அவள்வந்துபணிதல்.)



மற்றையோர்க்கும் வரன்முறையால்வகுத், துற்றதீக்கொடுத் துண்குறுநீருகுத்
தெற்றையோர்க்கு மிவனலதில்லெனு, வெற்றிவீரன் குரைகழன்மேவினான்.

இப்படி பிராணனைவிட்ட மண்டோதரியினுடைய கற்பினிலைமையைக் கண்டு தேவதாஸ்திரீகளும், மற்ற பூலோக நாகலோகத்துஸ்திரீகளும், இரிஷி பத்தினிமார்களுமாகிய எல்லா பதிவிரதாஸ்திரீகளும் கொண்டாடினார்கள். மண்டோதரியும் இறந்துபோனபின் விபீஷணாழ்வானானவர் வேதவிதிப்படி பிரேதசடங்குகளைச்செய்து, சந்தனம்அகில்இக்கட்டைகளையடுக்கி அதன்மேல் தன் அண்ணனை ஏற்றி, மற்றக்கடன்களையும் செய்துமுடித்து, மயனுடைய புத்திரிகா ரத்தினமாகிய மண்டோதரியையும் தன்தமையனோடு கட்டைகளின்மேலேற்றித் தீயால் தகனமாக்கி, குடங்களிலிருந்து நீரைக்கொட்டுவதிலும் அதிகமாய் இரண்டுகண்களினின்று நீர்சொரிந் தழுது, கும்பகருணன்-இந்திரஜித்து - கும்பன் - நிகும்பன் - இவாள் முதலானவர்களுக்கு நீர்க்கடன் முதலியவைகளைச் செய்து, எல்லோர்க்கும் இவனை யல்லாமல் வேறே சரணாகதியில்லையென் றுணர்ந்து ஸ்ரீகோதண்டதீக்ஷா குருவினுடைய சீர்பாதங்களை வந்துவணங்கினார். இப்படி தம்முடைய சரணாரவிந்தங்களை வந்து வணங்கிய ஸ்ரீவிபீஷணாழ்வானை ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரர் கடாக்ஷித்து, அப்பா சற்குணசிலனே! ஏன்துக்கிக்கிறாய்? மரணமென்பது யாவருக்கும் இயற்கையாய் அமைந்திருப்பதுதானே: இஃதென்ன நீ அறியாததோ? என்று பலபல தேறுதல்சொல்லி அவருடைய துன்பப்பாசத்தை நீக்கிவிட்டார்.

இராவணன்வதைப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

முப்பத்தாறவது,

மீட்சிப் படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமரிலக்குமணரால் விபீஷணருக்கு இலங்காதிபத்தியத்திற்குரிய முடிசூட்டுவித்து இராவண னிறந்த சேதியைச் சீதைக்குணர்த்தும்படி ஆஞ்சனேயரைவிடுக்க, உடனேயவ ரசோகவனஞ்சென்றறிவிக்கவும்பிராட்டியார்ஆற்றற்கரியவானந்தத்தால்தன்னைமறந்துதெளிந்து, காவலரக்கியரைக்கொல்ல வெண்ணியவவர்க்கறிவுறுத்தித் தடுக்க, அப்பால் ஸ்ரீராமர் சீதையையலங்கரித் தழைத்துவரும்படி விபீஷணரையேவவும் அவளவ்வாறே வந்துவணங்கித் துதித்துநிற்க, அக்கால் ஸ்ரீராமர் தம்மைத்துதித்துநிற்குஞ் சீதையைச் சிலதோஷங் கூறிக்கடியவும் அவளிலக்குமணரால் அக்கினிமூட்டுவித் ததிற்பாய, அவ்வக்கினிதேவன் அச்சீதையைக் கையேந்திநின்று ஸ்ரீராமர்பால் விடுத்து வந்திக்கவும் அவரவளைநிர்த்தோஷியென் றுணர்ந்து அங்கீகரிக்க, அக்கால் தேவர்கள்வேண்டுகோளால் பிரமதேவனுமுருத்திரமூர்த்தியும் ஸ்ரீராமர்பால்வந்து அவரதுயதார்த்தநிலையையும் சீதையின்கற்புத்திறத்தையு

முணர்த்திச்சென்ற அவ்வுருத்திரபகவானேவலால்விண்டுலோகத்திலிருந்ததசரதசக்கரவர்த்திவந்துஸ்ரீராமலக்ஷ்மணனையும்சீதையையுந் தேற்றிச் சென்றபின் இந்திராதிதேவர்கள் காகுஸ்தர்கோரிய வரந்தந்து விரைவி லயோத்திக்கெழுந்தருளச்செய்துசெல்ல, அம்மாத்திரத்தில் ஸ்ரீராமர் விபீஷணர்கொணர்ந்த புஷ்பகவிமானத்தில் இலக்குமணரோடு சீதாசமேதராய் அவ்விபீஷண சுக்கிரீவாதி பரிசனங்கள் சூழவெழுந்தருளி கிஷ்கிந்தையைச் சமீபித்தபோது பிராட்டியார் வேண்டுகோளால் வானரப்பெண்களையும் வருவித்தேற்றி அப்பால்நடக்க, அக்கால் புட்பகவிமானம் சித்திரகூடபருவதத்தருகே போகையில் ஸ்ரீராமர் தமதுபரிசனங்களோடதினின்றுமிறங்கிப் பரத்துவாசமுனிவருடைய ஆச்சிரமத்தமர்ந்து தமதுவரவைப் பரதராஜனுக்கறிவிக்கும்படி ஆஞ்சனேயரைவிடுக்க, அச்சமயம் பரதரானவர் பதினான்குவருடஞ் சென்றும் பரந்தாமன் வராமையால் அக்கினியில்வீழ்ந் திறப்பதாகச் சத்துருக்னரோடு சமவாதஞ்செய்திருக்கையில் அஃதுணர்ந்த கௌசலாதேவி வந்து கையமர்த்திப் பலநீதிகூற, அவரது கேளாதுமறுத்து விரையுங்கால் ஆஞ்சனேயரெதிர்ப்பட்டு ஸ்ரீராமர்வரவைக் கூறிநிறுத்தி அவர்கணையாழியையளிக்கவும் அவரதுகண்டு ஆனந்தபரவசராகிச் சுவாமியைச் சென்றுகாண விரும்பியதும், அஃதுணர்ந்த சத்துருக்னரேவலாற் குழுமிய பலபரிசனங்களோடு பரதரானவர் வெளிப்பட்டு ஆஞ்சனேயரால் ஸ்ரீராமரது வனவாசச்சிறப்பையும் இராவணாதிஇராக்கதர்களையொழித்த பராக்கிரமச்செயலையு மோதக்கேட்டு நடந்து பாரத்துவாச ராச்சிரமத்தைச் சமீபித்ததும், அக்கால் ஸ்ரீராமர் அத்தபோதனர்செய்த விருந்தைத்தமது பரிசனத்தோடுண்டு தம்மைக் காணவந்த குகப்பெருமானை ஆசரித்து அன்றிரவுநீங்கிச் சூரியோதயமான பின் யாவரோடும் புஷ்பகவிமானத்திலேறி அயோத்திநோக்கிச் செல்லுகையில் ஆஞ்சனேயரால் அவரது வரவைக்காட்டப் பரதர்கண்டு சேவித்ததும், உடனே யவ்வாஞ்சனேயர் விமானத்திற்பாய்ந்து ஸ்ரீரகுநந்தனருக்குப் பரதாதிய பரிசனங்களின் வரவைக்காட்ட அவரவர்களையு மவ்விமானத்தேற்றி அயோத்தியாபுரியைச்சார்ந்த நந்திக்கிராமத்திற் சேர்ந்ததுஞ் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமர் விபீஷணருக்கு முடிசூட்டும்படி இளையபெருமாளுக் காக்கியாபித்தல்.

கவி.

வருந்தனீதி மனுநெறியாவையும், பொருந்துகேள்விப் புலமையினோயெனா
அருந்தவப்பய னாலடைந்தாற்கறைந், திருந்தவத்தினை யோற்கிதியம்பினான்.

சோதியான்மகன் வாயுவின்றோன்றன்மற், றேதில்வானர வீரரொடேகிநீ
ஆதிநாயக னாக்கியநூன்முறை, நீதியானை நெடுமுடிசூட்டுவாய்.

அப்பால் தான் முன்னைசெய்த அருந்தவத்தின் பயனால் தம்மைச்சரணமடைந்து உஜ்ஜீவித்த விபீஷணாழ்வானை ஸ்ரீராமர்பார்த்து, ஓ மநுநீதிமுதலிய தருமசாஸ்திர விதிகளை யறிந்திருக்கிற புத்திமானே! நீ வருத்தப்படாதே: என்று திருவாய்மலர்ந்தருளி ஸ்ரீலட்சுமணப்பெருமாளைப் பார்த்து, என்னப்பனே! சுக்கிரீவமகாராசன் - அநுமான் - மற்றவானர வீரர்கள் - இவர்களோடு நீ சென்று, வேதத்திற்சொல்லியபடி நீதிமானாகிய விபீஷணனுக்கு

முடிசூட்டக் கடவாயென்று ஆக்கியாபித்து மற்றவர்களுக்கும் விடைகொடுத்தருளினர். அப்போதங்கு நின்ற சமஸ்ததேவர்களும் - மற்றத் திக்குப்பாலர்களும் — தங்கள் தங்களுக்கேற்ற செய்கைகளைச் செய்யும் உட்களிப்போடுசென்று, சமுத்திர தீர்த்தத்தையும் - கங்கை — யமுனை - கோதாவரி — நருமதை - காவேரி - முதலிய தீர்த்தங்களையும் — திவ்வியரத்தினமயமாகிய சொர்னகிரீடத்தையும் — பெருமையாகிய வச்சிரமணிகளிழைத்த சிங்காசனத்தையும் - மற்றும் வேண்டியவைகளையும் விரைவாகக் கொண்டுவந்தனர்கள். மூலதாமரையிற்பிறந்த பிரமனானவன் பட்டாபிஷேகமண்டபம் கட்டவேண்டிய ஏற்பாடுகளைச் சொல்ல,அச்சொல்லின்வழியே தெய்வத்தச்சனானவன் பிறைச்சந்திரனையும் கங்கையும் சடாபாரத்தில்தரித்தருளிய கயிலாசபதியோடு மற்றத்தேவர்கள் யாவரும் அதிசயித்துப் புகழ்ந்துகொண்டாடும்படி நானாவித ஒளிகளைவீசுகின்ற நவமணிமயமாகிய மண்டபமொன்று சிருட்டித்தனன்.

இலட்சுமணர் விபீஷணரைச் சிங்காசனத்திலிருத்தி முடிசூட்டுதல்.

கவி.

மெய்கொள்வேத விதிமுறைவிண்ணுளோர், தெய்வநீள்புன லாட்டிருத்திட
அய்யனாணையி னாலிளங்கோளரி, கய்யினான்மகு டங்கவித்தானரோ.

உடனே சுவர்க்கலோக வாசிகளாகிய தேவர்கள் தெய்வீகம்பெற்று விளங்குகின்ற கங்கைமுதலாகிய நவநதிதீர்த்தங்களைக் கொண்டுவந்து நித்தியமாகிய சத்தியவத்துவைப் பத்தியோடுணர்த்தும் வேதவிதிப்படி அபிடேகஞ்செய்வித்து மங்களகரமாகிய வலங்காரஞ்செய்து சிங்காசனத்தின் மேலேற்ற ஸ்ரீகாகுத்தவம்ஸோத்பவராகிய இராமமூர்த்தியின் கட்டளையினால் இலட்சுமணப்பெருமான் தமதுகரத்தால் திருமுடியைச்சூட்டினர். அப்போது தர்மதேவதை நடனஞ்செய்தது. முப்பத்துமுக்கோடி தேவர்களும் கற்பகமலர்களைக் கொய்துகொய்து தூவினர்கள். சித்தர் சாரணர் முதலானவர்கள் தங்களுக்கு வேறேமலர்கள் கிடையாமல், திரிமூர்த்திகளோடும் - முனிவர்களோடும் - பரமவைதீகமார்க்கப் பிராமணர்களோடும் — ஆசீர்வசன மென்னுமலர்களைத் தூவினர்கள்.

அப்பால் பட்டாபிஷேகனாகிய அரக்கர்குலாதிபனானவர் ஸ்ரீராகவபிரானைத் தரிசிக்கவேண்டுமென்கிற பேரவாவையுடையவராகி இலட்சுமணருடைய பாதாம்புயங்களை வணங்கி, ஓ மேருமலையுங்கண்டு நாணுகின்ற தோள்களையுடைய இராமாநுஜரே! இயான் சர்வலோக சரணியராகிய ஸ்ரீராமபிரானைச்சேவித்து வருமளவும் நீர் இந்தலங்காநகரத்திலிருந்து இங்குள்ளவனாக் காவல்செய்திருமென்று அவரிடத்திலே விடைபெற்றுக்கொண்டு, சுக்கிரீவமகாராஜன் அங்கதன் முதலானவர்கள் சூழ்ந்துவரச்சென்று ஸ்ரீராமச்சந்திருடைய திருவடிகளை வணங்கினர். உடனே சுவாமியானவர் தம்மைச் சரணமடைந்த விபீஷணாழ்வானை வாரியெடுத்தணைத்து, ஓ அவைதீகமார்க்காநுசாரிகளாகிய இராக்ஷசர்களைப்போலல்லாமல் பரமவைதீகமார்க்கத்திற் பிசகாம

லொழுகுகின்ற சிரஞ்சீவியாகிய சுகுணசீலனே! இயாகாதிகளால் தேவர்களைத் திருப்திசெய்து, நீதியிலும் தருமத்திலும் தவறுமல்நடந்து, திரிலோகவாசிகளும் வந்து வணங்கும்படி இம்மைமறுமைப் பயன்களைத் தருவதாக அரசுசெய்யக் கடவாயென்று மற்றும் பலபல நீதிகளைக்கூறி, உன்னைச் சேர்ந்தவர்களோடு மிகுந்தகீர்த்தியையடைந்து வாழக்கடவாயென்றும் சொல்லினர்.

ஸ்ரீராமபிரான் ஆஞ்சநேயரைச் சீதாதேவிபாற்சென்று நடந்த யுத்தவைபவங்களைச் சொல்லென்றனுப்பல்.

கவி.

இப்புறத்தின வெய்துறுகாலையில், அப்புறத்தனை யுன்னியனுமனைத்
துப்புறச்செய்ய வாய்மணித்தோகைபால், செப்புறிப்படி போயெனச்செப்பினன்.

இப்படிசொல்லி முடிந்தபின் மேலே நடக்கவேண்டியதை ஆலோசித்துச் சிறிய திருவடிகளைப்பார்த்து, அநுமானே! நீ பவளம்போன்ற வாயையு மயில்போலும் சாயலையுமுடைய சானகியினிடத்தே சென்று, இங்கு நடந்த செய்திகள்யாவற்றையும் சொல்லென்றனுப்பினர்.

உடனே சர்வசுவாமியினுடைய கட்டளையின்படி சிறிய திருவடிகளானவர் அழகிய அசோகவனத்தைச் சேர்ந்து, நீரில்லாமல் வாடிக்கிடக்கின்ற ஒரு பூங்கொம்புக்குத் தளிர்க்கும்படி வார்க்கின்ற நீரைப்போல ஸ்ரீராமபிரானுடைய வீரப்பிரதாபச் செய்கையைக்கொண்டு பிராட்டியாருக்கெதிரேநின்று, ஸ்ரீரகு குலதிலகருடைய சகஸ்திர திருநாமங்களையும் பலபலமுறை வாயாரப்பாடிக் குதித்துக்குதித்துச் சாரிகைதிரிந்து ஆநந்தத் தாண்டவஞ்செய்து, களிப்பின்மிகுதியால் நடுங்குகின்ற அழகிய விரண்டுதிருக்கரங்களையும் உச்சியின்மேற் கூப்பிநின்று சொல்லுகிறார்:—

ஸ்ரீராமபிரானுத்தரவாற் சென்ற ஆஞ்சனேயர் சீதாதேவியைவணங்கிச் சோபனமுரைத்தல்.

கவி.

ஏழை சோபன மேந்திழை சோபனம், வாழி சோபன மங்கல சோபனம்,
ஆழி யான வரக்கனை யாரியச், சூழி யானை துகைத்தது சோபனம்.

ஓ சர்வக்கியராயிருந்தும் ஒன்றுமறியாதவர் போல இந்த வனத்திலிருப்பவரே! மங்களம் உண்டாகுக. இந்திராணி சரசுவதிமுதலிய உத்தம ஸ்திரீஜனங்கள் யாவரும் சிரசின்மேல்வைத்துக் கொள்ளத்தக்க திவ்வியாபரணம் போன்றவரே! மங்களம் உண்டாகுக. உம்முடைய இல்வாழ்க்கைக்கு மங்களம் உண்டாகுக. சக்கரதரனுகிய மத்தகஜமானது தேவரீர்பக்கலில் அபசாரப்பட்ட தசமுகனுகிய முண்மரத்தைத் தும்சப்படுத்திய விஜயத்துக்கு மங்களம் உண்டாகுக. ஓ என்தாயே! ஓ சர்வாத்துமதயாபரையே! அந்தப் பாபிஷ்டனுடைய தலைகள் பர்வதராசிகளைப் போலப் பூமிப்புழுதியில் உருண்டுகிடக்கின்றன. இரத்தினபரணங்களைத்தரித்த புஜசமூகங்கள்சமுத்திரத்தின்

அலைகளைப்போலத் தரையிற்கிடக்கின்றன. பருத்ததேகமானது சமுத்திரத்தைப்போலக் கிடக்கிறது. மஹாபரிசுத்தராகிய விபீஷணாழ்வானவர் சுவாமியைநோக்கி, ஸ்ரீ தசரதாத்மஜரே! தேவரீர் இன்னும் பிராட்டியாரை வரவழையாமலிருப்பது தேவரீருக்குப் பிழையாகமுடியும். அன்றியும் யாவருமதிக்கத்தக்க புகழுமல்லவென்று சொன்னாரென்று சொல்லினர்.

இப்படி ஆஞ்சநேயர் சொல்லிக்கொண்டு வரும்போது தம்மையடைந்தவர்களுடைய இருவினைகளை யொழித்து நித்தியானந்தத்தைத் தருகின்ற சீதாபிராட்டியார் தினம்தினம் ஒவ்வொருகலையாக வளராமல் எல்லாக்கலைகளும் ஒரேதினத்திற்சேர்ந்து சந்திரன் வளர்ந்தாற்போலச் சர்வாவயவங்களும் பூரித்தார். இம்மட்டுமோ? செவ்வாம்பல்போன்ற திருவாயும் திருமுகமண்டலமு மலர்ந்து தோன்றவும், நுட்பமாகிய இடையானது வருந்தும்படி தாம்கொண்ட காதலுக்கு இரண்டுபங்கதிகமாக ஸ்தனபாரங்கள் பூரித்துத்தோன்றவும், இராகுவாற் பிடிக்கப்பட்டு மறுபடியுங்கக்கிய சந்திரனைப்போலவும் காணப்பட்டார். ஆஞ்சநேயர் ஸ்ரீராமநாதருடைய செய்திகளைச் சொல்லிக்கொண்டு வரும்போது சர்வலோகேசுவரியாகிய பிராட்டியாருக்கு முன்னே ஓங்கிப் பூரித்தது மனமோ? மனத்திலுண்டாகிய பெருங்களிப்போ? அழகிய வளையலணிந்த தோளோ? அல்லது ஸ்தனபாரமோ? எதுவோ இன்னதென்று அறிந்துசொல்ல எம்மால் முடியாது. இப்படி பூரித்ததல்லாமல் திருமுகத்தில் புருவங்கள் நெரிந்தன. ஸ்தனங்கள் வெயர்வைக்குமிழிகளை அரும்பின. நினைப்பதொன்றும் சொல்வதொன்றுமாகி ஆனந்தபரவசப் பட்டவளாய் அஞ்சனை இளஞ்சிங்கத்தைப் பார்த்து, இன்னதைச் சொல்லலாமென்கிற நினைவில்லாமல் உன்மத்தமடைந்தவர்களைப்போலச் சும்மாகிடந்து யான் யாதுசொல்லப்போகிறேனென் றிருந்தாள். அந்த நிலைமையைக்கண்ட ஆஞ்சனேயர் அவரைத்தொழுதெழுந்து, ஓ சகன்மாதாவே! தேவரீருடைய இருதயத்திலுண்டாகிய களிப்பின் மிகுதியாலோ? அல்லது என்னுடைய தூதுபொய்யென்றோ? நீர் ஒன்றும் பேசாமலிருப்பதென்றார். அதுகேட்டருளிய எம்முடைய தாயானவள் அவரை யுற்றுப்பார்த்து, என்னப்பனே ஆஞ்சனேயா! உன்னுடைய வார்த்தையாகிய அமிர்தத்தைப் பானஞ்செய்தபின் என்னுள்ளத்தில் கரைபுரண்டெழுந்தோங்கிய சந்தோஷப் பிரவாகத்தினாலே பரவசப்பட்டு எதைச்சொல்லுவோமென்று ஆலோசித்து ஒன்றுந்தோன்றாமற் சும்மாவிருக்கின்றேனே யல்லாமல், நீ சொன்னசமாசாரமாகிய மகாபாக்கியமானது எனக்குண்டாகிய பைத்தியத்தைப் போக்கமாட்டாமல் மேலுமேலும் பைத்தியத்தைத் தருமோ?

அப்பா அஞ்சனைச்சிங்கமே! முன்னே தூதுவந்தபோது இந்தச் சிறையிலிருந்து யானே நீக்குகிறேனென்று சொன்னநீ, அப்படியே இப்போது சிறையில் நின்று நீங்க சந்தோஷச் செய்தியையும் சொன்னாய். அப்படிப்பட்ட உபகாரியாகிய உனக்கு என்னபிரதியுபகாரஞ் செய்யப்போகிறேனென்

பதை யோசித்து யோசித்து, உன்னோடு பேசவுமாட்டாமற் சும்மா விருந்து விட்டேன். ஓ என் ஐயனாகிய அநுமானே! இந்தத் திரிபுவனங்களையு நீ செய்த நன்றிக்குப் பிரதிநன்றியாகத் தந்தபோதிலும் சரிப்படுமோ? நீசெய்த உபகாரமழியாது அம்மூன்றுலகமு மழிந்துபோகுமே பிறகு எந்தஉபகாரஞ் செய்வதென்று நினைத்துக்கொண்டே யிருந்தேன். ஓ என்புத்திர தீபமே! உன்னை என்தலையால் வணங்கவுங் கூடுமென்று எண்ணுகிறேன். இப்படி யிருப்பதினால் யாதொருபகாரமும் செய்யச் சக்தியற்றநான் உனக்கு என்னசெய்யலாமென்று எண்ணி யிருந்தேனே யல்லாமற் பேச மறந்துவிட்டவளல்லேன். ஓ சாணைபிடித்த இரத்தினத்திற்குச் சமானமானஸ்ரீராமதூதனே! உன்பக்கலில் நான்செய்யவேண்டியது யாது அதைச்சொல்லக்கடவாயென்று கேட்டார். உடனேவாயுபுத்திரரானவர், ஓ எம்முடைய இறைவியே! நீர் எனக்குத் தயைசெய்கின்றவரம் வேறொன்றுமில்லை. உம்முடையமனம் களிக்கின்ற அநந்த கலியாண குணநிதியாகிய ஸ்ரீரகுகுல நாயகரிடத்தில் உம்மையான் கொண்டுபோய்ச் சேர்க்கும்படி நீர் கிருபைசெய்வதுதான் நான் பெற்றுக்கொள்ளும் பெருவரமாகும். என்றுசொல்லிப் பின்னுஞ் சொல்லுகின்றார்.

ஆஞ்சனேயர் காவலரக்கியரைக் கொல்லும்படி வரங்கேட்க பிராட்டியார் வேண்டாமென்று மறுத்தல்.

கவி.

எனவுரைத்துத் திரிசடையாளெம்மோய், மனையினிற்சுடர் மாமுகமாட்சியா
டனையொழித்திவ் வரக்கியர்தங்களை, வினையினிற்சுட வேண்டுவென்யானென்றான்.

இதுவுமல்லாமல் இரத்தினத்தைப்போலக் களங்கமற விளங்குகிற திருமுகத்தையுடைய திரிசடையென்னும் என் தாயையொழித்து, இந்த ராக்ஷசஸ்திரீகளையெல்லாம் என்னுடைய கையறையாற் கொல்லும்படி வேண்டுகிறேன். தயைசெய்விராகில் இதுவும் ஒருவரந்தான்.

ஸ்ரீ ஆஞ்சனேயரிப்படி கேட்டுக்கொள்ளுதலும் இதைக்கேட்ட தேகவலியையுடைய இராக்ஷசஸ்திரீகளெல்லாம் சீதாதேவியைப்பார்த்து, ஓ எங்களுடைய தாயே! உம்முடைய பாதாரவிந்தமே எங்களுக்கு அடைக்கலம்: அடைக்கலம்: என்று திருவடித் தாமரைகளைப்பற்றி விழுந்தார்கள். அப்போது தாயாரானவர் அரக்கர்மாதர்களைநோக்கி, அஞ்சாதேயுங்கள்: அஞ்சாதேயுங்கள்: என்று அபயப்பிரதானந்தந்து ஆஞ்சநேயருடைய முகத்தைப் பார்த்து, ஓ திரிகரணத்தாலும் பரிசுத்தவானே! அந்தப் பாபிஷ்டன் கட்டளையின்படி இவர்கள் செய்தார்களே யல்லாமல் இவர்களுடைய சுயபுத்தியால் என்னதீமைசெய்தார்கள்? எல்லாத்தீவினைகளையும் வசிப்பதற்கு இருப்பிடமாகிய துஷ்டஸ்திரீகளா யிருந்தபோதிலும் இவர்களை மனங்கலங்கும்படி செய்யாதே. இவ்வரத்தை எனக்கு நீ கொடுக்கவேண்டும். என்று பிராட்டியார் சொன்னபோது திருவடிகளானவர் சீதாபிராட்டியாருக்குத் தண்டன்

சமர்ப்பித்து, எம்பெருமானுடைய தேவியாரது திருவுளப் பாங்கின்படியே நடந்துகொள்ளக்கடவேனென்று நின்றுகொண் டிருந்தனர்.

ஸ்ரீராமர் சீதாதேவியை அலங்கரித்தழைத்து வரும்படி விபீஷணரையேவ அவர் சீதாபிராட்டியாரிடஞ் சென்று சொல்ல பிராட்டியார் சுவாமியைவந்து வணங்கல்.

கவி.

என்னுங்காலை யிருளும்வெயிலுங்கார்
மின்னுங்காலை யியற்கையவீடணன்
உன்னுங்காலக் கொணர்தியென்றேதவப்
பொன்னின்சாற்றளிர் சூடினன்போந்துளான்.

வேண்டிற்றுமுடிந்ததன்றே வேதியர்வேதனின்னைக்
காண்டற்குவிரும்புகின்றா னும்பருங்காணவந்தார்
பூண்டகக்கோலம்வல்லை புனைந்தனைவருத்தம்போக்கி
ஈண்டெக்கொண்டணைதியென்றா னெழுந்தருளிறைவியென்றான்.

இங்கே இப்படியிருக்க - இயாவரினும் பெரியோராகிய ஸ்ரீராமபத்திரர் ஸ்ரீ விபீஷணாழ்வானை நோக்கி, ஓ இலங்காநகரராஜனே! எமதுதேவியை வைபவத்தோடு அதிசீக்கிரத்தில் அழைத்துவாவென்று அருளிச்செய்தார். அம்மாத்திரத்தில் இருளைப்போல மேனியும் — சூரியனைப்போல முடியும் - மேகத்தில் தோன்றுகின்ற மின்னலைப்போல பீதாம்பரமும் ஆபரணங்களும் விளங்குகின்ற ஸ்ரீ விபீஷணாழ்வானவர் விரைந்துசென்று, ஸ்ரீ சானகிப்பிராட்டியாருடைய திருவடித்தாமரைகளுக்குத்தண்டன்சமர்ப்பித்து,ஓ எல்லோர்க்குந்தாயே! அந்தணர்கள் அருந்தெய்வமாகிய ஸ்ரீராகவபிரானனவர் தம்முடைய திருவுளத்தில் உத்தேசங்கொண்ட காரியமெல்லா முடிந்து விட்டன. இனியும்மைக்காணும்படி விரும்புகின்றார். நீங்களிநவரு மெழுந்தருளியிருக்கும் திருக்கோலத்தைக்கண்டு சேவிக்கும்படி பிரமன்முதலிய தேவர்கள்யாவரும் வந்திருக்கின்றார்கள். ஆதலால் தேவரீருக்குச் சீக்கிரத்தில் அலங்காரஞ் செய்வித்து உம்முடைய வருத்தத்தை ஆற்றுவித்து என்னிடத்தில் அழைத்துவாவென்றார். ஓ எம்முடைய இறைவியே! எழுந்தருள்வீராகவென்றார்.

இப்படி விபீஷணாழ்வான் சொன்ன சொற்களைக்கேட்ட பிராட்டியாரானவர் சற்றுநிதானித்து ஓ இராக்ஷசகுலவீரனே! யானிவ் விலங்காநகரத்துக்குளிருக்கும் தன்மை இப்படிப் பட்டதென்று அங்குவந்திருக்கும் தேவர்களும் - முனிவர்களும் - கற்புடைய மங்கையர்களும் — கண்டுணரும்படி, இதுவேபிரகாரம் யான்வருவேனேயானல் அது எனக்குப் பெருமையுடையதாயிருக்கும். அப்படியல்லாமல் யான் அலங்காரஞ் செய்துகொண்டு வருவேனேயாகில் பெருமையல்லவென் றருளிச்செய்தார். அதுகேட்ட ராட்சசகுலராஜன் பிராட்டியாரைநோக்கி, ஓ எம்முடையதாயே! தேவரீர் அலங்காரஞ்

செய்துகொண்டு எழுந்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தது யானே சொல்லியதல்ல. நீலரத்தினமலைபோன்ற திருத்தோள்களை யுடைய ஸ்ரீ ரகுகுலோத்தமருடைய அருளிப்பாடாகுமென்று சொன்னார். ஆனால்அப்படியே அலங்காரஞ்செய்து கொள்ளக்கடவே னென்று சம்மதித்தார்.

உடனே தேவர்களுடைய உத்தரவினால் சுவர்க்கலோகத்தி லிருந்து திலோத்தமை முதலிய தேவதாஸ்திரீகள் தாயாரை அலங்காரஞ் செய்யும்படி வந்து சேர்ந்தார்கள். அந்தத்திலோத்தமையும்—மேநகையும் - அரம்பையும் - ஊர்வசியும் - மற்றதேவதாஸ்திரீகளும் - வாசனையூட்டிய தைலமுதலிய திருமஞ்சனதிரவியங்களைச் சுமந்துகொண்டு வந்து நெருங்கிநின்று, பெண்ணிலக்கணம் விளையுங்காணியும் - கற்புடைய மங்கையர்க்கு ஆபரணமும் - அழகென்னும் பொன்னின் மதிப்பையறியும் உரையாணியும் - திருப்பாற்கடலில் அமுதத்தோடு அவதரித்த அன்னமும் — அறங்களை வளர்க்கும்தாயும் - உயர்ந்த வேதமார்க்கத்தைத் திருத்தும்படி அவதாரஞ்செய்த செல்வியுமாகிய ஸ்ரீசிதாபிராட்டியாருடைய சடையாய்த்திரண்டுள்ள கூந்தலைச் சிக்குநீக்கிவாரி, சர்க்கரைப்பாகையென்று அமுதத்தைப்போலப் பெருகுகின்ற சொற்களையுடைய பவளம்போன்றவாயில் முத்துக்களின் வரிசையையொத்த தந்தவரிசையைவிளக்கி, வாசனைத்தைலத்தைச் சிரசிலிட்டுத்தேய்த்தும, லினமாயுள்ள திவ்வியரத்தினத்தைச் சாணைபிடிப்பவர்போல வேதகீதங்களை யெடுத்துப்பாடி வேதமுறைமையின்படித் திருமஞ்சனஞ் செய்து, திருமேனியை மெல்லியசீலையால் ஈரமில்லாமல் துவட்டி, கருவிளை மலரைப்போலச் சித்திரத்தொழிலமைந்த பட்டுவஸ்திரத்தை உடுத்தி, அதன்மேல் மேகலாபரணத்தைப் பூட்டி, அழகிய பவளக்கொடிக்குப் பாலினுரையை அப்பினாற்போலத் திருவுருவமுழுமையும் கலவைச்சந்தனம் பூசி, குங்குமச் சந்தனத்தை ஸ்தனபாரங்களின் மேல் அப்பி, சந்திரனுடைய தேவியானவள் தன்மார்பில் தரித்துக்கொள்ளு முத்துவடத்தையும் - இந்திராணியானவள் தானலங்கரித்துக்கொள்ளும் இரத்தினாபரணங்களோடு மற்ற ஆபரணங்களையும் - தக்கபடி அணிந்து, இயற்கையாய்ச் சிவந்துள்ள அதரத்துக்குச் செஞ்சாயந்தீற்றி, பிராட்டியாருடைய திருவழகைக்கண்டு பிறருடைய கண்ணெச்சில் கழியும்படி வேதமந்திரங்களைச் சொல்லி ஆலத்திநீர்சுற்றி மண்பொட்டிட்டு நின்றார்கள்.

இவ்வண்ணம் சிதாபிராட்டியை அலங்காரஞ் செய்வித்து தேவவிமானத்தின் மீதேற்றி தேவமாதர்கள் சூழ்ந்துவரும்படியாகப் பிராட்டியாரை யழைத்துக்கொண்டு தேவநாயகனாகிய ஸ்ரீராமபிரான் பக்கத்தில் விபீஷணாழ்வார்சென்றனர் இவ்வண்ணம் வருங்காலையில் தேவர்கள் இரிஷிகள் தேவமாதர்கள் ரிஷிமாதர்கள் இன்னும் அவ்வத்தெய்விக வுலகத்துள்ள சகலரும் சூழ்ந்துவரும்போது வழிநெருக்கத்தால் இராட்சசவீரர்கள் சன்னிதிவிட்டுநடக்கும்படிப் பிரம்பினால் ஓங்கியடித்தகாலையில் ஓர் பேரிரைச்சலுண்டாயிற்று.

அந்தச்சத்தத்தைக்கேட்ட பிரானுனவர் கோபக்குறியுடையோராய் இச்சத்தம் பிறந்த காரணம்யாதென அங்குள்ள முனிவர்களைக்கேட்க அவர்கள்வழியில் நடந்தசங்கதிகளைக் கூற அதைக்கேட்கவே பகவானுனவர் தம்மிடமடைந்த விபீஷணரைப்பார்த்துச் சொல்கிறார்.

ஆ! வேதசாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த விபீஷணு! சாதுசற்ஜனர்களாகிய தேவர் முதலானவர்களை அதட்டித்துரத்தி அவர்கள் பக்கலில் என் அபசாரப்பட்டு நீதியல்லாததைச் செய்கிறாய்? அவர்களெம்மைக் காணவேண்டுமென்பது மாத்திரமேயல்ல: உயுத்தகளத்தைக் காணவேண்டுமென்னும் ஆசையாலும் வந்து நெருங்குகின்றார்கள். அப்படிப்பட்ட திக்குப்பாலர்களையும், தேவர்களையும், கடிந்து துரத்தும்படி யாருனக்குச்சொன்னார். மழுவாயுதத்தைத்தாங்கிய சிவமூர்த்தி — உபேந்திரனாகிய விஷ்ணுமூர்த்தி, கமலயோனியாகிய பிரமமூர்த்தி - இவர்களும், இவர்களுடைய பத்தினிமார்களாகிய பார்வதிதேவி — இலட்சுமிதேவி, சரஸ்வதிதேவி - இவர்களோடின்னும்; உலகத்திலுள்ளவர்களுக்கு ஒருகாரியமு நடப்பதுண்டோ? அளவிடற்கரிய தேவர்கள் தங்களுடைய உருவத்தை மறைத்துக்கொண்டு சேர்ந்து படுகளத்தின் பெருமையைப் பார்க்கவந்திருப்பார்களே: அவர்களை அதட்டித் துரத்துவார்களுமுண்டோ? அந்தத் தேவர்களே அப்படி உன்னால் துரத்தப்படுவார்களானால் மற்றவர்கள் என்னபாடுபட் டிருக்கமாட்டார்கள்? ஓ இராக்ஷசகுலவீரசிகாமணியே! சாதுஜனங்களைத் தடைசெய்தோட்டுவது உனக்கு அடுத்ததன்றென்று அருளிச்செய்தனர்.

இப்படி வேதநாயகன் திருவுளங்கன்றி அருளிச் செய்ததைக்கேட்ட பரிசுத்தகுணவானாகிய விபீஷணாழ்வானுனவர் அதிதுக்காக்கிரந்தரா யிருந்தார். இப்பால் அருந்ததிக்குத் திலகம்போன்ற சானகிபிராட்டியார் கழுகும் பருந்தும் - பேயும் - பசிப்பிணிதீர்ந்து களிக்கும்படி இராக்ஷசர்களுடைய உடல்களை சின்னபின்னப்படுத்திய வீரகோதண்டச் செல்வனுடைய திருமேனியின் கட்டழகினலங்காரத்தை விமானத்திலிருந்தபடி பேரவாவோடு கண்டு சேவித்துத் திருவுளமுங் கண்களும் களிக்கப்பார்த்து, அப்போது தமக்குளடங்காத பெருங்களிப்பால் என்னுடைய கற்பினொழுக்கத்தை யாவரு மறியச்செய்து என்னுயகனுடைய வீரத்தன்மையைப் பகிரங்கப்படுத்தி என்குலத்தினுடைய பெருமையை நிலைபெறச்செய்து இந்தவுலகத்தில் வியர்த்தமாய் நான் பிராணத்தியாகஞ் செய்துகொள்ளாதபடி உயிர்பிழைத் திருக்கவுஞ்செய்த அனுமானுக்கு நான்சொன்ன சிரஞ்சீவித்துவத்தை என்னுடைய கற்பானது நிலைபெறச்செய்யுமே யல்லாமற் செய்யாமற்போகா தன்றோ?

கவி.

எச்சிலென்னுடலுயி ரேகிற்றேயினி
நச்சிலையென்பதோர் நவையிலானெதிர்
பச்சிலைவண்ணமும் பவளவாயுமாய்க்
கைச்சிலையேந்திநின் றதனைக்கண்ணுற்றாள்.

இராக்ஷசர்களுடைய ஊரில் தங்கியிருந்த குற்றமுடைய வெனக்கு அடையவேண்டுவது இனிவேறே என்னவிருக்கிறதென்றெண்ணித்தமக்கெதிரே பச்சிலைபோன்ற திருமேனியும் பவளம்போன்ற வாயுமுடையவராய்த் திருக்கரத்தில் ஸ்ரீகோதண்டத்தைத் தாங்கிக்கொண் டிருந்த ஸ்ரீரகுநாயகரைப் பின்னும் கண்களாற் கண்டு, உயிரையிழந்த உடலானது அந்த உயிரைக்கண்டடையுந் தன்மைபோலத் தம்முடைய திருமுகமண்டலத்தை நாயகருக்குக் காட்டும்படி தேவதாஸ்திரீகள் சூழ்ந்துவர எழுந்தருளிவந்த விமானத்தைவிட்டுப்பூமியிலிறங்கி, இராமசுவாமியினுடைய பாதங்களுக்குத் தண்டன்சமர்ப்பித்து நின்றூர். அப்போது கற்பென்கின்ற தருமத்துக்கு அரசியும், பிரமேந்திராதிகளுடைய தேவிமார்களது கழுத்திற்குத் திருவென்னும் ஆபரணமாயெழுந்தருளியிருந்து இரக்ஷிப்பவரும், எல்லா அழகுகளுக்கும் அழகுகொடுப்பவரும், மகா கீர்த்திவாழ்வதற்கு இருப்பிடமானவரும், தம்மிடத்திலேயே அன்புவைத்த எல்லாவுயிர்களையும் இரக்ஷித்தருளுகின்ற தர்மஸ்வரூபியுமாகிய ஸ்ரீ சனகமகாராஜனுடைய அருந்தவப்புத்திரிகா ரத்தினத்தை ஸ்ரீ புருஷோத்தமராகிய ஸ்ரீராகவபிரானவர் திருக்கண்களால் கடாக்ஷித்தருளினூர்.

ஸ்ரீராமர் சீதையின் கற்புத்திறத்தைக்காட்டவேண்ணிச் சினத்தல்.

கவி.

சுணங்குறுதுணைமுலை முன்பிற்றூங்கிய
அணங்குறுநெடுங்கணீ ராறுவார்வுற
வணங்கியமயிலினைக் கற்பின்வாழ்வினைப்
பணங்கிளரரவென வெழுந்துபார்ப்புறூ.

இப்படி கடாக்ஷித்த ஸ்ரீ தசரதாத்மஜரானவர் தம்மைக் காணப்பெற்ற பாக்கியத்தாலுண்டாகிய ஆநந்தத்தால் இரண்டு நேத்திரங்களினின்றும் தாரைதாரையாய் ஸ்தனபாரங்களின்மேல் நீர்சொரியும்படி வணக்கஞ்செய்த கற்பின்வாழ்வாகிய சகன்மாதாவை சர்ப்பத்தைப்போலச் சீறிப்பார்த்து, ஓ ஜானகி! அவைதிக மார்க்காநுசாரியாகிய இராக்ஷசனுடைய நகரத்தில் நீ யிதுபரியந்தம் வாசஞ்செய்துகொண் டிருந்தாய். அங்கிருந்துகொண்டு அறுசுவையுண்டிகளைச் சிறிதும் கவலையென்பதே இல்லாமல் உண்டுகொண் டிருந்தாய். இப்படியெல்லா நடந்தபடியால் உன்னுடைய கற்பினிலைமை கெட்டுப்போனதன்றே? அப்படி கெட்டுப்போயும் இன்னமுயிரோடு பிழைத்திருக்கிறாய். இந்தப்பிரகாரம் பலகுற்றங்களைச் செய்திருந்தும் சிறிதுமச்சமில்லாமல் திரும்பிவந்தது என்னகாரணம்? உன்னை நான் இச்சிப்பேனென்று நினைத்தாயோ? கடலைத்தூர்த்து அணைகட்டி அதன்வழியாக இலங்காநகரத்துக் குள்ளே பிரவேசித்து இராக்ஷசப்பூண் டறும்படி என்பகைவனாகிய இராவணனைக் கொலைசெய்தது, ஓ மைதிலி! உன்னைச் சிறையிலிருந்து மீட்பிக்கும்படியென்று நினைத்துக்கொண்டாயோ? அந்தநினைப்புக் கொள்ளாதே: உன்னாலே எனக்கு நேரிட்ட அவமானத்தைப் போக்கிக்கொள்ள வேண்டுமென்று செய்தேன்.

என்னிடத்திற் கிஞ்சித்துமன்பில்லாத ஓ சனகராசன்பெண்ணே ! இராக்ஷசர்களுக்கு அமிர்தத்தைப் பார்க்கிலும் ருசிக்கின்ற மாமிசத்தையும், மதுவையும், போதுமானமட்டும் இதுபரியந்தம் உண்டாயே: சிலநாளாவது உன்னோடு உறவாடிக்கொண்டிருந்த எங்களுக்கு அந்த மதுமாமிசவிருந்து செய்விக்கலாமென்று விரும்பி வந்தாயோ ? அப்படி விருந்துசெய்ய அழைத்துக்கொண்டு போவதாயிருந்தால், ஏன் நாணத்தோடு தலைகுனிந்துகொண்டு கண்ணீர்சொரிகிறாய் ? உயர்ந்த ஆபரணங்களிற்பதித்த இரத்தினத்தினது ஒளியைப்போல உத்தமப்பெண்ணுக்குரிய நற்குண நற்செய்கைகள் உன்னிடத்திலில்லை. நீ நல்ல இராஜவமிசத்திலே பிறந்தவளல்ல. ஆகையால் உன்னிடத்தில் அவை கிடைக்கமாட்டா. ஒரு புழுவைப்போலப் பூமியிலுற்பத்தியானாய். அதற்குத் தக்கபடி துர்க்குண துர்ச்செய்கைகளைக் காட்டினாய். ஆ! சீதா ! சூரியகுலமானது அச்சம் – மடம் - நாணம் – பயிர்ப்பு - என்னும் பெண்ணுக்குரிய குணங்களும், இழிகுணமில்லாமையும், குற்றமில்லாத குடிப்பிறப்பும், கற்பென்கின்ற திடமும், நல்லொழுக்கமும், புருஷனே தெய்வமெனக்கொள்ளும் நிச்சய ஞானமும், கீர்த்தியும், பொய்சொல்லாமையுமாகிய குணங்கள் குறைவின்றிநிறைந்த ஸ்திரீகளையுடைத்தா யிருக்கிறதென்னு மகாகீர்த்தியை அடைந்திருந்தது. ஒரு பெண்ணாகிய நீ அந்தச்சூரியவமிசத்தோடு சம்பந்தப்பட்டபடியால் ஈகையென்பதில்லாத அரசனுடைய கீர்த்தியைப்போல அந்த வமிசத்தின் கீர்த்திமுழுமையு நாசமாய்விட்டதன்றோ ?

ஆ ! சானகி ! குலஸ்திரீகளா யுள்ளவர்கள் நாயகனை நீங்கியிருக்கிறகாலத்தில் பஞ்சேந்திரியங்களையும் அடக்கி, நல்லொழுக்கத்தையே உறுதியாகக்கொண்டு, தலைமயிரைச் சிக்கறவாரிமுடியாமற் சடையாகச் செய்வித்து, கற்பென்னும் ஒரு பெருந்தவத்தைச் செய்துகொண் டிருப்பார்கள். அந்தப்பெருந்தவத்துக்கு ஒரு பழிநேரிடுவதா யிருந்தால் தங்கள் பிராணனைவிட்டொழிந்து, அப்பழியைவாராமல் தடுத்துவிடுவார்கள். இந்த நற்குணங்களில் ஒன்றையாவது நான்உன்னிடத்திற் காணவில்லையே: நான் இனி உனக்கென்ன சொல்வது? உன்னுடைய நடக்கையானது என்னுடைய நெஞ்சைப் பிளக்கின்றதே; நீ நடந்தநடத்தை குலத்துக்குத் தக்கதல்லவென்று உனக்குத் தெரிந்திருப்பதினால்உனக்கிஷ்டமானமார்க்கமே நீ செல்லக்கடவாயென்று சொன்னார். இப்படிமெய்ஞ்ஞானச்செல்வமுடைய யோகிகளின்இருதயத்தில் வசிபவராகிய ஸ்ரீரகுராமரானவர் ஸ்ரீ சீதாபிராட்டியாருடைய கற்பினிலைமையை யாவருங்கண் டுணரும்படி செய்யவேண்டு மென்னும் கருத்தால் நிர்த்தாக்ஷிணியமாகச் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்த பிரமன்முதலிய தேவர்களும், முனிவர்களும், அவர்களுடைய மனைவிமார்களும், இராக்ஷசர்க ளெல்லோரும்,வானரர்களும்,மற்றயாவர்களும்வாயைத்திறந்துகதறி அழுதார்கள்.

இப்பாலிவ் விருவர்களும் கருணையாலும் இச்சையாலும் கொண்ட மானுஷாவதாரத்துக்கேற்கச் சகல வைதிகாதி ஒழுக்கங்களை நடந்துகாட்டுகின்ற

வர்களாகையால், சர்வசுவாமியானவரைக் காணமல் நெஞ்சம் புண்பட்டிருந்த சானகிபிராட்டியாருக்கு அவர்சொன்னசொல் புண்ணிற் கோலிட்டாற்போல அதிகதுக்கத்தை உண்டாக்கியது. அதனல் தம்முடைய இரண்டுவிசால நேத்திரங்களில் நின்று மிரத்தக்கண்ணீ ரொழுகும்படியாய்ப் பூமியை நோக்கிக்கொண்டு தம்மைமுழுது மறந்துபோய் பெருமூச்சு விடுகின்றவராகி, பாலைவனத்திலிருந்து சூரியகிரண வெப்பத்தால் தகிக்கப்பட்டு நீருண்ணுமாசையால் வருந்தி மரணவஸ்தை யடைந்தமானனது நல்ல நீர் நிறைந்த தடாகத்தைக்கண்டு அதன் சமீபத்திற்போய் உண்ணக்கூடாத சிலதடையை யடைந்தாற்போலத் தாம் குரூரர்கள்வசிக்கின்ற இலங்காநகரத்துக்குள் அதிகஷ்டத்தோடு வாசஞ்செய்துகொண் டிருந்து ஸ்ரீ சுவாமியைக் காணவேண்டுமென்கிற பேராசையோடு வந்தவிடத்தில் அவருடைய நிர்த்தாக்ஷிணியமாகிய சொற்களைக்கேட்டு அதிதுக்கத்தை யுடையவராய்த் தம்முடைய நேத்திரங்களிலிருந்து பெருகாநின்ற நீரானது உலகத்திற் பெருகியோடும்படிப் புலம்பி, இதுபரியந்தம் யாதொருதீயொழுக்கமு மில்லாமலிருந்து அடைந்தபேறு இந்த மகானுபாவருடைய திருமேனியைக் காணுதலும் இவருடைய திருவடிகளுக்குத் தண்டன் சமர்ப்பித்தலுமாம். இந்த அரியபேறு பெற்றதல்லாமல் நான்செய்துவந்த கற்பின்தவமு நல்லபயனையே தந்தது. என்று தமக்குள்ளே தீர்மானித்துக்கொண்டு ஸ்ரீ சர்வ சுவாமியைப் பார்த்துச் சொல்லுகிறார்.

இராமசுவாமி சினந்து சிலசில வார்த்தையைச் சுடச்சுடக் கூறியதைக்கேட்ட சீதாபிராட்டியார் வருந்திச் சுவாமியைப் பார்த்துச் சோல்லுதல்.

கவி.

மாருதிவந்தெனைக் கண்டுவெள்ளனீ, சாருதியீண்டெனச் சமையச்சொல்லினன்
யாரினுமேன்மையா னிசைத்ததில்லையோ, சோருமென்னிலையவன் றாதுமல்லனே.

எல்லோரிலும் உயர்ந்த பரம்பரனே! இந்த அநுமானும் ஸ்ரீ விபீஷணும்வானும் என்னிடத்தில் வந்து ஸ்ரீரகுநாயகரானவர் உம்மைவரும்படி ஆக்கியாபித்தாரென்று சொல்லி அழைத்து வந்தார்கள். இயானிதுவரையும் அநுபவஞ் செய்துகொண்டிருந்த என்னுடைய துக்கநிலையைத் தேவரீர்பக்கலில் ஸ்ரீ ஆஞ்சநேயர் சொன்னது மில்லையோ? அவர்சொல்லாமற் போவாரேயாகில் அவரைத்தூதுவரென்று சொல்லவுங்கூடுமோ? இத்தனைகாலமாக நான் பிரயாசத்தோடு செய்துவந்தது இப்படிப்பட்ட தவமும் — நன்மையும் - கற்புமென்று நீர் அறியாமையால், அவைவியர்த்தமாய்ப் போயினவன்றோ? ஐயோ! எல்லோருக்கும் கண்போல விளங்குகின்ற ஸ்ரீ புருஷோத்தமரான சிரேஷ்டரே! என்னைத்தாம் நிக்கிரகித்தால், உலகத்திலுள்ளவர்கள் என்னைக் கற்புடையளென்று சொல்லுவார்களோ? சொல்லப்போகிறதில்லை. நான் தாமரையிலெழுந்தருளிய பிரமதேவராலும் பேதிக்கப்படாத மனநிச்சயத்தை யுடையவளா யிருந்தும், இவருக்கஃதில்லாதவளானேன். இனியிந்த

உத்தமருடைய திருவுளத்திற் கொண்ட சமுசயத்தை நீக்க யாரால்முடியும்? பொதுவாய்நிற்கின்ற தருமதேவதையும் இவரைப்போலவே அறியாமற்போகுமோ? இயாதோ தெரிந்திலேன்.

கவி.

பங்கயத்தொருவனும் விடையின்பாகனுஞ், சங்குகைத்தாங்கிய தருமமூர்த்தியும்
அங்கையினெல்லிபோ லனைத்துநோக்கினு, மங்கையர்மனநிலை யுணரவல்லரோ.

பிரஹ்மாவும் சிவபிரானும் தருமமூர்த்தியாகிய விஷ்ணுவும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல எல்லாவற்றையும் தாமேயறிந்துகொள்பவர்களாயிருப்பினும், மங்கையருடைய மனத்தினது நிலைமை இன்னதென்று அறிந்துகொள்ளமுடியுமோ?முடியாது: ஆகையாலினி அன்னியர் நம்பும்படியோ?என்னுடைய குற்றமற்ற கற்பினைச் சொல்லிக் காட்டுவேன்? என்று தமக்குள்ளே யோசித்துக்கொண்டு, ஓ வேதநாயகனே! நீர்விரும்பாத இந்தத் தேகத்தை விடுவதைப்பார்க்கிலும் சிறந்தகாரிய மொன்றுமில்லை. இதுவே உம்முடைய கட்டளையும், என்கடமையுமாகும்,

சீதாபிராட்டியார் தேகத்தை நீக்குவேனென்று இளையபெருமாளைத் தீமூட்டச் சொல்ல வவர்மூட்டுதல்.

கவி.

இளையவன்றனையழைத் திடுதீயென, வளையொலிமுன்கையாள் வாயிற்கூறினள்
உணர்வுறுமனத்தவ னுலசம்பாவுக்கும், கிளைகணைத்தொழவவன் கண்ணிற்கூறினன்.

என்று சொல்லிவிட்டு இளையபெருமாளைக் கடாட்சித்து, ஓ சுமித்திராதேவியாருடைய புத்திரதீபமே! சீக்கிரத்தில் தீயைமூட்டக் கடவீரென்று ஆக்கியாபித்தனர். உடனே ஸ்ரீராமாநுஜரானவர் எல்லாவுயிர்களுக்கும் ஆதரவா யெழுந்தருளி யிராநின்ற ஸ்ரீராமசுவாமியைத் தண்டன் சமர்ப்பித்துநின்றனர். அவரும் அப்படியே செய்யக்கடவாயென்று கண்காட்டினார்: சுவாமியினுடைய அபிமதத்தைப் பெற்றுக்கொண்ட ஸ்ரீலட்சுமணரானவர் தமதுயிர்நீங்கித் தள்ளாடும்படி மிகுந்த துன்பமுடையவராகி, கண்களினின்று நீர்தாரைதாரையா யொழுகச்சென்று சாஸ்திரவிதிப்படி தீயைமூட்டினர்.

உடனே செந்தாமரைமலரில் வசிப்பவராகியும் தெய்வங்களுக்குத் தாயாயுமானபிராட்டியார் அந்தத் தீக்குச்சமீபத்திற்போய் நெருங்கினர். அம்மாத்திரத்தில் அதைக்கண்டு சகிக்கமாட்டாமல் சதுர்வேதங்களும், நித்தியமாகிய தருமதேவதையும் ஓலமிட்டன.

இப்படி சமஸ்தசீவர்களும் தம்மைக்கண்டு மனோதுக்கர்களாயிருக்க ஸ்ரீசானகிபிராட்டியார் இலக்குமணரால் மூட்டிய தீயைச்சுற்றி அருகில் நின்று, ஓ அக்கினிபகவானே! திரிகரணங்களுக்கு ளொருகரணத்தினாலாவது யாதாமொருகுற்றத்தை அடைந்திருப்பேனேயானால் நீ அதிகோபத்தையுடையவனாய் என்னைச்சுட்டுச் சாம்பராக்கக் கடவாயென்று சொல்லி, ஸ்ரீ

புருஷோத்தமராகிய ஸ்ரீரகுநாயகரை நோக்கி நின்றவிடத்திலேதானே இருந்து மனப்பூர்வகமான தண்டன்சமர்ப்பித்தனள்.

சீதாபிராட்டியார் அக்கினியை வலம்வந்து குதிக்க அக்கினிதேவன் கையேந்திவந்து ஸ்ரீராமர்பால் விடுத்தல்.

கவி.

நீந்தரும்புனலிடை நிவந்ததாமரை, எய்ந்ததன்சோயிலே யெய்துவாளெனப்
பாய்ந்தனள்பாய்தலும் பாலின்பஞ்செனத், தீய்ந்ததவ்வெரியவள் கற்பின்றீயினால்.

சீதாபிராட்டியார், நீந்துதற்கரிய நீரினிடத்து மேலெழுந்து வளர்ந்துமலர்ந்துள்ள தனதாயையமாகிய தாமரைமலரிலே யெழுந்தருளுவதுபோல அத்தீயினது நடுவே குதித்தனள். அப்படிக் குதித்தவுடனே அவளுடைய தெய்வத்தன்மையுள்ள கற்பாகிய நெருப்பினால் அந்தநெருப்புத் தகிக்கப்பட்டது. உடனே தீயின்கடவுளானவர் தம்மிலேகுதித்த சர்வசகந்மாதாவைத் தமது கரங்களினாலேசுமந்தெழுந்து, ஓ தீனபந்து! ஓ தேவதேவோத்தமா! ஸ்ரீ காகுஸ்தகுலநாயகா! என்னுடைய தேகமுழுமையும் எரிகின்றதேயென்று கதறி, சமஸ்தபிராணிகளையு மிரக்ஷிக்கின்ற பிராட்டியாரை இருகரங்களினாலேந்திக்கொண்டு மற்றிரண்டுகைகளையுங் குவித்துக்கும்பிட்டுக்கொண்டு, வேதாந்தத்தின் முடிவில் பிரதிபாதிக்கப்பட்ட பரவஸ்துவாயுள்ள ஸ்ரீராகவபிரானுடைய திருவடிகளுக்குச் சமீபத்திலேவந்துநின்றார். ஸ்ரீசீதாபிராட்டிக்கோ? முன்னே சுவாமியுடனே ஊடிக்கொண்டதினா லுண்டாகிய வேர்வையானது சற்றுமுலரவில்லை. அளகபாரத்திலும்–திருக்கழுத்திலும் கைகளினும் தரித்திருந்த பூமாலைகளெல்லாம், நீரில்தோய்த் தெடுத்தாற்போல விளங்கின. நிலைகலங்கியசமஸ்தாத்துமாக்களும் தங்கள்தங்கள் நிலையில்நின்றன. அருந்ததிமுதலிய கற்புடைய ஸ்திரீகள்யாவரும் நாணமும்,ஒழுக்கமும், இல்லாதவர்களாய் அந்தரமார்க்கத்தில் நின்று ஆநந்தக் கூத்தாடினார்கள். அக்கா லக்கினிபகவான் ஸ்ரீராமபிரானை நோக்கி, என் ஐயனே! உம்முடைய தேவியாரது தெய்வத்தன்மையுள்ள கற்புத்தீயினால் ஒன்றும் ஆலோசியாமல் என்னுடைய பலத்தை க்ஷீணிக்கச்செய்தீர். சுத்தமான யாகாக்கினி ஸ்வரூபராகிய தேவரீர் என்னை யென்னகோபத்தினால் இப்படிச் சுட்டெரித்தீர்? என்று பலவிதமாய் முறையிட்டார்.

இப்படி முறையிட்டுக்கொண்டிருந்த அக்கினிபகவானை ஸ்ரீராமநாதரானவர் நோக்கி, நீர்யார்? அக்கினியிலிருந்தும் தோன்றிவந்து என்னிடத்தில் நீர்பேசுவதென்ன? இந்தத் தீயொழுக்கமுடைய ஒருத்தியைச் சுட்டெரிக்காமல் ஏன் சும்மாவிட்டீர்? இயார்சொல்லைக் கேட்டுக்கொண்டு இப்படிச்செய்தீர்? இவற்றையெல்லாம் சொல்லக்கடவீரென்று கேட்டருளினார். அதுகேட்ட செந்தீக்கடவுள் ஸ்ரீதரனைவணங்கி, ஓ பரமாத்துமாவாகிய ஸ்ரீராமச்சந்திரரே! நானே அக்கினிதேவன். இந்த உலகமாதாவினுடைய கற்பென்கிற அதிதீக்ஷணியமாகிய தீயானது என்னைச்சுட, அதைப்பொறுக்கமாட்டாமையால் உம்மைச் சரணண்டினேன். பிராட்டியார்எனதுசுவாலையில்மூழ்கியெழுந்

No. 70. ஸ்ரீராமர் கண்டு, தீப்பாய்ந்த சீதையை, அக்கினிதேவன் கையேந்திவிடுக்க, பிரமதேவனுமவளைச் சன்
மானிப்பித்தல்.



தனைத்தாம் நேரேபார்த்தும், யாவருக்கும் சாக்ஷிபூதனாய் நிற்கின்றநீர் ஏன் சமுசயப்படுகிறீர்? ஓ ஸ்ரீகோதண்ட தீக்ஷாகுருவே! குலஸ்திரீகளை விவாகம் செய்வதும், அவர்க ளில்லறத்தினின்றும் விலகுவார்களே யானால் சத்திய பூர்வகமாய்க் கேட்பதும், மற்ற பலபொருள்களிடத்தில் சந்தேகந்தோன்றி னால் அந்தச் சந்தேகத்தை நிவர்த்திசெய்து கொள்வதும், ஆகியவிவையெல் லாம் என்னிடத்திலே தான் செய்துகொள்ள வேண்டும். இது நான்சொல்வ தன்று. நித்தியமாயும் அபௌருஷேயமாயு மிருக்கின்ற வேதங்களே சொல் லுகின்றன.

ஐயோ! இவள்திருவுளத்தில் சீற்றங்கொண்டு சபிப்பாளேயானால் மூ லதாமரையிலெழுந்தருளிய பிரஜாபதியாகிய பிரம்மதேவரும் இறந்துபோவ தல்லாமல் உயிர்பிழைத் திருப்பாரோ? என்று இன்னம்பலபல விதமாக எடு த்துச் சொல்லித் துதித்தனர். அசத்தியமாகிய பொருள்களையெல்லாம் சுட் டெரித்துச் சாம்பராய்ச் செய்யத்தக்க அக்கினிபகவானானவர் இப்படிச் சொ ல்லிமுடித்தபின், தேவசமூஹங்களும் மற்றத்திரிலோகத்தவர்களும் குதித்துக் குதித்து நின்று நடனஞ்செய்ய மங்கையர்க்கரசியாகிய பிராட்டியாரை ஸ்ரீப கவான்பக்கலில் விடுத்தனர்.

அக்கினிபகவான் கரத்தேந்திக் கொண்டுவந்து தன்பால்விடுத்த சீதாபிராட்டியை ஸ்ரீராமபிரான் அங்கீகரித்தல்.

கவி.

அழிப்பிலசான்றுநீ யுலகுக்காதலான்
இழிப்பிலசொல்லிநீ யிவளையாதுமோர்
பழிப்பிலளென்றனை பழியுமின்றினிக்
கழிப்பிலளென்றனன் கருணையுள்ளத்தான்.

இப்படி அக்கினிபகவானானவர் சொல்லியதைக் கேட்டருளிய கருணாச லதியாகிய ஸ்ரீராகவபிரானானவர் அவரையுபசரித்து, ஓ பாவகனே! சர்வலோக ங்களுக்கும் அழிவில்லாத சாக்ஷியாயிருக்கின்ற நீர் இந்தச்சானகியி னிடத்தி ல் இழிந்தகுணங்க ளில்லை, சிறிதுநிந்தையும் கிடையாது, என்று சொல்லுவ தினால் இனிப் பழிப்பில்லாதவளே: இனியாயினும் அங்கிகரிப்பவளாவாள் எ ன்று அருளிச்செய்தனர்.

ஸ்ரீராமர்பால் பிரமதேவனும் உருத்திரமூர்த்தியும்வந்து அவரதுயதார்த்தநிலையை யுணர்த்திச் சீதையைச் சன்மானித்தல்.

கவி.

உணர்த்துவாயுண்மை யொழிவின்றுகாலம் வந்துளதால்
புணர்த்துமாயையிற் பொதுவுறநின்றவை புணரா
இணர்த்துழாய்த்தொங்க லிராமற்கென் றிமையவரிசைப்பத்
தணப்பிறுமலரைச் சதுமுகனுரைசெயச் சமைந்தான்.

அதுசமயத்தில் இந்திராதி தேவர்கள் சதுர்முகராகிய பிரமதேவரைப் பார்த்து, தேவரீர் மூலப்பிரகிருதியின் காரியமாய் எல்லாச் சீவர்களுக்கும்

பொதுவாய் நின்று அவைகளை மயக்குகின்ற மாயையானது சிறிதும் அணுகாமல் உண்மை அறிவு ஆனந்தமே திருவுருவமாகவுடைய ஸ்ரீராமபத்திரருக்கு அவருடைய யதார்த்தநிலையில் நீர் அறிந்தவற்றுள்ளே சிறிதை எடுத்துச் சொல்லும். அவரோ தம்முடைய யதார்த்தஸ்திதியை அறியாதவர்போலக் காணப்படுகிறார். என்று சொல்லவும் பிரமதேவரானவர் ஸ்ரீராமசுவாமிக்கெதிரேவந்துநின்று அவரதுண்மையை வெளிப்படுத்தத் தலைப்பட்டார்.

ஓ எங்களுடைய துக்கநிவாரணார்த்தமாகத் திருவவதாரஞ்செய்த வரபாலன மூர்த்தியாகிய ஸ்ரீராமப்பிரபுவே! அடியேன் சொல்வதைக் கேட்டருள்வீராக. பழமையாகிய சூரியவமிசஸ்தர்களிற் பிறந்த ஒருமனிதனாக உம்மை நினைத்துக்கொள்ளாதேயும். சராசரப்பொருள்களெல்லாமும், உம்முடைய சங்கல்பலேசமாத்திரத்தால் தோன்றி உம்முடைய கருணையால் காக்கப்பட்டு நிற்கின்றன. ஆகையால் இந்தச்சமஸ்த பொருள்களும் உம்மையல்லாமல் இல்லை. நீரோ அந்நியமாய் நினைத்தருள வேண்டாம்.

தோற்றமும் - ஒடுக்கமும் - அளவுமில்லாம லிருக்கிற தம்முடையபெருமை பிறரால் அறியப்படாமல் தாமே அறியத்தக்க வேதசிரசுக்கள், காரியவஸ்துக்களாகிய எங்களுக்குமேல் ஒரு பரமாத்துமா உண்டென்று சொல்லும். அந்தப் பரமாத்துமாயாரெனில்? எங்களிடத்தில் கருணையுள்ள நீர்தானென்று சொல்லுகின்றனவே யல்லாமல், இங்கேவந்திருக்கிற பிரமேந்திராதிகளாகிய எங்களிலொருவரையும் சொல்ல வில்லையே: பிரமனாகிய எனக்கும், இந்திரனுக்கும், பலபிரமரிஷிகளுக்கும், மற்றசிவராசிகளெல்லார்க்கும், நீரே முதற்கடவுளென்று உண்மையறிந்து திடச்சித்தர்களாய்த் தேவதாந்தரங்களைப் பஜிக்காமல் உம்மையே உபாசிப்பவர்கள் நிவர்த்திசெய்யக்கூடாத இருவினைகளாகிய பாசத்தளையை நீங்கி முத்தியுலகத்தை அடைவார்கள். யான் முதலாகிய எல்லாச்சேதனர்களும் தாய் — தந்தை — மனையாள் — புத்திராதிய மகாமாயையென்னும் பேராசையாகிய கடலில் அழுந்தி, சுவாமியாகிய உமக்குச் சொத்தென்கிற உண்மைஞானமில்லாமையால் அந்தச்சனன சமுத்திரத்திலேயே கிடந்து துக்கங்களாகிய மகரமச்சங்களால் கவ்வப்பட்டு நடுங்குவோம். தேவரீருடைய நிரேதுக்கிருபையால் சிலசேதனர்கள் உம்மையே சுவாமியென்றும் - உமக்குத்தாங்கள் சேஷபூதர்களென்றும் — உண்மைஞானம் பிறந்து, பிறவித் துன்பங்களையொழித்து முத்தியுலகத்துக்கு வித்தைப்போலாவார்கள்.

சம்பத்தின் ராசியாகிய பெருஞ்செல்வத்தினாலே கர்வித்துக்கிடக்கிற இந்திராதிதேவர்கள் கொண்ட கர்வமானது அடங்கும்படி அசுரர்களும் — அரக்கர்களும் குரூரமாக யுத்தஞ்செய்து அவர்களையடித்துத் துரத்தவே, அவர்கள்வந்து உம்மைச்சரணாகதியென்று அடைகிறார்கள். அதன்பொருட்டு வசிக்கத்தகுதியல்லாத மானுஷிய கர்ப்பத்தினின்றும் அவதரித்து அந்தக்கொடியவர்களை நாசஞ்செய்து அந்தத் தேவர்களைக்காக்கின்றீர். இப்படிச்செய்வது

உமக்குக்கடனேயல்லாமல்மற்றொருவருக்குக்கடமையாகுமா? மூன்றெழுத்துக்கூடி ஓரெழுத்தாய்கின்ற பிரணவத்தினுடைய உண்மைப்பொருளை யறிந்தவர்கள், உம்மையுள்ளபடி அறிந்தவர்களாவார்கள். தேவரீரைப் பிரணவத்தின் வாச்சியமாக வறிந்த அந்தப்புருஷர்களே இருவகை வினைகளையும் வெறுத்து ஒழிப்பவர்கள். அந்தப் பிரணவப்பொருளை அறிவதுவே உண்மை ஞானமென்று உணராதவர்கள் மிருந்த யோனிகளா யிருந்தபோதிலும், பிரணவப்பொருளாகிய நீர் உண்டோ இல்லையோ என்று சந்தேகங்கொண்டு யுகமுடிவு வரையும் பிறக்கிறதும்இறக்கிறதுமாகி உழன்றுகொண்டிருப்பார்களேயன்றி உச்சீவிக்கமாட்டார்கள். ஓ சர்வசுவாமி! தேவரீருடையநிலையிப்படிப்பட்டதாக இருக்கிறது. அதைக்காட்டாமல் ஒளித்துநின்று எங்களை மயக்குகிறீர். ஆனாலும் உம்முடைய திருமார்பி லெழுந்தருளியிருந்து, எங்களையும் எங்களுக்கிருப்பிடமாகிய அண்டங்களையும் பெற்று, கிரகஸ்தாச்சிரமத்தை ஓங்கிவளரும்படி அனுஷ்டித்தருளிய எங்கள் தாயாகிய சானகிப்பிராட்டியாரை வியர்த்தமாகக் கோபஞ் செய்யாதேயு மென்றுபிரமதேவர் சொல்லி முடித்தனர்.

இந்தப்பிரகாரம் சமஸ்த அண்டசராசரங்களைச் சிருட்டித்த சதுமுகனானவர் துதிசெய்தானவுடனே இடபவாகனத்தையுடைய உமாநாயகராகிய உருத்திரமூர்த்தியானவர் இராமனைக் கடாக்ஷித்து, ஸ்ரீ ராமச்சந்திரா! நீர் உம்முடைய பெருமையை ஒன்றும் அறியீர்போலும். சமஸ்த அண்டங்களுக்கும் தாயாகிய இந்தச் சீதாபிராட்டியென்னும் கற்புடைய மங்கையர்க் கரசியானவள் பழையபடியே உம்முடைய திருமார்பைவந்து சேர்ந்தாள். நீரிந்தப் பிராட்டியை நிக்கிரகிப்பது தகுதியல்ல. இப்பிராட்டி கற்பில்நின்றும் தவறுவாளாகில் இந்தச் சமஸ்தபுவன சராசரங்களும்அழிந்துபோகாமல் இன்னமுநிலைத்திருக்குமோ? அப்போதே அழிந்துபோய்விடும். ஆகையால் இந்தச் சாக்ஷாது இலக்குமியைநீர் இப்படி நிந்திப்பது மறந்துவிடத் தக்கதென்று சொல்லினர்.

உருத்திரமூர்த்தியின் கட்டளையால் வைகுந்தத்திலிருந்த தசரதச்சக்கரவர்த்தி ஸ்ரீராமனுதியர்க்குப் பிரத்தியக்ஷமாகி அவர்களைத் தேற்றிச் செல்லுதல்.

கவி.

பின்னுநோக்கினன் பெருந்தகைமுன்புதற் பிரிந்த
இன்னலாலுயிர் துறந்திருந் துறக்கத்து ளிருந்த
மன்னனாங்குவற் சென்றுநீகண்டனை வணங்க
முன்னைவான்றுயர் நீக்குதிமொய்ம்பினே யென்றான்.

ஆதியான்பணி யருள்பெற்றவரசருக் கரசன்
காதல்மைந்தனைக் காணியவுவந்ததோர் கருத்தால்
பூதலத்திடைப் புக்கனன்புகுதலும் பொருவில்
வேதவேத்தனு மவன்மலர்த்தாண்மிசை வீழ்ந்தான்.

தம்மை நோக்கித் தவஞ்செய்தவர்களுக்கு வேண்டிய இஷ்டகாமியங்களைத் தயைசெய்கின்ற பரமசிவனானவர் பின்னும் ஆலோசனைசெய்து, அநந்த கலியாணகுண நிலயமாகிய ஸ்ரீராகவபிரானைப்பிரிந்த துன்பத்தால் தேகவியோக மடைந்து பாலனகர்த்தாவாகிய ஸ்ரீமகாவிஷ்ணுவி னுலகத்தையடைந்த தசரதசக்கரவர்த்திக்குப் பிரசன்னமாகி, ஓ மகா புண்ணியசீலனாகிய சக்

கரவர்த்தியே! நீ பூலோகத்துக்குப்போய் உன்னுடைய குமாரனுகிய ஸ்ரீராமச்சந்திரனைக்கண்டு உன்னுடைய மனோதுக்கத்தை மாற்றிக்கொள்ளுகவென்று சொல்லினர். ஸ்ரீசங்கரபகவானுடைய வாக்கின்படி சக்கரவர்த்தியானவர் தமக்குப் பிராணபதமாயிருந்த இராகவபிரானைக் காணவேண்டுமென்கிற கருத்தால் பூலோகத்துக்கு வந்து, சர்வசுவாமிக்கெதிரே நின்றனர். உடனே வேதபுருஷனுகவும் அவ்வேதங்களால் அறியப்பட்ட பரவஸ்துவாகவும் இரா நின்ற ஸ்ரீசானகிரமணனுனவர் சக்கரவர்த்தியினுடைய பாதங்களில் தமது திருமுடிதோயும்படித் தண்டன் சமர்ப்பித்த திருக்குமாரரை சக்கரவர்த்தியானவர் வாரியெடுத்து, பர்வதம்போல விசாலமாகிய தமது மார்பிலழுந்தும்படி இறுக அணைத்து, தம்முடைய கண்களி லொழுகாநின்ற ஆநந்தபாஷ்பத்தால் திருமஞ்சனமாட்டி, இப்போதுதான் நாம் வாழ்ந்தோமென்கிற களிப்பு அதிகரித்தவராய் முன்னே தாமடைந்திருந்த துக்கங்கள் யாவற்றையும் அங்குள்ளயாவரும் கேட்கும்படி சொல்லிப் பிரலாபிக்கத்தொடங்கினர்.

ஓ என்னப்பனே! அக்காலத்திலே கேகயநாட்டரசனுடைய புத்திரியாகிய கைகேசியானவள் என்னிடத்திற்பெற்ற வரமென்கிற கூரிய வேலாயுதமானது, என்தேகத்தை நீக்கும்படி செய்ததுமல்லாமல் இன்றுவரையும் என்னெஞ்சி னிடத்திலேயே நின்று உபத்திரவத்தை விளைத்துக்கொண்டிருந்தது. இப்போது உன்னையான் ஆலிங்கனம் செய்தபின், திவ்வியாபரணங்களைத் தரித்துப் பரிமளமணக்கின்ற உன்திருமார்பாகிய காந்தக்கல்லானது அந்தவரமென்கிறவேலைக் கிரகித்துவிட்டது. ஓ அழகுபொருந்தியபெரிய திருத்தோள்களையுடைய ஸ்ரீரகுநாயகா! நல்லகுணங்களையுடைய சுபுத்திரர்களைப்பெற்று அதிகபிரக்கியாதியையடைந்தபுருஷர்களும்,என்னுடைய கால்களில்நின்றுமெழுகின்ற துகளுக்கும் சமானமாகாரென்னும்படியான மகாகீர்த்தியை எனக்குண்டாக்கினுய். இருவினைகளிலிருந்து நீங்கினவர்களுக்கும் பெறக்கூடாத ஸ்ரீவிஷ்ணுலோகத்தையும் சத்கீர்த்தியையும் பெற்று யாவர்களினும் உயர்ந்திருக்கிறேன்! சூரியவமிசகுல திலகனே! ஓ ஜானகிரமணு! முன்பு நான் வணங்கிக்கொண்டிருந்த தேவர்களு முனிவர்களும் பலமுறைபார்த்து எனக்குக் கைகளைக்குவித்துத் தண்டனிடுதலை உன்னுடைய செந்தாமரை மலர்போன்ற கண்களாற்பார். ஸ்ரீசர்வேசுரனுடைய திருவுந்திமலரில் அவதரித்த பிரமனோடு நானும் சமானமென்னும்படி அந்தச்சதுர்முகனோடு சத்தியவுலகத்தில் ஒரே ஆசனத்தில் இருக்கும்படியாயும் என்னைச்செய்தாய். என்று சொல்லித்தம்முடைய புத்திரராகிய அந்த ஸ்ரீராமநாதரை எடுத்தெடுத்து மார்பில் இறுகத்தழுவிப் பின்பு ஸ்ரீ சீதாபிராட்டியார் பக்கலிற் சென்றூர்.

உடனே பிராட்டியாரும் ஸ்ரீ சக்கரவர்த்தியாருடைய பாதங்களில் நமஸ்காரஞ்செய்தனர். நமஸ்காரஞ்செய்த பிராட்டியாரை யாவரும் சொல்லமுடியாத புகழையுடைய தசரதரானவர் அதிககருணையோடு அணைத்து நின்று, ஓ மங்கையர்க்கரசியே! ஸ்ரீராகவபிரான் உன்னை அக்கினியிற் பிரவேசிக்கும்

படிச் சொன்னது உன்னுடைய அழிவில்லாத கற்பினிலைமையை உலகத்தாருடைய இருதயத்தில் எட்டுவிக்கும்படியே யல்லாமல் வேறன்று. அதை உன்னுள்ளத்தில் மற்றொன்றாக நினைக்கவேண்டாம். ஸ்ரீ பகவத்பக்திஹீனர்களாகிய பாபிஷ்டதுராத்துமாக்கள் உன்விஷயத்திற் சங்கைகொண் டிருப்பார்களேயானால், அவர்களு மிப்போது அந்தச் சந்தேகத்தை நீக்கி உன்னிடத்தில் நிச்சயமாகிய நம்பிக்கையடைந்து உஜ்ஜீவிப்பார்களன்றோ? இது சத்தியமே: கங்கைநாடாகிய கோசலநாட்டின் இராஜசிகாமணியின்மேற்சீற்றங்கொள்ளாதே: பொன்னைத் தீயிற்போட்டெடுத்தல் அப்பொன்னினுடைய வாஸ்தவத்தை அறியும்படியல்லவோ? அப்படியென்றே இதை நினைப்பது தகுதியாகும். பிரமேந்திராதி தேவர்களு முனிவர்களும் கூடியிருக்கிற இந்தமஹாசபையில் நீ கற்புடைய மங்கையர்களுக்கு அரசியென்று தெரிவிப்பதற்காகவே உன்னை அக்கினியில் முழுகச்சொன்னது. இதுசமயம் தப்பிப்போனால் இந்த மஹாசபையைக்கூட்டி உன்னுடைய கற்பினிலைமையைக் காட்டுதல் அருமையென்றுணர்ந்து நினைத்து இந்தப் புருஷோத்தமன் இப்படிக்குச் செய்தானுக்குமென்று பிராட்டியாரைத் தேற்றினார்.

பின்பு ஸ்ரீராமாநுஜர் பக்கலிற்போய் உள்ளத்திலுள்ள அன்பானதுகாட்டும்படியாகத் தம்மைத் தாமேதழுவுவதுபோலத் தம்முடையமார்பில் அவருன்றும்படித்தழுவி, தம்முடைய கண்களிலிருந்து இடைவிடா தொழுகாநின்ற நீரானது திருமஞ்சனஞ் செய்கின்ற தீர்த்தம்போல இளையபெருமானுடைய சடாமகுடத்திற் பாய்ந்திழியும்படியாக உச்சிமோந்து, அப்பனே! இலக்ஷ்மணா! என்னுடைய சனனவியாதியையும் - ஸ்ரீ ரகுநாயகன் ஆரண்ணியத்துக்குத் தனியாய்ப் போகின்றானென்று என்னெஞ்சிற்கொண்ட துன்பப்பிணியையும் – நீக்கினாயே: ஓ சுமித்திராதேவி இளஞ்சிங்கமே! திரிமூர்த்திகளுடன் தேவலோகவாசிகளெல்லாரும் நீ இந்திரனுடைய பகைவனாகிய இந்திரசித்துவைப்போரில்வென்ற மகாகீர்த்தியையே பேசுகிறார்கள். என் ஐயனே! இந்த உலகத்துக்கு நேரிட்ட துக்கமாகிய விரோதத்தை நிவர்த்திக்கச்செய்து தருமத்தை நிலைபெறச்செய்தாயேயென்று பலவாறு சொல்லினர்.

இந்தப்பிரகாரம் இலக்குமணரோடு பேசிய சக்கரவர்த்தியானவர் மீட்டும் ஸ்ரீ சானகிரமணரிடத்துச் சென்று, ஓ என்பிராணபதமாகிய இராமா! உனக்குவேண்டியதொன்றைக் கேட்பாயாகவென்று சொல்லினர். அப்போது ஸ்ரீராமபத்திரரானவர் அவரைநமஸ்கரித்து, என்பிதாவே! நீர் என்னிடத்தில் வைத்தஆசையாகிய குணத்திசயத்தால் பொல்லாதவனென்று வெறுத்துவிட்ட என்தெய்வமும், உம்முடைய புத்திரனாகிய பரதாழ்வானும், எனக்குத்தாயும் தம்பியுமாகும்படியான வரங்களைத் தயைசெய்யக்கடவீரென்று கேட்டருளினர்.

அக்கால் தசரதசக்கரவர்த்தியானவர் ஸ்ரீராமனைத்தழுவி, இயாவருக்கும் வரத்தைத் தயைசெய்கின்ற ஸ்ரீரகுவம்சதிலகனே! நீகேட்டுக்கொண்ட இரண்டிலே பரதன் உனக்குத்தம்பியேயாகக் கடவன். உனக்கு யான்கொடுத்த திருமுடியை அபகரித்துக்கொண்டு இந்த விரதவேஷத்தை உனக்குக்கொடுத்த பாவிமேல் எனக்குண்டாகிய கோபமானது சத்தியமாய் நீங்கவில்லை. என்று ஸ்ரீராமபிரானைத் தழுவிநின்ற கைகளும் தளர்ந்து தொங்கும்படியாக அதிகதுக்கத்தோடு சொன்னார். அது கேட்டருளிய ஸ்ரீராமபிரானனவர் தசரதசக்கரவர்த்தியாரைப்பார்த்து, என்பிதாவே! நிலையில்லாத தேகபோஷணார்த்தத்துக்கு உபயோகமாயிருக்கின்ற இராச்சியாதிகாரத்தை யான்விரும்பும் விருப்பமானது பெருங்குற்றங்களுக்கெல்லா மூலமென்பதை யான் அறிந்துகொள்ளாமற்போனதே குற்றமல்லாமல், என்னை வளர்த்தெடுத்த தெய்வமாகிய தாயானவள் கருணையால் என்விஷயத்தில் அந்த ராச்சியாதிகாரத்தைத் தடுத்துவிட்டது குற்றமோவென்று சொல்லினர். அப்படியே யாகுகவென்று தசரதரும் சம்மதித்து முன்பு கைகேசிமேற் கொண்டிருந்த கோபம் ஆறினர்.

அப்போதிராவணனுக்குப் பிரமனுதியர் தயைசெய்துகொடுத்திருந்த வரங்களெல்லா வற்றையு மழித்து வெற்றிகொண்ட ஸ்ரீராகவபிரானனவர் கேட்டுக்கொண்டபடி சக்கரவர்த்தியார் சம்மதித்ததைக் கண்ட தேவர்கள்யாவரும் ஒருவரையொருவர் பார்த்து, ஆ! ஆ! கேட்டீர்களா? நாம் பெற்றுக்கொண்ட வரம் ஈடேறும்படி நம்முடைய இறைவனைக் காட்டுக்கனுப்பிய மகோபகாரியாகிய கைகேசியானவள், இந்தச் சக்கரவர்த்தியாரிடத்திற் பெற்றுக்கொண்ட வரங்களும் இரண்டு. அவ்விரண்டு வரங்களின்படி நடந்துகொண்ட எம்பெருமானுக்கு இன்றிவர்கொடுத்த வரங்களும் இரண்டென்று மனவிரக்கத்தோடு பேசிக்கொண்டார்கள். திரிலோகத்தார்களும் சிறந்ததாகக் கொண்டாடுகின்ற சத்தியத்தின்பொருட்டு உயிரைக்கொடுத்து மிகுந்த கீர்த்தியையடைந்த தசரத சக்கரவர்த்தியானவர் இப்படி இரண்டுவரங்களைத் தந்து, சகன்மோகனகார ஸ்வரூபராகிய ஸ்ரீராமபிரானையும் - ஸ்ரீ இளையபெருமாளையும் - ஸ்ரீ சீதாபிராட்டியாரையும் - விட்டுப்பிரிந்து விமானத்தின்மீதேறி வைகுந்தம்போயினர்.

இந்திராதிதேவர்கள் சுவாமியைப்பிரார்த்தித்து வேண்டியவரந்தருகிறேமென அப்படியே கொடுமென்று சுவாமிகேட்டல்.

கவி.

கோட்டுவார்சிலைக் குரிசிலையமரர்தங் குழாங்கள்
மீட்டுநோக்குறு வீரநீவேண்டுவ வரங்கள்
கேட்டியாலென வரக்கர்கள்கிளப்பருஞ் செருவில்
வீட்டமாண்டுள குரங்கெலாமெழுகென விளம்ப.

இப்பால், வளைந்தநீண்டவில்லை யுடைய ஸ்ரீராமபிரானை இந்திராதிதேவர்கள்பார்த்து எங்களாலாகவேண்டிய வரங்களேதாவதிருக்கின் பெற்றுக்கொள்

ளுமென்று கேட்டார்கள். அப்போது ஸ்ரீராமபிரானானவர், ஓ தேவர்களே இராக்ஷசவீரர்களால் யுத்தத்தில்மடிந்துபோன வானரர்களெல்லாம் உயிர்பிழைத்தெழுந்திருக்கவும், அவர்கள் எங்கெந்தவனங்களிலும் - பர்வதங்களிலும் - இவைபோன்ற இடங்களிலும்போய் வசிக்கின்றார்களோ? அந்தவிடங்களிலெல்லா மதுரமானகாய்களும் - கனிகளும் — கிழங்குகளும் — தேனும் - உண்ணத்தக்க நீரும் புஷ்கரமாயிருக்கவும், வரத்தை ஈயுங்களென்று கேட்டருளினர். அதுகேட்ட யாவருக்கு முதல்வராகிய சதுர்முகக்கடவுளும் - இந்திரனும் — மற்றத் தேவர்களும் — முனிவர்களும் — ஸ்ரீராமனைப்பார்த்து, ஓ துன்பத்தையேவிளைக்கின்ற சனனநோய்க்கு மருத்துவனாய் விளங்குகின்ற ஸ்ரீராமபத்திரனே! உம்முடைய கருணாவீக்ஷணியத்தால் அப்படியே ஆகக்கடவதென்று ஒவ்வொருவருந் தனித்தனியே சொல்லிக் கண்களுமனமுங் குளிர்ந்தார்கள்.

அப்போது பாபாத்துமாவாகிய இராவணனோடு செய்த முதற்போர்முதல் அவனோடுசெய்த கடைப்போர்வரையு மாண்டுபோன வானரங்களில் ஆஞ்சநேயர்கொண்டுவந்த சஞ்சீவியாற் பிழைத்தவைபோக மற்றவையெல்லாம் உயிர்த்தெழுந்து, சிந்தையும் விழிகளும் களிக்கும்படியாக நடந்த யுத்தங்களையெல்லா நினைத்தும் — படுகளத்தைப் பார்த்தும் — அத்தியந்தப் பிரீதியோடு ஓடிவந்து தாமரசமலர்போன்ற நேத்திரங்களையுடைய ஸ்ரீரகுநாயகருக்குத் தண்டன்சமர்ப்பித்தன. இராவணன் - கும்பகருணன் - இந்திரஜித்து - அதிகாயன் - கும்பன் - நிகும்பன் - மகரக்கண்ணன் - பிசாசன் - தூமாக்ஷன் — வச்சிரதந்தன் - முதலிய ராக்ஷசவீரர்களால் மடிந்துபோய் இப்போது உயிர்பெற்றெழுந்த அந்த வானரங்களெல்லாம் அங்கே சந்தோஷ ஆரவாரஞ்செய்துகொண் டிருந்தன. பிரமன்முதலிய தேவர்களெல்லாம் ஸ்ரீராமநாதரை நோக்கி, தேவரீர் சுக்கிலபட்சத்து அஷ்டமியில் சுவேலாசலத்தை வந்தடைந்து, இலங்காநகரத்தை வானரசைனியங்களால் முற்றுகைபோட்டு, அரக்கர்கள்யாவரையும் கொலைசெய்து, அமரபட்சத்துப் பஞ்சமிதிதியில் இராக்ஷசகுலநாயகனாகிய இராவணனையும் உயிர்மாய்த்து, இனியிந்த அண்டத்தில் வஞ்சகர்களில்லையென்னும்படியாகக் கொலைத்தொழில்செய்தீர். ஓ தாமரைமலர்போன்ற கைகளையுடைய எம்பெருமானே! தாயார்சொல்லியபடி பதினாலுவருஷமும் இன்றோடுமுடிகின்றது, இன்றைத்தினமே அயோத்திக்கெழுந்தருளி ஸ்ரீ பரதாழ்வானுக்குத் தரிசனையாகாவிட்டால் அந்த ஸ்ரீமான் தீயைமூட்டி அதிற்குதித்துப் பிராணத்தியாகஞ் செய்துகொள்ளுவார். ஆதலால், அப்படிஅயோத்தியில் நடவாதபடி தேவரீர் சீக்கிரமாய் எழுந்தருளவேண்டுமென்று சொல்லிவிட்டுப் போயினார்கள்.

உடனே சுவாமியானவர் விபீஷணாழ்வான் முதலானவர்களைப் பார்த்துச்சொல்லுகிறார். ஓ மித்திரர்களே! என்தாயானவர் எனக்குக் கட்டளையிட்ட வருஷங்கள் பதினான்கும் இன்றோடு சரிபட்டுப்போகிறது. இன்றையத்

தின நான் அயோத்தியைப்போய்ச் சேராமற்போவேனே யானால், என்தம்பி பரதாழ்வான் எரியில்விழுந்து பிராணனை மாய்த்துக்கொள்ளுவான். அதுகண்டு என்குலமுற்று நாசமாய்விடும். அப்படிநேரிட வொட்டாமல் இங்கேயிருந்து இந்தத்தினமே அயோத்திக்குப் போகத்தக்க வாகனம் ஒன்றுண்டோவென்று கேட்டருளினர். சுவாமிசொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்த ஸ்ரீவிபீஷணழ்வானனவர் அவரைப்பணிந்தெழுந்து, சுவாமி! எக்ஷராஜனுகிய குபேரனுக்குப் பிரமதேவராற் கொடுக்கப்பட்ட மகா புஷ்பகவிமான மொன்றுண்டு. அது மிகவும்பரிசுத்தமுடையது. அதன்மீது இந்தவானரவெள்ளங்கள்யாவுமேறினும் ஒருபுறத்தில் அடங்கிப்போமே யல்லாமல், அதற்கு ஒருசுமையாகமாட்டா. இராவணன் எப்போதாவது ஒருகாலத்தில் இலங்கையிலுள்ள ராக்ஷசர்களையெல்லாம் ஏற்றிக்கொண்டுபோய் உலாவுவான். ஆதலால் அவ்வளவு பெரிதென்று சொல்லினர். அப்படிப்பட்டதானல் அதைக் கொண்டுவாவென்று சுவாமியானவர் கட்டளையிட்டனர்.

விபீஷணர்கொணர்ந்த புஷ்பகவிமானத்தின்மீது ஸ்ரீராமபிரான் சீதாலக்ஷ்மண சகிதரா யெழுந்தருளல்.

கவி.

அண்டகோடிக ளனந்தமொத் தாயிரமருக்கர்
விண்டதாமென விசும்பிடைத்திசையெலாம் விளங்கக்
கண்டையாயிர கோடிகளொலிப்புறக் கனலக்
கொண்டணைந்தன னெடியினிசாக்கர்தங் கோமான்.

அண்டகோடிக ளொன்றுய்த்திரண்டு ஒருருவமாயினதுபோன்ற பெரிய உருவமுடையதாயும், ஆயிரஞ் சூரியர்கள் ஏககாலத்தில் உதயஞ்செய்தாற்போன்ற ஒளியையுடையதாயும், அநேகமணிகள் கணீர்கணீரென்று சப்திப்பதாயுமுள்ள அந்தப் புஷ்பகவிமானத்தைச் சர்வசுவாமியினுடைய கட்டளையின்படி விபீஷணழ்வானனவர் அதிவேகமாய்க் கொண்டுவந்தார். அந்தப் புஷ்பகவிமானம் பூமியில்வந் திறங்கியதைக் கண்ட ஸ்ரீராகவபிரானனவர் திருவுளமகிழ்ந்து, நம்முடைய எண்ண முடியுமென்றுஅதன்மேலெழுந்தருளினர். உடனே தேவர்கள் யாவரும் அவர்மேல் புஷ்பங்களை வாரியிறைத்துப் பல்லாண்டு கூறினர்கள். கற்புக்குத் தன்னைப்போன்றவ ரில்லாத ஸ்ரீ சானகிபிராட்டியாரைத் திரிசடையென்னும் சுகுணவதியானவள் தண்டன்சமர்ப்பித்து, ஓ ஜகத்காரணி! அடியாளும் தேவரீரோடு அயோத்திக்கு வருகிறேனென்று சொல்லினள். அதுகேட்ட ஸ்ரீ சீதாபிராட்டியானவர் — அம்மா திரிசடையே நீ யாதொரு துன்பமுமில்லாமல் இலங்காநகரத்துக்கு ஒருதெய்வத்தைப்போலிருக்கக்கடவாயென்று ஆக்கியாபித்து ஸ்ரீராமபிரான் பக்கலில்வந்து சேர்ந்தார். மணம்வீசுகின்ற மாலையைத்தரித்த இராமாநுஜரும் விமானத்தின்மேலெழுந்தருளினர்.

அப்போது சமஸ்த அண்டங்களையும் உண்ட ஸ்ரீசர்வேசுரனுடைய திருவுதரத்தைப்போல விளங்குவதாயும், வாயுவினது வேகமும் பின்னிடும்படி

மயினுவேகத்தையொத்த வேகத்தை யுடையதாயும் ஆகாயத்தின்கண் விளங்குகின்ற விமானத்தின்மே லெழுந்தருளியிராநின்ற ஸ்ரீராமநாதரானவர் ஸ்ரீ விபீஷணாழ்வானை நோக்கி, ஓ பூவினிதழ்களால் தொடுத்த மாலையைத்தரித்தவனே! நீ மகாபுண்ணியன்-சத்தியன் உனக்குயாதொருகுறையு முண்டாகாது, நீ எந்நாளுஞ் சிரஞ்சீவியாக நீதிதவறாது இலங்காபுரியை அரசாக்ஷி செய்யென்று அருளிச்செய்தனர். பின்புமனோவாக்குக் கெட்டாத கீர்த்தியை யுடைய இராமபத்திர ரானவர் சுக்கிரீவமகாராஜரைப் பார்த்து, ஓ சூரியபுத்திரனாகிய மகாராஜனே! உன்னுடைய புஜபலத்தாலே பத்துத்தலைகளையுடைய இராவணனைச் சங்கரித்தேன். அவன்முதலிய இராட்சசர்களுடைய யுத்தத்தில் உன்னுடைய சேனைகள்யாவு மிகுதியுஞ்சிரமப்பட்டு இளைப்படைந்தன. இனிமேல் நீ உன்னுடைய சேனைகளோடு கிட்கிந்தைக்குப்போய்ச் சேர்ந்து வாழக்கடவாய். என்றுசொல்லி அங்கதப்பெருமானையும், சாம்பவந்தரையும், பநசனையும்,வெற்றியைத் தரத்தக்க போரில்வல்ல நீலன் முதலாகிய சேனநாயகர்களையும், வாயுபுத்திரராகிய ஸ்ரீ ஆஞ்சநேயரையும் கடாக்ஷித்து, நீங்களும் சுக்கிரீவ மகாராஜருடனே போங்களென்று திருவாய்மலர்ந்தருளினர்.

ஐயனுனவர் இந்த வசனத்தைச் சொன்னமாத்திரத்தில் ஸ்ரீ விபீஷணாழ்வான்முதலிய யாவரு மனந்திடுக்கிட்டு, உடலுமுயிரு நிலைகலங்கும்படி விழிகளில் நீர் தாரைதாரையாக ஒழுக ஸ்ரீராகவபிரானுடைய செந்தாமரை மலர் போன்ற திருவடிகளை அவரவர்களும் தங்கள் தங்கள் தலைகளிற் சூட்டிக்கொண்டு, எம்பெருமானே! உம்மைவிட்டு நீங்குவோமே யானல் நாங்கள் பிழைப்பதில்லை. தேவரீரோடு பெரியமதில்சூழ்ந்த திருவயோத்திக்கு வந்திருந்து, பசும்பொன்னுற் செய்யப்பட்டு முத்துமாலைகள் தொங்குகின்ற இரத்தினமய கிரீடத்தைத்தரித்துக்கொள்ளும் பட்டாபிஷேக திவ்விய மகோற்சவத்தையும் — அங்குநடக்கும் வைபவங்களையும் - சிங்காதனத்தின்மேல் தேவரீரெழுந்தருளியிருக்கும் அழகையும்— உஜ்ஜீவிக்கும்படி கண்ணுற் சேவிக்குமளவும் தேவரீரைப் பிரியாதிருக்கும்படி தயைசெய்வீரென்று மிகுதியும் பணிவாகக் கேட்டுக் கொண்டார்கள்.

ஸ்ரீராமபிரான் விபீஷணாதியர் வேண்டுகோளால் யாவரையும் புஷ்பகவிமானத்தி லேற்றிக்கொள்ளுதல்.

கவி.

அன்பினலவர் மொழிந்தவாசகங்களு மவர்கள்
துன்பமெய்திய நடுக்கமுநோக்கிநீர் துளங்கல்
முன்புநானினைந் திருந்ததப்பரிசுநும் முயற்சி
பின்புகாணுமா றுரைத்ததென் றுரைத்தனன் பெரியோன்.

இப்படி விபீஷணாழ்வான் சுக்கிரீவமகாராஜா முதலானவர்கள் அதிகப்ரீதியோடு கேட்டுக்கொண்ட விண்ணப்பத்தையும் — அவர்கள் பிரிவென்னுந் துன்பத்தா லடைகின்ற நடுக்கத்தையும் — ஸ்ரீஜகந்நாதரானவர் கடாக்ஷித்து,

நீங்கள் துன்பப்படவேண்டாம். நீங்கள் சொன்னபடியே உங்களை அயோத்திக்கு அழைத்துக்கொண்டுபோக முன்னமேநான் நினைத்ததுண்டு. ஆனால் உங்களுடைய உள்ளக்கருத்தை அறியும்படியாக அது சொன்னதேயல்லாமல் வேறல்லவென்று சொல்லியருளினர். அப்படி சொல்லியருளிய ஸ்ரீராமசுவாமியினுடைய மொழியைக்கேட்டவுடனே ஸ்ரீசுக்கிரீவ மகாராஜரும் — விபீஷணாழ்வானும்—சிறியதிருவடிகளாதி-மற்றவானரத்தலைவர்களும்—சேனைகளும்—சகலசகத்காரணனாகிய ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரருடைய சீர்பாதங்களை வணங்கி, தேகத்தோடு முத்தியடைந்தவர்களைப்போல ஆச்சரிய பூதர்களாய் நின்றார்கள். நின்ற அவர்கள் யாவரையும் புஷ்பகவிமானத்தின்மேலேறும்படி சுவாமி ஆக்கியாபிக்கவே, அதிகவிரைவாக சுக்கிரீவன் முதலானவர்களும் — வானரப் படைகளும் — விபீஷணரும் — அவருடைய சேனைகளும்— அந்தவிமானத்தின்மீதேறி ஒருபுறத்தில் இருந்தார்கள். இவர்களேயல்லாமல் பதினாலுலோகங்களும் அவற்றிலுள்ள சராசரங்கள் யாவும் ஏறினபோதிலு மேலுமேலும் வெற்றிட மிகவுமிருக்கத்தக்க அவ்வளவுபெருமையுள்ள விமானத்தினுடைய இயல்பை யோகீசுவரர்களாலே சொல்லவேண்டியதேயல்லாமல், இந்தப்பூமியின்கண் சொல்ல வல்லவர்கள் யாருண்டு?

இப்படியந்தப் புஷ்பக விமானத்தின்மேல் எழுபதுவெள்ளச் சேனைகளும் - சூரியபுத்திரனும் - இலங்காதிபதியும் — அவருடையசேனையும் சூழ்ந்துட்கார்ந்திருக்க, மத்தியில் ஸ்ரீராமாநுஜர் ஒருபக்கத்திலும் ஸ்ரீ சீதாபிராட்டியார் ஒருபக்கத்திலுமிருக்க, இவ்விருவருக்கு நடுவே ஸ்ரீராகவபிரான் எழுந்தருளினர். அந்தப் புட்பகவிமானமானது அப்பிராகிருத பரமபதத்தைப் போலத் தோன்றியது. ஹேயகுணங்களு முதலுநடுவு முடிவுமில்லாமலு நான்கு வேதங்களுக்கு மெட்டாமலு மிருக்கிற ஸ்ரீ பரஞ்சுடரைப்போல ஸ்ரீராகவபிரான் அந்த விமானத்தில் விளங்கினார், ஸ்ரீராமபத்திரருடைய அநுமதியினால் சூரியபுத்திரராகிய சுக்கிரீவமகாராஜனும், இலங்காநகராதிபதியாகிய ஸ்ரீவிபீஷணாழ்வானும், வெற்றியே பூணத்தக்க இருவகைச்சேனைகளும், ஆஞ்சநேயர் சாம்பவர்முதலிய படைத்தலைவர்களு மனிதவுருவங்கொண்டார்கள்.

யாவரும் புஷ்பகவிமானரூடராய் வடதிசை நோக்கி வரும்போது அவ்வவ் விடங்களைக் குறிப்பிட்டு ஸ்ரீராமபிரான் சீதாபிராட்டிக்குக் கூறல்.

கவி.

குடதிசைமறைந்தபின்னர்க் குணதிசையுதையஞ்செய்வான்
வடதிசையயனமுன்னி வருவதேகடுப்பமானம்
தடையொருசிறிதின்றாகித் தாவினான்படரும்வேலை
படையமைவிழியாட்கைய னிலையனபகரலுற்றான்.

மேற்றிசையிலே அஸ்தமித்தபின்பு கிழ்த்திசையிலே உதையஞ் செய்கின்ற சூரியன் தக்ஷணாயன நீங்கி உத்தராயணத்துக்காக வடபாரிசத்தில் வருவதுபோல யாதொருதடையு மில்லாமல் புஷ்பகவிமானமானது ஆகாயமார்க்

கத்தில் தாவிவரும்போது, ஸ்ரீராமநாதர் வாள்போலு நீண்டு கூர்மைபெற்று விளங்குகின்ற கண்களையுடைய பிராட்டியாருக்கு அவ்விடங்களைக் குறிக்கப் பட்டு சிலவார்த்தைகளைச் சொல்லத்தொடங்கினர்.

ஸ்ரீ சானகிபிராட்டியாருக்குச் சொல்லத் தொடங்கிய பகவானானவர் இப்புட்பக விமானமானது இலங்காநகரத்தை வலஞ்செய்து போகவேண்டு மென்று எண்ணங்கொண்டனர். இப்படி எண்ணங் கொள்ளுவதற்கு முன்ன மே அப்புட்பகவிமானம் வலப்பிரதக்ஷணமாகஇலங்காநகரத்தினதுகீழ்க்கோ புரவாயிலிற்கு வந்தது. அப்போது சுவாமியார் அதிசயித்து ஸ்ரீசானகிபிராட் டியாரைப் பார்த்துச் சொல்லுகின்றார். ஹேசீதா! இங்கேதான் பிரகஸ்தனெ ன்னு மிராக்ஷசப் படைத்தலைவன் நீலனென்னும் வானரப்படைத்தலைவனால் உயிர்மாய்ந்தான். சுபாரிசனென்பவன் மாண்டதும் இவ்விடமேயாம். அப் பால் மேற்றிசைவாயிலில் வந்தவிடத்து, இவ்விடத்தில் ராவணனானவன் சுக் கிரீவனால் தன் கிரீடத்திலிழைக்கப்பட்ட சிரோரத்தினங்களை யிழந்து என் னுற் கொலையுண்டானென்று சொல்லிக்கொண்டு வந்த ஸ்ரீராமச்சந்திர ரா னவர் சேதுவைச் சமீபித்து, ஹேஜானகி! உன்னைப்பிரிந்து பலநாள் கழிந்த பிற்பாடு நான்சுக்கிரீவனோடு சிநேகஞ்செய்து உன்னைத் தேடும்படி அநுமா னை அனுப்ப, அநுமான் உன்னைக்கண்டுவந்து தெரிவித்தபின் வானரசிரேஷ் டர்கள் கட்டியது இந்தச்சேதுவாகும். இந்தத் திருவணையினுடைய மகாத் துமியத்தைச் சொல்லப் பிர்மாவினாலு முடியாது. இதன்பெருமையை எவ்வ ளவென்று சொல்லுவேன். ஹே மைதுலீ! பெற்ற தாய்தந்தையர்களுக்கும்— குருவுக்கும் - பெருங்குற்றத்தைச் செய்து, சுற்றத்தாரையு மழித்த பா தகர்களும் வந்து தரிசிப்பார்களேயானால் உடனே தேவர்களாவார்கள். இந் திரன் மலைகளைச் சிறகரிந்தகாலத்தில் ஓடிவந்தொளித்த மைந்நாக பர்வதமும், பார்த்தவர்களுடைய பாபங்களை ஒழிக்கின்ற கெந்தமாதன பர்வதமும், இங் கேயிருக்கின்றனபார். அவ்விரண்டு மலைகளும் இந்தச் சேதுவினுடைய சம் பந்தத்தால் பரிசுத்தம் அடைகின்றன.

நதிகளிலே சிறந்த கங்கை - யமுனை — கோதாவிரி - காளிந்தி - முதலிய நதிகள் யாவற்றிலு மூழ்கினாலல்லாமல் பாபங்கள் நீங்கமாட்டா. இந்தச் சேது அப்படியல்ல. தரிசனஞ்செய்த மாத்திரத்திலே எல்லாப் பாபங்களையு மொழித்துவிடும். பசுவையும்—ஆசாரியரையும்-முனிவர்களையும்—ஸ்திரீகளின் கூட்டத்தையும்-குழந்தைகளையும்-ஏதோ ஒருபயத்தால் அஞ்சிவந்து அடைக் கலம் புகுந்தவரையும்கொலைசெய்த மகாபாதகர்கள்வந்துஇச்சேதுவினிடம்வ ந்துஸ்நானஞ் செய்வார்களேயானால், அவர்கள் தங்கள்பாதகங்களை யெல்லாந் தொலைத்து தேவர்கள் வணங்குகின்ற தேவர்களாகி விடுவார்கள். என்றுகூறி வந்த ஸ்ரீ சர்வசுவாமியானவர் அங்கு மரக்கலங்கள் தோணிகள் முதலான வைகள் உலாவவேண்டுமென்று திருவுளத்தி லெண்ணித் தமது திருக்கையி லுள்ள வீரகோதண்டத்தினது குதைநுனியால் கீறிவிட்டு, ஹே ஜனகமகா

ராஜ புத்திரியே! பஞ்சமா பாதகங்களைச் செய்தவர்களானாலும் இந்தத் திருவணைக்குச் சமீபத்தில் வருவார்களேயானால், இருபத்தொரு சனனமும் துக்கவியாதி யில்லாதவர்களாய் தேவர்கள் விரும்புகின்ற சங்கநிதி பதுமநிதிகளைப்போலச் சிரேஷ்டர்களாவார்கள். செந்தாமரைமலரில் வசிக்கின்ற வசீதா! இந்தச் சேதுவைப்போலத் தான் ஆகவில்லையே என்கிற துக்கத்தால் கங்கையானவள் உருத்திரபகவானுடைய நெற்றிக்கண்ணின் நெருப்புச்சூட்டையும் சகித்துக்கொண்டு அவருடைய சடைக்காட்டிலிருந்து தவஞ்செய்கின்றாளென்போமானால், இந்தத் திருவணையினுடைய மான்மியத்தை எப்படிச் சொல்லக்கூடும்?

என்று ஸ்ரீராமபிரானவர் சேதுவின் பெருமையாவுஞ் சொல்லிவிட்டு, ஹே வனிதாரத்தினமே! இங்கேதான் சமுத்திரராஜன் என்னுடைய பாணதீக்ஷணியத்தைப் பொறுக்கமாட்டாமல் என்னைவந்து சரணம் புகுந்தான். இது அகஸ்தியர் வாசம்பண்ணும் பொதியமலை. இதுசேஷமலை. இப்படியென்று ஒவ்வோரிடங்களையும் அவ்வவ் விடங்களிலுள்ள விசேடங்களையுஞ் சொல்லிக்கொண்டு போம்போது சீதாபிராட்டியானவளவரை நோக்கி, சுவாமி! தேவரீருடைய தாசனாகிய அநுமானை எவ்விடத்திற் கண்டதென்று கேட்டனள். அதற்கு சுவாமியானவர் பிராட்டியாரைப் பார்த்து, ஹே வனிதா! இதோதோன்றுகின்ற கிட்கிந்தையென்னு மலையிற்றான் அந்த உத்தமனைக்கண்டது. சமுத்திரங்களை யெல்லாம் ஒரேபாய்ச்சலிற் பாயவல்ல வாலியென்னு மகாவீரனை அவன்செய்த அகிர்த்தியத்துக்குத் தண்டனையாகக் கொல்வித்து, தருமநூல்களைக் கற்றுணர்ந்து அதன்வழியே நடக்கின்ற மேலோர்களைப்போலு நல்லொழுக்கத்தையுடைய சூரியபுத்திரனாகிய சுக்கிரீவ மகாராஜன் பட்டத்தைப்பெற்று வாழ்கின்ற இடமும் இதுதானென்று சொல்லியருளினர்.

சீதாபிராட்டியார் வேண்டுகோளால் கிட்கிந்தையிலுள்ள வானரஸ்திரீகளையும் விமானத்தின்மீதேற்றிச் செல்லுதல்.

கவி.

கிட்கிந்தையிதுவேலைய கேட்டியாலெனதுபெண்மை
மட்குந்தானையவெள்ள மகளிரின்றுகிவானோர்
உட்கும்போர்ச்சேனைசூழ வொருத்திபோயயோத்தியெய்தின்
கட்கொந்தார்குழலினாரை யேற்றுதல்கடன்மைத்தென்றாள்.

இவ்வண்ணம் பிரான்சொல்லக்கேட்ட பிராட்டியானவர் சுவாமி அடியாளுக்கொரு விண்ணப்பமுளது. அதைத் தாம் அங்கிகரிக்கவேண்டியது. அஃதியாதெனின், சுவாமி! தேவர்களும் அஞ்சத்தக்க சேனைகள் சூழ்ந்துவரயானொருபெண் யாதொரு பெண்கள்கூட்ட மில்லாமல் அயோத்தியாநகரத்துக்கு வருவேனேயானால், என்னுடைய பெண்மையானது பெருமைப்படாது. ஆதலால், இந்தக் கிட்கிந்தையிலிருந்து சிலஸ்திரீகளை எனக்குஉசாத்துணையாக

ஏற்றுதல் யுக்தமாகுமென்று சொன்னாள். அந்தச்சொல்லை ஸ்ரீராமபிரான் சுக்கிரீவருக்குச் சொல்லினர். அந்தமகாராஜாவானவர் சிறிய திருவடிகளைப்பார்த்து, நீர் சீக்கிரமாகப்போய் கிட்கிந்தையிலுள்ளஸ்திரீகளை இராஜதரிசனத்துக்குப்போகு முறைமை எப்படியோ? அந்த முறைமைப்படி கொண்டுவாருமென்று சொல்லினர். உடனே ஆஞ்சநேயரும் விமானத்தைவிட்டிழிந்து சென்று அங்குள்ள ஸ்திரீஜனங்களை அம்முறைமையாகக் கொண்டுவந்தார். அந்த வானரப்பெண்கள் யாவரும் விமானத்தின்மேலேறி, தங்களரசனாகிய சுக்கிரீவமகாராஜரையும் - ஸ்ரீசானகிபிராட்டியாரையும் - ஸ்ரீராமப்பிரபுவையும் - நமஸ்காரஞ்செய்து நின்றவர்களாகித் தாம் கிட்கிந்தையிலிருந்து கொண்டுவந்த சுமங்கலத்துக்குரிய பொருள்களைப் பிராட்டியார் பக்கலில்வைத்து முறையாக வணங்கிச் சமீபத்தில் உட்கார்ந்தார்கள். ஸ்ரீ சீதாபிராட்டியாரும் இனி யாதொருகுறைவு மில்லையென்று திருவுள மகிழ்ந்தனர். உடனே புட்பகவிமான மனோவேகமாகச் சென்றது.

அப்படிச் செல்லும்போது ஸ்ரீராகவபிரான் ஸ்ரீசீதாபிராட்டியைப் பார்த்து, ஹே சீதா! நமக்கெதிரே தோன்றுகிற நதியானது கோதாவிரி, அதற்குப் பக்கத்தில் தோன்றுகிற பர்வதத்திலேதான் நாமிருவரும் ஒருவரையொருவர் பிரிந்துதுன்பங்களையனுபவித்தது. ஒ தேனுண்ணும்படி வண்டுகள்மொய்த்தொலிக்கின்ற மலர்மாலைசொருகிய கூந்தலையுடைய சானகி! பெருமையாகிய விரதங்களை யநுசரித்து உபாசனைசெய்பவர்களும், இயாகங்களைச் செய்பவர்களு மெக்காலமு மிடைவிடாதுவசிக்கின்ற தண்டகாரண்ணியமோ அதோ தோன்றுகிறது. இதோ தேவர்களிற் சிரேஷ்டனாகிய இந்திரனும் வணங்கத்தக்க சித்திரகூடம். இது பரத்துவாசரிஷியானவர் வாசம்பண்ணுகிற இடமென்றுசொன்னார்.

பாரத்துவாசமுனிவர் ஸ்ரீராமமூர்த்தியின்வருகைதெரிந் தெதிர்கொண் டழைத்துத் தமது பன்னகசாலைக் கழைத்தேகல்.

கவி.

மின்னைநோக்கிய வீரனீதியம்பிடும் வேலை
தன்னைநேரிலா முனிவரனுணர்ந்துதன் னகத்தின்
என்னையாளுடை நாயகனெய்தின னென்னாத்
துன்னுமாதவர் சூழ்தரவெதிர்கொள்வான் றொடர்ந்தார்.

மின்னல்போலும் தேககாந்தியையுடைய ஸ்ரீ சானகிபிராட்டியாரை நோக்கி இராமநாதரானவர் இப்படிச் சொல்லிக்கொண்டு வரும்போது பரத்துவாச முனிசிரேஷ்டரானவர் ஸ்ரீராகவபிரான் வருகின்றாரென்றறிந்து; தன்னுடன் அநேகமுனிவர் கூட்டங்கள் சூழ்ந்துவரும்படியாக தனதரியதவகோலத்தோடு எதிரேவருகின்றனர். அப்படியவர் வருவதையறிந்த பிராணனவர் புட்பகவிமானமானது பூமியில் தாழும்படி நினைத்தனர். நினைத்தமாத்திரத்தில் சுவர்க்கலோகமானது பூமியில்வந் திறங்கியதுபோலப் புட்பகவிமானமானது பூமியில்வந்து தங்கியது. உடனே என்னைஆளாக உடைய சுவாமியானவர்

விமானத்தைவிட்டிறங்கி விரைந்துசென்று, பரமவைதிகஸ்தராகிய பரத்துவாசமுனிவருடைய பாதங்களுக்குத் தண்டன்சமர்ப்பித்தனர். இப்படி தண்டன்சமர்ப்பித்த தாமரைக்கண்ணராகிய ஸ்ரீராகவபிரானை அம்முனிவர் வாரியெடுத்தணைத்து உச்சிமோந்து, சடைமுடியிலுள்ள தூசுகள் நீங்கும்படி ஆநந்தக்கண்ணீர் சொரிந்தனர். உடனே கறுத்த அளகபாரத்தையுடைய ஸ்ரீசானகிபிராட்டியாரும் ஸ்ரீராமாநுஜரும் தண்டன்சமர்ப்பித்துச் சமீபத்தில் நெருங்கினமாத்திரத்தில், அருமையாகிய தவசிரேஷ்டரானவர் ஆசீர்வசனங்களைச்சொல்லிச் சந்தோஷகரமாகி யுண்ணுதற்குரிய அமுதத்தை எதிர்வரக் கண்டாற்போல அவர்களைக்கண்டு மனங்குதூகலித்து ஆனந்தக்கண்ணீர் பெருக்கினர்.

அதன்பின்பு சுக்கிரீவ மகாராஜரும் – விபீஷணாழ்வாரும் – ஆஞ்சநேயரும் - சாம்பவரும் - மற்றவானரர்களும் - தம்மை வணங்குந்தோறும் ஆசீர்வதித்து, ஞானநாயகனைப் பிராட்டியாரோடு முனிவர்கூட்டங்கள்சூழ்ந்து வேதகோஷஞ்செய்துவரத் தம்முடைய ஆச்சிரமத்துக்குள்ளே அழைத்துச் சென்று, சூரியவமிசகுல திலகராகிய ஸ்ரீராமபத்திரர்முதலிய யாவருக்கும் செய்யவேண்டிய மரியாதைகள் யாவுஞ்செய்து ஆநந்தக்கண்ணீர் பெருக சுவாமியினுடைய திவ்விய மங்களகரவடிவழகைச் சேவித்துப் பலமுறைபுகழ்ந்து ஸ்ரீராமா இன்றைக்குமாத்திரம் தாம் இச்சேனைகளோ டிருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். பிறகு வேதங்களின் பரமார்த்தத்தை நன்குணர்ந்த பரத்துவாசரானவர் ஸ்ரீரகுநாயகரைப் பார்த்து மேலுஞ்சொல்லுகிறார்.

ஓ எங்கள்குலதெய்வமே ! ஸ்ரீஜானகிரமணா! உண்மையை யுடைய தேவர்களது துன்பத்தைவீரகோதண்டத்தை வளைத்தொழித்துச் சர்வலோகங்களையுங்காக்கின்ற செந்தாமரைமலர்போன்ற கண்களையும், மரகதரத்தினம்போன்ற திருமேனியையுமுடைய தீனபந்துவே ! ஸ்ரீபரதாழ்வானுடைய நிலையைச் சற்றுச்சொல்லுகிறேன் கேட்டருள வேண்டும். ஸ்ரீ தசரதாத்மஜனே ! நீ தென்றிசையைச் சென்றபின் உன்னுடைய பிரிவால் ஸ்ரீ பரதாழ்வான் தேகம் வெயர்த்தும், துன்பக்கண்ணீர் சொரிந்தும், நல்வினைதீவினைகளோடு ஸ்ரீபகவத் தாசர்களுக்குச்செய்யும் வைதிககைங்கரியத்தையும் வெறுத்தும், சித்தப்பிரமையடைந்தும், மறந்தொருவேளை உலகத்தைப் பார்ப்பதாயிருந்தால் தென்றிசையை யல்லாமல் மற்ற திசைகளைப்பாராமலும், பயமும் துக்கமும் ஒருருவுகொண்டதென்னும்படியாய்த் தோன்றியும் இருக்கிறான்.

இம்மட்டுத்தானோ? இந்திரியங்களை நிக்கிரகித்து கனிகாய்களை ஆகாரமாகப்புசித்தும், நாடுகளிற்சென்று குதிரைகளுக்காகக் கொண்டுவந்த புல்லைப்பரப்பி அதன்மேற் படுத்தும், அயோத்திமா நகரத்துக்குள் பிரவேசியாமல் நந்திக்கிராமத்தில் வாசஞ்செய்துகொண்டு உன்னுடைய திருநாமத்தை மறவாமல் இரவும் பகலும் வாயாற்சொல்லிக்கொண்டிருக்கிறான். என்னப்பனே ஸ்ரீராமபத்திரா! இராக்ஷசகுலநாயகனுடைய இருபது நீலகுலாசலங்களை

யொத்த தோள்களையும், பத்துச் சூரியர்களை யொத்த முடிகளணிந்த தலைகளையும், துண்டித்துத்தள்ளிய வீரநாயகா! இதுகாறு நாங்கள் உன்னைப்பிரிந்ததுமுண்டோ? உன்னுடைய பராக்கிரமாதிசய லீலைகளையும், உன் பக்தகோடிகளுடைய இருப்பையும், சார்வதாஞானதிருஷ்டியால் அறிந்துகொண் டிருக்கிறோம். அம்மாத்திரமேயல்லாமல் உன்னை எங்களுடைய இருதயகமலத்தில் சாக்ஷாத்கரித்துக்கொண்டு நித்தியானந்த அநுபவஞ் செய்துகொண்டிருக்கிற நாங்கள் உன்னை எவ்விதத்தில் பிரிந்தவர்களாவோம்? ஆதலால் உன்னை நாங்கள் எப்போதும் பிரிந்தவர்களல்லோ மென்று கூறினர்.

அந்தப் பாரத்துவாச முனிவரைத் தம்முடைய அவதாரத்துக்குத் தக்கபடி நடிக்கின்ற இராகவபிரானனவர் மகாசந்தோஷத்தோடும் பார்த்து, ஸ்ரீ சங்கரபகவானும் நான்முகக்கடவுளுமே புகழ்தற்குத்தகுந்த மாதவசிரேஷ்டரே! உம்மைவணங்கி உம்முடைய கிருபைக்குப் பாத்திரவானாகி உயர்ந்தேன். அதுகாரணத்தால் எனக்குச் சமானமான புருஷன் நானேயல்லாமல் ஒருவருமில்லையென்று சொல்லினர். பின்பு ஸ்ரீபாரத்துவாச முனிவரானவர் ஸ்ரீராமபத்திரரைக் கருணையாகப்பார்த்து, ஸ்ரீராமநாதா! உனக்கு என்னவரம் என்னாற்பெற்றுக்கொள்ள வேண்டுமோ அந்தவரத்தை என்னைக் கேட்பாயாகவென்றார். அதுகேட்டருளிய ஸ்ரீராமசுவாமியானவர் அவரைத் தொழுதெழுந்து, இந்தவானரர்கள் தாங்கள் இஷ்டப்பட்டுச் சென்றகாடுகளி லெல்லா மழைகாலத்திற் செழித்து உண்டாகுவதுபோலக் காய்கனிகளும் - கிழங்குகளும் – தேனும் - மதுரமாகிய நீரு நிறைந்திருக்கவும், அவர்கள் சுகசீவிகளாயிருக்கவும் வரத்தைத் தயைசெய்ய வேண்டுமென்று கேட்டருளினார். அந்த முனிவரும் அப்படியே ஆகக்கடவதென்று ஆசீர்வதித்தனர்.

பாரத்துவாசமாமுனிவர் ஸ்ரீராமனுதியர்க்கு விருந்து செய்தல்.

கவி.

அருந்தவனனையநின்னோ டனிகவெஞ்சேனைக்கெல்லாம்
விருந்தினிதமைப்பேனென்னு விளங்குமுத்தீயினுப்பண்
புரந்தொராகுதியையீந்து புறப்படுமளவிற்போகம்
திருந்தியவானநாடு சேரவந்திறுத்ததன்றே.

பிறகு பாரத்துவாசமுனிவர் ஸ்ரீராமபிரானைப் பார்த்து, எங்கள் ஐயனே ஸ்ரீரகுராமா! உனக்கும் உன்னுடைய சேனைகளுக்கும் விருந்துசெய்கிறேனென்று கூறி, ஆகவனீயம் - தட்சணாக்கினியம் – காருகபத்தியம் என்னு மூன்றுநீயா லமைத்த யாகத்தில் வேதமந்திரங்களைச் சொல்லி அவிர்ப்பாகஞ் சொரிந்தார். இப்படி ஆகுதிசெய்த மாத்திரத்தில் யாதொரு குறைவுமில்லாமல் சுவர்க்க லோகத்திலுள்ள எல்லாவளப்பங்களும் ஒருமிக்கவந்து அங்கே இறங்கியன. ஸ்ரீராகவபிரான் அரசர்முதல் அடியார்கள் வரைக்கும் ஒரு பேதமுமில்லாமல் அபரிமிதமாக அந்த வளப்பங்களை அநுபவிக்கக்கண்டு, பிற்பாடு தாம் அறுசுவையுள்ள உண்டியை அமுதுசெய்யப் போகும்போது அநுமானை அழைத்துச் சொல்லுகின்றனர்.

ஸ்ரீராமபிரான் அயோத்திக்குச் சென்று பரதாழ்வானுக்குத் தமது க்ஷேமத்தை அறிவித்துவரக்கட்வாயேன் றக்கியாபித்து மோதிரந்தந் தனுப்புதல்.

கவி.

இன்றுநம்பதி வருதுமுன்மாருதி யீண்டச்
சென்றுநீதின்மை செப்பியத்தீயவித் திளையோன்
நின்றநீர்மையு நினைவுநீதேர்ந்தெம்மி னோர்தல்
நன்றெனுவவன் மோதிரங்கைக்கொடு நடந்தான்.

ஓ அநுமானே! நாம் அயோத்திக்கு வருவதற்கு முன்பாக நீ சென்று ஸ்ரீ பரதாழ்வானைக்கண்டு எம்முடைய க்ஷேமத்தைத் தெரிவித்து, அந்தப்பரதன் தான்விழுந்திறக்கும்படித் தீமூட்டி யிருப்பான். அதை அவித்துவிட்டு அவனுடைய எண்ணத்தையும் அவனிருப்பையு நீ அறிந்துகொண்டு எம்மிடம்வந்து சேரவேண்டுமென்று சொல்லித் தமதுவிரலாழியையுங் கொடுத்தனுப்பினர். உடனே அஞ்சனாதேவி புத்திரர் தம்முடைய பிதாவினுடைய வேகமும் - இராமசுவாமியினது பாணவேகமும் — மனோவேகமும் பின்னிடும்படிச்சென்று, கங்கையின் கரையிலுள்ள குகப்பெருமானுக்கு ஸ்ரீ ராமபத்திரருடைய வருகையையும் அவரெழுந்தருளி யிருக்கும் ஆச்சிரமத்தையும் தெரிவித்து ஆகாயமார்க்கமாகச் சென்றார். அநந்தகலியாணகுண நிலயராகிய ஸ்ரீராகவபிரான் தெற்குத்திக்கை நோக்கிச்சென்ற செய்திகள் யாவற்றையும் சொன்னோம். எம்பெருமானானவர் அக்காலத்தில் நான்பதினான்குவருஷ மானவுடன் அயோத்தியாநகரத்துக்குத் திரும்பி வருகிறேனென்று சொன்னதை விசுவசித்திருந்த ஸ்ரீ பரதாழ்வானுடைய நிலைமை இனியெடுத்துச் சொல்லுவோம்.

நந்திக்கிராமத்திலுள்ள பரதாழ்வானது நிலைமையின்னதெனல்.

கவி.

நந்தியின்பதி யின்றலைநாடொறும், சந்தியின்றி நிரந்தரந்தம்முனோன்
பந்தியங்கழற் பாதமருச்சியா, இந்தியங்களை வென்றிருந்தானரோ.

ஸ்ரீ சர்வேசுரனாகிய ஸ்ரீராகவபிரான் ஆரண்ணியத்துக் கெழுந்தருளும்போது சித்திரகூடத் தண்டைவந்து கண்டுபோன ஸ்ரீ பரதாழ்வானானவர் தமக்கு அந்தச் சுவாமியானவர் அருளிய திருப்பாதுகையை நந்திக்கிராமத்தில் சிங்காதனத்தின்மேல் எழுந்தருளச் செய்தும், பின்பு ஸ்ரீசத்துருக்காழ்வானை நோக்கி, ஹே சத்துருக்கா! நீ ஒரு ஏவலாளியைப்போலிருந்துகொண்டு அயோத்தியா நகரத்திலுள்ள அந்தணர் முதலியவருணத்தார் துன்பப்படாதவண்ணம் காத்திருவென்று ஆக்கியாபித்து, தாம் அங்கே ஒருவரோடும் வார்த்தையாடாமல் இந்திரியங்களை நிக்கிரகித்துவிட்டு வேறொரு தெய்வசிந்தனையிலாது தமது தமையனாருடைய திருப்பாதுகைகளைத்தியானித்து அர்ச்சனை செய்துகொண்டும், பிரிவென்கிற துக்கத்தினால் உடல்மெலிந்து எலும்புருவாய்நின்று அவரைப்பார்ப்போர் அன்பென்பது ஒருருவங்கொண்டதுபோ

லத் தோன்றுகின்றா ரென்னும்படியாகக் காணப்பட்டும், ஸ்ரீ சுவாமியானவர் ஆரணியத்துக்குச் சென்றதை நினைக்கும்போதெல்லாம் கண்களில் நீர்பெருகிக்கொண்டும், காய்கனிகிழங்குகளை யல்லாமல் மற்றொன்றையும் புசியாமலும், ஸ்ரீராமபிரான் நம்மையாட்கொள்ளும்படி வருகிறதிசை இதுவன்றோவென்று தென்றிசையையே நோக்கிக்கொண்டு உயிர்போவதும்வருவதுமாகிய மகாதுக்கத்தை அநுபவித்தும், என்னுயிர்க்கும் உயிராகிய ஸ்ரீரகுநாயகன் திருமுடிசூட்டியபி னல்லாமல் என்றுன்ப மொழியமாட்டாதென்று தமக்குள் நினைத்துக்கொண்டு மிருந்தனர்.

இப்படிப்பட்ட துக்காக்கிரந்தரா யிருக்கின்ற ஸ்ரீ பரதாழ்வானவர் ஒருநாள் திருப்பாதுகைகளை அர்ச்சிக்குங்காலத்தில் ஸ்ரீராமபத்திரரானவர் அயோத்திக்குத் திரும்பிவருகிறே னென்று சொல்லிய திருவாக்கை நினைத்து, அந்தநாள் என்றைக்கோவென்று சோதிஷசாஸ்திரிகளை வரவழைத்துக் கேட்டபோது அவர்களும் இன்றைக்குத்தா னென்று சொன்னார்கள். அந்தச் சொல்லைக் கேட்டமாத்திரத்தில் ஸ்ரீரகுநாயகர் திரும்பிவருகிறேனென்ற சொல்லை நினைத்துக்கொண்டு, கொலையுண்டவர்களைப்போலச் சுவாசம் அடங்கிப் பூமியில் வீழ்ந்து மறுபடியும் எழுந்து செந்தாமரைமலரைவென்ற கண்களில் தாரைதாரையாக நீர்சொரிந்து, உடலினின்றும் பிராணன் போவதும் வருவதுமாய் உஞ்சலாட அதிகமரணாவஸ்தை யடைந்து அங்கிருந்த முனிவர் முதலானவர்களைப் பார்த்து, ஓ முனிவர்களே! பொய்சொல்ல வறியாத எங்களருந்தெய்வமாகிய ஸ்ரீராமநாதர் எனக்குச் சொல்லிவிட்டுப்போன நாட்கெடுவையும் - நான்படுகிற துன்பத்தையும் — எங்கள் தாயாகிய கௌசலா தேவியினுடைய அன்பையும் சகித்துக்கொண்டு வனத்திலேயே வாசஞ்செய்யமாட்டார். இயான்செய்த பாபகர்மபலனால் ஏதோ ஒருபகை அவ்விடத்திலும் சம்பவித்திருக்கும் அதனால்தான்வரவில்லையென்று தேம்பித்தேம்பி யழுவார்.

ஆ! ஆ! எங்களுடைய வீரசிகாமணியாகிய ஸ்ரீ கோதண்டபாணிக்கெதிரே திரிமூர்த்திக ளாயினும், சுவர்க்க மத்திய பாதாளங்களிலுள்ள எவர்களாயினும், ஆயுதமெடுத்து வந்து பிராணபீதியில்லாமல் நிற்பார்களோ? அவ்வளவு சத்திமான்க ளல்லர்களே என்று தாம்கொண்ட சந்தேகத்தை நிவர்த்திப்பார். நமது தம்பியாகிய பரதனென்பவன் இராச்சியாதிகாரத்தில் இப்போது இச்சையுடையவனா யிருப்பான். அப்படி இச்சையிருக்கிற பட்சத்தில் அந்தராச்சியபட்டாபிஷேகத்தை அவனேஅடையட்டும். நமக்குவேண்டியதில்லை. இந்தக் காட்டிலிருந்துகொண்டு தவஞ்செய்வதே நல்ல உத்தமபலனென்று தமக்குள் ஆலோசித்துக்கொண்டு வனத்திலேயே இருந்துவிட்டாரோ வென்று மூர்ச்சையடைவார். நான் பிராணனை மாய்த்துக்கொள்வதினால் இங்குள்ள குடும்பத்தார் யாவரும் உயிரைமாய்த்துக் கொள்ளுவார்கள். அப்படி என்குடும்பத்தை நான் கொலைசெய்பவனானாலும் ஆகக்கடவேன்.

அந்த ஸ்ரீராகவபிரானானவர் வனத்திலேயே வாசஞ்செய்தாலும் செய்யட்டும். அல்லது அயோத்தியாபுரிக்கு வந்து அரசுசெய்தாலும் செய்யட்டும். எங்களாண்டவர் வருவார் வருவாரென்று நினைத்து இந்தத்துக்கத்தில் வருந்தமாட்டேன். என்னுயிரோடு என்துக்கத்தைப் போக்கடிப்பேனென்றார்,

இப்படிப் பலபலவிதமாகச் சொல்லிய ஸ்ரீபரதாழ்வானானவர் ஸ்ரீசத்துருக்கனை என்னிடம் வரச்சொல்லுங்களென்று தூதரை அனுப்பினார். அந்தத்தூதர்கள்போய்ச் சொன்னமாத்திரத்தில் ஸ்ரீசத்துருக்காழ்வானானவர் விரைந்துவந்து தமது தமையனாருடையசீர்பாதங்களை வணங்கினார்.அன்புடன்வணங்கிய திருத்தம்பியாரைப் பரதரானவர் கண்ணீரொழுகி வடிகின்ற தமது மார்பிலிறுகத்தழுவி, ஓ என்னையனே சத்துருக்கா! இப்போது நான் உன்னிடத்திற் கேட்டுக்கொள்ளும் வரமோ ஒருகுற்றமுமில்லாதது. ஆகையால் நீயும் சம்மதித்துக் கொடுக்கவேண்டியதே: அந்தவரம் என்னவென்று கேட்பாயாகில், நம்முடைய தெய்வநாயகனாகிய ஸ்ரீராகவப் பெருமானானவர் முன்னே தாம் திருவாய் மலர்ந்தருளிச்சொல்லிப் போனநாள் இன்றோடுமுடிவாகும்.இத்தினத்தில்எழுந்தருளாமையால் இனித்தீயைமூட்டி அதிற்குதித்து இறந்துவிடுகிறேன்.அயோத்தியா நகரத்திலுள்ளவர்கள் வருந்தாதபடி நீ இராஜ்யபட்டாபிஷேகனாகி அரசுசெய்யக்கடவாய். இதுதான் வேறொன்றுமல்ல. இதைத் தடுக்காதேயென்று கேட்டுக்கொண்டார். ஸ்ரீ பரதாழ்வானானவர் இந்தச்சொல்லைச் சொன்னமாத்திரத்தில் ஸ்ரீ சத்துருக்னப்பெருமான் தமதுகைகளால் இரண்டுகாதுகளையுமூடிக்கொண்டு திடுக்கிட்டு, கண்களு மனமு நடுநடுங்கி,விஷத்தையுண்டவரைப்போல அதிவேதனைப்பட்டுச் சோர்ந்துவிழுந்து புலம்பிக்கதறிப் பெருமூச்செறிந்து, மறுபடியுமெழுந்து மனங்கொதித்துப்பரதாழ்வானைப் பார்த்துச்சொல்லுகிறார்.

கவி.

கானாளநிலமகளைக் கைவிட்டுப்போவானைக் காத்துப்பின்பு
போனானுமொருதம்பி போனவர்கள்வருமவதி போயிற்றென்னா
வானாதவுயிர்விடவென் றமைவானுமொருதம்பி யயலேநானா
தியானுமிவ்வரசாள்வெ னென்னேயிவ்வரசாட்சி யினிதேயம்மா.

இராகவபிரானெழுந்தருள வில்லையென்று கவலைகொண்ட என்னையனே! அடியேன் தேவரீர் விஷயத்தில் என்று அபசாரப்பட்டேன்? ஒருதம்பியானவர் திருவயோத்தியா புரியென்னும் பூமகளைக் கைவிட்டுக் காட்டையாளும்படியாகச் சென்ற தன் தமையனாருக்கு வேண்டிய கைங்கரியத்தைக் குறைவின்றிச் செய்யப்போனார். காட்டுக்குச் சென்ற தமையனானவர் இன்னநாளில் வருகிறேனென்று சொல்லிப்போன தவணை தப்பிப்போச்சென்று ஒரு தம்பியானவர் தம்முடைய உயிரைமாய்த்துக் கொள்ள யத்தினப்படுகிறார். இவற்றையெல்லாமெண்ணி நான்றுகொண்டு பிராணனை விடாமல்நான் சாதே அயோத்தியாபுரியை அரசாள விருக்கின்றேன்? ஆ! ஆ! என்னு

டைய யோக்கியதை நன்றாயிருக்கின்றது: இதென்ன ஆச்சரியம்? என்னைய னே! ஸ்ரீராகவரானவர் காட்டுக் கெழுந்தருளிய பின்பரதமகாராஜர் நகரத்து க்குள் பிரவேசித்து வாழ்ந்துகொண் டிருந்தாரென்று உலகத்தார் சொல் லவொட்டாமல் நீர் அயோத்திக்குப் புறம்பிலேயே யிருந்து இந்த அரியதவ த்தைச் செய்துகொண்டிருந்தீர். உமக்குப்பின் பிறந்தவனாய் இந்தச் சத்து ருக்கனென்கிற ஒரு அடியா னிருந்த போதிலும் இப்படிப்பட்ட சொல்லைச் சொல்லலாமோ? தேவரீர் தீயிற்குதித்துப் பிராணனை மாய்த்துக்கொண்ட பிறகு நான் உயிரோடிருந்தேனாகில் அதுவும், அக்கால் ஒருகுடையின்கீழ் இந்தப் பூமண்டலங்களை ஆளுவேனாகில் அதுவும், ஒன்றுக்கொன்று சமான மானதே யல்லாமல் வேறன்றே யென்றுசொன்னார்.

இப்படிச்சொல்லி முறையிட்ட ஸ்ரீசத்துருக்காழ்வானைப் பரதாழ்வா னானவர் நோக்கி, ஆதம்பீ! சத்துருக்னா! நம்முடைய பெருமானானவர் இது பரியந்தம் வாராமல் தாமசித்திருக்கிறார். இங்கேநாமும் அப்படியே சர்வசி த்தமா யிருக்கிறோம். நாமிறந்து விட்டால் இந்தப்பூமி அரசனில்லாமல் அலை ந்துபோமல்லவா? அதையந்தக் காருண்ணிய மூர்த்தியார் கேள்விப்பட்டு ஆரண்ணியத்திலேயே இருக்கமாட்டார். உடனே வந்து இவ்வரசாட்சியை ஏற்றுக்கொள்ளுவார். அவரிப்போதுசெய்கிற மாறுபாடு நிலைபெறாது. ஆகை யால், என்னப்பனே! சீக்கிரமாகச் சென்று அக்கினியை மூட்டக்கடவா யென்று ஆக்கியாபித்தார்.

பரதாழ்வான் அக்கினியிற்பிரவேசிப்பே னென்பதை யறிந்த கௌசல்யா தேவியாரங்குவந்து வருந்துதல்.

கவி.

அப்பொழுதினிவ்வுரைசென் றயோத்தியினினிசைத்தலுமே யரியையீன்ற
ஒப்பெழுதவொண்ணாத கற்புடையாள்வயிறுபுடைத் தலமந்தேங்கி
இப்பொழுதேயுலகிறக்கும் யாக்கையினைமுடித்தொழிந்தான் மகனேயென்னா
வெப்பெழுதிலனன்ன மெலிவுடையாள்கடிதோடி விலக்கவந்தாள்.

அப்போதிந்தச் செய்தியை அங்குள்ளவர்கள் அயோத்திமா நகரத்திற் சொன்னவுடனே ஸ்ரீபரந்தாமனைப்பெற்ற கற்பிற் சமானமில்லாத ஸ்ரீகௌச ல்யாதேவியார் வயிற்றில்மோதி அடித்துக்கொண்டு புத்திரப்பிரமை யடைந்த முது, ஐயோ! என்மகனே! நீ இறப்பாயேயானால் உடனேயிந்த அயோத்தியி லுள்ள ஜனங்கள்யாவரும் இறந்து போவதற்குச் சந்தேகமில்லையே: என்று துக்கமேஉருக்கொண்டு நடந்ததுபோலவிரைந்தோடி ஸ்ரீ பரதாழ்வானை விலக் கும்படிசென்றார். மற்ற மந்திரிமார்களும், சேனாநாயகர்களும், பிராமணர்க ளும், எல்லாஸ்திரீகளும், அந்நகரத்திலுள்ள யாவரும், கைகளைத் தங்கள்த லைமேல்வைத்து வாய்விட்டுக்கதறிக்கொண்டு சூழ்ந்துசென்றார்கள்.

அங்கே இந்திரன் முதலாகிய தேவர்களும் — அவர்களுடைய தேவிமார் களும் - முனிவர்களும்-ஸ்ரீபரதாழ்வானுடையஇருப்பைநோக்கிஸ்துதிசெய்ய,

விரைந்துசென்ற ஸ்ரீகௌசல்யாதேவியானவர் தம்முடைய கூந்தலானது அவிழ்ந்தலையவும் - தேகந்தடுமாறவும் - கண்கள் நீர் சொரியவும் திடுக்கிட்டு, உருத்திர பூமியில் சித்தப்படுத்தியிருக்கிற நெருப்பில் விழப்போகின்ற தமது திருக்குமாரரைப் போகக்கூடாதென்று தடுத்து நடுவிற்போய் நின்றார். அப்படிநின்ற திருத்தாயாருடைய சரண கமலங்களுக்கு ஸ்ரீ பரதாழ்வாருனவர் தண்டன் சமர்ப்பித்தனர். தண்டன்சமர்ப்பித்த குமாரனை ஸ்ரீகௌசல்யாதேவியானவர் வாரியெடுத்து, உறுதியாக வணைத்துப்பிடித்துக் கொண்டு சொல்லுகிறார். அப்பா பரதா ! சக்கரவர்த்தியார் நம்மைவிட்டுப் பிரிந்து மரணத்தை யடைந்ததும், ஜேஷ்டபுத்திரனாகிய ஸ்ரீராமன் நாம்படுகிற துன்பமொன்றையுங் கவனியாமல் காட்டுக்குச்சென்றதும், முன்னே நாம்செய்த தீவினைப்பயனுகும். பதினான்குவருஷம் கழிந்தபின் வருகிறேனென்று சொல்லிப்போய் அந்த ஸ்ரீராகவன் இன்னம் வராமலிருப்பதும், நாம்செய்த பாபகர்மபலந்தான். நீ அதை நினைத்துக்கொண்டு இப்படிச்செய்யத் தலைப்பட்டாய். நீ தீயிற்குதிக்க நினைப்பாயேயானால் இந்தக்கோசலதேச முழுமையுமுள்ள அரசர்களும், சதுரங்கசேனைகளும், அக்கினிப் பிரவேசஞ்செய்வார்கள். நானும் சுமித்திராதேவியும்,அந்தக்கைகேசியல்ல. நாங்களும்நெருப்பில் மூழ்குவோம். இவ்வளவிலே போகுமோ ? தருமதேவதையும் தீயிற்குதித்து மாய்ந்துவிடும். உலகங்களும் தங்கள் நிலைகுலைந்து போகும்.

ஓ என்னருங் குழந்தையே ! என் அப்பா ! ஸ்ரீபரதா ! மநுஸ்மிருதியிற் சொல்லப்பட்ட சத்கருமங்கள் யாவும் உன்னுடைய ஒழுக்கமேயென்று நாங்கள் நினைத்திருக்கிறோம். உன்னுடைய அருமையைச் சிறிது நீ அறிந்துகொள்ளவில்லை. உன்னுடைய பெருங்கீர்த்தியானது ஊழிகாலமழிந்துபோயினும் அழியுமோ ? அநேக ஸ்ரீராமர்களானபோதிலும் உன்னுடைய கருணையை யோசித்துப் பார்த்தால் உனக்குச் சமானமாவார்களோ ? இவ்வுலகஞ்செய்த புண்ணியமாகிய உன்னுடைய உயிர்போகுமேயானால் தேவர்களாயினும் இந்த மனுஷர்களாயினும் உயிரோடிருப்பார்களோ ? அந்த ஸ்ரீராமபத்திரன் இன்றைக்கு வராமற்போனல் நாளையாவது வருவான். உனக்குச் சொன்னசொல்லைத் தவறிப்போவானென்று நினைக்கவேண்டாம். நாளைக்கும் வராமல் தப்பிப்போவானேயானுல் நாமெல்லோரு மரணமடைவது திண்ணந்தான். தருமசொரூபி நீயேயல்லாமல் வேறில்லை யென்னும்படியா யிருக்கின்ற ஸ்ரீபரதா ! ஒப்பற்றபரதன் இறந்துபோனனென்று துக்கித்து நெடுநாள்வாழ விருக்கிற உயிர்கள்யாவும் இறக்கும்படிசெய்யப் போகிறாயோ ? அப்படிச் செய்யாதே: இறத்தலும் - சிலர் விட்டுப்பிரிதலும் – ஒன்றின்மேற் கொண்ட மோகத்தினாலே பிறத்தலும் - சேதனர்களுக்குக் கடமையென்றுணர்ந்து, இந்த லோகபந்தத்தினின்று நீங்குதல் - அல்லது யானெனதென்னும் இருவகைப்பற்றையும் துறத்தல் – இவைதான் ஒரு புருஷனுக்குத் திடமென்று சொல்லப்படுமென்று சொல்லினார்.

இந்தப்பிரகாரம் நீதிகளை யெடுத்துச்சொன்ன ஸ்ரீ கௌசல்யாதேவியைப் பார்த்து ஸ்ரீ பரதாழ்வானனவர் சொல்லுகிறார். அம்மா என் தெய்வமே! புத்திரனனவன் சொல்லைத் தடுத்துவிட்டானென்று என்மேலு நிஷ்டூரங்கொள்ளாதேயும். இயான் முன்னே செய்துகொண்ட சபதம் தவறுவேனேயானல், நம்முடைய சூரியவமிசத்தாருடைய நல்லொழுக்கத்துக்குக் குற்றநேரிடுமல்லவா? அப்படி நம்முடைய குலதர்மமானது அழியும்படியாக என்பிராணனை விரும்பி வாழமாட்டேன். முன்னேயான் செய்துகொண்ட சபதத்தையே செய்துமுடிப்பேன். தாம் சொன்னசொல் தப்பிப்போகாமல் யதார்த்தத்துக்குத் தம்முடைய உயிரைக்கொடுத்து ஸ்ரீ விஷ்ணுலோகத்தை யடைந்த சக்கரவர்த்தியாருக்கு நானும் புத்திரன்தானே; அப்படியிருக்க நான்சொன்னசொல்லைத் தவறிப்போகலாமோ? மூத்தோர் சொன்ன சொல்லின்படித் தாம்சங்கற்பித்துக்கொண்டது பிசகாமல் நடப்பது ஸ்ரீகாகுஸ்தராகிய ஸ்ரீராமபிரானுக்கு மாத்திரந்தான கடமை? மற்றப் புத்திரர்கள் அப்படிநடப்பது நீதியல்லவோ? ஸ்ரீ சக்கரவர்த்தியாருடைய ஜேஷ்டபாரியாகிய என்தாயே! தாயினுடைய சொல்லின்படி நடத்தலும், பிதாவினுடைய வாக்கின்படி நிறைவேற்றலும், தாய்மார் தம்பிமார்களிடத்து வைக்கவேண்டிய அன்பைப் பற்றில்லாமல் ஒழித்தலும், சர்வசுவாமியாகிய ஸ்ரீராமபிரானுக்கேகடமை. நானோ அப்படியொன்றும் செய்யவில்லை. நான் இன்னதுசெய்வேனென்று ஆதியிற் சொல்லிக்கொண்ட சொல்லை இந்தத்தீயில்வீழ்ந்து மாண்டு காட்டுவேனேயானல் ஒருகுற்றமும் இல்லாதவனவேன்.

பரதாழ்வான் கௌசல்யாதேவியின் கருத்திற்கிசையாது அக்கினியிற் பிரவேசிப்பதே கடமையென்று அக்கினியைப்பூசைசெய்யும்போது, வந்தார் வந்தார் ஸ்ரீராமனென்று சொல்லிக்கொண்டு ஆஞ்சநேயர் அங்கு வந்து பரதாழ்வானைத்தடுத்து கணையாழியைத்தந்து மகிழ்வித்தல்.

கவி.

என்றுதீயினை யெய்தியிரைத்தெழுந், தொன்றுபூச விடுமுலகோரொடு
நின்றுபூசனை செய்கின்றநேசற்குக், குன்றுபோனெடு மாருதிகூடினன்.

அய்யன்வந்தன னரியன்வந்தனன், மெய்யின்மெய்யனெ னின்னுயிர்வீடினல்
உய்யுமேயவ னென்றுரைத்துட்புகாக், கையினலெரி யைக்கரியாக்கினன்.

என்று சொல்லிவிட்டு மூட்டியிருக்கிற நெருப்புக்குச் சமீபத்தில்போய், அயோத்தியாபுரி ஜனங்களு மற்றவர்களும் கோவென்று முறையிட்டழுதுகொண்டு பின்தொடரத் தாமந்த அக்கினிக்கெதிரே நின்று, ஸ்ரீராமருடைய திருவடிகளைத் தியானித்துப் பூசைசெய்கிற ஸ்ரீ பரதாழ்வானுக் கெதிரே ஸ்ரீ அநுமானனவர் பிராமணப் பிரமசாரியைப் போலவந்து, நம்முடைய ஐயனனவர் இதோவந்தார். இயாவரும் பூசிக்கப்பட்ட ஸ்ரீராகவபிரானனவர் இதோவந்தார். உண்மைக்கும் உண்மையாய்நின்ற உம்முடைய உயிர்நீங்கினல் அந்த ஸ்ரீராமப்பிரபுவானவர் உயிரோடும் இருப்பாரோ? என்று ஓயாமற்

சொல்லிக்கொண்டு வந்து அந்தச் சனநெருக்கங்களுக்குள் பிரவேசித்து, எரிகின்ற நெருப்பைத் தமது கையினால் அவித்துக் கரியாக்கிவிட்டார். இவ்வாறு தீயைக் கரியாக்கிவிட்ட வாயுபுத்திரரானவர் ஸ்ரீ பரதாழ்வானுடைய சீர்பாதங்களை நமஸ்கரித்தெழுந்து வாயைக் கையாற்பொத்தி வளைந்து நின்று, ஸ்ரீ பரதமகாராஜரே ! நீர் அங்கீகரிக்கத்தக்கது ஒருசொல்லுண்டு அதைக் கேட்பீராக, முன்னாலே ஸ்ரீராமச்சந்திரரானவர் தாம் வருகிறதாகச் சொல்லிப்போனநாள் முடியவில்லை, இன்னம் நாற்பதுநாழிகை யிருக்கிறது, அப்படி யில்லாமற்போனால் உமக்கு முன்னேதானே நான் நெருப்பைமூட்டிப் பிராணனை மாய்த்துக் கொள்ளுகிறேன். இன்றிராத்திரியுங் கழிந்து நாளை உதயம்வரையில் அடியேன்சொல்லை நம்பியிரும். என்சொல் தவறிப்போகுமேயானால் நீரும் இந்தச்சனங்களும் பிராணனை மாய்த்துக் கொள்ளுங்கள். நம்முடைய நாயகருக்குப் பரத்துவாசமுனிவர் விருந்துசெய்யும்படி வேண்டிக்கொண்டு அவரையங்கே நிறுத்திவிட்டனர். அல்லாமற்போனால் உம்மிடத்தில் வராமற் காலாதீதமும் செய்வாரோ? இன்னமொன்று அடியேன் சொல்லக்கேளும். ஓ யாதொரு குற்றமுமில்லாத பரிசுத்த இருதயத்தையுடைய ஸ்ரீ பரதமகாராஜரே ! தேவதேவர்களுக்கு நாயகனாகிய ஸ்ரீராகவபிரானானவர் அதிகிருபையோடு கொடுத்த பெரியவடையாளம் ஒன்றுண்டு, அதை அடியேன் கொண்டுவந்தேன், நீர் அதைப்பாருமென்றுகூறி ஸ்ரீ சுவாமியினுடைய மோதிரத்தைக் காட்டினார்.

கவி.

காட்டியமோதிரங் கண்ணிற்காண்டலும்
ஊட்டியவல்விட முற்றுமூற்றுவார்க்
கூட்டியநன்மருந் தொத்ததாமரோ
ஈட்டியவுலகுக்கு மிளையவேந்தற்கும்.

ஆஞ்சனேயர்காட்டியமோதிரமானது ஸ்ரீபரதாழ்வானுக்கும், ஸ்ரீசத்துருக்காழ்வானுக்கும், திருவயோத்தியாபுரியிலுள்ளவர்களுக்கும், விஷத்தாற்பிராணன் போகின்ற ஒருவனுக்குப் பிரயோகித்த நல்லமருந்தைப் போலாயிற்று. முன்னாலே அழுதுகொண் டிருந்த வாய்களெல்லாம் சந்தோஷ ஆரவாரஞ்செய்தன. தாரைதாரையாய் நீர்பெருகிக்கொண் டிருந்த கண்களெல்லாம் அந்த நீரைச் சொரிந்தில. பூமியிலேவளைந்து மோதிக்கொண்டிருந்த தலைகளெல்லாம் ஸ்ரீ ஆஞ்சநேயருக்குக் கைகளைக்குவித்துத் தண்டன் சமர்ப்பித்துக்கொண்டு மேலே உயர்ந்தெழுந்தன. ஸ்ரீ பரதாழ்வானானவர் அந்தத் திருவிரலாழியை வாங்கித் தமது திருமுகத்தி லணைத்துக்கொண்டு, இந்த மோதிரத்தைக்கண்டு பூரிப்பதற்கு நம்முடைய பரதமகாராஜருடைய தேகம் போதுமானதோவென்று சொன்னவர்கள் நாணும்படி தேகமிகவும் பூரித்து, ஸ்ரீ பரதரானவர் தம்மை வணங்குகின்ற அஞ்சனாபுத்திரரை வணங்கிக் குதித்துக்குதித்துக் கூத்தாடினார்.

இராகவபிரானானவர் தம்மைப் பிரிந்துபோனதுமுதல் அவருடைய பிரிவின் துன்பத்தையேயல்லாமல் யாதொரு சந்தோஷத்தையும் அனுபவிக்காமையாலே வாயாலுந் தின்னாற் பறந்துபோகத்தக்க நிலையிலிருந்த ஸ்ரீ பரதாழ்வாருடைய திருமேனியானது, இவர் நம்முடைய பரதமகாராஜரல்லர் யாரோ அந்நியரென்னும்படி பூரிப்பினால் பருத்தது. அவருடைய இரண்டுதோள்களும் திக்குகளை யளாவும்படி வளர்ந்தன. இப்படிப் பூரித்துநின்ற பரதமகாராஜரானவர் ஸ்ரீராமபத்திரர் தம்மிடத்துவைத்துள்ளகருணையைக்குறித்துச் சற்றுநேரம் அழுவார். ஸ்ரீ காகுஸ்தரானவர் வருவாரென்கிற மகிழ்ச்சியால் சற்றுநேரம்சிரிப்பார். தமக்குச் சுவாமியினுடைய திருவிரலாழியைக் கொண்டுவந்து கொடுத்தலாகிய மகோபகாரஞ்செய்த ஸ்ரீ அநுமானுக்குச் சற்றுநேரம் தண்டன்சமர்ப்பிப்பார். களிப்பு அதிகரிப்பதனால் எழுந்து சற்றுநேரம் துள்ளுவார். ஸ்ரீ சானகிரமணரானவர் சொன்னசொல் தவறினாரென்று வியர்த்தமாய் அபசாரப்பட்டோமே யென்று சற்றுநேரம் பூமியில்விழுந்து புரண்டு அழுவார். ஆ! ஆ! ஸ்ரீராமசுவாமியினுடைய மோதிரம் நமக்குக்கிடைத்ததல்லவாவென்று பூரிப்பார். அவருடைய சொல்தவறாத நிலையைக்குறித்து அச்சப்பட்டு உடல்வெயர்ப்பார். அங்குள்ள கூட்டத்தாரோடு ஸ்ரீராமருடைய கலியாணகுணங்களைப் பாடிக் கைகளைக் கொட்டிக்கொண்டு சற்றுநேரம் ஆனந்தக்கூத் தாடுவார்.

பின்னும் அங்குள்ளவர்களைப் பார்த்து, ஓ பாவிகளே! உங்களுடைய பாவங்களெல்லாம் நசிக்கும்படி ஆநந்தத்தாண்டவம் செய்வீர்கள்: செய்வீர்கள்: இந்தப் பரத்துவாசருடைய ஆச்சிரமத்தண்டைதான் ஸ்ரீ ராமநாதர் எழுந்தருளியிருக்கிறார், அங்கே ஓடிச்சேவியுங்கள்: சேவியுங்கள்: ஸ்ரீராமபிரானுடைய மஹாகீர்த்தியைப் பாடுங்கள்: பாடுங்கள்: இப்படிப்பட்ட மகோபகாரஞ்செய்த ஸ்ரீராமநாதருடைய பாதாரவிந்தங்களைத் தலையில் சூடிக்கொள்ளுங்கள்: சூடிக்கொள்ளுங்கள்: என்பார். எம்பெருமானானவர் காட்டுக் கெழுந்தருளும்படி வஞ்சனைசெய்த மாயக்கைகேசியானவள் இனிப் பிராணனைமாய்த்துக்கொள் வாளல்லவாவென்று தமதுதோள்களைக் கொட்டுவார்: ஒருபாதத்தைப் பூமியிலூன்றி நின்று மற்றொருபாதத்தைத் தூக்கிக்கொண்டு, நீலமலை ஆடுவதுபோல மண்டலாகிருதியாக நடனஞ்செய்வார். சுவாமியினுடைய புகழைப்பாடுவார். தமக்கெதிரேயுள்ள பிராமணர்களை நோக்கி, நீங்கள் ஆசாரத்தில்வழுவாமல் நடக்கும்படியாக நல்லகால நேரிட்டதல்லவா வென்று அவர்களை நமஸ்கரிப்பார். அரசர்களைப் பார்த்து, நீங்க ளிராஜதர்மங்களிற் பிசகி ஒருவரோடொருவர் கலகப்பட்டு நாசமடையாமல் நீதியோ டிராச்சியபாலனஞ் செய்து ஒருவருக்கொருவர் அந்நியோந்நியமா யிருக்கும்படி நல்லகாலம் இப்போது சம்பவித்ததல்லவாவென்று அவர்களைத் தொழுவார். தாதியர்களைப்பார்த்து, கூனியென்னு மகாபாதகியானவள் நம்முடைய பெருமான்பக்கலில் அபசாரப்பட்டுநாமெல்லாம்வருந்தும்

படியாக இவ்வளவு தீமைகளைச் செய்ததுபோல நீங்கள் யாதொருதீமையும் செய்யாமல் உத்தமிகளா யிருக்கிறீர்களல்லவா வென்று அவர்களுக்குத் தண்டனிடுவார். இனி ஸ்ரீராகவபிரான் பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு சிங்காதனத்தின்மேல் எழுந்தருளியிருக்க, அவருக்குவேண்டிய குற்றேவல்களைச் செய்து யானுஜ்ஜீவிப்பதற் குபயோகமாயிருப்பது இந்தத் தேகமல்லவா வென்று தம்மைத்தாமே கும்பிடுவார். உன்மத்தராய்ச்சற்றுநேரம் உட்கார்ந்திருப்பார். திடுக்கிட்டு எழுந்திருந்து சற்றுநேர நிற்பார். ஸ்ரீ ராமபிரான் பக்கலிற்கொண்ட பிரீதியானது ஸ்ரீ பரதாழ்வானை இப்படியெல்லாம் செய்வதினால், அந்தப் பிரீதியென்பது மயக்கத்தைத் தருகின்ற மதுவிலே பிறந்ததுதானோ? மற்றெதுவோ அறியோம்.

இந்தவிதமாக ஆநந்த பரவசராய்நின்ற ஸ்ரீ பரதாழ்வானவர் ஸ்ரீ ஆஞ்சநேயரைப் பார்த்து, ஓ ஸ்ரீராமதூதனே! நீதிரிமூர்த்திகளில் ஒருவனாயிருக்கலாமென்று நினைக்கின்றேன். நீ பிர்மசாரி உருவங்கொண்டு வந்தது வாஸ்தவமன்று. உண்மையாக நீயாரோ அதை எங்களுக்குச் சொல்லவேண்டுமென்றுகேட்க ஆஞ்சநேயர் சொல்லுகிறார். ஸ்ரீ ராமச்சந்திரர் பக்கலில் அதிபக்திமானாயுள்ள ஸ்ரீபரதாழ்வானே! அஞ்சனாதேவியானவள் தான்செய்த அருந்தவத்தின் பலனாக வாயுபகவானுக்கு என்னைப்பெற்றாள். நானோ உம்முடைய தமையனாராகிய ஸ்ரீ ராகவபிரானுக்கு அடிமைத் தொழில்செய்கின்ற ஏவலாளன். எனக்கியற்கையான உருவம் ஒருகுரங்கினுடைய வடிவம். அவ்வுருவத்தை மாற்றிக்கொண்டு இங்கேவந்தேன். அடிமைத்தொழில்செய்கின்ற நாயினேனுடைய அற்ப உருவத்தை உம்முடைய தாமரைமலர்போன்ற கண்களாற்பார்த்தருளுமென்றுஅப்போதுகொண்டபிராமணஉருவத்தைநீக்கிவிட்டு தேவர்களுடைய கண்ணுக்கும்எட்டாத தூரத்தில் தமது முடியானது உயரும்படியாக வளர்ந்துநின்றார். இப்படிநின்ற திருவடிகளுடைய உருவத்தைக்கண்ட ஸ்ரீபரதசத்ருக்னர்களும், வசிஷ்டரிஷியும், இது ஆச்சரியப்படத்தக்க உருவமென்று நினைத்தார்கள். அங்குள்ள சேனாவீரர்களெல்லாம் அவருடைய திருமேனியைக்கண்டு பயத்தா லிறக்காமற்போயினும் பிராணபீதியடைந்தார்கள்.

அப்போது ஸ்ரீபரதாழ்வானவர்சிறியதிருவடிகளைப்பார்த்து, ஹே ஆஞ்சநேயா! இங்கேநின்று நாங்கள்சொல்லுகிற சொற்கள் உன்னுடைய குண்டலங்களணிந்த காதுகளில் நுழையமாட்டா. ஆதலாலிந்த அழிவில்லாத உருவத்தைச் சீக்கிரமாகக் குறுகச்செய்வா யென்று வேண்டிக்கொண்டார். உடனே திருவடிகளானவர் தம்முடைய திருவுருவத்தைப் பழையபடி சுருக்கி வணங்கிக்கொண்டு எதிரே நின்றார். அவருக்கு ஸ்ரீபரதாழ்வானவர் அளவற்ற திரவியாபரணங்கள் முதலியவற்றைப் பிரீதியினாற்கொடுத்து, சன்மானித்தார்.

ஸ்ரீராமசுவாமியை எதிர்கொண்டு போதற்குச் சேனைகளையும் பட்டினத்து ஜனங்களையும் பிரயாணப்படுத்துவாயென பரதாழ்வார் சத்துருக்னருக்கு ஆஞ்ஞாபித்தல்.

கவி.

இளவலையண்ணலுக் கெதிர்கோளென்றுநம்
வளைமதிலயோத்தியில் வாழுமாக்களைக்
கிளையொடுமேகெனக் கிளத்தியெங்கணும்
அளையொலிமுரசின மறைவிப்பாயென்றான்.

ஸ்ரீசத்துருக்காழ்வானை நோக்கி, தம்பீ சத்துருக்னா! ஸ்ரீராகவபிரான் பரத்துவாசருடைய ஆச்சிரமத்தில் எழுந்தருளி யிருக்கின்றார். அவரை எதிர்கொண்டு போகும்படி அயோத்தியா நகரத்துள்ள ஜனங்களைப் பிரயாணஞ் செய்யும்படிக்கும், தோரணங்கள் நாட்டி மேலேகொடிச்சீலைகள் சுற்றிப் பூரணகலசங்களை வேதிகைகளின் மேல்வைத்து இப்படிப்பட்ட சர்வாலங்காரங்களையுஞ் செய்யும்படிக்கும், இரதகஜதுரகங்களுக்கு அலங்காரம் பண்ணும்படிக்கும், அயோத்தியா நகரத்தின் மதின்முதற்கொண்டு பரத்துவாசர் வசிக்கும் வனம்வரைக்கு முத்துப்பந்தர் போடும்படிக்கும் பறையறைவித்துத் தெரிவிப்பாயென்று உத்திரவுசெய்தார்.

ஸ்ரீ பரதாழ்வானனவர் இந்தவண்ணம் உத்திரவு செய்தமாத்திரத்தில் ஸ்ரீ சத்துருக்கனாழ்வானனவர் அவருடைய திருவடிகளைவணங்கி, குற்றமில்லாத நூற்கேள்விகளையும் அவற்றிற்குத்தக்க ஒழுக்கத்தையுமுடைய சுமந்திரனுக்கு இப்படி நகராலங்காரஞ் செய்விக்கும்படி தெரிவித்தார். அந்தக் கட்டளையைப் பெற்றுக்கொண்டு குதுகலமான சித்தமுடையவராகிய சுமந்திரரென்னு முதன்மந்திரி யானவர் வள்ளுவர்களை அழைப்பித்து, ஸ்ரீராமச்சந்திரர் பரத்துவாசமுனிவராசிரமத்தில் எழுந்தருளி யிருக்கிறார். அவரை எதிர்கொண்டுபோம்படி புரவாசிகளும் சேனைகளும் பிரயாணப்படவும், நகரமுழுமையும் அலங்காரஞ் செய்யவும், அயோத்திமாநகர முதற்கொண்டு பரத்துவாசருடைய ஆச்சிரமம் வரையில் முத்துப்பந்தர் போடவும், முரசங்கொட்டித் தெரிவிக்கக் கடவீர்களென்று ஆக்கியாபித்தார். அவருடைய ஆக்கினையின்படிவள்ளுவர்கள் யானைகளின்மேலேறிச்சென்று, சுவர்க்கத்தையும் திக்குகளையுங் கடந்துசென்ற மகாகீர்த்தியையுடைய ஸ்ரீராகவபிரானுக் கெதிர்கொண்டு போகும்படி நகரஜனங்களும் - அரசர்களும் - சதுரங்கசேனைகளும் - எழக்கடவீர்கள். நகரத்தை அலங்காரம் செய்யக்கடவீர்கள். அயோத்தியாநகர் மதில்முதல் பாரத்துவாசராசிரமம் வரையில்முத்துப்பந்தல் போடக்கடவீர்களென்று பறைசாற்றினார்கள்.

இப்படி வள்ளுவர்கள் கொட்டிய முரசொலியைக் கேட்டமாத்திரத்தில் திருவயோத்தியாபுரியிலுள்ள பிர்ம க்ஷத்திரிய வைசிய சூத்திர சாதுர் வருணத்தார்களும் ஆச்சரியகரமா யிரைந்துகொண்டு, அளவிடக்கூடாத களிப்

யுடையவர்களாய் விரைவாக அலங்காரஞ்செய்துகொண்டு பிரயாணத்துக்குச் சித்தமானார்கள். தோஷரகிதராகிய ஸ்ரீராமநாதரை எதிர்கொள்ளவேண்டுமெனக் கொட்டிய பேரிகையின் ஓசையானது அந்நகரவாசிளுக்கு எப்படியிருந்ததென்றால்? நெடுநாள் தரித்திரத்தால் வருத்தப்பட்டுக்கொண்டிருந்த ஏழைகளுக்குத் திரவியக்குவியல் யாதொருமுயற்சியு மில்லாமல் எதிர்ப்பட்டாற்போலவும், முன்னே திருக்கலியாணத்தினிமித்தம் ஸ்ரீ மிதிலாபுரிக்குப் பிரயாணப்படும்படி கொட்டிய முரசொலியைப்போலவும் இருந்தது. முரசொலியைக்கேட்டு அலங்கரித்துக்கொண்டு ஆயத்தமான அறுபதினாயிரம் அக்குரோணி சேனைகளும், இராஜநாயகர்களும், மற்றவர்களும், அவரவர்களுடைய சுபத்தினிமார்களும், தாங்கள் வெகுதினமாக அடையவேண்டுமென்று கோரியிருந்தபொருள் தானேவந்து கிடைத்தாற்போலச் சந்தோஷங்கொண்டாடிக்கொண்டு சென்றார்கள். அப்போது தேவர்களெல்லாம் எங்களுடைய துக்க நிவாரணார்த்தத்துக்குக் காரணபூதர்கள் இவர்களல்லவா வென்று நெருங்கித் தோத்திரஞ்செய்து கும்பிடும்படியாகத் தாய்மார்கள் மூவரும் பொன்னாற்செய்யப்பட்டமணிகளிழைத்த தண்டிகைகளிற்சென்றார்கள்:

பரதாழ்வார் ஸ்ரீராமபிரானைக்காணும்படி யாவரோடு மெதிர்கொண்டு போதல்.

கவி.

திருவடியிரண்டுமே செம்பொன்மௌலியா, இருபுறஞ்சாமரை யிரட்டவேழ்கடல்
வெருவருமுழக்கென வேழமார்த்தெழப், பொருவருவெண்குடை நிழற்றப்போயினன்.

தமக்குத் தாமே சமானமானவர்களாகிய, முனிசிரேஷ்டர்களும் பந்துஜனங்களும் சூழ்ந்துவரச் சத்துருக்னரோடு ஸ்ரீ பரதாழ்வானனவர் சிறியதிருவடிகளுடைய கையைப்பற்றிக்கொண்டு, ஸ்ரீ ராகவபிரானுடைய திருப்பாதுகைகளைத் தமது சடைமுடியின்மேல் எழுந்தருளச்செய்து, இருபுறத்திலும் சாமரைவீசவும் —வெண்பட்டுக்குடைபிடிக்கவும் - எழுகடலினோசையைப்போல இரதகஜதுரகங்களினோசை கோஷிக்கவும் சென்றனர். பீதாம்பரதாரியாயும், மணிமகர குண்டலங்களைத் தரித்தவராயும், செந்தாமரை மலர்போன்ற நேத்திரங்களை யுடையவராயும், சங்குசக்கரமுதலிய பஞ்சாயுதபாணியாயும், எனக்குள் எழுந்தருளியிராநின்ற ஸ்ரீகோதண்டதீக்ஷா குருவை எதிர்கொள்ளும்படியாய் ஸ்ரீபரதாழ்வான் செல்லுகின்றார். என்னுடைய கிரணவெப்பத்தால் கற்கள்நிறைந்தவழி தாமரசமலர்போன்ற அவருடைய பாதங்களைச்சுடு மாதலால் நான் மறைந்துவிடுகிறேனென்று போகின்றவரைப்போல சூரியபகவானனவர் அஸ்தமனமானார்.

ஸ்ரீ ஆஞ்சநேயருடைய கையைப்பற்றிச் சென்ற ஸ்ரீபரதாழ்வானனவர் பொழுதுபோனவுடனே ஸ்ரீ அநுமானைப்பார்த்து, ஐயா அஞ்சனைசிங்கமே! ஸ்ரீலட்சுமிபதியாகிய ஸ்ரீராமச்சந்திரரானவர் எந்தவிடத்திலிப்போது வசித்துக்கொண்டிருக்கின்றார்? அங்கே தங்கியிருப்பதற்குக் காரணமியாது? அவற்றையெல்லாம் சாங்கோபாங்கமாகச் சொல்லக்கடவாயென்று கேட்டார். அம்மாத்திரத்தில் ஆஞ்சநேயரானவர் ஸ்ரீபரதாழ்வானுக்குத் தண்டன்சமர்ப்பித்து, சுவாமி! எம்பெருமானனவர் திருவயோத்தியாபுரியில் இருந்ததும், ஒருகால் விசுவாமித்திரரது வேள்விகாரணமாக வெளிப்பட்டு மிதி

லாநகரத்துக்குச் சென்று திருக்கலியாண மகோச்சவத்தை நிறைவேற்றிக் கொண்டு திருவயோத்தியாபுரிக்குத் திரும்பி எழுந்தருளியதும், அப்பால் மாதர்பிதுர் வாக்கிய பரிபாலனார்த்தமாக வனவாசஞ்செய்ய வெளிப்பட்டுச் சென்று சித்திரகூடபருவதத்தை யடைந்ததும், தேவரீர் அறிந்திருக்கின்றனவே யல்லாமல் அடியேன் சொல்லவேண்டியதில்லை யன்றோ? பிறகுநடந்த சவிஸ்தாரங்களைச் சொல்லுகின்றேன்.

அநுமார் பரதாழ்வாருக்கு ஸ்ரீராமபிரான் சித்திரகூடபர்வதத்தை நீங்கினபிறகு இதுவரைக்கும்நடந்த வரலாறுகளை முறையேகூறல்.

கவி.

சித்திரகூடத்தைத் தீர்ந்தபின்சிரம், பத்துடையவனுடன் விளைந்தபண்புந்தான்
இத்தலையடைந்தது மிறுதியாமென, வித்தகத்தூதனும் விரிக்குஞ்சிந்தையான்.

அந்தச் சித்திரகூடத்தை நீங்கிச்சென்றபின் பத்துத்தலைகளையுடைய இராவணனோடு நடந்த யுத்தமும் இந்தப் பாரத்துவாசருடைய ஆச்சிரமத்தை அடைந்ததுமே முடிவாகும். என்று ஸ்ரீராமபிரானுடைய திவ்வியசரித்திரங்களைவிரித்துச் சொல்லத்தொடங்கினார்.

ஸ்ரீ பரதமகாராஜரே! ஸ்ரீ கோதண்டத்தைக் கையிற்றாங்கிய எம்பெருமானானவர் சித்திரகூடபர்வதத்தை நீங்கிச் சென்றபின்பு விராதனென்னும் ஒருராக்ஷசனைக் கொலைசெய்து, தபோநிதிகள் வாசஞ்செய்கின்ற தண்டகாரணியத்தைச்சேர்ந்தார். அங்கேயிருந்தஅருந்தவமுனிவர்யாவரும்ஸ்ரீசர்வேஸ்வரமூர்த்தியின் பக்கலில்வந்து, ஸ்ரீராமப்பிரபுவே! நாங்களிராவணகும்பகருணாதி ராக்ஷசர்களால் எங்கள் தபோபலம் அழிந்துபோனோம். அவர்கள் செய்கிற உபத்திரவத்தால் யாகாதி சத்கருமங்களையும் செய்வதில்லை. என்று முறையிட்டுக்கொள்ளவே ஸ்ரீராமநாதரானவர் கருணைசுரந்து, ஓ தண்டகாரணிய வாசிகளே! ஸ்ரீபகவத்பக்த சீலர்களாகிய உங்கள்பக்கலில் அபசாரப்பட்ட அந்த ராக்ஷசர்களையெல்லாம் என்கையிலுள்ள கோதண்டத்தை வளைத்துக் கூர்மையுள்ள அம்புக்கு இரையாக்கி நாசப்படுத்துகிறேன். இது சத்தியமாகும். நீங்களுங்கள் மனத்திலுள்ள கிலேசங்களை ஒழிக்கக் கடவீர்களென்று அவர்களுக்கு அபயப்பிரதானங்கொடுத்து அங்கே பத்துவருஷம் வசித்திருந்தனர்.

அப்போது தண்டகாரண்ணிய முனிவர்கள் யாவரும் நித்தநித்தமும் ஸ்ரீராமபிரானுடைய ஜகன்மோஹனாகார திவ்வியமங்கள விக்கிரக சௌந்தரியத்தைத் தங்கள்கண்களாரச் சேவித்து விட்டுப்பிரிய மனமில்லாதவர்களாய் மேலே நடக்கவேண்டியதாகிய இராவணாதிகளுடைய வதத்தை யோசித்து, ஸ்ரீராகவபிரானே! நீர் இந்தவனத்துக்குச் சமீபத்திலுள்ள அகஸ்தியருடைய ஆச்சிரமத்துக்குப் போகக் கடவீரென்று ஆக்கியாபிக்க, உடனே அங்கிருந்து புறப்பட்டுச்சென்றார். அகஸ்தியமுனிவரானவர் ஸ்ரீகாகுஸ்தர் எழுந்தரு

ளுவதை முன்னதாகவறிந்து எதிர்கொண்டுவந்து அழைத்துச்சென்று, திவ்வியமாகிய ஒருவில்லையும் – அம்பறுத்தூணியையும் - கவசத்தையும் - வாளாயுதத்தையும் கொடுத்தனர். அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சடாயுவென்னும் கழுகின்குலராஜனைக் கண்டு சானகிபிராட்டியாரோடும் இளையபெருமாளோடும்கூட சோலைகளடர்ந்த பஞ்சவடியில் வாசஞ்செய்தார்.

அங்கே நம்முடைய ஆண்டவனானவர் சுகமாக எழுந்தருளியிருக்கும்போது இராக்ஷசகுலத்தார் நெடுநாளாகச்செய்துவந்த பாபங்களெல்லாம் ஒன்றாய்த்திரண்டு ஒருருவமாய்நின்ற சூர்ப்பநகையென்பவள்வந்து; ஸ்ரீசானகிபிராட்டியாரைச்சீறிச்சென்றாள். அதுகண்ட இளையபெருமாளானவர்பிராட்டியாருக்குப் பயநிவர்த்திசெய்து, அந்த ராக்ஷசியினுடைய காதுகளையும் - மூக்கையும் - ஸ்தனங்களையும்கொய்து துரத்திவிட்டார், உடனே அவள் ஓடி கரனிடத்திலேசென்று முறையிட்டாள். அது செய்திகேட்ட கரனும் - திரிசிரனும் – தூஷணனும் – மூன்று வடவாக்கினிமூளத்தெழுந்தாற்போல உடன்சேர்ந்து, சேனைகளோடுஅதிவிரைவாகவந்து எதிர்த்தார்கள். நம்மையனுனவர் தமதுதிருக்கரத்திலேபிடித்திருந்தஸ்ரீகோதண்டத்தைக்கண்ணுற்பார்த்தமாத்திரத்தில், அவர்கள்யாவரும் தீப்பொறிபட்ட பஞ்சுக்குவியலையொத்து நாசமாயினார்கள். அம்மூவரும் ஸ்ரீராமபாணத்தால்நாசமானதைக்கண்ட சூர்ப்பநகையானவள் இலங்காநகரத்துக்குப்போய் இராவணனிடத்திற்சொல்லி முறையிட்டுக்கொண்டாள்.

அந்தப் பாபிஷ்டன்வஞ்சகமாகிய மானையொன்றேவி, ஸ்ரீராமலட்சுமணர்கள் பிராட்டியாரைவிட்டுப்பிரியச்செய்து; தான் திரிதண்டத்தைக் கையிற்பிடித்து வைதிகமார்க்கச்சந்நியாசிவேடங்கொண்டுவந்து, நம்முடைய தாயை நிலத்தோடுபேர்த்தெடுத்துக் கொண்டுபோனான். அப்படிபோகும்போது வந்தெதிர்த்த சடாயுவைப் பூமியில்விழும்படி தனக்குச் சிவமூர்த்திகொடுத்த வாளாயுதத்தால் அவருடையசிறகைவெட்டித் தள்ளிவிட்டு, அதிதுக்கத்தோடுவருத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றபிராட்டியாரைக்கொண்டுபோய் அசோகவனத்திற் சிறைவைத்துவிட்டான். மாரீசனென்னு மானைத் துரத்திச்சென்று அம்மானைக்கொலைசெய்து திரும்பிவருகின்ற ஸ்ரீராகவபிரான் வழியிலே இராமாநுஜனைக்கண்டுமனக்கிலேசங்கொண்டு அவருடன்அதிகவிரைவாய்வந்து, பஞ்சவடியிதீரத்திற்சீதையைக்காணாது தென்றிசைநோக்கிச் சிலகுறியாற் சென்று குற்றுயிராய்க்கிடக்கின்ற தமது தந்தையாகிய சடாயுராஜனைக் கண்டு சீதையின் வர்த்தமானங்களைக் கேட்டு மிகுதியும் துன்பப்பட்டுஅவருக்குச் செய்யவேண்டிய கடன்களைச் செய்துவிட்டு, தேவியாரைத் தேடிக்கொண்டு தெற்குத்திசையை நோக்கிச்செல்லுகையில் கவந்தனைச்சம்ஹரித்து அவனுக்குச் சாபவிமோசனஞ்செய்து,தம்முடையவரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்த சபரியானவள் செய்தபூசனையைஏற்றுக்கொண்டுஅவள்சொன்ன அடையாளப்படி கிட்கிந்தைக்கு வந்துசேர்ந்தார்.

இளையபெருமாளோடுவந்த ஸ்ரீராமநாதர் ஸ்ரீசுக்ரீவமகாராஜனைச்சிநேகித்து,வாலியினாலுண்டாகியதுன்பத்தைநீக்கிஉனக்குமுடிசூட்டுகிறேனென்று

அபயங்கொடுத்து, பின்புமராமரமேழையும் மகாபராக்கிரமசாலியாகிய வாலியினது மார்பையும்ஊடுருவிச்செல்லும்படி பாணப்பிரயோகஞ்செய்து ஸ்ரீசுக்கிரீவமகாராஜருக்குப் பட்டாபிஷேகஞ் செய்தனர். அடுத்துவந்த மாரிக்காலம்ஒழிந்தபிறகு கவயன் — இடபன் — நீலன் - மயிந்தன் - சாம்பன் — சதவலி — பநசன் — அங்கதன் — முதலியவானரசிரேஷ்டர்களும், எழுபதுவெள்ளம்வானரர்களுஞ்சூழும்படி; சுக்கிரீவமகாராஜாவானவர் ஸ்ரீராமசுவாமிபக்கலில்வந்து சேர்ந்தார். ஸ்ரீராமபத்திரருடையஅநுமதிபெற்றுத் தேவியாரைத்தேடும்படி ஒவ்வொருதிக்குக்கும் இரண்டுவெள்ளஞ்சேனைகளை அனுப்பித் தேடும்படி மகாராஜா அனுப்பினார்; தென்றிசையில்இரண்டுவெள்ளஞ் சேனையோடு சென்ற அங்கதப்பெருமானும், சாம்பவரும், என்னை இலங்கைக்குள் பிரவேசிக்கும்படி ஏவினார்கள். நானு மகேந்திரமலையிலிருந்து பாய்ந்து இலங்காநகரத்தைச்சேர்ந்துஸ்ரீசகன்மாதாவைக்கண்டு சேவித்து நான் திரும்பிவந்து ஸ்ரீசர்வசுவாமிக்குச்செய்தி சொன்னமாத்திரத்தில், வானரவெள்ளங்களாகிய யாவர்களோடும் புறப்பட்டு தென்சமுத்திரக்கரையைச் சார்ந்தார்.

அதுசமயத்தில்மெய்ஞ்ஞானத்துக்குமெய்ஞ்ஞானம்போன்றஒழுக்கமுடைய ஸ்ரீவிபீஷணாழ்வானானவர் தனதண்ணனாகிய இராவணனைப்பார்த்து; நீஸ்ரீசீதாபிராட்டியாரை விட்டுஸ்ரீராமபிரானைச்சரணாகதி யடைஇல்லாவிட்டால் உன்னுடையசம்பத்தும் ஆயுசுமுடிந்து நாசமடைவாயென்று சொன்னார். அந்தநீதிமொழிகளைக் கேட்டுத் துராத்துமாவாகிய தசக்கிரீவனானவன்மிகுந்தகோபிஷ்டனாய் அவரைச்சீறினான். உடனே சுகுணசீலராகிய விபீஷணாழ்வானானவர் காருண்ணிய மூர்த்தியாகியதாசரதியைச்சரணம்புகுந்தார். சரணமடைந்த அவருக்கு ஸ்ரீகாகுஸ்தரானவர்அபயப்பிரதானந்தந்து, இலங்காநகரத்துக்கு அரசன்இனி நீதானென்றுவாக்களித்துப் பிற்பாடுவருணனைக்குறித்து உபாசித்தார். வருணபகவானோ சற்றுத்தாமசஞ் செய்தான். அதுகண்டு ஸ்ரீராமபிரானுக்கு இரண்டுநேத்திரங்களும் சிவந்தன. உடனே ஏழுசமுத்திரமும் வருணபகவானுடையவுடலும்வெந்துபோயின. அம்மாத்திரத்தில்சமுத்திரராஜன் அபயமென்றுசொல்ல அவனுக்கு அபயங்கொடுத்தார். உடனே வானரவீரர்கள் மலைகளைக்கொண்டுவந்துசமுத்திரத்தை அணைகட்ட, அதன்வழியாக யாவருஞ்சென்று இலங்கையை முற்றுகைபோட்டுக்கொண்டு ஆரவாரித்தார்கள். அவ்வோசையைக்கேட்டுத்தேவர்களெல்லாம் இராக்ஷச பயந்தீர்ந்தார்கள்.

அப்போது சுவாமியானவர் இலங்காதிபதியின் தம்பியாகியகும்பகருணனுடைய தோள்களையுங்கால்களையுங் கண்டித்து, மற்றராக்ஷசர்களையு நாசப்படுத்தி, வெள்ளிமலையைப் பேர்த்தெடுத்த இராவணனுடைய இருபதுதோள்களையும் - அஷ்டதிக்கஜங்களின் தந்தங்களைமுறித்த மார்பையும் - பத்துத்தலைகளையும் - அம்புகளால் அறுத்துத்தள்ளித் தேவர்களுடைய துன்பத்தை நீக்

கினர். இராமாநுஜரானவர் இந்திரஜித்துவையும்—அவன் தம்பிமார்களையும் - மற்றவர்களையும் — தம்முடைய அம்பினால்துண்டித்து வீழ்த்தினர். தேவர்கள் யாவரும் புஷ்பமாரியைத்தூவி இறந்தராக்ஷசக்கூட்டங்களிற் கவந்தங்கள் கூத்தாடுவதைக் கண்டு சந்தோஷித்தார்கள். தேவர்களும் - முனிவர்களும் - சித்தர்களும் - அவரவர்களுடைய பத்தினிமார்களும் — மற்றதிரிலோகவாசிகளும்—தனித்தனியாக ஸ்ரீராகவபிரானைப் புகழ்ந்து மொய்த்துக்கொள்ள, அப்போது காயாம்பூவையொத்ததிருமேனியையுடைய ஸ்ரீஜானகிரமணரானவர் விபீஷணருக்கு நீதிகளைச்சொல்லி இறந்தவர்களுக்குஉத்தரகிரியைகளைச் செய்வித்துஇலட்சுமணனைக்கொண்டு அவருக்குப்பட்டங்கட்டுவித்தார்:

இவையெல்லா நடந்தபின் தம்மிடத்திலெழுந்தருளிய பிராட்டியாரைச் சுவாமியானவர் சீறியருளினர். அதுகண்டஜானகியார் அக்கினியிற்பாய அக்கினிதேவனவளையேந்திவந்து ஸ்ரீதாசரதியைத்தோத்திரஞ்செய்துநிற்க, உடனேபிரமதேவனும்-உருத்திரமூர்த்தியும்—அவருக்குச்சொன்னசொல்லாற்கோபந்தீர்ந்தார். அப்பால்உருத்திரமூர்த்தியின்கட்டளையால், சத்தியத்துக்குப் பிராணனைக்கொடுத்த தசரதச்சக்கரவர்த்தியானவர் விமானத்தின்மேல் அங்கெழுந்தருளினர். ஸ்ரீராகவப்பிரானும், பிராட்டியாரும், இலட்சுமணரும், ஸ்ரீ தசரதச்சக்கரவர்த்தியாருடைய பாதத்தில் வீழ்ந்துசேவித்தார்கள் அப்படிச் சேவித்தவர்களைத் தசரதச்சக்கரவர்த்தியானவர் தனித்தனி ஆலிங்கனஞ் செய்து இரகுபதியைநோக்கி, என்னால் உனக்குவேண்டியவரம் பெற்றுக்கொள்ளுகவென்றார். அதற்கு இராமபிரானானவர் - என்னையனே! தம்முடைய கருணையால் என்னையெடுத்துவளர்த்ததாயும், அவருடையபுத்திரனும், முன்போலவே எனக்குத்தாயுந் தம்பியுமாகும்படியானவரம் தயைசெய்யவேண்டு மென்று கேட்டுக்கொண்டனர். சக்கரவர்த்தியாரும் அப்படியே ஆகுகவென்றுவரந்தந்துபோனர். தேவர்கள் உமக்குவேண்டியவரத்தைக் கேளுமென்று கேட்டுக்கொள்ள, அதற்குச்சுவாமி இறந்தவானரர்கள் உயிர்த்தெழுந்திருக்கவும் - எல்லாவானரர்களும் சென்றவிடங்களி லெல்லாம் உணவுகள் குறைவின்றிக்கிடைத்து சுகசீவிகளாயிருக்கவும் — வரந்தர வேண்டுமென்று கேட்டார். அத்தேவர்களும் உம்முடைய கருணையால் அப்படியே ஆகுகவென்று சொல்லிப் போயினர்கள்.

அப்பால் நமதையனானவர் அதிகவிரைவாய் அயோத்திக்குப் போகவேண்டுமென்கிற குறிப்பைத் தென்னிலங்கை வேந்தராகியஸ்ரீவிபீஷணாழ்வானானவர் அறிந்துகொண்டு புட்பகவிமானத்தைக்கொடுத்தார். அதன்மேல் ஸ்ரீராகவபிரானும், ஸ்ரீசீதாபிராட்டியாரும், ஸ்ரீ இலட்சுமணரும், சுக்ரீவமகாராஜாவும், விபீஷணாழ்வானும், சாம்பவர்முதலிய படைவீரர்களும், இருவகைச் சேனைகளும், ஆரோகணித்துக்கொண்டு பரத்துவாசருடைய ஆச்சிரமத்துக்குவந்து சேர்ந்தார்கள். இப்படிச்சேர்ந்தபின்பு ஸ்ரீ ரகுபதியானவர் உம்மிடத்துள்ள பிரமையாலே என்னை அழைத்து விரலாழியைக்கொடுத்து,

விரைவாகச்சென்று இதைக்காட்டி என் தம்பியாகிய ஸ்ரீ பரதாழ்வானுடைய துன்பத்தை முழுமையுநீக்கி வரக்கடவாயென என்னையனுப்பினாரென்று சாங்கோபாங்கமாகச் சொல்லினர். இவ்வாறு சமுத்திரத்தைத் தாண்டி இராக்ஷசர்களுடைய நகரத்தை எரியூட்டிய வாயுபுத்திரரானவர் சொல்லிக்கொண்டுவரக் கேட்டருளிய பரதாழ்வானானவர் கண்ணீர் பெருகிக்கொண்டு, ஓ அனுமானே! இலங்காநகரத்தில் இராக்ஷசவேட்டை யாடிய நீலமேகம் போன்ற திருமேனியையுடைய ஸ்ரீராமபத்திரர்க்குப் பின்தொடர்ந்து சென்றான் ஒருதம்பி. அவருடைய சரித்திரங்களைக் கேட்டுக்கொண் டிருப்பேனாகிய நானும் ஒருதம்பியாயிருக்கின்றேன். என்னுடைய அடிமைத்தொழிலு மகாகீர்த்தியை யுடையதன்றோ? என்றுசொல்லிக் கண்ணீரொழுக அழுது கொண்டு ஆஞ்சநேயருடைய கரத்தை வலக்கரத்தாற்பற்றி, அந்தஇருளிலே கால்நடையாகச் சென்று சூரியோதயத்துக்கு முன்னே கங்கைக்கரையைச் சேர்ந்தார்.

அப்போது கிழ்த்திசைக் காவலாளியாகிய இந்திரனானவன் எம்பெருமான் இராவணவேட்டையாடித் திரும்பி அயோத்தியா நகரத்துக்கு எழுந்தருளிப் பூதேவியும் சீதேவியும் உள்ளங் குதூகலிக்கும்படி தரித்துக்கொள்ளும் பொன்னாற்செய்த கிரீடத்துக்குத் தகுந்த சிகாமணியை எடுத்தாற்போலச் சூரியனுதயஞ்செய்தான். இப்படி சூரியோதயமானவுடன் பரதாழ்வானானவர் காலைக்கடன்களைச் செய்து, ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரருடைய திருப்பாதுகைகளை அர்ச்சித்து ஆஞ்சநேயரைநோக்கி, ஓபிலவங்கசிரேஷ்டனே! நீசொல்லியசொல் தவறிப்போம்போ லிருக்கிறது. நீநவவியாகரண பண்டிதனானையால் உன்னுடைய வார்த்தைக்கு மறுவார்த்தை சொல்லுவாருமுண்டோ? இராமநாதரோடுகூட எழுபதுவெள்ளம் வானரசேனைகளும், இராக்ஷசகுல ராஜனுடைய அளவில்லாத ராக்ஷசசேனைகளும், இதோதோன்றுகிற பரத்துவாசருடைய ஆச்சிரமத்தில் வந்திருக்குமேயானால்; அங்கே சமுத்திர கோஷம்போல ஆரவாரமில்லாமலிருக்கவுங் கூடுமோ? ஓமஹா வீரசிகாமணியே! எம்பெருமான் எழுந்தருளினாரென்று சொன்னது சத்தியந்தானோ? நீ சொன்ன பரத்துவாசருடைய சோலை நமக்கு இரண்டுயோசனை தூரத்திலிருக்கிறது. சமுத்திரம்பெருகிப் பொங்கியதையொத் திருக்கத்தக்க எழுபது வெள்ள வானரசேனைகளும், மற்ற ராக்ஷசவீர சேனைகளும், இந்தச்சோலையில் தங்கியிருப்பது யதார்த்தமேயானால், சிறிதும் அரவமில்லாம லிருப்பதுமுண்டோ? ஆ! இதென்ன ஆச்சரியம்? நீ எனக்கு ஆசைகாட்டி அழைத்துவந்தது போதும்: போதும்: எஃதெப்படி யிருந்தபோதிலும் இருக்கட்டும். ஐயா மகாநுபாவா! நீசொன்ன எங்கள் சூரியகுல திலகனாகவும் என்பிராணபதமாகவு மிருக்கிற ஸ்ரீ சக்கரவர்த்தித் திருக்குமாரர் எங்கேயிருக்கிறாரென்று அதிகதுக்கமும் கோபமுந்தோன்றக் கேட்டருளினார்.

இப்படி பரதாழ்வானானவர் உறுத்திக் கேட்டருளும்போது அநுமானானவர் அவர்க்குத்தண்டன் சமர்ப்பித்துச் சொல்லுகிறார். ஸ்ரீ தாரகமந்திர

வாச்சிய திவ்வியசரித்திரகுணாநுபவ புருஷோத்தமருடையசோதரரே! இயான் சொன்னது பொய்யன்று. இந்தப் பரத்துவாச முனிவரும்-மற்றமுனிவர்களும்-சமஸ்ததேவர்களும்-பரந்தாமருடைய வேண்டுகோளின்படி கொடுத்த வரத்தாற்பெருகிய மதுவையும் காய்கனிகளையு நிரம்ப உண்டு,அதனால் மயங்கிச்செயலழிந்து சோம்பி வாயைத்திறவாம லிருக்கின்றார்கள். அப்படி யல்லாவிட்டால் இருவகைச் சேனைகளும் சும்மாவிருப்பவைக ளல்லவே: என்னையனே! என்மேற் கோபங்கொள்ளாதேயும். இனியொரு க்ஷணத்துக்குள்ளே நம்முடைய பெருமானானவர் புட்பக விமானத்தின்மேல் எழுந்தருளுகின்ற திவ்வியசேவையை, இங்கிருந்தபடியே நீர் பெருகிக்கொண் டிருக்கின்ற நேத்திரங்களாலேயே சேவித்துக் களிக்கப்போகிறீர். என்றின்னும் பலவிதமாகச் சொல்லிக்கொண் டிருந்தனர். இனி பரத்துவாசருடைய ஆச்சிரமத்திலெழுந்தருளி யிருக்கின்ற தாமரைமலர்போன்ற திருக்கண்களையுடைய ஸ்ரீ கோதண்டதீட்சா குருவானவர்செய்த செய்கைகளை யெடுத்துச் சொல்லுவோம்.

ஸ்ரீராமபிரான் தம்மைச் சூழ்ந்தவர்களோடு பரத்துவாசராசீர்மத்தில் விருந்துண்டிருக்குங்காலையில், தம்மைக்காணவந்த குகனைச்சன்மானித்தல்.

கவி.

அருந்தவன்சுவைகளாறே டமுதினிதளிப்பவையன்
கருந்தடங்கண்ணியோடுங் களைகணுந் துணைவரோடும்
விருந்தினிதருந்திகின்ற வேலையின்வேலைபோலும்
பெருந்தடந்தானையோடுங் கிராதர்கோன்பெயர்ந்துவந்தான்.

அரிய தவசிரேஷ்டராகிய பரத்துவாசமாமுனிவர் ஷட்ரசான்ன பதார்த்தங்களோடுதர நமதையனாகிய இராமச்சந்திர பகவான், கறுத்துவிசாலம் பெற்ற திருக்கண்களையுடைய ஜானகியோடும், தமதாதரவைப் பெற்றுள்ளயாவரோடும், தேவாமிர்தத்திற் கொப்பாகிய அவ்விருந்துணவை யமுது செய்தெழுந்தருளியிருந்த சமயத்து சமுத்திரத்தை நிகர்த்த பெருஞ்சேனையோடு வேடர் குலாதிபதியாகிய குகப்பெருமான் சுவாமியைக்காணும்படி வந்தனன். அவ்வண்ணம்வந்த குகனானவன் இராமபத்திர மூர்த்தியைத் தண்டன் சமர்ப்பித்து, அவருடைய திவ்வியமங்களகர விக்கிரகசௌந்தரியத்தில் தம்முடைய மனமும் — கண்களும் - அழுந்திச் சுழலிடச் சுற்றிச்சுற்றிச் சேவித்து, இப்படிப்பட்ட திவ்வியசேவையை இத்தனைகாலமாகச் சேவியாமல் வியர்த்தமாய்க் காலத்தைப்போக்கி விட்டோமேயென்று மிகுந்த துக்கத்தால் அழுதனன். என்மேல்வைத்த நிர்ஹேதுக்கிருபையால் எம்மை யாட்கொள்ளும்படி இங்கெழுந்தருளினா ரென்கிற பக்திபரவசத்தால் தட்டுமாறிப் பலமுறை தண்டன் சமர்ப்பித்தனன்.

அதுகண்ட இராகவபிரானானவர் பரதாழ்வானை எதிர்ந்து தழுவுவதுபோலத் தண்டன் சமர்ப்பித்த குகப்பெருமானை வாரியெடுத்துத் தழுவி,

№. 72. பாதர்தாய்மார்மூவரோடுவெளிப்பட்டு அஞ்சனேயரால்ஸ்ரீராமசரித்திரங்களை கேட்டுக்கொண்டுசெல்லுதல்.



அன்னப்பாகுகனே! உன்னுடைய புத்திரர்களு மனைவியும் க்ஷேமமோவென்று குசலப்பிரசனை செய்தார். அதற்கவன் - சுவாமி! நாயேனுக்குத் தேவரீருடைய கருணை இரட்சகமா யிருக்கும்போது தேவர் வினவிய பொருள்களிரண்டும் அருமையானவைகளல்ல. மெய்ஞ்ஞானச் செல்வராகிய இளையபெருமாளானவர் உம்மைப்பிரியாமற் பின்தொடர்ந்துவந்து செய்தற்குரிய கைங்கரியங்களைச் செய்தனர், அவ்வாறுசெய்யாது அஞ்ஞானமே நிரம்பிய மனத்தை யுடையேனுக்கு இந்த அற்பதேகத்தோடு கூடிவாழ்தலொன்றுமே நித்தியசுக மல்லவோ? இப்படிப் பலபலவிதமாகச் சொல்லித் துக்கித்தனர். இவ்வாறு தம்மைத்தாமே இகழ்ந்துகொண்டு துக்கிக்கின்ற குகாழ்வானைப் பக்தவற்சலராகிய ஸ்ரீ சக்கரவர்த்தித் திருக்குமாரர் கடாட்சித்து, அப்பாகுகனே! பரதனிருக்கு நிலையினின்று நீ என்ன வேறுபட்டிருப்பது? எல்லாவிதத்திலு நீ அவனையே ஒத்திருக்கின்றாய். இனித்துன்பப் படவேண்டாம் போய் உட்காரென்று சொல்லினர். உடனே ஸ்ரீ சானகிபிராட்டியாரையும், இராமாநுஜரையும், நமஸ்கரித்து உட்கார்ந்தார்.

ஸ்ரீ ரகுபதியானவர் குகப்பெருமானை முன்னே தமது திருக்கண்களாற் பார்த்து, சுக்கிரீவமகாராஜா முதலிய தோழர்களைப் பின்புபார்த்து, இந்த ஸ்ரீமான் சிறந்த தீர்த்தமாகிய கங்கையினிருகரைக்கு நாதன். தாயைப் பார்க்கினும் எல்லா உயிர்களிடத்திலும் அன்புள்ளவன். வேதமார்க்கத்தில் தவறுதலில்லாத வேடராஜனென்னும் பெயருள்ளவனென்றுசொல்லினர். இப்படி ஸ்ரீசானகி ரமணனானவர் சொல்லியருளினபோது சுக்கிரீவ மஹாராஜா முதலானவர்கள் பொருக்கென எழுந்து, ஒவ்வொருவராக குகப்பெருமானைக் காடாலிங்கனஞ்செய்து சிநேகித்தார்கள். இந்தப்பிரகார நடந்துகொண்டிருக்கையில் சூரியபகவான் ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரருடைய ஜகந்மோகனாகார திவ்வியசௌந்தரியத்தை யாவருங்கண்டு சேவிப்பதினால் அவர் திருமேனிக்குக் கண்ணெச்சில் படுமேயென்னும் பிரமையால் உலகமுழுமையும் இருளால் மூடிவிடுவான்போல அஸ்தமித்தான். இராகவபிரானானவர் சந்தியாவந்தனக் கடமையைச்செய்து, சேனைகள்யாவும் கடல்வளைந்துகொண்டதுபோலச் சூழ்ந்து சயனித்துக்கொள்ள சீதாபிராட்டியாரும் தாமுமாகச் சயனித்துக்கொண்டார். இராமாநுஜரும் குகப்பெருமானும் கையில் வில்லும் அம்புமேந்திக்கொண்டு, சிறிதும் கலங்காமல் இராமுழுமையும் காத்துக்கொண்டு திரிந்தார்கள். சூரியனும் உதயமானான்.

ஸ்ரீராமபிரான் பரத்துவாசரிடத்தில் விடைபெற்று யாவரோடும் புட்பக விமானத்தின்மீதெழுந்தருளி அயோத்தியைநோக்கிச்சேல்லுதல்.

கவி.

கதிரவனுதயகாலைக் கடன்கழித்திளவலோடும்
அதிர்பொலன்கழலினானவ் வருந்தவன் றன்னையேத்தி
விதிதருவிமானமேவி விளங்கிழையோடுங்கொற்றம்
முதிர்தருகருணையோடு முனிமனந்தொடரப்போனான்.

சூரியோதயமாகுநேரத்தில் காலைக்கடனை முடித்து இராமாநுஜரோடு சப்திக்கின்ற வீரக்கழலையணிந்த திருவடிகளையுடைய இராமமூர்த்தி அருந்தவத்தையுடைய பரத்துவாசமுனிவரைப் போற்றிசெய்து, விதிப்படியமைந்த புட்பகவிமானத்தின்மீது பிரகாசிக்கின்ற ஆபரணங்களை யணிந்த பிராட்டியாரோடும் வெற்றியிருந்த கிருபையோடும் இன்னு மற்றியாவரோடும் ககனமார்க்கமாக பரத்துவாசமுனிவருடைய மனம் பின்தொடர அயோத்தியாபுரியை நோக்கிச்சென்றனர். அந்தப்புஷ்பக விமானமானது ஆகாயத்திற் செல்லும்போது இஷ்ட நாயகனைக் கண்டமாத்திரத்தில் காமக்குறிப்புத் தோன்றநின்ற குலமங்கையைப்போலாகியும், சித்திரம் உயிர்பெற்றாற்போல அலங்காரமுடையதாகியும், இந்திரலோகமும் ஒப்பாகாத இயற்கையழகுடையதாகியும் விளங்காநின்ற திருவயோத்தியாபுரியினது மதிலின்புறமானது தோன்றியது. அப்பால் சற்றுத்தூரம் புஷ்பகவிமானம் சென்றபோது அழகியமதில்களாற் சூழப்பட்டழகுவாய்ந்துள்ள அயோத்தியாநகரந் தோன்றாநிற்க, ஞானமே திருமேனியாகவுடைய சானகிரமணனனவர் அதிமேதாவிகளாகிய தோழர்களைப் பார்த்து, இப்படிப்பட்ட அலங்காரத்தை யுடையதென்று ஒருவராலும் சொல்லமுடியாத அயோத்தியாநகரந் தோன்றுகிறதென்று சொல்லுதலும் கைகளைக் கூப்பிக்கொண்டு யாவருமெழுந்து வணங்கிநின்றார்கள். அப்போது புஷ்பக விமானமானது ஆகாயத்தின்கண் வருவதானாலும், அநேகசூரியர்கள் உதயமாயினாற்போல ஆஞ்சனேயர் முன் இராமபிரானுடைய புட்பகவிமானந் தோன்றிற்று.

ஆஞ்சநேயர் ஸ்ரீராமதரிசனத்தைக் காட்டப்பரதர் காணுதல்.

கவி.

அண்ணலேகாண்டியா லலர்ந்ததாமரைக்
கண்ணனும்வானரக் கடலுங்கற்புடைப்
பெண்ணருங்கலமுமின் பின்புதோன்றிய
வண்ணவிற்குமரனும் வருகின்றார்களே.

இவ்வண்ணம் விமானந் தோன்றினமாத்திரத்தில் ஆஞ்சநேயர் பரதாழ்வானைப் பார்த்து, ஓ பரதமஹாராசரே! அன்றலர்ந்த செந்தாமரைமலர்போன்ற திருநேத்திரங்களையுடைய இராமபிரானும், கற்புடையபெண்களுக்கு ஆபரணம்போலச் சிரேஷ்டமாக விளங்குகின்ற ஸ்ரீசானகி பிராட்டியாரும், உமக்குப்பின்னே அவதரித்த ஸ்ரீ லட்சுமணப் பெருமாளும், வானரசேனைகளும், விமானத்தின்மேல் வருகின்றதைப் பார்த்தருள்வீராகவென்று சொன்னார். ப்திலுலு லோகங்களும் தன்மேலேறிய போதிலும் வெற்றிடமிருக்கத்தக்க பெருமையுடையதா யொளியமைந்த விமானத்தின்மேல் ஊழிமுதல்வனாகிய இராமபத்திரர் தோன்றுகின்றாரென்று ஆஞ்சநேயர் சொன்னபோது, ஸ்ரீராமசுவாமியை எதிர்கொள்ளும்படி வந்தவர்களெல்லாம் ஒளியைவீசுகின்ற மேருமலையின் பெருங்குகையில் விளங்குகின்ற நீருண்ட மேகம்போல விமா

நெ 73. ஸ்ரீராமரைக்காணவந்தகுகனைச்சன்மானித்தல்.



ஸ்ரீராமர்அயோத்தியைநோக்கிவருவதைபரதருக்கு ஆஞ்சனேயர் காட்டுதல்.



உயுத்தகாண்டம். பரத்துவாசராச்சிரமத்தைச்சமீபித்தல்.

னத்துக்குள்ளே எழுந்தருளிய இரகுபதியைக் கண்டவுடனே ஆரவாரித்த சந்தோஷ ஆரவாரமானது இராவணன் அரசாண்ட தென்னிலங்கைக்கு அப்புறத்திலும் சென்றது.

அப்போது சத்தியத்தை ஆசரித்து மாமிசதேகத்தை விட்டொழித்து விஷ்ணுலோகத்தை யடைந்த ஸ்ரீ சக்கரவர்த்தியாரது வருகையைக் கண்டாற்போல, காட்டுக்குச்சென்ற தன் பிராணபதமாகிய இராகவபிரானை பரதாழ்வான் கண்களாரக்கண்டனர். தாங்களிழந்துபோன பொருள் கிடைப்பதற்குமுன் வருந்திய துன்பங்களெல்லாம் அப்பொருள் கிடைத்தமாத்திரத்தில் மறந்து ஆனந்திப்பவர்களைப்போல, சுவாமியானவர் காட்டுக்குச்சென்றபின் மிகுந்த துக்கங்களால் வருத்தப்பட்ட பரதாழ்வானவர் அதிக குதுகலங்கொண்டு, சீதாபதியைக் கும்பிடும்படி ஆஞ்சநேயர்கையைப் பற்றிக்கொண் டிருந்தகையை விட்டுவிட்டு இரண்டுகையையும் சிரமேற்குவித்துக்கொண்டு நின்றனர்.

ஆஞ்சனேயர் விமானத்திற்பாய்ந்து பரதாழ்வார்வருகையை ஸ்ரீராமபிரானுதியர்க் கறிவித்தல்.

கவி.

அக்கணத்தனுமனு மவணின்றேகியத், திக்குறுமானத்தைச் செவ்வனெய்தியச்
சக்கரத்தண்ணலைத் தாழ்ந்துமுன்னின்றான், உக்குறுகருணைநீ ரொழுகுமார்பினன்.

இயாவரினும் அதிமேன்பாடுள்ள கீர்த்திமானுகிய பரதாழ்வானவர் தாம்பற்றியிருந்த கையை விட்டவுடனே அநுமானுனவர் அவ்விடத்தினின்றுமேலேயெழுந்து, தமக்கெதிரே வருகின்ற விமானத்தின் மேற்பாய்ந்து ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாருடைய சீர்பாதங்களை வணங்கி, பரதாழ்வார்படுகிற ஆற்றுமையை நினைத்துக்கொண்டு கண்களில் நீர் தாரைதாரையாகப் பெருகிக்கொண்டு நின்று, மகாலட்சுமிக்கு நிவாசஸ்தானமாகிய திருமார்பையுடைய எம்பெருமானே ! சுவாலையைவீசிக்கொண் டெரிகின்ற பெருநெருப்பில் வீழ்ந்துவிடுவதற்குச் சர்வசித்தமாயிருந்த பரதாழ்வானை நாயேன் அடைந்து தேவரீருடைய வரவைச்சொல்லினேன். சொன்னபின்புதான் அயோத்தியா நகரத்திலுள்ளார் யாவரும் உயிரோ டிருப்பவர்களாயினுர்களென்று சொல்லினர். அதுகேட்டருளிய இராமபத்திரர் அவரைக் கிருபையோடும் பார்த்து, அப்பா அஞ்சனேச்சிங்கமே ! முன்பு யான்செய்த தீவினைகள் பலவற்றுல் அநேக இடுக்கண்கள் ஒன்றின்பின்னொன்றுக வந்துகொண்டே யிருக்கின்றன. இப்போது யான்செய்த சுகிர்தத்தால் நீயொருவன் கிடைத்து அவற்றையொழிக்க ஒழிந்துபோகின்றன. ஓ என்தாயைப்பார்க்கினும் என்னிடத்ததிக அன்புவைத்துள்ளவனே ! என்றுசொல்லிக் காடாலிங்கனஞ்செய்து, நீ எனக்குக்கிடைத்தது தவத்தாலென்று எனக்குமாத்திரமா சொல்லிக்கொள்வது ? என்பிதாவுக்கும், என்தாய்மார்க்கும், என்தம்பிமார்களுக்கும், எம்மைச்சார்ந்தவர்களுக்கு மாகுமென்று சொன்னர்.

இவ்வாறு ஸ்ரீராமமூர்த்தியானவர் திருவாய்மலர்ந்தருளுகையில், எல்லாருடைய கீர்த்திகளும் தாழும்படியோங்கிய புகழையுடைய ஸ்ரீ பரதாழ்வானானவர் முத்திநெறிக்கு வழித்துணையும் தமக்குத்தாமே சமானமானவருமாகிய ஸ்ரீராமபிரானுடைய திருப்பாதுகைகளைத் தலையின்மேல் தாங்கிக்கொண்டும், இரண்டுகரங்களைக் குவித்துக்கொண்டும், கண்டவர்களுக்குள்ளே இந்தத்தேகத்திலும் உயிருண்டோ வென்றார்க்குக் கண்ணீரொழுக்கலாலும் — அழுதலாலும் — நடத்தலாலும் - உயிருண் டென்னும்படியாக மிகவுமிளைத்த தேகத்தையுடையவராய் விமானத்துக்குச் சமீபத்திலே நெருங்கிவந்தார். அப்படிவந்த பரதாழ்வானுக்குத் தருமதேவதைக்கோர் துணைவனாய் நிற்கின்ற ஆஞ்சநேயரானவர் தண்டன் சமர்ப்பித்துவிட்டு ஜானகீரமணரை நோக்கி, சுவாமி! தேவரீருக்குத் திருத்தம்பியாரும், சிந்தையுமொழியும் செல்லாததிலைமை யுடையதாகிய பரமபதத்தை யடைவதற்குச் சுலபமார்க்கமாகிய பாரதந்திரியமென்னு மெய்ஞ்ஞானவரத்தை ஆண்டுகொண்டிருந்தவரும்,தேவர்பக்கலி லுண்டாகிய நல்லகாலத்தால் வரம்பெற்றதாய் விஷயத்திற் பகைமை பாராட்டுபவருமாகிய பரதாழ்வான் இதோவந்து நிற்கின்றார். தம்முடைய திருக்கண்களால் கடாட்சித்தருளுமென்று வாய்பொத்திக்கொண்டு சொல்லினர்.

ஸ்ரீராமர் பரதராதியரைக் காணவேண்டுமேன் றெண்ணியதையறிந்த புட்பகவிமானம் பூமியிலிழிய, ஸ்ரீராமரும் இளையபெருமாளும் பரதருடன் தாய்மாராதியாவர்களையுங் கண்டுமேகிழ்தல்.

கவி.

அவ்வயினயோத்திவைகுஞ் சனமொடுமக்குரோணி
தவ்வலிலாறுபத்தா யிரமொடுமேந்தாயரோடும்
இவ்வயினடைந்துளோரைக் காண்பனென்றிராமனுன்னச்
செவ்வையினிலத்தைவந்து சேர்ந்ததுவிமானந்தானும்.

ஸ்ரீ அஞ்சனாதேவி புத்திரர்காட்டத் தமதுதிருத்தம்பியாரைக்கண்ட ஸ்ரீ ரகுராமரானவர் ஸ்ரீதசரதசக்கரவர்த்தியாரைக் கண்டாலொத்த சந்தோஷசித்தராகி, தம்மைக்காணவந்த அயோத்தியாநகர ஜனங்களையும் — அறுபதினாயிரம் அக்குரோணி சேனாவீரர்களையும் - தாய்மார் மூவர்களையும் — தம்பிமார்களையும் — முனிவர்களையும் — என்கண்ணாரக் காண்பேனென்று நினைத்தமாத்திரத்தில் புஷ்பகவிமானமானது பூமியிலிறங்கியது. இராகவபிரானெழுந்தருளிய புஷ்பகவிமானம் அவரவர்கள்செய்த நல்வினையால் மண்ணுலகத்திலிருந்து சுவர்க்கலோகத்துக்குக் கொண்டுபோம்படி வந்ததுபோல எல்லாவுயிர்களும் களித்தன. தசரதராமரானவர் கௌசல்யாதேவிமுதலிய தாய்மார்களுக்குப் பசுவின்பக்கலில்வந்த இளங்கன்றுபோலவும், விஷயாந்தரமுதலியவற்றை யொழித்த பிரபன்னர்களுக்கு மீனாலயம்வந்ததுபோலவும், வாலிபர்களுக்குத் தங்கள் கண்களிலாடுகின்ற பாவைபோலவும், பிரிவினையினாலி

ளைத்த தேகத்தையுடைய பரதசத்துருக்னர்களுக்கு நல்லுயிர்வந்தது போலவும், பெற்றதாயைக்காணுமையால் மிகவும் வருத்தமுற்று உழன்றுகொண்டிருந்த ஏழ்மையுடையோர்களுக்கெல்லாம் பெற்றதாய்வந்தாற்போலவும், அன்புடைய சத்புருஷர்களுக்கெல்லாம் தேவாமிர்தம்போலவும், மெய்ஞ்ஞானத்தையுடைய உயர்ந்தோர்களுக்கெல்லாம் தம்முடைய யதார்த்தநிலைமையோடு பிரசன்னமாயினது போலவும், மதர்த்த விழிகளையுடைய மங்கையர்களுக்கெல்லாம் களிப்பைத்தருகின்ற தேன்போலவும் ஆனுர்.

ஸ்ரீ ஜானகிரமணரே தங்களுக்குப் பிராணனல்லாமல் வேறேயுண்டென்று நினையாத கோசலநாட்டாரும் அயோத்தியா நகரத்தாருமாகிய ஸ்திரீபுமான்கள்யாவரும், இராமநாதர் எதிரேவந்ததைக் கண்டவுடனே சித்திரப்பிரதிமை உயிரடைந்தாற்போல முன்னடைந்திருந்த சித்தப்பிரமை நீங்கி நல்லுணர்ச்சியை அடைந்தார்கள். ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரர் வந்துவிட்டாரென்கிற ஆநந்தத்தால் சுமங்கலஸ்திரீகளும் புருஷர்களும் சுவாமி மேலும் ஒருவருக்கொருவர் தங்கள்மேலும் வாரிவாரித் தூவுகின்ற பரிமளப்பொடிகளும், சந்தனமும்,நெய்யும், முத்துக்களும்,புஷ்பங்களும்,வாசனைத்தைலமும் ஒன்றுகச்சேர்ந்து பெருகி; குதிரைகளினுடைய நுரையோடும் யானைகளினுடைய மதத்தோடும் அவர்களது கண்களிலிருந்து ஒழுகாநின்ற நீரோடும் கலந்து கடலையுங் கடந்தோடியது. இந்தப்பிரகாரம் யாவரும் சந்தோஷங்கொண்டாடி வந்தபோது கருணுசலதியாகிய ராமநாதரைப்பெற்ற கௌசல்யாதேவியாதி தாய்மார்கள்மூவரும், தம்பிமார்களிருவரும், வசிஷ்டமுனி ஒருவரும் போய்ப் புஷ்பகவிமானத்தின்மீதேறிஞர்கள்.உடனே ராமபிராஞனவர் தங்குலத்துக்கு ஆசாரியராகிய வசிஷ்டருடைய பாதங்களை வணங்கிஞர். வணங்கிய இராகவபிரானை அம்முநிபுங்கவர் ஆசிர்வதித்து, முன்தாம்கொண்டிருந்த துன்பங்கள் நீங்கும்படி இரண்டுகரங்களாலும் தூக்கி யெடுத்துப் பலமுறை தழுவிஞர்.

பின்பு இராமாநுஜர் அந்த முனிசிரேஷ்டருடைய பாதங்களை வணங்க, அவர் இரகுபதியைத் தழுவியதுபோலவே ஆசிர்வசனம்சொல்லி ஆலிங்கனம்செய்தனர். தாய்மார்கள் மூவரில் கைகேசியினுடைய அடிகளைச் செந்தாமரைமலர்போன்ற திருக்கண்களையுடைய ஸ்ரீ தசரதாத்மஜர் முன்னே நமஸ்கரித்து, பின்னே மற்றஇருவர்களுடைய பாதங்களையு நமஸ்கரித்தார்.அம்மூவரும் கண்களில் நீர்பெருகி மிகவும் பிரீதியோடு தழுவிஞர்கள். ஜனகராஜபுத்திரியார் வசிஷ்டமுனிவரையும், மாமிமார்களையும், வணங்கிநின்றுர். தனக்கொப்பில்லாத வெற்றியையுடைய இலட்சுமணர் மூன்று தாய்மார்களையும் வணங்கிஞர். அப்படி வணங்கிய இளையபெருமாளை அத்தாய்மார் மூவரும் எடுத்தணைத்து, ஓ குழந்தாய்! நீதான் இராமனுக்குத் தம்பியென்னும்படி காட்டுக்கு அப்புருஷோத்தமனேடு கூடப்போய்வந்தா யென்றுசொல்லி ஆசிர்வதித்தார்கள்.

ஸ்ரீராமர் தம்மைவணங்கிநின்ற பரதர் திருக்கோலத்தைக்கண்டு தழுவி ஒருவருக்கொருவர் அன்புகூர இலக்ஷ்மணர் சீதை இவர்கள் பரதரைவணங்கலும் சத்ருக்னர் ஸ்ரீராமனுதியரைவணங்கலும்.

கவி.

சேவடியிரண்டுமென்பி னடியுறையாகச்சேர்த்திப்
பூவடிபணிந்துவீழ்ந்த பரதனைப்பொருமிவிம்மி
நாவிடைபெயர்ப்பதொன்று முணர்ந்திலனின்றநம்பி
ஆவியுமுடலுமொன்றத் தழுவினனழுதுசோர்வான்.

ஆதியில் தாம்கொடுத்தருளிய திருப்பாதுகைகளிரண்டையும் பரதாழ்வானுனவர் சுவாமியின்திருவடிக்குக் காணிக்கையாகவைத்துத் தண்டன்சமர்ப்பித்தனர். அப்படித் தண்டன்சமர்ப்பித்த பரதாழ்வானை ரகுராமரானவர் தமது திருப்பவளவாக்கால்ஆசீர்வசனம்சொல்வதொன்றும் அறியாமல்உதடுகள் துடிக்கக்கதறியழுது, உயிருமுடலும் ஒன்றும்படி காடாலிங்கனஞ் செய்து, தமது நேத்திரங்களிலிருந்து பெருகியொழுகாநின்ற நீரால் இளமைக்கும் அழகுக்கு மாருக அணிந்திருக்கின்ற சடைமுடியிலுள்ள மாசெல்லா நீங்கும்படியாகக் கழுவி உச்சியைமோந்து, கன்றைக்கண்ட பசுவைப்போலத் தமதுள்ளத்துள்ள அன்பு புறத்திலும் தோன்றும்படி நின்முர்.

அதுசமயத்தில் இரதகஜதுரகபதாதியாகிய நால்வகைச் சேனைகளின் ஆடம்பரமும் மற்றவைபவங்களும் ஸ்ரீ சர்வசுவாமியினுடைய திருப்பாதுகைகளுக்கே நடக்கும்படி செய்துவந்த ஸ்ரீ பரதாழ்வானுடைய திருவடிகளில், இந்திரனை வெற்றிகொண்ட இந்திரஜித்துவைக் கொலைசெய்த இளையபெருமாளானவர் வீழ்ந்து தண்டனிட்டார். தண்டனிட்ட இராமாநுஜரை பரதாழ்வான் எடுத்துத்தழுவினர். அவ்விருவர்களுடைய திருமேனிகளையுங் கண்ட அறிவுடையோர் யாவரும் இராமபத்திரரை விட்டுப் பிரியமாட்டாமல் அவரோடு பின்றொடர்ந்து சென்று காட்டில்வருந்திய திருமேனியோ ? இவ்விரண்டுகள் எதுமிகுதியும் இளைத்து மெலிந்திருப்பதென்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு உள்ள நைந்தார்கள். கடைசியில் ஸ்ரீசத்துருக்கப் பெருமானுனவர் தேவதேவநாயகனுகிய இராகவபிரானுடையசீர்பாதங்களிலும்,இளையபெருமாளுடைய திருவடிகளிலும், நானுவித நல்லமலர்களைத் தூவிச்சேவித்துக்கொண்டார். அவ்விருவர்களும் எடுத்தணைத்தபின் மகேசுவரியாகிய சானகிபிராட்டியாருடைய திருவடிகளை வணங்கினுர்.

அப்பால் இராகவபிரானுனவர் பரத சத்துருக்னர்களுக்குத் தம்முடைய உயிர்த்தோழர்களாகிய சுக்கிரீவமகாராஜா முதலானவர்களை இன்னுரின்னுர் இப்படிப்பட்டவர்களென்று சொல்லிக்காட்டினர். உடனே ஸ்ரீசுவாமியோடுகூட வந்தவர்கள் அவ்விருவர்களையும் வணங்கினுர்கள். பரதாழ்வான் சுக்கிரீவமகாராஜாவையும், அங்கதப் பெருமானையும், குமுதனையும், சாம்பவரையும், நீலனையும், மற்றும்படைவீரர்களையும், விபீஷணுழ்வா

னையும், அவரவர்களுக்குத் தக்கவிதமாக மரியாதைகளைச் செய்தார். சுமந்திரனென்னு முதன்மைபெற்ற மந்திரியானவர் மற்ற மந்திரிமார்களோடும் - சேனாநாயகர்களோடும் - பந்துக்களோடும் - மத்தகஜங்கள் போன்ற இராஜகுமாரர்களோடும் - மற்றவர்களோடும் - இரகுநாதருக் கெதிரேவந்து, அருமைத்திருமேனி வாடிவருந்தும்படி காட்டுக் கெழுந்தருளியதை நினைக்குந்தோறும் தோன்றுகிற அழுகையும் — அந்தப்பதினான்கு வருஷங்களையுங் கழித்துவந்து இனிப்பட்டாபிஷேகஞ் செய்துகொள்வா ரல்லவாவென்று நினைக்குந்தோறும் தோன்றுகிற மகிழ்ச்சியும், ஒன்றையொன்று அதிகரித்து உபரும்படியாகத் தொழுதெழுந்து கண்ணீர் பெருக்கிக்கொண்டு நிற்க, நம்மையனானவர் அவரைத்தழுவிக் குசலப்பிரசனைகள் செய்து ஆநந்தித்தார். இளையபெருமாளும் அப்படியே க்ஷேமங்களை விசாரித்துச் சந்தோஷித்தார்.

யாவரும் புட்பகவிமானத்திலாரோகணித்து அயோத்தியாபுரிக்குப் பிரயாணமாக தேவர்கள் மலர்மாரிபொழிந்து ஆசீர்வதித்தல்.

கவி.

எறுகசேனையெல்லாம் விமானமீதென்றுதன்போல்
மாறிலாவீரன்கூற வந்துளவனிகவெள்ளம்
ஊறிரும்பரவைவானத் தெழிலியுளொடுங்குமாபோல்
எறிமற்றிளையவீர னிணையடிதொழுததன்றே.

அக்கால் சுமந்திரரானவர் இராமபத்திரரைச் செவ்வையா யுற்றுப்பார்த்து, இனி யிந்தப்பூமிக்கு யாதொருகுற்றமு மில்லையென்று மற்ற மந்திரிமார்களைப்பார்த்துச் சொன்னார். தம்மோடொத்தவர்களும் தம்மினு முயர்ந்தவர்களு மில்லாத இராமநாதரானவர் சேனைகளெல்லாம் விமானத்தின்மேல் ஏறக்கடவனவென்று கட்டளையிட்டனர். சமுத்திரநீரானது மேகத்திலடங்குவதுபோல அந்தச் சேனைகளெல்லாமும் விமானத்தின்மே லேறி இராமலட்சுமணர்களுடைய சீர்பாதங்களை வணங்கின: இவைகளையெல்லாம் அந்தரமார்க்கத்திலிருந்து பார்த்துக்கொண் டிருந்த தேவர்கள்யாவரும் இந்த விமானத்தை அண்டங்களையெல்லா முண்ட சர்வேசுரனுடைய திருவயிற்றுக்குச் சமானமென்று சொல்லுவோமேயானால் அந்தத்திருவுதரத்தில் பிர்ம்மேந்திராதி சமஸ்த சேதனர்களும் அடங்கி யிருந்தார்களே யல்லாமல் தாம் அடங்கியிருந்ததுண்டோ ? இல்லையே: இந்த விமானத்திலே அந்தத் தேவதேவ நாயகனாகிய இராகவபிரான் எழுந்தருளி யிருப்பதால் இதற்கு அந்தத் திருவுதரம் ஒப்பாகமாட்டாது. பகவானுடைய திருவயிறே ஒப்பாகாது போகுமேயானால் சமுத்திர மொன்றைமாத்திரம் தனக்குளடக்கிய அகஸ்தியருடைய கையொன்றோ சமானமாகப் போகிறதென்று சொல்லிக் கற்பகமலர்களைத்தூவித் துதித்தார்கள்.

அப்போது இடிக்கூட்டங்களும் எழுசமுத்திரங்களும் ஒருமித்து ஆரவாரித்தாற்போல முரசங்களும், சங்கங்களும், மற்றவாத்தியங்களும், யானை

குதிரைகளுமொலிக்கின்ற ஓசையும், பிராமணர்களுடைய வேதகீதங்களி னோசையு முயர்ந்தோங்கித் திக்குகளெல்லாம்பரவிச்சத்தித்தவோசை; ஆகாயவீதியில் நின்று சமஸ்ததேவகணங்களும் — சித்தர்களும் — சாரணர்களும் — ஸ்ரீ சக்கரவர்த்தித் திருக்குமாரருக்குக் கூறும் பல்லாண்டொலியினால் அடங்கிப்போகாநின்றன.

ஸ்ரீராமருடன் யாவரையுந்தாங்கிய புட்பகவிமானம் அயோத்தியிலிறங்குதல்.

கவி.

ஆனதோரளவையி னமரர்கோனொடும், வானவர்திருநகர் வருவதாமென
மேனிறைவானவர் வீசும்பூவொடும், தானுயர்புட்பக நிலத்தைச்சார்ந்ததால்.

இவ்வளவுகோஷத்தோடு அயோத்தியைநோக்கி ஆகாயத்திற் செல்கின்ற புஷ்பக விமானமானது இந்திரனுக்குக் களிப்புண்டாகும்படி சுவர்க்கலோகத்துக்குச் செல்வதுபோலிருக்கிறதென்று இந்தப் பூமியிலுள்ளோர் யாவரும் பேசிக்கொண் டிருக்கையில், இந்திரனாதி மற்றத்தேவர்களோடும் சுவர்க்கலோகமே பூலோகத்துக்கு வருவதுபோல அந்தப் புஷ்பகவிமானம் தேவர்கள் தூவுகிற மலர்மாரியோடு அயோத்தியா நகரத்தில்வந்திறங்கியது.

மீட்சிப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

முப்பத்தேழாவது,

திருமுடிசூட்டுப்படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமபத்திரரானவர் அயோத்தியாபுரியை யடைந்தபின் யாவரோடும் புஷ்பகவிமானத்தினின்று மிறங்கி நந்திக்கிராமத்தை யடைந்து தாம்கொண்டிருந்த தவவேடத்தினை மாற்றித் தேரேறிச்சென்று அரண்மனைக்குள்ளே பிரவேசிக்க, உடனே பரதாழ்வாருடைய பிரரேபணையால் வசிஷ்டமுனிவர் நிச்சயித்த திவ்வியமுகூர்த்த நாளில் ஸ்ரீ ராமபத்திரரானவர் ஸ்ரீசீதாசமேதராய் பிரமதேவரால் நிருமாணிப்பித்த பட்டாபிஷேகமண்டபத் தெழுந்தருளியிருக்க, அக்கால் ஆஞ்சனேயராற் கொணர்ந்த கங்கைமுதலிய தெய்வதீர்த்தங்களால் திருவபிடேகஞ்செய்யப்பெற்ற ஸ்ரீ சீதாபிராமரானவர் ஸ்ரீ வசிஷ்டபகவானால் திருமுடிசூட்டப்பெற்றுத் தம்பியர் மூவரோடு தாணியைப் பரிபாலித்திருந்தமை சொல்லப் படுகின்றது.

ஸ்ரீராமர் நந்திக்கிராமத்தையடைந்து தாம்கொண்டிருந்த தவவேடத்தினைமாற்றி அயோத்தியாபுரிக் கெழுந்தருளல்.

கவி.

நம்பியப்பரதனோடு நந்தியம்பதியைநண்ணி
வம்பலர்சடையுமாற்றி மயிர்வினைமாற்றிமற்றத்

No. 74. ஸ்ரீராமர்மகுடாபிஷேகம்.



உயுத்தகாண்டம். திருமுடிசூட்டுபடலம்.

தம்பியரோடீன்றானுந் தண்புனல்படிந்தபின்னர்
உம்பருமுவகைகூர வொப்பனையொப்பச்செய்தார்.

திரிலோகவாசிகளாகிய புருடர்களிற் சிறந்த சிரேஷ்டசீலராகிய சக்கரவர்த்தித் திருக்குமாரரென்னும் இராமசந்திரமூர்த்தியானவர், தமது தம்பியாராகிய பரதாழ்வாரோடும் மற்றவர்களோடுந் திருவயோத்தியாபுரியை விட்டு அதற்குத் தென்மேற்குத் திசையிலுள்ளநந்திக்கிராமத்தையடைந்து, வாசனையுடையதாய்ப் படர்ந்திருக்கின்ற சடைமுடியைமாற்றி க்ஷெளரமுஞ் செய்துகொண்டு, எல்லாத்தம்பியரோடுங் குளிர்ச்சிபெற்ற சரயுநதியில் ஸ்நானஞ்செய்து தேவர்களுஞ் சந்தோஷிக்க தமக் குபாசனமூர்த்தியைத்துதித்து திருமண்காப் பிட்டுக்கொண்டு,பீதாம்பரதாரிகளாயும், சர்வாபரண பூஷிதர்களாயும், நந்திகிராமத்தைவிட்டு அயோத்தியா நகரத்தைச்சேர்வதற்கு சதுர்வேதங்களையுமொத்த நான்கு வெள்ளைக்குதிரைகளைக் கட்டிச் சூரியனைப்போல விளங்குகின்ற இரதத்தின்மேல் ஆரோகணித்தருளினர். உடனே அந்தத் திருத்தேரில் மற்றமூவர்களும ஏறியருளி, அவர்களில் இராமாநுஜர் சுவாமிக்குப் பின்புறத்தினின்று வெண்கொற்றக் குடைபிடித்தார். சத்துருக்காழ்வான் பின்னே நின்று இரண்டு கரங்களிலும் இரண்டு சாமரைகளைப்பற்றி வீசினர். பரதாழ்வானனவர் ஆநந்தபரவசராய்க் கண்ணீர் பெருகிக்கொண்டு முட்கோல் பிடித்துத் தேரைநடத்திச் சென்றார்.

ஸ்ரீ புருஷோத்தமராகிய இராகவபிரானெழுந்தருளிய திருத்தேருக்கு இரண்டு பாரிசங்களும் விபீஷணாழ்வானும், சுக்கிரீவமகாராஜாவும், யானையின்மேலேறிப் போற்றிசெய்துகொண்டு சென்றார்கள். அங்கதப்பெருமான் கொடிப்படையின் முன்னே போனர். அறிவில் ஆதிசேடனையொத்த சிறியதிருவடிகளாகிய ஆஞ்சநேயர் திருத்தேருக்குப் பின்வந்தார். அறுபத்தேழுகோடி யானைகளின்மேல் வானரப்படைவீரர்கள் மானிடவுருக்கொண்டு, நல்ல ஆடையாபரணங்களைத் தரித்துக்கொண்டும், கலவைச்சந்தனமுதலிய பூச்சுகளைப் பூசிக்கொண்டும், வெண்பட்டுக்குடை நிழலைச்செய்யவும் போனர்கள்.நவகண்டங்களிலுள்ள இராஜபுருஷர்களில் சிலர்யானைகளின்மேலும், சிலர்பசும்பொன் தகடுவேய்ந்த தேர்களிலும், சாமரைகள் பக்கங்களில் வீசவும்-வெண்பட்டுக்குடைகள் பிடிக்கவும் - இரத்தினமய கிரீடங்கள் சிரசுகளில் பிரகாசிக்கவும்ஏறி கைகளைக்குவித்துச் சென்றார்கள். வானரமங்கையர்களெல்லாம் தெய்வஸ்திரீகளைப்போல உருவமாறி நல்ல பட்டுவஸ்திரங்களை யுடுத்தி, திவ்வியாபரண பூஷிதைகளாய் பிடியானைகளின்மேலும் -- குதிரைகளின்மேலும் - மற்ற வாகனங்களின்மேலு மேறி விண்மீன் கூட்டங்களைப்போலச் செல்ல ; அவர்களுக்கு நடுவே மகேசுவரியாகிய சானகி பிராட்டியார் விமானத்தின்மேல் சந்திரனைப்போலச் சென்றாள்.

ஆகாயவீதியினின்ற எல்லாத்தேவர்களு முனிவர்களும் இராகவபிரானும் ஸ்ரீ சீதாபிராட்டியாரு மெழுந்தருளுகிற திவ்வியசேனையைச் சேவிக்கும்

உள்ளக்களிப்பால் கற்பகமலர்களையும் வேறு சுகந்தமலர்களையும் கைகளோயாமல் வாரிவாரிச் சொரிதலாலே, இந்தப் பூமண்டலம் அந்தப் பூவுகளாலேயே நிறைந்து தரைதோன்றப் படாமையால் அதைக்கண்ட நிறைந்த கல்வியாளர்கள் இப்பூமியைப் பூவென்று அழைத்தார்கள். அன்றுமுதல் இந்தச் சகத்துக்குப் பூவென்று பெயருண்டாயிற்று, இரகுநாதரானவர் காட்டுக்கெழுந்தருளிய பிரிவின்துன்பத்தாலே கோடைகாலத்தில் நீர்ப்பசை யில்லாத மேகம்போலப் பதினான்குவருஷம் வரையில் மதநீர்ப்பெருக்காமல் இளைத்துச் சோம்பிக்கிடந்த யானைகளெல்லாம், இப்போது இராகவபிரானானவர் ஆரண்ணியத்தை விட்டுத் திருவயோத்தியாபுரிக் கெழுந்தருளியதை உணர்ந்தும் அவரைச்சேவித்தும் தாம்கொண்ட ஆநந்தமானது உள்ளத்தில் நிறைந்து அடங்காமற் பெருகியதுபோல மூன்றுமதநீரும் ஆறாயோடிக் கடலிற்போய் விழும்படிப் பெருகியன. அந்த யானைகளைப்போலவே குதிரைகளெல்லாம், பேசியறியாத ஊமைகள் ஏதோவொரு தெய்வவருளால் பேசும்படி பெற்றபோது ஏப்படிப்பேசுவார்களோ அதுபோலவும், இடிகளையேபெய்கின்ற மேகராசிகளைப்போலவும் கனைத்துக்கொண்டு சென்றன.

ஓரறிவுயிர்களாகிய மரங்கள் செடிகள் கொடிகள்யாவும் சர்வசுவாமியானவர் வனத்துக் கெழுந்தருளிய துக்கத்தால் அரும்பெடுத்துப் போதாகி மலராமலிருந்து, இப்போது ராமபத்திரர் அயோத்திக்கெழுந்தருளிய படியால் அந்தந்தப்பருவங்களி லரும்பி உடனே நல்லமணமுள்ள மலர்களைமலர்ந்து சுகந்தத்தை வீசியன. ராமபத்திரர் அயோத்தியாபுரியைப் பிரிந்ததுமுதல் அதிக துக்கத்தையுடையவர்களாய்க் கலவியின்பத்தி லிச்சையில்லாமல் வெறுத்திருந்த ஸ்திரீசனங்கள் யாவரும் ரவிகுலசந்திர ரெழுந்தருளினவுடனே மிகுந்த செல்வச்செருக் குடையவர்களுக்கு உடல் முழுமையும்பொன்னிறம்போன்ற பசலைபூத்தது.

ஸ்ரீராமச்சந்திரர் அயோத்தியாபுரியிலுள்ள அரண்மனையடைதல்.

கவி.

ஆயதோரளவில்செல்வத் தண்ணலுமயோத்திநண்ணித்
தாயரைவணங்கித்தங்க ளிறையொடுமுனியைத்தாழ்ந்து
நாயகக்கோயிலெய்தி நானிலக்கிழத்தியோடும்
சேயொளிக்கமலத்தாளுந் திருநடஞ்செய்யக்கண்டான்.

இவ்வண்ணமாக சகலஸ்தோம ப்ரிவாரங்களோடு இராமச்சந்திரமூர்த்தியானவர் அயோத்திமா நகரத்தைச்சேர்ந்து, தாய்மார் மூவரையுஞ் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, பாதகாணிக்கையோடு வதிஷ்டமகாமுனியை வணங்கி, ஸ்ரீதேவியும் பூதேவியும் நடிக்க நவரத்தினங்களிலும் நாயகமணிகளிழைத்த அரண்மனையை யடைந்தார்.

ஸ்ரீ ரகுகுலநாயகர் திருமாளிகைக்குள் எழுந்தருளினவுடனே புருஷர்களும்ஸ்திரீகளும்உடுத்தியிருந்தவஸ்திரங்களைஅவிழ்த்துவிடவேண்டுமென்றும்

கருத்தில்லாதவர்களாயினும் தாமே அவிழ்ந்துவிடுகிற அந்தவஸ்திரங்களை க்கீழே விழவொட்டாமல் பலமுறைகைகளால் தாங்கிக்கொண்டவர்களாகியு ம், ஆநந்த பரவசத்தால் தேகம் பூரிப்பதினாலும் — துள்ளித்துள்ளிக் குதிப் பதினாலும் — தங்களையறியாமல் வஸ்திரங்கள் அவிழ்ந்துபோய் மதுபானஞ் செய்த மயக்கத்தாலே நிருவாணிகளா யிருப்பவர்களைப் போன்றார்கள். பிரா மணர்களுடுத்தியிருந்த வஸ்திரங்களை வேசியர்கள்பறித்து உடுத்திக்கொண்டா ர்கள். அந்த வேசையர்களுடைய ஆடைகளை அந்தணர்கள் பறித்துத் தரித்து க்கொண்டார்கள். ஒருவருடலோடு ஒருவருடல் நெருங்கிப்படுதலாலே ஸ்ரீ சுவாமியினுடைய சேவையைக் காணும்படி சந்தனமுதலிய பூச்சுகளைப்பூசவு நேரமில்லாமல் அதிகவிரைவாய் வந்துவிட்டவர்களுடைய தேகமும், பூசிவந் தவர்களுக்கு இரட்டிப்பாகச் சந்தனமுதலானவைபட்டுப் பரிமளித்தன.

ஸ்ரீ ராமசுவாமியானவ ரிராஜசம்பத்தை நீங்கியிருந்த பதினான்குவருஷ மு நல்ல ஆடையும் இரத்தினாபரணங்களும் தரியாமல் துக்கத்தையே அநுப வித்துக் கொண்டிருந்த மங்கையர்கள் யாவரும் இப்போது சர்வாபரணங்க ளாலும் தங்கள் உடல்மறையும்படியாகத் தரித்துக் கொண்டமையால், அந்த ந்த அவயவங்களினிலக்கணந் தோன்றாமல் புருஷர்கள் மயங்கிநின்றார்கள். தேவபுருஷர்களுடைய தேகத்தி லணிந்திருந்த சந்தனம் இராஜபுருஷர்களு டைய தேகத்திலும் இராஜபுருஷர்களுடைய உடலிலணிந்த சந்தனம் தேவ புருஷர்களுடைய உடலிலும் பட்டுப் பரிமளிக்குங்காரணத்தால், தேவதாஸ் திரீகள் நம்முடையநாயகர் பூலோகஸ்திரீயை ஆலிங்கனம் செய்துவந்தாரெ. ன்றும் இராஜஸ்திரீகள் நம்முடையகணவர் தேவதாஸ்திரீயைத் தழுவிவந்தா ரென்றும் தங்கள் தங்கள் கொழுநர்களோடு ஊடிக்கொண்டார்கள்.

ஸ்ரீராமர் விபீஷணாதியர்க்கு அவ்வவ்வரண்மனைகளிலுள்ள பெருமைகளைக் காட்டென்று பரதாழ்வானுக்கு ஆக்யாபித்தல்.

கவி.

ஆயதோரளவிலையன் பரதனையருளினோக்கித்
தூயவீடணற்குமற்றைச் சூரியன்மகற்குந்தொல்லை
மேயவானரங்களாய வீரர்க்கும்பிறர்க்குநந்தம்
நாயகக்கோயிலுள்ள நலமெலாந்தெரித்தியென்றான்.

இவ்வாறு அரண்மனையெங்கும் சந்தோஷாரவாரமா யிருக்கும்போது ராமச் சந்திரரானவர் பரதாழ்வானைக் கருணையோடு பார்த்து, ஹேபரதா ! வி பீஷணாழ்வானையும் — சுக்கிரீவ மகாராஜாவையும் — மற்ற வானரப்படைத் த லைவர்களையும் - மற்றவர்களையும் அழைத்துப்போய், நம்முடைய சக்கரவர்த் தியினுடைய மாளிகையிலுள்ள சிறப்புக ளெல்லாவற்றையும் காட்டுகவென் று கட்டளையிட்டார். இப்படி கட்டளையிட்ட உடனே பரதாழ்வானனவர் சு வாமிக்குத்தண்டன் சமர்ப்பித்து, அவர்கள் யாவரையும் அழைத்துச்சென்று பலதிருமாளிகைகளைக் கடந்துபோய் தேவர்களுக்கு வாசஸ்தலமாய் நவ

ரத்தினங்கள்பிரகாசிக்கின்ற மேருமலைபோலவும் மகாலட்சுமிக்கு நிவாசமாகியும் விளங்குகின்ற தசரத சக்கரவர்த்தியினுடைய அந்தப்புரத்தைக் காட்டினர். அந்தத் திருமாளிகை வச்சிரம் — மாணிக்கம் — நீலம் - மரகதம் - இவை முதலிய இரத்தினங்களால் கட்டப்பட்டதாகையால் அவர்கள் அம்மணிகளுடைய கிரணகாந்தியால் உயிர்நிலைகுலைந்து, தங்கள் மனமும் மனோதிடமும் மிழந்து புத்திமயங்கி, கண்ணிமைகொட்டாமல் அப்படியப்படியே நின்று விட்டார்கள்.

அப்பாலவர்கள் யாவரும் அங்கிருந்துநீங்கி, இரத்தினங்களுக்குள் கௌஸ்துவ மணியைப்போல விளங்குகின்ற ஒருதிருமாளிகையைக் கண்டு இது யாதென்று வினவினார்கள். அவர்களை பரதாழ்வானனவர் பார்த்து, பூர்வத்தில் இக்ஷ்வாகுமகாராஜாவானவர் மூலதாமரையில் உற்பவித்த சதுர்முகனைநோக்கித் தவஞ்செய்துபெற்ற சதாகாலமும் இலக்குமிதேவி எழுந்தருளியிருக்கும் திருமாளிகையென்று சொன்னார். அதுகேட்டயாவரும் இதைத்துதிக்க எங்களால்முடியுமோ? முடியாது. என்றுதண்டன் சமர்ப்பித்துவிட்டு அப்பாற் சென்று மற்றோ ரிரத்தினமய மண்டபத்தைச்சேர்ந்து உட்கார்ந்தார்கள். அங்கு உட்கார்ந்துகொண்டு தாங்கள்கண்டுவந்த நானாவித விசித்திரமணிகளாலமைத்த தொழில்களை எண்ணி எண்ணி ஆச்சரியபூதர்களாயிருந்த அவர்களில் சுக்கிரீவமகாராஜாவானவர் பரதாழ்வானை நமஸ்கரித்து, ஓ பரிசுத்தகுணசீலரே! நம்முடைய பெருமானுக்குப் பட்டாபிஷேகஞ்செய்ய நல்லநாள் இன்னநாளென்று இன்னம் குறிக்காமலிருப்பதற்குக் காரணம் என்னவென்று கேட்டார்.

ஸ்ரீராமசந்திரர் பட்டாபிஷேகத்திற்காக ஆஞ்சநேயர் சகலதீர்த்தமுங்கொண்டுவரச்செல்லுதலும், வசிஷ்டமுனிவரைவரவழைத்துத் திருமுடிசூட்ட நாளிடுதலும்.

கவி.

எழ்கடலதனிற்றோய மிருநதிபிறவிற்றோயம்
தாழ்விலாதிவண்வந்தெய்தற் கருமைத்தோர்தன்மைத்தென்ன
ஆழியொன்றுடையோன்மைந்த னனுமனைக்கடிதினோக்கச்
சூழ்புவியதனையெல்லாங் கடந்தனன்காலின்றோன்றல்.

இப்படி கேட்ட மகாராஜாவை பரதாழ்வானனவர் பார்த்து, எழ்கடலினது தீர்த்தமும், கங்கைமுதலிய நதிகளினது தீர்த்தமும், இவ்விடத்தேவந்து சேர்தற்குச் சிலநாள்கழியுமல்லவா? அவைவந்தபின்புதான் ஒரு திவ்வியமுகூர்த்தநாள் நிச்சயித்துக்கொள்ள வேண்டுமென்றார். அதுகேட்ட சுக்கிரீவமகாராஜா சரிதானென் றொப்புக்கொண்டு, நம்முடைய ஆஞ்சநேயரிருக்கச்சே அந்தத் தீர்த்தங்கள் இங்கே வருவது பிரயாசமோவென்று சொல்லி ஆஞ்சநேயரைப் பார்த்தார். அந்த மகாநுபாவர் இந்தக்குறிப்பை அறிந்துகொண்டு, அந்தத்தீர்த்தங்கள்யாவுங் கொண்டுவரும்படி பூமியைத்தாண்டி அப்புறத்தே சென்றார்.

ஸ்ரீபரதரானவர் சாரதியை அழைத்து, எம்முடைய குலத்துக்கு ஆசாரியராகிய வசிஷ்டமுனிவரையும் - கணிதநூல்களில் வல்ல மற்றவர்களையும்-இங்கேவரும்படிச் செய்யவேண்டுமென்று சொல்ல, அப்படியே சாரதியானவன் சென்று அவர்களுக்குத் தெரிவிக்க, வசிஷ்டமுனிவரும் கணிதசாஸ்திரிகளும் வந்து மண்டபத்தைச் சேர்ந்தார்கள். வசிஷ்டபகவானைக் கண்டமாத்திரத்தில் யாவரும் எழுந்து தண்டன்சமர்ப்பித்தார்கள். உடனே பரதானவர் ஒரு திவ்வியாசனத்தைக் காட்டி அதிலெழுந்தருளும்படி கேட்டுக்கொள்ள வசிஷ்டர் அந்த ஆசனத்தின்மே லெழுந்தருளினார். மற்றவர்களும் தங்கள் தங்களுக்குரிய பீடங்களில் உட்கார்ந்தார்கள். ராமபத்திரருடைய மூத்த திருத்தம்பியார் வசிஷ்டமுனிவரை நோக்கி, சுவாமி! பூதேவியும் அஷ்டலட்சுமிகளும் களிக்கும்படி தசரதாத்மஜருக்குத் திருமுடிசூட்டு நாள் எந்தநாளென்று கேட்டார். அம்முனிசிரேஷ்டர் நன்றாய் ஆலோசித்து நாளையென்று சொன்னார்.

ஸ்ரீராமச்சந்திரர்க்குச்செய்யும் பட்டாபிஷேகத் திருமுகத்தைச் சகலதேசங்கட்கு மனுப்ப யாவருமயோத்தியாபுரியடைதல்.

கவி.

அடுக்கியவுலகமூன்று மாதரத்தூதர்கூவ
இடுக்கொருபேருமின்றி யயோத்திவந்திறுத்ததென்றால்
தொடுக்குறுகவியான்மற்றைத் துழனியையிறுதிதோன்ற
ஒடுக்குறத்துரைக்குந்தன்மை நான்முகத்தொருவற்குண்டோ.

உடனே யங்குள்ள காரியக்காரர்கள் இந்தப் பூமண்டலத்துக்கு ஏகசக்கராதிபதியா யிருந்த தசரத சக்கரவர்த்தியாருடைய திருக்குமாரருக்குத் திருமுடிசூட்டு நக்ஷத்திரத்தையும் - வாரத்தையும் - இலக்கினத்தையும் குறித்தெழுதி, இந்திரகுருவாகிய பிரகஸ்பதிக்கொப்பாகிய முனிபுங்கவர்களுக்கும்—மற்ற தேசாதிபதிகளுக்கும்-தூதுவர்கள் வசமாகத் திருமுகங்களை அனுப்பினார்கள். அந்தத்தூதர்கள் திருமுகங்களைக்கொண்டு இந்தப்பூலோகமே யல்லாமல் மற்றச் சுவர்க்கபாதலலோகங்களுக்கும் போய்ச் சுவாமியினுடைய பட்டாபிஷேக சுபச்செய்தியைத் தெரிவித்தனர்கள். அந்த மங்களச்செய்தியைக் கேட்டவுடனே திரிலோகவாசிகளும் ராமநாதரானவர் திருமுடிசூடிக்கொண்டு சிங்காதனத்தின்மே லெழுந்தருளியிருக்கும் திவ்வியசேவையைச் சேவிக்கவேண்டுமென்கிற பேரவாவால் தங்கள் சுயதேசத்தில் ஒருவருமில்லாமல் அயோத்திமாநகரத்துக்குள் வந்து சேர்ந்தார்கள், அப்படிவந்து சேர்ந்தவர்களுடைய வைபவத்தையும், முன்னே அயோத்திமா நகரத்திலுள்ள வைபவத்தையும், ஒரு முடிவுதோன்றும்படி சொல்லச் சதுர்முகராகிய பிர்மதேவராலு முடியுமோ? முடியாது. ஆதலால் அந்தவைபவங்களை யெடுத்து வருணிக்காமல் விட்டுவிட்டு மற்றவைகளைச்சொல்லப் புகுந்தானென்று என்னை யிகழ்பவர்களில்லை.

இப்படி எந்த உலகத்தார்களும் வந்து சேர்ந்தபோது வசிஷ்டமுனிவர் இராமபத்திர ரிடத்துக்கு எழுந்தருளினர். அவர்பின்னே பரதாழ்வானும்-சுக்கிரீவமகாராஜாவும் - விபீஷணாழ்வானும் – சாம்பவரும் - அங்கதப்பெருமானும்-மற்றப்படைவீரர்களும்சென்று, அனந்தகலியாணகுண பரிபூரணராயெழுந்தருளி யிராநின்ற ரவிகுல சந்திரருக்குத் தண்டன்சமர்ப்பித்து, சர்வசுவாமியே! நாளையதினம் தேவர் திருமுடிசூடு நல்லநாள். அதற்காக முதல்நாள் செய்யவேண்டிய தொடக்கத்தைச்செய்ய எழுந்திருமென்று கேட்டுக்கொண்டார்கள். அப்போது சாக்ஷா துருத்திரபகவானுக்குச் சமானமாகிய முனிசிரேஷ்டரும் அப்படியே கூறினர். அதுகேட்ட சுவாமியானவர் அக்கிரியைகளைச்செய்ய எழுந்துசென்றனர். பிரமதேவர் வந்திருந்து மயனென்னு நாமமுள்ள தெய்வத்தச்சனை நோக்கிப் பட்டாபிஷேகமண்டபங் கட்டவேண்டிய முறைமைகளைச் சொல்ல, மயனும் அந்தவண்ணமே பொன்னு நவரத்தினங்களுங் கொண்டு ஒருதிவ்யமணி மண்டபத்தை யாதொரு குறைவுமில்லாமல் நிருமாணஞ்செய்தான்.

முன்னே தீர்த்தங்கொண்டு வரும்படி தாவிச்சென்ற அஞ்சனாதேவிபுத்திரர் நான்கு திசைக்கடலினது தீர்த்தங்களையும், சப்த புண்ணியநதிகளினது தீர்த்தங்களையுங் கொண்டு தம்முடைய பிதாவைப்போல அதிக விரைவாய்வந்து சேர்ந்தார். அரசர்கள் பலநூறு யானைகளின்மேல் குடைநிழல்பரவப் பலபல ரத்தினக்குடங்களில் சரயுநதி தீர்த்தத்தைநிரப்பி ஏந்திக்கொண்டு, காளம் சங்கமுதலிய பலவாத்தியங்கள் முழங்கவந்து சேர்ந்தார்கள்.

இராமபிரான் சீதாபிராட்டியாரோடு பட்டாபிஷேகமண்டபத்தில் சிம்மாதனாரூடராயிருக்க யாவருமபிஷேகஞ்செய்தகங்குளிர வசிஷ்டமகாமுனிவர் சடங்கியற்றல்.

கவி.

மாணிக்கப்பலகைதைத்த வயிரத்தின்கால்கள்சேர்த்தி
ஆணிப்பொன்சுற்றுமுச்சி யழகுறச்சமைத்தபீடம்
எணுற்றபளிக்குமாடத் திட்டனரதனின்மீது
சேணுற்றதிரடோள்வீரன் றிருவொடும்பொலிந்தான்மன்னோ.

பளிங்குக்கற்களால் கட்டிய ஒரு சிங்காரமாளிகையில் மாணிக்கப்பலகைதைத்து வச்சிரக்கால்கள் சேர்த்துச்சுற்றிலும் பொன்னாற்சமைத்த பீடத்தின்மேல், ஸ்ரீராமபிரான் ஸ்ரீசானகிபிராட்டியாரோடு எழுந்தருளினர். சுமங்கலஸ்திரீகள் மங்களகிதங்கள் பாடவும், சாஸ்திரவிதிப்படி அந்தணர்கள் வேதகோஷம்செய்யவும், சங்கம் – தாளம் – முழவம் - பேரி - பூரி - இவைமுதலிய பல்வாத்தியங்கள் ஆரவாரிக்கவும், தேவர்கள் பூமழைசொரியவும் - வசிஷ்டர்முதலிய முனிவர்களும் - பிராமணர்களும் - மிகுந்த புத்திமான்களு நல்லொழுக்க முடையவர்களுமாகிய இராஜபுருஷர்களும் - மந்திரியர்களும் - முறையாக முன்னபிஷேகஞ் செய்தார்கள். சுக்கிரீவமகாராஜா, சாம்பவர்,

அநுமான், விபீஷணாழ்வான், குகப்பெருமான், முதலியயாவரும் முறையாகப் பின்னபிஷேகஞ் செய்தார்கள்.

அதுகாலத்தில் மரகதரத்தின மலையானது செந்தாமரைமலர்கள் பலபூத்துக் கங்காநதியினுடைய அலைகளின் துளிகளால் முழுமையு நனைந்து, இரண்டு பொற்குழைகளைத் தாவிப் பாய்கின்ற வேல்போலும் வடிவமைந்த விசால நேத்திரங்களையுடைய ஒருசொர்ணநிற மயிலோடும் வீற்றிருந்தாற்போல விளங்குகின்ற சானகிராமரை முனிவர்கள்முதலிய சாதுசஜ்ஜனங்கள் யாவரும் தங்கள் சனனநோய் நீங்கும்படி கண்களு மனமுங்குளிரச் சேவித்து ஆநந்தித்தார்கள். இந்தத் திருவபிஷேகத்தை வசிஷ்டமுனீந்திரர் பரமவைதிக மார்க்கத்தின்படி மந்திரங்களைச் சொல்லி நடத்தி, சுமந்திரனென்னு முதன்மந்திரியைச் சமீபத்தில் வைத்துக்கொண்டு மற்றச் சடங்குகளையும் இந்திரனுக்கு முடிசூட்டுங்காலத்தில் நடக்கும் கிரியா விசேடங்களைப்போல மிகுதியும் செய்தனர்.

இராமபிரானுக்கு வசிஷ்டமுனிவர் தமதுகரத்தால் முடிசூட்டுதல்.

கவி.

அரியணையநுமன்றாங்க வங்கதனுடைவாளேந்தப்
பரதன்வெண்குடைகவிக்க விருவருங்கவரிவீச
விரைசெறிகுழலியோங்க வெண்ணெயூர்ச்சடையன்றன்ன
மரபுளோர்கொடுக்கவாங்கி வசிட்டனேபுனைந்தான்மௌலி.

இவையெல்லா நடந்தபின்பு சிங்காசனத்தை மகாநுபாவராகிய அநுமான் சுமக்கவும், உடைவாளை அங்கதப்பெருமான்பற்றி நிற்கவும், பரதாழ்வான் வெண்கொற்றக்குடை பிடிக்கவும், லட்சுமண சத்துருக்னர்கள் இருபுறத்திலு நின்று சாமரைவீசவும், வாசனை வீசும்படியாகிய மலர்மாலையையணிந்த கூந்தலையுடைய சீதாபிராட்டியார் பக்கத்திலெழுந்தருளவும், திருவெண்ணெய்நல்லூர் சடையப்பமுதலியாருடைய மரபினராகிய வேளாளர்கள் மாணிக்க கிரீடத்தை யெடுத்துத்தர அக்கிரீடத்தை வசிஷ்டபகவானானவர் இராமபிரானுக்குச் சூட்டினார். அசுரகுலகுருவாகிய சுக்கிரனும் — தேவகுலகுருவாகிய பிரகஸ்பதியும் - கணிதசாஸ்திரவிதிப்படி குறித்த நல்லமுகூர்த்தத்தில் திரிலோகத்தார்களும் துள்ளித்துள்ளிக் குதித்து ஆனந்திக்க, சதுர்வேதங்களோடும் ஸ்ரீதேவி பூதேவிகளோடும் சர்வேசுரனாகிய ரவிகுலநாயகர் திருமுடிசூடியருளினார்.

அவாப்த சமஸ்தகாமராய்ப் பக்தபராதீனராய் விளங்குகின்ற ஞானமே திருமேனியாகவுடைய இராமபிரானானவர் தம்மிடத்தில் மிகுதியு மன்புடையோர்களுடைய கருத்தின்படி அதிதிருப்தி யுடையவராய்ச் சூடிக்கொண்ட திருமுடியானது அவருடைய சிரசின்மேல் பிரகாசித்துக்கொண் டிருப்பினும், சமஸ்தசேதனர்களு மிகுதியுங்களிக்கின்ற களிப்பை யோசித்துப்பார்த்தால் ஒவ்வொருசேதனனும் தன்தன்முடியிலும் அன்றந்தமுடியைத் தரித்துக்

கொண்டு இராச்சியாதிகாரம் பெற்றுக்கொண்டாற்போ லிருந்தது. பலநாள் தவஞ்செய்து தன்னுடைய இயற்கைக்குத்தக்க நாயகராகிய இராமச்சந்திரரையடைந்து இடையேபிரிந்து வருந்திக்கொண்டிருந்த பூதேவியானவள், இப்போது புருஷோத்தமராகிய இராமநாதரை மாந்தளிர்போலச் சிவந்து மிருதுவாகிய கைகளைநீட்டி ஸ்தனங்கள் அவருடைய மார்பிலழுந்தும்படி தழுவத்திருமுடி சூட்டிக்கொண்டு சானகிபிராட்டியோடு இராகவபிரான் பட்டாபிராமரா யெழுந்தருளியிருக்கும் திவ்வியசேவையைக்கண்ட வசிஷ்டர்முதலிய பிர்மரிஷிகளும் - மற்றப் பிராமணசஜ்ஜனர்களும் - ஆநந்தபரவசர்களாகிச் சர்வசுவாமியினுடைய திருவழகுக்குக் கண்ணெச்சில் படுமோவென்கிற பயத்தால் பிராமண ஸ்திரீகளைக்கொண்டு ஆர்த்திநீர்சுற்றி மங்களாசனஞ்செய்து, வேதாங்கத்தாலும் வேதமொழிகளாலும் துதிசெய்தார்கள்.

இராமபிரான் தம்பிமார்க்கும் வதிஷ்டமுனிவரால் மகுடந்தரிப்பித்து பரதருக்கு இளவரசுதரல்.

கவி.

விரதநூன்முனிவன்சொன்ன விதிமுறைவழாமைநோக்கி
வரதனுமிளைஞர்க்காங்கண் மாமணிமகுடஞ்சூட்டிப்
பரதனைத்தனதுசெங்கோ னடாவுறப்பணித்துநாளுங்
கரைதெரிவிலாதபோகக் களிப்பினுளிருக்குங்காலை.

விரதசீலராகியும் வேதவித்தாயுமுள்ள வசிஷ்டமகாமுனிவர் தமக்குக் கற்பித்த சாஸ்திரவிதிப்படி வேதவாக்கியங்களைக் கருதி, இராமபிரானனவர் இலக்ஷமணர் பரதர்சத்ருக்னர்களாகிய திருத்தம்பிமார்களுக்குத் தமதுகுலகுருவாகியவசிஷ்டமாமுனிவர் திருக்கரத்தாலேயே திருமுடிசூட்டுவித்து,பரதராகிய திருத்தம்பியாரை இளவரசாக்கி நீயுலகத்தைக்காப்பாயென்று தமது செங்கோலை யவரிடம்தந்து நாள்தோறும் கரைகாணுத பேரின்பமாகிய ஆனந்த சந்தோஷகரராகியிருந்தனர்.பரதமகாராஜர் இளவரசாகி இராச்சியத்தை அரசுபுரிந்தனர்.

திருமுடிசூட்டுப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

முப்பத்தெட்டாவது,

விடைகொடுத்த படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமபிரான் சீதாபிராட்டியாரோடு கொலுவிருத்தலும், பட்டாபிஷேகத்திற்கு வந்த பிராமணர் அரசர்இவர்களுக்கு வெகுமானமீந்தனுப்பலும், சுக்கிரீவர்முதலிய வானரவீரர்களுக்கும் விபீஷணர்க்கும் குகப்பெருமானுக்கும் வெகுமானமீந் தவ்வவர்களை யவரவரிருப்பிடம் செலுத்தித்தாம் தமது தம்பியரோடு அரசுபுரிதலும் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமபிரான் சீதாபிராட்டியாரோடு அரசுவீற்றிருத்தற் சிறப்பு.

கவி.

பூமகட்கணியதென்னப் பொலிபசும்பூரிசேர்த்தி
மாமணித்தூணிற்செய்த மண்டபமதனினுப்பண்
கோமணிச்சிவிகைமீதே கொண்டலுமின்னும்போலத்
தாமரைக்கிழத்தியோடுந் தயரதராமன்சார்ந்தான்.

விரிகடனடுவுட்பூத்த மின்னெனவாரம்வீங்க
எரிகதிர்க்கடவுடன்னை யினமணிமகுடமேய்ப்பக்
கருமுகிற்கரசுசெந்தா மரைமலர்க்காடுபூத்தோ
ரரியணைப்பொலிந்ததென்னவிருந்தனனயோத்திவேந்தன்.

பூமாதேவிக்கு ஆபரணம்போல் விளங்குகின்ற பசும்பொன்னினுற் சுவரொழுப்பி மாணிக்கத்தாற் செய்த தூண்களிறுத்திய மண்டபத்தின் மத்தியில் இரத்தினசிங்காதனத்தின்கண் மேகமுமின்னலும்போல தாமரைமலரின் கணெழுந்தருளியமகாலட்சுமியாகிய சீதாபிராட்டியாரோடு தசரதச்சக்கரவர்த்தியின் திருக்குமாரராகிய இராமமூர்த்தியானவர் பரந்துவிசாலித்த சமுத்திரத்தின்மத்தியில் மலர்ந்தமின்னலைப்போல் இரத்தினுபரணங்கள் மார்பில்பிரகாசிக்க, சூரியனைப்போலுஞ் சொலிக்கின்ற கூட்டமாகிய மணிகளாற்செய்த கிரீடம்சிரசில்விளங்க, செந்தாமரைமலர் மிகுதியுமலர்ந்த ஒருமேகராஜாசிங்காதனத்தி லிருந்ததைப்போல எழுந்தருளினுர்.

இவ்வண்ணம் சகலவைபவங்களையும் அனுபவித்துக்கொண்டிருக்குங் காலத்தில் மரகதமலையின் பக்கங்களில் வெண்மையாகிய சந்திரிகை பாய்வதுபோல வேல்போலும் கண்களையுடையமாதர்கள் தாமரைமலர்போன்ற கைகளால் சாமரைகளைப்பற்றி வீசவும், தம்முடைய ஜகன்மோகனுகாரதிவ்வியவடிவழகில் ஈடுபட்டு நாகர்களும் தேவர்களும் பலவாறு துதிக்கவும், சந்திரன்கண்டு உள்ளம்நோகும்படி பதினுலு லோகங்களிலும் தன்னுடைய குளிர்ந்த ஒளிவீசிக்கொண்டு பிரதாப லங்கேசுரனை வெற்றிகொண்ட கீர்த்தி மேலே ஓங்கிப் பரவியதுபோல் வெண்கொற்றக் குடைநிழலைச்செய்யவும், கற்புள்ள சுமங்கல பிராமணஸ்திரீகள் மங்கலகீதங்கள்பாடவும், ஸ்ரீமத்வேதமார்க்கப்பிராமண சனங்கள் ஆசீர்வசனங்களைச் சொல்லவும்,தாளம் முழங்கவும், சங்கமுதலான மங்கள வாத்தியங்கள் முழங்கவும்,சேல்போலப்பிறழ்கின்ற கருங்கண்களையும் கோவைக் கனிபோன்ற சிவந்தவாயையும் தாமரைமலர் போன்ற முகத்தையுமுடைய செளந்தரியவதிகளாகிய வேசியாஸ்திரீகள் நடனஞ்செய்யவும், அலைகளையெறிந்துகோஷிக்கின்ற சமுத்திரத்தினுேசையும் அடங்கும்படி நானுவாத்தியங்கள் முழங்கும்படியாகஐம்பத்தாறுதேசாதிபதிகளும் அயோத்தியாநகரத்தினது பர்வதா காரமாகிய கோபுரவாயலில் நெருங்கி வந்து பகவானுடைய திவ்விய கீர்த்திகளையெடுத்துப் புகழ்ந்துமுடிகள் ஒன்றோடொன்று தாக்கும்படி வணங்குந்தோறும் சீர்பாதங்களிரண்டும் சிவக்கவும், சுமந்திரர் முதலாகிய மந்திரிமார்களும் முனிவர்களும் படைத்தலைவர்களும்

சூழ்ந்து துதிக்கவும், பவளம்போன்ற சிவந்தவாயால்கற்புடைய மங்கையர்கள் பல்லாண்டு சொல்லவும், சிங்காசனத்தின்மேல் தேவராசனைப்போல இராமச்சந்திரர் அரசுவீற்றிருந்தார்.

நித்தியவிபூதி லீலாவிபூதி நாயகராகிய இராகவப்பெருமான் அரசு வீற்றிருக்கும்போது மயிந்தன் துமிந்தன் கும்பன் அகம்பன் அநுமான் குமுதாக்ஷன் சதவலி குமுதன் ததிமுகன் முதலாகிய அறுபத்தேழுகோடிவானரவீரர்களோடு எழுபது வெள்ளவானர சேனைகளுஞ்சுற்றிவர சூரியபுத்திரராகிய சுக்ரீவ மகாராஜாவும், ராட்சசகுலவீரரோடு விபீஷணனும்வானும், புள்ளிகளமைந்த புலியினதுவாலே இறுக்கக்கட்டிய அரையும் சுழல்கின்ற செங்கண்ணும் மலைபோல் உருண்டு திரண்ட புயங்களும் உடையவராய்த் தம்முடைய வேடுவச்சேனை சூழ்ந்துவர ஒரு சிங்கம்போல் குகப்பெருமானும் வந்து தண்டன் சமர்ப்பித்துக் கைகளைக் கூப்பிக்கொண்டு நின்றார்கள். இராமச்சந்திரரும் அவர்களிடத்துத் தமக்குண்டாகிய பேரன்பு மறையாமல் முகத்தில் தோன்றும்படிக் கருணையாகக்கடாக்ஷித்து அவர்களைக்கட்டி ஆலிங்கனஞ் செய்ததுபோலவே அன்போடு இனியவார்த்தையால் தமது திருப்பவள வாய்திறந்து யாதொரு குற்றமில்லாத வெற்றியாளர்களே! இங்கேஉட்காருமென்று சொல்லினர். அவர்கள் யாவரும் அப்படியே ஆசனங்களின்மேல் உட்கார்ந்து இமைகொட்டாமல் சுவாமியினுடைய வடிவழகைப் பார்த்துப்பார்த்து ஆனந்தித்துக்கொண் டிருந்தார்கள் ஸ்ரீமத்வேதமார்க்கத்தில் ஒழுகாநின்றமெய்ஞ்ஞானச்செல்வர்களாகிய முனி சிரேஷ்டர்களும் நான்குவேதங்களையும் ஐயமறஓதியுணர்ந்த கிரகஸ்தாச்சிரமத்தவர்களும் வேதத்திலும் மநுஸ்மிருதியிலும் சொல்லியபடி நடக்கின்ற உண்மையறிவுடைய வானப் பிரஸ்தாச்சிரமத்தர்களும் குருகுலவாசஞ்செய்து, சாஸ்திரங்களையும்வேதங்களையும் அவற்றைச்சார்ந்த நூல்களையும் சந்தேக விபரீதமில்லாமல் கற்றறிகிற பிரமசாரியாச்சிரமத்தார்களும் பாரம்பரியமாய்ப் பலநூல்கற்றுணர்ந்த வித்வஜனர்களும் அயோத்தியாநகரத்துக் கிறைவராகிய ஸ்ரீரகுநாயகரை முறையாகச்சூழ்ந்து தங்கள் தங்களுக்குரிய பீடங்களின்மேல் உட்கார்ந்தார்கள் பிரமேந்திராதி சமஸ்த தேவர்களும் முனிவர்களும் வேண்டிக்கொண்ட பிரார்த்தனையின் பொருட்டுத் திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான்மேல் சயனித்து திருக்கண் வளர்வதைவிட்டு நீர்வளப்பமிகுந்த அயோத்திமாநகரத்தில் வந்து அவதரித்த நிர்மல ரூபராகிய காகுஸ்தரை வணங்கித்துதித்துச் சமஸ்த தேசாதிபதிகளும் மற்றவர்களும் தங்களுக்குரிய ஆசனங்களின்மேல் வீற்றிருந்தார்கள்.

பட்டாபிஷேகத்திற்கு வந்த பிராமணர்களுக்கும் சகலதேசவரசர்களுக்கும் ஸ்ரீராமச்சந்திரர் வெகுமானந்தந்துவிடையீதல்.

கவி.

மறையவர்தங்கட்கெல்லா மணியொடுமுத்தும்பொன்னு
நிறைவளம்பெருகுபூவுஞ் சுரபியுநிரைத்துமென்மேல்

குறையிதென்றிரந்தோர்க்கெல்லாங் குறைவறக்கொடுத்துப்பின்னர்
அறைகழலரசர்தம்மை வருகெனவருளவந்தார்.

இந்தப்பிரகாரம் நித்தம்நடந்துகொண்டுவர இரண்டுமாதங்கழிந்தது. தேவர்கள் முதலாகிய சாதுஜனங்களுடைய துக்க நிவாரணார்த்தமாகத் திருவயோத்தியாபுரியி லவதரித்து அவைதிக மார்க்கானுசாரிகளாகிய துஷ்டராட்சசர்களைச் சங்கரித்த ராமபிரானுனவர், சதுர்வேதிகளாகிய பிராமணர்களுக்கெல்லாம் ரத்தினமும் முத்தும் பொன்னும் விளையத்தக்கபூமியும் பசுவும் தானஞ்செய்தும்,எங்களுக்கு இன்னதுகுறைவு என்றுசொல்லியாசித்தவர்களுக்கெல்லாம் அவர்களுடைய உள்ளக்குறைவு நீங்கும்படிவேண்டியவற்றைத் தானஞ்செய்தும், அவர்களுக்குத் தண்டன்சமர்ப்பித்து அவர்களெல்லாரையும் அனுப்பிவிட்டு அரசர்களை வரும்படி உத்திரவுசெய்தனர்.அப்படியே அரசர்களும் வந்தார்கள் வந்த அரசர்களைக் கிருபையோடுபார்த்து அவரவர்களுக்குத் தக்கபடி தேசம்-சிவிகை-ரத்தினகிரீடம்-ரத்தினுரம்-முத்தார மிவைமுதலிய ஆபரணங்கள் - குதிரை-தேர்-யானை — பீதாம்பரம் இவைகளை உள்ளன்போடு கொடுத்து அவர்கள் தங்கள்தங்கள் பதிகளுக்குப் போகும்படி கட்டளையிட்டனர்.

சுக்ரீவர் ஆஞ்சநேயர்முதலிய வானரவீரர்கட்கும் விபீஷணருக்கும் குகப்பெருமானுக்கும் வெகுமானமீதல்.

கவி.

சம்பரன்றன்னைவென்று தயரதனின்றகாலத்
தும்பர்தம்பெருமானீந்த வொளிமணிக்கடகத்தோடும்
கொம்புடைமலையுந்தேருங் குரகதக்குழுவுந்துசும்
அம்பரத்தனந்தர்நீத்தா னலரிகாதலனுக்கீந்தான்.

வெளுத்த திருப்பாற்கடலில்யோகநித்திரை செய்வதைவிட்டு அயோத்தியாநகரத்தில் வந்த ஸ்ரீராமச்சந்திரரானவர் சுவர்க்கலோக வாசிகளை நானுவித இடுக்கண்செய்த சம்பராசுரனைசெயம்கொண்ட தசரதசக்கரவர்த்தியாருக்கு அக்காலத்தில் இந்திரன் மனங்களித்துக் கொடுத்த தெய்வமணிக ளிழைத்த கடகத்தையும், யானைகளையும், குதிரைகளையும், தேர்களையும் நல்லசொர்னுபரணங்களையும் சுக்கிரீவமகாராஜருக்கு வெகுமதியாகக் கொடுத்தார். யாதொருபழிச்சொல்லு மில்லாத ஜயராமரானவர் அறிவுடையோரால் அங்கதனென்னும்பெயரை அழகுபடும்படி திருத்தும் விதம்போல இட்சுவாகு சக்கரவர்த்திக்குப் பூர்வத்தில் பிர்மதேவரானவர்கொடுத்திருந்த வாகுவலயத்தை அங்கதப்பெருமானுக்குக் கொடுத்தார். அப்போது அங்கதப்பெருமான் கொண்ட ஆனந்தத்தை யாராலறிந்து சொல்லிமுடியும். மேலும் அந்த அங்கதப்பெருமானுக்குப் பெரியவிலைமதிப்புள்ள ரத்தினுரத்தையும் பீதாம்பரத்தையும் குதிரைகளையுங் கஜசிரேஷ்டங்களையும் கொடுத்து உனக்கு நீயேஅல்லாமல் வேறு ஒப்பில்லாதவனே!அப்பா அங்கதா! சூரியகுமாரராகிய சுக்கிரீவமகாராஜாவைப் பிரியாமல் அவருடைய அபிமதானுசாரியாய் நடந்து கொள்ளென்றார்.

நித்தியமாய் வழங்கிக்கொண் டிராநின்ற கீர்த்தியையுடைய சக்கரவர்த்தித்திருக்குமாரர் அனுமானைக் கருணையோடு கடாட்சித்து நீசெய்த மகோபகாரத்தை எமக்கு யார்செய்யப் போகிறார்கள் அதற்குப் பிரதியுபகாரமாக யான் செய்யவேண்டியதென்ன விருக்கிறது. எமக்காகக்கொடிய அரக்கர்களோடு போர்செய்த திண்ணியதோள்களையுடையானே! இதோ என்மார்பி லணிந்த வச்சிர மணியாரத்தை அணிந்துகொள் ளென்றார். என்று சொன்னமாத்திரத்தில் ஆஞ்சநேயரானவர் மிகவும் நாணத்தோடு தலைவணங்கி வாயைப்புதைத்து முன்தானையை மடக்கியொதுக்கிக் கொண்டு ஒன்றும்பேசாமல்பயபக்தியோடு நின்ற வாயுபுத்திரரை நன்றாயுற்றுகடாட்சித்து ஸ்ரீசர்வசுவாமியானவர் தம்முடைய திருமார்பிலணிந்திருந்த வச்சிரரத்தினாரத்தையும் மெல்லிய பீதாம்பரத்தையும் யானைகளையும் குதிரைமுதலியவையும்கொடுத்தனர். சர்வேசுரனுடைய திருமார்பைநீங்கி மிதுலாபுரியில் திருவவதாரஞ்செய்த சானகிபிராட்டியாரை சுவாமியானவர் கடைக்கண்ணால் கடாட்சித்தனர். அக்குறிப்பை அறிந்துகொண்டு பிராட்டியாரும் முன்னே தமக்குச்சரஸ்வதிதேவிசமர்ப்பித்த முத்தாரத்தைத்தமது திருக்கரத்தால் எடுத்துமகாபிரீதியோடு சிறியதிருவடிகளுக்குக் கொடுத்தனர். சமஸ்தஅண்டங்களையு மவற்றிலுள்ளசேதனா சேதனங்களையும் முன்னே தம்முடைய உந்திக்கமலத்தின் வழியேதந்த பரந்தாமராகிய ராமநாதரானவர் விண்மீன்களைவென்று சந்திரனுக்கொப்புள்ளதும் இந்திரன்தரித்துக் கொள்ளத்தக்கதுமாகிய முத்தாரத்தையும் மற்றுஞ்சில ஆபரணங்களையும் யானை குதிரைகளையும் பீதாம்பரத்தையும் சாம்பவந்தருக்கும், சிறந்தநவமணிமாலையையும் முத்துமாலையையும் பொன்னிழையால் நெய்தவஸ்திரத்தையும் ஒப்பில்லாத பொன்னணிகளையும் மற்றும்பலவணிகளையும் யானை குதிரைகளையும் நீலனுக்குக்கொடுத்தார். ஆதிகாலத்திலே சதுர்முகனைச் சிருட்டித்த பகவானாகிய ரகுநாயகர் மத்தகஜங்களையும் சுவேதாசுவங்களையும் அனேகமான பொன்னாபரணங்களையும் மாணிக்க மாலையையும் மேலும்யோக்கியமான பலவஸ்துக்களையும் சதவலிஎன்னும் படைவீரனுக்கும், விலைமதிக்க அருமையானதும் தனக்குச் சமானமில்லாததுமாகிய ஒளியுள்ள மணியாரத்தையும் பொன்வஸ்திரத்தையும் மதத்யானை குதிரைகளையும் கேசரி என்னும் படைத்தலைவனுக்குங்கொடுத்தார். கோசலநாட்டு அரசனாகிய ராகவபிரான் நாகரத்தினாரங்களையும் கனகாம்பரத்தையும் கஜதுரகங்களையும் இப்படிப்பட்ட அளவில்லாத திவ்விய வஸ்துக்களையும் குமுதன் தாரன் பனசன் ஆகிய இவர்களுக்கும், கண்டோர் ஆநந்திக்கும்படி அறுபத்தேழுகோடி படைத்தலைவர்களில் அவரவர்களுடைய யோக்கியதைக்குத் தக்கபடி முத்தாரம் மணியாரம் பொன்னணிகள் வஸ்திரங்கள் கஜம் துரகம் முதலியவற்றைக் கொடுத்து இனியவார்த்தைகளைப்பேசி, கடலைப்போல ஓங்கிப்பெருகிய எழுபதுவெள்ளம் வானரவீரர்களைக் கடாக்ஷித்து தம்முடைய கருணையைப் பாலித்தனர்.

வானரர்யாவர்களுக்கும் நடக்கவேண்டிய முறைமையாவும் நடத்தினார் க்ஷீரசாகரத்தில் திருவனந்தாழ்வான்மேல் செய்யும் அறிதுயிலைநீங்கி அயோத்தியில்வந் தவதரித்த எமதய்யனானவர் பின்பு மின்னலினது திரட்சியையொத்த முடியைத்தரித்த சிவந்த நேத்திரங்களையுடைய விபீஷணாழ்வானைக் கிரு

யையோடு திருக்கண்மலர்சாத்தி இந்தச் சராசரங்களையெல்லாம் சுமக்கும் பெருவலியுள்ள உனக்கு நீயே ஒப்பில்லாமல் வேறொருவரும் ஒப்பாகார். ஒருவருண்டென்று சொல்லினும் பொன்னை இரும்பு ஒத்ததாயினும் ஒப்பாகமாட்டாரென்று அவருடைய உண்மைநிலையை எடுத்துப் புகழ்ந்து முன்னேதேவர்கள் தமக்குச் சமர்ப்பித்த ரத்தினக்கடகத்தையும் மதயானைகளையும் குதிரைகளையும் ரதங்களையும் மணிகளழுத்திய பொன்னணிகளையும் பொன்னிழையால் நெய்யப்பட்ட வஸ்திரங்களையும் கலவைச் சாந்தையும் செஞ்சந்தனத்தையும் அன்போடு கொடுத்தார். சிருங்கபேரிய மென்னும் நகரத்துக்கு அரசனாகிய குகப்பெருமானைக் கடாக்ஷித்து குற்றமற்ற துணைவராயினார்க்கு என்ன உபகாரஞ்செய்கிறது என்றுசொல்லி யானைகளையும் குதிரைகளையும் நிதிக்குவியலையும் உயர்ந்தவிலையுள்ள வஸ்திரங்களையும் ரத்தினாபரணங்களையும்கொடுத்து அவருடைய ஊர்க்குப்போகும்படி விடைகொடுத்தனர்.

ஸ்ரீராமபிரான் சுக்ரீவர் ஆஞ்சனேயர்ஆதி வானரவீரர்கட்கும் விபீஷணர்க்கும் தத்தமிடஞ்சார விடையீதல்.

கவி.

அனுமனைவாலிசேயைச் சாம்பனையருக்கன்றந்த
கனைகழற்காலினானைக் கருணையங்கடவுணோக்கி
நினைவதற்கரிதுநும்மைப் பிரிவென்றனீவிர்வைப்பும்
எனததுகாவற்கின்றென் னேவலினேகுமென்றான்.

உடனே கருணாசலதியாகிய ராமநாதரானவர்சிறியதிருவடிகளையும்அங்கதப்பெருமானையும்-சாம்பவரையும்-சுக்ரீவமகாராஜாவையும்நோக்கி உங்களைப் பிரியவும் பிரிவை நினைப்பதற்கும் கூடாமையாயிருக்கிறது. நீங்கள்வசிக்கும் கிட்கிந்தையானது உங்களுடையதல்ல என்னுடையதே அங்குள்ள குடிகள் காப்பாரில்லாமல் வருந்துவார்களேயானால் அக்குற்றம் என்னைச்சாருமல்லவா? ஆகையால்,என்னுடைய ஆக்கினையால் கிட்கிந்தைக்குச் சேனைகளோடு போய்ச் சேருங்களென்று உத்தரவுதந்து, விபீஷணாழ்வானையும் நோக்கி வானரேந்திரர்களுக்குச் சொன்னதுபோலவே இன்சொற்கள்சொல்லி விடைகொடுத்தார். சர்வ சுவாமியானவர் இப்படி தங்களுக்கு விடைகொடுத்தவுடனே அதிவிவேகிகளும் வேதஞ்சொல்லும் சத்தியமார்க்கத்தில் நடப்பவர்களு மாகிய அவர்கள்யாவரும் சுவாமியைப்பிரிகிறோமென்று சிறிதும் நெஞ்சங்கலங்காமல்,குதுகலமாகிய நெஞ்சையுடையவர்களாகிய நம்முடைய சுவாமியானவர் ஏவியதைச்செய்வதே நமக்குக்கடமையென்றுணர்ந்து பரதாழ்வானையும், ராமாநுஜரையும் சத்துருக்கப் பெருமானையும் வசிஷ்டபகவானையும் தாய்மார்கள் மூவரையும் மகேசுவரியாகிய சானகிபிராட்டியாரையும் சர்வேசுரனாகிய ராகவபிரானையும் தனித்தனியாகப் பிரதட்சணஞ்செய்து நமஸ்கரித்து அவரவர்களிடத்தில் செலவு பெற்றுக்கொண்டு பிரயாணப்பட்டுத் திருவயோத்தியா புரியைக் கடந்தனர்கள்.

குகனாதி சுக்ரீவன் ஆஞ்சநேயர் விபீஷணர்யாவரும் பிரயாணமாகி அவரவர்களை அவரவர்பதியினிறுத்தி விபீஷணர் இலங்காநகரம் புகுதல்.

கவி.

குகனைத்தம்பதியினுய்த்துக் குன்றினைவலஞ்செய்தேரோன்
மகனைத்தன்புரத்தில்விட்டு வாளெயிற்றரக்கர்சூழக்

ககனத்தின்மிசையேயெய்திக் கனைகடலிலங்கைபுக்கான்
அகனுற்றகாதலண்ண லலங்கல்வீடணன்சென்றன்றே.

கங்கைக்கரையின் சிருங்கேரிய நகரத்தில் குகப்பெருமானை இருக்கவிட்டு, அப்புறஞ்சென்று கிஷ்கிந்தா புரியை அடைந்து அங்கே சுக்கிரீவமகாராஜர் அங்கதப்பெருமான் சாம்பவர்சிறியதிருவடிகள் நீலன் பனசன் முதலானவானரவீரர்களை இருத்தி, ககனமார்க்கமாக ராகவபிரானுடைய கருணைக்குப் பாத்திரபூதராகிய விபீஷணாழ்வானனவர் சமுத்திரஞ்சூழ்ந்த இலங்காநகரமே போய்ச்சேர்ந்தார்.

ஸ்ரீராமமூர்த்தி அரசுபுரிதல்.

கவி.

அய்யனுமவரைநீங்கி யடிச்செறிதுணைவரோடும்
வய்யகமுழுதுஞ்செங்கோன் மனுநெறிமுறையிற்செல்லச்
செய்யமாமகளுமற்றைச் செக்தலம்களுமற்றும்
நய்யுமாறின்றிக்காத்தா னுனிலம்பொறைகடீர்த்தே.

உம்பரோடிம்பர்காறு முலகமோரேழுமேழும்
எம்பெருமானென்றேத்தி யிறைஞ்சிநின்றேவல்செய்யத்
தம்பியரோடுந்தானுந் தருமமுந்தாணிகாத்தான்
அம்பரத்தனந்தர்நீங்கி யயோத்திவந்திறுத்தகாளே.

இவ்வண்ணம் தமது பட்டாபிஷேக மகோற்சவத்தைக் கண்டுகளிக்கவந்த யாவர்களுக்கும்விடையீந்து இப்பூவுலகமுழுது மனுநீதி சாஸ்திரமுறையின்படி செங்கோல்நடாத்தி சிதேவி பூதேவி இவர்கள்வருத்தநீங்க, தேவலோகமும் பூலோகமுமாதிய பதினாலுலோகங்களும் எமதுகர்த்தாவாகிய பரந்தாமனேயென்று ஸ்தௌத்திய பாராயணஞ்செய்து குற்றேவல்களைச்செய்ய, தம்பிமார்களாகிய இலட்சுமணர் பரதர் சத்துருக்னர் இவர்களோடும் தானும்தருமமுமாக, பாலசமுத்திரத்தில் திருவனந்தாழ்வான்மீது அறிதுயிலைநீங்கி அயோத்திமாநகரத்தி லவதரித்த ஸ்ரீராமமூர்த்தியானவர் இவ்வுலகத்தை அரசாக்ஷிசெய்தனர்.

கவி.

இராவணன்றன்னைவீட்டி யிராமனுய்வர்துதோன்றித்
தராதலமுழுதுங்காத்துத் தம்பியுந்தானுமாகப்
பாரபரமாகிநின்ற பண்பினைப்பகருவார்கள்
நராபதியாகிப்பின்னு நமனையும்வெல்லுவாரே.

விடைகோடுத்தபடலம் - முற்றிற்று.

உயுத்தகாண்டம் - சம்பூரணம்.

ஸ்ரீராமஜெயம்.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.


№ 75. அயோத்தியாபுரியில்கொலுவீற்றிருக்கும் ஸ்ரீ இராமனை அகஸ்த்தி
யமுனிவர்கள் காணுதல்.



விசுவகருமன். மாலியவான், சுமாலிமாலி, இவர்களுக்கு இலங்கை
யை நிருமத்தது.



ஸ்ரீ



ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீசீதாலட்சுமண பரதசத்துருக்ன அநுமத்சமேத

ஸ்ரீராமச்சந்திர பரப்பிரம்மணேநம:.

ஸ்ரீமத் ராமாயணவசனம்.

ஒட்டக்கூத்தர் செய்தருளிய

ஏழாவது,

உத்தரகாண்டம்.

தோத்திரக் கவி.

வெள்ளியங்கிரியைமீதே வேரொடுமெடுத்தவீரக்
கள்ளவன்புயநாலைந்துங் கனகமாமவுலிபத்துந்
துள்ளியம்புவிமேல்வீழ வொருகணைதொடுத்துவிட்ட
வள்ளலம்புயமேயன்ன மலரடிவணக்கஞ்செய்வாம்.

ஒன்றாய்ப்பலவா யுளவாயில வாயுரைப்போர்க்
கன்றாகியாமா யருவாயுரு வாகிமெய்ம்மை
குன்றாதஞானக் கொழுந்தாய்க்குண மூன்றிறந்து
நின்றானியாவ னவனீள்கழ னெஞ்சில்வைப்பாம்.

ஸ்ரீராமஜெயம்.

முதலாவது,

திருவோலக்கப்படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமபிரானானவர் அயோத்தியாபுரியில் மகுடாபிஷேகஞ்செய்துகொண்டு தம்பியர் மூவரோடும் சீதாபிராட்டி சமேதராய்த் தமக்கொருவர் நிகரின்றி கொலுவீற்றிருந்து அரசியற்றி வருகிறநாளையில் ஒருநாளவரைக் காணவேண்டி அகஸ்தியராதி மாமுனிவர்கள் அங்குவர, அவர்களைப்பகவான் உபசரித்துப்போற்ற அம்முனிவர்கள் சுவாமியைப் புகழ்தல் சொல்லப் படுகின்றது.

ஸ்ரீராமபிரான் அயோத்தியாபுரியில் சிங்காதனரூடராகக் கொலுவீற்றிருத்தற் சிறப்பு.

கவி.

கண்ணாருலகிற் கருதார்குலக் கட்டைவாங்கித்
தண்ணார்தருமந் தழைக்கத்தனிக் காவல்பூண்டு
மண்ணோர்வணங்க மதிவெண்குடை மேனிழற்ற
விண்ணோர்குலம்வாழ விராகவன் வீற்றிருந்தான்.

பூலோகத்தினிடத்திலே சுவர்க்கலோகம்போல விளங்கும் அயோத்தியாநகரத்தில் அளவில்லாத விசித்திரமான தேவேந்திர சபையைப் பார்க்கிலும் அதிகமான சிங்காரங்கள் பொருந்திய கொலுமண்டபத்தி னடுவிலே, சுவர்க்கமத்திய பாதாளமென்று சொல்லப்பட்ட மூன்றுலோகங்களு நடுங்கச்செய்யும் கொடிய துஷ்டர்களாகிய இராவண கும்பகர்ணாதியர்களையும் பொல்லாதபாபமே ரூபமாகக்கொண்ட இராக்ஷதகுலத்தையு நாசமாகும்படிச் சம்ஹரித்துச் செயம்படைத்திருக்கின்ற ஸ்ரீராமரானவர், சோதிமயமாகப் பிரகாசிக்கு மாணிக்ககிரீடமும்-மகரகுண்டலமும்-வாகுவலயமும்-வச்சிரகடகமும்-இரத்தினகங்கணமும்-கொத்துச்சரப்பணியும்-முத்துமாலையும்-மோகனமாலையும்-பொற்பூணநூலும்-பட்டையரைஞாணும்-பவித்திர மோதிரமும்-இராஜ முத்திரைமோதிரமும்-வீரகண்டாமணியுமாகிய சகல திவ்வியாபரணங்களோடு சித்திரப்பூம்பட்டாடையும்-உத்தரீயமும்-பீதாம்பரமுந்தரித்து, சீதளகளபசந்தன கஸ்தூரியும்-சுகந்தபரிமள புஷ்பமாலைகளுமணிந் தலங்கரித்துக் கொண்டு, திருத்தம்பிமார்களோடு சர்வாபரண அலங்கார அதிரூபசவுந்தரியவதியாய் விளங்கும் ஸ்ரீமகாலட்சுமியாகிய சீதாதேவி சமேதராய் ஐம்பத்தாறு தேசத்தையாளுகின்ற மகாராஜாக்களெல்லாம் கிரமங்கிரமமாகநின்று குற்றேவல்களைக் கேட்கவும், முப்பத்துமுக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிர முனிவர்களாதியாவர்களும் பூர்வத்தில் அடியேங்களைக்காப்பாற்றவேண்டுமென்று முறையிட யோகநித்திரைநீங்கிப் பாற்சமுத்திரத்தின் மத்தியில் சர்ப்பசயனத்தின்மீது எவ்வளவு இன்பத்தோடு எவ்வண்ணம் வீற்றிருந்தனரோ அவ்வண்ணம் சபாமண்டபத்தின் மத்தியிலிட்ட சிம்மாதனத்தின்மீது எழுந்தருளியிருந்தார்.

ஸ்ரீராமச்சந்திரதரிசனங்காணவந்த மகாரிஷிகளை சுவாமிக்ஷேமலாபம் விசாரித்தல்.

கவி.

அந்தவேலை யதனுளடங்கிய, குந்தவேலையில் வாட்கைக்கொடியவர்
நந்தவேலை யடங்கலுநக்கினோன், சந்தவேலையைச் சார்சமதக்கினி.

இவ்வண்ணம் சீதாராமன் கொலுவீற்றிருந்த சமயத்தில் குந்தப்படை-வேற்படை-வாட்படை முதலியவாயுதங்களைக் கையிலேந்திய அசுரர்கூட்டங்களெல்லாம் கெடும்படி சமுத்திரத்தைப்பானம்பண்ணிய அகஸ்தியமாமுனி

வர்—சமதக்கினிமாமுனிவர் — காசிபமாமுனிவர்—பரத்துவாச மாமுனிவர் — தௌமியமாமுனிவர் — கௌதமமாமுனிவர் - கோசிகமாமுனிவர் — அத்திரி மாமுனிவர் — சுகப்பிரம்மமாமுனிவராதிய அநேகமுனிவர்கள் அயோத்தியா நகரத்திற் பிரவேசித்து, ஆஸ்தானமண்டபத்துக்கு முன்னாகவிளங்கும் கோபுரவாசலில் வந்து, அந்தவாசலைக் காத்திருக்கும் காவலாளரைப்பார்த்து, ஓ சேமத்தலைவரே ! நீங்கள் ஸ்ரீராமரிடம்போய் நாங்களும்முடைய பட்டாபிஷேகத் திருக்கோலங்காண அபேட்சித்து வந்திருக்கின்றோமென்று அறியப்படுத்துவீரென்று சொல்லினர். அவர்களும் அப்படியே ஸ்ரீராமருக்கு அறியச்செய்து, அவர்சொல்லியனுப்பிய உபசாரங்களைச் சொல்லி அந்த முனிவரர்களை யுள்ளேயழைத்துக்கொண்டு போனார்கள். அப்போதவர்கள் ஆஸ்தான மண்டபத்துக்குள் அடுத்தமாத்திரத்தில் இராமர் அந்தமுனிவர்களைக் கண்டு துணுக்குற்றுச் சிங்காதனத்தைவிட் டெழுந்திருந்து சீக்கிரமாகவந்து, அவர்களுடைய பாதங்களிலே தீர்க்கதெண்டனாக நமஸ்காரம் பண்ணி வந்தனஞ்செய்து, அநேகமான உபசாரவார்த்தைகள் சொல்லி அவர்களை முன்னே நடத்தித்தாம் பின்னேநடந்து அழைத்துப்போய் அந்த ஆஸ்தான மண்டபத்தில் நிறைந்திருக்கும் சகலமானரிஷிகளும் — தேவர்களும் - இராஜாக்களும் - மற்றுமுள்ள எல்லோருமெழுந்திருந்து வந்தனங்கள் செய்ய அந்த முனிவர்களுக்கு ஆசனங்கள் கொடுத்துப் பூசித்து எழுந்தருளியிருக்கச் செய்தார். அவர்களும் ஸ்ரீராமருக்கு ஆசீர்வாதம் செய்தார்கள்.

அதன்பின்பு ஸ்ரீராமர் மகாசந்தோஷமாக எழுந்தருளியிருக்கும் சமதக்கினிபகவான் முதலான மகாரிஷிகளைப்பார்த்து, தேவரீர்களுடைய ஆச்சிரமங்களும் — யாகசாலைகளும் — பசுக்களும் — நன்றாயிருக்கின்றனவோ ? வேதங்கள் — ஆகமங்கள் — சாஸ்திரங்கள் — இதிகாசங்கள் — புராணங்கள் - இவைமுதலாயுள்ள சகலவித்தைகளையும், உங்களுடைய புத்திரர்களும் வித்தியார்த்திகளும் நன்றாயோதிவருகிறார்களோ ? நித்திய கன்மானுஷ்டானமுதலான காரியங்களும் — காலநியமங்களும் — தப்பாமல் நடந்து வருகின்றனவோ ? என்று அந்தரங்கவிநய பயபத்தியுடனே மாதுரியவசனமாக க்ஷேமங்களை விசாரித்தார். அப்படி ஸ்ரீராமர் கேட்டருளிய சுகவிருத்தியென்னு மதுரவசனமாகிய அமிர்தத்தைப்பானம் பண்ணினவர்களான அம்முனிவர்கள் மகாசந்தோஷத்தை யடைந்து, அந்த ஸ்ரீராமரைப்பார்த்துச் சொல்லத்தொடங்கினார்கள்.

மகாரிஷிகள் சுவாமியைப்புகழ்தல்.

கவி.

புலத்தியன்றன்வழிப்போந்து பொல்லாவொழுக்கமில்லாத
குலத்துமுனிவிச்சிரவாவுக் கரக்கிவயிற்றினிடைத்தோன்றிக்
கொலைக்கையரக்கர்முதலான கோடாகோடிப்படைகொன்ற
சலத்தின்வலியாய்நீயிருப்ப வுண்டோவெமக்குத்தவறென்றார்.

கேளும் ஸ்ரீராகவா! புலத்தியப்பிர்மாவின் சந்ததியாகத் தோன்றிய விச்சிரவாவென்பவனுக்கு இராட்சசிவயிற்றினிடத்திற்றேன்றி, சகலலோகங்களு நசிக்கும்படியாய் மிகவும் கொடுமையான வுபத்திரவங்களைச்செய்யும் துஷ்டகண்டகராகிய விராதன் - கவந்தன் - கரன் - தூஷணன் - கும்பன் — நிகும்பன் — அகம்பன் — மகோதரன் - மகாபாரிசுவன் - தூம்பிராட்சன் — விரூபாட்சன் - சோணிதாட்சன் - மகராட்சன் — அதிகாயன் - பிரகஸ்தன் — தேவாந்தகன் - நராந்தகன், கும்பகர்னன், இவாள் முதலானவர்களோடு அளவில்லாத சேனுபதிகளும் — இராட்சதசேனையும், மூலபலமும், தசக்கிரீவனும், உயுத்தகளத்திலே சின்னபின்னப்பட்டு மடிந்து பிணக்குவைகள் பருவதங்களைப்போல ராசிராசியாகக் குவியவும், தேர்களும், யானைகளும், குதிரைகளும், குடைகளும், கொடிகளும், சாமரங்களும், மயிற்பிச்சங்களும், ஆலவட்டங்களும், வாள்களும், வேல்களும், வில்லுகளும், பாணங்களும், தண்டங்களும், முசலங்களும், சூலங்களும், எழுக்களு மாகியபலவு மறுபட்டு, முறிபட்டு, தெறிபட்டு, ஒடிபட்டு, சிதைபட்டு, இரத்தப் பிரவாகத்தில் மிதந்தோடவும்; நாய்களும், நரிகளும், காக்கைகளும், கழுகுகளும், பருந்துகளும், குடல்களை—மூளைகளை-கொழுப்புகளை—நிணங்களை - சதைகளை-கொத்தியும், பிடுங்கியும், குடித்தும், தின்றும், கவ்வியும், ஒன்றேடொன்றுகலந்து கூட்டமிட்டு நெருங்கி ஊளையிட்டுக் குலைத்துக்கத்திக்கதறி ஆர்ப்பரிக்கவும்; பூதப்பிரேத பிசாசங்களில் ஆணும் பெண்ணும், குட்டிகளும், அங்கங்கே கூட்டங்கூட்டமாகக் கூடிக்கொண்டு நன்றாய்க் கொழுத்த நிணங்களையும், சதைகளையும், கொழுப்புகளையும், வேறுவேறாகவெடுத்து வைத்துக்கொண்டு மண்டைகளாகிய கலங்களிலே பகுந்திட்டுத்தின்று தேக்கிட்டுக் கொக்கரித்துத் தோள்கொட்டிக் கூத்தாடி விளையாடவும்; விஜயலட்சுமி சந்தோஷத்தோடு நடனஞ்செய்யும்படியாக மகா உக்கிராவேசத்துடனே அட்டகாசம்பண்ணி விஜயகோதண்டத்தை வளைத்து நாணேறிட்டுக் குணத்தொனிமுழக்கி அந்தக்கோதண்டம் சக்கராகார மாகும்படியாக வளையவாங்கி அர்த்தசந்திரபாணம்- வச்சிரசூசிகாபாணம்- அக்கினிபாண முதலான திவ்வியாஸ்திரங்களைப் புங்கானுபுங்கமாக இடைவிடாது தொடுத்துச் சரவருஷமாகப் பொழிந்து கண்டதுண்டங்களாகச் சித்திரவதைசெய்து சங்கரித்துச் சருவலோகங்களு நிர்ப்பயமாக வாழ்ந்திருக்கும்படி வெற்றிபெற்று வாகைமாலைசூடிய விஜயகோதண்டபாணியாகிய தேவரீரோடு, மகாதபோமகிமை பொருந்திய முனிவர்களாலும், திரிலோகாதிபதிகளாலும், மற்றுமுள்ளவர்களாலும் வெல்லுதற்கரிய சகலமாயா வுபாயங்களினும் வல்லவனாகி, பலபராக்கிரம சௌரியங்களாலே மதோன்மத்தனாகி, துவாதசாதித்தியர்கள்-ஏகாதசருத்திரர்கள்-அஷ்டவசுக்கள் — மருத்துவரிருவராகிய விந்நால்வகைப்பட்ட முப்பத்துமூவர்க்கும் ஒவ்வொரு வகையினர்க் கொவ்வொரு கோடியாகக்கூடிய முப்பத்துமுக்கோடி தேவகணங்களுக் கதிபதியாகிய இந்திரனை மாயாபாசத்தினாலே கட்டிக் கொடுஞ்சிறையில்வைத்த வந்தக்காரணத்தினாலே இந்திரஜித்தனென்

னும்பெயர்பெற்ற பொல்லாத துஷ்டகண்டகனைச்சங்கரித்து வெற்றிபெற்ற இலட்சுமணருமிருக்க, எங்களுக்கு எக்காலத்தினும் யாதேனுமோர் குறை யுண்டாகுமோவென்று கேள்விக்குத்தரமாகப் பிரதிவசனஞ்சொல்லி வாழ்த்தினார்கள்.

திருவோலக்கப்படலம் முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

இரண்டாவது,

புலத்தியப்படலம்.

இப்படலத்தில் அகஸ்தியமுனிவர் இராமபிரானுக்கு, புலஸ்தியப் பிரமரிஷியினால் விச்சிரவாபிறந்ததும், அவ்விச்சிரவாவாற் குபேரன்பிறந்ததும், அக்குபேரன் பிரமனைநோக்கித் தவஞ்செய்து திக்குப்பாலர்களிலொருவனாய் புட்பகவிமானம் பெற்றதும், தந்தையாகிய விச்சிரவாவா லிலங்கைமா நகரத்திற் குடியேறினதும் சொல்லப்படுகின்றது.

இராவணாதியர்பிறப்பாதி வரலாறுகளைச் சுவாமிகேட்க அகஸ்தியர் பூர்வசரித்திரஞ்சொல்ல வாரம்பித்தல்.

கவி.

என்றுமுனிவர்தாங்கூற விராமன்கூறுமோரிரண்டு
குன்றமனையதிரள்புயத்துக் கும்பகன்னன்முதலாயோர்
வென்றிகூரிராவணிதன் வீரநீர்கூறியவாறே
அன்றுசிவன்பாலவன்பெற்ற வரமும்வலியுமவன்பிறப்பும்.

இரக்கமில்லாவன்னெஞ்சத் தெல்லாமாயைகளும்வல்ல
அரக்கர்பிறப்புமவர்பெற்ற வரமும்வலியுமவர்செயலும்
பரக்கவுரைமினெனவமரிற் பண்டிந்திரனுக்குடைந்தசுரர்
கரக்குங்கடலேழையும்வாங்கிக் கையாற்குடித்தமுனிகழறும்.

அப்படிக்கனுக்கிரகித்த மகாரிஷிகளைநோக்கி இராகவர் சொல்லுகிறார். ஓ என்னிருமைக்கும் துணையாயுள்ள தவசிரேஷ்டர்களே ! நீலபர்வதங்கள் போலப் பூரித்துயர்ந்த புசபலபராக்கிரமங்கள் பொருந்திய தசக்கிரீவன் - கும்பகர்னன் – இந்திரஜித்து முதலாயினோர்கள் உற்பத்தியேதுக்களும், அவர்கள் பெற்றவரங்களும், கடினமான இரும்புபோலும் சற்றுமிரக்க மில்லாத பாபசித்தகண்டராகிய இராக்ஷதர்களுடைய உற்பத்திகாரணமும், அவர்கள் பெற்ற வரங்களும், பூர்வோத்தரசங்கதியாக நன்றாய்விவரித் துரைத்தருள்வீரென்று கேட்டனர். அப்பொழுது மகாசபையாக நிறைந்திருக்கும் ஆஸ்தான மண்டபத்திலே பிரமசபைபோலவிளங்கு முனிகணங்களுக்குள்ளே

சருவசிரேஷ்டராகி ஓர்கால்தேவேந்திரனுக்குத்தோற்று ஒளித்த அசுரர்களைச் சங்கரிக்கும்வண்ணம் ஏழ்சமுத்திரத்தையு முண்டருளிய அகஸ்தியர்சொல்ல வாரம்பித்தனர்.

புலத்தியப்பிரமரிஷி மரபிற்றோன்றிய விச்சிரவாவுக்கு வச்சிரவண்ணன்பிறந்த வரலாறுரைத்தல்.

கவி.

அண்டர்நாயக னலைதிக மூந்தியாமடுவில்
புண்டரீகநான் முகன்மகன் புலத்தியனென்போன்
மண்டலந்திகழ் திவாகரன் றேரதுவலஞ்சூழ்
விண்டலந்திகழ் மேருவாம் வெற்பினைச்சேர்ந்தான்.

கேளும் தசரதாத்மஜராகிய ஸ்ரீராமா! இதற்குமுன் நடந்தசரித்திரம் சிலவுள்ளன அதைமுன்பு கூறுகிறேன் அவையாதெனில், தேவநாயகனுகியஸ்ரீமந் நாராயணமூர்த்தியினது அழகுவிளங்குகின்ற நாபிஸ்தானமாகிய தடாகத்தில் மலர்ந்ததாமரைமலரிலுண்டாகிய பிரமதேவரதுபுத்திரர்களிலொருவராகிய புலத்தியப்பிரமரிஷியானவர், உலகங்களை விளக்குகின்ற சகஸ்திரகிரணங்களையுடையசூரியன் தனதிரதத்தோடு தினப்பிரதக்ஷணஞ்செய்கின்ற ஆகாயத்தையளாவிய மகமேருகிரியில் சென்று, அருமையாகிய தபசுசெய்துகொண்டிருந்தார். அக்காலத்தில் தேவகன்னியர்களும்—நாககன்னியர்களும்—இரிஷிகன்னியர்களும்—சேர்ந்துகூடி, அந்தவனத்திலே நாடோறும்வந்து அங்கங்கிருக்குங் குளிர்ந்தமலர்கள் நிறைந்த தடாகங்களிலே சலக்கிரீடையாகக் குளித்து விளையாடுவதும், வகைவகையாயுள்ள சுகந்தபரிமள புஷ்பங்களைக்கொய்து சூடுவதும், ஒருவரோடொருவரிசைந்து குயிலிசைபோலக் கானம்பாடுவதுமாகப் பகற்காலமுழுதும் பொழுதுபோக்காக விளையாடிப் போவார்கள்.

அப்படி யிருக்குங்காலத்தில் ஒருநாள் அந்தப் புலஸ்திய முனிவர் தபசுபண்ணிக்கொண்டிருக்கு மாச்சிரமத்துக்குச் சமீபத்திலே எந்நாளும்போல வேடிக்கையாக ஆடியும் பாடியும் அனேக விநோதங்கள்செய்து விளையாடிக் கொண்டிருக்கிற தொனி அந்த முனிவர்காதிற் கேட்கப்பட்டு, அந்த இங்கிதத்தினாலே மனோவிகாரமாய்ச் சஞ்சலப்பட்டுத் தமக்குத் தபசுகூடாமற் போனபடியினாலே அவர் அந்தக் கன்னியர்களைப்பார்த்து மகாவுக்கிரமான கோபங்கொண்டு, இன்றுமுதல் நீங்கள் யாவரோனும் எந்தக்காலத்திலேயாகிலும் இந்தவனத்திலே வந்து தபசுக்கு விகாதமாக நம்முடைய கண்காண இப்படி யெதிர்ப்படுவீர்களாகில் உங்களுக்குப் பொல்லாத வுற்பாதமான கர்ப்பமுண்டாகக்கடவதென்று சாபமிட்டனர். அவர்செய்த சாபத்தைக்கேட்டு அந்தக் கன்னியர்களெல்லோரு நடுநடுங்கிப்பயந்து, ஒருவருக்கொருவர் சொல்லாமல் திசைதிசையாக வோடிப்போனார்கள்.

அப்படி யிருக்குங்காலத்தில் சகலவேதங்களையு நன்றாக வோதியுணர்ந்து அந்த வேதங்களாலே சத்தியமென்று சொல்லப்பட்ட அழியாத பொருளாகிய பரப்பிரம்ம சொருபத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோலக் கண்டு

மகிமைபொருந்தி யிருக்கின்ற திரணபிந்துவென்று சொல்லப்பட்ட மகாபுருஷருடைய பெண்ணாகிய அதிரூபசௌந்தரியமும் நல்லயவ்வனமும் பொருந்திய குணவதியென்னும் கன்னிகையானவள், முன்பு தேவகன்னியர்முதலானவர்களைக் குறித்து அந்தப் புலஸ்தியமகாமுனிவரிட்ட சாபகாரணத்தை யறியாதவளாய்த் தானுந் தன்னுடைய தோழிமார்களுமா யெந்நாளும்போல அந்த வனத்திலே புகுந்து, எப்பொழுதும் விளையாடுவதுபோல் அங்கங்கேயிருக்கும், புஷ்பதடாகங்களிலே சலக்கிரீடையாகக் குளித்து விளையாடியும், பூக்கள்பறித்துச் சூடியும், அம்மானையாடியும், பந்தடித்தும், இப்படிக்கெல்லாம் பலபலவிதமாக அவரவர் மனதுக்கிஷ்டமானபடியே விளையாடிக்கொண் டிருந்தார்கள்.

அப்படி யிருக்கிறவேளையிலே அந்தக் குணவதியானவள் தோழிப்பெண்களை விட்டுநீங்கித் தனிப்பட்டுத் தன்னுடைய உயிர்த்தோழியைத்தேடிக் கூவியழைத்துப் போகும்பொழுதில், அங்கேயோரிடத்திலே யாவருங்கேட்டறியாத ஒருதிவ்யமான வேதகானம் தன்னுடையகாதிற் கேட்கப்பட்டு மனமுருகி யானந்தபரவசத்தை யடைந்து, ஆ! ஆ! நாமொருநாளு மிந்தவனத்திலே இப்படி பாடப்பட்ட சங்கீதகானங் கேட்டதில்லையேயென் றதிசயித்து, இந்தக்கானம் பண்ணப்பட்ட மகாபுருஷர் எப்படிப்பட்டவரோ அவரைப் பார்க்கவேணுமென்று அந்தக் கானசுரத்தின் வழியேசென்று போய் அவரைக்கண்டாள். கண்டவுடனே அந்தப் புலஸ்தியமகாரிஷியானவர் முன்புதாஞ் சாபமிட்டிருந்த காரணப்படியே கர்ப்பமுண்டாகி, அக்கர்ப்பத்துக்குள்ள அடையாளங் காணப்படவு மவள்பயந்து, இஃதென்ன காரணமோவென்று ஆச்சரியத்தை யடைந்தவளாய்ச் சீக்கிரமாகப்போய்த் தன்னுடைய பிதாவாகிய திரணபிந்து மகாமுனிவரிடத்திலே தான் வனத்துக்குப்போனதும் அங்கேநடந்த விருத்தாந்தமும் தனக்கு அதிசயமான கருப்பமுண்டானதையும் கிரமமாகச்சொல்லி விசனப்பட்டாள்.

அப்பொழுது அந்தத் திரணபிந்துவானவர் திரிகால வர்த்தமானங்களுந் தெரிந்தவராதலால் அந்தப் புலஸ்தியமகாமுனிவரிட்ட சாபகாரணத்தினுலுண்டாகிய காரியமென்றறிந்து, தம்முடைய புத்திரிக்குத் தேறுதல்சொல்லி, அவளை யழைத்துக்கொண்டு புலஸ்தியப் பிர்ம்மாவினுடைய ஆச்சிரமத்துக்கு வந்தார். அவருமவருக் குபசாரம்பண்ணி இருக்கச்செய்தார். அப்பொழுது திரணபிந்துவானவர் புலஸ்தியமகாமுனிவரைப் பார்த்து, நீர் மகா தபோமகிமையுடையவராதலால் உம்முடைய நேத்திரவீட்சண்யம்பட்டமாத்திரத்திலே இந்தப்பெண் கருப்பவதியாயினுள். அல்லாமலு நானெடுங்காலம் அரிதான தபசுசெய்து இந்தப்பெண்ணைப்பெற்றேன்.இவளுக்குப்பெயரோ குணவதியென்னும்பெயராம். உமக்கேற்ற யோக்கியமெல்லா முடையவள். இந்தப்பெண்ணினை நீரே விவாகஞ்செய்து கொள்ளவேண்டு மென்றுபசாரமாகச் சொல்லவும் அவருஞ்சம்மதித்துப் பாணிக்கிரகணம் பண்ணிக்கொண்டார். பின்பு

அந்தப் புலஸ்தியராலே உபசரிக்கப்பட்டவராய் திரணபிந்துவானவர் தம்முடைய வாச்சிரமத்துக்குப் போயினர்.

அதன்பின்பு அந்தக் குணவதியானவள் தன்னுடைய பர்த்தாவாகிய புலத்தியருக்கு மிகவுஞ் சந்தோஷமுண்டாகும்படியாய் அவருடைய ஆச்சிரம தருமங்களிலும், அவரிடத்தில் தானடந்து கொள்ளவேண்டிய உபசாரப் பணிவிடைகளிலும், அவர் மனக்குறிப்பின்படியே பதிவிரதா தருமத்துக்கேற்க ஒரு காரியத்திலுஞ் சற்றுந்தாழ்வுவராமற் பயபத்தி விசுவாசத்துடனே நடந்துவருகிறாள். அப்படி நடந்துவருகிற யோக்கியதையினாலே அவர் மனமகிழ்ந்து, தம்முடைய பாரியாளாகிய அக்குணவதியைப் பார்த்துச்சொல்லுவார். கேளாய் பெண்ணே! நான் தபசுபண்ணிக் கொண்டிருக்கிற காலத்திலே தேவகன்னியர் முதலானவர்களைக் குறித்து நான்செய்த சாபகாரணந் தெரியாதவளா யுன்னுடைய தோழிப்பெண்களு நீயுமாக இந்தவனத்திலே வந்து சஞ்சரித்து விளையாடிக் கொண்டிருக்கும்பொழுதில், அந்தத் தோழியர்களைவிட்டுப் பிரிந்து நீயோரிடத்திற்றனித்தவளா யுன்னுடைய பிராணசகியாகிய கன்னிகையைத் தேடிக்கூவி யழைத்துக்கொண்டு வந்தாய்.


அப்பொழுது நாம்பாடிய வேதகானத்தை நீ நன்று யுன்னுடைய செவிக்கின்பமாகக் கேட்டுச் சந்தோஷித்து அக்கானத்தின் வழியே தேடிவந்து நம்மைக்காணப்பெற்ற காரணத்தால், அக்காலுன்னுடைய கருப்பத்திலுண்டாகிய சிசுவானதும் அந்தக்கானத்தைச் சிரவமென்று சொல்லப்பட்ட காதினாலே நன்றாய்க் கேட்டபடியினாலே விச்சிரவாவென்னும் பெயருடையவொருபுத்திரனாகப் பிறக்கக்கடவனென் றனுக்கிரகம் பண்ணினார்.

கவி.

அந்தவாசக மருள்முனிகூறலுமுவந்த
சிந்தையாடிருவயிற்றினிற் றிசைமுகன்றனக்குத்
தந்தைதோன்றியதொன்மைபோற் றவநெறிதழைப்ப
வந்துதோன்றினன் வைச்சிரவாமறைவிளங்க.

அவரனுக்கிரகஞ் செய்தபடியே உடனே யக்குணவதி யானவள் கருப்பவேதனைக ளொன்றுமில்லாமற் சுகமாக வொருபுத்திரனைப் பெற்றாள். அந்தப் புத்திரனையத்தாயானவள் நாடோறு மருமையாகப் போற்றிவளர்க்கச் செழுமையாய் வளர்ந்துவருங் காலத்தில், பிதாவானவர் அந்தந்தக் காலங்களிலே வேதமார்க்க விதிப்படியே கிரியைகள் தப்பாமல் சாதகருமம் - நாமகரணம் — அன்னப்பிராசனம் - சவுளம் . வித்தியாரம்பம் — உபநயனம், இவைமுதலாயுள்ள பிராமண கருமங்களெல்லாம் கிரமமாகச்செய்வித்தார். அந்த விச்சிரவாவென்னும் பெயருடைய புத்திரரானவர் பிதாவாகிய குருவனுக்கிரகத்தினாலே சகல வேதசாஸ்திரங்களும் ஓதியுணர்ந்து, பிதாவைப் பார்க்கிலு மேலான தபோமகிமைபொருந்தி விளங்கினார். அவ்விச்சிரவாவென்னு

№ 76. விண்டுவினால், மாலியிரக்கக்கண்ட, மற்றிருவரும் பாதாளம்போய் மறைதல்.



குபேரன் பிரம்மதேவன் அனுக்கிரம்பெற்று தன்தந்தைகாட்டிய
இலங்கையிலிருந்து அரசாளுதல்.



முனிவருக்குப் பரத்துவாசமாமுனிவர் தன்புத்திரியாகிய தேவவன்னியென்னும் கன்னிகையைப் பாணிக்கிரகணஞ்செய்தார்.

கவி.

தேவவன்னியச்செய்தவ முனிவனுங்குரைத்த
எவல்செய்தவளினிதிருந் தொழுகிடவந்தப்
பாவைதன்வயிற்றேன்றினன் பல்லுலகுள்ளோர்
யாவரும்மனமகிழ்ந்திட வெழின்மணிப்புதல்வன்.

தேவவன்னியென்னும் பெயருடைய புண்ணியவதியானவள் விச்சிரவாவென்னும் தமது பர்த்தாவினது மனக்குறிப்பையறிந்து குற்றேவல்செய்து கொண்டுவருங்காலத்தில் சகலலோகத்தாரு மனமகிழும்படியாக அவள்வயிற்றினிடத்தில் அழகுபெற்ற ஒரு சிறுகுமரன் தோன்றினன். அதுகேட்டுச் சத்தியலோகத்திலிருக்கும் பிரமனும், அவர்புத்திரர்களாகிய பிரம்மரிஷிகளும், சுவர்க்கலோகத்திலிருக்கிற தேவேந்திரன் முதலான திக்குப்பாலர்களும், மற்றுமுள்ள தேவர்களும், விச்சிரவாமுனிவரது ஆச்சிரமத்தை நாடிவந்து எல்லோரும் அவ்விச்சிரவாவென்பவரைப் பார்த்துச் சொல்லுகிறார்கள்.

ஐயா புலஸ்தியப் பிரம்மாவின் புத்திரரே! நீர்செய்த தபோபலத்தினாலே இந்தச் சற்புத்திரனைப் பெற்றீர். நீரேயாவரினு மேலானமகிமையும், சிலாக்கியமும், யோக்கியமும், பெருமையு முடையவரானீர். என்றுபசரித்து அந்தப்புத்திரனுக்கு வச்சிரவண்ணனென்று நாமதேயந்தரித்துஆசீர்வாதஞ் செய்துவாழ்த்தி, எல்லோரும் தாங்கள் வாசம்பண்ணுமிடத்தைச் சேர்ந்தார்கள். அதன்பின்பு அந்தப்புத்திரன் இளம்பிறைச் சந்திரன்போல வளர்ந்து, பதினாறு வயதுக்குள்ளாக சகல வேதசாஸ்திரங்களெல்லாம் ஓதியுணர்ந்து, அந்த வேதங்களிலே நித்தியமான வஸ்துவென்று சொல்லப்பட்ட பரப்பிரம்மசொரூபத்தை நிச்சயமாகத் தேர்ந்து, சமஸ்தமானவர்களுந் தவஞ்செய்யுந் தபோவனத்திற் சென்றனன்.

வச்சிரவண்ணனென்னும் குபேரன் பிரமனைநோக்கித்தவஞ்செய்து வரம்பெறுதல்.

கவி.

தோயமேதனக் காகரமாகவுந்துரக்கும்
வாயுவேயுணவாகவு மன்னுபேரறத்தை
நேயமாகியநிராசன ஞகியுநியமம்
சாய்விலாதுபல்லாண்டுநின் றருந்தவஞ்சரித்தான்.

இவ்வண்ணந் தபஞ்செய்யும்படிவனஞ்சென்ற வச்சிரவண்ணனென்னும் குபேரன், வாயுவையும்-சலத்தையும்-ஆகாரமாகப்பொசித்துக்கொண்டு, தர்மமாகிய நிராசனத்திலிருந்து, அனேககாலம் பிரம்மதேவரை நோக்கிச் சித்திரப்பிரதிமைபோ லசைவற்று அரிதான தபசுசெய்துகொண்டிருந்தான். அப்படியிருக்குங்காலத்தி லந்தவச்சிரவண்ணனுக்கெதிராகப் பிரம்மதேவர் பிரசன்னராகி, உன்னைப்போல நெடுங்காலம் உறுதியாக விருந்து அரியதபசுசெய்தோ

ரொருவருமில்லை. நீசெய்ததபசுக்கு நாமிகவுஞ் சந்தோஷத்தை யடைந்தோம். ஆதலா லுனக்குவேண்டிய வரங்களைக்கேள் நாம் தருகிறோமென்று சொல்ல அதற்கு அந்தவச்சிரவண்ணன் சொல்லுவான்.

சுவாமி! இந்திரன்-அக்கினி-யமன்-நிருதி-வருணன்-வாயு-ஈசானியன் என்று சொல்லப்பட்ட திக்குப்பாலர்களுடனே நானுமொரு திக்குப்பாலனாகவேண்டும். எடுக்கவெடுக்கக் குறையாத நவநிதிக்கதிபதியாகவேண்டுமென்றுகேட்கப் பிரம்மதேவர் அப்படியே கொடுத்தனர். அல்லாமலும் உலகத்திலுள்ள யாவர்களு மனதில் நினைத்து வாயினாற் சொல்லப்பட்ட பொருள்களெல்லாம் அந்த நிதிகளிலே பெருகக்கடவதென்றும் வரங்கொடுத்துப் பின்னும் மனோவேகத்தைப் பார்க்கிலும் அதிகவேகமாக நினைத்தவிடங்களெங்கும்போய் மீண்டுவருவதாய், அதனை யிழுத்துக்கொண்டு பாய்ந்தோடக் குதிரைகள் பூட்டாததாய், ஏழுலகத்திலுள்ள வெல்லோர்களு மேறினாலுமிடங்கொடுத்துப் பின்னும் விசாலமா யிருக்குமிடத்தை யுடையதாய், இயாவராலும் வெல்லப்படாததாய், நவரத்தினமயமான சிகரங்களால் அலங்காரம் பொருந்தியதாய், மகாமேரு பர்வதம்போலப் பிரகாசிக்கும் புஷ்பகமென்று சொல்லப்பட்ட திவ்விய விமானமுங்கொடுத் தனுக்கிரகித்துத் தம்முடைய சத்தியலோகத்துக்குப் போயினர்.

இப்படியாகப் பிரம்மதேவரிடத்தில் வரம்பெற்ற வச்சிரவண்ணனாகிய குபேரன் அளவில்லாத மகிழ்ச்சியுடனே தன்னுடைய பிதாவான விச்சிரவாவிருக்கும் ஆச்சிரமத்துக்கு வந்து, அவரைவணங்கி நமஸ்கரித்து, தான் தவசுபண்ணி வரம்பெற்ற விதங்களெல்லாஞ்சொல்லி, ஐயா பிதாவே! பிரம்மதேவர் வரங்கொடுக்கும் பொழுதில் நானிருந்து வாசம்பண்ணுதற்கு ஒரு ஸ்தானம் அனுக்கிரகஞ் செய்யவில்லை. ஆனதால் எந்தக்காலத்தினும் – சகல வுபாயங்களினாலேயும் - சத்துருக்களாலேயும் - செயிக்கக்கூடாததாய், பலமான துர்க்கங்களை யுடைத்தானதா யிருக்கும் ஓரிடத்தை நியமித்து அருள்செய்வீரென்று கேட்டான்.

குபேரனுக்குத் தன்தந்தையாகிய விச்சிரவாவேன்பவர் இலங்காபுரியைக்காட்ட அதிலிருந்தரசுபுரிதல்.

கவி.

இலங்கைமாநகரிராக்கத ரிருப்பிடமுன்னாள்
வலங்கொளாழிமா மாயனோடெதிர்மலைந்தமரில்
சலங்கியோடியநிருதர்கீ ழுலகிடைக்கரந்தார்
அலங்கன்மொய்ம்பினோ யந்நகரிருத்திநீயென்றான்.

அதற்கவனுடைய பிதாவாகிய அவ்விச்சிரவா வென்பவர் சொல்லுவார். அப்பா மகனே! மூன்றுலோகத்திலுமுள்ள யாவர்களாலும் சாதிக்கப்படாத பலங்களை யுடைத்தானதாய்ச் சமுத்திரத்தி னடுவிலே ஜலதுர்க்கஞ் சூழ்ந்திருக்கிற இலங்காபுரியென்னு மொருபெரிய நகரமுண்டு. அதினிடத்திலே

அனேக காலமாக ராஜரீகஞ் செய்துகொண் டிருந்த வெகுகோடி இராட்சதர்கள் ஸ்ரீமகாவிஷ்ணுவினுடனே யெதிர்த்து யுத்தம்பண்ணி, அளவில்லாத ராட்சதசேனைகளை மடியக்கொடுத்து, அவருடைய யுத்தத்துக் காற்றுமல் முறிபட்டோடிப் பிலத்துவாரத்தின் வழியாகப்போய்ப் பாதாள லோகத்திலே புகுந்து ஒளித்துக் கொண்டார்கள்.

ஆனதா லந்தராட்சதர்களிருந்த பலம்பொருந்திய இலங்காபட்டணத்தில் நீ வாசஞ்செய்துகொண் டிருப்பாயென்று சொன்னூர். அவர்சொன்ன பிரகாரமே தன்னுடைய வமிசத்தாரான யட்சகந்தருவ கின்னரர் முதலாயுள்ள பந்து பரிசனங்களுடனே புஷ்பகவிமானத்தின்மே லேறிப்போய் அந்த லங்காபட்டணத்திலே பிரவேசித்து, முன்னமொருகால் மகாவிஷ்ணுவின் சக்கரத்தினுலே யுத்தகளத்தில் மகாபலசாலியாகிய மாலியென்னும் ராட்சச னிறந்தபின்பு அழகும் பெருமையுங் கெட்டுப் பாழ்பட்டுக்கிடந்த அந்த நகரமே சுவர்க்கலோகமாகவும், தானேயொரு தேவேந்திரனுகவும், சகல தேவர்களும் தன்னை வணங்கும்படியாய் அளவில்லாத செல்வச்சிறப்புடனே வாழ்ந்திருந்தனன்.

புலத்தியப்படலம் முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

மூன்றாவது,

அரக்கர்பிறப்புப்படலம்.

இப்படலத்தில் அகஸ்தியர் இராமபிரானைநோக்கி பிரமதேவரால் இராட்சசர்களுண்டானவிதமும், அவ்வர்க்கத்தில் எதி - பிரகேதி யென்னுமிருவர்களுண்டாய் எதியென்பவனுடைய சந்ததிவழியாய் சுகேசனுக்கு மாலியவான்-சுமாலி-மாலி இவர்களுற்பத்தியும், அவர்கள் பிரமனை நோக்கித்தவஞ்செய்து வரம்பெற்றதும், விசுவகர்மனை நகரம் ஒன்றேற்படுத்தச் சொல்லியதும், அவன் இலங்கைமாநகரத்தின் பெருமையை யோசித்து அவ்விலங்கையி லவர்களைக் குடியேற்றினதும், அவர்களிலங்கையடைந்துசெய்த கொடுங்கோலும் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமச்சந்திரர் பூர்வ இராட்சசர்களின் பிறப்பாதி வரலாறுகளைக் கேட்க அகஸ்தியமகாமுனிவர் முறைபடக் கூறுதல்.

கவி.

இந்தமாநிலத் திராவணனுதியா மரக்கர்
முந்தையோரெலாம் புலத்தியன்வழியென மொழிந்தாய்
அந்தவண்ணமே யன்றியேவேறொரு வழியால்
வந்துளோர்களார் மாமுனியுரைத்தருள்கென்றான்.

எயுநீள்வலியிராக்கதர் தோற்றமுமிலங்கை
ஆயவாறுமந் நகரவர்க்காயகாரணமும்

மாயனுக்கவரோடிய வண்ணமுமற்றும்
தூயமாமுனிகூறென மாமுனிகூறும்.

இப்படியென்று குபேரனுடைய சவிஸ்தாரங்களைக் கூறிய. அகஸ்திய முனிவரை ஸ்ரீராமச்சந்திரர்பணிந்து, ஐயா முனிபுங்கவரே இவ்வுலகத்தை யதஞ்செய்த இராவணாதி இராட்சதர்களெல்லாம் புலத்தியப் பிரமாவின் சந்ததியென்று மொழிந்தீர். இத்தீவினையாளர் தவிர இன்னு மனேக விராட்சசர்களிருந்தார்களே அவர்களெல்லாம் யார் அவர்களெல்லா மெவ்வழியாய் வந்தவர்கள் அதைவிபரமாய்ச் சொல்லுவீரென்று கேட்டனர். அதைக் கேட்ட காகுஸ்தனை அகஸ்தியமுனிவர் பார்த்து இராட்சதர்களின் பிறப்பும், இலங்காபுரி யுண்டானவிதமும், அவ்விலங்கைக்கு அவர்கள் தலைவரானவிதமும், மகாவிஷ்ணுவுக்கு அவ்விராட்சசர்கள் தோற்றோடியவிதமும், ஆகியவிவற்றை முறைபடவருத்துச் சொல்லுகிறோம் கேளாய் ஸ்ரீராமாவென்று சொல்லுகின்றார்.

கேளும் ஸ்ரீராமா ! பூருவமொருகாலம் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மதேவரானவர், பூலோகம்-புவலோகம்-சுவலோகம்-சனலோகம்—தபோலோகம்—மகாலோகம்-சத்தியலோகமென்று சொல்லப்பட்ட மேலேழு லோகமும், அதலம்-விதலம்-சுதலம்-தராதலம்-இரசாதலம்-மகாதலம்-பாதாளமென்றுசொல்லப்பட்டகீழேழுலோகமும் ஆகிய பதினாலுலோகங்களையும் உண்டாக்கி,சரமென்றும் அசரமென்றும் சொல்லப்பட்ட இரண்டு வகையாகிய எண்பத்து நான்கு லட்சம் யோனிபேதமாயுள்ள சீவகோடிகளையும் படைத்து, அந்தச் சீவகோடிகளுக்குள்ளே அறிவோடுகூடிய பிராணிகளைப்பார்த்து நீங்கள் இந்த லோகங்களை இரக்ஷிப்பீரென்று ஒருவாக்கியம் பொதுப்படச் சொன்னார்.

அதுகேட்டு அந்தப் பிராணிகளெல்லாம் நமக்கொரு சுதந்திரமும் செயலுமுண்டோ ? நம்மைப்படைத்த கர்த்தாவானவர் யாவரைக்குறித்து என்னகட்டளை யிடுவாரோ ? அந்தப்படி நடப்போம். என்றெண்ணிக்கொண்டு எல்லாப்பிராணிகளும் அதற்குப் பிரதிவசன மொன்றும் சொல்லாமலிருக்க சிலபிராணிகள் யக்ஷ, யக்ஷ, என்று சொன்னார்கள். சிலபிராணிகள் ரட்ச, ரட்ச, என்று சொன்னார்கள். அவர்கள் வாயிற்பிறந்தவசனப்படியே பிரம்மதேவர் யக்ஷ, யக்ஷ, என்றவர்கள் யட்சர்களும், ரட்ச, ரட்ச, என்றவர்கள் ராட்சதர்களு மாகக்கடவீரென்று அருளிச்செய்தார். அப்படியுண்டான ராட்சதகுலத்திலே ஏதியென்றும், பிரகேதியென்றும், சொல்லப்பட்ட அண்ணனும் தம்பியுமாகிய இராட்சதாளிருவரில், இளையவனாகிய பிரகேதியென்று சொல்லப்பட்டவன் சாந்தகுணமுடையவனாகி, துன்மார்க்கங்களைவிட்டுச் சன்மார்க்கங்களை யநுசரித்து, பெரியோர்களைச் சார்ந்து சற்கதியடையவேண்டுமென்று நினைத்தவனாய் அளவில்லாத தபோதனர்களாகிய மகாரிஷிகள் வாசம் செய்துகொண்டிருக்கும் தபோவனத்திலே தபசுசெய்யப்போயினான். அதன்பின்பு அவனுக்கு மூத்தவனென்று சொல்லப்பட்ட ஏதியானவன் தயி

ரிய பல பராக்கிரமங்களிலேதனக்குச் சமானமானவர்க ளொருவரு மில்லை யென்னும்படி மேன்பாடுடையவனாக விருந்தான்.

அப்படி யிருக்குங்காலத்தில் அவன் தனக்குத்தகுமான சரீரதிடமும், நல்லரூபமும், உத்தமகுணமுமுடைய வொருஸ்திரீயை விசாரித்து வருவீர்க ளென்று தன்னுடைய தூதர்களுக்குச் சொல்லியனுப்பினான். அவர்களும் அப்படியே எங்குந்தேடி அவ்வளவுயோக்கியமுள்ள ஸ்திரீயைக் காணாமல், இயமலோகத்திலே போய்த் தாங்கள் தேடிக்கொண்டு வந்தபடிக்கு எல்லாலக்ஷணங்களும் பொருந்தியிருக்கும் ஒரு பெண்ணைக்கண்டு, தங்களுக்குத் தலைவனாகிய அந்த ராக்ஷசனிடத்துக்குவந்து தாழ்ந்து வணங்கிச்சொல்லுவார்கள். சுவாமி! தேவரீர் சொல்லி யனுப்பியபடியே எல்லாக் குணங்களு முடையவளாய், உம்முடைய யோக்கியத்துக் கேற்றவளாய், இயமனுடைய தங்கை யொருத்தி யிருக்கிறாளென்று சொல்லவும், ஏதியானவன் அப்பொழுதே யமபுரிக்குப்போய் உலகத்திலுண்டாகிய வெல்லாவுயிர்களையும் கொலைசெய்யும் கொடிய கூற்றுவனிடத்திற்சென்று, உம்முடைய தங்கையை யெனக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டான். அதற்கவனும் சம்மதித்து, கண்ணினாலே பார்த்தவர்கள் பயந்து நடுங்கும்படியான ரூபத்தையும் பயையென்று சொல்லப்பட்ட பெயரினையுமுடைய தன்தங்கையைக் கலியாணம் செய்வித்துக் கொடுத்தான்.

அதன்பின்பு அவளும் - அவனும் – காமசம்போகத்தில் விட்டுப்பிரியாமற் கூடியிருக்கும் காலத்திற் கருப்பந்தரித்து, அந்தப் பயையென்பவள் ஒரு புத்திரனைப் பெற்றாள். அவன் மின்னலைப்போலும் சிகையினை யுடையவனாதலால் அவனுக்கு வித்தியுற்கேசனென்று பெயர். அவன் அழகும் பருவமும் பொருந்திய கந்தருவகுலப் பெண்ணாகிய சந்தியென்னும் பெயருடையவள் பெற்ற சாலகட்டங்கடையென்று சொல்லப்பட்டவளை விவாகம் செய்து கொண்டு, அவளும் தானுமாக இரதியு மதனும், அன்றினும் பேடும்போல க்ஷணப்பொழுதும் விட்டு நீங்காமல் மோகசமுத்திரத்தில் அழுந்தினவர்களாகி, திவ்விய பரிமளமான புஷ்பவாசனைகளுடனே இளந்தென்றற்காற்று வீசும் சிங்காரவனங்கள் – குளிர்ந்த அருவிகளிறங்கு மலைச்சாரல்கள் - பூஞ்சோலைகள் – புஷ்பதடாகங்கள் – ஓடைகள் - நதிக்கரைகள் – இவை முதலான இடங்களெங்கும் தங்களுடைய மனசுக்கு இஷ்டமானபிரகாரம் நினைத்தவிடங்களிலேல விநோதம் விநோதமாக இருவரு மொருமையாய்க் காமசுகபோகம் அனுபவித்துக்கொண் டிருந்தார்கள்.

அப்படி யிருக்குங்காலத்தில் அந்தச் சாலகடங்கடை வயிற்றிலே கருப்பந்தரித்து அவளொரு குழந்தையைப் பெற்றாள். அந்தப்பிள்ளையைப் பிறந்தவிடத்திலே எறிந்துபோட்டு; எள்ளளவு மிரக்கமில்லாமற் சற்றாகிலும் திரும்பியும் பாராமல், அடங்காத காமவிகாரத்தை யடைந்திருக்கிற இராட்சதஸ்

திரீயானவளாதலால் மதங்கொண்ட யானைபோலத் திரியும் தன்னுடைய கண வன் எங்கெங்கே செல்லுகின்றானோ அங்கங்கே தானும் அவன்பின்னே தொடர்ந்துபோனாள். அப்படியவள் போனபின்பு எங்கு மேகங்கள் பரந்து இருண்டு காற்று மழையும் இடியு மின்னலுமாய் அந்தகாரப்பட்டிருக்கிற வேளையில் அந்தக் குழந்தையானது தன்கைவிரல்களை மடித்து வாயிலே வைத்துக்கொண்டு, எடுத்தணைத்து ஆதரவுசெய்வா ரொருவருமில்லாமல் தனியே யழுதுகொண்டு கிடந்தது. அப்படி கிடக்கிறதைத் தேவேந்திரன் முதலான சகல தேவர்களுங்கண்டு பரிதாபப்பட்டு, பரமசிவனுடைய திருவுளச்செயல் இப்படியு மிருந்ததோவென்று அதிசயத்தையடைந்து, அந்தப் பரமசிவனை நோக்கி மனதிலே தியானித்துப் புஷ்பவருஷம் பொழிந்து வணங்கிப் போற்றித் துதிசெய்து நின்றார்கள்.

அந்தச்சமயத்தில் பரமசிவன் உலகத்திலுள்ள எல்லாவுயிர்களும் துன்பங்கள்நீங்கி இன்பங்களைப் பெற்றுமகிழ்ந்திருக்கும்படியாக உமையவளுடனே ரிஷபாரூடராய் சிவகணங்கள் சூழச் சகலமானபேர்களுக்கும் காட்சிகொடுத்தருளி எல்லாவுலகங்களிலும் பவனியாக உலாவிவரும் பொழுதில், அவ்விடத்தில் அந்தக்குழந்தை நிராதரவாய்த் தனியே அழுது பரதவித்துக்கொண்டு கிடக்கின்றதை உமையவள்கண்டு திருவுள்ளமிரங்கிப் பரமசிவனை நோக்கிக் கூறுவாள். சுவாமீ ! இவ்விடத்தில் இப்படிக்கு ஒரு ஆதரவுமில்லாமல் தனியாய்ப் பரதவித்து அழுதுகொண்டு கிடக்கும் இந்தப் பிள்ளையை, தேவரீர் கிருபைசெய்து ரக்ஷிக்கவேண்டுமென்று இரக்கத்துடனேவேண்டிச்சொல்லினாள். அதுகேட்டபரமசிவன் அப்படியே தமது திருவுள்ளத்திற் கிருபைபொருந்தி, அந்தக் குழந்தையைக் கருணையாகப்பார்த்து, நிறைந்த ஆயுசும் எவ்வனமான பருவத்துக்குள்ள அழகும், இயாவரையும் வெல்லத்தக்க பலமும் — சுகேசனென்கிற பெயரும் நல்லநகரமும் சேனைகளும் உண்டாகக் கடவதென்று அனுக்கிரகம் செய்தார். அப்படியே பார்வதிதேவியும் அக்குழந்தையைப்பார்த்து, உன்னுடைய வமிசத்திலுண்டாகிய எல்லாருக்கும் கர்ப்பம் தரித்தவுடனே பராக்கிரமசாலிகளாய்ப்பிறக்கவும், அப்படிப் பிறப்பவர்களெல்லாரும் தவஞ்செய்து வரம்பெறுபவர்களாகவுங் கடவதென்று அருளிச்செய்தாள்.

இப்படிக்குப் பரமசிவனும் பார்வதிதேவியுங் கொடுத்த வரத்தினாலே அளவில்லாத செல்வமும்-சிறப்பும்-பலமும்-வெற்றியும் பொருந்தி, சுவர்க்கலோகத்தினும் அதிகமான வளங்கள்பொருந்திவிளங்குவதாய் பரமசிவம்கொடுத்த வொருபெரிய நகரத்தினிடத்திலே தேவேந்திரனைப்போல வீற்றிருந்தான். அப்படிக்குச் சிறப்பாகவிளங்கியிருக்கும் சுகேசனுடைய அளவில்லாதமேன்மைகளெல்லாம் ஒருகந்தருவனனவன் கேள்விப்பட்டு, இந்தச்சுகேசனுக்கே தன்னுடையகன்னிகையைக்கொடுக்கவேண்டுமென்று ஆலோசித்து,தான் பெற்ற புத்திரியாகிய தெய்வவதியை அந்தச்சுகேசனுக்கே விவாகஞ்செய்வித்துக்கொடுத்தான். அதன்பின் பந்தச்சுகேசனும் தெய்வவதியுமாகிய இருவருமிஷ்டமாகக்கூடிக்கலந்து காமசுகமனுபவித்துக்கொண்டு மகிழ்ந்திருந்தனர்.

மாலியவான் சுமாலி மாலியென்னு மூவிராட்சசர்க ளுற்பத்தி.

கவி.

மாலைதாழும் வரைத்தோட்சுகேசனுக்
கேலவார்குழல் வல்லிவயிற்றிடை
மால்கொண்மாலிய வானுஞ்சுமாலியும்
மாலியும்மெனு மைந்தர்பிறந்தனர்.

அந்தக்காலத்தில் இந்தத் தெய்வவதி வயிற்றிலே கர்ப்பந்தரித்து சுகேசனுக்குப் புத்திரராக மாலியவான் – சுமாலி – மாலி – என்று சொல்லப்பட்ட மூவரும் பிறந்தார்கள். அதன்பின்பு அந்தமூவரு மருந்தினாலே தீராத பொல்லாத வியாதிகள்போலவும், நெய்யினை வார்க்க வார்க்க மூண்டெழுந்தெரியு நெருப்புப் போலவும், அறிவில்லாத மூடர்களிடத்தில் அவர்களைக் கெடுக்கப் பெருகுஞ் செல்வம்போலவும், நல்லோரைச் சாராத பொல்லாத மூர்க்கரிடத்தில் விளையும் பாவம்போலவும், இரக்கமில்லாத பாவிகளிடத்தி லுண்டாகிய கோபம்போலவும், உயிர்களை யிரையாக வுண்ணும் யமன்போலவும், மணிமந்திர வவுஷதங்களினாலே திரும்பாத கொடிய விஷத்தினைப்போலவும்; உலகத்திலுள்ள வெல்லாப்பிராணிகளும் ஏங்கிப்பயந்து நடுங்கும்படிக்கு நாளுக்குநாள் செழிப்பாய் வளர்ந்து, அதிகமான பலபராக்கிரமமு முடையவளாகி, தங்கள் பிதாவாகிய சுகேசனென்பவன் முன்னாள் தவஞ்செய்து சிவனிடத்திற்பெற்ற வரத்தைப்பார்க்கிலு மேன்மையான வரங்கள் பெறவேண்டுமென்று மனதிலெண்ணி, மகாமேரு பருவதத்திற்கு வடபாரிசத்திற் பெரியதாய் விளங்கும் தபோவனத்தைச் சார்ந்து, அங்கே தபசுசெய்யும் விதிப்பிரகாரம் பஞ்சேந்திரியங்களை யடக்கி ஒருமைப்பாடாக மனவுறுதிகொண்டு சலனப்படாமல் பிரம்மதேவனை நோக்கி அளவில்லாத காலம் அரிதான தவங்களைச் செய்தார்கள்.

இப்படி யவர்கள் தவஞ்செய்து வருகிற செய்தியைத் தேவர்கள் அசுரர்கள் முதலான எல்லோருங்கண்டு, இந்தப் பாவிகள்செய்கிற கொடியதபசுக்கு வரம்பெற்றார்களேயாகில் அதினாலே என்னகாரணமும்—உற்பாதமும்—விளையுமோவென்று மனங்கலங்கி நடுக்கமுற்றார்கள். அப்படியாக விருக்குஞ் சமயத்திலே அந்த மூன்றுபேருக்கு மெதிராக நவரத்தின மயமான விமானத்திலேறிப் பிரம்மதேவர் பிரசன்னராகி, அவர்களைப் பார்த்து நீங்கள் நம்மைக்குறித்துச் செய்த மகாதபசுக்கு நாமிகவும் சந்தோஷத்தை யடைந்தோம். ஆகையால் உங்களுக்கு வேண்டிய வரங்களைக் கேட்பீராகில் நாம்தருகிறோமென்று சொல்லினர்.

மாலியவான் - சுமாலி - மாலி இவர்கள் மூவரும் பிரமதேவனிடத்தில் வரம் பெறுதல்.

கவி.

பூவயன்புக லப்புகல்வாரவர், தேவராதி திரிபுவனத்துளோர்
எவரேனு மெமக்கமர்தோற்கவும், தேய்வில்காலங்கள் செல்லவுஞ்செய்குவாய்.

அவ்வண்ணம் பிரமதேவன் பிரத்தியக்ஷமாகிச் சொன்னவுடனே இம்மூவரும் பிரமதேவனுக்குப் பிரதக்ஷண நமஸ்காரஞ்செய்து, அந்த மூன்றுபேரும் பிரம்மதேவரைநோக்கி, ஓ வாணிகேள்வரே ! சுவர்க்கலோகம், பாதாளலோகம், என்றுசொல்லப்பட்ட மூன்றுலோகங்களிலுள்ள தேவர்களோடு பராக்கிரம மகிமைபொருந்திய சக்கரவர்த்திகளாகிய மகாராஜாக்கள் முதலான யாவராலும் செயிக்கப்படாத பலமும், பராக்கிரமும், வெற்றியும், குறைவில்லாத ஆயுசும், அஸ்திர சஸ்திரங்களுமெங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டார்கள்.

அதற்கு அந்தப் பிரம்மதேவர் நீங்கள் கேட்டபடியே எல்லாவரமும் கொடுத்தோமென்று அனுக்கிரகஞ்செய்து, உடனே தாமிருக்கும் சத்தியலோகத்துக்குப் போயினர். பிரமதேவர் கொடுத்தவரத்தினால் சகலலோகங்களும் தங்களுக்குக் கீழ்மையாகும்படி தேவேந்திராதி தேவர்களையும் யக்ஷகின்னராதி சம்ஸ்தமான பேர்களையும் தோற்கும்படிச் செய்து பத்துத்திசைகளையும் வென்று திரிந்தார்கள்.

மாலியவானாதிமூவரும் விசுவகர்மனை அழைத்துப்பட்டணமொன்று நிருமித்துத் தரவேண்டுமெனல்.

கவி.

நீடுபுவனமொருமூன்று மயனுஞ்சிவனுநெடுமாலும்
கூடியமரின்முயன்றாலுங் குறுகவரியவரணினதாய்
ஆடலமரர்பதியினழ கழிக்குநகரியமைக்கவுடன்
நாடுநல்லோயெனவுரைப்ப நன்றென்றவன்போய்நாடுவான்.

அப்படியிருக்குஞ்சமயத்தில் அந்த மாலியவான் முதலான மூன்றுபேர்களும் தெய்வதச்சனை அழைப்பித்து, ஓ விசுவகர்மாவே ! பிரம்மா - விஷ்ணு-உருத்திரனென்று சொல்லப்பட்ட திரிமூர்த்திகளும், மற்று மூன்று லோகத்திலுமுள்ள தேவர்கள் முதலான யாவர்களும், ஒருமித்துக்கூடி யுத்தம்பண்ணத்தொடங்கினாலும் அவர்களாலேயும் அடுத்துச்செயிக்கப்படாத பலமான துர்க்கங்களை யுடைத்தானதாய், தேவேந்திரனுடைய சுவர்க்கலோகத்திலே யிருக்கும் காமதேனு, கற்பகவிருக்ஷம், சங்கநிதி, பதுமநிதி, சிந்தாமணி இவைமுதலான அயிசுவரியங்களுடனே அமராபதிபட்டணத்தையும் தாழ்வுபடுத்தி நிந்தைசெய்யத்தக்க மிகுந்த சிலாக்கியம்பொருந்தியதாய், நீங்களொரு பெரியநகரத்தை நாங்களிருந்து இராஜரீகஞ் செய்யும்படி யுண்டாக்குகிறதற்கு யோக்கியமான ஒரு ஸ்தானத்தைப் பார்த்து நிச்சயித்துச்சொல்லுவாயென்று கூறினர்கள். அதைக்கேட்ட விசுவகர்மாவானவன் தகுந்த, இடத்தை யோசிக்கலானன்

விசுவகர்மன் பூர்வமுண்டான இலங்கையின் பெருமையைச்சொல்லி அதுதானுங்களுக்கிடமென்று அதில் மாலியவானாதி மூவர்களையுங் குடியேற்றுதல்.

கவி.

முன்னாள்காற்றும்வாசுகியும் தந்தம்வலியினிலைமொழிந்து
பொன்னார்வரையைவாசுகிதன் பணத்தாற்பொத்திப்புறங்காப்ப

தன்னூர்விசையின்பெருங்காற்றுத் தாக்கச்சற்றுஞ்சலியாது
விண்ணோர்முனிவர்வேண்டியிட வீரன்சற்றேமுடிசாய்த்தான்.

விசுவகர்மனானவன் இவ்விராட்சசர்களுக்கு எவ்விடத்தை நிருமிக்கலாமென்று யோசிக்கும்போது இலங்காபுரியென்னும் பதியொன்றிருக்கின்றதால் அதைத்தான் இவர்களுக்குத் தரவேண்டுமென்று எண்ணங்கொண்டு, அவர்களைநோக்கி இலங்காபுரியென்று ஒருநகரமிருக்கிறது அளவற்ற சிறப்பையுடையது பூர்வத்திலேயே உண்டாயிருக்கிறது அதன் விருத்தாந்தத்தைச் சொல்லுகிறேன் கேளுமென்று சொல்லுகிறான். முன்னமொருகாலம் ஆதிசேஷனும் வாயுபகவானுமாகிய விருவரும் நான்பெரியவன் - நான்பெரியவன், நான்பலவான் - நான்பலவான், நான்பராக்கிரமன் — நான்பராக்கிரமன், நான் மகிமையுடையவன் — நான் மகிமையுடையவன், நானேசிலாக்கியன் — நானேசிலாக்கியன், என்று இந்தப்பிரகாரம் ஒருவருக்கொருவர் வாக்குவாதப்பட்டு, இந்தக்காரியத்தின் முன்னிலையாய் நம்மிருவருடைய பலாபலமும் - செயாபசெயமும் - அறிவோமென்று சமஸ்தமான தேவர்களும் சாக்ஷியாகச் சபதம் பண்ணிக்கொண்டார்கள். அப்பொழுது பொன்மயமான ஆயிரத்தெட்டுச் சிகரங்களுடனே எண்பதினாயிரம் யோசனையுயரமாகவிளங்கு மகாமேரு பர்வதத்தை ஆதிசேஷனானவன் தன்னுடைய விசாலமான ஆயிரம்படங்களையும் விரித்து மேலேமூடியும், உடலினாலே யிறுகச்சுற்றியும், இரவைலேசமும் தெரியாமல் மறைத்துக்கொண்டான். அந்த வேளையிலே வாயுபகவானானவன் யுகாந்தப் பிரளயகாலத்திலே பூலோகத்திலுள்ள சகல பர்வதங்களையும் பஞ்சாகப் பறக்கச்செய்யுந் தன்னுடைய மகாபலத்தினாலே பிரசண்ட வேகங்கொண்டு மோதிமோதியடித்தான். அப்படிக்கு மோதியடித்த அடியினாலே அந்த ஆதிசேஷன் சற்றுகிலுந் தளராதிருந்த பலத்தினைக்கண்ட அந்தவாயுபகவான் தன்னுடைய சொரூபத்தை யொடுக்கிக்கொண்டு வெட்கப்பட்டு, ஒருவருக்குந்தெரியாத ஓரிடத்திலே வெளிப்படாமல் மறைந்திருந்தான்.

அப்பொழுது எங்கும் வாயுசஞ்சார மில்லாதபடியினாலே பூலோகத்திலும் சுவர்க்கலோகத்திலு முள்ள வெல்லாவுயிர்களும் உலைநெருப்பி லிட்ட அரக்குப்பாவைபோல் உடல்களுருவிப் புழுங்கிக்கரிந்து வாடி, பரிதாபப்பட்டு மயங்கி, பின்பு துன்பம்பொறுக்கமாட்டாமல் தேவர்கள் முனிவர்கள் முதலான எல்லோருங்கூடி ஆதிசேஷனிடத்திற் சேர்ந்து, ஐயா அனந்தரே! இந்தப் பூலோகத்தைச் சிரசிலேதாங்கியிரக்ஷிக்கிறவர் நீரல்லவோ? உம்மைப்போலப் பெருமைபடைத்தா ரொருவருண்டோ? அறிவுடையவர்களி லுயர்ந்தவரு நீரே: ஆகையாலிப்பொழுது இந்தவுலகத்திலுள்ள சகலபிராணிகளு மரணவேதனையாகப் படுகின்ற துன்பந்தீரும்படிக்குக் கிருபைசெய்து ரக்ஷிக்கவேண்டுமென்று மிகவும் வணக்கத்துடனே உபசரித்து வேண்டிக்கொண்டார்கள். அது கேட்ட சேடனவர்களுக்குபகாரம் பண்ணும்பொருட்டு ஒரு உபாயந்தேடி, அவர்களைப் பார்க்கிறவன்போலத் தன்னுடைய ஆயிரந்தலைகளி

லே ஒருதலையைச்சற்றேநெகிழ்த்துத்தூக்கிச்சாய்த்துப்பார்த்தான். அப்பொழுது சமயம்பார்த்திருந்த வாயுபகவான் இதுதான் வேளையென்று, மகாவுக்கிர கோபத்துடனே அதிகபலங்கொண்டு பிரசண்டவேகமாக மோதியறைந்தான்.

அப்பொழுது அந்த வாயுபகவான் மோதிய வேகத்தினாலே ஆதிசேஷன் ஆயிரம்படங்களினாலே மறைக்கப்பட்டிருந்த மகாமேரு பர்வதத்தினுடைய ஆயிரத்தெட்டுச் சிகரங்களில், மூன்றுசிகரங்கள் பேர்ந்து தெறிபட்டுத் தெக்ஷண சமுத்திரத்திலே மகாவுன்னதமாயும், விசாலமாயும், பொன்மயமாயும், விழுந்துமூன்றும்ஒன்றுசேர்ந்துவிளங்கியிருக்கின்றது. அதுதான் நீங்களிராஜீகஞ்செய்கிறதற்கு யோக்கியமான தானமென்று சொன்னான். அதுகேட்ட மாலயவான் முதலான மூன்றுபேரும் அந்த விசுவகர்மாவைப்பார்த்து, நீ சொல்லிய சமுத்திர பருவதத்தின்மேலே நாங்களிருந்து இராஜாதிகாரஞ்செய்யத்தக்க யோக்கியமான ஒருபெரியபட்டணத்தை நிருமிப்பா யென்று கட்டளையிட்டார்கள்.

அந்தப்படியே விசுவகர்மன் அந்தப் பருவதத்தின்மேலே சந்திர சூரியர்களும் வழிவிலகிச் செல்லும்படியான உயரத்தை யுடையதாய் ஏழுதீவுகளுடனே பூமண்டலத்தைச் சூழ்ந்திருக்கப்பட்ட சக்கரவாளகிரிபோலப் பொன்மயமாக விளங்குங் கோட்டையும், அந்தச் சக்கரவாளகிரியைச் சூழ்ந்த பெரும்புறக்கடல்போல அகழியும், அந்தக் கோட்டைக்குள்ளே அனேகம்பருவதங்களை வரிசை வரிசையாக நிறுத்திவைத்ததுபோல ஆகாசபரியந்தம் அளாவப்பட்டதாய் நவரத்தினமயமான சிகரபந்திகளோடு விளங்குமளவில்லாத மாடமாளிகைகள் - கூட கோபுரங்கள்-உப்பரிகைகள் மேடைகள்-ஆஸ்தான மண்டபங்கள் - நாடகசாலைகள் - ஆயுதசாலைகள் - மல்லகசாலைகள் - குதிரைச்சாலைகள் - யானைக்கூடங்கள் - இராஜகிரகங்கள் புஷ்பதடாகங்கள் மலரோடைகள் - உத்தியானவனங்கள் - இவை முதலானவைகளெல்லாம் அனேக விநோத விசித்திரமாக நிருமித்து, இலங்காபுரியென்று பெயரிட்டான். அப்படிக்கு நிருமிக்கப்பட்ட திவ்வியமான மகாபட்டணத்தை அம்மூவரும் பார்த்து ஆச்சரியப்பட்டு, அந்தத் தெய்வத்தச்சனாகிய விசுவகர்மாவுக்கு உபசாரஞ்செய்து வேண்டிய வரிசைகளுங்கொடுத்து பகைவர்களுக்கு இடதுபுறந்துடிப்ப சுபமுகூர்த்த காலத்திலே இலங்காபுரியை யடைந்து அரசு புரிந்தனர்கள்.

மாலியவானாதி மூவர்க்கும் விவாகம் நடந்தேறுதல்.

கவி.

யாவராலுங்கண்களினா லெட்டிப்பார்க்கஒவொண்ணாத
காவலிலங்கைவீற்றிருந்த சாலைக்கானக்கந்திருவப்
பாவையானதருமதைதான் பயந்தமூவர்மங்கையரில்
மூவராயவாங்கவர்க்கு மூத்தவடைவின்முறைகொடுத்தாள்.

பதினாலுலகிலுள்ளோரும் கண்ணினாலும் பார்ப்பதற்குக் கூடாத காவல்பெற்றுள்ள இலங்காபுரியில்இம்மூவரு மிருந்தசமயத்து கந்தருவகுலத்திற் பிறந்த நருமதையென்று சொல்லப்பட்டவளுடைய புத்திரிகள்மூவரில் மூத்தவளாகிய சுந்தரியென்னுங் கன்னிகையைமாலியவானும்,அவளுக்கிளையவளாகிய கேதுமதி யென்னுங் கன்னிகையை சுமாலியும், அவளுக்கு மிளையதங்கையாகிய கன்னிகையை மாலியும் விவாகஞ்செய்துகொண்டு, அந்தக் கன்னியர்களுடனே அம்மூன்றுபேர்களும் அளவில்லாத விநோதமான காமசுகபோகங்களை யனுபவித்துக்கொண்டு இஷ்ட சல்லாபமாகச் சந்தோஷத்தை யடைந்திருந்தார்கள்.

அப்படி யிருக்குங்காலத்தில் மாலியவானுக்கும் சுந்தரிக்கும் புத்திரராக வச்சிரமுடியென்றும், விருபாக்ஷனென்றும், துன்முகனென்றும், பாபசித்தனென்றும், நியாயகோபனென்றும், மத்தனென்றும், உன்மத்தனென்றுஞ் சொல்லப்பட்ட ஏழுபேர் பிறந்தார்கள். அவனுக்கிளையவனாகிய சுமாலிக்குங் கேதுமதிக்கும், கைகசியென்றும் கும்பீநசியென்றுஞ் சொல்லப்பட்ட இரண்டு புத்திரிகள் பிறந்தார்கள், அவனுக்கு மிளையவனாகிய மாலிக்கும் கேதுமதிக்கிளைய தங்கைக்கும், குரூரயுத்தனென்றும் - நீலனென்றும் — நிலயனென்றும் - சம்பாதியென்றுஞ் சொல்லப்பட்ட நாலுபுத்திரர்கள் பிறந்தார்கள் அல்லாமலும் — முன்பு பிரமதேவன்கொடுத்த வரத்தினாலுண்டாகிய இரதகஜதுரகபதாதி சதுரங்கசேனைகளும்— விதம்விதமாயுள்ள அனேகமான அஸ்திரங்களும் - மற்றுமுள்ள ராசாங்க விமரிசைகளெல்லாமும் பெற்றிருக்கிற புஜபலபராக்கிரமத்தினாலே மதோன்மத்தராகி, தங்களுக்கு எதிரானவர்களொருவரு மில்லையென்று அகங்காரமேற்கொண்டு, உலகங்களையழித்தனர்.

மாலியவானாதி மூவரும் தேவலோகங்களி லுள்ளவர்களை வதைத்துத் தீமைசெய வவர்கள் வருந்தல்.

கவி.

மேவிநாகர்கருவறுத்து வையுலகம்பொடிசெய்து
தேவர்கோமான்றனைத்துரந்து செம்பொனுலகங்கைக்கொண்டு
பாவுமிந்தப்பல்லுலகம் படைத்துக்காத்துத்துடைக்கிற்போர்
மூவராவாரெவர்களுக்கு மூவரின்றியெனமொழிந்தார்.

நாகலோகமடைந்து அங்குள்ளநாகர்களைக் கருவறுத்து, பூலோகத்தைப் பஸ்மீகரப்படுத்தி தேவலோகம்புகுந்து தேவராஜனாகிய தேவேந்திரனைத்துரத்தி அவ்வுலகத்தைத் தங்கள் சுவாதீனஞ் செய்துகொண்டு பதினாலுலோகங்களையும் முத்தொழிலுஞ்செய்து நிற்கும் திரிமூர்த்திகள் இவர்களைவிடவேறில்லையென்று சொல்லும்படி திரிந்தார்கள். பூலோகத்திலுள்ளோர்

இந்திராதி தேவர்கள் முனிவர்கள் நாகலோகத்துள்ளோர்களான இவர்களுக்குயாதொரு பற்றின்றி இவர்கள் செய்யுமுபத்திரவத்தால் ரௌரவமுதலிய நரகத்தில் வீழ்ந்துவருந்தும் பாபாத்துமாக்களைப்போல் விசனப்பட்டிருந்தனர்கள்.

அரக்கர்பிறப்புப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

நான்காவது,

தோத்திரப்படலம்.

இப்படலத்தில் மாலியவானாதி மூவருஞ்செய்த கொடுமையைச்சகியாததேவர்கள் கைலையையடைந்து சிவபெருமானிடத்திற் சொல்லியதும், அச்சிவபெருமான் நாம் கொல்லத்தக்கதன்று மகாவிஷ்ணுவினிடத்திற் சென்று சொல்வீர்களாயி னவர் அவ்விராட்சசர்களைக் கொல்லுவாரென்றதும், தேவர்கள் பாற்கடலடைந்து பகவானைப்போற்ற பகவான் நாமெழுந்தருளி அரக்கர்களை அதம்பண்ணுகிறோமென்றருள் வாக்குக்கூறியதும் அகஸ்தியரால் ஸ்ரீராமபிரானுக்குச் சொல்லப் படுகின்றது.

தேவர்கள் கயிலாசத்தையடைந்து மாலியவானாதி அரக்கர்செய்யும் கொடுமையை, பரமசிவனைப் போற்றிசெய்து முறையிடல்.

கவி.

கோலகாலமாயுலகங் குலையநடுங்கிக்சொதித்துவரும்
ஆலகாலமமிழ்தாக வடக்கிவைத்தமணிமிடற்றன்
பாலகாலமுண்பலெனப் பற்றிப்பற்றியிழுத்திடுமெக்
காலகாலன்வீற்றிருக்குங் கயிலைமலையைக்கண்ணுற்றார்.

கேட்டீரோ தசரதாத்மஜரே! மகாரிஷிகளும் தேவர்களும் ஒன்றுகூடி இனியாம்யாதுசெய்வதென்று பரமசிவனிடத்திற்சென்று முறையிடினித்துயரந் தீருமென்றுயோசித்து, உலகமெலாங் குலையும்படி கோலாகலமாகப்பாலசமுத்திரத்திற் கிளைத்தெழுந்தஆலகாலவிடத்தை யடக்கியதிருக்கண்டத்தையுடையவனாய், அகாலத்திற் பாலன்பானைப்போல வந்த யமனுக்கு இயமனாயுள்ள சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற கயிலையங்கிரியையடைந்து திருநந்திதேவராற்றிருவாயிலைக் கடந்து உட்சென்று சிவபெருமானைக்கண்டு தோத்திரஞ் செய்கின்றார்கள்.

கவி.

எந்தாய்போற்றி யேறேறு மிறைவாபோற்றி யேழுலகுந்
தந்தாய்போற்றி யணிகொன்றைத் தாராய்போற்றி சகமுய்ய

வந்தாய்போற்றி வஞ்சகர்முன் வாராய்போற்றி மலரோனுஞ்
செந்தாமரைக் கட்டிருமாலு மாணுய்போற்றி சிவாபோற்றி.

அந்தத் தேவேந்திரன் முதலானவர்களெல்லோரும் இப்படிதோத்திரஞ் செய்து மூன்றுலோகமும் பாழாகக் கொடுமைசெய்யும் பாவிகளாகிய மாலியவான் முதலான இராக்ஷதர்களாலே தாங்கள்படுகிற துன்பங்களெல்லாஞ் சொல்லி முறையிட்டார்கள்.

சிவபெருமான் தம்மைவேண்டிய தேவர்களைநோக்கி நாம் இராட்சசர்களைக் கோல்லத்தக்கதன்று ஸ்ரீமகாவிஷ்ணுவினிடத்திற்சென்று சோன்ஞல் அவர் கோல்லுவாரேனவுரைத்த அவ்வண்ணம் தேவர்கள் பாற்சமுத்திர மடைதல்.

கவி.

மல்லார்புயத்துச்சுகேசன்றன் வழியிலுள்ளவாளரக்கர்
எல்லாப்பிழையுஞ்செய்தாலு மென்னையடைந்தோராதலினுல்
கொல்லேனவரையென்கையாற் கொல்லுமுபாயங்களுமெல்லாம்
வல்லோன்மாயனென்றவர்க்கு மங்கைபாகன்விடைகொடுத்தான்.

அப்பொழுது பரமசிவன் அவர்களைப்பார்த்து, ஓ அன்பினர்களே ! புஜபலபராக்கிரம சாலியாய் என்னிடத்தில் மிகவும் பத்திவைத்துள்ள சுகேசன்வழியில் வந்த அரக்கர்கள் எவ்வளவு பிழைகளைச்செய்தாலும், அவர்களுமவனைப்போலென்னை யடைந்தோராதலால் அவர்களை நாமேயழிப்பது தருமமல்ல. ஆகையா லிராக்ஷதர்குலத்துக்குப் பகைவராய் அவர்களைக் கொல்லும் உபாயமும் வெற்றியும் பொருந்திய மகாவிஷ்ணுவினிடத்துக்கு நாமனுப்புவித்தோமென்று நீங்களெல்லோரும்போயுங்கள்குறையைச்சொன்னுல்; அவர் உங்களுக்குத் துன்பஞ்செய்யும் அந்த ராக்ஷதர்களைச்சங்கரித்து உங்களை ரக்ஷிப்பாரென்று அனுக்கிரகஞ்செய்து அனுப்புவித்தார்.

அப்படியே அந்தத்தேவேந்திரன் - தேவர்கள் -மகாரிஷிகள் முதலானவெல்லோரும் திருப்பாற்கடலினிடத்திற் சேர்ந்து, அந்தத் திருப்பாற்கடலினடுவிலே மரகத ரத்தினம்போலப் பச்சையாய் விளங்கும் ஒருபெரிய ஆலிலையின்மேலே சிரசிலே மாணிக்கரத்தினங்கள் வரிசையாய் விளக்குபோலப் பிரகாசிக்கும் ஆயிரம் படங்களையுடைய ஆதிசேஷசயனத்திலே மாணிக்ககிரீடம் - மகரகுண்டலம் - ஆரகேயூரம் - கவுஸ்துவம்-பீதாம்பரம் - இவை முதலான திவ்வியாலங்கார பூஷிதராகி சங்கம், சக்கிரம், தண்டம், கோதண்டம், கட்கமென்று சொல்லப்பட்ட பஞ்சாயுதங்களையுந் தரித்தவராகி, ஸ்ரீமகாலட்சுமியும் பூதேவியுமாகிய தேவிமாரிருவரும் உபயபாதங்களை வருடவும், சகலபுவனங்களையும் படைக்குந்தொழிலினையுடையசதுர்முகப் பிரம்மாவானவர் இருக்குவேதம், எசுர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம், என்று சொல்லப்பட்ட நாலுவேதங்களையும் அவருடைய உந்திக்கமலத்திலிருந்து பாராயணஞ்செய்யவும், தும்புருநாரதரிருவருஞ் செவிகளுக்கின்பமாக ஆனந்

தமயமான வீணாகானஞ்செய்யவும், பரமபதவாசிகளான பாகவதர் இருபக்கங்களினுநெருங்கிக் கைகளைக்கூப்பித் தோத்திரஞ்செய்யவும்,கருடபகவான் முதலான பக்தகணங்கள் புடைசூழ்ந்து நிற்கவும், செந்தாமரைபோன்ற தமது வலதுகையைச் சிரசின்கீழே கொடுத்துக் கருணையே திருமேனியாக அறிதுயிலாகிய யோகநித்திரை செய்தருளு நாராயணமூர்த்தியைக் கண்கள் குளிரக்கண்டு தீர்க்கதண்டனாக நமஸ்கரித்து இவ்வாறு தோத்திரஞ்செய்வார்கள்.

தேவேந்திராதி தேவர்கள் மகாவிஷ்ணுவைப்போற்றல்.

கவி.

உலகினையெல்லாம் படைத்தளித்தழித்து மூண்டுமிழ்ந்தும்மளந்தாண்டும்
நிலையுடைவானாய் வாயுவாய்க்கனலாய் நீருடனிலனுமாயெண்ணில்
தொலைவிலாவுயிராய்ச் சுடர்களாய்த்தோன்றாச் சுருதியாய்ச்சிவனயனாகி
யலகிலாவிளையாட்டாடுவாயகண்ட மாயினாயாருனையறிவார்.

சகல புவனகர்த்தாவாகிய ஓ பரந்தாமனே! தாம்சர்வலோகங்களையும் உண்டாக்கி, இரக்ஷித்து,அழித்து,உண்டு,மீட்டும் வெளிகாட்டி அளக்கும்படியான அனந்தகல்யாணகுணமுடையவராய்,வானாதி பஞ்சபூதங்களாய், உயிராய், சூரியசந்திரர்களாய்,வேதமாய், திரிமூர்த்தியாய் அளவில்லாத லீலைகளைச் செய்யு மகாமாயச்சொரூபியாய் நிற்கும் உமதுமகிமையை யெம்மாற்சொல்லக்கூடுமோ யார்தானறிவார்கள்? உயிருமுடலும்; சொல்லும் பொருளும், எள்ளுக்கு ளெண்ணெயும், மலரும் மலருக்குள்மணமுமாய், சராசரங்களாய் நிறைந்தபலபொருள்களிலுமேவி காரணகாரியமாய், கண்ணுங்கருத்துமாய் யாவராலுமறியப்படாத பரவெளியாய், பொன்னும், பொன்னாற்செய்த ஆபரணம் பலவாயும், கடலாயும், கடற்றிரையாயும், தரையாயும், தரையிலெழும் அணுவாகியும், உன்னிடத்திற்றோன்றிய தேவர் மனுஷியராதி சகலவுயிர்களிலும் தோன்றியும்தோன்றாமலு மிருப்பவராய் இருக்கின்றஉமது பெருமையை யாரறிவார்களென்று தோத்திரம் செய்தார்கள்.

மகாவிஷ்ணுவானவர் யோகநித்திரைநீங்கி இந்திராதி தேவர்களைநோக்கி வந்தகாரியம்யாதேன அவர்கள் கூறுதல்.

கவி.

என்பனசொல்லியிந்திரனேத்து மேத்தொலியிருசெவியெய்த
இன்பநித்திரையைவிட்டுணர்ந்தருளி யேழுலகுடையவனவரை
அன்புறநோக்கியீவரும்வந்த காரணமென்னெனவகத்தில்
துன்பமதொழித்துத்தொழுதகையினராய்ச் சுராதிபரிவையிவைமொழிவார்.

இப்படி யென்றுசொல்லி முறையிட்ட தேவேந்திராதி தேவர்கள் முறையிட்டதைக்கேட்டு தனது யோகநித்திரையைவிட்டு அவர்களை அன்புடன் கடாக்ஷித்து, ஓ இந்திராதிதேவர்களே! நீங்கள் வந்தது யாதுகாரணமென்று கேட்க வதற்குத் தேவேந்திராதி தேவர்கள் சொல்ல வாரம்பித்தனர்.

பின்னும் பன்முறை பரந்தாமனைத் அத்தேவேந்திரனுதியர் தோத்திரஞ்செய்து, சுவாமி! தேவர்களுக்குச்சத்துருக்களாகிய அசுரரைக்கெடுத்து உல்கங்களைக்காக்குமிரக்ஷக கர்த்தாவாகியதேவரீருடையபரிபூரணகிருபையிருக்கவும், முன்பு தபஞ்செய்து பிரமதேவனிடத்திற் பெற்றவரத்தினாலே எல்லார்களினு மேலான பலபராக்கிரமங்களைப்பொருந்திய பொல்லாத துஷ்டகண்டகராகிய மாலியவான் — சுமாலி — மாலியென்று சொல்லப்பட்ட மூவர்கள் தங்களுடைய புத்திரர்களும், மித்திரர்களும், சுத்தவீரராயுள்ள சேனாபதிகள் முதலான அளவில்லாத வெகுகோடி ராக்ஷதசேனைகளுமாய்ப் பிரளயகாலத்திலே உலகத்தைமூடிய பெருவெள்ளம்போல எங்குமிராட்சத மயமாய்ப் பாதாளலோகத்தைப்பாழாக்கி, பூலோகத்தைப் பொடியாக்கி, சுவர்க்கலோகத்தைத் தூளாக்கி, எங்களையும் படாததுன்பங்கள்படுத்திய கொடுமைகளை யின்னபடியென்று அளவிட்டுச் சொல்லவும் தொலையாதென்று முறையிட்டார்கள்.

மகாவிஷ்ணுவானவர் தேவர்கள் முறையிட்டுக் கோண்டதற்கு அருள் வாக்குரைத்தல்.

கவி.

ஆங்கவரபயமென்றலுமஞ்சலஞ்சனீரென்றுகையமைத்துத்
தீங்குடையரக்கர்குலத்தைவேரறுத்துச் சிந்தைநோய்தீர்க்குவென்றிண்ணம்
நீங்கள்போயுங்கணிலைகளினின்மி னெனவடநேமியோன்விடுப்ப
ஓங்கியவமரர்போயபினரக்கர்க் குற்றனவொழிவின்றிமொழிவாம்.

இப்படியென்று தேவர்கள் முறையிட்டகாலத்தில் மகாவிஷ்ணுவானவர், ஓ தேவர்களே! நீங்களஞ்சவேண்டா மஞ்சவேண்டாமென்று கையமைத்துப் பொல்லாங்கு மிகுந்த இராட்சசகுலத்தை அடியோடுகளைந்து உங்கள் மனோசஞ்சலத்தை நிவர்த்திக்கிறேன் இது உண்மை! இனிநீங்களுங்களுடைய ஸ்தானத்தை யடைந்திருப்பீர்களென்று சொல்லினார். பிறகு தேவர்கள் சென்றபிறகு நடந்த விருத்தாந்தங்களை இனிச்சொல்லுவோம்.

தோத்திரப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

ஐந்தாவது,

இலங்கையழித்தபடலம்.

இப்படலத்தில், தேவர்கள் திருப்பாற்கடலிற் சென்று மகாவிஷ்ணுவினிடத்தில் முறையிட்டதும், விஷ்ணுவானவர் அபயாஸ்தந்தந்து இராட்சசர்களைச் சங்கரிப்போ மென்பதுந் தூதுவர்களால் மாலியவானாதி மூவருங்கேள்விப்பட்டு தேவலோகத்தின்மேல் படையெடுத்துப் போனதும், அக்கால் விஷ்ணுவுக்கு இந்திரன் தெரிவித்ததும், விஷ்ணுவா

னவர் அவ்விராட்சசர்களின் முன்புவந்து போர்செய்ததும், அப்போரில் மாலியிறந்ததும், மாலியவானும் சுமாலியும் மிகுந்தசேனைகளோடு பயந்து பாதாளலோகமடைந்ததும்ஸ்ரீராமமூர்த்திக்கு அகஸ்தியராற்சொல்லப்படுகின்றது.

தேவர்கள் பாலசமுத்திரமடைந்து மகாவிஷ்ணுவினிடத்தில் முறையிடவவரருளிச்செய்ததைத் தூதுவர்களால் மாலியவானாதி மூவருமறிந்து தேவர்கள்மீது படையெடுத்தல்.

கவி.

*இமையவரரக்கராலே யுற்றதம்மிடும்பையெல்லாம்
உமையொருபாகத்தானுக் கோடியேயுரைத்தவாறும்
நமையடைந்தவரைநாமே வெல்கைநன்றன்றுநாகத்
தமைதுயிலரிபாற்சென்மி னென்றவனறைந்தவாறும்.*

*அந்தமந்திரத்தைநெஞ்சிற் கொண்டனரமரரெல்லாம்
செந்திருமகள்கோனுக்குத் தேவர்கோன்செப்பவுங்கள்
சிந்தைநோய்தீர்ப்பென்றிண்ண மென்றருள்செய்தவாறும்
வந்துசாரணர்தாங்கூற மாலியவானுட்கொண்டான்.*

ஐயா ஜானகிராமரே! இந்தச்சங்கதி இப்படியிருக்க, தேவர்கள் முதலான எல்லோருங்கூடிக் கைலாசகிரியைச் சேர்ந்து பரமசிவனிடத்திலே தங்கள் குறைகளைச்சொல்லி முறையிட்டதும், அதற்குப் பரமசிவன் திருப்பாற்கடலுக்குப்போய் மகாவிஷ்ணுவினிடத்திலே சொல்லுவீர்களென்று அனுப்புவித்ததும், அப்படியே அவர்களெல்லோரும் திருப்பாற்கடலுக்கு வந்து மகாவிஷ்ணுவைக்கண்டு முறையிட்டதும், அதற்கு மகாவிஷ்ணுவானவர் அவர்களெல்லாரையும் பார்த்து உங்களுக்குத் துன்பங்கள்செய்யு மாலியவான் முதலான துஷ்டர்களையழித்து நீங்களெல்லோரும் ஒருபயமுமில்லாமற் சுகமாக வாழ்ந்திருக்கும்படிச் செய்கிறோமென்று உறுதியாகச் சொல்லியனுப்புவித்ததும், ஆகிய விவைகளையெல்லாம் உலகமெங்கும் சஞ்சரித்தாராய்ந்து இராசகாரிய சமாசாரங்களை விசாரிக்கும் சாரணர்கள் கேள்விப்பட்டு, உடனே சீக்கிரமாக லங்காபட்டணத்துக்குப்போய் அரக்கர்களாகிய தங்களுடைய ராஜாக்களுக்குச் சொன்னார்கள்.

அந்தச் சமாசாரங்கேட்ட அந்த மூவர்களும் துருத்தியினாலேயூத உலைமுகத்திலெரியு நெருப்புப்போல மனங்கொதித்துச் சீறி, மிகவுங்கொடுமையான கோபங்கொண்டு, இந்தக்ஷணமே சுவர்க்க லோகத்தைப் பாழாக்கித் தேவர்களென்று பேர்சொல்ல ஒருவருமில்லாதபடிக்குத் தேவர்களெல்லாரையுங் கொன்று சயங்கொண்டு மீண்டு வருவோமேயல்லாமல் நாங்கள் சும்மா வரமாட்டோமென்று சபதம்பண்ணிக்கொண் டெழுந்திருந்து போர்க்கோலங்கொண்டு, தாங்களும், தங்களுடைய புத்திரர்களும், சுத்தவீரராகிய படைத்தலைவர்களும், தேர்களேறி, இரத கஜ துரக பதாதியாகிய சதுரங்கசேனைகளும் பூமியாகாசமெங்கு மிருள் மூடப்பரந்து நெருங்கிச்சூழ்ந்துவரவும் சத்த

மேகங்களுங்கூடி யிடித்து முழங்குவதுபோலப் பதினெட்டு வாத்தியங்களு முழங்கவும் ஆரவாரித்து, அதிவேகத்துடனே சுவர்க்கலோகத்தை நாடிச்செல்லுவதானார்கள். அப்பொழுதில் பொல்லாத நிமித்தங்களாக மேகங்கள் இரத்தத்தையு மெலும்புகளையு மழையாகச்சொரிவதோடு மலைகளதிர்ந்து நடுங்கவுங் கண்டு, தங்களுக்கு அழிவுகாலஞ் சமீபமாக நேரிட்டிருப்பதால் அந்தத் துன்னிமித்தங்களைச் சற்று மெண்ணாமல் அகங்காரத்தையடைந்து மேற்சென்று நடந்தார்கள்.

அப்படிக்கு மிகவுங் கொடுமையான கோபத்துடனே மாலியவானுதிமூவரும்எட்டுத்திக்குகளுஞ் செவிடுபடச் சேனசமுத்திரங்களோடு ஆரவாரித்து வருகிற வேகத்தைப்பார்த்த தேவர்களெல்லாருங் கருடனைக்கண்ட சர்ப்பங்கள்போலப் பயந்து, என்ன செய்வோம்? எங்கேபோவோம்? என்று புலம்பிப் பரதவித்து ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லாமல் திக்குத்திக்காக ஒளிப்பிடந்தேடி யோடிப்போவாரும், ஓடமாட்டாமல் மனங்கலங்கிச் சுழன்றலைவாருமாகிப் பின்பவர்களெல்லோரு மொருங்குகூடி யொருதேவதூதனைக்கூவி, அப்பா குணவானே! நீயித் ததியிற் றயைசெய்து ஓரோட்டமாகவோடி இந்தச் செய்தியை நாராயணமூர்த்தியினிடத்திலே சொல்லுவாயென் றனுப்புவித்தார்கள்.

இராட்சசப்படைகள் தேவலோகத்தில் வரக்கண்ட தேவேந்திரன் ஸ்ரீமகாவிஷ்ணுவுக்குத் தெரிவிக்க ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் கருடவாகனரூடராய்ப் போர்க்கோலங்கொண்டு யுத்தகளம்வருதல்.

கவி.

அரக்காரம்பமெல்லா மமரர்கள்விடுத்ததூதர்
உரைத்தலுமுறக்கநீங்கி யுணர்ந்தெழுந்துவணப்புள்ளின்
வரைத்தடந்தோளிலேறி வானவர்வாழ்த்தவந்தச்
செருக்கிளர்படையைச்சென்று தாக்கினன்றிருவின்கேள்வன்.

அப்படியே அந்தத்தூதனுஞ் சுவர்க்கலோகத்தைவிட்டுவாயுவேகமனோவேகத்தினு மதிக வேகமாய்த் திருப்பாற்கடலை நோக்கி, ஓ! ஓ! நாராயணா! நாராயணா! ஓ! ஓ! முகுந்தா! முகுந்தா! ஓ! ஓ! மாதவா! மாதவா! ஓ! ஓ! புருஷோத்தமா! புருஷோத்தமா! ஓ! ஓ! உலோகரட்சகா! உலோகரட்சகா! என்று கூக்குரலாகக் கூப்பிட்டுக்கொண் டோடிச்சென்று முறையிட்டுச் சொன்னான். அப்படிக்கந்தத் தூதன் முறையிட்டசொல் காதிலே கேட்குமுன்னமே ஸ்ரீ நாராயணமூர்த்தியானவர் துணுக்குற்று, ஆதிசேஷசயனத்தைவிட் டெழுந்திருந்து, அதிசீக்கிரமாக மகாமேரு பர்வதத்தின் மேலே சமுத்திரசல பானம்பண்ணிச் சூற்கொண்டு கறுத்தமேகமானது மின்னல்கள் பளபளவென்று விட்டெறிப்ப ஒருபெரிய பச்சைவில்லுடனே பிரகாசித்து விளங்கினாற்போல சங்கம் – சக்கரம் – தண்டம்–கோதண்டம்– கட்கம் – ஆகிய பஞ்சாயுதங்களோடு ஆரம் – கேயூரம் – கிரீடம் – கட்காந்ததம் – குண்டலம் – இவைமுதலான திவ்விய மாணிக்க பூஷணங்களும் பிர

காசிக்கத் தக்கதாக அதிக பல பராக்கிரமம் பொருந்திய பக்ஷிராஜனுன கருடபகவான் தோளின்மேலாரோகணித்து, அந்த ராக்ஷத சேனுசமுத்திரத்தின்மேலே மகாவேகத்துடனே பாய்ந்தார்.

அப்பொழுது கருடபகவான் மகாவுக்கிரகோபத்துடனே மூலைக்குமூலையெங்கும் பாய்ந்து மோதியடிக்கிறசிறகின்காற்றுகிய பிரசண்டமாருத வேகத்தினுலே, அந்த ராக்ஷதசேனையிலே மலைகள்போலே நெருங்கியிருக்கிற தேர்களெல்லாந் தெறித்து முறியப்பட்டும், யானைக்கூட்டங்கள் சாய்ந்துவீழ்ந்துருளப்பட்டும், குதிரைத்திரள்கள் சிதையப்பட்டும், பதாதி வெள்ளமெல்லாம் பஞ்சாய்ப்பறந் தழியப்பட்டும், இப்படிக்குப் பலபலவிதமாகச்சின்னுபின்னப்பட்டு அளவில்லாத சேனைகள் மடிந்தன.

அதைக்கண்ட சுமாலியானவன் மிகவுமுக்கிரமான கோபங்கொண்டு சிதைவுபட்டோடுஞ் சேனுசமுத்திரங்களை யொன்றுய்த்திரட்டி முன்னேறிச்செல்ல நெருக்கி நடத்தி, தானுந் தன்னுடைய தேரைக்கடுக முடுக்கிக் கிட்டி நின்றெதிர்த்து அட்டகாசம்பண்ணி, தனது வில்லைவளைத்து நாணேறிட்டு அநேகவிதமாயுள்ள பாணங்களைத் தொடுத்து மகாவிஷ்ணுவினுடைய சரீரமுழுது மறையும்படி சரவருஷமாகப் பொழிந்து குரூரமான யுத்தம் பண்ணினுன்.

போருக்கெழுந்த சுமாலி மகாவிஷ்ணுவின்பாணந்தைத்து மூர்ச்சையாய்ச்சாய மாலியென்பவன் யுத்தத்திற்கு வந்திறத்தல்.

கவி.

நேரழிந்தமரோடுதானவர்க ளோடவோட விடுநேள்கொடித்
தேரழிந்துதமயன்றளர்ந்துவினை செய்வதொன்றுமறியாதிடக்
காரழிந்திடவிடித்தடர்ந்துவரு காலனென்னவிடமென்னவும்
வாரழிந்ததிருமேனியானை மாலிவந்திடை விலக்கினுன்.

இப்படி அகோரமான யுத்தஞ்செய்யுங்காலத்தில் விஷ்ணுவானவர் செய்யு முயுத்தத்திற்கு இராட்சசர்களாற்றுர்களாய் முதுகுகாட்டியோட சுமாலியானவன் தானேறிவந்த இரதமுறிந்து மேற்செயலொன்றுந் தெரியாமல் திப்பிரமை கொண்டுவருந்தி பாணந்தைப்பதினுல் மூர்ச்சித்து விழுந்தான். அதுகாலையில் மேகமுந்தோற்க அதிர்த்துவருகின்ற இயமனென்னும்படிமாலியென்னு மிராட்சசவீரன் இராட்சசர்களோடு மகாவிஷ்ணுவின் முன்னம்வந்து அட்டகாசம்செய்து அனேகவிதமாயுள்ள ஆயுதங்களுடன் பாணங்களைப் பிரயோகித்து குரூரமானயுத்தம் பண்ணினுன்.

அப்பொழுது மகாவிஷ்ணுவானவர் சிலசில பாணங்களைப்பிரயோகித்து, அவர்களால் விடப்பட்ட அஸ்திர சஸ்திரங்கள் யாவையுமறுத்துத் தள்ளி, அளவில்லாத சேனைகளையு மடியச்செய்தார். அப்படிச்செய்யும்போது கிரீடங்களுடனே தலைகளும், வாள்களுடனேதோள்களும், கவசங்களுடனே

மார்புகளும், வில்லுகளுடனே கைகளும், வீரகண்டாமணிகளுடனே கால்களும், அம்புகளுடனே விரல்களுமாக ; இப்படி வேறுவேறாய்க் கண்டதுண்டப்பட்டு உருண்டு புரண்டு சிதைந்தழிந்து யுத்தகளமெங்கும் குடலுமூளையுமிரத்தமுங்கலந்து செஞ்சேறுபட்டது. அதைக்கண்ட மாலியானவன் மகாவுக்கிரகோபங்கொண்டு, அதிசீக்கிரமாக வொருபலம்பொருந்திய வச்சிரதண்டத்தைக் கையிலே யெடுத்துக்கொண்டு தேரிலேநின்றும் பூமியிற்குதித்துப் பாய்ந்தோடிச்சென்று, அந்த மகாவிஷ்ணுவைத் தோளிலே தாங்கி யெதிர்த்துநின்ற கருடபகவானுடைய நவரத்தினகிரீடந் தகர்ந்து சிதறிவிழும்படி யோங்கியடித்தான். அப்படிக்கவ னடித்தபடியினாலே கருடபகவான் சற்றே மயங்கிச் சோர்ந்தார்.

அதுகண்ட மகாவிஷ்ணுவானவர் அப்படியாவென்று புன்சிரிப்புகொண்டு, இனியிந்தத் துஷ்டனை க்ஷணப்பொழுது முயிருடனே வைக்கப்படாதென்றெண்ணித் தம்முடைய வலதுகையிலிருக்கும் சக்கரத்தைப் பிரயோகம்பண்ணினார். அந்தச் சக்கரமானது அடுத்துநின்ற மாலியினுடைய சிரசினையறுத்துத் தள்ளி, பின்னு மதிகவேகத்துடனே யெதிர்ப்பட்ட சேனைகளெல்லாஞ் சாய்ந்துவிழும்படி யரிந்துமடித்து,ஆகாசமார்க்கத்திலேசெல்லும்பன்னிரண்டு சூரியருடனே பதின்மூன்றாஞ் சூரியன்போலப் பிரகாசத்துடனே சுழன்றுகொண்டு திரிந்தது. அந்தச் சக்கரத்தினாலே தலையறுபட்டு மாலியாகிய விளையதம்பி இறந்ததையும், அவனிறப்பதற்கு முன்னமே மகாவிஷ்ணுவானவர் பிரயோகித்து விடப்பட்ட அக்கினிமயமான பாணங்களினாலே சரீரமெல்லாந் துளைபட்டு சுமாலியானவ னிறந்தவன்போல மூர்ச்சையடைந்து கிடப்பதையும், போர்க்களத்திலே பார்த்தவிட மெங்கெங்கும் தன்னோடு வந்த பலவிதச் சேனைகளெல்லாம் சில குறைத்தலைக் கவந்தங்களாய்நின்று கூத்தாடுவதையும், பல சின்னபின்னப்பட்டுப் பிணக்குவியல்களாய் மடிந்தழிந்து கிடப்பதையும் சிரேஷ்டனான மாலியவான்பார்த்து மிகவும் துக்கப்பட்டு மகாவிஷ்ணுவினுடைய ரவுத்திராகாரத்தைக் கண்டு எதிர்நிற்கமாட்டாமற் பயந்தோடுகிறான். அப்பொழுதில் அவனோடுகிறதைக்கண்ட அவனுடைய சேனைகளும் கலைந்து பின்னேதொடர்ந்தோட, அதைக்கண்ட மகாவிஷ்ணுவானவர் சத்துருசேஷம் வைக்கப்படாதென் றெண்ணிப் புறங்கொடுத்தோடுகிற மாலியவானைக் கொல்ல மகாவுக்கிரத்துடனே நின்றார். அப்படி நிற்கும் பொழுது முன்பு போர்க்களத்திலே, அஸ்திரசஸ்திரங்களினாலே யடிபட்டு மூர்ச்சையடைந்து கிடந்த சுமாலியானவன் அந்த மூர்ச்சைதெளிந் தெழுந்து, தன்னுடைய தம்பியிறந்து கிடப்பதையும் - அளவில்லாத சேனைகளெல்லாம் பாழாய்மடிந்து கிடப்பதையும் - தமையனாகிய மாலியவானு மவன்சேனையும் பயந்தோடுவதையுங் கண்டு, நமக்கிப்படிப்பட்ட கதியும் வருமோவென்று மிகவு மனங்கொதித்துக் கொடுமையான கோபங்கொண்டு, மகாவிஷ்ணுவுக்கெதிரே யதிசீக்கிரமாகவோடி யடுத்துநின்று, இடிபோலமுழங்கி அட்டகாசம்பண்ணி அவரைப்பார்த்து இதனைச்சொல்லுகிறான்.

ஓ விஷ்ணுவே! உலகத்திலே துஷ்டநிக்கிரகம் சிஷ்டபரிபாலனமுதலான காரியங்களிலே மனுநீதிதப்பாமற் செங்கோற்செலுத்தி அரசாளப்பட்டராசாக்கள் யுத்தகளத்திலே போர்செய்யக்குறித்து வராதவர்களையும், எதிர்த்துப் போர்செய்ய மாட்டாதவர்களையும், போர்செய்யத் திறமில்லாமல் முதுகுகொடுத்தோடுமவர்களையும், யுத்தத்திலே யெதிர்த்தபொழுது பயப்பட்டுக்கைகால் நடுங்கிச்சோர்ந்து விழுமவர்களையும், போர்செய்வதைவிட்டொழிந்து நிற்குமவர்களையும், நிராயுதராய் நிற்பவர்களையும், உனக்கு நானுறவானவனென்று நயம்பேசி வேண்டிக் கொள்ளுமவர்களையும், சரீரதிட மில்லாதவர்களையும், வியாதியினாலே மெலிந்திருப்பவர்களையும், சுற்றத்தாரையும், பேடியர்களையும், ஸ்திரீசாதிகளையும், கொலைசெய்ய நினைந்து அவர்கள்மே லாயுதமெடுப்பது சுத்தவீரனுக்குத் தருமமல்லவென்று அநேக தருமசாஸ்திரங்களிலே சொல்லியிருக்கின்றன. நீயந்த ராசதர்மத்தைச் சற்றுமெண்ணாமல், இளங்கன்று பயமறியாதென்பதுபோலச் சிறுபிள்ளைப்புத்தியா லுபாயந்தெரியாமல் அபாயமாய்ச் சேனைகளையெல்லா மடியக்கொடுத்துத் தானு மிறந்துபோய்விட்ட என்னுடைய தம்பி மாலியென்பவனை வெற்றிகொண்டோமென்றும், நானிருக்கிறது தெரியாம லென்னைத்தேடிக்கொண்டுபோகிற வென்னுடைய தமையன் மாலியவானை யுத்தம்பண்ண மாட்டாமற் பயந்தோடிப் போகிறானென்றுமெண்ணி, அவனைப் பின்றொடர்ந்து கொல்லப் போகிறவன்போல நீ நிற்கிற கோலத்தைப்பார்த்தா லெனக்கே மிகவும் வெட்கமாயிருக்கின்றது.

ஆகையா லிப்பொழுது எதிர்த்துநிற்கிற வென்னுடனே யுனக்கு யுத்தம் பண்ணத் திறமுண்டானால் யுத்தம்பண்ணுவென்று போருக்கழைத்து மகாவுக்கிரத்துடனே சுப்பிரமண்ணிய சுவாமியினுடைய வேலாயுதத்துக்குச் சமமான பலம்பொருந்திய ஒரு வேலாயுதத்தைக் கையிலேயெடுத்துக் குலுக்கி, வலமாகச் சுழற்றித்திருப்பி, பின்வாங்கி முன்பாய்ந்தோடி நின்று, மகாவிஷ்ணுவினுடைய மார்பு பிளந்துருவியோடும்படியாக வுரங்கொண்டோங்கி யெறிந்தான். அப்படிக் கவனெறிந்த வேலானது மகாவிஷ்ணுவினுடைய மார்பு பிளக்கும்படிப்பாய்ந்தது, அப்பொழுது மகாவிஷ்ணுவானவர் தம்முடைய மார்பிலே பாய்ந்திருக்கிற அந்தவேலைத் தானேபிடுங்கி, அதிக வேகமாக அந்தச் சுமாலியினுடைய மார்பு தட்டுருவி யோடும்படிக்கு விசைகொண்டெறிந்தார். அந்தவேலானது வாழைப்பழத்திலே பாய்ச்சப்பட்ட ஊசியானதெப்படி தடையற்றோடுமோ ? அப்படிபோல அந்தச்சுமாலியினுடைய மார்பைப் பிளந்துருவிப் புறப்பட்டுப் பின்னு மனேகமான ராக்ஷதக்கூட்டங்கள் சாய்ந்துவிழும்படி துளைத்துருவி அப்பாலு மோடுகிறது. அப்படியோடுகிற வேகத்தை அந்தச் சுமாலியானவன் கண்டு, முன்பு தனக்குப் பரமசிவன்கொடுத்த வொரு சூலத்தைக் கையிலேயெடுத்து, முன்பந்தவேலையெப்படி யெறிந்தானோ ? அப்படியே யெறிந்தான்.

அந்தச் சூலமானது மகாவிஷ்ணுவினுடைய மார்பிலேபட்டு, சுவரிலெறிந்த பந்துபோல உதைந்துதெரித்து விழுந்தது. அதைக்கண்ட சுமாலியானவன் சற்று நிதானித்து, ஓ ஓ ! ! நம்முடைய தவமும் — பலமும் - நன்றாயிருந்தது: நன்றாயிருந்தது: என்றுநகைத்து ஆச்சரியப்பட்டு மனங்கலங்கி, இப்படிக்கெல்லா நமக்கொன்று முதவாமல் அபசயமாக வருகிறபடியினாலே இந்தப்பொல்லாதகாலத்திலே தரபிமானத்தை மேற்கொண்டு கோபத்தினாலேயின்னமும் யுத்தம்பண்ணிப் பிராணனைப் போக்கிக்கொள்ளுகிறது யோக்கியமல்ல வென்று வருந்தினான்.

மாலியவானும் சுமாலியும் மகாவிஷ்ணுவின் போருக்காற்றாது தோற்று பாதாளம் புகுந்தொளித்தல்.

கவி.

பாழிப்புயத்தரக்கன் பழியொடுதம்பியுந்தானும்
ஆழித்துயினெடுமால்படை யைந்தாலுமக்கருளன்
ஊழிப்பெருங்காற்றாலு மிவ்வுலகிற்பிழைப்பரிதென்
றேழிற்பெரும்பாதாளம தடைந்தாரிகலிடைந்தார்.

அக்காலத்தில் பலம்பெற்ற புயத்தையுடைய மாலியவான், மாலியிறந்த பழியைமேற்கொண்டு, சுமாலியோடுதானும், பாற்சமுத்திரத்திற்றுயிலு மகாவிஷ்ணுவினது பஞ்சாயுதங்களாலுங் கருடபகவான் சிறையினின்றெழு மூழிக்காற்றாலும், இவ்வுலகிற் பிழைப்பதரிதென்று இந்தவேளை யுயிர்பிழைத்துத் தப்பியிருந்தோமாகி லினிமே லெப்போதாகிலும் நல்லகாலம் வந்து நேரிட்டசமயத்தில் அந்தக் காலபலத்தினாலே சத்துருக்களைக் கொன்று பழியும்வாங்கி வெற்றிகொண்டு இராசரீகஞ்செய் திருக்கலாம். என்று ஆலோசனை பண்ணினவனாய் அப்பொழுதே யவ்விடத்தினின்று நீங்கி, யுத்தத்திலேமடிந்த சேனைகள்போகமிருந்துள்ளசேனைகளோடுதிரும்பிப்பாராமலோட்டமாகவோடிச்சென்று இலங்காபட்டணத்திலே புகுந்து, அவ்விடத்திலிருந்த தங்களுடைய ஸ்திரீஜனங்கள் — புத்திரர் . மித்திரர் - முதலானவர்களையுங் கூட்டவழைத்துக்கொண்டு, எங்கே போவோமென் றொளிப்பிடந்தேடி யொருவருக்குந் தெரியாம லிருள்பட்டிருக்கும் பாதாளலோகத்திலே மறைந்திருந்தான். இலங்காபுரியில் ஒருராட்சசருமில்லாமல் நிர்ஜீவபட்டணமாய்ப் பொலிவிழந்தது.

இலங்கையழித்தபடலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

ஆறவது,

இராவணன்பிறப்புப்படலம்.

இப்படலத்தில் அகஸ்தியர் இராமமூர்த்திக்கு இலங்காபுரிக்கண்ணுள்ள தன தரசாட்சியைக் குபேரன் கைக்கொண் டனுபவிக்கும் வைபவத்தைக்கண்டு பொறாமைகொண்ட மாலியவானுடைய சூழ்ச்சியின்படி சுமாலியின் வேண்டுகோளால் அவன் குமாரத்தியாகிய கைகசி விச்சிரவாவைக்கூடி இராவணன் - கும்பகருணன் - சூர்ப்பநகி — விபீஷணன் இவர்களைப் பெறுதலும், இவருளாண்பாலார் மூவரும் பிரமனைநோக்கித் தவஞ்செய்து பலவரம்பெறுதலும், அக்கால் மாலியவானாதியர் சூழ்ச்சியால் இராவணன் இலங்கைக் கரசனாயிருந்த குபேரனையோட்டித் தா னரசேற்றிருத்தலும், பின்பவன் தன் தங்கைக்கும் தனக்கும் தம்பியரிருவருக்கு மணவினை முடித்துப் புத்திரபாக்கியம் பெறுதலும் கும்பகருணன் நித்திரைபெற்றிருத்தலும் சொல்லப்படுகின்றது.

பாதாளம்புகுந்த மாலியவான் சுமாலிஎன்னு மிருவரும் யோசித்துச் சுமாலி தன்புத்திரியை யழைத்துக்கொண்டு பூலோகம் வருதலாதிய சவிஸ்தாரங்களை ஸ்ரீராமபிரானுக்கு அகஸ்தியமாமுனிவர் கூறுதல்.

கவி.

வேலையுண்டமாமுனிவன் விரித்துவிளம்புங்கதைகேட்டுக்
கோலமணிநீண்முடிதுளக்கிக் கொண்டல்வண்ணன்வியப்பெய்தி
ஆலமனையவிராவணன்ற னவதாரமுமாங்கவன்செயலும்
சாலவிருப்புற்றனன்கேட்கச் சாற்றுகென்னமுனிசாற்றும்.

சமுத்திர பானம்பண்ணிய அகஸ்தியர் இராட்சசர்களின் பூர்வசரித்திரங்களை விரித்துரைக்கக்கேட்டஇராமபிரான், தனது கிரீடமணிந்த சிரத்தை யசைத்து ஆச்சரியப்பட்டு அப்படியா! நன்றாயிருக்கிறது: நன்றாயிருக்கிறது. இதுநிற்க.இக்காலம் எனதுபாணங்களினாலிறந்தஇராவணாதியர்களின்உற்பத்தியும் அவர்களின் செயலும்கேட்க மிகவும் அவாவுற்றிருக்கிறேன் ஆதலால் அதைச்சொல்லுமென்று கேட்க அகஸ்தியர் சொல்லுகிறார். கேளுமையா இராகவரே! மாலியவானாதி இராட்சசர்கள் பாதாளம்புகுந்து ஒளித்துக்கொண்ட பிறகு சிலகாலம்கழிந்துதான் முற்கூறிய குபேரனிலங்கையி லரசுபுரிந்ததென்றறிவீர். அப்படி அவனரசு புரியுங்காலையில் ஓர்நாள் பாதாளலோகத்திலே யிருட்சிறைக்கூடத்தி லடைபட் டிருப்பவர்கள்போல அநேககாலந் துன்பப்பட்டுக்கொண் டிருக்கு மாலியவான் - சுமாலி என்னுமிருவருங்கூடி, நாமெத்தனைகால மிப்படி யிந்தத்துன்பத்தி லழுந்திக்கொண்டு கிடப்போ

மென்றாலோசித்தார்கள். அப்பொழுது மாலியவானானவன் சுமாலியைநோக்கி கேளாய் தம்பி! இப்பொழுதிருக்கிற ஏதுக்களைப் பார்த்தாலிந்தத்துன்பங்களை நீக்கிக் கொள்ளுவதற்கு நம்மாலுமாகாது. நம்முடைய புத்திரர்களும் அதிஷ்டவீனர்கள். அப்படி யிருந்தாலு நீபெற்றகன்னிகைகளிருவரில் மூத்த பெண்ணானவள் பிரமதேவனுக்குச் சமானமான மகிமைபொருந்திய வொரு மகாபுருஷனுக்கு ஸ்திரீயாவதற்கும், இந்த மூன்றுலோகத்துக்கும் இராசாக்களா யிருக்கத்தக்க புத்திரர்க்குத் தாயாவதற்கும் ஏதுக்களாயுள்ள உத்தம லட்சணங்களைப் பொருந்தி யிருக்கிறாள். ஆனதால் அந்தப் பெண்ணினாலே நாமுஞ் சுகப்படலாம். நம்முடைய குலமும் விர்த்தியாகும். இனிநாம் அதற்கான முயற்சியில் முயல்வதே உத்தமமென்று சொன்னான்.

இப்படி தமையன்சொல்லிய வசனத்தைச் சுமாலி உண்மையாகக்கொண்டு, அந்தயோசனை முடியும்படிக்கேற்ற வுபாயத்தைத் தேடினவனாகித்தன்னுடைய புத்திரியாகிய கைகசியை யழைத்துக்கொண்டு பாதாளலோகத்தை விட்டுப் பூலோகத்திலே சஞ்சரித்து வருகிறான். அப்பொழுது லங்காபட்டணத்திலே ராசரீகஞ் செய்துகொண்டிருக்குங் குபேரனானவன் யட்ச கந்தர்வ சித்த வித்தியாதரர் முதலான தேவர்களுடனே புஷ்பக விமானத்தின்மேலேறி, அனேக சம்பிரமத்துடனே பரமசிவனைத் தரிசனம்பண்ணக் கயிலாசகிரியை நாடிப் போகிறான். அப்படிப் போம்பொழுதில் அவனைச் சுமாலியானவன்கண்டு மனங்கொதித்தனன்.

பூலோகம்வந்த சுமாலியானவன் குபேரனைக்கண்டு பொறாமைகொண்டு கைகசியை விச்சிரவா முனிவரிடத்திற் புத்திரபாக்கியம்பெற வனுப்புதல்.

கவி.

வலியாரெல்லாங்கீழ்ப்பட்டு மற்றையவரேமேற்பட்டுப்
புலிவாழிடத்தேபசுவுறைந்து போராராழித்தோராய்
அலியாமிவனேயாணாகி யஞ்சாதிலங்கையுட்புகுந்து
நலிவாரின்றியரசாளக் கண்டேநாராயணனாலே.

மிகுந்த பலமுடையோ ரெல்லாங் கீழ்ப்பட்டு பலவீனர்களெல்லா மகாரதர்களைப்போல மேற்பட்டு புலிவாழ்ந்தவிடத்து அப்புலிக்குஞ்சும்படியான பசுவானது அரசுபுரிவதுபோல, அலிக்குச் சமானமாகியவிவன் ஆண்டகைமைக் குணமுடையவனாகி நாம்அரசுபுரிந்த இலங்கையுட்புகுந்து தன்னை வருத்துவோரின்றி யாதொன்றுக்கு மஞ்சாது அரசுபுரியக்கண்டோமல்லவா? நாராயணனாலே: ஆஆ!!நன்றாயிருக்கிறது! நன்றாயிருக்கிறதென்றுபொறாமைகொண்டு, தன்புத்திரியைப் பார்த்து, அம்மா! இந்தக்குபேரனுக்கிப்படியான செல்வமுதலானவைகளெல்லா முண்டாயிருப்பது, இவனைப்பெற்ற பிதாவாகிய விச்சிரவாவென்பவருடைய தபோமகிமையே யல்லாது வேறில்லை. ஆன

தால், நீயுமந்த விச்சிரவாவென்பவ ரிருக்குமிடத்துக்குப் போய் அவருனைக்கூடும்படிக்குபாயஞ்செய்து புத்திரரைப்பெறுவாயாகில் அப்புத்திரராலே நமக்குப் பகைவராயுள்ள இந்தக்குபேரன் முதலானதேவர்களையெல்லாம்வென்று நாமுநம்முடையவம்சத்தாரெல்லோருமொருகுறையுமில்லாம லிலங்காபுரியிலே வாழ்ந்திருக்கலா மென்று சொன்னான். அதுகேட்டகைகசி அப்படியே செய்கிறேனென்று அவ்விடத்தினின்று நீங்கி அந்த விச்சிரவாமுனிவனிருக்கும் ஆசிரமத்திற்குட் புகுந்து அவரை மயக்கி நின்றாள்.

விச்சிரவாமுனிவர் தம்மிடம்வந்த கைகசியைநோக்கி மயங்கி அவளுடன் சம்பாஷித்தல்.

கவி.

அன்னவவளையருமறையோ னருளினோக்கியார்மகணீ
என்னகருமம்போந்ததுபே ரென்னென்றுரைப்பச்சுமாலிதரு
கன்னிபெயர்கைகசிவந்த கருமங்கண்டுகொள்ளென்ன
மின்னினிடைதன்கருத்தறிந்து வேதமுனிவன்விளம்புவான்.

அவளைக்கண்ட விச்சிரவாவானவர் மிகவுங் காமவிகார மேற்கொண்டவராகி, மனங்கலங்கி மயங்கிச் சகிக்கமாட்டாதவராய் அவளைப்பார்த்து, பெண்ணே! இந்தவனத்திலே யிப்படித் தனியாகவந்து நிற்கின்ற நீ யாருடையமகள்? உன்னுடைய பெயரென்ன? இங்கேவந்தகாரண மென்னவென்று கேட்டார். அதற்குக் கைகசியானவ ளவரைப்பார்த்து, சுவாமி! நான்அசுரேந்திரனாகியமாலியவான் தம்பியாகிய சுமாலியினுடையபுத்திரி. என்பெயர் கைகசி. நானினைத்துவந்த காரியந் தேவரீர் திருவுள்ளத்துக்கே தெரிந்திருக்கு மென்று அமிர்தரச மொழுக விளங்கிளி பேசினாற்போல் நயமாகச் சொல்லக்கேட்ட விச்சிரவாவானவர் பின்னு மதிக மோகங்கொண்டவராய் மிகவுமாச்சரியப்பட்டு, பெண்ணே! நீ புத்திரார்த்தமாக நம்மைக்குறித்து வந்தாய் வந்தவேளை யசுரசந்தியான மாலைப்பொழுதாகையால், இப்பொழுது நம்மோடுகூடிப் பெறுகின்ற புத்திரர்கள் மிகவுங் கொடிய துஷ்டர்களாய் பிறப்பார்களென்று சொல்லவும் அதற்குக் கைகசியானவள், சுவாமி! உம்முடைய கிருபையினாலே உம்மைக் கூடிப்பெறுகிற புத்திரர்களும் உம்மைப்போலவே யிருக்கவேண்டுமல்லாமல், பொல்லாத புத்திரராகப் பிறக்கலாமோவென்று மிகவுமுபசரித்துச் சொல்லினாள்; இப்படி கைகசிகூறிய வார்த்தையைக் கேட்டவிச்சிரவாவானவர் சந்தோஷப்பட்டு, எல்லாருக்கு மிளையவனாகப் பிறக்கிறவன் சற்புத்திரனாகப் பிறப்பானென் றனுக்கிரகஞ் செய்து அப்பொழுதே யவளுடன்கூடி யனுபவித்தார்.

விச்சிரவாவுக்கும் கைகசிக்கும், இராவணன் — கும்பகருணன் - சூர்ப்பநகி இவர்கள் பிறத்தல்.

கவி.

இத்தத்துவங்களுரைத்தமுனி யிரவிருடபாற்றிசைவீழும்
அத்தப்பொழுதிலாங்கவளை யன்பானினைவின்படியணையப்

பத்துத்தலையும்பத்திரட்டி தோளுமாகப்பாரொடுக்கும்
சத்திக்கிரியின்றசக்கிரீவன் ருன்வந்துதித்தான் றரைநடுங்க.

நறையார்குழலாடன்வயிற்றின் ஞாலமடங்கவிழுங்கிடினும்
நிறையாவயிற்றினெடுவெரைபோ னீண்டவுருவனிமிர்கையன்
பிறையாரெயிற்றுப்பிலவாயன் பெருத்தவிழியனெருக்காலும்
குறையாதெழுவெம்பசியினெடு கும்பகருணன்பிறந்தனனல்.

பண்ணூர்மொழியாளவள்வயிற்றிற் பருத்தவிடையும்பருங்கழுத்தும்
விண்ணூர்மேகத்திடியென்ன வெடித்தகுரலுமுடையாளாய்க்
கண்ணூர்கனலும்புகையுமெழக் கனன்றுகாலன்கருக்குலையப்
பெண்ணாய்ப்பிறந்தாளெனவந்து பிறந்தாள்பெரியசூர்ப்பநகை.

அப்படிக் கனுபவிக்கிற சமயத்திலே கர்ப்பமுண்டாகி, உடனே பத்துத்தலைகளு மிருபதுகைகளு முடையனாய் அதிக பல பாராக்கிரம உக்கிரரூபத்துடனே உலகநடுங்கும்படித் தசக்கிரீவன் பிறந்தான். பின்னு மப்படியே யனுபவிக்கும்பொழுது, முன்போலவே கர்ப்பமுண்டாகி இருண்ட நீலகிரி போலச் சரீரமும்,உயர்ந்தகையும் கொழுந்துவிட்டெரியு நெருப்புப்போற் சிகையும்,அர்த்தசந்திரனைப்போலவிளங்கும் வக்கிரதந்தங்களும்,பெரியகண்களு முடையவனாய் வடவைக்கனல்போல் மாருதெரியுங் கொடுமையான பசியுடனே கும்பகர்னன் பிறந்தான். அதன்பின்பு பெருத்தமூக்கும், பெருத்த உதடும், பெருத்தகழுத்தும், பெருத்தமுலையும், பெருத்தவிடையும், பெருத்தகாலும், பெருத்தகையும், கடித்தபல்லும், வெடித்தகுரலும், தாறுதலையும், சிறுமுகமு முடையவளாய் கூற்றுவனே பெண்ணுருவங் கொண்டதுபோல மிகவும் பொல்லாத பாவியாகிய சூர்ப்பநகை பிறந்தாள். இப்படிக்கு மூவரும் பிறக்கத்தக்கதாகப் புணர்ந்து கலவியிளைப்பாறி, பின்னு மனமகிழ்ந்து அவ்விருவருங்கூடிப் புணர்ந்தார்கள்.

விபீஷணர்பிறத்தல்.

கவி.

மன்னுதவத்துப்புலத்தியன்றன் மரபுவிளங்கமறைவிளங்கத்
தன்னேரில்லாத்தந்தைக்குத் தக்கமகவாய்ச்சண்டாளர்
அன்னோர்முன்னோரவதரித்த வந்தவயிறுசுத்தமுற
மின்னேரிடையாடன்வயிற்றில் விளங்குபுகழ்வீடணன்பிறந்தான்.

நிலைபெற்ற தவத்தையுடைய புலத்தியப் பிரமரிஷியின் வமிசம்விளங்க நான்குவேதம்விளங்க, தாய்க்குந் தந்தைக்குமேற்ற குமாரராய் சண்டாளர்களாகிய முன்னோர்கள் பிறந்த வயிறுசுத்தமுற, மின்னலையொத்த இடையையுடைய கைகசியினுடைய வயிற்றின்கண், மிகுந்துபிரகாசிக்கின்ற கீர்த்தியையுடைய விபீஷணர் பிறந்தார். பிறகு தசக்கிரீவன்—கும்பகர்னன் - விபீஷணன் – ஆகிய மூவரும் பிதாவினிடத்திலேதானே சகல வேதசாஸ்திரங்களுமோதியுணர்ந்து, தனுர்வேதவித்தையும் அப்பியாசம்பண்ணி, எல்லாவித்தையிலும் வல்லவர்களாய் மேலான பராக்கிரமத்தைப் பொருந்தி யிருந்தார்கள்.

அம்மூவருள் முதலிருவர் மதோன்மத்தராய் அகங்காரங்கொண்டு, அந்தப் பிறதேசத்திலுள்ள கிரிவனங்களிலே ஆச்சிரமவாசிகளான தபோதனர்களெல்லோருக்கு முபத்திரவஞ் செய்துகொண்டு கொடியவிஷம்போல வளராநின்றார்கள்.

அந்தத் துஷ்டர்களுக் கிளையோனாகிய விபீஷணனானவன் தன்னுடைய குருவாகிய பிதாவுக்கு மனமகிழும்படியான ஏவற்பணிவிடை செய்துகொண்டு, அவருடைய வனுக்கிரகத்தினாலே சகல வேதசாஸ்திர சம்பன்னனாகி, இயாவருஞ் சந்தோஷப் படத்தக்க யோக்கியனாக விருந்தனன். பாபியாகிய சூர்ப்பநகை யென்பவளோ? அடங்காத காமவிகாரத்தை யுடையவளாகி, தான் சஞ்சாரமாகத் திரியுமிடங்க ளெங்கெங்கு மெதிர்ப்பட்ட ரிஷிகள்முதலான யாவரையும் வலிதிற்பற்றி யிழுத்து, அவர்கள் வருந்தி நடுங்கும்படியாகத் துன்பப்படுத்திப் புணர்ந்து இன்பமனுபவித்துக்கொண்டு திரிந்தனள். இப்படியிவள் திரிந்துகொண்டிருக்க, அந்தத் தசக்கிரீவன் முதலான மூவரும் அந்தவனத்திலே தானேசஞ்சரித்துக்கொண் டிருந்தார்கள்.

அப்பொழுது அவர்களைப்பெற்ற தாயாகிய கைகசியானவள்முன்னமே யொருநாள் தன்னுடைய பிதாவாகிய சுமாலியென்பவன் குபேரனைக் கண்டபொழுது மாச்சரியப்பட்டு நீ யிவன்பிதாவாகிய விச்சிரவாவைச் சேர்ந்து புத்திரரைப் பெற்று அந்தப் புத்திரராலே நமக்குத் துன்பத்தை விளைக்கும் பகைவராகிய தேவர்களைக்கெடுத்து இந்தக் குபேரனையுந் துரத்தி நம்முடைய வரசாட்சிக்குக் காணியாகிய இலங்காபட்டணத்திலே நாமெல்லோரும் வாழ்ந்திருக்கும்படிச்செய்வாயென்று போதித்த மனக்குறை தீரும்படிக்குக் காலம்பார்த் திருக்குமளவில், அந்தத் தசக்கிரீவன் முதலான மூவருந்தங்களுடைய பிதாவிருக்கு மாச்சிரமத்துக்குவந்து அவரைக்கண்டு வணங்கித் தரிசனஞ் செய்துகொண் டவ்விடத்தே வாசமாக விருந்தார்கள்.

அப்பொழுது கைகசியானவள் தன்னுடைய புத்திரராகிய தசக்கிரீவன் முதலான மூவரையும் பார்த்து, ஓ என்னருமைச் செல்வர்களே! இலங்காபுரியையாண்ட உங்கள் பாட்டன்மார்கள் மகாவிஷ்ணுவினால் போரில்தோற்று பாதாளம் புகுந்துவருந்த உன்தாயாதியாகிய குபேரன் புட்பகவிமானத்தோடும் இலங்காபுரியை யாள்கின்றான். நீங்கள்வருந்தி வனவாசஞ்செய்யவாயிற்றே என்று வருத்தப்பட்டாள்.

இராவணாதியர் மூவரும் வனஞ்சேன்று பிரமனைநோக்கித் தவம்புரிந்து வரம்பெறுதல்.

கவி.

என்றுதாய்சானிவைகூற வெயிற்றின்லேயிதழதுக்கி
ஒன்றுதவத்தாலிவனேடே யொத்தன்மிகுத்தல்செய்வனெனக்
கன்றுமனத்தாய்தனைத்தேற்றிக் கறவுமனத்தரிளைஞரொடும்
குன்றுபுரைதிண்புயத்தரக்கன் கொன்றைவனத்தைக்குறுகினான்.

277 இராவணன், கும்பகருணன், விபீஷணன் இவர்கள் பிரமனைவேண்டித்தவஞ்செய்து வரம்பெறுதல்.



குபேரன் இராவணன்வசமிலங்கையையொப்பிவித்துதான்புஷ்பகமேறிபோதல்.



இப்படி யென்றுசொல்லி தாயானவள்வருந்த இராவணனாகிய தசக்கிரீவன், உதட்டைக்கடித்து அம்மா தாயே! நீவருந்தாதேஎன் தாயாதியாகியகுபேரனைப்போல் நாங்களுந்தபஞ்செய்துவேண்டியவரத்தைப்பெற்றுஅவ்விலங்கையை யாள்கின்றோ மென்று தாயாரைத்தேற்றித்தம்பிமார்களுடன் கொன்றை வனத்தையடைந்து தவஞ்செய்யத் தொடங்கினார்கள். அவர்களிற் கும்பகர்ணனானவன் பிரமதேவனைநோக்கி வேனிற்காலத்தில் பஞ்சாக்கினி மத்தியிலே யிருந்தும், வருஷகாலத்தில் மழையிலேநனைந்தும், பனிக்காலத்தில் சலத்தின் மூழ்கிக்கிடந்தும், ஆகாரநித்திரை யில்லாம லிப்படிக் குறுதியாகப் பதினாயிரம்வருஷம் தபசு செய்தான். அவனுக் கிளையவனாகிய விபீஷணன் ஊசியைநிறுத்தி, அதின்மேலே தன்னுடைய வொருகாற் பெருவிரலையூன்றி மற்றொருகாலை மடித்துக்கொண் டண்ணாந்து நின்றபடியா யிரண்டுகைகளையு நீட்டிக் குவித்து, கண்களிமையாற் சூரியனைப் பார்த்துக்கொண் டிப்படி ஐயாயிரம் வருஷமும்; மடித்தகாலை நீட்டியூன்றி நின்றும், ஊன்றியகாலை மடித்துக்கொண்டும், இப்படி யையாயிர வருஷமுமாக விப்படிப் பதினாயிரம் வருஷ மொருவராலுஞ் சாதிக்கப்படாத வரியதவத்தைச் செய்தான்.

இப்பா லவ்விருவருக்கு மூத்தோனாகிய தசக்கிரீவனானவன் விதிப்படி யாகசாலைநிர்மித்து, அதனடுவிலே ஓமகுண்டஞ்செய்து, அந்தக் குண்டத்துக்குள்ளே யாகசமித்துக்களை நிறைத்து அக்கினியைமூட்டி வளர்த்து, அந்த வக்கினியிலே ஆயிரம் வருஷத்துக்கோவ்வொரு சிரசாக வொன்பதினாயிரம் வருஷத்தி லொன்பதுசிரசுகளையரிந் தாகுதிகொடுத்து, பதினாயிரம் வருஷத்தில் மிகுந்து நின்ற பத்தாஞ்சிரசையு மாகுதியாகக் கொடுக்கத்துணிந்து அந்தச் சிரசினை உடைவாளினா லரிகிறான். அப்பொழுதி லவன்செய்யுங் கொடுந்தொழிலுக் காச்சரியப்பட்ட பிரம்மதேவனானவர் அந்தக்ஷணமே அவனுக்குப் பிரத்தியக்ஷமாகி, உனக்குவேண்டிய வரங்களைக் கேள் தருகிறோமென்று சொல்லினார். அதற்குத் தசக்கிரீவன் பிரம்மதேவரைநோக்கி, ஓ பாரதிகொழுநரே! நான்மனுஷரை யொருபொருட்டா யெண்ணவில்லை தேவர்களிராக்ஷதர்கள் முதலாயுள்ள யாவரு மென்னுடைய வாக்கினைப் பிரகாரமேவல்கேட்டு நடக்கும்படிக் கெல்லாவல்லமையு முண்டாக வேண்டுமென்று கேட்டான். அதற்கவ ரப்படியே கொடுத்தோமென் றனுக்கிரகஞ்செய்து, பின்பு விபீஷணனுக்குப் பிரசன்னராகி, இப்படி யுன்னைப்போல மிகவு மருமையான தவத்தினைத் தவறாமற்செய்து முடித்தோ ரொருவருமில்லை. ஆதலால் உனக்குவேண்டிய வரங்களைக் கேட்பாயென்று கூறினார்.

அதற்கு விபீஷணன் பிரம்மதேவரை நோக்கி, சுவாமி! சகல பிராணிகளுந் துன்பமுற்று நடுங்கும்படிக்கு அதருமமார்க்கத்தினாலே செய்யப்பட்ட பாபகிருத்தியங்க ளென்னாற் செயயப்படாம லிருக்கவும், மேலான சிலாக்கியம்பொருந்திய தேவர்கள்முதலான யாவராலுஞ் செயிக்கப்படாத வெற்றியின் மேன்மைபொருந்தி யிருக்கவும் வேண்டுமென்று கேட்டான். அப்படியே

யுனக்குண்டாகக் கடவதென்று வரங்கொடுத்துப் பின்னுமந்தப் பிர்மதேவரானவர் விபீஷணன் வரங்கேட்ட விவேகத்தைப்பார்த்து, இவன் மிகவுஞ்சற்குணவானுகவும் — தர்மிஷ்டனுகவும் - சத்தியவானுகவு மிருக்கிறுன். ஆனா லிவனிந்தப்பூலோகத்திலே நெடுங்காலமிருப்பானுகிற் சகல பிராணிகளுக்கு மிதத்தைத்தேடுவானென்று நினைந்தவரா யந்த விபீஷணனைநோக்கி, அப்பா உத்தமனே ! நீயுகாந்தப் பிரளயகாலமளவு மழியாமற் சிரஞ்சீவியா யிருக்கக்கடவதென் றனுக்கிரகஞ்செய்து, அவனிடத்தினின்று நீங்கிக் கும்பகர்னனுக் கனுக்கிரகஞ்செய்தருளவருகிறுர்.

அப்பொழுது இந்தக் கொடியபாவியாகிய கும்பகர்னன்செய்து முடித்திருக்கின்ற குரூரமான தபசுக்குப் பிர்மதேவர் வரங்கொடுப்பாரேயாகில் நாமெல்லோரும் பிழைப்பிடமின்றி யிறந்து விடும்படியாய்த் துன்பப்படுத்திக் கெடுப்பானென்று பயந்துநடுங்கித் தேவர்கள் — அசுரர்கள் - இரிஷிகள் - முதலான யாவருங்கூடி ஆலோசித்து, அந்தப் பிர்மதேவரிடத்துக்கு வந்து வணங்கித் தோத்திரம்பண்ணி; சுவாமி! உமக்கு நாங்கள்செய்த அபராதமென்ன ? மற்றுமுள்ள பிராணிகள்செய்த பாவமென்ன ? அப்படிக்குத் தேவரீர் திருவுள்ளம் வெறுக்கும்படியான குற்றங்கள் செய்திருப்போமேயானுல் ஒருபாவமுஞ் செய்தறியாத விளம்பசுங்கன்றைக் கொடும்புலிக்கிரையாகக்கொடுப்பதுபோல அந்தப்பொல்லாத கண்டகனுகிய கும்பகர்னனுக்கு வரங்கொடுத்து அவனுலே துன்பப்படுத்துவித் தழியச்செய்வதிலும், எங்களைச் சிருஷ்டித்த நீரே தண்டனைபண்ணிக் கொல்வது மிகவுநன்மையென் றிந்தப்பிரகார முறையிட்டு வேண்டினுர்கள்.

அதுகேட்ட பிர்மதேவ ரவர்களைப்பார்த்துத் திருவுள்ளமிரங்கி, அந்தக் கும்பகர்னனு லுங்களுக்கொரு துன்பமுமுண்டாகாதபடிக்குச் செய்கிறுமென் றனுக்கிரகித்து, அதற்கோ ருபாயந்தேடினவராய்த் தம்முடைய தேவியாராகிய சரசுவதியைப்பார்த்து, நாமந்தக் கும்பகர்னனுக்கு வரங்கொடுக்கும்பொழுது அவனெண்ணம்பலியாதொழிய நீயவனுடைய வாக்கிலிருந்து அவன்கேட்கிறவரம் கெடும்படி மாறுபடுத்திச்சொல்விப்பாயென் றுகூறி, கும்பகர்னனுக்குப் பிரசன்னராகி உனக்கு வேண்டியவரமென்ன கேள் தருகிறுமென்று சொல்லினர். அதற்குக்கும்பகர்னன் எல்லாவரங்களினுமேலாகியவர மழியாமலிருப்ப தல்லவோவென் றுலோசித்தவனுய், நித்தியத்துவந் தரவேண்டுமென்று கேட்கிறவசனத்தை யவனுவிலிருந்த சரசுவதியானவள் மாறுபடுத்தி நித்திரைத்துவந் தரவேண்டுமென்று கேட்கச்செய்தாள்.

இப்படியவன் கேட்டமாத்திரத்தில் அப்படியே யுனக்கு வரங்கொடுத்தோமென் றுரைத்துப் பிர்மதேவர் தாமிருக்குஞ் சத்தியலோகத்துக்குப்போயினுர். இந்தப்படிவரம்பெற்ற கும்பகர்னனுக்கப்பொழுதே யறிவுமயங்கி அவசமான சோபநித்திரைதோன்றிற்று. அதுகண்டவன் இப்படிமாறுபாடுசெய்தவர்கள் தேவர்களேயல்லது வேறில்லையென் றுலோசித்தவனுய் மிகவும் வி

யாகுலப்பட்டு, தமையனாகிய தசக்கிரீவனிடத்திலுந் தம்பியாகிய விபீஷண னிடத்திலும் புலம்பிப் பரிதாபப்பட்டான். அப்படிக்கு விசனத்தை யடைந் திருக்குங்கும்பகர்னனுக்கு அவர்கள்தேறுதலைசொல்லிப், பின்பு அவனுடனே தாங்கள் முன்பு வாசஞ்செய்திருந்த வனத்திற் சேர்ந்திருந்தார்கள்.

இராவணன் மாலியவானாதியர் உபாயத்தினால் குபேரனை இலங்கையினின்று மப்புறப்படுத்தல்.

கவி.

அன்னவர்களினிதிருந்தவக்காலைத்தசமுகனைச் சுமாலிநோக்கி
முன்னமரிற்றுமெல்லா முகில்வண்ணன்றனக்கஞ்சி முதுகிட்டோடிப்
பன்னகர்நாடதுவாய பாதாளம்புக்கமையும் பண்டுதாமாள்
பொன்னகரத்திடைதனதன் புக்குவீற்றிருந்தமையும் பொருதுசொன்னான்.

இராவணாதியர்க ளவ்வனத் திருந்தபோது முன்பு மகாவிஷ்ணுவுக்குத் தோற்றோடிய சுமாலியானவன் இராவணனை யடைந்து அப்பா! தசக்கிரீவா! நாங்கள்முன்பு இலங்கையை அரசாண்டிருந்தோம் அப்படியிருந்தகாலத்தில் மாயவனால் தோற்று பாதாளம்புகுந்து வருந்துகின்றதையும், அவ்விலங்கையைக் குபேரன் அரசாள்வதையும் மனம்பொறுது சொல்லிப் பின்னும் சொல்லுகிறான். அந்தக் குபேரனையு முன்னையும்பெற்ற பிதா ஒருவரானகையாலும், அவனுனக்கு மூத்தவனானகையாலும், தானே யுடையவனென் றெண்ணிக்கொண்டு அந்த லங்காபட்டணத்தை யுனக்குக்கொடுக்கமாட்டான். அப்படிக்கிருந்தாலும் எந்தவிதத்தினாலேயானாலும் நீயந்தலங்காபட்டணத்தை யுன்னுடையதாகச் செய்து கொள்ளாதவரையில், நீ பிரயாசைப்பட்டுத் தவஞ்செய்து பெற்ற வரத்தினாலுண்டாகிய பலபராக்கிரம சவுரியங்களெல்லாம் அப்பிரயோசனமாய்ப் போய்விடும். நமக்குச் சத்துருக்களாயுள்ள தேவர்களு மிகழ்ச்சிசெய்யும்படியான அபகீர்த்தியுண்டாகுமென்று பலவாய் முறையிட்டான். இப்படி முறையிட்டுக்கூறிய அனேகவிதமான துர்ப்போதனைகளைக் கேட்ட அந்தத் தசக்கிரீவனானவன் சுமாலியாகிய பாட்டனைப்பார்த்து, ஐயா என்மூதாதையே! நீதிதப்பித் தமையனைக் கெடுத்து அவனாளுகிற பட்டத்தைத் தம்பிகட்டிக்கொண்டாளுவது தருமமல்லவென்று மறுத்துச் சொல்லினான்.

அதுகேட்டிருந்த பிரகஸ்தனானவன் தசக்ரீவனது மனதைப்பேதப்படுத்த அத்துர்ப்போதனைக்குட்பட்டு நீயே தூதாகப்போ யிந்தப்பிரகாரம் விவரமாகச் சொல்லிவருவாயென்று தன்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லியனுப்புவித்தான். உடனேயவனும் அவ்விடத்துநின்று நீங்கி லங்காபட்டணத்துக்குப்போய்க் குபேரனிடத்திற் சென்று, அவனைநோக்கி இவ்வாறு சொல்லுகிறான்.

ஐயா அரன்றோழரே! உன்னுடைய தம்பியாகிய தசக்ரீவன் தன்னுடைய பாட்டன்முதலானோர்கள் நெடுங்காலம் பரம்பரையா யதிகாரஞ்செய்

துவந்த இலங்காபட்டணத்துக் குடையவன் நானேயன்றி வேறொருவருண் டோவென்றும், என்னுடைய சிநேகிதமுஞ் சகாயமு முனக்குவேண்டியிருக் குமேயாகில் இப்பொழுதே யிந்தலங்கையைவிட் டப்புறத்தேபோகவேண்டு மென்றும் உம்மோடு சொல்லச்சொன்னானென்று சொன்னான்.

கவி.

அன்னவாசகங்கேட்ட வருநிதிக்கோன்வருங்கரும மனத்தினாராய்ந்
தென்னரசுமென்பதியு மென்றம்பியினதன்றே யெனக்கென்றம்பி
சொன்னபடிசெய்வனெனச் சொல்லிவிடுத்தவன்றனக்குச் சொன்னவெல்லா
தன்னுடையதாதைக்குத் தான்கூறக்கேட்டந்தத் தவத்தோன்சாற்றும்.

அதுகேட்ட குபேரனானவன் அப்பொழுது நேரிட்டிருக்கிற காலதேச வர்த்தமானங்கள் மூன்றையு நன்றாயாலோசித்து, இந்தப்பட்டணமு மிராச ரீகமு மெனக்கிளையோனாகிய தசக்கிரீவனுடையதே: அவன்மனதின்படியே நான் செய்கிறேன். என்று சொல்லிப் பிரகஸ்தனையனுப்பிவிட்டுத் தன்னு டைய பிதாவாகிய விச்சிரவாவென்பவரிடத்துக்கு வந்து, தசக்ரீவனாலேயுண் டான சங்கதிகளெல்லாஞ் சொல்லினன். அவருமவனைப்பார்த்துச் சொல்லு கிறார்.

அப்பாமகனே! அந்தத் தசக்ரீவனானவன் என்னுடனே யொவ்வொரு வேளைகளிலே இலங்காபட்டண முன்பு தன்னுடைய பாட்டன்மார் முதலா னோர்களாண்டு வந்ததென்று சொல்லியிருப்பான். அல்லாமலு மிப்படிக்கு நீ நியாயவிரோதஞ் செய்வது உனக்கு யோக்கியமல்லவென் றெவ்விதமாகச் சொன்னாலுங் கேளான். ஆதலால் விரோதப்படாமல் அந்தத் துஷ்டனுக்கு இலங்காபட்டணத்தைக் கொடுத்துவிட்டு, அளவில்லாத சிறப்பினையுடைய இமயகிரியினிடத்திற் சேர்ந்து தபசுசெய்திருப்பாயாகில் உனக்கெல்லாரினு மேன்மையான சகல செல்வங்களு முண்டாகுமென் றனுக்கிரகித்துச் சொல் லினார்.

இராவணன் இலங்காபுரியில்முடிசூடி தன்தங்கைக்குந் தனக்கும் தம்பிய ரிருவர்க்கு மணமுடித்துப் புத்திரபாக்கியம் பெற்றிருத்தல்.

கவி.

எந்தையுரைத்ததுசெய்வெ னெனத்தனதனிருங்கிளையோ டிலங்கைவிட்டுச்
சிந்தையெனுங்கடுந்தெய்வத் தேரேறித்திகழிமயஞ் சென்றுசேரத்
தந்திரமாகடறழுவத் தசக்கிரிவன்றன்னகரி வந்துசார்ந்து
மந்திரிகண்முடிசூட்ட மாமணிமண்டபத்தின்மிசை மகிழ்ந்திருந்தான்.

இதைக்கேட்ட குபேரனானவன் அப்படியே செய்வேனென்று தனது பரிவாரங்களாகிய யக்ஷகூட்டத்தவர்கள் நெருங்கப்புஷ்பகத்தின் மிசையேறி இமயகிரியையடைந்து தவஞ்செய்யச் சென்றனன். அதன்பின்பு தசக்ரீவன் தன்னுடைய பாட்டனாகிய மாலியவான் முதலானவர்களுடனே இலங்காபட் டணத்திலே பிரவேசித்து, மந்திரி புரோகிதர் முதலானவர்களினாலே பட்டா

பிஷேகஞ் செய்வித்துக்கொண்டு, மகுடாதிபதியாய் நவரத்தின சிங்காசனத்தின்மேவி இராஜாதிகாரஞ் செய்துகொண் டிருந்தனன்.

இப்படி தசக்கிரீவனுனவன் பூர்வம் மகாவிஷ்ணுவினுலே யடிபட்டோடிப் பாதாளலோகத்தில் வெகுகாலந் துன்பப்பட்டுக்கொண் டொளித்திருந்த மாலியவான் முதலான வெல்லோரும் ஒருவனுக்குப்போனபொருள் கிடைத்தாற்போல முன்ன மிருக்கையிழந்திருந்த அந்த லங்காபட்டணத்திற் சகலமான செல்வங்களுடனே தன்னைப் புடைசூழ்ந்திருக்கப் பெருமையாக வாழ்ந்திருக்குங் காலத்திலே சூர்ப்பநகையினுடைய வழகைக்கண்டு மோகங்கொண்டு மூர்ச்சித்துப் பரவசப்பட்ட வித்துருசிங்கவனென்னு மிராக்ஷதனுக்கு அந்தச் சூர்ப்பநகையை விவாகஞ் செய்வித்துக் கொடுத்தான்.

அதன்பின் பொருநா ளந்தத் தசக்ரீவனுனவன் தன்னுடையபரிவாரசேனைகளுடனே வேட்டையாட வனத்திற்சென்றான். அப்பொழுது மயனுனவன் தன்மகளை எல்லாரினு மேன்மையுடைய புருஷனுக்கு விவாகஞ்செய்து கொடுக்கவேணுமென்று நினைந்து, அந்தப்பெண்ணையு மழைத்துக்கொண்டு அவ்வனமார்க்கமாக வருகிறான். அப்பொழுதி லவர்களைக்கண்ட தசக்ரீவன் நீங்கள் யாவரென்றுகேட்க, அந்த மயனுனவன் தசக்ரீவனைப்பார்த்து, ஓ இலங்கைவேந்தே! நான் தயித்தியராஜன்மகன். என்னுடையபெயர் மயன். இலக்ஷுமிக்கு நிகரான சௌந்தரியத்தைப் பொருந்திய தரிசனையென்பவளை யெனக்குத் தேவர்கள் விவாகஞ்செய்வித்துக் கொடுத்தார்கள். அவளுநானுமாக ஐந்நூறுவருஷங் காமசுகபோக மனுபவித்திருந்தோம். அப்படியிருக்குங்காலத்தில் மண்டோதரியென்னு மொருபுத்திரியும், மாயா—துந்துபி-என்னுமிரண்டு புத்திரரும் பிறந்தார்கள். அவர்களுக்குள்ளே மிகவுஞ்சௌந்தரிய சற்குணங்களைப் பொருந்திய இந்தப் பெண்ணுக்கேற்ற புருஷனையெங்குந்தேடிக்காணுமல்,இவ்விடத்திலென்னுடைய பூர்வதபோபலத்தினுலும் என்மகளுடைய பாக்கியவசத்தினுலும் உம்மைக் காணப்பெற்றேன். என்றுபசாரமாகச் சொல்லிப் பின்னும் சொல்லுகின்றான்.

கவி.

குலம்வேண்டுமென்றிருப்பார் குலத்துள்ளார்கல்வியினுற் குறையாஞானப்
பலம்வேண்டுமென்றிருப்பார் தந்தைமார்பரந்தபெருஞ் செல்வமுள்ள
தலம்வேண்டுமென்றிருப்பார் தாய்மார்கள்யவ்வனமு நலமுஞ்சார்ந்த
நலம்வேண்டுமென்றிருப்பார் நாறுகுழன்மங்கைமார் நலத்தின்மிக்கார்.

பண்புடையகுடிப்பிறப்பும் பழிப்பில்லாப்பேரழகும் பரந்தகேள்வி
நுண்பொருளைநீரொழியப் பானுகருமன்னம்போ னேக்கித்தீரு
மொண்பொருளுமிந்நான்கு முடையாரைக் கிடையாதிவ் வுலகந்தன்னிற்
பெண்பெறுகைதனைப்போலப் பெரியதுயர்தானுண்டோ பேசுங்காலே.

ஓ தசக்ரீவமகாராஜனே! உலகத்திலே யொருபெண்ணுக்கு விவாகஞ்செய்யவாலோசிக்குமிடத்தில் சுற்றத்தார்கள் நல்லகுலமுடையோனுக்குக் கொடுக்க

வேணுமென்றும், பிதாவானவன் நல்லவித்தியாஞானமுள்ளவனுக்குக்கொடுத்துக்கீர்த்திபெறவேணுமென்றும், தாய்மார்கள் பெருஞ்செல்வமுள்ளவனுக்குக்கொடுக்கவேணுமென்றும், அந்தக்கன்னிகையானவள் யவ்வனமுமழகும்பொருந்தியபுருஷனுக்குப்பாரியாக வேணுமென்று மிச்சிப்பார்கள். நற்குடிப்பிறப்பும், நல்லழகும், பாலையுநீரையும் பிரித்துண்ணுமன்னத்தைப்போலக்கல்வியறிவினலே குணகுணங்களைப்பகுத்தறியும் விவேகமும், செல்வமுமாகிய விந்நான்குமுடைய உத்தமபுருஷன் கிடைக்கமாட்டான். ஆனதால் பெண்ணைப்பெறுவதைப்போலும் அபவாதம் வேறொன்றுமில்லையென்றுஞ்சொல்லி, உத்தமபுருஷனிடத்தி லிருக்கவேண்டிய யோக்கியங்க ளெல்லாம் பொருந்தி யிருக்கும் உம்முடைய குலமுதலானவைகளெல்லாஞ் சொல்வீரென்று கேட்டான். அதற்குத் தசக்கிரீவன்மயனைப்பார்த்துச் சொல்லுகிறான்.

ஐயா தைத்தியர்வேந்தே! சகல லோகங்களையுஞ் சிருஷ்டிக்கின்ற பிரம்மதேவருடைய புத்திரர் புலஸ்தியப் பிர்மா. அவருடைய புத்திரர் விச்சிரவாவென்பவர். நானவருடைய புத்திரன். என்னுடைய பெயர் மூன்றுலோகமுமேவல்கேட்டு நடக்கும்படிக்கு இராஜாதிகாரஞ் செலுத்தி யாளுகிற இலங்காதிபதியாகிய தசக்கிரீவன். அளவுபடாம லனேகவிதமாக விரிந்திருக்கிற சகல வேதங்களையும் ஓதி யுணர்ந்திருக்கும் வல்லமையுடையவனென்று தன்னுடைய சகல பெருமைகளையும் புகழ்ந்து சொன்னான். அதுகேட்ட மயனனவன் பெண்ணினா லடையப்பட்ட பிரயோசனத்தை நானே யடைந்தேனென்று மிகவுஞ் சந்தோஷப்பட்டு, இவனுக்கே கொடுக்கவேணுமென்று நிச்சயித்துக் கொண்டு, அந்தவனத்தி லப்பொழுதுதானே அந்தத்தசக்கிரீவனுக்கு மண்டோதரியைக் கல்யாணஞ்செய்து கொடுத்து, நவரத்தின முதலான பூஷணங்களும் சீதனவரிசையாகக் கொடுத்து, பிரம்மதேவன் மேலே பிரயோகஞ்செய்தாலுமவனையுங்கொன்று மீளுவதாகிய ஒருவேலாயுதமுங் கொடுத்துத் தன்னுடைய தானத்துக்குப் போயினான்.

பின்பு தசக்கிரீவன் அந்த மண்டோதரியுடனே இலங்கா பட்டணத்திலே பிரவேசித்திருந்தான். அப்படியவ னிருக்கும்பொழுது கும்பகர்னனுக்கு அசுரகுலத்தினிற் பிறந்த வயிரோசனன் மகளாகிய வச்சிரச்சுவாலை யென்பவளையும், விபீஷணனுக்குக் கந்தருவகுலப் பெண்ணாகிய சரபையென்பவளையு மனேக விமரிசைகளுடனே விவாகஞ் செய்வித்து, அவர்களு மகிழ்ந்திருந்தனர்கள்.

இந்திரசித்துப் பிறத்தல்.

கவி.

இந்திரனுஞ்சசியும்போ லிலங்கிழைமண் டோதரியுந்தானுமேய்ந்து
சிந்தையுவந்தனுபவித்துச் செல்கின்றகாலத்துத் திருவுளுள்பால்
வந்துபிறந்திடுமைந்தன் மழையிடித்ததெனவாய்விட் டழுதலாலவ்
வெந்திறன்மைந்தனைமேக நாதனெனப்பேரிட்டா னிலங்கைவேந்தன்.

இராவணன்குபேரனைச்சேயித்து அவன்புஷ்பகவிமானத்தைக்கைகொள்ளு

№ 78.



இராவணன்கைலாயமலையையெடுத்து சிவானுக்கிரகம்பெருதல்.



இந்திரனு மிந்திராணியும்போலத் தானு மண்டோதரியுங் காமசுகபோக மனுபவித்துக்கொண் டிருந்தார்கள். அக்காலத்தி லந்த மண்டோதரி கர்ப்ப வதியாகி யொரு பிள்ளையைப்பெற்றாள். அந்தப்பிள்ளை பிறந்தவுடனே கார் காலத்து மேகங்க ளிடித்தாற்போல முழங்கினான். ஆனதா லந்தப்பிள்ளைக்கு மேகநாதனென்று பெயரிட்டார்கள். அந்த மேகநாதனென்னும் பிள்ளையைச் செவிலித்தாய் முதலானவர்கள் உலகத்தை யெல்லா மழிக்குந் திறத்தினையு டைய சிறு நெருப்பை மூட்டிப் பெருநெருப்பாக்குவதுபோல, அறுசுவைச் சிற்றுண்டி முதலான வுணவுகளூட்டி வளர்த்தார்கள்.

அப்படி வளர்க்க வளர்ந்துவருங்காலத்தில் அவனுக் கிளையதம்பிமாராக அதிகாயன் — அக்ஷகுமாரன் - என்னு மிரண்டுபுத்திரர் பிறந்தார்கள். அவர் களு மவனைப்போலவே வளர்ந்துவருமளவில், கும்பகர்னனுக்குக் கூற்றுவனு மஞ்சத்தக்க கொடுமைபொருந்திய கும்பனென்றும் — நிகும்பனென்றும் - இ ரண்டுபுத்திரர் பிறந்தார்கள். அந்தப்புத்திரர்க ளெல்லோருஞ் சிங்கக்குட்டிக ள்போல வளர்ந்து பல பராக்கிரமங்கள் பொருந்தி நாளுக்குநாள் பிரபலமாக மேன்பட்டு வந்தார்கள். இப்படிச் சுவர்க்கலோகம்போலச் சுவர்ன்னமயமாக விளங்கும் இலங்காபட்டணத்திலே தசக்கிரீவனுந் தம்பிமார்களும் புத்திரர் மித்திரர் முதலான சம்பத்தினாலும்—செல்வப் பெருக்கினாலும்-பிரம்மதேவர் கொடுத்த வரத்தினுடைய மகிமையினாலும் - காட்டுப் பெருநெருப்புக்குக் க டுங்காற்றுக் கூடினாற்போலச் சுபாவமாயிருக்கிற துர்க்குணத்துடனே கர்வ மிகுந்து மதோன்மத்தராகி, தங்களுக்கு நிகரானவர்க ளொருவருமில்லையெ ன் றகங்காரங்கொண்டு, புண்ணியபாபங்களை யெண்ணாமல், சகல பிராணிக ளும் பயந்து துன்பப்படும்படிக்குக் குரூரதண்டமான அதிகாரஞ்செய்துகொ ண் டிருக்கின்றார்கள். அக்கால் கும்பகருணனானவன் தமயனையடைந்து என க்கு நித்திரைசெய்யும்படி ஓர்மண்டப மமைக்கவேண்டுமென இராவணன் தே வதச்சனையழைப்பித்து ஒருமாமணிமண்டபம் ஒருயோசனை யகலமும் இரண் டுயோசனை நிகளமுமாகச்செய்துதர வதிற்கும்பகருணன் புகுந்து நித்திரை செய்துகொண் டிருக்கின்றான்.

இராவணன்பிறப்புப் படலம்-முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

ஏழாவது,

வரையெடுத்த படலம்.

இப்படலத்தில் இலங்காபுரியாளு மிராவணன் ஒருநாள் வெளிப்பட்டு அள காபுரியடைந்து அங்குள்ள சோலைகளை அதம்பண்ணி இலங்கைக்குப் போக அதையறிந்த குபேரன் தூதுவனைவிட்டுச் சிலநீதிகூற வதைக் கேட்ட இராவணன் கோபித்து வந்ததூதுவனைக்கொன்று குபேரனி

டத்திற் போர்புரிந்து மூர்ச்சிக்கச்செய்து புஷ்பகவிமானமுதலிய செல்வங்களைக்கைப்பற்றி வருவழியில் புட்பகவிமானம் கைலையின்மேல் நேராகச்செல்லாது நின்றுவிட நந்திதேவர்வந்து சிலகூற வதைக் கேளாது கோபிக்க வவர்தந்த சாபத்தைப்பெற்று கைலையைவேரோடேபேர்க்கச்சிவபெருமான் பெருவிரலாலமுத்த அதனல் வருந்துங்காலையில் தன்சிரசிலொன்றைத்திருகி வீணையாகக்கொண்டு வேதம்பாட, சங்கரன்மகிழ்ந்துவந்துமூன்றரைக்கோடியாயுளும், ஓர்வாளுந்தர வதையேற்று வருங்காலையில் மகாவிஷ்ணுவானவர் தேவர்களின் வேண்டுகோளால் மாறுவேடங்கொண்டு மூன்றரைக்கோடியாயுள் மாறும்படி இன்னுமரைக்கோடி யாயுள் வாங்கிவாவென்றனுப்ப வவ்வண்ணமே சென்று அரைக்கோடியாயுளும் இராவணனென்னும் பேரும் பெற்றதை அகஸ்தியரால் இராமபிரானுக்குச் சொல்லப் படுகின்றது.

இராவணன் அளகாபுரியடைந்து அங்குள்ள சோலைகளையழித்தல்.

கவி.

பூவயன்றருவரத்தினுற் புயவலிச்செருக்கால்
ஆவதல்லதொன்றறிகிலா வரக்கர்கோனியக்கர்
தேவர்மாதவர்சிதறிடத் துரந்துநல்லளகைக்
காவெலாம்பொடிசெய்துவெங் களிறெனத்திரிந்தான்.

கேளுமையா! இரகுகுலோத்தமராகியஇராமபிரானே! இராவணனானவன் பிரமதேவனிடத்திற்பெற்ற வரப்பிரசாதத்தால்புஜபல பராக்கிரமச் செருக்கைக்கொண்டு மேல்விளையுங் காரியமொன்றேனுஞ் சிந்திக்காது மதோன்மத்தனாய் யக்ஷர்—தேவர்-முனிவர்-இவர்களையெல்லா மவரவ ரிடந்தினின்றுந் துரத்தி இலங்காபுரியி லரசுசெய்துகொண்டிருக்குங் காலத்தில் மந்திரி பிரதானியர்களோடு இரதாரூடனாய்ப் புறப்பட்டு அளவற்ற சேனைகளுடன் குபேரனுறும் அளகாபுரியடைந்து அங்குள்ளசோலை நந்தவனம் இவைகளைப் பொடிசெய்து கொடியயானைபோல உலாவி நம்மையெதிர்ப்பவரொருவருமில்லையென்று மகாசந்தோஷப்பட்டு மீண்டு இலங்கைமாநகரம் புகுந்தான்.

குபேரன் இராவணனுக்குச் சிலவார்த்தைசோல்லும்படித் தூதுவனைவிடுக்க அவன் இலங்கையையடைந்து இராவணனைக் கண்டு கூறுதல்.

கவி.

அன்னதன்மையனதிக்கிர மங்கள்கேட்டளகை
மன்னவனொருதூதனை விடுப்பவமற்றவன்போய்த்
தென்னிலங்கைநாயகன்றனைச் சென்றுகண்டுமையன்
சொன்னவாசகங்கேளெனத் தூதுவன்சொல்லும்.

குபேரனைவன் தன்தோட்டமழிந்த சங்கதியைக் கேள்விப்பட்டு பாரியாலோசனைசெய்து தன்னிடத்திலே யிருக்குமொரு தூதுவனையழைத்து, இராவணனுக்குச் சொல்லவேண்டிய சங்கதிகளைச் சொல்லியனுப்பினன்.

அவனும் அப்படியே இலங்கேசனிடத்திற்சென்று சொல்லுகிறான். ஐயா இராவணேஸ்வரா! நான் உன்தமயனாகிய குபேரனுடைய தூதுவன். அவர் உனக்கு முக்கியமாக வேண்டிய சிலவார்த்தை சொல்லச்சொன்னார் அஃதியாதெனில், உன்னுடைய தமயனாகிய அளகேசனானவர் இனிமேலாகிலு மிந்தத் துர்ப்புத்தியை நிவர்த்தி செய்து நன்னடக்கையை யனுசரித்து வீணாய் நரகத்துக் காளாகாமல் இதுவரையிலுஞ் செய்த தபோபலத்தின் மகிமையாற் கிடைத்த வரங்களைப் பாழாக்காமற் கிரமமா யிருக்கும்படியாயும், ஏழைகளாகிய தேவர்களை இனி யதஞ்செய்ய வேண்டாமென்றும், நீதிமுறைமை வழுவாமற் செங்கோல் செலுத்தினால் மிகுந்த புகழும் தர்மமுங் கிடைக்குமென்றும், இவைகளையெல்லாம் உனக்கெடுத்துச் சொல்லும்பாத்தியதை உன்றமையனாகிய வெனக் குண்டென்றும், உனக்குமூத்தவன் தந்தைக்குச் சமானமானவனென்றும், பெரியோர் சொல்லுவதை இகழ்ந்து தட்டிவிட லாகாதென்றும், இவ்விதமாகவுனக்கு நற்புத்திவரும்படியாயு நல்லதெளிவையடையும்படியாயும் சொல்லச் சொன்னார்.

அன்றியும் - நான்முன்பு இலங்கைநகரத்தை உன்வசஞ் செய்த பிறகு, இமயகிரியினிடத்திலே சிவனைநோக்கித் தபசுசெய்துகொண் டிருக்குங்காலத்திற் பரமசிவ னுமையவளுடனே யெதிர்தோன்றினார். அப்பொழுதி லுமையவள் விளங்கு மற்புதத்தைக் கண்டயான்ஆச்சரியப்பட்டு, இப்படி விளங்குஞ் சொரூபத்தை யுடையபேர்களு முண்டோவென்று மனதிலே நினைத்தேன். அதையறிந்த உமையவ ளுக்கிரமாகக்கோபித்துப் பார்த்தாள். அந்தக் கோபாக்கினியினாலே யென்னுடைய விடதுகண்ணானது நீறுயெரிந்து, சரீரமுழுதுங் கருகியுருகிச் சோபித்து விழுந்து பயந்து, அவ்விடத்தினின்று நீங்கி அந்தமலையிலேதானே வேறோரிடத்திலந்தக்குற்றந்தீர முன்புபோல் நியமங்கள் வழுவாமல் பயபத்தியுடனே தவஞ்செய்துகொண் டிருந்தேன். அப்படி யிருக்குங்காலத்தில் ஒருநாளந்தப்பரமசிவன் வெளிப்பட் டென்னைநோக்கி, உன்னைப்போலும் அரியதவஞ்செய்தோ ரொருவருமில்லை யானதால் நீ நமக்குத்தோழனாகக்கடவாய். உமையவள் கோபத்தா லெரிந்துபோனகண்ணும் பொற்கண்ணாக விளங்கியிருக்கக் கடவதென் றனுக்கிரகித்து ரக்ஷித்தார். அறியாமையினாலே செய்த அல்பகாரியத்துக்கு இப்படிப்பட்ட பிழை வருமானால், அறிந்து செய்யும் பொல்லாத காரியங்களுக் கென்னநேரிடாது? ஆதலா லிதையுஞ்சொல்லுகவென் றனுப்பினார்.

இராவணன் குபேரனுடைய தூதுவனைவெட்டி மந்திரிகளுடன் யோசித்தல்.

கவி.

ஆசில்லாதரனுரைட்பவ னளகையிலவனும்
ஈசன்றோழனுமகையெலா மென்முனஞ்சார்ந்து
பேசுந்தூதனார்பெறுகென விவைவெனவாளால்
வீசினனவனிருதுணி யாகமண் வீழ.

இவ்வாறு குபேரனிடத்தில் நின்றும் வந்ததூதுவன் வார்த்தைகளைக்கேட்ட இராவணன்மகா கோபத்தையுடையவனாய். ஆ ஆ !! நன்றாயிருக்கிறது: நன்றாயிருக்கிறது: யாரோ அளகாபுரிக்கு நாயகனும். அவன்சிவபெருமானுக்குத் தோழனும், அவன்தூதொன்றை யனுப்புவித்து எனக்குப்புத்தி புகட்டுவதாம் இது மிகவுமேன்மை: மேன்மையென்று நகைத்து, இதுதானிந்தத் தூதுவன்பெறும் வரிசையென்று முன்பின் யோசியாமல் தன்னுடைய கூரிய வாளாலே அவனைவெட்டிக் கண்டதுண்டமாக்கி, இராக்ஷசகிங்கரரைத் தின்றுவிடுங்களென்றான். அவர்களும் அப்படியே செய்தார்கள். அப்பால் பாவியாகிய தசக்கிரீவன் மந்திரிகளைப்பார்த்து, இந்தக் குபேரன் இப்படி சொல்லியனுப்பவேண்டிய காரணமென்ன? அதைக்குறித்து நாமென்ன செய்யவேண்டியது? என்று கேட்கும்போது பிரகஸ்தன் சொல்லுகிறான். ஓ இலங்கேசா! நான்சொல்வதென்னவிருக்கிறது? இது கிணறுவெட்டப்போய் பூதம் புறப்பட்ட கதையாய் நேரிட்டது. நேத்திரம் போனபின்பு இரவியை நமஸ்கரிப்பதிலென்னபலனுண்டு? அவனோ மிகுந்த பலாய்ஷ்டிகன். மேலும் சிவபெருமான் தோழன். அவனுக்கவரது திவ்யவரப்பிரசாதவருளிருப்பதினால் இவ்வளவு தயைதாக்ஷணியமின்றித் தூதனுப்பினான். அவனென்னமாயிருந்தபோதினும்பெரியோனென்பதைக் கிஞ்சித்தெண்ணி நடக்கவேண்டும். நீயோ அதிக்கிரமித்து அவன்வனத்தை நிர்த்தூளிதஞ் செய்தாய். அந்தக்குற்றமொருபக்கம் உன்பேரிலிருக்க, அதுவும் போதாதென்று உன்னை நாடிவந்த தூதனையும் வெட்டினாய். இது செய்யப்படாது. துணிந்து செய்துவிட்டாய். அந்தக்குபேரனோ முன்னமே நமக்கு ராச்சியத்தைத் தடைசொல்லாமற் கொடுத்திருக்கிறான். அப்படிக்கிருக்க நீ அநியாயமாய் அவன் வனத்தையழித்துவிட்டாய். ஆகையால் பூதபௌஷிய வர்த்தமானங்களை யறிந்து நடந்துகொள்ள வேண்டியதுதான் விவேகிகளது கடமை.' உனக்குத்தெரியாத காரியம் நானென்ன சொல்லப்போகின்றேன்? எப்போதும் "எதிர்வலியுந் தன்வலியுமாற்றான்வலியுந் துணைவலியுந் தூக்கிச்செயல்" என்பதை அறிந்துநடக்கின்றவனே உத்தமனாவான். அன்றியும் - 'அடக்கமமரருளுய்க்கு மடங்காமை ஆரிருளுய்த்துவிடும்" என்று ஒருநீதிவாக்கியமிருக்கின்றது. இதையறிந்து ஒருவனெப்போது நீதிமுறைவழுவாமலிராச்சியபாரஞ் செய்யவேண்டும். என்று சொல்லித் தான் மௌனமாய் இனி விளைவதை யறியலாமென்று ஒன்றும் பேசாமல் வாயைமூடிக்கொண்டான். அப்போது அருகிலிருந்த மகோதரனானவன் சொல்லுகின்றான்.

ஓ இலங்கேஸ்வரா! உலகத்தினிடத்திலொருவன் ஒருத்தியுடன்கலந்து புணர்ச்சிசெய்ய வெண்ணிக் கட்டிலின்மேலேறிய பின்னுங்கூட, அவளதுமுறையும் அனுமதியுங் கேழ்ப்பானோ? இந்த வச்சிரவண்ணன் வெகுநிறுக்காய்த் தூதனுப்பி நம்மைவலியச்சண்டைக்கிழுக்கும்போது, இனியவனுக்கும் நமக்கும் என்னவுறவிருக்கிறது? நீரென்னமோ அவனை வெகுபலவானென்

றெண்ணியிருக்கின்றீர்? அவனைமாத்திரமல்ல: அவனுடன்கலந்தொருவே ளை திரிமூர்த்திகளும்வந்தெதிர்த்தாலும், அவர்களையெல்லாம் ஜெயிக்குந்திற மை உம்மிடத்தி லிருக்கின்றது. அதுவெனக்குத் தெரிந்துதான் தைரியமாக ச்சொல்லுகின்றேன். நீரென்னமோ பின்னிடைவதுபோ லிருக்கிறது. அவ தைரியத்தை விட்டுவிடும். துணிந்தார்க்குத் துக்கமேது? தண்டிலே போனல் சுத்தவீரர்க் கிரண்டிலொன்று நிச்சயம். என்றைக்கிருந்தாலும் தேகம் அனி த்தியம். பயந்தால் ஜெயங்கிடைப்ப தரிது. நீரொன்றுக்கும் அஞ்சாமல் தா ராளத்துடன் உமது சேனசமுத்திரங்களைக் கூட்டிக்கொண்டு விமானமேறி, கைலைமலைச்சாரில் மந்தாகினிதீரத்துள்ள அளகாபுரிக்குச்சென்று குபேரன் சேனையைக் கொன்று அவனையும்வென்று, அவ்விதமாகவே உலகமெங்குந் திக்குவிஜயஞ்செய்து கீர்த்தியைப் பெற்றுக்கொண்டால் அப்பால் உமக்குச் சரியானவர்கள் ஆரிருக்கிறார்கள்? ஆகையால்அவ்வடதிசைத்தலைவனிடம் போ கும்படி தண்டுதளத்துக்கு உத்திரவுகொடும். இதுதானெனது கருத்து. அப் பாலும்முடைய இஷ்டமென்றான்.

இராவணன் குபேரனுடன் போர்புரிதல்.

கவி.

அன்னகோபத்தவரக்கர்கோ னளகையிலவனை
முன்னஞ்சென்றுநான் முட்டியேமனச்சினமுடித்துப்
பின்னைநின்றதுசெய்வனென் பெரும்படையெழுக
என்னலுங்கடல்கிளர்ந்தென வெழுந்ததுசேனை.

மகாகோபத்தையுடைய தசக்கிரீவன், மந்திரிகளுடன்பட்டதற்குச் சந் தோஷித்து அளகாபுரியடைந்து குபேரனைவென்று எனதுகோபத்தைத் தீர் த்துக்கொண்டுதான் வேறுகாரியம் பார்ப்பேன்ஆதலால் நமது சேனையெழுக வென்றுசொல்லிக்கொண்டு ஜெயத்தைத்தரும்பிரயாணபேரிகையறைவித்து த து ராணுவங்களையெல்லாம் விமானத்திலேற்றிக்கொண்டு, பிரகஸ்தன் — விரு பாட்சன் — மாரீசன் — மகோதரன் - வச்சிரமுஷ்டி - முதலிய மந்திரிமார்க ளோடும் இரத கஜ துரக பதாதிகளாகிய சேனைகளோடும் பிரையாணமாகி, அளகாபுரியைநோக்கி ஆகாயமார்க்கமாகச் சென்று அதன் கோட்டைவாசற் கெதிர்நின்று தனக்குமுன்னமே யவ்விடம்வந்திருக்குஞ் சேமத்தேரிலேறிக் கொண்டு, தனதிருகாலையுமடக்கி மண்டியிட்டு இருபதுகைகளிலும் இருபது விதமான ஆயுதங்களைத்தாங்கிக் கொடிவீரசிங்கம்போலக் கெர்ச்சித்து, தனது பாரியவில்லை ஆகர்ண பர்யந்தமிழுத்து வளைத்துக் குணத்தொனிசெய்து, ஆர்ப்பரித்து, அண்ணா! வச்சிரவண்ணா! ஓ குபேரா! இப்போதென் னுடன் போர்செய்ய உனக்குப்பலமிருந்தால், நீ ஆண்பிள்ளையேயானல், உன் முகத்தில் மீசையுமிருந்தால், உனது புஜபல பராக்கிரமத்தைக் காட்டி யென்னை ஜெயிக்கலாம். நான் தம்பியென்றும் நீ தமையனென்றுஞ் சொல்லு

கிற பந்தமும் பட்சமும் வேண்டியதில்லை. இனி படிகளத்திலு மொப்பாரியுண்டா? நாமிருவருநின்று சண்டைசெய்தாலும் ஜெயமுண்டு. இறந்தாலும் வீரசொர்க்கமுண்டு. ஆதலால் விரைவில் யுத்தசன்னுகங்கொண்டு வெளியே வாவென் றுகாந்தகாலப் பேரிடிபோல அறைகூவி ஆக்கிரமித்தான். அக்கால் அங்குள்ள தூதர்கள் உடனேகாற்றினுங் கடியவேகமாய்ச்சென்று இச்சங்கதிகளையெல்லாம் குபேரனுடனே சொன்னார்கள்.

அதுகேட்ட மாத்திரத்திற் குபேரனுனவன் திடுக்குற்று, ஐயோ! இதென்னவனியாயம்? இதென்னகாரணம்? நாமவனுக்கென்ன குற்றஞ் செய்தோம்? முன்னமவன் இலங்கையைக் கேட்காமுன்னமேகொடுத்துவிட்டோம். குருவிக்கூடுபோல் இவ்வளகையைக்கட்டிக் கொண்டிருந்தால் இதிலுள்ளவனத்தையெல்லாமழித்து வெட்டவெளியாக்கினுன். அதன்மேல் தூதுவனையனுப்பி இப்படிச் செய்யலாமாவென்றுங் கேட்டால் மறுபடியும் அக்கிரமத்துக்கே காப்புகட்டிக்கொண்டு, என்னை வெட்டமாட்டாத குறையாய் அவனையும் வெட்டினுன். அத்துடன் சும்மாயிராமல் நம்முடன் உயுத்தத்திற்கும் வந்துவிட்டான். இவனையாரழைத்தது? நம்மையே கொலைசெய்ய வந்தானுகையால் இவனுக்கென்ன கெட்டகாலமோ தெரியவில்லையென்று மணிமாலன் முதலிய மந்திரிகளோடு யோசனைசெய்து யுத்தத்திற்குப் புறப்பட்டனன்.

இவ்வாறுபுறப்பட்ட குபேரனுனவன் வானமளாவிய சகஸ்திர சிங்கங்கள்பூட்டிய ஸ்வர்னரதத்திலேறி, பார்ப்பவர்கள் கண்களைப்பறிக்காநின்ற பிரகாசந்தங்கிய கிரீடத்தோடும் விளங்கி, பூர்ணசந்திரோதய விலாசம்போன்ற முகங்களி லழகான தொழுகவும், மீசைகள் துடிதுடிக்கவும், கண்களி லனலெழும்பவும் பாரவில்லைவளைத்துப் புவனங்களெல்லாஞ் செவிடுபட நாணேசைசெய்து, தன்னுடைய பிராணமந்திரிகளாகிய மணிமாலன் — சங்கியோதகண்டகன்-விண்டினை—வீரன் இவாள் முதலாயினோர் புடைசூழவும், நால்வகைச்சேனைகளு நெருங்கிவரவும், ஜெயபேரிகை முழங்கவும், அனேகங்கோடியக்ஷ கின்னரர்களுடன் ஆக்கிரமித்துவருகிறுன். இப்படிவருகிறஅளகேசனைத் தசக்கிரீவன்கண்டு, தானும் தயாராய் தேரேறிக்கொண்டு, தனது மந்திரிமார்களுடனும், இரதகஜதுரக பதாதிகளுடனும், அமர்க்களத்திற்கு வந்துசேர்ந்தான். உடனே யிருதிறப்படைகளுங் கைகலந்துகொண்டன. அப்போது தசக்கிரீவன் தனது வில்லைவளைத்து நாணேறிட்டுக் குணத்தொனிசெய்து, அளவிறந்த கொடிய நாராசங்களைப் பிரயோகஞ்செய்தான். இதற்குள்ளாகவே தேர்த்தலைவருடன் தேர்த்தலைவரும், கரித்தலைவருடன் கரித்தலைவரும், பரித்தலைவருடன் பரித்தலைவரும், பதாதிவீரருடன் பதாதிவீரருமெதிர்த்து, ஒருவர்க்கொருவர் வாள் வேல் முதலிய அஸ்திரசஸ்திரப் பிரயோகங்களைச் செய்து எண்ணிறந்த அம்புகளை எய்தார்கள். மற்றுஞ் சில ராக்ஷசர்கள் தங்கள் தங்களது பராக்ரமத்தினுற் பர்வதங்களையு மரங்களையும் அடியுடன்பேர்த்து, நாற்றிசை முழுவதுந் திடுக்கிட வெறிந்தார்கள்.

இப்படி யிருக்கையில் தசக்ரீவனுடைய மாரீசன் முதலாகிய மந்திரிக ளெல்லாம் தங்கள் தங்கள் தேர்களை நடத்தி, மண்டியிட்டுப் பற்கடித்து வில் லைவளைத்து நாணியேறிட்டுக் குணத்தொனிசெய்து, அனேகவிதமாக அன லாஸ்திரம் - அயிந்திராஸ்திரம் - வாயுவாஸ்திரம் - வருணாஸ்திரம் - பிரமாஸ் திர முதலானவைகளையெல்லாந் தொடுத்துவிடுத்தார்கள். அந்த அஸ்திரங்க ளெல்லாம் வில்லினின்றும் விடுபட்டுவந்து குபேரனுடைய மந்திரிகள் முத லானவர்களைச் சின்னாபின்னமாகத் தொளைத்து, முதுகிலும்—மார்பிலும்-தோ ளிலும் - தொடையிலுமாக உருவிப்போய் விட்டன.

அதுகண்ட குபேரனது முதல்மந்திரியாகிய மணிமாலனெனவன் உக்ரா வேசங்கொண்டு, பல்லை நெறநெறவென்று கடித்து, மீசைகள் துடிக்கத் தன து பாரமானவில்லையெடுத்தூன்றி ஆகர்ணபரியந்த மிழுத்து,அநேகவிதமாகிய கொடிய நாராசங்களைப் பிரயோகித்து அவர்களையெல்லாம் தலைவிரிகோலங் கொண் டலைந்தோடும்படிச் செய்தான். அதையறிந்த தசக்ரீவனது மந்திரி மார்கள்வந் தவனைவிடாமல் மடக்கி அவனுடன் அகோரமான சண்டைவிளை த்து, அவனது தேர்களையும் - கொடிகளையும்—குடைகளையும்—தேரினது அச் சுகளையும்—ஆணிகளையும் வேறுவேறுபடுத்தி ஒன்றுவிடாம லழித்து, அவன து கரத்திலேந்திவந்த மலையை நிகர்த்த நெடியவில்லையுங் கண்டித்து, அவன் பிரமித்துக் கலங்கிச் சோபமடையச் செய்தார்கள்.

இவர்களெல்லா மிவ்வித ஆடம்பரமாய்முனைந்து யுத்தஞ்செய்யும்போது தசக்கிரீவன் சண்டமாருதம்போற் கூக்குரலிட்டுக்கொண்டு இருபது கண்க ளிலும் வடவாமுகாக்கினிபோல அக்கினிப்பொறிகள் பறக்கவந்து, இருபது கைகளிலும் பிடித்திராநின்ற வில்லைவளைத்துக் குணத்தொனிசெய்து சிங்க நாத அஷ்டகாசத்தோடும் குபேரனிடஞ்சென்று அவனைப்பார்த்து, அண்ணா குபேரா! இதென்ன சௌரியம்! என்னுடன் சண்டைசெய்து ஜெயமடை யும் வல்லமை உனக்கில்லையா? உன்னுடைய வல்லமையைக்கண்டால் பெ ண்களும் பழியார்களா? உனக்கும் சுத்தவீரனென்கிற பேரோ? உனக்குப் பரமசிவன் ஒத்தாசையாயிருந்தும் பலனென்ன? என்னுட னுயுத்தமிட்டு எ ன்னை வெற்றிகொண்டால் நீ எனது செங்கோலைப் பெற்றுக்கொள்ளுகிறாய். அப்படியில்லாமல் இந்தயுத்தகளத்தில் என்னாலிறந்தால் மகத்தாகிய மோக்ஷ மடைவாய். அவ்விதமே இரண்டுவிதத்திலொன்று நானும் பெறுகிறேன். மேலு நீயும் வெகுகாலமாய் நான்முகனைக் குறித்து மாதவமியற்றி வேண்டி யவரங்களைப் பெற்றிருக்கின்றாய். நானும் அவ்வாறுதான் அடைந்திருக்கி றேன். ஆகலால் நீபெற்ற வரமெல்லா மெங்கேபோச்சுது? துணிந்தார்க்குத் துக்கமேது? போருக்குவந்தும் புறங்கொடுக்கலாமா? எப்போதுந் தேகம நித்தியமல்லவா? உனது சௌரியத்தை நான் பார்க்கவேண்டும். என்னு டன் போர்செய்ய உனது தனுசையெடு. ஏதோ நாமிருவரு மொருகை

பார்ப்போம்வா. என்று பதைபதைக்கப்பேசுந் தசக்ரீவனைக் குபேரனானவன் கண்டு பிர்மித்து யாதொன்றும் தோன்றாதவனாகி இதனைச் சொல்லுகிறான்.

ஆ! தெய்வமே! கெட்டபுத்தி யிவனை விட்டுப்போகுமா? அதேது போவது? நாயின்வாலைக் குணப்படுத்த யாவரால்முடியும்? நல்லதென்றுநாம் சும்மாயிருந்தால் இவன் தலைகீழாய்த் துள்ளிவிழுகிறான், ஆலையில்லாவூருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரைபோல் இவன்மட்டுக்கும் இவனே கெட்டிக்காரனென்று என்னைச் செயஞ்செய்யவந்தான். பிள்ளையில்லாதவீட்டில் கிழவன் துள்ளிவிளையாடுவதுபோல இவன் தலைவிசிறியாடி, பெற்றதாயிடத்திலேயே கற்றவித்தை காட்டுவதுபோல உடலில்நாக்கைவழிக்கவந்தான். ஆயினு மூச்சுவிடாம லடித்தாற் காச்சுமூச்சென் றோடப்பட்ட பூச்சிக்குச் சமதையான பயல்: இவனா நம்மை யதட்டுகிறவன்? இவனிடத்தில் நமது சுருக்கைக்காட்டவேண்டும். படுகளத்திலு மொப்பாரி பார்ப்பவர்களுண்டோ வென்று தன்னுடைய வில்லையெடுத்து நிறுத்தி, வில்லைக் குண்டலாகிருதியாய் வளைத்து, அதிற் சொல்லக்கூடாத வாயுவாஸ்திரம் — அக்கினியாஸ்திரம் — தேவதாஸ்திரம் — சூரியாஸ்திரம் — நாகாஸ்திரம் - இவைமுதலிய அளவிறந்த அஸ்திரங்களையெல்லாம் கைகொண்டமட்டும் யாவருங்கண் டஞ்சும்படிச் சங்கஞ் சங்கமாகப் பிரயோகஞ் செய்தான்.

அதுகண்ட தசக்கிரீவன் தனது வலியவில்லையெடுத்தூன்றி வினோதமாகிய இரண்டு அர்த்த சந்திர பாணங்களைப் பிரயோகித்து, அவன் விடுத்தவைகளை யெல்லாம் ஒன்றேனும்விடாமல் வழியில்தானே துண்டித்து, உடனே எண்ணிறந்த மகா கொடிய நாராசபாணங்களைத் தொடுத்துவிட்டு அந்த வச்சிரவண்ணன் ஊர்ந்துவந்ததேரை அச்சுகழன்றுபோகவும் — ஆணியுடைந்துபோகவும் - குடைகிழிந்துபோகவும் — கொடியறுந்து போகவும் — குத்துக்காலடிப்பிடுங்கிக்கொள்ளவும்—கொடுங்கை வெவ்வேறாகவும்—சின்னாபின்னப்படுத்தி கிர்த்தூளிப்படலஞ்செய்து, அவனது கரத்தேந்தி நிற்கும் வில்லையும் கண்டித்து, பாகனையுஞ் சிரமறவடித்துப் பொடியாக்கினான். அப்போது வச்சிரவண்ணனாகிய குபேரனானவன் பிர்மித்து, மறுகாலும் வேறோரி ரதத்தி லூர்ந்துகொண்டு மறுவில்லைக் கையிலேந்திவளைத் தெதிர்சென்று, இருவித திவ்யாஸ்திரங்களை யெறிந்து அந்தத் தசக்கிரீவனது தண்டு தளங்களையெல்லாம் சிரம்வேறு - உரம்வேறு — கரம்வேறு — சதைவேறு — நிணம்வேறு - சுக்கிலம்வேறு — கால்வேறாகத் தும்சப்படுத்தி அதஞ்செய்து உகாந்த கால உருத்திரனைப்போல நின்றான்.

கேளும் ஸ்ரீராமா! அப்போது யமன்போல் வந்தெதிர்த்த அக்குபேரனைக்கண்டு இராக்ஷதர்களெல்லாம் சின்னாபின்னமாய்த் தலைவிரிகோலம்பூண்டு, காற்றிலும் கடியவேகமாயோடத் தலைப்பட்டார்கள். சிலராக்ஷசர்கள் இதென்ன வேலையில்லாதவேலை?நாம்சும்மா சிவனேயென்றிருந்தா லிந்தத்தசக்கிரீவன் நம்மை வலியவிழுத்துவந்து இங்கு பலிகொடுக்கின்றான். சுமப்பவ

னுக்கல்லவோ தெரியும் சுமக்கச்சொல்பவருக்கென்ன தெரியும்? தசக்கிரீவன் வாய்க்கொழுப்புச் சிலையால்வடிந்தகதைபோல் இதைவளர்த்திக்கொண்டான். இவனென்னவிடுவானோ? நாமுமிந்த அளகேசனை என்னமோவென்றுநினைத்தோம். ஏதேது நாம்பிழைப்பது? இவன் உகாந்தகாலருத்திரனைவிட அதிகவுக்ரமாய்க்காய்ந்துகொல்லுகின்றான். இவனையொரு பஞ்சையென்றுநினைத்து வந்துவிட்டோம். இந்தக் குபேரன் ஈஸ்வரானுக்ரகம் பெற்றவனாதலால் இனியென்செய்வானோ? என்றேங்கினவர்களாய் எவரை அடைக்கலம் கேட்கலாமெனப்பயந்து நிற்கின்றார்கள். அக்கால் தசக்கிரீவ னவர்களை நெருங்கி அவர்களுக்கெல்லாம் தைரியஞ்சொல்லி, இது குபேரன்செய்த கோலாகலமென்று நினைத்து அவனையடுத்து, அடாகுபேரா! இனிநானுன்னைத் தமையனென்றுங்கூட நினைப்பேனோ? நீயெவ்வளவு பஞ்சை? அந்த நஞ்சுண்டகண்டனே மிஞ்சி உனக்குத் துணைவந்தாலும் ஒருகைபார்த்து, நீயே யென்னைக் கெஞ்சும்படியாய் வைப்பேன். இதோபஞ்சாகப் பறக்கடிக்கிறேன்பார். என்று செஞ்சாமாருதம்போல் நின்று நானாவிதமாகத் தூஷித்து, தனதிருபதுகைகளிலும் பிடித்திருந்தவிற்களைத் தேரில்வைத்துவிட்டுக் கீழேகுதித்து, பர்வதம்போன்ற ஓர்கதாயுதத்தைக் கைக்கொண்டு, ஓடோடியும்வந்து கெந்துபாய்ந்து சிலம்பவிளையாட்டெல்லாங் காட்டி; ஆனையடி - சிங்கவடி - புலியடி - யாளியடி - என்னு மிவைமுதலியவுஞ் செய்து சுழன்று: வலமிடமிதித்து ஆகாயத்தெழும்பி, மீட்டும் பூமியிற்குதித்துப் பாய்ந்து எமதண்டம்போன்ற தனதுகதையை யுறுமிநோக்கிக் குலாலன் சக்கரமெனச்சுழற்றி மோதினான்.

அதைக்கண்ட குபேரனுங்கலங்காமல், தானுமவ்வாறே வில்லைவிடுத்துக் கதையையெடுத்து, அதிகவுக்கிரத்தோடும் அத்தசக்ரீவனது வல்லமையை மிஞ்சவொட்டாமல் திப்பிரமை கொள்ளும்படியாய்ச் சாடினான். இப்படி நற்குணமும் நற்செய்கையும்வாய்ந்த அளகேசனானவன் தனது புஜபலங்கொண்டுமோதியடித்த விசையால் தசக்ரீவனானவனுடனே சுருண்டு மூர்ச்சையடைந்தான். இவ்வாறுமூர்ச்சித்துக் கீழ்விழுந்தவன் மறுபடியுமெழுந்து, கோபமதிகரிக்க மகாவுக்ரத்துடன் கணக்கற்ற பர்வதங்களையும் விருட்சங்களையும் வேருடன் பிடுங்கிக்கொண்டு அந்தக்குபேரனைப் பார்த்து, அடாமூடா! நீ என்னை மூர்ச்சையாகச்செய்தவனானபடியாலிதற்கு நீ தப்பித்துக்கொள்ளுக பார்ப்போம். என்றுகூறித்தனதிருபது கைகளினாலு மோதியடிந்தான். அம்மலைகளுமரங்களு மவன்கையிலிருந்து விடுபட்டுவந்து இவன்மேலும் இவன்படைகளின்மேலும் புடைத்ததனால், அனேகயக்ஷர்கள் மாண்டுபோனதுமன்றித் தானும் பயந்தோடினன். அளகைப்பட்டணமும் அதமாகிவிட்டது.

இராவணன்குபேரனைத் தோற்கடித்துப் புட்பகவிமானமும் செல்வங்களையுங் கைப்பற்றிக்கொண்டு கைலாசமடைதல்.

கவி.

வண்டுசேர்பொழிற்குபேர மன்னன்வாழுமாநகர்
கண்டகண்டமாடெலாங் கவர்ந்துகொண்டுபண்டைநாள்
புண்டரீகவாசனன் கொடுத்தபுட்பகத்தையும்
கொண்டுவென்றிகொண்டரக்கர் கோனுவந்துபோயினன்.

அக்கால்குபேரனுடைய பட்டணத்திலுள்ள சகலவளப்பங்களையுங் கைக்கொண்டு பிர்மாவினற்கொடுத்த புட்பகவிமானத்தையும் பற்றிக்கொண்டு ஜெயம்பெற்று மகாசந்தோஷமாய் அடாகுபேரா ! நேரிலெனது வலிமையைக் கண்டும் இனிமேல் வீரங்காட்டுவையோ ? பத்திரம்: சாக்கிருதையாயிரு. இதோ உனக்கு வரமளித்த சிவபெருமானிடஞ்சென்று ஒருகை பார்க்கிறேன். என்று தனது சேனசமுத்திரத்தை யெல்லாம் அப்புஷ்பக விமானத்தின்மேலேற்றிக்கொண்டு, அண்டகடாகங்களெல்லாந் திடுக்கிட்டலற ஆகாய மார்க்கமாய் வெள்ளியங்கிரிக்கெதிராகச் சென்றமாத்திரத்தில், அப்பாற்செல்லமாட்டாமல் தடைபட்டுநின்று விட்டது. இவ்வாறு யாவராலுந் துதிக்கப்படுகின்ற கைலைமலையினல் தடைபட்டுநிற்கும் புஷ்பகவிமானத்தைத்தசக்கிரீவனானவன் கோபித்துப் பின்னுந் தூரத்தியும் அது சிறிதுநகராமலிருப்பதுகண்டு, ஆ! ஆ! இதென்ன ஆச்சரியமென்று மந்திரிகளோடு யோசித்துக்கொண்டிருக்குங்காலத்து எமதையனுகிய திருநந்திதேவரானவர் அங்குவந்து அடா தசக்கிரீவா நீ எவ்வளவுபிராணி ? உனக்கிதென்னவேலை ? காலத்துக்கேற்ற புத்தி கொடுக்கிறதோ ? இவ்வெள்ளியங்கிரிக்குத் தடைபட்ட விமானத்தை ஏன்வீணாய் நோகச்செய்கின்றாய் ? இந்தக் கிரியின்காரணந் தெரிந்துகொண்டாயா ? நானுகிலுஞ் சொல்லுகிறேன் கேள். முத்தொழிற்குங் காரணராய், சத்துச்சித்தானந்த நிட்களப்பொருளானவராய், எப்பொருட்குமிறைவராய், முதற் கடவுளாய், பார்வதிசமேதராய், முப்புரமெரித்த மூர்த்தியாய், மான்மழு சதுர்ப்புய காளகண்ட திரிநேத்ரதாரியாய், இடபவாகன ரூடராய், இளம்பிறையைச் சடாபாரத்திற் றரித்த பஞ்சாக்ஷரத் திருமேனியான சிவசாம்பவமூர்த்தியாய், ஸ்ரீ மஹாகணபதியையும் முருகக்கடவுளையும் பெற்ற முதல்வராய், அடியேனை யாதரிக்குந்தெய்வமா யிராநின்ற சிவபெருமானெழுந்தருளி யிருக்கப்பட்ட கைலைமலையென் றறியாயா ? இடைவிடாத சிவபூசா துரந்தரனுயிருக்கிற உனக்கேன் தெரியாமற்போச்சுது? உன்புத்தி மாறி நடப்பது சரியல்ல. இனியேனு நானென்னுமகந்தையை விடுத்து, நான்சொல்லும் புத்தியின்படி அந்த ரிஷபவாகனக்கடவுளை வணங்கி அப்பாற்செல்லுக. அடாமூடா ! இல்லையே யிவ்வரையைச் சுற்றிக்கொண்டு போய்விடு. சேனைகளு நீயுஞ் சிதறும்படியாய்வந்து நேரிடும். உனது திக்குவிஜயம் இந்தக்

திக்கிற் செல்லாறு. திக்குமுக்கலாடித் தியங்காமுன்னமே பக்குவமாய்த் தப்பித்துக் கொள்ளென்று சொல்லினர்.

இராவணன் திருநந்திதேவரால் சாபம் பெறுதல்.

கவி.

உரங்குடையவெஞ்சரனெனுஞ்சொல்பலவுஞ்சொலியுயர்ந்தகுணனும்
அரன்றனதுநந்திதன் முகந்தனையிகழ்ந்திட வவன்குபிதனாய்
இரங்கலைகுரங்குமுக மென்றெனையிகழ்ந்தவு னிலங்கைநகரில்
குரங்குகள்புகுந்துநனி கொன்றிடுகநின்குலனை யென்றுரைசெய்தான்.

இவ்வண்ணமாகத் திருநந்திதேவர் தசக்ரீவனுக்கு அறிவுண்டாகும்படியான அநேகசொற்களை யெடுத்துக்கூற வதைக்கேட்ட இராவணன் கண்ணுமனமுங் கலங்கும்படியாக மார்பைத்துளைக்கவிடுகின்ற கொடிய பாணவருஷங்களைப்போல பல்பலவார்த்தைகளைப் படபடவெனப்பேசி உயர்ந்த குணத்தையுடைய சிவபிரானது நந்திதேவனைநோக்கி அடாகுரங்குமுகமுள்ள மாடே நீயோ எனக்குப் புத்திசொல்பவன் இதோபார் என்பாணத்திற்கிரையாக்குகிறேனென்றுசொல்ல வதைக்கேட்ட நந்தியம்பெருமான் என்னையல்லவா குரங்குமுகமென்று சொன்னாய், இன்னுஞ்சிலகாலத்தில் உனதுலங்கையுநீயும் உன்குலமுங் குரங்குகளினாலழியக்கடவது என்று சாபமிட்டனர்.

இராவணன் கைலைமலையை யெடுத்தல்.

கவி.

சகட்டுருளையிற்றிரி பிறப்பிலிசபிப்பவெரு வுற்றதவசிப்
பகட்டிதுவெனக்கரு திரக்கமிலரக்கனோர் பழிப்பிலவர்மேல்
முகட்டெனதுபுட்பகம் விலக்குசயிலைச்கிரி முரிப்பனெனவோர்
துகட்கெள்படக்கடி தெடுத்தனன்பிகைத்தவர் துணுக்கமுறவே.

வண்டியினது சக்கரம்போல் மாறிமாறிப் பிறந்துழலுத லில்லாத நந்திதேவரிட்டசாபத்திற்கு தசக்கிரீவனனவன் யாவரு'மஞ்சும்படியாக வேய்க்கின்ற தவசிகளுடைய பகட்டுவார்த்தையைக்கொண்டுஎன்னைஏமாற்றவந்தாயோ நானிதற்கஞ்சுவேனோவென்றுஇரக்கமில்லாத மனத்தையுடையவனாய் அடா நந்தி எனது புஷ்பகவிமானத்தைத்தடுத்த இவ்வெள்ளியங்கிரி முறிபட்டுத் தூள்தூளாய்ப் போகும்படியாக அப்பரமசிவனு மனங்கலங்கும்படியாய்ப் பேர்த்தெடுக்கிறேன் பாரென்று சொல்லிக்கொண்டே புட்பகவிமானத்தை விடுத்துத் தாழக்குதித்துத் திடுதிடுதிடுவென் றோடிவந்து, அக்கைலைமலையின் சாரலிலே யொருபக்கத்திலேபோய்த் தன்னுடைய கோரப்பற்களாலே உதட்டைக்கடித்துக்கொண்டு, தனதிருபது தோட்களையும் அப்பர்வதத்தி னடிச்சந்திலே முட்டக்கொடுத்துத் தாக்கி, இருபதுகரத்தினாலேயும் அந்தக் கைலாசமலையை விடாது தன்னுடைய முழுப்பலத்தோடே பிடித்துக்கொண்டு ஆட்டினான். அப்படி யாட்டினமாத்திரத்திலே அந்தக் கைலாசமலையானது வேரோடே பெயர்ந்து, தடதடதடவெனவும்-

கிடுகிடுகிடுவெனவும்—குலுங்கியது. அப்போ துலகமெல்லாம்கவிழவும் அஷ்டதிக்குப்பாலர் — அஷ்டவயிரவர் — கருடகாந்தருவர் - சித்தவித்தியாதரர் முதல் இயக்கரீறாகச் சொல்லப்பட்டவர்க ளெல்லாங்கண்டு இடிவிழுந்த நாகம்போலே ஏங்கித் தத்தளித்து, இதென்ன விநாசகாலமோ தெரியவில்லையே: ஐ ஐயோ! நம்மையெல்லா முன்னமிவன் நிர்த்தூளிதஞ் செய்ததும் பெரிதல்ல. நமக்கெல்லாம் அபாயநேரிட்ட சமயத்திலே இந்தக்கைலாசபதியினிடத்திலே முட்டிக்கொள்ளலாமென்று சொல்லும்படியான வொருபலமிருந்தது அதுவுமிப்படிக்காய்விட்டதே; நாம்செய்தசிவார்ச்சனையும், தபமும், பரமேஸ்வரருடைய மலையையேபேர்த்தெடுக்கும்படி யாச்சுதே:ஒன்றாகியசிவமேயிப்பாடுபடுமானால் இனியத் துஷ்டன் யார்க்குப்பயப்படுவான்? சுவாமியுமவனை இலேசாய் விடுவாரென்று நினைக்கிலோம். ஏதோ இவனை விளையாடவிடுத்து வேடிக்கை பார்ப்பது மவருடைய திருவிளையாடலென்று சொல்லப்பட்டதுதான்.

மேலுமிவனுடைய மூதாதைகளான சுமாலி — மாலியவான் -மாலி— என்பவர்கள் கெருவித்துத் தேவர்களையெல்லா மதஞ்செய்யும்பொழுது, விஷ்ணுவானவரேற்பட்டுஅவர்களையழித்துவிட்டாரல்லவா?அப்பேர்ப்பட்டவர்களே எள்ளைப்போலே நசுங்கிப்போயிருக்க இவனெவ்வளவு பஞ்சையென் றெண்ணியிருந்தது, இப்பொழுதல்லவா இவனுடைய செய்கையாற்றெரியவந்தது. இவனைவிட அவர்கள் கூடினவரையில் நல்லவர்கள்தானென்று நினைக்கவேண்டியதாய் இருக்கின்றது. ஓசங்கரா! ஓகங்காதரா! ஓ மகாதேவசம்போ! ஓ தெய்வமே! இனி யாங்கள் செய்யும்படியான காரியமென்ன விருக்கின்றது? வைத்தியன் கைவிட்டாற் போலாச்சுது. என்று வாய்விட்டுக்கதறிக் கண்ணீராறாய்ப்பெருகியோட வாடினார்கள். இவர்க ளிப்படிவாட ரிஷீஸ்வரர்களெல்லாரும் திடுக்கிட்டுக் கலங்கினார்கள். நந்திகேசுவரரும் இதென்ன யிவனுக்கு நேர்ந்த கேடுகாலம்? நமது வல்லமையினாலே யிவனை அழுத்திவிடவெண்ணினாலும் அது நடவாத காரியம். முன்பின்தெரியாத மூடனை நாம் சரிசமானமாக்கிக்கொள்ளக் கூடாது. ஆனபோதிலு மிவன்செய்கிறதோ உலக முழுகிப்போகின்ற காரியமா யிருக்கின்றது. நாமு மவனுடைய இராச்சியத்திலே நானாவிதமான குரங்கினங்களெல்லா நெருங்கி அவர்களை நாசமாக்கிவிட வேண்டியதென்று சாபமிட்டிருக்கிறோம். இவனுஞ் சிலகாலத்திற் கப்பால் இராமபாணத்திற்குஇரையாகவேண்டியவனாவன். இப்பொழுது வந்த வினையானது தீரும்பொருட்டு எந்தையாகிய பரமசிவன் கிருபை யெவ்வணமோ? என்று பலகூறிச் சிந்தை கலங்கினார்.

அந்தவேளையிலே சந்திர சூரியர்களு மிதென்ன விந்தையென்று புந்திமயங்கி, இந்தப்பாவியா இங்கும் வந்தானென்று அந்தரத்திலேதானே தயங்கினார்கள், இப்படி யந்தக் கைலாசமலையை அடிமுடி குலுங்கும்படி தசக்கிரீவனானவன் தன்னுடைய புயாசலங்களாலே தூக்கி மோதி முட்டி யசையத்

தூக்கும் வேகத்தினுலுண்டாகும் சப்தத்தினுலும் — அவனுடைய அட்டகாசங்களினுலும் — அண்டச்சுவரெல்லாம் உடைபடும்படியாயும், தேவலோகமெல்லாஞ் செவிடுபடும்படியாயும், சொர்க்கமத்திய பாதாளலோகங்களெல்லாந் தத்தளிக்கும்படியாயும், ஆதிசேஷனென்று சொல்லப்பட்டவனும் திப்பிரமை கொள்ளும்படியாயும், அட்டகஜங்களும் ஆ! ஆ! எனக்கதறி நாற்றிசைகளினு மோடும்படியாயும், நக்ஷத்திரங்களெல்லாம் அவல்போலே யுதிரும்படியாயும், ஏழுசமுத்திரமும் சுவறிப்போய் வெறுந்தரையாகும்படியாயுநேரிட்டன. அதுகாலையிலே சிவசங்கரபகவானுடைய பூதவர்க்கங்களெல்லாமலறிப் பயந்து, இதென்னமோ ஒரு பூச்சிவந்திவ்விதமா யதஞ்செய்கிறதே: ஓ சுவாமி! ஓ சிவசாம்பவா! ஓ திரிபுராந்தகா! ஓ சங்கரா! ஓ சாம்பவிமனோகரா! ஓ பஞ்சாட்சர சொரூபா! ஓ திரிநேத்திரதரா! ஓ காளகண்டா! ஓ திரிசூலா! ஓ சிவனே! ஓ மகாதேவப்பிரபு! இதென்ன அனியாயம்? இதென்ன விளையாட்டு? ஆச்சு: ஆச்சு: இன்னம் கொஞ்ச நேரத்திற்குள்ளே என்னசெய்வானோ தெரியவில்லை. இவ்விதமான துஷ்டனுக்கொரு சிக்ஷை பண்ணலாகாதா? என்று மனேவியாகூலத்தை அடைந்து பலவிதமாய்ப் போற்றிசெய்து நின்றார்கள்.

அப்பொழுது ஈஸ்வரனானவர் இவனை மெள்ள அழுத்திவிடவேண்டுமென்று நினைத்து மௌனமாயிருந்தார். உடனே யவரருகிலேயிருந்த லோகேசுவரியான உமையவளானவள் நடுநடுங்கி, ஐயோ! இந்தப்பாவியரக்கன் செய்யாதகாரியஞ் செய்கின்றனே: ஒய்யாரமும் பண்ணவிடலாகுமா? பொல்லாதவேலை செய்கின்றவனிடத்தில் நாம் வல்லாண்மையென்று சொல்லப்பட்டதைக் காட்டாமலிருக்கலாமா? சுவாமி! உமக்குமீதொரு பெரிதானகாரியமா? மலையோ தலைகிழாய்க் கவிழ்கிறதா யிருக்கின்றதே: இன்னமும் பராமுகஞ்செய்யலாமா? நானினி யென்னசெய்வேன்? என்று மலைப்பெண்ணான அப்பார்வதியு மந்தப் பரமசிவனைச் சேர்த்துக்கட்டிக்கொண்டு, சுவாமி! இரக்ஷியும் காப்பாற்றும். ஆதரியும். என்று பலவிதமாய்ச்சொன்னதில் கருணசமுத்திரமான பரமேசுவரர் இளநகைகொண்டு சொல்லுகின்றார். ஓ என்னுயிர்க்குயிராகிய பெண்ணே! நீ யொன்றுக்கும் பயப்படவேண்டாம்.

சிவபெருமான் கயிலைமலையையெடுத்த இராவணன் நசுங்கும்படித் தமது பெருவிரலாலூன்றவழுந்தி வருந்தித் தன் தலையிலொன்றைத்திருகி வீணையாகக் கொண்டு சாமவேதம்பாடப் பரமசிவன் மகிழ்ந்துவரமீதல்.

கவி.

மறைத்தவர்மறுக்கமு மடக்கொடிநடுக்கமு மனத்திலுணராப்
பிறைச்சடைமுடிக்கடவுள் பொற்றிருவடிப்பெரு விரற்றலையினல்
நெறுக்கெனவழுத்திட வுடற்பொறைபதைப்பகிரு தர்க்கிறைவனும்
கறுத்தவுருவத்தனு மறக்கருமனத்தன்வெருவிக்கதறினன்.

இப்படியென்று பார்வதிதேவியாருக்குப் பரமசிவன்சொல்லி, முனிவர்களுடைய பயமும்; பார்வதியினுடைய நடுக்கமும், சந்திரசடாதரனுகிய சிவ

பெருமான்கண்டு இனி இவனைச்சும்மாவிடப் படாதென்று தமது திருவடிப் பெருவிரலால் அழுத்தினர். அழுத்தினவுடனே இராட்சசனாகிய விராவணன் தனதுதேகம் தாளாதவனாய் மனமஞ்சி நடுக்கமுற்று ஓவென்று பெருங்குர லிட்டழுதனன். கேளும் ஸ்ரீராமா! இப்படியாகத் தசக்கிரீவனானவன் துன் பப்பட்டு, அவனுக்கு முன்னம் அன்னைவார்த்த செவ்வெண்ணெயும் வெளிக ண்டு, தன்னையு மறந்து; பின்னையு மாவியுண்டோவில்லையோ வென்றிருக்கும் பொழுது பொன்னுலகத்தாரு மற்ற மன்னர்மன்னர்களு முன்னி; ஒருத்தரு க்கொருத்தர் பன்னிப் பன்னிக் களிப்புற்றிருந்தார்கள். அவ்வேளையிலே மா ரீசன்முதலானமந்திரிகள் இதைக்கண்டுவிசனமடைந்து, இந்தமகோதரன்பேச் சைக் கேட்டல்லவா இவனைவிடுத்தோம்? இப்பொழுதிவன் படுங்கஸ்தியை நா ம்கண்ணுற்பார்த்திருக்கலாமா? என்றிருதலைக் கொள்ளியி லெறும்புபோல வாடினவர்களாய் நாமிதற்கொரு உபாயஞ்செய்யாவிடிற் பிழைப்பதரிதென் றெண்ணி, உடனேயக்கயிலைமலையைச் சுற்றிப்போய் அவனைக்கண்டு, அவனு டன் தாங்களுமிகுந்த வியாகுலமடைந்து, ஐயா இலங்கேசா! உலகத்திலே பராக்கிரம சவுரியத்தினாலே மிகுந்த பலமுடையவன் பலமில்லாமல் தனக்கு க்கீழ்ப்பட்டவனைப் பகைத்துத் துன்பஞ்செய்தால், அந்தத் துன்பமானது அ வனினுமேலான பலமுடையவனாலே தீர்க்கப்படும். ஆனால் சகலமான தேவ ர்களினு மேன்மையுடையவராய், தேவதேவனென்றும் — மகாதேவ னென்றும் - பேர்படைத்து, தனக்குமேலானவரு மொப்பானவரு மில்லாமல் தானேதனக்கு நிகராய் விளங்கும் பரமசிவனாலே வரப்பட்டது ன்பம் அந்தச் சிவபிரானாலே தீர்க்கப்படுமல்லாமல் வேறொருவராலே தீர்க்க ப்படாது. ஆனதால் - அந்தப் பரமசிவனிடத்திலே யாவனொருவன் அறியா மையினாலே ஆயிரங்குற்றங்கள் செய்யினும், ஒருகாலத்திலே அறிவுண்டாகி ப்பயந்து நீயேகதியென்று நம்பித்தோத்திரம்பண்ணுவானாகில், அவர் அரு ளுடையவராகையாலே அதற்குச்சந்தோஷப்பட்டு அவன்செய்த குற்றங்களை யெல்லாங் குணமாகக்கொண்டு கிருபைசெய்துரக்ஷிப்பார். எப்பொழுதுஞ்சர் வசீவதயாபரனாகிய சாம்பசிவமே யாரினுமேலான தனிப்பொருளல்லது வேறல்லர். அவர்படைத்தளிக்கும் சீவாத்மாக்களிலே நாமுமொன்றல்லவோ அவரெங்கணு நிறைந்த தேசோமயப்பொருளாதலாலே அவர்க்கு நம்மிடத் திலேயுங் கிருபாநோக்கமுண்டாகும். அதிலுமந்தப்பரமேஸ்வரனுக்குச் சாம வேதத்திலே அதிகவிச்சையுண்டு. நீருமதிற்பழக்கமாதலால் அதற்குகந்து பி ரசன்னமாவார். அப்பொழுதுமக்கு இந்த வியாகுலமுதலான கஷ்டநிஷ்டூர ங்களெல்லா நிவர்த்தியாய் விடுகிறதுமல்லாமல், உமது மனோபீஷ்டப்படிக்கு நினைத்தவரமெல்லாம் பெறலாமென்று ஒருபாயத்தை யுரைத்து அப்பால கன்றார்கள்.

இப்படி உற்றமந்திரிகளுரைத்த உண்மை வாக்கியமானது நேத்திர மற்றவனுக்கு ஊன்றுகோல் கிடைத்ததுபோலவும் - வாடும்பயிருக்கு வான ஞ்சொரிந்தது போலவும் — இருந்தபடியால் தசக்கிரீவனானவன் அதையே

பெரிதாயெண்ணி,வேறுமுகாந்தரமென்ன விருக்கிறதென்றுதெளிந்து,இந்தச் சமயத்திலே இவ்வளவுதான் நமக்குச்சொல்வா ரரெனவுங்கருதி, கராவினுல வஞ்தையுறுங் கரியழைத்ததுபோலே ஓ மகாதேவசம்போ ! ஓ சிவசங்கரதேவா ! ஓ சாம்பவிமனோகரா ! ஓ கைலாசகிரிநாதா ! ஓ கமலபொற்பாதா ! ஓ பாலலோசனு ! ஓ பரமதயாளா ! ஓ அரகரசிவனே ! ஓ அருள்தருபரனே ! ஓ ரிஷபவாகனு ! ஓ நின்மலசொரூபா ! ஓ சந்திரசேகரா ! ஓ சடாதரதற்பரா ! ஓ முப்புரதகனு ! ஓ முனிவர்கள் வந்திதா ! ஓ நான்மறைக்கெட்டா நாதாந்தசோதி ! ஓ சுத்தநிர்மலனே ! ஓ சுபாஸ்கரவொளியே ! ஓ மேருவில்லுடையாய் ! ஓ திரிசூலா ! ஓ மான்மழுவேந்தி ! ஓ வானவர்பூசிதா ! ஓ பார்வதிசமேதா ! ஓ பக்தர்கள்சகாயா ! ஓ விரிஞ்சனுங்காணு வெள்விடைக் கபா ! ஓ பஞ்சாட்சரனே ! ஓ பரவெளிசிவனே ! ஓ தந்திமுகத்தனைத் தந்தருள்மூலா ! ஓ சரவணபவனைத் தாங்கியசீலா ! சரணஞ்சரணம் சங்கராசரணம். தருண மறிந்தெனைத்தாங்குவாய் சரணம். அத்தாசரணம்.அமலாசரணம். நித்தாசரணம் நிறைவேசரணம். போற்றி போற்றி புனிதவெள் விடையோய். போற்றி போற்றி புண்ணியவிறையோய். போற்றி போற்றி புங்கவர்க்கிறையோய். போற்றிபோற்றியென் புன்மதிதவிர்த்தோய். ஓ சுவாமி ! ஏழையான நான் தெரியாமற்செய்தபிழையை க்ஷமித்துக் காக்கவேண்டும். இத்தருணம் உம்மையல்லாமல் வேறுதுணையில்லை, என்று வாய்விட்டுக்கூவி, தாயாகிய பரமேசுவரியையும் இவ்விதமே பிரார்த்தனைசெய்துகொண்டு, தன்னுடைய பத்துத் தலைகளிலே ஒருதலையையும், இருபதுகைகளிலே ஒருகையையு மறுத்து யாழாகச்செய்துகொண்டு, அந்த மலையின்கீழேதானே தான்படும்படியான அவஸ்தையுடனே ஆயிரவருடமட்டும் அருமையோடு சாமவேதகானஞ் செய்தான்.

அப்படியிவன் செய்துவரும் சாமவேதகானத்தினுலே சர்வசீவராசிகளும் தேர்ச்சியடைந்தது மல்லாமல், இரிஷியீசுவரர் முதலானோரு மகிழ்ச்சி அடைந்தார்கள். அதுகாலையிலே வெள்ளியங்கிரியி விராநின்ற சாம்பசிவ மூர்த்தியானவர் ஆனந்தமடைந்திருப்பதுகண்டபார்வதாதேவிபரமேசுவரரைப்பார்த்து, சுவாமி ! அடியாள் இப்பேர்ப்பட்ட விநோதமான கானத்தை இதுகாறுங் கேட்டதில்லை. இதுவோ தேகம் பரவசமுறும்படியானதாயும், அற்புதந் தரப்பட்டதாயும் இருக்கின்றது. இப்படிகானஞ்செய்வோ னெவனோ தெரியவில்லை. ஆதலா லிதைநாம் சிரவணித்தும் சும்மாவிருப்பது ஞாயமல்ல: அவனிடஞ்சென் றின்னுனென்றறிந்து கருதினவற்றைத் தருங்கடமை நம்மதல்லவாவென்றுள். இதைக்கேட்ட செகநீசன் உமாதேவியைப்பார்த்து, பெண்ணே ! உனக்கு நினைவில்லையோ ? ஆயிரவருடத்திற்கு முன்னர் இந்தப் பர்வதத்தை அடியோடேயொருத்த னெடுக்கவந்த காலத்திலே, நீ அச்சமுற்று என்ன செய்வேனென்று தழுவிக்கொண்டாயே: அவனல்லவா இவ்வித கானஞ்செய்கின்றது? அந்தவுள்ளன் பெனக்குமுண்டு. ஆனுலவன் துன்மார்க்கனுயிருக்கின்றபடியாலும், முன்னமேதானே பிரம்மாவினிடத்திலே தக்கவரங்

களைப்பெற்ற பலத்தினாலே நம்மையே முழம்போடவந்தவனாயிருந்தபடியா லும், இப்பொழுது நாமவனைக் காணும்பட்சத்திலே ஏதாவதொருவரம் தர வேண்டியதாய் நேரிடுமல்லவோ? அவ்வரத்தைக்கொண்டு பின்னுமவன் உலகத்தை நாசம்பண்ணுவானே யென்கிறஎண்ணமேயல்லது, வேறில்லை யென்று சொன்னார். அந்த வசனங்கேட்ட லோகேசுவரியான பார்வதியம்மன் பின்னும் தக்கபடிசொல்லி, அப்பால் நடக்கவேண்டியவைக் கென்னசொல்வீரென்றாள். பரமேசுவரன் அத்தேவியாருடைய கருத்திற் கிசைந்தனர்.

கவி.

அவ்வழியவனும்பாட வரன்மகிழ்ந்தழைத்துக்கொண்டு
மூவ்வகையுலகுமாள மூன்றரைக்கோடியாண்டும்
எவ்வகைப்படையும்வெல்லுஞ் சந்திரவாளுமீந்தான்
பொய்வகைநிருதன்பெற்று விடைகொண்டுபோகலுற்றான்.

கேளும் ஸ்ரீராமபத்திரா! ஆதிசேஷனும் தன்புத்தியினா லெண்ணுதற்கருமையாகிய சாமவேதகானஞ் செய்ததில் மனமிரங்கிய ஈஸ்வரனும் ஈஸ்வரியுமழவிடைமேலெழுந்தருளி தசக்கிரீவன்முன் வந்தவனையழைத்தார்கள். உடனே யவன் மலையமூத்தினபாரம் நீங்கி ஜென்மசாபல்ய ஞானேனென்று அந்த வருத்தத்தில் நின்று நீங்கிவந்து அவர்களது திவ்யசரணாரவிந்தங்களில் தீர்க்கதெண்டன்செய்து, இருபதுகண்களினு நீர் தாரையாய்வடிய நிமிர்ந்து, சுவாமி! அடியேனை யாதரியும். இக்குற்றம் பொறுத்தருளும். நாயினுங் கடையனாகிய சிறியேனை உமது கடைக்கண்ணாற் பார்த்துக்கிருபையுடன் கைதூக்கியாட்கொள்ளும். ஓ என்னையாளுங் கடவுளே! எனப் பலவாறாய்ப்போற்றி வருந்தினான். இப்படி வருந்துகின்றவனை சுவாமிபார்த்து, அடா தசக்ரீவா! நீ கருதிய வரம்கேள் தருகிறேனென்று திருவாய் மலர்ந்தனர். அம்மாத்திரத்தி லத்தசக்ரீவன் இந்தமட்டுக்கும் விட்டால் அதுவே போதுமென்றெண்ணி யிருப்பவனாதலால், இயாதுந்தோன்றாதவனாய் அசைவற நின்றான். அவன் குறிப்பையுணர்ந்த பரமசிவன் சற்றாலோசித்து, இம்மலைப்பாரம் நீங்கினதே உயிர்ப்பிச்சைதந்த வரமெனக்கொண்டிருக்கின்றான். இவன் நம்மை வரங்கேளான். எனத்தாமே ஜீவகாருண்யத்தினால் திருவுளமிரங்கி, அப்பா தசக்ரீவா! நீ கேழ்க்காவிடினும் உனது உயர்வாகிய சாமவேத கானத்திற்கு உள்ளமகிழ்ந்தோமாதலால், உனக்கு மூன்றரைக்கோடி ஆயுளுண்டாருக. என்றுகூறி எதிர்த்த சத்துருக்களெல்லோரையுங் கொல்லத்தக்க ஓர் கூரியவாளும் கொடுத்தார்.

அப்போது தசக்ரீவனுக்கு முன்னிருந்த வருத்தமெல்லாந் தீர்ந்து எதாப்பிரகாரமாய் சந்தோஷ முற்றபோதினும், மிகவு மெலிவுற்றவனாதலால் வாயாற்சொல்லவுந் திடமற்றுத் தாகம்வேண்டிக் கையை எடுத்துக் குறிப்பித்தான். உடனே ரிஷபவாகனரூடராகிய ஈஸ்வரன் நந்திதேவர் முகத்தைப் பார்க்க, அவர் தேவர்களை யெச்சரிக்க, க்ஷணத்துள் அமுதகலசத்தைக் கொண்டு

வந்து எதிர்வைத்தார்கள். உடனேமிகவும் விடாய்ப்பட்டவனாதலால்ஆவலுடன் அக்கலயத்தை அப்படியே யெடுத்துத்தட்டாது உட்கொண்டான். நேரில் கிருபையாற் பார்த்திருந்த பார்வதிசமேத ரவனைநோக்கி, அப்பா தசக்ரீவா! இனி யுனக்கோர் பயமில்லை. எப்போதும்போல உன் புஷ்பகவிமானத்தில் ஏறிக்கொண்டு நினைத்தவிடஞ் செல்லலாம், என்று ஆசிகள்கூறி யெழுந்தருளினார். அப்பால் தசக்ரீவன் மறலிகையிற்சிக்கிய ஆன்மா மீண்டதுபோல முன்னிலும் பாங்காய்த் தேர்ச்சியடைந்து, மகாபலத்தைப்பெற்று, தன்னுடைய ராணுவங்களோடும், புஷ்பகவிமானத்தேறி வெகு கீர்த்தியுடன் இமயமலையை நோக்கிவருகின்றான். இந்தச்செய்தி கேட்டரிஷிகளோடு தேவர்களெல்லோருங்கூடி, இந்தத் தசக்ரீவன் முன்பு பிர்மதேவனிடத்திற் பெற்ற வரத்தினாலே ஒருகாலத்திலுஞ் சலனமில்லாத கயிலாசகிரியை யடியோடே பேர்த்தான். இப்பொழுது அந்தப் பலத்துடனே பரமசிவன் கொடுத்த வரத்தைக் கொண்டு எந்த வுலகத்தை யெவ்விதஞ் செய்வானோ தெரியவில்லை. இனி நாமெல்லோரு மிவனால் என்னபாடுபடுவோமோ? என்று மனங்கலங்கிப் பயந்து சீக்கிரமாகப்போய் மகாவிஷ்ணுவினிடத்திலே முறையிட்டார்கள்.

தேவர்களின் வேண்டுகோட்கிரங்கி மகாவிஷ்ணுவானவர் உபாயத்தினால் மூன்றரைக்கோடி யாயுளை அரைக்கோடியாக்கல்.

கவி.

தெண்டொடுகுடையது செங்கையேந்தினன்
குண்டிகைநிறைதரக் குளிரச்சாத்தினன்
தெண்டிரைக்கடலினுட் சென்றவாறெலாம்
நின்றெனக்கருளென நிருதன்கூறுவான்.

அதுகேட்ட மகாவிஷ்ணுவானவர் அவர்களை ரக்ஷிக்கும்பொருட்டுத் திருவுளங்கொண்டு, முன்னமொருகால் மகாபலிச் சக்கரவர்த்திக் கெதிராகப் போனதுபோலக் கையிலே குடையுங் கமண்டலமு மேந்தி, அற்புதமான பிரமசந்நியாசி வேஷங்கொண்டு தசக்ரீவனுக்கெதிரே வருகிறார். அப்பொழுதவன் சீக்கிரமாக விமானத்தினின்றுங் கீழேகுதித்து, எதிர்கொண்டுவந்து வணங்கி நமஸ்கரித்துப் பாதபூஜைபண்ணி அநேகவுபசாரங்கள் செய்தான். மகாவிஷ்ணுவானவர் அவனைப்பார்த்து, ஓ இலங்காதிபதி! உன்னைப்போலும் பெருமைபடைத்தா ரெந்தவுலகத்திலு மில்லை. ஆனாலுமுன்னுடைய விர்த்தாந்தங்களைச் சொல்லுவாயென்று கேட்க அவனவரைப் பார்த்துச் சொல்லுகிறான். ஓ அந்தணர் பெருமானே! என்னிலும் பெருமையுடையவன்போல எனக்கு மாறுபாடுபேசிய குபேரனைச்செயித்து வெற்றிகொண்டேன். சிவபிரானுடைய கயிலாசகிரியை யடியோடும் பெயர்த்தேன். அந்தப்பலத்துக்குச் சந்தோஷப்பட்ட பரமசிவன் எனக்கு மூன்றரைக்கோடி ஆயுளும், அவருடைய சூலத்துக்குச் சமானமான வொருவாளாயுதமுங் கொடுத்தார். இதுதான் என்னுடைய விர்த்தாந்தமென்று சொல்லவும் அதற்கவர் அவனைப்பார்த்து,

ஓ அதிவீரப்பிரதாபம்பெற்றதசக்ரீவமகாராஜனே! நீ யொருவருக்குங் கிடைக்காத வரங்களைப்பெற்றாய். நீ யெத்தனைகால மிருந்தாலும் அத்தனை காலமும் உலகத்துக் குபகாரமேயானதால், குறையாயிருக்கிற அரைக்கோடி வருஷமும் பெற்றாயானால் உனக்கு நிகரானவர்க ளொருவருமில்லை. எல்லா வுலகத்திலு முன்னுடைய வதிகாரஞ் செல்லுமென்று சொல்லிப் போயினர்.

அதுகேட்ட தசக்ரீவனானவன் உடனே யவ்விடத்தினின்றுநீங்கி, அதிசீக்கிரமாகக்கயிலாசகிரிக்குப்போய்ச்சிவபெருமானைநோக்கி யனேகமான தோத்திரங்கள்பண்ணி மிகவும் வணக்கத்துடனே நின்றான். இப்படியவனிற்கும்பொழுது பின்னு நீ யிங்கேவந்தகாரிய மென்னவென்று பரமசிவன்கேட்க, அதற்கவன் குறையில்லாமற்படிக்கு அரைக்கோடி வருஷமெனக்குக் கொடுக்கவேணுமென்று கேட்டான். அப்பொழுது பரமசிவன் நீ கேட்டபடியே யுனக்கு அரைக்கோடிவருஷங் கொடுத்ததன்றிமலையையெடுத்தபோது நாமூன்றியபெருவிரற்பாரத்தாலழுந்தி நீ அழுதபடியால் உனக்கு இன்றுமுதல் இராவணனென்னும் பெயருந்தந்தோமென் றனுக்கிரகஞ்செய்தார். இப்படிக்கு முன்பு பெற்றமூன்றரைக்கோடி வருஷம்போய் அரைக்கோடிவருஷமாக வரம்பெற்றதைத்தேவர்களுமுனிவர்களுங்கேட்டு, இவ்வளவாகிலும்பரமசிவனுமகாவிஷ்ணுவுமுபகாரஞ்செய்தருளினர்களே யானதாற்சிலகாலஞ்சென்றாகிலு நாமெல்லோருஞ் சவுக்கியத்தை யடைந்திருக்கலாமென்று ஆலோசித்திருந்தார்கள்.

வரையெடுத்தபடலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

எட்டாவது,

திக்குவிஜயப்படலம்.

இப்படலத்தில் சிவபிரானிடத்தில் வரம்பெற்றுவரும் இராவணன் வழியில் வேதவதியென்னும் தவப்பெண்ணைத்தீண்ட வவள் சாபம் பெற்றதும், பின்னர் மருத்துராஜனுடைய யாகத்தை யழித்ததும், அனரண்யராஜனை அங்கநோகச்செய் தவனாற் சாபம்பெற்றதும், அப்பால் எமதருமராஜனையும் - ஆதிசேஷனையும் - நிவாதகவசாளையும் - வருணனது புத்திரர்களையும்-காலகேயரையும் போராடி வென்று, பின்னரிலங்கைக்குப் போகவிருந்த தன்னை மகோதரன் கலைத்துநிறுத்த உடனே அவன் யோசனையால் அப்சரஸ்திரீகளாதிபலவகைஸ்திரீகளையும் சிறையெடுத்து, அதுவேபிரயாணமாகத் தன் சேனைகளோடும் புஷ்பக விமானத் தேறிப்போய் இலங்காபுரியை யடைந்ததும், காலகேயர் போரில் கணவனாகிய வித்யுஜ்ஜிஹ்வை யிழந்த சூர்ப்பநகை வந்து முறையிட வவளைத் தண்டகாரணியத்திற் கனுப்பியதும், பின்பவன்

No. 79. இராவணன் தவப்பெண்ணாகிய வேதவதியால் சாபமடைதல்.



இராவணன் மருத்துராஜாவின் யாகமழித்தல்.



 இராவணன் வேதவதியாற் சாபமடைதல்.

கொலுமுகத்துவந்து தனது திக்குவிஜயச்சிறப்பை யாவருக்குங்கூறி நிகும்பலையில் யாகமியற்று மேகநாதனைக்கண்டழைத்துவந்ததும், தான் சிறையெடுத்துவந்த ஸ்திரீசனங்களைச் சாரணராலழைப்பிக்கக்கண்ட விபீஷணன் சில நீதியையும் மதுவென்னு மசுரனால் தன் சிறியதாயாகிய கும்பீநசிக்குநேர்ந்த விபத்தையுங்கூறி அதைமறப்பிக்க உடனே தனது புத்திரமித்திராதியரோடு அவன்மேற் படையெடுத்துப்போய் அச்சிறியதாயார் வேண்டுகோளா லவனைச் சன்மானித்திருந்ததும், அப்பாலவன் தெய்வலோகத்தை நாடிச்சென்று ஓர் பூங்காவி லிறங்கியிருக்கையில் நளகூபரனை நாடிச்செல்லு மரம்பையை வலிதிற்புணர்ந்து அவள் சாபம்பெற்றதும்; பின்ன ரப்பூங்காவைக் கடந்து சென்று இந்திரலோகத்திற் போர்புரிகையில் அவ்விந்திரன் சுமாலிமுதலாயினோரைக் கொன்று பராக்கிரமித்து நிற்றலை மேகநாத னறிந்து ஓர் மாயையா லவனைப் பாசங்கொண்டு கட்டி யாவரோடு மிலங்காபுரிக்கு மீண்டு சிறைக்கூடத்தடைத்ததும், அதுகண்டு கலங்கிய தேவர்கள் வேண்டுகோளால் பிரமதேவ னங்ஙன மெழுந்தருளி மேகநாதனுக்குப் பலவரத்தோடு இந்திரஜித்துவென்னும் பேருங் கொடுத்து அவனை யச்சிறைக்கண்ணின்றும் விடுவித்ததும் சொல்லப்படுகின்றது.

இராவணன் வேதவதியாற் சாபமடைதல்.

கவி.

கங்கைசேர்சடைக் கண்ணுதல்காதலி
தங்குபங்கன் றனதருள்பெற்றவத்
துங்கமால்வரைத் தோணிருதன்றிசை
எங்கும்போர்செய் தியவனமெய்தினன்.

கேளும் ஸ்ரீராமா ! கங்காபவானியைத் தரித்த ஜடாபாரத்தையும், நெற்றிக்கண்ணையும், உமையவள்பொருந்திய வாமபாகத்தையுமுடைய சிவபிரானது கிருபையைப்பெற்ற உயர்ந்தபர்வதாகாரத்தையொத்த புயங்களையுடைய இராவணனானவன், எங்கும் போர்புரிந்து ஜெயம்பெற்று இயவனமென்னும் கானகத்தை அடைந்தனன். அங்கே கிள்ளைகள் கொஞ்சும் புஷ்பங்கணிறைந்த ஓர் தண்டலையின்கண், காமமுதலாறையுமகற்றி அக்கினிவளர்த்தி அதனிடைநின்று மாதவமியற்று மாணிக்கநிகர்த்த ரூபலாவண்யசவுந்தரியமுள்ள ஓர் கன்னிகையைத் தசக்ரீவன்பார்த்தான். அம்மாத்திரத்திலவன் ஸ்தம்பம்போல அங்ஙனேநின்றுபிரமித்து, இத்தகைய சௌந்தர்யவதி யிவ்விடமேதுகாரணமோ தவஞ்செய்யத் துணிந்ததென்றும், உலகமாயையை நிவர்த்திசெய்து அழிவில்லாப் பரம்பொருளை வேண்டி அமர்ந்தனளோவென்றும், வயதுற்ற வாலைப்பருவத்திலும் வதுவையாகாத மடமங்கையா யிருப்பதனாலெவ்வாறுநினைக்கக் கூடுமென்றும், இளமைக்கேற்ற வாகைப்புருஷனை விரும்பி யிவ்வாறாயினளோவென்றும், அதுவா யிருக்குமாகில் இவட்கு நம்மினுஞ்சிறந்த தலைவனுங் கிடைப்பானோவென்றும், சதுமுகனால் நாமும் வேண்டியரூபம் பெறத்தக்க வரம்பெற்றிருக்கின்றோமல்லவாவென்

றும், அஃதிவனுக் கெவ்வாறு வெளியுறும்? யாம்விளம்பித் தெளிவுறச்செய்வதே சரியென்றும், ஒருவேளை தேவனருளால் நமக்கிவ ளிசைந்தாலும் இசையாவிடினும் இவளை வலியக்கைப்பற்றுவதே சரியென்றும் பலவா யோசித்து: காலஹேதுவாய் (ஊழிற்பெருவலி யாவுள மற்றொன்று சூழினுந் தான் முந்துறும்.) என்றபடி தான் நினைத்ததே சரியென்று விமானத்தை விடுத்து, தனியாய் யாதினும் பற்றற்றுத் தன்னைமறந்து கண்மூடியிருக்கும் அவளையடுத்து, ஓ பெண்கள்நாயகமே! நீயார்? உனக்கென்ன பெயர்? நீ தவத்துக்குவந்த காரணமென்ன? என்றுரத்த சப்தமாக வானமுமுடைபடும்படியாய்க் கெர்ஜித்துக் கேட்டான்.

இவ்விதமானகுரலைக் கேட்டவுடன் தவத்திலிருந்தவேதவதியென்பவள் கண்களைவிழித்துப் பார்த்து, ஓ! ஓ! என்னகாரியஞ் செய்தோம்? மகாரணியத்தில் புருஷசஞ்சார மிராதென்றெண்ணி யிருந்தோமே இவன் யாரோ தெரியவில்லையே: ஆயினும் தக்கபடி சொல்லுவோமென்று அக்கன்னிகையானவள் அவனைப்பார்த்து, ஓ இராஜனே! நீர் கேட்டதற்கு நான்சொல்வதியாதெனில் — அந்தணரில் மிகுந்த குசத்துவ மகாமுனிவருடைய குமாரத்திநான். என்பெயர் வேதவதி. என்னுடைய பிதா சதாகாலமும் சந்தியாவந்தனாதி நித்திய நைமித்திய கருமங்களிலே சுவ்வளவுந் தவறாமல் விதிப்படி வேதபாராயணம் செய்துவருவார். அப்படி செய்துகொண்டு வருகிறநாளையில் அவரோதப்பட்ட வேதசொரூபத்திலே நின்று நான்பிறந்தேன். அப்படி வேதத்திற்பிறந்த காரணத்தால் எனக்கு வேதவதியென்று பெயரிட்டார். நானோ கன்னிகாஸ்திரீ. என்னை மணம்புரியவேண்டுமென அமரர்களும் — அரக்கர்களும் — அசுரர்களும் - மற்றியாவரும் வந்து எனதுபிதாவை வினவினார்கள். எனக்கவர்கள்பேரி லிஷ்டமில்லாமையால் நடவாதென்றுரைத்தேன். அதனால் [illegible]திலோர் அரக்கனுகிய சம்புவென்பவன் அதை மனதில் வைத்துக்கொண்டு, என்பிதாவை இரவில்வந்து மரணமாக்கிவிட்டுப் போய்விட்டான். அதுகண்ட என்தாய்மிகவும் வருந்தி என்தந்தையுடன் அக்கினிப்பிரவேசமாயினள். யான் சிந்தைநொந்து இவ்வேடங்கொண்டு, என்மனதில் நெடுநாளாய்க்கருதியிருக்கும் என்வடிவுக்கேற்ற புருஷனாகிய ஸ்ரீமகாவிஷ்ணுவை நினைத்துத் தவம்புரிகிறேனென்றாள்.

இதைக்கேட்ட தசக்ரீவன் — ஓ பெண்ணே! நானோபுலஸ்தியப்பிர்மாவின் சந்ததியில் வந்த பௌத்ரன். எனதுநாமகரணம் தசக்ரீவனென்று உலகஞ் சொல்லும். விச்சிரவப்பிர்மாவே எனக்குப் பிதாவாயிருக்கிறார். எனிவ்வுலகத்துக் காதாரகர்த்தாவாகிய கைலாசபதிக்கு அன்பன். எனது வல்லமையால் அக்கைலையங்கிரியை யெடுத்தவீரப்பிரதாபன். மூன்றுலகமும் புகழ்கொண்ட இலங்கைப்பட்டணமேவி அரசாட்சிசெய்யப் பட்டவன். மகத்தாகிய நல்வரமல்லாது பிரமாவினால் [illegible]துக்கேற்ற ரூபமெடுக்கத்தக்க [illegible]வரமும் பெற்றிருக்கின்றேன். ஆதலால், நீகோரின அந்த விஷ்ணுவான

வன் என்னினுஞ் சிறந்தவனா! நீ பெண்புத்தியால் அவனை யிதுவரையிலும் பெரிதாய்க் கருதினாய். இனியந்த நினைப்பைவிட்டு என்னை விவாகஞ் செய்து கொண்டாயானால், அந்தவிஷ்ணு முதலானபேர்களும் உன்னோடு நல்லவார்த்தை சொல்லுவார்கள். அரம்பை ஊர்வசிமுதலான தேவஸ்திரீகளும் உன்னேவல்கேட்டு நடப்பார்கள். இந்திராணி முதலானவர்களுக்குங் கிடையாத சகல போகபாக்கியங்களையு மனுபவித்துக்கொண் டிருப்பாய். என்று சொல்லித் தன்னாலியன்றவளவு மிராக்ஷதமாய்கைத் தந்திரமெல்லாஞ்செய்து நின்றான்.

இவையனைத்தையும் தவத்தினிற்கும் கன்னிகையாகியவேதவதியானவள் கேட்டு, சிந்தைபொறுக்காமல்அந்த தசக்ரீவனைப் பார்த்து, அடா இராக்ஷதப்பதரே! இதற்குள் மறந்துவிட்டாயோ? உன் வல்லமையும் சாமர்த்தியமும் ஒருவாறுநடவாமல், வெள்ளியங்கிரியின்கீழ்அகப்பட்டுப்பிராணாவஸ்தை யடைந்து, பின்பு பல்லைக்காட்டிக்கெஞ்சியாவருநங்கஞ் சொல்லும்படியாகச் சகஸ்திரவருடம் சாமகானஞ்செய்து சிவபெருமா னருளினால் தேறி தப்பித்துக்கொண்டுவந்த வுனக்கும் ஒருவாயா? அஃதென்ன நானறியாத குலாவலா? ஓரேவெண்மையா யிருக்கின்ற இரண்டு வஸ்துவாகிய இலவணமும்—கற்பூரமும் – சரியெனக்கொள்வாரு முண்டா? அடாநிர்மூடா! நானெனு மகந்தை கொண்டு உன்னாலான பிரட்டெல்லாம் செய்யவந்தாய். நீயா அந்த சாக்ஷாத் ஸ்ரீமகாவிஷ்ணுவுக்குச்சமானமாவாய்?வானத்தைமுட்டிப்பறக்கினும்ஊர்க்குருவிபறவைராசனுக்கு நிகராமா? ஓதுர்க்குணமுடைய துஷ்டா! இந்தக்ஷணம் அப்பால் அகன்றுவிடு. இவ்விடம்நிற்காதே. என்றியம்பித்தான்மௌனத்திருந்தாள். உடனே தசக்ரீவன் கோபங் கொண்டு, ஆலகால விஷம்போற் சீறி அதிக்கிரமித்து, இப்பொழுதே உன்னை இலங்கைக்குக்கொண்டுசெல்வேனென்று அந்தக் கற்புடைய வேதவதியின்கையைப் பற்றிவலித்தனன்.

கவி.

வாடாமலரோன் வரச்செருக்கான்மற்றெனைநீ
கூடாதனசொல்லிக் கூசாதுதீண்டினையால்
எடாவுனக்கு மிலங்கைக்குமுன்கிளைக்கும்
கேடாகத்தோன் றுவே னென்றாள்கிளர்சினத்தாள்.

இவ்விதந்தனதுகரத்தைப்பற்றியிழுத்தவனைமகாவுக்கிரகோபத்தோடு பார்த்து, அடா துன்மார்க்கப்பயலாகிய இராட்சசா! தாமரைமலரில் வாசஞ்செய்கின்ற பிரமனது வரம்பெற்ற கெர்வத்தால், அடாதவார்த்தைகளைச் சொல்லி மனங்கூசாது என்னைத்தீண்டினையல்லவா? உனக்கும், உன்னிலங்காபுரிக்கும்,உன்பந்துகளாகிய இராட்சசர்களுக்குங்கேடுவரும்படிச்சீதையாகப்பிறந்துவந்து கருவறுக்கின்றேன். என்று சாபமிட்டு அவன் கண்ணெதிரிலேயே திடீரென்று மனவுறுதியினால் தீயில்குதித்து, பின்பு மிதிலாபுரியில் யாகசாலைக்குப் பூமியையுழுங்கலப்பைநுனியிற் சீதாதேவி யம்மனாக அவதரித்துத் தேவரீரைத்திருமணம் புரிந்தனன்.

இராவணன்மருத்து ராஜனுடைய யாகமழித்தல்.

கவி.

வேதவதிதான்சீறி வெந்தீயின்மூழ்கியபின்
போதமிலாவரக்கன் புட்பகத்தின்மீதேறி
ஏதமிலாவிந்திரனே யாதியிமையவரும்
மாதவருஞ்சேர்ந்த மருத்தன்மகமடைய.

இவ்வண்ணம் வேதவதியானவள் மிகவுங்கோபித்துச் சாபங்கொடுத்து அக்கினியில் மூழ்கினாள். அவ்வேதவதியினது சாபத்தைக்கேட்ட இராவணன் அஞ்சாதவனாயினும், கிஞ்சித்து மனதுநொந்துவருவதெல்லாம் வரட்டும். அநுபவித்துத்தான் தீரவேண்டும். என்ன செய்வதென்று ஒருவாறுதேறி தைரியம்விடாமல் திடகாத்ரவீர பராக்ரமத்துடன் தன் சேனைகளையெல்லாம் புஷ்பக விமானத்திலேற்றிக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு சகலவிடங்களிலுஞ் சுற்றித் திக்குவிஜையஞ் செய்துகொண்டு, பலமன்னர் மன்னர்களையெல்லாம் வெற்றிகொண்டு கப்பணம்பெற்று, அளவிறந்த ஸ்திரீகளையுஞ் சிறையெடுத்து, மகாவுக்ரத்துடன் இமையகிரிக்கருகில் வருகிறான்.

அங்கே பொருளும்—புண்ணியமும்—குணமும் - கொடையும் - செல்வமும் — கல்வியும் — சீரும் — சிறப்பும் — அறமும் — பொறுமையுமுள்ள மருத்து ராசனானவன் கற்பகவனத்திற்கு நிகராய் வானத்தை முட்டும் விநோதமான ஒரு பூஞ்சோலையில் யாகசாலைநியமித்து, அதில் சங்கவர்த்தனரென்பவரை ஆசானாக வைத்துக்கொண்டு, யாககுண்டத்தில் அக்கினியைமூட்டி, வசிஷ்டர் - வால்மீகர் - நாரதர் - கௌதமர் — கண்ணுவர் — அகஸ்தியர் — ஜமதக்கி - பௌண்டிரிகர் - சதாநந்தர் - பரத்துவாசர் — விஸ்வாமித்திரர் — தூர்வாசர் - பராசரர் முதலியரிஷிக்கூட்டங்களும், இயக்கர் — விஞ்சையர் — கருடர் — காந்தருவர் — கின்னரர் முதலாகியவர்களும், அஷ்டவசுக்கள் — தேவர்கோனாகிய தேவேந்திரன் - இயமன் — அக்கினி — வருணன் — வாயு — குபேரன் இவர் முதலானவர்களும் புடைசூழும்படி அந்த யாகசாலை மண்டபத்தின்கண் ஆசானுரைத்தபடி கங்கைநீராடி நார்மடியுடுத்தி, தனது பத்தினியுடனமர்ந்து வேதவிதிப்படி யாகத்தை நடாத்திவருகிறான். அந்தயாக முடிவுபெற்று ஆகுதிகொடுக்குந் தருணத்தில் தசக்ரீவன் அச்சோலையின்வழியாய் வந்தனன்.

அவ்வழியாகவந்த சர்வசண்டாளனாகிய இராவணனைக்கண்ட தேவேந்திரன்பயந்து, மயிலுருவங்கொண்டான். வருணன்பயந்து அம்ஸவடிவானான். இயமன் காகவடிவமாயினன். குபேரனுமோணானுருவுகொண்டான். மற்றைத்தேவரெல்லாரும் ஒவ்வொரு மாயரூபங்கொண்டு தாங்கள் தாங்கள் பிழைக்கும்படி ஒவ்வொருதிசையிலோடி யொளித்தார்கள். தேவர்களெல்லா மிப்படியானபிறகு யாகசாலையில் தனித்துநின்றமருத்துராஜனை இராவணன் பார்த்துச் சொல்லுகிறான்.

அடா மருத்தா! இந்த மஹேஸ்வரயாகத்தைச் செய்துமுடிக்க உனக்கும் யோக்கியதையுண்டா? நீ என்னைவிட அவ்வளவு மேன்மையை வகித்தவனா? நான் திரிபுவனத்துக்குந் தலைவனாகிய இராவணனென் றறிந்தும், எனது திடகாத்ரவீர சௌரியபராக்ரமங்களைக் கண்டும், என்முன்னே தானே உனக்கிவ்வளவு கெருவமா? அளகேசனது நந்தவனத்தைக் கெடுத்துப் புஷ்பக விமானத்தையுங் கைக்கொண்டு, அவனையும் அலங்கோலப்படுத்திய செய்தி யறியாயா? நான் கைலாயமலையை யெடுத்தசேதி நீ நன்றாய்க் கேள்வியுற்றும், உனக்கே னிந்த மமதைகொண்ட செய்கை? ஊர்க்குருவிக்கே னிராயர் சிம்ஹாசனம்? கேட்பாரில்லையென்று கெருவித் திதைச்செய்ய முயன்றாயோ? நல்லது: என்னுடன் போர்செய்வதொன்று, இல்லாவிட்டால் நீ தோற்றேனென்று சொல்வதொன்று. இவ்விரண்டி லொன்று நடவாவிடில் நீயு முனது யாகமு மிமைப்பொழுதில் நிர்மூலமாகச்செய்வேனென்று அண்டச்சுவரும் இடிபடநின் றுரைத்தான். அவ்வார்த்தையைக்கேட்ட மருத்துராசனுக்குக் கோபம்பிறந்து, விழிகள் கோவைப்பழம்போலச் சிவந்து, மீசைதுடிக்க புஜங்களைத் தட்டிக்கொண்டு தான்செய்யும் யாகத்தையும்விடுத்து இராவணனை நோக்கி, அடா துன்மார்க்கா! அடா நிர்மூடா! அடா துரோகி! அடா சர்வசண்டாளா! நானனேககோடிகாலமாக முடிக்கநினைத்திருந்ததை இப்போது நான் செய்யப்பார்த்து இதற்கு நீ புண்யங்கட்டிக்கொண்டு; சிவபூசைவேளையிற் சிந்தைகலங்கச் செய்யும் பாவிகளில் நீயு மொருபாவிபோல் உன் துஷ்டத்தனத்தினால் இந்த யாகசாலையை யழிக்கவந்தாய்.

அடா பேதாய்! உன்னையும், உன்னுடன் வந்தவர்களையும், உன் திக்குவிஜயத்தையும், அரைநொடிக்குள் அறிகிறேனென்று சிங்கம்போலக் கெர்ஜித்தெழுந்தான். மிகுந்த பராக்ரமசாலியாகியமருத்துராச னிவ்வாறு கோபங்கொண் டெழுந்ததைக்கண்ட அருகிலிருந்த ஆசானாகிய சங்கவர்த்தனர் அவனைத் தடுத்து, ஓ மகாராசனே! உமதுகீர்த்தியும் ஜெயப்பிரதாபமுந் திரிபுவனங்களுக்குந் தெரிந்திருக்க, இவனென்னமோ பஞ்சை உம்மை லேசாய் மதித்தானென்று இந்தவேளையி லவனை யெதிர்த்து மகத்தாகிய யாகத்துக்குக் குறைவுதேடிக் கொள்ளுவானேன்? அவனென்ன உமக்கு நிகரானவனா? நமது காட்டினிடத்தில் எத்தனைவித ஜெந்துக்களைக் கண்டிருப்போம். அவைகளில் இவனும் ஒருவிதப்பூச்சியென் றறிந்துகொள்ளும். யாக நிறைவேறிவருகின்ற இந்த நல்லசமையத்தில் அவனுடன் சண்டைக்கு நிற்பதைவிட, நான்தோற்றேன்: நீ கெலித்தாய்: என்று வாயினாற்சொல்லி அவனை மகிழச்செய் தனுப்பிவிடுவதே சர்வோத்தமமாயிருக்கின்றதென்று குருவாகிய சங்கவர்த்தனர் திருவாய்மலர்ந் தருளியதை மருத்துமகாராஜனறிந்து, ஆம்: இச்சமயத்தில் இதைவிட வேறியோசனையென்ன விருக்கின்றது? இவ்வாறு சொல்லியனுப்புவதில் நமக்கென்னகுறைவு? எவ்விதத்திலும் காரியமே பெரிது. குருவுரைத்தவாக்கியமே பெரிதென்றதைச் சிரமேற்கொண்டு, இதுவுமொரு தந்திரந்தானென் றிசைந்து அவன்முன் சென்றான்.

இப்படி நற்குணமும் - பொறுமையும் — கல்வியும் — செல்வமும் — படைத்து மேலோர்சொல்லுக் கெதிர் விளம்பாத மருத்துராசனானவன் இராவணனையடுத்து, ஐயா முப்புவனமும் புகழும் பிரதாபலங்கேஸ்வரா ! நான் உமக்கோரெதிரா ? இன்னவகை போர்செய்வதென் றறியேனே. ஏதோ தெரியாமையால் இந்தயாகத்தை வளர்த்துகின்றேன். சிறியபிள்ளைகள் விளையாடுவது போற் செய்யாநின்ற வீதனைப் பெரியோர்களாகிய நீங்கள் கண்டுகொள்ளவுந் தகுமா ? அல்லது போரிடுவதுந்தான் தருமமா ? என்றுசொல்லிப் பின்னுநானே யிளைத்தேன். நீரே கெலித்தீர். என்றுஞ் சிறப்பித்துச் சொன்னதில் தசக்ரீவன்-சபாசு! சபாசு ! என்று தோள்களைத்தட்டி, மருத்தனெனக்குத்தோற்றானென்று வீராவேசங்கொண்டு தன் சேனைகளுடன் புஷ்பகவிமான மூர்ந்து ஆகாயமார்க்கமாய்ச் செல்லத்தொடங்கினான். அப்போது இந்தசங்கதிகளை மாயவுருக்கொண்டு கண்டிருந்த தேவேந்திரன் இனிப்பயமில்லை. நான்பிழைத்தேனென்று சிந்தைமகிழ்ந்து தனது சுயரூபங்கொண்டு அவ்வழியாய் வந்த ஓர்மயிலைக்கண்டு சொல்லுகிறான்.

ஓ மயிலே ! அந்தத் துன்மார்க்கனாகிய இராவணன்பொருட்டு நான் உனதுவடிவெடுத்ததனால், இனிமேல் என்னுடைய அடையாளமாக இந்தத்திரிபுவனத்தி லுண்டாகப்பட்ட உங்கள் கூட்டங்களுக்கெல்லாம் தோகைகளிடத்தில் என்னைப்போல்சகஸ்த்ர நேத்ரம் பிரகாசிக்கக்கடவது. நான் முகிலூர்தியாகையால் அம்மேகத்தைக்கண்டு தேகம் புளகாங்கிதமாய் மிகுந்த சந்தோஷமுற்று, அற்புதமாகிய உங்களது பசுங்கலாபங்களை விரித்து நர்த்தனஞ் செய்யக்கடவீர்கள், மேலு நாகங்களினால் உங்கட்கொரு துன்பமில்லாமலும் வரங்கொடுத்தேனென்றான். பிறகு எமதருமராஜன்காகத்தை நோக்கி, நானுமந்தத் துஷ்டனிமித்தம் உனது ரூபமெடுத்தபடியால், இனியுலகத்துள்ள உங்கள் குலத்துக்கெல்லாம் பிதுர்த்திதியில் அன்னம் படைப்பார்களாகில் அப்பிதுர்க்களெல்லா நிரயத்தாழாமல் முத்தியாகிய கரையை அண்டுவார்கள். இதுவுமன்றி எக்காலத்தினும் நீங்கள் நோயென்பதை யணுகாமல், தீர்க்காயுசும் பெற்றிருக்கக் கடவீர்களென்று ஆசீர்வதித்தான். அப்பால் சமுத்திரராசனாகிய வருணனானவன் நான் பிழைத்தோட வெடுத்தது அம்ஸரூபமாதலால், இனி யிவ்வுலகின்கண் அவ்வன்னங்களெல்லாம் என்னைப்போல வெண்மைநிறமாகக் கடவனவென்று வரமளித்தான்.

அச்சமயத்தில் வச்சிரவண்ணனாகிய வடதிசைத்தலைவன் ஓணானைப்பார்த்து, ஓணானே ! நானிறவாதிறக்க உனதுருவத்தைக் கொடுத்தாயல்லவா ? ஆதலால், உனக்குச்செய்யும் பிரதியுபகாரமுமுண்டோ ? ஆகிலும் நீயுமுன் குலமும்எவ்வெச்சமயத்தில் என்னென்னவுருவம்வேண்டுகின்றீர்களோ அவ்வுருவமுங்களுக்குண்டாகுக. இன்னும் உங்களுருவம் செம்பொன்னிறமாயிருக்கவென்று அனுக்கிரகித்தான்.

தேவேந்திரன் முதலாகிய தேவர்களெல்லாம் மருத்துமகாராஜன்செய்யு மகேஸ்வரயாகத்தையடைந்து திருப்திகரமாக அவிர்ப்பாகத்தைப்பெற்றுத் தங்கள் தங்களுலகமடைந்தார்கள். இவ்வித மஹேஸ்வரயாகத்தை இதுவரையில் பதினான்குலோகத்தில் ஒருவருஞ் செய்ததில்லை. இராஜாதிராஜ ராஜமார்த்தாண்டனாய் இத்திரேதாயுகத்தில் இதைச்செய்து முடித்தவனிவனொருவன்தான். இந்தயாக மிலேசானதல்ல. அற்பமான புருஷரால் முடியத்தக்கதுமல்ல. ஆதலின் இதன் பெருமையை எம்போன்றவனாற்சொல்லி முடியாது. பிறகு கொடுமையும் பலமும்பொருந்திய இராவணனாகிய இராட்சசன் அநேக மகுடமன்னர்களையும் அசுரர்களையும் அரக்கர்களையும் செயித்துக்கொண்டு பஞ்சாசத்கோடி பூமண்டலங்களினுந் தன் கீர்த்தியை நாட்டித் திக்குவிசையஞ்செய்து வாராநின்ற இராவணனானவன் உமது சூரியவம்சபரம்பரையி லவதரித்தவனாகியும் உம்முடைய மூதாதைகளாகிய பாட்டன்மார்களி லொருவனாயுமிருந்த இராஜாதிராஜ ராஜகெம்பீரவீரப்ரதாபனாகிய அனரண்யமகாராஜன் அரசாளுகிசெய்துவரும் உமது அயோத்தியாபுரி பட்டணத்தினுள் வந்தனன்.

இராவணன் அனரண்யமகாராஜனை வெல்லுதல்.

கவி.

எம்மாலுமிருக்காலு மொருக்காவுணரிமையோர்
தம்மாலுமொருக்காலு நினைக்குந்தரமல்லா
இம்மாநகரனரண்ணிய னென்போனெழின்மதில்சூழ்
அம்மாநகர்மன்னற்கிவை யுரைத்தானடலரக்கன்.

எங்களைப்போலொத்த ரிஷீஸ்வராலும் இருக்குமுதலிய நான்குவேதங்களாலும், சகலதேவர்களாலு மொருதரமு நினைகுந் தரமல்லாத ஸ்ரீராமமூர்த்தியே! இவ்வயோத்தியாபுரியில் வந்த அத்துஷ்டனாகிய இராவணன் யுத்தபேரிகையறைவித்து அனரண்யமகாராஜனை யுத்தத்திற்கழைக்க வந்துமகாராஜனைப்பார்த்துச் சொல்லுகிறான்.

அடா அனரண்யா! நீ என்னையும், என் சேனாசமுத்திரத்தையும், எனது ஜெயக்கொடியையும், தேவபுஷ்பக விமானத்தையும் பார்க்கவில்லையா? அரனது கைலைமலையையும், அளகேசனையும், மற்ற ராஜர்களையும், யாகஞ்செய்த மருத்துராஜனையும், நான்திடுக்கிட்டலறச்செய்திட்ட சேதியுங்கேட்கவில்லையா! என்னை நீ கண்டவுடனெழுந்துவந்து வணங்காமலும், திறைப்பணத்தை யளக்காமலும், அல்லது உயுத்தத்திற்குவராமலுமிருப்பது? இரவிகுலத்திற்பிறந்த வுனக்குக் குறைவுவருமென்றோ? நீயுமொரு க்ஷத்திரியன் தானோ? அடா மதியீனனே! நீ சண்டைக்குவருகிறாயா? அல்லது தோற்றேனென்று சொல்கின்றாயா? இவ்விரண்டில் உனது இஷ்டமென்ன சொல்லென்றுகேட்டான். இதைக்கேட்ட அனரண்யமகாராஜன் அடா ராவணா! யுத்தத்திற்குவருகிறேன். நீ செய்வதைச்செய்யென்று தனது சேனாசமுத்திரங்களைக் கூட்டிக்கொண்டு யுத்தத்திற்காரம்பித்தான். அதுகாலையில் இரண்டுவகைச் சேனைகளும் கோபாவேசங்கொண்டு தங்களைத்தாங்கள் மறந்து, அளவற்ற யுத்தங்களைச் செய்தார்கள்.

அக்கா லிராவணனானவன் ஆக்ரமித்து வில்லைவளைத்துப் பல்லைக்கடித்து அந்த அனரண்யராசனை மடக்கிக்கொண்டு, அவன்மீதில் அளவிறந்த அகோரமாகிய நாராசங்களை யெடுத்து ஏகம் - தசம் - சதம் - சகஸ்திரம் - என்று சொல்லும் கணிதப்படிக்குமுறையே பிரயோகஞ்செய்தான். அம்மாத்திரத்தில் தூளிப்படலம் உலகங்களையெல்லா மூடிக்கொண்டதனால் இருளானது பரந்து ஒருவர்முக மொருவருக்குத் தெரியாதபடி மகா பயங்கரத்துடன்வந்து அந்த ராசனுடைய தேகமெல்லாஞ் சல்லடைக்கண்களாகத் துளைத்தன. அதினால் மூர்ச்சையாய்விழுந்த அனரண்யமகாராசன் தன்தேகத்திற்பாய்ந்த அஸ்திரங்களின்வேதனை பொறுக்கமாட்டாமல், தனக்குவந்த அவமரியாதையை எண்ணி எண்ணி நெஞ்சம்புண்ணாகிக்கண்ணைத்திறந்து அந்தத் தசக்ரீவனைப்பார்த்துச் சொல்லுகிறான்.

கவி.

காலத்தினைஞாலத்தவ ரெவரேகடப்பவர்தாம்
ஆலக்கொடுமனத்தோயவ மதித்தாயெனையதனால்
கோலத்தசரதராமனென் குலத்தோன்கொடுங்கணையால்
தாலக்குலைபோனின்றலை தரைவீழ்கெனச்சபித்தான்.

அடாவிஷம்போலுங் கொடியமனதையுடையஇராவணகாதகா! ஏதோ நீதான் பலாஷ்டியனாயிருந்து என்னைப் பூமியிற்கிடத்தினை அவரவர்கட்குவரு நற்காலந்துற்காலபலத்தையார்தான் கடப்பார்கள் என்னை மிகவும் அவமதித்தாயாதலால், எனதுரகுவம்சத்தில் என்பேரன் மார்களிலொருவனாகிய தசரதச்சக்கரவர்த்தி பிறந்து பூலோகமுழுமையும் ஒரு குடைக்கீழாளப் போகிறான். அக்காலத்தில் அத்தசரதச்சக்கரவர்த்திக்கு உன்குலவைரியாகிய அந்த விஷ்ணுவே ஸ்ரீராமராக அவதாரஞ்செய்யப்போகின்றார். அவரது பாணங்களால் உன்தலைபத்தும் பனங்குலைபோலறுந்து பூமியில்விழப்போகிறது. உன் குலமும் நாசமடையப்படும். என்று சாபமீந்து பரமபதநாட்டுக் கெழுந்தருளினான். இராவணனு இச்சாபத்தை ஒருவரவுசிலவுவைப்பவன் அவ்வரசனிறந்த பிறகு அவனது சகலவளப்பங்களையு மழித்து, திக்குகள்தோறும் பாணப்பிரயோகஞ் செய்துகொண்டு அப்பால்நடந்தான்.

இவ்வண்ணம் யாவரையும் துச்சஞ்செய்து வரும்வழியில், திரிலோகசஞ்சாரியாகியும் மகாரிஷியாகியும் விஞ்ஞானத்தில் வல்லவராயுமுள்ள நாரதமகாமுனிவர் தேவலோகம் போகின்றவராயும் வருகின்றார். இந்தராவணனை அங்குகண்டார். கண்டவராகியநாரதர், "உள்ளமனமெரியஉதடுபழஞ்சொரிய" என்னும்பழமொழிபோல் இராவணனிடத்தில் விசுவாசமுள்ளவர்போல் காட்டி ஆசீர்வாதஞ்செய்து அப்பா இராவணேஸ்வரா! எங்கிருந்துவருகிறாய்? எங்குசெல்கிறாய்? உனது புத்திரமித்திரகளத்ராதிகளோடு பந்துக்களெல்லாம் சுகந்தானா சொல்லென்றுகேட்க, இராவணன் நாரதமகாமுனிவருக்கு வந்தனஞ்செய்து சொல்லுகின்றான்.

ஓ முனிவரேறே! எனக்கு மூத்தவனாகிய வச்சிரவண்ணனென்னும் குபேரனை வென்றேன். பிறகு வெள்ளியங்கிரியை உமாபதியுடன் தூக்கித்

No. 80. இராவணன் அனரண்யராஜனைவென்று அவன்சாபம்பெறுதல்.



இராவணன் எமதருமராஜனைவெல்லுதல்.



உத்தரகாண்டம்.

களைத்துச்சாமவேதகானஞ்செய்து அவரதுசொரூபத்தைத்தெரிசித்ததுமல்லாமல் உயர்ந்த வரங்களையும்பெற்றேன். அதன்மேலும் காட்டில் தவத்தினைச் செய்துகொண்டிருந்த வேதவதியென்னும் கன்னிகையைச் சிறையெடுக்க நினைத்ததில் அவள்சாபமளித்து இறந்தனள். மருத்துராசனுடனும் போர்செய்து வெற்றிகொண்டேன். அப்பால் சகல புவனங்களிலும் திக்குவிஜையஞ் செய்து பகுதிப்பணம் வாங்கிக்கொண்டு, அயோத்தியாபுரியில் அரசாட்சிசெய்யும் அனரண்ய மகாராசனையும் ஜெயித்து, அளவற்ற ஸ்திரீகளையும்சிறையெடுத்து, இப்பாலெனது இலங்கைக்குப் போகவேண்டி இவ்வழியாய்வந்து இவ்விட மிறங்கியிருக்கின்றேன். நானே திக்குவிஜையஞ்செய்து ஜெயத்தைப்பெற்ற வீராதிவீர ஜெயப்பிர்தாபனுதலால், இன்னமும் என்கைக்கு எகப்படாமலிருக்கப்பட்ட மன்னர்களிருந்தால் அதை யோசித்துச்சொல்லுமென்று கேட்டான். அதற்கு நாரதமுனிவரானவர் திகைக்குலுங்கச் சிரித்து இதனைச் சொல்லுகின்றார். யுத்தத்தில்வல்லமைபெற்றவில்வீரசிகாமணியாகியஇராவண மகாராஜனே! சிங்கமானது ஒருநரியுடனேபோய்ப் போர்புரியுமா? தீவினையினாற்கட்டுண்டு பசிநோய் வயோதிகம் இவற்றால் மிகவுந் தளர்ச்சியடைகின்ற மனிதர்மேல் பகைகொண்டு கொல்கின்றாயென்று கேள்விப்பட்டோம். நீ யுத்தத்தில் புறங்காட்டாத புஜபலசாமர்த்தியத்தை யுடையோன். வாள் முறியும்படிப் பிணத்தைவெட்டிச் செயம்பெறுவதாற் கீர்த்தியுண்டாமோ உண்டாகமாட்டாது: உனக்குச்சமமான பகைவர்களோடுபோர்புரிந்து செயம்பெற்றால் புகழுண்டு. பெற்றதாயானவள்புரண்டலறியழும்படியாகப் பிள்ளையினது உயிரையும் சிறுகுழந்தைகளழுதழியும்படியாக மாதாபிதாக்களுயிரையும் கொண்டுபோகின்ற குற்றம்நிறைந்த கொடுமைமிக்க இயமனதுவலையிலகப்பட்டுவருந்து மானிடரைக்கொல்லுதல் சரியல்லவே. எல்லாரையுங் கொல்லும்படியாகிய இயமனை நீவென்றால் உமக்குப்புகழுண்டென்று சொன்னார்.

இராவணன் இயமதருமனை வெல்லுதல்.

கவி.

என்றுமுனியிவைகூறவிராவணன்கேட்டெம்பெருமானியம்பிற்றன்றே
இன்றுசெயுமிதுவல்லால்யானறிவதொன்றுண்டோவென்றுகூறி
நன்றுபெரிதெனமகிழ்ந்துநாரதமாமுனிகூறுநல்லையின்னே
சென்றுசமன்றன்னொடுசெருச்செய்தி யவன்றோற்கை திண்ணமென்றான்.

இப்படியென்று நாரதமாமுனிவர் கூறியவார்த்தைகளைக்கேட்ட இராவணன், சுவாமி! தாம்சொல்லிய இயமனை இப்பொழுதேபோய் வெற்றிகொள்வேன். இச்சமயம் இக்காரியத்தை நடத்தாது வேறொருகாரியத்தை நான் நடத்தத்தொடங்குவதில்லையென்று மிகவுஞ்சந்தோஷித்து, தனது மந்திரிபிரதானியர்களைநோக்கி இப்பொழுதே இயமபுரியடைந்து இம்மகாமுனிவர்சொல்லிய இயமனைவென்று வரவேண்டும். எப்படியும் அவன்தோற்பது நிச்சயமாகும் ஆதலால் உங்களுடைய திருப்திகரம் என்னவென்று கேட்டனன்.

அவர்களில் மாரீசன்முதலியசிலவிவேகிகள்இந்நாரதர்கலகப்பிரியர்இவருடைய வார்த்தையினால் தீமைவருமன்றி நன்மைவராதென்றும், மகோதரன்முதலிய சில அவிவேகிகள் எவ்வண்ணமாவது நமனைவென்று புகழ்பெறுவதே உசிதம். ஐயா! உம்முடைய புயவலிமையென்ன உமது பிரதாபமென்ன இவர்களுடைய வார்த்தைகளைக் கேளாதேயும். இவர்களெல்லாம் பயமுடையவர்களென்றுசொல்லினர்கள், அவ்வாறே தனக்குள்ளேயும் தீர்மானித்துக்கொண்டு, உடனே யுத்தசன்னத்தனாய் வீரியங்கூறிச் சகல மேளவாத்தியங்களுடனே எமலோகத்திற்குச் சேனைகளைப் பிரயாணப்படுத்தித் தானும் விமானத்திலேறினான்.

இப்படி யிவன் விமானமேறுமுன்னமே நாரதமுனிவரானவர் அவனிடத்தினின்றும் செலவுபெற்றுக்கொண்டு, இவனையறியாமல் இவன் போகாமுன்னமே தாமந்த எமனிடஞ்சென்றனர். அவ்வியமனு மிகுந்த வணக்கத்துடனே தெண்டனிட்டு கைகூப்பிநின்று ஐயா மகதியாழ்த்தலைவரே! தேவரீரிவண் வந்தகாரியமேதோ? அடியேன்செய்த பூசையினுடைய பலத்தாலே தங்களுடைய திருவடியைத் தரிசிக்கப்பெற்றேன். எனச்சொல்லவு நாரதரிஷியானவர் இளநகையுடனே சிரமசைத்துப்பெருமூச்சுவிட்டுஇயமனைப்பார்த்துச் சொல்லுகின்றார்.

அப்பா இயமதருமராஜனே! நான் கைலாசம்—வைகுந்தம் இவ்விடங்களுக்குச்சென்று பூலோகசஞ்சாரஞ்செய்து வரும்வழியி லோரிடத்தில் இலங்காபுரியாளு மிராவணனைக்கண்டு அப்பா இராவணா! என்னகாரணமா யிங்கு வந்திருக்கிறாயென்றேன். அதற்கவன் தன்னுடைய வரலாறெல்லாஞ் சொன்னதுமன்றி, எமலோகத்திற்குச் சென்று எமனுடனே யுத்தஞ்செய்து அவனைக்கொல்லப் போகிறேனென்றான். நானுஞ் சிலவார்த்தைகளால் வேண்டியவரையினும் போதித்தேன். அவன் கேட்டவனாயில்லை. ஆதலினெனக்கதுகேட்டவுடனே மனந்தாளாமல், இதனை நம்முடைய ஆப்தனுக்குச் சொல்லாது அப்பாற்செல்வது தர்மமல்லவென்றெண்ணி நேரா யிங்குவந்தேன். அவனை நீயற்பமாய் நினைக்கவேண்டாம். இராக்ஷதசித்தன். வெகு பராக்கிரமத்தையுடையவன். உன்னுடைய விஷயத்திற் சிறிதேனும் இலக்ஷியமில்லாதவன். அவ்வந்தெதிர்ப்பாராயின் மறுபடியு மவனை உயிருடனிலங்கைக்குச் செல்லவொட்டாமல் உனது முழுபலத்தையும் காட்டி, அவனது சேனைமுழுமையும்வாட்டி, உனது மழுவாயுதத்தைத் தீட்டி, சமூலமுமோட்டி, உனது கீர்த்தியை நிலைநாட்டி வைப்பாயென்று எண்ணுகிறேன். ஆச்சுது: இந்நேர முன்னுடைய பட்டணத்திற் கருகிலே வந்துகொண்டிருப்பான். நீ சற்றேனும் இளையாதே: என்றுரைத்துக் கட்டிக் கூர்சீவிக் கோபமெழுப்பிவிட்டு, அவனிடஞ் செலவுபெற்றுக்கொண்டு அப்பாற் போயினார். இதற்குள் போர்க்கோலங்கொண்டெழுந்த ராவணனானவன் அண்டம்வெடிக்கக் கர்ச்சனைசெய்துகொண்டு, உகாந்தகால உருத்திரனைப்போல் எமபுரத்தைநோக்கி வருகின்றான்.

ஐயா தசரதநந்தனா! அப்படியவன் வருகின்றபோது அந்தயமபுரத்தில் அவன்கண்ட அதிசயங்கள் சிலவுள. அவை யாவனவென்றால், பூருவசன்மத்திலே பாபத்துக் கேதுவான ஸ்திரீகளுடைய மோகத்தினாலே காமவிகாரத்தி லழுந்தாத நல்லமனசை யுடையவர்களும், சரீரத்தை நிலையென்றெண்ணாம லழியாத புகழாகியசரீரத்தை விரும்பிப் புண்ணியத்தையே செய்தோர்களும், நியமந்தவறாத உத்தமப்பிராமணர்க்கு நல்ல புண்ணியகாலங்களிலே பூதான முதலான புண்ணியதானங்களைச்செய்தோர்களும், அந்தப் புண்ணியதானங்களை யேற்றுக்கொண்ட உத்தமபுருஷர்களும், சந்நியாசிகள் வாசஞ்செய்கிறதற்கு மடங்களும் கிரகஸ்தன் முதலானவவர்கட் கிடங்களுமுண்டாக்கிக் கொடுத்தோர்களும், கோடைகாலத்திலே தண்ணீர்ப்பந்தல் வைத்துத் தாகந்தீர்த்தவர்களும், பனிக்காலத்திலே குளிருக்கு வஸ்திரங் கொடுத்தோர்களும், இருக்குமிட மில்லாதவர்களுக்கு வீடுகொடுத் திருக்கச்செய்தோர்களும், வியாதிகளைத்தீர்த்துச் சவுக்கியப் படுத்துவித்தோர்களும், அறியாமையினாலே மூடரானவர்க ளிகழ்ந்து பேசுங்குற்றங்களைப்பொறுத்துக் கொள்ளும் பொறுமையுடைய பெரியோர்களும், பிராமணரையும் பசுக்களையு மாபத்துக்காலத்திலே இரக்ஷித்தோர்களும், சுவர்க்கலோகவாசிகளாய்ச் சுவர்னமயமான மண்டபங்களிலே வீற்றிருப்பதைப் பார்த்து ஆச்சரியத்தை யடைந் தப்பாற்போயினான்.

அப்படிப் போம்பொழுதில் உலகத்திலே பொருளுக்காசைப்பட்டு நியாயப்பிழையாக வழக்குத்தீர்த்தவர்களும், பதிவிரதையான தன்னுடைய ஸ்திரீயைவிட்டுப் பரஸ்திரீகளை யாசைப்பட்டவர்களும், உயிர்களைக்கொன்று தின்னுங் கொலையாளரும், கோட்சொல்லிக் குடிகெடுக்கும் வஞ்சகரும், செய்தநன்றி மறக்கும் விசுவாசகாதகரும், கல்விகளைக்கற்று வல்லமைபொருந்திய நல்லறிவுடைய பெரியோர்களை நிந்தைசெய்தமூர்க்கர்களும், பெற்றதாய் பசித்திருக்கவுண்ட பெரும்பாவிகளும், களங்கமில்லாமல் நம்பி யுறவுகொண்டசினேகிதனை வஞ்சித்துநடந்த கபடர்களும், ஆபத்திலுதவுவானென்று நாடோறு மிரக்ஷித்துவைத்திருந்த ராஜாவை யுத்தமுகத்திலே சத்துருக்களிடத்திற் காட்டிக்கொடுத்த இராஜத்துரோகிகளும், கோபத்தினாலே யொருவனிடத்தில் வயிரம்வைத்துக் குடிகேடுசெய்த கண்டகரும், மற்றொருவராலே மனக்கவலையுற்றுவந் தடைந்தோர்களுக் காதரவுசெய்யாம லவர்களைச் சீறியிகழ்ந்த கொடியோர்களும், ஆபத்தான காலத்திலே யடைக்கலமென் றடைந்தோர்களைக் கைவிட்ட குணக்கேடரும், எல்லோர்க்குங் குற்றம்பேசி யிகழ்ச்சிசெய்த ஈனரும், பகுத்தறியு மறிவினையுடைய இவ்வரிய மானிடப்பிறப்பிலே பிறந்து நாவினைப்பெற்றிருந்தும் அரஹோம் நமாவென்றும் – நாராயணாய நமாவென்றும் – துதித்தறியாத பாவிகளும், தெய்வநிந்தைசெய்த தீயோர்களும், பின்னும் பலபலவிதமாயுள்ள பாவங்களைச்செய்த கொடியோர்களும், உதிரமும், தசையும், மூளையும், வழும்பும், இந்திரியமுமாகச்சேறுபட்டுக்குழம்பி நிறைந்

திருக்குங் கோரநரகங்களிலே, நாவிலுஞ்சரீரத்திலும் புழுக்கள்சொரிய நெடுங்கால மழுந்தித் துன்பப்பட்டுக் கிடப்பதைப்பார்த்தான்.

இப்படி அநேகம்பெயர்கள், தசை - மூளை - உதிரம் - குடர் - இவைகளெல்லாம் ஒன்றாய்க்குழம்பி சேறுபட்டிருக்கும்படியான நரகிற்கிடந்து வருந்துகின்றவர்களை இராவணன்கண்டு,நீங்களெல்லாமிவ்வரு நரகினின்றுங்கரையேறுவீர்களென்று யாவரையு மேற்றிவிட ஏறினவர்களெல்லாம்பிழைத்தோம் பிழைத்தோமென்று துன்பத்தினின்று நீங்கி இராவணனைவாழ்த்தினார்கள். அதுகண்ட அந்நரகக் காவலாளர்கள்கோபித்து இராவணனுடன் போர்புரிய மகாவுக்கிரத்தோடு வந்தனர்கள். அவ்வண்ணம் வந்தவர்களாகிய நரகாதிபர்களைக்கண்டு இராவணன் மகாகோபங்கொண்டவனாகி இருபதுகைகளிலும் ஆயுதங்களை வாரிவாரியிறைத்து அவர்களின் சிரம்வேறு கரம்வேறு உடல்வேறு கால்வேறு வேறாகத்துண்டிடும் படியாகக்கொன்றனன். அதிற்றப்பி நின்றசிலர் ஓட்டமாயோடி இயமதருமனைக்கிட்டி வணங்கி, ஐயா! யாரோ இராவணேஸ்வரனும் அவன் சைனியங்களோடுவந்து நரகத்திற்கிடந்து வருந்திய பாபாத்துமாக்களையெல்லாம் கைதூக்கி மேல்விடுத்தான். அதைக்கண்ட நாங்கள்பொறாது அவனுடன் சண்டைக்குப்போனோம் போனவனேகர்களையுமவன் ஆயுதங்களினால் சம்மரித்துவிட்டான். அதிற்றப்பிவந்தவர்கள் யாங்களென்று கூறினார்கள்.

இதைக்கேட்ட இயமனானவன் முதல் மந்திரியான சித்திரகுப்தனை வரவழைத்து, அப்பா சித்திரகுப்தா! நாம்சத்தியமாய் இவ்விடத்திலே நமதுவரையிலு மெத்தெனநாளைக் கழித்திருந்தால், புத்தியில்லாத ராவணனானவன் தன்னுடைய வித்தையையெல்லாங்காட்டி நமதரசை பாழாக்குகின்றான். சத்துருப்போலேவந் தெதிர்ப்போனைச் சித்திரவதை செய்யாமற் சும்மர்விடலாமா? இதற்கு நீ என்னவுத்தரவு சொல்லுகின்றாய்? என்றுவினவவும் மித்திரனான சித்திரகுப்தனுஞ் சற்றுநேரம் யோசித்து, சத்தலோகமுஞ் சஞ்சரியாநின்ற நித்தனான நாரதரிஷிசொன்னதிலே குற்றமில்லை. உத்தமனென்றே எண்ணவேண்டும். இனிநாம் பத்திரமா யாவருஞ்சென்று அவனைச்சுற்றிக்கொண்டு தத்திகெட்டுத் தடுமாறும்படியாய் மொத்தினால், நத்திவந்தடைக்கலம் புகுவான். மற்றதொன்று மெண்ணவேண்டாம். எத்திசையுங் கீர்த்திபெற்ற நம்முடைய சுத்தவீரர்களான படைகளை அத்திமத்தகத்தைக் கிழிக்காநின்றசிங்கம்போலேஇத்தட்சணமே புறப்பட்டுச்சித்தப்படுத்தவேண்டு மென்றான். அதற்குமற்றப் பிரசித்தமான மந்திரிகளுமொத்துக்கொள்ள, அதுகண்ட காலன், ஆம் சரிதான்: இல்லாவிடில் நம்மை மதியான். துன்மார்க்கனுக்கு நன்மார்க்கஞ் சொல்வாரெவர்? என்றெண்ணி அவ்வாறே தனது சேனாசமுத்திரங்களையெல்லாங் கூட்டிக்கொண்டு,வரிசைத்தலைவர் – சேனைத்தலைவர் – வியூகத்தலைவர் – தேர்த்தலைவர் – ஆனைத்தலை

வர் - குதிரைத்நலேவா - முதலாய்ச் சொல்லப்பட்ட வீராதி வீரர்கள் அணி யணியாய்ச்சதுர்ப்பாரிசத்திலும்வரும்படியாகஇயமதருமன்வெளிப்பட்டான். இப்படி யவன் வெளிப்பட்டு வந்ததை இராவணனறிந்து சர்வசாக்ரதையாய் தன்னுடையசேனைகளை முடுக்கிவிட்டான். அம்மாத்திரத்தில்வஞ்சயானது நெ ஞ்சிற் குடிகொண்டுமிஞ்சிய இருதிறப்படைகளு மதிக கோபங்கொண்டு, த ங்கள் தங்களுடைய முழுபலத்தோடு ஒருவரையொருவர் மடக்கி யெதிர்த்து சர்வாயுதங்களையு மெறிந்து யுத்தம் விளைத்தார்கள் அப்போது இயமனுடைய சேனைகள் இராவணனுடைய சேனைகளை அதமாக்கின.

இப்படி எந்தகாரியத்திலும் முன்பின் தெரியாமல் இகலை மூட்டிக்கொ ள்ளு மிலங்கேசன் படைகளெல்லாம் கலக்கமடைந்து பலங்குறைந்து, மல சலங்களெல்லாம் வறண்டுபோய்ப் புலம்பும்படியான வாயர்களாய் அலங்கோ லமடைந்து,நங்குலங்கெடப் பிறந்தசண்டாள ராவணனுலல்லவா நாமனைவரு நலங்கெட்டது மல்லாமல் விலங்கிட்ட பறவைபோற் பறக்கும்படி யாச்சுது? ஐயையோ !! இனி யென்னசெய்யப்போகின்றோம்? என்றிரங்குவதை தசக் ரீவன் பார்த்தான். அப்படி பார்த்தபோதவன் இதென்ன ஒருபோதும் பே தியாத நமது சேனைகள் தத்தளிக்கின்றது? ஆ! ஆ! அந்தக் கலகஞ்செய்த நாரதன்காட்டிய வழியல்லவா வென்று வருந்தி மகாவீராவேசத்தோடு கோ பங்கொண்டு நின்றான். அப்போது இயமதருமராஜன், ஈட்டி - வேல் - வச்சி ரம் இவைமுதலிய வாயுதங்களை அவ்விராவணன்மேல் தைக்கும்படிப் பிர யோகித்தான். அம்மாத்திரத்தில் இராவணன் மிகவுங் கோபித்து, தனது வி ல்லைவளைத்து மேகஞ்சொரியு மழைகளைப்போல் பாணங்களைப்பொழிந்து இ யமனுல் விடப்பட்ட ஆயுதங்கள் தூள்தூளாகும்படி வீழ்த்தி, அவன்மார் பில் அழுந்தத்தைக்கும்படி அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகித்து அவ்வியம னுக்குத் துன்பத்தை விளைவித்தான். இயமனும் அத்துன்பத்திற்குச் சலியா மல் அநேகமான அஸ்திரசஸ்திரங்களை யேவினுன். இப்படி ஏழுநாளிரவும் பகலு மிடைவிடாது ஒருவர்க்கொருவர் அகோரமானயுத்தஞ்செய்தார்கள். ஒ ருவரையொருவர் வெல்லப்பார்த்தார்கள். அதற்குவேண்டிய உபாயந்தேடு வார்கள். இறந்தசேனைகள் அளவில்லை இவ்வண்ணம்போர்புரியும் போது இ ராவணன் அதிக்கிரமித்துஇயமனது தேர்ப்பாகன்மேலும், இயமன்மேலும், காலன்மேலும் ஆயிரம்பாணங்களைப் பிரயோகித்தான்.

அச்சமத்தில் காலனென்பவன் மிகவுங்கோபித்து இயமனைநோக்கி, என் னை இவ்விலங்கேசன்மேல் நீயேவும்பக்ஷத்தில் எனது தண்டத்தால் ஒரே அ டியாய் அடித்து இறக்கும்படிச் செய்கிறேனென்றான் அதைக்கேட்ட இயம ன் அக்கருத்துக்கிசைந்து அப்படியே செய்யென்று சம்மதித்தமாத்திரத்தில் காலனென்பவன் தனது தண்டத்தைக்கொண்டு இராவணனை யடிக்க ஆரம் பித்தான். அப்போது, பிரம்மதேவரானவ ரங்கெழுந்தருளி இயமனைக்கண்டு

அப்பா இயமதருமராஜனே! சண்டையை நிறுத்து நிறுத்து வேண்டாம் உனக்கு அபஜெயம்வரும். இவ்விராவணன் பெற்றிருக்கிறவரத்தினால் தண்டாயுதத்திற் கிருக்கிறபுகழ் இகழாய்விடும். அஃதந்தவிராவணனை யாதொன்றுஞ் செய்யாது நீ அவ்விராவணனைப்பார்த்து நான் தோற்றேனென்று சொல்லென்று சொல்லிப்பிறகு காலனைப்பார்த்து அப்பாகாலனே! பொறு பொறு அவசரப்படாதே என்றுரைத்தார்.

இவ்வார்த்தையைக்கேட்ட காலன் திகைத்து நிற்க உடனே எமனானவனவரைவணங்கி, ஐயா இரணியகருப்பரே! அவனுக்கு நான் இளைப்பதாகச் சொல்லவேண்டிய காரண மெனக்குரைக்கவேண்டுமென்று கேட்டான். அதற்குப் பிரம்மாவானவர் நகைத்து, ஐயா அந்தகரே! உப்புக்கும், முத்துக்கும், சர்க்கரைக்கும், மணலுக்கும், சரிபார்ப்பவர்களுண்டோ? துஷ்டனுக் கிடைந்துநின்றால் அதில்தாழ்வென்ன? தர்மசொரூபியாய் சர்வ புவனமுங் கொண்டாடுமும்மை விவேகபுஞ்சமாகிய கர்மவினனென்னு மிராவணனுக் கிணைசொல்லலாமா? ஆகிலும் திரிமூர்த்திகளில் எங்களிருவர்களாலுமே மாளானெனில் நீரா அவனைஜெயிப்பது? அதைவிட்டுவிடும். ஆனாலிவன் சிலகாலம் பொறுத்தபின்பு ஸ்ரீராமபாணத்துக்கு இரையாய்விடுவான். நீர்வருத்தம்வையாதீர். என்றுவிளம்பவும் எமனானவன் நகைத்து,ஐயா பரமேட்டி! நல்லகாரியஞ்சொன்னீர். என்னைவணங்கு மந்தத்துஷ்டனை நானா வணங்கிநிற்பது? உமக்கும் பரமசிவத்துக்கும் வரமென்பது லேசாயிருக்கின்றதே; அதனாலல்லவா இதுவரையிலும் அவனுடன் போராடும்படியா யிருக்கின்றது. என்றுகூறி அவர்கருத்துக்கு ஒருவாறாய்ச் சம்மதித்து உடனே தசக்கிரீவனைப்பார்த்து, ஆ! ஆ! இராவணா! இன்னமும் உனக்கு என்னுடன் போர்செய்யத்திடமிருக்கிறதாவென்றான். இதற்குள்பிரம்மாவானவர் இராவணனுக்குக் கண்ணினாற் குறிப்புகாட்டினார். அதனால் அவனும் ஏதேதுநான் பயப்படுவது நீயொரு எமன்மாத்திரமல்ல. உன்னைப்போல் இன்னம் கோடானுகோடி எமன்வந்தபோதிலும் நான் பின்னிடையேன். இஃதுன் அநுபோகத்துக்குந் தெரியவராதா? இதையெல்லாம் விடுத்து நீ எனக்குத் தோற்றுயென்று உன்வாயாற் சொல்லவேண்டும். பிறகுநான் செல்லவேண்டு மென்றான்.

இப்படி யவ்விராவணன் துணிவுடன் சொல்வதைக்கேட்டு அருகிலிருந்த சித்திரகுப்தனாகிய மந்திரி தன்ராசாவாகிய எமனுக்கு நன்றாய்த்தெளிவுற, இவ்வேழுநாளாக நடந்த யுத்தத்தினது பலாபலத்தின் ஜெயாபஜெயத்தையும் அதன் நயநஷ்டத்தின் குணானுபவத்தையு மெடுத்துரைத்தான். அதன்மேல் மகிஷவாகனனாகிய நமனுஞ்சம்மதித்து, பிள்ளையைப் பள்ளியென்பதனால் உள்ளசெல்வம் போவதில்லையென்றுன்னி, உடனே பாதகாணிக்கைகள் கொண்டுவந்துநின்று, ஓ இராவணேஸ்வரா! இவ்வுலகமெல்லா முமது வீரப்ரதாபங்களைமொழிவதற்கரிதெனில்நானொருவனுரைத்தமுடிவதோ? நீர்செய்த

இராவணன் ஆதிசேடனை வெல்லுதல்.



இராவணன் நிவாதகவசர்களை வெல்லுதல்.



த்தில் நான் தோற்றுவிட்டேன். ஆதலால் சந்திசெய்துகொள்ளு நிமித்தம் உம்மிடத்துக்கு வந்தேனென்றான். அதுகேட்ட ராவணன் மிகவுஞ் சந்தோஷித்தவனாய், அடா எமா! நீ யெனக்குத்தோற்றாயா? ஷபாஷ் நானும் அதுதான் கேட்டேன் என்று சொல்லி இருபது புயங்களும்பூரித்துநமனும் ஒரு சுத்தவீரனோ? எனக்குத்தோற்றான்; எனக்குத் தோற்றான்: என்றுசொல்லி வெற்றிச் சங்கத்தொனிசெய்து, வீதிவிட்ட மம்மதவேழத்தைப்போலத் தன் புஷ்பகவிமானத்தின்மீதுதானும்,மாளாமல் நின்ற சேனைகளுமாகப்புறப்பட்டு திக்குவிஜயப்பிரதாபனாய் அந்த எமலோகத்தைவிட் டப்பாற்சென்றான். பிர்மதேவரும் இருப்பிடத்துக் கெழுந்தருளினர். சர்வதேவர்களும் சந்தோஷமுற் றிருந்தார்கள். அப்பால் எமதர்மராசன் ஏதோ ஒருவகையாற்றேறினவனாகி, இறந்தசேனைகள்போக மற்றவர்களுடன் தன்பதியின் ஆளுகையிலமர்ந்து சுகமாகவிருந்தான்.

கேளும் தசரதநந்தனா! இவ்விதமாக பெயரைச் சொன்னவுடன் சகலலோகமும் பேரிடியைக் கேட்ட சர்ப்பம்போற் கிலிகொள்ளும் வீரத்தன்மையையுடையவனும்,எமலோகத்துக் கதிபதியுமாகிய தர்மராசனைச்செயித்த பிரதாபத்தினால் இலங்கேசனாகிய இராவணன் தன்னைமறந்து புயாசலங்களைத்தட்டிஆர்ப்பரித் துஉயுத்தசன்னத்தனாகி,எவர்களுநடுங்கும்படியாய் மத்தளம்-கர்ணா, பேரி, பூரி, முதலிய சர்வமேளவாத்தியங்களு முழங்கும்படிக்குச் சங்கத்தொனியுடன்பிரயாணபேரிகையறைந்துகொண்டு புறப்பட்டு வருகிறான். இப்படி வருகிறபோது வழியில் தனது மந்திரிகளைப்பார்த்துச் சொல்லுவான். கேளும் அமைச்சர்களே! அந்தமட்டு நாம்செய்த பூசாபலத்தால் நாரதனுடைய வார்த்தையைக்கொண்டு இயமனையும்வென்றோம்இன்னும்யாரிருக்கின்றார்கள். செருக்குற்றவர்கள் இருந்தால் சொல்லுமென்று கேட்டான். அப்பொழுது மகோதரன், இராவணேஸ்வரா! இப்பூலோகத்தை ஆயிரம்பணா மகுடத்தால் தாங்கப்பட்ட ஆதிசேடன் நமக்கு மிஞ்சின பலசாலியெவ்வுலகத்திலு மில்லையென்று கெர்வங்கொண்டவனாதலால் அவனது கொட்டத்தை யடக்கவேண்டுமென்றான்.

இராவணன் ஆதிசேடனை வேல்லுதல்.

கவி.

வெற்றியெனதென் றுரைத்து மிக்கெழுந்தவுவகையனாய் விறலின்மிக்க
மற்றடந்தோண்மாரீசன் மகோதரனைமுதல்வரொடு மணித்தேரேறிப்
பற்றலரைநிலைகெடுப்பான் பாதாளத்திடைபுக்குப் பண்பினோடும்
பொற்றடமாளிகைவிளங்கும் போகபுரியெனுநகரி சென்றுபுக்கான்.

இப்போது எல்லாரையுங்கொல்லும் இயமனுடன் போர்செய்ததால்த்திலும் வெற்றிநமதுதானே: ஆதிசேடனென்ன வரவாயிலவாவென்று மகாசந்

தோஷத்தை யுடையவனும், புயவலிமைமிக்க மாரீசன் மகோதரன்முத லான மந்திரிகளோடு புஷ்பகவிமானமாகிய தேரின்மீதேறிப் பாதா ளலோகம்புகுந்து ஆதிசேடனரசுபுரியும் போகபுரியெனு நகரடை ந்து உயுத்தபேரிகையறைந்து அந்நகர்க்கரசனாகிய ஆதிசேடனைச் ச ண்டைக் கழைத்தனன். அவ்வாதிசேடனும் தனதுபடைகளாகிய அநேகநா கங்களையும் சண்டைக்குப் புறப்படச் சொல்லித் தானும்புறப்பட்டுப்போரு க்கெழுந்து இராவணனோடு கைகலந்து ஓயாத யுத்தஞ்செய்யும்போது அநே கசர்ப்பங்கள் தங்கள்பற்களிலுள்ள விஷஞ் சொரியும்படியாக இராட்சசர்க ளைக்கடித்தமாத்திரத்தில் இவைகளினுடைய பற்களொடிந்ததேயன்றி அவ்வி ராட்சசர்களுக்கு யாதொரபாயமுமில்லை. ஆதிசேடனே தன்னொற்கூடியவரை யிலும்பார்த்து, தனது நாலாயிரம்பற்களும் அழுந்திவிஷங்கொட்டும்படியாகக் கடித்தனன். இவன்கடித்தகடியால் இராவணனுக்கு யாதொருபத்திரவ முண் டாகவில்லை. இராட்சசர்கள் செய்தயுத்தத்தால் அநேகநாகங்கள் மாண்டன. ஆதிசேடன் இராவணனுடையபாணங்கள் தைத்ததாலுண்டாகிய வருத்தத் தால் மூர்ச்சையாய்ப் பிறகுதெளிந்து மந்திரிகளால் இராவணனுடைய வரத் தைக் கேள்விப்பட்டனன்.

அதுகேட்ட மட்டில்லாக் கலக்கமுடையனாகிப் பட்டம்பூண்டிருக்கு நாகே ந்திரன் சற்று நிதானித்து, சரி: சரி: நானும் உங்கள்சொல்லைத் தட்டப்படா தல்லவா ? நட்டம் நமக்கேயன்றி யவனுக்கென்ன ? என்றுன்னித் தட்டுத்தட் டுகளாக நானாவிதமான மாணிக்கங்களை யெடுப்பித்துக்கொண்டு யாவரும் கு ம்பலாய் வரப்போய் கப்பணமாகவைத்து, ஐயா இராவணேஸ்வரா ! நாங்க ளோ அற்பமாகிய சர்ப்பங்கள். நீங்களோ இராக்ஷதர்கள். அதிலுங் கெடிஸ்த லாதிபதிகள். உங்களைச் செயிக்கவும் எங்களால் முடியுமோ ? இந்தமட்டுக்கு ம்போரை நிறுத்திச் சந்திசெய்துகொள்ள வந்தோம். என்றுவணங்கிக் கூறி னன். அதைத் தசக்கிரீவன்கேட்டு, மிகவுமகிழ்ந்து நமக்குமிஞ்சின விஜயப்பி ரதாபசாலிகள் எவ்வுலகிலுமில்லையென்று இறுமாப்படைந்து புயங்கள் பூரித் து நம்மைவலியவந்து சந்திசெய்துகொண்டானென்று வெளியிலெவ ரும் பிரமிக்கும்படி கெக்கலிகொட்டி, ஆதிசேஷன் எனக்கிளைத்தான்: இளைத் தான்: என்றுரைத்து ஆர்ப்பரித்துநின்றான். உடனே மந்திரிகளும் சந்தோ ஷஆரவாரஞ்செய்து நமக்கு நிகரானபலசாலிகளொருவரு மில்லையென்றெண் ணினார்கள்.உடனேதசக்கிரீவன் அம்மாணிக்கங்களையெல்லாம் கைக்கொண்டு சம்மதவாரியாகி, மந்திரி பிரதானிகளாதிசேனைகளுடன் புஷ்பகவிமா னமேறி அப்பாற்சென்றான், இங்குடனே ஆதிசேஷனுனவன் தன்னுடைய மாண் டுபோன சேனைகளையெல்லா மிர்தசஞ்சீவியின் பலத்தா லெழுப்பிக்கொண்டு எதாப்பிரகாரம் தன்னிருப்பிடஞ் சேர்ந்து நாகலோகத்தரசை நடாத்திச் சு கித்திருந்தான்.

இராவணன் நிவாதகவசர்களை வெல்லுதல்.

கவி.

அங்கருக்கரசனு மடன்மிகுதோள்வாசுகியோடளவளாவி
மன்னியநல்லுறவாகி மணிமதியாம்வளநகரி வந்துசாரத்
தன்னிகரில்லாதோர்கள் சாதித்தபெருவரமும் வலியுஞ் சார்ந்தோர்
கின்னிலெனப்புறப்பட்டு நிவாதகவசாதியர்கள் சென்றுசேர்ந்தார்.

கேளும் ஸ்ரீராமா ! இவ்வாறு போகபுரிக்கரசனாகிய ஆதிசேடனோடு கலந்து உறவாடிவரும்போது தசக்ரீவன் மகோதரனைப்பார்த்து, இனி நடக்கவேண்டிய தென்னென அவனுஞ் சொல்லுவான். ஐயா முப்புவனத்துக்கும் அதிபதியாகிய முதல்வனே ! இந்த நாகராசனைச் செயித்தது ஓர் பெரிதான காரியமல்ல. என்னெஞ்சி லொன்று நினைந்திருக்கின்றேன். அதனை வெளியிடும்போது நீர் மனமுவந்து கொண்டாடுவீர். அதுயாதெனில் - தேவலோகத்தில் நிவாதகவசரென்கிற அசுரர்கள் மூன்றுகோடிபேர்கள் ஒரேகெற்பத்திலவதரித்து ஒருதாய்க்குப் பிறந்தவர்கள். அவர்களோ வெகு தந்திரவாதிகள் அவர்களை வெல்லத் திரிமூர்த்திகளாலு மாகாது பிரமதேவனை அரியதவஞ்செய்துவேண்டிய வரங்களைப்பெற்றவர்கள், அப்பேர்ப்பட்டவர்களை ஜெயிப்பதல்லவோ உமது கீர்த்திக்கழகாகும். அவர்களை வெல்லாமல் நமது திக்குவிஜயத்தையு முடிக்கலாகுமா வென்றான். இப்படி யவன்சொல்வதை இராவணனவன்கேட்டு ஆனந்தமடைந்து, அவ்வாறுசெய்வதே சரியென்று தோளைத்தட்டி நின்று மந்திரிகளுடன் யோசித்து மணிமதியென்னும் நகரத்தில் இராவணனுமற்றுமுள்ள சேனைகளும் முற்றுகைபோட்டுக்கொண்டு நிவாதகவசர்களைச் சண்டைக்கு வரும்படியாகத் தூதனுப்பினான்.

இராவணனனுப்பிய தூதுவார்த்தையைக் கேட்டு முக்கோடி அசுரர்களாகிய அந்நிவாதகவசர்கள் கோபமூண்டு இராவணனுடைய சவிஸ்தாரங்களை அத்தூதுவர்களாலேயே தெரிந்துகொண்டு அப்படியா? நல்லதாகட்டும்: நாங்களும் அப்பேர்ப்பட்டவனைப்பார்க்க ஆவல்கொண்டிருக்கிறோம். உயுத்தத்திற்கும்வரத் தயாராய் காத்துக்கொண்டிருக்கின்றோம். நீ பரிஷ்காரமா யந்தராவணனென்பவனுக்குச் சொல்வாயென்றார்கள். இப்படியவர்கள் சொல்லியதீரத்தையும் அவர்களதுபலாபலத்தையும் நன்றாயூகித்துக்கொண்ட அத்தூதுவன் திரும்பிவந்து, தசக்கிரீவனுக்கு இவைகளையெல்லாம் பிரிவுபடுத்திச்சொல்லி வெளியிட்டான். அதனைக்கேட்ட இராவணன் மனங்கலங்கி இலங்காநகரம் போய்விடுவதே நலமென்று சேனைகளைக்கூட்டிக்கொண்டு புஷ்பகவிமானத்தின்மீது போகின்றான். அப்படிப்போகும்போது நிவாதகவசரென்னும் அசுரர்கள் யுத்தசன்னத்தராய்ப் புறப்பட்டுத் தமது சைனியங்களோடு கோட்டைவாயிலில்வந்து இராவணனென்பவன் எங்கே யெங்கே யென்று தேடுகிறார்கள் அப்போது தூதுவர்கள் ஐயா முக்கோடி யசுரர்களே இந்நேரம் இராவணன் யோசித்து உமது பிர

தாபங்களைக் கேள்விப்பட்டு நாம் இங்கு நிற்கவும் தகாது தகாது என்று தனது சேனைகளைப்புஷ்பகவிமானத்தி லேற்றிக்கொண்டு இதோ ககனவழியாகத்தானே பயந்தோடுகின்றான் பாருமென்று காட்டினார்கள். உடனே அம்முக்கோடி அசுரர்களும் பின்தொடர்ந்து, அடா ராவணா! அடா பயங்காளி! போகாதே நில் நில்; என்று அதட்டிக் கூவிக்கொண்டு சென்று தங்கள் தங்கள் விற்களைவளைத்து அவ்விராவணன்மேல் பாணப்பிரயோகஞ்செய்தனர்கள். உடனே இராவணன் ஓ ஓ!! இனி நாம்போவது சரியல்ல நமது புகழுக்கு இகழுண்டாகுமென்று நினைத்துத் தனது விமானத்தைத் திருப்பிச்சேனைகளுக்கும் திடஞ்சொல்லி யுத்தத்திற்கேவி தனதிருபது கரங்களாலும் அஸ்திரசஸ்திரங்களை பிரயோகஞ்செய்து அவர்கள் விட்டபாணங்களையெல்லாம் பொடிசெய்து நின்றனன்.

கேட்டீரோ ஸ்ரீமஹாலக்ஷ்மி மனோகரா! இவ்விருதிறச் சேனைகளுக்குள் தேர்மன்னர்களுடன் தேர்மன்னர்களும், இயானைவீரர்களுடன் இயானைவீரர்களும், குதிரைக் காவலர்களுடன் குதிரைக்காவலர்களும், படைத்தலைவருடனே படைத்தலைவரும், அணித்தலைவருடனே அணித்தலைவரும், சேனாபதிகளுடனே சேனாபதிகளும், வியூகராசர்களுடனே வியூகராசர்களும், இப்படியே பட்டவர்த்தனர் - மகுடவர்த்தனர் - அர்த்தரதக்காரர் - வெங்கலரதக்காரர் இவர்களெல்லாம் தங்கள்தங்க ளினத்தோடு நெருங்கி யெதிர்த்து, வில் - வேல் - வாள் முதலாகச் சொல்லப்பட்ட எண்ணான் காயுதங்களையுங் கையிலேந்தினவர்களாகி, ஆக்ரஹிக்குரோதத்துடனே திரிபுவனங்களும் கலங்கிப் பிரமிக்கும்படியாய் சர்வசங்காரப் பிரளயகால ருத்திரர்களைப் போலே ஒருவரையொருவர் குத்தியும், வெட்டியும், இடித்தும், உதைத்தும், அவரவர்களை உடலம் பதைக்கப் பிடித்தெறிந்தும், கடித்துத் தின்றும், கரங்களால் வாரியெறிந்தும், மரங்களாலே மோதியறைந்தும், இப்படியாய் கோரமான சண்டை விளைத்தார்கள். அக்காலத்திலே நிலைகள் புரண்டதும், தலைகள் உருண்டதும், கைகள் அழிந்ததும், கால்கள் ஒழிந்ததும், தோள்களுடன் தாள்கள் அறுந்ததும், குடல்கள் சரிந்ததும், உடல்கள் பிரிந்ததுமாகி; இருவகைச் சேனைக்கூட்டங்களிலுள்ள சனங்களெல்லாம் கழிந்தது போக மற்றவர்களெல்லா மொருவரையொருவ ரெதிர்த்து, ஒவ்வொருவரு மாண்டுபோமளவும் உயுத்தஞ்செய் திறந்தார்கள்.

இவ்வண்ணம் அருமையான உயுத்தஞ் செய்யும்போது இராவணனும் மூன்றுகோடி அசுரர்களும் தங்கள் தங்களுடைய சேனைகளெல்லா மாண்டு போவதே யாதுசெய்வதென்று கருதி நாமே முனைந்து யுத்தஞ்செய்யவேண்டுமென்று ஒருவர்க்கொருவர் கைகலந்து தங்கள் பூரணவல்லமையோடு யுத்தஞ்செய்தார்கள் அவ்வுயுத்தப்பிரபாவத்தையாரால்சொல்லமுடியும். அண்டம்பிளந்தன. நக்ஷத்திரங்களுதிர்ந்தன. சூரியசந்திராதிநவக்கிரகங்கள் தங்கள் வேகங்குறைந்து வழிமயங்கினார்கள். ஒருவரையொருவராடிப்பார்கள். புடைப்

பார்கள். வெட்டுவார்கள். குத்துவார்கள். மோதுவார்கள். தூக்கியெறிவார்கள். அஷ்டதிக்கிலும் இடசாரிவலசாரியாகஓடுவார்கள். வருவார்கள். வந்துபாணங்களைப்பொழிவார்கள். அவரவர்கள்பெற்றவரங்களினாலுண்டாகிய பூரணவலிவையும் காட்டுவார்கள். ஒருவர்க்கொருவர்கற்றிருக்கும்படியானமாயங்களைச் செய்வார்கள். ஒருவரையொருவர் வெட்டுவார்கள். மறுபடியு முயிர்பெற்றெழுவார்கள் இப்படி மூன்றுகோடி யசுரர்களும் தனியாகவும் கூட்டமாகவும் ஒருவனாய்நின்ற இராவணனோடு போர்புரிய அதனாலிராவணனொருவனாய் நின்றும் இளைத்தவனல்ல. அவர்களும் தோற்றவர்களல்ல. தோற்கச்செய்தவர்களுமல்ல. இப்படி இரவும்பகலும் இடைவிடாது ஒருவருடம் யுத்தம்பண்ணினார்கள். இவர்கள்செய்யும் யுத்தவதிர்ச்சியால் லோகாலோகங்களெல்லாம் பிரமித்துக்கலங்குவதைப் பிர்மதேவரறிந்துஅம்சவாகனாரூடராய் அவ்விருதிறத்தவர் நடுவில்வந்து நின்றுகையமர்த்தி ஓ பலவான்களாகிய நிவாதகவசர்களே! ஓ இலங்கேசா! யுத்தத்தைநிறுத்துவீர்கள். நிறுத்துவீர்களென்று சிலசொல்லவாரம்பித்தனர்.

கேளுங்கள் எனக்குரிய அன்பர்களே! நீங்களிச்சண்டைக்கேற்படவேண்டியதென்ன? க்ஷாத்திரந்தான் வரவேண்டியதென்ன? அல்லதுஒருவரையொருவராகிலும் ஜெயித்தீர்களா? நீங்கள் விவேகசாலிகளல்ல. விறுதாவாய் நமதுபெயருள்ள அஸ்திரத்தையேவி உலகத்தை நாசம்பண்ணுகின்றீர்கள் இதுசரியல்ல. இப்போதும் என்னசொல்லுகின்றீர்களெனக் கேட்டார். அதற்கு நிவாதகவசர்க ளவரைவணங்கி, சுவாமி வாணிகேள்வரே! நாங்கள் வலியச்சண்டை யெடுக்கவில்லை. அந்த ராவணனேவந்தானென்று சொன்னார்கள். அதைக்கேட்ட பிரமதேவர் சண்டையை நிறுத்தி சமாதானமாய் விடுங்கள். சிலநாளைக்குள் இரகுகுலத்தி லவதரிக்கும் ஸ்ரீராமசந்திரப் பிரபுவினால் அவ்விராவணன் மாள்வானேயன்றி உங்களால் மாளமாட்டானென்று சொல்லிவிட்டு, அப்பிரமதேவர் இராவணனையடுத்து, அப்பா இராவணா! இதென்னவேலை? உனக்கந்த அசுரர்கள் ஒரெதிரா? நீயோ உத்தமபுருஷன். அதிலும் என்வார்த்தையை நீதடுக்கமாட்டாயென்று எனக்குத்தெரியும். உனக்கு நான் அதிகமாய்ச் சொல்லவேண்டியிராது. இதுவே நல்லசமையம். நீயென்தான் வாள்கொண்டு வெட்டினபோதிலும், அவர்கள் வரப்பிரசாதங்களாலும் — மாயாவித்தைகளாலும் — மறுபடியு முளைப்பார்கள். நீயும் இலேசானவரமும் பலமுமுடையவனல்ல, இருதிறத்தோர்களும் பலவருடம் சண்டைசெய்தாலும், வரத்திலும் பலத்திலும் ஒத்தவர்களாதலால் ஒருவரையொருவர் செயிப்பதருமை ஆகிலும் ஒன்று சொல்லுகிறேன்கேள்:

துவாபரயுகத்தில் விஷ்ணுவானவர் நரநாராயணர்களா யவதரிக்கப்போகின்றார். அப்போதிவர்கள் அவர்களால் மாண்டுபோய்விடுவார்கள். ஆனால் இப்போதல்ல. நீ வீணாய்ச் சண்டையிட்டாலும் ஜெயிக்கமாட்டாய். அவர்களும் வெகுமாயாவாதிகள். அவர்கள்பேரிலிருக்குந் தயவைவிட உன்பேரிலெனக்கு அதிக அன்புண்டான படியினால்தான் சொல்லவந்தேன். நீ வாசித்

தறியாத சாஸ்திர மென்னவிருக்கிறதென்றார். அதற்கந்த ராவணன் அவரை வணங்கி, சுவாமி இரணியகருப்பரே! இந்த தந்திரங்களெல்லா நானறிவேன். எனக்கா தெரியாது? இந்த விஷயங்களெல்லா நான் பார்த்திட்ட பிச்சையாச்சுதே: நீரேதோ அவர்கள்மீதுவைத்த அன்பினாலல்லவா என்னை யிவ்வாறு சோதிக்கின்றீர் ? என்பேரில்வைத்த அன்பினால் வந்ததாக நான் நினைக்கவில்லை. போனவனைக் கூப்பிட்டு சண்டைதொடுத்தார்கள் நான் விடுவதேயில்லை: ஆகிலும் நீரேவந்து சொல்லுவதால் அப்படியானால் எனதிஷ்டப்படிக்கு அவர்களென்னெதிரில் வந்து நாங்களிளைத்தோம்: நீயே கெலித்தாய்: என்றுசொல்லுவார்களாகில் அப்போது சம்மதியாவேனேயல்லீது; இப்போது இந்த வெறுஞ்சொல்லுக் கிணங்கேன். அவர்களோ கிலிபிடித்துப் பிரமித்திருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட முரண்டு நீஇன்னமுஞ்செய்வதேனென்று பிரமதேவர்செல்ல, இராவணன்சொல்லுவான் ஐயா! பூலோகம் பதினான்கும்—தேவாதிதிரிமூர்த்திகளும் — ஒன்றாய்ப்புரண்டுபோரிடவந்தாலும்,என்முன்னே நிற்காமல்மிரண்டு அவர்களெலால் நிலைபெறாது வாடிவதங்கிப்போவார்கள். இப்போரில் அவர்களிறப்பதை நீரேபார்க்கப்போகின்றீரென்று திரண்டுபெருத்த இருபது தோள்களையுந்தட்டி, ஆகாயத்திலெழுந்து முட்டி, பூமியிற்கிட்டி ஆர்ப்பரித்து நின்றான்.

அதுகண்ட கமலாசனன் — இதேது நமக்கு இரவும் பகலும் பெரும் போராட்டமா யிருக்கின்றது. இவன் மடையபுத்திக்காரனாகையால் எப்படியாவதிப்போரை யொழித்துவிடுவதேசரி. என்றுன்னி நிவாதகவசாளையடுத்து அவர்கட்குஞ் சொல்லவேண்டிய நீதிமார்க்கங்களையெல்லா மெடுத்துச் சொல்லி, சதுர்விதவுபாயத்தாலு மவாளைச்சரிப்படுத்தி, ஓ அன்பர்களே! இவன்மீது உங்களுக்கு க்ஷாத்திரம் வேண்டியதில்லையென்று தெளியவுரைத்துப் பக்குவப்படுத்திக் கப்பணத்துடனே வரச்சொல்லி, இராவணன் முன்னின்று நாங்களே தோற்றோம். நீயேகெலித்தாய். என்று சொல்லச்சொல்லி இருவர்களையுஞ் சமாதானமாய்க் கலக்க வைத்தார். அதன்மேல் இராவணன் அவர்கள் தோற்றுவிட்டார்களென்கிற சந்தோஷசகிதனாகி, அவாளுடைய மாயாவித்தைகளைக் கற்றுக்கொடுக்கும்படிச் சம்மதவாரியாய்க் கேட்டுக்கொண்டான். அதற்கவர்கள் சம்மதித்து இரணக்களத்தைவிட்டு நீங்கி, மாண்டசேனைகள்போக மற்றவருடனே இராவணனை யழைத்துக் கொண்டு தங்களுடைய பட்டணத்திற்குள்ளே போனார்கள். பிரமதேவருஞ் சத்தியலோகத்திற் புகுந்தார். இந்த பலத்த யுத்தத்திலே இருதிறத்தார்கட்கு மாண்ட சைனியங்கள் கணக்கிடப்படா. கேளும் இராகவா! ஒருவருஷமாய் அகோரமான யுத்தஞ்செய்த இவர்களிருவரும் பின் பொருவரோடொருவர் கலந்து அதிக வாஞ்சனையாய் நீரும் பாலும் போல் மருவியிருந்தபடியாலே, அந்த நிவாதகவசாள் இந்த ராவணனுக்குத் தக்கமரியாதை செய்து, பின்னு மொருவருஷகாலவரையிலும் தேவதாபோச



இராவணன்தேவஸ்திரீகளாதிரைச்சிறையெடுத்துச்சேல்லக
கண்டதேவர்கள்கிலேசத்தைத்திருமால்தேற்றுதல்.



னத்தோடே வெகுபிரீதியாய் விருந்துகள்செய்து, அவன் கேட்டுக்கொண்ட வித்தைகளில் ஒன்றுயினு மொழியாமற் கற்பித்துக்கொடுத்தார்கள். அவையனைத்தையுங் கற்றுக்கொண்ட இராவணனுமவன் பின்பவர்களிடத்தில் விடைபெற்றுப் புஷ்பகவிமானமேறி, விரைவி லிலங்கைக்குப் போகவேண்டுமென்று கருதிப்புறப்பட்டனன்.

இராவணன் காலகேயரையும் வருணனையும் வெல்லுதல்.

கலி.

அங்ககரிலிட்டரக்க ரடல்வருணன்றனைவெல்வா னவன்முன்மேவும்
கன்னகிரிதனைமூடிக் காலகேயரையெல்லாங் கணத்திற்கொன்று
தன்னுடையதங்கையாந் தடவரைத்தோட்சூர்ப்பநகை தன்னைக்கொண்ட
மின்னனையசுடரிலைவேல் வித்துருசிங்கன்றனைவெங் களத்துவீழ்த்தான்.

அப்படிப் புறப்பட்டு வரும்போது வருணனைச் செயிக்கவேண்டுமென்று கருதி அவன் வசிக்கும் கன்னகிரி யென்னும்புரியை முற்றுகையிட்டு, அதற்குச் சமீபத்தில் தோயமாபுரியில் காலகேயரென்னு அறுபதினாயிரமசுரரை க்ஷணநேரத்திற் செயித்து காணிக்கைபெற்று, அக்காலகேயவசுரரிலொருவனாகிய தன்தங்கை சூர்ப்பநகையினது மணாளனாகிய வித்துருசிங்கனைப்படுகளத்திலொப்பாரியில்லையென்று யுத்தகளத்தில் மடியச்செய்துஅங்குள்ளகன்னியரையும் சிறையெடுத்தனன். பிறகு மந்திரிகளைப் பார்த்து நாமிந்த வருணனுடைய நகரத்தில்வந்திருந்தும்வருணனென்னும் பயல்நம்மைக்கண்டு வணங்கி நான் தோற்றேனென்று சொல்லாமலும் காணிக்கை செலுத்தாமலும் எங்கேயோ போயொளித்துக்கொண் டிருக்கிறானல்லவாவென்றுயோசித்துத்துதனுப்பஅதைக்கேட்ட வருணனுடைய புத்திரர் ஊழிகாலத்தக்கினியைப் போலக் கோபித்து இரதகஜதுரகபதாதிகளாகிய நால்வகைப்படையுமணிவகுத்து இராவணனிடம்வந்துயுத்தஞ்செய்யுங்காலையில்அவர்களது நால்வகைச் சேனைகளும் அலங்கோலமாம்படி யழியச்செய்து இராவணன் யாவரையும் பூமியில் வீழ்த்தினன்.

இப்படி தன்சேனைக ளழிந்ததைக் கண்ட வருணகுமாரர்கள் மிகவுங் கோபித்து புட்பக விமானத்தின் மீதிருந்து யுத்தஞ்செய்கின்ற அரக்கன்மேல் சோனமாரியைப்போல் அம்புகளைப் பொழிந்தார்கள். அவைகளை விலக்கிக் கொள்வதே தனக்குப் பொழுதுசரியாக அவர்களுக்குமேல் வேறுபாணங்களை விடுக்கச் சாத்தியமில்லாமல் மனம்வருந்தினான். அப்பொழுது சந்திரனையுங் கொன்றைமாலையுந் தரித்தசடாபாரத்தையுடைய பரமேஸ்வரரதுமலையையெடுத்த பராக்கிரமத்தையுடைய இராவணன் தைரியங்கொண்டவனாகி அவர்கள்விட்ட பாணங்களை விலக்கிப் பிரதிபாணங்களைக் கோடிகோடியாகச் சொரிந்தான். இவனது மந்திரியாகிய மகோதரன் அக்கினியும்விடமும்போலக் கொதித்து வருண புத்திரர்களின் சேனைகளைக்கொன்று வருந்தினான். அப்படிதமது சேனைகளைக்கொன்று வருத்தியதைக் கண்ட கோமுகன் — புஷ்கரன் என்னும் வருணபுத்திரர்கள் மனங்கொதித்து, மாயவித்தையில் மகானாகிய மகோதரனது மார்பில் தைக்கும்படி அக்கினியாஸ்திரங்

களை விடுத்து இராக்ஷசசேனைகளைத் தரைப்படுத்தி, இராவணனது தோளிலும் மார்பிலும் இரத்தமொழுகும்படியாக பாணங்களைவிடுத்து அண்டங்குலுங்க ஆர்ப்பரித்தார்கள். இராவணனனவன் மிகவும் கோபித்து அஸ்திரங்களையும் - சூலம் - வேல் — வச்சிரம் - தோமரம் - தண்டம் - உலக்கை இவை முதலிய வாயுதங்களையும்- செலுத்த, வருணராஜன் புத்திரர்கள் இதைக்கண்டு பயந்து இராவணனுக்குத் தோற்றோடினார்களென்னும் நிந்தைமொழிகூற தமது நகரத்தில் வந்து சேர்ந்தார்கள். உடனே வருணராஜன்தேவி புத்திரர்களையழைத்து உங்கள் தந்தையும் தேவலோகம் போயிருக்கின்றமையால் இனி நீங்கள் போருக்குப் போகாமல் இராவணனிடத்திற் சென்று சமாதானஞ் செய்துகொள்ளுங்களென வதற்குச் சம்மதித்து, மந்திரிகளைவிடுத்துப் பிரியவசனஞ் சொல்லச்செய்து காணிக்கைகொண்டு செலுத்திச் சமாதானஞ் செய்து நாங்கள் தோற்றோமென்றார்கள்.

இராவணன் அப்சரஸ்ரீகள் முதலானவர்களைச் சிறையெடுத்திலங்காநகரம் புகுதல்.

கவி.

அந்தவுரைகேட்டுவந்த வடலரக்கன்பகிரண்ட மதிரவார்த்து
வந்தவழிபுறப்பட்டு மதிலிலங்கைநகர்நோக்கி வழிக்கொள்வேலை
அந்தணர்தங்கன்னியரு மசுரர்கடங்கன்னியரு மளவிலாத
கந்திருவர்கன்னியரு முதலாயகன்னியரைக் கண்ணிற்கண்டான்.

இந்த வார்த்தையைக்கேட்ட தசக்கிரீவன் பகிரண்டங்களெல்லாம் படபடவெனத் துடிக்க ஆரவாரஞ்செய்து இனி இலங்கைநகர் நோக்கிச் செல்லவேண்டுமென்று சொல்லிப் புறப்பட்டபோது மகோதரன் சொல்லுகிறான். ஐயா இராவணேஸ்வரா! இது சமையம் வருணராஜனில்லாத காலமாயிருக்கிறபடியால், நீர் கருதியபெண்களை யாதொரு தடையுமின்றிச் சிறையெடுக்கலாமென்றான். அதுகேட்ட ராவணனனவன் மீறி, ஈதொருகந்தாயமென்று கூறி, வருணனில்லாத தருணமென்று அவன் பட்டினத்துட் பிரவேசித்து, அன்னங்களின்மே லிராசாளி பாய்ந்ததுபோல அப்சரஸ்திரீகளுடைய அரண்மனைகள்தோறும் பாய்ந்து, அவரவர்களு மலங்கோலப்பட்டுக் கண்ணிறைத்துத் தாமரையிலையி னீர்போற் றவிக்கவும் - வாயிலறைந்துகொள்ளவும்-ஒருவரையும் விடாமற்பலாத்காரமாய்அங்குள்ள நூறுகோடி அப்சரஸ்திரீகளையும் பிடித்துப் புஷ்பகவிமானத் தேற்றிக்கொண்டு, தன்சேனையுட னவ்வூரைவிட்டுக் ககனமார்க்கமா யப்பாற் செல்லுகிறான். அக்காலந்த அப்சரஸ்திரீகளெல்லாம் அழுதுப் புலம்ப வதைத் தன்காதுகளாற்கேட்டும், கண்களினாற் பார்த்தும், சற்றுமிரக்கமில்லாதவனாகி, பின்னு மகோதரனைப் பார்த்துச் சொல்லுவான். அப்பா மகோதரா! என்மீது நீவைத்திருக்குமன்பு இப்போதுதான் தெரியவந்தது. அந்தமட்டுமுன்னைக் குருத்துவமாய் நம்புவதற்கு நீயும் தக்கபடி உள்ளன்புவைத்து நன்மையானகாரியத்தையேசொல்லுகின்றாய். இதற்கு நானென்ன கைம்மாறுசெய்வேன்? இன்னமிப்பேர்ப்பட்ட

பெண்கள் எந்தவிடத்திலிருந்தாலும் இப்போதே சொல்லிவிடுக. என்றுகேட்கவு மகோதரன் சொல்லுவான்.

கேளும் ஸ்ரீராமா! "பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமைஞாலத் தறம்பொருள் கண்டார்கணில்." என்றும் – பரஸ்திரீகவனம் பரலோக நாசனமென்றும்-பிறன்மனைப்புகாமை அறமெனத் தருமென்றும் – தருமநீதி சாஸ்திரங்களெல்லாம் சொல்லியிருக்க, இந்தத் துன்மார்க்கனுகிய இராவணன் மேற்கூறிய வருணலோகத்து அப்சரஸ்திரீகளைச் சிறையெடுத்ததே யிவன்றலைக்குத் தாம்பூலமாயிருக்க, பின்னும் பெரும்பாவத்துக்கு நரகத்துக்கு மேதுவாகிய செய்கைகளையே தனது கவனத்திற் கருதி, தலைமாட்டுக் கொள்ளிஒயாத்த நிலைகாட்டு மகோதரனை யடுத்து வினவினபடியால் அவனும் ஆடு நனையுதென்று கோனாய்க் கென்னதுக்க மென்பதுபோலப் பனுவேறுவதெல்லா நமக்குச் சுரூரவையல்லது வேறல்லவென் றெண்ணினவனுகி, ஐயா பிரதாபலங்கேஸ்வரா! தெய்வலோகப் பெண்களெல்லா மகாசௌந்தரியமுள்ளவர்கள். இந்த ஸ்திரீகளைப்பார்க்கிலும் அவர்கள் வெகு மேலானவர்கள். அவர்களும் உமக்குக் கிடைக்கப்பட்டவர்களல்ல, ஆனால் நீர் இத்தக்ஷணம் யமுனாநதிக்குப்போனுற் பார்க்கலாம். அவ்விடத்திலவர்கள் நிதம் ஸ்நானஞ் செய்யுநிமித்தம் வருவதுண்டு. அவர்களுக்கு இரதிதேவி முதலானவர்களும் தொண்டுசெய்வார்கள். ஆதலால் உமக்கிஷ்டமானுற் போய்வரலாமென்றான்.

அதுகேட்ட தசக்ரீவன் தன்னுடன்வந்த தளங்களையெல்லா நிறுத்தி அப்சரஸ்திரீகளுக்குக் காவல்வைத்து, அவர்கள் வெளிவருவதானுல் உடைவாளாலுடனே வெட்டிவிடும்படி ஆக்யாபித்து, பாற்பானைக்கு முகப்பமிட்டுச் செல்லும் பூனைபோல் தான் புஷ்பகவிமானத்திற்சென்று, அந்த யமுனாநதிக் கரையில் நின்று அங்கு வந்திருக்கும் தேவதா ஸ்திரீகளைப்பார்த்து, ஆ! ஆ! பெண்கள்சிகாமணிகளே! என்னை யறிவீர்களா? என்புகழை நீங்கள் கேட்டதில்லையா? என்று தனக்குள்ள கிராப்புகளையெல்லாம் பிரபலமாக ஒன்றுவிடாமல் அவர்களுக்குச் சொல்லி, பின்னும் தனக்கு இந்தத் திரிபுவனங்களும்-திரிமூர்த்திகளும் – மற்ற யாவத்திராளு நடுங்குவதாயுஞ் சிரிப்புடன் புகன்றான். அவைகளைக்கேட்டஅவர்கள் பூனைமுன் எலியொத்தவர்களாகிப்பதுங்கிப்போவதற்கும் இடமில்லாமல், அடா பாதகா! அடா துரோகி! அடா சண்டாளா! இங்கு முழம்போட வந்தாயாவென்று புலம்பினுர்கள். அதனுலிவன் சிலரை வலுவி விழுத்துக் கட்டிப் புஷ்பகவிமானத் தடைத்தும், சிலரைச் சிறுமாறுபடச்செய்தும், சிலரைக் கூந்தல்களையறுத்தும், சிலரை வாயினுலுஞ் சொல்லக்கூடாத அலங்கோலஞ் செய்தும் ஆக்ரமித்துக் கொக்கரித்தான். அதுகாலையில் ஒடிவிட்டவர்கள் சிலபேர். ஒடும்போது வாளால் வீசியதனுல் வெட்டுபட் டிறந்தவர்கள் பலபேர். தங்களுக்குத் தாங்களே வாடியிறந்துவிட்டவர்கள் சிலபேர். இந்தச் சங்கதியைத் தேவர்களுங்காவலு அறிக்கைசெய்யலாமென்று நாடிச்சென்றவர்கள் பலபேர்.

இப்படி நாலுவிதமாகப் போனவர்கள் போக மற்ற எண்பதுகோடி ஸ்திரீகளைச் சிறையெடுத்துக்கொண்டு வரும்போது அவரவர்கள் புலம்பியழுகின்றவோசையானது உலகமெல்லாம் செவிடுபட்டது. அவர்கள் கண்களினின்றும் வடியாநின்ற நீரானது எங்கும் ஆறுய்ப்பெருகி யோடும்படி வானவழியாய்ச் செல்லும் பாவியாகிய ராவணன் தனது மூடத்தன்மையால் மகோதரனைப் பார்த்து, அப்பா என்னுயிர்த்துணைவனே! இதென்ன ஆறு? நாமெவ்வளவுதூரம் சென்றாலு நம்முடனேகூட வருகின்றதே என்றான். அதற்கவன், ஐயா இராவணேஸ்வரா! நீரிந்த தேவகன்னிகைகளையும் அந்த அப்சரஸ்திரீகளையும் சிறையெடுத்துவருவதைக் கேள்வியுற்ற இவர்களுக்குரியவர்களாகிய இந்திராதிதேவர்களும் வருணராஜனும் சந்தோஷமடைந்தவர்களாகி, கூடினவரையில் தக்கநாயகன் நமது குலப்பெண்களுக்குக் கிடைத்ததே நாம்செய்த பாக்கியமென்று ஆசீர்வதிப்பதையறிவிக்கும்பொருட்டும் — தேவரீர் திக்குவிஜயஞ்செய்து இளைப்புடன் செல்வதால் ஆயாசந்தீரும்பொருட்டும் - உமக்குக் குளிர்ந்த காற்றுண்டாகும்படியாக வருஷம் வருஷிக்கக் கட்டளையிட்டதனால், அந்த மழையானது இவ்வுலகங்களையெல்லாங் குளிரச் செய்ததுமன்றி உமக்கும் விடாய்தீரப் புனலைவாரி இறைக்கிறதென்றான்.

அது கேட்ட ராவணன் வெகுஆனந்தக்கடலில் மூழ்கினவனாகி, இருபது புஜங்களும் இருநூறு புயாசலங்களாய் விம்மப் பரவசமடைந்தான். அக்கால் வானத்தில் அசரீரியானது தோன்றி, அப்பா ராவணா! அதை நம்பாதே: உன்னைத் தொடர்ந்துவருமிவ்வாறானது நீ சிறையிட்ட ஸ்திரீகளின் கண்களிலிருந்து பாய்ந்தோடி வரப்பட்டது. இதைத் தண்ணீரென்றும், குளிர்ச்சியுடையதென்று நினைக்காதே. இஃதுன்குலத்தை யறுக்கவந்த மிகவும் வெப்பமாகிய அக்கினிக்குச் சமதையாகிய கூர்மையுள்ள வடிவாளென்று நினைந்துகொள்ளுக. எனச்சொல்ல அதைத் தான்கேட்டும், அவன் தோய்ந்திருக்கும் ஆசையினால் கிஞ்சிற்றேனு நினைக்காதவனாய் இவனைக் கவுரவப்படுத்திப் பேசிய மகோதரனுக்குப் பின்னும் உபசாரங்களைச்செய்து வெகு ஆடம்பரமாகக் கலந்து பேசிக்கொண்டு, முன்பின்வருவ தறியாத அற்பச் சந்தோஷியாய் இன்னம் எவர்களிருக்கிறார்கள் நமக்கெதிரியானவர்களென்றும், இப்பேர்ப்பட்ட ஸ்திரீசாதிக் கூட்டங்க ளிருக்கிறவிடங்கள் இன்னமுமுண்டாவென்றும், அப்படியுண்டாயின் அவர்கள் தலைமீதுங் கையை வைக்கலாமா வென்னும் யோசனையோடு செல்லுகின்றான்.

கேளும் ஸ்ரீதாசரதி! பாவங்களையெல்லா மூட்டையாகக் கட்டிக்கொண்டு செல்லும் இராவணனுக்கு மகோதரன் பின்னுஞ் சொல்லுவான். ஐயா இராவணேஸ்வரா!. நீர் சிறையெடுத்துக் கொண்ட ஸ்திரீகள் விஷயத்திற் கவனம் வைத்து நானும் யோசித்துப் பார்த்தேன். உம்மைப் பார்க்கும்போதே எவ்விதப் பெண்டுகளும் ஆவல்

கொண்டு நாடுகிறபடியால் எனக்குஞ் சுலபமா யிருக்கின்றது. உமக்கும் வேலைதீர்ந்தாற்போ லிருக்கின்றது. மாணிக்க மிருக்குமிடத்தைக் குருடனுக்குக் காட்டி யென்னபிரயோசனம்? மலடிக்கு மைந்தன் கதைகளைச் சொல்லி யென்னபயன்? சரச சையோகங்களின் கூறுபாட்டைப் பேடிகளுக்குரைத்தென்னகுணம்? உம்மைப்போற் சகலவிதத்திலும் கைதேர்ந்து, நல்லகுணத்தையும் - திடத்தையும் - திவ்வியாலங்கிருத வழகினையும் பெற்றவர்கள் யாரிருக்கின்றார்கள்? ஐயா தசக்ரீவரே! கண்ணிவைத்துப் பறவை பிடிப்பதுபோல் நாமு மிலக்குவைத்துக்கொண்டு, இதுவரையில் கிடைப்பதற்கு மரிதாகிய அப்சரஸ்திரீகளையும் - பார்ப்பதற்குங் கிட்டாத தேவகன்னிகைகளையும் - சிறையெடுத்தோம். உமது மனதி னிஷ்டப்படிக்கு அவர்களெல்லாஞ் சித்தித்ததும், அவர்களை நீர் சிறையெடுக்கப் பெற்றதும் ஒரு பெரிதல்ல. இன்னமொன் றிருக்கின்றது. அது மிகவுங் கந்தாயபலமா யிருக்கும். அதுயாதெனில், பாகீரதி தீர்த்தத்தில் கின்னரஸ்திரீகள் பத்துலக்ஷம்பேர்கள் நீர் விளையாட வருகிறதுண்டு. அதற்கு மிதுதான் சமையம். இத்தக்ஷணமே போவோமேயாகில் அவர்களும் வெகுலேசாய்க் கிடைப்பார்கள். என்று மிகவு முத்தமபுருஷன்போல் மெத்தவுந் தாபந்தரியத்துடன் சொல்லினான்.

இப்படியம் மகோதரன்சொல்லி முடியுமுன்னமே இராவணனானவன் தாவிக்குதித்து, தோளைத்தட்டிக் குலுங்கச்சிரித்து, உண்டுருசி கண்டவனும் பெண்டுருசி கண்டவனும் ஓயாதலைவனென்பதுபோல் வில்லிலிருந்துவிட்டகணையினுமதிகமனோவேகமாக வெகு ஆவலுடன் அந்தப்பாகிரதி தீர்த்தத்தையடுத்து,மாரீசன் முதலானவர்கள் தடுக்க-தான்கொண்டதே சரியென்று நடக்க-அங்கிருந்தவர்களெல்லாம் நடுநடுக்க—கின்னரர்களெல்லாம்துன்பத்திற்படுக்க - பின்னுமந்த ஸ்திரீகளெல்லாம் சாபங்கொடுக்க - அவர்களையெல்லாஞ் சிறையெடுத்து, உடனே சகலலோகமுங் கலங்க ஆர்ப்பரித்து வந்து மகோதரனைக்கண்டு, இன்னம் என்னசேதி ஏதாவதுண்டாவென்றான். அதற்கவன் ஐயா இலங்கேசா! உமக்குத்தானா பெண்டுக்குக் குறைவு? இன்னுமநேக மிருக்கின்றன. நானுமுமதுபேரில்வைத்த அன்பினால் எனக்குள் நெடுநாளாக வைத்துக்கொண் டிருந்த இடங்களையெல்லாம் உமக்கே தெரிவித்துவிடுகிறேன். எனக்கு உம்மைவிட யாரிருக்கின்றார்கள்? நீருமந்த வேலைக்கென்றே வந்தவர். உமக்கிப்போது நல்லோலைக்கிள்ளாக்காக விருக்கின்றது. உமது செங்கோலுக்குமுன் சங்கேதமுமுண்டா? உமது நல்ல காலபலத்தினால் மண்ணும் தங்கமாகிவிடும். நீர் மாத்திரம் பிரவேசிப்பதானால் நானுமடுக்கடுக்காகச் சொல்லுகிறேன் சற்றே யிளைப்பாறியிருமென்று மகோதரன் பூமலேற்றி, இன்னும் யக்ஷகன்னிகைகளும் - கந்தருவ கன்னிகைகளும் — இராஜகன்னிகைகளும் - பிராம்மண கன்னிகைகளுமாகிய பலவகைக் கன்னிகைகள் இன்னின்னவிடங்களில்இன்னின்னபடிக் கிருக்கின்றார்களென்று ஒரேதடவையாய்த் தன்வஞ்சந் தீரும்படிக்குச் சரவத்தி வைத்ததுபோற் சொல்லி முடித்தான்.

இப்படி மகோதரன் சக்கரைக்கஞ்சி வார்த்துப் பக்குவமாய்ச் சொல்லியவாறே இராவணனைச் சொக்குப்பொடியி லகப்பட்டுச் சக்கரம்போற் சுழன்றுசென்று அக்கன்னிகைகளை யெல்லாம் சிறையெடுத்து, ஆக முன்னூறு கோடி ஸ்திரீகளுடனும் இலங்கைக்குப்போக மிக்கமதத்தையடைந்து உக்ரமாகத்திரும்பி, தனது சதுரங்கசேனைகள் முதலிய சர்வத்திரளு மருவிவர நடந்துவருகிறான். அக்காலையிற் சிறைபட்ட ஸ்திரீகளெல்லா முறையிட்டழவும், அவர்கள் கண்களிலிருந்து நீரானதுவடிந்து சமுத்திரத்தினும் பெரிதாகி ஓடவும், அவரவர்கள் தலைவிரித்துப் பசுவைப்போற் கதறவும், இப்படியவன் அல்லோலகல்லோலஞ் செய்துகொண்டு ஆடம்பரமாய் வருவது எப்படி யிருந்ததென்றால்? வீட்டிற்பிறந்த பெண்ணாகிய சூர்ப்பநகியின் புருஷன் காலஞ்சென்றமையால் அதற்காகக் காலகேயராகிய அசுரப் பெண்களெல்லாம் கூடிக்கொண்டுவந்து விசாரித்துத்துக்கங்கொண்டாடுவதுபோலிருந்தது. மேலுமந்த ஸ்திரீகளெல்லாம் தலைவிரிகோலமாகித் தீராத்துயரையடைந்து, இனியெவ்வாறு பிழைப்போமென்று ஏங்கினவர்களாகி, அடா இராக்ஷதா! அடாபத்துத்தலையா! அடாபாவி! அடாசண்டாளா! அடாதுரோகி! எங்களையுமிப்படி பொசுக்குவாயா? நாங்க ளென்னசெய்தோம்? மசகம்போலிருக்கிற நாங்களும் உனக்கோரெதிரா? எங்களை யினியாகிலும் விட்டுவிடப்படாதா? பதைபதைக்கப் பச்சைக்கிளிகளைப் பிடித்துக் கூண்டிலடைப்பதுபோல் எங்களைப்பிடித்து நிரேதுவாய் இவ்விமானத்தி லடைத்துக்கொண்டு போகின்றாயே, எவ்விடஞ்செல்கின்றாய்? அவ்விலங்கையி லெங்களைக் கொண்டுபோய்வைத்து எங்கள் வாழ்நாளைக் கொள்ளை கொள்ளவா நினைத்திருக்கின்றாய்?

அடா துன்மார்க்கா! நாங்களிப்படி வயிறெரிந்து வாடித்தவிப்பது வீண்போமோ? உனக்கஃதிடிக்காமல் விடுமா? எங்களுடைய தேகத்தை நீ அனுபவிக்கவெண்ணியபடியால்உன்தேகத்தை அக்கினிதகிக்காதா? எங்களை நாடிவந்த உனதுகால்களை எமதூதர்கள் வெட்டி யெறியார்களா? பதிவிரதா சிரோமணிகளாகியஎங்களை விருப்பமுடனோக்கிப்பார்த்த உன்கண்களைபனநுங்கின் கண்ணைத் தோண்டுவதுபோற் கழுகினங்க ளெல்லாங்கூடிக்குத்திக்குத்திக் கிளறாதா! வம்புவார்த்தைகளால் வாவென்றழைத்த வாய்களிற் புழுக்கள் சொரியாதா? அடா பெண்களை யலையக்கண்ட பிசாசே! எங்களை வலியவிழுத்துப்பற்றிய உன்கரங்களைப் பனந்தறிபோல் வெட்டித்தறியார்களா? எங்கள் பெண்பாவம்பிடித்து நீ பேய்போலலையாயா? ஒருவன் பெண்சாதி மற்றொருவனுக்குத் தாயென்பதும், பிறனில் விழையாமையே பேரறமென்பதும், அறிந்திலாயா? அடாமட்டிக்கிடாவே! உனக்கு நாங்களிடுமிச்சாபங்கள் வீணாகப் போகுமா? பெண்டுகளையலையக்கண்டசண்டாளனைத் தண்டமேந்தியகாலனானவன்கண்டகண்டமாகவெட்டித்தெண்டிக்காமல்விடுவானா? அடா அற்பனே! இந்தக்காலத்தி லெங்களை இக்கோலஞ்செய்கிறபடியால் ஒரு ஸ்திரீயினால்தானே

நீ நாசமாகிப்போவாய். எங்கள் தலைவர் கூக்குரலைக் காதுகொடுத்துக் கேட்டுக்கொண் டிருக்கும் பாக்கியவானாகிய ஸ்ரீமஹாவிஷ்ணுவானவர் இன்னமெத்தனை நாள்தான் பொறுத்திருப்பாரோ? அவரும் பாணந்தொடுப்ப தெக்காலம்? உனக்குஞ் சாணந்தெளிப்ப தெக்காலம்? அடா பாதகா! என்றெவ்வொருவரு நானுவிதமாகச் சாபங்கூறினார்கள்.

இப்படி முந்நூறுகோடி ஸ்திரீகளும் ஓவென்றலறிச் சாபமிடுவதைக் கேட்ட இராவணன் மகோதரனைப்பார்த்து, அப்பா புண்ணியவானே! இதென்னகொள்ளை? ஐயோ! இவர்களெல்லா மிப்படி தூஷித்துச் சாபமிடுகிறார்களே: இவைகளையெல்லாம் கேட்டு மனந்தாளவில்லையே: என்காதும் புளித்துப்போகின்றதே: இதற்கொரு வழிசொல்லையாவென்றான். அதற்கவன் சேட்பத்துக்கேற்ற கோட்பாடான வைத்தியனைப்போல் இராவணனைப்பார்த்து, ஐயா இலங்கேஸ்வரா! இவர்களோய்யாரமாகக் கைகளை நீட்டிநீட்டி அப்பா! அப்பா! அம்மா! என்று தவிப்பதெல்லாம், நீர் மெய்யாக விட்டுவிடுவீரென்று பொய்யாகவே புகலுகின்றார்களேயல்லது அவர்களாற் செய்யப்போகிறதொன்றுமில்லை. நீரென்ன அப்படிச் செய்யாதகாரியஞ் செய்துவிட்டீர்? ஈதெல்லாம் வையகத்திலடுத்த காரியந்தானே: நாமிந்த நையப்பாட்டுக்கோ நடுங்குவது? இனியுய்யும் வழியைத்தேடும். என்றவனைப் பையப்பையத் தேற்றினான். அதனால் தசக்கிரீவன் பயித்தியந் தேறினவன்போல் தேறி, அப்பாமகோதரா! இனி நடக்கவேண்டிய தென்னவென்றான். அதற்கவன் நாமினிநேராய் நமதுபட்டணத்துக்கே செல்லவேண்டு மென்றுரைத்தான். அம்மாத்திரத்தில் இராவணனானவன் சர்வத்திராளுடன் புஷ்பகவிமானத்தைத்திருப்பி, சகலமேளவாத்தியங்களு முழங்கும்படியாய் மகா சந்தோஷானந்த வைபவத்துடன் இலங்காபுரியில் வந்து சேர்ந்தான்.

காலகேயர்போரில் இராவணனால் தன்கணவனாகிய வித்துருசிங்கிறந்ததைச் சூர்ப்பநகையறிந்து வருந்தி யுத்தகளம்வந்து புருஷனைக்கண்டு துயரப்படுதல்.

கவி.

ஆயவன்றனணிநகர மவனடையவடல்கால
கேயரமர்பொருகளத்துக் கிளரரக்கர்பெருஞ்சேனை
சாயவமர்பொருகளத்துத் தன்கணவன்படக்கேட்ட
தீயகொடுஞ்சூர்ப்பநகை செய்தனயாமுரைசெய்வாம்.

இவ்விதமாக இலங்கைப்பட்டணத்தில் இராவணன்வந்து இறங்கியிருக்க, அவ்விடம்காலகேயரோடு விளைத்தபோரில் இராவணன்தன்புருஷனாகிய வித்துருசிங்கனைச் சம்ஹரித்துவிட்ட செய்தியை தங்கையாகிய, சூர்ப்பநகையானவள் கேட்டு ஓடோடியு. மிரணக்களத்திற்கு வந்து, தன்புருஷனைக் கண்டெடுத்து வாரி மடியின்மீது வைத்துக்கொண்டு கடகடவெனப்புரண்டு, பூதவேதாளங்களும் பிரமிக்கக்கதறி, அலங்கோலமாகக் கூந்தலைவிரித்து மார்பிற்

புடைத்துக்கொண்டு, ஐயோ தெய்வமே! இப்படியுஞ் செய்வாயோ? எனக்குப் பிராணநாயகனாகிய வித்துருசிங்குவையும் கொண்டுபோய்விட்டாயே: என க்கூவி அப்பால் தன் புருஷன்முகத்தைப் பார்த்துப் புலம்புகிறாள்.

சூர்ப்பநகை புருஷனைக்கண்டு புலம்பித் தகனஞ்செய்து இலங்கையில் இராவணனிடம் வருதல்.

கவி.

காதலானீயென்னைக் கைப்பிடித்தவன்றுமுதற்
பேதையேன் சொல்லியசொல் பிழைத்தறியாப் பேரவுணா
நாதனேயென்னைநீ நடுக்கங்காணுதூரிற்
போதநீயெழுந்திராய் பொய்யுறக்கமுறங்காதே.

என்னிற்பின் சூர்ப்பநகை யிருக்குமோவிராளோவென்
றுன்னிச்சோதிப்பானுள் ளுயிரடக்கிக்கிடந்தாயோ
பின்னிற்கும்பழிபூண்டு பெருந்துயரப்பட்டுநா
னுன்னிற்பின்னிருக்கிலே னெழுந்திராயுத்தமனே.

முன்னமேதானென்னை முறைமையாலேகொடுத்துப்
பின்னெனைநூலிழப்பித்த விராவணனுமென்றமையன்
றன்னைமூவுலகாள யான்கண்டுதாரவுணர்
மன்னனேயுடல்சுமந்து வாழ்வேனோவாழ்வேனோ.

கைமுறுக்கிவாய்மடித்துக் கிடந்தகருத்தறியேன்
மைமுகத்துக்கருமனத்து வாளரக்கர்கோமானை
மெய்முறிக்கப்பெற்றிலே னெனநினைந்தோமேவாரை
மொய்முறிக்குமாற்றலாய் காரணமென்மொழியாயோ.

என்று புலம்பினவள் பின்னுமடங்காத துயரை யாற்றாளாய் வருந்தி, ஆ! ஆ! என்னருமைக் கணவனே! நானினி யென்செய்வேன்? நீ யிப்படி என்னைவிட்டுப் பிரியவும், நானிவ்விதம் வருந்தி உயிர்வாடவும், பார்ப்பவர்க ளெல்லாரும் சந்தைக்கூட்டம்போற் கூடவுஞ் செய்துவிட்டாயே: ஆ! என்னு யிர்க்குப்பிரான நாயகா! உனக்குமிப்படி வருமென்று நானறியாமற் போனே னே: நீ சுவர்க்கலோக வாழ்வை விரும்பிச்செல்லவும், நானிந்த மண்ணில் இ ன்னம் அவதிப்படவுமாக வைத்துவிட்டாயல்லவா? ஆ! என்புருஷசிகாமணி யே! நீ இப்படி இறந்துவிடுவது தெரிந்தால் நானுன்னை உயுத்தத்திற்கும் அனுப்புவேனா? அறியாமற்போனேனே: நீ யிப்படியும் என்னைவிட்டுப் பிரிய லாமா? இதுவுந்தர்மந்தானா? என்றனேகவிதமாகப் புலம்பி, அறுபட்ட முண் டத்தையும் தலையையும் ஒன்றாய்ச்சேர்த்துப் பார்த்து, வருத்தஞ் சகிக்காதவ ளாய் அதனுடன் சமஸ்நானஞ்செய்து தகனம்பண்ணிக் கர்மத்தை முடித்துப் பின்னும் சொல்லுகிறாள்.

ஓ பிரமாவே! என்றலையில்தானா இப்படி யெழுதவேண்டும்? வலியற்றுமெலி வுற்றிருக்குமிந்த எலியைத்தானா பலியிட நினைத்தாய்? பட்டகாலிற்றானா பட வேண்டும்? ஏழைக்குடிக்கவார்க்கும் கூழைத்தானா பிடுங்கிக்கொள்ள வெ ண்ணினாய். ஆ தெய்வமே! என்று மரணமூர்ச்சையடைந்து பூமியில் விழுந்து,

№ 83. இராவணன் சூர்பனகிக்கு ஜனஸ்தானமேற்படுத்தல்.) இராவணன் கொண்ட கொள்கையை விபீஷணர்



பின்பெழுந்து முன்சொன்ன அலங்கோலத்தினு மிஞ்சியவேஷத்துடன் ஆரு த்துயரங் கொண்டு, இரணபத்திர காளிபோல் அடங்காத கோபவெறியாகி, பார்ப்பவர்களெல்லாம் பயப்படும்படியாகவும் - அதிலும் சிலர் இனி யென்ன விதமாக முடியுமோவென்று நடுங்கும்படியாகவும் - தேவாதி தேவர்களெல் லாம் சரி: சரி: இன்றைக்குத்தா னிராவணன் தலைக்குத் தாம்பூலம் வரு கிறதென்று பேசிக்கொள்ளவும் — இரண்டுகண்களும் கோவைப்பழத்தினு மேலாகச் சிவந்து, வழியொன்றுந் தெரியாமலும் — மேடுபள்ளமுங் குறியா மலும் — முள்ளுமுரடென் றுன்னமலும் — கல்லுகரடென் றெண்ணமலும் - ஏதிரிற் சந்திக்கும் பேய்பிசாசுகளெல்லாம் பயந்தொளித்துக் கொள்ளவும் — சண்டமாருதம்போல் இவளுமொரு பெண்தானுவென்று யாவரும் பேசிக் கொள்ள இலங்கையை நோக்கி நடந்துவந்து, தன் ஸ்மரணை தனக்குத் தெரி யாமல் மறந்து, மானபிமான மென்பதையுந் துறந்து, கோவென் றலறிப் போய் இராவணன்சபையிற் குதித்து, கடகடவெனப் புரண்டு தலையை மோ திக்கொண்டு, விரித்தகூந்தல் பூமியிற் புரளவும் - கண்ணீர்பெருகிக் கடல்போ லோடவும் — முறையிடுகின்றுள்.

சூர்ப்பநகை இராவணனேடு முறையிடல்.

கவி.

சொல்லெடுத்துப்பழிதூற்றித் துன்பங்கொண்டேன்வீடு
கல்லெடுக்கநல்லுற்றூர் கரைந்தேங்கக்கடைக்கானீ
வில்லெடுக்கையுன்னுடைய வீரத்துக்கழிவன்றோ
வல்லெடுக்குந்தலைமாய்த்த வண்ணவோவண்ணவோ.

மூலைப்பாலொஞ்சாகி முனைமுகத்திலொருக்காலுங்
கொலைப்பாலனல்லாத்தன் மைத்துனனைக்கொலைசூழ்ந்த
புலைப்பாவியுன்றமையன் பொல்லானென்றெல்லோரு
மலைப்பாலேயறவலைந்தே னண்ணவோ வண்ணவோ.

காசுக்கும்பொன்னுக்கு மாழிக்குங்கடுஞ்சொல்லின்
வாசிக்குங்காலுண்ணு மணவாளப்பிள்ளைகளைப்
பூசிக்கைபொருகளத்துக் கொன்றுபுரட்டிடுகையோ
வாசைக்கும்புறஞ்செலுத்து மண்ணவோவண்ணவோ.

மிகையெல்லாஞ்செய்தாரே யாயிடினும்விளையாட்டான்
வகைவல்லாரொருக்காலு மைத்துனமார்தம்மோடு
பகையில்லையென்னுமந்தப் பழமொழியுங்கேட்டிலையோ
அசைவில்லான்வரையெடுத்த வண்ணவோவண்ணவோ.

என்று முறையிட்டழுதவள் பின்னு மவ்விராவணனைப் பார்த்து அடங் காத துயரத்தோடு அரோதனம் பண்ணுகிறுள். ஓ எனதண்ணுவே! என்னை யிந்தக்கோலமும் பண்ணுயல்லவா? இப்படியும் அனியாயஞ் செய்யலாமா? இதுவும் உனக்குத் தருமந்தானு? என்று பேசி மனம்ரோசி, இயாவர்க்கும் அடங்காப் பிடாரிபோல்வீசி, அடா தோஷி! அடா படுபாவி! உனக்குவந்த

பொல்லாதகாலமென்ன? இவ்விதமாகநான் நிலைகுலைந் தழுவதும் உனக்குச் சீரா? இதற்குத்தானா உன்னுடன் நான் பிறந்தது? நீ திக்குவிஜையஞ்செய்து திகைத்துப்போய் திக்கற்றுநின்ற கொள்ளைக்கு, இக்குவலயத்தில் என் பாவத்தைத்தானா அளந்துகொள்ள வேண்டும்? நான் மங்கிலியமிழந்து வாடித் தவிக்க நீ யுன் வாழ்நாள் கழிப்பதுமுண்டோ? சும்மாயிருந்த என்புருஷனைச் சற்றேனு நினையாம லெதிர்த்து, தன்மானம் பிறர்மான மின்றி நிரேதுவாய்க் கொன்றுவிட்டு வெகு கீர்த்தியுடன் வந்து சேர்ந்தாயோ? அடா துன்மார்க்கா! இந்தக் கண்காக்ஷிக்கு என்னையேன் ஒருவனுக்குக் கொடுக்கவேண்டும்? இப்படி யென்னை உருவிய கோல்போலாக்க எத்தனைநாள் நினைத்திருந்தாயோ? என்னதான் உயுத்தநடந்தபோதிலும் இப்படி யார்செய்வார்கள்? நீ யென்ன அவ்வளவு பிரதாபத்தை வகித்தவன்? அவரை யெத்தனையோ பராக்கிரமசாலிகளெல்லாம் கெஞ்சித் தஞ்சமென் றிருந்தார்களே; அடா பஞ்சைப்பயலே! நீதான் ஒருவன் பார்க்கும்போதே துள்ளித் தொப்பென்று விழுகின்றாய்.

அடா விவேகசூனியனே! உலகத்தினிடத்தில் என்னதான் பெண்ணுக்குத் தாய்வீட்டுச்செல்வ மமைந்திருந்தாலும், ஆடையாபரண அலங்கிருதங்களும் — பஞ்சகச்சாய உண்டியும் — யோக வைபோக்கியமும் — மற்றுமுண்டான சீருஞ் சிறப்பும் — வெகுவாய்க் கிடைக்கப்பெற்ற போதினும், காமாகரலீலையின் வினோதங் காட்டிப் புணரும் கண்ணிறைந்த கணவன் பாக்கியமே பாக்கியமென்பது உனக்குத் தெரியாதா? உன்கைவில்லின் திறமும், உன் சௌரிய பராக்கிரமமும், என தேழ்மைப் பிராணநாயகனிடத்தில் தானா காட்டவேண்டும்? அப்போதுதானா உன்னை யிவ்வுலகங்கள் மெச்சிக்கொண்டாடும்? அந்தக் காலகேயர்களுக்கும் உனக்கும் என்னபகையிருந்தது? அல்லதென்புருஷன்தான் என்னகுற்றஞ் செய்தான்? என் பிச்சைச் சோற்றைப் பிடுங்கவெண்ணி வந்ததேயல்லது, நீ யுத்தத்திற்காக வந்தவனல்ல. இதென்ன கன்னத்தி லடித்த காயமிருக்கப் பின்னுஞ் சாக்ஷி தேடுவாருண்டோ? நீ சண்டையில் வாள்யுத்தஞ் செய்தபோது அவனுன் அண்டையி லிருந்தானா? அவனிருந்த விடத்தைக் கண்டுபிடித்து வேணுமென்றே மண்டைபிளக்கவடித்த அடா சண்டாளப்பாவி! நீமாத்திர நால்வர்க்கழகாய் உண்டுடுத்திப் பெண்டு தேடிச் சுகித்திருக்கின்றாயே: தனக்குண் டெதிரிக் கில்லையென்று நினைக்கலாமா?

அடா சாமத்துரோகி! தாலிச்சரட்டை நீளச்செய்ய வொரு சகோதரன் வேண்டுமென்று உலகிற் றேடுவதுண்டு. நீ கூலிக்குப்பாவங் குறுக்க நின்றதுபோலும், வேலிக்கிட்ட முள் காலிற் றைத்ததுபோலும், சாலுமுழவையுந் தட்டாது விழுங்கவந்தாயே: நா னெள்ளத்தனைமஞ்சள் பூசிக்கொண்டு உள்ளபடி சிவன்செயலாமென் றிருந்ததில், நீ துள்ளித் தடுமாறிவந்து அதைக் கிள்ளியெறிந்தாயே: அடா பேயா! நீ யினியாகிலுஞ் சுகப்படுவாயா? என்று பலவாறாய்த் தூஷித்து, சீவரத்தா னிருந்துங்கெடுத்தான் செத்துங்

கெடுத்தானென்பதுபோலநானொருத்தியிப்படியாகத்தாழவும், இந்த லங்கைப் பெண்டுகளெல்லாம்வாழவுமாவென்று தன்மனதி லெண்ணிக்கொண்டு; அங்குள்ள யாவந்திராளுங்கண் டேங்கவும், சும்மாநின்று வேடிக்கை பார்ப்பவர்களுக்கும் துக்கந் தொடரவும், முறையே கும்பகர்னன் முதலானவர்களிடத்திலும் போய் நொந்துகொண்டு; அடுக்கடுக்கானவக்கணைகட்டிவாய்திறந்து அகோரமாக அழுதுகொண்டிருந்தாள். கேட்டீரோ ஸ்ரீராமச்சந்திரப்பிரபுவே! இவள்தான் அந்த ராவணனுக்கும், அவன்குடித்தனத்துக்கும், இயமன் போல்நேர்ந்த தலைமாட்டுக் கொள்ளியென் றறிந்துகொள்ளும். ஆனாலிராவணனுக்கதுகால மிஃதெல்லாம் உணர்ந்தறிவதற்கான நியாயந்தெளிவுறக் காட்டுவாருமில்லை. அவனுக்கு மிதன்மூலம் விளங்கவுமில்லை. ஓ இராகவா? இதையவள் மனதில்வைத்துக்கொண்டுகாற்றுள்ளபோதுதூற்றிவிடவேண்டுமென்றெண்ணி அவனுக்குச் சீதாதேவியினுடைய ரூபத்தைவர்ணித்து சிறையெடுக்கச்சொல்லவும, அவனும் விதிவலிப்பிரகார மெடுத்து அசோகவனத்திற் கொண்டுபோய் வைக்கவும், தேவரீருமவ்வளவுதூரம் போகவும் உமது திருக்கோதண்டத்தால் அவனுடைய புத்திரமித்திராதியரான சமூலமுமாளவுமாய்விட்டன: இவள்செய்த இந்தத்தீம்புக்கும், இராவணனென்னும் பாம்புக்கும், கும்பகர்னனு மகோதரனும் படிக்கும் வீம்புக்கும், உமது கோதண்டக் காம்புக்கும் சரியாய்விட்டது. மேலுமவ்விராவண னழிவதற்கு அனேக முகாந்திரங்க ளிருந்தபோதிலும், அவையெல்லாய்பலித்து முடிவதற்கு இவள்தான் மூலாதாரமாயிருந்து தூண்டிவிட்டாள்.

இப்படியிருக்க தசக்கிரீவனானவன் நான்குபக்கமுங் கவனித்து நோக்கிக் கண்ணியிற்சிக்கிக்கொண்ட வன்னப்பட்சிபோல விழித்து, தன்னுடைய முகத்தி விரத்தமென்பதில்லாமல் என்னசெய்வேனென் றுன்னிப் பிறகும கோதரனைப் பார்த்தான். அன்னவனு நானுமறிந்திலேன் அவளும் பொய்சொல்லா ளென்பதுபோலும் — பிள்ளையுங்கிள்ளிவிட்டுத் தொட்டிலுமாட்டிவிடுவாளென்பதுபோலும் - புண்ணிற் கோலிட்டு வதைத்தாலும் கண்ணுக்கழகாய்ப் பார்ப்பவன்போலும்-அடங்காமனக்களிப் புண்டாகியும் அதைவெளியிற் காட்டாதவன்போலும் - அவளுக்குமுன்பாக அவனுக்கேதோ தான்தணிக்கைசொல்லுவதுபோல் எழுந்து, ஐயா இராவணேஸ்வரா! இதென்ன சபையா மற்றென்னவென்று நினைத்தீர்? இதென்ன அலங்கோலம்? ஒரு பெண்பாலுமிப்படி பிரலாபிக்கலாமா ? ஐஐயோ !! இதுசும்மா விட்டுப்போவதல்லவே: பெண்பாவங் கொடியதென் றறியீரோ? அவளுக்கேதாவது ஒருவழியாய் தணிவுசொல்லி ஆதரிக்காமற் சும்மா கேட்டுக்கொண் டெண்ணமிடுகிறீரே: குலப்பெண்ணுந் தத்தளித்துக் கலக்கமுறலாமா? உமது வங்கிஷத்துக்கு நன்மையல்லவே: ஆனாலும் உமது ஆத்திரத்தை நானென்னென்று சொல்லுவேன்? காலகேயரைத்தான் நாம் கண்டிக்கவேண்டிய கடமை. இவள்கணவனென்செய்தான்? நீர் அனியாயமாக அவனையேன் வெட்டினீர்? இது நீரே தேடிக்கொண்ட வேலையாயிருக்கிறதே: நான் அப்போதே வேண்டாமென்று

எவ்வளவுதூரந்தடுத்தேன்? அந்தச்சொல் உமதுசெவிக்கு ஏற்காமற்போச்சுது. மிஞ்சிப்போனதற் கென்னசெய்யலாம். ஏதோகோபஞ் சண்டாளமாக நடந்தேறிவிட்டது. அந்த யுத்தமுனையில் மாத்திரம் யார்க்கும் ஒன்றுந்தோற்றாது. சாந்தகுணத்தர்களும் ஆத்திரப்பட்டு மீறுவர்களல்லவா? உமக்குமக்காலத்தில் இவனின்னானென்றும், பிறகிப்படியெல்லாம் வருமென்றுந் தோன்றாமற்போச்சுது.

ஐயா இலங்கேஸ்வரா! போனதெல்லாம் போகட்டும். ஐயோ! பாவம்: இவளைப் பார்க்கும்போதே என்வயிறும்பற்றியெரிகின்றதல்லாமல்,இவளும் அண்டநிழலில்லாமற் பரதவிக்கின்றாள். இனியார் அவளுக்குத்திக்கு? நாமும் அவள் துக்கத்தைப் பாராட்டவேண்டுமென்று கடமையிருக்கின்றதாதலால் நீரேயவளுக்கு இனிமையான வாக்கியங்களையு நல்ல நீதிகளையும் போதித்து, அவளுடைய ஆத்திரத்தையும் துக்கத்தையுந் தணித்து, இப்போதே தண்டகாரணியத்திற்கு அனுப்பிவிடும். ஏனெனில் - அங்கிருப்பவர்களோ உம்முடைய தாயாதிகள். அவர்களும் பதினாலாயிரம்பேர்க ளிருக்கிறார்கள். அத்தனை பேர்களுக்கும் தங்கையில்லாமல் வருந்துகின்றார்கள். அதற்கிசைந்தபடி இவளுமிருப்பாள். அவர்களுந் தங்கம்போல் வளர்ப்பார்கள். அவர்களைப் போல் பாதுகாக்க உங்களாலு முடியாது. என்றிங்கிதமாகவே இனிமேல் நடக்கவேண்டிய காரியங்களுக்குச் சோடித்துவிட்டான்.

இராவணன் சூர்ப்பநகையைத்தேற்றி தண்டகாரணியமனுப்பித் தன் திக்குவிஜயங்களைத் தாயாராதி மற்றுள்ளவர்கட்குத் தெரிவித்து மகிழ்தல்.

கவி.

இன்னபலவும்பன்னுமிவட் கிலங்கைவேந்த னீதுரைக்கும்
உன்னையுடையகணவனைநா னென்றுமுணரா துயிருண்டேன்
என்னையமரின்மதிமயக்கி யென்னாலேயின் றவனுவி
தன்னையுண்டவிதியாரைத் தடுக்கவல்லார் தாமுண்டோ.

இவ்வண்ணம் பலவுஞ் சொல்லிச் சொல்லி அழுது துயரப்படும் சூர்ப்பநகையைப் பார்த்து மகோதரன் சொல்லியவார்த்தைக் கிசைந்து அம்மா என்னிரு கண்மணியும் அருமைப் பிறப்புமாகிய தங்கையே! இனிநான்தான் என்னசெய்வேன்? இது நான் மனமறிந்துசெய்ததல்ல. கையானது கண்ணிற்பட்டுவிட்டாற்போல் நான் வேண்டுமென்று கொன்றவனுமல்ல. தெய்வச்செயலிப்படியானால் இதற்கு நாமென்னசெய்யலாம்? நீயேதோ பலவாறாய் துக்கித்தழுகிறாய். அந்தத்துக்கம் எனக்கில்லையா? மூவுலகத்துக்கும் அதிபதியின் தங்கை இப்படி மூளியானாளென்றால், அந்தமானம் என்னதல்லவா? அம்மா! கும்பகர்ணன் - விபீஷணன் - இந்திரசித்தன் - மாரீசன் - பிரகஸ்தன் - இவாள் முதலானவர்களும், தண்டகாரணியத்தில் நமது பங்காளிகளும், இன்னுமநேக பாத்தியஸ்தர்களுமிருக்க; ஏதோ தெய்வச்செயலாய் தப்பிப்போன ஒரு பிராணிக்கு நீயிந்தப்படி அவதைரியப்படலாமா? நாங்களெல்லாம்

இல்லையா? இன்னமும் அன்பான உன் மதனி மண்டோதரியிருக்க, உன்தாயார் கைகசியம்மாளிருக்க, உனக்கென்ன குறைவு? ஆனால் உன்னை யிந்தக் கோலத்துடன் பார்க்கும்படி விதித்த தொன்றேயல்லது மற்றென்னவிருக்கின்றது?

அம்மா! நீ வீணாய் பிரலாபிப்பதைவிடுத்து மனதைத்தேற்றி உறுதிப்படுத்திக்கொள், இனி நீ யழுவதினால் மாண்டவர்கள் மீண்டுவரப்போகிற தில்லை. ஆண்டவன் கட்டளை இப்படியும் ஆச்சுதல்லவா வென்று திடப்படுத்திக்கொள். உனக்குத் தகுந்தவிடமும் ஆதரவுஞ்சொல்லுகின்றேன் கேள். தண்டகாரணியத்தில் நமக்கான தமையன்மார்கள் பதினாலாயிரம்பேர்க ளிருக்கிறார்களல்லவா? அவர்களிடத்திற் சென்றால் உனக்குச் சகலசவுக்கியமும் கிடைக்கும். பயப்படாதே என்று ஆதரணைசொல்லித் தேற்றினான். அதுகேட்ட சூர்ப்பநகி ஒரு வழியாய்த்தேறி; இதுவும் ஒருவகைதானென்றும், நமக்குத் தீங்கு செய்த இத்துஷ்டனை எந்தமூலத்திலாவது அழித்துவிட வேண்டுமென்றும், அதற்கும் காலநேரிடாமற் போகுமாவென்றும், இனியிந்தச் சண்டாளத்துரோகிமுகத்தில் விழிக்கப்படாதென்று மெண்ணிக்கொண்டு; உடனே தண்டகாரணியஞ்சென்று கரதூஷணாதிகளிடத்தில் வாசமாயிருந்து கிருஷ்ணசர்ப்பம்போற் பல்லிற் பகைவைத்துக்கொண் டிருந்தாள்.

"கேளும் ஸ்ரீரகுநந்தனா! இவ்வாறிவள் தொலைந்தபின்பு தசக்கிரீவன் தனது திவ்யாலங்கிருதஅரண்மனையையடுத்து,அவ்விடமுன்பின் நடந்த சங்கதிகளையெல்லாம் கேட்டு யோகக்ஷேமங்களை யெல்லாம் விசாரித்தும், அன்னையாகிய கைகசியம்மனைத் தீர்க்கதெண்டஞ்செய்தும், தம்பியாகிய கும்பகர்ணனைக் கண்டு தழுவிக் கொண்டாடியும், மண்டோதரியைக்கண்டு வார்த்தை வழங்கியும், பட்டணத்தின் க்ஷேமங்களையெல்லா மற்றமந்திரி பிரதானிகளைக்கொண் டறிந்துகொண்டும், ஒருபக்கமாகவுட்கார்ந்து தான் திக்குவிஜையஞ்செய்துவந்த சவிஸ்தாரங்களெல்லாஞ் சொல்ல ஆரம்பித்து; தன் தமையனாகிய குபேரனைச்செயித்ததும், அவன் நந்தநவனத்தை யழித்ததும், அவனையிழந்த புஷ்பகவிமானத்தைக் கைக்கொண்டதும், கைலாசத்திற்சென்று நந்திகேஸ்வரருடன் வாய்ப்போராடினதும், அவர்சாபமீந்ததும், அப்பால் வெள்ளியங்கிரியைத் தூக்கினதும், அதற்குலகங்களெல்லாம் பயந்ததும்,பரமசிவன் தன்னைப் பெருவிரலா லழுத்திவிட்டதும், பின்பு மந்திரிகளால் உபாயந்தெரிந்துகொண்டு சாமவேதகானஞ் செய்ததும், அதன்மேல் சாம்பசிவமூர்த்திக்குத் தயவுவந்து வரமளித்தவினோதமும், வேதவதியைத் தவத்தினின்றும் தொடப்போனசேதியும், அதற்கவள் ஜானகியம்மனாகப் பிறந்து அழிப்பதாகச் சாபமிட்டுத் தணலிற் குதித்ததும், மருத்துராசன் யாகத்தில் ஒருத்தருமில்லாமற்செய்து தன்பலத்தைக்காட்டிச் செயம்பெற்றதும், அங்கிருந்தவர்களெல்லா மாறுரூபங்களெடுத்துப் பயந்தோடினதும், அப்பால் சங்கவர்த்தனரால் மருத்தன் கப்பணங்கட்டினதும், அயோத்தியாபுரியில்அனரண்யனை

மடக்கினதும், அவனும் தசரதசக்கரவர்த்திக்குப்புதல்வனாக ஸ்ரீமகாவிஷ்ணு பிறந்து உன்னை அழிப்பாரென்றுச்சொல்லி உயிர்விட்டதும், சாங்கோபாங்கமாகச் சொல்லிப் பின்னும் சொல்லுகிறான்.

கேளும் ஸ்ரீராமா! இவ்வாறிவர்களையெல்லாம் ஜெயித்து அவ்வவர்களிட்ட சாபங்களையுமேற்று மகாபராக்கிரமசாலியாய்த் தான்மீண்டு இலங்கையைநோக்கி வரும்போது தன்னை நாரதர் வந்துகண்டு கொண்டதும், அவர் எமலோகத்தின் சங்கதியெடுத்துரைத்ததும், உடனே தான்சண்டைக்குத் தயார் செய்து நமனிடத்திற் போராடினதும், அவ்வமோகமான யுத்தத்திற் பிரமதேவர் தோன்றிச் சமாதானஞ்செய்ததும், பின்னர் அவனிடத்தில் திறைப்பணம் வாங்கினதும், மகோதரன் சொற்படிக்கு நாகலோகஞ் சென்றதும், அங்குமனேகமாகிய வரிசைகளைப் பெற்றதும், நிவாதகவசர்பேரிற் கோடையிடிபோற் சென்றதும், அவர்களெல்லாந் திப்பிரமைகொண்டு ஆடிமாசக்காற்றிலெழும்புந்தும்புபோற்பறந்ததும், பின்பிரவும்பகலு மாளாயுத்தஞ்செய்து தேவாதிகளெல்லாம் திடுக்கிட்டலறப் பல அஸ்திரசஸ்திரங்களை அமோகமாகப் பொழிந்ததும், அதனைக்கண்ட பிர்மதேவரும் பிர்மித்து அங்குவந்து நிவாதகவசர்களைச் சரிப்படுத்தி இருவரையும் சமாதானஞ்செயததும், அந்த நிவாதகவசர் தனக்குவிருந்திட்டு மாயாவித்தை கற்றுக்கொடுத்ததும், அதன்மேல் மகோதரன் யோசனையின்படி காலகேயர்மேற் படையெடுத்து செயித்த சங்கதியும், வருணன்மீது படையெடுத்த மாக்ஷிமையும், அங்குசகலரையும் வாட்டியகொள்ளையும், அப்சரஸ்திரீகளையும், தேவஸ்திரீகளையும், கின்னரஸ்திரீகளையும், இன்னு மற்றுமுண்டான பலவகைப்பட்ட ஸ்திரீகளையும் சிறையெடுத்ததும் கூறி; தான்திக்குவிஜையப்பிரதாபனாய் யாவரும் தனக்கு நிகருமெதிருமில்லையென்று வெற்றிக்கொடிதரித்து ஜெயம்பூண்டு வந்த பிரதாபங்களையெல்லாம் விவரம்விவரமாய் ஒன்றொழியாமலெடுத்துரைத்தான். அவர்களு மவையனைத்தையுங்கேட்டு வெகு சந்தோஷப்பட்டு மிகவும் கொண்டாடினார்கள். உலகமும் களித்திருந்தது. இலங்கைப்பட்டண முழுமையு மங்களவாத்தியங்கள்முழங்கின; பிரஜைகளும் தங்களிராசனைமெச்சிக்கொண்டு வாழ்த்தினார்கள். இராவணன் சர்வசேனைகளுக்கும் உத்திரவுகொடுக்க அவ்வவர்களும் தங்கள் தங்கள் விடுதியிற்செல்லவும் தான்மந்திரி சகோதர இஷ்டஜன சகிதருடன் ஸ்நானஞ்செய்து, தாயாருடன் புசித்துத் தாம்பூலமருந்தி, பின்பு மண்டோதரியுடன் அம்சதூளிகா மஞ்சத்திற்சேர்ந்து வெகுவுல்லாசமாக மருவி வார்த்தையாடிக்கொண்டிருந்தான்.

இராவணன் இந்திரசித்துசெய்த நிகும்பலையாகத்தைக்கண்டு மகிழ்ந்து மகனையழைத்துக்கொண்டு தன்னிலங்காபுரி யடைதல்.

கவி.

நிருதர்கோமானிகும்பலையா னீவனத்தினுட்புக்கு
மருவியங்ஙன்மகஞ்செய்யு மகனைக்கண்டுமனமகிழ்ந்து

கருதிநீசெய்காரியமென் கழறென்றுரைப்பக்கவிகுருவாய்ச்
சுருதிவேலைகரைகண்ட தோலாவினைச்சுக்கிரன்சொல்லும்.

இவன்செய லிவ்வாறாக இவன் திக்குவிஜயஞ்செய்யப் புறப்பட்டுச் சென்று நடத்திவருங்காலத்தில் இலங்காபட்டணத்தி லிருந்தமேகநாதனென்று சொல்லப்பட்ட இவன்குமாரன் தன்னுடைய தகப்பனைப்பார்க்கிலு மதிகமான பலசவுரியங்களைப் பெறவேண்டுமென் றாலோசித்து, இரகசியமாய் நிகும்பலையென்று சொல்லப்பட்ட மகாவனத்துக்குப்போய்த் தங்கள் குலகுருவாகிய சுக்கிரபகவான் முன்னிலையாய் பரமசிவனைக்குறித்து வேதங்களிலே சொல்லப்பட்ட இருபத்தெட்டு மகாயாகங்களுக்குள்ளே இயாவராலுஞ்செய்து முடிக்கப்படாத கோமேதம், அசுவமேதம், பவுண்டரிகம், இராஜசூயம், இவை முதலான பலவிதயாகமுஞ்செய்து நிறைவேற்றி, மற்றயாகங்களைத்தொடங்கச் சித்தஞ்செய்துகொண் டிருந்தான். மண்டோதரியுடன்மருவி வெகுவுல்லாசமாய் வார்த்தையாடிக்கொண் டிருக்கின்ற இராவணனானவன் சிந்தையிற் கருதி, அவ்விரவு நீங்கி மறுநாளுதயத்தில் தனதரண்மனைபுகுந்து நித்தியவிதிகள் முடித்துக் கொலுச்சபைக்குவந்து, என்னுடைய பட்டத்துக்குமாரனாகிய மேகநாதனெங்கேயென்று விசாரித்தான். அதற்கு மந்திரிமுதலானவர்கள் மேகநாதனம்முடைய இலங்கைப்பட்டணத்திலே இல்லையென்று சொன்னார்கள். அதுகேட்ட இராவணனானவன் விரைவில் தூதுவரைவிடுத்து மேகநாதனிருக்குமிடம் விசாரித்துவரச் சொல்லுங்களென் றுத்தரவுசெய்தான். அவர்களு மப்படியே நாலுதிசையினுந் தூதர்களை அனுப்புவிக்க, அந்தத் தூதரும் தேடிக்கொண்டு இன்னவிடத்தி லிப்படியாக விருக்கிறானென்று சொல்ல, அதுகேட்ட மந்திரிகள் இராவணனுக்கறிவிக்க, உடனேயவன் நிகும்பலைவனத்துக்குப்போய்த் தன்னுடைய புத்திரனாகிய மேகநாதனைக்கண்டு மிகவுஞ் சந்தோஷத்தையடைந்து, நீயிப்படிக்கெல்லாம் பிரயாசப்பட்டு இந்தயாகங்களை என்னகாரியத்தை வேண்டிச் செய்கிறாயென்று கேட்டான். அதற்குச் சுக்கிராசாரியர் அவனைப்பார்த்துச் சொல்லுகிறார்.

கேளும் இராஜனே! நம்முடைய அரக்கர்குலமெல்லாம் விளங்கத் தோன்றிய உம்முடைய புத்திரனானவன் பஞ்சேந்திரியங்களை நிக்கிரகித்து, இயாதொரு சலனமுமில்லாமல் அதிகதிடபத்தியுடனே பரமசிவனைநோக்கி விதிப்படி தப்பாமல் மகாதபசும், இயாகங்களுஞ்செய்துமுடித்தான். அதுகண்ட பரமசிவன் மிகவுங்கிருபையுடனே வெளிப்பட்டு, ஒருகாலத்தினு மழிவில்லாத இரதமும் — வில்லும் — கவசமும் — அக்ஷயதூணியும் - மகாரிஷிகளுடைய கோபாக்கினிபோற் பகைத்தவர்யாரையு நாசஞ்செய்கின்ற அஸ்திரமுங்கொடுத்து, சகலலோகத்திலு முள்ள எல்லோரு மனங்கலங்கி மயங்கச்செய்யு மாயாவல்லபமும் — எதிர்த்தவர் யாவரையும் வெல்லத்தக்க பலமும் — உண்டாகக் கடவனென்று அனுக்கிரகஞ்செய்தார். ஆகையாலிப்படிப்பட்ட மேன்மைபொருந்திய புத்திரனைப்பெற்ற வுமக்கு யாதுகுறை? என்று சொல்லக்

கேட்ட இராவணன் மிகவுஞ் சந்தோஷத்தையடைந்து, சுவாமி! எல்லா மேன்மைகளுந் தேவரீருடைய அனுக்கிரக விசேஷத்தினாலே யல்லவோ விளைகின்றனவென்று கூறி, அந்தச் சுக்கிரபகவானுக் குபசார வந்தனஞ்செய்து, பின்பு மேகநாதனைப்பார்த்து, அடா எனதருமைச் செல்வனே! சகலமான வரங்களைப்பெற்ற நீ இனியென்ன காரியத்தைவேண்டி யாகஞ்செய்கிறாய் நீதேவர்கட்கவிர்ப்பாகங் கொடுக்கவேண்டாமென்று கூறி, ஐயோ! மெத்தவு மிளைத்தனையேயென்றப்பொழுது செய்துகொண்டிருக்கிற யாகத்தை நிறைவேறச்செய்து, ஆசாரியராகிய சுக்கிரபகவானை அவருடைய லோகத்துக்குப்போகும்படியாக உபசரித் தனுப்பிவித்து, தன்னுடைய குமாரனாகிய அம்மேகநாதனை யழைத்துக்கொண்டு இலங்காபட்டணம் வந்து சேர்ந்தான்.

இராவணன் சிறையெடுத்துவந்த ஸ்திரீகளைப்புணரவழைக்க விபீஷணர் வேண்டாமென்று சிலநீதிவார்த்தை கூறல்.

கவி.

பாகுபோலமொழியாரைப் பற்றிக்கொணர்ந்த பாவையரைச்
சோகமேவுசிந்தையரைத் துணைக்கண்ணருவி சோர்வாரைச்
சேகுபேணுமனத்தரக்கன் றிரளவழைப்பத் தீவினையைப்
போகமுயன்றவீடணனப் பொல்லாச்சரிதற் கிவைபுகன்றான்.

அப்படிவந்தவ னவ்விலங்காபட்டணத்திலே வாசஞ்செய்துகொண் டிருக்குமளவில் சிலநாளைக்குப் பின்பு ஒருநாள் மிகவுமடங்காத காமவிகாரமதமேற்பட்டுச் சகிக்கமாட்டாமல், முன்புதான் கொண்டுவந்து வைத்திருந்த சர்க்கரைப் பாகைப்போன்ற சொற்களை யுடையவர்களாய், மகாதுக்கம்பொருந்திய சிந்தையும், அருவியாற்றைப்போல் நீர்சொரியப்பட்ட கண்களையுமுடைய அப்சரஸ்திரீமுதலானவர்களைப் புணர்ந்தின்பமனுபவிக்கும்படி வயிரம்பெற்ற மனத்தையுடையஇராவணப்பதகன் கூட்டமாகவழைக்க, அக்காலத்தில் சமீபத்திருந்த தீவினையை நீக்கும்படித் தவமுயன்ற விபீஷணரானவர் அவ்விராவணனைப் பார்த்து சிலநீதிவார்த்தை சொல்லுகின்றார். அண்ணா! என்னகாரியத்தை நினைத்தீர்? இப்படியுமுண்டோ? உலகத்திலே யாவனொருவன் செல்வங்கீர்த்தி மேன்மைமுதலான சிலாக்கியங்களெல்லாங் கெடும்படியாய், மேலே தனக்குவருகின்ற துன்பத்தையு மெண்ணாமல், நல்லோர் சொல்லையுங் கேளாமல் மூர்க்ககுணத்தை மேற்கொண்டு, காமவிகாரத்தினாலேயறிவுகெட்டு, நல்லகுலத்திலே பிறந்த உத்தமஸ்திரீகளை யிச்சிப்பானாகில் அந்தப்பாவத்தினாலே அவனுமழிந்து அவனுடையகுலமு நாசத்தை யடையுமென்று வேதசாஸ்திரங்களிலே சத்தியமாகச் சொல்லியிருக்கின்றதே: இது மக்குந் தெரியாததல்லவே: ஐயோ! உமக்கு மிந்தப்புத்தி வரலாகுமோ? என்றுதடுத்துச்சொல்லி மெள்ள சாந்தப்படுத்தி, இன்னமொரு செய்தி சொல்லுகிறேன் கேளுமென்று சொல்லுகின்றான்.

விபீஷணர் மதுவென்னுமசுரன் கும்பீநசியைச் சிறையெடுத்துப்போனதை அறிவிக்க இராவணன் கும்பகர்ணனையும் இந்திரசித்துவையுங் கூட்டிக் கொண்டு அவன்மேற் படையெடுத்தல்.

கவி.

ஏகவீரவிதுகிடப்ப வியம்பக்கேண் முன் பெய்தியதை
மேகநாதன்வேள்வியுளான் வீரனைய வும்பிதுயிற்
போகமேவியவன்கிடந்தான் புனலின்மூழ்கி யான்கிடந்தேன்
ஆகமதுவாமடலசுர னரணீளிலங்கை யரண்புகுந்து.

அண்ணா! திரிலோகங்களிலும் சமானமற்ற வீரப்பிரதாப ஜெயசிங்கமே! நீரிந்தப்பட்டணத்தை விட்டுப் புறப்பட்டுக் குபேரன்மேற் படையெடுத்துப்போய் அந்தக்குபேரன் முதலான வனேகம்பேர்களைச் செயித்து வருவதற் குட்பட்டகாலத்திலே, மேகநாதன் வனத்திலே யாகஞ்செய்துகொண்டிருந்தான். கும்பகர்ன னித்திரைசெய்துகொண் டிருந்தான். நான் சலத்திலே முழுகித் தபசுசெய்துகொண் டிருந்தேன். அப்படியிருக்கிற சமயம்பார்த்து மதுவென்று சொல்லப்பட்ட அசுரனானவன் தன்னுடைய சேனைகளுடனேவந்து பட்டணத்திற்புகுந்து, இவ்விடத்திலிருந்த வனேகஞ் சேனைகளையுமழித்து நம்முடைய சிறியதாயாராகிய கும்பீநசியை வலிமையாகப் பற்றிக் கொண்டு தன்னுடைய பட்டணத்துக்குப்போய்ச் சேர்ந்தான். என்றுசொல்லவும் நெய்யைவார்க்கப் பொங்கியெரியு நெருப்பைப்போல இராவணன் மனங்கொதித்துச் சீறி, பூனையின்செவியை யெலிபற்றி யிழுத்தாற்போலவும் - புலியைச் சிறுமான் துரத்தினாற்போலவும் - சற்று மஞ்சாமல் என்னையு மதியாமல், சந்திரசூரியரும் பயப்பட்டு வழிவிலகிச் செல்லுகின்ற இவ்விலங்காபட்டணத்திலும் புகுந்து, என்னுடைய சிறியதாயையும் ஒருவன் கொண்டுபோனானல்லவா? வெகுநேர்த்தி: வெகுநேர்த்தி: தம்பீ விபீஷணா! அந்த மதுவென்று சொல்லப்பட்டவனை இப்பொழுதே செயித்துக் கொன்று, அவன் குலத்திலுள்ள ஸ்திரீகளையுங் கற்பழித்துக்கெடுத்து மீண்டுவருவேன். என்று சபதம்பேசித் தன்னுடைய சேனைகளெல்லா முன்னே போகும்படி யுத்தரவு செய்து, விபீஷணனை லங்காபட்டணத்துக்குக் காவலாகவைத்து, நித்திரை செய்துகொண்டிருக்கிற கும்பகர்னனை யெழுப்பி அழைத்துக்கொண்டு வரச் சொன்னான்.

அப்படியே சில தூதர்கள்போய் மேகத்திலிடி முழங்கினாற்போலப் பூமி யதிரும்படிக்கு அனேகமான பேரிகைமுதலான . பெரியவாத்தியங்களையடித்து முழக்கினார்கள். அந்த முழக்கத்தினாலே கும்பகர்ன னித்திரைவிட் டெழுந்திருந்தான். அப்பொழுது காலாக்கினிபோலே தகிக்கின்ற கொடுமையான பசிதீரும்படிக்கு ஆயிரம் பண்டிகளிலே சோறும் - புலாலும் - கறிகளும் - ஆயிரஞ்சாடிக ணிறையக்கள்ளும் - கொடுக்க வாங்கித்தின்று குடித்தும் அவனுக்குப் பசியடங்காமல், பின்னு மப்படியே

கொண்டுவந்து கொடுக்கவாங்கிப்புசித்துப்பசிதீர்ந்திளைப்பாறியிருந்தான். அந்தச்சமயத்தி லிராவணேசுர னழைக்கிறானென்று தூதர்சொல்ல, அதுகேட்ட கும்பகர்ணன் அந்தக்ஷணமே தமையனிடத்துக்குப்போ யென்னை யழைப்பித்தகாரிய மென்னவென்று கேட்க, அதற்கிராவணன் மதுவென்று சொல்லப்பட்டவன் செய்தகாரிய மிப்படியிருந்ததென்று கூற, அதுகேட்ட கும்பகர்ணன் மிகவு மாச்சரியப்பட்டுக் கோபத்துடனே துக்கத்தையு மடைந்து நிற்க, அதுகண்ட தசக்கிரீவன் அவனையு மேகநாதனையும் புறப்பட்டு வரச்சொல்லி ஆக்கியாபித்தான். அப்படியே யவர்களிருவரும் போர்க்கோலங்கொண்டு, அனேகவிதமாயுள்ள அஸ்திர சஸ்திரங்களைத் தரித்துத் தேரின்மேலேறி; தங்களுடைய சேனைகளோடும் வீதியிற் புறப்பட்டார்கள். அம்மாத்திரத்தி லிராவணன் இரௌத்திரா காரமாய்க் கோபாக்கினிபொங்க வச்சிரகவசம் — கிரீடம் - நெற்றிப்பட்டம் — வீரகண்டாமணி — இவைமுதலான வாபரணங்களும்வஸ்திரங்களுந் தரித்து, வில் — அம்பு — வேல் — வாள் - பரிசை — தண்டம் - சூலம் — இவைமுதலான திவ்விய ஆயுதங்களைக் கைகளிலேதாங்கி, வெள்ளைக்குடைகள் பிடிப்பாரும் - வெண்சாமரைகள் வீசுவாரும் — வெற்றிக்கொடிக ளேந்துவாரும் — விசயப்புகழைப் பேசுவாரும் இன்னுமுள்ள பலபல இராசாங்க வுபசாரங்களினாலே பணிவிடை செய்வாருமாகிய வனேகம் பரிவாரங்கள் சூழ்ந்துவரச் சகல வாத்தியங்களு முழங்கத் தேரின்மேலேறிப் புறப்பட்டான்.

அப்பொழுது முன்னேபோகும்படி யுத்தரவுசெய்த சேனைகள்போகப் பின்னு மனேகஞ் சதுரங்கசேனைகள்பூமியாகாசமெங்குந் தூளிப்படல மறைக்கத்தக்கதாக நெருங்கிவர, முன்னணிப் படையிலே பட்டத்துக்குமாரனாகிய மேகநாதனும் — பின்னணிப்படையிலே இளவரசு பட்டத்துக்குடைய கும்பகர்ணனும் படைசெலுத்திவர, அந்தச் சேனாசமுத்திரத்தி னடுவிலே மகாமேருபர்வதம்போலே விளங்குகின்ற தன்னுடையதேரினை வேகமாகநடத்திச்சென்று மதுவினுடைய பட்டணத்துக்குச் சமீபத்திலேபோ யடுத்தான். அப்பொழுது மதுவென்று சொல்லப்பட்டவ னித்திரை பண்ணிக்கொண் டிருந்தான். இராவணன் வருகிறானென்று சொல்லக்கேட்ட கும்பீநசியானவள் பயந்து, சீக்கிரமாக வெதிரேபோய் அவனுடைய காலிலேவிழுந்து புலம்பியழுதாள். இராவணனுந் தன்னுடைய சிறியதாயாரைத் தாழ்ந்தெடுத் துபசரித்து அவளைப்பார்த்து, தாயே ! நீயொன்றுக்கும் விசனப்படவேண்டாம். என்று தேறுதலை சொல்லினான். அப்போது பின்னுமவள்புலம்பிப் பரிதாபப்பட்டு இராவணனைப்பார்த்து, கேளாய் மகனே ! நானெடுநாளா யென்னுடைய புத்திரரையிழந்ததுமுதலான துன்பங்களினாலே விசனத்தை யடைந்திருக்க, இப்பொழுதுன்னுடைய கோபத்தினாலே எனக்குண்டாகப்பட்ட துன்ப மந்தத் துன்பங்களைப்பார்க்கிலு மிகவுங்கொடியதல்லவோ ? ஆகையால் நீ கோபத்தைதவிட்டு எனக்கு மங்கலியப்பிக்ஷை கொடுக்கவேண்டும். என் றுபசாரஞ் செய்து வேண்டிக்கொண்டு பின்னுமிராவணனை நோக்கிச் சொல்லுகிறாள்.

No. 34. இராவணன்கும்பீநசிவேண்டுகோளால் மதுவைச்) இராவணன்அரம்பையைவலிதிற்புணர்ந்துசாபமடை



உத்தரகாண்டம். மகாவிஜயப்படலம்.

கேளாய் ஜயனே! வேதங்களிலே அஷ்டவித மணங்கள் சொல்லியிருக்கின்றன. அவைபிரமம் - பிரசாபத்தியம் — ஆரிடம் - தெய்வம் - காந்தருவம் ஆசுரம் இராக்கதம்-பைசாசம், இவற்றுள்பிரமசாரிக்குக் கன்னியைத் தீமுன்னர் கொடுப்பது பிரமமணம். தலைமகனினத்தார்வேண்டத் தலைமகளினத்தார் உட்பட்டு அவளைத் தீமுன்னர்கொடுப்பது பிரசாபத்தியமணம். ஒன்றிரண்டு பசுவும் - எருதும் வாங்கிக்கொண்டு கன்னியைத் தீமுன்னர்கொடுப்பது ஆரிடமணம். வேள்வியால்வந்த கன்னியைத் தீமுன்னர் கொடுப்பது தெய்வமணம். கொடுப்பாருங் கேட்பாருமின்றி இருவருந் தனியானவிடத்தில் எதிர்ப்பட்டுத் தாமேகூடுவது காந்தருவமணம். பெண்ணுக்குப் பொன்பூட்டிச் சுற்றத்தார்க்கும் பொன்வேண்டுவன கொடுத்துக் கொள்ளுவது அசுரமணம். பெண்ணும் பெண்ணினத்தாரும் உடன்படாமல் வலிதிற்கொள்ளுவது இராக்கதமணம். துயின்றவளைச்சென்று கூடுவது பைசாசமணம். இந்த எட்டுமணங்களுக்குள்ளே இராக்கதச மணமென்பது மேற்சொன்னபடி கட்டுங்காவலுந் துர்க்கமுமாயிருக்கின்ற விடத்திலிருக்குங் கன்னியை யாவனொருவன் தன்னுடைய சவுரியபலத்தினாலே வலிமைசெய்து கொண்டுபோ யனுபவிக்கின்றதல்லவோ? அந்த நியாயமுனக்குந் தெரிந்திருக்குமே: என்றுமிகவும் வணக்கத்துடனே சொன்னாள்.

அதற்கவனவளைப்பார்த்து, அம்மா! தாயினிடத்திலே யென்னகுற்றமிருந்தாலும் விசாரிக்கவேண்டுவதில்லையென்றும் - பொறுக்கவேண்டுமென்றும் - வேதசாஸ்திரங்களிலே சொல்லியிருப்பதால், உன்னைக்குறித் தெல்லாக்குற்றங்களையும் பொறுத்தேன். உன்னுடைய அபீஷ்டமெனக்குஞ்சம்மதமே இனிபொருவிகற்பமுமில்லை. இப்பொழுது நான் சுவர்க்கலோகத்தைச் செயிக்கப்போகிறேன். ஆகையா லுன்னுடைய புருஷனை யொன்றுக்கும் பயப்படாமல் எனக்குச்சகாயமாய்ச் சேனைகளுடனே வரச்சொல்லுகவென்று கூறிக் கும்பீநசியைப் போகச்சொன்னான். அவளுமப்படியே சீக்கிரமாகப் போய் நித்திரைசெய்துகொண் டிருக்கின்ற தன்னுடைய புருஷனையெழுப்பி, நடந்த விர்த்தாந்தங்களெல்லாஞ் சொல்லினாள். அதுகேட்ட மதுவானவன் அப்படியாவென் றாச்சரியப்பட்டு, உள்ளத்திலே பயமும் வெளியேசந்தோஷமுமா யுடனேபுறப்பட் டெதிர்கொண்டுபோய் இராவணனைக்கண்டு, அன்புடனே கலந்து அனேகவுபசாரங்கள்செய்து தன்னுடைய பட்டணத்துக் கழைத்துவந்து, கிரகத்திலே விருந்து முதலான வெல்லாச்சிறப்புகளுஞ் செய்வித்தான். இராவணன் கும்பகர்ணன் மேகநாதனாதியர்களும் அம்மதுவினுடனே விருந்துண்டு, மிகவுஞ் சந்தோஷமா யன்றைநாளவ்விடத்தில் வாசஞ் செய்திருந்தார்கள்.

கும்பீநசியின் வேண்டுகோளால் இராவணன் மதுவென்பவனுடன் கலந்து தேவலோகவிஜயஞ் செய்யப்போகும்போது; அரம்பையின் சாபமேற்றல்.

கவி.

கொற்றவரக்கன்மதுவந்து கொண்டாடப்போயவனில்லம்
உற்றமதுசெய்பூசனைகொண் டுவந்தாங்கொருநாளினிதிருந்து.

பிற்றைவைகற்பெருஞ்சேனை சூழவேகிப்பெருவினைகள்
அற்றதவத்தோர்பயிலிமயத் தளகாபுரியினயலிறுத்தான்.

இந்தப்பிரகார மிராவணனுனவன் மதுவினுடைய பட்டணத்திலே யோருநாளிருந்து, மறுநாளுதயத்திலே அந்தமதுவென்பவன் தன்னுடைய சேனையுடனேகூட வரும்படியாகப் பிரயாணப்பட்டு தேவலோகத்தைநாடிப் போகின்றான். அப்பொழுதில் தவமுடையோர்கள் வாழ்கின்ற இமயமலையின் சமீபத்திலுள்ள அளகாபுரிக்கடுத்த பெரியவனத்தைக் கண்டு, அந்தவனத்திலே சகலசேனைகளோடு மிறங்கியிருந்தான். அப்படி யிருக்குமளவி லந்தவனத்தினுடைய சிங்காரத்தைப் பார்க்கவேண்டித் தானொருவனுந் தனியாகப் புறப்பட்டு, அங்கங்கே சந்தனம் – குங்குமம் – சண்பகம் - பாதிரி - புன்னை – கோங்கு – மகிழ் - மா - பலா - வாழை - இவைமுதலான விருக்ஷங்கள் நல்லவாசனை பொருந்திய புஷ்பங்களையு மதுரரசமொழுகுங் கனிகளையு முதிர்த்துநிற்கும் வளங்களையும், அறிவினாலே விளங்கப்பட்ட நற்குணம்பொருந்திய உத்தமபுருஷனுடைய மனம்போலத் தெளிவும், மயக்கத்தைச்செய்யும் ஸ்திரீகளுடைய மனம்போ லளவிடப்படாதவாழமுமுடைய தண்ணீர்த்தடாகங்களின் மாட்சிமைகளையும், அந்தத்தடாகங்களிலே நிறைய மலர்ந்திருக்குந் தாமரைப்புஷ்பங்களில் அன்னப் பக்ஷிக ளாணும்பெண்ணுமாகக் கூடி விளையாடிக்கொண் டிருக்குஞ் சிங்காரங்களையும், குளிர்ந்த புன்னைநிழலின் கீழே தேவர்களுந் தேவஸ்திரீகளு மிஷ்டசல்லாபமாகக்கூடி யனுபவித்துக்கொண் டிருக்கப்பட்ட பளிங்குப்பாறை மண்டபங்களின் பெருமிதங்களையும், மயில்களாட – வண்டுகள்பாட - குயில்கள்கூவ - கிளிகள்கொஞ்சிப்பேசு நயங்களையும் பார்த்துக்கொண் டுலாவிவருகிறான்.

அப்படியவன் வருமளவிற் சாயங்காலவேளையாக, அங்கோரிடத்திலே யழகெல்லாந்திரண் டொருவடிவாக விளங்கும் அதிரூப சவுந்தரியத்தையுடைய அரம்பையென்னுமொரு அப்சரப்பெண்மயில் நவமணியணியணிந்து, நல்வண்ணப்பட்டுடுத்து, நானத்தொடுகளபம்பூசி மந்தாரப்பூமாலைசூடி, அப்பாதையாய் நளகூபர னிடநாடிச் சென்றுகொண்டிருந்தனள். இராவணனவளைக்கண்டு மோகங்கொண்டு, இவளெந்தலோகத்துப் பெண்ணோவென் றுச்சரியப்பட்டுப்பிரமித்து, அடுத்துநின்று அந்தக்கன்னியைப்பார்த்து,பெண்ணே நீ யெங்கே யிருக்கிறவள்? உன்னுடைய பெயரென்ன? எவ்விடத்துக்குப் போகிறாய்? என்று கேட்டான். அதற்கவள் நான் சுவர்க்கலோகத்திலிருக்குந் தேவஸ்திரீகளி லொருபெண். எனக் கரம்பையென்று பெயர். என்னுடைய நாயகன் நளகூபரனென்று சொல்லப்பட்டவன். அவனிடத்துக்குப் போகிறேனென்று சொன்னாள். அதற்கவனவளைப்பார்த்து, அடிபெண்ணே! இவ்வுலகத்திலே இச்சிக்கின்ற யாவருக்கும் போகஸ்திரீகளாக விருக்கும் வேசைகளுக்கு ஒருநாயகனென்றும், அவர்களொருவனுக்குப் பாரியென்று செல்லு நியமமுண்டோ?என் றுபரிகாசமாகவிகழ்ந்துபேசினான். அதற்கவள்-

ஐயா! அந்தஸ்திரீகள் பலசிந்தையுடையவர்களே யானாலும், தங்களை விசுவாசத்துடனே பாரியாகக்கொண்ட உத்தம புருஷருக்கு வஞ்சனைபண்ணுவது தருமமல்லவேயென்று சொல்லினாள்.

இராவணனந்தவசனத்தைச் சற்றுமெண்ணாமல், மதப்பட்டயானைபோல மேல்விழுந்து புணரும்படியாக நின்றான். அப்படியவனிற்கின்ற மனக்குறிப்பை அரம்பையறிந்து, மிகவும் பயந்தவளாய் வணங்கித்தொழுது, ஓ இராசனே! புலஸ்தியருடைய புத்திரருக்குப் பேரனாகிய நளகூபரனென்று சொல்லப்பட்டவரெனக்கு நாயகனாகையால், அந்த முறைமையிலே யான் உமக்குமருமகள். உமது தமையனாரான குபேரன் தனயனான நளகூபரனால் வரிக்கப்பட்டு அவ்விடம் போகா நின்றேன். ஆதலாலதற்குத் தடைபடாதபடி விடைதரவேண்டுமென்று பின்னும் பலபலவிதமாக வேண்டிச்சொல்லினாள். அப்படிச் சொல்லியும் இராவணன் கேளாமல், வேசைகளுக்கு முறையுண்டோவென்று மறுத்து, அடங்காத காமவிகாரத்தினாலே மதிகெட்டு மேல்விழுந்து அவளை வலிமைசெய்து புணர்ந்தனுபவித்தான்.

கவி.

வந்தியாகரீ மாநிலமாதர்தம், சிந்தையாலன்றி யாவரைத்தீண்டினும்
கந்தவார்குழ லார்கற்பெரியினால், வெந்துவீழ்தியென் றேகினள்விம்மினாள்.

அப்படிக்கவனாலே துன்பப்பட்ட அரம்பையானவள் மேனிகுலைந்து பதைபதைத்து மனங்கொதித்து இராவணனைப்பார்த்து, அடா பொல்லாத துஷ்டப்பாபியே! என்னையிப்படி யநியாயஞ்செய்து துன்பப்படுத்திய நீ, இனிமேலென்னுடைய பதிவிரதாதர்மத்தை யறியப்போகிறாய். எந்தக்காலத்திலேயாகிலு மகாபதிவிரதைகளாயிருக்கின்ற ஸ்திரீகளை இப்படி வலிமைசெய்து தீண்டுவாயானால், அவர்கள்சாபத்தினாலே யென்னுடைய வயிறுபற்றியெரிகிறதுபோல நீ யெரிந்துபோகக்கடவாயென்று சாபங்கொடுத்தாள்.

இப்படி சாபங்கொடுத்த அரம்பையானவள் உடனே யந்தப்பாதகனைத் தப்பிக்கடந்து, எப்பொழுது வருவாளோவென்று வழிபார்த்திருக்குந் தன்னுடைய நாயகனாகிய நளகூபரனிடத்திற் சென்று, தனக்கிராவணனாலே நேர்ந்த துன்பத்தையெல்லா முண்மையாகச்சொல்லி மிகவும் விசனப்பட்டாள். அதுகேட்ட நளகூபரனானவன் சகலத்தையுந் தருமமாக நன்றாயாலோசித்து, இவளிடத்திலே தோஷமில்லையென்று நிச்சயம் பண்ணிக்கொண்டு, அடிபெண்ணரசி! உனக்கிப்படித் துன்பஞ்செய்தபாபியாகிய இராவணன் பதிவிரதையாயிருக்கின்ற ஒருவனுடையஸ்திரீயை யஞ்சாமல் இனிமேலெக்காலத்திலேயாகிலும் வலிமையாகத் தீண்டுவானாகில், அப்பொழுதே யவனுடைய பத்துத்தலைகளு மேழுபிளப்பாக வெடித்துப்போகக் கடவதென்று சாபஞ்செய்தான். அங்கேராவணனென்பவன் அந்த வனத்திலேதானே அடங்காத காமவிகாரத்தையுடையவனாகி, தன்னைவிட்டு நீங்கிப்போன அரம்பையானவளெந்தவழி வருவாளோவென்று நாலுதிக்கிலுந் திரும்பித்திரும்பிப் பார்த்துக்

கொண்டு, மன்மத பாணங்களினாலே சரீரமுழுதும் புண்ணாகத் துளைக்கப்பட்டு, மேலு மேலுஞ் சகிக்கப்படாத காமவிகாரத்துடனே அந்தராத்திரிமுழுதும் மொரு க்ஷணகாலம் ஒரு யுகமாகக் கடக்கப்படாத மோகசமுத்திரத்திலே முழுகிக்கிடந்தான்.

இராவணன் சுவர்க்கலோகஞ்சென்று இந்திரனுடன் போராடல்.

கவி.

துன்னிருசெந்துவெய்யோன் றோன்றிடத்துயரநீங்கித்
தன்னெதிரில்லாவெற்றித் தசமுகன்றானைசூழப்
பொன்னுலகத்தைநோக்கிப் புறப்படப்புரைதீர்வானோர்
மன்னுடனதனைக்கேட்டு மாயனைவந்துசேர்ந்தார்.

இந்தப்பிரகாரம் அந்தவனத்திலே முதனாளிராத்திரி முழுவதும் அரம்பையினுடைய மோகவிகாரத்தினாலே துன்பப் பட்டுக்கொண் டிருந்த இராவணனானவன் மறுநா ளுதயகாலத்திலே சூரியனைக்கண்டு நீங்கு மிருளுடனே தன்னுடைய மோகவிருளு நீங்கி மயக்கந்தீர்ந்து சிந்தைதெளிந்து, அவ்விடத்தினின்றும் புறப்பட்டுச் சகல சேனைகளுஞ் சமுத்திரம்போல முழங்கிச் சூழ்ந்துவரச் சுவர்க்கலோகத்தை நாடிப் போகின்றான். அப்படி போகும் பொழுதில் அந்தச் செய்தியைத் தேவேந்திரனறிந்து பயந்து துணுக்குற்றெழுந்திருந்து, சில தேவர்களுந் தானுஞ் சீக்கிரமாக வைகுண்டத்துக்குப் போய மகாவிஷ்ணுவைக் கண்டு வணங்கித் துதிசெய்து நின்றான். மகாவிஷ்ணுவானவ ரவ்விந்திரனைப் பார்த்து, ஓ சுரேசனே! நீங்கள்யாவரு மிவ்விடத்துக்கு வந்தகாரியமென்ன? இயாது காரணத்தினாலே விசனத்தையடைந்திருக்கின்றீர்கள்? என்றுகேட்க வதற்குத் தேவேந்திரன் மகாவிஷ்ணுவை நோக்கி, சுவாமீ! எக்காலமு மெங்களுக்குத் துன்பத்தையே விளைத்துவருகின்ற பொல்லாத வசுரகுலத்தைக்கெடுத்துத்தாய்போல வெங்களை ரக்ஷிக்குந் தேவரீரையன்றி வேறுதஞ்சமு முண்டோ? இராவணனானவன் முன்பு மிகவுங் கொடிதான தவங்களைச்செய்து பிர்மதேவனிடத்திலும் பரமசிவனிடத்திலும் பெற்ற வரத்தினாலும் பலத்தினாலும் பூலோகத்தைப் பாழாக்கி, இப்பொழுதெங்களைத் துன்பப்படுத்த நினைந்து தேவலோகத்தைநாடி அளவில்லாத தன்னுடைய சேனைகளுடனே வருகிறான். நாங்களென்னசெய்வோம்? என்று வணங்கி முறையிட்டுச்சொல்லினான்.

அதுகேட்ட மகாவிஷ்ணுவானவ ரவனைநோக்கி, ஓ இமையவர்வேந்தே! நீங்களொன்றுக்கும் பயப்படவேண்டாம். நாமே யந்தராவணன் முதலானவர்களைச் சங்கரித்து உங்களை ரக்ஷிக்கிறோம். என்றுந்தரவுகொடுத் தனுப்பவும் அந்த வுத்தரவைப் பெற்றுக்கொண்ட தேவேந்திரன் தன்னுடைய பரிவாரங்களோடு அமராவதி பட்டணத்துக்கு வருகிறான். அவன் வருவதற்கு முன்னே இராவணனுடைய சேனாசமுத்திரஞ் சுவர்க்கலோகமெங்கு நிறைந்தாவரிக்கிற முழக்கத்தை அவ்விடத்திலே தலைமையாயிருக்கின்ற சில தே

வர்கள் கேட்டு, இந்த ராக்ஷதர்களுடைய உபத்திரவத்திலே உள்ளநாளளவுந்
துன்பப்பட நம்மாலே முடியாது. ஆனாலு மித்துடனே தேவர்கள்வெல்வ
தொன்று. அரக்கர்கள் வெல்வதொன்று. தேவர்க ளிறப்பதொன்று. அரக்கர்
களிறப்ப தொன்று. இவ்விரண்டிலொன்றை இன்றைக்கே காணக்கடவோம்.
என்றெல்லோரு மொருமித்து ஒட்டிட்டுக்கொண்டு தேவசேனைமுழுதுமொ
ன்றாகத்திரண்டு, வடவாக்கினிபோலச் சீறி யாரவாரித்து நெருங்கிக்கலந்து,
மிகவுங் கொடுமையான யுத்தம்பண்ண ஆரம்பித்தார்கள். அப்பொழுதி லந்
தயுத்தவினோதம் பார்க்கவேண்டிச் சத்தியலோகத்திலிருக்கும் பிர்மதேவர்
அவ்விடத்துக்கு வந்தார். அந்தப் பிர்மதேவர் சந்தோஷத்தை யடையும்படி
யாகத் தேவர்களெல்லோரும் பின்னு மட்டகாசம்பண்ணி நெருங்கி, அனேக
மான அஸ்திர சஸ்திரங்களைப் பிரயோகித்து யுத்தஞ்செய்தார்கள்.

அந்தயுத்தத்தில் அளவில்லாத ராக்ஷத சேனைகளெல்லாங் கண்டதுண்ட
ங்களாகச் சின்னபின்னப்பட்டு, போர்க்களமெங்கும் பிணக்குவியல்கள் மலை
மலையாகக் குவிந்து இரத்தவெள்ளம் பெருகியோடத் தலைப்பட்டது. கவந்த
மும் பேயுங்கலந்து கூத்தாடின. இப்படி தேவசேனைக ளிராக்கதசேனைகளை ய
ழித்துப் பின்னு மேல்விழுந்து மோதிவருவதை இராவணன்கண்டு, தன்னு
டைய பாட்டனாகிய சுமாலியை யழைத்து, ஐயா என்மூதாதையே! இத்தே
வர்கள் நம்முடைய சேனாசமுத்திரத்திலே அனேகஞ் சேனைகளை மடித்துப்
பின்னும் பலங்கொண் டடித்துவருகிறார்களே: நீ யிந்தச்சமையத்தி லிப்படி
யிருக்கலாமோ? உம்முடைய பல சவுரியங்களை இந்தத்தேவர்களு மற்றெல்
லோர்களு மறியும்படிகாட்டி, இனியேனும் பகையைவென்று வெற்றிகொள்
ளவேண்டுமென்று சொன்னான். அவனப்படிச்சொல்லிய கோபக்குறிப்பினை
ச் சுமாலியறிந்து, அப்பா இராவணா! உன்னிஷ்டப்படியே செய்கிறேன். என்
னுடைய சாமர்த்தியத்தை இன்றைக்கு நீயே காணப்போகிறாய். என்றுசொ
ல்லி பானுகோபன் - நியாயகோபன் — துன்முகன் - தூமகேது - தூம்பிரா
க்ஷன் - விருபாக்ஷன் - மகோதரன் — மாரீசன் - கரன் - திரிசிரன் - தீக்ஷ
ணன்—சுன்—கசாரணன் - பாசகரன் - பைசாசன் - விராதன் - கும்பன் - நிகும்
பன் - சம்பன் - சம்புமாலி - என்று சொல்லப்பட்ட சேனாதிபதிகளுடனே
அச்சுமாலியான வனந்தக்ஷணமே போர்முகத்தில் திரும்பி துரத்திவருகிற
தைக்கண்ட தேவசேனைகள்சாய்ந்தோடின. அப்படியோடுஞ் சேனைகளைத் தே
வர்களிலொருவனாகிய சாவித்திரனென்று சொல்லப்பட்ட சேனாதிபதியானவ
ன் சாய்ந்தோடுகிற தேவசேனைகளை நிறுத்தி, சுமாலியைத் தடுத்து அவனோ
டெதிர்த்துக்கொண்டு அவனுமவனும் அனேக விசித்திரமான யுத்தம்பண்ணி
க்கொண்டிருந்தார்கள்.

அந்தச்சமயத்தில் சாவித்திரனானவன் லக்ஷியமில்லாதவிவனையோர் பொ
ருளாகப்பாராட்டி, நெடுநேரம் யுத்தம்பண்ணிக்கொண் டிருக்கவேண்டுவதெ
ன்னவென்று நினைத்து, மகாகோபத்துடனே யனேக பாணங்களைத் தொடுத்

துப்பிரயோகம்பண்ணி, அந்தச் சுமாலியினுடைய வில் அம்பு குதிரை சாரதி தேர்முதலியயாவையுந் துண்டுதுண்டாகவறுத்துத்தள்ளி, உடனேயொருவராலுந் தடுக்கப்படாத பலமு மகிமையும்பொருந்திய ஒருதண்டாயுதத்தைக்கையிலேயெடுத்துச் சுழற்றிவிட்டான். அந்தத் தண்டாயுதமானது யமதண்டம் போலே அதிக வேகமாகப் பாய்ந்து, மலைமேலேவிழுந்த விடிபோலச் சுமாலியினுடைய தலைநகர்ந்து அவனுடைய சரீரமுழுது முருத்தெரியாம லழிந்து குழம்பிச் சேறாகும்படி யரைத்துக்கொன்றது. அப்படிக்கந்தச் சுமாலி யிறந்தவுடனே சேனைகளெல்லாஞ் சிதைபட்டுத் திசைதிசையாக வோடக்கண்ட மேகநாதனானவன் அந்தச் சேனைகளையெல்லாந் தடுத்துத்திரும்பி, பின்னும் போரிலேமுட்டி யெதிர்த்துக்கொண் டளவில்லாத அஸ்திரசஸ்திரங்களினாலே தேவசேனைகளெல்லா நிலைகுலைந்தோடும்படி தாக்கி யுத்தம்பண்ணிக் கொண் டிருக்கின்றான்.

அப்படி யவனிருக்குமளவில் தேவேந்திரனுடைய குமாரனாகிய சயந்தனானவன் அவனுடனே எதிர்த்துக்கொண்டான். அப்பொழுது இவனோ மேகநாதன்? இவனோ சயந்தன்? என்று மயங்கத்தக்கதாக அவ்விருவருந் தங்களுடைய தேர்களைச் சக்கராகாரமாக இடசாரி வலசாரியிலே அதிவேகமாக முடுக்கி, பாணங்களைச் சரவருஷமாகப் பொழிந்துகொண்டு, ஒருவருக்கொருவர் மாறிமாறித் தோற்பதும் ஒருவரையொருவர் வெல்வதுமாக விப்படியே நெடும்பொழுது போர்விளைத்து, தங்களுடைய விருவகைச் சேனைகளும் யுத்தம் பண்ணுகிறதைவிட்டு ஆச்சரியப்பட்டுப் பார்க்க ஆக்கிரமித்து நின்றார்கள். அப்படி நிற்குமளவில் மேகநாதன் முனைந்து, கொடிய பாணங்களினாலே சயந்தனுடைய ரதசாரதி நிலைகுலைந்து விழும்படி யறுத்துத் தள்ளினான். அதுகண்ட சயந்தன் மிகவுங்கோபித்து, சில பாணங்களினாலே மேகநாதனுடைய ரதசாரதியுடலைத் துளைத்தறுத்துத் தள்ளினான். இப்படிச்சாரதி யிறந்ததைக்கண்ட மேகநாதன் மிகவுங் கோபங்கொண்டு, சீக்கிரமாக வக்கினிமயமான வனேகபாணங்களினாலே சயந்தனதுமார்புமுழுது நிறைத்தான். அதினாலே யந்தச்சயந்தன் மூர்ச்சையடைந்தான். அப்பொழு தவனுடைய பாட்டனாகிய புலோமனென்று சொல்லப்பட்டவன் மேகநாதனுடனே யெதிர்த்து யுத்தம்பண்ணிக்கொண் டிருந்தான்.

அது பார்த்திருந்த பிரமதேவர் தேவேந்திரனிடஞ்சென்று, ஓ வலாரி! உன்னுடைய குமாரன் மேகநாதனாலே யடிபட்டு மூர்ச்சித்துக் கிடக்கிறான். அல்லாமலு மந்த மேகநாதனுடனே உனக்கு மாமனாகிய புலோமன் யுத்தம்பண்ணிக்கொண் டிருக்கிறானென்று சொன்னார். அது கேட்டமாத்திரத்திலே இந்திரனானவன் புத்திரனைநினைந்து மிகவும் விசனத்தை யடைந்தவனாய் அதிகமான உக்கிரகோபங் கொண்டு, இரதசாரதியாகிய மாதலி யென்று சொல்லப்பட்டவனைச் சீக்கிரமாகத் தேர்கொண்டுவரச் சொல்லி, வச்சிரகவசம் - கிரீடம் - குண்டலம் – இவை முதலானவைகளை யணிந்து போர்க்கோலங் கொ

ண்டு உயுத்தசன்னத்தனாய் சபாமண்டபத்தினின்று நீங்கிப் புறப்பட்டு, பிரகஸ்பதிபகவான் முதலான மகாரிஷிகளாசீர்வாதஞ் செய்யவும் - யக்ஷகந்தர்வர்கள் திவ்வியகானம் பாடவும் - தேவஸ்திரீகள் மங்களம்பாடி வாழ்த்தி நாட்டியஞ்செய்யவும் - முத்துக்குடைகள் பிடிக்கவும் - வெண்சாமரைகளிரட்டவும் - விசிறிகள் வீசவும் - தேவதுந்துமி முதலான சகல வாத்தியங்களு முழங்கவும் வந்துதேரின்மேலேறி, அஷ்டவசுக்களும்-மருத்துவரிருவரும்-ஏகாதசவுருத்திரர் முதலானவர்களும்-தங்கள் தேர்களிலேறி அளவற்ற சேனைகளுடனே சூழ்ந்துவரும்படியாக வந்து யுத்தகளத்திற் பிரவேசித்தான். அம்மாத்திரத்திலதைக்கேள்விப்பட்ட இராவணனனவன் தன்னுடைய சேனாபதிகளுந்தானுமாக அவனை யெதிர்த்துவருகிறான்.

அப்படி வரும்பொழுதி லிவ்விராவணனுடைய குமாரனாகிய மேகநாதன் அவ்விடத்துக்கு வந்து, தன்பிதாவாகிய ராவணனைப்பார்த்து, இந்தத் தேவேந்திரனைச் செயிப்பதற்கு நீர் புறப்படவேண்டுமோ? நானொருவன் போதாதோ? என்னைப்புத்திரனாகப் பெற்றதற்கு இந்நாள்வரையிலு மென்னாலொரு பிரயோசனத்தையு மறியீரல்லவோ? ஆகையா லிப்பொழுதும்முடைய மனசு சந்தோஷத்தையடையும்படிக்கு இவனைச்செயித்து, உமக்கு வெற்றியுங்கீர்த்தியு முண்டாகச்செய்கிறேன். எனக்குத்தரவு கொடும். என்றவனை நிறுத்தித்தானே சென்றவ்விந்திரனுடனெதிர்த்துக்கொண்டு, கார்காலத்து மழைபெய்வதுபோல ஆகாசமெங்கும் பாணமயமாக நிறையும்படி சரவருஷமாகப் பொழிந்து மகாகோரமான யுத்தம்பண்ணுகிறான். அப்பொழுதில் தேவர்களுடைய தேர்த்திரள்களுக் கெல்லாம் அச்சுதெறிந்தும், ஆணிகள்கழன்றும், உருளைகளுடைந்தும், கொடிகளறுந்தும், கொடுங்கைகள் சரிந்தும், குதிரைகளுஞ் சாரதிகளு மடிந்துபோயின. இயானைக் கூட்டங்கட்கெல்லாம் கால்களறுபட்டும், வால்கள் பறிபட்டும்,கன்னங்கள் விடுபட்டும்,பின்னங்கள்பலபட்டும், துதிக்கைகள் துணிபட்டும், மதப்பைகளரிபட்டும், கொம்புகளொடிபட்டும், அம்புகளடிபட்டும் போனதல்லாமல், முகங்களு மத்தகங்களும்பிளக்கப்பட்டும் போயின. குதிரைத்திரள்களுக் கெல்லாம் கால்களும், வால்களும், தலைகளும், குளம்புகளும், முதுகுகளும், வேறுவேறாகிக் கண்டதுண்டப்பட்டழிந்தன. பதாதிவெள்ளமெல்லாம் பெருங்காற்றிலகப்பட்ட இலவம்பஞ்சுபோல உருத்தெரியாமல், ஆயுதங்களோடே சின்னபின்னப்பட்டழிந்தன.

கேளும் ஸ்ரீராகவா! அப்போதந்த யுத்தகளமே ஒருபெருந்தாழியாகவும்,அதிலேயகப்பட்டதேவர்களே தயிர்க்கட்டியாகவும்,மேகநாதனதுவலிவுள்ளபுயமே மத்தாகவுமிருந்தன. இப்படித்தேவர்களுடைய இரத்தமாம்சங்கள் சேறுபட்டுக் குழம்பாகும்படிகடைந்து கலக்கியழிப்பவனானமேகநாதனனவன், மேருவில்லையு மிவன் வில்லுக்குநிகர் சொல்லக்கூடாதென்று பிரமதேவர் முதலானவர்களாச்சரியப்படும்படிக்குப் பூமியாகாசந் திக்குகளெங்கும் உள்

ளிலும்புறம்பிலுமுலாவி, தேவர்களுடைய கண்ணிலுமனதிலுந் தானாகவே காணும்படிக்கு அதிவேகமாகப் பாய்ந்து சுழன்று மகா விசித்திரமான யுத்தம் பண்ணிக்கொண்டு நிற்கின்றான். அப்படி யவனிற்குமளவில் கும்பகர்ணனானவன் அதிகோபத்துடனே கண்கள் சிவந்து நெருப்புப் பொறிபறக்கவும் - அண்டம் வெடிபடவும் - பூமிநடுங்கவும் - அட்டகாசம்பண்ணி, ஒருபெரிய நீலமலை நடந்தாற்போல அதிசீக்கிரமாகச் சென்று, தேவர்களெல்லாரு முறிந்தோடும்படி போர்க்களத்திலே புகுந்து, தன்னுடைய தண்டாயுதத்தினாலே யாவரையு மடித்து, தேரோடு தேர்களைத்தாக்கி நொறுக்கியும், யானையோடு யானைகளைமோதிச் சிதைத்தும் - குதிரையோடு குதிரைகளைவீசி யழித்தும் - பதாதியோடு பதாதிகளைச்சாடிக் கொன்றும் - கைகளினாலே யோங்கியறைந்தும் - கால்களினாலே யுதைத்து மிதித்தும் - இப்படிக்குப் பலபலவிதமாக அனேகஞ்சேனைகளை மடித்தான்.

அதுகண்ட உருத்திரர் - வசுக்கள் - அருக்கர் - மருத்துவர் - என்று சொல்லப்பட்ட பலவகைத் தேவர்களெல்லாம் வெகுகோடி சதுரங்கசேனைகளுடனே அதிவேகமாகவந் தெதிர்த்துக்கொண்டு,மேகம்போல முழங்கி அட்டகாசம்பண்ணி, சூலாயுதம் - வேலாயுதம் - வாளாயுதம் - வச்சிராயுதம் - தண்டாயுத முதலானவனேக வாயுதபாணங்களினாலே கும்பகர்னனுடைய சரீரமுழுது மிரத்தவெள்ள மொழுகியோடும்படி துளைத்துப் பிளந்து, அளவில்லாத ராக்ஷசசேனைகளையுஞ் சின்னாபின்னப்பட் டழியும்படி யடித்தார்கள். அப்பொழுது ராவணன் பிரளயகால ருத்திரன்போல மகா உக்கிரகோபங்கொண்டு, இந்தக்ஷணமே தேவர்களென்கிற பெயரே இல்லாதபடியழித்து என்னுடைய வெற்றிப்புகழை நிலைநிறுத்துவேனென்று பிரதாபம்பேசி அட்டகாசஞ்செய்து, அதிவேகமாகத் தேரை முடுக்கி எதிர்த்துக்கொண்டு, கையிலேவில்லையெடுத்து நாணேறிட்டுக் குணத்தொனிபண்ணி, சத்தமேகங்களுங்கூடி நெருப்புமழை பெய்தாற்போல அக்கினிமயமான வனேககோடி பாணங்களைத் தொடுத்துச் சரவருஷமாக வோயாமற் பொழிகிறான். அப்போதப்பாணங்களினாலே தேவசேனைகளெல்லா நெருப்பிலகப்பட்ட பஞ்சுபோல் நீறாகிமடிய, அதைக்கண்ட தேவேந்திரனானவன் இராவணனைப்பார்க்கிலு மதிகோபங்கொண் டெதிர்த்துநின்று, அவ்விராவணனுடைய தலைகளிலும் - தோள்களிலும் - மார்பிலும் - பாணமயமாக நிறையும்படி விஷரூபமான அனேககோடி யக்கினிச்சரங்களைச் சொரிந்தான்.

அதற்கெள்ளளவாகிலும் பலங்குறைந்து சலியாத இராவணனானவன் பின்னுமப்படியவ்விந்திரன்மேலே அனேகபாணங்களைவிட்டான். இந்திரனுமப்படி அனேகபாணங்களை விட்டான். இப்படியே பின்னும் பின்னு மொருவருக்கொருவ ரிளையாமல் அனேக பாணங்களைப் பொழிந்துகொண்டு சமமான கோரயுத்தம்பண்ண, அவ்விருவருடைய சேனாசமுத்திரத்தி லுள்ள படைத்தலைவர்களும் - சுத்தவீரர்களும் - அவர்களைப்போலவே ஒருவரோடொருவ

ரெதிர்த்துக்கொண்டு, உலகமெங்கும் பாணமயமாக நிறைந்து இருளும்படி சரவருஷமாகப்பொழிந்து மிகவும் கொடுமையானயுத்தம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். அவர்களுள் தேவர்சேனையிலுள்ள படைத்தலைவர்களெல்லோருமொன்றுகத்திரண் டாரவாரித்து அதிககோபத்துடனே மிகவும் பலங்கொண்டு பலபலவிதமாயுள்ள அனேகவஸ்திர சஸ்திரங்களினாலே இராக்ஷசசேனைகளெல்லா மடிந்தழியும்படியாக யுத்தம்பண்ணும்பொழுதில் இராவணனுனவன் அதைக்கண்டு, உலைமுகத்து நெருப்புப்போல் மனங்கொதித்து, சிறிதும் சகிக்கமாட்டாதவனாய்த் தன்னுடைய சாரதியைப் பார்த்துச் சொல்லுகிறான்.

அப்பா வலவனே! இயானுன்னுடைய கைத்தொழில் வல்லமையை இன்றைக் கறியவேண்டும், இந்தத்தேரினை யொருநிமிஷத்திலே தேவர்களுடைய சேனைக்கு நடுவேகொண்டுபோய் விட்டாயானால், இப்பொழுதே யென்னுடைய பகைவரைச் செயித்து மூன்றுலோகமும் என்னுடைய வாக்கினைப்பிரகார நடக்கும்படியாக இராசரீகஞ் செய்வேன். ஆகையா லிந்தவுபகார மெனக்கு நீ செய்யவேணும். என்று நயமாகச் சொல்லவும் அதுகேட்ட அந்தச் சாரதியானவன் இரதத்தை அரைநிமிஷத்திலே மனோவேகத்திலும் அதிவேகமாகப்போக்கி, எதிரேநின்ற சேனையைப்பேதித்து உள்ளே செலுத்திக்கொண்டுபோகிறான். அப்படி போம்பொழுதில் அதுகண்ட தேவேந்திரன் தன்னுடைய பக்கத்திலேநின்ற தேவர்களைப் பார்த்து, ஓ நண்பர்களே! என்னை வஞ்சனையாலே அபசயப்படுத்துவருகிற இந்தராவணனை இப்பொழுதே யுங்களுடைய மனசு சந்தோஷத்தை யடையும்படிக்குப் பிடித்து, தோளோடு தோள்சேரக் கட்டுகிறேன் பாருங்களென்று சொன்னான். அப்படி யவன்சொல்வதற்கு முன்னமே தேரோ டிராவணன்வந்து கிட்டினான். அவன்கிட்டவே தேவேந்திரன் பயந்து மறைந்தோடிப் போயினான்.

அப்பொழுது ராவணனானவன் நூறுயோசனைதூர விஸ்தார நிறைந்து நின்ற தேவசேனையினுள்ளே திசைதிசைக்குத் தேரைமுடுக்கித் திருப்பிவளைத்து, தன்னுடைய பாணங்களினாலே சென்ற சென்ற விடமெங்கும் பாழாக வனேகஞ்சேனைகளை மடிக்கத் தலைப்பட்டான். அச்சமயத்தில் ஒரு பெரியபருவதத்தைக் கார்காலத்துமேகங்கள் கவிந்து மூடிக்கொண்டாற்போல, முன்பு மறைந்தோடிப்போன தேவேந்திரன் அளவில்லாத சேனைகளைத் திரட்டிக்கொண்டுவந்து இராவணனைவளைத்து நெருக்கினான். அப்பொழுது ராக்ஷசசேனையெல்லா மின்றோடே இலங்கை மன்னவ னிறந்துபோய் விட்டானென்று பயந்து முறையிட்டலற, அந்தச் சத்தங்கேட்ட இராவணனுடைய குமாரனாகிய மேகநாதனானவன் மிகவுங்கொடிய கோபங்கொண்டு, அதிவேகமாகவந்து, தகப்பனை வளைத்துக்கொண்டிருந்த சேனைகளெல்லாஞ் சின்னபின்னமாய் முறிபட்டோடத் துரத்தி, தேவேந்திரன்மேலே திரும்பி யெதிர்த்துக்கொண்டு, அவனுடைய தேரும் குதிரையும் சாரதியும் அவ

னும்.— உருத்தெரியாதபடிக்கு அனேககோடி பாணங்களை இடைவிடாமல் மேலுமேலுஞ் சொரிந்து நிலைகுலைந்து சாயும்படி யடித்தான்.

அப்பொழுது தேவேந்திரன் நமக்குச் சத்துருக்களாயுள்ள பலசவுரியம்பொருந்திய அனேகமான ராக்ஷசர்களுடனே மகத்தான யுத்தங்கள் செய்திருக்கிறோம். ஆனாலு மிப்பொழுதிவனாலேபடப்பட்ட துன்பத்தை யொருகாலத்திலும் பட்டறியோம். என்று பயந்து மனங்கலங்கித் தேரிலிருந்து நிர்வாகிக்கமாட்டாம லந்தத்தேரைவிட்டு, மிகவும் பலமும் வேகமும் பொருந்திய அயிராவதத்தின்மே லேறிக்கொண்டு, மகா வுக்கிரகோபத்துடனே பலபலவிதமாயுள்ள அனேக பாணங்களினாலே தன்னை யெதிர்த்துநின்ற இராக்ஷசசேனைகளெல்லாஞ் சின்னாபின்னப்பட்டழிய மடித்து, பின்னுஞ் சிலராக்ஷசர்கள் நாமெல்லோரு மெப்படிக்குத் தப்பிப் பிழைப்போமென்று பயந்து முறிந்தோடத் துரத்தி, மேகநாதனும் பிரமித்துப் பயப்படும்படிக்கு நெருங்கிச் சீறிக்கொடுமையான யுத்தம் பண்ணிக்கொண் டிருந்தான். அப்படியவ னிருக்குமளவில் அந்த மேகநாத னவனை யுத்தம்பண்ணி வெல்லக்கூடாமல் வஞ்சனையினாலே வெல்லவேணுமென் றுலோசித்து, முன்பு தனக்குப் பரமசிவன்கொடுத்த வரத்தினாலே உலகமெங்கும் அந்தகாரப்பட் டிருளும்படிக் கொரு மாயைசெய்து மயக்கினான்.

மேகநாத னிந்திரனைப் பாசத்தாற்கட்டி இராவணனிடங் கொண்டுசெல்ல வவன்மகிழ்ந்தவனுட னிலங்கைக்குப்போ யவ்விந்திரனைச் சிறையிடல்.

கவி.

செய்வதொன் றறி யாதுசிந்தை கலங்கியிந்திர னின்றிடக்
கய்யுமெய்யு மகப்படத்தெறு காலபாச மிதாமெனும்
வெய்யபாச முறப்பிணித்தனன் மேகநாதன் விளங்குசீர்
அய்யவெய்ய வரக்கரானவ ராடினார்சுரர் வாடினர்.

அப்பொழுது தேவசேனையிலுள்ள வெல்லோருமயங்கிச் செயலழிந்து, கைகால் சோர்ந்து கண்ணுந்தெரியாமல் மூர்ச்சையடைந்து கிடந்தார்கள். தேவேந்திரனுஞ் சிந்தைகலங்கி யொருசெயலுந் தோற்றாமல், சித்தப்பிரமைகொண்டவன்போல் மயங்கி நின்றான். அப்படிக்குநின்ற தேவேந்திரனை அந்த மேகநாதன் யமனுடைய பாசத்துக்குச் சமானமான ஒரு பாசத்தினாலே கட்டி, இராக்ஷசசேனைகளெல்லாம் இந்திரனகப்பட்டுக் கட்டுப்பட்டானென் றுவாரித்துச் சூழ்ந்துவரத் தன்னுடைய தகப்பனாகிய இராவணனுக்கெதிரே கொண்டுபோய் நிறுத்தி, ஓ எனதையாவே! நமக்குப் பகைவனா யிருப்பதல்லாமல், நம்முடைய குலத்திலுள்ள வனேகமான பலம்பொருந்திய இராக்ஷசர்களையழித்த பராக்கிரமனாகிய இவ்விந்திரன் எனக்காற்றமாட்டாமலென்கையிலகப்பட்டுக் கொண்டான். ஆனபடியினா லினிமே லுமக்கொரு பகையுமில்லை. அன்னத்தைப் பழிக்கு மழகிய நடையினையுடைய ஊர்வசி முதலான தேவஸ்திரீகளு முமதுமனசுக் கேற்றபடி நடப்பார்கள். இந்த மூன்றுலோ

No. 85.



இராவணன் மேகநாதனைச் சிறையிட பிரமன் வேண்டுகோளால் விடுத்தல்.



உத்தரகாண்டம்.

கத்துக்கு நீரே யதிபதியாகி இராஜரீகம்பண்ணி யாளுவீர். என்றிப்படித் தன்னுடைய பிரதாபங்களைச் சொல்லக்கேட்ட இராவணனானவன் புத்திரனாலே பிதா வடையப்பட்ட பிரயோசனத்தை யடைந்தவன் நானேயென்று மிகவு மானந்த சந்தோஷமாக மனம்பொங்கி, இருபது தோள்களும் பூரித்து, மகனை மார்பிறுகத் தழுவிக்கொண்டு, தேவர்களுக்கெல்லா மதிபதியாகிய தேவேந்திரனை நீ செயித்தது இந்த மூன்றுலோகத்தையுஞ் செயித்து வெற்றிகொண்டதல்லவோவென்று மகனை யருமையாகக் கொண்டாடி யுபசரித்து மகிழ்ந்தான்.

அதன்பின் பந்தராவணனானவன் தனக்குச் செயந்தருவித்த மேகநாதனோடு, கட்டுப்பட்ட இந்திரனும் - படைத்தலைவர்களும் - பரிவாரசேனைகளும் கூடவரச் சுவர்க்கலோகத்தினின்று நீங்கி இலங்கையை நோக்கி வருகிறான். அப்படி வரும்பொழுது அவ்விலங்காபட்டணத்திலுள்ள சகல செனங்களு மெதிர்கொண்டுவந்து வணங்கிப்புகழ்ந்து உபசாரஞ்செய்ய, அவர்களுடனே தன்னுடைய லங்காபட்டணத்துக்குள்ளே பிரவேசித்துத் தேவேந்திரனைச் சிறைக்கூடத்திலே வைத்து மிகவுஞ் சந்தோஷத்தை யடைந்திருந்தான். அப்படி யிருக்குங்காலத்திற் சகலமான தேவர்களும் அரசிழந்த குடியாகத் துன்பத்தை யடைந்தவர்களாய் என்னசெய்வோமென் றாலோசித்து, உடனே சத்தியலோகத்துக்குப் போய்ப் பிரமதேவரைக் கண்டு வணங்கி நமஸ்கரித்து, சுவாமீ! இராவணனானவன் யுத்தம்பண்ணிக்கொண் டிருக்கிற சமயத்திலே அவன் குமாரனாகிய மேகநாதனென்பவன் எங்களுடைய ராஜாவை வஞ்சனையினாலே அபசயப்படுத்திப் பிடித்துக்கொண்டுபோய் இலங்காபட்டணத்திலே சிறைவைத்திருக்கிறான். இந்தச் செயல்களெல்லா மும்முடைய மகிமையினாலே யுண்டானதல்லவோ? ஆகையாலிப்பொழுது எங்களிடத்திலே கிருபைவைத் திரக்ஷிக்கவேண்டுமென்று முறையிட்டு வேண்டினார்கள். அதுகேட்ட பிரமதேவர் அவர்களைச் சன்மானித்து, ஓ சுவர்க்கலோகவாசிகளே! இனி நாமே யுங்களுடைய ராஜனைச் சிறையினின்றும் விடுவித்து முன்போல விருக்கச்செய்கிறோம். அஞ்சாதீர்களென்றுசொல்லி அவர்களையுங்கூட வழைத்துக்கொண்டு இலங்காபட்டணத்துக்குவந்து, இராவணனைக்கண்டு ஆசீர்வாதஞ்செய்து சொல்லுகின்றார்.

தேவர்களின் வேண்டுகோளால் பிரம்மதேவர் இராவணனிடஞ் சென்று பிரிய வசனங்கூறி மேகநாதனுக்கு இந்திரசித்துவென்னும் பெயரையும் அவன்கேட்ட வரங்களையுந்தந்து இந்திரனைச் சிறை விடுவித்தல்.

கவி.

1
வந்திலங்கேசற்கண்டு மலரயன்புகல்வான்வைவேல்
வெந்திறலுடையவீர வேறுனக்கெதிரான்றன்
மைந்தனிந்திரனைவென்று வான்சிறைவைத்தலாலே
இந்திரசித்தென்றெல்லா வுலகமுமியம்பப்பெற்றான்.

கேளும் தசக்கிரீவராஜனே! இந்த மூன்றுலோகங்களிலேயும் பலபராக்கிரமசௌரிய விஷயங்களிலே தமக்குச் சமானமாகச் சிலாக்கியத்தை யடைந்தவர்க ளொருவருமில்லை. இப்படிப்பட்ட மேன்மைபொருந்திய உம்முடைய புத்திரனோ? உம்மினு மதிக பலவான். திரிலோகாதிபதியாகிய இந்திரனைச் செயித்துச் சிறையிலேவைத்தான். ஆகையா லிந்தக்காரணத்தினாலே மேகநாதனுக்கு இன்றுமுத லிந்திரசித்தென்று சொல்லப்பட்ட நாமதேயம் விளங்கக்கடவது. என்று சொல்லிப் பின்னும் நயமான வனேக உபசாரவார்த்தைகள்கூறி, ஐயா இலங்காதிபதி! இந்தத் தேவர்களெல்லோரு நம்முன்னிலையாய் உம்முடைய தரிசனத்துக்கு வந்தார்கள். ஆகையா லிவர்களுடைய மனசு சந்தோஷமாகும்படிக்கு இந்திரனைச் சிறைவிடுத் தனுப்பும்படி தயைசெய்யவேண்டும். என்றுசொல்லவும் அதற்கிராவண னவரைப்பார்த்து, ஐயா வாணிகேள்வரே! உம்மைக்குறித் திந்தத் தேவேந்திரனை விடுகிறதினாலே எனக்கென்ன பிரயோசனம்? ஆகையா லிதற்குப் பிரதியுபகாரமாக இந்த லோகமுள்ளளவு மழியாமலிருக்கு நித்தியத்துவத்தை யெனக்குக் கொடுத்தீராகில், நானு நீர் சொல்லியபடியே செய்கிறே னென்றான். இப்படி ராவணன்கேட்டதைப்பிரமதேவர் நன்றாயாலோசித்து, ஓ தசக்கிரீவமகாராஜனே! உலகத்திலே சர்வகாரணனாகிய ஈசுவரனைத்தவிர வேறொருவருக்கு நித்தியத்துவங் கிடையாது. ஆகுங்காரியத்தைக் கேட்டாற்செய்யலாம். ஆகாத காரியத்தை யார்தான் செய்வார்கள்? நம்மாலே கொடுக்கப்படாத பிரயோசனத்தை நீர் கேட்கிறது தருமமல்லவென்று சொன்னார்.

அப்பொழுது பக்கத்திலிருந்த இந்திரஜித்தானவன் பிரமதேவனைப் பார்த்து, சுவாமி! நானினிமேற்செய்யு மியாகத்திலே யுண்டாகிற இரதத்தின்மே லேறிக்கொண்டு யுத்தம் பண்ணுங் காலத்தில் எனக்கந்தியம் வராம லிருக்கவும், அந்த யாகத்துக்கொரு விகாதமுமில்லாமல் நிறைவேறும்படியாகவும் எனக்கு வரங்கொடுமென்று கேட்டான். அந்தப்பிரகாரமே கொடுத்தோமென் றனுக்கிரகஞ் செய்தார்.

கவி.

சிறையினாடிருந்தவந்தத் தேவர்கோன் றன்னைவிட்டு
மறையவன் றனக்குக்காட்டி மானவேன்மருமத்தூன்ற
உறுதுயர்பொறுக்கலாற்று தொருவரையெடுத்துநோக்கான்
சறைகெழுவேற்கைவானோர் காவலன்கவிழ்ந்துநின்றான்.

அன்னதன்மையனாய்நின்ற வமரர்கோன் றன்னைநோக்கிக்
கன்னிசர்தோளாய்முன்பு கவுதமனிட்டசாபம்
உன்னைவந்துறுதலாலே யுனக்கிதுவந்ததுன் றன்
பொன்னகர்புகுதியென்று விட்டயன்போயினானால்.

அப்படிக்கு வரம்பெற்ற இந்திரஜித்தானவன் மிகவுஞ் சந்தோஷத்தை யடைந்து, சிறைக்கூடத்திலிருந்த இந்திரனை வரவழைத்துப் பிரமதேவருக்

கெதிராகக் கொண்டுபோய்விட்டான். அப்பொழுது தேவேந்திரனுனவர் அற்பபிராணியாகிய ஒரெறும்பினாலே பெரிய மதயானையானது துன்பப்பட்டாற்போல இந்த ராவணன் மகன்செய்த மாயத்தினாலே நமக்கிப்படிப்பட்ட துன்பங்களெல்லா நேரிட்டதல்லவோவென்று மிகவுந் துக்கத்தை யடைந்து, சரீரமுழுதுங் குன்றி வெட்கப்பட்டு, ஒருவரையும் பாராமல் தலைகவிழ்ந்து நிலத்தைப் பார்த்தபடியாய் நின்றான். அக்கால் பிர்மதேவ ரிந்திரனை நோக்கி, கேளாய் தேவராஜனே! முன்பு கவுதமர்கொடுத்த சாபத்தினாலே உனக்கிப்படிப்பட்ட துன்பங்களெல்லா நேரிட்டன. தவமகிமைபொருந்திய மகாரிஷிகளுடைய சாபத்தை ஒருவரு நீக்கமாட்டார்கள். ஆனபடியினாலே நீ விசனப்படவேண்டாம். என்று தேவேந்திரனுக் குபசாரஞ் சொல்லிஇராவணனிடத்தினுத்தரவுசெய்வித்து, தேவர்களுடனே தேவேந்திரன் சுவர்க்கலோகத்திலே போயிருக்கும்படியாக வனுப்பித் தாம் தம்முடைய சத்தியலோகத்துக்குப் போயினார்.

திக்குவிஜயப்படலம் — முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

ஒன்பதாவது,

கார்த்தவீரியார்ச்சுனப் படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமருக்கு இராவணனுடைய சுபஜயங்களைச் சொல்லி முடித்த அகஸ்தியமகாமுனிவர் மீட்டுமவர் வேண்டுகோளின்படி அவனது அபஜயங்களைச் சொல்லப் புகுந்து, கார்த்தவீரியார்ச்சுனன் திக்குவிஜயஞ் செய்துகொண்டு இலங்கையை நோக்கிச் செல்ல இராவணன் நருமதைநதி தீரத்திற்குப் போயிருத்தலைக் கேட்டுச்சென்றுஅந்நதியிலோர்பால் பல ஸ்திரீகூட்டங்களோடு ஜலக்கிரீடை செய்துநிற்ப, அதனாலவன் சிவபூசைக்கு விக்கினமுண்டான ஒரேதுவினாலே இருவர்க்கும் போர்மூள, அப்போரிற் கார்த்தவீரியார்ச்சுனன் இராவணனைத் தோளோடு தோள்சேர்த்துக்கட்டித் தனது பட்டணத்திற்குக் கொண்டுபோய்ச் சிறைக்கூடத் தடைப்ப, அஃதறிந்து வருந்திய விபீஷணன் வேண்டுகோளாற் புலஸ்தியரானவர் அவனை யச்சிறையினின்றும் விடுவித்தமை சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமபிரான் பூலோகவரசர்களா லிராவணன் தோற்றதில்லையோவென்று அகத்தியரைக்கேட்க, அதற்கவர் கார்த்தவீரியார்ச்சுனனாற் கட்டுண்ட சரித்திரங்கூறல்.

கவி.

அரக்கர்கோன்விசயமடங்கலுங்கேட்ட வாழியானதிவியப்பெய்தித்
திரைக்கடலுலகம்வெருக்கொளவரக்கன் செருச்குநாட்டேயமன்னவரில்

ஒருத்தருண்டாகவுரைத்திலையடைந்த தவவலியுடையரானவரை
உரைத்திரீயென்னவுயர்பரம்பொருளு முத்தியுண்குறுமுனியுரைக்கும்

இவ்வண்ணம் இராவணனுடைய திக்குவிஜயப் பிரதாபங்களையெல்லாம் சக்கரதரனாகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் கேட்டாச்சரியப்பட்டு, ஐயா முனி புங்கவரே! அலைகளையுடைய சமுத்திரஞ்சூழ்ந்த உலகம் அச்சங்கொள்ளும் படி அவ்விராவணன் யாவரையும் ஜெயங்கொண்ட நாள்களில், பூலோகவர சர்கட்குள் அவனை ஜெயம்பெற்றவர்க ளொருவரையு நீர்கூறவில்லை: அப்படி செயம்பெற்றவர்களாகிய தவவலியுடையோரிருக்கின், அவர்களைச் சொல்லு மென்றுகேட்க வதற்ககத்தியமாமுனிவர் கூறுகின்றார். கேளும்கௌசலைதன யரே! சத்துருக்களென்று வாயினாலேயாகிலுஞ் சொல்லுகிறதற் கொருவரு மில்லாமல் இந்தவுலகமெல்லாந் தன்னுடைய ஆக்கினைப்பிரகார நடக்கும்படி இராச்சியபரிபாலனஞ் செய்யும் கார்த்தவீரியார்ச்சுன னிடத்திலும், வாலியி னிடத்திலும், இராவணனானவன் தனக்கு மேலான பலமுடையதொன்றுமி ல்லாத சரபத்தினிடத்திலே ஒருசிறுநரி யகப்பட்டதுபோலத் தன்னுடைய பல பராக்கிரமமெல்லா மிழந்து கட்டுப்பட்டான். சக்கரவர்த்திகளாயினும் சத்துருக்க ளில்லாதவர்கள் யார்? என்று சொல்லவும் அதுகேட்ட ஸ்ரீராமர் பின்னுமதிகமான சந்தோஷத்தையடைந்தவராய் அவ்வகஸ்திய மகாமுனிவ ரைநோக்கி, சுவாமி! அவ்விருவரிடத்திலு மிராவணன் கட்டுப்பட்ட விதங் களை நன்றாய் விவரித்துச் சொல்லவேணுமென்று கேட்க அகஸ்தியபகவான் சொல்லத் தொடங்கினார்.

கேளும் தசரதநந்தனா! முன்னமொருகாலம் தனக்கு நிகரான பலமு டையவர்க ளொருவருமில்லாத பராக்கிரமனும், ஆயிரந்தோள்க ளுடையவ னும், கார்த்தவீரியார்ச்சுனனென்று சொல்லப்பட்ட பெயரையுடையவனு மாய் ஒருவனிருந்தான். அவனளவில்லாத தன்னுடைய பரிவாரசேனைகளு டனே உலகத்திலே சத்துருக்களென் றெதிர்த்தவர்க ளெல்லாரையுஞ் செயி த்து வெற்றிகொண்டு வருமளவில் இலங்காபட்டணத்தைச் சார்ந்து, இரா வணனென்று சொல்லப்பட்டவனெவன்? அவனெவ்விடத்தி லிருக்கின்றான் அவனை யுத்தம்பண்ண வெளியிலே புறப்பட்டு வரச்சொல்லுங்கள். என்ற றைகூவிநின்றான். அதற்கவ்விடத்திலுள்ள இராவணனுடைய மந்திரிமார் கள் அவனைநோக்கி, ஐயா சகஸ்திரபுய சம்பன்னரே! நீர் கேட்ட எங்களிரா ஜன் அநேகமான ஸ்திரீகளுடனே சலக்கிரீடை விளையாடல்செய்யவிரும்பி இராஜபரிவாரசேனைகளுடனே நருமதைநதி தீரத்துக்குப் போயிருக்கிறாரெ ன்று சொல்லினர். அதுகேட்ட மாத்திரத்திலே கார்த்தவீரியார்ச்சுனனான வன் அவ்விடத்தினின்றுநீங்கி, இயானையைத்தேடிக்கொண்டு சிங்கம்போவது போல இராவணனைத் தேடிக்கொண்டு அவன்போனவழியே அதிவேகமாகச் செல்லுகின்றான். அப்படியவன் செல்லும்பொழுதி லவனுக்கெதிராகக் குளி ர்ந்த அருவிகளாலும் – இளந்தென்ற லுலாவும் பூஞ்சோலைகளாலும் - அழ

குபொருந்தி, பொன்மயமான ஆயிரஞ்சிகரங்களுடனே ஆகாசபரியந்த முய ர்ந்து விளங்கும் விந்தபருவதத்தைக்கண் டவ்விடத்தி லிருந்தான்.

அவனுக்கு முன்பாகச்சென்ற இராவணன் நருமதைநதி தீரத்தில் பல ஸ்திரீகளோடு ஜலக்கிரீடைவிளையாடல் முடித்து அந்தப் பருவதத்தினுடைய வழகைப்பார்த்து இப்படியு முண்டோவென் றுச்சரியப்பட்டு, அந்தப்பருவ தத்தின் பக்கத்திலே செல்லும் அந்த நருமதைநதியிலே மந்திரி முதலான வர்களுடனே தீர்த்தமாடி, வேதாகமவிதிப்படி மணலாலே இலிங்கம் வகுத் துச் சிவபூசைசெய்துகொண் டிருக்கின்றான். அந்தநதிக்கு மேலாக நெடுந்தூ ரத்திலே இராவணனைத்தேடிவந்த கார்த்தவீரியார்ச்சுனன் அனேகவிதஸ்திரீ களுடனே சலக்கிரீடைசெய்து விளையாடுதற்காக வெண்ணி, தன்னுடைய வாயிரங்கைகளினாலே அந்த நதியைக்குறுக்கே தடுத்து அந்தக்கைகளையே யணையாகக்கட்டி சலத்தைப் பெருக்கினான். அந்த சலமானது சமுத் திரம்போலத் தேங்கியெதிர்த்து மேற்கொண்டு இரண்டுபக்கத்திலுந் ததும்பிப் புரண்டு கரைகளை யுடைத்துக்கொண்டு பெருகியோடத்தலைப் பட்டது. அப்படியோடுகின்ற வெள்ளமானது இராவணனுடைய பூஜாமுக த்திற் பாய்ந்து, அவனாராதித்துவந்த பிரிதிவிலிங்கத்தைக் கரைத்தழித்துப் போயது. அதுகண்ட ராவணன் திடுக்கிட்டெழுந்து திகைத்து, மகாகோப த்துடனே சுகசாரணரை யழைத்து, அகாரணமாக விப்பொழு திந்தவெள்ள மிப்படி வரவேண்டியதென்ன? இந்தக் காரணத்தை நீங்கள் சீக்கிரமாகப் போயறிந்துவாருங்களென் றனுப்புவித்தான். அவர்களு மப்படியேபோய்க் கண்டுவந்து இராவணனைநோக்கிச் சொல்லுகிறார்கள்.

ஓமகாப்பிரபு! கார்த்தவீரியார்ச்சுன னென்று சொல்லப்பட்டவன் ஆயி ரந்தோள்களுடையவன். அவன்றன்னுடைய வாயிரங்கைகளினாலே ஆற் றைக் குறுக்கேதடுத்துச் சலத்தைப்பெருக்கி, அனேகஸ்திரீகளுடனே சலக் கிரீடை செய்துகொண் டிருக்கிறான், அந்தச் சலம்பெருகித் தேங்கிக் கரைபுரண்டு வெள்ளமாகவோடி வருகிறதென்று சொல்லக்கேட்ட இராவ ணன் அந்தக்ஷணமே மந்திரிமார்களுடன் கார்த்தவீரியார்ச்சுன னிருக்குமி டத்தே அதிவேகமாகப்போ யவனுடைய மந்திரிமார்களைப்பார்த்து, இராவ ணன் யுத்தத்துக்கு வந்திருக்கிறானென்று உங்களுடைய ராஜாவுக்குத் தெரி வியுங்களென்று சொல்லினான்: அதற்கவர்கள் எங்களுடையராஜா சில ஸ்தி ரீகளுடனே விநோதமாகச் சலக்கிரீடைசெய்து கொண்டிருக்கிற சமையமாதலால், இப்போது நாங்களும்முடைய காரியத்தை அறியப்பண் ணவுங்கூடாது. உயுத்தத்துக்கழைப்பதுவு நியாயமல்ல. நாளைக்குவந்தால் நீங்களிருவரும் யுத்தம்பண்ணலாம். என்று சொன்னமாத்திரத்திலே இராவ ணன் மிகவுங்கோபித்தூர்சிறி, அந்த மந்திரிமார்கள்மேலே புலிபோலப் பா ய்ந்தான். அவர்களுங் கோபங்கொண் டனேகசேனைகளுடனே யெதிர்த்துக் கொண்டார்கள். அதுகண்டு ராவணனுடைய மந்திரிமார்களு மெதிர்த்தார் கள்.

இப்படியவ் விருவகை மந்திரிமார்களு மொருவருக்கொருவர் அஸ்திர சஸ்திரங்களை மழைபோலப் பொழிந்து போர்க்களமெங்கு மிரத்தவெள்ளம் பெருக மிகவுங்கொடுமையான யுத்தம்பண்ணிக் கொண்டிருக்குமளவில், கார்த்தவீரியன்படை முனைந்து இராவணன் சேனையிலே அனேகஞ்சேனையை மடித்தது. அதுகண்ட மகோதரன் — மாரீசன் — விருபாக்ஷன் — தூம்ராக்ஷன் முதலான சேனாபதிகள் கோபங்கொண்டெதிர்த்து வேல்—சூலம் - தண்டம்- இருப்புலக்கை இவைமுதலான வாயுதங்களினாலே மோதியடித்தார்கள் அதனாலனேகஞ்சேனைகள் மடிந்து முறிபட்டோடிக் கார்த்தவீரியார்ச்சுனனிடத்தில் சாய்ந்து விழுகிறபொழுதில், அதைக்கண்ட ஸ்திரீகளெல்லாரும் விளையாடுகிறதை மறந்து நடுங்கிப் பயப்பட்டார்கள். அப்பொழுது கார்த்தவீரியனானவன் அந்த ஸ்திரீகளெல்லாரும் பயப்படாமலிருக்கத் திடஞ்சொல்லி நிறுத்தி, சலக்கிரீடை விளையாட்டைவிட்டுக் கரையேறி, மகாவுக்கிர கோபத்துடனே வந்து இராவணன் சேனையெல்லாந் திசைதிசையாய் நிலைகெட்டுமுறிந்தோடும்படிக்கு மோதிவதைத்தான். அப்பொழுதவனுடனே பிரஸ்தனெதிர்த்துக்கொண்டு தன்னுடையபல பராக்கிரமங்களெல்லாங் காட்டி, அனேக வாயுதபாணங்களினாலே அளவில்லாத சேனைகள்மடிய மோதியடித்து மேற்கொண்டு வருகிறான்.

அதைக்கண்ட கார்த்தவீரியன் தன்னுடைய ஒருகையிலேயிருந்த தண்டாயுதத்தினாலே பிரகஸ்தனை யோங்கியடித்துத் தரையிற் சிதறிவிழத்தள்ளி, பின்னு மகாவுக்கிரவேகத்துடனே சேனைகள்மேற் சென்று மோதிவருகிறான் அக்காலொருவரு மவனுக்கெதிர்நிற்க மாட்டாமற் பயந்து நிலைகுலைந்து, மகோதரன் முதலான படைத்தலைவர்களுஞ் சேனைகளு முறிந்தோடுகிறார்கள். அதைக்கண்ட ராவணனானவன் ஊழிகாலத்துப் பெருநெருப்புப்போலக் கோபங்கொண்டு சீறி, தன்னுடைய சேனைகளையெல்லா மோடாதபடி நிறுத்தி, கையிலேயொரு தண்டாயுதத்தை யெடுத்துக்கொண்டு மனோவேகமாகப் பாய்ந்து கார்த்தவீரியனை யடுத்தான். அவனு மெதிர்த்தான். அப்பொழுதவர்களிருவரு மலையுமலையும் - தீயுந்தீயும் - சிங்கமுஞ்சிங்கமும் — இயானையுமியானையு மெதிர்த்ததுபோலப் போரில்மூண்டு, இடிபோல முழங்கிக் கதாயுத்தஞ்செய்துகொண்டிருந்தார்கள். அப்படியிருக்குமளவி லிராவணனானவன் தன்னுடைய பலமுழுதுங்கொண்டுரத்துக் கார்த்தவீரியன் மார்பிலே யடித்தான். அவனந்தவடியை வாங்கிக்கொண்டு அதற்கெவ்வளவுஞ் சலியாமற் புன்சிரிப்பாகச் சிரித்து இதனைச்செய்வதாயினான்.

கார்த்தவீரியார்ச்சுனன் இராவணனைக்கட்டித்தன்னகரத்துக்கேகிச்சிறையிடுதல்.

கவி.

தண்டுவாண்முசலஞ்சக்கரஞ்சூலந் தடமழுத்தோமரநாஞ்சில்
பிண்டிபாலங்கோன்முதலவாயுதங்கள் பெருங்கையாயிரங்களால்வாங்கி
கொண்டுமேல்வீழ்ங்கொடுந்திறலரக்கர் குலைந்துகெட்டோடிடத்துரந்து
திண்டிறனிருபன்றிருநகர்புகுந்து தீயவன்றனைச்சிறைவைத்தான்.

86. இராவணன்கார்த்தவீரியனாற்கட்டுண்டு புலஸ்தியரால்விடுபடல்.



இராவணன்வாலிவாலிற்கட்டுண்டு, தாரையால்விடுபடல்.



இராவணன் கார்த்தவீரியனாற்கட்டுண்டபடலம்.

அடா தசக்கிரீவா! உன்னுடையபலமெல்லா மிவ்வளவுதானோ: இனி யிவ்வளவுபலத்துடனே நீ என்னசெய்யமாட்டுவாய் சிங்கத்துக்கு நரியானதெப்படியோ அப்படிப்போல நீ எனக்கு லக்ஷியமல்ல. ஆனாலுமென்னுடைய பலத்தைச் சற்றேபார். என்றந்தக் கார்த்தவீரியனோங்கி யோரடியடித்தான். அந்தவடி பொறுக்கமாட்டாம லிராவண னிலைகுலைந்து, இடிவிழுந்த நாகம் போலச் செயலழிந்து நின்றான். அதுகண்ட கார்த்தவீரிய னவனைத் திருடனைக் கட்டினாற்போலத் தோளோடு தோளிறுக்கச் சேர்த்துக்கட்டி முன்னே நடத்திக்கொண்டு போகிறான். அப்பொழுது நம்முடைய ராஜனை இவனிப்படிக் கட்டிக்கொண்டுபோக நாமெல்லோரும் பார்த்திருக்கலாமோ வென்று மகோதரன் மாரீசன் முதலானவர்கள் பின்றொடர்ந்து, கார்த்தவீரியனை நில் லுநில்லென்றுதடுத் தெதிர்த்தார்கள். அப்பொழுது கார்த்தவீரியனு மகா வுக்கிரகோபத்துடனே நரிக்கூட்டத்தின்மேலே சிங்கந் திரும்பினாற்போல அந்தமகோதரன் முதலானவர்கள்மேலே திரும்பி தன்னுடைய வாயிரங்கைகளிலும் பிடித்திருந்த தண்டம்—வாள் - இருப்புலக்கை — சூலம் — மழு - கைவேல் — கலப்பை - பிண்டிபாலம் - கோல் — முதலியவாயுத பாணங்களினாலே மோதியடித்துச் சின்னாபின்னப்படுத்தித் துரத்திவிட்டு, தன்னுடைய பட்டணத்துக்குப்போய் இராவணனைச் சிறைக்கூடத்திலே யடைத்து மிகவுஞ்சந்தோஷத்தை யடைந்திருந்தான்.

விபீஷணர் வேண்டுகோளின்படி புலஸ்தியப் பிரம்மாவினாற் கார்த்தவீரியார்ச்சுனன் இராவணனைச் சிறைவிடுதல்.

கவி.

கெட்டவாளரக்கர்களர்பெரும்பயத்தாற் கேடில்சீரிராவணனமரில்
பட்டபாடெல்லாம்வீடணற் குரைப்பப் பரிவுறுமனத்தினனவன்போய்ச்
சிட்டனுயுள்ளபிதாமகற்குரைப்பச் சிந்தைநொந்தச்சிறைவிடுப்பான்
வட்டமாமதில்சூழருச்சுனன் வாழும்வளநகர்மாமுனிவந்தான்.

கார்த்தவீரியார்ச்சுன மகாராஜனாலே யடிபட்டோடிய மகோதரன்முதலிய கொடியவரக்கர்களெல்லாங்கூடி இலங்காபட்டணமடைந்து இராவணன் பட்டபாடும் நாங்கள்கெட்டகேடு மிப்படி யிருந்ததென்று விபீஷணனிடத்திலே நடந்த விருத்தாந்த மெல்லாஞ் சொல்லிப் புலம்பிப் பரிதாபப் பட்டார்கள்.

அதுகேட்ட விபீஷணன் மிகவும் விசனத்தையடைந்து, சிறையிலகப் பட்டிருக்குந் தமையனை மீட்பதற் குபாயமென்னவென் றாலோசித்து, தன்னுடைய பாட்டனாகிய புலஸ்திய ரிடத்துக்குச் சீக்கிரமாகப்போய் தமையன்செய்தி இப்படியென்று சொன்னான். அதுகேட்டவவரு முடனே புறப்பட்டுக் கார்த்தவீரியார்ச்சுனன் பட்டணத்துக்கு வந்தார். அவர்வருகிற சமாசாரங்கேட்ட கார்த்தவீரியன் அவரையெதிர்கொண் டுபசரித்தழைத்துப் போய் ஆசனங்கொடுத் திருக்கச்செய்து, என்னிடத்துக்கு வந்தகாரியமென்

னமென்று கேட்டான். அதற்கவரவனை நோக்கி, இராவணனானவ னெடுங்கால மிகவுங்கொடிதான தபசுகள் பண்ணிப் பிரமதேவரிடத்திலும் பரமசிவனிடத்திலும் வரம்பெற்று, அவ்வரத்தினுடைய பலத்தினாலே திரிலோகாதிபதியாகிய தேவேந்திரன் முதலானவர்களை வெற்றிகொண்டு, அவ்வெற்றியாகிய திரவியத்தை யுமக்குத் திறையாகக் கொடுத்து உம்முடைய சிறையினுமகப்பட்டிருக்கிறான். இப்படி யவனைச்செய்த உமக்கு நிகரானபலவான்களொருவருண்டோ. ஆகையாலிந்த ராவணன்மேலே வைத்த கோபத்தை யொழித்து அவனைச் சிறையினின்றும் விடும்படிக்குத் தயைசெய்யவேணுமென்று சொல்ல அப்படியே கார்த்தவீரியார்ச்சுனன் இராவணனைச் சிறையினின்றும் விடச்செய்து, அந்தப் புலஸ்தியமகாமுனிவருக் குபசாரஞ்செய்தனுப்பினன். அவரும் பிரமலோகத்துக்குப் போயினர். இராவண னிலங்காபட்டணஞ் சேர்ந்திருந்தான்.

கார்த்தவீரியார்ச்சுனப் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பத்தாவது,

வாலிவாலாற் கட்டுண்ட படலம்.

இப்படலத்தில் கார்த்தவீரி யார்ச்சுனனுடைய சிறையினின்றும் விடுபட்ட இராவணனானவன் பின்னும் தன் துர்க்கிருத்தியங்களை விடாது செய்துகொண்டு கிஷ்கிந்தைக்குப்போய் வாலியைத்தேட, அவனுக்கவ் வாலிபத்தினியாகியதாரை அவனிருக்குமிடந் தெரிவிக்க, உடனே தசக்ரீவன் அத்திக்கை நாடிச் சென்று சிவபூசையிலிருக்கு மவன்பாற் சேட்டைசெய்ய, அதுகண்ட வாலி யவனைத் தன்வாலாற் கட்டிக்கொண்டு நாற்றிக்கினும்போய் தனக்குரிய நியமாதிகளை முடித்துக்கொண்டு கிஷ்கிந்தைக்குச் செல்ல, அங்கே தாரையானவளதுகண்டிரங்கி விடுவிக்க, பின்னரவன் வாலியாற் சன்மானிக்கப்பட் டிலங்கையை யடைந்திருந்தமை சொல்லப்படுகின்றது.

இராவணன் வாலியைச் செயிக்க கிட்கிந்தைவருதல்.

கவி.

சீலமாமுனியாற் சிறைபேர்ந்தவன், காலனென்னக் கனலென்னவெய்யச்சார்
ஆலமென்ன வவனியழித்துமா, வாலிமன்னும் வளநகரெய்தினன்.

இந்தப்பிரகாரம் அகஸ்தியமகாரிஷியானவர் கார்த்தவீரியார்ச்சுனனிடத்திலே இராவணன் கட்டுப்பட்ட கதையைச் சொல்லக்கேட்ட ஸ்ரீராமர் மிகவுஞ் சந்தோஷத்தை யடைந்தவராய்ப் பின்னும் அகஸ்திய முனிவரை நோக்கி, சுவாமி! அந்த ராவணன் வாலியினிடத்திலுங் கட்டுப்பட்டானென்று சொன்னீரே: அந்தக் கதையை நன்றாக விவரித்துச் சொல்லவேண்

டுமென்று கேட்டார். அதற்கவ் வகஸ்திய மகாமுனிவரிசைந்து, கேளும் சீதா லக்ஷ்மீநாயகா! ஒழுக்கமிக்க புலஸ்தியப் பிரமரிஷியாகிய தனது பாட்டனுராற் கார்த்த விரியார்ச்சுனனது சிறையினின்று மீண்ட இராவணப்பாதகன், அதனுடன் சும்மாயிராமல், இயமனைப் போலவும், அக்கினியைப் போலவும், விஷத்தைப் போலவும், பூலோகத்தை யழித்து எதிர்ப்பட்டவர்களை யெல்லாங்கொன்று, வாலிமகாராஜ னென்னும் வானராதிபதி யரசுபுரியும் வளமிக்க கிட்கிந்தா நகரத்தை யடைந்தான்.

அப்படி வந்தவனாகிய இராவணன் வாலியினுடைய அரண்மனை புகுந்து வாலியென்பவனெங்கே யெங்கே யென்று தேடினகாலத் தெதிர்ப்பட்ட அவ்வாலியின் பத்தினியாகிய தாரையானவ ளிராவணனைப் பார்த்து, நீயார் பேயைப்போல் இராக்காலத்தில்வந்துதேடுகிறுயே ஏன்தேடுகிறுயென்று கேட்க, நான் இலங்காபுரியாளும் இராவணேஸ்வரன், நான் வாலியோடு யுத்தஞ் செய்து ஜயம்பெறவந்தே னென்றுன். அதற்கவள் - கேளாய் இராக்ஷசா! நீ வாலியாகிய யமனுடனே யுத்தம் பண்ணிப் பிராணனுடனே தப்பிப்போகத் திறமுடையவனே? அல்லாமலும் — முன் புன்னைப்போ லறிவில்லாமல் வந்து வாலியுடனேயுத்தம்பண்ணி, அவனடித்தவடிகட்காற்றுராய் இறந்துபோனது ந்துமிமுதலானவர்களுடைய எலும்புமலையை நீ என்றும் பார்த்ததில்லையோ? ஆயினு நீ போர்செய்ய நினைப்பாயாகில் உன்னுடைய உயிர் யமலோகத்திலும், உன்னுடைய வெலும்புகளிந்த எலும்புமலையிலுஞ் சேருகிறது நிச்சயந்தான். இப்போது என் கணவனுகிய வாலியானவர் தன்னுடைய நித்தியகருமானுஷ்டான முடித்துவரப் போயிருக்கிறுர். அவருமிப்பொழு திவ்விடத்துக்கு வருகிற சமயந்தான் இதற்குள் நீயேன் பதறுகின்றுயென்று சொல்லிப் பின்னும் சொல்லுகிறுள்.

இராவணன் தாரைவார்த்தையாற் றென்றிசைச் சமுத்திரமடைந்து வாலியைக் கட்டவாரம்பிக்க வவன்தன்வாலினுற்கட்டிக் கிட்கிந்தை நகரமடைதல்.

கவி

தரிக்கிலாயெடனிற் றென்றிசைச்சாகரத், தாக்கவேகுதி யாலெனத்தாரையீ
துரைக்கவேகி யுயர்சிவபூசையில், இருக்கும்வாலியை யெய்தினனேச்குவான்.

அவரை நீ விரைவிற்காணவேண்டுமானுல் இப்பொழுது தெற்குச்சமுத்திரத் தீவுக்குச் சிவபூசைசெய்யப் போயிருக்கிறுர். நீயவ்விடத்திற்குப்போனுற் காண்பாயென்று சொல்ல அப்படியே யவ்விராவணன் தன்னுடைய மந்திரிகள் முதலானவர்களுடனே அவ்விடத்து நின்று நீங்கி, உடனே புறப்பட்டுப்போய்த் தெற்குச் சமுத்திரத்தீவு சேர்ந்தான். அப்பொழுதங்கே முன்னமொருகால முப்பத்துமுக்கோடி தேவர்களெல்லோரு மொருபக்கத்திலுந் தாமொருபக்கத்திலுமாக நின்று திருப்பாற்கடலைக் கடைந்து தேவர்களுக்கு அமிர்தங்கொடுத்த பலபராக்கிரமம் பொருந்திய வாலியானவன், மகாமேரு பருவதம்போலச் சரீரமும் - உதயகால சூரியவிம்பம்போல முகமும் - விளங்

கத் தக்கதாகச் சிவபூசாமுகத்திலே கண்களைமூடிக்கொண்டு, சரீரஞ் சற்று மசையாமற் பதுமாசனமாகவிருந்து சிவத்தியானம் பண்ணிக்கொண் டிருக்கிறுன். அந்தவாலியை இராவணன் கண்டு, ஆ! ஆ! நாம்வந்தவேளை நல்ல வேளை. இந்தச் சமயத்திலே இவனைப் பிடித்துக் கட்டலாமென்றெண்ணிக் கொண்டு தன்னுடனேவந்த வெல்லோர்களையுந் தூரத்திலே நிறுத்தி, தானொருவனுந் தனியனாய் மெள்ளவந்து பக்கத்திலே யடுத்துச் சத்தப்படாமற் றிரிய, அதை வாலியானவன் கண்டுங்காணுதவன்போலே யிருந்தான்.

கவி.

வெய்யவாளரக்கன்கையிருபதினால் வீக்கவும்விறன்மிகுவாலி
கய்யினாலவனைநெருக்கெனவிறுக்கி வாலினாற்கடிதுறக்கட்டி
மய்யணிகண்டன்பூசனைமுகித்து வாலுடனிராவணன்றூங்கப்
பய்யராவதனைக்கவ்விவிண்பறக்குங் கருடனின்மேற்கடல்பாய்ந்தான்.

அந்தச் சமயத்திலே ராவணன் வாலிக்குப் பின்னாலேவந்து, மெள்ள மெள்ளப் புலிபோலப் பதுங்கி ஒரே பாய்ச்சலாகப்பாய்ந்து, தன்னுடைய விருபதுகைகளினாலு மவனைப்பலமாகச் சேர்த்துக்கட்டிப் பிடித்தான். அப்படிப்பிடித்த ராவணனை வாலியானவ னிருந்தபடியே ஒருகையினாலே யொதுக்கிக் கக்கத்துக்குள்ளே சேர்த்திறுக்கி, ஆலையிலிட்ட கரும்புபோலச் சரீரத்திலுள்ள வெலும்பெல்லா நொறுங்கும்படி நெருக்கி, பின்பு தன்னுடைய வாலினுனியிலே அவனையொரு மணியாகக்கட்டிக்கொண்டு சிவபூசையினைச்செய்து முடித்துக்கொண்டான். அப்பாலந்த வாலியானவ னவ்விடத்தினின்று மேற்கடற்றீவுக்குப் போகவேணுமென்று நினைத்து, சர்ப்பத்தை வாயிற்கவ்வி ஆகாயத்திற் பறக்குங் கருடனைப்போல் தனதுமூச்சினை யடக்கிப் பலமான விசைகொண் டெழுந்து ஆகாசமார்க்கத்தி லதிவேகமாகப் பாய்ந்தான். அப்படிப்பாய்கிற பிரசண்டவேகக் காற்றினாலே முன்னும்பின்னு முள்ள சிறுமலைகள் - பெருமலைகள் - கல்லுகள் - மரங்கள் முதலியவெல்லா மோதப்பட்டு, அவ்வவைகளு நிலைகுலைந்துபேர்ந்து பறிபட்டு, எங்கும் பின்னுமுன்னுமாகப் பறந்துவீழ்ந்தன. அக்கா லிராவணனுடைய சகலபரிவார சேனைகளு மவனைப் பின்றொடர்ந்து மீட்கப்போகிறவர்கள்போல அந்த வேகக்காற்றினாலேயிழுக்கப்பட்டு, ஆகாசத்திலே சுழற்காற்றி லகப்பட்ட சருகுகள்போலப் பறந்து அலைச்சற்பட்டுப் பின்னு நிலத்திலே வீழ்ந்தன.

இவ்விதமாகியவேகத்துடன் தென்கடலுக்கடுத்த பாரதவருஷமென்று சொல்லப்பட்ட பூமியின்பரப் பொன்பதினாயிரமியோசனைதூர வகலமும், இதற்கடுத்த இமயமென்று சொல்லப்பட்ட மலைப்பரப்பு இரண்டாயிர மியோசனைதூரவகலமும், அதற்கடுத்த கிம்புருஷவருஷமென்னும் பூமிப்பரப்பொன்பதினாயிரமியோசனைதூர வகலமும், அதற்கடுத்த ஏமகூடமென்னுமலைப்பரப்பு இரண்டாயிர மியோசனைதூர வகலமும், அதற்கடுத்த அரிவருஷமென்னும் பூமிப்பரப் பொன்பதினாயிர மியோசனைதூர வகலமும், அதற்கடுத்த சமுத்திரப்பரப்பு இரண்டாயிரமியோசனைதூர வகலமும், ஆகக்கூடியமுப்பத்து

மூவாயிர மியோசனைதூரமு மொரு பாய்ச்சலாகப்பாய்ந்து மேற்குக்கடற்றீவுக்குப்போய் அவ்விடத்திலுஞ் சிவபூசைசெய்து முடித்துக் கொண்டான். பின்னுமப்படியே மேற்குக்கடல்முதல் வடக்குக்கடல்வரைக்கும் — வடக்குக்கடல்முதற் கிழக்குக்கடல்வரைக்கும் - இவைநடுவிலுள்ள பலபூமிகளையும் பருவதங்களையும் பாய்ந்து கடந்து, அந்தத் தீவுகளிலுஞ் சிவார்ச்சனைசெய்து முடித்துக்கொண்டு பின்னுமொரு பாய்ச்சலாகப் பாய்ந்து கிஷ்கிந்தாபட்டணம் வந்து சேர்ந்தான்.

தாரையின் வேண்டுகோளால் இராவணனை வாற்கட்டினின்று மவிழ்க்கவவன் சிநேகமுறை பாராட்டி இலங்கைக்கேகல்.

கவி.

ஆங்கவன்வரக்கண்டகமகிழ்தாரை யவனெடுவாலிடைக்கிடந்து
தூங்கியவரக்கன் றன்றுயர்கண்டு துறுகழல்வாலியைநோக்கி
ஈங்கிவன்யாவனிவனைநீபோக வினிவிடுகெனமனமிரங்கித்
தேங்கமழ்குழலிசெப்பிடவிடுத்துத் தீய்வற்கவனிவைசெப்பும்.

அப்படிவந்துசேர்ந்த வாலிக்கவனுடைய பாரியாகிய தாரையானவள் மிகவுமுபசாரஞ்செய்து; ஓ நாயகா! உம்முடைய வாலிலே கட்டுப்பட்டு, சரீரமுழுவது நொறுங்கி நொந்து புண்ணாகி, மிகவுந் துன்பத்துடனே பயந்துகிடக்கு மிவனெவனோவென்று கேட்டாள். அதற்கவ னவளைப்பார்த்து, ஓ நாயகி! இந்தப் பத்துதலைப்பூச்சி யகப்பட்டது: இதை நீ பார்க்கவேணுமென்று கொண்டுவந்தேனென்று சொல்லக்கேட்ட அவள் வாலியைநோக்கி, ஐயா! உம்முடைய பெருமைபொருந்திய பலத்துக்கிவனொரு லக்ஷியமோ ஆனதால் நீர் தயவுசெய்து இவனை விட்டுவிடவேண்டுமென்று மிகவும் வேண்டிக்கொண்டாள். அதற்கவனப்படியே செய்கிறேனென்று சம்மதித்துக் கட்டவிழ்த்துவிட்டு, அடா இராவணா! இப்பொழுதிப்படிக் கட்டுப்பட்டோமேயென்றெண்ணவேண்டாம். உலகத்திலே யிவன் பலமுடையவனென்றும், இவன் பலமில்லாதவனென்றும், இவன் வெல்வானென்றும், இவன் றோற்பானென்றும், ஒருவனை யொருவராலேயு நிச்சயிக்கக்கூடாது. ஜயமும் அபஜயமு மொருவன் பங்கல்ல. காலமு மொருபடித்தாயிராது. ஆனதாலுனக்கு யுத்தம்பண்ணவேணுமென்கிற இச்சையுண்டானா லிப்பொழுதே யுத்தஞ் செய்யலா மென்றான்.

அதற்கந்த ராவணன் சற்றுநிதானித்து அவ்வாலியைப்பார்த்து, ஓ கபிச்சக்கரவர்த்தி! நானும்முடையவாலிலே கட்டுப்பட்டனுபவித்த துன்பத்திலுமிக்கது வேறேயொரு துன்பமுண்டோ? உம்மோடு யுத்தமென்று சொல்லப்பட்டதை நினைக்கவுந் திறமுண்டோ? நானவும்முடனே யுத்தம்பண்ணத் தக்கவன்? நீரென்னை வேறுபாடாக நினையாமல் தயைவைத்துச் சிநேகிதனாகக் கொள்ளவேணுமென்று தாழ்ந்துசொல்லினான். அதற்கவ னப்படியேயென்று சம்மதித்து மிகவுஞ் சந்தோஷத்தை யடைந்து, அப்பொழுதே தன்

னுடைய கிரகத்துக் கழைத்துக்கொண்டுபோய்ப் போஜனமுதலான உபசாரங்கள்செய்வித்து ஒருமாதம் வரைக்கும் வைத்திருந்து, அப்பா தசக்கிரீவா! இன்றுமுதல் நீயெனக்கு முதன்மையான உரிமைத்தோழனாகுக. இனியாதொன்றுக்கு மஞ்சற்க. என்றுபசாரஞ்சொல்லி யனுப்புவிக்க இராவணனவ்வாலியினிடத்திலே உத்திரவுபெற்றுக்கொண்டு தன்னுடைய லங்காபட்டணம்வந்து சேர்ந்திருந்தான்.

வாலிவாலாற் கட்டுண்டபடலம் — முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பதினோராவது,

அனுமப் படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமருக்கு இராவணனுடைய சுபஜயங்களையும் அபஜயங்களையுங்கூறிய அகஸ்தியமுனிவர் மீட்டுமெவ்விராமபிரான் வேண்டுகோளால் அனுமானுடைய உற்பத்தியாதிக் கிரமங்களைக் கூறத்தொடங்கி வாயுபகவானுக்கும் அஞ்சனாதேவிக்கும் உற்பவித்துப் பிரமனாதிய தேவர்களால் வரம்பெற்றதையும், அவ்வரச்செருக்கால் தபோதன ராச்சிரமம் புகுந்து தகாதனவற்றைச்செய்து அவர்கள் சாபம்பெற்றதையும், பின்பு வாலிக்குப்பயந்து மதங்காசிரமத்தி லொளித்திருந்த சுக்கிரீவராஜனைத் தோழமைகொண்டு சூரியனிடத்தில் ஐந்திரவியாகரணம் பயின்றதையுங்கூறி, அவ்விராமமூர்த்திக்குச் சேவகத்திறங்கொண்டு அடியனாயிருப்பதீறாயுள்ள சவிஸ்தாரங்களைச் சொல்லிமுடித்து, மகாரிஷிகளோடு அகஸ்தியர் தனதாச்சிரமம் செல்ல, அக்காலையில் ஸ்ரீராமரையுஞ் சீதாபிராட்டியாரையும் பார்க்கவந்த மாமனாராகிய சனகமகாராஜனைக் கண்டுமகிழ வச்சனகன் அயோத்திவிட்டு ஆரணியமடைந்து இலங்கைசென்று இராவணசம்மார மீறாயுள்ள சரித்திரங்களைக் கேட்க விரும்பினபோது அச்சவிஸ்தாரங்களை வதிஷ்டமகாமுனிவராலிராமமூர்த்தி சொல்விக்க வதைக்கேட்டு மகிழ்ந்த சனகமகாராஜன் தனது மிதிலா நகரடைந்ததும் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமர் ஆஞ்சனேயருடைய வீரப்பிரதாபங்களைப்புகழ்ந்து அவர் சவிஸ்தாரங்களைக்கேட்க அகஸ்தியமகாமுனிவர் அவ்வாஞ்சனேயரின் உற்பத்தியாதி சவிஸ்தாரங்களைக் கூறல்.

கவி.

புலைவாளரக்கனிருகாலிரட்டி யொருநாலுபெற்றபுயமும்
தலையானபத்துமுறவால்விசித்த சயவாலிகொற்றமுழுதும்
மலையாசலத்துமறையோனுரைப்ப வதெலாமனத்திலுணராச்
சிலையாலரக்காதிறம்வேரறுத்த திறலானுரைக்குமிவையே.

நெ. 87. ஆஞ்சனேயர்பிரம்மாதியதேவரால்வரம்பெறுதல்.



சூரியனிடத்திலஸந்திரவியாகரணம்பயிற்றல்.



இந்தப்பிரகாரம் பொதியமலையி லெழுந்தருளியிருக்கும் ரிஷிசிரேஷ்டராகிய அகஸ்தியமகாமுனிவர் புலால்நாற்றம் பொருந்தியவாலை யேந்திய இராவணனது இருபதுபுயங்களும் பத்துசிரசும் சிக்கும்படி வாலினாற்கட்டி வெற்றிபெற்ற வாலியினது வீரப்பிரதாபங்களையும் அவ்விராவணனது உற்பத்தியாதிகிரமங்களையு முறைபடக்கூறியதைக்கேட்ட ஸ்ரீராமரானவர் மிகவுஞ் சந்தோஷத்தை யடைந்தவராகி, பின்னும் ஸ்ரீராமர் அவ்வகஸ்தியபகவானை நோக்கிச் சொல்லுகின்றார்.

ஐயா மூத்தமிழ்முனியே! முன்புநான் வனவாசஞ் செய்துவருகிறபோது சுக்கிரீவனுக்கு மெனக்குஞ் சினேகஞ் செய்வித்தும், ஒருசிறிதானகுளத்தைத் தாண்டுவதுபோலப் பெரிதான சமுத்திரத்தைப் பாய்ந்து அப்பொழுதெதிர்ப்பட்ட அங்காரதாரையென்று சொல்லப்பட்டவளுடைய குடலைப்பிடுங்கி மாலையாகத் தரித்துக்கொண்டு அவளைவதைத்தும், அசோகவனத்தைச் சூறையாடிப் பாழாகவழித்தும், சம்புமாலி முதலானவர்களை நிலத்தோடே தேய்த்துவதைத்தும், பின்னுமெதிர்த்துவந்த சேனைகளையெல்லாஞ் சமுத்திரத்திலே வாரி வீசித்துவைத்தழித்தும், சீதையினுடைய பிராணனை ரக்ஷித்தும், இப்படிக்கெல்லாம் அவ்விடத்திற் பிரயாசைப்பட்டுஞ் சற்றுமனஞ்சலியாமல் முன்பு இந்தக்கரையிலிருந்து தாண்டும்பொழுதுள்ள பலமாகத்தானே பின்னுமந்த லங்காதீவினின்றும் பாய்ந்திவ்விடத்துக்கு வந்து என்னுடைய சோகத்தைத் தீர்த்தும், சமுத்திரத்திலே யணைகட்டுவதற் கெவ்வளவு பிரயத்தினஞ் செய்யவேண்டுமோ அவ்வளவுபிரயத்தினமுஞ் செய்து சுலபமாகக்கட்டுவித்தும், உயுத்தமுகத்திலே இந்திரஜித்துப் பிரயோகித்த பிரமாஸ்திரத்தினாலே கட்டுப்பட்டு அவசமாய் மூர்ச்சையடைந்து கிடக்கும்பொழுதில் உத்தரதிக்கிலே மகாமேருபருவதத்துக்கு வடக்கே வெகுதூரத்திலிருந்த சஞ்சீவிமலையைப்பேர்த் தொருநாழிகையளவிற் கொண்டுவந்து வானரசேனைகளையும் இலட்சுமணனையு மூர்ச்சைதெளிவித்து ரக்ஷித்தும், பின்னுமிராக்ஷதர்கள் செய்யு மாயையினாலே யுண்டாகப்பட்ட விகாதங்களையெல்லாந் தீர்த்தும், இப்படிக்கின்னுமனேக விதமாயுள்ள காரியங்களாலே யெனக்குபகாரஞ்செய்தவனாய்; அணுவைப்போலவும்-மகாமேருவைப்போலவும்-சிறிதாகவும் பெரிதாகவும், தானினைத்தபடிக்கு ரூபங்கொள்ளத்தக்கசித்தியும், நிறைந்தவித்தையும், சுந்தரமும், பொறுமையும், நீதியும், சத்தியமும், விசுவாசமும்பொருந்தி; இன்னுமிவைமுதலாயுள்ள சிலாக்கியகுணங்களெல்லாம் பெற்று விளங்கிய அவ்வனுமானுடைய உற்பத்தியும், சரித்திரமும், தன்னுடைய பராக்கிரமந் தனக்குத்தெரியாத காரணமும் விவரமாகச் சொல்லவேணுமென்று கேட்டார்.

அதற்கந்த அகஸ்தியபகவானானவர் ஸ்ரீராமனைப்பார்த்து, கேளும் தசரதநந்தனா! முன்னமொருகாலம் அஞ்சனாதேவிக்கும் வாயுபகவானுக்கும் ஓர் காரணமகிமையினாலே புத்திரனாக அனுமான் பிறந்தவுடனே மாதாவைப்

பார்த்து வணங்கி, அம்மா! எனக்கு மிகவும் பசியாயிருக்கின்றது. இந்தப்பசி தீரத்தக்கதாக நான்புசிக்கும் பதார்த்தங்க ளென்னவென்று கேட்டான். அதற்கவள் இவனைப்பார்த்து, அடா குழந்தாய்! குளிர்ந்தவனங்களிலுஞ் சோலைகளிலு மதுரமாய்ச் சிவந்துபழுத்திருக்குங் கனிகளே உன்பசியைத் தீர்க்கத்தக்க பதார்த்தங்களென்றுசொல்லித் தன்மகனுடையபசியாற்றவேண்டிக் கனிகள் கொண்டுவர வனத்துக்குப்போனாள். இவ்வாறுபோனதாய் வருவதற்கு முன்னமே இவனுக்கு மிகவுங்கொடுமையான பசியுண்டாகி, அப்பசி வருத்தம் பொறுக்கமாட்டாமற் பரிதாபப்பட்டுக்கொண் டிருக்கிறசமையத்திலே உதயகாலத்திற் சூரியனுதித்தான். அந்தச்சூரிய விம்பத்தை இவ்வனுமான் கண்டு, தாய் தனக்குச்சொல்லிய சிவந்த கனிவகைகளிலே இதுவுமொரு கனிதானோவென்று நினைந்து சூரியன்மேலே மகாவேகமாகப் பாய்ந்தான். அப்பொழுதந்த வேகத்தைப்பார்த்த தேவர்களெல்லாம் பிரமித்து, இவன் குழந்தையாயிருக்கிற இப்பருவத்திலேயே பிதாவினுடைய பலமும் வேகமும் பெற்றதல்லாமல் கருடவேகமும்பெற்றுச் சூரியன்மேலே இப்படிப் பாய்ந்தானல்லவோ? ஆதலாலிவன் சகலபலமும்பொருந்தி நாளுக்குநாட் பிரபலமானால் நம்முடைய சத்துருக்களாகிய ராட்சதர்களெல்லாருமென்னதுன்பத்தை யடைவார்களோவென்று ஆச்சரியத்தை யடைந்தார்கள். அக்கால் பிதாவாகிய வாயுபகவான் அக்கினிமயமாயெரிக்குஞ் சூரியகிரணங்கள் சீதள சந்தனம்போலக் குளிர்ந்திருக்கக் கடவதென்று வரங்கொடுத்தான். அல்லாமலும் சூரியபகவான் தன்மேற்பாய்ந்து கவ்விக்கொண்டிருக்கு மிவ்வனுமானை விளையாட்டுக்குழந்தையென் றெண்ணிக் கோபஞ்செய்யாமல், தனதுகிரணங்களினாலே தகியாமல், இவன்மேல் தயவாக மகிழ்ச்சிகொண்டிருந்தான்.

இப்படியிருக்குஞ் சமயத்தில் கிரகணகால நேர்ந்தபடியினாலே சூரியனைப்பற்றவந்த இராகுவானவன் அந்தச்சூரியனைக் கவ்விக்கொண்டிருக்கும் இவ்வனுமானுடைய பராக்கிரமத்தைக்கண்டு பயந்தோடித் தேவேந்திரனிடத்துக்குப்போய், ஐயா தேவராஜனே! சந்திரசூரியமண்டலங்களைக்கவ்விப்பற்ற எங்கட்குமுன்னமே வரங்கொடுத்திருக்க, அப்பொழுது வேறொருவனுக்கு நியாயத்தப்பாய்க்கொடுக்கத்தக்கதாக நாங்கள்செய்த குற்றமென்னமோ? என்னகாரணத்தினாலிப்படிக் கவமரியாதை செய்வித்தீர்? என்று முறையிட்டுக் கூறினான். அதுகேட்ட தேவேந்திரன் அப்பொழுதே மிகவுங்கோபத்தோடு ஐராவதத்தின்மேலேறிக்கொண் டதிவேகமாகப்போ யடுத்துநின்று, நீயிந்தச்சூரியனைப்பிடியென்று இராகுவையேவினான். அவன் சூரியனையடுத்துவருவதைக்கண்ட இவ்வனுமான் சூரியவிம்பத்தைவிட்டு இராகுவின்மேலேபாய அந்த ராகுவானவன் பயந்து நடுங்கி யுளறிக்கொண் டோட்டமாயோடித் தேவேந்திரன் பாதத்தில்வீழ்ந்து புலம்பினான். அதுகண்ட தேவேந்திரன் மிகவுமுக்கிரமான கோபத்துடனே ஐராவதயானையை மகாப்பிரசண்டவேக

மாக நடத்திக்கொண்டு அநுமான்மேலேசீறி வருவதானான். அப்பொழுதிலந்த ஐராவதயானையின் முகத்திலே சிவப்பாய்விளங்குஞ் சிந்துரப்பொட்டுவட்டத்தை இவ்வனுமான் இதுவுமொரு கனிதானேயென்றெண்ணி, அவ்வயிராவத யானையின்மத்தகத்திலே பாய்வதானான். அப்படிப்பாயுமளவிலதைக் கண்ட தேவேந்திரன் பலம்பொருந்திய தன்னுடைய வச்சிராயுதத்தினாலே இவனையடித்தான். அந்தவடியினாலே இவ்வனுமான் மூர்ச்சையடைந்து பூமியிலே விழுந்தான்.

அந்த வேளையிலே, இவ்வனுமானுடைய பிதாவாகிய வாயுபகவானானவனிந்திரனைக்கோபித்து, இந்த மூன்றுலோகங்களையும் க்ஷணப்பொழுதிலழிப்பேனென்று சபதம்பண்ணிக்கொண்டு, உலோகத்திலே யெங்கும் வாயுவியக்கமில்லாதபடிசெய்து, தன்னுடைய புத்திரனைப்பார்த்து மிகவும் விசனத்தையடைந்தவனாயெடுத்துக்கொண்டுபோய் இமயகிரியைச் சேர்ந்து, அந்தக்கிரியிலே யொருபெரிய குகையிற் பிரவேசித்திருந்தான். அப்பொழுதுலகமெங்கும் வாயுவியக்கமில்லாதபடியினாலே, இயானைமுதலெறும்புகடையான எண்பத்துநான்கு நூறாயிரம் யோனிபேதங்களாயுள்ள சகலபிராணிகளும் வயிறுவிம்மி மரணயாதனையாகத் துன்பப்பட்டன. அச்சமயத்தில் தேவர்களும் ரிஷிகளும்போய்ப் பிரமதேவரிடத்திற்சொல்ல, அவரந்தத் தேவர்கள்ரிஷிகளுடனே வாயுபகவானிருக்குமிடத்தைத் தேடிவந்தார். வாயுபகவான் அந்தப்பிரமதேவரைக்கண்டெழுந்துபோய் மிகவும்புத்திரசோகவிசனத்துடனே அவருக்கு நமஸ்கரித்து வணங்கிநிற்க, அப்பொழுது பிரமதேவ ரந்தவாயுபகவானுடைய விசனந்தீரும்படி தேறுதலைசொல்லி யுபசரித்து, மூர்ச்சித்துக்கிடந்த வனுமானைத்தம்முடைய கையினாலேதடவிமூர்ச்சைதெளிவித்தெழுப்பித் தம்முடனே வந்ததேவர்களைநோக்கி நீங்களெல்லோரு மிந்தவனுமானுக்கு வரங்கள் கொடுப்பீரென் றருள்செய்தனர்.

அப்படியேசூரியபகவான்தன்னுடைய கிரணத்தின்காந்தியிலே நூற்றிலொருபங்கு பிரகாசமுண்டாகக்கடவதென்றும், சகலவித்தைகளையுஞ் சுலபமாகக்கிரகிக்கத்தக்க தீக்ஷணபுத்தியு முண்டாகக்கடவதென்றும் வரங்கொடுத்தான். வருணபகவான் யுத்தகளத்திலே சத்துருக்களாலே என்னுடையபாசத்தாற் கட்டுப்பட்டாலு மரணமடையாதிருக்கக் கடவனென்றும், இயமதருமராசன் என்னுடைய காலதண்டத்தினாலே மரணமடையாதிருக்கக் கடவனென்றும், குபேரன் தன்னுடைய கதாயுதத்தினாலே சாவாமலிருக்கக் கடவனென்றும், உருத்திரமூர்த்தி தம்முடைய சூலாயுதத்தினாலே யழிவில்லாதிருக்கக் கடவனென்றும், விசுவகருமாவானவன் சகல தேவர்களுடைய அஸ்திரசஸ்திரங்களினாலே அபசயப்படாமலிருக்கக் கடவனென்றும், வரங்கொடுத்தார்கள். பின்பு பிரமதேவர் தம்முடையபிரமதண்டத்தினாலே நாசப்படாமலிருக்கக் கடவனென்று வரங்கொடுத்து, அவ்வனுமானுடைய பிதாவாகிய வாயுபகவானைநோக்கி, ஓ சமீரணனே! உன்னுடையபுத்திர னினிமேலிந்த

லோகங்களைப் பிடித்துக்கொடுமைசெய்யும் இராவணனுடைய லங்காபட்டணத்தை யெரித்தழித்து, இராட்சதர் குலத்தை வேரறுத்து, ஸ்ரீராமன் சந்தோஷத்தையடையும்படிக் குபகரித்து, அவருடைய வனுக்கிரகத்தினாலே பரமபதத்தை யடையக்கடவனென்று மனுக்கிரகித்தார். இவ்விதமாகப் பிரமதேவர் முதலாயுள்ள சகலதேவர்களும் வரங்கொடுத்துத் தங்களுடைய லோகத்தைச் சேர்ந்தார்கள்.

கவி.

என்றமலரோன்முதலாய விமையோர்கொடுத்த வரச்செருக்கால்
நன்றுதீதென்றிங்குணரா நன்மாமுனிவ ருறைவீடத்துச்
சென்றுதயிர்பானெய்குடித்துச் சீரைச்சுருக்குஞ் சருவமெலாம்
ஒன்றுவலியோன்கொண்டெழலு மூழித்தீயி னுடன்றவர்கள்.

இப்படிக்குப் பிரமதேவர் முதலாயுள்ள சமஸ்த தேவர்களிடத்திலும் பெற்ற வரத்தினுடைய மகிமையினாலே இவ்வனுமானானவன் நமக்கு நிகரானவர்களொருவருமில்லையென்று அகங்காரகர்வத்தை யடைந்தவனாய் இதாகிதங்களொன்றுந் தெரியாமல் மதோன்மத்தனாகி, தபோதனர்களாகிய மகாரிஷிகள் வாசஞ்செய்துகொண்டிருக்கும் ஆச்சிரமங்களிலும் யாகசாலைகளிலும் புகுந்து, அவ்விடங்களிலுள்ள ஓமத்திரவியங்களாகிய நெய்-பால்-தயிர்களைக் குடித்தும் — கந்தமூலபலாதிகளைத்தின் றெச்சிலாக்கியும்— சந்தனபுஷ்பங்கள் முதலானவைகளை யெடுத்தெறிந்தும் - கமண்டலமுதலான பாத்திரங்களையெடுத்துருட்டி யுடைத்தும் — இப்படிக்குப் பலபலவிதமான பாவியசேட்டையாய் யாக காரியங்களுக்கு விகாதஞ்செய்துகொண்டு திரிந்தான். அக்காலத்திலொருநாள் முனிவர்களெல்லோருநாடோறு மிவ்வனுமான்செய்கிற துஷ்டசேஷ்டைகளைப் பார்த்துச் சகிக்கமாட்டாதவர்களாய் மிகவுங்கோபங்கொண்டு, இவன் சகலலோகங்களையு மொருநிமிஷத்திலே யழிக்கத்தக்க மகிமைபொருந்திய பிரமதண்டத்தினாலு மரணமில்லாத வரம்பெற்றவன். மிகவும் பொல்லாதவனாகவு மிருக்கிறான். இவனை யாவராலுமென்ன செய்யலாகும்? ஆனாலுமிவனைத் தண்டித் தடக்குவோமென் றாலோசித்து எல்லோருமொருவாக்காகத் தன்னுடைய பலபராக்கிரமந் தனக்குத் தெரியாமற் போகக்கடவதென்று சாபஞ்செய்தார்கள்.

அப்படிக்கந்த மகாரிஷிகள்செய்த சாபத்தினாலே விஷப்பல்பிடுங்கப்பட்ட பாம்புபோல இவ்வனுமான் தன்னுடைய வகங்காரகருவமுங் கோபமுமடங்கிச் சாந்தத்தை யடைந்தவனாகி, அந்தத் தபோதனர்களுக்குப்பயந்து ஆ! ஆ! நாமென்னகாரியஞ் செய்தோம்?நம்முடையவறியாமை எப்படியிருந்தது. இந்திரன் முதலான தேவர்களுடையசாபமும் பெரிதல்ல. அந்தத்தேவர் வணங்கத்தக்க பெருமையுடையவர்களாய் சகலலோகங்களையுஞ் சிருஷ்டிஸ்திதி சங்காரஞ்செய்கிற அதிகாரிகளாயுள்ள பிரமதேவர் — விஷ்ணுபகவான் — உருத்திரமூர்த்தி - இத்திரிமூர்த்திகளுடைய சாபமும் பெரிதல்ல. அந்தத் திரிமூர்த்திகளு நடுங்கும்படிச் சாபஞ்செய்கின்ற தபோதனர்களுடைய

சாபத்தைக்கடந்தா ரொருவருமில்லை. அப்படியிருக்க நாமிந்த மகாரிஷிகளுக்கு அபசாரத்தைச் செய்தவனானோம். என்றாலோசித்துத் தன்னைத்தானே பொறுத்துக்கொண்டு வெட்கத்தை யடைந்தவனானான்.

அதன்பின்பு முன்னமொருகாலம் வாலிசுக்கிரீவனாகியவிருவரும் தாரையின்பொருட் டொருவருக்கொருவர் விரோதப்பட்டுச் சகலலோகங்களிலுஞ் சென்று வெகுகாலமா யுத்தப்பண்ணிக்கொண்டுவருகிறநாளில், ஒருநாள் சுக்கிரீவன் அந்த வாலியினாலே யடிபட்டாற்றாமல் விளைத்தோடி மதங்கமாமுனிவருடைய ஆசிரமத்தையடைந்து அவர்பாலடைக்கலமாகப்புக, அவரந்தச்சுக்கிரீவனுக்கபயங் கொடுத்திரக்ஷிக்க, அக்காலச்சுக்கிரீவனை இவ்வனுமான் பிராணசினேகிதனாகத் தோழமைகொண்டு, அந்த மதங்கமகா முனிவரையுங் கண்டுவணங்கிச் சேவித்தனுமதிபெற்று வித்தியார்த்தியாகி வேதவேதாங்க முதலான சகல சாஸ்திரங்களுமோதியுணர்ந்து, பின்பு சூரியபகவானிடத்துக்குப்போ யெனக்கு அயிந்திரவியாகரணம் போதிக்கவேணுமென்று கேட்டான். அதற்கவ னிவனைப்பார்த்து, அப்பா அஞ்சனைச்சிங்கமே ! நாமேறியிருக்கு மிவ்விரதமானது ஒரு சுவாசகாலத்துக்கு இருபத்தோராயிரத்தறுநூறு யோசனைதூரம் அதிவேகமாகச் சதாகாலமுஞ் சஞ்சரித்துக்கொண் டிருப்பதால், ஓரிடத்திலிருந்து பாடஞ்சொல்வதற்குச் சாவகாசமில்லை. இப்படியாகவிருக்குமென்னிடத்திலே நீ அவ்வியாகரணம் கற்றுக்கொள்வதற்கு வல்லமையுண்டாகி லோதுவிக்கிறேனென்று சொல்லினான்.

அதற்கிவ்வனுமான் சூரியபகவானைப் பார்த்து, ஓ ஆதித்தமூர்த்தி! தேவரீருடைய வனுக்கிரக விசேஷத்தினாலே உம்மிடத்திலே அந்தவித்தையைக்கற்றுக்கொள்வதற்கு எனக்கு வல்லமையுண்டா யிருக்குமென்றுசொல்லி யுடன்பட்டு, குருவினிடத்தி லெதிரேயிருந்து பாடங்கேட்கிறபடிக்குச் சூரியபகவானுக்கெதிர்முகமாகவே அந்த ரதவேகத்துக்குப் பின்னிடாமல் ஆகாசமார்க்கத்திற் பாய்ந்தபடியாய் ஆறுதினத்திலே அவ்வயிந்திர வியாகரணமுழுதுங் கற்றுக்கொண்டான்.

தண்ணளியினான்மிகு தயாவுடைமையால்வரு தருக்கறுதலா
லெண்ணுகருமங்களிவை யாவுமிடையூற வியற்றுமியல்பால்
நண்ணலரைவிண்ணவர்க ளாயினுநடுக்குறு மிடுக்குடைமையால்
மண்ணுலகில்விண்ணுலகின் மாருதியையொக்குமவர் யாருமிலையே.

அறந்தலையெடுத்தபுவி வானவர்களானவர்க ளாடினர்கழ
மறந்தலையிறக்கியது வாலிமுதலானவர்கள் வாமநயனஞ்
சிறந்ததிரடோள்புருவ மார்பிடை துடித்தன சிறந்தபுகழா
னிறைந்தகுணமாருதி நினைத்திருவடித்தொழுது நின்றபொழுதே.

கேளும் ஸ்ரீ சீதாலக்ஷ்மி மனோகரா ! தயாளத்திலும், சாந்தத்திலும், சத்தியத்திலும், ஞானத்திலும்,நிகரற்றகுணத்திலும், பிரயத்தினம் பண்ணிய காரியங்களை விகாதப்படாதபடி முடிக்கும் வல்லமையிலும், நம்பினோர்களைப்

பாதுகாக்கு மனோநிடத்திலும், அவனுக்குச் சமானமானவர்க ளொருவருமில்லை. அவனாலே தருமங்களெல்லா மபிவிருத்தியாய்த் தேவர்களெல்லோருஞ் சவுக்கியத்தை யடைந்தார்கள். மேலும் பாவங்களனைத்தையும் பரிபாலிப்பவராகிய இராக்ஷசர்களெல்லாருந் துக்கத்தையடைந்தழிந்தார்கள். இன்னுமளவில்லாத மேன்மைபொருந்திய அந்தவனுமானானவன் உம்முடைய திருவடிப் பணிவிடையைவிரும்பி உம்மைவிட்டு நீங்காதிருப்பானாகில், உம்முடையகுணத்துக்குங்கீர்த்திக்குஞ்சமானமுண்டோ? என்றிப்படி அனுமானுடைய சரித்திரங்களெல்லாம் ஸ்ரீராமனுக்குத் தெரியச்சொன்னார். இப்படிக்கு அகஸ்தியமாமுனிவர் ஆஞ்சனேயருடைய சவிஸ்தாரங்களைச் சொல்லிப் புகழ்ந்தகாலையில், ஸ்ரீராமபிரான் அகஸ்தியமுனிவரை வணங்கி, ஐயாமுனிவரேறே! தபோவல்லமைமிக்க உங்களது அநுக்கிரகத்தினா லல்லவா எங்களுக்கெல்லாம் இராச்சியாதிகாரமும், எத்தனகாரியசித்தியும், கீர்த்தியுமுண்டாவது. உமதுகிருபாகடாக்ஷத்தால் இராட்சசர்களுடைய சவிஸ்தாரமும், வானராதிபதியாகிய சுக்ரீவனுக்குத் தோழனும், எனது பத்தினியை என்னிடங்கொண்டுவந்து சேர்க்கும்படி மிகவுஞ்சிரமம் எடுத்துக்கொண்டவனுமாகிய ஆஞ்சனேயனது சவிஸ்தாரங்களையுங் கேட்டேனென்று சந்தோஷித்தனர். மற்றமகாரிஷிகளெல்லாம் ஸ்ரீராமபிரானைப் பார்த்து, ஓ சீதாமனோகரா! எங்கட்கு விதியாய் விதித்திருக்கப்பட்ட நித்தியநைமித்தியமாதி காரியங்களனேகமிருந்தாலும் ஒரு காலத்திலாவ தும்மைவிட்டுப் பிரிந்திருப்பதற்கு மனங்கொள்ள வில்லையென்று சொன்னார்கள். அதுகேட்ட ஸ்ரீராகவன் அந்த மகாமுனிவர்களை நோக்கி, ஓ தபோநிதிகளே! நீங்க ளெவ்விடத்தி லிருந்தாலுமென்ன? உங்களுடைய ஆசீர்வாத அநுக்கிரகமொன்றுமே வேண்டுவது. உங்களுடைய தபோமகிமையினாலேயல்லவோ எங்களுடைய இராஜரீகமும் உலோகபரிபாலனமு முண்டாகத்தக்கது? ஆனதால் நீங்கள் நாடோறுங் காலநியமங்கள் தவறாது நித்திய நைமித்தியமான சற்கருமானுஷ் டானங்களை வழுவாமனடத்திவருவதே உங்களுடைய பாரம். இனியுங்களுடைய ஆச்சிரமங்களுக்கெழுந்தருளலா மென்றுபசரித் தடிபணியச் சந்தனாசலவாசராகிய அகஸ்தியபகவான் முதலான மகாரிஷிகளெல்லாரு மானந்த சந்தோஷத்தை யடைந்தவர்களாய் ஸ்ரீராகவனுக் கனேக வாசீர்வாதஞ்செய்து வாழ்த்தித் தங்களுடைய வாசமாகிய ஆச்சிரமங்களைச் சேர்ந்திருந்தார்கள்.

ஸ்ரீராமபிரான் தன்னைக் காணவந்த சனகமகாராஜனுடனளவளாவி மகிழ்ந்து தனது சவிஸ்தாரங்களை வதிஷ்டராற் சொல்லக்கேட்டவச் சனகமகாராஜன் சீதையைக்கண்டு பிரியவசனங்கூறி மிதுலாபுரியடைதல்.

கவி.

முடிச்சனகர்கோனுலகை மூடுடையொடுவகையோடனுக்கிடத்
தப்பரியபெருவகையோடுமெசிழ் தாசரதியைத்தழுவிமுன்
படைத்தகனமாபரணமாடைதிகழ் பாவையர்களாதிபலவும்
கொடுத்தபினிராவணகுலத்தினை யறுத்தகதைகூறியிடலும்.

No. 88. ஸ்ரீராமர்ஜனகராஜனுக்கு அகஸ்தியமுனிவரால் மதுவனவாசச்சிறப்பையறிவித்தல்.



ஸ்ரீராமர்தமது பரிஜனங்கட்கு வெகுமானம் கொடுத்தனுப்புதல்.



இவ்வண்ணம் அகஸ்தியர் தமது பன்னகசாலையை யடைந்தகாலையில் கிரீடாதிபதியாகிய சனகமகாராஜன், ஸ்ரீராமபிரான் சீதாசமேதனாக அயோத்தியாநகரடைந்ததாகக் கேள்விப்பட்டு மகாசந்தோஷசித்தனாய் மருமகனாகிய ஸ்ரீராமனைக் காணவேண்டி இராசபரிவார சதுரங்கசேனைகளுடனே மிதுலா பட்டணத்தினின்று நீங்கிவந்து அயோத்தியா நகரத்திற் பிரவேசித்துச்சபாமண்டபத்துள்ளேவருமளவில், ஸ்ரீராம னெதிர்கொண்டுபோய் மாமனாருக்கு நமஸ்கார வந்தனஞ்செய்ய அவரும் அப்படி வணங்கிய ஸ்ரீராமனாகிய மருமகனைத் தாழ்ந்தெடுத்துத் தழுவிக்கொண் டுபசரித்துச் சபையிற்போயிருந்து, வசிஷ்டாதி முனிவர்களுக்கு நமஸ்காரம்செய்து, மற்றுள்ள பரிசனங்கட்கெல்லாம் பரிவுகூறி, தான் வரிசையாகக் கொண்டுவந்த இராசோபசாரஞ்செய்யுமேவற்பெண்களும் — நிதிக்குவியல்களும் - இரத்தினத் திரள்களும் — வஸ்திரபூஷணங்களும் — மற்றுமுள்ள சுகந்த பரிமளத்திரவிய வஸ்துக்களுங் கொடுத்து மனமகிழ்ந் திருந்தார். சீதாபிராட்டியாரெழுந்து தகப்பனாருக்கு வந்தனஞ்செய்தார்.

அப்படி யிருக்குமளவில் அந்தச் சனகமகாராஜன் ஸ்ரீராமனைச் சீதாசமேதனாயிருக்க நோக்கி, என்னிருமைக்கும் பெருமைதரவந்த ஓ மருமானே! நீரிங்கிருந்து எனது புத்திரியோடு வனநோக்கிச் சென்றதுமுதல் தென்கடற்கரை சேர்ந்தவரையில் நடந்த சரித்திரங்களையும் — பின்னரக் கடல்நடுவிலுள்ள இலங்காத்வீபஞ் சென்று இராவணாதிகளைச் சங்கரித்த விதங்களையும் விவரித்துச் சொல்லவேணுமென்று கேட்டார். அதற்கு ஸ்ரீராமர் வசிஷ்டமகாமுனிவரைப் பார்த்து, ஓ முனீந்திரரே! இக்கேள்விக்கு அனுக்கிரகிக்குந்தன்மை தேவரீரதேயென்று வந்தனத்தோடு விண்ணப்பஞ் செய்தார். அதற்கவ்வசிஷ்ட மகாமுனிவ ரிசைந்து, ஸ்ரீராமன் பிதுர்வாக்கிய பரிபாலனஞ்செய்யவேண்டிச் சீதாலக்ஷ்மணருடனே அயோத்தியா பட்டணம்விட்டுப் புறப்பட்டுவனவாசம்போனதும், இராவணன் சீதையை அபகரித்ததும், வானரசேனைகளோடு சென்று இராவண சம்மாரஞ்செய்ததும், மீண்டு அயோத்தியாபுரியடைந்து மகுடாபிஷேகஞ் செய்துகொண்டதுமீறாயுள்ள சவிஸ்தாரங்களாகிய பதினான்கு வருஷத்தில் நடந்த சவிஸ்தாரங்களை யெல்லாம்சாங்கோபசாங்கமாகக்கூற; அதனைக்கேட்ட சனகமகாராஜன் வருந்தவேண்டிய விடங்களில் வருந்தியும், களிக்கவேண்டியவிடங்களில் களித்தும், சீதாபிராட்டியைப் பார்த்து அம்மாசீதா! நீயும் இத்துன்பங்களை அனுபவிக்கும்படியாகவும், நானும் இவைகளைக் கேட்கும்படியாகவும் நேரிட்டதே யென்று வருந்தி மீண்டுந் தெளிந்து இந்த ஸ்ரீராமமூர்த்தியின் லீலாவிளையாட்டே யன்றி வேறல்லவென்று சீதையைத்தேற்றி நீ என்றும் ஸ்ரீராமபிரானுடன் கலந்து வாழென்று ஆசீர்வாதஞ்செய்து அவளதுவந்தனத்தை யேற்று ஸ்ரீராமபிரானால் செலுத்திய ஆடையாபரணங்களை யெல்லாம் பெற்றுப் பிரியவசனங்கூறித் தனது மிதிலாநகரத்தையடைந்தனன்.

அனுமப் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பன்னிரண்டாவது,

சீதைவனம்புகுபடலம்.

இப்படலத்தில் ஸ்ரீராம ரிராச்சிய பரிபாலனஞ் செய்திருக்குங்கால், அவர திராச்சியச்சிறப்பிருக்கும்வித மிவ்வகைத்தெனப்பரதர்கூறிமகிழ்விக்க, அக்காலிளவேனில் சம்பவித்தபோதுஸ்ரீராமர் பிராட்டியாரோடு சோலையிற்சென்று ஆனந்தித்திருக்கையில் சீதாபிராட்டிக்குக் கருப்பக்குறி தோற்றக்கண்டு களித்து உனக்கு எதன்மேல் பிரியமென்று கேட்க, முனிவராச்சிரமத்திலொரு நாளிருக்கவேண்டுமென்ன அப்படியே யாகட்டுமென்று சொல்லி, உலகமொழியை யறிந்து சொல்லப்பட்டவர்களால், பிராட்டியைப்பற்றி யுண்டாகும் நிந்தைமொழியை ஸ்ரீராமர் கேட்டு, அந்தக்ஷண மிலக்குமணரால்பிராட்டியை வனத்தில்விடுவிக்க,அப்பாலவ ளருந்துயரோடு செல்லுங்கால் வான்மீகமுனிவர் தமதாச்சிரமத்திற் கழைத்துச்சென்று சன்மானிக்க, இப்பா லிலக்குமணர் சுமந்திரரோடு மீண்டு ஸ்ரீராமர்பால் வந்தடைதல் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமமூர்த்தி சீதாசகிதனுக அரசுபுரியுங்காலையில் பரதாழ்வார் அரசினது சிறப்புரைத்தல்.

கவி.

திங்களுருணத்தோரேகச் சேடனின்சிரசின்பாரம்
நீங்கியதெனத்தான்போற்றி நெடுங்கடலவனிபாரம்
தாங்கியவீரனுச்சிச் சந்தியினியமந்தான்செய்
தாங்குயிர்த்தம்பிமாரோ டரசுசெய்திருந்தகாலை.

இவ்வண்ணம் தம்மைக்காணவந்த அகஸ்தியராதி மகாரிஷிகளும், சனக மகாராஜனும் தங்கள்தங்களிடமடைந்த பிறகு ஆதிசேடனது ஆயிரந்தலைகளாலும் தாங்கப்பட்ட பூபாரத்தை ஒருதோளால் தாங்கி இராமபிரான் நித்தியநியமாதி தவறாது தமதுயிரையொத்த தம்பிமார்களோடு அரசுபுரிகின்றனர். அவ்வண்ணம் அரசுபுரியும்போது உலகமெங்கும் யாதொரு குறைவில்லாது சர்வஜீவாத்மாக்களும் சந்தோஷமா யிருக்கிற செய்தியைப் பரதர்கண்டாச்சரிய மடைந்து ஸ்ரீராமபிரானுக்குத் தெண்டனிட்டுச் சொல்லுகின்றார். சுவாமி! எங்களையாளவந்த பெருமானே! தாம்திருமுடிசூடி உலோக பரிபாலனஞ் செய்யச் சிம்மாதனமேறின நாள்முதல் நாளதுவரையிலும் இவ்வுலகிலுள்ள சகல சீவன்களுக்கும் ஆயுதங்களால் மரணமில்லை. சிங்கங்களால் யானைக்குச் சத்துருவென்னும் பயமில்லை. புலியானது பசுவையும் மானையும் சினேகங்கொள்ளும். அக்கினியில் மாள்வோரில்லை. பிள்ளைகளின் மரணங்களைத் தாய்தந்தையர்கள் கண்டதில்லை. நோயினால் பிடிக்கப்பட்டவர்களில்லை. வயோதிகருக்கு எமபயமுமில்லை. ஸ்திரீகள் புருஷனை யழிப்பதில்லை. காற்றானது அதிகங்குறைவு இல்லாமல் மிதமாகவீச பாவரையும் சந்

№. 89. ஸ்ரீராமர் புஷ்பகவிமானம் விடைபெற்றேகல். ஸ்ரீராமர் சீதைக்குப் பிருந்தாவனச் சிறப்பறிவித்தல்.



தோஷப்படுத்தும். ஸ்திரீகளெல்லாம் ஆண்பிள்ளையைப் பெறுவார்கள்; ஈதன்றி உலகுள்ள அரசர்களும் மற்றவர்களும் ஸ்திரீகளும் இராமப்பிரபுவே எந்நாளும் அரசுபுரிய வேண்டுமென்கிறார்களென்று இவ்விதமாகிய வார்த்தைகளைப் பரதரானவர் சொல்லினார். இதைக் கேட்ட பகவான் சந்தோஷித்திருந்தனர். இப்படி சகல வுயிர்களிடத்திலு முன்னிலு மதிகமான காருண்யத்தைச் செலுத்தி அரசாளுங்காலத்தில் பங்குனிமாதம்பிறந்து இளவேனிற் காலந்தோன்றியது.

ஸ்ரீராமர் இளவேனிலைக்கழிக்க சீதாபிராட்டியாரோடு உத்தியானவனஞ்சென்று களிகூர்ந்திருத்தல்.

கவி.

அண்ணலுமமிழ்திற் பிறந்தவாயிழையு மணிகொள்பூம்பொழிலிடை யடைந்தார்
தண்ணறும்புன்னை சண்பகஞ்செருந்தி சாதிபூஞ்சண்பகந்தாழை
எண்ணருங்குருந்து பாடலமாதியெழின்மர மிடைநெருங்கியதை
விண்ணவர்கோமான் கற்பகச்சோலை மேதினியிழிந்ததொத்துளதை.

ஸ்ரீராமபிரானும் தேவாமிர்தத்திற் பிறந்ததைப்போன்ற சகல நற்குணங்களையுமுடைய சீதாபிராட்டியாரும் இளவேனிற் பருவத்தைக் கழிக்கும் பொருட்டு குளிர்ச்சிபொருந்திய புன்னை — சண்பகம் - செருந்தி - தேக்கு - தெங்கு - குருந்து — பாதிரி இவைமுதலிய மரங்கள்நிறைந்து தேவலோகத்தில் இருக்கும் கற்பகச்சோலைபூலோகத்தில் இறங்கியிருப்பதைப்போலுந் தன்மைவாய்ந்த ஒரு உத்தியானவனத்தை அடைந்து, அங்குள்ள விநோதங்களையெல்லாம் தமதுபத்தினியாகிய வைதேகிக்குக் காண்பிப்பதாயினர்.

கவி.

மென்னடையன்ன நின்னடைக்கஞ்சி வெளியிடைநின்றிடவெள்கித்
துன்னிடைமலர்பூஞ் சோலையின்மறையத் தோகைநின் சாயலுக்குடைந்து
தன்னடைகெட்டே யினியுயிர்தாங்கோ மெனத்தழன்முழுகுவபோல
மின்னிடைப்பூணாய் விரிமலரசோகின் மேற்சென்றுவீழ்வன காணாய்.

உள்ளபோதினிதுண் டுறுதயோதவபோ டுறவுவிட்டுறுமிடந்தேடு
மொள்ளியரல்லோ ருறவுபோனெடுநா ளுயர்தருமலர்மதுவுண்டு
மெள்ளவம்மரம்பூ மாறிடவிட்டு வேறொருபூமரந்தேடிக்
கள்ளவிழ் கோதைகமழ்குழலாளே களிவண்டுபோவன காணாய்.

ஐங்கணையானைவிட்ட திவ்ரூப னருநிதியுடையனேவலுக்கு
மங்கைமார்மனம்போல் வாழைதன்மருங்கு வந்துறமரகதமாகிப்
பொங்கியசெருந்திப் பூவுறப்பொன்னாய் நீலமாய்ப்பூவைவீபொருந்தப்
பங்கயமடுப்பச்செம்மணியாகும் பளிக்கறை பைந்தொடிபாராய்.

பொருகயனயனப் புரிகுழலாளே பொய்த்தவவேடத்தின்மறைந்து
விரிகடலுலகில் வேண்டியவண்ணம் வெவ்வினைசெய்பவரென்னத்
திரிதருமீனைத் தப்பறக்கொத்தித் தின்றிடுமுபாயமீதெண்ணிக்
கருதியகொக்கு மெய்சலியாது கண்முகிழ்த்திருப்பன காணாய்.

அடிமலர்வாழை குறங்ககலல்கு லரவுமின்னிடையணியமைத்தோ
ளிடைநிரைதரளப் பவளவாய்வேற்க ணெழினுதல்விரைகமழோதி
வடிவினிற்செய்ய மங்கையரன்ன வண்டுகண்மொய்த்தசெங்கமலங்
கடுவினைக்கொல்ல னுலைக்கரிமூட்டு கனலினைநிகர்வது காணாய்.

இப்படி யங்குள்ள ஒவ்வொரு விநோதத்தையும் வைதேகிக்குக் காண்பித்தபிறகு பங்கயத்தடாகஞ் சூழ்ந்தலர்பளிக்குமண்டபத்தில் மங்கையரெல்லா மேத்தவும் பூர்வம் திருப்பாற்கடல் மத்தியிற் சேஷசயனத்தின்கண் இலக்குமிதேவியோடும் வீற்றிருந்தபடி அவ்வைதேகியோடும் வீற்றிருந்து, தெய்வமங்கையர்களுங்கண்டு நாணும்படியாகச் சேயிழையார்கள் செய்கின்ற பரதநாட்டியத்தையும் பாணர்கள்பாடுஞ் சங்கீதத்தையுங் கண்டுங் கேட்டுங் களித்துக்கொண்டாடி, அவ்வவர்கட்கும் அருமையாயுள்ள நிதிகளையும் ஆடையாபரணங்களையுங் கொடுத்து மகிழ்வித்தனுப்பி, சிலபோது அப்பொழிலின்கணுள்ள பலவகை மலர்களை நன்னுதலாரோடு சென்று கொய்தும் — புனல் விளையாடல் புரிந்தும் — அறுசுவையோடுங்கூடிய திருவமுதுண்டும் — இப்படி நாடோறும் பலசுகபோகங்களை யனுபவித்துக்கொண் டிருக்கின்றார்.

சீதாதேவியாருடைய கர்ப்பக்குறியை ஸ்ரீராமர்பார்த்து உனக்கு யாதுவிருப்பமென வவர்கூறல்.

கவி.

விழிபெரும்பசலை பூத்தனமேனி வெளுத்ததுமெல்லியன் முன்கை
தழுவியசரிகள் சரிந்தனகர்ப்பந் தரித்ததுசான்றவர்க் கெல்லாம்
மொழிவனபோல முலைகள்பால்பாய வவைமுகங்கருத்தன வாக
எழுதருஞ்சீதைக் கிவ்வகையாய விலக்கணம்பலவு முண்டாக.

இவ்வண்ணம் அச்சோலையிற் சகல வலங்காரங்களோடு ஆடல்பாடல் முதலிய வேடிக்கைகளாகப் பொழுதுகழித்துக்கொண் டிருக்குநாளில், சீதாபிராட்டியாருக்கு இரண்டுகண்களும் பசலைநிறமடைந்து, திருமேனிவெளுத்து, முன்கையிற்பொருந்திய வளையல்கள்சரிந்து கர்ப்பங்கொண்டதை யாவருக்குமறிவிக்குந்தன்மைபோல் இருதனங்களும் பால்பெருகுப்படிமுலைக்காம்புகள் கருநிறமடைய இவ்வகையாகக் கருப்பக்குறிதோன்றிற்று. அதைக்கண்ட ஸ்ரீராமரானவர் அக்கருப்பக்குறியைப்பார்த்து, ஓ சனகன்பெற்ற இரத்தினமே! நீ வயிறுவாய்த்திருப்பது எனக்குச் சாலக் களிப்பைத்தருகின்றது. இப்போது யாதுவிரும்புகின்றனை? என்று வினவுகையில் அந்தச் சானகிப்பிராட்டி சிறிது புன்னகைகொண்டு, சுவாமி! தயாதாக்ஷிண்ய தயிரிய சவுரியாதி சகல கல்யாணகுண பூரணரான பர்த்தாவைப்பெற்றிருக்கிற அடியாளுக்கு விரும்பத்தக்க தேதுமில்லை. ஆயினும் சுவாமியே இங்ஙன நியமிப்பதனால் ஒன்றுவேண்டுகின்றேன். அஃதென்னவெனில், இன்னொருதரம் கங்கைக்கரையிலுள்ள முனிவர்களின் ஆச்சிரமங்களிற் சென்று அவர்கள் திருவடிக்குக்குற்றேவல்செய்து ஒரு நாளவ்விடத்திருக்க வேண்டுவதுதானென்று விண்ணப்பஞ்செய்யவும் அதற்கந்த ராஜசிகாமணியானவர் அப்படியே யாகட்

டுமென் றருளிச் சிலநாள்சென்றபின் பொருநாளிரவில் அயோத்தியா பட்டணத்திலிருக்கும் வண்ணான் தன்னுடைய பெண்டாட்டியைக்கோபிக்கும்பொழு தவளைப்பார்த்து, பகைவனான இராட்சசன் கொண்டுபோய் வைத்திருந்த தன்னுடைய பெண்டாட்டியைப் பின்னுஞ் சேர்த்துக்கொண்டிருக்கிற இராமனைப்போல் மானமில்லாதவனென் றென்னை நினைத்தாயோவென்று தண்டித்தான். அதைப் புரசோதனைக்குப்போன சாரணர்கேட்டுவந்து சொன்ன மாத்திரத்திலே ஸ்ரீராமஸ்சுவாமியானவர் மனக்கலக்க முண்டாகி, நித்திரையில்லாமல் சூரியோதயத்துக்குமுன் னெழுந்து ஸ்நானமுதலாகிய நித்திய கர்மானுஷ்டான விதிகளை நிறைவேற்றிக்கொண்டு, மந்திரிகள் — சாமந்தர் — சேனுபதிகள் — பௌரோகிதர் — அன்னியதேச ராஜாக்கள் இவாள் முதலானவர்களுடனே வந்து கொலுக்கூடத்தி லெழுந்தருளியிருந்தார். அந்தச்சபையில் அகஸ்யக்காரர்களாகிய விஜயபத்திரன் - தந்தவத்திரன் — சுமாதகன்—சுராஞ்சி — இவாள் முதலானோர்கள் வேடிக்கைக் கதைகளும் பரிகாசக்கதைகளுமுரைக்க, அதுகேட்டிருந்த ஸ்ரீராமரவர்களைப்பார்த்து, நல்லது: இதெல்லாமிருக்கட்டும். இப்பட்டணத்திலாவதுநாட்டுப்புறங்களிலாவதுஜனங்கள் என்னைப்பற்றியும், இலட்சுமணன் - பரதன் — சத்துருக்னன் — சீதை-கைகேசி - இவர்களைப்பற்றியும், என்னசொல்லிக் கொள்ளுகிறுர்கள்? நூதனமாயோரரசன்வந்தபோது அவனைப்பற்றிச் சனங்களுக்குள் ஒருபேச்சு நிகழ்வதுண்டு, முக்கியமாயதை அரசனறிந்து காரியாகாரியங்களை நிச்சயிக்கவேண்டும். ஆனதுபற்றி நீங்கள் காதிற்கேட்டவைகளைச் சொல்லுங்களென்றுர். அவர்களுள் விஜயபத்திரனென்போன் கைகூப்பிக்கொண்டு கூறலாயினன்.

சுவாமி ! தேவரீர் துரைத்தனச்சீரையும், சுகுணங்களின் சிறப்பையும், பராக்கிரமப் பெருமையையும்பற்றி இயாவருமொக்கவியந்து புகழ்கின்றனர். இவ்வாறு தேவரீர் சரித்திரத்தை யெல்லா மேலாகப் பேசிவருகையில் அமுதத்தில் ஒருசொட்டு விஷங்கலந்ததுபோல் இடையிலொன்று வழங்குகின்றனர்.

ஸ்ரீராமபிரான் நகரத்துஜனங்கள் தன்னைப்பற்றிக் கூறும்வாக்கியத்தைக் கேள்விப்பட்டு தம்பிமாருடன்கலத்தல்.

கவி.

மன்னவனிராமன் மானபங்கத்தைமனதினில்வைத்திலன் வானோர்க்
கின்னல்செய்தொழுகு மிராவணன்கொடுபோந் திடைவிடாதீரறுதிங்கள்
தன்னெடுநகரி தனிற்சிறைவைத்த தையலைத்தாரமாய்க் கொண்டு
பின்னையும்வாழ்க்கை பேரிழுக்கென்று பேசுவார் பெருநிலத்துள்ளோர்.

சுவாமி ! தேவரீர் உண்மைகூறும்படி நியமித்திருப்பதனுல் அதையும் விண்ணப்பஞ் செய்கின்றேன். சகல சற்குணங்களுநிறைந்த நம்மிராஜா ஓராண்டளவும் இராக்கதன் வசத்திலிருந்த தம்மில்லாளை எங்ஙனம்வைத்துக்கொண்டு குலாவுகின்றுர் ? அரசன்செல்வழி குடியுஞ் செல்லுமாதலின் இனிநாமு

நம்மில்லாட்களைப் பிறரிடஞ் சென்றிருந்தாலும் வெறுக்காமல் வைத்துக் கொள்ளவேண்டுவதேயெனப் பேசிக்கொள்ளுகிறார்களென்றான். இவ்வாறவன் சொல்லியதைக் கேட்டமாத்திரத்தில் சுவாமி கிஞ்சித்து விசனமடைந்தவர்போலே சபையிலுள்ளோரைநோக்கி, இதைப்பற்றி யென்னசொல்லுகிறீர்களென்றார். அவர்களு மனப்பதைப்புடன் கைகூப்பிவணங்கி; ஆம்: அப்படித்தான் சொல்லுகிறார்கள். சாதாரண ஜனங்கள் உட்காரிய மறியமாட்டார்கள். ஆதலின் மேலுக்குத்தோன்றியவாறு வழங்குகின்றனரென்றார்கள்.

பின்பு ரகுகுலோத்தமர் யாவர்க்கும் விடைகொடுத்தனுப்பித் தம்பிமாரை யழைத்துவரக் கட்டளையிட்டார். அப்படியே வர்சற்காப்போர் சென்று இக்கட்டளையை அறிவிக்கத் தம்பிமார் மூவரும் தமையனார் சன்னிதிக்குவந்து வணங்கித் தெண்டனிட்டு; அவர் திருமுகமண்டலம் வாட்டமாயிருப்பது கண்டு கலங்கிநின்றார்கள். அப்போதவர் அநுசரைநோக்கி, ஓ என்னுயிர்க்குயிராகிய சகோதரர்களே! இப்போது நிகழு நாட்டுச்செய்தியைக் கேட்டீர்களா? நம்மைப் பிரசைகள் பிறவாற்றாற்புகழ்ந்தும் இராவணனிடத்திருந்து சீதையைக் கொண்டுவந்ததைப்பற்றி இகழ்கின்றனராம். எனக்குச் சானகியின்கற்புநிலை தெரியாதன்று. அக்கினியின்மூழ்கி அத்தேவனாற் புகழ்ந்து கொடுக்கப்பட்டாள். என்னிடத்தி லிடையறாதஅன்பும், மற்றும் பெண்மைக்குரிய நற்குணங்களும் வாய்த்தவள்தான். ஆகினு மென்னசெய்யலாம்? உலைவாயைமூடலாம் ஊர்வாயை மூடலாமோ? நாம் கீர்த்திக்காளாகவேண்டுமோ? அபகீர்த்திக் காளாகவேண்டுமோ? அபகீர்த்திக்காளாவதினும் இறப்பதோடு நரகம்புகுவதுவேமேலாம். ஆதலால் - ஓ என்னுயிர்த் தோழரான தம்பிமாரே! அவளைக்காட்டுக்கனுப்ப விரும்புகிறேன். நீங்கள் நன்றாய்க்கற்றவரும் புத்திமான்களுமாதலின் யான்புகன்றதின்சார மறிவீர்கள். இப்போதென்கருத்தை நீவிர்யாரும் தடுக்கவொண்ணாது. எனக்கோ அந்தப் பெண்கள்நாயகத்தை யிப்படிச்செய்வதினும் வேறுதுக்கம்வேண்டுமோ என்னசெய்வேன்? ஓ லட்சுமணா! அவள்மறுபடி முனிவராச்சிரமத்தில் வாசஞ்செய்ய என்னைக் கேட்டிருக்கின்றாள். அந்தநிமித்தத்தால் நீ நாளையகாலையில் தேர்மேலேற்றிக் கொண்டுபோய் நம்முடையநாட்டின் கடையெல்லையான கங்கையின் அக்கரையில் வான்மீக ராச்சிரமத்தண்டை விட்டுவர வேண்டுமென்றார்.

ஸ்ரீராமபிரானுத்தரவுபடி சீதாபிராட்டியை இரதமேற்றிக் கானகஞ்சேல்லுதல்.

கவி.

மன்னவன்பெரியோர் மலர்ப்பதந்தன்னை வணங்கிடக்காட்டெனவுரைத்தான்
என்னலுமவர்போ யுரைத்தலுமெழுந்த வுவகையாலின்னுயிர் தளிர்த்தே
மின்னொளியார முதலவாபரணம் விளங்குசீர்நவமணி யாடை
இன்னவைபிறவுந் தெரிந்துகொண்டிளையோ னியம்பிடவேறினு ளிரதம்.

ஸ்ரீராமபிரான் இவ்வாறுரைத்ததைக் கேட்ட இளையபெருமாள் துக்கத்தின்மூழ்கி, ஒன்றுந்தோன்றாமல் சற்றுநேரம் திகைத்துநின்று, அவராணையை

No. ௯௦. ஸ்ரீராமருத்தரவால் இலக்குமணர் சீதையைகங்கைக்கரையில் விடுதல்.



மறுக்க மாட்டாமையால் தலைகுனிந்து தம்மாளிகைக்கேகி, ஐயோ! இவ்வி ரவுவிடியாதிருக்குமானால் யான்பழிக்காளாகாமல் உய்வேனென்னுஞ் சிந்தை யாற் றுயிலொழிந்திருந்து, பின்னர்விடிந்ததும்சுமந்திரரை அழைத்துக்கொண்டு பிராட்டி திருமாளிகைக்குப்போய்தான்வந்தசெய்தியைப்பாங்கிமார்களாற்றெ ரிவிக்க, பிராட்டியார் உள்ளழைக்கஇலட்சுமணர் அரண்மனையுட்சென்றுஅவளை து திருவடிதொழுது, தாயே! நீர்மீட்டும் கங்கைக்கரையிலுள்ள முனிவராச் சிரமங்களைக்கண்டு ஸேவிக்க விருப்பங்கொண்டு சுவாமி சன்னிதியில் விண் ணப்பஞ் செய்தீராம். அதுநிமித்தம் அவ்விடத்துக்கு அழைத்துக்கொண்டு போம்படி அடியேனுக்கு நியமனமாயிற்று. இரதமும் வாசலில்வந்திருக்கின் றது. தேவரீர் எழுந்தருளலாம் என்றார். அதுகேட்ட சீதாதேவி குதூகலி த்துவேண்டு மாடையாபரணங்களை யெடுத்துக்கொண்டு வந்து திருத்தேர்மே லேறினாள். இப்படியிருவரு மிரதமேறிச்செல்லுகையில் சீதாதேவி வழியிற் சில அபசகுனங்களைக் கண்டு அச்சங்கொண்டு மைத்துனற்கு அறிவிக்க, அவ ரதுகேட்டுஇதெல்லாநன்மையேயன்றிதீமையல்லவென்றுமுகத்திற்சந்தோஷ முள்ளவர்போலக்காட்டிப்பேசிக்கொண்டேகோமதியென்னு நதிக்கரையிலிற ங்கி இரவைநீத்து, காலையில் மீளவும்புறப்பட்டு, கங்காநதிக்கரைசேர்ந்து பிரா ட்டியை இறக்கினவுடனே இளையவர்கோவென்று கதறி யழுதார்.

அதுகண்ட அத்தேவியார்கலங்கி, இஃதென்ன அகாரணமா யழுகின்றீ ர்? பெருமாளைப் பிரிந்த நிமித்தம் அழுகின்றீரோ? வேண்டாம்: ஓரிரண்டு நாளிலேயே நான் திரும்பிவிடுகின்றேன். எனக்கும் அவருடைய திருமுகம ண்டலத்தையும், திருக்கண் மலர்களையும், திருமார்பையும், திருத்தோள்களை யும், சேவிப்பதற்கு மனம்பதைக்கின்றது. அரிதமாய்க் கங்கையைத் தாண் டுவோம் என்றருளிச்செய்தார். சுமித்திராதனயரும் ஒன்றும் பேசாமற் சும ந்திரரை இங்கேயே யிருமென்று கட்டளையிட்டு, ஓர் படவையழைப்பித்துச் சானகியுந்தாமு மதிலேறி ஆற்றைக்கடந்துஅக்கரையில் வான்மீகமுனிவ ரா ச்சிரமத்திற்கருகி லிறங்கி, கண்ணுங்கண்ணீருமாய்க் கைகூப்பிநின்று பிரா ட்டியைநோக்கி, அம்மா! ஒருவார்த்தை சொல்ல என்மனது பதைக்கின்றது. அடியேன்மேல் அனுக்கிரகம் வைத்து அதைத்திருச்செவி சார்த்தவேண்டு மென்று சொல்லுவார்.

இலட்சுமணர் சீதாபிராட்டியைக் கங்காநதியின் றென்கரையில் விட்டு இராமபிரான் சொல்லிய வார்த்தையைச் சொல்லி வருந்தல்.

கவி.

உத்தமகுணத்தோய்கேட்டி யுலகமாதாவேகேட்டி
சுத்தனுஞ்சனகன்வேள்வி தோன்றியதூயோய்கேட்டி
வித்தகனிராமனேவி விட்டகாரியங்களெல்லாம்
தத்துவமானவண்ணஞ் சாற்றுவனென்றுசாற்றும்.

மேன்பாடுபெற்ற சர்வக்ஞனாகிய ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியானவர் நம் மையிக் கானகத்திற் கனுப்பிய காரியங்களை உண்மையாகச் சொல்லுகின்

றேன். உத்தமகுணத்தை யுடையவளே! லோகமாதாவே! சனகமகாராஜனுடைய யாகத்திற்பிறந்த பரிசுத்தமானவளே கேட்பாயாகவென்று சொல்லவாரம்பித்தனர். அம்மா! அடியேனைத் தம்பிமார்களோ டழைத்து, வாட்டமிக்கமுகத்தையும், கொடியமானமென்னும் வேலூன்றிய மார்பையும், மிக்க பெருமூச்சையும், நினைத்தகாரியத்தைச் சாதித்தலிலேயே நோக்கமிக்கமனத்தையுமுடையவராகி என்னைப் பார்த்து என்னசொன்னாரெனில், ஒவ்வொரு காரியங்களையும் உலகத்தாருக்குப் பயந்தே செய்யவேண்டும், உலகத்தார் உள்ளதென்றால் உண்டு; இல்லையென்றாலில்லை: உலகத்தார் இல்லாத ஓர் பொருளை உள்ளதென் றுரைக்கின் அதை வேறொருவன் உள்ளபடியில்லையென்று சொன்னால் அவன்தான் உலகத்திற்கு விரோதியாவன் அவனுக்கு யாதொரு பயனுங் கிடைக்கமாட்டா. ஆதலால், உன்மதனியாகிய சானகியை இராக்ஷதப்பாதகனாகிய இராவணன் கொண்டுபோய் ஒரு வருஷம் சிறைவைத்திருக்க நாம் சென்று இராவண சம்மாரஞ்செய்து சீதையை மீட்டு அக்கினிதேவன் சாக்ஷிசொல்ல நாம் வந்திருக்க, அதை உலகத்தாரறியாது இராவணன் சீதையை ஒருவருஷம் சிறைவைத்திருந்தான். அவள்மேல் வைத்த ஆசையினால் மானமில்லாது மீட்டுக்கொண்டு வந்தானே இதைவிட ராமன் சாகக்கூடாதா? என்று சொல்லுகிறார்கள். அவள் எப்படியாயினும் அசுத்தமுள்ளவளே சுத்தமுள்ளவளல்ல ஆதலால் நாம் அவளை என்மனதினின்றும் நிவர்த்திசெய்துவிட்டேன். நீ இரதத்தின்மேல் சீதையை ஏற்றிக்கொண்டு வனஞ்சென்று நமது தந்தையின் உயிர்த்தோழராகிய வான்மீக முனிவரது ஆசிரமத்தில்விட்டு வந்துவிடென்று சொன்னார். ஆதலால் அவர் வார்த்தையை மறுக்கவஞ்சி கொண்டுவந்து விட்டேனென்று முகத்திலறைந்துகொண்டு கோவென்றழுதார்.

அதைக்கேட்ட வைதேகியானவள் அக்கினியிற் காய்ந்த நாராசத்தைக் காதிற் சொருகியதுபோற் கேட்டு பூமியில் சோர்ந்து, வீழ்ந்து புரண்டு துயரம்பொறாது மூர்ச்சித்தனள். பிறகு உயிர்ப்புவந்தவள்போலெழுந்திருப்பள். கோவென்றலறுவள். வயிற்றைப் பிசைவள். துக்கசாகரத்தில் மூழ்குவள். கண்ணீர் ஆறாய்ப்பெருகுவள் இவ்விதமாகிய கோலத்தோடு இலக்குமணரை நோக்கித் தழதழத்த சொற்களால் புலம்பத்தொடங்கினாள்.

சீதாதேவி புலம்பல்.

கவி.

அன்னையோவையாவோ வாருயிர்த்தோழிமீர்காள்
தன்னேரிலாதவென்றித் தசரதராமன்சொன்ன
வின்னாதவிச்செயலைக் கேட்டபோதென்படுதீ
யென்னேரிவ்வுலகத்தில் யானேவிங்கிவைபடுவேன்.

பையார்வெம்பணத்துலகிற் பழியாலேபழிமறைத்து
நெய்யாலேநெருப்பவிக்க நீணிலத்திற் கண்டறியேன்

கையார்வெஞ்சிலைதரித்த காகுத்தனிடைக்கண்டே
னுய்யாரென்மாமிமா ரிவ்வுரைதஞ்செவியுறவே.

என்னெஞ்சராயென்னைக் காட்டில்விடச் சொன்னவரோ
வன்னெஞ்சராயதனுக் கிசைந்துவிட வந்தவரோ
நன்னஞ்சம் விழிக்கணிந்தநங்கைமார் நகைசெய்ய
வின்னஞ்சா காதிருந்த யானோநெஞ் சார்வலியார்.

பண்பிறந்த சொன்மடவார் பழித்தென்னை நகைப்பர்களோ
வெண்பிறந்தவன்னெஞ்ச னிராகவனென் றியம்புவரோ
மண்பிறந்த மறிகடல்சூ ழுலகத்தில் வாழ்பவரிற்
பெண்பிறந்தார் யான்பட்ட பெருந்துயரம் பட்டாரார்.

கனிமனத்துக் காகுத்தன் கடலுலகிற் பழிக்கஞ்சித்
தனியொருத்தி யான்கதறத் தனிக்காட்டில் விடுவித்தான்
பனியகற்றுமாதித்தன் பயந்தெடுத்துப் பழிப்பற்ற
மனுகுலத்திற் பிறந்தார்கட் கிவையோதான் மனுநெறியே.

கைகேசிமனந்திரியக் கற்பித்த கூனியைப்போல்
மையார்கண் மடவாரோ மைந்தரோ மண்ணுலகி
லையாவென் காதலனை யாரோவிக் காரியத்தைச்
செய்வாயென் றிப்பொழுது சிந்தையுறக் கற்பித்தார்.

என்றுபிரலாபித்த சீதாபிராட்டியார் இலக்ஷ்மணரை நோக்கி, ஐயா மைத்துனரே! பகவான் துக்கத்துக்கென்றே என்னைப் படைத்தான். முற்பிறப்பில் யான் யாரைப் பெண்டிரோடு சேரவொட்டாமற் பிரித்தேனோ? என்னபாவஞ் செய்தேனோ? இப்போதிப்படி எனக்குநேர்ந்தது. முன் ஸ்ரீரகுநந்தனர் திருவடியைப் பற்றிக்கொண்டு கானகத்தில் வதிந்தேன். இப்போது என்னசெய்வேன்? இயாருக்கு இதைச்சொல்வேன்? இக்கங்கையில்விழுந்து என்னுயிரைத் துறக்கலா மென்றால் அது என்பர்த்தாவின் குலத்திற்கு இழிவாதலா லங்ஙனஞ்செய்யவுந் துணிகின்றிலேன். ஆகிலும் இனி என்ன சம்பவிக்கவேண்டுவதோ அனுபவிக்கவேண்டும். அவர்நியமனத்தைநீர்எப்போதுங் கடக்கவேண்டாம். என்பேச்சாய் அவர்ஸந்நிதியில் அஞ்சலிபந்தத்தோடு விநயமாயொன் றுரைக்கவேண்டும். அதாவது - நெடுநாள் அடியாளோடுபழகி எனதுமனதையும் ஒழுக்கத்தையும் உணர்ந்திருந்தும் அபகீர்த்திக்கஞ்சி அடியாளைக் கானகத்தில்விடுத்ததற்கு மனநோகின்றிலேன். இதுவுந் தேவரீர் குணப்பெருமையென்றே களியாநின்றேன். கற்புள்ள பெண்களுக்குக் கணவர் திருவுள்ளப்படி நடப்பதன்றோ தருமம்? ஆகிலும் அடியாள்மீது பண்டுவைத்திருந்த அன்பையாவதுநினைக்கவேண்டும். கருவுற்றிருக்கும்அடியாள் கதி எங்ஙனமாயினுமாகுக. தேவரீர் தருமநெறிதவறாமல் அரசாட்சி செலுத்திவரவேண்டும். என்றிப்படி அவருக்கு விண்ணப்பஞ்செய்து என் மாமிமாருக்கும் என்வந்தனஞ் சொல்லக்கடவீரென்றாள். இளையபெருமாளும் அப்படி

யே செய்கிறேனென்று அவளை வலம்வந்து தெண்டனிட்டு ஒருவாறு சீதாபிராட்டியின் கவலையை யகற்றுவாராயினர்.

சீதாபிராட்டியின் கவலையை யொழிக்க ஒருவாறு தேற்றுதல்.

கவி.

உலகுக்குநாயகனு யோராழி தனைநடத்தி
மலையொக்குமதகளிற்றின் மதிக்குடைக்கீழ்வாழ்ந்தநள
னிலைகெட்டுநேரிழையை நெடுங்கானத் திடைவிட்டு
மலையொத்தவினைப்பயனுன் மடையனுய் வருந்தினனே.

தன்னேரிலாதவரிச் சந்திரன்றன் மைந்தனையு
மின்னேரிலாதவிடை மெல்லியலையும்விட்டு
முன்னேசெய்விதியாலே முடைப்பறையற் காளாகி
யென்னேதான் சுடுகாடுகாத்து நிலையிருந்தான்.

அம்மா! இவ்வுலகமெங்கும் ஏகசக்ரேஸ்வரனு யரசாண்ட சந்திரவட்டக்குடையையுடைய நளமகாராஜன் தன்னிலையழிந்து ஆரணியப்பிரவேசமாய் தன்பத்தினியாகிய தமயந்தியை வனத்தில்விட்டு தான் இவ்வயோத்தியாபுரியிலடைந்து மடைத்தொழிலாளனுய் வருந்தியகதை நீ கேட்டறிந்திலிரோ? எமது முன்னோர்களில் திரிசங்குமகாராஜன் புத்திரனுகிய அரிச்சந்திரமகாராஜன் தனதுபுத்திரனுகிய தேவதாசனையும், மனைவியாகிய சந்திரமதியையும் பிராமணனுக் கடிமையாக்கி, தான்பறையனுக் கடிமையாகி மயானத்தைக் காத்து எவ்வளவு வருத்தங்களை அனுபவித்தான் இச்சங்கதியெல்லா நீயறிந்திலிரோ? நீரோ அவர்களெல்லாம் தொழுந்தெய்வமாவீர் நீர்ஏன் விருதாவாய் வருந்தவேண்டும். வரும்வினைகளை அனுபவித்துத்தான் தீரவேண்டும். நீர் செய்த புண்ணிய பலத்தால் காகுத்தனை நாயகனுகவடைந்து, கிஞ்சித் பாவத்தால் பிரிந்தீர் இனியென்னசெய்வது. நீர் தவஞ்செய்ய வேண்டியதன்றிவேறென்று என்னசெய்யப் போகின்றீர். மகாரிஷிகளுடைய திருவடிகளைவணங்கி அவர்கள் சொல்லும் விதிப்படி உபவாசமாயிருந்து உனது பர்த்தாவை எப்போதும் உள்ளத்திருத்தித் தவஞ்செய்யவேண்டுமென்று இலட்சுமணர்சொல்ல வதைக்கேட்ட பிராட்டியார் ஐயா கொழுந்தனுரே! நான் ரிஷீஸ்வரர்களுடைய திருவடிக்குத்தொண்டு செய்யச் செல்வேனேயாகில் அவர்கள் உன்னுயகனைப் பிரிந்த காரணம் யாது சொல்லென்று கேட்கின் யாது பதில் மொழிவேன். சரிசரி: இஃது என்னுடைய பிழையன்றி உலகத்தார்மேற் பிழையின்று. நான் இருதுவடைந்து நான்கு மாதமாயிற்று. நாயகரோ என்னைப்பிரித்தனர் உலகம் ஏதாய் சொல்லுமோ கர்ப்பக்குறிவாய்ந்த எனதுடம்பை நன்குயுற்றுப்பார்த்துக் கொள்ளுமென்று சொல்லியதைக் கேட்டஇலட்சுமணர்,இருகண்களினின்றுந் தாரைதாரையாய்நீர்சொரிய மனமயங்கி வாய்விட்டுக் கதறி மனம்வாட்டமுற்று தவிக்குமதனி! என் தமையனுராகிய உன்பகவான் உன்னைக் கைப்பிடித்தநாள்முதல் நாளதுவரை

யிலும் அடியேன் உனதுபாதத்தை நோக்கி வார்த்தை சொன்னதேயன்றி திருமேனியின் சொரூபசுந்தரத்தைக் கண்டறியேனே இப்பொழுதுதான் யான் காணவல்லனேனென்று அவளது திருவடிகளைவணங்கி நான்போய் வருகிறேனென்று சொல்லிவிட்டு அங்கிருந்து திரும்பி அக்கங்கை நதியைக்கடந்து பிராட்டியைத் திரும்பித் திரும்பிப் பார்த்துச்சென்று சுமந்திரரோடு இரதத்தை நடத்திக்கொண்டு அயோத்திமாநகரை நோக்கிப்போயினர். அங்கு சீதாபிராட்டியார் இலட்சுமணர் போவதைப் பார்த்து ஒருகால் மீண்டுவருவாரோவென்னமோவென்று தேர்மறைகிறவரையில் வெகுநேரம் பார்த்திருந்தனள். பிறகுஐஐயோ! தேரோமறைந்துவிட்டது இளையவரோ என்னைக் கைவிட்டுப் போய்விட்டார். நானே தனியாய் நின்றுவிட்டேன். இனியென்ன செய்வதென்று கதறியழத் தொடங்கினள்.

சீதாபிராட்டியார் ஆரணியத்தில் தனியே புலம்பல்.

கவி.

இலங்கையிலே நெடுங்கால மிருஞ்சிறையிலேயிருந்து
புலம்பியழுதியான்பட்ட புல்லனவும் போதாமற்
றலங்குலவப்பழிபூட்டித் தனிக்கானில் விடுவித்து
விலங்கரியதுயர்விளைத்த விதியேயோ விதியேயோ.

ஏதமுறுபழியூட்டி யிப்பிறப்பி லெனையொழிய
மாதரையென் மனத்தாலுந் தொடேனென்று வரந்தந்த
காதலனைமனங்கலக்கிக் காட்டிலெனைவிடுவித்து
வேதனைநோய்செய்வித்த விதியேயோவிதியேயோ.

கண்ணறக்காகுத்தனெனைக் காட்டில்விடக் கண்டிருந்து
மண்ணகத்தார்வான்கொடுமை வாய்திறவா மானமிலாப்
பண்ணறைச்சியென்றென்னைப் பழிதூற்றப் பண்ணுவித்தாய்
விண்ணவர்க்கும்வெலற்கரிய விதியேயோவிதியேயோ.

தாளார்செந்தாமரைத்தாட் டசரதரா மன்மனத்தைக்
கேளானுளரையென்றுங் கேளாதவகைகலக்கிக்
கோளானதிடையரக்கர்கொடுவினையே னுக்கொருநாள்
மீளாதவனந்தந்த விதியேயோவிதியேயோ.

தக்கசுணவன்சீறத் தன்னைக்கைவிட்டகன்ற
புக்ககத்தார்கைவிடுவர் பிறந்தகத்தார்பெற்றோர்க
ளக்கணமேபழியிடுவ ரன்னியர்க ளருவினையேன்
மிக்கொரிடங்காண்கிலேன் விதியேயோவிதியேயோ.

இப்படி சீதாபிராட்டியா ரழுதுகொண் டிருப்பதை அங்கு திரிந்துகொண்டிருந்த முனிமக்கள் ஓடி வான்மீகமகாமுனிவர்க்கு அறிவித்தார்கள். அவர் தமதுயோக திருஷ்டியாலே நடந்ததையெல்லா முணர்ந்து, சனகன் பெற்றபொற்கொடி கதறுமிடத்திற்குத் துரிதமாகவந்து, அம்மணீ! நீ ஜனக மகாராஜன்மகள். தசரதமகாராஜன் மருமகள். இராமச்சந்திரன் மனையாட்டி.

பதிவிரதாசிரோமணி. உன்வரலாற்றைத் தவத்தாலறிந்தேன். இங்ஙனம் ஆக வேண்டுவதுதா னாயிற்று. நீ புலம்பவேண்டாம். உன்மாமனாருக்கு நான்தோழனாதலின் எனக்கும் நீ மருமகளே யாகின்றாய். ஆனதால் விசனமற்று என்னிடத்திருக்கலாம். தவஞ்செய்யும் பெண்டீர்பலர் என்னாச்சிரமத்தி னருகிலிருக்கின்றனர். அவர்களெல்லாம் உன்னை மகளைப்போ லெண்ணிப் பாதுகாத்து வருவார்கள். உனக்கு யாதும் குறையில்லை. இந்நோயிவ் வருக்கியசலத்தைக் கைக்கொள்ளக்கடவை. ஓ குழந்தாய்! சிந்தனையைவிட்டு எழுந்திரு. என்னாச்சிரமத்திற்குவா. என்று உபசரித்துச் சமாதானப் படுத்தினார்.

சீதாதேவி வான்மீகமுனிவராச்சிரம மடைந்திருத்தல்.

கவி.

துங்கமாதவனிவ்வாறு சொல்லிடத்தூயளாகி
அங்கவனல்லதீர்க்கு மடியிணைவணங்கிநிற்ப
மங்கையையுடனேகொண்டம் மாதவனேமதூபம்
தங்கியமுகட்டுப்பன்ன சாலையைவந்துசார்ந்தான்.

அப்போது சீதாபிராட்டியும் அவர் திருவடிகளுக்குத் தெண்டனிட்டு அவர்கொடுத்த அர்க்கியத்தைக் கைக்கொண்டு சமாதானமும் பரிசுத்தமுமுள்ளவளாகி, முனிகுமாரர் புடைசூழ வான்மீகமுனிவரோடுகூடத் தவப்பெண்களிருக்குமிடஞ் சென்றாள். அந்தத்தவப் பெண்கள் இவளைக்கண்டு அதிசயித்துக் கண்பரந்தவர்களாய் அம்முனிவர்க்குச் செய்யவேண்டுங் கடமைகளைச்செய்து வணங்கி, சுவாமி! இயாதுநிமித்தம் தேவரீர் இப்பெண்மணியோடிங்கெழுந்தருளியதென்று வினவினர். அதற்கவரவர்களை நோக்கி, ஓ புண்ணியசீலிகளே! இப்பெண் ஜனகன்புதல்வி. தசரதன்மருகி. இராகவன்காதலி. ஒருகாரணத்தாற் காதலனாலிங்கு விடப்பட்டாள். இவளை நீவிர் மென்மையாய்ப் பரிபாலித்து வரவேண்டும். என்று கட்டளையிட அவர்கள் - ஓ முனிவரரே! இப்பெண்மணியை இயற்கையிலேயே உபசரிப்போம். தேவரீர் பணிப்பு முண்டானபோது கேட்பானேன்? என்று அவளைச் சூழ்ந்துகொண்டு தெய்வப் பெண்ணாகவே பாவித்துத் தினமும் விசேஷ வுபசாரத்தோடு பாராட்டி வந்தார்கள். முனிவரும் சிஷரோடு தமதாச்சிரமத்திற்குச் சென்றார். சீதையும் அவர்களோடு கூடி ஒருவாறு விசனமாறித் தவநிட்டைகளைச் செய்துகொண் டங்கே யிருந்தாள்.

இலக்ஷ்மணர் சுமந்திரரோடு ஸ்ரீராமரிடம் வந்துசேர்தல்.

கவி.

மாதவத்தோனங்கிவ்வகையுரைப்ப மங்கையரனைவருமகிழ்ந்து
சீதையைப்போற்றச்சுமந்திரனோடு மிளையவன்றிருநகர்புகுந்து
நாதனைப்பணிந்துசெய்ததையுரைப்ப நாட்டுளோர்சொல்வழிகேட்டு
வேதனையுற்றவன்றினுமிக்க வேதனைப்பட்டனன்வீரன்.

இவ்வண்ணம் தபவலிமைமிக்க வான்மீகமுனிவர் சீதாபிராட்டியின் வைபவங்களைக் கூறினகாலத்து தவப்பெண்களெல்லா மகிழ்ந்து சீதைக்குபசாரம் புரிந்துவருகின்றனர்கள். இஃதிப்படியிருக்க, இலக்ஷ்மணப் பெருமாள் சுமந்திரரோடு அயோத்தியாபுரி யடைந்து ஸ்ரீராமபிரானை வணங்கி தாங்கள் சென்றுவந்த செய்திகளையெல்லாம் சொல்லக்கேட்டு, மனது மிகவும் வருந்தி முன்பு உலகத்தார் சொல்லிய சொல்லைக்கேட்டு, மனது மிகவும்வருந்தியகவலையைப்பார்க்கினும் சீதையைப்பிரிந்தகவலையதிகமாய்த் தளர்ச்சியுற்றனர். இளையபெருமாள் - சுவாமி! மூக்காலமும் உலகவியல்பும் அறிந்த தேவரீர் இப்படி துயரக்கடலி லாழலாமோ? தேவரீராலே யன்றோ உலகமெல்லாம் சந்தாப நீங்கும்படி யிருக்கின்றன, "துதிபழியிரண்டுங் கேட்டதுசொல்லு முலகையுமதன்வழியொழுகு, மதியையுநோவவடாதுமாசனகன் மகளையுநோவவிங்கடாதா, லதிருணவதியா யழலினுந்துய்ய வவளையு முன்னையும்பிரித்த, விதியினைநோவ வடுக்குமற்றிதனை வீரநிற்குணர்த்தவும் படுமோ." என்று பலவாயுரைக்கக் கேட்டபின் ஸ்ரீராமர் சிறிது துக்கந்துறந் திருந்தார்.

சீதைவனம்புகுபடலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பதின்மூன்றாவது,

சாந்திப்படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமர் இலக்குமணரால் ஒருவாறு தேறியபின் இராஜகாரியத்தி லிதயத்தைச் செலுத்தினவராய் அவ்விளையவரை நோக்கி இராஜதரும முரைக்கப்புகுந்து, ஆய்வின்மை - சினம் - குரோதம் - இவைகளைப்பற்றிப் பார்க்கன் - வசிஷ்டன் - யது - இவர்கள் சரித்திர முரைத்தல் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமர் இலக்ஷ்மணருடன் ஆய்வின்மையைப்பற்றிக்கூறிய பார்க்கராஜன்கதை.

கவி.

நிறைசடலவனிபார நீக்கியநெடும்பொற்றிண்டோள்
இறையவனிராமனன்போ டிளவலையெய்தநோக்கி
அறைகழற்றூரேய்நாட்டி லன்புநாடோறுநாடி
முறைசெய்கையிராசதன்ம மதனிறுமுயறுமென்றான்.

சமுத்திரஞ்சூழ்ந்த பூமாதேவிக்குப் பாரமாயிருந்த இராட்சசவமிசத்தைத் நம்சட்டுபடுத்திய நீண்ட அழகுபெற்ற வலிமைவாய்ந்த புயங்களையுடைய இராமச்சந்திர மகாராஜாவானவர் தம்மைத்தேற்றிய தம்பியைநோக்கி, அப்பா இலக்ஷ்மணா! நீயுரைத்ததெல்லா முண்மையே: உன்றலேயான் கவலை தீர்ந்தேன். இதெல்லா மிருக்கட்டும். நாம்நெடுநாளாய் இராஜகாரிய மொன்

றும் பாராமலிருக்கின்றோம். அது மிகவுந்தவறு. உலகத்திலே அரசனானவன் இராச்சியத்திலே நடக்குங்காரியங்களை நாடோறு நன்றாய்விசாரித்துப் பரிசோதித்து இராஜரீகஞ்செய்வது இராஜதரும முறைமையாதலால், நாமுமப்படியே செய்யவேண்டும். அன்றியும்:—

கவி.

சிறியமனைத்தனாகிச் சிறந்தசெங்கோலைவிட்டுக்
கூறுவெம்பழியைநாடிக் குலைந்திடக்கொடுங்கோலோச்சி
யாறிலொன்றிறைகொள்கின்ற தல்லவையகற்றிடாதே
யேறிறைகொள்வோனட்டி லிருப்பவர் மூடரன்றே.

தண்டிக்கப் படுவோர்தம்மைத் தண்டியாதொழிந்துவிட்டுத்
தண்டிக்கப்படாதோர்தம்மைத் தண்டிக்குந் தரணிமன்ன
னெண்டிக்கும்பரந்துமூடு மிரும்பழியெய்தித்தீயோர்த்
தண்டிக்குந்தருமனாலே தண்டிக்கப்படும்பினென்றான்.

அடற்பெருங்களிறுதிண்டேர் ரடுபரிகாலாடுன்று
சுடற்படை யுடையோன் மிக்க கருணையோன்காதலோடு
மிடர்க்கடல் வறியோரேற விருநிதியீவோனட்டி
னடப்பறியாதுகெட்ட நரபதியுளன்சொலென்றான்.

கோபசித்தனாகி நீதிமார்க்கத்தை விட்டுப் பழிபாவங்களை மேற்கொண்டு தன்னுடைய நாட்டிலே வாசமாயிருக்குங் குடிகளுக்குண்டாகிற துன்பங்களைப் போக்காமல் ; அவன்றானே யந்தக்குடிகளுக்குத் துன்பத்தையுண்டாக்கிக் குரூரதண்டஞ்செய்து நடுங்கப்பண்ணி அதிகமாக இறைகொண்டு கொடுங்கோல் செலுத்துவானாகில், அந்தத் துஷ்டனாகிய ராஜாவினுடைய தேசத்திலிருக்குஞ் சன்மார்க்கரானவர்களுந் துன்மார்க்கத்தையுடைய மூர்க்கரேயாவர்கள்.

அல்லாமலும் யாவனொரு ராஜாவானவன் தன்னுடையதேசத்தி லிருப்பவர்கள் ஒருதிரவியமூலியத்திலே யொருவருக்கொருவர் விவாதப்பட்டுத் தன்னிடத்திலே வந்து விவகாரத்தைச் சொல்லிக்கொண்டால் அந்த விவகாரத்தை யுள்ளபடிவிசாரித்துத் தருமசாஸ்திரப்பிரகார நடப்பியாமல், நட்பினாலேயாவது ஆசையினாலேயாவது — குரோதத்தினாலே யாவது — பக்ஷபாதமாய, தண்டனை செய்யத்தக்க குற்றமுடையவர்களைத் தண்டனை செய்யாமலுந் தண்டனை செய்யத்தகாத பரிசுத்தரானவர்களைத் தண்டனைசெய்தும் இப்படிக்கு நீதிமார்க்கந்தப்பி நடக்கில், அப்படிப்பட்ட கொடுங்கோன் மன்னவன் பூலோகமுள்ளளவும் கெடாமல் நிலைபெற்று விளங்கும் பாபத்தையும் அபகீர்த்தியையு மடைந்தவனாய்ப் பரலோகத்திலே யமதருமராஜனாலே குரூரதண்டனையாகத் தண்டிக்கப்பட்டு ஒருகாலத்திலுங் கரையேற்றமில்லாத நரகவாசத்துக்கும் யோக்கியனாவன்.

மேலும், இரத-கஜ-துரக-பதாதியென்று சொல்லப்பட்ட சதுரங்க சேனைப் பெருக்கமும், சகல பிராணிகளிடத்திலுந் தன்னுயிர்போல விளங்குந்

தயாளமும், வறுமையாளர்களுடைய தரித்திரத்துன்பங் கெடும்படிக்கு அவர்களிச்சித்தபொருளை அன்புடனே சந்தோஷமாகக் கொடுக்குங் கொடையினையுமுடையவனாகிய நீதிமன்னவனொருவனுளனாயின்; அவன் தேசத்திலிருக்கும் யாவர்க்கு மேதேனுமொரு குறையுண்டாகுமோ? இந்தப்பிரகாரந் தருமசாத்திரங்களிலே சொல்லப்பட்டிருந்தும், அஃதறிந்து நீதிமார்க்கமாக நடவாத இராஜாக்களுடைய சரித்திரங்கள் பலவுள. அவற்றுள் சில சொல்லுகிறேன்கேள். முன்னமொரு காலத்தில் பார்க்கனென்று சொல்லப்பட்ட ராஜாவானவன் அன்னதானமுதலான சோடசமகாதானங்களும், மற்றுமுள்ள சகலபுண்ணியங்களும் விதிப்படி நாடோறுஞ் செய்துவருவான். அந்த ராஜனப்படி செய்துவருமளவில் அனேககோடி காலமாய்ச் செய்யப்பட்ட புண்ணியங்களெல்லாம் ஒரு நிமிஷத்திலே சித்திப்பதாகிய மகாபுண்ணியகாலம் வந்து நேரிட்டது.

அப்பொழுதளவில்லாத நல்லபசுக்களை வேதோத்தமராகிய பிராமணர்களுக்குத் தானம் பண்ணுகிற சமயத்திலே, அந்த ராஜாவினுடைய புண்ணிய சரித்திரங்களைக் கேள்விப்பட்டு மிகவுந்தரித்திரனாகிய ஒரு பிராமணன் நெடுந்தூரத்திலிருந்துவந்தான். அந்தப்பிராமணனுக்கு மொருபசுவைத் தானமாகக்கொடுத்தான். அவனந்தப் பசுவைக்கொண்டுபோய்த் தன்னுடைய கிருகத்திலே கட்டிவைத்துக்கொண்டிருந்தான். அந்தப்பசு தப்பிப்போய்ப் பின்னுமந்தராஜாவினுடைய பசுக்கூட்டத்திலே சேர்ந்தது. அதை விசாரியாமலிப்படியே மற்றுமோர்நாட் கோதானம் பண்ணும்பொழுதில், அந்தப் பசுவையும் வேறொரு பிராமணனுக்குத் தானமாகக் கொடுத்தான். தானம்வாங்கின பிராமணன் அந்தப்பசுவைக்கொண்டுபோய்த்தன்னுடையகிருகத்திலே வைத்துக்கொண்டிருந்தான். அப்படியிருக்குமளவில் முன்பு தானம்வாங்கின பிராமணன் தப்பிப்போனபசுவை யெங்குங்காணாமல் இரண்டாவது தானம்வாங்கின பிராமணனிடத்திலிருக்கக்கண்டு இந்தப்பசுவானதென்னுடையதென்று சொல்ல, அதற்கிரண்டாவது தானம்வாங்கின பிராமணனுமென்னுடையதென்று சொல்ல, இப்படியந்தப் பிராமணர்களிருவருமந்தப்பசுவை யென்னுடையதென்னுடையதென்று மாறுபாடாக விவாதப்பட்டுத் தங்களுக்குத் தானமாகக்கொடுத்த பார்க்கனென்னு மிராசாவினுடைய ஆஸ்தான வாசலிலேவந்து நெடுநாளாய் முறையிட்டலைந்து திரிந்தார்கள்.

இப்படியலைகின்றவர்களை வந்தகாரியமென்னவென்று கேட்குங்கேள்வியில்லாமற் போனபடியினாலே அவ்விருவரு மிகவு மனஞ்சலித்துக் கோபித்து அந்த ராசாவைப் பார்த்து, நீயோந்திவடிவாய்ப் பாழுங்கிணற்றிலே அளவில்லாத துக்கத்துடனே தலைகீழாகத் தொங்கிக்கொண்டுகிடக்கக்கடவாயென்று சாபஞ்செய்தார்கள். அதுகேட்டவந்த ராசாவானவன் - ஓஓ!! நாமென்னகாரியஞ்செய்தோம்? நம்முடைய வறியாமையினாலே நமக்கிப்படிக் கபகீர்த்தியான காரியம் வந்து நேரிட்டதேயென்றுபயப்பட்டு அந்தப் பிராமணர்களிருவரை

யு நான்செய்த வபசாரத்தைப் பொறுத்து ரக்ஷிக்கவேணுமென்று மிகவும்வணங்கி வேண்டிக்கொண்டான். அதற்கவ்விருவரு மிராசாவைப்பார்த்து, நீயிப்படி வெகுகாலமிருந்து மேல்வருந் துவாபரயுகாந்தத்தி லவதாரஞ்செய்யு மகாவிஷ்ணுவாகிய கிருஷ்ணபகவானுடைய கிருபாகடாக்ஷ வீட்சணத்தினாலே உனக்குவந்த சாப நிவர்த்தியாய்ப் பழையரூபத்தை யடைந்து முன்போலவே யிருக்கக்கடவாயென் றனுக்கிரகஞ்செய்து, தங்களிருவருக்கும் விவாதப்பொருளாயிருந்த பசுவை உத்தமனான மற்றொருபிராமணனுக்குத் தானமாகக் கொடுத்துத் தாங்களிருக்குமிடம் போய்ச் சேர்ந்தார்கள். பின்பந்த ராசா வவர்களிட்ட சாபப்படியே ஓந்திவடிவாகி, ஒருபாழுங்கிணற்றிலே தலைகீழாகத் தொங்கிக்கொண்டு கிடந்தான். அப்பா இலக்ஷுமண்ணு! அந்தயோக்கியனான ராசனுக்கும் விசாரியாததினாலே அப்படிப்பட்ட தீங்குவந்து நேரிட்டதல்லவா? என்று ஸ்ரீராமர்சொல்லக்கேட்ட இலக்ஷுமணர் இப்படியுமுண்டோவென் றுச்சரியப்பட்டுத் தனக்குத்தானே யெண்ணமுற்றுநிற்க, அவருடையகுறிப்பறிந்த ஸ்ரீராமர்பின்னுமிலட்சுமணரைநோக்கி, ஆ தம்பி! நீ யிதைத்தானோ வதிசயமென்றெண்ணினாய்? இதனினுமற்புதமான ஒருகதையுண்டு அதனையுங் கேளென்று சொல்லத்தொடங்கினார்.

ஸ்ரீராமர் இலக்ஷுமணருக்கு சினங்கடியாமையைப்பற்றிக் கூறிய வசிஷ்டமுனி கதை.

கவி.

மன்னவனிமியென்பான்சீர் மனுகுலம்விளங்கத் தோன்றும்
பன்னெடுங்காலமிந்தப் பாரினையாண்டுபாரைப்
பின்னவன்துறந்துசென்று பெருவனங்குறுகிக்காலும்
அன்னவல்வினைகள்பாற வருந்தவஞ் செய்யுநாளில்

முன்னமொருகாலம் நம்முடைய குலத்திலுற்பவித்த நிமிச்சக்கரவர்த்தியென்று சொல்லப்பட்ட மகாராஜாவானவர் அநேககால மநுநீதிதவறுமல் தன்னுயிர்போல் மன்னுயிர்க்கிரங்கிச் செங்கோற்செலுத்தி இராச்சியபரிபாலனஞ் செய்துவருநாளில், இகப்பிரயோசனங்களெல்லா மடைந்தவராய்ப் பரப்பிரயோசனமாகிய மோட்சபதத்தை யபேட்சித்து மகாவனத்தைச்சார்ந்து, சத்திரயாகஞ் செய்யவேண்டி அத்திரி - பிருகு - ஆங்கிரசர் - வசிஷ்டர் — என்று சொல்லப்பட்ட நால்வரையும் வரவழைத்து இந்தயாகத்தைச் செய்விப்பீரென்று சொன்னார். அப்பொழுது தன்னுடைய குலகுருவாகிய வசிஷ்டமகாமுனிவரவரைப்பார்த்து, ஓ சக்கரவர்த்தி! இப்பொழுது தேவேந்திரன் யாகஞ்செய்விப்பதற்காக நம்மை வரித்திருக்கிறான். அந்தயாகத்தைநிறைவேற்றிப் பின்புவந் துன்னுடையயாகத்தை நடப்பிக்கிறோமென்று சொல்லிப் போயினார். அவரப்படிச்சொல்லக்கேட்ட நிமிச்சக்கரவர்த்தியானவர் இந்தவசிஷ்டனைத்தவிர வேறொருரிஷியு மில்லையோ? இவனிப்படி மறுத்துப்போய்விட்டதினாலே என்னுடையயாக நடவாமலின்றுபோய்விடுமோ? என்று

லோசித்தவராய் அந்தவசிஷ்டமகா முனிவருக்குச்சமானமான மகிமையுடைய கௌதமமகாமுனிவரை வரவழைத்து, அவர்முன்னிலையாக அந்தச் சத்திர யாகத்தை நடப்பித்துக்கொண் டிருந்தார்.

அந்தச்சமயத்தில் வசிஷ்டரானவர் சுவர்க்கலோகத்திலே தேவேந்திரனுடைய யாகத்தை நிறைவேறச்செய் திருக்குமளவில் பூலோகத்திலே நிமிச்சக்கரவர்த்தி கௌதமரைக்கொண்டு யாகநடப்பித்துக்கொண் டிருக்கிறதையறிந்து, இந்த நிமியென்று சொல்லப்பட்டவ னம்மையொரு பொருட்டாகவெண்ணுமல் நமக்குப்பிரதியாக வேறொருவரை வைத்துக்கொண்டிப்படி யாகமுஞ் செய்விப்பானேன்? அதனையு மறிகிறேன். என் றதிதீவிரமாகச் சுவர்க்கலோகத்தினின்று நீங்கி அந்தயாகசாலைக்கு வந்தார். அந்தச்சமையத்திலே நிமிச்சக்கரவர்த்தியானவர் நித்திரைசெய்துகொண் டிருந்தார். அதினாலே வசிஷ்டரிடத்துக்கு வராதிருந்தார். அப்பொழுதந்த வசிஷ்டமகாமுனிவர் நம்மைவேறுபடுத்தி யாகஞ்செய்விப்பது மல்லாமல் நாம்வந்தவிடத்து நம்மையொரு கௌஷியமாயெண்ணுமல் அவமரியாதைசெய்த படியினாலேயும், செத்தபிணம்போலத்தூங்கிக்கிடந்த படியினாலேயும், சரீரத்தைவிட்டுப்பிராணன் நீங்கி மரணத்தையடையக் கடவனென்று சாபஞ்செய்தார். அதைக் கேள்விப்பட்ட நிமிச்சக்கரவர்த்தியானவர் நானித்திரைசெய்துகொண் டிருந்தபோது இவர்வந்த தறியாதிருக்குமென்னை இப்படியனியாயமாகச்சாபஞ்செய்ததால், இந்தச்சாப மிவரைத்தானேயடையக் கடவதென்று தன்னைச்சபித்த அந்த வசிஷ்டருக்குப் பிரதிசாபஞ் செய்தார்.

அந்தச் சக்கரவர்த்தி தபோபலத்தினாலே சிலாக்கியம்பொருந்தி யாவரினு மேன்மையான மகிமை யுடையவராதலால் அவருடைய சாபத்தினாலே வசிஷ்டரானவர் மிகவுந் துக்கமும்பயத்தையு மடைந்தவராய்த் தம்முடைபிராணன் விடுபடுமென்றறிந்து, பிரமதேவரிடத்துக்குப் போய்த் தமக்கவமரியாதையாக ராஜாவினுடையசாபம்வந்துநேரிட்டவிருத்தாந்தங்களை யெல்லாஞ்சொல்லி, இந்தச் சாபத்தினாலே மேலுமேலுஞ் சனனமரணங்களுக்கிடமான யோனிபேதங்களிலே பிறவாமல் இந்தச் சாபநிவர்த்திக் கேதுவாக வேறொருசனன முண்டாகும்படிக் குபாயஞ்செய்தனுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக் கேட்டார். அதற்குப் பிரமதேவர் வசிஷ்டரைநோக்கி, ஐயா முனிசிரேஷ்டரே! முன்னமொருகால மித்திரனென்று சொல்லப்பட்ட சூரியபகவான் ஊர்வசியைக்கண்டு மோகப்பட்டு உன்னைக்கூடி யனுபவிக்கவேணுமென்று கேட்க, அதற்கவளுடன்பட்டு அப்படியே யும்மைச்சேருகிறேனென்று சொல்லிப்போய் அனேகந் தெய்வப்பெண்களுடனே ஒருசிங்காரமான புஷ்பதடாகத்திலே சலக்கிரீடையாக விளையாடிக்கொண் டிருந்தாள். அச்சமயத்தி லவ்விடத்திலே வருணபகவான் வந்து அந்த ஊர்வசியைக்கண்டு மயங்கிக் காமவிகாரத்தையடைந்து, நீயென்னைக் கூடவேணுமென்று கேட்டான். அதற்கவள் முன்னமேயென்னை யிச்சித்தசூரியபகவானுக்குடம்படிக்கைசெய்

து வந்திருக்கிறே னாதலால், முதலிலென்னை வரித்தவரைவிட்டு முறைமை தப்பாக உம்மைநான் சேரமாட்டேனென்று சொன்னாள்.

அம்மாத்திரத்திலே யந்தவருணபகவான் காமாக்கினியினாலே சரீரமெல்லாமுருகி, மோகவிகாரஞ் சகிக்கமாட்டாமல் இந்திரியத்தை யொழுகவிட்டான். அந்தவிந்திரியத்தை ஒருகும்பத்திலே பிடித்துவைத்திருக்கவும் அதனிடத்திலே அளவில்லாத மகிமையுடனே விளங்கும் அகஸ்தியபகவா னுற்பவித்தார். அதன்பின்பு ஊர்வசியானவள் வருணனிடத்திலே மிகவு மாசையுள்ளவளாகிச் சூரியபகவானிடத்துக்குப் போனாள். அப்பொழுதவருஞ் சகிக்கப்படாத காமவிகாரத்தை யடைந்தவராதலால் அவளைக்கண்டவுடனே அவள் வருணனிடத்திலே யாசைகொண்டிருக்கிற குறிப்பறிந்துகொண்டு கோபித்து, நீ பூலோகத்திலே நரஜனனத்திலேபிறந்து புரூரவாவென்று சொல்லப்பட்ட இராஜனுக்குப் பாரியாகி நெடுங்கால மிருந்துவரக்கடவாயென்று சபித்து அவளைச்சேராமலே தம்முடைய வீரியத்தை வெளியிலேவிட்டார். கேட்டீரோ வசிஷ்டரே ! அதனை மகாரேதசென்றெண்ணி வருணரேதசிருந்த கும்பத்திலேபிடித்துப் பூரித்து வைத்தார்களாதலால், நீரிந்தச் சரீரத்தைவிட்டந்தக்கும்பத்திலே பிரவேசித்துத் திவ்வியசரீரத்தையடைந்து வருவீரென்றனுக்கிரகஞ்செய் தனுப்புவிப்ப, அப்படியே யவருமுற்பவித்தார். அப்பா இலக்ஷ்மணா ! இப்படியாக வசிஷ்டமகாமுனிவருக்குக்கோபத்தினாலே மகத்தான பங்கநேரிட்டதால் யாவரையுங் கோபங்கெடுக்கும். அந்தக்கோபத்தை யெவனொருவன் கெடுத்தவனோ அவன் சுகத்தையடைவான்.

அப்பாலந்த வசிஷ்டரிட்ட சாபத்தினாலே நிமிச்சக்கரவர்த்தி மரணத்தையடைந்து சூட்சும சரீரத்தைப் பொருந்தியிருப்ப, அவருடைய மந்திரிமுதலான பரிசனங்கள் மரித்துப்போன ராசாவினுடைய சரீரத்தை வஸ்திராபரண கந்தபுஷ்பாதிகளினாலே அலங்கரித்து வைத்துக்கொண்டு, அந்தக்கௌதமமகாமுனிவரைக் கொண்டுதானே அணுமாத்திரமு மந்திரலோபங் கிரியாலோபந் திரவியலோபங்களில்லாமல் அந்தயாக மாரம்பித்தநாண்முதலாயிரம் வருஷமளவாக யாகத்தைச்செய்து முடித்தார்கள். இப்படிமுடிக்கவே அதையறிந்த இந்திரன்முதலான சகல தேவர்களு மாச்சரியத்தை யடைந்து, சூட்சுமதேகியாயிருக்கு நிமிச்சக்கரவர்த்தியை யழைத்து, உம்முடைய யாகத்துக்கு நாங்களெல்லோருஞ் சந்தோஷத்தையடைந்தோம். உமக்கு வேண்டியவரத்தைக் கேட்பீரென்றுசொல்ல வதற்கந்த ராசாவானவர் நானிந்த உலகத்திலுள்ளோர்களுடைய கண்களினுண்ணின்று எல்லாவதிசயங்களையுங் கண்டுகொண்டிருக்க வனுக்கிரகஞ் செய்வீர்களென்று கேட்டார். அதற்கவர்களப்படியே யாகக்கடவதென்று வரங்கொடுத்துத் தங்களுடைய லோகத்தைச்சேர்ந்தார்கள். அதன்பின்பு சகல ரிஷிகளுங்கூடித் தாங்கள் நித்தியாக்கினியுண்டாக்கப்பட்ட அரணியாகிய தீக்கடைக்கோலினாலே அந்தநிமிச்சக்கரவர்த்தினுடைய சரீரத்தைக் கடைந்தார்கள்.

அவ்வாறு கடையும்பொழுதில் அதினின்றுமொருபுருஷனுண்டானன். அப்படிக்கந்தப்புருஷன் பிறந்ததால் அவனுக்குச் சனகனென்று நாமதேயமிட்டு, இந்தப்பூமியைப் பரிபாலனஞ்செய்துகொண்டிருப்பாயென் றாசீர்வாதஞ்செய்து மண்டலாதிபனாக வைத்து, அந்த முனிவர்களெல்லோருந் தாங்களிருக்கு மாச்சிரமங்களுக்குப் போயினார்கள். அந்த நிமியென்று சொல்லப்பட்ட ராஜன்தபோமகிமை பொருந்திய உத்தமராகையால் நித்தியத்துவமான வரத்தைப்பெற்றார். களேபரமான வவருடைய சரீரமும் அவ்வளவு சிலாக்கியத்தை யடைந்தது. அல்லாமலும் அந்தச்சரீரத்தினின்று மொருவமிசமு முண்டாயது. ஆனதால் சத்தியமாக நீதிதப்பாமல்நடக்கு மன்னவனுக்கு ஒருகாலத்திலும், யாவராலும், எந்தமூலியத்திலும், ஒருதுன்பமுங்கேடும் வரா.

கவி.

ஒள்ளியதவத்தாற் கல்வியாலுணர்வா லுண்மையாலுணர்ந்தவருயர்ந்தோ
ரெள்ளியகுற்ற மில்லவரெய்தும் வெகுளியாலிப்படிப் பட்டார்
தெள்ளியவீரச் சிலையினாற்புறத்துத் திறற்பகை வெல்லலாஞ்சினமா
முள்ளுறுபகையையறிந்தவருலகத் தொருவரும் வென்றவரில்லை.

மூங்கிலிற்பிறந்த மூழங்குதீமூங்கின் முதலறமுருக்குமா போலத்
தாங்கருஞ்சினத்தீ தன்னுளேபிறந்து தன்னுறு கிளையெலாஞ்சயிக்கு
மாங்கதன்வெம்மை யறிந்தவர்கமையா லதனையுள்ளடக்கவு மடங்கா
தோங்கியகோபத் தீயினையொக்கு முட்பகையுலகில்வே றுண்டோ.

தம்பி ! குலத்தினாலேயாவது, கல்வியினாலேயாவது, தவமகிமையினாலேயாவது, மற்றுமுள்ள வெல்லாமேன்மையினாலேயாவது, தனக்கு நிகரில்லாமலிருப்பவனே யானாலும்; கோபத்தை யடைந்தானேயாகில் இப்பொழுது சொல்லப்பட்ட வசிஷ்டமகாமுனிவருக்கு நேரிட்டாற்போல மகத்தான துன்பத்தை யடைவான். தன்னையுங் குலத்தையுந் தனக்குள்ள வெல்லாச்சிறப்புகளையு முடனேகெடுப்பதற்குத்தன்னிடத்தி லுண்டாகுங்கோபத்தைப்போலும் வேறொருபகையு முண்டோ ? என்றுசொல்லி ஸ்ரீராகவர் பின்னு மிலட்சுமணரைப் பார்த்து இன்னமொருகதை சொல்லக்கேளென்று சொல்லத் தொடங்கினார்.

ஸ்ரீராமர் இலட்சுமணருக்கு குரோதம்வகித்தலைப்பற்றிக்கூறிய யதுவென்னுமிராஜகுமாரன் கதை.

கவி.

மன்னவனகுடனென்பான் வாசவன்மகமுஞ்செய்தோன்
அன்னவன்புதல்வன்றாதை யனையவன்றவத்தின்மிக்கோன்
பன்னெடுங்காலந்தன்னைப் பார்மன்னர்முறைசெவிப்ப
இன்னகர்க்கிறைவனாகியிருந்தவன் யயாதியென்போன்.

ஓ என்னுயிர்க்குயிராகிய அனுசனே! சந்திரகுலத்திற் றோன்றினவன். திரிலோகங்களையும் வென்று சகல்கீர்த்திகளையும் பெற்றவன். நூறு அசுவமே

தயாகஞ் செய்தவனாகியநகுஷனென்னும்பெயரையுடையமகாராஜனதுபுத்திரனான யயாதியென்பான்எல்லாமேன்மையும்பெற்றவன். அவன்விருஷபருவனென்றுசொல்லப்பட்டஅசுரேந்திரன் புத்திரியாகியசருமிஷ்டையையும்-சுக்கிராசாரியர் புத்திரியாகிய தேவயானையையும்-விவாகஞ் செய்துகொண்டு,அவர்களுடனே சகலபோகபோக்கியங்களை யனுபவித்துக்கொண்டிருந்தான். அப்படி யிருக்குநாளில் சருமிஷ்டைக்குப் பூருவென்பவன் பிறந்தான். தேவயானைக்கு யதுவென்பவன் பிறந்தான். அந்தப் புத்திரர்களுக்கு இராசாங்கத்துக்கு வேண்டிய சகலவித்தைகளையும்படிப்பித்துவருங்காலையில்,ஒருநாளிராசசபையில் இரண்டுபுத்திரரும் பிதாவைக் காணவந்தார்கள். யயாதிமகாராசா சருமிஷ்டையிடத்தி லதிமோகமுள்ளவனானபடியினாலே அவள்பிள்ளை பூருவினிடத்திலே பிரீதிபண்ணி, தேவயானைபிள்ளை யதுவினிடத்தி லுபேட்சைசெய்திருந்தான். அதுகண்டு யதுவென்பவனுக்குக் கோபமுண்டாய்த் தாயினிடத்துக்குப்போய்த் தன்பிதாசெய்த பட்சத்தைச் சொல்லித் துக்கப்பட்டான். அதுகேட்டவவள் சருமிஷ்டையினிடத்திலிருக்கிற பிரீதியினாலல்லவோ விப்படிப் பட்சபாதம்பண்ணினானென்று தன்பிதாவாகிய சுக்கிரபகவானை நினைத்தாள். அஃதறிந் தவர்வந்தார். அவருடனே தேவயானை இராசாபண்ணின பக்ஷபாதமெல்லாஞ் சொன்னாள். அதுகேட்ட சுக்கிராசாரியர் கோபித்து யயாதியைப்பார்த்து, நீ யௌவனத்தினாலல்லவோ அவளிடத்திலுனக் கதிமோகமுண்டா யிவர்களை யுபேக்ஷை பண்ணினாய்? ஆகையாலுன்னுடைய யௌவனம்போய் மூப்படையக்கடவாயென்று சபித்துப்போய் விட்டார்.

அப்பால் யயாதிராஜன் தன்னுடைய யௌவனம்போய் முதுமையடைந்து துக்கப்பட்டுக்கொண் டிருக்குங்காலத்தில் ஸ்திரீகளிடத்திலே மோகந் தணியாதவனாய்த் தன்னுடைய பிள்ளை யதுவை யழைப்பித்துச் சொல்லுகிறான்.


கவி.

நைந்தடியற்றவால நடுங்கிவீழ்கின்றதென்று
வந்தவீழூன்றிவீழா வகைநிலைவிளக்குமாபோல்
மைந்தர்களானோர்நல்ல வறிவினான்மகிழ்ந்துசேர்ந்து
தந்தையைத்தளராவண்ணந் தாங்குவர்தவத்தினன்றே.

புத்திரனாவோனீது பொருந்தித்தன்குலத்திலுள்ளோ
ரத்தனைவரையுந்தீய வருநரகுறுமற்காத்துச்
சுத்தமாங்கதியினுய்ப்பா னென்றுசொல்லுவர்கடயோ
யித்தைநீயுணர்ந்தென்மூப்பா மிடும்பையைத் தீர்த்திடாயே.

என்றுசொல்லி, அப்பாமைந்தனே ! இன்னுஞ்சிலகாலம் ஸ்திரீபோக முதலானசுகங்களையனுபவிக்க வெனக்கிச்சையிருப்பதாலென்மூப்பை வாங்கிக்கொண்டு உன்னுடைய யௌவனத்தைக் கொடுப்பாயென்று கேட்டனன். அதுகேட்டவவன் உனக்குரிமையுள்ள புத்திரன் கொடுப்பானேயன்றி நானேன் கொடுப்பேனென்றுசொல்ல, அப்போதிராஜன் உனக்கு முன்னு

№ 91. ஸ்ரீராமரிடத்தில்யமுனாதீரவாசிகள்முறைபாடு.



ஸ்ரீராமரால்சத்துருக்னர் இலவணராச்சியபட்டாபிஷேகம்.



டைய வமிசத்திலே பிறக்கிறவர்களுக்குங் கிரீடாதிபத்திய மில்லாமற்போக க்கடவதென்றும்- இவன்வமிசத்திலே இராட்சதர்கள் பிறக்கக்கடவர்களென் றும்-சாபம்பண்ணி யவனைப்போக்கி,தன்னிடத்தில்விசுவாசமுள்ள பூருவென் பவனையழைப்பித்து யதுவென்பான்மறுத்ததைச் சொல்லி,நீயேனுமறுக்காம லுன்னுடையௌவனத்தையெனக்குக்கொடுக்கவேணுமென்று கேட்டான். அந்தப் புத்திரன் வணங்கிப் பிதாவினுடைய மூப்பைத் தானேற்றுக்கொண்டு தன் யௌவனத்தைக் கொடுத்தான். அப்படியேயந்த யௌவனத்தினாலே நெடுநா ள்போகபோக்கியங்களை யனுபவித்து மறுபடியும் விவேகத்தினாலே வெறுத் து, பூருவென்பவனுக்கு மூப்பைப்போக்கிப்பட்டாபிஷேகம்பண்ணுவித்துத் தான்வனத்துக்குப்போய்த்தபசுபண்ணிமேலானகதியையடைந்தான். அப்பா இலக்ஷ்மணா! அற்பமாகிய குரோதத்தினாலே யதுவென்பவன் துக்கத்தைய டைந்தானன்றோ? ஆதலாலிராசாக்கள் குரோதத்தைவிட்டுச் சாந்தத்தைய டையவேணுமென்று ஸ்ரீராமரிலட்சுமணருக்குச் சொன்னார்.

சாந்திப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பதினான்காவது,

இலவணாசுரன்வதைப்படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமருடைய கொலுமுகத்தில் யமுனாதீரவாசிகளாகிய முனிவர்கள்வந்து இலவணாசுரன் கொடுமையைப்பற்றிக்கூறிய முறை பாடும், உடனேயவர் பரதலக்ஷ்மணரோடாய்ந்து சத்துருக்னருக்கவ் வசுரனையழித்து அவனரசினையுங் கையேற்று நடத்திவரும்படி ஆகயா பிக்க அவர்பிரயாணமாய் வான்மீகராச்சிரமமடைந்ததும்,அங்கம்முனி வரால் கன்மாஷபாதன் சரித்திரங்கேட்டுக் களித்திருந்தவர் சீதாபிரா ட்டியார் மக்கட்பேறடையக்கேட்டு வருந்தியதும். பின்னரங்கிருந் தரி திற்சென்று மதுவனஞ்சேர்ந்து சியவன முனிவரால் இலவணனுடைய கொடுமையையறிந்து அவனைப்போராடி வதைத்ததும், அப்பாலங்கு தேவர்கிருபையால்மதுபுரத்தைத்தாபித்துப்பன்னிரண்டாண்டரசியற்றி மீண்டு வான்மீகராலும் ஸ்ரீராமராலும் ஆசிபெற்று மதுபுரத்திற்சென் றரசாளுதலும் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமர் கொலுமுகத்தில் யமுனாதீரவாசிகள் இலவணனைப்பற்றிக் கூறிய முறைபாடு

கவி.

சந்திகாரியங்களெல்லாஞ் சமைந்தபின்றழைப்பச்சார்ந்த
அந்தணர்க்கம்பொன்பூமி யானிரையாதியாய
இந்திரைகொழுனனீந்தாண் டிருந்தபின்முனிவரெல்லாம்
வந்தனரென்னசொல்ல வாயிலோய்கொணர்தியென்றான்.

இப்படி ஸ்ரீராகவசிகாமணியானவர் இலக்ஷ்மணருக்குப் பலதரும நெறிகளைத் திருஷ்டாந்த சரித்திரங்களோடு மெடுத்துரைத்தபின் அவ்விளைய வராதியரோடெழுந்து அரண்மனையடைந்து ஒருவரையொருவர்பிரியாதுகொலுமுகத்துவந்து, மந்திரிபிரதானிகள் முதலானாரோடு குடிகளின்முறைகளைக் கேட்டுவிசாரித்து நியாயஞ்செலுத்திவந்தார். இவ்வாறே நாணாளுநீதிசெலுத்திவருநாளில்ஒருநாள் ஸ்ரீராமச்சந்திரமகாராஜாவானவர் தினவழக்கம்போல்பிராதக்காலையிலெழுந்து நித்தியகன்மாநுஷ்டான நெறிகளையெல்லாம்வேதோத்தமாகச்செய்து, பிராமணர்களுக்கு ஸ்வர்னம்-பூமி-பசு இவையாதியதானங்கள் பலவுஞ்செய்து சபாமண்டபம்வந்து சிம்மாதனமேறி கொலுவீற்றிருக்கையில், யமுனாநதிக் கரையிலே தவமியற்றிக்கொண்டிருக்கு முனிவரிற்பலர் சியவனமுனிவரை முன்னிட்டுக்கொண்டு அரண்மனை வாயிலிலே வந்து நின்றனர். அதை ஸ்ரீராமபிரான்அறிந்துஉள்ளேஅழைப்பித்துத்தெண்டனிட்டுச் சகலவுபசாரங்களாலே பூசித்து, ஓ சுவாமிகாள்! தேவரீர்க ளிங்கெழுந்தருளின காரியம் ஏது? அதனை யடியேனுக்கு நியமிக்கவேண்டும். இயானதைத் தடையின்றிச் செய்வேனென்று வினவினர். அதுகேட்ட அவர்களவரை நோக்கி, ஓ தசரதநந்தனா! காகுஸ்தசிங்கமாகிய உமக்கே இங்ஙனமுரைக்கத்தகும். நாங்கள் சில அரசரிடஞ் சென்றோம். அவர்கள்யாவரும் இப்படியுறுதிபேச அஞ்சினார்கள். ஆதலின் நீரேராஜகேசரி. எங்களை அசுரபயத்தினின்றும் விடுவிக்கவேண்டுமென்றுகூறித் தாங்கள்வந்த காரியத்தை விண்ணப்பஞ் செய்வதானார்கள்.

கவி.

மன்னவர்மன்னாமுன்னாண் மதுவெனுந்தானவேந்தன்
தன்னெதிரிலாதவீரன் தருமமுந்தயாவுமிக்கோன்
பின்னாகனருளாற்பெற்ற பெருவலித்திரிசூலத்தன்
அன்னதுகையதாக விளிவிலாவாயுப்பெற்றோன்.

ஆயவன்றனக்குக்கும்பீ நசிவயிற்றவதாரஞ்செய்
தீயவன்றேவராதி திரிபுவனத்துள்ளோர்க்கும்
சாய்விலாவென்றிவீரன் றயாவொடுந்தருமத்தோடும்
எய்விலாவஞ்சநெஞ்ச னிலவணனென்னும்பேரோன்.

கேளும் மகாராஜாவே! கிருதயுகத்திலே லோலையென்பவன் சுதனாகிய மதுவென்னும்அவுணனொருவனிருந்தனன். அவன்மகாபலபராக்கிரமமுள்ளவன் பிராமணவிசுவாசி மகாதருமாத்மா தேவரோடும்அவனுக்குநேசமேயிருந்தது. அவன் சிவபிரானைநோக்கி நெடுநாள் தவஞ்செய்ய, அக்கடவுள் அவனுக்குப் பிரசன்னராகித் தமது சூலாயுதத்தினின்று மொருசூலாயுதத்தை யுண்டாக்கி அவனுக்குத் தந்து, அப்பாமதுவே! இது மகாமகிமையுள்ளது. உன்னை மாறுகொள்ளும் பகைஞரைத் தப்பாமல் வென்று உன்கையில் மீட்டுஞ் சேரும். ஆனால் தேவர்மேலும் அந்தணர்மேலும் விடுத்தையாயின் பயன்படாது போவதுமன்றி, உன்னையும்விட்டு நீங்குமென் றருளிச்செய்தார். அதற்

கவன் சம்மதித்து சுவாமியை நோக்கி, ஓ தயாநிதி! தேவரீரளித்த இவ்வாயுதம் என்சந்ததிக்கெல்லா மிருக்கும்படி யனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்கவர் அப்பா! அஃதப்படி யாகமாட்டாது. ஆயினும் உன்வேண்டுகோளும் வீணாகாதபடி ஒரு வரந்தருகின்றேன். அதாவது உன் மகனுக்கு மாத்திரம் இருக்கக்கடவது. என்றுகூறி அந்தரத்தானமாயினர். இப்படி உருத்திரமூர்த்தியருளியதற்குக் களித்து அவருக்குச் சரணஞ்செய்துசென்று, திவ்வியமான மாளிகையொன்று கட்டி வாழ்ந்திருந்தான்.

அவனுக்குக் கும்பீநசியென்னு மனையாட்டிவயிற்றில் இலவணன் என்னுமகன்பிறந்தான். அவன் தந்தையின்குணங்களுக்கு மாறானதன்மை யுள்ளவனாய்நல்லோர்களைநலிவித்துக்கொண்டேவந்தான். அதற்குத்தகப்பன்மனவருத்தமுற்றும் ஒன்றுஞ் சொல்லமாட்டாமல் ஆயுதத்தை அவன்கையிற் கொடுத்து, அதன் பிரபாவத்தையும் அவனுக்குத் தெரிவித்துத் தான் வருணலோகம்போய்ச் சேர்ந்தான். பின்னர் அந்தலவணாசூரன் சூலத்தின் மகிமைபற்றியும் இயல்பானதன் கொடுமைபற்றியுஞ் செருக்குமிகுந்து, உலகத்தையெல்லாம் வருத்திவருகின்றனன். எங்களை முனிவரையே இம்சிக்கின்றான். ஐயா! இத்தன்மையன்இலவணன். அத்தன்மையது சூலம். உம்மையன்றி எமக்கு வேறுகதியில்லை. இத்துன்பமாற்றமாட்டாமல் யாம் பலவரசரிடஞ் சென்று முறையிட்டோம். எமக்கு அபயமளிப்பாரொருவருமில்லை. இயாவரினுமேலான திறத்தனான விராவணனையே நீர் சங்கரித்ததினால் உம்மைச் சரணமடைந்தோம். இனியெம்மைப் பாதகன்கையிற் சிக்காதிருக்குமாறு காத்தருளவேண்டும். உமது பேராற்றலுக்கு இயையாத தொன்றுமின்று.

என்றிவ்வகை தாபதர் விண்ணப்பஞ்செய்யக் காகுத்ததிலகர் அன்புற்றோரை, நோக்கி ஓதவசிகாள்! அஞ்சன்மின்: அக்கொடியோன் விரைவில்மாய்வான். என்றபயமளித்துத்தம்பியைப்பார்த்து, ஓஅனுசர்களே! இப்புண்ணியத்தை யார் ஏற்றுக்கொள்ளுகிறீர்கள் என்றார். அதுகேட்டஇலக்குமணர் அவரைத்தொழுதெழுந்து, சுவாமி! இம்மூவகை யுலகிலுள்ள முனிவர்கள் தானவர்களாதிய வெல்லோருங்கூடி அவ்விலவணனுக்குத் துணையாகவந்து என்னோடு பொருதுநின்றாலும், இப்பணியிலென்னைத் தேவரீரேவுவீராகில் அப்பாவகாரியை நான் கொல்லுவது நிச்சயமென்றார். அப்போது பரதாழ்வானவர் ஸ்ரீரகுநந்தனரைநோக்கி ஐயனே! அடியேன் விண்ணப்பமொன்றுளது. அதற்குத் தேவரீர்தமது திருச்செவிசார்த்தியருளல்வேண்டும் பதினான்கு வருடகாலமாய்த் தேவரீரோடு கானகமெல்லா நடந்து, காய்கனிமுதலிய பக்ஷணங்களைத் தேவரீரமுதுசெய்வதற் காய்ந்துதேடிக் கொணர்ந்து, கங்குலும்பகலுங் கண்ணுறங்காதபடி காத்து, தன்னைப்பொருத மாயவரக்கரையெல்லா மடியநூறி அந்தகபுரத்திலேற்றி, அதிகாயனையும் இந்திரஜித்துவையுங் கொன்று, இராவணனுக்கும் பலவிடர்களைச் செய்து உமதுதம்பி மிகவுநொந் திருக்கின்றான். ஆதலால் தேவரீரிவைகளை யாலோசித்து, இப்பணியை அடியேற்குப் பிரசாதிக்கவேண்டும் என்றார்.

உடனே சத்துருக்கனாழ்வானெழுந்து சக்கரவர்த்தித் திருமகனார்க்குத் தீர்க்கதெண்டன் சமர்ப்பித்து அஞ்சலியஸ்தராய் நின்று, சுவாமி! தேவரீர் வனவாசமெழுந்தருளினபோது பதினான்கு சம்வத்சரம் இந்தப் பரதாழ்வான் மரவுரியுஞ் சடைமுடியுமாய்க் கனிகளை யமுதுசெய்துகொண்டு, தமது கட்டளைப்படி அயோத்தியினின்றரசாளில் அவனியோர் பழிப்பரென்று தேவரீர் பொன்னடிநிலையை நன்முடியாகக்கொண்டு நந்திக்கிராமத்தில் நல்ல நித்திரையுமில்லாமல் இராச்சியபாரசிரமத்தை அனுபவித்தருளினார். அப்படி வருந்தினவரை இன்னமும் வருந்தும்படி நியமிப்பதிலும் அந்தக் கயிங்கரியத்தை அடியேனுக்கு நியமித்தால் நியமனப்படி நடக்கச்சித்தமாயிருக்கிறேனென்று விண்ணப்பஞ் செய்தார்.

ஸ்ரீராமபிரான் இலவணாசுரனை வதைக்க சத்துருக்னரை மதுபுரிக்கனுப்பல்.

கவி.

முனைக்களத்தெதிர்ப்பினிந்த மூவுலகத்தினுள்ளோர்
உனக்கெதிர்நிற்குமாற்ற லுடையரோவுயர்பொற்றோளாய்
சினத்திறலசுரன்றன்னைத் தென்புலத்தேற்றித்தூயோர்
மனத்திடர்தீர்த்தியென்றான் மனுகுலத்துதித்தவள்ளல்.

இப்படியென்று சத்துருக்னர் சொல்லவே அதைக்கேட்ட ஸ்ரீராமப்பிரபுவானவர் அப்பா சத்துருக்னா! நீர் யுத்தகளத்திற் பிரவேசிக்கின் இந்தமூவுலகத்தினரும் ஒருங்கு சேர்ந்தாலும் உன்னெதிர் நிற்பதற்கடுத்த பலத்தையுடையவர்களாவர்களோ? ஆகமாட்டார்கள். நீயோ புஜபலபராக்கிரம சாமர்த்தியமிருந்தவன். நீயே சென்று இவர்கள் சொல்லும்இலவணாசுரனைவதைத்து அவர்களுள்ளத்தைக் களிக்கச் செய்வாயென்று சொல்லினர். நாம்சொல்லுமின்னொரு வார்த்தையை நீதடைசெய்யாதேற்றுக்கொள்ளவேண்டும். அதாவது அவனைமடித்து அவனிராச்சியத்தை நீயே ஆளவேண்டும். இயாதொரு ராச்சியத்தையும் பாழ்ப்படுத்துவது தருமமன்று. ஆதலால் உனக்கிங்கேயே பட்டாபிஷேகஞ் செய்கிறேனென்று அருளிச்செய்தார்.

அக்கால் ஸ்ரீசத்துருக்கனாழ்வான் கிஞ்சித்து நாணமும் விசனமுமுற்று, திருமுகமண்டலம் கீழ்நோக்குள்ளவராய்த் தமயனாரைக் குறித்து, சுவாமி என்னையாண்டவரே! மூத்தோரிருக்க இளையோரரசாள்வது நெறியல்லவெனக் கேட்டிருக்கிறேன். ஆயினுமிது அறநெறியெனவும் அன்றெனவுமெடுத்துப் பேச அடியேன் சத்தியுள்ளேனல்லேன். பரதாழ்வான் முயன்றதைத் தடுத்த அபசாரத்திற்குப் பயனாய்க் கயிங்கரியத்தை இழக்க நேரிட்டதே; இனி சுவாமிநியமனத்தை உள்ளங்கனஞ்செய்தால் என்னநேரிடுமோவென நடுங்கி யாதொன்றும்புகலத்திறமின்றி வருந்துகின்றேன். ஆதலால் தேவரீரே கருணைகூர்ந்து அடியேன் துயரத்தைத் தீர்க்கவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தார். அதுகேட்ட சக்கரவர்த்தித்திருமகனார் மந்தஹாசத்தோடு அவரைநோக்கி,

№ 92. சத்துருக்னர்வான்மீகராசிரமமடைந்திருக்கையில் சீதைகுசல வரைப்பெறுதல்.



சத்துருக்னர்சியவனமுனிவருதவியால் இலவணனைச்சங்கரித்தல்.



அப்பா சுமித்திரையின் இளையசிங்கமே! மூத்தோர்மொழியை யேற்றுக் கொள்வதே பெரிய தருமமாதலின் இக்கட்டளையை நீ அங்கிகரித்தல் வேண்டும். நானிட்டபணியை யேற்றுச் சும்மாவிருவென்றுகூறி மந்திரிமாரைக் கொண்டு அபிஷேகத்துக்கு வேண்டுவன சடுதியிற்சேகரிப்பித்து, குலகுருவாகிய வசிஷ்டமாமுனி முதலியோரால் இலவணராச்சியத்திற்கு அரசாக அவ்விலட்சுமணனுஜருக்குப் பட்டங்கட்டி யருளினர். அதைநாட்டார் நகரத்தார்முதலியோரும் தேவரும் ஆமோதித்துக் கொண்டாடினர்கள்.

பின்பு ரகுகுலோத்தமர் அந்தணர்முதலிய நால்வகை வருணத்தினரோடு சதுரங்கசேனைகளும் சத்துருக்கனரோடுகூடப் போகும்படி நியமித்து, அவ்விளையதம்பியையெடுத்து மடிமே லணைத்துக்கொண்டு, அடாகுழந்தாய்! இச்சேனைமுதலிய பரிவாரங்களோடுகங்கைவெள்ளம் பெருகாமுன்னமேஅதைக் கடந்துசெல்லுக. நீயோ வருஷகாலத்திற்சென்று அந்த லவணன் உண்டிக்காகத்திரிந்து, தன்னிடஞ்சேருமுன்னே ஒன்றியாயெதிர்த்து யுத்தஞ்செய்து பகைவனை மடிக்கக்கடவாய். அவனுட்புகுந்து சூலம் கைக்கொள்வானாயின் அவனைவெல்வதெளிதன்று. சிவபிரானுடைய வரத்தை விணாக்கக்கூடாது. இதோ உனக்கு ஓரம்புதருகிறேன். இதுமதுகயிடவரைச் சங்கரிக்குநிமித்தம் பாற்கடலிற் பள்ளிகொண்ட பரமபுருடன் உண்டாக்கியது. இதற்குத்தப்பயாராலுமாகாது. இதைநான் இராவணன்மேலும் பிரயோகியாது வைத்திருந்தேன். இது உன்கையதாக உனக்கு வெற்றிவரத் தடையில்லை. நீமாற்றானை மடித்து நீதியோடு நெறியோடும் பிரகிருதிகள் மனமகிழ வரசாளக்கடவையெனநியமித்து வாழ்த்தியருளினர். அந்நியமனத்தைச்சத்துருக்கனர்சிரமேற்கொண்டு, தம்மோடுவந்த சனங்களையும் படைகளையு முந்தியனுப்பித் தக்கவிடத்திலிருக்கும்படி கட்டளையிட்டு,ஒருமாதம் தாம் அங்கேயிருந்து,மழைக்காலங் கிட்டினவுடனே புறப்பட்டு அண்ணன்மார் தாய்மார் குருமார்களைக் கும்பிட்டு வலம்வந்து அவர்களிடத்து வாழ்த்தோடு விடைபெற்று, இரண்டுநாளில் வான்மீகமுனிவ ராச்சிரமஞ்சேர்ந்து அவரைப் பூசனைசெய்து களிப்புற்று விற்றிருந்தார்.

சத்துருக்நர் இலவணசூரனைச் சம்ஹரிக்க ஸ்ரீராமரிடத்தில் விடைபெற்றுச் செல்ல வழியிலுள்ள வான்மீகராச்சிரம மடைந்து கல்மாஷபாத மகாராஜன் சரித்திரங்கேட் டிருக்கையில் சீதாபிராட்டி குசலவனைப்பெறக் கேட்டு வருந்தல்.

கவி.

அங்கமுனியடிவணங்கி யவன்செய்தபூசனைகொண் டன்றுதங்கி
மங்கைசனகன்பயந்த மடப்பாவையவ்விரவில் வயிறுவாய்ப்பச்
செங்கமலவிழிசெவ்வாய்ச் சிறுவர்பிறந்தாரிருவ ரென்றுசெப்பப்
பங்கமிலாமுனியெழுந்து பரிவோடுபிள்ளைகளைப் பற்றிப்பார்த்தான்.

அங்கே பக்கத்தில் பெரியதொரு யாகசாலை யிருக்கக்கண்டு அம்முனி வரைநோக்கி, சுவாமி! இதுயாருடைய யாகசாலையென வினவினர். அதற்கத் தாபதத்தலைவர் அருளிச்செய்யலாயினர். கேளுமையா காகுத்தமணியே! உமது திருவமிசத்திலே சுதர்சனனென்னு மரசனுக்கு வீரசஹன் என்றொரு குமாரரிருந்தார். அவரறத்திலு மறத்திலும் பேர்பெற்றவர். ஒருகால் அவர் வேட்டைக்குச் சென்றிருக்கையில் புலிவேடம்பூண்டு மிருகங்களைத் தின்று கொண்டிருந்த இரண்டிராக்கதச் சிறுவரைக்கண்டு, இருவரில் ஒருவனை அம்பினால் வீழ்த்தினர். மற்றொருவன் அரசன்மேற் பகைபாராட்டி, ஆ! நல்லது மன்னவனே! இப்பழியை யெவ்விதத்தேனும் யான் தீர்ப்பேனென்றுகூறி மறைந்துபோயினன். பின்பந்த நரபதி இராச்சியமடைந்து மித்திரசஹன் என்கிற பெயர்கொண்டு அசுவமேதமியற்றி முடித்தவளவில், குருவாகிய வசிஷ்டமாமுனி அங்குவந்து இராசனை நோக்கி, என்றனுக்குப்புலாலோடுகூடிய மதுரமான ஆகாரந்தருகவென்று கூறினர். அதற்கு மித்திரசஹன் நல்லதென்று தன்பாகத்தலைவனுக்குக் கட்டளையிட, அவ்விராக்ஷசன் பாகனாக வந்து நரமாமிசஞ் சமைத்துவைத்துத் தன்னிடஞ் சேர்ந்தான்.

இப்பால் நரேந்திரனனவன் பாகத்தலைவனாகிய ராக்ஷசனுடையமாயையை யறியாமல் அவ்வன்னத்தைஆசிரியற்குஅளிப்பிக்க,அவர்அதனையறிந்துமிகச் சினந்து,அடா அதமா! என்றனுக்கு அசுத்தமானஆகாரம் இட்டனையாதலின் நீ இவ்வாகாரம்புசிப்பவனே ஆகக்கடவையெனச் சபித்தனர். கோமகனும் தன்னிடத்துக்குற்றமில்லாதிருக்கச் சபித்தமையால் தானும் அக்குருவுக்குச் சாபமிடக்கையினீரேந்தினன். அப்போது அவன்மனைவியாகிய மதயந்தியானவள் ஆசிரியருக்குச் சாபமிடுவது தகுதியல்லவென்று மறுத்ததனால், அவ்வேந்தன் அந்நீரைத் தன்தாளின்மீது பெய்தனன். அதனால் பாதம்வெம்பியது பற்றி அவற்குக் கல்மாஷபாதனென்கிற பெயருண்டாயிற்று. பின்பவ்வரசன் இஃதிராக்கதன்செய்த வஞ்சமென்பதை யறிவித்துக் குருவைப்பணிந்து போற்ற, அவருமிராக்ஷச மாயையென்று அறிந்து இரக்கமுற்றவராகி, மன்னவனே! நான் கோபங்கொண்டு சொல்லியவார்த்தை தவிராது. ஆயினும் ஒரு வரந்தருகிறேன். அதாவது — இச்சாபத்தைப் பன்னிரண்டாண்டு அனுபவித்துப் பின்னர் அரசாளக்கடவை. அன்றியும் சாபந்தீர்ந்தபிறகு முன்னுகர்ந்த துன்பமியாவும் மறக்கக்கடவையென்று அனுக்கிரகித் தருளினர்.

அப்படியே அப்பார்த்திவனுஞ் சாபந்தீர்ந்து பழையபடி இராச்சியபாரநடாத்திவந்தனன். அந்த மகாராஜா அசுவமேதஞ்செய்த சாலை இது. என்று வான்மீகியுரைக்கக்கேட்டசத்துருக்கனும்வான்பெரியோர்பிரபாவத்தைச்சிந்தித்துக்கொண் டிருந்தான். இப்படியிருக்க - அவ்விரவிலேயே சீதாபிராட்டி இரண்டு குமாரரையீன்றாள். அச்செய்தியைச் சில முனிகுமாரரா லறிந்த வான்மீகமாமுனிவர் அங்குசென்று, குழந்தைகளிருக்கும் வடிவழகு வண்ண

முதலியவற்றைக் கண்டுகளித்து, குசைகளின் நுனியாலே மூத்தவனையும் அதன்புறத்தாலே இளையவனையும் காப்புச்செய்வித்து, இக்காரணத்தாலேயே மூத்தோனுக்குக் குசன் என்றும் – இளையோனுக்கு இலவன் என்றும் நாமகரணஞ்செய்ய உத்தேசித்து, தகுந்தகாலத்தில் அப்படியே செய்தார். சத்துருக்கனூழ்வான் அங்கிருப்போரால் அச்சேதிதெரிந்து, தமக்குளொன்றுந் தோன்றுதவராய் இதனைச் சிந்திக்கின்றார். ஐயோ! இப்பிள்ளைக ளயோத்தியிலுற்பவிக்கப்பெறாது பறவைகளொலியே யன்றிப் பஞ்சகருவிகளொலி சிறிதுமில்லாத இக்காட்டிற் பிறந்தார்களே யென்று வருந்துகின்றார்.

கவி.

பொய்யாதவேதியர்க்குப் பூதானங்கோதான முதலபண்ணிக்
கய்யாரநிதிவீசிக் காகுத்தன்காளையர்கள் பிறந்தாரென்று
மய்யார்பூம்பொழினகரி மகிழ்வெய்திமணிமுரச மறைந்துநின்று
நெய்யாட்லாற்சனங்க ளென்படுமோவின்றென்று நினைந்துநைந்தான்.

இவர்கள் நமதுபொன்னகரிற் பிறந்தார்களாகில் பொய்யாத வேதியர்களுக்கெல்லாம் பூதானங் கோதானமுதலிய பலதானங்களைச் செய்து, கையாரநிதிக்குவியல்களைவீசி, காகுத்தனுக்குக் காளையர்கள் பிறந்தார்களென்று நகரத்தினரெல்லா மகிழ்வெய்தும்படியாக முரசமறைந்து, நெய்யாடல் முதலாகிய சம்பிரமங்களினுல் சனங்கள் யாவரும் என்ன சந்தோஷத்தை யடைவார்கள்? ஆ! ஆ! இஃதென்னகுறை? என்று சிந்தித்து தமக்குள்தாமே நைந்தார்.

சத்துருக்னர் அங்கிருந்து யமுனுதீரத்துள்ள மதுவனமடைந்து சியவன முனிவரால் இலவணசூரன் விருத்தாந்த மறிதல்.

கவி.

சந்தியவந்தனைசெய்து தபோதனரோ டினிதிருந்தசமயத்தந்த
அந்தணரையடிவணங் கியடலரக்கர் குலத்தினைவேரறுத்துவந்த
சுந்தரவில்லிக்கிளையான் சொல்லுவானிலவணன்கைச் சூலஞ்செய்யும்
வெந்தொழிலுமவன்வலியும் விரித்துரைமினெனவவரும் விளம்பலுற்றார்.

இப்படி ஒருவிதத்தில் இன்பமும் மற்றொருவிதத்திற் றுன்பமுங்கொண்டு சத்துருக்கனூழ்வான் காலையிலெழுந்திருந்து பயணமாகி, ஏழுநாள்வழித்தங்கி மதுவனம்போய்ச் சேர்ந்து சியவனமுனிவரை நோக்கி, ஐயா! இந்த மதுமகனுடைய பலபராக்கிரமங்களையும் விசிதமாயறிய விரும்புகிறேன் இவனுற்பட்டவர் யார்யார்? என வினவ அத்தவசிகுலதிலகர் உரைக்கலாயினர். கேளும்காகுத்தசிங்கமே! இவனுற்பட்டார்க்கு அளவில்லை. அவற்றையெல்லாஞ் சொல்லப்பொழுதில்லை. சாரமாயொன்று கேளும். உமது திருவமிசத்தில் யுவனுசுவனென்பவருடைய குமாரர் மாந்தாதா என்பவர்மகாபல பராக்கிரமசாலியாயும், மகாமகிமையுள்ளவராயு மிருந்தாரெனக் கேள்

வியுற் றிருக்கின்றோம். அவரிப்பாதகனாலேதான் இறந்தார். எப்படியென்றால், அந்தமகாபுருஷன் இந்திரனோடு அர்த்தாசனத்திலிருந்து தேவராச்சியத்திற் பாதியாளவேணுமென்று கருத்துகொண்டு அதற்கேற்ற தவமுதலான முயற்சிசெய்துவருகையில், தேவர்கோன் பொறாமைகொண்டு வருந்தி அவ்வரசனிடம்வந்து இதனைச் சொல்லுகிறான்.

ஓ ராஜாதிராஜனே! நீர்செய்யுமுயற்சி தெரியும். அது பயன்படாமற் போகாது. அதுநிற்க — இந்தநரலோகத்திலே உமதுபிரதாபஞ் செல்லாதிருக்கச் சுரலோகத்திலே அதைச்செலுத்த எத்தனிக்கின்றீரே. அதுநேராகத்தோன்றவில்லையென்றியம்பினன். அதுசெவியுற்ற மாத்திரையில் மாந்தாதா விம்மிதங்கொண்டு, ஆ! அப்படியா? எங்கே யெனதுபிரதாபஞ் செல்லவில்லை? அதனை நீரெனக் குணர்த்தவேண்டு மென்றுகேட்டலும் அச்சுரபதி அவரை நோக்கி, ஓ நரபதி! மதுவின்மைந்தன் இலவணன் எனவொருவனுளன். அவன் நற்கிரியைகளையழித்து நற்றவர்களைப்புசித்து நானிலநடுக்கி வருகின்றான். அவனை நீர்வென்றிலீரென்னவும் அவ்வேந்தன்வெட்கித்தலைகுனிந்து, அவ்விந்திரனுக்கு வந்தனமியற்றித்தன்னகர்க்குச்சென்று, நாற்படையுங்கூட்டிக்கொண்டு மதுபுத்திரன் வதியுமிடஞ்சேர்ந்து அவனைப் போர்க்குவிளித்தார். அவ்விராக்கதன் சூலமுங்கையுமாகவந்து நின்றான். அரசன் எத்தனைமுயன்றும் பயன்படாமல் சேனையோடு தான் அச்சூலத்திற்கிரையானானென்று சொல்லிமுடித்தனர். பொழுதுபுலர்ந்தது. இனி அவ்வரக்கன் சூலமில்லாமல் ஊணுக்காகவெளியிற்செல்லுவான். அவன் திரும்பிவருகையில் நீர் அவனையெதிர்த்துச் சங்கரிக்கவேண்டும். ஆதலின் எழுந்து அவன்வதியுமிடத்து வாயிலில் யுத்தசன்னத்தராயிருக்க வேண்டுகிறோ மென்றார்.

சத்துருக்னர் சியவனமுனிவரால் இலவணசூரன் உளவையறிந்து மதுபுரமடைந்து வாயிலில்நின்று அவன்வரவுபார்த்திருந்து அவனுடன் போர்புரிதல்.

கவி.

என்றுதிருமறைமுனிவ ரிலவணன்றன்வலியெல்லா மியம்பக்கேட்டு
வன்றிறற்போர்ச்சத்துருக்கன் மதுபுரமாமாநகர வழிக்கொண்டந்த
குன்றனையோனுயிரலைப்பப் புறப்பட்டானெனச்சாரர் கூறக்கேட்டுச்
சென்றனனந்நகரெய்திச் செழுமதில்வாயிலினின்றான் சேனைசூழ.

இப்படியென்று சியவனமுனிவர் இலவணசூரனுடைய வலிவுகளையெல்லாஞ் சொல்லக்கேட்ட சத்துருக்னமகாராஜர் மதுபுரமடைந்து அவனெங்கேயிருக்கிறானெனக்கேட்க அவன் வெளியிலுள்ள ஜீவசெந்துக்களைக் கொல்லப் போகிறானென்று சாரணர்கள் சொல்லத்தெரிந்து அந்நகரதுவாயிலின்கணிருந்து அவன்வருவழியைப் பார்த்துக்கொண்டு வில்லில் நாணேறிட்டுக்கொண்டு ஆண்டேகினின்றார். அக்காலந்த லவணன் எங்குந்திரிந்து பலஜந்துக்களைக் கொன்றெடுத்துக்கொண்டுவருகையில் வாயிலிலிவரிருப்பதைக்கண்டு, நீயார்

இக்குறிக்க யாதுகாரணம்? எனவினவவும் சத்துருக்னர் அவனைநோக்கி, அடராக்ஷசா! இயான் தசரதகுமாரன். ஸ்ரீராமசந்திரருடைய தம்பி. உன்னோடு தொந்தயுத்தஞ்செய்து உன்னைப்பரலோகமனுப்ப வந்திருக்கிறேனென்றார். அதுகேட்ட விராக்கதன் நகைத்து, ஓ! ஓ! நான்வெகுநாளாய் உங்களைக்காண விரும்பியிருந்தனன். நீ என்குலத்தலைவனாகிய இராவணனைவதைத் தவர்க்கத்திற் சேர்ந்தவனல்லவோ? ஆதலினுன்னை இன்றேபசிருத்துவுக்கு அதிதியாக்குகிறேன். சற்றிரு உள்ளேசென்று படைக்கலங்கொண்டு வருகிறேனென்றான். அதுகேட்ட இலட்சுமணனுஜர் — அதுகூடுமா? உன்னையினியொருநிமிஷமாகிலும் புறஞ்செல்லவிடுவேனா? கையிலகப்பட்ட பகைவனை விடுகிறவன் தான்சாகமருந்துகொள்பவனன்றோ? ஆகவே நீ நின்றநிலையிலேயே போரிடவேண்டுமென் றருளிச்செய்தார்.

இச்சொல் செவிசாரவே அப்பாதகனுக்குக் கோபம்பொங்கிக் கையோடு கைபுடைத்து எயிறுதின்று இதழ்கவ்விக் கொண்டு, அடாமனிதப்பதரே! உன்னண்ணன் தசக்கிரீவன் முதலானோரைக் கொன்றதைக்கேட்டுப் புன்மையான மனிதரோடுபோர்புரிவ திழுக்கென்றிருந்தேன். இலட்டுகம்வாயில் வீழ்வதுபோல இன்றுநீ வலுவில் வந்ததனால் உன் கருவத்தையடக்கவேண்டும். இதோ யுத்தசன்னத்தனாய் நின்றேனென்று ஓர் பெருமரத்தைப்பிடுங்கிச் சத்துருக்கனர் மார்பிலெறிந்தான். அவரதனைக் கூரிய பகழிகளாலே பலதுண்டாக்கித் தள்ள, இலவணன் மறுத்தும்பல பாதவங்களைப்பறித்து மோதக்கண்டு காகுத்த திலகர் ஒவ்வொன்றையு மூன்றுநான்கு அம்புகளைக்கொண்டு சிதைத்துத் தள்ளி, மழைபொழிவதுபோல் அவ்விராக்கதன்மீது அம்புகளைப் பொழிந்தனர். அவனோ அதனாற்சிறிதும் வருந்தாதவனாகி யொருபெரிய விருக்ஷத்தா லவரது சென்னியிற்புடைக்க, அப்புடைத்தலால் அவர்சோர்ந்து மூர்ச்சையடைந்தார். அதுகண்டு தேவருமுனிவரும் ஹரஹர எனக்கதறினார்கள். அந்நிருதன் அவர் தரையிற் சாய்ந்ததுகண்டு இறந்தாரென்றே கருதி, தான் குதூகலத்தோடு கொணர்ந்தபூச்சிகளைப் புசிக்கத் தலைப்பட்டானேயல்லது சூலங்கொண்டுவர நினைத்திலன். அப்பால் சத்துருக்கனாழ்வாரோ முகூர்த்தத்திற்குள் அறிவொன்றி யெழுந்து மிக்கசீற்றமுற்று, ஸ்ரீராமபிரான் தமக்குப் பிரசாதித்திருந்த விஷ்ணுசாயகத்தைக் கோதண்டத்திற் சந்தானம்பண்ணி விடுத்தார். அக்கணையானது சூரியனுதித்தாலென்ன ஜாஜ்வல்யமாய் உலகெல்லாந் தீய்ந்துபோமாறு வானத்திற் செல்லக்கண்டு, அமரரும் அஞ்சியார்ப்பரித்தோடிப்பிரமதேவனைவினவினர். அவர் இதுதிருமாலின்சரம்-அஞ்சன்மின்—அவரது அமிசாவதாரமான சத்துருக்கனாழ்வான் இலவணன்மேற் பிரயோகித்தனனென்றுரைத்ததனால் மனத்தளர்ச்சியற் றிருந்தார்கள்.

சத்துருக்னர் இலவணசூரனை வதைத்தல்.

கவி

பெண்ணுருவிபாகன்பாற் பெருசூலப்பெருவலியாற் பெருகும்பாவம்
உண்ணிருமியாவவுண னுரமுருவியுபர்வரைக ளுருவியோடி

மண்ணுருவி மண்ணின்கீழ் மாநாகருலகுருவி மறித்துமீண்டு
திண்ணியதோட்சத்துருக்கன் செங்கையில்வந்திருந்ததந்தத் தெய்வவாளி.

அப்படிபுறப்பட்ட அக்கணையானது உமாதேவியை இடப்பாகத்தில்வைத்த பரமேஸ்வரனிடத்திலிருந்து பெற்ற சூலாயுதத்தின்வல்லமையால் ஒருவரும் நிகரற்ற பராக்கிரமசாலியாகிய இலவணசூரன்செய்த மாயத்தையெண்ணி அவனது மார்பிற்றைத்து அங்குநில்லாதுருவி, மலைகளையுருவி, பூலோகத்தையுருவி, பாதாளவுலகத்தையுருவி எங்குநிற்காது ஸ்ரீசத்துருக்ன மகாராஜனது அம்பறுத்தூணியில்வந்து சேர்ந்தது: அவனோ சூறையிற்பட்ட பெருமரம்போல்வீழ்ந்து யமனுக்குவிருந்தாயினான். அவன் வசத்திலிருந்த முத்தலைவேலானது மீண்டும் சூலபாணி சன்னிதானமேசேர்ந்தது: இவ்வாறு லோககண்டகனாயிருந்த லவணன் சங்கரிக்கப்பட்டவுடனே ஓரம்பினால் மூவுலகத்தையு முய்வித்த இராகவாநுஜனைத் தவசிகளும் வானவரும்புகழ்ந்து, ஜயவிஜயீபவ ! எனவாழ்த்திப் பூமழைபொழிந்தனர்.

பின்பு சுவர்க்கத்தாரெல்லாம் அந்தக்காகுத்த வீரர்க்கு எதிரில்வந்து, ஐயா ! மிகக்கொடியனான லவணனைச் சங்கரித்துப் புவனமெல்லாங் காத்தீர். ஆதலின்யாம் சாலவுவப்புற்றோம்.எம்மிடத்து நீர்வரம்வேண்டுகவெனவும்,அவர் எனக்கு வேறுவரமொன்றும் வேண்டாம். இவ்விடம்வசிப்பதற்கு ஏற்ற நகரமாதல்வேண்டுமென வுரைத்தார். அவர்கள் அங்ஙனமே யாகுகவெனக்கூறித் தம்முலகுக்கேகினர். உடனே அதுஅர்த்தசந்திராகாரமாய் ரமணீயமும் விசாலமுமான மாடமாளிகை கூடகோபுர மண்டப முதலியவற்றாலும், எல்லாப்பண்டங்களுநிறைந்தசெல்வங்களாலும்,தந்தம்நிறை தவறாத நால்வகை வருணத்தாராலும் விளக்கமுற்று; பலசெல்வமு மல்கியதோர் நகரமாயிற்று. மதுவென்பவன் கைக்கொண்டிருந்தது பற்றியும், கண்ணுக்கினிமையானது பற்றியும், அதற்குமதுபுரமெனத் திருநாமஞ் சார்த்தப்பட்டது. அது முன்பன்னிரண்டாண்டாய் அழிந்துகிடந்து பின் வீரசேனதேசத்துத் தலைப்பட்டணமாய் யமுனாநதிக்கரைக்கோ ரணியாயொளிராநிற்கக்கண்ட சத்துருக்னர் தமதுசேனை சேனாதிபதி மந்திரிமுதலாயினோரை அவ்விடத்துத்தக்கபரிசாயிருத்தி, இலவணன் குடியிருந்தவிடத்தையே அரண்மனையாக்கி யலங்கரித்து எழுந்தருளியிருந்தார்.

சத்துருக்னமகாராஜர் மதுபுரியையாண்டு ஸ்ரீராமரைக்காண மீண்டு அயோத்தியடைந்து அவருத்தரவால் மதுபுரஞ்சென்று அரசிருத்தல்.

கவி.

தய்யலர்பல்லாண்டிசைப்பச் சாமரைகள்பணிமாற தரளமோங்கும்
தெய்வமாவின்னிசைகள் செவிநுழையமாகதர்க டிரண்டுபோற்ற
மெய்யெலாமாபரணம் விரிசோதியால்விளங்க விண்ணோர்வாழ்த்தப்
பொய்யிலாவுள்ளத்தான் பொங்கணைமேல்வீற்றிருந்தான் புலவர்போற்ற.

இவ்வாறு சத்துருக்னர் பன்னிரண்டாண்டு அந்நாட்டையாண்டு ஸ்ரீராம பிரானுடைய திருவடிகளைச்சேவிக்கப் பேரவாக்கொண்டு, துனைத்தனத்தை மந்திரிகள் வசமொப்புவித்து, ஒருநூறு இரதமும் சிறிதுபடையுங்கொண்டு பிரயாணப்பட்டு, ஏழெட்டுநாள் வழித்தங்கி, வான்மீகமுனிவராச் சிரமத்திற் கெழுந்தருளி அத்தபோதனரை யிறைஞ்சி அவரளித்த பிரசாத நுகர்ந்து வீற்றிருந்தார். இப்படியிருக்கையில் அந்த முனிவரர் பற்பலகதை களையியம்பி மதுபுத்திரனை மாள்வித்ததையுகந்து, ஓ இரகுகுலதிலக! நீர் இல வணனோடு நிகழ்த்தியவமரை யான் இந்திர சபையிலிருந்து நோக்கினன். வெகுசிலாக்கியமா யிருந்தது. என்மனதிலு மிக்க உவப்புண்டாயிருக்கின்றது. ஆதலால் அதன்பயனாக உம்மை யுச்சிமோக்கின்றேன். எனவெழுந்து த ழுவி யுச்சிமோந்து சிறப்புச்செய்தனர். இங்ஙனம் அவரால் கொண்டாடப்ப ட்டு நின்ற சத்துருக்கனுழ்வார், குசனுமிலவனும் தூரத்தில் மறையவிருந்து ஸ்ரீராமசரித்திரமாகிய ராமாயணத்தைத் தக்க தாளலயைகளோடு யாழிலிட்டு மதுரமாய்ப் பாடக்கேட்டு, அதெல்லாம் அப்போதுதான் நடந்ததுபோல அ னுபவத்தில்வர மனந்தளர்ந்து கண்ணீர்மல்க வொருமுகூர்த்தகாலம்பிரக்ஞை யற்றிருந்தார்.

அவரோடுகூட வந்தவர்களும் அப்பாடலைச் செவியுற்றுத் தலையிறங்கி முகம்வாடி, இதென்ன ஆச்சரியம்? எப்போதுநடந்த சரித்திரமிது? இயார் பாடுகின்றனர்? ஈதொருகனவோ? நனவுதானோ? என்றயிர்த்துத் தம்மரச னிடஞ்சென்று, இதென்ன வான்மீகமுனிவரை வினவியறிந்து தெரிவிக்கவிரு ம்புகிறோமென்றனர். அதற்கவர் தம்பரிவாரத்தாரை நோக்கி, மகாரிஷியின் ஆச்சிரமத்தில் எத்தனையோ அதிசயங்களிருக்கும். நாம்வினவ வொண்ணாது. என்றவர்களைப் போகவிடுத்துத் தமக்கென்று சமைத்தவிடஞ்சென்று படுத்து ஸ்ரீராமகதா சங்கித நினைவேகொண்டு விசனத்தினால் நித்திரையின்றியே இர வைக்கழித்தனர். கதிரவன் கிரணங்களாகியகைகளால் இரவென்னுங்கரிய போர்வையை நீத்து விளங்கியபின் இலட்சுமணசகோதரர் காலைக்கடன்களை யனுட்டித்துப் புற்றிற்பிறந்த பெருமுனியிடம் விடைபெற்று, அயோத்தியா நகரத்தை நண்ணிச் சக்கரவர்த்தித் திருமகனுரைத் தெண்டன்சமர்ப்பித்து நேத்திரத்தி னீர்ததும்பநின்று, சுவாமி! தேவரீர் நியமித்தபடி இலவணனை யொழித்து மதுரையைச் சீராக்கி இராச்சியபரிபாலனஞ் செய்துவந்தேன். பன்னிரண்டுவருடங் கழிந்தன. இனி சுவாமி திருவடிவாரத்தை விட்டுப்பிரிய மனமற்றிருக்கிறேன். தாயில்லாக்குழவிபோலென்னைத் தனியேவிட்டு அனு தரிப்பது தேவரீருக்குத் தகுமோவென்று விண்ணப்பஞ்செய்தார்.

அப்போது தமையனுரும் தம்பியை யணைத்துக்கொண்டு, அப்பா! விச னப்படாதே: பிரிவிற்குக்கஷ்ரதலும், படைக்குக்கூசுதலும். போர்க்குப்பின் னிடலும், க்ஷத்திரியதருமமன்று கடைசித்தம்பியாகிய உன்னைப்பிரிந்திருப்ப தில் எனக்குத் துன்பமில்லையா? ஆயினும் அறத்துக்குயாரு மடங்கவேண்டுவ

தாதவின்பொறுத்துக்கொண்டிருக்கின்றேன். நீயுமிவ்வாறேயறத்தைநோக்கிக் கடவுள்கட்டளையாலமைந்த ராச்சியாதிகாரத்தை நிறைவேற்றக்கடவை. வேண்டுமானபோது இங்குவந்து என்னைக் கண்டுபோகலாம். இப்போது ஏழுநாளிங்குவதிந்து மதுரைக்கு ஏகக்கடவையென்று தேற்றியருளினார். இப்படி தேற்றியும் சத்துருக்னர்தேறாமல், கட்டளையை மறுக்கக்கூடாதென்று அப்படியேயுடன்பட்டு, இலட்சுமணரையும் - பரதரையும் — தாய்மாரையுங்கண்டு தெண்டனிட்டு, மற்றுமுள்ளோரையும் தக்கபரிசிலுபசரித்து ஏழுபகல்கழிந்தவுடனே புறப்பட்டு மதுபுரிக்கு எழுந்தருளி மாதர்கள் பல்லாண்டிசைக்க முத்தாலலங்கரித்த சாமரைவீச, தெய்வீகமாகிய இசைகளைச் செவியிற் பொருந்த விசைக்க பட்டுவான்கள் புகழ்சொல்ல, தகத்தகாயமாய் ஆபரணங்கள் திருமேனியில் பிரகாசிக்க, தேவர்களெல்லாம் பூமழைபொழிந்து வாழ்த்த வித்துவான்களெல்லாம் புகழ்ந்துபோற்ற பொய்யில்லா மெய்நிறைந்த நெஞ்சத்தையுடைய சத்துருக்னமகாராஜன் சிம்மாதனரூடராய் மதுபுரத்தை யரசுபுரிந்தனர்.

இலவணசூரன்வதைப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பதினைந்தாவது,

சம்புவன்வதைப்படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமருடைய கொலுமுகத்தில் ஓர் பிராமணனும் பிராமணியும், இறந்துபோன தங்கள் பிள்ளையைக் கொணர்ந்து வைத்துமுறையிட, ஸ்ரீராமர் நாரதமுனிவரால் அப்பிள்ளையிறந்ததற் கேதுவான சம்புவனைத்தேடி வதைத்து அகஸ்திய ராச்சிரமமடைய, அம்முனிவர் அவருக்கு சுவேதராஜன் கதைகூறி அவனாற் றாம்பெற்று வைத்திருந்த ஆபரணத்தையளிக்க, அப்பாலம்முனிவரால் மனுகுலத்தோனாகிய தண்டனாலாளப்பட்ட விராச்சியம் தண்டகாரண்யமானவாறு கேட்டு அயோத்தியை யடைந்தமை சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமர் கோலுமுகத்தில் ஓர் பிராமணனும் பிராமணியும் இறந்துபோன தம் பிள்ளையைவைத்து முறையிடல்.

கவி.

இளையவனேகவிராகவனயோத்தி யிருந்தரசாள்கின்றவேல்லை
விளைபெருமூப்புவெண்ணரைத்தலையோர் வேதியன்றாரத்தினோடும்
வளர்தருந்துயரான்மரித்ததன்மகனை மடியிலேவைத்துயிர்க்கெல்லாம்
களைகணாயுள்ளகாவலன்கோயில் வாயிற்சதறிடுங்காலை.

படம் 93. அகஸ்தியர் ஸ்ரீராமருக்கு சுவேதனாற்றம் பெற்ற ஆபரணமளித்தல்.



ஸ்ரீராமர் உயிர்த்தெழுந்த பிராமணப்பிள்ளையையும் தாய்தந்தையரை யுஞ் சந்தோஷிப்பித்தல்.



இவ்வண்ணம் இளையதம்பியாகிய சத்துருக்னமகாராஜனை மதுபுரிக்கனுப்பி இராமச்சந்திரமகாராஜாவானவர் அயோத்தியாபுரியில் சிங்காதனரூடராயரசாக்ஷிசெய்து வருநாளையில், வயோதிக பருவம்வாய்ந்து நரைத்தமயிரையுடைய ஓர் பிராமணன் தன்பத்தினியோடு இறந்துபோன தனது அரிய ஓர் பிள்ளையை அரண்மனைவாயிலிற் கொண்டுவந்து கிடத்தினான் அப்போதப் பிராமணஸ்திரீயானவள் அப்பிள்ளையை மடியின்மீது எடுத்துவைத்துக்கொண்டு அங்கிருப்போரெல்லாங் கலங்கிவருந்தும்படியாகத் தன்பிள்ளையின்மேல் விழுந்து புலம்புகிறாள்."

கவி.

மணியேயென்றன் மாசறுசோதி யழகுக்கோ
ரணியேயென்றன் னாருயிரேயா ரமிழ்தேதேவன்
பணியேதிந்நா ளேகவுனக்குப் பணியாரப்
பிணியேதந்தா யீங்கிதுவோநான் பெறும்பேறே.

முன்னைச்சென்மத் திட்டுடையேனா தலின்மோகத்
துன்னைப்பெற்றுப் போற்றிவளர்த்தின் றுனைவிட்டே
னென்னைப்போலப் பாவிகளுண்டோ வினையில்லாப்
பொன்னைப்பெற்றுத் தப்பமுடிந்தேன் பொறியற்றேன்.

பதங்களிலார்க்கும் பன்மணியார்க்கும் படியில்லாச்
சதங்கையுமொண்பொற் றண்டையுமம்பொன் னரைநாணும்
பதம்பலவாகு மைம்படையும்மெய் யழகெல்லாம்
பொதிந்தகழுத்துங் காறையுமம்பொற் புனைபூணும்.

பட்டமுநெற்றிப் பன்மணிமுத்தின் படர்சோதிச்
சுட்டியுமம்பொற் றோடுமிலங்கொன் றுணையேயோ
வெட்டனையுஞ்சார் பில்லவனாட்டி னிடைவந்தாய்
கட்டியசுற்றிக் காப்பிடவாராய் களிறேயோ.

மண்ணறுசீரு மானமுமங்க வசைபூண்டோன்
கண்ணறையன்கா குத்தனெனாதிக் கடன்ஞாலம்
புண்ணுறுதீயிற் புத்திரசோபந் தனைமாற்றிப்
பண்ணறைநாய்தாய் செத்திலளென்றே பழிதூற்றும்.

என்னைக்கைவிட் டேகியநீயோ வெழின்மைந்தா
வுன்னைக்கைவிட் டென்னொடுவாரா துழல்வேனோ
தன்னைச்சொல்லிக் கூப்பிடவேதுந் தகவில்லா
மன்னர்க்கல்லா மன்னவனோவுன் வலியாரார்.

ஒன்றுந்துன்பங் கொள்கலமானே னுயிரெல்லாங்
கொன்றுண்பாவிக் கூற்றுவனென்னைக் கொடுபோகான்
வன்றிண்சிந்தை மன்னவனுமென் வினைதேரா
னென்றென்சிந்தை யெய்துறுமோவாள் வினையையே.

இவ்வாறுகூறிப்புலம்பிய பார்ப்பினி புத்திரசோகத்தால் தனதுநிலைகுலைந்து நிற்ப, அந்தப் பிராமணனும் ஆற்றமாட்டாத துக்கத்தினனாய் அழத்தொடங்கினான்.

கவி.

கன்னெஞ்சராயுள்ளோர் காளையரைத்தாமிழந்து கதறுநிற்பர்
மென்னெஞ்சராயுள்ளோர் வெந்துயரம்பொறுக்கலா விடுவராவி
யென்னெஞ்சிலெரிமூட்டி யென்னையறக்கைவிட்ட வுன்னைப்போல
வன்னெஞ்சனேயானு மைந்தனேயுனைத்தொடர்ந்து வருகின்றேனே.

தனக்குநோய்வேண்டாதான் சந்ததிபெற்றிடாதொழிக தளர்வுமிக்கு
மனத்துநோய்தான்பெருக மலடனுக்கின்றியாம்படுமிம் மறுக்கமில்லை
யெனக்குநீசெய்விருந்த நீர்க்கடனினின்னிற்பி னிருந்துபிள்ளா
யுனக்குநான்செய்வனோ செய்யேன்கா ணுனைத்தொடர்ந்து வருகின்றேனே.

கண்ணிலான்பெற்றிழந்தா னெனவுன்னைப்பெற்றிழந்து காந்திப்பொங்கும்
புண்ணுளேநாராசம் புடைத்தனையபொறுக்கலா தாற்றேனாகி
மண்ணிலாப்பெரும்பாவத் தெங்களுக்குமகனாக வென்னபாவம்
பண்ணினாய்மகனேயென் பழிப்பற்றபேரழகா பகர்ந்திடாயே.

தேசற்றதீவினையேன் றிருவுடையோர் பிள்ளைகளைப் பெற்றுவாழ
வாசைப்பட்டாவிதளர்ந் தருந்தவங்கள் செய்துநா னனேகங்கால
மேசற்றேனேசறவு கெடவந்தாயென்றிருந்தே னெங்கேபோனாய்
மாசற்றமணியேயென் மறுவற்றவடிவுடைய மைந்தரேறே.

தள்ளாடுமேனியனாய்த் தனையனைநானிழந்தாவி தளர்கின்றேனைக்
கொள்ளாதுகூற்றுமென்னைக் கொடுபோகாதினியுனக்குத் தோழராகி
யுள்ளார்களொடுதெருவில் விளையாடியுடம்பலசி யுறங்கினாயோ
பிள்ளாய்நீயெழுந்திரா யிதுவென்ன பேருறக்கம் பேசிடாயே.

கொஞ்சியவுன் சொற்கேட்டுக் குடுமியுஞ்சுட்டியுமழகுங் குறித்துச்சால
நெஞ்சுகளித்தினிதிருந்த நெடுந்தவத்தால் விதிமுறைநின் னரையிற்கட்டு
முஞ்சியுநற்கோவணமு முப்புரிநூலுந்தோளும் விளங்கித்தோன்ற
வஞ்சனேன் மைந்தாநீமறையோதிவரக்காணப் பெற்றிலேனால்.

தராதலத்திலிதற்குமுதற் றந்தையர்க்குமுனந்தனையர் மரித்தாரில்லைப்
புராதனத்தாலல்லாதிப் புத்திரசோகத்தாலே புலம்புமிந்தப்
பிராமணிக்குப்பிழைப்பரிது பெரும்பீடையால்யானும் பிழைக்கமாட்டே
னிராமனுக்கேபழியாக விறக்கின்றோ மிருவருமேயென்னுங்காலை,

இவ்வாறழுத பிராமணனனவன் இராமபத்திரனை நோக்கி, ஓய்ராஜனே இந்தவனியாயமுண்டோ? நானொருபாபமுஞ் செய்ததில்லை. உன்னாற்செய்யப்பட்ட அதர்மத்தினாலே என்னுடையபிள்ளை யிறந்துபோய்விட்டது, நானுமென்னுடையஸ்திரீயுமுனக்கெதிரே பிராணனை விடுகிறோம். இந்தப் பிரமகத்திபாதகத்தையு மேற்றுக்கொண்டு நீயேசுகமாயிருப்பாய். என்றிப்படி நிந்தித்து முறையிட்டுப் பின்னும்புலம்பித் துக்கப்பட்டான்.

ஸ்ரீராமபிரான் இரிஷிகளைவரவழைத்து நமதுநாட்டில் அபமிருத்தியு நேர்ந்தது என்னகாரணமேன்றுவினவ நாரதர் விடைதரவறிந்து கானகஞ்சென்று தபஞ்செய்த சூத்திரனைவதைத்தகாலையில் இறந்தபிள்ளை யுயிர்பெற்றெழுந்திருக்க இராமர் அகஸ்திய ராச்சிரமம் வருதல்.

கவி.

வந்தவரையடிவணங்கி வரன்முறையாற்பூசித்தங் கிருந்தமன்னன்
சிந்தையில்வெந்துயரறிந்து செழுமறைநாரதமுனிவ னினையசெப்பும்
இந்தவுன்றனிராச்சியத்தி லிதற்குமுன்னிலாததிதொன் றுண்டாய்த்தெய்வ
அந்தணன்புத்திரன் மாளவதுவந்த காரணத்தை யறிதியென்றான்.

அதுகேட்டஸ்ரீராமர் மிகவும் விசனத்தையடைந்தவராகி, உடனேவசிஷ்டர்-வாமதேவர்-கவுதமர்-நாரதர்-முதலான மகரிஷிகளை வரவழைத்து, இந்நாட்டிலபமிருத்தியுநேர்ந்ததென்னகாரணத்தாலென்று கேட்டார். அப்பொழுதவர்களில் நாரதமகாமுனிவர் ஸ்ரீராமரை நோக்கி, கேளுமகாராஜனே! கிருதயுகத்திலே பாபமேயில்லை. பிராமணனுக்குத் தபசுமகிமையுண்டு. திரேதாயுகத்திலே நாலிலொருபங்கு பாபம். க்ஷத்திரியனுக்குத் தபசுமகிமையுண்டு. துவாபரயுகத்திலே இரண்டுபங்கு பாபம். வைசியனுக்குத் தபசுமகிமையுண்டு. கலியுகத்திலே மூன்றுபங்கு பாபம். சூத்திரனுக்குத் தபசுமகிமையுண்டு. இப்படி யுகதருமமிருக்க, இந்தத்திரேதாயுகத்திலே அதர்மமாகச் சூத்திரன் தபசுபண்ணுகிறபடியினாலே இந்தப்பிள்ளை யிறந்துபோய்விட்டது. நீரிதை விசாரித்துத் தண்டித்தா லிந்தப்பிள்ளை பிழைக்குமென்று சொன்னார்.

அதுகேட்ட ஸ்ரீராமர் சந்தோஷத்தையடைந்து இலட்சுமணனை வரவழைத்து, தம்பி! நீ யிந்தப் பிராமணனைச் சமாதானப்படுத்தி இந்தப்பிள்ளையின் சரீரத்தை யெப்படிபாதுகாத்து வைத்திருக்கவேண்டுமோ அப்படிச்செய்து வைத்திரு, நானச்சூத்திரனைக் கண்டுபிடித்துச் சங்கரித்துவருகிறேனென்றுத்திரவுகொடுத்து உடனே புஷ்பகவிமானத்தை நினைத்து வரச்செய்து, அம்பு - வில் - வாள் - இவற்றையெடுத்ததிலேறிக்கொண்டு, கிரமமாக மேற்கு - வடக்கு - கிழக்கு - இம்மூன்றுதிசையிலுந் தேடிப்பார்த்து ஒரு பாபமுமில்லாதிருப்பதை யறிந்துகொண்டு தெற்குத்திசையிற் செல்லுகிறார். அப்பொழுது ஓர் பருவதத்திற்கடுத்த வடபாரிசத்தில் ஒருமடுநடுவிலே தலைகீழாகத் தபசுபண்ணிக்கொண் டிருக்கிறவனைக்கண்டு, நீயார்? என்னநிமித்த மிப்படித் தபசுசெய்கிறாய்? என்றுகேட்க, அதற்கவன் ஐயா! நான்சூத்திரன் என்பெயர் சம்புவனென்பர். இயானிந்தச் சரீரத்துடனே தேவத்தன்மையடைவதற்காகத் தவஞ்செய்கிறேனென்று சொன்னான். அம்மாத்திரத்திலே ஸ்ரீராமர்வாளாலே அச்சம்புவனைத் தலையுருளவெட்டி வதைத்தார். அப்பொழுதிந்திராதி சகலதேவர்களும்வந்து சந்தோஷப்பட்டு ஸ்ரீராமரைக்கொண்டாடி, உமக்குவேண்டியவரத்தைக் கேளுந்தருகிறோமென்று சொன்னார்கள். அதற்கு ஸ்ரீராமர் அந்தப்பிராமணப்பிள்ளை பிழைப்பதேயெனக்குவேண்

டிய வரமென்றுசொன்னார். அந்தப்பிள்ளையிப்பொழுதேபிழைத்தானென்று தேவர்கள் அனுக்கிரகித்துப்பிறகு சொல்லுகின்றார்கள். ஐயா! அகஸ்தியர் பன்னிரண்டுவருடஞ் சலசயனஞ்செய்ததீக்ஷை இப்பொழுது முடிக்கிறபடியினாலே நாங்களவரிடத்துக்குப்போகிறோம், நீருமவரைக்காண வருகலாமென்றுசொல்லிப் போயினார்கள். பின்பு ஸ்ரீராமருமவர்களோடகஸ்தியருடைய வாச்சிரமத்தைச் சேர்ந்தார். இப்படி யகஸ்தியருடைய வாச்சிரமத்திற் சேர்ந்த இந்திரனாதிய தேவர்களெல்லாம் அவராலுபசரிக்கப்பெற்றுப் போனபின், ஸ்ரீராமரவரைக்கண்டு வணங்க, அவரவரையுமுபசரித்துத் தம்மிடத்திலிருந்த திவ்வியாபரணத்தைக் கொடுத்தார்.

அகஸ்தியராற்றந்த வாபரணத்தைவாங்கிய ஸ்ரீராமபிரான் அதன்வரலாறு கேட்க வவருரைத்தல்.

கவி.

அந்தவாபரணங் கண்டவாழியான், உந்துதீவினை யோர்முன்புனக்கிது
தந்துளோன்றனை சாற்றெனத்தன்னிடை, வந்தகாரண மாமுனிகூறுவான்.

அதையவர் வாங்கிக்கொண் டிதுவந்தவிதமென்னவென்றுகேட்க, அதற்கவர் ஸ்ரீராமரைப்பார்த்துச் சொல்லுகிறார். கேளும் காகுத்தவம்ச சிரோமணியாகிய இராகவா! முன்பு நான் திரேதாயுகத்திலே நூறுயோசனைவிசாலமாய் ஒரு பிராணிகளுமில்லாத மகாவனத்திலே தபசுசெய்யப் போயிருந்த காலத்தில், அந்தவனத்தினடுவில் ஒருயோசனை விசாலமா யொருதடாகமும் அதற்கடுத்த வொருவருமில்லாத வோராச்சிரமுமிருக்கக்கண் டன்றிராத்திரி யதிலிருந்து, மறுநாளுதயத்தி லந்தத்தடாகத்திற்கிடக்குஞ் சவத்தைக் கண் டாலோசித்து நிற்குமளவில், அனேக விசித்திரத்துடனே மேலுலகத்திலிருந்து ஒரு விமானம் வந்தது. அதிலிருந்து ஒரு புருஷனிறங்கி யந்தச்சவத்தைப்பிடுங்கித்தின்றான். அவனைநீயாவனென்னகாரணத்தாலிப்படிச்செய்கின்றாயென்றுகேட்க,அதற்கவன் நான்விதர்ப்பதேசாதிபதியாகியவசுதேவனென்னுமிராஜனுடைய புத்திரன் என்பெயர் சுவேதன். நானிராச்சியபரிபாலனஞ் செய்துகொண்டிருக்கும் காலத்தில் ஆயுட்பிரமாணந்தெரிந்து என்னுடைய தம்பியாகிய சுரதனென்பவனுக்கு இராச்சியங்கொடுத்துத் தபோவனத்திற் சேர்ந்து, மூவாயிரம்வருஷந் தபசுசெய்து பிரமலோகத்தையடைந் தவ்விடத்திற் சகிக்கப்படாத பசிதாகத்தினாலே மிகவும்வருந்தி, எனக்கிப்படி வரவேண்டுவதென்னவென்று பிரமதேவரைக் கேட்டேன்.

அதற்கவர் பூலோகத்திலே நீ யன்னங்கொடா துன்னுடைய சரீரத்தையே போஷித்தபடியினாலே, உனக்கிப்படிவந்தது. இந்தப்பசிக்கு நரமனிதர் சரீரத்தையேபுசி, அஃதுனக் கமிர்தம்போலிருக்கும். இனிமேலெப்பொழுதகஸ்தியபகவா னேரிடுவாரோ? அப்பொழு தவராலிந்தத் தோஷநீங்குமென்று பிரமதேவ ரனுக்கிரகித்தபடிக் கிப்பொழுது தேவரீரைக் காணப்பெற்றேன். ஆகையாலென்னாலுபசரித்துக்கொடுக்கப்பட்ட இந்த வாபரணத்தை

யொப்புக்கொண்டு கிருபைசெய்து என்னை யிரக்ஷிக்கவேணுமென்று மிகவும் வணங்கிப் பிரார்த்தித்தான். அப்பொழுததை நானேற்றுக்கொண்ட மாத்திரத்திலே அந்தச்சவங் காணமற் போய்விட்டது. அவனும் பசிநீங்கி முன்னிருந்த பிரமலோகத்தை யடைந்தான். அந்தச் சுவேதமகாராஜனாலே கொடுக்கப்பட்ட திந்தத் திவ்வியாபரணமென்று சொல்லக்கேட்டனர்.

ஸ்ரீராமர் அவ்வாரணியத்தைக்கண் டதிசயித்து அதன் வரலாறுகேட்க அகஸ்தியர் இது தண்டனாலாளப்பட்டு ஆரணியமானதென்று அதன் வரலாறுகூறக் கேட்டு அயோத்திநகர் சேர்ந்து பிராமணர்களைமகிழ்வித்து உயிர்த் தெழுந்தபிள்ளையுடன் அவர்களை அவரிடத்திற் கனுப்புதல்.

கவி.

இன்னதாமிவ்வாபரண மென்பால்வந்தவழியென்று
பன்னுவேதமாமுனிவன் பகரப்பரனிவியப்பெய்தி
மன்னுமிருகம்பறவைநரர் வழங்காதொழிதலிவ்வனத்தில்
என்னநிமித்தத்தாலிதுநீ யியம்பென்றியம்பமுனியியம்பும்.

இவ்வாபரண மின்னகாரணத்ததென்றும் வந்தவழியுங் கேட்ட இராம மூர்த்தியானவர் ஆச்சரியமடைந்து, ஐயா முனிசிரேஷ்டரே இன்னுமொரு சந்தேகம், அஃதியாதெனில் தாமிருக்கு மிவ்வாரணியத்தில் ஒருமிருகமாவது பறவையாவது மனிதர்களாவது சஞ்சாரமில்லா திருப்பது யாதுகாரணம் அதைத் தெளிவுற வருள்செய்யவேண்டுமென்று கேட்க, அந்தற் ககத்திய முனிவர் கூறவாரம்பித்தனர். கேளும் ரகுநந்தனே! முன்பு கிருதயுகத்திலே மனுவானவர் பூமண்டலமுழுதுஞ் செங்கோல் செலுத்தி இராச்சியபரிபாலனஞ் செய்துகொண்டிருந்தார். அவர்தம்முடைய புத்திரனாகிய இட்சுவாகு மகாராஜனுக்குத் தருமசாஸ்திர முதலான சகல சாஸ்திரங்களையும் போதித்து, இராச்சியபட்டாபிஷேகமும் பண்ணுவித்துச் சுவர்க்கத்தை யடைந்தார். பின்பந்த இட்சுவாகு மகாராஜா அளவில்லாத புண்ணியங்களைச்செய்து நூறு புத்திரரைப் பெற்றார். அவர் திரிகாலவர்த்தமானமுந் தெரிந்தவராதலை யாற் கடைசி புத்திரன் இனிமேல் தண்டத்தை யடைவானென்பதை யறிந்து அவனுக்குத் தண்டனென்று பெயரிட்டு, விந்தகிரிக்குஞ் சைவலபருவதத் திற்கு நடுவுள்ள நூறுயோசனை தூர பூமியுங்கொடுத்தார். அவனங்கே மதுமந்தமென்று பட்டண முண்டாக்கிச் சுக்கிரபகவானை யாசாரியராக வைத்துக் கொண்டதிகாரஞ்செய்துகொண் டிருந்தான்.

அப்படி யிருக்குங்காலத்தி லொருநாளவன் சுக்கிராசாரியா ரிடத்துக்குப் போம்பொழுது அவரிருக்கு மாச்சிரமத்துச் சமீபத்திலே அவருடைய புத்திரி சரையென்பவளைக்கண்டு மோகித்துச்சகிக்கப்படாத காமவிகாரத்தை யடைந்தவனாகி, அனேக விதங்களா லுபசரித்துவேண்டியு மவளுடன்படாது மறுக்கவுங் கேளாம லவளை வலிமைசெய்து புணர்ந்தான். அவள் மிகவும் விசனப்பட் டழுதபடியே தன்னுடைய பிதாவிடத்துக்குப் போனாள். அவர் நடந்த செய்கையையறிந்து கோபித்து, என்னையு மதியாமற் குருபுத்திரி

யென்று நினையாமல் இப்படி யவமரியாதையான பாதகம்பண்ணினனாதலால், இந்தத் தண்டனே டிவனுடைய வமிசமும் பட்டணமும் ஏழுநாளையிலே தீப்பட்டுவெந்தழியக் கடவதென்று சாபஞ்செய்தார். அவர் சாபப்படியே அப்பட்டணமுமழிந்து வனமாயது. அந்தக்காரணத்தினு லன்றுமுதலிந்த வனத்துக்குத் தண்டகாரணியமென்று பெயராயது. என்றகஸ்திய மாமுனிவர் சொல்லக்கேட்ட ஸ்ரீராமர் மிகவுஞ்சந்தோஷத்தை யடைந்தவராய் அன்றிராத்திரியங்கிருந்து, மறுநாளுதயத்தி லவருடைய வனுமதிபெற் றவ்விடத்தினின்று நீங்கிப்போய் அயோத்திமாநகரஞ் சேர்ந்தார். அதற்கு முன்னமே இறந்த பிராமணப்பிள்ளை பிழைத்திருந்ததால் அந்தப் பிள்ளையுடனே மாதாபிதாக்களையுஞ் சந்தோஷப்படுத்தி யனுப்பினர்.

சம்புவன்வதைப் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பதினறாவது,

அஸ்வமேதயாகப் படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமர் பரதலக்ஷ்மணர்கள் முன்னிலையில் இராஜசூயயாகத்தைப்பற்றி யோசித்தபோது இலக்ஷ்மணர் அஸ்வமேதயாகமே நல்லமென்று விருத்திராசுரன் கதையை யுரைக்க, ஸ்ரீராமருமப்பரதலக்ஷ்மணருக்கு இளன்கதைகூறி அவ்வஸ்வமேதம்புரியச் சம்மதிக்க, உடனே யத்தம்பியாரிருவரும் அவருத்தரவால் எங்கும் சேதியனுப்பிக் கோமதிநதிக்கரையில் யாகசாலை நிருமிக்கவும், தாமியாவரோடு மங்கெழுந்தருளி பலதேசராஜாக்கள் - முனிவர்கள் - வானரவீரர்கள் முதலியோர்முன்னிலையில் வேள்விச்சடங்குகளைத்தையும் விதிப்படி நிறைவேற்ற, அக்கால் வான்மீகராக்ஞையால் குசலவர்கள் யாகசாலையுட் சென்று அவர்கற்பித்த இராமாயணத்தைப்பாடி ஸ்ரீராமரை மகிழ்விக்க, அப்போதவர்களைத் தமது மக்களென் றறிந்த இரகுநந்தனர் வான்மீகரையுஞ் சீதையையு மங்ஙனமழைப்பிக்க, அவ்வாறே யிருவருமெழுந்தருளிவந்து தேவர்கள் முனிவர்கள் முன்னிலையில் சீதாதேவி தனது கற்பினிலைமையைப்பற்றிப் பிரமாணஞ்செய்து பூப்பிரவேசமாக, அது கண்டு, பூதேவிமேற்சினந்த ஸ்ரீராமர் பின்பிரமதேவனுற் றணிந்து குசலவர்களாலே இராமாயணத்தைப் பூர்த்திசெய்து மீண்டு அயோத்தியாபுரியை யடைந்தமை சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமர் பரதலக்ஷ்மணர்களை யழைத்து இராஜசூயயாகம் பண்ணவேணுமென்று யோசனைசெய்ததில் அஸ்வமேதயாகம் செய்யத் தேர்தல்.

கவி.

மாத்திரைக்கடன்மண்ணுேரை மனுமுதலாயதன்மம்
சாத்திரப்படிதப்பாமற் சரிப்பித்துச்சகலத்துக்கும்

№ 94. ஸ்ரீராமர் அசுவமேதயாகம்



உத்தரகாண்டம். அசுவமேதயாகப்படலம்.

நேத்திரமாகிநின்றோ னெடுநிலைவாயில்காக்கும்
வேத்திரக்கரத்தோன்றன்னை விளித்திவைவிளம்பலுற்றான்.

ஸ்ரீமங்களாகரகுணத்தனாய், சர்வாந்தரியாமியாய், சகலகாரியங்கட்கும் காரணமாய், சர்வசகத்தையு நோக்குங் கமலக்கண்ணனா யிருக்கும் ஸ்ரீராமச் சந்திரமகாராஜாவானவர் தமதிளையதம்பியாகிய சத்துருக்ன மகாராஜாவை மதுபுரிக்கு அரசனாக நியமித்து, அலைகளையுடைய கடல்சூழ்ந்த பூமிலோகத்து ள்ள சர்வான்மகோடிகளை மநுநீதி தர்மசாஸ்திரப் பிரகாரம் அயோத்தியாபுரி யிலிருந்து அரசாளுநாளையில், ஒருநாள்பிரம்பாயுதங் கரத்திற்கொண்டுதமது ஆசாரவாயிலைக் காக்குங்காவலாளியால் தமது தம்பிமார்களை வரவழைத்து இராஜசூய யாகம் பண்ணவேணுமென்று லோசித்தார். அதற்கு இலக்ஷ்மணர், ஸ்ரீராமமூர்த்தியை நோக்கிச் சொல்லுகிறார்.

கவி.

சொற்பொருடெரியாமைந்தன் சொல்லியகுதலைச்சொற்கள்
பெற்றதாய்க்கினியவாகும் பெற்றிபோற் பெருஞ்சொனன்னூல்
கற்றறிவொன்றுமில்லேன் கழறிடுமிந்தப்புன்சொல்
கொற்றவாவின்சொல்லாகக் கொள்ளுதி குறைகடீர்த்தே.

பொன்னையேநோக்கிநிற்பர் பொதுவிலைமகளிர்மாரி
தன்னையேநோக்கிநிற்குந் தரணியிற்பைங்கூழ்தந்த
வன்னையேநோக்கிநிற்கு மரும்பெறற்குழவியென்ன
நின்னையேநோக்கிநிற்பர் நீணிலத்துள்ளோரெல்லாம்.

ஆகலால், சுவாமீ! இராஜசூய யாகத்திலே யனேக ராஜாக்களுக் குபத் திரவமுண்டாகு மானபடியினாலே, கருணையே யுருவமாக வவதரித்திருக்கி ன்ற தேவரீரால் அந்தயாக மெப்படி செய்யப்படுமென்று சொல்லினர். அது கேட்ட ஸ்ரீராமர் சந்தோஷத்தை யடைந்து, நீ சொன்னதுதகுமேயென் றொப்புக்கொண்டார். அப்பொழுதிலட்சுமணர் ஸ்ரீராமரைநோக்கி, சுவாமி! யாகங்களுக்குள்ளே மிகவுநன்மையான யாகம் அஸ்வமேதம். தேவேந்திர னுங் கந்தயாகத்தினாலே பிரமகத்திதீர்ந்தனென்று கேள்விப்பட்டிருக்கிறேன். அஃதெப்படியென்றால், விருத்திராசுர னென்னுமோரசுரன் இராச்சியாதி காரம்பண்ணிக்கொண்டு மதுராபட்டணத்தி லிருந்தான். அவன் சிலகாலஞ் சென்றபின்பு தன்னுடைய சிரேஷ்டபுத்திரனுக் கரசியல்கொடுத்து கொடு மையான தபசுபண்ணிக்கொண்டிருக்குமளவில், அதைத் தேவேந்திரனறி ந்து இவனாலென்னதீங்கு விளையுமோவென்று பயந்தவனாய்ச் சகலதேவர்க ளுடனே விஷ்ணுவினிடத்துக்குச் சென்று, உலகமெல்லாங் கெடும்படி தவஞ் செய்கின்ற விருத்திராசுரனைச் சங்கரித்து எங்களை யிரக்ஷிக்கவேணுமென்று பிரார்த்தித்தான்.

அக்கால் விஷ்ணுவான்வரவனைப் பார்த்து, ஓ வலாரி! அந்தவசுர னென் னிடத்தில் விசுவாசமுள்ளவனாகையால் அவனைநான் வதைக்கப்படாது. பின் னையெப்படி யென்னில், என்னுடைய சத்தியை மூன்றாகப் பிரித்து ஒருபங்கு

பூமியினிடத்திலும், ஒருபங்கு வச்சிராயுதத்தினிடத்திலும், ஒருபங் குன்னிடத்திலும் இருக்கச்செய்கிறேன். அதுகொண்டு நீயேயவனைச் செயித்திடுக. என்றனுக்கிரகித் தனுப்புவிக்க அப்படியே இந்திரன் சகலதேவர்களுடனே விருத்திராசுரன் தபசு செய்துகொண் டிருக்கிற வனத்துக்குவந்து, அவனைக் கண்டு வச்சிராயுதத்தினாலே வதைத்தான். அம்மாத்திரத்திலே தேவேந்திரனைப் பிரமகத்திபற்றித் துன்பப்படுத்தத் தலைப்பட்டது. அதுகண்டதேவர்கள் பின்னும் விஷ்ணுவினிடத்துக்குப் போய்த் தங்களுடைய ராஜனுக்குவந்த துன்பத்தைச் சொல்லி விசனப்பட்டார்கள், அதுகேட்ட மகாவிஷ்ணு அவர்களை நோக்கி, ஓ தேவர்களே! அசுவமேதயாகம் பண்ணினால் அந்தப் பிரமகத்தி தீருமென்று சொல்லினர். அப்படியே தேவர்களந்த யாகத்தைச்செய்வித்து முடிக்குமளவில் அந்தப் பிரமகத்தி வெளிப்பட்டது. அதையவர்கள் நாலுபங்காக்கிப் போக்கி, பிரமகத்திநீங்கிய தேவேந்திரனுடனே சகலதேவர்களுஞ் சந்தோஷத்தையடைந்திருந்தார்கள். ஆகையால் - அசுவமேத மப்படிப்பட்ட மகிமையுடைய தல்லவோவென்று இலட்சுமணர் சொன்னார். அக்கால் பரதரும் அதுவேநலமென்று வற்புறுத்திக் கூறினார்.

இப்படி லட்சுமணர்சொன்ன கதையைக்கேட்ட ஸ்ரீராமர் அந்தலக்ஷுமணரையும் பரதரையுநோக்கி, ஓ என்துணைவர்களே! இவ்வஸ்வமேதத்தைப் பற்றி நானுமோர் கதைசொல்லுகிறேன் கேண்மின்கள். அஃதெப்படியெனில் — பாகிலீக தேசாதிபதியாகிய கர்த்தமப் பிரசாபதியினுடைய புத்திரன் இளனென்பவன். இவனிராச்சிய பரிபாலனஞ் செய்துகொண் டிருக்குங்காலத் தொருநாள் வனத்திலே வேட்டையாடப் போயினன். அப்பொழுது மகாதேவராகிய பரமசிவன் சகல பிராணிகளையும் ஸ்திரீரூபமாக்கிப் பார்வதிக்குபதேசஞ் செய்திருக்கு மிடத்துக்கு அவனும் போனமாத்திரத்திலே, இவனு மிவனுடனே போனவர்களும் ஸ்திரீகளானார்கள். அப்படி ஸ்திரீரூபத்தையடைந்த இளனானவன் மிகவும்பயந்து நடுங்கி அந்தப் பரமசிவனைச் சரணமாகவடைந்தான். அதற் குபதேசமுறையிற் கூடியிருக்கும் பரமசிவன் இளனைநோக்கி, நீ புருஷத் தன்மைதவிர மற்றெந்த வரங் கேட்கினுந் தருவோமென்று சொல்லினர். அதற்கவன் மறுமொழி யொன்றுஞ் சொல்லாமல் உமையவளை மிகவும்வணங்கித் தோத்திரம்பண்ணிப் பிரார்த்தித்தான். அதற்குமையவள் நான் கொடுக்கவேண்டிய பாதிப்புருஷத்துவத்தைத் தருகிறேன், உன்மனசின்படி யாகுகவென்று சொல்லினள். அதற்கவன் ஒருமாசம்பெண்ணாகவும் ஒருமாச மாணாகவு மிருக்கவேணுமென்று கேட்டான். அப்படியே யுமையவளனுக்கிரகித்து, பின்னுமவனுக்குப் பெண்ணானகாலத்துப் புருஷனாகவிருந்ததும் புருஷனானகாலத்துப் பெண்ணாகவிருந்ததுந் தெரியாதிருக்க வரங்கொடுத்தாள்.

அந்தவரத்தினாலப்படியே இளன் பெண்ணுருவமாகி, முன்புதன்னோடு ஸ்திரீயானவர்களுடனே அந்தவனத்திலே சஞ்சரித்துக்கொண் டிருந்தான்.

அப்பொழுதி லவ்விடத்தி லொருமலைக்கடுத்த தடாகமத்தியிலே தபசுசெய்து கொண்டிருக்கும் புதனென்பவன் இளையைக்கண்டு மோகப்பட்டு, மிகவுமாச்சரியத்தை யடைந்து மனங்கலங்கித் தபசைவிட்டுக் கரையில்வந்து, ஆவர்த்தனியென்னு மந்திரத்தினாலே அவளுடைய செயலை யறிந்துகொண்டு, கூடநின்றவர்களைக் கிம்புருஷரிடத்திற் சேரப்பண்ணி, பின்பு அவளைநோக்கி நான்சந்திரனுடைய புத்திரனாகிய புதன். என்னை நீவிரும்பிச் சேரலாமென்று நயந்து வேண்டவும் அவளுமப்படியே சம்மதித்தாள். அப்பொழு தவ்விருவருங்கூடி இஷ்டமாகக் காமசுகபோக மனுபவித்தார்கள். இப்படி மகிழ்ந்திருக்குங்காலத் தொருமாச மானவுடனே ஓர்நாள் சயனத்தைவிட் டெழுந்திருக்கும் பொழுது, இளையானவிளன் புருஷரூபமாகியெழுந்தான். அந்தவிளமகாராஜன் தபசுபண்ணுகிற புதனைக்கண்டு என்னுடனேவந்த பரிவாரசனங்க ளெங்கே யென்றுகேட்க, அதற்குப்புதன் அவர்கள் கன்மழைபெய் திறந்துபோய்விட்டாரென்று சொல்ல, அதுகேட்டு எனக்கு மிகவுமுரிமையானவர்க ளிறந்தபின்பு நானுயிர்வைத்திரேனென்று விசனப்பட்டான். அதற்குப் புதன் நீயிவ்விடத்திலொரு வருஷமிருந்தால் உன்னுடைய விசனந்தீரும்படி யுதவிசெய்கிறேனென்று சொல்ல, அது கேட்டபடியே யொப்புக்கொண்டு வரத்தின்படியே ஸ்திரீயாகவும் புருஷனாகவு மிருந்தான்.

அக்காலத் தொன்பதாமாசம் புரூரவசுவென்னும் பிள்ளையைப்பெற்றுப் புதனிடத்திற்கொடுக்க, அந்தப்பிள்ளையை யவன்வளர்த்தான். அப்படி யோருவருஷஞ்சென்று புருஷனாகவிருக்கையில் அந்தப் புதனானவன் சம்வர்த்தன் துருவாசர் முதலான மகாரிஷிகளை யரவழைத்து; இந்தவிளனுக்கு நன்மையைச் செய்வீர்களென்று பிரார்த்தித்தான். அதையறிந்தந்த விளனுடைய பிதாவாகிய கருத்தமப் பிரசாபதியென்பவர் புலஸ்தியர்முதலான மகாமுனிவர்களுடனே அவ்விடம்வந்துசேர்ந்தார். பின்பு அம்முனிவர்களெல்லோரு மொருவருக்கொருவ ராலோசித்து, இந்தக் கருத்தமப் பிரசாபதியானவர் அசுவமேத யாகத்தைச்செய்து பரமசிவனைப் பிரார்த்தித்தால் அவருடைய வனுக்கிரகத்தினாலே இளனுடைய பெண்டன்மை தீருமேயன்றி, வேறொன்றினாலுந் தீராதென்று சொல்லினர். அப்படியே யெல்லாருஞ் சம்மதித்துப் புதனுடைய வாச்சிரமத்திலே அசுவமேதமாரம்பித்து விதிப்படிசெய்து முடிக்குமளவில் பரமசிவனெதிர்தோன்றினர். அம்மாத்திரத்திலே மகாரிஷிகள் முதலானவெல்லோரு மிவனுக்குப் பெண்டன்மை தீரும்படி யனுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, பரமசிவனுமப்படியே வரங்கொடுத்துப்போயினர். பின்பு அந்தமகாரிஷிகளும் யாகத்தைமுடித்து அவரவரிருக்குமிடம் போய்ச்சேர்ந்தார்கள். அந்தவிளனும் புருஷத்துவத்தை யடைந்து தன்னுடைய பாகிலிகதேசத்தைவிட்டு மத்தியதேசத்தில் பிரதிஷ்டானமென்னும் பட்டணத்திலிருந்தான். அவனுடைய மூத்தபிள்ளையாகிய சசிபிந்துவென்பவன் பாகிலிகதேசத்துக் கதிபதியாயிருந்தான். அந்தவிளமகாராஜனுக்குப்பின் பவனுடையபுத்திரன் புரூரவசு அந்தப்பிரதிஷ்டான பட்டணத்தில் மத்

தியதேசாதிபதியானன். ஆகையா லசுவமேத மப்படிப்பட்ட மகிமையுடையதேயென்று ஸ்ரீராமரானவர் பரதலட்சுமணர் கேட்கச் சொன்னார்.

ஸ்ரீராமர் அஸ்வமேதக்குதிரையை யலங்கரிப்பித்து விடுத்து யாகத்திற்கு வரும்படியாவர்க்குந் தூதுவிடுத்தல்.

கவி.

சந்திரனனையகொற்றத் தனிக்குடை நிழற்றப்பாரா
இந்திரைகொழுநனெல்லா விலக்கணமுடையமாவை
மந்திரவிதித்தோர்தம்மான் மந்திரிப்பித்தமாவைத்
தந்திரந்தாங்கவேவித் தரணியிற் செல்லவிட்டான்.

இவ்வண்ணம்பேசி அஸ்வமேதயாகஞ் செய்யவேண்டுமென்று யோசனை முடிந்ததில், சந்திரனைப்போலும் வெண்மைமிக்க பூசக்கரக்குடை நிழலைச்செல்ய உலகத்தையாள்கின்றதேவிநாயகனாகியஸ்ரீராமன்நல்லநாள்கொண்டு சர்வலக்ஷணங்களுமுடையகுதிரையைத்தம்பிமார்களால்அலங்கரிப்பித்துவேதவிதிப்படி ஓமாதிகிரியைகளை மந்திரபூர்வமாகப் பிராமணர்களாலே செய்வித்து அளவற்றசைனியங்களைக்கூட்டிப்பூப்பிரதக்ஷணஞ் செய்ய அனுப்புவித்தனர்

பிறகு அகத்தியாதி மகாரிஷிகளுக்கும், தமதுகுலகுருவாகியவசிஷ்டமகாமுனிவர்க்கும், விபீஷணாழ்வாருக்கும், சுக்ரீவன்—அனுமான்-அங்கதன்—சாம்புவந்தன்—குகன் — மற்றுந் தேசதேச மகாராஜாக்கள்—சத்துருக்னர் இவர்கட்கெல்லாம் அஸ்வமேதயாகஞ் செய்யும்படியான நாள்குறித்துத் திருமுகமெழுதி தூதர்வசமனுப்புவித்தனர். திருமுகங்கொண்டு சென்றதூதர்கள் காற்றினுங்கடுகி அவ்வவ்விடங்களிற் சென்று சந்தோஷசங்கதியைத் தெரிவித்துத் திருமுகத்தைக் காட்டினார்கள். திருமுகங்கண்ட யாவரும் மகாசந்தோஷத்துடன் புறப்பட்டு அயோத்திமாநகரம்சேர்ந்தார்கள். அப்படிவந்ததமதுகுலகுருவாகிய வசிஷ்டாதிமுனிவர்களை ஸ்ரீராமன் வணங்கி, ஆசனந்தந்து வீற்றிருக்கும்படி செய்தார். தமதுதிருவடிவணங்கிய விபீஷணரையும் அநுமானையுந்தழுவினார். சுக்ரீவன்முதலிய வானரவீரர்கட்குப் பிரியவசனம்சொல்லினர். குகனைக்கண்டானந்தித்தனர் சத்துருக்னரை மார்புடனிறுகத்தழுவினர். இவ்வண்ணம் யாவருக்கும் ஆசனந்தந்து அதன்மீது உட்காரும்படி அருள்செய்து இலக்ஷமணரை நோக்கி, அப்பா இலட்சுமணா! கோமதிநதிதீரத்துள்ள நைமிசாரணியத்தில் முனிவர்களும்யாமுமிருந்துயாகஞ் செய்யயாகசாலையும், அநுமான்-சுக்ரீவன்—முதலிய வானரவீரர்கட்கும், விபீஷணர்க்கும், இன்னுமகாராஜர்களுக்கும், மாளிகைகளும்செய்விப்பாயென்று ஸ்ரீராமன் உத்திரவுசெய்ய அவ்வண்ணமே இலட்சுமணர் சென்றுநைமிசாரணியத்தில் அனேக ஏர்பூட்டி நிலத்தைஉழுவித்துச்சமஞ்செய்துயாகசாலையும், அவரவர்கட்குத்தக்கபடி தமயனுத்திரவுப்பிரகாரம் மாடமாளிகை கூடகோபுரங்களுமாகிய இவைகளைச்செய்து, அன்னசாலை — தண்ணீர்ப்பந்தர்—உலாவுமிட முதலியதகுந்தவசதிகளைமுறைப்படி செய்வித்து, வாழை-கமுகு-கொடி இவைகளை அலங்காரமாகக்

கட்டி இடங்களையெல்லாம் சுத்தப்படுத்தி ஸ்ரீராமபிரானிடத்தில் வந்து; அண்ணா! தாம்கட்டளையிட்ட முறைப்படி யாகசாலையும் — பாடமாளிகைகளும் — தேவலோகமுநாணும்படிச் செய்தேனென்ன பகவான்சந்தோஷித்து, அங்கு நடத்தவேண்டியவைகளுக்கேற்ற, ஆயிரங்கோடி பொன்னும், அவ்வளவு தொகைபசுக்களும், அவ்வளவுகலவரிசியும், பயறு எள்ளுகோதுமைமுதலிய நவதானியங்களும்-இன்னும் வேண்டியபதார்த்தவகைகளும், மிளகு நெய் இவைகளும் ஆயிரங்கோடி பண்டிகளின் மேலேற்றிக்கொண்டு, பரதாழ்வாரையும் இலக்ஷுமணப்பெருமாளையும், சீதைபிரிந்தபிறகுஅச்சானகிக்குப்பிரதியாயேற்படுத்திய சுவர்ணப்பாவையையு மலங்கரித்து எடுப்பித்து முன்னதாய்ப்போய்ச் சேரும்படிவிடைகொடுத்து, மந்திரிகளைநோக்கி இன்றுமுதல் ஏழுநாளிருக்கிறது யாகாரம்பஞ்செய்ய, ஆதலால் நமது நாடுகளையும் நகரத்தையும் அலங்காரஞ்செய்யும்படிப் பறையறைவிப்பீர்களென்ன அதைக்கேட்ட மந்திரிகள் வள்ளுவர்கட்குத்திட்டஞ்செய்ய வவர்கள் யானையின்மீது முரசறைய வதைக்கேட்ட நாடுநகரச்சனங்களெல்லாம் தங்கள் தங்கள் வீதிகளையும் வீடுகளையு மலங்காரஞ்செய்ய வாரம்பித்தார்கள்.

கோசலதேசத்துச்சனங்கள் நாட்டையும் நகரத்தையும் அலங்கரித்தற்சிறப்பு.

கவி.

குறைவொன்றில்லாக் கோசலநாட்டிற் சனமெல்லாம்
இறைவன்வேள்விகாண விரைந்தோ ரெங்கெங்கும்
நிறைபொற்கும்ப மூடனெய்விளக்கு நின்றேந்தி
உறைசீர்மாடத் தொண்ணகரஞ்சென் றுறுவாரும்.

எப்படி யலங்காரஞ்செய்தார்களென்றால், அந்நகரத்துப் பிரசைகளெல்லாம் - எவ்விடங்களிலும் பூரணகும்பமமைத்து, நெய்விளக்கேற்றி, மேல்மாடத்திலும் — வாசலிலும், தெருவிலும் பூப்பந்தரிட்டு, வாழை கமுகு தெங்கு இவைகளைக்கட்டுவாரும், மேற்கட்டிகளை வாயில்கடோறுங்கட்டுவாரும், உதயகாலசூரியனைப்போலப்பிரகாசிக்கின்ற நவமணிகளிழைத்த பூரணகலசங்களை நியமித்து முத்துமாலையணிந்து அலங்காரம் செய்வாரும், இரத்தினத்தூண்களிற் [illegible]ாதிக்க உறைகளைக்கழற்றுவாரும், அவ்வவ்வீடுகளிலுள்ள ஸ்திரீகளும் பு[illegible]ர்களும், உலகமெல்லாம் விலைமதிக்கும் ஆடையாபரணங்களை அணிவாரும், [illegible]ப்படியாவரும் தங்கள்வீடுகளையும் தங்களையுமலங்காரஞ்செய்து ஆனந்தப[illegible]வசத்தர்களாகி தங்கள்தங்கள் வாகனங்களின்மீது யாகசாலைநியமித்துள்ள கோமதிநதியைச் சேரும்படிச் சித்தமாகி ஸ்ரீராமபிரானுடைய பிரயாணத்தை எதிர்பார்த்திருந்தனர்.

ஸ்ரீராம்பிரான் இரதாரூடனாகிக் கோமதிநதிக்கரை யடைதல்.

கவி.

மங்கையர்வாழ்த்தமாகதரேத்த மறையவராசிகள் கூறப்
பொங்கியகடலிற்புடைபரந்திரைத்துப் பொன்னகர்ச்சனம் புடைசுற்றப்

பங்கமில்வீரன்பங்கயக்கண்ணற் பார்த்தபார்த்திடமெலாஞ்சனங்கள்
செங்கரங்கூப்பித்தேவர்களுவப்ப வேறினன்செழுமணித்திண்டேர்.

பிறகு எனையாளவந்த ஸ்ரீராமச்சந்திர மகாராஜாவானவர் தமது சைனியங்களையெல்லாம் பிரயாணசித்தமாகும்படிச்செய்து, அரண்மனைக்குட்சென்று கங்கைமுதலியநவநதி தீர்த்தங்களால் ஸ்நானஞ்செய்து, பீதாம்பரவஸ்திரந்தரித்துத்திருநெற்றியில் திருநாமமணிந்து அவதாரகோலத்துக்கேற்றபடி தானும் விஷ்ணுவைத் தான்போற்றி ஆரகேயூரகடகங்கண சரப்பளி பாதிபந்து வீரக்கழல் இவைமுதலியவாபரணங்களைத் தரித்து, கலவைச்சாந்தணிந்து, மனு முதலிய மகாராஜாக்கள்நாள் தொடங்கித் தொன்று தொட்டுவந்த மாணிக்கக்கிரீடத்தைச் சிரத்திலணிந்து, பிராமணர்கட்கும் யாசகர்கட்கும் ஏழைகட்கும் அவரவர்கள்வேண்டியபடி தானஞ்செய்து சுபமங்கிலியஸ்திரீகளெல்லாம் பல்லாண்டுபாட, புகழ்வோர்கள்புகழ வேதப்பிராமணர்களாசீர்வதிக்க, அரண்மனைவாயிலில்வந்து யாகசாலைக்குச் செல்லும்படி எதிர்பார்த்துநின்ற அப்பட்டணத்துச் சனங்கள் எங்கணுநிறைந்து நாற்புறமும் கடல்போற்சூழ்ந்து யாவருங்கைகூப்பிக் கொண்டு தொடர தேவர்கள் சந்தோஷிக்க நவமணிகளிழைத்த ஸ்வர்ணத்தேரின்மேல் ஆரோகணித்தனன். அக்காலையில் சின்னம் பிடித்தார்கள் அச்சின்ன மெப்படிச்சப்தித்ததெனில்.

கவி.

சம்புவைத்தரித்தகையிற் சார்ஙகந்தரித்தான்வந்தா
னம்புயக்கண்ணன்வந்தா னம்பருக்கன்பன்வந்தான்
றம்பியர்க்கினியான்வந்தான் சசரதராமன்வந்தான்
உம்பருக்கமுதமுன்னூ ருதவியவொருவன் வந்தான்.

மனுகுலம்விளங்கத்தோன்றி வரிசிலையினைபோனேடு
முனிமொடுபோனான்வந்தான் மூப்புரமெரித்தவில்லி
தனுவினையிறுத்துச்சீதை தன்கரம்பிடித்தான்வந்தா
னனையவளுடனேமீண்டு மயோத்தியிலடைந்தான்வந்தான்.

தாயுரைதலைமேற்கொண்டு தையலையுடனேகொண்டு
தீயவெங்கானஞ்சேர்ந்த செருவலி வில்லிவந்தான்
றூயமாமுனிவன்முன்பே தோன்றிய தூயோன்வந்தான்
மாயமாரீசன்மாள வரிசிலைவளைத்தோன் வந்தான்.

அனுமனையடிமைகொண்டாங் காயிரங்கதிரோன்மைந்தற்
கினியனாய்வாலிமாள வெரிசரந்துரந்தான் வந்தான்
திரைவதன்முன்னமாழி நீரெலாநெருப்பதாகக்
குனிசிலைவளைத்தான்வந்தான் கோசலைநாடன்வந்தான்.

குன்றினாலாழிகட்டிக் கொடுந்திறற்சேனையோடு
சென்றிராக்கதரையெல்லாஞ் செருக்களத்தவியநூறித்
தன்றிறலழிந்துநின்ற தசமுகன்வலிமைகண்டாங்
கின்றுபோய்நாளைவாவென் றியம்பியவிறைவன் வந்தான்.

முன்னநாஞ்சொன்னநாளில் முடுகிநாஞ் செல்லோமாகில்
வன்னியிற்பரதன்வீழு மென்றுதன் மனத்திலெண்ணி
யன்னவனெறிவிழாம லனுமனைமுன்னேயேவிப்
பொன்னகரடைந்தான்வந்தான் புவனமூன்றுடையான் வந்தான்.

இவ்வாறுசின்னஞ் சப்தித்ததைக்கேட்ட அந்நகரத்து வீதிகளினிருபுறத்து வீடுகளிலுள்ள ஸ்திரீகள்யாவரும், மேககர்ச்சிதத்தைக் கேட்டு மலைக்குகையிலிருந்த மயில்கள் எப்படி ஆனந்தமாய் வெளிவருமோ அப்படியே வெளிவந்து மனமகிழ்ந்து மேகம்போலும், காயாமலர்போலும், மரகதரத்தினம்போலவும், நீலமலர்போலவும், கடல்போலவு மழகுவிளங்குகின்ற கண்ணனாகிய ஸ்ரீராமச்சந்திரப் பிரபுவின் திருமேனியைக்கண்டு விகாரங்கொண்டு, ஆ! ஆ! சீதைதான் இப்பிரபுவினது திருமேனியினலத்தையனுபவிக்கத்தவஞ்செய்தனளோவெனில், அவளு முழுத்தவஞ்செய்தவளல்லவென்று ஒருவருக்கொருவர் இவ்வண்ணம்பலபல, வார்த்தையாடிக்கொண்டுகைவளையல்களும் இடையிலுடுத்திய சேலையும் சோர்ந்துவிழும்படியாகப் பின்தொடர, மந்திரிகள் - படைத்தலைவர்கள்-அணித்தலைவர்கள்-யூகத்தலைவர்கள்-தண்டத்தலைவர்கள்-பட்டுவான்கள்-நாடகஸ்திரீகள்-வீணையைமீட்டிப்பாடும்ஸ்திரீகள்-பிராமணர்கள்-சோதிடர்கள்-கணக்கர்கள்-சூழ்ந்துவர, பேரிகை-மத்தளம்- தவில்-முரசு-டங்கா-மேளம்-நாகசுரம்-புள்ளாங்குழல்முதலிய வாத்தியகோஷங்கள்முழங்க இரத கஜ துரக பதாதிகளாகிய நால்வகைச்சேனைகளும் நான்குபுறமுஞ்சூழ, அயோத்தியாபுரியின் வெளிமதில்வாயிலைக்கடந்து எள்ளிடவுமிடங்கிடையாமல் கோமதிநதிக்கரையிலுள்ள நைமிசாரணியத்தி லலங்காரஞ்செய்திருக்கிற யாகசாலையிற்சென்று, அங்குள்ள தம்பிமாரும்-மந்திரிகளும்-பிரதானிகளும்-மகாமுனிவர்களும் எதிர்கொண்டழைக்க இரதத்தினின்றுமிறங்கி அவ்விடத்தமைத்த ஓர் நவமணிமண்டபத்திற் றம்பிமார் சூழும்படியாக இவ்வுலகங்களை உண்டுமிழ்ந்தருளிய வைகுண்டாதிபதியாகிய ஸ்ரீராமமூர்த்தி வீற்றிருந்தனர்.

திருமுகங்கண்ட அவ்வத்தேயமன்னவர்களும் மகாரிஷிகளும் யாகசாலைக்கு வருதல்.

கவி.

தேடுதனம்பூணுடைமுத லடங்கக்கொண்டுசேனையொடும்
கூடியடங்கவருதலினு லந்தக்குலமன்னவர்வாழும்
நாடுந்துயநலமிக்க நைமிசாரணியமென்னும்
காடுநாடாயினதென்றூற் சனத்தையாரேகணக்கிடுவார்.

இப்படி அம்மண்டபத்தில் இராமபிரான் வீற்றிருந்தபோது, தாமனுப்புவித்த திருமுகத்தைக் கண்டகாலையில், ஸ்ரீராமபிரானைக் காணும்படி திரவியம் - ஆபரணம் - வஸ்திரம் - இவைமுதலிய காணிக்கைகளைக்கொண்டு அங்கம் - கலிங்கம் - காம்போசம் - பாஞ்சாலம் -

விலாடம் — இலாடம் - சூரம் - சீனம் - மகதம் - யாதவம் - சேரம் - சோழம் - பாண்டியம்- சிந்து-இவைமுதலிய தேசமகாராஜாக்களும், முன்னமே அயோத்திமாநகரத்தில் வந்திருக்கின்ற சுக்ரீவன்-சாம்புவந்தன்- நளன்-நீலன்,அனலன்—அங்கதன்-அநுமான்முதலிய வானராதிபதிகளும், விபீஷணரும், முறை முறையேவந்து ஸ்ரீராமபிரானைக் கண்ணாரக்கண்டு தரிசித்துத் தங்கள் தங்களுக்கிட்ட ஆசனத்திலிருந்தனர்கள். ஆங்கிரர் - அத்திரி - காசிபர் — கௌசிகர் - சமதக்னி - பாரத்துவாசர் - கௌதமர்— சாபாலி — அகஸ்தியர்— கண்ணுவர் — புலத்தியர் - பிருகு - இவர்கள்முதலிய மகாமுனிவர்கள் தங்கள்தங்கள் தவகோலங்களோடு பன்னகசாலையைவிட்டு அந்நைமிசாரணியத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீராமச்சந்திரனிடத்தில் வந்தனர்கள். அப்படிவந்த தபோதனர்களை ஸ்ரீராமன் எதிர்கொண்டு பணிந்து உள்ளழைத்துவந்து ஆசனந்தந்து அதிலெழுந்தருளச்செய்து,க்ஷேமலாபங்களை விசாரித்துச் சந்தோஷமாயிருந்தனர். அக்காலையில் இலக்ஷுமணப்பெருமான் இராமபிரானுத்தரவுபடி வந்தவர்களுக்கெல்லாம் அமைத்துவைத்திருக்கும் விடுதியில் அவ்வவர்களை முறைமைப்படி விட்டு தேவபோஜனமாகிய தேவாமிர்தமும் நாணும்படியாக ஷட்ரசான்னமாகிய உணவைஊட்டுவித்து மனமகிழ்ந்தனர். யாவரும் இந்தயாகத்தைப்போலெவரும் எக்காலத்திலும் செய்தவரில்லையென்றுகொண்டாடினார்கள்.

ஸ்ரீராமபிரான் அரசருக்குச்சன்மானமும், பிராமணர்கட்கும் ஏழைகட்குந் தானமும் வழங்குதல்.

கவி.

வறியவர்வேண்டிற்றெல்லாம் வழங்குவன்வள்ளலென்றுங்
கெறிபறையறைதலோடு மிரவலரானேரெல்லாம்
பறையறையோசைகேட்டுப் பழுமரந்தன்னில்வீழும்
பறவையுமதுவீழ்தேனிற் பலசனம்வந்துமொய்த்தார்.

பிறகு இராமச்சந்திரன் அவ்வத்தேய மகாராஜாக்களுக்கெல்லாம் சன்மானமாக சொர்னமும் - வஸ்திரமும் - ஆபரணமும் கொடுத்து, சுக்ரீவன்-அநுமான்-விபீஷணர்—அங்கதனுதி வானரத்தலைவர்-குகன் இவாள்முதலிய பிரமுகாளுக்கும், ஆடையாபரணங்களைக்கொடுத்து,பிராமணர்களுக்கும் ஏழைகளுக்கும் வேண்டியது வேண்டியபடி தானங்கொடுக்கப்போகிறோம். ஆதலால் யார்யார் எதெது வேண்டுகிறார்களோ அவர்களெல்லாம் வருகலாமென்று பறையறையச்சொல்ல,அப்படியேபறையறைந்த சத்தத்தைக்கேட்ட யாவரும் பழுத்தமரத்தில் வந்துசேரும் பக்ஷிகளைப்போல்வந்துசேரப் பொன்வேண்டினவர்கட்குப் பொன்னும்,பூமிவேண்டினவர்கட்குப் பூமியும், மாணிக்கம் வேண்டினவர்கட்கு மாணிக்கமும், இன்னும் யார்யார் என்னென்ன வேண்டினார்களோ அவரவர்மனம் களிக்கக்கொடுத்து மகிழ்வித்தனர்.

அச்சமயத்தில்,எப்பொழுதும் ஜலத்தில் முழுகித்தவஞ்செய்வதால்பாசிமூடிய திருமேனியும், ஜீவராசிகள் நசுங்கிவருந்தாதவண்ணம் குந்துநடையையுடையவருமாகிய ஓர்மகாமுனிவர் ஐயாமகாராஜனே! எனக்குப்பொன்னும்

பூஷணத்தாலுமடையுஞ் சுகமொன்றுமில்லை. எனக்கு வேண்டுவதுமரவுரியொ ன்று அதைக்கொடுக்க வேணுமென்றுகேட்க, ஸ்ரீராமன்மனமகிழ்ந்து ஒருபண் டி மரவுரியைக் கொடுத்தனர். பிறகு ஒருகமண்டலம் வேண்டுமென்றுகேட்க ஒருபொன்கமண்டலம்கொடுத்தனர். மற்றொருபிராமணன் எழுந்து, ஐயாமகா ராஜாவே கஞ்சிக்குப் பயறுவேண்டுமென்று என்மனைவி கேட்டன ள். அதற்காகவந்தேன் ஒருகலப்பயிறு வேண்டும் என்ன, பிரானுனவர் இப் பிராமணனது வறுமையை நினைந்து, மலைபோலுங்குவிந்த திரவியமும், பசு க்கூட்டமுங் கொடுக்க, பிராமணன் அதற்குச்சம்மதியாது ஐயா இரகுபுங்க வரே! நான் கேட்டபொருளைக் கொடாதுவேறுபலபொருளைக் கொடுத்தா லும் நான்வாங்கமாட்டேன். ஏனெனில், என்மனைவி கலப்பயறுதான் கேட் டனள். அதுதவிர வேறுபொருளை நான்வாங்கிக்கொண்டுபோனால், அவள் என்னைச் சேரமாட்டாள் - மிகவுங் கோபிப்பாள் - சாதம்போடமாட்டாளெ ன்றுசொல்ல, இராகவன்கேட்டு, ஆ! ஆ! இவன் உண்மையுடையோன் தன் மனையவள் சொல்லியவார்த்தையை மறையாது கூறினனென்று மகிழ்ந்து கஞ்சிக்கு வேண்டிய அரிசியைத்தரும் நெல்லு நூறுயிரங்கலமும், நூறுயிர கலப்பயறும் கொடுத்தனுப்பினர்.

இவ்வாறு யார் யார் எது எது விரும்புகின்றார்களோ அவ்வவர்களிஷ்ட ப்படி கொடுத்துத் திருப்திசெய்வித்துப் பொழுதுபோக்குநாளில், இயாகத்தி ற்குக் குறித்தநாள்வந்துவிட அன்று ஸ்ரீராமனுத்தரவுபடி வேண்டிய உபகர ணங்களை யொன்றுந் தவறாது அவ்வியாகசாலையிற் சேர்த்து, விதிப்படி வேள் வித்தம்பங்கள் நிறுத்தி வசிஷ்டமா முனிவரானவர் யாகம்பண்ணத் தொடங் கினர். ஸ்ரீராமபிரானும் மைதுலியாகிய ஜானகி நீங்கினபிறகு, சொர்னத் தாற் சீதைபோலுருச்செய்து அழகுவிளங்கக்கண்டுகொண்டிருக்கும் பாவை யைச் சமீபத்திற் சேர்த்தி விரதசீலராய் கங்கணந்தரித்து ஆசிரிய ருத்திரவுபடி யாககாரியம் பார்க்கின்றார். வேதங்கள் முழங்கின. பூப்பிரதக்ஷணஞ் செய்ய ச்சென்ற குதிரையும் வந்துவிட அக்குதிரைக்குச் சோடசோபசாரஞ்செய்து அதனது நாலுகால்களுக்கும் பொற்குளம்பூட்டி அலங்காரஞ்செய்து வேள் வித்தம்பத்திற்கட்டி வேதவிதிப்படி செய்யவேண்டிய முறைகளைச் செய்து தேவர்களுக் கவிர்ப்பாகங்களைத் தந்து யர்கநடந்துகொண் டிருக்கின்றது. இவ்விதமாக நடக்கிற சவிஸ்தாரத்தை வான்மீகமுனிவ ரறிந்தனர்.

வான்மீகமுனிவ ருத்தரவால் குசலவர்கள் யாகசாலையில்வந்து இராமாயணம் பாடுதல்.

கவி.

இசைபுனையிராகவ னினையவேள்விகள், நசைபலவேட்குமங் நாளினுண்டிறை
வசையறுமதரவான் மீகிமன்னிய, குசலவர்வருகெனக் குறித்துக்கூறினன்.

இந்தப் பிரகாரம் ஸ்ரீராமச்சந்திரன் வேள்விசெய்யும் நாளில் வான்மீக முனிவரானவர் குசலவர்களைத் தன்னிட மழைப்பித்து நீங்களிருவரும் நைமி

சாரணியஞ் சென்று அயோத்தியா நகரத்தையாளும் ஸ்ரீராமன் செய்யும் யாக சாலையிற் பிரவேசித்து எம்மாற்கற்பித்திருக்கும் இராமாயணத்தை நீங்கள் பாடுங்களென்றுக்யாபிக்க அவ்வண்ணமே அவ்விரு குமாரர்களும் வான்மீக முனிவரையும் தாயாகிய சீதையையும்வணங்கி ஆடையாபரணவலங்கிருதர்களாய் வீணையை இடதுதோளிற்சார்த்தி நைமிசாரணியத்திற்சமைத்த யாகசாலையிற் சென்றார்கள். அங்குள்ளவர்களெல்லாம் இக்குமாரர்களைப் பார்த்து ஆஆ!! இதென்ன ஆச்சரியம் ஸ்ரீராமச்சந்திரனை யொத்திருக்கிறார்களே யென்று பேசிக்கொண்டார்கள். இவ்விருகுமாரர்களும் வீணையின் முறுக்காணிகளைத்திருகி தேவரும் கந்திருவரும்வித்தியாதரரும் கேட்டு நாணும்படி சுதி சுரம் தாளப்பிரமாணங்கள் பெழாலொலி கண்டத்தொலி ஒன்றிற்கொன்று மாறுபடாது வாயிலில்நின்று இராமாயணத்தைப்பாடினார்கள்.

ஸ்ரீராமபிரான் கேட்டு தமதெதிரிற் பாடவழைக்க அக்குசலவர்கள் இராமாயணத்தை வரன்முறைப்படி பாடுதல்.

கவி.

குரன்முதலெழுவகை நரம்புகூட்டிய, விரல்கவர்ந்தடுத்துள வேதர்சீரியாழ்
கரமிசைவாங்கினர் கவின்கொள்காப்பிய, உரைபயிலின்னிசை யுரைப்பதாயினர்.

இவ்வண்ணம்பாடிய இராமாயணத்தை யாககாரியத்திலிருந்த ஸ்ரீராமபிரான் கேட்டு இஃதியார்? சுதிமுறை பிறழாது பாடுபவர்களை. அவர்யழையுங்களென்ன, உடனே வாயிற்காப்பாளர் குசலவாளிடஞ் சென்று, ஸ்ரீராமச்சந்திரபகவான் அழையென் றருளிச்செய்தாரென்ன வதைக்கேட்ட குமாரர்களிருவரும்உள்சென்றுபகவானைப்பணிந்துநின்றார்கள். சுவாமி, அவர்களைப்பார்த்து, ஓ வாலிபர்காள்! நீங்கள் அங்குபாடினீர்களே அதை இவ்விடத்திற்பாடும் பார்ப்போமென்ன அப்படியேபாடுகிறோமென்று வீணையைக் கையிலெடுத்து, குரல்முதலிய ஏழு ஓசைகளமைந்த எழுவகை நரம்புகளைத்தமது விரல்களால் நெறித்து, இராமாயணத்தைவான்மீகமுனிவர் தங்களுக்கெப்படிகற்பித்தனரோ அவ்வண்ணமேபகவானது திருவவதாரமுதல்இலங்கையையடைந்துராவணசம்மாரஞ்செய்து பிராட்டியைமீட்டு அயோத்தியாபுரியையடைந்துபட்டாபிஷேகஞ்செய்ததீறுகியசரித்திரங்களைச்சாங்கோபசாங்கமாகச் சொல்லக்கேட்டவப்பிரானுனவர்மகிழ்ந்துபுதல்வரை நோக்கி, நீங்கள்யார்? எங்கிருக்கிறது? உமது பெயரென்ன? இக்காவியம் பாடினவர் யாவர்? எதுவரைக்கும் பாடியுளது வென்று வினவ, அதற்குக் குசலவர்கள் பகவானைப் பார்த்து, ஓ அரசே! யாங்கள் வால்மீகிமகாமுனிவரது சிஷியர்கள் - அவரது ஆச்சிரமத்திலேயேதா னிருக்கிறது. எமதுபெயர் குசன் என்றும் லவன் என்றும் பெயர். இப்பொழுது தேவரீர் திருச்செவிசார்த்தியருளிய இந்தக் காவியஞ் செய்தருளியவர் வால்மீகர், பிரபந்தம் இருபத்திநாலாயிரம் சுலோகங்களும், நூறு உபாக்கியானங்களு மடங்கியது இதனை ஆதிமுதல் ஐந்நூறு சருக்கங்களாகவும் ஆறுகாண்டங்களாகவும் வகுத்து அவற்றுடனே உத்தரகாண்டமும் சேர்த்துச் செய்தரு

நெ. 95 குசலவர்கள் இராமாயணம்பாடி ஸ்ரீராமரை மகிழ்வித்தல்.



ஸ்ரீராமர், வால்மீகரையும் சீதையையும் அழிப்பித்தல்.



உத்தரகாண்டம். குசலவர்கள் இராமாயணம்பாடியது.

ளியிருக்கின்றார். என்று குசலவர்கள் கூறக்கேட்டு மகாசந்தோஷமடைந்து, தன்திருமேனிபோலு மழகுவாய்ந்த அப்புத்திரர்கட்குப் பதினெண்ணாயிரம் பொன்கொடுக்கும்படிமந்திரிகட்கு ஆஞ்ஞாபித்தார். அவ்வார்த்தையைக்கேட்டபுதல்வர்கள் ஓமஹாப்பிரபோ. பொருள்எங்கட்கு வேண்டாம் வேண்டாம்: அஃது சகல பாபங்களையு முண்டாக்கும். நாங்களோ முனிவராச்சிரமத்திலிருந்து காய்கனிகிழங்குகளை உண்டு காலங்கழித்து வருகின்றவர்கள். நாங்கள் பொருளினிடத்தில் எட்டிக்காயைப்போல் கைப்புக்கொண்டிருக்கிறோமென்று சொல்ல, பிரான்மகிழ்ந்து ஓ குமாரர்களே இன்னும் நாளையதினம் வந்துபாடுவீர்களாவென்றுவினவ, அவ்வண்ணமே நாளையதினமும் வந்துபாடுகிறோமென்று விடைகொண்டு வான்மீகபகவானது ஆச்சிரமமடைந்து நடந்த வர்த்தமானங்களைக் கூறி மறுநாள்முதல் சிலநாள்வந்துவந்து பாடிக்கொண்டிருந்தார்கள்.

ஸ்ரீராமர் குசலவரைத் தமது புத்திரர்களென்றறிந்து வான்மீகரையும் சீதையையும் அழைப்பித்தல்.

கவி.

பன்னியபனுவலின்சொற் குசலவர்பாடுகின்ற
இன்னிசைகேட்டுநாளு மியல்புளியொருநாளந்தப்
பொன்னியற்சனகிபெற்ற புதல்வரென்றறிந்துவாங்கித்
தன்னிகர்புதல்வர்தம்மைத் தழுவினனெழுவுத்தோளான்.

இவ்வண்ணம் குசலவர்பாடுகின்ற வால்மீகராமாயணத்தை நாள்தோறுங்கேட்டு வருநாளையிலொருநாள் இப்புதல்வர்கள் சானகியினிடம் தமக்குதித்த குமாரர்களென்றறிந்து அவர்களைத்தழுவி உச்சிமுகந்து அளவில்லாத சந்தோஷங்கொண்டு, இலங்கையிலக்கினியில் முழுகுவித்துச் சீதையின் கற்புத்திறத்தைக் காட்டினதைப்போல் இன்னுமொருவிசைஉலகினர்க்குக்காண்பிக்கவேண்டுமென்றுதிருவுளங்கொண்டு புத்திரர்களைநோக்கி,ஓ குமாரர்காள்! நீங்கள் உங்களாச்சிரமஞ்சென்று நாளையதினம் வாருங்களென்று திட்டஞ்செய்து, பிராமணர் அரசர்கள் மந்திரிகள் பிரதானிகள் யாவருக்கும் விடைகொடுத்து தமது அரண்மனையடைந்து தூதர்சிலரை விளித்து, நீவிர் வான்மீகபகவான் சன்னிதிக்குச்சென்று சீதைகல்மிஷமின்றிச் சுத்தமான ஒழுக்கமுள்ளவளாயின் அம்முனிவருடைய கட்டளையினால் இச்சபைநடுவே நம்பிக்கைவரத்தக்க சபதஞ்செய்யக் கடவளென்று விஞ்ஞாபனஞ் செய்யுங்கள். இவ்விஷயத்திலம்மகாரிஷியின் கருத்தும் - சீதையின்கருத்தும் - இத்தன்மைத்தெனவறிந்து, உடன்பாடாயின் நாளையகாலையிலே இவ்வண்ணஞ் செய்யவரவேண்டுமென்று சொல்லிவருவீர்களென்று ஆக்கியாபித்தருளினர். அவ்வினையுரைப்போர் உடனே அம்முனிபுங்கவர் சன்னிதானஞ்சென்றுவணங்கி இராமவாக்கியத்தை விண்ணப்பஞ்செய்ய, அவர் நல்லதப்படியே சீதை செய்வாளென்று நும்மரசற்குக் கூறுமின்களென்றனர். அத்தூதுவ ரவ்வாக்கியத்தைச் சிரமேற்கொண்டு இரகுநாயகரிடம் விஞ்ஞாபனஞ் செய்தனர்.

அதுசெவியிற் பட்டவுடனே இராமர்களிப்புற்று, ஆண்டு சூழநின்ற முனிவர் அரசர்முதலிய யாவரையுநோக்கி, நாளையகாலை சீதை தனது நல்லொழுக்கத்திற்குக் குறியாகப் பிரமாணஞ்செய்யச் சித்தமாயிருக்கின்றாள். இயாரார் காணப்பிரியமுள்ளவரோ அவரெல்லாம் இங்குவந் திருக்கலாமென வுரைத்தனர், அதனை யாவருங்கொண்டாடிப் புகழ்ந்து விடைபெற்றுத் தத்தமிடஞ் சென்றனர்.

இப்பால் மறுநாளுதயத்தில் வசிஷ்டர் - வாமதேவர் - விசுவாமித்திரர்— சதாநந்தர் - பரத்துவாசர் - அகஸ்தியர் - நாரதர்முதலிய இருடிகளும், விபீஷணர்முதலிய அரக்கரும், சுக்கிரீவன்முதலிய கபிகளும், மற்றும் அந்தணர் அரசர் - வைசியர் - சூத்திரர் - ஆகிய நால்வருணத்தினரும் வந்து சபைகூடினர்கள்.

கவி.

ஈனப்பழிக்குத்தானிறைஞ்சி யிளையோன்றன்னைப் பிரிந்ததிற்பின்
மானக்கூர்வேனிறத்தூன்ற வைகரேறுந்தளர்வாளை
கானிற்றெய்வங்கண்டிரங்கக் கண்களாறுய்ச்சொரிவாளை
ஞானத்தவத்தோன் பின்கொண்டு நாதன்சவையினுட்புக்கான்.

அச்சமயத்தில் பழிக்குப்பயந்து இளையவர் தம்மை யாரணியத்தில் விடுத்துப் பிரிந்தபின், மானமாகியவேல் தைப்பதினால்வருந்தி, காட்டுதேவதைகளுங்கண்டழக் கண்ணீராறுய்ச்சொரியுஞ் சீதாபிராட்டியை அழைத்துக்கொண்டு மாணாக்கர்தம்மைச் சூழும்படி வான்மீகபகவான் ஸ்ரீராமன் சபையினுள்வந்தனர். பின்புறத்திற் பிராட்டியார் காஷாயவாடையும், குவித்தகையும், குனிந்தசென்னியுமாகி, பிரமனைத்தொடர்ந்து சுருதிவருவதுபோல் வந்துநின்றனள். குசலவர்களும்கூடவந்தனர்கள். இவ்வாறனைவரும்கூடியசபையில் வான்மீகமுனிவரர் இரகுவரரைநோக்கி, ஓ தசரதகுமாரரே! இதோநிற்கின்றசீதை மகாபதிவிரதை. மேன்மையான தருமாசாரமுள்ளவள். கரணமூன்றிலுங் குற்றமற்றவள். உலகத்தின் அபவாதத்துக்கு அஞ்சின உமக்கு நம்பிக்கைகொடுக்கச் சித்தமாயிருக்கின்றாள். இதோநிற்கிற குமாரரிருவரும் உமதுபுத்திரர். இரட்டைப்பிறப்பினர். நான்சத்தியமே சொல்கிறேன். நான் வருணதேவருடைய பத்தாங்குமாரன். பொய்யை நினைத்துமறியேன். ஈண்டியானுரைத்தவை பொய்யாயின் அனேகவாயிர வருஷங்களாகச்செய்த தவத்தின்பயனை இழக்கக்கடவேன். ஐம்பொறிகளிலும் அந்தக்கரணத்திலும் இவள்தூயவளெனத்தெரிந்தே யானிவளை யாதரித்துவந்தேன். உலகநிந்தைக்கு வெருவிக் காட்டிலுய்த்த வுமக்கெதிரி லிவள் சபதஞ்செய்யக் காத்திருக்கிறாள். இவ்விருகுமாரர்களும் உமதுபுத்திரர்கள் என்று உறுதியாக மொழிந்தனர்.

பிறகு காகுத்தசிரோமணி அஞ்சலிபந்தஞ் செய்துகொண்டு, சுவாமீ! தேவரீர் வாக்கியங்களே நம்பிக்கைக்குப் போதுமானவை. முன்பிவள் தேவதைகள் சன்னிதானத்திற் சபதஞ்செய்ததினாலேயே சுத்தமானவளென நிச்சயித்து மனையில் வைத்துக்கொண்டேன். இவளுடைய நல்லொழுக்கங்

№ 96. சீதாபிராட்டிபிரமாணஞ்செய்துபூப்பிரவேசமாதல்.



பூமாதேவிமேற்சினந்த ஸ்ரீராமரைபிரம்மதேவன்தேற்றுதல்.



களு நற்குணங்களு மடியேற்குத் தெரியாததல்ல. ஆயினும் லோகாபவாத பயத்தினாற் புறம்விட்டதைத் தேவரீர் க்ஷமித்தருளவேண்டும். இச்சிறுவரும் என்மக்களெனத் தெரிந்துகொண்டேன். இவ்வாறு பரிசுத்தமான இம்மைதிலியிடம் எனக்கு அன்புபெருகச் சோதனை தரக்கடவதுதானென்றியம்பி நிற்கையில் வாயுபகவான் யாவரும் ஆனந்திக்குமாறு சுகமானபரிசத்தோடும் சுத்தமான கந்தத்தோடும் வீசினார். இதைக்கண்டு ஆங்குதுன்னிய யாவரும் பெருவியப்போடு பெருங்களிப்பு மடைந்தனர். அப்பொழுது பிராட்டியார் இவ்வார்த்தைக ளனைத்துங்கேட்டுச் சொல்லுகிறாள். எனது கற்புத்தன்மை அருந்ததிதேவியும்போற்றத்தக்கதென்று யாவருக்குந் தெரிந்த விஷயமே; அப்படிப்பட்ட எனது கட்டளையைக் கணவன் பொல்லாங்கென் றுரைக்கின் எனதுநிலைமைஎவ்வாறுபயன்படும். இனிமறுத்துச்சொல்லவேண்டியவிஷயங்களேதுமின்று.வாயிலிட்ட விஷத்தை வயிற்றுக்குள்ளிறக்கினால்கொல்லுமே யன்றி அல்லாவிடில் யாதுசெய்யும். என்மீது கொடியபழியைக் கூறினவர்களின் நெஞ்சு பிளக்கும்படியாக இப்பொழுதே சோதனை காட்டுகிறேன் யாவரும் பாருமென்றுகடுத்துக்கூறினாள். அப்பொழுது வான்மீகமுனிவரானவர் அம்மா ஜானகி! கோபிக்கவேண்டாம் உனது பர்த்தாவினுத்தரவுபடி உலகங்கொண்ட சந்தேகத்தை யொழிப்பாயாகவென்று சொல்லினார். அப்போது சீதையானவள்அம்முனிவருடைய கமண்டலத்திலுள்ள மந்திரநீரைக் கையில் வாங்கி ஆசமனஞ்செய்து பூமியைப் பார்த்து இதனைச்சொல்லுகிறாள்.

வான்மீகரோடு யாகசாலைவந்தசீதை தனதுகற்பைப்பற்றிப் பிரமாணஞ்செய்து பூப்பிரவேசமாய்மறைய அப்பூதேவிமேல்இராமமூர்த்தி கோபித்தல்.

கவி.

வினைப்பாசத்தையறுத்தமுனி வேள்விகாத்துமிதிலைபுகுந்
தெனக்காவீசன்வில்லிறுத்தன் றெனைக்கைப்பிடித்தவெழிலாரும்
புனைக்காயாம்பூநிறத்தானை யன்றிமற்றோர்பூமனையான்
மனத்தால்வாக்காணினையேனேல் வழிதாவெனக்குமண்மகளே.

வருந்தியேபயந்தநீ மற்றென்கற்புமவ், வருந்ததிகற்புமொன் றானதென்றிடின்
பெருந்துதிமாநிலம் பிளத்தியென்றனள், இருந்துதியமரரு மேத்துங்கற்பினாள்.
பலதலைமாசுணப் பள்ளிமேவிய, நிலைபெறுகற்பின ணிதிகொண்மேனியாள்
வலைமுலையாகத்தாண் மாரிக்கூந்தலாள், அலைகடலாடையா ளவனிதோன்றினாள்.
சேணுலாவியதல மடந்தைசீதைதன், பூணுலாவியபுயம் பொருந்தப்புல்லுறீஇ
வாணிலாவியகதிர் வழங்கல்செல்கலாக், கீணிலைப்படலமுங் கிழியப்போயினார்.

இரண்டு கண்களினின்று மருவியாற்றைப்போல நீரைப்பெருக்கிஅம்மா பூமாதேவி! தீவினையாகிய பந்தத்தினின்றும் விடுபட்ட விசுவாமித்திர முனி

வரது யாகத்தை ரக்ஷித்து மிதிலாபுரியடைந்து அடியாளுக்காகச் சிவபிரானது வில்லைமுறித்துஎனதுகையைப்பிடித்த காயாம்பூநிறத்துமேனியானாகிய இவ்விரகுவம்சகுலதிலகனன்றி மற்றொருபுருடனை எனது மனத்தினாலாவது வாக்கினாலாவது நான்நினையாத சத்தியமுடையவளாயின் எனக்குநீவழிதந்து இடங்கொடுக்கவேண்டும். நீபெற்ற புத்திரியாகிய வெனது கற்பும் அருந்ததி தேவியினது கற்புமொன்றாயிருக்குமென்னின், நீவாசம்செய்யும்பூமி வழிவிடவேண்டுமென்று பூதேவியை வேண்டும்பொழுது பூமியிரண்டாய்ப் பிளந்து வெடித்தது. அவ்வெடிப்பின்வழியாக ஆயிரம்பணாமகுடங்களையுடைய ஆதிசேஷனாகிய சயனத்தின்மீது எழுந்தருளும் கற்பிற்சிரேஷ்டமானவளும்,இரத்தினப்பிரகாசம் போன்ற திருமேனியுடையவளும், வளர்ந்ததனங்கள் வாய்ந்த பரந்தமார்பையுடையவளும், மேகம்போலுங் கூந்தலையுடையவளும், சமுத்திரத்தை யாடையாக இடையிற்கொண்டவளுமாகிய அப்பூமாதேவியானவள் யாவருடைய நேத்திரங்களுக்கும் புலப்படும்படியாக நாகலோகத்தார்கள்சிரத்தின் மேற்றாங்கப்பட்ட ஓர்திவ்வியசிங்காதனத்தின் மேற்றோன்றி அச்சீதையைத் தன்னிரண்டு புஜங்களாலே அணைத்தெடுத்து, அச்சிங்காதனத்தின்மேல்வைத்துக்கொண்டு வந்தவழியாய்ப்பூமிக்குள்ளே புகுந்துவிட்டாள். இவ்வாறு பிராட்டி பூதேவியுடன் பூமிக்குள் பிரவேசித்தவளவில் வானவர் பூமழைபெய்து புகழ, புவியிலிருந்தோரும் ஆச்சரியத்தோடு கூவிப் புகழ்ந்தனர். இயாவரும் சிறுபொழுது ஒன்றுந் தோன்றாது பாவைகளை யொத்திருந்தனர்.

அக்கால் தசரதநந்தனரோ? தலைகுனிந்து கண்ணீர்மல்கி மனஞ்சோர நின்று, நெடுநேர மழுதரற்றிச்சோகமுங் குரோதமும் விஞ்சப் பூதேவியை விளித்து இங்ஙனமிசைக்க லாயினர். ஓநிலமகளே! நான் பார்த்துக்கொண்டேயிருக்கையிற் சீதையை நீ மறைத்ததினாலே சோகமானது என்மனதை வருத்துகின்றது. முன்பவள் காணாதிருந்தபோது கடலைக்கடந்து இலங்கையை வென்று கொணர்ந்தேன். இப்போதும் உன்வயிற்றைக்கிழித்துக்கொண்டுவரமாட்டுவேன். அப்படிவேண்டாம். நீயே என்னரியகாதலியைக்கொண்டு வந்துகொடு. இன்றேல் அவள் சென்றவழியாகிலு மெனக்குக்காட்டுக. எதுவுஞ்செய்யா தொழிவையாயின் உன்னை மலை கடல் காடுகளோடு நீறாக்கிவிடுகிறேன். அவளிருக்குமிடத்திலாகிலு மென்னைக்கொண்டுபோய்விடு. இப்போதவ ளிருக்குமிடம் சொர்க்கமோ? பாதாளமோ?மற்றெதுவோ? அவளோடுகூட நானிருக்க விரும்புகின்றேன். நீ என்றனக்கு மாமியாயிருந்தும் இங்ஙனஞ் செய்வது நலமன்று.

பூமாதேவிமேற் கோபித்த ஸ்ரீராமரைப் பிரமதேவர்வந்து சாந்தப்படுத்தல்.

கவி.

இன்னனவுரைத்துரைத் திகலிராகவன், துன்னியபுவியினைத் துணிப்பனென்றழிப்
பொன்னிகர்சததளப் பூந்தண்கோயிலின், மன்னியபிதாமகன் வந்துதோன்றியே.

இப்படியென்று இராமசுவாமியானவர் பலபல வார்த்தைகளைச் கூடச் கூடவுரைத்துக் கோபித்து இப்பூமியைப் பேர்த்துவிடுகிறேனென்று தமது கோதண்டத்தை யெடுத்தனர். அச்சமயம் பொன்னிறம்பெற்ற இதழ்களையுடைய தாமரை மலராகிய ஆலயத்தில் விற்றிருக்கும் பிரமதேவர் அங்கு தோன்றி, பொறும் பொறும் காகுத்தவமிசோத்பவரே! பொறும் பொறும் எங்களை ரக்ஷிக்கவந்தவரே யென்று சொல்லி, ஐயா! நீர் பஞ்சபூத சம்பந்தமாகிய உலகத்தை உண்டு ஆலிலையின்மீது கண்வளர்ந்து திரிலோகங்களையுமிரக்ஷிக்கின்றீர். நீரறியாதகாரிய மொன்றுளதோ? இன்று: ஆயினும் சில கூறுகிறேன் அதாவது — சுவாமி! புலத்தியப் பிரமரிஷி வமிசத்தில் தோன்றி எங்களுக்கெல்லா மிடர்விளைத்த கொடியபாதகனாகிய இராவணனைச் சங்கரித்தற்கன்றோ தாம் வைகுண்ட நகரத்தைவிட்டு இங்குமானிடதேகியாகத்திருவவதாரஞ் செய்தது.

ஐயா ஸ்ரீராமபிரானே! தேவரீர் இவ்வண்ணம் வருந்தலாகுமோ? தேவரீருடைய முந்தியதன்மையாகியவிஷ்ணுபாவத்தையும், சொர்க்கிகளோடுகட்டளையிட்டு நிர்ணயித்ததையுநினைத்துக்கொள்ளுமாறு இங்ஙன நினைப்பிக்கின்றேனே யல்லது வேறில்லை. சீதாதேவியும் தேவரீரோடு பூர்வீக ரூபத்தையே அடையுந்தன்மையள். இப்போது நாகலோகத்தி லெழுந்தருளியிருக்கின்றாள். பரமபதத்தில் உம்மோடு சேர்வாள். இதுநிற்க வான்மீகமுனிவரால் தேவரீருடைய சரித்திரமமைத்துச் செய்யப்பட்ட இக்காவியமே மேலானகாவியம். இதுவே ஆதிகாவியம். இயான் தேவதைகளோடுகூட முன்பே கேட்டிருக்கின்றேன். இதுவெகு அற்புதமானது. இதில் மிகுந்திருக்கிற பாகத்தைத் தேவரீரே செவிசாய்த் தருளவேண்டும். பிறர் கேட்கலாகாது. தேவரீரன்றிக் காவியம் பெறத்தகும் புருடனெங்குமில்லை. என்றிப்படி விண்ணப்பஞ்செய்து தமதுலகத்திற்குச் சென்றார்.

ஸ்ரீராமர் பூதேவியின்மேற்கொண்டகோபத்தைப் பிரமதேவனால்தீர்ந்து தமது புத்திரரோடு அயோத்தியடைந்தரசாளல்.

கவி.

அங்கண்வானகத் தமலனாமெனப், பங்கயாசனப் பானுரைத்தலும்
துங்கவார்சிலைத் துணைநெடும்புயச், செங்கண்வீரன்வெஞ் சினமொரீஇயினான்.

இவ்வண்ணம் பிரம்மாவானவர் கூறியவார்த்தைகளைக் கேட்டு ஸ்ரீராமன் கோபந்தணிந்து தன் புதல்வரை யணைத்து யாகசாலையுட் சென்று பூரணாகுதிசெய்து அன்றுமுதல் வான்மீக மகாமுனிவர் பாடிய பாலகாண்டமுதல் உத்தரகாண்ட மீறாகக் குசலவர்களால் கேட்டு நூறு அஸ்வமேதயாகஞ் செய்து முடித்து யாவரையும் சந்தோஷிப்பித்தனர்.

கவி.

சேடனாயிரஞ் சிரமசைத்திடக், கோடிலாமதிக் குழவியன்னகோட்
டோடையானையி னும்பரேறியே, ஆடன்யாவினா னயோத்திமேவினான்.

தன்குடைக்கிடைத் தலமொரேழையும், பொன்பெய்மாரியான் பொதுவறப்புரந்
தன்பர்சூழவா ளரசர்போற்றநீ, டின்பமேநுகர்ந் தினிதுவைகினன்.

இப்படி யாகத்தைமுடித்து வேண்டியபடியே தானமீந்து நல்லதினம்பார்த்துத் தமதுசோதரர்கள் புடைசூழ சகலபரிவாரங்களோடும் விபீஷணர் - சுக்ரீவன் — ஆஞ்சனேயர்-வான்மீகர்-வசிஷ்டராதிமுனிவர்களோடும் பட்டத்துயானையின்மீ தாரோகணித்துப் பூமியதிரும்படி அயோத்தியாபுரி யடைந்து முனிவர்களுக்கு விடைதந்து தனதுபூசக்கரக்குடைநிழலில் ஏழுலோகங்களேயும் காப்பாற்றி மாதமும்மாரிபெய்ய உலகமெல்லாம் தனதுசெங்கோல்செல்லும்படி,பொன்னினாற்செய்த பாவையாகிய சீதையோடும் குசலவர்களாகிய புத்திரர்களோடும் தம்பிமாரோடும் இன்பங்களைஅநுபவித்துச்சுகமாகவாழ்ந்திருந்தனர்.

அஸ்வமேதயாகப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பதினேழாவது,

கால்காத்தபடலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமபிரானனவர் பரலோகமடைந்த தமது தாய்மார் மூவருக்கும் சரமகிரியைகளை நடத்தி, சத்துருக்னர்க்கும் வானரவீரர்க்கும் விபீஷணர்க்கும் விடைதந்து இராச்சிய பரிபாலனஞ் செய்திருக்குங்கால் தமது நல்லம்மானாகிய யுதாசித்து மகாராஜன் வேண்டுகோளின்படிப் பரதாழ்வானால் கந்திருவர்களைச் செயிப்பித்து அவ்வம்மானிராச்சியத்தை அப்பரதர் புத்திரரிருவர்க்கும் பகுந்தளித் தரசாளச் செய்ததும், பின்பிலக்குமணர்புத்திர ரிருவர்க்கும் அப்பரதாழ்வானியமனப்படி அவர்களைக் கொண்டே காருகபதமென்னுந்தேயத்தைப் பகுந்தளித் தரசாளச் செய்ததும் சொல்லப்படுகின்றது.


கோசலைதேவிபரலோகமடைய ஸ்ரீராமர்வருந்தி சரமக்கிரியையாதி நடத்தி பிறகு பரமபதமடைந்த கைகேசி சுமித்திரை இவர்களுக்குப்பரதலக்ஷ்மணர்களால் சரமக்கிரியை நடத்தி சத்துருக்னருக்கும் வானரர்க்கும் விபீஷணர்க்கும் விடையீதல்.

கவி.

இன்னதன்மையா லினியவையகம், பன்னியாளுநாட் பலகழிந்தபின்
கன்னன்மென்மொழிக் கவின்கொள்செய்யவாய், அன்னகோசலைக் கந்தமுற்றதால்.

இப்படியாக ஸ்ரீராமபிரான் அரசாளுநாளில் அநேகநாள் கழிந்தபிறகு சர்க்கரைபோன்ற மொழியும் அழகுநிறைந்த சிவந்தவாயுமுடைய தனது தாயாகிய கௌசல்யா தேவியானவள் பரமபதமடைந்தனள். ஸ்ரீராமன் ஆற்றுதற் துயரமுறுவ தாயினர்.

№ 97. ஸ்ரீபரதகுமாரர்பட்டாபிஷேகம். ஸ்ரீ இலக்குமணகுமாரர்பட்டாபிஷேகம்.



உத்தரகாண்டம். கால்காத்தப்படலம்.

கவி.

கொன்னேர்வைவேற் கோசலமன்னன் குலமங்காய்
அன்னேயன்னே யத்தனுமுன்னே யகல்வுற்றான்
இன்னேநீயு மென்னையுநீத்தா யெனின்யானும்
பின்னேவந்தேன் வந்தனெனென்றே பேதுற்றான்.

சொந்தார்கோலக் கோசலநாடன் குலமங்காய்
சந்தார்மார்பத் தசரதனின்பத் தகைவல்லி
அந்தோவந்தோ வையனைநாடி யடியேனும்
வந்தேன்வந்தே னென்றுதளர்ந்தே மாழ்குற்றான்.

பொன்னேமுத்தே பூதலமேழும் புகழ்மேவும்
தன்னேரில்லாத் தசரதன்மார்பந் தனியாள்வாய்
அன்னேயன்னே யென்றிருகண்ணீ ரறவார
என்னேயென்னே யென்றிளையோரு மிடருற்றார்.

இப்படிப்பகவானே புலம்பியகாலையில், அநேகமாகியபரிஜனங்களும் தாதிகளும் ஏவலாளிகளும் சமுத்திரகோஷம்போல் அழுதுவங்க, தாயாகியகோசலைதேவிக்குப் பிரேதச்சடங்கியற்றி ஸ்மசானத்திற்சேர்த்திதகனசஞ்சயனஞ்செய்து பிறகுபிண்டோதகதிலதர்ப்பணுதிகளையும், அரசர்களுக்குவிதித்த வேதமுறைப்படி செய்தனர். இன்னுஞ் சிலநாளைக்குள் கைகேசி சுமித்திரையாகிய இரண்டு தாய்மார்களும் பரமபதமடைய அவர்கட்கு மப்படியே தம்பிமார்களைக்கொண்டு விதிப்படி கர்மவேள்வி புரிந்து சத்துருக்ன மகாராஜாவாகிய தம்பியை மதுபுரிக் கரசாளவனுப்பி, சுக்ரீவனுக்கும் அங்கதனுக்கும், ஆஞ்சனேயர்க்கும், மற்றவானரகோடி வீரர்கட்கும், இலங்காபுரியாளும் விபீஷணருக்கும், வேண்டிய வெகுமதிதந்து விடையீந்து, மற்றவரசர்கள் புடைசூழ இரத்தினசிங்காதனத்தி லாரோகணித் தரசுபுரிகின்றனர்.

ஸ்ரீபரதருடைய அம்மானுகிய உதாசித்து மகாராஜன் வேண்டுகோளின்படி, பரதரையும் அப்பரதர் பிள்ளைகளையும் கேகய தேசத்திற்கனுப்பி கந்திருவர்களைச் செயிப்பித்தல்.

கவி.

மொய்காம்விழியார்த முலைமுகடுபொருதடந்தோட்
கொய்கேயவரிமுராஅர் கொடைப்பரதன்றிருமாமன
கைகேயன்குலக்குருவாங் கலைமறைதேர்கார்க்கியனும்
பொய்கேதமில்லாத புகழ்முனிவனவைபுகுந்தான்.

இப்படி யரசாளுநாளில்,அழகுநிறைந்த கண்களையுடைய மாதர்களினது முலைமுகடுதோயும்படியான தோள்களையுடையபரதமகாராஜனது நல்லம்மானுகியகேகயதேசத்து மகாராஜனது குலகுருவென்னுங்கார்க்கியமகாமுனிவரானவ ரொருநாள் அயோத்தியாபுரியடைந்து தமது ஆஸ்தானமண்டபத்தை நோக்கி வருவதறிந்தசக்கரவர்த்தித் திருமகனுர் எதிர்கொண்டுபோய் வெகு

வணக்கத்தோடு ஆஸ்தானமண்டபத்தி லழைத்துக்கொண்டுவந்துமகாபயபத்தியோடு பூசித்து அம்மான் முதலானோர்களுடைய யோகக்ஷேமங்களைவிசாரித்து, சுவாமி! இயாதுகாரிய நிமித்தம் தேவரீர் ஈங்கெழுந்தருளியதெனக்கேட்டனர். அதற்கத்தபோதனர் நவிலலுற்றனர். ஓ காகுத்ததிலகரே! சிந்துமகாநதியின் இருகரையிலுமுள்ள நாடுகளைச் சைலூஷன் என்னுங் கந்தருவனுடைய மக்கள் அநேக வாயிரத்தவர் கைப்பற்றிக்கொண்டு பார்த்திவரைப் பாதித்து வருகின்றனர். அந்நாடுகளெங்கு மிகுவளப்ப முள்ளவையாய் அரசர்க்கு வேண்டும்பொருள்களைத் தருபவை. ஆதலின் - அக்காந்தருவரை வென்று இராஜவம்சத்தார்க்குச் சுகம்வருவிக்கவேண்டும். அது உம்மையன்றிப் பிறராலாகத்தக்க தன்றென்று உம்முடைய நல்லம்மான் சொல்லும்படி என்னை யனுப்பினாரென்றார்.

இச்சொல் செவிபுக்கவுடனே ராகவசிங்கம் கைகுவித்து அத்தவத்தோர் பெருமானைநோக்கி, சுவாமி! அங்ஙனமே யாகுக. நம்பரதன் மக்களாகிய தக்ஷனும் புட்கரனும் பெரும்படைகொண்டுசென்று வெற்றிபெறுக. அவர்க்குத் துணையாய் அப்பரதனே ஏகுக. வெல்லப்படு மவ்விராச்சிய மிருபிரிவாகி இருவர்க்கு முரியனவாகுக. என்றுரைத்து, அப்பொழுதே அக்குமாரருக்குப் பட்டாபிஷேகஞ்செய்வித்தனர். உடனே பெருமாள்நியமனப்படி கைகேயிபுத்திரராகியபரதர்நால்வகைத்தானபெருந்தானைகளைக் கூட்டிக்கொண்டு, குமாரரோடுகார்க்கிய முனியைமுன்னிட்டுக்கொண்டு பயணமாகிப்பதினைந்துநாட்களிற்கேகயதேசஞ்சேர்ந்தனர். அப்படையின்பெருக் கெவ்வளவினதென்றால்:

குறைமதியனையவெண் கோட்டுக்கோலமா, நிறைமதிபுரைவன திலகநெற்றிய
சிறைமதுகரங்களுந் தேனினீட்டமு, மறைதருமும்மதத் தருவிவாரணம்.

நிழலொடுமலைவன நீள்கரத்தன, வழலுறவிழியன வசலம்போல்வன
தழைசெவியுடையன சமரந்தீர்ப்பன, மழையெனவிதிர்வன மதுகைவாரணம்.

சூட்டியமணியன துலங்குசெவ்வரக், கூட்டியவுருளைய வொளிகொள்பொன்னினாற்
கோட்டியகொடிஞ்சிய குதிரைநான்குடன், பூட்டியசெழுமணிப் பொலன்கொடேர்பல.

நிறப்பலமணியெனு நிறங்களெண்ணில, உறப்பெரும்புவிபெறு தென்னவும்பரிற்
பறப்பனபோல்வன பதுமத்தெண்ணன, பிறப்பனபெருங்கடல் பெரியதிக்கன.

நிலத்தடியிடம்பெறு தென்றுநீண்டவா, றலத்திடைமிதிப்பபோற் றுவுங்கோளன
வலத்தினுமிடத்தினும் வாவுங்கொட்பன, குலத்தினுக்கிசைந்தன குரகதங்களே.

ஒத்ததுபிறந்தன யூதத்தாயின, வெத்தகப்பிறந்தன வெள்ளைவானிறம்
பத்ததுமுகத்தினும் பயந்தபான்மைய, வத்தியிற்கடியன வாசியீட்டமே.

சூர்முகத்தனலுமிழ் தோமரத்தினர், கூர்முகப்பகழியர் கொதித்தநெஞ்சினர்
கார்முகக்கரத்தினர் கழலர்கல்லெனத், தார்முகத்தெழுவுதோட் டறுகண்வீரரே.

இவ்வகைப்படைத்துணையோடு பரதாழ்வான்சேர்ந்தவுடனே யுதாசித்து மகாராஜனும் தனதுசைனியத்தோடுபரதற்குப்பக்கபலமாகப்புறப்பட்டார்.

இத்தன்மையாகப்பரதாழ்வான், கந்திருவர்நகரத்தண்டை சென்று சுற்றிக்கொள்ள, அக்கந்திருவரும் போர்க்கு வலிந்துநின்றனர். இருதிறத்தாரும் ஏழுதினமளவும் பேரமாபுரிந்தார்கள். அப்படி செய்யும்படியான யுத்தப்பிரபாவமெத்தன்மைத்தெனில்,

கரியற்றன கொடியற்றன ககனத்துறுகவனப்
பரியற்றன பணையற்றன படையற்றனவிடையே
வரியற்றனசிலையற்றன மரமற்றனவயவார்
இரியற்றனவெனவற்றன கிளர்பொற்கொடியணிதேர்.

பாருடின கழுகாடின படர்சோரியின்றிரைப்பே
ராருடின வலகைக்குல மடர்காகமுங்கழுகும்
மாருடினர்வேருடினர் மகிழ்ந்தாடினர்மறவோர்
நீருடினதிசையெங்கணு நிமிர்ந்தாடினகவந்தம்.

உரமதுடையவுயர் தலைகள்புயமதற வுரியவலியதனு வளையவே
சரமதெதிரவவர் தலைகடவிடுபடு தொகுதியெனமுடிக டறியவாள்
தரமொடிறவுலவை கழலவிகடதட கருணிகதறவெயி றுகமிகும்
புரவிகழறுணிய விரதவுருணெறிகொள் பொடிசெய்திடுமிவனெய் சரமரோ.

இருவரொருவழியி னிகலியெதிர்விழிய ரியலவயில்களெதிர் விடுவரா
லொருவரொருவழியி னுரறுமுருமினென வுரறுகுரலினர்க ளுலகெலாம்,
பருவமழைமுகில்கள் பொழிவதெனநெடிய பரதன்விடுபகழி மழையினல்
வருவன்வருவனவன் வருவன்வருவனென வெருவிமலைமுழையி னுழைவரால்.

மதுரகளபதள மகளிர்மகிணர்படர் மருவுமுடல்தழுவி யிடைவிடார்
உதிரநதியிடையி னெழுகியுயிரொழிவ ருரகபணநெளிய வுடவும்வெங்
கதிருமதியுமுக வதிருமதகரட கரியுமிருககன விரதமுங்
குதிரையணியினொடு துணியவொருவனொரு கொடியபகழிவிடு களமெலாம்.

முரிதருஞ்சிலை மூன்றுகோடிகந்
திருவர்பட்டவச் செங்களத்தினிற்
பரிகள்பட்டவும் பகழிபட்டவுங்
கரிகள்பட்டவுங் கணக்கொன்றில்லையால்

ஓரிடங்களு மொழிவுறுதவெம்
பேரிடங்கரின் பிணையல்காதிடைக்
காரிடங்கள்வெங் கழுகுமோரியும்
பாரிடங்களும் பருந்துமானவால்.

இப்படிப்பட்ட தன்மையுடையதாம். அப்படியிருதிறத்தாரும் போர்புரிகையில் பரதாழ்வார் தமதுபுத்திரர்களால் அக்கந்திருவர்களைக் கொல்வித்து நாட்டைத்தம்வயப்படுத்தினர்.

ஸ்ரீ பரதமகாராஜன் தமதுபுத்திரர்க்கு சிந்துநாட்டினில் இரண்டுநகரஞ்செய்வித்து அரசாளவிடுத்து அயோத்தியடைதல்.

கவி.

திக்குநிகழ்புகழ்ப்பரதன் றீதிலவார்தினமென்ப
மிக்கமறைமுறைமையினல் வேதியரோடினிதாய்ந்து

புக்சமிகைப்புட்கரற்குப் புட்கரமாநகர்போர்வில்
தக்கனுக்குத்தக்கசிலை நகரிவர்க்குத்தான்கொடுத்தான்.

அஷ்டதிக்குகள்தோறும் விளங்குகின்ற கீர்த்திமிக்க பரதமகாராஜன், சிந்துதேசத்தில் அளகாபுரிபோல் இரண்டுநகரஞ்செய்வித்து, நகரத்திற்குவேண்டியமுறைமைகளை வகுத்து, அந்நகரத்திற்குத் தம்புதல்வர் பெயரால்பெயரிட்டு, பிராமணர்களோடாராய்ந்து நன்னாள்கொண்டு புட்கலனென்னும் தமது மூத்தகுமாரனுக்குப் புட்கலாவதி நகரத்தையும், இளையகுமாரனாகிய தக்ஷனுக்குத் தக்ஷசிலாநகரத்தையு முடிசூட்டி அரசாளவிடுத்து அங்குள்ள தேசமன்னர்களையுந்தனதடிமைப்படுத்தி, ஐயாண்டளவுமங்கிருந்துஅவரவர்களரசாட்சியின் திருத்தங்களைக்கண்டு களிப்புற்றுத்திரும்பித் திருவயோத்திக்கெழுந்தருளி, தமையனார் திருவடிகளை யிறைஞ்சி நடந்தவையெல்லாம் விண்ணப்பஞ் செய்தார்.

ஸ்ரீராமர் இலக்குமணருடைய குமாரரிருவர்க்கும் காருகபதமென்னுந் தேயத்தைப் பகுந்தளித்தல்.

கவி.

ஆந்தவுரைகேட்டுமெகிழ்ந் தடற்பரதன்முகநோக்கித்
தந்திரமுங்கரிபரியுந் தரைப்படவென்றொருகணையால்
இந்திரனையமர்தொலைத்தா னிகன்மலைக்கும்பெருந்திறலான்
மைந்தருக்கும்வளநாடு வகுத்துரைத்தியெனவுரைத்தான்.

இவ்வண்ணம் புத்திரரை அரசாளவிடுத்து அயோத்திமாநகரையடைந்து தமது திருவடியில் வணங்கிப்போய் வெற்றிகொண்டுவந்த சவிஸ்தாரங்களைப் பரதமகாராசன் சொல்லக்கேட்ட ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியானவர் மகிழ்ந்து மிகவும் வலிமைபெற்ற பரதாழ்வாருடைய திருமுகத்தை நோக்கி, அப்பா என்னருமைச் சோதரா! இலங்கைமாநகரடைந்து, தேவேந்திரனுக்குப் பகைவனாகிய இந்திரசித்துவை அவனது சேனைகளோடு தொலைத்து செயங்கொண்ட இலக்ஷ்மணனது புத்திரரிருவர்களு மரசாக்ஷி செய்யும்படியாக யாதொருவளங்களிலும் குறைவில்லாத நாடெதுவோ அதைநீ ஆராய்ந்து சொல்லுகவென் வாக்யாபிக்க, அதைக்கேட்ட பரதரானவர் பகவான், திருமுகத்தைநோக்கி, சுவாமீ! அதோ காருகபதம் என்கிற தேசமிருக்கிறதே, அதுநல்லவிடம். அதிற் பலதுஷ்டரிருக்கின்றனர். அதனைக் கைவசமாக்கி இவர்களுக்குத்தாபிக்கலாமென்று விண்ணப்பஞ் செய்தார். இதுசரிதானென்று இராகவேந்திரர் அங்கிகரித்து, அங்கதன்-சந்திரகேது என்னுஞ் சவுமித்திரிபுதல்வரிருவர்க்கும் பட்டாபிஷேகஞ்செய்து வேண்டும்படை முதலானவைகளோடு அனுப்பியருளினார். அவர்களுள் அங்கதனுக்கு இளையாழ்வானானவர் பக்கத்துணையாகி, இரகுநந்தனரா லாக்கியாபிக்கப்பட்ட படைகளிற்பாதி தம்மைச்சூழ்ந்துவர வெளிப்பட்டார். அக்காலவ் விராமாநுஜரைச் சூழ்ந்து செல்லும் படையின்பெருக் கெவ்வளவென்றால்:—

ஐங்சோலையாமாறனைய வதிமதத்தவனலுமிழும்
பைங்கண்ணவேழுறுப்பும் படிதோயும்பான்மையன
வெங்கதவெண்டிசைக்கரியோ டமர்விளைப்பதெனப்படுதந்
தங்குமணியோடையன தடக்கைமதத்தனிக்கரிகள்.

நிழல்செய்ததழைசெவிய நிலந்தோயுநீள்கரத்த
சுழல்விழியசூற்பேயுந் தொகைப்பருந்தும்பின்செல்ல
வழல்விழியவழிமதத்த வயின்மருப்பினடல்வீரக்
கழறுமிக்கும்புகர்முகத்த கடகரிகள்பலகோடி.

இயல்வனத்திற்பிறந்தபே ரிளங்கிளியினிறத்தனவு
மயினிறத்தவளைநிறத்த மணிநிறத்தமரைநிறத்த
பயினிறத்தகடலகத்தும் பலதேசத்தும்பிறந்த
குயினிறத்தகொய்யுளைய குரகதங்கள்பலகோடி.

கோகனகமுகையனைய கொழுங்கனகக்கொடிஞ்சியன
பாகன்கமகிழவயப் பரிபூணும்பான்மையன
நாகவுலகங்குழைய நடந்தோடுந்தடங்கால
மாகனகநெடுந்துவச மணித்தேர்கள்பலகோடி.

உருத்துநெடுங்கதிர்வேல்கொண் டிரங்கிழிப்பதல்லாது
மருத்துவரினுங்கூடி வெங்காட்டிமீளாதார்
எதிர்த்துவருங்கழல்வீர ரிரியநிலைக்கிரியெறியும்
மருத்துவினைநிகராகும் வயவீரர்கணக்கில்லார்.

இவ்வளவு பெரும்படையோடுசென்ற இலக்குமணர் அக்காருகபததேசத்துள்ளவிடங்களைத்தம்வசப்படுத்தி, அங்குஅங்கதீயாஎன்னும்ரமணீயமான நகரியொன்றுண்டாக்கினார். அஃதெப்படியெனில்:—

நெடுந்தெருக்களுநியமமு நீளுறுமறுகுந்
தடங்கொள்கூலமுஞ் சந்தியுஞ்சதுக்கமுமணியி
னிடுஞ்சுடர்த்தொடு மிஞ்சியுமஞ்சுவந் துறங்குந்
தொடுங்கிடங்குமேற் சூளிகைவாயிலின்றொகையும்.

கருதிநீடிய கருமணிக்கூலங்களொருபாற்
பரிகணீடிய பருமணிப்பந்திகளொருபால்
விரிநெடுங்கொடித் தோரணிவீதிகளொருபா
லுருவின்மேகத்தி லுயர்மணித்தோரணமொருபால்.

பனகர்வாழ்திரு நகரமோபருமணியதனாற்
றினகராதிபர்நகரமோ சித்தர்கணகரோ
வனகவிந்திரநகரமோ வளகையோயாதோ
கனகமானகர்க்குவமையோ கணிப்பதற்கரிதால்.

ககனமங்கையர்கழுத்தெனக் கமுகினநெருங்கு
வகைநெடும்புனல் வளநகர்வருபவர்க்கெல்லா
நகலருஞ்செழு நவமணியொளியினான்மயங்கிப்
பகலுமேனையவிரவுமென் றொருபரிசிலதால்.

படைத்தமாமுனி பாரெலாமொருவழிப்படுத்தி
யடைத்தசொக்குமிவ் வணிநகரோவியத் தணிந்த
மடைக்கண்மங்கையர் முகமெனமதியின்மேன் மறுவைத்
துடைப்பபோன்றன துகிலணிதேர்மணித் துவசம்.

மதுரமென்மொழி மடந்தையர்வடம்பரிந்திட்ட
கதிர்கொணித்திலப் பன்மணியெங்கணுங்கலங்கி
யுதிர்தலாலும்ப ரிழுக்கிவீழ்ந்தொழிகதிர்சிதறி
மதியுமீன்களுங் கிடந்தவாபோன்றனமறுகே.

இவ்வளவழகோடு நிருமித்த அங்கதீயாவென்னுநகரத்தில் இலக்குமணர், மூத்தவனாகிய அங்கதனையிருத்தி அரசியற்றச்செய்து மீண்டுஅயோத்தியை யடைந்து, ஸ்ரீராமபிரானை வணங்கித் தாம்போய் நடத்திவந்தகாரியங்களை விளம்பி மகிழ்வித்தனர்.

இப்பால் பரதாழ்வானனவர் இலக்குமணருடைய கனிஷ்டகுமாரனுக்குப் பக்கத்துணையாகி முன்புஸ்ரீராமரா லாக்கியாபித்துச் சிரேஷ்டகுமாரனோடும்போன படைபோக, மற்றப்பாதிப்படை தம்மைச்சூழ்ந்துவர வெளிப்பட்டார். அப்படைப் பெருக்கின் காட்சி யெப்படியிருந்த தென்றால்:-

பாழிவெண்கொடிப் பருமணிக்கொடிஞ்சியநெடுந்தே
ராழியானெரித் ததுவரைக்குலமெலா மடையப்
பூழியாயினபுரவியின் விலாழியிற் புகர்வெஞ்
சூழியானைமும்மதத்தினிற் றுகளடங்கினதால்.

கான்குலாவிய கனவரைநெரிதரக்கழனி
மீன்குலாவியதரைநெடுந் துகளெழவிரைதேர்
வான்குலாநதி சுவறிடவழங்குவெம் படையி
னன்கினோதையா னரவலவாயொலியடங் கினதால்.

இவ்வித பெரும்படையோடுசென்ற பரதர்அந்தக்காருகபதத்து மல்லபூமியென்னுமிடத்தில் சந்திரகாந்தா என்பதொரு மகாபுரிநிருமித்துச் சந்திரகேதுவை அரசாளவைத்து, ஆட்சிதிருந்தி நிலைபெறப்பார்த்து ஓராண்டுகழிந்தபின் அயோத்திக்கு மீண்டு ஸ்ரீராமபாதாரவிந்தங்களையே சேவித்துக்கொண்டிருந்தனர்.

காலகாத்தபடலம் — முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பதினெட்டாவது,

வைகுந்தப்படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமர் பரத லக்ஷ்மணர்களுடைய புத்திரர்களுக்குத் தாம் மகுடாபிஷேகஞ்செய்வித் திராச்சியாதிபத்தியமுந் தந்து தாமயோத்தியிலிருந் தரசியற்றுங்கால் ஆதியிற் சங்கற்பித்துக்கொண்ட

No. 98. ஸ்ரீராமர்பால்காலன்வந்து பேசுகையில்லக்குமணனை துருவாசர்சினந்துபோதல்.



இலக்குமணர்வைகுண்டமடையக்கண்டுவருந்திய ஸ்ரீராமனாதியர்முறைபாடு.



காரியமுடிவோடு பதினோராயிர மாண்டுங்கழிந்ததென்றுபிரமதேவனேவலால் காலதேவன்வந் தறிக்கைசெய்திருக்கையில், துருவாச ரிலக்குமணரைச்சினந் துள்ளேசென்று அன்ன பானாதிகளருந்திச் சென்றனராக:—உடனே இலக்குமணர் ஸ்ரீவைகுண்டத்திற் கெழுந்தருளக்கண்டு வருந்திய இரகுநந்தனர்பால் பரதாழ்வாரனாதியர் முறைபாடும், பின்னரப்பரதாழ்வான் குசலவர்க்குப் பட்டாபிஷேக மியற்றிக் கோசல நாடிரண்டிற்கு மரசாக்கிவைத்துச் சத்துருக்னருக்குத் தூதர்களாற் றங்கள் கருத்தினையறிவித்ததும், அதுகேட்ட இலக்ஷ்மணனுசர் தமது புத்திரரிருவர்க்குந் தமதிராச்சியத்தைப் பகுந்தளித்து அயோத்திக்கு வந்து ஸ்ரீராமபிரானைச் சரணமடைந்ததும், அக்கால் சுக்கிரீவமகாராஜன் விபீஷணாழ்வான் முதலிய சகலரும் ஸ்ரீராமபிரானாதியர்கொண்டிருக்குங் கருத்தினையுணர்ந்து உடனே அயோத்திக்குவந்து தங்களபிப்பிராயத்தை விண்ணப்பஞ்செய்ததும், அப்பகல் ஸ்ரீராமர் மகாபிரஸ்தானத்துக்குரிய சடங்குகளை நிறைவேற்றித் தமது சகோதரர் முதலிய பரிசனங்களோடு வேதமாதியயாவும் பின்றொடர்ந்துவரச் சரயுகட்டுஞ் சேர்ந்து சோதியிற்கலந்தருளி இலக்குமி சமேதராய் ஸ்ரீவைகுண்டமடைந்ததுஞ் சொல்லப் படுகின்றது.

ஸ்ரீராமர்பால் காலன்வந்து பிரமன்கருத்தை யறிவித்தல்.

கவி.

தென்றிசைக்கடவுளுந் தேவனேவலால், அன்றுதன்னுருவொழித் தயோத்திமாநகர்க்
குன்றுநின்றனையதோர் கோயில்வாயிலில், ஒன்றியமுனிவர னுருவங்கொண்டுளான்.

இப்படி ரகுநாயகர் தருமந்தழைக்க இராச்சியாதிபத்திய நடாத்திவருகையில் ஒருதினம் தக்ஷிணதிசைக் கதிபதியாகிய இயமதருமராஜன், சதுமுகப்பிரமதேவனது கட்டளையால் தனது சுயரூபத்தை மறைத்து ஒரு முனிவடிவங்கொண்டு, அயோத்திமாநகரை யடைந்து மகமேருபர்வதம்போ லுயர்ந்த அரண்மனைவாயிலில்வந்து இலட்சுமணரை விளித்து, யான் அதிபலமகாமுனிவரின் தூதன். ஒருபெரிய காரியநிமித்தம் வந்தேன். விரைவிலென்வரவை ஸ்ரீராமமூர்த்திக்கு அறிவிக்கவேண்டும் என்றான். அதைக்கேட்ட இலட்சுமணர் அங்ஙனமேசென்று விண்ணப்பஞ்செய்ய ஸ்ரீராமமூர்த்தி உள்ளேவநம்படி யுரைத்ததனால், அத்தவத்தோன் உள்சென்று யாவரினும் விசேஷமான ஆசிகூறினன்.

அப்போது சுவாமி அவர்க்கு முறைப்படிஉபசாரமியற்றித் தேவரீர் யாருடைய தூதராக எழுந்தருளியதோ அவர் பணிப்பை யருளிச்செய்யலாமென மொழிய, அவரும் — ஓ ரகுகுலோத்தமா! என்னைத் தூதனுப்பிய மாமுனிவரின் வாக்கியங்களைச் செவிகொள்ளத் திருவுள்ளமாயின், நாமிருவரேயன்றி மற்றியாரு மிருத்தல்கூடாது. இயாராயினு நம்முடைய சல்லாபத்தைக் கேட்டலும் இவ்விடத்துவந்தாலும், அவர் கடுந்தண்டனைக் குள்ளாகும்படி

கட்டளையிடவேண்டுமென்றார். அதுகேட்ட ஸ்ரீராமர் அங்கீகரித்துச் சவுமித்திரியை நோக்கி, அப்பா! இங்கு வேறுவாயிலோன் வேண்டாம். நீயே யிருக்கக்கடவை. யாங்களிருவரும் பேசுமிடத்து எவரும் வரவொண்ணாது. ஒட்டிக்கேட்கவு மொண்ணாது. அவ்வாறுசெய்தால் தண்டனைக்குப் பாத்திரமாவர். ஆதலின் நீநன்று காக்கவேண்டும். என்று ஆணையிட்டு ஏகாந்தத்திற்சென்று, இனிக்கட்டளையிடுகவென முனிவரைத் தூண்டினார். உடனே முனிவேடம்பூண்ட தேவனுஞ் சொல்லத்தொடங்கினான்.

சுவாமி! அடியேன் பிரமதேவராலே தேவரீர் சன்னிதிக்கு ஏவப்பட்டேன். உலகத்துள்ள வுயிர்களைக் காலமறிந்துண்ணுங் காலனாய அடியேன் தேவரீராலே படைக்கப்பட்டவன். என்னைச் சதுர்முகபகவான் விண்ணப்பஞ்செய்யச் சொல்லியதாவது. தேவரீர்பூர்வம்உலகங்களையெல்லா முள்ளடக்கிக்கொண்டு, பெரும்புறக்கடலிற் பள்ளிகொண்டு, உந்தியிற்பூத்த திவ்யமாகிய தாமரைப்பூவில் அடியேனை யுற்பவித்துப் படைப்புத்தொழிலை நடத்தும்படி கட்டளையிட்டருளினீர். அடியேனுந் தேவரீரிடத்துப் பாரத்தைவைத்து நியமனப்படி பிரசாபத்தியஞ் செலுத்திவருகின்றேன். மதுகைடவரென்கிற தைத்தியரிருவரை வதைத்து, அவர்களுடைய எலும்புகளாலும் - நிணங்களினாலும் - இப்பூமியை மலைகணெருங்கியதாகவும், புல்பூண்டுமுதலியன முளைக்கும்படியானதாகவுஞ் செய்தருளினீர். அதனாலே பூமிக்கு மேதினிஎன்கிற பெயருண்டாயிற்று. அடியேனுக்கு உண்டாயிருக்கிற சத்தியெல்லாம் தேவரீர் தந்ததே. இப்படியே யாவருக்கும், சத்திகற்பித்திருக்கிறீர் பின்பு தேவதைகளின் காப்புக்காக அதிதிதேவியினிடம் இந்திரனுக்குத் தம்பியாக உபேந்திரனென்னுந் திருநாமத்தோடவதரித்து, அவர்களுக்கு விபத்துக்கள் நேர்ந்தபோதெல்லாம் சகாயமாகநின்றருளினீர்.

பின்பு இராவணாதியரால் உலகமெல்லா நடுக்கமுற்றிருக்கையில், அவர்களுடைய சங்காரத்திற்காகத் திருவுளம்பொருந்தி இம்மானிஷியவவதாரஞ் செய்தருளினீர். சங்கற்பித்தகாரிய நிறைவேற்றியாயிற்று. சங்கேதப்படி பதினோராயிரமாண்டுங்கழிந்தன. ஆதலால் இனித்தன் [illegible]சோதிக்கு எழுந்தருளலாம். சகலபூதங்களையு மிரக்ஷித்தருளவேண்டும். தே[illegible] எழுந்தருள்வதை எதிர்பார்த்துக்கொண்டு அங்கங்கே விண்ணவர் காத்திருக்கின்றனர். அவர்களை அனுக்கிரகிக்கவேண்டும். அடியேன் இங்ஙனஞ்[illegible] நினைப்பூட்டலேயல்லது வேறன்று. இன்னும் பூலோகத்திலேயே எழுந்தருளியிருக்கத் திருவுள்ளமாயின் அவ்வாறேசெய்யலாமென்று பிரமதேவன்சொல்லியதாகக் காலமூர்த்தி செப்பியதைச் செவிகொண்ட ஸ்ரீபகவான் இந்திரநீலபருவத சிகரத்தில் நிலவுபட்டதென்னச்சிரித்து அருளிச்செய்யலாயினர்.

ஓ தென்றிசைத்தேவனே! நாம் எண்ணிக்கொண்டிருப்பதையே பிதாமகனும் உரைத்தார். நீவருவாயென்றுநினைத்தேன் அந்தப்படியே வந்தாய், நமக்கு மிகவுஞ்சந்தோஷமாயிற்று. உனக்குநன்மையுண்டாகக்கடவது. யாம் எமது பரமபதத்தை யடைவதற்குச் சித்தமாயிருக்கிறோ மென்றனர்.

தூர்வாசமகாமுனிவர் அரண்மனைவாயிலடைந் தங்குள்ள விலக்ஷ்மணரைச் சினந்துள்ளேசென்று அன்னமருந்தித் தமதாச்சிரமமடைதல்.

கவி.

இலங்குமணிப்பசுந்தண்டா ரிராகவன்றனெழுபரித்தேர்
விலங்கிளஞ்செங்கனகமணி மாளிகையின்மதில்வாயில்
அலங்கியசெங்கனல்வேள்வி யத்திரிதன் றிருப்புதல்வன்
துலங்கியதூற்றருவாச னெனுமுனிவன் றோன்றினன்.

இப்படி இயமதருமராஜனாகிய முனிவரும் ஸ்ரீராமபிரானும் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், நித்தியாக்கினிசெய்யு மகாதபசியாகிய அத்திரிமகாமுனிவரின் புத்திரராகிய தூர்வாசமகாமுனிவர், விளங்குகின்ற நவமணியாரங்களும் மலர்மாலையுந்தரித்த மார்பினையுடைய அவ்விராமபிரானது சூரியன்வலமாகப் போகும்படி உயர்ந்த இரத்தினமாளிகையைச் சூழ்ந்த மதிலினது வாயிலின்கண் வந்து, அங்குள்ள இலக்ஷ்மணப்பெருமானை நோக்கி, அப்பா இலக்ஷ்மணா! துரிதமாயென்னை ஸ்ரீராமரிடம் அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்றனர். அதற்கு இளையவர் கைகூப்பிக்கொண்டு, சுவாமி! காரியம்யாது? அடியேனிருக்கின்றேன் அதனைச்சாதிப்பதற்கென்றுகூறினர். அதுசெவிப்பட்டதும் அம்முனிக்குக் கோபாக்கினி பொங்கி, இந்தக்ஷணத்திலேயே இராமனுக்கு நான்வந்ததைத் தெரிவிக்கவேண்டும். அப்படிச் செய்யாமற்போனால் உடனே இந்நகரத்தோடு நீங்களும், உங்கள் சந்ததியும், அழிந்துபோம்படி சபிப்பேன். நான்கோபத்தை அடைக்ககில்லேன் எனவே இலக்குமணர் தமக்குத்தாமே சற்றுலோசித்து, என்னொருவனுக்குக் கேடுவந்தாலும் வரட்டும். என்னிமித்தம் மற்றவர்க்கு வராதிருந்தாற்போதுமென்றுநிச்சயித்து சுவாமிசன்னிதியில் இவர்வரவைத் தெரிவித்தார். அவரும் காலனையனுப்பிவிட்டுக் கோபமு[illegible]ரைக்கண்டு வந்தனஞ்செய்து, சுவாமி! அடியேற்கு யாதுபணிக்கின்[illegible]னவினவினர். அதற்கவ்வத்திரிபுத்திரர் - ஓ தசரதநந்தனா! யான் ஆயிரவருஷமளவுந் தவஞ்செய்து முடித்தேன். இப்போது பெரும்பசியால் வருந்துகின்றேனாதலால் அன்னந் தரவேண்டுமென்றனர். அதற்கு ரகுநாயகர் புன்னகைகொண்டு அவர் விரும்பியபடி போசனமளிக்க, உடனே புசித்துத் திருப்தியடைந்து ஆசிகூறித் தமதாச்சிரமத்திற்குச் சென்றனர்.

இலக்ஷ்மணர் ஸ்ரீராமரைப்பிரிந்து சரயுநதியில் மூழ்கி யோர்கத்திருந்து வைகுண்ட மடைதல்.

கவி.

இன்னகரத்துள்ளோ ரினைந்தினைந்தேங்கிமாழ்க
நன்னகர்வாயினீங்கி நவமணிகொழித்துமுத்தும்

பொன்னொடுவரன்றியெங்கும் புனல்பரந்துலகம்போற்றும்
தன்னிகர்நதியொன்றில்லாச் சரயுப்பேராறுசேர்ந்தான்.

இப்பால் ராகவபிரான் காலதேவன்பேச்சை நினைத்து சற்றுத் துயர முற்றவராகி, ஏதும்பேச வாயெழாமற் றலைகுனிந்து நின்றார். அதைக்கண்டு இளையபெருமாள் தமையனுரைக்கிட்டி, சுவாமி! சிந்திப்பதேன்? காலகதியைக் கடக்கலாகுமோ? அடியேனைத்துறந்துபிரதிக்கினையைக்காத்தருளுகவெனவிஞ்ஞாபனஞ்செய்ய, சுவாமியானவர்நகரத்தினரோடுமந்திரிமாரையும்வசிஷ்டரையும்அழைப்பித்துநடந்ததைத்தெரிவித்தார். அதற்குமயித்திராவருணி ஓ ஸ்ரீராமபிரபுவே! இக்காரியமெல்லா முன்பே அறியப்பட்டதுதான். தம்பியைத்துறந்து பிரதிக்கினையை நிறைவேற்றித் தருமத்தைக்காத்தருளவேண்டும், தருமமழியப் பிரபஞ்சமே யழியுமன்றோ என்றுரைத்தனர். அதைத்திருச்செவிசார்த்திய பெருமாள் தம்பியைநோக்கி, அப்பா இலட்சுமணா! தக்கவர்க்குக் கைவிடுவதும் வகிப்பதும், ஒக்குமாதலின், உன்னைக் கைவிட்டேனென்றார். அக்காலவ்விளையவர் கண்கள் நீராற்கலுழ்ந்து தந்திருமாளிகை செல்லாமல் நேராகப் புறப்பட்டார். அப்போது பட்டணத்து ஜனங்களும் ஸ்ரீராமனும் பரதரும், புத்திரர்களு மாதர்களும் மகாதுயரப்பட்டு வருந்தி வருந்தி ஏங்க, பட்டணத்தினது கோட்டை வாயிலைக் கடந்து, நவமணிகளைக் கொழித்துச் சுவர்னங்களை வாரிக்கொண்டு உலகமெங்கும் போற்றும்படியாகச் செல்கின்ற சரயுநதிசேர்ந்து அந்நதிநீரில் ஸ்நானஞ்செய்து பிராணாயாமத்தால் சுவாசமடங்கிநின்றார் அச்சமயத்தில்

கவி.

மீனொதவேலை புடைசூழ்வியனுலகில், வனோர்புலம்ப விகல்வேலிலக்குவனும்
ஊனோடவற்றுருலையாவுடம்பெய்தி,வானோர்புடைசூழ வைகுண்டம்போய்ப்புக்கான்.

உலகிலுள்ள சர்வபிரஜைகளும்வருந்தினர் சகலதேவதைகளும் பரிவாரத்தோடு அங்கேவந்து பூமழைபொழிந்தனர். உடனேயவ்விலக்ஷ்மணர் சாக்ஷாத் விஷ்ணுவின் அம்சமாகிய ஆதிசேஷராய் விமானத்தி லெழுந்தருளி வைகுண்டஞ் சேர்ந்தார். அப்போது ஸ்ரீராமமூர்த்தியி னிருப்பும், நகரத்தினர் செயலும், எவ்வாறிருந்தனவெனில்:—

கவி.

தேன்பிரியாதகானிற் சிலைகொடு காத்தபின்னே
னூன்பிரிகின்றகாலத் துயிரினையொத்தான் முன்னோன்
கான்பிரிகல்லாவோதிக் கைகயன் மடந்தைகூறத்
தான்பிரிகின்றநாளிற் றந்தைதன் றகையனானன்.

என்றபடி தம்பியைப்பிரிந்து வருந்தினார்.

நம்புநான் மறையோர்க்கெல்லா நல்கியேகடந்தான்கண்டா
லும்பரார்சொன்னவார்த்தை யொழியுமோ வுலகத்தென்பார்
தம்பியாரின்றதுள்ளங் கழிந்ததோர் காலமென்பார்
தம்பியாரின்றியாவி தரிக்குமோதமையனென்பார்.

வலத்தியல் மன்னர்க்கெல்லாம் வரங்கொடுத்தாவிநீத்தல்
குலத்தியல்பன்றே வென்பார் கொள்ளுமோகூற்றமென்பா
ரலக்கணுற்றிடாதுவாழ்வோ டமையுமோ வயோத்தியென்பா
ரிலக்குவனுவிநீங்கி லிருக்குமோ யாவுமென்பார்.

இவ்வாறு பட்டணத்துப் பிரஜைகளெல்லாம் புலம்பத் தம்பியைத்துறந்த ஸ்ரீரகுநந்தனர் உடனே மனதிற் றுயரந்தாங்கினவராகி, உள்ளம்பதைபதைத்து, மேனியெல்லாம்வேர்த்து மெலிவுற்று, நெடுங்காலமாக என்னிடமிருந்து காத்த நீ இப்போது கைவிட்டாயோவென்று புலம்புவதாயினர்.

கவி.

விம்பக்கவிகை விறல்மேகநாதனையோ
ரம்பிற்றடிந்தா யருவினையேனுருயிரே
வம்புற்றதாரான் மகனேமதியிலியென்
றம்பித்துணையே தரியேன்றரியேனே.

ஆற்றுவனேவேந்தே யவயம்புகுந்தானைக்
கூற்றுவனேவந்து குறுகாவகைகாத்து
மாற்றவனேர்விட்ட வடிவேல்வரைமார்பி
லேற்றவனேயெம்பி யிலக்குவனேயென்னுயிரே.

(என்றழும்போது)

வண்ணவரையழுத மானுகமுமழுத
விண்ணுந்திசையும் வியன்ஞாலமுமழுத
வெண்ணரிதினைவுற் றினைந்தினைந்திங்ஙனே
யண்ணலழுதா னழாததுவொன்றில்லையால்.

இப்படி சராசரங்களனைத்து மழும்படியாகப் புலம்பிய ஸ்ரீரகுநந்தனர் உடனே மந்திரிகள் முதலானவர்களை யழைப்பித்து, ஓ மித்திரர்களே ! இனிப்பரதனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்துவிட்டு நான் தம்பி சென்றவழி செல்கின்றேன். சௌமித்திரியைப்பிரிந்திருக்கமாட்டேனென்றனர். அதுகேட்ட கைகேசிசுதரு மற்றுமிருந்தோரும் அப்படியே நிலத்தில்விழ்ந்துமூர்ச்சித்துக் கிடந்தனர். பின்னர்பரதர் எழுந்திருந்து கண்ணீர்சிந்தநின்று இவ்வாறு சொல்லுகின்றார்.

கவி.

காதனென்னை நளிர்முடிசூடென
வேதமுள்ளறக் கூறியதெம்முடைத்
தாதைதன்னைத் தடக்கைகயன்பெற்ற
கோதைகொண்ட வரத்திற்கொடியதால்.

அண்ணனீபுரந் தாள்கின்றவையக
மெண்ணியென்வயி னீந்ததுதெய்வதம்
நண்ணிநாகஞ் சுமக்குமிந்நானில
மண்ணில்நாக்குஞ்சுமக்கெனில் மாண்டதால்.

இம்மிசெந்நெ லினுக்கிணையாகுமே
லம்மிமற்றை யருவரையொக்குமேல்
மின்மினிச்சுடர் வெங்கதிரொக்குமே
லும்மிலொத்துல காளுதலுண்மையால்.

என்றுகூறி ஸ்ரீராமபிரானைத் தொழுதெழுந்து, சுவாமி! அரசாட்சியை யான் சிறிதும் ஏற்கமாட்டேன். இது தேவரீர் திருவடியாணை. தேவரீருடனிருத்தலே மேலான சுவர்க்கமாதலின், அங்ஙனமிருக்க அனுக்கிரகிக்கவேண்டும். இந்தத் தக்ஷிணகோசலத்திற்குக் குசனையும், உத்தரகோசலத்திற்கு இலவனையும், அரசாளும்படி பட்டாபிஷேகஞ் செய்தருளுக. சத்துருக்கனனிடத்துக்குத் தூதரையனுப்பி அழைப்பிக்க வேண்டும். என்றிப்படி பரதாழ்வான் சொல்வதைக் கேட்டும் — தரையில் விழுந்துகிடக்கிற பிரஜைகளைப் பார்த்தும் - வசிஷ்டமாமுனிவர் ஸ்ரீராமரைநோக்கி, ஓ இராமபத்திரபகவானே! பிரகிருதிகள் கிடக்குங்கிடையைக்கடாக்ஷித்தும், பரதன்விண்ணப்பத்தை யங்கீகரித்தும் கிருபைகூர்ந்து, அவர்களுடைய மனோரதத்தைப் பூரிப்பதேதகுதி. அவர்கள் மனமுறியச்செய்தல் தகுதியன்று எனவெடுத்துரைத்தனர். அதனாலே சுவாமியிரங்கி யாவரையுமெழுப்பி, என்கிடக்கின்றீர்கள்? இயான் செய்யத்தக்கது யாது? எனத் திருவாய்மலர்ந்தருளவும் அவர்கள் விண்ணப்பஞ் செய்யலாயினர். ஓ ஆண்டவனே! அடியோங்களிடத்தில் அனுக்கிரகமும் அன்பு முளவாயின் அடியோங்களையுங் கூட அழைத்துக்கொண்டு போகவேண்டும். தேவரீர் கானகத்தேகினும், கடலிற்புகினும், வேறுலகஞ் செல்லினும், அடியேங்களும் அங்குவந்திருக்கும்படி திருவுள்ளம் பற்றவேண்டும். தேவரீரில்லாவிடம் எமக்குநரகமாகும், ஆதலின் எங்கெழுந்தருளினாலும் யாமியாவரும் குடும்பத்தோடு அங்கு பின்செல்லக் காத்திருக்கின்றோம். இதுதான் எங்களுடைய மனோரதம். என்று அன்போடும் வணக்கத்தோடும் பிரார்த்திக்க, இராமபிரான் அவர்களுடைய அன்பினுறுதிப்பாட்டைக் கண்டு அப்படியே யாகட்டுமென்று சாதித்தருளினர்.

கோசலதேசத்தில்ஸ்ரீராமர்பிள்ளைகட்கும்,மதுரையில் சத்துருக்னர்பிள்ளைகட்கும் மகுடாபிஷேகமும், அச்சத்துருக்னரும் சுக்கிரீவாதியரும் அயோத்திக்கு வருகையும், அவ்வவர்கட்கு ஸ்ரீராமரது அருளிப்பாடும்.

கவி

நாடிமாமறை கூறியநாளினில், ஆடகத்த வரியணைமீதரி
ஓடையானைய ரொண்கரஞ்சென்னிமேல், சூடமைந்தரை மாமுடிசூட்டினன்.

இப்படி திருவாக்கருளிய ஸ்ரீராமசுவாமியானவர், வேதமுறைப்படி நன்னாளில் இரத்தினமிழைத்த ஸ்வர்ன சிங்காதனத்திலேற்றி மத்தகஜங்களையு

No 99. ஸ்ரீராமர் பிள்ளைகட்கு பரதர் மகுடாபிஷேகஞ்செய்தல்.



சத்ருகனர்தமது பிள்ளைகட்கு மகுடாபிஷேகஞ்செய்தல்.



உத்தரகாண்டம். சோர்க்காரோகணப்படலம்.

தொன்னகர்பாழ்படத் துணைந்துசூழ்தர
முன்னவர்வாயில்விட் டகன்றுபோயினர்.

மறுநாள் விடிந்தவுடன் ஸ்ரீராமச்சந்திரபகவான் தாமரைமலரையொத்த திருக்கண்களும் - பூரணச்சந்திரனையொத்தமுகமும் — பவளத்துண்டம்போன்ற அதரமும் - வெற்றிமாலை சூடிய திருத்தோள்களும் - வரையெனப் பரந்தெழுந்த மார்புமுடையவராய்ச் சூரியனைப்போல்விளங்கி, புரோகிதரால் மகாபிரஸ்தானத்துக்குரிய சடங்குகள் செய்யப்பெற்று, மெல்லிய பீதாம்பரத்தை இடையில் உடுத்தி, விரலில் தருப்பைப் பவித்திரம் விளங்கப் பிரமமந்திரம் ஆவர்த்திசெய்துகொண்டு, யாவரோடும் ஒன்றும் பேசாமல் பாதரக்ஷையின்றியே அரண்மனைவிட்டுப் புறப்பட்டெழுந்தருளினர். அக்காலையில் அங்குள்ளவர் சுவாமியைப் பிரிவதற்கிஷ்டமில்லாமல் அவரதுதிருவடியின்மேல் வைத்த ஆசையினால் அவ்வயோத்தியாபுரியில் ஒருவருமில்லாது யாவரும் நெருங்கிச் சூழ்ந்து கோட்டைவாயிலைக் கடந்து தொடர்ந்துவர தமது வலப்பக்கத்தில் திருமகளும், இடப்பக்கத்தில் நிலமகளும் வரச் சென்றனர்.

அன்றியும், சங்கற்பம் - பராக்கிரமம் - கார்முகமுதலிய படைகளும் புருஷரூபங்கொண்டு கூடச்சென்றன. மறைகள் - காயத்திரிமுதலிய மந்திரங்கள் மறையவர் வடிவத்தோடு அவரைத் தொடர்ந்துபோயின. மகாபிரமரிஷிகளும்,வேதியர் வேந்தர் முதலியோர்களு முகமலர்ந்துடனேகினர். அந்தப்புரத்திருந்த மடவார்களும், பாலகரும், ஊழியரும், ஆமாத்தியரும்,சேனைத்தலைவராதியரும்;தத்தம் பரிவாரங்களோடு குதுகலித்து அடுத்துப்படர்ந்தனர். பரதசத்துருக்கனர்களும் தந்த மக்கினிஹோத்திரத்தைமுற்கொண்டு தமயனார்பின்போயினர். வானரர்களும் ராட்சசர்களும் சேரக்கூடினர். இவ்வாறு ஸ்ரீராமபிரானடியார்க ளனைவரும் திறந்திருக்கும் தேவநகர்புக மிகமகிழ்ந்து கலியாணநடையாக நடந்தனர். சுவாமி யெழுந்தருளுவதைப் பார்க்க வந்தவர்களும் அப்படியே பின்றொடர்ந்து சென்றனர். இவ்வாறு போகின்றவர்களுடன் இதைப் பார்த்திருந்த விலங்கு பறவை முதலியனவும் களித்தே கூடவரத்தொடர்ந்தன. இவையெல்லா மோரற்புதமாயிருந்தது.

இப்படிப் பலரும்புடைசூழ நடந்த ஸ்ரீபகவானனவர் சுழல்பெற்றுவேகமுள்ளதாய் உச்சாகத்தோடு குடதிசைநோக்கிச் செல்லாநின்ற சரயுநதியைக் கண்ணுற்று, அதன்கரையி னின்றருளினர். அப்போது பிரமதேவர் மற்றைத்தேவர் கூட்டங்களோடும், திவ்விய முனிவர் குழாத்தோடும், அங்குவந்தனர். அவர்களுடையதேஜஸும் விமானங்களினொளியும் கலந்து ஆகாயமெல்லாம் அனேககோடி சூரியருதித்தாற்போற் பிரகாசித்தது. நல்லவாசனையோடு தென்றல் வீசியது. புஷ்பவருஷம் வருஷித்தது. திவ்வியவாத்தியங்கள் முழங்கின. இப்படி மகோத்ஸவமாயிருக்கையில் பிரமதேவர் பகவானைநோக்கி,

ஸ்ரீதிருமாலே! பல்லாண்டு: பல்லாண்டு: ஸ்ரீமாதவனே பல்லாண்டு: பல்லாண்டு: அடியேம் பாக்கியத்தா லிப்படிகிடைத்தது. தம்பிமாரோடுவைகுண்டத்திற்கெழுந்தருளித் தமது திருமேனியிற்புகுக. அல்லதுஎந்தத்திருமேனியிற் றிருவுள்ளமோ அதிற்புகுக. அல்லது அப்பரமபத நாட்டிற்கு நேரேயெழுந்தருளத் திருவுளமிருக்கின் அப்படியே யெழுந்தருளுக. எப்புவனத்திற்கும் புகுமிடமானவரும், புகுவிப்பவரும், தேவரீரேயன்றோ? தேவரீரோடென்றும்பிரியாதுறைகின்ற திருமகளன்றி மற்றையாருந் தேவரீரை யறியமாட்டார்கள். தேவரீரே யாவையும் அநுக்கிரகிக்கவல்லவரும், அழியாதவருமாகிய மகாபுருடனென்றுதுதித்து விண்ணப்பஞ்செய்தார்.

கவி.

துன்னியவானவர் துயரநீக்குவான்
மன்னியவுலகினிற் பிறந்தமாயையைத்
தன்னிகரிலாதவச் சரயுநீத்துத்தன்
பின்னவர்தம்முடன் பெயர்த்துமேயினன்.

தேவர்களின் இரக்ஷணார்த்த நிமித்தமாகப் பூமியிற் பிறந்தமாயாவுடலை சரயுநதியிற் கழித்து, ஸ்ரீராமமூர்த்தியானவர் தம்பிமாராகிய பரதசத்துருக்னரோடு தமது சோதியிற்கலந்தருளினார். தேவதைகளும் ரிஷிகளுங்கூடி அன்புபெருக ஆராதித்தனர். அக்கால் சுவாமி பிரமனைநோக்கி, என்னிடத்திடையறாத அன்பினராய்ப் பின்பற்றிய யாவர்க்கும் புகுமுலகந்தருகவெனக் கட்டளையிட, அவர்பகவானுடைய திருவுள்ளத்தைத் தெரிந்துசாந்தானிகமென்னுமிடத்தைப்புகும்படி செய்தனர். உடனேபிரமலோகத்திற்கு மேற்பட்டதாய்ப் பரமபதம்போலவே மீண்டும் வருதலில்லாத மேன்பாடுள்ள சாந்தானிகபதபோகத்தையாவரும்பெற்றுமகிழ்ந்தனர். அப்போது பதுமயோனி, இன்னும் எவராகிலும்ஸ்ரீராமமூர்த்தியின் பாதாரவிந்தத்திலன்புள்ளவராயின் அவரும் இவ்வுலகஞ்சேர்ந்து பரமபத மடைவீர்களென்றுரைத்தருளினார். சுக்கிரீவன் முதலிய வானரவீரர்களு மற்றோரும், தாந்தாந்தோன்றிய தேவர்களிற் கலந்தனர். இங்ஙனமன்பரெல்லாம் கோப்பிரதாரமென்கிற சரயுக்கட்டத்தில் மூழ்கித் தத்தமுடம்புகளை யொழித்துத் தேவவிமானத்தின்மேலேறி உத்தமபதமடைந்தனர். அக்காலத்தில் சரயுநதி தீர்த்தந்தெளித்த ஸ்தாவரசங்கமமாகிய சராசரங்கள் யாவும் பரமபத மடைந்தன.

கவி.

ஆழியான்மகிழ்ந்துபூவி னயன்மறைகொண்டுவாழ்த்தச்
சூழியானையின்மீதேறி யிந்திரன்றுதிசெய்தேத்தப்
பூழிவாழ்மேனியானும் புகழ்ந்திடக்கணங்கள்போற்ற
வாழிவானவர்கள்கூற மருவிவைகுந்தஞ்சேர்ந்தான்.

இவ்வண்ணம் ஸ்ரீராமமூர்த்தியானவர், பிரமதேவர் நாலுவேதங்களாலும் துதிசெய்ய, தேவேந்திரன் ஏத்திப்போற்ற, சிவபிரானும்புகழ, தேவகணங்கள்போற்றி வாழ்த்துகூற, வைகுந்தமாகிய தமது பரமபதநாட்டையடைந்தனர். சுவாமி ஆதிநாராயணராகியும்- பரதசத்துருக்கனர் சங்குசக்கரங்களாகியும்-நித்தியசூரிகளோடுஇலட்சுமிதேவிசமேதராய் இலக்ஷுமணராகிய சேஷசயனத்திற் கண்வளர ஸ்ரீவைகுண்டத்திற் கெழுந்தருளினர். இதையெல்லாங்கண்டு பிதாமகன்முதலான வானுலகத்தோர் ஆனந்தக்கண்ணீர் அரும்பப்பெற்று, ஸ்ரீவைகுண்டபதியைப் பணிந்து துதித்துக்கொண்டே தத்தமுலகமுற்றனர். அன்றேமுடு திருவயோத்திநெடுங்காலம்பாழாகவிருந்து பின்பு இடபனென்னுமரசன்காலந்தொட்டு மறுபடி வளமானநகரமாயிற்று.

ஸ்ரீமத்ராமாயணங் கேட்போர் அடையும் பயன்.

கவி.

இணையநற்காதைமுற்று மெழுதினோர்வியந்தோர்கற்றோர்
அணையதுதன்னைச்சொல்வோர்க் கரும்பொருள்கொடுத்துக்கேட்போர்
கணைகடற்புடவிமீதே காவலர்க்கரசாய்வாழ்ந்து
வினையமதறுத்துமேலை விண்ணவன்பதத்துச்சேர்வார்.

இவ்வாறு ஸ்ரீமந்நாராயணமூர்த்தி உலோகாநுக்கிரக நிமித்தமாக ஸ்ரீராமாவதாரஞ்செய்து நடத்திய திருவிளையாட்டை யமைத்த புண்ணிய சரிதமாயும், வேதத்தோ டொத்ததாயு மிருக்கின்ற ஸ்ரீமத் ராமாயணவசனகாவியமென்னும் இந்தப் பிரபந்தத்தை மகாபயபத்தியோடு எழுதினவர்கள்-அதிசயித்தவர்கள் அன்புடன்-படித்தவர்கள்-படிப்பவர்க்குப் பொருள்கொடுத்து அதைக்கேட்டவர்கள்-சமுத்திரஞ்சூழ்ந்த உலகத்தில் அரசர்க்கரசராய் வாழ்ந்து பாவங்களெல்லாம் நீங்கி ஸ்ரீபரமபதநாட்டை யடைந்து நித்தியராய் வாழ்வார்கள்.

வாழ்த்து.

கலைமறைமுனிவரோங்க காரிகையார்தங்கற்பு
நிலைபெறமன்னர்செங்கோ னீணிலந்தன்னில்வாழ்க
அலைகடலிலங்கைமூதூ ரரக்கர்வேரறுத்தவைவேற்
சிலைதொடுவில்லிகாதைச் செந்தமிழ்சிறக்கவன்றே.

வைகுந்தப்படலம் - முற்றிற்று,

உத்தரகாண்டம் சம்பூரணம்.

ஸ்ரீமத் ராமாயண வசனம்.

முற்றுப்பெற்றது

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

பிழைதிருத்தம்.

உயுத்தகாண்டம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
16	30	நுவல்வதாயினான்	நுவல்வதாயினேன்
44	4	பராதனர்தாம்	புராதனர்தாம்
53	5	கையிள்ளுள	கையிலுள்ள
64	15	மெல்லென	ஞெல்லென
79	9	பத்சவயவத்தாமரைகளுந்	பத்தவயவங்களுந்
85	6	தார்கெழுதன்மையி	தார்கெழுதானையி
101	19	வற்றுறை	யவற்றுறை
103	19	பருகாந்தார	பிருகாந்தார
,,	25	பிருகாந்தர	பிருகாந்தார
104	29	பொருளொன்று	பொருளொன்றும்
109	8	எவையும் யம்மலையிலு	எவையும் அம்மலையிலு
114	15	லிராவணநியமித்த	லிராவணன்நியமித்த
116	31	யிறுத்தார்	யிறுத்தான்
129	4	சொல்லுஞ	சொல்லுகி
131	18	உக்கிரமமாக	உக்கிரமாக
,,	20	சுவேலாசனத்	சுவேலாசலத்
133	8	நாயகப்பதத்துக்குச்சமானமாகிய	நாயகமணியைநடுவிலழுத்திய
137	15	தோரணத்தின்மிசை	தோரணத்தின்மணி
138	26	பூலோக	பூலோகத்
148	18	சோந்தோம்	சேர்ந்தோம்
,,	22	விட்டானே	விட்டேனே
,,	30	பைம்புண்	பைம்பூண்
150	8	சார்த்தூலமென்னு	சார்த்தூலனென்னு
,,	46	கூறலுற்றா	கூறலுற்றான்
,,	38	இவை	இவை
,,	40	தரேர்க்காவிலே	தேர்க்காவிலே
177	2	உயுத்தசந்நாசனாக	உயுத்தசந்நாகனாக
217	2	சொல்லுகிறதினால்	சொல்லுகிறதினாலு
210	31	நாதனாகிய	நாதனாய்
,,	32	தரப்பெற்றவன்	தரப்பெற்றவர்
240	12	ககைக்கு	கைக்கு
242	2	யத்தஞ்செய்தல்	யுத்தஞ்செய்தல்
243	21	தூப்தீத	தூபதீப
251	36	நித்திதிரை	நித்திரை
254	16	கெதிர்ப்பட்ட	கெதிர்ப்பட்ட
255	8	வாளரயுதத்தினால்	வாளாயுதத்தினால்
,,	34	மாத்ய்தல்	மாய்த்தல்
263	24	பழியா	பகழியா

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
266	35	தொலைந்து	தொலைத்து
,,	36	மொழித்து	மொழிந்து
272	37	என்பந்துக்களுடனே	உன்பந்துக்களுடனே
,,	38	உன்னுடைய	என்னுடைய
275	15	யனையா	யனையான்
283	29	மின்ன	மென்ன
301	32	ஓங்கிவளர்	ஓங்கிவளர்
315	12	மகாசத்திற்	மாகாசத்திற்
320	19	கர்ச்சனை	கர்ச்சனை
820	35	வீரர்க்ள	வீரர்கள்
327	14	சேனையிம்மிற்	சேனைதம்மிற்
,,	28	கரையில்	சரையில்
330	3	காயா	அதிகாயா
343	18	கிமர	நிமிர
346	29	இந்திரசித்திவினுடைய	இந்திரசித்துவினுடைய
357	29	வழியிற்	வழியிற்றங்கா
,,	37	முதலாகி	முதலாகிய
363	18	போல்	போல
378	8	மழையின்	மழையென்
415	23	ஒருவிர்	ஒருவர்
418	19	தமதுத்	தமது
456	17	குணத்தைம்	குணத்தையும்
,,	30	வாழவடைந்தன	வாழ்வடைந்தன
458	31	தேவர்கெளல்லாம்	தேவர்களெல்லாம்
460	33	நாமுப்போய்	நாமும்போய்
469	13	மூலகினின்றவ	மூலகினின்றில
470	10	சொய்ய	செய்ய
472	37	நயமாயப்	நயமாய்ப்
,,	36	பரவதத்துடனே	பர்வதத்துடனே
483	38	றுட்டாரென்று	விட்டாரென்று
497	24	அந்தமார்க்கத்தில்	அந்தரமார்க்கத்தில்
510	4	சாச்ஜொலியமாப்	சாச்ஜொலியமாய்ப்
560	32	அடைத்துக்கொண்டுவர	அழைத்துக்கொண்டுவர
575	37	துண்டுதுண்டாக்கி	துண்டுதுண்டாகி
584	4	கண்டத்தயையுடைய	கண்டத்தையுடைய
,,	33	சஞ்சீவிமலையை	சஞ்சீவிமருந்தை
504	13	உட்ல்களில்	உடல்களில்
605	3	இரத்தகங்கணங்களை	இரத்நகங்கணக்களை
611	28	ஒட்டிக்கொண்டு	ஒட்டிக்கொண்டு
612	14	அந்தரத்திற்	அந்தரதத்திற்
617	35	பெற்றேள்	பொற்றேள்
621	15	மிருதியும்	மிருதியும்
623	4	திரிந்தின	திரிந்தன
632	28	வல்லமையுடையவனு	வல்லமையுடையவரு
650	17	திற்ந்திவ்	திறந்திங்
660	18	தேய்த்தும, வினமா	தேய்த்து, மலினமா
686	10	கொஸ்ளுகிறேன்	கொள்ளுகிறேன்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
693	21	சர்வேஸ்வதமூர்த்தியின்	சர்வேஸ்வரமூர்த்தியின்
694	31	பஞ்சவடியிதீரத்திற்	பஞ்சவடிதீரத்திற்
703	6	மெய்ஞ்ஞானத்தையுடைய	மெய்ஞ்ஞானத்தையுடைய
719	11	உபகாரஞ்	உபசாரஞ்
,,	32	யுடையவர்களாகிய	யுடையவர்களாகி
720	32	பாரபரமாகி	பராபரமாகி

உத்தரகாண்டம்.

736	14	சம்ஸ்தமான	சமஸ்தமான
741	26	மகரரிஷிகள்	மகாரிஷிகள்
755	6	தொடங்கினார்கள்	தொடங்கினன்
758	9	சொன்னவெல்லா	சொன்னவெல்லாம்
781	38	புரிந்தனன்	புரிந்தனள்
785	21	னடலரக்கான்	னடலரக்கன்
,,	23	நினைகுந்	நினைக்குந்
790	10	நரகாதியர்	நரகாதிபர்
791	32	அச்சமத்தில்	அச்சமயத்தில்
793	2	தத்தில்	யுத்தத்தில்
798	15	அவர்களெலால்	அவர்களெல்லாம்
,,	16	போகின்றீரென்று	போகின்றீரென்று
799	36	வருந்தினன்	வருத்தினன்
830	2	முத்தியுண்	முததியுண்
836	35	வலசமும்	வகலமும்
840	29	அப்பொழுது	இப்பொழுது
861	24	தம்முடை	தம்முடைய
869	31	குசலவனை	குசலவரை
877	24	மிலங்கொன்	மிலங்கென்
886	13	செல்ய [ன	செய்ய [ன
892	19	பாடுபவர்களை அவர் யழையுங்களென்	பாடுபவர்? அவர்களையழையுங்களென்
901	4	பேரமா	பேரமர்